14645

SECRETARIAT LIBRARY
23 ... 1946
MADRAS GOVERNMENT

Government of Madras.

SECRETARIAT LIBRARY

Class No.

Ch. S. III (Library)-1—6,000—18-11-42.

JL
V211:19(7 )m,N39
NL :3
6-5E6

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை.

மலர் III.] 1943-ம் ஞு ஜனவரி மீ 1௳, வெள்ளிக்கிழமை [இதழ் 1

SECRETARIAT LIBRARY 21 . 3 . 1943 MADRAS GOVERNMENT



மேன்மை தங்கிய சென்னை கவர்னர் ஆர்தர் ஹோப்.

இவர் அனுப்பிய புது வருஷச் செய்தியை அடுத்த பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

# சென்னை கவர்னர் புது வருஷச் செய்தி

## “வெற்றி சூரியன் தோன்றி விட்டான்”

### காந்தியார் கொள்கை ஜப்பானை வரவேற்பது !

‘சென்னை யுத்த சஞ்சிகை’க்கு சென்னை கவர்னர் மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் துரையவர்கள் புது வருஷத்தை முன்னிட்டு, கீழ்க்கண்ட செய்தியை அனுப்பி யிருக்கிறார்கள் :—

உலக மகா யுத்தம் ஆரம்பமானதி லிருந்து 4-வது புது வருஷம் தான், இந்த 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி.

1942-ம் வருஷத்திய சம்பவங்களைக் கொண்டு ஆலோசித்துப் பார்த்தால், முடிவில் நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்னும் உறுதி உண்டாகிறது.

அந்த வருஷ ஆரம்பத்தில் அடுத் தடுத்துப் பல தோல்விகள் நேர்ந்தன. கிழக்கே, மலேயா, பிலிப்பைன் தீவுகள், நெதர்லந்து கிழக்கிந்தியத் தீவுகள், ஆகியவற்றை இழந்தோம். பிறகு பர்மாவையும் இழந்தோம். ஆகவே, இந்தியாவின் எல்லைப் புரத்திற்கு யுத்தம் வந்து விட்டது. ரஷ்யாவிலே டான் நதிப் பள்ளத் தாக்கையும் காக்கஸஸ் பகுதியையும் ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆப்பிரிக்காவிலே, ஜெர்மன் சேனாதிபதியான ரோமல் அலெக்ஸாந்திரியா வரை நம்மை விரட்டி யடித்தார். ஆனால், சென்ற சில மாதங்களாக ஏடு புரண்டு விட்டது. ஜெர்மானியர்கள் ஸ்டாலின்கிராடில் சரியானபடி தோல்வி யடைந்தார்கள். அன்றியும், ரஷ்யக் குளிர் காலத்தையும் தாங்க வேண்டிய நிர்பந்த நிலைமையில் இருக்கிறார்கள். எகிப்தில் நாம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறோம். ரோமலின் படைகளை அடித்து நொறுக்கி விட்டோம். சிரெனெய்காவை விட்டே விரட்டி விட்டோம். அதே சமயத்தில், மீண்டும் தலை தூக்கிய பிரெஞ்சுப் படைகள் பிரிட்டிஷ் படைகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் உதவியாக வந்து சேர்ந்தன. இவை ஒன்று சேர்ந்து, வடாப்பிரிக்காவிலும் மேற்காப்பிரிக்காவிலும், திரிபோலியும், துனிஷியாவின் ஒரு பகுதியும் தவிர, மற்றெல்லா பாகங்களையும் கைப்பற்றிக் கொண்டன. திரிபோலியும் துனிஷியாவின் பகுதியும் விரைவில் நம் வசப்படலாம். கிழக்கே நியூ கினியாவிலும் சாலமன் தீவுகளிலும் ஜப்பானியர்கள் மகா கஷ்டப் பட்டு விட்டார்கள். அவர்களுடைய கப்பற் படை அடுத்தடுத்து தோல்வி யடைந்தது.

இந்த வெற்றிகளால் நாம் பெருமிதம் கொள்ளக் கூடாது. இது பற்றி சர்ச்சில் துரை கூறியது மிகவும் பொருத்தமாகும். அவர் கூறியதாவது:—

> அவை முடிவின் ஆரம்பமல்ல ; ஆனால் ஆரம்பத்தின் முடிவு—அதாவது என்றென்றைக்கும் பாதுகாக்கும் பொருட்டு நடைபெறும் சண்டையின் முடிவையும்; நேச தேசப் படைகள் எதிரிகளைத் தாக்குவதின் ஆரம்பமும் என்று தான் பொருள்படும்.

இவை நம்மைத் தூண்டும் ; அப்போது நம் முயற்சிகள் அதிகமாகும் ; இதன் பயனாக முடிவான வெற்றி விரைவில் கிடைக்கும்.

இங்கே இந்தியாவில், நம் சிந்தனையும் முயற்சிகளும் கொஞ்ச காலமாக சிதறிக் கிடக்கின்றன. ஏனென்றால், வேண்டுமென்றே சிலர் நாட்டில் கலவரங்களைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். இவற்றை நாம் ஒடுக்க வேண்டி யிருக்கிறது. இப்படி கிளப்பி விடுகிறவர்கள், மக்கள் விடுதலையே தமது லட்சியம் என்று கூறுகிறார்களே யொழிய, உண்மையில் அந்த லட்சியத்திற்கு பாதகந் தான் செய்கிறார்கள். இந்தக் கலவரங்களை நாம் தகுந்தபடி அடக்கி யிருக்காவிட்டால், விரைவில் இந்தியாவை ஜப்பானியர்கள் தாக்கி யிருப்பார்கள். அரசியல் வசதிகள் மட்டுமன்றி, கல்வி, நீதி, தனிப்பட்டவர்களின் உரிமை ஆகிய அனைத்தையும் கொடுங் கோலர்கள் இரக்கமின்றி நசுக்கித் தொலைத் திருப்பார்கள். இப்படித் தான் மலேயாவிலும் பர்மாவிலும் செய்து கொண்டிருக்கிறார்கள். மீண்டும் இந்நாடுகளை நாம் நம் படைகளை யெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து, மீட்கிற வரைக்கும், அதே கொடுமைகளுக்குத் தான் ஆளாக நேர்ந்திருக்கும்.

ஆகவே, இந் நாட்டின் உள்ளவர்களில் நாட்டுப் பற்றுடையவர்களுக்கு ஒரு கடமை யிருக்கிறது. கலகமும் கலவரமும் எங்கே தலை தூக்கினாலும் உடனே அதை ஒடுக்க வேண்டும், யுத்த முயற்சிக்கு முழு மனதோடு உதவும்படி பெரும் முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் விடுதலை லட்சியம் கை கூடும். நாஜி கொடுமைகளும் ஜப்பானிய அக்கிரமங்களும் என்றென்றைக்கும் ஒழிந்து போகும்.

69526

JL V2l;1;9(3) N43 M438



# தாழ்த்தப்பட்டோர் அடைந்த ஏமாற்றம்

## பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொறுப்புகள்

### நான்கு வகை விடுதலைகளும் வேண்டும்

(தேசீயப் போர்முனை பகுதி அமைப்பாளர் ராவ்பகதூர் எம். சி. ராஜா, எம்.எல்.ஏ., எழுதியது.)

*யுத்தத்தைப் பற்றி பொதுவாக ஜனங்களின் போக்கிலேயே ஒரு பெருத்த மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.* **இதற்குக் காரணம் “தேசியப் போர் முனை” இயக்கந்தான்.** *இந்த இயக்கத்தை சுமார் ஒரு வருஷத்திற்கு முன்பு மேன்மை தங்கிய வைசிராய் பிரபு தோற்றுவித்தார். மக்கள் கொண்டிருந்த தோல்வி மனப் பான்மையை இந்த இயக்கந் தான் போக்கியது. யுத்தத்தின் முடிவு என்னாகும் என்பது பற்றி சந்தேகங் கொள்ளுகிறவர்கள் இப்போது யாரும் இல்லை. தப்பிக்க வழி யில்லை என்னும் எண்ண முடையவர்கள் இப்போது ஒருவரும் கிடையாது. மக்களுக்குள் பயத்தை உண்டாக்கும் பொருட்டு பிரசாரம் செய்கிறவர்கள் கூட, இப்போது வாயடைத்துப் போயிருக்கிறார்கள்.*

**ஜவஹர்-காந்தி வேற்றுமை.**

*யுத்தப் பிரசினையைக் குறித்து ஜவஹர்லாலுக்கும் காந்தியாருக்கும் ஏற்பட்ட வேற்றுமையை பொதுவாக ஜனங்கள் கவனித் திருப்பார்கள். யுத்த சம்பந்தமாகக் காங்கிரஸ் என்ன முறையைக் கைக்கொள்ள வேண்டு மென்று விவாதித்தார்கள். அப்போது ஜவஹர்லாலின் எண்ண மெல்லாம் நேச நாடுகள் வெற்றி பெற வேண்டு மென்பதிலேயே பதிந்திருந்தது ; ஆனால், காந்தியாரின் எண்ண மெல்லாம ஜப்பானியர்கள் இந்தியாவிற்கு வந்து வசப் படுத்திக் கொள்ளுவதிலேயே இருந்தது.* **அது,** *ஜப்பானியரால் கடுமையான ஆபத்து ஏற்படக் கூடிய காலம். அப்போது காங்கிரஸ் கைக்கொள்ளவேண்டிய முறை யொன்றை காந்தியார் வகுத்தார். அது தான் “எதிரி யோடு பலாத்கார மற்ற முறையில் ஒத்துழையா திருப்பது” என்பது. இது தற்போதுள்ள அரசாங்கத்திடம் சமாதானமாகவும் நேசமாகவும் இருப்பதாகத் தோற்றும். ஆனால் இதன் உள் அர்த்தம் என்ன வென்றால், ஜப்பானியர்கள் இந்தியாவில் வந்து இறங்குவார்கள் என்பது தான். ஜவஹர்லால் எந்த விஷயத்தைக் குறித்தும் நேர்மையான முறையில் ஆலோசித்துக் கொண்டிருந்தவர். ஆகையால் ரஷ்யா, அமெரிக்கா, சீனா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகள் சேர்ந்துள்ள நேச தேசங்கள் முடிவில் வெற்றி பெறும் என்பது பற்றி அவருக்குச் சந்தேகமே கிடையாது. அந்தக் காலத்தில் ஒவ்வொரு நாட்டின் நிலைமையும் மிகவும் ஆபத்தா யிருந்தது.*

*எப்பொழுதும் ஆசையி னின்று தான் எண்ணம் பிறக்கிறது. காந்தியாரின் எண்ணம் என்ன தெரியுமா ?*

> *“ஜப்பானியர்கள் இந்தியாவிற்கு வரும் போது நான் போப் கிரிகரி போல அவர்களுக்கு எதிரில் போகச் சந்தர்ப்பங் கிடைக்கும், நம்மைத் தாக்க வருகிறவர்களைத் தலை வாசலிலேயே சந்திப்பேன். சமாதான முறையைக் கொண்டே வெல்ல வேண்டும் என்னும் எனக் கினிமையான மந்திரத்தை அவர்களுக்கு ஓதுவேன். போராட வேண்டா மென்று நான் அவர்களை வேண்டிக் கொள்ளுவேன். சமாதானமாகவே நாட்டை வசப் படுத்திக் கொள்ளும்படி அனுமதிப்பேன்.* **அவர்களுடைய அனுமதியின் பேரில் நானும் காங்கிரசும் நாட்டை ஆள அனுமதிக்க வேண்டு மென்று கோருவேன்.”**

*இந்த எண்ணங்களிலும் ஆசைகளிலும் மண் விழுந்தது. சமீப காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களையும் யுத்த முன்னேற்றத்தையும் சீர்தூக்கிப் பார்க்கிறவர்களுக்கு இது நன்ருகத் தெரியும். வெற்றி பெற வேண்டு மென்பது பற்றி, நாம் கொண்டிருப்பது ஆசை, நம்பிக்கை மட்டுமல்ல ; உறுதி கொண்டிருக்கிறோம். இந்த உறுதிக்குத் தகுந்த ஆதாரங்கள் உண்டு. இதற்குத் தேசீயப் போர் முனை இயக்கத்தின் வேலையும் ஒரு காரணந் தான்.*

*நாம் வெற்றி பெற வேண்டுமானால், பெரிதும் முயல வேண்டு மென்றும், ஏராளமான தியாகங்கள் செய்ய வேண்டு மென்றும், அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டும் பிரிட்டிஷ் முதல் மந்திரி சர்ச்சிலும் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. என்றாலும் நாம் வெற்றி பெறுவது மட்டும் உறுதி. இருள் நீங்கி விட்டது. வெ றி சூரியன் தோன்றி விட்டான்.*

* * *

*இந்தப் பாந்த உலகத்தில் யுத்தத்தின் போக்கு இப்படி யிருக்கிறது ; ஆனால் இந்தியாவில் நிலைமை எப்படி யிருககிறது ? நேச நாட்டுப் படைகள் இங்கே வந்து விட்டன. அவசியமானால், தரையிலும் போராடத் தயாரா யிருக்கின்றன. வெளி நாட்டார் இந்தியாவைத் தாக்கி அக்கிரமங்கள் செய்யாதபடி இவை தடுக்கக் கூடியவை. இந் நாட்டு மக்களைக் காப்பாற்றும் பொருட்டு இராணுவத்தார் என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்று நாம் தகுந்தபடி உணர்ந்து கொள்ளுவ தில்லை. இந்த இராணுவத்தில் இந்தியர்களும் இந்தியரல்லாதவர்களும் இருக்கிறார்கள். இந்தியப் படையினர் மத்திய கிழக்கிலும் வடாப்பிரிககாவிலும், பிரிட்டிஷ் படைகளும் அமெரிக்கப் படைகளும் இந்தியாவிலும் பல வகைகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். வெளி நாடுகளில் இந்தியப் படைகள் செய்து கொண்டு வரும் வேலைகள் அனைவருக்கும் தெரியும். இந்த யுத்த சரித்திரத்திலேயே இது ஒரு மிகச் சிறந்த பகுதியாக விளங்கும். பிரிட்டிஷ் படைகளும் இந்தியப் படைகளும் இந்தியாவில் என்ன செய்கின்றன வென்று இப்போது வெகுவாகத் தெரியாது. அவர்களுடைய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அவற்றை வெளியிடா திருப்பது நல்லது தான். இவர்கள் வேலைகள் எல்லாம் முடிந்த பிறகு, அவர்கள் இங்கே வேலையற்றுப் போய் வந்திருக்க வில்லை யென்றும், அவர்கள் மிகுந்த பல முள்ளவர்கள் என்றும், அவர்களால் நமக்குப் பாதுகாப்பு அதிகம் என்றும், அவர்களால் ஊக்கமும் உறுதியும் நமக்கு உண்டாகின்றன வென்றும் தெரிந்து கொள்ளுவோம். ஆபத்திற்குதவுகிறவர்கள் தான் உண்மையான நண்பர்கள்.*

*மேன்மை தங்கிய லின்லித்கோ பிரபுவும், ஜெனரல் வேவலும் இந் நாட்டு விஷயங்களுக்குத் தலைவர்களாக இருக்கும் பாக்கியம் நமக்கு வாய்த்திருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் நடைபெறும் சம்பவங்களை இவ்விருவரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். சிவில் இராணுவம் பொருளாதாரம், கைத்தொழில், அரசியல் நிர்வாகம் முதலிய இலாக்காகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கின்றார்கள். யுத்தத்தில் வெற்றி பெறவும், கட்டுப்பாடான சமாதானத்தை நிலை நாட்டவும் இந்த இலாக்காக்கள் பெரிதும் உதவும். நம் மாகாணத்திலும் மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் துரையவர்களைக் கவர்னராக அடையும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். இவருடைய ஆலோசகர்கள் விஷய ஞானம் மிகவும் உடையவாகள். இவர்களுடைய உதவியைக் கொண்டு அவர் சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நாட்டிக் கொண்டு வருகிறார். அன்றியும் எல்லா வகை யுத்த வேலைகளிலும் பொது ஜனங்களின் கூட்டுறவையும் ஆதரவையும் திரட்டி,*

யுத்தத்தில் வெற்றி பெற வேண்டு மென்னும் எண்ணம் பொதுவாக ஜனங்கள் மனதில் வேரூன்றும்படி, ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

இந்த யுத்தத்தில் வெற்றி பெற வேண்டி செய்யப் படும் எல்லா வேலைகளாலும், இந்நாட்டிலுள்ள எல்லா இனத்தவர்களுக்கும் என்ன பலனுண்டு? தகுந்த ஆலோசனையின் பேரில் தான் பல இனத்தவர்கள் என்று சொல்லுகிறேன். ஏனென்றால், பல இனங்களையும் ஒரே இனம் என்று கூறுவதால் பலனில்லை. இங்கே இல்லாத ஒற்றுமை, இருப்பதாகத் தப்பெண்ணங் கொண்டதனால், பெருந் தீமைகள் நிகழ்ந்து விட்டன. பல இனத்தவர்களுக்குள்ளும் ஒரே வகை இயல்புகள் இருக்கின்றன வென்னும் காரணம் பற்றி, முழு ஒற்றுமை ஏற்பட்டு விட்டதாகக் கூற முடியாது. வேற்றுமைகளையும் நாம் கவனிக்க வேண்டும். இவை முக்கியமானவை. எந்த விஷயத்தைக் குறித்தும் இவை முடிவு செய்யத் தக்கவை. பொருளாதாரத் துறையில் இது மிகவும் முக்கியம். எல்லோருக்கும் வயிறு உண்டு என்றால், எல்லோருக்கும் ஒரே வயிறு தான் இருக்கிறது என்று பொருள் கொள்ளலாமா? ஒருவர் சாப்பிட்டால், மற்றவர்களுடைய பசி யெல்லாம் நீங்கி விடுமா? இப்போது நம் நாட்டிற்குத் தேவை ஒற்றுமை யல்ல; ஆனால் இசைந்த வாழ்வு தான். பொது மக்களுக்கு நன்மை தரத் தக்க முறையில், இந்நாட்டை ஆட்சி புரிந்து வந்தவர்களிட மிருந்து ஆதிக்கத்தைப் பிடுங்கிக் கொள்ளும் பொருட்டு, ஒற்றுமை ஏற்பட்டு விட்டதாக மேல் வாரியாக வாதிக்கலாம். இப்போது நமக்கு என்ன வேண்டு மென்றால், பல இனத்தவர்களுக் குள்ளாகவும் இசைந்த வாழ்வு தான் வேண்டும்.

இதனால், அவர்களுக்குள் கூட்டுறவு உண்டாகும். அவர்கள் பொது நோக்கங்கள் ஈடேறும். ஆதிக்கத்தைப் பகிர்ந்து கொள்ளுவதில், எல்லோருக்கும் நீதியும் நியாயமும் வழங்கப்படும். அப்போது தான் எல்லா இனத்தவர்களுக் குள்ளும் இசைந்த கூட்டுறவு ஏற்படும். இந்தக் கூட்டுறவு ஏற்பட்டு நெடு நாட்களுக்குப் பிறகு தான் அரசியல் ஒற்றுமை ஏற்படக் கூடும்.

**நாட்டின் எதிர்காலம்.**

இந்தச் சமயத்தில் இந்தியாவின் எதிர் காலத்தைப் பற்றி, இங்குள்ள ஆலோசனைக்காரர்களின் மனதைக் கிளறிக்கொண்டிருக்கும் பிரசினை யொன்றுண்டு. இந்தியாவில் தம் ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்க பிரிட்டிஷார் விரும்புகிறார்களா என்பது தான் அந்தப் பிரசினை. இதை விட்டுக் கொடுக்கத் தாம் விரும்புவது மட்டுமன்றி, ஆவலாகவு மிருப்பதாக அவர்கள் பலமுறை கூறி யிருக்கிறார்கள். அரசியல் பல்லவியைப் பாட வேண்டு மென்று நினைக்கிறவர்கள் தான், இந்த வார்த்தைகளை நம்பாதது போலப் பாசாங்கு செய்கிறார்கள். பலவீனமான இனத்தவர்களின் நன்மைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆதிக்கத்திலுள்ளவர்களுக்கு உண்டு. இந்தப் பொறுப்பையும் அரசாங்கத்தார் கை விட்டு விடுவார்களா? ஆதிக்கம் மிகுந்தவர்களின் இஷ்டப்படி எல்லாம் நடக்கும்படி ஆதிக்கமற்றவர்களை ஒப்புக் கொடுத்து விடுவார்களா? இப்போது இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களின் உள்ளங்களில் உண்மையான தோர் அச்சம் தோன்றி யிருக்கிறது. அதாவது, நாம் வெற்றி பெறும் போது—வெற்றியடைவது உறுதி—இது வரை பல கஷ்டங்களுக்கிடையே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நேர்மையாகவும் கருணையோடும் நடந்து கொண்டது போலவே, இனியும், தாழ்த்தப்பட்டவர்களிடம் நடந்து கொள்ளுவார்களா? இதற்கு ஜாதி இந்துக்களின் எதிர்ப்புக் கொஞ்சமா? இனி ஏற்படக் கூடிய தேர்தல் பொதுத் தொகுதியில் ஜாதி இந்துக்களெல்லவா பெரும்பான்மையோர். இதுவரை எங்கள் அனுபவத்திலிருந்து, பிரிட்டிஷாரின் மேற்பார்வையும் ஆதிக்கமும் இல்லையானால், இந்தத் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களை ஜாதி இந்துக்கள் வெகுவாக அலட்சியம் செய்வார்கள் என்பது உறுதி. இன்றும் பல வகைக் கட்டுபாடுகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாக்குகிறார்கள். **இவை ஜாதி இந்துக்களின் சார்பாக காந்தியார் வகுத்த முறைகள். இந்த முறைகளின்படி தம்முடன் சேர்த்துக் கொள்வது போல் சேர்த்து, எங்களுக்குள்ள அரசியல் சுயேச்சையைப் பறிமுதல் செய்து விடுகிறார்கள்.** அரசியல் சுயேச்சையைக் கொண்டு தான், அறிவு முன்னேற்ற மடையும். சமுதாய உயர்வு உண்டாகும். பொருள் நிலையும் பெருகும். பண்டைக் கால பண்ணைக்காரன் இன்று சமூக அடிமையா யிருக்கிறான். இனி அறிவுத் துறையிலும், அரசியல் துறையிலும் கொடுமைக்கு ஆளாக நேரலாம். பல ஊழி காலமாக நம் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு தலை தூக்க உதவியது, பிரிட்டிஷ் அரசாங்கமல்லவா? அவர்கள் ஜனநாயக உணர்ச்சி யுடையவர்கள். நீதியும் நேர்மையும் கொண்டவர்கள். பொருளாதாரங் காரணமாகவும் அரசியல் காரணமாகவும் இவர்கள் தம் உணர்ச்சிப்படி நடந்து கொள்ள ஒட்டாதபடி தடைகள் ஏற்பட்டன. என்றாலும் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்குத் தம்மால் இயன்றவரை உதவினார்கள். இனி ஏற்படப் போகும் அரசியல் அமைப்புப் போராட்ட நிர்ப்பந்த காலத்திலுங் கூட, இந்த இனத்தவர்களின் நன்மைகளைத் தியாகஞ் செய்து விடமாட்டார்கள் என்று நான் பெரிதும் நம்புகிறேன். தம் ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் தான், தாழ்த்தப் பட்டவர்களிடம் அரசாங்கத்தார் கவலையும் அனுதாபமும் காட்டுகிறார்கள் என்று சொல்வது எளிது. இப்படி அந்த அரசியல் கட்சிகள் சொல்வதற்குக் காரணம் என்ன வென்றால், ஆதிக்கத்தைக் கைப்பற்ற வேண்டுமென்னும் பேராசை தான். ஆனால், அதற்கேற்றபடி, எளிய இனத்தவர்களிடம் நீதியோடும் நேர்மையோடும் நடந்து கொள்ள வேண்டு மென்னும் உண்மையான உணர்ச்சி அவர்களிடம் இல்லை.

**தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நிலை.**

இந்தச் சமயத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் நிலை என்ன? இந்த இனத்தவர்கள் பொது மக்களின் முக்கியமான பெரும் பகுதியினர். அவர்களுடைய எதிர் கால வாழ்வு அஞ்சத் தக்கதாகவு மில்லை; சிறப்பானதாகவும் தோன்றவில்லை. நாட்டின் யதேச்சைபற்றி, மற்ற இனத்தவர்களின் கோரிக்கைகள் பற்றி, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் போக்கு எதுவோ, அதை யொட்டித் தான் எல்லாம் அமையும். பரிபூரண சுயாட்சி வழங்குவதாக அரசாங்கத்தார் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இந்த நாட்டு நிர்வாகம் பற்றி தமக்குள்ள எல்லா ஆதிக்கத்தையும் பொறுப்பையும் விட்டுக் கொடுப்பதாகவும் கூறி யிருக்கிறார்கள். சிறுபான்மை வகுப்பினரில் அநேகரும், தாழ்த்தப் பட்டவர்களும் சம்மதித்தால் மட்டுந் தான், தமக்குள்ள ஆதிக்கத்தை மாற்றித் தரக் கூடு மென்று வற்புறுத்துகிறார்கள். இதுவும் நம் அதிர்ஷ்டந் தான்.

இந்நாட்டிலும், வெளி நாடுகளிலும் இதுபற்றி பொது ஜனங்களின் கருத்தை சிருஷ்டிக்கிறார்கள். அதுவும், மகா கெட்டிக்காரத்தனமாகவும் பெரும் பொருளுதவியைக் கொண்டும், வாயில்லா பூச்சிகளாகவும், நசுக்கப்பட்ட இனத்தவர்களாகவும் உள்ளவர்கள் மீது, நெடு நாட்களாக ஆதிக்கம் செலுத்திக் கொண்டு வந்தவர்கள் தான் இப்படிச் சிருஷ்டிக்கிறவர்கள். இப்படிச் சிருஷ்டிக்கப் பட்ட பொது ஜனக் கருத்துக்கு மாறாகத் தாம் விதிக்கும் நிபந்தனையை, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வற்புறுத்துவார்களா என்பது தான் கேள்வி. இங்கிலாந்தி லிருந்தும் இந்தியாவிலிருந்தும் மட்டு மன்றி உலகத்தின் மற்றெல்லாப் பாகங்களிலு மிருந்தும், அமெரிக்காவிலும் சீனாவிலு மிருந்துங் கூட பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மீது ஒரு குறை கூறுகிறார்கள். அதாவது, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கூறும் வாக்குறுதியை நிறைவேற்றும் எண்ணம் அவர்களுக்கில்லை யென்றும், ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்க அவர்கள் விரும்ப வில்லை யென்றும் குறை கூறுகிறார்கள். இதனால், அரசாங்கத்தார் தடுமாற்ற மடைவார்களா?; நெடு நாட்களாக அடிமைத் தனத்திற்கு ஆளாகி யிருந்தவர்களைக் காட்டிக் கொடுத்து விடுவார்களா?



**இரண்டு ஆபத்துக்கள்.**

தாழ்த்தப்பட்டவர்கள் தலைக்கு மேலே இரண்டு ஆபத்துக்கள் இருக்கின்றன. இவ்விரண்டும் இரண்டு வகை அறியாமையினால் உண்டானவை. ஒன்று மேல் நாடுகளிலுள்ள நல்லெண்ணமுள்ள லட்சிய வாதிகளின் அறியாமையால் ஏற்படுகிறது. மற்றொன்று, ஜாதிக் கட்டுப்பாட்டிற்கும், புரோஹிதக் கட்டுப்பாட்டிற்கும் உள்ளாகி யிருக்கும் இந்நாட்டவர்களின் அறியாமையால் ஏற்படுவது. இவர்கள் தான் பொதுத் தேர்தல்களில் இந்துக்கள் என்னும் பெரும்பான்மையோரா யிருக்கிறவர்கள். மக்களைப் பலபல வகுப்பினராகப் பிரித்து வைப்பதற்காக மட்டும் சாதி வேற்றுமை முளைக்க வில்லை. ஒவ்வொரு சாதிக்கும் தனி பழக்க வழக்கமும், மூட நம்பிக்கையும் அரண்களாக அமைந் திருக்கின்றன. ஜாதி உயர்வு தாழ்விற்கு ஏற்றபடி கட்டுப்பாடுகளும் உயர்ந்து கொண்டே போகும். இதன் பயனாக, தாம் மற்றவர்களை விட வேறுபட்டவர்கள் என்னும் தனித் தன்மை அவர்களுடைய உள்ளத்தே உண்டாகிறது. ஆகவே அளவு கடந்த பாரபட்சமும், நியாயமற்ற மனக் கசப்பும் உண்டாக இடமுண்டாகிறது. இந்தக் காரணத்தால் தான், தாழ்த்தப்பட்டவர்களை பல நூற்றாண்டுகளாக அடிமைப் படுத்தி வைத்திருந்தார்கள். இந்தியாவைப் பற்றி நல்லெண்ண முடையவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இந்தியாவைக் குறித்து விஷய ஞானம் போதாது. அவர்கள் இந்தியாவிற்கு நன்மை செய்ய விரும்புவார்களானால், ஒரு காரியம் செய்ய வேண்டும். எந்த விதத் தொடர்பு மில்லாத, திறமை வாய்ந்த சமூதாய அறிஞர்கள் அடங்கிய தூதுக் கோஷ்டி யொன்றை இந்தியாவிற்கு அனுப்ப வேண்டும். இவர்கள், இந்திய மக்களின் சமூதாய நிலை, உறவு முதலியவற்றைக் குறித்து விசாரணை செய்ய வேண்டும். அரசியல் துறையில் செய்யப்படும் செயல்களும் தீர்மானங்களும் இவற்றை யொட்டித் தான் நடை பெறுகின்றன. இப்படிப்பட்ட ஒரு தூதுக் கோஷ்டியை அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் இந்தியாவிற்கு அனுப்ப வேண்டும். இந்தத் தூதுக் கோஷ்டியினர் போதுமான காலம் இந்திய மக்களிடையே பழக வேண்டும். இன்று இந்திய மக்கள் உள்ள சமூதாய நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் என்னென்ன செய்யக் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறார்களென்றும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட தோர் தூதுக் கோஷ்டியை அவர் அனுப்புவா ரானால், அனேக தலைமுறைகளுக்கு நிலைத்திருக்கக் கூடிய சமுதாய அமைப்பிற்கும் அரசியல் அமைப்பிற்கும் முதன் முதல் அவர் விதை விதைத்தவராவார்.

**சர்ச்சில் சொன்னது என்ன?**

சில மாதங்களுக்கு முன்பு சர்ச்சிலும், ரூஸ்வெல்டும் அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஒரு இடத்தில் சந்தித்துப் பேசினார்கள். அதன் பிறகு சர்ச்சில் ஒரு செய்தி விடுத்தார். ஹிட்லர் ஆதிக்கத்திற்குள்ளான ஐரோப்பிய நாடுகளில் மக்கள் படும் கஷ்டங்களைக் குறித்துத் தெரிவித்தார். அப்போது அவர் கீழ்க் கண்டவாறு கூறினார்:—

"குகை இருண்டு நீளமானதாக விருக்கலாம்; ஆனால் முடிவில் வெளிச்சம் இருக்கிறது."

அது போலவே, இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களுங் கூட நீண்ட இருண்ட குகை வழியாகத் தான், தம் வாழ்நாட்களை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும் அங்கங்கே இந்தக் குகைக்குச் சில திறப்புக்கள் இருக்கின்றன. உதாரணமாக, புத்தர், அசோகர், இராமானுஜர், ராஜாராம் மோகன் ராய், கேசவ சந்திர சென், ரெனடே, டாக்டர் டி. எம். நாயர் ஆகியோர் காலத்திலும், மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் ஏற்பட்ட பிறகுந் தான், தாழ்த்தப்பட்டவர்களின் நீண்ட இருண்ட வாழ்க்கையில், வான ஒளி வீசியது. 1935-ம் வருஷத்திய சீர்திருத்தத்தின்படி இவர்களுக்குத் தேர்தலில் தனித் தொகுதி ஏற்பட்ட போது, இவர்களைச் சூழ்ந்திருந்த இருள் சற்று நீங்கியது போலத் தோன்றியது. **இந்தச் சமயத்தில் தான் புனா ஒப்பந்தம் ஏற்பட்டது. இது பற்றி அவர்கள் கொஞ்சமும் சந்தேகம் கொள்ளாதபடி சம்மதித்தனர். இது காரணமாக அவர்கள் அரசியல் சிறையில் அடைபட்டனர். அதிலிருந்து அவர்கள் இன்னும் மீளவில்லை.** இப்போது இவர்களுக்கு ஒரு புதிய நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதாவது, இந்த யுத்தத்தில் நேச நாட்டினர் வெற்றி பெறுவார்கள். அப்போது நிலைமை மாறும். பல நூற்றாண்டுகளாகத் தாம் இருந்துவந்த அடிமைத்தனத்திலிருந்து மீட்சி பெறக் கூடும். சமூதாயத் துறையிலும் அரசியல் துறையிலும் தம்மை இன்னும் அடிமைப்படுத்தியே வைத்திருக்க வேண்டு மென்று விரும்புகிறவர்களின் முயற்சிகள் கவிழும். அப்போது விடுதலை உத்வேகம் கிளம்பும். இதன் பயனாக சுயேச்சை தானாகவே உண்டாகும்.

**சுயேச்சை யாருக்கு?**

தேசீயக் கூட்டத்தினருக்கு மட்டுந் தான் சுயேச்சை வேண்டு மென்று கோருகிறார்களே யொழிய, ஒரு இனத்தார் மற்றொரு இனத்தாரோடு பழகும்போது இவர்கள் சுயேச்சை வழங்க மறுக்கிறார்கள். ஒரு இனத்தார் மற்ற இனத்தாருக்கு சுயேச்சை வழங்க வேண்டும் என்று நினைப்பது கூடக் கிடையாது. இந்த சுயேச்சையின் பயனாகப் பல இனத்தவர்களுக்குள்ளும் கூட்டுறவு ஏற்படும். ஒரு இனத்தவர் மற்றொரு இனத்தவரை அடிமைப் படுத்தி வைப்பதும் எளியவரை வலியவர்கள் அடக்கி யாளுவதும், இதனால் நீங்கும். தாழ்த்தப்பட்டவர்கள் சம்பந்தப்பட்டவரை இது முழுதும் உண்மை. சென்னை மாகாணத்தின் படைகளுக்குப் பெரும்பாலும் சிப்பாய்களைக் கொடுத்து உதவியது தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் தான். இவர்கள் மத்திய கிழக்கிலும் வடாப்பிரிக்காவிலும் தம் சிறந்த சேவகத்தினால் சிறந்த புகழ் பெற்றிருக்கிறார்கள். விடுதலையை முன்னிட்டும் நியாயத்தை நிலை நாட்டவும், தம் உயிரையுங் கொடுக்கத் துணிந்து போர் முனைக்குத் தாம் போகும் போது, தம் இனத்தவர்கள் இருந்த அதே பரிதாபகரமான நிலையிலேயே இருப்பதை, அவர்கள் போர் முனையிலிருந்து திரும்பி வந்த பிறகும் காணுவார்களானால், அவர்கள் மனம் என்ன பாடுபடும்!

அரசியல் வாதிகளின் மனப்படியே எல்லாம் நடப்பதானால், படையினருக்கு அரசியலில் இடமே கிடையாது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார், தம் ஆதிக்கத்தை ஒப்புக் கொடுக்கும் முன்பு, அவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமை ஒன்று உண்டு. அதாவது, அக்கிரமக்கார எதிரிகளிட மிருந்து இந்த நாட்டை மீட்டவர்களான தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளிட்ட பலரையும், இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு ஏதோ நாட்டிற்குத் தாம் பிரமாதமாகத் தொண்டு செய்து விட்டதாக வாய்ச் சவடால் வீசும் குறும்பர்களின் எதேச்சாதிகாரத்திற்கு, உள்ளாக்கக் கூடாது. அட்லாண்டிக் பிரகடனத்தில் குறிக்கப்பட்டுள்ள நான்கு வகை விடுதலைகளும யுத்தத்தின் ஒரு கட்டத்தில் தொகுக்கப்பட்டவை யானாலும், எல்லா நாட்டவருக்கும் எல்லா இனத்தவருக்கும் இது பொருந்த வேண்டு மென்னும் நோக்கத்தோடு தான் தொகுக்கப்பட்டது. இது பற்றி சந்தேகமே கிடையாது. இந்த விடுதலைகள் சில நாடுகளின் அரசியல் துறைக்கு மட்டுமன்றி, எல்லா நாடுகளின் சமூதாயத் துறைக்கும் பொருந்தியதாக அமைய வேண்டும்.

வறுமை, அச்சம், ஆதிக்கம், மத இழிவு ஆகியவற்றி லிருந்து தாழ்த்தப்பட்டவர்கள் விடுதலை பெற வேண்டும். இந்திய மக்களின் சமூதாய வாழ்வில் இந்நான்கு வகை விடுதலைகளும் கைகூட வேண்டுமென்பது தான் என் மனமார்ந்த கோரிக்கை.

வர்களுக்கு ஒரு கடமை யுண்டு. அதாவது, இந்தியா **வின் நன்மையை நாடிச் செய்யப்படும் முயற்சிகளுக்குத் தடையா யுள்ள பல வேற்றுமைகளையும் பிளவுகளையும் அடுத்த வருஷத்தில் ஒழித்து விட வேண்டும்.** மன்னர்களும், ஜமீன்தார்களும், பார்ப்பனர்களும், தீண்டாதார்களும், காங்கிரஸ்காரர்களும், முஸ்லீம் லீக்காரர்களும், இந்தியாவி லுள்ள எல்லாக் கட்சியினரும் ஒன்று பட்டுச் சந்தித்து, இந்தப் புது வருஷ ஆரம்ப முதல், தம் கட்சிக்கு எவ்வகைப் பாதகம் நேர்ந்த போதிலும் அதைப் பொருட் படுத்தாமல், இந்தியா முழுதுக்குமே நன்மை தரத் தக்க எந்த ஏற்பாட்டையும் ஆதரிப்பதாகக் கடவுள் முன்னிலையில் உறுதி கொள்ளுவார்களானுல், எவ்வளவு உயர்வாக விருக்கும்!

அடுத்த வருஷத்தில் இராணுவத் தோல்விகளோ அரசியல் தோல்விகளோ ஏற்படாது என்று சொல்ல முடியாது. ஆனுலும் நாம் சம்பந்தப் பட்ட வரையிலுமாவது இயன்ற வரை முயல வேண்டு மென்று உறுதி செய்து கொள்ள வேண்டும். ஜெர்மனியும் இத்தாலியும் ஜப்பானும் அடியோடு விரைவாகத் தோற்கடிக்கப்பட வேண்டும். ஏனென்றுல், அவர்களின் கொள்கைகள் பகைமையும் கொடுமையுந் தான். இவற்றிற்குப் பதிலாகச் சிறந்த அரசியல் கொள்கை அமைய வேண்டும். அப்போது தான் பொதுவாக மக்கள் இனத்திற்கும், குறிப்பாக இந்தியாவிற்கும் நன்மை யுண்டு. இந்த முடிவான வெற்றி எப்போது கைகூடு மென்று நமக்குத் தெரியாது; ஆனுல் அது கூடிய விரைவில் கைகூடும் என்று எதிர் பார்க்கலாம். இந்த யுத்தத்தில் திடீர் மாற்றங்கள் பல ஏற்பட்டன. சிறந்த அறிஞர்களைக் கூட இந்த யுத்தப் போக்கு பல முறை ஏமாற்றி விட்டது. சமாதானமும் வெற்றியும் நாம் எதிர் பார்ப்பதை விட சீக்கிரத்திலேயே ஏற்படலாம். 1918-ம் வருஷம் திடீரென்று தான் நமக்கு வெற்றி கிடைத்தது. நெடு நாட்களுக்குக் கஷ்டப் பட்டும் போராடியும் இரத்தமும் கண்ணீரும் சிந்தும்படியும் நேரலாம். இந்த யுத்தம் நெடு நாட்கள் நடந்தாலும் சரி, விரைவில் முடிந்தாலும் சரி, முடிவான வெற்றி கிடைக்கும் வரை போராடியே தீர வேண்டும். இப்படிப் பட்ட வெற்றி கிடைக்கா விட்டால், உலகத்திற்கே நாச காலந் தான். உலகின் மற்ற பாகங்க ளெல்லாம் அடிமைப் படும் போது, இந்தியா விடுதலை யடையு மென்று கருதுவது தவறு. கொடுமை வெற்றி பெற்ற உலகத்தில், இந்தியா யதேச்சையோடு வாழ முடியாது. இந்தியாவிற்கு விடுதலை என்றுல் நாகரீக உலகம் நன்கு அமைந்து விட்டது என்று தான் அருத்தம். சர்வ தேசக் கூட்டுக் கொள்ளைக்காரர்களின் ஆட்சிக்கு உட்பட்ட சாம்ராஜ்யங்களில் இந்த நிலைமை ஏற்பட முடியவே முடியாது. ஜப்பானியர் ஐராவதி நதிக் கரையிலும், ஜெர்மானியர்கள் யூபர்டிஸ் நதிக் கரையிலும் வெற்றி முழக்கம் செய்து கொண்டிருப்பார்களானுல், தனக்குக் கிடைக்கக் கூடிய ஏதேச்சையை எத்தனை நாட்களுக்கு இந்தியா காப்பாற்றிக் கொள்ளக் கூடும். உங்களுடைய அரசியல் நோக்கம் எதுவாக வேண்டுமானுலும் இருக்கட்டும். உங்கள் நாட்டின் மீது உங்களுக்குப் பற்றுண்டா? வாழ்க்கை முறைப்படியும் யதேச்சையாகவும் இருக்க வேண்டு மென்று விரும்புகிறீர்களா? அப்படியானுல், பொது நோக்கத்திற்காகப் போராடுகிறவர்களோடு நீங்களும் சேர வேண்டும். மிஸ்டர் சர்ச்சிலின் கொள்கைகள் உங்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம்; அது போலவே தோழர் ஸ்டாலினுடைய கொள்கைகள் மிஸ்டர் சர்ச்சிலுக்குப் பிடிக்காதிருக்கலாம். மந்தையைச் சூரையாடத் திருடர்கள் வரும் போது எல்லாக் கட்சியினரும் ஒன்று பட்டு அவர்களை விரட்ட வேண்டும். எல்லோருக்கும் ஆபத்து நேரும் போது, கட்சி வேற்றுமைகளுக்கு இடமேது? நேச நாடுகள் வெற்றி பெற்றுல் தான் இந்தியாவிற்கு விமோசன முண்டு. இந்த நம்பிக்கையோடு உண்மையான ஒவ்வொரு இந்தியனும், தன், மதமோ, அரசியல் கொள்கையோ எதுவா யிருந்தாலும், அவசியமானுல் சாகும் வரையிலும் கூடப் போராடித் தீருவதற்கு ஆயத்தமா யிருக்க வேண்டும்.



ஜெர்மன் பாம்பர் விமானம்
சோவியத் படைகளின்
குண்டுகளுக்கு
இறையாகி தீப்பற்றிக்
கொண்டு எரிந்து
பொசுங்குகிறது

6-ம் பக்கம் தொடர்ச்சி.

ஆராய்ச்சியாளருக்கும், பேச்சாளருக்கும் எழுத்தாளருக்கும் இந்தப் புத்தகசாலை பெரிதும் உதவும். இவர்கள் அறிவோடு கூடிய நாட்டுப் பற்றுடையவர்கள். இவர்கள் ஒவ்வொரு விஷயத்தைக் குறித்தும் படித்து, உணர்ந்து, விவாதித்து மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுவார்கள். இதன் நோக்கம் என்ன வென்றுல் ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள ஒவ்வொரு முக்கியமான பகுதியிலும் ஒரு சிலரைத் திரட்டவேண்டும். இந்தியா மகத்தானதோர் நாடு என்றும், அது மகா சக்தி வாய்ந்ததென்றும் அவர்கள் உணர வேண்டும். இது சம்பந்தமாக எழும் பிரசினைகள் மனதைக் கலக்கத் தக்கவை; துன்பந்தரத் தக்கவை; இவற்றையும் அவர்கள் சமாளிக்க வேண்டும். இது கைகூடும் பொருட்டு மதம், ஜாதி, கட்சி முதலிய அற்ப விஷயங்களை எல்லாம் அவர்கள் அகற்றி விட வேண்டும். பல பிரசினைகளைக் குறித்தும் சமீபத்தில் வெளி வந்த புத்தகங்களையும், அரசாங்க உத்திரவுகளையும், கோர்ட்டுத் தீர்மானங்களையும் மற்றவற்றையும் அப்புத்தகசாலையி னின்று அவர்கள் படித்து உணர வேண்டும். சம்பளமில்லாமல் பல விடங்களுக்கும் போய் பிரசாரம் செய்கிறவர்களை இவர்கள் தயார் செய்ய வேண்டும்.

இந்தச் சிறந்த திட்டத்தின் நுணுக்கங்களை விவரிக்க இங்கு இடமில்லை. "தான் ஒரு இந்தியப் பிரஜை என்பதில் பெருமை" கொள்ளும் ஒவ்வொரு அறிஞரும் இதைக் குறித்துக் கவனிக்க வேண்டும் என்றும், ஊக்கம் கொள்ள வேண்டு மென்றுந் தான் இந்தப் புது வருஷச் செய்தியை விடுக்கின்றேம்.



# யுத்தத்தின் பொருட்டு செய்யப்படும் தருமங்கள்

## பண வசூல் குறைந்து விட்டது

### எந்த வகை உதவிகள் செய்யப் படுகின்றன

(யுத்த தர்மக் கூட்டுக் கமிட்டிக் காரியதரிசியான ஸ்ரீமதி ஜி. ஜி. ஆர்ம்ஸ்ட்ராங் எழுதியது.)

'யுத்தத்தின் பொருட்டு செய்யப்படும் தருமம்' என்னும் சொற்களையே உபயோகிக்கக் கூடா தென்று சிலர் ஆட்சேபித்தனர். ஆஸ்பத்திரிகளுக்கு சப்ளைகள் அனுப்புகிறேம். படையினருக்கு வசதிகள் செய்து கொடுக்கிறேம். யுத்தக் கைதிகளானவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கும், போரில் இறந்து போனவர்களுடைய குடும்பத்தவர்களுக்கும் உதவுகிறேம். இவ்வளவும் நமமைப் பாதுகாக்கிறவர்களுக்காக வல்லவா? ஆகவே, இவை தருமங்களல்ல. பொது ஜனங்களாகிய நாம் அவர்களுக்கு இவ்வளவும் செய்ய வேண்டு மென்று அவர்கள் எதிர்பார்ப்பது மிகவும் நியாயமாகும். உண்மை தான். என்றுலும் உலக முறைப்படிப் பார்த்தால், இவை எல்லாம் 'தர்மங்கள்' தான். அதாவது அன்புடனும் ஆசையுடனும் உதவப்படுவது. தயா தாட்சண்யமாகக் கொடுக்கப்படுவ தல்ல. இப்படிக் கொடுத்தால் 'தருமம்' என்னும் சொல்லின் தத்துவத்திற்கே முரணுகும். இந்தப் போராட்டத்தில் போராடுகிறவர்களிடத்திலும், காயப்பட்டவர்களிடத்திலும் அன்பும், நன்றியும், ஆதரவுங் காட்ட வேண்டுமானுல், பல வழிக ளுண்டு. போர் விமானங்களுக்காகவும் யுத்தத் தளவாடங்களுக்காகவும் உதவுவதற்கும் இதற்கும், மிகுந்த வேற்றுமை யுண்டு. ஆகவே, இவற்றிற்கு 'யுத்தத்தின் பொருட்டு செய்யப் படும் தர்மங்கள்' என்னும் வார்த்தைகளைத் தவிர, மிகவும் பொருத்தமான வார்த்தைகள் கிடைப்பது அரிது.

நம்மை விட இந்த யுத்தப் பொறுப்பை அதிகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறவர்களிடம் அன்பும் இரக்கமும் கொள்ளுகிறேம். இதன் பயனுகத் தான் யுத்தத்திற்கு தர்மங்கள் கொடுத்து ஆதரிக்கிறேம். 1943-ம்ஆூ இப்படிப்பட்ட தர்மங்களுக்குக் கூட மிகுந்த நெருக்கடி ஏற்படக் கூடும். நாமெல்லாம் மனிதர்கள் தான். நம் உணர்ச்சி, எந்த அளவிற்கு தூண்டப்படுகிறதோ அந்த அளவிற்கு நமக்கு இரக்கமும் உண்டாகிறது. இப்படி ஏற்படும் இரக்கம் நிலைத் திருப்பதில்லை; மாறிவிடுகிறது. யுத்தம் ஆரம்பமான காலத்தில், இதற்கு உதவி செய்ய வேண்டு மென்னும் ஆசை வெகுவாகத் தோன்றியது. ஆனுல், எந்த விதத்தில் உதவுவது என்று யாருக்கும் தெளிவாகத் தெரிய வில்லை. ஆகவே, எந்த வித உதவியும் செய்யப் பட்டதாகத் தெரியவில்லை. என்றுலும் அவரவர் உள்ளத்தில் யுத்தத்திற்கு உதவ வேண்டும் என்னும் ஆசை ஊன்றி யிருந்தது. ஆகவே, ஆஸ்பத்திரி சப்ளைகளுக்கும் கம்பளித் துணிகள் பின்னவும் பல கோஷ்டிகள் ஏற்பட்டன. ஆனுல், இந்த ஏற்பாடுகளெல்லாம் எதற்காக என்று மட்டும் யாரும் தெரிந்து கொள்ளவில்லை. இன்ன நோக்கத்தோடு தான் இந்த வேலை செய்யப்படுகிறது என்று நெடு நாட்கள் வரை உணர்ந்து கொள்ளக் கூடவில்லை. எனவே, அவர்களுடைய ஊக்கம் குறைந்தது. இருப்புச் சரக்காக இருக்கப் போகிறதற்காக, தாம் உழைத்துக் கொண்டே யிருக்கப் போவதில்லை என்று கூறி, பலர், தாம் செய்து வந்த வேலையை நிறுத்தி விட்டார்கள். சிலர் உடனே ஏற்படும் பயனைப் பற்றி கவலை கொள்ளாது தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்தனர். இப்படித் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்திருக்கா விட்டால், யுத்தம் திடீரென்று நம் தலைவாசலுக்கு வந்த போது, தேவைப் படும் இடங்களுக்கு ஆஸ்பத்திரி சப்ளைகளை வழங்க நாம் ஆயத்தமா யிருந்திருக்க முடியாது.

வெளி நாடுகளி லுள்ள நம் படைகளுக்கு 1941-ம் வருஷம் கிருஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு பொருள்களைப் பரிசுகளாக அனுப்ப வேண்டு மென்று திட்டமிட்டு, இதற்குப் பொருளுதவி புரியுமாறு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்த மாகாணம் முழுதும் இந்த வேண்டுகோள் பரவியது. இதனுல் சிறந்த முறையில் வசூலானது. 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல், படைகள் நம்முடனே இருக்கிறுர்கள். நம் பாதுகாவலர்களான இவர்கள், நம் மாகாணத்திலேயே இருக்கிறுர்கள். தேவைக்குத் தக்கபடி இந்நாட்டிலேயும் வெளி நாட்டிலேயும் நமக்காகப் போராட அவர்கள் ஆயத்தமா யிருக்கிறுர்கள். அவர்கள் இங்கிருக்கும் போது, மிகுந்த அசௌகரியத்தோடு தான் இருக்கிறுர்கள். ஆகவே கிருஸ்மஸை முன்னிட்டு அவர்களுக்குத் தருமம் செய்வது மட்டும் போதாது. துருப்புக்களுக்கு வசதிகள் அளிக்கும் பொருட்டு நிதி திரட்ட வேண்டி. மேன்மை தங்கிய நம் சென்னை கவர்னர் அவர்கள் விடுத்த அறிக்கையில், படையினரின் வாழ்க்கை மிகவும் சௌகரியமானதாக ஆக்க வேண்டியது நம் கடமை என்று குறிப்பிட்டார். அது தான் நம் கடமையும் கூட. இது ஒரு முழு நேர வேலை. அவர்களுக்குச் சிற்றுண்டிகள் வேண்டும். நமக்கு இரக்கம் தோன்றும் போது மட்டும், அவர்களுக்கு உதவினுல் போதாது; எப்போதும் உதவ வேண்டும். விளையாட்டுப் பொருள்களும், பொழுது போக்கு வசதிகளும், ஆஸ்பத்திரி சட்டைகளும் அவர்களுக்கு வேண்டும். தகுந்த பலன் எதுவும் ஏற்படாது என்று தோன்றிய காலத்திலும் கூட இடைவிடாது உழைத்துக் கொண்டிருந்ததின் பயனுக, நெடு நாட்களுக்கு உதவத் தக்கபடி ஏராளமான ஆஸ்பத்திரித் துணிகள் நம் கைவச மிருக்கின்றன. இது வரை இருந்து வந்ததை விட இந்தத் துணிகளுக்கு அதிகமான தேவை ஏற்பட்டாலுங் கூட, நாம் சமாளிக்க முடியும். ஆஸ்பத்திரிகளுக்குத் துணிகள் மட்டு மன்றி இன்னும் பல பொருள்கள் தேவை. இவற்றை வாங்கப் பணம் வேண்டும்.

**நல்ல உதவி.** இரக்கச் சித்தமுடையவர்களும் உதாரகுணமுடையவர்களும் இம்மாகாணத்தில் ஏராளமா யிருக்கிறுர்கள். தனிப்பட ஒவ்வொருவருக்கும் விடுத்த வேண்டுகோட்களுக்கு இணங்கி, அவர்கள் அளித்த உதவியி லிருந்து இது நன்கு விளங்குகிறது. சென்னை ஆம்புலன்ஸ் நிதி, லண்டன் விமானத் தாக்குதலினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பொருட்டு லார்ட் மேயர் வசூலித்த மீட்சி நிதி, கிருஸ்மஸ் உதவிநிதி ஆகியவற்றிற்கு அவர்கள் அளித்த ஆதரவி லிருந்து, எவ்வளவு தாராள சிந்தையுடையவர்கள் அவர்கள் என்று தெளிவாகிறது. இந்த வேண்டுகோள்கள் எல்லாம் கொஞ்ச காலத்திற்குத் தான் செல்லும்; பிறகு செல்லாது. ஒரு சில மாதங்களோ, அல்லது வாரத்தில் 2 அல்லது 3 நாட்களோ மட்டும் ஊக்கமாக நம்மைக் காக்கும் படையினர் போராடிக் கொண்டிருந்து விட்டு, பிறகு களைப்படைந்து, அக்கரையோடு போராடாது போவார்களானுல், நமக்கு எவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்டு விடும். "தங்களுக்காக நான் பெரிதும் இரக்கப்பட்ட காலம் ஒன்று உண்டு; தங்களுக்கு உதவ வேண்டுமென்று நான் மிகவும் கவலையோடிருந்தேன்; ஆனுல், எத்தனை நாட்களுக்குத் தான் தங்களை நான் நினைத்துக் கொண்டிருக்க முடியும்" என்று யுத்தக் கைதிகளிடமாவது விமான தாக்குதல்களுக்கு ஆளானவர்களிடமாவது சொல்ல முடியுமா? ஆகவே இவர்களை 1943-ம் வருஷம் முழுதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனென்றுல், நம் உதவி, சென்னை மாகாணத்தி லுள்ள

# யுத்த சஞ்சிகை

## வார வெளியீடு

மலர் III] 1943-ம் ௵ ஜனவரி ௴ 1௳. [இதழ் 1

## புதிய வருஷத்தின் போக்கு

**இன்று புது வருஷம்.** எதிர் காலத்தின் ஒரு பகுதி இதில், இந்தியாவின் எதிர் காலம் எப்படி அமையும்? இது வரைக் கனவிலுங் கூட எதிர் பார்த்திராத செல்வங்கள் பொழியுமா? அல்லது அளவிட முடியாத துன்பங்கள் நேருமா? இந் நாடு எந்த வகை வாழ்விற்குத் தன்னை ஆயத்தப் படுத்திக் கொண்டிருக்கிறதோ அதற் கேற்றபடி தான், அதன் எதிர் காலமும் அமையும். இத்தலையங்கத்தில் இது பற்றி ஆலோசிப்போம். இதில் யுத்தத்தைப் பற்றிய குறிப்புக்களே தேவை யில்லை. என்றாலும், கூடிய விரைவில் நேச நாட்டினர் இந்த யுத்தத்தில் வெல்லுவார்கள் என்று மட்டும் குறிப்பிடுவோம். இந்தியாவில் வசிக்கும் நாம், உடனடியாகக் கவனிக்க வேண்டியது " சமாதானத்தை நிலை நாட்டும் வழி எது? " என்பதைப் பற்றித்தான்.

" உன்னை உணர்ந்து கொள்" என்பது தான் இப் புது வருஷச் செய்தியாக நாம் விடுக்கின்றோம். இது பின் பற்றத் தக்க சிறந்த கொள்கை. இன்று இந்திய அறிஞர்களும் இது பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு, பிரிட்டனில் பல பிரசினைகள் எழுந்தன. அவற்றை அறிவுப் பிரசினை, சமூகப் பிரசினை, பொருளாதாரப் பிரசினை என்று வகுத்து அவற்றிற்கு முடிவு காணத் தவறி விட்டார்கள். அதனால் ஏற்பட்ட ஆபத்துக்கள் சென்ற 3 வருஷங்களாக மிகக் கடுமையான முறையில் தலை தூக்கிக் கொண்டிருக்கின்றன. வீணாகக் காலங் கடத்தியதனால் பிரிட்டனுக்குப் பெரும் தீங்குகள் நேர்ந்தன. யுத்தம் முடிந்த பிறகு, இந்தியாவிலும் அது போலவே குற்றம் செய்யக் கூடாது. யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போதே, இந்நாடு என்ன செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டும். இந் நாடு செய்ய வேண்டிய வேலைகள் அநேகம். அவற்றைச் செய்து முடிக்க பல ஆண்டுகள் செல்லும். ஆகவே தான் எந்தெந்தத் துறைகளில் எவ்வளவு வேகமாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தெரிந்து, நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் பல விதத் துன்பங்களில் நீந்தி இந்தியா கரை யேற வேண்டி யிருக்கிறது.

இது பற்றி அநேக சிக்கல்கள் இருக்கின்றன; அவற்றை பிய்த்தெறிய வேண்டி யிருக்கின்றது. அநேக சுரங்க வெடிகள் உண்டு; அவற்றையும் அகற்ற வேண்டும். அவையாவன:—

1. கைத் தொழிலில் விரைவில் முன்னேற்ற மடைந்த நாடுகளெல்லாம் பல விதத் துன்பங்களுக்கு ஆளாயின என்பது அனுபவ சித்தாந்தம். இந்தத் துன்பங்களைத் தவிர்க்க இந்தியாவினால் எப்படி முடியும்? சர்வ தேச முறைப்படி எதேச்சை இந்தியா தன்னை எப்படி மீட்டுக் கொள்ளப் போகிறது.
2. ஒரு நாட்டிற்கு இரண்டு வகைப் பொருளாதாரப் பிரசினைகள் உண்டு. அதாவது விவசாயப் பிரசினை, கைத் தொழில் பிரசினை. இவை இரண்டும் ஒன்றிற் கொன்று பெரிதும் மாறு பட்டவை. இவற்றிற்கு முடிவு காண்பது எப்படி?
3. இராணுவத்தில் இப்போது 10 லட்சம் இந்தியர்களுக்கு மேல் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் அநேகர் சேரக் கூடும். இவர்களில் பெரும்பாலோர் இராணுவத்தை விட்டு விலகி மீண்டும் பொது ஜனங்கள் ஆகத் தான் போகிறார்கள். தன் கௌரவத்தை நிலை நாட்டிப் பாதுகாத்த இவர்களுக்கு, இந்தியா என்ன செய்யப் போகிறது?

இந்தியாவின் உள் நாட்டுப் பிரசினைகள் இப்படிப் பட்டவை. மற்றும் பல பிரசினைகளும் உண்டு. அரசாங்கத்தின் மனப் போக்கையும் இலட்சியத்தையும் பொது ஜனங்களின் மனப் போக்கையும் இலட்சியத்தையும் இவை பாதிக்கும். உதாரணமாக:—

1. உலக ஒற்றுமை, நடை முறையில் பலிதமாகுமா? ஆகுமானால் எப்படி அதைப் பெறுவது?
2. தேய்ந்து போன சர்வ தேச சங்க மொன்றிருக்கிறது. இதை உயிர்ப்பிக்க வேண்டுமென்று கோடிக் கணக்கான மக்கள் விரும்புகிறார்கள். இதை எப்படிச் செய்வது?
3. நம் எதிரிகளின் நோக்கத்தையும் செயலையும் வெறுக்கிறோம். ஆகவே, அவர்களோடு நாம் போராடுகிறோம். யுத்தத்திற்குப் பிறகு நாமும் நேச நாடுகளும், ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, விஷி பிரான்சு, மற்றும் ஹிட்லருக்கு ஆதரவாயுள்ள நாடுகளிடம் கொள்ள வேண்டிய போக்கு எது?
4. விஞ்ஞான சம்பந்தமாகப் புதிதாகக் கண்டு பிடிக்கத் தக்கவை தான், நம் தலை எழுத்தை நிர்ணயிக்கக் கூடியவை போலிருக்கிறது. இவை மனித இனத்திற்கே எஜமானத்துவம் பெற்று விட்டன. அழிவு வேலையையும், அதனால் ஏற்படும் பயன்களையும், அதற்கான ஆயுதங்களை உற்பத்தி செய்வதையும் கட்டுப் படுத்த, மனித இனம் எப்போது மீண்டும் ஆதிக்கம் கொள்ளப் போகிறது?

இந்தப் பிரசினைகளை வெல்ல முடிவானதோர் வழி காண வேண்டுமானால், சமாதானம் ஏற்பட்டு வாழ்க்கை முறை மீண்டும் செவ்வையாக அமையும் வரைக் காத்திருக்க வேண்டுமென்று நான் சொல்ல வர வில்லை. ஆனால், இதில் என்ன கஷ்டமென்றால், யுத்தம் முடிவடைந்த வுடனேயே, இப்பிரசினைகள் வெகு விரைவாக இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் கிளம்பும். இவற்றிற்கு முடிவு காண, முன்னதாகவே ஆயத்தமா யில்லாதவர்கள் பாடு, பெரும் திண்டாட்டமாகத் தான் முடியும்.

நாம் குறிப்பிட்ட பிரசினைகளில் முக்கியமானதோர் பிரசினையான இந்திய அரசியல் அமைப்பைக் குறித்துக் கூறவில்லையே என்று சிலர் நினைக்கலாம். வேண்டுமென்றே தான் அது பற்றி இங்கே குறிப்பிட வில்லை. இப்போதுள்ள நிலைமையில் இவ்வளவு மாறுபாடுள்ள பிரசினையைக் குறித்து ஆராய்ச்சி செய்வது என்பது ஏறக் குறைய முடியாத காரியம் என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், மக்களின் மன நிலைமை தகுந்தபடி பண் பட்டிருக்க வில்லை. கட்சிக் கோரிக்கைகளும் ஆபாசமானவை. இந்த இரண்டு அடிப்படையான தத்துவங்களையும் உணர்ந்து கொண்டதனால், இக்கட்டுரையை வளர்க்க நாம் விரும்ப வில்லை. முதலாவதாக, சமாதானம் ஏற்பட்டவுடனேயே இந்தியா சுயேச்சை பெற்று விடும். இரண்டாவதாக, அந்த யதேச்சை இந்தியாவின் அரசியலைப் பொருத்த சட்ட நுணுக்கங்களை நாம் சாதகமான முறையில் இப்போது விவாதிக்கக் கூட வில்லையானாலும், இங்கே குறிப்பிட்டுள்ள மற்ற பிரசினைகளைக் குறித்து விவாதிக்கலாம்.

எதிர் காலத்தில் இன்னது தான் சம்பவிக்குமென்று தேசியப் போர் முனையாளர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாட்டுப் பற்றும் உண்டு. இவற்றை ஆதாரமாகக் கொண்டு நாம் ஒரு வார்த்தை கூறுவோம்: ஒரு பெரிய ஸ்தாபனம், அதற்கு இந்நாட்டின் நலன்களிலுள்ள அக்கறை, வெகு அதிகம். இந்நாடு முன்னேற்ற மடைய வேண்டும் என்னும் உறுதி மிகவும் உண்டு. இதன் நாட்டுப் பற்று நாள் தோறும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. எந்தக் காரியத்தையும் காலா காலத்தில் செய்ய வேண்டுமென்னும் உறுதி கொண்டிருக்கிறது. இந்த ஸ்தாபனத்தை ஆதாரமாகக் கொண்டு ஒரு ஆராய்ச்சிக் கழகம் அமைந்து கொண்டிருக்கிறது. சர்வ தேசச் சட்டம், பொருளாதாரம், அரசியல் பொருளாதாரம், சமுதாய சாஸ்திரம், கல்வி முதலிய பிரசினைகளில் வல்லவர்கள் அக்கழகத்தைச் சார்ந்திருப்பார்கள். இக்கழகம் ஒரு பெரிய புது புத்தகசாலையைச் சேகரித்து அமைக்கும். மிகவும் முக்கியமான தற்காலப் பிரசினைகளைக் குறித்து, இந்நாட்டிலுள்ள நூற்றுக் கணக்கான

(8-ம் பக்கம் பார்க்க)



# "ஆபத்துக் காலத்தில் கட்சிகளுக்கு இடமேது?"

## நாட்டிற்கு விடுதலையளிப்பது பரிபூரண ஒற்றுமையே

### கனம் நீதிபதி எஸ். வாட்ஸ்வொர்த், ஐ.சி.எஸ். எழுதியது

*அரசியல் மாகாநாடுகள், விஷயாலோசனைக் கமிட்டிகள், கட்சி சூழ்ச்சிகள், சவடாலான எழுத்துப் பிரசங்கங்கள், கோப தாபங்கள் ஆகியவற்றிற்குப் பிறகு உருவாகும் தீர்மானங்களைக் குறித்து நமக்குக் கவலை யில்லை. இது வரை நாம் செய்த தவறுகள் எவை? அத் தவறுகளை நாம் அடுத்த வருஷமும் செய்யக் கூடாது. நாம் என்னென்ன செய்து முடிக்க வேண்டும்? என்று இவ்வெல்லாம் காத்திருந்து பல முறை அலசிப் பார்த்து யோசனை செய்து உறுதியாகத் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். சிறந்த தீர்மானங்களைக் கொண்டு, நரகத்திற்கு வழி தேடலாம் என்று கூறும் குறும்பனின் பரிகாச வார்த்தைகளை நாம் அலட்சியம் செய்வோம். ஏனென்றால் சிறந்த தீர்மானங்கள் தான் மோட்ச லோகத்திற்கு வழி காட்டும். ஒவ்வொரு வருஷக் கடையிலும் தான் அவ்வருஷத்தில் செய்த நன்மை தீமைகள் எவை என்று சீர்தூக்கிப் பார்ப்பது மிகவும் நன்மை தரும். அப்போது தான் அடுத்த வருஷத்தில் குற்ற மில்லாமல் காலந் தள்ள இயலும். தனிப்பட்ட ஒருவருக்கு எது நன்மையோ, அது ஒரு நாடு முழுதுக்குமே நல்லதாகும். இது வரை நிகழ்ந்த குற்றங்களுக்காக ஒருவரை யொருவர் குறை கூறிக் கொள்ளுவதை விட்டு விடுவோம். நாம் செய்யக் கூடாத காரியங்களைச் செய்தோமென்றும், நாம் செய்ய வேண்டியவற்றை செய்யாது விட்டு விட்டோமென்றும் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒப்புக் கொண்டு நம் தேசீய ஒற்றுமையைப் புலப்படுத்துவோமாக! நாம் செய்த குற்றங்களை ஒப்புக் கொண்ட பிறகு, 1943-ம் வருஷத்தில் இன்னும் சிறந்த முறையில் வேலை செய்ய வேண்டுமென்று ஒன்று பட்டு உறுதி கொள்ளுவோமாக! 1942-ம் வருஷத்தில் நாம் செய்த குற்றங்கள் எத்தனையோ; கடவுளுக்குத் தான் தெரியும். இந்த வருஷத்தின் முதல் ஒன்பது மாதங்களிலும் இராணுவத் துறையிலும் அரசியல் துறையிலும் அடுத்தடுத்து இடைவிடாது தோற்றுக் கொண்டே வந்தோம். முத்துத் துறை முகத்தை ஜப்பானியர்கள் தாக்கிய போது நேர்ந்த கொடும் நஷ்டத்தைக் கருதிப் பார்த்தால், கீழ் நாடுகளில் நம் படைகள் தோற்றது ஒரு ஆச்சரியமல்ல. கீழக் கடல்களில் நாம் ஆதிக்கத்ததை இழந்தது தான் இதற்குக் காரணம். மீண்டும் இந்த ஆதிக்கத்தைப் பெற நாம் முயற்சிக்கின்றோம். இந்த முயற்சி முன்னேற முன்னேற எதிரி விரட்டப் படுவான். இதன் பொருட்டு நம் படைகள் எந்த அளவிற்கு ஒத்திருந்து வேலை செய்கிறார்களோ, அவ்வளவு விரைவாக எதிரிகளை விரட்டி யடிக்கக் கூடும். இதற்காக நாம் உதவலாம். இதற்கு, பொது மக்களின் உணர்ச்சி கெடாதபடி பாதுகாக்கலாம். முட்டுக் கட்டைக்காரர்கள் உண்டாக்கும் தீமைகளைத் தடுக்கலாம். அவர்களுடைய உறவினர்களாகிய ஒத்துழையாமைக் காரர்களால் நேரிடும் தீமைகளும் நம்மை நெருங்க ஒட்டாதபடி தடுக்கலாம். படைகளுக்கு ஆள் திரட்டும் வேலையில் நம்மால் இயன்ற வரை உதவலாம். இப்படித் திரட்டப் பட்டவர்களின் ஊக்கம் குலையாதிருக்கும்படி அவர்களை வைத்திருக்கலாம். இவை நாம் இடைவிடாது செய்ய வேண்டிய வேலைகள். படைகளில் சேர இளைஞர்கள் ஆவலா யிருக்கிறார்களென்றும் ஆனால், அவர்களுடைய தாய்மார்களும் நண்பர்களும் தடுக்கிறார்களென்றும் அடிக்கடி கேள்விப் படுகிறோம். ஆபத்திற்கு உள்ளாகாதபடி விடுதலைப் போராட்டத்தில் வெற்றி பெற முடியாது. இப் போராட்டத்தில் தமக் குள்ள கடமையை நிறைவேற்ற ஆயத்த மில்லாத எவரும், இந்தப் போராட்டத்தினால் ஏற்படக் கூடிய பலனுக்கு உரியவர்களல்ல.* **மிருகத் தனமான ஒழுக்க மற்ற ஒரு எதிரிக்கு அடங்கிப் போகாமல் 5 வருஷங்களாக எதிர்த்துப் போராடிப் பல வகைக் கஷ்டங்களுக்கும் உள்ளாகி மடிந்து கொண்டு வரும் சீன ஆண்களையும் பெண்களையும் குறித்து சற்று சிந்தியுங்கள். வீட்டிற்குள் பதுங்கிக் கொண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இது வல்ல சமயம். நீங்கள் அப்படிச் செய்வீர்களானால் நீங்கள் உள்ள வீட்டில் மேலேயே வெடி குண்டு விழ வேண்டுமென்று கோரியவர்களாவீர்கள்.** *நம் இளைஞர்கள் நம் எதிரிகளை எதிர்த்துப் போய் எல்லைப் புரத்திலிருந்து அவர்களை விரட்டி யடிக்க வேண்டும். அல்லா விட்டால், நிரந்தரமான சமாதானமோ விடுதலையோ நமக்குக் கிடைக்கப் போவதில்லை.*

அரசியல் துறையிலுங் கூட 1942-ம் வருஷத்தில் பொதுவாகத் தோல்வி தான் ஏற்பட்டது. இந்த வருஷக் கடைசியில் கிடைத்த வெற்றிகளெல்லாம் இராணுவப் போக்கிற்குப் புத்துயிரளித்த போதிலும் கூட அத் தோல்விகளுக்கு இன்னும் ஈடு செய்யக் கூட வில்லை. இந்தத் தோல்வியைக் குறித்து ஒருவரை யொருவர் குறை கூறிக் கொண்டிருந்தோம், ஒவ்வொரு கட்சியும் மற்ற கட்சிகள் தான இத் தோல்விக்குக் காரணம் என்ற முடிவிற்கு வந்தன. ஒரு கட்சியாவது பொது நன்மையை முதன்மையாகக் கருதவில்லை. நாடு முழுதுக்குமே நன்மையுண்டாகும் என்பதை முன்னிட்டு, தம் கட்சி நன்மைகளை விட்டுக் கொடுக்க விரும்ப வில்லை. அரசியல் விவாதங்களுக்கு இது வல்ல இடம், இப்போது இந் நாட்டிலுள்ளவர்கள் மிகுந்த எதேச்சையோடிருக்கிறார்கள். ஒருவரை யொருவர் நம்பாது சந்தேகப் படுவது, கட்சித் தன்னலம், மாறுபட்ட விஷயங்களில் இசைந்து வர மறுப்பது ஆகியவற்றால், உள்ள யதேச்சையும் பாதிக்கப்படும். நாமெல்லாம் விரைவில் அடைய எதிர் நோக்கி யிருக்கும் மகத்தான யதேச்சை இவற்றால் கிடைக்காமற் போய் விடும். இப்போது ஏற்பட்டுள்ள ஆபத்து மகத்தானது. எதேச்சையை நாடும் மக்களுக்கும் இந்தியாவிற்கும் பெருந் திகிலை இது உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது. இதை நாம் உணர வேண்டும். எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட வேண்டும். உலக விடுதலை என்னும் பொது நோக்கம் ஈடேற வேண்டி நம்மாலான அனைத்தும் செய்ய வேண்டுமென்று நமக்குள் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். 1943-ம் வருஷம் நாம் இப்படிச் செய்வோமா? "என் இனத்தவருக்கு எந்த அளவிற்கு யதேச்சையும் ஆதிக்கமும் தேவை என்று என் மனதிற்குப் படுகிறதோ, அந்த அளவிற்கு அவை வழங்கப்பட வேண்டும்; இல்லாவிட்டால் உலக விடுதலைக்காகப் போராடுகிறவர்களுக்கு நான் உதவி செய்ய மாட்டேன்" என்று சொல்லுவது கொஞ்சங் கூட நியாயமல்ல. **சமரசத்தின் பேரில் தான் எல்லா வகை விடுதலைகளும் உண்டாகின்றன.** பாஸிஸ்ட் ஆட்சி முறை தவிர, வேறெந்த அரசியல் திட்டமும் எல்லாக் கட்சியினருக்கும் திருப்தியளிக்கத் தக்கதாக இருக்க முடியாது. கட்சிக் கொடுமை நாளடைவில் தனிப்பட்டவரின் ஆதிக்கமாக மாறுகிறது. ஜெர்மனியிலும் இத்தாலியிலும் இக் கொடுமைகளால் ஏற்பட்ட கொடுமைகள் எல்லாம் இதனாலும் உண்டாகும். பெரும்பான்மையோரைப் போலவே சிறுபான்மையோருக்கும் விடுதலை வழங்க வேண்டியது நியாயந் தான். நியாயமான அளவிற்கு, சிறு பான்மையோருக்குப் பாதுகாப் பளிக்காத அரசியல் திட்டம், நாட்டிற்கு விடுதலையைத் தராது. எவ்வளவு நல்லெண்ணத் தோடு முயன்ற போதிலும் கூட, இந்தியாவிற்குத் திருப்திகரமான முறையில் ஒரு அரசியல் அமைப்பை வகுப்பது மகா கஷ்டமான வேலை. விரோத மனப் பான்மையோடும் பரஸ்பர நம்பிக்கை யில்லாமலும் திருப்திகரமான அரசியல் அமைப்பை வகுப்பது என்பதும் முடியாத காரியம். ஆகவே, நல்லெண்ணமும், நாட்டுப் பற்றும், மக்கள் இனத்தின் மீது அக்கறையும் கொண்டுள்ள

படைகளுக்கும், வெளி நாடுகளிலும் இந்தியாவின் மற்ற பாகங்களிலு முள்ள சென்னைப் படைகளுக்கும் படைகள் வசதி நிதியினின்று வழங்குவதுமட்டு மன்றி, கீழக்கோடியில் ஜப்பானியர் வசப்பட்ட லட்சக் கணக்கான சிவில் யுத்தக் கைதிகளுக்கும் இராணுவ யுத்தக் கைதிகளுக்கும் நம்மால் இயன்ற வரை உதவக் கடமைப் பட்டிருக்கிறோம். இதுவரை அவர்களுக்கு நாம் உதவக் கூடாத நிலையி லிருந்தோம்; இப்போது உதவக் கூடும். இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தார் ஏராளமான சாமான்களையும், மருந்துப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் லாரென்ஸ் மார்க்ஸுக்கு அனுப்புகிறார்கள். அங்கிருந்து மாற்றுக் கப்பல்களில கீழக் கோடியிலுள்ள யுத்தக் கைதிகளுக்கு அவை ஏற்றுமதியாகின்றன. உஷ்ணப் பிரதேசத்தி லிருந்து வடக்கேயுள்ள குளிர் தேசத்திற்கு இந்த யுத்தக் கைதிகளில் அநேகரை அனுப்பப் போவதாக நவம்பர் மாதம் செய்தி கிடைத்தது. உடனே அவர்களுக்கு 20,000 செட் கம்பளி உடுப்புக்கள் அனுப்ப ஏற்பாடுகள் செய்தோம். கீழக் கோடியிலுள்ள தனிப்பட்ட யுத்தக் கைதிகளுக்கு பார்சல்கள் அனுப்ப முடியாது. ஆனால் மொததமாக அனுப்புவதற்கு அனைவரும் உதவலாம். இதன் பொருட்டு உதவப் படும் ஒவ்வொரு பொருளும் பெரிதும் மதிக்கத் தக்கது தான். இந்த உதவி தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும். ஏனென்றால், யுத்தக் கைதிகளுக்கு இவை எப்போதும் தேவை.

யுத்தத்திற்குத் தருமம் செய்யும்படி பிரசாரம் செய்வது எப்போதும் கஷ்டமானதோர் வேலை. தாம் உதவும் தொகை எதற்குப் பயன் படுகிறது என்று அறிய ஒவ்வொருவரும் விரும்புவார்கள் தான். இது நியாயமுங்கூட. இந்தக் கொடையாளிகளின் தாராள உணர்ச்சியைத் தூண்டி விட வேண்டுமானால், நோயாளிகளுக்கும், காயப்பட்டவர்களுக்கும், யுத்தக் கைதிகளுக்கும், விமானத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், நம்மைக் காக்கும் பொருட்டு இங்கே காத்திருந்து பலவகை அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருக்கும் தரைப் படையினருக்கும் கடற் படையினருக்கும் விமானப் படையினருக்கும், எந்தெந்த வகை உதவிகள் தேவை என்பது பற்றி விவரமாகத் தெரிவிக்க வேண்டியது அவசியந் தான். இவ்வளவு தகவல்களையும் ஒவ்வொருவருக்கும் தெரிவிக்க வேண்டுமானால், ஏராளமான காயிதம் வேண்டும். இப்போது காயிதம் கிடைப்பது அரிதா யிருக்கிறது. பத்திரிகைகளிலும் இடம் கிடையாது; எனவே எல்லாவற்றையும் வெளியிட முடிவ தில்லை. ரேடியோ மூலம் தெரிவித்தாலும் ஒரு சிலர் மட்டுந் தான் தெரிந்து கொள்ளக் கூடும். இத்தனைத் தகவல்களையும் எழுதுவ தென்றால் அதிக நேரம் பிடிக்கும். சிப்பந்திகளோ மிகவும் கொஞ்சம்; அவர்கள் செய்ய வேண்டிய வேலையோ மிகவும் அதிகம். சென்ற வருஷம் கிருஸ்மஸ் விழாவை முன்னிட்டு படையினருக்கு பரிசுகள் வழங்க வேண்டி பொருள் கோரி விடுத்த வேண்டுகோளுக்கு மிகச் சிறந்த வசூல் கிடைததது. இதற்கு முக்கயமான காரணம் என்ன வென்றால், இம்மாகாணத்தி லுள்ள பலருக்கும் தனித் தனியே கடிதங்கள் எழுதியது தான். இநத வருஷம் அப்படிக் கடிதங்கள் அனுப்பக் கூட வில்லை. காயிதம் மிகவும் அரிதாகி விட்டது. இதற்கு ஒரு காரணம். இதற் கென்று சென்ற வருஷம் மிகவும் கஷ்டப் பட்டு உழைத்தவர்கள் அநேகர், இப்போது வேறு துறைகளில தம் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த வருஷ வசூல் பெரிதும் குறைந்து விட்டது. பிரசாரம் செய்வது மேலும் மேலும் கஷ்டமாகிக் கொண்டு வருகிறது. யுத்தக் கைதிகளுக்கும், காயப்பட்டவர்களுக்கும், படையினருக்கும் உதவுகிறவர்கள், அவர்களுக்கு நெடுநாட்கள் உதவ வேண்டும் என்று உணர்ந்து, அதற்கேற்றபடி அவ்வப்போது தொடர்ச்சியாகப் பொருளுதவி செய்து கொண்டிருக்க வேண்டும். மிகச் சிறந்த திட்ட மொன்றை இம்மாகாணத்தில் ஆரம்பித்திருக்கிறார்கள். இது தான் படைகளின் வசதிக்காக "வாரத்திற்கு ஓரணா" திட்டம். நம்மில் சிலர் வாரத்திற்கு ஒரு அணாவிற்கு அதிகமாகவே கொடுக்கக் கூடும். மேலும் சிலர் யுத்தக் கைதிகளுக்கும் யுத்தத்தினால் பாதக மடைந்தவர்களுக்கும் உதவ, ஆசை கொள்ளலாம். இவர்களுடைய தேவைகள் எப்படி நெடுநாட்களுக்கு இருக்குமோ, அதுபோலவே, இந்த "வாரத்திற்கு ஓரணா" நிதியும் நெடு நாட்களுக்கு உதவும். ஆகவே இது மிகச் சிறந்த தோர் திட்டந் தான். சிலர் உதவ ஆவலா யிருக்கிறார்கள். ஆனால், இந்த வேலைகள் நடைபெறும் இடத்திற்கு வெகு தூரத்திற்கு அப்பால் வசிக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். ஆகவே, தாம் உதவக் கூட வில்லை என்று வருந்துகிறார்கள். ஆனால் அவர்கள் செய்யக் கூடிய வேலை பெரிதும் உண்டு. முன் கூறிய முறைப்படி ஒழுங்காக உதவி கிடைக்கத் தக்கபடி ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்தத் தொகை எவ்வளவு கொஞ்சமாக இருந்தாலும் பாதகமில்லை. இப்போது செய்யப் படும் வேலைகளைக் குறித்துத் தமக்குக் கிடைக்கும் தகவல்களை வெகுவாகப் பரவச் செய்ய வேண்டும். யுத்தத்திற்கான தருமங்களுக்கு நிதி திரட்டி உதவும் இந்த வேலை 1943-ம் வருஷத்தில் சற்று இலகுவாகும். இந்த வேலை இந்த வருஷத்தில வெகுவாக அதிகப்பட்டது. மேலும் இனி அதிகப்படும்.



## மன்னர்பிரானும் அரச குடும்பத்தினரும்

*

பிரிட்டன் தேசீயப் பிரார்த்தனை நாளன்று, மன்னர் பிரானும் அரச குடும்புத்தவரும் கோவிலுக்குப் போய்த் திரும்புகின்றனர்.



# இளைஞர்களும் யுத்த முயற்சியும்

## குண்டுகள் விழுந்தும் பீதி கொள்ள வில்லை

### படையிலும் சேர்ந்தனர்—பணமும் திரட்டினர்

### சென்னை மாகாண கல்வி இலாக்கா டைரக்டர் மிஸ்டர் ஆர். எம். ஸ்டாதாம் எழுதியது

இந்தப் புது வருஷத்தில், இந்நாட்டிலுள்ள இளைஞர்களான ஆண்களுக்கும் பெண்களுக்கும் சிறந்த பாதுகாப்பும் முன்னேற்றமும் கடவுள் அளிப்பாராக! என் உத்தியோக காலத்தில் பாதி நாட்கள் வரை இம்மாகாணத்திலுள்ள இளைஞர்களோடு நாள் தோறும் நெருங்கிப் பழகி வந்திருக்கிறேன். ஆகவே, அவர்களுடைய நோக்கம், ஆசை, கஷ்டங்கள் முதலியவற்றை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறேன். யுத்தம் இந்தியாவை யடுத்து விட்டது. மற்ற இனத்தவர்களைப் போலவே, இந்திய இளைஞர்களையும் இது பாதிக்கிறது. 1942-ம் வருஷத்தில், தம் எதிர் கால வாழ்க்கைக்காகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த இளைஞர்களான ஆண்களும் பெண்களும், உறுதியற்ற யுத்த கால நிலைமையை முன்னிட்டு, மிகவும் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தார்கள். எவ்வளவு தான் மிருகத் தனமானதாகவும் அழிக்க வல்லதாகவும் இந்த யுத்தம் இருந்த போதிலும் கூட, இந்திய இளைஞர்களான ஆண்களுக்கும் பெண்களுக்கும் சாதாரணமாக ஏற்படக் கூடிய பிரசினைகளின் போக்கைத் தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் இது பல வகைகளிலும் மாற்றி விட்டது. இம்மாகாணத்திலுள்ள இளைஞர்கள் யுத்த முயற்சியில் பெரிதும் நெருங்கி ஈடு பட வேண்டியவர்களாகி விட்டார்கள். இவர்கள் மிகச் சிறந்த முறையில் படைகளில் சேர்ந்திருக்கிறார்கள்; பொருளுதவி செய்திருக்கிறார்கள். பொது மக்களின் உணர்ச்சி கெடாமல் வைத்திருக்கிறார்கள். இவை பற்றி சென்னை மாகாணம் பெருமை கொள்ளத் தகும். சென்ற சில நூற்றாண்டுகளாக உள் நாட்டு யுத்தமோ வெளி நாட்டு யுத்தமோ இம்மாகாணத்தில் நடை பெறவில்லை யென்று நினைக்கிறேன். ஆனால் இந்தியாவின் வட பகுதியிலுள்ள மாகாணங்களில் நடந்திருக்கின்றன. என்றாலும் படையின் எல்லாப் பகுதிகளுக்கும், உள் நாட்டுப் பாதுகாப்புப் படைக்கும் அநேகர் வந்து சேர்ந்திருக்கிறார்கள். யுத்த முயற்சிக்கு பண உதவியும் மற்ற பல வகை உதவிகளும் செய்திருக்கிறார்கள். மற்ற மாகாணங்களில் இந்த அளவிற்கு உதவி கிடைக்கவில்லை. எந்த அளவிற்குப் படைகளில் ஆட்கள் சேர்ந்திருக்கிறார்களென்று உத்தியோக தோரணையில் அறிவிக்கப்படுகிறது; ஆகையால் அந்த விவரங்களை நான் இங்கே குறிப்பிட வில்லை, என்றாலும் சிறந்த அளவிற்கு உதவி கிடைத்திருக்கிறது. படையில் சேர முன் வந்தவர்களுக்குப் பயிற்சியும் உடை முதலிய வசதிகளும் சேகரித்துக் கொடுக்கத் தக்க அளவிற்குத் தான், இந்த உதவி பயன் பட்டது. இந்த உதவிகள் வழங்கியவர்கள் இராணுவ வகுப்பினர் மாத்திர மல்ல. போராட்டமே இன்ன தென்று அறியாத ஆயிரக் கணக்கான குடும்பங்களி லிருந்து, இளைஞர்கள் தம் நாட்டைக் காக்கும் கடுமையான வேலையில் ஈடுபட முன் வந்திருக்கிறார்கள். இம்மாகாணம் முழுதும் நான் வெகுவாக சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறேன். பல தொழில்களில் சேர்ந்தும், குமாஸ்தாக்களாகவும், ஆசிரியர்களாகவும், வேலை செய்து கொண்டிருந்த அநேகம் இளைஞர்கள் படைகளில் சேர்ந்திருக்கிறார்கள் என்று தெரிந்து அவர்களை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். நான் ஒரு உபாத்தியாயர். என் தொழிலைச் சேர்ந்தவர்கள் படைகளில் சேருவார்கள் என்று எதிர் பார்ப்பதில் பிரயோசனமில்லை; என்றாலும் என் தொழிலைச் சேர்ந்தவர்களுங் கூட, படைகளில் இப்போது சேர்ந்திருக்கிறார்கள்; உதாரணமாக யுத்தக் கைத் தொழிலாளர்கள் ஏராளமாகச் சேர்ந்திருக்கிறார்கள். சென்னை மாகாணத்தைப் போல வேறெந்த மாகாணத்திலும் இந்த அளவிற்குச் சேரவில்லை. இவர்களில் அநேகர் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள். சாதாரணமாக இவர்கள் ஆசிரியப் பயிற்சி சாலையில் சேர்ந்திருப்பார்கள். இப்போது அவர்கள் யுத்தக் கைத் தொழில் பயிற்சி சாலையில் இருக்கிறார்கள். அன்றியும் இம் மாகாணத்தி லிருந்து அநேக மாணவர்கள் இந்திய வியாபாரக் கப்பல்களிலும், இந்தியக் கப்பற் படையிலும் பயிற்சி பெறுகிறார்கள். தரைப் படைக்கும் விமானப் படைக்கும் தம் மாணவர்களில் சிலரை உதவாத கல்லூரியே இம் மாகாணத்தில் கிடையா தென்று சொல்லலாம். உள் நாட்டுப் பாதுகாப்புப் படையில் சேரவும் நர்சிங் படையில் சேரவும் கோரும் மனுக்களுக்குப் பஞ்சமே கிடையாது. என் இலாக்கா, போர் முனையில் தான் மிகுந்த ஆதிக்க முடையதே யொழிய, போராடுவதிலல்ல என்று பொதுவாக நினைக்கிறார்கள். ஆனால் சில புள்ளி விவரங்களை நான் பெருமையோடு வெளியிடுகிறேன். என் இலாக்காவில் ஏறக்குறைய 3,800 சிப்பந்திகள் இருக்கிறார்கள் (ஆண்களும் பெண்களும் சேர்ந்து). இவர்களுள் 1,100 பேர்களுக்கு அதிகமானவர்களின் உறவினர்கள் இப்போது படைகளில் சேர்ந்திருக்கிறார்கள். இப்படிச் சேர்ந்திருக்கிறவர்களின் எண்ணிக்கை 2,500. இவர்களுள் 1,000 பேர்களுக்கு அதிகமானவர்கள் தரைப் படையிலும், 120 பேர்கள் கப்பற் படையிலும், 130 பேர்கள் விமானப் படையிலும் சேர்ந்திருக்கிறார்கள். நாட்டைப் பாதுகாக்கும் தொழிலில் சேர உபாத்தியாயர்கள் அஞ்சுகிறவர்கள் என்று இனிக் கூற மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இம் மாகாணத்தின் சில ஜில்லாக்களில் மட்டும் நானும் என் சிப்பந்திகளும் செய்த வேலையின் பயனாக 130,000 பேர்கள் உபாத்தியாயர்களும் மாணவர்களும் தேசீயப் போர் முனையில் சேர்ந்திருக்கிறார்கள். இத்தனை உபாத்தியாயர்களும் மாணாக்கர்களும் தேசீயப் போர் முனையில் சேர்ந்திருப்பதை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ச்சி செய்து பார்த்தால், யுத்தத்தைக் குறித்து இந் நாட்டு இளைஞர்களின் போக்கு எப்படி இருக்கிறது என்று தெளிவாகும்.

**யுத்த பீதியின் பலன்.**

மற்றொரு விஷயத்திலும் நம் மாகாண இளைஞர்களைக் குறித்து நாம் பெருமை கொள்ளலாம். 1942-ம் வருஷத்தில் சென்னை, விசாகப் பட்டினம், காக்கினாடா, கொச்சி ஆகிய ஊர்களில் யுத்த பீதியின் பயனாக ஏற்பட்ட கஷ்டங்களுக்கு ஜனங்கள் உள்ளானார்கள். இந்த வருஷம் ஜனவரி மாதத்திற்கும் பிறகு பல மாதங்கள் வரையிலும் மாணக்கர்கள் கொஞ்சங் கூட பதட்ட மில்லாமல் இருந்தார்கள் என்பதை நான் நேரில் அறிவேன். பல காரணங்களால் விசாகப் பட்டினத்தில் யுத்த பீதி மிகவும் அதிகமா யிருந்தது. இங்கே யுள்ள அரசாங்க உயர்தர பெண் பள்ளிக்கூடம் துறை முகத்தை யடுத்து அமைந்திருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு இப்பள்ளிக்கூட மாணவிகள் உட்கார்ந்து எழுதினார்கள். அவர்கள் அனைவரும் பரீட்சையில் தேறி, கல்லூரிகளில் சேருவதற்குத் தகுதி யுடையவர்களானார்கள். பரீட்சைக்குப் போன அனைவரும் தேறியது இம் மாகாணத்தில் இந்தப் பள்ளிக்கூடம் ஒன்றில் மட்டுந் தான். விசாகப்பட்டினத்திலும் காக்கினாடாவிலும் குண்டுகள் விழுந்த பிறகு தான் 'டெக்னிகல்' பரீட்சைகள் நடைபெற்றன. அந்தப் பரீட்சைக்கு மனுச் செய்து கொண்டவர்களை, வெளியூர்களில் பரீட்சைக்கு உள்ளாக விருப்பமா என்று கேட்ட போது, அங்கேயே பரீட்சைக்கு உள்ளாக, முக்கால் வாசிப் பேர்கள் இசைந்தார்கள். அது போலவே சென்னையிலும் முக்கால் வாசிப் பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு உட்கார விரும்புவதாகத் தெரிவித்தார்கள். இந்த வருஷம் ஜூன், ஜூலை மாதங்களில் கல்லூரிகள் திறக்கப்படுமோ அல்லவோ என்று ஜனங்கள் கொண்டிருந்த கவலை கொஞ்ச மல்ல. இந்தக் கவலை அவசியம் தான். நியாயமுங் கூட. சென்னையிலுள்ள 3 பெண்கள் கல்லூரிகளிலும் இதற்கு முந்திய வருஷங்களை விட அதிகம் மாணக்கர்கள் சேர்ந்தனர். ஆண்கள் கல்லூரிகளில் சேருவதற்கு வந்த மனுக்களின் எண்

ணிக்கைக்கும் குறைவில்லை. இப்போது, இஞ்சினீரிங் கல்லூரி, வருஷம் முழுதும் வேலை செய்கிறது. இதில் சேருவதற்கும் ஒருபோதுமில்லாத அளவுக்கு மனுக்கள் மே மாதத்திலேயே வந்து விட்டன. நாம் தாக்கப் படலாம்; வெடி குண்டுகள் நம் மீது வீசப் படலாம். இது மிகவும் கவலைக் கிடமான நிலைமை தான். அப்போதுங் கூட மாணுக்கர்கள் அஞ்சாதிருந்தது, சென்னை இளைஞர்களுக்கே பெருமை தரத் தக்கது தான். மிகவும் எளியவர்களான மாணுக்கர்களும் யுத்த நிதி பற்றி தம் கடமையைச் சரிவரச் செய்திருக்கிருர்கள். கல்வி இலாக்கா மட்டும் யுத்த நிதிக்காக 2,30,000 ரூபாய் வசூலித்திருக்கிறது. இதற்கு உதவியவர்களும் வசூலித்தவர்களும் இம் மாகாண இளைஞர்களே. இதில், கல்லூரி மாணவர்கள் வசூல் செய்தது ரூ. 31,000.

யுத்தங் காரணமாக கஷ்டமும் துன்பமும் உண்டு. இது பற்றி சந்தேகமே கிடையாது. என்றுலும், இதை யடுத்து சில நன்மைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நன்மைகள் அடுத்த வருஷத்தில் அதிகப்படும் என்று நம்புகிறேன். இந்த நன்மைகளை அனுபவிக்கிறவர்கள் பெரும்பாலும் இம் மாகாண இளைஞர்கள் தான். இளைஞர்களுக்குள் இருந்த வேலை யில்லாத் திண்டாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது. யுத்த நிலைமை காரணமாக ஏற்பட்ட சில புதிய வேலைகள் தற்காலீகமானவையாயிருக்கலாம். இந்த தற்காலீக வேலை, அவர்கள் எப்படிப்பட்ட வேலைக்குத் தகுந்தவர்கள் என்று தெரிவிக்கும். உதாரணமாக, யுத்தங் காரணமாகப் பல கைத் தொழில்கள் தோன்றின. யுத்தக் கைத் தொழிற் பயிற்சி சாலைகளும் இதன் பயனுகத் தான் ஏற்பட்டன. **கற்ற இளைஞர்கள் கைத் தொழில்களில் புகுவது இழுக்கு என்ற மனப் பான்மை இப்போது மாறி விட்டது. அன்றியும் நிரந்தரமான பல புதிய துறைகளை இம் மாகாண இளைஞர்களுக்கு யுத்தம் உண்டாக்கி யிருக்கிறது. இது வரை தென்னிந்தியர்களுக்கு இந்தியத் தரைப் படையிலும், கப்பற் படையிலும், விமானப் படையிலும் இவற்றை யடுத்த பல வேலைகளிலும் சேர இடமில்லா திருந்தது. இப்போது இடங் கிடைத்து விட்டது.** இந்தப் படைகள் யுத்தம் முடிந்த பிறகுங் கூட, இருக்கும். ஆகவே இவற்றில் சேருகிறவர்களுக்கு உத்தியோகமும் நல் வாழ்வும் ஏற்படுகிறது. பாதுகாப்புப் படைகளான ஏ.ஆர்.பி. முதலுதவிப் படை முதலியவையும் யுத்தத்திற்குப் பிறகு சமூதாய வேலைகளுக்கும் உள் நாட்டு வேலைகளுக்கும் உதவக் கூடும். இந்தியாவின் கைத் தொழில் முன்னேற்றத்திற்கு யுத்தம் பெரிதும் உதவி யிருக்கிறது. இந்தக் கைத் தொழில் முன்னேற்றம் நிரந்தரமானது. இதை ஒருவரும் மறுக்க மாட்டார்கள். இந் நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு இது சந்தர்ப்பங்களை வெகுவாக அளித்துக் கொண்டிருக்கும். இது வரை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்த ஏராளமான பொருள்களை இப்போது இந்தியாவிலேயே செய்ய சந்தர்ப்பத்தை உண்டாக்கியது யுத்தந் தான். இதன் பயனுக, பல கைத் தொழில்கள் நிரந்தரமானவையாகி விட்டன. இது வரை, குறிப்பாக என் இலாக்காவில் இளைஞர்களான ஆண்களுக்கும், பெண்களுக்கும் தகுந்த வேலைகள் கிடைப்பது கஷ்டமாயிருந்தது. இப்போதும் இனி மேலும் இந்த நிலைமை மாறி வெகுவாக முன்னேற்ற மடைந்து கொண்டிருக்கும்.

வேறொரு வகையிலும் தென்னிந்திய இளைஞர்களுக்கு ஒரு மாறுதல் ஏற்படுகிறது. மிருகத் தனமான இராணுவ ஆதிக்கம் நாஜிகளின் தன்மை. இந்தத் தன்மையை இந்திய இளைஞர்கள் பெறக் கூடாது என்பது தான் நம் ஆசை. தம்மையும் தம் நாட்டையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை அவர்களுக்கு உண்டாக வேண்டுமென்பது தான் எனது விருப்பம். இந்த நோக்கத்தைக் கொண்டு நாம் பார்ப்போமானுல், இந்தியப் படைகள் பெருகிக் கொண்டு வருவதை நாம் வரவேற்க வேண்டியது தான். இந்திய இளைஞர்களும் இதை வரவேற்கிருர்கள். எப்படி? நூற்றுக் கணக்கான இளைஞர்கள் படைகளில் சேர்ந்திருக்கிருர்கள். இந்த உணர்ச்சி தற்காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் நம் நாட்டிற்குச் சிறந்த பலமாக அமையும். யுத்தம் மிருகத் தனமானது கொடியது என்று மற்ற எவரையும் விட, படையினர் தான் நன்றுக உணர்ந்திருக்கிருர்கள். என்றுலும் தீமையி னின்று தான் நன்மை பிறக்கிறது. **தைரியமும், சகிப்புத் தன்மையும், தியாக உணர்ச்சியு மில்லாமல் நாச கால யுத்த வேலையில் எந்த இந்திய இளைஞரும் ஈடுபட முடியாது.** யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்ட பிறகுங் கூட, தைரியமும், சகிப்புத் தன்மையும் தியாக உணர்ச்சியும் அவர்களுடைய இயல்புகளாக அமையும். யுத்தத்திற்கு முன்பும் இந்தத் தன்மைகள் இந்திய இளைஞர்களிடம் இல்லை என்று நான் சொல்ல வர வில்லை. ஆனுல் யுத்த களத்தில் இத் தன்மைகள் இன்றி யமையாதன. ஆகையால் அவை அங்கே பிரகாசிக்கின்றன.

## இந்தியப் பெண்களின் தொண்டு.

யுத்தம் சம்பந்தமாக இளம் இந்தியப் பெண்களும் சிறந்த தொண்டாற்றிக் கொண்டு வருகிருர்கள். எதிர் காலத்திலும் அவர்கள் தொண்டு மிகவும் முக்கியமான தாகும். எப்போதும் இந்தியப் பெண்களுக்குச் சகிப்புத் தன்மையும் தியாக உணர்ச்சியும் மிகவும் உண்டு. இந்திய நாட்டைப் பாது காக்கும் பொருட்டு தம் கணவன்மார்களையும் சகோதரர்களையும், மக்களையும் போர் முனைக்கு அனுப்பி யிருக்கும் பெண்களுக்கு இத் தன்மைகள் பெரிதும் அமைந் திருக்க வேண்டும். இத் தன்மைகளுக்கு ஏற்ற பலன், எதிர் காலத்தில் கட்டாயம் கிடைக்கும். சென்ற 1941-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் பெண் கல்வி மகாநாடொன்று நடைபெற்றது. அப்போது நான் ஒரு பிரசங்கம் செய்தேன். என் உள்ளத்தில் உதித்ததை அப்போது நான் கூறினேன். அதாவது "இந்தியப் பெண்களின் மடமை, தன்னல மின்மை, தியாக உணர்ச்சி ஆகியவை பழமையானவை. இந்தச் சிறப்புக்களோடு கல்வியும் கூடிப் பொது நோக்கும் அமையுமானுல், கல்வி சம்பந்தமான பிரசினை மட்டு மன்றி, இந்தியா சம்பந்தமான பல பிரசினைகளுக்கும் திருப்திகரமான முடிவு காணக் கூடுமென்று நான் உறுதியாக நம்புகிறேன்" என்று கூறினேன்.

இப்போது பல நன்மைகளை இளைஞர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிருர்கள். இனியும் இப்படியே அனுபவிப்பார்கள் என்றும் நம்புகிறேன். தோழமையினுலும் ஒற்றுமையினுலும் தான் இவை ஏற்படுகின்றன. அனைவருக்கும் ஆபத்துக்களும் துன்பங்களும் ஏற்படும் போது தான், தோழமையும் ஒற்றுமையும் விரைவில் கைகூடுகின்றன.

1943-ம் வருஷம் நாம் வெற்றி பெறலாம். அப்போது முடிவான வெற்றி பெற்றுலுங் கூட, அந்த வருஷமும் அதற்குப் பிறகுங் கூட, பல பிரசினைகளுக்கு முடிவு காண வேண்டி யிருக்கும். என்றுலும் எதிர் காலத்தில் நம் மாகாணத்தில் உள்ள இளைஞர்கள் முன்னேற்ற மடைவது உறுதி. யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும், இம் மாகாணத்திலுள்ள எல்லா இனத்தவர்களின் பையன்களையும் பெண்களையும் கல்வி பெறும்படி செய்யப் பெரிதும் முயற்சித்துக் கொண்டு வந்திருக்கிறேன். ஆண் பெண் அனைவரும் கல்வி பெற வேண்டுமென்னும் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத பெற்றேர்கள் பலர் உண்டு. யுத்தத்திற்குப் பிறகு கல்வியைப் பற்றி இவர்களுடைய போக்கே மாறி விடும். தகுந்த ஆதாரத்தைக் கொண்டு தான் நான் இதை உறுதியோடு கூறுகிறேன். இதற்கு இந்தியாவிலேயே தகுந்த சாட்சியங்க ளிருக்கின்றன. சென்ற மகா யுத்தம் முடிந்த பிறகு, பஞ்சாபில் குறிப்பாகக் கிராமங்களில் கல்வி வெகு விரைவாகப் பரவத் தலைப் பட்டது. இதற்குக் காரணம் என்ன? ஆயிரக் கணக்கான படையினர் போர் முடிந்து தத்தம் சொந்த ஊர்களுக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய போக்கு பெரிதும் மாற்ற மடைந்திருந்தது. கல்வியின் நலன்களை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். எனவே, அனைவரையும் கற்கும்படி தூண்டினுர்கள். இதன் பயனுக கல்வி வெகு விரைவாகவும் தீவிரமாகவும் பஞ்சாபில் பரவியது.

இந் நாட்டு இளைஞர்களின் நல் வாழ்விலும் இன்பத்திலும் அக்கரை யுள்ளவர்கள் அனேகருண்டு. அவர்களைப் போலவே, 1943-ம் வருஷ ஆரம்ப விழாவன்று இம் மாகாணத்திலுள்ள இளம் பெண்களுக்கும் இளம் ஆண்களுக்கும் **வாழ்த்துக் கூறுகிறேன்.**



# சர்வ தேச சட்டம் என்றுல் என்ன?

## உலக ஐக்கிய அரசாங்கம்!

### என்ன செய்தால் பல மடையலாம்?

**கனம் நீதிபதி ஜே. ஏ. பெல்., ஐ.சி.எஸ். எழுதியது.**

உலகிலுள்ள எல்லா நாடுகளும் கடுமையான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில் நம்மிடையேயுங் கூடச் சட்ட விரோதமானவர்கள் பலர் இருக்கிருர்கள். ஆகவே, சர்வ தேசச் சட்டம் எதிர் காலத்தில் எப்படி அமைய வேண்டு மென்பது பற்றி இப்போது ஆலோசிப்பது பொருத்தமாகுமா? என்றுலும் ஒருவாறு ஆராய்வோம்.

சர்வ தேசச் சட்டம் என்னும் பதங்களுக்கே பலர் பல விதமாகப் பொருள் கூறுகிருர்கள். ஒரு அரசாங்கத்திற்கும் மற்ற அரசாங்கங்களுக்கும் உள்ள சம்பந்தத்தையே பொதுவாக இது குறிப்பிடுகிறது. இது அரசாங்கங்களுக்குள் இருக்கும் சம்பந்தந்தானேயொழிய, நாடுகளுக்குள் அல்ல. அப்படியானுல் அது எப்படி 'சட்டம்' ஆகும்? **இங்கிலாந்தின் பிரதம நீதிபதி லார்டு கோல்ரிட்ஜ் இது பற்றிக் குறிப்பிடுவதாவது :—**

> உண்மையாகப் பார்த்தால் 'சர்வ தேசச் சட்டம்' என்பது பொருத்த மற்ற பெயர். அதன் உள் கருத்தை அந்தப் பெயர் குறிப்பிட வில்லை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளா விட்டால், தப்பு வழியில் அது கொண்டு போய் விடவுங் கூடும். சட்டம் என்றுல், முதலில் அதை வகுக்கிறவர் வேண்டும். பிறகு அதைப் பயன் படுத்தி நீதிபாலிக்கிறவர்கள் வேண்டும். பிறகு இத்தீர்ப்புக்களை நிறைவேற்றுகிறவர்கள் வேண்டும். இதன் பிறகு, சட்டத்தை மீறுகிறவர்களைத் தண்டிக்கிறவர்கள் வேண்டும். நாகரிக அரசாங்கங்கள் எல்லாம் ஒன்றே டொன்று வழக்கமாக எந்த முறையையொட்டி நடந்து கொள்ளுகின்றனவோ அதைத் தொகுத்தது தான் சர்வ தேசச் சட்டம்.

இவர் இப்படிக் கூறுவதற்கு ஆதாரமென்ன? அறிஞரான ஆஸ்டின் என்பவர் 1861-ம் வருஷத்தில் (The Province of jurisprudence determined) என்னும் தலைப்புள்ள ஒரு நூலை எழுதியிருக்கிருர். அதில் அவர் இது பற்றி குறிப்பிடுவதாவது :—

> பொதுவான கருத்திற்கு இணங்கத் தான் சர்வ தேசச் சட்டம் அமைகிறது. இதை யொட்டிய கடமைகள், ஒழுக்கத்தை யடிப்படையாகக் கொண்டவை; அல்லது, இக்கட்டுப்பாடுகளை மீறினுல், மற்ற அரசாங்கங்களும் நாடுகளும் தம் மேல் கோபங் கொண்டு அதனுல் யுத்தங்கள் கூட உண்டாகக் கூடுமே என்னும் பயத்தை யடிப்படையாகக் கொண்டது.

1914-ம் வருஷம் சென்ற மகா யுத்தம் ஆரம்பமான போது, இந் நோக்கங்கள் மிகவும் விரிவடைந்தன. 1871-ம் வருஷம், கருங்கடல் சம்பந்தமாக லண்டனில் ஒரு ஒப்பந்தம் செய்ய முயற்சித்தனர். அதில், ஆஸ்திரியா–ஹங்கேரி, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, ஜெர்மனி, துருக்கி முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அப்போது அவர்கள் செய்த தீர்மானத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட் டிருக்கிருர்கள் :—

**ஒரு ஒப்பந்தத்திற் கை யொப்பமிடும் அரசாங்கங்கள் சமரசமாக இசைந்தா லல்லது, அவ்வொப்பந்தத்தின் கட்டுப்பாடுகளை அந்த அரசாங்கங்கள் மீற முடியாது. ரத்து செய்யவும் முடியாது.**

1908-ம் வருஷம் ஆஸ்திரியா–ஹங்கேரி, பாஸ்னியா–ஹெர்ஸிகோவினு, ஆகியவற்றை, ஏற்கெனவே செய்யப் பட்டிருந்த ஒப்பந்த கர்த்தாக்களான அரசாங்கங்களின் அனுமதி யின்றி, தன் நாடுகளோடு இணைத்துக் கொண்டது. அதே ஒப்பந்த கர்த்தாக்கள் 1878-ம் வருஷம் நடைபெற்ற பெர்லின் ஒப்பந்தப்படி முற்கூறிய பகுதிகளைத் தற்காலீகமாக இணைத்துக் கொள்ள அனுமதித் திருந்தார்கள். இதை சர்வ தேச சங்கம் ஆட்சேபித்தபோது அதற்கு ஆஸ்திரியா–ஹங்கேரி கூறிய விடையாவது :—

> சர்வ தேச சட்டங்களை நாம் மீற வில்லை. ஒப்பந்தங்களை பாதிக்கத் தக்க எதையும் நாங்கள் செய்து விடவில்லை. இப்பகுதிகளைத் தற்காலீகமாக இணைத்துக் கொண்டிருப்பதை நிரந்தரமாக இணைத்துக் கொள்ளும்படி அந்த அரசரங்கங்களே அனுமதித்திருக்கின்றன.

ஆகவே, அரசாங்கங்களும் நாடுகளும் தமக்குள் ஏற்பட்ட வாக்குறுதிகளையும் ஒப்பந்தங்களையும் காப்பாற்ற வேண்டும் என்னும் நோக்கம் 1914-ம் வருஷம் ஆரம்பமான மகா யுத்தத்திற்கு முன்பு வார்த்தையளவிலாவது இருந்து வந்தது.

பண்டைக் காலத்தில் இத்தாலியில் பல சிறு சிறு நாடுகள் இருந்தன. இவை ஒன்றே டொன்று வியாபாரம் செய்தன. ஒன்றை யொன்று கவிழ்க்கவும் முயற்சித்தன. அப்போது தான் போக்கு வரவிற்கு அனுமதிச் சீட்டு பெறுவது என்னும் விதி ஏற்பட்டது. இராணுவத்தையும் பொது ஜனங்களையும் தனித்தனியாகப் பிரித்தார்கள்; சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் ஏற்றுமதி இறக்குமதியை யொட்டிய விதிகள் அதிகப்பட்டன. வட ஐரோப்பாவில் 30 வருஷ யுத்த மொன்று நடை பெற்றது. அது மகா கொடுமைகளுக்கு மக்களை ஆளாக்கியது. இதன் பயனுக இத்தாலியர்கள் சற்று அன்புடன் நடக்கத் தலைப் பட்டார்கள். போராட நேர்ந்தால், குற்றமற்ற பொது ஜனங்களைக் காயப்படுத்தாமலும் கொல்லாமலும் கொடுமைக்கு உள்ளாக்காமலும், போர்க்களங்களை யடுத்துள்ள கிராமங்களில் படையினர் அக்கிரமங்கள் செய்யாமலும் போராட்டத்தை நடத்த வேண்டும் என்று இத்தாலியர்கள் உணர்ந்தார்கள்.

ஹேக் மகாநாட்டின் போது தான் இந்த வேலை உச்ச நிலையை யடைந்தது. 1899-ம் வருஷம் யுத்தத்திற்கான விதிகள் வகுக்கப்பட்டன. அவற்றை பெரிய அரசாங்கங்க ளெல்லாம் ஒத்துக் கொண்டன. காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்வது, யுத்தக் கைதிகள், பொது ஜனங்கள் மீது போர் தொடுப்பது ஆகியவை கடற் படை யுத்தத்திற்கும் பொருந்தும் என்று ஜினிவாவில் ஏற்பட்ட ஒப்பந்தத்தினுல் நிர்ணயிக்கப்பட்டது. சர்வ தேசத் தகராறுகளைக் குறித்து விசாரணை செய்து தீர்ப்புச் செய்ய ஹேக் என்னும் இடத்தில் ஒரு நீதி மன்றத்தை ஏற்படுத்தினுர்கள். 1907-ம் வருஷம் இன்னும் மேலான அன்பு முறையை யொட்டி எல்லா நாடுகளும் நடந்தன.

> யுத்தத்தை ஆரம்பிக்கும் முறை, வியாபாரக் கப்பல்களை யுத்தக் கப்பல்களாக மாற்றி யமைப்பது, போராட்டத்தில் கலந்து கொள்ளாத அரசாங்கங்களின் உரிமைகளும் கடமைகளும், சுரங்க வெடிகள் போடுவது, அரண் செய்யப்படாத இடங்களைக் கப்பற் படைகள் தாக்குவது, விஷ வாயுவை ஒரு யுத்த ஆயுதமாக உபயோகிப்பது முதலியவை பற்றி, விதிகளை அமைத்தனர்.

இத்தனைக் கட்டுப்பாடுகளும் ஒப்பந்தங்களும், எற்பட்டுங் கூட, பழைய பாடத்தையே படித்துக் கொண்டு இவற்றை அலட்சியம் செய்கிறவர்களும் இருந்தார்கள். இந்த ஒப்பந்தங்களில் எறக்குறைய எல்லாவற்றிற்கும் ஜெர்மனி கையொப்ப மிட்டிருக்கிறது. என்றாலும் 1914–18-ம் வருஷங்களில் ஜெர்மனி இவற்றை மீறி விட்டது. எந்த வகையிலாவது வெற்றி பெற வேண்டு மென்பது ஒன்று தான் அப்போது ஜெர்மனியின் இலட்சியம். பெல்ஜியத்தை காப்பற்றுவதாக வாக்குறுதி கொடுத்திருந்தது; ஆனால், தானே அதைத் தாக்கியது. தன் கப்பற் படைகளைக் கொண்டு அரண் செய்யப்படாத இடங்களை எல்லாம் தாக்கியது. விஷ வாயுவை யுத்த ஆயுதமாகக் கையாண்டது. ஆஸ்பத்திரிக் கப்பல்கள் மீதும் ஆஸ்பத்திரிகள் மீதும் வெடி குண்டுகளை வீசியது. இராணுவ வீரர்களாக யுத்தக் கைதிகளைப் பயன் படுத்தியது. அவர்களைக் கொடுமைப் படுத்தியது. தாம் கைப்பற்றிய நாடுகளை சூறையாடி நாசஞ் செய்தது.

30 வருஷத்திய மகா யுத்தம் மிகக் கொடுமையானது. காட்டு மிராண்டித் தனமானது. இதன் பயனாக ‘க்ரோஷியஸ்’ மனப்பான்மையும் அவருக்குப் பின் வந்தவர்களின் மனப்பான்மையும் வெகுவாக மாற்ற மடைந்தன. (அதே அளவுக்குக் கொடுமையானதாகவும் காட்டுமிராண்டித் தனமாகவும் மகா யுத்தமும் இருந்தது). அந்தச் சமாதானத்தின் பயனாக கொடிய மனக் கசப்பு எற்பட்டது. அதாவது, சர்வ தேசச் சட்டத்தை உண்மையிலேயே சட்டமாக அமுல் நடத்த வேண்டு மென்று ஒரு சிலர் விரும்பினார்கள். அதாவது, ஒரு நீதிமன்றம், தகராறுகளைப் பற்றிய விசாரணை, தீர்ப்பளித்தல், அத்தீர்ப்புக்களை நிறைவேற்றுதல், கட்டுப்படாதவர்களைக் கண்டித்தல் முதலிய முறைகளைக் கையாள வேண்டு மென்று விரும்பினார்கள். வேறு சிலர் இந்த விதிகளும் கட்டுப்பாடுகளும் சாபத்தீடுகள் என்று கருதினர். இப்படிக் கருதினவர்கள் தான் பெரும்பாலும் வெற்றி பெற்றார்கள். ஆகவே வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகளை படிப்படியாகக் கைவிடத் தலைப்பட்டார்கள். எனவே, சட்டத்தை வற்புறுத்த விரும்பியவர்களின் எண்ணிக்கை குறைந்தது.

இது சம்பந்தமான முக்கியமான கொள்கைகளாவன:—

1. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளை மதித்து அவற்றின் உண்மைத் தத்துவத்தை ஒப்புக் கொள்ள வேண்டும்.

2. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் யதேச்சையை ஒப்புக் கொள்ள வேண்டும்.

3. யதேச்சை நாடுகள் எல்லாம் ஒன்றோடொன்று சமத்துவமானவை என்று மதிக்க வேண்டும்.

இந்தக் கொள்கைகளைப் பிரமாதப் படுத்தினார்கள்; ஆனால் நடை முறையில் இவற்றிற்கு ஆதரவு கிடைக்க வில்லை. சர்வதேச சங்கம் சில்லரை விஷயங்களில் நல்ல வேலை செய்தது. ஆனால், ஆரம்ப காலத்தில் அமெரிக்கா இச்சங்கத்தில் சேராதிருந்ததால், மகத்தான தீமை விளைந்து விட்டது. பிறகு இத்தாலியும், ஜெர்மனியும், ஜப்பானும், செய்த சதிகளால் இச்சங்கத்தின் வலுக் குறைந்தது. அழிந்து விடத் தக்க நிலைமைக்கு வந்துவிட்டது. இச்சங்க விதிப்படி சில அரசாங்கங்கள் தம்மிடம் உள்ள யுத்தத் தளவாடங்களை வெகுவாகக் குறைத்துக் கொண்டார்கள். அதாவது படைகளையும் ஆயுதங்களையும் அவசியமாகத் தேவைப்படும் போது உடனே திரட்டிக் கொள்ள முடியாதபடி குறைத்துக் கொண்டார்கள். ஆகவே, சர்வதேசச் சட்டத்தை மீறி நடக்கிறவர்களைத் தடுக்க, அவர்களுக்குத் திறமை யில்லாது போயிற்று. உதாரணமாக அபிசீனியாவையும் அல்பேனியாவையும், இத்தாலி தாக்கியது. ஜர்மனியும், இத்தாலியும், ரஷ்யாவும் அனாவசியமாக ஸ்பெய்ன் விஷயத்தில் குறுக்கிட்டன. பிறகு அவெர்னசுக்குள்ளும் வந்து இறங்கினார்கள். இவற்றின் பயனாகத் தான் இந்த மகா யுத்தம் ஆரம்பமாயிற்று.

எதிர் காலத்தில் நிலைமை எப்படி இருக்கும்? நம் நாடு உள்ளிட எந்த நாட்டின் வாக்குறுதியை யாவது மீண்டும் நம்பலாமா? அரசாங்கங்கள் மாறுகின்றன. அரசியல் ஆசைகளும் வெகுவாக அதிகப்படுகின்றன. கருத்துக்கள் வேறுபடும். கட்சிகள் உண்டாகும். இவை உலக சமாதானத்தை குலைக்கும் தன்மையன.

யுத்தத்திற்குப் பிறகு அரசியல் காரணங்களை விடப் பொருளாதாரக் காரணங்கள் தான் முதன்மை பெறும். இப்போது எதிரிகள் கைப்பற்றியுள்ள நாடுகளிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும். பசிக் கொடுமையால் வாடும் அந்நாட்டு மக்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் கொடுக்க வேண்டும். இந்த வேலையைச் சரிவர செய்து முடிக்கக் கூடிய வசதிகள் நேசதேசத்தாரிடம் மட்டுந் தான் இருக்கின்றன. இந்த வேலையைத் தொடர்ச்சியாகவும் ஒற்றுமையோடும் செய்து வர வேண்டும். இப்படிப்பட்ட உதவிகளை அந்நாட்டவர்கள் பெற்றால், தம் அரசியல் நோக்கங்கள் ஈடேறும் பொருட்டு மேலும் ஒற்றுமையோடிருக்க அவர்கள் நாட மாட்டார்களா?

ஒரு ஐக்கிய அரசாங்கம் அமைந்திருப்பதாக நினைத்துக் கொள்ளுவோம். அது உலகத்தில் கடலிலும் தரையிலும் சமாதானத்தை நிலைநாட்ட உறுதி கொண்டிருக்கிறது. இதற்கென்று தகுந்த பந்தோபஸ்து செய்திருக்கிறது. கடற் கொள்ளைக்காரர்கள், தம் எல்லைக்குட்பட்ட கடலுக்குள் வராதபடி கடற்படைகள் தடுத்துக் கொண்டிருக்கின்றன. கலகக்காரர்களை ஒடுக்கி சமாதானத்தை நிலை நாட்டுகிறது. நாள் செல்லச் செல்ல, பொருளாதார நிலைமை மீண்டும் உறுதிப்படும். இது தெளிவாகத் தெரிகிறது. அப்போது மற்ற நாடுகளையும் இந்த ஐக்கிய அரசாங்கத்தோடு இணைத்துக் கொள்ளலாம். **இந்த ஏற்பாடுகள் பிற்காலத்தில் உலக ஐக்கிய அரசியலாக மாறும். இதைத் தோற்றுவிக்கிறவர்களின் மனதில் சர்வதேச சங்கம் அதற்கு முதற்படியாகத் தோன்றும்.**

இதற்கு வாயளவில் பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. கெட்டவர்கள், கடலிலும் தரையிலும் ஆதிக்கம் செலுத்தாதபடி தடுக்க, ஒரு தலைவர் வேண்டும். ஐக்கிய அரசாங்கத்தில் சேர்ந்துள்ள அனைவரும் யுத்தத் தளவாடங்களையும், படையினரையும், வெடி மருந்துகளையும் கொண்டு அதற்கு உதவ முழு விருப்பத்தோடும் ஆயுதத் தோடும் இருக்க வேண்டும். அப்போது மற்ற கப்பற் படைகளோடு பிரிட்டிஷ் கப்பற்படையும் சேர்ந்து போராடக் கிளம்பும். என்றாலும், இதை நடத்துவது பிரிட்டிஷ் கடற்படைத் தலைவ ரல்ல. ஜினிவாவி லிருந்தாவது வேறெந்த இடத்திலிருந்தாவது தான் நடத்துவார்கள். ஆனால், சர்வதேச சங்கத்திற்காக லட்சக் கணக்கான பவுன்கள் செலவிட்டு தகுந்த கட்டிடங்களை ஜினிவாவில் கட்டியிருக்கிறார்கள். அவற்றைப் பயன்படுத்தாதிருப்பது வருந்தத் தக்கது தான்.

எதற்கும் மனப் போக்குத் தான் மிகவும் முக்கியம். தம் அரசாங்கங்கள் சில தியாகங்களைச் செய்ய வேண்டியது அவசியம் என்று சில நாடுகள் ஒத்துக் கொண்டால், பழைய குற்றங்கள் பரிகரிக்கப் படலா மென்று நம்ப இடமுண்டு. அப்போது அக்குற்றங்கள் மீண்டும் நேரவே முடியாது. ஒரு வயலில் இரவும் பகலும் உழைக்கிறவர்களு மிருக்கிறார்கள். நாள் தோறும் இரண்டொரு மணி நேரம் வேலை செய்கிறவர்களு மிருக்கிறார்கள். அந்த நிலம் அறுவடையான பிறகு, அதன் பலனை அதில் உழைத்தவர்கள் சமமாகப் பாகித்துக் கொள்ளுகிறார்கள். அதாவது எல்லாத் தொழிலாளர்களும் சம நிலையி லிருக்கிறார்கள். அப்போது தான், சமாதானம் ஏற்பட இடமுண்டு. இனி, அக்கிரமம், பேராசை, மிருகத் தனம் ஆகியவை தலை தூக்கினால், சிறு நாடுகளை பெரிய நாடுகள் கைப்பற்றிக் கொண்டால், சிறு பான்மை யோரைக் கொடுமைப் படுத்தினால், ஒப்பந்தங்களில் கை யெழுத்திட்ட மை காயு முன்னதாகவே அவற்றை மீறினால், கையாலாகாதத் தன்மையோடு கையைக் கட்டிக் கொண்டு உலகம் சும்மா யிருக்காது.



தனிப்பட்டவர்கள் சம்பந்தப் பட்ட வரை, அவர்கள் மீது சட்டத்தை அமுல் நடத்த வேண்டுமானால், அதற்குத் தகுந்த ஆயுதம் வேண்டும். அது போலவே தான் சர்வ தேச விதிகளுக்கும். இங்கே ஆயுதம் என்பது போலீஸ் படையைத் தான் குறிக்கிறது. சர்வ தேசப் போலீஸ் படை யொன் றிருக்க வேண்டும். அல்லது இதற் கென்று விருப்பத் தோடு உதவுகிற நாடுகளி லிருந்து வந்து சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு போலீஸ் படை யிருக்க வேண்டும். இதற்குப் பல வகைக் கஷ்டங்கள் உண்டு. இந்தப் படையில் அநேகம் பேர்கள் சேர வேண்டு மானால், வெகுவாக எடுத்துச் சொல்ல வேண்டி யிருக்கும். இந்த ஆசையை நிறை வேற்ற வேண்டுமானால், நல்ல திட்டமும் மனமும் இருக்க வேண்டும்: இல்லையானால் முன்னிருந்த படியே தான் இனியும் இருப்போம். இது வரை சர்வ தேசச் சட்டம் இருந்தது போலவே தான் இனியும் இருக்கும். அதாவது பெயரளவிலே தான் அது சட்டமாக இருக்கும். இது வரை சௌகரியப் படும் போது இதைக் கையாளுவதும், அசௌகரியப் படும் போது கை விட்டு விடுவதுமாக இருந்தார்கள். ‘மாலட்’ என்பவர் “Northern Antiquities” என்னும் ஒரு புத்தகத்தை எழுதி யிருக்கிறார். அதில் அவர் குறிப்பிடுவதாவது:—

> “யுத்தத்தை, நீதியை நிலை நாட்டுவது என்று நினையுங்கள். இது எளியோர்களை வலியோர்கள் அடக்கி யாள, ஆட்சேபிக்க முடியாத உரிமையை யளிக்கிற தென்று மதியுங்கள். வலியவர்களுக்கு எளியவர்கள் அடிமைப் படுத்தப்பட வேண்டு மென்பது கடவுளின் சித்தம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது”.

இப்படியும் கொள்கைகளைப் பரப்புகிறவர்கள் இருக்கிறார்கள்!

இது தான் 1943-ம் வருஷத்திலும் அதற்குப் பிற்காலத்திலும் நம் நோக்கம்? ஏராளமான தியாகங்களைச் செய்தோம்; செய்து கொண்டு மிருக்கிறோம். உலகம் துன்பக் கடலில் மூழ்கி யிருக்கிறது. இரத்த வேட்கையும், வெறுப்பும், நாசமும் மிகச் சாதாரணமா யிருக்கின்றன. நம் பெருமையை முன்னிட்டு இவற்றை நாம் மறந்து விட முடியுமா?

**நாம் பல மடைய வேண்டுமானால், பிறரோடு நாம் அன்பாகப் பழகவேண்டும். பிறருடைய நோக்கம் என்னவென்று உணர்ந்து கொள்ள ஆசைப் பட வேண்டும்.** உண்மை விவரங்களுக் கேற்றபடி நன்றாக ஆலோசனை செய்து வகுக்கப்பட்ட விதிகளை அமுல் நடத்தத் திறமை வேண்டும்......தான் செய்யும் செயல் மிகவும் சரி என்று உறுதி கொள்ளும் போது தான், ஒவ்வொருவருக்கும் மிகுந்த பலமுண்டாகிறது........ நியாய மற்ற முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு கூறுங்கள். அப்போது எதிர் காலத்தில் புது வாழ்வு தோன்றும். சர்வ தேசச் சட்டத்தை எல்லா அரசாங்கங்களும் மதித்து அதற்குக் கீழ்ப்படியும்.

## ஆப்பிரிக்கா வெற்றி

### “சிவபெருமான் கிருபை வேண்டும்” என்ற மெட்டு

பல்லவி

ஜயமினிப் பயமில்லை வாரும்—கொடும்
ஜருமனியு மழிந்தே தீரும்—சத்தியந் தேரும் (ஜய)

அனுபல்லவி

கயவர்கள் அழிந்திடும் காக்ஷி—காணவேண்டிலே
கடையன் ஹிட்லரின் படுவீழ்ச்சி—போதுமேசாக்ஷி (ஜய)

சரணங்கள்

(1) வந்து விட்டது பனி வாழ்வு குலைந்துமினி
நொந்து விழுந்திடும் ஜெர்மனி—நோக்கிக் கவனி (ஜய)

(2) வீர ருஷியர் ஸ்டாலின் க்ராடிலே வெற்றி கோலின்
சார மிழந்தே ஹிட்லர் சாய்வான்—தளர்ந்தே ஓய்வான் (ஜய)

(3) ஓடி யொழிந்தான் ரோமல் ஒதுங்கி யெங்கும் நிற்காமல்
உயர்ந்தது நேச தேசம் ஓங்கி—ஜயமே தாங்கி (ஜய)

(4) ஆப்பிரிக்காவில் ஜயம் அடைந்து விட்டோம் நிச்சயம்
தோற்பதற் கிட்லரிச் சமயம்—தொடங்கி விட்டான் (ஜய)

# ப ழ ங் க தை

டான்ஸிக் நகரைக் சுபளீகரம் செய்து கொள்ளும் நோக்கத்துடன் ஹிட்லர் தனது ஜெர்மன் இராணுவப் பிசாசை திடீரென தூண்டி விட்டார்; அதுவே காரணமாக, இவ்வுலகிலே யுத்தத் தீ மூண்டு விட்டது. அது இன்று எங்கெங்கோ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அந்தத் தீயில் சிக்கிய பல் கோடி மக்களில் பலர் உயிரிழந்தனர்; மற்றும் பலர் அங்க மிழந்தனர்; வீடிழந்தனர்; வாசல் இழந்தனர்; சொத்திழந்தனர்; சுகமிழந்தனர்.

ஹிட்லர் ஏவி விட்ட டாங்கிப் படைகளும், விமானப் படைகளும் ஐரோப்பாவைப் பேய்கள் போல ஆங்காங்கே பிடுங்கித் தின்னத் தொடங்கி விட்டன. வெற்றிமேல் வெற்றியாக வந்து குவிந்து கொண்டிருந்தது ஜெர்மானியருக்கு. சீட்டுக் கட்டால் கட்டப் பெற்ற வீடுகள் மாதிரி, ஒவ்வொரு தேசமும் பொத்து, பொத்து என்று ஹிட்லரின் யந்திர யமனுக்கு முன்னால் விழுந்து வந்தன. இங்கிலாந்தில் உள்ள புராதனமான கட்டிடங்களும், பொருள்களும், குழந்தைகளும், பெண்டிரும் நாஜி விமானங்களிலிருந்து ஈவிரக்க மின்றி வீசப் பெற்ற குண்டுகளுக்கு இலக்காயினர்: ஏதேது! உலக முழுவதையுமே ஹிட்லர் பிடித்துக் கொண்டு, எங்கும் ஸ்வஸ்திகா கொடியைப் பறக்கவிட்டு, ஏகச் சக்ராதிபதியாக இருந்து அட்டகாசம் செய்யத் தொடங்கி விடுவார் போலிருக்கிறதே என்று எல்லோரும் எண்ணத் தொடங்கினர். கிட்டத் தட்ட இரண்டு வருட காலம் ஹிட்லர் காட்டிலே மழை தான்.

இங்கிலீஷ் கால்வா யிலிருந்து ருஷ்யா வரை ஜெர்மன் தேசத்தோடு கலந்து விட்டது. பேராசைப் பேய் மனிதனைச் சும்மா இருக்க விடுகிறதா? அது ஹிட்லரை நன்றாகப் பிடித்து ஆட்டிற்று. அதன் பயனாக, ஹிட்லர், மகாபலிஷ்ட தேசமான ருஷ்யாவிடமும் தனது வாலை ஆட்டத் தொடங்கினார்.

அப்பொழுதிருந்தே பிடித்தது அவருக்கு விநாச காலம். ஆனால் வெளித் தோற்றத்திற்கு எல்லோரும் பயப்படும்படியான நிலைமையே நீடித்திருந்தது. ஹிட்லரின் படைகள் சூறாவளிபோல ருஷ்யாவிலும் வீசிப் பாய்ந்து, வெகு தூரம் சென்று விட்டன. மாஸ்கோ நகரத்திற்கு ஏக ஆபத்து உண்டாகி விட்டது. ருஷ்ய சர்க்கார் தடபுடலாக, முந்நூற்றைம்பது மைல் தூரத்தில் உள்ளதோர் நகருக்கு விரைந்து ஓட வேண்டி வந்தது. லெனின்கிராட் நகரம் முற்றுகை யிடப் பட்டுவிட்டது. தெற்கிலும் நாஜிகள் செழிப்பான பிரதேசங்களைக் கௌவிக் கொண்டு விட்டனர்.

இந்தச் சமயத்திலே காஸ்டாவ் நகர் அருகிலே திடீரென ருஷ்யர்கள் கை வலுத்தது. வெற்றி கண்ட வெறியிலே தம்மையே மறந்திருந்த ஜெர்மானியர் ஓட்டம் பிடிக்க வேண்டி வந்தது. அது வரை தோல்வி என்பதே கண்டிராதவர்கள் திடீரெனப் பின்வாங்கி ஓடவேண்டிய நிலைமையை அடைந்ததும், அவர்களுக்கே சமாளித்து நிற்க முடியவில்லை.

ஒரே ஓட்டம் தான். பனி காலமும் வந்து விட்டது. தெற்கிலே ஏற்பட்ட வெற்றி, ருஷ்யர்களுக்கு புது உத்சாகத்தைக் கொடுத்தது. மாஸ்கோ அருகிலும் அவர்கள் முன்னேறினார்கள். மாஸ்கோவிற் கிருந்த அபாயம் நீங்கிற்று.

இப்படிப் பட்ட சமயத்திலே தான் ஜப்பான் திடீரெனப் போர்க் கோலம் பூண்டது. அமெரிக்காவும் அது காரணமாகப் போரில் இறங்க வேண்டி வந்தது. அதுவரை சும்மா இரவல்—குத்தகைத் திட்டப்படி யுத்தத் தளவாடங்களை மட்டும் சப்ளை செய்துகொண்டிருந்த அமெரிக்கா, உலக சரித்திரத்திலேயே முதன் முறையாக, உலக மகா யுத்தத்தில் நேராகவே கலந்து கொள்ள வேண்டி வந்தது. ஆயுத உற்பத்தியின் வேகம் ஆரம்பத்தில் போதவில்லை. இருபுறங்களிலும் பல்லாயிரம் மைல் நீளமுள்ள கடற் படைகளைக் கொண்டிருப்பது காரணமாக, அது தன்னுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளைத் துரிதப் படுத்த வேண்டி வந்தது.

வெகு காலமாகவே உள்ளூர, ஐந்தாம் படையினரின் உதவியால் அமெரிக்கரின் நிலைமையை அறிந்து கொண்டிருந்த ஜப்பானியர், சட்டென அமெரிக்காவின் வலுக் குறைந்த பிரதேசங்களைத் தாக்கினர். அவர்கள் பூரண யுத்த சன்னத்தராக இருந்ததால், அவர்களுக்கு மளமளவென வெற்றிகள் வந்து குவிந்து கொண்டிருந்தன. எதிர்பாராத வேகத்தில் மலேயா, சிங்கப்பூர், சுமத்ரா, ஜாவா, பர்மா, நியூகினியாவில் ஒரு பகுதி, குடால்கனார், ரபால் போன்ற தீவுப் பிரதேசங்கள், ஹாங்காங், இந்தோ சைனா, சயாம், சில பசிபிக் தீவுகள் எல்லாம் அவர்கள் கைகளில் சிக்கி விட்டன. ஆஸ்திரேலியாவிற் கிருந்த ஆபத்து பலமடங்கு அதிகரித்து விட்டது. ஆஸ்திரேலியாவில் சில பகுதிகளில் கூட ஜப்பானிய குண்டுகள் விழுந்தன. உதவ வேண்டும், உதவ வேண்டும் என 'ரூலு'க்கு மாறாகவே ஆஸ்திரேலியா, அமெரிக்காவைப் பார்த்துக் கேட்கத் தொடங்கி விட்டது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே, வெகு சிரமத்தோடு அமெரிக்கப் படையினர் ஆஸ்திரேலியா அருகிலும், பஸிபிக்கில் மத்ய பிரதேசத்திலும் ஜப்பானியரை அடித்து நொறுக்கி ஓடச் செய்தனர்.

இதற்குள்ளாக பனிகாலம் மாறி, கோடை காலம் வந்து விட்டது ருஷியாவிலே, தீவிரமான ஏற்பாடுகளுடன் நாஜிப் படைகள் மீண்டும் தம் கை வரிசையைக் காட்டின. ஸெபாஸ்டபோல் எனும் துறைமுகத்திற்காகப் பல மாத காலம் கடும்போர் நடந்தது. நாஜிகள் முடிவில் வெற்றி பெற்று, அதிவேகமாக காகஸஸ் பிரதேசத்திலும், ஸ்டாலின் கிராடு நகரை நோக்கியும் முன்னேறினர்.

ஆப்பிரிகாவிலே ரோமல் வெற்றி கண்டார். மளமளவென எகிப்திற்குள்ளும் புகுந்து, நைல் நதிப் பிரதேசத்தைக் கொள்ளை கொண்டு விடுவார்போலிருந்தது. ஆனால், நேசப் படையினர் அவரை எல் அலமீன் எனுமிடத்தில் தடுத்து நிறுத்தி விட்டனர்.

'ஏது இன்னும் விமோசனமில்லை போலிருக்கிறதே!' என்று எல்லோரும் ஏங்கலாயினர். சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சியாங்கே ஷேக் போன்றவர்களுக் கெல்லாம் கூட, ஏகக் கவலையாக இருந்தது.

ஆனால், இப்பொழுது இதெல்லாம் பழங்கதையாக ஆகிவிட்டது. ஜெர்மானியர் ஜெயிக்க முடியாதவர்கள் என்றிருந்த பிரமை தீர்ந்து விட்டது. உலகம் நாஜிகளின் பிடியில் சிக்கித் தவிக்க வேண்டி வருமோ வென்றிருந்த ஐயம் நீங்கி விட்டது. வெற்றி என்பதை நாம் கொஞ்சமாவது, எங்காவது காண்போமா என்றிருந்த குறையும் நீங்கி விட்டது. நாளுக்கு நாள் நேசதேசத்தாரின் சக்தி, அதிகமாகிக் கொண்டே வருகிறது. எங்கு பார்த்தாலும் எதிர்த்து முன்னேறித் தாக்கும் தைரியம் வந்து விட்டது. இன்னும் உச்ச நிலையை அடைய வில்லை நமது சக்தி.



ஆனால், அச்சு நாட்டாரின் சக்தியோ உச்ச நிலையை அடைந்து, மறுபுரம் சறிய ஆரம்பித்து விட்டது. அது சறுக்கிக் கொண்டு போகும் வேகத்தில், இனி அதனை பகவான் கூடத் தடுத்து நிறுத்த முடியாது போலிருக்கிறது. கடைசியாகக் கீழே விழுந்து நொறுங்கின பிறகே அதற்கொரு நிரந்தர முடிவு காணலாம் போலிருக்கு.

நேச தேசப் படைகள் வட ஆப்பிரிக்காவிலே அதி சாமர்த்தியமாகவே போராடி வருகின்றன. 'தாக்குவதில் மட்டும் நான் மகா சூரனல்ல; பின்வாங்கி ஓடுவதிலும் அசகாய சூரன் நான்' என்பதைக் காட்டிக் கொண்டு விட்டார் சேனாபதி ரோமல். அவரையும், அவரது படைகளையும சற்றும் ஓய்வு கொடாது தாக்குகின்றன, பிரிட்டிஷ் எட்டாம் சேனை. ட்யூனிஸியாவிலோ மும்முரமான சண்டை நடக்கிறது. குறுகிய பிரதேசத்திலிருந்து கொண்டு ஜெர்மானியர் கடுமையாகப் போராடுகிறார்கள். அதி வேகமாக முன்னேறி வந்து விட்டதால், அமெரிக்கப் படைகள் அங்கு போதிய விமான நிலையங்களை ஏற்பாடு செய்து கொள்ள வில்லை. அதனால் அமெரிக்கப் படையின் முன்னேற்றம் முன் போல் வேகமாக இல்லை. அச்சு நாட்டினருக்கு அங்கே அவர்கள் சூடு கொடுத்துக் கொண்டே தானிருக்கிறார்கள்.

அங்கு மட்டுமா? ஜெர்மனியிலும், இத்தாலியிலுமுள்ள முக்கிய நகரங்களை பிரிட்டிஷ் விமானிகள் தவிடு பொடியாக்கி வருகின்றனர். ஜெர்மனியிலே தொழிலாளர் பஞ்சம் அதிகமாகி வருகிறது. முன் போல் ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்பட வில்லை. போர் முனையில் இருப்பவர்கள் பொறியி லகப்பட்ட எலிகளைப் போல் பல இடங்களில் தவிக்க வேண்டியிருக்கிறது. போதாக் குறைக்கு ருஷ்யாவிலே பனி காலம் நடக்கிறது. ருஷ்யர்கள் முந்தின வருஷம் செய்தது போலவே, இப்பொழுதும் முன்னேறித் தாக்கி, பல இடங்களிலிருந்து ஜெர்மானியர்களை விரட்டி வருகிறார்கள். இந்த ஸ்டாலின் கிராடு நகரம் ஒன்று மட்டுமே, ஹிட்லரின் உயிரில் பாதியை வாங்கி விட்டது. வட ஆபிரிக்காவிலே நாஜிகள் அடைந்த தோல்விக்கும், ஸ்டாலின்கிராடிலே அவர்கள் அடைந்த நஷ்டத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கு மென்றே தோன்றுகிறது.

நேச தேசத்தினர் வட ஆப்பிரிக்காவில் புகுந்தது காரணமாக, ஹிட்லர் பிரான்ஸ் முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டு விட்டார். காயம்பட்ட புலி போலே சீறிக் கொண்டிருக்கிறார் அவர். அவரது ஆத்திரத்தை மூட்டுவதற்காக நடிப்பது போலவே, அவருக்கு உதவுவதாகக் கூறிக் கொண்டிருந்த அட்மிரல் டார்லான் சட்டென ஆப்பிரிக்கா சென்று நாஜிகளுக்கு விரோதமாக நடக்கலானார். அவரது போக்கே விசித்திரமாக இருந்தது. 'நானே பிரான்ஸின் அதிபதி' என்ற தினுஸில் பேசலானார் அவர்.

வட ஆப்பிரிக்காவில் முக்கியப் போர் அரங்கமாக உள்ள ட்யூனிஸியாவிற்குப் போகும் பாதையில் இருக்கும் ஆல்ஜியர்ஸில் இருந்து கொண்டு இவர் இவ்வாறு செய்வதைக் கண்டதும், எல்லோருக்கும் என்னமோ போல் தானிருந்தது. இப்படி யிருக்கையில் சென்ற வாரம் எதிர் பாராதபடி இவர் யாரோ ஒருவரால் சுட்டுக் கொல்லப் பட்டார். இதனால் வட ஆபிரிக்கப் போர் நிலைமை என்ன ஆகும் என்று எல்லோரும் கவலையோடு கவனித்து வருகிறார்கள். எல்லோருக்கும் இந்த ஒரு கவலை என்றால், ஹிட்லருக்கு ஏகக் கவலைகள். அடுத்தபடி என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார் பாவம்! நாளுக்கு நாள் குறைந்து வரும் நாஜிகளின் வலிமையைக் கண்டு, மனமுடைந்து போயிருக்கிறார். மீண்டும் தலை தூக்க முடியுமா என்ற எண்ணம் அவர் மனசிலே தோன்றி யிருக்க வேண்டும். 'முன்னேறித் தாக்குவதை விட, பாதுகாக்க வேண்டியதே இப்பொழுது முக்கியம்' என்று கூறிவிட்டு, பாதுகாப்பு வேலைகளில் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறாப் போலிருக்கிறது. எந்தச் சமயம் நேச தேசத்தார் ஐரோப்பா மீது பாய்வார்களோ என்ற பீதி அவருக்கு இருந்து கொண்டு தானிருக்கிறது என்பது தெளிவாகவே தெரிகிறது.

பிரான்ஸிலே கடற் கரை யோரங்களில் உள்ள விமான நிலையங்களை எல்லாம் காலி செய்ததோடில்லாமல், அந்த நிலையங்களைப் பாழடித்து, பள்ளம், மேடுகளாக்கி, மரம் மட்டைகளை நிரப்பி வைத்திருக்கிறாராம். பிரான்ஸிலே பலமான விமானப் படையும் காலாட் படைகளையும் வைத்திருக்கிறாராம். பின்னால் எப்போதாவது இவை உபயோகமாகக் கூடும் என்றாலும், இப்பொழுது ஆபிரிக்கா, ருஷ்யா ஆகிய பிரதேசங்களில் இருக்கும் அவசரத் தேவைக்கு உபயோக மில்லாம லிருக்கின்றன. ஆயினும் ஹிட்லர் ஸ்பெயின் மீது பாயலாமா, துருக்கிக்குள் நுழையலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறாப் போலிருக்கிறது. ஆனால் நாஜிகளை ராக்ஷஸர்களாக மற்றவர்கள் நினைத்தது எல்லாம் பழங் கதையாகிவிட்டது. இப்போது அவர்கள் எங்கு போனாலும் 'சூடான' வரவேற்பே அவர்களுக்குக் கிடைக்கும். புது வருடத்தில் இன்னும் பல புதுக் கதைகள் நம் செவிகளில் விழக்கூடும்.

இப்பொழுதே கொஞ்சம் விழுந்திருக்கிறது. ஒரு சிறு கதை. பர்மாவிலே பிரிட்டிஷ் படைகள் புகுந்து அக்யாபை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஜப்பானியர் பேச்சு, மூச்சில்லாது இடத்தை ஒழித்து விட்டு விட்டுப் போயிருக்கிறார்கள். ஆனால் கல்கத்தா, சிட்டகாங் ஆகிய நகரங்களில் உள்ளவர்களைப் பீதி யடையும்படி செய்வதில் அவர்கள் முனைந் திருக்கிறார்கள். இதற்கு ஒரு படி மேலே அவர்கள் போனாலும் போகலாம். ஆனால் முன்பிருந்தது போலின்றி, இப்பொழுது இந்தியாவின் பாது காப்பு வெகு நன்றா யிருக்கிறது. ஆகவே யாரும் கவலைப் படவே தேவையில்லை. பதட்டமின்றி பொறுமையோடு இருப்பவர்கள் என்றும் பயப்படவே வேண்டாமே!

# சில்லரைப் பஞ்சம்

## யார் பொறுப்பாளி

### பொது மக்கள் கடமை.

சமீப காலத்தில், சில்லரைக் காசுகள் கிடைக்க வில்லை என்பது பற்றி ஏராளமான கருத்துக்கள் பத்திரிகைகளில் வெளி வந்து கொண்டிருக்கின்றன. இது பற்றி சமீபத்தில் இந்தியா சர்க்கார் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். என்றாலும், அரசாங்கத்தாரின் போக்கைக் கண்டித்து இன்னும் பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளி வந்து கொண்டிருக்கின்றனவே யொழிய, இந்தத் தொல்லையின் மூல காரணத்தை அவை வெளியிட வில்லை. இது சமூதாயப் பிரசினை. இதற்கு முடிவு காண வேண்டுமானால், பொது ஜனங்களால் தான் முடியும் என்று சொல்லலாம். சமூதாயத்திற்குத் துன்பம் விளைவிப்பவர்கள் இந் நாட்டில் இருக்கிறார்கள். தம் சொந்த இலாபத்தை முன்னிட்டோ, அல்லது வேறு காரணங்களை முன்னிட்டோ, இச் சந்தர்ப்பத்தை தமக்குச் சாதகமாகத் துர்ப் பிரயோசனப் படுத்த முயற்சிக்கிறார்கள். இவர்கள் மீது கொஞ்சங் கூட இரக்கங் காட்டக் கூடாது. இவர்களைக் காட்டிக் கொடுத்து விட வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பொது ஜனங்கள் என்ன செய்யலாம் :—

1. சொற்ப அளவிற்குக் கூட சில்லரைக் காசுகளைச் சேர்த்து வைக்கக் கூடாது.
2. எப்படிப் பட்ட அவசியம் நேர்ந்தாலும், காசின் மதிப்புக்கு அதிகமாகத் தொகை கொடுத்து வாங்கக் கூடாது.
3. குற்றவாளிகளைப் பிடிக்க, அதிகாரிகளுக்கு உதவ வேண்டும். இக் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டு மென்று தான் அரசாங்கம் விரும்புகிறது. இதற்குப் பொது ஜனங்களின் உதவியும் கூட்டுறவும் மிகவும் அவசியம். யாரேனும் சில்லரைக் காசுகளைத் திரட்டிக் கொண்டிருப்பதாகத் தெரிந்தாலும், அல்லது, இலாபத்திற்கு விற்பதாகத் தெரிந்தாலும், இப்படித் திரட்டும் படியோ விற்கும்படியோ தூண்டிக் கொண் டிருந்தாலும், போலீசாருக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

இது பற்றி சர்க்கார் கூறுவதாவது :—

இந்தியாவி லுள்ள எல்லா வகுப்பினரும், குறிப்பாக ஏழைகளும், இதனால் மிகுந்த அசௌகரியத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆளாகிறார்கள். ஏனென்றால், அவர்கள் நாள் தோறும் கொடுக்கல் வாங்கலுக்கு, சில்லரை செலாவணியில் இல்லை.

இந்த வகையில் அரசாங்கத்தார் தம்மாலானதைச் செய்கிறார்கள். இந் நாட்டில் ஒரு போதுமில்லாதபடி அவ்வளவு அதிகமாக சில்லரைக் காசுகளைச் செலாவணியின் பொருட்டு வெளி யிட்டிருக்கிறார்கள்.

இவ்வளவு ஏராளமான சில்லரையும், யுத்தம் ஆரம்பமான போது செலாவணியி லிருந்த சில்லரையும் இப்போது பொது ஜனங்களிடம் செலாவணியி லிருக்கிறது. இவ்வளவு சில்லரை வெளியாகி யிருந்துங் கூட, தினசரிச் செலாவணிக்கு அவை கிடைக்க வில்லை.

இந்தச் சில்லரையில் கொஞ்சங் கூட அரசாங்கத்தார் மீண்டும் வாபீஸ் வாங்கிக் கொள்ள வில்லை. ஆகவே, இந்தச் சில்லரைப் பஞ்சத்திற்குக் காரணம், யாரோ தம் தேவைகளை விட மிக அதிகமாகத் திரட்டி வைத்துக் கொண்டிருப்பது தான்.

சில்லரைப் பஞ்சம் எங்கு அதிகமாகி விடுமோ என்று அஞ்சி, திரட்டிவைத்திருக்கிறவர்களும் உண்டு. இப்படிச் செய்வதனால் இவர்கள் நிலைமையை மேலும் மோசமாக்கி விடுகிறார்கள். இச் செயல் ஆலோசனை யில்லாதது. அவர்கள் போன்ற மற்ற பிரஜைகளுக்கு இதனால் தீமை நேருகிறது.

தம் சொந்த லாபத்தை முன்னிட்டுத் திரட்டுகிறவர்களும் உண்டு. சில்லரைகளை அதிக விலைக்கு விற்கவும், அவற்றை உருக்கித் தாமிரமாக்கி விற்கவும் தான் இவர்கள் திரட்டுகிறார்கள்.

தேவைக்கு மீறி சில்லரைகளைத் திரட்டுவதும் சில்லரையின் மதிப்பை விட அதிகத் தொகைக்கு விற்பதும் வாங்குவதும் சட்டப்படி குற்றங்களாகும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஞு ஜனவரி மீ 8உ, வெள்ளிக்கிழமை [இதழ் 2

மகத்தான கூட்டமைப்பு ஏற்பட்டது.



சிறந்த வாழ்வு தான் லட்சியம்.

இதுவரை எதிரிகளின் தாக்குதலைத் தடுத்து கொண்டே யிருந்து வந்த ஐக்கிய நாடுகள், இப்போது தாமே தாக்கத் தலைப் பட்டிருக்கின்றன. யுத்த களத்தில் நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டிருக்கின்றது ; இதை விடச் சிக்கலான மற்ற துறைகளிலும் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பது தான் எம் கோரிக்கை. ஒரு வருஷத்திற்கு முன்பு 26 ஐக்கிய நாடுகள் வாஷிங்டன் பிரகடனத்தில் கையெழுத்திட்டன. உண்மையிலேயே அப்போது உலக நிலை கோரமாகத் தான் இருந்தது. உலகம் ஒத்துக் கொள்ளத் தக்க இலட்சியங்களை யடிப்படையாகக் கொண்ட, அத்லாண்டிக் பிரகடனம், சென்ற புது வருஷத் தன்று இந் நாடுகளைக் கட்டுப் படுத்திவிட்டது.

இதன்படி இராணுவ ஆக்கிரமிப்பு, ஒப்பந்தங்களை மீறுவது, திட்ட மிடப் பட்ட மிருகத்தனமான செயல்கள் ஆகியவற்றை, இந் நாடுகளெல்லாம் ஒன்று கூடி, கொஞ்சங்கூட ஈவிரக்கம் பாராட்டாமல் நசுக்கி விட வேண்டும். மனித இனம் போற்றும் இலட்சியங்களான நல் வாழ்வு, விடுதலை, இன்பம் ஆகிய புனிதமான நன்மைகளை மக்களுக்கு மீண்டும் வழங்க வேண்டும். இது வரை உலகத்திலேயே ஏற்பட்டிராத மகத்தானதோர் கூட்டமைப்பை இவர்கள் உண்டாக்கி விட்டார்கள்.

—ரூஸ்வெல்ட்.

## புது வருஷ வாழ்த்து

சென்னையிலுள்ள பிரிட்டிஷ் விமானப் படைத் தலைவர் மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்களுக்கு அனுப்பிய செய்தியாவது :—

" தங்களுக்கும் சென்னை மாகாண மக்களுக்கும் என் படையினர் அனைவரும் வாழ்த்துக் கூறுவதோடு, தாங்கள் அன்பு கூர்ந்து அனுப்பிய கிருஸ்மஸ் செய்தி பற்றி, தங்களுக்கு நன்றி செலுத்துகிறார்கள்."

# எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் ?

## தலைவர்கள் கருத்துக்கள்

### ரூஸ்வெல்ட்

சென்ற புது வருஷத் தன்று தான் ஐக்கிய நாடு களின் பிரகடனம் வெளியானது. ஆகவே அதன் முதலாவது ஆண்டு விழாவாகிய இந்தப் புது வருஷத் தன்று, அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் அவர் கூறியிருப்பதாவது :—இதுவரை எதிரிகளின் தாக்கு தலைத் தடுத்து கொண்டே யிருந்து வந்த ஐக்கியநாடுகள், இப்போது தாமே தாக்கத் தலைப்பட்டிருக்கின்றன. யுத்த களத்தில் நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டிருக்கின்றது ; இதை விடச் சிக்கலான மற்ற துறைகளிலும் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பது தான் என் கோரிக்கை. ஒரு வருஷத்திற்கு முன்பு 26 ஐக்கிய நாடுகள் வாஷிங்டன் பிரகடனத்தில் கையெழுத்திட்டன. உண்மையிலேயே அப்போது உலக நிலைமை கோரமாகத் தான் இருந்தது. உலகம் ஒத்துக் கொள்ளத்தக்க இலட்சியங்களை யடிப்படையாகக் கொண்ட, அத்லாண்டிக் பிரகடனம் சென்ற புது வருஷத் தன்று இந் நாடுகளைக் கட்டுப் படுத்தி விட்டது.

> இதன்படி இராணுவ ஆக்கிரமிப்பு, ஒப்பந்தங்களை மீறுவது, திட்டமிடப்பட்ட மிருகத்தன மான செயல்கள் ஆகியவற்றை, இந் நாடுகளெல்லாம் ஒன்று கூடி, கொஞ்சங்கூட ஈவிரக்கம் பாராட்டாமல் நசுக்கி விட வேண்டும். மனித இனம் போற்றும் இலட்சியங்களான நல் வாழ்வு, விடுதலை, இன்பம் ஆகிய புனிதமான நன்மைகளை மக்களுக்கு மீண்டும் வழங்க வேண்டும். இதுவரை உலகத்திலேயே ஏற்பட்டிராத மகத்தான தோர் கூட்டமைப்பை இவர்கள் உண்டாக்கி விட்டார்கள்.

இரண்டு வகைகளில் இந்தக் கூட்டமைப்பு மகத்தானது. (1) மகத்தான பலம் ஏற்படுகிறது. (2) புனிதத் தன்மையும் பெரிதும் ஓங்குகிறது. இந்தக் கூட்டமைப்பில், மேலும் மூன்று நாடுகள் இப்போது சேர்ந்திருக்கின்றன. மகா ஆபத்தான சமயத்தில் ஏற்பட்ட இந்த ஒற்றுமை, மிகச் சிந்த பலனளித்து விட்டது.

தம்மை தற்காத்துக் கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் இப்போது தாக்க முனைந்து விட்டன. இந்தப் புது வருஷ நாளன்று நம் கடமைகள் 3 வகைப் படும். **முதலாவதாக எதேச்சையான மக்களின் முழு பலத்தையுங் கொண்டு. நாகரிகத்தை நாசப் படுத்தும் கொள்ளைக் கூட்டத்தை அடியோடு நசுக்கி விட வேண்டும். இரண்டாவதாக, மீண்டும் இந்த அநாகரிகக் கூட்டம் தலை தூக்காதபடி நாடுகள் ஒன்றோடொன்று இசைந்திருக்கக் தகுந்தபடி அமைக்க வேண்டும். மூன்றாவதாக, நாகரிகத்தின நற்பயன்களை நாம் அனுபவிக்க வேண்டுமென்று தான் கடவுள் இப்படி அமைத்திருக்கிறார் ; இந்த விலையில்லா சமாதானத்தையும் விடுதலையையும் அனுபவித்து இன்பமடையத் தக்கப்படி மக்களுக்குள் கூட்டுறவு அமைய வேண்டும்.**

சமீபத்தில் பத்திரிகைக்காரர்கள் மகா நாட்டில் தான் கூறியதைப் பெருக்கி மேலும் அவர் கூறியதாவது :—

" சமாதானம் ஏற்பட்ட பிறகு நாம் சாதிக்க வேண்டியவை பல உண்டு. இவை பற்றி நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். **அப்போது தான், யுத்தத்திற்கு முன்பிருந்த நாசகால நிலைமைக்கு நாம் மீண்டும் போக மாட்டோம்.** பல துறைகளிலும் நேச நாடுகள் இனி ஒன்றுபட்டிருக்க வேண்டும். என்றாலும் யுத்த லட்சியங்களில் மிகவும் முக்கியமானது ஒன்றிருக்கிறது. அந்த லட்சியந்தான் சமாதானத்தை நிலை நாட்டுவது. அப்போது தான், இந்த யுத்தத்தில் ஈடுபட்டுள்ள எல்லோரும், போர் முனைகளில் உள்ளவர்களும், கடற் படையைச் சார்ந்தவர்களும் மீண்டும் இந்தக் கொடுமைகளுக்கு ஆளாகாதிருக்கக் கூடும். தம் மக்களும் இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு ஆளாகா திருக்க முடியும் என்னும் **உறுதிப்** பாட்டிற்கு இடமேற்படும். நாம் எந்த அளவிற்கு சமாதானத்தை நிலை நாட்டுகிறோமோ, அதைப் பொருத்துத் தான் இந்த யுத்தத்தின் பயனாக ஏற்படக் கூடிய எல்லாம் நிலைத்திருக்கக் கூடும்.

" இந்த யுத்தம் முந்திய யுத்தங்களைப் போலில்லை. இந்த யுத்தத்திற்கு பிறகு, நாட்டின் நிலைமை எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி திட்ட மிட வேண்டிய அவசியத்தை, ஜனங்கள் பொதுவாக உணருகிறார்கள். யுத்தத்தில் வெற்றி பெற வேண்டி அவர்கள் எப்படி ஒன்று கூடிப் பொது முயற்சி செய்கிறார்களோ, அது போலவே, சமாதான காலத்திலும் அவர்கள் முயற்சிக்க வேண்டும். **சமாதானத்தைக் காப்பாற்றி நிலை நாட்டுவதுதான், நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் மிகவும் அவசியம் என்று மக்கள் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.**

### தோழர் காலினின்

சோவியத் மகா சபையின் தலைவர் தோழர் காலினின் யுத்த நிலைமையைக் குறித்து செய்த ரேடியோ பிரசங்கமாவது :—

" சென்ற வருஷம் ஹிட்லரோடும் அவருடைய கூட்டாளிகளோடும் மிக மிகக் கடுமையாகப் போராடினோம். தன் நாட்டிலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் எல்லோரையும் அவர் திரட்டினார். ஆனால் ஜெர்மனியர்களின் திட்டங்கள் பேராசையை யடிப்படையாகக் கொண்டிருந்தன. போராட்டம் எப்போதும் மகா கடுமையாகவே இருந்தது. என்றாலும் ஹிட்லரின் ஆசைகளை எல்லாம் மண்ணைக் கவ்வும்படி செய்தன, நம் செம்படைகள். ஒரு வருஷத்திற்கு முன்பு இருந்ததை விட, இப்போது நம் நிலைமை மிகவும் சாதகமா யிருக்கிறது. இந்த வருஷம் போர் அரங்கம் முழுதிலு மிருந்து எதிரிகள் நம்மைத் தாக்கவில்லை. தெற்கிலும், தென் மேற்குப் பகுதியிலும் தான் தாக்கினார்கள். **இங்கே ஓரிடத்திலாவது அவர்கள் வெற்றி பெறவில்லை. எதிரியின் தாக்கும் சக்தி வெகுவாகக் குறைந்து விட்டது. அவர்களுக்கு ஏராளமான நஷ்டம். போன வருஷம் ஆன போர்ச் செலவை விட, இந்த வருஷம் அவர்களுக்கு அதிகச் செலவாகும்.** மத்தியப் போர் முனையிலும, மத்திய டான் நதிப் போர் அரங்கத்திலும்,வட காகஸிலும் எதிரிகளை நாம் தாக்கிக் கொண்டிருக்கிறோம். இங்கெல்லாம் நிலைமை நமக்குச் சாதகமாகவே யிருக்கிறது. **இப்போது இங்கே எதிரிக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தால் இனி அவர்கள் இங்கே தலை தூக்கவே முடியாது போய் விடும்.** நாம் கைப் பற்றிய யுத்தக் கைதிகளும் யுத்தத் தளவாடங்களும் ஏராளம். செஞ் சேனைகள் மீண்டும் 2000 குடியிருப்புக்களையும் ஜில்லாக்களையும் நகரங்களையும் கைப்பற்றின."

" எதிரியைத் தாக்கவேண்டுமென்னும் உணர்ச்சியும், நாட்டுப் பற்றும் நம் மக்களிடையே நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது. உற்பத்தி அதிகரிக்கிறது. நம் தொழிலாளர்களின் பெரு முயற்சியாலும், கூட்டுப் பண்ணைக்காரர்களின் பெரு முயற்சியாலும் நம் படைகளுக்கு வேண்டியவை எல்லாம் கொடுக்கிறோம். 1943-ம் வருஷ ஆரம்பத்திலேயே வெற்றிக் குறிகள் தென்படுகின்றன. நம் மகத்தான தலைவரான தோழர் ஸ்டாலினுடைய தலைமையின் கீழ், நம் ஒன்றுபட்ட முயற்சியின் பயனாக, கூடிய விரைவில் நாம் வெற்றி பெறுவோம்.

### டாக்டர் சி. ஜே. போ.

சீன கான்சல் ஜெனரல் ஒருவர் நம் நாட்டில் இருக்கிறார். அவருடைய பெயர் **டாக்டர் சி. ஜே. போ.** அவர் இந்தியாவிற்கு புது வருஷச் செய்தியொன்று விடுத்திருக்கிறார். அது வருமாறு :—

**" புது உலகம் விரைவில் அமையப் போகிறது. இந்தப் புது உலக வாழ்வு வெற்றி பெற வேண்டுமானால், நம் முயற்சிகள் மேலும் ஒன்றுபட்டிருக்க**



**வேண்டும் ; ஐக்கிய நாடுகளும் அவற்றிலுள்ள தனிப்பட்ட பிரஜைகளும் தம் குறுகிய தேசிய மனப்பான்மையையும் உரிமைகளையும் விட்டுக் கொடுக்க வேண்டும்.** பல விடங்களிலும் நிகழ்ந்துள்ள சம்பவங்களை யொட்டிப் பார்த்தால், யுத்தத்தை நடத்த வேண்டிய பொறுப்பு நமக்கு ஏற்பட்டு விட்டது என்று தெரியும். எதிரிகளுக்கு நேரப் போகிற கதியை அவர்கள் இன்னும் உணரவில்லை.

> கடைசியில் நாம் இராணுவ வெற்றி யடைவது உறுதி. வாழ்க்கையின் அரசியல் நோக்கம் குறைபட்டதாகவோ வீணானதாகவோ இருக்கப் படாது. அப்படி யிருந்தால் தான் யுத்தங்கள் நேரும். அப்போது தான், ஓங்கி வளர்ந்து கொண்டு வரும் கூட்டுறவு உணர்ச்சி, படிப்படியாகக் குறையத் தலைப் படும்."

" ஷியாங் கெய் ஷேக்கைத் தம் அரசாங்கத் தலைவராகக் கொண்டிருக்கும் $47\frac{1}{2}$ கோடி சீனர்களும் பாக்கியசாலிகள் தான். நாம், புதிய உலகம் அமைய வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். **இப்படி அமைக்கிறவர்கள் ஷியாங் கெய் ஷேக், ரூஸ்வெல்ட், ஸடாலின், சர்ச்சில் ஆகிய நால்வர்களும் தான்.** இதன் பொருட்டு மகத்தான தியாகஞ் செய்தவர்கள் பலர். உயிரைக் கொடுத்தவர்கள் அநேகர். இத்தனையும் நம் பொது நன்மைக்காகத் தான் செய்தார்கள். ஆகவே அவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம். நாம் அவர்களை மறந்து விடக் கூடாது. ஆகாயத்திலும், தரையிலும், கடலிலும் இருக்கும் **நம் வீரப் படையினரின் கையில் தான், நம் எதிர்கால வாழ்வு அடங்கி** யிருக்கிறது. நமது நோக்கம் ஈடேற வேண்டி உதவும் பொருட்டு, அவர்களுக்கு நன்றி யுள்ளவர்களா யிருப்பது நமது கடமை. **வீண் வார்த்தைகள் பேசாதீர்கள். நேர்மையற்ற முறையில் குறை கூறாதீர்கள். மனக் கோட்டைகள் கட்டாதீர்கள். அநாவசியமான சந்தேகங்கள் கொள்ளாதீர்கள். அகாரணமான தப்பெண்ணங்கள் கொள்ளாதீர்கள்.** ஏனென்றால் தனிப்பட்ட சமூகத்திற்குள்ளோ, சர்வ தேச சமுதாயத்திலோ ஒரு புதிய அமைப்பு ஏற்பட வொட்டாதபடி இவை தடுக்கும்."

" கல்கத்தாவைப் பல முறை எதிரிகள் விமானங்களி லிருந்து தாக்கினார்கள். **அப்போது அந்நகர வாசிகளும் இந் நாட்டவர்களும் மிகுந்த அமைதியோடிருந்ததைக் கண்டு பெருமை கொள்ளுகிறேன். இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டி, இவர்கள் கொண்டிருந்த உணர்ச்சியை எங்கள் ஜெனரலாஸிமோ பெரிதும் பாராட்டுகிறார்.** இந்த உணர்ச்சி எப்படி ஓங்கிக் கிளம்பியதோ, அது போலவே, எல்லா வகைகளிலும் நிலைமையைச் சமாளிக்க மாகாண அரசாங்கத்தாரோடு இந்நாட்டு மக்கள் ஒத்துழைக்கவும் வேண்டும் என்று கோருகிறார். இன்னும் கடுமையாக எதிரி நம்மைத் தாக்கக் கூடும். இது எதிர் பார்த்தது தான். இதை லண்டன், சூக்கிங், ஸ்டாலின்கிராட் ஆகிய நகரங்கள் சமாளிக்கக் கூடுமானால், ஏன் கல்கத்தா சமாளிக்காது ?"

" இந் நாட்டவர்களே ! **அமைதியா யிருங்கள். உங்கள் நண்பர்கள் அனைவரையும் அமைதியா யிருக்கும்படிக் கோருங்கள். பீதி கொள்ளுவதால் பயனில்லை- வெற்றியின் சின்னங்கள் காணப்படுகின்றன. மீண்டும் சமாதானமும் நீதியும் விரையில் நிலவும். நீங்கள் உதவ விரும்பினால், உங்கள் கடமையைச் செய்யுங்கள். புது வருஷத்திற்கு நான் உங்களுக்கு அனுப்பும் செய்தி இதுதான்."**

### ஜெனரல் நோகுஸ்

மொராக்கோவில் பிரஞ்சு ' ஸ்தானீகராக ' இருப்பவர் ஜெனரல் நோகுஸ். இவர் சென்ற 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி இரவு மொராக்கோ ரேடியோ மூலம் விடுத்த புது வருஷச் செய்தியாவது :—

" பிரான்சிலுள்ள நம் சகோதரர்கள் யுத்தக் கைதிகளாகி ஜெர்மானியர்களின் கொடுமைகளால் பெரிதும் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். டுனிசியாவில் நம் படையினர் மிகக் கம்பீரமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்." பகுதிக் கலவரங்களில் கலந்து கொள்ள வேண்டாமென்று எச்சரித்த பிறகு, அவர் மேலும் கூறியதாவது :—

> **வெற்றிக்குப் போராட வேண்டுமென்னும் ஒரே எண்ணந் தான் உங்கள் மனதில் ஊன்றி யிருக்க வேண்டுமென்று** அட்மிரல் டார்லான, தான் கொல்லப் படுவதற்கு முதல் நாள் மாலை தெரிவித்தார். இந்த வெற்றிக்கு இப்போது வழி காட்டிக் கொண்டு போகிறவர் நம் தலைவரான ஜெனரல் ஜிராட் தான். அவருடைய உள்ளம், வீரம், சிறந்த நாட்டுப் பற்று ஆகியவற்றை நீங்கள் நன்கு அறிந் திருக்கிறீர்கள். **அவருடைய கட்டளைக்கு, உற்சாகத்தோடு நாம் கீழ்ப் படிந்து நடப்போம். ஏனென்றால், மிகவும் கௌரவமான நிலைமைக்குத் தான் அவர் நம்மைக் கொண்டு போய்ச் சேர்ப்பார். பிரான்ஸை விடுவிக்கவும் வெற்றியை நாடியும், நாம் ஒன்று பட்டு, முன்னேறுவோமாக !**

## இந்திய விமானியின் சமயோசித புத்தி

காலை 6 மணி கூட ஆக வில்லை. வங்காளக் குடாக் கடலில் ஒரு விமானம் பறந்தது. அதில் இருவர் தான் இருந்தனர். ஒருவர் இந்தியர். விமான மோட்டி ; மற்றொருவர் அவருடைய உதவியாளர். இவர் ஸகாட்லாந்துகாரர். சிவப்பு வெளிச்ச மொன்றை உதவியாளர் தென் திசையில் கண்டார். முதலில் அது ஒரு காவல் கப்பலாக இருக்க வேண்டுமென்று நினைத்தார். பிறகு அதை யடுத்து கடும் புகை கிளம்புவதைக் கண்டார். எனவே, விமான மோட்டி, 8000 அடி உயரத்திற்கு மேலே பறந்து, அங்கே நடை பெறும் சம்பவங்களை நேரே காணும் பொருட்டு, விமானத்தின் விசையை முடுக்கிக் கொண்டு மேலே கிளம்பினார். ஒரு வியாபாரக் கப்பலை எதிரி கப்பல்கள் தாக்கியதால் அது நெருப்புப் பற்றிக் கொண்டு எறிவதைக் கண்டார்கள். அந்த இடத்தை வெகு நுணுக்கமாக அந்த உதவியாளர் ஆராய்ச்சி செய்து பார்த்தார். எதிரியின் யுத்தக் கப்பல்கள் வட்டமாக நின்று கொண்டு, நடுவில் சிக்கிக் கொண்டிருக்கும் வியாபாரக் கப்பலைச் சுட்டுக் கொண்டிருந்தன. **அந்தக் கப்பற் கூட்டத்தில் ஒரு ஜப்பானிய விமானந் தாங்கிக் கப்பலும், ஒரு போர்க் கப்பலும், ஒரு க்ருய்ஸரும், இரண்டு நாசகாரிகளு மிருந்தன.** எரிந்து கொண்டிருந்த வியாபாரக் கப்பல் 5 அல்லது 6 ஆயிரம் டன் கப்பலாக இருக்க வேண்டும்.

காலை 6·50 மணிக்கு 3 எதிரி மானோபிளேன்கள் இவர்கள் இருந்த இடத்திற்குக் கீழே அதி வேகமாகப் பறந்து போயின வென்றாலும், இவர்களுடைய விமானத்தை அவை கவனிக்கவில்லை. அவர்கள் கண்களுக்குப் படாமல் தம் விமானத்தை இவர்கள் மறைத்துக் கொண்டார்கள்.

இந்தச் சம்பவங்களை யெல்லாம் அவ்வப்போது தன் தளத்திற்கு இந்த உதவியாளர் தெரிவித்துக் கொண்டிருந்தார். காலை 7 மணி 6 நிமிஷம். உடனே தளத்திற்குத் திரும்பும்படி கட்டளை கிடைத்தது. அதன்படி உடனே அவர்கள் திரும்பினார்கள். **இவர்கள் அனுப்பிய செய்திகள் நம் கப்பற் படைத் தலைவருக்கும் விமானப் படைத் தலைவருக்கும் மிகவும் உதவியா யிருந்தன.**

# ஜெர்மனி தோற்றால் ஜப்பான் நிலை என்ன?

## நேச நாடுகளின் சிறந்த தளம் சீனா தான்

ஜப்பான் போரில் இறங்கி 6 மாதங்கள் ஆகின்றன, அடுத் தடுத்துப் பல விடங்களில் அது வெற்றி கண்டது. இதற்குக் காரணம் என்ன? ஜப்பான் கைப்பற்றிய நாடுகள், ஜப்பானுக்கு மிக அருகிலுள்ளவை; அவற்றை பாதுகாக்கக் கூடிய சாம்ராஜ்யங்களின் படை பலம், அவற்றிற்கு வெகு தூரத்திலிருக்கிறது. ஆகவே, ஜப்பான் தன் மனம் போல் எக்காரியத்தையும் செய்ய இடமுண்டு. இது வரை, மேல் நாடுகளிலுள்ள அரசாங்கங்களுக்குள் உள்ள விரோதத்தைத் தனக்குச் சாதகமாக ஜப்பான் பயன் படுத்தி வந்தது. ஆனால் இப்போது ஜெர்மனியோடு தன் இலாப நஷ்டத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டிருக்கிறது. இதன்படி ஜெர்மனி தோற்றால், ஜப்பான் நாசமடையும்படி நேரும்.

**ஜெர்மனிக்குத் தான் இலாபம்.**

ஜெர்மனி வெற்றி பெற வேண்டி ஜப்பான் தன் முழு பலத் தோடும் போராட வேண்டும். இப்போது ஜப்பானியர்களின் பலம் இவ்வளவென்று நமக்குத் தெரியாது. அவர்களுடைய நோக்கத்தையும் நாம் அறியோம். தனக்கும் ஜெர்மனிக்கும் உள்ள கட்டுப்பாடுகளினின்று தன்னை விலக்கிக் கொள்ள ஜப்பானால் முடியாது.

ஜப்பான் உள் நாட்டில் அமைந் திருக்கிறது. ஆகவே, இலகுவில் ஆஸ்திரேலியாவையும் இந்தியாவையும் தாக்கக் கூடும். தாம் தாக்க ஆரம்பிக்கும் பொருட்டு இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் தளங்களாக நேச நாட்டினர் பயன் படுத்த வேண்டும். இதற்காகவாவது, இந்த இரு நாட்டையும் நேச நாடுகள் பாதுகாக்க வேண்டும்.

**சீனப் போர்.**

ஜப்பானுக்கு உண்மையிலேயே தடையாயிருப்பது சீனா வென்று தான் சொல்ல வேண்டும். சீனாவை அடிமைப் படுத்தினா லல்லது ஜப்பான் அமைதியோ டிருக்க முடியாது. **ஆனால் ஜப்பானின் கை வரிசை சீனாவில் செல்ல வில்லை. கிழக்காசியப் "பொது அமைப்பில்" சீனா ஒரு அச்சாணி போன்றிருக்கிறது. இங்குள்ள தளங்கள் நேச நாடுகளுக்கு உற்ற துணைகளா யிருக்கின்றன.**

நன்றாக ஆலோசித்துத் திட்டமிட்ட பிறகு தான் ஜப்பானியர்கள் யுத்தத்தில் இறங்கினார்கள். இது அவர்களுக்கு நியாயமானதாகத் தோன்றுகிறது! முதலில் சீனாவை அடிமைப் படுத்திக் கொண்டு, பிறகு கிழக்காசியாவிலும் தென் கடல் தீவுகளிலும் "கூட்டு முன்னேற்ற அமைப்பை" அமைக்க வேண்டுமென்று திட்டமிட் டிருந்தனர்.

தனக் கடுத்துள்ள பலமான நாட்டின் குரல் வளையைப் பிடித்துக் கொண்டு விட்டால், தான் சுகமாக வாழலாம் என்று ஜப்பான் நினைத்தது. பிரிட்டிஷாரையும் டச்சுக்காரர்களையும் சூறையாட வேண்டுமென்பது தான் அவர்களுடைய எண்ணம். மலேயாவிலும் நெதர்லந்து தீவுகளிலுமுள்ள மூலப் பொருள்கள் மீது தான் அவர்களுடைய கண்களெல்லாம் பதிந்திருந்தன.

அப்போது "கூட்டு முன்னேற்றத்" திட்டத்தின் எல்லைகள் எவை என்று ஜப்பானியத் தலைவர்கள் நிர்ணயிக்க வில்லை. இத்திட்டத்தில் ஆஸ்திரேலியாவையும் இந்தியாவையும் சேர்த்து ஒரு ஜப்பானியத் தலைவராவது பேசியதே கிடையாது. யோசுகி மத்சுயோகா என்றொரு ஜப்பான் அந்நிய நாட்டு மந்திரி இருந்தார். அவர், தாய்லந்து, பர்மா, புது சலிடோனியா ஆகியவற்றை மட்டுந் தான் இத்திட்டத்தில் சேர்த்திருந்தார். அவருக்கு முன் கப்பற் படைத் தலைவராக விருந்த அட்மிரல் சங்கிச்சி யாகஹாஷி என்பவர் இத்திட்டத்தின் வடக்கெல்லை மஞ்சுகோவென்றும், தெற் கெல்லை ஆஸ்திரேலியக் கரையென்றும், மேற் கெல்லை வங்காள குடாக் கடல் என்றும் வரையறுத்திருந்தார். இந்த எல்லைக் குட்பட்ட பகுதிகள் ஒரு கட்டமாக இருக்கின்றன.

**ஊர்க் குருவி பருந்தாகுமா?**

இந்தப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்ட பிறகு, ஆஸ்திரேலியா மீதும் இந்தியா மீதும் அவர்கள் பாயத் தான் செய்வார்கள். இந் நாடுகளைக் கைப்பற்றி அங்கே விமான நிலையங்களையும் போக்கு வரவு சாதனங்களையும் அமைத்துக் கொள்ள முயற்சிப்பார்கள். எதற்காக? **இத்தனையும் தம் எதிரிகள் இந் நாடுகளில் வசிக்கிறார்கள் என்பதற்காகத் தான. இந் நாடுகளில் இந்த ஏற்பாடுகளை அவர்கள் செய்வார்களானால், அவையே அவர்களுக்குக் கழுத்தறுப்பாக முடியப் போகின்றன.** இவ்வளவு பரந்த நாடுகளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பே, ஜப்பானைக் கவிழ்த்து விடும். "ஊர்க் குருவி பருந்தாக முடியுமா"?

நிற்க, தென் கடல்களில் ஜப்பான் விரட்டியடிக்கப் பட்டால், அது தோற்றதாகத் தான் அர்த்தம். சீனாவை ஜப்பான் முழுதும் வெல்லா விட்டால், ஈடு செய்ய முடியாத பெரும் ஆபத்திற்கு ஜப்பான் உள்ளாகும்.

**ஜப்பான் மன்னர் பவனி.**

ஜப்பானியர்கள் அடுத்தடுத்து வெற்றி கண்டு வந்தார்கள். அப்போது ஜப்பான் மன்னர் தன் வெள்ளைக் குதிரை மேல் தெருக்களில் பவனி வந்தார். வெகு சிறந்த முறையில் அவர்கள் யுத்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தான் இது குறிக்கிறது. இந்த வெற்றிகளைக் கொண்டு ஜப்பானியர்கள் திருப்தி கொள்ள வில்லை. பர்மாவைத் தாக்கினார்கள். அப்போது அங்கிருந்த பிரிட்டிஷ் படைகளும் சீனப் படைகளும் கொஞ்சம் தான். எனவே, பர்மாவையும் விரைவில் கைப்பற்றி விடாதபடி தடுத்துக் கொண்டிருக்கத் தான் இவர்களால் முடிந்தது. பழையபடி சீனாவைத் தாக்க ஜப்பானியர்கள் ஆரம்பித்தார்கள்.

கடைசியாக பர்மாவையும் கைப்பற்றிக் கொண்டனர். ஆகவே, சீனத் தலைவர் ஷியாங்-கெய்-ஷேக்கின் நிலைமை மேலும் கஷ்டமாகி விட்டது. என்றாலும், அவருடைய பிடிவாதமும் நாட்டுப் பற்றும் அவருக்கு உற்ற துணைகளாக விளங்கின. அன்றியும், அமெரிக்காவும் பிரிட்டனும் இராணுவ உதவியும் பொருளுதவியும் செய்கின்றன. ஆனால் பர்மா ரோடை இழந்தபோது ஒரு சில சீனர்கள் சிறிது கலக்கம் கொண்டனர். 'பருவத்தே பயிர் செய்கிறவர்கள் அல்லவா ஜப்பானியர்கள்.'

**ஒரு கையில் உதவியும் மறு கையால் வெடி குண்டடியும் சீனர்களுக்குக் கொடுக்க முன் வந்தனர். ஆனால் சீன மக்கள் அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர்.** சீனா முழுதையும் வென்றால் மட்டுந் தான் ஜப்பான் நிம்மதி யோடிருக்க முடியும். ஏனென்றால், சீன தளங்களி லிருந்து வெகு இலகுவில் நேச நாட்டுப் படைகள் ஜப்பான் தலை நகரையே தாக்கக் கூடும். ஆகவே இந்தச் சமயத்தில், சீனாவிற்கு நேச நாடுகள் உதவ வேண்டியது மிகவும் அவசியம். **இது உதவி மட்டு மல்ல, மிகவும் அவசியமுமாகும். அப்போது தான் நம் எதிரிகளை நாம் எளிதில் வெல்லக் கூடும்.**

**முலாம் பூசிய பேச்சு.**

சமீபத்தில் சர்வ தேசச் சந்தை யொன்று நியூயார்க்கில் நடை பெற்றது. அதற்கு ஜப்பான் கமிஷனராகப் போயிருந்தவர் டோஷிகோ என்பவர். இவர் சமீபத்தில் டோகியோ ரேடியோவில் பேசினார்.

அப்போது, அமெரிக்கா ஜப்பானுடைய ஆலோசனைகளைக் கொஞ்சங் கூட அங்கீகரிக்காதது பற்றி நீலிக் கண்ணீர் வடித்தார். ஒரு சிறிது இசைந்திருந்தால் கூட, பவளத் தீவுகளை ஜப்பான் தாக்கி யிருக்காதென்று அளந்து கொட்டுகிறார்.

ஆனால், அத் தீவு தாக்கப்படுவதற்கும், ஜப்பான் ஆலோசனைகளை அமெரிக்கா நிராகரிப்பதற்கும் நெடு நாட்களுக்கு முன்ன தாகவே, பவளத் தீவைத் தாக்க ஜப்பான் கப்பற்படை வன் கிளம்பியது என்பதற்கு, அவர் காரணங் கூறாமல் மழுப்பி விட்டார்.

இப்படி அவர் ரேடியோவில் பேசியதற்குக் காரணம் என்ன? தம் பேராசைத் திட்டம் ஈடேற ஒட்டாதபடி தடுத்துக் கொண்டிருப்பது பிரிட்டிஷ் பலந் தான் என்பதை அவர்கள் நன்கு உணர்ந் திருக்கிறார்கள். **ஆசியாவில் பிரிட்டிஷாருக்கு உள்ள சொத்துக்களை எல்லாம் சூறையாட வேண்டுமென்பது தான் ஜப்பானியர்களின் கருத்து. இந்தக் கருத்தை ஈடேற்றிக் கொள்ளுவதில் அமெரிக்காவின் விரோதத்தைத் தேடிக் கொள்ளாதிருக்க ஜப்பான் முயன்றது; ஆனால் முடியவில்லை. பிரிட்டனும் அமெரிக்காவும் பிரிந்து விட்டால், தானே கிழக் கடலில் தனி ஆட்சி செலுத்தலா மென்பது ஜப்பானின் பேராசை.**

ஜப்பான் போரில் இறங்கிய போது, ஹிட்லருக்குச் சாதகமாகப் போக்குக் காட்டும் பொருட்டு இறங்கியதாகச் சிலர் கூறினார்கள். ஜப்பானியர்களின் கொள்கைகளையும் தன்மையையும் உணர்ந்தவர்கள் யாரும் இப்படிச் சொல்ல மாட்டார்கள். தமக்கு எந்த விதமான உதவியும் செய்ய ஹிட்லரால் முடியா தென்று ஜப்பான் இராணுவாதிகாரிகளுக்குத் தெரியும். ஜப்பான், கீழக் கோடியில் போர் ஆரம்பித்ததன் பயனாக, பிரிட்டிஷ் படையிலும் அமெரிக்கப் படையிலும் ஒவ்வொரு பகுதிகள் இந்தப் போர்க் களத்திற்கு வந்து சேர்ந்தன. கீழக் கோடியில் போர் மூளாதிருந்தால் இந்தப் படைகளால் ஹிட்லருக்கு மேலும் கஷ்டம் அதிகமா யிருந்திருக்கும்.

இதற்குப் பதிலுதவி செய்வதாக ஹிட்லர் ஜப்பானுக்கு வாக்குக் கொடுத்திருப்பது உண்மை.

இதன் முதற் பகுதியும் வந்து கொண்டிருக்கிறது. அதாவது அத்லான்டிக் மகா சமுத்திரத்தில் தம் எதிரிகளின் கப்பல்களை நாசம் செய்யும் பொருட்டு; ஏராளமான நீர் மூழ்கிக் கப்பல்களையும் யு-படகுகளையும் ஜெர்மனி யனுப்பி யிருக்கிறது.

ஆனால், இவற்றை வெல்லும் பொருட்டு ஏராளமான பெரிய கப்பல்களை அமெரிக்காவும் இங்கிலாந்தும் கட்டிக் கொண்டிருக்கின்றன. நிற்க, போதுமான போக்கு வரவு வசதிகள் இல்லாதபடியால், போதுமானபடி சீனாவிற்கு இவற்றை உதவ, அமெரிக்காவால் முடிய வில்லை.

**யாருக்கு இலாபம்?**

இந்த யுத்தத்தில் அச்சு நாடுகள் வெற்றி பெற்றால், ஜப்பானுக்கும் கொண்டாட்டந் தான். ஜெர்மானியர்கள் வெற்றி பெறா விட்டால் என்ன செய்வது என்பது பற்றி மிஸ்டர் கோ சமீபத்தில் ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். **ஜெர்மனி தோற்றால், ஜப்பானோடு நெடு நாட்கள் போர் புரிவதை விட, ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வதே மேல் என்று நேச நாடுகள் நினைக்கத் தக்கபடி, தன் படைகளை ஜப்பான் திரட்டி வைத்திருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.** இது வரை ஜப்பான் சூறையாடிய தெல்லாம், பிரிட்டனையும், ஹாலந்தையும், விஷி பிரான்சையுந் தான். ஆகவே, அமெரிக்காவின் நல்லுறவைத் தான் தேடிக், கொள்ளக் கூடுமென்று ஜப்பான் நம்புகிறது.

எல்லா நாட்டு மக்களும் யுத்தத்தினால் சோர்வு அடைந்திருக்கிறார்கள். எனவே, சமாதானமும், உணவும், கோருவார்கள். வரிப்பளு குறைய வேண்டுமென்று நாடுவார்கள். சமூதாய நிலை முன்னேற வேண்டுமென்று விரும்புவார்கள். இவை மனித இயல்புகள் தான். **இதைத் தமக்குச் சாதகமாகக் கொண்டு, நேச நாடுகளி லிருந்து அமெரிக்காவைப் பிரித்து விட ஜப்பான் முயற்சிக்கும்.**

இதன் பொருட்டு எல்லா வகைப் பிரசாரங்களையும் கைக் கொள்ளுவார்கள். ஆசியாவில் நிரந்தரமான சமாதானம் நிலைக்க வேண்டுமானால், "ஆசியா ஆசியாக் காரர்களுக்கே" ஆகி விடவேண்டுமென்று கூறுவார்கள். இதற்கு என்ன அர்த்தம் என்றால், "ஆசியா ஜப்பானியர்களுக்கே" என்று தான் அர்த்தம். பிரிட்டிஷ் டச்சு சாம்ராஜ்யங்களின் நன்மையை முன்னிட்டு அமெரிக்க இளைஞர்களின் உயிர்களைப் பலி கொடுப்பதா என்றும் அமெரிக்கர்களைக் கேட்பார்கள்.

["டைம்ஸ்" பத்திரிகையின் டோக்கியோ நிருபர் எழுதிய கட்டுரையினின்று திரட்டியது.]

## தண்ணீர் எங்கே கிடைக்கும்

### கிணறு தோண்டுகிறவர்களுக்கு ஆலோசனை

படைகள் ஓரிடத்தி லிருந்து வேறிடங்களுக்கு அடிக்கடி மாறிப் போய்க் கொண்டிருக்கும்படி நேருகிறது. அப்போது அவர்களுக்குத் தண்ணீர் வசதி தேடிக் கொடுக்க வேண்டியது அதிகாரிகள் பொறுப்பு. எல்லா இடங்களிலும் ஆறுகளும் குளங்களும் ஏரிகளும் இருப்பதில்லை. எனவே கிணறுகளை தோண்டுகிறார்கள். தோண்டினாலும், நல்ல தண்ணீர் கிடைக்கும் என்ற உறுதியில்லை. இந்த கஷ்டத்தை ஸ்ரீமதி மில்லன் போக்கி விட்டார். எனவே, இவரை இலங்கை அரசாங்கத்தார் வேலைக் கமர்த்தி யிருக்கிறார்கள். இவர் இங்கிலாந்து, ஈராக்கு, ஸ்விச்சர்லந்து, மலேயா முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து இது பற்றி ஆராய்ச்சிகள் செய்து வந்தார்.

இங்கிலாந்தில் 'ஹேஸல்' என்றொரு மரமுண்டு. அதன் கவட்டையின் உதவியால் எங்கே தண்ணீர் கிடைக்கும் என்று தெரிந்து கொள்ளலாம். அது, போலவே இலங்கையில் கொய்யா மரக் கவட்டையைக் கொண்டு இவர் கண்டு பிடிக்கிறார். அன்றியும் அங்குள்ள நிலத்தின் தன்மையையும், எவ்வளவு ஆழத்தில் தண்ணீர் கிடைக்கு மென்றும், அது குடிப்பதற்காகுமா அல்லது உப்புத் தண்ணீரா என்றும் தெரிவித்து விடுகிறார். இவர் அங்கங்கே பெய்யும் பருவ மழைகளைக் கொண்டும், நாட்டின் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டும், தன் அனுபவத்தைக் கொண்டும் தான் இவற்றை நிர்ணயிக்கிறார். இவர் கூறிய சோதிடம் தவறியதே இல்லையாம்.

இந்தியாவில் கூட, கிணறுகள் தோண்டு முன்பு நிலத்தை இப்படி பரீட்சிப்பதுண்டு. இரண்டு கைகளாலும் இறுகப் பற்றிக் கொள்ளத் தக்கபடி ஈரங் காயாத புளியங் கவட்டையை வெட்டி, அதன் இரண்டு கிளைகளையும் கைகளில் இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். அதன் அடித் தண்டு முன்புறம் நீண்டிருக்க வேண்டும். இரண்டு முழங் கைகளையும் இரண்டு விலாப் புறங்களிலும் ஊன்றி, கவட்டையைப் பற்றிக் கொண்டு கிணறு தோண்டப் பட வேண்டிய இடத்தின் பக்கம் போனால், அந்தக் கவட்டைத் தண்டு, இரு கைகளையும் திருகிக் கொண்டு சுழலுகிறது. அப்படிச் சுழலுகிறது கீழே பூமிக்குள் தண்ணீர் இருக்கிறது என்பதை அறிவிக்கிறது. சுழலா விட்டால் தண்ணீர் இல்லை என்பதைத் தெரிவிக்கிறது.

# "சபாஷ் கல்கத்தா!"

## நக மிழந்த புலி

"யுத்த நெருப்பில் குளித் தெழுந்த, முதல் இந்திய மாகாணத் தலை நகரம், கல்கத்தா தான். ஆச்சரியப் படத் தக்க விதமாக தைரியத் தோடும் மன உறுதியோடும் அந் நகர வாசிகள் நடந்து கொண்டார்கள். சபாஷ் கல்கத்தா !". சென்ற டிசம்பர் மாதம் 20-ம் தேதி முதன் முதல் ஜப்பானியர்கள் விமானங்களி லிருந்து தாக்கிய வுடனே முன் கூறிய வாறு மேன்மை தங்கிய வைசிராய் பிரபு, மேன்மை தங்கிய வங்க மாகாண கவர்னருக்கு ஒரு செய்தி யனுப்பினுர். அதற்குப் பிறகு எதிரிகள் கல்கத்தாவை 4 முறைகள் தாக்கி யிருக்கின்றனர். சுமார் 8 மாதங்களுக்கு முன்னதாக இப்படி தாக்கக் கூடிய நிலைமையில ஜப்பானியர்கள் இருந்தார்கள் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. சென்ற ஏப்ரல் மாதம் 2?-ம் தேதி ஜப்பான் ஆதிக்கம் உச்ச நிலையி லிருந்தது. அப்போது "உடனடியாக ஏற்படக் கூடிய ஆபத்து, விமானத் தாக்குதல் தான்" என்று அப்போது ஜெனரலாகவும் இப்போது பீல்ட் மார்ஷலாகவும் உள்ள வேவல் குறிபபிடுகிருர். மேலும் அவர் கூறியதாவது :—"தம் தளங்களி லிருந்து எவ்வளவு தூரத்தில் ஜப்பானியர்கள் இருக்கிருர்கள் என்று சற்று கவனியுங்கள். அவர்களுடைய யுத்த முயற்சி எவ்வளவு அதிக தூரம் பரவி இருக்கிறது என்பதையும் கவனியுங்கள். அவர்கள் ஜப்பானி லிருந்து இந்தியாவிற்கு வர வேண்டுமாஞல், உள்ள நிலப் பாதையையும் கடற்பாதையையும் கடற் படையைக் கொண்டும் விமானப் படையைக் கொண்டும் தாக்க முடியாதபடி அமைந் திருக்கின்றன. **ஜெர்மனி பிரிட்டனேயோ அல்லது பிரிட்டன் ஜெர்மனியையோ ஏராளமாகவோ, கடுமை யாகவோ, தொடர்ச்சியாகவோ விமானங்களைக் கொண்டு தாக்குவது போல, இந்தியாவை ஜப்பானிய விமானங்கள் வந்து தாக்கக் கூடிய சக்தி, அவர்களுக்குக் கிடையாது".** இந்த மொழிகள் எவ்வளவு உண்மை என்று கல்கத்தாவைச் சமீபத்தில் ஜப்பானியர்கள் தாக்கிய போது ஏற்பட்ட அனுபவங்கள், மெய்ப்பித்து விட்டன. மிக மிக அற்பமான அளவில் தான் கல்கத்தாவைத் தாக்கிஞர்களே யொழிய, ஜெர்மனி பிரிட்டனைத் தாக்கிய அளவிற்கோ பிரிட்டன் ஜெர்மனியைத் தாக்கிய அளவிற்கோ, இல்லை.

ஜெர்மன் விமானங்கள் லண்டனைத் தாக்கிய போது, ஒரு முறையில் மட்டும் 450 டன் வெடி குண்டுகளை எறிந்தார்கள். சென்ற வருஷம் மே மாதம் பிரிட்டிஷ் விமானங்கள் 1,000 கிளம்பிப் போய் கொலோன் நகரத்தின் மீது 90 நிமிஷங்களில் 3,000 டன் வெடி குண்டுகளை எறிந்தன. இவ்வளவு கடுமையாகத் தாக்குவது சாதாரணமாக மிகவும் அபூர்வந் தான். என்ருலும் இப்போது சாதாரணமாக அடிக்கடி, பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த 200 'பாம்பர்' விமானங்கள் கிளம்பிப் போய் சராசரி ஒரு முறைக்கு 450 டன் வெடி குண்டுகள் விகிதம் எறிந்து வருகின்றன.

இவ்வளவு கடுமையாக ஜப்பான் தாக்க முடியுமா ?

**நக மிழந்த புலி.**

பர்மாவில் ஏராளமான விமான நிலையங்க ளிருந்தால், சிறந்த முறையில் போக்கு வரவு சாதனங்கள் அமைந் திருந்தால், நல்ல முறையில் பயின்று தேறிய படைகளிருந்தால், யுத்தத் தளவாடங்களும் அவற்றைத் தயாரிக்கும் தொழிற் சாலைகளும் ஏராளமாயிருந்தால், அப்படித் தாக்க ஒருக்கால் ஜப்பாஞல் முடியலாம். இந்த வசதிகள் இவர்களுக்கு பர்மாவில் கிடையாது. அன்றியும் **பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க 10-வது விமானப் படையும் ஜப்பானுக்குக் கொஞ்சங்கூட ஓய்வு கொடுக்காமல் தாக்கிக் கொண்டிருக்கின்றன.** கல்கத்தாவை முதல் 4 முறைகள் தாக்கிய போது எவ்வளவு வெடி குண்டுகளை எறிந்தார்களோ, அதை விட அதிகமாகவே தான், சென்ற டிசம்பர் மாதம் 26-ம் தேதி 'ஹிஹோ' என்னும் பர்மிய நகரத்தை அமெரிக்க 10-வது விமானப் படை தாக்கிய போது எறிந்தது. பர்மாவில் எதிரிகள் வசமுள்ள இராணுவக் குறிகளை நேச நாட்டு விமானப் படைகள் நாசஞ் செய்து கொண்டு வருகின்றன.

சென்ற டிசம்பர் மாதம் 26-ம் தேதி ஒரு பத்திரிகைக் காரர்கள் மகாநாட்டில் ஜெனரல் கலேடன் பிஸ்ஸெல் குறிப்பிட்டதாவது :—பர்மாவிலுள்ள எதிரி விமான நிலையங்கள் சதா நெருப்புக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, தம் விமானப் படையை ஒரு இடத்தி லிருந்து மற்ருேரிடத்திற்கு அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கிருர்கள். அல்லாமலும் அரகான் டிவிஷனுக்குள் நேச நாட்டுப் படைகள் புகும்படி அனுமதித்ததற்கு ஜப்பான் சரியான காரணம் சொல்ல வேண்டும். கல்கத்தாவைத் தாக்கியது இதற்குச் சரியான பதிலாகாது. ஜப்பானிய பாம்பர் விமானங்கள் பெரும்பாலும் இராக் காலங்களில் தான் வருவது வழக்கம். அவை வெகு வெகு உயரத்தில் பறந்து வருகின்றன. கல்கத்தாவிலுள்ள போர் விமானங்களுக்கும் விமான எதிர்ப்புப் பீரங்கிகளுக்கும் அஞ்சித் தான் அவை அப்படி வந்தன. **கல்கத்தாவில் விமானத் தாக்குதல் நேர்ந்த போது, அந்த ஊர் வாசிகளுடைய மன நிலையைப் புகழ்ந்து மேன்மை தங்கிய வைசிராய் பிரபுவும், மாகாண கவர்னரும் முதல் மந்திரியும் வெகுவாய்ப் பாராட்டி யிருக்கிருர்கள்.**

கல்கத்தாவை என் ஜப்பானியர்கள் தாக்கிஞர்கள் ? தம் பாதுகாப்புத் தந்திர முறைகளை மறைக்க வேண்டி, தாக்கும் சக்தி தமக்கு உண்டு என்று பிறர் எண்ண வேண்டு மென்பதற்காகத் தான், தாக்கிஞர்கள். நக மிழந்த புலியைப் போல் இன்று ஜப்பான் இருக்கிறது. அது இன்னும் களைப் படையவில்லை. எங்கேனும் ஓரிடத்தை அது தாக்கத் தான் செய்யும். அவர்களுக்கு அருகிலுள்ள முக்கியமான குறி கல்கத்தா. இதைத் தாக்குவதஞல், பிரசாரம் செய்ய ஜப்பானுக்கு நல்ல வசதி ஏற்படும். கல்கத்தாவைத் தாக்கிய போது ஜனங்கள் மீது எறியக் கூடாத வெடி குண்டுகளையும் கூட எறிந்திருக்கிருர்கள். தாம் இராணுவ ஸ்தானங்களை மட்டுந் தான் வெடி குண்டுகளால் தாக்குவதாக அவர்கள் செய்து கொண்டு வந்த பிரசாரம் இப்போது பொய்யாகி விட்டது.

**ரஷ்யர்கள் சொல்லுவது :**

**கொஞ்சம் பேர்களாக வந்தால் உங்களை வெல்லுவேன். அதிகம் பேர்கள் வந்தீர்களாஞல், நீங்களே உங்களைத் தோற்கடித்துக் கொள்ளுவீர்கள்.**





# யுத்த நிலைமைபற்றி ஜெனரல் பிஸ்ஸெல்

## அமெரிக்க 10-ம் விமானப் படையின் வீரச் செயல்கள்

புது வருஷ தினத் தன்று மாலை புது டில்லியில், 1942-ம் வருஷம் நடை பெற்ற போராட்டத்தைக் குறித்து ஜெனரல் கிளேடன் பிஸ்ஸெல் பத்திரிகைக் காரர்கள் மகா நாட்டில் கூறியதாவது :—"இந்த வருஷம் நேச நாடுகளுக்கு மிகவும் கஷ்ட காலமாகத் தான் இருந்து வநதது.

பிரிட்டிஷாாகளுக்கு இன்னும் அதிகக் கஷ்ட காலமா யிருந்தது. இந்தக் கடுமையான கஷ்ட காலத்தை நாம் கடந்து விட்டோம். ஆப்பிரிக்காவி லிருந்து ஜெர்மன் படைகளையும் இத்தாலியப் படைகளையும் விரட்டி விட்டோம். ரஷ்யர்களோ மிகச் சிறந்த முறையில் மீண்டும் தாக்கக் கிளம்பி விட்டார்கள். தென் மேற்குப் பசிபிக் தீவுகளில் நமக்கு வெற்றி தான். இங்கே அமெரிக்கப் படைகள் போய் இறங்கி விட்டன. இந்தப் போர்க் களத்திலே அமெரிக்கர்கள் தகுந்தபடி தம்மை ஆயத்தம் செய்துகொண்டு விட்டார்கள்."

"நல்ல முறையில் இங்கே ஆரம்ப வேலைகள் செய்யப் பட்டிருக்கின்றன. புது வருஷத்தில் நாம் முன்னேறிப் போகத் தான் போகிறேம். அமெரிக்க 10-வது விமானப் படையை இந்தியர்களும் சீனர்களும் மிகச் சிறந்த முறையில் உபசரித்தனர். ஆகவே, அவர்களுக்கு அவ்விமானப் படையினரின் நன்றி உரியது. நாம் எதிர் பார்க்கக் கூடிய அளவிற்கும், விரும்பக் கூடிய அளவிற்கும், இந்தியர்களும் சினர்களும் ஒத்துழைத்தார்கள். நாம் ஒருவரோ டொருவர் நெருங்கிப் பழகிய பிறகு, மிகச் சிறந்த முறையில் நாம் உண்மைகளை உணர்ந்து கொள்ளுகிறேம். ஆரம்ப காலத்தில் சில்லரை மனக் கசப்புக்களுக்குக் காரணமா யிருந்தவை எல்லாம், திருப்திகரமாகத் திருந்தி விட்டன. **பரஸ்பர மரியாதையும் நம்பிக்கையும் கௌரவமும் எல்லா இனத்தவர்களுக் குள்ளாகவும் ஓங்கி வளர்ந்து கொண்டு வருகின்றன."**

"புதிய வருஷத்தில் மகத்தான வெற்றி பெற வேண்டு மென்றும், முடிவான வெற்றி பெறுவதற்கு நம்மாலானதை நாளுக்கு நாள் மேலும் அதிகமாகச் செய்ய வேண்டு மென்றும், 10-வது விமானப் படை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது."

சென்ற வாரம் இந்த 10-ம் விமானப் படை செய்துள்ள அரிய சேவைகளைக் குறித்து அவர் மேலும் கூறியதாவது :—"சென்ற டிசம்பர் மாதம் 24-ம் தேதி மேற்கு யூஞனின் ஒரு பகுதியை ஜப்பானியர்கள் தாக்கிஞர்கள். இதற்கு இரண்டு ஜப்பானிய பாம்பர் விமானங்கள் வந்தன. இவற்றுள் ஒன்றை சுட்டு வீழ்த்திஞேம்; மற்றென்றை காயப் படுத்திஞேம். கிருஸ்மஸ் தினத்தன்று 8 பாம்பர் விமானங்களும், 9 போர் விமானங்களும் வேவு பார்க்கும் விமானம் ஒன்றும் அதே போர்க் களத்திற்கு வந்தன. அதற்கு மறு நாளும் ஜப்பானியர் தாக்க முயன்றனர். பிறகு வெளிவந்த பத்திரிகை அறிக்கையில், இவற்றுள் 3 பாம்பர் விமானங்களும் 3 போர் விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன வென்றும், 3 பாம்பர் விமானங்களும் 6 போர் விமானங்களும் சேதப்படுத்தப் பட்டன வென்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. ஆஞல், சீனர்கள் தாம் 8 விமானங்களை அந்தப் போரரங்கத்தில் கண்டதாகப் பிறகு தெரிவித்தார்கள். அதாவது நாம் 6 விமானங்களை மட்டும் சுட்டு வீழ்த்தியதாக அறிவித்திருந்தோம். ஆஞல் சீனர்கள் அனுப்பி யிருக்கும் செய்திப்படி, மேலும் இரண்டு விமானங்கள் வீழ்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது."

"விமான நிலயத்தையும் ரங்கூன் துறைமுகத்தையும் தாக்கியதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்த வாரம் இரண்டு முறை ரங்கூனை மிகக் கடுமையாகத் தாக்கிஞேம். இரண்டாம் முறை தாக்கிய போது, ஜப்பானியர்கள், எரிந்து கொண்டிருந்த தம் டாங்கியை விட்டுவிட்டுத் தப்பிக் கொண்டார்கள். ஒரு ஜப்பானிய சாமான் கப்பல் மீது வெடி குண்டை எறிந்தோம். அல்லாமலும் பாங்காக்கிலுள்ள வெடி மருந்து சாலை மீதும், துறை முகங்களின் மீதும் பண்டக சாலைகள் மீதும் குண்டுகளெறிந்து தாக்கிஞேம். இந்தப் போர் அரங்கத்தில் விமானங்கள் தம் தளத்தை விட்டு இவ்வளவு தூரம் போய்த் தாக்கி வெற்றியோடு இது வரைத் திரும்பியதே கிடையாது."

அவரைப் பத்திரிகைக் காரர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் பதில் கூறியதாவது :—"இங்கிலாந்திற்கும் இத்தாலிக்கும் உள்ள தூரத்தை விட இது அதிக தூரம். அன்றியும் இந்த விமானங்கள் பறந்து போன நாடுகளில் பெரும் பகுதி, விரோதிகளுக்குச் சொந்தம். இவ்வளவு தூரம் நம் விமானப் படைகள் பறந்து போய்ப் போராடின வென்று பெருமை கொள்ள வேண்டுமென்பது நம் ஆசை யல்ல. மற்ற, போர் முனைகளில், இதை விட வெகு தூரம் போன படைகள் இருக்கின்றன."

கண்ட இடத்தி லெல்லாம் ஜப்பானியர்களை நாம் தாக்கிஞேம். பர்மா முழுவதையும் நாம் தாக்கி யிருக்கிறேம். இந்த வாரம் நம் பாம்பர் விமானங்க ளெல்லாம் தம் தளங்களுக்கு வந்து சேர்ந்து விட்டன.

## பர்மாவிற்குள் புகுந்தோமா ?

நேச நாட்டுப் படைகள் அரகானுக்குள் பிரவேசித்து விட்டன. இது பலருக்கு ஊக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது. உண்மை நிலைமையை நாம் நன்கு உணர வேண்டும். நேச நாட்டுப் படைகள், சிட்டகாங்குக்கும் ஆக்யாபுக்கும் இடையே யுள்ள மாங்டாவுக்கும் புத்திடாங்குக்கும் போய்ச் சேர்ந்திருக்கின்றன. **புத்திடாங்** ஆக்யாபுக்கு வடமேற்கே 60 மைல்கள் தூரத்தி லிருக்கிறது. மாங்டா, நாப் நதியின் முகத்துவாரத்தி லிருக்கிறது. இந்த ஆற்றில் கப்பல்கள் 30 மைல்கள் தூரம் மேலே போகலாம். இதற்கு நேர் கிழக்கே புத்திடாங் இருக்கிறது. இந்த இரண்டு இடங்களுக்கும் இடையே ஒரு ரோடு போகிறது. மாங்டாவை நாம் கைப்பற்றிக் கொண்டதஞல் இரண்டு வகைகளில் நமக்குச் சாதகம். முதலாவதாக, ரயில் வழியாக நமக்குத் தேவையான சப்ளைகளைக் கொண்டு வரலாம். இரண்டாவது ஆற்றின் வழியாக உள் நாட்டிற்கும் அவற்றை கொண்டு போகலாம்.

மாங்டாவை நாம் கைப்பற்றிக் கொண்டது, சரியான படை யெடுப்பின் ஆரம்பமாகாது. பர்மாவை நோக்கி நாம் இன்னும் கிழக்கே போக வில்லை ; ஆஞல் தெற்கே அரகான் கரைக்குத் தான் போயிருக்கிறேம். அரகானுக்கும் பர்மாவிற்கும் இடையே உயர்ந்த மலைக் காடுகள் இருக்கின்றன. உலகத்திலேயே அதிக மழை இங்கே தான் பெய்கிறது. அரகான் பகுதியை நாம் கைப் பற்றிக் கொண்ட போதிலும், இந்தப் பெரும் மலைக்காடுகளைக் கடந்து தான் பர்மாவிற்குப் போக முடியும்.

## பிரிட்டிஷ் விமானப் படையின் வீரச் செயல்கள்

பர்மாவிலுள்ள ஜப்பானியப் படைகளை பிரிட்டிஷ் விமானப் படை சென்ற நவம்பர் மாதத்தில் மட்டும், தாக்கும் பொருட்டு 20 பகல்களிலும் 10 இரவுகளிலும் கிளம்பின. என்ருலும் தாக்கியது 10 பகல்களிலும் 9 இரவுகளிலும் தான். டிசம்பர் மாதத்தில் சராசரி நாள் ஒன்றிற்கு ஒரு முறை விகிதம் தாக்கி யிருக்கின்றது. இந்த மாதம், முதல் 6 நாட்கள் வரை, மழை காரணமாக விமானங்கள் வெளிப்பட வில்லை. ஆனல் டிசம்பர் மாதம் மத்தியிலிருந்து இடை விடாது தாக்கிக் கொண்டிருக்கின்றன.

எதிரிகளுக்கு மாக்வேயில் ஒரு பலமான விமான தளம் இருக்கிறது. இதை எட்டு முறை பிரிட்டிஷ் விமானப் படை தாக்கியது. என்ன தான் கடுமையாக ஒரு விமான நிலயத்தைத் தாக்கினலும், விரைவில் அதைத் தகுதியானதாக ஆக்கிக் கொள்ளக் கூடும். ஆனல் நம் விமானங்கள் தாக்கியதன் பயனக, மாக்வே விமான நிலயத்திற்கு நேர்ந்த சேதத்தைப் பழுது பார்த்துக் கொள்ள இன்னும் அவர்களால் முடிய வில்லை. ஆக்யாப் நகரத்தையும் தாக்கினேம். நம் விமான வெடி குண்டுகளுக்கு, விமான நிலயங்களும், ரயில்வே போக்கு வரவும், ஆறுகளில் போகும் கப்பல்களும், இலக்காயின. மூன்று இரவுகளில் டூங்கூ என்னுமிடத்திலுள்ள ஜப்பானிய விமான நிலயங்களைத் தாக்கினேம். மற்ற இரவுகளில் ஹிஹோ, அக்யாப், மாக்வே ஆகிய ஊர்களைத் தாக்கினேம். டிசம்பர் மாதத்தில் 2 ஜப்பானிய விமானங்களை அழித்தோம். அநேக விமானங்களைச் சேதப்படுத்தினேம். பிரிட்டிஷ் விமானப் படைக்கு 8 விமானங்கள் நஷ்டமாயின.

டிசம்பர் மாதத்தில் எதிரிகள் இந்தியாவைத் தாக்க ஆரம்பித்தனர். கல்கத்தாவைத் தாக்கினர்கள். சிட்டகாங்கிலும் பெனியிலும் வெடி குண்டுகளை வீசினர்கள். வெடி குண்டுகள் ஒன்று விழுந்தாலும் 100 விழுந்தாலும் பலன் ஒன்று தான். இராணுவப் போக்கின்படிப் பார்த்தால், இங்கு நேர்ந்த சேதம் மிகவும் அற்பம் என்று தான் சொல்ல வேண்டும். **ஜப்பானியர்கள் சாதாரணமாகப் பகல் காலத்தில் தான் விமானங்களில் வந்து தாக்குவது வழக்கம். ஆனல் கல்கத்தாவை இரவில் தாக்கினர்கள். ஏன் இந்த மாறுதல்? நம் பாதுகாப்பிற்கு அஞ்சி யல்லவா இரவில் வந்து கள்ளத் தனமாக வெடிகுண்டுகள் எறிந்தார்கள்.**

இரவில் விமானப் போர் நடந்தால், பலா பலன்களை அறுதி யிட்டுச் சொல்ல முடிவதில்லை. அந்த விமானப் போரில், ஒரு எதிரி விமானத்தைச் சுட்டு வீழ்த்தினது உறுதி. மற்ற காயப் பட்ட விமானங்கள் தம் தளததிற்குப் போய்ச் சேர்ந்தன வென்றும் உறுதியாய்ச் சொல்ல முடியாது. சென்ற மாதத்தில் இந் நாட்டைத் தாக்க வந்த 13 எதிரி விமானங்கள் நாசமாயின. இவை பெரும்பாலும் போர் விமானங்கள். மற்றவை காயப்பட்டன. நமக்கு 6 விமானங்கள் நஷ்டம். நம் விமானிகள் எல்லாம் சௌக்கியமா யிருந்தார்கள்.

**அமெரிக்கா முயற்சி.**

டிசம்பர் மாதத்தில் அமெரிக்க விமானப் படை ஜப்பானியர்களுக்கு விரோதமாகத் தன் முயற்சியைப் பெருக்கியது. இந்தியாவி லிருந்து இவை கிளம்பி 25 முறை சென்றன. போக்கு வரவு சாதனங்களையும், துறை முகங்களையும், கப்பல்களையும், தொழிற்சாலைகளையும் தாக்கின. பல முறை ரங்கூன் கப்பல் தளங்களையும், துறை முகத்தையும் கடுமையாகத் தாக்கி நல்ல வெற்றி பெற்றன. பாங்காகிலுள்ள கடற் படைத் தளத்தையும் வெடி மருந்து சாலையையும் கடுமையாகத் தாக்கின.

## பாரசூட் பயிற்சி விவரம்

விமானப் படையினர் 'பாரசூட்' பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இந்தப் பயிற்சி பெற்றுள்ள இந்தியப் படையினர் தாமாகவே இதில் சேர்ந்தவர்கள் தான். இன்னும் இது ஒரு வாலிண்டியர் படையாகவே இருக்கிறது.

இதில் சேர்ந்தவர் முதன் முறை விமானத்தில் பறக்கும் போதேயே, இந்தப் படைக்கு அவர் தகுதியுடையவர் தான வென்று நிர்ணயித்து விடுகிருர்கள். இதற்கு முன்பு அவரை டாக்டர் சோதிக்கிருர். இதுவும் கடுமையான சோதனை தான். இந்த இரண்டு வகைச் சோதனைகளிலும் தேறியவர்கள் தான் உடற் பயிற்சிக்கு அனுப்பப் படுகிருர்கள். இது சாதாரண உடற் பயிற்சி யல்ல. சில தசைகளை இப் பயிற்சி வலுவாக்குகிறது, இது அவர்களுக்கு மிகவும் அவசியம். கரணமடிப்பதற்கான சில இரகசியங்களையும் அங்கே அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிருர்கள். இந்தப் படைக்கு மிகுந்த உயரமும் கனத்த தோள்களும் உடையவர்களை விட, காலில் மிகவும் பலமுள்ள குள்ளர்கள் தான் மிகவும் பொருத்த மானவர்கள்.

இந்தப் படைக்கு மிகவும் பொருத்தமானவர்கள் இந்தியாவில் ஏராளமா யிருக்கிருர்கள். மலை வாசிகளும் கூர்க்கர்களும், பட்டாணியர்களும் பலமுள்ள கால்களுடையவர்கள். விசேஷ உடற் பயிற்சிக்குப் பிறகு, ஒரு விமானத்தில் எப்படி ஏறுவது என்று கற்றுக் கொள்ளுகிருர்கள். பிறகு, என்னென்ன செய்ய வேண்டு மென்றும் பார்ச்சூட்டை எப்படிக் கையாள வேண்டு மென்றும் கற்றுக் கொள்ளுகிருர்கள். இவை அனைத்தும் அவர்களுக்கு முறையே செய்து காட்டப் படுகின்றன. பிறகு 6 அல்லது 7 அடி உயரத்திலிருந்து குதித்துப் பழகுகிருர்கள். தம் போர் உடுப்புகளுக்கு மேலே, ஒரு வகை அங்கியையும் கால் சட்டையையும் அணிந்து கொள்ளுகிருர்கள். இவை ஏனென்ருல், இவர்கள் விமானங்களி லிருந்து குதிக்கும் போது இவர்களுடைய யுத்த ஆயுதங்கள் பாரசூட்டில் சிக்கிக் கொள்ளா திருக்க வேண்டித் தான்.

இவர்களுடைய உடுப்புகளிலுள்ள பைகளில் வெடி குண்டுகளையும், கால்களில் சிறு துப்பாக்கிகளைக் கட்டியும், கொண்டு போகலாம். இவர்கள் தரைக்குப் போய்ச்சேரு முன், விரைவில் துப்பாக்கியைச் கழற்றிக் கொள்ளத் தக்கபடி வசதிகள் அமைந்திருக்கின்றன.

பாரசூட் கட்டின் ஒரு முனை விமானத்தி லிருக்கிறது. பாரச்சூட் படையினர் குதிக்கும் போது, அது குடை போல் விரியும் வரை, விமானத்திற்கும் பாரசூட்டிற்கும் ஒரு கயிறு அமைந்திருக்கும். பாரசூட் நன்ருகக் குடை போல் விரிந்தவுடன், இந்தத் தொடர்பு நீங்கி விடுகிறது.

பாரச்சூட் படையினர் முதுகில் ஒரு கச்சையோடு விமானத்தினின்று ஆகாயத்தில் ஒவ்வொருவராகக் குதிக்கிருர்கள். இடையே அவ்வப்போது, குதித்த படையினருக்கு பாரசூட் மூலமாகவே யுத்தத் தளவாடங்களும் அனுப்பப் படுகின்றன.

**எப்படிக் குதிப்பது ?**

பாரசூட் கொண்டு குதிக்கிறவர்கள் கைகளை இரண்டு புரங்களிலும் அமைத்துக் கொண்டு கால்களைச் சேர்த்து நேராக வைத்துக் கொண்டு தான் குதிக்க வேண்டும். இல்லாவிட்டால், பாரசூட் கயிறுகளில் உடல் சிக்கிக் கொள்ளக் கூடும். அப்போது பாரசூட் குடை விரியாது. உயிருக்கும் ஆபத்து உண்டாகும்.

ஒரு பாரசூட் படையினர் தரையை அடையும் போது, அந்த வேகம் அவரை முன்புரமாகத் தள்ளும். அப்போது அவர் ஒரு கரணமடித்தாரானல், அந்த வேகம் மாறி விடும். அவர் அப்போது பூமியில் உறுதியாய் நிற்கக் கூடும்.

ஒரு முறை பாரசூட் உதவி கொண்டு குதித்தவர்கள், பிறகு இலகுவாகக் குதிக்கிருர்களாம். பல முறை குதித்துத் தேர்ச்சி யடைந்தவர்களுக்கு இரக்கையும் அதைக் கொண்ட பாரச்சூட் படைச் சின்னமும் கொடுக்கிருர்கள்.



## "அரண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்"

பொழுது விடிந்தது. கிருஷ்ணசாமிக்கு முன்னே ஒரு ரேடியோ இருந்தது. அதிலுள்ள ஒரு திருகைத் திருகினன். அவன் முகத்தில் மகிழ்ச்சியில்லை. உசடு தட்டியது. சற்று தலையைச் சொரிந்தான். யோசித்தான். 'பட பட பட பட' வென்னும் உரத்த சத்தம் கேட்டது. அவன் மனம் மேலும் வருந்திற்று. என்ருலும் அவன் முயற்சியை அவன் கைவிட வில்லை. மேலும் மேலும் அந்தத் திருகுகளைத் திருகிக் கொண்டிருந்தான். உரத்த சத்தம் நின்றது. வேறெரு குரல் கேட்பது போலிருந்தது. கிணற்றிற் குள்ளிருந்து பேசுகிறவன் குரல் போலிருந்தது அது. கிருஷ்ணசாமி முகத்தில் சற்று மகிழ்ச்சி காணப் பட்டது. வன் ? அந்த ரேடியோவை கிருஷ்ணசாமி அப்போது தான் செய்து முடித்தான். மீண்டும் மற்றெரு திருகைத் திருகினன். அந்தக் குரல் சற்று உரத்துக் கேட்டது......டனிலிருந்து செய்தித் திரட்டு" என்னும் சொற்கள் அவன் காதுகளில் விழுந்தன. 'லண்டன் செய்திகள்' அப்போது சொல்லப்படும் என்று உணர்ந்தான். அவற்றைக் கேட்பதற்கு அவன் ஆயத்தமானன். ஜப்பானியர்கள் இந்தியாவிற்கு வந்து விடுவார்களோ என்ற சந்தேகமும் பயமும் அவனுக்கு அதிகம். அப்போது ரஷ்யாவைப் பற்றிய செய்திகளை ரேடியோ வெளி யிட்டுக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் 'இந்தியாவைப் பற்றிய செய்திகள்' என்னும் சத்தம் கேட்டது. மிகுந்த ஆவலோடு கேட்டான் கிருஷ்ணசாமி. அந்தச் சமயத்தில் ரேடியோவில் பெருத்த சத்தம் அடிக்கடி கிளம்பியது. ரேடியோ செய்திகளைக் கேட்க ஒட்டாதபடி இச்சத்தம் தடை செய்தது. என்ருலும், அவ்வப்போது சில வார்த்தைகள் கேட்டன. "ஜப்பானியர்கள் இந்தியாவின் கடற்கரைக்கு வெகு தூரத்திற் கப்பால் இல்லை" என்ரு சொன்னன் ரேடியோவில் ? ஜப்பானியர்கள் இந்தியாவிற்குள் வந்து விடுவார்களோ என்ற அச்சம் அவனுக்கு எற்கெனவே உண்டு. இச் செய்தி அவன் காதில் விழுந்த வுடனே, தலை கிறுகிறுத்தது. ரேடியோ செய்திகளை உன்னிப்பாய்க் கேட்க அவனல் இயல வில்லை. உன்னிப்பாய்க் கேட்டிருப்பானுனல், சரிவரக் கேட்டிருப்பான். தவறு செய்யக் காரணமே இராது.

தன் மனைவியிடம் ஓடினன் விரைவாக.

கிருஷ்ண.—கிளம்பு சீக்கிரம் !

மனைவி.—எங்கே ?

கிருஷ்ண.—ஜப்பான்காரன்......

மனைவி.—ஜப்பானுக்கா ? என் ?

கிருஷ்ண.—வந்து விட்டான்.

மனைவி.—யார் ?

கிருஷ்ண.—மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு உடனே கிளம்பு. தாமதிக்க நேர மில்லை. 'கேள்விகள் கேட்டுக் கொண்டே பொழுதைக் கடத்தாதே.'

மனைவி.—எவன் வந்து விட்டான் ? என் போக வேண்டும் ? எங்கே போக வேண்டும் ?

கிருஷ்ண.—கேள்விகளைக் கேட்டுக் கொண்டே யிரு ! ஜப்பான்காரன் வந்து விட்டான்.

மனைவி.—ஐயய்யோ ! எப்போ ? எங்கே ? இதோ, இதோ கிளம்புகிறேன்.

கிருஷ்ண.—நீ ஆயத்தமாகு ! அதற்குள் நம் ஆரோக்கியசாமிக்கும் விஷயத்தைச் சொல்லி, கிளம்பி விடச் செய்கிறேன். பாவம் ! அவனும் அவன் குடும்பத்தாரும், உயிர் தப்பிப் பிழைக்கட்டும்.

மனைவி.—அதற்குள் நானும் மூட்டை முடிச்சுக்களுடன் ஆயத்தமாகிறேன். போய் சீகிரம் வந்து விடுங்கள்.

ஆரோக்கியசாமியை எச்சரிக்க வேண்டி கிருஷ்ணசாமி கிளம்பினன்.

* * * * *

நேரே கடைத் தெருவிற்குப் போனன். ஆரோக்கியசாமி, தன் கடையில் உட்கார்ந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தான். விரைந்து கடைக்குள் புகுந்தான் கிருஷ்ணசாமி. இவனைக் கண்டதும் ஆரோக்கியசாமி வரவேற்ருன்.

கிருஷ்ண.—செய்தி தெரியுமா ?

ஆரோக்.—எந்தச் செய்தி ?

கிருஷ்ண.—லண்டனி லிருந்து சமீபத்தில் வந்த செய்தி ?

ஆரோக்.—அது என்ன செய்தி ?

கிருஷ்ண.—இந்தியாவின் கடற்கரைக்கு வெகு அருகிலேயே ஜப்பானியர்கள் இருக்கிருர்கள்.

ஆரோக்.—என்ன ? ஜப்பானியர்களா ? எங்கே ?

கிருஷ்ண.—எந்த இடத்தி லென்று எனக்குத் தெரியாது. ஆனல் நம் இந்தியாவின் கரை யருகிலென்று மட்டும் சொல்லுவேன்.

ஆரோக்.—உனக் கெப்படித் தெரியும் ?

கிருஷ்ண.—இன்று காலை நான் ரேடியோவில் இச் செய்தியைக் கேட்டேன்.

ஆரோக்.—அப்படியானல் நானும் கிளம்ப வேண்டியது தான்.

கிருஷ்ண.—கிளம்ப வேண்டியது தான். மூட்டை முடிச்சுக்களைக் கட்டும்படி நானும் என் மனைவியிடம் சொல்லி விட்டு வந்தேன்.

ஆரோக்.—நானும் என் மனைவியிடம் சொல்லி ஆயத்தமா யிருக்கும்படி தெரிவித்து விட்டு, பள்ளிக் கூடத்திற்குப் போய் என் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன். நானும் உன்னேடேயே கிளம்பி விடுகிறேன். என் தாயாருக்கு உடம்பு நன்ருயில்லை. என்ருலும், அவர்களையும் கொண்டு போய் விட வேண்டியது தான்.

கிருஷ்ண.—சரி ! கிளம்பு. நான் போய் வருகிறேன்.

ஆரோக்கியசாமி கிருஷ்ணசாமிக்கு விடைகொடுத்தனுப்பி விட்டு தன் கடையை மூடிக் கொண்டிருந்தான். அப்போது பாளையம் வெற்றிலை பாக்கு வாங்கும் பொருட்டு அக்கடைக்கு வந்தான். அப்போது அவசரம் அவசரமாக ஆரோக்கியசாமி கடையை அடைப்பதைக் கண்டு,

பாளையம்.—என்ன ஆரோக்கியசாமி ! என் கடையை யடைக்கிருய் ? என்ன விசேஷம் ?

ஆரோக்.—நான் கிளம்பி விடுகிறேனப்பா ! உனக்குத் தெரியாதா ? ஜப்பான்காரன் வந்து விட்டானமே !

பாளையம்.—என்ன ? ஜப்பான்காரன ? எங்கே வந்திருக்கிருன் ?

ஆரோக்.—எங்கேயோ எனக்குத் தெரியாது. ஒரு வேளை நம் துறைமுகத்திற்கே வந்திருக்கவும் கூடும். நீயும் கிளம்பி விடு.

பாளையம்.—இப்படி அரை குறைச் செய்திகளை எனக்குச் சொல்லாதே ; உனக்கு யார் இந்தச் செய்தியைச் சொன்னது ?

இதற்குள் தன் கடையை மூடிக் கொண்டு வெளியேறும் ஆரோக்கியசாமி, அன்று காலை கிருஷ்ணசாமி ரேடியோ மூலம் இச் செய்தியைக் கேட்டதாகத் தெரிவித்துக் கொண்டே போனன்.

பாளையம்.—ரேடியோவிலேயா ? அப்படியானல் உண்மையாகத் தான் இருக்க வேண்டும் !

ஆரோக்.—ஆமா ! உண்மை தான்.

பாளையம் திகைத்தான். அவன் மனைவிக்கும் பேறு கால சமயம். அதுவும் முதற் பேறு காலம். என்ன செய்வான், பாவம் ! அந்தச் சமயம் ஒரு குண்டு சத்தம் கேட்டது. சோல்ஜர்கள் துப்பாக்கிச் சுடப் பழகும் சத்தந் தான் அது. "அரண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்" அல்லவா ? ஜப்பானியர்கள் துறை முகத்திற்குள் வந்து இறங்கிச் சுடுகிருர்கள் என்று பாளையம் நினைத்தான். பீதி கொண்டான். "ஜப்பானியர்கள் வந்துவிட்டார்கள் ; ஜப்பானியர்கள் வந்துவிட்டார்கள்" என்று கூவிக் கொண்டே ஓடினன் பாளையம் தன் வீட்டிற்கு. இவன் தலை தெறிக்கக் கூவிக் கொண்டு தெருவில் ஓடியதைத் தெருவி லிருந்தவர்கள் கண்டார்கள். அப்போது துப்பாக்கிக் குண்டுகள் சத்தம் அவர்கள்

காதில் கேட்டது. அவர்களும் பீதி கொண்டார்கள். ஓட்டம் பிடித்தார்கள்.

பாளையம் வீடு வந்து சேர்ந்தான். பெருமூச்சு வாங்கியது அவனுக்கு. காரணம், அவன் கொண்ட பீதி. அல்லாமலும் அத்தனை வேகமாக அவன் தன் வீட்டிற்கு ஓடினான். தன் மனைவியைக் கூவியழைத்தான். "ஜப்பான்காரன் வந்து விட்டான்; உடனே கிளம்பு! நாம் ஓடிவிட வேண்டும். மூட்டை முடிச்சுக்களை எல்லாம் சித்தப்படுத்து. அதற்குள் நான் வண்டியைத் தயார் செய்கிறேன்" னென்று கூவிக் கொண்ட இலாயத்திற்கு ஓடினான். வண்டியை இழுத்து வெளியே நிறுத்தினான். குதிரையை அவிழ்த்தான். இவனுடைய அவசரத்தை குதிரை எப்படி தெரிந்து கொள்ள முடியும்? இலாயத்தை விட்டு வெளி வர சற்று தாமதமானது. இது பற்றி கோபங் கொண்டான். சவுக்கால் அதை அடித்தான். சேணத்தைப் பூட்டினான். கழுத்துப் பட்டையை முகத்தில் மாட்டினான். முகப்பட்டாவை இடுப்பில் கட்டினான். அவன் செய்தவை எல்லாம் தாறுமாறாகவே இருந்தன. கடைசியில் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, குதிரையை வண்டியில் சரிவரப் பூட்டினான். பிறகு, வீட்டிற்குள் ஓடினான். அவன் எதிர்பார்த்தபடி சித்தமாக யாவும் இல்லை. இதற்கு அவன் மனைவி பூரண கர்ப்பிணியா யிருந்தது தான் காரணம். "அவசரக்காரனுக்கு புத்தி மட்டு" அல்லவா? தன் மனைவியின் நிலைமையைக் குறித்து அவன் எண்ணிப் பார்க்கவே யில்லை. கடுங் கோபங் கொண்டான். பெருங் கூச்சல் போட்டு தன் மனைவியைக் கடிந்தான். தன் கணவனைத் திருப்தி செய்வதில் அவன் மனைவி மிகவும் அக்கரையுடையவர். ஏதோ ஒரு பெட்டியை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வரும் போது, படி இடறி கீழே விழுந்தார். மீண்டும் எழுந்திருக்க வில்லை. அவருடைய முகத்திலிருந்து இரத்தம் கொப்புளித்துக் கொண்டு கிளம்பியது. அத்துடன், அச்சமயம் குழந்தையும் பிறந்து விட்டது.

* * * *

இதற்கிடையில் ஊரே அல்லோல கல்லோலப்பட்டு விட்டது. எல்லாத் தெருக்களிலும் ஜனங்கள் நடமாட்ட மில்லை; ஆனால் ஓட்டந் தான். இதை போலீஸ் சேவகர் ஒருவர் கவனித்தார். விவர மென்ன வென்று கேட்டார். ஒருவர் போலீஸ் சேவகரைப் பார்த்து, "என்ன ஐயா! உமக்குக் காது செவிடா? ஜப்பானியர் சுடுகிற சத்தம் உங்கள் காதில் கேட்க வில்லையா? நம்மூருக்கே அவர்கள் வந்துவிட்டார்களே. நாம் தப்பி யோடி விட வேண்டாமா?" என்று சொன்னார்.

போலீஸ்.—இது சர்வ முட்டாள் தனம். சோல்ஜர்கள் துப்பாக்கிச் சுட்டுப் பழகும் சத்தம் இது. இங்கே ஜப்பானியர்களே கிடையாது. இந்தச் செய்தியை உங்களுக்குச் சொன்னது யார்?

ஒருவர்.—இன்று காலையில் யாரோ ரேடியோவில் இச்செய்தியைக் கேட்டார்களாம்; அதற்குள்ளாகவே, அவர்கள் இங்கே வந்து விட்டார்கள். எனவே, நான் தப்பித்துக் கொண்டு ஓடிவிட வேண்டும்.

போலீஸ்.—அடடா! முட்டாள் தனமாக ஓடாதீர்கள்! நில்லுங்கள். இன்று காலை ரேடியோ செய்தியில் அப்படி யொன்று மில்லை. நானே என் காதால் கேட்டுக் கொண்டிருந்தேன். அமெரிக்கர்களோடு ஜப்பானியர் பசிபிக் மகா சமுத்திரத்தில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இந்திய கடற்கரைக்கு வெகுதூரத்திற்கு அப்பால் இருக்கிறார்கள். இதைத் தான் நான் கேட்டேன். அப்படி நீங்கள் வெளியேறுவதா யிருந்தால், அரசாங்க உத்திரவு பிறக்காதோ? அப்படி ஏதேனும் நிர்பந்தமான நிலைமை ஏற்பட்டால், உங்கள் பெட்டி பேழைகளை எடுத்துக் கொண்டு கிளம்ப 2 மணி சாவகாசமாவது குறைந்தது கிடைக்கும்.

ஒருவர்.—யாரோ இச்செய்தியைக் கேட்டாராமே!

போலீஸ்—அவர் அதைச் சரிவர கேட்டிருக்க மாட்டார். "தவலை போயிற்று என்று சொன்னால், தலை போயிற்று" என்று ஒருவன் காதில் பட்டதாம். அது போலத் தான் அவர் காதிலும் பட்டிருக்க வேண்டும். "ஜப்பானியர்கள் இந்திய கடற்கரைக்கு வெகு தூரத்திற்கு அப்பால் இப்போதிருக்கிறார்கள்" என்றல்லவா ரேடியோ இன்று காலை அறிவித்தது. **பிறர் சொல்வதை எல்லாம், உடனே நம்பி விடாதீர்கள்! பொய் வதந்திகளைக் கேட்காதீர்கள்!**

ஊரை விட்டு வெளியேறியவர்களைப் போலீசார் தடுத்து விட்டார்கள். அனைவரும் வெட்கத் தோடு வீடு திரும்பினர். புறப்படும் அவசரத்தில் கிருஷ்ணசாமி, தான் செய்த ரேடியோவைத் தகுந்தபடி கட்டி வைக்க மறந்து விட்டார். ஆகவே, அது தவறி கீழே விழுந்து உடைந்து போனது. பாளையத்திற்கு பிறந்த குழந்தை இறந்து விட்டது. அவன் மனைவி கடும் நோயாகி ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையிலிருக்கிறார். பொய் வதந்திகளைப் பரப்பியதற்காக, கிருஷ்ணசாமியும் பாளையமும் தண்டனை யடைந்தனர்.

## டார்லன் நாட்டுப் பற்று

அட்மிரல் டார்லன் கொலைக்குப் பிறகு வட ஆப்பிரிக்காவின் அரசியல் நிலைமை மிகவும் கலவரமாகவே இருந்து கொண்டு வருகிறது. தான் கொலை யாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு தான் அவர் நேச நாட்டினரோடு சேர்ந்தார். இதன் பயனாக, நேச நாட்டினருக்கு 1 மாத யுத்தமும் 15,000 உயிர்களும் இலாபமாயின. இவர் கொலை யுண்டது நியாயமா, தவறா என்பது பற்றி மாறுபட்ட கருத்துக்கள் வெகுவாக இருந்து கொண்டு தான் இருக்கும். யுத்தம் முடிந்து எல்லா தஸ்தாவேஜிகளும் வெளியான பிறகு தான், உண்மை விவரங்கள் தெரிய வரும். தன்னை, ஒரு நாட்டுப் பற்றுடைய பிரஞ்சுக்காரராகவே அவர் மதித்து வந்தார். அவருடைய ஆசை எல்லாம் பிரஞ்சுக் கப்பற் படை மீது தான். ஜெர்மானியர்களின் நம்பிக்கைத் துரோகத்தால் அவர் விழிப் படைந்தார். நாஜிகள், தாம் ஒப்புக் கொண்ட சமரசத்தை மீறினார்கள் என்று கண்டவுடனேயே நேசநாடுகளோடு சேர்ந்து கொண்டார். நேச நாட்டினர் வெற்றி பெற முடியாது என்று மனப்பூர்வமாக நினைத்து, தம்மை வென்றவர்களோடு சமரசம் பேசிக் கொண்டு, அவர்கள் அடிக்கீழ் வாழ வேண்டும் என்று கருதியவரைக் கூட, ஜெர்மானியர்கள் கொடுமையாக நடத்தினார்கள். வட ஆப்பிரிக்க 'மன்ன'ரான டார்லனைக் குறித்து ஜெனரல் எய்சினேவர் அழகாகக் குறிப்பிடுகிறார்:

> "தன் வாக்குறுதியை நிறைவேற்றுவதில், நான் அறிந்த அளவில், அவர் ஒரு போதும் தவறியதே கிடையாது."

வடாப்பிரிக்காவிலுள்ள பிரஞ்சுக்காரர்கள் ஒரு பெருந் தலைவரை இப்போது அடைந்திருக்கிறார்கள். அவர் தான் ஜெனரல் ஜிராட். இவர் ஒரு வீரர். டிகாலுக்குப் பிறகு கிளம்பியவர். இவர் நியமனத்தை உலகமே பாராட்டுகிறது சமீபத்தில், போராடும் பிரஞ்சுக்காரர் ஒருவர் வாஷிங்டனில் பேசும்போது ஜெனரல் ஜிராடைப் பற்றி குறிப்பிட்டார். அப்போது, இப்போதுள்ளவர்களுக்குள் ஜெனரல் ஜிராட் தான் மிகவும் சிறந்தவர். பிரான்சிலும், பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளிலும் உள்ளவர்களைத் திரட்டக் கூடியவர். ஜெனரல் எய்சினேவர் இவரைப் பற்றி கூறியதாவது:—

> "இவ்வளவு உயர்ந்த நலன்களும் ஒழுக்கமும் உடையவர் என்னோடிருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது."

என்றாலும். பிரஞ்சு மக்களுக்குள் ஒருவித சமரசத்தை உண்டு பண்ண முடியாதபடி சில கஷ்டங்கள் இருக்கின்றன. முதல் முறையாக டிகாலும் ஜெனரல் ஜிராடும் சந்தித்துப் பேசிவிட்டார்கள். என்றாலும் வட ஆப்பிரிக்காவிலுள்ள சாம்ராஜ்ய சங்கத்தைக் கலைத்து விடுவதைக் குறித்து, இருவருக்கும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கின்றன. என்றாலும் நாளடைவில் ஏதேனும் ஒரு நல்ல முடிவு ஏறபடத் தான் செய்யும்.



# ரஷ்யப் போர் முனையில் ஜெர்மானியர் அவதி

## ஜெர்மனியைப் பணிய வைப்பது தான் ஸ்டாலின் திட்டம்

சென்ற 6 வாரங்களாக தென் ரஷ்யாவில் நடைபெற்ற போராட்டத்தைக் குறித்து சோவியத் அறிக்கை யொன்று வெளிவந்தது. அதில், 3 கட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறது. **முதல் கட்டம்:** செம் படைகள் ஸ்டாலின்கிராடிற்குத் தென் மேற்கிலும் வட கிழக்கிலும் தாக்கின. டான் நதிக்குத் தென் மேற்கிலும் ஸ்டாலின்கிராட் போர்முனையிலும் எதிரிகளுக்குச் சரியான அடி. **இரண்டாவது கட்டம்:** டான் நதிக்குப் பின் புரத்தில் தகுந்த அரண்களை எதிரிகள் அமைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த அரண்களைத் துளைத்துக் கொண்டு செம் படைகள் உள்ளே புகுந்து, ஸ்டாலின்கிராடுக்குப் போகிற வழியில் சூழப்பட்டுள்ள ஜெர்மன் படைகள் தப்பிப் போய் விடாதபடியும், வெளி உதவி அவர்களுக்குக் கிடைக்காத படியும், பார்த்துக் கொள்ள வேண்டி யிருந்தது. இந்தப் பொறுப்பை அவர்கள் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றினார்கள். **மூன்றாவது கட்டம்:** ஸ்டாலின்கிராடில் செம் படைகள் ஜெர்மன் படைகளைச் சூழ்ந்து கொண்டன. இதை விடுவிக்க வேண்டி, கொடெல்னிகோவோவின் வட பகுதியைப் போய் ஜெர்மன் படைகள் தாக்கின. ஆனால் இந்தப் புதிய படைகளை அடியோடு அழித்து, தெற்கே விரட்டி, மீண்டும் ஜெர்மன் படைகளோடு போய்ச் சேர ஒட்டாதபடி செய்ய வேண்டும் என்பது செம் படைத் தலைவரின் கட்டளை. அப்படியே அவர்களும் செய்து முடித்தார்கள்.

இந்தக் குளிர் காலத்தில், இராணுவ முக்கியத்துவமுள்ள இடங்களை மேலும் பந்தோபஸ்து செய்து கொள்ளுவதோடு, தமக்குக் கிடைக்கக் கூடிய அளவிற்கு ஜெர்மானியர்களின் மூலப் பொருள்களைக் கைப்பற்ற வேண்டும் என்பது தான் ரஷ்யர்களின் நோக்கம். அன்றியும் ஜெர்மன் படைகளையும் விரட்டியடிக்க வேண்டும். ஒரு இடத்தில் ரஷ்யப் படைகளைப் பிளந்து கொண்டு அதன் வழியே தன் ஏராளமான படைகளைக் கொண்டு போவது ஜெர்மானியர்கள் வழக்கம். ரஷ்யர்களோ பல விடங்களிலும் ஏக காலத்தில் எதிரிகளைத் தாக்கிக் கொண்டு அவர்களைச் சிதறடிக்கிறார்கள். இந்த முறை ரஷ்யர்களுக்கு முழு வெற்றி யளிக்க வில்லை. ஆனால் சூழப்பட்டிருக்கும் தம் படைகளை ஸ்டாலின்கிராடிலிருந்து விடுவிக்கும் பொருட்டு, தம் கையிருப்புச் சேனைகளையும் போர் முனைக்குக் கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஜெர்மன் படைத் தலைவருக்கு ஏற்பட்டது. வடக்கே ஜெர்மானியர்கள் போக்கு வரவுச் சாதனங்களை செம்படைகள் தாக்கின. இவற்றைக் காப்பாற்ற வேண்டியும் தம் கையிருப்புப் படைகளை ஜெர்மானியர் கொண்டு வந்தனர். ஆகவே, மழை காலத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க வேண்டிய ஜெர்மன் படைகள் மீண்டும் போர் முனைக்கு வரும்படி நேர்ந்தது. இதனால் கோடை காலத் தாக்குதல் ஆரம்பமாகும் போது, ஜெர்மானியர் பலங் குறைந்து போயிருக்கும். அல்லது மழை காலம் முழுதும் அவர்கள் பின் வாங்கியே யிருக்கும்படி நேரும். இந்த யுத்தத்தின் முடிவு அடுத்த கோடை காலத்தில் தான் தெரியும் போலிருக்கிறது. இதற்காக ஸ்டாலின் ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார். ஐரோப்பாவில் ஹிட்லரின் கோட்டையைத் தகர்த்தெறிய பிரிட்டனும் அமெரிக்காவும் ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றன.

காகஸஸ் மலை ரோடில் உள்ள நால்சிக் என்னும் ஊரை ஜெர்மானியர்கள் கைப்பற்றி 2 மாதங்களாயின. இப்போது அதை மீண்டும் ரஷயர்கள் கைப் பற்றி விட்டனர். காகஸஸில் மஸ்தாக்குக்கு மேற்கே 30 மைல்கள் தூரத்திலுள்ள ப்ரொக்லாட்னியா என்னும் ஊரையும் ரஷ்யர்கள் மீண்டும் கைப்பற்றி விட்டார்கள்.

ஏராளமான மக்கள், நாடு, மூலப் பொருள்கள் முதலியவற்றை இழந்தும், ரஷ்யா கொஞ்சங் கூட கலக்க மடையாமல், இலட்சியத்தையே குறியாகக் கொண்டு போராடியது. ரஷ்ய வெற்றிக் குரிய சின்னங்கள் இப்போது காணப் படுவது போல, ஒரு போதும் காணப் பட்டதே கிடையாது. ரஷ்யாவில் எந்தப் போர் முனையிலும் ஜெர்மானியர்களைத் தாக்குகிறார்கள். ஜெர்மானியர்களைச் சிதறடித்து, அவர்கள் கையிருப்புப் படைகளையும் கரையச் செய்து அடி பணியும்படி செய்ய வேண்டு மென்பது தான் ஸ்டாலினுடைய திட்டம்.

# வளர் பிறையும், தேய் பிறையும்

அமாவாசை, பௌர்ணமை இவ்விரண்டும் பதினைந்து நாட்களுக் கொரு முறை வருகின்றன. பௌர்ணமி கழிந்ததும், மளமளவென சந்திரனது உருவம் தேய்ந்து கொண்டே வருகிறது. அவ்வாறு வந்து, கடைசியாக ஒரே இருட்டாக ஆகி விடுகிறது. வெளிச்சக் கலப்பே இல்லாத அந்த நிலைமையில் சந்திரன், அமாவாசை சந்திரன் என்ற பெயரைப் பெறுகிறான்.

ஆனால், பௌர்ணமிச் சந்திரன் தோன்று முன், ஒவ்வொரு நாளும் கிறு கிறுவென்று சந்திரன் வளர்ந்து வருகிறான். முன்னோரத்தில் வெளிச்சம் இருந்து வருகிறது. எல்லோருக்கும் அது சந்தோஷமாக இருக்கிறது. கடைசியாக பூரண சந்திரன் பிரகாசிக்கும் பொழுது 'ஆஹா! என்ன குஷியாக இருக்கிறது!' என்று நாம் ஒவ்வொருவரும் கூறுகிறோம்.

இதே போல, ஜெர்மனியின் நிலைமை பூரணச் சந்திரன் தேய ஆரம்பித்த பிறகு இருப்பது போலவும், நேச தேசத்தாரின் நிலைமை அமாவாசை இருட்டிற்கப்பால் வளரும் சந்திரனை நிகர்த்தும் இருக்கின்றன.

ஜெர்மனியும் சரி, அதோடு சேர்ந்த நாடுகளும் சரி; யுத்த தளவாடத் தயாரிப்பு, பொருளாதார நிலைமை, சுபிக்ஷம் ஆகியவற்றின் உச்சத்தை எட்டியாயிற்று. தட்டிக் கேட்க ஆளில்லாம லிருந்த காலமும் மலை யேறிவிட்டது. வெற்றி மேல் வெற்றி கிட்டுவதும் பழங்கதை யாகிவிட்டது. தட்டுத் தடங்கலின்றி சாமான்களை உற்பத்தி செய்வதும் சாத்யமில்லாது போய்விட்டது. கச்சாப் பொருள்களும் சுலபமாகக் கிடைப்பதில்லை. ஜெர்மன் மக்களுக் கிருந்த குஷியும் குறைந்து விட்டது. தினம் விடிந்தால், எங்காவது ஒரு பிரதேசத்தை பிரிட்டிஷ் விமானிகள் சல்லடைக் கண்களாகத் துளைத்து விடுகின்றனர். அவர்கள் வானத்தில் காட்சி தந்து போன இடம், பெரிய பூகம்பத்திற் கப்பால் உள்ள பிரதேசத்தை நிகர்த்திருக்கிறது. ஆலைகளில் வேலை செய்ய முன் போல் நிபுணர்கள் பலர் கிடைக்க வில்லை. பயங்காட்டி, பலரைத் தூக்கி வந்து சேர்க்க வேண்டி யிருக்கிறது. அவர்கள் செய்யும் வேலை எப்படி யிருக்கும்? வெறும் தண்டமாகத் தானே இருக்கும்?

இந்த நிலைமையில், போர்க் களங்களி லிருந்து மோசமான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. 'ருஷ்யர்கள் ஒரு இடத்தில் பல ஆயிரக் கணக்கான ஜெர்மானியரை வளைத்துக் கொண்டு விட்டனர். இன்னொரு இடத்தில், ஒரு பெரிய படை அப்படி அப்படியே தன்னுடைய ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும், லாரிகளையும் விட்டு விட்டு ஓடிவிட்டது. டாங்கிகள் பல பனிக்கட்டிகளுக் கிடையிலும், சேற்றிலும் சிக்கிப் பாழாயின என்ற செய்திகள் வரும் பொழுதெல்லாம், தலைமை ஸ்தலத்தில் உள்ளவர்களுக்கு 'பகீர்' 'பகீர்' என்றிராதா?

சாமான்கள் செலவாவதோடு, வெற்றியும் கிட்டினால் தானே, ஊரிலே வேலை செய்கிறவர்களுக்கும் உத்சாகமிருக்கும்? சும்மா செலவு, நஷ்டம் என்றே போய்க் கொண்டிருந்தால், ஆசாமி 'தீவாளி' ஆக வேண்டியது தானே? நாளுக்கு நாள் ஜெர்மனி தேய்ந்து கொண்டு தானிருக்கிறது.

'ருஷ்யாவின் மத்யப் பகுதியில் நோவோ சொகோல்நிகி என்ற ஊரை, உயிரை விட்டாவது காப்பாற்றுங்கள்' என்று ஹிட்லர் உத்திர விட்டிருக்கிருராம்! நிலைமை எப்படி ஆகிவிட்டது பார்த்தீர்களா?

ருஷ்யர்கள், தமக்குக் கிடைத்த வெற்றிகளை, ஒன்றிற்குமேல் ஒன்ருக அடுக்கிக் கொண்டே வருகிருர்கள். காகஸஸ் பிரதேசத்திலே திடுதிப்பென்று பாய்ந்து மாஸ்டாக் என்ற நகரைக் கைப்பற்றி விட்டார்கள். இந்த இடத்தி லிருந்து தான், ஜெர்மனியர் பல படைகளை முன்னுக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். பனி காலத்திற்கு இங்கு தங்க பூரண ஏற்பாடுகளும் செய்து வைத் திருந்தனர். ஆனல் ருஷ்யர்கள் அவர்களை நிம்மதியாக இருக்க விட வில்லை.

'பகவான் இருக்கிருர். பனிகாலம் தீரட்டும்; என்ன செய்கிறேம் பாருங்கள். மளமளவென மேலே பாய்ந்து பிடுங்கித் தள்ளப் போகிறேம். இந்த வருஷத்திற்குள் ஒரு பெரிய தேசம் கோவிந்தா ஆகப் போகிறது. அது ஜெர்மனியாக இராது. அப்புறம் நம் பாடு வேட்டை தான். இப்போது நடக்கும் பேரராட்டம் ஜெர்மனியை உண்டு, இல்லை என்று தீர்த்து விடும் என்பதை மறந்துவிடாதீர்கள்' என்று ஹிட்லர் கூறியிருக்கிருர்.

கஷ்டம் தலைக்கு மீறிப் போய்விட்டால் தான் பகவானை நினைப்பார்கள். பகவானை முன்பெல்லாம், தனக்கு அடுத்தபடியாக நினைத்துக் கொண்டிருந்த ஹிட்லர், இப்பொழுது அதே பகவானை நினைவிற்குக் கொண்டுவர முயன்று கொண்டிருப்பதி லிருந்தே, அவருக்கும் ஜெர்மன் மக்களுக்கும் இது தேய் பிறைக் காலம் என்பது தெரியவில்லையா?

பனிக்காலம் முடிந்த பிறகு, ஜெர்மானியர் பிரமாதமாக ஏதோ செய்ய வேண்டுமெனத் திட்டம் போட்டிருக்கலாம். ஆனல், அதுவரை எல்லாம் சுகமாக இருந்தால் தானே! வசந்த காலத்திற் கென்று வைத்திருக்கிற ஆட்களையும், பொருள்களையும் இப்பொழுதே செலவழிக்கும்படியான நிலைமை வந்து விட்டால், வசந்த காலத்திற்கான 'பிளான்' குப்பைக் கூடைக்குப் போக வேண்டியது தானே? அவ்வாறு குப்பைக் கூடைக்கு ஹிட்லரது பிளான்களை அனுப்பத் தான், ருஷ்யர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிருர்கள்.

மார்ஷல் டிமோஷிங்கோவை மாஸ்கோவிற்கு வரும்படி ஸ்டாலின் அழைத்திருக்கிருர். இவ்வருடத்திற்குள்ளாகவே, நாஜிப் படைகளை ஒரே மூச்சில், ருஷ்ய மண்ணிலிருந்தே விரட்டி அடித்து, யுத்தகளத்தை ருஷ்யாவி லிருந்து ஜெர்மனிககு மாறும்படி செய்ய அவர் திட்டம் போட விரும்பியிருக்கிருராம். 'இந்த வருஷம் ஒரு பெரிய தலை உருண்டு விழும்' என்று ஹிட்லர் சொன்ன போது, அதை ஒரு புதிராகவே எல்லோரும் கொண்டிருப்பர். அவரது கண் முன்னல், ருஷ்யா, பிரிட்டன் எல்லாமே பெரிய தலைகளாகத் தான் தோன்றிக் கொண்டிருக்கும். இந்தத் தலைகளைத் தான் அவர் மனசில் வைத்திருக்கக் கூடும். ஆனல் தன் தலையும் பெரிசு என்பதையும் அவர் மறக்க வில்லை. அவர் சொன்ன சொல் அவர் விஷயத்திலேயே உண்மையாகி விட வேண்டும் என்று பார்க்கிருப் போலிருக்கிறது ஸ்டாலினும், அவரது சகாக்களும்.

இது வரை, அதாவது சென்ற ஒன்றரை மாதங்களுக்குள் ஒன்றே முக்கால் லக்ஷம் ஜெர்மானியர் இறந்து போயினராம். ஒன்றரை லக்ஷம் பேர்கள் கைதியாகினராம். இரண்டாயிரம் ஊர்களுக்கு மேல் ருஷ்யர்கள் கைகளுக்குத் திரும்பக் கிடைத்திருக்கின்றனவாம். இந்த வெற்றி இன்னும் பெருகக் கூடும் என்பதற்கான அறிகுறிகள் நன்குத் தென்படுகின்றன.

ஆனல் ஒன்று. ஹிட்லரும் சரி, ஜப்பானிய டோஜோவும் சரி; மகா பொல்லாதவர்கள். தங்களுக்குப் பெருமையைத் தேடிக் கொள்ள, தங்கள் நாட்டினரையும், பிற நாட்டவரையும் ஈணக்கின்றிப் பலி கொடுக்கத் தயங்க மாட்டார்கள். எந்த நாட்டையும் சுரண்டித் தள்ளி ஓட்டாண்டியாக்கக் கூச மாட்டார்கள். அதோடு, அவர்களது சக்தி இன்னும் பூரணமாகக் குறைந்து விடவில்லை. அது தேயும் வேகமும் நிதான மாகவே இருக்கிறது. ஆனல் ஜெர்மானியருக்கு இது தேய் பிறைக்காலம் என்பதில் மட்டும் கடுகளவு சந்தேகமும் கிடையாது.

வட ஆபிரிகாவிலே ஜெர்மானியரது எதிர்ப்பு கடுமையாகவே இருக்கிறது. எதிரியும் ஏதேதோ ஜகஜால வேலைகளைத் தான் செய்து பார்க்கிருன். ஆனல் நேச தேசப் படைகள் அசாத்தியமான இடைஞ்சல்களை அவனுக்கு உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. ட்யூனிஸியத் துறை முகங்களை அமெரிகக, பிரிட்டிஷ் விமானிகள் நிர்த்தூளியாக்கி வருகிருர்கள். ரோமலின் படைகள் ஒய்வில்லாது பின் வாங்குகின்றன. சுதந்திரப் பிரஞ்சுப் படைகள் சாமர்த்தியமாகவே போராடுகின்றன. மழை ஒரு பக்கம் உயிரை வாங்குகிறது. ஆனலும் நேச தேசத்தார் மேலும் மேலும் தமது படைகளுக்கு உதவி அனுப்பி வருகிருர்கள். அந்த உதவிகள் வராது தடுக்க, ஜெர்மானிய நீர் மூழ்கிகள் மும்முரமாக வேலை செய்கின்றன. ஆரம்பத்தில் இருந்தது போன்ற ஜோர், ட்யூனிஸியாவில் இல்லையானலும், நமது கை தான் ஓங்கி யிருக்கிறது. போக்கு வரத்துப் பாதைகள் இப்பொழுது 'நீண்டு விட்டன'. வெகு தூரத்திற்கு வெகு தூரம் உதவி போக வேண்டி யிருக்கிறது. அதி சமீபத்திலே விமானங்களை வைத்திருக்கும் ஜெர்மானியர் கொஞ்சம் தொல்லை கொடுக்கத் தான் செய்கிருர்கள். ஆனலும் அவர்களை, இஷ்டப்படியெல்லாம் குதித்தாட நேச தேசத்தார் விட்டு விடவில்லை.

நேச தேசத்தார் ஆரம்பத்திலேயே அமாவாசைச் சந்திரனை நிகர்த்திருந்தார்கள். அந்த நிலைமை ஒரு நாளோடு நின்றுவிடாமல், மூன்று வருஷ காலம் நீடித்திருந்தது. இப்பொழுது அந்த நிலைமை மாறி, வளர் பிறைச் சந்திரனைப் போல் நேச தேசத்தாரின் சக்தியும் வெற்றியும் வளர்ந்து வருகிறது. இது உச்ச நிலைமையை அடையும் போது, யுத்தமும் முடியும். உலகோரும் ஆனந்த மடைவர்.

மேற்கே நிலைமை இப்படியிருக்க, கிழக்கே ஜப்பானியர் தம் கையில் கிடைத்தவற்றைப் பலப்படுத்திக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. குள்ளர்கள் லேசுப்பட்டவர்க ளல்ல. 'கள்ளனை நம்பினலும் குள்ளனை நம்பாதே' என்பார்கள். அது ஜப்பான் விஷயத்தில் ரொம்ப வாஸ்தவம்.

பர்மாவிலே கிட்டத் தட்ட ஒன்றரை லக்ஷம் ஜப்பானியர்களிருக்கிருர்களாம், இன்னும் கொஞ்ச நாளில் எங்கோ தம் வரிசையை ஜப்பானியர் காட்டப் போகிருர்களென டோஜோ கூறியிருக்கிருர். ஆகவே, அவர் ஏதோ திட்டம் போட்டு வைத்திருக்கிருர் என்றே தெரிகிறது.

சாலமென் தீவுகளுக் கருகே ஒரு பெரிய கப்பற்படை இருக்கிறது. அங்கு ஜப்பானியர் ஒவ்வொரு தீவிலும் உபத்திரவம் கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள். எப்படியாவது நேச தேசத்தாரை இந்த ஒரு பிரதேசத்திலேயே தாக்குக் காட்டி நிறுத்திக் கொண்டிருக்கலாமென நினைத்திருக்கிருர்கள் போலிருக்கிறது அவர்கள்.

ஆனல், அவர்கள் நினைத்தது போல் நடக்கவா இருக்கிருர்கள் நேச தேசத்தார்? பார்த்தார் சேனபதி வேவல். சமயம் பார்த்து பர்மாவிற்குள் படையெடுக்கவும், பர்மாவில் உள்ள முக்ய இடங்களைத் தகர்க்கவும் ஏற்பாடு செய்துவிட்டார். புது வருஷத்தில் பல புதுச் செய்திகள் வரக் கூடும். துருக்கி, ஸ்பெயின் போன்ற நாடுகளைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் அதிகம் அடிபடக் கூடும்.

ஜெர்மன் பிரசார மந்திரி கப்பல்ஸ் துரை கூறியது போல், இந்த யுத்தமானது எவ்வாறு திடீரெனத் தொடங்கிற்றே, அதே போலவே திடீரென நின்று போகக் கூடும். அதனல் தான், நேச தேசத்தார், யுத்தத்திற்கு அப்பால் செய்யப்பட வேண்டிய காரியங்களிலும் விசேஷ சிரத்தை காட்டத் தொடங்கி யிருக்கிருர்கள். வருமுன் காப்பது தானே புத்திசாலிகளுக் கழகு. எதிர் கால உலகிலே எங்கும் சமாதானமும் சுபிட்சமும் நிலைத்திருக்கும்படி பார்த்துக் கொள்ளப் போவது நேச தேசத்தார் தானே? அவர்களது நற் கருமத்திற்கு உங்களது பூரண ஆதரவும் தேவை. சுகமாக வாழ விரும்புவோர் நேச தேசத்தாரின் வெற்றியையே வேண்டுவர். இது உண்மையா, இல்லையா?

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

5 Copies Edi Stock file.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஞு ஜனவரிமீ 15உ, வெள்ளிக்கிழமை [இதழ் 3



இனி, ஜெர்மானியர்களை, தாங்க முடியாதபடி அவ்வளவு கடுமையாகவும் இடைவிடாதும் விமானங்களிலிருந்து தாக்கிப் பழி வாங்க வேண்டிய காலம் வந்து விட்டது.

"ஒவ்வொரு நாடாகத் தனக்கு எதிரியாக்கிக் கொண்டு, துரோகத்தனமாக ஹிட்லர் அவற்றைத் தாக்கி அழித்துக் கொண்டு வந்தார். இனி அது முடியாது. ஏனென்ருல், ரஷ்யர்களை அவர் தாக்கிய போது, தோழர் ஸ்டாலின் தலைமையில், அவர்கள் மகத்தான மன உறுதியோடு எதிர்த்து நிற்கிருர்கள். ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் யுத்தத்தின் போக்கே முழுதும் மாறிக் கொண்டிருக்கிறது."

"கொடுமைக் காளாயிருக்கும் எல்லா நாட்டு மக்களும் ஹிட்லரைக் கடுமையாக வெறுக்கிருர்கள். ஜெர்மனி, மீண்டும் தலை தூக்காதபடி நேச நாடுகள், கடைசி முறையாக தாக்கும் பொருட்டு ஐரோப்பா மீது படையெடுக்கும். அந்தச் சரியான தருணத்தில், அந் நாடுகளிலுள்ள மக்களுக்கு ஒரு ஊக்கம் பிறக்கும். அப்போது ஹிட்லர் கண்டிப்பாகத் தோல்வி யடைவார்."

—ஜெனரல் சிகோர்ஸ்கி.

# அச்சு நாடுகள் மீது பழி வாங்குவோம்

## அமெரிக்கத் திட்டம் எதிரி அடிவயிற்றை தாக்கியது

### தளவாட உற்பத்தி பெருக்கம்

**1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 7-ம் தேதி அமெரிக்க ஜனப் பிரதிநிதிகள் சபை வாஷிங்டனில் கூடியது. அப்போது அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :—**

**"ஜப்பானைப் போருக்கு இழுப்பது தான் பசிபிக் சமுத்திரத்தில் நம் நோக்கம். இந்த வருஷம் நாமே முன்னேறித் தாக்கப் போகிறோம். அச்சு நாட்டாருக்கு ஆகாயத்திலிருந்த விமான ஆதிக்கம் அழிந்து விட்டது. எனவே மிகக் கடுமையாகவும் பச்சாதாபம் சிறிதும் இன்றியும் நேச நாடுகள் அச்சு நாடுகளைக் கண்டிப்பாகத் தாக்கத் தான் போகின்றன. நம் நேச நாட்டுப் படைகள் பெர்லினுக்கும் ரோமாபுரிக்கும் டோக்கியோவுக்கும் போக, விரைவில் வழி பிறக்கும்."**

யுத்த நிலைமையைக் குறித்து அவர் மேலும் கூறியதாவது :—

வெற்றியிலும் தோல்வியிலும் அமெரிக்கப் படைகள் மிகச் சிறந்த முறையில் தம் கடமைகளை நிறைவேற்றியிருக்கின்றன. கிழக் கோடி யுத்தத்தில் இச் சிறப்புக்கள் துலங்குகின்றன. இப் படையினரை அமெரிக்கப் பொது மக்கள் வெகுவாகப் பாராட்டுகின்றனர். 1942-ம் வருஷத்திய யுத்தத்திலேயே மிகவும் முக்கியமானது, நீண்ட ரஷ்யப் போர் முனை தான். முதலாவது **ஸ்டாலின்கிராடின் சிறந்த தற்காப்பு.** இரண்டாவது, சென்ற நவம்பர் மாதம் முதல், இடைவிடாது ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் தாக்கி பலவிடங்களிலும் விரட்டியடிக்கின்றனர். நிற்க, **கிழக் கோடியில்** சென்ற வருஷம் ஜப்பானியர்கள் பலவிடங்களிலும் அடுத்தடுத்து வெற்றி பெற்றனர். என்றாலும் பசிபிக் சமுத்திரத்தின் மத்திய பாகத்திலும் தென் பாகத்திலும் இந்து மகா சமுத்திரத்திலும் அவர்கள் கை மேலும் ஓங்காதபடி தடுக்கப்பட்டு விட்டது. **மத்திய கிழக்கில்** எகிப்து வழியாகவும் லிபியா வழியாகவும் பிரிட்டிஷ் படைகள் எதிரிகளைத் தாக்கின. பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் வடாப்பிரிக்காவைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இவை மட்டுமன்றி, மேலும் முக்கியமான சம்பவங்கள் என்ன வென்றால், போக்கு வரவுப் பாதைகளில் நடைபெற்ற கடுமையான யுத்தங்கள் தான்.

**வெற்றி கிடைத்தால் 1942-ம் வருஷத்தில் கிடைக்க வேண்டும் ; அல்லது எல்லாவற்றையும் தாம் இழந்து விட நேரும் என்று, அச்சு நாட்டாருக்கு நன்றாகத் தெரியும். 1942-ம் வருஷம் கடந்தும் கூட, அவர்கள் வெற்றி பெற முடியவில்லை.**

சென்ற வருஷத்தில் நமக்குக் கிடைத்த மகத்தான வெற்றி மிட்வே தீவுகளில் நடந்த கப்பல் யுத்தத்திலும் விமான யுத்தத்திலும் தான். இது மிகவும் முக்கியமான இடம். வெகு தூரப் பிரயாணங்களுக்கு இது மத்தியமான இடமாய் அமைந்திருக்கிறது. நாம் முன்னேறிப் போய் தாக்குவதற்கு இது ஏற்றதோர் தளமாக அமைந்திருக்கிறது. சாலமன் தீவுகள் நியூ கினியா முதலியவற்றில் கடுமையான போர் நடைபெற்றாலுங் கூட, அவை பெரும்பாலும் தற்காப்புக்காகத்தான் பயன் படும். நிற்க, நம் கப்பல்களும் நீர் மூழ்கிகளும் ஜப்பான் கப்பல்களை வெகுவாக நஷ்டப் படுத்தியிருக்கின்றன. இந் நஷ்டத்தை விரைவில் ஈடு செய்ய ஜப்பானால் முடியாது. ஜப்பானியரின் கப்பல் பலம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது ; ஆனால், நம் பலமோ நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது. நாம் ஜப்பானைத் தாக்கும் போது, நமக்குப் பக்க பலமாக, நம் போன்ற நோக்கமுடைய பல நாட்டுப் படைகள் இருக்கின்றார்கள். நாம் பர்மா ரோடு வழியாக எவ்வளவு தளவாடங்களை அனுப்பினோமோ அவ்வளவு தளவாடங்களை இன்றும் விமானங்கள் மூலம் அனுப்புகிறோம்.

நாம் ஜப்பானைத் தாக்கி வெடி குண்டுகளை எறியும் போது தான், அவர்கள் நம் சக்தியை உணர்ந்து கொள்ளுவார்கள். இவர்களை வெல்லும் பொருட்டு, குறுக்கிடக் கூடிய எல்லாத் தடைகளையும் வென்று கொண்டு, சீனாவிற்கு ஏராளமான யுத்தத் தளவாடங்களைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். இந்த யுத்தத்திற்குப் பிறகு சீனர்களுக்கு பந்தோபஸ்து, முன்னேற்றம், கௌரவம் ஆகியவை ஏற்படும். நிற்க, ரஷ்யப் போர் முனையிலிருந்து ஜெர்மன் படைகளை மற்ற போர் முனைகளுக்குப் பிரித்து விட வேண்டிய வேலைகளைச் செய்தோம்.

நன்றாக ஆலோசனை செய்து திட்ட மிட்ட பிறகு, நூற்றுக் கணக்கான கப்பல்களை வடாப்பிரிக்காவிற்கு அனுப்பினோம். அது போலவே பிரிட்டிஷ் அரசாங்கமும் அனுப்பியது. இவை எல்லாம் குறிப்பிட்ட இடத்திற்கு சேத மதிக மில்லாமல் போய்ச் சேர்ந்து விட்டன.

**அச்சு நாடுகளின் அடிவயிற்றை தாக்கியது.**

இது யுத்தத்தின் போக்கையே வெகுவாக மாற்றி விட்டது. சர்ச்சில் குறிப்பிட்டது போல, இது எதிரிகளின் அடி வயிற்றைத் தாக்கியது. மேற்காப்பிரிக்காவிலும், தென் அட்லான்டிக் கடலிலும் அச்சு நாட்டார் தலை தூக்க முடியாத தோர் நிலைமையை உண்டாக்கி விட்டது.

இன்று பிறநாடுகளில் போராடும் நம் படையினர் 15 லட்சம் பேர்கள். நிற்க, நம் வியாபாரக் கப்பல்களும், இவர்களுக்கும் மற்ற நேச நாட்டினருக்கும் சப்ளைகள் கொண்டு போய்க் கொண்டிருக்கின்றன. நம் விமான பலம் எவ்வளவு பெருகிக் கொண்டு வருகிற தென்று நம்மவர்கள் உணரவில்லை ; ஆனால், நம் எதிரிகள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். நம்மோடு ஒத்திருந்து போராடும் நாடுகளின் தலைவர்களான சர்ச்சில், ஸ்டாலின், ஜெனரல சீமோ ஷியாங்-கெய்-ஷேக் அவர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

இன்று, நேச நாடுகளுக்குள் மிகச் சிறந்த ஒற்றுமையும், கூட்டுறவும் அமைந்திருக்கிறது. எப்போது எங்கே அச்சு நாடுகளை நேச நாடுகள் தாக்கப் போகின்றன என்று நான் இப்போது சொல்ல முடியாது. ஒரே சமயத்தில் பல விடங்களைத் தாக்குவோமா என்றும் சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நாமும், பிரிட்டிஷாரும், ரஷ்யர்களும் கொஞ்சங் கூட இரக்கப்படாமல் நாள் தோறும் விமானப் படைகளைக் கொண்டு டன் கணக்காக பெரிய வெடி குண்டுகளை எதிரிகளின் யுத்தத் தொழிற்சாலைகள் மீதும், போக்கு வரவுச் சாதனங்களின் மீதும், துறைமுகங்களின் மீதும் எறிவோம். தாம் நினைத்தது தவறு என்று ஹிட்லரும், முஸோலினியும் அப்போது தான் உணருவார்கள்.



ஒரு நாடு போரில் வெற்றி பெற வேண்டுமானால், அது ஏராளமாக உற்பத்தி செய்ய வேண்டும். அதிசயிக்கத் தக்கபடி நாம் எக்காரியத்தையும் செய்தால் மட்டுந் தான் நம்மவர்களுக்கு திருப்தி ஏற்படும்.

**அதிசயிக்கத் தக்க உற்பத்தி.**

1942-ம் வருஷம் நாம் எந்த அளவிற்கு உற்பத்திகள் செய்தோம்? அந்த வருஷ ஆரம்பத்திலே நாம் இது பற்றி திட்ட மிட்டபோது, எதிரிகளைப் பயமுறுத்தும் நோக்கத்தோடு தான் அப்படித் திட்ட மிட்டோ மென்று சிலர் நினைத்திருக்கக் கூடும். ஆனால், அத்திட்டப்படியே நிறைவேற்ற வேண்டுமென்னும் நோக்கத்தோடு தான், அதை வகுத்தோம். அநேக துறைகளில் நாம் திட்ட மிட்டதை விட வெகு அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். அந்த வருஷம் 48,000 இராணுவ விமானங்களை செய்தோம். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று அச்சு நாடுகளும் சேர்ந்து உற்பத்தி செய்ததை விட, இது தான் அதிகம். சென்ற டிசம்பர் மாதத்தில் மட்டும் 5,500 இராணுவ விமானங்களைச் செய்தோம். இந்த விமான உற்பத்தி மேலும் பெருகிக் கொண்டு போகிறது. அன்றியும், அந்த வருஷம் 6,70,000 மிஷின் பீரங்கிகள் செய்தோம். 1941-ம் வருஷம் உற்பத்தியை விட, இது 6 மடங்குக்கும் அதிகம். முதல் மகா யுத்தத்தில் நாம் கலந்து கொண்டிருந்த $1\frac{1}{2}$ வருஷ காலத்தில் தயாரானதை விட, இது 3 பங்குக்கும் அதிகம். மேலும் 21,000 டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள் செய்தோம். இதுவும், அதற்கு முந்திய வருஷத்து உற்பத்தியை விட 6 மடங்குக்கு அதிகம். இது வன்றி 125 கோடி துப்பாக்கிகளும் தோட்டாக்களும் செய்தோம். 1941-ம் வருஷம் செய்ததை விட, இது 5 மடங்குக்கு அதிகம். முதல் மகா யுத்தத்தின் போது செய்ததை விட இது 3 மடங்கு அதிகம். 18 கோடி 10 லட்சம் பீரங்கி குண்டுகள் செய்தோம். 1941-ம் வருஷ உற்பத்தியை விட இது 12 மடங்குக்கு அதிகம். முதல் மகா யுத்த கால உற்பத்தியை விட, இது 10 பங்குக்கும் அதிகம்.

'உளுத்துப் போன கையாலாகாத ஜன நாயக நாடு' என்று அமெரிக்காவைக் கேவலமாகப் பேசிக் கொண்டிருந்த ஹிட்லரும், டோஜோவும், தம் நாட்டு மக்களுக்கு இப்போது என்ன சமாதானம் சொல்லப் போகிறார்கள் ?

நம் 20 லட்சம் பேர்களைக் கொண்ட படை இப்போது 70 லட்சமாகப் பெருகி விட்டது. இவர்களுக்கு உணவுப் பொருள்கள் ஏராளமாகத் தேவை. நம் நாட்டிலுள்ள விவசாயிகள் இந்த வருஷம் பயிரிட்டு விளைவித்ததைப் போல, இது வரை செய்ததே கிடையாது. இதன் பொருட்டு அரசாங்கம் சில கட்டு திட்டங்களை சட்ட மூலமாக விதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உள்ள உணவுப் பொருள்களை **ஏழை பணக்காரன் என்ற வேற்றுமை யின்றி எல்லோருக்கும் விநியோகிக்கப்பட்டது. வாழ்க்கைச் செலவுகளில் ஏற்றத் தாழ்வு ஏற்படாதபடி நிலைத்திருக்கச் செய்ய வேண்டு மென்று உறுதி கொண்டிருக்கிறோம்.** இது சம்பந்தமாகச் சில தவறுகள் நேர்ந்திருக்கக் கூடும். பெருங் காரியங்களைச் சாதிக்கும் முயற்சியில் சிறு தவறுகள் உண்டாவது இயற்கை தான். இத்தவறுகளும் நம் அனுபவங்களும் நமக்கு ஏற்ற படிப்பினைகளாகும். இத்தவறுகளைக் காரணமாகக் கொண்டு தேசத் துரோகிகள் நம் மீது குறை கூறுதிருக்கத் தக்கபடி, அவற்றை சீர்திருத்துவோம். யுத்தத்தில் நாம் வெற்றி பெறு முன் பலவிதக் கஷ்டங்களுக்கு நாம் ஆளாக நேரும். நாட்டுப் பற்றை விட, வயிற்றுப் பாடு தான் பெரிது என்று நினைக்கக் கூடிய அமெரிக்கர்கள், நல்ல வேளையாக மிகக் கொஞ்சம் பேர்கள் தான் இருக்கின்றார்கள்.

ஒரு யுத்தத்தில், அதன் பயன் தான் முக்கியம். இதில் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. நாம் யுத்தத்தில் இறங்கி ஒரு வருஷந் தான் ஆகிறது. இதற்குள்ளாக அமெரிக்க மக்கள் ஆண், பெண், அடங்கலும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். நமக்குத் துணைவர்களாக நல்ல வீரர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள், அமெரிக்க உற்பத்தியாளர்களுக்கும், தொழிலாளர்களான ஆண்களுக்கும் பெண்களுக்கும் நம் நன்றி உரியது.

நல்ல முறையில் நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டு மென்று தான் நாமும் நேச நாடுகளும் ஆசைப்படுகிறோம். முதல் மகா யுத்தத்திற்குப் பிறகு, இந்த மகா யுத்தம் ஆரம்பமாகும் வரை நாம் நிரந்தரமான சமாதானத் தோடு வாழ்ந்து வந்தோமென்று சொல்லுவதற் கில்லை.

**"யுத்தம் முடிந்த பிறகு (1) நிரந்தரமான சமாதானம் ஏற்படவேண்டும், (2) நாட்டிலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிழைப்பிற்கு வழி ஏற்பட வேண்டும்.**

பேச்சுச் சுதந்தரமும், மதச் சுதந்தரமும் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதவை. இவை உலக மெங்கும் அமைய வேண்டும். மூன்றாவதாக, நாம் விரும்புவது முடைப்படாத வாழ்க்கை. இவற்றை அமைத்துக் கொடுப்பதில் பலவகைக் கஷ்டங்கள் இருக்கின்றன. பிறந்தது முதல் சாகும் வரை பொருளாதாரக் கஷ்டம் உண்டாகாத முறையில் வாழ்க்கை முறை யமைய வேண்டு மென்று இளைஞர்கள் பொதுவாக விரும்புகிறார்கள். இந்த இலட்சியத்தை நாம் அடைய, முறைப்படி நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். முறைகளை வகுக்க வேண்டும். **தீமையைப் போக்கும் பொருட்டாக மட்டும் நாம் போராடவில்லை ; நன்மையை நாடியுந் தான். பழமையின் பெருமையை நாம் நிலை நிறுத்திக் கொள்ளுவதுடன், எதிர் காலத்தில் உயர்வடையவும் வேண்டும். உலகப் பொருளாதார நிலை சீர்பெற்றால் மட்டுந் தான், அமெரிக்கப் பொருளாதார நிலையும் சீர்ப்படும். இராணுவத் துறையிலோ, பொருளாதாரத் துறையிலோ, மற்ற நாடுகளிலிருந்து, அமெரிக்காவைப் பிரித்து விட முடியாது. இந்த யுத்தத்தில் வெற்றிபெற வேண்டியது முதல் வேலை. அடுத்தது நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். மூன்றாவதாக அச்சத்தை நாம் போக்க வேண்டும்.**

இன்னும் 10, 20, 50 வருஷங்களில் மற்றொரு யுத்தம் ஏற்படக் கூடும். அப்போது நாம் எப்படித் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி நாம் இப்போது ஆலோசித்து முடிவு செய்து கொள்ளுவது அவசியந் தான்:

**யுத்தத்தின் அளவு பெருகுகிறது ; கொடுமை பெருகுகிறது, அதனால் விளையக் கூடிய நாசமும் பெருகுகிறது. ஆகவே உலகிலுள்ள எல்லா நாடுகளும் கீழான நிலையை யடைகின்றன.**

யுத்தம் சரியானபடி முடிவடையாமல் சமாதானம் ஒன்று ஏற்படுவதாக வைத்துக் கொள்ளுவோம். அப்போது மற்றொரு யுத்தம் கட்டாயம் ஏற்படத் தான் செய்யும். ஆகவே, இன்று குழந்தைகளாயிருப்பவர்கள் அப்போது போராடும்படி நேரும். அக்காலத்தில் உலக மக்களின் நிலை எப்படி இருக்கும் என்று நினைக்கும்போதே என் உள்ளம் நடுங்குகிறது. இந்தக் கொடுமைகளுக்குத் தானும், தன் மக்களும் தன் பேரன் மார்களும் ஆளாகக் கூடாதென்று தான் ஒவ்வொரு அமெரிக்கனும் விரும்புவான். **இந்நாட்டு மக்களில் ஒரு சிலர், இந்த யுத்தத்தைச் சௌகரியமாக முடிவு கட்டி விடலா மென்றும், அமெரிக்கர்கள் மட்டும், பிடுங்கித் தின்னும் பேர்வழிகளுக்குத் தப்பித் தம்மை பாதுகாத்துக் கொள்ளக் கூடுமென்றும் நினைக்கிறார்கள். இவ்வளவு பாதுகாப்பான இடம் நமக்குக் கிடைக்கப் போவதில்லை என்பது நமக்குத் தெரியும். உலகிலுள்ள இந்தப் பிடுங்கித் தின்னும் பேர்வழிகளின் பல்லைப் பிடுங்க உங்களால் மட்டும் ஆகாது. அவர்கள் பெருகி, அதிக பலமடைகிறார்கள். கூடிய சீக்கிரம் நம் கழுத்தின் மேலேயே அவர்கள் வந்து உட்காரப் பார்ப்பார்கள்.**

**அக்கிரமக்காரர்கள் கையில் ஆயுத பலம் அதிகப்பட்டால், ஒரே இரவில் பல நாடுகளுக்கு ஆபத்தை யுண்டாக்கி விடுவார்கள்.**

இந்த யுத்தம் முடிந்த பிறகு, ஜெர்மனியோ, இத்தாலியோ, ஜப்பானோ ஆயுதங்களை வைத்துக் கொண்டிருந்தால், அல்லது வைத்துக் கொண்டிருக்கும்படி அனுமதிக்கப்பட்டால், உலகத்தைக் கைப்பற்ற வேண்டும் என்னும் பேராசைக்குத் தான் அவர்கள் மீண்டும் உள்ளாக நேரும்.

**அவர்கள் நிராயுத பாணிகளாகவே இருக்க வேண்டும். உலக மக்களுக்கு இத்தனைக் கஷ்டங்களை உண்டாக்கிய அவர்களுடைய தத்துவத்தை அவர்கள் கைவிட வேண்டும். அதை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதையும் விட்டு விட வேண்டும்.**

முதல் மகா யுத்தத்திற்குப் பிறகு, நிரந்தரமான சமாதானம் உலகில் நிலவத் தக்க, சிறந்த லட்சியத்தை அடிப் படையாகக் கொண்டு, ஒரு திட்டம் வகுத்தோம். என்றாலும், அதை நாம் நிறைவேற்றக் கூட வில்லை. **இதிலிருந்து, மக்கள் இன்று உள்ள நிலைமையில், நல்லெண்ணத்தினால் மட்டும் சமாதானத்தை நிலை நாட்ட முடியாது என்று தெரிந்து கொண்டோம்.**

இன்று நேச நாடுகள் ஒன்று பட்டிருப்பது போல உலக சரித்திரத்திலேயே எந்த நாடும் ஒன்று பட்டிருந்தது கிடையாது. இதன் மூலம் இந் நாடுகளுக்குள் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதன் படி இந் நாடுகள் பிற நாட்டு அரசாங்கங்களின் மீது அக்கிரமமாகப் பிரவேசிக்க மாட்டார்கள்; அந் நாடுகளைக் கைப்பற்றவும் முயற்சிக்க மாட்டார்கள்.

மோசே விதித்த பத்து கற்பனைகளில் கடைசி கற்பனை "பிறன் பொருளை இச்சியாதிருப்பாயாக!" என்பது. இதை மீறும் எந்த நாட்டையும் தடுக்க வேண்டும்; மீண்டும், ஜெர்மனியும், ஜப்பானும், இத்தாலியும் ஆயுத பாணிகளாகாதபடி தடுக்கவும் வேண்டும். அப்போது தான் சமாதானம் நிலவும். இதற்கு நேச நாடுகள் ஒன்று பட்டிருக்க வேண்டியது அவசியம்.

எதிலும் குறை கூறுகிறவர்கள் உண்டு. அது போலவே சந்தேகப் பேர்வழிகளும் உண்டு. இப்படிப் பட்ட ஒற்றுமை ஏற்படத்தான் வேண்டு மென்று கோருகிற அமெரிக்கர்களும், உலகில் சுயேச்சை நிலவ வேண்டும் என்று நினைக்கிறவர்களும், இருக்கிறார்கள். இவர்களுடைய கோரிக்கை தான் ஈடேறும் (கரகோஷம்).

உலக மக்களையே இழிவு படுத்தும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது தான் அச்சு நாடுகளின் தத்துவம்.

சதா குறை கூறிக் கொண்டிருக்கிறவர்களுடைய வார்த்தைகளைப் பொருட்படுத்தி நம் எதிர் காலத் திட்டத்தை வகுப்பதாக விருந்தால், எதிரிகளின் கொள்கைக்கு நாமும் அடிமைகளாகத் தான் ஆவோம். அப்போது வெற்றிக்குப் பதிலாகத் தோல்வி தான் அடைவோம். மனித இனத்தின் மீது நம்பிக்கை உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்குந் தான் இப் போராட்டம் நடை பெறுகிறது. பொது மக்களை நம்புவதா, அல்லது கொடுங் கோலர்களையும் எதேச்சாதிகாரிகளையும் நம்புவதா என்பது மிகப் பழங் காலத்திய பிரசினை. மக்கள் மீது நம்பிக்கை யில்லாமல், அவர்கள் முற்போக்கைத் தடுத்து கொடுமைகளுக்கும் துன்பங்களுக்கும் அவர்களை ஆளாக்குகிறவர்களும் உண்டு.

**உலகிலுள்ள எதேச்சையா யுள்ள மக்கள் எல்லோரும், தம் முழு பலத்தையும் திரட்டிக் கொண்டு, இப்போது முன்னேறிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தடை செய்ய யாராலும் ஆகாது.**

இனி உலகில் மக்கள் எல்லோரும் சமாதானத்தோடும் பாதுகாப் போடும் வாழத் தக்க நிலைமையை உண்டாக்க வேண்டு மென்று அவர்கள் முனைந்திருக்கிறார்கள். இந்த யுத்தம் எப்போது முடியு மென்று நான் சொல்ல முடியாது.

என்றாலும், இந்த 1943-ம் வருஷத்திற்குள் பெர்லினுக்கும் ரோமாபுரிக்கும் டோக்கியோவுக்கும் நாம் போய்க் கைப் பற்றத் தக்க நிலைமை உண்டாகும் என்று நம்புகிறேன். (கரகோஷம்).

இந்தக் கடமையைச் செய்து முடிக்க, நம் நாடு நல்ல நிலையில் இருக்கிற தென்று நமக்குத் தெரியும்.

**நம் நாட்டு மக்களின் உள்ளம் நிறைந் திருக்கிறது; ஊக்கம் சிறந் திருக்கிறது; நம்பிக்கை நிலைத்திருக்கிறது.**

## சாப்பர்கள் மைனர்கள் தொழில் உயர்வு

பீரங்கிகளின் முழக்கம் அவர்கள் முன்னேற்றத்தைத் தடுக்க வில்லை. அவர்கள் எங்கே போனாலும் மிஷின் பீரங்கிகள் வெடிக்கும் சத்தந் தான். அவர்கள் மரணத்தைப் பொருள் படுத்தாமல் தான், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தாக்குவதனால் பிறக்கும் வீர உணர்ச்சியும், போராட்டத்தினால் கிடைக்கும் பெருமைகளும் இந்திய சாப்பர்களுக்கும் மைனர்களுக்கும் கிடையாது. ஆனால் அவர்களுடைய வீரம், பிறர் உணர்ந்து கொள்ள முடியாதது; அளவிலும் குறையாதது; யுத்தங்களில் வெற்றி பெறப் பெரிதும் உதவுவது.

சாப்பர்களும் மைனர்களும் வேலை செய்யா விட்டால், எட்டாம் படை முன்னேறிய வழிகளி லெல்லாம் அதற்கு நாசந் தான் நேர்ந்திருக்கும்.

ஜெர்மன் படைகள் பின் வாங்கி யோடும் போது, மணலில் எதை எதைப் புதைத்து விட்டுப் போயிருக்கிறார்கள் என்று தேடிக் கண்டு பிடித்து அகற்ற வேண்டிய கடமை இவர்களுடையது.

சில சமயங்களில் பெரிய சுரங்க வெடிகளைப் புதைத் திருப்பார்கள். இவற்றைப் பெயர்த்தெடுக்க வேண்டும். அப்போது தான், எதிரிகளை விரட்டிக் கொண்டு போகும் நம் படைகள், முன்னேறிப் போகக் கூடும்.

சில சமயங்களில் மிக நுட்பமான முறையில் எதிரிகள் தடைகளைப் போட்டு விட்டுப் போகிறார்கள். ஜெர்மன் எஃகுக் குல்லாய்களைப் போலுள்ள வஸ்துக்களை அங்கங்கே போட்டு வைத்திருக்கிறார்கள். அவற்றை தொட்டால், வெடித்து விடுகின்றன. இவற்றிற்கு 'பூபி வெடி' என்று பெயர்.

எதிரிகளுடைய இப்படிப் பட்ட கடுமையான தடைகளை எல்லாம் நீக்க வேண்டியது, சாப்பர்கள் மைனர்களுடைய கடமை. இதில் எந்த அளவிற்கு அவர்கள் கெட்டிக்காரர்களோ, அந்த அளவிற்கு அவர்கள் உயிருக்கு ஆபத்துண்டு.

**இவர்கள் தான், போர்க் களத்தில் முன்னணியில் தலை மறைவில் வேலை செய்கிறவர்கள்.**



# சென்ற வருஷம் அட்டகாசம்: இந்த வருஷம் புலம்பல்.

## அச்சு நாட்டாரின் அலங்கோலம்

### "கீழே விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை"

அரசியல் நிலைமை பற்றி இத்தாலிய ரேடியோ மூலம் சென்ற 1943-ம் ஆண்டு ஜனவரி மீ 9உ மேரியே அபல்லியஸ் என்பவர் கூறியதாவது:—

போர்முனையின் பல பகுதிகளிலும், அச்சு நாட்டுப் படைகளை ரஷ்யர்கள் பிளந்து கொண்டு முன்னேறுகிறார்கள். பல ஸ்தானங்களையும் கைப்பற்றி வசப் படுத்திக் கொண்டார்கள். சில முக்கியமான இடங்களைக் கூட வசப்படுத்திக் கொண்டார்கள். ரஷ்யப் படையினர் நன்றாகப் போராடி யிருக்கிறார்கள். அவர்களுடைய தலைவர்களும் கெட்டிக்காரர்கள். இந்த வருஷம் அச்சு நாடுகளுக்கு மிகவும் கஷ்டமான காலந் தான். ஆனாலும், எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தாலும், அத்தனைக்கும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தக்கபடி ஆயத்தங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். அச்சு நாட்டினரின் இப்போதைய நிலைமையையும் அச்சு நாட்டுத் தலைவர்கள் கொஞ்ச காலத்திற்கு முன்பு கூறிய வார்த்தைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் உருசிகரமாயிருக்கும். சென்ற வருஷம் புது வருஷ தினத்தன்று தன் படைகளுக்கு விடுத்த செய்தியில் ஹிட்லர் குறிப்பிட்டதாவது:—

"நம் மக்களுக்கும் நம்மோடு சேர்ந்துள்ள நாடுகளுக்கும் இந்த 1942-ம் வருஷம் முடிவான வெற்றி கிடைக்கும்படி அருள் புரியுமாறு கடவுளை பிரார்த்திப்போம்."

"1941-ம் வருஷத்தில் ரஷ்யர்கள் தம் தலை எழுத்தை மாற்றிக் கொண்டு நம்மைத் தாக்க, செய்த முயற்சிகள் பலிக்காது."

சென்ற ஜனவரி மாதம் பெர்லின் ஸ்போர்ட்ஸ் பாலாஸ்டில் பேசிய போது, ஜெர்மன் காலாட் படைகளின் அபாரமான செயல்களைப் பாராட்டி ஹிட்லர் கூறியதாவது:—

"தற்காத்துக் கொள்ளும்படி நம்மைக் கட்டாயப் படுத்தியது ரஷ்யர்களல்ல; ஆனால் கடுமையான குளிர் தான். இனித் தான் நமக்குப் பெருங் கஷ்டம். கிழக்கிலுள்ள இந்த எதிரிகள் இந்தக் குளிர் காலத்தைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இதில் அவர்கள் ஏமாந்து விடப் போகிறார்கள். பூமி இறுகி உறுதியாகக் கூடிய பருவம் வரும். அப்போது ஜெர்மனியர்கள் எதிரிகளைத் தாக்கி வெல்லுவோம். போர் முனையிலுள்ள நம் படையினர், ரஷ்யர்களை விடப் பல வகைகளிலும் தாம் மேலானவர்கள் என்னும் உணர்ச்சியோ டிருக்கிறார்கள். . . . . . . . இந்த வருஷம் எப்படி முடியப் போகிறதென்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். இந்த வருஷம் எதிரி எங்கே தலை காட்டினாலும் அங்கே அவர்கள் தலையிலேயே அடிப்போம். இந்த வருஷம் கூட, அநேக வெற்றிகள் பெறுவோம். நமக்கு மிஞ்சிய படை பலமும் விமான பலமும் வேறெந்த நாட்டிற்கும் கிடையாது. நமக்குள்ளது ஒரே வழி தான். அது தான் யுத்தம். வெற்றிக்கு அது தான் வழி."

ஆனால், இந்த வருஷம் என்ன சொன்னார்? பழைய டாம்பீகப் பேச்சையும் சவடால் வார்த்தைகளையும் காணோம். தன் படைகளுக்கு அனுப்பிய செய்தியில் தனக்கு நேர்ந்த பெருங் கஷ்டங்களைக் குறித்துத் தான் குறிப்பிடுகிறார். அவர் கூறியதாவது:—



"பல இரவுகள் மகா கவலையோடு கண் விழித்துக் கொண்டே படுத்துக் கொண்டிருந்தேன். அப்போது என் சிந்தனை எல்லாம் உங்களைப் பற்றி தான்."

வெற்றி தேடித் தருகிறேன் என்று சொல்ல இப்போது அவருக்கு வாயில்லை. தன் 'தீரம்' மிகுந்த வீரர்களுக்கு அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தப் போராட்டம் எவ்வளவு கஷ்டமானதாக இருக்கிறது. இனியும் எவ்வளவு கஷ்டமானதாய் இருக்கும். எதிரிகளுக்கு எத்தனை முறை வெற்றிகள் கிடைத்தாலும். . . . . . முடிவில் வெற்றி ஜெர்மானியர்களுக்குத் தான்.

என்றாலும் ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனை ஏற்படும் என்னும் பேரச்சம் அவர் வார்த்தைகளில் ஒலிக்கிறது. மேலும் அவர் கூறியதாவது:—

"நார்வேயிலிருந்து ஸ்பெய்ன் எல்லை வரையிலும் எதிரி தாக்குதலை ஜெர்மன் படைகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன."

**சென்ற வருஷம், உலகத்திலுள்ள விமானப் படைகளில் ஜெர்மன் படையே மிகச் சிறந்தது என்று பீத்தினார். இந்த வருஷம் அந்தச் சுரம் இறங்கி விட்டது. இந்த வருஷம் "தன்னாலானதைச் செய்து கொண்டிருக்கிறது" என்று மிகுந்த அடக்கத்தோடு கூறுகிறார்.** தன் மிகச் சிறந்த படை தேய்ந்து போய், நேர் முகமாகத் தனக்குட் பட்டுள்ள ஆயுதந் தாங்கிய இரகசியப் படை தான் என்றும், இது தான் எதிர் காலத்தில் நேரப் போகிற கடுமையான போராட்டத்திற்கு அச்சாணி போன்ற தென்றும், அவர் குறிப்பிடுகிறார்.

ஹிட்லர் பிரசங்கத்தின் கடைசிப் பாகத்தில், ஒரு போது மில்லாத அச்சமும் அடக்கமும் காணப்படுகின்றன. அவர் மேலும் கூறியதாவது:—

"1943-ம் வருஷம் மிகவும் கடினமானதாயிருக்கலாம். ஆனால் முந்திய வருஷங்களைப் போல் அவ்வளவு கடினமா யிராது. 1941-42-ம் வருஷத்திய குளிர் காலத்தைக் கடக்கும் சக்தியை நமக்குக் கொடுத்த கடவுள், இந்த வருஷமும் அடுத்த வருஷமும் கூட குளிர் காலத்தைக் கடக்க அருள் புரிவார்."

* * * *

**கோயரிங் புலம்பல்.**

ஹிட்லருக்கு வலது கை போன்றவர் கோயரிங். ஜெர்மனியின் பலத்தைப் பற்றி சென்ற வருஷம் இவர் பிரமாதமாகப் பீத்தினார். சென்ற அக்டோபர் மாதத்தில் அவர் கூறியதாவது:—

"சென்ற வருஷத்திய குளிர் காலத்தோடு இந்த வருஷத்திய குளிர் காலத்தை ஒப்பிட முடியாது. இந்த வருஷம் நாம் ஆயத்தமாயிருக்கிறோம். ரஷ்யாவில் குளிர் காலம் எப்படி யிருக்கு மென்று தெரிந்து கொண் டிருக்கிறோம். ஆகவே, இப்போது அதை நாம் இலகுவில் சகித்துக் கொள்ளுவோம். சென்ற வருஷம் குளிர் காலத்தில் எதிரிகளை நாம் இடைவிடாது தாக்கிய தன் பலனாக, நாம் அளவிட்டுச் சொல்ல முடியாதபடி அவர்கள் கஷ்டப் பட்டிருக்கிறார்கள். ஒரு இடத்திலாவது ரஷ்யர்கள் கெட்டிக்காரத்தனத்தினால் வெற்றி பெற்ற துண்டா? மத்தியமான இடத்தில் ரஷ்யர்களை நாம் வென்று விட்டோம். இந்த இடத்தை நிர்ணயித்தது நாம்

தானே யொழிய ரஷ்யர்களல்ல. எப்போதும் இப்படியே தான் நடந்து வருகிறது"—

என்று முழுப் பொய் கூறி தன் பிரசங்கத்தை முடித்தார்.

இந்த வருஷப் புது வருஷச் செய்தியில் சில நாட்களுக்கு முன்பு அவர் கூறியதாவது :—

"நம் கடைசி மூச்சு உள்ள வரை, ஜெர்மனியின் பொருட்டு போராடுவோ மென்று இறந்து போன நம் வீரர்களின் ஆவியின் பேரில் நாங்கள் சத்தியம் செய்கிறோம்."

சென்ற வருஷம் கஷ்டமான காலத்தில், தன் தோழர்கள் செய்த எல்லா வற்றின் பொருட்டும் அவர்களுக்கு நன்றி கூறினார். அவர் எதிர் பார்த்தபடி ஒன்றேனும் நடை பெற வில்லை. "எதிர் காலத்தில் என்ன நேரு மென்றும் சொல்ல முடியாது" என்று கூறிப் புலம்புகிறார். இருந்தாலும், **மறு வார்த்தை பேசாது ஹிட்லர் கட்டளைப் படி நடக்க வேண்டுமாம், "கஷ்டங்களும், சகிப்புத் தன்மையும், ஒழுக்கமு மில்லாமல் எந்தப் போரிலும் வெற்றி பெற முடியாது"** என்று கூறுகிறார்.

* * * *

இனி, ஹிட்லருடைய பிரசார மந்திரியான டாக்டர் கோபல்ஸ் என்ன சொன்னா ரென்று கவனிப்போம். சென்ற 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் அவர் தன் 'டா ரேஷ்' என்னும் வாரப் பத்திரிகையிலும் ரேடியோ பிரசங்கங்களிலும் பொது ஜனங்களின் வாழ்க்கை மிகவும் கடினமாகிக் கொண்டு வருகிற தென்று குறிப்பிட்டார். போர் முனைக்குப் போகும் தபால்கள் ஏராளமா யிருந்தன வென்றும், ஆகவே, போர் முனைக்கு அனுப்பப்பட வேண்டிய சாமான்களின் எண்ணிக்கைக் குறைக்கப்பட வேண்டு மென்றும் கூறினார்.

1942-ம் வருஷம் ஜனவரி மாதம் 18-ம் தேதி

"இப்போதுள்ளது போல் நமக்குள்ள சாதகமான நிலைமை ஒருபோதும் ஏற்பட்டதில்லை ; ஆகவே எதையும் பொருட் படுத்தாமல் போராடுவதற்கு இது போல ஏற்ற சமயம் ஒரு போதும் ஏற்பட்டதில்லை"

என்று கூறினார். மறு மாதம், போர்க் களத்தில் ஜெர்மானியர்களாகிய தாமே பராக்கிரம சாலிகள் என்று கூறினார். ஆனால், 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதியன்று தம் பலத்தில் அவர்கள் முன்பு கொண்டிருந்த நம்பிக்கையும், வெற்றி நிச்சயமாகக் கிடைக்கு மென்று அவர்கள் கொண்டிருந்த உறுதியும், காணப்பட வில்லை.

**முடிவில் வெற்றி பெற வேண்டு மானால், கஷ்டங்களை அனுபவிக்க மன உறுதி கொள்ள வேண்டும்.**

என்று அந்தப் பிரசார மந்திரி கூறுகிறார். இவருடைய போக்கிலிருந்து, ரஷ்யர்களின் தாக்குதலினால் பெரிதும் கலவரமடைந்திருக்கிறதாகத் தெரிகிறது. ஒரு ஜெர்மன் ரேடியோ மூலம் டாக்டர் கோபல்சும் அவருடைய ஆட்களும் "மத்திய டான் பகுதியில் மட்டுந் தான் எதிரிகள் நம் படையைப் பிளந்துக் கொண்டு போய் விட்டனர்" என்று கூறினர். தம் தாக்கும் சக்தியை சோவியத் படைகள் இழந்து விட வில்லை என்றும் ஒப்புக் கொண்டனர். **"ரோமல் தயங்கிய போது, அமெரிக்காவும், பிரிட்டனும், திரட்டக் கூடிய கப்பல்களை யெல்லாம் திரட்டி, நன்னம்பிக்கை முனையைச் சுற்றி, ஏராளமான யுத்தத் தளவாடங்களைக் கொண்டு போய் ஆப்பிரிக்கப் பாலைவனங்களில் இறக்கிக் கொண்டு, ரோமலை நொறுக்குகிறார்கள்"** என்று அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

ஜெர்மன் போக்கு வரவுகள் ஒரு வருஷத்திற்கு முந்தி அமைந்திருந்த பெருமையினால், ஹிட்லரும் கோபல்சும் அப்போது தலை கொழுத்துப் போயிருந்தார்கள். அது, யாராலும் அமைக்க முடியாததோர் அதிசய மென்று நினைத்தார்கள். இப்போது கோபல்ஸ் சொல்லுவ தென்ன ?

"ஏராளமான படைகளைக் கொண்டு ஜெர்மானியர்கள் இப்போது தாக்குவ தில்லை. ஏனென்றால் படைகளுக்கும் தளவாடங்களுக்கும் சேதம் ஏற்படுகிறது. ரஷ்யர்கள், தாம் பலசாலிகள் என்பதற்காக நம்மைத் தாக்க வில்லை ; தாம் பலவீனர்கள் என்பதனால் தான் தாக்குகிறார்கள். தாம் நாளுக்கு நாள் பலவீன மடைந்து வருவதையும், நாம் அதிக பலம் பெற்று வருவதையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். நாம் தவறு செய்தால் தான், இநத யுத்தத்தில் தோல்வி யடைவோம். இந்த யுத்தம் எந்த அளவிற்கு நீண்டு கொண்டு போகிறதோ அந்த அளவிற்கு நம் நாட்டின் சக்தி சேதமாகிறது.

அவர் புது வருஷத் தன்று தன் நாட்டவர்களுக்குக் கூறியதாவது :—"இந்த யுத்தம் மகா கடுமையானதாகவும் துன்பமான தாகவும் தான் இருக்கும்." "போராடுங்கள் ! உழையுங்கள்" எனபது தான் என் புது வருஷத்திய செய்தி.

* * * *

**டோஜோவின் ஏமாற்றம்.**

ஹிட்லரின் அவதாரமாக ஜப்பானில் முளைத்திருக்கிறவர் (டோஜோ) 1942, 1943-ம் வருஷங்களில் என்னென்ன சொன்னா ரென்று கவனிப்போம். இவர் ஜப்பானிய அரசாங்க சபையின் 79-வது கூட்டத்தில் பேசும் போது, தன் நம்பிக்கைகளையும் அச்சத்தையும் தெளிவாக எடுத்துச் சொன்னார். அவருடைய நம்பிக்கைகளெல்லாம் சிதறிப் போயின. அவர் கொண்ட அச்சங்க ளெல்லாம் பலித்தன. என்றாலும் டோஜோ தன் வெற்றிகளைக் குறித்து பிரமாதமாகப் பெருமை கொண்டார். தாம் வெற்றி கொண்ட நாடுகளை யெல்லாம் திரட்டும்படி தன் படைத் தலைவர்களுக்குக் கட்டளை யிட்டார். இதற்கு அவர் என்ன காரணம் கூறினார் தெரியுமா ? "உலகத்திலேயே தாமே மகா பணக்காரர்கள் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் பெருமை கொண்டிருக்கின்றன. ஆகவே அவர்களை நாம் தாக்குவது கடினமாகத் தான் இருக்கும்," என்று கூறினார். தம் பாஸிஸ்ட் தோழர்களைப் பெருமை படுத்தி அவர் கூறியதாவது :—

"புது உலக அமைப்பை உண்டாக்க வேண்டி, நம் நேசர்களான ஜெர்மனியும் இத்தாலியும் படிப்படியாக வெற்றி யடைந்து வருவது பற்றி பெரிதும் மகிழ்ச்சி யடைகிறோம்." இந்தப் புது வருஷத் தினத் தன்று, சீனாவும், மஞ்சூரியாவும், சையாமும் தம் நேச நாடுக ளென்றும், அங்குள்ளவர்களின் உதவியாலும், அங்குள்ள மூலப் பொருட்களின் உதவியாலும் தன் எதிரிகளை ஒரே மட்டாக தலைதூக்க முடியாமல் அடித்து விடலா மென்றும் குறிப்பிட்டார். சீனாவும் தன் நேச நாடென்று டோஜோ கூறுவது உண்மையிலேயே ஆச்சரியமாகத் தான் இருக்கிறது ! சூங்கிங்கிலிருந்தும் கியாங்சியிலிருந்தும் ஜப்பானியர் விரட்டப் பட்டனர். ருபேயில் அவர்களுக்குப் பலமான எதிர்ப்பு இருந்து வருகிறது. சையாம் மட்டுந் தான் அதன் நேச நாடாக ஒருக்கால் இருக்கலாம். பிலிப்பைன் தீவினரைப் பற்றியும் கிழக் கிந்தியத் தீவினரைப் பற்றியும் ஜப்பானியர்களுக்கு நம்பிக்கை கிடையாது. பாபுவாவி லிருந்து ஜப்பானியர் விரட்டப் பட்டனர். சையாமோ தன் கஷ்ட நிலையைக் குறித்து பாங்காக் ரேடியோ மூலம் சென்ற வருஷம் முழுதும் புலம்பிக் கொண்டிருந்தது. புது வருஷத் தன்று டோஜோ விடுத்த செய்தியைக் குறித்து மிகப் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளி யிட்டது டிசம்பர் 26உ பாங்காக் ரேடியோ தான். அது வருமாறு :—

"என் அருமையான தாய் நாட்டுப் படைகளே ! நம் நாடு அழிவதை விட, நாம் அழிவதே மேல்." யுத்தம் நெடு நாட்கள் நடக்குமோ என்று டோஜோ எப்போதும் அஞ்சிக் கொண்டிருக்கிறார். ஆனால், அவர் எந்தெந்த விஷயங்களில் அதிகமாகப் பயந்தாரோ அவை நடைபெற்றுவிட்டன. **"அச்சு நாட்டு வெற்றிகளை" ஆதாரமாகக் கொண்டு, நேர்மையற்ற முறையில் இலாபம் திரட்ட வேண்டு மென்று**

(8-ம் பக்கம் பார்க்க.)



# பொங்கலோ பொங்கல் !

பீடை மாதம் கழிந்தது ; நல்ல மாசம் பிறந்தது என்று நாட்டார் அனைவரும் மகிழும் காலம் வந்து விட்டது. வியாதியும் வெட்கையும், மழையும், குளிரும், வரட்சியும், பசியும் ஒருவாறாகத் தீர்ந்து, உழுது பரம்படித்து, விதை விதைத்து, களை பிடுங்கி எருத் தெளித்து அருமையாக வளர்த்த பயிர்கள் தலை சாய்ந்து, அறுவடைக்குச் சித்தமாக இருக்கின்றன. அவை 'மார்க்கெட்'டிற்கு வந்து விட்டால், அப்பால் ஏழைகள் குறை சற்றே குறையலாம்.

மழை பெய்து ஓய்ந்ததன் பயனாக செடி கொடிகள் செழித்து நிற்கின்றன, கண்ட இடங்களில் எல்லாம் பசும் புல் தலை தூக்கி எழுகின்றன. அதி உத்சாகத்தோடு தட்டாரப் பூச்சிகளும், வண்ணாரப் பூச்சிகளும், தலைக்கு மேலே விர், விர் என்று வட்டமிட்டுச் சுற்றி விளையாடுகின்றன. அவற்றைப் பிடிக்க கிராமச் சிறுவர்களும் ஓடியாடுகின்றனர். மாமரம் பூத்து விட்டது. அம் மரங்களிடையே குயில் தாவித் தாவி ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருக்கிறது. அதற்கு தம்புரா வாசிப்பது போல், வண்டுகள் 'ரொய்ய், ரொய்ய்' என்று ரீங்காரம் செய்த வண்ணமாக இருக்கின்றன.

அங்கு மிங்கும் கரும்புக் கழிகளை கட்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு செல்கிறார்கள் பலர். பீடை ஒழிந்து பொங்கல் வந்தது, தரையும் குளிர்ந்தது மனமும் குளிர்ந்தது. நாடு செழிக்க வேணும், நாம் என்றும் குதித்துப் பாட வேணும் என்று கிராமப் பெண்கள் கும்பல் கும்பலாகக் கூடி கும்மி யடித்துப் பாடுகிறார்கள். வீடுகளில் அடைந்து கிடக்கும் ஒட்டடை ஒதுக்கப் படுகிறது. பழ செல்லாம் வீசி எறியப் படுகின்றன. வீட்டிலே சுண்ணும்பு பூசப் படுகிறது. வாசலிலே பெரிய பெரிய கோலங்கள் போடப் படுகின்றன.

மழை அழித்த வீடுகளை மக்கள் சீர்ப்படுத்துகின்றனர். புத்தாடை வாங்கிக் கட்டிக் கொள்ளுகின்றனர். பழசு போச்சு, புதிசு ஆச்சு என்று பானை சட்டிகளை வாங்கிக் குவிக்கின்றனர். கையிலே காசு கல கலவென்று ஒலிக்கும் பொழுது, மனசிலும் கலகலப்பு இருப்பதற்குக் கேட்க வேண்டுமா ? மக்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு பொங்க லிடுகிறார்கள். 'பால் பொங்கிற்றா ?, பால் பொங்கிச்சா !' என்று ஒருவரை யொருவர் கேட்டுத் திருப்தி யடைகிறார்கள். தாம் பாடுபட்டதன் பலனை அனுபவிக்கும் போது யாருக்குத் தான் இன்பம் தோன்றாது ? மாட்டுப் பொங்கல், ஜல்லிக் கட்டு எல்லாம் நடக்கிறது. அனைவரும் வேலைக் கவலைகள் எதுமின்றி, கூட்டம் போட்டு தமாஷிலே நேரத்தைக் கழிக்கிறார்கள்.

எல்லாம் சரிதான் ! பொங்கல் வந்தது, குஷி பிறந்தது என்று எப்பொழுதும் சும்மா இருந்து விட முடிகிறதா ? இது வருடா வருடம் வரும் சாதாரணப் பொங்கல். ஆனால் உலகோரே கொண்டாட வேண்டிய பொங்கல் என்று வருகிறதோ அன்று தான் அனைவருக்கும் உண்மையில் க்ஷேம காலம் என்று சொல்லுவோம். வேறு பாஷையில் சொல்லுவ தென்றால், அச்சு நாட்டாருக்குப் 'பொங்கல்' வைத்து விட வேண்டும் முதலிலே. அப்புறம் தான் உலகோர் ஒருவரைப் பார்த்து ஒருவர் '(உங்கள் மனசிலே) பால் பொங்கிற்றா ?' என்று கேட்கலாம். அது வரை நாம் கொண்டாடிப் பெறுவ தெல்லாம் அற்ப இன்பங்களாகவே இருக்கும்.

நாடு செழிக்க வேணும் ; நாம் கைகளைப் பிசையாதிருக்க வேணும் ; சாமான்கள் தட்டின்றிக் கிடைக்க வேணும் ; அநியாய விலை மாற வேணும் ; அனைவரும் பசியாற உண்ண வேணும் என்றால் யுத்தம் நிற்க வேணும். அப்பொழுது தான், பெண்கள் மட்டுமின்றி, ஆண்களும் சேர்ந்து, '**தொலைந்தது பீடை, ஒழிந்தான் சனியன், எழுந்தது இன்பம்**' என்று கும்மி யடிக்கலாம், யுத்தம் நிற்க வேணு மென்றால், அச்சு நாட்டார் ஒரே யடியாக அடக்கப் பட வேணும். **அதற்குப் பொது ஜனங்கள் சகல தியாகங்களையும் செய்யச் சித்தமாக இருக்க வேணும்.** ராணுவத்தில் உள்ளவர்கள் மகா தியாகிகள். நமது நலனைக் காக்க நாடு, மனை, மக்கள் அனைத்தையும் விட்டு, உலகின் வெவ்வேறு பாகங்களுக்குப் போய், இரவு, பகல், மழை, குளிர், பனி, வெயில், நித்திரை, சுகம் ஒன்றையும் லக்ஷயம் செய்யாது போராடி வருகிறார்கள். **இவ்வாறு நமக்காகப் பாடுபடுகிறவர்களுக்கு மேலும் மேலும் சகாயம் செய்ய வேண்டியது நமது கடமை யல்லவா ?** அவர்களுக்கு அதிக உதவி யளிக்காது நட்டாற்றிலே கை விடுவது போல் நிறுத்தி விடுவதால், யாருக்கு நஷ்டம் ? உங்கள் குழந்தைகளுக்கும், உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் தான் நஷ்டம். உங்கள் நீடித்த உதவி இல்லை யென்றால், வெற்றியும் சீக்கிரம் வரப் போவதில்லை. அது இழுத்துப் பறித்துக் கொண்டிருக்க இருக்க, இங்கே புதுப் புதுக் கஷ்டங்கள் தான் முளைத்துக் கொண்டிருக்கும். இது தேவலையா, இல்லா விட்டால் நீங்கள் மனப் பூர்வமாக உதவி யளித்து, 'சட்புட்' என்று வெற்றியைச் சம்பாதிக்க வழி செய்து விட்டு, நிம்மதியாக உங்கள் தொழிலை கவனித்துக் கொண்டு, வயிறு நிறைய உண்டு வருவது தேவலையா ?

இந்த யோசனையை உங்களுக்கு விட்டுவிட்டு, நேச தேசத்தார் தாம் எடுத்த காரியத்திலேயே கண்ணாயிருக்கிறார்கள். 1942-ம் வருஷம் உண்மையிலேயே ஒரு பீடை பிடித்த வருஷம் தான். அது நல்லதனமாக ஒழிய வேண்டுமே என்று தான் நேச தேசத்தார் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். நல்ல காலமாக நமக்கு அதிகக் காயமின்றி அவ்வருடம் ஒழிந்தது. ஆகவே அது வரை, ஒரு பீடை தீர்ந்தது என்று இவ்வருடப் பொங்கலை உத்சாகமாக கொண்டாடலாம். ஆனால் இறுதி வெற்றி பெறும் வரை நாம் இந்த அற்ப சந்தோஷங்களோடு திருப்தி யடைந்து விட முடியுமா ? அச்சு நாட்டார் ஆதியிலிருந்தே, பல வருஷங்களாகவே பெரிய யுத்தத்திற்கென்று தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை மறுபடியும் தலை தூக்க வொட்டாது அடிப்ப தென்பது லேசான காரியமில்லை தான். ஆனாலும் நேச தேசத்தாரின் பலம் பெருகி வரும் வேகத்தைப் பார்த்தால், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னது போல், 1944-ல் யுத்தம் முடிவடைந்து, எல்லோரும் மகிழும்படியான சந்தர்ப்பம் வாய்க்கு மென்றே தோன்றுகிறது.

அமெரிக்க சைனியத்திலே கூடிய சீக்கிரமே ஆறரைக் கோடிப் பேர்களிருக்கப் போகிறார்களாம். 'இந்த யுத்தத்தை பெர்லின், ரோம், டோக்கியோ, நகர வாசல்களுக்கே கொண்டு போகப் போகிறோம்' என்று ரூஸ்வெல்ட் அறிவித்து விட்டார். 'அச்சு நாட்டு நகரங்கள் மீது இடை விடாது குண்டுகளைப் பொழியப் போகிறோம். நாம் எண்டாப்பா இந்த உலகத்திலே, அதிலும் இந்த ஜெர்மனி, இத்தலி, ஜப்பான் போன்ற நாடுகளிலே பிள்ளையாகப் பிறந்தோம் என்று அங்குள்ளவர்கள் எண்ணித் துடிப்பார்கள் அப்பொழுது' என்கிறார் இன்னொருவர். 'இந்த ஜப்பானியர்கள் கேவலம் குரங்கு ஜன்மங்கள் தான். குரங்குகளைப் பிடித்துக் கூட்டி லடைத்து வதைப்பது போல் தான் இவர்களையும் செய்ய வேணும். ஆபத்தில் சிக்கிய ஜப்பானியர்களைக் காக்கச் சென்றவர்களை இந்தக் குள்ளர்கள் கைகுண்டு வீசி மடியச் செய்கிறார்கள். இவர்களுக்கா ஈவிரக்கம் காட்டுவது ? அடித்து நொறுக்க வேண்டாமா ?' என்று துடிக்கிறார் இன்னொருவர்.

ஜப்பானியர் தென் பஸிபிக் பிரதேசத்திலே பட்ட உதையையும் அடைந்த அவமானத்தையும், இழந்த இடங்களையும் சரிக்கட்ட பெரும்பாடு படுகிறார்களாம். பெரிய கப்பல் கூட்டங்கள் அங்கு தென்படுகின்றனவாம். திருட்டுத் தனமாகச் சில தீவுகளில் படைகளைக் கூட இறக்கி யிருக்கிறார்கள். இம்மாதிரி ஜப்பானியரை அங்கே சேர விடுவதால், ஆஸ்திரேலியாவிற்குள்ள ஆபத்து நீடித்திருப்பதாகவே விஷயமறிந்தவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ஆனாலும், ஜப்பானியரை, அவர்கள் மனம் போன போக்கிலே காரியங்களைச் செய்ய விட்டு விட்டு, நம்மவர்கள் தூங்கிக் கொண்டிருக்க வில்லை. அமெரிக்க,

ஆஸ்திரேலிய விமானிகள் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் ஜப்பானியக் கப்பல்களை நொறுக்கிக் கொண்டே யிருக்கிறார்கள். ஜப்பான்காரனுக்கு ஏக நஷ்டம் தான். ஆனாலும் அவன் நஷ்டத்தைப் பொருட் படுத்த முடியுமா ?

இப்பொழு தெல்லாம் ஜப்பானியர் பாது காப்பு யுத்தத்தையே நடத்தி வருகிறார்கள். அதோடு, அவர்களுக்கு போக்கு வரத்துக் கஷ்டங்களும் முளைத் தெழுந்திருக்கின்றன. எந்தச் சமயத்திலும் அமெரிக்கர்களும், மற்ற நேச தேசத்தாரும் ஜப்பானையே தாக்க வரக் கூடும் என்பது ஜப்பானியருக்குப் பட ஆரம்பித்திருக்கிறாப் போலிருக்கிறது. இல்லா விட்டால் அவர்கள் ஏன் பெரிய பெரிய தொழிற்சாலைகளை எல்லாம் மஞ்சூரியா, இந்தோ-சைனா, பர்மா போன்ற நாடுகளுக்கு மாற்ற நினைத்திருக்கிறார்கள் ? நேச தேசத்தார் ஜப்பானைத் தாக்க ஆரம்பித்தால் சும்மா ஜப்பானியக் குழந்தைகளையும், பெண்களையும், கிழவர்களையுமா தாக்குவார்கள் ? பாவம் ! இந்த அநியாய வேலைகள் எல்லாம் அச்சு நாட்டாருக்கே அர்ப்பணம். நம்மவர்கள் தாக்கக் கூடியதெல்லாம், ஜப்பானிய தொழிற்சாலைகளும், போக்குவரத்து சாதனங்களுந் தான். ஆகவே, ஜப்பானியர் முன்னெச்சரிக்கை யாகவே, தொழிற்சாலைகளை எல்லாம் பிடிபட்ட நாடுகளுக்கு மாற்றப் போகிறார்கள் போலிருக்கிறது. ஜப்பானுக்கும், ஜப்பானிய மக்களுக்கும் சேதம் வந்து விட்டால், மக்களின் மனோ திடமே குலைந்து விடுமல்லவா ? தந்திரகாரக் குள்ளனய்யா !

தவிர, இப்பொழுது ஜப்பானியர் பிடித்த இடங்களில் பல முக்யமான பொருள்கள் எல்லாம் கிடைத்திருக்கின்றன. அவற்றை யுத்த தளவாடங்களாகவும், வெடி குண்டுகளாகவும், விமானங்களாகவும் மாற்ற, தொழிற்சாலைகள் வேண்டாமா ? அவற்றை ஜப்பானுக்கு எடுத்துச் செல்வது என்றால் கப்பல் வசதி இல்லை. ஆகவே, வீட்டுக்கே காபி ஹோட்டல் வருவது போல, தொழிற்சாலைகளே, விளை பொருள்கள் உள்ள இடத்திற்குத் தூக்கப் படுகின்றன. இதெல்லாம் வரப்போகும் நேச நாட்டு எதிர்ப்பின் தன்மையைக் காட்டவில்லையா ?

இந்த உதைப்பு ஜெர்மானியருக்கும் ஏற்பட்டிருக்கிறது. துருக்கி எல்லையிலும், பெல்ஜியத்திலும் அவர்கள் பெரிய அரண்களைக் கட்டி வருகிறார்களாம். ருஷ்யாவிலே ஜெர்மானியர் படும் உதைக்கு அளவேயில்லை. எங்கு திரும்பினாலும் ருஷ்யர், எமன்கள் போல் தோன்றுகிறார்கள். காகஸஸ் பிரதேசத்திலே பிரமாண்டமானதோர் ஜெர்மன் படைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதனை நாலா புறங்களிலும் ருஷ்யர்கள் வளைத்து வருகிறார்கள்.

'கீழே விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை' என்ற கதையாக சரியான உதைப்படுகிறதையும் மறந்து, 'முன்னணியைக் குறுக்கி வருகிறோம்' என்று ஜெர்மன் பிரசார மந்திரி ஜெர்மானியருக்குக் கூறி வருகிறார். 'நம்ப முடியாத, எதிர்ப் பார்க்காத வேகத்தோடும், பலத்தோடும் ருஷ்யர்கள் தாக்குகிறார்கள். இத்தனை காலமாக நாம் எவ்வளவோ நஷ்டங்களை அவர்களுக்கு விளைத்திருக்கிறோம். ஆனாலும் எங்கிருந்து தான் அவர்களுக்கு இத்தனை பீரங்கிகளும், விமானங்களும், ஆள் பலமும் வருகிறதோ தெரியவில்லை. கடுமையாகத் தான் நடக்கிறது சண்டை !' என்று ஒப்புக் கொள்ளுகிறது நாஜி ரேடியோ.

ஆழந் தெரியாமல் தான் ருஷ்யாவிலே காலை விட்டு விட்டார் ஹிட்லர். இப்பொழுது பிரான்ஸி லிருந்து கூட ரிஸர்வ் படைகளை ருஷ்யாவிற்கு எடுத்து அனுப்பி யிருக்கிறார் அவர். காகஸஸிற்கு வாசல் எனப்படும் ராஸ்டாவ் நகரத்திற்கு ஆபத்து ஆறு பக்கங்களிலிருந்து நெருங்கிக் கொண்டிருக்கிறதாம். ஜெர்மானியர் புதிது புதிதாகப் படைகளைக் கொணர்ந்து குவித்து, ருஷ்யர்களின் முன்னேற்ற வேகத்தைத் தடுக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்களாம். ராஸ்டாவைக் கைவிட்டு விட்டால், நாஜிகள் பாடு ரொம்பக் கஷ்டம் தான்.

இந்தக் கொள்ளையிலே, கருங்கடல் பிரதேசத்திலே ருஷ்யர்கள் முன்னேறித் தாக்கக் கூடும் என்ற பயம் அச்சு நாட்டாருக்கு ஏற்பட்டிருக்கிறது ; படட்டும் அவதி நன்றாக !

"வட ஆப்பிரிக்காவை சீக்கிரமே 'க்ளீன்' செய்து விட வேண்டும்" என்று நேச தேசத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். ட்யூனிஸியாவிலே அச்சு நாட்டாரது வால் ஆடிக் கொண்டு தானிருக்கிறது. அவர்களை விரட்டுவது கொஞ்சம் சிரமமாகத் தானிருக்கிறது. ஆனாலும் சுதந்திர தாகம் கொண்ட பிரஞ்சுப் படைகள் ஜீரோவின் தலைமையில் பிரமாதமான காரியங்களைச் செய்யக் காத்திருக்கின்றன. மத்ய தரைக் கடலிலே பிரிட்டிஷ் நீர் மூழ்கிகள் அச்சு நாட்டினருக்குப் போகும் உதவிகளைத் தடை செய்து கொண்டிருக்கின்றன. ஜெர்மானியருக்கு ஏக நஷ்டம்.

கிரிக்கெட் விளையாட்டிலே, பந்தை எறியும் கட்சியார், அடிக்கடி ஆளை மாற்றிப் பந்தெறியச் செய்ய வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார்கள் என்றால், பந்தடிக்கும் எதிரிகளை லேசில் அசைக்க முடியவில்லை ; 'என்ன தந்திரம் செய்து பார்த்தும் பயனில்லை,' என்று தானே அர்த்தம் செய்து கொள்ளுகிறோம். அதே போல, வட ஆப்பிரிக்காவிலே, ஜெர்மானியருக்கு பல புதுப்புது சேனாபதிகள் அமர்த்தியனுப்பப் படுகிறார்கள் ; பழைய ஆசாமிகளுக்கு சீட்டுக் கிழிகிறது என்றால், அங்கே நேச தேசப் படையினரின் தாக்குதல் அபாரமாக இருக்கிறது ; அவர்களை அச்சு நாட்டாரால் ஒன்றும் செய்ய முடிய வில்லை என்று அர்த்தம் செய்து கொள்ளலாமா இல்லையா ?

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

**டோஜோ கொண்ட எண்ணம் பலிக்க வில்லை.** அரசாங்க சபையில் அவர் கடைசியாகப் பேசியபோது அவர் கூறியதாவது :—"இப்போது தான் உண்மையான யுத்தம் ஆரம்பமாகிறது. நேச நாட்டினர் (பிரிட்டன், அமெரிக்கா, சீனா, இந்தியா முதலியவை) நம்மை வெடி குண்டுகளைக் கொண்டு தாக்குவார்கள். ஆகவே, விமானப் பாதுகாப்பு ஏற்பாடுகள் கொஞ்சங் கூடத் தளர்ச்சி யின்றி நடை பெற வேண்டும்."

பல வருஷப் பிரசாரத்தினாலும் ஆயத்தத்தினாலும் அமைந்தது, ஜெர்மனியர் ஒழுக்கமும், ஜப்பானியர் ஒழுக்கமும். அது பழுதுபட்டதாக அறி குறிகள் தோன்றவில்லை. அவர்களுடைய யுத்தத் தளவாடங்களை நொறுக்கி நாசஞ் செய்தால் மட்டுந் தான் அவர்களுடைய ஒழுக்கம் குலையும். மிகச் சமீபத்தில் அச்சு நாட்டுத் தலைவர்கள் செய்த பிரசங்கங்கள் மன முடைந்து பேசப்பட்டவை யல்ல. ஆனால் அவர்களுடைய பேச்சின் போக்கி லிருந்து ஒரு உண்மை விளங்குகிறது. அதாவது இது வரை தாக்கிக் கொண்டிருந்த இந்த அக்கிரமக்காரர்கள், இப்போது தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார்கள். குடால்கனாரி லிருந்து டூனிஸ் வரை இவர்கள் தற்காத்துக் கொள்ள வேண்டியவர்களாகி விட்டார்கள். **1943-ம் வருஷத்தில் அச்சு நாட்டார் கவலையில் மூழ்கி யிருக்கிறார்கள் ; நேச நாட்டார் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.**





# தன்னைக் கொல்ல லஞ்சம் கொடுப்பவர்கள்

## ஜெர்மானியர்கள் கொலைக் கள நாடகம்

### அறிவும் கலையும் அழிந்தது

நாஜிகளின் அக்கிரமங்களுக்கு மிகவும் உள்ளானது போலந்து தான். அதன் பிரதம மந்திரி சமீபத்தில் பேசியிருக்கிறார். தன் நாட்டு மக்களும் நாஜிகள் கொடுமைகளுக்கு ஆளாகி யிருக்கும் மற்ற நாட்டு மக்களும் எப்படிப்பட்ட உணர்ச்சியோ டிருக்கிறார்கள் என்று தெள்ளத் தெளிய எடுத்துக் கூறினார். அக்கிரமஸ்தர்கள் மீது பொது மக்கள் வெறுப்பு உருப் பெற்று வருகிறது. இந்த வெறுப்பு, சரியான சமயத்தில் ஐரோப்பாவைத் தாக்கும். இந்தச் சமயத்தில் நேச நாடுகளும் கடைசி அடியாக அவர்கள் தலைமேல் அடிக்க சமயம் ஏற்படும். அப்போது ஹிட்லர் தோல்வி யடைவது உறுதி.

**போலந்துக்கு நேர்ந்த கதி.**

சென்ற 1939-ம் வருஷம் அக்டோபர் மாதம் ஜெர்மானியர்கள் போலந்தைக் கைப்பற்றினார்கள். அது முதல் போலந்து மக்கள் ஜெர்மானியர்களிடம் படும் அவதி, குறிப்பாக யூதர்கள் படும் அவதி சொல்லி முடியாது. உள் நாட்டுத் தலைவர்களை அகற்றி விட்டார்கள். அந் நாட்டைக் கைப்பற்றிய சில மாதங்களுக்குள் ஆயிரக் கணக்கானவர்களைத் தூக்கி லிட்டார்கள். பதினாயிரக் கணக்கானவர்களை நாடு கடத்தினார்கள். இந்தப் பகுதியில் மட்டுந் தான் இனி போலந்துக் காரர்கள் வாழ வேண்டு மென்று 1939-ம் ௵ அக்டோபர் ௴ 12௳ ஒரு சட்டத்தையும் பிறப்பித்தார்கள். பிறகு தொழிலாளர்களையும் இந்தப் பகுதிக்கு நாடு கடத்தினார்கள். கிராமங் கிராமமாகக் காலி செய்தனர். இவர்களை அப்புறப் படுத்துவதற்கு ஹிட்லரும் ஜெர்மன் இரகசியப் போலீசாரும் வந்தார்க ளென்றால் அங்கு நடந்த கொடுமைகளைச் சொல்லவும் வேண்டுமா ?

போலந்து சர்வ கலாசாலைக் கட்டிடங்களையும் அங்கிருந்த பொருள்களையும் நாசம் செய்து பேராசிரியர்களை ஜெர்மனிக்குக் கைதிகளாக அனுப்பினார்கள். கலையை யழித்தார்கள். ஆராய்சி ஸ்தாபனங்களை யொழித்தார்கள். பொருளாதார வாழ்க்கையை நாசப் படுத்தினார்கள். தொழிலாளர்களை ஜெர்மனிக்குக் கொண்டு போய் யுத்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்படி நிர்ப்பந்தித்தார்கள்.

போலந்தி லிருந்து, லண்டனிலுள்ள போலந்து அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கும் செய்திகளி லிருந்து போலந்தி லிருந்த யூதர்களை லட்சக் கணக்கில் ஜெர்மானியர்கள் கொன்றிருப்பதாகத் தெரிகிறது.

1940-ம் ௵ அக்டோபர் ௴ 17௳ ஒரு சட்டம் பிறந்தது. இதன்படி வார்சா நகரை 3 பகுதிகளாகப் பிரித்தார்கள். இங்கே 480,000, யூதர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் மிகக் கேவலமான பகுதிக்கு ஒதுக்கினார்கள். மிகச் சிறந்த பகுதியைத் தமக்கென ஜெர்மானியர்கள் வைத்துக் கொண்டார்கள். மற்ற பகுதிகளில் போலந்துக் காரர்களை வசிக்கும்படி அனுமதித்தார்கள். யூதர்கள் வசித்த பகுதியைச் சுற்றி சுவர்கள் இருந்தன. அவற்றில் ஒரு சில வாயில்கள் மட்டுந் தான் இருந்தன. ஜூலை மாதம் 20-ம் தேதி அந்தப் பகுதியை ஜெர்மன் படைகள் சூழ்ந்து கொண்டு, உட்புகுந்து அறிஞர்களான யூதர்களை எல்லாம் பிடித்துக் கொன்று விட்டார்கள். மறு நாள் ஒரு பிரகடனத்தில் எல்லா யூதர்களும் கையெழுத்திட வேண்டு மென்று வற்புறுத்தப்பட்டனர். அதில் கீழ்க் கண்டவாறு எழுதப்பட்டிருந்தது :—

> "ஜெர்மன் அதிகாரிகள் உத்திரவுப்படி வார்சாவில் வசிக்கும் யூதர்கள் எல்லோரும் ஆணா யிருந்தாலும் பெண்ணா யிருந்தாலும் எந்த வயதினரா யிருந்தாலும், கீழ் நாடுகளுக்கு அனுப்பப் படுவார்கள்."

மறு நாள், ஜூலை மாதம் 23-ம் தேதி யூத கௌன்ஸில் தலைவர் ஜெர்மன் அதிகாரிகளை பேட்டி கண்டு வந்த பிறகு தற்கொலை செய்து கொண்டார். மறு நாளே 6,000 யூதர்களை நாடு கடத்த அவர் ஒப்புக் கொண்டிருந்தார். அன்று 10,000 பேர்களை ஒப்புக் கொடுக்க வேண்டு மென்று ஜெர்மன், அதிகாரிகள் நிர்ப்பந்தித்ததால் தான் அவர் தற்கொலை செய்து கொள்ள நேர்ந்தது. பிறகு நாள் தோறும் யூதர்களை நாடு கடத்தினார்கள். செப்டெம்பர் மாதம் முதல் தேதிக்குள் 2½ லட்சம் யூதர்களை நாடுகடத்தி விட்டனர். அக்டோபர் மாதம் நாடு கடத்தப்பட வேண்டிய 40,000 பேர்களுக்கு, செப்டெம்பர் மாதத்திலேயே 120,000 உணவுச் சீட்டுக்கள் அச்சாயிற்று !

**நாடு கடத்தும் கொடுமை.**

ஆயுதந் தாங்கிய ஜெர்மன் காவலர்கள், யூதர்கள் வசிக்கும் பகுதியைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். சிலர் அப்பகுதிக்குள் புகுந்து சில வேட்டுகளைத் தம் துப்பாக்கியால் சுடுகிறார்கள். இந்த வேட்டுச் சத்தம் கேட்டதும் அங்குள்ள அனைவரும் வெளி வந்து விட வேண்டும். வெளி வராதவர்களையும் ஒளிந்து கொள்ளுகிறவர்களையும், நோயாளிகளையும் காலில்லாதவர்களையும் அங்கேயே சுடடுக் கொன்று விடுகின்றனர். வெளி வந்தவர்களை அழைத்துக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகிறார்கள். அங்கே, வயதானவர்களையும் பிரயோசன மில்லாதவர்களையும் பிரித்து கல்லறைக்கு அழைத்துக் கொண்டு போய் அங்கே கொன்று விடுகிறார்கள். மிஞ்சி யிருக்கிறவர்களை சாமான்கள் ஏற்றிப் போகும் ரயில் வண்டியில் ஏற்றுகிறார்கள். அதில் சுண்ணாம்பு பரத்தி வைக்கப் பட்டிருக்கிறது. 40 பேர்கள் மட்டும் ஏறக் கூடிய வண்டியில் 180 பேர்களை ஏற்றுகிறார்கள். அந்த வண்டிகளை நன்றாக அடைத்து முத்திரை வைத்து விடுகிறார்கள். இந்த ரயில் வண்டி ஒரு கொலைக் களத்திற்குப் போகிறது. 3 கொலைக் களங்க ளிருக்கின்றன. அவற்றுள் ஒன்றில் ஒரு பெரிய அகழி வெட்டி யிருக்கிறார்கள். இதற்குள் அங்கே கொண்டு போய் கொல்லப் படும் யூதர்களின் பிணங்களைப் போடுகிறார்கள். இந்த அகழியிலுள்ள ஒரு இயந்திரம் ஓய்வில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறதாம். இதிலிருந்து கிளம்பும் துர்நாற்றம் தாங்கமாட்டாமல் அந்தப் பக்கத்திலுள்ள கிராம வாசிகள் தம் ஊரை விட்டே ஓடிப் போகிறார்களாம். இந்த கொடுமைகளுக்குத் தாம் ஆளாவதை விட, **வார்சாவிலேயே தம்மைச் சுட்டுக் கொன்று விடும்படி கோரி தலா 100 ஸ்லோடிஸ் (ரூ. 62-8-0-க்குச் சமம்) லஞ்சம் கொடுக்கிறார்கள்.**

இது போலந்தி லிருந்து மட்டு மல்ல. பிரான்சு, ஹாலந்து, நார்வே, பால்கன் நாடுகள் முதலியவற்றி லிருந்து வண்டி வண்டியாக யூதர்களை ஏற்றிக் கிழக்கே கொண்டு போகிறார்கள். இந்த மகா கொடுமையைக் குறித்து நேச நாடுகள் சமீபத்தில் ஒரு கூட்டுப் பிரகடனம் வெளியிட்டிருக்கின்றன. அதை அயல் நாட்டு மந்திரி மிஸ்டர் ஆந்தனி ஈடன் காமன்ஸ் சபையில் சென்ற டிசம்பர் மாதம் 17-ம் தேதி வாசித்தார். "இந்தக் கொடியவர்கள் சரியானபடி தண்டிக்கப்பட" வேண்டு மென்றும், இதற்குத் தகுந்த முறைகளைக் கையாள வேண்டு மென்றும் நேச நாட்டார்கள் தீர்மானித்திருக்கின்றனர் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பழி வாங்க வேண்டிய பருவம் வந்து விட்டது என்று ஜெனரல் சிகோர்ஸ்கி குறிப்பிட்டார். எப்படிப் பழி வாங்குவது என்று பிரிட்டிஷ் விமான உற்பத்தி மந்திரி சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் குறிப்பிடுகிறார். ஜெர்மனியும் இத்தாலியும் இனி இன்னும் கடுமையாக விமானங்களால் தாக்கப் படும். அவர் இழைத்த கொடுமைகளை விடப் பல மடங்கு அதிகக் கொடுமைகளை, நாம் அவர்களுக்குச் செய்வோம்.

# படையினருக்கு ஆரம்பச் சம்பளம்

முன்பு படையில் சேருகிறவர்களுக்கு இருந்த ஆரம்பச் சம்பளத்தை விட, இப்போது அதிகச் சம்பளம். அதாவது மாதம் ரூ. 13 மூலச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. 6 மாத காலம் நன்றாக வேலை செய்த பிறகு, திறமையைக் குறித்து மேலும் ரூ. 1 கொடுக்கப்படுகிறது. இது 12 மாதங்களுக்குப் பிறகு ரூ. 2-8-0 விகிதம் கொடுக்கப்படுகிறது. போர்க்களத்திற்குப் போகாதிருக்கிறவர்களுக்கு, சாப்பாட்டிற்காக மாதம் ரூ. 3-ம், வண்ணான், நாவிதன் செலவுகளுக்காக அணா 10-ம் மேலும் கொடுக்கப்படுகின்றன. இவையன்றி, மாதந் தோறும் சம்பளப் பிடித்த மென்று ரூ. 3-ம், யுத்தத்திற்குப் பிறகு வாழ்க்கைக்கு உதவும் பொருட்டு ரூ. 2-ம் ஒவ்வொருவர் கணக்கிலும் வரவு வைத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே போர் முனைக்குப் போகாதிருக்கும் ஒரு சிப்பாய், படையில் சேர்ந்தவுடனே ரூபாய் 26-10-0-ம், 6 மாதங்களுக்குப் பிறகு ரூ. 27-10-0-ம், 1 வருஷத்திற்குப் பிறகு ரூ. 30-2-0-ம் பெறுகிறார்.

இந்தியாவில் போர் முனைக்குப் போகும் சிப்பாய்களுக்கு மேலான உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. மாதந் தோறும் படி ரூ. 5 கிடைக்கிறது. ஆகவே, 12 மாத சேவகம் செய்த ஒரு சிப்பாய்க்கு ரூ. 31-8-0 கிடைக்கிறது. வெளி நாடுகளுக்குப் போகும் சிப்பாய்களுக்கு வெளி நாட்டு அலவன்ஸ் ரூ. 7 மேலும் கொடுக்கப்படுகிறது. ஆகவே 1 வருஷ சேவகம் செய்துள்ள ஒரு சிப்பாய் வெளி நாடுகளுக்குப் போனால், மாதந் தோறும் ரூ. 38-8-0 கிடைக்கிறது. படையில் சேர்ந்து ஒரு வருஷம் ஆகு முன்பு வெளி நாடுகளுக்குப் போகும் சிப்பாய்களுக்கு ரூ. 33-8-0-ம், லான்ஸ் நாயிக்குக்கு ரூ. 35-8-0 ம் நாயிக்குக்கு ரூ. 46 முதல் 48 வரையிலும், ஹவில்தாருக்கு ரூ. 49 முதல் 53 வரையிலும் கிடைக்கிறது.

## பிரிட்டிஷ் விமானியும் ஜப்பான் விமானியும்.

**பர்மா எல்லைப்புறத்தில் ஜப்பானிய பாம்பர் விமானக் கூட்டங்கள் கிளம்பின. அவற்றைக் கண்ட, பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த விமானி யொருவர், தன் விமானத்தைக் கொண்டு இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில் 60 மைல்கள் தூரத்திற்கு 2 விமானக் கூட்டங்களை விரட்டி யடித்தார். இவர் பெயர் ப்லேட் சார்ஜென்ட் பிலட் ஜான் ஒல்டாம். இவருடைய சொந்த ஊர் லங்காஷையர். இவர் தன் அனுபவத்தைக் குறித்துக் கூறியதாவது :—**

"முதலில் 7 பாம்பர் விமானங்கள் கொண்டதோர் கூட்டத்தைத் தாக்கினேன். பிறகு மேகங்களில் மறைந்தேன். அவற்றிற்கு முன்னதாக சிட்டகாங் வந்து சேர்ந்து விட்டேன். பிறகு இரண்டாவது கூட்டத்தைத் தாக்கக் கிளம்பினேன். மொத்தத்தில் மூன்று முறைகள் தாக்கினேன்."

"முதல் முறை நான் தாக்கிய வுடனே, எங்கேயோ எனக்கு அடிபட்டதாகத் தோன்றியது. ஆகவே மறுபடி நான் இரண்டு முறை தாக்கிய போது அவற்றின் பலன் என்ன வென்று தெரிந்து கொள்ளக் கூட வில்லை. ஏனென்றால், காற்றடைப்புக் கண்ணாடியில் எண்ணெய் சிதறி யிருந்தது. மேல் மூடியைத் திறந்த போது என் தலையிலும் சட்டையிலும் எண்ணெய் கொட்டியது. நெருப்பிருக்கு மென்று சந்தேகப் பட்டேன். எனவே, தரையை நோக்கி, சிட்டகாங்குக்கு அருகிலுள்ள ஒரு வயலில் வந்திறங்கினேன்.

அருகிலிருந்த கிராமத்திற்குள் சென்றேன். அந்தக் கிராம வாசிகள் என்னை அளவு கடந்து உபசரித்தார்கள். உதவினார்கள். நான் உயிரோடு தப்பியது பற்றி பெரிதும் மகிழ்ந்தார்கள். கிராமத்தின் மத்தியில் ஒரு நாற்காலியில் என்னை இருக்கச் செய்தார்கள். ஆரஞ்சுப் பழங்களும், வாழைப் பழங்களும், கேக்குகளும் ஏராளமாகக் கொடுத்துச் சாப்பிடச் செய்தார்கள். அங்கே அளவு கடந்து தேநீர் நான் குடித்தேன். பிறகு ஒரு வீட்டிற்கு என்னை அவர்கள் அழைத்துக் கொண்டு போனார்கள். அங்கேயும் கேக்கும் இன்னும் என்னென்னமோ கொடுத்தார்கள். **அவர்கள் உள்ளன்போடு கொடுப்பதை நான் மறுக்க முடியவில்லை. அவற்றையும் சாப்பிட்டேன்.** பிறகு ஒரு மோட்டார் காரில் ஏறி வேறோர் இடத்திற்குப் போனேம். அங்கே கொஞ்சம் ஆட்டிறைச்சியும், கறியும், தேநீரும் கொடுத்தார்கள். அவற்றையும் சாப்பிட்டேன். என் வயிறு வெடித்து விடும் போலிருந்தது.

கடைசியாக நான் ஒரு ரயில் வண்டியில் ஏறினேன். அந்த வண்டியில் இரண்டு இந்திய சிப்பாய்கள் **ஒரு ஜப்பானிய விமான மோட்டியைக் கைது செய்து கொண்டு போனார்கள்.** அந்த வண்டிக்குள் நான் புகுந்த உடனே, அந்த ஜப்பான் விமானியின் மனம் தளர்ச்சி யடைந்தது. "நானும் ஒரு விமானி" என்று நான் கூறியவுடனே, எழுந்து உட்கார்ந்து என்னைக் கவனித்தார். "நானும் விமானி தான்" என்றார். அவருக்கு நான் ஒரு சிகிரெட் கொடுத்தேன். மகிழ்ச்சி யோடு பெற்றுக் கொண்டார். நானும் ஒரு விமான மோட்டி யென்று தெரிந்ததும், என்னோடு சகஜமாகப் பழக ஆரம்பித்தார்.

## அலாஸ்கா பெரு வழி

### ரஷ்யர்களுக்குக் கொண்டாட்டம் ; ஜப்பானியர்களுக்குத் திண்டாட்டம்

அலாஸ்கா பெரு வழி இப்போது திறக்கப்பட்டு விட்டது. இதன் நீளம் 1,671 மைல். பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த டாசன் முனையி லிருந்து அலாஸ்காவி லுள்ள பேர்பாங்க்ஸ் வரை இந்த ரோடு அமைக்கப்பட் டிருக்கிறது இதை அமைக்க 6 மாதங்களுக்குச் சற்று அதிக காலம் பிடித்தது. இதன் வழியாக அமெரிக்காவின் வட பாகங்களிலுள்ள தளங்களுக்கு ஏராளமாக யுத்தத் தளவாடங்கள் போகின்றன. 7 இஞ்சினீரிங் படைகளைச் சேர்ந்த 10,000 சோல்ஜர்களும் 2,000 தொழிலாளர்களும் இந்த வேலையைச் செய்து முடித்தனர். ஒரு நாளைக்கு சராசரி 8 மைல்கள் வீதம் வேலை செய்து அமைத்தார்கள். சுமார் 200 ஆறுகளுக்கும் கால்வாய்களுக்கும் பாலங்கள் அமைக்க வேண்டி நேர்ந்தது. இதனால் ரஷ்யர்களுக்குக் கொண்டாட்டமும், ஜப்பானியர்களுக்குத் திண்டாட்டமுந் தான் உண்டாகும்.



# இருட்டறை ரகசியம்.

பல பெரிய தெருக்கள் சந்திக்குமிடம் தான், சென்னையிலுள்ள 'ரௌண்ட் டாணா.' இதற்குக் கொஞ்ச தூரத்தில் சில லாயங்கள் இருக்கின்றன. அதன் மெத்தையின் உட்புறத்தில் ஒரு இருண்ட அறை. வெளியே போகும் மோட்டார், டிராம் வண்டிகளின் சத்தங் கூட இங்கே கேட்பதில்லை. இது ஒரு இரகசிய இடம். அங்கே சிலர் கூடியிருந்தனர். அவர்களுள் ஒருவர், சற்று அதிகாரத்தோடு "உங்களையும் உங்கள் வேலைகளையும் பற்றி எனக்கு மிகுந்த சந்தோஷம். இன்று நீங்கள் பலவகையான தகவல்களைக் கொண்டு வந்தீர்கள். அவை நமக்கு மிகவும் உபயோகமானவை. இன்னும் நீங்கள் ஜனக் கூட்டங்களோடு கலந்து அதிகத் தகவல்களைச் சேகரித்துத் தர வேண்டும். நீங்கள் உங்கள் கண்களைக் கொண்டும் காதுகளைக் கொண்டும் மிகவும் உன்னிப்பாய்க் கவனிக்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவராக உங்கள் கூலியைப் பெற்றுக் கொண்டு போங்கள்" என்றார்.

* * * *

மறுநாள் காபி ஹோட்டலில் இருவர் உட்கார்ந்திருக்கின்றனர். சிற்றுண்டி வேளையில் நாள் தோறும் இவர்கள் சந்திப்பது வழக்கம். இவர்களில் ஒருவர் குமாஸ்தா ; மற்றொருவர் ஒரு கடையில் விற்பனையாளர். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு பலகாரத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் போது, தங்கள் கம்பெனியும், மற்ற கம்பெனிகளைப் போல நிலைத்துக் கொண்டது என்றும், ஏராளமான இலாபம் சம்பாதிக்கும் என்றும், பல மாதங்களாக கேப் டவுனில் கட்டுக் கிடையாக விருந்த ஒரு சாமான் கப்பலில் தம் கம்பெனிக்கு வெளி நாடுகளிலிருந்து ஏராளமாகச் சரக்கு வந்து கொண்டிருக்கிற தென்றும் குமாஸ்தா சொன்னார். "இது ஒரு நல்ல செய்தி தான்" என்று பதிலளித்தார் விற்பனையாளர்.

குமாஸ்தா.—இது ஒரு இரகசியச் செய்தி; என்றாலும் உங்களிடம் மட்டும் சொன்னேன். இந்தக் கப்பல் முதலில் கொழும்புவில் சரக்கை இறக்குவதாக ஏற்பாடாகி யிருந்தது ; இப்போது பம்பாய்க்குத் தகுந்த துணைக் கப்பல்களோடு வந்து கொண்டிருக்கிறது.

விற்பனை.—நல்லது, நான் உங்களுக்கு மற்றொரு நல்ல செய்தி சொல்லுகிறேன். இன்னும் 3 நாட்களில் பர்மாவிலிருந்து இந்தியப் படைக் கப்பல் ஒன்று சென்னைக்கு வரப் போகிறது. அதில் படையைச் சேராத சிலரும் வருகிறார்கள். என் நண்பர்கள் சிலரும் அதில் வருகிறார்கள். . . . . . .

இதற்கு மேல் அவர்கள் பேசியவை பற்றி நமக்குக் கவலை யில்லை. இவர்கள் பேசியதை அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தது யார் என்று அவர்களுக்குத் தெரியாது. இதனால் மகா கொடிய தீங்கு நேர்ந்து விட்டது.

* * * *

இந்திய கனவான்கள் கூடும் சங்கம். அங்கிருந்த ஒரு சோபாவில் ஒரு கனவான் சாய்ந்து கொண்டிருந்தார். இவர் ஒரு தங்க வியாபாரி. தாகத்திற்குக் கொண்டு வரும்படி அங்கிருந்த ஒரு வேலைக்காரனை ஏவினார். அவருக்குப் பின்புரமிருந்த மற்றொருவர் "எனக்கும் கொண்டு வரும்படி கட்டளையிடுங்கள் ; தாகம் அதிகமா யிருக்கிறது" என்று கோரினார். இதைக் கேட்ட வியாபாரி எழுந்து சோபா மீது உட்கார்ந்து கொண்டே, "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி "இரண்டு கோப்பை கொண்டு வாடா" என்று வேலைக்காரனுக்கு உத்திர விட்டார்.

இவ்விருவரும் பல விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று வியாபாரி கிளம்பினார். மற்றொருவர் 'என்ன இவ்வளவு அவசரம்?' என்று கேட்டார்.

வியாபாரி.—"பல லட்ச ரூபாய்கள் பெறுமான தங்கப் பாளங்களை பம்பாய் அரசாங்கத்தார் என்னிடம் வாங்குவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். இன்றிரவு பம்பாயிக்குப் போகும் ரயிலில் அவற்றை நான் அனுப்ப வேண்டும்."

வியாபாரி எழுந்து தன் மோட்டார் காரில் ஏறி, போய் விட்டார். இந்தச் செய்தியை வெளியிட்டதனால் தனக்கு ஏற்பட விருந்த நஷ்டத்தை அவர் எப்படித் தெரிந்து கொண்டிருக்க முடியும்?

* * * *

மாலை வேளை. டிராம் வண்டி நிறைய ஜனங்கள். சிலர், அதில் தொங்கும் பிடிகளைப் பற்றி நின்று கொண்டு வருகிறார்கள். இவர்களுள் இருவர், ஒருவரோ டொருவர் பேசத் தொடங்கினார்கள்.

"ஆகவே, லெனின்கிராட் நகரம் பிடிபட வில்லை ?"

"இப்போது பிரிட்டனும் அமெரிக்காவும் போகிற போக்கைப் பார்த்தால், பிடிபடவே படாது."

"ஆமாமா."

"உங்களுக்கு விஷயம் தெரியாது. இங்கே நம் சென்னை மாகாணத்திலும் கூட அநேகம் படைகள், அநேக டாங்கிகள், அநேக பீரங்கிகள், அநேக விமானங்கள், ஏராள்மான தளவாடங்கள் எல்லாம் இருக்கின்றன. என் அண்ணன் மகன் வெடிமருந்து தொழிற்சாலையில் ஒரு பொறுப்புள்ள உத்தியோகத்தி லிருக்கின்றான். அவன் சொன்ன விஷயங்கள் தான் இவை. எதிரி இங்கே வந்தால், அவன் கர்ப்பம் கலங்கிப் போகும்.

இது இராஜ விசுவாசமான தோர் பேச்சுத் தான். ஆனால், யுத்த காலத்தில் மகா முட்டாள்தனமானது.

* * * *

கிண்டி குதிரைப் பந்தயம் கடைசி நாள். ஏராளமான கூட்டம். செல்வத்தில் மிதக்கும் இரண்டு கனவான்கள் அங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

"இன்றைக்கு மிகச் சிறந்த குதிரைகள் ஓடிக் கொண்டிருக்கும் போது கூட, மேன்மை தங்கிய நம் கவர்னர் இன்று வரமாட்டார் போலிருக்கிறதே! அவர் சென்னையில் இல்லை ; உதகமண்டலத்திலும் இல்லையாமே. மாயமாக வல்லவா இருக்கிறது!"

"ஆமா! ஆனால், ஒரு மகா இரகசியமான செய்தி எனக்குத் தெரியும். இது நம்பத் தகுந்தவர்கள் கூறிய செய்தி. ஒரு நடுக் காட்டில் ஒரு விமான நிலையத்தைக் கட்டி முடித்திருக்கிறார்களாம்! இதில் ஒரே சமயத்தில் அநேக விமானங்கள் தங்கலாமாம். இதைத் திறந்து வைக்க இன்று மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அங்கே போயிருக்கிறார் ; இவ்வளவு பெரிய விமான நிலையம் நம்மாகாணத்திலேயே கிடையாதாம்.

இவ்வளவு வெளிப்படையாக இந்த விஷயங்களை விவாதிப்பது அவ்வளவு புத்திசாலித் தனமல்ல.

* * * *

மீன் கடை. இரண்டு பெண்கள் தாம் கொண்டு வந்த மீன்களை எல்லாம் விற்ற பிறகு, வெற்றிலைச் சருகை மடித்து மென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் பேசியதாவது :—

"எங்கூட்டுக்காரு தாங் கண்ணாலே பாத்தாராமே. ஒரு பெரிய கப்பலாம் ; அதுலே ரொம்ப அரிசி மூட்டை போச்சாமே, எலங்கெக்கி!"

"அங்கே எங் கொண்டு போறான் ?"

"அங்கேருக்கிற பட்டாளத்துக்கு. எங்கூட்டுக்காரு ரொம்பத் தூரம் கட்டுமரத்தை வலிச்சிகினு போனாரும். அப்ப, அந்தக் கப்பக்காரெனுங்க, அவருக்குக் காசெ மேலேருந்து எறிஞ்சானுங்களாம்!

இப்படிப்பட்ட செய்திகளை நீங்கள் கடைத் தெருக்களில் கேட்கலாம். ஆனால், இதனால் விளையும் தீமை என்ன ?

* * * *

அன்றிரவு. பழைய இருட்டறை. அங்கிருந்தவர்கள் மூச்சு விடும் சத்தம் தவிர வேறு சத்தமே கிடையாது. அனைத்தும் அமைதியா யிருந்தது. திடீரென்று ஒரு ரேடியோ பேசும் சத்தம் கேட்டது. எதிரியின் ரேடியோ நிலையத்தி லிருந்து சொல்லப்பட்ட செய்திகள். வார்த்தைகள் அழுத்தந் திருத்தமாகவும் தெளிவாகவும் இருந்தன.

“ இன்று மாலை பல முக்கியமான செய்திகளை அறிவிக்கிறோம். இன்று அரபிக் கடலில் தகுந்த துணைக் கப்பல்களோடு வந்து கொண்டிருந்த பல கப்பல்களை மூழ்கடித்து விட்டோம்.”

இச் செய்தியைக் கேட்டவர்கள் அனைவரும் கொக்கரித்தனர். மூலையிலிருந்து கிளம்பிய ஒரு முரட்டுக் குரல் தான் சற்று உரத்துக் கொக்கரித்தது. அந்த ரேடியோ மேலும் கூறியதாவது :—

“ பர்மாவி லிருந்து கிளம்பிய ஒரு கப்பலில் படைகள் ஏராளமாக வந்து கொண்டிருந்தன. அதில் பொது ஜனங்களும் சிலர் இருந்தனர். இதையும் வழி மறித்துப் பிடித்து விட்டோம். அதில் இருந்தவர்கள் கடலில் மூழ்கிப் போனார்கள். ஒரு சிலர் நீந்திக் கொண்டிருந்தார்கள். அவர்களைக் காப்பாற்ற வழி யில்லை. எனவே, மேலும் அவர்கள் தொல்லைகளுக்கு ஆளாகாதிருக்க வேண்டி, மிஷின் பீரங்கியால் சுட்டுத் தள்ளி விட்டோம்”.

இதைக் கேட்டதும் அங்கிருந்தவர்களில் ஒருவர் நீண்ட தோர் பெரு மூச்சு விட்டார். மூலையிலிருந்து கிளம்பிய முரட்டுக் குரல் மேலும் கொக்கரித்தது. அந்த ரேடியோ மேலும் கூறியதாவது :—

“ இலங்கைக்கு அரிசி ஏற்றிப் போய்க் கொண்டிருந்த ஒரு கப்பலைத் தவறுதலாக ‘ டார்பிடோ ’வைக் கொண்டு மூழ்கடித்து விட்டோம். அந்த அரிசியை நாம் கைப்பற்றி உபயோகித்திருக்கலாம்.”

“ ஐயய்யோ ! என் தந்தையும் நானும் நாசமடைந்தோம். எங்கள் சொத்துக்களெல்லாம் அந்தக் கப்பலோடே பாழடைந்து போயிற்றே. இந்தக் கப்பலைப் பற்றிய தகவல் கொடுத்தது எவன் ? அவன் உயிரை வாங்கி இரத்தத்தைக் குடித்து விடுகிறேன் ” என்று கடுங் கோபத்தோடு கிளம்பினார் ஒருவர்.

“ சட் ; சும்மா இரு ! ” என்று கடும் கோபத்தோடு கிளம்பியது மூலையி லிருந்த முரட்டுக் குரல். மேலும் அது கூறியதாவது :—

“ அது உங்கள் கப்பலா ? ,எங்களுடைய தல்லவா ? கண்ணைத் திறந்து கொண்டு தானே இந்தக் கிடு கிடு பாதாளத்தில் நீ விழுந்தாய் ! என் பேரில் குற்றம் சொல்லாதே.”

“ உயிரை வாங்கி, இரத்த்தைக் குடிப்பேன் என்று வீரம் பேசியவர், தட்டித் தடுமாறி அந்த அறையை விட்டு அப்பால் அகன்றார் கன வருத்தத்தோடு. அந்த ரேடியோ மேலும் கூறியதாவது :—

“ இந்தியாவில் நம் எதிரிக்கு எவ்வளவு பலம் இருக்கிற தென்ற தெளிவான புள்ளி விவரங்கள் நம்மிடம் இருக்கின்றன. நம் நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் மிகவும் முக்கியமான தோர் செய்தியைத் தெரிவிக்கக் கூடிய நிலைமையி லிருக்கிறோம்.

“ அதாவது, சென்னை கவர்னர், இன்று காலையில் நடுக் காட்டில் ஒரு விமான நிலையத்தை ஆரம்பித்து வைத்தார். இது உண்மையான செய்தியா அல்லவா ? இன்னொரு செய்தி சொல்லட்டுமா ? இன்று மாலை சென்ட்ரல் ஸ்டேஷனி லிருந்து புறப்பட்ட பம்பாய் மெயில், சென்னைக்கு 100 மைல்களுக்கு அப்பால் ஆபத்திற் குள்ளாகி நொறுங்கியது. பம்பாய் அரசாங்கத்தார் வாங்கும் பொருட்டு அனுப்பப்பட்ட தங்கப் பாளங்கள் அதில் ஏராளமாகப் போய்க் கொண்டிருந்தன. நாம் அந்தத் தங்கப் பாளங்களைக் கைப் பற்றப் போய், பல உயிர்களையும் நாசஞ் செய்ய வேண்டி நேர்ந்தது. வண்டியைக் கவிழ்த்தாலல்லது எங்களுக்குத் தங்கப் பாளம் கிடைக்காது. ஆகையால் தான் கவிழ்த்தோம்.”

அந்தக் கூட்டத்தி லிருந்த மற்றொருவர் கிளம்பி “ போதும் ; நிறுத்து. அந்த வண்டியில் தானே என் மனைவியையும் மக்களையும் நான் அனுப்பினேன்.” என்று கதற ஆரம்பித்தான். இந்தச் சமயத்தில், தடுமாறிக் கொண்டு வெளியேறியவர் மீண்டும் அந்த அறைக்குள் நுழைந்து “ விடாதே ! பிடி ! அந்த முரட்டுக் குரல் மூர்க்கனை ; நம் எல்லோரையும் நாசஞ் செய்து விட்டான். கொல்லுங்கள் அவனை ” என்று கூவினான்.

கோபத் தீ கொழுந்து விட்டெரிந்தது அனைவர் மனத்திலும். முரட்டுக் குரல் கிளம்பிய மூலையை நோக்கி அனைவரும் ஒருமுகமாக ஓடினர். ஆனால் அந்த மூர்க்கன் எங்கே ?

ஐந்தாம் படைக்காரன் தப்பி விட்டான். எங்கேயோ மாயமாக மறைந்து விட்டான். இது வரை முட்டாள் தனமாக ஏமாந்து அவனுடைய கையாட்களாக விருந்த அனைவரும், பழி வாங்கும் நோக்கத்தோடு தேடினர் ; மறைந்து விட்டான் மோசக்காரன். எனவே, அங்கிருந்தவை அனைத்தையும் உருவில்லாதபடி நாசம் செய்து விட்டனர்.

**ஆக்வே நீங்கள் பேசும் போது எச்சரிக்கையா யிருங்கள்.** அவன் அங்கே, இங்கே, எங்கே வேண்டுமானாலும் இருப்பான். எங்கே தகவல்கள் கிடைக்குமென்று கிராமங்களிலும் பட்டணப் புரங்களிலும் மோப்பம் பிடித்துக் கொண்டு திரிவான். இப்படிப் பட்ட 5-ம் படையினனின் கையாட்களாக, தெரிந்தோ தெரியாமலோ ஆகி விடாதீர்கள் ! மற்றவர்களை நாசப் படுத்துவது மட்டு மின்றி, நீங்களும் நாசமடைவீர்கள்.

**உண்மையிலேயே ஆபத்துத் தான். எச்சரிக்கை. ஜாக்கிரதையாகப் பேசுங்கள்.**

## மீண்டும் ஐந்தாம் படை ?

**[நம்பத் தகுந்தபடி பெரும் புழுகாகப் புழுக வேண்டும்**

**—ஹிட்லர்.]**

சென்னையிற் பல விடங்களிலும் பல கடைகளை அதிகாரிகள் ஆரம்பித்து ரூபாய்க்கு $2\frac{3}{4}$ படி வீதம் அரிசி விற்கிறார்கள் என்று பத்திரிகைகளில் சில நாட்களுக்கு முன் செய்தி வெளி வந்தது. இங்கே விற்கப்படும் அரிசியில் வாந்தி பேதிக் கிருமிகள் இருப்பதனால், அதை வாங்கிச் சாப்பிடுவது ஆபத்திற்கு உள்ளாக்கும் என்று போலீஸார் தமுக்குப் போட்டுத் தெரிவித்ததாக ஒரு வதந்தி கிளம்பியது. இது காரணமாக சில தொழிலாளிகள் அந்தக் கடைகளில் அரிசி வாங்க பயப் படுகிறார்கள்.

இந்த வதந்தி கேவலமானது. முழுப் பொய். இது 5-ம் படையினராவது, கொள்ளை லாப மடிக்கும் பேர்வழிகளாவது தான் கிளப்பிய வதந்தியா யிருக்க வேண்டும்.

## பரிபூரண யுத்தம்

நாம் பரிபூரண யுத்தத்தில் இறங்கியிருக்கிறோம். ஏனென்றால் நம் வாழ்விற்கே ஆபத்து உண்டாகி யிருக்கிறது. சுயேச்சையும் சுயமரியாதையுந் தான் வாழ்க்கைக்குப் பெருமை தருவன. இவற்றை நாம் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு நாம் பரிபூரணமாக முயற்சிக்க வேண்டும். பரிபூரண யுத்தம் மகா கடுமையானது தான். நம் உயிரையும் உடைமைகளையும் வெற்றியின் பொருட்டு தத்தம் செய்கிறோ மென்று தான் இதற்கு அர்த்தம். ஜனநாயக நாட்டில் பரிபூரண யுத்தம் என்றால் மகா கடுமையானது தான். மக்கள் இனமும், நாடும் நிலைத்திருக்க வேண்டி, உயிர்களையும் உடைமைகளையும் தகுந்தபடி பயன்படுத்த வேண்டி வருமென்று, ஒவ்வொருவரும் எதிர்பார்த்திருக்க வேண்டும். பரிபூரண யுத்தத்தில், நாம் போர் உடுப்புக்கள் அணிந்திருந்தாலும் அணிந்தில்லா விட்டாலும் நாம் அனைவரும் சோல்ஜர்கள் தான்.

—ரூஸ்வெல்ட்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, “ VICTORY HOUSE ”, MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஞு ஜனவரிமீ 22உ, வெள்ளிக்கிழமை [இதழ் 4



ஈராக்கு முதல் மந்திரி ஜெனரல் நூரி சையிது.

ஈராக்கு முதல் மந்திரி ஜெனரல் நூரி சையிதுக்கு, மிஸ்டர் சர்ச்சில் அனுப்பிய செய்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார் :—

“ ஈராக் என்னும் புதிய சாம்ராஜ்யத்தை எதிர் காலத்தில் நடத்துவிக்கும் பொறுப்பை முதல் முதல் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒப்புக் கொண்ட போது, ஈராக்குக்குப் பரிபூரண சுயேச்சையை விரைவில் வழங்க வேண்டு மென்று வாக்குறுதி கொடுத்தார்கள். இந்த வாக்குறுதியை 10 வருஷங்களுக்கு முன்பே நிறைவேற்றி விட்டனர். அது முதல் இந்த இரு நாடுகளின் விரோதிகள், நம் நேசத்தைக் குலைக்க, அரும்பாடு படுகிறார்கள். ஆனால் அவர்கள் முயற்சி பலிக்க வில்லை. ஈராக்கி பார்லிமெண்டுக்கு சட்டப்படி யதேச்சையான ஆதிக்கம் ஏற்பட்டு விட்டது. ஆகவே நேச நாடுகளின் நோக்கங்களையும் ஈராக்கு முழுதும் ஆதரிப்பதையும், உலக மக்களை அடிமைப் படுத்த விரும்பும் அக்கிரமஸ்தர்களை எதிர்க்க வேண்டு மென்று தாம் முடிவு கட்டி யிருப்பதையும், உலக மக்களுக்கு எடுத்துக் காட்ட, தானாகவே முன் வந்திருக்கிறது.”

“ யுத்தம் கடுமையானது தான் ; ஆனால் முடிவு மட்டும் நிச்சயம். தாங்களும் எங்களோடு சேர்ந்தது பற்றி பெரிதும் மகிழ்ச்சி யடைகிறோம்.”

# நேச நாடுகளின் விமான பலம் அதிகரிக்கிறது

## போர் முனைகளில் விமான பலத்தின் அவசியம்

அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் 1943-ம் ஞு ஜனவரிமீ 7உ அமெரிக்கப் பொது ஜன சபைக்கு அனுப்பிய செய்தியில், "இந்த 1943-ம் வருஷம் முடிவதற்குள் பெர்லின், ரோமாபுரி, டோக்கியோ ஆகிய நகரங்களைப் பிடிக்கும் முயற்சியில் வெகுவாக முன்னேறி விடுவோமென்று நம்புகிறேன்" என்று கூறினர். இப்படிச் சொல்லி ஒரு வாரத்திற்குள் பிரிட்டிஷ் விமானப் படை பெர்லின் நகரத்தைப் பலமாகத் தாக்கியது. பெர்லின் நகரத்தில் "ஸ்வென்ஸ்காட்க்பிலாடெட்" என்றொரு பத்திரிகை நடக்கிறது. பெர்லினிலுள்ள விமான எதிர்ப்புப் பீரங்கிகள் அப்போது கடுமையாக போராடியது போல, ஒரு போதும் போராடியதில்லை யென்று அந்தப் பத்திரிகை நிருபர் குறிப்பிடுகிறார். ஏராளமான பெரிய குண்டுகளையும் சிறிய குண்டுகளையும் பிரிட்டிஷ் விமானப் படை வீசியதாகவும், பெருந் தீ பல விடங்களில் பற்றி எரிந்ததாகவும் தெரிகிறது. இதுதான் பெர்லினை 54-வது முறையாக பிரிட்டிஷ் விமானப் படை தாக்கியது. அதற்கு மறு நாளும் கூட, அதாவது ஜனவரி மாதம் 17-ம் தேதியுங் கூட பெர்லின் நகரத்தை அது தாக்கியது. சென்ற 1941-ம் ஞு டிசம்பர்மீ 7உ இரவு அதாவது 14 மாதங்களுக்கு முன்பு, பிரிட்டிஷ் விமானப் படை பெர்லினைத் தாக்கியது போலக் கடுமையாக ஒரு போதும் தாக்கியதே கிடையாதாம். சோவியத் விமானப் படையும் பல முறை பெர்லினைத் தாக்கியது. சென்ற செப்டெம்பர் மாதத்திற்கு முன் ஒரு வருஷத்திற்குள் ரஷ்ய விமானப் படை 12 முறை பெர்லினைத் தாக்கியதாக மாஸ்கோ ரேடியோ அறிவித்தது.

இவை எல்லாம் நேச நாடுகளின் விமான பலம் அதிகப் படுகிறது என்பதைத் தான் குறிக்கின்றன. தான் அமெரிக்கப் பொது ஜன சபைக்கு விடுத் திருக்கும் செய்தியில், ரூஸ்வெல்ட் இது பற்றி வற்புறுத்திக் கூறியிருக்கிறார். எல்லாப் போர் முனைகளிலும் விமான பலம் தமக்கு அதிகமா யிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் ஐரோப்பாவின் எந்தப் பகுதியில் எப்போது தாக்கும் என்று தான் சொல்லுவதற்கு முடியா தென்றும், ஆனால் தாக்குவது மட்டும் உண்மை யென்றும் அதுவும் கடுமையாகத் தாக்க நேருமென்றும் அவர் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது :—

> நாம் தரைப் போரில் எங்கே எப்போது தாக்கப் போகிறோமென்று நான் சொல்ல முடியாது. ஆனால் நாமும் பிரிட்டிஷாரும் ரஷ்யர்களும் கொஞ்சங் கூட இரக்கமில்லாமல் நாள் தோறும் விமானத்தி லிருந்து தாக்குவோம். அவர்களுடைய யுத்தத் தொழிற்சாலைகள் மீதும், போக்கு வரவு சாதனங்கள் மீதும் துறை முகங்கள் மீதும் டன் கணக்காக வெடி குண்டுகளை எறிந்து குவிப்போம். வார்ஸா, ராட்டர்டாம், லண்டன், கவென்ட்ரி முதலிய நகரங்களைத் தாக்கும் போது, ஜெர்மானியர்களுக் கிருந்த விமான பலம் இப்போதில்லை. இனியும் அவர்களுக்கு ஏற்படப் போவதுமில்லை. நாம் பெருமை கொள்ளத் தக்கபடி 1942-ம் வருஷ விமான உற்பத்தியும் டாங்கி உற்பத்தியும் நடந்திருக்கின்றன. வடாப்பிரிக்காவிலே நாம் ஒரு விமானத்தை இழந்தால் எதிரியின் இரண்டு விமானங்களைச் சேதப் படுத்துகிறோம். அது போலவே தென் மேற்குப் பசிபிக் யுத்தத்தில் நாம் ஒரு விமானத்தை இழந்தால் எதிரியின் 4 விமானங்களைச் சேதப் படுத்துகிறோம்.

பிரிட்டிஷ் விமானப் படைகள் ஜெர்மனியைத் தாக்கும் போது எறிந்தது போல அவ்வளவு கடுமையாக பசிபிக் சமுத்திரத்தில் நடை பெறும் போரில் அமெரிக்க விமானப் படைகள் எறிய வில்லை. அமெரிக்க விமானப் படை ஜப்பானியர்களை மிகக் கடுமையாகத் தாக்கியது சென்ற டிசம்பர் மாதம் 24-ம் தேதி வேக் தீவுகளைத் தான். அப்போது 36 டன் வெடி குண்டுகளைத் தான் எறிந்தன. ஆனால் பிரிட்டிஷ் விமானப் படை முதன் முறையாக சில்ட் என்னும் இடத்தைத் தாக்கியபோது 45 டன் வெடி குண்டுகளை உபயோகித்ததாகத் தெரிகிறது. அது முதல் பிரிட்டிஷ் விமானப் படை எறியும் விமான குண்டுகளின் கனமும் எண்ணிக்கையும் அதிகப் பட்டுக் கொண்டே வருகிறது. ஒரு விஷயம் நாம் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். பசிபிக் தீவுகளில் விமான நிலையங்கள் அடுத்தடுத்து இல்லை. ஆகவே போராடப் புறப்படும் விமானங்கள் நெடுந் தூரம் போய்ப் போராடி திரும்ப வேண்டி யிருக்கிறது. ஆகவே, அங்கங்கே குடால்கனல், புனு முதலிய இடங்களில் புதிய விமான நிலையங்களை அமைக்க வேண்டி யிருக்கிறது. இதற்கு அங்கங்கே கடற் போரும் நடத்த வேண்டி யிருக்கிறது. இவற்றிற்கு விமான பலம் அவசியம். பவளக் கடலிலும் மிட்வே தீவுகளிலும் வெற்றி நமக்குக் கிடைத்ததற்கு நம் விமான பலம் தான் காரணம். இப்போது அமெரிக்கர்கள் ஜப்பானைத் தாக்க ஒவ்வொரு இடமாகக் கைப்பற்றிக் கொண்டு வருகிறார்கள். இது தான் ரூஸ்வெல்ட் கொடுத்த வாக்குறுதி. 1943-ம் வருஷத்தில் எப்போது டோக்கியோவை விமானப் படை தாக்குமென்று யாரும் சொல்ல முடியாது. இப்போது பெருகிக் கொண்டு போகும் அமெரிக்க விமான பலத்தைப் பார்த்தால், அது மகா கடுமையாகத் தான் டோக்கியோவைத் தாக்குமென்று தெரிகிறது.

### அமெரிக்காவில் எஃகு உற்பத்தி

ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று அச்சு நாடுகளும் சேர்ந்து உற்பத்தி செய்யும் எஃகு 5 கோடி முதல் 5½ கோடி டன் தான். ஆனால் அமெரிக்காவில் இப்போது 8 கோடியே 90 லட்சம் டன் உற்பத்தியாகிறது. எஃகு பெருக்கத் திட்டம் இன்னும் சில மாதங்களில் முடிவடையும். அப்போது 9 கோடியே 70 லட்சம் டன் உற்பத்தியாகும்.

—டோனல்ட் நெல்சன்.

உணவுப் பொருள்களை

அதிகமாகப்

பயிரிடுங்கள்.



# அமெரிக்கத் திட்டமும் உற்பத்தியும்

## வியாபாரக் கப்பல்கள் கட்டவேண்டியதன் அவசியம்

அமெரிக்க உற்பத்தியைப் பற்றிய சில புள்ளி விவரங்களைக் கீழே தருகின்றோம். ஒரு வருஷத்திற்கு முன்பு, ரூஸ்வெல்ட் ஒரு திட்ட மிட்டார். அதன் படி அந்த வருஷத்தில் அமெரிக்காவில் யுத்த உற்பத்தி எந்த அளவிற்கு நடைபெற வேண்டுமென்று குறிப்பிட்டார். அந்தப் புள்ளிகள் எதிரிகளைப் பயமுறுத்துவதற்காகத் தான் வகுக்கப்பட்டனவே யொழிய, உண்மையில் செய்து முடிக்கும் நோக்கத்தோடு வகுக்கப் பட்ட தல்ல வென்று அநேகர் நினைத்தார்கள். 1942-ம் வருஷம் ஜனவரி மாதம் 7-ம் தேதி அவர் வகுத்து வெளியிட்ட திட்டத்தில், அந்த வருஷம் கீழ்க்கண்ட வாறு உற்பத்திகள் ஆக வேண்டு மென்று குறிப்பிட்டிருந்தார் :—

| | | |
|---|---|---|
| விமானங்கள் | .. .. | 60,000 |
| டாங்கிகள் | .. .. | 45,000 |
| வியாபாரக் கப்பல்கள் | .. | 80 லட்சம் டன்கள். |

இது சாதாரணமாக சாதிக்க முடியாத தோர் திட்டமாகத் தோன்றலாம். ஏனென்றால், இத்திட்டத்தை நிறைவேற்ற ஆரம்பிக்கு முன்பு, அமெரிக்காவின் பொருளாதாரத் துறைகள் எல்லாவற்றையும் யுத்தத் துறைகளாக மாற்ற வேண்டி யிருக்கும். அமெரிகத் தொழிற் சாலைகளுக்கு அது மகா கஷ்டமான வேலை தான். தேர்ந்த தொழிலாளர்களைத் திரட்ட வேண்டும். முதலாளிகளுக்குள் உள்ள, போட்டிகளைச் சரிக் கட்ட வேண்டும். யார் யார் முதலில் வேலை செய்வது என்று நிர்ணயிக்க வேண்டும். பொது மக்களின் உபயோகத்திற் கென்று இருந்த மூலப் பொருட்களை இராணுவ உபயோகத்திற் கென்று மாற்ற வேண்டும். யுத்தத்திற்கான தேவைகள் தொழிற் சாலைகளிலிருந்து உற்பத்தியாகி வெளிவரு முன்பு செய்யப்பட வேண்டியவை தான் இவை எல்லாம். 12 மாதங்களுக்கு முன்பு சமாதான காலத் தேவைகளுக்கு சாமான்கள் உற்பத்தி செய்து கொண்டிருந்த தொழிற் சாலைகள், இதற்குள் முழு மூச்சாக யுத்த முயற்சியில் மகா வேகமாகவும் திறமையோடும் இறங்கி வேலை செய்கின்றன.

1941-42-ம் வருஷத்தில் உற்பத்தியானவை பற்றிய கீழ்க் கண்ட புள்ளி விவரங்கள், நமக்கும் பெரும் ஆச்சரியத்தை விளைக்கின்றன :—

| | 1941. | 1942. |
|---|---|---|
| விமானங்கள் .. | 19,000 | 49,000 |
| டாங்கிகள் .. .. | 16,000 | 32,000 |
| வியாபாரக் கப்பல்கள். | 1,10,000 | 8,200,000 டன்கள். |

இந்த மூன்று வகை உற்பத்திகளில் ரூஸ்வெல்ட் திட்டம் நிறை வேறியது வியாபாரக் கப்பல் உற்பத்தி ஒன்றில் மட்டுந் தான். பேர்ல் துறை முகத்தை எதிரிகள் தாக்கிய பிறகு தான் வியாபாரக் கப்பல்களின் அவசியத்தை நாம் தெளிவாக உணர்ந்தோம். உலக முழுதுமே யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. நேச நாடுகளின் போக்கு வரவுப் பாதைகளோ வெகு நீளம். பிரிட்டனுக்கும் மத்திய கிழக்குப் போர் முனைக்கும் மட்டுமன்றி தென் மேற்குப் பசிபிக் போர் முனைக்கும் படைகளையும், யுத்தத் தளவாடங்களையும் அனுப்ப வேண்டி யிருக்கிறது. ஆகவே, யுத்த உற்பத்திகளில் வியாபாரக் கப்பல்களுக்கே முதல் இடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஏனென்றால் கப்பல்கள் இல்லாமல் மற்ற யுத்தத் தளவாடங்களை அனுப்ப முடியாது. ஆகவே, கப்பல்கள் கட்டுவதில் மிகுந்த கவனம் செலுத்தப் பட்டது. இதனால் தான் விமானங்களும் டாங்கிகளும் ரூஸ்வெல்ட் திட்டப்படி உற்பத்தி செய்யக் கூட வில்லை. என்றாலும் அமெரிக்க விமான பலமும் நேச நாடுகளின் விமான பலமும் பெருகிக் கொண்டே போகின்றன. இப்போது பெர்லின் நகரத்தை வெடி குண்டுகளைக் கொண்டு தாக்கியது எதைக் குறிக்கிறது? ரூஸ்வெல்ட் சொன்னது போல் அச்சு நாடுகளின் தலை நகரங்களை நாம் தாக்குவதற்கு இது தான் முதற் படியாகும்.

## அழையாது வந்த விருந்தாளிக்குத் தகுந்த மரியாதை



அஸ்ஸாமைச் சமீபத்தில் தாக்கிய ஜப்பான் விமானத்தை நம் படைகள் சுட்டு வீழ்த்தி விட்டன. அதைக் கண்டு போகும் ஜனங்களின் திருப்தி.

# ரஷ்யத் திட்டப்படி ஜெர்மானியர் பின் வாங்குகின்றனர்

"நியூஸ் க்ரானிகில்" பத்திரிகையின் நிருபர் பால் வின்டர்டன் ரஷ்யாவிலுள்ள ஜெர்மன் படைகளைக் குறித்து சுருக்கமாகத் தன் பத்திரிகைக்கு எழுதி யிருக்கிறார். அதாவது :—

"சிற்சில இடங்களில் ஜெர்மானியர்கள் மிகக் கடுமையாக எதிர்த்துப் பார்த்தார்கள். என்றாலும் அவர்களுக்கு ஆள் பலம் இல்லை. **அவர்கள் பின் வாங்கியது அவர்கள் திட்டப்படி யல்ல. ஆனால், அவர்கள் தோல்வி மட்டும் ரஷ்யர்கள் திட்டப்படி தான்.** விமானங்களி லிருந்து நாம் பார்க்கும் போது, ஏராளமான பொருள்களை விட்டு விட்டு ஜெர்மானியர்கள் பின்வாங்கிப் போய் விட்டார்கள் என்று மிகத் தெளிவாகத் தெரிகிறது. அந்தப் பொருள்களெல்லாம் நல்ல நிலைமையிலேயே யிருக்கின்றன. ரஷ்யப் படைகள் சூலம் போல மூன்று திசைகளிலும் முன்னேறித் தாக்கிக் கொண்டிருக்கின்றனர்."

"வட காகஸஸில் ஆர்மவீர் என்பது ஒரு ரயில்வே ஜங்ஷன். இது ராஸ்டோவ-டிரான்ஸ்-காககேஷியன் ரயில்வேயில் மிகவும் முக்கியமான இடத்தில அமைந்திருக்கிறது. தென் வடலில் ரோஸ்டோவிலிருந்து க்ராஸ்னிக்கு போய்வந்து கொண்டிருக்கும் ரயில்வேயும், கிழ மேலில் ஸ்டாலின்கிராடிலிருந்து நொவோவஸிஸ்க்குக்கும் ஓடிக் கொண்டிருக்கும் ரயில்வேயும் சோவியத் போர் முனைக்கு மிகவும் பொருத்தமாயிருக்கின்றன. இந்த முக்கியமான ரயில்வே ஜங்ஷனையும் ரஷ்யர்கள் தாக்குவதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு ரயில்வேக்களும் சந்திக்கு மிடத்தில் டிகோரெட்ஸ்க் என்னும் ஊர் இருக்கிறது. இதற்கு வடக்கே 100 மைல் தூரத்தில ராஸ்டோவ் நகர மிருக்கிறது. இதற்குக் கிழக்கே 75 மைல் தூரத்தில் சால்ஸ்க் என்னும் ஊர் இருக்கிறது. இந்த இரண்டு ஊர்களையும் ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டால், ராஸ்டோவை நம்பிக் கொண்டிருக்கும் ஜெர்மன் படைகள பாடு திண்டாட்ட மாகி விடும்."

"டான் பகுதியில் டோனெட்ஸ் என்னும் இடத்தில் பரந்த போர் முனை ஏற்பட்டிருக்கிறது. இதையடுத்து ரஷ்யப் படைகள் வந்து கொண்டிருக்கின்றன. டான் ஆற்றுக்குச் சில மைல்களுக்கு அப்பால் ரஷ்யர்கள் வந்து விட்டார்கள். மத்திய டான் பகுதியில் கடுமையான போராட்டம் நடைபெறுகிறது. ராஸ்டோவ் நகரத்தை வளைத்து கொண்டு வரும் ரஷ்யப் படைகள் முன்னேறிக் கொண்டு வருகின்றன."

"மத்தியப் பகுதியில் வெலிகி லூகியில் ஜெர்மானியர்கள் கடுமையாக எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது எதிர் பார்த்தது தான். ஏனென்றால் திடீரென்று முன்னேறித் தாக்கும் படைகளை ஜெர்மன் படைத் தலைவர் இங்கே தான் வெகுவாகத் திரட்டி வைத்திருந்தார். விலிகி லூகியை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்களென்று இப்போது தான் ஜெர்மானியர்கள் ஒப்புக் கொண்டனர். இதற்கு முந்தி இச் செய்தியை அவர்கள் மறுத்துக் கொண்டிருந்தார்கள். இதற்குக் காரணம் எவ்வளவு சேதம் தமக் கேற்பட்டாலும், அதைப் பொருட்படுத்தாமல், புகுந்து மீண்டும் இழந்த பகுதியைக் கைப்பற்றி விடக் கூடு மென்று எதிர் பார்த்தார்கள். அவர்களுடைய திட்டம் ஈடேற வொட்டாமல் சோவியத் அரசாங்கத்தார் தடுத்து விட்டார்கள். ஜெர்மன் படைகளை அடிமேல் அடி அடித்துத் தாக்கி வெகுவாகப் பலவீனப் படுத்தி விட்டார்கள். தாம் 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ந் தேதி யைப் பற்றி விலுகி லூகியை மீண்டும் ஜெர்மானியர்கள் கைப் பற்ற முடியாதபடி செய்து விட்டார்கள்."

# ரஷ்யப் பெண்ணின் வீரம்

## இந்த வருஷமே யுத்தம் முடியவேண்டும்

வெலிகி லூகி ஒரு பழமையான ரஷ்ய நகரம். அதை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். அதை மீட்கும் பொருட்டு ரஷ்யர்கள் 5 நாட்கள் கடுமையாகத் தாக்கினார்கள். புது வருஷ நாளன்று மீட்டு விட்டார்கள். இதைப் பிடித்த 24 மணி நேரத்தில், அங்கிருந்து போகும் ரயில் வண்டிகளெல்லாம் வழக்கம் போல் போய் வந்தன.

அங்கு நடந்த போரில் ஒரு முக்கியமான விஷயம் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். மேலே நெருப்பு கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. கைகால் நடுங்கும் பெண்களும், அச்சத்தினால் முகம் வெளுத்த பிள்ளைகளும் தம் மறை விடங்களி லிருந்து மெதுவாக மார்பால் நகர்ந்து கொண்டே வெளிப்பட்டனர். எந் தெந்த முக்கியமான இடங்களி லெல்லாம் ஜெர்மானியர்கள் காவல் இருக்கின்றார்கள் என்று ரஷ்யப் படைகளுக்கு இவர்கள் காட்டினார்கள். **இவர்களில் ஒரு பெண்ணின் பெயர் 'அமர புருஷேசோ.' இவருக்கு வயது 20 தான். தன் ஊருக்குள் இருக்கும் ஜெர்மானியர்களைத் தாக்கும் பொருட்டு ரஷ்யப் படையினருக்கு முன் சென்று** சிறந்த வழியை இவர் காட்டினார். பின்னர் ரஷ்யர்களுக்குப் பல வெற்றிகள் அடுத்தடுத்துக் கிடைத்துக் கொண்டு வருகின்றன. இங்கே 5 நாட்கள் கடும் போர் நடந்தது. இந்தப் பகுதியில் ஏரிகளும் குளங்களும் அதிகம். இவை மழை காலத்தில் உறைந்து போயிருக்கும். எனவே அப்போது போக்கு வரவு சற்று தடைப்படும். அங்கே நல்ல ரோடுகளும் கிடையாது. சென்ற 6 வாரங்களில் எதிரிகளின் 60 டிவிஷன் படைகளை ரஷ்யர்கள் தாக்கி நாசஞ் செய்து விட்டார்கள். வெயில் காலம் வர இன்னும் 12 வாரங்கள் இருக்கின்றன. அதற்குள் ஜெர்மானியர்கள் எவ்வளவு பெரிய படை கொண்டு வந்தாலும் தவிடு பொடியாகி விடுவார்கள். இந்த வருஷத்திலேயே யுத்தத்தை முடித்து விடவேண்டு மென்று ரஷ்யா விரும்புகிறது. வெயில் காலத்தில் ஹிட்லர் தலை தூக்காதபடி நொறுக்கி விடவேண்டு மென்பது தான் ரஷ்யாவின் நோக்கம்.

### இந்தியர்கள் தாராளம்

#### விமானங்களுக்கு ஐந்தரைக் கோடி

யுத்தம் ஆரம்பமானதி லிருந்து பிரிட்டிஷ் விமானங்களுக்கும் இந்திய விமானப் படைக்காகவும் இதுவரை 5 கோடியே 37½ லட்சம் ரூபாய் இந்தியர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதில் இந்திய மன்னர்கள் கொடுத்த லட்சக் கணக்கான ரூபாய்களும் பாம ஏழையான விவசாயிகள் கொடுத்த அணுக்களும் சேர்ந்து இருக்கின்றன. இத் தொகையைக் கொண்டு தான் அக்கிரமக்கார அச்சு நாட்டவரின் அட்டகாசங்களை அடக்க யுத்த விமானப் படை வாங்கப்பட்டது. ஒரு விமானத்தை வாங்குவதற்கு உதவியவரின் பெயராலேயே தான், அந்த விமானம் பெயரிடப்படுகிறது. இப்படிப் பெயரிடப் பட்ட சென்னை விமானப் படை, இப்போது இந்தியாவில் இருக்கிறது. பிரிட்டனிலும் மேல ஐரோப்பாவிலும் அரும் சேவை செய்த இந்த விமானப் படை இப்போது நன்றி செலுத்தும் நோக்கத்தோடு இந்தியாவைக் காக்கவும், எதிர்ப்பவர்களைத் தாக்கவும் வந்திருக்கிறது.



# பழிக்குப் பழி கொடடா!

தன்னுடைய மனைவியின் பாதத்தை அலங்கரிக்கும் விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டான் பாண்டியன். குறித்த கெடுவிற்குள் தன் மனைவிக்கான சிலம்பைச் செய்து வரத் தவறிய வஞ்சிப் பத்தனை பிரமாத கெடுபிடி செய்தான். அதோடு விட்டானா? ஒரு பாவமும் அறியாத கோவலனை, துன் மந்திரிகளின் போதனைகளைக் கேட்டு, கொலைக்களத்திற்கு அனுப்பி விட்டான். அநியாயமாகக் கோவலனின் தலை வெட்டப்பட்டது.

விஷயமறிந்தாள் பத்தினி கண்ணகி. நீதியை நாடினாள். ஆனால் துர்போதனைகளுக்குக் குறியான பாண்டிய னிடமிருந்து நீதியோ, நியாயமோ கிடைக்க வில்லை. அவ்வளவு தான். அவளது மனம் கொதித் தெழுந்தது. பத்தினி கண்ணகி பத்திர காளி போலானாள். பழிக்கு பழி வாங்க வேண்டு மெனும் எண்ணம் தலை தூக்கி நின்றது. ஆத்திரம் பொங்க, தனது பதிவிரதா சக்தியால், மதுரா நகரத்தையே பற்றி எரிபச் செய்து விட்டாள் அவள். பாண்டியனும். அவனது குடும்பத்தாரும், அவனது துன் மந்திரிகளும் பேராஸ்தைப்பட்டு, செத்து விழுந்தனர். இத்தனையையும் கண்ட பிறகே, கண்ணகியின் மனம் நிம்மதி யடைந்தது. பதிவிரதா சக்தி எப்படிப் பட்டது என்பதும் உலகோருக்கும் தெளிவாயிற்று.

இது பழங் கதை. ஆனால் இப்போது இதே போன்ற தொரு புதுக் கதை நடந்து கொண்டிருக்கிறது இவ்வுலகிலே. தனது நாட்டின் அளவைப் பெருக்கி, அதனைப் பெரிய சாம்ராஜ்ய மாக்கினோம் என்ற பெருமையைப் பெற விரும்பினார் ஹிட்லர்.

இதற்காக வேண்டி, ஒரு பாவமும் அறியாத போலந்து மக்களையும், அப்பால் ஐரோப்பாவில் உள்ள வேறு பல நாடுகளில் உள்ளோரையும் அநியாயமாகக் கொன்று தள்ளச் செய்து; ஆங்காங்கே உள்ள அழகிய நகர்களையும் பாழாக்கி, எல்லோரது வயிற் றெரிச்சலையும் கொட்டிக் கொண்டார்.

இது அநியாயம் என்பதை நேச தேசத்தார் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அவர் கேட்பதாயில்லை. தன்னையே மறந்து பித்தனைப் போல், மேலும் மேலும் அநியாய காரியங்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

போலந்து மக்கள், மற்றும் ஹிட்லரின் ஆக்ரமிப்புக்கு உள்ளான நாட்டு மக்களுக்கு எல்லாம் உள்ளூரக் கொதித்துக் கொண்டே இருக்கிறது. அந்நாடுகளின் க்ஷேமத்திலேயே கருத்துடைய பெரியார்கள் பலர் சீமையி லிருக்கிறார்கள். அவர்களனைவரும், ஜனநாயக ஆட்சியையும், மக்களுக்கான சுதந்திரத்தையும் நிலை நிறுத்துவதற்காகப் பாடுபட்டு வரும் பிரிட்டிஷ், அமெரிக்க உதவியுடன், ஹிட்லரையும் அவரது சகாக்களையும் நோக்கி, 'பழிக்குப் பழி கொடுங்கடா, பழிகாரப் பயல்களா!' என்று சொல்லிக் கொண்டே, அவர்களை அழித் தொழித்து, உலகத்திலே சமாதானத்தைப் பரவச் செய்ய திட்டங்கள் போட்டு வருகிறார்கள்.

சென்ற வாரம், போலந்தின் மாஜி மந்திரியான ஜெனரல் ஸிக்கோர்ஸ்கி, அமெரிக்காவிற்கு போய் விட்டு, சீமைக்குத் திரும்பினார். வந்தவுடனே அவருக்கு ஸ்காட்லாந்தி லிருந்த போலந்து வீரர்கள் ஒரு வரவேற்பு விழா நடத்தினார்கள். அப்பொழுது சொன்னார் ஸிக்கோர்ஸ்கி :—

"நாம் படை யெடுத்துச் செல்லும் காலம் சீக்கிரமே வரப்போகிறது. உங்கள் புஜ வலிமையைக் காட்ட பல சந்தர்ப்பங்கள் சீக்கிரமே கிடைக்கப் போகிறது. உங்களது தாக்குதல், காரணமாக, ஐரோப்பாவின் 'கேட்டு'க்கதவுகள் படாரென அகலத் திறக்கப் போகின்றன. சரித்திரத்திலேயே இம்மாதிரி யாரும் பழிக்குப் பழி வாங்கியது கிடையாது என்ற பெயர் ஏற்படப் போகிறது.'

இம்மாதிரியே தான் எல்லோரும் பூரண உறுதியுடன் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கேட்கும் பொழுது, ஹிட்லர் காதிலே நாராசத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல் தானிருக்கும். முற் பகலில் விதைத்தால், பிற் பகலில் விளைய வேண்டியது விளைந்து தானே தீரும். வினை விதைப்பவன் வினை தானே அறுப்பான்?

ஹிட்லர் செய்த காரியங்களில் ஒன்றாவது நல்ல காரிய மில்லை. ஆகவே, அவருக்குப் பிறர் செய்யக் கூடியது நல்லதாக இருக்குமா? எப்புறம் திரும்பினாலும் எரி நெருப்பாகவே இருக்கப் போகிறது அவருக்கு.

இருக்கப் போகிறது என்ன? சென்ற வாரம் இரண்டு நாட்கள் பெர்லின் நகரிலே ஒரே எரி நெருப்பாகத் தானே இருந்ததாம். பிரிட்டிஷ் விமானிகள் ஆத்திரம் தீர பெர்லின் நகர் மீது குண்டுமாரி பொழிந்து விட்டு வந்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் விமானிகளும் சரி, பிரிட்டிஷ் கப்பற்படையினரும் சரி, அசாத்தியமான காரியங்கள் பலவற்றைத் துணிந்து செய்து வருகிறார்கள்.

ருஷ்யாவின் கையை பலப்படுத்துவதால், நேச தேசத்தாரின் கட்சிக்கு நிறைய அநுகூலமுண்டு என்பதை பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். 'முதலில் ருஷ்யாவிற்குச் சாமான்களை அனுப்பு, அப்புறம் மற்ற காரியங்களைப் பார்' என்று கூட ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சமீபத்தில் ஒரு 'ரூல்' போட்டிருக்கிறாரே! பிரிட்டிஷ் கடற் படையைச் சேர்ந்தவர்களோ, தங்களுக் கேற்படும் கஷ்ட நஷ்டங்களையும் பொருட் படுத்தாது, வடகடல் வழியாக, சாமான்களைக் கொண்டு போய் ருஷியாவில் குவிக்கிறார்கள்.

ருஷ்யரும் சம்மைப் போன்ற சூரர்கள் யாருமே இல்லை என்ற பெயரை எடுக்கப் பிறந்தவர்கள் போல, தங்கள் தாய் நாட்டைக் காக்கப் பிரமாதமாகப் போராடுகிறார்கள். அவர்களது சாகசங்களைக் கேட்டு உலகமே பிரமித்து நிற்கிறது.

'இதோ ஸ்டாலின் கிராடைப் பிடித்துவிடப் போகிறார்கள்!' என்று ஜம்பமடித்தார் ஹிட்லர். ஸ்டாலின்கிராடும் விழுந்து விடும் போல் தானிருந்தது, அருமையாகப் பழக்கிய இரண்டு லக்ஷம் வீரர்களையும், மேற்கொண்டு மேற்கொண்டு எண்ணற்ற டாங்கிகளையும், பீரங்கிகளையும், விமானங்களையும் அந் நகரைப் பிடிப்பதற் கென்று அனுப்பினார். ஆனால் நடந்த தென்ன? ஹிட்லர் முகத்திலே ருஷ்யர்கள் கரியைப் பூசிவிட்டார்கள்.

தலைதப்பினால் தம்பிரான் புண்ணியம் என்று ஹிட்லரின் ஆட்கள் நினைக்கும்படியாக ஆகிவிட்டது. அங்குள்ள 2 லக்ஷம் பேர்களையும் ருஷ்ய வீரர்கள் நாற்புறங்களிலிருந்தும் அமுக்க வருகிறார்கள். இரண்டு லக்ஷம் பேர்களில் ஒண்ணேகால் லக்ஷம் பேர்கள் காயம்பட்டோ, கைதிகளாகவோ, பிணங்களாகவோ இருக்கிறார்கள். பாக்கி உள்ளவர்கள் அநியாயமாகச் சாவானேன் என்று, ருஷ்ய சேனாதிபதி, அவர்களுக்கு ஒரு இறுதி எச்சரிக்கை விடுத்தார். 'சரணாகதி அடையுங்கள்; அபயமளிக்கிறோம்' என்று.

ஆனால் அவர்கள் தலைகளிலே பிரமன் சரியாக முழங் கையாலே பட்டையாக, 'ருஷ்யரிடம் சிக்கி மடிய வேண்டும்' என்று எழுதியிருக்கிறான் போலிருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது அவர்கள் மரியாதையாகப் பணிவார்களா என்ன? அதோடு, உதவி வருகிறது என்று ஹிட்லர் வேறே ரேடியோ மூலம் சொல்லி வைத்து விட்டார். 'கஞ்சி வரதப்பா' என்றதும், 'எங்கே வரதப்பா?' என்று கேட்டானாமே ஒருவன், அதுமாதிரி, 'உதவியா' எங்கே வருகுது? என்று கேட்டுக் கொண்டு, உயிரைப் பிடித்துக் கொண்டு, அரை வயிறுக்குக் கூட இல்லாது, இன்னமும் போராடுகிறார்களாம் அந்த எண்பதினாயிரம் ஜெர்மனியரும்.

ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராடைச் சுற்றிப் போராடுவது மட்டு மில்லாமல், காகஸஸிலும், ருஷ்யாவின் மத்ய பாகத்திலும், லெனின்கிராடு அருகிலும் நொறுக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்,

பதினொரு மாதகாலமாக முற்றுகை யிடப்பட்டுக் கிடந்த லெனின்கிராடு நகரம், சுதந்திர மடைந்து விட்டதாம். அதைச் சுற்றி வேட்டை நாய்கள் போலக் கிடந்த ஜெர்மானியரைத் துளைத்துக் கொண்டு புறப்பட்டு விடடார்களாம் வீர ருஷ்யர்கள்.

தெற்கே காகஸஸ் பிரதேசத்திலும் அவர்களுக்கு அமோகமான வெற்றி தான். 'காகஸஸின் திறவு கோல்' என்று சொல்லப்படும் ராஸ்டாவ் நகரைப் பிடிக்க, மூன்று திசைகளிலிருந்து ருஷ்யர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். 1941-ம் வருஷம் நவம்பர்மீ 23-ந் தேதி இந்த முக்யமான நகரம் ஜெர்மானியர் கையில் விழுந்தது. அடுத்த வாரமே, ருஷ்யர்கள் அங்கிருந்த ஜெர்மானியரை அடித்து விரட்டினர். ஆனால் கோடைகாலம் வந்தது ஜூலை 24-ல் ராஸ்டாவை ஜெர்மானியர் திரும்பவும் பிடித்தனர்.

அதே நகரத்திற்கு இப்பொழுது திரும்பவும் போர் நடக்கப் போகிறது. அங்கிருந்து இம்முறை ஜெர்மானியர் துரத்தப்பட்டு விட்டால், சென்ற கோடை காலத்தில் ஜெர்மானியர் தொடங்கி நடத்தி அடைந்த வெற்றிகள் எல்லாம் பாழானது மாதிரி தான்.

ஹிட்லர் தான் என்ன செய்வார்? அவர் கூறுவதெல்லாம் பொய்யாகி வருகிறது. ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு சொன்னார், 'வரப்போகும் குளிர் காலப் போராட்டத்திற்கு நான் சரியான ஏற்பாடு செய்திருக்கிறேன்' என்று. ஆனால் சென்ற இரண்டு மாதங்களுக்குள் ருஷ்யாகள் கிட்டத் தட்ட நூற்றைம்பது மைல்கள் முன்னேறிய தோடில்லாமல், முக்யமான ஜெர்மன் படைகளை வளைத்துக் கொண்டு, சுளையாக அவர்களிட மிருந்த டாங்கிகளையும், மற்ற வெடிமருந்து, பீரங்கிகள் முதலியவற்றையும் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள். ருஷ்யச் சேற்றிலே மாட்டிக் கொண்டு விட்டதால், ஹிட்லர் மற்ற இடங்களிலும் தோல்வி அடைய நேரிட்டு விட்டது.

வட ஆபிரிகாவிலே ரோமல் திரும்பவும் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்து விட்டார். நின்று போராட சக்தியில்லை அவருக்கு என்பது, இதிலிருந்து தெரியவில்லையா? ட்ரிபோலி என்ற முக்ய நகரை நோக்கித் தான் அவரும் பின் வாங்குகிறார்; பிரிட்டிஷ் எட்டாவது சேனையும் முன்னேறுகிறது.

சுதந்திர பிரஞ்சுப் படைகளோ தென் திசையிலே முன்னால் வந்து கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் முதல் சேனையும், அமெரிக்கப் படைகளும் ட்யூனிஸியாவிலே பயங்கரமாகப் போராடி வருகிறார்கள். இன்னும் முப்பத்தைந்து மைல்கள் போனால் ட்யூனிஸ் துறைமுகம். ஆனாலும், வழியிலே ஒரே சேறு நிறைந்த பிரதேசம். போக்குவரத்திற்கும் வேண்டிய வசதிகள் இல்லை. ஆகவே முன்னேற்றமும் மெதுவாக இருக்கிறது. ஜெர்மானியரும் எண்பதாயிரம் பேர்களைப் புதிதாகக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்களாம். ஆகாயத்திலே கோரமான விமானச் சண்டைகள் நடந்தாயிற்று. முப்பது, நாற்பது என்று நாஸி விமானங்கள் நாசமாகி விட்டன.

ட்யூனிஸியப் போர் வெகு கடுமையானதாகத் தானிருக்கும். இதையே பெரிய போர்க் களமாக்க நாஸிகள் தீர்மானித்திருக்கிறாப் போலிருக்கிறது. அவர்களுக்கு, அருகே ஸிஸிலித் தீவில் பல விமான நிலையங்களிருக்கின்றன. அதோடு நீண்ட தூர பீரங்கிகளையும் ஸிஸிலியில் ஜெர்மானியர் நிறுத்தி வைக்கிறார்கள்.

வட ஆபிரிகச் சண்டை தீர்ந்து விட்டால், பிறகு ஐரோப்பியப் படையெடுப்பிலே நேசதேசத்தார் கவனம் செலுத்தலாம்.

நேசதேசத்தார் எப்படியும் நம்மை விடப் போவதில்லை என்பதை-அறிந்தே ஹிட்லர் தென் ஐரோப்பாவிலே பலஹீனமான பால்கன் பிரதேசங்களைப் பலப்படுத்தத் தொடங்கிவிட்டாராம். அது தவிர, மத்யதரைக் கடலுக்கு பக்கத்திலே உள்ள பிரதேசங்களனைத்திலுமே 'பக்கா' பாரா போட்டிருக்கிறாராம். உள்ளூர மனுஷனுக்கு நடுக்கந் தான். யாரய்யா இவரை வீண் சண்டைக்குப் புறப்படச் சொன்னார்கள்?

இப்பொழுது சிலி என்ற அமெரிக்க நாடும், இராக் என்ற முஸ்லீம் நாடும் அச்சு நாட்டுடன் 'டூ' போட்டாயிற்று. இதனால் என்ன லாபம் என்கிறீர்களா? அச்சு நாட்டாருக்கு இவ்வாறு சிறுகச் சிறுக உலக மெங்குமே எதிரிகள் வளர்ந்து விட்டால், என்றாவது ஒருநாள் அவர்கள் இழந்து போக வேண்டியது தானே?

ஜெர்மானியர் விஷயம் இப்படி யிருக்க, இங்கே நமக்குச் சமீபத்திலேயே பிரமாதமான சண்டைகளை நடத்தி வருகிறார்கள், பிரிட்டிஷ், அமெரிக்க, இந்திய வீரர்கள் பலர். ஒரு கோஷ்டியார், வங்கங்குடாக்கடலில் ஒரு ஜப்பானிய கப்பல் கோஷ்டியைத் தாக்கி, ஓரிரு கப்பல்களை நீர்மட்டத்திற்கடியில் அனுப்பினர். மற்றவர்கள் ரங்கூன் அருகேயும், பர்மாவில் வேறுபல இடங்களிலும் குண்டுகளை வீசியிருக்கிறார்கள். இன்னொரு கோஷ்டியார், ஏகக் கஷ்டத்துடன் அரக்கான் மலைப் பிரதேசங்களில் உள்ள ஜப்பானியர்களை விரட்டி வருகிறார்கள். சென்ற வாரம் ஒரு நாள் ஜப்பானியர் கல்கத்தா மீது குண்டு போட வந்து, படு சேதத்திற்கு ஆளாயினர். நான்கு நிமிஷங்களில் மூன்று விமானங்களை வீழ்த்தி விட்டார் ஒரு பிரிட்டிஷ் இளைஞர். இனிமேல் கல்கத்தா என்றாலே; 'ஸ் ஸ் ஸ்! சுடுண்டோய்!' என்று தான் ஜப்பானியர் கூறிக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமே யில்லை. இந்தியர்கள் பாதுகாப்பற்றவர்கள் என்ற எண்ணத்தை ஜப்பானியர் மறக்க வேண்டிய காலமிது. இந்தியப் பாதுகாப்பு விஷயத்தில் என்னென்ன அதிசய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன தெரியுமா? எங்கு பார்த்தாலும் நேசநாட்டாரின் கை வலுக்கிறது. அச்சு நாட்டாரின் ஸ்ருதி குறைந்த வருகிறது. நியாயம் ஜெயிக்க வேண்டியது தானே நியாயம்!

---

தென்னிந்திய படைத் தலைவர் லெப்டினெண்ட் ஜெனரல் சர் நோயல் பெரிஸ்போர்ட் பியர்ஸ் சென்ற 1943-ம் வருஷ ஜனவரிமீ 15உ சென்னையி லுள்ள பல பத்திரிகாசிரியர்களையும் கஸ்தூரி மாளிகையில் கண்டு கூறியதாவது :—

> "என் ஆதிக்கத்திற் குட்பட்டுள்ள படைகளுக்கும் தென் இந்தியாவிலுள்ள மக்களுக்கும் நெருங்கிய கூட்டுறவு இருக்க வேண்டு மென்பதில் நான் மிகவும் அக்கரை கொண்டிருக்கிறேன். இந்தப் படை தென் இந்தியர்களுக்குத் தான் சொந்தம். அவர்களை எதிரிகள் தாக்க ஒட்டாமல் தடுப்பதற்காகத் தான் இது இருக்கின்றது. படை வீடுகளுக்கு வந்து நேரில் காண, பத்திரிகைக் காரர்களுக்கு நான் எல்லா சந்தர்ப்பங்களையும் கொடுக்கிறேன். இங்கேயுள்ள பத்திரிகைகளோடும் பொது மக்களோடும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டு மென்பது தான் என் ஆசை. இராணுவ மோர்டார்களால் பொது மக்களுக்கு நேரக் கூடிய ஆபத்துக்களைத் தடுக்க நான் ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். இனி சிவில் சப்ளைகள் போக்கு வரவும், சற்று இலகுவாக நடைபெறும்."

---



# நேச நாடுகளோடு ஈராக்கும் சேர்ந்தது

## ஒற்றுமையைக் குலைக்க அச்சு நாடுகள் முயற்சி

ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய அச்சு நாடுகள் மீது ஈராக் போர் தொடுக்கக் கிளம்பி விட்டது. நேச நாடுகளுடன் சேர்ந்து விட்டது. பிரிட்டனுடைய எதிரிகள் மீது, பிரிட்டன் சார்பாக, ஒரு சுயேச்சையான அரபு அரசாங்கம் போர் தொடுக்க ஆரம்பித்திருக்கிறது, உலக சரித்திரத்திலேயே இது தான முதல் முறை. இந்த உலக யுத்தத்தில் ஈராக் சேர்ந்தது பற்றி, பிரிட்டன் அதை வரவேற்கிறது. சென்ற மகா யுத்த காலத்திலும் அதற்குப் பிறகுங் கூட, பிரிட்டனுக்கும், இராக்குக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. இந்த யுத்த காலத்தில் அதாவது 1939-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் ஜெர்மனிக்கும் ஈராக்குக்கும் இருந்து வந்த அரசியல் சம்பந்தம் அற்று விட்டது. அது போலவே 1941-ம் வருஷம் ஜூன் மாதம் இத்தாலியோடும், 1941-ம் வருஷம் நவம்பர் மாதம் ஜப்பானோடும் விஷி அரசாங்கத்தோடும் தாம் கொண்டிருந்த அரசியல் சம்பந்தத்தை ஈராக்கு ரத்து செய்து கொண்டது. ஆகவே, ஈராக்குக்கும் பிரிட்டனுக்கும் உள்ள உறவைக் கெடுக்க, ஜெர்மனி பெரு முயற்சி செய்தது. 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஈராக்கு அரசாங்கத்தின் முதன் மந்திரியா யிருந்த ரஷீத் ஆலியின் உதவியைக் கொண்டு அரசாங்கத்தையே திடீரென்று கவிழ்த்து விட வேண்டு மென்று ஜெர்மானியர்கள் முயன்றார்கள். இம் முயற்சி பலிக்க வில்லை. எனவே, ரஷீத் ஆலி நாட்டை விட்டுத் தப்பி யோடும்படியான நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டது.

பிறகுங் கூட, அச்சு அரசாங்கங்கள் ஈராக்கு மீது கடும் வெறுப்பும் கோபமும் கொண்டிருந்தன. தம் ரேடியோக்கள் மூலமாக, ஈராக்குக்கு விரோதமாகவும் அதன் நன்மைகளுக்குப் பாதகமாகவும் அடிக்கடி பேசிக் கொண்டிருந்தன. அந் நாட்டில் உள்ள சட்டத்தையும் சமாதானத்தையும் குலைத்து அதை ஆபத்திற்குள்ளாக்க வேண்டு மென்பது தான் அவற்றின் நோக்கம். ஆகவே பொய்யான செய்திகளைப் பரவச் செய்து பொது மக்களுக்குள் இருக்கும் ஒற்றுமையைக் கெடுத்து ஒருவருக் கொருவர் விரோதத்தை யுண்டாக்க முயன்றனர். இது மட்டுமல்ல. ஈராக்கு அரச குடும்பத்தை அவமானப் படுத்தும் முறையில், அச்சு நாட்டினர் தம் ரேடியோக்களிலிருந்து பேசினார்கள். இதனால் பொது மக்களுக்கு அரச குடும்பத்தாரிடம் உள்ள மதிப்பு குலைந்து விடும் என்பது அவர்களுடைய கருத்து. அந் நாட்டில் சில போக்கிரிகள் உண்டு. இவர்கள் அரசாங்க சட்டத்தை மதிப்ப தில்லை. ஆகவே அரசாங்க சட்டமும் இவர்களுக்கு ஆதரவளிப்ப தில்லை. இவர்களை ஜெர்மானியர்கள் கைக்குள் போட்டுக் கொண்டார்கள். ஆயுதங்கள் கொடுத்து உதவினார்கள். அமைதியாகவும் செம்மையாகவும் நடந்து கொண்டிருக்கும் அரசாங்கத்தைக் கவிழ்த்து விட முயன்றார்கள். இந்தக் காரணங்களால் தான், அச்சு நாடுகள் மீது ஈராக்கு போர் தொடுக்கும் படியான அவசியம் நேர்ந்தது. இது பற்றி ஈராக்கு அரசாங்கம் ஒரு அறிக்கை விடுத்தது. அதில்,

> **"குறிப்பாக ஈராக்கின் நன்மைக்காகவும் பொதுவாக அரசுகளின் நன்மைக்காகவுந் தான், நாம் நேச நாடுகளுடன் சேர்ந்தோம்"**

என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த அறிக்கையை வரவேற்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் ஈராக்கு முதல் மந்திரிக்கு அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் குறிப்பிடுவதாவது :—

> "ஈராக்கு அரசாங்க சபை தன்னிச்சையாக, யதேச்சை யாக, தனக்குச் சட்டப் படிக்கு உள்ள அதிகாரத்தைக் கொண்டு, அச்சு நாடுகள் மீது போர் தொடுக்கிறது. இந்தப் போராட்டம் மிகவும் கஷ்டமான தாகத் தான் இருக்கும், ஆனாலும் முடிவு மட்டும் நிச்சயந் தான். எங்கள் பக்கத்தில் நீங்களும் சேர்ந்திருப்பது எமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது."

முதல் மகா யுத்த காலத்தில் ஈராக்கு அரசாங்கம் அமைவதற்கு பிரிட்டன் பெரிதும் உதவியது. 26 நாடுகளின் பக்கத்தில் இப்போது ஈராக்கும் சேர்ந்து விட்டது. நேச நாடுகளின் யுத்தப் பிரகடனத்தை ஈராக்கும் ஒப்புக் கொண்டு விட்டது.

---



சாலமன் தீவில் சமீபத்தில் பிடிபட்ட ஜப்பான் படை வீடுகள்

# சீனாவில் விசேஷ உரிமைகளை விட்டுக் கொடுத்தது ஏன்?

## பிரிட்டன், அமெரிக்காவின் நல்லெண்ணத்தின் அறிகுறி

சமீபத்தில் சீனாவோடு பிரிட்டனும் அமெரிக்காவும் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கின்றன. இதன்படி சீனாவின் சில பகுதிகளில், தமக்குள்ள விசேஷ உரிமைகளை விட்டுக் கொடுக்க, பிரிட்டனும் அமெரிக்காவும் இசைந்திருக்கின்றன. சர்வ தேச சம்பந்தங்களில் இது ஒரு முக்கியமான சம்பவம். யுத்தத்தினால் நேர்ந்த சம்பவங்கள் காரணமாகவும், அத்லான்டிக் பிரகடனம் காரணமாகவுந் தான் இந்தப் புரட்சிகரமான நிலைமை ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன. (1) சர்வ தேச சம்பந்தத்தில், ஒரு நாட்டை பிற நாட்டவர்கள் கவர்ந்து கொள்ளும் அக்கிரமச் சின்னங் கூட இருக்கப்படாது என்பது தான் பிரிட்டனுடைய ஆசை; அது தான் அமெரிக்கா விருப்பமுங் கூட. 2. சீனாவை ஒரு ஏகாதிபத்திய நாடாக ஆக்கி, மற்ற எல்லா நாடுகளும் அதை ஒப்புக் கொள்ள வேண்டும். இதிலிருந்து பிரிட்டனும் அமெரிக்காவும், குறிப்பாக பிரிட்டன், தன்னல மில்லாமலும் நல்லெண்ணத்தோடும் தான் இப்படிச் செய்தன என்றேற் படுகிறதல்லவா? தற்கால முறையில் சீனாவும் ஒரு முதல் தரமான ஆதிபத்திய நாடாக அமையவேண்டுமென்னும் நல்ல நோக்கந் தான் இதற்குக் காரணம்.

> புதிய உலக நிலையைக் குறித்தோ, மேல் நாட்டு விஞ்ஞான முறைப்படி தானும் அந்த ஆதிபத்திய நாடுகளில் ஒன்று என்றோ, சீனா சுமார் 100 வருஷங்களுக்கு முன்பு கூட உணராமலிருந்தது,

என்று சர் ஜான் ப்ராட் குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறுவதாவது:—

> "அவர்களுடைய கண்களுக்கு சீனாவே நாகரிக உலகமாகத் தோன்றியது. தம்மைச் சுற்றியுள்ள நாடுகளெல்லாம் தமக்குக் கீழ்ப்பட்டவைகளென்றும், தம்மை வெகுவாக மதிக்கும் காட்டுமிராண்டிகளென்றும், தாமே நடு நாயக நாடென்றும் நினைத்துக் கொண்டிருந்தார்கள்."

1715-ம் வருஷந் தான் சீனாவிற்கும் பிரிட்டனுக்கும் உறவு ஏற்பட்டது. அது முதல், வியாபாரம், கைத் தொழில், முதலிய துறைகளில் பிரிட்டனுக்கு மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டது. ஆகவே, சீனாவின் முன்னேற்றத்தில் பிரிட்டன் மிகுந்த அக்கரை கொண்டிருந்தது. இந்த எண்ணத்தை நிறைவேற்றும் போது, இரண்டு முறை சீன சக்கரவர்த்தியோடு, தகராறுகள் நேர்ந்தன. என்றாலும், சீனாவிற்கு உதவும் கொள்கையை பிரிட்டன் கைவிட்டு விடவில்லை. அப்போது தான் ஒரு பலமான மத்திய அரசாங்கம் அமைய முடியும். இது அமைந்தால் தான் சாம்ராஜ்யத்தின் பல பகுதிகளிலும் சிதறிக் கிடக்கின்ற சீன மக்களை ஒன்று படுத்த முடியும். ஆகவே, இந்தக் கொள்கையை எப்படி பிரிட்டன் நிறைவேற்றிக் கொண்டு வந்தது என்று விவரித்துச் சொல்ல வேண்டிய அவசிய மில்லை. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். 1921-ம் வருஷம் வாஷிங்டனில் ஒரு மகா நாடு நடைபெற்றது. இதை நடத்துவிக்க பிரிட்டனும் அமெரிக்காவும் அரும்பாடு பட்டன. இங்கே ஒரு ஒப்பந்தம் உண்டானது. அதில் 9 நாடுகள் கையொப்பமிட்டன. இதன்படி, பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் சீனாவை உயிர்ப்பித்து முன்னேற்றுவதற்கு எல்லா வசதிகளும் சந்தர்ப்பங்களும் கொடுப்பதாக 9 நாடுகளும் ஒப்புக் கொண்டன. இந்த ஒப்பந்தத்தை வெற்றிகரமாக முடித்த தனிப் பெருமை, பிரிட்டனுக்கே உரியது. ஏனென்றால், சீனா பிரிட்டன் மீது சந்தேகங் கொண்டிருந்தது.

1911-ம் வருஷம் அரச குடும்பத்தை நீக்கி விட்டு குடியாட்சியை பிரிட்டன் தான் ஏற்படுத்தி யிருந்தது. இந்தக் குடியரசின் தலை நகரம் நாங்கிங்கி லிருந்தது. இந்த ஒப்பந்தத்தில் கை யெழுத்திட்ட 9 நாடுகளில் ஜப்பானும் ஒன்று. என்றாலும், இதை மீறி 1931-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 18-ம் தேதி சீனாவிலுள்ள மஞ்சூரியாவை ஜப்பான் தாக்கினது. மஞ்சூரியா மீது ஜப்பான் பலாத்காரமாகப் பிரவேசித்த போது, பிரிட்டன் சீனாவோடு நேசமாகவே யிருந்தது. சீனப் பொருளாதார நிலையைத் திருத்தி யமைப்பதில் அக்கரை கொண்டது. இதற் கென்று லீத் ராயல் கமிஷன் என்னும் பெயருள்ள ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. 1935-ம் வருஷம் கீழ் நாடுகளின் ஆதிக்கத்திற்கு ஒத்த நிலையில் சீனாவின் ஆதிக்கமும் அமையத் தக்கபடி முயன்றது.

இது வரை அமெரிக்கா எக்காரியமும் செய்யவில்லை. இதற்குக் காரணம் சம்பவங்களின் போக்கை அது கவனித்துக் கொண்டிருந்தது தான். ஆனால், பசிபிக் சமுத்திரத்தில், அமெரிக்க ஆதிபத்தியம் உச்ச நிலையி லிருக்கத் தக்கபடி அமைக்க வேண்டுமென்று அமெரிக்கா ஆலோசித்துக் கொண்டிருக்கும் போது, பெர்ல் துறை முகத்தை ஜப்பானியர்கள் தாக்கினார்கள். இப்போது பிரிட்டனை விட அமெரிக்கா தான் மிகுந்த அக்கரை கொண்டிருக்கிறது. சீனா சுதேச்சை யோடும், விடுதலை யோடும் இருக்க வேண்டுமாம். இது அமெரிக்காவின் சுய நன்மைக்காக இருக்கலாம். என்றாலும், இது அவர்களின் நல்லெண்ணத்தையும் குறிக்கிறது.

'வேய்ஹெய்வேய்' என்னும் இடத்தில் மட்டுந் தான் இனி பிரிட்டனுக்கு உரிமையுண்டு. சீனாவிலுள்ள போர்ட் ஆர்தர் என்னும் துறைமுகத்தை, ரஷயர்கள் கைப் பற்றிக்கொண்டதை ஈடு செய்து கொள்ள வேண்டித் தான், இதை பிரிட்டிஷார் பெற்றார்கள். இது வன்றி "கௌலூன்" என்னும் குறுகிய பகுதியும் (ஹாங்காங்குக்கு எதிரி லுள்ளது) பிரிட்டிஷார் வசமே யிருக்கும். இதை பிரிட்டிஷார் குத்தகைக்கு வாங்கி யிருக்கிறார்கள். ஆகவே, இதற்கும் அரசியலுக்கும் சம்பந்தமே கிடையாது. இது பற்றி யாரும் அஞ்சத் தேவை யில்லை.

### இராணுவ உடுப்பில்லாத படை

பர்மாவிற்கும் இந்தியாவிற்கும் இடையேயுள்ள இடம் மலைக் காடு. அநேக ஆறுகள் இடையே ஓடுகின்றன. கடுமையான மலைக் காய்ச்சலின் உறைவிடம். இதன் நீளம் 800 மைல்கள். அங்கே சின்நாடு என்றும் நாக மலை என்றும் இருக்கின்றன. இங்கே ஜனங்கள் மிகக் கொஞ்சம் பேர் தான் இருக்கின்றார்கள். இவர்கள் நல்ல பலசாலிகள். இவர்களைக் கொண்டு ஒரு படையை அமைத்திருக்கின்றார்கள். இந்தப் படையினர் இராணுவ உடுப்பு அணிய வில்லை. உயர்ந்த மலைகளை இலகுவில் கடக்கிறார்கள். புரண்டு ஓடும் காட்டாற்றை ஒரு மூங்கிற் கழியைக் கொண்டு கடக்கிறார்கள். மிகவும் அற்பமான ஆகாரந் தான் சாப்பிடுகிறார்கள். எதிரிகளின் படை வீடுகளுக்குப் போய் இரகசியமான தகவல்களைச் சேகரித்துக் கொண்டு வருகிறார்கள். இவை நம் படைத் தலைவர்களுக்கு மிகவும் உபயோகமானவையாயிருக்கின்றன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ௵ ஜனவரி மீ 29௳, வெள்ளிக்கிழமை [இதழ் 5



**1943-ம் ௵ ஜனவரி மாதம் 23-ம் தேதியன்று யுத்த மந்திரி சர் ஜேம்ஸ் க்ரிக் செய்த ரேடியோ பிரசங்கத்தில் கீழ் கண்டவாறு அறிவித்தார்:—**

"திரிபோலி வீழ்ந்தது என்ற செய்தி இன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. இதன் மூலம் ஆப்பிரிக்காவில் இத்தாலிய சாம்ராஜ்யம் அழிந்து விட்டது என்று தான் அர்த்தம். ரஷ்யர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் கஷ்டமான காலம் இருந்தது. அப்போது அவர்கள் சிறுகச் சிறுகப் பின் வாங்கிக் கொண்டிருக்க வேண்டி யிருந்தது. இப்போது இவ்விருவருக்கும் நல்ல காலம் பிறந்து விட்டது என்று திட்டமாகச் சொல்லலாம். அச்சு நாடுகள், 'வீண் டாம்பீகம் பேசும் மிருகங்கள்.' அவற்றை அடியோடு அழிப்பதில் இந்த இரண்டு நாடுகளும் பங்கு கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

சென்ற சில மாதங்களாக செஞ் சேனைகளின் அருமையான, மகா கடுமையான, வேலைகளைக் கண்டு நாம் பெரிதும் ஆச்சரியப் படுகிறோம். அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம். அதே பாராட்டுதலையும் நன்றி யறிதலையும் நாம் நம் படையினருக்கும் விசேஷமாகச் செலுத்த வேண்டியவர்களா யிருக்கிறோம். ஏன்? ஆப்பிரிக்காவில் இத்தாலிய சாம்ராஜ்யத்தையே அடியோடு அழித்து விட்டார்கள். இதைச் செய்து முடித்தவர்கள், பிரிட்டிஷ் படைகள், இந்தியப் படைகள், ஆஸ்திரேலியப் படைகள், நியூசிலந்துப் படைகள், தென்னாப்பிரிக்கப் படைகள் பிரிட்டிஷ் கிழக் காப்பிரிக்காவிலும் பிரிட்டிஷ் மேற்காப்பிரிக்காவிலும் உள்ளவர்கள் தான். பிற் பகுதியில், அமெரிக்க சப்ளைகளும் விமானப் படைகளின் உதவியும் நமக்குக் கிடைத்தன; என்றாலும், இந்தப் போராட்டம் முழுவதையும் நாம் தான் நடத்தினோம் என்று சொல்ல வேண்டும்."

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| ஜப்பானியர்கள் கல்கத்தாவில் ஏமாந்தார்கள் .. .. .. .. .. | 2 |
| உணவுப் பொருள் உற்பத்தியும் விநியோகமும் .. .. .. .. .. | 3 |
| துருக்கியால் நேச நாடுகளுக்கு நன்மை தான் .. .. .. .. .. | 4 |
| விமானத் தாக்குதலுக்கு அஞ்சக் கூடாது. | 5 |
| அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் .. | 7 |
| சர்ச்சில் வாக்குறுதி நிறைவேறியது ... | 9 |
| அடியா ? உதையா ? .. .. .. | 10 |
| ரஷ்யாவின் மகத்தான வெற்றிகள் .. | 11 |


# ஜப்பானியர்கள் கல்கத்தாவில் ஏமாந்தார்கள்

## விமானத் தாக்குதலின் நோக்க மென்ன ?

ஜப்பான் விமானங்கள் கல்கத்தாவை ஜனவரி மாதம் 15-ம் தேதி இரவு தான் தாக்கின. இந்த வருஷம் இது தான் முதல் தாக்குதல். இதற்கு 11 நாட்களுக்கு முன்னதாகவே தாக்கியதாக யாராவது சொன்னால், அவர்களை என்னவென்று சொல்லுவீர்கள் ? பெர்லின் ரேடியோ அப்படிச் சொன்னால் அது பற்றி நீங்கள் ஆச்சரியப்படலாமோ ? ஜனவரி மாதம் 6-ம் தேதி அது இந்துஸ்தானியில் என்ன சொன்னது தெரியுமா ? :—

"ஜனவரி மாதம் 4-ம் தேதி கல்கத்தாவையும் அங்குள்ள துறைமுகத்தையும் இராணுவக் குறிகளையும் ஏராளமான ஜப்பான் விமானங்கள் வந்து கடுமையாகத் தாக்கின. இதன் பயனாக, மகத்தான சேதம் ஏற்பட்டது. ஹௌரா தொழிற்சாலை அடியோடு அழிந்தது. எண்ணெய்க் கிணறுகளில் பெரும் நெருப்புக்கள் மூண்டன. ஹௌரா ரயில்வே ஸ்டேஷன் மீதும் இராணுவப் படை வீடுகள் மீதும் வெடி குண்டுகள் விழுந்தன. கப்பல்கள் நிற்குமிடங்கள் பல, கடுமையாகச் சேதமாயின. ஒரு கப்பல் மூழ்கியது. டயமண்ட் துறைமுகத்தில் ஒரு பீரங்கிப் படகு எரிந்து சாம்பலாகி விட்டது."

இது பற்றி அந்த ரேடியோ ஜெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் செய்த பிரசங்கத்தில், "இது வரை இவ்வளவு கடுமையாக யாரும் தாக்க வில்லை" என்று கூறி, சேத விவரத்தை அளந்து கொட்டிற்று. அப்போது நடைபெற்ற விமானப் போரில் 14 பிரிட்டிஷ் விமானங்களும், 4 ஜப்பான் விமானங்களும் சேதமானதாகத் தெரிவித்தது. **இது ஆதி முதல் அந்தம் வரை பச்சைப் புளுகு.** கல்கத்தாவில் சென்ற டிசம்பர் மாதம் 27 தேதி முதல் ஜனவரி மாதம் 15 தேதி வரை ஒரு விமானத் தாக்குதலும் கிடையாது என்று எல்லோருக்கும் தெரியும்.

ஜனவரி மாதம் 15 தேதி இரவு நேர்ந்த விமானத் தாக்குதலை எடுத்துக் கொள்ளுவோம். அது மிக அபாயமானது. என்றாலும் கல்கத்தாவின் மிக பலமான பாதுகாப்புக்களை அந்த எதிரி விமானங்கள் எதுவும் செய்ய முடிய வில்லை. குறிகளுக்கு அப்பால் யாருக்கும் எவ்விதத் தீங்கும் நேரமுடியாத இடத்தில் தம் வெடிகுண்டுகளை அவைகள் எறிந்து விட்டுப் போகும் படியான நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. **4 நிமிஷங்களில் 3 ஜப்பானிய விமானங்களை 1 பிரிட்டிஷ் படை விமானம் சுட்டு வீழ்த்தியது இதிலிருந்து கல்கத்தா எந்த அளவிற்குப் பாதுகாக்கப் பட்டு வருகிறது என்று விளங்கும்.**

ஜப்பானியர்கள் விமானங்களில் இங்கு வந்து தாக்குவதன் நோக்கமென்ன ?

**எதிரியின் கையாலாகாத் தனம்.**

இராணுவ நோக்கோடு பார்த்தால், ஒரு வித பலனுமில்லை. பர்மாவில் தம் வசமுள்ள இடங்களை அமெரிக்க விமானப் படையும் பிரிட்டிஷ் விமானப் படையும் தாக்குவதனால், பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்தோடு கல்கத்தாவைத் தாக்குவதாகவும் தோன்றவில்லை. கல்கத்தாவையும் சிட்டகாங்கையும் விமானங்களில் எதிரிகள் வந்து தாக்கியதன் பயனாகப் போக்கு வரவு சாதனங்கள் பாதிக்கப்பட வில்லை. அரகானில் முன்னேறிக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் படைகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இந்தியா விற்குள் உள்ள போக்கு வரவுகளையும் கல்கத்தாவில் நடைபெற்ற விமானத் தாக்குதல், பாதிக்க வில்லை. கல்கத்தா மீது குண்டுகள் வீசவேண்டு மென்று அவர்கள் விரும்புவது இயற்கை தான். சென்ற ஏப்ரல் மாதமே கல்கத்தாவை ஜப்பானியர்கள் தாக்கக் கூடுமென்று எதிர்பார்த்தது தான். இதுவரை கல்கத்தாவை 6 முறைகள் மட்டுந் தான் அதுவும் இரவில் மட்டுந் தான், தாக்கினார்கள். பகலில் தாக்க அவர்களால் முடிய வில்லை.

இதிலிருந்து ஒரு விஷயம் நன்றாகத் தெரிகிறது. அதாவது, நன்றாகப் பாதுகாக்கப் பட்டுள்ள ஒரு ஊரை, தற்போதுள்ள நிலைமையில், கடுமையாகத் தாக்கக் கூடிய பலம் எதிரிக்கு இல்லை என்று "உள்ளங்கை நெல்லிக் கனி" போல் விளங்குகிறது. அதனால் தான், அவ்வப்போது வந்து தாக்கிக் கொண்டு, பொய் பிரசாரத்தினால் பொது மக்களுக்குள் பீதியை உண்டு பண்ணி, தம் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கிறார்கள்

**பெருத்த கலவரத்தை உண்டாக்கி சாதாரண வேலைகள் எல்லாம் ஸ்தம்பித்துப் போகும்படி செய்து, முக்கியமான வேலைக்காரர்கள் யெல்லாம் வெளியூர்களுக்குப் போய் விடும்படி செய்து, போக்கு வரவுகள் நடைபெற ஒட்டாதபடி செய்து விடுவார்களானால், அவர்கள் முயற்சி பலித்ததாகும். ரங்கூனில் அப்படிச் செய்து தான் வெற்றி பெற்றார்கள். கல்கத்தாவிலும் அப்படித் தான் நேரும் என்று எதிர் பார்த்தார்கள் ; ஆனால் ஏமாந்தார்கள். விமானத் தாக்குதல் காலத்தில் பீதி கொண்டு தெருக்களில் ஓடி வராமல் கல்கத்தா வாசிகள் பாதுகாப் பிடங்களில் தங்கிக் கொண்டார்கள்.** சிலர் ஊரை விட்டு ஓடினார்கள். இவர்கள் படிக்கத் தெரியாதவர்கள். தொழில் தேர்ச்சி யில்லாதவர்கள். ஏ.ஆர்.பி. பிரசாரத்தை உணர்ந்து கொள்ளும் சக்தி யில்லாதவர்கள். ஊரை விட்டு அடிக்கடி ஓடுகிற தன்மை இவர்களுக்கு உண்டு. இப்படி ஓடியவர்களும் மிகக் கொஞ்சம் பேர்கள் தான். எதிரிகள் எதிர்பார்த்ததைப் போல, அத்தனைப் பேர்கள் வெளி யேற வில்லை.



# உணவுப் பொருள் உற்பத்தியும் விநியோகமும்

## அமெரிக்கா மேற் கொள்ளும் முறை என்ன ?

**சமீபத்தில் சென்னை கவர்னர் மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப்,** 91-வது ரோடெரி ஜில்லா முதல் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். அப்போது அவர் செய்த பிரசங்கத்தில், உணவுப் பொருள்களைக் குறித்துப் பேசினார். மற்ற எல்லாப் பிரசினைகளையும் விட, இதைக் குறித்துத் தான் எல்லா மக்களும், அரசாங்க அங்கத்தினர்களும் வெகுவாகக் கவலை கொண்டிருக்கிறார்க ளென்று தெரிவித்தார். மேலும் அவர் கூறியதன் சாரமாவது:—

"இந்த நிலைமை படிப்படியாக நீங்கி விடுமென்று நம்புகிறேன். பொது மக்கள் இது பற்றி வெகுவாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பெருத்த இலாபம் சம்பாதிக்கிறவர்களையும், பொருள்களை ஏராளமாகத் திரட்டி வைக்கிறவர்களையும் விதிக்கப்பட்ட விலையை விட, மிக அதிக விலைக்கு விற்கிறவர்களையும் பொது ஜனங்கள் தடுக்க வேண்டும். யுத்த காலத்தில் இந்தக் கெட்ட தொழிலை வெகுவாகக் கையாளுகிறார்கள். இந்த உணவுப் பிரசினையை மற்ற நாடுகள் எப்படிக் கையாண்டிருக்கின்றன வென்று முதலில் நாம் கவனிக்க வேண்டும். பிறகு இந்தியாவிலுள்ள நாம் என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசிக்க வேண்டும்."

அமெரிக்கப் பொது ஜன சபையில் தன் வரவு செலவுத் திட்டத்தை வெளியிட்ட போது **ரூஸ்வெல்ட் என்ன சொன்னார் ?**

"13 கோடி மக்கள், உண்பதையும் உடுத்துவதையும், சூடாக்கிக் கொள்ளுவதையும், பிரயாணம் செய்வதையும் கட்டுப்படுத்துவதென்பது இலகுவானதல்ல. அது அவர்களுக்குக் கசப்பாகத் தான் இருக்கும். பரிபூரண யுத்தத்தை நாம் நடத்த வேண்டுமானால், இன்பத்தையும் சௌகரியத்தையும் நாம் கவனித்துக் கொண்டிருக்க முடியாது."

சமாதான காலத்தில், மற்ற நாட்டவர்களை விட அமெரிக்கர்கள் மேலான உணவு தான் உண்டார்கள். சிறந்த உடைகளைத் தான் உடுத்தினார்கள். சிறந்த வீடுகளில் தான் வசித்தார்கள். ஆனால், யுத்தம், அவர்களுடைய வாழ்க்கை நிலையை வெகுவாக மாற்றி விட்டது. கட்டுப் பாடுகளை அதிகப் படுத்தியும், வரிகளை உயர்த்தியும், உற்பத்தியையும், விநியோகத்தையும் மிகச் சிறந்த முறையில் நேர் செய்தும், இந்தப் பிரசினையை அமெரிக்கா சமாளித்துக் கொண்டு வந்திருக்கிறது.

**நிற்க, உலகத்திலேயே ஏராளமான வரி விதிக்கப் பட்டுள்ள நாடு பிரிட்டன் தான். அதுவும், தன்னிடம் உள்ளதை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கும் முறையைக் கையாளுகிறது. அப்போது தான் வெற்றி பெற இயலும்.**

அமெரிக்காவில் 13 கோடி மக்கள் வசிக்கிறார்கள்.

**இரட்டைப் போக்கு.**

ஆனால் இந்தியாவில் 40 கோடி மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் பல வகைப் பட்டவர்கள். பழமைப் பித்தம் பெரிதும் கொண்டவர்கள். ஆகவே, இந்தப் பிரசினையை இங்கே இலகுவாகத் தீர்ப்பது கஷ்டந் தான். பொருள்களைத் திரட்டி வைத்துக் கொள்ளுகிறவர்களும், ஏராள இலாபம் திரட்டுகிறவர்களும், பரந்த சமுதாய நோக்கம் கொள்ள வேண்டும். அல்லது, தனிப்பட்டவர்களுக்கு உள்ள உரிமைகளைப் பாதிக்கத் தக்க முறையில் கட்டளைகள் பிறப்பித்தால், அக் கட்டளைகளின்படி நடக்க வேண்டும். இன்னும் மேலான முறையில் கட்டுப் பாடுகள் அமைய வேண்டுமென்று, தற்கால அரசாங்கத்தின் போக்கைச் சிலர் குறை கூறுவதை, வாசகர்கள் கவனித்திருக்கலாம். **இந்தக் குறை நீங்க வேண்டுமானால், அரசாங்கம் சர்வாதிகாரம் கொள்ள வேண்டு மென்று தான் அர்த்தம்.** ஆனால், சர்வாதிகாரிகள் ஆட்சி புரியும் நாடுகளில் நிலைமை மேலும் மோசமா யிருக்கின்றது. இதைச் சமாளிக்க வேண்டி, சர்வாதிகாரிகள் கையாண்ட முறைகள் மகா கொடுமையானவை.

**ஜெர்மனியின் உணவுப் பிரசினைக்கு ஒரு முடிவு காண வேண்டி, போலந்தி லிருந்த யூதர்கள் அனைவரையும் கொலை செய்து விடும்படி ஹிட்லர் கட்டளை யிட்டார்.**

கோயரிங் பிரமாதமாக என்ன சொன்னார் தெரியுமா? **"ஐரோப்பாவில் யார் பட்டினி கிடந்தாலும், ஜெர்மானியர்கள் மட்டும் பட்டினி கிடக்க மாட்டார்கள்"** என்று சொன்னார். ஆனால், இந்த உணவுப் பிரசினையைக் குறித்து அமெரிக்கா மிகவும் அன்பான முறையில் சமாளித்துக் கொண்டு வருகிறது. **அங்கே உணவுப் பொருள்களைத் திரட்டி வைக்கிறார்கள். ஏன் ? அதிக விலைக்கு விற்பதற்காக வல்ல ; ஆனால், பஞ்ச காலத்தில் உதவ.**

இந்தியாவில் உணவுப் பொருள் பஞ்சம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்று சற்று ஆராய்வோம்.

**காரணமும் பரிகாரமும்.**

இப்போது இந்தியாவில் 10 லட்சம் பேர்களைக் கொண்ட படைகள் தான் இருக்கின்றன. எல்லா வகைத் தொல்லைகளுக்கும் மூல காரணமா யிருக்கும் எதிரிகள் நம்மைத் தாக்காதபடி இந்தப் படையினர் தான் நம்மைக் காப்பாற்றுகிறார்கள். இந் நாட்டிலே 38 கோடிப் பேர்கள் வசிக்கிறோம். இந்தப் படையினருக்கு உணவளிக்க வேண்டி யிருப்பதனால், 38 கோடி இந்தியர்களின் வாழ்க்கை நிலையும் பாதிக்கப் பட்டு விட்டதாக சில குறும்புக் காரர்கள் கூறுகிறார்கள். இது சுத்தப் பிசகு. மற்றொரு காரணமும் இவர்கள் கூறுகிறார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் உணவுப் பஞ்சம் மிக அதிகமா யிருப்பதாகவும், ஆகவே, உணவுப் பொருள்களை அங்கே ஏற்றுமதி செய்து விடுவதாகவும் சொல்லுகிறார்கள். இந்த ஏற்றுமதியும் வெகுவாக இப்போது குறைந்து விட்டது. இந்தக் காரணமும் சரியானதல்ல. அப்படியானால் உண்மையான காரணங்கள் தான் எவை ?

**1. சில நாடுகளை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டதால், அந் நாடுகளிலிருந்து வந்து கொண்டிருந்த உணவுப் பொருள்கள் இறக்குமதி இப்போது நின்று விட்டது.**

**2. மற்ற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இங்கே இப்போது இறக்குமதி செய்ய முடிவதில்லை. ஏனென்றால் கப்பல்களெல்லாம் யுத்தத் தளவாடங்களை ஏற்றிச் செல்லுவதற்குத் தான பெரிதும் பயன் படுகின்றனவே யன்றி, உணவுப் பொருள்களுக்கு அவற்றில் இடங் கிடைப்ப தில்லை.**

**3. சென்ற வருஷம் நேர்ந்த இராணுவ ஆபத்துக்களை முன்னிட்டுப் பொது ஜனங்கள் கொண்ட காரணமற்ற பெரும் பீதி. இது தான் முக்கியமான காரணம். இதனால் தான் உணவுப் பொருள்களைத் திரட்டி வைக்கவும், ஏராளமான இலாபம் தேடவும், விதிக்கப்பட்ட விலையை விட மிக அதிகத் தொகைக்கு விற்கவும், முற்பட்டார்கள்.**

இந்தியா அரசாங்க வியாபார அங்கத்தினர் **சர் நளின ரஞ்சன சர்க்கார்** சமீபத்தில் கல்கத்தாவில் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது உணவுப் பிரசினையைச் சமாளிக்க இரண்டு வழிகளைக் குறிப்பிட்டார்.

1. உணவுப் பொருள்கள் ஏராளமாகப் பயிராக வேண்டும்.
2. கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களை சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

முதல் வழியில் ஓரளவிற்கு நாம் முன்னேறி யிருக்கிறோம். **இது பற்றி இந்திய அரசாங்க விவசாய அங்**

(8-ம் பக்கம் பார்க்க.)

# துருக்கியால் நேச நாடுகளுக்கு நன்மை தான்

## நாஜிகள் திட்டத்தைத் துருக்கி குலைத்தது

இப்போது துருக்கி பத்திரிகாசிரியர்களின் கோஷ்டி யொன்று இந்தியாவிற்கு வந்திருக்கிறது. இதற்கு நவ்ஷேரா என்னு மிடத்தில் கொடுத்த வரவேற்பிற்குப் பதிலளிக்கையில், அந்தக் கோஷ்டியில் ஒருவரான என் சாதெக்,

> "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் மிகுந்த விசுவாசத்தோடு முஸ்லீம்கள் யுத்த முயற்சியில் இங்கே மிகுந்த பங்கெடுத்துக் கொள்ளுவது கண்டு நான் பெரிதும் மகிழ்கிறேன்; பிரிட்டனுக்கு உற்ற நண்பனாக துருக்கி இருந்து வருகிறது என்பதை இச்சமயம் வலியுறுத்த விரும்புகிறேன்"

என்று கூறினர். பல நாடுகளும் யுத்தத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போதிலும் கூட, யுத்தத்தில் இறங்காமல் தற்காத்துக் கொண்டிருப்பது இந்த ஒரு நாடு தான். மேல் நாடுகளையும் கீழ் நாடுகளையும் இணைக்கக் கூடியதுந் துருக்கி தான்.

'துருக்கியின் தந்தை' என்றும் 'ஆட்டா டர்க்' என்றும் கூறப்படும் கமால் பாட்சாவின் பெரு முயற்சியால் துருக்கி ஒரு ஜனநாயக நாடாக மாறியது. துருக்கி மக்கள் அவரையே தம் தலைவராக 1923-ம் ஞூ அக்டோபர்மீ 29உ தேர்ந் தெடுத்தார்கள். அக்காலத்தில் துருக்கி சக்ரவர்த்திக்கு அரசியல் ஆதிக்கம் மட்டு மன்றி, மத ஆதிக்கமும் இருந்து வந்தது. இந்த மத ஆதிக்கம் அவருக்கில்லாதபடி 1924-ம் வருஷம் இவர் செய்து விட்டார். அப்போது துருக்கியில் ஏற்பட்ட பெரும் புரட்சியில், பல பொருளாதார நன்மைகள் முளைத்தன. **1933-ம் வருஷம் துருக்கி அரசாங்கம் ஒரு 5 வருஷத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தது. 1935-ம் வருஷத்தில் சமதர்மத்தையே தம் திட்டமாக** அரசாங்கம் மேற் கொண்டது. கெமாலுக்குப் பிறகுப் பிறகு வந்த எசிசொந்த இனோனுவும், அவரைப் பின் பற்றியே நடந்து வருகிறார். அதன் பயனாக, சமாதானமும் முன்னேற்றமும் பெருகி வருகிறது.

போராடும் கட்சிகள் எதிலும் சேராமல் சென்ற 3 வருஷங்களாக துருக்கி ஒதுங்கி யிருந்து கொண்டு வருகிறது. இந்தக் கொள்கைக்கு அடிப்படையான காரணங்கள் இரண்டு.

1. 1939-ம் வருஷம் யுத்தம் ஆரம்பமான வுடனேயே சமரச முறையைக் கையாளும் துருக்கி, நன்றாகத் தேறிய 10 லட்சம் பேர்களைக் கொண்ட தன் பெரும் படையைத் திரட்டி, தான் எந்தப் பாகம் சேர்ந்தாலும் அதற்கு வெற்றி கிடைக்கக் கூடிய நிலைமை உண்டாக்கிக் கொண்டது.
2. நாஜிகள் எவ்வளவோ வற்புறுத்தியும் கூட, போரில் ஈடு பட்டுள்ள நாடுகளுக்கு ஒவ்வாத ஒரு அந்நிய நாட்டுக் கொள்கையைத் தான் பின் பற்றுகிறது. அவசியம் நேர்ந்தால் துருக்கியும் போராடும்.

இது பற்றி பிரசிடெண்ட் இனோனு 1942-ம் ஞூ மார்ச்சுமீ 19உயில் கூறியதாவது :—"யுத்தத்தைல் கலவ திருக்க முயற்சிப்போம். இது முடியா விட்டால், நம் நாட்டின் கண்ணியத்தை நிலை நாட்டத் தக்க முறையில், நம் கடமையை நிறை வேற்றுவோம்."

**நேச நாடுகளுக்கு நன்மை.**

இந்தக் கொள்கையைத் தான் துருக்கி பின் பற்றி வருகிறது. இதன் பயனாக ஜனநாயக நாடுகளுக்கும் துருக்கிக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. எனவே, பால்கனுக்கும் மத்தியதரைக் கடலுக்கும் யுத்தம் படருமானால், பரஸ்பர உதவி செய்து கொள்ள வேண்டு மென்று துருக்கி, பிரிட்டனோடும், பிரான்சோடும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு பிரான்சு தோற்று விட்டது. ஆகவே, பிரிட்டனோடு துருக்கி செய்து கொண்ட ஒப்பந்தம் மட்டும் இன்னும் அமுலி லிருக்கிறது. இது பற்றி துருக்கி முதல் மந்திரி சரஜோக்லு,

> "நம் அரசியல் அமைப்பிற்கே நாம் பிரிட்டனுடன் கொண்டுள்ள நட்புத் தான் அடிப் படையான தத்துவம்"

என்று 1942-ம் ஞூ ஆகஸ்ட்டுமீ 5உ அறிவித்தார்.

மத்திய கிழக்கிலுள்ள போர், மேலும் கிழக்கே பரவ ஒட்டாதபடி தடுக்க, துருக்கி ஒரு இயற்கை யரணாக அமைந் திருக்கிறது. சிரியா, ஈராக், ஈரான் ஆகிய நாடுகளைக் கைப்பற்ற நாஜிகளின் சூழ்ச்சிகள் பலிக்காமற் போகவும், தம் போக்கு வரவுப் பாதைகளைப் பலப் படுத்திக் கொள்ள வேண்டிய அவகாசம் கிடைத்ததற்கும் காரணம், துருக்கி போரில் இறங்காம லிருந்தது தான். இதனால் தான், நாஜிகளின் நோக்கம் இங்கே நிறைவேற ஒட்டாதபடி தடுக்க, நேச நாடுகளால் முடிந்தது. யுத்த காலத்தில், யுத்தத்தில் சேர்ந்த நாடுகளுக்கும் சேராத நாடுகளுக்கும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவது இயற்கை. இந்த நெருக்கடி துருக்கிக்கு நேராமல் நேச நாடுகள் தடுத்து விட்டன.

## இருந்தாலும் செத்தாலும், இனம்!

**யுத்தங் காரணமாக, காயப்பட்டோ, காயப்படாமலோ படையினர் கடலில் சிக்கித் தவிப்பதுண்டு. இப்படித் தவிக்கும் ஒவ்வொருவரையும் மீட்டு, சிவில் அதிகாரிகளிடம் ஒப்புவிக்கிறவர்களுக்கு, ரூ. 100 இனம் கொடுக்கப்படு மென்றும், படையினரின் பிணங்கள் அகப்பட்டால், ஒவ்வொரு பிணத்திற்கும் ரூ. 50 வீதம், அவற்றை ஒப்புவிக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படு மென்றும் சபையோடு கூடிய கவர்னர்-ஜெனரல் அனுமதித்திருக்கிறார். இந்தத் தொகைகள் சிவில் அதிகாரிகள் மூலம் கொடுக்கப்படும்.**



# விமானத் தாக்குதலுக்கு அஞ்சக் கூடாது

## மால்டாவையும் சீனாவையும் பின் பற்றுங்கள்

### நமது கடமை என்ன?

**சென்னை ஹைக் கோர்ட் கனம் நீதிபதி எஸ். வாட்ஸ்ஒர்த், ஐ.சி.எஸ். அவர்கள் எழுதியது :—**

சென்ற இரண்டு வாரங்களாகக் கல்கத்தாவில் நடை பெற்ற சம்பவங்களைப் பற்றி என்னென்னமோ பேசுகிறார்கள். சென்னையிலும் கூட விமானத் தாக்குதல் நேரக் கூடுமா என்பதைக் குறித்தும் பலர் பல வித கருத்துக்களைக் கூறுகிறார்கள். **தற்போதுள்ள நிலைமையில் சென்னையில் கடுமையான விமானத் தாக்குதல் நேராது என்று தான் நான் கருதுகிறேன்.** அப்படி நேரவே மாட்டாது என்று முடிவாகவும் சொல்லி விடுவதற் கில்லை. இனி விமானத் தாக்குதல் நேரவுங் கூடும். ஆகவே, நாம் அதற்கான ஆயத்தங்கள் செய்து கொண்டே யிருக்க வேண்டும்.

விமானத் தாக்குதலை மிக மிக முக்கியமானதாகக் கருதுகிறோம். லண்டனைத் தாக்கியது போல, ஏராளமான விமானங்கள் ஏக காலத்தில் வந்து தாக்கினால், பெருத்த சேதம் நேரக் கூடும் என்பதை நான் மறுக்க வில்லை. லண்டனை அவ்வளவு கடுமையாக எதிரி விமானங்கள் ஏராளமாகத் தாக்கிய போதிலும், அந்த நகர வேலைகள் தடைப் படாமல் நடந்து கொண்டு தானிருந்தன. இந்தக் கட்டுரையில் பொதுவாக, எப்படிப் பட்ட விமானத் தாக்குதலைக் குறித்துக் குறிப்பிடுகின்றே னென்றால், திடீரென்று வந்து சில குண்டுகளை எறிந்து விட்டு ஓடிப் போகும் விமானங்களைக் குறித்துத் தான். இப்படிப் பட்ட விமானத் தாக்குதல்கள் தான் கல்கத்தாவில் நிகழ்ந்தவை. இதனால் நம் தூக்கம் வெகுவாகக் கெட்டு விடும் என்பது உண்மை தான். ஆனால் மிகக் கொஞ்சம் பேர்களே இவற்றால் மிகுந்த ஆபத்திற் குள்ளாக நேரும். இவற்றால் எவ்வளவு அசௌகரியத்திற்கும் ஆபத்திற்கும் இடமுண்டாகலாம் என்று நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமானால், இதன் பொருட்டு, நாம் இருந்த இடத்தை விட்டு ஓடி விட வேண்டிய அவசியம் கொஞ்சங் கூடக் கிடையாது.

**முழுப் பாது காப்பு எது?**

**பரிபூரணப் பாதுகாப்பு என்பது ஒரு இடத்திலும் கிடையாது.** புயல் காற்று, பெரு வெள்ளம், பூகம்பம் முதலியவை இயற்கையால் உண்டாகும் ஆபத்துக்கள். தொத்து நோய்களால் உண்டாகும் ஆபத்துக்கள் எப்போதும் உண்டு. நாம் நாகரிகம் மிகுந்த காலத்தில் வாழுகிறோம். இந்த நாகரிகத்தாலும் பல வகை ஆபத்துக்களுக்கு உள்ளாகிறோம். போதாக் குறைக்கு, பெரிய நகரங்களில் மோட்டார் கார்களால் நாள் தோறும் ஆபத்துக்கள் நேர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றிற்குப் பயந்து பொதுவாக ஜனங்கள் நகரங்களை விட்டு நாட்டுப் புரங்களுக்கு ஓடிப் போகிறார்களா? இல்லை. இவை, நகர வாழ்க்கையினால் நேரும் துன்பங்கள் என்று தான் நினைத்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே, இத்துன்பங்களுக்குத் தாம் ஆளாகாதிருக்க வேண்டி, தகுந்த முன்னெச்சரிக்கை யோடு இருந்து கொள்ளுகிறார்கள். தெருக்களில் போகும் போது, மோட்டார் கார்கள் வருகின்றனவா என்று கவனித்து, எச்சரிக்கை யோடு தான் நடக்கிறார்கள். மோட்டார்களுக்குப் பயந்து கொண்டு நாட்டுப் புரங்களுக்குப் போய் வசித்தால் என்னவாகும்? தொத்து வியாதிகள் உண்டாகுங் காலத்தில் அவற்றை தடுக்க நகர சுகாதார அதிகாரிகள் கைக்கொள்ளும் முறைகளை; நாட்டுப் புரங்களில் கைக் கொள்ள இயலுவ தில்லை. ஆகவே தொத்து நோய்களுக்கு உள்ளாகி மடியும்படி நேரலாம். **மோட்டார்களால் நேரக் கூடிய ஆபத்துக்களைப் போன்றது தான், விமானத் தாக்குதல்களால் நேரக் கூடிய ஆபத்துக்களும் என்று நினைக்கக் கூடிய பழக்கம் நமக்கு உண்டாவது மிகவும் நல்லது என்று நினைக்கின்றேன்.** சாதாரணமாக இப்போது ஜப்பானியர்கள் தாக்கும் முறையைப் பார்த்தால், இந்தத் தாக்குதல்களால் ஏற்படக் கூடிய ஆபத்தை விட, மோட்டார் கார்களால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களில் தான் அதிகம் பேர் சேதமானார்கள் என்று தெரிகிறது. ஏக காலத்தில் ஏராளமான விமானங்கள் திரண்டு வந்து மிகக் கனமான வெடி குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்தால், மகத்தான நஷ்டம் உண்டாகத் தான் செய்யும். ஆனால், இப்படிப்பட்ட விமானங்களோ, வெடி குண்டுகளோ ஜப்பானியர்களிட மில்லை யென்று தெரிகிறது. இவற்றால் நேரக் கூடிய ஆபத்துக்களும், மோட்டார் கார்களால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைப் போன்றவை தாம் என்றும், இந்த ஆபத்துக்கள் அஜாக்கிரதையினால் நேருபவை தாம் என்றும், உத்தியோக தோரணையில் வெளிவரும் அறிக்கையி னின்று தெரிகிறது.

பெரும்பாலான வெடி குண்டுகள், குறிப்பாகக் கொஞ்ச வேகமுள்ள வெடிகுண்டுகள் யாரையும் கொல்லுவ தில்லை. பொதுவாக ஜனங்களைத் தாக்கும் வெடிகுண்டுகளையே ஜப்பானியர்கள் கையாளுவதாக, பத்திரிகைகளில் வெளி வரும் செய்திகளிலிருந்து தெரிகிறது. திறந்த வெளிகளில் இருப்பவர்களுக்கு இதனால் மிகுந்த பாதகம் நேரலாம்; ஆனால், கட்டிடங்களை இவை பாதிக்க முடியாது. ஆகவே, கட்டிடங்களுக்குள் இருப்பவர்களுக்கும் இதனால் பாதகமிருக்காது. நாம் எச்சரிக்கையாக விருந்தால், இந்த வெடிகுண்டுகளுக்கு நாம் அஞ்ச வேண்டிய அவசியமே கிடையாது என்று கூடச் சொல்லலாம்.

**சென்னைக்கு உள்ள வசதி.**

சென்னைக்கு ஒரு சிறந்த வசதி இருக்கிறது. அது தான் ஏராளமான திறந்த வெளிகள். திறந்த வெளிகள் மிகுதியாக இல்லாத ஊர்களை விட, சென்னையில் உள்ளவர்கள் மிகுந்த பாதுகாப்போ டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். சென்னையிலும் ஜன நெருக்கமான பகுதிகள் இருக்கத் தான் செய்கின்றன. ஆனால், சென்னை நகரம் மிகப் பரந்தது. இங்கே அநேக நந்த வனங்கள் இருக்கின்றன. வீடுகளைச் சுற்றி பல இடங்களில் திறந்த வெளிகள் இருக்கின்றன. அகன்ற ரோடுகளும் விளையாடும் வெளிகளும் இருக்கின்றன. கண்டபடி வெடி குண்டுகளை ஜப்பானிய விமானங்கள் எறிந்தால், அவை குறிப்பிட்ட இடத்தில் விழு மென்ற நிச்சய மில்லை.

இந்த உண்மை நமக்குத் தெரிந்திருப்பது போலவே ஜப்பானியர்களுக்கும் தெரியும். அன்றியும் பகலில் வெடி குண்டுகளைப் போடுவதால் தமக்கு மிகுந்த நஷ்டம் உண்டு என்றும் அவர்களுக்குத் தெரியும். அப்படியானால் சென்னையில் வெடிகுண்டுகளைப் போட அவர்கள் விரும்புவார்களா? ஜப்பானிய படைத் தலைவரின் எண்ணம் என்ன வென்று எனக்குத் தெரியாது. அவர்கள் அறிவாளிகள் என்றே வைத்துக் கொள்ளுவோம். இது பற்றி சந்தேகமே கிடையாது. அப்படியானால் இந்தியாவிலுள்ள முக்கியமான நகரங்கள் மீது ஏன் வெடிகுண்டுகள் எறிய வேண்டும் என்னும் கேள்வி பிறக்கிறது. அவர்களுடைய நோக்கம் என்ன :—

(1) பொது ஜனங்களுக்குள் பீதியை உண்டாக்குதல்.

(2) போக்கு வரவு சாதனங்களைத் தடைப் படுத்துதல்.

2

(3) பொது ஜன வாழ்வை பாதிக்கச் செய்வது. ரயில்வேக்கள் வேலே செய்ய முடியாதபடி அவர்கள் செய்ய முயற்சிக்கலாம். இப்படிச் செய்வார்களானுல், சப்ளேகள் போக்கு வரவு பெரிதும் தடைப்படும். இதை யடுத்து உற்பத்தியும் தடைப்படும். இவற்ருல் உயிர்ச் சேதம் நேராதானுல், இவற்றை அவர்கள் செய்யலாம். **அப்போது நம் கடமை என்ன ? அவர்கள், அவ்வாறு செய்ய வொட்டாதபடி தடுக்க வேண்டும்.**

நாம் இதை எப்படிச் செய்வது ? நம் பாது காப்புக்களே எவ்வளவிற் கெவ்வளவு செம்மையாக அமைத்துக் கொள்ளுகிருேமோ, அவ்வளவிற் கவ்வளவு, விமானத் தாக்குதல்களால், அவர்கள் தான் நஷ்டமடைவார்கள். பாதுகாப்புக்கு நீங்களும் நானும் பொறுப்பாளிக ளல்ல. இந்தப் பொறுப்பை, மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றக் கூடிய ஒருவர் ஏற்றுக் கொண்டிருக்கிருர். அவர் தான் நம் இந்திய படைத் தலேவர் **பீல்ட் மார்ஷல் சர் ஆர்ச்சிபாலட் வேவல்.** இதனுல், நமக்குப் பொறுப்பில்லே யென்று சும்மா யிருந்து விடக் கூடாது. **அப்போதைக் கப்போது நேரும் விமானத் தாக்குதல்களால் உண்டாகக் கூடிய ஆபத்துக்களும் உண்டு என்ருலும், இவை பற்றி பொது ஜனங்கள் அளவிற்கு மீறி பீதி கொள்ளும்படி விடக் கூடாது. பொது மக்கள் எந்த அளவிற்கு இயல்பான முறையில் வாழுகிருர்களோ, அந்த அளவிற்குத் தான் இராணுவ வேலேகளும் நடை பெற முடியும். பீதி கொண்டால் பாதுகாப்பு வேலேகளும் ஸ்தம்பித்து விடும்.** ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு, ரயில்வேக்கள், துறை முகங்கள், தபால் ஆபீசுகள், பேசுந் தந்தியாபீசுகள், விளக்குகள், தண்ணீர் வசதிகள், கடைகள், உண்வுச் சாலேகள், வைத்திய வசதிகள், சுகாதார வசதிகள் முதலியவை, மிகவும் இன்றியமையாதன. ஒரு கட்டு வெடிகுண்டுகள் தமக்குச் சமீபத்தில் விழுந்தாலும் கூட, சாதாரணமாகத் தொழிலாளர்களும் மற்றவர்களும் தம் வேலேகளே விட்டு விட்டு, கிராமங்களுக்குப் போய்விடக் கூடாது. அங்கே போய் ஆட்டு மந்தைகளேப் போல் கூடி விடக் கூடாது. அவர்கள் தாம் இருந்த இடத்திலேயே இருக்க வேண்டும். முக்கியமான இராணுவப் போக்கு வரவுகள் நடை பெற்றுக் கொண்டிருக்கும் போது ஒரு வெடி குண்டு விழுந்து, அதனுல் யாருக்கும் சேதம் உண்டாகாமல், **பீதி மாத்திரம் உண்டானுலும், அதனுல், எதிரிகளின் எண்ணம் ஈடேறியது என்று தான் பொருள்.**

ஆகவே எதிரிகளின் இந்த எண்ணத்தைச் சிதற அடித்து விடலாம். எப்படி ? முதலில், யாரும் அது பற்றி பீதி கொள்ளத் தேவை யில்லே யென்ற உணர்ச்சியைப் பொது மக்களிடையே உண்டாக்க வேண்டும். விமான்த் தாக்குதல் விரும்பத் தகாதது தான். இதனுல் ஆபத்து ஏற்படக் கூடு மென்பதை யாரும் மறுக்க முடியாது. இதனுல் ஏ்ற்படக் கூடிய வெறுப்பை நாம் சகித்துக் கொள்ளலாம் ; ஆபத்தையும், மன உறுதியுள்ள ஆண்களும் பெண்களும் தாங்கிக் கொள்ளலாம்.

**சென்னேயின் நற் பெயரை நிலே நாட்டும் பொறுப்பு நம் கையில் தான் இருக்கிறது என்பதை நினேவில் வைத்துக் கொள்ளுங்கள்.** நம் அழகிய, சரித்திர சம்பந்தமான நகரத்தைக் குறித்து நாம் பெருமை கொள்ள வேண்டும். நம்மை விட இழிவான நிலேயி லுள்ளவர்கள், நாள் தோறும் உட்கொள்ளும் இந்த மருந்தை, உட் கொள்ள முடியாத கோழைகள் சென்னே வாசிகள் (விமானத் தாக்குதலேத் தாங்க முடியாதவர்கள்) என்று, பிறர் இழித்துக் கூறும்படி வைத்துக் கொள்ளவா போகிறீர்கள் ?

**வீர நாடுகள்.**

மால்டா ஒரு சிறு தீவு. அதில் எதிரிகள் நூற்றுக் கணக்கிலல்ல, ஆயிரக் கணக்கில் தாக்கினுர்கள். அதனுல் அத் தீவிலுள்ளவர்களுக்குச் சந்தோஷம் இருக்காது என்பது உண்மை தான். தங்களுக்கு ஆபத்து ஏற்படலா மென்று அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் நாள் தோறும் தாம் செய்ய வேண்டிய கடமைகளேச் சரிவர செய்து கொண்டுதா னிருந்தார்கள். பல நூற்றுண்டுகள் வரை அழியாத புகழை அவர்கள் தங்களுக்குத் தேடிக் கொண்டார்கள். வாலெட்டா நகரத்திலுள்ள பழைய அழகிய கட்டிடங்க ளெல்லாம் நொறுங்கிப் போகலாம். என்ருலும், வேலேகள் வழக்கம் போல் நடை பெறுகின்றன. **இந்த யுத்தத்தில் நமக்கு வெற்றி கிடைத்த பிறகு, மகா வீரத் தனமாக நடந்துக் கொண்டவர்கள் மால்டாக் காரர்கள் தான் என்று உலகம் முழுதும் பாராட்டிப் போற்றும்.**

இனி சூங்கிங் நகரத்தை எடுத்துக் கொள்ளுவோம். அந் நகரத்திற்குச் சரியான பாதுகாப்புக்கள் இல்லே. அந் நகரம் சிதறிப் போகும்படி ஜப்பானியர்கள் வெடி குண்டுகள் எறிந்தார்கள். கடவுள் அருளினுலே இப்போது சீனர்களுக்கு அமெரிக்க உதவி கிடைத்திருக்கிறது. அமெரிக்கப் படைகள் சீனர்களேப் பாதுகாக்கின்றன. ஜப்பானிய வெடிகுண்டுகளுக்கும் பீரங்கிகளுக்கும் இரையாக வேண்டிய அவசியம் இப்போது அவர்களுக்குக் கிடையாது. இந்த உதவி கிடைக்கு முன்பு, ஜப்பானியர்கள் வெடி குண்டுகளேச் சொரிந்து கொண்டிருந்தார்கள். சீனர்களுக்கும் அவர்கள் சொத்துக்களுக்கும் நேர்ந்த சேதத்திற்கு அளவே யில்லே. இத்தனேயும் அவர்கள் சகித்துக் கொண்டு தானிருந்தார்கள். **இவர்களேப் போல் நாமும் சகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.**

**பர்மாவைத் தாக்குவதா தவறு ?**

பர்மாவைத் தாக்குவது தவறு என்று சிலர் சில நாட்களுக்கு முன் சொன்னதைக் கேட்டேன். அவர்கள் முட்டாள்களென்றும் ஆலோசனே யில்லாதவர்கள் களென்றும் தான் சொல்லுவேன். நாம் பர்மாவைத் தாக்குவதனுல் தான் எதிரிகள் கல்கத்தாவைத் தாக்கிப் பழிவாங்குகிருர்கள் என்று அவர்கள் காரணம் சொல்லுகிருர்கள். இது எந்த அளவிற்குப் பொருத்த மான தென்று கவனிப்போம்.

"சில அஜாக்கிரதையான மோட்டார் டிரைவர்கள் ஓட்டும் கார்களினுலும் லாரிகளினுலும் நேரக் கூடிய ஆபத்துக்க்ளில் எத்தனேப் பேர்கள் சேதப்படுவார்களோ, அத்தனேப் பேர்கள் தான் ஒரு விமானத் தாக்குதலால் சேதமாகக் கூடும். இதை முன்னிட்டு, பர்மாவை நாம் தாக்காது போவோமானுல், என்ன நேரும் தெரியுமா ? ஜப்பானியர்கள் கையில் பர்மா ரோடை ஒப்புக் கொடுத்தது மன்றி, அவர்கள் கையில் சீனர்களேக் காட்டிக் கொடுத்தவர்களு மாவோம். இப்போது ஜப்பானியர்கள் கல்கத்தாவைத் தாக்குவதனுல் நேரக் கூடிய ஆபத்து அற்பமானது, ஆனுல், இப்போதே நாம் பர்மாவைத் தாக்கி ஜப்பானியர்கள் மேலும் இந்தியாவிற்கு வராது தடுக்கத் தவறினுல், இந்தியாவின் எதிரிகளே, நாகரிக உலகம் முழுதுக்குமே எதிரிகளா யுள்ளவர்களே, நம் வீட்டு வாசலிலேயே விட்டு வைப்பதாகும். இப்படி விட்டு வைத்திருந்தால், தகுந்த சந்தர்ப்பம் பார்த்து நம்மை அடியோடு நாசஞ் செய்யத் தான் அவர்கள் முயற்சிப்பார்கள்."

**இந்தியா க்ஷேமமாக இருக்க வேண்டு மானுல், ஜப்பானியர்கள் பர்மாவி லிருந்து விரட்டப் பட வேண்டும். சீனர்கள் க்ஷேமமாக இருக்க வேண்டு மானுல், பர்மா ரோடு மீண்டும் நம் வசப்பட வேண்டும். உலகம் க்ஷேமமாக இருக்க வேண்டு மானுல், அக்கிரமஸ்தர்கள் ஆர்ப்பாட்டங்கள் அடக்கப் பட வேண்டும்.**

**ஆபத்திலேயே வாழுங்கள்.**

சில வருஷங்களுக்கு முன் ஒரு யாத்ரீகர் இருந்தார். அவர் இளேஞர்களுக்கு ஒரு சிறந்த புத்திமதி கூறினுர் அது என்ன தெரியுமா : "**ஆபத்திலேயே வாழுங்கள்**" என்று தான் அவர் சொன்னுர். அவர் என்ன நோக்கத்தைக் கொண்டு அவர் அப்படிச் சொன்னுர் ? கஷ்டத்தி லிருந்து தான் நன்மை

(9-ம் பக்கம் பார்க்க)



# அமெரிக்க ஜனத் தலேவர் ரூஸ்வெல்ட்

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் 13 கோடிப் பேர்கள் வசிக்கிருர்கள். இவர்கள் அனேவரும் சேர்ந்து தமக்கு ஒரு தலேவரைத் தேர்ந் தெடுக்கிருர்கள். இப்படித் தேர்ந் தெடுக்கப் பட்டவர் தான் ப்ராங்கிலின் ரூஸ்வெல்ட். ஒரு முறை யல்ல, இரு முறை யல்ல, மூன்று முறைகள் அடுத்தடுத்து அவரையே தம் தலேவராகத் தேர்ந் தெடுத்தார்கள்.

அமெரிக்கா ஒரு குடியேற்ற நாடு. டச்சுக்காரர்கள், ஸ்வீடிஷ்காரர்கள், ஜெர்மானியர்கள். ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர்கள், இத்தாலியர்கள் முதலிய பல ஐரோப்பியர்கள் தம் நாடுகளிலிருந்து முற் காலத்தில் அங்கே போய்க் குடியேறினவர்கள் தான், இப்போது 13 கோடிப் பேர்களாகப் பெருகி விட்டனர். ஆகவே, ரூஸ்வெல்ட் ஐரோப்பிய நாடுக்ளில் எந்த நாட்டைச் சார்ந்தவ ரென்று திட்டமாகச் சொல்ல முடியாது. இந்த நாடுகளி லெல்லாம் இவர் இருந்திருக்கிருர். அந் நாட்டு மொழிக ளெல்லாம் அவருக்குத் தெரியும். அந் நாட்டவர்களோடு உள்ளன்போடு உறவாடிக் கொண்டு வந்திருக்கிருர்.

இவர் பிறந்து 61 வருஷங்கள ஆயின. நியூ யார்க் நகரத்தை யடுத்த தோர் பண்ணேயில் தான் அவர் பிறந்தார். 14 வயது வரை அவருடைய தாய் தந்தையரே அவருக்குப் பாடங்கள் கற்பித்து வந்தார்கள். ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளேப் பயின்ருர். கப்பல் ஓட்டவும், குதிரை ஏறவும், காட்டு வழிகளேக் கண்டு பிடிக்கவும், உழுது பயிரிடவும் கற்றுக் கொண்டார். இவை எல்லாவற்றிலும் கப்பல் ஓட்டுவதில் தான் அவருக்கு ஆசை அதிகம்.

இவர் நன்ருகக் கல்வி பயின்ருர். அமெரிக்காவிலுள்ள மிகப் பெரிய சர்வகலாசாலேகளில் ஹார்வெட் சர்வகலாசாலேயும் ஒன்று. இங்கே அவர் படித்துக் கொண்டிருக்கும் போது,

> **"யதேச்சைக்காகப் போராடுகிறவர்களோடு தான் நான் இருக்கிறேன்,"**

என்று ஒரு முறை சொன்னுர். தன் 21-வது வயதிற்குள் யதேச்சை பெற்ருர். நல் வாழ்வு பெற்ருர். பிறரும் தன்னேப் போல் நல் வாழ்வு வாழ வேண்டுமென்றும் விரும்பினுர்.

தன் உறவினராகிய 'எலியனுர்' என்னும் நங்கையைத் தன் இளமையிலேயே 1905-ம் வருஷம் கலியாணம் செய்து கொண்டார். தன் கணவனுரைப் போலவே ஸ்ரீமதி எலியனுரும் நல்ல வாழ்க்கை நடத்தியவர்கள். ஆகவே, பிறரும் தம் போலவே, நல் வாழ்வு வாழ வேண்டு மென்று அவரும் விரும்பியது ஆச்சரியமல்லவே. இவ்விருவருக்கும் திருமணமாகும்போது, ரூஸ்வெல்டின் தந்தையான தியோடர் ரூஸ்வெல்ட் தான் அமெரிக்காவின் தலேவராகவிருந்தார். இத் திருமணத்தை நடத்துவித்து மணமக்களே வாழ்த்திய காலத்து, தன் பதவியைத் தன் மகன் அடைவா ரென்று எதிர்பார்த்தாரோ என்னவோ நாம் அறியோம். இப்படிப்பட்ட சிறந்த குழந்தையைப் பெற்ற தகப்பன் என்ன தவம் செய்தாரோ என்று கூறி, பொதுவாக ஜனங்கள் பாராட்டுவதுண்டு. இப்படிப்பட்ட சிறந்த பெயரையும் புகழையும் அடையத் தக்க தகுதியை உண்டாக்க வேண்டியது தான் தந்தையின் கடமை. இந்தக் கடமையை தியோடர் ரூஸ்வெல்ட் குறை வற செய்தார். அது போலவே, தன் மன மொழி மெய்யினுல், தன் தந்தைக்குத் தான் செய்ய வேண்டிய கடமைகளேச் செய்து நீங்காப் புகழுக்கு உரியவரானுர் பிராங்கிலின் ரூஸ்வெல்டும்.

இவர் வக்கீலானுர். ஊரில் நடக்கும் அக்கிரமங்களேக் கண்டார். அவற்றை கடிந்தார். நியூ யார்க் நகரின் சட்ட சபைக்கு அபேட்சகராக நிற்கும்படி அவருடைய நண்பர்களும் அவ்வூராரும் அவரைக் கோரினுர்கள். அவர் அதை உடனே ஒப்புக் கொள்ள வில்லே. தன் நிபந்தனேகளே விதித்தார். அவற்றை அவ்வூரார் ஒப்புக் கொள்ளுவதா இருந்தால் மட்டுந் தான், அபேட்சகராக நிற்கக் கூடு மென்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். அவர் கூறிய நிபந்தனேகள் எவை தெரியுமா ?

**1. எனக்குப் பரிபூரண சுயேச்சை யிருக்க வேண்டும்.**

**2. நான் ஒரு மனிதனுக்கும் கட்டுப் பட்டவனல்ல.**

**3. எப்படிப்பட்ட செல்வாக்கும் என் மன நிலேமையைக் கலேக்க முடியாது.**

இவரையே அவ்வூரார் தேர்ந் தெடுத்தார்கள். ஒருமுறை யல்ல ; இரண்டு முறைகள்.

1913-ம் வருஷம் அமெரிக்காவின் தலேவராக இருந்தவர் வில்ஸன். பிராங்கிலின் ரூஸ்வெல்டின் நேர்மையையும் திறமையையும் அவர் உணர்ந்திருந்தார். எனவே, கப்பற் படை உதவி மந்திரி பதவியை அவருக்குக் கொடுத்தார். பொது மக்களுக்குத் தொண்டு செய்வதில் மிகுந்த அக்கரை யுள்ள ரூஸ்வெல்ட் இப் பதவியை ஒப்புக் கொண்டு, வாஷிங்டனுக்குப் போனுர். அவர், ஒரு முறை கப்பற் படையில் பிரயாணம் செய்யும்படி நேர்ந்தது. அப்போது வட கடலில் மிகுந்த ஆபத்தான பகுதியில் பிரயாணஞ் செய்வ தென்று திட்டமிட்டார்.

1921-ம் வருஷம் பண்டி விரிகுடாவின் வட கிழக்குக் கரையில் கப்பற் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். இங்கே கடலில் அநேக பாறைகள் உண்டு. இவற்றைக் கடந்து கப்பல் ஓட்டிக் கொண்டு போவது சாதாரண காலத்திலேயே மிகவும் கஷ்டம். இவர் பிரயாணம் செய்த போது மூடு பனி வந்து கப்பிக் கொண்டது. கப்பலோட்டி சற்று திகைத்தார். அச் சமயம் நமது ரூஸ்வெல்ட் அவ்விடத்திற்கு விரைந்து சென்ருர். கப்பலோட்டும் சக்கரத்தைக் கைப்பிடித்தார். பல மணி நேரங்கள் வெகு திறமை யோடு கப்பலே ஓட்டிக் கொண்டு போனுர். கப்பல் கரை சேர்ந்தது. அச்சமயம் ரூஸ்வெல்ட் தவறி தண்ணீரில் விழுந்தார். தண்ணீர் மிகவும் குளிர்ந்திருந்தது. ஆகவே அவருடைய உடலும் ஒருவாறு குளிரினுல் விரைத்தது.

அச் சமயத்தில், அங்கே, அதாவது அவரது சொந்த ஊரிலே, ஒரு பெரும் நெருப்புப் பற்றிக் கொண்டது. அவருடைய மக்களும் அவ்வூராரும் அதை அணேத்துக் கொண்டிருந்தார்கள். இவர் தன், உடல் விரைப்பதையும் பொருட் படுத்தாமல் விரைந் தோடினுர் அங்கே. தானும் அவர்களோடு சேர்ந்து அந்த நெருப்பை அணேத்து விட்டார். அன்றிரவு முழுதும் அவர் மிகவும் களேப்படைந்திருந்தார். பொழுது விடிந்தது. ரூஸ்வெல்ட் படுக்கையை விட்டு எழுந்திருக்க வில்லே. இரண்டு கால்களேயும் அவரால் அசைக்க முடியவில்லே. அவருக்கு இளம்பிள்ளே வாத நோய் கண்டது.

தான் நோயாக யிருப்பதாக அவர் ஒருவரிடமும் சொன்ன தில்லே. கொஞ்சம் கொஞ்சமாக அவர் சில மணி நேரத்தில் நடக்க ஆரம்பித்தார். இவருடைய நோய் குணமாக 15 வருஷ மாவது பிடிக்கு மென்று வைத்தியர்கள் சொன்னுர்கள். ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டு மென்றும் எச்சரித்தார்கள். ரூஸ்வெல்ட் இதைப் பொருட்படுத்த வில்லே. வேலே செய்தார். 8 வருஷங்களில் இவருடைய நோய் முழுதும் நீங்கியது. உடனே அவரை நியூ யார்க் நகரத்தின் கவர்னராக அந் நகர மக்கள் தேர்ந் தெடுத்தார்கள். இரண்டு வருஷங்கள் அப் பதவியை வகித்தார். மீண்டும் தன் பழைய நண்பர்க ளோடு சேர்ந்து விட்டார். இவருடைய நண்பர்கள், வீடில்லாதவர்கள், வேலேயில்லாதவர்கள், பால் பண்ணேயாட்கள், மில்தொழிலாளி

கள், சிறு கடைக்காரர்கள் வரி செலுத்துவோர்கள் முதலாயினோர் தான். உண்மையிலேயே இவர்கள் தான் பொது மக்கள்.

சென்ற மகா யுத்தம் முடிந்து சுமார் 10 வருஷங்களுக்குப் பிறகு வெகு கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அப்போது அந்தக் கொடுமையை நீக்க வல்லவர் யார் என்று 13 கோடி அமெரிக்கர்களும் தேடினார்கள். அப்போது தான் பிராங்லின் ரூஸ்வெல்ட் அவர்களுக்கு அகப்பட்டார். ஆகவே, 1932-ம் வருஷம் அவரைத் தம் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த அக்கிரமங்களைக் கண்டார். கடிந்தார்.

அமெரிக்க மக்கள் அனைவரும் அவர் புறந் தான். அமெரிக்கப் பிரதி நிதிகளென்று யதேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அவருக்குப் பக்க பலமாக இருந்தார்கள். இந்த பலத்தைக் கொண்டு, விவசாயிகளுக்கு நிலங்கள் கொடுக்க வேண்டுமென்று பொது ஜன சபையைக் கோரினார். வீடில்லாதவர்களுக்கு விடுதியும், பசித்தவர்களுக்கு உணவும் வழங்கப்பட வேண்டுமென்று கோரினார். வேகமாகப் பாயும் ஆறுகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கோரினார். 13 கோடி மக்களுக்கும் அவர் என்ன ஆலோசனை சொன்னார் தெரியுமா ? :—

**"உலகத்தில் நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை ; ஆனால், ஒன்றிற்கு மட்டுந் தான் நாம் அஞ்ச வேண்டும். அது தான் அச்சம். நம் நாடு இப்போது கடுமையானதோர் போராட்டத்தி லிறங்கியிருக்கிறது. இந்தச் சிக்கலான நிலைமையினின்று நாம் மீள வேண்டும். இதற்கு நம் நாட்டு மக்கள் அனைவரையும் பெரும் படையாகத் திரட்ட வேண்டும். இந்தப் படையின் தலைமையை நான் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறேன்."**

தான் பதவி ஏற்ற 70 நாட்களுக்குள் நாட்டின் பொருளாதார நிலைமையைத் திருத்தி யமைக்க ஒரு அழகான திட்டத்தை வகுத்தார். இதைப் பொது ஜன சபைக்கு முன் வெளியிட்டார். அன்று முதல் 30 நாட்களில் அத்திட்டம் சட்டமாகி விட்டது. இதினின்று, அந் நாட்டில் ரூஸ்வெல்டிற்கு அக் காலத்தில் எதிர்ப்பே யில்லை என்று தான் ஏற்படுகிறது. இந்தச் சட்டத்தின் மூலம் பொது ஜனங்களுக்கு உதவ அரசாங்கம் முன் வந்தது. ஆகவே, இவரை அடுத்தடுத்து மூன்று முறை தம் தலைவராக அமெரிக்க மக்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளை ஆள முன் வந்தவர்கள், அந் நாட்டுப் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்ல. ஆனால், பயமுறுத்தியும், பட்டினி போட்டும், துப்பாக்கிகளைக் கொண்டும் தான் பதவிகளைக் கைப்பற்றினார்கள்.

யுத்தம் எப்படிப் பட்டதென்று ரூஸ்வெல்டிற்குத் தெரியும். இவருக்கு 4 ஆண் மக்கள் உண்டு. இவர்கள் நல்ல பருவ மடைந்தவர்கள். மற்ற தந்தைமாருக்குத் தம் மக்களிடம் உள்ள அன்பு ரூஸ்வெல்டிடம் குறைந்திருக்குமா ? தன் மக்களிடமும் மிகுந்த அன்பு கொண்டவர் தான். தன் மக்கள் நால்வரையும போர்க் களத்திற்கு இப்போது அனுப்பி யிருக்கிறார்.

சமாதானம் மிகவும் அருமையானது தான். இனிமையானதுங் கூட. அப்போது தான் நீதியும் சயத்துவமும் நல்வாழ்வும் நிலை பெறும். இதை ரூஸ்வெல்ட் நன்றாக உணர்ந்திருந்தார். ஆகவே, அவர் கூறியதென்ன ? :—

**"எல்லா நாடுகளும் சமாதானமாக வாழட்டும். சமாதான பங்கம் செய்கிறவர்கள் எச்சரிக்கையா யிருக்க வேண்டும்,"**

என்று குறிப்பிட்டார். யுத்தம் வந்தது ; துன்பந் தொடர்ந்தது.

எதேச்சைக்காகப் போராடும் தன் நாட்டு வீரர்களுக்கு அவர் ஒரு வாக்குறுதி கொடுத்தார். அதாவது, 1,85,000 விமானங்களை இரண்டு வருஷங்களுக்குள் கட்டி முடித்து விடுவதாகச் சொன்னார். மேலும், 1,20,000 டாங்கிகளையும், 55,000 விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் 18,000,000 டன் கப்பல்களையும் கட்டி முடிப்பதாகக் கூறினார். தம்மோடு சேர்ந்து நின்று போராடுகிறவர்களுக்கும் தம் நாட்டு உணவுப் பொருள்களை உதவி, அமெரிக்கர்களும் உண்டு வருகிறார்கள்.

பொது மக்களிடையே நிரந்தரமான சமாதானம் நிலவ வேண்டுமானால், நான்கு வகை யதேச்சைகள் அமைய வேண்டுமென்று அவர் குறிப்பிடுகிறார். அவையாவன :—

**1. பேச்சுச் சுதந்திரம்.**
**2. பசி யின்மை.**
**3. கடவுளைத் தொழும் முறையில் சுதந்திரம்.**
**4. அச்சத்திற்கு ஆளாகாத சுதந்திரம்.**

தானும் தன் நாட்டு மக்களும் இந் நான்கு வகைச் சுதந்திரங்களையும் பெற வேண்டுமென்று உறுதி கொண்டார். இவர் சாதாரணமாக ஒரு உறுதி கொள்ளுவதில்லை ; **உறுதி கொண்டால், அதை எப்படியும் நிறை வேற்றியே தீருவார்.** இது அமெரிக்கர்களுக்குத் தெரியும். உலக முழுதும் சமாதானம் நிலவினால் மட்டுந் தான் அமெரிக்காவிலும் சமாதானம் நிலைக்க முடியும்.

உலக முழுதுக்கும் பொது எதிரியா யுள்ளவர்களை அடியோடு அழிக்காமல் ரூஸ்வெல்ட் விட மாட்டார் என்றும் அமெரிக்கர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இந்த யுத்தம் முடிந்து நிரந்தரமான சமாதானம் நிலவும் வரை, அவர் ஓய்ந்திருக்க மாட்டார்.

(3-ம் பக்கம்—தொடர்ச்சி)

கத்தின்ரான சர் ஜோகேந்திர சிங் இரண்டு வாரங்களுக்கு முன்பு புது டில்லியில் செய்த் ஒரு பிரசங்கத்தில் இது பற்றி குறிப்பிட்டார். நெல்லும் தினையும் சாதாரணமாகப் பயிரிடப்படுவதை விட 76 லட்சம் ஏக்கர் அதிகமாகப் பயிரிட வேண்டுமென்று, போன பசலியின் போது திட்ட மிட்டார்கள். அதன் படியே செய்து முடித்தார்கள். **இரண்டாவது வழி, சாகுபடியான உணவுப் பொருள்களை விநியோகிப்பது.** இதற்கு நேர்மையானபடி உணவுப் பொருள்கள் கிடைக்குமா என்று கவனிக்க வேண்டும். பிறகு இயன்ற வரை கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டு விநியோகிக்க வேண்டும். இப்போது ரயில்வேக்களில், மற்ற எல்லாச் சாமான்களையும் விட முதலில் உணவுப் பொருள்களை ஏற்றி யனுப்புவது என்னும் கொள்கையை ரயில்வே அதிகாரிகள் மேற் கொண்டிருப்பது பாராட்டத் தக்கது தான். இதில், பெரிதும் பாராட்ட வேண்டிய மற்றொரு விஷயமுமுண்டு. அது தான் பொது மக்களின் கூட்டுறவு. இந்த இரண்டு வழிகளுக்கும் பொது மக்களின் ஒத்துழைப்பும் கூட்டுறவும் மிகவும் அவசியம். இப்படிப் பட்ட கூட்டுறவும் ஒத்துழைப்பும் இல்லையானால், உலகிலுள்ள எந்த அரசாங்கமும், உணவுப் பொருள்களை அளவிற்கு மீறித் திரட்டுவோர்களையும், ஏராளமான இலாபந் தேடுகிறவர்களையும் வெல்ல முடியாது. இதற்கு எவை தேவை ?

**1. ஒருவரை யொருவர் நம்ப வேண்டும்.**
**2. நேர்மையான முறையில் உணவுப் பொருள்களை வாங்கி விற்க வேண்டும்,**
**3. பிரிட்டனும் அமெரிக்காவும் மேற் கொண்டிருப்பது போல், அவசியமானால், உண்ணும் உணவையே மாற்றிக் கொள்ள நாம் ஆயத்தமா யிருக்க வேண்டும்.**

அரசாங்கத்தார் நடத்தி வரும் திட்டத்திற்கு இவை மிகவும் முக்கியம்.



# சர்ச்சில் வாக்குறுதி நிறைவேறியது

## ரோமல் நினைத்த தென்ன ? இப்போது நடந்ததென்ன ?

**1943**-ம் ஆண்டு ஜனவரி 23-ம் தேதி சனிக்கிழமை காலையில் நம் எட்டாம் படை திரிபோலி நகரத்தைப் பிடித்து விட்டது. அமெரிக்க மந்திரி மிஸ்டர் கார்டெல் ஹல் இது பற்றி என்ன சொல்லுகிறார் தெரியுமா ?

**"திரிபோலி நகரம் பிடிப்பட்டது பிரிட்டிஷாருக்கு ஒரு மகத்தான வெற்றி ; மிகச் சிறந்த வெற்றி ; மகா முக்கியமானது",**

என்று குறிப்பிட்டார். பிரிட்டன் யுத்த மந்திரி சர் ஜேம்ஸ் க்ரிக் தன் ரேடியோ பிரசங்கத்தில் என்ன சொன்னார் தெரியுமா ?

**"இது ஒப்புயர்வில்லாத ஒரு இராணுவ ஏற்பாடு. இதன் பயனாக, ஒரு பெரிய சேனை, மகா வேகமாக பாலை வனத்திற்கு விரட்டி யடிக்கப் பட்டு விட்டது"**

என்று கூறுகிறார்.

நிற்க, இரண்டு வருஷங்களுக்கு முன்பு மிஸ்டர் சர்ச்சில் ஒரு வாக்குறுதி கொடுத்தார் ; அதை இந்த வெற்றி, நிறைவேற்றுகிறது. சென்ற 1940-ம வருஷத்திய கிருஸ்மஸ் பண்டிகை யன்று முஸோலினிக்கு அவர் ஒரு வாக்குறுதி கொடுத்தார். அதாவது :—

**"உம்முடைய ஆப்பிரிக்க சாம்ராஜ்யத்தை சுக்கல் சுக்கலாகத் தகர்த் தெறிந்து விடுவோம்"**

என்று கூறினார்.

திரிபோலி நகரம் பிடிபடுவதற்குச் சரியாக 3 மாதங்களுக்கு முன்பு தான் ரோமல் தன் படைகளைக் கொண்டு சூயஸ் கால்வாயைக் கூடக் கைப்பற்றி விடக் கூடுமென்று எல் அலமீன் நகரத்தி லிருந்து கொண்டு மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தார்.

சென்ற அக்டோபர் மாதம் 23-ம் தேதி ரோமலின் படைகளைக் கொஞ்சங் கூட ஈவிரக்கம் இல்லாமல் ஜெனரல் மாண்ட்காமரியின் படைகள் தாக்க ஆரம்பித்தன. அது முதல் எண்ணித் தொண்ணூறாம் நாள், திரிபோலி பிரிட்டிஷ் வசம் ஆனது. **இது வரை 1,400 மைல்கள் பாலைவனத்தில் 8-ம் படை கடந்து வந்திருக்கிறது** இப்போது ரோமலை துனிசியாவிலும் மான்ட்காமரி விரட்டியடிக்கிறார். இப்போது ரோமல் படையில் இருப்பவர்கள் யார் தெரியுமா ? 'இந்தப் படையைக் கொண்டு எகிப்தைக் கைப்பற்றி விடுவேன்' என்று மார் தட்டிக் கொண்டு வந்தாரே ரோமல் ; அந்தப் படையில் செலவானவர்கள் போக மீதி இருப்பவர்கள் தான் இவர்கள். இந்த சொற்பப் படையையும் இழந்து விடாதபடி துனிசியாவிலுள்ள வான் ஆர்னிம படைகளுடன் போய்ச் சேர்ந்து வி வேண்டுமென்பது தான், ரோமலின் எண்ணமா யிருக்க வேண்டும்.

துனிசியாவை எதிரிகள் தாக்காதபடி, பிரஞ்சுக்காரர்கள் ஒரு அரணை அமைத்திருந்தார்கள். இதன் பெயர் **மாரத் லைன்.** இதற்குள் இருந்து கொண்டு தற்காத்துக் கொள்ள வேண்டுமென்பது தான் ரோமலின் எண்ணமா யிருக்க வேண்டும். இந்த இடத்திற்கு சப்ளைகள் வர வேண்டுமானால், பிஸெர்டா, ட்யூனிஸ் ஆகிய துறைமுகங்களின் வழி பாகத் தான் வர வேண்டும். இந்தத் துறைமுகங்களை நேச நாட்டுப் படைகள் சரியானபடி தீட்டிக் கொண்டு தான் வருகின்றன. அச்சு நாடுகளை ஆப்பிரிக்காவை விட்டு விரட்ட துனிசியாவில் தான் முடிவான போர் நடைபெறும்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

பிறக்கும் என்னும் நம்பிக்கையினால் தான். ஒரு ஆபத்து ஏற்படுங் காலத்து, அதற்கேற்ப, அளவிற்கு மிஞ்சி, அதிக பீதி கொண்டால் மட்டுந் தான், துன்பமும் துயரமும் உண்டாகின்றன வென்பது அவருடைய எண்ணம். டைபாய்ட் சுரம் நம்மைத் தாக்காதபடி எப்படி ஊசி மருந்தைக் குத்திக் கொள்ளுகிறோமோ, அது போலவே தான் ஆபத்துக்களையும் சகிக்கத் தக்கபடி நம் மனதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் வசிப்பது புதிய உலகம். இது வீரம் மிகுந்தது. ஆகவே, நாம் ஆபத்துகளுக் கிடையிலேயே வசிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். நாம் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், அப்படித் தான நாம் வசிக்க வேண்டி யிருக்கிறது. இது பற்றி நமக்கு எவ்வித உரிமையும் கிடையாது. இந்த ஆபத்துக்களுக்கு நாம் உள்ளாகப் போகிறோமா என்பதல்ல நம் பிரசினை ; ஆனால் இந்த ஆபத்துக் காலத்தில் புத்திசாலித் தனமாக நடந்துக் கொள்ளப் போகிறோமா இல்லையா என்பது தான் பிரசினை. அச்ச மில்லாதவர்கள் உண்மையிலேயே மிகக் கொஞ்சம் பேர்கள் தான். அச்சத்தை வெல்லுகிறவர்களுக்கும் அதற்கு அடிமை யாகிறவர்களுக்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு. அச்சத்திற்கு இடங் கொடுத்துத் தம் வாழ்க்கை முழுதுமே பாழ்படுத்திக் கொள்ளுகிறவர்களு முண்டு. இவர்கள் மனந் தான் இவர்களுடைய நிலைமைக்குக் காரணம். இவர்கள் தாம் மட்டும் துன்பத்திற்கு ஆளாவது மட்டு மன்றி, தம்மைச் சேர்ந்துள்ளவர்களையும் துன்பத்திற்கு ஆளாக்குகிறார்கள். அச்சத்தைப் போன்ற தொத்துநோய் வேறெதுவுங் கிடையாது. இந் நோய் காட்டுத் தீப்போல் பரவுகிறது. இதைத் தடுக்க இலகுவில் முடிவதில்லை. **ஆனால், பீதி ஏற்பட ஒட்டாமல் நாம் தடுத்து விடலாம். இதற்கு, பீதியை உண்டாக்கக் கூடிய விஷயங்களைக் குறித்தே பேசா திருக்கலாம். தோல்வி மனப் பான்மையை உண்டாக்கக் கூடிய முறையில் பேசலாகாது. இப்படிப் பேசுகிறவர்களோடு நாம் சகவாசம் செய்யக் கூடாது. ஆபத்து நேரிடக் கூடுமென்று சதா பேசிக் கொண்டிருக்கிறவர்களையும் அனுமதிக்கக் கூடாது. நம் மனதில் அச்சம் தோன்றினால், அதை நமக்குள்ளாகவே அடக்கிக் கொள்ள வேண்டும். என்ன நேர்ந்தாலும் மலர்ந்த முகத்தோடிருக்க வேண்டும். எதிர் பாராதபடி நம்மிடையே வெடிகுண்டுகள் விழுந்தால், நாம் பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கிக் கொள்ளுவோம். ஆபத்து நீங்கிய பிறகு, நாம் நாள் தோறும் செய்யும் வேலையை வழக்கப்படி செய்ய வேண்டும். நமது குறைபாடுகளினால் எதிரியின் லட்சியம் எதுவும் ஈடேறக் கூடாது என்று உறுதி கொள்ள வேண்டும். எதிரி நம்மைப் பயமுறுத்துகிறானே யொழிய நம்மைக் கொல்ல அவன் விரும்ப வில்லை என்பதை நாம் ஞாபகப் படுத்தி கொள்ள வேண்டும்.** நம்மைப் பயமுறுத்த அவனால் முடியாது என்று நாம் அவனுக்குத் தெரிவிக்க வேண்டும். அப்போது தான் அவன் நோக்கம் ஈடேறாது. பிறர் பீதி கொண்டால், நம் தைரியத்தைக் கொண்டு அவர்களுக்கு ஊக்க மூட்ட வேண்டும். கடைசியாக நாம் ஒரு உறுதி கொள்ள வேண்டும். அதாவது, எது நேர்ந்தாலும், நம் வேலையை இந் நகரத்திலேயே செய்து கொண்டிருக்க வேண்டும் என்பது தான்.

# அடியா? உதையா?

கதையே மாறிப் போச்சய்யா இப்பொழுது! முன்பெல்லாம் தினசரிப் பத்திரிகை ஒன்றை யாராவது கையிலே வைத்திருந்தால், அருகி லிருப்பவர், 'என்னுங்க, ஜெர்மனிக்காரனுக்கு ஜெயமா? தோல்வியா?' என்றே கேட்பது வழக்கம். ஆனால், இரண்டொரு தினங்களுக்கு முன்னால் ஒருவரை மற்றொருவர் பார்த்து, 'என்ன ஸார்! அச்சு நாட்டாருக்குக் கிடைத்திருப்பது என்ன? அடியா? உதையா?' என்று கேட்டுக் கொண்டிருந்தார். எங்கு திரும்பினாலும் நேச தேசத்தினர் அவர்களுக்கு அடி அல்லது உதை தான் கொடுத்து வருகிறார்கள். எல்லா இடங்களிலும், அடி தாளாது எடுக்கிறார்கள் ஓட்டம்.

ஆனாலும் அச்சு நாட்டினர் இன்னும் ஒடுங்கிய பாடில்லை. அவர்களது பலம் அசாத்தியமானது என்பதை ருஷ்யர்களும் சரி, ஆஸ்திரேலியர்களும் சரி, நாமும் சரி ஒப்புக் கொள்ளுகிறோம். ஆஸ்திரேலியர்கள் என்ன சொல்லுகிறார்கள்? 'நமது விடாமுயற்சியால் சிருஷ்டித்த பாதுகாப்புக்களின் உதவியால், ஜப்பானியரை, தூரவே நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறோம். நமது முயற்சியைச் சற்றுத் தளர விட்டாலும் போதும், கோவிந்தா தான். ஆஸ்திரேலியாவிற்குள்ள படையெடுப்பு ஆபத்து இன்னும் தீர்ந்த பாடில்லை' என்கிறார்கள் அவர்கள்.

சாலமன் தீவுகளிலே ஜப்பானியரது ஆதிக்கம் சிறுகச் சிறுக ஒடுங்கித் தான் வருகிறது. ஆனால், அவர்களும் சும்மா இல்லை. பெரிய பெரிய யுத்தக் கப்பல்களைக் கட்டுகிறார்களாம். ஜப்பானின் தலை நகரமான டோக்கியோவிலிருந்து ஆறு மைல் தூரத்தில் ஒரு பெரிய கப்பல் கட்டும் இடம் இருக்கிறது. இந்த இரு இடங்களையும் சேர்க்க, ஜலநதிற் கடியில் ஒரு பெரிய பாதாள வழியைக் கட்டி விட்டார்களாம் ஜப்பானியர். அதேபோல, ஜப்பானிய சர்க்காரும், ஆபத்துக் காலத்தில் நேரே கப்பலேற இவ்வழியை உபயோகிக்க எண்ணியிருக்கிறார்களோ என்னவோ?

இது போக, ஜப்பானியர் புதிதாக மிதக்கும் தீவுகளை உண்டாக்கி யிருக்கிறார்களாம். இதற்கு என்னடா செலவு என்றால், மூங்கில் கம்புகளும், களிமண்ணும் தானும். இந்தத் தீவுகளிலே விமானங்கள் வந்து இறங்கலாமாம். தவிர, விமானங்களுக்கு வேண்டிய பெட்ரோல், விமானிகளுக்கு தேவையான ஆகாரம் எல்லாம் இங்கு இருக்குமாம். எல்லாம் மலிவாகவே தான் முடிக்கப் பார்க்கிறார்களய்யா இந்த ஜப்பானியர்கள்! அதிகம் செலவழிக்க அரிசி வேண்டாமா?

அரிசி என்றதும் பர்மா நினைவு வருகிறது. இந்த பர்மாவை இப்பொழுது நேச தேச விமானத்தினர் சரியாகக் கவனித்து வருகிறார்கள். பல இடங்களில் கூடியுள்ள ஜப்பானியப் படைகளை அமெரிக்க வெடிகுண்டெறியும் விமானங்கள் சிதற அடித்து வருகின்றன. அக்யாப் அருகே நேச தேசப் படைகள் மதுவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஜப்பானியர் கல்கத்தாவையும், சிட்டகாங்கையும், பெனி என்ற இடத்தையும் சென்ற வாரம் தாக்கி யிருக்கிறார்கள். ஆனால் முன்பு இருந்தது போல் ஜப்பானிடம் விமானங்கள் நிறைய இல்லை என்றே தோன்றுகிறது.

ஜப்பானியர் என்ன செய்து கொண்டிருக்கிறார்களோ தெரியாது. அமெரிக்கர்கள் ஜப்பானைப் பெருவாரியாகத் தாக்க பெரிய திட்டங்கள் போட்டு வைத்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமே யில்லை. ஐரோப்பாவிலே, ஹிட்லரது இடுப்பு ஒடிய வேண்டியது தான் தாமசம்; ஜப்பானின் முதுகெலும்பு நொறுங்க ஆரம்பிக்கும். இதனால் இப்பொழுது ஜப்பானை ஒன்றும் செய்ய முடியாதென்று அர்த்தமல்ல. தானாகப் பயத்தினால் குறைகிற பலம் குறையட்டுமே என்று தான்! இது ஒரு யுத்த தந்திரம்!

வீர ருஷ்யர்களின் அற்புதமான செயல்களை நினைத்தால், மயிர்க்கூச்செறியும். எங்கே தான இவ்வளவு ஆட்களையும், ஆயுதங்களையும், திட்டங்களையும், தைரியத்தையும் அவர்கள் சேகரித்து வைத்திருந்தார்களோ தெரியவில்லையே! நசுங்கியே போய் விட்டான் ஒருவன் பெரிய யானையின் அடியில் சிக்கி என்று **நாம் எண்ணிக் கொண்டிருக்கையில், மேலே இருந்த** யானை ஒரு பனை உயரம் எழும்பி, தூரப் போய் விழுகிறது; கீழே உள்ளவன் எழுந்து உடம்பில் ஒட்டிய மணலைத் தட்டி விட்டுக் கொண்டு, கிராப் எங்கே கலைந்து போய் விட்டதோ என்று சட்டைப் பையில் உள்ள சீப்பை எடுத்து, கிராப்பைச் சீவிக் கொண்டு அலக்ஷியமாக முன்னே நடந்து போனால், நாம் எவ்விதமாக ஆச்சரியப்படுவமோ, அவ்விதமாகவே இன்று உலகோரும், முக்கியமாக ஜெர்மானியரும் ருஷ்யரின் தாக்குதல்களைக் கண்டு வியப்படைந்து நிற்கிறார்கள்.

ஜெர்மனியரின் சேனா பலத்தைத் தகர்த்து, கிடைக்கிற வரை அவர்களிடமுள்ள யுத்தத் தளவாடங்களையும், வெடி மருந்துகளையும் கைப்பற்றி விட வேண்டுமென்பதே ருஷ்யரின் திட்டம் என்று தோன்றுகிறது. ஜெர்மானியர் வசமுள்ள ருஷ்யப் பிரதேசங்களில் பெரும் பாகத்தைத் திரும்பப் பிடித்து விட வேண்டுமென்ற விஷயத்தை அவர்கள் பிரமாதமாகக் கருதுவதில்லை என்றே தோன்றுகிறது.

அதனால் தான் ஸ்டாலின்கிராட் நகரிலே உள்ள இரண்டு லக்ஷம் ஜெர்மானியரை நாற்புறமும் சூழ்ந்து நசுக்க முயன்று வருகிறார்கள். அவர்களுக்கு உணவு அனுப்புவது எப்படி என்று ஹிட்லர் அனுதினமும் மண்டையை உடைத்துக் கொள்ளுகிறாராம்.

காகஸஸ் பிரதேசம் அதி முக்கியமான பிரதேசமாகும். அங்கிருந்தும் ஜெர்மானியரைக் காலி செய்ய ருஷ்யர்கள் ஏற்பாடு செய்து விட்டார்கள். ஜெர்மானியர் எல்லா இடங்களிலும் திணறும் திணறலைப் பார்த்து விட்டு, அவர்களுடன் கட்டாயத்தின் பேரில் போராட வந்த ருமேனியப் படைகளில் சில, எப்படியாவது தப்பிப் பிழைத்து தம் நாட்டிற்கு ஓடிவிட முயற்சித்தனவாம்.

ருஷ்யர்கள் திடீர் திடீரென்று பல திசைகளில் முன்னேறி வளைத்துக் கொள்ளுவதால், ஜெர்மானியர் பாடு பெரும் அவதியாகி விட்டதாம். அதனால், யுத்த முனையைப் பரந்திருக்க விடுவது சிரமமாக இருக்கிறதாம். ஆகவே, தம் ஆட்களைப் பின்வாங்கச் செய்து க்யூபன் பிரதேசத்திலே ருஷ்யர்களை நின்று எதிர்க்கலாம் என்று நினைத்திருக்கிறாப் போலிருக்கிறது.

காகஸஸிற்கு வாசல் போல் உள்ள ராஸ்டாவ் நகரை நோக்கிப் பல திசைகளி லிருந்தும் ருஷ்யப் படைகள் விரைந்து வருகின்றன. வழியிலே உள்ள ஆர்மவீர் என்ற முக்ய நகரம் அவர்கள் வசமாகி விட்டது. சென்ற இரண்டேகால் மாதங்களுக்குள் ருஷ்யர்கள் அடைந்த வெற்றியும், நாஜிகள் அடைந்த நஷ்டமும் அசாத்தியமாகும்.

ருஷ்யாவிலே லெனின்கிராட் அருகிலும், மத்ய பாகத்திலும் ருஷ்யர்களைத் தடுத்து நிறுத்த ஜெர்மானியரால் முடியவில்லை. கார்கோவ், குர்ஸ்க் ஆகிய நகரங்களிலே குளிர் காலத்திலே தங்கி யிருக்க நினைத்திருந்தார்கள் பல ஜெர்மானியர். ஆனால் ருஷ்யர்கள் இந்நகர்களையும் சும்மா இருக்க விட மாட்டார்கள் எனத் தெரிகிறது. தென் மேற்கு காகஸஸ் பிரதேசத்திலே, ஓரிடத்திலே, ருஷ்யர்கள் ஒரு ஸ்டேஷனில் நின்று இரு ரயில் வண்டித் தொடர்கள் மீது தம் டாங்கிப் படைகளை ஏவி விட்டனர். ரயிலும் தவிடு பொடி; அவற்றிலிருந்த ஜெர்மானியரும் சட்ணி. வலோகாநாஸ்கா என்றொரு நகரம். அதனருகே போராட வந்த ஜெர்மானியர் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைக்க மறுத்தார்களாம். உடனே அத்தனை பேர்களையும் ருஷ்யர்கள் எமனுலகிற்கு அனுப்பி விட்டார்களாம்.

இத்தனை ஆகியும், ''எதிரியின் பலம் இன்னும் குறைய வில்லை. பிரமாதமாக எதிர்க்கிறானவன். ஆகவே நாம் பல கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும்' என்று ஒரு ருஷ்யப் பத்திரிகை எச்சரிக்கிறது. வாஸ்தவம்! ஹிட்லர் லேசானவரல்ல. அதை நாம் மறக்கக் கூடாது தான். மெள்ள மெள்ளத் தான் **அவரது பலத்தை வாங்க வேண்டும்.**

**சமீபத்தில் அமெரிக்காவி லிருந்து ஸப்மரீன் எதிர்ப்புத் துருப்புக்கள் சீமைக்கு வந்திருக்கிறார்கள். சீமையிலுள்ள கடற்கரை விமானப் படையுடன் சேர்ந்து அவர்கள் நாஜி நீர்மூழ்கிகளை வேட்டை யாடு**

(12-ம் பக்கம் பார்க்க.)



# ரஷ்யாவின் மகத்தான வெற்றிகள்

## ஜெர்மானியரின் முழுப் பூசனிக்காய்ப் பொய்கள்

### "சமுத்திரத்தில் ஒரு துளி பால்"—ஜப்பானின் விபரீதக் கூற்று

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ரஷ்யர்களுடைய விடுதலைப் போராட்ட வெற்றி வளர்ந்து கொண்டே வருகிறது. ஆனால் ஜெர்மன் வானொலி நிலையம் ரஷ்யாவின் மகத்தான வெற்றிகளைப் பற்றிச் செய்துவரும் பிரசாரம் என்ன? அது மிகவும் வேடிக்கையானது. ஜனவரி 15-ந தேதி பர்லின் நிலையம் முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைத்திருக்கிறது. அன்றைய தினம், "காகசஸ் பிரதேசத்தில் சில இடங்களில் ரஷ்யர்கள் தாக்கினார்கள். ஆனால் அத் தாக்குதல்களெல்லாம் தடுக்கப்பட்டு அவர்கள் பின் தள்ளப்பட்டார்கள்," என்று பர்லின், வாய் கூசாமல் கூறுகிறது. தோல்வியடைந்து வருங்காலத்தில், இதே ராகத்தில் தான் பர்லின் பிரசாரக் கோஷ்டியார் பாடுவது வழக்கம். இதைக் கேட்டும் ஜெர்மன் மக்கள் உண்மையான விஷயத்தை அறியாமல், "சரிதான், ரஷ்யாவில் நமக்குத் தான் வெற்றி" என்று மனப்பால் குடிக்க வேண்டும் என்பது தான் அவர்களின் நோக்கம்.

**கெட்டிக் காரன் பொய்.**

காகசஸ், பிரதேசத்தில், எந்தெந்த இடங்களில் ரஷ்யர்கள் தாக்கினார்கள், எங்கெங்கு தடுக்கப்பபட்டார்கள், எந்தெந்த இடங்களில் பின் தள்ளப்பட்டார்கள் என்ற விவரம் ஒன்றும் அவர்களுக்கு அறிவிக்கப் படவில்லை. ஏன்? கெட்டிக்காரன் பொய் எட்டு நாளைக்கும் அதற்குப் பிறகும் தாங்க வேண்டுமல்லவா? பேர், ஊர் சொல்லாமல் வெற்றிச் செய்தி சொன்னால், உண்மை வெளியான காலத்திலும் பொய் பிரசாரகர்கள் தப்பித்துக் கொள்ளலாம். அன்றைய தினம், பர்லின் உண்மையைச் சொல்லுவதாயிருந்தால் என்ன சொல்லியிருக்க வேண்டும்? க்ராஸ்னி என்ற உலகப் பிரசித்திபெற்ற எண்ணெய்க் களஞ்சியங்களுக்கு அருகாமையில் இருந்த ஜெர்மன் பட்டாளங்கள் நிர்மூலமாக்கப் பட்டன என்று சொல்லி யிருக்க வேண்டும்; கால்முக் சம வெளிகளில் இருந்த ஜெர்மன் சிப்பாய்கள் விரட்டி யடிக்கப் பட்டார்கள் என்று சொல்லியிருக்க வேண்டும்; ராஸ்டோவை நோக்கி ஆரம்பிக்கப் பட்ட ரஷ்யாவின் மாபெரும் தீவிரப் பாய்ச்சலின் வேகத்தை எதிர்க்க இயலாமல், ஜெர்மன் படைகள் குபான் ஆற்றை நோக்கிப் பின் வாங்கிச் சென்றன என்று சொல்லி யிருக்க வேண்டும். ஆனால் பர்லின் இதை எல்லாம் மறைத்துவிட்டது. மறைத்ததோடு நின்று விடவில்லை. ஜனவரி 16-ந் தேதி, பர்லினும், அதனுடைய கூட்டாளியாகிய ரோமும், ரஷ்யாவைப் பற்றி அலட்சிய மாகப் பேசியுள்ளன. "ரஷ்யாவாவது, கடைத் தேறுவதாவது?" என்ற முறையில் பிரசாரம் திருப்பப் பட்டது. அன்றைய தினம், ஆங்கிலத்தில் செய்யப்பட்ட செய்தி விமரிச ஒலிபரப்பில், "ரஷ்யப் பட்டாளங்கள் எந்த இடத்திலும் முன்னேறவுமில்லை, எந்த முக்கியமான இடத்தைப் பிடிக்கவுமில்லை" என்று பர்லின் கூறுகிறது. அதே நாளில் ரோம் நிலையம், தன்னுடைய இந்துஸ்தானி செய்தி ஒலிபரப்பில், "ரஷ்யாவினுடைய யுத்த சாதனங்களெல்லாம் முழுதும் உபயோகப் படுத்தப்பட்டு வீணாய்ப் போய் விட்டன; அதி சீக்கிரத்தில் ரஷ்யா பலம் உடைந்து முறியடிக்கப் படும் என்று பிரிட்டிஷார் அஞ்சுகிறார்கள்" என்று கூறியிருக்கிறது. பர்லினுடைய ஆங்கிலப் பேச்சாளர், லார்டு ஹா-ஹா என்பவர், "ரஷ்யர்கள் ஏராளமான தரைப் படைகளை உபயோகிக்கிறார்கள்; அவர்களுடைய நஷ்டங்களும் ஏராளமானவை. ஸ்டாலினுடைய பெருந் தாக்குதல்கள் தங்களுடைய லட்சியத்தை அடையவில்லை" என்று கூறியிருக்கிறார். **இந்த அருமையான பிரசார மணிகளை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக் கொள்வோம்.**

**இருந்த முக்கியம் போன ரகசியம்.**

எந்த முக்கியமான இடமும் பிடிக்கப்படவில்லை என்று பர்லின் கூறுகிறது. சரி, கடும் போராடி ஜெர்மன் பட்டாளங்களை முறியடித்து கைப்பற்றிய இடங்களெல்லாம் என்னவாயின? எலிஷியா, மாஸ்டாக், நாலசிக், கொடெல்னிகோவோ, ஸ்மிலியான்ஸ்கியா, பொரொஸோவ்ஸ்கி, விலுகிலுகி, இவைகளெல்லாம் ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டார்களே, என்று கேட்கலாம். **ஜெர்மானியர்கள் பிடித்தபோது அவை முக்கியமாக இருந்தன, ஜெர்மனியர்கள் கையிலிருந்து போய் விட்ட பிறகு, அவற்றின் முக்கியம் போய்விட்டது, அவ்வளவுதான்!**

**பொருளில்லாத பிரசாரம்.**

அடுத்த படியாக, ரஷ்யாவினுடைய பலம் உடைந்து விட்டது என்ற ரோம் நிலைய அவாவை எடுத்துக் கொள்வோம். ஆறு வாரங்களில், ரஷ்யப் படைகள் 11,589 கிராமங்களையும் பட்டணங்களையும் பிடித்து விட்டன: 22 அச்சுப் பட்டாளங்கள் சுற்றி வளைக்கப் பட்டன; 36 படைகளும், 6 டாங்கிப் படைகளும், 7 மோட்டார் படைகளும் முறியடித்து நாசம் செய்யப் பட்டன. இவை எல்லாம் சிரமமான காரியம் தான். ஆனால் ரஷ்யர்களுக்கு சிரமபரிகாரத்துக்குக் கூட அவகாச மில்லை. அவர்கள் முன்னேறிக் கொண்டே செல்கிறார்கள். ரஷ்யாவினுடைய பலம் உடையவில்லை; அச்சு நாட்டுத் தலைவர்களுடைய மனம்தான் உடைந்து விட்டது. இதற்கு வேறு சாட்சி வேண்டிய தில்லை—ஜனவரி 9-ந் தேதி, ரோம் நிலையத்தின் பிரபல பேச்சாளராகிய மேரியோ அபெல்லியஸ் என்ன சொன்னார்? "ரஷ்யச் சிப்பாய் நன்றாகப் போர் செய்கிறான்; அவனுடைய தலைவர்கள் திறமை வாய்ந்தவர்கள்" என்று சொன்னார். பர்லினின் ராணுவ வியாக்கியானப் பேச்சாளர், லெப்டினென்ட் ஜெனரல் டிட்மார், ரஷ்யாவிலுள்ள யுத்த நிலைமை "கவலைக் கிடமாயிருக்கிறது" என்று கூறினார். அவர்களுடைய அருள் வாக்கி லிருந்தே, அச்சுப் பிரசார **அலட்சியங்களுக்குப்** பொருளில்லை என்று தெரியவருகிறது.

லார்டு ஹா-ஹா கூறியதை எடுத்துக் கொள்வோம்:—

**தலைவர் ஸ்டாலினுடைய லட்சியம்.**

"ஸ்டாலினுடைய பெருந் தாக்குதல்கள் தங்களுடைய லட்சியத்தை அடையவில்லை" **ஓ ஹோ! அப்படியா சமாச்சாரம் ஸ்டாலின்கிராட் இன்னும் ரஷ்யர்கள் கையில் இருக்கிறதாமே? மாஸ்கோவில் கிரெம்லின் மாளிகையில் மாபெருந் தலைவர் ஸ்டாலின் இன்னும் ஆச்சரியமான போர்த் திட்டத்தை அற்புதமான அமுலுடன் நடத்தி வருகிறதாகக் கேள்வி.** லெனின்கிராட் முற்றுகையிலிருந்து ஜெர்மனியர்கள் விரட்டப் பட்டார்களென்பது விளக்கமான செய்தி. அப்படி இருக்கும் போது, பெருந் தாக்குதல்கள் லட்சியத்தை அடையவில்லை என்றால் அதை **ஜெர்மன் மக்கள் தவிர வேறு யார் நம்புவார்கள்? ஹிட்லருடைய லட்சியம்** லெனின்கிராட், மாஸ்கோ, ஸ்டாலின்கிராட், காகசஸ் இவற்றைக் கைப்பற்றுவது. **ஸ்டாலினுடைய லட்சியம்** ஹிட்லருடைய லட்சியத்தை நிறைவேற்ற வொட்டாமல் அழிப்பது. அது மிகச் சிறப்பாகத் தான் நடந்து வருகிறது என்பதற்கு ரஷ்யர்களுடைய வெள்ளிடை மலைகளைப் போன்ற வெற்றிகள் தான் தக்க சான்று.

"இல்லை, இதை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம்; ஹிட்லர் என்ற பிரமரிஷி வாகிலிருந்து வந்தால் தான் நாங்கள் நம்புவோம்" என்று ஜெர்மனியர்கள் கூறலாம். ஹிட்லருடைய பெருமிதமான கூற்றுகளை அவர்கள் சற்று கவனித்தால், பொதுவாக யுத்தப் பேச்சின் நிலையும், சிறப்பாக ரஷ்யாவில் ஜெர்மனியர்கள் நிலைமையும், அவர்களுக்குக் கூட, நன்றாகப் புலப்படும். 1940-ல் "நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம்" என்றார் ஹிட்லர். 1941-ல் "நாங்கள் வெற்றி பெறப் போகிறோம்" என்றார்; 1942-ல் "நாங்கள் வெற்றி பெற்றாக வேண்டும்" என்றார்; 1943-ல் "நாங்கள் சரணமடையப்போவதில்லை" என்கிறார். இவை எல்லாம் ஹிட்லருடைய பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட வீராவேசப் பேச்சுகள். இதை விட வேறென்ன அத்தாட்சி **வேண்டும்?**

**பந்தய ஓட்டப் பாடம்.**

ஜெர்மனிக்கு ரஷ்யா கற்றுக் கொடுக்கும் பாடத்தைப் போல, தூரக் கிழக்குப் பிரதேசத்தில் ஜப்பானுக்கு அமெரிக்கா கற்றுக் கொடுக்கிறது என்று சொல்லலாம். இதைப் பந்தய ஓட்டப் பாடம என்று கூறலாம். ஆப்பிரிக்காவில் ரோமல் ஓடிய ஓட்ட வேகத்துக்கு முதல் பரிசு; ரஷ்யாவில் ஜெர்மனியர்கள் ஓடும் ஓட்டப் போக்குக்கு இரண்டாவது பரிசு; தென் பசிபிக் பிரதேசத்தில் ஜப்பானியர்களுக்கு மூன்றாவது பரிசு. இப்படியாகப் பரிசு கொடுக்கலாம். ஆனால் ஓடுகிற ஓட்டத்தில் பரிசு வாங்குவது கூட முடியாத காரியம். ஜப்பானியர்கள் சாலமன்ஸ் சண்டையில் துரத்தி யடிக்கப் பட்டதைப் பற்றி, டோக்கியோ, நிலையம் கூறுவதைப் பார்த்தால், பர்லின் நிலையக் கோஷ்டியின ராகந் தான் என்று சொல்லலாம். சாலமன்ஸ் தீவுக் கூட்டத்தில் குடால்கனார் என்பது முக்கியமான தீவு. இதிலிருந்து ஜப்பானியர்கள் விரட்டப் பட்டார்கள். அவர்களுடைய எதிர்த் தாக்குதல்கள் பயனில்லாமற் போயின. இந்தத் தீவு முக்கியமானதல்ல என்று டோக்கியோ பிரசாரம் செய்து வருகிறது. ஜப்பானிய போர்த் தலைமை ஸ்தானத்தில் உள்ள ராணுவப் பிரதிநிதி, கர்னல் டோகோ யா ஹாகி கூறியதை டோக்கியோ விளம்பரப்படுத்தி யிருக்கிறது. "ஒரு பெரிய சமுத்திரத்தில் ஒரு துளி பாலைப் போன்றது" குடால்கனார் என்று அந்த ராணுவத் தலைவர் கூறினாராம். அத்தோடு டோக்கியோ நிற்கவில்லை. இந்த முக்கியமல்லாத தீவைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா ஏராளமான நஷ்ட மடைந்து விட்டது என்றும் கூறுகிறது! ஆடு நனைகிற தென்று ஓநாய் அழுத கதை தான் இது!

**திராட்ச நரி ஜப்பான்.**

ஆனால் ஒரு மாதத்துக்கு முன் டோக்கியோ என்ன கூறிற்று? சென்ற டிசம்பர் மாதம் 16-ம் தேதி "ஜப்பான் சாலமன்ஸ் தீவுகளை இழந்தால், அது ஜப்பானுடைய உயிருக்கே அபத்து விளைவிக்கக் கூடியதாகும்" என்று கூறிற்று. இதன் பின், 11 நாட்களுக்கு பிறகு, அதாவது டிசம்பர் 27-ம் தேதி, ஜப்பானிய முதன் மந்திரி, ஜெனரல் டோஜோ "சாலமன்ஸ் தீவுகளில் நமது விரோதிகள் பலமான விமானத் தளங்களை வைத்திருக்கிறார்கள். அதனால் தான் உணவுப் பொருள்களும், யுத்தப் பொருள்களும் அங்கு இறங்குவதற்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது" என்று கூறினார். இதற்கு ஒரு மாதத்திற்கு முன், அதாவது, சென்ற நவம்பர் 21-ம் தேதி, மசனூரி இட்டோ என்ற பிரபல ஜப்பானிய கடற் போர் விமர்சனக்காரர் கூறியதை படேவியா அச்சுவானொலி நிலையம் குறிப்பிட்டது. அவர் என்ன கூறினாரென்றால், "குடால்கனார் தீவு யுத்தம் மிகவும் முக்கியமானது. பூகோள அமைப்பில் அது ஒரு முக்கியமான இடத்தில் இருக்கிறது. யுத்த நிலையில் அது ஒரு முக்கிய கேந்திரஸ்தானம்," என்று விளக்கி யிருக்கிறார். அதற்கு முன் மாதத்தில், அதாவது அக்டோபர் 15-ம் தேதியில், அதே படேவியா நிலையம் என்ன கூறிற்று? "சாலமன்ஸ் தீவுகளில் அமெரிக்கர்கள் இறங்கி விட்டதால் பெருமை கூறிக் கொள்ளுகிறார்கள். இது நகைப்பை உண்டாக்கும் கூற்று. அவை யுத்த சம்பந்தமாக முக்கியமான தீவுகளேயல்ல" என்று கூறிற்று. **இருக்கும் போது முக்கியமும், இழந்த பின் முக்கிய மற்ற தன்மையும் அடைவதை நோக்கினால், "சீச்சீ, சாலமன்ஸ் தீவுகள் புளிக்கின்றன" என்று திராட்சைப் பழ நரி கதையைச் சற்று மாற்றலா மென்று தோன்றுகிறது. இந்த முக்கிய மல்லாத தீவுகளுக்காக சென்ற மே மாதம் 21-ந் தேதியிலிருந்து இதுவரைக்கும் 586 விமானங்களையும், 80 கப்பல்களையும் ஜப்பான் ஏன் இழந்தது?**

கடைசியாக, ஒரு ருசிகரமான பொய்! ஜப்பானிய விமானங்கள் கல்கத்தாவை சில நாட்களுக்கு முன் தாக்க முயற்சித்தன வல்லவா? இந்த மாதத்தில் அப்போது தான், அதாவது ஜனவரி மாதம் 15-ந் தேதி தான், முதல் தாக்குதல். இதற்கு முன் நடந்த தாக்குதல் டிசம்பர் மாதம் 27-ந் தேதி. ஆனால் பெர்லின் ஜெர்மன் மொழியில் உள் நாட்டுக்குச் செய்த ஒலிப்பரப்பில், ஜனவரி மாதம் 4-ந் தேதி அதாவது தாக்குதல் உண்மையில் நடந்ததற்கு 11 நாட்களுக்கு முன்னமேயே, ஜப்பானிய விமானத் தாக்குதல் நடந்து விட்டதாகவும், 14 பிரிட்டிஷ் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் கூறியிருக்கிறது. ஜெர்மானியர்களின் உடயோகத்துக்கு மாத்திரம் கூறப்பட்ட பொய், இப்போது கல்கத்தா மக்களும், இதரர்களும் நகைக்கும் படியாய் விட்டது.

—[சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து சென்ற வாரம் (சனிக்கிழமை, ஜனவரி 23-ல்) ஒலிபரப்பப்பட்ட ஒரு பேச்சு.]

(10-ம் பக்கம் தொடர்ச்சி.)

கிறார்கள். அதோடு, ஜெர்மன் சப்மரீன் தளங்கள் மீதும் குண்டுகளை வீசுகிறார்கள்.

வருகிற வசந்த காலத்தில் ஐரோப்பாவிலே பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் இரண்டாவது போர் முனையைத் தொடங்கலாம் என்று கூறப்படுகிறது. சென்ற வாரம் நார்வேயில் உள்ள ஒரு இடத்தை பிரிட்டிஷ் 'கமாண்டோஸ்' என்ற சிறு படை யெடுப்புக் கோஷ்டியினர் தாக்கியதாகக் கூறப்படுகிறது. நார்வேயைப் பற்றி ஹிட்லருக்கு எப்பொழுதும் கவலை தான். அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை பிரமாதமாகச் செய்திருக்கிறார் அவர். நார்வே படை யெடுக்கப்பட்டால், ஸ்வீடன் யுத்தத்திற்குப் புறப்பட நேரிடலாம். ருஷ்யா பின்லாந்து மீது பாயலாம். ஆகவே ஹிட்லருக்கு வடக்கே யிருந்தும் ஆபத்து வர விருக்கிறது.

தனது யுத்த இயந்திரத்தை வலுப்படுத்த ஹிட்லர் அரும் பாடுபட்டு வருகிறாராம். அவருக்கு வேலையாட்கள் நிறைய வேண்டி யிருக்கிறது. பிரான்ஸிலிருந்து ஆட்களைக் கொண்டு வர முயற்சிக்கிறார். ஜெர்மனிக்குப் போய்ப் பாடுபடுவதை விட, தங்கள் வலது கைக் கட்டை விரல்களை வெட்டிக் கொள்ளலாம் என்று துணிந்து விட்டார்களாம் பலர். இவ்வாறு செய்து கொள்ளுவோரைத் தண்டிக்க அங்கு சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். டென்மார்க்கி லிருந்து தொழிலாளரை அனுப்ப அந்நாட்டு மந்திரி மறுத்து விட்டாராம். ஹிட்லர் பாடு சங்கடம் தான் போங்கள்!

நாளையத் தினம் அவரது கூட்டாளிகள் தான் அவருடனேயே சேர்ந்து நிற்கிறார்கள் என்பது என்ன நிச்சயம்? ஆபத்து அதிகமாகி விட்டால், கம்பி நீட்டி விடுவது ஹிட்லரின் குணம் என்று அவரைப் பற்றி அறிந்தவர்கள் கூறுகிறார்கள். எங்கு ஓடப் போகிறார் பாவம்?

ஓடுகிற விஷயத்திலே, ஜெனரல் ரோமலுக்கு அப்புறம் தான மற்றவர்கள் எல்லாம். அவரையும் அவரது படைகளையும் நம்பி இருந்தவர் முஸோலினி. அவர்களிருக்கிறார்கள்; இத்தாலிய ஆப்பிரிக்க சாம்ராஜ்யத்திற்கு அழிவில்லை என்று எண்ணியிருந்தார் அவர். அவரது எண்ணத்தில் மண் விழுந்து விட்டது. ரோமல் தன் படைகளோடு ட்ரிபோலிடானியாவையே காலி செய்து விட்டு, ட்யூனிஸியாவிற்குள் ஓடி விட்டார். அப் பிரதேசத்தின் தலை நகரான ட்ரிபோலி நேச தேசத்தார் வசம் சிக்கி விட்டது. அங்கேற்பட்ட சேதங்களைச் சரிப்படுத்தி, அதையே தளமாகக் கொண்டு, இத்தாலியரையே தாக்க நேச தேசப் படைகள் முயற்சிக்கக் கூடும். எத்தனையோ அக்ரமங்கள் செய்து சம்பாதித்த ஆப்பிரிக்க இத்தாலிய சாம்ராஜ்யம், சீட்டுக் கட்டாலாகிய வீடு போல் நொறுங்கிப் போன தோடு, இடிந்த பாகம் கூட, வேற்றார் கைக்குப் போய் விட்டது. இதன் பலன் கூடிய சீக்கிரமே இத்தாலியில் காணலாம்.

ட்யூனிஸியாவிலே ஜெர்மானியர் கடுமையாகவே எதிர்க்கிறார்கள். ரோமலின் படையும் வந்து சேரட்டுமென அவர்கள் எதிர்பார்க்கிறார் போலிருக்கிறது. இன்னும் எத்தனையோ காரியங்கள் நடக்குமெனத் தான் ஜெர்மானியர் எதிர்பார்த்தனர்! இப்போதைக்கு அடியும், உதையும் பெறுவதோடு அவர்கள் திருப்தியடைய வேண்டியது தான்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

5 Copies
EO St. file

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5உ, வெள்ளிக்கிழமை [இதழ் 6

## நமக்குத் தான் சாதகம்



கர்னல் பிரான்க் நாக்ஸ்.

"டோக்கியோவை விமானங்களைக் கொண்டு தாக்கக் கூடிய சந்தர்ப்பம் வந்து விட்டது என்று தான் நினைக்கிறேன். எப்படி, எப்போது தாக்கப்படும் என்று நான் இப்போது சொல்ல மாட்டேன். எதற்கும் அவர்கள் ஆயத்தமா யிருக்கட்டும். மிகச் சிறந்த முறையில் நம் நீர் மூழ்கிகள் வேலை செய்து கொண்டு வருகின்றன. ஜப்பானியர் போக்கு வரவுக் கப்பல்களை இவை வெகு விரைவாகச் சேதப்படுத்திக் கொண்டு வருகின்றன."

"தம் படைகளுக்குத் துணைப் பலமாகப் புதிய படைகளைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டு மென்னும் எண்ணத்தை ஜப்பானியர்கள் கைவிட்டு விட்டார்க ளென்றும், குடால்கனார் பாதுகாப்பு இன்னும் 30 நாட்களுக்குள் நின்றுவிடு மென்றும் தான், நான் நினைக்கிறேன். இந்த எண்ணம் ஒருக்கால் தவறாகவும் இருக்கலாம்."

"பசிபிக்கில் ஜப்பானியர்களுக்கு மகா தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். கை கலந்த போர் நடந்தாலும் நமக்குத் தான் சாதகம் ஏற்படும். ஏராளமாகக் கப்பல்களையும் விமானங்களையும் மற்றும் பல வகைச் சாதனங்களையும் தயார் செய்கிறோம். இந்தப் போராட்டத்திலும்—இந்த ஒரு வகைப் போராட்டந் தான் உண்டு என்று நான் சொல்ல வில்லை—நமக்குத் தான் முடிவான வெற்றி."

—அமெரிக்கக் கப்பற் படை மந்திரி கர்னல் பிரான்க் நாக்ஸ் பசிபிக் போர் முனையைப் பார்வையிட்டுத் திரும்பிய போது, நியூ யார்க்கில் 1943-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31உ கூறியது.

பொருளடக்கம்.

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| வடாப்பிரிக்காவில் நேச நாடுகளின் தீவிர முன்னேற்றம் .. .. .. .. | 2 | காய்கறிகளை அதிகமாய்ப் பயிரிடுங்கள் .. | 4 |
| நாஜிகள் போக்குவரவைத் தடுப்பது தான் முக்கிய நோக்கம் .. .. .. | 3 | உணவுப் பொருள்கள் பஞ்சம் உண்மையா. | 5 |
| இந்தியப் படையின் வீராவேசம் .. .. | 4 | அமெரிக்காவிற்கு பிரிட்டிஷ் உதவி .. | 7 |
| | | ஹிட்லர் எங்கே ? .. .. .. .. | 9 |

# வடாப்ரிக்காவில் நேச நாடுகளின் தீவிர முன்னேற்றம்

## திரிபோலியைக் கைப்பற்றியது மிக முக்கியம்

எட்டாம் படைக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்துக் கொண்டிருக்கிறது. சுவேராவை அது கைப்பற்றி விட்டது. இனி டுனிசியாவிற் குள்ளும் புகும். எகிப்தைப் பாது காக்க வேண்டும்; லிபியாவைக் கைப்பற்ற வேண்டும் என்னும் கேள்விகளுக்கே இப்போது இடமில்லை. ஜெனரல் மான்ட்காமரியின் படைகளுக்கு ஒரு புதிய கடமை ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மன்–இதாலியப் படைகளைக் கீழ் புரத்தில் தாக்க வேண்டும். இவை டுனீசியாவைப் பாதுகாக்க வேண்டு மென்பது கட்டளை. இது தான் அச்சு நாடுகளின் சரியான அரண் அமைந்த பகுதி. திரிபோலியை நேச நாடுகள் கைப்பற்றிய வுடனேயே, இத்தாலி முழுதும் ஒரு கலக்கம் ஏற்பட்டு விட்டது. இந்த முக்கிய மானதோர் வெற்றியை மிகவும் அற்பமாக பாசிஸ்ட் பத்திரிகைகள் மதிக்கின்றன. இதனால் இத்தாலிக்குத் தோல்வியு மில்லை இங்கிலாந்துக்கு வெற்றியு மில்லை என்று கூறுகின்றன. "போபுலோ–டி–இத்தாலியா" என்பது முஸோலினிக்குச் சொந்தமான பத்திரிகை. இது என்ன சொல்லுகிறது தெரியுமா ?

> 'திரிபோலியைக் காலி செய்து விட்டு அச்சு நாட்டுப் படைகள் மேல் திசை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன'

என்று கூறுகிறது. திரிபோலியைக் கைப்பற்றியதைக் குறித்து அச்சு நாடுகள் எவ்வளவு தான் அலட்சியமாகக் கூறிய போதிலும், உண்மையிலேயே ஆங்கிலோ–அமெரிக்கப் படைகளின் கூட்டுறவோடு முன்னேறிக் கொண்டிருக்கும் எட்டாம் படைக்கு, மிகச் சிறந்த தளமாக இது அமைந்திருக்கிறது. சமுத்திரங்களைக் கடக்கும் பெரிய கப்பல்கள் தங்க, பிசெர்ட்டாவுக்கும் அலெக்சாந்திரியாவிற்கும் இடையில் உள்ள துறைமுகம், திரிபோலி ஒன்று தான். இதன் மூலமாகத்தான் லிபியாவி லிருந்த ஆபிரிக்க (ஜெர்மன்) படைகளுக்கு 2 வருஷங்களாக சப்ளைகள் வந்து கொண்டிருந்தன. இதை நேச நாடுகள் கைப்பற்றியதனல், மிகுந்த வசதி யுண்டு. நீல நதி டெல்டாவி லிருந்து தரை வழியாக சப்ளைகள் நெடு நாட்கள் வருவதற்குப் பதிலாக, சில நாட்களிலேயே கொண்டு போய்ச் சேர்த்துக் கொள்ளலாம். திரிபோலிக்கும் மால்டாவுக்கும் இடையே 200 மைல்கள் தான். மால்டாவை ஒரு "விமானந் தாங்கித் தீவு" என்றே சொல்லலாம். ரோமல் டோப்ருக்கைக் கைப்பற்றி அதனல் அற்ப சுகம் கொண்டிருந்தபோது, மால்டாவை நாசஞ் செய்து விடக் கூடு மென்று மனப்பால் குடித்தார். திரிபோலியைப் பிடித்த 24 மணி நேரத்திற்குள் திரிபோலிடானியாவிலுள்ள எல்லா முதல் தரமான விமான தளங்களையும் பிரிட்டிஷ் விமானப் படை கைப்பற்றிக் கொண்டது. திரிபோலிக்கு வெளியேயுள்ள காஸ்டெல் பெனிடோ விமான தளத்தையும் கைப்பற்றிக் கொண்டது. இதன் பயனக வட டுனிசியாவில் கிழக்கி லிருந்து மேற்குக் கடைசி வரை, ஒரு வகை விமான பலம் நேச நாடுகளுக்கு உண்டாகி விட்டது. **இனி ஏற்படப் போகிற போராட்டத்தில் வெற்றி பெற வேண்டுமானல், டியூனிஸ்-பெசாட்டா போர் முனையிலும் குறுகிய கடல் பகுதிகளிலும் மேலான விமான பலம் இருக்க வேண்டியது அவசியமாகும். அலமீன் யுத்தத்தை விட, இது தான் மிகவும் முக்கியமானதா யிருக்கும்.** இந்த முக்கியத்துவத்தை ஹிட்லர் நன்றுகத் தெரிந்து கொண்டிருக்கிருர். அதனல் தான் தன் மிகச் சிறந்த படையினரில் 50 ஆயிரம் பேர்களை இங்கே பலி கொடுக்கவும் உடன் படுகிருர்.

**நீர் மூழ்கிக் கப்பல்கள்.**

அமெரிக்கக் கப்பற் படை மந்திரி கர்னல் பிராங்க் நாக்ஸ். இவர் சென்ற ஜனவரி மாதம் 31-ம் தேதி பத்திரிகை பிரதிகளுக்கு ஒரு பேட்டி கொடுத்தார். அப்போது நேச நாட்டினரின் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது :—

> அட்லான்டிக் சமுத்திரத்தில், நீர் மூழ்கிக் கப்பல்களின் போராட்டம் மிகக் கடுமையான பிரசினையா யிருக்கிறது. நமக்கு இதனல் மிகுந்த நஷ்டம் உண்டாகலாம்.

இதிலிருந்து ஒரு விஷயம் நமக்குத் தெளிவாகிறது. தன் முழு கவனத்தையும் பலத்தையும் தன் நீர் மூழ்கிப் படகுகளைக் கொண்டு ஹிட்லர் போராடுவா ரென்று நினைக்க வேண்டி யிருக்கிறது. அதுவும் வெகு விரைவாகத் தாக்குவார் போலிருக்கிறது. இதன் பயனக, நேச நாடுகள் ஐரோப்பாவைத் தாக்கும் நாளைத் தள்ளிப் போட வேண்டு மென்பது தான் ஹிட்லரின் எண்ணமா யிருக்க வேண்டும். நெடு நாட்கள் எல்லை இல்லாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே போய், ஒரு நெருக்கடியை உண்டாக்கி, பிறகு, தான் சமாதானம் செய்து கொள்ள விரும்புவதாக அறிவிக்க வேண்டு மென்பது அவருடைய எண்ணமா யிருக்கலாம். கப்பற் படைத் தலைவர்களுள் முதல்வரான மிஸ்டர் ஏ. வி. அலெக்சாந்தர், நீர் மூழ்கி படகுகள் கூட்டங் கூட்டமாகக் கிளம்பிப் போய் போராடுகின்றன வென்றும், நடுக் கடலில் அவை பழுதானல், நீர் மூழ்கி டாங்கர்கள் அங்கே போய் அவற்றை பழுது பார்க்கின்றன வென்றும் பெர்லின் ரேடியோ கூறுவதாகத் தெரிவிக்கிருர். இது பற்றி ராய்ட்டர் கப்பற் படை நிருபர் எழுதுவதாவது :—

> 150 நீர் மூழ்கிகள் இருக்கின்றன. ஜெர்மன் கப்பற் படையில் மூன்றி லொரு பங்குக்கு இது சற்று குறைவு. இவை எப்போதும் அத்லாண்டிக் சமுத்திரத்திலும், மத்தியதரைக் கடலிலும் வட கடலிலும் வேலை செய்து கொண்டு வருகின்றன. மாதம் ஒன்றிற்கு 15 அல்லது 20 படகுகள் வீதம் இதைக் கட்டி முடிக்கிருர்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)



# நாஜிகளின் போக்குவரவைத் தடுப்பது தான் முக்கிய நோக்கம்

## கொரில்லா போரின் தத்துவம்

ராஸ்டோவை நோக்கி ரஷ்யர்கள் இன்னும் முன்னேறிப் போய்க் கொண்டிருக்கிருர்கள். இவர்கள் இரண்டு முக்கியமான ரயில்வே ஜங்ஷன்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். 1, கஸ்தோர்னையா. இங்கே தான் வெலுகி எலெட்ஸ் ரயில்வேக்கள் சந்திக்கின்றன. 2, க்ரோபாட்கின். இது ராஸ்டோவ்-காக்கஸஸ் ரயில்வேயி லுள்ளது. மற்றும், மெய்காப் டிரோரெட்ஸ்க் என்னும் இடங்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இவை இரண்டும் மிகவும் முக்கியமான இடங்கள். இவற்றை பிடித்த பிறகு ஜெர்மானியர்கள் ஆர்ப்பாட்டங்க ளெல்லாம் அடங்கினது போலத் தான். ஏனென்றல் அவர்கள் வடக்கே பின்வாங்க முடியாது. இப்போது சோவியத் படைகள் டிகோரெட்ஸ்கி லிருந்தும் மெய்கோபி லிருந்தும் மேற்கு நோக்கிப் போகின்றன. அப்போது ஸ்டாலின்கிராடில் வளைக்கப்பட்டது போல, இப்போது காக்கஸஸிலும் நாஜிகள் வளைக்கப்படுவார்கள். மெய்கோப்பை ரஷ்யர்கள் பிடித்து விட்டபடியால், குபானிலுள்ள ஜெர்மன் படைகள் வெளியேற முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. மெய் கோப் மற்றொரு வகையிலும் முக்கியமான இடம். இங்கே எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. சென்ற கோடை காலத்தில் போர் இங்கே நடந்த போது. சோவியத் படைகள் பின்வாங்க நேர்ந்தது. அப்போது இந்த எண்ணெய்க் கிணறுகளை நாசஞ் செய்துவிட்டுப் பின் வாங்கினர். இப்போது அதை மீண்டும் பிடித்து விட்டனர். இதைக் கைப்பற்றிய படைகளை யடுத்து, இந்த எண்ணெய்க் கிணறுகளைச் செப்பனிட சோவியத் இஞ்சினீர்களின் படையும் வந்தன. காக்கஸஸ் பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் போகவும் வரவும் முடியாதபடி செய்து விட வேண்டு மென்பது தான் ரஷ்யர்கள் யுத்த தந்திரம். இந்த ஊர்களைக் கைப்பற்றி தம் நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றிக் கொண்டார்கள்.

காக்கஸஸ் பிரதேசத்தில் ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் தாக்க ஆரம்பித்த போதே, அந்தப் பகுதியில் ஜெர்மன் படைகள் போக்கு வரவைத் தடுக்க வேண்டி இரண்டு முக்கியமான ரயில்வேக்களை ரஷ்யர்கள் வெட்டி விட்டார்கள். ஆதியில் சோவியத் ரயில்வே லைனை ஒட்டித் தான் ஜெர்மன் படைகள் முன்னேறி வந்து கொண்டிருந்தன. ராஸ்டோவ்-பாக்கு ரயில்வேயை யொட்டி க்ரோஸ்னி எண்ணெய்க் கிணறுகளையும் அவர்கள் அப்படித் தான் அடைந்தனர். அது போலவே, க்ராஸ்மடார்-ஸ்டாலின்கிராட் ரயில்வேயைக் கைப்பற்றியவுடனே தான், ஸ்டாலின்கிராடை அவர்கள் தாக்கிறுர்கள். ஜெர்மானியர்களிட மிருந்து ஆர்மவீரையும் சால்ஸ்கையும் கைப்பற்றியதன் மூலம் ரஷ்யர்கள் மிகவும் முக்கியமான கட்டத்தைக் கடந்தார்கள். நைகாப் எண்ணெய்க் கிணறுகளுக்குப் போகும் கிளை ரயிலின் ஜங்ஷனில் தான் ஆர்மவீர் இருக்கிறது. இந்த இடத்தை ரஷ்யர்கள் கைப் பற்றிய பிறகு மேற்கு நோக்கிப் போய் மெய்காப்பைப் பிடித்தார்கள். அடுத்தபடியாக கருங்கடல் துறைமுகமான தாப்சிக்குத் தான் ரஷ்யரால் ஆபத்து.

மற்றொரு ரஷ்யப் படை ஸ்டாலின்கிராட்-க்ரஸ்னெடார் ரயில்வே பக்கம் வந்து சால்ஸ்கைக் கைப்பற்றிக் கொண்டது. இது ராஸ்டோவுக்கு பிரியும் கிளை ரயில்வே ஜங்ஷன். அடுத்தாற்போல், டிகோரெட்ஸ்கைக் கைப்பற்றினர்கள். ராஸ்டோவ்-பாக்கு ரயில்வேயும், ஸ்டாலின்கிராட்-க்ராஸ்மடார் ரயில்வேயும் சந்திக்கு மிடத்தில் தான் இது இருக்கிறது. இதை ரஷ்யர்கள் பிடித்துக் கொண்டதனல், ஜெர்மன் படைகள் ராஸ்டோவுக்குப் பின் வாங்கும் பாதைகளைக் கைப்பற்ற வில்லையானலும், திரும்பவும் முன்னேறி வருவதற்கு வழியில்லாமல் செய்து விட்டது.

இப்போது ஜெர்மானியர்கள் என்ன தான் செய்யக் கூடும் ? ராஸ்டோவுக்குப் பின் வாங்கி விடுவார்களா ? அல்லது, ஸ்டாலின்கிராடில் சிக்கிக் கொண்டு அவதிப் பட்டது போல மேற்குக் காக்கஸஸிலும் சிக்கிக் கொண்டு அவதிப் படுவார்களா ? எது எப்படி யிருந்தாலும், ஒன்று மட்டும் நிச்சயம். காக்கஸஸ் பிரதேசத்தை ரஷ்யர்கள் தாக்கும் போது ஜெர்மானியர்கள் போக்கு வரவிற்கு இடந்தரக் கூடாது என்னும் நோக்கங் கொண்டு தான், ஜெர்மானியர்களின் முக்கியமான தளமான ராஸ்டோவுக்கும் மற்ற தளங்களுக்கும் சம்பந்தம் ஏற்படாதபடி செஞ்சேனைகள் தடுத்து விட்டன.

**சீனுவின் கொரில்லா போர்.**

சமீபத்தில் கசப்ளங்காவில் நடைபெற்ற மகா நாட்டைக் குறித்து "சீனு டைம்ஸ்" என்னும் பத்திரிகை எழுதுகிற போது, சோவியத் படைகள் மகத்தான முறையில் ஹிட்லரை வென்றது பற்றியும், ஜெர்மானியர்கள் வடாப்பிரிக்காவில் அடைந்த தோல்வியைக் குறித்தும் குறிப்பிட்டு மேலும் எழுவதாவது :—

"தென் மேற்குப் பசிபிக் போர் முனையிலும் சீனப் போர் முனையிலும் தான், நாமும் நம் எதிரிகளும் வேரூன்றுவதற்கு இன்னும் போராடிக் கொண்டிருக்கிறேம். தன்னைத் தகுந்தபடி தாக்க ஒட்டாமல் சீனு தன் எதிரிகளைத் தடுத்துக் கொண்டிருக்கிறது." இந்த யுத்தத்தை நெடு நாட்களாக நடத்த முடிந்ததற்குக் காரணம், சீனர்களின் 'கொரில்லா' போர் முறை தான்.

"கொரில்லா" என்னும் பதம் ஸ்பெயின் மொழியி லிருந்து வந்தது. இப்படிப் பட்ட சண்டை நெடு நாட்களுக்கு முன்பு முதன் முதல் அந் நாட்டில் தான் நடை பெற்றது. தம் நாட்டைத் தாக்க வந்த நெபோலியன் மீது மகா கொடூரமான வெறுப்புக் கொண்டிருந்தார்கள் ஸ்பெயின் தேசத்தார். இது காரணமாக நெபோலியன் தன் காரியம் ஒன்றையும் ஸ்பெயினில் சாதித்துக் கொள்ள முடியாமல் திண்டாடினுர். கொரில்லா போராட்டம் வெற்றி பெற வேண்டு மானல், இரண்டு வகை வசதிகள் மிகவும் அவசியமாகும்.

**1. உள் நாட்டு மக்களின் கூட்டுறவு.**

**2. தாக்க வரும் எதிரி கண்டு அஞ்சத் தக்க, ஒரு தேசியப் படை.**

தென்னைப்பிரிக்க யுத்தத்தில் கொரில்லா சண்டை வெற்றி தரவில்லை. மகா வீரத்தோடு தான் போயர்கள் போராடினுர்கள். அவர்கள் தோற்றதற்குக் காரணம் தேசியப் படை யில்லாதது தான். இதே காரணத்தால் தான் மஞ்சூரியாவிலும் கொரில்லாப் படை வெற்றி பெற முடிய வில்லை. மஞ்சூரியாவை வென்றுள்ள ஜப்பானியர்களை அங்குள்ள சீனர்கள் மகா கடுமையாக வெறுக்கிருர்கள். இந்த வெறுப்பை ஒரு உருவாக்குவதற்கு அங்கே தேசியப் படை யில்லை. வட சீனுவில் ஜப்பானியர்கள் மிகக் கடுமையாகத் தாக்கி வெகு தூரம் நாசம் செய்து விட்டார்கள். என்றுலும் அங்கே அவர்கள் ஊன்றிக் கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் கொரில்லா போராட்டம் வெற்றி அங்கே பெற்றது தான். இந்த சீன கொரில்லாக்கள் வெற்றி பெற்றதற்கு முககிய காரணம், எட்டாம் வழிப் படையைச் சேர்ந்த பழைய "கம்யூனிஸ்டு"கள் அநேகர் அதில் சேர்ந்திருப்பது தான். இவர்கள் ஹோபி-ஷான்சி

(11-ம் பக்கம் பார்க்க)

# இந்தியப் படையின் வீராவேசம்

## விடா முயற்சி வெற்றி தந்தது

ஆப்பிரிக்காவில் நடைபெறும் போர் முனைகளில், எல் அலமீன் போர் முனை தான் மிகவும் முக்கிய மானதென்று சொல்ல வேண்டும். இங்கிருந்து தான் நேசநாடுகளுக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்துக் கொண்டு வருகின்றது. இந்த எல் அலமீன் போர் முனையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறித்து, அங்கிருந்த ஒரு படைத் தலைவர் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

மாலை வேளை. எதிரிகளைத் தாக்கும் பொருட்டு இரண்டு இந்தியப் படைகள் கிளம்பின. மற்றொரு பகுதிப் படை எதிரியின் இடது பக்கத்தில் தாக்கப் புறப்பட்டது. இடையில் எதிரிகள் சுரங்க வெடிகளை யமைத்திருந்தார்கள். இவற்றைக் கடந்து நம் படைகள் ஜெர்மன் படைகளைத் தாக்கின. அவர்களுடைய போர் முழக்கம் வெகு தூரம் வரைக் கேட்டது. கடுமையாக யுத்த மாடினார்கள். ஜெர்மானியர்களுக்கு சரியான தண்டனை கிடைத்தது. மகா வீரா வேசத்தோடு இந்தியப் படைகள் போராடின வென்று நேரில் கண்டவர்கள் கூறிப் பாராட்டுகிறார்கள். இவ்வளவு வீரா வேசத்தோடு முன்னேறிப் போகிறவர்களெல்லாம், தப்பி மீண்டு வருவது அரிது. என்றாலும் மீண்டார்கள். வெற்றியும் பெற்றார்கள்.

இனி எதிரிகளின் இடது புறத்தில் தாக்கப் புறப்பட்ட இந்தியப் படையினர் என்ன வாயினர் என்று கவனிப்போம். இந்தப் படையினர் எதிர்பார்த்தபடி தாக்கக் கூடவில்லை. அந்தப் பக்கத்தில் எதிரிகள் தகுந்தபடி அரண்கள் அமைத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே. இரவு முழுதும் அங்கங்கே பதுங்கியிருந்து, தாக்கி, வெல்ல முயன்றார்கள். எதிரிகளும் கூடியவரை எச்சரிக்கையாகவே யிருந்தார்கள். ஆகவே முழு மூச்சாக நம் இந்தியப் படைகள் முன்னேறித் தாக்கினார்கள். இந்த முயற்சியும் பலிக்கவில்லை. ஆகவே அதிகாலையில் தம் முயச்சியைக் கைவிட்டுத் தம் படை வீட்டிற்குத் திரும்பினர்.

"முயற்சி திருவினை யாக்கும்" என்னும் உண்மையை நனகு உணர்ந்தவர்களல்லவா இந்தியப் படைகள்? தம் படையினரின் எண்ணிக்கைக் குறைந்து போனதைப் பற்றி கவலை கொள்ள வில்லை. தம் படையைக் குறைவற அழைத்துக் கொண்டார்கள் வெற்றி கொள்ளுவ தென்னும் மன உறுதியும் கொண்டார்கள். கிளம்பினார்கள் மீண்டும் போராட. ஜெர்மன் பீரங்கிகள் மீண்டும் கடுமையாகக் கிளம்பின இந்தியப் படைகள் தாம் சேரிய இடத்தைப் பிடித்தார்க ளானாலும, அங்கே தம்மை நிலை நாட்டிக் கொள்ளக் கூட வில்லை. ஆகவே மீண்டும் பின் வாங்க நேரிட்டது.

"அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்" என்னும் பழ மொழி இந்தியப் படை யினர் படித்துப் பழகியது தான். மூன்றாம முறையும் கிளம்பினார்கள். இந்தச் சமயம் ருவீசத் காடு நெருகத் தாக்கும்படி அவர்களுக்குக் கட்டளை. இநதக் கரட்டைத் தாக்கப் பெரிதும் கஷ்டப்பட்டார்கள். என்றாலும், இந்தக் கரட்டில் ஏறினார்கள். ஆனால் உச்சிக்குப் போகக் கூட வில்லை. இந்தக் கரட்டின் உச்சி வரை ஏறி விடலாம். ஆனால் அங்கே நிலைப்பது கஷ்டம். ஏனென்றால், அநதக் கரட்டின் உச்சியில் சொருகு மணல் இருக்கிறது. அதில் கால் வைத்தால் சறுக்கி இரு புறங்களிலும் கீழே வந்து விட வேண்டியது தான். என்றாலும் நம படையினர் கூடிய வரை சமாளித்தார்கள.

**முதல் தரமான படை.**

இங்குள்ள எல்லாப் படைகளிலும் இது தான் முதல் தரமான படை என்று அனைவரும் பாராட்டினார்கள. சுரங்க வெடிகள் போடப்பட்டிருந்த பாதைகள் வழியாகப் போகும் இராணுவ மோட்டார்களின் வேகம் கண் கொள்ளாக காட்சியா யிருந்தது. ஒரு ஜமேதாரின் தீரத்தைப் பாராட்டி அங்கேயே (டி.எஸ்.ஓ.) சிறந்த ஊழியத்திற்காகப் பாராட்டி யளிக்கப்படும் பதக்கம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அன்றியும் அவருக்கு மேஜர் பதவியும் கிடைத்தது. அவருக்கு இவை கிடைத்தது மிகவும் நியாயந் தான். இநத யுத்தத்தில் போய் மீண்டு, காயத்தோடும் திரும்பியவர் இவர் ஒருவர் தான்.

போர் நடக்கும் போது, அவருடைய படையின் கர்னல் காணக் கிடைக்க வில்லை. அவரை எதிரிகள் கைது செய்து விட்டனர். அட்ஜுடன்டும் கொல்லப் பட்டார். பிறகு வந்த படைத் தலைவர், சில மணி நேரத்தில் காயப்பட்டார். அப்போது, நம் ஜமேதார் மகா வீராவேசத்தோடு கிளம்பினார். முதலில் ஒரு சிறு துப்பாக்கியையும் பிறகு ஒரு சனியனையும் கொண்டு 25 ஜெர்மானியர்களைக் கொன்று வீழ்த்தினார்.

## காய் கறிகளை அதிகமாய்ப் பயிரிடுங்கள்

சென்னை அக்ரி-ஹார்டிகல்சரல் சங்கத்தார் "காய் கறிகளை அதிகமாகப் பயிரிடுங்கள்" என்னும் தலைப்புள்ள தோர் புத்தகத்தைச் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இதில் உருளைக் கிழங்கு பயிரிடுவதைக் குறித்தும் தெரிவித்திருந்தால், இது மேலும் உபயோகமா யிருக்கும். சென்னையில் உருளைக் கிழங்கு சாகுபடி யாகாது என்கிறீர்களா? நல்லது. இந்த மாதம் 1-ம் தேதி, சென்னை 'சிவில் ஆர்பன் டிவிசலம்' பான்ட் மாஸ்டர் விருதியிலுள்ள ஸ்ரீமதி டாரதி கிளார்க்குடன் பேசிக் கொண்டிருந்தேன. அதன் ஒரு பகுதியைக் கீழே தருகிறேன்.

"சென்ற நவம்பர் மாதம், 18 அங்குலம் ஆழ முள்ள ஒரு கால்வாய் வெட்டினேன். சென்ற வருஷத்திய எருவை அதில் கொட்டினேன். மொத்தமாக உருளைக் கிழங்கைப் கடையில் வாங்கினேன். அவற்றை நான் என் உக்கிராணத்தில் வைத்திருக்கும் போதே, அவற்றில் சில முளைத்து விட்டன. இது கண்ட நான், அவற்றின் கணகளை வெட்டி, அந்தக் கால்வாயில் 1 கஜத்திற்கு ஒரு முளை வீதம், கண்கள் மேல் நோக்கி யிருக்கும்படி 1 அடி ஆழத்தில் ஊன்றினேன். பிறகு அந்தக் கால்வாயை மண்ணைப் போட்டு மூடி நாள் தோறும் இரண்டு முறை தண்ணீர் ஊற்றி வந்தேன். மழை வந்த பிறகு தான் தண்ணீர் ஊற்றுவதை நிறுத்தினேன். 3 வாரங்களில் செடிகள் தலை தூக்கி விட்டன. இப்போது (2 மாதங்களில்) 2 அடி உயரம் வளர்ந்து விட்டன. இப்போது ஒவ்வொரு உருளைக் கிழங்கி லிருந்து 5 கிழங்குகள் முளைத்து விட்டன. இதோ 2 பவுண்ட் உருளைக் கிழங்கு இந்தக் கூடையில் கொண்டு வந்திருக்கிறேன்."

இதை எழுதும் போது நம் நாவில் ஊற்றெடுக்கிறது. சென்னை வாசிகளும் இம் முறையைப் பின் பற்றி உருளைக் கிழங்கைப் பயிரிடும்படி சிபார்சு செய்கிறோம். "உணவுப் பொருள்களை அதிகமாகப் பயிரிடுங்கள" என்னும் அரசாஙகத திட்டததிற்கு, இவர் பெரிதும் உதவியவராவார்.



# உணவுப் பொருள்கள் பஞ்சம் உண்மையா ?

## இதைப் போக்க பொது ஜனங்கள் ஒத்துழைக்க வேண்டும்

### கனம் என். ஆர். சர்க்கார் விளக்கம்

இப்போதுள்ள உணவுப் பஞ்ச நிலைமையைக் குறித்து இந்தியா அரசாங்கத்தார் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பஞ்சம் காரணமாக இநநாட்டில் அநேகம் பேர்கள் மகா கடுமையான கஷ்டங்களுக்கு ஆளாகின்றார்கள். **உணவு இலாக்கா** வென்று புதிதாக இடபோது அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் திட்டங்கள் வெகுவாகப் பெருகிக் கொண்டிருக்கின்றன. "**உணவுப் பொருள்கள் அதிகமாகப் பயிராக்குங்கள்**" என்னும் கோரிக்கை ஜனங்களிடையே வெகுவாகப் பரவத் தக்கபடி பல பத்திரிகைகளும் உதவின. அவற்றிற்கு நான் நன்றி செலுத்துகிறேன். நான் அந்த இலாக்காத் தலைவனாக இருக்கும் போது தான், அந்த இயக்கத்தை ஆரமபித்து வைத்தேன். அப்போது பத்திரிகைகள் இதற்கு உதவியது போலவே, இப்போதும் எனக்கு உதவு மென்று நம்புகிறேன். பத்திரிகைகள் கூறும் குறைபாடுகளைக் குறிப்பாக நிர்மாணத்திற்கான குறைகளை, எடுத்துக் கூறுவதை நான் வரவேற்கிறேன்.

இது அரசியல் கட்சிகளுக்கு அப்பார்பட்ட தோர் பிரசினை. இந்தியாவின் நன்மையில் அக்கறை யுள்ளவர்கள் அனைவரும் இதற்கு உதவ வேண்டும். இது பற்றி வியாபாரிகளுக் குள்ளும் பொது ஜனங்களுக் குள்ளும் நம்பிக்கை ஏற்படுமானால், இந்தத் தொல்லைக ளெல்லாம் ஒருவாறு நீங்கும்.

**உணவுப் பஞ்சம் உண்மையா ?**

முதல் கேளவி: உண்மையிலேயே இந்நாட்டில் தானியப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதா? "உணவுப் பொருள்களை அதிகமாகப் பயிரிடுங்கள்" என்னும் இயக்கம் தகுந்தபடி வெற்றி பெற்றிருக்கிறது. பல விடங்களில் சிறந்த அறுவடை யாகி யிருக்கிறது. என்றாலும் சில முக்கியமான பகுதிகளில் சாதாரணமாக அறுவடையாவதை விட மிகக் கொஞ்சமாகத் தான் அறுவடை யானது. ஆகவே, இந்தக் குறைபாட்டைச் சரி செய்யத் தான் சில பகுதிகளின் அதிகப்படி அறுவடை, ஈடு செய்ய உதவியது.

சென்ற வருஷம் அறுவடையான அளவிற்கு, இந்த வருஷமும் கோதுமை முதலிய தானியங்கள் அறுவடையானதாக வைத்துக் கொள்ளுவோம். (அதிகமாக அறுவடையாகக் கூடும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.) யுத்தம் ஆரம்பமாவதற்கு மூன்று வருஷங்களுக்கு முன்பிருந்து இறக்குமதியான பர்மா அரிசியையும் சாகுபடியான அரிசியையும் கொண்டு கணக்குப் பார்த்தால், இந்தக் கணக்கிற்கு 5 சதமானம் குறைவாகத் தான் இப்போது சாகுபடியாகு மென்று, புள்ளி விவரங்களிலிருந்து விளங்குகிறது. பாதுகாப்பிலாக்காவிற்கு நாம் சப்ளை செய்ய வேண்டியிருக்கிறது என்பது உண்மை தான். அதுவும், யுத்தத்திற்கு முன்பு தேவைபட்டதை விட மிக மிக அதிகமாகத் தேவைப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற 10 வருஷங்களாக உணவுக்கான தானிய சாகுபடி பற்றிய புள்ளி விவரங்களைக் கொண்டு நாம் பார்ப்போமானால், இந்த வருஷம நாம் எதிர்பார்க்கும் குறைவை விட, மிகக் குறைவாக 5 வருஷங்கள் சாகுபடியாயின வென்று தெரிய வரும். ஒரு வருஷத்தில் மட்டும் 14 சதமானம் குறைந்தது. இதுபற்றி யாரும் அஞ்ச வேண்டியதில்லை.

**ஏற்றுமதியா காரணம் ?**

இந்நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனாலா உணவுப் பஞ்சம் ஏற்பட்டது? இந்தக் காரணத்திற்குக் கொஞ்சங்கூட ஆதாரமே கிடையாது. யுத்தத்திற்கு முன்பு 3 வருஷங்களில் ஏற்றுமதியான உணவுப் பொருள்களின் சராசரி வருஷ ஏற்றுமதி யோடு, யுத்தம் ஆரம்பமானதி லிருந்து சென்ற 1942-ம் வருஷம் நவம்பர் மாதம் ஆரம்பம் வரையில் யுத்தத்தின் பொருட்டும் வெளி நாட்டவர்களின் உபயோகத்தின் பொருட்டும் ஏற்றுமதியான வருஷ சராசரியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இப்போது ஏற்றுமதியாகும் சராசரி குறைவானதாகத் தான் தெரியும். யுத்தத்திற்கு முன் மூன்று வருஷங்களில், இந்தியாவில் சாகுபடியானதில் 1 அல்லது 2 சதமான அளவு தான் இந்தியாவை விட்டு வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதியானது. யுத்த காலத்தில் பொதுவாக ஏற்றுமதியே மிகவும் சுருக்கம். சமீப காலத்தில் அது மேலும் குறைந்து விட்டது. இலங்கைக்கும் அராபியாவிற்கும் மட்டும் தான் இந்தியாவிலிருந்து இப்போது அரிசி ஏற்றுமதியாகிறது. இந்த அரிசியைத் தான், தம் உணவிற்கு அங்குள்ளவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந் நாட்டில் எந்த அளவிற்குத் தானியங்கள் கிடைக்கின்றனவோ, அதைப் பொருத்துத் தான் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை நிர்ணயிக்க வேண்டு மென்பது, அனைவரும் ஒப்புக் கொள்ளத் தக்க முறை.

**நம்பிக்கை யில்லாதது, காரணம்.**

அப்படியானால் தற்போதைய கஷ்டங் களுக்குக் காரணம் என்ன? **முக்கியமான காரணம் நம்பிக்கை யில்லாதது தான்.** மற்றும் பல காரணங்களும் உண்டு. அவையாவன :—

1. **சென்ற வருஷம் எதிரிகள் இந்நாட்டைத் தாக்குவார்கள் போலிருந்தது.**
2. **பர்மாவி லிருந்து ஓடி வந்தவர்கள் ஏராளமாக இங்கே குடி புகுந்தார்கள்.**
3. **பர்மா அரிசி இறக்குமதி ஆகாதே என்ற பயம்.**
4. **சிந்து நதியில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தாலும், வங்காளத்திலும் ஒரிசாவிலும் ஏற்பட்ட புயற் காற்றினாலும் சேதமான பயிர்களால் தகுந்த பலன் கிடைக்காது என்ற அச்சம்.**
5. **பம்பாயிலும் மற்றும் சில பகுதிகளிலும் பருவ மழை இல்லாதது.**

இந்தக் காரணங்களால் பொது மக்களின் மனம் பெரிதும் சலன மடைந்தது. ஆகவே கையிருப்புக்களை ஸ்தம்பிக்கச் செய்து விட்டார்கள். முதலாவதாக,

1. நிலைமை சீர்ப்படுகிற வரை தன் கையில் தானியம் இருக்க வேண்டும் என்னும் காரணம் பற்றி, விவசாயிகள் தம் கையிலுள்ள தானியத்தைப் பத்திரப் படுத்திக் கொள்ளுகிறார்கள். விவசாயி தன் இருப்புச் சரக்கை, விற்றாலும், தகுந்த விலை கிடைக்கிறது. அன்றியும் தானியங்களின் விலை உயர்ந்தாலும், விவசாயிகளை அது பாதிப்பதில்லை.
2. எதிர் காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு விடக் கூடுமோ என்னும் காரணத்தினால், தானியங்களைச் சமைத்துச் சாப்பிடுகிறவர்களும் கூட, தம் தேவைக்கு அதிகமாகவே வாங்கிச் சேகரித்து வைத்துக் கொள்ளுகிறார்கள்.
3. பல வித கட்டுப்பாடுகளை அரசாங்கத்தார் விதித்து விட்டார்கள்.

**இவற்றால் பொது மக்களுடைய நம்பிக்கை பெரிதும் குறைந்து விட்டது. இந்தச் சமயத்தில், உலக மக்கள் அனைவரும் துன்பத்திற்கு ஆளாகி யிருக்கும் போது, கொள்ளை இலாபம் அடிக்கத் தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் ஈவிரக்க மற்ற கொள்ளைக் காரர்கள், ஏராளமாகத் தானியங்களைச் சேகரித்து வைக்கிறார்கள்.**

**பொது மக்களுக்குள்ளும் வியாபாரிகளுக்குள்ளும் நம்பிக்கை ஏற்பட்டு விடுமானால், இத் தொல்லைகளெல்லாம் நீங்கி விடு மென்று உணவு இலாக்கா அதிகாரிகள் கருதினார்கள்.**

**கோதுமைப் பஞ்சம்.**

கோதுமைப் பஞ்சத்தை விரைவில் சமாளிக்க வேண்டி யிருக்கிறது. இதற்கு முதற் படியாக, இந்திய அரசாங்கத்தார், வேற்று நாடுகளிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்ய பிரிட்டிஷ் அரசாங்கத்தாரோடு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அடுத்த 3 மாதங்களில் கோதுமை இந்தியாவில் இறக்குமதியாகும். சென்ற வருஷம் படைகளுக்காக மட்டுந் தான் கோதுமை இறக்குமதி செய்தோம். இப்போது அப்படிக் கில்லாமல், பொது ஜனங்களின் உபயோகத்திற்கும் அது பயன் படும். இரண்டாவதாக இன்ன விலைக்கு மேல் கோதுமை விலையை உயர்த்தி விற்கக் கூடாது என்றுள்ள கட்டுப்பாடான சட்டத்தை, ரத்து செய்து விடுவதென்று இந்தியா அரசாங்க அறிக்கை பிறந்திருக்கிறது. இதனால், கோதுமை விளையு மிடங்களிலுள்ள வியாபாரிகளுக்குள் நம்பிக்கை யுண்டாகக் கூடும். மூன்றாவதாக உண்மையான நிலவரத்தை இந்தியப் பொது மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு, பிரசார முறையைக் கையாளுவ தென்று உணவு இலாக்கா முடிவு கட்டி யிருக்கிறது. கடைசியாகக் கொள்ளை இலாபமடிக்கும் நோக்கத் துடன் உணவுப் பொருள்களைத் திரட்டி வைக்கிறவர்களை முன்னதாகவே எச்சரித்து வைப்பது நல்லது. அப்படிப் பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும். அவர்கள் திரட்டி வைத்திருக்கும் பொருள்கள் பறி முதல் செய்யப்படும்.

இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமை மீண்டும் ஏற்படா திருக்க வேண்டி, இந்தியாவில் பெரும்பாலோர் உண்ணும் தானியங்கள் தேவைக்கு அதிகமாயிருப்பவற்றை வாங்கும் பொருட்டு, சில உத்தியோகஸ்தர்களை நியமிப்ப தென்று இந்தியா அரசாங்கத்தார் முடிவு கட்டி யிருக்கிறார்கள். இந்த உத்தியோகஸ்தர்கள் மாகாண அரசாங்கங்களின் உதவியைக் கொண்டும் கட்டளைப்படியும், சமஸ்தானங்களின் உதவியைக் கொண்டும் கட்டளைப்படியும் வேலை செய்வார்கள். பஞ்சாப் மாகாணத்தில் இந்த உத்தியோகஸ்தர்களை நியமித்தாகி விட்டது. இங்கே கையாளப் படும் முறைகளை மற்ற மாகாண அரசாங்கங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தவிர வேறு யாரும் ஒரு மாகாணத்தை விட்டோ சமஸ்தானத்தை விட்டோ, உணவிற்குரிய தானியங்களை வெளி மாகாணங்களுக்கு அனுப்பக் கூடாது. தேவைக்கு அதிகமா யுள்ளதை மட்டுந் தான் இந்த உத்தியோகஸ்தர்கள் விலைக்கு வாங்கி வெளி மாகாணங்களுக்கு அதாவது அந்தத் தானியப் பஞ்சம் ஏற்பட்டுள்ள மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்வார்கள். படைகளின் உபயோகத்திற்கும் அனுப்புவார்கள். இப்படி அனுப்பப்படும் தானியங்களை அந்த மாகாணங்களி லுள்ள வியாபாரிகள் திரட்டி வைத்துக் கொள்ளாதபடியும், பொது மக்களுக்குக் கிடைக்கத் தக்கபடியும் ஏற்பாடுகள் செய்ய வேண்டியது, அந்தந்த மாகாண அரசாங்கங்களின் பொறுப்பாகும். இதனால் ஏற்றுமதிக்குப் போட்டி யில்லாது போய் விடுகிறது. அரசாங்கத்தாரே கொள் முதல் செய்து, பொது ஜனங்களுக்கு விற்பதனால், விலையும் வெகுவாக உயர மாட்டாது. இதற்கு, உணவுகளுக்கான தானியங்களின் போக்கு வரவைக் கட்டுப்படுத்த, அரசாங்கத்தாருக்கு ஆதிக்கம் இருக்க வேண்டும்.

இனி அமுலுக்கு வரப்போகிற திட்டத்தின் சுருக்கம் இது தான். இதற்கு இடையில் உணவு இலாக்கா, உணவுப் பஞ்சம் உள்ள இடங்களுக்குக் கூடிய வரை உதவிக் கொண்டு தானிருக்கிறது. அரிசி தினை முதலிய தானியங்களை பம்பாய், திருவாங்கூர், கொச்சி, டில்லி முதலிய ஊர்களுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள எல்லோருக்கும் உணவுப் பொருள்களைப் பகிர்ந்து கொடுப்பது மிகவும் கஷ்டமான தோர் காரியம். நகரங்களிலும் கைத்தொழில் பகுதிகளிலும் பகிர்ந்து கொடுப்பது சாத்திமாகவிருக்கலாம். பகிர்ந்து கொடுக்கும் முறையை கையாள வேண்டிய அவசியம் நேருமானால், அப்படிச் செய்ய மாகாண அரசாங்கங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டு மென்று தெரிவிக்கப் பட்டிருக்கிறார்கள்.

தற்போதுள்ள நிலையைக் குறித்தும் இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டி என்னென்ன முறைகள் கையாளப் பட்டிருக்கின்றன வென்பது பற்றியும் ஒருவாறு தெளிவாக்கி யிருக்கிறே னென்று நினைக்கிறேன். இன்னும் பல வகைத் தொல்லைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் வெல்ல உறுதி கொண்டிருக்கிறோம். பொது ஜனங்களும், பத்திரிகைகளும், பொது ஜனத்தலைவர்களும் எந்த அளவிற்கு உதவி ஒத்துழைக்கிறார்களோ அந்த அளவிற்குத் தான் இந்த முயற்சி வெற்றி தரும். ஆகவே, பொது ஜனங்களுக்கு இப்போது கவலையைப் போக்கி மீண்டும் நம்பிக்கை யுண்டாகும்படி செய்ய, நாம் தகுந்தபடி பிரசாரத்திற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டிய தவசியம்.

## மகத்தான வெற்றி

உலக சரித்திரத்திலேயே மகா மகத்தான முறையில் நம் எட்டாம் படை ஆப்பிரிக்காவில் முன்னேறிப் போய் வெற்றி கண்டது. எருசலேமை நோக்கி பண்டைக் காலத்தில் அலென்பி படை யெடுத்துப் போனார். கிரேக்க நாட்டிலிருந்து மகா அலெக்ஸாந்தர் இந்தியாவிற்குப் படை யெடுத்து வந்தார். சின்ன ஆசியா மூலம் செனபோன் தன் 10,000 பேர்களைக் கொண்ட பெரும் படையை நடத்திக் கொண்டு கடற் கரையை யடைந்தார். அலமீனிலிருந்து திரிபோலிக்கு ஜெர்மானியர்கள் ஓடிய ஓட்டத்திற்கும், அவர்களை பிரிட்டிஷ் படைகள் விரட்டிய விரட்டிற்கும், இவை ஒன்றுவது நிகரில்லை. டானியூப் நதி வழியாக ஐரோப்பாவிற்குள் மால்பரோ மின்னல் போல் பாய்ந்து வந்திருக்கலாம். என்றாலும், ஜெனரல் அலெக்ஸாந்தர் அடைந்த புகழுக்கும் மான்ட்காமரிக்குக் கிடைத்த மகத்தான வெற்றிக்கும் மால்பரோவின் பாய்ச்சலை ஒப்பிட்டால், அது மகா அற்ப மாகத் தான் தோன்றும். இந்த யுத்தத்தில் வெற்றி பெற வேண்டி, எந்தெந்த வகைகளில் துன்பப் பட நேரும் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு, நம் படையினரின் வெற்றி விழாக் கொண்டாடும் போது, கடவுளுக்கு நன்றி செலுத்துவோமாக !

—" டெய்லி எக்ஸ்பிரஸ் "



# அமெரிக்காவிற்கு பிரிட்டிஷ் உதவி

## இரகசியமாய் வைத்திருக்க வேண்டியதன் அவசியம்

**" லிபர்டி " பத்திரிகை அமெரிக்காவி லிருந்து வெளி வருவது. இதன் அரசியல் நிருபர் தான், வால்டர் காரிக். இவர் சமீபத்தில் தன் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதி யனுப்பி யிருக்கிறார். அது வெளியானது. பிரிட்டிஷார் மீது குறை கூறுகிறவர்களுக்கு இக்கட்டுரை சரியானபடி பதில் கூறுகிறது. அக் கட்டுரையின் சுருக்கமாவது :—**

ஏதேதோ பேசுகிறார்கள். என்னென்னமோ எழுதுகிறார்கள். இவற்றைக் கேட்கிறீர்கள் ; படிக்கிறீர்கள். உங்கள் மனதில் உடனே உண்டாகும் எண்ணம் என்ன ? அமெரிக்காவி லிருந்து தான் தளவாடங்கள் பிரிட்டனுக்குப் போகின்றனவே யொழிய, பிரிட்டனி லிருந்து அமெரிக்காவுக்கு எந்த விதத் தளவாடமும் வருவதில்லை என்று தான் சாதாரணமாக எண்ணுவீர்கள். அன்றியும் பிரிட்டன் ஒரு தூரில்லாத குடுக்கையைக் கையிலேந்திக் கொண்டு நிற்பது போலவும், அமெரிக்கத் தொழிற்சாலைகளிலிருந்தும் பண்ணைகளி லிருந்தும் நாம் தாராளமாக அந்தக் குடுக்கையில் கொட்டி வீணாக்கி விடுவதாகவும் நினைக்கிறீர்கள். இப்படிப்பட்ட எண்ணம் உங்களுக்கு ஏன் ஏற்படவேண்டும் ?

**அமெரிக்கப் படைகளுக்கு பிரிட்டன் செய்திருக்கக் கூடிய உதவிகளைக் குறித்து விளம்பரம் செய்யப்பட வில்லை. ஏனென்றால், அது யுத்த ரகசியம். பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியர் கைப்பற்றி முடியு முன்னதாகவே, விமான எதிர்ப்புப் பீரங்கிகளை பிரிட்டன் அமெரிக்காவிற்கு விரைவாகக் கொண்டு வந்து சேர்த்து விட்டது. இதன் பயனாக அமெரிக்க மேல் கரையி லிருந்து ஆசியாவின் கீழ்பாகம் வரை எதிரி விமானங்கள் தலை காட்ட ஒட்டாதபடி செய்து விட்டது.**

இது பற்றிய முழு விவரங்களையும் நாம் வெளியிடுவதற்கில்லை. ஏனென்றால், இதை எதிரி அறிந்தால், எச்சரிக்கையாகி விடுவான். குருட்டுத் தனமாக நம் அரண்களில் மோதி மண்டையை உடைத்துக் கொள்ளாமல், தப்பிக் கொள்ளுவான்.

**இரகசியத்தின் அவசியம்.**

அமெரிக்காவை யடுத்துள்ள கடலில் எதிரி நீர் மூழ்கிக் கப்பல்கள் உண்டு. இவை கடல் நீருக்குள்ளும் கடல் மட்டத்திலும் மிகுந்த சேதத்தை விளைத்துக் கொண்டிருந்தன. இவற்றை வேட்டை யாடுவதற்கும், பிரிட்டன் தான் நமக்கு நீர்மூழ்கிகள் கொடுத்து உதவினது.

" இச் செய்தியை மிகவும் இரகசியமாக வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது ; இதை இரகசியமாய் வைத்திருப்பதனால், ஒரு வகைத் தீமையும் உண்டாகிறது. அதாவது, ஆங்கிலேயர் மீது சதா குறை கூறிக் கொண்டிருக்கிறவர்களும் அமெரிக்காவில் இருக்கிறார்கள். பிரிட்டானியர்களை இவர்கள் அலட்சியப் படுத்துகிறார்கள். ' ஒரு அமெரிக்கன் உயிரோ டிருக்கு மட்டும் பிரிட்டிஷார் போராடுவார்கள் ' என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இவை எல்லாம் உண்மையிலேயே பிரிட்டனை இழிவு படுத்தும் வார்த்தைகள். பிரிட்டன் அமெரிககாவுக்கு செய்துள்ள உதவிகளை அவர்கள் அறிந்திருந்தால், இப்படி யெல்லாம் பேச மாட்டார்கள். துரதிஷ்ட வசமாக இந்த முழு விவரத்தையும் இரகசியமாகவே வைத்திருக்க வேண்டி யிருக்கிறது. "

தருணம் விரைவில் வரும். அப்போது, அமெரிக்காவும் யுத்தத்தில் ஈடுபட நேர்ந்த வுடனே, வெளி நாடுகளுக்கு யுத்த தளவாடங்களை ஏற்றுமதி செய்து கொண்டிருந்த அமெரிக்கா, தன் படைகளைத் தகுந்தபடி சித்தப்படுத்த வேண்டி, வெளி நாடுகளிலிருந்து எப்படி யுத்தத் தளவாடங்களை இறக்குமதி செய்தது என்பது பற்றி, வெகு தெளிவாக வெளியிடலாம்.

**பிரிட்டிஷார் செய்த உதவி என்ன ?**

பிரிட்டிஷாரின் சார்பாக நாம் பிரசாரம் செய்யவில்லை. இது வரை இங்கிலீஷ்காரர்கள் என்ன செய்தார்கள் ? இப்போது என்ன செய்கிறார்கள் ? என்று கவனிப்போம்.

**இவர்கள் மகா சிறந்த முறையில் தம் வேலைகளைச் செய்திரா விட்டால், இப்போது வின்சர் அரண்மனையில் ஹிட்லர் குடி புகுந்திருப்பார். கனடாவிலுள்ள ஆட்டாவாவிலும் கூட தன் படைகளைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு அமெரிக்காவையும் தாக்க முயற்சித்திருப்பார்.**

" இரண்டு வருஷங்களுக்கு முன்பு தான் நாஜிகள் தம் முழு பலத்தோடும் ஆதிக்கத் தோடும் பிரிட்டனுக்கு 20 மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு இடைவிடாது தாக்கிக் கொண்டிருந்தார்கள். இது பழைய கதையா யிருக்கலாம். என்றாலும் இதை மறக்க முடியாது. "

" இந்த யுத்தத்தில் பிரித்தானியர்களின் பங்காளிகளாக நாம் இருக்கிறோம். அது போலவே, யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்படும் போதுங் கூட, இருப்போம். ஆகவே, இது வரை பிரிட்டிஷார் செய்ததும் இப்போது செய்வதும் நமக்கு மிகவும் முக்கியமானவை. **பரிபூரண யுத்தம் என்றால் என்ன என்பதற்கு பிரிட்டன் ஒரு எடுத்துக் காட்டா யிருக்கிறது. இனி நாமே அதை உணரப் போகிறோம்.** இப்போது, சர்க்கரை, காசோலின், மோட்டார் டயர்கள் முதலியவற்றை தேவைக்குத் தக்கபடி கட்டுப்படுத்தி கொடுப்பது, சற்று கஷ்டமாகத் தோன்றலாம். ஆனால், இதுவே கூடிய சீக்கிரம் ஒரு வேடிக்கையாகத் தோன்றப் போகிறது. ஒருக்கால் நமக்குப் பட்டு மேல் ஜோடுகளும் கால் சட்டைப் பொத்தான்களும் கிடைக்காமல் போகலாம். ஆனால் இந்த யுத்தம் இன்னும் வெகு காலம் தொடர்ந்து நடக்குமானால் நம் வாழ்க்கை எப்படி யமையுமென்று கவனிக்க வேண்டும். நெடுநாட்களாக பிரிட்டிஷார் எவ்வளவு கொடிய தியாகங்களுக்கு உள்ளாகி யிருக்கிறார்களோ, அவற்றிற்கு நாமும் உள்ளாக நேரும்.

**பரிபூரண முயற்சி.**

இங்கிலாந்திலுள்ள ஒவ்வொருவரும் யுத்தத்தில் வெற்றி பெறும் பொருட்டு திரண்டு விட்டார்கள். அது போலவே, எல்லாப் பொருள்களையும் யுத்தத்திற்காகவே பயன் படுத்தினார்கள். இங்கிலாந்திலுள்ள ஆண், பெண் அத்தனைப் பேர்களிலும் மூன்றில் இரண்டு பங்குப் பேர்கள் படைகளிலும், உள் நாட்டுப் பாதுகாப்புக்காகவும், யுத்தத் தொழிற் சாலைகளிலும் உழைக்கிறார்கள். அதாவது 14 வயதிற்கு மேற்பட்டு 65 வயதிற்கு உட்பட்டவர்களில் உடல் பலமுள்ள அனைவரும் இத்தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். 18½ முதல் 51 வயதுவரை யுள்ளவர்கள் கலியாணமாகாதிருந்தால், அவர்கள் அனைவரும் படையில் சேரவேண்டும், அல்லது இன்றியமையாத யுத்தத் தொழில் செய்கிறவர்களாக இருக்கவேண்டும்.

சென்ற வருஷம் யுத்தத்திற்காக பிரிட்டனிலிருந்து போர்முனைக்கு அனுப்பப்பட்ட விமானங்களில் நான்கில் ஒரு பங்கு விமானங்கள் தான் அமெரிக்காவி லிருந்து பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தவை. அன்றியும் இங்கிலாந்து, போர் முனைக்கு 15 டாங்கிகள் அனுப்பினால், நாம் ஒரு டாங்கி விகிதந் தான் இங்கிலாந்திற்கு அனுப்பினோம்.

(12-ம் பக்கம் பார்க்க.)

2-ம் பக்கம்—(தொடர்ச்சி).

பிரான்சிலுள்ள முக்கியமான நீர் மூழ்கிக் கப்பல் தளம் லோரீண்ட் என்னு மிடத்தி லிருக்கிறது. இதை பிரிட்டிஷ் விமானப் படை கடுமையாகத் தாக்கியது.. இங்குள்ள தொழிற் சாலைகளில் இப்படகுகளில் உண்டாகும் கடுமையான பழுதுகளை எல்லாம் செப்பனிடுகிறார்கள். 40 நீர் மூழ்கிகள் இருக்கத் தக்க 2 தளங்களை வளைத்துக் கட்டி யிருக்கிறார்கள். மற்றொரு தளத்தையும் கட்டி யிருக்கிறார்கள். இதில் 10 நீர் மூழ்கி படகுகள் தங்கலாம்.

அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஸ்டிம்ஸன் கூறியதாவது :—

தற்போதைய யுத்த நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்தால், நேச நாடுகளுக்கு மிகச் சிறந்த பருவமாகத் தான் தோன்றுகிறது. என்றாலும் ஜெர்மன் நீர்மூழ்கி படகுகளினால் மூழ்கடிக்கப்படும் நேச தேசக் கப்பல்களைப் பற்றித் தான் நாம் கவலை கொள்ள வேண்டி யிருக்கிறது. இந்த நீர்மூழ்கி படகுகளைக் கொண்டே இந்த யுத்தத்தில் வெற்றி பெற்று விடலாமென்று ஹிட்லர் நினைக்கிறதாகத் தெரிகிறது.

இந்த நீர் மூழ்கி படகுகளின் தொல்லைகளைத் தவிர்க்க நேசநாடுகள் என்னென்ன முறைகளைக் கைக்கொண்டிருக்கின்றன ? பிரிட்டிஷ் தீவுகளில் ஆகாய ரோந்துகள் வெகுவாக அதிகப்படுத்தி யிருக்கிறார்கள். ஆகவே இங்கிலாந்துக் கரையை யடுத்து 3 மைல் தூரம் வரை இந்த நீர்மூழ்கி படகுகள் வர, அவற்றிற்குத் தைரியம் கிடையாது என்று பிரிட்டிஷ் விமான மந்திரி சர் ஆர்ச்சிபால்ட் சிங்கிளேர் கூறினார். சென்ற நவம்பர் மாதம் நம் படைகள் இங்கிலாந்திலிருந்து வடாப்பிரிக்காவிற்குப் போன போது, அப்படைகளை ஏற்றிப் போன கப்பல்களுக்குத் துணையாக 12½ லட்சம் மைல்கள் பிரிட்டிஷ் கரைகாவல் விமானங்கள் பறந்து வந்தன. ஆகாயத்தில் நேச நாட்டு விமானங்கள் காவல் புரிவதனால், நீர்மூழ்கி படகுகள் அப்பக்கம் தலைகாட்ட முடியவில்லை. இப்போது பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் நீர்மூழ்கி எதிர்ப்புப் பீரங்கிக் கப்பல்களும் நாசகாரிக் கப்பல்களும் தான் வெகுவாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**அமெரிக்காவில் ஏராளமான கப்பல் உற்பத்தி.**

சென்ற வருஷம் அமெரிக்காவில் ஏராளமாகக் கப்பல்கள் கட்டினார்கள். 1941-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 9 கப்பல்கள் (86,185 டன்கள்) கட்டினார்கள். 1942-ம் வருஷம் செப்டெம்பர் மாதத்தில் 93 கப்பல்கள் (1,009,800 டன்கள்) கட்டினார்கள். 1942-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் 1 நாளைக்கு 1 கப்பல் வீதமும் டிசம்பர் மாதத்தில் 1 நாளைக்கு 4 கப்பல்கள் விகிதமும் கட்டினார்கள். இன்னும் 3 மாதங்களில் அதாவது அடுத்த மே மாதத்தில் 1 நாளைக்கு 5 கப்பல்கள் விகிதம் கட்ட வேண்டு மெனத் திட்டமிட்டிருக்கின்றனர். நீர் மூழ்கிப் படகுகளால் மூழ்கடிக்கப்படும் கப்பல்களின் எண்ணிக்கையை விட அதிக மாகவே நேச நாடுகள் கட்டி முடிக்கின்றன.

வெற்றி பெற, கப்பல்கள் மிகவும் அவசியம். சரளமாகப் போக்கு வரவு செய்யத் தக்கபடி எந்த அளவிற்குக் கப்பல்கள் நம் வசம் இருக்கின்றனவோ, அந்த அளவிற்கு வெற்றி சமீபிக்கும். இதே விஷயத்தை வலியுறுத்தி சென்ற 1942-ம் வருஷ ஜூலை மீ 20உ ஜப்பான் ரேடியோ மூலம் ஒருவர் கூறியதாவது :—

"கப்பல்களில் தமக்கு இடங் கிடைக்க வேண்டு மென்பதற்காகத் தான் இந்த யுத்தமே நடக்கிறது. கப்பலில் இடம் கிடைக்காத நாடு, தோற்க வேண்டியது தான்."

பொருள்கள் தயாராகும் இடத்திலிருந்து போர் முனைக்கு அவற்றை அனுப்ப வேண்டுமானால், தூரம் அதிகமாக ஆக, அதிகக் கப்பல்கள் தேவைப்படும். அப்போது தான் சப்ளைகளைத் தகுந்தபடி அனுப்ப முடியும். வட அமெரிக்காவிற்கும் முக்கியமான நேச நாட்டுத் தளங்களுக்கும் உள்ள தூரம் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது :—

| | | |
|---|---|---|
| அமெரிக்காவிலிருந்து | லண்டனுக்கு .. | 4,000 மைல்கள். |
| ஷை | மாஸ்காவுக்கு (பாஸ்ரா வழியாக) .. .. | 14,000 ,, |
| ஷை | ரூங்கிங்குக்கு .. | 13,000 ,, |
| ஷை | கல்கத்தாவுக்கு .. | 12 000 ,, |
| ஷை | சிட்னிக்கு .. | 7,000 ,, |
| ஷை | கெய்ரோவுக்கு .. | 12,000 ,, |
| பிரிட்டனி லிருந்து | மாஸ்கோவுக்கு (வட துருவக் கடல் வழியாக). | 4,000 ,, |
| ஷை | ரூங்கிங்குக்கு .. | 13,000 ,, |
| ஷை | கல்கத்தாவுக்கு.. | 12,000 ,, |
| ஷை | சிட்னிக்கு .. | 12,000 ,, |
| ஷை | கெய்ரோவுக்கு .. | 12,000 ,, |

கப்பல்கள் தகுந்த துணைகளுடன் 10,000 மைல்கள் போய் தாம் ஏற்றிப் போகும் சரக்குகளை 10,000 மைல்களுக்கு அப்பால் இறக்கி விட்டுத் திரும்பி வந்து சேர, 12 வாரங்கள் செல்லுகிறது. உதாரணமாக இங்கிலாந்தி லிருந்து 10 லட்சம் டன் தளவாடங்களை இந்தியாவிற்கு அனுப்ப வேண்டு மென்று வைத்துக் கொள்ளுவோம். உள்ளது 100 கப்பல்கள் தான். ஒரு கப்பலுக்கு 5,000 டன்கள் சப்ளை வீதம் ஏற்றி அனுப்பிக் கொண்டிருந்தாலுங்கூட, 6 மாத காலம் வரை அந்த 100 கப்பல்களும் வேறு எந்த விதமான வேலையும் செய்ய முடியாது. 200 கப்பல்கள் இருக்கு மானால் 3 மாதத்தில் அவற்றை அனுப்பி விடலாம். இந்த முக்கியமான பகுதியைத் தான், நாம் பொதுவாக மறந்து விடுகிறோம்.

**வெற்றி தரும் வைர முள்.**

வெற்றி தரும் வைர முள் தான், கப்பல் போக்குவரவுகள். ரஷ்யாவிற்கும், வடாப்பிரிக்கா விற்கும், மத்திய கிழக்குப் போர் முனைக்கும், இந்தியாவிற்கும், சீனாவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் தொடர்ச்சியாக சப்ளைகள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ஜெர்மன் நீர்மூழ்கி படகுகள் கை ஓங்காதபடி தடுக்கத் தக்க அளவிற்கு, நேச நாடுகளின் கப்பல் பலம் அமைந்திருக்கிறது. இது பற்றி பீல்ட் மார்ஷல் வேவல் கூறியதாவது :—

"வடாப்பிரிக்கப் படைகளுக்கு சப்ளைகள் போய்க் கொண்டிருந்ததனால், இந்தியாவி லுள்ள படைகளுக்கு வந்து கொண்டிருந்த சப்ளைகள் பாதிக்கப்பட வில்லை. இதிலிருந்து தேவைக்கதிகமான கப்பல் பலம் நமக்கிருக்கிற தென்றும், அதனால் தான் எதிரிகள் நம்மை யணுக வில்லை யென்றும் தெரிகிறது. இது போதாது. பல விடங்களிலும் நம் கப்பல்கள் ஆதிக்கம் செலுத்தத் தக்கபடி ஏராளமான கப்பல்கள் இன்னும் கட்டப்பட வேண்டும் இதைத் தடுத்து விடத் தான், ஹிட்லர் வீணாக அரும்பாடுபடுகிறார்."

### "போர் விமானங்களும்" "விமான தளங்களும்"

இனி "விமானங்கள்" என்பதற்குப் பதிலாக "போர் விமானங்கள்" என்றும் "விமான நிலையங்கள்" என்பதற்குப் பதிலாக "விமான தளங்கள்" என்றுந் தான் இராணுவத்தார் வழங்க வேண்டு மென்று ஒரு இராணுவக் கட்டளை பிறந்திருக்கிறது. பிரிட்டிஷ் விமானப் படையினர், "போர் விமானங்கள்" என்றும் "விமான தளங்கள்" என்றுந் தான் வழங்குகிறார்கள். அதே முறையை யொட்டித், தான் இந்த உத்திரவும் பிறந்திருக்கிறது.



# ஹிட்லர் எங்கே?

ஹிட்லர் ஜெர்மனியிலே கொட்ட மடிக்க ஆரம்பித்து, சென்ற வாரத்தோடு பத்து வருஷங்கள் பூர்த்தியாகி விட்டன. ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றிய நாளை ஜெர்மனியிலே சென்ற ஒன்பது ஆண்டுகளாக மிக தடபுடலாகக் கொண்டாடி வந்திருக்கிறார்கள். அன்றையத் தினம் ஹிட்லர் ஆடம்பரமாக மேடை மீது தோன்றி, தொண்டை கிழிய, மணிக் கணக்கில் கத்துவார். சொல்லி வைத்தாற் போல, ஐந்து நிமிஷங்களுக் கொரு தடவை, எதிரே கூடியிருப்பவர்கள் எல்லாம் கரகோஷம் செய்வார்கள். ஹிட்லர் பேசப் போகிறார் என்றால், அதில் ஏதாவது முக்கியமான விஷயம் இருக்கும் ; அது என்ன என்று கேட்க வேண்டு மென, உலகிலே பல பாகங்களில் உள்ளவர்களும் ரேடியோவிற்கு முன்னால் போய் உட்கார்ந்திருப்பது வழக்கம். ஹிட்லர் பேசும் பொழுதும், அவரது சீடப் பிள்ளைகள் கைகளைத் தட்டும் பொழுதும், ரேடியோப் பெட்டியே உடைந்து போய் விடும் போலிருக்கும்.

ஆனால் இவ்வருடம் நடந்த கதையே வேறு. இவ்வளவு காலமாக, தட்டிக் கேட்க ஆளில்லை. ஆகவே, தம்பி சண்ட ப்ரசண்டனாக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தான். இப்பொழுதோ, ஹிட்லர் பேசப் போகும் நேரத்தை ஞான திருஷ்டியால் அறிந்தவர்கள் போல, அதி தைரியமாகவே பிரிட்டிஷ் விமானிகள் பட்டப் பகலிலே பதினொரு மணி சுமாருக்கு பெர்லின் நகர் மீதிலே பறந்து குண்டுகளை அட்சதைகளைத் தூவுவது போல் தூவி விட்டார்கள். அதனால் 11 மணிக்கு ஆரம்பமாவதற் கிருந்த பிரசங்கம், 12 அடித்து 9 நிமிஷங்களுக்குத் தான் ஆரம்பமாயிற்று. 'மன்னிக்க வேண்டும். இதோ ஆரம்பமாகப் போகிறது. இன்னும் சில நிமிஷங்கள், இன்னும் சில நிமிஷங்களே தான் !' என்று நான்கு முறை பெர்லின் ரேடியோக்காரர்கள் உலகோரைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ள வேண்டி வந்தது. இதற்குக் காரணம் என்ன வென்று அவரிடம் கேட்டிருந்தால், 'ராகு காலம் கழியட்டும் என்றிருந்தோம். வேறொன்றுமில்லை' என்றே பதில் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறோம்.

அட ! நேரங் கழித்துத் தான் பிரசங்கம் ஆரம்பமாயிற்று. ஹிட்லர் வந்தாரோ ? அது தான் இல்லை. கீழ்த் திசையிலே நடக்கும் யுத்தங் காரணமாக, அவர் தனது தலைமை ஸ்தானத்திலேயே தங்க வேண்டி வந்து விட்டதாம். எத்தகைய வருந்தத் தக்க செய்தி பாருங்கள் ! அவருக்காக நடக்கும் விழா ; அதில் அவரே கலந்து கொள்ள முடியாத மோசமான நிலைமையை உண்டாக்கி விட்டார்கள் இந்த பிரிட்டிஷ்காரர்களும், ருஷ்ய யமன்களும். தன்னைப் பற்றி நினைக்கும் பொழுதே, உலகோர் கிடு கிடென நடுங்கின காலம் எல்லாம் போய், தனது வீழ்ச்சியை அதி சீக்கிரத்திலேயே எல்லோரும் நிச்சயமாக எதிர் பார்த்திருக்கும் நிலைமை வந்திருப்பதை நினைத்துப் பார்த்து, அப்படியே ஹிட்லர் மன முடைந்து போயிருப்பார் என்றே நினைக்கிறோம். வெளியில் தலைகாட்டக் கூட, அவருக்கு வெட்கமாக இருக்கும். **அவர் சொல்லி வந்த வார்த்தைகள் எல்லாம் உண்மையாகிக் கொண்டிருந்த வரை, அவர் தைரியமாகவும் பகிரங்கமாகவும் நாலு பேர்கள் முன்னால் பேசி வந்தார். ஆனால், தான் சொல்லிய வார்த்தைகள் எல்லாம் பொய்யாகி, 'உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணு, அதுவும் போச்சுடா, அரோஹரா' என்று ஆகி விட்டால், அவர் தான் என்ன செய்வார்?**

வெளியில் முகத்தைக் காட்ட மன மில்லாது, தனது கையாட்களான கொயரிங்கையும், பிரசாரப் புளுகரான கப்பல்ஸ் துரையையும் தூண்டி விட்டு, ஜெர்மன் மக்களிடம் ஒரு அழுகை அழச் செய்திருக்கிறார். அழுகை முடிவில் ஒரு மிரட்டும் மிரட்டச் செய்திருக்கிறார். இவ்வாறு செய்வானேன் ?

**ஸ்டாலின் கிராடில் ரஷ்ய வெற்றி.**

அதற்கு முக்கிய காரணம் ஸ்டாலின்கிராட் நகரிலே பட்ட அவமானம் தான். அது தவிர ருஷ்யாவின் இதர பாகங்களில் அவரது படைகள் படும் இடியும் உதையும், வட ஆப்பிரிக்காவிலே ரோமல் எடுத்த ஓட்டமும் அவரது மனதைத் தகர்த்திருக்கக் கூடும். பொறுக்கி எடுத்த மூன்றே கால் லக்ஷம் வீரர்களை ஸ்டாலின்கிராடு நகருக்கு அனுப்பினார். 'இதோ பிடிக்கப் போகிறார்கள் பாருங்கள்' என்றார். ஆனால் அவரது வீரர்களைத் தான் சனியன் சரியாகப் பிடித்துக் கொண்டது. சென்ற வாரக் கடைசிக்குள் அவர்களனைவரையும் ஒரு தினுசாகத் தீர்த்து விட்டார்கள் ருஷ்யர்கள். ஜெனரல் வான் பாலஸ் என்றொரு ஜெர்மன் சூரர். இவர் தான் ஸ்டாலின்கிராடை ஜெயித்து வெற்றி மாலை சூட எண்ணி யிருந்தார். ஆனால் இன்று இவர் அங்கே ஒரு வீதியிலே, ஒரு வீட்டினுள் பதுங்கிக் கொண்டிருக்கிறார். இவரது உண்மை சகாக்களாக உள்ள சிலர், அர்த்த மில்லாது, தம் சக்தியை விடப் பல மடங்கு அதிகமான ஆட்களோடு போராடுகிறார்கள். அவர்க ளனைவரையும் பலியாகக் கொடுத்த பின்னரே, அவர் சரணடைவார் போலிருக்கிறது. **ஸ்டாலின்கிராடிலே வேறு பல படைத் தலைவர்கள் தங்கள் ஆட்களோடு மரியாதையாக, ஹிட்லரின் ஆக்ஞையையும் மீறி, சரண மடைந்தார்களாம்.** நாளைய ஜெர்மனி எப்படி யிருக்கும். இப்பொழுது அட்டகாசம் செய்யும் ஹிட்லரின் கதி என்ன ஆகும் என்பதை நேரில் பார்க்க அவர்கள் ஆசைப்படுகிறாப் போலிருக்கிறது.

ஸ்டாலின்கிராடு நகரை மீண்டும் புதுப்பிக்கத் தீவிர ஏற்பாடுகள் நடக்கின்றன. இதே சமயம் வீர ருஷ்யர்கள் மளமளவென, உத்சவ காலங்களில் விடப்படும் எரி வாணங்களைப் போல, அங்கு மிங்கும் அதிவேகமாகப் பாய்ந்து செல்லுகிறார்கள். காகஸஸ் பிரதேசத்திலே கிட்டத் தட்ட இரண்டு லக்ஷம் நாஜிப் படைகள் பின் வாங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களைத் துரத்தி விட்டு மெய்காப் எண்ணெய் வயல் பிரதேசத்தையும், இது போன்ற வேறு பல முக்கியமான இடங்களையும் ருஷ்யர்கள் கைப் பற்றி வருகிறார்கள். இப்பிரதேசத்தின் தலைநகரான க்ராஸ்னடாரை விட்டு விட்டு, கருங்கட லோரத்தில் உள்ள நோவோரோஸிஸ்க் என்ற இடத்தை நோக்கி ருஷ்யர்கள் முன்னேறுகிறார்கள். ஆகவே ஸ்டாலின்கிராடிலிருந்தோர் கதையும் இங்குள்ளவர்கள் கதையும் ஒன்றாகும் எனத் தோன்றுகிறது. இவை தவிர, கர்ஸ்க், கார்க்கோவ் நகரங்களுக்கு வெகு சமீபத்திலே போய்விட்டார்கள் ருஷ்யர்கள்.

வடக்கே லெனின்கிராடருகே பயங்கர யுத்தங்கள் நடக்கின்றன. அந்நகரை நாஜிகளின் பூத பீரங்கிகள் பிரமாதமாகச் சுடுகின்றன. மத்ய ருஷ்யாவிலும் ருஷ்யர்களின் கை வலுத்திருக்கிறது.

**கப்பல்ஸ் உண்மையை கக்குகிறார்.**

ருஷ்யர்கள் இப்படி வெளுத்து வாங்கிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களைப் பார்த்து, 'கிழக்கே யிருந்து வரும் பயங்கர வெள்ளம்' என்று கப்பல்ஸ் துரை சொன்னதில் தவறென்ன இருக்கிறது ? ஆனால், இப்பொழுது பலமாக அடி விழும்பொழுது தானே உண்மையைக் கக்குகிறார்கள் ? "அடி உதவுவது போல் அண்ணன் தம்பி எல்லாம் உதவ மாட்டா" ரய்யா ! ஒரு குடையால் விபாண்டகர் தன் மகனை ரிஸ்யச்ருங்கரை மறைத்தது போல், ஒரு ஆளை வேண்டுமானாலும் மறைக்கலாம். ஒரு குடையால் ஒரு மலையை மறைக்க முடியுமா ? ருஷ்யாவிலே மலை மலையாகத் தானே ஜெர்மனியப் பிணங்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றை, 'ருஷ்யாவில் அப்படி நாம் ஒன்றும் சளைத்துவிட வில்லை' என்று ஒரே பொய்யால் மறைத்து விட முடியுமா ?

விஷயம் பூருவும் வெளி யாகாமல் போய் விடாது. அவ்வாறு வெளியாவது திடீரென வெளியாகி விட்டால், ஜெர்மன் மக்கள் பொங்கி எழக் கூடும் என்பதற்காகத் தான், சர்க்கரை முலாம் பூசப் பெற்ற கொயினு மாத்திரைப் போல், கசப்பான செய்திகளைப் பல வார்த்தைகளால் மூடி, அவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக ஜெர்மன் மக்களுக்குப் புகட்டச் செய்திருக்கிறார் ஹிட்லர்.

'வெற்றி என்பது செல வில்லாமல் கிடைக்கக் கூடிய பண்டமல்ல ஐயா!' என்ற உண்மையை ஏதோ புதிதாகக் கண்டு பிடித்து விட்டது போல் தன் மக்களுக்குச் சொல்லச் சொல்லி யிருக்கிறார் ஹிட்லர்.

**'இன்றையத் தேதியில் இரண்டே இரண்டு விஷயங்கள் தான் நமது கவனத்தி லிருக்க வேண்டும். ஜெர்மனியும் அதன் சகாக்களும் ஜெயிக்க வேண்டும். இல்லாவிட்டால், பழமையான நாகரிக முதிர்ந்த நமது நாடு, கீழ்த் திசையிலிருந்து வரும் வெள்ளத்தில் முழுகிப் பாழாக வேண்டியது தான். இப்பொழுது ஸ்டாலின் கிராடு, ஆப்பிரிக்கா போன்ற பிரதேசங்களில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் எல்லாம் பிரமாத மில்லை. நாளை கீழ்த் திசையி லிருக்கும் காட்டுமிராண்டிகள் நமது நாட்டிலே பாய்ந்து வந்து விட்டால், நாம் படக் கூடிய அவஸ்தைகள் அனந்தம். விதி அளிக்கும் அடிகளை வீரனே ஏற்க முடியும். நமது நாட்டில் உள்ளவர்கள் உயிரைத் திரணமாக மதிக்க வேண்டும். கஷ்டத்தைப் பொருட் படுத்தக் கூடாது' என்று சொல்லி யிருக்கிறார் ஹிட்லர்.**

**கோயரிங் முகாரி.**

கோயரிங் தனது முகாரி ராகக் கீர்த்தனையிலே, 'ஏமாந்தோ மய்யா, ருஷ்யா பின்லாந்துடன் நடத்திய போரை கண்டு' என்று பாடி யிருக்கிறார். ஒறு சிறு நாடான பின்லாந்துடன் போராடச் சக்தியற்ற ருஷ்யாவை, பத்து வாரங்களில் ஊதித் தள்ளி விடுவது பிரமாதமா என்ன என்று எண்ணினார்கள் போலிருக்கிறது கோயரிங் கோஷ்டியார். ஆனால், அதற்கப்புறம் ஜெர்மனிய நிபுணர்கள் ருஷ்யாவிற்குப் போய் வந்தார்களாம். அவர்கள் கொணர்ந்த தகவல்களைப் பார்த்தால், **ஜெர்மனியைப் போல் பல மடங்கு அதிகமான ஆயுதங்களை ருஷ்யா உற்பத்தி செய்திருக்கிறது என்பது தெரிந்ததாம்.**

ஆனாலும், ருஷ்யாவைச் சும்மா விட்டு விட ஹிட்லருக்கு விருப்ப மில்லை. அவ்வாறு சும்மா விட்டு விட்டால், எப்படியும ஜெர்மனிக்கு ஆபத்துத் தான் என்று எண்ணினாராம். பகவான் மேலே பாரத்தைப் போட்டு விட்டு, போரி லிறங்கி விட்டாராம். இப்பொழுது விதி குறுக்கிட்டு விட்டதாம். ஹிட்லரைப் போன்ற தலைவர் கிடைப்பதே அரிதாம். அப்படிப்பட்ட தலைவர் சொற்படி கேட்டு நடப்பது ஜெர்மன் மக்களின் பாக்கியமாம். 'ஜெர்மனியிலே 16 வயதுக்குமேல் 65 வயதுக்கு உட்பட்ட ஆடவர்களும், 17 வயதுக்கு மேல் 45 வயதுக்கு உட்பட்ட பெண்களும் தேசீயப் பாதுகாப்பு வேலைக்காக உடனே பதிவு செய்து கொண்டாக வேண்டும்' என்பது ஹிட்லரின் உத்திரவாம்.

இந்த உத்திரவு கீழ்ப்படியப் படலாம். ஆனால் முடிவு என்ன என்பது தெரிந்தது தானே! **சக்தி குன்றிப் போனால் தான், எதைக் கண்டாலும் எரிந்து விழுவார்கள் மனுஷர்கள்.**

'முணு முணுப்பவர்களே! ஸ்டாலின்கிராட் நகரிலே அத்தனைப் பேர்கள் தொத்திக் கொண்டிருக்க வேண்டுமா என்ன என்று நீங்கள் கேட்கலாம். அது தான் ராணுவ சம்பிரதாயம்!' என்கிறார் கோயரிங் ஒரு மூச்சிலே.

'சமரசமா? யாரோடு சமரசம்? போல்ஷ்விக்கர்களுடனா? சீ! சீ! கனவான்களோடு, வேண்டுமானால் சமரசம் பேசலாம்' என்கிறார் மறு மூச்சில்.

இதிலிருந்து ஒரு விஷயம் விளங்குகிறது, ருஷ்யர்கள் மீதில் தான் ஜெர்மானியருக்கு த்வேஷமே ஒழிய, சௌகரியப்பட்டால், மற்ற நேசநாடுகளுடன் ஹிட்லர் சமரசம் பேசத் தயார் என்று சொல்லுவது போலிருக்கிறது. பின்னால் இத்தகைய சமரசத்திற்கு இடம் ஏற்படலாம் என்று எண்ணித் தான், ஹிட்லரோ, கொயரிங்கோ, அமெரிக்கர் ஆபிரிகாவில் வந்து குதிப்பதைப் பற்றிக் கண்டித்து ஏதும் சொல்லவில்லை போலிருக்கிறது.

**கசப்ளாங்கா முடிவு.**

ஆனால், ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரதம மந்திரி சர்ச்சில், ஜெனரல் ஜூரே, ஜெனரல் டிகால், மற்றும் நேசதேச சேனாபதிகள் எல்லாம் மேற்கு ஆபிரிகாவில் கூடிப் பேசினார்களே, அப்பொழுது, நிபந்தனையின்றி அச்சு நாட்டினரைச் சரணடையச் செய்ய வேண்டும்; அதற்கு என்னவழி என்றுதான் யோசித்திருக்கிறார்கள். கசபிளாங்கா என்ற இடத்தில் மேற்கண்டவர்கள் கூடிப் பேசி, அடைந்த முடிவு சரித்திரத்திலேயே ஒரு முக்கிய விஷயமாக இருக்கும்.

1943-ம் வருடத்திலே அச்சு நாட்டினரை என்னென்ன செய்து இடுப்பை ஒடிப்பது என்பதற்கு விரிவான திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். அச்சு நாட்டாரது ஒற்றர்களுக் கெல்லாம் நேசநாட்டுத் தலைவர்கள் 'டிமிக்கி' கொடுத்து விட்டு, தைரியமாக கசபிளாங்காவில் கூடிப்பேசி யிருக்கிறார்கள்.

அதற்கப்பால் பிரதம மந்திரி சர்ச்சில் சும்மா லண்டன் திரும்பி விட வில்லை. நேரே கெய்ரோவிற்குப் போயிருக்கிறார். அங்கிருந்து, துருக்கிக்கு ஒரு நடை சென்று, தலைவர் இனோனுவையும், மற்ற துருக்கித் தலைவர்களையும் கண்டு, தங்களது புது வருஷத் திட்டத்தை அவர்கள் காதுகளிலும் போட்டு வைத்து விட்டு, துருக்கியின் பரஸ்பர அன்பைச் சம்பாதித்துக் கொண்டு, மத்யக் கீழ்த் திசை பற்றிய கவலையைக் குறைத்துக் கொண்டு, புறப்பட்டிருக்கிறார்.

இவ்வருடம் சரி, இனியும் சரி, ஹிட்லர் தம் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் பாய முடியாது. நேசதேசத்தவர்கள் அவரைக் கௌவி ஜீரணிப்பதற்கு நாற்புறங்களும் சூழ்ந்து நிற்கிறார்கள். ஆயிரக் கணக்கான எடையுள்ள குண்டுகள் ஹாம்பர்க், ரூர், எம்டன் பிரதேசங்களில் விழுந்து படுசேதமுண்டாக்கும் சப்தம் ஹிட்லர் செவிகளில் விழுந்து கொண்டு தானிருக்கும். வருகிற வசந்த காலத்திலே, ஐரோப்பா தாக்கப்படலாம்; ருஷ்யாவும் அப்பொழுது சும்மா இராது. வட ஆப்பிரிக்க யுத்தம் நமக்குச் சாதகமாகவே முடியலாம்.

**ரோமல் டியூனிசியா போனதேன்?**

இப்பொழுது தானென்ன? ரோமல் டியூனிஸியாவிற்குள் ஓடிவிட்டார். எதற்கய்யா என்றால், அங்குள்ள மற்றப் படைகளை பிரிட்டிஷ் முதலாவது சேனையின் பிடிகளிலிருந்து விலக்க என்று சொல்லுவார் போலிருக்கிறது. அவர் அவ்வாறு தன் படைகளோடு வடக்கே உள்ள நாஜிப் படைகளுடன் கலக்கக் கூடாது என்று தான் நேசதேசத்தார் விரும்புகிறார்கள். ரோமல் நமது எட்டாவது சேனையைப் பற்றியும், அதற்குள்ள உதவி மார்க்கங்களைப் பற்றியும் தவறாக் கணக்கிட்டதன் பலனை இன்று அனுபவிக்கிறார். டியூனிஸியப் போர் கடினமானதாகவே இருக்கும். அங்கு ஜெர்மானியர் 52 டன் கனமுள்ள புலி டாங்கிகளைக் கொண்டு குவி திருக்கிறார்களாம். முக்யமான மூன்று மலைச் சிகரங்கள் அவர்கள் வசமிருக்கின்றனவாம். அம்மலைகளை அணுகுவதால் ஏக நஷ்ட முண்டாகிறதாம். எதிர்பார்த்ததைவிட அதிக நாட்கள் தான் ஆபிரிக்கப் போர் நடந்து கொண்டிருக்கிறது. ஆயினும் வெற்றி பற்றி சந்தேகமிராது.

ஒரு நாளைக்கு 120 லக்ஷம் பவுன் வீதம் பிரிட்டன் இந்தப் போருக்கென்று செலவிடுகிறது. நாளுக்கு நாள் அசன் கையும் வலுத்து வருகிறது. 1941-ம் ஆண்டிலே ஜெர்மானியர் லண்டன்மா நகரை



நொறுக்கித் தள்ளினர். அப்பொழுது பெர்லின் மக்கள், 1942-43-ம் ஆண்டிலே தங்கள் வீடுகளும், குழந்தை குட்டிகளும் லண்டன் வாசிகளுடையவற்றைப் போலவே தவிடுபொடி யாக்கப்படும் என்பதைக் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள்.

கொயரிங் கூட என்ன சொல்லுகிறார்? ருஷ்யாவை ஒருவிதமாக அடக்கியபின், பெர்லின்மீது விழும் குண்டுகளுக்குச் சரியான பதில் கொடுப்பாராம். ஐயோ பாவம்! இதிலிருந்தே இப்பொழுது ஜெர்மன் விமானப் படை பலமிழந்திருக்கிறது என்பது தெரியவில்லையா?

நாளை ஐரோப்பா தாக்கப்படலாம். எப்படி, எங்கே, எப்பொழுது என்பது இப்பொழுது நமக்கெல்லாம் தெரியாது. ஆனால் பெரிய தலைவர்களாக உள்ளவர்களுக்கு விஷயம் தெரியும். அல்லும் பகலும் இதே நினைவாக இருக்கிறார்கள் அவர்கள். அப்பொழுது நாம் என்ன செய்யப் போகிறோம் என்று ஹிட்லர் சகாக்களும் கவலை கொண்டிருப்பார்கள்.

**நம்பிக்கை தரும் செய்திகள்.**

கீழ்த்திசையிலிருந்து நமக்கு நம்பிக்கை தரக் கூடிய செய்திகளும் ஹிட்லருக்கு தலை நோவு தரக்கூடிய தகவல்களும் வந்து கொண்டிருக்கின்றன. ஜப்பானியர் முனபோல் யதேச்சையாகப் போகமுடியவில்லை. குடால்கனாலில் அமெரிக்கர்கள் அவர்களைத் தலைதூக்க விடவில்லை. 'டோக்கியோவை விமான மூலம் தாக்கும் காலம் நெருங்குகிறது' என்கிறார் ஒருவர். அமெரிக்க நீர்மூழ்கிகள் ஜப்பானியக் கப்பல்களுக்கு யமனாக இருக்கின்றன. வேக் தீவு மீது அமெரிக்க விமானங்கள் பறக்கின்றன. இருநூறு முந்நூறு என்று பிரிட்டிஷ் விமானங்கள் அக்யாப்பை நோக்கிச் சென்று, ஜப்பானியரைத் திணற அடிக்கின்றன. என்ன செய்வார் பாவம், ஹிட்லர், 'எங்கே ஹிட்லர்? ஹிட்லர் எங்கே? என்று நேசதேசத்தவர் அவரை ஹதம் செய்யக் காத்திருக்கிறார்கள். ஆகவே அவர் 'ஹிட்லர் எங்கே?' என்று கேட்கும்படியான நிலைமையில் எங்கே போய் உட்கார்ந்திருக்கிறார்? தான் செய்த கொடுமைகளுக் கெல்லாம் ஒரு நாள் பதில் சொல்லித் தீரவேண்டு மென்ற பீதி அவர் மனதில் இருக்குமல்லவா?



**சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ் படையை எச். எச். மைசூர் மகாராஜா அவர்கள் பார்வையிடும் காட்சி.**

(3-ம் பக்கம்—தொடர்ச்சி).

மலைப் புரங்களி லிருந்து தான் போராடுகிறார்கள். **இவர்கள் கொள்ளைக் கூட்டத்தாரல்ல. ஆனால் முறைப்படி உடை தரித்து நன்கு அமைக்கப் பட்ட ஒரு கூட்டத்தார்.** இவர்களுடைய தலைவர் **நே-ஜுங்-ஷீங்.** மத்திய சீனாவில் மற்றொரு கொரில்லாப் படை யிருக்கிறது. இதன் தலைவர் **ஜெனரல் யுவான்.** இந்தப் படை பல வித கஷ்டங்களுக்கிடையே போராடிக் கொண்டு வருகிறது. ஏனென்றால் சீனப் பொது மக்களுடைய உதவியும் கூட்டுறவும் கொரில்லாப் படைகளுக்குக் கிடைப்பது அரிதா யிருக்கிறது. காரணம் ஜப்பானியர்கள், சீனப் பொது மக்களைப் படுத்தும் கொடுமைகள் தான். **என்றாலும் 5 லட்சம் ஜப்பானியர்களைச் சீனர்களின் கொரில்லாப் படைகள் கைதிகளாக்கி விட்டன.**

(7-ம் பக்கம்—தொடர்ச்சி).

நிற்க, பிரிட்டன் 40 லட்சம் ஜதை பூட்ஸுகள் ரஷ்யாவிற்கு அனுப்பியது. அதன் பயனாக இப்போது இங்கிலாந்திலுள்ளவர்கள் சராசரி 3 வருஷங்களுக்கு ஒரு ஜதை பூட்ஸ் விகிதம் உபயோகிக்க வேண்டி யிருக்கிறது. ஒரு விமானம் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டால், 4 விமானங்கள் இங்கிலாந்தில் செய்து ரஷ்யாவிற்கு அனுப்பப் படுகின்றன. சாதாரணமாக ஒரு வருஷத்தில் செய்யப்படும் வேலையை 10 வாரங்களில் செய்து முடித்து, பாரசீகத்தின் குறுக்கே ரயில்வே லைன் போட்டு முடிக்க பிரிட்டிஷ் ரயில்வே தொழிற்சாலைக்காரர்கள் உதவினார்கள். இந்த ரயில்வே வழியாகத் தான் பாரசீக வளைகுடாவி லிருந்து காகஸஸ் பிரதேசத்திற்கு (ரஷ்யாவிற்கு) சப்ளைகள் இப்போது போகின்றன.

விஷயங்களில் தலை யிடாதவர்கள். எல்லா வகைகளிலும் பிரிட்டிஷார் அமெரிக்கர்களை ஒத்திருக்கிறார்கள்.

உண்மைக்கு மாறான எண்ணங்களை அமெரிக்காவைக் குறித்து இங்கிலாந்தும், இங்கிலாந்தைக் குறித்து அமெரிக்காவும் ஏன் கொண்டிருக்க வேண்டும்? இதற்குப் பூர்வீக பழக்க வழக்கங்களை இன்னும் கைக் கொண்டிருப்பதும் காரணந் தான். அது போலவே தான் ஹாலிவுட்டும் இருக்கிறது. இந்த இரண்டு நாடுகளிலு முள்ள கதாசிரியர்களும் இதே முறையைப் பின் பற்றித் தான் கதைகள் எழுதுகிறார்கள். ஒரு விஷயத்தை அமெரிக்கர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். 4 கோடி 60 லட்சம் இங்கிலீஷ்காரர்கள் இங்கிலாந்து என்னும் சிறிய தீவில் அடைந்து கொண்டிருக்



பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த "பரோடா ஸ்குவாட்ரன்" படையை எச். எச். நவா நகர் ஜாம் சாஹிப் அவர்கள் பார்வையிடும் காட்சி.

**நேச நாடுகளுக்கு பிரிட்டன் உதவி.**

போராடும் பிரான்சு, நார்வே, போலந்து, ஹாலந்து முதலிய அரசாங்கங்கள் இப்போது இங்கிலாந்தில் அஞ்ஞாத வாசத்திலிருக்கின்றன. இந்த அரசாங்கங்களின் படைகளுக்கு வேண்டிய எல்லாவற்றையும் பிரிட்டிஷ் அரசாங்கமே செய்ய வேண்டி யிருக்கிறது. இது சம்பந்தமாக ஏராளமான செலவாகிறது. இவ்வளவும் இங்கிலாந்து மக்களுக்கு வரிச் சுமைகளா யிருக்கின்றன. அமெரிக்கர்கள் கொடுக்கும் வரியை விட, மிக அதிகத் தொகையே இங்கிலீஷ்காரர்கள் கொடுக்க வேண்டி யிருக்கிறது.

நம்மைப் போலவே பிரிட்டிஷ்காரர்களும், தம் காரியத்திலேயே கண்ணா யிருப்பவர்கள். பிறர்

கிறார்கள். அமெரிக்க நாடுகளில் ஒன்றான அரிசோனியாவை விடச் சிறிது இங்கிலாந்து. என்றாலும் வழக்க பழக்கங்கள், எண்ணங்கள், நோக்கங்கள் ஆகியவற்றில் அவர்கள் அமெரிக்கர்களை ஒத்தே இருக்கிறார்கள். இனி இங்கிலீஷ்காரர்களைக் குறித்து சிந்திப்பதானால், கூன் விழுந்த, ஒற்றைக் கண்ணாடி யோடுள்ள நாட்டுப்புறத்தான் என்று சிந்திக்காமல், அமெரிக்கர்களை போல் உள்ளவர்களாகவே ஆண்களையும், பெண்களையும் நினைக்க வேண்டும். என்றாலும் ஒரு வேற்றுமை யுண்டு. அமெரிக்காவைப் போல் இரண்டு பங்கு வேலை செய்கிறார்கள் பிரிட்டிஷார். ஆனால் அமெரிக்கர்கள் உண்ணும் உணவில் பாதி யளவு தான், பிரிட்டிஷார் உண்கிறார்கள்."

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.



5 Copies
Ed. St. file

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம௵ பிப்ரவரி௴ 12௳, வெள்ளிக்கிழமை •[இதழ் 7



## எதிரி தப்பி யோடுகிறான்

"யுத்தத்தின் போக்கை மிகச் சிறந்த முறையில் நீங்கள் மாற்றி விட்டீர்கள். காசப்ளாங்காவில் சாம்ராஜ்ய ஜெனரல் ஸ்டாப் தலைவரோடும் அமெரிக்க ஜனத் தலைவரோடும் நான் இருக்கிறபோது, திரிபோலிக்கு பாலை வனப் படை வந்து சேர்ந்து விட்டதென்ற செய்தி கிடைத்தது. இதனால், எங்கள் விவாதத்தின் போக்கே மாறி விட்டது. எதிர் காலத்திற்குச் சாதகமான வழிகள் இப்போது திறக்கின்றன."

"கடுமையாக நாம் இன்னும் போராட வேண்டி யிருக்கிறது. எகிப்திலிருந்தும் திரிபோலிடானியாவி லிருந்தும் ஒரு இடத்திலும் தாமதிக்காமல் 1,400 மைல்கள் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று எதிரி தப்பி யோடுகிறான். இப்படி உயிர் தப்பி ஓடுகிறவன் தான், துனிசியாவை மீட்கப் போகிறவனும்!"

"நீங்கள் அடைய வேண்டிய வெற்றிகள் இன்னும் உண்டு. நம் படைகள் பல விடங்களி லிருந்தும் திரண்டு வந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் உதவியால் ஆயுதந் தாங்கிய ஒவ்வொரு ஜெர்மானியனையும் இத்தாலியனையும் ஆப்பிரிக்காவி லிருந்து அடியோடு அழித்து விரட்டி விடக் கூடுமென்று நம்புகிறேன்."

—மிஸ்டர் சர்ச்சில் சென்ற வாரம் திரிபோலியில் 8-ம் படைக்குச் செய்த பிரசங்கத்தில் கூறியது.

# மு ர சொ லி

"ரஷ்யாவிற்கு, அதன் வீரம் மிகுந்த செம் படைகளுக்கு, அதன் வெற்றிக்குப் பெரிதும் உதவிய மகா உழைப் பாளிகளான ஆண்களுக்கும் பெண்களுக்கும் இன்னும் சப்ளைகள் அனுப்ப வேண்டு மென்று கனடா விரும்புகிறது. சீனவுக்கும் நாம் என்னென்ன அனுப்பக் கூடுமோ அவற்றை அனுப்பி உதவி புரிய வேண்டும். அப்போது தான் சரியான படி, விரைவாக ஜப்பானைத் தாக்க அவர்களால் இயலும்."

—மிஸ்டர் இல்ஸ்லி,
கனடா நீதி மந்திரி பொது மக்கள் சபையில் கூறியது.

* * * * *

"குத்தகைக் கடன் ஒரு இளக்கமான சாதனம். பாஸிஸ்டு ஆர்ப்பாட்டங்களைத் தகுந்தபடி ஒடுக்குவதற்கு, ஜன நாயகமே தகுந்த தோர் ஆயுத மென்று இது மெய்ப்பித்து விட்டது."

—அட்மிரல் இ. லாண்ட்,
(அமெரிக்க யுத்தக் கப்பல் நிர்வாகி).

* * * * *

ஆப்பிரிக்காவில் அச்சு நாடுகளுக்குச் சொந்தமான பகுதிகளிலிருந்து ரோமலின் படைகள் அடியோடு விரட்டப்பட்டன. எதிரிப் படைகள் எல்லாம் எல்லைகளைக் கடந்து துனிசியாவிற்குள் சென்று விட்டன.

—எட்டாம் படை நிருபர்.

* * * * *

ஸ்டாலின்கிராடிலும், காக்கஸஸிலும் கிடைத்துள்ள வெற்றிகள் மகா முடிவான வெற்றிகள். நாஜிகளும் பாஸிஸ்ட்களும் இந்தப் போர் முனையில் படு தோல்வி யடைந்தார்கள் என்பதற்கு இதுவே ஏற்ற சான்றாகும்.

—டாக்டர் பீனஸ்,
(செக்கோஸ்லேவேகியத் தலைவர்).



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் .. .. .. .. | 1 | விலைவாசிகள் பிரச்சினையும் பொது மக்களும் | 8 |
| எதிரி தப்பி ஓடுகிறார் .. .. .. | 1 | அட்டை செய்வது எப்படி .. .. .. | 9 |
| முரசொலி .. .. .. .. .. | 2 | சாகப் போகிற காலத்தில்..! .. .. | 10 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. ... | 3 | இந்தியப் படைக்கு வேவல் பாராட்டு .. | 12 |
| ரஷ்யா : ஸ்டாலின் போர்த் திறமை .. | 4 | பிரிட்டிஷ் விமானியின் வெற்றி .. .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

## ஆஸ்திரேலியாவும் ஜப்பானும்

**ஆஸ்திரேலியா ஒரு சிறந்த தளம்.**

விரைவில் தென் மேற்குப் பசிபிக் கடலுக்கு போர்க் கப்பல்களை அனுப்ப வேண்டு மென்று நேச நாடுகளை ஆஸ்திரேலியா கோரியதைக் குறித்து 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை எழுதியதாவது :—

"இந்த இடத்திலே நடக்கும் போர் எவ்வளவு முக்கியமானது என்று நேச நாடுகள் நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றன. ஜப்பானியர்களை அங்கிருந்து உருட்டி விரட்டி, அவர்களுடைய மூல பலம் உள்ள இடத்திலேயே அவர்களோடு போராடுவோம்."

தம் உதவிக்கு போர்க் கப்பல்கள் அனுப்ப வேண்டு மென்று கோரி ஆஸ்திரேலிய பார்லிமெண்டில் பேசிய அந்த நாட்டுப் பரதம மந்திரி மிஸ்டர் கர்டின் குறிப்பிட்டதாவது :—

"முன்போலவே தான் இன்றும் ஜப்பானியர்களால் நேரக்கூடிய ஆபத்திற்கு உள்ளாகியிருக்கிறோம். ஜப்பான் கைப்பற்றி யுள்ள நாடுகளி லிருந்து, யுத்தத்திற்குத் தேவையான மூலப் பொருள்கள் ஏராளமாய்க் கிடைக்கின்றன. பவளக் கடல், சாலமன் தீவுகள், நியூகினியா, முதலிய இடங்களில் தக்கபடி பாதுகாப்புகளை அமைத்திருக்கிறோம் என்று நாம் இறுமாப்போடிருப்போமானால், இப்போதில்லா விட்டாலும், இந்த வருஷத்தில் எப்போதாவது, ஜப்பானியர்கள் நம்மைத் தாக்கி வெற்றி கொள்ளக் கூடும்."

மேலும் அவர் கூறியதாவது :—ஜப்பானியர்களின் தொல்லைகளைச் சமாளிக்க வேண்டி ஆஸ்திரேலியக் கடற்படையை 28 சதமானமும், தரைப்படையை $2\frac{1}{2}$ மடங்கும், விமானப் படையை 2 மடங்கும் நம் அரசாங்கம் அதிகப்படுத்தி யிருக்கிறது. அன்றியும் யுத்தத் தளவாடங்களும் மற்ற யுத்தத் தேவைக்கான பொருட்களையும் செய்கிறவர்களின் எண்ணிக்கை 27 சதமானம் அதிகப் பட்டிருக்கிறது. இரண்டு வாரங்களுக்கு முன்பு ஜனப் பிரதிநிதிகளின் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. நேச நாடுகளிடம் பரிபூரண விசுவாசம் கொண்டிருப்பதாகவும், நாட்டிலுள்ள படை பலம் முழுவதையும பொருள் பலம் முழுவதையும் பயன்படுத்தி இந்த யுத்தத்தில் வெற்றிபெற எல்லா வகைகளிலும் முயற்சிக்க வேண்டுமென்று உறுதி கொள்ளுவதாகவும், அத் தீர்மானம் கூறுகிறது.

தென் மேற்குப் பசிபிக் கடலில் எதிரிகளைத் திருப்பித் தாக்குவதற்கு ஆஸ்திரேலியா தகுந்த தளமாக அமைந்திருக்கிற தென்பதை நேச நாட்டாரும் அச்சு நாட்டாரும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ரோமாபுரிக்கு ஜப்பானிய தூதராகச் சென்றிருந்தவரான 'ஷெரடோரி' சென்ற வருஷம் ஜூன் மாதம் என்ன சொன்னார் தெரியுமா? "ஆஸ்திரேலியாவைக் கைப்பற்றின லல்லது இந்தப் போராட்டத்தை முடிக்க முடியாது" என்று குறிப்பிட்டார்.



தென் மேற்குப் பசிபிக்கில் உள்ள ஜனநாயக நாடுகளில் ஆஸ்திரேலியா தான் மகா பலம் பொருந்தியது என்றும், அதை ஒரு தளமாக வைத்துக் கொண்டே ஜப்பானுக்குக் கூட வந்து போராடலாம் என்றும் ஜப்பானியர்கள் நன்றாக அறிவார்கள். ஆஸ்திரேலியாவையும் இந்தியாவையும் கைப்பற்றினால் மட்டுந் தான், தப்பான வழிகளில் இதுவரைத் தாம் கைப்பற்றிய நாடுகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதையும் ஜப்பான் நன்கு உணர்ந்திருக்கிறது. சென்ற வருஷம் மார்ச்சு மாதத்தில், 'டாரிகோ ஷம்போ' என்னும் ஜப்பானிய பத்திரிகை கீழ்கண்டவாறு எழுதியது :—

**"ஆசியப் புதிய அமைப்பை நிலை நாட்டுவதற்கு இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் வென்று தானுக வேண்டும்."**

இதன் பொருட்டு, இந்தியாவை ஜப்பான் தன் வழக்கம் போல் தட்டிக் கொடுத்துப் பார்த்தது; பயமுறுத்திப் பார்த்தது. பலிக்கவில்லை. அதே மாதத்தில் ஜப்பானிய தலைவர் ஒருவர் கீழ்கண்டவாறு கூறினார்: "ஒரு புனிதமான போராட்டத்தை நடத்த ஜப்பானிய சக்ரவர்த்தி கிளம்பி யிருப்பது பற்றி, ஆஸ்திரேலியா கொஞ்சமும் அஞ்சத் தேவையில்லை." மூன்று மாதங்களுக்குப் பிறகு மற்றொரு ஜப்பானியத் தலைவர், "**ஆஸ்திரேலியா போராடத் துணியுமானால், அதை ஜப்பான் நசுக்கிவிடும்; சமாதானத்தை நாடி, ஒத்துழைக்க உடன்பட்டால் ஜப்பான் தன் நல்ல அயலாராகவே ஆஸ்திரேலியாவை வரவேற்கும்**" என்று கூறினார். ஆனால் ஆஸ்திரேலியாவா இந்த ஏமாற்று வித்தைகளைப் பொருள் படுத்தும்; பயமுறுத்தல்களுக்கு அஞ்சும். ஒருபோது மில்லை நேசநாடுகளாயுள்ள மற்ற பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளைப் போல வ ஆஸ்திரேலியாவும் முழு மனதோடு தன் படை பலத்தையும் பொருள் பலத்தையும் திரட்டியிருக்கிறது.

* * * *

**நியூ கினியாவின் முக்கியம்.**

தம் நாட்டை ஜப்பானியர்கள் தாக்குவதானால் தம் நாட்டின் வட கரையிலுள்ள முக்கியமான நகரங்களைத் தாக்குவார்கள் என்று ஆஸ்திரேலியர்களுக்குத் தெரியும். உதாரணமாக, ஆஸ்திரேலியாவின் கிழக் கரையில் டௌன்ஸ்வில்லா, கெய்ர்ன்ஸ் ஆகிய ஊர்கள் இருக்கின்றன. யார்க் முனையின் நுனியில் தர்ஸ்டே தீவிருக்கிறது. தைமூருக்கு நேர் கிழக்கே 400 மைல்கள் தூரத்தில் டார்வின் இருக்கிறது. தைமூர் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமானது. இது சிலிபிஸ் தீவுக்குத் தென் கிழக்கி லிருக்கிறது. வட மேற்குக் கரையில் விண்டாம், ப்ரூம் என்னும் ஊர்கள் இருக்கின்றன. கெய்ர்ன்ஸுக்கும் ப்ரூமுக்கும் இடையே 4 லட்சம் சதுர மைல்கள் இருக்கின்றன. ஆனால், மிகக் கொஞ்சம் பேர்

(6-ம் பக்கம் பார்க்க)



தோழர் ஸ்டாலின்.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞு பிப்ரவரி 12உ. [இதழ் 7

# ரஷ்யா : ஸ்டாலின் போர்த் திறமை

“ ஜெர்மானியர்கள் அரசியல் தந்திரத்தில் தவறிப் போக வில்லை ; ஆனால், யுத்த தந்தி த்தில் தான் தவறி விட்டார்கள் ; எப்படி யென்ருல், தம் படைகளின் முதல் படைத் தலைவராக ஹி ரை ஆக்கிக் கொண்டார்கள் ; ஸ்டாலினிடம் ஹி லர் தோற்று விட்டார் ; தானே முன்னின்று, ஸ்டாலின் போரை நடத்தினர் ” என்று 6-வது சோவியத் படைத் தலைவரான ஜெனரல் சூயிகோவ் குறிப்பிட்டார். ஜெர்மன் 6-வது படையை நடத்தி வந்த பீல்ட் மார்ஷல் வான் பாலஸைத் தோற்கடித்தவர் ஜெனரல் சூயிகோவ் தான். அன்றியும் சோவியத் தலைவரின் சிறப்பைக் குறித்துக் கூறிய லெப்டினெண்ட் ஜெனரல் கலினின் கூறியதாவது : “ ஜெர்மானியர்கள் என்ன செய்வார்களென்று நெடு நாட்களுக்கு முன்னரே அவர் உணர்ந்து கொண்டு, அதற்கேற்றபடி எல்லாம் சித்தம் செய்து கொண்டார். உதாரணமாக, ஜெர்மன் ஜெனரலான வான் மான்ஸ்டீன் ஒரு பெரும் படையோடு கடலிக்கெய்வோவி லிருந்து கிளம்புவார் என்று எதிர்பார்த்தார். ஆகவே இதை தடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார். அவர் நினைத்தபடியே ஜெர்மன் ஜெனரல் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு அங்கே வந்து, தோல்வி யடைந்தார். இதற்குக் காரணம் ஸ்டாலினுக்கு இருக்கும் வருமுன்பாரு ஞரைக்கும் திறமை தான்.

**மான்ஸ்டீன் எதிர்ப்பில் நாஜி நம்பிக்கை.**

ரஷ்யப் படைகள் ஸ்டாலின்கிராடிலிருந்து வட மேற்கேயும் தென் மேற்கேயும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தன. அப்போது டான் நதிக்கும் வால்கா நதிக்கும் இடையேயிருந்த ஜெர்மன் 6-ம் படையை வளைத்துக் கொண்டன. என்றாலும் நாஜிகள் கலக்க மடையவில்லை. ஸ்டாலின்கிராடைக் கைப்பற்றும் நாள் சற்று தாமதித்திருக்கிறது என்று தான அவர்கள் நினைத்தார்கள். மத்திய டான் பகுதியிலுள்ள க்லெட்ஸ்கயாவிலிருந்து தென் திசையிலும், கலெச்சிலிருந்து வட திசையிலும் பெரும் சோவியத் படைகள் போன போது கூட, தமக்கு ஏற்படப் போகும் பெரும் ஆபத்தைக் குறித்து நாஜிப் படைத் தலைவர்கள் கொஞ்சங் கூட அஞ்சவில்லை. தம்மை வளைந்து கொண்டுள்ள விடத்திற்கும், அச்சுப் படைகளின் மூல பலமுள்ள இடத்திற்கும் இடையேயுள்ள 50 மைல் அகலமுள்ள நீண்டதோர் நிலப் பகுதியைத் தான், ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். பலமாகத் தாம் திரும்ப ரஷ்யர்களைத் தாக்கினால், மீண்டும் நிலைமையைச் சீர்படுத்திக் கொள்ளலாமென்று நாஜிகள் எதிர் பார்த்தனர். அப்போது ஜெனரல் மான்ஸ்டீன் (ரஷ்ய படைத் தலைவர்களுள் ஒருவர்) 6 ரஷ்யப் படைகளுக்குத் தலைமை வகித்து முன்னேறிக் கொண்டு வந்தார். இந்தப் படைகளின் இடது புறத்தில் ஜெர்மன் படைகள் திரும்பத் தாக்கின. இதில் முதலில் ஒருவாறு வெற்றி பெற்றன. என்றாலும் பிறகு ருஷ்ய பீரங்கிகளைத் தாள அவர்களால் முடியவில்லை. இதுவரை தற்காப்பிலிருந்த சோவியத் படைகள், இதன் பிறகு தான் முன்னேறித் தாக்க ஆரம்பித்தன. மறுமுறையும் ஜெர்மன் படைகள் திரண்டு வந்து மத்திய டான் நதிப் பகுதியில் தாக்க ஆரம்பித்தன. இங்கேயும் அவர்கள் கை ஓங்கவில்லை. காரணம் ஜெர்மானியர்களின் போக்கு இப்படித் தான் இருக்க வேண்டுமென்று முன்னதாகவே யூகித்தறிந்து அதற்கு ஆகவேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்து விடுகிறார், இப்படியாக ஜெர்மன் முயற்சிகள் பாழாகின்றன.

* * * *



**ஜெர்மன் 6-ம் படையின் தலை விதி.**

இனி ஜெர்மானியர்களுக்கு ஒரே வழிதான் உண்டு. கிழக்கு நோக்கி டான் நதி வளைவுப் பக்கம் படையைத் திரட்டிக் கொண்டு போகலாம். இது தற்கொலைக்குத் தான் ஒப்பாகும். ஆகவே தன் 6-ம் படையின் தலை விதிப் போல் ஆகிறதென்று அந்தத் துறந்து விட்டார் ஹிட்லர். இந்தப் படையை சோவியத் படைகள் வளைத்துக் கொள்ளும் போது 2 லட்சம் பேர்கள் 6-ம் படையில் இருந்தனர். 65 நாட்கள் நடைபெற்ற முற்றுகைக்குப் பிறகு, 12 ஆயிரம் பேர்கள் தான் மிஞ்சியிருந்தனர்.

ஆனால், காக்கஸஸ் பிரதேசத்தில் முக்கியமான ஊர்களெல்லாம் ஜெர்மானியர் வசந்தானிருந்தன. இந்த ஊர்களில் ஒன்றிற் கொன்று போக்கு வரவு வசதிகள் செம்மையா யமைந்திருந்தன. பல கோட்டைகளும் அங்கங்கே ஜெர்மானியர்கள் கட்டியமைத்திருந்தார்கள். இங்கே ரஷ்யர்கள் கை ஓங்காது என்று ஜெர்மானியர்கள் நினைத்தார்கள்.

**திடீர் மாறுதல்.**

திடீரென்று ஜெர்மன் படைகள் நிலை குலைந்தன. டான் நதிக்கு வடக்கே 40 மைல் தூரத்திற்கு சோவியத் படைகள் ஜெர்மன் படைகளை நெருங்கிப் பின்வாங்கி போடச் செய்தன. பல முக்கியமான ரயில்வே ஜங்ஷன்களைக் கைப்பற்றின. சால்ஸ்கும் ரஷ்யர்கள் வசமாகிற்று. இந்த ரஷ்யப் படையின் இடது பகுதி, மணிச் ஏரிக்குத் தென் மேற்கிலுள்ள வரோஷிலோவ்ஸ்க் என்னும் இடத்தைக் கைப்பற்றியது. ஆர்மவீரையும், டிகோரெட்ஸ்கையும் கைப்பற்றியதனால் ரஷ்யப் படைகளுக்குச் சிறந்த வசதி ஏற்பட்டது. கிழக் காக்கஸஸ் பிரதேசத்தில் பின் வாங்கியோடிக் கொண்டிருக்கும் ஜெர்மன் படைகளை வளைக்க இடமேற்பட்டது. இந்த ஜெர்மன் படை தான் க்ராஸ்னி எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்ற வரலாமென்று பகற்கனவு கண்டது.

**ஜெர்மன் படையின் அரை மனது.**

காக்கஸஸில் ஜெர்மானியர்கள் அரைமனதோடு தான் பின்வாங்குகிறார்கள். **நேர் நின்று போராடுவதா அல்லது பின்வாங்குவதா என்பது பற்றி ஒருமுடிவு கட்ட முடியாமல் ஹிட்லர் திண்டாடியதனால் தான் இந்த நிலைமை உண்டானது.** ரோமலைப் போல் பின் வாங்கத் தான் வேண்டும் என்று உறுதியாக ஹிட்லரும் முடிவு கட்டி யிருப்பாரானால், கூடிய வரை படைகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கலாம். அன்றியும் போக்கு வரவு சாதனங்களும் தளவாடங்களும் மிச்ச மாகும். இப்படிப் பின் வாங்கும் படைகளுக்குத் தகுந்த பக்க பலம் விரைவில் கிடைக்கவில்லையானால், அதன் நாசம் உறுதி தான்.

ரஷ்யப் போர் முனை 100 மைல்கள் நீளமுள்ளது. இங்கே சென்ற சில நாட்களாக ரஷ்யப் படைகள் பல புதிய வெற்றிகள் பெற்றன. கார்கோவுக்கு அருகிலுள்ள வலூக்கி என்னும் ரயில்வே ஜங்ஷனை ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள். **வாரனேஜ் போர் முனையில் ஹிட்லருடைய பலத்த தளமான கர்ஸ்கை சென்ற ஞாயிற்றுக்கிழமை ரஷ்யப் படைகள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டன.** கார்கோவுக்கும் ஓரலுக்கும் இடையிலிருந்த ஜெர்மன் லைனை ரஷ்யப் படைகள் தகர்த்து விட்டன. ப்ரயான்ஸ்குக்கும் கார்கோவுக்கும் இடையிலுள்ள ரயில்வே லைனையும் வெட்டி விட ரஷ்யர்களுக்கு எளிது. உக்ரேனியாவில் ஹிட்லர் தன் தளமாக கார்கோவைத் தான் எண்ணி யிருக்கிறார். இதற்கு 50 மைல்கள் தூரத்திலுள்ள பீலோகராட் என்னும் இடத்தை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்.

**ராஸ்டோவ் யுத்தம்.**

ஜெர்மானியர்களை எதிர்த்துத் தாக்க சோவியத் படைகள் கிளம்பிய போது, ரயில்வே போக்கு வரவு வசதிகள் சோவியத் படைகளுக்குக் கிடையாது. ஆனால் தாக்க ஆரம்பித்த பிறகு பல முக்கியமான ரயில்வே ஜங்ஷன்கள் சோவியத் கைக்குத் திரும்ப கிடைத்து விட்டன. இதன் பயனாக ஜெர்மன் படைகளின் போக்கு வரவுக்குத் தடை ஏற்பட்டது. சோவியத் படைகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போவது எளிதாயிற்று. டோனெஸ் வளைவில் ஜெர்மானியர்கள் மகா கடுமையாக வளைத்துக் கொள்ளப் பட்டார்கள். இங்கே 2½ லட்சம் ஜெர்மானியர்கள் தம் மரணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள். ஆகவே ராஸ்டோவ் போர் முனையைக் கூட விட்டு விட்டு ஜெர்மன் படைகள் பின் வாங்கிப் போய் விடக் கூடுமென்று எதிர் பார்த்தனர்.

**தற்கால யுத்த அதிசயங்கள்.**

தற்கால யுத்தத்தின் சிறந்த அம்சங்களைக் காண வேண்டுமானால் வாரனேஜ், காக்கஸஸ் ஆகிய இரண்டு போர் முனைகளிலும் காணலாம். சோவியத் தலைவர் இதன் பொருட்டு கையாண்ட முறைகள் எவை ?

1. **முறைப்படி எதிரியைப் போய் வளைத்துக் கொள்வது.**
2. **குறிப்பிட்ட காலந் தவறுமல் எதிரியைத் தாக்குவது.**
3. **பலமாக மாறி மாறி அடிப்பது.**
4. **சப்ளை ஸ்தாபனங்களோடு கூட்டுறவு கொள்வது.**
5. **தருணம் பார்த்து தாக்குவது.**

இவை பற்றி யார் தான் தோழர் ஸ்டாலினைப் பாராட்டாதிருக்க முடியும் ?

**“ சரணம் சரணமையா ”**



வட காக்கஸஸ் போர் முனையில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களிடம் சரணம் அடைகின்றனர்.

(3-ம் பக்கம்—தொடர்ச்சி).

களே அங்கு வசிக்கின்றனர். ஆகவே இந்தப் பகுதியைப் பாதுகாப்பது சற்று கஷ்டமான காரியந் தான். அன்றியும் கெய்ர்ன்சுக்கும் ப்ரோமுக்கு மிடையேயுள்ள கடற்கரை 3,000 மைல்கள் நீளம். சென்ற 20 வருஷங்களுக்கு அதிகமாவே ஜப்பானியர்கள் படகுகளில் இங்கே வந்து முத்துக் குளிப்பதுண்டு. ஆகவே, இந்தக் கடற்கரை முழுதும் ஜப்பானியர்கள் நன்கு அறிவார்கள். ஆகையால் தான் ஜப்பானியர்களால் தமக்கு ஆபத்து நேரக் கூடு மென்று ஆஸ்திரேலியர்கள் மிகுந்த ஆயத்தத் தோடிருக்கிறார்கள். நியூ கினியாவில் தகுந்த பாது காப்புக்கள் அமைப்பதும் இதை முன்னிட்டுத் தான்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை நியூ கினியாவைச் சேர்ந்த 'வா' என்னும் இடத்தில், நேச நாட்டுப் படைகள் 41 ஜப்பானிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தி விட்டன. இதில் நேச நாட்டு விமானம் ஒன்று கூட நஷ்ட மடைய வில்லை. ஒரு மாதத்திற்கு முன்பு 'லே' என்னு மிடத்திற்கு அருகில் ஜப்பானிய துணைக் கப்ப லொன்றைச் சிதறடித்த பிறகு, இவ்வளவு பெரிய விமானப் போராட்டம் நடை பெறவேயில்லை. இந்த விமானப் போருக்குப் பிறகு, நேச நாட்டுப் படைத் தலைவர் மெக்கார்தர் தன் அறிக்கையில் "இன்று பகல் முழுதும் நடை பெற்ற பல விமானப் போர்களில், அடியோடு எதிரிகள் தோற்று, ஆகாயத்தினின்று விரட்டப் பட்டார்கள்" என்று குறிப்பிடுகிறார்.

பெர்ல் துறைமுகம் தாக்கப்படுவதற்கு முன்பு, நேச நாடுகள் வெற்றி பெறவேண்டி ஆஸ்திரேலியர்கள், தம் படைகளை, பல யுத்த அரங்கங்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். வெளி நாடுகளில் 4½ லட்சம் பேர்களைக் கொண்ட ஆஸ்திரேலியப் படைகள் போராடிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. ஜப்பான் யுத்த மாட ஆரம்பித்த வுடனே நிலைமை மாறி விட்டது. ஆஸ்திரேலியாவிற் இருந்த ஆபத்து அதிகப்பட்டு விட்டது, ஆகவே ஆஸ்திரேலியப் படைகள் தம் தாய் நாட்டிற்குத் திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிப்ரவரி மாதம் 3-ம் தேதி ஆஸ்திரேலிய முதல் மந்திரியான மிஸ்டர் கர்டின் விடுத்த அறிக்கையில் கீழ் கண்டவாறு குறிப்பிடுகிறார் :—

"ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சாம்ராஜ்யப் படைகள் தம் நாட்டைக் காக்கும் பொருட்டுத் திரும்பிப் போவது பற்றி எந்த விதத் தடையும் கிடையா தென்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டு தன் பரந்த நோக்கத்தை நிலை நாட்டிக் கொண்டார்."

பிரிட்டனின் தேவைகள் அதிகம் என்று தெரிந்து அமெரிக்காவை ஆஸ்திரேலியா உதவி கோரியது. **அதைக் காப்பாற்ற அமெரிக்கா உடனே முன் வந்தது. ஏராளமான படை பலமும் பொருள் பலமும் கொடுத்து உதவியது.** சாலமன் தீவுகளிலும், நியூ கினியா பகுதிகளிலும் நேச நாடுகளுக்குக் கிடைத்த வெற்றிகளைக் கொண்டு எவ்வளவு சிறந்த உதவி ஆஸ்திரேலியாவிற்கு அமெரிக்கா செய்திருக்கிறது என்று ஒருவாறு நிர்ணயிக்கலாம்.

### ஆஸ்திரேலியாவுக்கு ஞாதி இல்லையா ?

ஆஸ்திரேலியாவைத் தனியாகத் துண்டித்து விட வேண்டு மென்பது ஜப்பானுடைய ஆசை. ஆஸ்திரேலியா ஒரு மகத்தான தளமாக இருக்கும் வரையில் தென் மேற்குப் பசிபிக் கடலில் ஜப்பானின் நிலைமை எப்போதும் ஆபத்திற்குள்ளாகித் தான் இருக்கும். சென்ற வருஷம் வசந்த காலத்தில் ஜப்பானியர்கள் ஆஸ்திரேலியாவிற்கு "பசிபிக் சமுத்திரத்தின் ஞாதியற்ற பிள்ளை" என்று பெயர் சூட்டினார்கள். ஆஸ்திரேலியாவின் கடற் பாதைகள் அனைத்தையும் வெட்டி விடப் பார்த்தார்கள். ஆனால், பவளத் தீவுகளிலும் மிட் வ தீவுகளிலும் நேச நாட்டாருக்குக் கிடைத்த வெற்றிகள், இலங்கையின் பாதுகாப்புக்கள், மடகாஸ்கரை பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றி உட்புகுந்தது, ஆகிய இவை எல்லாம் ஜப்பானியர்களின் ஆசையில் மண்ணைப் போட்டன. ஆஸ்திரேலியாவின் வடகரையில் சிதறிக் கிடக்கும் சில தீவுகள் ஜப்பானியர் வசமிருக்கின்றன. இவற்றைத் துளைத்துக் கொண்டு நம் நேச நாட்டுப்படைகள் புகுந்து சாலமன் தீவுகளிலும் நியூகினியாவிலும் பல வெற்றிகளைப் பெற்றன. ஆகவே, அந்தப் பெரிய தீவைத் தம் தளமாகக் கொண்டு தாக்க வேண்டு மென்று ஜப்பானியர் போட்டிருந்த திட்டம் குலைந்தது. இப்போது ஜப்பான் கீழ்க்கண்ட இரண்டில் ஒன்று செய்யவேண்டும் (1) **தான் வென்ற நாடுகளை எல்லாம் திரட்டவேண்டும், அல்லது (2) அவற்றை விட்டு விட்டுப் போய் விட வேண்டும்.** இந்த இரண்டாவது முறையை ஜப்பான் கைக்கொள்ளும் படியான அவசியத்தை உண்டாக்கும் பொருட்டுத் தான், நேச நாட்டுப் படைகள் இவ்வளவு மும்முரமாகத் தென்மேற்குப் பசிபிக் கடல்களில் போராடுகின்றன.

உடனடியாக சாலமன் தீவுப் பகுதியிலிருந்து நேச நாடுகளின் பலத்தை குறிப்பாக விமான பலத்தைச் சிதறிப் போகும்படி அடிக்க வேண்டு மென்பது தான் ஜப்பானியர்களின் நோக்கம். இதற்கு ஆஸ்திரேலியாவில் எந்தப் பகுதியையாவது தாக்கினால், சாலமன் பகுதியிலுள்ள விமானங்கள் அங்கே விரைந்து போகும் என்று நினைக்கிறார்கள். அப்படி ஜப்பான் செய்தால், ஜப்பான் கப்பல்களை நேச நாட்டு விமானங்கள் கண்டிப்பாக நாசஞ் செய்யும். ஜப்பானும் ஓய்ந்திருக்கட்டும். இதற்கிடையில், எப்படிப்பட்ட நிலைமையையும் சமாளிக்க, ஆஸ்திரேலியா தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளட்டும்.

## வட ஆப்பிரிக்க வெற்றியும் : சீனாவின் மகிழ்ச்சியும்

### சீனாவின் கருத்து.

பிரிட்டிஷ் விமான உற்பத்தி மந்திரி சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், பிப்பிரவரி மாதம் 4-ம் தேதி நடை பெற்ற "சீனாவிற்கு உதவி" விழாக் கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டதாவது :—சீனா ஒரு பழமையான நாகரிகமுடைய நாடு என்றாலும் சிதறிக் கிடந்த மக்களை ஒன்று திரட்டி ஒரு நாடு எனத் தக்க முறையில் அமைந்தது சமீபத்தில் தான். எனவே, அதை ஒரு இளம் நாடு என்றும் கூறலாம். இங்கே உள்நாட்டுத் தொல்லைகள் மிகவும் உண்டு. தகுந்த தளவாடங்களும் கிடையாது. படைகளுக்கும் போதுமான உணவும் இல்லை. என்றாலும், **உலகத்திலேயே பாஸிஸ்ட் கொடுமைகளை எதிர்த்து முதல் முதல் தோள் தட்டியது சீனா தான்.**

"அதை விட மகத்தான பல அரசாங்கங்கள் ஜப்பானை திருப்தி செய்திருக்கின்றன. சீனாவும் சுலபமாக அப்படிச் செய்திருக்கலாம். இதனால் தமக்கு ஏற்படக் கூடிய தீங்கு எப்படிப்பட்டது என்பதை சீனத் தலைவர்கள் உணர்ந்தார்கள். ஆகவே, வருஷக் கணக்காக எத்தனையோ வகையில் மகா கொடூரமான கஷ்டங்களுக்கு உள்ளானார்கள். ஏன் ? தம் உரிமைகளைக் காக்க ; உலகில் நன்மையை நிலை நாட்டிக் காப்பாற்ற ; தம் சுயேச்சைக்கு எப்படிப்பட்ட பாதகமும் நேராதபடி காத்துக் கொள்ள".

சென்ற சில வாரங்களாக சீனர்களின் உள்ளம் மேலும் பலப்பட்டிருக்கிறது. மனம் மேலும் உறுதியடைந்திருக்கிறது. எப்பாடு பட்டாவது கொடுமைகளை எதிர்த்துப் போராடி தம் சுயேச்சையை நிலை நாட்ட வேண்டு மென்று முடிவு கட்டி விட்டார்கள். இவர்கள் இந்த முடிவு கட்டியதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றுள் ஒன்று வட ஆப்பிரிக்காவில் நேச நாடுகள் அடைந்த வெற்றிகள். திரிபோலியில் நேச நாடுகள் அடைந்த வெற்றிகளின் பலா பலன், வெகு தூரத்திற் கப்பாலுள்ள சீனப் போர் முனையிலும் ஏற்பட்டது. இந்த வெற்றியைப் பற்றி சீனப் பத்திரிகையான 'டா மாங் போ' என்னும் பத்திரிகை எழுதியதாவது :—



**டோஜோவுக்கு உள்ள அஸ்தி ஜுரம் அதிகப்படும். இந்த நேச நாட்டு வெற்றி, ஹிட்லர் தலையெழுத்தை நிர்ணயித்து விட்டது ; அது மட்டுமல்ல ; ஜப்பானுக்கும் இது பலமான அடி தான்.**

"ஹெய்ன் மின் போ" என்ற வேறொரு பத்திரிகை, "அச்சு நாடுகளின் அழிவு காலம் வந்து விட்டது என்பதற்கு, மத்தியதரைக் கடல் போர் முனையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களே போதுமான சான்றுகளாம்" என்று குறிப்பிடுகிறது.

கசப்ளாங்கா மகா நாட்டின் முடிவுகள் வெளி வரும் முன்னதாகவே, "சுங்-யாங்-சோ டாங் ஜி போ". என்னும் மற்றொரு சீனப் பத்திரிகை "படைகளை மாற்றுவதிலும், இயற்கையான மூலப் பொருட்களைச் சேகரிப்பதிலும், படை பலத்தையும் விஞ்ஞான அறிவையும் பயன் படுத்துவதிலும், உலகம் முழுதுக்கும் பொருந்தத் தக்கபடி போர்த் தந்திர முறைகளையும் திட்டங்களையும் ஒன்று போல் அமைத்தால் தான், வெற்றி பெற முடியும்" என்று குறிப்பிடுகிறது.

இன்னொரு சீனப் பத்திரிகையான "ஹெய்ன் வா ஜி போ" ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனையை அமைப்பதைக் குறித்து சர்ச்சிலும், ரூஸ்வெல்டும் சந்தித்துப் பேசியதை வரவேற்று, ஐரோப்பியப் போர் முனையில் நிகழும் சம்பவங்கள், கீழக் கோடியிலுள்ள சீனாவுக்கும் நன்மை யளிக்கும் என்று குறிப்பிடுகிறது.

## பால்கன் நாடுகளில் கிளர்ச்சி

### பால்கனில் நாஜி எதிர்ப்பு முயற்சிகள்.

லண்டனிலுள்ள யூகோஸ்லேவிய அரசாங்கத்திற்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது யூகோஸ்லேவிய யுத்த மந்திரி ஜெனரல் மிகைரோவிச். இவர் அந்தத் தேச பக்தர் படைகளின் தலைவருங் கூட. இவர் ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறாராம். இதன்படி யூகோஸ்லேவியாவின் மத்தியப் பகுதியிலும் தென் பகுதியிலும் உள்ளவர்கள் சட்டமறுப்பு ஆரம்பிப்பார்கள். அங்கு வந்து குடியேறும் அச்சுநாட்டுப் படைகளிடையே குழப்பம் உண்டாக்க வேண்டு மென்பது தான் அவருடைய நோக்க மென்று தெரிகிறது. யூகோஸ்லேவியாவில் மட்டுமன்றி பால்கன் நாடுகளிலேயே அச்சு நாடுகளின் மீது மிகுந்த அதிருப்தி வளர்ந்து வருகிறது.

டான் நதிக்கடுத்த போர்முனையில் ருமேனியப் படைகள் பெருவாரியாக மாண்டன என்னும் செய்தியை அந்த அரசாங்கத்தார் எவ்வளவோ இரகசியமாக வைத்திருக்க முயன்றார்கள். ஆனால் உண்மை வெளி வந்து விட்டது. காட்டுத் தீப்போல் நாடெங்கும் பரவி விட்டது. 50,000 ருமேனியர்கள் டான் போர்முனையில் மடிந்தார்கள் என்றும், புகழ் வாய்ந்த சில படைத் தலைவர்கள் தற்கொலை செய்து கொண்டார்க ளென்றும், ஜனங்களுக்குத் தெரிந்தது. அந்நாட்டின் 'வீரக் காவலர்'களில் ஒரு பகுதியினரும், தேசீய விவசாயிகள் கட்சியினரும், ருமேனியர்களை ருஷ்ய போர்முனையி லிருந்து திருப்பி வரவழைத்துவிட வேண்டு மென்று கோரினார்கள்.

ஜெர்மனியர்கள் ரஷ்யாவின் சில பகுதிகளைக் கைப்பற்றிய போது ருமேனியாவிற்கு டினீஸ்டரைச் சுற்றியுள்ள 'டிரான்ஸ்டினீஸ்ட்ரியா' என்னும் பகுதியைக் காப்பாற்றுவதை விட, டிரான்சில்வேனியாவைப் பிடுங்கும் பொருட்டாவது ருமேனியப் படைகள் இருக்க வேண்டியது அவசியம் என்னும் எண்ணம் இருந்து வருகிறது. தமக்குக் கொடுத்த 'டிரான்ஸ்டினீஸ்ட்ரியா' வைக் காப்பாற்றிக் கொடுக்க ஜெர்மனியால் முடியுமா என்று ருமேனியர்கள் சந்தேகப்படுகிறார்கள். இதுவரை ஜெர்மானியர்களுக்குப் பணிந்து கிடந்த மார்ஷல் அந்தனெஸ்குவின் போக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறதற்கு இந்த உணர்ச்சிகள் தான் காரணம். ரஷ்யப் போர்முனையில் ஆயிரக் கணக்கான ருமேனியப் படையினர் மடிவதற்கு, நாஜிகளிடம் தான் கொண்டிருந்த விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை தான் காரணம் என்பதை இப்போது தான் உணர்ந்திருக்கிறார் போலிருக்கிறது. இந்த மாறுதலைக் கண்ட ஹிட்லருக்கு மகா கோபம் பொங்கி எழுந்தது. 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் ருமேனியாவிலிருந்து ஜெர்மனிக்கு ஓடிப்போன வீரப் படையினரை ஏவி விட்டார். இப்படிப்பட்ட நெருக்கடியான பருவத்தில் தன் கோஷ்டியில் புரண்டு செய்கிறவர்களை வைத்திருப்பது ஹிட்லருக்குப் பிடிக்க வில்லை. ஆகவே ஒரு அநாமதேயத்தைப் பிடித்தார். அவர் பெயர் 'ஹோரிய சீமா' இவர் அந்தனெஸ்குவின் எதிரி. இரண்டு வருஷங்களுக்கு முன்பு ருமேனியாவை விட்டு ஜெர்மனிக்கு ஓடிப் போன 'வீரப் படை'யினரில் இவரும் ஒருவர். சமீபத்தில் ருமேனியாவில் நடந்த ஒரு குழப்பத்திற்குக் காரணம் சீமாவும் அவருடைய கோஷ்டியாரும் செய்த கிளர்ச்சி தான். அநதனெஸ்குவை எச்சரிக்க வேண்டு மென்பது தான் அவர்களுடைய நோக்கம். ஹிட்லர் மனம் போல் நடப்பதாக அந்தனெஸ்கு ஒப்புக் கொள்வாரானால், இனி 'வீரப் படையினர்' கலவரங்கள் உண்டாக்கும்படி அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆனால் ஆந்தனெஸ்கு மட்டும் பிடிவாதமாயிருந்தால், அவர் வசமுள்ள ஆதிக்கத்தை சீமாவுக்குப் பிடுங்கிக் கொடுத்து விடுவார் ஹிட்லர்.

### ஹங்கேரியிலும் அமைதி யில்லை.

ஹங்கேரியிலும் அமைதி யில்லை. ருஷ்யப் போர் முனையில் குறிப்பாக வாரனேஜ் போர் முனையில் ஹங்கேரியப் படைகள் மடிந்ததன் பயனாக, நாஜிகளுக்கு விரோதமாகப் பல வேலைகள் நடை பெற்றுக் கொண்டு வருகின்றன. ரஷ்யாவைப்பற்றி தம் அரசாங்கம் கொண்டுள்ள போக்கு தவறான போக்கில் போகிற தென்று அந் நாட்டு மக்கள் சந்தேகங் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். ரஷ்யாவோடு போராடக் கூடாது என்றும் சொல்லி கிளர்ச்சிகள் செய்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையில் ஹங்கேரியும் ருமேனியாவும் ஒன்றோடொன்று போரிடுட்க் கொள்ளும்படி ஹிட்லர் அனுமதிக்க முடியாது. ஆகவே, தன் 'நாஜி ஆரோ க்ராஸ்' கட்சியை மீண்டும் அவர் புதுப்பித்தார். ஹெரர்த்தி ஆட்சி நாஜிகள் விருப்பப்படி நடை பெறுவதா யிருந்தால், இந்தக் கட்சி அதற்கு உதவி செய்யும் ; விருப்பப்படி நடக்கா விட்டால், அதை பலவந்தப் படுத்தி அடக்கும்.

சமீபத்தில் அங்காராவிலிருந்து ஒரு செய்தி வெளி வந்தது. இதில், வாரனேஜில் ரஷ்யர்களால் கைதி செய்யப்பட்டிருந்த அங்கேரிய ஜெனரல் பொகரஸையும் மற்ற இராணுவ உத்தியோகஸ்தர்களும் எதன் பொருட்டும் ஹங்கேரி போராட வேண்டிய தில்லை என்று வெளிப் படையாகக் கூறியதற்காக புடாபெஸ்ட் என்னும் இடத்தில் அவர்களைக் கைது செய்து விட்டார்களாம். இதிலிருந்து நாஜிகளிடம் ஹங்கேரியர்களுக்கு மிகுந்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறதென்றும் தெளிவாகத் தெரிகிறது.

### பல்கேரியா நிலைமை என்ன ?

பல்கேரியாவின் நிலைமை என்ன ? தவறான போக்கிலே தான் மீண்டும் அரசாங்கம் நடை பெறுகிறது என்று தான் பொதுவாக ஜனங்கள் கருதுகிறார்கள். தான் மரியாதையாகப் பின் வாங்கிக் கொள்ள வேண்டிய பருவம் வந்து விட்டது என்று போரிஸ் அரசர் கருதுவதாகத் தெரிகிறது. அப்போது தான் அரச பதவி தனக்கு நிலைக்கு மென்றும் யுத்த முடிவில் சற்று இலகுவான நிபந்தனைகள் பல்கேரியாவுக்கு விதிக்கப்படலா மென்றும் நினைக்கிறார். இது வரை நாஜிகளுக்கு ஆதரவான முறையில் அரசாங்கம் நடை பெற்று வந்ததற்கு யார் மீது பொறுப்பைக் கட்டி பழி சூட்டலா மென்று அவர் தேடிக் கொண்டிருந்தார். கடைசியாக அச்சு நாட்டாரிடம் அதிக பக்தி கொண்டுள்ள உள் நாட்டு மந்திரியான காப்ரோவ்ஸ்கீஸ் இவருக்கு அகப் பட்டார்.

# விலைவாசிகள் பிரச்சினையும் பொது மக்களும்

## அரசாங்கத்தார் செய்துவரும் முயற்சிகள்

**மிஸ்டர் சி. எச். மாஸ்டர்மன் அவர்கள் சமீபத்தில் சென்னை வானொலி நிலயத்தில் செய்த ஆங்கிலப் பேச்சின் சாரம் பின் வருமாறு :—**

'வயிற்றுக்குச் சாப்பாடு இருந்தால் தான் படைகள் மேற் கொண்டு போகக் கூடும்' என்பது **நெப்போலியனுடைய** கொள்கை உங்களில் பலருக்கு இது தெரிந் திருக்கலாம். அது போலவே **பீல்ட் மார்ஷல் சர் ஆர்ச்சி பால்ட் வேவல்** கூறிய மொழியையும் கேட்டிருப்பீர்கள் ; அல்லது படித்திருப்பீர்கள். அவர் என்ன சொன்னார் தெரியுமா ?

> **"தற்கால யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு முக்கியமான அம்சம் என்ன வென்றால், பொது மக்களின் நல்லுணர்ச்சி தான்."**

அதாவது இந்த யுத்தத்தில் போராட்டத்திற்குப் படையினர் எவ்வளவு முக்கியமானவர்களோ அவ்வளவு முக்கியமானவர்கள் தான் பொது மக்களும். இவர்கள் செய்யும் தொண்டு மிகவும் முக்கியமானது. இது ஒரு பரிபூரண யுத்தம். ஒவ்வொருவரும் முன் அணியில் இருக்கின்றார்கள்.

ஒரு படை திறமையோடு போராட வேண்டுமானால், போதுமான அளவிற்கு உணவுப் பொருள்கள் அதற்கு சப்ளை செய்யப்பட வேண்டும். இந்த யுத்தத்தில் படையின் ஒரு பகுதி தான் பொது ஜனங்கள். நம் பொது எதிரியை வெல்லும் பொருட்டுப் போராடத் தக்க திறமை நமக்கு இருக்கவேண்டுமானால், ஒவ்வொருவருக்கும் போதுமான அளவிற்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும். இந்த விஷயத்தைப் பற்றி மேலும் நான் அதிகம் கூற வேண்டியதில்லை யென்று நினைக்கிறேன். இப்போது தேசீயப் போர் முனையாளர்கள் உணவுப் பொருள் சப்ளை பிரசினையைத் தம் முக்கியமானதோர் பிரசினையாக ஏற்றுக் கொண்டு பாடுபட்டு வருகிறார்கள் என்பதை நான் உங்களுக்கு ஞாபக மூட்டுகிறேன்.

நியாயமான விலைக்குப் போதுமான உணவு கிடைக்கும்படி செய்ய வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையுமாகும் என்பதை ஏன் மறந்துவிடுகிறார்களோ தெரியவில்லை. நியாயமான விலைக்குப் போதுமான் உணவுப் பொருட்களை விற்பதும் கூட. யுத்த முயற்சிக்கு உதவுவது தான். இது அரசாங்கத்தின் கடமை யென்று தான் பொதுவாக ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆம், இது அரசாங்கத்தின் கடமை தான். இது உங்கள் கடமையுங் கூட. எப்படி உங்கள் கடமை என்பதை இனி விளக்கிக் கூறுகிறேன். நம் ஆண், பெண், குழந்தைகள் ஆகிய அனைவருக்கும் போதுமான அளவிற்கு உணவுப் பொருள்கள் கிடைக்கும்படி செய்ய, நம்மால் எப்படி முடியும் என்பது தான் நம் பிரசினை.

ஹிட்லர் 1939-ம் வருஷம் வம்பாக நம் மீது போர் தொடுத்தார். அதன் பயனாக பல கஷ்டங்களுக்கு நாம் உள்ளாக நேர்ந்தது.

1. உணவுப் பொருள்கள் முதலியவைகளின் விநியோகம் கஷ்டமாயிற்று.
2. நமக்குத் தேவையான சில பொருள்கள் கிடைப்பதில்லை.
3. விலை வாசிகள் அளவு கடந்து உயர்ந்து விட்டன.

நமக்குச் சில மூலப் பொருள்களை அனுப்பிக் கொண்டிருந்த சில நாடுகளை எதிரி கைப்பற்றிக் கொண்டான். எனவே, அந்நாடுகளிலிருந்து அவை இப்போது வருவதற் இல்லை. உதாரணமாக பர்மாவி லிருந்து எண்ணெய், பெட்ரோல், அரிசி ஆகியவை இறக்குமதியாகிக் கொண்டிருந்தன. அதுபோலவே, மலேயாவி லிருந்தும் ரப்பர் இறக்குமதியாகிக் கொண்டிருந்தது. இவை இப்போது நமக்குக் கிடைப்ப தில்லை. மற்ற வெளி நாடுகளிலிருந்தும் சரக்குகள் இறக்குமதி செய்வதும் கஷ்டமாயிருக்கிறது. இது மட்டுமல்ல. உள் நாட்டிலேயும் சாமான் போக்கு வரவுகள் சரளமா யில்லை. ஏனென்றால், ஹிட்லர் தன் நீர்மூழ்கிக் கப்பல்களை எல்லாக் கடல்களிலும் ஏவி விட்டிருக்கிறார். நம் நாட்டைப் பாதுகாக்கும் படைகளுக்கு தளவாடங்கள் போதுமானபடி வேண்டும். படைகளும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோக வேண்டிவரும். இவற்றிற்கு தாராளமாகப் போக வர வசதிகள் வேண்டும். இதற்கு எதிரிகள் வசப்பட்ட நாடுகளை எவ்வளவு சீக்கிரம் மீட்கிறோமோ, அவ்வளவு சீக்கிரம் நம் கஷ்டங்கள் நீங்கும். உதாரணமாக, பர்மாவை மீட்கும் வேலையில் நம் படைகள் முனைந்து இறங்கி விட்டன.

இதனால், அரசாங்கத்தாரோ மற்றவர்களோ விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக் கூடா தென்று நான் சொல்ல வரவில்லை. அரசாங்கம் இந்த வேலையைச் செய்து கொண்டு தான் இருக்கிறது. பொதுமக்களும் இந்தத் துறையில் தம் கடமையைச் செய்ய வேண்டுமென்பது தான் எம் கோரிக்கை.

### விலை வாசிகள் உயருவது ஏன் !

யுத்த சப்ளைகள் நடைபெறுகின்றன. யுத்த வேலைகளும் நடைபெறுகின்றன. சப்ளைகளுக்காக ஏராளமான தொகை செலவாகிறது. யுத்த வேலைகளைச் செய்யும் வேலைக்காரர் களுக்காகவும் ஏராளமான தொகை செலவாகிறது. ஆகவே பெருந் தொகை செலவாயிருக்கிற தென்று தெரிகிறது. நிற்க, யுத்தத் தளவாடங்களைத் தவிர மற்ற பொருள்களை இறக்குமதி செய்ய வசதி யில்லை. ஆகவே, அனேகம் பொருள்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. ஆகவே, பணம் செலாவணி அதிகரித்திருந்தும், பணத்தைக் கொண்டு வாங்கக் கூடிய பொருள்கள் கிடைக்க வில்லை யானால், என்ன நேரும் ? கிடைக்கக் கூடிய பொருள்களின் விலை உயருகிறது. விலைவாசிகள் உயருவதற்கு இது தான் காரணம்.

இப்படிப்பட்ட நிலைமையை எப்படிச் சமாளிப்பது ? இதற்கு இரண்டு முறைகளைக் கையாள வேண்டுமென்று நினைக்கிறேன்.

1. செலவிற் கென்று கிடைக்கக் கூடிய ரொக்கத் தொகையைக் குறைத்து விட வேண்டும்.
2. ஒவ்வொரு பொருளின் விலையையும் கட்டுப்படுத்தி, அந்த விலைக்குத் தான் விற்க வேண்டு மென்று வற்புறுத்த வேண்டும். இவற்றை விலை கொடுத்து வாங்குகிறவர்களும் அளவுப்படி விநியோகிக்க வேண்டு மென்னும் சட்டம் உண்டாக்கி, அதை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.

விலை வாசிகள் குறைய வேண்டுமானால் இந்த இரண்டு முறைகளையும் கையாள வேண்டியது அவ்சியம்.

செலாவணியிலுள்ள தொகையைக் குறைப்பதெப்படி ? பொது ஜனங்கள் தமக்கு இன்றியமையாத பொருள்களை மட்டுந் தான் வாங்க வேண்டும். தேவையானால் இவற்றை சற்று அதிகமாக வாங்கி சேமித்து வைத்துக் கொள்ளலாம். இதனால் ஏராளமாகப் பணத்தைத் திரட்டி வைத்துக் கொள்ளுவது என்று அர்த்த மாகாது. இப்படித் திரட்டப்பட்ட பணத்தைப் பயன் படுத்தி ஏதேனும் வாங்கினால் தான், அதற்கு ஆக்கம் உண்டு. மீதி செய்து வைக்க வேண்டு மென்றால், என்ன பொருள் ? நமக்குள்ள இன்றியமையாத தேவைகள் போக, மிகுதியாகுந் தொகைகளை பாதுகாப்பு நிதிகளிலும், யுத்த செம நிதிகளிலும் சேமித்து வைக்க வேண்டுமென்பது தான் என் கருத்து. இந்த யுத்த காலத்திலும் கூட, அநேகம் பேர்கள் களியாட்டங்களிலும், விருந்துகளிலும், விழாக்களிலும் பெருந் தொகைகளைச் செலவிடுகிறார்கள். இவற்றின் பொருட்டு நாம் செலவு செய்யா திருப்போமானால், விலைவாசிகள் குறைவதற்கு உதவியவர்களாவோம்.

> **உங்கள் இன்றியமையாத தேவைகளுக்குப் போக மிகுதியாகுந் தொகையை யுத்த கடனுக்க் கொடுப்பதனால் உங்களுக்கு இரண்டு வகைகளில் இலாப முண்டு. (1) யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்குப் பணம் கடன் கொடுத்து உதவியவர்களாகிறீர்கள். (2) உங்கள் வருமிருக்கும் உபரித் தொகையை அநாவசியமான துறைகளில் செலவிடாதபடி சேமிப்பதன் மூலம், விலைவாசிகள் குறைவதற்கு உதவியவர்களுமாவீர்கள். இது ஒரு சிறந்த பொதுத் தொண்டல்லவா ?**

### யுத்த சேம நிதியில் சேருங்கள்

ஏழைகள் தம் தொகையை மீதி செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்கள் வசம் அதிகத் தொகை யிருப்பதனால் தான், அதிக விலை கொடுத்துப் பொருள்களை அவர்கள் வாங்குகிறார்கள் என்றும் நான் சொல்லவில்லை. மீதி செய்யக் கூடியவர்கள் எல்லோரும் தம் உபரித் தொகையை யுத்தக் கடனாகக் கொடுத்து சேமித்தால், ஏழைகளுக்கு அதிக உணவு கிடைக்கும் ; விலை வாசிகளும் குறையும். இந்த முறையை நாம் கையாளா விட்டால், யுத்தத்தில் வெற்றியடையும் வழிகளில் ஒன்றை இழந்தவர்களாவோம்.

இரண்டாவதாக, விலைவாசிகளை அரசாங்கத்தார் கட்டுப்படுத்தி ஒவ்வொருவருக்கும் இன்னது தான் படித்திறம் என்று நிர்ணயிக்க வேண்டும். இந்த அளவிற்கு மேல் அவர்கள் வாங்கக் கூடா தென்ற நியதி ஏற்பட வேண்டும். படித் திறத்தை மட்டும் நிர்ணயித்து விட்டு விலை வாசிகளைக் கட்டுப் படுத்தா விட்டால், விலைவாசிகளைத் தகுந்தபடி குறைக்க முடியாது. இந்தத் துறையில் அரசாங்கத்தார் சும்மா இருந்து விடவில்லை. மண் எண்ணெய்க்கும் பெட்ரோலுக்கும் படித்திறம் விதித்து விட்டார்கள். சர்க்கரைக்கும் தீப்பெட்டிக்கும் விலையை நிர்ணயித்து விட்டார்கள். அரிசியின் விலை வாசியைக் கட்டுப் படுத்தா விட்டாலும், அதன் விலை அதிகமாக உயராதபடி பல முறைகளைக் கையாளுகிறார்கள். நம் நாட்டின் பல பாகங்களிலும் அரிசி கிடைக்கத் தகுந்தபடி ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். உதாரணமாக சென்னைக்கு வெளி ஜில்லாக்களிலிருந்து தான் அரிசி வரவேண்டும். ஏராளமாக இருப்புள்ள ஜில்லாக்களில் மிகக் குறைந்த விலைக்கு அரிசியை வாங்கி சென்னைக்கு அனுப்ப அங்கங்கே பல உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். தகுந்தபடி அரிசி மூட்டைகள் சென்னைக்கு வந்து சேர்ந்த பிறகு, அதை நியாயமான விலைக்கு விற்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இதன் பொருட்டு சில மொத்த வியாபாரிகள் சில்லரையில் அரிசி விற்கும் பொருட்டு நகரத்தின் பல பாகங்களிலும் 12 டிப்போக்களை ஆரம்பித்திருக்கிறார்கள். இவை மட்டு மின்றி, அரசாங்கத்தாரே ரூபாய்க்கு $2\frac{3}{4}$ படி அரிசி விற்கும் 4 டிப்போக்களை ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தாரும் ஒரு குறிப்பிட்ட விலைக்கே தம் டிப்போக்களில் அரிசி விற்கிறார்கள். மூட்டையாக வாங்குகிறவர்களுக்கு, ஒரே சமயத்தில் 2 மூட்டைகளுக்கு அதிகமாக சில கடைக்காரர்கள் விற்பதில்லை. விலையும் மூட்டைக்கு ரூ. 16-11-0. இந்தக் கடைகளையும் டிப்போக்களையும் அவ்வப்போது அரசாங்க



உத்தியோகஸ்தர்கள் மேற் பார்வை யிட்டுக் கொண்டு வருகிறார்கள். இப்போது, சென்னையிலுள்ளவர்கள் அனைவருக்கும் நியாயமான விலைக்குப் போதுமான அரிசி கிடைக்கிறது என்று தான் நினைக்கிறேன். ஒருக்கால் அவர்கள் கோரும் ரகம் கிடைக்காமல் இருக்கலாம்.

நியாயமான விலை என்றால் என்ன ? 1938-ம் வருஷம் ரூபாய்க்கு $2\frac{3}{4}$ படி அரிசி நியாயமான விலையா யிருந்திருக்காது. **விவசாயி முதல் சில்லரை வியாபாரி வரை நியாயமான இலாபம் அடையத் தக்க விலை எதுவோ, அது தான் நியாயமான விலை யாகும்.** இதன் பொருட்டுத் தான் அரசாங்கத்தாரும் முயன்று கொண்டு வருகிறார்கள். சாகுபடி யாகிற இடத்திலேயும் சில்லரை வியாபாரிகளிடத்திலும் அரசாங்கத்தார் விலையைக் கட்டுப் படுத்துகிறார்கள். விவசாயிக்கும் நெல்லைக் குத்தி அரிசியாக்கும் மில்காரர்களுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் அவரவர் முயற்சிக்குத் தகுந்தபடி ஊதியம் கிடைக்கக் கூடியபடியே கட்டுப்பாடுகளைப் பயன் படுத்துகிறார்கள்.

விவசாயியிட மிருந்து நெல் வாங்குகிறோம். அதற்குக் கொடுக்கப்படுந் தொகை தான் கொள் முதல் விலை எனப்படுவது. இது சம்பந்தமாக அரிசி என்ன விலைக்கு விற்கிறது; யுத்தத்திற்கு முன்பு என்ன விலைக்கு விற்றது என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். முதலாவதாக, யுத்தத்திற்கு முன்பு விவசாயிகளுக்கு நல்ல விலைக்கு, நெல் விற்பதில்லை. இப்போது விலை வாசிகள் உயர்ந்திருக்கிறபடியால் அவர்களுக்கு, நெல் விலையும் உயர்ந்து சற்று இலாபமாக இருக்கக் கூடும். இரண்டாவதாக, விவசாயியின் சாகுபடிச் செலவுகள் வெகுவாக அதிகப்பட்டு விட்டன. இதிலிருந்து விவசாயியின் வரவு அதிகமாக அதிகமாக, செலவும் அதிகமாகிறது என்று தெரிகிறது. நெல் சாகுபடி செய்ய, விவசாயிக்கு; முன்னைய விட அதிகச் செலவாகிறது. ஆகவே, அவர் சாப்பிடும் அரிசிக்கும் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்குக் கொஞ்சமும் இடங் கொடுக்கக் கூடாது. **விவசாயி முதல் சில்லரை வியாபாரி வரை அதிக இலாபம் அடைய மாட்டாதபடி செய்து விட்டால், விலை வாசிகள் உயர இடமே இருக்காது. உங்கள் படித் திறத்தை நீங்களே நிர்ணயிங்கள்.**

சுருக்கமாகச் சொன்னால், அரசாங்கத்தார் மேற்கொள்ளும் முறைகள் இவை தான். இவற்றிற்கு நாம் ஒவ்வொருவரும் எப்படி உதவக் கூடும் ? **நாம் ஒவ்வொருவரும் சிக்கனமாகச் செலவு செய்து புத்திசாலித் தனமாகச் சேமித்து வைக்கலா மென்று முன்பே சொன்னேன்.** நமக்கு இன்றி யமையாதவற்றையுங் கூட தேவைக் கதிகமாக வாங்கித் திரட்டி வைக்கக் கூடாது. அதாவது உங்கள் படித் திறத்தை நீங்களே நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிப்பதற்கோ, ஏராளமாகச் சரக்குகளைத் திரட்டி இருப்பு வைத்துக் கொள்ளுவதற்கோ, விதிக்கப்பட்ட விலைக்கு, அதிகமாக எந்தப் பொருளையும் விற்பதற்கோ, நீங்கள் ஆதரவு காட்டா திருக்கலாம். விதித்த விலைக்கு மேல் தொகை கொடுத்து எதையும் வாங்காதீர்கள். யாரேனும் ஏராளமாகத் திரட்டி வைத்திருந்தால், உடனே அதிகாரிகளுக்குத் தெரிவியுங்கள். இப்படிப்பட்டவர்களைக் கடுமையாகத் தண்டிக்க அரசாங்கத்தார் ஆயத்தமா யிருக்கிறார்கள். வெளி நாடுகளில் பண்டயினர் நம் எதிரிகளோடு போர் புரிந்தால், உள் நாட்டிலுள்ள பகைவர்களோடு, முன் கூறிய முறைகளைக் கொண்டு நீங்கள் போராடி வெல்லலாம்.

---

## அட்டை செய்வது எப்படி ?

வீணாகப் போன காயிதத் துண்டுகளை எல்லாம் முதலில் சேர்க்க வேண்டும். ஒரு தொட்டியில் தண்ணீர் ஊற்றி அதில் இத் துண்டுகளை ஊற வைக்க வேண்டும். 5 நாட்களுக்குப் பிறகு அதை எடுத்து ஒரு அம்மிக் கல்லின் மீது வைத்து சுமார் அரை மணி நேரம் அறைக்க வேண்டும். வெண்ணெயைப் போல் மெதுவாகி விடும். இத்துடன் கோந்தை அல்லது மாப்பசையைக் கலக்க வேண்டும். அறைத்த காயிதம் 100 பங்குகள் இருந்தால், 2 பங்கு கோந்து அல்லது மாப்பசை சேர்க்க வேண்டும். இவ்விரண்டையும் நன்றாகக் கலந்த பிறகு, ஒரு மட்டமான தகட்டின் மேல் அதைத் தடவி, அப்பள உருளையைக் கொண்டு அதன் மேல் உருட்டி சமன் செய்யவும். அப்போது தான் மேடு பள்ளங்கள் இருக்காது. இது நன்றாகக் காய்கிற வரைக்கும் (சுமார் 5 நாட்கள் பிடிக்கும்) அப்படியே விட்டு வைத்திருந்து, பிறகு நம் தேவைக் கேற்ற அளவிற்கு அதை வெட்டிக் கொள்ளலாம்.

அறைத்த காயிதம் வெண்ணெய் போலிருக்கும் போது, சாயத்தைச் சேர்த்தால், நாம் கோரும் நிறமுடைய அட்டை கிடைக்கும்.

# சாகப்போகிற காலத்தில்……. !

உடம்பிலே தெம்பு இருக்கிற காலம் வரை என்னென்ன அட்டூழியங்கள் செய்ய முடியுமோ அத்தனையும் செய்து விட்டு, அதன் விளைவாக ஒரே யடியாக வியாதியும், கவலையும், நஷ்டமும் சேர்ந்து வந்து சூழ்ந்து கொண்ட கடைசிக் காலத்திலே, ஒருவன், 'சாமி! கடவுளே! ஆண்டவனே! என்னைக் காப்பாத்த மாட்டாயா? தெரியாமெச் செய்துட்டேன் தப்பு எல்லாம். ஐயோ பொறுக்க முடியலையே அவஸ்தை!' என்று அலறினாலும். அவனுக்கு யாராவது இரங்குவார்களா? அவனைப் பற்றி அறிந்தவர்கள் எல்லாம், 'வேணும் நன்றாக இவனுக்கு! அப்பா! என்ன ஆட்டம் ஆடினான் ஐயா இவன், அந்தக் காலத்திலே! அப்பொழுது கடவுளை ஒரு தடவை யாவது நினைத்திருப்பானா இவன்? இப்பொழுது சாமியாம், பூதமாம்! எந்தச் சாமி வருவார், இப்படிப்பட்ட அயோக்யனைக் காப்பாற்ற? என்று தான் சொல்லுவார்கள்.

மேற்கண்ட மனிதனது நிலைமையில் தானிருக்கிறார் ஹிட்லர். 'ஐயோ பாவம்' என்று அவரைப் பார்த்துச் சொல்வதற்கு இந்தப் பிரபஞ்சத்திலே ஒரு ஆள் கிடைப்பது கூட சிரமம். அவருடைய நாட்டு மக்கள், "அவரன்றி ஓரணுவும் அசையாது! அவரே கடவுளின் திரு அவதாரம்! அவர் 'சா' என்றால் சாவோம்" என்றிருந்தார்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை. ஆனால் இன்றோ, ஹிட்லரை ஜெர்மானிய மக்கள் எல்லாம் மனமார வைது கொண்டு தானிருப்பார்கள்.

'ஹிட்லர் கடவுளின் அவதாரம் தான். ஆனால் பிசாசு அவதாரம்!' என்றே அவர்கள் நினைக்கக் கூடும். அவரது சர்வாதிகார ஆசையைப் பூர்த்தி செய்ய, எத்தனை இளம் பெண்கள் அமங்கலியராயிருக்கின்றனர்! எத்தனைத் தாய்மார்கள் புத்திர சோகத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள்! எத்தனை பேர் வீடு வாசலின்றித் தவிக்கிறார்கள்! எத்தனை கோடிப் பேர் அரை வயிறு உணவுடன் திருப்தி யடைந்திருக்க வேண்டி வந்திருக்கிறது! இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால், ஜெர்மன் மக்களைப் பிடித்த பீடை, லேசிலே விடாது போலிருக்கிறது அவர்களை.

ஜெர்மனியிலே, படை திரட்டுவதற்குப் புதுப் புது விதிகள் பிறந்து கொண்டிருக்கின்றன. 'ஹோட்டலை மூடு! கடையைச் சாத்து! சினிமாக் கொட்டகை எதற்கு? அதிக உபயோக மற்ற தொழிற் சாலைகளை அடை!' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். மீசை கூட முளைக்காத சிறுவர் முதல், அறுபது வயதான கிழங்கள் வரை, போர்க் களத்திற்குப் போகச் சித்தமாக வேண்டுமாம். இதற்காகத் தான் கும்பல் கும்பலாக, பலிக்காகத் தீனி போட்டு வளர்க்கப்படும் ஆடுகள் மாதிரி, ஜெர்மனியிலே விவாகங்கள் நடக்க ஏற்பாடு செய்து, அதிகமாகக் குழந்தைகள் பெறுவோருக்கு விசேஷ வெகுமானம் எல்லாம் கொடுத்து வந்தாரோ ஹிட்லர்?

ஸ்டாலின்கிராடிலே, வீரர்களாக உள்ள மூன்று லக்ஷம் ஜெர்மானியரை, ஜெர்மனி இழக்க வேண்டி வந்தது. அந்தச் செய்தியை ஹிட்லரா மறைக்கத் துணியவில்லை. அந்தப் போரில் மடிந்தவர்களின் வீரத்தை வெகுவாகச் சிலாகித்து விட்டு, அவர்களின் ஞாபகார்த்தமாக ஜெர்மனி முழுவதிலும் சென்ற வாரம் இரண்டு மூன்று நாட்கள் துக்கம் கொண்டாடும்படி உத்திரவு பிறந்தது.

## வளையம் சுருங்குகிறது

இம்மாதி யாக, இன்னொரு தடவை ஜெர்மனியிலே துக்கம் கொண்டாட வேண்டி வரும் போலிருக்கிறதே! டான் நதி சமுத்திரத்திலே சங்கமமாகும் பிரதேசத்தருகே, சுமார் இரண்டரை லக்ஷம் ஜெர்மானியர்களை, ருஷ்யர்கள் வளைத்துக் கொண்டு சிவி நதள்ள யத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு நாள் வளையம் சுருங்குகிறது. இந்த முயற்சியில் ருஷ்யர்கள் வெற்றி பெறுல், ஜெர்மனிக்கு மற்றொரு பலத்த அடி கிடைத்தது போலாகும்.

பனி காலத்திலும் சரி, மற்ற காலத்திலும் சரி; தங்கி யிருந்து, முன்னால் செல்லும் படைகளுக்குத் தேவையான ஆயுதம், உணவு, வெடி மருந்து, டாங்கி, விமானங்களை சப்ளை செய்வதற்கு சகல வசதிகளையும் ராஸ்டாவ், கார்க்கோவ் போன்ற பெரிய நகரங்களில் சேமித்து வைத்திருந்தார்கள் ஜெர்மானியர். இந்த நகரங்களுக்கெல்லாம் இப்பொழுது தலைவலிக்க ஆரம்பித்திருக்கிறது. ராஸ்டாவின் மீது ருஷ்யர்கள் விடும் 'மூச்சு' நன்றாகப் படும் போலிருக்கிறது. அந்நகருக்குத் தெற்குத் திசையிலே அவ்வளவு நெருங்கி விட்டார்கள் ருஷ்யர்கள்.

சென்ற 81 நாட்களில், அதாவது ருஷ்யர்கள் கை வலுக்க ஆரம்பித்ததி லிருந்து சென்ற ஞாயிறு வரை, சரியாக ஒரு லக்ஷம் சதுர மைல் பரப்புள்ள ருஷியப் பிரதேசத்தை ருஷ்யர்கள் அச்சு நாட்டாரிடமிருந்து மீட்டிருக்கிறார்கள் என்பது, கேட்டு மகிழத்தக்க செய்தியாகும். ருஷ்யர்களின் முன்னேற்ற வேகம் சற்றும் தணிவதாகக் காணோம்.

ஆனால், ஜெர்மானியர் ராஸ்டாவ் நகர் அருகே, தங்களிடமுள்ள டாங்கிகளை யெல்லாம் கொண்டு ருஷ்யர்களைக் கடுமையாகத் தாக்கி யிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முயற்சிகள் எல்லாம் கல் சுவற்றில் மோதிக் கொண்டவன் அடைந்த பலனையே அளித்தன.

ஒரு புறம் இவ்வாறு கடுமையாகப் போரை நடத்திப் பார்க்கையில், மறு புறத்திலே நாஸிப் படைகள் ராஸ்டாவிலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் கம்பி நீட்டிய வண்ணமாக இருக்கிறார்களாம். காகஸஸில் சிக்கிய நாஸிப் படை, கிரிமியாவிற்குத் தப்பிப் போக முயற்சிக்கிறதாம். ஆனால் இங்கே ருஷ்யக் கடற் படை போடுகிற போடு கொஞ்ச நஞ்சமாக இல்லையாம்.

## எங்கு பார்த்தாலும் தோல்வி

இப்படியாக ருஷ்யப் போர் முனையிலிருந்து கண்ணீருவிச் செய்திகளே ஜெர்மனிக்குப் போய்க் கொண்டிருக் கின்றன. ஹிட்லர் வெகு ஜம்பமாக, ஏதேதோ மனதில் எண்ணிக் கொண்டு, பல ஜெர்மன் சேனாதிபதிகளை வேலையி லிருந்து தள்ளிவிட்டு, பிரமாதமாக ஏதோ கிழித்து விடுகிறவர் போல, தானே பிரதம சேனாபதி பதவியை ஏற்றார். ஆனால் அன்றிலிருந்து இன்று வரை, பாவம்! அவர் பெருமையாகச் சொல்லிக் கொள்ளும்படி, ஒரு வெற்றியாவது கிட்ட வில்லை. அதற்கு மாறாக, எங்கு திரும்பினாலும் பூசையும், தோல்வியுமாகவே இருக்கிறது. தன்னைக் கண்டால் பிரமாத மகிழ்ச்சியை அடைந்து கொண்டிருந்த தனது நாட்டு மக்களுக்கே தனது முகத்தைக் காட்ட முடியாத நிலைமைக்குத் தன்னைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு விட்டார் அவர். அவரை முன்போல ஜெர்மன் மக்கள் இனியும் மதிப்பார்களா?

அவர் வெற்றி மேல் வெற்றி அடைந்து வந்த வரை, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அவரிடம் ஒரு மரியாதையும், பயமும் இருந்திருக்கும். இனி? இத்தாலிய மக்கள் ஏகமாக முணு முணுக்கிறார்களாம். முஸோலினியின் வாய் ஒரே யடியாக அடைத்துப் போயிருந்தது. பேசுவதற்கு என்ன இருக்கிறது அவருக்கு? அபிஸீனியாவும் போச்சு, லிபியாவும் போச்சு! இத்தாலிய சாம்ராஜ்யத்தின் ஆப்பிரிக்கப் பகுதியிலே இத்தாலிய ஆட்சி அஸ்தமித்துப் போய் விட்டது. பாக்கி இருப்பது இத்தலி மட்டும்தான். அதன் மீதும் நேசதேசத்தவரின் விமானிகளது கண்பார்வை அடிக்கடி விழுந்து கொண்டிருக்கிறது. வட ஆப்பிரிக்கப் போர் ஒரு தினுஸாக முடிந்துவிட்டால், பிறகு இத்தாலியை, நேசதேசக் கப்பற்படைகளும், தரைப் படைகளும் நன்றாகக் கவனிக்கத் தொடங்கிவிடும். ஆகவே முஸோலினி என்ன சொல்லுவார்.

## "சரணடைய வைப்போம்"

உள்ளே ஆத்திரம் பொங்கிக்கொண்டிருக்கிறது. கஸபிளாங்காவிலே நேசதேசத் தலைவர்கள் கூடி, 'நிபந்தனையின்றி அச்சு நாட்டினரைச் சரணடைய வைப்போம்' என்று தீர்மானித்ததைக் கேட்டு, 'நாங்கள் மட்டும் என்ன? ஆயுதம் பிடிக்க சக்தி இருக்கும் வரை நாங்கள் பணியவே மாட்டோம்' என்று முஸோலினி வாய் திறந்து கூறினார்.

தாமும் சும்மா இல்லை என்று தம் மக்களுக்குக் காட்டிக் கொள்ள விரும்புகிறவர் போல, இத்தாலியிலே படைபலத்தைப் பெருக்கக் கடுமையான சட்டங்களைப் பிறப்பித்தார். அடுத்தபடியாக, தனது மாப்பிள்ளையான ஸியானோ பிரபுவை கல்தாக் கொடுத்து, அந்நிய நாட்டு மந்திரிப் பதவியிலிருந்து தள்ளி, போப் பாண்டவர் கோட்டையிலே இத்தாலியப் பிரதிநிதியாக இருந்து சாப்பிடச் சொல்லி விட்டு, தாமே அந்நிய நாட்டு மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறார் முஸோலினிப் பெரியார். இதனாலே யுத்தத்தின் போக்கு மாறி விடப் போவதில்லை. ஆனால், முஸோலினியின் மனசிலே நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டும் தெளிவாகிறது.

இது ஒருபுறமிருக்க, ஹிட்லர் கவர்ந்த நாடுகளுக்கு அடுத்தாப்போலிருக்கும் துருக்கி, இன்றுவரை நடுநிலைமை நாடாகவே இருந்து வருகிறது. சென்ற வருடம் நாஸிகள் அடைந்துகொண்டிருந்த வெற்றியைப் பார்த்தபொழுது, துருக்கி நிச்சயம் மாட்டிக் கொள்ளப் போகிறது நாஸிப் பிடியில் என்றே எல்லோரும் நினைத்திருப்பார்கள். அப்பொழுது துருக்கியும் கொஞ்சம் யோசனை செய்யத்தான் செய்திருக்கும். ஜெர்மனியைப் பகைத்துக் கொள்ள அது அப்பொழுது விரும்பி யிராது. அதனால் தான், ஜெர்மனியிலிருந்து கிடைக்கும் ஆயுதங்களுக்குப் பதிலாக, ஏதோ சில ரஸாயனப் பொருள்களை ஜெர்மனிக்கு அனுப்ப, துருக்கி ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆனால் ஜெர்மனி எங்கிருந்து துருக்கிக்கு ஆயுதம் சப்ளை செய்யும். உடையவர் பாடே 'லாட்ரி'; அப்படியிருக்க தானத்திற்கு எங்கே போகும் ஜெர்மனி? ஆகவே ஜெர்மனிக்கு துருக்கியி லிருந்து எப்பொருளும் போகவில்லையாம்.

## துருக்கிக்கு சர்ச்சிலின் உறுதி மொழி

ஆனால் இன்றைய நிலைமை என்ன? சென்ற வாரம் பிரதம மந்திரி சர்ச்சில் நேரே துருக்கிக்குச் சென்று, அதன் தலைவரைக் கண்டு பேசி, 'பயப்படாதேயுங்கள், நாங்களிருக்கிறோம் உங்களுக்கு வேண்டியதை அளிக்க. ஹிட்லரைக் கண்டு பயப்படாதீர்கள் கொஞ்சம் பொறுத்துப் பாருங்கள் அவர் படப்போகிற பாட்டை' என்று தெரிவித்தார்.

'எங்களுடைய நாட்டை நன்றாகப் பாதுகாத்துக் கொள்ள ஆயுதங்கள் தேவை. அவற்றை அனுப்பினாலே போதும்' என்று துருக்கித் தலைவர் கூறியிருக்கிறார்.

'அதற்கென்ன? கப்பல் கப்பலாக அனுப்புகிறோம். ஜெர்மனிக்கு மட்டும் எதும் விட்டு கொடுத்து விடப் படாது' என்று சொல்லி துருக்கிய ஆங்கில நேச பாவத்திற்கு மற்றொரு கெட்டியான முடி போட்டு விட்டுத் திரும்பி யிருக்கிறார் சர்ச்சில்.

சர்ச்சிலா வந்தார் துருக்கிக்கு? என்னத்தை ஓதி வைத்து விட்டுப் போனார்? ஓடிவா ஐயா நேரே! நடந்ததை எல்லாம் வந்து சொல்லி விட்டுப்போ!' என்று துருக்கியில் உள்ள ஜெர்மன் மந்திரிக்கு உத்திரவிட்டிருக்கிறார் ஹிட்லர். இப்பொழுது துருக்கியை முன்போல மிரட்ட முடியாது என்பது ஹிட்லருக்கே தெரிந்திருக்கும். சர்ச்சில் துருக்கிக்குச் சென்று திரும்பியதால், அச்சு நாட்டினர் போட்டிருந்த மனக் கோட்டையில் திண்ணமாக இடியே விழுந்திருக்கும்.

இது தவிர, பிரிட்டனுக்கு அமெரிக்காவி லிருந்து மேலும் மேலும் படைகள் வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன. 'பெர்லினிலேயே போய் சண்டையை நிறுத்த நிபந்தனைகளைப் போடுவோம்' என்கிறார் வட ஆப்பிரிக்க பிரஞ்சுத் தலைவரான ஜீரோ துரை. ஜெர்மனியில் உள்ள தொழிற் சாலைகள் மீதும், கப்பல், நீர் மூழ்கிகள் கப்பல்கள் கட்டும் இடங்கள் மீதிலும் நேச தேச விமானங்கள் அடிக்கடி குண்டு மழை பொழியச் செய்கின்றன. ஐரோப்பிய அரங்கத்திலே போர் புரியப் போகும் அமெரிக்கப் படைகளின் தலைவர் என்று ஒருவரை நியமித்து விட்டார்கள். இன்னொரு அமெரிக்க சேனைத் தலைவர் சொல்லுகிறார் "விமான மூலமாக, லக்ஷுப் பார்த்து ஜெர்மனியை ஏகமாக நொறுக்கப் போகிறோம்" என்று.

## ஹிட்லருடைய நீர் மூழ்கித் திட்டம்

இதை யெல்லாம் ஹிட்லர் கேள்விப்பட்டுத்தான், 'என்னடா செய்யலாம்?' என்று ஆத்திரந்தாளாது தீர்க்கயோசனையில் ஆழ்ந்திருக்கிறப் போலிருக்கிறது. அவரது கப்பல்களை நேச தேச விமானங்கள் மத்யதரைக் கடலிலும், மற்றக் கடல்களிலும் மூழ்கடித்து வருகின்றன. ஹிடலர் பெரிதாக, அதே கடைசியாக ஒரு போர்த் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறாரோ என்னமோ? அவரது விமானங்கள் முன் போல் பல இடங்களில் வாலாட்டக் காணோம். அனைத்தையும் எங்கு கொண்டு வைத்திருக்கிறாரோ தெரியவில்லை. ஜெர்மனியிலே வேறே 'ரிஸர்வ்' விமானப் படைகள் இருக்கின்றன. இன்னும் இரண்டு மாதம் போனால் வசந்த காலம் தொடங்கும். ஜெர்மனியிலும் படை பலம் பெருகும். அது வரை தாக்குப் பிடிக்க வேணுமே; அதற் கென்ன செய்வது என்று தான், நீர் மூழ்கிகளை உற்பத்தி செய்யும் வேலையைத் துரிதப் படுத்தி வருகிறப் போலிருக்கிறது அவர். ஒரு நாளைக்கு ஒரு நீர்மூழ்கி வீதம் இப்பொழுது கட்டப்படுகிறதாம். இன்னும் அதிகமாகக் கட்ட அவர் முயலுவார் எனத் தெரிகிறதாம்.

இந்த நீர் மூழ்கிகளால், நேச தேசக் கப்பல்களுக்கும், ஆட்களுக்கும் நிறையச் சேதம் உண்டாகி வருகிறது. நாற்புறங்களிலும் சமுத்திரத்தைக் கொண்டுள்ள பிரிட்டனை, நீர் மூழ்கிகளின் உதவியால் பட்டினி போட்டுச் சாக அடிக்கலாம் என ஹிட்லர் மனப்பால் குடிக்கிறார் போலிருக்கிறது. நீர் மூழ்கிகளின் தொல்லையைச் சமாளிக்கா விட்டால், ஆபத்து என்பதில் சந்தேகமில்லை. ஆனால் விமானங்களைப் பெருக்கி, சாமான் கப்பல்களுக்கு அதிகமான துணையை அனுப்பி, நீர் மூழ்கிகளை வேட்டையாடும் சிறு கப்பல்களை அதிகமாகக் கட்டி வந்தால், ஒரு தினுஸாகச் சமாளித்துக் கொள்ளலாம். நீர் மூழ்கிகள் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கும் ஹிட்லருக்கு, நீர் மூழ்கிப் போரிலும் தோல்வி ஏற்பட்டு விடுமானால், இன்னும் ஒரு பெரிய அடிதானது.

சென்ற வாரம் அவருக்கு ஒரு சிறிது ஆறுதலை அளிக்கக் கூடிய விஷயம் வட ஆப்பிரிக்காவி லிருந்து சென்றிருக்கிறது. ரோமலின் படைகளில் ஒரு பகுதி, தப்பினேன் பிழைத்தேன் என்று ட்யூனிஸியாவின் வட பகுதியில் திணறிக் கொண்டிருக்கும் அச்சு நாட்டுப் படையுடன் கலந்து கொண்டு விட்டதெனத் தெரிகிறது. இந்த சங்கமம் காரணமாக, அமெரிக்கப் படையினர் கொஞ்சம் பின் வாங்க நேர்ந்திருக்கிறது. ரோமலின் படைகளில் மற்றொரு பகுதி, ட்ரிபோலிடனியாவின் எல்லையில் உள்ள மாரெத் அரண்களில் நின்று, ஜெனரல் மான்ட்காமரியின் தாக்குதலைச் சமாளிக்க முயலுகின்றனவாம். மான்ட்காமரியும் அடுத்த தாக்குதலுக்கு ஆயத்தம் செய்து வருகிறாராம். ட்யூனிஸியாவிலே நடந்து வரும் போரும், நடக்கப் போகும் போரும், இந்த யுத்தத்திலே முக்யம் வாய்ந்த சில போர்களாக இருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை. நேசதேசத்தினருக்கு அச்சு நாட்டினரை விட வசதிகள் அதிக மிருக்கின்றன. ஆகவே அவர்கள் வெற்றி பெறுது போக 'சான்ஸே' இல்லை.

ரோமல், வான்சர்ணீமோடு சேர்ந்தார் என்ற இந்தச் செய்தி ஒன்று மட்டும் ஹிட்லரைத் தூக்கி நிறுத்தி விடப் போவதில்லை. அவர் என்னமோ இப்பொழுது, 'எல்லாம் கடவுள் செயல், விதி வந்து அநியாயமாகக் குறுக்கே நின்று விட்டது பகவான் இருக்கிறார் நம்மைக் காக்க!' என்றெல்லாம் பேசுகிறார். சாகப் போகிற காலத்தில் 'சங்கரா, சங்கரா' என்று தவிப்பவன் கதையாகத் தானிருக்கிறது ஹிட்லர் பேசுவதும், செய்வதும்.

(12-ம் பக்கம் பார்க்க.)

# இந்தியப் படைக்கு வேவல் பாராட்டு

ஆப்பிரிக்கப் பாலை வனங்களில் கடுா போராடி வெற்றி பெற்ற ஒரு இந்தியப் பட்டாளம் 2 வருஷங்களுக்குப் பிறகு, திரும்ப இந்தியாவிற்கு சமீபத்தில் வந்து சேர்ந்தது. இதன் சிறந்த சேவகத்தைப் புகழ்ந்து பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் கூட பார்லிமெ ன்டில் பேசினுர்.

இந்தப் பட்டாளம் கப்பலை விட்டு இறங்கிய வுடனே, இந்திய படைத் தலைவர் பீல்ட் மார்ஷல் சர் ஆர்ச்சி பால்ட் வேவல் தன் சொந்த முறையில் அந்தப் படையினரைப் பாராட்டி ஒரு செய்தியை அனுப்பினுர். அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது :—

"இரண்டு வருஷங்களுக்குப் பிறகு திரும்ப இந்தியாவிற்கு வரும் உங்களைப் பெரும் மகிழ்ச்சி யோடு வரவேற்கிறேன். நீங்கள் உங்கள் சேவகத்தின் மூலம், உங்களுக்கு மட்டு மன்றி, இந்திய படைகளுக்கே ஒரு உயர் வைத் தேடிக் கொண்டீர்கள். ஆப்பிரிக்கப் பாலை வனங்களில் நீங்கள் அடைந்த வெற்றிகளை யாரும் மறக்க முடியாது. உங்களுக்கு நல் வாழ்த்துக் கூறுகிறேன்."

இந்தப் பட்டாளத்தை உத்தியோக முறைப்படி வரவேற்க ஒரு விழா நடத்தினுர்கள். அப்போது மேன்மை தங்கிய சிந்து கவர்னரும், முதல் மந்திரியும் விஜயம் செய்திருந்தார்கள். அப்போது இந்தியப் படைத் தலைவரின் செய்தி வாசிக்கப்பட்டது.

# பிரிட்டிஷ் விமானியின் வெற்றி

## இத்தாலிய நீர்மூழ்கிக் கப்பல் நாசம்

ஒரு 'கடலினு' போர் விமானத் தலைவர் தன் அனுபவத்தைக் கீழ்க் கண்டவாறு கூறினுர் :—

"என் முக்கியமான வேலை ஜப்பானிய நீர் மூழ்கிக் கப்பல்களை அழிப்பது தான் ; என்றுலும் ஒரு இத்தாலிய நீர் மூழ்கிக் கப்பலைக் கண்டால் விட்டு விடுவேனு ?"

என் விமானம் வெகு விரைவாகப் பறந்து கொண்டிருந்தது. அப்போது ஒரு பெரும் இறைச்சல் கேட்டது. கீழே பார்த்தேன். ஒரு நீர் மூழ்கிக் கப்பலைச் சேர்ந்தவர்கள் மிகுந்த மகிழ்ச்சியால் பெருங் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். அது ஒரு இத்தாலிய நீர் மூழ்கிக் கப்பல். அதிலிருந்தவர்கள் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள். என் விமானத்தை க் கீழே பாய்ச்சினேன். அப்போது பெரும் சத்தம் கிளம்பியது. இதைக் கேட்டவுடனே அவர்கள் திடுக்கிட்டுப் போனுர்கள். இன்னது தான் செய்வ தென்று தோன்றுமல் தவித்தார்கள். பிறகு தம் பீரங்கிகளைப் போய் ஆயத்தம் செய்தார்கள். அதற்குள் நான் பல முறை என் மிஷின் பீரங்கியைக் கொண்டு அந்தக் கபபலைத் தாக்கினேன்.

போர் நடந்த இடம் மத்திய தரைக் கடலில். என்றுலும் நடுக் கடல். சாக வேண்டும் அல்லது மீள வேண்டும் என்னும் உறுதி யோடு தான் இரு தரத்தாரும் போராடினேம். போர் 20 நிமிஷம் நடைபெற்றது. நான் தண்ணீருக்குக் கீழேயும் தாக்கிய போது நீர் மூழ்கிக் கபபல் சிதறிப் போய் நீர் மட்டத்திற்கு மேலே கிளம்பியது. அதிலிருந்தவர்கள் கடலில் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த நீர் மூழ்கிக் கப்பலின் தலைவரைக் கைதியாகப் பிடிக்க வேண்டு மென்பது என் ஆசை. எனவே கடலுக்கு மேல் விமானத்தைக் கொண்டு வர வேண்டு மென்று முயற்சித்தேன. ஆனுல், அதற்குள் ஒரு பெரிய அலை வந் என் விமானத்தைத் துளைத்து விட்டது. நீர் மூழ்கிக் கப்பல் முழுகியது போலவே, என் விமானமும் முழுகி விடுமோ என்று அஞ்சினேன். ஆனுலும் மனம் தளராமல் வேலை செய்து, என் விமானத்தை கடலி லிருந்து உயரக் கிளப்பினேன். பிறகு, பறந்து போய் ஜிப்ரால்டரிலுள்ள விமானத் தொழிற்சாலையில் செப்பனிட்டுக் கொண்டேன். சில நாட்களில் கிளம்பி வங்காளக் குடாக் கடலில் ஜப்பானிய நீர் மூழ்கிகளை வேட்டையாடிக் கொண்டிருக்கிறேன். அந்த இத்தாலிய நீர் மூழ்கிக் கப்பலை நாச செய்து மூழ்கடித்தது, எனக்கு நல்ல பயிற்சி யளித்தது.

(11-ம் பக்கம்—தொடர்ச்சி).

**தவளையும் எலியும் : ஜெர்மன் மக்களின் கதி**

அந்த ம ஷருக்கு, ஜப்பானிலிருந்தாவது சந்தோஷச் செய்தி கிடைக்க வழி இருக்கிறதா என்று பார்த்தால், அதற்கும் வகை ய இல்லை. குடால்கனுலில் அமெரிக்கத் துருப்புகள் நுழைந்து விட்டன. ரோகலைவில் என்ற தீவிலே நேசதேச விமானங்கள் மூன்று மணி நேரம், ஜப்பானியர்கள் மீது இடைவிடாது குண்டு மாரி பொழிந்திருக்கின்றன. நியூ கினியாவிலே ஒரு நேசதேச விமானக் டத்தைத் தாக்கச் சென்ற ஜப்பானியர், 41 விமானங்களை இழந்து விட்டனர். சாலமன் தீவுகளுக்கருகே ஜப்பானியரும் அமெரிக்கரும் தத்தம் எதிரியின் பலத்தை அறிய முயன்று வருகிருர்கள். அதே தீவுகளுக்கருகே ஒரு கடற் போர் நடந்திருக்கிறது. நேச தேசத்தவர் கை இங்கெல்லாம் உயர்ந்து ருக்கிறது. இந்தச் செய்தி ஹிட்லருக்கு ஆறுதலையோ, தேறுதலையோ அளிக்கவா போகிறது? அவஸ்தைப் படவேண்டிய ஜென்மமாகப் போச்சு ஹிட்லருடைய ஜென்மம்! இன்னும் பட வேண்டிய அவஸ்தைகளை யெல்லாம் பட்டு அனுபவித்த பின் தான், அவரது ஆட்டம் அடங்கும். அது வரை, தவளையின் காலோடு, தனது காலையும் ஒரு கயிறுல் பிணைத்துக் கொண்ட எலியைப் போல் தான், ஹிட்லரைத் தலைவராகக் கொண்ட ஜெர்மன் மக்களும் அவதிப்பட வேண்டும்.

அமெரிக்காவில் செய்யப்படும் மத்திப அளவுள்ள டாங்கிக்கு தாமிரம் ½ டன், ஒரு போர் விமானத் திற்கு ⅓ டன், விமானக் கோட்டைக்கு 1½ டன் ஒரு யுத்தக் கப்பலுக்கு 1,000 டன்னும் செலவாகிறது.

இந்த மகா யுத்தத்தை ஹிட்லர் ஆரம்பம் செய்ததன் பயனுக 40,000 கோடி டாலர்கள் உலகத்திற்கு நஷ்டமாகி யிருக்கிறது. இந்த வருடம் முழுதும் யுத்தம் தொடர்ந்து நடக்குமானுல் 50,000 கோடி டாலருக்கு அதிகமாகவே செலவுக் கணக்காகு மென்று தெரிகிறது.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

5 Copies

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் வருஷம் பிப்ரவரி மீ 19உ, வெள்ளிக்கிழமை [இதழ் 8



கெய்ரோவிற்குச் சர்ச்சில் விஜயம்

## முக்கியமான நோக்கம்

" தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் எதிரியோடு சரியானபடி வெகு விரைவாகவும் ஏராளமாகவும் படைகளைக் கொண்டு போராட வேண்டு மென்று நாங்கள் கட்டிய முடிவு தான், கசப்ளாங்கா மகா நாட்டின் முடிவுகளில், மிகவும் முக்கியமானது."

" வெள்ளைக் கடல் முதல் கருங் கடல் வரையுள்ள பரந்த ரஷ்ய யுத்த முனையில், ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை எப்படி பொசுக்கி ரத்தங் கக்கச் செய்தார்களோ, அதுபோலவே, நாமும் ஜெர்மானியர்களைப் பொசுக்கி ரத்தம் கக்கும்படிச் செய்ய வேண்டும்."

" இப்போது நாம் இன்னது தான் செய்ய வேண்டு மென்பது பற்றிய முழுத் திட்டம் எற்பட்டு விட்டது. அடுத்த ஒன்பது மாதங்களில் இத்திட்டத்தை நம் சக்திக்கு ஏற்றபடி நிறை வேற்றுவோம்......."

" பிரிட்டன் தன் வார்த்தையைக் காப்பாற்றி விட்டது" என்னும் உணர்ச்சி எகிப்து முழுதும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. நாம் நன்றியுள்ளவர்க ளென்றும், தவறு செய்யாத தோழர்கள் என்றும் எகிப்தியர்கள் நம்மை மதிக்கிறுர்கள். நீல நதியை யடுத்துள்ள நகரங்களையும் கிராமங்களையும் வளமான பாகங்களையும் எதிரிகள் தாக்கி, அதனுல் பெரும் ஆபத்துக்கள் ஏற்படாதபடி நாம் பாது காத்தோம் என்றும் மதிக்கிறுர்கள்."

*மிஸ்டர் சர்ச்சில், 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 11-ம் தேதி பொது மக்கள் சபையில் யுத்த நிலைமை பற்றி பேசிய போது கூறியது.*

# முரசொலி

"சீனப் படைகளோடு 500 அமெரிக்க விமானங்கள் சேர்ந்தால் சீனுவை விட்டு ஜப்பானியர்களை விரட்டி விடலாம். ஜப்பானியர்கள், விமான சவாரியில் கெட்டிக்காரர்கள் தான்; ஆனுல், சுடத் தெரியாது."

—கர்னல் ராபர்ட் ஸ்காட்.

* * * * *

"மேலும் நாடுகளைக் கைப்பற்ற வேண்டு மென்னும் பேராசை அமெரிக்கா விற்குக் கிடையாது. உலகத்தின் சில பகுதிகளில் துறை முகங்களுக்காகவும் விமான தளங்களுக்காகவும் மட்டுந் தான் கொஞ்சம் இடம் வேண்டி யிருக்கும். யாரிடமு மிருந்தும் எதையும் நாம் பிடுங்கிக் கொள்ள முயற்சிக்க வில்லை."

—கர்னல் பிராங் நாக்ஸ்.

* * * * *

"சர்ச்சிலைப் போலவே ரூஸ்வெல்ட்டும் சோதிடம் சொல்லுகிருர். அதிலும் முழு நம்பிக்கையோடு சொல்லுகிருர். இந்த வருஷக் கடைசிக்குள், கசப்ளாங்காவில் என்னென்ன முடிவு கட்டினுர்களோ, அவற்றை யெல்லாம் செய்து முடிக்கப்படுமே யொழிய, வார்த்தைகளால் எதுவும் சொல்ல மாட்டாராம்."

—"டைம்ஸ்" (நியூ யார்க்).

* * * * *



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : சர்ச்சில் .. .. .. | 1 | தலையங்கம் :—ராஸ்டோவ் : ரஷ்யர்களின் மா பெரும் வெற்றி .. .. .. | 4 |
| முக்கியமான நோக்கம் .. .. .. | 1 | அச்சு நாடுகளுக்கு மிஸ்டர் சர்ச்சில் எச்சரிக்கை .. .. .. .. .. | 5 |
| முரசொலி .. .. .. .. .. | 2 | சீனுவின் மூலமாக ஜப்பான் தாக்கப்படும் .. | 8 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | ஹிட்லர் திணறுகிருர் .. .. .. | 11 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

## கசப்ளாங்கா மகா நாடு

1943-ம் ஞு பிப்ரவரி 11உ பிரிட்டிஷ் முதல் மந்திரி சர்ச்சில் பார்லிமெண்ட் காமன்ஸ் சபையில், கீழக்கோடியிலும் பர்மாவிலும் உள்ள போர் நிலைமையைக் குறித்துக் குறிப்பிட்ட போது,

> "இப்போதைக்கு, ஜப்பானுேடு நாம் போராடுவதற்கான முயற்சிகள் இந்தியாவைப் பொறுத்த அளவிற்குத் தான் செய்து கொண்டிருக்கிறேும் ; பர்மா ரோடை நாம் மீண்டும் கைப்பற்றி அதன் வழியாக சீனுவிற்கு நாம் பெரும் உதவிகள் அனுப்ப வேண்டு மென்னும் அளவிற்குத் தான், ஆசியாவில் நம் போர் முயற்சிகள் இருந்து வருகின்றன,"

என்று குறிப்பிட்டார். மேலும், இது பற்றி சீனத் தலைவரான ஷியாங்-கெய்-ஷேக்குடன் பிரிட்டிஷ் அரசாங்கம் கடிதப் போக்கு வரவு நடத்திக் கொண்டிருக்கிறது. அன்றியும் எதிர் காலத் திட்டத்தைக் குறித்து அமெரிக்க விமானப் படைத் தலைவர் ஜெனரல் ஆர்னுல்டும், பீல்ட் மார்ஷல் சர் ஜான் டில்லும் அவருடன் கலந்து பேசிக் கொண்டிருந்திருக்கிருர்கள். 1943-ம் ஞு பிப்ரவரி 12உ வாஷிங்டனில் பத்திரிகை நிருபர்கள் விருந்தின் போது பேசிய பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், இந்த மகா நாட்டைக் குறித்துப் பேசினுர். அப்போது அவர் கூறியதாவது:—**ஜப்பானியர்களை சீனுவிலிருந்து விரட்டுவதற்கு பலமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.** சீனுவிற்கு பலமான விமானப் படையை நாம் அனுப்பி, ஜப்பானுக்கு மேலேயும் அவை பறந்து தகுந்தபடி ஜப்பானியர்களை ஒடுக்கும். கசப்ளாங்கா மகா நாட்டிற்குப் பிறகு, சுங்கிங்கில் ஜெனரலாசிமோவோடு ஜெனரல் ஆர்னுல்ட் கலந்து பேசி, என்னென்ன செய்ய வேண்டு மென்பது பற்றி, தெளிவான தோர் திட்ட மொன்றை வகுத்திருக்கிருர்கள். டோக்கியோவை அடைவதற்குப் பலவழிகள் உண்டு. அவற்றில் ஒரு வழியையும் நாம் அலட்சியம் செய்ய மாட்டோம்." ஆகவே, கசப்ளாங்கா மகா நாட்டில் விவாதிக்கப்பட்ட பல முக்கியமான விஷயங்களில், ஜப்பானைத் தோற்கடிப்பது எப்படி என்பதும் ஒன்ருகும். கசப்ளாங்கா மகா நாட்டில் ஐரோப்பியப் போர் முனைகளைப் பற்றி விவாதித்தது போலவே, சுங்கிங்கிலும், கல்கத்தாவிலும், நடைபெற்ற மகா நாடுகள் கீழக் கோடிப் போர் முனையைப் பற்றி விவாதித்தன வென்று சொல்லலாம். இவை எல்லாம் உலக யுத்த தந்திர முறையைப் பற்றியவை தான் என்ருலும், கசப்ளாங்கா மகா நாட்டில் ஜெர்மனியையும் இத்தாலியையும் வெல்லுவதற்கான முறைகளைக் குறித்து விவாதிக்கப்பட்டது. சுங்கிங்கிலும் கல்கத்தாவிலும், கீழக் கோடியிலும் இந்தியாவிலும் என்னென்ன ஏற்பாடுகள் செய்து ஜப்பானியர்களை வெல்ல வேண்டு மென்று ஆலோசித்துத் திட்ட மிட்டார்கள்.

**வேவல்-ஹோ-இங்-சென் பேச்சு.**

சீன யுத்த மந்திரி ஹோ-இங்-சென்னும், இந்திய படைத் தலைவர் வேவலும் முக்கியமான விவாதங்களில் கலந்துகொண்டார்கள் என்னும் காரணத்தைக் கொண்டு, பெரும் படைகளைத் திரட்டிக் கொண்டுபோய், நாம் இழந்த நாடுகளை மீண்டும் உடனே கைப்பற்றப் போகிறேும் என்று நினைத்துவிடக் கூடாது. ஜப்பான் மீது ஒரு பெரும் கப்பற்படையைக் கொண்டு தாக்குவதற்கு ஏற்ற தருணம் இன்னும் வரவில்லை என்றும் சொல்லக் கூடும். அடுத்த மாத மத்தியில் ஆரகான் கரையோரங்களில் கடுமையான மழை ஆரம்பமாகி விடும். ஆகவே கப்பல்கள் கடல்களில் போவதற்கு சற்று அசௌகரியமாயிருக்கும்: இந்தத் தாக்குதலைத் தள்ளிப் போடுவதற்கு சீனுவின் பரிபூரண சம்மதம் வேண்டும். என்ருலும், இந்த மகா நாடு முடிந்த பிறகு வெளி வந்த அறிக்கையில்,

> ஜெனரல் மெக்கார்தரும், பீல்ட் மார்ஷல் வேவலும் சமீபத்தில் சந்திப்பார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. இதன் மூலமாகச் சிறந்த கூட்டுறவு ஏற்படும். இதிலிருந்து ஜப்பானியர்களை தலைதூக்க மாட்டாதபடி தாக்குவதற்குத் தகுந்த, பெரிய திட்டங்கள் தயாராகின்றன வென்று தெரிகிறது.

**யுத்தத்திற்குப் பிறகு பர்மா அமைப்பு.**

பர்மா சம்மந்தப் பட்டவரை, அது யுத்தத்திற்குப் பிறகு எப்படி அமைய வேண்டு மென்பது பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மிகுந்த அக்கரை கொள்ளுகிருர்கள். இந்தியாவில் தற்போதுள்ள பர்மா அரசாங்கத்திற்கு எந்தெந்த வகைகளில் பிரிட்டிஷ் அரசாங்கம் உதவுகிறது என்று இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி சமீபத்தில் பார்லிமெண்டில் கூறினுர். இந்த உதவிகள் மூன்று வகைப்படும் :—

"1. பர்மாவை மீட்கும் முயற்சியில் இராணுவ அதிகாரிகளுக்கு என்னென்ன தேவையோ அவற்றை யெல்லாம் வழங்கத் தக்க ஸ்தாபனத்தை ஸ்தாபிப்பதும், அதன்மூலமாக ஜப்பானியர்களை விரைவில் வெல்ல பரிபூரணமாக ஒத்துழைப்பதும்,

2. ஜப்பானியர்களை விரட்டிய பிறகு, பர்மாவை மீண்டும் சரியானபடி அமைப்பதும், அங்கே மக்கள் சாதாரணமாக வாழத் தக்க வசதிகளைச் செய்து கொடுப்பதும்,

(10-ம் பக்கம் பார்க்க.)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஆண்டு பிப்ரவரி மீ 19௳. [இதழ் 8

## ராஸ்டோவ் : ரஷ்யர்களின் மா பெரும் வெற்றி

“ ஒரு காரியத்தைச் செய் ; அதுவும் வெற்றி பெறச் செய் ” என்னும் கருத்துடைய ஆங்கிலப் பழமொழி யொன்று உண்டு. இதையும் மிஞ்சி விட்டார்கள் ரஷ்யர்கள். ஒரே சமயத்தில் பல ஜெர்மன் அரண்களைப் பெரும் படைகளைக் கொண்டு தாக்கி சோவியத் படைகள் வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண்டு வருகின்றன. இதன் பயனாக, ரஷ்யர்கள் தாக்கிய இடங்களிலே எல்லாம் நாஜிப் படைகள் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அன்றியும் அவர்களுடைய கையிருப்புச் சேனைகளை அங்கங்கே கொண்டு போய்ச் சேர்க்கவும் முடியாமற் போயிற்று.

இந்தத் தந்திரத்தைக் கொண்டுதான் ராஸ்டோவ் நகரத்தை சோவியத் படைகள் கைப்பற்றின. இது மகத்தானதோர் வெற்றி தான். ரஷ்யப் படைகளின் போக்கை முதலில் பார்த்தால் ராஸ்டோவ் நகரம் மீது பாய்வார்கள் என்று தான் நினைக்க வேண்டியிருந்தது. ஆனால் திடீரென்று அந்தப் போக்கு மாறியது. அவர்கள் நோக்கம் பல விடங்கள் மீதும் பாய்ந்தது. கர்ஸ்க், கார்கோவ், வரோஷிலோவ்கிராட் ஆகிய மூன்று முக்கியமான ஜெர்மன் அரண்களை ஏககாலத்தில் தாக்கினார்கள். ஆகவே, ராஸ்டோவைப் பற்றி மட்டும் அல்லாமல், மற்ற முக்கியமான இடங்களைக் குறித்தும் நாஜிகள் கவலை கொள்ள வேண்டியவர்களானார்கள்.

குளிர் காலத்தில் தாம் தங்கியிருக்க இந்தத் தளங்களைத் தான், நாஜிப் படைகள் நம்பிக்கொண்டிருந்தன. தென்வடல் போக்குவரவுப் பாதுகாப்பு லைனில் ஜெர்மானியர்கள் ராஸ்டோவ், வொரோஷிலோவ்கிராட், கார்க்கோவ், பையல்கராட், கர்ஸ்க், ஓரல் ஆகிய தளங்களைத் தான் முக்கியமானதென்று நாஜிகள் கருதிக் கொண்டிருந்தனர். ஓரல் தவிர மற்ற எல்லா விடங்களையும் இப்போது சோவியத் படைகள் கைப்பற்றி விட்டன. ரஷ்ய அரண்களான, வாரொனேஜ், வலூகி, மில்லெரோவோ, குபியான்ஸ்க், சால்ஸ்க், திகொரெட்ஸ்க் ஆகிய ஊர்களிலிருந்து வடக்கேயும் மேற்கேயும் தெற்கேயும் புறப்பட்டுப் போன சோவியத் படைகள் தான், அந்த ஊர்களைக் கைப்பற்றின. திகோரெட்ஸ்க்கை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டபோது ராஸ்டோவிலிருந்து நோவோரோஸிஸ்க் வரையுள்ள வளைவில் இருந்து கொண்டு ஆஸாவ் கடலை ஒரு அரணாகக் கொண்டு தம்மைத் தற்காத்துக் கொள்ளலாமென்று ஜெர்மானியர்கள் நினைத்தார்கள். ஆனால் குல்சேவ்ஸ்கியாவை ரஷ்யர்கள் கைப்பற்றிய போது, உள்ள நம்பிக்கையையும் நாஜிப் படைகள் இழந்து விட்டார்கள். ஏனென்றால், இது ஒரு ரயில்வே ஜங்ஷன். இதன் வழியாகத் தான மேற்கு நோக்கி ராஸ்டோவுக்குப் போகும் ரயில் போகிறது. ஆகவே, இதைக் கைப்பற்றி விட்டபடியால் மார்ஷல் வான் லிஸ்டின் குபான படை பிளவு பட்டது. இதில் ஒரு பகுதி கெர்ச் ஜலசந்தியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. மற்றொன்று டான் நதி கடலில் கலக்கு மிடத்திலுள்ள ஒரு குறுகிய பகுதியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.

### நான்கு முறை கை மாறியது

மற்ற மூன்று ஜெர்மன் அரண்களை ஒரே காலத்தில் தாக்கியதனால் தான் சற்று இலகுவாகவே ராஸ்டோவைக் கைப்பற்ற முடிந்தது. ராஸ்டோவ் கை மாறியது இப்போது நான்காவது முறை. சென்ற 1941-ம் ஆண்டு நவம்பர் மீ 23௳ தான் ஜெர்மானியர்கள் அதைக் கைப்பற்றினார்கள். அதன் பிறகு 6 நாட்களில் ரஷ்ய படைத் தலைவரான மார்ஷல் டிமோஷாங்கோ மீண்டும் அதைக் கைப்பற்றினார். 8 மாதங்களுக்குப் பிறகு, 1942-ம் ஆண்டு ஜூலை மீ 24௳ யன்று மீண்டும் அந் நகரம் ஜெர்மானியர் வசமானது. பிறகு 6 மாதங்களும் 3 வாரங்களும் ஆன பிறகு, மீண்டும் செஞ்சேனைகள் அதைக் கைப்பற்றிக் கொண்டன. இனி அது கை மாறாது என்று ஒருவாறு துணிந்து சொல்லலாம்.

ராஸ்டோவைக் கைப்பற்றியது மிகவும் முக்கியமானது. ஏனென்றால், டானெட்ஸ் பகுதியை மீண்டும் கைப்பற்றிய முதல் கட்ட வேலை இதனால் முடிந்தது என்று தான் அர்த்தம். ஜெர்மானியர்கள் காக்கஸஸ் பிரதேசத்திற்குப் போவதற்கு ஆசார வாசலாயிருந்தது ராஸ்டோவ் தான். இப்போது ரஷ்யர்கள் உக்ரேனுக்குப் போவதற்கு ஆசார வாசலாகவும் உதவுகிறது. தென் ரஷ்யாவிலுள்ள முக்கியமான ரயில்வே ஜங்ஷன்களில் இதுவும் ஒன்று. இது முக்கியமான துறைமுகமும் கூட. ஜெர்மானியர் படையெடுக்கு முன்பு இது ஒரு நிலக்கரிச் சுரங்க முள்ள இடமாகவும் கைத் தொழில் பகுதியாகவும் இருந்தது. காக்கஸ் எண்ணெய் கிணறுகளில் உற்பத்தியாகும் எண்ணெயில் ஒரு பாதி பிரம்மாண்டமான குழாய்களின் வழியாக இங்கே தான் வந்து சேர்ந்தது. ஜெர்மானியர்கள் முன்பு ராஸ்டோவைப் பிடித்ததனால், அவர்களுக்கு இலாபம் இல்லை. ஏனென்றால், தொழிற் சாலைகளையும் இயந்திரங்களையும் ரஷ்யாகள் அதற்கு முன்னதாகவே யூரல் மலைப் பகுதிகளுக்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

**நன்றாகப் பயிற்சி பெற்ற படையின் சிறப்பு என்ன வென்றால், மகா நெருக்கடியான நிலைமை ஏற்படுகிற வரை, எதிர்த்து முன்னேறிக் கொண்டுவரும் எதிரியைத் தடுக்கக் கடுமையாகப் போராடுவது தான். நல்ல படைத் தலைவரின் சிறப்பு எது வென்றால், எதிரியை எங்கே எப்போது தாக்க வேண்டுமென்று பகுத்தறிவைக் கொண்டு நிர்ணயிப்பது தான்.** இந்த இரண்டு வகைச் சிறப்புக்களும் சோவியத் படைகளுக்கு இருக்கின்றன. ஆகையால் தான் அடுத்தடுத்துப் பல வெற்றிகள் பெற்றன. குறிப்பிட்ட நேரத்திற்கு முந்தாமலும் பிந்தாமலும் ரஷ்யப் படைகள் தாக்கின. இதற்குச் சிறந்த உதாரணம் ஜெர்மன் 6-ம் படையை, மகா கெட்டிக்காரத் தனமாக செம் படைகள் வளைத்துக் கொண்டது தான். ஜெர்மன் அரண்கள் எல்லாவற்றையும், ஓரே காலத்தில் தாக்கிப் பயமுறுத்தி ராஸ்டோவைக் கைப்பற்றியது ரஷ்ய யுத்த தந்திரத்தின் சிறப்பைக் குறிக்கிறது.

### ராஸ்டோவுக்குப் பின் கார்க்கோவ்

ராஸ்டோவைக் கைப்பற்றிய இரண்டு நாட்களுக்குள் கார்க்கோவையும் அதே யுத்த தந்திரத்தால் ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள். 1943-ம் ஆண்டு பிப்ரவரி மீ 16௳ கார்க்கோவைக் கைப்பற்றியே தீருவதென்று ரஷ்யர்கள் மன உறுதி கொண்டு விட்டனர். ஜெர்மானியர்கள் தம் கல் கோட்டை யென்று கருதியிருக்கும் ஊரல்லவா அது ? ஆகவே இரண்டு படைகளுக்கும் கடும் போராட்டம் அங்கே நடைபெற்றது. தெருக்களில் கூட மகா உக்கிரமாகப் போராடினார்கள். கடைசியில் ரஷ்யர்களுக்கே வெற்றி கிடைத்தது. இந்த ரஷ்யப் படையின் தலைவர் கர்னல் ஜெனரல் **கோலிகோவ்.** தென் ரஷ்யாவிலுள்ள இந்த மகத்தான எதிரி தளத்தைக் கைப்பற்றி விட்டதாக சோவியத் அறிக்கை வெளியாவதற்குச் சற்று நேரத்திற்கு முன்பு, ஒரு ஸ்வீடிஷ் பத்திரிகை நிருபரிடம் ஜெர்மன் இராணுவத் தலைவர் ஒருவர் “இப்போது நமக்கு ஏற்பட்ட தோல்வியைப் போல் இந்த யுத்தத்தில் ஒரு போதும் நமக்கு ஏற்பட்டதில்லை” என்று கூறினாராம். இது உண்மை தான். ஆனாலும், இது, நாம் எதிர்பார்த்தது தான். கார்க்கோவுக்கும் கர்ஸ்க்குக்கும் இடையே யுள்ள குப்யான்ஸ்கி, நோவோ ஆஸ்கோல், பையோல்கராட் ஆகிய முக்கியமான ஜெர்மன் தளங்களைக் கைப்பற்றிய வுடனேயே தென் கிழக்கிலிருந்தும் வடகிழக்கிலிருந்தும் வந்து கொண்டிருக்கும்

(7-ம் பக்கம் பார்க்க.)



# அச்சு நாடுகளுக்கு மிஸ்டர் சர்ச்சில் எச்சரிக்கை

## “ கசப்ளாங்கா திட்டம் 9 மாதங்களுக்குள் நிறைவேற்றப்படும் ”

### ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் உதவியைப் பற்றி பிரிட்டன் வாக்குறுதி

சென்ற 1943-ம் ஆண்டு பிப்ரவரி மீ 11௳ லண்டனில் பார்லிமெண்ட் சபை கூடி யிருந்தது. அனைவரும் மிகுந்த ஆவலோடு கூடி காத்துக் கொண்டிருந்தனர். முதன் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் வந்தார். கர கோஷம் வானைப் பிளந்தது. மிஸ்டர் சர்ச்சில் உடனே யுத்த நிலைமையைக் குறித்து ஒரு தெளிவான சொற்பொழிவு நிகழ்த்தினார். அதன் சுருக்கமாவது :—

“ நானும் அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்டும் கசப்ளாங்காவில் மகா முக்கியமானதோர் நோக்கத் தோடு தான் சந்தித்தோம். வெகு விரைவில் தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் பெரும் படைகளைக் கொண்டு பல விடங்களில் எதிரி யோடு போராட வேண்டுமென்பதற்காகத் தான் திட்டமிடும் பொருட்டுக் கூடிப் பேசினோம்.

பல விஷயங்களைக் குறித்துச் சாதாரணமாக நாங்கள் அப்போதைக் கப்போதே முடிவு கட்டி விடக் கூடும். என்றாலும், இப்போது அவை பற்றி எல்லாம் எம் மனதைச் செலுத்தக் கூட வில்லை. எதிரி யோடு இன்னும் நெருங்கிப் போராடுவதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும் ; இந்தப் போராட்டத்தை இன்னும் எந்தெந்த இடங்களில் எந்தெந்த அளவிற்குப் பெருக்க வேண்டுமென்று சிந்திப்பது தான் எமது முதல் வேலை.

வெள்ளைக் கடல் முதல் கருங் கடல் வரையுள்ள பரந்த ரஷ்ய நாட்டு மக்களைச் சுட்டுப் பொசுக்கி, இரத்தங் கக்கச் செய்தான் நம் எதிரி. இப்போது அதே போல அவனைச் சுட்டுப் பொசுக்கி இரத்தங் கக்கச் செய்ய வேண்டியது நமது கடமை.

இது அவ்வளவு இலேசான காரிய மல்ல. இதற்கு மகா பலம் பொருந்திய பெரும் படை வேண்டும். எதிரி என்ன தான் பாதுகாப்புக்கள் அமைத்திருந்தாலும், எதிரி நாட்டுக் கரைகளில் போய் இறங்கி விடக் கூடிய சாமர்த்தியம் பிரிட்டிஷ் படைகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் உண்டு. இறங்கிய பிறகு அங்கே வேரூன்றிக் கொள்ளுவது அவர்களுக்கு மிகவும் எளிது.

ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களால் நம் படைகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தின் அளவை விட, மிக அதிகமாகவே பிரிட்டன், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் கப்பல்கள் கட்டப்படுகின்றன. 6 மாதங்களுக்கு முன்பு இருந்த நம் கப்பல் படையை விட, இப்போது $12\frac{1}{2}$ லட்சம் டன் அது அதிகமா யிருக்கிறது. சென்ற இரண்டு மாதங்களாக ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களால் நம் படைகளுக்கும் கப்பல்களுக்கும் நேர்ந்த சேதம் மிகக் கொஞ்சம். நம் கப்பற் படையைச் சேர்ந்த 30 லட்சம் பேர்களில் (காணமற் போனவர்கள், கொல்லப்பட்டவர்கள், மூழ்கி இறந்து போனவர்கள் அனைவரையும் சேர்த்து), 1348 பேர்கள் தான் சேதமானார்கள்.

சென்ற வருஷ ஆரம்பம் முதல் அக்டோபர் முடிய, நாம் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களை வேட்டையாடி நாசம் செய்தது போல, அதற்கு முன்பு செய்தது கிடையாது. சென்ற வருஷம் நவம்பர் மாதம் முதல் இன்று வரை அதை விட இன்னும் அரை மடங்கு அதிகமாகவே நாசம் செய்திருக்கிறோம்.

### உணவுப் பொருள்கள் நிலைமை

உணவுப் பொருள்கள் கையிருப்பிலும் மூலப் பொருட்கள் கையிருப்பிலும் நாம் இப்போது வெகு வாகக் கை வைக்க வேண்டி யிருக்கிறது. ஆபிரிக்கா, ஆசியா, பசிபிக் முதலிய போர் அரங்கங்களுக்கு இவை பெரிதும் தேவை. அன்றியும் ரஷ்யத் துணைக் கப்பல்களுக்கும், இந்தியா, பாரசீகம் முதலிய மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இவை பெரிதும் தேவைப்படுகின்றன. இப்போது கப்பல்கள் கட்டப்படும் வேகத்திலேயே மேலும் கட்டிக் கொண்டு போனால் மட்டுந் தான், 1943-ம் வருஷக் கடைசியில் நாம் சற்று தலை தூக்க முடியும் ; 1944-ம் வருஷம் நம் போக்கு வரவு, சற்று இலகுவா யிருக்கும்.

**எந்த அளவிற்கும் எவ்வளவு விரைவாகவும் ரஷ்யாவிற்கு இந்த யுத்தத்திலுள்ள பொறுப்பை நாம் குறைக்கிறோமோ, அவ்வளவு விரைவாக யுத்தம் முடிவடையும். இதற்கு நம் கப்பல் கட்டும் வேகந் தான் காரணம்.**

நானும் ரூஸ்வெல்டும் கசப்ளாங்காவில் சந்தித்து பரிபூரணமாக விவாதித்த பிறகு, நாங்கள் என்ன முடிவிற்கு வந்தோமென்றால், ‘**எதிரிகள், பரிபூரண சரணாகதி என்று நிபந்தனைகள் விதிக்காமல் நம் காலில் வந்து விழ வேண்டும்**’ என்று தான். அவர்கள் நம்மிடம் சரணாகதி யடைந்து விட்டார்கள் என்னும் காரணம் பற்றி, **அந் நாட்டு மக்களை நாம் கொடுமையாகவும் அக்கிரமமாகவும் நடத்த மாட்டோம் என்றாலும் நீதி செலுத்தப்படும் ; அதுவும் கடுமையாக இருக்கலாம்.** இப்படிச் சரணாகதி யடைவார்களானால், நாஜிகள், பாஸிஸ்டுகள், ஜப்பானியர்கள் ஆதிக்கங்களின் சின்னங்கள் கூட இல்லாதபடி, அழித்து விடுவோம். இது உறுதி.

கசப்ளாங்காவில், யுத்த நிலைமையைக் குறித்துப் பரிசீலனை செய்யும் பொருட்டு தரைப் படை, கடற் படை, விமானப் படை ஆகியவற்றில் நிபுணர்கள் எங்களோடு கூட விருந்து, இராணுவத் துறை பற்றியும், தளவாட உற்பத்திகளைப் பற்றியும் பொருளாதார நிலையைப் பற்றியும் நன்கு நெடு நேரம் ஆலோசித்தனர். மிஸ்டர் ரூஸ்வெல்டும் நானும் அவர்களுக்கு, அவ்வப்போது எங்கள் கருத்துக்களைக் கூறி உதவினோம்.

**இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி ஒரு திட்டத்தை வகுத்து முடித்து விட்டோம். முதலாவதாக நம் படைகளை எங்கெங்கே எப்போது பிரித்து விட வேண்டும் என்பது பற்றியது. அவை திட்டப்படி முன்னேறிப் போனால், என்ன பலன் உண்டாகும், என்பது இரண்டாவது பிரச்சினை.**

குறிப்பிட்ட திட்டப்படியே நம் வேலைகள் நடைபெறுகின்றன. இவற்றில் நாம் சில சமயங்களில் ஏமாற்ற மடையலாம் ; தவறிப் போகலாம் ; பெருந் தவறுகள் செய்யலாம். என்றாலும் நம் திட்டத்தை விட்டுத் தவற மாட்டோம். அந்நிலைமைக்கு ஏற்றதோர் திட்டத்தை வகுக்க முடியாமல் தவிக்க மாட்டோம் ; சந்தர்ப்பம் எப்போது வருமென்று நாம் காத்துக் கொண்டிருக்க மாட்டோம். நமது வேலை நமக்குத் தெரியும். நிபுணர்களின் ஆலோசனைகளும் நமக்கிருக்கின்றன. ஆகவே நம் திட்டத்தை மிக நுணுக்கமாக ஆராய்ந்து, உணர்ந்து, படிப்படியாக நிறை வேற்றுவது தான் இப்போது நம் வேலை. இந்த மகா நாட்டிற்கு தோழர் ஸ்டாலினும் அவருடைய நாட்டு நிபுணர்களும் வந்திருந்து கலந்து கொள்ள முடியாமற் போனது பெரிதும் வருந்தத் தக்கது தான்.

## ரஷ்யாவிற்குப் பெரும் உதவி

அமெரிக்கத் தலைவருக்கு உடல் நலமில்லை. என்றாலும், அவர் அதைப் பொருட்படுத்தாமல் தான் அம்மகா நாட்டிற்கு வந்திருந்தார். தோழர் ஸ்டாலினையும் அம்மகாநாட்டில் கலந்து கொள்ளச் செய்யும் பொருட்டு கார்டூம் வரையிலும் போக வேண்டு மென்று விரும்பினார். ஆனால், அச்சமயம் தோழர் ஸ்டாலின் தன் படைகளை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டிருந்தார். அப்படைகளும் மிகக் கடுமையாகப் போராடி வெற்றி பெற்றுக் கொண்டு வந்தன. ஆகவே, அவர் மகா நாட்டிற்கு வந்து கலந்து கொள்ளக் கூடவில்லை.

ஒரு விஷயம் பற்றி இச்சபையோருக்கு உறுதி கூற விரும்புகிறேன். அவர் அம்மகா நாட்டில் கலந்து கொள்ள வில்லை யானாலும், ரஷ்யர்களின் மகத்தான அதிதீவிர முயற்சிகளுக்கு நம்மால் இயன்ற வளவிற்கு உதவ வேண்டியது நமது கடமை என்றும், நம் எதிரிகள் ரஷ்ய எல்லைகளை விட்டு விரட்டப்பட வேண்டு மென்பது நம் நோக்கங்களில் ஒன்றாகு மென்றும் கூறுகிறேன்.

முதலில் ஜெர்மனியின் ஆதிக்கத்தைக் குலைத்து வென்ற பிறகுதான், ஜப்பான் மீது நம் கவனத்தைச் செலுத்த வேண்டு மென்று ஒரு வருஷத்திற்கு முன்னதாகவே நிபுணர்கள் தீர்மானித்தார்கள். அதே நோக்கத் தோடு தான் நாம் இப்போது வேலை செய்து வருகிறோம். ஜெர்மனி அத்தியாயத்தை ஒருவாறு முடித்துக்கொண்டு, பிரிட்டிஷ் படைகளும் அமெரிக்கன் படைகளும் திரண்டு, கிழக்கு நோக்கிச் சென்று பரிபூரண சரணாகதி யடையும்படி ஜப்பானியர்களை நொறுக்க வேண்டும்.

பிரிட்டிஷ் யுத்த மந்திராலோசனை சபையார் இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தத் தனக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறதாகத் தெரிவித்து, அவசியமானால் புதியதொரு ஒப்பந்தம் செய்து கொள்ளலா மென்று நான் சொன்னபோது, **பிரிட்டன் சொல் ஒன்றே தனக்குப் போது மென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார்.**

இந்த யுத்தம் எவ்வளவு காலம் நடைபெற்றாலும், இதன் பொருட்டு எவ்வளவு செலவானாலும், மற்ற நேசநாடுகளைப் போலவே, அவர்களோடு ஒத்திருந்து போரை நடத்த வேண்டு மென்று கட்டுப்பட்டிருக்கிறோம். அம்மகா நாட்டில் இது மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இந்தத் தீர்மானத்தை நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்று கோருகிறேன் (கரகோஷம்).

நமது அமெரிக்கத் தோழர்கள் குடால்கடனாரில் முழுவெற்றி பெற்றார்கள். ஆஸ்திரேலியப் படைகளும் அமெரிக்கப் படைகளும் நியூ கினியாவி லுள்ள பூனாவென்னும் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டன. இவை பற்றி நாம் அவர்களைப் பாராட்டுகிறோம். ஜப்பானியர்களோடு யுத்தமாடுவதில் நம்முயற்சி இந்தியா மட்டிலுந் தான் இருக்கிறது. பர்மா ரோடைக் கைப்பற்றி அதன் வழியாக சீனாவிற்குத் தேவையான உதவிகளை யனுப்ப நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். இது நமது முக்கியமான வேலை.

நாம் ஷியாங்-கேய்-ஷேக்கோடு நெருக்கமாகக் கடிதப் போக்கு வரவுகள் வைத்துக் கொண்டிருக்கிறோம். அவர் கசப்ளாங்கா மகா நாட்டிற்கு வரக்கூட வில்லை. என்றாலும் நம் கருத்துக்களை அவருக்குத் தெளிவுப் படுத்த அமெரிக்க விமானப் படைத் தலைவரான ஜெனரல் ஆர்னால்டும், பீல்ட் மார்ஷல் சர் ஜான் டில்லும் இப்போது சூங்கிங்கில் இருக்கிறார்கள்.

தன் நாட்டிற்கு மேலும் உதவி கிடைக்கும் என்பது பற்றி தனக்கு மிகுந்த திருப்தி யென்று ஜெனராலிஸிமோ நமக்குத் தெரிவித்திருக்கிறார். கீழ் நாடுகளில் எப்படிப் போராட்டம் நடைபெற வேண்டுமென்பது பற்றி நாம் வகுத்து அவருக்கு அனுப்பிய திட்டத்தை முழுதும் ஒப்புக் கொள்ளுகிறார். சில நிமிஷங்களுக்கு முன்பு தான் அவரிடமிருந்து செய்தி வந்தது. அதில், ஜப்பானை நசுக்க மூன்று அரசாங்கங்களும் வகுத்துள்ள திட்டத்தை அப்படியே தான் ஆதரிப்பதாகக் குறிப்பிடுகிறார்.

## ரஷ்யாவிற்குப் பாராட்டு

ரஷ்யா இது வரை சாதித்து முடித்த தென்ன? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது என்று நான் தெளிவாகக் காண்கிறேன். எதிரியோடு போராடி வெல்லும் பொருட்டு ஏராளமாகவும், மகா வேகத்தோடும், பெரும் ஊக்கத்தோடும் பிரிட்டனும் அமெரிக்காவும் திரட்டக் கூடிய படை பலத்தைக் கொண்டு, முழு மனதோடு நாம் போரிடாவிட்டால் நம் கடமையில் தவறியவர்களாவோம். (கரகோஷம்) விரைவாகவும் பெரும் பலத்தைக் கொண்டும் எதிரியைத் தாக்கும்படி இராணுவ நிபுணர்களுக்கும் ஆலோசர்களுக்கும் நானும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் கட்டளைகள் பிறப்பித்திருக்கிறோம்.

## துருக்கிக்கு விஜயம்

துருக்கியர்களைத் தொந்தரவிற் குள்ளாக்க வேண்டு மென்பது நமது கொள்கையல்ல. **அது மட்டுமல்ல, துருக்கிக்கு ஆபத்து நேர்ந்தால், பிரிட்டனுக்கும், மற்ற நேச நாடுகளுக்கும் அதனால் ஆபத்து நேரும்.**

பாரசீகத்திலும் ஈராக்கிலும் உள்ள எண்ணெய்க் கிணறுகள் கீழ் நாட்டு யுத்தத்திற்கு மிகவும் முக்கியமானவை. எக்கட்சியிலும் சேராதிருக்கும் துருக்கி தான். இவற்றை எதிரிகள் வந்து தாக்காதபடி தடையா யிருந்தது, ஆகவே, துருக்கி பிரிட்டனுக்கும் நேச நாடுகளுக்கும் மிகச் சிறந்த சேவை செய்திருக்கிறது.

**இரண்டாவதாக துருக்கியின் படைகளுக்குத் தற்கால யுத்தத் தளவாடங்கள் தகுந்தபடி இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அதனால் பிரிட்டனுக்கும் நேச நாடுகளுக்குந் தான் நன்மை யுண்டு.**

இந்தத் தளவாடங்களையும் போக்கு வரவு சாதனங்களையும் வெகு விரைவாகவும் ஏராளமாகவும் கொடுக்கத் தக்க நிலைமையில் நாமும் அமெரிக்கர்களும் இருக்கிறோம்.

துருக்கியை அரண் செய்து கொள்ள வேண்டியது பற்றி தகுந்த ஏற்பாடுகள் செய்யும்படியாகத் தான் நாம் துருக்கியைக் கோரினோம். இதன் பயனாக ஒரு பிரிட்டிஷ்-துருக்கி ராணுவக் கோஷ்டி யொன்று இப்போது அங்காராவில் கூடி ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. துருக்கியின் அரண்களைப் பலப்படுத்துவதும், போக்குவரவு சாதனங்களைப் பெருக்குவதும், புதிய யுத்த ஆயுதங்களைத் தருவித்து துருக்கிப் படைகளின் திறமையை அதிகப் படுத்தவும், தூண்டுவது தான் இக்கோஷ்டியின் வேலை.

**துருக்கி நம் கூட்டாளி; நண்பர். அதன் நாடுகளும், உரிமைகளும், நன்மைகளும் பாதுகாக்கப்பட வேண்டு மென்பது தான் நம் ஆசை. நமக்கும் மகா வீரர்களான ரஷ்யர்களுக்கும் ஒரு 20 வருஷ ஒப்பந்தம் இருக்கிறது. இவர்களுக்கும் துருக்கிக்கும் நல்லுறவு ஏற்பட வேண்டு மென்பது தான், நாம் பெரிதும் விரும்புவது.**

## வாக்குறுதியைக் காப்பாற்றினோம்

எல் அலமீனில் நடை பெற்ற யுத்தம் சரித்திர பிரசித்தம் வாய்ந்ததாகி விட்டது. ஏனென்றால், இந்த யுத்தத்தினால் தான் எகிப்து மீட்சி பெற்றது.

"நம் வார்த்தையை நாம் நிறைவேற்றி விட்டோமென்றும், நாம் விசுவாச முள்ளவர்கள் என்றும், சாதாரண மாகத் தவறு செய்ய மாட்டோ மென்றும் நீல நதியை யடுத்த நாடுகளை எதிரிகள் தாக்காதபடி நாம் தான் காத்தோம் என்றும், எகிப்தில் எங்கு பார்த்தாலும் பேசிக் கொள்ளுகிறார்கள்."

நான் திரிபோலிக்குப் போயிருந்த போது இத்தாலிய நகரத்தை ஜெர்மானியர்கள் கைகளிலிருந்து பிரிட்டிஷ் படைகள் மீட்கும் முதல் பட்டணம் இது தான் என்று நான் தெரிவித்தேன். அப்போது அங்கிருந்த இத்தாலியர்கள் பெரிதும் மகிழ்ச்சி யடைந்தார்கள்.



கடல் மூலமாக திரிபோலி துறைமுகத்திற்கு எந்த வித சப்ளைகளும் போய்ச் சேர ஒட்டாதபடி ஏராளமான பெருங் கட்டிடங்களை இடித்துத் தள்ளித் தடுத்து விட்டார்கள் ஜெர்மானியர்கள். ஆகவே இங்கு நடைபெறும் யுத்தத்தின் பலனைப் பற்றி அவசரப் படாமல் கவனித்து வர வேண்டும்.

## படைத் தலைவர்களுக்குப் பாராட்டு

க்ராம்வெல் போன்ற உருவம் வாய்ந்தவர் ஜெனரல் மான்ட்காமரி. இவர் 'முகம்' கடு கடுப்பானது. பல சிறந்த வெற்றிகளைக் கண்டவர். களைப்பு என்பதே அவருக்குக் கிடையாது. தன் படையின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்.

சென்ற 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி நான் உத்தியோக தோரணையில், ஜெனரல் அலெக்ஸாந்தருக்கு ஒரு உத்திரவைப் பிறப்பித்திருந்தேன். அந்த உத்திரவிற்கு அவர் அளித்த பதிலில் "ஐயா, தாங்கள் சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி எனக்கு இட்ட கட்டளை நிறைவேறிவிட்டது; எகிப்து, சிரெனெய்கா, லிபியா, திரிபோலிடானியா ஆகிய பகுதிகளிலிருந்து நம் எதிரிகளையும், நமக்குத் தடையாயிருந்தவை யனைத்தையும் விலக்கியாகிற்று. மேலும் தங்கள் கட்டளையை நான் இப்போது எதிர்பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டார் (கரகோஷம்).

இதைக் குறித்தும் நாங்கள் கசப்ளாங்கா மகா நாட்டில் கலந்து ஆலோசித்தோம். நான் ஜெனரல் அலெக்ஸாந்தருக்குக் கொடுத்த கட்டளையைச் சில மாதங்களுக்கு முன்பு தான் வெளியிட்டேன். அதாவது எகிப்தை விட்டு எதிரியை அவர் விரட்டிய பிறகு தான் அக் கட்டளையை வெளியிட்டேன். அது போலவே, இப்போது அவருக்கு அனுப்பப்படும் கட்டளையையும் தக்க சமயத்தில், அதாவது தாமதித்து வெளியிடும்படி இச் சபையோர் என்னை அனுமதிக்க வேண்டு மென்று கோருகிறேன்.

வட ஆப்பிரிக்காவில் நேச நாட்டுப் படைகள் போய் இறங்கிக் கைப்பற்றிக் கொண்டது இராணுவ முறைப்படி மிகச் சரியான வேலை யென்று ஸ்டாலின் கூடத் தெரிவித்திருக்கிறார். இதன் பயனாகத் தான் ஐரோப்பாவின் மேற்குப் பகுதிகளில் நேச நாடுகள் எதிரியைத் தாக்க முடிந்தது.

## எதிரி சப்ளைகளில் $\frac{1}{3}$ பங்கு நாசம்

துனிசியாவிற்குக் கடல் வழியாக எதிரிக்கு வரும் சப்ளைகளில் மூன்றில் ஒரு பங்கு சப்ளைகளை நாசம் செய்து விடுகிறோம். அவர்களுக்கு வந்து சேரக் கூடிய பக்க பலத்தை விட, நமக்குள்ள பக்க பலம் மிகவும் அதிகம். பாலைவனப் படையைக் கண்டு நடுங்கி ஓடுகிறார் ரோமல். இது இந்த யுத்தத்தில் முக்கியமான தோர் கட்டம்.

நான் அளவிற்கு மீறிய நம்பிக்கையோடு இருந்து விட்டேனென்று எதிர் காலத்தில் யாரும் என் மீது பழி சொல்லக் கூடாது என்பதை முன்னிட்டு, நான் எதைச் சொல்ல வேண்டு மானாலும், மிகுந்த தயக்கத் தோடே சொல்லிக் கொண்டு வருகிறேன்.

துனிசிய முனையில் ஏறக்குறைய $2\frac{1}{2}$ லட்சம் பேர்களைக் கொண்ட எதிரிப் படைகள் இருக்கின்றன. ஆகவே, நேச நாட்டுப் படைகளுக்கு நேரக் கூடிய கஷ்டங்கள் கொஞ்சம் என்று நாம் மதிக்க முடியாது. கடும் போராடும்படியான அவசியம் நமக்கு நேரலாம்.

## புதிய படைத் தலைவர்கள் நியமனம்

இப்போது பாலைவனப் படை அமெரிக்கர்களின் ஆதீனத்தை யடைந்து விட்டது. ஆகவே, அமெரிக்கப் படைத் தலைவரான ஜெனரல் எய்சினோவர் கட்டளைப்படி அது நடக்கும். அவருடைய திறமையில் எனக்கு மிகுந்த நம்பிக்கை யுண்டு. நான் இது வரை கண்ட மிகச் சிறந்தவர்களுள் இவரும் ஒருவர். நாங்கள் காசப்ளாங்காவில் கூடிய போது, பாலைவனப் படை அமெரிக்கப் படைத் தலைவர் ஆதீனத்திற்கு உட்பட்டது. அங்கே, ஜெனரல் அலெக்சாந்தர் டிபுடி படைத் தலைவராக விருக்க வேண்டு மென்றும், விமானப் படைத் தலைவரான சீப் மார்ஷல் டெட்டர் மத்தியதரைக் கடலில் நடைபெறும் விமானப் போர்களை ஜெனரல் எய்சினோவருக்கு உட்பட்டு நடத்த வேண்டு மென்றும், தீர்மானித்தோம். ஜெனரல் எய்சினோவர் கோரிக்கைப்படித் தான் விமானப் படைத் தலைமை விமான சீப் மார்ஷல் டெட்டருக்குக் கொடுக்கப்பட்டது. இவருக்கு உட்பட்டு வைஸ் மார்ஷல் கனிங்ஹாம் வேலை செய்வார்.

தற்போது வட ஆப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் கப்பற் படைக்கும் அமெரிக்கக் கப்பற் படைக்கும் தலைமை வகித்து நடத்துகிறவர் சர் அண்ட்ரூ கன்னிங்ஹாம். இவர் கிழக்குப் பகுதியிலுள்ள கடல்களிலும் தம் ஆதிக்கத்தைச் செலுத்துவார். மத்திய தரைக் கடல் முழுதும் இவருக்குட்பட்ட கடற் படை, ஆதிக்கம் செலுத்தும். இப்போது மத்தியதரைக் கடலில் பிரதம படைத் தலைவராக இருப்பவர் இனி லிவாந்த் பகுதிக்குப் படைத் தலைவராக விருப்பார். இவருக்குச் செங்கடலிலும் அதைச் சார்ந்த இடங்களிலும் தான் ஆதிக்கம் இருக்கும். டிபுடி பிரதம படைத் தலைவராகி விட்ட ஜெனரல் அலெக்சாந்தருக்குப் பதிலாக, இப்போது பாரசீகத்திலும், ஈராக்கிலும், உள்ள திறமை வாய்ந்த 10-ம் படைக்குத் தலைமை வகித்துள்ள ஜெனரல் சர் ஹென்ரி மெய்த்லண்ட் நியமிக்கப்பட்டிருக்கிறார். பாரசீகத்திற்கும் ஈராக்குக்கும் ஒரு புதிய படைத் தலைவர் விரைவில் நியமிக்கப் படுவார். தற்போதுள்ள சுயேச்சைப் பிரஞ்சுப் படையை, ஜெனரல் ஆன்டர்சன் தலைமையில் நடத்தும்படி ஜெனரல் ஜிராட் அனுமதித்து விட்டார்.

## வேண்டுகோள்

இந்த ஏற்பாடுகளின் சாதக பாதகங்களைக் குறித்து பத்திரிகைகளும், இச்சபையோரும், பொது மக்களும், மிகவும் ஜாக்கிரதையா யிருக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது இந்த வேலையில் ஈடுபட்டுள்ள பல படைத் தலைவர்களுக்குள்ளும் நிலவி யிருக்கும் நல்லுணர்ச்சியைக் கெடுத்துவிட வேண்டாமென்று கோருகிறேன்.

ஜெனரல் எய்சினோவரும், ஜெனரல் அலெக்சாந்தரும், ஒழுக்கத்திலும் தன்னல மற்ற தன்மையிலும் தலைசிறந்தவர்கள். தம் சொந்த முன்னேற்றத்தைக் குறித்துக் கொஞ்சமும் லட்சியம் செய்கிறவர்களல்ல.

இச்சபையோரிடம் எந்தவிதமான தயவையும் மன்னர் பிரான் அரசாங்கம் கோரவில்லை; ஆனால் நமக்குக் கிடைத்துள்ள பலா பலன்களைக் கொண்டு, மதிப்பிடவேண்டு மென்று தான் கோருகிறேன்.

(4-ம் பக்கம்—தொடர்ச்சி)

ரஷ்யப் படைகள் கட்டாயம் கார்க்கோவை பிடித்து விடுமென்று தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அது எப்போது பிடிப்படும் என்பது தான் பிரசினையா யிருந்தது.

## கிழக்கு அரண் நொறுங்குகிறது

ராஸ்டோவ், கர்ஸ்க், கார்க்கோ ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக ஓரல் தான் ஜெர்மனியின் முக்கியமான தளம். இதையும் ரஷ்யர்கள் பிடித்து விட்டால், ஜெர்மானியர்களின் அரண்கள் நொறுங்கியதாகத் தான் அருத்தம். ஜெர்மன் படைகள் மண்டையில் செம்மட்டியடிஅடித்த மாதிரியாக, ரஷ்ய சேனைகள் இடைவிடாதுஅடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து அச்சுநாடுகளின் ஆதிக்கம் அடியோடு ஐரோப்பாவில் அழிந்து விடுமென்று தெளிவாகத் தெரிகிறது.

# "சீனாவின் மூலமாக ஜப்பான் தாக்கப்படும்."

## நேச நாட்டுத் திட்டத்தைப் பற்றி பிரசிடென்ட் ரூஸ்வெல்ட்

### ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனைக்கு ஏற்பாடு

*சமீபத்தில் அமெரிக்கப் பொது மக்கள் சபைப் பத்திரிகை நிருபர்கள் அளித்த விருந்தில், அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் பேசும் போது,* **துனீசியப் போர் முடிந்த வுடனே ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கவேண்டு மென்று நேச நாடுகள் முடிவு செய்திருப்பதாக அறிவித்தார்.** *மேலும் அவர் கூறியதாவது :—*

உங்கள் விருந்தில் நான் கலந்து கொண்டு இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன. அதன் பிறகு பல சம்பவங்கள் நிகழ்ந்தன. 2 வருஷங்களுக்கு முன்பு நான் பேசிய போது, ஜனநாயக நாடுகளுக்கு யுத்தத் தளவாட உற்பத்தி ஸ்தானமாக அமெரிக்கா அமைய வேண்டு மென்று உறுதி கொண்டிருப்பதாகக் கூறினேன். அப்போது காட்டுமிராண்டிகளிட மிருந்து நாகரிகத்தைக் காப்பாற்ற வேண்டு மென்று அமெரிக்கர்கள் அனைவரும் உறுதி கொண்டிருந்தார்கள். அப்போதே தளவாட உற்பத்திகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தன. இன்று மற்றொரு விஷயம் என் மனதில் உறுதிகொண்டிருக்கிறது. **அதுதான் இந்த மகா யுத்தத்தைக் கடைசிவரை ஒருகை பார்த்து விடுவது** என்னும் உறுதி. பெர்லின், ரோமாபுரி, டோக்கியோ ஆகிய தலை நகரங்களின் தெருக்களில் வெற்றிக் கோலத்தோடு நம் படைகள் பவனி வரவேண்டும்.

சென்ற வருஷம் செப்டெம்பர் மாதம் இந்நாடு முழுதும் நான் சுற்றுப் பிரயாணம் செய்தேன். யுத்தத் தளவாடத் தொழிற்சாலைகளுக்குப் போனேன். விமானப் பயிற்சி சாலைகளுக்குப் போய் அங்கு நடைபெறும் பயிற்சியைக் கண்டேன். வெளி நாடுகளிலுள்ள நம் படைகளைப் போய்க் கண்டேன். அவர்களோடு பேசினேன். அவர்களில் ஒரு சிலர் உயிர் இழக்கும்படி நேரும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனாலும், அவர்கள் மகிழ்ச்சியோடு தான் இருக்கிறார்கள். ஏன்? தம் நாட்டிற்கு எதிரிகளா யுள்ளவர்களோடு போராடும் பொருட்டுத் தான் அவர்கள் அங்கே போயிருக்கிறார்களென்று அவர்களுக்குத் தெரியும். இதனால், உண்மையான, நிரந்தரமான சமாதானம் உண்டாகும். அதன் பயனாய் உலகத்தின் எதிர்கால வாழ்வு சிறப்பாக இருக்கும்.

போர்முனையிலுள்ள படையினர் நம் நன்றிக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள். நம் கப்பற் படையினிடத்திலும் நமக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. ஏனென்றால் இவற்றின் உதவியால் தான் நாம் பிற நாடுகளில் போய் இறங்கக் கூடும். அன்றியும், நம் வியாபாரக் கப்பல்களும் மிகவும் உபயோகமா யிருக்கின்றன. யுத்தத் தளவாடங்களை இவை தான் ஏற்றிக்கொண்டுபோய் வெளிநாடுகளிலுள்ள நம் படைகளுக்கும் மற்ற நேச நாடுகளுக்கும் உதவுகின்றன. இவற்றின் உதவியின்றி, நாம் போரைத் தொடர்ந்து நடத்த முடியாது. நான் வெகு இரகசியமாகப் போர்முனைகளுக்குப் போக வேண்டி யிருந்தது. ஆகவே, திடீரென்று என்னைத் தங்கள் முன் கண்டபோது, நம் படையினர் மிகவும் ஆச்சரியப்பட்டனர். மற்ற போர்முனைகளுக்கும் நேச நாடுகளுக்கும் போய் நம் படையினரை நேரில் காணவேண்டு மென்பது தான் என் ஆசை. அப்போது, நம் அரசாங்கமும் நம் நாட்டு மக்களும் அவர்களைப் பற்றி மிகவும் பெருமை யடைகிறார்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். அவர்களுடைய முயற்சியின் பயனாக, எதிரி திக்குமுக்காடுகிறான் என்று அவர்களுக்குத் தெரிவிப்பேன்.

**நமது படைகள் ஒவ்வொன்றிலும் கப்பல் படைகள் ஒவ்வொன்றிலும் பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள், தொழில், மதம், அரசியல் போக்கு முதலிய அனைத்திலும் ஒருவரோடொருவர் மாறுபட்டிருக்கிறார்கள். என்றாலும் அவர்களை எதற்காகப் போராடுகிறீர்கள் என்று கேட்டால், ஒரு முகமாக 'நாங்கள் எங்கள் நாட்டிற்காகப் போராடுகிறோம் என்றுதான் சொல்லுவார்கள்.** இதன் பொருள் என்னவென்று நீங்கள் கேட்டால், தன் விருப்பம் போல் பேசவும், படிக்கவும், காது கொடுத்துக் கேட்கவும் உள்ள உரிமையைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகப் போராடுவதாக ஒருவர் பதில் சொல்லுவார். மற்றொருவர் அமெரிக்காவிலுள்ள கிருஸ்துவக் கோவில்களில் நாஜிக் கொடி பறக்கக் கூடாது என்பதற்காகப் போராடுவதாகச் சொல்லுவார். தனக்கும் தன் போன்றவர்களுக்கும் நாள்தோறும் மூன்று வேளை உணவு கிடைக்க வேண்டுமென்பதற்காகப் போராடுவதாக வேறொருவர் கூறுவார். தன் மக்களும், பேரன்மார்களும் இதுபோல இன்னொரு முறை ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் போராடும் கெட்ட தொழிலில் ஈடுபடக் கூடாது என்பதற்காகப் போராடுவதாகத் தெரிவிப்பார் இன்னொருவர். இவற்றை திரட்டிப்பார்த்தால், ஒவ்வொரு அமெரிக்கனும் தன் நாட்டின் பொருட்டுத் தான் போராடுவதாக ஏற்படுகிறது.

இப்போது அமெரிக்காவை யடுத்துள்ள நாடுகளிலுள்ளவர்களின் எதேச்சை எந்த அளவிற்கு இருக்கிறதோ, அந்த அளவிற்குத் தான் இப்போதும் எதிர்காலத்திலும்கூட, அமெரிக்க மக்களின் எதேச்சையும் அமையும். எங்கேயோ ஒரு மூலையில் ஆரம்பமான இந்தப் போராட்டம், உலகில் எல்லாப் பகுதிகளிலும் தீவுகளிலும் நடைபெறுகிறது. உலக மக்கள் எல்லோருமே இதனால் பெரும் பாதகமடைந்திருக்கிறார்கள்.

**இந்த யுத்தத்திறகுப் பிறகு ஏற்படக் கூடிய சமாதானம், உலக முழுதும் ஓரினம் என்னும் கொள்கையை ஒப்புக்கொண்டு உலக மக்கள் அனைவருக்கும் நீதி செலுத்தினாலல்லது, மீண்டும் போர் மூளும் என்ற பயத்திற்கு உலக மக்கள்** *அனைவரும் ஆளாகியிருக்க வேண்டியது தான்.*

பல திசைகளிலுமுள்ள நம் படைகளோடு நான் பேசியபோது தம் தாய் நாட்டின் பாதுகாப்பைப் பற்றி அவர்கள் மிகுந்த அக்கரை கொண்டிருக்கிறார்களென்று தெரிந்தது. தாய் நாட்டில் மிகுந்த குறைபாடுகளிருப்பதாகவும், யுத்தத்தின் விளைவுகளைப் பற்றிய உண்மையான விவரங்களை யாரும் உணரவில்லையென்றும், தன்னலமிக்க தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துவிடுவதாகப் பயமுறுத்தி, தளவாட உற்பத்தி வேகத்தை வெகுவாகக் குறைக்கிறார்களென்றும், சில பண்ணையர்கள் உணவுப் பொருட்களின் விலையை மிகவும் அதிகமாக உயர்த்தி கொள்ளை இலாபம் தேடப் பார்க்கிறார்களென்றும், படித்தரங்கள் விதிக்கப்பட்டது பற்றி பெரும்பாலோர் அதிருப்தி கொண்டிருக்கிறார்களென்றும், மற்றும் பல சில்லரைப் பிரச்னைகள் உண்டென்றும் வெகுவாகப் பெருக்கி யாரோ அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இதன் பயனாக, அவர்கள் ஒரு சிலர் சிறிது கலக்கங் கொண்டிருந்ததாகத்தெரிந்தது. இவை எல்லாம் உண்மையை வெகுவாகப் பெருக்கிக் கூறப்பட்டவை என்று சொன்னேன். அமெரிக்கர்கள் அனைவரும் இந்த யுத்தத்தில் வெற்றிபெற வேண்டுமென்னும் உறுதியோடிருக்கிறார்களென்றும், இதன் பொருட்டு பல வகைத் தியாகங்களை அவர்கள் மகிழ்ச்சியோடு செய்து வருகிறார்களென்றும் நான் அவர்களுக்குக் கூறினேன். சிலர் தன்னலம் மிகுந்த எண்ணத்தால் அரசாங்கத்தின் போக்கிற்கு மாறுதலாக நடக்கிறார்கள் என்பது உண்மை தான் என்றும் சொன்னேன். அமெரிக்காவில் பொய் வதந்திகளைப் பரப்ப நாஜிகளும், பாஸிஸ்டுகளும், ஜப்பானியர்களும் ஏராளமான தொகைகளைச் செலவிடுகிறார்கள் என்று நம் படைகளுக்குத் தெரியும். என்றாலும் இவற்றை அமெரிக்கர்கள் நம்பி ஏமாந்து விடமாட்டார்களென்றும் நம் படைகளுக்குத் தெரியும்.



### யுத்தத்திற்குப் பிறகு படைகள் நிலை

இப்போது யுத்தத்தில் போராடுகிறவர்களுக்கு, யுத்தம் முடிந்த பிறகு தகுந்த வேலைகள் கொடுக்கப்படும். தனிப்பட்டவர்களின முயற்சியில் நடைபெறும் ஸ்தாபனங்களிலும் தொழிற்சாலைகளிலும் அவர்களுக்கு வேலை கிடைக்கத் தக்கபடி ஏற்பாடுகள் செய்யப்படும். பிறகும் வேலையில்லாதவர்கள் யாரேனும் இருப்பார்களானால், அவர்களின் பொருட்டு இச்சபையோர் ஒரு சட்டம் கூடச் செய்யும்படி நேருமென்று எதிர்பார்க்கிறேன். இவை எல்லாம் இயலாது என்று கூறி சந்தேகிக்கும், அற்ப ஆலோசனைக்காரர்களும் நம் நாட்டில் ஒரு சிலர் இருக்கிறார்கள். உண்மை நிலையை உணரும் திறமை அவர்களுக்குக் கிடையாது.

பிரிட்டிஷ் படைகளையும் பிரஞ்சுப் படைகளையும் அமெரிக்கப் படைகளையும் நாம் இப்போது வட ஆப்பிரிக்காவில் திரட்டிக் கொண்டிருக்கிறோம். இங்கே தான் இந்த யுத்தத்தின் மிகக் கடுமையான போராட்டம் நடைபெறப் போகிறது. அச்சு நாடுகளின் ஆதிக்கத்திற் குட்பட்ட ஐரோப்பியப் பகுதிக்குக் கொண்டு செல்லும் ஜலசந்தி, நேச நாடுகள் கைவசமாகாதபடி தடுக்க வேண்டு மென்று எதிரிகளும் போராடச் சித்தமாகிக் கொண்டிருக்கிறார். துனிசியா போரில் முக்கியமான நோக்கம் எதிரிகளை நாட்டைவிட்டுக் கப்பலேறும்படி விரட்டுவது தான். இந்தப் போர்க் களத்திலுள்ள பிரிட்டிஷ் படையில் நன்கு தேர்ச்சி பெற்ற பல படைவீரர்களிருக்கிறார்கள். இவர்கள் ப்லான்டர்ஸ், டன்கர்க் ஆகிய இடங்களில் வெற்றி கண்டவர்கள்; இவர்களுக்குத் தலைவராக ஜெனரல் ஆன்டர்ஸன இருக்கிறார். நாஜிகளை வட ஆப்பிரிக்காவில் மண்ணைக் கவ்வச் செய்த 8-ம் படை, ஜெனரல் மான்ட்காமரி தலைமையில் இருந்து வருகிறது. துனிசியாவிலுள்ள எதிரியைத் தெற்கே யிருந்து எட்டாம் படையும்; ஜெனரல் டிகாலின் உத்தியோகஸ்தர்களுள் ஒருவரான லாக்னேர் என்பவரின் தலைமையிலுள்ள எதேச்சைப் பிரஞ்சுப் படையும், தாக்கும். மேற்கே யிருந்து ஜெனரல் ஜிராட் தலைமையிலுள்ள எதேச்சை பிரஞ்சுப் படையும் பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளும் தாக்கும்.

### ஜெனரல் எய்சினேவர் சிறப்பு

இந்தப் படைகளுக்குத் தலைமை தாங்கிப் போரை நடத்துகிறவர் ஜெனரல் எய்சினேவர். இவர் இளைஞர். கன்சாஸ் பயனியர் படையைச் சார்ந்தவர். சிறந்த யுத்தவீரர். இவர் தன் படைகளை நடத்தும் திறமையைப் பாராட்டி, அவரே நேச நாட்டுப் படைகளுக்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக மிஸ்டர் சர்ச்சில் கசப்ளாங்கா மகா நாட்டில் பிரரேபித்தார்.

இவருக்கு அடுத்தபடியாக பிரிட்டனின் மகா வீரர்களில் ஒருவரான ஜெனரல் அலெக்ஸாந்தரை நியமித்திருக்கிறோம். இவர் மத்திய கிழக்குப் போர் முனையில் பிரிட்டிஷ் படைகளை (8-ம் படை உள்பட) நடத்தி, எல் அலமீனில் வெற்றி கண்டவர். எய்சினேவரும் அலெக்ஸாந்தரும் மிக நெருக்கமாகவிருந்து யுத்தத்தை நடத்தவேண்டிய முறைகளைக் குறித்து அப்போதைக் கப்போது ஆலோசித்துக் கொண்டு வருகிறார்கள். அலெக்ஸாந்தர் எய்சினேவருக்கு வலது கை போன்றிருக்கிறார். இநத உண்மைகள் நம் எதிரிகளுக்குத் தெரிந்திருக்கட்டும்.

### ஐரோப்பாவைத் தாக்குதல்.

துனிசியப் போரில் நம் படைகளுக்குக் கொஞ்சம் சேதம் நேரலாம். போர்க்களத்திலுள்ளவர்களைப் போலவே, நாமும் இது பற்றி சற்று தைரியத்தோடும் சகிப்புத் தன்மை யோடும் இருக்க வேண்டும். நாம் அச்சு நாடுகளைத் தாக்கப் போகிறோம். இது பற்றி எதையும் ஒளிமறைவாக நாம் வைத்துக் கொள்ள வில்லை. ஆகவே, ஹிட்லர் தன் திறமையை எல்லாம் கொண்டு துனீசியப் போரை நடத்த முன் வரக் கூடும். துனீசியாவில் தன் படைகளை வெகுவாகப் பலப்படுத்தி வைத்திருக்கிறார். ஏராளமான தளவாடங்களும் சப்ளைகளையும் தடையில்லாமல் அங்கே அனுப்பிக் கொண்டிருக்கிறார். துனீசியாவில் நேச நாடுகள் வெற்றி பெற்றால், வெகு இலகுவில் ஐரோப்பியாவைத் தாக்கக் கூடு மென்று அவருக்கு நன்றாகத் தெரியும். அதனால் தான், இவ்வளவு ஏற்பாடுகளும் செய்கிறார். கீழ் திசையில் நாஜிப் படைகள் **தலை தூக்காதபடி ரஷ்யப் படைகள் அடித்து நொறுக்கியது போலவே, நாமும் மேல்புரமிருந்து கடுமையாகத் தாக்க வேண்டும். பல திசைகளிலு மிருந்து எதிரியை நாம் அடித்து நொறுக்க வேண்டும்; அப்போது தான் இன்னது தான் செய்வது என்று தெரியாது தவிப்பார் ஹிட்லர்.**

*பிரான்சுக்கு வெளியே யுள்ள எல்லா பிரஞ்சுக்காரர்களும் திரண்டு, நாஜிகளின் கொடுமைகளுக்கு ஆளாகித் தவிக்கும் தம் சகோதரர்களை மீட்க முயற்சிக்கிறதாக கசப்ளாங்கா மகா நாட்டில் தெரிய வந்தது.*

நாள் ஆக ஆக, தன்னலமென்பது பிரஞ்சுக்காரர்களிடமிருந்து அகன்று வருகிறது. தம் விடுதலையின் பொருட்டு அனைவரும் ஒன்று பட்டு எதிரியைத் தாக்க வேண்டு மென்னும் உணர்ச்சி அதிகப்பட்டு வருகிறது. அட்லாண்டிக் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட முக்கியமான யுத்த நோக்கங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது, இன்று எதிரி கைவசப்பட்ட நாடுகள் எதிர் காலத்தில் யதேச்சை யுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பது தான். இந்தப் புனிதமான உரிமையை அவர்கள் அடையும் பொருட்டு உதவுவது தான் நேச நாடுகளின் கடமை. நம் ஜனநாயக உணர்ச்சிக்கு முளை கிளம்பியது அமெரிக்கப் புரட்சியிலும் பிரஞ்சுப் புரட்சியிலும் தான்: அரசாங்க ஆதிக்கம் ஏற்படுவது பொது மக்களின் பலத்தால் தான் என்னும் உணர்ச்சி அப்போது தான் ஏற்பட்டது. இனி நாஜிகளை பிரான்சிலிருந்து விரட்டிய உடனேயே, பிரஞ்சு பொது மக்கள் தம் பிரதிநிதிகளைத் தேர்ந்து கொள்ளட்டும். அப்போது நாஜி ஆட்சி முறையோ, பாஸிஸ்ட் ஆட்சி முறையோ, ஜப்பான் ஆட்சி முறையோ அங்கே நடக்காது.

### கசப்ளாங்கா முடிவுகள்.

தம் மனதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டு மென்னும் உரிமை அனைவருக்கும் இருக்க வேண்டு மென்பது தான் அட்லான்டிக் பிரகடனத்தின் தத்துவங்களில் ஒன்று. இதைக் கொண்டு எந் நாட்டாரும் பல கொலைகளைச் செய்து விட முடியாது; தம் நாட்டு மக்களையோ பிறநாட்டு மக்களையோ அடிமைப் படுத்த முடியாது. கையாட்களையும் லவால்களையும் நிரந்தரமாக ஆட்சி நடத்தும்படி வைத்திருக்க வேண்டு மென்று இந்த உலக யுத்தம் நடைபெறுவதாகவும் சொல்லுவதற் கில்லை. கசப்ளாங்கா மகா நாட்டின் பலனாகக் கூடிய விரைவில், பலவிதச் செய்திகள் வெளிவரும். இச் செய்திகள் அச்சு நாட்டாருக்குக் கலக்கத்தை யுண்டுபண்ணும்.

தென்-மேற்குப் பாசிபிக் தீவுகளில் நெடு நாட்கள் போராடி வெற்றி கண்டோம். நம் விமான பலம் உயர்ந்தது என்றும் நம் படையினர் சிறந்த போர் வீரர்களென்றும் மெய்ப்பித்துக் கொண்டோம். நமக்கு ஆஸ்திரேலியாவும் நியூசிலந்தும் பெரிதும் உதவின. பிரிட்டிஷாரும் நமக்கு நேர் முகமாக உதவினார்கள். பசிபிக் கடல்களிலுள்ள தீவுகளில் ஒவ்வொன்றாகப் பிடித்து அங்கிருந்து ஜப்பானியர்களை விரட்டுவதில் நம் அவகாசத்தை வீணாக்க, நாம் விரும்பவில்லை. சீனாவில் ஜெனரலிஸிமோவோடு நம் அரசாங்க பிரதிநிதி ஜெனரல் ஆர்னால்ட் கலந்து பேசிக்கொண்டிருக்கிறார். கசப்ளாங்கா மகா நாட்டில் நிறைவேறிய தீர்மானங்களைக் குறித்து அவரிடம் சொல்லி யிருக்கிறார். இதன் பயனாக சீனாவிலிருந்து ஜப்பானியர்களை அடியோடு விரட்டி விடவும் ஜப்பானையே விமானங்களைக் கொண்டு தாக்கவும்

திட்டமிட்டாகிற்று. டோக்கியோவிற்குப் பல வழிகளுண்டு. இந்த எல்லா வழிகளையும் நாம் கையாளுவோம்.

### நேச நாடுகளை வெட்டிவிட முயற்சி.

நேச நாடுகள் வெற்றி பெற்றால் ஒன்றோடொன்று நாயும் பூனையும் போல் சண்டையிட்டுக் கொள்ளுமென்றும், அதன் பயனாக அந் நாட்டு மக்களுக்குத் தீங்கு நேருமென்றும் "ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுதது போல்" அச்சு நாடுகள் நீலிக் கண்ணீர் வடித்துத் தப்புப் பிரசாரம் செய்கின்றன. இது தான் அவர்களுடைய கடைசி ஆயுதம். இதுவும் பலிக்க வில்லை. இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தை நாம் தெளிவு படுத்த விரும்புகிறோம். நாம் வெற்றி பெற்ற பிறகு, அச்சு நாட்டுப் பொது மக்களை எந்த விதக் கொடுமையும் நாம் செய்ய மாட்டோம்; **ஆனால் அவர்களுடைய தலைவர்களைப் பழி வாங்கியே தீருவோம். அவர்கள் செய்த குற்றங்களுக்கு அவர்கள் தப்பிக் கொள்ள விரும்புவார்களானால், உடனே எவ்வித நிபந்தனையு மின்றி சரணாகதி யடைய வேண்டும்.**

ரஷ்யாவிற்கு விரோதமாக பிரிட்டனையும் அமெரிக்காவையும் சீனாவையும், இந்த நாடுகளுக்கு விரோதமாக ரஷ்யாவையும் தூண்டி விட நாஜிகள் முயற்சித்தால், அது பலிக்குமா?

> **யுத்தத்தினால் நேர்ந்த பல விதத் தொல்லைகளின் பயனாக, தலைவர்களுடைய அறிவும் நேச நாட்டு மக்களுடைய அறிவும் மிகவும் கூர்மையாகி விட்டன. நிரந்தரமான சமாதானம் யுத்தத்திற்குப் பிறகு நிலைக்க வேண்டு மென்பதற்காக, நாம் அனைவரும் ஒன்று பட்டிருக்க வேண்டியது அவசியம் என்று என் அனுபவத்தைக் கொண்டு சொல்லுகிறேன்.**

அச்சு நாடுகளில் ஜப்பான் முதலில் தோல்வி யடைந்தால், அடுத்தபடியாக ஜெர்மனியை ஒடுக்கும் பொருட்டு நேச நாட்டுப் படைகளெல்லாம் பயன்படும். ஜப்பானுக்கு முன்னதாகவே ஜெர்மனியை வெல்ல வேண்டு மென்று முடிவு செய்ய வேண்டு மென்று பிரிட்டிஷ் முதல் மந்திரி காசப்ளாங்கா மகாநாட்டில் கோரினார். பிறகு ஜப்பானியர்களை தாக்க சீனாவிற்கு உதவியாக தன் முழு படை பலத்தையும் பொருள் பலத்தையும் நம்மைப் போலவே உதவுவதாகவும் குறிப்பிட்டார். இது பற்றி அவசியமானால், ஒப்பந்தங் கூடச் செய்து கொள்ளலா மென்றும் கூறினார். **இது தேவையில்லை யென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வார்த்தைகளே போது மென்றும் நான் பதில் கூறினேன்.**

இன்று, அமெரிக்கத் தலைவராக இருந்த ஆபிரகாம் லிங்கனின் பிறந்த நாள். உலக முழுதிலும், எதேச்சை மக்கள் அனைவரும், இந் நாளைக் கொண்டாடுகிறார்கள். 1862-ம் வருஷம் அவர் கூறியதாவது :—

> "என் போன்ற பிரஜைகளே! உலகப் போக்குக்கு நாம் தப்ப முடியாது. இந்த அமெரிக்கப் பொது மக்கள் சபையையும் இந்த நிர்வாகத்தையும் உலகம் மறக்காது"

இப்படி அவர் கூறி 80 வருஷங்களுக்குப் பிறகு யுத்தத் தீ மக்கள் இனத்தையே சூழ்ந்து கொழுந்து விட்டெரிகிறது.

கடவுளின் கருணையினால், நமக்கு மேன்மை யுண்டாகும் என்பதில் எனக்குப் பரிபூரண நம்பிக்கையுண்டு. அறிவு பெருகவும், சகிப்புத் தன்மை ஓங்கவும், அடிமைத் தனம் அழியவும் வேண்டி, 20-ம் நூற்றாண்டின் மத்தியில், நல்லெண்ண முளவர்கள் ஒன்று பட்டுப் போராடி வெற்றி கண்டார்கள் என்று எதிர் கால மக்கள் நம்மைப் பற்றி குறிப்பிடுவார்கள்.

---

(3-ம் பக்கம்—தொடர்ச்சி)

3. நிர்வாக சம்பந்தமான எல்லா விவரங்களைக் குறித்தும் நன்கு ஆராய்ந்து, எதிர்காலத்தில் என்ன முறையைக் கைக்கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறவும்."

ஆகவே இவற்றிலிருந்து கொஞ்ச காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களும், நெடுங்காலத் திட்டங்களும் உண்டு என்று தெரிகிறது. ஜப்பானியர்களை பர்மாவை விட்டு விரட்டி, தற்போதுள்ள குழப்பமான நிலைக்குப் பதிலாக அமைதியை உண்டாக்குவது கொஞ்ச காலத்தில் நிறைவேற்றப் படவேண்டியதோர் திட்டமாகும். நெடுங்காலத் திட்டப்படி, பர்மாவைப் புதியதோர் நாடாகக் கட்டி முடிக்கவேண்டும். அப்போது தான் அது நிலைக்க முடியும். அப்போது தான் பிறநாட்டுப் படைகள் தன்னைத் தாக்காதபடி தற்காத்துக் கொள்ளக் கூடும். வியாபாரப் போட்டியிலும் வெல்லக் கூடும். அந் நாட்டு மக்களுக்கு எப்படிப் பட்ட சுயாட்சி ஏற்றதென்று தோன்றுகிறதோ அதை நடத்த முடியும். இப்போது பர்மாவிற்கு எந்த வித சுதந்தரமும் கிடையாது. அங்கே எல்லா அரசியல் கட்சிகளையும் ஜப்பானியர்கள் ஒழித்து விட்டார்கள். ஜப்பானியர்களுக்கு உதவி செய்த பர்மியர்களுக்கும் ஜப்பானியர்கள் நாமஞ் சாற்றி விட்டு, கொடுங்கோல் ஆட்சி நடத்தி வருகிறார்கள். ஆனால் பிரிட்டனின் கொள்கை என்ன?

> பர்மா இழந்த சுயேச்சையை மீட்டுக் கொடுக்க வேண்டும். இது வரை அவர்கள் அனுபவித்துக் கொண்டு வந்த சுயாட்சியை மீண்டும் அவர்கள் பெற உதவி புரிய வேண்டும்

ஜப்பானியர்கள் கூறியது போல், 'உங்களுக்கு இன்ன தேதியில் சுயராஜ்யம் கொடுத்து விடுகிறோம்' என்று கூறுவது எளிது. ஆனால் நேர்மையாகாது. ஏனென்றால்; இப்போது பர்மா விருத்தி யில்லாமல் இருக்கிறது. ஜப்பானியர்கள் நடத்திய கொள்ளை யுத்தத்தினால் நாச மடைந்திருக்கிறது. பர்மாவை மீண்டும் புதிய முறையில் அமைத்தால் மட்டுந் தான், உண்மையான சுயேச்சையை பர்மியர்கள் அனுபவிக்க முடியும். இதனால், ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்குத் தேவையான உணவும், மூலப் பொருள்களும், வரியும் கொடுப்பது என்று அர்த்தமாகாது. ஆனால் பொருளாதார உலகில், தனித்த சுயேச்சையுள்ள நாடாக அமைய வேண்டும்.

> **இதன் பொருட்டு பர்மா கவர்னர் ஒரு தனி இலாக்காவை ஏற்படுத்தி யிருக்கிறார். இந்த இலாக்கா, பர்மாவின் பொருளாதாரப் பிரசினைகளைப் பற்றியும் சமுதாயப் பிரசினைகளைப் பற்றியும் ஆராய்ச்சி செய்து எதிர் காலத்தில் பர்மா எப்படி அமைய வேண்டு மென்பது பற்றி திட்டங்கள் வகுக்கும்.**

இது பற்றி இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி "இந்த இலாக்காவில், பர்மா முதல் மந்திரியும், நிதி மந்திரியும் மற்ற பர்மியர்களும் வேலை செய்கிறார்களென்றும், மிகவும் கெட்டிக்காரர்களான இளம் உத்தியோகஸ்தர்கள் இந்த இலாக்காவை நடத்துகிறார்களென்றும் குறிப்பிட்டார். இது மிகவும் கடுமையான வேலை தான். எப்படி யென்றால், சட்டம், சமாதானம், போக்கு வரவுகள், கல்வி, சுகாதாரம், சாகுபடி, கைத்தொழில், வியாபாரம், நிதி முதலிய பல இலாக்காக்களின் நுணுக்கங்களையும் இவர்கள் வகுக்க வேண்டி யிருக்கிறது. ஜப்பானியர் பர்மாவில் இதற்கான அளவிற்குப் பணம் செலவு செய்ய மாட்டார்கள். "வெந்தது போதும் முந்தியிற் போடு" என்று கொள்ளை கொண்டு போகும் ஜப்பானியர்கள் போல், நாம் நடந்து கொள்ளமாட்டோம். நேர்மையான முறையில் நம் கடமையை நிறைவேற்றுவோம்.



# ஹிட்லர் திணறுகிறார்

ஒரே புகையாக இருந்தாலும் சரி, போதுமான காற்று இல்லா விட்டாலும் சரி, யாராவது கழுத்தைப் பிடித்து அமுக்கினாலும் சரி, மூச்சுத் திணறுவதும், முழி பிதுங்குவதும் இயற்கை தானே? ஹிட்லருக்கு இத்தகைய அவஸ்தைகள் எல்லாம் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் விமானிகள் பகல், இரவு என்று பாராது, ஆயிரம், இரண்டாயிரம் டன் கணக்கிலே ஜெர்மனி மீதும், ஜெர்மானியர் வசமுள்ள பிரதேசங்களின் மீதும் வீசும் குண்டுகளால் சிருஷ்டிக்கப்படும் தீ, புகை எல்லாம் ஒரு பக்கம் பிரமாதமாகக் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. முன் போல 'தம்' பிடித்து, எல்லோரையும் அலற வைக்க, இப்பொழுது முடியவில்லை. ரஷ்யர்கள் கழுத்தை அமுக்குவது போலவே மேலே பாய்ந்து, விழுந்து, அட்டகாசம் செய்கிறார்கள். ஆப்பிரிக்காவிலே நிலைமை சீர்ப்படவே யில்லை. பிரிட்டிஷ் எட்டாவது சேனை பெரிய யமனாக அமைந்தது போல், இன்னும் விடாது துரத்தி வருகிறது ரோமலின் சேனையை. துருக்கியும், பிரிட்டனும் பிரமாதமாகக் குலாவ ஆரம்பித்து விட்டன. ரஷ்யா வோடு துருக்கி தோள் மீது கை போட்டுக் கொண்டு நிற்கத் தீர்மானித்திருக்கிறது. நாளாக ஆக, பலியாகும் ஜெர்மன் வீரர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த, மேலும் மேலும் போர் முனைக்கு அதிகப்படியான ஆட்களை அனுப்ப வேண்டுமல்லவா? புதிது புதிதாக விமானிகளைப் பழக்க வேண்டும். டாங்கிகளையும், விமானங்களையும், வெடிகுண்டுகளையும் உற்பத்தி செய்ய வேண்டும். அதற்கெல்லாம் தேவையான பொருள்களுக்கு எங்கே போவது? நேச தேசத்தாரின் கை களைத்திருந்த காலமெல்லாம் போய் விட்டது. அவர்கள் ஹிட்லர் 'சிங்க'த்தை அதன் குகையிலேயே எதிர்த்து, அதன் பிடரியைப் பிடித்து நன்றாகக் குலுக்கி, அதை உண்டு, இல்லை என்று செய்து விடத் தீர்மானித்திருக்கிறார்கள். நேச தேசத்தார் பக்கம் விஜயலக்ஷ்மி கொஞ்சம் திரும்பி யிருக்கிறாள். இவை அனைத்தும் சேர்ந்த பின், ஹிட்லர் திணறுவதில் ஆச்சரிய மென்ன இருக்கிறது?

### ரஷ்யாவிற்கு வெற்றி மேல் வெற்றி

சென்ற வாரம் நடந்த சம்பவங்கள் ஹிட்லர் மனசிலே இன்னும் அதிகப்படியான குழப்பத்தை உண்டாக்கி யிருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை. சுமார் மூன்று மாதங்களுக்கு முன் ஸ்டாலின்கிராடு நகர் அருகே வெற்றியின் ஒரு கோடியைக் காண ஆரம்பித்தார்கள் ரஷ்யர்கள். அவ்வளவு தான்! அன்றிலிருந்து இன்று வரை மளமள வென வெற்றி மேல் வெற்றியாக வாரிக் குவித்து வருகிறார்கள் அவர்கள்.

ஸ்டாலின்கிராடு நகர்ப் போரை ஹிட்லர் தொடர்ந்து நடத்தி வந்த போது, அவருடைய சைனியத்திற்கு வேண்டிய சப்ளைகள் எல்லாம் **ராஸ்டாவ்** என்ற முக்யமான நகரத்திலிருந்து தான் போய்க் கொண்டிருந்தன. இது பெரிய பெரிய தொழிற் சாலைகள் பலவற்றைக் கொண்ட பிரமாண்டமான நகரம். இதன் தலை விதி வெகு விசித்திரமானது. ரஷ்ய-ஜெர்மானியப் போர் தொடங்கி, ஒன்றரை வருடங்களாகு முன், இந்த நகர் நான்கு தடவை கை மாறி விட்டது. இதிலிருந்த தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்களை எல்லாம் ரஷ்யர்கள் முன் கூட்டியே ரஷ்யாவின் மற்றொரு கோடிக்கு எடுத்துப் போய் விட்டார்கள். காகஸஸ் பிரதேசத்திற்கு இதுவே தலை நகர். யூக்ரேனிலிருந்து, காகஸஸ் செல்ல, இந்நகர் ஒரு பிரதான வாசல் போலிருக்கிறது. இந்நகர் வழியாக மாஸ்கோவிற்கு ஒரு ரயில் பாதை செல்லுகிறது. காகஸஸில் உள்ள எண்ணெயும், கோதுமை முதலிய உணவுப் பொருள்களும் வட ரஷ்யாவிற்குப் போக வேண்டுமானால், இந் நகர் வழியாக சௌகரியமாகப் போகலாம்.

இப்படிப்பட்ட முக்கியமான நகர் இப்பொழுது கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. இதை ஜெர்மானியர் கைவிட்டு விட்டு, எடுத்தார்கள் ஓட்டம். இந்த நகரை, சாத்யமான வரை பாது காக்கலாம் என்று ஜெர்மானியர் நினைத்தார்கள் போலிருக்கிறது. இதற்காக ஒரு பயங்கரமான டாங்கிப் போரையும் நடத்தினார்கள். ரஷ்யர்கள் முன்னேறும் ஜோரில் இந்த எதிர்ப்புகள் எல்லாம் நிற்க முடியுமா என்ன?

ஸ்டாலின்கிராடிலே பறி கொடுத்த மூன்று லக்ஷம் பேர்களுக்கு வட்டியாக காகஸஸ் பிரதேசத்திலே மற்றொரு இரண்டரை லக்ஷம் பேர்கள் சிக்கிக் கொள்வார்கள் போலிருக்கிறது. கடற்கரை யோரமாகத் தப்பி ஓடப் பார்க்கும் நாஜிப் படைகளை, ரஷ்ய பீரங்கிகள் ஹதம் செய்கின்றன.

ராஸ்டாவ் நகரத்திலே புத்துணர்ச்சி பிறந்திருக்கிறது. அந்நகரத்திலிருந்து மீண்டும் மாஸ்கோவிற்கு ரயில் ஓட ஆரம்பித்து விடுமாம். ரஷ்யப் படைகள் யூக்ரேனிற்குள் புக, இந்த காகஸஸ் ஆசார வாசல் பெரிதும் உபயோகப்படப் போகிறது

### ஸ்டாலின்கிராடா? ரஷ்யப் பிணக் காடா?

இது இப்படியிருக்க, ஸ்டாலின்கிராட் நகருக்குப் புத்துயிர் அளிக்கும் விஷயத்திலே ரஷ்யர்கள் பூரண சிரத்தை காட்டி வருகிறார்களாம். அந்நகரில் உருப்படியாக உள்ள பிரதேசமோ, வீடோ ஏதுமே கிடையாதாம். எங்கு பார்த்தாலும் பாழும் பிணங்களும் முண்டங்களுமாகத் தானிருக்கிறதாம். ஒரு சமயம் ரஷ்யாவிலே மிகப் பிரசித்தி பெற்ற தொழிற்சாலை நகரமாக இருந்த ஸ்டாலின்கிராடு இப்பொழுது உலக சரித்திரத்திலேயே ஒரு தனி இடத்தைப் பெறும் பாக்யத்தை அடைந்த நகரமாகி யிருக்கிறது. இந்த நகரிலே ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்பதை ரஷ்ய அதிகாரிகள் வெகு ஜாக்கிரதையாகக் கணக்குப் போட்டுப் பார்க்கத் தொடங்கி விட்டார்களாம். இந்த நஷ்டத்தை எல்லாம் காட்டி, இவ்வளவு பணமாச்சு என்று குறித்து, நாளை யுத்த முடிந்ததும் ஜெர்மனியிடம் இந்த பில்லை சமர்ப்பிக்கப் போகிறார்களாம். கோடிக் கணக்கான பவுனை ஜெர்மனி கக்க வேண்டி வரலாம்.

ஒரு விஷயமுண்டு! ஸ்டாலின்கிராட் நகரப் போர் இருக்கிறதே, இதற்கும் வட ஆப்பிரிக்கப் போருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிற தென்றே தோன்றுகிறது. ஸ்டாலின்கிராடிலே சரியானபடி நாஜிகளின் சிண்டு சிக்கிக் கொண்டு விட்டதால் தான், பிரிட்டிஷ் எட்டாவது சேனையின் வேலை வட ஆப்பிரிக்காவிலே சுலபமாகி விட்டது. ஸ்டாலின்கிராட் போரிலே, ஹிட்லர் வெற்றி கண்டிருந்தால், அங்கிருந்த விமானப் படைகளில் ஒரு பகுதியை அவர் கட்டாயமாக ஆப்பிரிக்காவிற்கு அனுப்பியிருப்பார். அதோடு, ஆப்பிரிக்கச் சண்டையிலும் அதிகக் கவனம் செலுத்தி யிருப்பார். அதற்கு அவருக்கு வசதி யில்லாமல் செய்தது, ஸ்டாலின்கிராடிலே ரஷ்யர்கள் காட்டிய வீரமும், தியாகமும் தான்.

### ஸ்டாலின்கிராட் வெற்றியும், வடஆப்பிரிக்க யுத்தமும்

ஸ்டாலின் கிராடு வெற்றிக்கு, வட ஆப்பிரிக்க யுத்தமும் ஒரு வகையில் உதவி புரிந்தது என்றே சொல்ல வேண்டும். எதிர் பாராதபடி எட்டாவது சேனை முன்னேறவும், அமெரிக்கப் படைகள் மேற்கு ஆப்பிரிக்காவில் வந்திறங்கி, ட்யூனிஷியாவை நோக்கிப் பாயவும், ஹிட்லர் திகைத்துப் போயிருக்க வேண்டும். இரண்டு இடங்களையும் தான் கவனிக்க வேண்டும் அவர். இரண்டும் கடும் போராக மாறி விட்டன. ஆகவே இரண்டையும் அவரால் சரியாகவே கவனிக்க முடியவில்லை. அது காரணமாகவும் அவரது படைகளுக்குத் தோல்வி ஏற்பட்டிருக்கக் கூடும்.

ரஷ்யாவிலே, ராஸ்டாவ், வர்ஷிலோவ்கிராட், நோவோரஸிஸ்க் போன்ற முக்ய நகரங்களையெல்லாம் ரஷ்யர்கள் திரும்பப் பிடித்திருக்கிறார்கள். ஹிட்லர் தமது அரும் பொக்கிஷமெனக் கருதி வந்த கார்க்கோவ் நகரமும் எந்தச் சமயம் விழப்போகிறதோ தெரியவில்லை. மாஸ்கோவிற்கும் கார்க்கோவிற்கும் நடுவிலே உள்ள ஓரெல் எனும் முக்கிய நகருக்கும் ஆபத்து வந்து விட்டதாம். இப்பொழுது காகஸஸ் போர் முடிந்து, ரஷ்யாவின் களஞ்சிய மெனப்படும் யூக்ரேனிலே யுத்தம் நடந்து வருகிறது.

'இந்த வருஷம் பனிக் கொடுமை சகிக்க முடியவில்லை' என்று ஜெர்மன் பிரசாரகர்கள் சொல்லுகிறார்களாம். அதெல்லாம் சுத்த 'கப்ஸா' என்று தெரிகிறது. இவ்வருடத்தைப் போல், 'காரமற்'றிருந்த பனிக்காலம், சமீப காலத்திலே இருந்ததே இல்லையாம். 'நொண்டிக் குதிரைக்கு சறுக்கி விழுந்

தது சாக்கு' என்பார்களே, அதே போல, அடி வாங்குவதற்கு ஏதாவது ஒரு காரணம் சொல்ல வேண்டுமோ, இல்லையோ ?

பனி காலத்திற்கென்று ஹிட்லர் பல இடங்களைத் தயார் செய்து வைத்திருந்தார். ஆனால் அவரது கணக்கு எல்லாம் பொய்யாகப் போகும்படி செய்து விட்டார்கள் ரஷ்யர்கள். 'ரஷ்யர்கள் மகா மோசக்காரர்கள். அவர்கள் செய்வது எல்லாம் ஜாலம். சொல்வதெல்லாம் பொய்' என்று அலறுகிறார்கள் ஹிட்லரின் சகாக்கள்.

### ரஷ்யர்கள் சாகசம்

இந்த விஷயத்திலே மட்டும் மேற்கண்ட ஜெர்மானியப் பிரஜைகளின் வார்த்தைகள் அநேகமாக உண்மையாகத் தானிருக்கின்றன என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டியது தான். பின்லாந்துடன் சண்டை போட்ட போது, ஏதோ ரொம்ப சங்கடப்படுவது போல் காட்டிக் கொண்டார்கள் அவர்கள். ரஷ்யாவிலே இருப்பவர்கள் எல்லோருமே குடியானவர்கள் ; நவீன யுத்த யந்திரங்களை அவர்களில் அநேகர் கண்ணாலும் கண்டிருக்க மாட்டார்கள் என்றெல்லாம் உலகோரை நம்பும்படி செய்தார்களா இல்லையா அவர்கள் ? அவ்வாறு நம்பிக்கை ஏற்படச் செய்து விட்டு, திடு திப்பென்று குண்டாந்தடியை எடுத்துச் சுழற்றி, ஜெர்மானியரது மண்டையை உடைக்கலாமா ? ரஷ்யாவின் ஆயுதபலம், ராணுவ பலம் எல்லாம் எவ்வளவு எவ்வளவு என்பது நேற்று வரை யாருக்காவது தெரியுமா ? இப்படி அது எல்லாவற்றையும் கமுக்கமாக வைத்திருந்து விட்டு, இன்று திடீரென்று அத்தனையையும் அவிழ்த்து விடலாமா ? போன வருஷத்தில் குளிர் காலத்திலே ஒரு தினுஸாகப் போராடி விட்டு, இவ்வருஷப் பனி காலத்தில் இன்னும் பயங்கரமாகப் போராடலாமா ? ஜெர்மானியரது போர் முறையைப் பாடமாகப் படித்துக் கொண்டு, 'குருவுக்கு மிஞ்சின சீஷனை'ப்போல, அவர்களை விட ஒரு அடி முன்னேறிப் போய், ஆங்காங்கேயுள்ள ஜெர்மானியரை நாற்புறங்களிலும் வந்து வளைத்து, சட்ணியாக்கலாமா ? இதெல்லாம் சரி யென்று ஜெர்மனிக்காரர் ஒப்புக் கொள்ளுவார்களா ?

ரஷ்யப் போரின் போக்கு எப்படி போகும் என்பதைப் பற்றி ஹிட்லருக்கே ஒன்றும் புரியாம லிருக்கலாம். முன் மாதிரி அவர் இப்பொழுது 'அட்வான்ஸிலே'யே, 'அது செய்யப் போகிறேன், இது செய்யப் போகிறேன்' என்ற தம்பட்ட மடிப்பதில்லை பார்த்தீர்களா ? அவருடைய வாயே அடைத்துப் போகும்படி செய்த பெருமை, ரஷ்யருக்கே உரித்தாகும்.

### ஜெர்மனிக்கு விநாசகால ஆரம்பம்

என்றையத் தினம் ஹிட்லர் தனது ராணுவத்தின் மூல சேனாபதியாக அமர நினைத்தாரோ, அன்றிலிருந்தே அவரது ராணுவத்திற்கு விநாசகாலம் ஆரம்பமாகி விட்டது. தான் செய்த தவறை இப்பொழுது தான் ஹிட்லர் உணர ஆரம்பித்திருக்கிறார் என்று தோன்றுகிறது. ராணுவத்தை மேற்பார்த்துக் கொள்ளவும், யுத்தத்தை மேற்கொண்டு நடத்தவும் அவர் ஒரு யுத்த சபையை நியமிக்கப் போவதாகவும், பல புது சேனாபதிகளை போர்க்களத்திற்கு அனுப்பப் போவதாகவும் வெளி வந்திருக்கும் செய்திகள் மேற்கண்ட விஷயத்தை ஊர்ஜிதம் செய்கின்றன.

இதே போல, லோரியான், கொலோன், கோபன்ஹேகன் ஆகிய நகர்கள் மீது சென்ற வாரம் பிரிட்டிஷ் விமானங்கள் இடை விடாது குண்டுமாரி பொழிந்திருப்பதி லிருந்தும், நேச தேசத்தார் ஜெர்மனியின் நீர் மூழ்கிக் கப்பல்களை அதிகரிக்க விடப் போவதில்லை ; எப்படியும் இவற்றால் ஏற்படும் தொல்லைகளைச் சமாளித்தே தீருவார்கள் என்பதும் ஊர்ஜிதமாகிறது.

இந்த நீர் மூழ்கிக் கப்பல்களின் சக்தியில் தான் ஹிட்லர் தமது கடைசி நம்பிக்கையை வைத்திருக்கிறார் போலிருக்கிறது. இசனுல் தான் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், பிரதம மந்திரி சர்ச்சிலும் கஸப்ளாங்காவில் கூடிப் பேசிய பொழுது, தமது எதிர்கால போர்த் திட்டத்தை வகுத்திருப்பார்கள். 1943-ம் வருஷத்திலே வட ஆப்பிரிக்கப் போரை முடித்துக் கொண்டு, ஐரோப்பியப் போரை நேச தேசத்தவர் தொடங்கக் கூடும் எனச் சிலர் கூறுகிறார்கள். 'முதலில் ஹிட்லரை மண்ணைக் கௌவ வைப்போம். பிறகு நமது சக்தி யனைத்தையும் ஒன்று சேர்த்துக் கொண்டு, கீழ்த் திசை சென்று, ஜப்பானைத் தாக்குவோம். ஜெர்மனியை நிலம், கடல், ஆகாயம் மூன்றிலிருந்தும் பூரண வலுவோடு தாக்கத் திட்டங்கள் போட்டிருக்கிறோம். அதற்காகக் கப்பல்கள் பல கட்டச் சொல்லி யிருக்கிறோம். முதலில் ரஷ்யாவிற்கு நிறைய உதவி யளிக்க விரும்புகிறோம். ஜப்பானையும் மறக்கவில்லை. ஜப்பானை சீனாவிலிருந்து தாக்க வேண்டு மென்றே, பர்மா ரோடைத் திறந்து வைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்' என்று சர்ச்சில் கூறி யிருக்கிறார். கனடாவி லிருந்து ஏராளமான படைகள் ஐரோப்பியப் போரில் கலந்து கொள்ள பிரிட்டனில் வந்து இறங்கிய வண்ணமாக இருக்கின்றன. ரஷ்யர் பெறும் வெற்றியாலும், வட ஆப்பிரிக்காவில் கிடைத்த ஜெயத்தாலும், எகிப்து, துருக்கி, பாரசீகம், ஈராக், இந்தியா ஆகிய நாடுகளுக் கிருந்த படை யெடுப்புப் பயம் சற்றே குறைந்திருக்கிறது. ஹிட்லருக்கும் உதறல் காண ஆரம்பித்திருக்கிறது.

அமெரிக்காவி லிருந்து தலைவர் ரூஸ்வெல்ட் முழங்குகிறார், அச்சு நாட்டார் நிபந்தனையின்றி பூரணமாகச் சரணடையும் வரை போரை நடத்துவோம் என்று. அதோடு நில்லாமல், 'நேச தேசப் படைகள் நேராக, பெர்லின், ரோம், டோக்கியோ நகர்களில் வெற்றிக் கொடி ஏந்திச் செல்லும் வரை யுத்தம் நடக்கும்' என்றும் அறிவித்திருக்கிறார். ஹிட்லருக்கு இவ்வார்த்தைகள் சர்க்கரை போலிருக்குமா என்ன ?

### ஹிட்லருக்கு ஏக விமான நஷ்டம்

வட ஆப்பிரிக்காவிலே ரோமல் ஓட்டம் பிடித்த பொழுது, கிட்டத் தட்ட இரண்டாயிரம் விமானங்களை ஆங்காங்கே விட்டு விட்டுப் போய்விட்டார். இன்று அவற்றில் பல சீர்ப்படுத்தப்பட்டு, ரோமல் தலையிலேயே குண்டுகளை வீச உபயோகப் படுகின்றன. ரஷ்யாவிலும் ஹிட்லருக்கு ஏக விமான நஷ்டம். மேல் திசையிலே தினம் விடிந்தால் விமானப் படையெடுப்பாகி விட்டது. அதைச் சமாளிக்க, பல விமானங்களை அங்கே வைத்திருக்க வேண்டி வந்திருக்கிறது. ட்யூனிஸியாவில் நடக்கும் போரை எவ்வளவுக் கெவ்வளவு அதிக காலம் நீடிக்க வைக்கிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு ஹிட்லருக்குச் சௌகரியம். ஆதலால், ட்யூனிஸியாவிற்கு ஏராளமான ஆட்களையும், டாங்கிகளையும் அனுப்பச் செய்திருக்கிறார் அவர். அதற்காக, பல வெடி குண்டு விமானங்கள் துருப்பேற்றிச் செல்லும் விமானங்களாக மாற்றப்பட்டிருக்கின்றனவாம். பல கப்பல்கள் இத்தாலிக்கும், ட்யூனிஸிற்கும் இடையே வெகு மும்முரமாக வேலை செய்கின்றனவாம். அவற்றிற்கு விமானப் பாதுகாப்பளிக்க வேண்டும். இங்கிலாந்து மீது படையெடுத்துச் செல்ல விமானங்களை அனுப்ப வேண்டும். என்ன செய்வார் ஹிட்லர் ? திணறுகிறார். இந்த யுத்தத்தை ஆரம்பித்த பொழுது, தனது விமானப் படையின் 'இணையில்லாச் சக்தியிலே' தான் பிரமாதமான நம்பிக்கை வைத்திருந்தார் அவர். ஆனால், இன்றோ, அந்த விமானப் படை, அவர் எண்ணும் காரியங்களைச் சாதிக்க முடியாது தவிக்கிறது. நேச தேச விமானங்கள் போகும் ரேட்டை அவற்றால் சமாளிக்க முடியவில்லை.

வரப் போகும் மாதத்திலே சில முக்ய சம்பவங்கள் நடைபெறலாம். யூக்ரேன் பிரதேசத்திலே பனிக் கட்டி உருகி, எங்கும் வெள்ளக் காடாகலாம். வட ஆப்பிரிக்காவிலே இப்பொழுது தொந்தரவு கொடுத்து வரும் மோசமான மழையும், புயலும் மட்டுப் படலாம். மாரெத் லைனை ரோமல் காக்க முடியுமா என்பது அப்பொழுது தெரியும். சென்ற வாரம், பத்து இருபது மைல் முன்னேறிய ஜெர்மானியப் படையை, அமெரிக்கப் படைகள் ட்யூனிஸியாவில் என்ன செய்யும் என்பது வெளியாகும். கஸபிளாங்காவில் நேச தேசத் தலைவர்கள் போட்ட திட்டத்திலே, சில அம்சங்கள் க்ரியாம்சைக்கு எடுத்துக் கொள்ளப்படும். போகப் போக இனி ஸ்வாரஸ்யம் தான்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம்௵ பிப்ரவரி௴ 26௳, வெள்ளிக்கிழமை [இதழ் 9



## ஸ்டாலின்கிராடுக்கு வீர வாள் பரிசு

மாட்சிமை தங்கிய நமது மன்னர் பிரான் ஸ்டாலின்கிராட் நகருக்கு ஒரு வீர வாளைப் பரிசளிப்பதாக முடிவு கட்டி யிருக்கிறார். இது பற்றி சோவியத் மகா சபைத் தலைவரான தோழர் கலினினுக்குக் கீழ்க் கண்டவாறு ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார் :—

"உலக சரித்திரத்திலேயே புதிய சகாப்தம் ஏற்படத் தக்க வாறு, நம் பொது எதிரியை எதிர்த்து, செம் படைகள் வெற்றி கண்டன. இதற்குக் காரணம் செம் படைகளின் வீரத் தன்மையும், அப் படைத் தலைவர்களின் மகத்தான திறமையுந் தான். ஆகவே, நானும் என் பிரஜைகளும், சோவியத் பொது மக்களோடு சேர்ந்து செம் படைக்கும் அதன் தலைவர்களுக்கும் நன்றி செலுத்துகிறோம்."

"ஸ்டாலின்கிராட், எதிரிகளுக்கு விட்டுக் கொடுக்காது எதிர்த்து நின்ற தன் பயனாகத் தான், யுத்தத்தின் போக்கே மாறியது. எதிரிகள் நொறுங்கிப் போகத் தக்கபடி அடி விழுந்தது. நாகரிகத்தையும் எதேச்சையையும் எதிர்த்தவர்களுடைய மனதில் பீதி வேரூன்றியது."

"இது பற்றி நானும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மக்களும் உங்களைப் பெரிதும் மெச்சுகிறோம். ஆகவே, உங்கள் ஸ்டாலின்கிராட் நகருக்கு வழங்கும் பொருட்டு ஒரு கௌரவ வீர வாள் தயார் செய்யும்படிக் கட்டளை யிட்டிருக்கிறேன்."

"இடைவிடாது மகா பலத்தோடு எதிரிகள் தாக்கிக் கொண்டிருந்தும், தளராத தைரியத்தோடு தடுத்து இந்த வீர நகரம் காத்து வந்தது. இது பெரிதும் சந்தோஷிக்கக் கூடியது தான். இதை, இந்தக் கத்தி ஞாபகப் படுத்தும். பிரிட்டிஷ் மக்கள் மட்டு மன்றி, உலகிலுள்ள நாகரிக மக்கள் அனைவரும் உங்களைப் பெரிதும் பாராட்டுகிறார்கள் என்பதற்கு இது ஒரு சின்னமாக இருக்கும்."

# மு ர சொ லி

சென்ற மூன்று மாதங்களாக நடை பெற்ற யுத்தத்தில் 7,000 டாங்கி களேயும், 4,000 விமானங்களேயும், 17,000 பீரங்கிகளேயும் ஜெர்மன் படைகள் இழந்தன.

ஸோவியத் அரசாங்கம் தம் கை யிருப்புப் படைகளே ஓயாது பெருக்கிக் கொண்டே வந்து, மிகவும் பலமடைந்து கொண்டு வருகிறது. காலப் போக்கு ஜெர்மனிக்கு விரோதமா யிருக்கிறது. சென்ற 20 மாதம் நடை பெற்ற யுத்தத்தில் 9,000,000 ஜெர்மன் உத்தியோகஸ்தரையும், படையின ரையும் தகுதி அற்றவர்களாக செம் படையினர் ஆக்கி விட்டார்கள். இவர்களில் 4,000,000 பேர்களுக்கு அதிகமாகவே கொல்லப்பட்டனர்.

கிழக்குப் போர் முனேயில் ருமேனிய படையையும் இத்தாலிய படையையும், ஹங்கேரியப் படையையும், ஸோவியத் படைகள் அடியோடு நொறுக்கி விட்டன.

—ஸ்டாலின்.

*செம் படையின் 25-ம் ஆண்டு விழாவின் போது தன் படையினருக்கு அனுப்பிய செய்தி.*

* * * * *

நான் ரஷ்ய மக்களுக்கு மதிப்பு கொடுக்கின்றேன். ஏனென்ருல், செம் படை அவர்களேக் கொண்டது தான். அதற்கான எல்லாவற்றையும், ரஷ்யப் பொது மக்கள் தான் கொடுத்து உதவுகிருர்கள். இதன் பொருட்டு மகா கடுமையான தியாகங்களும் செய்கிருர்கள். செம் படையினரும் ரஷ்யப் பொது மக்களும் சேர்ந்து, ஹிட்லரை தோற்கடிக்கிருர்கள். ஆகவே, அமெரிக்க மக்களின் நிரந்தரமான நன் மதிப்புக்கும் அவர்கள் பாத்திர மாகிருர்கள்.

—ரூஸ்வெல்ட்.

* * * * *

சென்ற சில வாரங்களாக உங்கள் படைகள் தொடர்ச்சியாக அடைந்த வெற்றிகளேப் பற்றி நான் மட்டில்லாத மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் பெரிய நகரங்களே நீங்கள் வெற்றி கரமாக கைப்பற்றி எதிரி படைகளே அடியோடு அழித்ததி லிருந்து அச்சு கொள்ளேக் கூட்டத்தார் அழிந்து விடும் நாள் நெருங்கி விட்டது என்று தெரிகிறது. மேலும் எதிர்த்து தாக்க வேண்டும் என்று நேச நாட்டினர்கள் போட்ட திட்டம் நிறை வேற்றும் நாளும் சமீபத்து வந்து விட்டது. தங்கள் சிறந்த தலைமையில் உங்களுடைய வீரப் படையினர் போராடியதின் பயனுகத் தான் இந்த மகத்தான வெற்றிகள் கிடைத்தன.

—ஜெனரலாஸிமோ ஷியாங்-கெய்-ஷேக்.

* * * * *

"செம் படைகளின் 25-வது ஆண்டு விழா வாகிய இன்று, அதன் ஒவ்வொரு பகுதிக்கும் தோழர் ஸ்டாலின் சிறந்த படைத் தலைமைக்கும் நாம் நன்றி செலுத்துகிறேம். அவர்களுடைய யுத்த தந்திரம் தலை சிறந்தது. போர் முனேயி லுள்ள அப் படைத் தலைவர்கள் அத் தந்திரங்களே வெகு திறமை யோடு நிறை வேற்றினுர்கள். ஆரம்ப உத்தியோகஸ்தர்களும் மகா வீரத் தோடும் திறமை யோடும் தம் படைகளே நடத்தினர். படையினரோ, எத்தனேக் கஷ்டங்களானுலும் சகித்துக் கொண்டிருக்க நன்ருகப் பழகித் தேர்ந்தவர்கள்."

சோவியத் கொரில்லாப் படைகளின் வீரம் அழியாப் புகழுடையது.

—மிஸ்டர் ஆந்தோனி ஈடன்.

*செம் படையின் 25-வது ஆண்டு விழா, பிப்ரவரி மாதம் 21-ம் தேதி லண்டனில் நடைபெற்ற போது கூறியது.*



## பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| மாட்சிமை தங்கிய 6-ம் ஜார்ஜ் மன்னர் (முகப்புப் படம்) .. .. .. | 1 | செம்படை (தலையங்கம்) .. .. | 4 |
| ஸ்டாலின்கிராடுக்கு வீரவாள் பரிசு .. | 1 | பிரிட்டனுக்கு போல்ஷிவிக் பூச்சாண்டி .. | 5 |
| முரசொலி .. .. .. .. | 2 | ஐந்தாம் படையினர் யார்? .. .. | 8 |
| போர்முனே நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | இந்தியப் படைகளின் போர்த் திறமை .. | 10 |
| | | வாழ்க செஞ்சேனே .. .. .. | 11 |
| | | போன வாரத்திலே .. .. .. | 12 |


# போர் முனே நிகழ்ச்சி விளக்கம்

### ஜெர்மனியின் மதிப்பு குலேகிறது.

*சுவித்சர்லாந்தில் உள்ள "பெர்னர் டாக்வாச்ட்" என்னும் பத்திரிகை கீழ்க் கண்டவாறு எழுதுகிறது :—*

*"செம் படைகள் முன்னேறி வருவதால், ஐரோப்பாவின் தென் கிழக்குப் பகுதியிலுள்ள ஹங்கேரி, ருமேனியா, ஸ்லெவேகியா, பல்கேரியா முதலிய நாடுகளுக்குத் தான் ஆபத்தே யொழிய, மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கல்ல வென்று சொல்லலாம்."*

*கிரீசும், யூகோஸ்லேவியாவும் எவ்வளவு கஷ்டப் பட்டாவது கௌரவத்தை நிலே நாட்ட விரும்புகின்றன; ஆனுல், மற்ற பால்கன் நாடுகள் தம் கௌரவத்தை விற்கவும் துணிந்து ஜெர்மனியோடு குலாவின.*

*இந்த நாடுகள் எல்லாவற்றிற்கும், இனி ஜெர்மனி ஜெயிக்க முடியாது எனனும் எண்ணம் ஏற்பட்டு விட்டதென்று தெரிகிறது. இச் செய்தி அந் நாடுகளின் பொது மக்களுக்குத் தெரிந்தால், தம் அரசாங்கத்தின் மீதே வஞ்சம் தீர்க்கக் கிளம்பி விடுவார்கள் அல்லவா? ருஷ்யப் போர் முனேக்கு அனுப்பப்பட்ட 20 ருமேனிய டிவிஷன்கள், 6 ஹங்கேரிய டிவிஷன்கள், 9 இத்தாலிய டிவிஷன் படைகள் நாசமாயின. இவற்றைப் பற்றி அந்நாடுகளி லுள்ளவர்களுக்கு அந்த அரசாங்கங்கள் எதுவும் தெரிவிக்கவே இல்லே. பொது மக்களேச் சமாதானப் படுத்த வேண்டிய அவசியம் அந்த அரசாங்கங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதன் பயனுக அரசாங்கங்களுக்கும் பொது மக்களுக்கும் மனக் கசப்பு வெகுவாக அதிகப் பட்டுக் கொண்டு வருகிறது.*

*சென்ற ஜனவரி மாதம் 22-ம் தேதி நடைபெற்ற ஒரு விருந்தின் போது* **ஹங்கேரியா முதல் மந்திரி கல்லே, முன்னேய விட அதிகச் சேதம் ஹங்கேரியப் படைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது; ஆனுல் சேதம் எவ்வளவு என்று திட்டமாகத் தெரியவில்லே என்று குறிப்பிட்டார்.**

*இந்த விஷயத்தைப் பற்றி 'பெஸ்டர் லாயிட்' என்னும் ஹங்கேரியப் பத்திரிகை கூறுவதாவது :—*

*"பொய் வதந்திகளேக் கடுமையாகக் கண்டித்துப் பேசியது பற்றி நம் முதன் மந்திரிக்கு நன்றி செலுத்துகிறேம். போர்க் களத்திற்குப் போனவர்களின் உறவினர்களுடைய மனதில் ஒரு வித கலவரத்தை சந்தர்ப்பா சந்தர்ப்பம் தெரியாமல் உண்டாக்குகிறவர்களேத் தக்கபடி தண்டிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். போர்க் களத்தில் நேர்ந்த சம்பவங்களால் நேர் முகமாகப் பாதிக்கப் பட்டவர்களுக்கு முதலாவதாக உதவி செய்யலாம்.* **அவர்களுக்கு வருத்த முண்டாக்கக் கூடிய எந்தச் செய்தியையும் தெரிவிக்காமல், அவர்கள் துயரங்களேச் சாந்தப் படுத்துவோம்."**

*இப்படியே இராணுவ விஷயங்களிலும் கூட உண்மைகளே மறைத்து விடுகிருர்கள். ஆகவே, பொய் வதந்திகள் ஏராளமாகக் கிளம்ப இட முண்டாகிறது.*

*"பெஸ்டர் லாயிட்" என்னும் பத்திரிகைக்கு அதன் இராணுவ நிருபரான வான் மியோர்கா எழுதியனுப்பி யிருந்த செய்தியைக் குறித்து "பெர்னர் டாக்வாச்ட்" என்னும் ரஷ்யாவிற்கு விரோதமான பத்திரிகை எழுதியதாவது :—*

**"இவர் கிழக்குப் போர் முனேயைக் குறித்து உண்மைக்கு மாருக விளக்குகிருர். உண்மையான விவரங்களே, பத்திரிகைகளேப் படிக்கிறவர்கள் உணர்ந்து கொள்ளமாட்டார்கள் என்று அவர் நினேக்கிருர். அது தவறு. தன் அறிக்கையில் ரஷ்ய அறிக்கைகளேப் பற்றி அவர் குறிப்பிடுவதே கிடையாது."**

*நிற்க, தீராப் பசி கொண்ட தம் ஜெர்மன் எஜமானர்களுக்கு உணவுப் பொருள்களேயும், மூலப் பொருட்களேயும், படைகளேயும் ருமேனியா கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமையி லிருக்கிறது. இதன் பயனுகப் பொது மக்களிடையே கலவரமும் பீதியும் உண்டாகி யிருக்கிறது. இதைச் சாந்தப் படுத்த ருமேனிய அரசாங்கம் பெரிதும் முயன்று கொண்டிருக்கிறது. இந்த நிலேயையும் மறைத்துத் தான் சுவிஸ் பத்திரிகைகளும் துருக்கிப் பத்திரிகைகளும் எழுதுகின்றன.*

*"செய்ன்ட் காலிஸ் டெக்ப்ளாட்" என்னும் பத்திரிகை, 3 லட்சம் ருமானியர்கள் போரில் மாண்டது மட்டுமன்றி, 2 ருமானியப் படைத் தலைவர்கள் தற்கொலே செய்து கொண்டார்கள் என்று அறிவித்ததோடு கீழ்க் கண்டவாறு எழுதியது :—*

*"படையைச் சேர்ந்தவர்கள் போராடாதபடி தப்பி ஓடி பல்கேரியாவுக்குள் அநேகர் புகுந்து கொண்டதன் பயனுகத் தான், தோல்வி ஏற்பட்டது. அதே சமயத்தில் யுத்தத்திற்கு விரோதமான பிரசாரம் வெகுவாக நடை பெற்றது. நிப்பர் லேனுக்கு பின்புறம் போய் விடும்படி மார்ஷல் அன்தனிஸ்குவைக் கோரி ஏராளமான துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன. மசிடோனியா, கீரீஸ் ஆகிய நாடுகள் உட்பட பால்கன் நாடுகளில் கொந்தளிப்பாய் இருக்கிறது."*

*ஜெர்மனியின் நிலேமை மோசமாக ஆரம்பித்த பிறகு தான், அதற்கு ஆதரவு கொடுத்த அரசாங்கங்களும் அந் நாட்டு மக்களும் தாம் ஏமாந்து போனதை உணரத் தலேப்பட்டார்கள். இந்த நாடுகளுக்கும் ஜெர்மன் அரசாங்க சபைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைப் பற்றி நாம் ஆராய்ந்தால் தான், இந்த நாடுகளின் நிலேமை எதிர் காலத்தில் எப்படி இருக்கு மென்று ஒருவாறு அனுமானிக்கலாம்.*

### ஹங்கேரியின் தந்திரமான போக்கு.

*டிரியானுன் ஒப்பந்தம் சென்ற மகா யுத்தம் முடிந்த பிறகு ஏற்பட்டது. அப்போது முதல் தாம் இழந்த நாடுகளே மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்பது தான் ஹங்கேரியின் ஆசை. ஜெர்மனியின் விருப்பத்தின் படி நடந்தால் இது பலிக்*

(6-ம் பக்கம் பார்க்க.)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞு பிப்ரவரிமீ 26உ. [இதழ் 9


# செம்படை

செம்படை தோன்றி 25 ஆண்டுகள் ஆகி விட்டன. இந்த இளம் படை ஹிட்லரை மிகச் சிறந்த முறையில் வென்றது. இந்த வெற்றிகளை மறக்கப் பல்லாயிரம் ஆண்டுகள் செல்லும். இதன் வெள்ளி விழா வன்று, மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் மன்னர் பிரான் ஸ்டாலினகிராட் நகருக்கு ஒரு வீர வாள் வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறார். இந்தப் படைகளைப் பாராட்டும் போது, இவை யடைந்த வெற்றிகளால் 'உலக சரித்திரத்திலேயே ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கி விட்டன' வென்று கூறினார். இதை விட எப்படிச் சிறப்பிப்பது? அமெரிக்கத் தலைவரான ரூஸ்வெல்ட், "உலகத்திலே இது வரை கண்டிராதபடி வெற்றி" பெற்றதாக இப்படைகளைப் பெரிதும் பாராட்டுகிறார்.

இப்படையினர் ஒரு பெரிய அற்புதம் செய்து விட்டார்கள் என்று தான் உலக மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள். நாஜிகளின் புலம்பலிலும் அவர்களை அறியாமலேயே இப்படையினரைப் பாராட்டுகிறார்கள். சமீபத்தில் பெர்லினிலிருந்து ஜெர்மன் பிரசார மந்திரி கோப்பல்ஸ் செய்த தோர் பிரசங்கத்தில் **தன் நாட்டிற்குப் பிரமாதமான தோர் ஆபத்து நேரப் போவதாகக் குறிப்பிடுகிறார். இதைத் தடுக்கப் பிரமாதமாக முயற்சிக்க வேண்டுமாம்.**

பதின்மூன்று மாதங்களுக்கு முன்பு ஹிட்லர் என்ன சொன்னார்?

"சோவியத் ரஷ்யா இப்போது (1941) அடிபட்டு அழிந்ததைப் போல, எந்த மகத்தான சாம்ராஜ்யமும் இவ்வளவு கொஞ்ச காலத்தில் இது வரை அழிந்ததே இடையாது. ரஷ்யாவி லிருந்து நமக்கு ஏற்படக் கூடிய ஆபத்தை நாம் தவிர்த்து விட்டோம். ஆகவே, இன்னும் ஒரு ஆயிரம் வருஷத்திற்கு ஐரோப்பாவின் தலை யெழுத்தை நிர்ணயித்து விட்டோம்" 1941-ல் உண்மையிலேயே நிலைமை அப்படியில்லை. இது ஹிட்லர் கட்டிய மனக் கோட்டை தான். சோவியத் படைகள் பலமானவை என்று ஹிட்லருக்குத் தெரியும். ஆனால் அவற்றின் சக்தியை அவர் அப்போது அறிந்து கொள்ள வில்லை. இதுபற்றி சமீபத்தில் பேசிய கோப்பல்ஸ்,

**"மக்கள் மனதால் நினைக்கக் கூட முடியாத அளவிற்கு, இந்த மழை காலத்தில், ரஷ்யா வெற்றி பெற்று உள் புகுந்துவிட்டது," என்று கூறுகிறார்.**

சோவியத் படைகளின் உண்மையான பலத்தை ஒருவரும் அறியவொட்டாதபடி இரகசியமாகவே ஸ்டாலின் வைத்துக் கொண்டிருந்தார். இது பற்றிய உண்மை நிலையை யறியாத போரிஸ் சென்வரின் என்னும் பிரஞ்சு கம்யூனிஸ்ட் ஒருவர் ஸ்டாலினை இது பற்றி எச்சரித்திருக்கிறார்.

## பாதுகாக்கும் படை, தாக்கக் கிளம்பியது

பிப்ரவரி மாதம் 21-ம் தேதி நடைபெற்ற செம்படையின் 25-வது விழாவன்று ஸ்டாலின் விடுத்த செய்தியில், சோவியத் ரஷ்யாவைப் பாதுகாக்கும் பொருட்டுத் தான் செம்படை தோன்றியது என்றும் பிறர் நாடுகளைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக வல்லவென்றும் குறிப்பிடுகிறார். ஆனால் துரோகத் தனமாக ஜெர்மனி ரஷ்யா மீது போர் தொடுத்தபோது தான், பாதுகாப்புப்படை தாக்கும் படையாக மாறியது. ஜெர்மானியர்கள் ரஷ்யாவில் செய்த கொடுமைகளுக்கு ஏற்றவாறு பழிவாங்கத் தலைப்பட்டது. 1942–43-ம் வருஷ மழைகாலத்தில் அதாவது 3 மாதங்களில் மட்டும், 7,000 டாங்கிகளையும், 4,000 போர் விமானங்களையும், 17,000 பீரங்கிகளையும், ரஷ்யப் படைகள் ஜெர்மானியர்களிட மிருந்து கைப்பற்றின. 112 ஜெர்மன் டிவிஷன் படைகள் அடித்து நொறுக்கப் பட்டன. 7 லட்சம் ஜெர்மானியர்கள் கொல்லப் பட்டனர். 3 லட்சம் பேர்கள் கைதியாயினர். யுத்தம் ஆரம்பமானதி லிருந்து 90 லட்சம் ஜெர்மானியர்களைத் தகுதியற்றவர்களாக்கி விட்டது செம்படை. போர் முனைகளில் 40 லட்சம் ஜெர்மானியர்கள் மடிந்தார்கள்.

பிரமிக்கத் தக்க இந்த வெற்றிகள் ரஷ்யாவிற்கு எப்படிக் கிடைத்தன? தந்திரத்தால் தான். ஒரே காலத்தில் ஜெர்மானியர்களின் பல அரண்களையும் தாக்கி, ஆங்காங்குள்ள அவர்களுடைய இருப்புப் படைகளை அங்கங்கேயே இருந்து மடியும்படி செய்து விட்டார்கள். இதன் பயனாக, ஜெர்மனி அரண்கள் மட்டுமன்றி, போக்கு வரவிற்கு வசதியான பல ரயில்வே ஜங்ஷன்களும் ரஷ்யர்கள் வசப்பட்டன. அன்றியும் பல முக்கியமான நகரங்களையும் ஜெர்மானியர்களிடமிருந்து மீட்டு விட்டார்கள். பாக்கி யிருப்பது ஓரெல் நகரந்தான். அங்கேயும் இப்போது மகா உக்கிரமாகப் போராடுகிறார்கள். இவ்வாறாகப் பல சிறந்த வெற்றிகள் கிடைத்தன.

நாஜிசத்தையும் பாசிஸத்தையும் அடியோடு அழிப்பதற்கு அடி கோலிய செம்படையினரின் வீரத்தை ஊழி காலம் வரை, உலகம், புகழ்ந்து நன்றி செலுத்தும்.



# பிரிட்டனுக்கு 'போல்ஷிவிக்' பூச்சாண்டி!

## ஜெர்மனியின் மித்திர பேதச் சூழ்ச்சி

### 'கொள்கைப் போராட்டம்' கோதுமைப் போராட்டமாக மாறி, மீண்டும் 'கொள்கைப் போராட்ட' மாக மாறிய விநோதம்!

அச்சு நாட்டுப் பிரசார சிருஷ்டி கர்த்தாவாகிய **டாக்டர் கோப்பல்ஸ்** பர்லினில் ஒரு அருமையான பிரசங்கம் செய்திருக்கிறார். அதை அருமையான பிரசங்கம் என்றும் சொல்லலாம், ஆச்சரியமான பிரசங்கம் என்றுங் கூடச் சொல்லலாம். இதென்ன விநோதம்? **கோப்பல்சினுடைய** பிரசங்கத்துக்கு இவ்வளவு புகழ் மாலையா? என்று கேட்கலாம். வேறென்ன செய்வது? பொய்ப் பிரசார சிருஷ்டி கர்த்தா, வெளிப் படையாக உண்மை பேச ஆரம்பித்தால் அவரைப் பாராட்டத் தான் வேண்டியிருக்கிறது. அவருடைய வாய் மொழிகளாலேயே ஒரு உண்மை வெளியாகிறது. பொதுவாக அச்சு வானொலி நிலையங்கள் செய்து வரும் பிரசாரம் உண்மையல்ல என்பதையும், சிறப்பாக சென்ற சில நாட்களாகச் செய்து வந்த பிரசாரத்துக்கும் உண்மைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதையும் அவருடைய பிரசங்கமே காட்டிவிட்டது.

அவருடைய பிரசங்கத்தின் மற்றொரு விசேஷம் என்ன வென்றால், எந்த நாஜித் (ஜெர்மன்) தலைவரும், இது வரையில் ரஷ்யாவின் மாபெரும் வெற்றிகளின் காரணமாக ஜெர்மனியின் நிலைமை மிக மிக மோசமாய் விட்டது என்பதை ஜெர்மன் மக்களுக்கு இவ்வளவு விளக்கமாகவும், உருக்கமாகவும் கூறியதே இல்லை என்பது தான்.

## டாக்டர் கோப்பல்சின் ஒப்பாரி.

**டாக்டர் கோப்பல்ஸ்** இரண்டு மணி நேரம் பேசினாராம். என்ன பேசினார்?

"ஜெர்மனி மிகுந்த ஆபத்தில் இருக்கிறது. மகத்தான முயற்சி செய்தால் தான் பிரம்மாண்டமான அபாயத்திலிருந்து தப்புவோம். ரஷ்யாவினுடைய முன்னேற்றத்தின் உக்கிரம் மனித நினைவுக்கும் அப்பால் போய் விட்டது. நான் உலக மக்களுக்கு மூன்று விஷயங்களை வற்புறுத்த விரும்புகிறேன். முதலாவது, ஜெர்மனியின் ராணுவ பல மில்லாவிட்டால், ஐரோப்பா முழுவதும் போல்ஷிவிக் கொள்கைக்கு இரையாய் விடும்; இரண்டாவது, ஐரோப்பாவை ரஷ்யப் பொது வுடமைக் கொள்கையிலிருந்து தப்புவிக்க வேண்டுமானால், ஜெர்மன் ராணுவ பலமும், ஜெர்மன் மக்களும் தான் அதைச் செய்ய முடியும்; மூன்றாவது, உலகத்தையே பொது வுடமைக் கொள்கையாக ஆக்க வேண்டும் என்பது ரஷ்யாவினுடைய நோக்கம். ஆகையால் மேற்கு உலகத்துக்கே ஒரு பெருந் தீங்காக விளங்கும் ரஷ்யப் பொது வுடமைக் கொள்கையை அழிக்க வேண்டும்; இதற்காக ரஷ்யாவைத் தோற்கடிக்க வேண்டும்."

இது தான் டாக்டர் **கோப்பல்சின்** இரண்டு மணி நேர ஒப்பாரிப் பிரசங்கத்தின் சுருக்கம். ரஷ்யாவில் உள்ள நிலைமையைப் பற்றி அலட்சியமாகவும், அனுவசியமாகவும், அகங்காரத்துடனும் பேசியது போய், இப்போது அபாய கூக் குரல் வெளிப் படையாகப் போடும் நிலைமைக்கு வந்து விட்டதல்லவா? இது அச்சுப் பிரசார சரித்திரத்திலேயே ஒரு பெரிய விசேஷம்.

## 1941-ல் ஹிட்லர் கூறியது.

ஒரு வருஷம் மூன்று மாதங்களுக்கு முன், அதாவது 1941-ம் ஞு நவம்பர்மீ 8உ, **ஹிட்லர்** கூறியதையும் இப்போது **கோப்பல்ஸ்** கூறுவதையும் கவனித்தால் இந்த விசேஷத்தின் அருமை தெரிய வரும். அப்பேது **ஹிட்லர்** என்ன கூறினார்?

"ரஷ்ய சாம்ராஜ்யம் உடைத்துத் தூளாக்கப் பட்டு நாசமாய்க் கிடக்கிறது. இவ்வளவு குறுகிய காலத்தில் அவ்வளவு பெரிய சாம்ராஜ்யம் அழிந்து போனது சரித்திரத்தில் கிடையாது. ரஷ்யாவினால் உண்டாகக் கூடிய அபாயம் முன்னமேயே தடுத்து விலக்கப் பட்டது என்று நாம் கூறலாம். அடுத்த ஆயிரம் வருஷங்களுக்கு ஐரோப்பாவின் எதிர் காலம் நல்ல நிலைமையை அடைந்து விட்டது,"

என்று ஜெர்மன் தலைவர் கூறினார். ஆனால் அவருடைய அருமைப் பிரசார மந்திரி, ஒரு வருஷத்துக்கு முன் அழிந்து போன ரஷ்யாவினால் மேற்கு உலகத்துக்கு நேரக் கூடிய அபாயத்தைப் பற்றி இப்பொழுது எச்சரிக்கை செய்கிறார்!

இந்த எச்சரிக்கையின் நோக்க மென்ன? சுருக்கமாகக் கூறு மிடத்து, போல்ஷிவிக் பூச்சாண்டியைக் காட்டி பிரிட்டனை பயப் படுத்த வேண்டு மென்பது தான்.

பிப்ரவரிமீ 11-ந் தேதி **பர்லின்** வானொலி நிலையம் தன்னுடைய ஆங்கிலச் செய்தி விமரிசன ஒலி பரப்பில், தன்னுடைய உள்ளக் கருத்தைக் காட்டி யிருக்கிறது.

"ஜெர்மனி போல்ஷிவிசக் கொள்கையை எதிர்த்துத் தான் ஒரு பரிசுத்தப் போர் நடத்திக் கொண்டு வருகிற தென்றும், ஜெர்மனி தோல்வி யடைந்தால், ஐரோப்பாவும், இங்கிலாந்தும் போல்ஷிவிக் சமுத்திரத்தில் முழுகி விட வேண்டி நேருமென்றும்,"

**பர்லின்** கூறுகிறது.

## ஜெர்மனியின் பழய சால்வை.

ரஷ்யாவில் நடக்கும் ஜெர்மனியினுடைய "கொள்கைப்" போராட்டம் எத் தன்மையானது என்பதைப் பற்றி, **டாக்டர் கோப்பல்ஸ்** இதற்கு முன் என்ன கூறினார்? சென்ற வருஷம் அக்டோபர் 18-ந் தேதி, அவர், "வீணை கொள்கை லட்சியங்களுக்காக, சென்ற முறைகளில் நாம் போராடினோம். ஆனால் இப்போது நிலக்கரி, இரும்பு, பெட்ரோல், இவை எல்லாவற்றையும் விட, கோதுமை இவைகளுக்காகத் தான் நாம் போராடுகிறோம்" என்று கூறினார்.

கொள்கைப் போராட்டம் கோதுமைப் போராட்டமாக மாறிவிட்டது; இப்போது மீண்டும் பழைய சால்வையை அது அணிந்து கொள்ள முயலுகிறது!

சரி, இங்கிலாந்தைப் பற்றி, ஜெர்மனி கவலையும் சிரத்தையும் கொண்டிருக்கிறதே—அது எப்படிப் பட்டது என்பதைக் கவனிக்கலாம். சமீபத்தில் ஜெர்மனியில் நடந்த அறுவடை விழாக் கொண்டாட்டத்தில் பேசும் போது, ஹிட்லரின் வலது கை போன்ற மார்ஷல் **கோயரிங்** என்ன சொன்னார்?

"இன்றையத் தினம், ஸ்டாலின்கிராடில் மாபெரும் போர் நடக்கிறது. ஜெர்மன் விமானப் படை ஸ்டாலின்கிராடை முடித்து விட்ட பிறகு, தன்னுடைய முழு பலத்தையும் இங்கிலாந்தின் மேல் திருப்பும்."

என்று வீரம் பேசினார். ஸ்டாலின்கிராடில் ஜெர்மானியர் தான் முடிந்து விட்டார்கள்; கோதுமைக்கும் எண்ணெய்க்கும் வந்தவர்கள் **ஸ்டாலின்கிராட்** மாத்திர மல்ல, தெற்கு போர் முனையிலுள்ள மகத்தான மாரி கால யுத்த தளங்களாகிய **ராஸ்டாப், வாரஷிலோவ்கிராட், கார்காப், பியெல்கோராட், குர்ஸ்க்** முதலிய வற்றையும் இழந்து ஓடிக் கொண்டே யிருக்கிறார்கள்; சீக்கிரத்தில் **ஓரல்** என்ற தளத்தையும் இழப்பார்கள். ஆனால் இவர்கள் ஓடுகிற ஓட்டம் இங்கிலாந்தை தாக்குவதற்கு அல்ல; தாங்கள் தப்பிக் கொள்வதற்காக!

## ஸ்டாலினும், காசபிளாங்கா மகா நாடும்.

இங்கிலாந்தை போல்ஷிவிசத்தி லிருந்து தப்புவிக்கும் பகல் வேஷம் போடும் ஜெர்மனி, பிப்ரவரி 13-ம் தேதி, ஒரு குறும்பான பொய் கூறி யிருக்கிறது. **காசபிளாங்கா**வில் நடந்த மகா நாட்டுக்கு **ஸ்டாலின்** போகாததற்கு காரணம் ஒன்று கண்டு பிடித்திருக்கிறது. அவர் உலகம் முழுவதும் போல்ஷிவிக் கொள்கையைப் பரப்பத் தீர்மானித் திருப்பதாலும், **காசபிளாங்கா**வில் செய்யப்பட்ட ஏற்பாட்டுக்குத் தான் நேரில் கட்டுப்பட விரும்பாததாலும் தான் அவர் போகவில்லை என்று **பர்லின்** கூறுகிறது. **ஸ்டாலின்** போகாததற்குக் காரணம், ஸ்டாலின்கிராடிலும், இதர யுத்த முனைகளிலும், ஜெர்மன் படைகளை தோற்கடிக்கும் திட்டத்தைத் தானே நேரில் அப்போது நடத்தி வந்ததால் தான், என்பது, உலகறிந்த விஷயம்.

(9-ம் பக்கம் பார்க்க.)

(3-ம் பக்கம்—தொடர்ச்சி)

கும் என்று ஹங்கேரிக்குத் தோன்றியது. ஆகவே, ஸெக்கோஸ்லவேக்கியாவின் ஒரு பகுதியைத் தமக்குக் கொடுத்து விட வேண்டுமென்று முதலில் கோரினார்கள். அதன்படியே ஸெக்கோஸ்லவேக்கியாவின் வட பகுதியில் கொஞ்ச நாட்டை ஹங்கேரிக்கு கொடுத்து விட வேண்டுமென்று ஜெர்மானியர் தீர்ப்பளித்தார்கள். இந்தத் தீர்ப்புக்கு ஈடாக ஜெர்மனியருக்கு விரோதமாகத் தாம் எதுவும் செய்வதில்லை என்று ஹங்கேரி 1939-ம் வருஷம் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

அதன் பிறகு ஜெர்மனிக்குப் போதுமான படையுதவி செய்யாமல் போனாலும், ஜெர்மானி வென்று கொண்டு வந்த பகுதிகளில் சிலவற்றை, தான் சேர்த்துக் கொண்டு வந்தது. ஜெர்மனி போலந்தைத் தாக்கிய போது ருதீனியாவையும் தன் நாட்டோடு சேர்த்துக் கொள்ளும்படி ஜெர்மனி அனுமானித்தது. அடுத்தபடியாக ருமேனியாவுக்கு டான்சல்வேனியாவை மீண்டும் கொடுத்து விட வேண்டும் என்று வற்புறுத்தியது. யுத்த தந்திர நிலைமையை ஒட்டி ருமேனியாவின் மத்தியப் பகுதி வரையிலும் ஹங்கேரிய நாடுகள் பரவி இருப்பது, ஜெர்மனிக்கு மிகவும் சாதகம். இது சம்பந்தமாக ஹங்கேரியும் ருமேனியாவும் பேசி வந்த சமரசப் பேச்சுகள் முறிந்து போகவே, ஜெர்மனி குறுக்கிட்டு 1940-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 2-வது வியன்னா தீர்ப்பு ஒன்றைச் செய்தது. இதன்படி தமக்குச் சாதகமாக ஹங்கேரிக்கு டான்சலவேனியாவை ஒப்புவித்தது. இதற்கு ஈடாக ஹங்கேரி அரசாங்கம் 3 நாடுகள் ஒப்பந்தத்திற்கு இணங்கிக் கையெழுத் திட்டது. இது வரை அடுத்தடுத்து ஹங்கேரி தன் எண்ணங்களை நிறைவேற்றி வந்தது. இந்த அரசாங்கத்தின் ஆட்ட பாட்டங்களுக்கு எல்லாம் அந்நாட்டுப் பொது மக்களும் ஆதரவு அளித்து வந்தார்கள். ஏனென்றால், சென்ற பத்து வருஷங்களாக பிற்போக்கான பிரசாரமே இவர்களிடையே நடைபெற்றது. ஆகவே எதிர் காலத்தில் ஜெர்மானியர்களுக்குச் சரியானபடி ஈடுபாடுகள் கொடுக்க நேரிடும் என்று அக் காலத்தில் அவர்களுக்கு தெரியாது.

**ஹங்கேரியின் ஆசை**

**அடுத்த பலி யூகோஸ்லேவியா.** இந்த நாட்டு அரசாங்கம் அச்சு நாடுகளுக்கு சாதகமா யிருந்தது. எனவே, பொது ஜனங்கள் கலகம் செய்தனர். ஆகையால் இவர்களுடைய தந்திரம் இங்கே பலிக்க வில்லை. பலித்திருக்குமானால் இங்கேயும் ஜெர்மானியர்கள் ஒரு தீர்ப்புக் கொடுத்திருப்பார்கள். இதற்கிடையில், லாப மடைய வேண்டி, போராட வேண்டிய அவசியம் ஹங்கேரிக்கும் ஏற்பட்டது. ஜெர்மன் படையும், ஹங்கேரி படையும் சேர்ந்து யூகோஸ்லேவேகியாவைத் தாக்கின. இது வரை சந்தர்ப்பத்திற்கு தகுந்தபடி நடந்து வந்த ஹங்கேரி, ஜெர்மனி சொற்படி கொடுமையான முறைகளை கையாள வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளானது. பால்கன் நாடுகளை அதாவது யூக்கோஸ்லேவேக்கியாவையும், கிரீஸையும், ஜெர்மனி கைப்பற்றிக் கொண்டு தாம் நெடு நாட்களாக எதிர் பார்த்திருந்தபடி, ரஷ்யாவைத் தாக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. இதற்கு ஹங்கேரியின் ராணுவ உதவியும் ஜெர்மனிக்கு உண்டு. இந்த உதவி அளிக்க ஹங்கேரி மறுக்க முடியாது. ஏனென்றால் நாடு பிடிக்க வேண்டும் என்ற ஆசை ஹங்கேரிக்கு வெகு அதிகம். **அதன் பயனாக அருகிலுள்ள நாடுகளெல்லாம் ஹங்கேரிக்கு விரோத மாயின.** என்றாலும், ஜெர்மனியின் பலமான ஆதரவு தனக்கு உண்டு என்னும் நிம்மதி ஹங்கேரிக்கு உண்டு. இருந்தாலும் போதுமா? உள் நாட்டில் பலமானதோர் சேனை அமைந்திருக்க வேண்டியது ஹங்கேரிக்கு அவசிய மாயிற்று. இப்போது ஜெர்மனிக்கு தோல்வி ஏற்படுகிறது என்று தெரிந்த உடனே, அயல் நாட்டார்கள் தன் மீது படை எடுத்து வந்து விடுவார்கள் என்ற பயம் ஹங்கேரிக்கு வெகு அதிகமாய் விட்டது. இது வரை 130,000 பேர்களைக் கொண்ட ஒன்பது டிவிஷன் படைகளைத் தான் ரஷ்ய போர் முனைக்கு ஹங்கேரி அனுப்பி இருக்கிறது. அன்றியும் குரோஷியா, ஹர்பியாவிலும் நடைபெறும் கொரில்லா யுத்தத்தை அடக்க அநேக டிவிஷன் படைகளை அங்கே அனுப்பி இருக்கிறது. ருமேனியா 20 டிவிஷன் படைகளை அனுப்பி இருக்க, ஹங்கேரி ஒன்பது டிவிஷன் படைகளைத் தான் அனுப்பி இருக்கிறது. என்றாலும் அச்சு நாடுகளின் கூட்டாளி நாடுகளைப் போல, ஹங்கேரியின் விளை பொருள்கள் எல்லாவற்றையும் இலவசமாக ஜெர்மானிக்கு அனுப்பிவிட வேண்டி யிருக்கிறது. இப்போது ஹங்கேரியி லுள்ள பிற்போக்கான அரசாங்கம் ஜெர்மனியரின் கைக்குள் ளிருக்கிறது. **தம் விருப்பப்படி ஹங்கேரி முதல் மந்திரி கல்லேயும் அவருடைய தோழர்களும் நடக்கா விட்டால் இம்ரெடி என்னும் நாஜிகளின் தோழரை அவருக்கு பதிலாக நியமிப்பதாகச் சொல்லி பய முறுத்துகிறார்கள்.** ஜெர்மனி பலவீன மடைந்து அதற்கேற்றாற் போல் கல்லேயின் செல்வாக்கும் குறையுமானால், சமூக ஜனநாயகக் கக்ஷியும், விவசாய கக்ஷியும் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டு மந்திரி சபையை அமைக்கலாம். அதனால் ஜெர்மனிக்கும் இப்போது உள்ள அரசாங்கத்துக்கும் இடைஞ்சல்கள் நேரலாம்.

**ருமேனியா**—ருமேனியாவைப்பற்றி ஜெர்மானியர்கள் கருத்து என்ன வென்பதைப் பற்றி புகாரெஸ்ட்டிலுள்ள ஜெர்மன் அரசாங்கப் பிரதிநிதி கில்லிங்ஸ் கூறியதாவது :—

"ருமேனிய விவசாயிகளைக் கணக்கில் சேர்ப்பதில்லை. படித்தவர்களில் 100-க்கு 60 பேர்கள் பிரிட்டிஷாரிடம் ஆசையுள்ளவர்கள்; 100-க்கு 30 பேர்கள் எதைப் பற்றியும் கவலை கொள்ளாதவர்கள். மீதியுள்ள 100-க்கு 10 பேர்கள் பிற்போக்கியர்கள். இவர் தங்களை 'நாஷனல் சோஷியாலிஸ்ட்' என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் தான் நம்மோடு விவகாரங்கள் நடத்துகிறவர்கள்."

ஜெர்மானியரின் நிழலில் மார்ஷல் அந்தனெஸ்கு ருமேனிய மந்திரியானார். அது குழப்பமான காலம். எனவே, அந்த மந்திரி சபையைப் பொது ஜனங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால் ஜெர்மானியர்கள் வெற்றி ஓங்கத் தலைப்பட்டது. ருமேனியாவோடு ரஷ்யாவின் பெரும் பகுதிகளைச் சேர்த்துக் கொண்டு பெரிய சாம்ராஜ்யத்தையே ஸ்தாபித்து விடலாமென்று மனப்பால் குடித்தார்கள். இவர்கள் ஆசையில் மண் விழுந்தது. ஜெர்மனி இப்போது மகத்தான தோல்விகள் அடைகிறது. ஆகவே, மார்ஷெல் அந்தனெஸ்குவின் செல்வாக்கும் மங்கத் தலைப்பட்டு விட்டது.

**பய முறுத்தி பணம் பறிப்பவர்கள்**

பயமுறுத்திப் பணம் பறிப்பதில் ஜெர்மானியர்கள் கைதேர்ந்தவர்கள். முதலில் ருமேனியாவைச் சேர்ந்திருந்தது டிரான்சில்வேனியா. இதை ஹங்கேரிக்கு ஜெர்மானியர்கள் பிடுங்கிக் கொடுத்தார்கள். ஆகவே தான் ஹங்கேரியும் ஜெர்மானியரோடு சேர நேர்ந்தது. இப்போது ருமேனிய படைகள் ஏராளமாக ஜெர்மானியோடு சேர்ந்து ரஷ்யாவிற்கு விரோதமாகப் போராடின. இதற்கு ஈடாக, மீண்டும் டிரன்சில்வேனியாவை ருமேனியாவிற்குத் தருவதாக ஜெர்மனி வாக்களித்திருக்கிறது. அன்றியும், ஜெர்மனி இந்த யுத்தத்தில் தோற்றால், ருமேனியா அதோ கதியாகிவிட நேரும் என்றும் ஜெர்மானியர்கள் பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள். இது போலவே ஹங்கேரியையும் பல்கேரியாவையும் பயமுறுத்தும் பொருட்டு, ஜெர்மன படைகளை அந்நாடுகளில் வைத்திருக்கிறார்கள்; பொருளாதாரத் துறைகளிலும் கை வைக்கிறார்கள், இத்தாலியிலுள்ளது போல, அரசியல் துறையிலும், இராணுவத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் ஆலோசனை கூறுவதற்கு ஆலோசகர்களை நியமித்திருக்கிறார்கள். இவை மட்டுமன்றி. அந்நாட்டு அரசாங்கங்களின் போக்கைத் தணிக்கை செய்யும்படி **'அயன் கார்டு'களை** நியமித்திருக்கிறார்கள்.

ஒரு வாரத்திற்கு முன்பு, அந்தனெஸ்குவையும் அவருடைய இராணுவ ஆலோசகர்களையும் பொருளாதார ஆலோசகர்களையும் ஹிட்லர் பிரமாத ஆர்ப்பாட்டங்களோடு தருவித்தார். அப்போது ஹிட்லருடைய கோரிக்கைகளுக்கு அவர் இணங்காதிருக்க முடியாது. அன்றியும் அச்சு நாடுகளில் ஒன்றாக ருமேனியாவும் சேர்ந்திருந்தது. ஆகையால், ருமேனியாவை ஹிட்லர் பகைத்துக் கொண்டால், பால்கனில் தனக்குள்ள ஆதிக்கம் குலைந்து விடுமென்று, அவருக்குத் தெரியும்.



சென்ற ஜனவரி மாதம் 30-ம் தேதி கோயரிங் செய்த ஒரு பிரசங்கத்தில், ரஷ்யாவில் போராடும் ஜெர்மன் படைகளில், காலியாகும் ஸ்தானங்களுக்கு ஜெர்மானியர்களைத் தான் நியமிக்க வேண்டுமேயொழிய மற்ற அச்சு நாட்டவர்களை நியமிக்கக் கூடாது என்று குறிப்பிட்டார்.

அச்சு நாடுகளின் பிடியிலிருந்து ருமேனியா விடுபடுமா? அப்படி விடுபட முயற்சித்தால், ஜெர்மனியின் கோபத்தை எதிர்த்து நிற்க முடியுமா? அந்தனெஸ்குவின் ஆட்சி ஜெர்மனியைச் சார்ந்ததாகத் தான் இருக்கும். என்றாலும் ஆதிக்கமுள்ள ஜனநாயகக் கோஷ்டிகளும் அந் நாட்டி லிருக்கின்றன. எந்தச் சமயத்தில் எப்படித் தாக்க வேண்டுமென்று அவற்றிற்குத் தெரியும்.

**பல்கேரியா.** 1936-ம் வருஷம் பல்கேரிய அரசர் போரிஸ், ஹிட்லரையும் முஸோலினியையும் கண்டார். அது முதல் கிரீஸிலிருந்தும் யூகோஸ்லேவியாவிலிருந்தும் பல பாகங்களைத் தம் நாட்டோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்னும் ஆசை கொண்டார். அது முதல் பல்கேரிய வியாபாரத்தில் ஜெர்மானியர்கள் புகுந்தார்கள். யுத்த ஆரம்ப காலத்திலே, பல்கேரிய வியாபாரம் முழுதும் ஜெர்மானியர்கள் கைவச மிருந்தது.

பிறகு 1939-ம் வருஷம் பிலோவ் மந்திரி சபை ஏற்பட்டது. இதற்கு அரசியல் அநாம தேயங்களைத் தான் போரிஸ் அரசர் நியமித்தார். தான் கூறுகிறபடி அச்சபை நடக்கும் பொருட்டுத் தான் அப்படிச் செய்தார். இந்த யுத்தத்தில் ஜெர்மனி தான் வெற்றி பெறும் என்று நம்பி, தன் நாட்டிற்கும் ஜெர்மன் படைகள் வரும்படி அனுமதித்தார். ஹிட்லர் கொடுத்த கிரீஸையும் யூகோஸ்லேவையும் ஏற்றுக் கொண்டார். பிரிட்டன் மீதும் அமெரிக்கா மீதும் போர் தொடுத்தார். என்றாலும் ரஷ்யா மீது அவர் போர் தொடுக்கவில்லை. ஏனென்றால், ரஷ்யா மீது போர் தொடுத்தாரானால், அவருடைய பதவிக்கே ஆபத் தேற்பட்டுவிடும். காரணம் பல்கேரிய விவசாயிகள் ரஷ்யர்களுக்கு ஆதரவாயிருக்கிறார்கள். இந்தக் காரணத்தைக் கொண்டு தான், பல்கேரியப் படைகள் துருக்கிய எல்லைப் புரத்திலும், திரேஷிய கடற்கரையிலும், இருந்து காவல் புரிய வேண்டுமென்று விட்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. இப்போது ரஷ்யாவுக்கு வெற்றி மேல் வெற்றிகள் கிடைக்கவே, அந் நாட்டு மக்கள், ரஷ்யர்களிடம் தமக்குள்ள ஆசையை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டார்கள். இது பொறுக்கவில்லை ஜெர்மன் ரகசியப் போலீசாருக்கு. இப்படிப் பட்டவர்களை யெல்லாம் சிறைப் படுத்தும்படி போரிஸ் மன்னரை, நிர்ப்பந்தப் படுத்தினர். அரசாங்கத்தில் அதிக பாஸிஸ்டுகளை நியமிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். இதன் பயனாக போரிசுக்குத் தன் நாட்டிலிருந்த செல்வாக்குக் குறைய தலைப்பட்டது.

**பத்திரிகைகளின் துர் பிரசாரம்.**

பல்கேரியாவிலுள்ள பத்திரிகைகள் ஜெர்மன் ஆதிக்கத்திற் குட்பட்டவை. ஆகவே, இந்த யுத்தத்தில் பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் வெற்றி கிடைக்குமானால், பல்கேரியாவில் மகா பயங்கரமான நிலைமை ஏற்பட்டு விடுமென்று அவை எழுதுகின்றன. அன்றியும் கிரீஸைக் காட்டிக் கொடுத்தது பல்கேரியா தான். இது போல எல்லா அயல் நாடுகளின் விரோதத்தையும் அது தேடிக் கொண்டது. இத்தனையும் ஜெர்மனியின் உதவி தனக்கிருக்கிற தென்ற அகம்பாவத்தால் தான். இப்போது ஜெர்மனியும் இத்தாலியும் தோற்றால், அயல் நாடுகளெல்லாம் தன் மீது பழி தீர்த்துக் கொள்ளும் என்னும் அச்சம் வெகு அதிகமாயிருக்கிறது.

ஜெர்மனிக்கும் அதோடு நேசங் கொண்டுள்ள பால்கன் நாடுகளுக்கு முள்ள தொடர்பு இப்படியாக இருக்கிறது. ஜெர்மனியை வெல்ல யாராலும் முடியாதென்று மூன்று சர்வாதிகாரிகள் நம்பினார்கள். அதன் உதவியால் இலவசமாகத் தன் பேராசையைப் பூர்த்தி செய்து கொள்ளலாமென்றும் நினைத்தார்கள். இவர்களை இந்த நிலையில் வைத்திருக்கும் பொருட்டு ஜெர்மானியர்கள்,

1. இவர்களுக்கு ஏராளமாகக் கொள்ளைப் பொருட்கள் கிடைக்குமென்று ஆசை வார்த்தை கூறி யிருந்தார்கள்;
2. ஒருவர் மீது மற்றொருவருக்குப் பொறாமையுண்டாகச் செய்து அவர்களைப் பிரித்து வைத்தார்கள்;
3. ஜெர்மனி தோற்றுப் போனால், மற்ற எல்லா நாடுகளும் சேர்ந்து இந் நாடுகள் மீது பழி வாங்கி விடுமென்னும் பயத்தை யுண்டாக்கி, தன் சொற்படி நடக்கும்படி செய்து கொண்டார்கள்.

ஜெர்மன் படைகளின் உதவியால், இவர்கள் பதவி வகிக்கும் வரையில் தான் இப்படி ஏமாற்றக் கூடும்.

**கையாலாகாத அரசாங்கம்.**

ஒரு கொள்ளைத் தலைவன் தன் ஆட்களுக்குப் பங்கு கொடுக்கா விட்டால் என்னாகும்? ஜெர்மனியின் பலம் குறையக் குறைய அதன பொறுப்புக்கள்மிகவும் அதிகப்படும். ருமேனிய எண்ணெய், உணவுப் பொருள்கள், உள் நாட்டுப் படைகள், முதலியவை இன்னும் அதிகமாகத் தேவைப்படும். கிரீஸ், செர்பியா, க்ரோஷியா, அல்பேனியா ஆகிய நாடுகளில் கலகக்காரர்கள் கிளம்பி விடுவார்கள். இங்குள்ள அரசாங்கமோ கையாலாகாதது. பொது ஜனங்களின் தேவைகள் பூர்த்தியாகா விட்டால், அவர்களுக்கு அரசாங்கத்தின் மீது கோபம் வரத் தான் செய்யும். இந்தச் சமயத்தில் அரசாங்கத்திற்கு ஆள் பலமும் பொருள் பலமும் குறைந்து விட்டது.

பால்கன் தீபகற்பம் கருங்கடலுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடையே இருக்கிறது. கிழக்குப் போர் முனையில் ஜெர்மன் படைகளுக்கு ஒரு வலது எல்லையா யிருக்கிறது. ரஷ்யா மீது பாய்வதற்கு முன்னதாகவே, ஹிட்லர் பால்கன் நாடுகளை வளைத்து கெட்டிப் படுத்திக் கொண்டார். நேச நாட்டுப் படைகள் முதலில் பாய்வது எந்த நாட்டின் மீது? இத்தாலி மீதா? தென் பிரான்சு மீதா? அல்லது, வட பிரான்சு, நார்வே முதலிய பகுதிகளின் மீதா? இது பற்றி கசப்ளாங்கா மகா நாட்டில் தான் முடிவு கட்டியிருப்பார்கள். இந்த முடிவு ஒரு இரகசியம். ஜெர்மானியர்கள் இப்போது ஏட்ரியாடிக் ஏஜியன் கடல்களில் உள்ள துறை முகங்களை அதி வேகமாகச் செப்பனிடுவதைப் பார்த்தால், இது வரை ஜெர்மனியின் கிடங்காக இருந்த பால்கன் நாடுகள், இப்போது எப்படி வரண்டு போகின்றன வென்பது விளங்கும்.

# ஐந்தாம் படையினர் யார்?

## அறியாமலேயே யுத்த முயற்சிக்குத் தடை செய்பவர்கள்

### வேலை செய்யாத குமாஸ்தா ; அரசாங்க சம்பளம் பெற்று யுத்த விரோதப் பிரசாரம் செய்பவர்

### எல்லோருக்கும் பகிரங்கக் கடிதம்

**அன்புள்ளவர்களே !**

**இதை நீங்கள் படிக்க வேண்டியதற்கு 4 காரணங்கள் உண்டு—**

1. இப்போது யுத்தம் நடை பெறுகிறது. உங்களையும், உங்களைச் சார்ந்தவர்களையும் அது பலவகைகளி லும் பாதிக்கிறது. ஐரோப்பிய நாடுகளிலுள்ள பொது ஜனங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை விட, நீங்கள் அதிகமாகக் கஷ்டப்படுகிறீர்கள்.

2. இந்த யுத்தத்தில் நீங்கள் ஒதுங்கி நின்று 'எனக்கு இதில் சம்பந்தம் இல்லை' என்று சொல்ல முடியாது. சம்பந்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நிரந்தரமான சமாதானம் கூடிய விரைவில் ஏற்பட வேண்டுமானால், உங்கள் கடமைகளை நீங்கள் கட்டாயம் செய்து தான் தீர வேண்டும்.

3. பழைய காலத்தைப் போல 'நான் படையில் சேர்ந்திருக்க வில்லை. நான் நகரவாசிகளில் ஒருவன் தான்; ஆகவே, எனக்கு ஆபத்தில்லை' என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. பாதுகாப்பு இல்லாத பெண்கள் மீதும், குழந்தைகள் மீதும் வெடிகுண்டு எறியும் எதிரி, உங்களையும், உங்கள் இனத்தாரையும் என்னையும் கூடத் தாக்குவான் என்று உங்களுக்கு நன்ருக தெரியும்.

4. தேசீயப் போர் முனையாரோ, தகவல் மந்திரி காரியாலயத்தாரோ இந்தத் துண்டுப் பிரசுரத்தைத் தயாரிக்க வில்லை. அல்லது யுத்தப் பிரசாரம் செய்யும் பொருட்டு தொகைகள் பெறும் கூட்டத்தாராலும் எழுதப்பட வில்லை. இதை ஏன் நான் சொல்லுகிறேன் என்ருல், அரசாங்கத்தார் உண்மையை வெளியிட்ட போதிலும், நம் பொது மக்களில் அநேகர், அதை நம்புவதில்லை. நான் எல்லா வகைகளிலும் உங்களை ஒத்திருப்பவன் ; உள்ள கஷ்டங்களை உங்களைப் போலவே உணருகிறவன் ; இந்த மகா கொடுஞ் செயல்கள் எல்லாம் ஒழிய வேண்டு மென்று விரும்புகிறவன். ஆகவே, என் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கீழே தெரிவிக்கிறேன் ; பார்த்து உணர்ந்து கொள்ளுங்கள்.

இப்போது யுத்தம் நடைபெறுகிறது. இந்தியாவும் அதில் பரிபூரணமாக ஈடுபட்டிருக்கிறது. இந்த யுத்தத்திற்கு முன், அரசியல் வாதங்கள் மறைந்து விட்டன. இப்போது ஒவ்வொரு இந்தியனும் கேட்பது என்ன?" இந்தியாவின் எல்லைப் புறத்திலிருந்து எவ்வளவு தூரத்துக் கப்பால் ஜப்பானியரை விரட்டி விட்டோம்? இந்திய நகரங்களின் மீது ஜப்பானியர்கள் இனி விமானங்களைக் கொண்டு தாக்கமாட்டார்கள் என்ற உணர்ச்சியும் நம்பிக்கையும் ஏற்பட இன்னும் எவ்வளவு காலம் செல்லும்? இந்த யுத்தம் முடிய எவ்வளவு காலம் செல்லும்? விலைவாசிகள் உயரும்படி அனுமதிப்பது ஏன்? உணவுப் பொருள்கள் விற்பனையை தகுந்தபடி கட்டுப்படுத்த அரசாங்கம் ஏன் முயலவில்லை? பழைய மாதிரியான நிலைமை மீண்டும் இனி எப்பொழுது உண்டாகும்? விரைவில் சமாதானத்தை ஏன் அவர்கள் நிலைநாட்ட வில்லை?

இந்தக் கவலைகளுக்கும் தொல்லைகளுக்கும் நீங்கள் தான் பெரும்பாலும் காரணம் என்று சொன்ஞல், என் மீது கோபித்துக் கொள்வீர்கள். ஆனல் உங்களைச் சுற்றி உள்ளவர்களின் செய்கைகளைச் சற்று நிதானித்து பாருங்கள். அவர்கள் ராஜ விஸ்வாசமுள்ளவர்களாகத் தோற்றலாம் ; நேர்மையானவர்களாகவும், அச்சு நாட்டுக்கு விரோத மனப்பான்மையுள்ளவர்களாகவும் தோற்றலாம். இவையெல்லாம் விரும்பத் தக்க குணங்கள் தான். அவர்கள் எதை வெறுக்கின்ருர்களோ, அதே குற்றத்தை அவர்களே செய்கின்ருர்கள். இந்த உண்மையை அவர்களுக்கு எடுத்துச் சொன்ஞல், கோபம் வந்து விடும்.

அன்று நம்மோடு ரயிலில் வந்த ஒருவர், தான் ஒரு டின் மண்ணெண்ணெய்க்கு அரசாங்கத்தார் விதித்த விலையை விட, அதிகமாக 1 ரூபாய் கொடுத்து வாங்கியதாகக் கூறியது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அப்போது அருகிலிருந்தவர் அந்த எண்ணெயை விற்ற வியாபாரியின் விலாசத்தை கேட்டு, ஒரு டின் எண்ணெய்க்கு ரூ. 2 வேண்டுமானலும் அதிகமாகக் கொடுத்துத் தானும் சில டின் எண்ணெய் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டதும் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இது எதைக் காட்டுகிறது?

ஒரு ஆபீசில் ஒரு குமாஸ்தா, தனக்கு கண் பார்வை மங்கி இருப்பதாகவோ அல்லது ரத்தாசயம் பலவீனமாக இருப்பதாகவோ அல்லது வேறு ஏதோ குறைபாடு இருப்பதாகவோ சொல்லி, இந்தக் குறைபாடு தனக்கு இல்லையானல், தான் கட்டாயம் சிப்பாயாக சேர்ந்து இருக்க கூடுமென்று தன் அதிகாரிகளிடம் அவர் சொல்லுவது வழக்கம். ஆனல் ஆபீசில் சற்று கடுமையான வேலையுள்ள நாட்களில், அவர் ஆபீசுக்கு வருவதில்லை. மறுநாள் தான் நோயாய் இருப்பதாக ஒரு டாக்டரிடம் சர்டிபிகேட் வாங்கி 10 நாள் லீவுக்கு மனுப் போட்டுவிடுகிருர், இவர் இரண்டாவது பேர்வழி.

இனி, ஒரு வியாபாரி. இவரிடமிருந்து சர்க்கரையும் மண் எண்ணெயும் மகா விரைவில் விற்றுப் போகின்றன. சரக்கு வந்து இறங்கிய மறுநாளே செலவாகி விடுகிறது. அவருக்குப் பல சிநேகிதர்கள் உண்டு ; அவர்களை எல்லாம் திருப்திப் படுத்துவது அவருடைய கடமை தான். தன் குடும்பத்தாரையும் திருப்திப்படுத்த வேண்டும். ஒவ்வொருவருக்கும் இன்ன அளவுக்குத் தான் சரக்கு விற்க வேண்டும் என்னும் நியதி கிடையாது. ஆகவே, தன் விருப்பம் போல் விற்பது பற்றி அவரை யார் தடை செய்ய முடியும்? இவர் மூன்ருவது பேர்வழி.

அடுத்தாற்போல் நமது நண்பர் "திடீர் புழுகர்" இருக்கிருர். அவருக்கு "நம்பத் தகுந்த இடங்களிலிருந்து" செய்திகள் கிடைக்கும். அவற்றை விநியோகிப்பதில் அவருக்கு வெகு ஆசை. அன்றையத் தினம் பந்தயக் குதிரை வாய்விட்டு தன்னிடம் கூறியதாகச் சில செய்திகளை கொண்டு வந்து கூறிஞர். அப்படிப்பட்டவர் யுத்தச் செய்திகளை விட்டா வைப்பார். சென்ற அக்டோபர் மாதமே ஜெர்மானியர்கள் ஸ்டாலின்கிராடிற்குள் புகுந்து கைப்பற்றிக் கொண்டார்கள் என்று சொன்ஞர் ! சாலமன் தீவுகளுக்கு அப்பால் அமெரிக்கன் கப்பல் படைகளை ஜப்பானியர்கள் அடியோடு அழித்து விட்டார்கள் என்று கூறிஞர் ! சாதாரணமாக அரசாங்க அறிக்கைகளின் மூலம் வெளிவரும் செய்திகளைத் தான் நீங்களும் நானும் நம்புவது வழக்கம். ஆனல் கல்கத்தாவில் ஜப்பானிய விமானங்கள் குண்டுகளை எறிந்த போது நேர்ந்த சேதத்தை குறித்து அவர் சொன்ன வர்ணனைக்களைக்கேட்ட யார் தான் அவரை நம்பாதிருக்க முடியும்? ஆனல் அப்போது என் மைத்துனர் ஒருவர் கல்கத்தாவிலிருந்து என் விருந்தினராக வந்தார். அங்கே அவர் நேரில் கண்டவற்றை என்னிடம் கூறிஞர். அவர் வாய் மொழியை நான் கேட்டிரா விட்டால் நமது நண்பரின் சரக்குகளை நம்பித் தான் இருப்பேன். இவர் நாலாவது பேர்வழி.

நமது நண்பர் பக்தர் உண்மையானவர். அவரிடத்தில் நமக்கு மதிப்பு உண்டு. அவருடைய சொல்லும் செயலும் ஒன்று போல் இருக்கும். தன் அரசியல் கட்சியின் தீர்மானப்படி அவர் நடப்பது வழக்



கம். நாம் நமது வயிற்றுப்பாட்டை பார்ப்பதற்கு தான் பொழுது இருக்கிறம்த ஒழிய, அரசியலில் பங்கு கொள்ள அவகாச மில்லை. நமது பக்தர் ஒரு இராணுவத்தில் சிவிலியன் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டார். அவர் கருத்து மாறிவிட்டது என்று நான் அப்போது நினைத்தேன். ஆனல் அப்படி இல்லை. இந்த யுத்தத்தில் இந்தியா கலந்து கொள்வது சரியல்ல வென்பது தான் இன்னும் அவருடைய கருத்து. இதைத் தன் சொந்த நண்பர்களிடம் கூறுகிருர். நாள்தோறும் ஆபீசுக்கு போகிருர். தனக்காகவும் தன் போன்றோர்களுக்காகவும் போராடும்படி மற்ற இந்தியர்களைத் தூண்டி அதன் பொருட்டு பெரும் தொகையைச் சம்பளமாக பெறுவது பற்றி அவர் கொஞ்சம் கூட வெட்கப்படுவது இல்லை. இப்படிப் பட்டவர் தன் கருத்துக்களை வெளியிடாது இருப்பது நல்லதல்லவா? இவர் 5-வது பேர்வழி.

மற்ருெரு பேர் வழி இருக்கிருர். இவருக்கு என்னமோ பிரிட்டிஷார் என்ருலே மனதுக்குப் பிடிப்பதில்லை. இந்த ஒரு காரணத்துக்காக, அச்சு நாடுகள் ஜெயிக்கவேண்டும் என்றும், நேச நாடுகள் தோற்கவேண்டும் என்றும் மனதார நினைக்கிருர். டோக்கியோ ரேடியோவோ, பர்லின் ரேடியோவோ, தெரிவிக்கும் விஷயங்களை வேத வாக்குகளாக மதிக்கிருர். ஆனல் லண்டன் ரேடியோவோ டில்லி ரேடியோவோ கூறும் செய்திகளைப் பொய் கலந்த செய்திகள் என்று கூறுகிருர். இவருடைய செய்கை பெண்ஜாதிமீது கோபித்துக்கொண்டு மைத்துனனை கடித்தவன் செயலை ஒத்திருக்கிறது. இவர் 6-வது பேர்வழி.

கடைசியாக இன்னெருவரைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். இவர் சமய சந்தர்ப்பம் இல்லாமல் எல்லா இளைஞர்களும் படையில் சேர வேண்டும் என்று கூரை மீது இருந்து கூவுவர். அச்சு நாடுகள் அழிந்தால் தான் உலகத்துக்கு நன்மை உண்டு என்று மனதார நம்புகிறவர். ஆனல் அவருடைய பிள்ளைகள் ஒருவராவது, நெருங்கிய பந்துக்களின் பிள்ளைகளில் ஒருவராவது படையில் சேர்ந்து வெளி நாடுகளுக்குப் போகவில்லை. இவர் 7-வது பேர்வழி.

இவர்களை 5-ம் படையினர் என்று சொன்ஞல் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள். என் மீது வீண் பழி சுமத்துவீர்கள். இவர்களுடைய செயல்களால் விரைவில் வெற்றி ஏற்படுவதற்குப் பதிலாக, உள் நாட்டுப் போர் முனை வேலைத் தடைபடும். ஏதேச்சையாக உள்ள ஒருவர் தன் விருப்பப்படி எதைப் பற்றியும் எப்படி வேண்டு மானலும் நினைக்கலாம். அவருக்குப் பேச்சுச் சுதந்திரமும் ஒரு அளவுக்கு உண்டு. ஆனல் நினைத்தபடி எல்லாம் பேசுவது என்பது சிறப்புத் தருவது ஆகாது. அவர் கூறும் சில வார்த்தைகள் உண்மையாக இருந்தாலும், தேவை இல்லாதவையாக இருக்கலாம். தன் வார்த்தைகளால் பொது மக்களிடையே பீதி ஏற்படுமா என்பது பற்றி யோசித்து அளவோடு பேச வேண்டும்.

முன் கூறியவர்கள் தான் ஐந்தாம் படையினர். இவர்கள் செயலால் யுத்த முயற்சி பெரிதும் தடைப் படும். பாலங்களை இடிப்பவர்களும் தண்டவாளங்களைப் பெயர்த்து எறிகிறவர்களும் தான் ஐந்தாம் படையினர் என்று முடிவு கட்டி விடுவதற்கு இல்லை. ஏனென்ருல் சில மூடர்களும் காலிகளும் கூட இப்படிச் செய்யலாம். அவர்களுடைய செயலால் எதிரிக்கு எந்த விதமான நன்மையும் கிடையாது. ஆனல் முன் கூறிய ஏழு வகைப் பேர்வழிகளும் எதிரிக்கு உதவி செய்தவர்களாவார்கள்.

---

(5-ம் பக்கம்—தொடர்ச்சி)

போல்ஷிவிக் கொள்கையைப் பரப்புவதைப் பற்றி ரஷ்யாவினுடைய எண்ண மென்ன? இதைப் பற்றி ஜெர்மனி செய்து வரும் பிரசாரம் முழுப் பொய் என்பதை "**பிராவ்தா**" என்ற ரஷ்ய மக்கள் மதிப்பும், ஸ்டாலின் அரசாங்கப் பொறுப்பும் பெற்ற பத்திரிகை விளக்கி யிருக்கிறது.

> "ஐரோப்பாவின் மேல் போல்ஷிவிக் கொள்கையை வற்புறுத்தி நிலை நிறுத்த ரஷ்யா முயற்சி செய்யாது"

என்று அப்பத்திரிகை வாக்குறுதியளித்திருக்கிறது. இந்த வாக்குறுதியை ஐரோப்பிய மக்கள் அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷ் மக்களின் மாபெரும் பத்திரிகை, "**லண்டன் டைம்ஸ்**" கூறியிருக்கிறது. ஜெர்மன் மிரட்டலுக்கு பிரிட்டன் கொஞ்சங் கூட பயப்பட வில்லை. "பனங் காட்டு நரியா வெறும் சல சலப்புக்கு அஞ்சும்"?

### வடக்கு ஆப்பிரிக்காவுக்கு அமெரிக்கத் தலைவர்.

டாக்டர் **கோப்பல்ஸ்** பிரசார இலாக்காக்காரர்கள் பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் அபிப்பிராய பேதம் உண்டாக்க முயன்றதோடு நின்று விடவில்லை. பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் சச்சரவு மூட்ட முயன்ருர்கள். பிப்ரவரி 12-ந் தேதி, ஜெனரல் ஐசன் ஹவர் என்ற அமெரிக்க ராணுவத் தலைவர் வடக்கு ஆப்பிரிக்காவில் பிரதம ராணுவத் தலைவராக ஏற்படுத்தப்பட்டதைப் பற்றி, **பர்லின்** குறிப்பிட்டிருக்கிறது ஜெர்மன் மொழியில் செய்யப்பட்ட செய்தி ஒலிப்பரப்பில்,

> "ரூஸ்வெல்ட்டுடைய உத்திரவுகள் தான் நிறைவேற்றப் படுகின்றனவே ஒழிய, பிரிட்டனுக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. சண்டை போடுவதெல்லாம் பிரிட்டிஷார்கள், ஆனல் பெருமை யடைவதெல்லாம் அமெரிக்கர்கள்."

என்று பர்லின் ஏளனம் செய்கிறது. அதன் பின், ஆங்கிலப் பேச்சு ஒலிப்பரப்பில்,

> "நேச நாட்டுக் கப்பல்களில் 100-க்கு 60 அமெரிக்கக் கப்பல்கள், வடக்கு ஆப்பிரிக்க பிரதேசத்திலும், ஆஸ்டிரேலியா பிரதேசத்திலும், பிரிட்டன் தன்னுடைய வலிமையையும் ஆதிக்கத்தையும் இழந்து விட்டது. தன்னுடைய உயிர்ப் பலமாகிய கடல் வலிமையை அமெரிக்காவுக்கு அர்ப்பணம் செய்து விட்டது. ஆகாயத்திலும் அமெரிக்காகள் அதிகமான விமான பலம் பெற்று வருகிருர்கள். 3½ வருஷ யுத்தத்திற்குப் பிறகு, பிரிட்டன் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சாம்ராஜ்யத்திற்கு ஆளாய் விட்டது."

என்று ஒரு வியாக்கியானம் செய்கிறது. பிப்ரவரி 12-ந் தேதி, **பர்லின்** தன்னுடைய இந்துஸ்தானி செய்தி ஒலிப்பரப்பில்,

> "ஆஸ்டிரேலியா கொஞ்சங் கொஞ்சமாக அமெரிக்காவினுடைய ஆதிக்கத்தின் கீழ் போய் கொண்டிருக்கிறது,"

என்று கூறுகிறது.

### பயன் படாச் சூழ்ச்சி

ஆனல் பிரிட்டனும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும், அமெரிக்காவும், அச்சுப் பிரசாரகர்களின் மித்திர பேத சூழ்ச்சியில் அகப்படப் போவதில்லை. இந்த சூழ்ச்சி புதிதானதல்ல ; எத்தனையோ முறை இதற்குமுன் கையாண்டு பயன்படாமற் போன சூழ்ச்சியே ஒழிய வேறல்ல.

நேச நாடுகளெல்லாம் தங்களுக்குள் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசமே யில்லாமல் நடந்து வருகின்றன என்ற விஷயம், மிஸ்டர் **சர்ச்சில்**, பிரசிடெண்ட் **ரூஸ்வெல்ட்** முதலிய தலைவர்களுடைய பிரசங்கங்களில் அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 11-ந் தேதியில் காமன்ஸ் சபையில் பேசிய மிஸ்டர் **சர்ச்சில்** நேச நாடுகளின் ஏகோபித்த ஒற்றுமைப் போர்த் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது காசபிளாங்கா மகாநாட்டு முடிவுகளைப் பற்றி கூறிஞர்.

> "நாங்கள் ஒரு முடிவான முயற்சித் திட்டத்தை வகுத்திருக்கிருேம். அடுத்த 9 மாதங்களுக்குள் அத் திட்டம் எங்களாலியன்ற அளவு நிறை வேற்றப்படும்."

என்று அவர் வற்புறுத்திஞர். பிப்ரவரி 12-ந் தேதியில் பேசிய பிரசிடெண்ட **ரூஸ்வெல்டும்**,

> "பெர்லின், ரோம், டோக்கியோ வீதிகளில் நேச நாட்டுத் துருப்புகள் அணி வகுத்துச் செல்லும் வரை, நாஙகள் இந்த யுத்தத்தை தொடர்ந்து நடத்துவோம்."

என்று கூறிஞர்.

மித்திர பேதப் பிரசாரம் சென்ற இரண்டு வாரங்களாக மும்முரமாக நடந்ததற்கு காரணம், பல போர் முனைகளில் நேச நாட்டினா வெற்றி பெற்று வருவது தான். "சேர்ந்து வாழ்வதல்லவோ சிறந்த வலிமை"; ஆகையினால அந்த வலிமையைக் கொஞ்சம் சிதைத்துக் கலைத்து விட்டால் நமக்கு அனுகூலம்— என்ற எண்ணத்தில அச்சு நாட்டு நிலையங்கள் அடுக்கடுக்காகப் பொய்யுரைகள் கூறி வருகின்றன. இல்லாததை உண்டு என்று கூறி வந்து கொண்டேயிருந்தால், கொஞ்சமாவது சந்தேகம் ஏற்படாதா என்பது தான் நோக்கம்.

[—சென்னை அகில இந்திய வானெலி நிலையத்திலிருந்து பிப்ரவரி 20-ந்தேதி ஒலிபரப்பப்பட்ட ஒரு பேச்சு.]

# இந்தியப் படைகளின் போர்த் திறமை

## ஜெனரல் ஹார்ட்லியின் பாராட்டு

"டுனீஷியாவில் எதிரிகளோடு போராடும் பொருட்டு மேலும் இந்தியப் படைகள் போக வேண்டுமா அல்லவா என்பது பற்றி இனித்தான் முடிவு கட்ட வேண்டும். இந்தியப் படைகளைக் கொண்ட 4, 5-வது படைகளும் 3-வது இந்திய மோட்டார் பட்டாளமும், மற்ற பட்டாளங்களும் வட ஆப்பிரிக்க போரில் மிகச் சிறந்த முறையில் போராடின. அது பற்றி இந்தியாவும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும், நேச தேசங்களும் கூட, அவற்றிற்கு மிகவும் நன்றி செலுத்த வேண்டியிருக்கிறது" என்று டிபுடி பிரதம படைத் தலைவர் ஜெனரல் சர் ஆலன் ஹார்ட்லி இந்தியா அரசாங்க சபையில் கூறினர்.

மேலும் அவர் கூறியதாவது:—சமீபத்தில் யுத்த நிலைமையில் ஏற்பட்ட திடீர் மாறுதல்களைக் குறித்து நான் எதுவும் சொல்லப் போவதில்லை. வடக்கே லெனின்கிராடிலிருந்து தெற்கே ஸ்டாலின்கிராட், காக்கசஸ் வரையிலும் ரஷயர்கள், ஒப்பு உயர்வு இல்லாத வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆப்பிரிக்காவில் எல் அலமீனிலிருந்து டுனீஷியா வரையிலும் 8-ம் படை சிறந்த வெற்றி பெற்றிருக்கிறது. இவை இரண்டுக்கும் இடையே உள்ள தூரம் ரஷ்ய போர் முனையின் நீளத்திற்குச் சமானமாகும். பிரெஞ்சு வட ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் படைகளும், அமெரிக்கப் படைகளும் இறங்கின. தென் மேற்கு பஸிபிக் கடல்களில் அமெரிக்கப் படைகளும் ஆஸ்திரேலியப் படைகளும் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் சிறந்த வெற்றிகள் பெற்றன. இவை எல்லாம் நமக்கு ஒரு புதிய ஊக்கத்தை உண்டாக்கி இருக்கின்றன. அன்றியும் பர்மாவிலும், சயாமிலும், சீனாவிலும் நம் எதிரிகளை பிரிட்டிஷ் விமானப் படையும், அமெரிக்க விமானப் படையும் அதிகமாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன.

முதலில், அமெரிக்கத் தலைவரும், பிரிட்டிஷ் முதல் மந்திரியும் தம் படைத் தலைவர்களுடன் கஸபிளாங்காவில் சந்தித்தார்கள். பிறகு கெய்ரோவில் ஒரு மகா நாடு நடைபெற்றது. அதன் பிறகு, துருக்கியிலும், இந்தியாவிலும் சுங்கிங்கிலும் சம்பாஷணைகள் நடைபெற்றன. இவற்றிலிருந்து ஒரு உண்மை தெளிவாகத் தெரிகின்றது. **நேச நாடுகள் எதிரியைத் தாக்க வேண்டும் என்னும் முயற்சியில் ஈடுபட்டு விட்டார்கள் என்பதைத் தான் இது குறிக்கிறது.** இதற்கு முன் நடைபெற்ற யுத்தங்களில், இப்போது ஈடுபட்டு இருப்பது போல, இந்தியப் படைகள் ஒரு போதும் ஈடுபட்டதில்லை. இனியும் ஈடுபடப் போவதில்லை. வட ஆப்பிரிக்காவில இத்தாலியர் ஆதிக்கத்தையும் ஜெர்மன் எதிர்ப்பையும தடுக்க ஓயாமல், எகிப்து, சூடான், எர்ட்டிரியா, அபிஸீனியா, சிரனைகா முதலிய இடங்களில் மிகக் கடுமையாக இரண்டு வருஷ காலங்கள் போராடியும், இந்தியப் படைகளுக்கு அதிகச் சேதம் ஏற்பட வில்லை.

### ஒப்புயர்வற்ற இந்தியப் படை

சென்ற அக்டோபர் மாதம் மான்ட்காமெரி எதிரிகளைத் தாக்க புறப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்னதாக 4-வது 5-வது இந்திய டிவிஷன்களுக்கு கொஞ்சம் ஓய்வு கிடைத்தது. ஆனால் 5-வது இந்தியக் காலாட் படை ரிவைசாத் சரடின் மேல் இருந்து கொண்டு சென்ற ஜூன், ஜூலை மாதங்களில் ரோமல் முன்னேற்றத்தைத் தடுத்துக் கொண்டிருந்தன. இந்தப் படை இதற்கு முன் போராடிய அளவிற்கு வேறெந்தப் படையும் போராட வில்லை என்று சொல்லலாம். **நமது 4-வது இந்திய படை 51-வது ஹைலெண்டு டிவிஷனுக்கு உதவியாக எல் அலமீனைத் தாக்கப் போன போது, எதிரியின் அரண்களை கிழித்துக் கொண்டு உட்புகுந்தது. இது கண்ட இத்தாலிய படைகளும், ஜெர்மன் படைகளும் மலைத்து விட்டன. 5-வது** இந்தியப் பட்டாளம் சென்ற நவம்பர் மாதம் **3-ம்** தேதி இரவு எதிரியின் அரண்களில் 5 மைல் தூரம் புகுந்து தமக்கு அதிகச் சேதம் இல்லாமல் எதிரிகளில் அநேகரைக் கைதிகளாக பிடித்து வந்தனர். சென்ற அக்டோபர் மாதம் 23-ம் தேதி முதல் 29-ம் தேதிக்குள் மேலப் பாலைவனத்தில் நடந்த யுத்தத்தில இந்தியர்கள் 5 பேர் மாண்டனர். 51 பேர் காயம் பட்டனர். 21 பேர் காணமற் போயினர்.

### எதிரிப் படைகள் ஏராளமாகக் கைதியாயின

ஓட்ட மெடுக்கும் ரோமலின் படைகளை விரட்டிக் கொண்டு ஜெனரல் மான்டகாமெரியின் படைகள் வெகு வேகமாகத் தொடர்ந்தன. அப்போது இந்தியப் படைகள் ஏராளமான எதிரிப் படைகளைக் கைதி செய்தன. அன்றியும் எதிரிப் படைகள் தாம் ஓடும் போது விட்டு விட்டுப் போன ஏராளமான பொருள்களையும் கைப்பற்றின. திரிபோலிக்கு எதிரியை விரட்டிச் கொண்டு போன இந்த படைகளுக்கு, ஏராளமான சப்ளைகள் காலாகாலத்தில் அனுப்பிய பெருமை சப்ளை பட்டாளத்திற்கும், போக்கு வரவுப் பட்டாளத்திற்கும் உரியது. அன்றியும் மெர்ஸா மத்ரூ, டோப்ரூக், திரிபோலி முதலிய இடங்களில் எதிரிகளால் கைதி செய்யப்பட்டுக் கடுமையாக வேலை செய்து கொண்டிருந்த நூற்றுக் கணக்கான இந்திய சிப்பாய்களையும், கூர்க்க சிப்பாய்களையும் இந்தப் படை மீட்டது. அச்சமயம் எதிரிகளுக்கு வந்து கொண்டிருந்த சப்ளைகளை இந்த இரண்டு படைகளும் நாசம் செய்வதில் ஈடுபட்டிருந்தன. சென்ற இரண்டரை வருஷங்களாக மத்திய கிழக்குப் போர் முனையில் நடைபெற்ற யுத்தத்தில் 4-வது டிவிஷன் படையில் 15,000 பேர்கள் தான் சேதமாயினர். ஆனால் 1 லக்ஷம் இத்தாலிய ஜெர்மன் படையினரை கைதி யாக்கினர். ஏராளமான எதிரி டாங்கிகளையும், விமானங்களையும் கைப்பற்றினர்.

நிற்க, பார்ஸீகத்திலும், ஈராக்கிலும் இந்தியப் படைகள் பெரிதும் உழைத்துக் கொண்டிருக் கின்றன. இந்த படைகளும் பாரஸீக வளைகுடாவிற்கு மேற்கேயும், வடக்கேயும் இருப்பதால், சோவியத் படைகளுக்கு ஊக்கமும், நம் எதிரிகளுக்கு அச்சமும் உண்டாகின்றன. அல்லாமலும் பாரஸீக வளைகுடாவிலிருந்து ரஷ்யாவிற்கு சப்ளைகள் அனுப்புவதற்கு ஒரு ரயில்வே லைனைக் கட்டி முடித்தது இந்தியப் படைகள் தான்.

இந்தியாவின் கீழ்ப் பாகத்தில் சிந்த்வின் பள்ளத் தாக்கிலிருந்து அரக்கான் கடற்கரை வரை நமது படைகள் நன்றாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. இங்கே காடுகள் அதிகம். எனவே போக்கு வரவு மிகவும் கஷ்டம். சப்ளைகள் அனுப்புவதும் இயலாத காரியம். என்றாலும் நம் படைகள் முன்னேறிப் போய் பர்மாவுக்குள் நுழைந்து விட்டன. எதிரிகள் வசப்பட்ட நாடுகளுக்குள்ளும் நம் கொரில்லா படைகளும் ரோந்துப் படைகளும் புகுந்து விட்டன. மலேயாவிலும், பர்மாவிலும் நடைபெற்ற யுத்தத்தின் அனுபவங்கள் இந்தப் போரில் நம் படைகளுக்கு பெரிதும் உதவியா யிருக்கின்றன. ஜப்பானியர்களைப் போலவே இந்தியர்களும் காட்டு யுத்தத்தில் திறமை சாலிகள் தான என்பதை இந்தியப் படையினர் உண்மையாக்கி விட்டார்கள்.

### கடற் படைப் பாதுகாப்பு

இந்தியாவில் கட்டப் பட்ட கப்பல்கள் இந்திய கடற்கரை வியாபாரத்தைப் பாதுகாக்கின்றன. இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கட்டப் பட்ட கப்பல்கள், அங்கிருந்து கொண்டு வரப்படும் வியாபாரக் கப்பல்களுக்கு காவல் கப்பல்களாக வந்து சேருகின்றன. அரக்கான் கடற்கரையில் நம் கப்பற் படை மிகச் சிறந்த முறையில் வேலை செய்து கொண்டு இருக்கிறது. ஒரு ஜப்பானியக் கப்பலை தாக்கி மூழ்கடித்ததில் 50 ஜப்பானியர் கடலுக்குள் மூழ்கி மடிந்தார்கள். போராடும் விமானங்களிலும் பாமர் விமானங்களிலும் நம் விமானப் படையினருக்கு நல்ல பயிற்சி அளிக்கப் படுகிறது. பிரிட்டிஷ் விமானப் படையோடும், அமெரிக்க விமானப் படையோடும் இந்திய விமானிகளும் சேர்ந்து கூடிய விரைவில் பர்மியப் போர் முனையில் போராடுவார்கள்.



# வாழ்க செஞ்சேனை?

ஸ்பெயின் தேசத்திலும், தென் அமெரிக்காவிலும் எருதுப் போர் என்று ஒன்று நடப்பதுண்டு, வட்ட வடிவமான பெரிய தோர் மைதானம். அதைச் சுற்றி உயர்ந்த சுவர். அந்தச் சுவர் அகலமாகவும் இருக்கும். அதன் மீது பல தட்டுக்கள் இருக்கும். அத்தட்டுக்களிலே பல்லாயிரக் கணக்கானவர்கள் வந்து உட்காருவார்கள். கீழே உள்ள மைதானத்திலே, அழகாக உடை உடுத்த ஒருவன் வந்து நிற்பான். அவன் கையிலே ஒரு சிவப்புத் துணி இருக்கும். ஆளைப் பார்த்தால் சாதாரணமாகத் தானிருப்பான். கொஞ்சம் பொறுத்துப் பார்த்தாலல்லவா அவன் சமர்த்து தெரியும்!

திடீரென அந்த மைதானத்திற்குள், மகா கோபத்துடன், சண்டைக் கென்றே வளர்ந்து வந்ததோர் எருது பாய்ந்து வந்து நிற்கும். உடனே, உள்ளே நிற்பவன் தன் கையில் உள்ள சிவப்புத் துணியை இரு கைகளாலும் அகல விரித்து அதன் முன்னே கொண்டு காட்டுவான். அந்தச் சிவப்பு நிறத்தைப் பார்த்ததுமே, அந்தக் காளை பிரமாதமாக மிரளும். ஏதோ அலக்ஷியமாகச் சுற்றி வருவது போல் தானிருக்கும் அது. ஆனால் அதனுடைய கடைக் கண் எல்லாம், அந்தச் சிவப்புத் துணி மீது தானிருக்கும். சட்டென சீறிக்கொண்டே, அந்த மனிதனைப் பார்த்து அதி வேகமாகப் பாயும் அந்தக் காளை. அந்த மனிதன் வெகு லாவகமாக ஒரு புறம் ஒதுங்கி விடுவான்.

திரும்பவும் சிவப்புத் துணியை அக்காளையின் முன் காட்டுவான். அது அருகில் வரும் பொழுது, அந்தத் துணியை அதன் முகத்தின் மீது படும்படி செய்வான் இவ்வாறு அடிக்கடி பாய்வதால் அந்தக் காளை களைத்துப் போகும். அந்த மனிதன் சமயம் பார்த்து தன் கையிலுள்ள துணியால் அக்காளையின் முகத்தை நன்றாக மூடிக் கட்டி விடுவான். அப்பால் அதன் முதுகின் மீதேறி விடுவான். அது அவனை உலுக்கித் தள்ள, தன்னாலான வரை முயலும். ஆனாலும் அவன் அதனை விடாப் பிடியாகப் பிடித்து; தனனிடமுள்ள கத்தியால் ஓங்கி ஒரு குத்து குத்தி, கீழே வீழ்த்தி விடுவான். வானமே இடிந்து விழுந்து விடுவது போன்ற கரகோஷம் அங்கு கூடியிருப்போரிடை யிருந்து எழும். அது வரை அவர்கள் எல்லாம் மூச்சைக் கையில் பிடித்துக் கொண்டு, என்ன ஆகுமோ, ஏதாகுமோ என்று இந்த எருதுப் போரைக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். சில சமயங்களில், அந்தக் காளையிடம் அந்த மனுஷன் எக்கச் சக்கமாகச் சிக்கிக் கொள்ளுவான். தனது கூரிய கொம்புகளால் அந்த எருது அவனை உயரத் தூக்கி எறிந்து விடும் அப்புறம் அந்த ஆள் பிழைப்பது கஷ்டம் தான். இப்படிப்பட்ட பயங்கரமான சண்டையில் ஒரு மனிதன் தன்னிடமுள்ள சிவப்புத் துணியின் உதவியாலே, அந்த முரட்டு எருதை மிரளச் செய்து, அடித்து வீழ்த்துகிறான் என்றால், அது மிக ஆச்சரியமல்லவா? அதைப் போற்றும லிருக்கலாமா? எருதுப் போரில் ஜெயித்தவன் என்றால் எவ்வளவு மரியாதைகள் கிடைக்கும் தெரியுமா?

இது ஸ்பானிய மக்கள் வாழும் இடங்களில் நடக்கும் வேடிக்கை ஆனால், இப்பொழுது ருஷ்யா எனும் நாட்டிலே, இது வரை உலகமே கண்டிராததோர் பிரமாதமான எருதுப் போர் நடந்து கொண்டிருக்கிறது. இது வேடிக்கை யல்ல. ஸ்பானிய மக்கள் வாழும் இடங்களில் நடக்கும் எருதுப் போர்களிலே, எருதுடன் போராடப் போகிறவன் காயமுற்று காலகதி யடைய நேரிட்டால், அங்கு கூடியிருப்போர் கொஞ்சம் வருத்தப் படுவார்கள். அதோடு தீர்ந்தது அவன் விஷயம். இன்னொருவன் அந்த எருதுடன் போராட வந்து விடுவான். தவிர, போர் முடிந்த பின், அந்த எருதை ஒரு தனி இடத்திலே கட்டுப்படுத்தி வைத்து விடலாம்.

ஆனால், ருஷ்யாவில் நடக்கும் எருதுப் போரின் தினுஸே வேறு. ஹிட்லர் எனும் காளை, ரொம்பவும் கொழுத்துப் போய், பல பேர்களை ஐரோப்பாவிலே கீழே விழத் தட்டிய திமிருடன், ருஷ்யாவில் உள்ள ஸ்டாலின் மீதும் பாய எத்தனித்தது. அது பாய்கிற பாய்ச்சலைக் கண்டு உலகோர் மூச்சைப் பிடித்துக் கொண்டு, ஸ்டாலினுக்கு என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்ற திகிலுடன் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

ஸ்டாலின் என்ன செய்தார்? செஞ்சேனை என்ற சிவப்புத் துணியைக் கையிலே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, ஹிட்லர் காளையை மிரள வைத்துக் கொண்டே யிருந்தார். அப்புறம்? திடீரென்று ஸ்டாலின்கிராட் என்னுமிடத்திலே, தனது செஞ்சேனையின் உதவியால், அந்தக் காளையை ஓட்டம் பிடிக்கச் செய்தார். இவ்வாறு ஒரு ஆளைத் தாக்க வந்த காளை, வாலை முறுக்கிக் கொண்டு ஓட்டம் பிடிக்கிறது என்றால், பார்ப்பவர்கள் கரகோஷம் செய்வார்களா, மாட்டார்களா? இப்பொழுது அச்சு நாட்டாரைத் தவிர, பாக்கி யுள்ளவர்கள் எல்லாம், இதையே தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்திலே, ஹிட்லர் காளையை தீரத்துடன் விரட்டி ஓட்டிய செஞ்சேனையின் இருபத்தைந்தாவது வருட விழா தினம் வந்து சேர்ந்தது.

அந்தத் தினத்தை ருஷ்யாவிலேயும் சரி, நேச நாடுகளிலும் சரி ஏக தடபுடலாகக் கொண்டாடியிருக்கிறார்கள். ஸ்டாலின்கிராடிலே செஞ்சேனை வீரர்களும், அந்நகர வாசிகளும் காட்டிய வீரத்தைப் பாராட்டி, ஜார்ஜ் மன்னர் ஸ்டாலின்கிராட் நகருக்கென்று தாமாகவே ஒரு கௌரவச் சின்னமாக ஒரு பட்டாக் கத்தியைக் கொடுக்க முன் வந்திருக்கிறார். நாளை சண்டையெல்லாம் முடிந்து, எல்லோரும் தத்தம் வேலைகளை கவனிக்கத் தொடங்கும். சமாதான காலத்திலே. இந்தச் சின்னம் ஸ்டாலின்கிராடைக் காத்த வீரர்களின அற்புத சாகசச் செயல்களை நினைவு மூட்ட உதவு மல்லவா?

செஞ்சேனையின் வீரச் செயல்கள் உலக சரித்திரத்திலே ஒரு உன்னத இடத்தைப் பெறப் போகின்றன என்பதில் சந்தேகமேயில்லை. இத்தகைய புகழ் பெற்ற செஞ்சேனையைப் பற்றி ஒரு சில குறிப்புக்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது ரொம்ப அவசியமாகும்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை யோடு தான செஞ்சேனை பிறந்து இருபத்தைந்து வருடங்கள் பூர்த்தியாயின. அதற் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் தான், இந்த செஞ்சேனையை சிருஷ்டித்தார்கள், ஸ்டாலின், வரோஷிலோவ், டிமோஷிங்கோ என்ற மூன்று தலைவர்கள். மெள்ள மெள்ள, உலகோரின் திருஷ்டியில் அதிகம் படாமலே, அதாவது திருஷ்டி தோஷம் ஏற்படாமலே, இந்த செஞ்சேனையின் பலத்தை மேற்கண்ட மூன்று தலைவர்களும் வளர்த்து வந்திருக்கிறார்கள்.

ஆரம்பத்திலே ருஷ்யாவுடன் நேசமாகத்தானிருந்தது ஜெர்மனி. இப்பொழுது ஜெர்மன அதிகாரிகள் ருஷ்யாவிற்கு அடிக்கடி போய், அங்குள்ள ராணுவத்தினரின் பயிற்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் திருஷ்டிகளிலே, ருஷ்யர் வெறும் சொத்தைகளாகவே பட்டிருக்க வேண்டும். அவர்களது அறிக்கைகளைக் கொண்டு தான ஹிட்லர் திடீரென ருஷ்யாமீது பாயத் தீர்மானித்தார் போலிருக்கிறது. அந்தத் தீர்மானமே ஜெர்மனிக்கு அளவற்ற சங்கடங்களைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

ஆரம்பத்திலே, ஜெர்மானியப் படைகள் கொஞ்சம் வெற்றியைக் கண்டன. பனிகாலம் வரும் வரை ருஷ்ய செஞ்சேனை சமாளித்துக் கொண்டு நின்றது. பனிக்காலம் ஆரம்பமானதும் தனது வித்தையை எல்லாம் காட்ட ஆரம்பித்து விட்டது அந்தச் சேனை.

ஜெர்மானிய ருஷ்ய யுத்தம் தொடங்கிய பொழுது, வெற்றி வெறிகொண்ட ஜெர்மன் சேனைக்கு முன், செஞ்சேனை நிற்கமுடியுமா என்று சந்தேகப்படத் தான் செய்தார்கள். ஆனால் நாளடைவில் அனைவரது சந்தேகங்களும் மறைந்து கொண்டே வந்தன. ஸ்டாலின்கிராடு போர் முடிந்து, புயலென செஞ்சேனை வீரர்கள் நாலாபுறங்களிலும் பரந்து, ஆங்காங்கே உள்ள அச்சு நாட்டுப் படைகளை அலற அடிக்கத் தொடங்கிய பின் தான், 'ஏ அப்பா' செஞ்சேனை

(12-ம் பக்கம் பார்க்க.)

# போன வாரத்திலே!

சென்னையை விட்டு ரயில் புறப்பட்டு மதுரையை அணுகிக் கொண்டிருக்கும் பொழுது, மாம்பலம், சைதாப்பேட்டை, பீச்சு முதலிய இடங்களை யெல்லாம் பற்றி யாராவது நினைத்துக் கொண்டிருப்பார்களா? இதே தினுஸிலே ருஷ்யர்கள் நவம்பர்௴ 19-ந்தேதி யன்று பெரிய தாக்குதலைத் தொடங்கிய பின், சென்ற வாரம் வரை கிட்டத்தட்ட முந்நூறு மைல்கள் முன்னேறியிருக்கிறார்கள். இப்பொழுது ஸ்டாலின்கிராட், ராஸ்டாவ், கார்க்கோப் முதலிய அதி முக்கியமான நகரங்கள் எல்லாம் வகு தூரம் பின்னே போய் விட்டன. அங்கெலாம் ருஷ்ய மக்கள் தங்களுடைய தினப்படி வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்து விட்டனர். செஞ்சேனை-வீரர்களோ, மேற்கே அதி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஊரல் என்ற முக்கியமான நகருக்கு வெகு அருகே சென்று விட்டார்கள் அவர்கள். இந்த நகரைக் காக்க ஜெர்மானியர் புதிது புதிதாகப் பட்டாளங்களைக் கொண்டு வந்து குவிக்கிறார்கள். அவர்களுடைய எதிர்ப்பை யெல்லாம் பாழடித்து வருகிறார்கள் செஞ்சேனை வீரர்கள். நீப்பர் நதியிலே பனிக்கட்டி கெட்டியாக இருக்கும் பொழுதே அந்த நதியை சுலபமாகக் கடந்து அப்பால் போய் விட வேண்டுமென அவர்கள் விரைந்து செல்லுகிறார்கள். இந்த நதிக்குக் குறுக்கே தான் உலகிலேயே மிகப் பெரிதாக உள்ள அணைக்கட்டுகளில் ஒன்று கட்டப் பெற்றிருந்தது. இரண்டு வருஷங்களுக்கு முன் தேச பக்தி மிகுந்த ருஷ்யர்கள், ஜெர்மானியரின் முன்னேற்றத்தைத் தடுக்க வேண்டி, கோடிக் கணக்கிலே செலவிட்டுக் கட்டிய அதி உபயோகமான இந்த அணையை மனம் துணிந்து தாமாகவே உடைத்து விட்டு, பல்லாயிரம் சதுர மைல் பிரதேசங்கள் பாழாகப் போகச் செய்தார்கள்.

ஜெர்மனிக்கு இது ரொம்ப நெருக்கடியான காலம் தான். ருஷ்யர்களிடம் ஜெர்மானியர் பெறும் உதை பலமானது தான். இதனால் ஏற்பட்ட தளர்ச்சியைச் சரிக்கட்டிக் கொள்ள ஜெர்மனிக்கு அவகாசம் கொடுக்கக் கூடாது என்று தான் நேச தேசத் தலைவர்கள் 1943-க்காக போர்த் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். ஜெர்மனியின் மோசமான நிலைமையை மனதில் எண்ணித் தான், ஜெர்மன் பிரசார மந்திரி ஒரு அழுகை அழு திருக்கிறார். ஜெர்மனியிலே இன்னும் பெரிய முயற்சிகள் செய்யப்பட வேண்டும்; யார் யாருக்கு உடம்பில் சக்தி யிருக்கிறதோ அவர்கள் எல்லாம் யுத்தம் தாங்க வேண்டும்; இந்தச் சமயத்திலே சும்மா இருந்து விட்டால் ருஷ்யரின் சமதர்மக் கட்சியின் பிடியிலகப்பட்டு, நசுங்கிச் சாகவேண்டியது தான் என்று புலம்பி யிருக்கிறார் அவர்.

இத்தாலியிலும், மற்றுமுள்ள ஐரோப்பிய நாடுகளிலும் ஜெர்மனிக்குப் பூரண ஆதரவளிக்க சகல முயற்சிகளும் செய்யப்பட வேண்டுமென ஹிட்லர் தெரிவித்திருக்கிறாராம்.

ஜெர்மானியருக்கு இது வரை ஏக நஷ்டம் தான். ஆனாலும், ஜெர்மனியின் சக்தி இன்னும் சரியாகத் தளர வில்லை. ஐரோப்பாவிலே ஜெர்மனி அபகரித்த நாடுகளிலே யிருந்து வேண்டிய சௌகரியங்கள் அதற்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. கிடைப்பதை யெல்லாம் அதி வேகமாகச் சுரண்டியெடுத்து, ஜெர்மனியிலே கொண்டு குவிக்கச் செய்திருக்கிறார் ஹிட்லர். 'ஆகவே, சீக்கிரமே யுத்தம் முடியும் என்று எதிர்பார்க்க முடியாது' என்று அமெரிக்க உதவி யுத்த மந்திரி கூறுகிறார்.

ஹிட்லருக்கு தற்சமயம் ஆப்பிரிக்காவி லிருந்து தான் கொஞ்சம் நல்ல செய்திகள் கிடைத்து வருகின்றன. ரோமலின் படைகள், அதிகப் போர் அநுபவமில்லாத அமெரிக்கப் படைகளை நோக்கிப் பாய்ந்து, சிறிதளவு வெற்றியைக் கண்டிருக்கின்றன. அப்படைகளின் முன்னேற்றத்தை பிரிட்டிஷ் படைகள் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கின்றன. ட்யூனிஷியாவிற்குப் புது ஜெர்மன் விமானப் படைகள் வந்திருக்கின்றனவாம். அங்கு வெடி விமானங்களை அதிகமாகக் காணோமாம். பெரிய சண்டைக்கு அவற்றை ரோமல் வைத்திருக்கிறாரா; இல்லாவிட்டால் அவை ஆட்களைச் சுமந்து வரப் போய்விட்டனவா என்பது தெரியவில்லை. மத்ய தரைக் கடலிலே, சென்ற சில மாதங்களில் 136 அச்சு நாட்டுக் கப்பல்களை பிரிட்டிஷார் மூழ்கடித்து விட்டனர். அதோடு, ஸிஸிலி, க்ரீட், இத்தலி ஆகிய பிரதேசங்களிலும் வெடி குண்டுகளை வீசியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் எட்டாவது சேனை மெதுவாக, ஏக மழையையும், காற்றையும் பொருட்படுத்தாது முன்னேறிக் கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷ் விமானங்கள், ஜெர்மனியின் கையில் உள்ள லோரியோன், விலஹெல்ம்ஷேவன் ஆகிய பிரதேசங்களில் நூற்றுக் கணக்கான டன் குண்டுகளைப் பொழிந்திருக்கின்றன. ஆகவே ஜெர்மானியர் நிம்மதியாக நேச தேசக்கப்பல்களை மூழ்கடிக்கும் நீர்மூழ்கிப் படகுகளைத் தயாரிக்க முடியுமா என்ன? சென்ற வருஷத்திலே மட்டும் பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள் ஐரோப்பாவில் உள்ள 250 நகரங்களைத் தாக்கி யிருக்கின்றன. ஐரோப்பா முழுவதிலும் வாழும் மக்கள் பிரிட்டிஷ் வெடி விமானங்களைப் பற்றியே தூக்கத்தில் கூட நினைவாக இருக்கிறார்களாம்.

75 லக்ஷம் பேர்கள் கொண்ட சேனை அமெரிக்க சேனை என்ற பெயர் ஏற்பட வேண்டுமென ரூஸ்வெல்ட் கூறியிருக்கிறார். மிதக்குந் தீவுகளைச் சிருஷ்டிக்க 21 கோடி டாலர்களைச் செலவழிக்க அநுமதி கொடுத்து விட்டார் அவர். ருஷ்யாவிற்கு இடைவிடாது உதவியை அனுப்ப வேண்டுமென்பது நேச நாட்டினரது திட்டமாகும். ஜெர்மனியைக் கவனித்து விட்டு, பிறகு ஜப்பானைத் தாக்கலாமென்பதும் அவர்களது திட்டம் தான்.

இப்படி ஒரு திட்டம் போட்டாச்சு என்பதற்காக, ஜப்பானியரை தான் தோன்றிகளாக வளருவதற்கு நேச தேசத்தார் இடங் கொடுக்கவில்லை. ஸாலமன் தீவுகளிலே பல இடங்களிலேயும், பர்மாவில் பல முக்ய ஸ்தலங்களையும் நமது கட்சி விமானிகள் நொறுக்கி வருகிறார்கள். ஜப்பானியர் சீனா மீது சில பிரதேசங்களில் பெரிதாகப் படையெடுக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் போன இடமெல்லாம் அவர்கள் வெற்றி காணும் காலம் மலை ஏறி விட்டது.

(11-ம் பக்கம்—தொடர்ச்சி.)

யின் சக்தி அபாரம்!' என்று அனைவரும் கூற ஆரம்பித்திருக்கிறோம். ஜெர்மானியர் அந்த நாளில் அனுசரித்த தந்திர முறைகளை யெல்லாம் செஞ்சேனை வீரர்களும், தலைவர்களும் நன்றாகக் கற்றுக் கொண்டு, அந்த வித்தையை ஜெர்மானியரிடமே காட்டத் தொடங்கிவிட்டார்கள். இனிமேல் ஜெர்மானியர் புது வித்தையைக் கற்றாக வேண்டும். வசந்த காலம் எப்பொழுது வரப்போகிறது என்று ஏங்கிக் கிடக்கும் ஹிட்லர், அக்காலம் வந்ததும் கொஞ்சம் வாலாட்ட முயலுவார். ஆயினும், ருஷ்யர்கள் தங்கள் முன்னேற்ற ஏற்பாடுகளைத் தளர விடுவார்கள் என்று தோன்றவில்லை.

செஞ்சேனை வீரர்கள், ஹிட்லர் இரண்டு வருஷ காலமாகப் பாடுபட்டு அடைந்த வெற்றிகளை யெல்லாம் பாழ்படுத்தி விட்டார்கள். இதனால் ஜெர்மனிக்கும், ஹிட்லருக்கும் எவ்வளவு நஷ்டம்! எவ்வளவு அவமானம்! 'யாராலும் தோற்கடிக்கப் படாத சேனை எனது சேனை' என்று மார் தட்டிக் கொண்டிருந்த ஹிட்லரின் முகத்திலே கரியைப் பூசிய பெருமை, ருஷ்ய செஞ்சேனைக்கு உரித்தாகும். அந்த நாளிலே நெப்போலியனது படைகள் அடைந்த கதியையே, ஹிட்லரது படைகள் இன்று அடைந்து கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் செஞ்சேனை வீரர்களிடம் குடிகொண்டுள்ள தளராத தேச பக்தி, குன்றாத வீரம், இணையற்ற சகிப்புத் தன்மை, தம் தலைவர்களிடம் அவர்கள் கொண்டுள்ள அபார நம்பிக்கை ஆகியவையே முக்கிய காரணங்களாகும். இத்தனையும் இருந்ததாலேயே அவர்கள் இந்நாளைய யுத்தத்தின் போக்கையே மாற்ற முடிந்திருக்கிறது. இத்தகைய பெருமை வாய்ந்த செஞ்சேனை நீடூழி வாழ்க! அது அடைந்து வரும் அற்புத வெற்றிகள் மென்மேலும் வளருக! என்று நாம் பிரார்த்திப்போமாக!

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-௵ மார்ச்௴ 5௳, வெள்ளிக்கிழமை [இதழ் 10

## செஞ் சிலுவைச் சங்கத்திற்குப் பாராட்டு

"அச்சு நாட்டினர் தாக்குதலின் பயனாக, இந்த உலகத்திலே ஒரு பெரும் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மிருகத் தனமும், அச்சமும், வறுமையும், பசிப்பிணியும் தாண்டவமாடுகின்றன. ஆனாலும், இந்த போராட்டங்களுக்கும் கஷ்டங்களுக்குமிடையே, பாதகத்திற்கு உள்ளாகாமலும், யாரும் பாதிக்க முடியாதபடியும் செஞ்சிலுவை தலை தூக்கி நிற்கிறது. இது நம் மனதிற்கு இன்ப மளிக்கிறது."

"நமது கடற் படையும், தரைப் படையும், விமானப் படையும் கடுமையாகப் போராடின; இன்னமும் போரிட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றிற்கு இரவும் பகலும் ஒன்று தான். பல சமயங்களில் உணவு இருக்காது. அநேக சமயங்களில் தூக்கம் கிடையாது. அடர்ந்த பயங்கரமான காடுகளிலும், ஆபத்தான கடல்களிலும், வரண்ட பாலைவனங்களிலும், புயற்காற்றிலும், போய்ப் போராடினார்கள். ஏன்? நம்மை எதிரிகள் வந்து தாக்கக் கூடாது என்பதற்காகத் தான். ஆகவே, அவர்களுக்கு நன்றி செலுத்துமாறு உங்களை மனப்பூர்வமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

"இவ்வளவு கஷ்டங்களையும் வெல்ல வேண்டுமானால், அவர்களுக்கு எவ்வளவு சகிப்புத் தன்மையும், வீரமும், அமைந்திருக்க வேண்டும்? ஆகவே, அவர்களுக்கு என்ன உதவி நாம் செய்யக் கூடும்? என்ன தியாகம் செய்ய முடியும்? அவர்கள் செய்யும் அருமையான தொண்டிற்கு, இவை எல்லாம் எப்படி ஈடாக முடியும்?"

மேன்மை தங்கிய லேடி லின்லித்கோ.

# மு ர சொ லி

"1943-ம் வருஷம் நாம் எதிரியைத் தாக்கி போராடப் போகிறோம். அதில் கலந்து கொண்டு நாமும் ஆதரவளிக்க வேண்டும். இதற்காகத் தான், "வெற்றி பெறுவதற்கு விமானங்கள்" கட்ட ஒரு இயக்கத்தை இன்று ஆரம்பித்திருக்கிறோம். இதன் மூலம் நாம் அவர்களுக்கு நம்மாலானவரை உதவி செய்து, முடிவாகப் பரிபூரண வெற்றி பெறுவதற்கு நாம் உறுதி கொண்டிருக்கிறோ மென்பதை இது குறிக்கும்".

—மிஸ்டர் சர்ச்சில்.

*  *  *  *  *

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அமைக்கப் பட்ட யுத்த சாதனங்களில், பிரிட்டிஷ் எட்டாம் படை தான் மிகச் சிறந்தது."

"ரஷ்யாவுக்கு, பாரசிகம் ஈராக் வழியாக ரயில்பாதை யமைத்தது பற்றி பிரிட்டிஷ் இஞ்சினீர்களும் இந்திய இஞ்சினீர்களும் பெருமை கொள்வது நியாயந் தான்."

—சர் ஜேம்ஸ் க்ரிக்.

*  *  *  *  *

"சீனாவும் அதைச் சேர்ந்த நேச நாடுகளும் வெற்றி பெற்றால் தான் சயாமுக்கு மீட்சி உண்டு. சயாமில் நாடுகளைப் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணமோ அதன் அரசாங்கத்தையோ சுயேச்சையையோ பாதிக்க வேண்டு மென்னும் எண்ணமோ சீனாவிற்கும் நேச நாடுகளுக்கும் கிடையாது என்று உறுதி கூறுகிறேன். சீனப் படைகளோடு சயாம் படைகளும் சேர்ந்து ஜப்பானியப் படைகளை எதிர்க்க வேண்டும்".

—ஜெனரலாசிமோ ஷியாங்-கெய்-ஷேக்.
சயாமியப் பொதுஜனங்களுக்குச்
செய்த வானொலிப் பிரசங்கம்.

*  *  *  *  *

"ஸ்டாலின் கிராட் போர்முனையில், சென்ற வருஷம் நவம்பர் மாதம் 19-ம் தேதி நடைபெற்றதைப் போல், உலக சரித்திரத்திலேயே போர் நடந்த தில்லை. இவ்வளவு பெரிய யுத்தத்தில் எவ்வளவோ சிக்கலான நிலைமைகள் எல்லாம் உண்டு. அவற்றையெல்லாம் ரஷ்ய படைத் தலைவர்கள் மகா கெட்டிக்காரத் தனமாகச் சமாளித்து நடத்தியது தான் மிகவும் முக்கியமான கட்டம். ரஷ்யர்கள் வெற்றிபெற்ற ஒவ்வொரு முறையும், தாம் வெற்றிபெறக் கூடுமென்று எதிரிகள் முயன்று முயன்று தோல்வி யடைந்தார்கள். உலக சரித்திரத்திலேயே இந்த மிகப் பெரிய யுத்தம் நமக்கு வெற்றி கொடுத்தது".

—டெய்லி எக்ஸ்பிரஸ்.

*  *  *  *

"தம் நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டுப் போராடிக் கொண்டிருக்கும் போதே ஏராளமான டாங்கிகளும் விமானங்களும் கையிருப்பில் இருக்கத் தகுந்தபடி ரஷ்யர்கள் எப்படிக் கட்டி முடித்தார்களோ தெரியவில்லை. செய்து முடித்தது மன்றி அவற்றை எதிரிகள் கைப்பற்றுதபடி பாதுகாத்தும் வந்தார்கள். இதனால் தான், யுத்த நிலைமை திடீரென்று மாறியது. இவற்றை அவர்கள் எப்படி கட்டி முடித்தார்கள் என்பது ஒரு பெரும் மாயமாகத் தான் இருக்கிறது. இந்த முக்கியமான துறையில் அவர்களுக்குள்ள பலத்தைக் கண்டு, எதிரிகளைப் போலவே, நேச நாட்டினருங்கூட ஆச்சரிய மடைந்தார்கள்".

—"டெய்லி மெயில்"



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| செஞ்சிலுவைக்குப் பாராட்டு .. .. | 1 | தென் இந்தியக் கிராம வாசிகள் உதவி .. | 6 |
| முரசொலி .. .. .. .. | 2 | அஸ்ஸாம் எல்லையில் கொரில்லாப்படைகள் .. .. .. .. | 7 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | நான்கு தூண்கள் .. .. .. | 7 |
| வடாப்பிரிக்கப் போர் : மாரெத் அரணின் முக்கியம் (தலையங்கம்) .. .. | 4 | கணக்கிலே சைபர் .. .. .. | 8 |
| வருவாயைப் பெருக்க புது வரிகள் .. | 5 | ஷேக் ஜெய்னூ பகதூரின் சரித்திரம் .. | 10 |
| துருக்கி-பிரிட்டன் உறவு .. .. | 5 | ஆட்சி நலம் கூறல் .. .. .. | 11 |
| இந்திய விமானப் படையின் எதிர் காலம் .. | 6 | பழமும், காய் கறிகளும்: மிளகாய் .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**ஜப்பான் பிரசாரப் போக்கில் மாறுதல்.**

சமீபத்தில் ஜப்பான் ரேடியோ பிரசாரப் போக்கு மாறி யிருக்கிறது. அது ஓரளவிற்கு உண்மையைத் தான் கூறுகிறது. அச்சம் அதில் ஒலிக்கிறது. தம் யுத்த முயற்சிகளைத் தவிடு பொடி யாக்கத் தக்க ஆற்றல் நேச நாடுகளுக்கு அதிகரித்துக் கொண்டு வருகிறது என்று தெரிவிக்கிறது. தம் இராணுவத் திறமை பற்றியும் ஆற்றலைப் பற்றியும் பேசும் வீண் டம்பப் பேச்சு இப்போது ஜப்பான ரேடியோவில் இல்லை. "ஜப்பான் ரிவ்யூ" என்னும் பத்திரிகையில் ஜப்பானிய எழுத்தாளரான செலிச்சி தனகா என்பவர் கீழ்க் கண்டவாறு எழுதினார் :—

"எதிரிகளை உடனே அழிப்பதை விட, நம் பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்."

இது போலவே தான் "கெய்சோ" என்னும் ஒரு ஜப்பானியப் பத்திரிகையில் சிஜியோசி மட்சுனே என்பவரும் நெபோலியன் யுத்தத்திற்குப் பிறகு பிரிட்டனின் உற்பத்தி சக்தி ஏராளமாகப் பெருகி விட்டதென்று எழுதுகிறார். சென்ற 150 வருஷங்களில் பருத்தி 600 மடங்கும், இரும்பு 500 மடங்கும் முன்னைய விட அதிகமாகச் செலவானது என்று புள்ளி விவரங்கள் கூறுகிறார். நேச நாடுகளின் பலம் மிகுந்து கொண்டு வருகிற தென்று சொல்லி ஜப்பானிய இளைஞர்களை உற்சாகப் படுத்தும் பிரசாரத்தில் இப்போது இவர்கள் இறங்கி யிருக்கிறார்கள். "உங்கள் நாட்டின் நோக்கத்தை நிறைவேற்ற எல்லா வகைகளிலும் நீங்கள் முயற்சிக்க வேண்டும்" என்று அடிக்கடி ஜப்பானியர்கள் தம் நாட்டாரிடையே பிரசாரம் செய்து கொண்டு வருகிறார்கள்.

ஜப்பானியர் ஆதிக்கத்திற் குட்பட்ட பாலோ என்னும் தீவில் ஒரு ரேடியோ நிலையம் இருக்கிறது. இந்த நிலையத்தி லிருந்து ஒரு தபால் உத்தியோகஸ்தர் ஜப்பானிய மொழியில் கீழ்க் கண்டவாறு பேசினார் :—

வாழ்வதா, சாவதா என்னத் தக்க நிலையில் இன்று ஜப்பான் போராடிக் கொண்டிருக்கிறது. தற்கால யுத்தத்தில் அதுவும் ஆரம்ப நிலைமையில், போர் முனையில் போராடும் சிப்பாய்க்கும், தத்தம் வீடுகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் வேற்றுமையில்லை........பீரங்கிகளைக் கொண்டு போர்முனையில் வேலை செய்யாதவர்கள், போர் முனையில் தாம் இருந்தால் எவ்வளவு மன உறுதியோடு போராடுவார்களோ, அதே மன உறுதியோடு தம் நாட்டிலும் வேலை செய்ய வேண்டும்."

"பேச்சாளர்களுக்கும், பத்திரிகைக் காரர்களுக்கும், வெளி நாடுகளில் பிரசாரம் செய்கிறவர்களுக்கும், வழி காட்டியா யிருக்கக் கூடிய" மசோதா ஒன்றை ஜப்பானிய அரசாங்கத்தார் கொண்டு வந்திருக்கிறார்கள். டோக்கியோ ரேடியோவிலிருந்து இது பற்றி கீழ்க் கண்டவாறு பிரசாரம் செய்தனர் :—

"கடுமையான கட்டுப் பாடு மிகவும் அவசியமாமாயிருக்கிறது. ஜப்பானின் தலை யெழுத்தை இந்த யுத்தம் முடிவு கட்டி விடும். இந்த யுத்தத்தில் வெற்றி பெற ஜப்பானியர்களுக்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. இதற்காகத் தான், யாரும், பிரசங்கங்கள் செய்யும் பொழுதும், தகவல்களை வெளியிடும் பொழுதும், தவறுகள் செய்து விடாதபடி தடுக்க அரசாங்கத்தார் பாதுகாப்பு முறைகளைக் கைக் கொண்டிருக்கிறார்கள். இதில் அரசாங்கத்தாருக்குப் பொது ஜனங்களும் உதவி செய்து மிகவும் ஜாக்கிரதையோ டிருப்பார்கள் என்று நம்புகிறோம்."

இது சம்பந்தமாக கடுமையான கட்டுப் பாடுகள் ஏற்கெனவே யிருக்கின்றன. இப்போது மேலும் அதிகக் கட்டுப் பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன.

தம் டாம்பீக வார்த்தைகளை விட்டு விட்டு, உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும், தம் பிரசாரத்தின் போக்கை ஏன் ஜப்பானியர்கள் மாற்றி கொண்டார்கள்? காரணம் தெளிவாகத் தெரிகிறது. விமானங்கள் கட்டவும் விமானிகளைப் பழக்கவும் ஜப்பானியர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். இதை மறைக்க முடியவில்லை. விமானிகளைப் பழக்குவதைக் குறித்து ஜப்பான் போக்கு வரவு மந்திரி டோகிமாவைக் கேட்ட கேள்விக்கு அவர் கூறிய பதிலை, டோக்கியோ விமான நிலையம் 1943-ம் ஆண்டு பிப்ரவரி 16உ வெளியிட்டது. அதாவது :—

"அவர்களைப் பழக்க எல்லா முயற்சிகளும் செய்யப் படுகின்றன. கொஞ்ச காலத்திலேயே முழுப் பயிற்சியும் கொடுக்க வேண்டியது பற்றி ஆலோசித்து வரப் படுகிறது. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் மாணுக்கர்கள் மனம் விமானத் தொழிலில் பதியத் தக்கபடி, விமானங்களில் ஏறிப் பறக்கும் முறையையும் கற்றுக் கொடுப்பார்கள்."

விமான உற்பத்தியைக் குறித்து அதே ரேடியோ கூறியதாவது :—

"ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் கல்லூரிக்கும் மாதிரி விமானங்களையும், மாணுக்கர்கள் ஏறி பழகுவதற்கு விமானங்களையும் சப்ளை செய்வ தென்று தீர்மானித் திருக்கிறார்கள்." ஜப்பானியப் போர் முனைக்கு ஹடகயா கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட் செய்த சிறந்த தொண்டைப் பாராட்டி யுத்த மந்திரி அதைக் கௌரவித்திருப்பதாக மற்றொரு செய்தியை அந்த ரேடியோ வெளியிட்டது. விமானங்களுக்குத் தேவையான எல்லா ரசாயனப் பொருள்களை

(10-ம் பக்கம் பார்க்க.)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞு மார்ச்மீ 5உ. [இதழ் 10

## வட ஆப்பிரிக்கப் போர்: மாரெத் அரணின் முக்கியம்

துனீசியாவி லிருந்து நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. மாரெத் அரணின் பல இடங்களில் பிரிட்டிஷ் எட்டாம் படை துளைத்துக் கொண்டு புகுந்து விட்டது. இங்கிருந்த ரோமலின் படைகளை நேச தேச பாம்பர் விமானங்கள் தவிடு பொடி யாக்கி விட்டன. அப்போது தான் ஜெனரல் மான்ட்காமரியின் படைகள் மேல் நோக்கி வந்து எதிரியைத் தாக்க முடியும். எகிப்தை விட்டு அச்சு நாட்டுப் படைகளை விரட்டும் போது எப்படி எல் அலமீன் மீது விமானங்களிலிருந்து குண்டுகள் விழுந்தனவோ, அது போலவே தான், இரவும் பகலும் நேச தேச விமானப் படைகள் எதிரிகளைத் தாக்கின. மாரெத் என்னும் கிராமத்தைத் தான் முக்கியமாகத் தாக்கின. இந்தப் போர் முனையில் இரவுகளில் வெடி குண்டுகளை நேச தேசத்தார் எதிரி மீது எறிகிறார்கள். பகற் காலத்தில் பீரங்கிகளைக் கொண்டு இரு தரத்தாரும் போராடுகிறார்கள்.

மகினுட் அரண் கட்டப் பட்ட திட்டத்தை ஒட்டித் தான் மாரெத் அரணும் கட்டப்பட்டது. இதில் மூன்று பாது காப்புப் பகுதிகள் இருக்கின்றன. இதில் மாரெத் என்னும் கிராமம் மிகவும் முக்கியமான இடத்தில் அமைந்திருக்கிறது. பாலை வனத்தி லுள்ள மலைகளில் கட்டப்பட்டிருக்கும் பல கோட்டைகள் சேர்ந்தது தான், மாரெத் அரண். இங்கே பீரங்கிகளும், வசிக்கு மிடங்களும், டெலிபோன்களும், தண்ணீர்க் குழாய்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாதுகாப்பின் பொருட்டு, முள் வேலியும், மற்றும் பல வகைச் சாதனங்களையும் அமைத் திருக்கிறார்கள். இந்த அரண்கள் 9 முதல் 10 மைல் தூரத்திற்கு ஒன்றன் பின் ஒன்றாக உள்ளடங்கிப் பரவி யிருக்கின்றன.

ரோமல் இப்போது என்ன செய்யக் கூடும்? இந்த அரண்களைக் காவல் செய்து கொண்டு நெடு நாட்கள் அங்கேயே இருப்பாரா? அல்லது இவற்றை கைவிட்டு விட்டு, துனிசியாக் கோடியிலே யுள்ள வான் ஆர்னிம்மின் படைகளோடு சேர்ந்து அச்சு நாட்டுப் படைகளை எல்லாம், ஒரே இடத்தில் திரட்டி வைத்துக் கொள்ளுவாரா? என்பது தெரியவில்லை. ரோமலின் படைகளைப் பல முறை நேச நாடுகள் வென்றன. இவற்றி லெல்லாம் மிகவும் முக்கியமானது கசரீன் கணவாயைக் கைப்பற்றியது தான். இதற்குத் தென் மேற்கே 28 மைல்களுக்கு அப்பாலுள்ள பெரியானு என்னும் ஊருக்குள் அமெரிக்க இஞ்சினீரிங் படை நுழைந்து விட்டது. ஆகவே, துனீசியாவில், நடைபெறும் யுத்தமே, போக்குவரவு சாதனங்களைக் கைப் பற்றுவதற்காகத் தான் நடைபெறுகிறது என்று சொல்லலாம்.

இரண்டு அச்சு நாட்டுப் படைகளும் சேர்ந்து 120,000 பேர்கள் இருக்கின்றார்கள். தளவாடங்களும் ஏராளமாய் அவர்கள வச மிருக்கின்றன. சப்ளைகள் வந்திறங்குவதற்கான தளமும் அருகிலிருக்கிறது. எனவே, ரோமலை இலகுவில் வென்று விடக் கூடும் என்று சொல்லுவதற்கில்லை. இந்தப் போர் நெடு நாட்கள் கடுமையாக நடந்தாலும் நடக்கலாம். இங்கே, வெற்றி கண்ட பிறகு தான் ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனையை ஆரம்பிக்க இலகுவா யிருக்கும். தூனிசி லிருந்தும் பிசெர்ட்டாவிலிருந்தும் அச்சு நாட்டினரை, விரட்டிய பிறகு தான், ஐரோப்பாவைத் தாக்க பிரிட்டனும் அமெரிக்காவும் முயற்சிக்கக் கூடும். இது ஹிட்லருக்கு நன்றாகத் தெரியும். அதனால் தான், தன் படைகளுக்கு ஏற்படும் சேதத்தையும் பொருட்படுத்தாமல், வட ஆப்பிரிக்காவிலுள்ள தம் இடங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, ஏராளமான படைகளை அங்கே அனுப்பிக் கொண்டிருக்கிறார். நேச நாட்டினருடைய எண்ணம் ஈடேற ஒட்டாதபடி தாமதிக்கச் செய்ய வேண்டு மென்பது தான், அவருடைய எண்ணம்.

வடாப்பிரிக்காவில், எல்லா நேச தேசப் படைகளுக்குத் தலைவராக ஜெனரல் எய்சினோவர், நியமிக்கப் பட்டிருக்கிறார். அவருக்கு அடுத்தபடியாக ஜெனரல் அலெக்சாந்தர் டிபுடி தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். இந்த இரண்டு நியமனங்களையும் "லண்டன் டைமஸ்" பத்திரிகை வெகுவாகப் பாராட்டி யிருக்கிறது.

மத்தியதரைக் கடலில் தோல்வி ஏற்படும் என்று அனைவரும் எதிர் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், நிலைமையை மாற்றி, வெற்றி பெற்றவர் ஜெனரல் அலெக்சாந்தர். அல் அலமீன் என்னும் இடத்தில், தலை கீழ் மாறுதலை இவர் உண்டாக்கினார். அதுவும் மகா விரைவாக. இப்போதும் முன் போலவே விரைவாக, வட ஆப்பிரிக்காவில் நிலைமையை மாற்றி விடுவாரானால், ஐரோப்பிய யுத்தத்தின் போக்கும் பெரிதும் மாறுதலடையும்.

எல்லோருடைய கவனமும் மாரெத் அரண், ட்யூனிஸ், பிசெர்டா ஆகியவை மீது தான் பதிந் திருக்கின்றன. நேச நாட்டுப் படைகள் எல்லாம் ஒரே தலைமைக் குட்பட்டிருக்கின்றன. வெற்றி பெறுவதென்ற மன உறுதி கொண்டிருக்கின்றன. இவற்றால், அச்சு நாட்டினர் அடியோடு அழிந்து போவார்கள். இது பற்றி கொஞ்சமும் சந்தேகமே கிடையாது.



# வருவாயைப் பெருக்க புது வரிகள்

## பிரிட்டிஷ் பொது மக்கள் செய்யும் உதவி

### வரவு செலவு சரிக் கட்டுகிறது

ஒரு வருஷத்தில் பிரிட்டிஷ் பொது மக்கள் வரிகளாக 88 கோடி பவுன் அரசாங்கத்திற்குக் கொடுக்கிறார்கள். இவ்வளவு பெருந் தொகை கொடுப்பது அவர்களுக்கே தெரியாது. சாதாரணமாகத் தன் வருவாயில் ஒரு சிறு பகுதியை அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுக்க வேண்டி யிருக்கிறது என்று மட்டும் தெரியும். இதைத் தவிர, நாள் தோறும், மணித் தோறும், சிறு சிறு தொகைகளை வரியாகச் செலுத்திக் கொண்டிருப்பதை அவர்கள் அறிவதில்லை. இந்தச் சிறு தொகைகள் சேர்ந்து பெருந் தொகையாகி விடுகிறது.

காலையில் சிற்றுண்டி சாப்பிடும் போது தேநீர் குடிக்கிறார்கள். அதில் சர்க்கரையைக் கலந்து தான் சாப்பிடுகிறார்கள். இப்போது 1 பவுண்ட் தேயிலைத் தூளின் விலை $2\frac{1}{2}$ ஷில்லிங் (ரூ. 1-14-0) அதற்கு வரி $6\frac{1}{4}$ பென்ஸ் (ரூ. 0-6-3). சர்க்கரை சில்லறையில் பவுண்ட் 3 பென்ஸ் (3 அணு) வீதம் விற்கிறது. இதற்கு வரி $2\frac{1}{4}$ பென்ஸ் ($2\frac{1}{4}$ அணு) அதாவது சர்க்கரை விற்று முதல் தொகையில் $\frac{3}{4}$ பங்கு அரசாங்கத்திற்கு வரியாகப் போய்ச் சேருகிறது. சிற்றுண்டி சாப்பிட்ட பிறகு சிகிரெட்டோ, சுங்கானோ பிடிக்கிறார்கள். இதன் வாயிலாகவும் வரித் தொகை ஏறுகிறது. புகையிலைக்கும் தீப்பெட்டிக்கும் கூட வரியுண்டு. நெருப்புப் பெட்டியின் விலையில் பாதிக்கு அதிகம், வரி; புகையிலையின் விலையில் முக்கால் பங்கு, வரி. சுங்கான் புகையிலையின் விலையில் 5-ல் 4 பங்கு, வரி.

பிரிட்டனில் புகையிலைப் பங்கீடு செய்ய வேண்டிய அவசியம் நேரு மென்று நினைத்த ஒரு கால முண்டு. அது 1941–42-ல். 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் பிரேரேபிக்கப்பட்ட அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில், புகையிலை வரி 3-ல் 1 பங்கு உயர்ந்தது. அதன் பயனாக, சிகிரெட்டு சுங்கான் பிடிப்பவர்கள் கொஞ்ச காலம், மட்டாகப் பிடிக்கத் தலைப்பட்டார்கள். ஆகவே, இரு வகை புகையிலைக்கும் இருந்த கிராக்கி குறைந்தது. ஒரு வாரத்திற்குள், எல்லா வகைப் புகையிலையும் சிகிரெட்டுக்களும் எல்லாக் கடைகளிலும் நாடெங்கும் கிடைத்தன. சராசரி இங்கிலீஷ்காரர் ஒரு வருஷத்திற்கு முன்பு எந்த அளவிற்கு சிகிரெட்டோ சுங்கானோ பிடித்தாரோ, அதே அளவிற்குத் தான் இப்போதும் பிடிக்கிறார். ஆகவே, இப்போது புகையிலைப் பங்கீடு செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாகத் தோன்ற வில்லை.

இப்படி மறை முகமாக அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வரித் தொகை ஏராளமானது. இந்த இனத்தில் மட்டும் நாளொன்றிற்கு $2\frac{1}{2}$ லட்சம் பவுன் வசூலாகிறது. மறை முகமாக $80\frac{1}{2}$ கோடி பவுன் வரி வசூலிக்கலா மென்று 1942-43-ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த நிதி வருஷத்தின் முதல் 9 மாதங்களில் மட்டும் 86 கோடி பவுன் வசூலானது. ஆகவே இந்த வருஷத்தில் 88 கோடிப் பவுன் வசூலாகு மென்று எதிர்பார்க்கலாம். ஒருக்கால் இதுவே 90 கோடி பவுன் ஆனாலும் ஆகலாம். நிதி நிர்வாகத்திற்கு ஏற்ற சாதனமாக, மறைமுகமான வரி உதவுவது, இது தான் முதல் முறை. பிரிட்டிஷ் வரவு செலவுத் திட்டத்தில் வருமான வரி போன்ற இனங்களை விட, இந்த மறைமுக வரி அதிகமாக வசூலாகவும் கூடும்.

இப்படிப்பட்ட வரிச் சட்டங்கள் விதிப்பதனால், ஒரே மூச்சில் இரண்டு காரியங்களைச் செய்து முடிக்கிறார்கள். அவசியமான பொருள்கள் சம்பந்தப்பட்ட வரை, எந்த விதமான கட்டுப்பாட்டிற்கும் இடமில்லாமல் செய்து விட்டார்கள். இப்படிப்பட்ட பொருள்கள் ஏராளமாகச் செலவாவதினாலே, மிகவும் முக்கியமானதான யுத்த நிதிக்கு வழி தேடியவர்களுமாவார்கள்.

## துருக்கி - பிரிட்டன் உறவு

**இஸ்தன்பூல் என்னும் ஊரிலிருந்து வெளிவரும் துருக்கிப் பத்திரிகையான "எனி சபா"வில் துருக்கிக்கும் பிரிட்டனுக்கும் உள்ள உறவைக் குறித்து டிபுடி எச். சி. எல்ட்சன் எழுதியிருப்பதாவது :—**

அரசியல் பரம்பரைத் தொடர்புகளில், நமக்கும் பிரிட்டனுக்கும் உள்ள உறவு, மிகவும் முக்கியமான பகுதி. ஸ்ட்ரெயிட்ஸ், கீழ ஐரோப்பியா, அனடோலியா, ஆகிய இடங்களில் துருக்கி ஆட்சி நிலைத்து நடை பெறுவதற்கு பிரிட்டிஷ் ராஜ தந்திரம் பெரிதும் உதவி யிருக்கிறது. நமது நாட்டின் சரித்திரத்திலேயே மிகவும் கஷ்டமானதும் நெருக்கடியானதுமான நிலைமை ஏற்பட்ட போது, துருக்கி சாம்ராஜ்யத்தைப் பலபல பிரிவுகளாகப் பிரித்து விடக் கூடாது என்று தடுத்தது லண்டன் அரசாங்கம். நாசத்தை யுண்டாக்கக் கூடிய சான்-ஸ்டிபானோ ஒப்பந்தத்தில் தலை யிட்டு அதை மாற்றும்படி உதவியதும் லண்டன் அரசாங்கம் தான்.

நாம் லண்டன் போயிருந்த போது, அன்வர் பாட்சாவின் மகன் அங்கிருக்கிறார் என்று நான் மிஸ்டர் சர்ச்சிலிடம் சொன்னேன். அப்போது, அவரை, தான் காண விரும்பினார். சென்ற மகா யுத்தத்தில் நம் எதிரியோடு அன்வர் பாட்சா சேர்ந்திருந்த போதிலும், அவர் உண்மையிலே சிறந்த நாட்டுப் பற்றுடையவர் என்று கூறிப் பாராட்டினார்.

தம் எதிரிகளையும் பாராட்டுவது, பிரிட்டிஷாரின் தன்மை. நம் பிரிட்டிஷ் நண்பர்களைப் பெரிதும் நாம் பாராட்டுவதற்கு, இது தான் காரணம். இந்த இரண்டு நாடுகளும் ஒன்றை யொன்று தெளிவாக உணர்ந்து பாராட்டுகின்றன. பரஸ்பர உதவியினால் இருதரத்தாருக்கும் நன்மை யுண்டு என்று தெரிந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இரண்டு நாடுகளும் ஒன்றோடொன்று நல்லுறவோடு தான் இருக்கக் கூடும்.

ஆகவே, இந்த உணர்ச்சியினாலும், உண்மையான நிலைமையை உணர்ந்து கொள்ளும் தன்மையினாலுந் தான் துருக்கிக்கும் பிரிட்டனுக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டிருக்கிறது.

# இந்திய விமானப் படையின் எதிர்காலம்

## யுத்தத்திற்குப் பிறகு மூன்று வகை நன்மைகள்

இந்திய விமானப் படை தோன்றிய போது, பல வகைக் கஷ்டங்கள் அதற்கு ஏற்பட்டன. இப்போது நல்ல பலன் தரத் தக்க பருவத்தை யடைந்திருக்கிறது. எதிர் காலத்தில் இந்தப் படையும் அதைச் சேர்ந்தவர்களும் இன்னும் உயர்ந்த நிலைமையிலிருப்பார்கள். இவர்களின் படிப்பிற்குத் தகுந்தபடி சம்பள விகிதமும் விதிக்கப் பட்டிருக்கிறது. இந்தப் படைகளில் சேருவதனால் எவ்வளவு நன்மையுண்டு என்று நன்றாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. போர் முனைத் தேவையை முன்னிட்டு, ஏராளமான விமானங்கள் வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, முதல் தரமான தற்கால விமானங்கள் கிடைக்க வில்லை என்ற புகாருக்கு இப்போது இடமே கிடையாது. விமானப் படையில் சேர்ந்து சேவகம் செய்ய எத்தனை இந்தியர்கள் முன்வருகிறார்களோ அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி மிகத் திறமையுள்ள விமானப் படையை இந்நாட்டில் வைத்திருக்க வேண்டு மென்பது தான், அரசாங்கக் கொள்கை. இப்படையில் போதுமான அளவிற்கு இந்தியர்கள் சேராததனால் தான், எல்லாக் கஷ்டமும். விமானங்களில் ஏறிப் பறக்கும் தொழிலில் வீர இந்திய இளைஞர்களுக்குக் குறை வில்லை. ஆனால் தரையில் வேலை பார்க்கிறவர்களின் படைகளில் தான் போதுமானபடி ஆட்கள் சேரவில்லை. இவர்களுடைய கடமைகளும் மிகவும் முக்கியமானவை தான். இதற்கு ஏற்றவர்கள், இதில் சேருவதற்குந் தகுந்த சம்பளம் முதலியவை ஏற்படாதது, இதற்குக் காரணமாயிருக்கலாம். சம்பளம் சம்பந்தப்பட்ட வரையில், இப்போது நன்மையானதா யிருக்கிறது. இந்தச் சம்பள உயர்வு நன்றாகப் பொதுமக்களுக்குத் தெரிந்தால் தான், இதில் ஏராளமாகச் சேருவார்கள்.

உயிர் வாழப் பொருள் தேட வேண்டும். பெருந் தொகைகளைச் செலவு செய்து இந்தியக் குடும்பத்தினர் தம் மகனை படிக்க வைக்கின்றனர். ஆகவே, இந்த மகன் படித்துத் தேறிய பிறகு, குடும்பத்திற்கு உதவி செய்வான் என்று எதிர்பார்ப்பது இயற்கை தான். ஏற்கெனவே சிறந்த முறையில் போராடிப் புகழ் பெற்றிருக்கும் படையில் அந்த இளைஞர் சேருவதால், அந்தக் குடும்ப வருவாய் குறைந்து விடாது.

**விமானத் தொழிலாளர்களுக்கு மாதந் தோறும் ரூ. 60 முதல் ரூ. 110 வரை கிடைக்கிறது. கமிஷன் பெருத உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 75 முதல் ரூ. 265 வரை கிடைக்கிறது. இவர்கள், கமிஷன் உத்தியோகஸ்தர்களாகவும் உயர்த்தப்படலாம்.** இந்தப் படை சிறிதாக இருந்தபோதிலும், 1940-ம் ஆண்டு முதல் இதுவரை கீழான பதவிகளிலிருந்து 380 பேர்கள் உத்தியோகஸ்தர்களாக உயர்த்தப் பட்டிருக்கிறார்கள். விமானப் படை விரைவில் பெருக வில்லை என்று குறை கூறியவர்களுமுண்டு. இப்போது உள்ள நிலைமையை எடுத்து அனைவருக்கும் தெரிவிக்க வேண்டியது அவர்களுடைய கடமை.

தகுந்த உடற்கட்டும் கல்வியும் உள்ளவர்கள் ஆரம்பத்திலேயே இன்ன சம்பளம் பெறலாமென்று, குறை கூறுகிறவர்கள் அவர்களுக்கு தெரிவிக்கவேண்டும். உயர்ந்த பதவிகளை யடையவும் சந்தர்ப்பமுண்டு என்றுரைக்க வேண்டும். சர்வ கலாசாலைகளில் நடைபெறும் விமானப் பயிற்சி வகுப்புக்களிலும் இவர்கள் உதவக் கூடும். படை திரட்டும் பிரசங்கங்கள் செய்யக் கூடும். நேர்முகமாகவும் சிபார்சு செய்யக்கூடும். இந்த வேலையில் நெடுநாட்கள் சேவகம் செய்யச் சந்தர்ப்பமிருக்கிறது. இந்திய விமானப் படையைச் சேர்ந்தவர்கள் முதல் தரமான தொழிற் பயிற்சி பெறுகிறார்கள். இந்தப் பயிற்சியை தொழில் போர்டாரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

### மூன்று வகை நன்மைகள்

இந்திய விமானப் படையில் சேருகிறவர்களுக்கு, யுத்தத்திற்குப் பிறகு மூன்று வகைகளில் நன்மையுண்டு :—

**1. இந்திய விமானப் படையிலேயே தொடர்ச்சியாக வேலை செய்யலாம்.**

**2. சமாதானம் ஏற்பட்ட பிறகு சிவில் விமான போக்குவரவு கட்டாயம் ஏற்படத் தான் போகிறது. அதில் சேரலாம்.**

**3. இங்கே அடையும் அறிவையும் திறமையையும், தகுதியையும் வேறு வகைக் கைத்தொழில்களில் பயன்படுத்தலாம்.**

யுத்தத்திற்குப் பிறகு இந்திய விமானப் படை எவ்வளவு பெரியதாயிருக்கு மென்றாவது, அதில் எத்தனைப் பேர்கள் வேலை செய்வார்க ளென்றாவது இப்போது சொல்ல முடியாது. என்றாலும் சிவில் விமானப் போக்குவரவுகள் அதிகப்படும் என்பது பற்றி கொஞ்சங் கூடச் சந்தேகமே கிடையாது. இந்த யுத்தத்தில், தேர்ச்சி யடைந்த ரேடியோ நிபுணர்கள், உலோகத் தொழிலாளர்கள், ஆயுதங்கள் செய்கிறவர்கள், படமெடுக்கிறவர்கள், மின்சார வேலைக்காரர்கள் ஆகியோருக்கு, யுத்தவேலை முடிந்த பிறகு, மற்றவர்களை விட முன்னதாக வேலை கிடைக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். இந்தப் புதிய படையிலும் இந்திய இளைஞர்கள் அதிகமாகச் சேரவில்லை. நல்ல வேலை கிடைக்கும் சந்தர்ப்பத்தை அவர்கள் இழந்து விடுகிறார்கள். இதற்குக் காரணம் அவர்களுடைய பெற்றோர்கள் தான். தம் மக்களை இந்தப் படையில் சேரும்படி அவர்கள் தூண்டி யிருக்க வேண்டும். சாதாரணமாகச் சிவில் உத்தியோகங்களுக்கும் மற்ற தொழில்களுக்குந் தான் தம் மக்களை அவர்கள் அனுப்புகிறார்கள். இதனால் ஏராளமான நஷ்டமுண்டாகி யிருக்கிறது. சிவில் விமானங்கள் கட்டுவதையும் தள்ளிப் போட்டு விட்டார்கள். என்றாலும் நல்ல வாழ்விற்கு, அவசியமானவற்றைச் செய்து காப்பாற்றுவது தான் சிறந்த வழி. இதில் கண்ணியமுண்டு. நாட்டிற்கும் அருந் தொண்டு ஆகும். இந்தப் படை தோன்றி, 10 வருஷங்களாகின்றன. இதன் வயதிற் கேற்ற அளவு அதைப் பெருக்கிக் கொள்ள இந்தியர்களால் முடியும்.'

—"ஸ்டேட்ஸ்மன்."

# தென் இந்திய கிராமவாசிகள் உதவி

## விமான நிலையங்களுக்குக் காவல்

ஒரு தென் இந்திய கிராமம். அதை யடுத்து ஒரு விமான நிலையத்தைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அது கட்டி முடிந்த உடனே, அது தம்மைப் பாதுகாக்கும் பொருட்டு, தம் செலவில் தான் கட்டப் பட்டது என்று, அந்தக் கிராமவாசிகள் உணர்ந்தார்கள்.

**ஆகவே, அதைத் தமக்குச் சொந்தமான சொத்துப் போல் நினைத்தார்கள். அந்தக் கிராம வாசிகளில் முக்கியமானவர்கள் தாமும் உதவி புரிவதாக விமானப் படை யதிகாரிகளிடம் கூறினார்கள்.**

அக்கிராம வாசிகள் பகற் காலத்தில் தம் விவசாயத்தைக் கவனித்துக் கொண்டு, இரவுகளில் முறை வைத்துக் கொண்டு, விமான நிலையத்தையும் அதை யடுத்துள்ள இடங்களையும் காவல் செய்தார்கள். இவர்கள் தாமாகவே இத்தொண்டு புரிகிறார்கள். இதன் பயனாக, இங்கு காவலுக் கென்று நியமிக்கப் பட்டிருந்த படைகள், வேறிடங்களுக்கு மாற்றப் பட்டு விட்டன. இவர்கள் இங்கிலாந்திலுள்ள 'ஹோம் கார்டு'களை யொத்திருக்கிறார்கள். இவர்களுடைய திறமையில் விமானப் படை யதிகாரிகளுக்கு மிகுந்த நம்பிக்கை யிருக்கிறது ஜப்பானியர்களை வெல்லுவதற்கு இவர்களும் உதவுகிறார்கள்.



# அஸ்ஸாம் எல்லையில் கொரில்லா படைகள்

## மிகுந்த ஆபத்தில் சிறந்த தொண்டு

சென்ற வருஷம் மே மாதம் ஜப்பானியர்கள் பர்மா வழியாக முன்னேறிக் கொண்டு வந்தார்கள். ஆனால் அஸ்ஸாம்-பர்மா எல்லையிலேயே அவர்கள் நின்று விடும்படி நேர்ந்தது. இங்கு நடைபெற்ற போராட்டத்தைக் குறித்து பத்திரிகைகளில் வெகுவாக விளம்பரமாக வில்லையானாலும், இடை விடாது போராட்டம் நடந்து கொண்டு தானிருந்தது. தொடர்ச்சியாக கொரில்லாப் படைகள் தம் போராட்டத்தை நடத்திக் கொண்டுதா னிருந்தன.

இந்த எல்லைப்புரம் மலைக்காடு. அடர்ந்து ஓங்கி வளர்ந்த மரங்கள் ஏராளம். ஆங்காங்கே ஒற்றையடிப் பாதைகள் மட்டும் காணப்படும். அங்குள்ள ஜனங்கள் சிதறிச் சிதறி வசிக்கிறார்களேயொழிய, ஒரு ஊரில் சேர்ந்து வசிப்பதில்லை. வேட்டையாடி உண்கிறார்கள் ; அல்லது புராதன முறைப்படி விவசாயம் செய்து சாப்பிடுகிறார்கள். இன்னும், வில்லும் அம்புந் தான் அவர்களுடைய ஆயுதங்கள். இவர்களுடைய தலைவர்கள் ஜப்பானியர்களோடு போர் தொடுத்து விட்டார்கள். ஆகவே, இந்த ஆயுதங்களைக் கொண்டு ஜப்பானியர்களோடு போராடுகிறார்கள்.

இந்தப் போராட்டத்தில் இவர்களுடைய பங்கு மிகவும் பாராட்டத் தக்கது. இவர்களைவிட முக்கியமானவர்கள் கொரில்லாப் படைகள். இந்தப் படையில், பிரிட்டிஷ் படைகளும் இந்தியப் படைகளும் சேர்ந்திருக்கின்றன. இவை ஜப்பானியர் கைப்பற்றி யிருக்கும் பகுதிகளுக்குள் போய் ஜப்பானியர்களைத் தேடுகின்றன ; அவர்களுடைய இராணுவ ஸ்தாபனங்களை அழிக்கின்றன. சிறந்த தகவல்களைச் சேகரித்துக் கொண்டு வருகின்றன. இந்த கொரில்லா படைகள் சுவர் வைத்தது போல் இடைவிடாது வேலை செய்து கொண்டிருக்கின்றன. அந்த மலைக்காட்டிலே தான் வசிக்கின்றன. எதிரி கைப்பற்றியுள்ள நாடுகளில் நெடு நாட்கள் சஞ்சாரம் செய்கின்றன. இந்த மலைக் காட்டிலிருந்து தான், போராடுவதற்கும், வேவு பார்ப்பதற்கும் இவை கிளம்புகின்றன. சில சமயங்களில் ஒரு உத்தியோகஸ்தரும் 6 சிப்பாய்களும் 2 அல்லது 3 கோவேறு கழுதைகளின் மேல் ஏற்றிப் போகக் கூடிய தளவாடங்களோடு கிளம்புவதுண்டு. சில சமயங்களில் பல கோவேறு கழுதைகள் இலேசான பீரங்கிகளைச் சுமந்து கொண்டு இப்படைகளுடன் போவது முண்டு.

### ஒரு கோஷ்டிக்கு நேர்ந்த கஷ்டங்கள்

ஒரு சிறு கிராமத்தி லிருந்து ஒரு சிறு கோஷ்டி கிளம்பியது. பல நாட்கள் காடு முரடான ஒற்றையடிப் பாதை வழியாக மிகவும் கஷ்டப்பட்டு நடந்து போயினர். அடர்ந்த மலைக்காடு. கொசு முதலிய பூச்சிகள் ஏராளம். காட்டு மிருகங்கள் எந்த நிமிஷம் வேண்டுமானாலும் தோன்றி கொன்று விடக் கூடும். கடைசியாக இந்தக் கோஷ்டி ஒரு காட்டின் ஓரத்திற்கு வந்து சேர்ந்தது. இவர்கள் அநேக நாட்களாக மலேரியாக் காய்ச்சலோடு அவதிப் பட்டுக் கொண்டிருந் திருக்கிறார்கள். அவர்களில் 3 பேர்கள் இன்னும் கொஞ்ச நாட்கள் வரை மேற்கொண்டு போக முடியாத நிலைமையி லிருந்தனர். ஆகவே, அங்கேயே சில நாட்கள் தங்க வேண்டு மென்று முடிவு செய்தனர்.

25 மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு கிராமத்தில் ஜப்பானியர்கள் பொது ஜனங்களைக் கஷ்டப்படுத்திக் கொண்டிருப்பதாக செய்தி கிடைத்தது. எனவே, ஒரு உத்தியோகஸ்தரும் 2 சிப்பாய்களும் கிளம்பினார்கள். வழியில் ஒரு ஓடை. இதைக் கடக்க வேண்டி யிருந்தது. இந்தக் காடுகளில், ஓடைகளில் வெள்ளம் பெருகிப் பரவி அகன்ற ஆறுகள் போல் காட்சி தரும். இதைக் கடப்பது அவர்கள் எதிர் பார்த்ததை விடக் கடினமான வேலையா யிருந்தது. ஒரு சிப்பாய் ஒரு கயிற்றைப் பிடித்துக் கொண்டு வெள்ளம் புரண்டோடும் அந்தக் காட்டாற்றை நீந்திக் கடக்க வேண்டி நேர்ந்தது. பிறகு ஒரு கம்பிப் பாலம் அமைத்து அதன் உதவியால் கோவேறு கழுதைகளையும், அந்தக் கோஷ்டியினரையும் அக்கரை கொண்டு போய்ச் சேர்க்க நேர்ந்தது. இவ்வளவு கஷ்டப்பட்டு, மிகுந்த முன் ஜாக்கிரதை யோடு இந்தக் கோஷ்டி அந்தக் கிராமத்தை யடைந்தது. அந்தக் கிராமத்தி லிருந்த ஆடு மாடுகளைக் கொன்று வீடுகளைக் கொள்ளை யடித்து அங்கிருந்த உணவுப் பொருள்களை எல்லாம் எடுத்துக் கொண்டு சில மணி நேரத்திற்குமுன் தான், ஜப்பானியர்கள் போய் விட்டார்கள் என்னும் தகவல் கிடைத்தது.

இந்தக் கோஷ்டியினர் திரும்பவும் அந்தக் காட்டின ஓரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அதன் பிறகு வேறொரு கிராமத்தில் 100 ஜப்பானியர்கள் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. இந்தக் கோஷ்டியினரை விட அதிகம் பேர்களல்லவா ஜப்பானியர்கள். என்றாலும் இந்தக் கோஷ்டி அஞ்சவில்லை. அந்தக் கிராமத்தி லிருந்து சில ஜப்பானியர்களைக் கைதிகளாகப் பிடித்து வந்து, தகவல்களை விசாரித்தார்கள். இந்தக் கோஷ்டியினர் 3 வாரங்கள் வரை அந்த மலைக் காட்டில் வேலை செய்து விட்டுத் தம் தலைமை ஸ்தானத்திற்குச் சிறந்த தகவல்களோடு வந்து சேர்ந்தார்கள். பர்மாவிலுள்ள ஜப்பானியர்களுக்கு இந்த கொரில்லாப் போராட்டம் மிகுந்த கலக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது. இந்தக் கோஷ்டியினர் மிகவும் நுணுக்கமாகத் தகவல்களைச் சேகரித்துக் கொண்டு வருகின்றனர். அதனால், எதிரிகளின் இரகசியமான இடங்களையும் இராணுவக் குறிகளையும் பார்த்து நேச தேச விமானப் படைகள் குண்டுகள் எறிய முடிகிறது.

# நான்கு தூண்கள்

ரஷ்யர்கள் தம் சமூக அரசியல் ஸ்தாபன முறைகளை யொட்டி, வாழ்க்கையை நிலை நாட்டிக் கொள்ளும் பொருட்டுத் தான், செம்படை ஏற்பட்டது. தன் சகிப்புத் தன்மையாலும், பலத்தினாலும், வெற்றிகளாலும் இந்தப் பொறுப்பையும் செம்படை மிஞ்சி விட்டது. இந்தப் புதிய அநாகரிகத்தை வெல்லும் பொறுப்பு நான்கு வல்லரசுகளுக்கும் உண்டு. இவை அதை மெய்ப்பித்து விட்டன. ஆகவே எதிர் காலத்தில் இந்த நான்கு வல்லரசுகளும் 4 தூண்களாக அமையும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், சீனக் குடியரசு, சோவியத் யூனியன் ஆகிய இந்நான்கு வல்லரசுகளும் சமூகத் துறையிலும், அரசியல் முறையிலும் பெரிதும் மாறு பட்டவை. இந்த யுத்த நெருக்கடியில், இந்த நான்கு வல்லரசுகளின் நோக்கங்களும் அவசியங்களும் ஒரே மாதிரியானவை என்று உணர்ந்து கொண்டன. எதிர் காலத்தில் இந்தப் பொது நோக்கம், வேற்றுமைகளை எல்லாம் ஒழித்து ஒற்றுமை ஏற்படக் கூடிய நிலைமையை அமைக்க வேண்டி யிருக்கிறது. இப்படிப்பட்ட ஒற்றுமை அமைவதற்கு ஆதாரமாக, சோவியத் யூனியனும் பிரிட்டனும் ஒரு 20 வருஷ ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன.

—"டைம்ஸ்"

# கணக்கிலே 'ஸைபர்'

'அஞ்சும் நாலும், எட்டு, எட்டு, எட்டு' என்று ஒரு பையன் கணக்குப் போடுகிறான் என்று வைத்துக் கொள்வோமே! அவன் போடுகிற கணக்கு, எவ்வளவு பெரிய பெருக்கலாகவோ, வகுத்தலாகவோ தான் இருக்கட்டுமே. அதன் முடிவு சரியாகி இருக்குமென்று நினைக்கிறீர்களா? இந்தக் கணக்கிலே அந்தப் பையனுக்கு, வாத்தியார் என்ன 'மார்க்' கொடுப்பார்? சரியான 'ஸைபர்' தான் அல்லவா? 'நடுவிலே ஒரு இடத்தில் தானே கணக்கு தப்பு ஸார்?' என்று கேட்டால், வாத்தியார் சிரிக்க மாட்டாரா? நடுவிலே போடுகிற ஒரு சிறு தப்புத் தான் கடைசி வரை தப்பிலேயே கொண்டு விட்டு விடுகிறது. இது தெரிந்த விஷயம் தானே!

ஹிட்லர் பையன் இருக்கிறனே, அவன் கூட சமீப காலத்தில் இந்த மாதிரி தப்புக் கணக்குப் போட்டு விட்டு, சரியான 'கோழி முட்டைகளை' வாங்கிக் கொண்டு, அதோடு பூசைக் காப்பையும் பெற்றுக் கொண்டு தவி, தவி என்று தவிக்கிறான்.

ஆனால் ஆரம்பத்திலே, அவன் கணக் கெல்லாம் போட்ட பொழுது, பிரமாத நம்பிக்கையோடு தானிருந்தான். கணக்கெல்லாம் சரியாக இருக்கும்; நல்ல மார்க் கிடைக்கும், பரீக்ஷை பாஸாகும். அப்புறம் வாழ்க்கையிலே ரொம்ப சௌகரியங்கள் எல்லாம் கிடைக்கும் என்று நினைப்பவன் போலவே தான் ஹிட்லரும் இருந்தார். அவர், கணக்கு மத்தியிலே அஞ்சும் நாலும் எட்டு என்று காட்டிய சிறு தவறுதலாலே, அவருடைய பிளான்கள் எல்லாம் பாழாப் போச்சு.

அவர் போட்ட யுத்தக் கணக்குகளிலே ருஷ்யா மீது படையெடுக்கத் தீர்மானித்தது ஒரு தவறு தான். அது காரணமாக ஜெர்மனியின் அளவை பெருக்க வைக்க அவர் போட்ட திட்டங்கள் எல்லாம் பாழாகி விட்டன. உலகிலே தன் நிகர் அற்ற தேசம் ஜெர்மனி என்ற பெயரை அவர் சம்பாதிக்கப் பார்த்தார். ஆனால் இன்று அவர் இருக்கும் நிலைமை என்ன? உலகிலேயே அதிக அவதிக் குள்ளான தேசத்தார் ஜெர்மன் தேசத்தார் தான் என்று உலகோர் சொல்லும் படி ஆகி விட்டது நிலைமை. அது மட்டு மில்லை; இத்தகைய துர்ப்பாக்கியத்திற்கு உள்ளான ஜெர்மனியோடு சேர்ந்த அச்சு நாட்டாருக்கும் இதே கதி தான் ஏற்படும் என்று உலகோர் நினைக்கத் தொடங்கி விட்டார்கள்.

பாவம்! ஹிட்லர் ஏதேதோ பிரமாதமாக 'பிளான்'கள் போட்டுக் கொண்டிருந்தார். 'ருஷ்யா மீது திடுதிப் என்று படை யெடுத்திருக்கிறோம்; நாம் போடுகிற போட்டை ருஷ்யரால் சமாளிக்கவே முடியாது. நமது அடி தாளாது ருஷ்யா அப்படியே சீட்டுகளால் ஆன வீடு மாதிரி புலு புலு என்று உதிர்ந்து விழுந்து விடும்!' என்று ஹிட்லர் எண்ணி யிருக்கக் கூடும். அதற் கப்பால், ருஷ்யாவில் சென்ற இரண்டு ருஷ காலங்களில் அவரது சைனியங்கள் பெற்ற வெற்றிகளைக் கண்டு, அவர் மனதில் கொஞ்சம் திருப்தி அடைந்திருக்கலாம்.

## ஹிட்லர் பேராசை

அது மட்டு மில்லை, ருஷ்யாவில் மிகச் செழிப்பாக உள்ள பிரதேசம் யூக்ரேன் தான். காகஸஸ் பிரதேசத்திலே நல்ல எண்ணெய் வயல்கள் இருக்கின்றன. யூக்ரேனிலே கோதுமை விளைகிறது. 'பிள்ளை பிறக்கிறத்துக்கு முன்னாலே பேர் வைக்கிறது' என்பார்கள். அது மாதிரி யூக்ரேன் நிரந்தரமாகத் தம் கையிலே தங்குமா என்பது திட்டமாகத் தெரிகிறதற்கு முன்னாலே, ஹிட்லர் என்ன செய்தார் தெரியுமா? யூக்ரேன் பிரதேசத்திலே ஜெர்மன் துருப்புக்கள் புகுந்ததுமே, 'வாங்கய்யா ஜெர்மானிய மிராசுதார்களே! சீக்கிரம் வாங்கய்யான்னா, ஆமை நடையிலே வர்ரீங்களே! இதோ இந்த யூக்ரேன் பிரதேசத்தைத் துண்டு போட்டுக் கொள்ளுங்கள். ஜோராக கோதுமை பயிர் செய்யுங்கள். இங்கேயே நிலக்கரியும் ஏராளமாகக் கிடைக்கிறது. உங்கள் சமர்த்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். முன்னாலே போய்க் கொண்டிருக்கும் சைனியத்திற்கும் நீங்கள் தான் உணவு சப்ளை செய்ய வேண்டும். அதோடு, பெரிய பெரிய தொழிற்சாலைகளை எல்லாம் இங்கு கட்டச் செய்யுங்கள். ஜெர்மனியிலே இருந்து யந்திரங்கள் எல்லாம் வரட்டும். எப்படி நம்ப பிளான்? நான் சண்டை போடுகிறேன், கொஞ்சம் ஆட்கள் சேதமாகிறது என்றால், அதுக் கேற்ற பலன் இருக்கிறது பார்த்தீர்களா? சாப்டுங்கள் திருப்தியாக! நம்ப ஜெர்மனிக் காரர்களின் வயிறு நிறைய வேண்டுமென்பதற்காகத் தானே நான் இவ்வளவு பாடு படுகிறேன்' என்ற தினுஸிலே, ஹிட்லர் சொன்னாராம்.

ஆனால், நடந்த தென்ன? ஹிட்லரின் கனவை எல்லாம் தகர்த் தெறிந்து கொண்டிருக்கிறார்கள் ருஷ்யர்கள். காகஸஸை அநேகமாக ஹிட்லர் மறக்கும்படியான கட்டம் வந்து விட்டது. இனிமேலே காகஸஸ் என்ற பெயரே அநேகமாக யுத்த அறிக்கைகளிலே தென்படாது போலிருக்கிறது. யூக்ரேனிலும் ருஷ்யர்கள் பிரமாதமான வெற்றிகளைப் பெற்று வருகிறார்கள். அவர்கள் திரும்பக் கைப்பற்றி வரும் இடங்கள் பலவற்றுள், ரயில்களிலே, வண்டி வண்டியாக ஆலை இயந்திரங்கள் நின்று கொண்டிருக்கின்றன. அவற்றை ருஷ்யர்கள் உபயோகித்துக் கொண்டு, ஹிட்லருக்கு உள்ளூர 'தாங்ஸ்' சொல்லுவார்கள் என்று நினைக்கிறோம்.

உடம்பு இல்லாமற் போனாலும் போகட்டும் ஐயா, கை தப்பினால் போதுமே என்று துடிப்பவனை யொத்து, ஸ்டாலின் கிராடு போனால் போகட்டும்; காகஸஸையும் இழந்தாச்சு பரவாயில்லை. யூக்ரேனிலும் கைக் கெட்டியது வாய்க்கு எட்டவில்லை. அதுவும் போகட்டும். இதோடேயாவது நிற்க வேண்டுமே பகவந்தா!' என்று ஹிட்லர், பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கக் கூடும் என்று எதிர்பார்ப்பது அநேகமாகத் தவறாக இருக்காது. ருஷ்யப் படைகள் வெற்றி மேல் வெற்றி பெற்று, உத்சாகத் தோடு, யூக்ரேன் பிரதேசத்தின் தலை நகராக உள்ள கீவ் நகரை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறார்களாம். தவிர, ருஷயப் படைகள் ஜெர்மனியின் கிழக்குக் கோடி எல்லைக்கு இருநூறு மைல் அருகே சென்று விட்டனவாம். மத்யப் பகுதியிலே, அதாவது மாஸ்கோவிற்கு மேற்கே மொஜெய்ஸ்க் என்றொரு இடம் இருக்கிறது. அங்கே ருஷ்யர்கள் புதிதாகப் பெரியதொரு தாக்குதலை ஆரம்பித்து விட்டார்களாம். வடக்கே லெனின் கிராட் சமீபத்திலும் செஞ்சேனை வெற்றி கண்டு வருகிறது. செஞ்சேனையின் இத்தகைய வெற்றிகளுக்குக் காரணம் என்ன என்பதை ருஷ்யப் பத்திரிகை ஒன்று அழகாக எடுத்துக் காட்டி யிருக்கிறது.

## மக்களே ராணுவம்; ராணுவமே மக்கள்

'ருஷ்யர்களிடை ஆள் சேதம் அதிக மிருக்கலாம். ஆயுத நஷ்டம் அசாததியமாக இருக்கலாம். ஆனாலும் அவர்கள் இப்பொழுது பெற்று வரும் வெற்றிகளுக்குக் காரணம், அவர்களது செஞ்சேனைப் படைகளுக்கும், ருஷ்ய மக்களுக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தம் தான். மக்களின் க்ஷேமத்தை அவர்கள் மறப்பதே இல்லை. ராணுவத்தின் வயிறு நிறைந்தால் போதும் என்று இருப்பதில்லை. மக்களே ராணுவம், ராணுவமே மக்கள் என்றிருக்கிறார்கள் அவர்கள். அதனால் தான், வற்றாத ஆள் பலத்தை ருஷ்யா அடைந்திருக்கிறது. அச்சுக் கொள்ளைக் காரர்களுக்கும் நமக்கு முள்ள மூல வித்தியாசம் இது தான். அங்கே ராணுவத்திற்கு அடி பிடி கட்டாயத்தின் பேரில் ஆள் சேர்க்க வேண்டும். ஆனால் ருஷ்யாவிலோ, தேச பக்தி ததும்ப, உள்ள ருஷ்ய மக்கள், ஆண், பெண் என்ற வித்தியாசமே இல்லாமல், தங்களது தாய் நாட்டைக் காக்க, தாமே பொங்கி எழுந்த வண்ண மிருக்கிறார்கள். கூலிக்கு மாரடிக்க வருகிறவன் எவ்வளவு நேரம் தான் மாரடிப்பான்? உடம்பிலே வலி தோன்றினால் மெள்ள நழுவி விட மாட்டானா? அதே போல், அச்சு நாட்டுப் படைகளிலேயும் பெரும்பான்மையோருக்கு, இந்தப் போரில் சிரத்தையே கிடையாது. ருஷ்யர்கள் விஷயம் அம்மாதிரி அல்ல. இது தான் வித்தியாசம்' என்று அப் பத்திரிகை எடுத்துக் காட்டுகிறது.

ருஷ்யர்களின் வீரத்தைக் கண்டு உலகமே பிரமிக்கிறது. ஹிட்லர் கீழ்த் திசையிலேயே இருக்கிறாராம். எது வந்தாலும் சரணடைவ தில்லை என்று சொல்லும்படி, சொல்லி அனுப்பி யிருக்கிறாராம். இரண்டாந் தடவையாக, அவர் ஒரு முக்கியமான நாஸி விழாவின்போது பிரசன்னமாக இருக்க முடியாது செய்து விட்டார்களாம் 'பாவி' ருஷ்யர்கள்.



ருஷ்யர்கள் ஆனாலும் ரொம்ப மோசம் தான். எது வேண்டுமானாலும் செய்யலாம், ஏமாற்றக் கூடாது பாருங்கள்! சுண்டைக்காய் மாதிரி உள்ள பின்லாந்து தேசத்தோடு, அவர்கள் சில வருஷங்களுக்கு முன் சண்டை போட்டார்களோ இல்லையோ! அப்பொழுது அவர்கள் ஏதோ ரொம்பவும் திணறுவது போல பாசாங்கு செய்தார்கள். அதோடு சக்தி மிக்க ஆயுதங்களை யெல்லாம் அப்பொழுது வெளியிலேயே எடுக்க வில்லை அவர்கள். அப்பொழுது நடந்த யுத்தத்தையும், அதில் உபயோகப்படுத்தப் பட்ட ஆயுதங்களையும் ஜெர்மானியர்கள் ஜாக்கிரதையாகவே கவனித்து வந்தார்கள். 'பு' இவ்வளவு தானா உங்க கிட்டே இருக்கிற சரக்கு! இதுக்கு மேலே இருக்கு நம்ம கிட்டே! அதனாலே பயமில்லை' என்று ஹிட்லர் கோஷ்டியார் எண்ணி விட்டார்கள். ஆனால், ருஷ்யப் படைகள் ஜெர்மானியருடன் சண்டை போடத் தொடங்கியதுமே, ஒவ்வொரு முரட்டு ஆயுதத்தையும் வெளியில் எடுத்து விடுகிறார்களே பார்க்கலாம். இப்படி ஏமாற்றலாமா?

இதைத் தான் நாஸிப் பிரசாரகர்கள் சொல்லிச் சொல்லி அழுகிறார்கள். அதிருஷ்ட தேவதை ருஷ்யர்கள் பக்கம் கொஞ்சம் திரும்பி யிருக்கிறதாம். அவர்கள் இந்த யுத்தத்தில் பல புது விஷயங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறார்களாம். நாங்களும் தான் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறோம். 'சமயம் வரும்; அப்பொழுது காட்டுவோம் எங்கள் வித்தைகளை என்கிறார் அவர்.

## ஜெர்மானியர் ஈடு செய்தே யாகவேண்டும்.

இவ்வளவு காலமாக ஜெர்மானியர் சும்மா இல்லை, தாங்கள் கற்ற வித்தைகளை யெல்லாம் காட்டிக் காட்டித் தான், 8 லக்ஷத்துச் சொச்சம்பேர்களை ருஷ்யாவில் இழந்திருக்கிறார்கள். 112 பட்டாளங்கள் சட்னியாகி யிருக்கின்றன. விலை மதிப்பற்ற யுத்த சாதனங்கள் பாழாகி யிருக்கின்றன. உலக நாகரிகத்தைப் பாழ்ப் படுத்த வந்த இந்த ஜெர்மன் புண்யாத்துமாக்களை இந்த உலகம் என்றாவது மறக்க முடியுமா! போலந்தில் உள்ளோரையும், யூதர்களையும் ஜெர்மானியர் சித்திரவதை செய்ததையும், நேச தேசத்தார் என்றும் மறக்க முடியாது. அதற்கெல்லாம் ஜெர்மானியர் ஈடு செய்தே யாகவேண்டும் என குடியேற்ற நாட்டு மந்திரி ஸீ. ஆர். ஆட்லி ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டிருக்கிறார்.

ருஷ்யர்கள் ஊரல் என்ற முக்ய ஸ்தலத்தையும் கைப்பற்ற முயன்று வருகிறார்கள். தெற்கே, அஸாவ் என்ற கடற் கரை யோரத்திலே, பயங்கரமான போர்கள் நடந்து வருகின்றனவாம். மேற்றிசையிலிருந்து 22 டிவிஷன் படைகளை அவசர அவசரமாக ஹிட்லர் ருஷ்யப் போர் முனைக்குத் துரத்தி யிருக்கிறாராம். நாஸி விமானங்களும், டாங்கிகளும் ருஷ்யரது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனவாம். டானெட்ஸ் நதி சமுத்திரத்தில் கலக்கும் இடத்திற்கு அருகே உள்ள செழிப்பான பிரதேசத்தில் நடக்கும் இந்த யுத்தம், ருஷ்யரது முன்னேற்ற வேகத்தைச் சற்று குறைத்திருக்கிறாப் போலிருக்கிறது. சில கிராமங்கள் இங்கே அடிக்கடி கைமாறினவாம். இதோடு, பனி வேறு உருக ஆரம்பித்து விட்டதாம். இந்த அவகாசத்தை நாஸிகள் பயன் படுத்திக் கொள்வார்கள் என்று தோன்றுகிறது. ருஷ்யப் படைகளும், ஆரம்ப ஜோரில் வெகு தூரம் வந்து விட்டன. அவற்றிற்கு மென் மேலும் உதவி அனுப்ப, சௌகரியமான ரஸ்தாக்கள் இல்லை. ஆகவே மெல்ல மெல்ல நிறைய சாமான்களைக் கொணர்ந்து சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியமும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதெல்லாம் எதிர் பார்த்தது தான்! இனி ருஷ்யர்கள் சும்மா விட்டு விடமாட்டார்கள். தங்களுடைய கையிருப்பு சாமான்களை அதிகப் படுத்திக் கொள்ள ருஷ்யர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதைப் பார்த்து, 'ருஷ்யர்களின் முன்னேற்றம் தடை செய்யப் பட்டுவிட்டது' என்று கொக்கரிக்கிறார்களாம் நாஸிப் பிரசாரகர்கள். 'ராஜா போகிற பாதையில் நின்று, ராஜாவை நிறுத்தி விட்டேண்டா!' என்று மார் தட்டிக் கொண்டனாமே ஒரு பைத்தியம்; அவன் கதை தான் இப்பொழுது நமக்கு நினைவிற்கு வருகிறது!

## ட்யூனிஸியாவிலே!

ருஷ்ய நிலைமை இப்படி யிருக்க, ட்யூனிஸியாவிலே, பிரிட்டிஷ் எட்டாவது சேனை எனும் ரதம் திரும்பவும் கிளம்பி விட்டாற் போலிருக்கிறது. ட்யூனிஸியாவில், கடற்கரை யோரத்தில் உள்ள மாரெத் அரண்களை இப் படை பல இடங்களில் துளைத்து விட்டது. நெடுந்தூரம் சுடும் பீரங்கிகளையும், விமானங்களையும், இப் படை வெகுவாக உபயோகித் திருக்கிறது. ரோமலும், எவ்வளவு நாள் இந்த அரணில் தொத்திக் கொண்டு, பிரிட்டிஷ் படைகளைத் தடுத்து நிறுத்த முடியுமோ, அதுவரை முயன்று பார்த்தார். முடியவில்லை.

மத்ய ட்யூனிஸியாவிலே, போன வாரம் ரோமலின் படைகள் அழகாக மூக்குடைபட்டு, அலறி அடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தன. காஸ்ரைன் என்ற ஊரையும், அதனருகே உள்ள கணவாயையும் பிடித்துக் கொண்டு, அப்பாலே உள்ள தாலோ என்ற இடத்தைக் கைப்பற்றி, நேச தேசத்தாரின் நிலைமையைச் சிக்கலாக்க முயன்றன ரோமலின் படைகள். அவற்றிற்கு வான் ஆர்னீமின் படைகளும் உதவி புரிந்தன. ஏமாந்திருந்த சமயம் பார்த்து, புதிதாக வந்துள்ள அமெரிக்கப் படைகளை மேற்கண்ட படைகள் தாக்கி வெற்றி கண்டன.

ஆனால், பிரிட்டிஷ் படைகள் சரியான சமயத்திலே குறுக்கிட்டு, மானத்தைக் காத்ததோடு, அமெரிக்கப் படைகளுக்கு உத்சாக மூட்டி, இழந்த பிரதேசங்களைத் திரும்பக் கைப்பற்ற உதவின. பறந்தோடும் அச்சுப் படைகளை பிரிட்டிஷ் அமெரிக்க விமானங்கள் த்வம்சம் செய்தன. நேச தேசப் படைகள் மீது பாய்ந்தால், எதாவது பெட்ரோல், கிட்ரோல் கிடைக்குமென ஆசை யோடு எண்ணி வந்தார்கள் போலிருக்கிறது அச்சு நாட்டார். 'உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா, அதுவும் போச்சுடா அரோஹரா' என்ற கதையாக, புதுப் பெட்ரோல் ஏதும் கிடைக்காதது ஒருபுற மிருக்க, கையில் இருந்ததும் போய்விட்டது.

ட்யூனிஸியாவிலே, இப்பொழுது சர்ச்சில் டாங்கிகள் அதி பயங்கரமாகப் போராடுகின்றனவாம். ஒரு போரிலே 14 ஜெர்மன் டாங்கிகளை ஒன்பது சர்ச்சில் டாங்கிகள் எதிர்த்து, அவற்றில் நான்கை நாசமாக்கி விட்டனவாம். நேச தேசத்தினர், ட்யூனிஸியாவில் ஏராளமான விமானங்களைச் சேர்த்து வருகிறார்களாம். சீக்கிரமே ட்யூனிஸியாவில் உள்ள அச்சு ஸ்தலங்களை பெரும் போடாகப் போட்டு நொறுக்கப் போகிறார்களாம். மத்யதரைக் கடலிலே நேச தேசத்தினர் தம் இஷ்டப்படி செல்ல முடிகிறது. அச்சு நாட்டார் ட்யூனிஸியாவிற்குக் கொண்டு சேர்க்க முயலும் சாமான்களை, கப்பல்களோடு மூழ்கடித்து வருகின்றன நேச தேச நீர் மூழ்கிகளும், விமானங்களும். ட்யூனிஸியப் போர் எதிர் பார்த்ததை விடக் கடுமையானதாகவும், நீடித்து நடப்பதாகவும் தானிருக்கும் போலிருக்கிறது. இதிலே அதிகச் சேதத்திற்கும் தயாராக இருக்க வேண்டுமென அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்து வருகிறார்கள். ஆனாலும் இறுதி வெற்றியைப் பற்றி யாரும் சந்தேகப் படவில்லை.

## இன்னும் இருக்கு பெரிய விருந்துகள்.

பிரிட்டிஷ் விமானிகளும், அமெரிக்க விமானிகளும் சென்ற வாரம் இரண்டு நாட்கள் இடைவிடாது, ஜெர்மன் நகரங்களையும், வில்ஹெல்ம் ஷேவன், டாக்கார், பிரெஸ்ட் போன்ற இடங்களையும் தாக்கி, படுசேதத்தை உண்டு பண்ணி விட்டார்கள். இம்மாதிரி இது வரை கண்டதுமில்லை, கேட்டதுமில்லை' என்றே அந்த இடங்களில் உள்ளவர்கள் எல்லாம் கூறிக் கொண்டிருப்பார்கள் இப்போ. அவற்றை நேச தேச விமானிகள் நின்று கேட்கக் கூட விரும்ப வில்லை, 'இது என்ன பிரமாதம்? இன்னும் இருக்கு பெரிய விருந்துகள்' என்றுதான் இந்த விமானிகள் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஜெர்மனியைத் தாக்கு முன், அதனுடைய நீர் மூழ்கிக் கப்பல் பலத்தை ஒடுக்க வேண்டாமா? அதற்கே இத்தனை ஏற்பாடுகளும், வாண வேடிக்கைகளும், உத்சவங்களும்.

# ஷேக் ஜெய்னூ பகதூரின் சரித்திரம்

## 36 வருஷம் கப்பல் உத்தியோகம்

புது வருஷ கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்ட போது ஷேக் ஜெய்னூவும் 'ஆர்டர் ஆப் தி பிரிட்டிஷ் எம்பையர்' என்னும் பட்டத்தையும் 'பகதூர்' என்னும் பட்டத்தையும் பெற்ருர். இவர் சென்ற 36 வருஷங்களாக கப்பல்களில் சேவகம் செய்து கொண்டிருக்கிருர். இப்போது கமிஷன் பதவி பெற்று, ஒரு கப்பலில் 'போட்ஸ்வெய்ன்' (முக்கிய அதிகாரி) ஆக இருக்கிருர்.

1906-ம் வருஷம் 'மின்டோ' என்னும் வியாபாரக் கப்பலில் வேலைக் கமர்ந்தார். அங்கே 9 வருஷங்கள் வேலை பார்த்தார். படிப்படியாகப் பதவியில் உயர்ந்து 1913-ம் வருஷம் சுக்காணியாஞர். 1914-ம் வருஷம் மகா யுத்தம் ஆரம்பமானது. அப்போது 'மின்டோ' செங்கடலில் காவல் புரியப் போனது. "கோனிக்ஸ் பாக்" என்னும் ஜெர்மன் க்ரூய்சர் கப்பலைத் தடுக்கும் பொருட்டு, இந்த 'மின்டோ' அனுப்பப்பட்டது.

பிறகு இவர் வாரண்டு உத்தியோகஸ்த ராஞர். 1925-ம் வருஷம் முதல் 1933-ம் வருஷம் வரை பயிற்சிக் கப்பலில் ஆசிரியராக இருந்து மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். பிறகு "ஹிந்துஸ்தான்" "இன்வெஸ்டிகேடர்" என்னும் கப்பல்களில் வேலை பார்த்தார். 1938-ம் வருஷம் கமிஷன் பதவி பெற்று, 'போட்ஸ்வெய்ன்' என்னும் அதிகாரியாஞர். இந்த மகா யுத்தம் ஆரம்பமானது முதல், கராச்சியில் ராயல் இந்திய கடற்படையில், உயர்தர மாணவர்கள் படிக்கும் "பகதூர்" என்னும் கப்பலில் வேலை பார்த்து வருகிருர்.

கப்பற் படையில் சேருகிறவர்களுக்கு, இவருடைய வாழ்க்கை ஒரு நல்ல முன் மாதிரியா யிருக்கும்.

---

(3-ம் பக்கம்—தொடர்ச்சி.)

யும் செய்து யுத்தத்தை நடத்தும்படி உதவ, இந்தக் கம்பெனி மிகுந்த கஷ்டங்களுக்கு ஆளாகி யிருக்கிறது. "கஷ்டங்கள்" என்னும் வார்த்தை இங்கே ஊன்றிக் கவனிக்கத் தக்கது. இந்தக் கஷ்டங்களைப் போக்க வேண்டி, மஞ்சூரியாவைச் சூறையாட ஜப்பான் முயற்சிக்கிறது. பல உலோகங்களைக் கொண்டு ஒரு புதிய கலவையைக் கண்டு பிடித்திருப்பதாகவும் இதைக் கொண்டு இலகுவில் விமானங்கள் கட்டலா மென்றும் பிப்பரவரி மாதம் 10-ம் தேதி படேவியா ரேடியோவில், அறிவித்தது. சென்ற இரண்டு வருஷங்களில், மஞ்சூரியாவில் விமான உற்பத்தி மிகவும் அதிகமா யிருக்கிற தென்றும், அலியூமினிய வெடி குண்டுகளைக் கொஞ்சச் செலவில் ஏராளமான மின்சார சக்தியைக் கொண்டு செய்து முடிக்க முடிகிற தென்றும், மஞ்சூரிய இண்டஸ்டிரியல் டெவலப்மென்ட் கார்ப்பொரேஷனின் தலைவர் கூறிஞர். அதாவது ஜப்பானியர்கள் மஞ்சூரியாவை இன்னும் அதிகமாகச் சுரண்டுகிருர்கள் என்று தான் இதற்கு அருத்தம்.

ஜப்பானுக்குள்ள மற்ருெரு பிரசினை, பருத்தி. ஜப்பானிய ஜனப் பிரதிநிதிகள் சபையில் கேட்கப்பட்ட கேள்விக்கு வியாபார மந்திரி கிஷி அளித்த விடையை ரேடியோ மூலம் பிப்ரவரி 15-ம் தேதி அறிவித்தார்கள். அதாவது :—

"ஜப்பானுக்குத் தேவையான அளவு பருத்தி இங்கே கிடைப்பதில்லை ; ஆகவே, இந்தப் பிரசினையைத் தீர்க்க அரசாங்கத்தார் தன்ஞலான எல்லா முறைகளையும் கையாளுவார்கள். ஜப்பானுக்குப் பருத்தி உற்பத்தித் திட்டத்தின் முக்கிய ஸ்தானமாக சீஞ தான் இருக்கும்."

ஜப்பானுக்கு ஏராளமாகப் பருத்தி வேண்டு மென்னும் காரணத்திஞல், தென் கிழக்கு ஆசியாவின் உள் நாட்டுப் பொருளாதார நிலையையே சீர்குலைக்கிருர்க ளென்று இதிலிருந்து விளங்கும். இந்த யுத்தத்தை மேலும் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்த வேண்டுமாஞல், கீழ்க்கண்ட பொருள்கள் மிகவும் அவசியம் :—பெட்ரோலியம், இரும்பு, சமைப்பதற்கு உபயோகப்படும் நிலக்கரி, மஞ்ஞேசிலை, தாமிரம், நிக்கல், டங்ஸ்டென் முதலியன. இவை யெல்லாம் வெளி நாடுகளிலிருந்து தான் ஜப்பானில் இறக்குமதியாக வேண்டும். யுத்தத்திற்கு முன்பு 32 லட்சம் டன் இரும்பு, 2,224 டன் மஞ்ஞேசிலை, 256,000 டன் நிக்கல், 11,300 டன் தாமிரம் முதலியவற்றை ஜப்பான் இறக்குமதி செய்தது. **இவை எந்த நாடுகளிலிருந்து ஏற்றுமதி யாயினவோ, அந் நாடுகளிலிருந்து, ஜப்பானுக்கு எதுவும் இப்போது ஏற்றுமதியாக முடியாது.**

**ஜப்பான் ஏற்றுமதி இறக்குமதிப் பிரசினை.**

ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தமாக ஜப்பானுக்கு பலத்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஏற்றுமதி இறக்குமதி நிலைமை கஷ்டமாயிருக்கிற தென்றும், மூழ்கிப் போன கப்பல்களை மீண்டும் தேடி எடுக்க முயற்சிப்பதாகவும் பிப்பிரவரி மாதம் 10-ம் தேதி டோக்கியோ ரேடியோ அறிவித்தது. அதே நாளில் படேவியா ரேடியோ என்ன சொன்னது தெரியுமா? "ஜப்பானியக் கப்பல்கள் கட்டுவதற்கு வேண்டிய இரும்பு முதல் மற்ற எல்லாப் பொருள்களையும் வேண்டிய அளவிற்கு மஞ்சூரியாவிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். வேறெங்கிருந்தும் இறக்குமதி செய்ய வேண்டிய அவசிய மில்லை." ஆகவே, தன் ஆதிக்கத்திற் குட்பட்ட ஒவ்வொரு நாடும் தனக்கு ஏதேனும் வேண்டிய அளவிற்குக் கொடுத்து உதவ வேண்டு மென்று ஜப்பான் விரும்புகிறது. அப்போது தான ஜப்பான் வியாபாரக் கப்பல்கள் தடையின்றிப் போய் வரமுடியும். ஜப்பானியர்கள் மற்றும் அவ்வப்போது கூறியவைகளி லிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. அதாவது, ஜப்பானியக் கப்பல்களுக்கு அதிக வேலை கூடாது என்பதற்காகத் தான், ஜப்பானுக்குட்பட்ட ஆசிய நாடுகள் எல்லாம், தம் தேவைகளைத் தம் நாடுகளிலேயே தயார் செய்து கொள்ள வேண்டு மென்னும் கொள்கையை ஜப்பானியர் கொண்டிருக்கிருர்கள்.

ஜெனரல் ஹொம்மா சென்ற ஆகஸ்ட்டு மாதம் 2-ம் தேதி, கீழ்க்கண்டவாறு கூறிஞர் :—

"நாளடைவில் கிழக்காசியாக் கூட்டு முன்னேற்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, பிலிப்பைன் தீவின் பொருளாதாரமும் மாறிவிடும். இப்போது தம் உணவுப் பொருள்களை அங்குள்ளவர் தாமே விளைவித்துக் கொள்ள வேண்டும்."

ஜூலை மாதம் 8-ம் தேதி டோக்கியோ ரேடியோ கூறியதாவது :—"மலேயாவில் போதுமான அளவிற்கு உணவுப் பொருள்கள் விளைவாக வேண்டி, எங்கெல்லாம் நெல் சாகுபடி செய்யலாமோ அங்கெல்லாம் சாகுபடி செய்ய வேண்டு மென்று': ஜப்பானிய இராணுவ அதிகாரிகள் முடிவு கட்டி யிருக்கிருர்கள்." சென்ற ஜூலை மாதம் 9-ம் தேதி வெளிவந்த "கோயல் நிஷி செய்துங்" என்னும் பத்திரிகையில் "கப்பல்களில் இடம் மிச்சம் பிடிக்க வேண்டி, சில தொழிற் சாலைகளைத் தென் பகுதிக்கு மாற்றி விடுவதா, கூடாதா என்பதைக் குறித்து ஜப்பான் அரசாங்கம் இன்னும் ஒரு முடிவிற்கு வர வில்லை" என்று எழுதியது. இதிலிருந்து, ஜப்பானுக்குப் பல கஷ்டங்க ளிருக்கின்றன வென்றும் அவற்றுள் மிகவும் முக்கியமானது ஏற்றுமதி இறக்குமதி என்றும் தெரிகிறது.

ஜப்பானியர்களுக்கு அங்கே செய்யப்படும் ரேடியோ பிரசாரம், ஜெர்மனியின் நிலையைத் தெளிவாக அறிவித்தது. அதைக் கேட்டு, ஜப்பானியப் பொது மக்கள் சாந்தியும் பலமும் அடைய வேண்டும் என்பது தான் அவர்கள் நோக்கம். பிப்பிரவரி மாதம் 3-ம் தேதி டோக்கியோ ரேடியோ கூறியதாவது :—

"ஜெர்மானியர்களைப் போல ஜப்பானியர்கள் அவ்வளவு கஷ்டப்பட வில்லை. இதுபற்றி ஜப்பானியர்கள் நன்றி செலுத்த வேண்டும். தற்போதைய யுத்தத்தில் தமக்கு வெற்றி கிடைக்கு மென்ற உறுதியோடு ஜெர்மானியர்கள் இல்லை. ஆஞல் சென்ற உலக மகா யுத்தத்தில் அவர்கள் அடைந்த கடுமையான அனுபவங்களை முன்னிட்டு, எப்பாடு பட்டாவது வெற்றி பெறத் தான் வேண்டு மென்னும் உறுதியோடிருக்கிருர்கள்."

இந்தப் பிரசாரத்தின் மூலம் ஜப்பானியர்கள் தம் இராணுவ பலத்தைக் குறித்துப் பீத்திக் கொள்ளவில்லை. ஜப்பானுடைய கடுமையான நிலைமையைத் தான், இந்தப் பிரசாரம் குறிக்கிறது.

# ஆட்சி நலம் கூறல்

பகலே செய்யும் பரிதிச் செல்வன் பாடெய்தாச்
சகமே நமையாள் ஆங்கில மன்னன் தன்னுடே
இகமே இற்றைக் கிருநூருண்டா எண்ணில் சீர்
அகமே துய்க்கப் பெற்ருேம் அச்சம் அற்ருேமே 1

கொடுங்கோல் மன்னர் கொற்றம் கொன்று குடிமக்கட்(கு)
இடையூறென்றுப் படியாள் நமதாங் கிலமன்னர்
அடையா ரஞ்சும் படையும் அமைச்சும் ஆண்டாண்டாய்க்
கடைபோ காமல் ஓம்பிட வாழ்வில் களித்தோமே 2

நம்முயிர் நமதாங் கிலமன் றனது நம்முயிர்மன்
தம்முயிர் நமதா ருயிரே என்னில் தடையென்னே
விம்மித மின்றி யின்றுநல் லின்பம் விளைப்பதுதான்
செம்மை கொள் ஆரும் ஜியார்ஜ்எனு மன்னன் செங்கோலே 3

மண்ணும் நீரும் வானும் ஆங்கில மன்னன்றன்
எண்ணில் நின்றே இகவா நிலைமை எமையராம்
பண்ணில் நில்லாப் பாழ்போ மரசர் பாராமல்
நண்ணும் எதிரா நண்ணிய தம்ம நகையாமே 4

இந்தியர் நாமோ எண்ணில் கோடி யிகலுடையோம்
நொந்திடல் ஏனோ? நோஞ மையுற நுழையரசர்
வெந்துறு தீயின் விறகென விளிய வென்றியுடன்
வந்தனை செய்வோம் ஆங்கில அரசை வாழ்கென்றே 5

எத்தனை எத்தனை நன்மை யடைந்தோம் எண்ணில்லை
அத்தனை யத்தனை யின்பம் துய்த்தோம் ஆங்கிலநம்
உத்தமச் செங்கோல் வழியினில் அதனை யுணர்ந்தோமாய்
மெத்திய வீரத் திறனை மிலைந்தே வினைசெய்வோம் 6

நாத்திக அரசாம் நாசிசம் வந்து நலியாதே
ஆத்திக அரசெனும் ஆங்கிலம் போற்றி அழிவில்லாப்
பாத்தியம் கொண்டே பாரினில் வாழ்வோம் பண்புறவே
கோத்திரம் கொள்ளீர் வம்மின் வம்மின் கூர்ந்தினிதே 7

எழுமின் இன்றே யிமையிற் காக்கும் இகல் நமது
தொழுமன் ஆட்சி வென்றி குறித்தே தொடர்பாக
விழுமம் எய்த வேற்ருர் படையை வீழ்வித்துக்
கழுமுள் வேலி என நம் நாட்டைக் காத்திடுவோம் 8

மெலியோர் வலியோர் என்றென் ஞுதிம் மேதினியில்
சலியா வாய்மைச் சார்பினிற் சார்ந்து சாய்வின்றி
மலியா நீதி தந்தே நம்மை வாழ்விக்கும்
நலியா நமையா ளாங்கில மன்னன் நனிவாழ்க 9

வாழிய ஆரும் ஜியார்ஜ் எனும் ஆங்கில மன்னர்மன்
வாழிய நமையாள் எலுசபெத் தென்னும் மாராணி
வாழிய அவர்தம் ஆட்சி சிறந்தே மண்ணின்மேல்
வாழிய வாழ்வுறு மன்பதை மகிழ்வொடு வாழியரோ 10

# பழமும் காய் கறிகளும்

## மிளகாய்





**வர்ணனை.**—மிளகாயில் பல வகைகள் உண்டு. இவற்றுள் ஒன்று பதார்த்த வகைகளுக்கு சுவையும் மணமும் கொடுக்க உபயோகப்படுகிறது. மற்ருென்று காய் கறியாகப் பயன் படுகிறது. இந்த வகைகளில் இரண்டைப் பற்றி இங்கே குறிப்பிடுவோம்.

1. பச்சை மிளகாய், சிறு அடர்த்தியான செடி. அதன் காய்கள் கனத்த சதைப்பற்றுள்ள தோலுள்ளவை.

2. குடை மிளகாய். 1 அல்லது 2 அடி உயரச் செடியா யிருக்கும் போது அதன் இலைகள் சற்று பெரிதா யிருக்கும். காய்கள் பெருத்து, காரமில்லாமல், கனத்த சதைப் பற்றுள்ளதா யிருக்கும். இந்தக் காய் சற்று இனிப்பா யிருக்கும். கூட்டுக் கறிகளிலும், இறைச்சி யோடும் இதைச் சேர்த்துச் சமைக்கிருர்கள்.

**பரவச் செய்தல்.**—விதை வியாபாரிகளிடமிருந்து விதையையாவது விதையுள்ள நெத்துக் காயையாவது வாங்கிக் கொண்டு, அந்த விதைகளை விதைக்கலாம்.

**சாகுபடி.**—நிலத்தை நன்ருகக் கொத்தி, பாத்தி கட்டியாவது, பூந் தொட்டிகளிலாவது, தரை மட்டத்திற்குச் சற்று கீழே பூமிக்குள் விதைகளை ஊன்ற வேண்டும். விதைகளுக்கு மேலே யுள்ள மண் மிகவும் இலேசானதா யிருக்க வேண்டும். நாற்று கிளம்பி 5 அல்லது 6 வாரங்கள் ஆன பிறகு, அந்த நாற்றைப் பிடுங்கி வரிசையாக 2½ அடிக்கு ஒரு நாற்று வீதம் நடவேண்டும். ஒரு வரிசைக்கும் அடுத்த வரிசைக்கும் 1½ அடி இடைவெளி யிருக்க வேண்டும். உரமிட்டு நன்ருகக் கொத்தி விடப்பட்ட பூமி, மிளகாய் பயிரிட, மிகவும் தகுந்தது. 3 அல்லது 4 மாதங்களில் காய்க்கிறது. பிறகு பல மாதங்கள் காய்த்துக் கொண்டிருக்கிறது.

**சாகுபடிப் பருவம்—பச்சை மிளகாய்.**—சம பூமியிலும் மலை நாட்டிலும் எப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரை.

**குடை மிளகாய்.**—சம பூமியில் ஆகஸ்டு மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையிலும், மலை நாடுகளில் எப்ரல் மாதம் முதல் மே மாதம் வரையிலும்.

**உபயோகங்கள்.**—பச்சை மிளகாயின் நிறம் பச்சையாயிருக்கும் போதும் சிவப்பா யிருக்கும் போதும் அதைக் கிள்ளுகிருர்கள். கறிகளோடு இதைச் சேர்த்துச் சமைக்கிருர்கள். உப்பிட்ட தயிரில் நன்ருக மிளகாயை ஊற வைத்து, வெயிலில் உலர்த்தி, எண்ணெயில் வறுத்து சாப்பாட்டிற்கு உபபதார்த்தமாக உண்கிருர்கள். குடை மிளகாயை ஒரு பதார்த்தமாக உபயோகிக்கிருர்கள். காய் கறிகளும், ஊறுகாயும், இறைச்சியும், மீனும், மிளகாயுடன் சேர்த்துத் தான் சமைக்கிருர்கள்.

**உள்ளடக்கம்.**—பச்சை மிளகாய், தண்ணீர் 82·8 சதமானம் ; உலோகச் சத்து 1 சதமானம் ; மாச் சத்து 2·9 சதமானம் ; கொழுப்பு 0·6 சதமானம் ; நார் 6·8 சதமானம் ; கார்போ ஹைட்ரேட் 6·1 சதமானம் ; கலோரிஸ் பவுனுக்கு 200 ; சுண்ணச் சத்து 0·05 சதமானம் ; மாக்னீஷியம் 0·036 சதமானம் ; நிமதாக்கினிச் சத்து 0·161 சதமானம் ; இரும்பு 0·002 சதமானம் ; விட்டமின் ஏ, 1-யு 100 கிராமுக்கு 8,000 ; விட்டமின் பி, 1-யு 100 கிராமுக்கு 41, விட்டமின் சி, 100 கிராமுக்கு 162·5.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஆண்டு மார்ச்மீ 12உ, வெள்ளிக்கிழமை [இதழ் 11



## ஒரு மகத்தான வெற்றி

ஜெனரல் மெக்கார்தர் மகா புத்திசாலித் தனமாகப் படைகளைத் திரட்டி உருப்படுத்தியதனுல் தான் வெற்றி கிடைத்ததே யொழிய, ஆட்கள் எண்ணிக்கையின் மிகுதியினுல் அல்ல. உதாரணமாக, எதிரிக் கப்பல்களுக்கு உதவியாகப் பிஸ்மார்க் கடலில் போய்க் கொண்டிருந்த கப்பலைத் தாக்குவதற்கு 136 போர் விமானங்கள் 226 டன் வெடி குண்டுகளை உபயோகித்து வெற்றி பெற்றன. ஆனுல், சென்ற வெள்ளிக்கிழமை எஸ்ஸெனில் நடை பெற்ற யுத்தத்தில், 40 நிமிஷங்களில் 1,500 டன் வெடி குண்டுகளை எறிந்தனர்.

ஆஸ்திரேலியாவின் யுத்த தந்திர முறைகளை யொட்டித் தான் கரையோரங்களில் விமான தளங்கள் கட்டப்பட்டன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குத் தீமை உண்டாக்கத் தக்க முறையில் ஜப்பான் பலந் திரட்டிக் கொள்ள முடியாதபடி இந்த யுத்த தந்திர முறை செய்து விட்டது.

நாமடைந்த சிறந்த வெற்றியால் பெருமை யடைகிரும். இத்தனைப் போர் முனைகளிலும் தாம் முடிவில் வெற்றி பெறுவோம் என்னும் உறுதி, நமது படைகளுக்கு இப்போதிருப்பது போல, ஒரு போதும் இருந்த தில்லை.

—மிஸ்டர் கர்ட்டின், ஆஸ்திரேலிய முதல் மந்திரி.

# முரசொலி

"உலகத்தின் ஒரு பகுதி தான் இந்தியா. இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகிலுள்ள நாடுக ளெல்லாம் தனித் தனியாக வாழ முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. இது, இந்த யுத்தத்தினுல் ஏற்பட்ட பலன். யுத்தத்திற்குப் பிறகு இந்தியாவும் பிற நாடுகளின் உதவியைக் கொண்டு தான் வாழ வேண்டி யிருக்கும். தன்னை விட அதிக ஆதிக்கமும் முன்னேற்றமும் அடைந்துள்ள நாடுகளின் கூட்டுறவும் முன்னேற்றமும் இருந்தால் மட்டுந் தான், இந்தியாவும் முன்னேற முடியும்."

—சர் ஜெரிமி ரெய்ஸ்மன்.

சென்ற 6-ம் தேதி வரவு செலவு திட்ட விவாதத்திற்கு இந்தியா சட்ட சபையில் பதில் கூறியது.

* * * * *

"ஜப்பான் நிபந்தனை யில்லாமல் சரணடைய வேண்டும். எந்த வித யுத்தத் தளவாடங்களையும் இனி அது வைத்துக் கொள்ளக் கூடாது. இது அமெரிக்காவின் கொள்கை. பசிபிக் கடல் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குட் பட்டிருக்க வேண்டு மென்று நாம் சொல்ல வில்லை; ஆனுல், எதிர் காலத்தில் அங்கே சமாதானம் நிலவ வேண்டு மென்பது தான் நமது எண்ணம்."

—மிஸ்டர் சம்னர் வெல்ஸ்.

* * * * *

சமுகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் பழைய காலத்தில் பெண்களின் நிலையைக் குறித்து நிர்ணயிக்க வேண்டுமானுல், அவர்களுடைய கணவன்மார்களின் நிலையை யொட்டித் தான் நிர்ணயிக்க வேண்டும்; இன்று எல்லா உரிமைகளும் ஆண்களோடு சரி நிகர் சமானமாகப் பெற்றிருக்கிறர்கள். ஆகவே, அவர்களுடைய சொந்த நிலைமையைக் கொண்டே, இனி சீனப் பெண்களை மதிப்பிடவேண்டி யிருக்கிறது.

—ஸ்ரீமதி ஷியாங்-கெய்-ஷேக்.



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : கர்ட்டின் .. .. | 1 | அன்றும் இன்றும் .. .. .. | 7 |
| ஒரு மகத்தான வெற்றி .. .. | 1 | தீமையினின்றும் நன்மை பிறக்கிறது .. | 9 |
| முரசொலி .. .. .. .. | 2 | சுரங்க வெடி ! எச்சரிக்கை ! .. .. | 10 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. | 3 | விருந்தினர்களைக் குறையுங்கள் .. | 11 |
| தலையங்கம் : மாஸ்கோ போர் .. .. | 4 | சரண் புகுந்த யூதர்களுக்கு உதவி .. | 11 |
| சீனுவிற்கு நேச நாடுகளின் உதவி .. | 5 | அவரையும் பட்டாணியும் .. .. | 12 |
| இந்தியப் பாதுகாப்பு அதிகப்படுகிறது .. | 6 | ஒரு புதிய போட்டிப் பரிசு .. .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**ரோமலின் தோல்வி.**

மார்ச்சு மாதம் 6-ம் தேதி சனிக்கிழமை ரோமல், எட்டாம் படையை இரண்டாம் முறை தாக்கப் புறப்பட்டார். மாரெத் அரணுக்கு முன் புறமிருந்த ஜெனரல் மாண்ட்காமரியின் படைகளை அழித்து விட இரண்டு முறை முயன்றார். மீண்டும் இவர் எண்ணம் பலிக்க வில்லை. ஏராளமான படையினரையும் தளவாடங்களையும் இழந்தார். பிறகும் அவர் சும்மா இருக்கவில்லை. நேச நாட்டுப் படைகளுக்குள் பிளவு உண்டாக்க முயற்சித்தார். முடியவில்லை. பிறகு, மாரெத் அரணி லிருந்து நேர் முகமாக வந்து தாக்கினுர். அங்கேயும் பின்னடைந்து ஓட நேர்ந்தது. ஏராளமான படைகளும் டாங்கிகளும் நஷ்டமானதைத் தவிர, வேறு எநத வகையிலும் பலனில்லை. எட்டாம் படை வெற்றிக் கொடி நாட்டியது.

துனீசியாவில் மீண்டும் யுத்தம் ஆரம்பமானது. அது மூன்று வாரங்கள் நடை பெற்றது. எட்டாம் படையினர், எதிரிகள் முன்னேற ஒட்டாதபடி மிக வீரத்தோடு போராடினுர்கள். முன் போல ஜெர்மானியர்கள் இப்போது முன்னேறக் கூடவில்லை. அப்போது நேச நாட்டுப் படைகள், தன் படைகளைத் தாக்கு மென்றும் அப்படித் தாக்க ஒட்டாதபடி தாமதப் படுத்த வேண்டு மென்பது தான் முதலில் ரோமலின் எண்ணமாக இருந்திருக்க வேண்டு மென்றும் தெரிகிறது. அல்லது எல்லா நிலைமைகளும் தனக்குச் சாதகமாக இருப்பதாக அவர் நினைத்து தாக்கப் புறப்பட்டிருக்கவுங் கூடும். இவர் வீரமாகத் தாக்கினுர். இவருடைய படைகள் வெகு விரைவில் இவரைத் தொடர்ந்து வந்தன. என்றுலும் திடீரென்று பின் வாங்கினுர். இவர் கெட்டிக்காரர் தான். என்றுலும் தவறுகள் செய்கிறர்.

படைத் தலைவர் இப்படித் தவறுகள் செய்வாரானுல், இத்தாலியர்களுக்குத் தான் பயம் அதிகரிக்கும். ஏனென்றுல், துனீசயாவை விட்டு அச்சு நாட்டுப் படைகளை விரட்டிவிட்டால், இத்தாலி ஆபத்திற்குள்ளாக நேரும். துனீசியாவிலுள்ள மலைகள் இத்தாலியும் சிசிலியும் நீண்டு வந்திருப்பது போலத் தோற்றுகிறது. மத்திய தரைக் கடலின் தரை மட்டம் ½ மைல் உயர்ந்தால், இத்தாலி, சிசிலி, மால்டா, துனீசியா, ஆகியவை எல்லாம் ஒரே நிலப் பகுதியாகிவிடும். ஆப்பிரிக்காவையும் மத்திய ஐரோப்பாவையும் இணைக்கும். ஆகவே துனீசியாவில் இத்தாலிக்கு விரோதமான நேச நாட்டுப் படைகள் இருப்பதால், அதற்கு ஆபத்து இருக்கத் தான் செய்யும். இது பழைய காலத்தி லிருந்த ரோமர்களுக்கும் தெரிந்திருந்தது. எப்படி என்றுல், துனசியாவிற்கு அருகில் அக்காலத்தில் கார்தேஜியா என்றெரு நாடிருந்தது. அந் நாட்டில் எதேச்சாதிகாரம் செலுத்தியவன் ஹனிபால் என்பவன். இவனை ரோமர்கள் அக்காலததில் வென்று, அவன் நாட்டை அடியோடு அழித்து விட்டார்கள்.

**நேச நாடுகளுக்குப் பெரும் வெற்றி.**

பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் துனீசியா மீது படை யெடுத்தது பற்றி ஜெர்மானியர்கள் என்ன நினைத்தார்கள் தெரியுமா ? இத்தாலியை மட்டுமன்றி, டான்யூப் பிரதேசத்தையும் ஜெர்மனியையுங் கூட கைப்பற்ற ஆரம்பித்திருக்கிறர்கள் என்று தான் நினைத்தார்கள். கடைசியாக துனீசியாவைத் தாம் கைப்பற்றி விட வேண்டு மென்று ஜெர்மானியர்கள் முடிவு கட்டினுர்கள். ஏன் ? துனீசயா தான் ஐரோப்பா மீது பாய்வதற்கு ஏற்ற பாய்ச்சல் தளம். இதைக் கைப்பற்றும் முயற்சியில் தம் சேனைகளுக்கும் தளவாடங்களுக்கும் பெரும் சேதம் ஏற்படும் என்றும் ரோமலுக்குத் தெரியும். என்றுலும் பொருட்படுத்த வில்லை. ஏன் ? ரஷ்யர் போர் முனையில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போது, தென் ஐரோப்பியாவில் நேச நாட்டினர் போரில் இறங்கும்படி அனுமதிக்கக் கூடாது எனபது தான் அவர்களுடைய கருத்து. இனி, அல்ஜீரியாவில் தளம் அமைத்துக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் படைத் தலைவர்களும், அமெரிக்கப் படைத் தலைவர்களும் இந்நிலைமையைக் குறித்து என்ன நினைத்தார்கள் என்று கவனிப்போம். லண்டனுக்கும் பெர்லினுக்கும் உள்ள தூரந் தான் அல்ஜீரியாவிற்கும் துனசியாவிற்கும். ஆகவே, அல்ஜீரியாவில் கப்பலை விட்டு இறங்கிய உடனேயே துனீசியாவைக் கைப்பற்ற வேண்டு மென்பது, இவர்களுடைய எண்ணமல்ல. மழை காலத்தில் நன்றுக பயிற்சி செய்து கொண்டு அல்ஜீரியா முதல் டாக்கர் வரை அரண் செய்து கொள்ள வேண்டு மென்று தான் நினைத்தார்கள். ஆனுல், நேசநாட்டுப் படைகள் அங்கு வந்து இறங்குவதைத் தடுக்க ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களுக்குத் திறமை யில்லை யென்று தெரிந்த வுடனே, வடக்கேயும் மேற்கேயும் தாம் இறங்குவதைப் பிரஞ்சுப் படைகள் தடுக்கவில்லை யென்று தெரிந்த வுடனே, மகா கடுமையாக எதிரிகளைத் தாக்கி விரட்டி யடிக்க வேண்டுமென்று நேச நாட்டுப் படைத் தலைவர்கள் முடிவு கட்டினுர்கள். அதனுல் தான் முதல் படை துனீசியாவை நோக்கி விரைந்து சென்றது. படைகள் இறங்கித் தங்கி பயிற்சி பெறுவதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளை மாற்றி, திடீரென்று எதிரிகளைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஆகவே, போன் என்னும் முக்கியமான துறைமுகத்தைக் கைப்பற்றினுர்கள். மத்திய துனீசியாவிலுள்ள விமான நிலையங்களில் பாராசூட் படைகள் போய் ஏராளமாக இறங்கின. இவற்றிற்குப் பிறகு தான் டாங்கிகளும் காலாட் படைகளும் அங்கே போய்ச் சேர்ந்தன. முதல் படை தூனிஸை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்போது குறுக்கிட்ட ஜெர்மன் படையினரை நசுக்கிக் கொண்டு முன்னேறியது. இந்தப் படை வெகு வேகமாக வந்தபடியால், படையும் தளவாடங்களும் துண்டு துண்டாகத் துண்டிக்கப்பட்டன.

(11-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞூ மார்ச்மீ 12உ. [இதழ் 11


## மாஸ்கோ போர்முனை 1812—1943.

"முன்னே ஓடுகிற வாய்க்கால் வழியைப் பற்றித் தான் பின்னேயும் ஓடும்" இந்தப் பழமொழி அனுபவத்திற்கு மிகவும் ஒத்திருக்கிறது. மாஸ்கோ போர்முனையில் சமீபத்தில் நிகழ்ந்த சம்பவங்களே இதற்கு ஏற்ற சான்றுகள். 1812-ம் வருஷத்தில் நெபோலியனுடைய படைகளை ரஷ்யப் படைத்தலைவரான மார்ஷல் குடுசாப் விரட்டி யடிக்க வில்லையா? அதுபோலவே தான் ஹிட்லரின் படைகளையும் மார்ஷல் திமோஷேங்கோ சமீபத்தில் விரட்டி யடித்தார். நெப்போலியனுக்காவது, ஒரு ஆறுதலிருந்தது. மேரி லூயி சக்ரவர்த்தினிக்கு அவ்வப்போது தகவல்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். அந்த ஆறுதல் கூட ஹிட்லருக்குக் கிடையாது. ஆகவே நெப்போலியனுடைய மன நிலையை விட, ஹிட்லரின் மன நிலை மேலும் வருத்தமாகத் தான் இருக்கும்.

ரஷ்யப் போராட்டத்திற்குப் பிறகு 3 வருஷங்கள் கழித்து செண்ட் ஹெலினு என்னுமிடத்தி லிருந்து நெப்போலியன் கீழ்க் கண்டவாறு சக்ரவர்த்தினிக்கு எழுதினுர் :—

"ஆயுதங்களைக் கொண்டு போராடும் படையினரோடு தான் நான் போர் தொடுத்தேனே யொழிய, கடுங் கோபங் கொண்டுள்ள இயற்கையை எதிர்த்து அல்ல. அந்தப் படைகளை வென்று விட்டேன். ஆனுல், நெருப்பையும், மூடுபனியையும் சாவையும் வெல்ல முடிய வில்லை. என்னை விட என் தலைவிதி வலுத்தருந்தது."

எதிரி தன்னை விட பலசாலி என்று தெரிந்தால், தம் உணவுப் பொருள்கள், வீடு, வாசல், கழனி முதலிய் அனைத்திற்கும் ரஷ்யர்கள் நெருப்பு வைத்து விட்டார்கள். கடுமையான குளிர். தம் கடமையை நன்ருக உணர்ந்து நடக்கும் படைகள். இவைதான் நெபோலியனுக்கு விரோதமாயிருந்தவை. இதே நிலைதான் இன்று ஹிட்லருக்கும். 1812 ம் வருஷம் ஆகஸ்ட்டுமீ 29-ம் தேதி மியாஸ்மா என்னும் நகருக்குள் நெபோலியன் புகுந்தபோது, அவர் கண்ட காட்சி என்ன? அந்நகரமே எரிந்து சாம்பலாய்க் கிடந்தது. அதுபோலவே அந்த வருஷம் செப்டெம்பர் மாதம் 14-ம் தேதி மாஸ்கோ நகரத்திற்குள் போன போது, அந்நகரமே தீப்பற்றி எரிகிறதைக் கண்டார்.

இதை யாரும் நம்ப முடியாது தான். இது நாசகால யுத்தம். இந்த யுத்த தந்திரத்திற்கு ஈடான தந்திரம் உலக சரித்திரத்திலேயே காண முடியாது.

இப்போது இதே நிலையைத் தான் ஹிட்லரும் கண்டார். அதுவும், பரந்த தேசத்தில் மிகவும் அதிகமாக. மற்ற எல்லாக் கஷ்டங்களையும் விட, ஹிட்லருக்கு எது மிகவும் கஷ்டமாயிருக்கிற தென்ருல், தன் படைகளை எதிரிப் படைகள் வளைந்து கொண்டு நாசம் செய்யும் யுத்த தந்திரந் தான்.

மாஸ்கோவிலிருந்து நவம்பர் மாதம் 9-ம் தேதி ஸ்மாலென்ஸ்க் நகரத்திற்கு நெப்போலியன் வந்து சேர்ந்தார். அங்கேயும் அவர் கட்டாந் தரையைத் தான் கண்டார். காயப் பட்டவர்களும் நோயாளிகளுந் தான் அங்கிருந்தார்கள். அப்போது அவர் வசமிருந்த உணவுப் பொருள்களும் தளவாடங்களும் கூட குறைந்து விட்டன. அவருடைய படைகள் பின் வாங்கி ஓட்டாதபடி வெட்டி விடும் பொருட்டு இரண்டு ரஷ்யப் படைகள் விரைந்து இரண்டு வெவ்வேறு திசைகளிலிருந்து வந்து கொண்டிருந்தன. ஆகவே, அவர் தன் படைகளுடன் அங்கிருந்து விரைவாகப் பின் வாங்க வேண்டி யிருந்தது. நவம்பர் மாதம் 14-ம் தேதி அங்கிருந்து புறப்பட்டார். அவர் படையெடுத்துப் போன போது கொண்டு போன $1\frac{1}{2}$ லட்சம் பேர்களில், மிஞ்சி மிகுந்த ஒரு சிலரோடு தான் திரும்பினுர்.

இப்போது ஹிட்லரும் ஸ்மாலென்ஸ்க் நகரத்திலிருப்பதாகத் தெரிகிறது. ரஷ்யாவிலேயே ஜெர்மனி வசமுள்ள மிகப் பெரிய தளம் இது தான். ஹிட்லரின் தலைமைக் காரியாலயமும் இங்கே தான் இருக்கிறது. இதை நோக்கித் தான் முக்கியமான ரஷ்யப் படைகள் வந்து கொண்டிருக்கின்றன. மார்ஷல் திமோஷெங்கோவின் தாக்கும் திட்டங்களில் இது ஒரு பகுதி. சென்ற மார்ச்சு மாதம் 1-ம் தேதி சோவியத் தகவல் நிலையத்தார் கீழ்க் கண்டவாறு அறிவித்தார்கள் :—

திமோஷெங்கோவின் தலைமையில் ரஷ்யப் படைகள் முதல் முதலாக, ஜெர்மன் 16-வது படைகளைத் தாக்கி, ரிழேவுக்கு வட மேற்கே யுள்ள டெமியான்ஸ்க் முதலிய 302 ஊர்களைக் கைப்பற்றினர். எதிரிகளின் பலமான அரண்களை ரஷ்யப் படைகள் தகர்த்து விட்டன. இதனுல் ஜெர்மன் படைகளுக்கு மிகுந்த ஆபத்துத் தான். இதைத் தெரிந்து, மேற்கு நோக்கி எதிரிகள் பின் வாங்கினுர்கள்.

இதுபற்றி மாஸ்கோவிலுள்ள ராய்டர் விசேஷ நிருபர் எழுதுவதாவது :—

"சோவியத் படைகளின் முக்கியமான இணைப்புக்களை தகர்த்துவிட வேண்டு மென்று ஜெர்மானியர்கள் முயற்சித்தனர். ஆனுல், இம் முயற்சி ஜெர்மானியர்களுக்கே தீமையாய் முடிந்தது. டெமியான்ஸ்க் நகரத்தைக் கைப்பற்ற வேண்டு மென்று ஜெர்மானியர்கள் திட்டமிட்டது உண்மை தான். ஆனுல் அவர்கள் திட்டத்தை ஸ்டாலினுடைய யுத்த தந்திரம் தவிடு பொடி யாக்கி விட்டது. தெற்குப் போர் முனையிலே சென்ற 3 மாதங்களாக இடைவிடாது வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண்டு வந்த சோவியத் படைகள், சற்று ஓயப் போகும் சரியான சமயத்தில், மார்ஷல் திமோஷேங்கோ இங்கே தாக்கினுர்."

(5-ம் பக்கம் பார்க்க.)



# சீனுவிற்கு நேச நாடுகளின் உதவி

## "பர்மா ரோடைக் கைப்பற்ற வேண்டும்"

### பிரபுக்கள் சபையில் க்ரான்போர்ன் பிரபு பிரசங்கம்

க்ரான்போர்ன் பிரபு, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பிரபுக்கள் சபையின் முதல் அங்கத்தினர். இவர் சென்ற 4-ம் தேதி சீனுவிற்கு உதவி செய்வதைக் குறித்து அச்சபையில் பேசினுர். அதன் சுருக்கமாவது :—

"சீனுவிற்கு அனுப்பும் பொருட்டு இந்தியாவில் ஏராளமான யுத்தத் தளவாடங்கள் தயார் செய்யப்படுகின்றன. சீனுவிற்கு விமானப் போக்கு வரவு அதிகப்பட்டிருக்கிறது. நாம் பர்மாவை மீண்டும் வென்று பர்மா ரோடை மீண்டும் கைப்பற்றினுல் தான், இதன் வழியாகச் சீனுவுக்கு நாம் தகுந்தபடி அனுப்ப முடியும். இது நம் யுத்தப் போக்கின் முக்கிய அம்சமாக இருக்க வேண்டும். அமெரிக்காவும் பிரிட்டனும் இதில் தம் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கின்றன."

"**சீனுவின் நலத்தில் நம் எல்லோருக்கும் மிகுந்த அக்கரை யிருக்கிறது. சீனுவின் யுத்தம் நமது யுத்தம்.** உலகிலுள்ள எதேச்சை மக்களின் பரந்த படையின் ஒரு பகுதி தான், நேச நாடுகளின் படைகள். சீனுவிற்கும் ரஷ்யாவிற்கும் பிரிட்டன் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் உண்டு. நமது படைகள், இப்போதும் எதிர் காலத்திலும் தகுந்தபடி தம் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு வேண்டிய தளவாடங்களை ஏராளமாகத் தயாரிக்க வேண்டி யிருக்கிறது. ஆகையால் சீனுவிற்கும் ரஷ்யாவிற்கும் தேவையான எல்லாவற்றையும் பிரிட்டன் அனுப்ப முடியாமல் இருக்கிறது.

"பர்மா ரோடு வழியாகத் தான் சமீப கால வரை எல்லா சப்ளைகளும் சீனுவிற்குப் போய்க் கொண்டிருந்தன. இப்போது விமான மூலம் தான் அனுப்ப வேண்டி யிருக்கிறது. இதனுல் இதற்கு உபயோகப்படும் விமானங்களை வேறு வேலைகளுக்கு உபயோகிக்க முடியாதிருக்கிறது. இப்போது சீனுவிற்கு விமானப் போக்கு வரவு அமெரிக்காவின் பொறுப்பாகி விட்டது. நேச நாடுகளின் ஏற்பாட்டின்படி அமெரிக்காவின் போர்த் தந்திர முறைகளை நிறைவேற்ற, தகுந்த இடமாக அது அமைந்திருக்கிறது."

"சமீபத்தில் ஸ்ரீமதி ஷியாங்-கெய்-ஷேக் அமெரிக்காவிற்குப் போன போது, அவருக்கு அங்கு நடந்த வரவேற்பிலிருந்து அமெரிக்கர்களுக்கு சீனு மீது எவ்வளவு அக்கரை யிருக்கிற தென்று விளங்கும். எவற்றை யெல்லாம் அனுப்பக் கூடுமோ அவற்றை யெல்லாம் அமெரிக்கா சீனுவிற்கு அனுப்புகிறது. எல்லாவற்றையும் விமானங்களின் மூலமே அனுப்ப வேண்டி யிருக்கிறபடியால், வேண்டிய அளவிற்கு அனுப்ப முடியவில்லை. பளுவான தளவாடங்களையும் அனுப்பக் கூடவில்லை. இந்தப் போக்கு வரவு விமானங்களை அதிகப்படுத்துவதற்காகத் திட்டமிடப் பட்டிருக்கிறது. இது முடிந்த உடனே ஏராளமான தளவாடங்கள் சீனு போய்ச் சேர முடியும்."

"விமானப் போக்கு வரவு தான் இப்போது சீனுவின் உயிர் நாடி. ஆகவே, இதைப் பெருக்க பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்தியா அரசாங்கமும் கூடிய வரையில் உதவிக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையில் அமெரிக்காவி லிருந்தும் பிரிட்டனிலிருந்தும் ஏராளமான சப்ளைகளை இந்தியாவில் கொண்டு வந்து இறக்கிச் சேர்த்து வைக்கிருர்கள். சந்தர்ப்பங் கிடைக்கிற போது இவற்றை சீனுவிற்கு அனுப்புவார்கள். சீனுவிற்கு இவற்றை யனுப்ப வேறு வழிகள் ஏதேனும் உண்டா வென்று கண்டு பிடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிருர்கள். என்ருலும் பர்மா ரோடு வழியாக அனுப்பியது போல, இலகுவாக இவ்வழிகளில் அனுப்ப முடியாது தான். பர்மா ரோடு எதிரிகள் வசம் இருக்கும் வரை, சீனுவிற்கு சப்ளைகள் அனுப்புவது அதிருப்தியாகத் தான் இருக்கும். ஆனுலும், இயன்ற வரை எல்லா வகை முயற்சிகளும் செய்யப்படும். தென் மேற்குப் பசிபிக் கடல்களில் நேச நாட்டார் நடத்தும் போரினுல், சீனுவில் போர் நிலைமை சற்று தளர்ந்திருக்கிறது. இந்தத் தென் மேற்குப் பசிபிக் யுத்தம் ஒரு பச்சைப் புண். இதனுல் ஜப்பானுடைய ஆள் பலமும் பொருள் பலமும் வெகுவாகக் குறைந்து விட்டது. இங்கே ஜப்பானியர்கள் ஜம்பம் பலிக்கவில்லை. அதன் அட்டகாசம் குறைந்து கொண்டு வருகிறது."

"நாம் திட்டமிடும் போது, சீனுவிலுள்ள போர் விமான நிலையங்களையும் மறந்து விட மாட்டோம். இங்கே அமெரிக்க வாலிண்டியர் விமானப் படையினர் செய்திருக்கும் வீரச் செயல்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். பசிபிக் யுத்தத்தை எந்த முறையில் நடத்துவது என்பது பற்றி வாஷிங்டனில் பசிபிக் யுத்தக் கௌன்ஸில் அங்கத்தினர் அடிக்கடி ஆலோசித்துக் கொண்டு வருகின்றனர். இந்தக் கௌன்ஸிலில் சீனப் பிரதிநிதியும் இருக்கிருர்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

பல செயல்களை ஒரே சமயத்தில் வெற்றியோடு செய்து முடிப்பது தான் ரஷ்யர்கள் கொள்கை யென்று முன்னமேயே அறிவித்திருக்கிருேம். இதன் பயனுக, தெற்குப் போர் முனையிலிருந்த நெருக்கடி மாஸ்கோ, லெனின்கிராட் போர் முனைகளுக்கு மாறியது. இங்கேயும் அதே கொள்கையைத் தான் கையாளப் போகிருர்கள். இங்கேயும் வெற்றி கிடைக்கு மென்பது உறுதி.

மாஸ்கோவிற்கு வடமேற்கே 110 மைல்களுக்கு அப்பால் ரிழேவ் நகர மிருக்கிறது. இது ஜெர்மானியர்களுக்கு ஒரு பாய்ச்சல் தளமா யிருந்தது. இதை ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டார்கள். பிறகு விலிகி லூகி என்னும் ஊருக்கும் முக்கியத்துவம் உண்டாகி விட்டது. இதையும் ரஷ்யர்கள் ஏற்கெனவே கைப்பற்றி யிருந்தார்கள். விலிகி லூக்கிக்கும், கோல்முக்கும் இடையே யுள்ள பரந்த போர் முனையில் ரஷ்யர்கள் தாக்கிக் கொண்டிருக்கிருர்கள். விலிகி லூக்கிக்கு 30 மைல்களுக்கு அப்பால் தான் ரயில்வே இருக்கிறது. இதைக் கைப் பற்றிவிட்டால், மாஸ்கோ போர் முனையிலுள்ள ஜெர்மன் படைகளிலிருந்து லெனின்கிராடை வளைத்துள்ள படைகளை வெட்டி விடலாம்.

மாஸ்கோ லெனின்கிராட் போர் முனைப் படங்களைப் பார்த்தால், பல விடங்களில் பரந்து அமைந்துள்ள ஜெர்மன் அரண்களை ஏககாலத்தில் திமோஷேங்கோ தாக்குவார் என்று தெளிவாகத் தெரியும். வடக்கே ஸ்தரயா ரூஸாவைத் தாக்கவும் இவர் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிருர். கட்ஸ்க் என்னு மிடத்தைப் பிடித்து விட்டார். இரண்டு திசைகளிலேயிருந்து கிட்டி போட்டது போல இரண்டு படைகள் வியாஸ்மாவை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. ஸ்தரயா ரூஸாவிற்கும் ஓரெலுக்கும் இடையே 700 மைல்கள். ஜெர்மன் அரண்கள் இங்கே நெடுக இருக்கின்றன. இவை யெல்லாம் செம்படைகளின் தாக்குதலைத் தாங்க மாட்டாமல் நொறுங்குகின்றன. மாஸ்கோ போர் முனையைச் சேர்ந்த ஸ்மாலென்ஸ்க் நகரம் மகா ஆபத்திற் குள்ளாகி யிருக்கிறது.

# இந்தியப் பாதுகாப்பு அதிகப்படுகிறது

## உணவுப் பிரச்சினையைத் தீர்க்க வழி

### இந்திய அரசாங்க நிதி அங்கத்தினர் பிரசங்கம்

*இந்தியா சட்ட சபையின் நிதி யங்கத்தினர் 1943–44-ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த போது பேசியதன் சுருக்கமாவது :—*

தற்போதுள்ள வரிகளை யொட்டி வசூலிக்கப்படும் தொகையில் 60 கோடியே 20 லட்சம் ரூபாய் பள்ளம் விழுகிறது. மொத்தத்தில் 199 கோடியே 30 லட்சம் வசூலாகு மென்று தெரிகிறது. இந்த வரவிற்கு மேல் ஏற்படும் செலவுத் தொகையை, அதிக வரி விதித்தும் கடன் வாங்கியும் ஈடு செய்து கொள்ளுவதென்று திட்ட மிட்டிருக்கிறது. 1942–43-ம் வருஷத்திய நிலைமையை விட இபபோதைய நிலைமை மேலாயிருக்கிறது. சென்ற வருஷத்தில் இந்தியப் பாதுகாப்புக் கென்று ஒதுக்கப்பட்ட தொகையை விட, அதிகமாகச் செலவானது. புதிய ஆபத்துக்கள் இந்தியாவிற்கு நேராதபடி காப்பாற்றுவதற்காகக் கையாளப்பட்ட முறைகளைப் பெருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1943–44-வது வருஷத்தில், இந்தியப் பாதுகாப்புக்குத் தேவையான அளவு தரைப் படைகள் அமைந்து விடு மென்று சொல்லலாம். சென்ற வருஷத்தை விட, இந்த வருஷம் பாதுகாப்பின் பொருட்டு குறைவாகத் தான் செலவாகும். உணவுப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்தார் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இந்திய தரைப் படைகளுக்கு வெகு அதிகமாக ஆட்களைத் திரட்டி, பழக்கி, உடுப்பு ஆயுதம் முதலியவற்றைக் கொடுத்திருக்கிறோம். சென்ற வருஷமத்தியில் மாதம் ஒன்றிற்கு 70,000 பேர்கள் வீதம் படைக்குத் திரட்டப் பட்டார்கள். **இவர்களில் அநேகர் நம் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.** இது போலவே பயிற்சி சாலைகளும் பெருகின. போக்கு வரவு சாதனங்களும், இந் நாட்டின் பாதுகாப்பை அனுசரித்தே அமைக்கப்பட்டன. இதற் கென்று செலவான தொகையில் பெரும் பகுதி, பாதுகாப்புக் கணக்கில் எழுதப் பட்டது. இந்தப் படைகளுக்கு வேண்டிய தளவாடங்களும் ஸ்டோர்ஸ்களும் அமெரிக்காவிலிருந்து குத்தகைக் கடனாக வாங்கப்படும். இதுவரையில் பாதுகாப்புப் படையாக இருந்தவை, இனி ஒருக்கால் தாக்கும் படையாக மாறக் கூடும்.

சென்ற வருஷம் இந்திய சிப்பாயின் சம்பளம் போதுமானது தானா என்பது பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர்கள் சம்பளம், திறமைக்காகக் கொடுக்கப்படும் சம்பளம், சாப்பாட்டு அலவன்ஸ் ஆகியவற்றை சென்ற அக்டோபர் மாதம் அதிகப்படுத்தப் பட்டது. இது பற்றி முந்தியே இச் சபையோருக்கு அறிவித்திருக்கிறோம். தற்போதுள்ள நிலைமையில், சிப்பாய்களுக்கு அதிக ரொக்கம் தேவை யில்லை என்று தெரிந்தது. ஆனால் எதிர் காலத்தில் அவர்களுடைய செலவிற்குத் தேவைப்படும். அதாவது படையைக் கலைக்கிற போது, இவர்களுடைய நிலைமையை முன்னேற்றிக் கொள்ள வேண்டி, பெருந் தொகை தேவைப் படும். ஆகவே மாதந் தோறும் பிடித்து வைத்துக் கொள்ளப்படும் சம்பளத் தொகையையும் அதிகப் படுத்தப் பட்டது. இப்படிச் சேரும் தொகைக்குச் சமமான தொகையை அரசாங்கம் அவரவர் கணக்கில் வரவு வைத்து விடுகிறது. இந்தத் தொகைகளை எல்லாம் சேர்த்து ஒரு நிதியாகத் திரட்டப் படுகிறது. சிப்பாய்களுக்கும், மற்ற ராணுவத்தார்களுக்கும் யுத்தம் முடிந்த பிறகு நன்மை தரக்கூடிய திட்டங்களை நிறைவேற்ற இந்த நிதி பயன் படும்.

#### கப்பற் படை

இந்த வருஷம் பல துறைகளிலும் கப்பற் படை வெகுவாக முன்னேறி யிருக்கிறது. பல கப்பல்கள் புதிதாகச் சேவகத்திற்கு வந்திருக்கின்றன. பிரிட்டிஷ் கப்பற் படைக்காகத் தயாரிக்கப்பட்ட, அநேக மோட்டார் போர்க் கப்பல்கள் இந்திய கப்பற் படைக்கு மாறின. இவை இந்திய பாதுகாப்பிற்கு மிகவும் ஏற்றவை. கப்பற் படையினர் ஒரு பாதிக்கு மேல் அதிகப் பட்டிருக்கின்றனர். கப்பல் படைத் தளங்கள் பல வகைகளில் முன்னேற்ற மடைந்திருக்கின்றன. பல புதிய தளங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தப் படையினருக்கு 'டார்பிடோ' பயிற்சி யளிப்பதற்கு புதிதாக ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டிருக்கிறது. இப்போதுள்ள சிக்னல் பள்ளிக்கூடம் மிகவும் விரிவடைந்திருக்கிறது. நீர் மூழ்கிக் கப்பல் பயிற்சி யளிக்கும் பொருட்டு ஒரு பெரிய பள்ளிக்கூடம் புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. கப்பல்களி லிருந்து கரையிலிறங்கித் தாக்கும் பயிற்சி இப் படையினருக்கு ஏற்படும் பொருட்டு, ஒரு பள்ளிக்கூடம் இப்போது இருந்து வருகிறது.

#### விமானப் படை.

இந் நாட்டின் பல பாகங்களிலும் விமான நிலையங்கள் கட்ட ஏற்பாடுகள் செய்து, பல மாதங்களாக லட்சக் கணக்கானவர்கள் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். இதற் கிடையில் தகுந்த தளவாடங்களுடனும் தேர்ச்சி பெற்ற விமானிகளுடனும் போர் விமானங்களும் இந்தியாவிற்கு வந்த வண்ணமாயிருக்கின்றன. இவை இந்தியப் பாதுகாப்புத் திட்டத்தில் பங்கு கொள்ளுகின்றன. அன்றியும் இந்தியாவிலேயே விமானிகளைத் தயாரிக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. 1943–44-ம் வருஷ ஆரம்பத்தில் இந்திய விமானப் படைகள் இந்தியாவில் இருக்கு மென்று எதிர் பார்க்கிறேன். பல விமானப் படைகளுக்கு, தற்கால முறைப்படி யமைந்த விமானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கையாளுவதைக் குறித்து பயிற்சி யளிக்கப்படுகிறது.

நிற்க, விமானப் படை பெருகிக் கொண்டு வருகிறது. ஆகவே விமானங்களை நல்ல நிலையில் வைத்துக் காப்பாற்றவும், பழுது பார்க்கவும் வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, ஹிந்துஸ்தான் ஏர் க்ராப்ட் கம்பெனியார் விமானங்கள் கட்டுவதை விட, இந்த வேலைகளிலே தான் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள். அரசாங்கத் தொழிற் சாலைகள் மட்டுமன்றி, இவற்றின் பொருட்டு ஒரு சிவில் ரிப்பேர் ஸ்தாபனம் ஒன்றையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தப் பரந்த முயற்சிகளின் பலனாக, எதிரிகள் இந்தியாவை விமானங்களி லிருந்து தாக்க முடியாதபடி தடுக்கத் தக்க, பலம் ஏற்பட்டு விட்டது. இது மட்டு மல்ல, பர்மாவிலும் மற்ற இடங்களிலும். எதிரியை விமானங்களி லிருந்து தாக்கவும் நமக்குப் பலம் ஏற்பட்டு விட்டது.

#### உணவுப் பிரச்சினை.

நடப்பு வருஷத்தில், உணவுப் பொருள் நெருக்கடி மிகவும் அதிகரித்தது. எனவே உணவுப் பொருள் இலாக்கா ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு உண்டானது. சாகுபடியாகும் உணவுப் பொருள்களை தாராளமாக விற்கும்படி விவசாயிகளைத் தூண்டுவதற்கு பிரசார மூலமாகவும் மற்றும் பல வகைகளிலும் முயற்சிகள், நடைபெறுகின்றன. சேமித்து வைக்காதபடி தடுக்கவும் கட்டுப் பாட்டு முறைகள் கையாளப் படுகின்றன. இதன் பயனாக, ஒரு இடத்தி லிருந்து வேறொரு இடத்திற்கு உணவுப் பொருள்கள் தாராளமாகப் போக இட முண்டாகும். இதன் பயனாக, அதிக விளைவுள்ள மாகாணங்களி லிருந்து, கொஞ்ச விளைவுள்ள மாகாணங்களுக்கு இவை கொண்டு போகப்படும். இப்படியாக, நாடு முழுதும் உணவுப் பொருள்கள் சமன் செய்யப்படும். **உணவுப் பொருள்களை வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்கத் தக்கபடி, விசேஷ முறைகள் கையாளப் படுகின்றன.**

(8-ம் பக்கம் பார்க்க.)



# அன்றும், இன்றும்

அந்தக் காலத்திலே, அதாவது புராண காலத்திலே, வித்துற்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்ற அசுரர்கள் பிரமாதமாகத் தவம் செய்து, பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளைப் பெற்றார்களாம். அவை அப்படியே பறந்து போய், பல நகரங்கள் மீது உட்கார்ந்து விடுமாம். அதோடு அந்த நகரங்கள் எல்லாம் பாழாகி விடுமாம். இதெல்லாம் புராணக் கதை என்று சொல்லிக் கொண்டிருந்தோம்.

ஆனால் இன்று என்ன நடக்கிறது தெரியுமா? உண்மையிலேயே அமெரிக்காவிலே பறக்கும் கோட்டைகள் சிருஷ்டிக்கப்படுகின்றன. அவை 'ஜம்' என்று பறந்து வந்து, ஹிட்லர் ஆசையோடு பிடித்த ஐரோப்பா மீதில் எல்லாம் குண்டுகளைப் பொழிந்து, அங்குள்ள தொழிற்சாலைகளையும், ராணுவ முக்யம் வாய்ந்த இடங்களையும் பாழடித்துக் கொண்டிருக்கின்றன. ஹிட்லரது பேச்சை நம்பிய ஜெர்மன் மக்கள், இப்பொழுது படும் அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. 'எல்லாம் ஹிட்லரே! ஹிட்லரே கடவுள்! ஹிட்லரே கடவுளின் தூதன்!' என்று நம்பி நம்பி, ஜெர்மானியர் எல்லாம் மோசம் போய்விட்டார்கள். அது இப்பொழுது தான் அவர்களுக்குத் தெரிய ஆரம்பித்திருக்கிறது. ஜெர்மனி மீது விழுந்து வெடித்து, அனைவரையும் கதிகலங்கச் செய்யும் ஆயிரம் டன் வெடிகுண்டுகள் எல்லாம், ஹிட்லரின் அசட்டுச் செயலால் ஏற்பட்ட வரவு என்பதை இப்பொழுது தான் ஜெர்மன் மக்கள் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். இனிமேல் அப்பா என்றாலும் முடியாது, அம்மா என்றாலும் விடாது. படவேண்டியதை யெல்லாம் பட்டுத் தானே தீரவேண்டும்? ஹிட்லர் கடவுளும் அல்ல, கடவுளின் தூதனும் அல்ல. ஜெர்மனிக் கென்று கடவுள் சிருஷ்டித்த ஒரு சனியன் தான் என்பது திட்டமாகி விட்டது. இதே அபிப்பிராயத்தைத் தான் எதிர்கால சரித்திராசிரியர்களும் கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகமே யில்லை.

ஹிட்லர் எதாக இருந்தாலும் இனி நேசதேசத்தார் கவலைப்படப் போவதில்லை. ஹிட்லரையும், அவர் ஜெர்மன் மக்களிடை விஷமெனப் பரவச் செய்துள்ள ஹிட்லரிஸத்தையும் பூண்டில்லாமல் ஒழித்தால் ஒழிய, நேசதேசத்தார் திருப்தியடையப் போவதில்லை. அதோடு, அவரது சகாக்களின் கொட்டங்களையும் ஒடுக்கி விடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் நேசதேசத்தார்.

இதற்கு பூர்வாங்கமாகத் தான், ஜெர்மனி மீதும், ஜெர்மனியின் வசப்பட்ட ஐரோப்பிய நாடுகள் மீதும் அடிக்கடி அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் பறந்து செல்லுகின்றன. சமீபத்திலே பத்து நாட்கள் தொடர்ந்தாற் போல் இரவும் பகலுமாக இங்கிலீஷ் கால்வாய் பிரதேசத்தில் தொடங்கி, வடக்கே பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க் நாடுகள் மீதிலும், ஜெர்மனியிலே பெர்லின், ஹாம்பர்க், ஸெயின்ட் லொரைன் நகர்கள் மீதிலும் குண்டுகளைப் பொழிந்திருக்கிறார்கள் அந்த விமானிகள்.

பெர்லின் நகரிலே ஏகச் சேதமாம். கொயரிங் துரையின் காரியாலயத்தைக் கூட ஒரு நேசதேச குண்டு சம்பிரமமாகக் கவனித்து விட்டதாம். அதோடு, க்ரப்ஸ் தொழிற்சாலையும், வேறுபல முக்யமான ஆலைகளும் தவிடுபொடியாயினவாம். பெர்லினில் உள்ளோர் எல்லாம் தங்கள் சக்தியனைத்தையும் உபயோகித்து பாழான பெர்லினை உடனே சீர்திருத்த வேண்டுமென பிரசார மந்திரி கொப்பல்ஸ் கூறியிருக்கிறாராம்.

#### நீர்மூழ்கிகள் கட்டும் முன்பே ஒழிகின்றன.

பிரிட்டிஷ், அமெரிக்க விமானிகளின் திருஷ்டியெல்லாம், முக்யமாக கொடிய நாஜி நீர்மூழ்கிகள் சிருஷ்டிக்கப்படும் 4 ஸ்தலங்கள் மீது தானிருக்கின்றன. ஏனென்றால் இந்த நீர்மூழ்கிகளின் தொல்லை தான் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. அது காரணமாக அமெரிக்காவிலே தயாராகிக் கிடக்கும் ஏராளமான ஆயுதங்களையும் விமானங்களையும், டாங்கிகளையும் ஏற்றி வர கப்பல்கள் சௌகரியமாகக் கிடைப்பதில்லை. அந்த உதவிகள் இல்லாது நேசதேசத்தார் தொடர்ந்து எவ்வாறு யுத்தத்தை நடத்த முடியும்? இது காரணம் பற்றித் தான், நாஜி நீர்மூழ்கிகள் பிறக்கும் இடத்தையே அழிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றை யெல்லாம் பார்க்கும் ஜெர்மன் மக்கள் கொஞ்சம் கூட முணு முணுக்காம லிருப்பார்களா என்ன? "ஓய் ஹிட்லரே! நமது 'லுப்ட்வாப்' (விமானப் படை) அப்படிப் பட்டதாக்கும், இப்படிப் பட்டதாக்கும் என்று வாய் கிழியப் பேசினீரே." ஐயா! இப்போ என்ன செய்கிறது உமது 'லுப்ட் வாப்பு?' லண்டன் நகரையாவது பதிலுக்குப் பதில் தாக்குவது தானே? என்று அப்பட்டமாக அவர்கள் கேட்காவிட்டாலும், ஜாடையாக ஹிட்லர் காதில் விழும்படியாக ஏதாவது சொல்லத் தான் சொல்லுவார்கள். அதைக் கேட்டு, ஹிட்லர் தற்சமயம் பிரிட்டனுக்கு விமானங்களை அனுப்புவாரானால், அவ்வளவுக் கவ்வளவு நமக்கு நல்லது தான்.

#### ஹிட்லரின் தடுமாட்டம்

இப்பொழுது சீமைக்கு விமானங்கள் அனுப்புவதென்றால், அவை எல்லாம் போச்சு என்று செலவுக் கணக்கில் எழுதி விட்டுத் தான் அனுப்ப வேண்டும். அப்படியே அனுப்புவ தென்றாலும ருஷ்யர் போர் முனையிலிருந்து தான் எடுத்து அனுப்ப வேணும். அவ்வளவுக் கவ்வளவு அவர்களுக்கு ருஷ்ய முனையில் பலக் குறைவு தானே? நன்றாக அரும்பி மலர்ந்த மலர்களைப் போலிருந்த மணியான விமானிகள் எல்லாம், மேலே விண்ணுலகத்திற்கு ஒரே யடியாகப் பறந்து போய் விட்டார்களே! இப்பொழுது வருகிறவர்கள் எல்லாம் கத்துக் குட்டிகள் தானே? ஆகவே, ஹிட்லர் தமது கடற் படையைச் சீர்ப்படுத்தி, அதனுதவியால் ருஷ்யாவிற்குப் போகும் கப்பல்களையும், பிரிட்டனுக்கு வரும் கப்பல்களையும், கடற்கரையோர நகர்களையும் தகர்க்க முயலக் கூடும். ஆனால் பிரிட்டிஷ் நகரங்கள் முன் போலில்லாது, தடபுடலான பாதுகாப்பு ஏற்பாடுகளுட னிருக்கின்றன. சென்ற இடங்களில் எல்லாம் ஜெர்மன் விமானங்களுக்குச் சூடான வரவேற்புக் கிடைக்கும் என்பதில் சந்தேகமே யில்லை.

ஹிட்லருக்கு ஓய்வு, ஒழிவு என்பதே இப்பொழுது இராது. மேற்கே பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள் படுத்தும் பாடு பொறுக்க முடியவில்லை; கிழக்கேயோ ஒரே அவஸ்தை தான்! ருஷ்யர்கள் அடைந்து வரும் ஒவ்வொரு வெற்றியும் ஹிட்லரை ஒரு ஆட்டு ஆட்டிக் கொண்டுதானிருக்கும் என்பதில் ஐயமும் உண்டோ?

#### கைப்பற்றியவற்றை ஹிட்லர் இழந்தார்.

நாஜி யுத்த யந்திரத்தை ஒரே யடியாக ஒடுக்கி அடக்கும் வரை, ருஷ்யர்கள் நிற்கப் போவதில்லை என்ற செய்தி ஹிட்லருக்கு, காதில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றியது போலவே இருக்கும். வடக்கே இல்மென் ஏரிக்கரையிலே நாஜிகள் செய்திருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை யெல்லாம் ருஷ்யர்கள் தகர்த்துக் கொண்டு, பனிக் கட்டி மீது பாய்ந்து சென்று, ஏரியைக் கடந்து முன்னேற ஆரம்பித்து விட்டார்களாம். அப்பால் ஸ்டரயா ரூஸாவிலிருந்து ஓரல் வரை 700 மைல்கள் பரந்துள்ள பிரதேசங்களிலே கடும் போர் நடந்து வருகிறதாம். சென்ற வாரத்திலே ருஷ்யர்கள் ரீஷெவ், காட்ஸ்க் என்ற முக்யமான நகர்களை எல்லாம் திரும்பப் பிடித்துக் கொண்டார்கள். ரீஷெவ் முனையிலே ருஷ்யர் அடைந்து வரும் வெற்றிகளைப் பார்த்தால், 1941-ம்ஹூ பனிக் காலத்தில் ருஷ்யர்கள் ஜெர்மானியரைத் தாக்கினார்களே, அதற்கப்பால் ஜெர்மானியருக்குக் கிடைத்த இடங்களும் பிரதேசங்களும் பறி போய் விட்டன என்பது தெரிகிறது.

தென் பிரதேசத்திலே நாஜிப் படைகள் மூர்க்கமாகவே போராடுகின்றனவாம். ருஷ்யர்களின் முன்னேற்ற வேகம் அதனால் குறைந்திருக்கிறதாம். ஆனாலும் ருஷ்யர்கள் ராஸ்டாவுக்கு மேற்கே புதிதாக ஒரு தாக்குதலை ஆரம்பித்திருக்கிறார்களாம். பல பிரதேசங்களிலே ருஷ்யர்கள் பல இடுக்கித் தாக்குதல்களை நடத்துகிறார்கள். இவற்றி லிருந்து தப்பிப் பிழைக்க ‘ பிளான் ’ போடுவதற்கே ஜெர்மானியருக்கு காலம் சரியாக இருக்கும் போலிருக்கிறது. இதற்கே நேரம் சரியாகப் போய்விடுகிற தென்றால், அவர்கள் முன்னேறித் தாக்க, திட்டம் போடுவதெப்போ ?

## ஸ்டாலின் கிராடைப் புதுப்பிக்க முயற்சி.

ஜெர்மானியர் நிலைமை இப்படி யிருக்க, ருஷ்யர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா ? ஸ்டாலின் கிராட் நகரம் ஒரே பாழாகப் போனது வாஸ்தவமே ! ஆனாலும் அந்நகரைப் புதுப்பித் தெழுப்பும் கைங்கரியத்தில் உதவி புரிய ருஷ்ய மக்களனைவருமே ஆவலாக இருக்கிறார்களாம். ஸ்டாலின்கிராடைச் சீர்ப்படுத்தும் வேலைகள் மும்முரமாக நடக்கின்றனவாம்.

ருஷ்யக் குடியானவர்கள் இருபத்தி மூன்றரை லக்ஷம் பவுண்டு தானியங்களையும், எண்ணற்ற ஆடு மாடுகளையும் ஸ்டாலின்கிராடுக்கு அனுப்பி யிருக்கிறார்களாம். வால்கா நதியில் வேலை செய்யும் துறைமுகத் தொழிலாளர்கள், ஸ்டாலின்கிராடிலே கப்பல் துறைகளைக் கட்டிக் கொடுக்க இசைந்திருக்கிறார்களாம்.

“ குயவனுக்கு பல நாள் வேலை, தடியடிக்காரனுக்கு ஒரு நாள் வேலை ” என்பது பழமொழி. ஆனால், ருஷ்ய மக்கள் செய்கிற வேலைகளையும், அவர்களது ஊக்கத்தையும் பார்த்தால், தடியடிக்காரனுக்கு பல நாள் வேலை, குயவனுக்கு சில நாள் வேலை என்று பழமொழியை மாற்ற வேண்டியிருக்கும் போலிருக்கு !

இன்னும் ஆறே மாதங்களில், ஸ்டாலின்கிராட் தொழிற்சாலைகள் ரிப்பேர் செய்யப்படுமாம். அங்கே டாங்கிகளும், ட்ராக்டர்களும் உற்பத்தி செய்யப்படுமாம். அங்குள்ள ரயில் பாதைகள் ஒழுங்காக வேலை செய்யத் தொடங்கி விட்டனவாம். ஸ்டாலின் கிராடிலே திரும்பவும் எலக்ட்ரிக் விளக்குகள் எரிய ஆரம்பித்து விட்டன என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்.

இம்மாதிரியாக, ஜெர்மானியரிடம் மீட்கப்பட்ட பிரதேசங்களி லெல்லாம் புனர் நிர்மாண வேலைகள் துரிதமாகவே நடக்கின்றனவாம். இதற்குக் கூட முன்கூட்டியே அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள் போலிருக்கிறது.

ஹிட்லரின் சக்தி இன்னும் அடியோடு அழியவில்லை. ருஷ்யாவில் மட்டும் இன்னும் அவர் 180 டிவிஷன் படைகளை நிறுத்தி வைத்திருக்கிறார் என்பதை ருஷ்யர்கள் மறந்து விடவில்லை. அதனால் தான் அடிக்கடி மேற்றிசையிலே இரண்டாவது போர் முனையைத் தொடங்க வேண்டுமென அவர்கள் கூறி வருகிறார்கள். அதற்கும் சரியான சமய சந்தர்ப்பம் வர வேண்டாமா ?

## ரோமலுக்கே வெட்கமா யிருக்கிறதா ?

வட ஆப்பிரிக்க யுத்தத்திலே நாம் இன்னும் ஒரு முடிவு காணவில்லை. ரோமலுக்கு ரொம்ப ஆத்திரம் போலிருக்கிறது. எங்கு பார்த்தாலும் பாதுகாப்புப் போரை நடத்தி வருவது அவருக்கே வெட்கமாக இருக்கிறாப் போலிருக்கிறது. அதனால்தான் அவர் சென்ற வாரம், மாரெத் அரண்களுக்கு முன்னால் உள்ள எட்டாவது பிரிட்டிஷ் சேனை மீது படை யெடுக்கத் துணிந்தார் போலும். அவரது திட்டத்திலே எட்டாவது படையினர் மண்ணைப் போட்டு விட்டார்கள்.

இந்தப் போரிலே ரோமல் தோற்றால், தலை விரி கோலமாக வடக்கே ஓட வேண்டியது தான். வடக்கே மட்டும் என்ன வாழுகிறது ? நேச தேசப் படைகள், வான் ஆர்னீம் என்ற ஜெர்மானிய சேனாபதியை அழ வைத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு பிரதேசத்திலே, பாதுகாப்பே இல்லாதது போல் தோன்றச் செய்தார்கள் நேச தேசத்தார். நாஜிப் படைகள் குடுகுடென்று இந்த வலையில் வந்து விழுந்தன. சரியான சமயம் பார்த்து நேசப் படைகள் பீரங்கிகளின் வாய்களை அவிழ்த்து விடவே, நாஜிப் படைகள் சிதறிப் போயின. மத்யப் போர் முனையில் நாஜிகள் பின் வாங்கிய வண்ணமே இருக்கிறார்கள். வடக்கே மும்முறமாகச் சண்டை நடக்கிறது.

## ஜப்பானியர் பட்ட அடி பெரிய அடி தான்.

இதே போல, தென்-மேற்கு பஸிபிக் பிரதேசத்திலும் கடும் போர் நடக்கிறது. அங்குள்ள ஜப்பானியரை அமெரிக்க, ஆஸ்திரேலிய விமானிகள் லேசில் விடுவதில்லை. சென்ற வாரம் ஒரு அற்புதமான சண்டை நடந்தது. அதிலே ஜப்பானியர் பட்ட அடி பெரிய அடி தான். நியூகினி தீவிலே பதினையாயிரம் வீரர்களை, ஆயுதங்களுடன் கொண்டு இறக்க ஒரு பெரிய கப்பற் படை இருநூறு விமானங்களைப் பாதுகாப்பாகக் கொண்டு, நகர்ந்து போய்க் கொண்டிருந்தது. அதை நேச தேச விமானிகள் பார்த்து விட்டார்கள். அந்தக் கப்பல்களில் ஒன்று கூட பாக்கியில்லாமல் எல்லாவற்றையும் மூழ்க அடித்து விட்டே மறு வேலை பார்த்தார்கள் அவர்கள். ஜப்பானிய விமானங்களிலே நூறுக்கு மேல் காலியாம். இது ஒரு மகத்தான வெற்றி தான்.

ஆஸ்திரேலியாவிற்கு உள்ள படை யெடுப்பு ஆபத்து இன்னும் தீரவில்லை என்கிறார்கள். ஜப்பானியருக்கு பிஸ்மார்க் கடலில் ஏற்பட்ட படு தோல்வி, அவர்களது தற்போதைய போர்த் திட்டத்தைப் பாழாக்கி யிருக்கலாம். ஆனாலும், அவர்களுடைய பலம் இங்கு பூருவாகக் குறைய வில்லை. ராபால் போன்ற இடங்களில் நிறையக் கப்பல்களை வைத்திருக்கிறார்கள். இரண்டாயிரம் மைல் நீளத்திற்குள் சிக்கிய பல தீவுகளிலே ஏராளமான படைகளை வைத்திருக்கிறார்கள். ஆகவே இன்னும் பல கடும் போர்கள் நடக்க வேண்டும்.

## சீனாவில் ஜப்பானியருக்கு எங்கும் தோல்வி

பர்மாவில் உள்ள ஜப்பானியரை இந்தியாவிலிருந்து செல்லும் அமெரிக்க, பிரிட்டிஷ், இந்திய விமானிகள் நொறுக்குகிறார்கள். வரப் போகும் மழை காலத்திலும் அவர்கள் மண்டையை உடைக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். சீனாவிலே ஜப்பானியருக்கு எங்குமே தோல்வி தான். அதர்ம யுத்தம் செய்பவர்களுக்கு இறுதியில் கிடைப்பதும் இது தானே ?

---

(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

இந்த நிலையில், உணவுப் பொருள்களை அரசாங்கத்தார் வாங்கி அனுப்புவதற்கு எவ்வளவு செலவாகும் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. என்றாலும் ஏறக்குறைய 75 கோடி ரூபாய்கள் செலவாகலாம். இந்தத் தொகையை முதலில் இந்திய அரசாங்கத்தார் செலவு செய்து, பிறகு மாகாண அரசாங்கத்தாரிடமிருந்து வசூல் செய்து விடுவார்கள். ஏனென்றால், உணவுப் பொருள்கள் மாகாண அரசாங்கங்களின் சார்பாகத் தான் வாங்கப் படுகின்றன.

முக்கியமான உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகப்படுத்த எல்லா வகைகளிலும் முயற்சிக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தார் உறுதி கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிகளின் பொருட்டு, தகுந்தபடி பணம் செலவு செய்யத் தான் வேண்டும். எந்தெந்த முறைகளைக் கையாள வேண்டுமென்று இன்னும் முடிவாகவில்லை. என்றாலும் இதற்கென்று மொத்தமாக 50 லட்ச ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நல்ல பலன் கிடைக்குமென்று தோன்றினால், இந்தத் தொகையை விட அதிகமாகவும் செலவு செய்யும்படி நேரும்.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால், இத்திட்டத்தின்படி செலவு 76 கோடியே 78 லட்சம். இந்தியப் பாதுகாப்புக்கென்று 182 கோடியே 81 லட்சம். ஆகவே மொத்தம் திட்டமிடப்பட்ட செலவு ரூ. 259 கோடியே 59 லட்சம். தற்போதுள்ள வரி விகிதத்தின்படி, திட்டமிடப்பட்டிருக்கும் மொத்த வருவாய் ரூ 199 கோடியே 30 லட்சம் தான். ஆகையால் வரவிற்கு மேல் 60 கோடியே 20 லட்சம் அதிகம் செலவாகக் கூடும்.



# தீமையினின்றும் நன்மை பிறக்கிறது

## யுத்தத்தினால் மக்கள் பயிற்சி பெற்றனர்

### ஏ. ஆர். பி. வார்டனுக்குப் பாராட்டு

சில நாட்களுக்கு முன்பு நான் கல்கத்தாவிற்கு ஒரு நண்பரின் விருந்தினனாகப் போயிருந்தேன். அப்போது ஒரு நாள் இரவு 10-மணி இருக்கும். நிலவின் ஒளி அந் நகரத்தை மேலும் அழகு படுத்திற்று. விமான அபாய அறிவிப்புச் சங்கு ஊதியது. என்னுடைய நண்பரும் அவருடைய மனைவியாரும் தம் உடுப்புக்களை அணிந்து கொண்டு வெகு விரைவில் வெளிப் பட்டார்கள். அவர் விசேஷப் போலீஸில் சேர்ந்திருந்தார். அவருடைய மனைவியார் அடுத்திருக்கும் முதல் உதவி நிலையத்தில் நர்ஸாகச் சேர்ந்திருந்தார். இதற் கிடையில், அங்கிருந்த வேலைக்காரர்கள் எல்லோரும் சாப்பாட்டு கட்டிற்கு விரைந்து வந்தார்கள். இது தான் அவர்கள் ஆபத்துக் காலத்தில் தங்கி யிருக்கும் இடம். இரண்டொரு நிமிஷங்களில் அந்த அறையிலிருந்த கண்ணாடிச் சாமான்களையும் பீங்கான் சாமான்களையும் அப்புறப்படுத்தி விட்டனர். விளக்குகளின் திரிகளை இறக்கி விட்டனர். நாங்கள் எல்லோரும் அங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். சுமார் 1 மணி நேரத்திற்குப் பிறகு தான் அபாயம் நீங்கி விட்டது என்று அறிவிக்கும் சங்கு ஊதியது.

அந்தச் சமயம் 3 ஜப்பான் விமானங்கள் கல்கத்தாவிற்கு வர முயற்சித்தன. ஆனால், கல்கத்தா நகரத்திற்கு அருகில் வரும் முன்பே அவை எல்லாம் சுட்டு வீழ்த்தப் பட்டன. ஆகவே, எந்த விதச் சம்பவமும் அப்போது அங்கே நடை பெற வில்லை.

இந்தச் சமயத்தில் நான் இரண்டு விஷயங்களை முக்கியமாகக் கவனித் தேன்.

1. அபாய அறிவிப்புச் சங்கு ஊதிய வுடனே, தாம் என்ன செய்ய வேண்டுமென்று அந்த வீட்டிலிருந்த அனைவரும் உணர்ந் திருந்தார்கள். அதுவும் விரைவாகவும் ஆர்ப்பாட்டமின்றியும் செய்து முடித்தார்கள்.

2. கல்கத்தாவிலுள்ள ஏ. ஆர். பி. வார்டன்கள், மெஸெஞ்சர்கள், மீட்சிக் கோஷ்டியார், முதல் உதவியாளர்கள், டாக்டர்கள், சிப்பந்திகள், கண்ட்ரோல் ரூம் சிப்பந்திகள், ரிபோர்ட் சென்டர் சிப்பந்திகள், நெருப்பணைப்பவர்கள் ஆகியோர், தம் போன்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் உதவி தேவையானால், அவற்றைச் செய்வதற்கு ஆயத்தமாகக் காத்துக் கொண்டிருந்தார்கள். முன்பு விமானத் தாக்குதல் நேர்ந்த போதுங் கூட, அப்படித் தான் ஆயத்தமா யிருந்தார்கள்.

## விமானத் தாக்குதலுக்கு முன்பு.

யுத்தம் ஆரம்பமான போது, உள் நாட்டுப் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டது. அந்தப் படையினர் யுத்தத்தைக் குறித்துப் பிரமாதப் படுத்துவதாக நம்மில் பெரும்பாலோர் நினைத்தோம். அக் காலத்தில் யுத்தம் வெகு தூரத்திற்கு அப்பால் நடை பெற்றுக் கொண்டிருந்தது. யுத்தம் இந் நாட்டிற்கு வந்தாலும் வராவிட்டாலும், நாம் எச்சரிக்கையாகத் தான், ஆயத்தமாகத் தான் இருக்க வேண்டுமென்று யாராவது சொன்னால், அநாவசியமாகப் பயப்படுத்துகிறவன் என்று தான் அவரைச் சொல்லுவார்கள். கல்கத்தாவிலும் அப்போது அப்படித் தான் சொன்னார்கள். இந்திய நகரங்களில் மட்டும் இப்படிப் பட்ட எண்ணம் தோன்றியதாக நினைக்க வேண்டாம். இங்கிலாந்தில் எதிரி விமானங்கள் தாக்கும் முன்னதாகக் கூட, ஏ. ஆர். பி., பொது மக்களுக்கு தொந்தரவு கொடுக்கும் ஸ்தாபனம் என்று தான் மதித்தார்கள்.

யுத்தம் நமக்கு அருகே வந்து விட்டது. கல்கத்தாவிற்கு வெகு அருகில் வந்து விட்டது. இங்குள்ள உள் நாட்டுப் பாது காப்புப் படையினர் கெட்டிக்காரர்களா யிருப்பது பற்றி, இந் நகரவாசிகள் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களா யிருக்க வேண்டும். இங்கே உள் நாட்டுப் பாது காப்புப் படையினர் என்றது, செய்ன்ட் ஜான்ஸ் ஆம்புலென்ஸ் படை, செஞ்சிலுவைக் காரர்கள், தீயணைப்பவர்கள், ஏ. ஆர். பி. ஆகியவர்களைத் தான்.

சென்னையிலும், இம்மாகாணத்திலுள்ள பல முக்கியமான நகரங்களிலும் நன்றாகப் பயிற்சி பெற்ற ஏ. ஆர். பி. காரர்களும், தீயணைக்கும் படையினரும், ஆயிரக் கணக்கான முதலுதவியாளர்களும், இருக்கிறார்கள் என்னும் செய்தி, நமக்கு சற்று ஆறுதலளிக்கிறது. அவசியம் நேரும்போது இவர்கள் மிகத் திறமையோடு வேலை செய்வார்கள்.

இந்த ஸ்தாபனங்கள் எல்லாம் ஒரு வாரத்திலேயோ ஒரு மாதத்திலேயோ ஏற்பட்டவை யல்ல; அவை, தற்போது அமைந்துள்ள திறமையடைய, மிகவும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டி நேர்ந்தது.

தென்னிந்தியாவிற்கு விமான விபத்து நேராது என்று தான் நம்புகிறோம். நாம் இப்படி நம்புவதனாலேயே ஜப்பானியன் இங்கு வராமல் நின்று விடமாட்டான். இங்கு விமான விபத்து நேராது என்று சும்மா இருந்து விடுவது, முட்டாள் தனமாக முடியலாம். இங்கேயும் எதிரிகள் குண்டுகளை வீசலாம்.

## பொது ஜன உள் நாட்டுக் காவற் படை

ஆகவே, முன்னைய விட உள் நாட்டுப் பாது காப்புப் படையினரோடு பொது மக்கள் இப்போது அதிகமாக ஒத்துழைக்கிறார்கள். இதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன வென்று நினைக்கிறேன்.

1. முதலாவதாக, எதிரிகள் விமானங்களிலிருந்து நம்மைத் தாக்குவார்களானால், இந்தப் படையினர், முழு வெற்றி யடைய வேண்டும். உள் நாட்டுப் பாதுகாப்பு அந்தப் படைக்குத் தான் பொறுப்பு என்று பெரும்பாலோர் நினைக்கிறார்களே யொழிய, பொது மக்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைத்தால் தான், வெற்றி பெற முடியும் என்று உணருவதில்லை.

2. இரண்டாவதாக இன்னும், யுத்தத்திற்குப் பிறகும், இந்தப் படையைச சேர்ந்த ஒவ்வொருவரும், முன்னையை விட மேலான நிலையிலுள்ள பிரஜைகளாக இருக்க விரும்பி, அதற்காகப் பழகிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, ஒத்திருந்து வேலை செய்வதால் உள்ள நன்மைகளையும், ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை கொள்வதிலும், தம்மீதே நம்பிக்கை கொள்ளுவதிலும் பழகுகிறார்கள். நல்ல பயிற்சி இருந்தால் மட்டுந் தான், இந்த நம்பிக்கை உண்டாகும். அன்றியும் பிறரைப் பற்றி நினைக்கவும், தாம் கற்ற விசேஷக் கல்வியைக் கொண்டு உதவவும் பழகுகிறார்கள்.

இது, மிகைபடக் கூறப் பட்டதாக சந்தேகப் பேர் வழிகளுக்குத் தோன்றலாம். ஆனால், உண்மையிலேயே சென்னையில் பல முறை இதைப் பரீட்சித்துப் பார்த்திருக்கிறோம். அப்போதெல்லாம் உள் நாட்டுப் பாதுகாப்புப் படையினர் மிகச் சிறந்த முறையில் நடந்து கொண்டனர். அதற்கு ஒரு உதாரணம் கீழே தருகின்றோம் :—

## சென்னைத் துறைமுகத்தில் சம்பவம்

சில மாதங்களுக்கு முன்பு சென்னைத் துறைமுகத்தில் சில கூலிக்காரர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெரிய மரக் கழி தவறி விழுந்து விட்டது. அதனால் இரண்டு கூலிக்காரர்களுக்குப் பலமான காயப்பட்டது. ஒருவருக்குத் துடை எலும்பு பல சுக்கல்களாக முறிந்தது மட்டுமன்றி, இரத்தக் குழாயும் வெடித்து, ஏராளமான இரத்தச் சேதம் ஏற்பட்டது. மற்றவருக்குக் கால் எலும்பு பல சுக்கல்களாக உடைந்து விட்டது. முதலாவது பேர்வழிக்கு உடனே முதல் உதவு செய்யாதிருந்தால் கண்டிப்பாய் இறந்து போயிருப்பார். ஏனென்றால், அவ்வளவு இரத்தம் பீறிட்டு வெளிக்கிளம்பியது. அருகிலிருந்த கூலிக்காரர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். இன்னது செய்வ தென்று தெரியவில்லை. ஏனென்றால், அவர்கள் முதல் உதவிப் பயிற்சி பெற்றவர்கள் அல்ல. அப்போது துறைமுக

## சுரங்க வெடி! எச்சரிக்கை!



இந்தியாவின் கீழ் கரையில் கடலில் அடிக்கப் பட்டு வந்து ஒதுங்கிக் கிடந்த ஒரு சுரங்க வெடியைச் சில கிராம வாசிகள் கையில் எடுக்கப் போனதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

அப்படிச் செய்தால், பொது ஜனங்களுக்கு மிகுந்த ஆபத்து நேரு மென்பது அனைவருக்கும் தெரிந்தது தான். எளிதில் வெடிக்கக் கூடிய பல வஸ்துக்கள் சுரங்க வெடிகளில் நிரம்பி யிருக்கின்றன. சர்வ தேச முறைப்படி, சுரங்க வெடிகள் போடப்பட்ட இடத்தை விட்டு நகருவதா யிருந்தால், அவற்றால் ஆபத்துக்கள் நேராதபடி அவை அமைக்கப்பட வேண்டும். இந்த யுத்தத்தில் எதிரிகள் இந்த முறைகளை எல்லாம் கைவிட்டு விட்டார்கள். அதைத் தொட்டாலுங் கூட, திடீரென்று பலத்த சத்தத்தோடு வெடிக்கும். அப்போது பல உயிர்களுக்கும் ஏராளமான பொருள்களுக்கும் பெரும் சேதம் ஏற்படும்.

சுரங்க வெடியின் கூடு ஒரு வகை உலோகத்தால் செய்யப்பட்டது. அதன் குறுக்களவு $2\frac{1}{2}$ அடி முதல் 4 அடி வரை இருக்கும். சாதாரணமாக அதன் நிறம் கருப்பு. ஆனால், கடல் நீரில் நெடு நாட்கள் இருந்தால், இந் நிறம் மாறி விடுகிறது. அவற்றிற் சிலவற்றிற்குக் கொம்பு போன்ற இரண்டு முனைகள் சற்று நீட்டிக் கொண்டிருக்கும். இவற்றில் ஏதேனும் பட்டால், உடனே வெடித்து விடும். **கடலிலாவது கடற் கரையிலாவது அப்படிப் பட்ட பொருளை யாராவது பார்த்தால், அதற்கு 500 கெஜ தூரத்திற்கு அப்பால் தான் இருக்கவேண்டும். அருகிலுள்ள சிவில் அல்லது இராணுவ அதிகாரிகளிடம் அது பற்றி அறிவிக்க வேண்டும்.** நிபுணர்களைக் கொண்டு அவர்கள் அதை ஆராய்ச்சி செய்வார்கள். அவசியமானால் அதனால் துன்பம் நேராதபடி அதைச் செய்து விடுவார்கள். **இப்படிச் செய்வதனால் பொது ஜனங்கள் தமக்குப் பாதுகாப்புகள் தேடிக் கொள்வது மட்டு மன்றி, முக்கியமான தகவல்களை அதிகாரிகளுக்கு உதவியவர்களு மாவார்கள்.**

ஏ.ஆர்.பி.யைச் சேர்ந்த இருவர், இக் கூக்குரலைக் கேட்டு, என்ன விஷயம் என்று தெரிந்து கொண்டு போகலா மென்று அங்கே வந்தார்கள். இவர்கள் செய்ன்ட் ஜான்ஸ் ஆம்புயுலென்ஸ் படையில் முதலுதவித் தேர்ச்சி பெற்றவர்கள். அருகி லிருந்த ஆபீசில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்கள். விபத்தில் காயப்பட்டவர்களை அவர்கள் முதல் முதல் அப்போது தான் கண்டார்கள். அவர்கள் கடமையை உடனே உணர்ந்தார்கள். இந்தச் சம்பவம் நடந்த இரண்டு நிமிஷங்களுக்குள் முதல் பேர்வழியின் இரத்தக் கழிவை நிறுத்தி விட்டார்கள். காயப்பட்ட இருவருக்கும் முதலுதவி செய்தார்கள். விரைவாக அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். காயப்பட்டவர்களைப் பரிசோதித்த டாக்டர், இவ்விருவருக்கும் முதலுதவி, கொடுக்கப்பட்டிருந்த முறையைப் பாராட்டி, அந்தச் சந்தர்ப்பத்தில், அப்படித் தான் செய்திருக்க வேண்டு மென்று தன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

### சிறந்த அறிவும் பயிற்சியும்

இவர்கள் பெறும் பயிற்சியை நடைமுறையில் பரீட்சிக்க, இது மிகச் சிறந்த உதாரணம் தான். இந்த ஒரு சம்பவம் மட்டு மல்ல. விபத்துக் காலங்களில், ஏ.ஆர்.பி. காரர்கள் பொறுப் பேற்றுக் கொண்டு, வெகு விரைவாகச் செயலாற்றி, தாம் பெற்ற பயிற்சியைக் கையாளுகிறார்கள். இந்தப் பயிற்சி மிகச் சிறந்ததாகவும் இருக்கிறது.

“ தீமையினின்று நன்மை பிறக்கிறது என்பதும் உண்மை தான். இந்த யுத்தத்தின் பயனாக ஆயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் இப்பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இந்த யுத்தம் ஏற்படா திருந்தால், முதலுதவி, நர்சிங், தீயணைத்தல், மீட்சி வேலை, முதலியவற்றில் இவர்கள் பழகி யிருக்கவே மாட்டார்கள். அவர்கள் இப்பயிற்சியால் அடைந்த அறிவும் உயரிய நடத்தையும் சாதாரணமாக அவர்களுக்கு வாய்த்திருக்காது. இவை, யுத்தத்திற்குப் பிறகுங் கூட நெடு நாட்களுக்குப் பயன்படும். வெடி குண்டுகள் விழுந்தாலும் விழா விட்டாலும், விமான விபத்து நேர்ந்தாலும், நேரா விட்டாலும், நாட்டின் நன்மையை முன்னிட்டு உள் நாட்டுப் படையினர் செய்யும் முயற்சிகளுக்கு நாம் உதவ வேண்டியது அவசியம்.

—சென்னை வானொலி நிலையத்தினின்று செய்யப்பட்ட ஒரு பிரசங்கம்.



# விருந்தினர்களைக் குறையுங்கள்

## உணவுப் பிரச்சினையைத் தீர்க்க வழி

### மே. த. சென்னை கவர்னர் ஆலோசனை

சென்னை கவர்னர் மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு விடுத்த வேண்டுகோளை நம் வாசகர்கள் கவனிக்கும் பொருட்டு இங்கே மீண்டும் வெளியிட்டிருக்கிறோம் :—

சில உணவுப் பொருள்கள் பஞ்சம், குறிப்பாக சர்க்கரைப் பஞ்சம் இங்கே ஏற்பட்டிருக்கிற தென்று பொது மக்களுக்குத் தெரியும். ஆகவே, அவற்றை சேகரித்து வைப்பதும் வீணாக்கா திருப்பதும் அவசியந் தான். அப்போது தான் எல்லோருக்கும் விகிதாசாரப் படி உணவுப் பொருள்கள் கிடைக்கும். இதன் பொருட்டு பொது மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டு மென்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் விரும்புகிறார்கள். திருவிழாக் காலங்களிலும், சமூகச் சடங்குகள் நடை பெறும் போதும் நடத்தும் விருந்துகளில் குறிப்பிட்டவர்களே கலந்து கொள்ளும் படிச் செய்ய வேண்டும். ஏராளமாக விருந்துகள் நடத்த வேண்டாம். தேநீர் விருந்துகளிலும் விருந்தினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். இதன் மூலமாக சர்க்கரைச் செலவு குறையும்.

இதனால், நமது நாட்டைக் காக்கும் படையினருக்கு விருந்துகள் நடத்தக் கூடா தென்று அருத்தமல்ல. இது வரை படையினருக்கு விருந்துகள் அளித்து வந்தவர்களும், அளித்து வந்த ஸ்தாபனங்களும் இனியும் அளிக்கு மென்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் நம்புகிறார்கள்.

இந்த வேண்டுகோளுக்கு இணங்கி, பொது மக்கள் இந்தத் தியாகம் செய்ய முன் வருவார்கள் என்று நம்புகிறோம். இதனால், ஏற்கெனவே உள்ள உணவுப் பொருட்களும் வீணாகாமல் இருக்கும்.

# சரண்புகுந்த யூதர்களுக்கு உதவி

## பிரிட்டிஷ்-அமெரிக்க ஏற்பாடுகள்

சென்ற ஜனவரி மாதம் 20-ம் தேதி அமெரிக்க அரசாங்கத்திற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு ஞாபகக் குறிப்பை அனுப்பியது. அதில், நாஜிகள் வசப்பட்ட நாடுகளிலிருந்து தப்பி வருகிறவர்களுக்கு மற்ற எல்லா நாடுகளும் சேர்ந்து உதவி செய்ய வேண்டு மென்றும், ஒரே நாடு இந்தப் பாரத்தை ஏற்றுக் கொள்ளும்படி விடக் கூடா தென்றும் குறிப்பிட்டிருந்தது—

தமக்கு அடங்காதவர்களை அழித்து விடுவது என்று ஜெர்மானியர்கள் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஏராளமான மக்கள் தப்பி வந்து மற்ற நாடுகளில் சரண் அடைகிறார்கள். இந்த நிலைமையைக் குறித்து ஆலோசிக்கும் பொருட்டு ஒரு மகாநாடு கூட்ட வேண்டும். அங்கே ஒவ்வொரு அரசாங்கமும் இவர்களுக்காக இது வரை என்ன செய்திருக்கிறது; இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது என்று அறிவித்து, இனி என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் முடிவு கட்ட வேண்டும்.

“ இந்த யோசனையை அமெரிக்கா ஏற்றுக் கொண்டால், பிரிட்டிஷ் அரசாங்கமும் குடியேற்ற நாடுகளும் அம்மகா நாட்டில் கலந்து கொள்ள விரும்பும். அப்போது அந்தந்த நாடுகளுக்கு எவ்வளவு உணவுப் பொருள்கள் தேவை யென்றும், கப்பல்களில் எவ்வளவு இடம் தேவைப்படும் என்றும், இவ்வளவிற்கும் ஈடு செய்த பிறகு, மேலும் சரண் புகுகிறவர்களுக்கு இடங் கொடுத்து உதவ முடியுமா என்பது பற்றியும் ஆலோசிக்கக் கூடும். துரதிர்ஷ்டவசமாக **இதுபற்றி பிரிட்டனுக்கு ஒரு பெரும் கஷ்டம் இருக்கிறது. இப்போதே பிரிட்டனில் ஏராளமான பேர்கள் சரண் புகுந்திருக்கிறார்கள்.** இவர்களை ஏற்றிக் கொண்டு வருவதற்குக் கப்பலில் இடமும், இவர்கள் உண்ணுவதற்கு உணவும் மிகக் கஷ்டப்பட்டுத் தேட வேண்டியிருக்கிறது. இன்னும் பலரை ஏற்றுக் கொள்ளுவதற்கு இடமில்லை. என்றாலும், பாலஸ்தீனத்திலே 29,000 யூதச் சிறுவர்களைக் கொண்டு போய் இறக்கிக் கொள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் ஒப்புக் கொள்ளுகிறது. அன்றியும் அவர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான, வயது வந்தவர்களையும் அங்கே ஏற்றுக் கொள்ளுமாம்.

இந்தக் கடிதத்திற்கு பதில் கடிதம் அமெரிக்க அரசாங்கம் பிரிட்டனுக்கு அனுப்பி யிருக்கிறது. அதில், ஐரோப்பாவிலுள்ள யூதர்களுக்கு எந்தெந்த வகைகளில் உதவி செய்வதானாலும், தானும் ஒத்துழைக்க ஆயத்தமா யிருப்பதாக அதில் குறிப்பிட்டிருக்கிறது.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

**தூனிஸைக் கண்டோம் : மழையும் வந்தது.**

டொப்ரூபாவைக் கடந்து பிரிட்டிஷ் படைகள் சென்று விட்டன. தூனிஸ் இன்னும் 12 மைல்கள் தூரம் தான். இது சென்ற நவம்பர் மாதக் கடைசியிலிருந்த நிலைமை. ஆனால், அதற்கு 2 வாரங்களுக்கு முன்னதாக, தூனிஸிலும் பெசர்ட்டாவிலுமுள்ள கப்பல் தளங்களையும் விமான தளங்களையும் பலப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். எதிரிகள் மகா கடுமையாகத் தடுத்தார்கள். போன் துறைமுகத்திலுள்ள நம் கப்பல்களையும் ஸ்டோர்களையும் எதிரி விமானங்கள் சிசிலியிலிருந்தும் வட தூனிசியாவி லிருந்தும் வெடி குண்டுகளை எறிந்து நாசஞ் செய்ய வந்தன. தூனிசுக்கு வெகு அருகில் . நாங்கள் நெருங்கி விட்டோம். ஆனால், மழை வந்து விட்டது. அப்போது நமது டாங்கிகளும் போக்கு வரவு மோட்டார் கார்களும் தண்ணீர் நிரம்பி விட்டன. ஜெர்மன் படைகள் நம் படைகளைவிட மிகப் பெரியவை. எனவே முன்னேறிப் போய்க் கொண்டிருந்த நம் பட்டாளத்தை பின்னடையச் செய்தார்கள். இதன் பயனாக டொபரூபாவை இழக்கும்படி நேர்ந்தது. இந்த முதற் படை பலவகைக் கஷ்டங்களுக்கும் உள்ளாகி மகா தீரத்தோடு போராடி வந்தது.

* * *

இரண்டு படைகள் தூனிசியாவை நோக்கி வளைந்து கொண்டு வருவதை ஜெர்மானியர்கள் கண்டார்கள். தூனிசியாவைத் தாக்கப் போன நம் முதற் படை ஆபத்துக் குள்ளானது. நிற்க, தென் தூனிசியாவில் எட்டாம் படை நுழைய ஒட்டாதபடி எவ்வளவு தூரம் தாமதிக்கச் செய்யக் கூடுமோ, அவ்வளவு தூரம் செய்ய வேண்டு மென்று ரோமல் தீர்மானித்தார். லிபியாவின் குறுக்கே இவர் பின் வாங்கிக் கொண்டிருக்கும் போதே, படைகளையும் தளவாடங்களையும் திரட்டிக் கொண்டே போனார். இதன் பயனாக வான் ஆர்னிம் படைகளுக்கு அவகாசம் கிடைத்தது; எட்டாம் படையின் முற்போக்கும் தாமதப்பட்டது. நேச நாட்டுப் படைகள் ஏராளமாக மலைப் பகுதிகளிலிருந்து கிளம்பும் விமானப் பாதுகாப்புகளுடன் வந்து, மத்திய தூனிசியாவிலுள்ள சம வெளிகளின் பக்கம் கீழ் திசை நோக்கி எதிரிகளைத் தள்ளிக் கொண்டு வந்திருந்தால் என்னவாகு மென்று நினைக்கிறீர்கள்! ஆர்னிமின் படைகளோடு ரோமலின் படைகள் போய்ச் சேர்ந்திருக்க முடியாது. ரோமலின் போக்கு வரவுகளுக் கெல்லாம், ஆபத்து நேர்ந்திருக்கும். எதிரில் மாண்ட்காமரியின் படைகளும் வந்து கொண்டிருந்தன. இவ்வாறெல்லாம் நடக்க வில்லை. ஏனென்றால், அந்தப் பகுதியில் மேலான போக்கு வரவு வசதிகள் அச்சு நாட்டுப் படைகளுக்கு இருந்தன. ஆகையால் தான், ரோமல், நேச நாட்டுப் படைகளை வெட்டி விட முயன்றார்.

## அவரையும் பட்டாணியும்

### 1 எகிப்திய அவரை

**வர்ணனை.**—அவரைக் கொடிவிரைவில் பலமாக வளரும். இதன் இலைகள் மூன்று பிரிவுகள் உடையவை. அவரைப் பூ பல நிறங்கள் உடையதாக, அதாவது வெள்ளை, மட்டச் சிவப்பு, முதலிய நிறங்கள் உடையதா யிருக்கும். அவரைக் காய்கள் தட்டையாய் அகன்றிருக்கும். அதன் வாய் சற்று நெளிந்திருக்கும்.

**பரப்புதல்.**—இதன் விதைகள் எல்லா விதை வியாபாரியிடத்திலும் கிடைக்கும். இதை ஒரு அங்குல ஆழத்தில் பூமியில் ஊன்ற வேண்டும். அந்த பூமியை சாண எருவும் இலைகளைப் பொசுக்கிய சாம்பலையுங் கொண்டு, முன்னதாகவே கொழுமைப் படுத்தி யிருக்க வேண்டும்.

**சாகுபடி.**—விதைகளை 3 அல்லது 4 அடிகளுக்கு ஒன்று வீதம் நட வேண்டும். நிலம் காயாதபடி வைத்திருக்க வேண்டும். பிறகு இந்தக் கொடியைப் பந்தலில் ஏற்றி விட வேண்டும். விதைத்த 3 அல்லது 4 மாதங்களில் காய்களைப் பறிக்கலாம். ஒரு வருஷத்திற்கு அதிகமாகவே இது காய்க்கிறது.

**பருவம்.**—சம பூமியில் மே முதல் ஜூன் மாதம் வரை மழை நின்ற வுடனே விதை யூன்ற வேண்டும். மலை நாட்டில், ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை.

**உபயோகங்கள்.**—பிஞ்சுகளைப் பெரும்பாலும் கறி செய்கிறார்கள். வருஷம் முழுதும் காய்க்கிறதனால், காய்களைச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**உள்ளடக்கம்.**—தண்ணீர் 83·3 சதமானம்; உலோகச் சத்து 0·8 சதமானம்; மாச் சத்து 4·9 சதமானம்; கொழுப்புச் சத்து ( ·4 சதமானம்; நார் 1·8 சதமானம்; கார்போஹைட்ரேட் 8·8 சதமானம்; கலோரிஸ் 1 பவுனுக்கு 300; சுண்ணச் சத்து 0·32 சதமானம்; மாக்னீஷியம் 0·035 சதமானம்; நிமதாக்கினிச் சத்து 0·098 சதமானம்; இரும்புச் சத்து 0·007 சதமானம்; விட்டமின் ஏ, 1-யு 100 கிராமுக்கு 540; விட்டமின் பி, 1-யு 100 கிராமுக்கு 25; விட்டமின் சி, 1-யு 100 கிராமுக்கு 40·6 சதமானம்.



## ஒரு புதிய போட்டிப் பரிசு

சென்னை வாசிகள் பலர் போர் முனைகளுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. அதிலிருந்து கொஞ்சம் மீது செய்து சேர்த்து வைக்கிறார்கள். யுத்தத்திற்குப் பிறகு இது அவர்களுக்கு உதவும். இந்தத் தொகை நல்ல முறையில் வருவாய் தரத் தக்கபடி செலவு செய்யப் படவேண்டும். உதாரணமாக கிராம வாழ்க்கையை மாற்றி யமைப்பதற்கும், யுத்தத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் முன்னேற்றத் திட்டங்களை முன்னிட்டும் அதைச் செலவிடலாம்.

நம் சிப்பாய்கள் தம் பணத்தைச் செலவிட, ஒரு வழியைச் சொல்லுகிறோம்.

இப்பத்திரிகாசிரியருக்குக் கீழ்க்கண்டவைகளின் படங்கள் வேண்டி யிருக்கிறது:—

(1) கிணறு தோண்டுவது.
(2) கட்டி முடிந்த கிணற்றை உபயோகிப்பது.
(3) பரம்படித்தல்.
(4) பழ மரத் தோப்புக்கள்.
(5) காய்கறித் தோட்டங்கள்.
(6) ஒரு சிறு கடை.
(7) கோழிப் பண்ணை.
(8) ஆடு மாடுகள் அபிவிருத்தி.
(9) வீடுகள் கட்டுதல்.
(10) கலியாணம்.
(11) சிப்பாய் தன் பணத்தை வேறெந்த வகையில் செலவிட நினைத்தாலும் அந்த வகை.

இவை பற்றி அனுப்பப்படும் மிகச் சிறந்த படத்திற்கு முதற் பரிசு ரூ. 20, இரண்டாவது பரிசு ரூ. 10. முற்கூறியுள்ள ஒவ்வொரு இனத்திலும் அனுப்பப்படும் படங்களில் சிறந்தவற்றிற்கு, ஒவ்வொரு இனத்திற்கும் ரூ. 3 விகிதம் கொடுக்கப்படும்.

எந்த இனத்திலுள்ள படமாவது பரிசு பெறத் தகுதியில்லாததா யிருந்தால், பரிசு கொடுக்கவோ மறுக்கவோ பத்திரிகாசிரியருக்கு உரிமை உண்டு.

படங்கள் திருப்பி யனுப்பப்பட மாட்டா.

படங்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 31–3–43-க்குள் அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,
"சென்னை யுத்த சஞ்சிகை"
"விக்டரி ஹௌஸ்", மௌண்ட் ரோட்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

5 Copies
ED St file

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் வருஷம் மார்ச் மீ 19உ, வெள்ளிக்கிழமை [இதழ் 12

## இந்தியா: தளவாட உற்பத்தி ஸ்தானம்



இந்தியாவில் 15 லட்சம் பேர்கள் படையில் சேர்ந்திருக்கிறார்கள். மத்திய கிழக்குப் போர் முனைகளில் நடைபெற்ற மகா கடுமையான போராட்டங்களில் முதல் தரமாக இவர்கள் போராடினார்கள். மத்திய கிழக்குப் போர் முனைகளுக்கு இந்தியாவி லிருந்து தான், பெரும்பாலும் தளவாடங்கள் உற்பத்தியாகி அனுப்பப் பட்டன. இப்போது சீனாவை விடுவிக்கும் படைகளுக்குத் தேவையான சப்ளைகளையும் தளவாடங்களையும் உதவ இந்தியா ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறது. இப்போது போலி வெற்றிகள் அடைந்து கொண்டிருக்கும் ஜப்பான், இனி தடுமாட்டமடைந்து விடும்.

மிஸ்டர் அமெரி

பர்மிங்ஹாமில் மார்ச் மாதம் 12-ம் தேதி

கூறியது.

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஆண்டு மார்ச்சு 19உ. [இதழ் 12


## ரஷ்யா : ஜெர்மானியர் மறு தாக்குதல்

ரஷ்யா குளிர் மிகுந்த நாடு. அதனால், போக்கு வரவு மிகவும் தடைப்படும். கால்வாய்கள் உறைந்து விடும். தெருக்க ளெல்லாம் பனிக் கட்டி உறைந்து கிடக்கும். ஆகவே, நடமாட்டம் மிகவும் கஷ்டம். என்றாலும், பழக்கம் உள்ளவர்களுக்கு எளிதல்லவா ? அதனால் தான் இந்தக் குளிரை ஜெர்மானியர்கள் தாங்கக் கூட வில்லை. பழக்கப்பட்ட ரஷ்யர்கள் தம் பலம் மிகுந்த எதிரியை விரட்டி யடித்தனர். வெற்றிகள் பெற்றனர். ஆனால் பனி காலம் நிரந்தரமானதா ? இல்லை. பனி உருகத் தலைப்பட்டது. இந்த வருஷம் பருவத்திற்கு முன்னதாகவே உருகத் தலைப்பட்டது. இது ஜெர்மானியர்களுக்கு வசதி யளித்தது. பனி கால மெல்லாம் தகுந்தபடி ஜெர்மானியர்கள் போர் தொடுக்க வில்லை. பெரும்பாலும் பின் வாங்கிக் கொண்டே யிருந்தனர். இந்தத் தருணத்தைத் தக்கபடி பயன் படுத்திக் கொண்டார் ஹிட்லர். பெருஞ் சேனைகளையும் தளவாடங்களையும் திரட்டி முக்கியமான இடங்களில் இருப்பு வைத்திருந்தார். பனி எப்போது நீங்கும் என்று காத்திருந்தார். சூரியன் உதித்தான். பனி உருகியது. கிளம்பினார் இந்தச் சமயத்தில். மீண்டும் ரஷ்யாவைத் தாக்கினார். தெற்கு நோக்கி ரஷ்யப் படைகள் முன்னேறிக் கொண்டிருந்தன. கடுமையாக இவற்றோடு போராடினார். அவை முன்னேற ஒட்டாதபடி தடுத்தார்.

டானெட்ஸ் பகுதியின் கீழ்ப் பாகத்தை ரஷ்யர்கள் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தனர். அதையும் கைப்பற்றி விடுவார்கள் போலிருந்தது. கைப்பற்றுவார்களானால் வட பகுதியிலுள்ள ஜெர்மானியர்களுக்கு மகா ஆபத்து. அவர்கள் தப்பிப் போக வழி கிடையாது. ஆகவே, இந்தக் கீழ் புறமுள்ள வழியைக் காப்பதோடு, அங்குள்ள வளைவிலிருந்து போராடிக் கொண்டே, பின் வாங்க வேண்டுமென்று ஹிட்லர் திட்ட மிட்டார். இவர் முயற்சிக்கு இயற்கையும் உதவியது. பனி உருகியது. தரை தெளிந்தது. போக்கு வரவு சற்று எளிதானது. இந்தத் தருணத்தைக் கைநழுவ விடுவாரா ஹிட்லர். கையிருப்புப் படைகளையும் தளவாடங்களையும் திரட்டினார். இவை கிரிமியாவிலிருந்து வந்தவை போலும். இவற்றை மேற்கு டோனெட்ஸ் பகுதிக்குக் கொண்டு போனார். வட கிழக்கிலிருந்து மகா கடுமையாக ரஷ்யர்களை எதிர்த்துத் தாக்கினார். இந்தப் பகுதி சென்ற ஒரு மாத காலமாக ரஷ்யர் வச மிருந்தது. இங்கே இரு தரத்தாருக்கும் வெற்றி தோல்விகள் மாறிக் கொண்டே யிருந்தன. அப்போது ரஷ்யப் படைகள் டானெட்ஸ் பகுதியின் தென் பகுதியிலும் கார்க்கோவ் நகரத்திற்கு மேற்கே யிருந்து முன்னேறிக் கொண்டும் இருந்தன. இவ்விரண்டு படைகளும் சேர ஒட்டாதபடி வெட்டி விட வேண்டும் என்பது தான் ஜெர்மானியர்களுடைய நோக்கம். அசாவ் கடலை நோக்கி முன்னேறிப் போக ஒட்டாதபடி ரஷ்யர்களை ஜெர்மானியர்கள் தடுத்து விட்டார்கள். தடுத்திருக்கா விட்டால், ஜெர்மானியர்களின் , கதி அதோகதி தான். ஸ்டாலின்கிராடில் கிடைத்த் தோல்வியை விட பெருந் தோல்வி தான் அவர்களுக்குக் கிடைத் திருக்கும். சென்ற வேனிற் காலத்தில் திமோஷாங்கோவின் படைகளை வட டானெட்ஸுக்குக் குறுக்கே விரட்டினார்கள் ஜெர்மானியர்கள். அப்போது என்ன முறையைக் கையாண்டார்களோ அதே முறையைத் தான் இப்போதும் கையாண்டார்கள். இதன் பயனாக, மீண்டும் கார்க்கோவ் நகரத்தைக் கைப்பற்றினார்கள். இது மகா ஆபத்தான முயற்சி தான். தோற்றிருந்தால், கொர்லோவ்கா பகுதியைக் காவல் செய்யும் படைகளோடு போய்ச் சேரும்படி முன்புறம் விரட்டப் பட்டிருப்பார்கள். அப்போது ஜெர்மன் படைகளை ரஷ்யப் படைகள் இலகுவில் வளைந்துக் கொள்ளக் கூடும்.

இனி, ரஷ்யர்கள் கையாளும் யுத்த தந்திர முறை என்ன வென்று கவனிப்போம். தெற்குப் போர் முனையில் ஜெர்மானியர்கள் முன்னேற்றத்தைத் தடுக்க வேண்டும். இங்கே நிலைமை சாதகமாகிற வரை, வடக்குப் போர் முனையில் கடுமையாக எதிர்த்துப் போராட வேண்டும். இது தான் ரஷ்யர்கள் திட்டம். ஆனால், டெமியான்ஸ்க், ரிழேவ் முதலிய நகரங்களைச் சுற்றியுள்ள முக்கியமான பகுதிகளை ஜெர்மானியர்கள் அழித்து விட்டார்கள். வட பகுதியில் பனி நீங்குகிற வரை மேலும் மேலும் ஜெர்மானியர்கள் தாக்கி வெற்றி பெற்றுக் கொண்டே போகலாம். பல விடங்களில் போர் கொடுத்து எதிரியைப் பலக் குறைவு அடையச் செய்ய வேண்டுமென்பது தான் ஜெர்மானியர்களின் எண்ணம். தன் படைகளைப் போர்முனை முழுதும் நிரவி வைத்திருக்க வேண்டு மென்பது தான் ஹிட்லருடைய ஆசை. அப்போது தான் வேனிற் காலத்தில், தான் ரஷ்யர்களைத் தாக்க வசதியா யிருக்கு மென்று அவர் நினைக்கிறார்.

வழக்கம் போல இன்னும் கொஞ்ச காலம் பனி பெய்து கொண்டிருந் திருந்தால் என்னவாகி யிருக்கும் ? ரஷ்யர்கள் அஸாவ் கடற்கரை வரை முன்னேறி, ஜெர்மன் படைகளை வளைத்துக் கொண்டிருப்பார்கள். அப்போது ஸ்டாலின்கிராட் போர் முனையை விட மிகக் கடுமையான தோர் நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடும். அப்படி நடக்க வில்லை. ஏனென்றால், பனி இந்த வருஷம் சற்று முன்னதாகவே நீங்கி விட்டது. இரண்டாவதாக, ரஷ்யர்கள் மீண்டும் கைப்பற்றிய பகுதி மிகப் பரந்தது. அங்கே போக்கு வரவு வசதிகளை யமைக்கப் போதுமான வசதிகள் இல்லை. ஆகவே, போதுமான உணவுப் பொருள்களும் சப்ளைகளும் தகுந்தபடி அனுப்பக் கூடவில்லை.

காக்கஸஸின் தென் பகுதியில், கெர்ச் ஜல சந்திக்கு எதிரில் தம் பாதுகாப்புப் படைகளை ஒரு வளைவாக ஜெர்மானியர்கள் அமைத்துக் கொண்டிருந்தார்கள். இந்தப் படை, அவர்களுக்கு ஒரு அரண் போல் உதவியது. இந்த அரணுக்குப் பின்புறம், அவசியம் நேர்ந்தால், கிரிமியாவிற்கு ஜெர்மன் டிவிஷன்கள் தப்பிப் போக வசதி யளித்தது. உக்ரேனிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு இந்தப் பாதுகாப்புப் படையும் உதவியா யிருக்கிறது. நொவோரோஸிஸ்க் கப்பல் தளத்தையும் கெர்ச் ஜல சந்தியையும் தம் ஆதிக்கத்திற்குள் ரஷ்யர்கள் கொண்டு வந்தால் மட்டுந் தான், கிரிமியாவின் தென் பகுதியிலும் அஸாவ் கடலின் தளங்களிலும் அவர்கள் வெற்றிகரமாகப் போராட முடியும்.



1943-ம் ஆண்டு போர் மீண்டும் ஆரம்பமானவுடனே, ஜெர்மானியர் வசமுள்ள உக்ரேனுக்கும் கிரிமியாவிற்கும் ஆபத்து ஏற்படக்கூடு மென்று எதிர்பார்க்கப் பட்டது. இதற்கு, கார்க்கோவ், ராஸ்டோவ், நொவோரோஸிஸ்க் ஆகிய விடங்களை வளைந்து கொள்ளுவ தென்று ரஷ்யர்கள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் கார்க்கோவ் நகரம் ஜெர்மானியர்கள் வசப் பட்டு விட்டது. டான்பாஸ் போர்முனைக்கு ஏராளமான இருப்புப் படைகளை ஹிட்லர் அனுப்பினார். 8 டாங்கி டிவிஷன் படைகளையும், 5 காலாட்படை டிவிஷன்களையும், புதுப்பித்தனுப்பினார். அன்றியும் ஐரோப்பாவின் மேற்குப் பகுதியிலிருந்து 12 புதிய டிவிஷன் படைகளையும் அனுப்பினார். ஆகவே, அநேக நகரங்களை ரஷ்யர்கள் காலி செய்யும்படி நேர்ந்தது.

டானெட்ஸ் ஆற்றின் வட பகுதியி லிருந்து ரஷ்யர்களை விரட்டி விட வேண்டு மென்பது தான் ஜெர்மானியர்களுடைய நோக்கம் என்று தெரிகிறது. இதனால் கார்க்கோவ் முதல் பாகன்ராக் வரை அஸாவ் கடல்கரை வழியாகத் தம் அரண்களைத் தொடர்ச்சியாக அமைத்துக் கொள்ள ஜெர்மனியர்களுக்கு வசதியாயிருக்கும்.

நிற்க, கார்க்கோவ் போர்முனையில், ஜெர்மானியர்களுடைய எண்ணிக்கை வெகு அதிகம். ரஷியர்களுக்குப் போதுமான டாங்கிகளும் பெரிய பீரங்கிகளும் தகுந்தபடி கிடையாது. ஏனென்றால் சுமார் 400 மைல்கள் தூரம் ஸ்டாலின்கிராடி லிருந்து முன்னேறி வந்திருக்கிறார்கள். வசதியான ரோடுகளோ ரெயில்வேக்களோ இங்கே கிடையாது. போதாக் குறைக்கு பனியும் விரைவில் இந்த வருஷம் நீங்கிவிட்டது. ஆகவே, உக்ரேனுக்கு உதவிப் படைகளையும் தளவாடங்களையும் விரைவில் கொண்டு வந்து சேர்க்கக் கூடவில்லை. இவ்வளவு இடையூறுகளுக்கும் தலை கொடுத்து, இந்த அளவிற்காவது ரஷ்யர்கள் தலைதூக்கி நிற்பது பற்றி யாரும் ஆச்சரியப்படத் தான் செய்வார்கள்.

மத்தியப் போர்முனை சம்பந்தப்பட்ட வரை, ஹிட்லரின் முக்கிய தளம் ஸ்மாலென்ஸ்க் நகரம். இதற்கு அரண்போல் விளங்குவது வியாஸ்மா. இந்த நகரத்தை ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டார்கள். ஆகவே ஸ்மாலென்ஸ்கின் கிழக்கு அரண் தொலைந்தது என்று தான் அருத்தம். சோவியத் படைகள் ஸ்மாலென்ஸ்க் நகரத்திற்கு 60 மைல் தூரத்தில் முன்னேறிக் கொண்டு வருகின்றன. தம் முழு பலத்தையுங் கொண்டு ஸ்மாலென்ஸ்க் நகரத்தைக் காப்பாற்ற ஜெர்மானியர்கள் முயற்சிப்பார்கள். ஏனென்றால், ஸ்மாலென்ஸ்க் நகரத்தை ஜெர்மானியர்கள் இழந்தால், மத்தியப் பகுதியிலேயே தம் ஆதிக்கம் முழுவதையும் இழந்தவர் களாவார்கள்.

# இந்தியப் படைத் தலைவர் வேவல் பிரசங்கம்

## நல்ல போர்ப் பயிற்சி தான் வெற்றி தரும்

### புது டில்லியில் இராணுவப் பொருட் காட்சி ஆரம்ப விழா

1943-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 16-ம் தேதி புது டில்லியில் இராணுவக் காட்சி சாலை யொன்றை மேன்மை தங்கிய சர் ஆர்ச்சிபால்ட் வேவல் (இந்தியப் படைத் தலைவர்) ஆரம்பித்து வைத்த போது பேசியதன் சுருக்கமாவது :—

பர்மாவையும் மலேயாவையும் எதிரிகள் கைப்பற்றிய பிறகு இந்தியாவையும் அவர்கள் தாக்கக் கூடும் எனறு எதிர் பார்த்தோம். ஆகவே தகுந்த பாதுகாப்புக்கள் ஏற்படுத்தினோம். இதன் பொருட்டு அநேக விமான நிலையங்கள் கட்டினோம். போக்கு வரவு வசதிகள் அமைத்தோம். கரையோரங்களைக் காக்க விமான எதிர்ப்புப் பீரங்கிகளை அங்கங்கே நிறுத்தினோம். படைகளுக்கு ஆட்களைத் திரட்டி, பயிற்சி யளித்தோம். இன்னும் பல வகை வேலைகளைச் செய்தோம். இபபோது இந்தியாவை எதிரிகள் தாக்கினால், அவர்களோடு போராடி தோற்கடிக்கக் கூடிய நிலைமையில் இன்று நாம் இருக்கிறோம். ஆனாலும், இந்தியாவிற்கு ஆபத்தே இல்லை என்று சொல்லி விடவும் முடியாது ; இந்த மகா கொடிய எதிரிகள் இடுப்பை ஒடித்து "உட்கார்ந்தாயா குரங்கே உன் சந்தடி யடங்க" என்றது போல், கை தூக்க ஒட்டாதபடி அடித்து வீழ்த்தி விட வேண்டும். இந்தக் காட்சி சாலையில் காணப் படும் தளவாடங்கள் போன்றவை தான் நம் படைகள் உபயோகிப்பவை. இவற்றை உபயோகிக்க பலர் இன்னும் படைகளில் சேர வேண்டும். குறிப்பாகப் படித்தவர்கள் சேரவேண்டும். எதிர்கால நாகரிக வாழ்க்கைக்கு இது மிகவும் அவசியம்.

இந்தியா சட்ட சபை நடைபெறும் இந்தச் சமயத்தில் இந்தக் காட்சி சாலை திறந்து வைக்கப்படுவது மிகவும் பொருத்தந் தான். இதற்கு முன் இராணுவக் காட்சி ரயில் வண்டி ஒன்று 1940-41-ம் வருஷத்தில் 20,000 மைல்கள் தூரம் பிரயாணம் செய்திருக்கிறது. கோடிக் கணக்கான மக்கள் இதைப் பார்த்திருக்கிறார்கள். கிராம வாசிகள் இதைக் கண்டு உணர்ந்து கொள்ள வேண்டு மென்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. பிறகு ஆயிரக் கணக்கில் கிராம வாசிகள் படைகளில் சேர்நதனர்.



தற்கால யுத்த முறை எவ்வளவு சிக்கலானது என்றும், எத்தனை வகை ஆயுதங்கள் இதற்குப் பயன்படுகின்றன வென்றும், இந்த போர் காரணமாக நாடுகளுக்கு எவ்வளவு நன்மைகள் உண்டு என்பது பற்றியும் இந்தக் காட்சிசாலையைக் காண்பவர்கள் இலகுவில் தெரிந்து கொள்ளக் கூடும். இந்தத் தளவாடங்களையும் உடுப்பு முதலியவற்றையும் தற்காலம் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு தயாரித்து, அவற்றைத் தகுந்தபடி உபயோகிக்கக் கற்றுக் கொடுப்பது கஷ்டமான காரியம். மற்றும் இராணுவத்தினருக்கு வைத்திய சம்பந்தமான ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன. யுத்தத்தினால் சேதம் அதிகந் தான் ; என்றாலும், எல்லாம் சேதமாகி விடுவதில்லை.

ஏறக்குறைய 20 லட்சம் பேர்கள் இந்தியப் படையில் இப்போது சேர்ந்திருக்கிறார்கள். ஏறக்குறைய $\frac{1}{2}$ லட்சம் பேர்கள் வெளி நாடுகளில் வேலை பார்த்தவர்கள். சற்றேறக்குறைய 1 லட்சம் பேர் போர்க் களத்தில் காயப்பட்டார்கள். 60 முதல் 70 ஆயிரம் பேர்கள் வரை ஹாங்காங்கிலும் மலேயாவிலும்

(11-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

**விவசாய நாடு கைத் தொழில் நாடானது.**

இயந்திரக் கைத் தொழில் சம்பந்தமாக இந்தக் கமிஷன நல்ல வேலை செய்திருக்கிறது. ஹுனன் என்னுமிடத்தில் மத்திய இயந்திரத் தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபித்தது. ஜப்பானிய யுத்தம் காரணமாக இதை ஹுனனிலிருந்து யுன்னனுக்கு மாற்ற நேர்ந்தது. இந்தத் தொழிற்சாலையில் நெசவாலை முதல் பலவகை இயந்திரங்களும் செய்யப்படுகின்றன. இதற்கு உதவியாக ஷெக்வானிலும் கன்சுவிலும் இரண்டு தொழிற்சாலைகள் வேலை செய்கின்றன.

மின்சாரப் பொருள்கள் செய்யும் தொழிற்சாலைக்கு அநுசரணையாக 4 வெவ்வேறு தொழிற்சாலைகளை இந்தக் கமிஷன் ஆரம்பித்திருக்கிறது. ஒன்றில், தந்திக் கம்பிகளும் பூமிக்குள் புதைக்கப்படும் கம்பிகளும் செய்கிறார்கள். மற்றொன்றில், சூனியக் குழாய்களும் விளக்கு பல்புகளும் செய்கிறார்கள். இன்னொன்றில், பேசுந் தந்திக்கானவற்றைச் செய்கிறார்கள. வேறொன்றில், மின்சார உற்பத்தி செய்யும் இயந்திரங்களைச் செய்கிறார்கள். சீனப் படையினர் ஏராளமான டெலிபோன் செட்டுகளையும் ரேடியோக்களையும் உபயோகிக்கிறார்கள். 8 வருஷங்களாக க்வீலின் என்னுமிடத்தில் ரேடியோ செட்டுகள் செய்து முடித்து வருகிறார்கள். செய்திகளை வெளியிடும் ரேடியோக்களும், ரேடியோபோன்களும் அரசாங்க உபயோகத்திற்கு மட்டுந் தான் செய்கிறார்கள் ; ஆனால் ரேடியோக்களும் ஒலிபெருக்கிகளும் பொது மக்கள் உபயோகத்திற்கும் செய்கிறார்கள்.

தென்மேற்கு, வடமேற்கு மாகாணங்களிலுள்ள அநேக மின்சார பவர் ஸ்டேஷன்கள் இந்தக் கமிஷன் ஆதிக்கத்திற் குட்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாகச் சமீபத்தில் ஒரு பெரிய ஆராய்ச்சி நடந்தது. இது நல்ல பலனைத் தரலாம். இன்னும் பரந்த முறையில் மின்சாரப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தகுந்த இயந்திரங்களைத் தருவிக்க முடியாமலிருப்பது, மிகவும் கஷ்டமாகத் தான் இருக்கிறது.

விவசாய நாடாக விருந்த சீனு, எவ்வளவு விரைவில் கைத் தொழில் நாடாக மாறிவிட்டது என்று இவற்றிலிருந்து தெளிவாகும். சீனுவிற்குப் பல வகைக் கஷ்டங்கள் உண்டு. யுத்தங் காரணமாக இவை மேலும் சிக்கலாயின. என்றாலும், வேறொருவர் வந்து தமக்கு உதவ வேண்டு மென்று சீனர்கள் சும்மா இருக்க வில்லை. தம நிலைமை என்ன ? எத்தனைக் கட்டுப்பாடுகள் ? குறைபாடுகள் எத்தனை? இவற்றை எல்லாம் சீனர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆகவே, தாமே நிலைமையைச் சமாளிக்க முயன்றார்கள். இதிலிருந்து, வெளி நாட்டார் சீனத் தொழில் முன்னேற்றத்திற்கு உதவவில்லை யென்று அர்த்தம் செய்யக் கூடாது. ஏனென்றால், கைத் தொழிலில் வெகுவாக முன்னேற்ற மடைந்துள்ள பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகள், சீனுவிற்கு மகா நெருக்கடியான பருவத்தில் குறுக்கிட்டு ஈட்டுக் கடன் சட்டப்படி வெகுவாகத் தந்து சீனர்களின் யுத்த முயற்சிக்கு உதவி செய்தார்கள். ஆனால், இங்கே கவனிக்கத் தக்கது என்னவென்றால், தற்கால நிலைமையில் தனக்கு என்ன தேவை என்று சீனு உணர்ந்து, தாமாகவே முயன்று பெருத்த கைத் தொழிலை அமைத்துக் கொண்டது.

ஜெர்மனியின் யுத்தத் தளவாட உர்பத்திச் சாலைகளில மிகப் பெரியது க்ரப்ஸ் தொழிற்சாலை. இதன் பரப்பு 800 எக்கர் நிலம். இது எஸ்ஸென் என்னுமிடத்திலிருக்கிறது. நாளிது மார்ச்சு மாதம் 12-ம் தேதி இந்தத் தொழிற்சாலை மீது பிரிட்டிஷ விமானப் படை குண்டு மாரி பொழிந்தது. சென்ற வாரமும் இங்கே 1,000 டன் வெடி குண்டுகளை எறிந்தது. உலகத்திலேயே மிகப் பெரிய தொழிற்சாலை இது தான். இதற்குப் பெரும் பழுது ஏற்பட்டது. பிரிட்டிஷ் விமானப் படை இதை மகா மன உறுதியோடு தாக்கியது.

ஜெர்மனியிலுள்ள பல முக்கியமான பட்டணங்களின் மீதும் நகரங்களின் மீதும் கூட, பிரிட்டிஷ் விமானங்கள் வெடி குண்டுகளை எறிந்து சேதம் விளைவித்தன. மார்ச்சு மாதம் பிறக்கும் முன்பு பெர்லின் மீது 70 முறையும், ஹாம்பர்க் மீது 96 முறையும் பிரிட்டிஷ் விமானங்கள் வெடி குண்டுகளைக் கொண்டு தாக்கின. பழி வாங்கும் நோக்கத்தோடு ஜெர்மன் விமானப் படை லண்டனைத் தாக்க முயன்றது. ஆனால் முடியவில்லை. மியூனிச், ப்ராகு (நாஜி கட்சியின் தலைமை ஸ்தானம்) முதலிய முக்கியமான கைத்தொழில் பகுதிகளையும் விமானங்களிலிருந்து பிரிட்டிஷ் படைகள் தாக்கி பெருஞ் சேதமுண்டாக்கின.

சென்ற பிப்ரவரி மாதத்தில், வில்ஹெல்ம்ஷேவனை 4 முறையும், லோரீண்டை 4 முறையும், கொலோனை 3 முறையும், ஸ்பீசியாவை 2 முறையும், டூரின், மிலான், செண்ட் நசீர், ஹாம்பர்க், ப்ரெகமன் நியூரெம்பர்க் ஆகிய இடங்களையும் பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கின. அன்றியும், வில்ஹெல்ம்ஷேவன், டன்கர்க், ப்ரெஸ்ட், செண்ட் நசீர் என்னும் இடங்களை அமெரிக்க விமானப் படைகளும் தாக்கின.

ஜனவரி மாதத்தில் லோரீன்டை 5 முறையும், பெர்லினை 2 முறையும், எஸ்ஸெனை 2 முறையும், போர்டோ, டசெல்டார்ப், எம்டென், ஹாம்பெர்க் ஆகிய இடங்களையும் பிரிட்டிஷ் விமானப் படை வெகு கடுமையாகத் தாக்கியது.

அமெரிக்க விமானப் படை இந்த மாதம் வில்ஹெல்ம்ஷேவன் என்ற இடத்தைத் தாக்கியது. ஜெர்மனியிலுள்ள ஊரை அமெரிக்க விமானப் படை தாக்குவது இது தான் முதல் முறை. லில்லி, ப்ரெஸ்ட், லோரீண்ட், செண்ட் நசீர் என்ற இடங்களையும் தாக்கியது. ஜெர்மனியில் முக்கியமான பகுதி ஹாம்பர்க் இது உள் நாட்டிலுள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்பு பட்டப் பகலில் அமெரிக்கர்கள் தம் விமானக் கோட்டைகளி லிருநது வெடி குண்டுகளை இங்கே உதிர்த்து விட்டார்கள். ஜனவரி மாதத்தில் கனடிய விமானப் படையும் தன் திறமையை இங்கே காட்டியது.

**இரண்டாவது போர் முனை : தடுக்க ஹிட்லர் முயற்சி.**

நேச நாட்டார் ஐரோப்பாவின் மேற்குப் பகுதியை வெகு கடுமையாகத் தாக்கப் போகிறார்கள். இதை அவர்கள் இரகசியமாக வைத்திருக்கவில்லை. இதைத் தடுக்கும் பொருட்டு, தம் பிரசார தந்திரத்தை ஜெர்மானியர்கள் கையாளுகிறார்கள் : (1) தங்களிடம் மிகச் சிறந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கின்றன வென்று கூறுகிறார்கள். இந்த நீர்மூழ்கிப் கப்பல்களுக்குத் தேவையான உதவியும், நடத்துவதற்குத் திறமையுள்ள ஆட்களும், அவற்றைப் பழுது பார்க்கவும் நிறுத்தி வைக்கவும் இடமும் இருக்க வேண்டும். இவை இப்போது அவர்களுக்குக் கிடைக்காது. (2) ஐரோப்பியக் கடற்கரையை அரண் செய்யப் போவதாகக் கூறுகிறார்கள். இதற்கு, போக்கு வரவிற்கேற்ற கால்வாய்களும் இரயில்வேக்களும் மிகவும் அவசியம். இவை தான் இப்போது பாழடைந்து கிடக்கின்றனவே. (3) ஜெர்மானியர்கள் கைப்பற்றிய நாடுகளிலுள்ள வயது வந்த எல்லாத் தொழிலாளர்களும் படையில் சேரும்படி நிர்பந்திக்கப்படுவார்கள் என்று கூறுகிறார்கள். தொழிற்சாலைகள் உருவாக இருந்தால் தானே தொழிலாளர்கள் பயன் படுவார்கள்.

☞ இந்த மூன்று வகை முயற்சிகளும் ஈடேற ஒட்டதாபடி தடுக்க வேண்டித் தான் பிரிட்டிஷ் விமானப் படை முக்கியமான இடங்களைத் தாக்குகிறது.



## தென் ஆற்காடு ஜில்லா தேசீயப் போர் முனை




சமீபத்தில் தென் ஆற்காடு ஜில்லா தேசீயப் போர்முனையாளருக்கு விழுப்புரத்தில் நடைபெற்ற மறு பயிற்சியின் போது எடுக்கப்பட்ட படம் :. இதில் திண்டிவனம் சப்-கலெக்டர் மிஸ்டர் எஸ். எம். ஹாசன், ஐ.சி.எஸ்., ஜில்லா அமைப்பாளர் திரு. வி. கோபால கௌண்டர், பாடகர் திருமதி சி. எஸ். பட்டம்மாள், ஜில்லா பேச்சாளர் திரு. என். தண்டபாணி பிள்ளை, பத்து தாலூகா பிரசாரகர்கள், பிரசாரக இன்ஸ்பெக்டர், கௌரவ தாலூகா அமைப்பாளர்கள், முதலியோர் இருக்கின்றனர்.

## கிணறுவெட்ட, பூதம் புறப்பட்டது

கிணறு வெட்டும் போது ஒவ்வொருவரும் என்ன நினைத்துக்கொண்டு வெட்டுகிறார்கள் ? நல்ல ஜலம் வரும் என்று நினைத்துக் கொண்டு தானே ? அந்த நினைவுடனே தான் ஒரு பேர்வழி கிணறு ஒன்றை வெட்டினானாம். அதிலே ஜலம் தோன்று முன், ஒரு பூதம் தோன்றியதாம். சும்மா தோன்றியதோடு நில்லாமல், 'அடே பயலே ! எதற்காக என்னைக் கிளப்பினுயடா ?' என்று கேட்கத் தொடங்கிற்றும். அந்த நிலைமையில் கிணறு வெட்டச் சொன்ன பேர்வழியின் முகத்தையும், கிணறு வெட்டியவர்களின் மூஞ்சிகளையும் பார்த்திருந்தால் ரொம்ப அழகாயிருந்திருக்குமே ! இந்தக் கதையில் உள்ள பேர்வழிகள் யாரோ, நமக்கென்ன தெரியும் ? ஆகவே அவர்களை நாம் பார்த்திருக்க முடியாது தான்.

ஆனால் அவர்கள் செய்த காரியத்தைப் போன்றதொரு காரியத்தை ஹிட்லரின் உத்திரவை ஏற்று, பல ஜெர்மானியர்கள் செய்து வருகிறார்கள். மேலே சொன்ன கதையில் உள்ளவர்கள் கிணறு தோண்டப் போனார்கள். அது தோண்டப் பெற்றிருந்தால் நல்ல காரியத்துக்கு உபயோகப் பட்டிருக்கக் கூடும். ஆனால் ஹிட்லர் தோண்டச் சொன்னதும், அவரது சகாக்கள் தோண்டியதும், நல்ல கிணறு அல்ல. அவர் தோண்டச் சொன்னது வெறும் பள்ளங்கள் தான். ஐரோப்பாவின் அழகே இந்தப் பள்ளங்களால் பாழாகி வருகிறது. குரங்குப் புத்தி என்பார்களே ; ஆமாம் ! ஹிட்லரிடம் அந்தப் புத்தி தான் பூரணமாக அமைந்திருக்கிறது. இதைக்கொண்ட அந்த மகானுபாவன் செய்கிற சேஷ்டைகளால், எத்தனை அரிய உயிர்கள் நாசமடைந் திருக்கின்றன தெரியுமா ? எத்தனை அழகான இடங்கள் பாழாகியிருக்கின்றன தெரியுமா ? உலகிலே எத்தனை கோடிப் பேர்கள் அவதிப்படுகிறார்கள் தெரியுமா ? ஹிட்லரைப் பிடித்தாட்டும் மண்ணாசை காரணமாக, இந்தப் பூமண்டலத்தார் அனைவருமே, எந்நாளும் பட்டிராத கஷ்டங்களை அநுபவிக்க நேர்ந்திருக்கிறது. அரிசி விலை உயர்ந்து விட்டது ; மண்ணெண்ணெய் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. நெருப்புப் பெட்டிப் பஞ்சம் பொறுக்க முடியவில்லை, விறகு, விறகு என்று ஆலாப் பறக்க வேண்டி வந்து விட்டது என்றால், இதற்கெல்லாம் ஹிட்லரும் அவரது சகாக்களும் விளையாட்டாக மூட்டிய யுத்தத்தீ தான் காரணமாகு மென்பது முழு உண்மை.

இது ஒரு புறமிருக்க, ஹிட்லர் ஐரோப்பாவிலே பள்ளங்களையும், படுகுழிகளையும் தோண்டச் செய்தார் அல்லவா ? அவை அவருக்கே தொல்லையை உண்டாக்கி வருகின்றன. ஒவ்வொரு பள்ளத்திலிருந்தும் புதுப் புது பூதங்கள் கிளம்பி யிருக்கின்றன.

### நித்யக் கண்டம் பூர்ணயுசு.

ஐரோப்பாவில் மட்டுமல்ல, இவ்வுலக முழுவதிலுமே அவருக்கும் அவரது சகாக்களுக்கும் உள்ள விரோதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள்

# முரசொலி

“ஆசியாக் கண்டத்தில், தம் சிறந்த உணர்ச்சியினாலும், ஒழுக்க பலத்தினாலும், மகா உறுதியான செல்வாக்குள்ள நாடுகளாக சீனாவும் இந்தியாவும் மாறப் போகின்றன. மக்கள் இனத்திலேயே, ஒரு பாதிப் பேர்கள் இந்தியாவிலும் சீனாவிலும் வசிக்கிறோம். ஆகவே, நமக்குள்ள எல்லாச் சொத்துக்களையும் இழந்தாவது, கொடிய அச்சு நாட்டவர்கள் நம்மைப் பணிகிற வரை, போராடியே தீருவ தென்று உறுதி கொள்ள வேண்டும். அன்றியும், வெற்றி கிடைத்த பிறகு, புது உலகத்தை அமைக்க உதவி செய்வோம். அப்போது தான் யதேச்சையும், நீதியும், சமாதானமும் நிலவும்.”

—டாக்டர் சான்-டோ-பான்.
*சீனத் தகவல் மந்திரி.*

* * * * *

“வீட்டு வாசலில் யுத்தம் வந்திருக்கிறது என்பதற்கு என்ன அர்த்த மென்று ரஷ்யா, பிரிட்டன், சீனா, கைப்பற்றப்பட்ட நாடுகள் முதலியவற்றிற்குத் தெரியும். எதிர் காலத்தில் நமக்கு அயலார்களாக யிருக்கப் போகிறவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்து கொள்ள, நமது மூளையைக் கொஞ்சம் பயன் படுத்த வேண்டும். யுத்தத்திற்குப் பிறகு பொது மக்களின் கடமை என்ன என்பது பற்றி ஒருக்கால் அப்போது தான் தெரிந்து கொள்ளக் கூடும். சமாதானப் பத்திரத்தில் கையெழுத்திட்ட அன்று முதலே, நாம் அக்கரை கொள்ளத் தேவையில்லை யென்று நினைப்போமானால், சமாதானமே ஏற்படாது.”

—அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்.

* * * * *

“அச்சு நாடுகள் வசப்பட்ட நாடுகள் மகா பரிதாபமான நிலைமையி லிருக்கின்றன. கடன்கார நாடுகளா யிருக்கின்றன. இவற்றை இப்படியே விட்டு வைத்திருந்தால், உலக நிலைமை சீர்ப்படாது. சர்வதேச சங்கம் தகர்ந்து விட்ட தென்று சொல்லுவது தவறு. உலக அமைதியை முன்னிட்டு, இதை விட பலமான ஒரு சங்கம் அமைய வேண்டும். உலகத்தைக் கட்டியாள வேண்டு மென்று பேராசை கொள்ளும் நாடுகளுக்கு இது ஒரு பெரும் தடைக் கல்லா யிருக்க வேண்டும்.”

—பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ்.
தென்னாப்பிரிக்க அரசாங்க சபையில்
மார்ச்சு 12-ம் தேதி கூறியது.

* * * * *

“சென்ற 4 வருஷங்களாக யுத்தம் நடைபெறுகிறது. மடியத் தக்க நிலைமையில் ஜெர்மனி இன்று இருக்கிறது. சமீபத்தில் ஹிட்லர் இடிபோல் ஐரோப்பாக் கண்டம் முழுதும் முழங்கினார். இன்று வாயை மூடிக் கொண்டிருக்கிறார். ஜெர்மன் அரசாங்க சபையில் புலம்பல் சத்தந் தான் கேட்கிறது. ஜெர்மானியர்களின் வாழ்வுக்கே கேடுவந்து விட்ட தென்று அழுகிறார்கள்.”

—டாக்டர் பெனிஸ்.
செக்கோஸ்லோவேகிய தலைவர்
மார்ச்சு 13-ம் தேதி லண்டனில் கூறியது.

* * * * *

“இனி நம் வேலை கடுமையானது. நாம் நெடுந்தூரம் போராடவேண்டி யிருக்கிறது. இந்த யுத்தத்தில் வெற்றி பெறு முன்பு, தோல்விகளும் ஏமாற்றங்களும் ஏற்படத் தான் செய்யும்.”

—மிஸ்டர் ஆந்தனி ஈடன்.
வாஷிங்டனில் மார்ச்சு 13-ம் தேதி கூறியது.



## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| முகப்புப்படம் : மிஸ்டர் அமெரி .. | 1 |
| இந்தியா தளவாட உற்பத்தி ஸ்தானம் .. | 1 |
| முரசொலி .. .. .. .. | 2 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 |
| தலையங்கம் : ரஷ்யா—ஜெர்மானியர் மறு தாக்குதல் .. .. .. | 4 |
| இந்தியப் படைத் தலைவர் வேவல் பிரசங்கம் .. .. .. .. | 5 |
| தென்னாற்காடு ஜில்லா தேசீயப் போர் முனையினர் (படம்) .. .. | 7 |
| “கிணறுவெட்ட பூதம் புறப்பட்டது” .. | 7 |
| கிராமங்களில் ரயில்வே பாதுகாப்புத் திட்டம் .. .. .. .. | 10 |
| பாக்டாடில் இந்தியப் படைகளுக்கு விடுதி .. | 11 |
| ஜப்பானியர் கைப்பற்றிய நாடுகளின் நிலை. | 11 |
| கொசுத் தொல்லை ஒன்றுதான்.. .. | 11 |
| கீரையும் தண்டும் .. .. .. | 12 |
| விருந்தாளியில்லாத விருந்து .. .. | 12 |
| ஜெர்மனியில் 5-ம் படை .. .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**சீனாவின் எதிர் காலம்.**

*சீனக் குடியரசின் தந்தை டாக்டர் சென் யட் சென் என்று சொல்வார்கள். இவர் இறந்து போன ஆண்டு நிறைவு மார்ச்சுமீ 13உ நடை பெற்றது. அதே சமயத்தில், தேசீயத் தெய்வீக இணைப்பு இயக்கத்தின் 4-வது ஆண்டு விழாவும் நடை பெற்றது. அப்போது சீனத் தலைவர் ஜெனரலாசிமோ ஷியாங்-கெய்-ஷேக் ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார். அப்போது இந்த யுத்த நிலைமையில் சீன மக்கள் பல வசதிகளை இழக்க வேண்டியது அவசியம் என்று கூறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது :—*

*“நீங்கள் போதுமான அளவிற்கு கஷ்டப்படவில்லை. சிக்கனமாகவு மில்லை. போதுமான அளவிற்குக் கஷ்டப்பட்டு போராடவு மில்லை. சீனாவின் எதிர்கால வாழ்வு உங்கள் கையில் தான் அடங்கி, இருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடியான சமயத்தில், தேசீயத்தை உயிர்ப்பிப்பதில் உங்கள் முயற்சிகளை இரண்டு மடங்கு அதிகப் படுத்த வேண்டும்.”*

*இவர் “சீனாவின் தலை யெழுத்து” என்னும் தலைப்புள்ள ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கிறார். அதிலும் இதே விஷயத்தைத் தான வலியுறுத்தியிருக்கிறார். மஞ்சு வம்சத்தாரின் ஒழுக்கக் குறைவினாலும், மற்றும் பல வகைத் தடைகளாலும் தான் சென்ற நூற்றாண்டில் சீனா இழிவான நிலைமையில் இருந்தது என்று அப்புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். சீனாவின் நிலைமை முன்னேற வேண்டுமானால், தன் உள் நாட்டு நிலைமையைச் சீர்திருத்துவதனாலே தான் முடியும். இதற்கு, போக்கு வரவு சாதனங்களைப் பெருக்குவதோடு, பெரிய தொழிற்சாலைகளையும் அமைக்க வேண்டும். இதற்காக ஒரு 10 வருஷத் திட்டத்தை வகுத்திருக்கிறார். இதன் பொருட்டு சீன அரசாங்கம் மிகுந்த அக்கரை கொள்ளுகிறது. “தேசீய மூலப் பொருள் கமிஷன்” என்னும் பெயருள்ள ஒரு கோஷ்டியை 8 வருஷங்களுக்கு முன்பு நியமித்தார்கள். பொருளாதார மந்திரி காரியாலயத்தின் ஒரு பகுதியாக இது இருந்து வந்தது. தேசீய இராணுவக் கௌன்சில், இதன் ஆதிக்கத்திற்கு உட்பட்டது தான். சுரங்க வேலைகளையும் மின்சார வேலைகளைப் பெருக்கி, நடத்திக் கட்டுப் படுத்துவதும் இந்தக் கௌன்சில் தான். இது ஏற்கெனவே சிறந்த வேலை செய்து முடித்திருக்கிறது. இது காரணமாக, தனிப்பட்டவர்கள் முயற்சிக்குப் பாதகம் நேருமென்று நினைக்க வேண்டாம். ஆனால் தனிப்பட்டவர்களின் முயற்சிகளுக்கு அரசாங்கத்தார் ஆதரவு அளிக்கிறார்கள். பெரிய தொழிற்சாலைகளைக் கட்டி நடத்துவதில் மட்டுந் தான் அரசாங்கத்தார் முனைகிறார்கள். இப்படிப்பட்ட வேலைகளில் சாதாரணமாக வியாபாரிகள் அக்கரை கொள்ளுவதில்லை. ஏனென்றால் இவற்றில் விரைவில் இலாபங் கிடைப்ப தில்லை. ஆனால் நெடு நாட்களாகப் போராடிக் கொண்டிருக்கும் அரசாங்கம் பெரிய கைத் தொழில்களை அலட்சியம் செய்ய முடியாது.*

* * * *

**சீனாவில் எண்ணெய்க் கிணறுகள்.**

*இந்தக் கமிஷன் செய்த முக்கியமான பல வேலைகள் உண்டு. அவற்றில் ஒன்று தான் எண்ணெய்க் கிணறுகளை அவர்கள் கண்டு பிடித்தது. 8 அல்லது 9 வருஷங்களுக்கு முன்பு கான்ஸ் மாகாணத்தில் உள்ள நிலத்தை ஆராய்ச்சி செய்து, எண்ணெய்க் கிணறுகளைக் கண்டு பிடித்து, 14 கிணறுகள் தோண்டி, ஏராளமான எண்ணெய் எடுத்து, சுத்தம் செய்து வைத்தது இந்தக் கமிஷன் தான். ‘காசோலின்’ தயாரிக்க இயந்திரங்களை அமைத்திருக்கிறார்கள். ஷெக்வன், கன்சு, சுங்கிங் ஆகிய மாகாணங்களில், ‘எதில்-ஆல்கொஹால்’ தயாரிக்கவும் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். விமானங்களுக்கு உபயோகப் படத்தக்க உயர்ந்த ‘ஆல்கொஹால்’ ஷெக்வன் மாகாணத்தில் உற்பத்தியாகின்றது.*

**சீனாவின் மூலப் பொருள்கள்**

*சீனாவின் மூலப் பொருள்களையும் இந்த கமிஷன் சிறந்த முறையில் பயன் படுத்துகிறது. இதன் மேற்பார்வையில் கியாங்சி மாகாணத்தில், டங்ஸ்டென் சுரங்கங்கள் வேலை செய்கின்றன. இவற்றை முன்னேற்ற பல முறைகளைக் கையாளுகிறார்கள். இங்கிருந்து எடுக்கப்படும் மண் கலந்த உலோகத்தைச் சுத்தி செய்ய சூங்கிங்கிலும் குன்மிங்கிலும் இரண்டு தொழிற் சாலைகள் இருக்கின்றன. அன்றியும் சூங்கிங்கிலும், ஷெக்வானிலும் தாமிரம் சுத்தம் செய்யும் இயந்திரங்க ளிருக்கின்றன. இங்கே சுத்தமாகும் தாமிரம் மிகவும் சிறந்தவை என்று கருதப் படுகிறது. ஷெகவானில், பூமியிலிருந்து எடுக்கப்பட்ட மண் கலந்த இரும்பைச் சுத்தம் செய்யும் இயந்திரம் இருக்கிறது. இந்தத் தொழிற்சாலை, ஜப்பானியர்கள் சீனாவைத் தாக்கும் முன்பு ‘ஹன்யாங்’ என்னும் நகரத்தி லிருந்தது. யுத்தம் ஆரம்பமான வுடனே, 40,000 டன் கனமுள்ள இந்தத் தொழிற்சாலையை உள் நாட்டிலுள்ள ஷெக்வானுக்கு மாற்றி விட்டார்கள். இது போலவே தான் ரஷ்யாவை ஜெர்மானியர்கள் தாக்கிய போது தம் தொழிற்சாலைகளை எல்லாம் ரஷ்யர்கள் யூரல் பிரதேசத்திற்குக் கொண்டு போய் விட்டார்கள். இப்போது, சீனாவிலுள்ள இரும்புத் தொழிற்சாலையில பல புதிய வகை இயந்திரங்களைக் கொண்டு ‘பஞ்சு இரும்பு’ என்னும் ஒரு வகை இரும்பைத் தயாரிக்கக் கூடு மென்று தெரிகிறது. இது யுத்த வேலைகளுக்கு மிகவும் பயன் படும்.*

(6-ம் பக்கம் பார்க்க.)

உயர்ந்து வருகிறது. அவர் பிடித்த ஐரோப்பிய நாடுகளிலே வசிக்கும் ஜெர்மானிய அதிகாரிகள், ஜெர்மானியப் படையினர் பாடெல்லாம் நித்யக் கண்டம் பூர்ணயுஸாக இருக்கிறது.

இப்பொழுது பிரான்ஸை எடுத்துக் கொள்ளுங்கள். ஹிட்லரைச் சேர்ந்தவர்கள் அந்நாட்டிலே குஷாலா இருக்கிருர்கள் என்று நினைக்கிறீர்கள்? ஹூ ஹூம்! பிரஞ்சு மக்களின் மனங்கள் கொதித்துக் கொண்டிருக்கின்றன என்பதும், ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிருேமே என்று அவர்கள் ஏங்கி நிற்கிருர்கள் என்பதும், தக்க சந்தர்ப்பம் கிடைத்து விட்டால், அதனை அவர்கள் கைவிடமாட்டார்கள் என்பதும், தெளிவாகத் தெரிகிறது.

ஹிட்லருக்கும் இது தெரியாம லில்லை. பிரான்ஸிலே யாரையும் நம்பவில்லை அவர். பிரஞ்சு மக்களுக்கு அவர் மீதில் அபிமானமும், அவருக்கு பிரஞ்சு மக்களிடம் நம்பிக்கையும் இருந்திருக்குமானல், பிரான்ஸிலே அவர் லக்ஷக் கணக்கான படைகளை நிறுத்தி வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிரா தல்லவா? ருஷ்யாவிலே ஜெர்மானியரிடை ஏற்பட்டு வரும் நஷ்டத்தை ஈடு கட்ட அவர் பிரான்ஸி லிருந்து தமது சைனியங்களை ருஷ்யாவிற்கு அனுப்பலா மல்லவா?

அது தான் சாத்ய மில்லா திருக்கிறது. ஆகவே ஜெர்மனியி லிருந்தே ருஷ்யாவிற்கு ஆட்களை அனுப்ப நேர்ந்திருக்கிறது. அது காரணமாக ஜெர்மனியில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்ய போதுமான ஆட்கள் இல்லாது போய்விடுகிறது. அந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டி ஹிட்லர் பிரான்ஸுக்குத் தகவல் அனுப்பி, அங்கிருந்து நிறைய ஆட்களை ஜெர்மனிக்கு அனுப்பும்படி ஏற்பாடு செய்திருக்கிருர்.

## தொழிலாளர் பஞ்சம்.

'ஜெர்மனியிலே நிறையச் சம்பளமும், வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கப்படும்' என்று ஹிட்லர் கைப்பொம்மையாக உள்ள லவால் துரை பறைசாற்றிப் பார்த்தார். தாமாக ஆட்கள் வருவார்கள் என்று நினைத்தார்.

ஆனல் சுதந்திர உணர்ச்சி மிக்க பிரஞ்சு மக்கள் ஜெர்மனிக்குச் செல்லவோ, ஜெர்மனிக்கு உதவவோ விரும்பவில்லை. ஆகவே, வலுக் கட்டாயத்தின் பேரில் தான் ஆட்களை சேர்க்க வேண்டி வந்திருக்கிறது.

இதன் பயனக இப்பொழுது ஒரு புது பூதம் பிரான்ஸிலே கிளம்பி விட்டது. கொரில்லாக்களின் தொல்லை பிரான்ஸிலே ஆரம்பமாகி விட்டது. ஜெர்மன் ரகஸ்யப் போலீஸாருக் கெல்லாம் இவர்கள் 'டிம்கி' கொடுத்து விடுகிருர்கள். பிரஞ்சு ராணுவத்தி லிருந்து தள்ளப்பட்டவராகவும், மார்ஷல் பேதானின் சேனையைச் சேர்ந்தவர்களும், ஜெர்மானியரின் ஆதிக்கத்தில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து ஓடிவந்து விட்டவர்களுமே பிரஞ்சு கொரில்லாப் படையில் சேர்ந்து வருகிருர்கள். இவர்களின் முயற்சிக் காரணமாக பல ஜெர்மன் அதிகாரிகளும், ஜெர்மன் படை வீரர்களும் பிணங்களாகி வருகிருர்கள்.

பிரஞ்சு மக்களைப் பற்றிய கவலை ஹிட்லருக்கு நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது என்பதில் சந்தேகமே இல்லை. நாளையத் தினம் ஐரோப்பாவிலே இரண்டாவது போர்முனையை நேசதேசத்தார் ஏற்படுத்துகிருர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது பிரஞ்சு மக்க ளெல்லாம் சட்டென நேச தேசத்தாரோடு கலந்து கொள்வார்கள் அல்லவா? அவ்வாறு அவர்கள் கலந்து கொண்டு விட்டால், யுத்தத்தின் போக்கு என்ன ஆகும்? இதுவே ஹிட்லரின் கவலை!

## யுவர்கள் வேட்டை.

ஆகவே, பிரான்ஸில் உள்ள வாலிபர்களையும், திடசாலிகளையும், அதாவது 18 வயதுக்குமேல் 40 வயசுக் குட்பட்டவர்களை யெல்லாம் பிடித்து, ஜெர்மனிக்கு அனுப்பி விட வேண்டுமென உத்திரவிட்டிருக்கிருராம் ஹிட்லர். நேச தேசத்தினர் இரண்டாம் போர் முனையை ஆரம்பித்தாலும், பிரான்ஸிலே யுவர்கள் யாருமே இல்லாவிட்டால் கொஞ்சம் தைரியமாக இருககலா மென்பது அவரது எண்ணம் போலும். ஹோட்டல்களிலும், தெருக்களிலும், சினிமாக் கொட்டகைகளிலும் யுவர்கள் வேட்டையாடப் படுகிருர்களாம். வீடுவீடாகப் புகுந்து கூடப் பார்க்கத் தொடங்கி விட்டார்களாம் அங்கே.

ஹிட்லர் செய்யும் ஏற்பாடுகளைப் பார்த்தால், எவ்வளவு காலம் யுத்தத்தை நீடித்து நடத்திக் கொண்டிருக்கலாமோ அவ்வளவுக் கவ்வளவு சௌகரியம் எனறு நினைக்கிருப் போலிருக்கிறது. ஜெர்மனியிலே பூரணமாகப் படை திரட்ட தான் என்னென்ன செய்திருக்கிருர் என்பதை விவரமாக அச்சிட்டு அதன் பிரதிகளை இத்தலி, ருமேனியா, பிரான்ஸ் ஸீக்கோஸ்லேவேகியா ஆகிய நாடுகளுக் கெல்லாம் ஹிட்லர் அனுப்பி யிருக்கிருராம். எங்குமே இன்னும் அதிகப்படியான யுத்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்பது தான் அதன் அர்த்தம்.

## ஹிட்லர் என்ன செய்யக் கூடும்?

இப்பொழுதிருக்கும் நிலைமையில் ஹிட்லர் என்ன செய்யக் கூடும் என்பதைப் பற்றி ஆளுக் கொருதினுஸாக ஜோஸியம் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். ருஷ்யாவை ஜெயித்தாலன்றி ஜெர்மனி நிம்மதியாக இருக்கவே முடியாது. இந்தப் பனிக் காலத்தில் நடந்த யுத்தங்களிலே ருஷ்யா தனது 'ரிஸர்வ்' பலத்தை யெல்லாம் உபயோகித் திருக்க வேண்டும் என்று நினைத்து, புதிதாக வஸந்த காலத்தில் ஹிட்லர் பெரிய தாக்குதலுக்குத் திட்டம் போட்டிருக்கக் கூடும். மறுபடியும் இன்னொரு பனிக் காலம் வரை மாட்டிக் கொண்டு முழிக்கக் கூடாது என்ற நினைப்பிலே, ருஷ்ய யுத்தத்திலே விஷ வாயுப் பிரயோகத்தை ஹிட்லர் தொடங்கலாம்; அதோடு பிரிட்டன் மீதும் விஷ வாயு குண்டுகளைப் போடலாம் என்பது ஒரு கட்சி. பிரிட்டனிலிருந்து ஐரோப்பா மீது நேச தேசத்தார் படை யெடுக்காது தடுக்க, பிரிட்டிஷ் கடற்கரை நகரங்களை, படகுகளில் போய் நாஸிகள் தாக்கலா மென்பது மற்றொரு கட்சி. ஸ்பெயினையாவது துருக்கியையாவது போருக்கிழுப்பார் ஹிட்லர் என்பது இன்னொரு கட்சி. **எது செய்தாலும் மாட்டிக் கொண்டு முழிப்பார் என்பது நமது கட்சி.**

இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பு இருந்த நிலைமைக்கும், இப்பொழுதுள்ள நிலைமைக்கும் வித்தியாசமில்லையா ஐயா? அப்பொழு திருந்த நிலைமையைப் பார்த்து விட்டுத் தானே, 'இந்த யுத்தம் ஒரு போர் முனையில் தான் நடக்கும். அமெரிக்கா அளிக்கக் கூடிய உதவி துளியத்தனை தானிருக்கும்' என்று சொன்னர் ஹிட்லர்.

ஆனல் இன்று என்ன ஆகிவிட்டது. சென்ற மூன்று மாதங்களிலே இந்தியாவிற்கு 59 கோடி பெறுமானமுள்ள சாமான்கள்; ருஷ்யாவிற்கு 45 கோடி; சீனைக்கு 111 கோடி என்று உதவி போய்க் கொண்டிருக்கிறது அமெரிக்காவிலிருந்து. மற்றொரு வருஷத்திற்கு தளவாட இரவல் சட்டப்படி உதவியளிப்பது என்று அமெரிக்க சட்ட சபை ஏகோபித்துத் தீர்மானம் செய்து விட்டது. சீனவிற்கு அதிகப்படியான உதவி செய்வது என்றும் அமெரிக்கா தீர்மானித்திருக்கிறது. ஆகையால், ஹிட்லர் வீண் கனவு எதும் காண வேண்டிய அவசியமே இல்லை.

## பஸ்ட் கிளாஸ் பைத்தியம்.

'என்ன செய்வது, என்ன செய்வது என்று இராப் பகலாக யோசனை செய்ததன் காரணமாகத் தானே என்னமோ, ஹிட்லருக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டு விட்டது. அவரது அந்தரங்க வைத்தியர் கிழக்குப் போர் முனைக்குப் போய் வந்து விட்டார்' என்றொரு செய்தி கிளம்பிற்று. இது எவ்வளவு தூரம் வாஸ்தவமோ தெரியாது. ஆனல் ஒன்று, ஹிட்லர் நிலைமையில் வேறு யார் இருந்தாலும், அவர்கள் இதற்குள் 'பஸ்டு கிளாஸ்' பைத்தியமாகவே மாறியிருப்பார்கள் என்பதில் எள்ளளவு சந்தேகங் கூடக் கிடையாது.



யுத்தத்தின் முடிவு காலம் நெருங்கி விட்ட தென்பதிலும் சந்தேகமே இல்லை என்று அபிப்பிராயப்படுகிருர் டாக்டர் பெனேஷ் என்பவர். ஹிட்லரின் ஆடம்பரப் பேச்சுக்களே இப்பொழுது காணேமல்லவா? அதோடு, அவர் இப்பொழுது ஜெர்மன் பொது மக்களின் திருஷ்டியில் கூட விழுவதில்லை அல்லவா? அவமானமாக இருக்காதா ஐயா அவருக்கு? ருஷ்யாவைப் பத்து வாரங்களில் தீர்த்து விடுவோம் என்று அவர் பேசிய பேச்சை யாராவது மறந்திருப்பார்களா?

இன்று ருஷ்யாவில் நடப்ப தென்ன? 'ருஷ்யப் போர் முனையிலே நமது அரிய பொக்கிஷங்கள் பலவற்றை இழந்து வருகிருேம் என்பதும், அங்கு ஏக ரத்தம் சிந்தப்படுகிற தென்பதும் உண்மை' என பிரசார சூரரான கொயபல்ஸ் துரையே கூறியிருக்கிருரே!

ருஷ்யாவிலிருந்து ஜெர்மானியருக்கு ஒரு சிறிது சமாதான மளிக்கக் கூடிய செய்திகள் இப்பொழுது எட்டிக் கொண்டிருக்கலாம். தென் ருஷ்யாவிலே, புதுப் படைகளைக் கொண்டு குவித்து, ருஷ்யரைச் சற்றே பின் வாங்கச் செய்திருக்கின்றன நாஜிப் படைகள். முக்கியமான எட்டு நகரங்களை நாஜிகள் தம் வசப்படுத்திக் கொண்டு, யூக்ரேண் பிரதேசத்திற்கே ஜீவ நாடி போன்ற கார்கோவ் நகரைப் பலமாகத் தாக்கி வருகிருர்கள். அந்த ஒரு நகரைத் தாக்க 2 லக்ஷம் வீரர்களையும், ஆயிரம் டாங்கிகளையும் நாஜிகள் உபயோகப் படுத்துகிருர்களாம். இந்த நகரின் முக்யத்வத்தை அறிநத ருஷ்யர்களும், விடாப்பிடியாக இந் நகரைப் பிடித்துக் கொண்டிருக்கிருர்களாம்.

மத்யப் போர் முனையிலே போன வாரம் ஜெர்மானியரை வியாஸ்மா என்ற முக்கியமான நகரிலிருந்து ருஷ்யர்கள் கல்தா கொடுத்து வெளியேற்றினர்கள். ஏகப்பட்ட அரண்களுடனும், பாதுகாப்புக்களுடனும் இருந்த நகரம் இது இது வீழ்வதற்கு முதல் நாள் கூட, மூன்று நாஜி டிவிஷன் படைகளும், ஒரு பீரங்கிப் பட்டாளமும் இந் நகருக்குள் இருந்தனவாம். திடீரென்று இரவு இரண்டு மணிக்கு, கத்தரிக்கோல் போல் ருஷ்யப் படைகள் இந் நகருக்குள் புகுந்து, நாஜிகளைச் சிதறி யோடச் செய்து விட்டன.

## ரஷ்யர்கள் உலகையே திகைக்கச் செய்கின்றனர்.

வியாஸ்மா பிடிபட்டதால், ருஷ்யர்கள் ஆனந்தத்தோடு, மூன்று பிரிவுகளாகப் பிரிந்து ஜெர்மனியின் மற்றொரு கேந்திர ஸ்தானமான ஸ்மாலென்ஸ்கைப் பிடிக்க விரைந்து சென்று கொண்டிருக்கிருர்கள். ஆனல் இங்கும் ஜெர்மானியரது எதிர்ப்பு பலத்து வருகிறதாம். ருஷ்ய மக்களின் தீரத்தைக் கண்டு உலகமே ஹிட்லர் உள்பட திகைத்து நிற்கிறது.

வட ஆப்பிரிகாவிலே, சமீபத்திலே ரோமலின் படைகள் கொஞ்சம் வாலாட்டிப் பார்த்தன. அந்த வாலை எட்டாவது படையினர் சுட்டு விட்டனர். மாரெத் அரணுக்கு அருகே ரோமல் நிறையப் படைகளையும், ஆயுதங்களையும் கொண்டு குவித்திருக்கிருர் என்பது வாஸ்தவம். இந்தப் பிரதேசத்திலே ஏகப்பட்ட கண்ணி வெடிகளையும், பீரங்கிகளையும் வைத்திருக்கிருர்களாம் அச்சு நாட்டார். ஆகவே இங்கு நடக்கும் யுத்தம் கடுமையானதாகவே இருக்கும்.

எட்டாவது படையினர் தைரியமாகவே இருக்கிருர்கள். அப்படையினருக்கு வேண்டிய 'சபளை'கள் எல்லாம் 1,700 மைல் தூரத்திலிருந்து தான் வந்தாக வேண்டும். ஆனலும் அவர்களுக்கு ஏதாவது குறைவுண்டா? பேசப்படாது. இல்லை என்பதே இங்கு கிடையாது.

தினசரி பல்லாயிரம் காலன் கணக்கில் பெட்ரோல் செலவாகிறது இங்கே. தற்சமயம் இங்குள்ள சீதோஷ்ண நிலைமை எட்டாவது சேனைக்குப் பாதகம் விளைவிப்பதாகவே இருக்கிறது. ஆனலும் என்ன? எட்டாவது சேனையின வலிமை லேசானதல்ல.

## அச்சு நாட்டார் எண்ணம் பலிக்க வில்லை.

ட்யூனிஸியாவிலே வட பிரதேசத்திலே நேச தேசப் படைகள் அச்சு நாட்டாரை ஓரிடத்திலிருந்து விரட்ட முயன்ருர்கள். இப்போதைக்கு அந்த முயற்சியில் அவர்கள் வெற்றி காணவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக நமது நிலைமையை வலு படுத்திக் கொண்டு, முடிவிலே ஓங்கி ஒரு அறை அறைந்து, அச்சு நாட்டாரை விரட்டி யடிப்போம் என்கிருர் ஒரு சேனபதி. அதிலும் உண்மை இருக்கத்தா னிருக்கிறது.

வட ஆப்பிரிக்காவிலே ஐம்பதாயிரம் பிரஞ்சுக்காரர்கள் ஜெனரல் கிராடின் ஆக்ஞைப்படி பிரமாதமாகப் போர் புரிந்து வருகிருர்கள். அவர்கள் சில வெற்றிகளையும் கண்டாயிற்று.

இவர்களைப் போலவே, அச்சு நாட்டாரைத் தாக்குவதிலே பிரிட்டிஷ் அமெரிக்க விமானிகளும் மேற்கு ஐரோப்பாவிலே வெற்றி கண்டு விட்டார்கள். சென்ற வாரம், ஜெர்மனியில் உள்ள பிரமாண்டமான க்ரப்ஸ் ஆயுத உற்பத்தி சாலை நேச நாட்டு வெடி குண்டுகளின் சக்தியைக் கண்டது. அந்தத் தொழிற் சாலைகளில் பற்றிய தீ பதினையாயிரம அடி ஆகாயத்தில் பாய்ந் தெழுந்ததாம். அதாவது சுமார் மூன்று மைல் உயரம் கிளம்பிற்ரும். நீர்மூழ்கிகளுக்கும், விமானங்களுக்கும் இங்கு தான் இயந்திரங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன. மார்சு ஐந்தாந் தேதியன்று பிரிட்டிஷ் வெடிகளி லிருந்து தப்பிய தொழிற்சாலைகள், அன்று பாழாயினவாம். ஸ்டட்கார்ட் எனும் இடமும் பலமாகத் தாக்கப்பட்டது. நாற்பது நிமிஷ நேரத்திற்குள் பல ஆயிரம டன் எடையுள்ள வெடி குண்டுகள் வீசப்பட்டன என்ருல், எப்படி இருந்திருக்கும் பார்த்துக் கொள்ளுங்களேன். கோவிலிலே உத்சவ காலத்திலே ஒரு அதிர் வேட்டு வெடித்தாலே, நமது குலை நடுங்கிப் போகிறதே ஐயா!

மேற்கே நிலைமை இப்படி யிருக்க, ஜப்பானியர் என்ன செய்து கொண்டிருக்கிருர்கள் தெரியுமா? பிஸ்மார்க் கடலிலே உதை பட்ட பிறகு, ஜப்பானியர் அதி பயத்தோடு, பல சிறு கப்பல்களில் சாமான்களையும் ஆட்களையும் ஏற்றி, சுற்றுப் பாதைகள் வழியாக அனுபபி வருகிருர்களாம். வட ஆஸ்திரேலியாவைத் தாக்கும் நோக்கம் ஜப்பானியருக்கு இருக்கக் கூடும் என்பது அவர்கள் வட ஆஸ்திரேலியாவிற்கு அருகே உள்ள டச்சு கிழக்கிந்திய தீவுகளில் விமானங்களையும், ஆட்களையும் கொண்டு குவிப்பதி லிருந்து தெரிகிறதாம். ஜப்பானுக்கு இன்னும் நிறைய விமான பலம் இருப்பதாக ஒரு ஆஸ்திரேலிய அதிகாரி கூறுகிருர்.

இருக்கட்டுமே! அமெரிக்காவின் உற்பத்தி சக்தி எவ்வளவு என்பது நமக்குத் தெரியாதா என்ன? சீனவின் கையைப் பலப்படுத்தி, அங்கிருந்தே ஜப்பானைத் திணற அடிக்கத் தான் அமெரிக்கா திட்டம் போட்டிருக்கிறதே! இதை அறிந்தே ஜப்பானிய ரேடியோ, 'விமானப் படையெடுப்புக்கு சித்தமாக இருங்கள்' என்று ஜப்பானிய மக்களை எச்சரித்து வருகிறதாம். அதோடு, சீன மீது புதிதாகப் பெரிய தாக்குதல்கள் ஓரிரண்டைத் தொடங்கி, நேச தேசத்தார் ஜப்பானைத் தாக்க உபயோகிக்கக் கூடிய விமான தளங்களை தம் வசப்படுத்திக் கொள்ள முயலலாம் என்றும் கூறப்படுகிறது. ஏற்கெனவே, ஆறரை லக்ஷம் பேர்களை சீன யுத்தத்திலே ஜப்பான் பறிகொடுத்திருக்கிறது. இன்னும் எவ்வளவு பாக்கியோ, யார் கண்டார்கள்? பர்மாவில் கூட ஜப்பானியர் ஏராளமான படைகளைக் கொண்டு குவிக்கிருர்களாம். இந்தியாவிலே நேச தேச ராணுவ பலம் அதிகரித்து வருவதே இதற்கான காரணமாக இருக்கும்.

# கிராமங்களில் ரயில்வே பாதுகாப்புத் திட்டம்

## காவலாளிகள் நியமனம் : மாதம் ரூ. 15 சம்பளம்

**1. காவலாளிகளின் எண்ணிக்கை.** — ரெயில்வே லைன்கள் எல்லாவற்றையும் இரவும் பகலும் காவல் புரியும்படி ஏற்பாடாகி யிருக்கிறது. தனியாகக் காவல்காரர்கள் ரோந்து கொடுக்கக் கூடாது. இராக் காலங்களில் இவர்களுடைய எண்ணிக்கை அதிகப்பட வேண்டும். நாளொன்றுக்கு 2 மைல்களுக்கு 8 பேர்கள் வீதம் காவலாளிகள் நியமிக்கும்படி ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த 8 பேர்களும் தமக்குள் முறை வைத்துக் கொண்டு காவல் புரிவார்கள். காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பகல் காவல்காரர்கள் முதல் முறை. மாலை 4 மணி முதல் நடு இரவு வரை இரவு வேலை இரண்டாவது முறை. நடு இரவு முதல் காலை 8 மணி வரை மூன்றுவது முறை.

**2. காவலாளிகளை நியமிப்பது.**—ரெயில்வே லைன்கள் போகும் கிராமங்களில் இந்த வேலைக்கு யார் யார் தகுதியானவர்களென்று அந்தந்தக் கிராம முனிசீப்புகள் ஒரு ஜாபிதா தயார் செய்ய வேண்டும். அந்தந்த கிராமத் தலைவர்களடங்கிய கமிட்டியாரின் உதவியைக் கொண்டு இந்த ஜாபிதாவை கிராம முனிசீப்புகள் தயாரிக்கலாம். ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் யுக்தப்படி தான் இது நடை பெற வேண்டும். தாசில்தாரும் சப்-இன்ஸ்பெக்டரும் அந்தந்தக் கிராமங்களுக்குப் போய் இந்த ஜாபிதாவில் பதிவாகி யிருக்கிறவர்களைப் பார்க்க வேண்டும்.

இன்னின்னார் இன்னின்ன இடத்தில் 'இத்தனை மணி முதல் இத்தனை மணி வரை காவல் செய்ய வேண்டு மென்று ஏற்பாடு செய்ய வேண்டியது கிராம முனிசீப்பின் கடமை. கிராமத் தலைவர்கள் கமிட்டி யிருந்தால், அதன் உதவியும் அவருக்கு உண்டு.

**குறிப்புக்கள்.**—(1) ஒரு கிராமத்தின் வழியாகப் போகும் ரயில் பாதை சரியாக 2 மைல்கள் அல்லது 4, 6, 8 மைல்கள் இருக்காது. அப்போது, ஒரு யூனிட் இவ்வளவு தூரம் என்று ஜில்லா மாஜிஸ்ட்ரேட் தன் யுக்தப்படி நிர்ணயிப்பார்.

(2) சில சமயங்களில் ஒரு கிராமத்தினூடே ரெயில்வே லைன் போன போதிலும் கூட, அடுத்த கிராமத்தின் எல்லை ரெயில்வே லைனை யொட்டி வரும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அத்தக் கிராமத்தையும் காவலுக்குச் சேர்த்துக் கொள்ளலாம். இரண்டு கிராமங்களி லிருந்தும் தலைவர்கள் கமிட்டி கட்டாயம் ஏற்பட வேண்டும். அடுத்திருக்கும் கிராமத்தின் முனிசீப்பு இந்த கமிட்டி அங்கத்தினரா யிருக்க வேண்டும். இரண்டு கிராமங்களிலும் முறைப் புத்தகங்கள் வைக்கப்பட வேண்டும்.

**3. சம்பளம்.**—இந்தக் காவலாளிகளுக்கு மாதம் ரூ. 15 விகிதம் கொடுக்கப்படும். ஒரு கிராம எல்லைக்குள் 4 மைல்கள் தூரம் ரெயில்வே லைன் போனுல், இரண்டு யூனிட்டுகளாகப் பிரித்து ஒரு யூனிட்டுக்கு 8 பேர்கள் விகிதம் 16 பேர்களை நியமிக்க வேண்டும். இப்படிப்பட்ட கிராமங்களின் முனிசீப்புகளுக்கு 16 × 15 ரூ. 240 மாதக் கடைசியில் அனுப்பப்படும். இதை நாளொன்றிற்கு 8 அணு விகிதம் அந்தக் காவலாளிகளுக்கு அவர் கொடுப்பார்.

**4. மேல் பார்வை.**—இவர்களுடைய வேலையை மிகவும் கவனமாகவும் அடிக்கடியும் மேற்பார்வை யிட வேண்டும். இப்படிச் செய்யா விட்டால், இந்தத் திட்டமே வீணுகி விடும். இதன் பொருட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் 2 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை நியமிக்க வேண்டும். இவர்கள் ரெயில்வே லைனில் எவ்வளவு தூரம் வேலை செய்ய வேண்டு மென்றும், எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டு மென்றும் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் நிர்ணயிப்பார்.

அந்த ரெயில்வே லைனில் அவர்கள் எவ்வளவு அடிக்கடி போய் வரக் கூடுமோ அவ்வளவு அடிக்கடி போய் வர வேண்டும். ரெயில்வே அதிகாரிகள் ஏற்பாடுகளின் மேல் ரெயில்வே ட்ராலிகளையும் இவர்கள் உபயோகிக்கலாம். இந்தக் காவலாளிகள் ரெயில்வே லைனில் தவருது காவல் செய்கின்றுர்களா இல்லையா வென்று தணிக்கை செய்வது தான், இந்த ஸ்பெஷல் ரெவின்யூ இன்ஸ்பெக்டருடைய வேலை. எந்த யூனிட்டிலாவது காவலாளிகள் இல்லையானுல், உடனே அவர் அந்தக் கிராமத்திற்குப் போய் காவலாளிகளை வேலைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இவர்கள் கிராமத்திலுள்ள முறையைச் சோதித்து, கிராம முனிசீப்பு செய்துள்ள முறை ஏற்பாடுகள் சரிதானு வென்று தணிக்கை செய்வதோடு, சம்பள சம்பந்தமாக ஏற்படும் தகராறுகளையும் தீர்க்கலாம்.

இவர்கள் மேல் பார்ப்பது மட்டு மன்றி, ரெயில்வே போலீஸார், சரகப் போலீஸார், ரெவின்யூ சிப்பந்திகள் அந்தக் கிராமங்களுக்குத் தம் அலுவலின் மேல் போனுல். அவர்களும் மேல் பார்வை யிட வேண்டும்.

**5. முஸ்தீப்பு.**—ஒவ்வொரு காவல் கோஷ்டியும், வெள்ளைத் துணியில் குறுக்கே இரண்டு சிவப்புக் குறுக்குக் கோடுகளிட்ட கொடிகளை அடையாளத்திற்காகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். போலீஸ் தடிகள் கிடைக்க வில்லை யாகையால், மூங்கில் தடிகளை அவர்கள் எடுத்துக் கொண்டு போகலாம். இராக் காலங்களில், ஒரு லாந்தரையாவது தீவர்த்தியையாவது கொண்டு போக வேண்டும். இவற்றை ஜில்லா மாஜிஸ்டரேட் அவர்களுக்கு சப்ளை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்வதோடு, அவருடைய யுக்தப்படி ஒவ்வொரு கிராமத்திற்கும் இவ்வளவு எண்ணெய் கொடுக்கப்பட வேண்டு மென்றும் நிர்ணயிக்கவேண்டும்.

**6. காவலாளிகளின் கடமைகள்.**—ஏதேனும் அசம்பாவிதங்கள் நேர்ந்திருந்தால், உடனே போலீஸ தலையாரிக்குத் தெரிவிக்க வேண்டும். யாரேனும் லைனுக்குச் சேதம் விளைவிக்க முயன்று கொண்டிருந்தால், காவலாளிகளில் ஒருவர் உடனே கிராமத்திற்கு ஓடி, உதவிக்கு ஆட்களைத் திரட்டிக் கொண்டு வர வேண்டும். தனித்து காவலாளிகள் ரோந்து போகக் கூடாது என்பதற்கு இதுவும் ஒரு காரணம். லைன்களுக்குச் சேதம் விளைவிப்பவர்களையும் சந்தேகத்திறகு இடங் கொடுக்கிறவர்களையும் கைது செய்து அருகிலுள்ள போலீஸ ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டும்.

**7. தங்குவதற்குக் கொட்டகை.**—சில சமயங்களில் கிராமததிற்கும் ரெயில்வே லைனுக்கும் வெகு தூரம் இருக்கக் கூடும். அப்படிப்பட்ட இடங்களில் முகாம்களாக உபயோகப்படத் தக்கபடி, கொட்டகைகளை ஜில்லா மாஜிஸ்ட்ரேட் தன் யுக்தப்படி கட்டலாம்.

**8. பொறுப்பு.**—கிராமவாசிகளுக்குப் பொறுப்புக் கட்ட வேண்டு மென்னும் கொள்கையை யடிபபடையாகக் கொண்டு தான், இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இநதத் திட்டத்தை நிறை வேற்ருத கிராமங்களுக்கு கூட்டு அபராதம் விதிக்கப்படும். கீழ்க் கண்ட முறையில் கிராமவாசிகளுக்கு இந்த விஷயம் தெளிவாக்கப்படும் :—

உங்கள் கிராம எல்லையிலுள்ள ரெயில்வே லைனுக்குப் பழுது நேர்ந்தால், அரசாங்கத்தார் உங்களைத் தான் அதற்குப் பொறுப்பாளி யாக்குவார்கள். உங்களுக்கு ஒரு அபராதமும் விதிப்பார்கள். இந்தப் பொறுப்பை நிறைவேற்ற ஒவ்வொரு கிராமத்திலும் இத்தனைப் பேர்கள் என்று நிர்ணயித்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பார்கள. இவர்களை நியமித்து, அவர்கள் சரிவர வேலை செய்கிறுர்களா என்று கவனிக்க வேண்டிய பொறுப்பு, உங்களுடையது. மேற் பார்வை யிடும் போது உங்கள் கிராமத்தைச் சேர்ந்த காவலாளி, லைனில் காவல் செய்ய வில்லை யென்று ஏற்பட்டால், உங்கள் கிராமத்திற்கு ஒரு இழுக்கு ஏற்பட்டு விடும். அதன் பிறகு, உங்கள் ரெயில்வே லைனை யாரேனும் சேதப்படுத்துவார்களானுல், அப்போது கூட்டு அபராதம் விதிக்கும் போது, இது பற்றியும் ஆலோசிப்பார்கள்.

**9. பொது** —இந்தத் திட்டப்படி பொதுவாக ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முழு அதிகார முண்டு. கலவர முள்ள இடங்களில காவலாளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, உஷாராகக் காவல் புரிவதற்கான ஏற்பாடுகள் செய்யலாம்.



## பாக்டாடில் இந்தியப் படைகளுக்கு விடுதி

பாக்டாடில் ஒரு பெரிய மாளிகையை இந்தியப் படைகளின் விடுதியாக உபயோகிக்கும்படி திருவாங்கூர் மகாராஜா அவர்கள் கொடுத்திருக்கிறுர்கள். இதை இன்னும் பெரிதாக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. விலைவாசிகள் என்ன தான் உயர்ந்திருந்த போதிலும், இந்த விடுதியைச் சார்ந்துள்ள கடைகளில் ஏராளமான வியாபாரம் நடை பெறுகிறது.

இங்கே நாற்காலி, கட்டில், சோபா, மேசை முதலிய வசதிகள் உண்டு. சிறந்த உணவு வழங்கப்படுகிறது. நாடக மேடைகளும் நடனக் கூடங்களு மிருக்கின்றன.

இதன் ஆரம்ப விழாவிற்கு பிரிட்டிஷ் ஸ்தானீகரான சர் கிருன் கார்ன்வாலிஸ் தலைமை வகித்தார். அப்போது பம்பாயிலிருந்து ஒரு டாக்டரும், சிந்துவிலிருந்து ஒரு பட்டு வியாபாரியும், எல்லைப் புற மாகாணத்திலிருந்து ஒரு பட்டதாரியான பட்டாணியரும், லாகூரிலிருந்து ஒரு சீக்கிய நிலச்சுவான்தாரும் வந்திருந்தனர்.

## ஜப்பானியர் கைப்பற்றிய நாடுகளின் நிலை

ஜப்பானியர்கள் ஒரு நாட்டைக் கைப்பற்றிஞல், என்ன நடக்கிறது ? நிலைமை எப்படி மாறுகிறது ? பொது மக்களை எப்படி நடத்துகிருர்கள் ?

ஜப்பானியர் ஒரு நாட்டைக் கைப்பற்றி அங்கு போய்ச் சேர்ந்த வுடனே, சில நாட்கள் வரை ஜப்பானியப் படைகள் தம் இஷ்டம் போல் எது வேண்டுமானுலும் செய்யும்படி அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு, (1) வெற்றி பெற்ற படையினருக்குப் பரிசு. (2) அந்நாட்டு மக்களுக்குப் பீதியை உண்டாக்குவது.

பிறகு முன்னேற்பாட்டோடு அதிகார தோரணையில் கொடுமைப் படுத்தி, பொது மக்களுடைய சொத்துக்களை யெல்லாம் பறிமுதல் செய்கிறுர்கள். அந்நாட்டிலுள்ள எல்லா மூலப் பொருள்களையும் திரட்டி ஜப்பானுடைய உபயோகத்திற்கு அனுப்ப வேண்டு மென்பது தான் அவர்களுடைய நோக்கம்.

இந்த விஷயங்களில் இரக்கம் என்பது சற்றும் அவர்களுக்குக் கிடையாது. யுத்த முறைகளையும் அவர்கள் லட்சியம் செய்வது கிடையாது.

இதன் பயனுக, வியாபாரம் வெகுவாகக் குறைந்து விட்டது. வாழ்க்கைச் செலவும், வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும், உணவுப் பஞ்சமும் அதிகப்படுகின்றன.

## "கொசுத் தொல்லை ஒன்று தான்"

ஒரு கப்பற் படைத் தலைவர் தன் கப்பலை விட்டுக் கிளம்பினுர். மாயு ஆற்றுப் படுகையை யடைந்தார். அங்கே சேர் இடுப்பளவு ஆழமிருந்தது. அதில் கடந்து மேலே போனுர். ஒரு மாந்தோப்பு. அப்போது தான் ஜப்பானியர்கள் அங்கிருந்து காலி செய்து போனதற்கான குறிகள் தென்பட்டன. உடனே அங்கிருந்த ஒரு மரத்தின் மேலேறினுர். அங்கிருந்து பல விஷயங்களை உணர்ந்தார். சுமார் 24 மணி நேரம் அங்கேயே இருந்தார். அங்கே கொசுத் தொல்லை ஒன்று தான் "மகா கடுமையாயிருந்தது" என்று அவர் தெரிவித்தார். அவர் கொண்டு வந்த தகவல்கள் மிகவும் உபயோகமா யிருந்தன.

(5-ம் பக்கம் தொடர்ச்சி.)

யுத்தக் கைதிகளா யிருக்கிறுர்கள். உண்மையில் கொல்லப்பட்டவர்களின் தொகை 2 முதல் 3 ஆயிரம் பேர்கள் தான்.

நமது படைகளின் சிறந்த வேலைகளைப் பாராட்டி நான் இங்கே பேச வேண்டியதில்லை. பெரும் படைகளை எதிர்த்து பல விடங்களில் நம் படைகள் வெற்றி கொண்டதற்குக் காரணம், நல்ல பயிற்சி தான். குறைந்த பயிற்சியுள்ள படைகளால் தான் நமக்குச் சில தோல்விகளும் நேர்ந்தன.

புதிதாகப் படையில் சேருகிற ஒருவர், 6 மாத காலம் கடுமையாகப் பயிற்சி பெற்ருல் தான், சிப்பாயாகலாம். இவர்கள் மற்ற சிப்பாய்களோடு சேர்ந்து வேலை செய்து பழகினுல் தான் தகுந்தபடி வேலை செய்ய முடியும். பிறகு ஒரு பட்டாளத்தில் சேர்ந்து பழக வேண்டும். அதன் பிறகு பிரிகேடிலும், டிவிஷன்களிலும் சேர்ந்து வேலை பழக வேண்டும். இப்படிக் கஷ்டப்பட்டு பழகியவர்கள் தான் 4-வது 5-வது இந்தியன் டிவிஷன்களைச் சேர்ந்த இந்தியப் படைகள். இந்தப் பயிற்சியினுல் தான், அவை போர் முனையில் பெரும் புகழ் பெற்றன.

# கீரையும் தண்டும்



1. முட்டைக் கோஸ் :

**வர்ணனை.**—ஒரு சிறு செடி. அடிப் பக்கத்திலுள்ள இலைகள் மட்டும் மலருகின்றன. மேலுள்ள இலைகள், ஒன்றின் மேல் ஒன்று மேவி மூடிக்கொண்டிருக்கின்றன. இது பொதுவாக உருண்டை வடிவமானது.

**பரவுதல்.**—சாதாரணமாக விதையிலிருந்து தான் முளைக்கிறது. சில வகைகள், அதன் பக்கத்திலேயே முளைக்கின்றன. இவற்றைப் பிடுங்கி நட்டால், செடியாக வளருகின்றன.

சம பூமியில்.—ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை.

மலைப் பிரதேசத்தில்.—மார்ச்சு முதல் ஆகஸ்டு வரை.

**சாகுபடி.**—உயர்ந்த பகுதிகளில் தான் ஏராளமாகச் சாகுபடி செய்கிறார்கள். இதை மிகவும் ஜாக்கிரதை யோடும் கவனத் தோடும் சாகுபடி செய்தால், சம பூமிகளிலும் சாகுபடி செய்யலாம்.

இதைச் சாகுபடி செய்ய நன்றாக உர மிட்டுத் தண்ணீர் பாய்ச்சப் பட்ட பூமி வேண்டும். நிழலான இடத்தில் நிலத்தை நன்றாகச் செப்பனிட்டு பாத்தி கட்டி, பூமி மட்டத்திற்குச் சற்று கீழே விதைகள் ஊன்ற வேண்டும். முளைகள் 4 அல்லது 5 அங்குல உயரம் கிளம்பிய வுடனே, நாற்றுப் பிடுங்கி வரிசையாக 2 அடிக்கு ஒரு செடி வீதம் நடவேண்டும். இரண்டு வரிசைகளுக்கு நடுவே 1½ அடி இடை வெளி யிருக்க வேண்டும். பிறகு இந்த முளைகள் மேல் சூரிய உஷ்ணம் தாக்காதபடி சில நாட்கள் வரை மறைத்து வைக்க வேண்டும். பிறகும் நிலத்திற்குத் தாராளமாக எருப் போட்டால், நல்ல பலன் தரும். 3 அல்லது 4 மாதங்களில் அறுவடை செய்யலாம்.

**உபயோகங்கள்.**—வேக வைத்துச் சமைத்து ஜனங்கள் பிரிய மாகச் சாப்பிடுகிறார்கள். கறி யோடும் சமைத்துச் சாப்பிடுகிறார்கள்.

**உள்ளடக்கம்.**—தண்ணீர் 92·6 சதமானம் ; உலோகச் சத்துக்கள் 0·6 சதமானம் ; மாச்சத்துக்கள் 1·4 சதமானம் ; கொழுப்புச் சத்து 0·1 சதமானம் ; நார் 0·8 சதமானம் ; கார்போஹைட்ரேட்கள் 4·5 சதமானம் ; 125 பவுனுக்கு கலோரீஸ் ; சுண்ணச்சத்து 0·071 சதமானம் ; மாக்னீஷியம் 0·021 சதமானம் ; நிமதாக்கினி 0·042 சதமானம் ; இரும்புச் சத்து 0·0007 சதமானம் ; விட்டமின் ஏ குறிப்புக்கள் தான் காணப்படுகின்றன் ; விட்டமின் பி 25 கிராமுக்கு 1 யூனிட் ; விட்டமின் சி 100 கிராமுக்கு 62·5 யூனிட்.

## விருந்தாளி யில்லாத விருந்து

யுத்தம் காரணமாக ஏராளமான குக்கிராமங்களுக்குக் கூட நல்ல ரோடுகள் போட்டு விட்டார்கள். இதுபற்றி கிராமவாசிகள் உண்மையிலே சந்தோஷப்படுவார்கள். இந்தியக் கிராமவாசிகள் நன்றியுள்ளவர்கள். ஆகவே, அந்த ரோடுகள் போட்ட இராணுவ சார்ஜெண்டுக்கு ஒரு தேநீர் விருந்து நடத்தினார்கள். விருந்து பலந்தான். ஆனால், அதில் அந்த சார்ஜெண்ட் கலந்து கொள்ளவில்லை. படையினர் சட்டைக் கையிலுள்ள கோடுகளைக் கொண்டு தான் ஒவ்வொருவரையும் அந்தக் கிராமத்தார் மதித்தார்களே யொழிய, தோள்களிலுள்ள சின்னங்களைக் கொண்டு மதிக்க வேண்டு மென்று அவர்களுக்குத் தெரியாது. எனவே, அவரை அழைக்கத் தவறி விட்டார்கள்.

## ஜெர்மனியில் 5-ம் படை

ஜெர்மனியிலுள்ள தொழிற் சாலை மிகுந்த ஒரு பெரிய நகரத்தின் தெருச் சுவர்களில் விடியற்காலையில் ஹிட்லருக்கு விரோதமாகவும் ஸ்டாலினுக்குச் சாதகமாகவும் வாசகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இதைக் கண்ட நாஜிகளுக்குப் பச்சைமிளகாய் தின்ற மாதிரி இருக்கிறது. அம்மொழிகளை அழித்துவிட்டு, “ ஏ கோழைகளா ! பகலில் எழுதுவது தானே ” என்று நாஜிகள் எழுதினார்கள். அன்றிரவே அதற்குப் பதில் கிடைத்தது. மறுநாள் காலையில், அதற்குக் கீழே, “ முடியவில்லை ; ஏனென்றால், பகலில் நேரமில்லை ; உங்கள் படையோடு நாங்களும் சேர்ந்து கவாத்து செய்ய வேண்டி யிருக்கிறது ” என்று எழுதப்பட்டிருந்தது.

50 லட்சம் கம்யூனிஸ்ட்களும் அழிந்து விட்டார்களா ஜெர்மனியில் ? இல்லை.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ௵ மார்ச் ௴ 26௳, வெள்ளிக்கிழமை [இதழ் 13

## “ இரண்டொரு வருஷத்தில் வெற்றி ”



நான் ஒரு தீர்க்கத் தரிசியல்ல. என் சிந்தனை சக்திக்குத் தோன்றுவதையே நான் இங்கே சொல்லுகிறேன். அதாவது, அடுத்த வருஷம் அல்லது அதற்கு அடுத்த வருஷம் ஹிட்லரையும் அவர் கொள்கையையும் வென்று விடலாம். அதன் பிறகு, பேராசைக்கார ஜப்பானியர்கள் கொட்டத்தை யடக்குவோம். வெகு நாட்களாக ஜப்பானியர்களின் கொடுமைக் குள்ளாகி யிருந்த சீனாவை மீட்போம். நம் நாடுகளையும் டச்சு நேச நாடுகளையும் மீட்போம். ஆஸ்திரேலியா, நியூசிலந்து, இந்தியா முதலிய நாடுகளில் இனி வாலாட்டவே முடியாதபடி செய்து விடுவோம். இது தான் மிகவும் முக்கியமான கடமை. இதை நிறைவேற்ற ஒரு போதும் தவறக் கூடாது.

இதற்கு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, ஆகியவற்றின் தலைமையில் நேச நாடுகள் உலக நன்மையை முன்னிட்டு ஒரு ஸ்தாபனத்தை யமைக்க முயற்சிக்க வேண்டு மென்று நாம் எதிர்பார்க்கிறோம். இது மட்டுமல்ல. யுத்தம் முடிந்த வுடனே நாசமடைந்த நாடுகளில் பெரும் பஞ்சம் உண்டாகக் கூடும். அதைச் சமாளிக்கவும் நாம் ஏற்பாடுகள் செய்ய வேண்டியது அவசியம்.

நம் நாடு சம்பந்தப்பட்டவரை, ஹிட்லரைத் தோற்கடித்த பிறகு, ஒரு நான்கு வருஷத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இதில் 5, 6 முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. இவற்றை நெடு நாட்கள் ஆராய்ச்சியின்மேல் முன்னதாகவே தீவிரமாக ஆயத்தம் செய்து வைத்திருக்கிறோம். இவை பொதுத் திட்டத்திற்கு பொருந்துகின்றன. இவற்றை நிறை வேற்ற நான்கு வருஷங்கள் கட்டாயம் பிடிக்கும்.

# முரசொலி

"சென்ற ஆறு மாதங்களாக சென்னை மாகாணத்தைப் போல வேறெந்த மாகாணத்திலும் அத்தனை அதிகம் பேர்கள் படையில் சேர்க்கப்பட வில்லை. பஞ்சாப் மாகாணத்திலுங் கூட இல்லை. படையில் சேருகிறவர்களுக்கு நல்ல சாப்பாடு கிடைக்கிறது. அவர்கள் தங்கள் தங்கள் நாட்டிற்காக உழைக்கிறார்கள்; குடும்பத்தாருக்கும் உதவுகிறார்கள். இவர்கள் பணத்திற் காசைப்பட்டு படையில் சேர்ந்தார்கள் என்று சொல்லுவது கூடாது. பொறுப்பில்லாமல் பழி சாற்றுகிறவர்கள், தங்கள் அறிவை இன்னும் பயன் படுத்த வேண்டும். தங்கள் இஷ்டத்தின் பேரில் தான் அவர்கள் சேர்ந்தார்கள்."

மே. த. சர். ஆர்தர் ஹோப்,
சென்ற 19-ம் தேதி கண்ணனூரில் கூறியது.

* * * * *

"எதிர் கால இந்தியாவின் பாது காப்பு, அதன் கப்பற் படையைப் பொறுத்ததாயிருக்க வேண்டும். 'எங்களுக்காக மற்ற நாடுகளின் கப்பற் படைகள் காவல் புரியட்டும்' என்று சொன்ன காலம் மலை யேறி விட்டது."

கப்பற்படை உதவித் தலைவர், சர் பிட்ஸ்ஹர்பர்ட்,
சென்ற 18-ம் தேதி டில்லியில் கூறியது.

* * * * *

"போர் முனையில் கவிழ்ந்திருந்த மேகங்கள் விலகிக் கொண்டிருக்கின்றன. எதிரிகள் திக்கு முக்காடுகிறார்கள். எனவே, மகா பயங்கரமான தளவாடங்களைப் பிரயோகிக்கிறார்கள். என்றாலும் ஜெயக் காற்று நம் பக்கந் தான் வீசுகிறது. வெற்றி வெகு தூரத்திற் கப்பால் இருந்த போதிலும், நெருங்கிக் கொண்டிருக்கிறது. மக்கள் சமூகத்தின் மகத்தான முன்னேற்றம் தடைப் படாது. பெரும் விளக்கு அணையாது. இது யதேச்சை யுலகமா யிருக்குமே யொழிய, அடிமை உலகமா யிருக்காது. அந்த யதேச்சையை நம் நல்லெண்ணத்தினாலும் விசுவாசத்தினாலும் கட்டாயம் அடைவோம்."

பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ்,
சென்ற 20-ம் தேதி ஜோஹனஸ்பர்கில் பேசியது.

* * * * *

"சீனாவும் இந்தியாவைப் போன்றது தான். அது பலவீனமா யிருக்கலாம். விருத்தி யடையாம லிருக்கலாம். ஆனால், யுத்தம் வந்த போது எதிரியை எதிர்த்து நின்றது. இதற்குக் காரணம் அந்நாட்டவருக்குள் உள்ள ஒற்றுமை தான். சீனர்களும் இந்தியர்களும் தெய்வீகத் துறையில் ஒன்று பட்டவர்கள்; அயலார்கள். எத்தனையோ தடைகளிருந்தும் அவற்றைப் பொருட் படுத்தாமல் புத்த மத தர்மத்தைப் படிக்கும்படி சீனர்களை இந்தியாவிற்கு அனுப்பினோம். இன்னும் நெருங்கிய தொடர்பு இந்த இரண்டு நாட்டவர்களுக்கும் ஏற்பட வேண்டு மென்று எதிர்பார்க்கிறேன்."

ஜெனரல் சூயிங்,
(சீன இராணுவக் கோஷ்டித் தலைவர்),
லண்டனில் சென்ற 21-ம் தேதி கூறினார்.

* * * * *



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம்: சர்ச்சில் .. .. | 1 | அச்சுப்பிரசார அத்திப்பழம் .. .. | 7 |
| "இரண்டொரு வருஷத்தில் வெற்றி" .. | 1 | தேள் கொடுக்கு .. .. .. | 9 |
| முரசொலி .. .. .. .. | 2 | பாட்டு: லாடம் பொறுக்குதல், மனதைக் குழப்புகிறது .. .. .. | 11 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | ஒரு புதிய போட்டிப் பரிசு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு .. .. .. | 12 |
| தலையங்கம்: துனீசிய யுத்தம் .. .. | 4 | | |
| எதிர்காலத்தில் உலக நிலை .. .. | 5 | | |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**பணத்தை மிகுதிப் படுத்துங்கள்.**

"வெற்றியின் பொருட்டும் சமாதானத்தின் பொருட்டும் பணத்தை மீதி செய்யுங்கள்" என்று மிஸ்டர் டாட்வெல் குறிப்பிடுகிறார். நாம் திறமையோடிருப்பதற்கும் நம்மைச் சார்ந்தவர்களுடைய நன்மையை முன்னிட்டும் மிக அவசியமான செலவுகள் தவிர, மற்ற செலவுகளை அடியோடு நிறுத்திவிட வேண்டும். வரிகளைச் செலுத்த வேண்டும். உடனடியாகச் செய்ய வேண்டிய அவசியச் செலவுகளைச் செய்யவேண்டும். வருவாயில் மீதியாகி யிருப்பதைக் கொண்டு கடனைக் கொடுக்க வேண்டும். யுத்த உதவி நிதிகளுக்குக் கொடுக்கவேண்டும். அல்லது யுத்தத்திற்காகப் பயன்படும் பொருட்டு அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். விலைவாசி உயர்வைப் பற்றிக் குறிப்பிடும்போது, மிகவும் அவசியமானவற்றின் பொருட்டு மட்டும் பொது மக்கள் பணத்தைச் செலவு செய்வார்களானால், அனாவசிய செலவுகளை நிறுத்திவிடுவார்களானால், இதன் மூலம் மீதிப்படும் தொகையை அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்தால் விலைவாசிகளும் அதிகப்படாமல் நின்றுவிடும். தம்மிடம் மீதியாகும் தொகையைப் பொதுமக்கள் தாங்களே சேமித்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று அவர் தெளிவாகக் கூறுகிறார். யுத்த காலத்தில் விலைகள் உயர்ந்தால், பொது மக்கள் தகுந்தபடி தம் பணத்தை மிகுதி செய்து வைக்க வல்லை யென்று தான் இதற்கு அருத்தம்.

இப்படிச் சிறுசிறு தொகைகளை மீதிப்படுத்துவதனாலே, யுத்தச் சிக்கனம் பாதிக்கப்படுமா என்னும் கேள்வி பிறக்கலாம். வெகுவாக பாதிக்கத் தான் செய்யும். சிறுசிறு தொகைகளைச் செலவிடாமல் தடுப்பதும், சேமிப்பு தான். மீறி செலவு செய்தால், யுத்த உற்பத்திக்கே பெரும் ஆபத்தாக முடியும். ஏனென்றால், இந்தத் தொகைகளைச் செலவு செய்வதன் மூலம், யுத்த வேலையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களும், பொருள்களும், யுத்தப் பொருள்களுக்கு உதவக்கூடிய (கப்பலில்) இடங்களும், பொது மக்கள் தேவைகளுக்காகப் பயன்படும். அன்றியும், இந்த யுத்தத்திறகாகச் செலவாகும் பெருந் தொகை, இந்தச் சிறுசிறு சேமிப்புகள் சேர்ந்த தொகையைக் கொண்டு தான் சமாளிக்கப்படுகிறது.

சென்ற 3½ வருஷங்களில், இங்கிலாந்திலுள்ள பொதுமக்கள் சேமநிதி 500 கோடிப் பவுன். யுத்தக் கடன்களாகவும், அரசாங்கத்திற்கு நன்கொடைகளாகவும் வட்டியில்லாத கடன்களாகவும் இந்தத் தொகையைச் சேமித்துக் கொடுத்தார்கள். யுத்தத்திற்கு முந்திய 6 வருஷங்களில், இதே அளவிற்குத் தான் சராசரி வருஷச் செலவு ஆனது. இந்தத் தொகையில் 190 கோடி பவுன் வரை, வருஷம் 300 பவுன் வருவாயும் அதற்குட்பட்ட வருவாயும் உள்ளவர்கள் சேமித்தது என்பதை, இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பொது மக்கள் சேமிப்புத் தொகை அதிகப்பட வேண்டு மென்பதற்காகத் தான், சமீபத்தில் "வெற்றியின் பொருட்டு விமானங்களை அதிகப்படுத்த பெரும் முயற்சி" செய்யப்பட்டது. கொஞ்ச காலத்திற்கு முன்பு "யுத்தத் தளவாட வாரம்", "யுத்தக் கப்பல்கள் வாரம்" ஆகியவற்றைக் கொண்டாடினார்கள். அப்போது லண்டன் நகரத்தில் மட்டும் 17 கோடி பவுன் வசூலானது. "வெற்றிக்காக விமானங்களைப் பெருக்க முயற்சி"த்த முதல் வாரத்திலேயே 15 கோடி பவுனாவது வசூல் செய்ய வேண்டுமென்று திட்டமிட் டிருந்தார்கள்.

**தேசீய சேமிப்புக் கோஷ்டி.**

இங்கிலாந்தில் சிறு சிறு கோஷ்டிகளாக, பல பாகங்களிலும் 3,000 கோஷ்டிகளிருக்கின்றன. இவர்கள் ஒன்று பட்டு உழைத்து போதுமான பணம் திரட்டுகிறார்கள். கடைசியாகத் தமக்குள்ளேயே சேமிப்புப் பத்திரங்களைப் பரிமாறிக் கொள்ளுகிறார்கள். ஜெர்மன் உற்பத்தி ஸ்தானங்களையும், போக்கு வரவு சாதனங்களையும், நீர் மூழ்கிக் கப்பல்கள் கட்டும் தளங்களையும், வெடி குண்டுகளைக் கொண்டு நாசஞ் செய்வதற்காக மட்டும் இவர்கள் பண வசூல் செய்ய வில்லை. வெற்றி பெறவும், சமாதான காலத்திய வாழ்க்கையை முன்னிட்டும் சேமிக்க வேண்டியது அவசியம என்னும் உணர்ச்சியை மக்களுக்குள் இது உண்டாக்குகிறது.

இங்கிலாந்திலுள்ள பொது மக்கள் ஏராளமாகச் சேமித்து வைக்க வேண்டியது அவசியம் என்பதை பிரிட்டிஷ் நிதி மந்திரி சர் கிங்ஸ்லி உட் சமீபத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ஏனென்றால், யுத்தம் முடிந்த வுடனே, ஏராளமான வீடுகள் கட்ட வேண்டும்; தொழிற் சாலைகளைத் திருத்தி யமைக்க வேண்டும்; சமூதாய நிலையையும் மாற்றி யமைக்க வேண்டும்; நாஜிக் கொடுமைகளுக்கு ஆளாகியிருந்து மீண்டவர்களுக்கும் தேவையானவற்றைக் கொடுக்க வேண்டும். இவற்றிற்குப் பெருந் தொகை வேண்டி யிருக்கும். ஆகவே பொது மக்கள் சிக்கனமாகச் செலவு செய்து, எவ்வளவு அதிகமாக மீதி செய்யக் கூடுமோ அவ்வளவு அதிகமாக மீதி செய்ய வேண்டும்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை இரவு பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில், செய்த வானொலிப் பிரசங்கத்தில், நாசமான பிரதேசங்களில் பஞ்சம் உண்டாகாதபடி தடுக்க வேண்டிய கடுமையான வேலை நமக்கிருக்கிற தென்று குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் கூறியதாவது. உடனடியாகச் செய்ய வேண்டிய முக்கியமான மற்றொரு வேலை யுண்டு. அதாவது நமது நகரங்களையும் பட்டணங்களையும் திருத்தித்

(8-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

## வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞு மார்ச்மீ 26உ. [இதழ் 13

## துனீசிய யுத்தம்

துனீசிய யுத்தம் மும்முரமாக ஆரம்பமாகி விட்டது. மார்ச்சு மாதம் 20-ம் தேதி இரவு மாரெத் அரண் முழுதையும் மாண்ட்காமரியின் படைகள் தாக்கின. இந்த யுத்தம் முடிந்த வுடனேயே ஹிட்லரை ஐரோப்பிய போர் முனையில் சந்திக்க வேண்டும். மாரெத் (கிராமம்)துக்கும் மெடியன் என்னுமிடத்திற்கும் இடையே ஒரு ரோடு போகிறது. இந்த ரோடுக்கும் கடற்கரைக்கும் 6 மைல் தூரம் போர் முனை அமைந்திருக்கிறது. மேற்குப் பாலைவனப் படைகளும், துனீசிய விமானப் படையும் இதற்கு ஆதரவாயிருக்கின்றன. மேற்கே யிருந்து அமெரிக்க 5-ம் படை எதிரிகளைத் தாக்குகிறது. மூன்று பிரிவுகளாகத் தாக்கி, மத்தியதரைக் கடலை நோக்கி ஓடும்படி விரட்டுகிறது. ரோமல் தப்பி விடாதபடி தடுப்பது தான் இதன் நோக்கம்.

அச்சுப் படைகளுக்குப் பின் புறத்தில், கடற்கரைக்கு 40 மைல்களுக்கு அப்பாலுள்ள மக்னுசி என்னுமிடத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. இதற்கு 80 மைல்களுக்கு அப்பால் மாரெத் அரணில் நம் 8-ம் படை போராடிக் கொண்டிருக்கிறது. இப்போது ரோமல் தப்பி ஓடவேண்டுமானுல், கடற்கரை யோரமாக சுமார் 40 மைல் அகலத்திற்குள்ளாகத் தான் ஓட வேண்டும்.

வடாப்பிரிக்காவிலுள்ள ராய்ட்டரின் விசேஷ நிருபர் கீழ்க் கண்டவாறு கூறுகிருர் :—" 80 மைல்கள் அளவுள்ள சதுரத்திற்குள் ரோமலுடைய படைகள் சிக்கிக் கொண்டிருக்கின்றன. மாரெத் அரண்களை மாண்ட்காமெரியின் படைகள் தகர்த்துக் கொண்டிருக்கின்றன. ரோமலுக்குப் பின் புறமிருந்து அமெரிக்கப் படைகள் முன்னேறிக் கொண்டு வருகின்றன. மாரெத் அரணைத் துளைத்துக் கொண்டு, 8-ம் படையின் ஒரு சிறந்த பட்டாளம் கடந்து போய் கடற் கரையிலுள்ள கேப்ஸை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இங்கே கடுமையான யுத்தம் நடக்கிறது." இது பற்றி, ஜெர்மன் இராணுவ நிருபர் பலட்விக் செர்டோரியஸ் என்பவர் சென்ற திங்கட்கிழமை தெரிவித்ததாவது :—" மிகப் பெரிய யுத்தம் நடைபெறுகிறது. ஆள் பலத்திலும் தளவாட பலத்திலும் தாம் மேலானவர்கள் என்பதை, பிரிட்டிஷார் நடை முறையில் காட்டுகிருர்கள். வட துனீசியாவில் ஜெனரல் ஆண்டர்சனுக்குட்பட்ட பிரிட்டிஷ் முதற் படை இன்னும் பாதுகாப்பிலேயே தான் இருக்கிறது. ஒருக்கால் இந்த யுத்தத்தின் அடுத்த கட்டத்தில் அதுவும் தாக்கக் கிளம்பலாம்."

இந்த முதற் படை ஒரு கொல்லன் பட்டடைக்குச் சமானம். இதன் மேல் ரோமலின் படைகளை வைத்து எட்டாம் படை என்னும் சம்மட்டியைக் கொண்டு நொறுக்கப் போகிருர்கள். இந்த சம்மட்டியடி தனக்குக் கிடைக்கு முன்னுல் பட்டடையையே ஒழித்து விட வேண்டு மென்று அதாவது முதற் படையையே அழிக்க அரும்பாடு பட்டார். முடியவில்லை. எனவே, சம்மட்டி யடியைத் தடுக்கப் பார்த்தார். எட்டாம் படையைத் தாக்கினுர்.

ஆனுல், காலந் தவறித் தாக்கினுர். சற்று முன்னுல், தாக்கியிருந்தால் அவருக்குச் சற்று சாதகமாயிருந்திருக்கும். எட்டாம் படை அவ்வளவு பலமாக இல்லை என்னும் எண்ணத்தை யுண்டாக்க வேண்டி, இருண்ட இரவுகளில் இந்தப் படையின் பகுதிகளைப் பிரித்து அங்கங்கே பக்கங்களிலேயே வைத்திருந்தனர். நோட்டம் பார்க்க வந்த அச்சு விமானங்கள் மிகக் கொஞ்சம் பேர்கள் தான் எட்டாம் படையில் இருக்கிருர்கள் என்று அறிவித்தது. இதைக் கொண்டு தான் துணிந்து ரோமெல் தாக்கக் கிளம்பினுர். இது ரோமலுக்கு முதல் தரமான திகைப்பு. இரண்டாவதாக விமான எதிர்ப்புப் பீரங்கிகளை மறைத்து வைத்திருந்த இடங்கள். ரோமல் படைகளை இந்த பீரங்கிகள் நாசம் செய்து விட்டன.

ஆனுலும் மாரெத் அரணுக்கு எதிரிலுள்ள மத்மதா மலை மேல் ரோமல் படைகள் இருக்கின்றன. இங்கிருந்து கிளம்பிய படையும் தோற்று விட்டது என்னும் காரணத்தைக் கொண்டு, நேச தேசப் படைகளின் வேலை இலகுவில் முடிந்து விடு மென்று நினைப்பதற் கில்லை. இப்போது பெருந் தோல்வி யடைந்தாலும், ரோமெலுக்கு உள் நாட்டிலிருந்து சப்ளைகள் வர இட மிருக்கிறது. அல்லாமலும் தொடர்ந்தாற் போல் பல துறைமுகங்கள் அவர் வசமிருக்கின்றன. அவை மூலமும் சப்ளைகள் அவருக்கு வரலாம். சுருக்கமாகச் சொன்னுல், இந்த யுத்தத்தின் முடிவைப் பற்றிய சந்தேகம் கிடையா தென்ருலும், இலகுவில் முடியாது. மகா கடுமையாகப் போராட வேண்டி யிருக்கும்.

பிரிட்டிஷ் முதற் படையை ஒழிக்க ரோமல் முயன்ருர். முடிய வில்லை. ஆனுல் நெப்சா என்னும் இடத்தை அந்தப் படை கைப்பற்றிக் கொண்டது. 8-ம் படையைத் தாக்கினுர். இதுவும் பலிக்க வில்லை, பிரிட்டிஷ் படைகளும் அமெரிக்கப் படைகளும் கிழக்கு நோக்கித் தொடர்ச்சியாக முன்னேறிக் கொண்டு வருகின்றன. ஆகவே, ரோமல் பாடு வைத்து முடியாது போலத் தான். தான் சூயெஸ் கால்வாயில் முகாமடிக்கப் போவதாகக் கூறிய தெல்லாம் பகற் கனவாகி விட்டது. ஸ்டாலின்கிராடில் நாஜிப் படைகளை வளைத்துக் கொண்டு அடியோடு அழித்தது போல், தன்னையும் தன் படைகளையும் அழித்து விடுவார்களோ என்ற பீதி அவருக்குக் கட்டாயம் ஏற்பட்டிருக்கும்.

8-ம் படையோடு போயிருக்கும் ' நியூஸ் கிரானிகல் ' பத்திரிகை நிருபர் மார்ச்சு மாதம் 14-ம் தேதி தெரிவித்ததாவது :—" தாம் மடிய வேண்டியது தான் என்று ரோமலின் படைகளுக்குத் தெரியும். தம்மைச் செலவானவர்களாகத் தான் ஹிட்லரும் முசலோனியும் மதிக்கிருர்களென்று அவர்களுக்குத் தெரியும்." இதற்கு 9 நாட்களுக்குப் பிறகு, அதாவது 23-ம் தேதி, மொராக்கோ வானொலி நிலையத்திலிருந்து வெளியான செய்தியில், கடைசி வரையில் எதிர்த்து நின்று மடியும்படி ரோமலுக்கும் வான் ஆர்னிமுக்கும் அவர்கள் படையினருக்கும் ஹிட்லர் உத்திரவிட்டிருக்கிரு ரென்று தெரிகிறது. தான் ரஷ்யப் போர் முனைக்குப் போவதாகவும் அதே செய்தியில் ஹிட்லர் அறிவித்திருக்கிருர்.



இது ஒரு பிரசாரத் தந்திரம். எப்படி என்ருல், பல விடங்களிலும், அச்சு நாடுகள் தோல்வி யடைகின்றன. ஆகவே, தானே நேரில் போய் இருந்த ரஷ்யர்களைப் பணிய வைத்து, அங்கிருக்கும் நாஜிப் படைகளை துனிசியாவிற்கு அனுப்பி இங்கே நேச நாடுகளையும் வெல்லப் போவதாகப் பிறர் நினைக்க வேண்டு மென்பதற்காகத் தான் இந்தப் பிரசாரம். உண்மையிலேயே இதுவே ஜெர்மன் திட்டமாக விருந்தாலும் இருக்கலாம். ரோமல் காலங் கடத்துகிருர். இதன் பொருட்டு எவ்வளவு நஷ்டமானுலும் அவர் பொருட் படுத்த வில்லை. ஏனென்ருல் ஐரோப்பாவின் தென் கரையைப் பலப்படுத்த வேண்டும். அன்றியும் புதிய படைகளையும் ஜெர்மனியில் திரட்ட வேண்டும்.

இதற்கு நேச நாடுகள் இடங் கொடுக்கப் போவதில்லை. ஆகையினுல் தான், ஜெனரல் மாண்ட்காமரி மகா உக்கிரத்தோடு சம்மட்டி யடி யடிக்கிருர். இங்கே நடை பெறுவதை விட, மிகவும் கடுமையாக கேப்ஸில் ஒரு யுத்தம் நடைபெறப் போகிறது. நாம் எதிர் பார்ப்பதை விட இது விரைவாகவே நேர்ந்தாலும் நேரலாம்.

# எதிர்காலத்தில் உலக நிலை

## அக்கிரம நாடுகளைத் தண்டிக்க வேண்டும்

### சர்ச்சில் பிரசங்கம்

லண்டன் வானொலி நிலையத்தி லிருந்து பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் சென்ற 21-ம் தேதி இரவு ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :

சென்ற ஒரு வாரமாக எனக்குக் கடுமையான காய்ச்சல் தான். என்ருலும், அப்போதைக்கப் போது நடை பெற்றுக் கொண்டிருந்த சம்பவங்களைத் தெரிந்து, மேற் கொண்டு என்னென்ன செய்ய வேண்டு மென்று பொறுப் போடு உத்திர விட்டுக் கொண்டிருந் திருக்கிறேன். விரைவில் யுத்தம் முடிந்து விடு மென்று ஒரு சிலர் நினைக்கிருர்கள். நான் அப்படி நினைக்க வில்லை.

எதிர் காலத்தில் நம் நாட்டின் நிலைமை எப்படியிருக்கு மென்று சொல்ல முடியாது. ஆகவே, அந்தக் காலத்தில் இன்னின்ன காரியங்கள் செய்து முடிக்கப்படும் என்ற ஒரு வாக்குறுதிக்கு அரசாங்கததை உள்ளாக்க முயற்சிக்கிறவர்களைக் குறித்து, நாம் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். நீங்கள் என்னை நம்புகிறீர்கள். என் வழியைப் பின் பற்றி வந்து கொண்டிருக்கிறீர்கள். பல வகைத் துன்பங்களுக்கு என்னோடு நீங்களும் உள்ளாகி யிருக்கிறீர்கள். உங்களுக்கு, அதைச் செய்து விடுகிறேன் ; இதைச் செய்து விடுகிறேன் என்று வீண் வாக்குறுதிகள் கூற மாட்டேன். ஆனுலும், எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய நிலைமையைச் சமாளிக்க நாம் ஆயத்தமாயிருக்க முயற்சிக்க வேண்டியது அவசியம்.

### ஹிட்லர் அடுத்த வருஷம் தோற்கலாம்

நான் ஒரு தீர்க்கத் தரிசியல்ல. என் சிந்தனு சக்திக்குத் தோன்றுவதையே நான் இங்கே சொல்லுகிறேன்.. அதாவது, **அடுத்த வருஷம் அல்லது அதற்கு அடுத்த வருஷம் ஹிட்லரையும் அவர் கொள்கையையும் வென்று விடலாம். அதன் பிறகு, பேராசைக்கார ஜப்பானியர்கள் கொட்டத்தை யடக்குவோம். வெகு நாட்களாக ஜப்பானியர்களின் கொடுமைக் குள்ளாகி யிருந்த சீனுவை மீட்போம், நம் நாடுகளையும் டச்சு நேச நாடுகளையும் மீட்போம். ஆஸ்திரேலியா, நியூசிலந்து, இந்தியா முதலிய நாடுகளில் இனி வாலாட்டவே முடியாதபடி செய்து விடுவோம்.** இது தான் மிகவும் முக்கியமான கடமை. இதை நிறைவேற்ற ஒரு போதும் தவறக் கூடாது.

ஹிட்லரைத் தோற்கடித்து, ஜெர்மனியும் இத்தாலியும் நம்மிடம் சரணுகதி யடைவது தான் இந்த யுத்தத்தின் உச்ச ஸ்தானம். அப்போது நம் கடமை என்ன வென்று தெளிவாகத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். நாமும் நம் நேச அரசாங்கங்களும் ஒரு பெருங்காரியத்தைச் செய்து முடித்தவர்களாவோம். கடவுள் கருணையால், நான் அது வரை பிழைத்திருந்து, இப்போதுள்ள தலைமைப் பதவியிலேயே இருந்தால், அக்காலத்தில் பிரிட்டிஷார் என்னென்ன செய்ய வேண்டுமென்று பிரிட்டிஷ் நிர்வாக சபையினரின் சம்மதத்தின் பேரில், தெரிவிப்பேன்.

ஹிட்லரை வென்ற பிறகு, ஜப்பானேடு நாம் என்ன தான் கடுமையாகப் போராடினுலும், இப்போது உள்ள படைகளைக் குறைக்கத் தான வேண்டி யிருக்கும். அப்போது மகா கஷ்டமான சிக்கலான நிலைமை ஏற்படும்.

இனி யுத்தம் ஏற்படவே கூடா தென்ருல்,

(1) குற்றவாளிகளான அரசாங்கங்கள் யுத்தத் தளவாடங்களையே வைத்திருக்கக் கூடாது ; அவர்களிட முள்ளவற்றையும் ஒப்புக் கொடுத்து விட வேண்டும்.

(2) அவர்களை முறைப்படி விசாரணை செய்து தண்டிக்க வேண்டும்.

(3) அவர்கள் கைப்பற்றிய நாடுகளி லிருந்து சூறையாடிக் கொண்டு போன இயந்திர சாதனங்களையும் சிறந்த பொருள்களையும் திருப்பிக் கொடுத்து விடும்படிச் செய்ய வேண்டும்.

இவற்றைப் பொறுத்துத் தான் நம் எதிர்காலப் பாதுகாப்பு அமையும். இதற்கு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, ஆகியவற்றின் தலைமையில் நேச நாடுகள் உலக நன்மையை முன்னிட்டு ஒரு ஸ்தாபனத்தை யமைக்க முயற்சிக்க வேண்டு மென்று நாம் எதிர்பார்க்கிருேம். இது மட்டுமல்ல. யுத்தம் முடிந்த வுடனே நாச மடைந்த நாடுகளில் பெரும் பஞ்சம் உண்டாகக் கூடும். அதைச் சமாளிக்கவும் நாம் ஏற்பாடுகள் செய்ய வேண்டியது அவசியம்.

### பொது ஸ்தாபனத்தின் கடமைகள்

நேச நாடுகள் எல்லாம் சேர்ந்து ஏற்படுத்தும் இந்த ஸ்தாபனத்தில், ஒரு காலத்தில் இரண்டு கௌன்சில்கள் ஏற்பட வேண்டும். ஒன்று ஐரோப்பாக் கௌன்சில், மற்றொன்று ஆசியாக் கௌன்சில். என் திட்டப்படி, அக்காலத்தில் ஜப்பானிய யுத்தம் மிகக் கடுமையாக நடை பெற்றுக் கொண்டு தானிருக்கும். ஐரோப்பிய நிலைமையைச் சீர்ப்படுத்த கௌன்சில் நியமித்து, அது வேலை செய்ய ஆரம்பித்த பிறகு தான் மற்ற வேலைகளை நாம் கவனிக்கக் கூடும். இதை நம் சார்பாக மட்டுந் தான் சொல்லுகிறேன் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த **ஐரோப்பியக் கௌன்சில்—**

(1) உண்மையிலேயே சக்தி யுடையதாக அமைய வேண்டும்.

(2) அதற்குட்பட்ட பலமான படைக ளிருக்க வேண்டும்.

(3) தகராறுகளை விசாரணை செய்து தீர்ப்புச் சொல்லுவதற்கு ஒரு ஹைக் கோர்ட் இருக்க வேண்டும்.

(4) இந்தத் தீர்ப்புக்களை நிறை வேற்றுவதற்கு, அங்கே ஒரு தேசீயப் படையோ, சர்வ தேசப் படையோ அல்லது இரண்டுமோ இருக்க வேண்டும். மேலும் அக்கிரமங்கள் நடக்காதபடியும், போருக்கு ஆயத்தங்கள் செய்யாதபடியும் இந்த படைகள்

தடுக்கும். இந்தக் கௌன்சிலில் ஐரோப்பாவிலுள்ள எல்லா நாட்டினருக்கும் இட முண்டு. இங்குள்ள பல சிறு சிறு அரசாங்கங்களை இணைத்து தனித் தனி கோஷ்டிகளாக மாற்றி விடலாம். மற்ற பெரிய சாம்ராஜ்யப் பிரதிநிதிகளுக்குச் சமதையாக இந்தக் கோஷ்டிகளின் பிரதிநிதிகளும் அந்தக் கௌன்சிலில் அங்கம் வகிப்பார்கள். எல்லா நாடுகளும் மனப் பூர்வமாக ஒத்திருந்தால் மட்டுந் தான் இது முடியும். ஐரோப்பிய யுத்த நிலையே இன்னும் உச்ச நிலையை யடைய வில்லை ; கீழ்க் கோடி யுத்தமோ இன்னும் முதற் கட்டத்தில் தான் இருக்கிறது. இந்தச் சமயத்தில் இந்தத் திட்டத்தின் முழு விவரங்களையும் வெளி யிடுவது, முட்டாள் தனமாகத் தான் முடியும். இதைக் கொண்டு, பெரிய அரசாங்கங்கள் இது பற்றி கலந்தாலோசிக்க வில்லை யென்று நினைத்துவிடக் கூடாது.

### நான்கு வருஷத் திட்டம்

நம் நாடு சம்பந்தப்பட்டவரை, ஹிட்லரைத் தோற்கடித்த பிறகு, ஒரு நான்கு வருஷத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இதில் 5, 6 முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. இவற்றை நெடுநாட்கள் ஆராய்ச்சியின் மேல் முன்னதாகவே தீவிரமாக ஆயத்தம் செய்து வைத்திருக்கிறோம். இவை பொதுத் திட்டத்திற்கும் பொருந்துகின்றன. இவற்றை நிறை வேற்ற நான்கு வருஷங்கள் கட்டாயம் பிடிக்கும். உலகத்தில் ஒப்புயர்வு இல்லாத ஒரு இன்ஷியூரென்ஸ் திட்டத்தை நாம் கையாண்டு வருகிறோம். இந்தத் திட்டத்தை இன்னும் தாராளமாக்க வேண்டும். குழந்தை முதல் கிழவர் வரை அனைவருக்கும் வாழ்க்கை இலகுவாக அமையத் தக்கபடி செய்ய வேண்டும். மக்களுக்கு வேலை யில்லாத் திண்டாட்டம் ஏற்படக் கூடா தென்றால், அதற்கு இடமே கொடுக்கக் கூடாது. சோம்பேறியாக யாரும் இருக்கவே கூடாது. மற்ற விஷயங்களைக் குறித்தும் ஆராய்ச்சிகளும் ஆலோசனைகளும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

யுத்தம் முடிந்த பிறகு இங்கிலாந்தில் உணவுப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கும். யுத்தத்தை முன்னிட்டு சாகுபடியை வெகு அதிகமாகப் பெருக்கினோம். இதற்கு அரசாங்க உதவியும் கொடுத்து வருகிறோம். யுத்தத்திற்குப் பிறகும் உதவி யளிப்பது எப்படி என்பது, முதல் பிரச்சினை. இரண்டாவது பொது மக்களின் உடல் நலத்தைக் காப்பாற்ற அநேக சுகாதார உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. மூன்றாவதாக, இப்போதுள்ள உலக நிலையை இங்கிலாந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், இங்கிலாந்தின் ஜனன விகிதம் அதிகப்பட வேண்டும். இதற்கு பெரிய குடும்பங்களின் எண்ணிக்கை அதிகப்பட வேண்டும். அன்றியும் நோயணுகாதபடியும் தடுக்க வேண்டும். அடுத்த படியாக, கல்வி. இது பரந்த முறையிலும் தாராளமாகவும் போதிக்கப்பட வேண்டும். தனிப்பட்ட உரிமைகளுக்காகவும் மக்கள் விடுதலைக்காகவும் நாம் எவ்வளவு போராடி யிருக்கிறோ மென்பதை நாம் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். இனி ஏற்படப் போகும் சமுதாயத்தில் ஒரு அரசியல் வாதியோ, உத்தியோகஸ்தரோ தான் மதிப்பிற் குரியவர் என்றிருக்கப் படாது. முயற்சிக்கும் சிக்கன வாழ்விற்கும் தக்க பலன் தராத ஒரு சமூக வாழ்வை அமைக்கக்கூடாது. அதற்கேற்ற ஒரு சமுதாயத்தை '**யமைக்க முயல**' வேண்டு மென்று தான் சொல்லுகிறேன். ஏனென்றால், உலகிலுள்ள எல்லா நா டவர்களையும் விட, நம் நாட்டவர்கள் ஏதேச்சாதிகாரத்திற்கு உட்பட ஒரு போதும் சம்மதிக்க மாட்டார்கள். அவர்களுடைய உடலில் சுதந்தர இரத்தம் ஓடுகிறது. மக்கள் அனைவருடைய மனப் போக்கும் ஒன்று போலிருப்பதில்லை. வேறு பட்டுத் தான் இருக்கும். அது போல் குணமும் வேறு பட்டுத் தான் இருக்கும். ஆனால், அவர்கள் அனைவருக்கும் சம சந்தர்ப்பங்களை நாம் அளிக்கலாம். அனைவரும் சமமாகக் கற்கத் தக்கபடி வசதிகள் அமைக்க வேண்டும். உயர்ந்த கல்வி பெற விரும்புகிறவர்களுக்கு வசதிகள் செய்து தர வேண்டும்.

இங்கிலாந்திலுள்ள மக்களுடைய ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்த மதக் கல்வி போதிக்கப்படுகிறது. ஆரம்பக் கல்வி முடிந்த வுடனே, இளைஞர்களைக் கவனிக்காமல் விட்டுவிட முடியாது. சாதாரணக் கல்வியோடு தொழிற் கல்வியும் அவர்கள் பெறத் தக்கவாறு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்போது தான் பள்ளிப்படிப்பு முடிந்த வுடன், தொழிலில் ஈடுபட அவர்களால் இலகுவில் இயலும்.

நாம் ஒரே குடும்பம் போல முன்னேறிப் போக எண்ணி யிருக்கிறோம். எவ்வித சாதி வேற்றுமையும் நமக்கில்லை. மற்ற நாடுகளை விட நாம இந்த வேற்றுமைகளால் பெரிதும் பாதக மடைந்தோம். எனவே, இந்த வேற்றுமைகளை ஒழித்து விடுவோம். உடனடியாகச் செய்ய வேண்டிய வேலை யொன்று உண்டு. நமது நகரங்களையும் பட்டணங்களையும் திருத்தித் திட்டமிட்டுக் கட்டவேண்டியதிருக்கிறது. இதற்குப் பெருந் தொகை செலவாகும். ஏராளமான பேர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கும். இதன் மூலம், நாம் வசிக்கிறதற்கு ஏற்ற வசதிகளுள்ள வீடுகள் கட்டப்படும். அன்றியும் இதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒருவாறு தீரும். இத்தனை பற்றியும் நாம் எந்த வித வாக்குறுதிகளும் தர முடியாது. ஆனால் ஆயத்தங்கள் மட்டும் செய்துக் கொண்டிருப்போம்.

யுத்த காலத்தில் விலை வாசிகள் நிரந்தரமாகவிருக்கும்படி நாம் செய்து விட்டோம். யுத்தத்திற்குப் பிறகுங் கூட இதே முறையைப் பின் பற்றியே நடப்பது என்பது தான் எம் எண்ணம். யுத்தத்திற்கு முன்பு இருந்ததை விட, யுத்தத்திற்குப் பிறகு அதிகமாக வரி விதிக்கும்படி நேரலாம். என்றாலும், தனிப்பட்டவர்களின் தொழில் முயற்சியைப் பாதிக்கத் தக்க முறையில் இந்த வரி உயர்வு இருக்காது.

யுத்தங் காரணமாக, நாம் எது பற்றியும் திட்டமிடக் கூட வில்லை. சென்ற மகா யுத்தம் திடீரென்று முடிவானது போல இப்போதும் முடிவாகி சமாதானம் ஏற்படுமானால், எதிர்காலத் திட்டம் எதுவுமில்லாமல் திண்டாடுவோம். அதனால் தான், அக்காலத்தில் பெருத்த வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. ஆகவே, இந்த யுத்தத்திற்குப் பிறகு—

1. வேலை யில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்.
2. எதிர்காலத்தில் தொழில் பெருக வேண்டும்.
3. தனிப்பட்டவர்களின் தொழில் முயற்சிகளும் அரசாங்க முயற்சிகளும் இயன்ற வரை நடை பெற வேண்டும்.

பல வகைத் தொழில்களை அரசாங்கமே நடத்துவதற்கு இனி சந்தர்ப்பங்கள் ஏராளமாக இருக்கும். குறிப்பாக அரசாங்கமே ஏக போக உரிமை யோடு நடத்தக் கூடிய பல தொழில்கள் உண்டு. நாட்டில் பொருளாதார நிலை உயர்ந்திருக்க வேண்டு மென்பது பற்றித் தான் அரசாங்கம் கவலை கொள்ளும். ஆனால், தனிப்பட்டவர்களின் தொழில் முயற்சிகளுக்கும் ஆதரவு கொடுக்கத் தான் வேண்டும். ஏனென்றால், யுத்தத்திற்குப் பிறகு, கலைக்கப்படும் படையைச் சேர்ந்தவர்களுக்கு, வேலை வேண்டும். அத்தனைப் பேருக்கும் அரசாங்கம் வேலை கொடுக்க முடியாது.

### வியாபார நிலை

யுத்தத்திற்குப் பிறகு அநேக நாடுகளின் பொருளாதார நிலைமை மிகவும் நாசமடைந்து தான் இருக்கும். ஆகவே அந் நாடுகளுக்கு சரக்குகளை ஏற்றுமதி செய்ய பிரிட்டிஷ் வியாபாரிகள் சாதாரணமாகத் துணிய மாட்டார்கள் தான். என்றாலும், ஹிட்லரை வென்ற பிறகு, மீண்டும் வியாபாரத்தை நடத்த சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. இதில், நமது முயற்சிக்குச் சர்வ தேச சங்கமும் ஒத்திருக்க வேண்டும். அமெரிக்காவின் வியாபாரத்தை யொட்டியும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் வியாபாரத்தை யொட்டியுந் தான் நமது செல்வ நிலை அமையும். ஆகவே, அந் நாடுகளோடு நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொண்டு தான் வருகிறோம். எதிர் காலத்தில், நாணய மாற்றத்தைப் பற்றியும் சர்வ தேசச் செலாவணியைக் குறித்தும் அந்நாடுகளுக்கும் மற்ற நேச நாடுகளுக்கும் தற்காலிகத் திட்ட மொன்றை யனுப்பி யிருக்கிறோம். இது தான் இத்துறையில் முதல் கட்டம்.

நமது நேச நாட்டுப் படைகள், பல போர் முனைகளிலும் கடுமையாக உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், நாம் சமாதான முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்னும் தப்பு எண்ணம் யாருக்கும் ஏற்படக் கூடாது.



# அச்சுப் பிரசார அத்திப்பழம்

## மதத்துக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் ரோம் நிலையம்

### முஸ்லீம்களை ஏமாற்றும் முயற்சிக்குக் கூலி, உலகத்தின் கேலி தான் !

### கிறிஸ்து மதத்தின் மேல் 'ஆர்வம்' பர்லினின் சோழியன் குடுமி

"அத்திப்பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தை", என்ற பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்கள். "அச்சுப் பிரசாரத்தை ஆராய்ந்தால் அத்தனையும் சொட்டை", என்பது ஒரு புது மொழி. சென்ற சில நாட்களாக, அச்சு வானொலி நிலையங்கள் செய்த பிரசாரத்தை நீங்கள் கவனித்தால், இந்த புது மொழி பொருத்த முள்ளதா, அல்லது அர்த்த மற்றதா, என்பது நன்றாக விளங்கும். இப்போது, கோப்பல்சினுடைய கூட்டம் "மதத்துக்காகவும், கொள்கைக்காகவும் ஜெர்மனி போராடுகிறது", என்று பெருங் கூச்சலிடுவதால், முதலில் மத சம்பந்தமான பிரசாரத்தை எடுத்துக் கொள்வோம். மதத்தின் பெயராலேயே பொய் சொல்லுகிறவர்கள் வேறென்ன தான் செய்யமாட்டார்கள் ?

முக்கியமாக, ரோம் வானொலி நிலையம் இந்த மத விஷயமான பொய்யுரைகளால் சற்று விஷமம் செய்யலாம் என்று முயற்சி செய்திருக்கிறது. ரோம ராஜ்யத் தலைவர் முசலோனி. ஆப்பிரிக்காவில் ரோம ராஜ்யம் இருந்த இடம் தெரியவில்லை. போன மார்க்கத்தை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இந்த முசலோனி "இஸ்லாம் மதத்தைப் பாதுகாப்பவர்" என்ற வீண் ஆடம்பரப் பட்டத்தைக் கொண்டவரல்லவா ?— ஆகையால், இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களைக் கலைப்பதற்கு ரோம் நிலையம் சில பொய்களை கூறியிருக்கிறது. ரஷ்யாவிலுள்ள முஸ்லீம்கள் அச்சு நாடுகளுக்கு எதிராக நடந்து வரும் போராட்டத்தில் நேர்முறையாக பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று சமீபத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### முதல்தரமான பொய் மூட்டை !

இதைப்பற்றி மார்ச்சு மாதம் 9-ந் தேதி, ரோம் வானொலி நிலையம் தன்னுடைய பாரசீக மொழி ஒலி பரப்பில் குறிப்பிட்டிருக்கிறது :

"இது முஸ்லீம்களை ஏமாற்றுவதற்காகச் செய்யும் சூழ்ச்சி. முஸ்லீம்க ளெல்லாம் ரஷ்யாவின் சார்பாக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தைப் பரப்புவது தான் இதன் நோக்கம். ஆனால் முஸ்லீம்கள் பொதுவுடைமைக்காரர்களோடு சேரவே மாட்டார்கள்",

—என்று ரோம் நிலையம், என்னமோ எல்லாம் தனக்கு தெரிந்தது போல், கூறியிருக்கிறது. இதற்கு முந்திய வாரத்தில் இதைப் போன்ற மற்றொரு பொய்யினால் அராபிய மக்களை ஏமாற்ற முயற்சித்திருக்கிறது. மார்ச்சு மாதம் முதல் தேதி அராபியர்களுக்குச் செய்யப்பட்ட ஒலிபரப்பில், முதல்தரமான பொய் மூட்டை அளந்திருக்கிறது.

"போல்ஷிவிக் கொள்கை அல்லாவுக்கு விரோதம். மதத்துக்கு விரோதம். ரஷ்யாவிலுள்ள எல்லா மாதாக் கோவில்களையும் மசூதிகளையும் அது அழித்து விட்டது. இலட்சக்கணக்கான முஸ்லீம்களுடைய உணர்ச்சியை வேரோடு நசுக்கிவிட்டது",

—என்று ரோம் நிலையம் நீலிக் கண்ணீர் வடிக்கிறது. ஆனால் உண்மை யென்ன ? ரஷ்யாவில் நடக்கும் மாபெரும் போராட்டத்தைப் பற்றி ரஷ்ய முஸ்லீம்களுடைய எண்ண மென்ன ? அவர்களுடைய தொழுகைச் சாலைகளை யார் அழித்தார்கள் ? இதைப்பற்றி ரஷ்ய முஸ்லீம்களின் மதத்தலைவர் (Mufti), விளக்கமாகக் கூறியிருக்கிறார் :

"ஹிட்லருடைய கொள்ளைக் கூட்டத்தினர் பிடியிலிருந்து தம்முடைய நாட்டை விடுவிப்பதற்காக ரஷ்ய முஸ்லீம்கள் போராடிக்கொண்டு வருகிறார்கள்",

—என்று அவர் நாட்டுப் பற்றுணர்ச்சியுடன், ரோம் நிலையப் பொய்யை மறுத்திருக்கிறார். மேலும் அவர் கூறுகிறார்:

### முஸ்லீம்களுக்குச் செய்த கொடுமைகள்.

"துருக்கி—டார்டார் முஸ்லீம் மத சடங்குகளையும் பழக்க வழக்கங்களையும், அடியோடு அழித்துவிட வேண்டு மென்பது தான் ஜெர்மனியர்களுடைய நோக்கம். இதற்காக மத நூல்களையும் இதர புத்தகங்களையும் அவர்கள் அழித்தார்கள் ; பள்ளிக்கூடங்களை மூடிவிட்டார்கள் ; முஸ்லிம் குழந்தைகளுக்கு முஸ்லிம் வழக்கத்தின்படி பெயரிடக் கூடாது என்று கட்டளை இட்டார்கள். அதற்குப் பதிலாக, பிறந்த குழந்தைகள் பெற்றோர்களால் ஜெர்மன் பாதிரிகளிடம் கொண்டு போகப் படவேண்டும். அக்குழந்தைகளுக்கு ஜெர்மன் பெயர்கள் கொடுக்கப்படுகின்றன."

"என்று ரஷ்ய முஸ்லீம் மதத் தலைவர் முறையிட்டிருக்கிறார். இதெல்லாம் எங்கு நடக்கிறது ? ஜெர்மானியர்களால் கைப்பற்றப்பட்ட ரஷ்யப் பிரதேசங்களில் ! ஜெர்மானியர் ரஷ்ய முஸ்லீம்களுக்குச் செய்த கொடுமைகளை அவர் முடிவாக ஒரு வாக்கியத்தில் கூறியிருக்கிறார்.

"எங்களுடைய மக்கள் நிர்மூலமாக்கப்பட்டார்கள் ; எங்களுடைய மசூதிகள் தரை மட்டத்துக்கு இடிக்கப்பட்டன ; எங்களுடைய கலை ஸ்தாபனங்க ளெல்லாம் அழிக்கப்பட்டன",

—என்று அவர் கதறுகிறார். இப்படிப்பட்ட கொடூரங்களை எல்லாம் யார் செய்தார்கள் ? முசலோனியின் கூட்டாளிகளாகிய ஹிட்லரின் சீடர்கள் தான். ரஷ்யர்களல்ல.

சரி, ரோம் நிலையம் இஸ்லாம் மதத்திற்காகப் பரிந்து பேசுகிறது ; பர்லின் நிலையம் எந்த மதத்தின் மேல் ஆர்வம் கொண்டிருக்கிறது ? கிறிஸ்து மதத்தில் ! மத சம்பந்தமான பொய்ப் பிரசாரத்திலும் பங்கு ! ! கிறிஸ்துவின் ஒப்பற்ற கொள்கையான மனித சகோதரத்துவத்தை அடியோடு வெறுக்கத் தொடங்கினவர்கள், கிறிஸ்து மதத்தின் மேல் திடீரென்று அன்பு கொள்வானேன் ? அதற்கொரு காரணம் இருக்க வேண்டும் ? "சோழியன் குடுமி சும்மா ஆடுமா ?" கிறிஸ்து மதத்தின் மேல் அன்பு கொள்வதற்குக் காரணம் ரஷ்யாவுக்கும் நேச நாட்டினருக்கும் மத சம்பந்தமான வெறுப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கந் தான். "போல்ஷிவிக் ரஷ்யா வெற்றி பெற்றால், கிறிஸ்து மதம் அடியோடு போய்விடும்", என்ற பொய்ப் பிரசாரத்தைத் தொடர்ந்து செய்து வந்தால், அதனால் சிறிது பலனாவது ஏற்படாதா என்று பர்லின் நினைக்கிறது. ஆனால் ரஷ்யாவில் மதச் சுதந்திரம் உண்டு ; மாதா கோவில்களும் உண்டு. இது உலகறிந்த விஷயம். ஆகையால் பர்லின் புதிய மதப் போர்வையினால் கிறிஸ்தவ உலகம் ஏமாந்து விடாது. நான்கு மாதங்களுக்கு முன், அதாவது சென்ற நவம்பர் மாதம், பர்லின் வானொலி நிலையம் கூறியதையும் யாரும் மறந்து விடவில்லை. அப்போது பர்லின் என்ன கூறிற்று ?

### கிறிஸ்து மதத்துக்குப் பதிலாக ஹிட்லரிசம்.

"கிறிஸ்து முதல் ஏற்பட்ட எல்லா உன்னத லட்சியங்களும் ஜெர்மானிய மக்களுடைய சமூக உணர்ச்சிகளைக் குறைத்துக் கொண்டே வந்திருக்கின்றன. ஹிட்லர் தான் நமக்கு ஒரு புதிய உன்னதமான லட்சியத்தை அளித்திருக்கிறார்.

அது தான் ஜெர்மானியர்களுடைய பரிசுத்த ரத்தக் கொள்கை. இது நம்முடைய மத சம்பந்தமான சகல விருப்பங்களையும் பூர்த்தி செய்கிறது'',

—என்று பர்லின் வியாக்கியானம் செய்திருக்கிறது. கிறிஸ்துவையும், கிறிஸ்தவ லட்சியங்களையும், இழித்துக் கூறிய பர்லின், இப்போது கிறிஸ்தவ மதத்தைக் காப்பாற்றுவதற்காக ஆதரவு தேடுகிறதாகச் செய்யும் பாவனையினுல், பிரிட்டனே, பிரிட்டிஷ் மக்களோ மயங்கிவிடப் போவதில்லை.

அச்சுப் பிரச்சாரகர்களின் எண்ண மென்னமோ, இரண்டு நேச நாடுகளுக்கும் பிளவு ஏற்படுத்த வேண்டுமென்பது தான். மார்ச்சு மாதம் 9-ந் தேதி ரோம் நிலையம் தன்னுடைய பாரசீக மொழி ஒலிபரப்பில்

'' ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் உள்ள கடல் போன்ற வித்தியாசம் இன்னும் அதிகமாக விசாலித்துக் கொண்டு வருகிறது '',

என்று கூறியிருக்கிறது. இது கூறிய மூன்று மணி நேரத்துக்குள், பர்லின் தன்னுடைய ஆங்கில ஒலி பரப்பில் கூட்டாளி கூறியதை மறுத்து விட்டிருக்கிறது.

'' பிரிட்டிஷார் ரஷ்யா வெற்றி யடைய வேண்டுமென்று நாள் தோறும் பிரார்த்தனை செய்கிருர்கள். இதிலிருந்து ரஷ்யர்களுடைய பாட்டுக்கு பிரிட்டிஷார் தாளம் போட்டுக் கொண்டு வருகிருர்கள் என்று தெரிகிறது ''

என்று பர்லின் ஏளனம் செய்கிறது. இதனுல் கிருஸ்துவ மதப் பற்றுள்ள பிரிட்டனும், யாதொரு மதப்பற்றுமற்ற ரஷ்யாவும், ஏகோபித்த கொள்கை ஒற்றுமையால் இணைக்கப் பட்டுள்ளன வென்றும், அந்த ஒற்றுமைக்கு எப்படியாவது ஊனம் செய்ய வேண்டுமென்று அச்சு நிலையங்கள் முயற்சிக்கின்றன என்றும் விளக்கமாகப் புலப்படுகின்றன.

இதே மாதிரியாக, இஸ்லாமிய மதப் பற்றுள்ள நடு நிலைமை நாடுகளுக்கும், பிரிட்டன்-அமெரிக்காவாகிய நேச நாடுகளுக்கும், அபிப்பிராய பேதம் உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அச்சு நிலையங்கள் குறும்புப் பிரசாரம் செய்திருக்கின்றன. மார்ச்சு மாதம் 11-ந் தேதி, '' ஆசாத் முஸ்லீம் லீக் '' என்ற போலி வானெலி நிலையம் துருக்கியைப் பற்றி குறிப்பிட் டிருக்கிறது.

'' பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளும், அமெரிக்க ராஜ தந்திரிகளும், துருக்கியை யுத்தத்தில் எப்படியாவது மாட்டிவிட வேண்டுமென் று தங்களாலான பிரயத்தன மெல்லாம் செய்து வருகிருர்கள் '', என்று இந்த அச்சு நிலையம் கூறுகிறது.

## ஆதாரமற்ற பொய்க்கு அடானு மறுப்பு

இதற்கு யாதொரு வித ஆதாரமுமில்லை என்பது பிரிட்டிஷ் முதன் மந்திரி மிஸ்டர் சர்ச்சிலும், துருக்கியின் முதன் மந்திரி மிஸ்டர் சரஜோக்ளுவும், கூறியவற்றிலிருந்து விளங்கும். சென்ற மாதம், பார்லிமெண்டு சபையில் யுத்த நிலைமைப் பற்றி விவரித்துப் பேசும் போது,

'' துருக்கியைக் கஷ்டத்தில் மாட்டி விடுவது எந்த வகையிலும் நம்முடைய கொள்கை யல்ல. அதற்கு மாருக, துருக்கி தொந்தரவில் அகப்பட்டுக் கொண்டால், அது பிரிட்டனுக்கும் தொந்திரவாக முடியும்,''

என்று மிஸ்டர் சர்ச்சில் ஆணித்தரமாக கூறியிருக்கிருர். ஒரு வேளை இரகசிய ஏற்பாடு இருக்கலாம் ; அதன்படி துருக்கி யுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டோ, என்னமோ ? '' என்று சிலர் நினைக்கலாம். ஆனுல் அடானு மகாநாட்டைப் பற்றி, சில நாட்களுக்கு முன் பேசிய துருக்கி முதன் மந்திரி, சரஜோக்ளு, '' யாதொரு விதமான இரகசிய வாக்குறுதி கேட்கப்படவுமில்லை, கொடுக்கப்படவுமில்லை '', என்று வற்புறுத்திக் கூறியிருக்கிருர்.

மற்ருெரு முஸ்லீம் நாடாகிய ஈஜிப்டுக்கும், நேச நாடுகளுக்கும் விரோத உணர்ச்சியை உண்டாக்கி, பிளவு ஏற்படுத்த வேண்டுமென்று '' ஆசாத் ஹிண்ட் '' என்ற பொய் யிந்திய அச்சு நிலையம் முயற்சித் திருக்கிறது. மார்ச்சு மாதம் 10-ந் தேதி, தமிழ்ச் செய்தி ஒலிபரப்பில்,

'' ஈஜிப்டு நாட்டு மக்கள், பிரிட்டிஷாரையும் அமெரிக்கர்களையும் வெறுக்கிருர்கள். ஏனென்ருல் பிரிட்டன் ஈஜிப்டுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்க வில்லை,''

என்று அது கூறுகிறது. அச்சு நிலையங்களின் விஷமத் தனமான பொய்களில் இது ஒன்று என்பது, ஈஜிப்டின் முதன் மந்திரி, மிஸ்டர் நகாஷ் பாஷா அவர்கள் கூறியதிலிருந்து தெரியவரும். இரண்டு மாதங்களுக்கு முன், அதாவது ஜனவரி மாதம் 12-ந் தேதி, ஈஜிப்டின் அரசாங்கத் தலைவர்,

'' கடுமையான இந்த யுத்த காலத்தில், நாங்கள், அதாவது பிரிட்டனும் ஈஜிப்டும், ஒரு விஷயத்தின் உண்மையைப் பூரணமாகத் தெரிந்து கொண்டோம். அதாவது சுதந்திரமும் ஒற்றுமையும், உண்மையான நட்பை உண்டாக்கு கின்றன ''

என்று கூறி யிருக்கிருர்.

## அச்சு நிலையங்களின் வீண் முயற்சி

அதற்கு முந்திய மாதத்தில், அதாவது டிசம்பர் 7-ந் தேதி, '' பிரிட்டனுக்கும் ஈஜிப்டுக்கு முள்ள நட்புத் தளைகளை வலுப்படுத்துவதற்கு வேண்டிய எல்லா காரியத்தையும் செய்யப் போகிறேன் '', என்று அவர் வற்புறுத்திருக்கிருர். இப்போது ஈஜிப்டு, பிரிட்டனேடு மாத்திரமல்ல ; இதர ஜனநாயக நாடுகளோடும், பூரணப் பூர்வமான நட்புரிமையோடு இருந்து வருகிறது.

இந்த ; பூரண நட்புதான், வடக்கு ஆப்பிரிக்காவில் நேச நாடுகள் பெறற வெற்றிகளுக்கு முக்கிய காரணம். இப்போதும் ஈஜிப்டினுடைய ஒத்துழைப்பினுல் தான் டுனிசியாவில் பிரிட்டிஷ் படைகளுக்கு யுத்தத் தளவாடங்களும், இதர ' சப்ளை ' சாமான்களும் போய்க் கொண்டிருக்கின்றன.

நட்பு, ஒத்துழைப்பு, சுதந்தரப் பற்று முதலிய லட்சியங்களில் நேச நாடுகளும், அவைகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான நடு நிலைமை முஸ்லீம் நாடுகளும், ஒன்று பட்டிருக்கின்றன. எவ்வளவு பொய் சொன்னுலும், அச்சு வானெலி நிலையங்களால் இந்த ஒற்றுமையை அசைக்க முடியாது. '' தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும் '' என்பது ஒரு மெய் வாக்கு. அச்சு நிலைய பிரசாரகர்கள் மெய் வருந்தினுலும், வாய் வருந்தினுலும், அவர்களுடைய பொய் பிரசார முயற்சிக்குக் கூலி உலகத்தின் கேலி தான் !

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

திட்ட மிட்டுக் கட்டி முடிக்க வேண்டும். இதற்கு ஏராளமான தொகையும் பொருள்களும் ஆட்களும் வேண்டும். இது இரண்டு வகைகளில் நல்ல சந்தர்ப்பம் அளிக்கிறது. எப்படி யென்ருல், வீடுகளைத் தற்கால முறைப்படி கட்டலாம். யுத்தம் நின்று போன உடனேயே சில வருஷங்கள் வரை ஏற்படக் கூடிய வேலை யில்லாத் திண்டாட்டத்தை இது ஒருவாறு நீக்கும். இந்த முக்கியமான நோக்கங்களைக் கொண்டு தான், இங்கிலாந்தின் பொருளாதாரக் கொள்கையும் அமைக்கப்படுகிறது.

ஆகவே, இந்தியா சம்பந்தப்பட்ட வரை, யுத்தத்திற்குப் பிறகு, புது வீடுகள் கட்டுவதற்கான பெருந் திட்டங்கள் இருக்காது. ஏனென்ருல நேர் முகமாக யுத்தக் கொடுமைகளுக்கு நாம் அவ்வளவாக ஆளாகவில்லை. என்ருலும் யுத்தத்திற்குப் பிறகு நாட்டின் நிலையை மாற்றி யமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்கு அரசியல் ஞானிகளும் பொருளாதார நிபுணர்களும் தம் தெளிந்த அறிவையும் ஊக்கத்தையுங் கொண்டு வேலை செய்ய வேண்டும். இப்பொழுது எந்த அளவிற்குப் பொது மக்கள் பணத்தைச் சேமித்து அரசாங்கத்திற்கு உதவுகிருர்களோ, அந்த அளவிற்கு, அரசியல் ஞானிகளின் வேலையும் பொருளாதார நிபுணர்களின் வேலையும் குறையும்.



# தேள் கொடுக்கு

தேள் இருக்கிற தய்யா, மகா பொல்லாதது தான். அதிலேயும் வெள்ளைத் தேள் என்று ஒன்றிருக்கிறது. அதைப் போன்ற விஷ முள்ள தேள் வேறெதுவுமில்லை என்று சொல்லுவார்கள். அந்தத் தேளின் கைகள் நறுக்கப்பட்டு விட்டன என்று வைத்துக் கொள்ளுவோம். கை தான் போய் விட்டதே, இனி மேலே இதைப் பற்றிப் பயமில்லை, சும்மா விட்டு விடலாம் என்று யாராவது நினைப்பார்களா ? அந்தத் தேளை சக்தி அற்றதாக ஆக்கவேண்டு மானுல், அதன் கொடுக்கை நறுக்க வேண்டும். கொடுக்கை நறுக்கி விட்டு, அதன் கைகளை நறுக்காமல் விட்டால் கூட பயமில்லை. அப்புறம் அதைக் கொல்ல வேண்டுமென்கிற அவசியம் கூட இல்லை.

அதே போல, அச்சு நாடுகள் எனும் கொடிய தேள்கள், உலகத்திலே உலவிக் கொண்டிருந்த சமாதான தேவதையை ஏககாலத்தில் சேர்ந்து, பலமாகக் கொட்டி, ஒழித்து விட எண்ணி யிருந்தன. அதை மற்ற நாடுகள் பார்த்துக் கொண்டு சும்மா இருந்து விடவில்லை. இந்தத் தேள்களின் கொடுக்குகளை நறுக்கி விட மற்ற நாடுகள் கிளம்பின.

இந்த முயற்சியிலே, மேற் கண்ட தேள்களின் கரங்கள் அவ்வப்போழுது சேதப்படுத்தப் பட்டு வருகின்றன. ஆனுலும் கொடுக்கு இருக்கும் வரை இந்தத் தேள்கள் கொட்ட மடிக்கத் தான் செய்யும். கொஞ்ச நேரம் திகில் பிடித்தது போல் சும்மா இருந்தாலும், பிறகு யாரையாவது கோபத்தோடு கொட்டி வைக்கும். அதனுல் தான் நேச நாடுகள் கத்தியைச் சரியானபடி தீட்டிக் கொண்டிருக்கின்றன. தக்க சமயத்திலே ஒரே போடாக போட்டு, அந்தத் தேள்களின் கொடுக்குகளை அப்புறப் படுத்தி விடத் திட்டம் போட்டிருக்கின்றன. அது வரை, தேள்களின் உபத்திரவம் இருந்தே தான் தீரும்.

ருஷ்யாவிலே போய் ஹிட்லர் பிரமாதமாகச் சாதித்து விடலாம் எனக் கனவு கண்டு கொண்டிருந்தார். ஆனுல் இப்பொழுது ருஷ்யாவைப் பற்றிய நினைவு, கனவில் ஏற்பட்டால் கூட, அலறி அடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து விடுவார் என்றே நினைக்கிருேம். அவரது ஆசையிலே மண் போட்டது, இந்த ருஷ்யா தான் அல்லவா ? போன நவம்பர் மாசத்துக் கப்பால், பெர்லின் பக்கம் திரும்பிப் பார்க்கக் கூட ஹிட்லருக்கு வெட்கமாக இருந்திருக்கிறது. எத்தனையோ முக்யமான விழாக்களுக் கெல்லாம் கூட, அவர் வரவில்லை.

ருஷ்யப் போர் முனையிலே அங்கு மிங்கும் பேயாக அலைந்து கொண்டிருந்தார் போலிருக்கிறது. சமீபத்தில் கூட, அவர் தென் போர் முனைக்கு விமானமொன்றில் வந்திறங்கினுர் என்ற செய்தி வந்தது. ஏதோ கொஞ்சம் அதிருஷ்டம் இருந்தது. அதோடு எங்கெங்கிருந்தோ பிய்த்து பீராய்ந்து புதுப் படைகளைக் கொணர்ந்து தெற்குப் போர் முனையில் தள்ளச் செய்தாரவர். ஒரு குறுகிய பிரதேசத்தில், நூற்றுக் கணக்கான டாங்கிகளையும், ஏராளமான படைகளையும், பல விமானங்களையும் கொண்டு தாக்கி யிருக்கிருர்கள் நாஜிகள். அது காரணமாக, தென் ருஷ்யாவிலே, ருஷ்யப் படைகளின் முன்னேற்றம் தடுக்கப் பட்டது. அப்பால் நாஜிகள் பயங்கரமாக, வெறி கொண்டவர் போல் போராடி, கார்க்கோவ் என்னும் நகரத்தைக் கைப்பற்றினர்.

ஒரு காலத்தில் ஏகமாகப் பிரசித்தி பெற்றிருந்த நகரம் தானிது. ஆனுல் இப்பொழுது பெரும்பாலும் பாழாகத் தான் இருக்கிறதாம். ஆயினும், இது ராணுவ முக்யம் வாய்ந்த தொரு முக்ய ஸ்தலமாகும். பல பிரதேசங்களுக்குச் செல்லும் போக்கு வரத்துப் பாதைகள் இந்நகரைத் தொட்டுக் கொண்டு தான் போகின்றன. எப்பொழுது இது ஜெர்மன் வசமாகி விட்டதோ, ருஷ்யர்களுக் கிருந்த சௌகரியம் குறைந்தது மாதிரி தானே ?

தவிர, இந்நகரைப் பிடித்த ஜோரிலே, நாஜிப் படைகள் ஓரிரண்டு திசைகளில் அதி வேகமாக முன்னேறப் பார்க்கின்றன. பைலோகிராடு என்ற தொரு முக்ய நகர் கூட, அவர்கள் வசப் பட்டு விட்டது. ருஷ்யப் படைகளைப் பக்கவாட்டில் தாக்கி, அவற்றின் பின்னுல் உள்ள பாதைக்கு ஆபத்து உண்டாக்க வேண்டு மென்பது அச்சுப் படைகளின் எண்ணம் போலிருக்கிறது.

அதற்கு டானெட்ஸ் என்ற நதியைக் கடக்க வேண்டும். இப்பொழுது சில இடங்கள் பனிப் பாறை யாக இருக்கும். அந் நதி இன்னும் சில தினங்களில் வெள்ளம் பெருகும் ஆருக மாறி விடும். அப்புறம் நாஜிகள் பாடு அவஸ்தை தான். இப்பொழுதே அந் நதியைக் கடக்க வேண்டு மென்ற ஆவலில், நாஜிகள் பல டாங்கிகளை இந்தப் பனிப் பாறை மீது ஓட்ட, அந்த டாங்கிகள் ஜலத்திற்குள் அமிழ்ந்து போகின்றன. அவற்ருேடு ஆட்களும் கோவிந்தா தான். சில இடங்களில் படகுப் பாலங்களை ராத்திரி ராத்திரியே ஜெர்மானியர் அமைத்து விடுகிருர்களாம். ஆனுலும் எதிர்க் கரைக்கு வந்து சேருவோரை, ' சதக் ' பண்ணிவிடுகிருர்களாம் ருஷ்யர்கள்.

**கார்க்கோவைப் பிடித்ததிலே ஜெர்மானியர் அறுபத்து ஆருயிரம் பேர்களைப் பலி கொடுத்திருக்கிருர்ளாம்.** அப்புறம் பாழ்ான டாங்கிகள், விமானங்கள், வெடி குண்டுகளை எல்லாம் கணக்கிட வேண்டுமா என்ன ?

இந்தப் பனிக்காலப் போரிலே, ஜெர்மன் படைகளெல்லாம் ' க்ளோஸ் ' ஆகிவிட்டது என்ற பெயர் ஏற்பட்டிருக்கும். ஆனுல், கார்க்கோவ் நகரத்தை ஜெர்மானியர்கள் கைப் பற்றியதனுல் நிலைமை மாறி விட்டது. தவிர, இங்கே நாஜிகள் வெற்றி யடைந்திரா விட்டால், கிரிமியாவில் உள்ள நாஜிப் படைகள் பாடு அவதியாக இருக்கும். பிறகு, காகஸஸோடு சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கும் கெர்ச் ஜல சந்திக்கு தலைவலி உண்டாகி யிருக்கும். ஹிட்லர் பெர்லினுக்குத் திரும்பும் காலம் எது என்பது நிச்சய மில்லாதிருந்திருக்கும்.

தெற்கே கொஞ்சம் வெற்றி என்றதும், அந்த மனுஷர் குடுகுடென்று பெர்லினுக்கு ஓடி, அங்கே ராணுவ அதிகாரிகள் முந்நூறு பேர்கள் உள்ள தொரு சிறு சபையிலே பேசி யிருக்கிருர். ' இனி மேல் என்ன நடக்கப் போகிறது பாருங்கள் !' என்று அவர் அந்தச் சபையோருக்கும், அவரது பிரசங்கத்தை ரேடியோ மூலமும், பத்திரிகைகள் மூலமும் தெரிந்து கொண்டவர்களுக்கும் சொல்லி யிருக்கிருர். ' ஆஹா ! அவசியம் பார்க்கத் தான் போகிருேம் ' என்று உலகோர் அனைவருமே கூறிக் கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேக மில்லை.

மணிக் கணக்கில் அலறி அட்டகாசம் செய்யும் இந்த ஆத்மா, பதினைந்து நிமிஷங்களே பேசினுராம் அன்று. பகிரங்கமாக முன் போல் எல்லாம் கூட்டம் கூட்டி, தம்பட்டம் அடிக்க முடியுமா என்ன ? பிரிட்டிஷ், அமெரிக்க விமானிகள் போடுகிற போட்டை ஹிட்லர் அறியாதவரா ? சென்ற மார்ச் ஆருந் தேதி யன்று பெர்லின் நகரை பிரிட்டிஷ் விமானிகள் நொறுக்கித் தள்ளினுர்கள் அல்லவா ? அன்று விமான உற்பத்தி இலாக்கா மந்திரியின் பிரம்மாண்டமான காரியாலயம் ' டபார் ' ஆயிற்ரும். இன்னும் ஏகப்பட்ட பேர்கள் சேத முற்ருர்களாம். இப்படி யிருக்கையில் வெளியிலே கூட்டம் போட முடியுமா என்ன ? அதனுல் தான், வெகு ரகசியமாக எங்கோ ஒரு கட்டிடத்திற்குள்ளே யிருந்து பேசியிருக்கிருர் அவர்.

' பத்து வருஷங்களுக்கு முன் பிறந்து இன்று உலகோரின் கவனத்தை யெல்லாம் கவர்ந்துள்ள நமது அற்புத நாஜி இயக்கம் மட்டும் பிறந்தே இரா விட்டால், இந்த போல்ஷ்விக் இயக்கம் ஜெர்மனியையே ஒரு ஆட்டு ஆட்டி வைத்திருக்குமே ! இவ்வளவு முன் ஏற்பாட்டுடன் பயங்கரமாகத் தாக்கும் நம்மையே ' தண்ணி ' காட்டி வரும் ருஷ்யர்களின் சக்தியைப் பார்த்தீர்களா ? இவ்வளவு

பலம் உள்ள ஒரு எதிரியை நமக்கு அருகிலே வைத்துக் கொண்டு நாம் சும்மா இருக்கலாமா ? எல்லோரும் துள்ளி எழுங்கள். இன்னும் மும்முரமாகப் போர் முயற்சியில் ஈடு படுங்கள். ருஷ்யாவிலும், வட ஆப்பிரிகாவிலும் மட்டு மின்றி, தாய் நாட்டிலும் உங்களை நீங்களே பாது காக்கப் போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்வது ? உரலுக்குள் தலை கொடுத்தாச்சு. கஷ்டமாகத் தானிருக்கிறது. இனிமேல், உலக்கை இடியையும் பொறுத்துத் தாளுக வேண்டும். தவிர வலியைப் பொறுத்துக் கொண்டு, நைஸாக, ஆட்டி ஆட்டித் தான் தலையை வெளியில் எடுக்க வேண்டும். முகத்தின் இரு புறங்களிலும் தோல் சிதைந்து, ரத்தம் ஒழுகக் கூடும். ஆனாலும் தலை தப்பித் தானே ஆகவேண்டும் ? அநியாயமாக **ஐந்தரை லக்ஷம் பேர்கள்** ருஷ்யப் போரில் மடிந்து, வீர ஸ்வர்க்கம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய சாவிற்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டாமா ? பகவான் இருக்கிறார். நீங்கள் கடைசி வரை போராட வேண்டியது தான். அவஸ்தையும் படவேண்டியது தான் என்கிற தினுசிலே ஹிட்லர் பேசி யிருக்கிறார். ஏண்டாப்பா இந்த அவஸ்தை ? ஆப்பைப் பிடுங்குவானேன். பிறகு அலறித் துடிப்பானேன். சிவனே என்று இருந்திருந்தால், இப்படி யெல்லாம் முகாரி ராகம் பாட வேண்டி வந்திராதல்லவா ?

ஜெர்மன் மக்களிடம் பகிரங்கமாகவே, ருஷ்ய யுத்தத்தில் ஏற்பட்ட படுசேதத்தைப் பற்றி ஹிட்லர் சொல்ல நேர்ந்திருப்பதைப் பார்த்தால், ஜெர்மன் மக்களுக்கு இவ்விஷயம் முன் கூட்டியே நன்றாகத் தெரிந்து விட்டது ; இனியும் விஷயத்தை மறைக்கக் கூடாது என்று ஹிட்லர் நினைத்திருக்கிறார் என்றெண்ணத் தோன்றுகிறது. ஜெர்மனியிலே வந்து விழும் குண்டுகளைப் பார்க்க பார்க்க, 'ஐயோ ! நம்மைப் போல் விமான பலம் படைத்த நாடே உலகில் கிடையாது என்று ஹிட்லர் சொன்னாரே ஆதியிலே !, அந்த நிலைமை மாறிப் போய், நேச தேசத்தார் கை, தூக்கி விட்டது போலிருக்கிறதே ; இனி என்ன செய்வது ?' என்று ஜெர்மன் மக்கள் பீதி யடைந்து, நடு நடுங்கிக் கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமே யில்லை. ஒரு நாளைக்கு இருபத்தி நான்கு மணி நேரமல்லவா ? இந்த இருபத்தி நான்கு மணி நேரமும் விமானங்களைக் கொண்டு, ஜெர்மன் நகரங்களையே தாக்கத் திட்டம் போட்டிருப்பதாக, சீமையில் உள்ள அமெரிக்கப் படைத் தலைவர் கூறுகிறார். இந்தத் திட்டம் அமுல் படுத்தப்படும் காலம் சமீபத்திலேயே இருக்கிற தென்கிறார்கள்.

## ஜெர்மன் நீர் மூழ்கிகளுக்குச் சனியன்

ஹிட்லருக்கு முக்ய ஆயுத மாகவும், நேச தேசத்தாருக்குப் பிரதானமான சங்கடத்தைக் கொடுத்து வருவதும் ஜெர்மன் நீர்மூழ்கிகள் தான். அவற்றை அழிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பிரிட்டனிலே ஒரு நூதன விமானம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இது மற்ற விமானங்களைப் போல், தரையிலே வெகு தூரம் ஓடி மேலே கிளம்புவதில்லை. நிற்கும் இடத்திலிருந்தே, ஜம்மென உயரக் கிளம்பி விடுகிறது. முன்னாலும், பின்னாலும், பக்க வாட்டிலும் பறக்கக் கூடிய இந்த விமானத்தை எந்தக் கப்பலில் வேண்டு மானாலும் எடுத்துப் போகலாம். ஆகவே, நீர் மூழ்கிகள் எங்கு தோன்றினாலும், இந்தப் புது விமானத்தின் உதவியால், நீர் மூழ்கிகளின் மண்டைகளில் அடிக்கலாம். நீர் மூழ்கிகளின் பலமும் போய் விட்ட தென்றால் அப்புறம் ஹிட்லர் உபதேசத்துடன் இருந்து வரும் அச்சுநாடுகளின் ஆதிக்கத்தின் முடிவு காலம் அதிக தூரத்திலிராது.

வட நார்வேயில் ஜெர்மானியர் தமது கப்பற் படைகளைத் திரட்டி வருகிறார்களாம். ருஷ்யாவிற்கு வட அட்லாண்டிக் சமுத்திர மூலம் செல்லும் உதவிக் கப்பல்களை தாக்கவே இந்த ஏற்பாடு போலிருக்கிறது.

'பிரான்ஸிலிருந்து உடனே இரண்டரை லக்ஷம் தொழிலாளர்களை ஜெர்மனிக்கு அனுப்புகிறீரா, எங்கள் ராணுவத்தைக் கொண்டு கட்டாயத்தின் பேரில் அவர்களை இழுத்துக் கொண்டு போகட்டுமா?' என்று ஒரு ஜெர்மன் அதிகாரி பிரஞ்சு சர்க்காரின் பொம்மைத் தலைவரான லவாலைக் கேட்டிருக்கிறாராம்.

என்ன செய்வது ? ருஷ்யப் போர் அரங்கத்திற்கு ஜெர்மனியிலிருந்து எல்லோரையும் அனுப்பு வேண்டி யிருக்கிறது. அப்புறம் வேலைக்கு ஆள் வேண்டாமா ?

வட ருஷ்யாவிலே, ருஷ்யர்களின் கை தான் வலுத்திருக்கிறது. ஸ்மாலென்ஸ்க் நகரை நிமிஷத்திற்கு நிமிஷம் ருஷ்யப் படைகள் அணுகி வருகின்றன. வடக்கே ஸ்ட்ராயா ரஸ்ஸா எனும் இடத்தருகே நடக்கும் போரிலே, ருஷ்யர்கள் விமான மூலமாகவே ஆட்களையும், டாங்கிகளையும், பீரங்கிகளையும் கொணர்ந்து தள்ளுகிறார்களாம். கடுமையாகத் தானிருக்கிறது சண்டை.

## எட்டாம் படையின் சிறப்பு

ட்யூனிஷியாவிலும், பர்மாவிலும், இதே போல இப்பொழுது சண்டை கடுமையாகத் தானிருக்கிறது. மாரெத் அரண்களைப் பிரமாதமாகத் தகர்க்க ஆரம்பித்து விட்டதாம் எட்டாவது சேனை. அமெரிக்கப் படையினர் **கப்சா** எனும் நகரைப் பிடித்துக் கொண்டு மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருக்குமிடத்திற்கும், எட்டாவது சேனை போராடுமிடத்திற்கும் இடையிலே எண்பது மைல்கள் தானிருக்கின்றனவாம். ரோமல் பாடும் அவதி தான்.

பர்மாவிலே, ஜப்பானியரது தொந்தரவு அதிகமாயிருக்கிறது. அரக்கன் மலைப் பிரதேசத்திலே நமது படைகள் தீரமாகவே போராடி வருகிறார்கள். அவர்களுக்குக் கடல் மூலமாக உதவி போய்ச் சேர முடியாமலிருக்கிறது. ஜப்பானியருக்கோ நிலம், நதி மூலமெல்லாம் உதவி வருகிறது. ஆனாலும் நம்மவர்கள் சளைக்க வில்லை.

'இந்தியா இப்பொழுது எத்தகைய எதிர்ப்பையும் சமாளித்துக் கொள்ளும் நிலைமையில் இருக்கிறது. இங்கு இருபது லக்ஷம பேர்கள் கொண்ட சைனியம் இருக்கிறது' என்ற இனிய செய்தியை நமது செவிகளில் போட்டு வைத்திருக்கிறார் நமது இந்திய சேனாபதி. அதோடு, இந்தியாவிற்குள்ள படையெடுப்பு ஆபத்து இன்னும் நீங்க வில்லை. ஜப்பானியரைக் கடைசி வரை ஒடுக்கி விரட்டினால் அல்லாமல், நாம் நிம்மதியாகத் தூங்க முடியாது. அதற்கு படித்த யுவர்கள் பலர் இன்னும் அதிகமாக ராணுவத்தில் சேர வேண்டும்' என்று கூறி யிருக்கிறார் அவர்.

## ஜப்பானியர் சேஷ்டை ஒடுங்க வில்லை

பஸிபிக் பிரதேசத்திலே ஒன்றும் ஜோராக இல்லையே என்று சிலர் நினைக்கலாம். வாஸ்தவம் ! அங்கு மந்த நிலைமையே வியாபித்திருக்கிறது. ஆனால் சீக்கிரமே எங்கோ ஓரிடத்தில் பெரிய போர் ஏற்படலாம். ஜப்பானின் சக்தியும் அதிகம் குறையவில்லை என்கிறார்கள். இது வரை அது 18 லக்ஷம் டன் எடையுள்ள கப்பல்களை இழந்து விட்ட போதிலும், நம்மிடமிருந்து பிடித்தது, புதிதாக கட்டியது எல்லாமாகச் சேர்ந்து 9 லக்ஷம் டன்னுக்கு அதிகமாகவே உள்ள கப்பல்கள் அதன் கப்பற் படையில் சேர்ந்திருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் உள்ள டார்வின் நகரம் சென்ற வாரம் தாக்கப்பட்டது. இவற்றைக் கவனித்தால், ஜப்பானியாது சேஷ்டை இன்னும் ஒடுங்கவில்லை என்பது தெரிகிறது.

மொத்தத்திலே, இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால், யுத்தம் சீக்கிரமே முடியுமென்று யாரும் எதிர் பார்ப்பதற்கில்லை. ஆனால் பிரதம மந்திரி சர்ச்சில் சொல்லி யிருக்கிறாரே, 'அடுத்த வருஷமோ அதற் கடுத்த வருஷமோ இந்த நாஸிகளின் ஆதிக்கம் அடியோடு ஒழியும் ! அப்புறம் நமது பூரண பலம் கொண்டு ஜப்பானைத் தாக்குவோம்' என்று. இந்த மொழிகளிலே எத்தனையோ விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன என்பது உண்மை.



# லாடம் பொறுக்குதல்

## போர்த் தொண்டு

இராகம்—இந்துஸ்தான் பியாக் தாளம்—ஏகம்.

1 வீதியிலே விழும் லாடமே—அதை—வேண்டிப் பொறுக்கிடத் தேடுமே
ஓதிமனம் வைத்திப் பாடமே—இன்றே—ஒப்பியத் தொண்டினை நாடுமே (வீதி)

2 ரோட்டினிலே நடமாடிடும்—உள்ள—ரோதாவினில் என்றும் கூடிடும்
பாட்டையினிற் சென்று நாடிடும்—பல—மாட்டின் லாடங்களே தேடிடும் (வீதி)

3 ஓடுகின்ற வேகக் குதிரையும்—மெல்ல—ஊருகின்ற மாட்டுக்கும்பலும்
போடுகின்ற லாடம் முழுதுமே—இனிப்—பொறுக்கவும் வாரீர் எப்பொழுதுமே (வீதி)

4 லாடங்கள் மேற் பறந் தோடியே—பல—லக்ஷ மோட்டார் டயர் வீடியே
நாடெங்கும் நஷ்டமுண் டாகுதே—இதை—நாடநம் உள்ளமும் வேகுதே (வீதி)

5 ஆயுதங்கள் செய்ய இரும்புமே—தந்து—போயுதவி செய்ய விரும்புமே
தேயும் பல லாடம் பொறுக்குவீர்—தம்—தேசப் படைப்பலம் பெருக்குவீர் (வீதி)

6 போரிலே தொண்டு செய்வோர்களே-என்றும்-பொறுக்கி லாடம் தருவோர்களே
பாரிலே தொண்டு செய் நல்லராம்—இன்று—பணமும் சம்பாதிக்க வல்லராம் (வீதி)

7 ஆறுலா டம் தரு வோர்க்கன்றே—வரும்—அட்டியின்றிப் பைசா ஆறிரண்டே
நூறு நூருய் லாடம் சேர்க்கவே—ஆகும்—நூதன மாய்ப்பணம் பார்க்கவே (வீதி)

8 கண்டெடுத் தலாடம் கையிலே—கொண்டு—காட்டிடக் காசதைப் பையிலே
கொண்டு செல்லாகும் மெய்யிதைக்—கண்டு—துண்டுலா டம்தேடல் செய்யிதை (வீதி)

9 உள்ளூர்ப் போலீஸினில் வீரரும்—மற்றும்—உங்களூர் மணியகாரரும்
கொள்ளுவர் லாடத்தைக் கூடியே—பணம்—கோரு வண்ணம் ஈவர் நாடியே (வீதி)

10 மற்றுமுள்ள பேரும் காசினைத்—தந்து—பெற்றுக்கொண் டீந்திடில் லாடமே
சற்றுப்பொ றுத்துநம் போலீஸார்—பணம்—முற்றுங்கொ டுத்திட வேகூசார் (வீதி)

## மனதைக் குழப்புகிறது ; ஆனல் உண்மையே

ஒரு ஹங்கேரி வாசியும் சுவித்சர்லந்து வாசியும் கீழ்க் கண்டவாறு பேசிக் கொண்டிருந்தார்கள் :—

சுவிஸ் :—ஹங்கேரி ஒரு குடியரசு நாடு தானே, ஐயா !

ஹங்கே :—இல்லை, இல்லை. அது ஒரு இராஜ்யம்.

சுவிஸ் :—உங்கள் அரசன் யார் ?

ஹங்கே :—எங்களுக்கு அரசர் கிடையாது. எங்கள் நாட்டிற்கு அட்மிரல் (கப்பற் தலைவர்) ஹார்டி தான் இராஜப் பிரதிநிதி.

சுவிஸ் :—கப்பல் தலைவரா ? பேஷ். அப்படியானல் உங்களுக்கு ஒரு கப்பற் படை யிருக்குமே ?

ஹங்கே :—இப்போது கப்பற் படை கிடையாது ; ஆனல், முன்பு இருந்தது. இந்தப் பட்டம் மாத்திரம் இருக்கிறது.

சுவிஸ் :—உங்களுடைய ஹங்கேரி ராஜ்யம் யுத்தத்தில் ஈடுபட வில்லை என்று நினைக்கிறேன்.

ஹங்கே :—இல்லை, இல்லை. நாங்கள் ரஷ்யர்களோடு போராடுகிறோம்.

சுவிஸ் :—புரிகிறது விஷயம். உங்கள் அயலாரான ரஷ்யர்களை நீங்கள் விரும்ப வில்லை. அவர்களுடைய நாடுகளில் கொஞ்சம் உங்களுக்கு வேண்டும் போலிருக்கிறது.

ஹங்கே :—உங்களுக்கு ஒன்றுமே புரிய வில்லை. ரஷ்யாவிட மிருந்து எங்களுக்கு ஒன்றுமே வேண்டாம். அந்த நாட்டோடு நாங்கள் மிகுந்த சிநேக பாவத்தோடு இருக்கிறோம்.

சுவிஸ் :—அப்படியானல் நீங்கள் ரஷ்யாவோடு ஏன் போராட வேண்டும்.

ஹங்கே :—ஏனென்றல் டிரான்சில்வேனியாவை ருமேனியா எங்களுக்கு விரைவில் திருப்பிக் கொடுக்க வேண்டு மென்று தான்.

சுவிஸ் :—ஆனல் ருமேனியர்கள் உங்களுடைய எதிரிகளா ?

ஹங்கே :—இல்லை, இல்லை ருமேனியா எங்களுடைய நேச நாடு.

## ஒரு புதிய போட்டிப் பரிசு

சென்னை வாசிகள் பலர் போர் முனைகளுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. அதிலிருந்து கொஞ்சம் மீதி செய்து சேர்த்து வைக்கிறார்கள். யுத்தத்திற்குப் பிறகு இது அவர்களுக்கு உதவும். இந்தத் தொகை நல்ல முறையில் வருவாய் தரத் தக்கபடி செலவு செய்யப் படவேண்டும். உதாரணமாக கிராம வாழ்க்கையை மாற்றி யமைப்பதற்கும், யுத்தத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் முன்னேற்றத் திட்டங்களை முன்னிட்டும் அதைச் செலவிடலாம்.

நம் சிப்பாய்கள் தம் பணத்தைச் செலவிட, ஒரு வழியைச் சொல்லுகிறோம்.

இப்பத்திரிகாசிரியருக்குக் கீழ்க்கண்டவைகளின் புகைப் படங்கள் வேண்டி யிருக்கிறது :—

(1) கிணறு தோண்டுவது.
(2) கட்டி முடிந்த கிணற்றை உபயோகிப்பது.
(3) பரம்படித்தல்.
(4) பழ மரத் தோப்புக்கள்.
(5) காய்கறித் தோட்டங்கள்.
(6) ஒரு சிறு கடை.
(7) கோழிப் பண்ணை.
(8) ஆடு மாடுகள் அபிவிருத்தி.
(9) வீடுகள் கட்டுதல்.
(10) கலியாணம்.
(11) சிப்பாய் தன் பணத்தை வேறெந்த வகையில் செலவிட நினைத்தாலும் அந்த வகை.

இவை பற்றி அனுப்பப்படும் மிகச் சிறந்த புகைப் படத்திற்கு முதற் பரிசு ரூ. 20, இரண்டாவது பரிசு ரூ. 10. முற்கூறியுள்ள ஒவ்வொரு இனத்திலும் அனுப்பப்படும் புகைப் படங்களில் சிறந்தவற்றிற்கு, ஒவ்வொரு இனத்திற்கும் ரூ. 3 விகிதம் கொடுக்கப்படும்.

எந்த இனத்திலுள்ள புகைப் படமாவது பரிசு பெறத் தகுதியில்லாததா யிருந்தால், பரிசு கொடுக்கவோ மறுக்கவோ பத்திரிகாசிரியருக்கு உரிமை உண்டு.

புகைப் படங்கள் திருப்பி யனுப்பப்பட மாட்டா.
புகைப் படங்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 31–3–43-க்குள் அனுப்ப வேண்டும்.

**ஆசிரியர்,**
**" சென்னை யுத்த சஞ்சிகை "**
**" விக்டரி ஹௌஸ் ", மௌண்ட் ரோட்.**

## சர்க்கரை வள்ளிக் கிழங்கு



**வர்ணனை.**—இது ஒரு கொடி. கணுக்களில் வேர்விடுகிறது. அங்கெல்லாம் மாச்சத்துள்ள கிழங்குகள் உருவாகின்றன. இந்தக் கிழங்குகளைச் சாப்பிடலாம். இதன் இலைகள் கைவிரல்களைப் போலப் பிளந்திருக்கின்றன. இதன் பூக்களின் அடிப்பாகம் குறுகியும் மேல் பாகம் விரிந்து மிருக்கின்றன. இதன் நிறம் மட்டச் சிவப்பு. கொடியின் உருவம் பல வாறாக இருக்கலாம். கொடியின் நிறம் வெள்ளை, வெளிறு அல்லது மட்டச் சிவப்பு.சதைப் பற்றுள பாகம் வெள்ளை, வெளிறு, மஞ்சள், அல்லது இந்திர நீலம் கலந்த மஞ்சள் நிறம்.

**பரவுதல்.**—சுமார் 6 கணுக்களுள்ள ஒரு அடிக் கொடித்துண்டின் அடிப்பகுதியை மழை காலத்தில் பூமியில் ஊன்ற வேண்டும். அந்தத் துண்டுக் கொடியிலிருந்த இலைகளை முந்தியே நீக்கி விட வேண்டும். நிலத்தைக் கொத்திவிட்டு, கோடுகளிட்டதுபோல் பள்ளமும் அதையடுத்து மேடுமாக நெடுக அமைக்க வேண்டும். ஒரு மேட்டிற்கும் அதற்கடுத்த மேட்டிற்கும் இடையே 3 அடி தூரம் இருக்கவேண்டும். இந்த மேடுகளின் மேல் தான், துண்டுக்கொடிகளை 15 அங்குலத்திற்கு ஒன்று வீதம் ஊன்றவேண்டும்.

**சாகுபடி.**—வரட்சியான சீதோஷ்ணமுள்ள நாட்டில், நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ள பூமிதான் இதற்கு மிகவும் ஏற்றது. பூமி நன்றாக உழப்பட்டிருந்தால் தான் கிழங்குகள் நன்றாக வளரும். கொடிகளை ஊன்றுகிற மேடுகளில், புழுத்த சாணத்தைக் முற்ற எருவைக் கொண்டு, பூமியைச் செய் நேர்த்தி செய்ய வேண்டும். ஆரம்ப காலத்திலேயே களை பிடுங்குவது நல்லது. வரண்ட காலத்தில் தாராளமாகத் தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். 4, 5 மாதங்களில் பலன் கொடுக்கிறது. கிழங்குகள் முதிர்ந்து போனால், அதன் இலைகள் பழுத்து மஞ்சள் நிறமடைகின்றன. எச்சரிக்கையாக முட்களைக் கொண்டு கிழங்குகளைத் தோண்டி எடுக்க வேண்டும். ஈரமில்லாத வரட்சையான அறைகளில் கிழங்குகளைக் கொட்டி வைக்கலாம்.

**உபயோகம்.**—வேக வைத்துத் தேங்காய்ப்பூவோடு சேர்த்துச் சாப்பிடலாம். உருளைக் கிழங்குக்குப் பதிலாக, இதை இறைச்சியோடு சேர்த்துச் சமைத்துச் சப்பிடலாம். வற்றலாக்கியும் வறுத்துச் சாப்பிடலாம்.

**உள்ளடக்கம்.**—தண்ணீர் 63·8 சதமானம் ; உலோகச் சத்து 1·4 சதமானம் ; மாச்சத்து 2 சதமானம் ; கொழுப்பு 1·3 சதமானம் ; கார்போஹைட்ரேட் 31 சதமானம் ; 1 பவுண்டுக்கு 735 கால்லரிகள் - சுண்ணச் சத்து 0·028 சதமானம் ; மாக்னீஷியம் 0·044 சதமானம் ; நிமதாக்கினி 0·118 சதமானம் ; இரும்புச் சத்து 0·0004 சதமானம் ; விட்டமின் ஏ 100 கிராம் யூனிட்டுக்கு 100 ; விட்டமின் பி 100 கிராம் யூனிட்டுக்கு 28 ; விட்டமின் சி 100 கிராம் யூனிட்டுக்கு 28.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஆண்டு ஏப்ரல் மீ 2உ, வெள்ளிக்கிழமை [இதழ் 14

## பெரும் மகிழ்ச்சி !



# முரசொலி



இப்போது தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் எதிரிகளை விமானங்களி லிருந்து தாக்க வேண்டியது மிகவும் அவசியம். அப்போது தான் தென் கடலிலும் பர்மாவிலும், தாம் இழந்தவற்றை மீண்டும் ஜப்பானியர்கள் கைப்பற்ற முடியும், அவர்களைத் தடுக்க முடியும்.

—"டைம்ஸ்".

• • • • •

"சர்வதேசங்களும் சேர்ந்து ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குத் தேவையான சக்தியும் கொடுக்கப்பட வேண்டும். அப்போது தான் தனிப்பட்டவர்களின் உரிமைகளும் முயற்சிகளும் பாதிக்கப்பட மாட்டா. ஏற்கெனவே உள்ள ஒப்பந்தங்களை ஒரு சாரார் மட்டும் மீறும்படி நாகரிக உலகம் அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது. அநியாயக் காரத் தலைவர்கள் தம் நாட்டு மக்களைப் போரில் இழுத்து விடாமலும், அது காரணமாக உலகத்திற்கே பெருந் துன்பம் நேராமலும் தடுத்து, மகத்தான சமாதானத்தை நிலை நாட்ட வேண்டு மென்பது தான், இந்த ஏற்பாட்டின் நோக்கம். நேச நாடுகள், கொள்ளைக் கூட்ட நாடுகளின் பல்லைப் பிடுங்கி விடும்."

—மிஸ்டர் அந்தோனி ஈடன்,
பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி.

• • • • •

இந்த யுத்தத்தில் தோல்வி யடைவதனால் ஏற்படும் ஆபத்தை விட, யுத்தத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் சமாதானத்தைத் தவற விடுவதனால் ஏற்படும் ஆபத்து, மகா கொடியதாகும்.

— ஸ்ரீமதி ஷியாங்-கெய்-ஷேக்.

• • • • •

யுத்தம் முடிய இன்னும் எவ்வளவோ நாட்கள் இருக்கின்றன. இது வரை எதிரிகள் நம்மைத் தாக்காதபடி தடுத்துப் போராடிக் கொண்டிருந்தோம். அந்தக் கட்டம் இப்போது முடிந்து விட்டது. இரண்டாவது கட்டம் ஆரம்பமாகிறது.

—பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ்,
தென்னாப்பிரிக்கத் தலைவர்.



பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| முகப்புப் படம் : பெரும் மகிழ்ச்சி .. | 1 |
| முரசொலி .. .. .. .. | 2 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 |
| தலையங்கம் : விமானத் திருவிழா .. | 4 |
| விமான மாணவர்கள் அணிவகுப்பு .. | 5 |
| இந்திய விமானப் படை .. .. | 6 |
| ஒரு திருத்தம் .. .. .. | 7 |
| இந்திய விமானப்படை பற்றிய அனுபவங்கள் .. .. .. .. | 8 |
| இந்திய விமானப் படைத் தலைவர் .. | 9 |
| அய்யோடா ! .. .. .. | 10 |
| மணமும் உருசியுந் தரும் செடி : புதினா | 12 |
| சிப்பாய்கள் படிக்கப் புத்தகங்கள் வேண்டும் .. .. .. .. | 12 |
| இந்தியப் படைத் தலைவர் வேண்டுகோள் .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**ரஷ்யப் போர் முனையில் சற்று அமைதி.**

ரஷ்யப் போர் முனை 1,200 மைல் நீளம். இந்த யுத்தத்திலேயே சென்ற 5 மாத காலமாக இங்கே தான் மகா கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இப்போது தற்காலிகமாகச் சற்று அமைதி ஏற்பட்டிருக்கிறது. ஸ்தரயா ரூசவி லிருந்து ஓரெலுக்கும் காகஸ்க்குக்கும் செம்படையினர் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். இது ஒரு போர்த் தந்திர முறை. முக்கியமான ஜெர்மன் அரண்களை யடுத்து ஸ்மாலென்ஸ்க் நகரத்திற்குச் செம்படைகள் வந்து விட்டதாகத் தெரிகிறது. இரண்டு படைகளுக்கும் டானெட்ஸ் பகுதியில் மகா கடுமையான யுத்தம் நடைபெறுகிறது. பனி உருகத் தலைப்பட்டால், ஜெர்மானியர்களுக்கு போக்கு வரவுக்கு, மிகவும் கஷ்டம் ஏற்படும். இது அவர்களுக்குத் தெரியும். ஆகவே, இதன் பொருட்டு அவர்கள் பகீரதப் பிரயத்தனங்கள் செய்கிறார்கள். விடடானெட்ஸைக் கடக்க அவர்கள் அரும்பாடு பட்டார்கள்: முடியவில்லை. இதிலிருந்து தாக்குவதற்குப் போதுமான பலம் அந்தப் படைக்கு இல்லை யென்று தெரிகிறது. இதிலிருந்து அந்த ஆற்றின் கீழ் கரையில் வசதியான இடங்களை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியைக் கைவிட்டு விட்டார்கள் என்று அர்த்தமல்ல. டானெட்ஸ் ஆற்றின் வளைவிலும் வலது கரையை யடுத்த மலைகள் மேலும் தான், மகா கடுமையான யுத்தம் நடை பெறுகிறது. ஆற்றின் வலது கரையிலுள்ள எல்லா முக்கியமான இடங்களையும் ரஷ்யர்கள் வெகு ஜாக்கிரதையாகவே காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். எதிரிகள், ஆற்றை கடக்க ஒட்டாதபடி தடுப்பதற்கும், ரஷ்யர்களால் முடியும்.

சென்ற மாதம் 21-ம் தேதி பெர்லின் (ஜெர்மனியின் தலை நகரம்) நகரத்திலே வீரர்கள் நினைவு நாள் விழா நடை பெற்றது. அப்போது ஹிட்லர் ஒரு பிரசங்கம் செய்தார். அதற்கு முன், கொஞ்ச காலமாக அவர் பிரசங்கம் செய்வதில்லை. அதாவது, அதற்கு முன்பு, சென்ற வருஷம் நவம்பர் மாதம் 8-ம் தேதிக்குப் பிறகு, அவர் பிரசங்கமே செய்ய வில்லை. வீரர் நினைவு விழாவன்று அவர் கூறியதாவது :—

"துரதிர்ஷ்ட வசமாக நம் ஜெர்மன் படைகள் அதோகதி யடையக் கூடியதோர் நிலைமை ஏற்பட்டது. கடைசியாக இந்த நிலைமையையும் சமாளித்துக் கொண்டோம். நமது போர் முனைகளை உறுதிப் படுத்திக் கொண்டோம். இன்னும் சில மாதங்களில் வெற்றி யடையத் தக்கபடி வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்."

டானெட்ஸ் ஆற்றின் முன் பகுதியில் நடை பெறும் யுத்தம் மிகவும் நெருக்கடியான நிலைமையி லிருக்கிறது. இருந்தாலும் கோபல்ஸ் பொய் மூட்டைகளை உதறுகிறார். மகா கலவரமான காலத்திலேயே ஏராளமான பலந் திரட்டிக் கொண்டாராம் ஹிட்லர் !

இது தான் கோபல்ஸ் கூட்டத்தாரின் பொய்ப் பிரசாரம். இப்படிச் சொல்லி ஜெர்மன் மக்களை ஏமாற்றுகிறார்கள். டானெட்ஸ் ஆற்றுப் போர் முனை நெடுக, ஜெர்மானியர்களின் தாக்குதலை வெகு திறமையோடு ரஷ்யர்கள் தடுத்து விட்டார்கள். பனி உருகி அதனால் தனக்கு சௌகரியம் ஏற்படுகிற வரைக்கும் இங்கே போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கு மென்று ஹிட்லர் எதிர்பார்க்கிறார். ஆகவே, உக்ரேனையும் கருங் கடற் கரையையும் வெற்றியோடு காப்பாற்றிக் கொண்டிருப்பதை ஆதாரமாகக் கொண்டு, ஜெர்மானியர்களிடம் பிரசாரம் செய்ய, இதுவே ஏற்ற சமயம் என்று நினைக்கிறார்.

இது வரை என்னென்ன சம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன வென்று கவனிப்பது மிகவும் பொருத்தமாகும். ஏறக்குறைய 4 வாரங்களுக்கு முன்பு டானெட்ஸ் ஆற்றின் வளைவில் க்ராஸ்னோவர் மெஸ்கி என்னுமிடத்தில், ஜெர்மன் படைகளை இடது புரத்தில் செம்படைகள் கடுமையாகத் தாக்கின. நிற்க, மேலக் கடைசியில், பாவ்லோகிரேட் வரை மகா வேகத்தோடு முன்னேறிப் போய், நீப்பர் ஆற்றங் கரையிலுள்ள நீப்ரோபெட்ரோஸ்க் என்னும் ஊரைத் தாக்கக் கூடிய அளவிற்கு நெருங்கி விட்டார்கள். இது மிகவும் முக்கியமான சம்பவம். இப்படிப்பட்ட நெருக்கடியான சமயத்தில் வசந்த காலம் பிறந்தது. பனி உருகத் தலைப்பட்டது. இந்த வருஷம் மட்டும் 1 மாதத்திற்கு முன்னதாகவே உருக ஆரம்பித்து விட்டது. ஆகவே, பொல்டோவையும் நீப்பரையும் நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த செம்படைகள் சற்று தடைப்பட்டன. இந்த நிலையை தனக்குச் சாதகமாக ஹிட்லர் பயன்படுத்திக் கொண்டார். டானெட்ஸ் வட மேற்குப் போர் முனையில் ஏராளமான டாங்கிப் படைகளையும் விமானப் படைகளையும் கொண்டு போய்ச் சேர்த்தார். ஆகவே, மத்திய டானெட்ஸ் பகுதிக்கு, லஸோவயா, பர்வன்கொவோ, ஸ்லவியான்ஸ்க் ஆகிய ஊர்களின் வழியாக வந்து சேர வேண்டிய தாயிற்று.

**1 மாதத்திற்குப் பின். பனி உருகினால்**

ஒரு மாதத்திற்குப் பிறகு பனி உருகி யிருந்தால் என்ன நேர்ந்திருக்கும் ? கார்க்கோவுக்குத் தென் மேற்குப் பகுதியிலிருந்து செம்படைகள் ஒரே மட்டாகத் திரண்டு போய்த் தாக்கி யிருக்கக் கூடும். உக்ரேனையும் கிரிமியாவையுங் கூட ஜெர்மானியர்கள் இழந்திருக்கக் கூடும். இந்தச் சமயத்தில், ஏராளமான படைகளை ஹிட்லர் போர் முனைக்கு அனுப்பியது மகா ஆபத்தான சூதாட்டந் தான். ஏனென்றால், அப்போது கார்க்கோவ் ரஷ்யர்கள் வசந் தான் இருந்தது. கீவ் முதல் டானெட்ஸ் பகுதி வரை ஜெர்மன் படைகளுக்கு சப்ளைகள் வரும் வழி அது தான். கார்க்கோவ் ரஷ்யர்கள் வச மிருந்ததனால், அப்போது இந்தப் பகுதி மிகுந்த ஆபத்திற்கு உள்ளாகி யிருந்தது. அதாவது, அந்தச் சமயத்தில் ஏராளமான படைகளைக் கொண்டு போய்ச் சேர்ப்பது, நாச

(9-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஆண்டு ஏப்ரல் மீ 2௳. [இதழ் 14


## விமானத் திரு விழா

நேற்று, இரட்டை விமானத் திரு விழா. இந்த விழாவை பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முழுதும் கொண்டாடினார்கள். பிரிட்டிஷ் விமானப் படை தோன்றி 25 வருஷங்கள் ஆயிற்று. எனவே அப்படைக்கு நேற்று வெள்ளி விழா நடை பெற்றது. இரண்டாவதாக, இந்திய விமானப் படை தோன்றி 10 வருஷங்கள் ஆயிற்று. ஆகவே, அதற்கும் 10-வது ஆண்டு விழா நேற்று நடை பெற்றது. சென்னைக்கு அடுத்த பரங்கி மலையில் கூட, நேற்று இந்த விழா நடை பெற்றது. அது ஒரு கண் கொள்ளாக் காட்சி. விமானப் படையினர் அணி வகுத்துச் சென்றனர். மேன்மை தங்கிய சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்கள், அந்தப் படையினரின் மரியாதையை ஏற்றுக் கொண்டார்கள். அச்சமயம் இராணுவ அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் பொது ஜனத் தலைவர்களும் விஜயம் செய்திருந்தனர்.

இந்தக் காட்சியைக் கண்டவர்களுக்கு ஒரு புதிய உணர்ச்சி ஏற்படும். இது இயற்கை. தாமும் விமானப் படையில் சேர வேண்டும் என்னும் ஆசை உண்டாகத் தான் செய்யும். ஆகாயத்தில் பறக்க வேண்டுமே என்னும் அச்சம் தலை தூக்காதபடி, இந்த ஆசை செய்து விடும். இப்படிப்பட்ட உறுதியும் பிடிவாதமும் உடையவர்கள் தான், படைகளுக்கு, குறிப்பாக விமானப் படைக்கு, ஏற்றவர்கள்.

இந்திய விமானப் படையின் வயது கொஞ்சம் தான். என்றாலும் அது சாதித்திருக்கக் கூடிய வேலைகள் மிகச் சிறந்தவை. இந்தப் படையினரில் பலர், வீரப் பதக்கங்கள் பெற்றிருக்கின்றனர். அவர்களுடைய புகழ் உலகெங்கும் வீசுகிறது. ஒப்புயர்வு இல்லாதவர்களாக விளங்குகிறார்கள்.

சென்ற 10 வருஷங்களில் விமானப் படை பெரிதும் விரிவடைந்திருக்கிறது. அநேகர் அதில் சேர்ந்திருக்கிறார்கள். அவரவருக்கு ஏற்ற பதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கீழ்த் தரமான பதவிகளில் சேர்ந்த பலர், தம் திறமையால் வெகு விரைவாக உயர்ந்து, உயர்தரப் பதவிகள் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லா வகை வசதிகளையும் அங்கே அளிக்கிறார்கள் கவலை என்பதற்கே இட மில்லை. அவர்கள் முகங்களில் இன்பக் களை தாண்டவ மாடுகிறது. சாப்பாடு, துணி மணிகள், இருப்பிடம், விளையாட்டு, புத்தகங்கள், பத்திரிகைகள் முதலிய அனைத்தும் இலவசமாகக் கிடைக்கின்றன. இன்ப உலகிலேயே இருந்து வருகிறார்கள் என்றால், தவறாகாது.

" தனக்கென வாழா பிறர்க்குரியாளர் " என்று கூறப்பட்ட வாசகம் இவர்களுக்கு மிகவும் பொருந்தும். பிறரைக் காப்பதே தம் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டு மன்று. கொடியவர்களைத் தண்டிக்கவும் அவர்கள் பின் வாங்குவ தில்லை. இவர்களுக்குள் பரிபூரண ஒற்றுமையைக் காண்கிறோம். உடை, நடை, உணவு, ஒழுக்கம், செயல், மனப்பான்மை, எண்ணம் ஆகிய எல்லா வகைகளிலும் ஒரே அச்சாக விளங்குகிறார்கள். பரந்த இந்திய நாட்டிற் பிறந்த பல் வேறு சமயத்தவரும் இதில் சேர்ந்திருக்கிறார்கள். சிவில் வாழ்க்கையில் இவர்கள் ஒவ்வொருவரும் பெரிதும் மாறுபட்டவர்கள். என்றாலும், விமானப் படை வாழ்க்கை இவர்களனைவரையும் ஒன்று படுத்தி விட்டது. " சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை " என்னும் பழ மொழிக்கு இவர்கள் ஏற்ற உதாரணங்கள். இவர்களுடைய ஒற்றுமைத் தன்மையும், தியாக உணர்ச்சியும், வீரமும் பாராட்டத் தக்கன.



இந்தப் படை விரைவில் பெருகி வருவது பற்றி மகிழ்கிறோம். என்றாலும் நம் பரந்த நாட்டைக் காவல் புரியத் தக்க அளவிற்கு இன்னும் பெருகவில்லை. நம் விமானப் படையைப் பெருக்குவதற்கு, இந்த மகா யுத்தம் சிறந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது. ஆகவே, இதைக் கை நழுவ விடலாகாது. இந்தியர்களை உலகம் மதிக்கும் காலம் வந்து விட்டது. இந்த மதிப்பை நிலை நாட்டி காப்பாற்றிக் கொள்ள வேண்டியது, நாட்டுப் பற்றுடைய ஒவ்வொரு இந்தியனுடைய கடமையுமாகும்.

இந்தியா விவசாய நாடு. ஆனால், கைத்தொழில் நாடுகளில் தான், காசு கொழிக்கிறது என்ற எண்ணம் பொதுவாக இருந்து வருகிறது. ஆகவே, இந்தியாவும் கைத் தொழில்களை விருத்தி செய்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்திய விமானப் படை இதற்குச் சிறந்த சந்தர்ப்பத்தை அளித்திருக்கிறது. இதைத் தக்கபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இதனால் வேலை யில்லாத் திண்டாட்டம் ஒருவாறு நீங்கும். அப்போது ஏழை மக்களின் வறுமை குறையும். பொருளாதாரக் கஷ்டம் தணியும். பணப் பழக்கம் உண்டாகும். செலாவணி அதிகப்படும். மக்கள் இன்பமாக வாழ்வார்கள். நாடு செழிக்கும்.

ஆகவே இத்தனை நலன்களையும் நாம் அடைய, விமானப் படை துணை செய்கிறது. எந்த அளவிற்கு விமானப் படை பெருகுகிறதோ அந்த அளவிற்கு இந்தியாவிற்குப் பாதுகாப்பு ஏற்படும் ; பிற நாட்டவர்கள் மதிப்பார்கள் ; இந்திய நாடும் பல வகைகளிலும் செழிக்கும். ஆகவே, இப்படிப் பட்ட சிறந்த நிலையை நம் நாடு அடையும்படி முயற்சிக்க வேண்டியது, நாட்டுப் பற்றுடைய ஒவ்வொருவரின் நீங்காக் கடமையுமாகும். ' பிறந்தன இறக்கும் ' ' ஆறிலும் சாவு, நூறிலும் சாவு.' நம் நாட்டின் பொருட்டு உயிர் துறந்தவர்களுக்கு ' வீர சுவர்க்கம் ' என்று நூல்கள் கூறுகின்றன. தம் நாட்டின் பொருட்டு உயிர் விட்டவர்களை உலகம் புகழுகிறது. அவர்களுடைய குடும்பத்தினரின் மதிப்பு உயருகிறது. ஆகவே சாவுக்கு அஞ்சி, பின் வாங்குதல் கூடாது. அது கோழைத் தனம். தமிழர்கள் வீரத் தமிழர்கள் என்பதை மெய்ப்பிக்க வேண்டும். தமிழரசர்கள் ஆண்டு வந்த காலத்தில், எதிரிகள் படையெடுத்து வந்த போது, வீட்டுக் கொருவர் போர்க் கோலம் பூண்டு போர் முனைக்குப் போகவில்லையா ? அவர்கள் வழிவந்த தமிழர்கள் ஒரு போதும் பின்னடைய மாட்டார்கள் ; கோழைகளாக மாட்டார்கள். வீர வாழ்வையே விரும்புவார்கள். அப்போது தான், தம் முன்னோர்களின் சிறப்பைக் காத்தவர்களாவார்கள். இந்திய விமானப் படையில் சேர்ந்துள்ளவர்கள் அதைக் காத்து வருகிறார்கள். இனிச் சேருகிறவர்களும் காப்பார்கள். தமிழ் இளைஞர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. விமானப் படையில் சேர்ந்து அருந் தொண்டாற்ற தகுந்த தருணம். இதில் அவர்கள் தவறமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

25 வயதடைந்த பிரிட்டிஷ் விமானப் படை, எதிரிகளை கதிகலங்கச் செய்து கொண்டு வருகிறது. அதன் வாலிபப் பருவம் உற்ற துணையாக விளங்குகிறது. இந்திய விமானப் படை தன் பாலப் பருவத்திலேயே பெருஞ் செயல்கள் செய்து முடித்திருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு படைகளுக்கும் இந்த இரட்டை ஆண்டு விழாவின் போது நாம் வாழ்த்துக் கூறுகிறோம்.

# விமான மாணவர்கள் அணிவகுப்பு

## பெற்றோர்கள் கவனிக்க வேண்டிய விஷயம்

பார்ப்பதற்குப் பதினாயிரங் கண்கள் வேண்டுமென்பார்கள். அது போன்ற காட்சியைச் சமீபத்தில் பம்பாயில் கண்டார்கள். இந்திய விமானப் படையைச் சேர்ந்த முதல் நம்பர் சிக்னல் மாணவர்கள் 600 பேர்கள் தம் கைகளை வீசி அணிவகுத்துச்சென்ற காட்சி, கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது. 227-வது கோஷ்டி விமானப் படைத் தலைவர் கம்மோடர் எப். ஜே. வின்செண்ட் அந்த மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இந்தியாவிலுள்ள விமானப் பள்ளிக் கூடங்களிலேயே இது தான் மிகப் பெரிது. இங்கே தான் மிகச் சிறந்த சாதனங்க ளெல்லாம் இருக்கின்றன. இந்தப் பள்ளிக் கூடத்தில் தேறியவர்கள் தான் அங்கே அணி வகுத்துச் சென்றவர்கள். அப்போது பம்பாயிலுள்ள நேச நாட்டு அரசாங்கப் பிரதி நிதிகளும், இராணுவ அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் விஜயம் செய்திருந்தனர். இந்தப் பள்ளிக் கூடத்தை ஆரம்பித்தது முதல் இதற்கு முன்பு ஒரு முறை தான் அதாவது 6 மாதங்களுக்கு முன்பு தான், இப்ப்டிப்பட்ட அணிவகுப்பு நடந்தது. இப்போது வெளியேறுகிறவர்கள் இந்தியாவின் பல விமான நிலையங்களிலும் தம் வேலையைப் போய் ஒப்புக் கொள்ளுவார்கள். இனி வாரந் தோறும், தேறுகிறவர்களை வெளியே அனுப்புவார்கள்.

அந்தப் பள்ளிக்கூடத் தலைவரான விங் கமாண்டர் ஜே. எஸ். ஸ்மித் அந்தப் பள்ளிக் கூடம் செய்துள்ள வேலையைக் குறித்த அறிக்கையைப் படித்தார். அதில், பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெற வருகிறவர்களுக்கு, கவாத்து, உடற் பயிற்சி, பந்தாட்டம், இராணுவ ஒழுங்கு முறைகள், தந்தி, பொதுப் பாது காப்பு முதலியவை பற்றி 6 வாரப் பயிற்சி யளிக்கப்படுமென்று குறிப்பிட்டிருந்தார். அதற்குப் பிறகு 16 வாரங்கள் விமானத் தொழில் பயிற்சியளிக்கப் படுகிறது. அப்போது, ' க்ரௌண்ட் வயர்லஸ் ஆபரேடர் ', ' வயர்லெஸ் ஆபரேடர் ', விமான பீரங்கிக்காரர், 1-வது, 2-வது வகுப்பு எலெக்ட்ரிஷியன், பாட்டரி சார்ஜிங் ரூம் அட்டெண்டர் முதலிய வேலைகளையும் பழகுகிறார்கள். ஒரு ' வயர்லஸ் ஆபரேடர் ' ஒரு படை விமானத்தில் போய் நன்றாக அனுபவப்பட்ட பிறகு, வயர்லெஸ் மெக்கானிக் அல்லது வயர்லெஸ் ஆபரேடர் மெக்கானிக் வகுப்பில் தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படிக்கோரலாம். இதில் தேறியான பிறகு, உயர்ந்த பதவிக்குத் தகுதி பெறுகிறார்கள். அப்போது சம்பளமும் அதிகப்படும். அது போலவே தான் 2-ம்வகுப்பு எலெக்ரிஷியன் முதல் வகுப்பிற்கு மாறலாம்.

விமானப் படைத் தலைவர் வின்ஸெண்ட் கூறியதாவது :—இந்த இளைஞர்கள் சிறந்து தொண்டாற்றுகிறார்கள். இங்கே அவர்களுக்குக் கிடைக்கும் பயிற்சி எதிர் காலத்தில் மிகவும் பயன் படும். யுத்த சம்பந்தமான இந்தத் தொழிலில் முன்னேற்ற மடைவதற்குத் தம் மக்களுக்குச் சந்தர்ப்பம் உண்டு என்பதைப் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும்.

# இந்திய விமானப் படை

## சேருகிறவர்களுக்கு நிபந்தனைகள்

**தகுதிகள்.**—18-க்கு மேல் 38 வயதிற் குட்பட்டவர்கள் தான் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். விமான பீரங்கிக்காரர்களாக 18 முதல் 28 வயதிற் குட்பட்டவர்கள் தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். மன்னர்பிரானின் பிரஜையாகவாவது, சமஸ்தானப் பிரஜையாகவாவது இருக்கவேண்டும். இந்தியக் கலப்புச் சந்ததியா யிருக்கக் கூடாது. ஆனால் இந்தியாவில் குடியேறியவராக இருக்கலாம். நிற்க, 1, 2, 4 விமானப் பீரங்கிகள் ஆகிய பகுதிகளுக்கு, மெட்ரிகுலேஷன் அல்லது அதற்குச் சமமான பரீட்சை கொடுத்தவர்களா யிருக்க வேண்டும். 3, M., 5-வது பகுதிகளுக்கு, 6-வது வகுப்பு அல்லது அதற்குச் சமதையான ஞானம் வேண்டும். இங்கிலீஷில் நன்ருகப் பேசவும் எழுதவும் தெரிந்திருப்பதோடு ஆரம்பக் கணக்கும் தெரிந்திருக்க வேண்டும். இந்தத் தொழில்களில் முன் அனுபவ மிருந்தால் நல்லது. 3, M., 5-வது பகுதிகளில் சேருகிறவர்கள் தாம் மெட்ரிகுலேஷன் பரீட்சை தேறவில்லையே என்று கவலைப்பட வேண்டிய தில்லை. நாளடைவில் அனுபவத்தை யொட்டி மற்ற தொழில்களும் கற்றுக் கொள்ள்லாம். நல்ல உடற் கட்டு இருக்க வேண்டும். விமானப் படையில் சேர்ந்த பிறகு, டாக்டர் சொல்லுகிறபடி அம்மை மருந்தோ, ஊசி மருந்தோ குத்திக் கொள்ள ஆயத்தமா யிருக்க வேண்டும்.

**சேர்க்கை.**—யுத்தம் முடிகிற வரையிலும், அதற்குப் பிறகு, உங்கள் ஊழியம் தேவைப் படுகிற வரை, ஊழியம் செய்வதாக வாக்குறுதி ஆரம்பத்திலேயே எழுதிக் கொடுக்க வேண்டும். முதலாவதாக, இரண்டாம் வகுப்பு விமானத் தொழிலாளியாகத் தான் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். பிறகு பயிற்சி நடைபெறும். அதன் பிறகு நடைபெறும் பரீட்சையில் தேருவிட்டால், அதே இனத்தைச் சேர்ந்த வேருெரு தொழிலில் பயிற்சி பெற அனுப்புவார்கள். இதிலும் தேருது போனல், படையினின்று விலகிக் கொள்ளலாம்; அல்லது, அதைவிடக் குறைந்த சம்பளமுள்ள வேலைக்கு மாற்றிக் கொள்ளலாம்.

**கமிஷன் பதவி.**—எல்லா வகைகளிலும் தகுதியுடையவர்களாக நீங்கள் இருந்தால், கமிஷன் பதவியும் உங்களுக்குக் கிடைக்கலாம்.

நீங்கள் இந்திய விமானப் படையில் சேர்ந்த உடனேயே, இந்திய விமானப் படைச் சட்டத்திற்கு உள்ளாகிறீர்கள். இந்தியாவைப் பாதுகாப்ப தோடு வெளி நாடுகளுக்கும் நீங்கள் போகும்படி நேரலாம்.

**தொழில்கள்.**—இந்திய விமானப் படையில் சேருகிறவர்கள் அவரவர் தகுதிக்கு எற்றபடி கீழ்க் கண்ட தொழில்கள் கற்றுக் கொடுக்கப் படுகிருர்கள். தொழிலுக் கேற்ற சம்பளமும் ஏற்பட்டிருக்கிறது.

### 1-வது தொழில் வகைகள்.

இரண்டாவது வகைத் தொழ்ல்களில் தேர்ச்சியடைந்தவர்களைத் தான் 1-வது தொழில் வகைக்கு மாற்றுகிருர்கள். இதில் நேர்முகமாகச் சேர முடியாது. இந்த வகையைச் சேர்ந்தவர்கள் தான் 1-வது வகுப்பு எலெக்ட்ரிஷியன், 1-வது வகுப்பு பிட்டர், 2-வது ஏ. வகுப்பு பிட்டர், 2-வது இ. வகுப்பு பிட்டர், பிட்டர் ஆர்மரர், பிட்டர் எம்.டி., ஆர்.டி.எப். மெக்கானிக், இன்ஸ்ட்ருமென்ட் மேக்கர், மெட்டல் ஒர்க்கர், 1-ம் தரம் போட்டோகிராபர், வயர்லெஸ் ஆபரேடர் மெக்கானிக், கார்பென்டர், ப்ரொபெல்லர் மேக்கர்.

### 2-வது தொழில் வகைகள்.

ஆர்மரர், 2-ம் தரம் எலெக்ட்ரிஷியன், போர் விமான பிளேட் மெகானிக், இன்ஜின் ப்ளேட் மெக்கானிக், இன்ஸ்ட்ருமென்ட் ரிபேரர், எம். டி. 1-ம் தரம் மெகானிக், ஆர். டி. எப். ஆபரேடர், 2-ம் தரம் போட்டோகிராபர், வயர்லெஸ் ஆபரேடர், தாமிரக் கொல்லர், கருமான், தகட்டுக் கொல்லர், வெல்டர், மீடியோராலாஜிகல் அஸிஸ்டெண்ட், மீடியோராலாஜிகல் அப்சர்வர், கார்பென்டர் ப்ரொபெல்லர் ரிப்பேரர்.

### 3-வது தொழில் வகைகள்.

பாப்ரிக் ஒர்க்கர், தச்சர், ஹைட்ரொஜென் ஒர்க்கர், பலூன் ஆபரேடர், எம். டி. 2-ம் தரம் மெக்கானிக்.

### 4-வது தொழில் வகைகள்.

கணக்கு குமாஸ்தாவும் பொது வேலை குமாஸ்தாவும், எக்விப்மெண்ட் அஸிஸ்டென்ட், ஸ்பெஷல் ட்யூடி குமாஸ்தா.

### 5-வது தொழில் வகை.

ஏர்க்ராப்ட் ஹான்ட்.

### வைத்தியத் (M) தொழில்.

நர்சிங் ஆர்டர்லி.

### விமானிகள்.

விமான பீரங்கிக்காரர்.

## அசல் சம்பள விவரம்

| பதவி. | 1-வது தொழில் வகை. | 2-வது தொழில் வகை. | 3-வது தொழில் வகை. | 4-வது தொழில் வகை. | 5-வது தொழில் வகை. | வைத்தியத் தொழில். | விமானி. |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 2-ம் தரம் ஏர்க்ராப்ட் மென் .. .. | 75 | 60 | 50 | 60 | 40 | 40 | 60 |
| 1-ம் தரம் ஷை ஷை .. .. | 90 | 65 | 55 | 62 | 42 | 42 | .. |
| 1-ம் தரம் ஷை ஷை 1 வருஷத்திற்குப் பிறகு. | 95 | .. | .. | .. | .. | .. | .. |
| லீடிங் ஏர்க்ராப்ட்ஸ் மென் .. .. .. | 100 | 70 | 60 | 65 | 45 | 45 | .. |
| ஷை ஷை 1 வருஷத்திற்குப் பிறகு. | 105 | .. | 63 | .. | 46 | 46 | .. |
| ஷை ஷை 2 வருஷங்களுக்குப் பிறகு. | 110 | .. | 66 | .. | 47 | 47 | .. |
| ஷை ஷை 3 ,, ,, | .. | .. | 69 | .. | 48 | 48 | .. |
| ஷை ஷை 4 ,, ,, | .. | .. | 72 | .. | 49 | 49 | .. |
| ஷை ஷை 5 ,, ,, | .. | .. | 75 | .. | 50 | 50 | .. |
| கார்போல் .. .. .. .. .. | 130 | 100 | 80 | 75 | 62 | 62 | .. |
| ஷை 1 வருஷத்திற்குப் பிறகு .. | 135 | .. | .. | .. | 66 | 66 | .. |
| ஷை 2 வருஷங்களுக்குப் பிறகு .. | 140 | .. | .. | .. | 70 | 70 | .. |
| சார்ஜெண்ட் .. .. .. .. | 145 | 115 | 85 | 85 | 80 | 80 | 100 |
| ஷை 1 வருஷத்திற்குப் பிறகு .. | 150 | .. | .. | 90 | 85 | 85 | 105 |
| ஷை 2 வருஷங்களுக்குப் பிறகு .. | 155 | .. | .. | .. | .. | .. | 110 |
| ஷை 3 ,, ,, .. | .. | .. | .. | .. | .. | .. | 115 |
| ஷை 4 ,, ,, .. | .. | .. | .. | .. | .. | .. | 120 |
| ப்ளைட் சார்ஜெண்டு .. .. .. .. | 160 | 130 | 90 | 100 | 90 | 90 | 125 |
| ஷை ஷை 1 வருஷத்திற்குப் பிறகு. | 165 | .. | 95 | 105 | 95 | 100 | 130 |
| ஷை ஷை 2 வருஷங்களுக்குப் பிறகு. | 170 | .. | 100 | 110 | 100 | .. | 135 |
| ஷை ஷை 3 வருஷங்களுக்குப் பிறகு. | 175 | .. | .. | .. | .. | .. | 140 |
| ஷை ஷை 4 வருஷங்களுக்குப் பிறகு. | 180 | .. | .. | .. | .. | 120 | .. |
| வாரண்டாபீசர் .. .. .. .. | 225 | 200 | .. | 135 | 120 | 125 | 145 |
| ஷை 1 வருஷத்திற்குப் பிறகு .. | 235 | 210 | .. | 140 | 125 | 130 | 150 |
| ஷை 2 வருஷங்களுக்குப் பிறகு.. | 245 | 220 | .. | 150 | 130 | 140 | 155 |
| ஷை 3 ,, ,, .. | 255 | 230 | .. | 160 | 140 | .. | 160 |
| ஷை 4 ,, ,, .. | 265 | 240 | .. | .. | .. | .. | .. |

**முக்கியமான குறிப்பு.**—விமானப் படையில் சேர்ந்து பயிற்சி பெறும் போது எந்தத் தொழில் வகையைச் சார்ந்திருக்கிருர்களோ, அந்த வகையில் 2-ம் தரம் ஏர்க்ராப்ட்மென்னுக்குரிய சம்பளம் கொடுக்கப்படும். பயிற்சி முடிந்த சார்ஜெண்டுகளெல்லாம் விமான பீரங்கிக்காரர்களாவார்கள். இந்தச் சம்பள மன்னியில் ஒவ்வொரு ஏர்க்ராப்ட்மென் கணக்கிலும் மாதந் தோறும் ரூ. 3 விகிதம் வரவு வைத்து, சேருந் தொகையை, படையை விட்டு நீங்குகிற போது கொடுக்கப்படும். சில பதவிகளிலுள்ளவர்களுக்கு வருஷந் தோறும் சம்பள உயர்வு கிடைக்கிறது என்னும் காரணத்திஞல், இந்தக் கட்டங்களெல்லாம் கடந்தாக வேண்டுமென்பதில்லை. நீங்கள் திறமைசாலிகளா யிருந்தால் விரைவிலேயே பதவிகளில் உயரலாம்.

**அலவன்சுகள்**

1. எல்லா ஏர்மென்களுக்கும் சாப்பாட்டு அலவன்சு மாதம் ரூ. 3.

2. ஏர்மென்களுக்கு நன்னடத்தைச் சம்பளம்—

   6 மாத சர்வீஸ் ஆன பிறகு மாதம் ரூ. 1.
   1 வருஷ சர்வீஸ் ஆன பிறகு மாதம் ரூ. 3-8-0.

3. நல்ல வேலைக்குச் சம்பளம்—(நான்-கமிஷன் உத்தியோகஸ்தர்களுக்கு)

   1 வருஷத்திற்குப் பிறகு மாதம் ரூ. 2.
   2 ஷை ஷை ரூ. 4.
   3 ஷை ஷை ரூ. 6.

4. விசேஷ வேலைகளுக்குச் சம்பளம்—

   பி.டி. இன்ஸ்ட்ரக்டர், மாதம் ரூ. 2.
   பாரச்சூட் பாக்கர், நாளைக்கு அணு 2.
   செர்வீஸ் போலீஸ், நாளைக்கு அணு 2.

5. சில விமானப் படைகளில் சலவை செய்வோர்களையும் நாவிதர்களையும் சேர்த்திருக்கிறது. படையினருக்கு இவர்கள் இலவசமாக ஊழியம் செய்வார்கள். இவர்கள் இல்லாத படைகளில், இதன் பொருட்டு மாதந் தோறும் 10 அணு அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது.

**உங்கள் சம்பளம் என்ருல் என்ன?**

இந்திய விமானப் படையைச் சேர்ந்தவர்களுடைய சம்பளம் அவர்களுடைய சொந்தச் செலவுக்காக அதாவது, தைலம், சோப்பு, சிகிரெட், புகையிலை முதலிய உபரிச் செலவுகளுக்காகத் தான் பயன்படுகிறது.

**உடுப்பு.**—நீங்கள் படையில் சேர்ந்து பயிற்சி பெற ஆரம்பித்த வுடனேயே, உங்களுக்கு முழு இராணுவ உடுப்பும், படுக்கையும் இலவசமாகக் கொடுக்கிருர்கள்.

**பென்ஷன்கள்.**—இது மூன்று வகைப்படும். 1 சர்வீஸ் பென்ஷன், 2 டிஸெபிலிடி பென்ஷன், 3 குடும்பப் பென்ஷன்.

**வைத்தியம்.**—சம்பளத்தோடு இலவச வைத்தியம் செய்யப்படும்.

**விளையாட்டுகள்.**—விமானப் படையில் சேர்ந்திருக்கிற வரையிலும், நீங்கள் உடற்கட்டோடும் மன உறுதியோடு மிருக்க வேண்டி, பந்தாட்டங்களும் விளையாட்டுகளும் ஆடலாம். அன்றியும், இந்திய விமானப் படை நிலையங்களில், ஒய்வு நேரங்களில் போய்ப் படிக்கவும் எழுதவும் விளையாடவும் வசதிக ளிருக்கின்றன.

**சாப்பாடு.**—இலவசமாகச் சாப்பாடு போடப்படுகிறது. உங்களுக்குத் தேவையானதை நீங்களே வாங்கிக் கொடுத்தால் அதையும் சமைத்து, பொதுச் சாப்பாட்டின் போது பறிமாறப்படும்.

**வாழ்க்கை.**—இலவச விடுதி. கலியாண மாகாதவர்கள், படை வீட்டில் வசிக்க வேண்டும். கலியாண மானவர்கள் பயிற்சி முடிந்த பிறகு, தம் குடும்பத்தோடு படை வீடுகளுக்கு வெளியே வசிக்கலாம். ஆனுல், படை ஒரு இடத்திலிருந்து வேறிடத்திற்கு மாறினுல், அவர்கள் தம் சொந்தச் செலவில் தான் தன் குடும்பத்தாரை அழைத்துப் போக வேண்டும். அன்றியும் யுத்த காலத்தில் சாதாரணமாக அரசாங்க வீடுகள் இவர்களுக்குக் கொடுக்க முடியாது.

**லீவும் பர்லோவும்.**—ஊழியத்தின் அவசியத்தை அனுசரித்துத் தான் லீவ் கொடுக்கப்படும். 1 வருஷத்தில் 10 நாட்கள் **காஷியல் லீவ்** உண்டு. இதனுல் வருஷத்திற்குக் கணக்காகும் லீவ் பாதிக்கப்பட மாட்டாது. அந்தக் காலத்தில் இலவசமாக வெளியூர்களுக்குப் போய்வர முடியாது. 2. **சர்வீஸ் லீவ்** ஒரு வருஷ சேவகத்திற்கு 45 நாட்கள் முழுச் சம்பளத்தோடும் அலவன்ஸ்களோடும் லீவ் கொடுக்கப்படுவதோடு, உங்கள் சொந்த ஊர்களுக்குப் போய் வர இலவச ரெயில்வே பாசும் கொடுக்கப்படுகிறது. 3. **சீக்கு லீவ்**, வைத்திய போர்டார் சிபார்சின் பேரில், சாதாரணமாக உங்கள் சொந்த ஊருக்குப் போய் வர லீவ் கொடுத்து, முழுச் சம்பளத்தோடு, இலவச ரெயில்வே பாசும் கொடுக்கிருர்கள்.

படைத் தலைவர் யுக்தப்படி தான் லீவ் கொடுக்கப்படும்.

## ஒரு திருத்தம்

**சென்ற 1943-ம் ஞு மார்ச்சு மீ 26உ வெளியீட்டில் 7-வது பக்கத்தில் "அச்சுப் பிரசார அத்திப் பழம்" என்னும் தலைப்போடு வெளியிடப்பட்ட கட்டுரை, சென்னை அகில இந்திய வானெலி நிலயத்திலிருந்து "இரட்டை நாவு" என்ற தொடரில் செய்யப்பட்ட ஒரு பேச்சாகும்.**

# இந்திய விமானப் படை பற்றிய அனுபவங்கள்

## கீழ் பதவியில் சேர்ந்து, கமிஷன் பெற்றவர் கூறுவது

இந்திய விமானப் படையில் தாழ்ந்த பதவியில் சேர்ந்து தன் திறமையினுல் இப்போது கமிஷன் பதவி வகிக்கும் ஒருவர் கீழ்க் கண்டவாறு எழுதுகிருர்.—

நான் 1932-ம் வருஷம் இந்திய விமானப் படையில் சேர்ந்தது முதல் பெரும்பாலும் வட மேற்கு மாகாணத்திலேயே தான் என் நாட்களைக் கழித்தேன்.

1939-ம் வருஷம் யுத்தம் ஆரம்பமானது. நமது இந்தியத் தரைப் படை மிகச் சிறந்த புகழ் பெற்று விட்டது. அதே திறமையும் உறுதியும் எமக்கு உண்டு என்பதை மெய்ப்பிக்க தகுந்த தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம். பிறகு தான் பர்மாவைத் தாக்கக் கிளம்பினோம்.

**எங்கள் பட்டாளத்தின் தலைவர் உள்பட அனைவரும் இந்தியர்கள் தான்.** நாங்கள் பர்மாவிற்குப் போன அன்றைக்கே எதிரிகள் எங்கள் மீது குண்டு மாரி பெய்தார்கள். அன்று சாயங்காலமே நம் விமானிகள் கிளம்பிப் போய் எதிரி விமான நிலையத்திலுள்ள விமானக் கொட்டகைகளையும் தந்தி யில்லாக் கம்பி நிலையத்தையும் நாசம் செய்தார்கள். அது முதல் அடிக்கடி நம் இளைஞர்கள் எதிரிகள் இருக்கும் இடத்திற்கு மேலே பறந்து குண்டுகளைக் கொண்டும், மிஷின் பீரங்கிகளைக் கொண்டும் நாசஞ் செய்து வருகிருர்கள்.

இனி, தரையிலிருந்தவர்கள் எப்படியானுர்கள் என்று கவனிப்போம். முதல் தாக்குதலுக்குப் பிறகு, அச்சம் அடியோடு நீங்கி விட்டது. பிறகு எதிரிகள் தாக்கிய போது நம் விமானப் படையினர் பதுங்குமிடங்களில் கூட பதுங்கிக் கொள்ளுவதில்லை. ஒரு நாள், எங்கள் விமானம் ஒன்றில் வெடி குண்டுகளை ஒரு ஆர்மரர் ஏற்றிக் கொண்டிருந்தார். அந்த வெடி குண்டின் வாலிலுள்ள சிறகில் " இந்தியாவிலிருந்து வெகுமதி " என்று எழுதி முடித்தார். அப்போது எதிரி விமான மொன்றி லிருந்து விழுந்து வெடித்த வெடி குண்டின் கதிர், அப்போது ஏற்றப்பட்ட விமானத்தின் சிறகை மட்டும் அந்த வாசகத் தோடு சிதைத்தது. அந்த வெடிகுண்டு அதற்கருகி லிருந்த அந்த ஆர்மரர் பக்கத்திலேயே விழுந்தது. விமானத் தாக்குதல் முடிந்த பிறகு, தன் வாசகத்தோடு அந்தச் சிறகை அவர் கையில் எடுத்துக் கொண்டு வெளியேறினுர்.

மற்றொரு இளம் விமானி. இவர் அப்போது தான் அந்த விமானப் படையில் சேர்ந்தவர். ஒரு நாள் பர்மாவிற்குப் போன போது, எதிரிகள் மகா கடுமையாகத் தாக்கினுர்கள். அப்போது, அவர் பதுங்குமிடத்தில் பதுங்கி யிருந்தார். தனக்குச் சற்று தூரத்தில் எதிரி வெடி குண்டின் கதிர் ஒன்று, ஒரு சார்ஜெண்ட் மீது பட்டு காயமானதைக் கண்டார். எதிரிகள் சரமாரியாகக் குண்டுகளைப் பெய்து கொண்டிருப்பதை அவர் பொருட் படுத்த வில்லை. மார்பாலேயே நகர்ந்துக் கொண்டு வெளிப்பட்டார். காயப் பட்டவரைத் தன் முதுகின் மேல் சுமந்து கொண்டு, மீண்டும் பதுங்கு மிடத்திற்கு வந்து அவருக்கு முதலுதவி செய்தார்.

ஒரு கடுமையான விமானத் தாக்குதலில் ஒரு எக்விப்மெண்ட் அஸிஸ்டெண்ட் சிக்கிக் கொண்டார். அருகில் பதுங்கு மிடம் எதுவு மில்லை. ஆகவே, சில விநாடிகளுக்கு முன்பு எதிரிகள் வெடி குண்டுகள் விழுந்து ஒரு பள்ள மிருந்த இடத்தில், குதித்துத் தப்பிக் கொண்டார்.

மற்றொரு விசித்திரமான சம்பவம். பர்மாவில் ஒரு விமானம் பழுதாகிவிட்டது. அதை நம் ரிப்பேரர்கள் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உதவியாக, அநேகக் கூலிகளும் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி விமானங்கள் தாக்கின. கூலிகள் ஓடிப் போனுர்கள். ரிப்பேரர்கள் விமான இரக்கைக்குள் பதுங்கிக் கொண்டார்கள். சற்று நேரத்திற் கெல்லாம் ஆபத்து நீங்கியதை அறிவிக்கும் சங்கு ஊதியது. ரிப்பேரர்கள் அனைவரும் சுகமாகவே வெளி யேறினுர்கள். இவர்களும் மனத் தடுமாற்றங் கொண்டு ஓடிப்போக முயற்சித்திருந்தால், கண்டிப்பாகக் கொல்லப்பட்டிருப்பார்கள்.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளி லிருந்தும் விமானிகள் வந்து சேர்ந்திருக்கிருர்கள். இவர்கள் சிறந்த உணர்ச்சியும் உயர்ந்த ஒழுக்கமும் உடையவர்கள். எதிரி வெடி குண்டுகள் விழுந்து கொண்டிருக்கும் போது கூட, பாட்டுகள் பாடிக் கொண்டிருந்தார்கள்.

தளவாடங்களை மீண்டும் நிரப்பிக் கொள்ளும் பொருட்டு இவர்கள் இந்தியாவிற்கு மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பினுர்கள். போர் முனைக்கு மீண்டும் செல்ல மிகவும் ஆவலா யிருக்கிருர்கள்.

## ஒரு புதிய போட்டிப் பரிசு

### போட்டித் தவணை தள்ளி வைக்கப்பட்டது

சென்னை வாசிகள் பலர் போர் முனைகளுக்குப் போயிருக்கிருர்கள். இவர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. அதிலிருந்து கொஞ்சம் மீதி செய்து சேர்த்து வைக்கிருர்கள். யுத்தத்திற்குப் பிறகு இது அவர்களுக்கு உதவும். இந்தத் தொகை நல்ல முறையில் வருவாய் தரத் தக்கபடி செலவு செய்யப் படவேண்டும். உதாரணமாக, கிராம வாழ்க்கையை மாற்றி யமைப்பதற்கும், யுத்தத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் முன்னேற்றத் திட்டங்களை முன்னிட்டும் அதைச் செலவிடலாம்.

நம் சிப்பாய்கள் தம் பணத்தைச் செலவிட, ஒரு வழியைச் சொல்லுகிருேம்.

இப்பத்திரிகாசிரியருக்குக் கீழ்க்கண்டவைகளின் புகைப் படங்கள் வேண்டி யிருக்கிறது :—

(1) கிணறு தோண்டுவது.
(2) கட்டி முடிந்த கிணற்றை உபயோகிப்பது.
(3) பரம்படித்தல்.
(4) பழ மரத் தோப்புக்கள்.
(5) காய்கறித் தோட்டங்கள்.
(6) ஒரு சிறு கடை.
(7) கோழிப் பண்ணை.
(8) ஆடு மாடுகள் அபிவிருத்தி.
(9) வீடுகள் கட்டுதல்.
(10) கலியாணம்.
(11) சிப்பாய் தன் பணத்தை வேறெந்த வகையில் செலவிட நினைத்தாலும் அந்த வகை.

இவை பற்றி அனுப்பப்படும் மிகச் சிறந்த புகைப் படத்திற்கு முதற் பரிசு ரூ. 20, இரண்டாவது பரிசு ரூ. 10. முற்கூறியுள்ள ஒவ்வொரு இனத்திலும் அனுப்பப்படும் புகைப் படங்களில் சிறந்தவற்றிற்கு, ஒவ்வொரு இனத்திற்கும் ரூ. 3 விகிதம் கொடுக்கப்படும்.

எந்த இனத்திலுள்ள புகைப் படமாவது பரிசு பெறத் தகுதியில்லாததா யிருந்தால், பரிசு கொடுக்கவோ மறுக்கவோ பத்திரிகாசிரியருக்கு உரிமை உண்டு.

புகைப் படங்கள் திருப்பி யனுப்பப்பட மாட்டா.

போட்டியிடுகிற சிலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, புகைப் படங்கள் அனுப்ப வேண்டிய தேதி 1943-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15-ம் தேதி வரை தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

புகைப் படங்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 15–4–43-க்குள் அனுப்ப வேண்டும்.

**ஆ சி ரி ய ர் ,**
**" சென்னை யுத்த சஞ்சிகை "**
**" விக்டரி ஹௌஸ் ", மௌண்ட் ரோட்.**



# இந்திய விமானப் படைத் தலைவர்

## சர் ரிச்சர்ட் பியர்ஸ் சரிதம்

இங்கிலாந்தின் பாம்பர் விமானப் படைத் தலைவரா யிருந்தவர் ஏர் மார்ஷல் சர் ரிச்சர்ட் பியர்ஸ். இவர் இப்போது இந்தியாவின் விமானப் படைத் தலைவரா யிருக்கிருர். இந்தியாவின் விமானப் பாதுகாப்பு மிகவும் கெட்டிக்காரர் வசம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு கட்டி யிருக்கிறது. ஆகவே தான், **சர் ரிச்சர்ட் பியர்ஸ்** நியமிக்கப் பட்டிருக்கிருர். இவர், தான் இருந்த இடத்திலிருந்து கொண்டே வேலை பார்க்கிறவரல்ல. அவரும் விமானத்தில் பறக்கிருர்.

பார்வைக்கு ஒரு வீரராகத் தோன்றமாட்டார். ஆனுல், அவர் மார்பில் அணிந்துள்ள வீரப் பதக்கங்களைக் கொண்டு தான், அவர் ஒரு சிறந்த வீரர் என்று மதிக்க வேண்டும். இங்கிலாந்தில் பாம்பர் விமானப் படைத் தலைவராக இருந்த போது, மிகச் சிறந்த வெற்றிகள் பெற்ருர்.

### தன் படையிடம் நம்பிக்கை.

தன் படையினரிடம் பரிபூரண நம்பிக்கை அவருக்கு இருந்தது. தான், பாம்பர் படையை விட்டு விலகிய காலத்தில் ஒரு விசேஷ அறிக்கை விடுத்தார். அதில், தான் விலகுவது பற்றி வருந்துவதாகவும், என்ருலும் இப்படிப் பட்ட தோர் வீரப் படைக்கு 15 மாதங்கள் தலைமை வகித்து நடத்தி வந்தது பற்றி பெருமை யடைவதாகவும், குறிப்பிட்டிருந்தார்.

### அதிர்ஷ்டக்கார பியர்ஸ்.

இவரை அதிர்ஷ்டக்கார பியர்ஸ் என்று அனைவரும் அழைப்பதுண்டு. ஏனென்ருல், பல முறை இவர் யமன் வாயிலிருந்து தப்பினுர்.

இவருடைய தகப்பனுர் ஒரு அட்மிரல் (கப்பல் படைத் தலைவர்) கடற் படையில் சேர வேண்டுமென்பது தான் அவருடைய ஆசை. ஆகவே, கப்பல் விமானப் படையின் வாலிண்டியர் ரிசர்வில் சப் லெப்டினென்டாகச் சேர்ந்தார். சென்ற மகா யுத்தத்தில் இந்தப் பதவியிலேயே இருந்து ' டி.எஸ்.ஒ.' வீரப் பதக்கம் பெற்ருர். ஏனென்ருல் 1915-ம் வருஷம் ஆஸ்டெண்டிலும், செஸ்ப்ரக்கிலும் உள்ள ஜெர்மன் நீர் மூழ்கித் தளங்களை ஓயாமல் தாக்கி வென்ருர். பிறகு டார்டெனெல்சிலும் இத்தாலியிலும் போராடி 1919-ம் வருஷம் ' ஏ.எப்.சி.' விமானப் படைப் பதக்கம் பெற்ருர். 1930-ம் வருஷம் விமான மந்திரிக் காரியாலயத்தில், ' டிபுடி டைரக்டர் ஆப் ஆபரேஷன்ஸ் அன் இன்டெலிஜென்ஸ் ' என்னும் பதவியை ஏற்ருர். 1933-ம் வருஷம் பாலஸ்தீனத்திலும் டிரான்ஸ்ஜோர்டானிலும் விமானப் படைத் தலைவராகப் போனுர். அங்கே, தரைப் படையையும் விமானப் படையையும் ஒரு தலைவரின் கீழ் வேலை செய்யும்படிச் செய்தார். 1936-ம் வருஷம் பாலஸ்தீனத்தில் நடை பெற்ற நெருக்கடியான கலவரத்தில் இவர் செய்த அருமையான தொண்டைப் பாராட்டி, ' சி.ஓ.பி.' (கம்பானியன் ஆப் தி ஆர்டர் ஆப் தி பாத்) பட்டம் கொடுத்தார்கள்.

மற்ற படையினரோடு அவர் கூட்டுறவு கொண்டிருந்திருக்கிருர். இந்த அனுபவம், இந்திய விமானப் படையை நிர்வகிக்கும் இந்தச் சமயத்தில் மிகவும் உதவியா யிருக்கும். மத்திய கிழக்கிலிருந்து திரும்ப அவர் லண்டனுக்குப் போன போது, டைரக்டர் ஆப் ஆபரேஷன்ஸ் அண்டு இன்டெலிஜென்ஸ் என்னும் பதவியையும், விமானப் படையினரின் டிபுடி தலைவர் பதவியையும், ஏற்றுக் கொண்டார். இந்த யுத்தம் ஆரம்பமான வருஷம் விமானக் கௌன்சில் அங்கத்தினரானுர். விமானப் படையின் வைஸ் சீப் ஆனுர் ; பாம்பர் விமானப் படைப் பிரதம தலைவரானுர்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

மாகத் தான். இதை ஜெர்மானியர்கள் உணர்ந்தார்கள். ஆகவே தான் வடக்கேயும் ஒரு பலமான படையை யனுப்பி கார்க்கோவ் நகரத்தையே வளைந்து கொள்ள ஏற்பாடு செய்து விட்டார்கள். ஏராளமான ஜெர்மன் டாங்கிப் படைகளைத் தடுக்க மாட்டாமல் ரஷ்யர்கள் சற்று பின்வாங்க நேரிட்டது. ஆகவே, கார்க்கோவ் நகரம் ஜெர்மானியர் வசமானது. இது செம்படைகளுக்கு பெருத்த சேதந் தான். இதைப் பற்றி கொஞ்சமும் சந்தேகமே கிடையாது. அப்போது எதிர்பாராதபடி மகா நெருக்கடியானதோர் நிலைமை ஏற்பட்டது. இதை வெகு திறமையோடு ரஷ்யப் படைத் தலைவர் சமாளித்தார். கார்க்கோவிற்கு மேற்கேயும் தென் மேற்கேயும் உள்ள செம்படைகள் தம்மை ஜெர்மன் படைகள் வளைத்து விடாதபடி தடுத்தன. போராடிக் கொண்டே பின் வாங்கின. லையல்கோரெட் என்னும் ரயில்வே ஜங்ஷனையும் ரஷ்யர்கள் காலி செய்தனர். இதனுல் வடக்கே ரஷ்யர்கள் வசமிருக்கும் கர்ஸ்க்குக்கு ஆபத்து ஏற்படும். கர்ஸ்க்கையும் ஜெர்மானியர்கள் மீண்டும் கைப்பற்றி விடுவார்களானுல், தென் பகுதியிற் ஓரலைத் தாக்கும் ரஷ்யப் படைகள் பின் வாங்கும்படியான அவசியம் நேரும். ஜெர்மன் படைகளின் பின் புரத்திற்கும் டானெட்ஸ் வளைவிற்கும் தொடர்பு தரும் ரயில்வேயைக் காப்பாற்றும் பொருட்டுத் தான் ஜெர்மானியர்கள் முதலில் எதிர்த்துத் தாக்கினுர்கள். ஆனுல் இந்த முயற்சி ஜெர்மானியர்களுக்கு நல்ல பலன் தந்தது. கார்க்கோவை மீண்டும் கைப்பற்றினுர்கள். கர்ஸ்க்கையும் கைப்பற்றக் கூடும். ஓரெல் பகுதியிலுள்ள அரண்களைப் பலப்படுத்திக் கொள்ளவுங் கூடும்.

நிப்பரை நோக்கி ரஷ்யர்கள் தாக்கப் போனது மகா வீரமான செயல் தான். மகா கஷ்டமானதுங் கூட. ஏனென்ருல் தென்மேற்கே தாக்கிக் கொண்டிருக்கும் படைகளுக்கும் இந்தப் படைகளுக்கும் சம்பந்தமில்லாது போய்விடும். என்ருலும் இந்த முயற்சி முட்டாள் தனமான தென்று சொல்ல முடியாது. ஏனென்ருல், அதனுல், நல்ல இலாபம் கிடைக்கத் தக்க நிலையி லிருந்தது. வழக்கம் போல் இன்னும் 3 வாரங்கள் வரை மூடுபனி கப்பிக்கொண்டிருந்தால், நிலைமை வேறுவிதமாய் முடிந்திருக்கும். ஸ்டாலின்கிராடுக்குக் கிழக்கே 400 மைல் தூரத்தில் நீப்பர் வளைவு இருக்கிறது. இந்த 400 மைலையும் ஒரே மூச்சில் ரஷ்யர்கள் சென்ற மழைகாலத்தில் கடந்து வந்தனர். ரஷ்யப் படைகள் பரந்திருந்தன. எதிர்பாராதபடி தரையும் வெகு ஆழத்திற்குச் சேருகிவிட்டது. இவற்ருலும் ரஷ்யப் படைகள் மிகவும் சங்கடப் பட்டன.

இந்தச் சமயத்தில் ஹிட்லர் சிறு சிறு படைகளைக் கொண்டு அவ்வப்போது தாக்கவில்லை. ஆனுல் 25 டிவிஷன் படைகளும், ஏராளமான டாங்கிகளும் தளவாடங்களும் கொண்டு தாக்கினுர். இந்தப் பகுதியில் இவ்வளவு ஏராளமான படைகளையும் தளவாடங்களையும் சேகரிக்க ஹிட்லரால் எப்படி முடிந்தது? காக்கஸஸ், க்ரிமியா, மேல ஐரோப்பியா ஆகிய பிரதேசங்களிலிருந்து மீட்கப்பட்ட படையினரைக் கொண்டு, ரஷ்யர்கள் முன்னேற்றத்தைத் தடுத்தார்கள். இங்கே தேர்ந்த படையினரையும் ஏராளமான சப்ளைகளையும் டாங்கிகளையும், மழைகாலக் கடைசியில் ஹிட்லர் கொண்டு வரக் காரணமென்ன? ஏனென்ருல், உக்ரேனையும் அதிலுள்ள விளை பொருள்களையும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு எவ்வளவு தியாகமானுலும் செய்ய அவர் தயாரா யிருந்தார். மற்றொரு காரணமும் உண்டு. கருங்கடலை யடுத்த பால்கன் நாடுகள் தான், ஜெர்மன் ஆதிக்கத்திற்குட்பட்ட பல நாடுகளிலும் பலவீனமானது. செம்படைகளோ மகா வேகமாக வந்து பெரும் ஆபத்தை விளைவிக்கிருர்கள். ஆகவே, அவர் அந்தப் பகுதியையும் பந்தோபஸ்து செய்ய வேண்டி வந்தது.

ரஷ்யர்கள் அடைந்த வெற்றிகளைக் கண்டு திடுக்கிட்ட ஹிட்லர், தன் கையிருப்பில் வைத்திருந்த படைகளையும் தளவாடங்களையும் இங்கே அனுப்பும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இனி நேச நாட்டுப் படைகள் மேற்கே ஜெர்மனியைத் தாக்கும் போது, ஹிட்லர் படைகளின்றி தவிப்பார். ஆகையால் இந்த ஏற்பாடும் நேசநாடுகளுக்கு மிகவும் நல்லது தான்.

# அய்யோடா!

ஒரு வியாபாரத்தை நடத்துகிறோம். அது முடிந்து போகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் லாப, நஷ்டக் கணக்கு பார்ப்போமா இல்லையா? அதே போல, உலக மகா யுத்தம் என்கிற பெரிய வியாபாரம் என்றாவது ஒரு நாள் முடிந்து தானாக வேண்டும். அப்பொழுது அதில் ஏற்பட்ட லாப நஷ்டங்களை எல்லோரும் கணக்கிட்டுப் பார்ப்பார்கள். அந்தக் கணக்கைப் பார்க்கிற மனுஷர் எவரானாலும் பிரமித்துத் தான் போவார் என்பதில் சந்தேகமே இல்லை. அதைப் பார்க்கிறவர் இங்கிலீஷ் பேசுகிறவராக இருந்தால், 'ஓ! மை காட்!' என்பார். தமிழராக இருந்தால், 'அய்யோடா! இவ்வளவு நஷ்டமா ஆயிருக்கு!' என்று தான் சொல்லுவார்.

ஹிட்லர் என்ற ஒரு தனி மனுஷனின் கொனஷ்டைப் புத்தியின் பயனாகவே, இப்படி உலகெங்கும் பலர் கண்ணீர் விடும்படியாக ஆயிற்று; அவர் போகிற போக்கைப் பார்த்துத் தான், ஜப்பானில் உள்ள சிலருக்கும், போரில் இறங்கலாமே என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனாலே, புண்படாத நாடே இல்லை என்று ஏற்பட்டு விட்டது என்கிற விஷயங்களை அறியும் பொழுது, யாரானாலும் ஹிட்லரைப் பழிக்கத் தான் செய்வார்கள்.

ஒரு ஈ, எறும்பைக் கொன்றாலே பாபம் என்பார்கள். அப்படியிருக்க, லக்ஷக்கணக்கிலே பல வீர வாலிபர்களைக் கொன்ற பாபம் எவ்வளவு பெரிதாயிருக்குமென்று பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வளவு பாபமும் ஹிட்லர் தலையிலே தான் போய் விழும். இத்தனைக்கும் பகவான் முன் போய் நின்று அவர் பதில் சொல்லியாக வேண்டுமல்லவா? இதெல்லாம் அவருக்கு எங்கே தெரியப் போகிறது?

## ஹிட்லர் பகற் கனவு

பிரம்மசாரி ஓடம் கவிழ்த்த கதை என்பார்கள். ஹிட்லர் ஒரு பிரம்மசாரி தான். இவ்வுலகிலே பரவியிருந்த சமாதானம் என்ற ஓடத்தைக் கவிழ்த்து, அனைவரையும் திண்டாட்டத்தில் விட்டுவிட்டார் இந்தப் பாழும் பிரம்மசாரி. அவரால் கவிழ்க்கப்பட்ட ஓடத்தை, நேச தேசத்தார் சரிப்படுத்த பெரும்பாடு படவேண்டியிருக்கிறது. ஆனால், இந்தக் காரியத்திலே நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற தைரியம் நேச தேசத்தாருக்கு இருக்கிறது. இந்த யுத்த ஆரம்பத்திலே, ஹிட்லர் நினைத்தார், தாம் நினைத்த தேசங்களை எல்லாம் திடீரெனப் போய்த் தாக்கி விடலாம்; அவ்வாறு தாக்குவதால், அந்தந்த நாட்டாரிடை ஏற்படும் திக்பிரமை தீரு முன் அவர்களை அடக்கி, தம் கைக்குள் போட்டுக் கொண்டு விடலாம் என்று. இந்த உலகமே ஆயுத பலம் அற்று, சோனியாகத் தூங்குவதாகவே அவர் கனவு கண்டு கொண்டிருந்தார் போலிருக்கிறது.

எடுத்த எடுப்பிலே எல்லோருமே சற்று பிரமித்துத் தான் போனார்கள். ஆனால் இந்த உலகம் கும்பகர்ணனைப் போல் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. அதி வேகமாகவே விழித்தெழுந்தது. இப்பொழுது பிரமிக்கும் நிலைமையிலிருப்பவர் ஹிட்லர் தான் என்பது தெளிவாகி விட்டது.

## ஹிட்லர் பாடு திண்டாட்டந் தான்

அவரது படைகள் எல்லாம் இப்பொழுது தத்தம் தலைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காகப் போராடுவதிலேயே முனைந்திருக்கின்றன. ட்யூனிஸியாவை எடுத்துக் கொள்ளுங்கள். ஐரோப்பிய யுத்தத்திலே இந்த ட்யூனிஸியப் போர் வெகு முக்யமானதாகும். இந்த வட ஆப்பிரிக்கப் போர் ஒரு முடிவுக்கு வந்த பின் தான், ஐரோப்பாவைத் தாக்கும் விஷயத்திலே நேச தேசத்தார் கவனம் செலுத்த முடியும். ஐரோப்பாவை மறுபுறத்தில் தாக்கினால் தான், ஹிட்லருக்கு உண்மைத் திண்டாட்டம் ஆரம்பமாகும். ருஷ்யர் ஒரு புறமும், நேச தேசத்தார் மற்றொரு புறமும் வந்து இடிக்கத் தொடங்கி விட்டால், ஹிட்லர் பாடு திணறிப் போய்விடும் என்பதில் ஐயமே இல்லை. அவரைத் திணற அடித்து, உண்டு இல்லை என்று ஆக்கிவிட வேண்டுமென்பதே நேச தேசத்தாரின் இறுதி லக்ஷ்யம். அந்த லக்ஷ்யத்தை அவர்கள் அடைந்து விட்டால், சண்டை தானாக நின்று விடுமே

இத்தனையையும் நினைவில் வைத்துக் கொண்டு தான், பிரிட்டிஷ் எட்டாவது சேனைக்குத் தலைவராக உள்ள வீரர் ஜெனரல் மாண்ட்காமரி சென்ற இருபதாந் தேதியன்று, தமது படைகள் மாரெத் அரண்களைத் தாக்கப் புறப்படு முன் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்.

"இந்த மாரெத் அரணிலே ரோமல் பெரிய நம்பிக்கை வைத்திருக்கிறார். அவரது படைகளில் பெரும் பாகம் இங்கிருக்கிறது. இந்தப் படைகளை அழிக்க வேண்டும். அப்பால், கிர்ரென்று ஸ்பாக்ஸ், ஸூஸ் போன்ற முக்கிய இடங்களைப் பிடித்துக் கொண்டு நேரே ட்யூனிஸை அடைய முயல வேண்டும். ட்யூனிஸ் பிடிபடும் வரை நமது படைக்கு ஓய்வு கிடையாது. நமது பகைவர் ஒன்று சரணடைய வேண்டும்; அல்லது அவர்களை, கடலில் நாம் கொண்டு தள்ள வேண்டும். அது வரை நாம் களைத்து நிற்கவே கூடாது. ஒவ்வொருவரும் இதை நினைவில் வைத்துக் கொண்டு, தைரியத்துடன் போர் புரிய வேண்டும்."

## 8-ம் சேனை சரியான போடு போட்டது

இதுவே அவரது அறிக்கை. இந்த அறிக்கையை எட்டாவது சேனையில் உள்ள ஒவ்வொருவரும் நன்றாக மனப்பாடம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது. பத்து நாட்கள் மாரெத் அரண் முன்னால் பயங்கரமான போர் நடந்தது. ரோமலும் பிரமாதமாகத் தான் சண்டை போட்டார். 'அதற்குள் பிரமாதமாக எதையும் எதிர்பார்த்து விடாதீர்கள். நமது விரோதிக்கு இங்கு நல்ல பலமிருக்கிறது' என்று பிரதம மந்திரி சர்ச்சில் கூட பார்லிமெண்டில் எச்சரித்தார். ஆனாலும், பிரிட்டிஷ் எட்டாவது சேனை சரியான போடு போட்டு விட்டது.

அது காரணமாக, ரோமலின் படைகள் சூழப்படும் நிலைமை ஏற்பட்டு விட்டது. பார்த்தார் ரோமல். எடுத்தார் ஓட்டம்! மாரெத் அரண், மற்றுமுள்ள பாதுகாப்பு ஸ்தலங்கள் எல்லாம் எட்டாவது சேனையின் கைகளுக்கு வந்து விட்டன.

ரோமலும் அவரது படைகளும் கடும் போர் புரிந்து கொண்டே பின் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். கேப்ஸ் என்ற நகரம் வழியில் இருக்கிறது. அங்கும் ரோமல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார். அந்த நகரத்தை பிரிட்டிஷ் விமானங்களும் கப்பல்களும் தகர்த்து வருகின்றன. அங்கும் சூடு தாங்காமல், அந்த இடத்தை ரோமல் காலி செய்து விட்டு ஓடக் கூடும் என்கிறார்கள்.

கேப்ஸ் நகரம், மாரெத் அரணிற்குச் சமீபத்தில் தானிருக்கிறது. ஆனாலும், இப்பிரதேசத்திலே முன்னேறுவது வெகு சிரமமான காரியம். காரணம், பின்வாங்கும் ரோமலின் படைகள் பாதைகளை எல்லாம் பாழாக்கிச் செல்வதோடு, வெடிகளையும் வைத்துச் சென்றிருக்குமல்லவா?

## அப்புறம் என்ன செய்வார் ரோமல்?

கேப்ஸ் நகரத்தைக் காலி செய்துவிடுகிறாரய்யா! அப்புறம் என்ன செய்வார் ரோமல்? என்று கேட்பீர்களே! செய்வதென்ன இருக்கிறது? பாக்கி தம்மிடமுள்ள படைகளை, தலை பிழைத்தால் தம்பிரான் புண்யம் என்று சொல்லிக் கொண்டு, கூட அழைத்துக் கொண்டு கடற்கரையோரம் வழியாக வடக்கே ஓடுவார். கடற்கரையிலிருந்து நாற்பத்தைந்து மைல் அகலமுள்ள பிரதேசத்திலே தான் அவர் தமது ஓட்டத் திறமையைக் காட்ட வேண்டும். இவ்வளவு குறுகிய பிரதேசத்திலே லக்ஷக் கணக்கிலே ஒரு படை தாறுமாறாக ஓடுவது என்றால், மேலே பறக்கும் விமானிகள் கண்களில் விழாமல் போய்விட முடியுமா என்ன? அந்த விமானிகள் பாடு வேட்டை தான்.

இந்தச் சமயத்திலே, கடற்கரையை அடைய மேற்கிலிருந்து கிழக்கே பாய்ந்து வருகின்றன அமெரிக்கப் படைகள். இந்த யுத்தத்திலேயே முதல் தடவையாக, அமெரிக்க, பிரஞ்சு, பிரிட்டிஷ் ஆகிய மூன்று தேசப் படைகளும், ஜெனரல் அலெக்ஸாந்



தர் என்ற ஒரு தலைவரின் கீழ், மத்ய ட்யூனிஸியாவில் போராடுகின்றன. இப்படையினர் பெறும் வெற்றிகள் ட்யூனிஸியாவில் அச்சுப்படைகளின் நிலைமையை வர வர மோசமாக்கி வருகின்றன. ரோமல் எப்படியாவது வடக்கே யுள்ள வான் ஆர்னீமின் படைகளோடு கலந்து கொள்ள முயலலாம். அவ்வாறு அவர் கலந்து கொள்ளுமுன் அவரது படை எப்படியிருக்கும் தெரியுமா? "கழுதை தேய்ந்து கட்டெறும்பு" ஆனது போல மாறி விடும். அப்பால், தெற்கு ட்யூனிஸியாவின் பெயர் அதிகம் அடிபட வேண்டிய அவசியம் இராது.

ட்யூனிஸியப் போர் எவ்வளவு முக்யமான தென்பதைக் காட்ட இன்னொரு விஷயம். ஹிட்லர் ட்யூனிஸியாவில் உள்ள அச்சுப் படைகளுக்கு என்ன உத்திரவிட்டிருக்கிறார் தெரியுமா? 'சாத்தியமான வரை எதிர்த்துப் போராடுங்கள்; இல்லையேல் மடியுங்கள்' என்று இவ்வாறு உத்திரவிட்டு விட்டு அவர் ருஷ்யப் போர் முனைக்குப் போய்விட்டாராம்.

## வீரருக்குப் பரிசு, காதற் கடிதங்கள்

நாமும் அங்கு போய்ப் பார்த்துவிட்டு வரலாம், வாருங்கள்! அதற்கு முன்னால் ஒரு தமாஷ் செய்தி. தமாஷுக்கு இது சமயமா என்று கேட்பீர்கள்? அதை இப்பொழுது சொல்லா விட்டால், பிறகு பழசாகி விடுமே! ஜெனரல் மாண்ட்காமரி வட ஆபிரிகாவில் அடைந்து வரும் வெற்றிகளைக் கண்டு, உலகமே ஆனந்தங் கொண்டு வருகிறது. யுத்தத்தின் போக்கையே மாற்றிய சூரர் என்று அவரை எல்லோரும் புகழுகிறார்கள். நாமெல்லோருமே அவரது திறமையை எண்ணி ஆச்சரிய மடைகிறோம். ஆனால், பிரிட்டனில் உள்ள இரண்டு ஸ்திரீகள் எல்லோருக்கும் மேலே போய் விட்டார்கள். அவர்களிருவரும், ஒருவர் செய்கிறது இன்னொருவருக்குத் தெரியாமல், ஜெனரல் மாண்ட்காமரி மீது காதல் கொண்டு விட்டார்கள். அதைக் கடித மூலமாகவும் அவருக்குத் தெரிவித்து விட்டார்கள். இவ்விருவரின் கடிதங்களும் அவருக்கு ஒரே தபால் மூலம் கிடைத்ததாம். அவற்றைப் பார்த்து விட்டு அவர் கடகட வென்று சிரித்திருப்பார் எனவே நம்புகிறோம். அதைவிடப் பெரிதாக, ரோமலின் படைகள் மாரெத் அரண்களை விட்டு ஓடுவதைப் பார்த்து அவர் சிரித்திருக்கலாம். தமக்கு வந்த காதல் கடிதங்களுக்கு என்ன பதில் எழுதினார் என்பதை அவர் தெரிவிக்கவில்லையே!

உம்! இப்பொழுது போகலாம் வாருங்கள் ருஷ்யப் போர் அரங்கத்திற்கு! அங்கே, ஸ்மாலனெஸ்க் என்ற நகருக்கு ஒரு பக்கத்திலே முப்பது மைல்களுக்குள்ளும், மற்றொரு புறத்திலே நாற்பத்தைந்து மைல்களுக்குள்ளும் ருஷ்யப் படைகளிருக்கின்றன. யுத்தம் கடுமையாகவே இருக்கிறது. லெனின்கிராடை நாஜிகள் தடபுடலாக விமானங்களைக்கொண்டு தாக்கினார்களாம். தெற்கு ருஷ்யாவிலே நடக்கும் போர் தான் அதி பயங்கரமானதாக இருக்கிறதாம். அங்கே கார்கோவ் நகரை நாஜிகள் கைப்பற்றிக் கொண்டபின், அவர்களுக்குக் கொஞ்சம் அனுகூலம் ஏற்பட்டது. ஆனால், அந்நகரிலிருந்து 20, 30 மைல்கள் தான் அவர்கள் முன்னேறினார்கள். அதற்குமேல் போகவேண்டுமானால், டானெட்ஸ் நதியைக் கடந்தாக வேண்டும்.

## ரஷ்யர்கள் கொன்று தள்ளுகிறார்கள்

இதற்குத் தான் ருஷ்யர் இடங்கொடாது, கொன்று தள்ளிக் கொண்டிருக்கிறார்கள், புதிது புதிதாக ஜெர்மன் படைகள் வந்து குவிகின்றனவாம். இங்கே அப்படைகள் ருஷ்யப் படைகளைத் துளைத்து விட்டால், அப்பால், மாஸ்கோவிலிருந்து ராஸ்டாவ் செல்லும் பாதைக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமாம். இந்த ஆபத்து நேராமலிருக்கவே ருஷ்யர் அரும்பாடு பட்டுப் போராடுகிறார்கள்.

ருஷ்யாவிலே யுத்தம் நீடித்து நடக்க நடக்க, ஹிட்லருக்கு ஆள் பஞ்சமும் நீடித்துக் கொண்டேதானிருக்கும். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் கட்டாயத்தின் பேரில் ஆள் சேர்க்கச் சொல்லியிருக்கிறார் அவர். பெல்ஜியத்திலே, காலேஜ்களில் சேரும் ஆண், பெண் அனைவரையும் ராணுவத்தில் பதிவு செய்து கொள்ளும்படி உத்திரவு பிறந்திருக்கிறதாம். அதற்கு மறுத்தால், அவர்களை கெடுபிடி கட்டாயத்தின் பேரில் ஜெர்மனிக்குக் கொண்டுபோய், கடும் வேலைகளில் ஈடுபடுத்தப் போகிறார்களாம்.

போலந்து நாட்டிலே, இம்மாதிரி கட்டாயத்தின் பேரில் ஆட்களைச் சேர்க்கையில், நாஜிகளுக்கும், அந்த ஆட்களுக்கும் பெரிய சண்டை நடந்ததாம். இருதரப்பிலும் ஏகச் சேதம். ஜெர்மானியரைக் கண்டால் எங்குமே வெறுப்பாகத் தானிருக்கிறது. தக்க சமயம் வந்தால், எல்லோரும் 'கொல்'லெனக் கிளம்பி விடுவார்கள்.

நார்வே தேசத்தின் மீது 500 ரகசிய ஏஜெண்டுகளும், 500 நார்வீஜிய நாஜி அதிகாரிகளும் பாரசூட் மூலம் இறங்கி யிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஆங்காங்கே ஒளிந்திருக்கிறார்கள். அவர்கள் நாளாவட்டத்தில் தங்கள் வேலையைக் காட்டுவார்கள். இத் தகவலறிந்த நாஜி அதிகாரிகள் கண்ணிலே எண்ணெயை ஊற்றிக் கொண்டு, சுற்றி வருகிறார்களாம்.

## பெர்லின் மீது 6-வது தாக்குதல்

பெர்லின் நகரம் 6-வது தடவையாகத் தாக்கப்பட்டிருக்கிறது. சேதத்திற்கோ கணக்கேயில்லை. பட்டப் பகலிலேயே நேச தேச விமானங்கள் குண்டு வீசத் தொடங்கி விட்டதால், அவற்றை எதிர்த்துப் போராட அதிகப் படியான வேட்டை விமானங்கள் தேவை என்று அங்கு ஒரு கூக்குரல் கிளம்பியிருக்கிறாப் போலிருக்கிறது. இது கேட்டு, ருஷ்ய டுனிஸியப் போர் முனைகளிலிருந்தெல்லாம் பல விமானங்களை ஜெர்மனிக்கு அனுப்பி வருகிறார்கள் என்று கூறப்படுகிறது.

அமெரிக்க விமானிகள் நாளுக்கு நாள் அதி பிரமாதமான காரியங்களைச் சாதித்து வருகிறார்கள். ஜெர்மனியையும், அதன் வசப்பட்ட நாடுகளையும் இடைவிடாது தாக்க அவர்கள் பெரிய திட்டம் போட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் விமானிகளோ, ஜெர்மானியத் தொழிற்சாலை நகரங்களைத் தவிடு பொடியாக்கி வருகிறார்கள். அதைக் கண்டு ஒவ்வொரு நகரமாக நாஜிகள் காலி செய்து வருகிறார்கள். பிரிட்டிஷாரின் புது பீரங்கிகள் அச்சு நாட்டாரை அலற அடித்து வருகின்றனவாம். அதைப் பார்த்து ஒரு ஜெர்மன் நிபுணர், 'நெடுந்தூரம் சுடும் பீரங்கிகளிலே இன்னும் பெரிய ரகம் ஒன்று தயார் செய்கிறோம் பாருங்கள்' என்று பயமுறுத்துகிறாரும். 'ஓய்! இந்த சலசலப்புக்கெல்லாம் இந்தப் பனங் காட்டு நரி பயப்படாது ஐயா!' என்று சொல்லிக் காட்டி வருகிறார்களாம் நேச தேசத்தார். 'ஜெர்மனியும் சரி, இத்தாலியும் சரி தோற்கடிக்கப்படும். அதோடு யுத்தம் நின்றுவிடாது. ஜப்பானியரையும் அடக்கி ஒடுக்கும் வரை, பிரிட்டன் யுத்தத்தை நிறுத்தாது. பலர் சேர்ந்து செய்து கொள்ளும் உடன்படிக்கைகளை ஒரு சிலர் உடைத்து காற்று வாக்கில் விடும் காரியத்திற்கு எந்நாளும் நாகரிக உலகோர் இடங் கொடுக்கவே கூடாது' என்று ஈடன் துரை சொல்லி யிருக்கும் வார்த்தைகள் கவனிக்கத் தக்கவை.

## "இன்னும் 10 வருஷமானாலும் தயார்!"

இது இப்படியிருக்க, ஜப்பானியர்கள் பல வருடங்களுக்கு முன் ஆரம்பித்த சீனப் போர் இன்னும் மும்முரமாகவே நடக்கிறது. 'இன்னும் நூறு வருடங்களானாலும் போராடத் தயார்' என்கிறார் ஒரு சீன அதிகாரி. இத்தகைய வீர மனப்பான்மை உள்ள சீனரை யாராவது அசைக்க முடியுமா? ஓரிடத்தில் அவர்களை விஷவாயுப் பிரயோகத்தால் அடக்க முயன்றார்களாம் ஜப்பானியர். 'ஏய் ஜப்பானியரே! உஷார்! நீங்கள் தொடர்ந்து விஷவாயுப் பிரயோகத்திலிறங்கினால், நாங்களும் அந்தப் பாடத்தைத் திருப்பிப் படிக்கத் தொடங்குவோம்' என்றார் ரூஸ்வெல்ட்.

சீன யுத்தம் சாதாரணமானதல்ல. அங்கு அறுபத்தி ரெண்டே முக்கால் லக்ஷம் ஜப்பானியர்களை ஜப்பான் முடக்கி வைக்க வேண்டி வந்தது. அவர்களில் ஆறரை லக்ஷம் பேர்கள் பரலோகம் போய் விட்டார்கள். அய்யோடா! என்ன அநியாயம்! இன்னும் எத்தனை பேர்கள் சாகவேண்டுமோ! 'இன்னும் எதிர்பாராத சங்கடங்கள் பல ஏற்படலாம். அதற்குத் தான் நமது உற்பத்தி வேலைகளை அதிகரித்து வருகிறோம்' என்கிறார் டோஜோ. ஆப்பை பிடுங்கின குரங்கின் கதையை, டோஜோவுக்கு நினைப்பு மூட்ட விரும்புகிறோம்.

## மணமும் உருசியுந் தரும் செடி

### புதினு



**வர்ணனை.**—பூமியின்மேல் படரும் செடி. கணுக்களில் இலைகள் விடுகிறது. இதன் தண்டுகள் பூமிக்குள் செல்லுகின்றன. இதற் கென்று ஒரு தனி மணமுண்டு.

**பரப்புதல்.**—இந்தக் கொடியின் வேரைக் கொண்டு வந்து நன்ருகச் செய் நேர்த்தி செய்யபபட்ட பூந்தொட்டிகளிலாவது பாத்தி களிலாவது நடவேண்டும்.

**பருவம்.**—எல்லாப் பருவங்களிலும் நட லாம்.

**சாகுபடி.**—பூமிக்கு நன்ருக எருவிட்டு கொடியை ஊன்றி, நிறைய நாள்தோறும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மலை நாடு களில் நன்ருக வளருகிறது. சம பூமிகளில் நிழலில் தான் இதை வளர்க்கச் செய்ய வேண்டும்.

**உபயோகங்கள்.**—சட்னி, ரசம், கூட்டுக் கறிகள், குழம்பு, முதலியவற்றிற்கு மணங் கொடுக்கவும், பட்டாணி அல்லது உருளைக் கிழங்கு ஆகியவற்ருேடு வேக வைத்துச் சாப் பிடவும் உபயோகப்படும்.

**உள்ளடக்கம்.**—சுண்ணச் சத்து 0·277 சதமானம்; மாக்னீஷியம் 0·066 சதமானம்; நிமதாக்கினி 0·185 சதமானம்; இரும்புச் சத்து 0·015 சதமானம்; விட்டமின் பி-100 கிராம் கொண்ட யூனிட்டிக்கு 69; விட்டமின் சி-100 கிராம் கொண்ட யூனிட்டிக்கு 123 சதமானம்.

## சிப்பாய்கள் படிக்க புத்தகங்கள் வேண்டும்

புத்தகங்கள் படிப்பதில் உங்களுக்கு மிகுந்த ஆசை யுண்டா? உண்டு என்ருல், மேன்மை தங்கிய இந்திய தளபதி இந்த வாரம் விடுத்திருக்கும் ஒரு வேண்டுகோளை, இந்தியாவிலுள்ள படைகளிடம் அக்கரை கொண்டிருக்கும் நீங்கள், கட்டாயம் பாராட்டுவீர்கள். நம்மைப் பாதுகாப்ப தற்காக மட்டுந்தான் இந்தப் படைகள் இருக்கின்றனவென்று, தெரியாதவர்கள் நினைத்துக் கொண் டிருக்கலாம். இந்தியர்களாகிய நாம், மிக அருமையாகப் போற்றி வரும் கலைகளை அழிக்க முயற்சிக் கும் எதிரிகளைச் சாக அடிக்கப் போகிறவர்கள் இவர்கள் தான் என்று, அவர்களுக்குத் தெரியாது.

2. சிப்பாய்களில் நோயானவர்களுக்கும் காயப்பட்டவர்களுக்கும், தனித்த பகுதிகளிலிருந்து சேவகம் செய்கிறவர்களுக்கும் புத்தகங்களைச் சேகரித்து அனுப்புவதில், கூட்டு யுத்த தர்மக் கமிட்டி யார் செய்துள்ள அருமையான வேலை பற்றி, இந்தப் பத்திரிகாசிரியருக்கு நன்ருகத் தெரியும். இதற்கு முன்பே நீங்கள் புத்தகங்கள் கொடுத்து உதவி யிருக்கலாம்; இனியும் கொடுக்கக் கூடும். உங்கள் சொந்த ஊருக்கு வெகு தூரத்திற்கப்பால் நீங்கள் நோயாகவோ தனிமையாகவோ இருப்ப தாக வைத்துக் கொள்ளுவோம். அப்போது உங்கள் பொழுதைக் கழிக்க ஏதேனும் புத்தகங்களிருந் தால் எவ்வளவு வசதியா யிருக்கும்? பதினுயிரக் கணக்கானவர்கள் இந்த நிலைமையி லிருக்கிருர் கள். அவர்களுக்கு லட்சக் கணக்கான புத்தகங்கள் உடனே வேண்டியிருக்கிறது. நீங்கள் படித்து முடிந்த புத்தகங்கள் இருந்தால் உங்கள் ஜில்லா கலெக்டருக்கு அவற்றை அனுப்புங்கள். படையின ருக்கு அவை போய் கிடைக்கத் தக்க ஏற்பாடுகளை அவர் செய்வார். எல்லா மொழிகளிலும் புத்தகங் கள் தேவை. படங்களுள்ள பத்திரிகைகளும் தேவை. ஆகவே உங்கள் அலமாரியைச் சோதித்து, புத்தகங்கள் கொடுத்து உதவுங்கள்.

## இந்திய படைத் தலைவர் வேண்டுகோள்

"நான் கிழக்கிந்தியாவிற்கு அல்லது மற்ற எந்த இடத்திலாவது உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் போகும் போதெல்லாம் ஒரு விஷயத்தைத் தெளிவாகக் காண்கிறேன். அங்குள்ளவர்களுக்குப் படிப்பதற்கு எதுவு மில்லை. அவர்களுக்கு இது மிகவும் தேவை. நான் சதா படித்துக் கொண்டிருக்கும் பழக்க முடையவன். ஆகவே படிக்க வேண்டுமென்று விரும்புகிறவர் களுக்கு உதவ நான் பெரிதும் முயற்சித்து வந்திருக்கிறேன். துக்கடா புத்தகங்கள் (Light literature) தான் பொதுவாகத் தேவை. அவற்றிலுள்ள விஷயங்களும் கடுமையா யிருக்கக் கூடாது. கதைகள், சம்பவங்கள் முதலியவை தான் பெரும் பாலும் தேவை.

மேன்மை தங்கிய பீல்ட் மார்ஷல் சர். ஆர்ச்சிபால்ட் வேவல்,

இந்திய படைத் தலைவர்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் வருஷம் ஏப்ரல்மீ 9உ, வெள்ளிக்கிழமை [இதழ் 15

## படைகளின் பொது நோக்கம்



"பிரிட்டிஷ் முதலாவது படையைச் சேர்ந்த பல சிப்பாய்கள் வட ஆப்பிரிக்கா வில் கால் வைத்தது முதல் இடைவிடாது போராடிக் கொண்டிருக்கிருர்கள். மலை களில் குளிர் காலங்களில் ஏற்படும், கஷ்டங்களை ஜெயித்தார்கள். என்ருலும், அவர்கள் முழு ஊக்கத்தோடும், உறுதி யோடுந் தான் இருந்தார்கள்."

"ஆரம்ப காலத்தில் கிடைத்த எல்லா அமெரிக்கப் படைகளையும் இந்த பிரிட்டிஷ் முதல் படைக்கு உதவியாக அனுப்பினேம். இந்த அமெரிக்கப் படைக ளெல்லாம் இப் போது ஒன்று திரட்டப்பட்டு ஜெனரல் அலெக்சாந்தர் தலைமையில் ஒரே படை யாகப் போராடிக் கொண்டிருக்கிறது."

"எதிரியை நசுக்க வேண்டு மென்பது தான், இந்தப் படைகளின் பொது நோக்கம். எனவே, இவை பரி பூரண சமரசத்தோடும், ஒற்றுமையோடும் உழைத்து வரு கின்றன. இதனுல் இந்தப் போர் முனையில் மட்டும் வெற்றி கிடைப்பது மன்றி நமது எல்லா எதிரிகளையும் நாளடைவில் முழுதும் தோற்கடிக்க முடியும்."

—ஜெனரல் ஐஸ்னேவர்.

# முரசொலி



"ஆறு மாதங்களுக்கு முன்னதாக சிலர் நினைத்ததை விட, திடீரென்று யுத்தம் முடிந்து போகலாம். ஜெர்மனி ஆள் பலம் இல்லாது திண்டாடுகிற தென்று நமக்குத் தெரியும். ரஷ்யாவில் ஏராள மான நஷ்ட மடைந்திருக்கிறது. தான் கைப்பற்றிய நாடுகளை அடிமைப் படுத்தி வைத்திருக்கும் கஷ்டம் அதற்கு அதிகப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நீங்கள் எந்தத் துறையைப் பார்த்தாலும், அதன் திண்டாட் டம் வளர்ந்து கொண்டிருக்கின்றது. அதன் போர் முயற்சியின் கஷ்டம், மிக மிக அதிகப்பட்டால், அந்த இயக்கமே பிளவு கண்டு அழிந்துவிடக் கூடும்."

—ஹலிபாக்ஸ் பிரபு.

* * * * *

"சமாதானம் நிலைத்திருக்க வேண்டுமானால் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும், அமெரிக்காவும், ரஷ்யா வும், சீனாவும் ஒன்றை ஒன்று தெளிவாக உணர்ந்து கொள்வது மட்டும் போதாது. எல்லா நேச நாடுகளும் பரிபூரணமாக ஒத்துழைக்க வேண்டும்."

"சேர்ந்தே இந்த யுத்தத்தை நாம் வெல்வோம். சமாதானத்தையும் நாம் சேர்ந்தே அடைவோம். இதற்குக் குறைந்த எதுவும், நமக்குத் திருப்தி யளிக்காது. நமது மக்கள் சுயேச்சை வாழ்வு அடையவும், தம் இஷ்டப்படி நடக்கவும் தகுந்த உலகத்தை அமைத்துக் கொடுக்க வேண்டிய கடமை, உங்களுக்கும் எனக்கு மிருக்கிறது."

—அந்தோனி ஈடன்.

* * * * *

"யுத்த சரித்திரம் எழுதப்படுகின்ற காலத்திலே, வெற்றிக்கு சர்ச்சில் எப்படிப் பட்ட மகத்தான உதவி செய்திருக்கின்ருரென்று எழுதப்படும். அது தொடர்ச்சியான உதவி. அந்த உதவியின் பொருட்டு விஞ்ஞான ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தும்படியும், இந்த யுத்தத்தில், அந்த ஆராய்ச்சியின் பலனைக் கண்டு பிடிக்கப் பட்டவைகளைக் கையாளும்படியும் அவர் இடைவிடாது வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிருர்."

—காப்டன் ஆலிவர் லிட்டில்டன்.

* * * * *

"எதிரி கொடுத்த மருந்தையே, எதிரிக்கு பிரிட்டன் கொடுக்க வேண்டியதாயிற்று. நாம் தகுந்தபடி வெடி குண்டுகளை எறிந்தால், எதிரியைத் தகர்த்து விடலாம். ஜெர்மானியர்களையும், இத்தாலியர்களையும் வட ஆப்பிரிக்காவிலிருந்து விரட்ட வேண்டிய காலம் வந்துவிட்டது. அப்போது யுத்தத் தந்திர முறையிலேயே பெருத்த வேற்றுமை தோன்றும்."

—மிஸ்டர் ஹெல்பர்ட் மாரிசன்.

* * * * *

"ஆப்பிரிக்காவில் செய்தது போலவே டன்கர்க்கிலும் அச்சு நாடுகள் செய்ய வேண்டி வரும். சீக்கிரத் தில் மத்திய தரைக் கடலில் ஏராளமான வெள்ளைத் தொப்பிகள் மிதக்கும்."

—ராய்ட்டர்.

* * * * *

"மிருக பலத்துக்கும், நியாயத்திற்கும் ஏற்பட்ட போராட்டத்தின் பலாபலன்களை வெகு செவ்வையாக, அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் உணர்ந்தார். எனவே, ஜனநாயகத்தின் ஆயுத சாலையாக அமெரிக்காவை ஆக்குவதற்குத் திட்டமான முறைகளைக் கையாண்டார். ஆகவே, இவருடைய தூர திருஷ்டிக்கும், அரசியல் ஞானத்திற்கும் இக்காலத்தவரும், எதிர் காலத்தவரும் கட்டாயம் நன்றி செலுத்துவார்கள்."

—ஸ்ரீமதி ஷியாங்-கெய்-ஷேக்.

* * * * *

"இத்தாலியர்களே! விழித் தெழுங்கள்! இன்னும் சில மாதங்களே இருக்கின்றன. பிறகு நியாயத் தீர்ப்பு நாள் வரப்போகிறது. இத்தாலியைத் தாக்குவதற்கு 1000 கணக்கான பாம்பர் விமானங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. இத்தாலியர்களுக்குச் சாப்பாடு போடும் சைத் தொழில்களும், போக்கு வரவு சாதனங் களும் நிர்மூல மாக்கப்படும். ஐயோ! இத்தாலியே! உலக சரித்திரத்திலேயே இது வரையில் ஏற்பட்டிராத கதியை நீ அனுபவிக்கப் போகிருய்."

"என்றாலும், இன்னும் அவகாசம் இருக்கிறது. உன்னுடைய தளவாடங்களை ஒப்புவித்து விடவேண்டும். நாங்கள் பிரேரேபிக்கும் சமாதான நிபந்தனைகள் கண்ணியமான முறையில் அமையும். உள் நாட்டில் உள்ள பாஸிசத்தை நீங்கள் அழித்தால், வெளியிலிருந்து நாங்கள் உங்களுக்கு உதவுவோம். உங்கள் அரசாங்கத்தி லிருந்து விடுபடுங்கள். இன்னும் சில வாரங்களில், அல்ல, சில நாட்களில் இது ஏற்பட வேண்டும். இல்லையானல் பயனில்லை. உங்கள் வீட்டு வாசலிலேயே பீரங்கிகள் முழங்கும்."

—ஜெனரல் ஜிரால்டின் பிரதிநிதி.



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| ஜெனரல் எஸ்ஸினேவர் .. .. .. | 1 | படம் .. .. .. .. | 13 |
| முரசொலி .. .. .. .. | 2 | உயிர் தப்பினர்கள் .. .. .. | 14 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | தாமாகவே முகாமிற்குச் செல்லும் கைதிகள் .. .. .. .. | 14 |
| தலையங்கம் .. .. .. .. | 4 | உணவு சப்ளைகளை அதிகப்படுத்த ஆராய்ச்சி. | 15 |
| இந்திய விமானப் படை .. .. | 5 | எச்சரிக்கை (பாட்டு) .. .. .. | 15 |
| போர் வீரர்களுக்குப் புத்தகங்கள் வேண்டும். | 7 | பாவற்காய் .. .. .. .. | 16 |
| உம்! விட்டுடு! .. .. .. | 9 | ஒரு புதிய போட்டிப்பரிசு .. .. | 16 |
| டோஜோ பிரசங்கம் .. .. .. | 11 | | |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**ஜப்பானியில் உணவுப் பொருள் திண்டாட்டம்.**

நெதர்லந்து கிழக்கிந்தியத் தீவுகளை திடீரென்று அவசரமாக ஜப்பானியர்கள் தாக்கியதற்குக் காரணம், அவர்களுக்கு மிகவும் தேவையான எண்ணெயைக் கைப்பற்ற வேண்டுமென்னும் நோக்கத் தோடு தான்; ஆனால் இவர்கள் ஆசை பலிக்க வில்லையென்று சிட்னியிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளிலிருந்து தெரிகிறது. அந்தத் தீவுகளில் வசிக்கும் டச்சுக் காரர்கள் தம் நாசகால வேலையைப் பரிபூரணமாகவும் விரைவாகவும் செய்து முடித்து விட்டார்கள். எண்ணெய்க் கிணறுகளைப் பற்றியும் அவற்றை எப்படி நாசஞ் செய்யலா மென்றும் தெரிந்த நிபுணர்கள் கூறுவதிலிருந்து, தரகான், சரசாங்கா, சிரம் முதலிய எண்ணெய்க் கிணறுகளி லிருந்து இன்னும் எண்ணெய் ஊறு மென்றும், சாதாரண காலத்தில் 80 லட்சம் டன் எண்ணெய் உற்பத்தியான இடத்தில் இப்போது மிகமிகச் சொற்பமாகத் தான் உற்பத்தியாகு மென்றும் தெரிகிறது. பாலிக் பேப்பன் எண்ணெய்க் கிணறுகளை ரிப்பேர் செய்து விட்டதாக ஜப்பானியர்கள் கூறுவது முழுப் பொய்.

ஜப்பானில் எண்ணெய்க்கும் உணவுப் பொருள் களுக்கும் மிகுந்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் நடைபெற்ற வட்ட மேசை மகாநாட்டின் போது, ஜப்பானிய விவசாய இலாக்காத் தலைவரான இஷியி எய்னேசுக்கோ செய்த பிரசங்கத்தி லிருந்து தெளிவாகத் தெரிகிறது.

"உணவுப் பொருள்களை விநியோகிப்பது மிகவும் நெருக்கடியான தோர் பிரச்சினை," என்று அவர் குறிப்பிட்டார். அவர் கூறுகிற கணக்குப்படி, சீன யுத்தம் ஆரம்பமாகும் முன்பு ஒரு வருஷத்தில் 640 லட்சம் 'கோக்கு' (சுமார் $14\frac{1}{4}$ கோடி கலம்) அரிசி உற்பத்தியானது. கொரியாவி லிருந்தும் பார்மோசாவி லிருந்தும் சுமார் $5\frac{1}{3}$ லட்சம் கலம் அரிசி இறக்குமதியானது. ஜப்பான் உணவு இலாக்கா வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்களி லிருந்து, 14 கோடி $33\frac{1}{4}$ லட்சம் கலம் அரிசி தேவை என்று தெரிகிறது. ஜப்பானுக்குள்ள நாடுகளி லிருந்து இவ்வளவு அரிசி இடைக்காது என்பது தெளிவாகத் தெரிகிறது. அன்றியும் பஞ்சம் காரணமாக, கொரியாவி லிருந்தும் எதுவும் இறக்கு மதியாவதில்லை யென்று எயின்சுகோ வெளியிடுகிருர். நிற்க, ஜப்பானில் மட்டும் 14 கோடி 14 லட்சம் கலங்கள் தான் சாகுபடி செய்ய முடிந்தது. ஆகவே, தனக்கு வேண்டிய அளவிற்கு அரிசி சாகுபடி செய்ய ஜப்பானல் முடியவில்லை யென்று தெளிவாகத் தெரிகிறது. இந்த நிலையையில் என்ன செய்ய வேண்டும்?

"இந்த நிலைமையை முன்னிட்டுப் பார்த்தால், அடுத்த வருஷத்திற்கு அரிசிப்பாடு திண்டாட்டந் தான்; ஆகவே தென் பகுதிகளில் எங்கிருந்தெல்லாம் கொண்டு வரக்கூடும் என்னும் பிரச்சினை எழுகிறது" என்று எய்னேசுக்கா குறிப்பிடுகிருர்.

சென்ற மார்ச்சு மாதம் 17-ம் தேதி பாங்காக் வானெலி நிலையத்திலிருந்து, ஜப்பானியர்கள், தம் வசப்பட்ட நாடுகளை எப்படிச் சுரண்டுகிருர்கள் என்பது பற்றிப் பேசும்போது

"நமக்கு உண்ண உணவில்லை; அதனல் என்ன முழுகிப் போயிற்று"

என்று ஒரு விமர்சகர் குறிப்பிட்டார்.

தாம் கைப்பற்றிய நாடுகளில் உள்ளவற்றில் எந்த அளவிற்குச் சுரண்டிக் கொண்டுபோக முடியுமோ, அந்த அளவிற்குக் கட்டாயம் ஜப்பானியர்கள் சுரண்டிக் கொண்டு போகத் தான் செய்வார்கள். ஆனலும் இதிலும் ஒரு பெரும் கஷ்டம் இருக்கிறது.

"கப்பல்கள் கொஞ்சம் தான் இருக்கின்றன. ஆகையால் சுரண்டப்படும் பொருள்களை ஏற்றிவந்து ஜப்பானில் சேர்க்கமுடியும் என்று சொல்லுவதற்கில்லை. எனவே, நமக்குத் தேவையானவற்றையெல்லாம் ஜப்பானிலேயே உற்பத்தி செய்து கொள்ளுவதே நமது நோக்கமா யிருக்க வேண்டும்",

என்று எய்னேசுக்கா சொல்லுகிருர்.

கப்பல் போக்கு வரவு வசதியைக் குறித்து 1942-ம் வருஷம் நவம்பர் மாதம் கூட்டு முன்னேற்றத் திட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ற அளவு, சமாதான காலத்தில் வியாபாரக் கப்பல்களை உதவ் முடியாது என்று கருதுகிருர்கள். சென்ற பிப்ரவரி மாதம் 8-ம் தேதி ஒரு டோமி செய்தி கூறியதாவது:—

"யுத்தம் ஆரம்பித்த போது இருந்த அதே நிலைமையில் தான் இன்னும் ஜப்பானிய வியாபாரக் கப்பல் போக்குவரவு இருந்து வருகிறது."

ஜப்பானுடைய 'கப்பல் பலத்தைக் குறித்து ரோமாபுரிக்குத் தெரிவிக்கும் நோக்கத்தோடு தான் இந்தச் செய்தி ஒலி பரப்பப்பட்டது.

இப்போதுள்ள நிலைமையில் தன் அரிசிச் சாகுபடியை ஜப்பான் அதிகப்படுத்த வேண்டும். 85 லட்சம் கலம் அரிசி விளைவிக்க ஜப்பானியர்கள் ஒரு திட்ட மிட்டிருக்கிருர்களென்று தெரிகிறது. இது இலேசான காரியமல்ல. பல கஷ்டங்கள் இருக்கின்றன. இந்த நோக்கம் ஈடேறும் முன்னதாக, பல முக்கியமான கிராமப் பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டிய பொறுப்பு ஜப்பானுக்கு இருக்கிறது.

இதுபற்றி மிஸ்டர் எய்னேசுக்கு சொல்லுவதாவது:—

"நில சம்பந்தமான சீர்திருத்தம் ஏற்படும். குடியானவர்கள் முழுமனதோடு ஒத்துழைக்க வேண்டிய நிலைமை உண்டாகும்.

(8-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

**வார வெளியீடு**

மலர் III] 1943-ம் ஏப்ரல்மீ 9உ. [இதழ் 15


சென்ற வார இதழில், கேப்ஸுக்காகப் பெரும் போராட்டம் நடைபெறும் என்று தெரிவித்தோம். அதற்கு முன்னதாகவே கடுமையாகப் போராடவேண்டிய நிலைமை ஏற்படுமென்றும் குறிப்பிட்டோம். யுத்தத்தைப் பற்றிய முடிவுகள் இலகுவில் செய்து விடக் கூடாது என்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லியிருப்பதையும் குறிப்பிட்டோம். எதிர் பார்த்ததை விட மிகவும் சீக்கிரமாகவே, கேப்ஸ் நகரம் வீழ்ந்தது. ஏனென்றால், தான் பின் வாங்கிப் போய் வான் ஆர்னிம் படைகளோடு வட துனீசியாவில் சேர ஒட்டாதபடி நேச நாட்டுப் படைகள் தன்னை வழி மறித்து விடக் கூடும் என்று ரோமல் அஞ்சினர். செவிலீன் மெத்தூர் ரோடு வழியாக, ரோமல் படைகளைப் பின் பற்றி, பிரிட்டிஷ் படைகள் முன்னேறிக் கொண்டு வருகின்றன. விமானங்களிலிருந்தும் கப்பல்களிலிருந்தும் எதிரிகளை பிரிட்டிஷ் படைகள் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. தற்கால யுத்தப் போக்கில், பின் பற்றத் தக்க முறையில் துனீசிய யுத்தம் நடைபெறுகிறதென்று சொல்லலாம். இங்கே, இரண்டு வகைத் திட்டங்களைக் கையாளுகிறார்கள். இவ்விரண்டிலும் பல வகைப் பகுதிகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் பல வகைக் கஷ்டங்கள் இருக்கின்றன. முதலாவதாக, தென் ஐரோப்பாவை, எகிப்திலிருந்தும் அத்லாண்டிக் கடல் பக்கமிருந்தும் தாக்க வேண்டுமென்பது நேச நாட்டாருடைய திட்டம். இரண்டாவதாக, ரஷ்யாவோடு மகா கடுமையான போராட்டத்தில் ஜெர்மன் இறங்கியிருக்கின்ற இந்தச் சமயத்தில், நேச நாடுகள் ஐரோப்பாவைத் தாக்கிவிடாதபடி, அவற்றைப் பிளந்து வைத்துக் காலந் தாழ்த்த வேண்டுமென்பது ரோமலுடைய எண்ணம்.

துனீசியப் போர் முனையில் நேச நாட்டு விமானப் படைகளின் சிறப்புக்கள் வெகு அதிகம். ஜெனரல் மண்ட்காமரியின் படைகளுக்கு இவை பறக்கும் அரண்களாக விருந்து பாதுகாத்திருக்கின்றன. பீரங்கிப் படைகள் அவ்வப்போது கடுமையாகத் தாக்கி எதிரிகளைச் சின்னாபின்னப் படுத்தின. மேற்கு நோக்கி வந்து போராடும்படியான அவசியம் ரோமலுடைய படைகளுக்கு நேரும். ஆகாயத்திலிருந்தும் மூன்று திசைகளிலிருந்தும் ஒரே சமயத்தில் இது வெகு கடுமையாகத் தாக்கப்படும். இதைத் தவிர்க்கும் பொருட்டு, ஐரோப்பியப் பாதுகாவலுக்காக வைத்திருக்கும் விமானங்களை இங்கே அனுப்ப முடியுமா? இனி காத்திருந்து என்ன செய்கிறார்களென்று பார்ப்போம்.

வடக்கே ஒன்றும் படை சர்ரெத் முனையைக் கைப்பற்றி, மேலும் கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. தெற்கே, மாரெத் போரில் மண்ட்காமரியின் எட்டாம் படை வெற்றி பெற்று, கேப்ஸ் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறது. இதன் பயனாக, ரோமல் ஓட்டமெடுக்கிறார். தன் படையைத் திருத்தியமைத்துக் கொள்ள, போதுமான அவகாசம் இருக்குமா என்பது தான் கேள்வி. சூசீக்குப் பக்கத்தில் எங்கேனும் ஓரிடத்தில் அச்சு நாட்டார் போர் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

சென்ற 5 மாதங்களாக வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண்டுவந்த 8-ம் படை, மாரெத் அரணில் முதலில் தோல்வியுற்றது. ஏனென்றால், வடாப்பிரிக்க யுத்தத்திற்கே இது தான் மகா உறுதியான அரணாகத் தமக்கு அமையுமென்று நினைத்து ஏராளமான தளவாடங்களையும் படைகளையும் ஜெர்மானியர்கள் அங்கே சேர்த்து வைத்திருந்தார்கள். ஆகவே, அவர்கள் தற்காலீக வெற்றி பெற்றார்கள். பிறகு, 8-ம் படையின் ஒரு பகுதி, போர் கொடுத்துக் கொண்டேயிருக்கும் போது, மற்ற பகுதி, மாரெத் அரணைச் சுற்றிக் கொண்டு ரோமலை வளைக்க ஆரம்பித்தது. கடைசியாக ரோமல் அங்கிருந்து ஓட்டமெடுக்க நேர்ந்தது.

எல் கட்டாருக்குக் கிழக்கே அமெரிக்கப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. எல் ஹம்மாவிலிருந்து பிரிட்டிஷ் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இவ்விரண்டு படைகளாலும் தனக்கு ஆபத்து நேருமென்று, ரோமலுக்குத் தெரியும். இவற்றைத் தடுக்க ரோமல் பல வழிகளில் முயன்றார். பலிக்கவில்லை. கடைசியாக, எல் கட்டார், சானெட், மக்னசி, பாண்டேக் முதலியவற்றையும் நேசநாடுகள் கைப்பற்றி விட்டன.

இதுவரை ஜெர்மானியர்கள் காலந் தாழ்த்திக் கொண்டிருந்தார்கள். வட பகுதியிலும், மத்தியப் பகுதியிலுமுள்ள போக்குவரவுப் பாதைகளைக் குலைக்க ரோமல் முயற்சித்தார். இதன் பயனாகச் சிலமாதங்கள் காலங் கடந்தன. மாரெத் அரண்கள் அவர்கள் பாதுகாப்புக்கு மிகவும் உதவியாயிருந்தன. கொஞ்சகாலம் மண்ட்காமரியின் படைகளை ரோமல் தடுத்து வைத்திருந்தார் என்று சொல்லலாம். ஆனால் 8-ம் படை அக்காலத்தில் சற்று மூச்சு வாங்கிக் கொண்டது. தன் பலத்தைப் பெருக்கிக் கொண்டது. தன் சப்ளை முறைகளையும் திருத்தியமைத்துக் கொண்டது. மாரெத் அரணிலிருந்து ரோமல், 8-ம் படையைத் தாக்க ஆரம்பிக்கு முன்னதாகவே, அதைத் தகர்த்தெறிய மண்ட்காமரி தயாராகி விட்டார். என்றாலும், இவற்றால், எதிரியின் நிலைமை மகா மோசமாகிவிட்டதென்று சொல்லுவதற்கில்லை.

இப்போதுள்ள இடத்திலேயே ஆபிரிக்கப் படைகளை நாசஞ் செய்து விடவேண்டுமென்பது தான் நேசநாடுகளின் யுத்தத் தந்தரம். தன் படைகளுக்குச் சேதமில்லாமல் பின்வாங்கி, வட துனீசியாவில் போய்த் தம் படைகளோடு சேர்ந்துவிட வேண்டுமென்பது தான் ரோமலுடைய யுத்த தந்தரம்.

துனீசியாவின் கடைசி யுத்தம் துனீசியாவிலும் பிசெர்ட்டாவிலும் தான் நடைபெறும். இரண்டில் ஒன்று இதில் தெரிந்துவிடும். கேப்ஸுக்குப் போய்த் திரும்பிய பிறகு ஜெனரல் ஜிராட் கூறியதாவது :— "டன்கர்க்கில் நேர்ந்ததுபோல ஆப்பிரிக்காவில் அச்சு நாட்டாரும் செய்யவேண்டும். மத்தியதரைக் கடலில் ஏராளமான வெள்ளைத் தொப்பிகள் மிதக்கப் போகின்றன." இந்த மொழி உண்மையாகுமென்பதற்குப் பல அறிகுறிகள் தோன்றுகின்றன.



# இ ந் தி ய வி ம ா ன ப் ப டை

நமது இந்திய விமானப் படைக்கு இன்று பத்தாவதாண்டு பிறந்து விட்டது. இதை யொட்டி இவ்விழா இந்தியா முழுதும் கொண்டாடப் படுகின்றது. இவ்விழாவை யொட்டி விமானங்கள் பறந்து செல்லும் காட்சி பேரின்ப மயமாய் இருக்கின்றது.

இந்திய விமானப் படைக்கு முதன் முதலாக 1926-ல் விதை போடப்பட்டது. காலஞ் சென்ற **பண்டித மோதிலால் நேருவையும்** முஸ்லீம்களின் தலைவராய் இன்று திகழும **ஜின்னா அவர்களையும்** அங்கத்தவர்களாய்க் கொண்ட **ஸ்கீன் கமிட்டியார்** 1926-ல் சிம்லாவில் கூடி—இந்தியாவுக் கென்று தனியான விமானப் படை அமைக்க வேண்டுமென சிபார்சு செய்தனர். இதை யொட்டி 1930-ல் இந்திய விமானப் படையின் முதல் ஆறு மாணவர்கள்—விமானப் பயிற்சி பெற இங்கிலாந்து சென்றனர். 1932-ல் டெல்லி இந்திய சட்ட சபையில் விமானப் படைச் சட்டமொன்று நிறைவேற்றப் பட்டது. அதற்கு மேல் 1933-ல் ஏப்ரல்மீ முதல் தேதியன்று இந்திய விமானப் படை உருவாகிற்று. அன்று, முதல் முதல், கராச்சியில் இந்திய விமானப் படையின் முதல் அணி விமானம், உயரம் பறந்தது. இதிலிருந்து இந்திய விமானப் படை வளர் பிறைபோல் வளர்ந்து வருகின்றது. 1933 ல் ஓர் அணியுடன் (flight) பிறந்தது; 1936-ல் இரண்டு அணியாயிற்று, இதிலிருந்து ஒவ்வோராண்டிலும் ஒவ்வோரணி சேர்க்கப்பட்டது. இவ்வாறாக 1939 ன் இறுதியில் இப்படை 200 உத்தியோகஸ்தர்களையும் ஆட்சிகளையும் கொண்ட ஒரு முழுப்படையாக (a full squadron) ஓங்கி வளர்ந்து விட்டது.

## விமானப் படையின் அவசியம்

பிறகு 1939 ல் ஐரோப்பியாவில் யுத்தம் துவங்கியதும் மிக சடுதியில் போலண்டு, பெல்ஜியம், ஹாலண்டு, டென்மார்க், நார்வே—பெரிய வல்லரசாகிய பிரான்சு முதலிய நடுகள் விழுந்ததும்—தற்கால யுத்தத்தில் ஜெயிப்பதற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் பலமான மேம்பட்ட விமானப்படை அவசியம் என்பது தெளிவாயிற்று. அதன்மேல் இந்தியவிலும் 1940 மே மாதத்தில் எல்லா வகைப் படைகளையும் பெருக்க வேண்டுமென்ற திட்டம் வகுக்கப்பட்டது. இத் திட்டப்படி 1 41 முடிவிற்குள் மூன்று அணிகளைக் கொண்ட 3 squadron களும்—1942 மார்ச்சுக்குள் 4 squadron களும் இருக்க வேண்டும். இத்திட்டப்படி பெருக்குவது 1940-ல் கஷ்டமாய் இருந்த போதிலும் 1941 செப்டம்பருக்கு மேல், ஐரோப்பாவில் யுத்த நிலையில் சிறிது தெளிவு ஏற்பட்டமையாலும் அதனால் அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் தாராளமாய் விமானங்களும் அவைகட்கு வேண்டிய சாமான்களும் கிடைக்க வசதி ஏற்பட்டமையாலும், இந்திய விமானப் படையை 10 squadron வரைப் பெருக்க முடிவு செய்யப்பட்டது. இனி, ஜப்பான் 1941 டிசம்பரில் போரில் இறங்கியதும்—அதனால் மிகச் சீக்கிரத்தில் டச்சு கிழக்கு இந்தியத் தீவுகள்—பலமான சிங்கப்பூர், மலேயா—நமக்கு அடுத்துள்ள பர்மா வீழ்ந்து—இந்தியாவுக்கு அபாயம் வந்தவுடன், இத்திட்டத்தில் பெரும் வியக்கத் தக்க மாறுதல் ஏற்பட்டது. நாம் முன் கூறிய சாதாரணத் திட்டம் விடப்பட்டு—இந்திய விமானப் படையை யுத்த முறையில் பயப்படுத்த பெருத்த திட்டம் கோலப்பட்டது. இத்திட்டப்படி நாடெங்கும் விமானத் தளங்கள்—கூடங்கள்—விரைவாய்க் கட்டப்படுகின்றன. விமானப் பலம் நாடோறும் யுத்த முறையில் பெருகிக் கொண்டு வருகின்றது. வாஸிரிஸ்தான் மத்தியில் ஒரு நூதனமான தளம் இருக்கின்றது. வடமேற்கு எல்லையின்மேல் பறக்கும் விமானங்களெல்லாம் இங்கிருந்து தான் கிளம்புகின்றன. வானத்திலிருந்து அந்த விமான தளத்தை நோக்கி பறந்து வரும் பொழுது, அங்குள்ள விமானங்களோ, விமானக் கூடங்களோ தென்படுவதில்லை நாலா பக்கங்களிலும் செங்குத்தான மலைகள் சூழ்ந்த ஒரு கோட்டை தான் காணப்படும். விமானம் வந்திறங்குவதைக் கோட்டைக்கு உள்ளேயும், மலை உச்சிகளிலும் ஒளிந்திருக்கும் பட்டாணியத் துப்பாக்கி வீரர்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், அவர்கள் இருக்குமிடம் விமானிகள் கண்ணுக்குப் புலப்படாது. விமானம் தரையில் இறங்கி ஓடி அந்தக் கோட்டையை அடைந்தவுடன், கோட்டைக் கதவுகள் திடீரென்று திறந்து விமானத்துக்கு வழி விடும். விமானம் உள்ளே நுழைந்தவுடன் கதவுகள் மூடிக்கொள்ளும். இப்போது இந்திய விமானப் படையில் தலைவர்களாய் இருக்கும் பலர், முதன் முதலில் இங்குப் பயிற்சி பெற்றவர்கள். இதைப் போன்ற விமானத் தளங்கள் எதிரியை எதிர்த்துப் போராட வல்லமை பெற்றவைகள் இப்பொழுது இந்தியா முழுதும் முக்கிய இடங்களில் பல உள்ளன. 1933-ல் ஒரு அணியுடன் துவங்கிய இந்திய விமானப் படை, இன்று நவீன முறையில்—இந்தியாவைப் பாதுகாக்கும் வல்லமையுடனும்—எதிரிகள் வந்தால்—எதிர்த்துப் போராடும் நிலையிலும்—அஃதோடன்றி அதற்கும் மேல்பட்டு எதிரிகளின் இடமாகிய பர்மாவுக்குள் பறந்து சென்று, அங்கு ரெங்கூன் மாண்டலே முதலிய பல இடங்களில் டன் டன்களாய் வெடிகுண்டுகள் வீசி—எதிரிகளுக்குப் பெருத்த நாசத்தை விளைவிக்கக் கூடிய மாபெரும் சக்தி வாய்க்கப் பெற்றதாய் இருக்கின்றது. ஆ! ஆ!!—இப்பத்தாண்டிற்குள் இந்திய விமானப் படையின் வளர்ச்சியின் வேகத்தை என்னென்பேன்!!

## கடமையும் பொறுப்பும்

இனி இப்படையின் அமைப்பு—கடமை-பொறுப்பு முதலியவைகள் என்னவென்பதைக் கவனிப்போம்.

இந்திய விமானப்படை முழுதும் இந்திய மயம். இதனுடன் பிரிட்டிஷ் ராயல் விமானப் படையும் ஒத்துழைக்கின்றது. இந்திய விமானப் படையில் ஐந்து வகைகள் உள்ளன :—

(1) Fighter Reconnaisance (கண் காணிப்பு.)

இது நம்முடைய தரைப் படையுடன் ஒத்துழைக்கின்றது. எதிரிப் படைகளைக் கண்காணித்து வருவதுடன், எதிரி இடங்களிலுள்ள இராணுவக் குறிப்புகளை அழிக்கின்றது.

(2) Bomber Reconnaisance (கண் காணிப்பு.)

இது நம் தரைப் படைக்காக, கண் காணிப்பு வேலை செய்வதுடன், எதிரிப் படைகளின் மேல், வெடி குண்டுகள் வீசி—நம் படைக்கு ஆதரவு கொடுக்கின்றது.

(3) Fighter.

ஆகாயத்தில் ஆக்கம் பெற்று நம்பிக்கைக்குப் பக்கத்தில் வரும் எதிரி விமானங்களை—எதிர்த்துப் போராடி—அவைகளை நாசம் செய்கின்றது.

(4) Bomber (பாம்பர்).

எதிரியின் இடங்கட்குச் சென்று—ராணுவ நிலையங்கட்குச் சென்று ராணுவ நிலயங்களின்மீது வெடி குண்டு வீசி நாசமாக்கித் திரும்பி வருகின்றது.

(5) General Reconnaisance (பொது கண் காணிப்புப் படை)

நம் தரைப் படையுடனும், கப்பற் படையுடனும் ஒத்துழைத்து, கடற்கரையையும், துறை முகங்களையும் பாதுகாக்கின்றது. இவை கரைக்குப் பக்கத்தில் எதிரிகளின் கடற்படையையும், நீர் மூழ்கிக் கப்பல்களின் தொல்லைகளையும் ஒழிப்பதோடு—நம் துறை முகங்களுக்கு வரும் கப்பல்களையும், கான்வாய்களையும் பாதுகாத்து வருகின்றன. இவைகளின் பாதுகாப்பால் தான், நம் கரையோரக் கப்பல் வியாபாரம் நடைபெறுவதுடன், எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்களால் மூழ்கடிக்கப்படும் கப்பல்களிலிருந்து தவிக்கும் ஜனங்களும் காப்பாற்றப் படுகின்றார்கள்.

## பாராப் படை

இனி மேற்கூறிய இந்திய விமானப் படையோடு விமானங்களிலிருந்து எதிரிகளிடையில் குதிக்கும் வீரப் "பாராப் படையும்" உண்டு. இப்படையில் பல இந்தியர்களும், கூர்க்கர்களும் இருக்கின்றார்கள்.

குதிக்கும் படைக்கு விமானப் படையும்—தரைப் படையும் பயிற்சி கொடுக்கின்றது. விமானப் படை, அவர்கள் பயிற்சிக்கு விமானமும்—விமான ஓட்டிகளுக்கு வெடிகுண்டு எறிவதற்குப் பதிலாய் ஆட்களைக் கீழே எறியும் பயிற்சியும் கொடுக்கின்றது. தரைப் படையினரோவெனின் பாராப் படைக்கு வேண்டிய ஆட்களைத் தெரிந் தெடுத்துக் கொடுப்பதுடன் அவர்கள் விமானத்திலிருந்து தரையில் இறங்கியவுடன் பலமாய்ச் சண்டை போடவும் கற்றுக் கொடுக்கின்றது. இந்த இந்திய பாராப்படை சமீபத்தில் சிந்து மாகாணத்தில் ஹர்கொள்ளைக் கூட்டத்தாரை அழிக்கப் பேருநவி செய்தது என்பதை நாம் மறக்க முடியுமோ ?

இனி, நம் விமானப்படை நமது கிழக்கு எல்லைப் புறத்தில் இந்தியாவைப் பாது காத்ததற்குச் செய்துள்ள சில அரிய வீரச் செயல்களைக் கூறுவேன்.

யுத்தத்தின் மூன்றும் ஆண்டில் நம் விமானப் படையினர் செயற்கரிய செயல்கள் செய்துள்ளனர். இந்த மூன்றும் ஆண்டில், நம் விமானப் படைக்கு கிழக்கே ஒரு வல்லரசை எதிர்த்துப் போராடும் சமயம் கிடைத்தது. இதனல் விமானப் படையின் உத்தியோகஸ்தர்கட்கும், விமானிகட்கும், ஆட்களுக்கும் தற்கால விமானப் போரில் போதிய பயிற்சியும், அநுபவமும், அறிவும், ஆற்றலும் கிடைத்தன. மற்றும் இப்பொழுது தான் விமானப் பயிற்சிக் கென்று திறக்கப்பட்ட நிசால்பூர், லாகூர், அம்பாலா, பீகம் பேட்டை, ஜேகதிபுரி முதலிய இடங்களிலுள்ள பள்ளிக்கூடங்கள் மிக வேகமாய் மேலே பறக்கக் கூடிய விமானிகளையும், அவர்கட்கு ஆதரவாய்த் தரையில் இருக்க வேண்டிய சிப்பந்திகளையும் தயாரித்தன. அதோடு இங்கிலாந்துக்குப் பயிற்சிக்குச் சென்றிருந்தவர்களும் இப்பொழுதே திரும்பி வந்தனர். இச் சமயந்தான் பர்மாவின் பாதுகாப்புக்காக இந்திய விமானப் படையைச் சேர்ந்த இரண்டு வகை அணிகள் அனுப்பப்பட்டன. இவைகள் பர்மாவில் டாங்கோ, லாஷியோ என்ற இடங்களில் இருந்து கொண்டு எதிரிப் படைகளைத் தாய்லந்தில் கண் காணித்ததுடன் தாய்லந்தில் எதிரியின் ராணுவக் குறிகளின் மேல் வெடி குண்டு வீசி, எதிரிக்குப் பெருத்த நாசம் உண்டாக்கி, பர்மாவில் நமக்காகப் போர் செய்த நமது துருப்புகளுக்கும், சீனப் படைக்கும் பேருதவியாய் இருந்தன. இவைகளின் வெடி குண்டு வீச்சால் எதிரிகளின் பல விமானத் தளங்களும், அவர்கள் துருப்புகளும், சாமான்களும் நாசமடைந்தன. இத்தகைய வீரச் செயல்களுக்காக இவ்வணியின் இந்தியத் தலைவர் நமது பிரதம தளகர்த்தர் வேவல் அவர்களால் இரு முறை பாராட்டப் பட்டார்.

1942 எப்ரலில் வங்காளக் குடாக் கடலுக்கு வந்து ஒரு ஜப்பானிய பெருங் கடற்படையைக் கண்டு பிடித்ததும் பலமான எதிர்ப்புக் கிடையே அதைப் பின் தொடர்ந்து தைர்யமாய்க் கண்-காணித்து, அது மறைந்ததைத் தெரிவித்ததும் கடலோரத்தைப் பாதுகாக்கும் நம் இந்திய விமானப் படையின் ஓர் அணி தான். இவ்வணியால் கண்டு பிடிக்கப்பட்ட ஜப்பான் கடற்படைதான், சென்னை மாகாணத்தையும் இலங்கையையும், தென்-கிழக்குக் கடற் கரை முழுவதையும் ஒரு கலக்கு கலக்கியதாகும்.

### எல்லோரும் இந்தியர்களே !

இந்திய விமானப் படையில் கண் காணிப்பவர்களும், விமானிகளும், அப்படைக்குத் தரையில் உதவியாய் இருப்பவர்களும் எல்லாம் இந்தியர்களே ! தரையிலிருப்போர் எதிரிகள் பலமாய்க் குண்டு வீசிய காலத்தும், தைரியத்துடன் இருந்தும், இப்பொழுது இருப்பதும் பாராட்டத் தக்கதாகும்.

சென்ற ஆண்டில் பர்மா போரின் பிற்பகுதியில் இந்திய விமானிகள் யுத்த அரங்கங்களில் போக்கு வரவு சாதன வேலையில் ஈடுபட்டிருந்ததும், பர்மாவிலிருந்து இந்தியர்களைத் தாய் நாடு கொண்டு வந்து சேர்ப்பதில் அவர்கள் காட்டிய ஊக்கமும் தைரியமும் இந்திய மக்களால் மறக்க முடியுமோ ?

இனி இப்போது பர்மாவைப் படை எடுத்துக் கொண்டிருக்கும் நம் சேனைக்குப் பேருதவியாய் இருந்து கொண்டும், ரங்கூன் மாண்டலே முதலிய இடங்களின் மேல் வெடி குண்டு எறிந்து கொண்டும், கல்கத்தா, சிட்டகாங்கு முதலிய இடங்கட்கு எதிரி விமானங்கள் வரும்போதெல்லாம் அவர்களை மடக்கி எதிர்த்து விரட்டி யடிப்பது, நம் விமானப் படையாகும்.

1941 செப்டெம்பரி லிருந்து நம் விமானப் படை எல்லைப்புற மாகாணத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கின்றது. மற்றும் இந்த யுத்த காலத்தில் இந்தியாவின் கடற் கரை முழுதும் பாதுகாக்கும் பாரம், இந்திய விமானப் படைக்கு இருக்கின்ற தென்று சொன்னல், அது மிகையாகாது.

இந்திய விமானப் படை இனி நம் கிழக்கு எதிரியாகிய ஜப்பானை நசுக்குவதில் பெரும் பங்கு எடுத் கொள்ளப் போகின்றது. இழந்த பர்மாவையும், மலேயாவையும், டச்சு கிழக்கு இந்தியத் தீவுகளையும் மீண்டும் பெறுவதில் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளும். எனவே, எதிர் காலத்தில் அதற்குப் பெரும் ஆக்கம் உண்டு.

**எனவே, இந்திய இளைஞர்கள் இப்படையில் சேர்ந்து நலனும் புகழும் அடைதற்கு இதுவே தகுதியான காலம். முன்னே பயிற்சி பெறுவதென்றல் இங்கிலாந்து செல்லவேண்டும். இப்பொழுதோ இந்தியாவிலேயே பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.**

### பறக்க வேண்டிய தில்லை

இந்தியப் படையில் சேர்வதால் எல்லோரும் மேலே பறக்க வேண்டு மென்பதல்ல. இந்திய விமானப் படையில் தரையிலேயே இருந்து செய்யக் கூடிய வேலைகள் பல உண்டு. இத்தரை சிப்பந்திகளுக்கு அம்பாலா பள்ளிக்கூடத்தில் பயிற்சி கொடுக்கப் படுகின்றது. எனவே, விமானத்தில் பறக்கும் விமானிகளாய் வரப் பயப்படுகின்றவர்கள் தரையில் இருக்கக் கூடிய பிட்டர்கள் Riggers, Wireless operators, Electricians முதலிய உத்தியோகங்கட்குப் பயமின்றித் தாராளமாய் வரலாம். இப்படை பெரிய சமுத்திரம். விரும்பினல் எல்லோருக்கும் வேலையுண்டு. எட்டாவது படித்தவர்களிலிருந்து பி.ஏ., எம்.ஏ. படித்தவர்கள் வரைக்கும், அவர்கள் விருப்பத்திற்கும் ஆற்றலுக்கும் தக்கவாறு வேலையுண்டு.

படித்த இளைஞர்கள் இப்படையில் சேர்ந்து நலம் பெற வேண்டு மென்பதற்காக 1942 ஜூலை 1ௗ முதல் சம்பளங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கட்கு மாதந் தோறும் ரூபா 60 முதல் 100 வரை கிடைக்கின்றது. கமிஷன் பெருத உத்தியோகஸ்தர்கட்கு 75 முதல் 265 வரை கிடைக்கின்றது. இவர்கள் கமிஷன் உத்தியோகஸ்தர்களாகவும் உயர்த்தப்படலாம். இந்தப் படை சிறிதாக இருந்தபோதிலும், 1940 முதல் இது வரை கீழான பதவிகளி லிருந்து 380 பேர் உத்தியோகஸ்தர்களாக உயர்த்தப்பட் டிருக்கின்றர்கள். இந்திய விமானப் படையில் சம்பளத்தோடு உண்டி, உடை, இருப்பிடம் முதலியவைகள் இனும் கொடுக்கப்படும். சாப்பாடு உயர்ந்தது.

### வாழ்க்கை இன்பகரமானது

விமானப் படையினர் வாழ்க்கை இன்பகரமானது. அவர்கள் வாழ்க்கையில் தொந்தரவு என்பதே கிடையாது. சாதியும், மதமும், மூடப் பழக்க வழக்கங்களும் அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடுவ தில்லை. ஆற்றலும், அக்கரையும் உள்ளவர்கள் உயர்ந்த பதவிகளை எளிதில் அடையலாம், எனவே இதில், நம் இளைஞர்கள் சேரவேண்டு மென்பது என் பேரவா.

*திருச்சி அகில இந்திய வானெலி நிலயத்தி லிருந்து செய்யப்பட்ட தோர் பிரசங்கம்.*



# போர் வீரர்களுக்குப் புத்தகங்கள் வேண்டும்

## ஜெனரல் வேவலின் வேண்டுகோளும், நமது கடமையும்

## உயிரைத் தியாகம் செய்பவர்களுக்குச் சிறு புத்தகங்கள் கொடுக்கக் கூடாதா ?

### நாவல்களும், சஞ்சிகைகளும் தேவை ; தமிழ் மக்கள் செய்ய வேண்டியத் தொண்டு

*போர் முனையில் இருந்து சண்டை செய்யும் வீரர்களுக்காகப் புத்தகங்களைச் சேகரித்து அனுப்புதல் சம்பந்தமாக சென்னை அகில இந்திய வானெலி நிலயத்தி லிருந்து ஒலி பரப்பப்பட்ட பேச்சு, பின் வருமாறு :—*



நம்மிடமுள்ளதும், நமக்கு உபயோகப்படாததுமான நூல்களையும் பழைய பத்திரிகைகளையும் திரட்டி, போர் முனையில் இருந்து சண்டை செய்து வரும் வீரர்களுக்கு அனுப்புவதின் அவசியத்தைப் பற்றி நாம் கவனிக்க வேண்டும். உலகத்தில் இப்பொழுது கோரமான ஒரு மகா யுத்தம் நடந்து வருவது உங்கள் யாவருக்கும் தெரிந்த விஷயம். இந்த யுத்தம் ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா முதலிய எல்லாக் கண்டங்களிலும் பரவி இருக்கிற தென்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். ஆங்கில சாம்ராஜ்யத்தினுள் இருக்கும்படியான இந்திய நாடும், இந்த யுததத்தில் ஈடுபட்டு வருகிறது. இந்நாட்டு மக்கள் இதை உணராமல் இருக்க வில்லை. அது பற்றியே, இந் நாட்டு வீரர்கள் பலரும் தங்களால் இயன்ற வரை ஒத்தாசை செய்ய முன் வந்திருக்கிறர்கள். கப்பற் படைகளில் சேர்ந்திருக்கிறவர் பலர். பலர் பட்டாளங்களில் சேர்ந்து, ஆப்பிரிக்கா போன்ற தொலைவிலுள்ள இடங்களுக்குச் சென்று போர்த் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். நம் நாட்டுக்கு அருகாமையில் உள்ள பர்மாவை எதிரிகள் பிடித்துக் கொண்டு, அங்குள்ள மக்களை அளவில்லாத கஷ்டங்களுக் குள்ளாக்கினதால், அங்கிருந்த பல்லாயிரக் கணக்கான இந்திய மக்களை வெளியேற்றி விட்டார்கள். இது காரணமாக, இப்பொழுது இந்திய நாட்டைச் சேர்ந்த அஸ்ஸாமிலும் போர் நடநது வருகிறது. இங்கே பிரிட்டிஷ் துருப்புகளும், நம் இந்திய சைனியங்களும், ஆகாய விமானங்களும், அநேக கஷ்டங்களுக்கு மத்தியில், போர் புரிந்து வருகின்றனர். இவ்வாறு இந் நாட்டுச் சைனியங்கள் பற்பல முனைகளிலும் சண்டை செய்து வரும் பொழுது, நாம் மட்டும் சும்மா இருப்பது தகுமா ? பண்டை நாளில் போர் செய்த மக்களுக்கு, போர் முனைக்குச் செல்லாதவர், எத்தனையோ வகையான தொண்டுக ளெல்லாம் செய்து வந்திருக்கின்றனர் என்று நமது பழைய இலக்கியங்கள் கூறுகின்றன. ஆகையால், இக்காலத்திலும் சைனியங்களில் இருக்கும் வீரர்களின் வாழ்க்கையைச் சிறிதளவேனும் சந்தோஷமாக்குவதற்கு நாமும் முன் வந்து அநேக விதமான தொண்டுகள் செய்ய வேண்டும்.

### பல விதமான உதவி

இம்மாதிரியாக நாம் செய்யக் கூடிய சேவைகள் அநேகம். பல தனவந்தர்கள் தங்களிட முள்ள பணத்தைக் கொடுத்து, போர் நடத்துவதற்கு உதவுகின்றர்கள். பெரிய பெரிய 'மில்' நிர்வாகஸ்தர்கள் எல்லோரும் தங்கள் 'மில்'களிலிருந்து யுத்தத்தில் போர் செய்யும் துருப்புகளுக்கு இன்றியமையாத யுத்த தளவாடங்களைத் தயார் செய்து உதவுகின்றர்கள். தொழிலாளிகளோ தம்மாலான வேலைகளைச் செய்து சைனியங்களுக்காகப் பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றனர். பலர் படைகளில் சேர்ந்து உதவி செய்து வருகின்றனர். வைத்தியப் பயிற்சி பெற்ற பலர், யுத்தத்தில் காயம் பட்டவர்களுக்கும், நோய்வாய்ப்பட்ட வீரர்களுக்கும் சிகிச்சை செய்வதற்காகத் தாமே வலிய வந்து சேவை செய்கின்றர்கள். நம் நாட்டுச் சகோதரிகள் பெரும்பாலோர் முதலுதவி 'நர்ஸிங்' முதலிய பயிற்சிகள் பெற்று யுத்தத்தில் காயமடைந்தவர்க்கு ரண சிகிச்சை செய்ய முன் வந்திருக்கிறர்கள். இவை யெல்லாம் நம் இந்திய மக்களுக்கு இயற்கையாகவே யுள்ள கருணையையும், அன்பையும் தெரிவிக்கிறது.

யுத்தத்தின் முன்னணியில் நின்று போர் செய்பவர்கள் தங்களுடைய வீடு, வாசல், மனைவி, மக்கள், சுற்றம் எல்லோரையும் விட்டு விட்டு, நம் நாட்டைக் காப்பாற்றுவதற்காக அநேக ஆயிரம் மைல்களுக்கப்பால் சென்று போர் புரியச் சித்தமா யிருக்கின்றனர். அவர்கள் செய்து வரும் சிறந்த சேவையினல் தான், நாம் இதுவரையில் அதிகமான கவலையும் பயமுமில்லாமல் நம் நாட்டிலேயே யிருந்து சுகமாகக் காலங் கழிக்கிறேம். ஆனல், நமக்காகப் போர் புரியும் வீரர்களோ அநேக விதமான கஷ்டங்களுக்குட்பட்டுப் போர் செயயும்படி ஏற்படுகிறது. நாம் நிர்ப்பயமாயும் சந்தோஷமாகவும் வாழ்வதற்காகப் போர் முனையில் பாடுபடுகின்ற அவர்களின் வாழ்க்கையை நாமும் சிறிதளவேனும் சந்தோஷப்படுத்த முயலுவது நம் கடமை யன்றே ? அவர்கள் போர் முனையில் தீரத்துடன் போர் செய்து புகழுடன் திரும்பி வர வேண்டும் என்ற எண்ணம் நம் எல்லோருக்கு முண்டு. அவர்களை உற்சாகப்படுத்தினல் தான் நாம் வெற்றி பெறக் கூடும்.

### ஓய்வு நேரத்தைக் கழிக்க

அப்படி அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு அநேக வழிகள் உண்டு. அவற்றுள் ஒன்று, அவர்களுக்குக் கிடைக்கும் சிறிது ஓய்வு நேரங்களை அவர்கள் இனிதாகக் கழிப்பதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பதாகும். நாள் முழுவதும் அவர்கள் போர் முனையில் அநேகக் கஷ்டங்களுக் கிடையே போர் புரிவதால், தங்களுக்குக் கிடைக்கும் ஏதோ சிறிதளவு அவகாசத்தை அவர்கள் இன்பமாகக் கழிக்கப் பிரியப்படுகிறர்கள். மேலும், அநேகர் வெட்டுண்டும், காயப்பட்டும், வைத்திய சாலைகளில் கொண்டு விடப்பட்டுச் சிகிச்சை செய்யப்படுகின்றர்கள். இவர்களை யெல்லாம் உற்சாகப் படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

இவ்வீரர்களில் அநேகர் படித்தவர்கள்; ஆகையால் அவர்கள் மாதப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள் பொழுது போக்கான இலக்கியங்கள், துப்பறியும் நாவல்கள்-இம்மாதிரி பற்பல புத்தகங்களைத் தங்கள் ஓய்வு நேரங்களில் படித்து இன்புற விரும்புகிறார்கள். இது சம்பந்தமாக இந்திய நாட்டில் இருக்கும் மேன்மை தங்கிய சேனாதிபதி மார்ஷல் வேவல் அவர்கள் சமீபத்தில் விடுத்த ஒரு அறிக்கையில் பின் வருமாறு கூறுகிறார் :—

"நான் கிழக்கிந்தியப் போர் முனையில் உள்ள பட்டாளங்களையோ அல்லது ஆஸ்பத்திரிகளையோ அல்லது ராணுவத் தளங்களையோ பார்வையிட்டு வரும் பொழுது அங்கேயுள்ள சிப்பாய்களுக்கும், ஆங்கிலத் துருப்புகளுக்கும் வேண்டிய தேவைகளில் மிக முக்கியமானது, ஓய்வு நேரங்களில் படிப்பதற்குப் புத்தகங்களும், பத்திரிகைகளுமே என்றுணர்ந்து வருகிறேன். எனக்கும் படிப்பதில் அவா உண்டு. ஆதலால் அவர்களுடைய இவ்வுணர்ச்சியில் எனக்கு மிகுந்த அனுதாபம் உண்டு. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நான் எவ்வளவோ முயற்சி செய்து வருகிறேன்''

என்று கூறிப் பொது மக்களும் அவர்களால் கூடுமானவரை உதவி செய்யுமாறு பிரார்த்தித்திருக்கிறார்.

## ஒரு தடவைப் படித்த நூல்கள்

மேற் சொன்ன தேவையைப் பூர்த்தி செய்ய அநேக தனிப்பட்ட நபர்களும், 'கிளப்'புகள் போன்ற பல பொது ஸ்தாபனங்களும் முன் வந்திருக்கின்றன. அவைகள் தங்களால் கூடுமான வரை தங்களிடமுள்ள பழைய சஞ்சிகைகளையும், படிக்கக் கூடிய நூல்களையும் தாராளமாகக் கொடுத்து ஒத்தாசை செய்து வருகின்றன. ஆயினும், அவர்கள் கொடுத்து உதவுகின்ற பத்திரிகைகளும், புத்தகங்களும் வேண்டிய அளவிற்குப் போதுமானதாக இல்லை. நம் நாட்டில் அநேக வீடுகளில் நூற்றுக் கணக்கான புத்தகங்கள் ஒரு தடவை படிக்கப்பட்டோ, அல்லது படிக்கப்படாமலோ, அலமாரிகளில் சேமித்து வைக்கப்பட்டு வருகின்றன. அநேகர் வீடுகளில் இம்மாதிரி ஒரு தடவை படிக்கப்பட்டு மூலையில் உபயோக மில்லாம லிருக்கும் அநேக பழைய சஞ்சிகைகளும், கதைப் புத்தகங்களும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பெரும்பாலும் மாத சஞ்சிகைகளில் அநேகம் ஒரு தடவைப் படிக்கப்பட்டுத் தனியாக மேஜையில் ஒதுக்கி வைக்கப்பட்டு வருகின்றன. நாமெல்லோரும் இவற்றை ஒதுக்கி வைத்தவுடன், இம்மாதிரியான நூல்களையும், சஞ்சிகைகளையும் சைன்யங்களுக்குக் கொடுத்துதவினால் யுத்த வீரர்கள் பெரிதும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகமே யில்லை. நமக்காக உயிரையே தியாகம் செய்யச் சித்தமா யிருப்பதுடன் நம் பாதுகாப்புக்கென்று கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கும் வீரர்களுக்கு நம்மாலான இச்சிறு உதவியைச் செய்யக் கூடாதா?

புத்தகங்களில் எம்மாதிரியானவற்றை அனுப்ப வேண்டும், என்பதைப்பற்றி ஒரு யோசனை கூறலாமென்று நினைக்கிறேன். பெரும்பாலும் சைனியங்களில் உள்ளவர் பொழுது போக்குக்கான கதைப் புத்தகங்களையே விரும்புகின்றனர். புத்தகங்களிலுள்ள விஷயங்கள் வாசிப்பதற்கு எளிதாக இருப்பதையே அவர்கள் விரும்புகின்றனர். மேலும், புத்தகங்கள் அதிகக் கனமாகவும், பருமனாகவும் இருக்க வேண்டிய தில்லை. அவர்கள் அதிகமாக விரும்புவது கற்பனைக் கதைகள், வீரச் செயல்கள் நிறைந்த கதைகள், துப்பறியும் கதைகள் முதலியவை போன்றனவாம். புத்தகங்கள் உருவத்தில் சிறியனவாகவும், இலேசாகவும் இருப்பின் அவைகளை அனுப்புவதும் சுலபமாகும். இந்திய துருப்புகள் இதே மாதிரி கதைப் புத்தகங்களையும், பத்திரிகைகளையுமே விரும்புகிறார்கள். நம் சிப்பாய்களுக்குத் தமிழ் பத்திரிகைகளும், ஆங்கில சஞ்சிகைகளும், பல ஹிந்திப் பத்திரிகைகளும், தெலுங்குத் தமிழ்ப் பத்திரிகைகளும், பலவித கதைப் புத்தகங்களையும் அனுப்பினால் மிகவும் உற்சாக மடைவார்கள்.

## சேகரித்து அனுப்பும் முறைகள்

இவற்றைச் சேகரித்து அனுப்புவதற்காகச் சில முறைகளைக் கையாளலாம். உங்களில் அநேகர் உயர்தரப் பாடசாலைகளிலும், வேறு பாடசாலைகளிலும் தலைமை ஆசிரியர்களாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் உங்களிடம் படிக்கும் சிறுவர்கள் மூலம் அவர்கள் வீட்டில் படித்து விட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட பத்திரிகைகள், அல்லது புத்தகங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று விசாரிக்கலாம். பிறகு அவர்களைத் தங்கள் பெற்றோர்களின் அனுமதியைக் கேட்டுவிட்டு அவைகளைக் கொண்டு வந்து கொடுக்குமாறு செய்யலாம். யார் அதிகமாகச் சேகரித்துக் கொண்டு வந்து கொடுக்கிறார்களோ அவர்களைப் பாராட்டி ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கலாம். கொடுத்தவர்களின் பெயர்களை ஒரு ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொள்ளலாம். இவ்விதமே பெரிய காரியாலயங்களிலும், மானேஜர் தன் சிப்பந்திகளிடமுள்ள பழைய பத்திரிகைகளையோ, புத்தகங்களையோ அவர்கள் இஷ்டத்துடன் அவர்களிடமிருந்து பெற்று அவற்றை அனுப்பலாம். பெரிய பத்திரிகைக் காரியாலயங்கள், தம்மிடமுள்ள பழைய பத்திரிகைகளை அனுப்பி உதவலாம். 'கிளப்'புகள், வாசகசாலைகள் போன்ற பொது ஸ்தாபனங்கள் இவ்விஷயத்தில் அதிக ஒத்தாசை செய்ய முடியும். ஏனென்றால், அவை அநேக ஆங்கிலப் பத்திரிகைகளையும், தமிழ் சஞ்சிகைகளையும் எல்லோரும் படிப்பதற்காகப் பல இடங்களிலுமிருந்து வரவழைக்கின்றன. எல்லோரும் படித்த பிறகு அப்பத்திரிகைகள் பிரயோசனப்படுவது மில்லை. ஆகவே, இந்த ஸ்தாபனங்கள் அப்படிப்பட்ட உபயோகமில்லாத பத்திரிகைகளையும், பழைய புத்தகங்களையும் துருப்புகளுக்கு அனுப்பலாம்.

இவ்விதமாகச் சேகரித்து அனுப்புவதால் ஆஸ்பத்திரியில் நோய்வாய்ப்பட்டாவது, காயப்பட்டாவது கிடக்கின்ற வீரர்களை உற்சாகப் படுத்திச் சீக்கிரம் குணமடையச் செய்வதற்கு மற்ற எல்லாவற்றையும் விட, இப்புத்தகங்களும் சஞ்சிகைகளும் மிக உதவியா யிருக்கும். மேலும், தொலைவு தூரங்களில் முகாம செய்து கொண்டிருக்கும் வீரர்களின் உற்சாகமற்ற ஓய்வு நேரங்களைச் சந்தோஷமுள்ள தாக்குவதற்குப் பெரிதும் உதவும். மேலும் பத்திரிகைகள் மூலம் வீரர்கள் எல்லாவிடங்களிலும் நடக்கின்ற செய்திகளையும் அறிவதால், தங்கள் ஊரிலே நடக்கும் விஷயங்களையும் அறிந்து கொள்வார்கள். அதன் மூலம் அவர்கள் தங்கள் ஊர்களில் நடக்கின்ற விஷயங்களை அறிந்து அவற்றுடன் தொடர்பு வைத்துக் கொள்ள முடியும்.

[புத்தகங்களை அனுப்ப விரும்புபவர்கள் கௌரவ காரியதரிசி, கூட்டு யுத்த தருமக்கமிட்டி டிபோ (Joint War Charities Depot), 'பாங்க்வெட்டிங் ஹால்,' 'கவர்ன்மெண்ட் ஹவுஸ்,' சென்னை, என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.]

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

இரண்டு போகம் நெல் விளையாத நிலங்கள் விளையும்படிச் செய்யப்படும். பொருளாதார சம்பந்தமான பல அசௌகரியங்களுக்கு விவசாயிகள் ஆளானார்கள். பழத் தோட்டங்களை யெல்லாம் நெல் வயல்களாகத் திருத்தி யமைப்பார்கள். யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு வழி, உணவுப் பொருள்கள் சப்ளை ஒழுங்காக நடைபெறுவது தான்.''

ஜப்பானில் சராசரி வாழ்க்கைச் செலவு மிகக் குறைவு என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இப்போது ஜப்பானிய யுத்தப் பிரபுக்களின் வீண் ஆசைகளை நிறைவேற்ற வேண்டி, வாழ்க்கைச் செலவை மேலும் குறைக்க வேண்டியிருக்கிறது. மேலும், இத்துறையில் முயற்சிக்கும் தன்மை, தொழிலூக்கமுடைய அந்தக் குடியானவர்களுக்கு இல்லாதிருக்கலாம். ஜப்பானிய முதல் மந்திரி டோஜோ, இந்த யுத்தத்தை விரைவில் முடிக்க ஆவலாய் இருப்பதற்குக் காரணம் இதாகத் தான் இருக்கவேண்டும். இந்த யுத்தம் "இன்னும் ஒரு வருஷத்தில் முடிய வேண்டும்.'' என்று வெளிப்படையாகச் சமீபத்தில் கூறியதை ஞாபகப் படுத்தலாம். இது அவ்வளவு எளிதல்ல, ஏனென்றால், நேச நாடுகளின் நோக்கம் வேறு. "ஜப்பான் ஜப்பானியருக்கே அமைய வேண்டும் என்பது தான் கீழ் நாட்டு யுத்தத்தின் நோக்கம் என்று ஜெனரல் ஸ்மட்ஸ் குறிப்பிட்டார். இதிலிருந்து டோஜோ குறிப்பிட்டதை விட நெடுங்காலம் இந்தப் போர் நடைபெறுமென்று ருஜுவாகிறது.



# உம்! விட்டுடு! ாசங்கம்:

நவராத்திரி சமயத்திலே மதுரையிலே மீனாக்ஷியம்மன் கோயிலிலே ஒரு விசேஷம் நடப்பதுண்டு. அங்குள்ள பொற்றாமரைக் குளத்தருகே, வரிசையாக நூற்றுக் கணக்கிலே பெண்கள் உட்கார்ந் திருப்பார்கள். அவர்கள் எல்லாம் தலைவிரித்தாடிய வண்ணமே இருப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் எதிரே ஒரு பூசாரி, வேப்பிலை-பிரம்பு சகிதமாக அமர்ந்திருப்பான். நடு நடுவே, அந்தப் பெண்கள் பிரமாதமாக அலறுவார்கள்.

'உம்! விட்டுடு! விட்டுடுப் போயிடு! போகாட்டா உதை தான்!' என்று மிரட்டுவார்கள் அந்தப் பூசாரிகள். திடீர் திடீரெனச் சில பெண்கள் ஏகமாகக் கூச்சலிட்டுக் கொண்டு, எழுந்து ஓடுவார்கள். சரியான பூசை கொடுத்து, அவர்களைப் பிடித்திழுத்து உட்காரச் செய்வார்கள், பூசாரிகள்.

இதெல்லாம் என்ன தெரியுமா? பேயாட்டமும், பேயோட்டுதலும். மேற்கண்ட பெண்களைப்பிடித்துள்ள பிசாசுகள் படுத்தும் பாடுகளுக்கு கணக்கே இராது. அந்தப் பிசாசுகள் அப் பெண்களை லேசில் விடா. அவ்வாறு விட்டுப் போகுமுன் தான் ரொம்ப ரொம்ப அட்டகாசம் செய்யும். ஆனாலும் பூசாரி அஞ்சாது, களைக்காது நின்று, அப் பிசாசுகளை விரட்டியடிப்பான்.

அதே போல, வட ஆப்பிரிக்காவை அச்சுப் பிசாசு பலமாகப் பிடித்து வாட்டிக் கொண்டிருந்தது. அதனை நேச தேசப் பூசாரிகள் விடாப்பிடியாக நின்று விரட்ட முயன்று வருகிறார்கள். அது என்னடா என்றால் லேசிலே விடுவேனா என்று இழுத்துப் பறித்துக் கொண்டே நிற்கிறது. ஒவ்வொரு தடவை அது சேஷ்டை செய்கிற போதும், அதற்கு நேச தேசப் பூசாரிகள் சரியான அடி கொடுக்கத் தான் செய்கிறார்கள். பெரிய பிசாசு! அதனால் அதைப் பூரணமாக விரட்டி யடிக்க நாள் தானாகிறது.

## கிளம்பி விடும்

ஆனால், இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால், வட ஆப்பிரிக்காவை விட்டு இந்தப் பிசாசு வெகு சீக்கிரத்திலேயே சீட்டு வாங்கிக் கொண்டு கிளம்பி விடும் என்று தோன்றுகிறது. அப்படி அது கிளம்புவதற்கு முன்னால், கடைசியாக ஒரு ஆட்டு ஆட்டி வைத்து விட்டுத் தான் போக முயலும். வெறும் சாப்பாட்டிற்காகட்டும், ரயிலிலே கொஞ்ச நேரத்திற்காகட்டும் ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பவன், 'அதை விட்டு நகரு' என்றால், என்னென்ன பேச்சுப் பேசுகிறான். அப்படியிருக்க, ஆப்பிரிக்காவை விட்டு விட்டுப் போவதால் பலவித கஷ்ட நஷ்டங்களும், அவமானமும் ஏற்படும் என்று அச்சு நாட்டாருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும் பொழுது, லேசிலே விட்டுவிட்டுப் போய்விடுவார்களா என்ன? கடைசியாக ஒரு தடவை, பயங்கரமாகப் போராடிப் பார்க்கத் தான் செய்வார்கள். இந்தக் கட்டத்திலே தான் வெகு ஜாக்கிரதையாக யிருக்க வேண்டும்.

காட்டிலே வேட்டையாடப் போகிறார்கள். அவ்வாறு போகிறவர்களுக்கு கண்களும், செவிகளும் வெகு கூர்மையானவையாக இருக்க வேண்டும். அதிலும் புலி வேட்டைக்குப் போகிறவர்கள் மகா ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது வெகு அவசியம். ஏனென்றால். புலி மகா தந்திரமான பிராணி. யாராவது கண்ணைக் கொட்டினால் கூட, அது தெரிந்து கொண்டு விடுமாம். ஆகவே, உயர்ந்த மரக் கிளைகளிலே பரண்களைக் கட்டிக் கொண்டு, கண் கொட்டாது அமர்ந்திருந்து, புலி வரும்பொழுது பார்த்துச் சுடுவார்கள். ஒரே தடவையிலேயே அந்தப் புலி விழுந்தால் உண்டு. இல்லாவிட்டால் ரொம்ப ஆபத்து. காயம் பட்ட புலி திடீரென ரொம்ப உயரமாகத் துள்ளிக் குதிக்குமாம். அவ்வாறு குதிக்கும் பொழுது, அது போடும் சப்தத்தைக் கேட்டால் யாரானாலும் நடுங்கி விடுவார்களாம். அப்பொழுது அது எட்டிப் பிடிக்க முடியாத உயரத்திலே தான் பரண்களை அமைத்திருப்பார்கள். காயம் பட்ட புலிக்குள்ள ஆத்திரத்திலே, அதன் பிடியிலே யாராவது சிக்கிக்கொண்டு விட்டால், அதோடு 'க்ளோஸ்' தான். அதனால் காயம்பட்ட புலி விஷயத்திலே விசேஷ ஜாக்கிரதையோடு தான் வேட்டை நிபுணர்கள் நடந்து கொள்வார்கள்.

ரோமலும், வான் ஆர்னீமும் காயப ...
தானே! அவர்கள் வட ஆப்பிரிக்காவை ர்கள்
படவேண்டிய நிர்ப்பந்தம் நாளுக்கு நாள
மாகிக் கொண்டே வருகிறது. அதனால், அவ
எங்காவது ஒரு இடத்திலே சேர்ந்து நின்று ஒரு கை பார்த்து விட்டுத் தான் போவார்கள். அந்த இறுதிச் சண்டை எங்கு, எப்பொழுது நடக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது.

ஆனால்; ஒன்று மட்டும் நிச்சயம். ஜெனரல் ஜிரோ என்ற பிரஞ்சுத் தலைவர் கூறியபடி, கூடிய சீக்கிரமே, மத்யதரைக் கடலிலே, ட்யூனிஸியாவிற்கும் ஸிஸிலிக்கும் இடையிலே, ஏகப்பட்ட வெள்ளைத் தொப்பிகள் மிதக்கும் என்பது நிச்சயம்.

கடலிலே வெள்ளைத் தொப்பியா என்று கேட்டு பிரமிப்பீர்கள்! ஆமாம், ஜெர்மானியர்களும், இத்தாலியர்களும் அணிந்துள்ள தொப்பிகளைப் பற்றியே இங்கே குறிப்பிடுகிறோம். அன்றொரு நாள், யுத்தம் ஆரம்பமான புதிசிலே, நேச தேச வீரர்களை, பிரான்ஸிலே நெருக்கிப் பிடித்து நசுக்க முயன்றார்களல்லவா இந்த நாசிகள்! அப்பொழுது நேச தேசப் படைகள், வெகு சாமர்த்தியமாக டங்கர்க் என்ற துறை முகத்தி லிருந்து, சாத்யமான சாதனங்களை எல்லாம் உதவியாகக் கொண்டு, சீமைக்குப் போய்ச் சேர்ந்தன. அச்சமயம் அப்படைகளை அச்சு நாட்டு விமானங்கள் பிரமாதமாகத் தாக்கின. ஆனாலும், அப்பொழுதிருந்த ஆபத்தான நிலையிலே, நம்மவர்கள் எவ்வளவோ திறமையுடன் தான் தங்களைச் சமாளித்துக் கொண்டார்கள்.

## பயங்கர நிலைமை ஏற்படலாம்

அவ்வாறு தங்களைச் சமாளித்துக் கொள்ளும் பயங்கர நிலைமை ரோமலுக்கும், வான் ஆர்னீமுக்கும், அவரது படைகளுக்கும் சீக்கிரமே ஏற்படலாம். டங்கர்க் துறைமுகத்தில் ஒரு கோரக் காட்சி ஏற்படப் போகிறது என்று யாருமே எதிர் பார்க்க வில்லை. ஜெர்மானியரும் அங்கு முன் கூட்டி வந்து காத்திருக்க வில்லை. அவசர அவசரமாக, ஒரு விதரணையில்லாமல், கண்மூடித்தனமாக, விலையுயர்ந்த வெடி குண்டுகளைப் பாழாக்கினார்கள். ஆனால், இப்பொழுது ட்யூனிஸியாவிலோ, அச்சு நாட்டார் வெளியேறியே தீர வேண்டும் என்பதை முன் கூட்டியே நேச தேசத்தார் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சரியான பூசை போட வேண்டிய சாமான்களை எல்லாம் சமீபத்திலேயே சேர்த்து வைத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட முகூர்த்தம் வந்ததும் போடு போடென்று போட்டு விடுவார்கள்.

மத்யதரைக் கடலிலே, ட்யூனிஸியாவிற்கு மேற்கிலும், கிழக்கிலும் ஏகப்பட்ட நேச தேச யுத்தக் கப்பல்கள் இருக்கின்றன. ருஷ்யப் போர் முனைகளிலே, அடிக்கடி இடுக்கித் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இது தரை மீது நடக்கும் தாக்குதல். ஆனால், இது வரை கடலிலே எங்கும், யாரும் இடுக்கித் தாக்குதலை நடத்தவே இல்லை என்று நினைக்கிறோம். கூடிய விரைவில் இந்தக் குறையும் தீர்ந்து போகக்கூடும். ட்யூனிஸியா அருகே இந்த அற்புதம் நிகழலாம். அச்சு நாட்டாருக்கு ட்யூனிஸியாவே, பெரிய 'டங்கர்க்'காக அமையும் போலிருக்கிறது. இங்கே நடக்கும் காட்சியின் கோரத்தை அதிகப்படுத்த, எண்ணற்ற வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் கூடி யிருக்கின்றன. இங்கு நடக்கப் போகும் வேடிக்கையைப் பற்றி அறிய உலகமே ஆவலாக இருக்கிறது.

'இன்னும் ஐந்து வாரங்களில் இது நடக்கலாம்' என்கிறாராம் ஒரு ஆஸ்திரேலிய நிருபர். 'அதை நாங்கள் நம்ப வில்லை' என்கிறார்களாம் பிரிட்டிஷ் அதிகாரிகள். ரோமலிடம் இன்னும் பலமான டாங்கிப் படை இருக்கிறதாம். போன வாரம் ஒரு நாள் கூட, அவரது டாங்கிகளில் 35, திடீரென மத்ய ட்யூனிஸியாவில், கடற் கரையை நோக்கி முன்னேற முயலும் அமெரிக்கப் படைகளை, பலமாகத் தாக்கினவாம். ஆகவே, கடும் போர் ஒன்று நடந்த பிறகே எதுவும் சொல்லலாம் என்று அபிப்பிராயப் படுகிறார்களாம் பிரிட்டிஷ் அதிகாரிகள்.

இவ்வீரர்களில் அநேகர் படித்தீ்யூனிஷியாவிலே நேச அவர்கள் மாதப் பத்திரிகைக்காண்டிருக்கிறார்களே சில பொழுது போக்கான ..., அவர்கள் எல்லாம் பிரிட்டிஷ் நாவல்கள்-இம்மாதிரித்து, ‘ டங்கர்க்கிலே நீங்கள் ரொம் ஓய்வு நேரங்களிலீர்களோ ? அங்கிருந்த நிலைமையைக் இது சம்பூர் விவரித்துச் சொல்லுங்களேன் ’ என்று மேன்மையோடு கேட்கிறார்களாம். கள்

## மூன்று பிரதேசங்களில் முன்னேற்றம்

நேச தேசப் படைகள் மூன்று பிரதேசங்களிலே ட்யூனிஷியாவிலே முன்னேறிக் கொண்டிருக்கின்றன. வடக்கே கடற்கரை யோரம் ஒரு படை அச்சு நாட்டு முக்ய ஸ்தலமான பிஸெர்ட்டாவிற்கு அருகே வந்து விட்டது. மத்யப் பிரதேசத்திலே அமெரிக்கப் படைகள் சிரமப் பட்டு முன்னேறுகின்றன. எப்படியாவது இந்தப் படைகளும், மாண்ட்கமரியின் எட்டாவது படைகளும் ஒன்று சேர விடக்கூடாது என்ற கவலை யோடு, ரோமல் ஏராளமான சுரங்க வெடிகளை எங்குப் பார்த்தாலும் தூவி வரச் செய்கிறாராம். ஆங்காங்கு நின்று, நேச தேசப் படைகளை எதிர்க்க சிறு சிறு படைகளை ஏவி விடுகிறாராம். என்ன தான் செய்யட்டுமே, இந்த அச்சுப் பிசாசு ஆப்பிரிக்காவை விட்டுக் கிளம்பியே தீரும்.

அதற்கு அவர்களும் தான் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்களாம். ஸிஸிலியிலே ஏராளமான கப்பல்களும், படகுகளும் தயாராக இருக்கின்றனவாம். இத்தாலியி லிருந்த படகுகளை எல்லாம் ‘அபேஸ்’ செய்து விட்டார்களாம். ‘இவற்றைச் செலவிலே எழுதி விடுங்கள்’ என்று சொல்லி ஏதோ கொஞ்சம் சில்லறை கொடுத்துவிட்டு, அவற்றைக் கைப் பற்றி விட்டார்களாம் நாஸிகள். நாஸி நீர் மூழ்கிகளும், விமானங்களும் தயாராக இருக்கின்றன. முக்யமான படைகளை ரோமல் விமான மூலம் வெளியேற்றி விடுவார் போலிருக்கிறதாம். கப்பல் வழியாகப் போகப் பார்க்கும் படைகளுக்கு நிச்சயம் பெருஞ் சேதம் ஏற்படும் என்பதில் சந்தேகமே யில்லை. அதற்கென்ன செய்வது ? தப்ப முடியாத விதி ஆச்சே இது !

இத்தாலியில் உள்ள சில முக்ய துறைமுகங்களை எல்லாம் நாஸிகள் தங்கள் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வந்து விட்டார்களாம். நாளை, நேச தேசத்தார் படை யெடுத்து வந்தால், அப்பொழுது வெறும் விளக்கெண்ணெயாக இத்தாலியர் இருந்து விட்டால் என்ன செய்கிறது என்ற பயம் போலிருக்கிறது.

## உதை புராணம் ஆரம்பம்

இத்தாலியர்களுக் கிருப்பது போன்ற கவலை இப்பொழுது வேறு யாருக்குமே இருக்க முடியாது. வட ஆப்பிரிக்க கதை முடிந்ததும், அடுத்து இத்தாலிய கதை புராணம் தானே ஆரம்பமாகும். இப்பொழுதே வயிற்றைக் கலக்க மருந்து கொடுத்து விட்டார் ஜெனரல் ஜிரோவின் சகாவான ஒருவர். ‘இத்தாலியரே ! இப்பொழுதே விழித்தெழுங்கள். தலைக்கு மேல் வெள்ளம் போய் விட்டால், அப்பா என்றாலும் பிரயோசன மில்லை ; அம்மா என்றாலும் சுக மில்லை. ஆயுதங்களைக் கீழே வையுங்கள். அச்சு நாட்டார் உறவை ஒழியுங்கள். உங்கள் தொழிற் சாலைகளும், குழந்தை குட்டிகளும் நாசமாவதால் யாருக்கு நஷ்டம் ?’ என்று ரேடியோ மூலம் கிண்டி விட்டிருக்கிறார் அவர்.

அவர் சொல்வது வாஸ்தவம் என்பதை ரூபிக்கச் சென்றவர்கள் போல, நூறு அமெரிக்க விமானிகள் பறக்கும் கோட்டைகளில் சென்று நேபிள்ஸ் நகரை த்வம்சம் செய்து வந்திருக்கிறார்கள்.

அமெரிக்க விமானிகள், இங்கு மட்டும் தம் கைத்திறமையைக் காட்ட வில்லை. மேற்கு ஐரோப்பாவிலே, எஸ்ஸன் என்ற இடத்திலும், பாரிஸ் நகருக் கருகே உள்ள ஒரு பெரிய மோட்டார் உர்பத்தி சாலையிலும் அவர்களது குண்டுகள் பலமாக விழுந்திருக்கின்றன. பட்டப் பகலிலேயே க்ரப்ஸ் தொழிற் சாலையை நேச தேச விமானிகள் தாக்கி யிருக்கிறார்கள். சென்ற ஒரு மாதத்தில் மட்டும் 8,000 டன் குண்டுகள் அச்சு நாட்டார் கால் வைத்த பிரதேசங்களில் மட்டும் வெடித்திருக்கின்றன. ஹிட்லர், கொயரிங் ஆகியோரின் ஆபீஸ்களையும் தகர்த்தெறிந்திருக்கிறார்கள் மேற்கண்ட விமானிகள். இவர்கள் இன்னும் பிரமாதமான வேலைகளைக் காட்டப் போகிறார்களாம்.

ஜெர்மனிக்கு இந்தக் குண்டு வீச்சைப் பற்றிய கவலை ஒரு புற மிருக்க, படை யெடுப்பு பீதி ஒருபுறம் அதிகமாகி வருகிறதாம். ஹாலந்திலே கடற்கரை யோரமாக உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வை யிட ஒரு ஜெர்மன் சேனாபதி சென்றாராம். நேச தேசத்தார் எங்கு வேண்டுமானாலும் தாக்கலாம் போலிருக்கிறதே என்று கவலைப்படுகிறாராம் அவர். தவிர, ‘அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் நேச தேசத்தாருக்குத் தெரிந்து விட்டதே ! ஹாலந்து தேச வேவுகாரர்கள் அவர்களுக்கு எல்லாம் சொல்லி விட்டார்களே ! நாங்கள் கூட, அவர்களில் சிலரது தலையைச் சீவினேமே ! ’ என்கிறாராம்.

## பெண்களையும் அனுப்பச் சொல்லுகிறார் !

இது ஒன்றாச்சா ? ஜெர்மனியின் ஆள் பலம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறாப் போலிருக்கிறது. பிரான்ஸிலிருந்து இரண்டரை லக்ஷம் பேர்களை ஜெர்மனிக்கு வரச் செய்திருக்கிறார் ஹிட்லர். இப்பொழுது பிரான்சுப் பெண்களையும் அனுப்பச் சொல்லுகிறாராம். ருஷ்யப் போர் முனைக்கு மள மளவென ஆட்களை அனுப்பி வருகிறாராம். அங்கே தென் போர் முனையிலே ஜெர்மானியர் கொஞ்சம் வாலாட்டுகிறார்களாம். ஆனாலும், ருஷ்யர் விடாப்பிடியாகவே போராடுகிறார்களாம். ருஷ்யாவின் மற்றப் பிரதேசங்களிலேயும் போர் நடந்து கொண்டு தானிருக்கிறது. எல்லா இடங்களுக்கும் ஆள் அனுப்புவ தென்றால் என்ன செய்வார் ஹிட்லர் ? ‘அத்தனைக்கும் ஆள் கிடைக்காமல் போய் விட்டால், திடீரென ஒரு நாள், எதிர் பாராமலே யுத்தம் நின்று விடக்கூடும் என்கிறார் ஹாலிபாக்ஸ் துரை. யார் கண்டார்கள்? இந்த உலகத்திலே எத்தனையோ அதிசயங்கள் நடக்கின்றன. அவற்றுள் இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

சில தினங்களுக்கு முன் பாருங்களேன். அமெரிக்காவி லிருந்து இருபத்தேழரை மணி நேரத்திலே ஒரு பிரமாண்டமான வெடி குண்டெறியும் விமானம் 11,748 மைல் பறந்து வந்து, இந்தியாவை அடைந்திருக்கிறது. இது ஒரு அதிசய மல்லவா ? அச்சு நாட்டாரைத் தோற்கடிக்கு முன், நேச தேசத்தார் இன்னும் எத்தனை அதிசயச் செயல்களைச் செய்து காட்டப் போகிறார்களோ தெரியவில்லை. பார்த்துக் கொண்டே வாருங்கள், ஒவ்வொன்றாக !

இந்தியாவைக் காக்க

விமானப் படையில் சேருங்கள் !



# டோஜோ பிரசங்கம் :

## அன்பு மொழிகளால் சீனர்கள் இன்புறுவார்களா ?

### ஆட்டினுடைய சுதந்தரத்தைக் குள்ளநரி பாதுகாக்கும் கதை

### ஜப்பானுடைய சுயநல சாஸ்திரமும், சன்மார்க்க சாஸ்திர வேஷமும்

### பேசுவதோ தியாகம், அடிப்பதோ கொள்ளை

69526



அச்சு நாட்டுத் தலைவர்களுடைய பல பிரசங்கங்களை நீங்கள் அவ்வப்போது படித்திருப்பீர்கள் ; அவைகளுடைய குணதிசயங்க ளெல்லாம், அச்சு அடித்ததைப் போல, ஒரே மாதிரியாக இருக்கும். மறைத்துக் கூறல், குறைத்துக் கூறல், மாறுபடக் கூறல், மிகைப் படக் கூறல் முதலிய அம்சங்கள் பல மிளிர்ந்து கிடைப்பதை நீங்கள் காணலாம். மார்ச்சுமீ 25-ந் தேதி, ஜப்பானிய முதன் மந்திரி டோஜோ ஜப்பானிய பார்லிமெண்டு சபையில் ஒரு ருசிகரமான பிரசங்கம் செய்திருக்கிறார் ; அதில் இந்தச் அம்சங்கள் அபரிமிதமாகக் காணப்படுகின்றன. இந்தப் பிரசங்கத்தினுடைய சுருக்கத்தை, அன்றையத் தினமே டோக்கியோ வானொலி நிலையம் சீன மொழியில் ஒலி பரப்பி யிருக்கிறது. டோஜோ சீனாவைப் பற்றிக் கூறியதைக் கேட்டால், “ இந்தப் பூனையும் பால் குடிக்குமா ? ” என்று தோன்றும்—சீனா விடத்தில் அவ்வளவு அன்பு காட்டி யிருக்கிறார் !

சீனாவுக்குச் சமீபத்தில் அவர் சென்றிருந்தாராம். “ சீனா ” என்றால் ஜப்பானிய ஆதிக்கத்தின் கீழுள்ள நான்கிங் சீனா, வாங் சிங் வீ (Wang Ching Wei) யினுடைய சீனா—மார்ஷல் சியாங்கே ஷெக்கினுடைய சுதந்திர சுங்கிங் சீனா அல்ல. நான்கிங் சீனத் தலைவரிடம் டோஜோ கலந்து பேசினாராம். பெருந் தலைவர்கள் நேரில் கலந்து பேசுங் காலமல்லவா இது? மிஸ்டர் சர்ச்சில் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டோடு கலந்து பேச வில்லையா ? அதைப் போல மிஸ்டர் டோஜோ, பிரசிடெண்ட் வாங் சிங் வீயைச் சந்தித்தார். புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்டதாம்—வரி வ்ரியாகத் தெரிய வேண்டு மென்பதற்காக !

## நாங்கிங்கில் டோஜோ—வாங்-சிங்-வீ-சந்திப்பு

சரி போகட்டும், நான்கிங்கில் நடந்த இந்த அருமையான சந்திப்பைப் பற்றி டோஜோ என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

“ போர் உணர்ச்சி கொண்ட சீனாவின் புது மக்களை நான் கண்டேன். சீன தேசீய அரசாங்கம் ஜப்பானுடன் சேர்ந்து யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதில் உண்மையான மனோபாவத்துடன் இருக்கிறதென்பதை உணர்ந்தேன். இதைக் கண்டதும் நான் பெரு மகிழ்ச்சி கொண்டேன். ஜப்பானுடைய உண்மையான யுத்த நோக்கங்கள் என்ன என்பதை சீன மக்கள் உணர்ந்து கொண்டார்கள் ; உணர்ந்து ஜப்பானுடன் ஒத்துழைக்கிறார்கள். பிரிட்டனும் அமெரிக்காவும் சீனாவுக்கும் ஜப்பானுக்கு மிடையே அபிப்பிராய பேதம் உண்டாக்கித் தொந்திரவு கொடுப்பதில் சுறுசுறுப்பா யிருக்கின்றன.”

—என்று ஜெனரல் டோஜோ கூறி யிருக்கிறார். இந்தப் பிரசங்கத்தில் ஒரே விஷயம் தானுண்மை : டோஜோ நான்கிங்குக்குப் போனதும், நான்கிங்கிலுள்ள சீனத் துரோகிகள் டோஜோவுக்கு அடி பணிந்து தண்டனிட்டு, ஒத்துழைப்பு உறுதி மொழி கொடுத்ததும் மற்ற விஷயங்க ளெல்லாம் உண்மைக்கு மாறுபாடானவை.

சீன மக்களாவது ஜப்பானுடன் ஒத்துழைப்பதாவது ? இப்போது நடக்கும் உலக மகா யுத்தம் தொடங்கி நான்கு வருஷங்களாயின என்றால், சீன ஜப்பானிய யுத்தம் தொடங்கி ஆறு வருஷங்களுக்கு மேல் ஆகி விட்டதே ? சீனர்களா ஒத்துழைக்கிறார்கள் ? சுதந்திர உணர்ச்சி கொண்ட சீனப் பழங்குடி மக்கள், ஜெனராலிஸ்ஸிமோ சியாங்கே ஷெக்கினுடைய தலைமையின் கீழ், ஜப்பானை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். எப்படி பிரான்சில், விஷி தலைநகரில் மார்ஷல் பேத்தானும் அவர் தலைமையின் கீழுள்ள அரசாங்கமும் ஹிட்லருக்கு உட்பட்டு இருக்கின்றனவோ, அதைப் போல நான்கிங்கில் உள்ள பிரசிடெண்ட் வாங்-சிங்-வீ-யும் அவருடைய அரசாங்கமும் டோஜோவினுடைய ஆட்சிக்கும் சூழ்ச்சிக்கும் ஆளாகி இருந்து வருகின்றன.

## அடிமை சீன அரசாங்கமும், சுங்கிங் சுதந்தர அரசாங்கமும்

இந்த அடிமை சீன அரசாங்கத்தைப்பற்றி, படேவியா என்ற ஜப்பானிய ஆதிக்கத்துக்குட் பட்ட வானொலி நிலையம் புகழ்ச்சியாகப் பேசியிருக்கிறது. மார்ச்சு மாதம் 16-ந் தேதி செய்யப்பட்ட ஆங்கில ஒலிபரப்பில், டோஜோ நான்கிங்குக்கு விஜயம் செய்ததைக் குறிப்பிட்டுவிட்டு, பிரசிடெண்ட் வாங்-சிங்-வீ ஜப்பானோடு பூரணமாக ஒத்துழைப்பதைச் சிறந்த புத்திசாலித்தனம் என்று பாராட்டி யிருக்கிறது. அத்தோடு நிற்கவில்லை ; சியாங் கே ஷெக் அவர்களுடைய நடை முறைக் கொள்கை திட்டத்தினால்,

“ சுங்கிங் அரசாங்கத்தின் வீரமுள்ள லட்சக்கணக்கான சீன மக்கள் சொல்லமுடியாத கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகிறார்கள்.”

—என்று படேவியா நிலையம் கூறுகிறது. ஆமாம், அது உண்மைதான் ; ஆனால் ஏன் இக்கஷ்டங்களையும் துன்பங்களையும் அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் ? ஜப்பானிய ஆட்சியின் கீழுள்ள சமாதானத்தை விட, சீன சுதந்தரப் போரினால் ஏற்படுங் கஷ்டங்கள் எவ்வளவோ மேலானவை என்ற காரணத்தால் தான் !

## ஜப்பானிய ஆட்சியின் நோக்கம் : அயோக்கியன் விளக்கம்

ஜப்பானிய ஆட்சி என்றால் எப்படிப்பட்டது என்பதைச் சீன மக்கள் நன்றாக அறிவார்கள். ஏனென்றால், இதனுடைய நோக்கத்தைப் பற்றி விவரித்து ஒரு பிரபல ஜப்பானியர், செட்சூச்சி அயோக்கி—பொருத்தமான பெயர்தான் ! விளக்கிக் கூறி யிருக்கிறார். வெளி நாட்டில் செய்ய வேண்டிய பிரசாரத்தைப் பற்றிக் கூறும்போது,

JL
V211:19(J:m) m, N39
N43:3

"ஜப்பானிய கலேப் பிரசாரம் வெளி நாடுகளில் செய்வ தென்றுல், நம்முடைய விஞ்ஞான சாஸ்திரம், சித்திரம் முதலியவைகளே மாத்திரம் புகுத்துவது என்று பொருளல்ல; நம்முடைய அரசியற் கொள்கைகள், யுத்தத் தளவாடங்கள், பொருளாதாரத் திட்டங்கள் முதலிய எல்லாவற்றையும் புகுத்த வேண்டும் என்பது தான் ஜப்பானியக் கலேப் பிரசாரத்தின் நோக்கம். ஜப்பானிய தேசீய ஆதிக்கத்தை நிலே நிறுத்துவதைத் தவிர வேறல்ல"

—என்று அவர் யாதொரு ஒளி மறைவின்றி, எந்தவித சந்தேகத்துக்கும் இடமில்லாமல், விவரித்துக் கூறி யிருக்கிறுர். ஜப்பானிய பிரசாரத்தின் நோக்கத்தை அறிந்த பிறகு, ஜப்பானுடைய பசப்பு மொழிகளால் சீனர்கள் மயங்கி விடுவார்களா? ஒருக்காலும் மயங்க மாட்டார்கள். இருந்த போதிலும், ஜப்பான் தன்னுடைய அன்பு மொழிகளால் சீனமக்களே இன்புறும்படிச் செய்துவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறது. மார்ச்சுமீ 22-ந் தேதி டோக்கியோ நிலேயம் தன்னுடைய ஆங்கில ஒலிபரப்பில், பின்வருமாறு கூறுகிறது :—

ஜப்பானுடைய அசைக்க முடியாத கொள்கை சீனுவின் தனி அரசாங்க சுதந்தரத்தையும், நேர்மைத் தன்மையும் நிரந்தரமாகப் பாதுகாப்பது தான்."

ஒரு குள்ளநரி ஆட்டினுடைய சுதந்தரத்தைப் பாதுகாப்பது தான் தன்னுடைய நோக்கம் என்று கூறுவதில் எவ்வளவு உண்மை யிருக்கிறதோ அவ்வளவு உண்மை ஜப்பான் கூறுவதில் இருக்கிறது. இந்தக் கூற்றுக்கும், சென்ற 13 வருஷங்களாக ஜப்பான் நடந்து வந்ததற்கும் யாதொரு சம்பந்தமு மில்லே. 1930 ம் வருஷத்தி லிருந்து ஜப்பான் சீன தேசத்தைக் கண்டதுண்டமாக்கி வந்திருக்கிறது; அதல்லாமல், தனி அரசாங்க சுதந்தரத்துக்காகவும், நாட்டு நேர்மைத் தன்மைக்காகவும், பாடு படும் சீனமக்கள் பலருக்கு உயிர்ச் சேதம் விளேவித்திருக்கிறது; சீன தேச வாழ்க்கையையே நாசம் செய்திருக்கிறது.

## ஜப்பானுடைய 'புதிய தந்திரம்: அரசியல் சலுகைத் "தியாகம்"

இப்போது, ஜப்பான் ஒரு புதிய தந்திரத்தைக் கையாண்டிருக்கிறது. சீனுவிலுள்ள ஜப்பானிய அரசியல் உரிமைகளே சீனுவுக்கே திருப்பிக் கொடுத்து விட்டதாக, ஜப்பான் பெறுமை யடித்துக் கொள்ளுகிறது. 16 நாட்களுக்கு முன், அதாவது மார்ச்சுமீ 15 ந் தேதி, டோக்கியோ நிலேயம் ஆங்கில ஒலி பரப்பில், உண்மையை அறிந்தவர்கள் நகையாடும்படியான ஒரு விஷயத்தைக் கூறியிருக்கிறது.

"ஜப்பானுக் கென்று கொடுக்கப் பட்ட சில அரசியல் சலுகைகளே ஜப்பான் சீனுவுக்கே ஒப்படைத்து விட்டது இதனுல், ஜப்பானிய அரசாங்கத்தின் வெளிநாட்டு அரசியல் கொள்கை ஒழுங்கான சன்மார்க்க சாஸ்திர விதிகளே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்ற விஷயம் உலகத்துக்கு ருசுபடுத்திக் காண்பிக்கப் பட்டது"

—என்று டோக்கியோ ரேடியோ கூறுகிறது. இதனுல் யார் ஏமாறுகிறவர்கள்? அரசியல் சலுகைகளே அடிமை அரசாங்கமாகிய நான்கிங் அரசாங்கத்துக்கு ஒப்படைத்து விட்டதால், நிலேமை என்ன மாறிவிட்டது? ஒரு பரம யோக்கியன் "நான் உலகத்தைத் துறந்து விட்டேன்; என்னுடைய நிலங்கள், வீடு, வாசல் எல்லாம் தியாகம் செய்து விட்டேன், பத்திரம் கூட ரிஜிஸ்டர் ஆபீசில் பதிவு செய்து விட்டேன்" என்று கூறினுன். "யாருக்குத் தியாகம் செய்து விட்டாய்?" என்று ஒருவன் கேட்டான். "ஏன்? என் மனேவி பேருக்கு என்னுடைய எல்லா சொத்துகளேயும் எழுதி வைத்து விட்டேன்" என்று உணர்ச்சி ததும்பக் கூறினுனும் தியாகமூர்த்தி! ஜெனரல் டோஜோவினுடைய கையாளான பிரசிடெண்ட் வாங் சிங் வீயினிடம் ஜப்பானிய அரசியல் சலுகை உரிமைகளேக் கொடுத்து விட்டதால், ஜப்பானுக்கு என்ன நஷ்டம் நேர்ந்து விட்டது? இது வெறும் வாய்பேச்சுத் தியாகந் தானே? வாங் சிங் வீ அரசாங்கம் டோஜோ ஆட்டுகிறபடி ஆடும் சூத்திரப் பாவை தான் என்பது உலகறிந்த விஷயம். இதே வாங் சிங் வீ 6 வருஷங்களுக்கு முன் என்ன கூறினுர்? 1937-ம் வருஷம் ஆகஸ்டு மாதம்,

"ஜப்பானுடைய பரந்த ஏகாதிபத்திய சூழ்ச்சித் திட்டத்தின் போக்கில், சீனு ஒரு சம்பவமே ஒழிய வேறல்ல"

—என்று இப்போது பேருக்குப் பிரசிடெண்டாயிருக்கும் இவர் கூறி யிருக்கிறுர்.

## ஜப்பானுடைய ஏமாற்றுப் பிரசாரம்

சீனுவும், இதர ஜப்பானிய ஆதிக்க நாடுகளும் ஜப்பானுடைய சுயநல சாஸ்திரத்துக்குத் தான் உபயோகபடுகின்றன; சன்மார்க்க சாஸ்திர ஒழுங்குக்கு உதாரணமாக உபயோகப்பட வில்லே. இந்த உண்மை, ஜப்பானிய உணவுப் பொருள் பாகு பாடு இலாகாத் தலேவர், மிஸ்டர் கஜிகாரா (Kajekara), சமீபத்தில் கூறியதி லிருந்து விளங்கும். அவர்,

"மஞ்சூரியா, கொரியா, சீனு, பார்மோசா முதலிய நாடுகள் நமக்கு இருக்கின்றன. நமது தேவைக்கு அதிகமாகவே அங்கு உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன"

என்று பெருமை கொள்ளுகிறுர். இதனுல் கொள்ளேயடிப்பது தான் ஜப்பானுடைய கொள்கை; தியாகம் செய்வதாகச் சொல்லும் அதன் பிரசாரம் வெறும் ஏமாற்றுப் பிரசாரம், என்பது விளங்கும்.

இதே ஏமாற்றுப் பிரசாரம் ஜப்பானுடைய வெளிநாட்டுப் பொருள் திட்டத்தின் சம்பந்தமாக நடத்தப் படுகிறது. மார்ச்சு 11-ந் தேதி, டோக்கியோ நிலேயம் தன்னுடைய ஆங்கில ஒலி பரப்பில் ஜப்பானுடைய பொருள் திட்ட ஒப்பந்தங்களேப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. நான்கிங் சீனு, இண்டோ-சீனு, தாய்லந்து முதலிய ஜப்பானிய ஆதிக்க நாடுகளுடன் ஜப்பான் தாராளமான பொருளுதவி ஒப்பந்தங்கள் செய்திருக்கிறதென்றும், இந்த ஒப்பந்தங்கள் கிழக்காசியாவின் புதிய பொருளாதார அமைப்புத் திட்டத்தின் முன்னணிக் கட்டங்களாகும் என்றும் டோக்கியோ புகழ் மாலே பொழிகிறது. இந்தப் புதிய ஒப்பந்தங்களின் பலன் என்ன? ஜப்பானுடைய நிதி மந்திரி, கயா—இதுவும் ஒரு விளக்கமான பெயர்!—பிப்ரவரி 8-ந் தேதி, கூறியதிலிருந்து புலப்படுகின்றது. ஜப்பானிய பார்லியமெண்டு சபையில் அவர் பேசும்போது,

"தெற்கே ஜப்பானிய ஆதிககத்தின் கீழுள்ள நாடுகளிலிருந்து 330 கோடி 'யென்' அரசாங்க வருமானம் வசூலிக்கப்படும்...... ஜப்பானுடைய யுத்தச் செலவுகளில் சில பாகத்தை இந்த நாடுகள் கொடுக்க வேண்டுமென்பது சகஜம் தான்,"

—என்று ஜப்பானிய நீதி நூல் கொள்கைகளே விளக்கி யிருக்கிறுர்.

## ஜப்பானுடைய கடன் தீர்க்கும் வழி

ஜப்பானிய நோக்கத்தைப் பற்றி இன்னும் சிறிது சந்தேகம் இருக்குமானுல், தென் கிழக்கு ஆசியாவிலுள்ள ஜப்பானிய அரசாங்கத்தின் ஆலோசனேயாளர், மிஸ்டர் ஷிமாடா (Shim.da) கூறியதைக் கவனித்தால், அந்தச் சந்தேகமும் நீங்கிவிடும்.

"நம்முடைய வெற்றிகளினுல் கைப்பற்றப்பட்ட பொருட் செல்வத்தினுல், 1931-ம் வருஷத்திலிருந்து வாங்கப்பட்ட ஜப்பானிய யுத்தக் கடன்களே யெல்லாம் தீர்த்து விடலாம்"

என்று அவர் வெட்ட வெளிச்சமாகக் கூறி யிருக்கிறுர்.

இப்படியாக, ஜப்பானிய தலேவர்கள் கூறியவற்றிலிருந்து ஜப்பானிய முதன் மந்திரி டோஜோவின் அருமையான மொழிகளுக்கு ஆதாரமே இல்லே என்பது விளங்கும். சீன மக்கள் எந்தக் காலத்திலும் டோஜோவை நம்ப மாட்டார்கள்; ஜப்பானுக்கு அடிமையாக மாட்டார்கள். அவர்கள் பிரிட்டனேயும் அமெரிக்காவையும் தங்களுடைய சுதந்தர போராட்டத்துக்கு இரண்டு கைகளாக கருதுகிறுர்கள். அவர்களுடைய நம்பிக்கை வீண் போகாது அவர்களுடைய போராட்டம் முடிவில் சுதந்தரக் கொண்டாட்டமாக மாறும் என்பது திண்ணம்.

—சென்னே அகில இந்திய வானெலி நிலேயத்திலிருந்து மார்ச்சு 31-ந் தேதி ஒலி பரப்பப்பட்ட ஒரு பேச்சு.






இத்தாலியின் ராணுவ லட்சியங்களை, பிரிட்டிஷ் விமானப் படை கடுமையாகக் காக்கவைக்க,

## உயிர் தப்பினார்கள்



வங்காளக் குடாவில் சில செம்படவர்கள் படகுக ளில் மீன் பிடிக்கச் சென்றார்கள். 15 மைல்களுக் கப்பாலே ஏதோ ஒன்று கடலில் மிதப்பதைக் கண்டு, அதைத் தம் படகோடு கட்டி இழுத்துக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். இதைக் காண அந் தக் கிராமத்தாரும், அடுத்த கிராமத்தார்களும் வந்து கூடி விட்டார்கள். அது ஒரு சுரங்க வெடி. நல்ல வேளையாக, அது கெட்டுப் போயிருந்தது. கெட்டுப் போகாதிருந்தால் அவர்கள் பாடு அப்போதே தீர்ந்து போயிருக்கும்.

மற்றொரு சுரங்க வெடி கரையில் ஒதுக்கப்பட்டது. இதை அதிகாரிகள் அறிந்து, தகுந்த மேற்பார்வை யுடன் வெடிக்கச் செய்தார்கள். 40 அடி அகலத் திற்கும், 20 அடி ஆழத்திற்கும் ஒரு பெருத்த பள் ளத்தை இது உண்டாக்கி விட்டது. நல்ல வேளையாக நிபுணர்கள் வருகிற வரையிலும், ஒருவரும் அதன் அருகில் போக வில்லை.

தற்கால யுத்தத்தின் மகா கொடிய தளவாடங்க ளில் சுரங்க வெடியும் ஒன்று. இதனால் மூழ்கிய கப்பல்கள் எத்தனையோ! ஒரு தெரு முழுவதை யுமே நாசம் செய்யக் கூடிய சக்தி அதற்கு உண்டு.

**கடற் கரையில் ஒதுக்கப் பட்டுள்ள ஒரு சாதாரண வெடிகுண்டை யாராவது தொட்டால், அது வெடித்து, சுற்றி 500 அடிகளுக்குள் இருப்பவர்களைக் கொல்லும். கட்டிடங்களைச் சிதறடிக்கும்.**

கடலிலோ, தரையிலோ வெடிகுண்டு போன்ற எந்த வஸ்துவைக் கண்டாலும் அதனருகில் யாரும் போகக் கூடாது. பின் வாங்கிட வேண்டும். ஏனென் றால், அது ஒரு உயிர்க் கொல்லி. அதைக் குறித்து, மிகச் சமீபத்திலுள்ள ஒரு சிவில் அதிகாரிக்காவது, இராணுவ அதிகாரிக்காவது அறிவிக்க வேண்டும். அந்தச் சுரங்க வெடியைப் பழுதாக்கும் பொருட்டு ஒரு உத்தியோகஸ்தர் அனுப்பப்படுவார்.

# தாமாகவே முகாமிற்குச் செல்லும் கைதிகள்

## மாரெத் அரண் கைப்பற்றப்பட்ட வரலாறு

துனிஷியாவில் 8-ஆம் படையைச் சேர்ந்த இந்தியர் கள் மாரெத் அரணில் மகா பராக்கிரமமான செயல் களைச் செய்திருக்கின்றார்கள். 8-ஆம் படை கைப்பற்ற வேண்டுமென்று நினைத்த, பல இடங்களைக் கைப்பற்றி யவர்கள் இந்தியப் பகுதியினரே. இவற்றுள் ஒன்று, ஒரு மிஷின் பீரங்கித் தளம். இரண்டு இந்தியப் படைகள் எவ்வித எதிர்ப்புமின்றி இலகுவில் அவை களைக் கைப்பற்றிக் கொண்டன. என்றாலும், பிற்பாடு ஏராளமான ஷெல் குண்டுகள் அவர்கள் மீது பெய் தன. இவர்களை அந்த இடத்தை விட்டு விரட்ட, அச்சு நாட்டுப் படைகள் வெகுவாக முயற்சித்தன. அப்போ தெல்லாம் அந்த ஷெல் குண்டுகள் அவர்கள் மீது பெய்து கொண்டிருந்தன.

மெடினின் என்னும் கிராமத்திற்கு 20 மைல்க ளுக்கு மேற்கே ஒரு உயர்ந்த மலைத் தொடர்ச்சி இருக் கின்றது. இது தான் முன்னேற்றத்திற்குத் தடை. இதைக் கடக்க ஒரு கணவாய் உண்டு. இது வளைந்து வளைந்து செல்லும் ஒரு பாதை. நமது படைகள் இந்த மலையின் வட கோடியி லிருந்தன. அந்த இடத்திற்குக் கிழக்கே 30 மைல் தூரத்தில் பாலை வனம் இருக்கிறது. இந்த மாரெத் அரணை விட்டுத் திடீரென்று ரோமலின் படைகள் பின் வாங்கிய வுடனே,, இந்தியப் படைகள் அந்த மலைப் பிரதேசத் தின் மத்தியப் பகுதியி லுள்ள கணவாய்ப் பகுதியை யும் கூடக் கைப்பற்றிக் கொண்டது. அங்கிருந்த எதிரிப் படைகளைச் சிதற அடித்து வெற்றிக் கண்டது. தளராது உழைத்து அங்குப் பழுதாகி யிருந்த ரோடு களை யெல்லாம் செப்பனிட்டது. இங்கே 100 இத்தாலி யர்கள் கைதியானார்கள். மறுநாள் மாலை 3 மணிக்கு மாரெத் அரணை வளைந்து வந்த 8-ஆம் படையின் மற்றொரு பகுதியுடன், இந்த வெற்றிப் படை போய்க் கலந்து கொண்டது. கேப்சு நகரத்திற்கு வடக்கே யுள்ள புதிய இடங்களுக்கு 8-ஆம் படை போய்ச் சேர்ந்தது. அங்கிருந்து பின் வாங்கிக் கொண்டி ருந்த படைகளின் பின்னணியி லிருந்த இத்தாலியர் கள், அவ்வப்போது பீரங்கி வெடிகளைக் கிளப்பினார் கள். இதைக் கேட்ட 8-ம் படை, போருக்கு ஆயத்த மாகிக் கிளம்பியது. 8-ம் படைக்கு முன் இந்த இத் தாலியப் படை என்ன செய்ய முடியும்? எனவே, சரண் அடைந்தனர். தம் வச மிருந்த பீரங்கிகளையும் மற்ற தளவாடங்களையும் ஒப்புக்கொடுத்தனர். இந்த யுத்தக் கைதிகளை மேற் பார்த்துக் கொள்ளக் கூட 8-ம் பணடக்கு அப்போது சமய மில்லை. எனவே, அந்தப் படைகள் தாங்களாகவே, 8-ம் படையின் கைதி முகாமிற்குப் போகும்படியாகக் கட்டளை பிறந் தது. அவர்களும் அப்படியே போனார்கள். ஏன்? போகாவிட்டால் அவர்களுக்குச் சோற்றுப்பாடு திண் டாட்டந் தான்! "பசி வந்திடப் பத்தும் பறந்து விடு மல்லவா"! அதனால் தான் போனார்கள்.



# உணவு சப்ளைகளை அதிகப்படுத்த ஆராய்ச்சி

## சிறந்த நெல் விதைக்கிறவர்களுக்கு உதவி

### இந்திய விவசாய ஆராய்ச்சிக் கௌன்ஸில் அறிக்கை

இந்திய உணவு சப்ளைகளை அதிகப்படுத்துவதற்கு உதவும் பொருட்டு அநேக திட்டங்களை வகுத்து அவற் றிற்கு 1941–42-ம் வருஷத்தில் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கௌன்சில் பொருளுதவி செய்தது. இந் தக் கௌன்சிலின் அறிக்கை இப்போது தான் வெளி வந்திருக்கிறது. சென்னை, வங்காளம், ஐக்கிய மாகா ணம், ஒரிஸா ஆகிய மாகாணங்களில், சாகுபடிகளைப் பெருக்கவும், இப்போது சாகுபடியாகும் ரகத்திற்கு மேல் 10 அல்லது 20 சத விகிதம் அதிகமாகச் சாகு படியாகும் நெல்லை விநியோகிக்கவும், பண உதவி கொடுக்கப்பட்டது. இதன் பயனாக 1944-ம் வருஷத் தில், 15 லட்சம் ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி யாகு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. நெற் களஞ் சியங்களில் பூச்சி விழுந்து சேத மாகாதபடி தடுப் பதைப் பற்றி, ஆராய்ச்சி செய்து துண்டுப் பிரசுரங்கள் வெளி யிட வேண்டு மென்று இந்திய விவசாய ஆராய்ச்சிக் கௌன்சில் அனுமதித்தது. அன்றியும், தினை, பருப்பு வகைகள் முதலியவை பற்றியும் ஆராய்ச்சிகள் பல விடங்களில் நடத்தப் பட வேண்டு மென்றும் அனுமதித்தனர்.

பழங்களைப் பக்குவப் படுத்தி டப்பிகளில் அடைக் கும் தொழில் பெலுச்சிஸ்தானத்தில் வெகுவாக நடை பெறுகிறது. பழங்களையும், கிழங்குகளையும் காய வைப்பதற்கு ஒரு தனி முறையை அங்கே கையாளுகிறார்கள்.

மேலான முறையைக் கொண்டு எல்லா விவசாயி களும் சாகுபடி செய்ய வேண்டு மென்பதற்காக அநேக புதிய திட்டங்களைக் கிராமங்களில், நிறை வேற்றும்படி அனுமதித்தார்கள்.

பட்டணங்களுக்கும், நகரங்களுக்கும் பால் சப்ளையை அதிகப்படுத்தவும், வெளியூர்களுக்கு அனுப்பவும், கெட்டு விடாதபடி பக்குவப் படுத்தவும், வகுக்கப்பட்ட ஒரு திட்டத்தைக் குறித்து கௌன்சில் ஆலோசித் தது. நெய்யில் மற்ற பொருள்களைக் கலக்காதபடி எப்படித் தடுப்பது என்பது பற்றி மாகாண அரசாங் கங்களுக்கும், சமஸ்தானங்களுக்கும் தெரிவித்தது. வனஸ்பதிக்கு வர்ண மேற்றுவதைக் குறித்தும் ஆலோசித்தது. டப்பியில் அடைக்காமலும் பனிக் கட்டியில் வைக்காமலும் மீனைக் கெட்டுப் போகாத படி பக்குவப் படுத்தி வைப்பது எப்படி என்று கண்டு பிடிக்க, முயற்சிக்கப்பட் டிருக்கிறது. தேன் உற்பத் தியை அதிகப்படுத்தவும் முயற்சிக்கின்றனர். இதற் காக ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த ஜியோலிகோட் டிலும், இஸ்ஸத் நகரிலும் தேன் ஆராய்ச்சிக் கூடங்கள் அமைக்க அனுமதித்தனர்.

சுத்தமான வெள்ளைக் கம்பளி தயாரிக்க வேண்டி, சென்னை, பம்பாய், பஞ்சாப், பீஹார், மைசூர், காஷ் மீரம், பெலுச்சிஸ்தான் ஆகிய மாகாணங்களில் அட்டுப் பண்ணைகள் வைத்து நடத்த, தொகை கொடுத்து உதவி யிருக்கிறார்கள்.

சென்னை, வங்காளம், மத்திய மாகாணம், பீஹார், பஞ்சாப் ஆகிய மாகாணங்களிலுள்ள மிருக ஆராய்ச்சி சாலைகளில, கிராமங்களிலுள்ள ஆடு மாடுகளுக்கு எப்படிப்பட்ட உணவு ஏற்றது என்பது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இந் நாடு முழுவதிலு முள்ள மிருகங்களின் வியாதிகளைக் குறித்து, இந்தக் கௌன் சிலைச் சேர்ந்த மிருக வைத்திய ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

பல மாகாணங்களிலும், சமஸ்தானங்களிலும் கோழி, வாத்து முதலிய பறவைகளின் இனத்தைப் பெருக்கவும், முட்டை உற்பத்தியை அதிகப்படுத்தவும் அநேக உத்தியோகஸ்தர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

---

## எச்சரிக்கை

**இராகம் :—புன்னாகவராளி.** **தாளம் :—ஆதி.**

எச்சரிக்கையா யிருக்கணும்—சகோதரரே (எச்)

இச்சகம்பேசும் ஜப்பானை நிச்சயமாய்
வெட்டிவீழ்த்த (எச்)

கச்சைகட்டி ஆணும் பெண்ணும்
லட்சியத்தைக் கைவிடாமல்
எச்சில்புத்திக் குள்ளர்களை எதிர்த்துத்
தடுத்தடக்க (எச்)

அச்சுநாட்டி னர்தினமும் லச்சையில்லா
மலேசொல்லும்
கொச்சைவாய் மொழியைக்கேட்டு
குடிமோசம் போய்விடாமல் (எச்)

குண்டுகளை வீசிவீசிக்
கொல்லுமந்தப் பாவிகளை
அண்டையில்வ ரவிடாமல்
அடித்துத்து ரத்திவிட (எச்)

தந்திக் கம்பியையறுத் தாலென்ன லாபம்?
தண்டவாளம் பெயர்த் தாலென்ன லாபம்?
நொந்திடு பவர்களும் நாமன்றோ தோழா
நாசமாகும் காசு நமதன்றோ? சீரா? (எச்)

வண்டிப் பாதைகளை வெட்டிடலாமோ?
வழியான பாலங்கள் வீழ்த்திடலாமோ?
சண்டித் தனங்களும் செய்திடலாமோ?
சரிதானோ இவையெல்லாம் சொல்விடு தோழா! (எச்)

அஞ்சல் தபால்களை அநியாயமாக
அக்கினி யிட்டு மழித்திடலாமா?
சஞ்சலம் யாருக்கு சொல்லிடு வாயே!
செலவெலாம் நமதன்றோ சிந்தைசெய் தோழா! (எச்)

ஈனவிச் செயல்களால் என்னதான் பயனோ!
எம துமதுபெண்டிர் பிள்ளைகட் கெல்லாம்
ஆன பொருள்கள் அனைத்துக்கும் நாசம்
அல்லவா? சொல்லிடு அறிவுள்ள தோழா! (எச்)

தேசீய வீரரின் தொழிலிது தானோ?
தேடும்சு தந்திரம் தானிதி லாமா?
நாஸியம் பாஸீஸம் நொறுங்கிடக் கொல்லு
நேரும் ஜப்பானையும் நசுக்கியே வெல்லு! (எச்)

கள்ளமுள்ள வித்தியாசக் கற்பனைகளை மறந்து
கைகோர்த்துலாவினால் இதந்தருமே
உள்ளத்திற்கபடமின்றி ஒன்றுகூடி அனைவரும்
உழைத்திடில் வருமந்த சுதந்திரமே
வெள்ளையனைப் போகச்சொல்லிக்
கொள்ளையனை வரச்செய்தால்
விடுதலைக்கதுதான் அருத்தமா?—இந்தக்
கெடுதலைப்புத்திதான் பொருத்தமா? (எச்)

கேடுசெய்வெள்ளம்வருமுன் போடுகெட்டியாய்
அணையை
பாடுமரிய செந் தமிழ் பகுத்தறிவாலறிந்து (எச்)

# பாவற்காய்



**வர்ணனை :**—இது ஒரு கொடி. பற்றிக் கொண்டே படரும். பூக்கள் மஞ்சள் நிறமானவை. இவற்றில ஆண் பூ வென்றும், பெண் பூ வென்றும் வேற்றுமை யுண்டு. பெண் பூ மட்டுந் தான் காய்க்கிறது. பாவற் காயில் பல வகை யுண்டு. இவற்றில் உருண்டை உருண்டையாகப் பலவிதக் காய்கள் காய்க்கிறன. 4 முதல் 6 அங்குலம் நீளமுள்ள பச்சைக் காய்களும் 6 முதல் 8 அங்குலம் நீளமுள்ள வெளிறின காய்களும், ஒன்றரை அங்குல நீளமுள்ள காய்களும் உண்டு. பழம், ஆரஞ்சும், மஞ்சளும் கலந்த நிறம். அதற்குள் சிவந்த கவசம் இருக்கிறது. அதில் தட்டையான விதைகள் பதிந்திருக்கின்றன.

**பரவுதல் :**—பழத்தி லிருந்து விதைப்பதற்கு விதைகள் கிடைக்கின்றன. அதன சிவப்புப் பகுதியைக் கழுவி நீக்கி விட்டு விதைகளுக்குச் சாம்பல் தூவி காய வைக்க வேண்டும்.

**சாகுபடி :**—செய் நேர்த்தி செய்யப்பட்ட பாத்திகளில் இரண்டடிக்கு ஒரு விதை வீதம் ஊன்றவேண்டும். நன்கு அமைக்கப்பட்ட பந்தல்மீது கொடிகளை ஏற்றி விடவேண்டும். அவ்வப்போது புழுத்த சாணத்தை எருவாகப் போட வேண்டும். நாள் தோறும் தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். மூன்று மாதங்களுக்குப் பிறகு கொஞ்ச காலம் வரை பலன் தருகிறது.

**உபயோகம் :**—இந்தக் காயின் ருசி சற்றுக் கசப்பானது. ஆனாலும், கறியோடும், ஊறுகாயோடும் சேர்த்தால் சாப்பிடலாம். வற்றல் போட்டும் வைத்துக் கொள்ளலாம்.

**உள் அடக்கம் :**—தண்ணீர் 95 சதமானம். மாச் சத்து, கொழுப்பு, கார்போஹைரேட்ஸ், நார், உலோகங்கள் முதலியவும் சிறிதளவு இருக்கின்றன, சுண்ணச் சத்து, மாக்னீஷியம், நிமதாக்கினி, இரும்பு ஆகியவற்றின் தோற்றங்களு முண்டு. ஏ.பீ.ஸி. விட்டமின்களும் இருக்கின்றன.

## ஒரு புதிய போட்டிப் பரிசு

### போட்டித் தவணை தள்ளி வைக்கப்பட்டது

சென்னை வாசிகள் பலர் போர் முனைகளுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. அதிலிருந்து கொஞ்சம் மீதி செய்து சேர்த்து வைக்கிறார்கள். யுத்தத்திற்குப் பிறகு இது அவர்களுக்கு உதவும். இந்தத் தொகை நல்ல முறையில் வருவாய் தரத் தக்கபடி செலவு செய்யப் படவேண்டும். உதாரணமாக, கிராம வாழ்க்கையை மாற்றி யமைப்பதற்கும், யுத்தத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் முன்னேற்றத் திட்டங்களை முன்னிட்டும், அதைச் செலவிடலாம்.

நம் சிப்பாய்கள் தம் பணத்தைச் செலவிட, ஒரு வழியைச் சொல்லுகிறோம்.

இப்பத்திரிகாசிரியருக்குக் கீழ்க்கண்டவைகளின் புகைப் படங்கள் வேண்டி யிருக்கிறது :—

(1) கிணறு தோண்டுவது.
(2) கட்டி முடிந்த கிணற்றை உபயோகிப்பது.
(3) பரம்படித்தல்.
(4) பழ மரத் தோப்புக்கள்.
(5) காய்கறித் தோட்டங்கள்.
(6) ஒரு சிறு கடை.
(7) கோழிப் பண்ணை.
(8) ஆடு மாடுகள் அபிவிருத்தி.
(9) வீடுகள் கட்டுதல்.
(10) கலியாணம்.
(11) சிப்பாய் தன் பணத்தை வேறெந்த வகையில் செலவிட நினைத்தாலும் அந்த வகை.

இவை பற்றி அனுப்பப்படும் மிகச் சிறந்த புகைப் படத்திற்கு முதற் பரிசு ரூ. 20, இரண்டாவது பரிசு ரூ. 10. முற்கூறியுள்ள ஒவ்வொரு இனத்திலும் அனுப்பப்படும் புகைப் படங்களில் சிறந்தவற்றிற்கு, ஒவ்வொரு இனத்திற்கும் ரூ. 3 விகிதம் கொடுக்கப்படும்.

எந்த இனத்திலுள்ள புகைப் படமாவது பரிசு பெறத் தகுதியில்லாததா யிருந்தால், பரிசு கொடுக்கவோ மறுக்கவோ பத்திரிகாசிரியருக்கு உரிமை உண்டு.

புகைப் படங்கள் திருப்பி யனுப்பப்பட மாட்டா.

போட்டியிடுகிற சிலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, புகைப் படங்கள் அனுப்ப வேண்டிய தேதி 1943-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15-ம் தேதி வரை தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

புகைப் படங்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 15–4–43-க்குள் அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,
"சென்னை யுத்த சஞ்சிகை"
"விக்டரி ஹௌஸ்", மௌண்ட் ரோட்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஞு ஏப்ரல்மீ 16உ, வெள்ளிக்கிழமை [இதழ் 16

## மூன்று காரியங்கள்



ஜெனரல் மண்ட்காமரி

மாரெத் போராட்டம் ஆரம்பமாகு முன்பு, ஜெனரல் மண்ட்காமரி தன் படைகளைப் பார்த்து 3 காரியங்களைச் செய்யும்படிக் கூறினார்.

முதலாவதாக, மாரெத் அரண்களில் எதிரிகளைத் தக்கபடி தண்டிக்கும்படிக் கூறினார். மார்ச்சு 21 முதல் 28 தேதிகளுக்குள் அப்படியே நடந்து விட்டது. 8,000 பேர்களைக் கைதியாக்கினோம்.

இரண்டாவதாக, கேப்சுக்கு உட்புகுந்து போகும்படி சொன்னார். ஏப்ரல் மாதம் 6-ந்தேதி அதுவும் நடந்தது. எதிரிகள் முட்டாள் தனமாக வாடி அக்ரித் என்னும் இடத்தில் போர் கொடுத்தார்கள். எனவே, சரியானபடி அடிபட்டார்கள். இங்கேயும் 7,000 பேர்கள் கைதியானார்கள்.

மூன்றுவதாக, வேகமாக ஸ்பாக்ஸ், சூசீ, டுனிஸ் ஆகிய துறைமுகங்களுக்குப் போக வேண்டு மென்று சொன்னார். இப்போது அங்கே போய்க் கொண்டிருக்கிறது நேச நாட்டுப் படைகள். இப்போது கைதியாகிற விகிதப்படி மேலும் எதிரிகளைக் கைதி செய்வோமானால், தம் ஸ்தானங்களைக் காவல் காக்கக் கூட காலாட்படை, எதிரிகளுக்கு இல்லாமற் போய்விடும்.

எட்டாம் படையை எதுவும் தடை செய்யவில்லை.; தடை செய்யவும் முடியாது. உங்கள் குடும்பத்தவர்களுக்கும் உலகம் முழுதுக்குமே நாள்தோறும் நல்ல செய்திகளை அது அனுப்பிக் கொண்டிருக்கிறது.

இதுவரை நம் சாம்ராஜ்யத்திலேயே எட்டாம் படையைப் போன்ற படை இருந்த துண்டா, வென்று சந்தேகிக்கிறேன். இதன் புகழை உலக முழுதும் ஒவ்வொரு வீட்டாரும் பாடுவார்கள். இப்போதைய வெற்றி முரசம் : 'டுனிஸுக்கு முன்னேறிப் போய் எதிரியைக் கடலுக்குள் விரட்டுவோம்' என்பது தான்.

# மு ர சொ லி



யுத்தத்தை வெல்ல வேண்டும் என்னும் கடுமையான வேலையில் நம் முழு சிந்தையையும் முயற்சியையும் செலுத்தா திருந்தால், மகா முட்டாள் தனமாகத் தான் போய் முடியும். அன்றியும் இந்த யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்கங்க ளெல்லாம் சில ஆயத்தங்கள் செய்ய இப்போதே ஆரம்பிக்க வேண்டியது அவசியம். அப்போது தான் சமயம் வருகிற போது, அவர்கள் கொஞ்சங் கூட ஆயத்த மில்லாமல் இருக்க மாட்டார்கள்.

—மிஸ்டர் ஈடன் (பிரிட்டிஷ்)
அந்நிய நாட்டு மந்திரி காமன்ஸ் சபையில் கொடுத்த ஸ்டேட்மெண்டின் ஒரு பகுதி.

* * * * *

"ஹிட்லர் நீக்கப்படுவார். ஏனென்ருல் அவர் முயற்சிகள் பலிக்க வில்லே. இதற்கு ஜெர்மன் படைத் தலேவர்கள் தான் காரணர்களா யிருப்பார்கள். ஆனுல் ஹிட்லரைத் தொலேத்து விட்டால் மட்டும் போதாது. நம்முடைய கஷ்டங்கள் நீங்காது. அதற்கு, யுத்தம் முடிந்த பிறகு, நமது உக்கிராணங்களே நிரப்ப வேண்டும். தளவாடசாலேகளேக் காலி செய்ய வேண்டும்."

—லார்ட் வான்சிட்டார்ட்.

* * * * *

இரண்டு நோக்கங்களே அடிப்படையாகக் கொண்டது நமது யுத்த கால அன்னிய நாட்டுக் கொள்கை. மற்ற எல்லா நோக்கங்களே விட, இவ்விரண்டும் மிகவும் முக்கியமானவை. முதலாவதாக, அதிகம் பேர்களேப் பலி கொடுக்காமல், கூடிய வரை விரைவாகப் பரிபூரண வெற்றி பெற வேண்டும். இரண்டாவதாக, நிரந்தரமான சமாதானம் நாட்டில் நிலவும் பொருட்டுப் பாடுபடவேண்டும். இந்த நிலேமை ஏற்பட வேண்டுமானுல், ஜெர்மானியர்கள் பிரான்சை விட்டு விரட்டப்பட்ட பிறகு, பிரஞ்சு மக்கள் யதேச்சை யடைய வேண்டும். தங்கள் குடியரசையும், அரசாங்கத்தையும் சட்டங்களேயும் ஏற்படுத்திக் கொள்ள அவர்களுக்கு உரிமை யிருக்கவேண்டும்.

—மிஸ்டர் சும்னர் வெல்ஸ்.

* * * * *

தற்போதைய யுத்த முயற்சிகளேச் சில நேச நாடுகள் அதிகப்படுத்த வேண்டும். வெற்றி விரைவில் அடைய வேண்டுமானுல், யுத்த முயற்சிகளும் விரைவில் அதிகப்பட வேண்டும்.

—லிட்விஞவ்,
க்யூபாவிலுள்ள ரஷ்ய ஸ்தானீகர்.



## பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : ஜெனரல் மண்ட்காமரி .. | 1 | உணவுப் பொருள்களும் விவசாயிகள் கடமையும் .. .. .. | 6 |
| முரசொலி .. .. .. | 2 | டாக்டர் கோப்பல்சின் பழைய பாடம் .. | 8 |
| போர்முனே நிகழ்ச்சி விளக்கம் .. | 3 | ரோமல் ஒரு சூரர் .. .. .. | 10 |
| தலேயங்கம் .. .. .. | 4 | வால் அவரை .. .. .. | 12 |


# போர் முனே நிகழ்ச்சி விளக்கம்

**ஜெர்மன் நீர் மூழ்கிகளின் லீலேகள்.**

சென்ற 6-ம் தேதி பத்திரிகைக்காரர்கள் மகாநாடொன்றில் அமெரிக்கக் கப்பற் படை மந்திரி கர்னல் ப்ராங்க் நாக்ஸ் பேசினுர். அப்போது பிப்ரவரி மாதத்தை விட மார்ச்சு மாதத்தில் ஜெர்மன் நீர்மூழ்கிகளால் நேச நாட்டுக் கப்பல்களுக்குச் சேதம் அதிகம் என்று குறிப்பிட்டார்.

"பல கப்பல்கள் மூழ்கிவிட்டன. ஏனென்ருல் அநேக ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் வெளிக் கிளம்பி விட்டன. இது கடுமையான நிலேதான். மோசமானதுங் கூட. இதைப் பற்றி அலட்சியமாய் யாரும் இருக்க முடியாது," என்று குறிப்பிட்டார்.

ஐரோப்பிய நீர்மூழ்கித் தளங்களே வெடி குண்டுகளேக் கொண்டு தாக்குவது பற்றிக் குறிப்பிடும் போது, ஜெர்மன் நீர்மூழ்கிகளே ஓரளவிற்குத் தடுத்துத் திக்குமுக்காடச் செய்வதாகக் குறிப்பிட்டார். ஜெர்மானியர்கள், தாம் ஏராளமான கப்பல்களே மூழ்கடித்து விட்டதாக பெருக்கிச் சொல்லுவதை, கர்னல் நாக்ஸ் ஸ்டேட்மெண்ட் ஒப்புக் கொண்டதாக அர்த்தமாகாது. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களின் அட்டகாசம் அத்லாண்டிக் பகுதியில் அதிகம் என்று அவர் கூறியதோடு, சென்ற ஜனவரி பிப்ரவரி மாதங்களில் எதிர்பார்த்த அளவிற்கு நேச நாட்டுக் கப்பல்கள் மூழ்கவில்லே யென்னும் உண்மையையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். நிற்க, அமெரிக்க யுத்தத் தகவல்கள் டைரக்டர் மிஸ்டர் எல்மெர் டேவிஸ் மார்ச்சு மாதம் 31-ம் தேதி கொடுத்த ஸ்டேட்மெண்டில், 1943-ம் வருஷம் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் நேர்ந்த கப்பல் நஷ்டங்களேவிட மார்ச்சு மாதம் அதிக நஷ்டம் நேர்ந்திருந்த போதிலும், 1942-ம் வருஷத்தில் ஒரு மாதத்திலாவது, இவ்வளவு கொஞ்சமாக நஷ்டம் ஏற்படவில்லே. அதிக நஷ்டந் தான் ஏற்பட்டது என்று குறிப்பிட்டார். அதாவது உள்ள நிலேமையை அவர் குறைத்துச் சொல்லுவதாக அர்த்தமாகாது. நிலேமை எந்த அளவிற்குக் கடுமையானதோ, அந்த அளவுக்கு மட்டும் எடுத்துக் காட்ட முயற்சிக்கிருர். இங்கே ஒரு விஷயத்தை ஞாபகப் படுத்துவது பொருத்த மாகும். சென்ற பிப்ரவரி மாதம் 11-ந் தேதி யுத்த நிலேமையைக் குறித்து மிஸ்டர் சர்ச்சில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

"நமக்குக் கடலில் ஏற்படும் நஷ்டம் வெகு அதிகம். இதனுல் நம் வேலே வெகுவாகத் தடைப்படுகிறது. நம் முழு பலத்தோடு போராட முடியாதபடி தடைப்படுத்துகிறது. இதன் பயனுக யுத்தமும் நீண்ட காலம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது."

இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். நஷ்டமாகும் கப்பல்களின் எண்ணிக்கையைக் கொண்டும் அளவைக் கொண்டும் யுத்தம் எவ்வளவு காலம் நடைபெறு மென்று ஒருவாறு நிர்ணயிக்கலாம். ஆனுல் இந்த நஷ்டத்தால் ஏற்படும் பலன் என்னவென்று நிர்ணயிக்க முடியாது. இந்த நஷ்டங்களால், நேச நாடுகளின் போராட்டம் ஓரளவிற்குத் தடைப்படத் தான் செய்கிறது. என்ருலும், இந்தத் தடை எந்த அளவிற்கு இருக்கிறது என்ருல், ஒரு கப்பல் முழுகியதற்குப் பிறகு வேறு ஒரு கப்பல் கட்டி முடிக்கப்படுகிற வரையிலும் தான். 1943-ம் வருஷத்திலே பிரிட்டனும் அமெரிக்காவும் சேர்ந்து குறைந்தது 1 கோடியே 40 லட்சம் டன் கப்பல்கள் கட்டவேண்டு மென்று முடிவு செய்திருக்கின்றன. எதிரிக் கணக்குப்படியே பார்த்தாலும் இந்த வருஷத்தில் 20 லட்சம் டன் கப்பல்கள் தான் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது தற்போது நேசநாடுகளுக்குள்ள வியாபாரக் கப்பல்களே அதிகப்படுத்தாதபடி தடுக்க வேண்டு மென்று எதிரிகள் நினேத்தால்லது, அடுத்த 9 மாதங்களில் சராசரி மாதந்தோறும் 13 லட்சம் டன் கப்பல்களே எதிரிகள் மூழ்கடிக்க வேண்டும்.

அன்றியும் ஒரு மாதத்திலாவது 150 கப்பல்களுக்கு அதிகமாக, ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் நேசநாட்டுக் கப்பல்களே மூழ்கடித்ததாக ஜெர்மானியர்கள் கணக்குச் சொன்னதே கிடையாது. அதாவது இப்போது உள்ள 150 ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் சராசரி மாதம் ஒரு கப்பல் விகிதம் கூட இவை ஒவ்வொன்றும் மூழ்கடிக்கவில்லே. இது சம்பந்தமாக, ஜெர்மானியர்கள் கூறும் புள்ளிகள் 1-க்கு பாதி அதிகமாகச் சேர்த்துத் தான் சொல்லுகிருர்கள். நேச நாடுகளுக்கு ஏற்படும் கப்பல் நஷ்டத்தை ஈடுபண்ணும் பொருட்டு, மூழ்கடிக்கப்படும் கப்பல்களே விட, அதிகமாகக் கப்பல்கள் கட்டப்படுகின்றன என்னும் உண்மையை மறைத்துக் கூறுவது தான், ஜெர்மன் விளம்பர இலாக்கா மந்திரியான டாக்டர் கொப்பல்ஸ் அடிக்கடி கையாளும் தந்திரம். ஒரு மாதத்தில் எவ்வளவு கப்பல்கள் நஷ்டமாயின; எத்தனே கட்டப்பட்டன என்கிற கணக்கை அவர் சொல்லுவதில்லே. ஒரு வருஷத்தையோ, அதற்கதிகமாகவோ கணக்கெடுக்கிருர். அதுவும் எப்படி ? நஷ்டமான கப்பல்களேவிடக், குறைவாக கட்டப்பட்டதாகக் கணக்கெடுக்கக் கூடிய பகுதியைப் பார்த்துக் கணக்கெடுப்பது அவருடைய வழக்கம். நேச நாடுகளின் கப்பல்கள் ஏராளமாக நஷ்டமடைவதாகவும் அந்த அளவிற்குப் புதிய கப்பல்களே நேச நாடுகள் கட்டுவதில்லே என்பதையும் எடுத்துக் காட்டுவது தானே கொப்பல்ஸ் பிரசார தந்திர முறை. இப்போதுதான் திட்டமிட்டபடி கப்பல்கள் கட்டி முடிக்கக்கூடிய நிலேமைக்கு அமெரிக்கா வந்து சேர்ந்திருக்கிறது. ஒரு வருஷத்திற்கு முன்பு நாளொன்றிற்கு ஒரு கப்பல் வீதம் கட்டி முடித்துக் கொண்டு வந்தனர். இப்போது 4 கப்பல்கள் விகிதம் கட்டி முடிக்கிருர்கள். இன்னும் 2 மாதங்களில் 5 கப்பல்கள் வீதம் கட்டி முடிக்கக்கூடும்.

மூழ்கடிக்கப்படும் கப்பல்களின் எண்ணிக்கையைக் குறித்து ஒரு விஷயம் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். 1942-ம் வருஷம் வேனிற் காலத்திற்குப் பிறகு, மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களேவிட இப்போது அதிக கப்பல்களேக் நேச நாடுகள் கட்டு

(5-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

**வார வெளியீடு**

மலர் III] 1943-௵ எப்ரல்௴ 16௳. [இதழ் 16


# ஜெனரல் மண்ட்காமரி தந்திரம்

துனீசியப் போர் முனையில் வெகு விரைவாகச் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஜெனரல் மண்ட்காமரியின் படைகள் வெற்றி மேல் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். கேப்ஸ், ஸ்பாக்ஸ், சூசா ஆகிய நகரங்களை எட்டாம் படைக் கைப்பற்றி விட்டது. வடக்கு நோக்கி மலைகளுக்குள் பின் வாங்கிப் போகிறார் ரோமல்.

பாண்டுேக் கணவாயையும், கைருவான் என்னும் போக்கு வரவிற்கு மத்திய ஸ்தலமாக உள்ள ஊரையும் நேச நாட்டுப் படை கைப் பற்றிவிட்டது. மகா கடுமையாகப் போராடிய பிறகு தான் பாண்டுேக் கணவாயில் எதிரிப் படைகளைத் துளைத்துக் கொண்டு நேச நாட்டுப் படைகள் போக முடிந்தது. வடக்கே யுள்ள சம வெளிகளில் ஜெர்மன் விமான நிலையங்களில் மிகச் சிறந்தவை யிருந்தன. இவற்றைக் கைப்பற்றும் பொருட்டு, பிரிட்டிஷ் டாங்கிப் படைகளும், பிரஞ்சு அமெரிக்கக் காலாட் படைகளும் முன்னேறிப் போய்க் கொண்டிருக்கின்றன.

ரோமல் மிகுந்த நெருக்கடியான நிலைமையிலிருந்தார். என்றாலும் கடைசி நிமிஷத்தில் தப்பிக் கொண்டார். வடக்கே சூசி நோக்கிப் பின் வாங்கினார். இதையும் எப்ரல் மாதம் 12-ம் தேதி காலையில் எட்டாம் படை கைப்பற்றிக் கொண்டது. முதல் படையும் மிகச் சிறந்த வேலை செய்திருக்கிறது. துனீசியாவின் வடமேற்குப் பகுதி மட்டுந்தான் அச்சு நாட்டார் வசம் இருந்து வந்தது. அதையும் முதற் படை முற்றுகை யிட்டு விட்டது. போக்கு வரவிற்கு மத்திய ஸ்தலமாக விளங்கும் கைருவான் என்னும் ஊரையும் அதற்கு முன் தினம் தான் இது கைப் பற்றியது. இங்கேயே ரோமலை விட்டு விடுவோம். இனி ஜெனரல் மண்ட்காமரியைப் பற்றி ஒரு சிறிது கவனிப்போம். எதிரிப் படைகளை வெல்லுவதற்கு அவர் எந்த தந்திரத்தைக் கையாளுகிறார் என்று ஆராய்வோம்.

மாரெத் அரணை அவர் எப்படிக் கைப்பற்றினாரென்றும், எல் ஹம்மாவில், எதிரிப் படைகளை எப்படி வளைத்து வந்து பிடித்துக் கொண்டாரென்றும் முன்பே குறிப்பிட்டிருக்கிறது. முன்பு ‘ மாரெத் அரணை ’ப் பற்றி பிரமாதமாகப் பேசிக் கொண்டிருந்த ஜெர்மானியர்கள், இப்போது அதை ஒரு சாதாரண போர் முனை என்று சொல்லுகிறார்கள். உண்மை என்னவென்றால், ‘ மாரெத் அரண் ’ ஒரே சுவறல்ல. நன்றாக அரண் செய்யப்பட்ட 3 அரண்கள் இங்கே இருக்கின்றன. இந்த அரண்கள் தொடர்ச்சியாக இல்லை. சங்கிலி கோர்த்தது போல அமைந்திருக்கின்றன. இவை 1 மைல் முதல் 10 மைல் அளவிற்கு உள்ளடங்கி யிருக்கின்றன. இப்படிப்பட்ட அரணைக் குறித்து ஜெர்மானியர்கள் ‘ அரண் ’ அல்லவென்று சொல்லுவதற்குக் காரணமுண்டு. அவை கட்டப்பட்ட அரண்களல்ல ; ஆனால், இயற்கையாய் அமைந்தவை.

எட்டாம் படையின் வெற்றித் தொகையில் ‘ மாரெத் ’ அரணும் சேர்ந்து விட்டது. மிகக் கடுமையான போராட்டத்திற்குப் பிறகு தான், இங்கே வெற்றி கிடைத்தது. போராடுவதற்கு எல் அலமீன் எவ்வளவு ஏற்ற இடமோ, அவ்வளவிற்கு ‘ மாரெத் ’ தும் ஏற்ற இடம். சென்ற மார்ச்சு மாதம் 23-ம் தேதி வெளிவந்த செய்தியில், மாரெத்தைச் சேர்ந்த கடற்கரைப் பகுதியை மீண்டும் ரோமல் கைபற்றிக் கொண்டார் என்னும் செய்தி கிடைத்த போது, நமக்குப் பெருந் தோல்வி நேர்ந்து விட்டதாகவே நினைத்தோம். ஆனால் உண்மையான நிலைமையைப் பார்க்கப் போனால், பரீட்சார்த்தமாகக் காலை விட்டு ஆழம் பார்த்த கதையாகத் தான் இருக்கிறது. அந்தக் கறட்டைக் கடந்து வாடி சிக் சோனுக்குப் போவது மகா கஷ்டமான காரியம். இங்கே நம் காலாட் படைகள் கடும் போராடிப் போய்க் கைப்பற்றின. இந்த இடத்தில் எதிரிப் படைகள் போர் தொடுத்த போது, நிகழ்ந்த சம்பவங்களைக் கொண்டு ஒரு விஷயத்தை முடிவு செய்யலாம். பலமான எதிரிப் படைகளையும் தகர்த்துக் கொண்டு முன்னேறிப் போகக் கூடிய திறமை நம் காலாட் படைகளுக்கு உண்டு என்பது தான் இதன் உண்மை. என்றாலும் 36 மணி நேரத்துக்குப் பிறகு மிகப் பெரும் படையோடு எதிரி மீண்டும் தாக்கியதன் பயனாக, நம் படைகள் பின் வாங்க நேர்ந்தது. இதனால் சேதம் நமக்கு அதிகமில்லை.

மார்ச்சு மாதம் 24, 25 தேதிகளில் உள் நாட்டுப் பக்கத்தில் நம் படைகளைத் திருப்பினோம். வாடி சிக் சோனுக்குத் தெற்கேயுள்ள சில பகுதிகளைக் கைப்பற்றினோம். இது மாரெத்—மடினேன் லைனுக்கு வடக்கே 3 மைல் தூரத்திலிருக்கிறது. இதற்கிடையில் விமானப் படையும் பீரங்கிப் படையும் சிறந்த முறையில் காவல் புரிந்தன. இதனால் எதிரிகளுக்கு சப்ளை போக்கு வரவு பெரிதும் தடைப் பட்டது. எதிரிக்கு மேற்குப் பக்கம் போய் வளைந்து வேவு பார்த்து வரும்படி டாங்கிகளையும், மோட்டார் படைகளையும், காலாட் படைகளையும் பீரங்கிப் படைகளையும் மண்ட்காமரி அனுப்பினார்.

இதிலிருந்து அவருடைய யுத்த தந்திர முறை தெளிவாக விளங்குகிறது. அதாவது தன் படையை முதலில் சிதறிப் போகும்படி செய்து, எதிரிகளை வளைத்துக் கொண்டு நெருக்குவது தான் அவர் கையாளும் முறை. ரோமல் அமைத்திருந்த நான்கு அடுக்கு அரண்களையும் இரண்டு முறை அவர் ஊடுருவிப் பாய்ந்தார். ஒரு முறை ரோமல் படைகளை முன்புரம் தாக்கினார். மறுமுறை பின்புரமாகத் தாக்கினார். இப்படித் தாக்குவதற்குத் தகுந்த காரணங்கள் உண்டு. கரை நெடுக உள்ள ரோமல் படைகளுக்கு உட்புகுந்து, தென்கிழக்கு மூலைக்கு அவற்றை விரட்டக் கூடுமா என்று பரீட்சிக்கும் பொருட்டுத் தான் முன்புரந் தாக்கினார். எல் ஹம்மாவை நேர் முகமாக ஏன் தாக்கினார்களென்றால், தன் முழு பலத்தையுங் கொண்டு எதிரியைப் பின்புரம் தாக்கி அப்படைகளைத் தெற்கேயும் மேற்கேயும் சிதறடித்துவிடக் கூடுமா என்று பரீட்சிக்கும் பொருட்டுத் தான். இந்த தந்திரங்களும் நன்றாகப் பலித்தன.



மண்ட்காமரி, முன்புரந் தாக்கியதை எதிரிகள் தடுத்து விட்டார்கள். பின்புரமாகத் தாக்கியதில் அவர் வெற்றி பெற்றார். இதைக் கண்டவுடன் அவர் முக்கியமானதோர் தீர்மானம் செய்தார். மத்மதா மலையின் மேல்புரச் சாரலில் இரவிலேயே தன் எட்டாம் படை முழுவதையும், அதாவது பீரங்கிகள், காலாட் படை, டாங்கிப் படையையும், சுற்றி வளைத்துக் கொண்டு எல் ஹம்மாவிற்கு வடக்கே போனார். இந்த ஒரு மாறுதல் துனீசியாவின் யுத்தப் போக்கையே நேச நாடுகளுக்குச் சாதகமாக்கி விட்டது.

அந்தச் சமயத்தில் மாரெத் அரணை நேச நாட்டுப் படைகள் திரண்டு வந்து வளைந்து கொள்ளும் என்று ரோமல் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். ஆகவே, தனக்குப் பின்னே நேச நாட்டுப் படைகள் தாக்க ஒட்டாதபடி எல்லா முஸ்தீபுகளையும் செய்து வைத்திருந்தார். அந்தச் சமயத்தில் மாரெத் அரணைத் தாக்கிக் கொண்டிருந்த நேச நாட்டுப் படைகளும் கொஞ்சங் கூடத் தளர்வின்றி போராடிக் கொண்டிருந்தார்கள்.

பொழுது விடிந்தது. எட்டாம் படையினர் டெபகா மலையின் உச்சியிலிருந்து மிலாப் மலை யுச்சி வரை காட்சி யளித்தனர். அவர்கள் தலைகளுக்கு மேலே நேச நாட்டு விமானப் படையும் பந்தோபஸ்து செய்து கொண்டிருந்தது. படையினர் 6 பேர் விகிதம் அணி வகுத்துச் சென்றது கண் கொள்ளாக் காட்சி. கடுமையான போராட்டம் நடந்தது. தன் முழு பலத்தையும் கொண்டு தான் ரோமல் போராடினார். என்றாலும் எட்டாம் படையின் வேகத்தை மட்டுந் தான் ஓரளவிற்குத் தடை செய்ய அவரால் முடிந்தது. ஆப்பிரிக்கப் படையும் அழிந்து விடாதபடி காப்பாற்றிக் கொண்டார். மாரெத் மலையிலிருந்து கடற்கரை வரை தன் படைகள் போகவர இடம் வேண்டும் என்னும் நோக்கத் தோடு, அதைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார். இதன் பயனாக அவருடைய படைகளுக்கு மகத்தான சேதம் ஏற்பட்டது.

ஜெனரல் மண்ட்காமரியின் சிறந்த யுத்த தந்திரத்தின் பயனாக மாரெத் கேப்ஸ் போர் முனையில் நான்கு திசைகளிலும் நேசநாடுகளுக்குப் பரிபூரண வெற்றி கிடைத்தது. வடாப்பிரிக்காவிலிருந்து அச்சு நாட்டவரை வெளியேற்றுவதற்காக ஜெனரல் எய்சினேவரும் ஜெனரல் அலெக்ஸாந்தரும் சுருக்கமாகத் திட்டமிட்டதன்படி தென் துனீசியாவின் யுத்தத்தை எட்டாம் படை முடித்துக்கொண்டது.

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

கின்றன. ஜெர்மானியர் சொல்லும் கப்பல் நஷ்டக் கணக்கு, உண்மைக்குச் சற்று அதிகப்பட்டது. அந்தக் கணக்குப் படியே அமெரிக்கர்கள் கப்பல் கட்டும் விகிதத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள். கீழ்க் கண்ட அட்டவணை சென்ற டிசம்பர், பிப்ரவரி மாதங்களில் நஷ்டமான கப்பல்களின் அளவும் கட்டப்பட்ட கப்பல்களின் அளவும் குறிக்கப்பட்டிருக்கிறது.

| | | ஜெர்மானியர் மூழ்கடித்ததாகச் சொல்லுவது. | | அமெரிக்காவில் கட்டப்பட்ட புதிய கப்பல்கள். | |
|---|---|---|---|---|---|
| | | கப்பல்கள். | மொத்த டன் | கப்பல்கள். | மொத்த டன். |
| டிசம்பர் | .. | 109 | 634,800 | 125 | 777,000 |
| ஜனவரி | .. | 81 | 522,000 | 106 | 705,880 |
| பிப்ரவரி | .. | 90 | 577,000 | 130 | 867,440 |
| | | 280 | 1,733,800 | 361 | 2,350,320 |

சென்ற 8 மாதங்களுக்குள்ளாக நேச நாட்டுக் கப்பல்களுக்கு நேர்ந்த நஷ்டத்தைவிட, 20 லட்சம் டன் கப்பல்கள் அதிகமாகக் கட்டப்பட்டிருக்கின்றன என்னும் உண்மையை சென்ற மார்ச்சு மாதம் 30-ந் தேதி மிஸ்டர் எ. வி. அலெக்ஸாந்தர் வெளியிட்டார். இந்தக் காலத்தில் மட்டும் 70 லட்சம் டன் கப்பல்கள் நேச நாடுகளில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மொத்த நஷ்டம் 50 லட்சம் டன் தான். சென்ற 8 மாதங்களில் நஷ்டமான ஒவ்வொரு கப்பல்களுக்கும் பதிலாக ஒவ்வொரு கப்பல்கள் கட்டப்பட்டன.

**அச்சு நாடுகளின் நிலைமை**

இனி அச்சு நாடுகளில் கப்பல் நிலைமை எப்படியிருக்கிறதென்று பார்ப்போம். சென்ற பிப்ரவரி மாதம் கடைசி வரையிலும் ஜெர்மானியர்களுக்கு 3,365,000 டன்களும், இத்தாலியர்களுக்கு, 4,027,000 டன்னும், அவற்றின் கூட்டாளி நாடுகளுக்கு 606,000 டன்னும் வியாபாரக் கப்பல்கள் நஷ்டம். அதாவது, ஐரோப்பாவில் அச்சு நாடுகளுக்கு மொத்தத்தில், 8,018,000 டன் வியாபாரக் கப்பல்கள் நஷ்டம். 1939-௵ ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் சேர்ந்து 7,500,000 டன் வியாபாரக் கப்பல்கள் இருந்தன. அவர்கள் 3,000,000 டன் கப்பல்கள் போராடிக் கைப்பற்றினர், புதிதாக 2,000,000 டன் கட்டினர். இவர்களுக்கு நேர்ந்த நஷ்டங்களை நீக்கிப் பார்த்தால், இப்போது 4,500,000 டன்களுக்கு அதிகமாக இல்லை. இதில் இன்னும் 1,000,000 டன்கள் சேதமாகலாம்.

நிற்க, 1,857,000 டன் ஜப்பான் கப்பல்கள் நாசமானதாக கர்னல் நாக்ஸ் சென்ற மார்ச்சு மாதம் 27-ம் தேதி குறிப்பிட்டார். பசிபிக் யுத்தத்தை ஜப்பானியர் ஆரம்பிக்கும்போது அவர்களிடம், 60 லட்சம் டன் கப்பல்கள் தான் இருந்தன. பிறகு 2½ லட்சம் டன் கப்பல்கள் அதிகமாக கட்டியிருக்கக் கூடும். கீழக் கோடிக் கடல்களில் ஐரோப்பிய அச்சு நாடுகளுக்குச் சொந்தமான கப்பல்கள் 2½ லட்சம் டன்னும், நேச நாடுகளிடமிருந்து கைப்பற்றிய 220,000 டன் கப்பல்களும், மூழ்கிப் போன நேசநாட்டுக் கப்பல்களை எடுத்ததனால் கிடைத்த 1 லட்சம் டன்னும் சேர்ந்தால், மொத்தத்தில் அச்சு நாடுகளுக்கு ஆசியாவில், 50 லட்சம் டன்னுக்கு அதிகமாக இருக்காது.

ஜப்பான் கப்பல்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் வேலை என்ன ? ஜப்பானிலிருந்து சீனப் போர் முனைக்குப் படைகளையும் சப்ளைகளையும் ஏற்றிக் கொண்டு போவதற்கு 17½ லட்சம் டன் கப்பல்கள் வேண்டியிருக்கிறது. மற்ற போர்முனைக்குக் குறைத்த பட்சம் 25 லட்சம் டன் தேவையிருக்கும். அதாவது, இப்போதுள்ள இராணுவ நிலையை முன்னிட்டு, 35 லட்சம் முதல் 42½ லட்சம் டன் ஜப்பானியர்களுக்குக் கப்பல்கள் தேவையாயிருக்கின்றன. ஆகவே, ‘ கூட்டு முன்னேற்றத் திட்டத்’திற்காக 7½ லட்சம் முதல் 15 லட்சம் டன்கள் தான் இருக்கிறது. தாம் கைப்பற்றிய நாடுகளிலிருந்து மூலப் பொருள்களை ஜப்பானுக்கு ஏற்றிச் செல்லுவதற்கு, ஏராளமான கப்பல்கள் அவர்களுக்கு வேண்டியிருக்கிறது. அதாவது, இராணுவ உபயோகத்திற் கென்று வைக்கப்பட்டிருந்த கப்பல்கள் பலவற்றை கூடிய சீக்கிரம் மூலப் பொருள்கள் ஏற்றிக்கொண்டு வரும்படி உபயோகிக்க வேண்டும். அப்போது தான் ஜப்பானியர்கள் தம் உற்பத்தியைச் செம்மையாக நடத்திக் கொள்ள முடியும்.

# உணவுப் பொருள்களும் விவசாயிகள் கடமையும்

## விலைகள் உயருவதைத் தடுக்க வழி

### பணத்தை மீதிப் படுத்தி வையுங்கள்

இந்த மாகாண வாசிகள் இயற்கையாகவே தங்கள் சொந்த விஷயங்களிலே தான் அக்கறையுள்ளவர்களாக இருக்கிறார்கள். உணவு நிலைமை சென்னை மாகாணத்தி லிருப்பது போல வசதியாக, உலகத்தின் வேறெந்தப் பகுதியிலு மில்லையென்று சொல்லலாம். ஒரு வருஷமாகப் பட்டினியில் ஐரோப்பா வாடுகிறது. ஆயிரக் கணக்கான மக்கள் போலந்து, பெல்ஜியம், கிரீஸ் ஆகிய நாடுகளில் பட்டினியால் மடிகிறார்கள். மிக மிகக் கொஞ்ச உணவைச் சாப்பிட்டுக் கொண்டு மிகச் சிறந்த முறையில் ரஷ்யர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சீனாவின் பெரும் பகுதியில் பயங்கரமான பஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. அளவிலும் குணத்திலும் இங்கிலீஷ்காரர்கள் உணவு மிகவும் குறைந்து விட்டது. அதை அவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உலகத்திலேயே மிகப் பெரிய விவசாய நாடு அமெரிக்கா தான். இங்கிருந்த விவசாயிகளில் பலரை, படைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அனுப்பி விட்டார்கள். ஆகவே, வயல்களில் இப்போது வேலை செய்கிறவர்களுக்கு அதிகக் கஷ்டமாயிருக்கிறது. இங்கே விளையும் தானியங்கள் நேச நாடுகளுக்கும் படைகளுக்கும் அனுப்பப்படுகின்றன, இதன் பயனாக விலைவாசிகள் உயருகின்றன. தானியம் கிடைப்பதும் அரிதா யிருக்கிறது. ஆகவே பொது ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். மத்திய கிழக்கிலும் ஈரானிலும் போதுமான சப்ளைகள் இல்லை. ஆனால், இந்தியா முழுவதிலும் சமாதான காலத்தில் சப்ளைகள் நடத்து கொண்டிருந்தது போலவே தான், இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது. இறக்குமதியாகிக் கொண்டிருந்த ஆடம்பரப் பொருள்கள் இப்போது கிடைப்பதில்லை. ஆனால், மற்ற நாடுகளிலிருக்கிற அளவிற்கு இங்கே தானியங்கள், கம்பு, சோளம், தினை முதலியவைகள், எண்ணெய் வகைகள் ஆகியவற்றிற்குக் குறைவில்லை. சில இடங்களில் மட்டும் சில காய் கறிகள், உருளைக் கிழங்கு, பால், இறைச்சி ஆகியவை இந்தியப் படைகளுக்கும் பிரிட்டிஷ் படைகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் தேவைப்படும். அங்கே மட்டும் ஒரு சிறிது சப்ளைகள் குறையலாம். என்றாலும் 100-க்கு 95 பேர்கள் இதனால் பாதிக்கப்பட மாட்டார்கள்.

## நம் நஷ்டம் மிகக் கொஞ்சம்.

சென்ற $3\frac{1}{2}$ வருஷங்களாக யுத்தத்தில் இந்நாடு ஈடுபட்டிருந்தும், இந்த யுத்தம் உலக சரித்திரத்திலேயே இதுவரை இல்லாதபடி, அவ்வளவு கடுமையானதா யிருந்தும், இங்குள்ள நிலைமை ஆச்சரியப்படும்படி அவ்வளவு இலகுவா யிருக்கிறது. நம் நாட்டையும் எதிரிகள் தாக்கி யிருப்பார்களானால், நிலைமை வேறு விதமா யிருந்திருக்கும். மற்ற நாடுகள் தம் விடுதலையின் பொருட்டும், உலகம் இனிது வாழ வேண்டு மென்பதற்காகவும் அடையும் நஷ்டத்தோடு நம் நாடு அடையும் நஷ்டத்தை ஒப்பிட்டால், நம் நஷ்டம் மிக மிகக் கொஞ்சம் என்று தான் சொல்ல வேண்டும்.

தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ள முடியாத ஒரு சில மக்கள், போதுமான அளவிற்கு உணவு கிடைக்காமல் கஷ்டப் படுகிறார்கள் என்பது உண்மை தான். இது பற்றி வியாக்கியானம் செய்து கொண்டிருப்பதில் பலனில்லை. மேன்மை தங்கிய நம் கவர்னர் அவர்களும், ஆலோசகர்களும் இதையே தம் முதல் பிரச்சினையாகக் கவனித்துக் கொண்டு வருவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். ஒரு அரசாங்கம் எந்தெந்த வகைகளி லெல்லாம் சாகுபடியைப் பெருக்கக் கூடுமோ, அந்த வழிகளி லெல்லாம் ஊக்க மூட்டுவதற்கான முறைகளைக் கையாண்டிருக்கிறார்கள். அதாவது, நீர்ப்பாசனங்களை அதிகப்படுத்தினார்கள். அதிக நிலத்தில் பயிரிட ஏற்பாடுகள் செய்தார்கள். மிகச் சாதகமான முறையில் கடன்கள் கொடுக்கிறார்கள். விசேஷ முறையில் விதைகளும் எருவும் கொடுக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். குறைந்த விளைவுள்ள இடங்களுக்கும் மாகாணங்களுக்கும், அதிக விளைவுள்ள இடங்களிலிருந்தும் மாகாணங்களிலிருந்தும் அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விலை வாசிகளைக் கட்டுப்படுத்தவும், அதன் பொருட்டு தேவைகளுக் கேற்றபடி சப்ளைகளைச் சரிக் கட்டவும் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

என்றாலும் 1939-ம் வருஷம் விற்றதை விட இப்போது 2 அல்லது 3 மடங்கு, விலைகள் உயர்ந்து விட்டன. ஆனால் ஜனங்களுக்குக் கிடைக்கும் சம்பளம், பாதிப் பங்கு கூட உயரவில்லை. இதற்கு முன்பும், வயிற்றுக்கு மட்டுந் தான் ஏழைகள் வாங்கிச் சாப்பிட அவர்கள் வருவாய் உதவியது. இப்போது அது கூட வாங்குவதற்குப் போதுவதில்லை. இதற்குக் காரணங்கள் என்ன ? அவர்களுக்கு நீங்கள் எந்த வகையில் உதவலாம் ?

## படைகளைப் பலப்படுத்துங்கள்.

முதலாவதாக இந்தியாவிற்கு ஏராளமாக அரிசியை அனுப்பிக் கொண்டிருந்த இந்தோ-சீனா, சயாம், பர்மா ஆகிய நாடுகளை எதிரிகள் கைப்பற்றிக் கொண்டார்கள். அவர்களை அங்கிருந்து விரட்டி விட்டு, வங்காளக் குடாக் கடல் கரையோரங்களை மீண்டும் நேச நாடுகள் கைப்பற்ற வேண்டும். அதுவரை உங்கள் ஜனங்கள் கஷ்டப்படத் தான் செய்வார்கள். ஆகவே, நாட்டின் படைகளைப் பலப்படுத்த வேண்டும். அதிகம் பேர்களைப் படையில் சேர்க்க வேண்டும். யுத்தத் தளவாடங்கள் உற்பத்தி செய்யும் பொருட்டு, அரசாங்கத்திற்குத் தொகைகளை நன்கொடையாகக் கொடுக்க வேண்டும். கடனாகவும் கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, நேச நாடுகளின் வேலையும் இருக்கின்றது. யுத்தத்தை ஜெயிக்க, அதுவும் விரைவாக ஜெயிக்க, எல்லாவற்றையும் யுத்த முனைக்கு அனுப்ப வேண்டும். கப்பலில், பொது ஜனங்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொஞ்சமாக அனுப்ப வேண்டி, இடத்தைக் குறைக்க வேண்டும். அது போலவே, தொழிற்சாலை உற்பத்திகளிலும் பொது ஜனத் தேவைகளைக் குறைக்க வேண்டும். இரயில்வே வண்டிகளையும் இதன் பொருட்டுக் குறைக்க வேண்டும். போலந்தியர்கள், ருமேனியர்கள், பிலிப்பைன் காரர்கள் ஆகியோர் கஷ்டப் பட்டதைப் போல் நீங்களும் கஷ்டப்பட விரும்ப வில்லையானால் இந்த ஏற்பாடுகளை ஏற்றுக் கொள்வதைத் தவிர, வேறு உங்களுக்கு வழியில்லை. அன்றியும், உங்களுடைய வாழ்க்கை நிலையையும் குறைத்துக் கொண்டு, மிகக் கொஞ்சமான பொருள்களை வாங்குவீர்களானால், மேலும் உதவியவர்க ளாவீர்கள். கைத் தொழில் முதலாளிகளும், வியாபாரிகளும், தங்கள் பணத்தை யுத்த முயற்சியில் போடட்டும். உழைக்கட்டும். அந்தப் பொருள்களை நீங்கள் வாங்குவதை விட, உங்களுக்கு விடுதலையும், சௌகரியமும் அதனால் ஏற்படும் என்பதற்காகவாவது அவர்கள் அப்படிச் செய்யட்டும். விவசாயிகள் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, அவர்கள் சாகுபடி செய்யும் உணவுப் பொருளும் யுத்த முயற்சியின் ஒரு பகுதி தான். ஆகவே, எவ்வளவு அதிகமான நிலத்தில் எவ்வளவு அதிகமான கண்டு முதல் செய்யக் கூடுமோ, அவ்வளவும் செய்யத் தவறக் கூடாது.



## பண உதவியும் யுத்த முயற்சியும்

மூன்றாவதாக, இந்திய அரசாங்கம் செய்யக் கூடிய கடமை ஒன்றுண்டு. புதிதாக அமைந்துள்ள இந்தியப் படைகளுக்கு மட்டுமன்றி, இந்த நாட்டில் உள்ள நேச நாட்டுப் படைகளுக்கும் சப்ளைகள் அனுப்ப வேண்டும். பிரிட்டிஷ் படைகளும் அமெரிக்கப் படைகளும், தங்களுக்கு சப்ளையாகும் பொருள்களின் விலைகளைக் கொடுத்து விடுகிறார்கள். ஆனால், டாங்கிகளையும், விமானங்களையும், படைகளையும் ஏற்றி அனுப்புவதற்குக் கப்பல்களில் இடம் தேவையாயிருக்கின்றதனாலே, சாமான்களை அனுப்ப அவர்களால் முடிவதில்லை. இந்திய அரசாங்கம் பண்டங்களை வாங்க வேண்டி யிருக்கிறது. ஆகவே, நீங்கள் வாங்குவதற்குப் பண்டங்கள் கிடைப்பது அரிதா யிருக்கிறது. ஆனால், தொழிற்சாலைகளிலும், கிராமங்களிலும் உள்ள தொழிற்சாலை முதலாளிகளுக்கும், குடியானவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், கையில் பணம் மிகுந்து விடுகிறது. அந்தப் பணம் நீங்கள் சம்பாதிப்பது. அதை உங்களின் பொருட்டு நீங்கள் செலவு செய்யலாம்; யுத்த முயற்சிக்காகப் பயன்படுத்தும்படி அரசாங்கத்தாருக்கே திருப்பிக் கொடுத்து விடலாம். நீங்கள் முதலாவது கூறியபடி செய்வதால், விலை வாசிகளை உயர்த்தி விடுகிறீர்கள். இரண்டாவது சொல்லியபடிச் செய்தால், நீங்கள் விலைவாசிகளை உயர்த்தினால், உங்களுக்கு மட்டுமன்றி ஏழை மக்களுக்கும் செலவு அதிகப்படும். உங்களுக்கு உண்ணவோ, உடுக்கவோ அதிகமாகக் கிடைக்காது. வருமான வரி, நிலவரி, விற்பனை வரி, சுங்க வரி முதலியவற்றை இரட்டிப்பாக்கி விட்டால், இவற்றின் பொருட்டு சாதாரணமாக நீங்கள் கொடுப்பதைத் தவிர, அதிகமாகவும் நீங்கள் கொடுக்க முடியும்.

யுத்த முயற்சியின் பொருட்டு நீங்கள் பணத்தைக் கொடுத்தால் படையினர்களுக்கும், தளவாட உற்பத்திக்கும் அது பயன்படும்; உணவுப் பொருள்களின் விலையும், துணிகளின் விலையும் எப்போதும் போலவே இருக்கும். மொத்தத்தில் அவற்றின் பொருட்டுக் குறைந்த விலையைத் தான் கொடுக்கின்றீர்கள்.

இந்த அடிப்படையான உண்மையை இங்கிலாந்தில் உணர்ந்து விட்டார்கள். ஆனால் இங்கே, நீங்கள் இன்னும் உணரவில்லை. இங்கிலாந்தில் பொது மக்கள், ஏராளமான வரிகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அன்றியும், லண்டனில் ஒரு வாரத்திற்குள்ளாக யுத்த கடனாக 200 கோடி பவுன் வசூலானது. சென்ற 3 வருஷ காலமாக, இந்த மாகாணத்தில் 10 கோடிக்குக் குறைவாகத் தான் வசூல் ஆகியிருக்கிறது. விசேஷ வரிகளாக, அதை விடச் சற்று அதிகமாக வசூலானது. உங்களுடைய உயிர்களையும், விடுதலையையும் ஒன்றுக்குப் பாதியாகத் தான் மதிப்பிடுகிறீர்கள். அவ்வளவு சுலபத்தில் உங்களுக்கு விடுதலை கிடைத்து விடாது. நீங்கள் முயற்சிப்பீர்களேயானால், உங்களுக்கு வசதி இருக்காது. மிகவும் எளிய உணவுகூடக் கிடைக்காது. சாதாரண செலவுகளிலும், கடைகளிலும் உங்கள் பணத்தைச் செலவிடுவதற்குப் பதிலாக, அரசாங்கத்திற்கு நன்கொடையாகவோ, கடனாகவோ 20 முதல் 30 கோடி அடுத்த வருஷத்திற்குள் கொடுத்தால் விலைவாசிகள் இறங்கும் வேகத்தைக் கண்டு நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள். ரூபாய்க்கு 2 அணா வீதம் குறைந்தாலும் கூட, இம்மாகாண வாசிகள் தங்கள் செலவில் 20 கோடி மிச்சம் பிடிப்பார்கள். ஏழைகள் தங்களுக்குத் தேவையான உணவுகளை வாங்க முடியும். உணவு நிலைமை, உணவைக் கொண்டு என்ன செய்யப்படுகிற தென்பதைப் பொருத்தில்லை. ஆனால், அதை விற்பதின் மூலம் கிடைக்கக் கூடிய பணத்தைக் கொண்டு என்ன செய்யப்படுகிற தென்பதை பொருத்துத் தானிருக்கிறது.

## வழக்கம் போல் வாங்கி வில்லுங்கள்

நான்காவதாக, உணவுப் பொருள்களை விற்பவர்களும் வாங்குகிறவர்களும் செய்ய வேண்டியதென்ன ? விலைகள் உயர்ந்துகொண்டு போகிற போது, எப்போதையும் விட அதிகமாகவும், விரைவாகவும் பண்டங்களை வாங்குகிறார்கள். விலைகள் மேலும் உயர்ந்தால், அந்த விலைக்குப் பண்டங்களை வாங்காதபடித் தம்மைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டுத் தான் அப்படிச் செய்கிறார்கள். பிற்பாடு அதிக விலைக்கு வியாபாரிகள் விற்றுக் கொள்ளை லாபம் அடிப்பதாக அவர்கள் மீது பழி சுமத்துகிறார்கள். வாங்குகிறவர்கள் எப்போதையும் விட அதிகமாக வாங்கினால், தேவைக் கதிகமாகச் சேகரம் செய்கிறவர்களாகிறார்கள். நீங்கள் உங்களைப் பற்றி மட்டும் கவனித்துக் கொள்வீர்களானால் கொள்ளை லாபம் அடிப்பதாகவும், தேவைக்கு மீறித் திரட்டிக் கொள்கிறவர்களாகவுந் தான் அர்த்தமாகும். கடையில் பண்டங்கள் தட்டுப்படும்படியான நிலைமையை அதிகப்படுத்தி, உங்களுக்குத் தான் நாசத்தைத் தேடிக் கொள்கிறீர்கள். உங்களுடைய தன்னல உணர்ச்சியை அடக்குங்கள். எதிர் காலத்தை அமைதியோடு எதிர்த்து நில்லுங்கள், **வழக்கம் போல் வாங்குங்கள், வழக்கம் போல் வில்லுங்கள்.** அப்படிச் செய்வீர்களானால், நியாயமான விலைக்குப் பண்டங்கள் கிடைப்பதற்குத் தக்கபடி அதிகாரிகள் ஏற்பாடு செய்ய முடியும். நீங்கள் எல்லோரும் ஆவலாக வாங்குவீர்களானால், உங்கள் தேவைகளுக் கேற்றபடிப் பண்டங்கள் கிடைக்காது போய் விடும். அதாவது, கடைகளில் உள்ள பண்டங்களின் அளவு குறைந்து விடும். ஆகவே, மறு முறை நீங்கள் வாங்கும் போது மூக்கால் அழுது கொண்டே வாங்கும்படியான நிலைமை நேரிடும்.

நீங்கள் புத்திசாலித் தனமாகவும், பொது நன்மையை முன்னிட்டும் நடந்துகொள்ளாவிட்டால், அதிகாரிகளின் கட்டுப் பாடும், பலவந்தமும் அதிகமாகிக் கொண்டிருப்பதைத் தவிர, வேறு வழியில்லை.

## குடியானவர்கள் கடமைகள்

ஐந்தாவதாக, குடியானவர்கள், உணவுப் பொருளை உற்பத்தி செய்ய வேண்டிய கடமை இருக்கிறது. சென்ற வருஷம், இம்மாகாணத்திலுள்ள குடியானவர்கள் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்து நீர்ப் பாசனத்திற்கு உட்படுத்தியிருக்கிறார்கள். கடுமையாக உழைத்தார்கள். அப்படியிருந்தும் கண்டு முதல் எப்போதையும் விடக் கொஞ்சமாய்த் தான் இருந்தது. உண்மை யென்னவென்றால், மற்ற எல்லா நாடுகளைப் போலவே இந்த நாட்டிலேயும் விவசாயத்தைக் கட்டுபடுத்துவது பருவ மழையையே ஒழிய, மனிதர்கள் செய்யும் தீர்ப்பல்ல. சென்ற வருஷத்திய பருவ மழை, நமக்குப் பாதகமாயிருந்தது. சீடட் டிஸ்ட்ரிக்ட்களின் (கடப்பை, கர்னூல், பல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களின்) பெரும் பகுதிகளில் சாகுபடி அடியோடு இல்லாமல் போய் விட்டது. மற்ற பகுதிகளில் சாதாரணமாக விளைவதைவிட மிகக் கொஞ்சமாகவே விளைந்திருக்கிறது. என்றாலும், குடியானவர்கள் மனம் தளருவதில்லை. ஏனென்றால், கடன்கள் முதலிய வசதிகளை அரசாங்கத்தார் அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். சென்ற 20 வருஷங்களுக்குள்ளாக தானியம் விற்ற விலையை விட அதிக விலை இப்போது கிடைக்கிறது. ஆகவே, அவர்கள், தமக்காகவும், நமக்காகவும் தம் களஞ்சியத்தை நிரப்பி வைக்க எல்லா முயற்சிகளையும் செய்வார்களென்று உறுதியாக நம்பலாம். பருத்தி விலையும், நிலக்கடலை விலையும் எப்போதையும் விட அதிகமாகத் தான் இருக்கின்றன. இவை, நமக்கு வேண்டியவை தான். என்றாலும், சாதாரணமாக உணவுப் பயிர்கள் சாகுபடி ஆகாத இடங்களில் இவற்றைப் பயிர் செய்யலாம். பருத்தியும், நிலக்கடலையும் சாகுபடி செய்வதை வெகுவாகக் குறைத்து விடுவது குற்றமாகும். இந்தச் சமயத்தில் குடியானவர்களும்; அவர்களுக்கு ஆலோசனை சொல்பவர்களும் மிகுந்த ஜாக்ரதையோடு சிந்திக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. ஒவ்வொரு பயிருக்கும் எவ்வளவு நிலம் வேண்டு மென்றும், எத்தனை ஆட்கள் வேண்டு மென்றும் முடிவு கட்டிக் கொள்ள வேண்டும். அன்றியும், துணியும், எண்ணெயும் கிடைக்காது போனால், எவ்வளவு கஷ்டப்பட நேரிடுமென்றும், தெரிகிறது. இவற்றை ஒருக்கால் சகித்துக் கொண் டிருந்தாலு மிருக்கலாம். ஆனால் ,

(12-ம் பக்கம் பார்க்க)

# டாக்டர் கோப்பல்சின் பழைய பாடம்

## லார்டு ஹா-ஹாவினுடைய விநோத லாப நஷ்டக் கணக்கு

### ஹிட்லர் குட்டிக்கரணமும் மாஸ்கோ திராட்சைப் பழமும்

### ஜெர்மானியாரின் ரஷ்யப்போர் எண்ணெய்ச் செலவே ஒழிய பிள்ளை பிழைத்த பாடில்லை



சென்ற சில நாட்களில் அச்சு நாட்டு வாஞெலிப் பிரசாரத்தை கவனிக்கும்போது எனக்கு ஒரு பழைய சம்பவம் நினைவுக்கு வருகிறது—ஒரு பள்ளிக் கூட சம்பவம்! எங்களுக்கு ஒரு அருமையான சரித்திர ஆசிரியர் இருந்தார். அவர் மிகவும் கெட்டிக்காரர். சரித்திரக் கதைகளைச் சொல்லும் போது, அப்படியே எங்களுடைய மஞ்ே மேடையில், பழங் கதைச் சம்பவங்கள் தத்ரூபமாக நடப்பதைப் போலத் தோன்றும்—அவ்வளவு திறமையாக அவர் எங்களுக்குப் பாடம் சொல்லுவார். ஆனுல் ஒவ்வொரு சமயத்தில்,

"இன்றையத் தினம், நான் புதுப் பாடம் ஒன்றும் சொல்லப் போவதில்லை. புதிதாகச் சொல்லிக் கொண்டே போவதில் பயனில்லை என்று தோன்றுகிறது. நீங்கள் பழைய பாடத்தை இப்போது படிக்க வேண்டும். அப்போது தான் அது நன்ருக நினைவில் பதியும்."

என்று அவர் சொல்லி விட்டுப் போய் விடுவார். உடனே நாங்கள் கும்பல் கூடி பேசிக்கொள்வோம். "பழம் பாடத்துக்கு இப்போ தென்னடா அவசரம்?" என்பான் ஒருவன். "வாத்தியாருக்கு வேலை யிருக்குமப்பா? அதனுல் தான் பழம் பாடத்தை நம்ப தலைமேல் போட்டுட்டுப் பூட்டாரப்பா! என்பான் மற்ருெருவன்.

## பர்லினில் நடந்த "சம்பவம்"

இதைப் போன்ற சம்பவம் பர்லினில் பிரசார மந்திரி சபைக் காரியாலயத்தில் நடந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. டாக்டர் கோப்பல்சுக்கு சற்று அதிக வேலை இருந்திருக்க வேண்டும்; அதனுல் புதிய உத்தரவுகளுக்காக வந்த அவருடைய பிரசாரச் சிஷ்ய கோடிகளுக்கு, "பழைய பாடத்தைப் படியுங்கள்" என்று சொல்லி அனுப்பி யிருக்க வேண்டும். ஏனென்ருல் பர்லின் வாஞெலி நிலையமும் அதனுடைய சாகாக்களும் வெகு நாளைய பழைய பொய்ப் பிரசார முறையைக் கையாண்டிருக்கின்றன. அது என்ன வென்ருல், கிழக்குப் போர் முனையில் ரஷ்யர்கள் ஏராளமான உயிர்ச் சேதமும் யுத்தத் தளவாட நஷ்டமும் அடைந்திருக்கிருர்கள். அதனுல் அவர்களுடைய போர் வலிமை மிகமிகக் குறைந்து விட்டது என்பது தான்.

## கோப்பல்ஸ் மனம்போன போக்கு

மார்ச்சு மாதம் 31-ந் தேதி பர்லினிலிருந்து ஆங்கிலத்தில் பேசிய லார்டு ஹா-ஹா என்ற புனைப் பேருள்ள வில்லியம். ஜாய்ஸ் என்பவர்—இவர் கோப்பல்சின் பிரதம சிஷ்யர்!—இந்தப் பழம் பாடத்தைப் படித்திருக்கிருர் ஒவ்வொரு வாரமும், "செய்தியைப் பற்றிய அபிப்பிராயங்கள்" என்ற தலைப்பில் இவர், கோப்பல்ஸ் மனம் போன போக்கின் படி உண்மைச் செய்தியைத் திருத்தி, பொய்ப் பிரசாரத்தைப் புகுத்தி, ஒரு பிரசங்கம் செய்வது வழக்கம். சென்ற வாரத்திய பிரசங்கத்தில்,

"ஸ்டாலினுடைய மாரிகால தாக்குதலின் பலஞக, ரஷ்யத் துருப்புகள் தான் ஏராளமாகத் தியாகம் செய்யப்பட்டன. பிப்ரவரி மாதம் 23-ந் தேதியிலிருந்து இது வரைக்கும் ஸ்டாராயா ருசா (Straya Russa) என்ற பகுதியில் ரஷ்யர்கள் பெருத்த நஷ்ட மடைந்தார்கள். உயிரிழந்தவர்கள் 61,000, கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள் 2,978, 293 டாங்கிகளும், 26 பீரங்கிகளும், பல சில்லரை ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இதல்லாமல், கார்கோப், ஒரெல் பகுதிகளில் ரஷ்யர்கள் பெருவாரியான நஷ்டமடைந்திருக்கிருர்கள். இதெல்லாம் கவனித்தால் ஒரே முடிவுக்குத் தான் நாம் வர வேண்டி யிருக்கிறது. ரஷ்யர்களுடைய யுத்தத் தளவாட பலமும், ஆள் பலமும், எவ்வளவு அதிகமாக யிருந்தாலும், அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் வருங் காலத்தில் அவர்களுடைய போர் வலிமையைப் பெரிதும் குறைத்துவிடும்,

—என்று கூறியிருக்கிருர்.

## ரஷ்ய நடத்தைப் பற்றி வியாக்கியானம்

இத்தோடு லாட்டு ஹா-ஹா விட்டு விட்டாரா? இல்லை ரஷ்ய நஷ்டத்தைப் பற்றி அவர் மேலும் வியாக்கியானம் செய்கிருர்.

"உலகத்திலேயே இவ்வளவு பெருத்த நஷ்டமடைந்து அதற்குத் தகுந்த லாபத்தை அடையாத தாக்குதல், கிடையவே கிடையாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். யூக்கிரேனியன் மாகாணத்திலுள்ள நீர்வள நிளவள மிகுந்த பகுதிகளையும், தொழிற் செல்வமுள்ள ஜில்லாக்களையும், ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டால், அவர்களுடைய தியாகங்களுக்கு பலன் கிடைத்தது என்று சொல்லலாம். அதுவுமில்லை. அல்லது ஜெர்மன் பட்டாளத்தின் தாக்குதல் திறமையை உடைத்து விட்டாலும், ஒரு பெரிய காரியம் தான். அதுவுமில்லை, ரஷ்யர்கள் நஷ்ட மடைந்தார்களே ஒழிய, எந்த நோக்கத்தையும் அடைய வில்லை,"

—என்று இவர் கூறினுர். கூட்டலும் கழித்தலும் தெரியாத ஒருவன் லாப நஷ்டக் கணக்கைப் பற்றி வியாக்யானம் செய்தாலும். அதைப் போல இருக்கிறது லார்டு ஹா-ஹா கூறும் விவரம்! ஆனுல் உண்மை என்ன? யாருக்கு நஷ்டம் அதிகம்? யாருடைய நோக்கம் ஈடேற வில்லை? எப்படியாவது ரஷ்யச் செஞ்சேனையின் தாக்குதல் திறமையை உடைத்து அழித்து, லெனின்கிராட், மாஸ்கோ, ஸ்டாலின்கிராட், முதலிய பெரிய நகரங்களைக் கைப்பற்ற வேண்டு மென்று ஹிட்லர் ஒரு பெரிய திட்டம் போட்டாரே, அந்தத் திட்டம் நிறைவேறிற்ரு? மாஸ்கோவில் உள்ள கிரெம்லின் மாளிகையில் ஒரு குறிப்பிட்ட நாளில் விருந்துண்ணப் போவதாக வீரம் பேசின ஹிட்லர் இப்போது எங்கிருக்கிருர்?

## ஹிட்லரின் பெருந் தலைவலி

ஸ்மோலென்ஸ்க் நகரில் பெருந் தலைவலியுடன் இருக்கிருர் ஹிட்லர்? என்ன தலைவலி என்பீர்களோ? "ஏராளமான ஜெர்மன் ஆள்பலமும், ஆயுதபலமும் ஜெர்மன் அடிமை நாடுகளின் ஆள்பலமும், ஆயுதபலமும், ரஷ்ய மண்ணுக்கு இரையாகி விட்டனவே! எட்டி எட்டி ஆனமட்டும் குட்டிக் கரணங்கள் போட்டாலும், மாஸ்கோ திராட்சைப் பழம் நமக்கு கிட்ட மாட்டேனென்கிறதே!", என்று ஹிட்லர் எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி, மனம் புண்ணுகி, தலைமேல் கை வைத்துக்கொண்டு, ஸ்மோலென்ஸக் நகரில் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருக்கிருர்.



ஹிட்லருக்கு எவ்வளவு நஷ்டம் என்பதைச் சற்று கவனிக்கலாம். இரண்டரை மாதங்களுக்கு முன், அதாவது பிப்ரவரி மாதம் 23-ந் தேதி, எம். ஸ்டாலின் மூன்று மாத ஜெர்மன் நஷ்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர். இந்த மூன்று மாதங்களும் ஜெர்மன் துருப்புகள் பின்வாங்கிச் சென்ற மாதங்கள்! பின்வாங்கிச் செல்லும்போது நடந்த சண்டைகளில் 7 லட்சம் ஜெர்மானியர்கள் உயிரிழந்தார்கள். 3 லட்சத்துக்குமேற் பட்ட சிப்பாய்களும் தளகர்த்தர்களும் கைதியாக்கப் பட்டார்கள், இந்த மூன்று மாதங்களில் 7,000 டாங்கிகள், 4,000 விமானங்கள், 17,000 பீரங்கிகள் ஜெர்மானியர்களுக்கு நஷ்டம். இதற்கு முன் நஷ்டமான கணக்கு வேறு!. இவ்வளவு நஷ்டத்துக்கும் ஹிட்லர் அடைந்த லாபம் என்ன? எண்ணெய்ச் செலவே ஒழிய பிள்ளை பிழைத்த பாடில்லை என்ற ஏக்கந் தான்!

## அட்டகாசப் பேச்சு

இந்த ஏக்க மெல்லாம் வெளியில் காட்டப்படுவதில்லை. வெளிப் பேச்செல்லாம் ஆடம்பரமும் அட்டகாசமும் நிறைந்த பேச்சுகள். மார்ச்சு மாதம் 27-ந் தேதி, பர்லினில் இருந்து பேசிய லார்டு ஹா-ஹா கூறியதைக் கேட்டால், "இது என்ன யுத்த விமரிசப் பேச்சா, அல்லது நகைச் சுவைப் பிரசங்கமா?" என்று தோன்றும்.

"கிழக்குப் போர்முனையில் இருந்து நெருக்கடியான நிலைமை சமாளிக்கப்பட்டது. இந்த வருஷம், யுத்தம் ஆரம்பித்த காலந் தொடங்கி இது வரை உள்ள பலத்தைவிட, பிரமாண்டமான பலமுள்ள எதிரியாக, ஜெர்மனி ரஷ்யாவுக்குத் தோன்றும்",

—என்று அவர் கூறுகிருர். இதற்கு இரண்டு நாட்களுக்கு முன், அதாவது மார்ச்சு மாதம் 25-ந் தேதி பெர்லின் நிலையத்தி லிருந்து பேசிய வேருெரு ஆங்கில ஒலிபரப்பாளர், "ரஷ்யப் போர் முனையிலுள்ள நெருக்கடியான நிலைமை தீர்ந்துவிட்டது, ஜெர்மன் போர் அமைப்பு வலுப் படுத்தப்பட்டது", என்று இதே பாடத்தை படித்திருக்கிருர். வேனிற் காலத்தில் பைத்தியம் அதிகரிக்கும் என்று சொல்லுவார்கள். ஒவ்வொரு வேனிற் கால ஆரம்பத்திலும் ஜெர்மன் பிரசாரப் பித்து தலைக்கேறி வந்திருக்கிறது. சென்ற வருஷம், மார்ச்சு மாதம் 15-ந் தேதி, வேனிற் காலத் தாக்குதலுக்கு முன் ஹிட்லர் என்ன சொன்னுர்?

"ஒரு விஷயம் தீர்மானமாக நமக்குத் தெரிகிறது. மாரி காலத்தில் ஜெர்மன் துருப்புகளைத் தோற்கடிக்க முடியாத ரஷ்யர்கள், வரப்போகும் வேனிற் காலத்தில் ஜெர்மன் துருப்புகளால் அடியோடு நிர்மூலமாக்கப்பட்டுத் தோற்கடிக்கப் படுவார்கள்", என்று ஜோஸ்யம் கூறினர்.

## ஹிட்லர் ஜோஸ்யம் வீணுதல்

சரிதான், ஹிட்லருடைய ஜோஸ்யம் பலித்ததா? வேனிற்காலம் வந்தது; போய்விட்டது. பின்னர் மாரி காலம் வந்தது, அதுவும் போய்விட்டது. சென்ற மாரி காலத்தில் என்ன நடந்தது என்பது உங்களுக் கெல்லாம் தெரிந்த விஷயம்: ஸ்டாலின் கிராடில் மாத்திரம் ஹிட்லர் 3 லட்சம் ஜெர்மனியர்களை இழந்து மூக்கறுபட்ட கதை இந்த யுத்தத்தின் முக்கிய சம்பவங்களுள் மிக முக்கியமான தொரு சம்பவம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஸ்டாலின் கிராடில் படு தோல்வி, வடக்கே லெனின்கிராடின் முன்—ஜெர்மானியரின் இரண்டு—வருஷ முற்றுகையின் வீழ்ச்சி—இவை ஹிட்லரின் ஜோஸ்ய நஷ்டங்களுள் இரண்டு. இத்தோடு கூட, ராஸ்டாப்வைக் காலி செய்துவிட்டு, டானியட்ஸ் ஆற்றை அவசரம் அவசரமாகக் கடந்து ஓடிய ஓட்டத்தையும் சேர்க்கலாம்.

தற்போது ரஷ்யாவில் உள்ள நிலைமையைப் பற்றி கோப்பல்சின் பொய்ப் பிரசார நிலையங்கள் மேலும் பழைய பாடத்தைப் படித்திருக்கின்றன. ஜெர்மானியர்களுக்கு நிலைமை அனுகூலமா யில்லாதபோது, "பல பகுதிகளில் நமது துருப்புகள் எதிரிகளை முறியடித்து முன்னேறிச் சென்றன"—என்ற பாடம் தான் இது. தகவல் இல்லாத ஒரு செய்தியைச் சொன்னுல், அது உண்மையா பொய்யா என்று எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? யாரோ ஒருவன் எவனையோ கூட்டிக்கொண்டு எங்கேயோ சென்ருன் என்ருல், அதை எப்படி மறுக்க முடியும்? இந்தப் பழைய பாடத்தை, "ஆசாத் ஹிந்து" என்று வட ஜெர்மனியின் பொய் நிலையம் 12-நாட்களுக்கு முன் படித்திருக்கிறது. மார்ச்சு 26-ந் தேதி, தன்னுடைய இந்துஸ்தானி செய்தி ஒலி பரப்பில்

"எல்லா ரஷ்யப் போர் முனைகளிலும், ஜெர்மன் துருப்புகள் தொடர்ச்சியாக முன்னேறிக் கொண்டே செல்கின்றன."

—என்று பேர், ஊர், விவரம் ஒன்றும் இல்லாத ஒரு செய்தியைக் கூறி யிருக்கிறது. ஆனுல் உண்மை என்ன? குபான் பிரதேசத்தில் ரஷ்யர்கள் ஒரு முக்கியமான தாக்குதலைத் தொடங்கி, முன்னேறிக் கொண்டு வருகிருர்கள். ஜெர்மனியின் மாபெருந் தளமும், ஹிட்லருடைய கிழக்குப் போர் முனை யுத்த தலைமை ஸ்தானமுமாகிய ஸ்மோலென்ஸ்க் நகரத்தை இத் தாக்குதல் பாதிக்கும். இதல்லாமல், வியாஸ்மாவை மீண்டும் கைப்பற்றிய ரஷ்யர்கள், வடக்குப் போர் முனையில் இல் மென் ஏரிக்குத் தெற்கில் தாக்கிக் கொண்டிருக்கிருர்கள். இந்தப் பிரதேசத்தில், பாதுகாக்கப்பட்ட மூன்று இடங்களி லிருந்து ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் விரட்டி யடித்து விட்டார்கள்.

## ஒரு பழைய பொய்

பொய் பிரசார பழைய பாடத்தில் கூறப்பட்ட ஒரு பழைய பொய்யைப் பற்றி கடைசியாகக் குறிப்பிடலாம். இந்தப் பொய் 1941-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் கூறப்பட்டது.

"ரஷ்யத் தலைவர்கள் சிறிது பயிற்சி பெற்றவர்களையும் பயிற்சியே யில்லாதவர்களையும், அதாவது குழந்தைகளையும், கிழவர்களையும், இனிமேல் யுத்தத்தில் தள்ளிவிடுவார்கள்",

—என்று "தாஸ் சிக்னல்" என்ற பர்லின் பத்திரிகை எழுதிற்று. இந்தப் பொய்யை 9-நாட்களுக்கு முன், அதாவது மாச்சு 30-ந் தேதி பர்லின் வாஞெலி நிலையம் தன்னுடைய ஆங்கில ஒலி பரப்பில் கூறியிருக்கிறது,

"ரஷ்யப் பட்டாளங்களில் பலவற்றில் மூன்றில் ஒரு பாகம் தான் பயிற்சி பெற்ற சிப்பாய்கள் கொண்டுள்ளன வென்றும், மற்ற இரண்டு பாகம் பயிற்சி பெருத சாதாரண மக்களைக் கொண்டுள்ளன வென்றும், ரஷ்யக் கைதிகள் கூறுகிருர்கள்",

—என்று கூறுகிறது. ஆமாம், உண்மை தான். குழந்தைகள், கிழவர்கள், ராணுவப் பயிற்சி யில்லாத சாதாரண மக்கள் ஆகியோர் ரஷ்யப் பட்டாளங்களில் இருக்கிருர்கள். ஆனுல் அவர்களுக்குப் பயந்து தான் அஞ்சா நெஞ்சம் படைத்த ஹிட்லருடைய சிகாமணிகள் ஸ்டாலின்கிராடைக் கைவிட்டார்கள்; வியாஸ்மாவை விட்டு விட்டுப் பின்வாங்கினுர்கள்; ராஸ்டாப் ரண களத்தில் தங்களுக்கு நேரக்கூடிய அபாயத்திலிருந்து தப்பிக்கொண்டு "தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் என்று" ஒரே ஓட்டமாக ஓடி விட்டார்கள்.

## ஒரு புதிய பாடம்

ஆனுல், முடிவான ஒரு பெரும் போர் சமீபத்தில் தொடங்கப் போகிறது. 1,200-மைல் தூரம் நீண்ட பிரம்மாண்டமான போர் முனையில், வேனிற் காலக் கடும் போருக்கு ஜெர்மனியர்களும் ரஷ்யர்களும் மகத்தான ஏற்பாடுகள் செய்து வருகிருர்கள் என்று மாஸ்கோவில் உள்ள ராய்ட்டர் நிருபர் இன்று காலை வெளியான செய்தி மூலம் தெரிவிக்கிருர். அந்தப் போரில் கொப்பல்சினுடைய பழைய பாடங்களுக்கு ஒரு புதிய பாடம் கற்பிக்கப்படும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

—சென்னை அகில இந்திய வாஞெலி நிலையத்தி லிருந்து ஏப்ரல் 7-ந் தேதி ஒலி பரப்பப்பட்ட ஒரு பேச்சு.

# ரோமல், ஒரு 'சூரர்'



[ஆயாசந் தீர ஏதோ சாப்பிடுகிறுர் ரோமல். அவர் ஓடிய ஓட்டத்திறுல் ஏற்பட்ட ஆயாசமா யிருந்தாலும் இருக்கலாமோ ?.]

'பிசாசாக இருந்தாலும், அதற்குண்டான கடனைக் கொடுத்து ஒழித்து விட வேண்டியது தான்' என்று ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. அதன்படி ஜெர்மன் சேனுபதியான ஜெனரல் ரோமலுக் குண்டான கடனைக் கொடுத்து விட வேண்டியது தான் நியாயம். அவருக்கு நாம் கொடுக்க வேண்டியது என்ன இருக்கிறது என்று கேட்பீர்களே ! அவர் ஒரு சூரர் என்ற பட்டத்தை அவரிடம் ஒப்படைத்து விட வேண்டியது தான். எந்த வகையில் அவர் சூரர் என்ற கேள்வி உடனே பிறக்கும்.

பல வகைகளிலும் அவர் சூரர் தான். இல்லாவிட்டால், இத்தனை நாளைக்குள் அவருக்கு சரியான கல்தா கிடைத்திராதா ? முதலாவதாக, ஓட்டம் பிடிப்பதில் அவர் ஒரு பெரிய சூரர். ஒன்றல்ல, இரண்டல்ல, இரண்டாயிரம் மைல் தூரம் ஓடி யிருக்கிறுர் அவர். இன்னும் ஓடிய வண்ணமாகவே இருக்கிறுர். அவரது முழு ஓட்டத் திறமையையும் பார்த்து விட வேண்டு மென்று தீர்மானித்திருக்கிறுர்கள் நம்மவர்களான நேச தேசத்தார்.

ஆனுல், பல சமயங்களில் ரோமல் இதற்கு இடமே கொடுக்கவில்லை. திடீரென்று ஓட்ட வேகத்தை அதிகப் படுத்திக் கொண்டு, **நம்மவர்கள் பார்வையிலிருந்து தப்பி விட்டார்.** இது சூரத்தனமாக இல்லையா ?

மாரெத் அரண்களிலே பெரிய படையை வைத்துக் கொண்டு, நேச தேசப் படைகளை, சிலகாலம் முன்னேற வொட்டாது செய்து கொண்டிருந்தாரல்லவா ? அங்கே நேச தேசப் படைகளின் கை சற்றே உயர்ந்ததும், வெகு சாமர்த்தியமாக, தமது படைகளை பின் வாங்கச் செய்து விட்டார். அங்கிருந்தே ஓட்டம் தான்.

அவரது படைகளை, மற்றொரு பக்கத்தி லிருந்து அமுக்கி விடவேண்டும் என அமெரிக்கப் படைகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தன. ஆனுல் ரோமல் அதை முன் கூட்டியே எதிர் பார்த்து, வடக்கே அதி வேகமாக ஓடிவிட்டார்.

அப்பால், அமெரிக்கப் படைகளும் பிரிட்டிஷ் எட்டாவது சேனையும் சந்தித்தன. இப்பொழுது, இவ்விரண்டு சேனைகளும், ரோமலைத் தொடர்ந்து, வட திசை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. டியூனிஸியாவிலே சூசா என்பது ஒரு முக்கியமான துறைமுகப் பட்டணம்.

ரோமல் அங்கே நின்று எதிர்ப்பார் என எதிர் பார்த்தார்கள். அங்கும் ஏமாற்றி விட்டார் அவர். இந்த சூசா நகரத்திற்கு வடக்கே மலைகள் இருக்கின்றன. அந்தப் பிரதேசத்திலே தான், அவர் சில காலம் ஒளிந்திருந்து ஏதாவது செய்யலாம். தன்னிடம் பாக்கியுள்ள படைகளையும், டாங்கிகளையும் அவர் இங்கு குவிக்கிறுராம். இப்படியாகக் கொஞ்ச காலம் சண்டை போட்டுக் கொண்டிருந்தால், பிரிட்டிஷ் முதலாவது சேனையால் பின்னுலே தள்ளப்பட்டு வரும் பான் ஆர்னீம் என்ற ஜெர்மன் சேனுதிபதியின் படைகள், ரோமலின் படைகளோடு சேர்ந்து கொள்ளக் கூடும். அப்புறம் ஒரு பலத்த சண்டை நடக்கும். அதன் முடிவு என்ன என்பதைப் பற்றி சந்தேகமா என்ன ?

பாருங்களேன் ; ரோமல் படையிலே, இத்தாலியர்கள் நிறைய இருக்கிறுர்கள். எல் அலமீனிலே அச்சுப் படைகள் ஓட்டம் பிடிக்கத் தொடங்கிய பொழுதும் இத்தாலியர்கள் அந்தரத்தில் விடப்பட்டார்கள். நேசப் படைகள் தான் அவர்களைப் பிடித்து வைத்து, தீனி போடவேண்டி வந்தது. இப்பொழுது அதாவது சென்ற வாரத்தில், பதினுயிரம் பேர்கள் நம்மவர்களிடம் கைதிகளானுர்கள். இவர்களில் பெரும்பாலோர் இத்தாலியர்கள்.

## ரோமல் பார பட்சம்

'எடு ஓட்டம் !' என்று ரோமலின் ஆக்ஞை பிறந்ததும், ஜெர்மானிய சேனைத் தலைவர்கள், முதலில் ஜெர்மன் படைகளுக்குத் தான் வசதி செய்து கொடுக்கிறுர்களாம். இத்தாலியர்களின் மோட்டார் லாரிகளைக் கூட அவர்கள் பிடுங்கிக் கொள்கிறுர்களாம். எங்காவது பெரிய யுத்தம் நடந்தால், அகழிகளில் நின்று போராட இத்தாலியர்கள் அனுப்பப்படுகிறுர்களாம். அவசரத்திலே அகழிகளிலிருந்து வெளிக் கிளம்ப முடியுமா ? அப்படியே கிளம்பிச் சென்றுலும், முழு தூரமும் கால் நடையாகவே செல்ல வேண்டும். எப்படி இருக்கிறது இந்த சூர வேலை ?

இன்னொரு விஷயம் வட ஆபிரிக்கச் சண்டையை ஒரு வழியாக சீக்கிரமே தீர்த்து விட்டால், அப்பால் ஐரோப்பா மீது படை யெடுக்க சௌகரியமாயிருக்கும் என்று நேச தேசத்தார் பார்க்கிறுர்கள். அந்தக் காரியத்தைச் சீக்கிரமே நடக்கவிடாதபடி **செய்வ**தில் 'சூரர்' ரோமல் முனைந்திருக்கிறுர். ட்யூனிஸியாவில் இரண்டரை லக்ஷம் அச்சுப் படைகள் இருப்பதாகக் கூறப்பட்டது. இதிலே எவ்வளவு கரைந்து போயிருக்கிறதோ தெரியவில்லை. இப் படைகளிடம் இருந்த டாங்கிகளும், மற்ற சாதனங்களும் ரொம்ப ரொம்பக் குறைந்து போயிருக்க வேண்டும்.

சென்ற சனிக்கிழமை யன்று மட்டும் நாற்பது ஜெர்மன் டாங்கிகள் கோவிந்தா ஆகி விட்டனவாம். தவிர, ட்யூனிஸியாவில் உள்ள படைகளுக்கு மேற்



கொண்டு தாராளமாக உதவி கிடைக்க வில்லை. பிரிட்டிஷ் நீர் மூழ்கிகள் சமீபத்திலே பதினைந்து அச்சுக் கப்பல்களை மத்ய தரைக் கடலில் மூழ்கடித்திருக்கின்றன. தவிர, ஸிஸிலியிலும், இத்தாலியிலும் உள்ள முக்கியமான துறைமுகங்களை நேச தேச விமானங்கள் பொடிப் பொடியாக்கி வருகின்றன. இப்படி யிருக்கும் பொழுது, ட்யூனிஸியாவில் உள்ள அச்சுப் படைகள் எவ்வளவு காலம் தான் சமாளித்து நிற்க முடியும் ? அது தவிர, நேச தேசத்தார் தான் ஆகாயத்தில் பலசாலிகளாக இருக்கிறுர்கள். விமான பலம் யாருக்கு அதிகமாக இருக்கிறதோ, அவர்களுக்குத் தான் வெற்றி என்பது இந்த மகா யுத்தத்திலே பல கட்டங்களிலே ஏற்பட்ட அநுபவத்திலிருந்து நிச்சயமாக தெரிந்திருக்கிறது. ஆகவே, நேச நேசத்தாருக்குத் தான் வட ஆபிரிகாவில் இறுதி வெற்றி கிடைக்கப் போகிறது என்பதில் சந்தேகமேயில்லை.

## ஓடுவதற்குக் கூட இடமில்லை

ரோமலின் படைகள் ஓடுவதற்கு, ட்யூனிஸியாவில் கூட அதிக இடமில்லை. அங்கிருந்து, அச்சுப் படைகளை வெளியேற்றும் நோக்கம் ஹிட்லருக்கு இல்லை என்றே தோன்றுகிறது. ஆனுல், அங்குள்ள அச்சுப் படைகளை என்ன செய்வது ? நேசப் படைகளிடம் சரணுகதியடையச் செய்வாரா ? அது மாட்டார். 'டங்கர்க் செய்' என்று சொல்வதற்கு வசதி இல்லாததால், 'ஸ்டாலின்கிராட் செய்' என்றே தான் உத்திர விடக் கூடும் அவர். அதாவது, கடைசி வரை போராடி மடியுங்கள் ; அதனுல் அவகாசம் கிடைக்கிற வரை கிடைக்கட்டும் என்பது தான் அதன் அர்த்தம், **தனது எசமானனது கருத்தை அறிந்தவர் போல் தான் ரோமலும் யுத்தத்தை நடத்தி வருகிறுர்.** இந்த வகையிலும் அவர் ஒரு சூரர் தானே ? எதிர் காலத்திலே, இந்த யுத்தத்தைப் பற்றிய மகா புராணம் எழுதப்படும் பொழுது, இந்த சூரருக்கு அதிலே நிச்சயமாக இடமுண்டு. இன்னும் கொஞ்ச நாட்களில் வட ஆப்ரிக்க யுத்தப் படலம் தீர்ந்து போகும் போல் தானிருக்கிறது. 'இதுவே கடைசி வாரம் !' என்று சினிமாக்காரர்கள் விளம்பரம் செய்வது போல, இதுவே கடைசிக் காலம் ! அப்புறம் ஆபிரிகாவின் பெயரும், அதில் உள்ள கிராமங்களின் பெயர்களும் பத்திரிகைகளில் அதிகம் அடிபடாது.

வட ஆபிரிகாவில் நிச்சயமாக ஜெயம் காண முடியாது என்பது ஹிட்லருக்குத் தெரியுமா தெரியாதா ? அது தெரிந்திருந்தால், அவர் ஏன் மடத்தனமாக, ஆபிரிக்கச் சண்டையில் இவ்வளவு ஆட்களையும், பொருள்களையும் பாழாக்கி வருகிறுர் என்று கேட்கலாம், இதற்கு ஒரு காரணம் உண்டு. வசந்த காலம் ஆரம்பமானது மாதிரி தான். ருஷ்யாவிலே கூடிய சீக்கிரமே அங்கு முன்னேறித் தாக்க ஹிட்லர் ஏதோ திட்டம் போட்டு வைத்திருக்கிறுப் போலிருக்கு. அந்த ஏற்பாடுகள் முடிய வேண்டும். நதிகளிலும் வெள்ளம் வடிய வேண்டும். எங்கும் பனி முழுவதும் உருகி விட வேண்டும். இந்த சௌகரியங்கள் எல்லாம் கிடைத்து, கொஞ்ச காலம் போர் நடந்து விட்டால், அப்புறம் சிறிது சுகம் காணலாம். அந்த ஏற்பாடுகள் முடியு முன், ஆபிரிக்கப் போர் முடிந்து விட்டால், நேசதேசத்தார் சட்டென ஏதாவது செய்து விடுவார்கள். ஏற்கெனவே போட்டிருக்கும் திட்டங்கள் எல்லாம் அதனுல் பாழாகும் என்பதை ஹிட்லர் உணர்ந்திருக்கக் கூடும். தவிர, ஆபிரிகாவில் உள்ள படைகளை வெளியேற்ற வேண்டுமானுல், ஏகப்பட்ட கப்பல்கள் வேண்டும். வெடிவீசும் விமானங்கள், சண்டை விமானங்கள் எல்லாம் அனுப்ப வேண்டும். இந்த மாதிரி கப்பல்களும், விமானங்களும் வரவேண்டு மென்றே நேசதேசத்தார் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறுர்கள். அவர்களுக்கு அப்பொழுது சரியான வேட்டை அல்லவா ? மரம் நிறைய மாங்காய்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கிக் கொண்டிருந்தால், அதிகக் கைவலுவும், கல்லெறியும் இல்லாமலே, ஓரிரண்டு கற்களை எறிவதாலேயே பல மாங்காய்களை விழத் தட்டலாமல்லவா ? அதுபோல, ஏராளமான விமானங்களும், கப்பல்களும் தோன்றும் பொழுது, அவற்றுள் பலவற்றை அதிக சிரமமில்லாது பாழாக்கலாமல்லவா ?

## டங்கர்க் ஆகாதா ?

ருஷ்யப் போர் முனைக்கு எல்லா விமானங்களும் தேவையாக இருப்பதால், அந்தப் போர்முனை, ஆபிரிகப் போர்முனையை விட, அதிக முக்யமானதாதலால், ஹிட்லர் ட்யூனிஸியாவிலே டங்கர்க் செய்வதை ஆதரிக்கமாட்டார் என்றே தோன்றுகிறது.

ஜெர்மன் படைகள் லெனின்கிராடு அருகே ஏராளமாகக் குவிக்கப்பட்டு வருகின்றனவாம். தெற்கேயும் ஜெர்மன் விமானங்கள் ஓய்வொழி வில்லாமல் ஆட்களையும், சாமான்களையும் சுமந்து கொண்டு போய் இறங்கிக் கொண்டிருக்கின்றனவாம். கார்க்கோவிற்குக் கிழக்கிலும், நோவோ ரோஸிஸ்க்கிற்கு முன்னுலும் தான், கடும் போர்கள் நடந்து கொண்டிருக்கின்றனவாம். நோவோ ரோஸிஸ்க் நகரை ருஷ்யர்கள் முற்றுகை போட்டிருக்கிறுர்கள். இவை தவிர, மற்ற ருஷ்யப் போர்முனைகளில் அமைதி நிலவுகிறதென்றே சொல்ல வேண்டுமாம். புயலுக்கு முன்னுல் உள்ள அமைதி போலிருக்கிறது இது.

ஜெர்மானியர் மட்டுமன்றி, இம்முறை ருஷ்யர்களும் வசந்த காலத்தில் பெருந் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்து வருகிறுர்களாம். அவர்கள் எங்கே தாக்குவார்கள் என்பது தெரியாது. ஹிட்லர் தவிக்கிறுராம். தவிர, ருஷ்யர்கள் புதிது புதிதான விமானங்களை உற்பத்தி செய்து வருவதாகவும் தெரிகிறது.

ருஷ்யர்களுக்குப போட்டியாக ஹிட்லரும் புது விமானங்களைக் கட்டச் சொல்லியிருக்கிறுர். ஆனுல் ஜெர்மனியிலும், பெல்ஜியம், ஆலந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் உள்ள விமான உற்பத்தி சாலைகளை அமெரிக்க, பிரிட்டிஷ் விமானிகள் ஓய் வொழிவில்லாமலே, பட்டப் பகலிலேயே அக்னி பகவானுக்கு இரையாக்கி வருகிறுர்கள்.

## ஹிட்லர் 'ஸ்டண்ட்'

இவை தவிர, பால்கன் பிரதேசங்களிலே பலஹீனமான பிரதேசங்கள் சில இருக்கின்றன.

நேச தேசத்தார் திடீரென பால்கன் பிரதேசத்தைத் தாக்க முயன்றுல், ஆபத்தாச்சே என்று ஹிட்லர் பயப்பட வேண்டியது தான். இதேமாதிரி பெல்ஜியம், ஹாலந்து பிரதேசங்களிலும் வலுக் குறைவான இடங்கள் பல இருக்கின்றன. அதனுல் அங்கெல்லாம்,சென்ற மூன்று வருட காலமாகவே அரண்களை எழுப்பி வருகிறுர்கள். இன்னும் என்ன அவஸ்தைகள் இருக்கின்றனவோ தெரியவில்லை. ஹிட்லரும், முஸோலினியும் சென்ற வாரம் பிரன்னர் கணவாயில் சந்தித்து, நான்கு நாட்கள் பேசி யிருக்கிறுர்கள். உதவாக் கரை முஸோலினியிடம் பேச்சென்ன இருக்கிறது ? " நான்கு நாட்கள் அச்சு நாட்டுத் தலைவர்கள் கூடிப் பேசினுர்கள் " என்ற செய்தி உலகிலே பரவினுல், ஏதோ பிரமாதமாகப் பிளான்கள் போட்டிருக்கிறுர்கள் என்று உலகோர் நினைக்கக் கூடுமல்லவா ? அதற்காக செய்த 'ஸ்டண்ட்' வேலையோ என்னமோ ".

இல்லாவிட்டால், முஸோலினி தனது அழுகையை அழுது முடிக்க நான்கு நாட்கள் பிடித்திருக்கலாம். அடுத்தாற் போல் அடி வாங்கப் போவது இத்தலி தானே ! அது சம்பந்தமாக ஹிட்லரிடம் அதிக உதவியை முஸோலினி கேட்டிருக்கக் கூடும். இத்தலிக்கு ஆபத்து வந்தால் ஜெர்மனிக்கு அது வர வெகு காலம் பிடிக்குமா என்ன ? ஆகவே, ஹிட்லர் இத்தலியிலே உள்ள ராணுவத்தையும், கப்பற் படையையும் ஜெர்மன் மேற் பார்வைக்குள் வைக்க உத்திரவிடக் கூடும்.

## ஐரோப்பாவில் பெரும் புயல்

தவிர, ரோம் நகரத்தில் உள்ள சர்க்காரை வேறிடத்திற்குக் கொண்டுபோகும் யோசனையைப் பற்றியும் ஹிட்லர் அலசிப் பார்த்திருக்கக் கூடும். மொத்தத்திலே அச்சு நாட்டாருக்கு இப்பொழுது மன நிம்மதி கிடையாது. புயல் ஒன்று பெரிதாக வீசப் போகிறது ஐரோப்பாவிலே. அதற்கான அறிகுறிகள் நன்றுகத் தெரிகின்றன. கடவுளின் செய்கையால் கிளம்பும் புயல் போல், சிறிது காலம் வீசிவிட்டு ஓய்ந்து விடாது, நேச் தேசத்தாரின் தீர்க்க ஆலோசனையின் பேரில் வீசப் போகும் இந்தப் புயல், ஐரோப்பாவிலே சர்வாதிகாரிகளின் ஆட்சியைப் பூண்டோடு கொல்லி எறிந்த பிறகே ஓயப் போகிறது.

## வால் அவரை



**வர்ணனை.**—பெரிய உறுதியான கொடி. பல வருஷங்கள் ஜீவிக்கும். சாதாரண அவரையைப் போல மூன்று இலைகள் ஒவ்வொரு கொத்திலு மிருக்கும். பூக்கள் கொத்தா யிருக்கும். இதன் நிறம் வெள்ளை அல்லது வெண்மை கலந்த சிவப்பு. காய்கள் நீண்டு தட்டையா யிருக்கும். அவற்றில் சுமார் 10 விதைகள் இருக்கும்.

**பரவுதல்.**—நெத்துக் காய்களிலிருந்து விதைகளை எடுத்து, செப்பனிடப்பட்ட குழிகளில் 1 அங்குல ஆழத்தில் நட வேண்டும். புழுத்த சாணத்தை எருவாக அவ்வப்போது போட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

**பயிர் செய்யும் முறை.**—ஒரு வேலியிலேயாவது பந்தலிலேயாவது இந்தக் கொடிகளை எற்றிவிட வேண்டும். 3 அல்லது 4 மாதங்களில் காய்க்கிறது. வெயிற் காலத்தில் கொடி காய்ந்து போனதாகத் தோன்றினாலும், மழை காலத்தில் மீண்டும் தளிர்க்கிறது. சம பூமிகளில் மிகவும் நன்றாய் வளருகிறது.

**உபயோகங்கள்.**—பிஞ்சுகளைச் சமைத்துச் சாப்பிடலாம். பிஞ்சுகளை உரித்து விதைகளை மொச்சைக் காய்களைப் போல உபயோகிக்கலாம்.

**உள்ளடக்கம்.**—தண்ணீர் 88·6 சதமானம் ; உலோகச்சத்து 0·6 சதமானம் ; மாச்சத்து 2·7 சதமானம் ; கொழுப்பு 0·2 சதமானம் ; நார் 1·5 சதமானம் ; கார்போஹைட்ரேட் 6·4 சதமானம் ; 1 பவுண்டிற்கு 190 கலோரி ; சுண்ணச் சத்து 0·126 சதமானம் ; நிமதாக்கினி 0·092 சதமானம் ; இரும்புச் சத்து 0·002 சதமானம் ; விட்டமின் பி 25 சதமானம் ; விட்டமின் சி 50 சதமானம்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

உணவுக் கில்லாமல் கஷ்டப்பட முடியா தென்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மற்றொரு விஷயத்தையும் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய தவசியம். அதாவது, உணவுப் பொருள்கள் அல்லாதவற்றை உற்பத்தி செய்வதினால், அதில் கிடைக்கக் கூடிய இலாபத்தை உணவுப் பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்குவதின் மூலம் ஈடு செய்து விடுகிறோம். ஒரு விவசாயி 40 ரூபாய் பெருமானமுள்ள தானியத்தை விளைவிப்பதற்குப் பதிலாக, 80 ரூபாய் பெருமானமுள்ள பருத்தியை விளைவிப்பதாக வைத்துக் கொள்வோம். தாமே சாகுபடி செய்து கொள்ளக்கூடிய அளவு தானியத்தின் பொருட்டு அவர்கள் 80 ரூபாய் கொடுப்பார்களே யானால் அதனால் யாருக்கு என்ன லாபம் ? அதிகமான உணவுப் பொருள் சாகுபடி செய்வதின் மூலம் அவர்களுக்கு மட்டுமன்றி பொது ஜனங்களுக்கும் நன்மை உண்டு என்று தான் அப்படிச் சொல்லுகிறோம். பருவ மழை, காலா காலத்தில் எராளமாக வந்தால், தங்களால் இயன்ற வரை குடியானவர்கள் உதவுவார்களென்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

### அரசாங்கம் செய்ததென்ன ?

கடைசியாக, நமது மாகாண அரசாங்கம் செய்திருக்கக் கூடிய வேலையும், இனிச் செய்ய வேண்டிய வேலையும் பற்றிக் கவனிப்போம். அநேகர், எல்லாவற்றையும் விட, இது தான் மகா முக்கியமான பிரச்சினை யென்று பிரசங்கங்கள் செய்தார்கள் ; எழுதினார்கள். ஆனால், இது எது போல் இருக்கிற தென்றால் ரயில் வண்டி ஓடுவதைப் பற்றி ஸ்டேஷன் மாஸ்டருக்கும் கார்டுக்கும் தான் மிகுந்த அக்கரை யுண்டு, டிரைவர், வண்டியில் ஏறிப் போகிற ஜனங்கள் முதலியவர்களுக்கு அவ்வளவு அக்கரை யில்லை என்பது போலத் தான் இருக்கும். இது பற்றிய முடிவுகளைச் செய்வது நேச நாடுகளும் இந்திய அரசாங்கமுமாக இருந்த போதிலும், இதைக் கட்டுப்படுத்தி நடத்துவது மாகாண அரசாங்கந் தான். ஆனால், இத்தனைக்கும் மூல பலம் பொது ஜனங்கள் தான். ஒவ்வொரு கிராமத்திலும் தாலூக்காவிலும் எந்த முறையில் பொது ஜனத் தலைவர்கள், தம்மைப் பின்பற்றுகிறவர்களை நடத்துகிறார்களோ, அது போலவே தான் அந்த உணர்ச்சியோடு தான் பொது ஜனங்களும் வேலை செய்வார்கள். தலைவர்கள் எங்கேயோ வெகு தூரத்திற்கு அப்பாலிருந்து வருகிறவர்கள் தான், என்று உங்களில் அநேகர் நினைக்கிறீர்கள். உங்கள் தலைவர்கள் வெகு அருகிலேயே இருக்க வேண்டும். தைரியமும் ஊக்கமும் உங்களுக்கு இருந்தால் நீங்களே தலைவர்களா யிருக்கலாம். ஒரு பந்தாடுங் கோஷ்டிக்குத் தலைவராக நீங்கள் இருந்தால், உங்களுக்கு முடிவான கட்டளை டில்லியில் பிறக்கிறதா, பம்பாயில் பிறக்கிறதா என்று காத்திருப்பதில்லையே ? என்றாலும், இந்த மாகாணத்திலுள்ள கல்வியும், செல்வமும், அறிவும், ஒழுக்கமும் உடைய முதிர்ச்சி யுள்ளவர்கள் கூட, தமக்கும் பொது ஜனங்களுக்கும் நன்மையானது எது என்று சிந்திக்காமல், பிறர் என்ன கட்டளை யிடுகிறார்கள் என்று எதிர் பார்த்துக் கொண்டு அதன்படி நடந்து திருப்தி யடைகிறார்கள். இப்படியாகத் தான் இத்தாலி பாஸிஸத்தையும் ஜெர்மனி நாஜிஸத்தையும் எற்றுக் கொண்டது. உங்களைச் சுற்றி யுள்ளவர்களை விடக் கொஞ்சம் அதிகமாகத் தெரிந்த ஒவ்வொருவரும் தம் அயலார்களை நடத்துவிக்க வேண்டும். இந்த வேலைக்குத் தேசீயப் போர்முனை இயக்கம் எற்றது. இந்தச் சந்தர்ப்பத்தை உங்களில் சிலர் பயன்படுத்திக் கொண்டார்கள். மற்றவர்கள் தங்களால் இயன்ற அளவிற்குச் செய்யாதிருக்கக் காரண மென்ன ?

—சென்னை வானொலி நிலயத்திலிருந்து மிஸ்டர் **ஆர். கில்லெட்டி, ஐ.சி.எஸ்.,** ஒலிபரப்பிய ஒரு பேச்சு.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY. " VICTORY HOUSE ". MOUNT ROAD. MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம௵ ஏப்ரல்௴ 30உ, வெள்ளிக்கிழமை [இதழ் 17

## காலம் நெருங்கி விட்டது



" நேச நாடுகளோடு, கூடியவரை எல்லா வகைகளிலும் சம்பந்தம் வைத்துக் கொள்ளப் பார்க்கிறது ஹங்கேரி. தகுந்த சமயத்தில் அது ஜெர்மனியைக் காட்டிக் கொடுத்து விடும். பல்கேரியாவோ தன்னால் இயன்ற வரை முயன்று நேர்முகமாக இதுவரைப் போரில் கலந்து கொள்ளாமல் இருக்கிறது. தன்னுடைய போக்கை மாற்றிக் கொள்ளுவதற்கான தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. எந்தச் சமயம் வேண்டுமானாலும் யுத்தத்தை நிறுத்திவிடத் தான் தயாரா யிருப்பதாக நேச நாடுகளுக்கு பின்லந்து செய்திகள் அனுப்பிக் கொண்டிருக்கிறது. ஆந்தனெஸ்குவின் ஆதிக்கத்திற் குட்பட்டிருக்கும் ருமேனியா தன்னிடமுள்ள எல்லாவற்றையுங் கொண்டு ஆட்டங் காட்டிக் கொண்டிருக்கிறது. அச்சு நாட்டவர்களி லிருந்து முதலில் இதுதான் விலகும் போலிருக்கிறது. இத்தாலியிலோ சமீபத்தில் ஒரு விஷயம் வெளியானது. அதாவது, ஜெர்மானியர்கள் வசமிருந்து இத்தாலியை மீட்க ஒரு 'சதி' செய்யப்பட்டது. இதைக் கண்டு பிடித்த பிறகு தான், இத்தாலிய அரசாங்கத்தில் கடைசியாக மாறுதல் ஏற்பட்டது. ஐரோப்பாக் கண்டத்தில் நேச நாட்டுப் படைகள் காலடி எடுத்து வைத்த வுடனேயே எல்லாம் இயங்க ஆரம்பித்து விடும். அந்தக் காலம் நெருங்கி விட்டது. அதற்கு ஆயத்தமா யிருங்கள்."

**டாக்டர் பீனிஸ்** செக்கோஸ்லோவேகிய தலைவர் ஏப்ரல் 26-ம் தேதி ஒலிபரப்பிய பேச்சில் கூறியது.

# முரசொலி



“நிலைமை எவ்வளவு அவசரமா யிருக்கிறது என்று நாம் முழுதும் உணர்ந்திருக்கிறோம். நமக்கு இவ்வளவு உதவி செய்த சீனாவிற்கு, நாம் எவ்வளவு உதவி செய்யக்கூடுமோ, அவ்வளவும் செய்ய வேண்டியது அவசிய மென்றும் உணருகிறோம்.”

—சர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ்.

* * * * *

“மிக மிகக் கஷ்டமான காலங்களில் இந்தியப் படைகள் நிச்சயமாகவும் கொஞ்சமும் தயங்காமலும் உதவி வந்திருக்கின்றன. வெற்றி பெறுவதற்கு அவர்கள் செய்யும் தொண்டு மிகச் சிறந்தது.”

—“டைம்ஸ்”.

* * * * *

“யுத்தத்தின் நான்காவது வருஷத்தில் மகா கஷ்டமான நிலைமையை யடைந்து விட்டோம். இந்தப் பொறுப்புக்களி லிருந்தும் கஷ்டங்களி லிருந்தும் தப்பும் வழி தெரியவில்லை.”

கொப்பல்ஸ்.

“எந்த நிமிஷம் வேண்டுமானாலும் ஐரோப்பாவைத் தாக்க நாம் ஆயத்தமா யிருக்க வேண்டும். இதற்கு கனடியப் போர்வீரர்களுக்கு மகா முக்கியமான சந்தர்ப்பம் விரைவில் ஏற்படப்போகிறது.”

—மெக்கென்சி கிங்.

* * * * *

“உலக ஆரம்ப காலம் முதல் நடைபெற்ற யுத்தக் கொடுமைக ளெல்லாம் பாவங்களுக்கேற்ற தண்டனைகள் தான். இதைப் பற்றி சந்தேகமே கிடையாது.”

கார்டினல் மாக்கியோன்.

* * * * *

“ரஷ்ய மக்கள் நமக்குக் கொடுத்த ஆதரவிற்கும், அவர்கள் காட்டிய வீரத்திற்கும், இராணுவத் திறமைக்கும் நாம் நன்றி செலுத்துகிறோம். அமெரிக்காவில் பலம் ஓங்கி வளர்வது பற்றியும், சீனா கொஞ்சமும் தளர்ச்சியடையாமல் பலவகைக் கொடுமைகளையும் சகித்து வருவது பற்றியும் நாம் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.”

—சர் கிங்ஸ்லி உட்.

“மத்திய கிழக்கில் உண்மையிலேயே ஒரு யுத்தத் தளவாட உற்பத்தி ஸ்தானமாகத் தான், இந்தியா விளங்குகிறது. கங்கை நதிப் பள்ளத்தாக்கில் ஒரு பெரிய தொழிற்சாலை யிருக்கிறது. இதற்கு எஃகு நகரம் என்றே பெயர். இதை நீங்கள் பார்க்க வேண்டும். 2 லட்சம் தொழிலாளர்கள் மகா ஊக்கத்தோடு வேலை செய்துகொண் டிருக்கிறார்கள். உலகிலுள்ள மற்ற எந்த நாட்டுத் தொழிலாளர்களுக்கும் இவர்கள் குறைந்தவர்க ளல்ல.”

—“டெய்லி மெய்ல்.”

* * * * *

“ஹாலண்டுக்கும், சிட்னிக்கும், வாஷிங்டனுக்கும் வெகு தூரத்தில் துனீசியா இருக்கிறது. என்றாலும், இங்கே வெற்றி கிடைத்தால், நம் கண் மறைவிலேயே இனி ஜப்பானின் யுத்த அநாகரிகக் கொடுமைகள் தலைதூக்கவே முடியாதபடி ஒழிந்து விடும்.”

—கர்னல் ப்ராங் நாக்ஸ்
அமெரிக்கக் கடற்படை மந்திரி.

* * * * *

“அமெரிக்க விமானிகளை ஜப்பானியர்கள் கொன்றது எங்களுக்கு ஆச்சரியமா யில்லை. ஏனென்றால், இதைவிடப் பலவகைக் கொடுமைகளை இவர்கள், எங்கள் மக்களுக்குப் பல வருஷங்களாகச் செய்துகொண்டு வருகிறார்கள்.”

— ஸ்ரீமதி ஷியாங்-கெய் ஷேக்.





பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| “காலம் நெருங்கிவிட்டது” .. .. | 1 |
| டாக்டர் பீனிஸ் (படம்) .. .. | 1 |
| முரசொலி .. .. .. | 2 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. | 3 |
| தகுந்த புகழ்மாலை .. .. .. | 4 |
| மதுரை ஜில்லாவில் ஏழைகள் தானியடிப்போக்கள் .. .. .. | 5 |
| யுத்தகாலத்தில் அரிய பெரிய சேவை .. | 6 |
| யுத்தப் போக்கைப்பற்றி அச்சு நிலையங்களின் பொய்ப் பிரசாரம் .. .. | 9 |
| பிரிட்டனின் புதிய போர் விமானம் டைபூன் .. .. .. | 10 |
| விளையும் பயிர் முளையிலே .. .. | 11 |
| மண்ணெண்ணெய்ச் சிக்கன விளக்குகள். | 13 |
| ராட்சஸ புத்தி .. .. .. | 14 |
| முருங்கை .. .. .. .. | 16 |
| மரங்கள் விமானங்களாக மாறும் விநோதம் .. .. .. .. | 16 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**ஜப்பானிய ராஜதந்திரம்: ஒரு ஆராய்ச்சி.**

நாங்கிங் அரசாங்கத்தின் தலைவர் வாங் சிங் வெய். இவர் ஒரு சீனர். என்றாலும் ஜப்பானியரின் கையாளாகத் தான் இப்போது இருந்து வருகிறார். இவருடைய அரசாங்கத்தோடு ஜப்பானியர்கள் சமீபத்தில் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தின் பலா பலன்கள் என்ன என்பது பற்றி “சீன வருஷ நூல்” (China Year Book) என்னும் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறது. இதை இயற்றியவர் மிஸ்டர் எஸ். ஜி. டபுள்யு. உட்ஹெட். இவர் “மாஞ்செஸ்டர் கார்டியன்” பத்திரிகையில் சமீபத்தில், இந்த ஒப்பந்தத்தைக் குறித்து கீழ் கண்டவாறு எழுதி யிருக்கிறார் :—

1940-ம் வருஷம மார்ச்சு மாதம் நாங்கிங் நகரத்தில் வாங் சிங் வெய் அரசாங்கம் அமைந்தது. அப்போது ஜப்பானிய இராணுவத்தின் கையி லிருந்த சீனர்களுடைய சொத்துக்களைத் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லி, பிரமாத ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள் ஜப்பானியர்கள். ஜப்பானியப் படைகள் சீனாவில் முன்னேறியபோது, அங்கிருந்த பருத்தி ஆலைகள், மாவு ஆலைகள் முதலிய கைத் தொழில் ஸ்தாபனங்களையும் தொழிற்சாலைகளையும் சீனர்களிடமிருந்து பிடுங்கி, தம் நன்மைக்காகவே உபயோகித்து வந்தனர். இவை சம்பந்தமாகச் சில வசதிகள் செய்து தருவதாக 1910-ம் வருஷம் மார்ச்சு மாதம் நாங்கிங்கில் ஜப்பானியர்கள் கூறிய மொழிகள் பசப்பு வார்த்தைகளாகவே முடிந்தன.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

தாம் கைப்பற்றிய தொழிற்சாலைகளையும் இதர சொத்துக்களையும் திரும்ப அவற்றின் சொந்தக்காரர்களான சீனர்களுக்கே திருப்பிக் கொடுத்து விடுவதாக ஜப்பானியர்கள் கூறினார்கள். ஆனால் அதில் ஒரு முள் வைத்தார்கள். அந்த வியாபாரத்தில் ஜப்பானியக் கூட்டாளி ஒருவரையும் பங்காளியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமாம். அவர்கள் தான் பூரண அதிகாரமும் வகிப்பார்களாம். இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளுவது பற்றியும் அவர்கள் கூறுவது தான் முடிவானதாம். இவ்வளவும் நாங்கிங் பொம்மை ஆட்சிக்கு ஆதரவு தேடும் பொருட்டுத் தான் செய்தார்கள். ஆனால், அவர்கள் எண்ணம் பலிக்கவில்லை. இப்போது வேறொரு முறையைக் கொண்டு சீனர்களை வசப்படுத்தப் பார்க்கிறார்கள்.

ஜப்பானியர்களுக்கு எதிரிகளாய் உள்ளவர்களுக்கு, குறிப்பாக பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கருக்கும் சீனாவில் உள்ள சொத்துக்களை ஜப்பானியர்கள் கைப்பற்றினால், நாங்கிங் அரசாங்கம், அவற்றை எந்தச் சீனருக்குக் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறதோ, அவருக்குக் கொடுத்து விடுகிறார்கள். இதை ஜப்பானிய வியாபாரிகள் எதிர்க்கிறார்கள். ஷாங்கை நகரத்திலுள்ள இந்தச் சொத்துக்கள் மட்டும் எத்தனையோ கோடிகள் பெறும். இப்படியாக, ஷாங்ஹையில் ஆங்கிலேயர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் உள்ள சம்பந்தத்தை அடியோடு ஒழித்து விடவேண்டு மென்றும், சீனர்கள் ஆதரவைத் தேட வேண்டு மென்றும் ஜப்பானியர்கள் முயற்சிக்கிறார்கள்.

இந்த ஏற்பாடுகளை ஜப்பானிய வியாபாரிகள் எதிர்க்கிறார்கள். பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கர்களுக்கும் சொந்தமான சொத்துக்களைத் தாமே ஏகபோகமாக அனுபவிக்க வேண்டு மென்பது அவர்களுடைய ஆசை. “ப்ராங்பர்டர் செய்துங்” என்னும் பத்திரிகையிலிருந்து ஒரு உண்மை தெளிவாகிறது. “ஜப்பானிய வியாபாரிகளுக்கு அல்லது முதலாளிகளுக்கு அந்தச் சொத்துக்களில் ஏராளமான பங்குகள் இருந்தால் மட்டுந்தான், சீனர்கள் அவற்றை ஒப்புக் கொள்ளலாம்” என்பது இதற்கு நிபந்தனை.

**ஜப்பானின் ஓர வஞ்சக வியாபாரம்.**

ஜப்பானியர்கள் வழங்கிய வசதிகள் சூனியந் தான். அதோடு, சீனாவில் சில பகுதிகளில் விசேஷச் சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருந்த நேசநாடுகள் அவற்றை எவ்வளவு பெருமிதத்தோடு துறந்தன என்பதை ஒப்பிட்டுப் பாருங்கள். இவற்றை துறப்பதாக நேசநாடுகள் அறிவித்த பிறகு தான், தாமும் அவற்றை ஏதோ விட்டுக் கொடுப்பதாக ஜப்பான் அறிவித்தது. ஷாங்ஹையிலுள்ள சில தொழிற்சாலைகளைச் சீனர்கள் வசம் ஜப்பானியர்கள் ஒப்புவித்தனர். அப்போது ‘புதிய ஆசிய சகாப்தம்’ பிறந்து விட்டதாக பிரமாதமான ஆர்ப்பாட்டங்களோடு அறிவித்தார்கள். இந்த வசதிகளை ஜப்பானியர்கள் வழங்கியதன் நோக்கம் என்னவென்று கவனிப்போம். பணக்காரர்களான சீன வியாபாரிகளைச் சமரசப்படுத்திக் கொள்ளும் பொருட்டுத் தான், அவர்களுக்கு வியாபாரத்தை அதிகப்படுத்திக் கொள்ளத் தக்க சந்தர்ப்பங்களை அளித்தார்கள். ஆனால், இந்த ஏற்பாடுகளினால், ஜப்பானியர்களுக்கு கிடைக்கக் கூடிய அளவிற்கு சீனர்களுக்கு இலாபங் கிடைக்காது என்று அவர்களுக்குத் தெரியும். ஜப்பானியர்கள் இதில் தலையிடும் முன்னதாகத் தமக்குக் கிடைத்து வந்த இலாபம் இனிக் கிடைக்காது என்றும் கண்டனர். ஏனென்றால், ஜப்பானிலிருந்து ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துவதாக டோக்கியோ ரேடியோவே ஒப்புக் கொண்டிருக்கிறது. இது தான் ஜப்பானின் ஓர வஞ்சக வியாபார முறை. ஜப்பானுக்கு மூலப் பொருட்களை அனுப்பும் நாடுகள், ஜப்பானிலிருந்து எந்த வகைப் பொருளையும் திரும்ப எதிர்பார்ப்பதற்கில்லை. டோக்கியோ பாங்கிகளில் அவர்கள் கணக்கில் பெருந்தொகை வரவிருக்கும். அவ்வளவு தான்.

(7-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

**வார வெளியீடு**

மலர் III] 1943-ம் ௵ ஏப்ரல் ௴ 30௳. [இதழ் 17

## தகுந்த புகழ் மாலை

துனீசியா போரில் மிகச் சிறந்த முறையில் நான்காவது இந்திய டிவிஷன் படை போராடி யிருக்கிறது. இதைப் பாராட்டி மிஸ்டர் சர்ச்சில் சில நாட்களுக்கு முன் பேசினுர். இது பற்றி இந்தியர்களாகிய நாம், உண்மையிலேயே பெருமை யடைகிறோம். மாரெத் போர் முனையிலும், வாடி அகாரெத் என்னுமிடத்திலும் நமக்கு வெற்றி கிடைக்கும் பொருட்டு இந்த 4-வது இந்திய டிவிஷன் படைகள் நடத்திய போராட்டத்தைக் குறித்து, "மகா சிறந்த வெற்றிகள்" என்று, மேன்மை தங்கிய வைசிராயிக்கு மிஸ்டர் சர்ச்சில் அனுப்பிய பாராட்டுச் செய்தியில் குறிப்பிடுகிறுர். மேலும் அவர் கூறியதாவது :

"இந்திய சிப்பாய்களும் ஒப்புயர்வற்ற கூர்க்கர்களும் அடைந்துள்ள பெரும் புகழ், மத்திய கிழக்குப் போர் அரங்கங்களில் இந்தியப் படைகள் நடத்திய போராட்டங்களால் பெரிதும் உயர்ந்து விட்டது".

ஆப்பிரிக்காவிலும், கீழக் கோடியிலும், இந்தியாவிலும் இந்தியப் படைகள் செய்துள்ள அரிய சேவகத்தைக் கண்டு தான் ஆச்சரியப் படுவதாகவும் நன்றி செலுத்துவதாகவும் அவர் இந்திய மன்னர்களுக்கும் மக்களுக்கும் அறிவித்திருக்கிறுர். மகா கடினமான போராட்டத்தில் சிறந்த வீரச் செயல்கள் செய்து அடைந்த வெற்றியில் இந்தியர்கள் பங்கு கொள்வது பற்றி, தான் பெருமை யடைகிறதாகக் கூறுகிறுர்.

இந்த டிவிஷன் படையின் வீரத்தைப் பாராட்டி, பொது மக்கள் சபையில் இந்தியா மந்திரி மிஸ்டர் எமரி சமீபத்தில் குறிப்பிட்டார். 1940-ம் வருஷம் ஜெனரல் வேவல் தலைமையில் நடை பெற்ற மேற்குப் பாலைவனப் போராட்டத்திலும், இத்தாலியக் கிழக்காப்பிரிக்காவிலும், லிபியாவிலும், பொதுவாக எல்லாப் போர் முனைகளிலும் இந்தியப் படைகள் செய்துள்ள மகா சிறந்த சேவைகளைப் பற்றி குறிப்பிட்டார்:

"துனீசியாவில் ஜெனரல் மண்காமரி தலைமையில் பெற்ற வெற்றிகளோடு, மேலும் அதிக வெற்றிகள், இந்த டிவிஷன் படை பெற்றுக் கொண்டிருக்கிறது."

பிரிட்டிஷ் பத்திரிகைகளும் இந்த டிவிஷன் படைகளைக் குறித்து புகழ் மாலை பாடுகின்றன. "நீங்கள் தைரியத் தோடிருந்ததால் வென்றீர்கள் ; ஆகவே, தைரியமாகவே இருங்கள்" என்று இந்தப் படையினருக்கு, ஜெனரல் ஆச்சின்லெக் கூறியதை சில பத்திரிகைகள் இப்போது எடுத்து ஞாபகப்படுத்துகின்றன. இந்தப் பெரும் ஊக்கம் தரத்தக்க வார்த்தைகளைக் கேட்ட இந்திய வீரர்கள், ரோமல் பின் வாங்கியே போகும்படியான ஒரு நிலையை உண்டு பண்ணி விட்டார்கள். 4-வது இந்தியப் படையினர் 1940-ம் வருஷம் சித்தி பரானியில் மிகச் சிறந்த தோர் வெற்றி பெற்றது. மகா கடுமையான போராட்டத்திற்குப் பிறகு கிடைத்த இந்த வெற்றி, பல சிறந்த வெற்றிகளுக்கு, மூலமா யிருந்தது. வடாப்பிரிக்க மாகாணத்தி லிருந்து நான்கு கட்டங்களில் எதிரிகள் விரட்டி யடிக்கப்பட்டனர். அவை தான் சித்தி பரானி, லிபியன் ஓமார், பீர்-எல்-கோபி, கசாலா. இங்கே இந்தியப் படைகள் காட்டிய போர்த்திறமையை உலக முழுதும் புகழுகிறது. இந்திய அரசாங்க சபையில் சர் ஆலன் ஹார்ட்லி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் படைகள் எல்லாவற்றிலும் 4-வது இந்திய டிவிஷன் படை தான் மகா சிறந்தது என்று, சமீபத்தில் மத்திய கிழக்குக்குப் போய் டில்லிக்குத் திரும்பிய ஒரு பெரிய பிரிட்டிஷ் இராணுவ உத்தியோகஸ்தர் என்னிடம் கூறினுர் என்று கனம் அங்கத்தினர்களுக்கு அறிவிக்க ஆசைப்படுகிறேன்."

ஒரு வருஷத்திற்குப் பிறகும் புது வெற்றிகள் இந்தப் படை பெற்றுக் கொண்டிருக்கிறது. எல் அலமீனில் போராட்டம் ஆரம்பமானதிலிருந்து இந்தப் படை முன்னணியிலேயே இருந்து போராடிக் கொண்டிருக்கிறது. மாரெத் போராட்டத்தைக் குறித்து ஜெனரல் அலெக்சாந்தர் பீல்ட் மார்ஷல் வேவலுக்கு அனுப்பிய கடிதத்தில், "நான்காம் படை மிகச் சிறந்த முறையில் ரோந்து வந்து, மாரெத் அரண்களின் மத்தியிலும், மத்மதா மலைகளின் முக்கியமான கட்டடங்களிலும் மகா உக்கிரத்தோடு தாக்கியதன் பயனுக, வெற்றி கிடைத்தது என்று கூறுவது தவறுகாது.

வடாப்பிரிக்காவில் மட்டுமன்றி, மற்ற போர்முனைகளிலும் இந்தியப் படைகள் திறமையோடு போராடிப் புகழ் பெற்றிருக்கின்றன. இந்த மகா யுத்தம் ஆரம்பமாவதற்குச் சில வாரங்களுக்கு முன்னதாகவே, இந்தியப் படைகளை ஏடன், எகிப்து, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குக் கொண்டு போனுர்கள். மலேயாவிலும், பர்மாவிலும் மத்திய கிழக்கிலும் இந்தியப் படைகள் போராடினுர்கள். வட அபிசீனியாவை வென்றுர்கள். முக்கியமான இத்தாலியப் படைகளைப் போர்க் கைதிகளாகப் பிடித்தனர். சிரியாவைக் கைப்பற்றுவதிலும் இந்தப் படை மிகச் சிறந்த பங்கு கொண்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு வெற்றியும், தமக்கும் தம் நாட்டிற்கும் பெரும் புகழும் தேடித் தருவதில் இந்தப் படை ஒப்புயர்வில்லாதது என்று ஒருவாறு கூறலாம். பணத்திற் காசைப்பட்டுத் தான் பட்டாளத்தில் இந்தியர்கள் சேருகிறுர்கள் என்று குறை கூறித் திரிகிறவர்கள் வாய் திறக்க ஒட்டாதபடி அடக்குகிறது இந்தியப் படைகளின் தலை சிறந்த வெற்றிகள். உண்மைக்காகவும் நேர்மைக்காகவும் போராடும் இந்தப் படை நெடுநாள் வாழ்க ! இதன் புகழொளி உலகெங்கும் வீசுக ! இதன் முயற்சிகள் வெற்றி தருக ! இதன் லட்சியம் ஓங்கித்தழைக்க !



## மதுரை ஜில்லாவில் ஏழைகள் தானிய டிப்போக்கள்

சென்ற 1943-ம் ௵ மார்ச்சு ௴ 11௳ வரை 21 ஏழைகள் தானிய டிப்போக்கள் மதுரை ஜில்லாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன வென்று தெரிகிறது. இன்னும் பல டிப்போக்கள் விரைவில் ஏற்படலாம்.

இந்த டிப்போக்களுக்கு அந்தந்தப் பகுதியிலுள்ள பெரும் பணக்காரர்கள் முதல் கொடுக்கிறுர்கள். அங்கங்கே உத்தியோகப் பற்றில்லாதவர்களைக் கொண்ட கமிட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் கமிட்டியார் தானியங்களை விலைக்கு வாங்கி கடை விலையை விடக் குறைவான விலைக்கே ஏழை மக்களுக்கு விற்கிறுர்கள். சில சமயங்களில் கொள் முதல் விலையை விட விற்பனை விலை குறைவது முண்டு. இதனுல் நேரும் நஷ்டத்தை பொது ஜனங்கள் ஈடு செய்துகொடுக்கிறுர்கள். இந்தத் திட்டம் முழுவதையும் ரிவினியூ டிவிஷனல் ஆபீசர்களும், தாசில்தார்களும் மேல் பார்வையிடுகிறுர்கள். எல்லா டிப்போக்களும் திருப்திகரமாக வேலை செய்கின்றன. மேலும் பல விடங்களில் இப்படிப்பட்ட டிப்போக்களை ஆரம்பிக்க வேண்டு மென்று பொது ஜனங்கள் கோருகிறுர்கள். தங்கள் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது பற்றி பொதுவாக ஜனங்கள் சந்தோஷப் படுகின்றனர்.

இந்த டிப்போக்களில் குறைந்த விலைக்கு தானியங்கள் விற்கப்படுவதால், கட்டி வைத்திருந்த சரக்குகளுக்கு எங்கு விலையில்லாது போகுமோ என்று அஞ்சி தாங்களும் குறைந்த விலைக்கே விற்க வியாபாரிகள் முயலுகிறுர்கள்.

**திண்டுக்கல் தாலூகா.**—இந்த டிப்போக்களை ஆரம்பிப்பதற்காக திண்டுக்கல் தாலூகாவில் மட்டும், உத்தியோகப் பற்றில்லாதவர்கள் ரூ. 30,000 கொடுத்து உதவி யிருக்கிறுர்கள் என்பது பெரிதும் பாராட்டத் தக்கது. திண்டுக்கல் நகர சபை எல்லைக்குள் மூன்று டிப்போக்கள் நடைபெறுகின்றன : (1) நாகநகர், (2) பீகம்பூர், (3) டவுன்.

**மதுரை தாலூகா.**—மதுரை நகரத்தைச் சேர்ந்த இராமனுதபுரம் ரோட் 166-ம் நெம்பர் வீட்டில் ஒரு டிப்போ நடை பெறுகிறது. இந்த வீட்டை வாடகையில்லாமல் உபயோகித்துக் கொள்ளும்படி அதன் சொந்தக்காரர் அனுமதித் திருக்கிறுர். அங்குள்ள சௌராஷ்டிர வியாபாரிகள் இதை நடத்துவதற்கு மூல தனமாக ரூ. 5,000 கொடுத்து உதவி யிருக்கிறுர்கள். அங்குள்ள கமிட்டி யங்கத்தினர்கள் கொடுக்கும் சந்தாத் தொகையிலிருந்து அந்த டிப்போ சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்கப் படுகிறது.

**மேலூர் தாலூகா.**—சென்ற ஜனவரி மாதம் ஒரு டிப்போவை தேசீயப் போர் முனையின் தமிழ்ப் பகுதி யமைப்பாளர் சர் பி. டி. ராஜன் அவர்கள் ஆரம்பித்ததாகவும், அதன் பொருட்டு ரூ. 3,000 வசூலானதாகவும் தெரிகிறது. மிகக் குறைந்த விலைக்கு தானியங்களைக் கொள் முதல் செய்து கூப்பன் முறைப்படி அவற்றை ஏழைகளுக்கு விற்கப் படுகிறது.

**திருமங்கலம் தாலூகா.**—சென்ற டிசம்பர் மாதம் 30-ம் தேதி, திருமங்கலம் டவுன் காளியம்மன் கோவில் தெரு 154-ம் நம்பர் வீட்டில் ஒரு டிப்போ ஆரம்பிக்கப்பட்டது. இதன் பொருட்டு திருவாளர் பி. பி. பி. சிதம்பர நாடார் ரூ. 2,000 கொடுத்து உதவினுர். இவர் ஏழைகளுக்கு மட்டுந் தான் சீட்டுக்கள் கொடுக்கிறுர். இந்தச் சீட்டைக் கொண்டு தான் டிப்போவில் தானியம் வாங்க முடியும். ஒருவருக்கும் 4 அணுவிற்கு அதிகமாகத் தானியம் விற்பதில்லை.

**உசிலம்பட்டித் தாலூகா.**—இங்குள்ள டிப்போ சென்ற டிசம்பர் மாதம் 24-ம் தேதி ஆரம்பிக்கப் பட்டது. இங்குள்ள அரிசி வியாபாரிகளைக் கொண்ட ஒரு கமிட்டி தான் இதை நடத்துகிறது. இதுவரை ரூ. 1,915 இதன் பொருட்டு வசூலாகி யிருக்கிறது.

**பழனி தாலூகா.**—பழனியிலும் ஒட்டன் சத்திரத்திலும் இரண்டு டிப்போக்கள் நடைபெறுகின்றன.

**பழனி** டிப்போவில் முன்பு குறைந்த விலைக்கு விற்றதன் பயனுக ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்யவேண்டி, நடப்பு விலையைவிட ரூபாய்க்கு $\frac{1}{2}$ படி அதிகமாக வாரந் தோறும் 101 மூட்டைகள் கொடுப்பதாக வியாபாரிகள் ஒப்புக் கொண்டிருக்கிறுர்கள். நாள் தோறும் 60 முதல் 65 மூட்டைகள் அரிசி விற்பனையாகிறது. இந்த டிப்போவிற்காக ரூ. 1,770. வசூலாகியிருக்கிறது.

**ஒட்டன் சத்திரத்தில்.**—டிசம்பர் மாதம் 25-ம் தேதி ஆரம்பித்து, அரிசி, சோளம், கேழ்வரகு ஆகியவற்றை குறைந்த விலைக்கு விற்கிறுர்கள். இதன் பொருட்டு ரூ. 2,581, வசூலாகி யிருக்கிறது.

கீரனூரிலும் இடையக்கோட்டையிலும் டிப்போக்கள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**நிலக்கோட்டை தாலூகா.**—வெற்றிலைக் கூண்டிலும் பட்டிவீரன்பட்டியிலும் டிப்போக்கள் இருக்கின்றன.

**வெற்றிலைக் கூண்டில்** கூட்டுறவு ஸ்டோரில் அரிசி, சோளம், கேழ்வரவு ஆகியவற்றை விலைக்கு வாங்கி விற்கிறுர்கள். மற்ற கடைகளில் ரூபாய்க்கு 3 படி விகிதம் விற்றுல், இங்கே $3\frac{1}{4}$ வீதம் விற்கிறுர்கள். இந்த ஸ்டோரின் பொருட்டு ரூ. 4,000 வசூலாகி யிருக்கிறது.

**பட்டிவீரன்பட்டி.**—இங்குள்ள டிப்போ தோன்றியதற்கு திருவாளர் டபுள்யு. பி. எ. சௌந்தர பாண்டிய நாடார் அவர்கள் தான் காரணம். இவர் இதன் பொருட்டு ரூ. 10,000 வசூல் செய்திருக்கிறுர். இதில் பெரும் பகுதி இவர் கொடுத்த தொகை தான். அந்த ஊரிலுள்ள ஏழைகள் எத்தனைப் பேர்கள் என்று கணக்கெடுத்து அவர்களுக்கு எவ்வளவு தானியங்கள் தேவையிருக்குமோ அவற்றை அறுவடைக் காலத்திலேயே கொள் முதல் செய்து, கடைகளில் விற்பதை விட, ரூபாயுக்கு $\frac{1}{4}$ படி அதிகப் படியாகவே விற்கப்படுகிறது.

**உத்தமபாளையம் தாலூகா.**—இங்கே 3 டிப்போக்கள் இருக்கின்றன.

**சின்னமனூர்.**—இங்கே டிசம்பர் மாதம் 6-ம் தேதி டிப்போ ஆரம்பிக்கப்பட்டது. இதன் பொருட்டு இவ்வூரிலுள்ள முக்கியஸ்தர்கள் ரூ. 1,362–8–0 வசூல் செய்திருக்கின்றனர்.

**கோம்பை.**—இங்கே 1943-ம் ௵ ஜனவரி ௴ 23௳ ஆரம்பிக்கப்பட்ட டிப்போவிற்கு ரூ. 2,930 வசூலாகி யிருக்கிறது.

**உத்தமபாளையம்.**—இங்கே 1943-ம் ௵ ஜனவரி ௴ 20௳ நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் சர் பி. டி. ராஜன் அவர்கள் ஏழை மக்களுக்கு உதவவேண்டிய பொறுப்பைக் குறித்துப் பேசி, ஒரு டிப்போவைத் திறந்து வைத்தார்கள். தன் தம்பியின் பெயரால் இதற்கு நன் கொடையாக ரூ. 750 கொடுத்தார்கள். இங்கே இதன் பொருட்டு ரூ. 2,575 வசூலானது.

**பெரியகுளம் தாலூகா.**—இங்கே 7 டிப்போக்கள் நடைபெறுகின்றன : **போடிநாயக்கனூரில்** ரூ. 10,000 வாக்களிக்கப்பட்டு, ரூ. 6,000 இதன் பொருட்டு வசூலாகி விட்டது. **தேனியில்** ரூ. 3,000 வாக்களிக்கப்பட்டு ரூ. 1,420 வசூலாகியிருக்கிறது. **தேவதானப்பட்டியில்** ரூ. 2,000 இதன் பொருட்டு வாக்களிக்கப்பட்டு ரூ. 800 வசூலாகியிருக்கிறது. **கங்குவார்பட்டியில்** ரூ. 1,000 வாக்களிக்கப்பட்டு ரூ. 500 வசூலாகி யிருக்கிறது. **பெரியகுளத்தில்** ரூ. 1,500 வாக்களிக்கப்பட்டு ரூ. 792 வசூலாகி யிருக்கிறது. **சில்வார்பட்டியில்** ரூ. 1,000 வாக்களிக்கப்பட்டு ரூ. 400 வசூலாகி யிருக்கிறது. வடுகப்பட்டியில் ரூ. 550 வாக்களிக்கப்பட்டு ரூ. 350 வசூலாகி யிருக்கிறது.

# யுத்த காலத்தில் அரிய பெரிய சேவை

## செஞ்சிலுவைச் சங்கத்தின் முக்கியமான தொண்டுகள்

### 1863-ம் ஆண்டு ஜினீவா ஒப்பந்தமும், அதன் பயனும்

### சமாதான காலத்தில் சங்கம் செய்யும் வேலைகள்



**போர் முனையில் காயப்பட்டவர்களுக்குச் செஞ்சிலுவைச் சங்கத்தார் முதலுதவி யளித்து ஆம்புலென்ஸ் மோட்டாரில் ஏற்றுங் காட்சி.**

[சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில், " யுத்த முயற்சி " என்ற புதிய பேச்சுத் தொடரில், முதலில் பேசியவர் பாரிஸ்டர் கே. சி. சுப்பிரமணிய செட்டியார். சென்ற வாரம் எப்ரல் 15-ல் " செஞ்சிலுவைச் சங்கம் " என்ற தலைப்பில் பேசிய அவருடைய பிரசங்கம் கீழே பிரசுரிக்கப்படுகிறது.]

செஞ்சிலுவைச் சங்கங்கள் உலக முழுதும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்திய செஞ்சிலுவைச் சங்கம் அந்தச் சங்கங்களின் ஓர் பாகம். சென்னைப்பட்டணத்திலும் செஞ்சிலுவைச் சங்கத்தை அமைத்து வேலை செய்து வருகிறார்கள். சென்னையில் கவர்னர் மாளிகையிலுள்ள பாங்குவெட்டிங் ஹாலில் (Banqueting Hall) கீழேயுள்ள ஹாலில் அந்தச் சங்கத்தின் காரியாலயம் இருக்கின்றதை யாவரும் கவனித்திருக்கலாம். இந்த யுத்த காலத்தில், இந்தச் செஞ்சிலுவைச் சங்கமானது பரோபகார நோக்கங் கொண்ட அரிய பெரிய வேலைகளைச் செய்து வருகிறது. இந்த வேலையானது மனுஷனுக்கு மனுஷன் தயவையும் அன்பையும் காட்ட வேண்டிய ஓர் தர்ம கைங்கரியம் என்றே சொல்ல வேண்டும்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் அடையாளம், வெள்ளைத் துணியிலோ, வெள்ளை வஸ்துவிலோ, சிவப்பு நிறமான சிலுவை போட்ட குறியாகும். கொடிகளிலும், பில்லைகளிலும் இந்தக் குறி போட்டு வருகிறார்கள். இந்த அடையாளம் கஷ்டத்தி லிருப்பவர்களையும், துன்பத்திலிருப்பவர்களையும், நோயாளிகளையும், காயப்பட்டவர்களையும் காப்பாற்றி உதவி செய்வது என்பதைக் காட்டுகிறது. இந்த அடையாளமிட்ட மோட்டார் வண்டிகளையும், லாரிகளையும், பஸ்களையும் ஒவ்வொருவரும் ஜில்லாக்களிலுள்ள பட்டணங்களிலும், சென்னப்பட்டணத்திலும் யாவரும் கவனித்துப் பார்த்திருப்பீர்கள். செஞ்சிலுவைச் சங்கமானது சமாதான காலத்திலும் கூட வேலை செய்து வந்திருக்கிறது. அதாவது, தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்படும் கஷ்டங்களையும், வியாதிகளையும், வெள்ளம், பஞ்சம் இவைகளினால் ஏற்படும் துன்பங்களையும் நிவர்த்திக்க உதவுவதும், பிணி சாக்காடு இவைகளைத் தடுக்க சுகாதாரப் பிரசாரம் செய்வதும் சமாதான காலத்திலுள்ள வேலைகள். இந்த உலக யுத்தத்தில் நேச தேசத்தார்கள் ஒரு பக்கமும், அச்சு நாடுகள் ஒரு பக்கமு மிருந்து கொண்டு போர் புரிந்து வருவது யாவரும் அறிந்த விஷயம். இந்தப் போரில், நம் படைகளி லுள்ளவர்கள் சிலர் காயப்பட்டும், சிறைப் பட்டும், வியாதியாயு மிருப்பதைக் கேள்விப் பட்டிருப்பீர்கள்.

#### உதவி செய்து காப்பாற்றும் சேவை

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் உன்னதமான நோக்கம் என்னவென்றால், நம் இந்தியப் படைகளில் அதாவது, தரைப் படை, கப்பற் படை, ஆகாயப் படைகளில் வியாதியாகிப் போனவர்களையும், காயம்பட்டவர்களையும், சிறைப்பட்டவர்களையும் காப்பாற்ற வேண்டிய ஜீவ காருண்ணிய முள்ள பெருஞ் சேவையே. இச் செஞ்சிலுவைச் சங்கம், இந்தியா, ஈராக், ஈரான், லிபியா, எகிப்து, துனிசியா கீழ் திசை நாடுகளில் இந்தியா சைன்னியங்களிலும் பிரிட்டிஷ் சைன்னியங்களிலும், வியாதி கண்டவர்கட்கும், காயம் பட்டவர்களுக்கும், வியாதியி லிருந்து தேறி வருகின்றவர்களுக்கும் உதவி செய்து காப்பாற்றும் சேவையில் ஈடுபட்டிருக்கின்றது.

செஞ்சிலுவைச் சங்கத்தை முதல் முதலாக ஏற்படுத்தியவர் யார் என்றால் ஹென்ரி டுனண்ட் (Henry Dunant) என்பவரே. அவர் 1859-ம் வருடத்தில் சோல்பரினோ (Solferino) என்ற போர்க்களத்தில் காயம்பட்டுக் கிடந்தவர்களின் கஷ்டங்களையும் துன்பங்களையும் உணர்ந்து சிந்தித்தார். அவர், உலகத்தில் துன்புறும் ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டு மென்ற கொள்கை வாயளவி லில்லாமல், உண்மையில் செய்கையில் செய்து காட்ட வேண்டு மென்ற எண்ணத்துடன் இவ்வித சங்கத்தை நிறுவினார். அவரை ஓர் தர்ம சீலர் என்றே கூற வேண்டும். இந்தப் பெரும் போரில் நேச தேசத்தார்கள் செஞ்சிலுவைச் சங்கங்களின் வேலைகளை அவரவர்கள் பகிர்ந்து கொண்டு செலவு செய்தும் வேலைகள் இரட்டிப்பாகப் போகாமல் நடத்தி வருகிறார்கள்.

இவ்விதமான கஷ்டத்தி லிருப்பவர்கட்கு உதவி செய்ய வேண்டு மென்ற எண்ணம் அநேகருக்கு இல்லாம லில்லை. ஆனால், சிலர் தங்களுக்கு ஒரு விதக் கஷ்டமும் துன்பமுமில்லா திருப்பதாலும் காயப்பட்டவர்கள் தங்களுக்கு அநேக மைல் தூரத்தி லிருப்பதாலும், அவர்களின் கஷ்ட நஷ்டங்களை உணர முடியாதிருந்து வருகிறார்கள். காயம் பட்டவர்கட்கும், சிறைப்பட்டவர்கட்கும் உதவி செய்ய வேண்டுமென்பதையும், செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கங்களையும் எடுத்துக் காட்டினால், யாவரும் இச்சங்கத்தின் உதவிக்கு முன் வருவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

#### செஞ்சிலுவை அடையாளம்

செஞ்சிலுவை அடையாளத்தைப் போர் புரியும் சைனியங்கள் எந்த வேலைக்கும் உபயோகப்படுத்தக் கூடா தென்று ஜினீவ வில் 186"-ம் வருஷத்தில் நடந்த ஒப்பந்தத்தின்படி ஏற்பாடாகி அமுலிலிருந்து வருகிறது. ஆனால், சண்டையில் காயப்பட்டவர்களையும், வியாதியஸ்தர்களையும் காப்பாற்றுவதற்காக இந்த அடையாளத்தை உபயோகிக்கலாம். உதாரணமாக, செஞ்சிலுவை ஆஸ்பத்திரிகள், ஆஸ்பத்திரி கப்பல்கள், செஞ்சிலுவை சேவைக்குச் சாமான் ஏற்றிப்போகும் கப்பல்கள், ரயில்கள், மோட்டார் வண்டிகள், லாரிகள் இந்த அடையாளத்தை, வீரர்களை காப்பாற்றும் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் காட்டுவதற்காக உபயோகிக்கலாம். அதினால் தான் எல்லா நாகரிகமுள்ள தேசங்களும் செஞ்சிலுவை அடையாள மிட்டவைகளைச் சுடவோ, அழிக்கவோ, எதிர்க்கவோ கூடா தென்று ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். அதனால் உலகத்திலுள்ள எல்லாச் செஞ்சிலுவைச் சங்கங்களும் நூற்றுக்கணக்கான காப்பாற்றும் வேலைகளைச் செய்து வருகின்றன.

நம் இந்தியத் துருப்புக்கள், பட்டாளங்கள், விமானப் படைகள், கடற் படைகள் வெளி நாடுகளிலும் சண்டை செய்து வருவது உங்களுக்குத் தெரிந்த செய்தியே. முக்கியமாக இந்தியா, ஈரான், ஈராக், எகிப்து, லிபியா, துனிசியா முதலிய யிடங்களுக்கு அனுப்ப வேண்டிய சாமான்களை வாங்கவும், சேகரிக்கவும் ஏராளமான பண உதவி வேண்டியிருக்கின்றது. இதற்காகச் சேரும் பணத்தை இந்தியன் ஆஸ்பத்திரிகளிலேயே அநேகமாய்ச் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஏனென்றால் பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கம் பிரிட்டிஷ் துருப்புகளிருக்கும் ஆஸ்பத்திரிகளுக்கு ஏராளமான பொருளுதவி வெகு தாராளமாகச் செய்திருக்கின்றது.

வியாதியஸ்தர்களையும், காயப்பட்டவர்களையும் கவனிப்பது மட்டும் தான் இச்சங்கத்தின் நோக்கங்கள் என்று எண்ணிவிடக் கூடாது. ஏனென்றால், நாமெல்லோரும் என்றும் மறவாது நினைக்கக் கூடியவர்கள் யார் என்று கேட்டால், நமக்காகச் சண்டை செய்து சண்டையில் எதிரிகளால் கைப்பற்றப்பட்ட கைதிகள். அவர்களில் அநேகர் ஜெர்மானியர் கையிலும், இத்தாலியர் கையிலும், ஜப்பானியர் கையிலும் சிறைப்பட் டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களல்லவா ? இவர்களுக்கும் இச் செஞ்சிலுவைச் சங்கத்தார், உதவியளிக்கும் வேலையில், தங்களால் இயன்றதைச் செய்தே வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய சாமான்களை பார்சல் செய்து, நம் வீரர்கட்கும் அந்தந்த முகாம்களுக்கு அனுப்ப வேலை நடந்து வருகிறது. ஆனால், கீழ்ப் பிரதேசங்களுக்குச் சாமான்கள் அனுப்புவது கஷ்டமான காரியமாக விருக்கிறது. ஏனெனில், ஜப்பானியர்கள் இது விஷயத்தில் ஒத்து உழைக்க வில்லையெனத் தெரிகிறது.

#### கைதிகளுக்குத் தபால் சேவை

மேலும், இன்னுமொரு வேலை செஞ்சிலுவைச் சங்கம் செய்து வருகிறது. என்ன வென்றால், எதிரியின் தேசங்களிலும் எதிரி கைப்பற்றியுள்ள விடங்களிலுமுள்ள, ராணுவத்தில் சேராத சாதாரண நம் பொது ஜனங்களுக்குத் தபால் போக்கு வரத்து செய்வதையும் சேவையாகக் கொண்டிருக்கிறது. இவ்விதம் போக்கு வரத்தினால் கீழ்ப் பிரதேசங்களில் காணமற் போனவர்களைக் கண்டு பிடிக்கவும் ஆகாய விமானத் தாக்குதல்களால் காயப்பட்டவர்களுக்கு உதவி செய்யவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாவிலும் சென்னைப் பட்டணத்திலும் நமக்கு முக்கியமான வேலைகள் யாதெனின், ஆஸ்பத்திரிகளுக்குத் தளவாடங்கள் அனுப்புவதும், சிறையிலிருப்பவர்கட்கு வேண்டிய சாமான்கள் அனுப்புவதுமேயாகும். இச் சங்கத்தின் வேலைகளை எல்லாருக்கும் தெரியும்படிச் செய்ய வேண்டியதற்காகச் செஞ்சிலுவை வாரம் என்று எப்ரல் மாதம் ஏற்படுத்தப்பட்டு, பத்திரிகை மூலம் விளம்பரங்களும் ரேடியோ மூலம் பிரசாரங்களும் நடந்தேறி வருகின்றன. ஆதலால் இந்தக் காரியத்தில் இந்தியாவிலுள்ள எல்லா மக்களின் ஒத்துழைப்பும் அவசியம் தேவை என்பது நான் சொல்லாமலே நன்குப் புலப்படும். யார் யாருக்கு எந்தெந்த விஷயத்திற்கு உதவி செய்ய விருப்பமோ அதற்காகப் பணத்தையோ, அவரவர்கள் இனமாக கொடுப்பதையோ, பிரத்தியேகமாக வைக்கும்படி விரும்பினால், அவரவர்கள் விருப்பப்படிக்கே, ஆஸ்பத்திரிக்கோ, சிறைப்பட்டவர்களுக்கோ ஒதுக்கி வைக்கப்படும்.

#### தர்மம் தலை காக்கும்

ஆதலால், " தர்மம் தலை காக்கும் " என்ற பழமொழியை ஞாபகத்தில் வைத்து அவரவர்கள் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவியோ, சாமான் கொடுத்து உதவியோ செய்து சிறைப்பட்டவர்களையும் நாம் மறக்கவில்லை என்பதைக் காட்டுவோமேயானால் செஞ்சிலுவைச் சங்கம் செய்யும் அரிய சேவைக்கு ஊக்க மளிக்கும் பெருமை நமக்குண்டு. இந்தச் சேவையில் ஈடுபடுகிறவர்களும், இச் சேவைக்கு உதவி செய்பவர்களும் யுத்த முயற்சிக்கு உதவி செய்கிறவர்களாகவே போற்றப்படுவார்கள். இம் முயற்சியில் ஈடுபட வேண்டியது நமது கடமை.

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

நாங்கிங் அரசாங்கத்திற்கு ஜப்பானியர்கள் வழங்கியுள்ள வசதிகளால் கொஞ்சமும் ஏழைகளுக்கு இலாபமில்லை. விலைவாசிகள் வெகுவாக உயர்ந்து விட்டன. உணவுப் பஞ்சம் அதிகம். பட்டினியாகவுங் கூட அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே தான், சூங்கிங் ஆட்சிமுறைக்கு இந்த வியாபாரிகள் ஆதரவா யிருக்கிறார்கள். இந்த உண்மை ஜப்பானியர்களுக்கும் தெரியும்.

இந்த வசதிகளைக் குறித்து நாங்கிங்—டோக்கியோ ஒப்பந்தம் செல்லத் தக்க தல்ல வென்று சூங்கிங் அரசாங்கம் ஒரு பிரகடனம் விடுப்பது நலம் என்று மிஸ்டர் உட்ஹெட் கருதுகிறார். எந்தச் சமயத்தில் இந்தப் பிரகடனம் வெளிவர வேண்டுமென்று அந்த ஸ்தலத்தில் உள்ளவர்கள் முடிவு செய்துகொள்ளட்டும். அவர்கள் என்ன செய்தபோதிலும், ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது; ஜப்பான் வாக்குறுதிகள் அர்த்தமற்றவை. இந்தச் சாலக்கு வேலைகளெல்லாம் எப்படிப்பட்டவை யென்று ஜெனரலாஸிமோ ஷியாங்-கெய்-ஷேக்கும் அவருடைய தோழர்களும் நன்றாகத் தெரிந்து கொண்டுதா னிருக்கிறார்கள். டோக்கியோ ரேடியோ இவர்கள்மீது சீறி விழுவதிலிருந்து இது தெளிவாக விளங்குகிறது.

**ரஷ்யாவில் அமைதி : மழை காலத் தாக்குதல்.**

ரஷ்யப் போர் முனையில் இப்போது சற்று அமைதியா யிருக்கிறது. கோடை காலத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுவதிலேயே இரு கட்சிகளும் முனைந்திருக்கின்றன. போர் முனை முழுதும், ஒரு வருஷத்திற்கு முன்பிருந்ததை விட மிகுந்த பாது காப்பான இடங்களிலேயே ரஷ்யர்கள் இருப்பதாகத் தெரிகிறது. மழை கால பதில் எதிர்ப்பு முடிந்து விட்டதாக ரஷ்யப் படைத் தலைவர்கள் அறிவித்து விட்டார்கள். அன்றியும் இதன் பயனாக, எவ்வளவு நாடுகள் பிடிக்கப்பட்டன எதிரிகளுக்கு எவ்வளவு ஆள் பலமும் ஆயுத பலமும் சேத மடைந்தன வென்றும் வெளியிட்டனர்.

இந்த விவரங்களைக் கொண்டு கிழக்குப் போர் முனையின் நிலைமை எப்படி மாறியிருக்கிற தென்றும், அதன் பயனாக நேச நாடுகள் வெற்றியை நோக்கி எவ்வளவு தூரம் போயிருக்கிற தென்றும் ஆராய்வோம். சென்ற வருஷம் ஜெர்மானியர் கோடை காலத் தாக்குதல் ஆரம்பித்த போதிருந்த நிலைமையோடு இப்போதுள்ள நிலைமையை ஒப்பிட்டால், ஜெர்மானியர்கள் ஜெயித்தவற்றை யெல்லாம் ரஷ்யர்கள் மீட்டுக் கொண்டு, மிகவும் மோசமான நிலைமைக்கு ஜெர்மானியர்களை உள்ளாக்கி விட்டார்கள்.

சென்ற 9 மாதங்களாகப் போராடியதன் பயனாக ரஷ்யப் படைகளை விட ஜெர்மன் படைகள் மிகவும் பலவீன மடைந்து விட்டன. ஜெர்மனியின் கூட்டாளிகளின் படைகள் அழிக்கப்பட்டன. உலகத்திலேயே போர்த் திறமையில் மகா சிறந்த படையென்று கருதப்பட்டு வந்த ஜெர்மன் 'வேர்மாட்' படைகளுக்கு, ஏராளமான சேதம். ஆகவே, 1942-ம் வருஷக் கோடை காலம் முதல் இந்த 9 மாத காலத்தில் ஜெர்மன் வரவு செலவுக் கணக்கைப் பார்த்தால், அவர்கள் முயற்சிகளெல்லாம் வீணானது மட்டு மன்றி பெருந் தொகைகளையும் கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கின்றார்கள். ஜெர்மானியர்கள் திட்டப்படி இது ஒரு நெருக்கடியான பருவம். செஞ்சேனைகளை இனித் தலைதூக்க முடியாதபடி நிரந்தரமாக நிர்மூலமாக்கிவிட வேண்டும். ரஷ்யாவிலுள்ள ஜெர்மன் படைகளைத் தெற்கேயும் மேற்கேயும் அனுப்பி, இங்கிலாந்தும் அமெரிக்காவும் தம்மைத் தாக்க ஒட்டாதபடி தடுக்கும்படிச் செய்ய வேண்டும். இந்த திட்டத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு கவனித்தால், அதன் பலன் எவ்வளவு முக்கியமான தென்று விளங்கும். இந்த யுத்த காலத்தில் 9 மாதங்களை ஜெர்மானியர்கள் இழந்தது, இந்த யுத்தத்தின்' போக்கிலேயே ஒரு முக்கியமான மாறுதலை உண்டாக்கி விட்டது.

ஆனால் ரஷ்யர்களோ மழை காலத்தில் பதில் தாக்குதலின் மூலம் வட காக்கஸஸ் பகுதியிலும், டான் பேசின் பகுதியிலும் உள்ள தானியம் விளையும் நாடுகளைக் கைப்பற்றி, நல்ல பருவத்தில் விதைத்தும் விட்டார்கள். காக்கஸஸ் மண்ணெண்ணெய்ப் பிரதேசத்திலிருந்து ஜெர்மானியர்களை விரட்டி விட்டார்கள். டானெட்ஸ் பகுதியிலுள்ள நிலக்கரி, இரும்பு, பெரிய தொழிற்சாலைகள் முதலியவை உள்ள பகுதிகளையும், மேல் உக்ரேய்ன் பகுதியிலுள்ள நெல் வயல்களையும் மீண்டும் ஜெயித்திருக்க வேண்டிய ரஷ்யர்கள், அற்பத்தில் தவறி விட்டார்கள்.

**ரஷ்யர்களுக்கு வசதியான நிலைமை.**

மீண்டும் கோடை காலத் தாக்குதல் ஆரம்பமாகு முன்பு, யுத்த நிலைமை எப்படியிருக்கிறதென்று கவனிப்போம். லெனின்கிராடை ஜெர்மானியர்கள் முற்றுகை யிட்டிருந்தார்கள். அது இப்போது முறிந்து விட்டது. இது ஒரு பெரிய காரியந் தான். ஏனென்றால், மாஸ்கோவிற்கு வலது பக்கத்திலுள்ள பகுதியை இது வலுவாக்குகிறது. ஆனால் லெனின்கிராடுக்கு தென்புறமுள்ள முக்கியமான ஜெர்மன் படைகள் இன்னும் அகலவில்லை. இல்மென் ஏரிக்குத் தெற்கே, டெமியான்ஸ்க்குக்கு அருகில் ஜெர்மானியர்கள் செஞ்சேனைகளைத் துளைத்துக் கொண்டு போக முயன்றார்கள். ஆனால் பலிக்கவில்லை. ஒரு வருஷத்திற்கு முன்பு ஜெர்மன் படைகளைக் கிட்டிக்குள் போட்டு மடக்கியதைப் போலச் செய்த ஸ்தரயா ரூசாவை இன்னும் ருஷ்யர்கள் கைப்பற்ற வில்லை.

மாஸ்கோவிற்கு மேற்கே ரிழேவுக்கும் வியாஸ்மாவிற்கும் வெளியே எதிரிகள் துரத்தப்பட்டார்கள். இதன் பயனாக சோவியத் ரஷ்யாவின் தலைநகரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று அவர்கள் போட்டிருந்த திட்டம் குலைந்தது. வெலுக்கி லூக்கியை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இங்கிருந்து 15 மைல்கள் தூரத்திலுள்ள பெரிய ரெயில்வே லெனின்கிராடுக்கும் கீவுக்கும் ஓடிக்கொண்டிருக்கிறது. இதைக் கைப்பற்றுவதற்கு வெலுக்கி லூக்கி ஒரு பாய்ச்சல் தளமாக உதவும்.

இப்போது ஸ்மாலென்ஸ்க், பிரியான்ஸ்க், ஓரல் ஆகிய ஊர்கள் ஜெர்மானியர்கள் வசமிருக்கின்றன. மாஸ்கோவிற்கு தென் மேற்கே இவை சிறந்த ஜெர்மன் கோட்டைகளாகக் காட்சி யளிக்கின்றன. முக்கியமான போக்கு வரவுப் பாதையான கர்ஸ்க்கை ரஷ்யர்கள் கைப்பற்றி வைத்துக் கொண்டார்கள். ஆகவே ஜெர்மன் படைகள் மத்தியப் பகுதியிலிருந்து கார்க்கோவுக்கும் தென் பகுதிக்கும் நேர்முகமான போக்கு வரவுகள் வைத்துக் கொள்ள ஒட்டாதபடி தடுத்து விடுகிறார்கள். கார்கோவ் மட்டும் ரஷ்யர்கள் கையில் இருந்திருந்தால், வால்கா பக்கம் எதிரிகளை விரட்ட, ஏற்ற பாய்ச்சல் தளமாக உபயோகப்பட்டிருக்கும். ஜெர்மானியர்கள் அதை ஒரு தாக்குதல் தளமாக உபயோகிக்கிறார்கள். இங்கிருந்து நாலா பக்கங்களிலும் அவர்கள் தாக்கலாம். ரஷ்யர் மகா பிடிவாதத்தோடு டானெட்ஸ் ஆற்றின் முற் பகுதியையும் மத்தியப் பகுதியையும், அதன் மேல் கரையிலுள்ள முக்கியமான பகுதிகளையும் காத்துக் கொண்டு தம் பாதுகாப்புக்களைப் பலப்படுத்திக் கொண்டார்கள். யுத்த ஆரம்ப காலத்தில் ஜெர்மானியர் முன்னேறி வந்தபோது ரஷ்யர்கள் இருந்ததை விட, ரயில்வே போக்கு வரவு வசதிகள் சம்பந்தப்பட்ட வரை, இப்போது மிகவும் மேலான நிலைமையி லிருக்கின்றார்கள்.

இன்றைய நிலைமை எப்படி இருக்கிற தென்றால் ஜெர்மானியர்கள் தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்து கொள்ளத் தக்கபடி மழை காலத்தில் உற்பத்தியை அதிகப்படுத்த முடியாது. அப்படிச் செய்வார்களே யானால் கோடைக் காலத்து தாக்குதலுக்கு இட மில்லாமல் போய்விடும். தாங்கள் எவ்வளவு பலத்தோடு செஞ்சேனைகளைத் தாக்கக் கூடுமோ, அவ்வளவு பலத்தோடும் தாக்க வேண்டியது மிகவும் அவசிய மென்று உணர்ந்திருக்கிறார்கள். ஏனென்றால், துனீஷிய போராட்டத்தினால் ரோமல் என்ன தான் கால தாமதம் ஏற்படுத்தினாலும், அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஜெர்மன் நீர் மூழ்கி கப்பல்கள் எவ்வளவு சேஷ்டைகள் செய்தாலும், நேச நாட்டுப் படைகள் தம்மை மேல் திசையிலிருந்து தாக்கும் என்ற அச்சம், அவர்களுக்கு மிகுதியாக யிருக்கிறது.

**அமெரிக்க உற்பத்தியும் ஜப்பானியர் கவலையும்.**

அமெரிக்காவின் ஏராளமான உற்பத்தியைக் கண்டு ஜப்பான் நடுங்குகிறது. அரசாங்கத் தகவல் இலாக்காத் தலைவர் கர்னல் நேகோ யஹாகி என்பவர் 'கிங்' என்னும் ஜப்பானிய பத்திரிகையில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார். "வயது வந்த அமெரிக்கர்கள் அனைவரும் படையில் சேர வேண்டுமென்னும் உத்தரவு பிறந்து விட்டது. யுத்தத் தளவாட பலமும் ஏராளமாகப் பெருகிவிட்டது. இவற்றைக் கொண்டு அமெரிக்க அரசாங்கம் இந்த யுத்தத்தில் எவ்வளவு உறுதியாக யிருக்கிற தென்று விளங்குகிறது. ஒரு வருஷத்தில் 60 ஆயிரம் விமானங்கள் கட்ட வேண்டு மென்று ரூஸ்வெல்ட் திட்டமிட்டு இருக்கிறார். 1942-ம்௵ ஜனவரிமீ த்திலிருந்து மோட்டார்கார்கள் கட்டப்படக் கூடாதென்று உத்தரவு பிறந்து விட்டது. போர்டு தொழிற் சாலையும், மற்ற மோட்டார் செய்யும் தொழிற் சாலைகளும் விமானங்கள் கட்டவும், இஞ்சின்கள் செய்யவும் பயன்படுகின்றன.

இந்தத் தொழிற் சாலைகளும் வெகுவாகப் பலத்து விட்டன. அமெரிக்கர்கள் தங்கள் அதிக உற்பத்திகளைக் குறித்துப் பிரமாதமாக விளம்பரம் படுத்துவதிலிருந்து அவர்கள் எவ்வளவு கஷ்டமான நிலைமையிலிருக்கிறார்க ளென்பது விளங்குகிறது. இதைக் கேட்டு ஜப்பானியர்கள் அஞ்சத் தேவை யில்லை." இது எதிரியின் சூழ்ச்சி. இதற்கு நாம் ஆளாகக் கூடாது.

அமெரிக்கத் தளவாடங்கள் பல நாடுகளுக்கும் போய்ச் சேருகின்றன. ஆகவே, அங்கே பலவீனமான பாகங்கள் ஏற்படத் தான் செய்யும். நாம் அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமக்குப் போதுமான தளவாடங்கள் இல்லாது போனாலும், அதற்கு ஈடு பண்ணிக் கொள்ளத் தக்க மன பலம் நமக்கு வேண்டும். அப்போது தான் வெற்றி கிடைக்கும். ஆகவே, ஜப்பானின் மன பலத்தைப் பெருக்குங்கள்."

**டோக்கியோ மீது விமானத் தாக்குதல்.**

சமீபத்தில் சில விஷயங்களை ஜப்பான் தகவல் இலாகா உபத் தலைவர் வெளியிட்டார். அமெரிக்காவைச் சேர்ந்த டெக்ஸா மாகாணத்தில் உள்ள பரந்த வெளிகளில் டோக்கியோ நகரம் போன்ற பெரியதொரு நகரத்தைக் கட்டி, அதை விமானங் கொண்டு தாக்கினார்கள் என்று அவருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்தக் காரணத்தைக் கொண்டு, நாம் அஞ்சத் தேவையில்லை. ஏ.ஆர்.பி. சம்பந்தமான எல்லா வித முன்னேற்பாடுகளும் நாம் செய்திருக்கின்றோம். இதனால் பல தொழிற் சாலைகளில் இரவு வேலைகள் தடைப்பட்டுத் தளவாட உற்பத்தியும் சிறிதளவு பாதிக்கப் படுகிறது.



# யுத்தப் போக்கைப் பற்றி அச்சு - - நிலையங்களின் பொய்ப் பிரசாரம்

## தாய்லாந்துக்கு ஜப்பானின் விசித்திரக் கட்டளை

ஐரோப்பாவிலே இந்த யுத்தம் தொடங்கிய காலத்திலே ஜெர்மனி அடிவைத்த இடமெல்லாம் வெற்றியா யிருந்தது. அப்போது போலந்து நாட்டைப் படையெடுத்துப் பல இடங்களையும் வெகுத் துரிதமாக ஜெர்மானியப் படைகள் ஆக்கிரமித்து வருகையில் 'எல்லாம் நாங்கள் வகுத்த திட்டப்படியே நடந்து வருகின்றன' என்றார் ஹிட்லர். உலகம் அதிசயித்து; அச்சமுற்றது. பிறகு பெல்ஜியம், ஹாலந்து, பிரான்சு ஆகிய நாடுகளை ஒவ்வொன்றாக வென்று கவர்ந்தபோது, 'ஹிட்லர் வகுத்த திட்டம் இம்மியும் மாறாது' என்று ஆர்ப்பரித்தனர் ஜெர்மானியர். இதற்குப் பிறகு இங்கிலாந்தைப் படை யெடுத்து, லண்டனைக் கைப்பற்றி வெற்றிக் கொடியை நாட்டுவதாக அவர் வகுத்திருந்த திட்டம் மலையேறிப் போயிற்று. இதற்குப் பிறகு, ருஷியாவைப் படையெடுத்தார். அங்கும் அவருடைய திட்டம் தகர்ந்து தூள் தூளாகப் போய்விட்டது. இப்பொழுது ஆப்பிரிக்காவில் ஜெர்மானியர் எகிப்து நாட்டு எல்லையிலிருந்து கிட்டத்தட்ட இரண்டாயிரம் மைல் பின்னேறியாய்விட்டது. இன்னும் பிரிட்டிஷ் துருப்புக்களும், அமெரிக்கத் துருப்புக்களும் இடைவிடாது தாக்க, அவர்கள் பின்னேறிக்கொண்டே வருகிறார்கள். இந்த நிலையில் ஹிட்லர் விடுத்த அறிக்கையைக் கேளுங்கள். 'துனீஷியாவிலே கைர்வான், ஸூஸே என்னும் இடங்களுக்கு வடபுறமாக எங்கள் சைனியமானது நாங்கள் வகுத்த திட்டப்படி பின்னேறிக்கொண்டு வருகிறது.' நல்ல திட்டம் இது! சென்ற நவம்பர் மாதத்தில் ரொம்மல் பின்னோக்கி ஓடத் தொடங்கியபொழுது, ஹிட்லர் சொன்னது நினைவிருக்கிறதா? 'ரொம்மல் பின்வாங்கியதால் மண்காமெரியை முன்னேற வொட்டாமல் காலை முறித்து விட்டோம்.' ஓடுகிறவனைத் துரத்துவதால் பின் தொடர்பவனுடைய கால் முறிந்து விட்டதாம்! ஆகா எவ்வளவு சாமர்த்தியமான ஓட்டம்! அவர் அப்பொழுது இன்னும் ஒன்று சொன்னார் 'எதிரியோடு சண்டை போடுவதை விட்டு மிகவும் துணிகரமாக ரோம்மல் விலகிக்கொண்டார்' என்று. என்ன துணிவு! பின்னோக்கி ஓடுவது சாமர்த்தியம்! சண்டை போடாமல் பயந்து விலகுவது துணிவு! தோற்றுக் கொண்டே யிருப்பது திட்டம். பலே ஹிட்லர்! துனீஷியாவை விட்டு உம்முடைய சைனியம் வெளியேறும்போது, அதையும் உம்முடைய வெற்றி என்று கூடச் சொல்லிவிடுவீர் போலிருக்கிறதே.

### கை சலித்தவன் பேசும் நீதி.

நிலச் சண்டை கிடக்கட்டும். ஆகாய விமானப் போரைப் பார்ப்போம். ஜெர்மனி ஆட்டி வைக்கும் பொம்மைகளில் ஒருவர் கௌண்ட் ப்ரினோன் (Count Brinon) என்னும் பிரான்சு நாட்டினர். இவர் இப்போது பெர்லினிலே மதிப்பற்ற தூதரா யிருந்து வருகிறார். ஜெர்மனி தூண்ட, இவர் பரிதாபக் கண்ணீர் வடிக்கிறார். இந்த அநியாயம் உண்டா? பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை போட்ட குண்டுகளால், சென்ற ஒன்றரை வருஷத்தில் நாலாயிரம் ஜனங்களுக்கு மேல்—ஈடுபடாதவர்கள்—எங்கள் நாட்டில் மாண்டு விட்டார்களே—என்று இவர் கதறுவதாக ஜெர்மன் ரேடியோ கூறுகிறது. அதாவது பிரிட்டிஷ் விமானப் படைகள் மிகவும் உக்கிரமாகப் பிரான்சிலுள்ள விமான நிலையங்கள், ஆயுத சாலைகள், தொழிற் சாலைகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் ஒளிந்திருக்கும் இடங்கள் இவற்றைத் தாக்கி வருகையில் ஒவ்வொரு நாளும் சுமார் எட்டு பேர் மாண்டு வருகிறார்கள். இதற்குக் கண்ணீர் வடிக்கும் ஜெர்மனி இரண்டு வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தைத் தாக்கி, குண்டு மழை பொழிந்த பொழுது, ஒரு வருஷத்தில் இங்கிலாந்தில் மாண்டவர்களின் தொகையை வைத்துக் கொண்டு சராசரிக் கணக்குப் பார்த்தால், தினந்தோறும் ஜெர்மனியில் கொல்லப் பட்டவர்களின் தொகை நூற்றைம்பத்தாறு. அப்போது ஜெர்மனி சொன்னது என்ன தெரியுமா? "நாங்கள் சண்டை போடாதவர்களை வேண்டுமென்றா கொல்லுகிறோம்? இவ்வளவு மகத்தான விமான தாக்குதல் நிகழும் போது, சாமானிய ஜனங்களும் அடிபட்டுச் சாவது இயல்பு தானே?' எட்டு பேரைக் கொன்றால் பாவம், அநீதி, அதர்மம், நூற்றைம்பது பேரைக் கொன்றால் யுத்த தர்மமும் இயல்பும். இதன் உண்மை வேறொன்றுமில்லை. தான் செய்தால் நீதி, பிறர் செய்தால் அநியாயம். கை சலித்தவன் நீதி பேசுவது தான் இயற்கை.

### ரோமாபுரி ரேடியோ கூறும் தப்பர்த்தம்.

இனி, கடலில் நடப்பதைப் பார்ப்போம். 'நாங்கள் டார்ப்பிடோ வீதி ஒன்று கடலில் இட்டிருக்கிறோம். இதைக் கடந்து செல்ல முயலும் எதிரிக் கப்பல்களை மூழ்கடித்து வருகிறோம். அவர்களுடைய கப்பல் நிலை மிகவும் மோசமாகி விட்டது' என்று ஒரு நாள் சொல்லுகிறது ஜெர்மன் ரேடியோ. வேறொரு நாள் 'ஐக்கிய நாடுகள் மிகவும் துரிதமாகக் கப்பல் கட்டி வருகிறார்கள். பிரிட்டிஷாரின் வியாபாரம் முழுவதையும் அமெரிக்கா கைப்பற்றிவிடும்' என்கிறார்கள். மார்ச்சு மாதம் முப்பதாம் தேதியன்று கப்பல் இலாகா மந்திரி மிஸ்டர் ஏ. வி. அலெக்ஷாந்தர் 'சென்ற எட்டு மாதங்களாக நாங்கள் கட்டியுள்ள கப்பல்களின் எடை, அதே காலத்தில் மூழ்கிய கப்பல்களின் எடையைக் காட்டிலும் இருபது லக்ஷம் டன் அதிகமாக இருக்கிறது' என்று சொன்னார். இந்தச் செய்தியைக் கேட்ட ரோம் ரேடியோ என்ன சொல்லிற்றுத் தெரியுமா? 'சில மாத காலமாக நாங்கள் கட்டும் கப்பல்களை விடக் கடலில் மூழ்கிச் சேதமாகும் கப்பல்கள் அதிகம் என்று அலக்ஸாண்டர் ஒப்புக் கொண்டார்" என்று.

### ஜெர்மனியும் ஜப்பானும் பயப்படுகின்றன.

ஜெர்மனியும் இத்தாலியும் சொல்லுவதெல்லாம் இப்படி ஏன் வெறும் புரட்டாயிருக்கிறது? நிலத்தில் எங்கும் தோல்வி. துனீஷியாவில் தோல்வி. ருஷியாவில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. ருஷியச் சேனை ஒழியவில்லை. ருஷியரின் வீரம் குன்றவில்லை. ஸ்டாலின்கிராடு கைப்பற்றப் படவில்லை. மாஸ்கோ லெனின்கிராடு இவைகளின் அண்டையிலேயே எட்டிப் பார்க்கவும் முடியவில்லை. துனீஷியாவில் போலவே கூபான் தீபகற்பத்திலும் கடற்கரை ஓரம் வரையில் ஓடிவந்தாய் விட்டது. ஆகாயத்திலிருந்து எதிரி விமானங்கள் ஜெர்மன் விமானங்களோடு போராடி அவற்றை வீழ்த்தி, முக்கியமான ஆயுதச் சாலைகள், தொழிற்சாலைகள் முதலியவற்றை முறையாகத் தாக்கித் தகர்த்து வருகின்றன. கடல் மார்க்கமாக லக்ஷக் கணக்கான போர் வீரர்கள், யுத்தத் தளவாடங்கள், உணவுப் பொருள்கள் முதலிய பல்வேறு யுத்த அரங்கங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இங்கிலாந்திலே பெருஞ் சேனையும் அதற்கு வேண்டியவைகளும் திரண்டு வரக் காணுகிறார்கள். ருஷியர்களுக்கு ஏராளமான உதவிப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன. வெற்றி, வெற்றி என்று ஜெயபேரிகை கொட்டிய காலமெல்லாம் போய், எங்கும் பின்வாங்கி வரும் பயங்கர நிலைமை அச்சு நாடுகளுக்கு ஏற்பட்டுவிட்டது. நாட்டிலுள்ள ஜெர்மானியரும், இராணுவ பலத்தினால் அடிமை யாக்கப்பட்ட நாட்டினரும் சந்தேகப்படத் தொடங்கி விட்டார்கள். இதனால் பொய்யும் புரட்டும் சொல்லி அவர்களை ஏமாற்ற முயலுகிறார்கள். தங்கள் மனத்தைத் தாமே தேற்றிக் கொள்ள முயலுகிறார்கள். 'அவர்கள் எவ்வளவு ஆயுதங்களை வேண்டு மானாலும் செய்யட்டுமே, நாங்களா பயப்படு

வோம் ? ஆட்களைக் கொண்டல்லவோ சண்டை செய்ய வேண்டும் என்கிறது ஜப்பான். 'அவர்கள் எவ்வளவு ஆட்களை வேண்டுமானாலும் திரட்டிக் கொள்ளட்டுமே. நாங்கள் கோட்டைகளைக் கட்டிவிட்டோம். எங்களுக்குக் கொஞ்சம் கூட பயம் இல்லை.' என்கிறது ஜெர்மனி. 'நீங்கள் பயப்படுகிறீர்களா ?' என்று இவர்களை யார் கேட்டார்கள் ? 'பயம் இல்லை' என்று சொல்லுவதிலிருந்தே இவர்கள் பயப்படுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா ?

## விளைபொருள்களுக்காகவே போராட்டம்

யுத்த விஷயம் கிடக்கட்டும். மற்றொரு விஷயத்தைப் பார்போம். ஜெர்மனி ஏன் போர் புரிகிறது ? ஒரு சமயம், எங்களுக்கு இடம் போதாது, இடம் வேண்டும் என்றது. மறு சமயம் ருஷியர்களும் அவர்களுடைய பொது உடைமைக் கொள்கையும் உலகத்தை நாசமாக்கி விடும் ; அவற்றிலிருந்து உலகத்தைக் காப்பாற்றுவதற்கே நாங்கள் போர் புரிகிறோம், என்றது. மற்றும் ஒரு சமயம், ஹிட்லரும் முஸ்ஸோலினியும் சந்தித்த பிறகு, நாங்கள் போராடுவது 'சுதந்திரம், தர்மம்' இவற்றின் பொருட்டே என்றது. சென்ற அக்டோபர் மாதம் பதினெட்டாம் தேதியன்று கொப்பல்ஸ் தங்களுடைய நோக்கத்தை சந்தேகத்திற்கிட மில்லாமல் சொல்லி விட்டார் : 'முன்னெல்லாம் ஏமாற்றத்தை அளிக்கும் லக்ஷியங்களுக்காகக் கடும்போர் புரிந்தோம். இனி அவ்வாறு செய்யப் போவதில்லை. நாம் இப்போது யுத்தம் செய்வது, நிலக்கரிக்காகவும் அதற்கும் மேலான கோதுமைக்காகவும்' என்றார். அதாவது அவை விளையும் நாடுகளைக் கைப்பற்றுவதற்காகவே ஜெர்மனி போர் புரிகிறது என்று தெரிகிறதல்லவா ?

## ஜப்பானியர் வாக்குறுதி என்னவானது ?

கீழ் நாடுகளில் அவர்களுடைய துணைவர்கள் இருக்கிறார்களே—ஜப்பானியர்கள்—அவர்களும் சமதர்மம், கூட்டு முன்னேற்றம் முதலியவற்றுக்காகத் தான் போராடுவதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் மறு சமயம் 'ஜப்பானியர் இனி மேல் கவலைப்பட வேண்டியதில்லை. நமக்கு வேண்டிய ஈயம், ரப்பர், எண்ணெய் முதலியவை முழுவதையும் நம் நாட்டுக்கே உரியவையாக்கி விட்டோம். நம்முடைய பஞ்சம் ஒழிந்தது' என்கிறார்கள். இவர்கள் காப்பாற்றுவதாகச் சொன்னார்களே, அந்த நாடுகளின் கதி என்ன ? ஒரே ஒரு உதாரணம் போதும்.

தாய் நாடு எனப்படும் ஸயாம் நாடு நாகரிகம் முதிர்ந்த நாடு. அந்நாட்டோடு ஜப்பானியர் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். சொல்லளவில் ஜப்பானும் தாய் நாடும் சமம். போர் முனையில் இரத்தம் சிந்தி, அவர்கள் தாய் நாட்டை அடிமையாக்கவில்லை. ஆனால் வாளை ஓங்கட்டுமா ? நீ என்னோடு சமாதானத்துக்கு வருகிறாயா ? என்றது ஜப்பான். தாய் நாடு உடன்படிக்கை செய்து கொண்டது.

'எங்களோடு சேர்ந்து விட்டீர்கள் உங்களுக்கு கூட்டு முன்னேற்றம் உண்டாகும்' என்று உறுதி கூறிற்று ஜப்பான்.

ஆனால் இந்த மாதம் பன்னிரண்டாம் தேதியன்று ஜப்பான் போட்ட உத்தரவைப் பாருங்கள். "இன்று முதல் யாரும் எக்காரணத்தாலும் துளி மருந்து கூட வாங்கவும் கூடாது விற்கவும் கூடாது. தங்களிடமுள்ள மருந்துகளை வேறொன்றும் செய்து விடவும் கூடாது. தங்களிடம் மருந்து உள்ளவர்கள் எல்லாரும் அம்மருந்து எவ்வளவு குறைவான அளவில் இருந்தாலும் சரி, அதைக் குறித்து உடனே சுகாதார இலாக்கா மந்திரிக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்து விட வேண்டும். தங்களிடம் உள்ளது இன்ன மருந்து, இவ்வளவு மருந்து, அதை வைத்திருக்கும் இடம் இது, என்று எல்லாவற்றையும் மிக விவரமாக குறிப்பிட வேண்டும். நாட்டுப்புறங்களில் உள்ளவர்களும் தங்கள் அக்கம் பக்கங்களிலுள்ள அரசாங்க அதிகாரிகளிடம் போய் நேரில் எல்லா விஷயங்களையும் தெரிவிக்க வேண்டும். அந்த அதிகாரிகள் சுகாதார இலாக்காவுக்குத் தெரிவிப்பார்கள். நாடு முழுவதும் உள்ள எல்லா இடங்களிலும் உள்ளவர்களிடமிருந்து மேல் அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்த பிறகு,வழக்கமாக மருந்து விற்பனை செய்து வந்தவர்கள் யாரென்று தெரிந்து, அவர்களுக்கு மருந்து விற்க அனுமதி கொடுக்கும் விஷயத்தைப் பற்றிய ஆலோசனை தொடங்கப்படும். அதற்குப் பின்பே மருந்து விற்பனை செய்ய அனுமதிச் சீட்டுகள் கொடுக்கப்படும்."

## கூட்டு முன்னேற்றமா? கூட்டு நாசமா?

இதைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள். முதலில் எல்லா இடங்களிலிருந்தும் விவரமான தகவல்கள் கிடைக்க வேண்டும். இரண்டொரு இடங்களிலிருந்து தகவல் கிடைக்கா விட்டாலும் காரியம் தடைப்பட்டு விடும். எவ்வளவு நாள் ? யார் கண்டார்கள்! இதன் பிறகு இரண்டாவதாக ஆலோசனை முயற்சிகள். இது எவ்வளவு காலம் நீடித்து நடக்குமோ தெரியாது. அதன் பிறகு மூன்றாவதாக அனுமதிச் சீட்டுகள் கொடுக்கப்படும். இதற்கு எவ்வளவு நாள் பிடிக்குமோ அதுவும் கடவுளுக்கே தெரியும். இவ்வளவும் தொடங்கி நடைபெறும் வரையில், மருந்தை வாங்கவும் கூடாது ; விற்கவும் கூடாது. அது வரை தாய் நாட்டு மக்கள் நோய்களை நோக்கி, நோய்களே, எங்களைக் காப்பாற்றும் ஜப்பானியர்கள் ஆராய்ச்சி முடியும் வரை, நீங்கள் எங்களை அணுகாதீர்கள் என்று கேட்டுக் கொண்டு, நோய்கள் மனமிரங்கினால் பிழைத்தார்கள். இல்லாவிட்டால், கூட்டுச் செழிப்பு எனப்படும் கூட்டு நாசமே அவர்களுடைய கதி.

உடன் படிக்கை செய்த தாய்நாடு படும்பாடு இது மற்ற அடிமை நாடுகளைப் பற்றிப் பேச்சென்ன ?

—சென்னை வானொலி நிலையத்திலிருந்து 21-4-43-ம் தேதி 'இரட்டை நாவு' என்னும் தொடரில் ஒலிபரப்பப்பட்ட பேச்சு.

# பிரிட்டனின் புதிய போர் விமானம் : டைபூன்

டைபூன் விமானத்தில் ஒருவர் மட்டுந்தான் ஏறிப் போகலாம். உலகத்திலேயே மகா வேகமாகப் பறக்கக் கூடிய விமானம் இது தான். இது மகா உறுதியானது. இதன் உருவம் 'மஸ்கிடோ' விமானத்தைப் போலவே பெரிது. இதிலுள்ள இஞ்சின் 2,400 குதிரை வேக முள்ளது. இதிலுள்ள ஒவ்வொரு உருளையும் 100 குதிரை வேக முள்ளது. இதில் தான் இருக்கிறது அதன் இரகசியம். இதைத் திட்ட மிட்டுச் செய்து முடித்தவர் மிஸ்டர் சிட்னி காம்.

## 'டைபூன்' விமானங்கள்

'ஹரிகேன்' விமானத்திற்கு அடுத்தபடியாக 'டைபூன்' விமானத்தைச் சொல்ல வேண்டும். இதை வகுத்துத் திட்டமிட்டவர் மிஸ்டர் காம் தான். இதைச் செய்து முடித்தவர்கள் ஹாக்கர் கம்பெனியார். இரண்டு வருஷங்களுக்கு முன்னதாக இதைக் கட்டிக் கொண்டிருந்ததாகக் கேள்வி. இந்த வகை விமானம் முதல் முதல் கட்டி முடிந்து ஒரு வருஷமாகிறது. முதல் முதல் இதில் ஏறிப் பறந்து வெள்ளோட்டம் பார்த்தவர் காப்டன் ஹெரால்ட் பால்போர். இவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் விமான உதவி மந்திரி. என்றாலும், சென்ற வருஷம் டிப்பியைத் தாக்கிய போது தான், முதன் முதல் இது போராட்டத்தில் உபயோகிக்கப்பட்டது.

சமீபத்தில் லண்டன் நகரத்தை ஜெர்மன் விமானங்கள் பகலில் தாக்கியபோது, பள்ளிக்கூடத்திலிருந்த பிள்ளைகளும் உபாத்தியாயர்களும் மடிந்தார்கள். அப்போது டைபூன் தன் திறமையைக் காட்டியது. 'டைபூன்' விமானங்கள் 5 ஜெர்மன் விமானங்களை விரட்டிக் கைப்பற்றின அல்லது சுட்டு வீழ்த்தின. இப்போது ஒரு 'விங்' படை 'டைபூன்' விமானங்களைக் கொண்டே அமைந் திருக்கிறது. இந்த விமான மோட்டிகள் இது வரை 35 எதிரி விமானங்களை நாசஞ் செய்திருக்கிறதாகத் தெரிகிறது.



# "விளையும் பயிர் முளையிலே"!

வயலிலே விதை விதைக்கிறோம். சில தினங்களில் முளை தோன்றுகிறது. அந்த முளையைப் பார்த்ததுமே, எதிர் காலத்தில் விளையப் போகிற பயிர் எப்படி யிருக்கும் என்பது தெரிந்து விடுமல்லவா ? முளை வீசிக்கொண்டு வந்தால், சரி ! பயிரும் ஜோராக இருக்கும் என்று தீர்மானித்துக் கொள்ளுவோம். ஆரம்பத்திலேயே நோஞ்சான் மாதிரி முளை கிளம்பினால், இது உருப்படாது என்று முடிவு கட்டி விடுகிறோம் அல்லவா ? இத்தனையும் மனதில் வைத்துக் கொண்டு தான், 'விளையும் பயிர் முளையிலே' என்று சொல்லி வைத்தார் ஒரு பெரியவர்.

இந்தப் பழமொழியை எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் இப்பொழுது என்ன வந்திருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். பல வருஷங்களுக்கு முன்னே தென் ஆப்பிரிக்காவிலே போயர் யுத்தம் என்றொரு யுத்தம் நடந்தது. அது உள் நாட்டுச் சண்டை தான். ஆனாலும் வெகு காரமாகத் தான் நடந்தது.

அந்த யுத்தத்திலே பங்கெடுத்துக் கொள்ள வேண்டி, பல நகரங்களிலிருந்தும் போர் வீரர்கள் யுத்த முரசு கொட்டிய வண்ணமே கிளம்பிச் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு ஊரில், ஒரு வீட்டு மாடியிலே ஒரு ஸ்திரீயும், ஒரு சிறுவனும் நின்று, போர்க் கோலத்திலே சென்று கொண்டிருந்த வீரர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அந்தப் பையன் சொன்னான் : "அம்மா ! நானும் பெரியவனானால், இவர்கள் மாதிரியே உடை உடுத்தி, ஜம், ஜம் என யுத்தத்திற்குப் போவேனம்மா !" என்று.

"யுத்த களத்தில் போய் சண்டை போடுவது என்பது விளையாட்டுக் காரியமில்லையடா என் கண்ணே ! சோல்ஜர்களின் வாழ்க்கையே மகா கடினமானதாச்சே !" என்றாள் தாயாரான அந்த ஸ்திரீ.

## "எவ்வளவு கஷ்டமானாலும் சமாளிப்பேன்"

"பரவாயில்லை அம்மா ! எவ்வளவு கஷ்டமான வாழ்க்கையாக இருந்தாலும் நான் சமாளித்துக் கொள்ளுவேனம்மா ! எனக் கொன்றும் பயமில்லை அம்மா !" என்றானாம் அந்தப் பையன். அவனை அப்படியே வாரி எடுத்து, அணைத்து, முத்த மிட்டுக் கொண்டாளாம் அந்தத் தாய். தன் மகனது வீரப் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தே போயிருப்பாள் அந்தத் தாயானவள் என்று சொல்வது மிகை படக் கூறுவதாகுமா என்ன ?

'விளையும் பயிர் முளையிலே' என்பது இந்தக் 'கேஸிலே' ரொம்பப் பொருந்துகிறது. அதே பையன் இன்று வட ஆப்பிரிக்காவிலே, துனீஸியாவிலே, ரோமலின் சைனியங்களைத் திணற அடித்துக் கொண்டு, உலகோரின் பாராட்டுதல்களை எல்லாம் வாங்கிப் பைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறார். இவர் யார் ? இவரே எட்டாவது பிரிட்டிஷ் சேனையின் இணையற்ற தலைவரான ஜெனரல் மண்ட்காமரி. அன்றொரு நாள் அவரது தாயார் அவரது வீரப் பேச்சைக் கேட்டு எவ்வாறு மகிழ்ந்தாளோ, அதே போல இன்று இவரது வீரச் செயல்களையும், நிகரிலாத போர்த் திட்டங்களையும் கேட்டு உலகில் உள்ள தாய்மார்கள் எல்லாம் அளவற்ற ஆனந்தத்தை அடைந்திருக்கிறார்கள்.

வட ஆப்பிரிக்கா மண்ணிலிருந்து அச்சுப் படைகளை உதைத்து அனுப்பினால் அல்லாமல், ஐரோப்பாவைத் தாக்கும் கைங்கரியத்தை ஆரம்பிப்பதற்கில்லை என்பதை நேச நாட்டினர் அனைவரும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இதை ஜெனரல் மண்ட்காமரியும் மனதில் வைத்துக் கொண்டு தான், அச்சு நாட்டாரே கண்டு பிரமிக்கும்படி திடீர், திடீர் என அவர்கள் மீது பாய்ந்து, நின்று நிதானிக்கக் கூட விடாமல், அவர்களது படைகளை ஓட வைத்து விட்டார்.

## கடலில் தள்ளி, நசுக்கிக் கொல்ல வேண்டும்

வட ஆப்பிரிக்கா வெங்கும் பரவிக் கிடந்த அச்சு நச்சுப்பூச்சிகளை, துனீஸியாவிலே ஒரு சிறு பிரதேசத்திற்குள் கொண்டு குவித்தாச்சு. இனி, மொத்தமாக அவற்றை அங்கிருந்து துடைத்து கடலில் தள்ள வேண்டும், அல்லது நசுக்கிக் கொல்ல வேண்டும்.

எகிப்தி லிருந்து மண்ட்காமரி தமது படையை கிட்டத் தட்ட மூவாயிரம் மைல்கள் முன்னே கொண்டு வந்திருக்கிறார். அப் படைகளுக்கு அதிகச் சேதம் ஏதுமில்லை. அவரது படைகளிடம் உள்ள நவீன யுத்த சாதனங்களையும், அவரது படைகளின் போர்த் திறமையையும் குறித்து அச்சு நாட்டாரே போற்றுகிறார்கள் என்றால், மண்ட்காமரிக்கு இதை விட வேறென்ன பெருமை வேண்டும் ? அவரைப் பெற்ற தாய் மகா பாக்கியவதி என்றே கூற வேண்டும்.

துனீஸியாவிலே கடைசியாக ஒரு யுத்தம் நடக்க வேண்டியது பாக்கி யிருக்கிறது. இது வெகு கடுமையாக இருக்கு மென்பதில் சந்தேகமே யில்லை. ஐயா ! ஒரு பானையிலே பத்துப்படி ஜலமும் ஒரு ஆழாக்கு உப்பும் கலந்திருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவ்வளவு ஜலத்திலே அந்த உப்பு கலந்திருப்பதால், அந்தப் பானையில் உள்ள ஜலம் அவ்வளவு உப்புக் கரிக்காது. அதே ஜலத்தை அடுப்பு மீது வைத்துக் காச்சுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். பானை ஜலம் சுண்டச் சுண்ட, ஜலத்தின் ருசியும் வரவர அதிக உப்பாக மாறுமல்லவா ? கடைசியிலே, ஒரு படி ஜலம் மட்டும் பானையிலிருக்கையிலே, அந்த ஜலத்தை எடுத்து வாயில் விட்டுக் கொண்டால், அசல் உப்புக் கஷாயமாகத்தானாகிவிடும்.

அதே போல, வட ஆப்பிரிக்கா முழுவதும் அச்சுப் படைகள் பரந்து கிடந்த பொழுது, அவற்றின் சக்தி குறைவு தான். இப்பொழுதோ, ஒரு சிறு பிரதேசத்திற்குள், ரோமலின் படைகளும், வான் ஆர்னீம் என்பவரின் படைகளும் சேர்ந்து குவிந்திருக்கின்றன. பல விமானங்களும் அங்கிருக்கின்றன. அருகிலேயே ஸிஸிலியும், இத்தாலியும் இருக்கின்றன. ஆகவே, அச்சு நாட்டாரின் வலிமை இப்பொழுது அதிகரித்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆகவே இறுதிப் போரும் கடுமையாகத் தான் இருந்து தீரும். அது அவ்வாறு இருக்கு மென்பதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.

## நேசநாட்டு விமானிகள் கொண்டாட்டம்

ஜெர்மானிய விமானங்கள் இப்பொழுது நேச தேசப் படைகள் மீது படையெடுக்கவும் துணிந்திருக்கின்றனவாம். ஆல்ஜியர்ஸ் பிரதேசங்களில் கூட ; சில வெடி குண்டுகளை வீசி யிருக்கின்றனவாம். ஆனால், நேச நாட்டினரும் சும்மா இல்லை. ஒரு புறம் பிரிட்டிஷ் முதலாவது சேனை அச்சுப் படைகளை இறுக்கிக் கொண்டு வருகிறது. மற்றொரு புறம் அமெரிக்கப் படைகள் மலை உச்சிகளைப் பிடித்து வருகின்றன. இன்னொரு திசையில் எட்டாவது சேனை இடித்துக் கொண்டிருக்கிறது. தவிர, சிறு பிரதேசத்திற்குள் அச்சு நாட்டாரின் பெரிய படை சிக்கிக்கொண்டிருப்பதால், நேச நாட்டு விமானிகள் பாடும் கொண்டாட்டமாக இருக்கிறது.

மே மாத முதல் வாரத்திற்குள் 'க்ளீனக' துனீஸியாவிலிருந்து அச்சு நாட்டாரைத் துரத்தி விடலாம் என பத்திரிகா நிருபர்கள் கூறுகிறார்கள். அங்கு நடக்கும் சண்டைகளை அவர்கள் நேரில் பார்ப்பதால் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை பிறந்திருக்கிறப்போ லிருக்கிறது.

இவ்வளவு காலம் வட ஆப்பிரிக்காவிலே பாலைவனப் போராக நடந்து வந்தது. இப்பொழுது மலை நாட்டுப் போர் தொடங்கியிருக்கிறது. இதன் போக்கே அலாதியாக இருக்கும். அச்சு நாட்டாருக்கு பதுங்கி நின்று வாலாட்ட பல இடங்கள் கிடைத்திருக்கும். அவை ஒவ்வொன்றிலிருந்தும் அவர்களை அப்புறப்படுத்தி

ஆகவேண்டுமல்லவா ? அது கொஞ்சம் சிரமமான காரியம் தான். அச்சு நாட்டார் வழி நெடுக, சுரங்க வெடிகளை பதிணுயிரக் கணக்கிலே போட்டு வைத்திருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் ஜாக்கிரதையாக நாச மாக்க வேண்டும். அதில் எல்லாம் சிரமம் இருக்கத்தானிருக்கிறது.

இது வரை நேச நாட்டார் கைகளிலே முப்பதாயிரம் பேர்கள் கைதிகளாகச் சிக்கி யிருக்கிறார்கள். அவர்களில் 23 ஆயிரம் பேர்கள் இத்தாலியர்களாம். பாக்கி உள்ளவர்கள் தான் ஜெர்மானியர். 'வருகிற சண்டைக் கெல்லாம் நான் இருக்கிறேன், வாரியக் கட்டைப் பூசைக்கு நீ இருக்கிறாய் !' என்று ஒருவன் சொன்னானும். அந்தக் கதையாக, சண்டை போடுகிற வரை போட்டு விட்டு, அகப்பட்டுக் கொள்ளுவோம் என்று தோன்றும் பொழுது, இத்தாலியர்களைப் பின்னால் விட்டு விட்டு, லாரியில் ஏறித் தப்பித்துக் கொண்டு விடுகிறார்களாம் நாஜிகள்.

## இத்தாலியர்கள் மறப்பார்களா ?

இதை யெல்லாம் இத்தாலியர்கள் மறப்பார்களா ? "யானைக் கொரு காலம் வந்தால், பூனைக்கொரு காலம் வராதா"? இப்பொழுது துனீஸியாவில் உள்ள படைகளை எல்லாம் ஹிட்லர் அப்படியே சாக அடிக்க உத்தேசித்திருக்கிறாரா, அல்லது தப்ப வைக்க உதவப் போகிறாரா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. சார்டீனியா, ஸிஸிலி, பிஸர்டா ஆகிய பிரதேசங்களை நாஜிகளைக் கொண்டே, கடைசி வரை ஒரு கை பார்த்து விடுவார் என்று சொல்லுகிறார்கள் சிலர்.

ஆனால், கிரேக்க நாட்டருகே யிருந்து பல மோட்டார்ப் படகுகளும், பெரிய யுத்தக் கப்பல்களும் வெகு அவசரமாக இத்தாலியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றனவாம். இத்தாலிக்கும் துனீஸியாவிற்கும் இடையில் கூட ஏகப்பட்ட கப்பல்கள் வேலை செய்கின்றனவாம். ஏற்கெனவே வட ஆப்பிரிக்காவில் இருந்து வரும் படைகளுக்கு அங்கு அன்ன சத்திரங்களா கட்டி வைத்திருக்கிறார்கள் ? ஆகவே, அங்குள்ள படைகளுக்கு ஆகாராதிகளும், மேற் கொண்டு யுத்தத் தளவாடங்களும் கொண்டு கொடுக்க வேண்டாமா ? இக் காரியம் இடைவிடாது நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் காரியத்திற் கென்று வரும் கப்பல்களிலே, ஒண்ணுக்குப் பாதியை நேச தேசத்தார் ஜலத்துக் கடியில் வாசம் செய்ய அனுப்பி விட்டார்களாம்.

இது ஒரு புறமிருக்க, துனீஸியாவிற்கு உணவு கொண்டு வரும் மேற்படி கப்பல்கள், திரும்பும் பொழுது இத்தாலியரை ஏற்றிச் செல்லுகின்றனவாம். இந்தக் கப்பல்களிலே ஏறிச் செல்லும் ஜெர்மானியரை, இத்தாலியர் ஆத்திரத் தோடு கழுத்தைப் பிடித்துத் தள்ளி வருகிறார்களாம்.

நிற்க, அச்சு நாட்டார் மெல்ல மெல்ல துனீஸியாவைக் காலி செய்து கொடுத்து விடுவார்கள் என்றும் தோன்றுகிறதாம், போர் முனையில் இருக்க வேண்டியவர்கள் போக, பாக்கி உள்ள கைத்தொழில் நிபுணர்களையும், குமாஸ்தாக்களையும் அங்கிருந்து வெளியே கடத்திவிட அச்சு நாட்டார் தீர்மானித் திருக்கிறார்கள் போலிருக்கிறதாம்.

## 84 அச்சு விமானங்கள் அரோஹரா !

சில நாட்களுக்கு முன்பு, ஒரு பெரிய விமானக் கூட்டம் ஸிஸிலியை நோக்கிச் சென்று கொண்டிருந்ததை, சில பிரிட்டிஷ் கழுகுப் பார்வையாளர்கள் பார்த்து விட்டார்கள். அவ்வளவு தான் ! துனீஸியாவிற்கு அருகே, வானத்திலே கடும் போர் மூண்டதாம். ஆள் சுமக்கும் பிரமாண்டமான ஜெர்மானிய விமானங்களில் பல தரையில் விழுந்து நொறுங்கிற்றும். வேறு பல, கடற் கரைகளில் போய் இறங்கி விட்டனவாம். மொத்தத்திலே அன்று ஒரு நாளையில் மட்டும் 84 அச்சு விமானங்கள் 'அரோஹரா !' ஆகிவிட்டனவாம். ஒரு நாள் சண்டையில் இத்தனை விமானங்கள், சீமையில் நடந்த கடும் போர்களில் கூட நாசப் படுத்தப்பட்ட தில்லையாம். ஏதேது ! வட ஆப்பிரிக்காவிலே உள்ள நேச தேசப் படைகள் பல விஷயங்களில் 'பஸ்டு மார்க்' வாங்கத் திட்டம் போட்டிருக்கிறாப் போலிருக்கிறதே !

ஒரு ஆள் தூக்கி விமானத்தில் நெருங்கி உட்கார்ந்தால் 50 பேர்கள் இருக்கலாமாம். இந்தக் கணக்கிலே பார்த்தால், அன்று மட்டும் மூவாயிரத்துச் சொச்சம் பேர்கள் உருப்படி யில்லாது போயிருக்க வேண்டும்.

நேச நாட்டாரிடம் விமான பலம் அதிகமாக இருப்பதை இந்தச் செய்தி நன்றாக எடுத்துக் காட்டுகிறது. இந்த பலமிருப்பதால் தான், இந்த மாத ஆரம்பத்திற்குள்ளாகவே, பத்து லக்ஷம் டன் எடையுள்ள அச்சுக் கப்பல்களை மத்தியதரைக் கடலுக்கு பலியாக ஆக்கி யிருக்கிறார்கள் நேச தேசத்தார். எப்படியாவது வட ஆப்பிரிக்க யுத்தம் முடியுமானால், அப்பால் மத்திய தரைக் கடல் பாதையில் உள்ள ஆபத்து குறையும். அந்தப் பாதையில் ஆபத்து இருப்பதால் தானே, அமெரிக்காவி லிருந்தும், சீமையிலிருந்தும் கிளம்பும் கப்பல்கள், தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல, தென் ஆப்பிரிக்காவைச் சுற்றி வர வேண்டி யிருக்கிறது. மத்ய தரைக் கடல் பாதை ஆபத்தற்றதாக ஆகி விட்டால், கப்பல்களிலே இன்னும் அரைப் பங்கு இடம் அதிகம் கிடைக்கும். இந்தியாவிற்கு 'சட் புட்' என்று சாமான்கள் வந்து சேரும். அப்பால் நமக்கு பல விதங்களிலும் சௌகரியமாயிருக்கும்.

## இந்தியப் படைகளின் சாகசச் செயல்கள்

இந்தியா என்றதும், துனீஸியாவிலே இந்தியப் படைகள் சாதித்த சாகசச் செயல்களைப் பற்றிய நினைவு வருகிறது. மாரெத் அரண் அருகே நடந்த கடும் யுத்தத்திலும் சரி, துனீஸியாவிலே இதர இடங்களில் நடந்த மற்றப் போர்களிலும் சரி, இந்தியப் படைகள் அதி ஆபத்தான இடங்களில் நின்று, தமது பெருமையை உலகோர் அறியச் செய்திருக்கின்றன.

ஒரு நாள், நல்ல காரிருளில், ஜெர்மானியரைத் தாக்க உத்திரவு பிறந்து விட்டது. இருட்டிலே போராடுவது என்றால் மகா கஷ்டம். ஆயினும் அந்தக் கஷ்டத்தை எல்லாம் சமாளித்துக் கொண்டு, ஏதும் குளறுபடி செய்யாமல் இந்தியச் சேனை அச்சு நாட்டாரை விரட்டி யடித்து விட்டது. பிரதம மந்திரி சர்ச்சிலும், மற்றவர்களும் இதற்காக இந்தியப் படைகளைப் பெரிதும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

இங்கே பாராட்டுப் பேச்சு நடக்கும் பொழுது, அங்கே அச்சு நாடுகளிடை ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டிருக்கிறார்களாம்.

'சுத்த மண்டுகளடா நீங்கள். ஜெனரல் மண்காமரி இவ்வளவு சுலபமாக வட ஆபிரிகாவிலே வெற்றி கண்டதற்கு உங்களுடைய இத்தாலியக் கடற்படையினர் பயந்தாங் கொள்ளிகளாகவும், முழுச் சோம்பேறிகளாகவும் இருந்ததே காரணம்' என்று நாஜிகள் கூறிகிறார்களாம்.

'ஊத்தை வாயை மூடய்யா'. மேற்கு ஆப்பிரிக்காவிலே அமெரிக்கப் படைகளும், நேச தேசப் படைகளும் வந்து இறங்கினதினாலே தானே, வட ஆப்பிரிக்கா யுத்தத்தின் போக்கே மாறிற்று. அந்தப் படைகள் அங்கு வந்து இறங்கின பொழுது, உங்களுடைய நீர்மூழ்கிகள் அட்லாண்டிக்கிலே பிரமாதமாக என்ன செய்து விட்டன ? ஜலத்திலே தபசு பண்ணிக் கொண்டிருந்தனவா ? அது போகட்டும். ருஷ்யாவிற்கு வட கடல் வழியாக கப்பல் கணக்கில் எவ்வளவு சாமான்கள் போயிருக்கின்றன. நார்வே அருகிலிருந்த உங்கள் கப்பற் படைகள், அப்பொழுதெல்லாம் என்ன செய்து கிழித்து விட்டன ? போங்கய்யா உருப்படா கோஷ்டிகளா ! உங்களை நம்பி எங்களவனும் எங்களை இந்தச் சண்டையிலே இறங்கச் சொன்னானே, அது 'மண் குதிரையை நம்பி ஆற்றிலே இறங்கின' மடையன் கதை மாதிரித் தான் முடியப் போகிறது." என்று இத்தாலியர்கள் திருப்பிச் சொல்லுகிறார்களாம்.

## ஹிட்லரிடம் முஸோலினி காவடி

யார் எது சொன்னால் என்ன ? பட்டுத்தானாக வேண்டும். இத்தாலிய நகரங்களும் இப்பொழுது எரி வெடி உபத்திரவத்தை அநுபவிக்க நேர்ந்திருக்கிறது. இந்தக் கஷ்டத்தைத் தீர்க்கப் படாதா என்று முஸோலினி ஹிட்லரிடம் காவடி எடுத்துச் சென்று



வேண்டி யிருக்கிறாராம். அதன் பலனாக பல போராடும் விமானங்கள் இத்தாலிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

எது எப்படிப் போனாலும், இந்தப் பெரிய மனுஷங்கள் எல்லாம் சமயம் வந்தால் கம்பி நீட்டி விடத் தான் செய்வார்கள். ரோமல் இப்பொழுது என்ன செய்திருக்கிறார் ? தனி விமானத்திலேறி ஜெர்மனிக்குப் போய்விட்டாராம். முஸோலினியின் குடும்பத்தார் ரோம் நகரை விட்டு, ஸ்விட்ஸர்லாந்து எல்லைப் புறத்திற்குக் குடிபோ யிருக்கிறார்களாம். தலைக்கு மிஞ்சி வெள்ளம் போகும் நிலைமை வந்து விட்டால், நடு நிலைமை நாடான ஸ்விட்ஸர்லாந்திற்குள் 'கபக்' எனப் புகுந்து விடலாமல்லவா ? முன் காலத்திலே ஒரு தடவை முஸோலினி இவ்வாறே தான் தப்பி ஒளிந்திருக்கிறார். அந்த வகையில் நல்ல அநுபவம் ஏற்பட்டிருக்கு மல்லவா ?

ஹிட்லருக்கோ இப்பொழுது ஏகக் கவலை. அவர் துனீஸியப் போரைப் பற்றிக் கூட அதிகம் நினைத்துக் கொண்டிருக்கமாட்டார். பால்கன் பிரதேசங்கள் தான் பலஹீனமான பிரதேசங்களாகும். அங்கு பாதுகாப்புக்கு ஹங்கேரியர் இருக்கிறார்கள். அவர்களை ஹிட்லர் நம்பவில்லை போலிருக்கிறது. ஆகவே அந்த வீரர்களை பிரான்ஸிற்கு அனுப்பிவிட்டு, பிரான்ஸிலிருந்து முதல்தர நாஜிகளை பால்கனுக்கு மாற்ற முயலுகிறாராம் அவர்.

ருஷ்யாவிலே பிரமாதமான போர்கள் எதுவும் நடக்கவில்லை. ஹிட்லர் லெனின்கிராட் மீது அதிக கவனத்தைச் செலுத்துவார் போலிருக்கிறதாம். தெற்கே க்யூபன் பிரதேசத்திலே ஜெர்மானியர் ருஷ்யர்களை விடாது தாக்குகிறார்களாம். ருஷ்யர்களும் ஜெர்மானியரை க்ரிமியாவிற்குள் அடித்து விரட்ட முயலுகிறார்களாம். ருஷ்ய கொரில்லாப் படைகளோ பலே வேலைகள் செய்து கொண்டிருக்கின்றனவாம். ஸ்டாலின் ருஷ்யக் கடற்படைத் தலைமையையும் தானே எடுத்துக் கொண்டு விட்டாராம். வருகிற மாதத்திலே ருஷ்யப் போரரங்கத்திலே பல விசேஷங்கள் நடைபெறக் கூடும். நாஜிகள் தங்களது விமான பலத்தை ருஷியாவிலே பெருக்கி வருகிறார்களாம்.

## ஜெர்மன் தொழிற்சாலைகள் தவிடு பொடி

ஆனால், அவர்களது முக்கிய தொழிற்சாலைகளை நூற்றுக் கணக்கான பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள் இரவிலும் பகலிலும் தவிடு பொடியாக்கி வருகின்றன. சூடு பொறுக்க முடியாது ஜெர்மானியர் தவிக்கிறார்கள்.

'ஜெர்மனி மீது பாய இரண்டாவது போர் முனையை ஐரோப்பாவில் சீக்கிரமே ஆரம்பிப்போம் ; 1,300 கோடி டாலர் கடன் கொடுங்கள் இன்னும், பதினைந்து நாட்களுக்குள்ளே !' என்று அமெரிக்காவிலே ஒரு மந்திரி கேட்கிறார். நாஜி நீர்மூழ்கிகள் இன்னும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலே அட்டகாசம் செய்த வண்ணமாகத் தானிருக்கின்றன. அவற்றையும் நேச நாட்டார் சமாளித்து வருகிறார்கள். ஐரோப்பாவை தெற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும் நேச தேசத்தார் தாக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

இதை யெல்லாம் பார்த்து ஜெர்மனிக்கு உள்ளூர நடுக்க மேற்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால், ஸ்பெயினிலே ஒருவர் உலக சமாதானம் பற்றிப் பேசினதும், 'ரொம்ப அழகாக, நியாயமான விஷயத்தையே பேசியிருக்கிறார் அவர். அவர் பேசியதை யெல்லாம் நாங்கள் ஆமோதிக்கிறோம்' என பெர்லின் வட்டாரங்களில் உள்ளவர்கள் தாளம் போடுவது ஏன் ? எப்படியாவது இந்த யுத்தம் முடிந்தால் போது மென்றாகி விட்டாப் போலிருக்கிறது அவர்களுக்கு.

ஆனால், நேசதேசத்தார் இந்த வார்த்தைகளைக் கண்டு மயங்கப் போவதில்லை. நிபந்தனையின்றி பூரணமாக சரணாகதி யடைந்தால் ஒழிய இவர்கள் விடமாட்டார்கள். ஹிட்லர் பூண்டையே அழிக்கும் வரை நிற்கமாட்டார்கள். மேற்கே அச்சு நாட்டாரும், நேச தேசத்தாரும் இப்படி மாட்டிக் கொண்டிருப்பதைத் தனக்கு அநுகூலப் படுத்திக் கொண்டு ஜப்பான் ஆஸ்திரேலியா அருகே பெரும் படைகளைக் கொண்டு குவித்து வருகிறதாம். பர்மாவிலும் விமான பலத்தை அதிகப்படுத்திக் கொள்ளுகிறதாம். இந்துமகா சமுத்திரத்திலேயும் சில நீர் மூழ்கிகளை உலவ விட்டிருக்கிறதாம். அலூஷியன் தீவுகளிலேயும் தன்னைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறதாம். ஜப்பானிய நகரங்கள் எந்தவிதமான விமானப் படையெடுப்புக்கும் தயார் என்கிறதாம். அது எது வேண்டுமானாலும் செய்யட்டும் ; சொல்லட்டும். அச்சு நாட்டாருக்கு மேற்கே அளிக்கப்படும் அதே பிரசாரத்தைத் தான், அச்சு நாடுகளில் மூன்றாவதான ஜப்பானுக்கும் நேச தேசத்தார் அளிக்கப் போகிறார்கள். ஏதோ ஜெர்மனிக்கும், இத்தாலிக்கும் இப்பொழுது முதல் தீர்த்தம் கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அடுத்த சான்ஸ் ஜப்பானுக்குத் தான் ! அவசரப்படாதீர்கள் !

# மண்ணெண்ணெய்ச் சிக்கன விளக்குகள்

மண்ணெண்ணெய்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தாவர எண்ணெய்களைக் கொண்டு விளக்கெரிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்பதுபற்றி சென்னை அரசாங்கத்தார் ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள். தாவர எண்ணெய்களில் சிலவற்றை சாப்பிடலாம் ; சிலவற்றை சாப்பிடமுடியாது ; சில தாவர எண்ணெய்களைச் சில இந்திய வீடுகளில் ஏராளவிற்கு விளக்கெரிக்கின்றார்கள். இப்போது இருப்பிலுள்ள மண்ணெண்ணெயை யுத்தத் தேவைகளை முன்னிட்டுச் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அன்றியும் எல்லா வீடுகளிலும் தாவர எண்ணெய்களையே உபயோகிப்பதனால் அம்மாகாணத்திற்கே பொருளாதாரத் துறையில் இலாபமுண்டு. இப்போதுள்ள மண்ணெண்ணெய் விளக்குகளில் தாவர எண்ணெய்களை ஊற்றி விளக்கெரிக்க முடியாது. ஆகவே, சாதாரண வீடுகளிலும் கூட, தாவர எண்ணெயைக் கொண்டு எரிக்கத் தக்க புது மாதிரி விளக்குகள் செய்ய வேண்டியது அவசியம் என்று அரசாங்கத்தார் உணர்ந்தார்கள். இந்த நோக்கத்தோடு அரசாங்கத்தார் நடத்தும் பல தொழிற் கல்விச் சாலையில் ஆராய்ச்சிகள் நடத்தினார்கள். விசேஷ விளக்குகள் செய்யத் திட்டமிட்டவர்களுக்கும் செய்தவர்களுக்கும் ஊக்கங் கொடுத்தார்கள். பொது ஜனங்களில் சிலரும் அரசாங்க இலாக்காக்களைச் சேர்ந்தவர்களும் பலவகை விளக்குகளைச் செய்தார்கள். இவற்றை தொழில் இலாக்காக்காரர்கள் சோதித்தார்கள். இவற்றில் சிலவற்றின் விலை அதிகம். இவற்றிற்கு எண்ணெய்ச் செலவும் அதிகமாகும். மற்றவற்றின் அமைப்பு, சிக்கலானது. ஆகவே, கையாளுவதும் இலகுவல்ல. இவை ஒவ்வொன்றிற்கும் தனிச் சிறப்புக்கள் உண்டு. என்றாலும் எல்லா வீடுகளிலும் உபயோகிக்கத் தக்க முறையில் சரியான விளக்கு செய்யப்பட்டதாகக் கூறுவதற்கில்லை. பல விளக்குகளையும் எண்ணெய்களையும் பரீட்சித்த பிறகு 'ராமதீபமும்,' ஜி.எஸ்.டி. பர்னரும், 'கவர்னர் டம்ப்ளர் விளக்கு'களும் பொதுவாக உபயோகிக்கத் தக்கவை யென்றும், உடனடியாகப் பொது ஜனங்கள் அவற்றை உபயோகிக்கலா மென்றும் அரசாங்கத்தினர் முடிவு கட்டினர்.

கீழக் கோதாவரி மேலக் கோதாவரி ஜில்லாக்களில் உள்ள அரசாங்கக் காரியாலயங்களில் 'ராமதீப'த்தைப் பரீட்சிக்கும்படி ஜில்லா கலெக்டர்களுக்குச் சிபார்சு செய்யப்பட்டது. கடலை எண்ணெய், புங்க எண்ணெய், புகையிலை விதை எண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு இந்த விளக்கு எரிகிறது. இதைக் கையில் எடுத்துக் கொண்டு போகலாம். இதைப் பார்த்தால் சாதாரணமாக மண்ணெண்ணெயைக் கொண்டு எரிக்கப்படும் 'ஹரிகேன்' விளக்கைப் போலவே யிருக்கும். ஆகையால் இதை உபயோகிக்க விசேஷத் திறமை தேவை யில்லை. ஆனால் 6 மணி நேரத்திற்கு ஒரு முறை திரியைச் சரிபார்த்து வெட்டிவிட வேண்டும். இந்த விளக்குகளுக்குப் பேட்டென்ட் உரிமை, மிஸ்டர் வி. வி. சர்மா

(16-ம் பக்கம் பார்க்க)

# ராட்சஸ புத்தி

1939-ம் வருஷத்திலே தானே இந்த யுத்தம் ஆரம்ப மாயிற்று? அப்பொழுதி லிருந்து இது வரை ஜெர்மானியர் இருபது லக்ஷம் யூதர்களை அழித்தொழித்திருக்கிறார்களாம். இன்னும் ஐம்பது லக்ஷம் பேர்கள் தலைக்கு மேலே நாஸிக் கத்திகள் தொங்கிக் கொண்டே இருக்கின்றனவாம். உலகிலேயே மொத்தம் சுமார் ஒன்றரைக் கோடி யூதர்கள் தானிருக்கிறார்கள். இவர்களில் கிட்டத் தட்டப் பாதிப் பேர்களுடைய உயிர்களுக்கு ஹிட்லர் உலை வைக்க ஏற்பாடு செய்து விட்டாராம்.

இது ஒரு பக்கமாச்சா? போலந்திலும், பிரான்ஸிலும் ஜெர்மனியிடம் அடிமைகளாகச் சிக்கிக் கொண்டிருக்கும் மக்களின் மனம் சதா குமுறிக் கொண்டே இருக்கிறது. அவர்களில் பலரைப் பெண் என்றும், குழந்தைகள் என்றும், கிழவர்கள் என்றும் பாராது துப்பாக்கி முனையில் நிறுத்தி, நாஸிகள் சுட்டுத் தள்ளி வருகிறார்களாம். இப்படியாக அச்சு நாடுகளின் பெரிய அண்ணாத்தையான ஜெர்மனியின் கைகள் ரத்தத்திலேயே தோய்ந்து கிடக்கின்றன.

அந்த அண்ணாத்தைக்கு நான் ஒன்றும் இளைத்தவனில்லை என்று காட்டிக் கொள்ள, ஜப்பான் விரும்பினாப் போலிருக்கிறது. உடனே அதுவும் கொலைகாரத் தொழிலில் இறங்கி விட்டது.

### அவன் தம்பி அங்கதன்

சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் பதினெட்டாந் தேதி, திடீரென ஒரு அதிசயச் செய்தி வெளியாயிற்று. அதனை உலகெங்கு முள்ள பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் போட்டன. அன்றையத் தினம் டோக்கியோ உள்பட பல முக்கியமான ஜப்பானிய நகரங்களை, எங்கிருந்தோ வந்த அமெரிக்க விமானங்கள் நொறுக்கித் தள்ளி விட்டுப் பறந்து போய் விட்டன. அப்போது சில விமானிகள் ஜப்பானியரிடம் சிக்கிக் கொண்டார்களாம். ஜப்பானிய நகரங்கள் மீது குண்டு வீசிய விமானங்கள் எங்கிருந்து வந்தன என்பதை, அந்த விமானிகளிட மிருந்து அறிந்து கொள்ள ஜப்பானியர் பட்டபா டெல்லாம் வீ யிற்று. போன வாரம் வரை, அதாவது மேற்படி சம்பவம் நடந்து சரியாக ஒரு வருஷம் பூர்த்தியாகும் வரை, அந்த ரகசியம் வெளியிடப் படவே இல்லை.

அந்த விமானங்கள் 'ஹார்னெட்' என்ற விமானந் தூக்கிக் கப்பலி லிருந்து கிளம்பிச் சென்றனவாகும் என்பதை ஜப்பானியரும் இப்பொழுதே தெரிந்து கொண்டிருப்பார்கள்.

ஜப்பான் பக்கமே யாரும் அண்ட முடியாது என்று பெரிய தலைவர்கள் ஜம்பமாகப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே இந்த 'எழவு' விழுந்ததால், மேலதிகாரிகளுக் கெல்லாம் ரொம்ப அவமானமாகப் போயிருக்கும். அந்த ஆத்திரத்தை அவர்கள் தம்மிடம் சிக்கிய அமெரிக்க விமானிகளிடம் காட்டத் தீர்மானித்து விட்டார்கள், போன வாரம் அந்த விமானிகளின் கழுத்தைச் சீவி எறிந்து விட்டார்களாம்.

இந்தச் செய்தி கேட்டு உலகமே திடுக்கிட்டிருக்கும். இது என்ன ராக்ஷஸ புத்தி என்றே ஒவ்வொருவரும் ஆச்சரியத்தோடு கேட்பார்கள். இந்த ஆச்சரியம் ஒரு புறமிருக்க, ஜப்பானின் மிருகத்தனமான, காட்டுமிராண்டிச் செய்கையை எல்லோரும் மனப்பூர்வமாகக் கண்டிக்க வேண்டியது தான் நியாயம். ஜப்பானிய நகரங்கள் மீது குண்டு வீசிய விமானிகள் எல்லாம், ஒரு பாவமு மறியாத நகர மக்கள் மீதும் குண்டுகளை எறிந்து விட்டார்களாம்! உண்மை என்னவென்றால், அமெரிக்க விமானங்களைத் துரத்திச் சென்ற ஜப்பானிய விமானிகள், தாழப் பறந்து கொண்டிருந்த அமெரிக்க விமானங்களை, மேலிருந்து யந்திரத் துப்பாக்கிகளால் சுட்டனராம். அது குறி தப்பி, கீழே இருந்த அவர்களது நாட்டு மக்களில் பலரது உயிரை வாங்கி விட்டதாம். இதை மறந்து, பொது ஜனங்களிடை ஏற்பட்ட சேதத்திற்கு அமெரிக்க விமானிகளையே பொறுப்பாளிகளாக்கி, அவர்கள் தலைகளைச் சீவி எறிந்திருக்கிறார்கள் ஜப்பானியர்.

இந்தக் கோரச் செயலைக் கேள்விப்பட்டு, 'பலே ஜப்பான்!' என்று பாராட்டுகிறது ஜெர்மனி. குடிகாரன் தானே குடியனைப் பார்த்துப் புகழ வேண்டும்!

### பழி வாங்குவது நிச்சயம்

இது போக, பர்மாப் போரில், ஜப்பானியர் தங்களிடம் சிக்கியவர்களை யெல்லாம் சித்ரவதைச் செய்ததாகவும் கூறப்படுகிறது. இதை யெல்லாம் நம்மவர்கள் வெகு ஜாக்கிரதையாகக் கணக்கெடுத்து வைத்திருக்கிறார்கள். எத்தனை வருஷங்களானாலும் இதை யாரும் மறக்கவே மாட்டார்கள். மறக்காதிருந்து என்ன செய்வார்கள் என்று கேட்பீர்களே! இந்த அக்ரமங்கள் செய்தவர்களை யெல்லாம் யுத்த முடிந்ததும் சந்தியில் இழுத்து வந்து நிறுத்தி, 'அதுக்கு என்ன சொல்றே? இதுக்கு என்ன சொல்றே?' என்று கேட்டு, அவர்களுக் கெல்லாம் சரியான தண்டனை விதிக்கப் போவது நிச்சயம்.

ராக்ஷஸர்கள் அந்தக் காலத்தில் இது போலவே தான் அட்டகாசம் செய்து கொண்டிருந்தார்களாம். ஆனால், கடைசியில் அவர்கள் கதி என்ன ஆயிற்று? ராமனும், கிருஷ்ணனும், விஷ்ணுவும், சிவனும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்ன செய்தார்கள்? ராக்ஷஸப்பூண்டே இல்லாதபடி அழித்தொழிக்க முன் வந்தார்கள். அதே போல, இன்று அச்சு நாட்டு அரக்கர்கள் கோர லீலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், நாளை அவர்களை எல்லாம் நேச தேசத்தார், உண்டு இல்லை என்று முடிவு கட்டியே தீர்க்கப் போகிறார்கள். இதில் கொஞ்சமும் சந்தேகமே வேண்டாம். மனிதர் நோக பார்க்கும் வாழ்க்கை இனி இல்லை.

இந்தக் கொள்ளையிலே, ருஷ்யரங்கத்தி லிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. ஜெர்மானியர் ருஷ்யப் போர் முனைக்கு ஏராளமான விஷ வாயுப் பெட்டிகளை அனுப்பி வருகிறார்களாம். ருஷ்யர்களை நேர் முகமான, நியாயமான சண்டைகளில் ஜெயிக்க முடியாது என்பது நாளுக்கு நாள் நாஸிகள் மனதிலே நன்றாக வேர்விட்டுக் கொண்டு வருகிறாப்போலிருக்கிறது. ஆகவே, அயோக்யத் தனமான வழியிலே அவர்களது புத்தியும் செல்லுகிறாப் போல் தோன்றுகிறது.

ஜெர்மனி மட்டும், இந்த யுத்த ஆரம்பத்தில் 'விஷ வாயு ப்ரயோகத்தை எதிரிகள் ஆரம்பிக்கு முன் தான் ஆரம்பிப்பதில்லை' என்று சொன்ன சொல்லை மறந்து விஷ வாயுவை ப்ரயோகிக்கத் தொடங்கினால், பிரிட்டனும் சும்மா இராது என்று பிரிட்டிஷ் சர்க்கார் அப்பட்டமாகச் சொல்லி விட்டார்கள். ததாஸ்து என்று அமெரிக்க சர்க்காரும் உடனே கூறி விட்டார்கள். நேச தேசத்தார் முதலில் விஷவாயு ப்ரயோகம் செய்யவே மாட்டார்கள். ஆகவே, ஜெர்மனிக்கு விஷ வாயு ப்ரயோகம் செய்ய இந்த வழியில் சந்தர்ப்பமே கிடைக்காது. ஆனால், புளுகுவதிலே புலிகளான ஜெர்மானியர், சும்மாவாவது நம்மவர்கள் மீது ஒரு பழி போட்டுவிட்டு, சட்டென விஷ வாயுவை எடுத்து விடத் தொடங்கக் கூடும். அதை உத்தேசித்துத் தான் பிரிட்டனும், அமெரிக்காவும், தங்கள் கைகள் அப்பொழுது புளியங்காய்ப் பறிக்கப் போயிராது என்பதை முன் கூட்டியே தெரிவித்து விட்டார்கள். இது ஒரு ராக்ஷஸச் செயல் தான்.

### ராக்ஷஸனுக்கு மூளை உண்டா?

ராக்ஷஸன எத்தனையோ முரட்டுக் காரியங்களைச் செய்யக் கூடும். ஆனாலும், அவன் செய்யும் காரியங்கள் எல்லாம் மூளையை உபயோகித்துச் செய்யப்படுபவையாக இருக்குமா என்றால், நமக்கென்னமோ சந்தேகந்தான்! பல சமயங்களில் அவன் தன் சுய உணர்வே இல்லாது, மூளையற்று வேலை செய்து விடுவான்.

இதற்கு உதாரணமாக ஹிட்லரையும் டோஜோவையும் எடுத்துக் கொள்ளலாம். ஹிட்லர் இருக்கிறாரே, 1940-ம் வருஷத்திலேயே, டங்கர்க்கிலிருந்து நேச தேசப் படைகளை திக்குமுக்காடி சீமைக்குச் சிதறி ஓடச் செய்தபொழுது, சீமையிலே சரியாக ஒரு ஆயிரம் விமானங்கள் கூட இல்லை. அதே மாதிரிதான் விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் அதிகம் இல்லை. கண்காட்சி சாலையிலிருந்து கூட சில பீரங்கிகள் வெளியே கொண்டு வரப்பட்டிருந்தன. அப்பொழுது பிரிட்டன், யுத்தத்திற்குக் கொஞ்சம் கூட சித்தமாக இல்லை. ஹிட்லர் அப்பொழுது பிரிட்டன்மீது படையெடுக்காது போனது அவர் செய்த மூளையற்ற காரியங்களில் மிகப் பெரியது.

### ஹிட்லர் திணறி அலையத்தான் சான்ஸ்

இன்று பிரிட்டனைப் போல் பாதுகாப்புடன் கூடியுள்ள நாடு எதுவுமே இல்லை எனலாம். இன்று அங்கே பனி ரெண்டாயிரம் விமானங்களுக்கு மேலிருக்கின்றன. தவிர, இன்று பிரிட்டனிலே ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸின் மேற் பார்வையிலே, பதினையாயிரம் தனி ஆலைகள் பிரிட்டனிலே விமானங்களுக்கு வேண்டிய பாகங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன. அப்பொழுது ஹிட்லர் செய்த தவறின் பயனாக, இன்று அதே பிரிட்டனிலிருந்து, பிரிட்டிஷ், அமெரிக்க, கனடிய விமானிகள் தினம் பறந்து சென்று, ஜெர்மனியின் உயிர் நிலைகளை உண்டு இல்லை என்று நாசம் செய்து வருகின்றன. 'போனால் வராது சான்ஸ்! வை ராஜா வை! வச்சாக் காஸ், போனால் காஸ்!' என்று விளையாடுவார்களே, அதே மாதிரி, ஹிட்லருக்கு ஒரு பெரிய சான்ஸ் போய் விட்டது. அதைக் கைவிட்டதால், இன்று திணறி அலையும்படியான சான்ஸ் தான் கிடைத்திருக்கிறது.

இதே போல, ஜப்பானிய பிரதம மந்திரி டோஜோவும் மூளையில்லாமல் ஒரு காரியத்தைச் செய்தார். திடுதிப்பென முத்துத் துறைமுகத்தைப் போய்த் தாக்கி, அமெரிக்காவையும் சண்டையில் இழுத்துப் போட்டார் அவர். இவ்வாறு செய்யாமல், அப்பொழுதே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பகுதிகளை மட்டும் தாக்க ஏற்பாடு செய்திருந்தால், அவர் பாடு கொண்டாட்டமா யிருக்கும். நான்கு வருடங்களுக்கு முன், இந்தியாவில் இருந்த சேனைகளையும், விமானங்களையும், யுத்த ஏற்பாடுகளையும் இப்பொழுது எண்ணிப் பார்த்தாலும், அப்பொழுது ஜப்பான்காரன் இந்தியாவில் புகுந்திருந்தால் பல விபரீதங்கள் தான் நடந்திருக்கும் என்று நிச்சயமாகத் தெரியும் அந்த சந்தர்ப்பத்தைக் கைவிட்டு விட்டு, சாலமன் தீவுகளுக் கருகே போய் மாட்டிக் கொண்டு உதை வாங்க வழி செய்து கொண்டார் டோஜோ.

சமீபத்தில் அவர் தமது மந்திரி சபையைக் கொஞ்சம் உதறி எடுத்து ஒழுங்குபடுத்தி யிருக்கிறார். அது காரணமாக அவர் தமக்குக் கல்வி இலாகா மேற்பார்வையையும் சேர்த்துக்கொண்டிருக்கிறார். வாஸ்தவம்! அவர் கற்க வேண்டியது நிறையத் தான் இருக்கிறது! இனித் தவறு செய்தால், அதோடு சட்டென்று கோவிந்தா ஆகவேண்டியதுதான்.

அன்றிருந்த இந்தியாவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும், இன்றிருக்கும் இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் எவ்வளவு வித்தியாசங்க ளிருக்கின்றன! அன்று லக்ஷம் பேர்களே இருந்த இந்திய சேனையில் இன்று பல லக்ஷக்கணக்கில ஆட்களிருக்கின்றனர்.

### ஜப்பான் வேலை

புதிதாக முன்னேறித் தாக்கி நாடு பிடிக்கும் வேலைகளை ஜப்பான் கைவிட்டு விட்டு, இப்பொழுது ஆங்காங்கேயுள்ள காச்சாப் பொருள்களைச் சுரண்டி எடுத்துச் சேர்க்கத் தொடங்கி யிருக்கிறது. வட சீனாவிலிருந்து தென் சீனத்திற்கும், பர்மா, மலேயா, தாய்லாந்து, ஆஸ்திரேலியா அருகே உள்ள தீவுகள் ஆகிய இடங்களுக் கெல்லாம், ஏராளமான படைகளை ஜப்பான் அனுப்பி வருகிறதாம். தன்னுடைய எதிரிகளை மிரட்ட ஜப்பான் செய்யும் வேலையாக இருக்கலாம் இதெல்லாம்.

தவிர, பர்மாவைக் கைப்பற்றியே தீருவது என்று நேச தேசத்தார் திட்டம் போட்டிருப்பதும், அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதும் டோஜோவிற்குத் தெரிந்திருக்கலாம். ஆகவே, அவர் முன் கூட்டியே ஏதாவது கொஞ்சம் வாலை ஆட்ட முயலலாம். அதற்கெல்லாம் இந்தியாவில் எல்லோரும் 'ரெடி' யாகவே இருக்கிறார்கள். கீழ்த்திசையின் ஆயுதக் கோட்டையாக ஆகியிருக்கிறது இந்தியா இன்று. இங்கே மேலும் மேலும் சேர விரைந்து வரும் வாலிபர்களுக்கு உடையும், ஆயுதமும் சப்ளை செய்ய முடியாத நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஜப்பானியர் இங்கு காலடி வைத்தால், அந்தக் கால் நிச்சயம் ஒடிபட்டுப் போகும் என்பதில் சந்தேகமே யில்லை.

ஜப்பானியர் ஆஸ்திரேலியா அருகேஅதிக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் எனத் தெரிகிறது. ஆஸ்திரேலிய அதிகாரிகள் இதுபற்றி அடிக்கடி ஏதாவது சொல்லிக் கொண்டே யிருக்கிறார்கள். நேச நாட்டினர் ஜப்பானை மறந்து விடவில்லை.

ஆனால், ஒரு அறிஞர் கூறியதுபோல், ஹிட்லர் மண்டையிலே சரியாக அடித்தால், டோஜோ மூக்கிலே ரத்தம் ஒழுகும் என்பது உண்மை. ஜெர்மனி கொடுத்த தைரியத்தின் பேரிலும், அதன் தூண்டுதலின் பேரிலும் தானே, ஜப்பான் தன் சக்திக்கு மிஞ்சிய காரியத்தி லிறங்கிற்று!

தெற்கே க்யூபான் பிரதேசத்திலே மட்டும் கோர யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. ஜெர்மானியர் ஒரு லக்ஷம் பேர்களை ஒரு சிறு பிரதேசத்திலே கொணர்ந்து நிறுத்தி, அவர்களுக்கு இரண்டு மூன்று டாங்கிப் படைகளையும், ஏராளமான விமானங்களையும் உதவிக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அங்குள்ள படைகள் வெகுக் கடுமையாக அடிக்கடி ருஷ்ய வீரர்களைத் தாக்குகின்றன.

ருஷ்யாவிலே அதிகமாகப் போர் நடக்க வில்லை யானதால், ஜெர்மானியரும், ருஷ்யரும் மளமளவெனத் தங்களது படைகளைப் பலப்படுத்தி வருவதாகத் தெரிகிறது. போன வருஷத்தைவிட சீக்கிரமே இவ்வருஷத்தில் வசந்த காலப் போர் நடக்கும்போ லிருக்கிறது. ஆனால், போன வருஷத்தைப் போல் ஹிட்லர், ஜெர்மனியிலிருந்தும், மேற்கு ஐரோப்பாவிலிருந்தும் ருஷ்யரங்கத்திற்கு உதவிப் பொருள்களைத் தாராளமாக அனுப்ப முடியாது. ஸ்கோடா, ப்ரெமன் தொழிற்சாலைகளில் இன்று பெரும் பகுதி பாழாக்கிக் கிடக்கின்றது.

### துனீசியப் போர் கடைசி அத்தியாயம்

தூனீஸியச் சண்டையில் கடைசி அத்தியாயம் நடக்கிறது. அங்கு வேறே உதவி அனுப்பியாக வேண்டும் ஹிட்லருக்கு. துனீஸியாவிலே அச்சு நாட்டார் கடும் போர் புரிகிறார்கள். மலைகளிலே நம்மவர்களது படைகள் தீரமாகவே சண்டை போடுகின்றன. எங்கு பார்த்தாலும் பிரமாண்டமான முள் மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அவற்றைச் சீவித்தள்ளிக் கொண்டு முன்னேற வேண்டும். மலைகளில் அங்கங்கே அச்சு நாட்டார் பீரங்கிகளை வைத்திருக்கிறார்கள். அவர்களது எதிர்ப்பும் பலமாகவே இருக்கிறதாம்.

தூனீஸியாவி லிருந்து அநாவசியமான ஆட்களையும், நல்ல பீரங்கிகளையும் அச்சு நாட்டார் வெளியேற்றி வருகிறார்களாம். இதே சமயம், தூனீஸியவிற்கும் பெரிய பெரிய நூதன ஆள் தூக்கி விமானங்களில் உதவி போய்க் கொண்டிருக்கிறதாம். இந்த நூதன விமானங்களில் பல நம்மவர்களது விமானிகளால் பலியிடப்பட்டு விட்டன.

போன வாரம் மட்டும் தூனீஸியா, ஸிஸிலி, சார்டினியா பிரதேசங்களில் 20 லக்ஷம் பவுண்டு எடையுள்ள குண்டுகளை நம்மவர்கள் வீசி யிருக்கிறார்கள். இந்த வாணவேடிக்கை வெகு ஜோராகத் தான் இருந்திருக்கும்.

### அச்சு நாட்டுப் படைகள் சூது

அமெரிக்கப் படைகளும், பிரஞ்சுப் படைகளும், பிரிட்டிஷ் எட்டாவது முதலாவது சேனைகளும் வெவ்வேறு திசைகளிலிருந்து அச்சு நாட்டுப் படைகளை நெருக்கி வருகின்றன. அச்சு நாட்டுப் படைகள் சூதான வேலைகளையெல்லாம் செய்து நம்மவர்களைக் கலக்கப் பார்க்கின்றன. ஒரு இடத்திலே சில நாஸிப் படையினர் கைகளை உயரத்தூக்கிக் கொண்டு சரணடைய வருவது போல் வந்தார்களாம். நம்மவர்கள் படைவரிசைக்கு அருகில் வந்ததும், ஏதோ பிகில் கொடுத்துவிட்டு, அவர்கள் கீழே குப்புற விழுந்து விட்டார்களாம். சட்டென அவர்களுக்குப் பின்னாலிருந்து குண்டுகள் கிளம்பி நம்மவர்களுக்குச் சேதத்தை உண்டாக்கி விட்டதாம். என்ன அயோக்யத்தனம் பாருங்கள்!

துனீஸியப்போர் முடிய வேண்டியதுதான் தாமதம்! இத்தாலியிலே ஒரே குழப்பமாக ஆகிவிடும்; அங்குள்ள அரசர் முடி துறப்பார், முஸோலினிக்கு கல்தா கிடைக்கும் என்று பேசிக் கொள்ளுகிறார்கள். இருக்கலாம்; யார் கண்டார்கள். அடுத்தாற்போல் அடிவாங்கப் போவது இத்தாலி தானே!

ஜெர்மனியருக்கு இந்தச் சமயத்திலே நம்பிக்கையும், தைரியமும் 'இஞ்செக்ட்' செய்து வருகிறார் கொப்பல்ஸ் துரை, 'நமக்கு இது கஷ்டகாலம்' என்கிறார் கொயரிங். இவர்கள் சொல்வதெல்லாம் நிஜமே தவிர வேறில்லை. சென்ற வருஷம் ஒன்றேகால் கோடி டன் எடையுள்ள கப்பல்களை நாம் இழந்த போதிலும், அச்சு நாட்டாரை ஒழிக்கும் விஷயத்தில் நமது ஏற்பாடுகள் ஒன்றும் குறையவே இல்லை.

## முருங்கை



**வர்ணனை.**—இந்த மரத்தின் வேர் கணுக்கள் உள்ளது. இதன் இலைகள் பல துணுக்குகள் உடையவை. பூக்கள் மங்கிய வெள்ளை நிறம். கொத்துக் கொத்தாகப் பூக்கும். காய்கள் மெலிந்து நீண்டு தொங்கும்.

**பரவுதல்.**—முருங்கைக் கிளைகளை மழை காலத்தில் நிலத்தில் ஊன்றினால், முளைத்து விடுகிறது. மரத்திலேயே முற்றின நெத்து விதைகளைக் கொண்டு விதைப்பதனாலும் முளைக்கிறது.

**சாகுபடி.**—இந்த மரங்கள் ஒன்றிற்கொன்று 15 முதல் 20 அடிகளுக்கு அப்பால் ஊன்றப்பட வேண்டும். கோடைக் காலத்தில் தண்ணீர் ஊற்ற வேண்டும். அடி மரத்தைச் சுற்றிப் புழுத்த சாணத்தை மழை காலத்திற்கு முன்பு எருக் கொடுக்க வேண்டும்.

**உபயோகம்.**—இளங் கீரையும், காயும், பூவும் கறியாக உபயோகமாகின்றன. வேரும், பட்டையும் மருந்துகளாக உபயோகமாகின்றன. இதன் விதையிலிருந்து ஒரு முக்கியமான எண்ணெய் எடுக்கப்படுகிறது. இதன் பட்டையினின்று கிளம்பும் பிசினைக் கொண்டு காலிகோ அச்சிடுகிறார்கள்.

## மரங்கள் விமானங்களாக மாறும் விநோதம்

ஒரு விமானக் கம்பெனியார் அமெரிக்கப் படை விமானங்கள் செய்ய வேண்டி மரத்தைக் கொண்டே செய்வதற்கான முறையைக் கண்டு பிடித்து விட்டார்கள். விமானங்களில் இஞ்சின்கள் அமைக்க வேண்டும். மரப் பலகையால் செய்த விமானத்தில் சாதாரணமாக இஞ்சினை வைத்தால் எரிந்துக் கருகிப் போய்விடும். ஆகவே, ரேடியோ ஒலி பெருக்கியைக் கொண்டு பல முறை இலேசான மரப் பலகைகளைச் சூடாக்கி, அந்தக் குழம்பைக் கொண்டு உறுதியான விமான இஞ்சின்கள் இப்போது செய்யப்படுகின்றன. இந்த விமானங்களில் எல்லாப் பகுதிகளும் மரத்தாலேயே செய்யப் படுகின்றன.

(13-ம் பக்கம் தொடர்ச்சி)

பெற்றிருக்கிறார். தேசீயப் போர்முனையின் மாகாண அமைப்பாளரின் சார்பாக ஏழைகளுக் கென்று தனிப்பட குறைந்த விலையில் விளக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

### ஜி. எஸ். டி. பர்னர்.

ஜி.எஸ்.டி. பர்னர் ஒரு புது விளக்கல்ல, பர்னர் மட்டுந் தான் புதுமாதிரி. இப்போதுள்ள 'ஹரிகேன்' விளக்கில் பொருத்தத் தக்கபடி இது அமைக்கப்பட்டிருக்கிறது. கடலை எண்ணெய், புங்க எண்ணெய், புகையிலை விதை எண்ணெய், ஆகியவற்றை கொண்டு அது எரிகிறது. 'ஹரிகேன்' விளக்கிலிருந்து மண்ணெண்ணெய் பர்னரை எடுத்து விட்டு, அந்த இடத்தில் ஜி.எஸ்.டி. பர்னரைச் செருகிவிட வேண்டும். ஏற்கெனவே உள்ள இடத்தில் இந்த பர்னரைச் செருகுவதனால், விசேஷத்திறமை இதற்குத் தேவையில்லை. 6 மணி நேரத்திற்கு ஒரு முறை எண்ணெய்க் கோப்பையை நிரப்புவதுடன், திரியையும் செம்மையாக வெட்டிவிட வேண்டும்.

மூன்றாவது, "கவர்ன்மெண்ட் டம்பளர் விளக்கு." இதை ஏழைகள் விளக்கு என்று சொல்லுவது பொருத்தமாகும். இதன் வெளிச்சம் அதிகமில்லையானாலும், இப்போது, ஏழைகள் வீடுகளில் உபயோகிக்கப்படும் மண்ணெண்ணெய் டப்பா விளக்குகளுக்குப் பதிலாக, இவற்றை உபயோகிக்கலாம். இதைக் கையில் எடுத்துக் கொண்டு போகலாம். காற்றில் அணையாது. கடலை எண்ணெய், புங்க எண்ணெய், புகையிலை விதை எண்ணெய், வேப்ப எண்ணெய், இலுப்பை எண்ணெய், ஆமணக்குக் கொட்டை எண்ணெய், பின்னைக்கொட்டை எண்ணெய் ஆகிய எந்தத் தாவர எண்ணெயை வேண்டுமானாலும் உபயோகிக்கலாம்.

ஜி.எஸ்.டி. பர்னரும், "கவர்ன்மெண்ட் டம்பளர் விளக்கும்" என்ன விலை, எப்படி உபயோகிப்பது, எங்கே கிடைக்கும் முதலிய விவரங்களை, சென்னையில தொழிற் கல்விச் சாலைத் தலைவரிடத்தி லிருந்தும் (Principal, Government School of Technology, Madras), சென்னை சேப்பாக்கம் கைத்தொழில் இலாக்கா கூட்டு டைரக்டரிடமிருந்தும் மேற்கொண்ட விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம். "ராம தீபம்" சம்பந்தமாக, கீழக் கோதாவரி ஜில்லா தவளேஸ்வரம் "ராம தீப ஒர்க்ஸ்" என்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ௵ மே௴ 7௳, வெள்ளிக்கிழமை [இதழ் 18

## ஏக காலத்தில் எல்லோரும் தாக்குவது



"1942–43-ம் வருஷம் மழை காலத்தில் நடை பெற்ற போராட்டத்தில் மகா கடுமையாக ஜெர்மன் படைகளை செம்படையினர் தாக்கினர். ஏராளமான எதிரிப் படையினரை அழித்தார்கள்; ஏராளமான யுத்தத் தளவாடங்களையும் நாசஞ் செய்தனர். ஸ்டாலின்கிராடுக்கு எதிரிலிருந்த இரண்டு எதிரிச் சேனைகளை செம்படையினர் வளைந்து அழித்து விட்டனர். இவர்களில் 3 லட்சம் பேர்கள் உத்தியோகஸ்தர்களையும் படையினரையும் கைதி செய்தனர். நூற்றுக் கணக்கான சோவியத் நகரங்களையும், ஆயிரக்கணக்கான கிராமங்களையும் ஜெர்மானியரின் கொடுங்கோலிலிருந்து மீட்டனர்".

"அதே சமயத்தில், நேச நாட்டு வெற்றிப் படையினர் லிபியா, திரிபோலி, டானியா ஆகிய போர் முனைகளில் இத்தாலிய ஜெர்மன் படைகளைத் தோற்கடித்தனர். அந் நாடுகளிலிருந்து எதிரிகளை விரட்டி யடித்தனர். துனீசியாவிலிருந்தும் அவர்களைத் தொடர்ந்து விரட்டிக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில், வீரம் பொருந்திய ஆங்கிலோ-அமெரிக்க விமானப் படையினர் ஜெர்மனியிலும் இத்தாலியிலுமுள்ள தொழில் பகுதிகள் நாசமாகும்படித் தாக்குகின்றார்கள். இத்தாலிய-ஜெர்மன் பாஸிஸ்டுகளுக்கு விரோதமாக இரண்டாம் போர் முனை ஆரம்பமாவதற்கு இது ஒரு அறிகுறியாகும். இந்த யுத்தம் ஆரம்பமானது முதல், எங்கேயும் அடிபடாத கிழக்கோடியிலுள்ள எதிரிகள், செம்படையினிடம் அடிபட்டதும், நேச நாடுகள் மேல் திசையில் அடித்ததும் ஒரே மாதிரியானவை.

இவை எல்லாம் சேர்ந்து ஹிட்லர் யுத்த ஏற்பாடுகளையே கலகலத்துப் போகச் செய்து விட்டன. உலக யுத்தத்தின் போக்கையே மாற்றி விட்டன. ஹிட்லர் ஆதிக்கத்திலிருக்கும் ஜெர்மனியை வெல்லுவதற்கு இன்றியமையாத நிலைமையை உண்டாக்க வேண்டி யிருந்தது".

—ஸ்டாலின்.

# முரசொலி



"உலகப் போராட்ட மென்னும் சதுரங்கத்தில், இன்றையத் தினம், தற்கால முறையில் மிகச் சிறந்த ஆதிக்கம் பெற்று விளங்கும் படைக்கு உதாரணமாக, எட்டாம் படை விளங்குகிறது."

—ரோம் வானொலி நிலயம்
*1943-ம் ஆண்டு ஏப்ரல் மீ 14௳ ஒலிபரப்பியது.*

* * * * *

"யுத்தத்தின் போக்கையே மாற்றிவிட்டோம். எதிரிகளின் நாட்டிற்கே போய் நம் போர்த் திறமையைக் காட்டுகிறோம். மேலும் நாம் முன்னேறிக் கொண்டே போவோம். ஹிட்லரையும் டோஜோவையும் அவர்களுடைய லட்சியங்களையும் அடியோடு அழிக்கிற வரையில், நாம் சும்மா யிருக்க முடியாது."

லெப்டினென்ட் ஜெனரல் பி. பி. சோமர்வெல்,
*அமெரிக்க இராணுவ சப்ளை தலைவர்.*

* * * * *

"நேச நாட்டவர்கள் எல்லோரையும் ஒன்று படுத்தி வைத்திருப்பதில் பிரிட்டிஷ் அரசாங்கம் மிகவும் கவலை கொண்டிருக்கிறது. மிகப் பொறுமையான உழைப்பின் பயனாகத் தான் இந்த ஒற்றுமை ஏற்பட்டது. முதலில், வெற்றி பெற வேண்டுமென்னும் எண்ணத்தோடு தான், இந்த ஒற்றுமை ஸ்தாபனம் ஏற்பட்டது. இந்த ஸ்தாபனத்தின் வேலை இதோடு நின்று விடாது. யுத்த நெருக்கடியிலுங் கூட, மிகச் சிறந்த முறையில், நிரந்தரமான சமாதானத்தை நிலைநாட்டத் தக்க ஸ்தாபனந்தான் இது."

* * * * *

"நான் 60 லட்சம் அமெரிக்கத் தொழிலாளர்களின் பிரதிநிதி. ஒற்றுமையோடு உழைப்பதற்குத் தொழிலாளர்கள் ஆயத்தமா யிருக்கிறார்கள் என்று நான் உறுதி கூறுகிறேன். உங்களோடு சேர்ந்து உழைக்கவும் தொண்டாற்றவும், தியாகங்கள் செய்யவும் நாங்கள் தயாராயிருக்கிறோம். இதனால் எது வந்தாலும் வரட்டும். இத்தனையும், ஜனநாயகம் வெற்றி பெற வேண்டித் தான்."

—மிஸ்டர் வில்லியம் க்ரீன்,
*அமெரிக்கத் தொழிலாளர் தலைவர்.*

* * * * *

"பிரஞ்சுத் தொழிலாளர்கள் எங்கிருந்த போதிலும், இந்தப் போராட்டத்தில் ஒன்றுபட்டுத் தான் இருக்கிறார்கள். போராட்டத்திலும், எதிரிகளைத் தடுத்து நிற்பதிலும் தான், தொழிலாளர்கள் ஒற்றுமை என்னும் கட்டிடம் கட்டப்படுகிறது. வெற்றி கிடைத்த பிறகு, தொழிலாளர்களுக்குப் பொது மக்கள் நன்றி செலுத்துவார்கள். அவர்களுக்கும் பாதுகாப்பளிப்பார்கள். நாட்டின் பொருளாதார வாழ்க்கை நிர்வாகத்தில், தொழிலாளர்களுக்கு உரிமை யளிப்பார்கள்."

—ஜெனரல் டி கால்—*போராடும் பிரஞ்சுத்*
*தலைவர் மே விழாவன்று விடுத்த செய்தி.*

* * * * *

"எதிரி இப்போது தற்காப்பிற்காகப் போராடுகிறான். தன் கட்சி தோற்றுவிட்ட தென்று இப்போது உணருகிறான். அவனுடைய பேச்சின் போக்கே, இப்போது மாறி விட்டது. தான் வெற்றி வீரன் அல்ல வென்றும் ஆனால் இரட்சகன் என்றும் சொல்லுகிறான். இந்தக் கொடிய மிருகம் இப்போது நாடகமாட ஆரம்பித்துவிட்டது."

—மிஸ் கமில்லி ஹியஸ்மான்ஸ்,
*தொழிலாளர் சோஷியலிஸ்ட் இண்டர்நாஷனல் தலைவர்*
*மே விழாவன்று ஸ்டாலினுக்கு அனுப்பிய தந்தி.*

* * * * *

"செம்படைகளும் நம் நேச நாடுகளின் படைகளும் சேர்ந்து பாஸிஸ்ட் மிருகத்தின் முதுகெலும்பை ஒடிக்கும் காலம் சமீபித்து விட்டது."

—ஸ்டாலின்.

* * * * *



## பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| ஏககாலத்தில் எல்லோரும் தாக்குவது .. | 1 | பாட்டு : "தமிழா ! போரில் சேர்" .. | 5 |
| முகப்புப் படம்—ஸ்டாலின் .. .. | 1 | ஏழைகளுக்கு அரசாங்க உதவி .. | 6 |
| முரசொலி .. .. .. | 2 | அது வேறே காலம் ; இது வேறே காலம். | 7 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. | 3 | 'ராம தீபம்' .. .. .. | 9 |
| வட ஆப்பிரிக்காவில் இரண்டாம் போர் முனை : தலையங்கம் .. .. | 4 | கரையாளர்களின் அருந் தொண்டு .. | 10 |
| | | தக்காளி .. .. .. .. | 12 |
| | | ரஷ்யாவின் புதிய போர் இயந்திரம் .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**நேசநாட்டு நீர்மூழ்கி கப்பல்கள்.**

அச்சு நாடுகளுக்குச் சொந்தமான அனேக கப்பல்களை மத்யதரைக் கடலில் நேச நாட்டு நீர்மூழ்கி கப்பல்கள் நாசம் செய்து விட்டன. இதன் பயனாக அச்சு நாட்டு சப்ளை கப்பல்களுக்கு முன்னைவிட அதிகமாகப் பந்தோபஸ்து கப்பல்கள் வந்து கொண்டிருக்கின்றன. மத்யதரைக் கடலில் எங்கோ உள்ள ஒரு நீர்மூழ்கி கப்பலி லிருந்து ராய்ட்டர் விசேஷ நிருபர் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிறார். மத்யதரைக் கடலில் ஏராளமான அச்சு நாட்டுக் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன. இன்னும் மூழ்கடிக்கப்படுகின்றன. இந்தப் போராட்டத்தைப் பற்றிய சரித்திரம் எழுதப் படுங் காலத்திலே, இந்த நீர்மூழ்கி கப்பல்கள் மிகச் சிறந்த முறையில் வேலை செய்தன என்று எழுதப் படும். அச்சு நாட்டுப் படைகளுக்குப் பக்க பலமும், சப்ளைகளும் வெகு அவசரமாகத் தேவை. அவை அந்தப் படைகளுக்குக் கிடைக்க ஒட்டாதபடித் தடுக்கப் படுகின்றன. அச்சு நாட்டு சப்ளை போக்கு வரவுகளைத் தடை செய்யும் நீர்மூழ்கிக் கப்பல்கள் எல்லா நேச நாடுகளி லிருந்தும் வந்தவை. பிரிட்டிஷ், அமெரிக்கக் கப்பல்கள் மட்டு மன்றி பிரஞ்சு, கிரேக்க, போலிஷ், டச்சு, யூகோசிலேவ் நாடுகளின் நீர்மூழ்கிகளும் மகா தீரத்தோடும், திறமையோடும் இதில் பங்கு கொண்டன. எல் அலமீனில் ஜெனரல் மண்காமரி கடுமையாகத் தாக்கியதன் பிறகு ஆறு மாத காலத்தில் எதிரி யுத்தக் கப்பல்கள் 18-யும் சப்ளை கப்பல்களில் 122-யும் மத்தியதரைக் கடலில் நேசதேச நீர்மூழ்கி கப்பல்கள் மூழ்கடித்தன. இவை செய்யும் வேலை இதுமட்டுமன்று. சமீபத்தில் கமாண்டர் தாமஸ் உட்ராப் என்பவர் பி.பி.ஸி. வானொலி நிலயத்தி லிருந்து ஒலி பரப்பிய ஓர் பிரசங்கத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :—

"ஜெனரல் ஜீரோவை பிரான்சை விட்டு ஓடிப் போகும்படிச் செய்தார்கள். பிறகு, உலகத்தோர் அதிசயிக்கத் தக்கபடி வட ஆப்பிரிக்காவில் அவர் தலை தூக்கும்படிச் செய்தார்கள். ஜன நடமாட்டம் இல்லாத வட ஆப்பிரிக்க கரையில் அமெரிக்க ஜெனரல்களைக் கொண்டு வந்து இறக்கினார்கள். அவர்கள் வேலை முடிந்தவுடனே அவர்களை அப்பால் அழைத்து வந்து விட்டார்கள். லிபியாவில் எதிரியின் படை வீடுகளுக்கு வெகு தூரம் பின்னால் கமாண்டோ படைகளைக் கொண்டு வந்து இறக்கினார்கள். மால்டாவுக்கு சப்ளைகள் குறைந்துபோன போது குறிப்பாக அதன் விமானங்களுக்குப் பெட்ரோல் இல்லாதபோது நம் நீர் மூழ்கிகள் வேலை செய்யத் தலைப்பட்டன. ஆகவே, இந்த நீர்மூழ்கிகளுக்கு ஆதாரமாக, மால்டா தீவுக்கு மேலே ஸ்பிட்பயர் விமானங்கள் ஆகாயத்தில் காவல் புரிந்து கொண்டிருந்தன."

1941, 42-ஆம் வருஷத்தில் அச்சு நாட்டுக் கப்பல்கள் மத்யதரைக் கடலைக் கடந்து 720 முறை இளம்பின. பிரிட்டிஷ் நீர்மூழ்கிகள் இவற்றுள் 216ஐ (சரிபாதி) மூழ்கடித்தன. 61 கப்பல்களை (8 சத விகிதம்) சேதப் படுத்தின. இதன் பயனாக ரோமல் திட்ட மிட்ட கப்பல் பலத்தில் 60 சத விகிதம் தான் அவருக்குக் கிடைத்தது. இந்த முழு பலத்தையும் கொண்டு 1942 ஆம் அக்டோபர் மீ 23௳ எகிப்து போராட்டத்தில் யுத்தத்தை முடித்துவிட வேண்டு மென்று அவர் திட்ட மிட்டுக் கொண்டிருந்தார். அதாவது இந்தக் கடுமையான போராட்டம் ஆரம்பிப்பதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னதாக நேசதேச நீர்மூழ்கிக் கப்பல்கள், அதுவரை இல்லாதபடி மிகக் கடுமையாகத் தாக்கின. அதன் பலனாக, மண்காமரியின் தாக்குதலைத் தடுப்பதற்கு ரோமலுக்கு ஒரு டாங்கர் கூடப் போய்ச் சேர வில்லை. இந்தக் காரணத்தால்தான் அமெரிக்க விமானப்படை எல் அலமீன் போராட்டத்தின் முதல் 4 நாட்களில் எட்டாம் படையை ஒரே ஒரு முறை மட்டும் தாக்கியது. அன்றியும், எல் அலமீனுக்கும், எல் அகைலாவிற்கும் இடையே யுள்ள விமான நிலயங்களில் 500 விமானங்களை நல்ல நிலைமையிலே விட்டு விட்டு ஓடினார்கள்.

**ஆப்பிரிக்காவிற்குப் போக, அச்சுநாடுகளுக்கும் நேச நாடுகளுக்கும் வழிகள்.**

மத்தியதரைக் கடலில் நடைபெறும் நீர்மூழ்கிக் கப்பல் போராட்டத்தில் நேச நாட்டு நீர்மூழ்கி கப்பல்களின் தலைவர்களுக்கு, ஒரு முக்கியமான கஷ்ட மிருக்கிறது. அதாவது, அச்சு நாட்டுப் படைகளின் வழிகள் மிகவும் குறுகியவை. லிட்டினோ முனைக்கும் (க்ரீட்) டோப்ருப்புக்கும் 175 மைல் தூரம் கடல் பிரயாணம். சிசிலியிலுள்ள பசேரோ முனைக்கும் திருபோலிக்கும் 240 மைல்கள் தூரம். நீண்ட தூரம் உள்ள அச்சுப் பாதை, பசேரோ முனைக்கும் பெங்காசிக்கு மிடையுள்ள 360 மைல் தூர முள்ளது. இரவு 8 மணியிலிருந்து காலை 4 மணிக்குள்ளாக, இருட்டில் 8 மணி நேரத்தில் அச்சு நாட்டுக் கப்பல்கள் 120 மைல்கள் தூரம் கடப்பதற்கு இந்தக் குறுகிய பாதைகள் உதவுகின்றன. ஒரு மணிக்கு 15 மைல் வேகத்தில் இந்தக் கப்பல்கள் போகின்றன. ஆகவே, இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் பகற் காலத்தில் தம் குறிகளைத் தெரிந்து தாக்க வேண்டுமானால் 4 மணி முதல் 16 மணி நேரம் பகல் வெளிச்ச மிருக்கிறது. ஆகவே, தடைசெய்வதற்குக் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் தவறுது இருப்பதைப் பொறுத்துத் தான், பல விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. மற்றொரு கஷ்டமும் உண்டு. இந்த எல்லா வழிகளிலும் பூரணமாக விமானப் பாதுகாப்பு இருக்கின்றது. ஆகவே, நீர்மூழ்கிகள் கடல் தண்ணீர் மட்டத்திற்கு மேலே தலை தூக்கினால் டார்பீடோக்கள் சுட்டுத் தள்ளிவிடக் கூடும்.

ஆப்பிரிக்காவில் உள்ள நேச நாட்டுப் படைகளுக்கோ சப்ளைகள் போக வேண்டுமானால் வெகு தூரம் கொண்டு போக வேண்டி யிருந்தது. இந்தப் பாதையில் அவற்றை அச்சு நாட்டு நீர்மூழ்கி கப்பல்

(5-ம் பக்கம் பார்க்க)

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஆண்டு மே மீ 7௳. [இதழ் 18

## வட ஆப்பிரிக்காவில் இரண்டாம் போர்முனை.

சமீபத்தில் இந்தியா மந்திரி மிஸ்டர் எல். எஸ். எமரி, பர்மிங்ஹாமில் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது அவர் பேசியதின் சுருக்கமாவது :—"நம் போர் முயற்சியின் பலனாக, வட ஆப்பிரிக்காவில் இரண்டாம் போர் முனையை ஹிட்லர் தான் தேடிக் கொண்டார். அதாவது தன்னால் எவ்வளவு படை திரட்ட முடியுமோ அவ்வளவு படைகளையும் திரட்டி, வட ஆப்பிரிக்காவிற்கு அனுப்பினார். ஆகவே அது 2-ம் போர் முனையாக மாறியது." சென்ற வருஷம் ஆகஸ்ட்டு மீ 3௳ முசோலினி வாய்ச் சவுடால் அடித்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். "இங்கேயாவது அல்லது உலகத்தின் எந்தப் பாகத்திலேயாவது 2-ம் போர் முனையை ஆரம்பிக்கவே முடியாது" என்று குறிப்பிட்டார். ரோம் வானொலி நிலையத்திலிருந்து அப்போது கூறப்பட்ட செய்தியாவது:—"எதிரிகளைத் தாக்குகிறபோது மகா சிறந்த முறையில் இத்தாலியர்கள் போராடுகிறார்கள். நம் நாட்டிலேயே நம்மைத் தாக்குகிறவர்களைக் குறித்துத் தான் இப்படிச் சொல்லுகிறேன். என்றாலும், நம்மை நேர் முகமாகத் தாக்க வேண்டுமானால் லிபியாவை பிரிட்டன் ஜெயித்தால் தான் முடியும். இதை ஜெயிக்கவே முடியாது." இப்பொழுது லிபியாவை நேச நாடுகள் கைப்பற்றி விட்டன. இத்தாலியர்களுக்கு வெற்றி யுண்டாவதற்கான வழிகளே இல்லை. துனீஷியா போராட்டம் கடைசி கட்டத்தி லிருக்கிறது. ஆகவே, இத்தாலியின் உறுதியான பேச்சு அடியோடு ஒழிந்து விட்டது. இத்தாலி தம் ராஜ்யத்தை மட்டுமன்றி, வட ஆப்பிரிக்காவில் ஏராளமான படைகளையும் இழந்தது இத்தாலியை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது என்பது பற்றி இத்தாலியப் பிரசாரகர்கள் மிகவும் கலவரப் பட்டிருக்கிறார்கள். மேரியோ அப்பேரியஸ் என்னும் வானொலி விமர்சகர், வெளிப்படையாகத் தன் நாட்டவரை எச்சரித்திருக்கிறார். பிரிட்டனும், அமெரிக்காவும் சேர்ந்த கூட்டு ராணுவ பலத்தைச் சமாளிக்க, தாம் தயாரா யிருக்க வேண்டு மென்று அவர் குறிப்பிடுகிறார். சென்ற ஏப்ரல் மீ 12௳ 'நிலைமை மகா ஆபத்தா யிருக்கிற தென்று' ரோம் வானொலி நிலையத்தி லிருந்து இத்தாலியர்களுக்குக் கடுமையான ஒரு எச்சரிக்கை பிறந்தது : போர் அரங்கம் இத்தாலியை அடுத்து படிப்படியாக வந்து கொண்டிருக்கிறது. கடுமையான கஷ்டகாலத்தைச் சமாளிக்க நாம் ஆயத்தமா யிருக்க வேண்டும்." இந்தக் கஷ்டகாலம் எதைப் போல் இருக்கு மென்று முசோலினிக்குத் தெரியும். ஆகவே, இத்தாலிய பாதுகாப்பைக் குறித்து அவர் மிகவும் மனக் கஷ்டம் கொண்டிருக்கிறார். அதி தீவிரமாகக் கரை ஓரங்களை அரண் செய்து கொண்டு வருகிறார். சிசிலியிலும், சார்டீனியாவிலும் உள்ள பொது ஜனங்களை, அதை விட்டு அப்புறப் படுத்தி விட்டார். கார்சிகாவை அரண் செய்யும் வேலையில் 40 ஆயிரம் இத்தாலியத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். டாரண்டோ, ஜினிவா வளைகுடாக்களில் டெரேனியன் கரை ஓரமாக சிசிலியும் சார்டீனியாவும் இருக்கின்றன. கரை ஓரப் பாதுகாப்புக்களைக் கடக்க முடியவே முடியா தென்றும் இத்தாலி கரை யோரமாக எதிரிப் படை கப்பல்கள் வந்தால், காவல் புரியும் இத்தாலியப் படை கப்பல்கள் அவற்றை எதிர்த்து நாசம் செய்து விடுமென்றும் ரோம் வானொலி நிலையம் கூறுகிறது. முசோலினியினுடைய படைக் கப்பல்கள் பலமானவையா யிருக்கலாம். ஆனால், அவை அளவுக்கு மீறிய முறையில் அமைந்துள்ளன. ஏழு போர்க் கப்பல்கள் அவற்றிலிருக்கின்றன. ஆனால், அவற்றைப் பாது காக்கத் தக்க அளவிற்கு நாசகாரிகள் இல்லை. சிசிலியிலும், சார்டீனியாவிலும் அரண் செய்வதற்காகத் தலைகால் தெரியாதபடி ஆயத்தங்கள் நடை பெறுகின்றன. இந்த இரண்டு தீவுகளிலும் இராணுவ முறைப்படி நிர்வகிக்க வேண்டி இராணுவ அதிகாரிகளோடு ஒத்துழைக்கத் தக்க சிவில் கமிஷனர்களை நியமித் திருக்கிறார்கள். இவை இரண்டும் இத்தாலிய பாதுகாப்புகளுக்குக் கற்கோட்டைகள் போன்றவை. இவை இரண்டிற்கும் ஆபத்து ஏற்படக் கூடுமென அஞ்சித் தான், மத்திய ஸ்தானத்தி லிருந்து ஆட்சி நடத்தப்பட வேண்டு மென்னும் முசோலினியின் கொள்கை மாறி, இந்த சிவில் கமிஷ்னர்களை நியமிக்கும்படி யாயிற்று. ஜெர்மன் விமானப் படைகளின் பெரும் பகுதியும், ஏராளமான எதிர்ப்புப் பீரங்கிகளும் இத்தாலியைப் பாதுகாக்கும் பொருட்டு ஐரோப்பாவின் பல பாகங்களி லிருந்தும் வந்து சேர்ந்திருக்கின்றன வென்று தெரிகிறது. ஸ்வித்சர்லாந்திலிருந்து வரும் தகவல்களிலிருந்து, இத்தாலிய அரசாங்கத்தை ரோமிலிருந்து ப்ளாரன்சுக்காவது, போலக்னாவிற்காவது மாற்றும் பொருட்டு ஆயத்தங்கள் செய்ய வேண்டி ஒரு ரகசிய கமிஷன் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நேச நாட்டவர்கள் இத்தாலியைக் கைப்பற்றி வந்து புகுந்து கொள்வார்களானால் அவர்களிடம் இத்தாலியர்கள் எப்படி நடந்து கொள்வார்க ளென்று தெளிவாக இத்தாலியர்களுக்குச் சொல்லப் பட்டிருக்கிறது. தொழிற்சாலைகளைச் சற்று பாதுகாப்பான இடத்திற்கு மாற்றி விட்டார்கள். பிரிட்டிஷ் விமானங்கள் 'பியத்' தொழிற்சாலையைத் தாக்கிய பிறகு, அங்கு மிஞ்சி யிருந்தவற்றை ஜெர்மனிக்கு அனுப்பி விட்டார்கள்.

1910-ம் வருஷம், "கடவுள் அருளால் நமக்கு நல்ல காலம் வரும் வரையில் எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும் நம் தீவை நாம் காப்போம்" என்று மிஸ்டர் சர்ச்சில் கூறினார். ஆனால், கயடா, முசோலினி, கொப்பல்ஸ் ஆகியோர் 'கயோர்னலா டீ இத்தாலியா' பத்திரிகையில் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார்கள். "நம் நாட்டை விட்டுக் கொடுபப தென்றால் ஏராளமான நாடுகளைத் தியாகம் செய்ய வேண்டும். சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டாலும். நாம் போராடியே தீர வேண்டும். எப்படியானாலும், அச்சு நாட்டு எல்லைகளுக்குள் எதிரிகள் புகுந்துவிடும்படி அனுமதிக்கக் கூடாது" இந்த இரண்டு வாக்கியங்களில் காணப்படும் வேற்றுமைகள் கவனிக்கத் தக்கன. தன் நோக்கம் உயர்ந்தது என்றும், முடிவில் தனக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம் என்றும், ஒரு தலைவர் (மிஸ்டர் சர்ச்சில்) கூறியது முதல் வாக்கியம். பிறகு காணப்படுவது, மனதுடைந்து போய்க் கூவும் அழுகுரல் ; வெற்றி வெகு தூரத்திற்கு அப்பால் விலகிக் கொண்டிருப்பதைக் கண்டதின் பலனாக எழுந்ததுதான். இந்த அழுகுரல். ஆகையினால் தான் கடைசி புகலாக ஒவ்வொருவரும் தம்மாலான உதவியைச் செய்ய வேண்டு மென்று இங்கே வற்புறுத்திக் கூறுகிறார்கள். 1940-ம் ஆண்டு டன்கர்கிற்குப் பிறகு பிரிட்டன் எந்த நிலமையி லிருந்ததோ, அதே நிலையில் தான் இன்று இத்தாலி இருக்கிறது. ஆனால் இவை இரண்டுக்கும் ஒரு வேற்றுமை உண்டு. தோல்வி மனப்பான்மையைக் குறிக்கும் வார்த்தை எதுவும் பிரிட்டனில் கிடையாது. ஆனால், இத்தாலியிலோ சந்தேகமும், மனச் சோர்வும் நாடு முழுதும் வாட்டிக் கொண்டிருக்கின்றன.

பொது ஜனங்களுடைய நல்லுணர்ச்சியைப் பெற எவ்வளவுதான் இத்தாலிய அரசாங்கம் முயன்றாலும் கூட, அவர்கள் அதிருப்தியோடு தானிருக்கிறார்கள். புரட்சியைப் பற்றியும், தோல்வியைப் பற்றியும் அங்கே பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இவை பற்றி, முசோலினி 'பாபுலே டி இத்தாலியா' என்னும் தன் பத்திரிகையில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார் :—"நமது படை வீரர்கள் தாகத்தினாலும் பசியினாலும் போர் முனையில் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்க, அவர்களைக் காட்டிக் கொடுப்பவர்களையும், அப்பேர்ப்பட்ட லட்சிய முடையவர்களையும் நாம் எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியும்?" சமீபத்தில் பாஸிஸ்டு கட்சியின் திட்டத்தைக் கார்லோ, ஸ்கார்ஸோ எனும் புதிய காரியதரிசி வெளியிட்டார். அதில் பிறரைத் திருப்தி செய்ய வேண்டு மென்னும் கொள்கையுடைவர்கள் எல்லோரும் கட்சியை விட்டு ராஜினாமா செய்ய வேண்டு மென்று குறிப்பிட்டிருந்தது. இதிலிருந்து, இத்தாலிக்கு ஆபத்தான பருவம் நெருங்கிவிட்ட தென்றும், தம் நாட்டுக் குடி மக்கள் தன்னிடத்திலும், தன்னைச் சார்ந்த இடத்திலும், எப்படி நடந்து கொள்வார்களோ என்பதைப் பற்றி முசோலினி அஞ்சிக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.



## தமிழா ! போரில் சேர் !

"ப்ருஹிமுகும்" என்ற வர்ணமெட்டு

பல்லவி

சேர்ந்திடுவாய் போரில்—தமிழா
சேர்ந்திடுவாய் போரில்

அனுபல்லவி

(1) சார்ந்திடும் தீயவர் சாய்ந்துமே நீங்கவும்
சாஸ்வதமாய் அறம் தான் தழைத்தோங்கவும் (சே)

(2) பொய் யொடு வஞ்சகம் செய்பவர் நையவும்
மெய்யொடு கலைகளும் மிகுந்துமே உய்யவும் (சே)

(3) நாகரீக முடன் நாடுகள் நாளும்
போகவிடாமல் கைக்கொண்டுமே வாளும் (சே)

(4) இந்திய நாட்டினில் உய்ந்திடும் வீரர்கள்
முந்திய தந்தையர் வன்திறம் முந்துற (சே)

(5) பெண்டுபிள்ளைகளுடன் மண்டபம் கோயில்கள்
குண்டுவிழ அழிந்து துண்டுபடா வண்ணம் (சே)

(6) சொத்தும் சுதந்திரமும் பத்தும் பறிகொடுத்துத்
தத்தளிக்கும் தேசங்கள் தம்கதி தவிர்த்திடச் (சே)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

கள் தாக்கவும் கூடும். நேப்பில்சுக்கும் பெங்காசிக்கும் உள்ள தூரத்தைப்போல் 50 பங்கு தூரம் இருக்கிறது, லிவர்பூலி லிருந்து நன்னம்பிக்கை முனை வழியாக எடன் வந்து சேர்வதற்கு. இந்தப் பாதையில் ஒரு பாதி குறைந்தது பன்னிரண்டாயிரம் மைல் தூரம் இருக்கும். நமது கப்பல்களுக்கு விமான பந்தோபஸ்து கிடையாது. பல வாரங்கள் வரை தாக்கப்படக் கூடிய நிலைமையிலேயே நேச நாட்டுக் கப்பல்கள் இருந்தன. ஆனால், மத்தியதரைக் கடலின் மத்தியில் அப்படிப்பட்ட ஆபத்தான கட்டம் சிலமணி நேரம்தான் அச்சு நாட்டுக் கப்பலுக்கு இருந்தன. ஒவ்வொரு பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கும் 5 ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் வீதம் வேலை செய்தன. இவ்வளவு வசதிகள் அவற்றிற்கு இருந்தும், அச்சு நாட்டு நீர்மூழ்கிகள் தம் வேலைகளைச் செய்ய அடியோடு தவறி விட்டன. இதன் பயனாக மாதந் தோறும் 50,000 பிரிட்டிஷ் துருப்புகள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை போய், எகிப்துப் போரில் வெற்றி பெற்றன.

1940-ஆம் வருஷம் மத்தியதரைக் கடலில் 2,331,291 டன் அச்சு நாட்டு சாமான்கள் வேனிற் காலத்தில் அனுப்பப்பட்டன என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லது. இதில் 10 லக்ஷம் டன் சாமான்களை பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்து விட்டன. அதாவது, 1940-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 23௳ முதல் 1943-ம் ஆண்டு ஜனவரி மீ 23௳ வரை 28 மாதங்களில் 43 சத விகிதம் மூழ்கடிக்கப்பட்டது. 1939-ஆம் வருஷம் பிரிட்டிஷ் ஐரோப்பிய நேச நாட்டுக் கப்பல்களில் 30,840,000 டன் பொருள்கள் மொத்தத்தில் கப்பல்களில் ஏற்றி அனுப்பப் பட்டன. இவற்றில் 72½ லக்ஷம் டன்னுக்கதிகமாக அதாவது, 1941-ம் ஆண்டு கடைசியில் யுத்தம் ஆரம்பமானதி லிருந்து 24 சத விகிதத்திற்கதிகமாக அச்சு நாட்டு நீர்மூழ்கி கப்பல்கள் மூழ்கடிக்கக் கூடவில்லை.

மத்திய தரைக் கடலில் நேச நாட்டு நீர் மூழ்கி கப்பல்களும், அச்சு நாட்டு நீர் மூழ்கி கப்பல்களும் எந்த அளவில் வேலை செய்து வருகின்றன என்றும் புள்ளி விவரங்கள் இவற்றிலிருந்து கிடைக்கின்றன.

# ஏழைகளுக்கு அரசாங்க உதவி

## பல விடங்களிலும் தானியக் கடைகள்

ஏழை ஜனங்களின் நிலைமை பற்றி அக்கரை கொள்ள வேண்டியது—குறிப்பாக இந்த யுத்த காலத்தில் அக்கரை கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் முக்கியமான கடமைகளில் ஒன்ருகும். ஆகவே, இது சம்பந்தமான பலவித பிரச்னைகளைக் குறித்தும், இரவு பகல் என்று பாராது கடுமையாக உழைத்து வருகின்றனர். ஆனுல், சில பொறுப்பற்ற பத்திரிகைகளும், அசட்டுத் தனமாகப் பேசுகிறவர்களும் இதன் உண்மையைச் செம்மையாகத் தெரிந்து கொண்டதாகத் தோன்ற வில்லை. ஆகவே, ஏழை மக்களுக்கு அரசாங்கம் என்னென்ன வசதி செய்து கொடுத்திருக்கிற தென்றும், அந்த வசதிகள் எங்கெங்கே கிடைக்கும் என்றும், அவ்வப்போது 'யுத்த' சஞ்சிகையில் வெளி வரும். சில சமயங்களில் அரசாங்கத்தார் தானிய டிப்போக்களையும், விறகு டிப்போக்களையும், '(நியாய விலை'க் கடைகளையும் ஆரம்பித்து வெகுகால மாகியும் கூட, அவற்றைப் பற்றியோ அல்லது அவை வைத்திருக்கப்படும் இடங்களைப் பற்றியோ பலருக்குத் தெரியாம லிருக்கிறது. ஆகவேதான் இவை பற்றி அவ்வப்போது சஞ்சிகையில் வெளியிடப்படும். இதர இலாக்காக்களும், குறிப்பாகக் கூட்டுறவு இலாக்காவும் இதற்குப் பெரிதும் உதவுவதாக வாக்களித் திருக்கிறது. ஆனுல், சில குறிப்பிட்ட துறைகளில் தேசீயப் போர் முனை விசேஷ அக்கரை கொண்டிருக்கிறது. உதாரணமாக, குறைந்த விலைக்கு உணவுப் பொருள்கள் விற்கும் டிப்போக்கள், ராணுவ நன்மைக்கான விஷயங்கள், ராம தீபங்கள் முதலியன.

1943-ம் வருஷம் மார்ச்சுமீ 11உ வரை 21 ஏழைகள் தானிய டிப்போக்கள் மதுரை ஜில்லாவில் ஆரம்பிக்கப்பட் டிருக்கின்றன. இன்னும் பல டிப்போக்கள் விரைவில் ஏற்படலாம். இந்தத் திட்டம் முழுவதையும் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர்களும்,' தாசில்தார்களும் மேல் பார்வை யிடுகிருர்கள்.

இந்த டிப்போக்களுக்கு அந்தந்தப் பகுதியி லுள்ள பெரும் பணக்காரர்கள் முதல் கொடுக்கிருர்கள். அங்கங்கே உத்தியோகப் பற்றில்லாதவர்களைக் கொண்ட கமிட்டிகள் ஏற்பட் டிருக்கின்றன. இந்தக் கமிட்டியார் தானியங்களை விலைக்கு வாங்கி, கடை விலையை விடக் குறைவான விலைக்கே ஏழை மக்களுக்கு விற்கிருர்கள். சில சமயங்களில் கொள் முதல் விலையை விட விற்பனை விலை குறைவது முண்டு. இதனுல் நேரும் நஷ்டத்தைப் பொதுஜனங்கள் ஈடு செய்து கொடுக்கிருர்கள். எல்லா டிப்போக்களும் திருப்திகரமாக வேலை செய்கின்றன. மேலும், பல விடங்களில் இப்படிப்பட்ட டிப்போக்களை ஆரம்பிக்க வேண்டு மென்று பொதுஜனங்கள் கோருகிருர்கள். தங்கள் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது பற்றிப் பொதுவாக ஜனங்கள் சந்தோஷப் படுகின்றனர்.

இந்த டிப்போக்களில் குறைந்த விலைக்கு, தானியங்கள் விற்கப்படுவதால், கட்டி வைத்திருந்த சரக்குகளுக்கு எங்கு விலை யில்லாது போகுமோ என்று அஞ்சி, தாங்களும் குறைந்த விலைக்கே விற்க வியாபாரிகள் முயலுகிருர்கள்.

**தென்னுற்காடு ஜில்லா :**—ஏழை மக்களுக்குப் பல வகைகளிலும் உதவுவது தான் தேசீயப் போர்முனை இயக்கத்தின் முக்கியமான தத்துவம். இந்த வேலையைச் செய்யாது போகுமானுல், அது இருப்பதும் ஒன்று தான், அழிவதும் ஒன்று தான். ஆகவே, உணவுப் பிரச்னையைத் தீர்க்க அது வெகுவாக முனைந்திருக்கிறது. இதனுல் யாருக்கும் பாதகம் நேரிடக் கூடாது ; அதிகமாகப் பயிர்களைச் சாகுபடிச் செய்யும்படி விவசாயிகள் தூண்டப்படுகிருர்கள். பெரிய மிராசுதார்கள் தான்யங்களை ஏராளமாகக் கட்டி வைக்க வேண்டா மென்று கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள். "குறைந்த விலை உணவுப் பொருள் டிப்போக்களை" ஆரம்பித்து இங்கே ஏழைகளுக்கு உணவுப் பொருள்களை விற்க ஏற்பாடு செய்யும் பொருட்டு நிதிகள் திரட்ட பாங்கர்கள் இடத்திலும், பரோபகாரிகளான கனவான்களிடத்திலும் தொகைகள் கேட்டுக் கொண்ட போது, மிகப் பெருந் தன்மையோடு உதவினுர்கள். பல விடங்களில் இந்த டிப்போக்கள் ஆரம்பமாயின. உணவுப் பொருள் பஞ்சம் என்னும் சத்தம் அடங்கி விட்டது. இதனுல் வியாபாரிகளுக்கோ, விவசாயிகளுக்கோ எந்த விதமான பாதகமும் ஏற்படவில்லை. நாடு முழுதும் திருப்தியே ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஜில்லாவி லிருந்து அடுத்த ஜில்லாவிற்குத் தான்யங்கள் ஏற்றுமதி செய்வது பற்றித் தடைகள் விதிக்கப் பட்டிருப்பதால் விலைகள் உயராமல் இருக்கின்றன. இதன் பயனுகத், தேசீயப் போர் முனையின் நல்ல பெயர் முன்னுக்கு வந்திருக்கிறது.

**வடஆற்காடு ஜில்லா :**—நான் ஒரு கிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்குப் போயிருந்தேன். அங்கே ஒரு கிழவர் என்னிடம் வந்தார். அவர் "(1876 முதல் 1877) தாது வருஷப் பஞ்சத்தில் கூட ரூபாய்க்கு 4 படி அரிசி விற்றதே, இப்போது 2 படி தான் விற்கிறது. ஜனங்கள் எப்படி வாழ முடியும் ?" என்று கேட்டார். இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லு முன்னதாக, வேருெரு கேள்வியை நான் அவரைக் கேட்க வேண்டியதாயிற்று. "ஐயா, தாது வருஷத்துப் பஞ்சகாலத்தில் நூற்றுக் கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும் மக்கள் பட்டினியால் மாண்டார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன், அது உண்மைதானு ?" என்று கேட்டேன். "ஆமாம்" என்று உடனே பதில் அளித்தார் அவர். "இப்போதும் ஜனங்கள் அது போல் சாவதை நீங்கள் பார்த்தீர்களா" என்று கேட்டேன். "இல்லை, ஆனுல் சமீபத்தில் வாந்தி பேதியால் அனேகர் மாண்டு போயினர்" என்று பதில் கூறிப் பேச்சின் போக்கை மாற்ற முயற்சித்தார். இதை இங்கே என் குறிப்பிடுகிறேன் என்ருல், ஏழைகள் இந்தக் கஷ்ட காலத்தில் அவஸ்தைப் படவில்லை யென்று காட்டுவதற்காக வல்ல. ஆனுல், விலைவாசிகள் உயர்வதற்கு அரசாங்கத்தார் தான் காரணம் என்று பழி கூறுவதைத் தடுக்கத் தான். இந்த விலைவாசிகள் உயர்வதற்குக் காரணம், அளவுக்கு மீறி சேமித்து வைத்துக் கொண்டவர்கள் தான் என்று மெய்ப்பிப்பதற்கும், நிலைமையைச் சமாளிக்க அரசாங்கத்தார் முயற்சிக்கின்ருர்க ளென்று எடுத்துக் காட்டவுந் தான் இதை இங்கே குறிப்பிடுகிருேம்.

இந்த ஜில்லாவில் பர்மா ஸ்டோர் மார்க்கெட்டிலும், ஜட்கா ஸ்டாண்டிற்குப் பக்கத்திலுமுள்ள குமாரசாமி முதலியார் சத்திரத்திலும் ஏழைகள் டிப்போ ஆரம்பித்திருக்கிறது. பர்மா ஸ்டோர் மார்க்கட்டில் ரூபாய்க்கு $2\frac{5}{8}$ படி வீதம் மட்ட அரிசி மகா ஏழைகளுக்கு விற்கப்படுகிறது. சத்திரத்தில் ரூபாய்க்கு $2\frac{1}{4}$ படி வீதம் நல்ல அரிசி விற்கப்படுகிறது. இது போன்ற பல டிப்போக்கள் குடியாத்தத்தைச் சேர்ந்த சந்தைப் பேட்டையிலும், ஆரணி ராமகிருஷ்ண முதலியார் கடையிலும், திருப்பத்தூரிலும்; நிமிலி கிராமத்திலும், சோழிங்கரிலும், ஆற்காட்டிலும், போளூரிலும், திருவண்ணுமலையிலும், பெருங்காட்டூரிலும், தென் கழனி கிராமத்திலும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.



# அதுவேறே காலம் ; இதுவேறே காலம் !

"அதென்னமோ, அம்மாமி முந்திப்போலே இல்லே இப்போ !" என்ருராம் ஒருவர். "அதெப்படி ஐயா இருப்பாளவள் ? முந்தி என்ருல், உடம்பிலே சரியான வலு இருந்தது. இருநூறு குடம் ஜலம் என்ருலும் அலக்ஷியமாக இடுப்பிலே சுமந்து கொண்டு வந்து கொட்டிக்கொண்டிருந்தாள். அக்கம்பக்கத்திலே ஏதாவது சண்டை என்ருல், நானுச்சு என்று கச்சம் கட்டிக் கொண்டு, கிளம்பிக் கொண்டிருந்தாள். காலையிலே எழுந்தால், ராத்திரி பத்துமணி வரை பம்பரமா சுற்றிக் கொண்டிருந்தாள். அதெல்லாம் இப்போ முடியுமா ? எத்தனையோ கஷ்டங்கள், நோய்கள், முந்தி இருந்த சக்தியிலே பாதிகூட இல்லையே இப்போ, அப்படியிருக்கிறப்போ ; அம்மாமியாலே என்ன செய்யமுடியும் ? இது தெரியாமே, அம்மாமி முந்தி மாதிரி இல்லேன்னு, எப்படி ஐயா ? பழைய நிலைமையை நினைத்துக் கொண்டு, பேசலாமா ? அதொரு காலம், இதொரு காலம்" என்ருராம் இன்னொருவர்.

இவர்கள் இவ்வாறு அம்மாமியைப் பற்றிய பேச்சு நமக்கு என் ஞாபகம் வந்தது தெரியுமோ ? அச்சு நாட்டுப் புலிகள் இருக்கு பாருங்கள், அவர்களின் தற்போதைய நிலைமையைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தோம். சட்டென, மேற்கண்ட இருவர் பேசிக்கொண்டிருந்தது நினைவிற்கு வந்தது.

யுத்த ஆரம்பத்திலே அச்சு நாட்டார் இருந்த ஜோர் என்ன ; இன்று அவர்களுக்கிருக்கும் திறமை என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தால், அந்தக் காலத்தில் அட்டகாசம் செய்துகொண்டிருந்த அம்மாமிக்கும், அவஸ்தைகள் பட்டு, தேகம் தளர்ந்து கிடக்கும் அம்மாமிக்கும் உள்ள வித்தியாசங்களே இருப்பதைக் காணலாம்.

யுத்த ஆரம்பத்திலே, ஜெர்மனிக்கிருந்த விமான பலத்திற்கும், டாங்கி பலத்திற்கும், இந்த உலகத்திலே ஈடே இல்லாதிருந்தது. ஜெர்மானியப் படையினர் முன்னேறுகிருர்கள் என்ருல், அவர்களின் வேகத்தைக் கண்டு புயலும் வெட்கப்படும் என்று வர்ணித்து வந்தார்கள். ஜெர்மனியின் விமானப் படை லண்டன் நகரையே தூளாக்கிவிட்டது. அந்த விமானப் படையின் சக்தியைக் கண்டு அஞ்சியே, அந்தக் காலத்திலே, சீமையிலிருந்து லக்ஷக் கணக்கிலே குழந்தைகளை, மகா கொடிய அட்லாண்டிக் கடலைக் கடந்து செல்லச் செய்து, அமெரிக்காவில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அவ்வாறு சென்ற குழந்தைகளை ஏற்றிக்கொண்ட தொரு கப்பலைக்கூட, ஈவிரக்கமற்ற நாஸி நீர்மூழ்கி ஒன்று பலியாகக் கொண்டுவிட்டது. பல குழந்தைகள் தெய்வாதீனமாக உயிர் தப்பின. மற்றவை நீரில் மூழ்கி மடிந்தன. இந்த கோர சம்பவத்தை நினைத்தாலும் ரத்தம் கொதிக்குமே !

### ஹிட்லர் மண்டை கனத்தது

எந்த நிமிஷத்திலே நாஸி விமானங்கள் வரப் போகின்றனவோ என்று நடுங்கிக் கொண்டிருந்த காலம் அது. நூற்றுக் கணக்கிலே அவை இங்கிலாந்துமீது பறந்துகொண்டிருந்தன. டங்கர்க்கிலேயிருந்து, தப்பினுல் போதும் என்று ஓடிக்கொண்டிருந்த நேசதேசப் படைகளை நாஸி விமானப் படை என்னபாடு படுத்திவிட்டது. இந்தப் படையும், டாங்கிப் படையும் ஒன்று கூடி, அதி சீக்கிரத்திலேயே ஹிட்லரின் மண்டையைக் கனக்க வைத்துவிட்டன. ஐரோப்பா முழுதுமே அவரது தனிக் குடைக்கீழ் வந்தது போலாகி விட்டபின், அவரது மண்டை கனப்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது ?

இது காரணமாகவே, ஹிட்லர் ருஷ்யா மீதும் பாயத் துணிந்தார், அது ஒரு காலம். அந்தக் காலக் கோளாறு காரணமாகத் தான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய இரண்டோடும் சேர்ந்து கொண்ட ஜப்பானும் தன்னைவிட எல்லா வகைகளிலும் பெரிய கையான அமெரிக்காவை விரோதித்துக்கொண்டு, அது காரணமாக நேச தேசங்களுக்கே விரோதியாயிற்று.

ஜப்பானுக்கும், அது யுத்தத்தி லிறங்கிய சமயத்திலே நல்ல பலம் தானிருந்தது. எதிர்ப்பும் பிரமாதமாக இல்லை. ஐயா, ஒரு ரஸ்தாவிலே திருட்டுப் பயம் உண்டு என்று தெரிந்தால் தானே, தகுந்த பாதுகாப்போடு புறப்படுவோம். நேற்று வரை எத்தகைய பயமும் இல்லாதிருந்த பிரதேசத்திலே, திடீர் என, நேற்றுவரை பரம சாதுக்கள் போல இருந்த பயல்கள், திருடர்களாக மாறி, வழிப்பறி வேலையில் இறங்குகிருர்கள் என்ருல், அதுகாரணமாக நாம் கொஞ்சம் நஷ்டப்பட்டுத் தானே ஆகவேண்டும். அப்புறம் இருக்கவே இருக்கு ! நம்மைத் தாக்கியவர்களைப் பற்றிய அடையாளத்தைச் சொல்லுகிருேம். பிறகு, போலீஸ்காரர்கள் புறப்படுகிருர்கள். பகிரங்கமாகவும், ரகசியமாகவும் விசாரணை நடக்கிறது. திருடன் அகப்படுகிருன். 'செமித்தியாக' தீட்டுகிருர்கள். பிறகு, அந்தப் பிரதேசத்திலே நிரந்தரமாக காவல் ஏற்படுகிறது.

அதே போல, நேற்று வரை, காசு கொடுத்து வாங்கி; இந்தப்புறம் திரும்பி, 'புஉஉஉ' என்று ஊதினதும், புஸ் என்று பருத்து, 'டப்' என்று வெடித்து உபயோகமில்லாது போகும் ரப்பர் பலூன்களையும், 'ஸெலுலாயிட்' பொம்மைகளையும், ஒரு தரம் சீவினுல் முக்கால்வாசி பட், பட் என்று ஒடிந்துபோகும் பென்ஸில்களையும் தயாரித்துக் கொண்டிருக்கும் வியாபாரக் கூட்டத்தினரைப் போலிருந்த ஜப்பானியர் திடுதிப்பென்று போர்க்கோலம் பூண்டார்கள். பாதுகாப்பற்றிருந்த மலேயா, சிங்கப்பூர், பர்மா பிரதேசங்களையும், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளையும், பிலிப்பைன்ஸ் தீவுகளையும் கைப்பற்றிக்கொண்டு, சாலமன் தீவுகளிலும், நியூ கினியா பிரதேசங்களிலும் கால் வைத்து, ஆஸ்திரேலியர்களைப் பார்த்து, 'என்னுங்க ? என்ன சொல்றீங்க ?" என்று கேட்கலானுர்கள். அது ஒரு காலம்.

### ஜப்பானியர் மூக்கு ஒடிந்தது

ஆனுல், இப்பொழுதுள்ளது வேறேகாலம். ஜப்பானியருக்கு, அதற்கப்பால் நல்ல உதை கொடுக்கப்பட்டது. அமெரிக்காவிலிருந்து வந்த படைகளும், ஆஸ்திரேலியப் படைகளும், சேர்ந்து, ஜப்பானியரின் மூக்கை உடைத்து விட்டார்கள். ஏற்கெனவேயே சப்பையாக உள்ள மூக்கு ; இப்பொழுது உடைந்து வேறே போய்விட்டது. என்ன அலங்கோலம் பாருங்கள் !

ஜப்பானியரது முன்னேற்றத்திற்கு, சென்ற பல மாதங்களாக முற்றுப் புள்ளி குத்தப்பட்டிருக்கிறது. இதற்கிடையிலே, எத்தனையோ ஜப்பானியக் கப்பல்கள் ஜலத்திற்கடியிலே போயிருக்கின்றன. பஸிபிக் பிரதேசத்தைப் பாரா பார்க்கும் அமெரிக்க நீர்மூழ்கிகள் ஒண்ணேகால் லக்ஷம் டன் எடையுள்ள ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றன. இதற்காக, பத்து அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்தலைவர்களுக்கு பாராட்டுதல்களும், பதக்கங்களும் கிடைத்தன.

ஜப்பானியர் எங்கும் முன்னேற முடியாதது ஒரு புறமிருக்க, தாங்கள் விழுங்கிய பிரதேசங்களை நேசதேசத்தார் மண்டையிலடித்துப் பிடுங்காதிருக்க வழி தேடுவதிலேயே முனைந்திருக்கிருர்கள்.

பர்மாவிலே அவர்களுக்கு ஓய்வு ஒழிவே இல்லாதிருக்கிறது. நம்மவர்கள் அரக்கான் மலைப் பிரதேசத்திலே புகுந்து, ஜப்பானியருக்குத் தொல்லையை விளைவித்தார்கள். ஆனுல், நம்மவர்கள் தற்சமயம் பின்வாங்க நேர்ந்துவிட்டது என்பது உண்மை தான். ஆயினும், நம்மவர்களுக்கு ஒரு நல்ல அநுபவம் ஏற்பட்டுவிட்டது.

### ஜப்பானியர் எண்ணத்தில் மண் விழுந்தது

மழை காலம் நெருங்கிவிட்டது அங்கே. இனி அங்கே பெருவாரியாக எத்தகைய ஏற்பாடுகளும் செய்வதற்கில்லை. ஆனுல் ஒன்று. சென்ற வருடம் இருந்த நிலைமையைப் பார்த்தால், ஜப்பானியர் இந்தியா மீது படையெடுத்து விடுவார்கள் போல்தானிருந்தது. நமது படைகள் பர்மாவில் புகுந்து, ஒரு போடு போட்டுவிட்டு வந்திருக்கின்றன. பருவகாலமும் மாறிவிட்டது. ஆகவே, இந்தியா மீது படையெடுக்க வேண்டு மென்றிருந்த ஜப்பானியரது எண்ணத்திலே நம்மவர்கள் மண்ணைப் போட்டார்களா இல்லையா ? அதுமட்டு மல்ல. ரங்கூன் மீதும், மற்று

முள்ள முக்யமான இடங்கள் மீதிலும், ஐராவதி நதியிலிருந்த கப்பல்கள், படகுகள் மீதிலும் குண்டுகளையும் போட்டு வைத்திருக்கிறார்கள் அமெரிக்க, பிரிட்டிஷ் இந்திய விமானிகள்.

பஞ்சாபிப் படையினர் மட்டுமே போதுமே, ஜப்பானியர் மனதிலே கலக்கத்தை உண்டுபண்ண. சமீபத்திலே அரக்கான் பிரதேசத்திலே நடந்ததோர் சண்டையிலே, பஞ்சாபிப் படையினர், கத்தி முனை போன்றுள்ள பாறைகளிலே சில இடங்களில் மூங்கில் ஏணிகளின் உதவியைக் கொண்டும் ஏறி, ஜப்பானியரைத் திணற அடித்து விட்டார்கள்.

இது ஒரு புறமிருக்க, ஜப்பானியர் இப்பொழுது ஆஸ்திரேலியாவை அதிகம் கவனிக்கத் தொடங்கியிருக்கிறுப் போலிருக்கிறது. சென்ற வாரம் டார்வின் துறைமுகத்தை ஐம்பத்தோரு ஜப்பானிய விமானங்கள் கடுமையாகத் தாக்கினவாம். அதிலே பதின்மூன்று விமானங்கள் பலியாயினவாம். நேச தேசத்தாருக்கு அதிக விமானச் சேதமாம்.

ஆஸ்திரேலியாவிற்குக் கிழக்கிலே, திடீரென ஜப்பானிய நீர்மூழ்கிகள் வாலை ஆட்டத் தொடங்கி விட்டனவாம். இதிலிருந்து, ஜப்பானியர் சும்மா இருக்கப் போவதாகத் தோன்றவில்லை. ஆஸ்திரேலியாவிற்கு வடக்கே, நூற்றுக் கணக்கிலே விமானக் கூடங்களை அவர்கள் அமைத்திருக்கிறார்களாம். ஆஸ்திரேலியாவை உபயோகப் படுத்திக் கொண்டு தங்களை நேசதேசத்தார் உபத்திரவப் படுத்தப் போகிறார்களே என்ற பீதியிலே, ஆஸ்திரேலியாவிற்கு வரும் பாதைகளைத் துண்டிக்கப் பார்க்கிறார்கள் போலிருக்கிறது ஜப்பானியர். அவர்கள் என்ன முயற்சிகள் வேண்டுமானாலும் செய்யட்டும். முன்போல, அல்வா சாப்பிடுவதுபோல, இனி வெற்றி காண முடியாது என்பது மட்டும் நிச்சயம். அது ஒரு காலம்; இது வேறே காலம்.

## கதை மாறிவிட்டது

ஜெர்மனி விஷயத்திலும் இது உண்மை தான். முன்பு வெற்றி மேல் வெற்றியாகக் குவித்துக்கொண்டிருந்த ஜெர்மனிக்கு, இப்பொழுது தொடர்ந்து தோல்விகளே வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன.

சென்ற இரண்டு தடவைகளில், வசந்த காலம் வந்தால் ஜெர்மானியரே ருஷ்யாவிலே முன்னேறித் தாக்குவதாக இருந்தது. ஆனால் இவ்வருஷமோ கதை மாறிவிட்டது. இரு கட்சியாரும் இப்பொழுது முன்னேறித் தாக்க பரபரப்புடன் ஏற்பாடுகள் செய்து வருகிறார்களாம். ருஷ்யர்கள் தென் ருஷ்யாவிலே, ஏராளமான படைகளைச் சேமித்து வைத்திருக்கிறார்களாம். முன்பிருந்த படைகளிலே நாலில் ஒரு பங்கு தான் நாஜிகளிடம் புதுத் தாக்குதலுக் கென்று இருக்கிறது. க்யூபான் பிரதேசத்திலே நாஜிப்படைகள் கஜகர்ணம் போடுகின்றன. ஆனாலும் ருஷ்யப் படைகளின் பிடிவாதமான முன்னேற்றத்தை தடுக்க அவற்றால் முடியவில்லை. அடுத்த மாதத்திற்குள் ருஷ்யாவிலே பெரிய போர்களை எதிர்ப்பார்க்கலாம். இது வரை எட்டரை லக்ஷம் பேர்களை ருஷ்ய அரங்கத்திலே இழந்தாயிற்று. இன்னும் எத்தனை பேர்கள் பலியாகக் காத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

ருஷ்யப் போர் நிலைமை இப்படியிருக்க, ட்யூனிஷியாவிலே, அச்சு நாட்டினர் அட்டைபோல் ஒட்டிக் கொண்டு, லேசில் விடமாட்டேன் என்கிறார்கள். பல ஆயிரக் கணக்கான மைல் நீளம் பரந்துள்ள பிரதேசங்கள் அவர்கள் கைவசமிருந்த காலம் போய், ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு 125 மைல்களே உள்ள காலம் வந்திருக்கிறது இப்பொழுது. மூன்று திசைகளி லிருந்து நேச தேசப் படைகள் முன்னேறிக் கொண்டே இருக்கிறார்கள். பிஸர்டா, ட்யூனிஸ் ஆகிய இரு பெரிய நகரங்கள் தான் அச்சு நாட்டாரிட மிருக்கின்றன. இந்நகரங்களுக்கும் நேச தேசப் படைகளுக்கும் இடையே 22 மைல்களே இருக்கின்றன. ஒவ்வொரு மலை உச்சியாக நேச தேசப் படைகள் கைப்பற்றி வருகின்றன. ஒரு மலை உச்சியிலே நேச தேசப் படைகள் இருந்தன. அச்சு நாட்டார் வெகு தீவிரமாக எதிர்த்துக் கொண்டே அம்மலை உச்சியை அணுகினார்கள். ஆனால் அங்கே யிருந்த படையினர் துப்பாக்கி முனையில் உள்ள சனியனகளைக்கொண்டு தாக்கி, அவர்களைச் சிதற அடித்து விட்டார்கள்.

## சிறிது மந்தம் ஏற்படலாம்

ட்யூனிஷியாவை விட்டு அச்சுப் படைகள் ஓட்டம் பிடிக்க யோசிக்கவில்லை போலிருக்கிறது. மேலும் மேலும் டாங்கிப் படைகள் அங்கு குவிக்கப்படுகின்றனவாம். அதோடு, நஷ்டத்தைப் பொருட்படுத்தாது, அச்சு நாட்டார் வெகு கோரமாக நேச தேசத்தாரைப் பதிலுக்குத் தாக்கி வருகிறார்கள். இரு கட்சியாரும் சண்டை போட்டு, தளர்ந்து போயிருக்கிறார்கள். வான நிலையில் வேறே கோளாறு ஏற்பட்டுவிட்டது. ஆகவே, யுத்த நிலைமையிலும் சிறிது மந்தம் ஏற்படலாம். எப்படியாவது, இந்த வசந்த காலத்திலே, ஐரோப்பாவிலே நேச தேசத்தார் தமது கவனத்தைச் செலுத்த இடங் கொடுக்கக் கூடாது எனும் நோக்கத்துடனேயே, அச்சு நாட்டார் ஆப்பிரிக்கச் சண்டையை இழுத்துப் பறிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

இதுவரை அச்சு நாட்டாரது கப்பல்களிலே 204 கப்பல்களை மத்யதரைக் கடலிலே பிரிட்டிஷ் நீர்மூழ்கிகள் மூழ்கடித்திருக்கின்றன. ஏப்ரல் மாதத்திலே அச்சு நாட்டாருக்கு 873 விமானங்கள் சேதமாகியிருக்கின்றன. நம்மவர்களுக்கு 566 நாசமாயிருக்கின்றன. ஆனால் அமெரிக்காவும், பிரிட்டனும் தடை எதுமில்லாது பதினாயிரக் கணக்கில் புது விமானங்களைச் சிருஷ்டித்து வருகின்றன. ஜெர்மனியோ தனது உச்ச நிலையை அடைந்துவிட்டு, இப்பொழுது இறங்கு போகத்தைப் பெற்றிருக்கிறது. ஜெர்மனியின் கைவசமுள்ள தொழிற்சாலைகளை பிரிட்டிஷ் விமானிகள் நாசமாக்கி வருகிறார்கள். ட்யூஸ்பர்க் என்றொரு எஞ்சின் உற்பத்திசாலை மீது, நிமிஷத்திற்கு 30 டன் வீதம் பிரிட்டிஷ் விமானிகள் குண்டுகளை வீசினார்களாம்.

முன்பெல்லாம், தமது படைகளைப்பற்றிப் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்த ஹிட்லரும், அவரது சீடப் பிள்ளைகளும் இன்று தமது போறாத காலத்தைப் பற்றிப் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். 'ப்ளிட்ஸ்கிரீக்' (மின்னல் தாக்குதல்) பேச்செல்லாம் மின்னலெனவே மறைந்துவிட்டது. தலை பிழைத்தால் போதும் என்றிருக்கிறது பிழைப்பு.

ஹிட்லரின் நம்பிக்கையெல்லாம் முன்பு, விமானங்கள் மீதும், தமது புயற்படைகள் டாங்கிப் படைகள் மீதும் இருந்தது. இப்பொழுது அவருக்குள்ள நம்பிக்கை யெல்லாம் அவரது நீர்மூழ்கிப் படைமீது தான்.

அப்படை செய்யும் வேலை, அவருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கலாம். சென்ற வருஷத்திலே கட்டினதைவிட 10 லக்ஷம் டன் அதிகமாகவே சேதமடைந்திருக்கிறது நேசதேசத்தாருக்கு. இன்னும் நீர்மூழ்கிகளின் தொல்லை இருந்து கொண்டு தானிருக்கிறது.

ஆனால், இவற்றை ஒடுக்க, தீவிரமாகத் திட்டங்கள் போடத் தான் செய்கிறார்கள் அமெரிக்காவிலே. மைலுக்கு மைல் பாதுகாப்பளிக்கத் திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். இன்னும் ஆறு மாதங்களுக்கப்பால் பாருங்களேன்! ஆர்.ஏ.எப். விமானிகள் பால்டிக் பிரதேசத்திலே, ஜெர்மானியக் கடல்களில் சுரங்க வெடிகளை ஏராளமாகப் போட்டுவருகிறார்கள். ட்யூனிஷியப் போர் முடிந்ததும், ஜெர்மனிக்கு இன்னும் அவஸ்தை அதிகமாகும்.

## எதிரிகளின் தோலை உரித்து விடுவோம்

'இது என்ன எழவு, இந்த யுத்தம் இப்படி இழுத்துக்கொண்டே போகிறதே! சட், புட் என்று முடிக்க மாட்டேன் என்கிறார்களே நம்மவர்கள்' என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் ருஷ்யத் தலைவரான ஸ்டாலின் கூறியது போல், இந்த யுத்தத்திலே காலத்தைக் கணக்கிட்டுப் பிரயோசனமே இல்லை. வெற்றி, மெதுவாகத் தான் வரும் நமக்கு. ஆனால் அது வருவது நிச்சயம். அச்சு நாட்டார் நிபந்தனையின்றிச் சரண் அடையும் வரை நேச தேசத்தார் விடப் போவதில்லை. இந்த பாஸிஸ்ட் மிருகத்தின் தோலை உரித்தே தீருவோம் என ருஷ்யப் படைகள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றன. ருஷ்யர்கள் நினைத்ததைச் செய்தே முடிப்பார்கள் என்பதில் இனியும் உங்களுக்குச் சந்தேகமா?




# தேசியப் போர் முனை
# ராம தீபம்




படுக்கையறை விளக்கு அணா 9
படுக்கையறை லாந்தர் ரூ. 1
கை விளக்கு அணா 2

குறிப்பு:

3 அவுன்ஸ் கடலை எண்ணெய் விலை 1 அணா. இது 21 மணி நேரம் எரியும். ஆகவே, தினந்தோறும் 3 மணி நேரம் விளக்கேரித்தால் சுமார் 5 அணா எண்ணெயைக்கொண்டு ஏழைகள் ஒரு மாதம் முழுதும் விளக்கேரிக்கலாம்.

ஸ்ரீபாத நரசிம்மா பிரதர்ஸ்,
காக்கினடா

## தாவர எண்ணெயை எரியுங்கள்

## யுத்தத்திற்காக மண்ணெண்ணெயை மிச்சப்படுத்துங்கள்!

**ராம தீபம்:**—புதிய முறையில் தாவர எண்ணெய்யாவது, மண்ணெண்ணெயையாவது கொண்டு எரிக்கத் தக்கபடித் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதன் அமைப்பு மிகவும் இலகுவானது. அதைக் கையாளுவதும் சுலபம். இது வரை தயாரிக்கப்பட்ட தாவர எண்ணெய் விளக்குகளில் ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு எண்ணெய்க் கோப்பைகள் இருக்கின்றன. இவை இரண்டிற்கும் இடையே ஒரு குழாய் இருக்கிறது. மேலே யிருக்கும் கோப்பையி லிருந்து குழாய் வழியாகக் கீழே யிருக்கும் கோப்பைக்கு எண்ணெய் இறங்குகிறது. பிறகு திரிக்குப் போகிறது. இந்த விளக்குகளில் மண்ணெண்ணெயை ஊற்றி எரிக்க முடியாது.

இந்த இரண்டு வகை எண்ணெய்களையுங் கொண்டு ராம தீபத்தை எரிக்கலாம். ஆகவே, இதை வாங்குகிறவர்களுக்கு இதனால் நஷ்டம் உண்டாகாது. மீண்டும் மண்ணெண்ணெயைப் பொதுவாக எல்லோரும் உபயோகிக்கத் தொடங்கினாலும், அப்போதும் இது பயன்படும். பல வகைத் தேவைகளுக்கும் வெளிச்சந் தரத்தக்கபடி இது அமைக்கப்பட்டிருக்கிறது. (ஹரிகேன் விளக்கு, மேசை விளக்கு, ரயில்வே பிளாட்பாரம் விளக்கு, படுக்கையறை விளக்கு, புட்டி அல்லது கை விளக்கு.)

ராம தீபங்களை வாங்க ஏழைகளால் முடியாது. ஆகவே இதில் கொஞ்ச விலையுள்ள படுக்கையறை லாந்தர், படுக்கையறை விளக்கு, படுக்கை விளக்கு, கைவிளக்கு ஆகியவற்றைத் தயாரிக்கும்படி கிழக்குக் கோதாவரி ஜில்லாவைச் சேர்ந்த தவளேஸ்வர ராம தீபம் ஓர்க்ஸ்ஸாரோடு சென்னை தேசியப் போர் முனையார் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு விளக்கிலும் தேசியப் போர்முனைச் சின்னத்தின் முத்திரை யிருக்கும். சில்லரையில், இவற்றின் விலை: படுக்கையறை லாந்தர் விலை ரூ. 1, படுக்கையறை விளக்கு அணா 9, கைவிளக்கு அணா 2.

இலகுவில் விளக்கெரிக்கும் வசதி மட்டும் இருந்தால் கிராமவாசிகளுக்குப் போதாது. எரிக்க எண்ணெய் கிடைக்குமா என்பது பற்றியும், அதன் விலையைக் குறித்தும் நாம் ஆலோசிக்க வேண்டும். இந்த நோக்கத்தோடு பலவித தாவர எண்ணெய்களை இந்த விளக்கில் விட்டு எரித்துப் பரீட்சித்தோம். படுக்கையறை லாந்தர் எண்ணெய்க் கோப்பையில் 3 அவுன்ஸ் எண்ணெய் பிடிக்கும். அதில் பலவகை எண்ணெய்களை ஊற்றி எரித்ததில் கீழ்க்கண்டவாறு எரிந்தன:—

| | | |
|---|---|---|
| 3 அவுன்ஸ் | கடலை எண்ணெய் | 21 மணி |
| ,, | புங்க எண்ணெய் | 20 ,, |
| ,, | வேப்ப எண்ணெய் | 24 ,, |
| ,, | இலுப்பை எண்ணெய் | 20 ,, |
| ,, | புகையிலை விதை எண்ணெய் | 21 ,, |
| ,, | கால் பங்கு கடுகு எண்ணெய் கலந்த கடலை எண்ணெய் | 25 ,, |

மழை காலத்தில் இலுப்பை எண்ணெய் உறைந்து விடுகிறபடியால் அதைக் கொண்டு விளக்கெரிக்க முடியாது.

வேப்ப எண்ணெய் வெகு நேரம் எரிகிறது. இது ஒரு வீசை 1 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும், நாள் தோறும் 3 அல்லது 4 மணி நேரம் எரிந்தால் ஒரு வாரத்திற்கு 1 அணா எண்ணெய் செலவாகும். ஒரு மாதத்திற்கு 4 அணா எண்ணெய் பிடிக்கும்.

முற்கூறிய எண்ணெய்களைக் கொண்டு ராம தீபங்கள், தொடர்ச்சியாக, திரியை உயர்த்த வேண்டிய அவசிய மில்லாதபடி 8 மணி நேரம் எரியும். துளி எண்ணெய் இருக்கிற வரை விளக்கு எரிகிறது.

தென்னிந்தியாவிலுள்ள மக்கள் தம் ஊர்களில் கிடைக்கக் கூடிய தாவர எண்ணெயைக் கொண்டு விளக்கெரித்து, மிகவும் இன்றியமையாத காரியங்களுக்குத் தேவையான மண்ணெண்ணெயை மிச்சப் படுத்துவார்கள் என்று தேசியப் போர் முனையாளர்கள் எதிர் பார்க்கிறார்கள்.

# கரையாளர்களின் அருந் தொண்டு

## தொழிலாளர்களின் போர் முயற்சி

[சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் "யுத்த முயற்சி" என்ற பேச்சுத் தொடரில், பாரிஸ்டர் எஸ். ஜி. ரங்கராமானுஜ முதலியாரவர்கள் செய்த பிரசங்கம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.]

சுமார் நான்கு வருஷங்களாய் நடந்து வரும் பூலோகப் போரில், சென்னை மாகாண மக்கள், தங்கள் கடமையை நன்கு உணர்ந்தார்கள். போருக்கு வேண்டிய பலவிதமான திட்டங்களில் ஆயிரக் கணக்காகத் திராவிட நாட்டு மக்கள் சேர்ந்திருக்கிறார்கள். தங்கள் வீரத் தன்மையையும் நாட்டு பற்றுதலையும் பேச்சளவில் காட்டுவதோடு நில்லாமல், காரிய முறையிலேயும் காட்டுவதற்கு, வீரத்துடன் முன் வந்திருக்கிறார்கள். அரசாங்கத்தாரும் அவ்வவ் வேலைக்குத் தகுந்தபடி அவர்களைப் பாகுபாடு செய்து வகைப் படுத்தி சேர்த்துக் கொண்டு, தேர்ச்சி செய்து, போரில் பல இலாக்காக்களுக்கு அனுப்பிக் கொண்டு வருகிறார்கள்.

ஆப்பிரிக்காவில் ரோமல் சேனையை விரட்டி ஒவ்வோரிடத்திலிருந்தும் துரத்திக்கொண்டு போகும் 8-வது சைனியத்தில் நமது. இந்திய வீரர்களின் தீரத்தையும், வீரத்தையும் அதிகாரிகள் மெத்தவும் கொண்டாடிப் பேசி யிருக்கிறார்கள். இதைக் கேட்கும்போது, போரில் நுழையாத மற்றவர்களுக்கும் இவ்விதமான சந்தர்ப்பம் வாய்க்க வில்லையே யென்று உள்ளம் குமுறுகின்றது.

### நம் மக்கள் நன்றி

போர்க்களத்தில் நின்று சண்டை செய்பவர்களுக்கும், கப்பற் படையில் சேர்ந்து கடலில் சண்டை செய்பவர்களுக்கும், விண் படையிற் சேர்ந்து எதிரிகளைத் தவிடு பொடி யாக்குகின்றவர்களுக்கும், நம் மக்கள் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளார்கள்.

இப்படிப் பிற நாட்டிற்குச் சென்று வெற்றிக்கொடி பிடிப்பது ஒரு வழி. உள் நாட்டி லிருந்து பகைவனை அழிப்பதற்கு வேண்டிய முயற்சியும் சூழ்ச்சியும் செய்வது மற்றொரு வழி. இவர்களுக்கும் அந்தப் பொறுப்பும் கடமையும் இல்லையா ? கட்டாயமாக உண்டு. போருக்கு ஆட்கள் சேர்ந்து விட்டால் மாத்திரம் போதுமானதா ? போருக்கு வேண்டிய பல வகை ஆயுதங்கள் பல்லாயிரக் கணக்காக வேண்டும். உணவுப் பொருள்கள் வேண்டும். உடுப்புக்கள் வேண்டும். வெடி மருந்து, குண்டு மருந்து வேண்டும். புண் பட்டவர்களுக்கு ரண வைத்தியர்களும், மருந்து வகைகளும் வேண்டும். இப்படியாக, கணக்கிட்டுச் சொல்ல முடியாத சாமான்களை, போருக்குச் செல்லாமல் ஊரில் இருப்பவர்கள், போர்க்களத்தில் இருப்பவர்களுக்கு அனுப்பிக் கொண்டே யிருக்க வேண்டுமே ! இவைகளை வேண்டிய காலத்திலும், போதிய அளவிற்கும், கொடுத்து வீரர்களின் ஊக்கம் குறைவுபடாமல், உற்சாகமும், வைராக்யமும் மேன்மேலும் அவர்களுக்குப் பெருகுவதற்கு வேண்டிய பலவித உதவிகள் தாராளமாக வழங்க வேண்டியது நமது கடமை.

### தற்காப்பு அவசியம்

அதுவு மன்றி, நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய தற்காப்புத் தன்மையும் நமக்கு வேண்டு மல்லவா ? ஜப்பான் போன்ற எதிரிகள் நம்மை கடல் மார்க்கமாகத் தாக்க வராதபடித் தடுப்பதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் நாம் செய்து கொள்ள வேண்டும். அதற்காக அரசாங்கத்தார் பல்வேறு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அந்த ஏற்பாடுகளை மக்கள் நன்றாய் அறிந்து கொள்ள வேண்டும். உணர்ந்த பிறகு அதன்படி முழு மனதுடன் நடக்க வேண்டும். தெரியாதவர்களுக்கு உண்மை விஷயங்களை விளங்க எடுத்துச் சொல்லி அவர்களையும் அதன் வழி நடக்கும்படிச் செய்ய வேண்டும்.

" முயற்சி திருவினையாக்கும்." முயற்சி வீண் போகாது. அதன் பலனைப் பாருங்கள் ! ஆப்பிரிக்காவில் துனிஷியாவில் நடக்கும் கடும் போரில், ஜெர்மன் படைத் தலைவர், தலை குனியும்படி நமது இந்தியப் படை வீரர்களும், திராவிடப் போர் வீரர்களும் போர் செய்து வருகிறார்கள் என்று மேல் நாட்டு வீரர்களே கொண்டாடுவதைக் கேட்க, நமது உள்ளம் பூரிக்க வில்லையா ! சந்தோஷம் பொங்க வில்லையா !

இந்த மகா பெரும் போரில் பங்கெடுத்துக் கொள்ளாத ஆணோ, பெண்ணோ கிடையாது. இதில் பெரும் பாகம் தொழிலாளர்களுக்குத் தான் உரியது. பலவித கருவிகள் செய்யவும், உணவுப் பொருள்கள் தயார் செய்யவும் மற்றும் பலவித உதவிகள் தொழிலாளர்களே ஆயிரக் கணக்காகவும், லக்ஷக்கணக்காகவும், ஆர்வத்துடனும், விடா முயற்சியுடனும் உழைத்துக் கொடுக்கிறார்கள். அவர்கட்கு இந்நன்னாடு என்றும் நன்றி பாராட்ட கடமை பட்டுள்ளது.

சென்னை ராஜதானி மிக நீண்ட கடற்கரை யோரம் உள்ளது. எதிரிகள் கப்பல் வழியாக வந்து நாட்டில் நுழைவதற்கு, கடற்கரை யோரமாய்ப் பல துறைமுகங்கள் உண்டு. அந்த அபாயத்தி னின்றும் நம்மைப் பாதுகாக்க வேண்டியது முக்கிய கடமைகளில் ஒன்று.

### கரையாளர் சிறப்பு

கரையோரத்தில் வாழ்பவர்களுக்குக் கரையோர், கரையாளர் என்று பெயர் வழங்குகின்றது. அவர்களுக்கு மீன் பிடிக்கும் தொழில் முக்கிய ஜீவனமாகி விட்டது. அவர்கள் திரைகட லோடியும் ஜீவனம் செய்கிறார்கள். கப்பல் பிரயாணம், கடல் பிரயாணம் அவர்களுக்குத் தலைமுறை தலைமுறையாக வழக்கத்தில் வந்திருக்கிறது. தற்காலத்தில் கப்பலில் பிரயாணம், மெத்த சௌகரியமாகச் செய்து வந்து விட்டவர்கள், டம்பமாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் கரையாளர் கூட்டத்தாரை மறந்து பேசுகிறார்கள். கட்டு மரத்திலே ஏறிக் கொண்டு ஒரு மணி நேரம் கடலில் போய்த் திரும்பி வந்து பேசினால், அப்போது தெரியும், அவர்கள் பாடு !

இவர்கள் மிக்க வலுவுள்ளவர்கள். தைரியசாலிகள். நமக்கு அவர்கள் கடலில் வெகு தூரம் சென்று உணவுப் பொருள்களைத் தேடிப் பிடித்து கொடுக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குப் படிப்பு இல்லை. பேனா பிடித்து எழுதும் உத்தியோக மில்லை. அரசாங்கத்தார் அவர்களுக்காக (Fisheries Department) மீன் இலாக்கா மூலமாய் சுமார் 40, 50 ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடங்கள் தான் வைத்திருக்கிறார்கள். மற்றபடிப் பெரும் பாலோர் நாகரிகமே அறியாதவர்கள். அதனால் அவர்களை மற்றவர்கள் மதிக்கிற தில்லை. அவர்கள் செய்யும் தொண்டு தேச பக்தியாகக் கருதப்படுவ தில்லை. அவர்கள் இக்கடும் பெரும் போரில் செய்யும் உதவி எவ்வளவு மதிப்புள்ளது என்று தெரிந்து கொள்ளுவ தில்லை. இத்தகைய ஏழை மக்களின் பேருதவியைச் சற்று உங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறேன். கவனிக்கவும்.

எதிரி கப்பல் கடலில் தூரத்திலோ நடுக் கடலிலோ வரும் போது பார்த்திருந்து, சமாசாரத்தை ஊருக்கு தெரியப்படுத்துவார்கள். இந்தச் சேவைக்கு என்ன கைம்மாறு தான் அவர்களுக்கு செய்யக் கூடாது ?

தொழிலாளர்களில் பலவித முண்டு. பெரும் பான்மை யோரைப் பற்றி நீங்கள் தெரிந்தும் கேட்டும் இருப்பீர்கள். ஆனால், ஒரு வகைத் தொழிலாளர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். அல்லது அவர்களைப் பற்றி உங்கள் மனதில் தோன்றி யிருக்காது. அவர்களை இப்போது ஞாபகப்படுத்துகிறேன். அவர்கள் தான் கடற்கரை யோரத்தில் சிறு குடிசைகளில்-' குப்பங்கள் ' என்று சொல்லப்படும் இடங்களில் வாழும்-மீன் பிடிக்கும் வகுப்பார். இவர்கள் செய்யும் தேசத் தொண்டைப் பாருங்கள்.

போரில்லாத காலத்தில் எவ்வளவோ ஜனங்களுக்குத் திரை கட லோடி உணவுப் பொருள்களைத் தேடிக் கொண்டு வந்து உதவுகிறார்கள்.

(Codliver oil) மீன் எண்ணெய் மேல் நாட்டில் இருந்து வந்து கொண்டிருந்தது. அதை, பலவித நோய்களுக்கு மருந்தாகக் கொடுக்கிறார்கள். இப்போது அந்தச் சரக்கு வருவ தில்லை. அதற்குப் பதிலாக, சுறா மீன் (Sharkliver oil) எண்ணெய் இப்போது அரசாங்கத்தார் தயார் செய்து பலவித நோய்களுக்கு மருந்தாகக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.



பலவித பயிர்களுக்கு, மீன், எருவாக உபயோகப் படுகிறது. அதனால் அரசாங்கத்தார் " உணவுப் பொருள் பெருக" என்னும் திட்டத்தைப் பயன் படுத்தும் பொருட்டு மீன் எருவை, வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதோ, அனுப்புவதோ கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். இது இவர்கள் நாட்டிற்குச் செய்யும் பெருந் தொண்டல்லவா ?

இதனால் கரையாளர்களை நாட்டிற்கு முக்கியமான தொண்டு செய்பவர்களாகக் கருத வேண்டு மல்லவா? அவர்களை நாட்டுக்குக் கண்களாக மதிக்க வேண்டும். ஏன் ? அவர்கள் அலை வீசும் கடலில் உயிரைக் கையால் பிடித்துக் கொண்டு, பெண்டாட்டி பிள்ளை



குட்டிகளையும் விட்டு விட்டு, கண்ணுக்கு எட்டாத தூரம் கட்டு மரத்தில் ஏறி நின்று கொண்டு போய், கண் குத்தி பாம்பு போல் எத்திசையும் நோக்கி, எந்தப் பக்கத்திலாவது எதிரி கப்பல் அல்லது படகு கண்ணில் படுகிறதா வென்று பார்த்துக் கொண்டு, அப்படி ஏதாவது கண்ணில் பட்டால், நமக்கு உடனே முன் ஜாக்கிரதையாக அறிக்கை யிடுவார்கள். இது எவ்வளவு முக்கியமான வேலை பார்த்தீர்களா ! இதை மதித்துத் தான் அரசாங்கத்தார், அவர்களை ' Coast guards ' அதாவது ' கடற்கரை காப்பாளர் ' என்று கூட்டு வித்து சம்பளம் கொடுத்து வேலையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன், நீங்கள் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். இராஜதானியில் ஒரு பக்கத்தில் கடற்கரை யோரத்தில் Mines என்று சொல்லப்படும் கப்பல்களையே தவிடு பொடியாக்கக்கூடிய ஒரு பெரிய கண்ணி என்று சொல்லப்படும் வெடி குண்டை கரையாளர்கள் கண்டு பிடித்து அதிகாரிகளுக்கு அறிவித்ததாகக் கண்டோம். கடலில் மிதந்து கொண்டு வரும் இம் மாதிரியான பொறி வெடித்தால், ஆயிரக் கணக்கான மக்களுக்கு உயிர்ச் சேதம் உண்டாக்கும். இவற்றைக் கண்டு பிடித்து கெடுதி செய்யா வண்ணம் தடுக்கக் கூடியவர்கள், இவர்களே !

### விசேஷ உத்தியோகஸ்தர்கள் நியமனம்

மலையாளக் கடல் கரை யோரத்திலே இவர்களை முக்குவன், வாலன் என்னும் வகுப்பைச் சேர்ந்தவர்களாகச் சொல்லுகிறார்கள். பழைய காலத்தில் இவர்களே கப்பலோட்டிகளும், படகு ஓட்டிகளுமாக இருந்தார்கள். போர் நெருக்கடியால் தற்சமயம் புகைக் கப்பல்கள் வருவ தில்லை. அதனால் அவர்களுக்குப் பலவித கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுகின்றன. அந்தக் கஷ்ட நஷ்டங்களைக் குறைக்கும் பொருட்டு இந்தியா கவர்மெண்டார் நாட்டுப் படகுகளைப் புகைக் கப்பலுக்குப் பதிலாக உபயோகிக்க வேண்டுமென்ற கருத்தினால் (Special officers) விசேஷ உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். இதனால் இவர்கள் இனி கப்பல்களை ஓட்டும் தொழிலிலும் வல்லவர்களாய்க் கடலைப் பாதுகாக்கும் தொழிலுக்கு உரிமையாளர்களாய் ஆவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால், பாவம் ! இவர்கள் ஏழைகள். படிப்பில்லாதவர்கள். தாழ்த்தப்பட்ட ஜாதியாரைச் சேர்ந்தவர்கள். இன்னமும் தாத்தா காலத்துக் கட்டு மரத்தையே கட்டிக் கொண்டு உயிரைப் பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களைப் பற்றிப் பத்திரிகைகளில் ஒன்றும் எழுதுகிற தில்லை. மற்றபடி வெளியில் கவனிப்பவர்களும் இல்லை. ஆயினும், தேருக்கு அச்சாணி முக்கியமாவது போல், நாட்டின் பாதுகாப்பிற்குக் கண் ஆகிறார்கள். முக்கியமானவர்கள் ஆகிறார்கள் என்பதை உணர்ந்து, மற்றைய தொழிலாளர்கள் இந்தப் போரில் உதவி புரிவது போலவே, இக் கட்டு மரத் தொழிலாளர்களும் உதவி புரிகிறார்கள் என்பதை யறிந்து, நாம் அவர்களை மதிப் போமாக ! மேம்படுத்துவோமாக !

# தக்காளி



**வர்ணனை.**—தண்டும், இலைகளும் மயிர் நிறைந்த ஒரு செடி. இதன் பழங்கள் சதைப்பற்று யிருக்கின்றன. உணவாகப் பெரிதும் உபயோகப்படுகின்றன.

**பரவுதல்.**—இதன் விதைகளை விலைக்கு வாங்கலாம்; அல்லது முற்றிய நெத்துக்களைத் தண்ணீரில் ஊற வைத்து அவற்றில் உள்ள விதைகளை யெடுத்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**சாகுபடி.**—பாத்திகளிலாவது, தொட்டிகளிலாவது, மண்ணை லேசாகப் போட்டு, விதையை மேலாக ஊன்றி நிழலில் வைத்திருக்க வேண்டும். 10 நாட்களில் முளை கிளம்புகிறது. பிறகு அந்தப் பாத்தியையோ அல்லது தொட்டியையோ, காலைச் சூரியன் அதன் மேல் படத் தக்கப்படி அப்புறப் படுத்த வேண்டும். 3 அல்லது 4 இலைகள் விட்ட பிறகு, இந்த முளைகளைப் பிடுங்கி நன்ருக எரு விட்ட மண் போடப்பட்ட பெரிய தொட்டிகளில் பெயர்த்து நட வேண்டும். இந்தத் தொட்டிகளில் புழுத்த சாணம் கொஞ்சமும் போட வேண்டும். திறந்த வெளிகளில் உயர்த்தப்பட்ட பாத்திகளிலும் தக்காளியைச் சாகுபடிச் செய்யலாம். இதற்கு அந்த இடம் கூடிய வரை நிழலானதாகவும், காலைச் சூரியன் அதன் மேல் படும்படியாகவு மிருக்க வேண்டும். செடிகள் ஒவ்வொன்றுக்கு மிடையே $1\frac{1}{2}$ அல்லது 2 அடி இடைவெளி யிருக்க வேண்டும். முளைகளில் வேர்களை, மண்ணைக் கொண்டு நன்ருக மூடி வைத்திருக்க வேண்டும். இதன் தண்டுகள் மிகவும் மெலிந்தவை யாதலால், அவற்றைத் தாங்குவதற்கு ஊன்று கோல்களையோ அல்லது வேலிகளையோ அல்லது பந்தல்களையோ உதவியாக அமைக்க வேண்டும். முதல் தண்டு மட்டும் வளரும்படி அனுமதிக்க வேண்டுமே ஒழிய, பக்கங்களில் கிளம்பும் முளைகளையும், இலைகள் கிளம்பினுல் அவற்றையும், கிள்ளி எறிந்து விட வேண்டும். சில பழங்கள் பழுத்த பிறகு முதல் தண்டை நிறுத்தி விட்டுப் பக்கங்களில் கிளைக்கும் முளைகளை வளரும்படி அனுமதிக்கலாம். நன்ருக எருவிட்ட மண்ணை. செடியைச் சுற்றிலும் கட்டி, கொத்திவிட்டு மாட்டுச் சாணத்தைக் கொண்ட, லேசான திராவக எருவை வாரத்திற்கு இரண்டொரு முறை உபயோகித்தால் நல்ல பலன் உண்டு. நோயான செடிகளைப் பிடுங்கி எரித்து விட வேண்டும். நன்ருக வளருகிற செடிகளுக்கு லேசாக பொட்டாசியம் பர்மாங்கனேட் என்னும் மருந்தைத் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் மஸ்லீன் துணியால் தைத்த பைகளைக் கொண்டு, புழுக்கள் அரித்து விடாத படி, பழங்களைக் காப்பாற்றலாம்.

**பருவம்.**—சம பூமிகளில் ஜூலை முதல் நவம்பர் மாதம் வரையிலும், மலைப் பிரதேசத்தில் மார்ச்சு முதல் ஜூன் மாதம் வரையிலும்.

**உபயோகங்கள்.**—பழங்களைப் பச்சையாகவும், 'சாலட்'டாகவும் சாப்பிடலாம். கறி சமைக்கவும், ஜாம்கள், பானகங்கள், ஊறுகாய்கள், சட்னிகள், சூப்புகள் முதலியவையும் செய்யப்படுகின்றன.

**உள்ளடக்கம்.**—தண்ணீர் 94 சத விகிதம், உலோகச் சத்து 0·7 சத வீதம், மாச்சத்து 1·9 சத வீதம், கொழுப்பு 0·1 சத வீதம், நார் 0·4 சத வீதம், கார்போ—ஹைட்ரேட்ஸ் 2 9 சத வீதம், ஒரு பவுண்டு கலோரிக்கு 100 சுண்ணச் சத்து 0·018 சத வீதம், மாக்னீஷியம் 0·01 சத வீதம் நிமதாக்னி 0·049 சத வீதம், இரும்புச் சத்து 0·004 சத வீதம், விட்டமின் ஏ 00 கிராம் கொண்ட ஒரு யூனிட்டுக்கு 1,700, விட்டமின் பீ 100 கிராம் கொண்ட ஒரு யூனிட்டுக்கு 36, விட்டமின் ஸி .00 கிராம் கொண்ட ஒரு யூனிட்டுக்கு 21·1.

## ரஷ்யாவின் புதிய போர் இயந்திரம்

சமீபத்தில் ஒரு புதிய வகைப் போர் இயந்திரத்தை ரஷ்யாவில் தயாரித்திருக்கிறார்கள். இவற்றைத் தயாரிக்கும் பொருட்டு ஒரு பெரிய தொழிற்சாலையை ஊரல் மலையின் தென் பகுதியில் கட்டி முடித்திருக்கிறார்கள். இதைக் கண்டு பிடித்துச் செய்தவர்களுக்கு ஸ்டாலின் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த யந்திரத்தை "**ஸ்டாலின் பரிசு பெற்ற இயந்திரம்**" என்றே தொழிலாளர்கள் கூறுகிறார்கள். மே விழாவுக்குள் செம்படைக்கு அநேக இயந்திரங்கள் போய்ச் சேர்ந்து விடும்.

சென்ற கால் வருஷத்திற்குள் எவ்வளவு பொருள்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று திட்ட மிட்டிருந்தனரோ, அவ்வளவும் பல நாட்களுக்கு முன்னதாகவே செய்து முடித்து விட்டார்கள். ஒரு விமான உற்பத்திச் சாலையில், இதற்கு முந்திய கால் வருஷத்தில் உற்பத்தி செய்யப்பட்டதை விட 100-க்கு 25 பங்கு அதிகமாக விமானங்கள் செய்து முடித்திருக்கின்றனர்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் வருடம் மே மீ 14உ, வெள்ளிக்கிழமை [இதழ் 19

## டன்கர்க் பழிக்குப் பழி



மாட்சிமை தங்கிய மன்னர்பிரான்.

"வட ஆப்பிரிக்காவில், நேச நாட்டுப் படைகளுக்கு, நீங்கள் தலைமை தாங்கி, சென்ற 6 மாதங்களாகக் கடலிலும் தரையிலும் ஆகாயத்திலும் நடைபெற்ற போராட்டங்களில் முன்னேறிக் கொண்டிருப்பதை, நான் மிகுந்த பெருமிதத்தோடு கவனித்துக் கொண்டு வருகிறேன்."



ஜெனரல் எய்சினேவர்.

"உங்களுடைய தலைமையில், பல நாடுகளிலிருந்து வந்து சேர்ந்திருக்கும் பல வகுப்பினர் அடங்கிய படைகளெல்லாம் ஒரே குடும்பம் போல் வசிக்கச் செய்திருக்கிறீர்கள். அவர்களுடைய கடமை இலகுவானதல்ல. எதிரிகள் மகா மன உறுதியோடும், கடைசி போராட்டம் என்னும் எண்ணத்தோடும் எதிர்த்து நிற்கிறார்கள். இப்போது டுனிஸ், பிசெர்ட்டா ஆகிய நகரங்களைக் கைப்பற்றி விட்டீர்கள். இத்துடன் உங்கள் போராட்டம் முடிவடைந்த தென்று சொல்லலாம். ஆப்பிரிக்காவிலுள்ள எதிரியின் கடைசி படைகள் கைப்பற்றப்படுகின்றன; அல்லது அழிக்கப்படுகின்றன. டன்கர்க் பழியைத் தீர்த்து விட்டோம்."

"உங்கள் வெற்றியைப் பற்றி, நேச நாட்டுப் படைகளின் மகா தலைவர் என்னும் முறையில் உங்களுக்கும், உங்கள் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த எல்லாப் படையினருக்கும், என் பிரஜைகள் அனைவர் சார்பாக என் மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் ஜெனரல் எய்சினேவருக்கு மே மாதம் 9-ந் தேதி அனுப்பிய செய்தி.

# மு ர சொ லி



"நேச நாடுகள் ஒவ்வொன்றும் தம் சக்திக்கு ஏற்றபடி கொடுக்க வேண்டும்; தேவைக் கேற்றபடி பெற்றுக் கொள்ள வேண்டும். இது தான் நமது மகத்தான ஒற்றுமைக்கு அடிப்படையான தத்துவம். இந்தத் தத்துவம் இப்போது வெளியாகிறது. நாஜிகள் அடியோடு அழிகிற வரையில், இந்தத் தத்துவம் வளர்ந்து கொண்டிருக்கும்."

—வைகௌண்ட் ஹலிபாக்ஸ்,
மே மாதம் 10-ம் தேதி கூறியது.

* * * * *

"யுத்த சரித்திரம் எழுதப்படும் போது, இந்த யுத்தத்தில் வெற்றி பெறும் பொருட்டு மிஸ்டர் சர்ச்சில் பல காரியங்கள் செய்தார் என்றும், அவற்றுள் ஒன்று, விஞ்ஞான ஆராய்ச்சிகள் செய்யும்படி இடை விடாது அவர் வற்புறுத்தியும் உதவியும், அவற்றின் பயனைக் கண்டு பிடிக்கப்பட்டவற்றை யுத்தத்தை நடத்துவதற்கு எப்படிப் பயன் படுத்துவது என்று தீர்மானித்தார் என்றும் எழுதப்படும்."

—காப்டன் ஆலிவர் லிட்டில்டன்,
பிரிட்டிஷ் அரசாங்க உற்பத்தி மந்திரி.

* * * * *

"பிரான்சை விட்டு ஜெர்மானியர்களை நாம் விரட்டி விடுவோம். டூனிஸையும் பிசெர்ட்டாவையும் நாம் விடுவித்தது போலவே, மார்செய்ல்ஸ், டூலான், பாரீஸ், ஸ்டரஸ்பரோ, மெட்ஸ் முதலிய நகரங்களையும் மீட்போம்."…. "பிரஞ்சுப் படை பெர்லின் வீதிகளில் நுழையும்."

—ஜெனரல் கிராக்,
அமெரிக்க 5-ம் படையின் தலைவர்,
மே மாதம் 9-ம் தேதி கூறியது.

* * * * *

"அட்லான்டிக் சமுத்திரத்தின் இரண்டு பக்கங்களிலும் இருந்து கிளம்பிய ஜெனரல் எய்சினேவரும் ஜெனரல் அலெக்சாந்தரும் பரிபூரண ஒற்றுமை யோடு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். நேச நாடுகளின் கூட்டுறவு எப்படிப்பட்டது என்பதற்கு எடுத்துக் காட்டாக இவர்கள் விளங்குகிறார்கள். இவர்களுடைய தலைமையில், மகா வீரத் தோடும் மன உறுதி யோடும் திறமை யோடும் அமெரிக்கப் படைகளும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் படைகளும் பிரஞ்சு வடாப்பிரிக்கப் படைகளும் தம் தலைவர்கள் வகுத்த திட்டப்படி போராடி வெற்றி பெற்றார்கள்."

—மேஜர் அட்லி,
பிரிட்டிஷ் டிபுடி முதல் மந்திரி காமன்ஸ் சபையில்
மே மாதம் 11-ம் தேதி கூறியது.

* * * * *

"வட அப்பிரிக்கப் போராட்டத்தில் கடற்படையின் பெரு முயற்சியும் தான், இந்த மகத்தான வெற்றியை யளித்தது. நம் நாட்டைக் காப்பாற்ற வேண்டு மென்னும் முக்கிய மான காரணத்தால் தான், நாம் இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம். ….யுத்தம் முடிந்த பிறகு, உலகில் சமாதானத்தை நிலை நாட்டத்தக்க பலமுள்ள ஸ்தாபனமாக நேச நாடுகளின் சிநேகத்தைப் பயன் படுத்திக் கொள்ள முயல வேண்டும்."

—கர்னல் நாக்ஸ்.
அமெரிக்க கப்பற்படை மந்திரி,
மே மாதம் 11-ம் தேதி கூறியது.



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| டன்கர்க் பழிக்குப் பழி .. .. | 1 | போராடுவதில் சீனர் நோக்கங்களும் ஜப்பானியர் நோக்கங்களும் .. .. | 6 |
| படங்கள்: மன்னர் பிரான் ஜெனரல் எய்சினேவர் .. .. | 1 | பர்லினின் ருத்திராட்சப் பூனை வேஷம் .. | 7 |
| முரசொலி .. .. .. | 2 | ஹிட்லருக்குத் தெரியுமே .. .. | 9 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. | 3 | படப் போட்டிப் பரிசு: முடிவு .. .. | 11 |
| தலையங்கம்: எதிரிக்கு முழுத் தோல்வி. | 4 | மரவள்ளிக் கிழங்கு .. .. | 12 |
| பாட்டு: வட ஆப்பிரிக்காவில் சிறந்த வெற்றி .. .. .. | 5 | | |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**வியாபாரக் கப்பல்களின் நிலைமை.**

சென்ற மார்ச்சு மாதத்தில் மூழ்கடிக்கப் பட்ட நேச நாட்டு வியாபாரக் கப்பல்களில் ஒரு பாதி கூட ஏப்ரல் மாதத்தில் மூழ்கடிக்கப்பட வில்லை யென்று அமெரிக்க யுத்தச் செய்தி யிலாக்காத் தலைவரான **மிஸ்டர் எல்மர் டேவிஸ்** வெளியிட்ட செய்தியை சென்ற சனிக்கிழமை வெளி வந்த பத்திரிகைகளில் வாசகர்கள் படித்திருக்கலாம். பல லட்சக் கணக்கான டன் கப்பல்களை மூழ்கடித்து விட்டதாக ஜெர்மானியர்கள் கூறிக் கொள்வது உண்மையல்ல வென்றும், பல மடங்கு அதிகப்படுத்திக் கூறுகிறார்க ளென்றும், அவர் கூறினார். 'துணைக் கப்பல் திட்டம் நிறை வேற்றப்படுகிற வரை, ஏராளமாக, நேச நாடுகளுக்கும் நஷ்டங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கலாம். ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களால் நேரிட்ட ஆபத்துக்களைப் பற்றியும், வியாபாரக் கப்பல் நிலைமை பற்றியும் சமீபத்தில் பல அறிக்கைகள் வெளி வந்தன. ஒரு வருஷத்திற்கு முன்பு நேச நாடுகளுக்கிருந்த வியாபாரக் கப்பல் டன்களை விட, மிகவும் அதிகமாக இப்போதிருக்கிறது' என்று **மிஸ்டர் சர்ச்சில்** சமீபத்தில் கூறினார். இதை அமெரிக்கக் கப்பற் படைக் கமிஷன் தலைவரான **ரியர் அட்மிரல் லான்ட்** சென்ற ஏப்ரல் மாதம் 28-ம் தேதி எடுத்துக் கூறி, "இந்தச் சொல்லை உறுதிப் படுத்தலாம்; என்றாலும், யுத்தம் ஆரம்பமான போதும், போதுமான கப்பல்கள் நம்மிடம் இல்லை; இப்போதும் அதே நிலையில் நாம் இல்லை" என்றார். வியாபாரக் கப்பல்கள் கட்டப்படுவது பற்றிய புள்ளி விவரங்களை அவர் வெளியிட்டார்: 30 கப்பல் கூடங்களுக்கு அதிகமாகவே யிருக்கின்றன. அவற்றில் 250 கப்பல்கள் நிற்குமிடங்க ளிருக்கின்றன. இங்கே பெரிய வியாபாரக் கப்பல்கள் கட்டப்படுகின்றன. மற்ற கப்பல்கள் கட்டுமிடங்கள் ஏறக்குறைய 40 இருக்கின்றன. இங்கே தான் உதவிக் கப்பல்கள் கட்டப்படுகின்றன. இவற்றில் சில வியாபாரக் கப்பல்களாகவும், சில கடன் குத்தகைக் கப்பல்களாகவும், மற்றவை போர்க் கப்பல்களாகவும் பயன்படும். அமெரிக்காவிலுள்ள 48 நாடுகளில் இந்த கப்பற் கட்டும் தளங்கள் 21 நாடுகளில் இருக்கின்றன. அன்றியும் அமெரிக்க நாடுகளில் முக்கால் பங்கு நாடுகளில், வியாபாரக் கப்பல்கள் கட்டுவதற்கான பல சாமான்கள் ஏறக்குறைய 1000 தொழிற் சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன.

அமெரிக்காவையும், கனடாவையும் சேர்ந்த இரண்டு முக்கியஸ்தர்கள் சென்ற ஏப்ரல் மாதம் 30-ம தேதி அறிக்கைகள் விடுத்திருக்கின்றனர். இவர்களில் ஒருவர் அமெரிக்கக் கப்பற் படை மந்திரி **கர்னல் நாக்ஸ்.** சென்ற மார்ச்சு மாதத்தை விட ஏப்ரல் மாதத்தில் எதிரி நீர் மூழ்கிக கப்பல்களால் நேர்ந்த சேதம், குறைவு தான் என்று அவர் வெளியிட்டார். அதில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

"சென்ற 4 மாதங்களாக படிப்படியாக கப்பல் படையையும் ஆகாயப் படையையும் அதிகப் படுத்தி, எதிரி நீர் மூழ்கிக் கப்பல்களுடன் போராடுவதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் 4 அல்லது 6 மாதங்களில் எதிரி நீர் மூழ்கிக் கப்பல்களின் கொட்டத்தை ஒடுக்கிவிடலாம் என்று **அட்மிரல் கிங்** கூறியதை நானும் ஆதரிக்கிறேன." மற்றொன்று ஒரு கூட்டறிக்கை. இதை வெளியிட்டவர்கள் கனடிய கப்பற் படை மந்திரி **மிஸ்டர் மக்டனல்டும்** கனடிய விமான மந்திரி **மிஸ்டர் பவரும்.** சமீபத்தில் வாஷிங்டனில் நடை பெற்ற நீர் மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு மகா நாட்டில் வகுக்கப்பட்ட தோர் திட்டத்தைக் குறித்து இந்த அறிக்கை பொதுவாகக் கூறுகிறது. இந்தத் திட்டப்படி கனடிய ராயல் கப்பற் படையைச்சேர்ந்த **ரியர் அட்மிரல் எல். டபுள்யு. மர்ரே** வட மேற்கு அத்லான்டிக் பகுதியில், முக்கிய படைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். எதிரி விமானங்களை எதிர்த்து வேட்டை யாடும் பொருட்டு நியமிக்கப் பட்டிருக்கும் அமெரிக்க, கனடிய பாம்பர் விமானப் படைக்கு ஒரு அமெரிக்க உத்தியோகஸ்தர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். மத்திய அட்லான்டிக் கடலுக்கு இந்தப் பக்கத்தில், பிரிட்டிஷ் பாம்பர் விமானங்கள் ரோந்து சுற்றும். இப்படியாக, வட அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையே யுள்ளதோர் பாதையில், குடை கவிந்ததைப் போல விமானங்கள் கவிந்து கொண்டிருக்கும். இந்த 600 மைல் பாதை தான் ஆங்கிலோ-அமெரிக்கன் வியாபாரக் கப்பல்களுக்கு மிகவும் ஆபத்துண்டாக்கக் கூடியதென்று ஜெர்மானியர்கள் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு.

**ஜெர்மன் வசந்த காலத் தாக்குதல் சூன்யமானது.**

வசந்த காலத்தில் ஏராளமான நீர் மூழ்கிக் கப்பல்களைக் கொண்டு போராடப் போவதாகச் சென்ற சில மாதங்களாக ஜெர்மன் ரேடியோ அடிக்கடி கூறிக்கொண்டிருந்தது. வசந்த காலம் போய் "மழை காலப் புயலோயும் வரை பொறுங்கள்" என்று அது கூறியது. வசந்த காலமும் கடந்து விட்டது. மழையும் புயலும் நின்று விட்டன. அது போலவே நேச நாட்டுக் கப்பல்கள் மூழ்கடிக்கப்படுவதும் குறைந்து விட்டது. அதனால் தான கோயரிங் பிரசார சுரம் வெகுவாகக் குறைந்து விட்டது. சென்ற ஏப்ரல் மாதத்தில் மட்டும் 4,23,000 டன் கப்பல்களை மொத்தத்தில் மூழ்கடித்ததாக பெர்லின் வானொலி நிலையம் கூறியது. 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் இதுவரை இவ்வளவு கொஞ்சமாகச் சேதம் ஏற்பட்டதே கிடையாது. சென்ற மார்ச்சு மாதம் நேர்ந்ததாகக் கூறப்பட்ட சேதத்தை விட, ஒரு பாதிக்கு இது மிகவும் குறைவு தான். நேச நாட்டுக் கப்பல்களில் இத்தனை லட்சம் டன் பொருள்களை மூழ்கடித்து விட்டோ மென்னும் டாம்பீகப் பேச்சுக்களை, இப்போது காணோம். ஏனென்றால் பெருமை பேசிக் கொள்ளத் தக்க அளவிற்கு நேச நாட்டுக் கப்பல்களை எதிரிகள் மூழ்கடிக்க வில்லை. மிகக் கொஞ்சம் நேச நாட்டுக் கப்பல்கள் தான் மூழ்கடிக்கப்பட்டன வென்று தெரிவித்தால், தம் நீர் மூழ்கிக் கப்பல்கள் பிரமாத·

(5-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

## வார வெளியீடு

மலர் III] 1943-ம் வருஷம் மேமீ 14உ. [இதழ் 19

# எதிரிக்கு முழுத் தோல்வி

இந்த மே மாதம் 10-ம் தேதி காமன்ஸ் சபை நடை பெற்றது. அப்போது டிபுடி முதல் மந்திரியான மிஸ்டர் அட்லி யுத்த நிலைமையைக் குறித்துப் பேசினார். வட ஆப்பிரிக்காவில் நேச நாடுகளுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியைப் பற்றிக் குறிப்பிட்டார். பிரிட்டிஷ் மக்களும் நேச நாடுகளிலுள்ள மக்களும் மட்டுமன்றி, நல்லெண்ணமுள்ள உலக மக்கள் அனைவருமே இந்த வெற்றியால் மகிழ்ந்து பூரித்துப் போவார்கள் என்று குறிப்பிட்டார். ட்யூனிஸி லிருந்தும் பிசெர்ட்டாவி லிருந்தும் எதிரிகளை அடித்து நொறுக்கி வெற்றி கண்டு, விரட்டிய நம் படைகளைப் பெரிதும் பாராட்டினார். மேலும் அவர் கூறியதாவது : இந்தப் போர் முனையோ மகா கடினமானது. 100 மைல் தூரத்திற்குச் சிதறிக் கிடந்தது. இங்கே நேச நாடுகள் வெற்றி பெற்றதற்குக் காரணம், பெரும் படைகள் ஒன்றிற்கொன்று ஆதரவாகவும் கூட்டுறவோடும் போர் முனைக்குப் போனது தான். இந்தக் கடும் போராட்டத்தில் அமெரிக்கப் படைகளும், பிரிட்டிஷ் படைகளும், பிரஞ்சு நாட்டுப் படைகளும், குடியேற்ற நாட்டு படைகளும், நியூசிலந்து படைகளும், இந்தியப் படைகளும் தத்தம் கடமைகளை மிகவும் சிறந்த முறையில் செய்து முடித்தன. இந்தப் போராட்டத்தில், பல வகை நாட்டினரும், தரைப் படையும், கடற் படையும், விமானப் படையும் மிகச் சிறந்த கூட்டுறவோடு போராடியது தான் மிகவும் சிறந்தது. "இது வரை யில்லாதபடி அவ்வளவு உயர்ந்த முறையில் நாம் போராட்டத்தை நடத்த முடிந்ததற்குக் காரணம், நம் படைகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு அமைத்துக் கொண்டது தான். எதிரிகளின் கல் கோட்டைகள் என்று கருதப்பட்ட ட்யூனிசும், பிசெர்ட்டாவும் திடீரென்று விழுந்ததற்குக் காரணம், நம் படைகளுக்குள் ஏற்பட்டிருந்த மிகச் சிறந்த கூட்டுறவும் ஒத்துழைப்புந் தான். மே மாதம் 7-ம் தேதி வெள்ளிக்கிழமை கால் மணி நேரம் போராட்டத்தில் அந்த இரண்டு நகரங்களும் வீழ்ந்தன."

இந்தத் துனீசியப் போராட்டத்தைப் பற்றி பி.பி.சி. விமர்சகர் ஒருவர் கூறியதாவது :—"கவலைப்படாமல் மலை யேறுகிறவன், தான் பற்றி ஏறும் பிடியைத் தவற விட்டுக் கீழே விழுகிறான் ; பிறகு பிடியைப் பற்றுகிறான் ; மறுபடியும் விழுகிறான் ; மீண்டும் பற்றுகிறான் ; விழுகிறான் ; அடிக்கடி விழுகிறான். அதைப் போலிருக்கிறது இந்த யுத்தம்."

எதிரி அரண்களில் மிகவும் முக்கியமானவற்றில் மாவிகல்ட் என்பது ஒன்று. மெட்ஜாஸ்-ட்யூனிஸ் ரஸ்தாவில் சரியான இடத்தில் இது அமைந்திருக்கிறது. இதுவும் வீழ்ந்தது. இந்தப் போராட்டத்தை விரைவில் முடிப்பதற்கு இந்த இடத்தைக் கைப்பற்றியது பெரிதும் வசதிதான். இங்கே பலமான பாதுகாப்புக்கள் அமைந்திருந்தன என்பது உண்மை தான். இது போன்ற அரண்களைக் காப்பாற்றிக் கொள்ள அச்சு நாடுகளுக்கு இயலாமற் போகுமானால், துனீசியப் போர் முனையையே காப்பாற்றிக் கொள்ள அவர்களால் இயலாமற் போகு மென்று தெளிவாகத் தெரிந்தது. ஆகவே தான், பிரிட்டிஷ் படைத் தலைவரான ஜெனரல் ஆண்டர்சன் திடீரென்று எதிரிகள் மேல் பாய்ந்து தாக்கினார். பிரிட்டிஷ் இராணுவ சரித்திரத்திலேயே இவ்வளவு சிறந்த போராட்டம் நடைபெற்றதில்லை. முடிவில் ஜெர்மன் படைகள் சிதறிப் போய் அழிந்தன.

பிசெர்ட்டாவையும், ட்யூனிஸையும் கைப்பற்ற உதவிய மகத்தான வெற்றிக்கு முன்பு நடைபெற்ற மகா கடுமையான இறுதிப் போராட்டத்தில், 4 படைகள் போராடின. அவையாவன. (1) அமெரிக்க இரண்டாம் படை, (2) போராடும் பிரஞ்சுப் படை, (3) பிரிட்டிஷ் முதற்படை, (4) பிரிட்டிஷ் 8-ம் படை. என்பிடாவில் என்னுமிடத்தை எட்டாம் படைக் கைப்பற்றியது முதல், 100 மைல்கள் தூரமுள்ள போர் முனை முழுதும் எதிரிகளை இந்நான்கு படைகளும் நசுக்கிக் கொண்டு தானிருந்தன. சர்ரெட் முனைப் பகுதியிலிருந்து பிசெர்ட்டாவை நோக்கி வடகோடியில் அமெரிக்க இரண்டாம் படை முன்னேறிக்கொண்டு வந்தது. தெற்கே, வாங்ஸ்டாப் மலையை பிரிட்டிஷ் முதற்படைக் கைப்பற்றியது. ஆற்றுப் பள்ளத்தாக்குக்குக் குறுக்கே மெட்ஜாஸ்-எல். பாப்—டொபூர்பா ரஸ்தாவின் இரு புரங்களிலும் விரைந்து ட்யூனிஸை நோக்கிச் சென்றன. தெற்கேயிருந்து 8-ம் படை இடைவிடாது தாக்கிக் கொண்டே முன்னேறியது. பிரிட்டிஷ் முதற் படைக்கும் எட்டாம் படைக்கும் இடையே போராடும் பிரஞ்சுப் படைகள் இருந்தன. இவை எட்டாம் படைக்கு இடது புஜம்போல் விளங்கின. பான்ட்-டு-பாவை எட்டாம் படைக் கைப்பற்ற இது பெரிதும் உதவியது. இதைக் கைப்பற்றியதன் பயனாக அச்சுப் படைகளுக்கு சப்ளைகள் வருவதற்கு வழியில்லாமற் போய்விட்டது. ஆகவே அச்சுப் படைகள் பின்வாங்க நேர்ந்தது. பின் வாங்காவிட்டால், பின்புரம் நேச நாட்டுப் படைகள் வந்து வளைந்து கொள்ளு மென்று அவர்களுக்குத் தெரியும். டொபூர்பாவைக் கைப்பற்றியதனால், ட்யூனிசுக்குப் போகும் சம் வெளிகளுக்கு வழி ஏற்பட்டது. மெட்டூரைக் கைப்பற்றிக் கொண்டதனால், பிசெர்ட்டாவுக்கும் ட்யூனிசுக்கும் இடையே ஓடும் ரயிலையும் நேர்முகமாகப் போகும் ரஸ்தாவையும் நேச நாடுகள் எளிதில் கைப்பற்ற முடிந்தது.

இந்தப் பல பகுதிகளிலும் போராடுவது நேசநாட்டுப் படைகளுக்கு இலகுவாகவும் அச்சுநாட்டுப் படைகளுக்குக் கஷ்டமாகவும் இருந்தது. வட துனீசியாவிலுள்ள மலைகளிலிருந்து படிப்படியாக சமவெளிகளுக்கு அச்சுநாட்டுப் படைகள் விரட்டப்பட்டன. சிறந்த விமான பலமும் நேசநாட்டுப் படைகளின் மிகச் சிறந்த போர்த்திறமையும் தளவாட பலமும் தான், பிசெர்ட்டா, ட்யூனிஸ் போராட்டங்களின் கடைசி கட்டத்தில், வட ஆப்பிரிக்கப் போராட்டத்தையே ஒரு முடிவிற்குக் கொண்டுவரும்படியான நிலைமையை உண்டாக்கியது,

இப்போது பான்முனை தீபகற்பத்திற்கு அச்சு நாட்டுப் படைகள் பின்வாங்கிக் போயிருக்கின்றன. இதை இரண்டாவது படான் ஆக மாற்ற ஜெர்மன் படைத் தலைவர் வான் ஆர்னிம் விரும்புகிறார். ஆனால் அந்தத் தீபகற்பம் முழுவதையும் நேசநாட்டுப் படைகள் இப்போது வளைத்துக் கொண்டன. அச்சுப் படைகள் தப்பிப்போக முயன்றால், ஆபத்திற்குள்ளாக வேண்டியதுதான். அதாவது மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் கூறியது போல, டன்கர்க் சம்பவத்திற்குப் பழிக்குப் பழி பரிபூரணமாக வாங்கி விட்டோம்.



(3-ம் பக்கம் தொடர்ச்சி)

மாகச் சாதித்து விடப் போவதாக கோப்பல்ஸ் செய்த பிரசாரம் வீணாகி விடும் என்று அவருக்குத் தெரியும். உள்ளதை விட அதிகமாகவே தான் கப்பல்களை மூழ்கடித்து விட்டதாக கோப்பல்ஸ் கூறுவது வழக்கம். இப்போது நேச நாடுகள் ஏராளமாகக் கப்பல்கள் கட்டிக் கொண்டு வருவதனால் முன்னை விட அதிகமாக இப்போது பெருக்கிச் சொல்லுகிறார்கள். உதாரணமாக கபடற் படையின் முதல் தலைவர் மிஸ்டர் எ. வி. அலெக்சாந்தர் சென்ற மார்ச்சு மாதம் 3-ம் தேதி கூறியதாவது :

"சென்ற டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் பிப்ரவரி மாதம் வரை ஏற்பட்ட சேதம் அதற்கு முந்திய மழை காலத்தைவிட மிகவும் கொஞ்சம்."

ஆனால், 1941-42-ம் வருஷம் மழை காலத்தில் நேர்ந்த சேதத்தை விட 40 சத விகிதம் அதிகமாகச் சேதம் விளைத்து விட்டதாக ஜெர்மனி கூறுகிறது. கப்பல் சேதத்தை ஈடு செய்வதற்கு தேவையான கப்பல்களை விட அதிகக் கப்பல்களைக் கட்டிக் கொண்டு வருவதாக, நேச நாடுகள் தெரிவிப்பதை மறுக்க கோப்பல்ஸ் முயற்சிக்கிறார். மூழ்கடிக்கப்படும் கப்பல்களின் எண்ணிக்கையை விட, அதிகக் கப்பல்களை நேச நாட்டினர் கட்டி, சென்ற கோடை காலத்திலேயே ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களோடு எதிர்த்து நின்று போராடினர். 1942-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 10 லட்சம் டன் கப்பல்களுக்கு அதிகமாகவே அமெரிக்காவில் தயார் செய்யப்பட்டன. ஆகவே தான் வெகு அதிகமாகத் தாம் நேச நாட்டுக் கப்பல்களை மூழ்கடித்து விட்டதாக டம்பம் பேசிக்கொள்ளுகிறார் கோப்பல்ஸ். தானும் 10 லட்சம் டன் (700,000 மொத்த டன்) கப்பல்களை நாசம் செய்து விட்டதாகக் கூறுகிறார். சென்ற ஏப்ரல் மாதக் கடைசியில் அதாவது 28-ந் தேதி பெர்லின் ரேடியோ கூறியதாவது :—

"மூழ்கடிக்கப்படும் கப்பல்களின் டன்களைக் குறித்த புள்ளிகளைப் பற்றி குழப்புகிறார்கள். அன்றியும்; ஆங்கிலோ அமெரிக்கக் கப்பல்கள் கட்டப்படுவதை விட, மூழ்கடிக்கப் படுவதே அதிகம்."

* * * *

**நேச நாட்டு உற்பத்தியும், மூழ்கும் கப்பல்களும்.**

மாதம் ஒன்றிற்கு 1,250,000 டன் வியாபாரக் கப்பல்களை நேச நாடுகள் கட்டி முடிக்கின்றன, இந்த யுத்தம் ஏற்பட்டதிலிருந்து இது வரை இவ்வளவு கப்பல்களைத் தாம் மூழ்கடித்ததாக ஜெர்மானியர்கள் கூறிக் கொண்டதில்லை. 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் முதல், 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் வரை சராசரி 601,405 டன் நேச நாட்டுக் கப்பல்கள் தான் மூழ்கடிக்கப்பட்டதாக பெர்லின் ரேடியோ கூறியது. 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் வரை 788,073 டன் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 1942-ம் வருஷம் நவம்பர் மாதந் தான், 1,035,250 டன் கப்பல்கள், மிகவும் அதிகமாக மூழ்கடிக்கப்பட்டது.

இந்த வருஷ வசந்த காலத்தில், நேச நாட்டுக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்துச் சிதறடிக்க வேண்டுமென்று ஜெர்மானியர்கள் போட்டிருந்த திட்டத்தில், ஏதோ தவறு ஏற்பட்டு விட்டதென்று தெரிகிறது. சென்ற சில வாரங்களாக ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு நேரும் ஆபத்துக்கள் தான் இதற்குக் காரணம். அன்றியும் கோடை காலத்தில், உலகத்தின் வட பாதியில் பகற் பொழுது அதிகம். அதாவது தன் கேவலமான வேலைகளைச் செய்ய ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களுக்கு வேண்டிய அவகாசமில்லை. சாமான் கப்பல்கள் போகும் வட அட்லான்டிக் கடல் முன்னைய விட இப்போது மிகவும் பாதுகாப்போடிருக்கின்றது. அங்கே கப்பல் துணையும் விமானத் துணையும் இருக்கின்றன. இந்த உண்மைகளிலிருந்து மூழ்கடிக்கப்படும் நேச நாட்டுக் கப்பல்களை விட, உற்பத்தியாகும் கப்பல்கள் தான் மிகவும் அதிகம் என்று தெரிகிறது. இந்தக் கப்பல் கட்டும் திட்டம் மிகவும் திருப்தி யளிப்பதாயிருக்கிறது.

## வட ஆப்பிரிக்காவில் சிறந்த வெற்றி

### "சிவபெருமான் கிருபை வேண்டும்" என்ற மெட்டு

பல்லவி

ஐயமினிப் பயமில்லை வாரும்—கொடும்
இருமனியு மழிந்தே தீரும் சத்தியந் தேறும் (ஐய)

அனுபல்லவி

கயவர்கள் அழிந்திடுங் காட்சி—காணவேண்டிலே
கடையன் ஹிட்லரின் படுவீழ்ச்சி
போதுமே சாட்சி (ஐய)

சரணங்கள்

(1) ஓடியொழிந்தான் ரோமல் ஒதுங்கி எங்கும் நிற்காமல்
உயர்ந்தது நேசதேசம் ஓங்கி—ஐயமே தாங்கி (ஐய)

(2) ஆப்பிரிக்காவில் ஜயம் அடைந்துவிட்டோம் நிச்சயம்
தோற்பதற் கிட்லர் இச்சமயம்—தொடங்கிவிட்டான் (ஐய)

(3) எதிர்த்து வீர ருஷ்யர் அதிர்த்து முனைந்து தாக்க
உதிர்த்து வீரமே ஜெர்மானியர்—உடைந்தழிவார் (ஐய)

(4) தீநாசி ஜர்மன்படை—டுனீசியாவில் உடைந்
தேநாசமாயழிந்ததின்றே—திகைத்தான் ஹிட்லர் (ஐய)

(5) கெய்சருக்குற்றகதி—கிட்டிவந்திடவிதி
பொய் சொரூபன் ஹிட்லரைச்சதி—புரிந்திடுதே (ஐய)

# போராடுவதில் சீனர் நோக்கங்களும் ஜப்பானியர் நோக்கங்களும்

## ஜப்பானியர்களைப் பழிவாங்க சீனா முனைந்திருக்கிறது

லண்டனில் சீன சென்ட்ரல் நியூஸ் ஏஜென்சி தலைவராயிருப்பவர் மிஸ்டர் எச்.டி.லின். சென்ற ஏப்ரல் மாதம் 27-ம் தேதி பி.பி.சி. வானொலி நிலையத்திலிருந்து அவர் ஒலிபெருக்கிய பேச்சில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :—

எதற்கும் அஞ்சாதபடி நாம் ஜப்பானியர்களை எதிர்த்துப் போராடினோம் நம்மை வெல்ல அவர்களால் முடியவில்லை. ஆகவே பொது ஜனங்களிடம், ஒருபோதுமில்லாதபடி மகா மிருகத்தனமாகவும், காட்டு மிராண்டித்தனமாகவும் கொடுமையாகவும் அவர்கள் நடந்து கொண்டார்கள். இதைக் கண்ட சீனப் பொது மக்கள் திக்கிட்டுப் போயினர். நாடு முழுவதையும் யுத்தத்தில் ஈடுபடுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதை, அப்போது தான் உணர்ந்தார்கள். ஆகவே, எதிரியை எதிர்த்து நிற்கும் பொருட்டு எல்லாப் பொது மக்களும் கச்சங் கட்டிக்கொண்டனர். இந்தச் சமயத்திற்கேற்றபடி சீன அரசாங்கமும் கிளம்பியது. சீனாவின் யுத்த நோக்கங்களும் சமாதான நோக்கங்களும் எவை என்று தெளிவாக சீன அரசாங்கம் பிரகடனம் செய்தது.

### சீன அரசாங்கத்தின் நோக்கங்கள்

முதல் நோக்கம் : நாடுமுழுதும் ஒற்றுமைப்பட்டு, என்னவானாலும் பொருட்படுத்தாதபடி, வெற்றி கிடைக்கிற வரையில் எதிரியோடு எதிர்த்துப் போராட வேண்டும் என்பது. இரண்டாவது நோக்கம்: நாட்டைத் திருத்தி யமைப்பது. அதாவது ஒருகையால் போராட வேண்டும் ; மறுகையால் சீனாவைத் திருத்தி யமைக்க வேண்டும். அப்போது தான், வெற்றி கிடைத்த பிறகு சீனா சோர்வோடிருக்காது. 1937-ல் போராடத் தலைப்பட்டபோது இருந்ததை விட, மிகவும் பலமுள்ளதாகவும் மகத்தானதாகவும் சீனா இருக்கும். மிகவும் நிர்ப்பந்தமானதோர் நிலைக்கு சீனாவை உள்ளாக்கத் தக்கபடி திருத்தி யமைக்கும் திட்டத்தை வகுக்கவேண்டுமென்பது எங்கள் எண்ணமல்ல. ஜப்பானில் ஆதிக்கம் செலுத்துவது 3 குடும்பத்தினர் தான். இப்படிப்பட்ட நிலைமையைச் சீனாவில் உண்டு பண்ண வேண்டுமென்பது எங்கள் எண்ணமல்ல. ஆனால் 45 கோடி சீன மக்களுக்கும் அது உரித்தானதாய் இருக்க வேண்டும்.

மூன்றாவது நோக்கம்: ஜனநாயகம். உண்மையான ஜனநாயகம் சீனாவில் ஏற்படவேண்டும். அப்போது தன் பொருளாதாரத் துறையிலும் அரசியலிலும் ஜனநாயகம் ஏற்படும்.

யுத்தத்திற்கு முன்பு நமக்குப் பார்லிமெண்ட் சபை கிடையாது. யுத்தம் ஆரம்பமானதிலிருந்து பொதுஜன அரசியல் கௌன்ஸில் ஏற்பட்டிருக்கிறது. இது ஆலோசனைகள் சொல்லும் ஒரு ஸ்தாபனமாகத் தான் இன்னும் இருந்து வருகிறது. என்றாலும், இதன் ஆலோசனைகளையும் தீர்மானங்களையும் அரசாங்கத்தார் ஒருபோதும் நிராகரித்தது கிடையாது. உண்மையிலேயே, எதிர்காலத்தில் சீன பார்லிமெண்டை அமைப்பதற்கு, இந்த ஸ்தாபனத்தை, ஒருவிதையாக, ஜெனரலாஸிமோ ஷியாங்-கெய்-ஷேக் போட்டிருக்கிறார். ஆகவே யுத்தம் முடிந்தபிறகு சீனா ஒரு ஜனநாயக நாடாகத் தான் கிளம்பும். உலக விடுதலைக்கு ஆக்கந் தந்து முன்னேறும். இது தான் நம்முடைய மூன்றாவது நோக்கம். . . . . . .

ஜப்பானுக்கு எவை தேவையோ, அவற்றிற்கு நேர் மாறானவையின்மேல் தான் சீனா நாட்டங் கொள்ளுகிறது. தம் மேல் நாட்டுச் சகோதரர்கள்மேல் வெறுப்புக் கொள்ள வேண்டுமென்றும் நேசங் கொள்ள கூடாதென்றும் ஜப்பான் விரும்புகிறது. சீனர்களாகிய நாமோ, சமத்துவம், நேர்மை, கண்ணியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கீழ் நாடுகளிலும் மேல் நாடுகளிலும் உள்ள ஏகேச்சை மக்களுக்குள் நெருங்கிய கூட்டுறவு அமையவேண்டுமென்று விரும்புகிறோம். இப்படியாகத் தான் உலக சகோதரத்வத்தையும் நிரந்தரமான சமாதானத்தையும் நிலை நாட்டமுடியும்.

### சீன மக்கள் தியாகச் சிறப்பு

இந்த நோக்கங்கள் ஈடேற வேண்டுமென்பதற்காகத் தான், மகா கடுமையான தியாகங்களை சீன மக்கள் செய்தார்கள். சீனா ஒரு விடுதலை நாடாகவே மீண்டும் கிளம்பவேண்டும். நேசநாடுகள் யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் , காட்டுமிராண்டிகளை நாகரிக மக்கள் வெல்லவேண்டும். யுத்தத்திற்குப் பிறகு சீனா, மகத்தானதாகவும் பலமானதாகவும் மீண்டும் கிளம்பவேண்டும் இவற்றின் பொருட்டுத் தாராளமாகத் தம் உயிர்களைச் சீன மக்கள் கொடுத்தார்கள். வீடுவாசல்கள் சொத்து சுதந்திரங்கள் அனைத்தையும் இழந்தார்கள்.

இப்படி நாம் தடுத்துப் போராடுவதனால் நேரிடும் நஷ்டம் மகா மகத்தானது . . . . . .வேண்டுமென்றே ஜப்பான் அக்கிரமங்கள் செய்ய ஆரம்பித்ததன் பயனாக, 20 கோடி மக்களின் வாழ்க்கை நேர்முகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், “ சீன சம்பவம் ” என்று தான் அதை ஜப்பானியர்கள் சொல்லுகிறார்கள். முழங்காலில் நின்று தன்னை வணங்கும்படி சீனாவைச் செய்யப் போவதாக ஜப்பானியர் பீத்திக் கொண்டார்கள். சீனாவை அழித்து விடப் போவதாக வாய்ச் சவடால் அடித்தார்கள். உலக தேசப் படங்களிலே சீனாவைக் காண முடியாதபடி செய்யப் போவதாக, டம்பம் பேசினார்கள். இப்படிக் கேவலப் படுத்திய ஜப்பானியர்களைப் பழிவாங்க, சீனா முனைந்திருக்கிறது. சீனாவோ 4 ஆயிரம் வருஷ நாகரிகமும் கலைகளும் உடையதோர் நாடு.

இன்று பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாட்டு மக்கள், நம் பக்கமிருந்து போராடுகிறார்கள். நாம் இந்தப் போராட்டத்தில் தனித்தில்லை.

### செஞ்சிலுவைச் சங்கமும், தபால் வசதியும்.

கீழ்க்கண்ட நாடுகளுக்கும் செஞ்சிலுவை சங்கத்தார் மூலம் தபால் போக்கு வரவு ஏற்பட்டிருக்கிறது :—

ஜப்பான், கொரியா, பர்மோசா, ஷாங்ஹை, ஹாங்காங், கைப்பற்றப்பட்ட சீனா, தாய்லாந்து, பிரஞ்சு இந்தோ சீனா.

இந்தியாவிலிருந்து செய்திகள் அனுப்புகிறவர்கள் யுத்தக் கைதிகளா யிருக்கக் கூடாது. இவர்கள் அனுப்பும் செய்தி சொந்தச் செய்தியாகவோ குடும்பச் செய்தியாகவோ மட்டுந் தான் இருக்க வேண்டும். முன்னே குறிப்பிட்ட நாடுகளிலுள்ள தம் சொந்தக்காரர்களுக்கு இவர்கள் கடிதங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தார் மூலமாக எழுதலாம். அந் நாடுகளிலிருப்பவர்களும் யுத்தக் கைதிகளாகவோ, காவலிலிருப்பவர்களாகவோ இருக்கக் கூடாது.

இங்கிலீஷ், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், நார்வீஜியன், டேனிஷ், டச் ஆகிய மொழிகளில் மட்டுந் தான் கடிதங்கள் எழுதலாம்.



அச்சு வானொலிப் பிரசார ஆராய்ச்சி

# பர்லினின் ருத்திராட்சப் பூனை வேஷம்

## ‘ஈஸ்டர்’ ஞாயிற்றுக் கிழமையன்று மதப் பாதுகாப்பு நடிப்பு!

### “ ரஷ்ய செஞ் சேனை வெற்றி ”க் குறிப்பும், அழுகைப் பல்லவி பாட்டும்

### சிறந்த வெற்றிகள் பல பெற்ற நான்காவது இந்தியப் பட்டாளத்தைப் பற்றி, ரோம் செய்த பொய்ப் பிரசாரம்

“ இரட்டை நாவு ” என்ற தொடரில், சென்ற வாரம் மேமீ 5-ந் தேதி சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து டி. எ. வி. நாதன் அவர்கள் செய்த பிரசங்கம் பின் வருமாறு :—

உருத்திராட்சப் பூனை கதை உங்கள் எல்லோருக்கும் தெரிந்தது தான். உடலெல்லாம் திரு நீறு ; கையில் உருத்திராட்ச மாலை ; மனனம் செய்வது ஐந்தெழுத்து மந்திரம் ; ஆனால் பூனையின் உள்ளத்தில் உள்ளது கள்ள நினைப்பு; உலகத்தை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம். பர்லின் நிலையப் பேச்சாளர், லார்டு ஹா-ஹா, சென்ற ‘ஈஸ்டர்’ ஞாயிற்றுக் கிழமையன்று இந்த உருத்திராட்சப் பூனை வேஷத்தை போட்டுக் கொண்டார். அன்றையத் தினம், அதாவது ஏப்ரல் 25-ந் தேதி, “ செய்திகளைப் பற்றிய அபிப்பிராயங்கள் ” என்ற தலைப்பில் பர்லினிலிருந்து பேசினார். அந்தப் பேச்சின் விசேஷமென்ன ? அதில் கடவுளின் மேல் அன்பு கசிந்தது ; பக்தி ரசம் அப்படியே வடிந்தது ; கிருஸ்து மதத்தின் மேல் அளவு கடந்த ஆர்வம் பொங்கித் ததும்பியது. என்ன சொன்னார் என்று கேட்கிறீர்களோ ? அவர் பேசியதில் முக்கியமான பாகத்தை மாத்திரம் கொஞ்சம் படித்து விடுகிறேன்.

“இன்றையத் தினம், ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை. இப்போது மதப் பிரசங்கம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கொஞ்சங் கூட இல்லாத போதிலும், ஹிட்லரும் அவருடைய பட்டாளங்களும் ‘பால்ஷ்விசம்’ என்ற தொத்து நோயிலிருந்து ஐரோப்பாவைப் பாது காக்கும் பெருந் தொண்டைப் பற்றிப் பேச விரும்புகிறேன். . . . மாஸ்கோவில் உள்ள ‘பால்ஷிவிக்’கர்களும், பிரிட்டனில் உள்ள அவர்களுடைய சகாக்களும், கடவுள் வழிபாட்டை மறுத்தல் என்ற ஒரு பெரும் பாவத்தைத் தங்களுடைய கொள்கைத் திட்டத்தில் ஒரு முக்கியமான பாகமாகக் கொண்டிருக்கிறார்கள். கிருஸ்துவை ஒரு பெரிய முதலாளி என்று சில காலத்துக்கு முன் அவர்கள் குறிப்பிட்டார்கள். . . . நான் ஒரு கிருஸ்தவ பாதிரியைப் போல் பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். அரசியல் விவகாரங்களில் மத சம்பந்தமான விஷயங்களைப் புகுத்தும் ஏமாற்றத்தை நான் வெறுக்கிறேன். ஆனால் மதம்



துனீசியாவில் நடந்த பெரும் போரில் சிறந்த வெற்றிகளை அடைந்த நான்காவது இந்தியப் பட்டாளத்தைப் பற்றி ரோம் வானொலி நிலையம் நகைத்தற் குரிய பொய்ப் பிரசாரம் செய்திருக்கிறது. ஸ்பாக்ஸ் என்ற பெரிய துனீசியத் தளம் கைப்பற்றப் பட்டதும், முதலில் அப்பட்டணத்தில் பிரவேசித்தது நான்காவது இந்தியப் பட்டாளம். பிரவேசித்த காட்சியில் ஒரு பகுதியை மேலே இருக்கிற படத்தில் காணலாம்.

ஒரு முக்கியமான விஷயம் என்று நம்புகிறவர்களெல்லாம் இதைக் கவனிக்கவேண்டும். 'பால்ஷிவிக்'கர்கள் ரஷ்யாவில் மதத்தை அழித்து விட்டார்கள். இப்போது அவர்கள் எந்த வேஷம் போட்டாலும், எந்த நடிப்பு நடித்தாலும், ரஷ்யாவின் செஞ்சேனை, இந்த யுத்தத்தில் வெற்றி பெற்று விட்டால், ஐரோப்பாவிலிருந்து கிருஸ்து மதம் அடியோடு வேரறுக்கப்படும்"—

என்று லார்டு ஹா-ஹா ஒரு பிரசங்க மாரி பெய்திருக்கிறார்.

### மதக் கொள்கைகளை வெறும் அகராதிச் சொற்களாக்குதல்

கிருஸ்து மதத்துக்காக அவர் காட்டும் அபரிமிதமான பரிவைக் கண்டு நமக்குப் பரிகசச் சிரிப்பு வருகிறதே ஒழிய வேறல்ல. ரஷ்யர்களா வேஷம் போடுகிறார்கள்? 'பால்ஷிவிக்'கர்களா நடிப்பு நடிக்கிறார்கள்? கடவுளுடைய அன்புருவத்தைப் பற்றியும், மனித சமூகத்தின் சகோதரத் தன்மையைப் பற்றியும் போதித்த கிருஸ்துவின் கொள்கைகளை, கண்ட துண்டமாக வெட்டி வீழ்த்தியவர்கள் யார்? ஐரோப்பாவையே ஒரு கொலைக் களமாக்கி, அன்பு, இரக்கம், சகோதரத் தன்மை, சமூக வாழ்வு, சுதந்தர வாழ்கை, முதலியவைகளை வெறும் அகராதிச் சொற்களாக ஆக்கியவர்கள் யார்? ஜெர்மனியர்கள் தான்! இவர்களுக்கு மதத்தைப்பற்றி பேச யோக்கியதை ஏது? கிருஸ்துவின் பெயரைக் கூடச் சொல்வதற்கு இவர்களுக்கு அருகதை யுண்டா? 'ஈஸ்டர்' ஞாயிற்றுக்கிழமை யன்று, லார்டு ஹா-ஹாவோ மதப் பிரசாரம் செய்வது? இந்தப் பொய் பிரசாரம் வீணாக ஏன் செய்யப்பட்டு வருகிறது?—என்றெல்லாம் நாம் நினைக்கலாம். ஆனால் இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் அவர்களுடைய பிரசாரத்தின் போக்கு மாத்திரமல்ல; அதனுடைய அடிப்படையான நோக்கம், பிரசாரம் செய்பவர்களுடைய மனோபாவம், அச்சு வானொலி நிலையங்களின் உண்மையான லட்சியம்.

### " பொய்யுடை ஒருவன் சொல் வன்மை "

கிருஸ்து மதப் பாதுகாப்பு என்ற வேஷத்தை யணிந்த லார்டு ஹா-ஹா என்ன நோக்கத்துடன் இம்மாதிரியான பிரசங்கம் செய்தார் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பிரிட்டனிலும் இதர ஆங்கிலம் தெரிந்த நாடுகளிலும் தன்னுடைய வார்த்தைகளுக்கும் அச்சு நிலையப் பிரசாரத்துக்கும் மதிப்பில்லை என்று அவருக்குத் தெரியும். ஆனால் மதிபபில்லாத பிரசாரத்துக்கு, சில சந்தர்ப்பங்களில் மதிப்பு ஏற்படலாம என்பது தான் அவருடைய நோக்கம். பிரசாரத்தினுடைய தத்துவமே கால, தேச, மக்கள் இயல்பைப் பொறுத்திருக்கிறது. ஒரு சமயத்தில் பொய்ப் பிரசாரத்தை மக்கள் நம்ப மாட்டார்கள். ஆனால் வேறு சமயத்தில் அதே பொயயில் மெய்யிருப்பதாக அவர்களை நம்பும்படி செய்யலாம். "பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய் போலும்மே, மெய் போலும்மே" என்ற புலவர் வாக்கு அச்சுப் பிரசாரத்தின் அடிப்படையான மனோ லட்சியத்தை விளக்கிக் காட்டுகிறது. சொல் வன்மை என்பது பொய் கூறும் சாமர்த்தியத்தை குறிக்கிறது. கிருஸ்து மதத்துக்கு 'பால்ஷிவி' சத்தினால் ஆபத்து வந்து விட்டது என்று சாதாரண காலத்தில் கூறினால், மக்களுடைய மனத்தில் அது ஆழமாகப் பதியாது. ஆனால் அதே பொய்யை 'ஈஸ்டர்' பண்டிகை நாளில் சொன்னால், வேறு விதமான மனோ மாறுதல்கள் ஏற்படலாம். கிருஸ்து செய்த மாபெரும் உயிர்த் தியாகத்தை நினைந்து, அவர் மீண்டெழுந்த நாளைக் கிருஸ்தவ மக்கள் கொண்டாடிக் கொண்டிருக்கும் போது, அதாவது அவர்களுடைய மத உணர்ச்சி மிளிர்ந்திருக்கும் காலத்தில், "உங்களுடைய மதத்துக்குக் தீங்கு நேரப்போகிறது. ரஷ்யா வெற்றி பெற்றால், ஈஸ்டர் பண்டிகை கிடையாது, கிருஸ்தவ மதம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்," என்று கூறினால், சிலருடைய மனமாவது சலனமடையாதா என்ற எண்ணத்தைக் கொண்டு தான், லார்டு ஹா-ஹா இம்மாதிரியாகப் பேசியிருக்கிறார். அதனால் தான் யுத்தச் செய்திகளைப் பற்றி அன்றைய தினம், போலி விமரிசம் செய்து கொண்டிருந்தவர், இடையில் 'ஈஸ்டர்' பண்டிகையைப் பற்றிக் குறிப்பிட்டு, அந்தச் சாக்கில் ரஷ்யாவுக்கும் நேச நாடுகளுக்கும் அபிப்பிராய பேதம் உண்டாக்கலாம் என்று நினைத்தார்.

### சண்டமாருதப் பிரசாரத்தில் பெருத்த மாறுதல்

ஆனால் அவருடைய நினைப்பு வெறும் நினைப்பாகவே தான் இருக்கும். ஏனென்றால், பிரிட்டிஷ் மக்களுக்கு ரஷ்யாவைப் பற்றி நன்றாகத் தெரியும். ரஷ்யப் பொதுவுடமை அரசாங்கத்துக்கு அரசாங்க மதம் என்று தனியாக ஒரு மதம் இல்லையாயினும், ரஷ்யாவில் எல்லோருக்கும் மத சுதந்தரம் உண்டு. ரஷ்யர் செஞ்சேனை வெற்றிபெற்றால், கிருஸ்தவ மதக் கொள்கைகளை நாசம் செய்த நாசியர்கள் அழிவார்கள்; அதனால் கிருஸ்தவர்களுக்கு லாபமே ஒழிய நஷ்டமல்ல.

லார்டு ஹா-ஹாவினுடைய பேச்சில், "ரஷ்ய செஞ்சேனை வெற்றி பெற்றால்" என்று கூறியதை நாம் ஆழ்ந்து கவனிக்கவேண்டும். சிலகாலமாக, ரஷ்ய வெற்றியைப் பற்றியும் அதனால் ஐரோப்பாவுக்கு நேரக்கூடிய தீங்குகளைப் பற்றியும், அச்சு வானொலி நிலையங்கள் அடிக்கடி வற்புறுத்திக் கூறிக்கொண்டு வருகின்றன. இம்மாதிரியான பேச்சு இதற்குமுன் கிடையாது. "ரஷ்ய செஞ்சேனை வெற்றி பெற்றால்" என்ற சொற்றொடர் அச்சுப் பிரசாரத்தில் கேள்விப்பட்டதே யில்லை. இதற்கு முன்னெல்லாம், ஜெர்மனியின் பலத்தைப் பற்றியும், அதன் வெற்றிகளையும் பற்றியும், ரஷ்யாவை வெகு விரைவில் ஜெர்மன் துருப்புகள் தோற்கடித்து வரும் என்பதைப் பற்றியும், அச்சு நிலையங்கள் சண்டமாருதப் பிரசாரம் செய்து வந்தன. சண்டமாருத வேகம் இப்போது தென்றலின் மெல்லிய நடையை விடக் குறைந்துவிட்டது என்று சொல்லலாம். "உலகத்தையே நாங்கள் ஹிட்லருடைய குடைக் கீழ் கொண்டுவரப் போகிறோம். எங்களுடைய ஒப்பற்ற பலத்துக்கு முன் யாரும் நிற்க முடியாது," என்று அச்சு நிலையங்கள் அட்டகாசம் செய்த காலம் ஒன்று; "ரஷ்யா வெற்றிபெற்றால் ஐரோப்பா போல்ஷிவிசத்துக்கு இரையாய் விடும், அந்தத் தீங்கை ஹிட்லருடைய துருப்புக்கள் எதிர்க்கின்றன," என்று இப்போது அழுகைப் பல்லவி பாடும் காலம் வேறு. இதனால் அச்சு நிலையப் பிரசாரத்தின் அடிப்படையான மனப் பான்மையிலேயே ஒரு பெருத்த மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்று விளங்குகிறது. "யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்று சொல்லுவார்கள். அதைப் போல ரஷ்ய செஞ்சேனை பினனால் பெறப் போகும் போர்க்கள வெற்றிக்கு, அச்சு நிலையங்களின் 'ரஷ்ய வெற்றிக்' குறிப்புகள் முன்னணி ஒலிபரப்புகளாக விளங்குகின்றன என்று சொல்லலாம்.

### ஹிட்லர் பிறந்த நாட் கொண்டாட்ட பயக் குரல் பிரசங்கங்கள்

இந்த முன்னணி ஒலிபரப்புக்களில் ஒரு விதமான பயக்குரல் தொனிப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இப் பயக் குரலுக்குக் காரணம் ஜெர்மனி முன்னேறித் தாக்கும் நிலைமையிலிருந்து இப்போது தற்காப்பு நிலைமைக்கு வந்ததுதான். இந்த நிலைமை, ஹிட்லருடைய பிறந்த நாட் கொண்டாட்டத்தின் போது, ஜெர்மன் தலைவர்கள் செய்த பிரசங்கங்களிலிருந்து இன்னும் விளக்கமாகத் தெரிகிறது. ஏப்ரல் 19உ பர்லின் நிலையத்திலிருந்து அச்சுப் பிரசார இலாகாத் தலைவர், டாக்டர் கோப்பல்ஸ், பேசினார். அடுத்த நாள் கொண்டாடப் போகும் ஹிட்லருடைய பிறந்த தினத்தைப் பற்றிக் குறிப்பிட்டு,

"விதியின் கடுமையான, வருத்தத்தைத் தரக்கூடிய, தாக்குதல்களை எதிர்த்து, ஹிட்லர் பிடிவாதத்தோடும், தைரியத்தோடும், போராடிக் கொண்டு வருகிறார். இந்த யுத்தத்தை அவர் விரும்பவில்லை; இதைத் தடுப்பதற்குத் தன்னாலான எல்லா முயற்சியும் செய்து பார்த்தார்.

(11-ம் பக்கம் பார்க்க)



# ஹிட்லருக்குத் தெரியுமே !

இந்த பத்திரிகை நிருபர்களே மகா நிபுணர்கள் தான். சில சமயங்களில் அவர்கள் சொன்னால் சொன்னபடியே நடந்து விடுகிறது. ஒரு வாரத்திற்கு முன்னால் ஒருவர் வட ஆப்பிரிகாவிலிருந்து கொண்டு, 'மே மாதம் முதல் தேதியே ட்யூனிஷியச் சண்டை முடிந்திருக்கவேண்டும். ஏதோ சில அசௌகரியங்களால் அது முடியவில்லை. ஆனால், மே 15 தேதிக்குள்ளாக ஜெர்மானியர் பெரிய கல்தா பெற்றுவிடுவார்கள்' என்றார். அவருடைய வாய்க்கு சர்க்கரைதான் போடவேண்டும். சர்க்கரை கிடைப்பது ரொம்ப சிரமமானாலும், இந்த விஷயத்திலே எவ்வளவு செலவழிந்தாலும் பரவா யில்லை.

அந்த நிருபர் சொன்னபடியே, வெள்ளிக்கிழமை இராத்திரி ஒரு மணிக்கு, ஏககாலத்தில் ட்யூனிஸ் நகரத்திற்குள்ளும், பிஸர்ட்டா நகரத்திற்குள்ளும் நேச தேசப்படைகள் புகுந்து, அங்கு எதிர்த்து நின்ற அச்சு நாட்டாரைத் துரத்தியடித்துவிட்டு, அந்த இரு முக்கிய நகரங்களையும் பூரணமாக தம் வசப்படுத்திக் கொண்டு விட்டார்கள். ட்யூனிஷியாவிலே இனி பெரிய ஊர்கள் ஏதுமில்லை.

இந்த இரு முக்கிய நகரங்களையும் அச்சு நாட்டாரை வார்த்து விட்டதால், அவர்கள் வட ஆப்பிரிகாவில் கொஞ்சம் தைரியமாக நிற்பதற்கான இடமே இனி இல்லை. முக்கோண வடிவத்திலே உள்ள பான் முனை தீபகற்பம் பாக்கி இருக்கிறது. அச்சுத் துருப்புக்களில் மிஞ்சியவை இங்குபோய் அடைந்திருக்கின்றன. அவசர அவசரமாக இந்தப் பிரதேசத்திலே பாதுகாப்புகளைப் பலப்படுத்த அவர்கள் முயலுகிறார்கள். இதே சமயத்தில் முக்கியமான படைகளில் பல கடல் கடந்து பறந்தோட முயலுகின்றனவாம்.

ஆனால், சினிமா ஆட்டம் முடிந்ததும், கொட்டகையில் உள்ள எல்லாக் கதவுகளையும் திறந்து விட்டு விடுவார்கள் அல்லவா, எல்லோரும் தாராளமாக வெளியே போகட்டும் என்று. அம்மாதிரி வட ஆப்பிரிகாவில் வேலை தீர்ந்துவிட்டது என்று இத்தாலிக்குத் திரும்பப் பார்க்கும் அச்சு நாட்டவர்க்கு, எல்லா வழிகளும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று நினைக்கிறீர்கள்?

### பழிவாங்க நல்ல சான்ஸ்

சரியாப் போச்சு! அன்றொரு நாள் பெல்ஜியத்திலிருந்து நேசதேசத் துருப்புகள் சீமைக்குத் தப்பி ஓடவேண்டிய எக்கச் சக்கமான நிலைமை ஏற்பட்டதா இல்லையா? அப்பொழுது ஜெர்மானியர் எவ்வளவு உத்சாகத்தோடு நேசதேசப் படைகளை ஓய்வொழிவில்லாது விமானங்களிலிருந்து தாக்கினார்கள். அப்பொழுது வலுவான நேசதேச ஆத்மாக்கள் எல்லாம், 'பழிக்குப்பழி வாங்கு!' என்று துடித்துக் கொண்டு இருக்கக்கூடுமே! அவற்றின் மனம் சாந்தியடைய நேசதேசத்தார் ஏதாவது பதிலுக்கு பதில் செய்யவேண்டாமா? இதோ வட ஆப்பிரிகாவில் வஞ்சம் தீர்த்துக் கொள்ள, ஒரு நல்ல சான்ஸ் கிடைக்கும் போலிருந்தது. நம்மவர்களுக்கு இதை முன் கூட்டி எதிர்பார்த்தே, நேசதேசக் கப்பற்படையும், விமானப் படையும் கழுகுகள் போல் ட்யூனிஷியா அருகே பலநாட்களாகக் காத்திருக்கின்றனவே?

அவற்றிக் கெல்லாம் நல்ல வேட்டை தான் இப்பொழுது! வட ஆப்பிரிகாவிலிருந்து தப்பி ஓட முயலும் அச்சுப் படைகளை, வெளுத்து வாங்குகின்றன நேசதேச விமான கடற்படைகள். அச்சு நாட்டினர் பெரிய கப்பல்கள் பலவற்றை இங்கே உபயோகிக்கக் காணோம். சிறுசிறு படகுகளையும், மோட்டார் படகுகளையும் அவர்கள் அதிகமாக உபயோகிக்கிறார்களாம். ஆகவே, நமது விமானிகள் யந்திர பீரங்கிகொண்டே அவர்களைத் தாக்க முடிந்ததாம்.

அச்சு நாட்டினரை சாத்தியமான வரை ஆப்பிரிகாவிலிருந்து வெளியேற்ற அச்சு ஆள் தூக்கி விமானங்கள் பெரிதும் முயன்று வருகின்றனவாம். நமது விமானங்கள் அவற்றையும் மடக்க மறக்கவில்லை.

### டன்கர்க் பழிக்குப் பழி

வட ஆப்பிரிகாவை ஹிட்லரும், முஸோலினியும் இனி மறந்துவிட வேண்டியதுதான். டங்கர்க்கிற்குப் பதிலுக்குப் பதில் ட்யூனிஷியாவிலே செய்து காட்டிவிட்டார்கள் நேசதேசத்தார். ட்யூனிஷியாவில் நம்மவர்கள் அடைந்துள்ள வெற்றியைக் கேள்விப்பட்டு, நேசதேச உலகமே ஆனந்தக் கடலில் ஆழ்ந்துகிடக்கிறது. எங்கு பார்த்தாலும் கொண்டாட்டம் தான். நேசதேசப் படைகளுக்குப் பொதுத் தலைவராக இருந்த அமெரிக்க சேனாதிபதி எய்சின்ஹோவருக்கு வந்து குவியும் வாழ்த்துக்களுக்குக் கணக்கே யில்லையாம்.

உண்மையிலேயே உள்ளத்தைப் பூரிக்கச் செய்யக் கூடிய மகத்தான வெற்றிதானிது. இந்த வெற்றி வராதா, வராதா என்றுதான் எல்லோரும் வெகு காலமாக ஏக்கத்துடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் எட்டாவது சேனை எகிப்திலிருநது சீறி எழுந்ததிலிருந்தும், அமெரிக்கப் படைகள் மேற்கு ஆப்பிரிக்க மண்ணில் வந்து குதித்ததிலிருந்தும் ஆறுமாத காலம் ஆகியிருக்கின்றது. இவ்வளவு குறுகிய காலத்திற்குள், நேசதேசப் படைகள் இரண்டாயிரம் மைல்களுக்குமேல் முன்னேறியிருக்கின்றன.

ஒய்வு ஒழிவு உண்டா? ஹூஹூம்! எதிர்ப்பும் அவர்களுக்குப் பலமாகவே இருந்தது. அமெரிக்கப் படையினருக்கு நவீன யுத்தமே புதிசு. அநுபவமும் அதிகமில்லை. ஆகவே ஒரு கட்டத்திலே அவர்கள் சிறிது தோல்வியடைந்து பின்வாங்க நேரிட்டபோது, 'இது என்னடா இது எழவாப் போச்சே! அச்சு நாட்டான் இந்த வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, மேலே ஏதாவது கட்டிவிடுவானோ' என்று ஐயமிட்டார்கள் பலர். ஆனால், அமெரிக்கப் படைகளுக்கு உடனே ரோஷம் பிறந்து விட்டது. பிரமாத துணிச்சலுடனும் உத்சாகத்துடனும் பிரிட்டிஷ் படைகளோடு நேச முறையில் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறத் தொடங்கின. அதன் பலன் என்ன?

### அடடா! என்ன ஒற்றுமை!

பிரிட்டிஷ் படைகள் ட்யூனிஸ் நகருக்குள் புகுந்த அதே சமயத்தில் அமெரிக்கப் படைகள் பிஸர்ட்டா என்னும் முக்ய நகருக்குள் பிரவேசித்து விட்டது. அடாடா! என்ன ஒற்றுமை பாருங்கள். மேற்கு ஆப்பிரிகாவிலே அமெரிக்கர் வந்து இறங்கின தினமும், எகிப்திலிருந்து எட்டாம் படை கிளம்பின தினமும் ஒன்றாகவே இருந்தது. இப்பொழுது, மேற்கண்ட இரு படைகளும் ட்யூனிஷியாவில் பெரிய வெற்றியைக் கொண்டாட இடமளிக்கும் காரியத்தைச் சாதித்ததும் ஒரே தினத்தில். 'பேஷ்! பேஷ்! பலே பேஷ்!' என்று அவர்களைப் பாராட்டலாம் போல் வருகிறது.

'இந்த வேற்றியை நேச தேசத்தாருக்குச் சம்பாதித்துக் கொடுத்த ஜெனரல் எய்சின்ஹோவர், ஜெனரல் ஆண்டர்ஸன், ஜெனரல் மண்ட்காமரி ஆகிய மூவரின் பெயர்களும், அவர்களுக்குக் கீழ் பொறுமையுடனும், திட சித்தத்துடனும், சகல கஷ்டங்களையும் அநுபவித்துக் கொண்டு போராடிய மகா வீரர்களது நாமங்களும் உலக சரித்திரத்திலே ஒரு நல்ல இடத்தைப் பெறுமென்பதில் சந்தேகமே கிடையாது.

நேசதேசத்தார் சிரமப்பட்டுப் பெற்ற பெரிய முதல் வெற்றி அல்லவா இது! 1939-ல் யுத்தம் ஆரம்பமானதிலிருந்து கஷ்டத்திற்கு மேல் கஷ்டமாகத் தானே இருந்தது நேச தேசத்தவர்க்கு. ஆகவே இந்த வெற்றியைக் கண்டு நம்மவர்கள் பரம சந்தோஷ மடையலாம். இதுவே இனி கிடைக்கப் போகும் பல வெற்றிகளுக்கு ஆரம்பமாக இருக்கட்டும்.

### ஹிட்லருக்கு இது ஒரு தோல்வி தான்

சென்ற ஐந்து மாத காலத்திலே, அமெரிக்காவிலிருந்து வட ஆப்பிரிக்காவிற்கு 15 லக்ஷம் டன் எடையுள்ள சாமான்களை ஏற்றிக் கொண்டு பல கப்பல்கள்

வந்திருக்கின்றன. இவற்றிலே நாற்பதிலே ஒரு பங்கு தான் சேதமாயிற்று. ஹிட்லரின் நீர் மூழ்கிகளால் அதற்கு மேல் வாலாட்ட முடியவில்லை. இது ஹிட்லருக்கு ஒரு தோல்விதான்.

இதே மாதிரி, மத்ய தரைக் கடலிலும் ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் பெரிய தோல்விகள் ஏற்பட்டன. சென்ற ஏப்ரலில் மட்டும், 200 அச்சு நாட்டுக் கப்பல்களை நேச தேச விமானங்களும், நீர் மூழ்கிகளும் மூழ்கடித்திருக்கின்றன. இது மட்டுமா ? ஆப்பிரிகாவில் அரை அடிமண்கூட இனி இத்தாலிக்குச் சொந்தமாக இல்லை. ஆப்பிரிக்க சாம்ராஜ்யம் என்ற பெயரையே முஸோலினி மறந்து விட வேண்டியது தான். அதோடு போகவில்லை அவருடைய அவதி. அடுத்தாற்போல் அடி வாங்க வேண்டியது அவருடைய அருமை இத்தாலிய தேசம் தான். கள்ள நரிபோல் இந்த யுத்தத்தில் கலந்து கொண்டு, கிடைத்ததைப் பிடுங்கித் தின்று மகிழ்ந்ததன் பலனை இத்தாலி இப்பொழுது அநுபவித்து வருகிறது.

## இத்தாலியரும் ஜெர்மானியரும் சரண்

ட்யூனிஷியாவிலே பதினாயிரக் கணக்கிலே இத்தாலியர்களும், ஜெர்மானியர்களும் நம்மவர்களிடை சரணடைந்து கொண்டிருக்கிறார்களாம். ஆங்காங்கே ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் குவியல் குவியலாகப் போட்டுவிட்டு ஓடுகிறார்களாம் பல்லாயிரவர். இப்பொழுது பான் முனை தீபகற்பத்திலே யுத்தம் நடக்கிறது. இது முடியும் வரை வட ஆப்பிரிக்க யுத்தம் முடிந்ததாகக் கூற முடியாது தான். ஆனால், இங்கே அச்சு நாட்டார் நீண்ட காலம் நின்று போராட முடியாது என்கிறார்கள் விஷயமறிந்தவர்கள். இங்கே போதிய குடி தண்ணீர் வசதி இல்லையாம். தவிர இப்பிரதேசத்தை நேச தேசத்தார் தரைப் பக்கத்திலும் சரி, கடற் புறங்களிலும் சரி நன்றாகச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள்.

இரவு பகல் என்றுது கடற்கரைகளில் குவியும் அச்சு நாட்டாரை நேச தேச விமானிகள் நொறுக்கிக் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, இங்கிருந்து தப்பி ஓடுவது என்பது சாத்தியமில்லை.

வெள்ளிக் கிழமையன்று எதையும் கொடுக்கக் கூடாது. பெண்கள் அன்று வீட்டை விட்டுப் போகவே கூடாது, என்பார்கள். ஆனால் அச்சு நாட்டார் வட ஆப்பிரிகாவிலே இழந்ததெல்லாம் வெள்ளிக் கிழமையன்றுதான். அன்று அவர்களுக்குப் பெரிய தோல்வி ஏற்பட்டது. அவர்களுடைய அழிவு காலத்தை நன்றாகவே இது குறிப்பிடுகிறது. அதே மாதிரி நமக்கு வெள்ளியன்று ஜெயம் ஏற்பட்டிருக்கிறது. அது நல்லதையே குறிப்பிடுகிறதல்லவா ?

ட்யூனிஷியச் சண்டை தீர்ந்து விட்டால், தனக்குக் கஷ்டம் அதிகமாகும் என்பது ஹிட்லருக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். ட்யூனிஷியச் சண்டையிலே நேச தேசத்தார் ஆகாயத்திலும் சரி, கடலிலும் சரி, நிலத்திலும் சரி அதிக ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து தான, அவர் இந்தக் கடைசி கட்டத்திலே அதிக விமானங்களை அங்கு அனுப்பவில்லை போலிருக்கிறது. சாகிற மனுஷனுக்கு பெரிய பெரிய டாக்டர்களைக் கொணர்ந்து வைத்தியம் செய்வதால், பணவிரயமே ஒழிய பலனிராது என்று எண்ணும் கோஷ்டியைச் சேர்ந்தவர் போலிருக்கிறது ஹிட்லர்.

அடுத்த அத்தியாயத்தைப் பற்றி அவர் இப்பொழுது அதிக சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறப் போலிருக்கிறது. பிரான்ஸு தேசத்திலே மதய தரைக் கடல் அருகே உள்ள பிரதேசங்களை யெல்லாம் நன்றாகப் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்கிறாராம் அவர். அதே மாதிரி பால்கன் பிரதேசத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடக்கிறனவாம். நார்வேயில் 70 மைல் அகலத்தில் உள்ள பிரதேசங்களில் ஆழ்ந்த அகழிகள் வெட்டப்படுகின்றனவாம். பல்கேரியாவிலே ஏதோ புகைச்சல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அங்கெல்லாம் ஏக போலீஸ் சோதனை நடக்கிறதாம். வெளி உலக சம்பந்தமே இல்லாது போய்விட்டதாம் பல்கேரியாவிற்கும், கிரேக்க தேசத்திற்கும்.

## ஹிட்லர் அநாகரிகத் தன்மை.

நேச தேசத்தார் பால்கனில் அடியெடுத்து வைப்பதானால், கிரேக்க நாட்டையே பாழாக்கி விட்டுப் போக ஹிட்லர் திட்டம் போட்டிருக்கிறாராம். ஐயோ ! எத்தனை ஆயிர வருடங்களாக இருந்த நாகரிக நாடு இது ! இதைப் பாழாக்க நினைக்கிறார் ஹிட்லர் என்றாலே, அவரது அநாகரிகத் தன்மை வெளிப்படவில்லையா ? என்ன மனுஷரய்யா அவர் ?

அடுத்தாற்போல் எங்கு போவது, என்ன செய்வது என்று தெரியாது விழிக்கிறப்போ லிருக்கிறது ஹிட்லர். அரசியல் வாதிகளையும், ராணுவ நிர்வாகிகளையும் கலந்து கலந்து பேசுகிறாராம் அவர். ருஷ்யாமீது இந்தக் கோடையில் படையெடுப்பதா இல்லையா என்ற சந்தேகம் வந்து விட்டதாம் அவருக்கு.

ருஷ்யர்கள் கொடுக்கிற உதை, பலம் போலிருக்கிறது. அவர்களுடைய முஸ்தீப்புகளையும், சக்தியையும் நினைத்தாலே, ஹிட்லருக்குக் கிலியாக இருக்கிறப் போலிருக்கு.

க்யூபன் பிரதேசத்திலே நாஜிகளை லக்ஷக் கணக்கிலே ஒரு சிறு இடத்தில் அமுக்கி வைத்து, அடித்துக் கொல்லுகிறார்கள் ருஷ்யர்கள். நவரோஸிஸ்க் என்ற முக்ய பட்டணத்தைத் தாக்க இரு புறங்களி லிருந்து முன்னேறுகிறார்கள் ருஷ்யர்கள். அவர்களுடைய கை அங்கே ஆகாயத்தில் ஓங்கியே இருக்கிறது. கையாலாகாது போன காரணத்தாலோ என்னமோ, விஷப் பூச்சிகளடங்கிய குண்டுகளை ஜெர்மானியர் ருஷ்யர்கள் மீது எறிவதாகக் கூறப்படுகிறது.

ருஷ்யாவைக் கொஞ்சம் மறந்துவிட்டு, பிரிட்டன் மீது பாய ஹிட்லர் நினைத்திருக்கலாம் என்றும் சொல்லுகிறார்கள். இல்லை, மாஸ்கோ மீது மீண்டும் ஒரு முறை மோதிப் பார்க்கக்கூடும் என்றும் கூறுகிறார்கள். 'பிரான்ஸிலிருந்து நிபந்தனைகளேதுமின்றி, பதினெட்டு வயதுக்கு மேல் நாற்பது வயதுக்குட்பட்டவர்களை யெல்லாம் ஜெர்மனிக்கு அனுப்பு' என்று லவாலுக்கு ஹிட்லர் உத்திரவு போட்டிருப்பதாகப் பேசிக் கொள்ளுகிறார்கள்.

யார் வந்தாலும் வரட்டும்; பூசை கொடுக்கத் தயார் என்றிருக்கிறார்கள் ருஷ்யர்கள். ஏற்கெனவேயே உத்சாகத்தோ டிருக்கும் ருஷ்யர்களுக்கு, பிரிட்டிஷ், இந்திய, அமெரிக்கப் படையினர் ட்யூனிஷியாவில் அடைந்த வெற்றி அதிக ஆனந்தத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமே இடையாது.

ஏன் தெரியுமா ? கூடிய சீக்கிரமே ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஏற்படும் என்பதை அவர்கள் நிச்சயமாக அறிவார்கள். அப்படி இரண்டாவது போர் முனை ஏற்பட்டு விட்டால், ஜெர்மானியர் திணறிப் போவார்கள் ; நாம் அப்பொழுது இன்னும் ஜோராக அடித்து வீழ்த்தலாம் என்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆகவே அவர்கள் சந்தோஷமடைவது இயற்கை தானே !

ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஏற்பட்டால், ஜப்பான் ருஷ்யாவைத் தாக்கக் கூடும் ; அதற்காக மஞ்சூரியாவிலே அது பத்து லக்ஷம் பேர்களை வைத்திருக்கிறது என்கிறார்கள் சிலர். ஜப்பானுக்கு வேறு வேலை இல்லையா என்ன ? ஜெர்மனி சொன்னபடி எல்லாமா ஆடுகிறது அது ? தன் தலை பத்திரமாக இருக்கவேண்டுமே என்ற கவலை தான் அதற்கு.

பர்மாவிலே ஜப்பானியர் ஏதேதோ தந்திரங்கள் செய்து பார்த்தார்கள். ஆனால், இந்தியாவில் உள்ள நேச தேச விமானிகள் பர்மாவிலே உள்ள அக்யாப், மேமியோ, ப்ரோம், ரங்கூன் ஆகிய இடங்களைத்தகர்த்து வருகிறார்கள்.

## ஹிட்லர் கடைசிகாலம் நெருங்குகிறது.

பர்மாவிலும், ஆஸ்திரேலியா அருகிலும் ஜப்பானியர் அதிக சிரத்தை காட்டி வருகிறார்கள். அப்படியிருக்க ருஷ்யாவையும் பகைத்துக் கொள்ள ஜப்பானியருக்குப் பைத்தியமா ஏனன ? கடைசி காலம் வந்து விட்டால் எல்லோரும் தம்மைக் கைவிட்டு விடுவார்கள் என்பது தான் ஹிட்லருககு ரொம்ப நன்றாகத் தெரியுமே ! அந்தக் கடைசி காலமும் அவரை நெருங்கிக் கொண்டு வருகிறது என்பது நமக்கும் நன்றாகத் தெரிகிறதே !



(8-ம் பக்கம் தொடர்ச்சி)

வலுக்கட்டாயமாக யுத்தம் அவர் மேல் சுமத்தப்பட்டது. ஆகையால் தம்முடைய நாட்டு மக்களுக்குத் தலைமை வகித்து யுத்தத்தை நடத்தி வருகிறார். இது மிகக் கடுமையான யுத்தம் ; இது முடிவதற்கு இன்னும் அதிக காலம் செல்லும் ''

—என்று டாக்டர் கோப்பல்ஸ் ஜெர்மன் மக்களுக்குக் கூறினார். ஹிட்லருடைய முகத்தில் கவலையால் ஏற்பட்ட பள்ளங்களும் கோடுகளும் அதிகரித்துள்ளன என்றும், அசையாத தன்மை, மனவுறுதி, கடூரம், சகிப்புத் தன்மை முதலிய குணாதிசயங்களும் முகத்தில் தோன்றுகின்றன என்றும் வர்ணித்திருக்கிறார். ஹிட்லருடைய வலது கை போன்ற ராணுவத் தலைவர், கோயரிங் என்ன கூறினார் ? பர்லினில் அணிவகுத்து நின்ற ஜெர்மன் பட்டாளங்களுக்குச் செய்த பிரசங்கத்தில், இனி மேல் அடைய வேண்டிய வெற்றிகளைப் பற்றி அவர் கூறவில்லை ; '' நம்மை யாராலும் தோற்கடிக்க முடியாது '', என்று மாத்திரம் கூறினார். உலகத்தையே என் உள்ளங்கையில் ஒரு நெல்லிக் கனியாக்கி விடுவேன் என்று வீரம் பேசிய காலம் போய், '' என்னை யார் வேண்டுமானாலும் அடியுங்கள் ; நான் அழப் போவதே யில்லை '' என்று கூறும் நிலைக்கு அச்சுப் பிரசாரம் வந்து விட்டது. இது பிரசார மனப்பான்மையின் மாறுதலை நன்கு காண்பிக்கின்றது.

## புலி வருவதற்கு முன் இத்தலியின் கிலி .

ரஷ்ய செஞ்சேனையின் பெரும் போர் அச்சுப் பிரசாரம் செய்பவர்களை அழாத குறைக்குக் கொண்டு வந்து விட்டது என்றால், டூனிசியாவில் நான்காவது இந்தியப் பட்டாளம் பெற்ற பெரும் வெற்றிகள் அவர்களுடைய மனோ நிலையைக் குலைத்து, பிரசாரத்தைக் கலைத்து, இந்திய மக்கள் அவர்களைப் பார்த்து மேலும் நகைக்கும்படியான நிலையில் கொண்டு வந்து விட்டது. டூனிசியாவிலிருந்து அச்சுத் துருப்புகள் முறியடிக்கப் பட்டால், இத்தலியின் பாடு திண்டாட்டந்தான். புலி வருவதற்கு முன், இத்தலி கிலி யடைந்திருக்கிறது. அந்தக் கிலியில் நான்காவது இந்தியப் பட்டாளம், பர்மாவில் நடந்த சண்டைகளில் 15,000 துருப்புகளை இழந்து விட்டது என்று ரோம் நிலையம் ஏப்ரல் 19-ந் தேதி கூறியிருக்கிறது. பர்மாவுக்கே அந்தப் பட்டாளம் எப்போதும் போனதில்லை என்ற விஷயம் பிறகு தான் தெரிந்து அடுத்த நாள், அதாவது ஏப்ரல் 20-ந் தேதி,

> '' டூனிசியாவில் நான்காவது இந்தியப் பட்டாளத்தைச் சேர்ந்த 16,000 சிப்பாய்கள் உயிரிழந்தார்கள் என்று நியூ டெல்லியில் கூறப்பட்டது''

என்று தெரிவித்தது. இரண்டு நாட்களுக்கு பிறகு, அதாவது ஏப்ரல் 22-ந் தேதி, ஹிமாலயா என்ற அச்சுப் போலி நிலையம்,

> '' டூனிசியாவில் 17,000 இந்திய சிப்பாய்கள் உயிரிழந்ததை பிரிட்டிஷார்கள் ஒத்துக் கொள்ளுகிறார்கள் ; ஆனால் உள்ளபடி உயிரிழந்தவர்கள் 70,000 பேர்கள்,''

என்று வாய் கூசாமல் எண்களையும் மாற்றி, பூஜ்ஜியங்களையும் அதிகப் படுத்திக் கூறி யிருக்கிறது. இதில் உண்மை என்ன ? சென்ற பிப்ரவரி மாதம் 15-ந் தேதி, இந்தியாவின் உதவி பிரதம தளகர்த்தர், இந்திய அரசாங்க சபையில் (' கவுன்சில் அப் ஸ்டேட்டில்'),

> '' ஆப்பிரிக்காவில் நடந்த 2½ வருஷச் சண்டையில் நான்காவது இந்தியப் பட்டாளம் 15,000 சிப்பாய்களை இழந்திருக்கிறது ; ஆனால் இந்த 2½ வருஷங்களில் ஒரு லட்சம் இத்தாலியர்களையும், ஜெர்மனியர்களையும் அப் பட்டாளம் கைதியாகப் பிடித்திருக்கிறது'', என்று கூறினார்.

இதை அவசரத்தில் மாற்றிக் கூறியதில் அச்சு நிலையத்தின் பிரசாரம் ஒன்றோடொன்று முரண்பாடாகி, பொய்யுரைகள் வெளியாய் விட்டன. இந்தப் பிரசாரத்தினுடைய நோக்கம் என்ன ? வட ஆப்பிரிக்காவில், சிடிபராணி, சிடி ஓமார், லிபியன் ஓமார், பீரெல்கோபி, கசாலா, எல் ஆலமீன், மாரெத், வாடி அகரிட் ஆகிய இடங்களில் வெற்றி பெற்று வீரமாலை சூடிய நான்காவது இந்தியப் பட்டாளத்தை மிஸ்டர் சர்ச்சில், இந்திய மந்திரி அமெரி முதலியவர்கள் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். இந்தப் புகழ்ச்சியினால் இந்திய யுத்த முயற்சி இன்னும் பல மடங்கு அதிகப்படும் ; இந்தியத் துருப்புகளின் நஷ்டத்தைப் பிரமாதப் படுத்தினால் இந்தியர்கள் சற்று மனந் தளர்வார்கள் ; ஆகையால் அப்படிச் செய்து பார்க்கலாம் என்பது அச்சுப் பிரசார நோக்கம்.

ஆனால் எப்படி பிரிட்டிஷ் மக்களிடம் அச்சு நிலையங்களின் ருத்திராட்சப் பூனை வேஷம் பயனில்லாமற் போயிருக்குமோ, அப்படியே அவைகளின் அதிக நஷ்டப் புரளி இந்திய மக்களை ஏமாற்றாது என்று திண்ணமாகச் சொல்லலாம்.

### போட்டோ படப் போட்டிப் பரிசு

#### பரிசின் முடிவு

நமது போட்டோ படப் போட்டிக்கு 9 பேர்கள் போட்டியிட்டனர். சென்னை மாகாணத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும், உதாரணமாக, சிதம்பரம், கோயமுத்தூர், ஈரோடு, குண்டூர், சென்னை, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி ஆகிய ஊர்களிலிருந்து போட்டியிட்டனர். இருவர் விதிகளை யொட்டி அனுப்பவில்லை யாகையால் அவர்கள் அனுப்பிய படங்கள் நிராகரிக்கப்பட்டன. இவர்களில் ஒருவர் படங்களை அனுப்புவதற்குப் பதிலாக நெகடிவ்களை அனுப்பியிருந்தார்.

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை மங்கபதி நாய்க்கன் தெரு, 26-ம் நம்பர் வீட்டிலிருக்கும் திருவாளர் எம். ஆர். நடேசன் அனுப்பிய படங்கள் மிகச் சிறந்தவை என்று தீர்மானிக்கப்பட்டு கீழ்க் கண்டவாறு பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன :—

முதல் பரிசு ரூ. 20—
'' கிணறு தோண்டுவது. ''

இரண்டாவது பரிசு ரூ. 10—
'' நன்கு வளர்க்கப்பட்ட ஆடு மாடுகள்.''

ஒவ்வொரு தலைப்பின் கீழும் அனுப்பப்படும் மிகச் சிறந்த போட்டோவுக்கு ரூ. 3 விகிதம் பரிசு அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தபடி, வரப் பெற்ற போட்டோக்களில் ஷை திருவாளர் எம். ஆர். நடேசன் அனுப்பிய படங்களே மிகச் சிறந்தவை எனத் தீர்மானித்து கீழ்க் கண்ட ஒவ்வொரு படத்திற்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்பட்டது :—

(1) வீடு கட்டுதல். (2) தோண்டி முடித்த கிணறு. (3) வயலுக்குப் பரம்படித்தல். (4) காய்கறித் தோட்டம். (5) கோழிப்பண்ணை. (6) திருமணம்.

# ம ர வ ள் ளி க் கி ழ ங் கு



**வர்ணனை.**—6 முதல் 8 அடி உயரமுள்ள அடர்த்தியான செடி. இதன் தண்டு மெலிந்து நிமிர்ந்திருக்கும். இலைக்காம்புசள் நீண்டு சிவப்பு நிறமானவை. இலைகள் கைவிரல்களைப் போல் 5 பாகங்களாகப் பிரிந்திருக்கும். கிழங்கு பெரிய வடிவமுள்ளதாயிருக்கும். இதில் மாச்சத்து மிகவும் உண்டு. இந்தக் கிழங்கின் இரசத்தில் 'ஹைட்ரோசையானிக்' திராவகமாவது, 'ப்ரஸ்ஸிக்' திராவகமாவது கொஞ்சம் இருக்கும். இலைக் கொத்துக்கள், கிழங்குகளின் அளவு, நிறம் ஆகியவற்றில் பல வகைகள் உண்டு.

**பரவுதல்.**—நன்ருக முதிர்ந்த தண்டில் 6–12 அங்குல நீளம் வெட்டி, 4 அல்லது 5 அடிக்கு ஒரு துண்டு விகிதம், அதில் பாதி நீளத்திற்குப் பூமிக்குள் சாய்வாக நட வேண்டும். இலைகள் முளைக்கிற வரையில் பூமி ஈரமாகவே யிருக்க வேண்டும்.

**சாகுபடி.**—எப்படிப்பட்ட நிலத்திலும் சாகுபடி செய்யலாம். புஞ்சை நிலத்திலும், உரமில்லாத பூமியிலும் முளைக்கும். செடியைச் சுற்றி மண்ணை யணைத்துக் களை பிடுங்க வேண்டியது அவசியம். ரகத்திற்குத் தகுந்தபடியும் நிலத்திற்குத் தகுந்தபடியும் 9 முதல் 12 மாதங்களில் கிழங்குகள் தயாராகின்றன. கிழங்கு தோண்டப்பட்ட 2 அல்லது 3 நாட்களில் சாப்பிட வேண்டும், இல்லாவிட்டால் விஷமேறிவிடும். இந்த 2 அல்லது 3 நாட்கள் கூட, ஈரமான மண்ணிற்குள் கிழங்குகளைப் புதைத்து வைத்திருப்பது நல்லது.

**பருவங்கள்.**—மலையாளத்தில் இரண்டு வகைக் கிழங்குகள் சாதாரணமாக இருக்கின்றன. ஒன்று எப்ரல் மாதம் நடப்பட்டு டிசம்பர் மாதம் தோண்டப்படுகிறது. மற்ருென்று ஜனவரி மாதம் நட்டு ஆகஸ்டு மாதம் தோண்டப்படுகிறது.

**உபயோகங்கள்.**—(1) கிழங்கின் தோலை உரித்து வேகவைத்து தயிரோடாவது சட்டினியாகவாவது சாப்பிடலாம். (2) கறிகள் சமைக்கலாம். (3) 'மோனியாக் மா' என்னும் மாவை இந்தக் கிழங்கிலிருந்து பல முறைகளைக் கொண்டு தயாரிக்கிருர்கள்: (a) கிழங்குகளை இலேசான மெல்லிய துண்டுகளாக வெட்டி, உலர வைத்து அவசியமாகிற போது பொடி செய்து கொள்ளுகிருர்கள், (b) மற்ருெரு முறைப்படியும் நல்ல 'மோனியாக்' தூளைத் தயாரிக்கலாம். வேரைத் தோலுரித்துக் கழுவி, பசை போல் அரைக்கிருர்கள். அகன்ற வாயுள்ள பாத்திரத்தில் முக்கால் பங்கு தண்ணீர் ஊற்றி, அதன் வாயில் மஸ்லீன் துணியைக் கொண்டு வேடு கட்டுகிருர்கள். இந்தத் துணி தண்ணீரில் தோய்ந்து கொண்டிருக்க வேண்டும். இந்தப் பசையை அந்த மஸ்லீன் வேடுத் துணிக்குள் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுத் தண்ணீருக்குள் சத்து இரங்கும்படி சலிக்க வேண்டும். இப்படியாக எல்லாம் சலித்தான பிறகு, மஸ்லீன் துணியை அவிழ்த்து விட்டு மாவு படியும்படி விட்டுவிட வேண்டும். பிறகு தண்ணீரை இறுத்துவிட்டு, புதுத் தண்ணீரை ஊற்ற வேண்டும். நன்ருகக் கலக்கி விட்டுவைத்தால், அடியில் களிம்பு போல் படியும். இப்படி 3 அல்லது 4 முறைகள் செய்த பிறகு, அடியில் இருக்கும் மாவின் மேல் செங்கல் நிறமான ஒரு வஸ்து படிந்திருக்கும். இதைக் கரண்டியால் அப்புறப்படுத்தி விட வேண்டும். அடியில் படிந்துள்ள மாவை சூர்ய வெப்பத்தில் உலர்த்த வேண்டும். பிறகு அதை அம்மியில் வைத்து அரைத்து சல்லடையில் சலிக்கவேண்டும். இந்த மாவை மிட்டாய்கள் செய்வதற்கும், துணிகள் சலவை செய்வதற்கும் உபயோகிக்கிருர்கள். (4) மர வள்ளிக்கிழங்கை மிக இலேசான தகடுகளாக அறுத்து, கொதிக்குந் தண்ணீரில் சில நிமிஷ நேரம் வைத்திருந்து, தண்ணீரை இறுத்துவிட்டு வெயிலில் உலர்த்தி காற்று புகாதபடி டப்பிகளில் அடைத்து வைத்திருந்தால், எத்தனை நாட்களானுலும் கெட்டுப் போகாது. அதுபோலவே மாவையும் வைத்திருந்தால் கெட்டுப் போகாது. இந்த வற்றலை எண்ணையிலாவது நெய்யிலாவது வறுத்து சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம். (5) வியாபாரத்திற்காகத் தயாரிக்கப்படும் பொடி கிழங்கிலிருந்து செய்யப்படுகிறது. (6) இருப்பு உணவாக உபயோகிக்கும் பொருட்டும் மர வள்ளிக் கிழங்கு பயிராகிறது.

**உள்ளடக்கம்.**—தண்ணீர், 59·4%; உலோகச் சத்து, 1·0%; ப்ரோடீன், 0·7%; கொழுப்பு, 0·2%; கார்போஹைட்ரேட், 38·7%. ஒரு பவுண்டுக்கு 795 காலோரி; சுண்ணச் சத்து, 0·069%; நிமதாக்னி, 0·092%; இரும்பு, 0·0009%, ஏ விட்டமின் கிடையாது, பி விட்டமின் 100-கிராம் யூனிட்டுக்கு 26, சி விட்டமின் 100-கிராம் யூனிட்டுக்கு 38·8 மில்லி கிராம்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ௵ மே௴ 21௳, வெள்ளிக்கிழமை [இதழ் 20

## வெற்றிப் பெருமிதம்

வெற்றிப்  பெருமிதம்

மேன்மை தங்கிய லின்லித்கோ பிரபு.

"வட ஆப்பிரிக்காவில் 3 வருஷங்கள் அரும் பாடு பட்டோம். வெயர்வை வடித்தோம். தியாகங்கள் செய்தோம். கடைசியில் மகத்தான வெற்றி பெற்ருேம். ஆப்பிரிக்கா கண்டமே சுத்தமாகி விட்டது. எதிரியின் பெரும் படைகள் கைப்பற்றப் பட்டன அல்லது அழிந்தன. மகா கேந்திர மார்க்கமான மத்திய தரைக் கடல் வழி திறந்து விடப்பட்டது. அதன் தென் கரை நெடுக பிரஞ்சு, அமெரிக்கன், பிரிட்டிஷ், குடியேற்ற நாடுகள், இந்தியா முதலிய நாட்டுப் படைகள் டிவிஷன் டிவிஷனுக அணி வகுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் வெற்றியால் பெருமிதங் கொண்டிருக்கின்றன. ஒத்திருந்து போராடுகிறவர்கள் தாங்கள் என்று இவர்கள் உணருகிருர்கள், இவர்களுடைய பரஸ்பர நம்பிக்கை, போர் முனையில் பரீட்சிக்கப் பட்டு விட்டது. அடுத்த போர் முனை எது என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். ஐரோப்பாக் கண்டம் முழுதும் பயங்கரமான நிலைமையை உண்டாக்கிய, ஓங்கி வளர்ந்திருக்கும் நாசிசத்தை, வேரோடு அழித்து விடவேண்டு மென்னும் உறுதிக் கொண்டிருக்கிருர்கள்."

"இந்த எதிரியை அழிக்கும் திருப்பணியில் நம் புகழ்பெற்ற நான்காவது இந்தியப் படையும் கலந்திருந்தது பற்றி நாம் மகிழ்ச்சி யடைவோம். 1940, 1941, 1942-ம் வருஷங்களில் ஆப்பிரிக்காவில் புகழ்பெற்ற பல படைகள் இப்போது துனீசியாவில் இல்லை. எகிப்தைக் காக்கும் பொருட்டு பீல்ட் மார்ஷல் வேவலின் தலைமையிலும், ஜெனரல் ஆகின்லெக் தலைமையிலும் போராடிய இந்தியப் படைகளை, இச்சமயத்தில் மறந்து விடுவது, நன்றி கெட்ட செயலாகும். இன்று நாம் கொண்டாடும் முடிவான வெற்றிக்குக் காரணம் ஆப்பிரிக்கப் போராட்ட ஆரம்ப காலம் முதல் அதில் ஈடுபட்டிருந்த பல படைகளின் கூட்டு முயற்சி தான்."

வெற்றிப் பெருமிதம்

வெற்றிப் பெருமிதம்

வெற்றிப் பெருமிதம்

# முரசொலி



"திட்டமும், முன் யோசனையும் தான் நமக்குத் துணைகள். இவற்றைக் கடுமையான போர் முறைகளுக்கு நாம் நடத்தி செல்லும் படைகளுக்குக் கொடுத்து உதவுகிறோம். வீர ரஷ்யர்களுக்கும் நெடு நாட்களாகத் துன்பப் படும் சீனர்களுக்கும் நாம் உதவுகிறோம். சிறைக் கதவுகளுக் குள்ளிருந்து நம்மைக் கூவி அழைக்கும் அடிமை நாடுகளுக்கும் நாம் இவற்றை உதவுகிறோம்."

—மிஸ்டர் சர்ச்சில்,
வாஷிங்டனிலிருந்து மே மாதம் 14-ந் தேதி,
செய்த வானொலிப் பிரசங்கம்.

* * * * *

"உங்களைக் கொடுமைப் படுத்துகிறவர்களிடமிருந்து உங்களை (பெல்ஜியர்கள்) மீட்க நாங்களும் எங்கள் நேச நாடுகளும் எங்களால் ஆனவரை முயலுவோம். உங்கள் மீட்சிக் காலம் நெருங்கிவிட்டது."

—மிஸ்டர் ஆந்தனி ஈடன்,
பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி பெல்ஜியர்களுக்கு,
16-ந் தேதி அனுப்பிய செய்தி.

* * * * *

"வட ஆப்ரிக்காவை பிடித்து விட்டதினாலேயே, எல்லாக் காரியங்களும் முடிந்து விட்டன என்று அர்த்தமல்ல. பாதுகாக்க வேண்டிய சிறந்த அரணாக அது இப்போது இல்லை. ஆனால், ஏற்ற தருணத்தில் அச்சு நாடுகளை நாம் மேலும் தாக்க, ஏற்ற தளமாக அமையும். அப்போது தான் ஹிட்லர் ட்யூனிஸில் தன் படைத் தலைவர்கள் சரணாகதி அடைந்தது போல, தானும் சரணாகதி அடைவார்."

—மிஸ்டர் அட்லி,
சென்ற 13-ந் தேதி காமன்ஸ் சபையில் பேசியது.

* * * * *

"சீன நாட்டிலிருந்து ஜப்பானியர்களை விரட்டி யடிப்பதில் நேச நாட்டுப் படைகளின் திறமையைக் கண்டு, நாம் மகிழும் நாள் சமீபித்து விட்டது."

—சர்ச்சில்,
மார்ஷல் ஷியாங்கிற்கு விடுத்த செய்தி.





பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| வெற்றிப் பெருமிதம் .. .. | 1 | தேசீயப் போர் முனை .. .. | 6 |
| படம்: மேன்மை தங்கிய லார்ட் லின்லித்கோ .. .. .. | 1 | தொழிலாளரும் உலகப் போரும் .. | 9 |
| முரசொலி .. .. .. | 2 | விதியின் லீலை .. .. .. | 10 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. | 3 | இந்தியப் படைக்குத் தனிப் பெருமை .. | 13 |
| சென்னை கவர்னர் கடிதம் .. .. | 3 | இந்தியப் படைகளுக்கு வைஸ்ராய் பாராட்டு .. .. .. | 14 |
| தலையங்கம்: வெற்றி முரசு .. .. | 4 | பாட்டு "இந்திய வீரரின் எழுச்சி" .. | 15 |
| ஜெய பேரிகை .. .. .. | 5 | துவைப் பருப்பு .. .. .. | 16 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**பெரும் யுத்தத்திற்கு ரஷ்யாவில் ஆயத்தம்.**

இனி ஏற்படப் போகும் பெரும் போராட்டங்களுக்கு ஆயத்தங்கள் செய்ய வேண்டி செம்படைகள் டானெட்ஸ் பகுதியைக் கடந்து விஷிஷானஸ் என்னு மிடத்திற் கருகிலுள்ள முக்கியமான இடங்களைக் கைப் பற்றிக் கொண்டார்கள். கடும் போராடி, டானெட்சுக்கு அப்பால் ஜெர்மானியர் வசமுள்ள ஒரு அரணைக் கைப்பற்றினர். அன்றியும் மலை மேலுள்ள இரண்டு கேந்திர ஸ்தானங்களைத் தாக்கினர். டான் பேசினிலுள்ள கைத் தொழில் பகுதியைத் தாக்குவதற்கு வசதியான தோர் இடத்தையும் கைப் பற்றிக் கொண்டனர். குபானில் மீண்டும் கடும் போராட்டம் நடை பெறுகிறது. என்றாலும், ஏராளமான படைகளை இரு தரத்தாரும் உபயோகிக்க வில்லை. காக்கஸஸ் பகுதியில் ஜெர்மானியர்கள் கைப்பற்றிய நாடுகளில் குபான் மட்டுந் தான் இன்னும் அவர்கள் வசமிருக்கின்றது. ஆகவே இதைக் காப்பாற்ற அரும்பாடு படுகிறார்கள். நோவோரோசிஸ்குக்கும், க்ரிம்ஸ்கியாயாவுக்கும், குபான் ஆற்றிற்கும் இடையே பலமான அரண் ஒன்றை ஜெர்மானியர்கட்டி முடித்திருக்கிறார்கள். ரஷ்யப் படைகள் விரைந்து வந்தால் குபான் ஆற்றுப் பெரு வெள்ளம் அவர்கள் வேகத்தைத் தடுக்கும் என்று ஜெர்மானியர்கள் நினைத்தார்கள். ஆனால் ரஷ்யர்கள் இந்த அரணைத் துளைத்துக் கொண்டு வந்து க்ரிம்ஸ்கியாயாவைக் கைப் பற்றிக் கொண்டார்கள். நோவோரோசிஸ்குக்கு வடக்கிலும் தெற்கிலும் ரஷ்யர்கள் கை ஓங்கி யிருக்கிறது.

* * * *

**ஜெர்மன் அச்சமும் ரஷ்யர் நோக்கமும்.**

குபான் ஜெர்மானியர்களுக்கு மிகவும் முக்கியமான தளம். இதை பாய்ச்சல் தளமாகக் கொண்டு காகஸசை மீண்டும் தாக்கலாமென்று அவர்கள், நினைக்கிறார்கள். அன்றியும் அதை ரஷ்யர்கள் கைப்பற்றி விடுவார்களானால், தென்காகசசில் அவர்கள் நிலைமைக்கே ஆபத்து ஏற்பட்டு விடும். கிரிமியாவிற்கும் தமான் தீபகற்பத்திற்கும் அதிக தூர மில்லை. இந்தத் தீபகற்பத்தில் தான் ஜெர்மானியர்கள் தம் தெற்குப் போர் அரங்கத்திற்கு வேண்டிய தளவாடங்களைச் சேகரித்து வைத்திருக்கிறார்கள். இதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டு மென்று ஜெர்மானியர்கள் விரும்புகிறார்கள். வேனிற் காலத் தாக்குதலுக்கு முன்னதாகவே கிரிமியாவைக் கைப் பற்றி விட வேண்டு மென்று ரஷ்யர்கள் விரும்புகிறார்கள்.

சென்ற மழை காலத்தில் லெனின்கிராடை வெகுவாக பலப் படுத்தி விட்டார்கள். வெலுகி லூக்கியை அவர்கள் கைப்பற்றியதனால், ஜெர்மானியர்கள் போக்கு வரவிற்கு அச்சாணி போன்றிருந்த ரயில் லைனுக்கு அருகில், ரஷ்யர்களுக்கு இடங் கிடைத்து விட்டது. இந்த ரயில்வே ரஷ்யாவின் வட பகுதியிலிருந்து தெற்கே உக்ரேய்ன் பகுதிவரை செல்லுகிறது. நிற்க, ராஸ்டாக்கையும் ஸ்டெட்டினையும் பிரிட்டிஷ் விமானங்கள் கடுமையாகத் தாக்கின. எனவே லெனின் கிராட் பகுதியில் போர் மூளலாம்.

**செம்படை தயார்**

வேனிற் காலத் தாக்குதல் கர்ஸ்க்குக்கு அருகில் எங்கேனும் நடை பெறலாம். இது கடுமையானதோர் போராட்ட மாயிருக்கும். ஜெர்மானியர்கள் தாக்கு முன்னதாக ரஷ்யர்களே பாய்ந்து ஜெர்மானியர்களைத் தாக்கவுங் கூடும். 'போர் முனையாக மாறக் கூடிய எல்லா இடங்களிலும் தகுந்த ஏற்பாடுகளை செம்படைகள் செய்து வைத்திருக்கின்றன. மூன்று வாரங்களுக்கு முன்பு நடந்த 'மே' விழாக் கொண்டாட்டத்தின் போது ரஷ்ய சர்வாதிகாரியான ஸ்டேலின் கூறியதாவது :

நம் செம்படைகள் நேசநாட்டுப் படைகளுடன் சேர்ந்து "பாசிஸ்ட் மிருகத்தின் முது கெலும்பை ஒடிக்க வேண்டிய காலம் நெருங்கி விட்டது."

இப்படி அவர் கூறும்போது, என்னென்ன சம்பவங்கள் நிகழப் போகின்றன வென்று தெளிவாக அனுமானித்துத் தான் அப்படிக் கூறினார் என்று நினைக்க வேண்டி யிருக்கிறது. இனி ஜெர்மானியர் ஜம்பம் பலிக்காது.

சென்னை கவர்னர். கவர்ன்மெண்டு வீடு,
மே 11, 1943.

"தேசீயப் போர் முனையின் முதல் ஆண்டு விழாவும் துனீசியாவில் நேச நாடுகள் அடைந்த மா பெரும் வெற்றி விழாவும் ஒருங்கே நடைபெறுவது பெருமிதமான சிறப்புத் தருவதாகும்."

"முதல் வருஷத்திலேயே தேசீயப் போர் முனையின் வேலை பாராட்டத் தக்கது என்று பெயர் வாங்கி விட்டது. நேச நாட்டுப் படைகளைப் போலவே, முடிவான வெற்றி பெறும் வரையில், தன் பலத்தை இது அதிகப்படுத்திக்கொண்டு போகும் என்பது பற்றி எனக்குக் கொஞ்சங் கூடச் சந்தேகமே யில்லை.

(ஒப்பம்) **ஆர்தர் ஹோப்,**
சென்னை கவர்னர்.

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞு மேமீ 21உ. [இதழ் 20


## வெற்றி முரசு !

இன்று மே மாதம் 21-ம் தேதி. வெள்ளிக்கிழமை. இந்தியா முழுதும் விழா. எல்லோருடைய முகத்திலும் இன்பம் தாண்டவமாடுகிறது. என் ? எதற்காக விழா ? நேச நாடுகள் துனீசியாவில் வெற்றி பெற்ருர்கள். இது ஒரு மகத்தான வெற்றி. ஒப்புயர்வு இல்லாதது. பரிபூரணமானது. முக்கியமான போர் அரங்கத்தில் கிடைத்த முதல் தரமான வெற்றி. இந்தப் போராட்டத்தில் இந்தியப் படைகள் மிகச் சிறந்த பங்கு கொண்டன. தம் தாய் நாட்டிற்கு அழியாப் புகழைத் தேடின. இந்த வெற்றியைக் குறித்துச் சென்ற வெள்ளிக்கிழமை மேன்மை தங்கிய வைஸ்ராய் பிரபு ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார். அதில், கீழ்க்கண்ட வாறு குறிப்பிட்டார். "நாம் பெரிதும் மகிழ்வோம். எனென்ருல், கடும் போராடி, கடைசியாய் வென்றது நமது புகழ் வாய்ந்த 4-வது இந்தியப் பட்டாளந் தான்." இந்த டிவிஷன் பட்டாளந் தான் அச்சு நாட்டுப் படைத் தலைவராக ஆப்பிரிக்காவி லிருந்த ஜெனரல் பான் ஆர்னிமைப் பிடித்தது. மேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்கள் இந்திப் படையைப் பெரிதும் பாராட்டிப் பேசியதோடு நிற்க வில்லை. மேலும் அவர் கூறியதாவது: எகிப்தைக் காக்கும் பொருட்டு பீல்டு மார்ஷல் வேவல் தலைமையிலும், ஜெனரல் ஆகின்லெக் தலைமையிலும் நடை பெற்ற பெரும் போராட்டத்தில் கலந்து கொண்ட இந்தியப் படைகளில் பல, இப்போது துனீசியாவில் இல்லை; அவை 1940-41-42-ம் வருஷங்களில் பெரும் புகழ் பெற்றன; இன்று நடைபெறும் துனீசிய விழாவில் இந்திய மக்கள் எல்லோரும் இனம், மதம், நிறம், நாகரிகம், கலை முதலிய எந்த வித வேற்றுமையுமில்லாமல் இந்த வெற்றியில் பெருமித் மடைகிருர்கள். என் ? இந்தியப் படைகளின் அருஞ் செயல்களை ஞாபகப் படுத்தி, அதனுல் பெருமை யடைகிருர்கள். இந்த மாபெரும் வெற்றியினுல் ஐரோப்பாவில் அச்சு நாடுகளின் ஆதிக்கம் அழிந்தது என்று தான் அர்த்தம். இப்படிப் பட்ட வெற்றியில் இந்தியப் படைகள் பெரும் பங்கு கொண்டது உண்மையிலேயே சிறப்பு தருவதாகும்.

முடிவான வெற்றியை நாடி மூன்னேறிப் போய்க் கொண்டிருக்கிறன, நேச நாட்டுப் படைகள். துனீசிய வெற்றியினுலே வெகு தூரம் முன்னேறி விட்டதாகத் தான் அர்த்தம். ஐரோப்பாவில் ஹிட்லர் கைப்பற்றியுள்ள நாடுகளையும், மற்ற அச்சு நாடுகளையும் தாக்குவதற்கு எற்ற பாய்ச்சல் ஸ்தலமாக வட ஆப்பிரிக்கா அமைந் திருக்கிறது. மத்யதரைக் கடலோ சிறந்ததோர் கேந்திர மார்க்கம். இந்த வழியும் நேசநாடுகளுக்கு இப்போது திறந்து விட்டது. ஆகவே, ரஷ்யாவிற்கு வெகு விரைவாக இதன் மூலம் தளவாடங்கள் அனுப்பக் கூடும். ஜிப்ரால்டருக்கும், சூயஸ் கால்வாய்க்கும் 1,800 மைல் தான் தூரம். ஆப்பிரிக்காவின் தென் கோடியில் உள்ள நன்னம்பிக்கை முனை வழியாக சூயஸ் கால்வாய்க்குப் போக வேண்டுமானுல் 12,000 மைல் தூரம். ஆகவே, மத்யதரைக் கடல் வழி திறக்கப்பட்டதினுல் நேச நாடுகளுக்குப் பெரிதும் வசதி யேற்பட்டு விட்டது என்பது வெளிப்படை. போராட்டக் காலங்களில் அவகாசம் மிக மிக முக்கியமானது. இந்த வசதி இப்போது நேச நாடுகளுக்கு எராளமாக எற்பட்டிருக்கிறது. கப்பல்களும் அடிக்கடிப் போய் வரலாம். எனவே, சரக்குகளும் எராளமாக அனுப்பலாம்.

ஆப்பிரிக்காவில் சென்ற மூன்று ஆண்டுகளாகக் கடுமையாகப் போராடினதின் பலன்தான் துனீசிய வெற்றி. இங்கே போர் ஆரம்பமாகி சரியாக இரண்டு வருஷம், பதினேரு மாதம், இரண்டு நாட்களாயின. டன்கர்க்கை விட்டு பிரிட்டிஷ் படைகள் வெளியேறிய ஒரு வாரத்திற்குப் பிறகு, அதாவது 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 10-ம் தேதி தான், இத்தாலி போரில் இறங்கியது. மத்யதரைக் கடலிலும் வட ஆப்பிரிக்காவிலுமுள்ள பிரிட்டிஷ் நாடுகளையும், பிரஞ்சு நாடுகளையும் தாக்கியது. அச்சு நாட்டுப் படைகள் தங்கள் ஆயுதங்களைக் கொண்டு எதிர்ப்பதை நிறுத்திய பிறகு, அதாவது மே மாதம் 12-ம் தேதியன்று ஆப்பிரிக்க யுத்தம் உத்தியோக முறையில் நிறுத்தப் பட்டது. ஆப்பிரிக்காவில் தன் சாம்ராஜ்யத்தை நிலை நாட்ட வேண்டுமென்று இத்தாலி பகற் கனவு கண்டு கொண்டிருந்தது முதலில் பலிக்கும்போலிருந்தது. பிறகு சூன்யமானது. மத்யதரைக் கடல் இத்தாலிக்குச் சொந்த மானதோர் எரி யென்று இறுமாப்பு கொண்டிருந்தார், முசோலினி. ஆனுல், சிசிலியையும், சார்டீனியாவையும், என், இத்தாலியையுங் கூட விமானத் தாக்குதலி னின்று காப்பாற்றும் பொருட்டு, அவர் செய்யும் பகீரத யத்தனங்கள் வீணுன இறுமாப்பு என்பதைத் தெள்ளத் தெளிய வெளிப் படுத்துகின்றன.

ஹிட்லரும் அவருடைய பிரசார இலாக்காவும் வட ஆப்பிரிக்க யுத்தத்தைக் குறித்தும் குறிப்பாக துனீசிய யுத்தத்தைக் குறித்தும் பீத்திக் கொண்டன. இத்தாலிய எரி என்று முசோலினி மத்யதரைக் கடலைச் சொல்லுவாரானுல், ஜெர்மனியின் ஒரு பகுதியாக வட ஆப்பிரிக்காவை அவர்கள் கருதினுர்கள் என்று நினைக்க இடந் தருகிறது. தமக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம் என்று அவ்வளவு உறுதியோடிருந்தார்கள். அவர்கள் வென்ருல், அது வெற்றி; தோற்ருல், போர்த் தந்திர முறை. அவர்கள் வென்ருலும் தோற்ருலும் திட்டப்படியே நிறைவேற்றப் பட்டதாக பெருமை கொண்டார்கள். ஆனுல் துனீசியாவில் இந்தப் பாசாங்கு பலிக்க வில்லை. அவர்கள் எவ்வளவோ முயன்று பார்த்தும் முடிய வில்லை. இது பற்றி லார்ட் ஹா ஹா மழுப்பி விடப் பார்க்கிருர். மே மாதம் 12-13-ம் தேதி இரவு பெர்லின் வானொலி நிலையத்திலிருந்து ஒரு பிரசங்கத்தை ஒலி பெருக்கினுர். அப்போது அவர் கூறியதாவது :—" வட ஆப்பிரிக்காவில் ட்யூனிசும் பெசர்டாவும் விழுந்து விட்ட போதிலும், போர் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது .....பண்டைக் காலத்தைப் போலவே தற்காலப் போராட்டத்திலும் போராடும் படையினரின் உணர்ச்சி தான் மிகவும் முக்கியமான விஷயம்" கடைசியில் அவருடைய பிரசாரம் இப்படிப் பேசும்படியான அளவிற்கு அது வந்து முடிந்திருக்கிறது.



அச்சு நாடுகளின் தோல்வியைக் குறித்து லார்டு ஹாஹா கூறியதாவது :—" தாள்வாயிலோ, நெற்றியிலோ, கழுத்திலோ பட்ட அடியாக அது இருக்கலாம். அதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமானுல், மிகப் பலமாக விட்ட குத்து, இலேசாக ஜெர்மனியின் முழங் காலுக்குக் கீழே தான் பட்டது" என்று சொல்ல வேண்டும். என்னவானுலும், இது அவ்வளவு முக்கியமான தல்ல." அதே மூச்சில், "தென் ஐரோப்பாவின் பாது காப்புக்கள் பரிபூரணமாக்கப்பட்டிருக்கின்றன. இனி எதிரிப் படைகள் இக்கரையில் இறங்க ஒட்டாதபடித் தடுத்து விடலாம்," என்றும் கூறுகிருர். அடி சரியான அடியாக இல்லா விட்டால், தம்மை எங்கே தாக்குவார்களோ வென்று ஹிட்லரும் முஸோலினியும் கவலை கொள்ளக் காரண மென்ன ?

துனீசிய வெற்றியின் முக்கியத்துவம் மிகவும் உயர்ந்தது. மத்யதரைக் கடல் வழி திறக்கப்பட்டு விட்டதனுலே, நேசநாடுகளின் கீழக் கோடிப் போர்த் தந்திர முறைகளில், மாற்றம் எற்படலாம். சிசிலியையும் சார்ட்டீனியாவையும் நேசநாடுகள் வெல்லலாம். மத்யதரைக் கடலில் போய்வரும் சப்ளை கப்பல்கள் அதிகப் பாதுகாப்போடு போய்வரும். இத்தாலிய கப்பல் தளங்களை அழிக்கிறதற்கு அதிக சந்தர்ப்பங்கள் எற்படும். ஆகவே, இத்தாலிக் கப்பற் படை இல்லை யென்றே வைத்துக் கொண்டு, மத்யதரைக் கடலில் உள்ள பிரிட்டிஷ் கப்பற்படையை, தூரக் கிழக்கிற்கு மாற்றவும் இடமுண்டு. மத்திய கிழக்கிலுள்ள நேசநாட்டுப் படைகளின் நிலைமையைப் பலப்படுத்துவதனுலே, ஈராக், ஈரானிலுள்ள எண்ணெயை மிகவும் விரைவாகவும் திறமையோடும் விநியோகிக்கலாம். இப்போது செலவாவதை விடக்குறைந்த செலவில், பாரசீக வளைகுடாவிலுள்ள துறைமுகங்கள் வழியாக, ரஷ்யாவிற்கு விரைவாக சப்ளைகள் அனுப்புவதற்கு முடியும்.

துனீசிய விழாவைக் கொண்டாடுகிருேம். இந்தச் சமயத்தில் நேசநாடுகளின் யுத்த தந்திர நிலைமையில் நம் மனம் செல்லுகிறது. அச்சு நாடுகளின் கழுத்தில் மாட்டப்பட்டிருக்கும் கயிறு இறுக்குகிறது. ஜெனரல் எய்சிஞேவர், ஜெனரல் அலெக்சாந்தர் ஆகியோர் தலைமையில் போராடிய நம் நேசநாட்டுப படைகளுக்கு நாம் நன்றி செலுத்துவோம். இந்த வெற்றியைக் குறித்து பிரிட்டிஷ் ஜெனரலான அலெக்சாந்தருக்கு அமெரிக்க ஜெனரல் அனுப்பிய பாராட்டுதலில் மகா கெட்டிக்காரத் தனமாக போர்த் தந்திர முறையை யொட்டி அவர், வட ஆப்பிரிக்காவில் கடைசி முறையாக அடித்தா ரென்று கூறிப் புகழுகிருர். இதன் பயனுக, அச்சுப் படைகள் அசைய ஒட்டாதபடி, எட்டாம் படை தடுத்துக் கொண்டது; முதல் படை கடைசி அடி அடித்தது என்றும் குறிப்பிடுகிருர்.

முதற் படையில் 100-க்கு 90 பேர்கள் பிரிட்டிஷ் படையினர். அது போலவே எட்டாம் படையிலும் 100-க்கு 76 பேர்கள் பிரிட்டிஷ் படையினர். இந்தப் போராட்டத்தில் பிரிட்டிஷ் படையினரில் 100-க்கு 87 பேர் காயப் பட்டனர் அல்லது உயிர் துறந்தனர். போர் முனையில் வெகுவாகச் சேத மடைந்தவர்களும் கஷ்டப்பட்டவர்களும் பிரிட்டிஷார்கள் அல்ல என்று அச்சு நாட்டுப் பிரசாரகர்கள் கூறுவது எவ்வளவு தூரம் பொய் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

அச்சு நாடுகளின் அகத்தை யொடுக்க உறுதி கொண்டுள்ள ஐக்கிய நாடுகளான அமெரிக்கா, போராடும் பிரான்சு, பிரிட்டன், இந்தியா முதலிய நாடுகளுக்குத் தான், இந்த வெற்றி உரித்தாகும். ஆப்பிரிக்கப் போர் சம்பந்தப்பட்ட வரை, துனீசியாவில் அச்சு நாடுகள், மீளாதபடி மண்ணைக் கவ்வி விட்டன. இனி இந்தப் போராட்டத்தில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதற்கு, இது ஒரு அறி குறியாயிருக்கிறது.

## ஜெய பேரிகை

சென்ற ஒரு ஆண்டாகத் தேசீயப் போர்முனை தன் கடமையை நிறைவேற்றி விட்டது. அதன் வேலைகளை இந் நாட்டவர் நன்கு அறிந்திருக்கிருர்கள். அதன் சிறப்பைப் பாராட்டுகிருர்கள். இப்படிப்பட்ட இயக்கம் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே தோன்ற வில்லையே யென்று வருந்துகிருர்கள். யுத்தத்திற்குப் பிறகு நாட்டை நிர்மாணிக்கும் வேலையில் இது ஈடுபடு மென்று எதிர்பார்க்கிருர்கள்.

இந்த இயக்கம் தோன்றுவதற்குக் காரணம் என்ன வென்பதைப் பற்றி இங்குக் குறிப்பிடுவது பொருந்தும். சுமார் $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு முன்னதாக ரஷ்யாவைத் தவிர, மற்ற எல்லாப் போர்முனைகளிலும் எதிரிகளைத் தடுத்துக் கொண்டிருக்கும் நிலைமையிலேயே தான் நாம் இருந்தோமே ஒழிய, தாக்கக் கூடிய நிலைமையில் இல்லை. கீழ் நாடுகளில், ஜப்பான், எட்டியவரையில் கைப்பற்றிக்கொண்டிருந்தது. உள் நாட்டிலேயோ பலாத்காரமான புரட்சியைக் கொண்டு தேசபக்தியை நசுக்கி அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்ற ஒரு கூட்டத்தார் பெரு முயற்சி செய்துகொண்டிருந்தனர். இது கண்ட பாமர மக்கள் திகைத்தனர், பயப்படவும் செய்தனர்.

இந்தியாவில் உள்ள மக்கள் ஆண் பிள்ளைகளா, பேடிகளா என்ற கேள்விக்குப் பேடிகள் அல்ல, ஆண் பிள்ளைகள் தான் என்று பதில் கொடுத்தனர். அறியாமை, தோல்வி மனப்பான்மை ஆகியவற்றை அழித்தனர். தேசீயப் போர்முனையைத் தோற்றுவித்தவர்கள், புவனேஸ்வர், அஜண்டா, முகஞ்சதாரோ, ஹலிபிட் முதலிய சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் அச்சு நாட்டாரின் பீரங்கிகளுக்கு இலக்காவதோ என்று கேட்டனர். சாந்த் பீ, சிவாஜி, கிளைவ் ஆகியோருடைய வெற்றிகளை இளைஞர்களுக்கு ஞாபக மூட்டினர். வேற்று நாட்டார் பஞ்சாபில் உள்ள கோதுமை வயல்களையும், ஜேரியாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களையும், அட்டாக்கில் உள்ள எண்ணெய்க் கிணறுகளையும், காவேரிக் கரையில் உள்ள நெல் வயல்களையும் கைப்பற்ற உரிமை எது என்று கேட்டனர்.

### எதிரிகளை வென்று வருகிறது

இப்படிப்பட்ட கேள்விகளால் பரிபூர்ணமான பலன்கள் எற்பட்டிருக்கு மென்று சொல்ல முடியாது.

(12-ம் பக்கம் பார்க்க)

# தேசீயப் போர் முனை

## சென்னையில் ஒரு வருஷ வேலை

### தோற்றம்

சென்ற வருட ஆரம்பத்தில் பிரசாரத்தின் அவசியம் தோன்றியது. இதற்குக் காரணம் பல வெற்றிகளை அடுத்தடுத்து நம் கீழ் நாட்டு எதிரி பெற்றது தான். நாட்டில் உள்ள மக்களின் உணர்ச்சியை ஒருமுகப் படுத்த ஒரு இயக்கம் தோன்ற வேண்டிய தவசிய மென்றும், அதன் பொருட்டுப் பிரசாரம் செய்ய வேண்டியதும் அவசிய மென்றும் தோன்றியது. பொதுஜனங்களும் எப்படிப் பட்ட நிலைமைக்கும் ஆயத்தமாக இருக்கும்படிச் செய்ய வேண்டிய தவசியமாயிற்று. எனவே, இந்தத் தேசியப் போர் முனை இயக்கத்தை டில்லியில் ஆரம்பித்தார்கள். சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்தில் மேன்மை தங்கிய வைஸ்ராய் பிரபு இதை அங்கீகரித்தார். இது நிலைக்குமா என்று சந்தேகித்தவர்களும், கேவலமாகப் பேசியவர்களும் உண்டு. இதற்குக் காரணம் நாட்டில் குழப்பத்தை உண்டாக்க வேண்டு மென்னும் நோக்க முடையவர்கள் தான். இந்த இயக்கத்தை இழித்துக் கூறியவர்களும், சந்தேகித்தவர்களும் இப்போது காணப்பட வில்லை. ஏனென்றால், அரசியல் புரட்சிக்குச் செய்யப்பட்ட ஏற்பாடு அழிந்து விட்டது. தேசீயப் போர் முனையில் மக்கள் அக்கரை கொள்ளத் தலைப்பட்டனர்.

நம் மாகாணம் சம்பந்தப்பட்ட வரை, இந்த இயக்க வேலை, பகிர்ந்து கொடுக்கப்பட்டது. மூன்று கமிட்டிகள் ஏற்பட்டுச் சிறந்த வேலை செய்கின்றன. மாகாணத்தில் மட்டு மன்றி ஒவ்வொரு ஜில்லாவிலும், இந்தக் கமிட்டிகள் ஏற்பட்டு மக்கள் உணர்ச்சியைத் தட்டி எழுப்புகின்றன.

இவர்கள் கௌரவத்திற்காகத் தொண்டாற்றியவர்கள். இவர்கள் சொந்த அலுவல்களோடு இந்த வேலைகளையும் செய்து வந்தனர். இந்தச் சமயத்தில் எதிரியின் பொய்ப் பிரசாரம் மிகவும் கடுமையா யிருந்தது. இதை மறுத்துரைக்க, தகுந்த திறமை யுள்ளவர்கள் வேண்டும். இந்த வேலையை இந்தக் கமிட்டியார் செய்யும்படி எதிர் பார்ப்பது முறை யல்ல. எனவே, மாதச் சம்பளத்தில் நம் மாகாணம் சம்பந்தப் பட்டவரை ஆயிரக் கணக்கான பிரசாரகர்களை பல வகைகளில் பிரசாரங்கள் நடத்த, அததற்குத் தகுந்தபடி நியமித்திருக்கிறார்கள்.

### அமைப்பு

மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்களே இந்த இயக்கத்தின் மாகாணத் தலைவராக இருக்க இசைந்திருக்கிறார்கள். தனக்கு உதவியாக சர் சி. ஆர். ரெட்டி, சர் பி. டி. ராஜன், கண்ணனூர் ராஜா சுல்தான் அப்துல் ரகிமான் அலி, சர் ராபர்ட் டெனிஸ்டன், திவான் பகதூர் எம். சி. ராஜா ஆகியோரைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார். இந்த இயக்கத்தை நடத்துவிப்பதற்கு யுத்தப் பிரசார இலாக்கா டைரக்டரை மாகாண அமைப்பாளராக நியமித்திருக்கிறார். நிற்க, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஜில்லா அமைப்பாளரை நியமித்து, அவரை உதவிக் கலெக்டர் பதவிக்கு ஒத்த நிலைமையில் நியமித்திருக்கிறார். இவர்கள் ஒவ்வொருவருக்கும் உதவியாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு சொற் பொழிவாளரை நியமித்திருக்கிறது. ஜில்லா சம்பந்தப்பட்டவரை யுத்த சம்பந்தமான எல்லா பிரசாரங்களையும் நிர்வகிக்க வேண்டியவர் ஜில்லா அமைப்பாளர். பிரசார மோட்டார் வண்டியைக் கொண்டு பல விடங்களுக்கும் போய் பிரசாரம் செய்வதோடு, வாசக சாலைகளைப் பார்வையிடவும் (4,000 முதல் 5,000 வரை மேல் பார்வையிடப்படுகின்றன) வேண்டியவர், ஜில்லா சொற்பொழிவாளர். தாலுகாவிற்கு ஒருவர் அல்லது இருவர் பிரசாரகர்கள் இருக்கின்றனர். கிராமங்கள் தோறும் போய்ப் பொதுக் கூட்டங்கள் நடத்துவதோடு, வண்டிகளிலும், பஸ்களிலும், ரயிலிலும், காபிக் கடைகளிலும், தெருத் திண்ணைகளிலும் இவர்கள் பொது ஜனங்களோடு பழகி, பிரசாரம் செய்கிறார்கள்.

இதன் பயனாக, பொய் பிரசாரத்திற்கும் தோல்வி மனப் பான்மைக்கும் இடமில்லாது போய்விட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கென்று 11 ஜில்லா சொற்பொழிவாளர்களை நியமிக்க அனுமதி கிடைத்திருக்கிறது. இவர்களை ஜில்லாவிற்கு ஒருவர் வீதம் நியமிக்க முடியாது. ஆகவே, அவர்களின் எல்லையை தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர் நிர்ணயிப்பார். பத்து ஜில்லாக்களில் பெண் சொற்பொழிவாளர்கள் இரண்டொருவர் வீதம் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். இவர்கள் பெண்களிடையே சிறந்த முறையில் பிரசாரம் செய்கிறார்கள். 10 ஜில்லாக்களில் கிராமப் பாதுகாப்புத் திட்டப் பிரசாரத்தை முன்னிட்டு 10 பிரசாரகர்களை நியமித்திருக்கிறார்கள். இவர்கள் மட்டுமன்றி ஒவ்வொரு ரிவின்யூ டிவிஷனுக்கும் இரண்டொரு கௌரவ டிவிஷனல் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். தம் சரகத்தைச் சேர்ந்த பிரசாரகர்களின் வேலையைத் தணிக்கை செய்து



வாசக சாலை.

உதவி செய்வதோடு, இவர்கள் அங்குள்ள வாசக சாலைகளை (13,000) மேல் பார்வை யிடவும் வேண்டும்.

எந்த முறையில் இவர்கள் எல்லோரும் பிரசாரம் செய்ய வேண்டுமென்பது பற்றி, சிம்லா தேசீயப் போர் முனை, டில்லி தகவல் இலாக்கா, சென்னை 'விக்டரி ஹௌஸ்' ஆகிய இடங்களி லிருந்து அவ்வப்போது தகவல்கள் கொடுக்கப்படுகிறது அன்றியும் புதுப் புது முறைகளில் தம் பிரசாரத்தை நடத்தும்படிச் சொல்லிக் கொடுக்க வேண்டி, அவ்வப்போது பிரசாரகர்களுக்கு 10 நாள் மறு பயிற்சி யளிக்கப்படுகிறது.

### மூன்று வகை பிரசாரம்



காட்சிப் படகு.

1. வாய்ப் பிரசாரம், 2. எழுத்துப் பிரசாரம், 3. காட்சிப் பிரசாரம் என்று மூன்று வகைப் பிரசாரங்களுண்டு.

(a) தகவல்கள் சேகரம். யுத்த சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் விநியோகிக்கத் தக்க முறையில் சென்னையில் 'விக்டரி ஹௌசும்', 23 ஜில்லாக்களிலும், 23 ஸ்தாபனங்களும் இருக்கின்றன.



### பிரசார மோட்டார்கள்




பிரசார மோட்டார் கார்.

23 மோட்டார்கள் ஜில்லாவிற்கு ஒன்று வீதம் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. இவற்றில் சினிமா படங்கள் காட்டுவதற்கும், ஒலி பெருக்குவதற்கும், மாஜிக் லாந்தர் படங்களைக் காட்டுவதற்கும் வசதிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன.

மாதந்தோறும் இம் மாகாணத்தில் 3,000 கூட்டங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு கூட்டத்திற்கும்



பிரசங்க மேடை.

சராசரி 1,500 பேர்கள் விஜயம் செய்கின்றனர். அன்றியும் கல்வி இலாக்கா டைரக்டர் 1½ லட்சம் உபாத்தியாயர்களையும் மாணவர்களையும் இந்த இயக்கத்தில் சேர்த்திருக்கிறார். நிற்க, சிம்லா தேசீயப் போர் முனை, தகவல் இலாக்கா முதலியவற்றி லிருந்து வெளிவரும் துண்டுப் பிரசுரங்களோடு சென்னை யுத்தப் பிரசார டைரக்டர் அனேக வகை துண்டுப் பிரசுரங்களையும் சுவரொட்டி விளம்பரங்களையும் கலெக்டர்களுக்கும், தாலுகாகளுக்கும் 13,000 வாசக சாலைகளுக்கும் போய்ச் சேரத் தக்கபடி இம் மாகாணத்தில் விநியோகிக்கிறார். சென்னை யுத்த சஞ்சிகை (30,000), பெரிய சுவரொட்டிப் படங்கள் (12,000), சிறிய சுவரொட்டிப் படங்கள் (50,000), துண்டுப் பிரசுரங்கள் (1 லட்சம்) மற்றும் பல வகைப் பிரசுரங்களும் வெளியிடப் படுகின்றன. மேலும் மாஜிக் லாந்தர் படக் காட்சிகளும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பாடகரை நியமித்து அவரைக் கொண்டு தேசீயப் போர் முனைப் பாடல்



நாடகமும் பாட்டும்.

களைப் பாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் பாட்டுக்கள் கூடிய விரைவில் இசைத் தட்டுகளாக வெளி வரும் என்று எதிர் பார்க்கலாம். யுத்த சம்பந்தமான நாடகங்களை சில ஜில்லாக்களில் நடித்தனர்.

இந் நாட்டிலுள்ள பல பத்திரிகைகள் அரசாங்க யுத்த முயற்சிக்கு உதவுவதாகத் தெரிய வில்லை. எனவே ஒரு தினசரிப் பத்திரிகைக்குப் பண உதவி செய்து நேர்மையான முறையில் தலையங்கங்கள் எழுதி, எல்லாச் செய்திகளோடும் வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறது.

### மற்ற தொண்டுகள்

இந்த இயக்கம் யுத்தப் பிரசார வேலையோடு மட்டும் நின்று விடவில்லை. உணவுப் பொருள்களை அதிகமாகப் பயிர் செய்யும்படி தூண்டுகிறது. இராணுவத்தாருக்கும் பொது ஜனங்களுக்கும் தொடர்பு உண்டாக்குகிறது. கரையாளர்களுக்கும் பாதுகாப்பு முறைகளைப் போதிக்கிறது. தானிய டிப்போக்கள், நியாய விலைக் கடைகள், விறகு டிப்போக்கள் முதலியவற்றை நடத்துகிறது. மண்ணெண்ணெய்ப் பஞ்சத்தை முன்னிட்டு, தாவர எண்ணெய்களைக் கொண்டு எரியக் கூடிய 'ராம தீப'ங்களைக் குறைந்த



ராம தீபம்.

விலைக்கு ஏழைகளுக்கு விற்க ஏற்பாடு செய்திருக்கிறது.

கிராமங்களில் கலவரங்களுக்கு இடங் கொடுப்பது சரியல்ல வென்று உணர்ந்து 'இருந்த இடத்திலே இருங்கள்' என்று சென்ற வருஷம் பிரசாரம் செய்தது. கிராமப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை வகுத்து அதை 10 ஜில்லாக்களில் பரீட்சித்தது. இந்த திட்டப்படி கேந்திர ஸ்தானங்களிலுள்ள கிராமங்களில், முக்கியமாக இந்த திட்டம் நடைபெறும். கிராமத் தலைவருக்கு உதவியாக பல உடற்கட்டுடைய இளைஞர்களுக்கு விசேஷப் பயிற்சி யளித்து



கிராமக் காவலர் பயிற்சி.

(12-ம் பக்கம் பார்க்க)






# தொழிலாளரும் உலகப் போரும்

இந்த யுத்தம் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது. ஜனநாயகம் என்றால், பொது மக்களின் உணர்ச்சி யென்று தான் பொருள். பொது மக்கள் என்றாலே 100-க்குத் 97 பேர்களான தொழிலாளர்களைத் தான் குறிப்பிடும். ஆகவே, இந்த யுத்தம் தொழிலாளர் யுத்தம் என்று சொல்வதில் தவறு எது?

இந்த யுத்தத்தில் தொழிலாளர்களே பங்கு கொள்கின்றார்கள். இதனால் பாதிக்கப் படுகிறவர்களும் தொழிலாளர்கள் தான். நன்மை யடைகிறவர்களும் தொழிலாளர்கள் தான். ஆகவே, இந்த யுத்தத்திற்கும், தொழிலாளர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று திட்டமாகச் சொல்லலாம். இந்த யுத்தத்தைப் பற்றித் தொழிலாளர்கள் அசட்டையா யிருப்பது "யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்"வற்குச் சமானமாகும். யுத்தம் இன்று உள்ள நிலையை ஒருவாறு சற்று சுருக்கிக் கூறுவோம். இந்த உலக யுத்தத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) துனிசிய யுத்தம். (2) ரஷ்ய யுத்தம். (3) பசிபிக் யுத்தம். இந்த மூன்றில் முதலாவது துனிசிய யுத்தம் முடிவடைந்து விட்டதென்று சொல்லலாம். இந்த யுத்தம் ஆரம்பமாகி ஏறக்குறைய மூன்று ஆண்டுகளாகின்றன. கடுமையான போர் நடந்தது. நமது படைகள் பாலைவனப் போராட்டத்தில் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. முதலில் தோல்வி ஏற்படும் போல் தோன்றியது. உண்மை வீரர்களுக்கு ஊக்கம் கிளம்பியது. மார்பு தட்டி கிளம்பினர். வெற்றி முரசு திக்கெட்டும் கொட்டினர். தோல்விக ளெல்லாம் அவர்களுக்கு மனச் சோர்வைத் தரவில்லை. வீறு கொண்டு எழுந்தனர். முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்று முனைந்தனர். வெற்றியோடு திரும்புவது அல்லது வீர சுவர்க்கம் சார்வது என்று உறுதி கொண்டனர். நேச நாட்டுப் படைகளோடு தோளோடு தோள் சேர்த்து போர்க் களத்தே நின்று கடும் போர் ஆடினர். கடைசியில் வெற்றியும் கண்டனர். இது தான் உண்மை வெற்றி. இனி ஏற்பட இருக்கும் முழு வெற்றிக்கு இது முதற் படி. இந்த வெற்றியால் நேச நாடுகளுக்கு மிகச் சிறந்த வசதி ஏற்பட்டிருக்கிறது. இது வரை அச்சு நாடுகள் போக்கு வரத்துக்குச் சாதகமா யில்லா திருந்த மத்ய தரைக் கடல் வழி, இப்பொழுது திறந்து விடப்பட்டு விட்டது. ஆப்ரிக்காக் கண்டத்தைச் சுற்றிப் போவதை விடுத்து, அதி சீக்கிரத்திலேயே மத்தியதரைக் கடல் வழியாகத் தளவாடங்களையும், படைகளையும், ரஷ்யாவிற்கும், தூரக் கிழக்கு நாடுகளுக்கும் அனுப்ப ஹேதுவாயிருக்கிறது.

நிற்க, ரஷ்யப் போர் முனையிலோ கூபான் பிரதேசத்தில் ரஷ்யப் படைகளும், ஜெர்மன் படைகளும் சகல ஆயுதங்களுடனு மிருந்தும், முழுப் படைகளும் சேர்ந்து இன்னும் போராட ஆரம்பிக்க வில்லை. என்றாலும், கடுமையான போராட்டம் அங்கே நடைபெறுகிறது. டானெட்ஸ் பிரதேசத்திலே அந் நதியைக் கடந்து கேந்திரஸ்தானங்களை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். கிரிமியா, ருமேனியா ஆகிய நாடுகளில் உள்ள துறை முகங்களில் பலமான ஜெர்மன் படைகள் ஆயத்தமா யிருக்கின்றன. கருங்கடல் வழியாக ஜெர்மனிக்கு வரும் உதவிக் கப்பல்களை நாசம் செய்வதே இதன் வேலை யென்று திட்டமிடப் பட்டிருந்தது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற விடாத படி, ரஷ்ய கப்பற் படை சிதறடித்து விட்டது. இது மட்டுமல்ல. ஹிட்லர் வேனிற் கால வரவை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது. "ஐயருக்காக அமாவாசை காத்திருக்குமா"? ரஷ்யா அது வரையிலும் காத்திருக்காது போல் தெரிகிறது. சுமார் 1,200 மைல் நீள முள்ள ரஷ்யப் போர் முனையின் கேந்திர ஸ்தானங்களை யெல்லாம் ரஷ்யா வெகுவாக அரண் செய்து வைத்திருக்கிறது. "உரலுக்கு ஒரு புறம் இடி, மத்தளத்திற்கு இரு புறமும் இடி" என்பார்கள். மத்தளத்தின் நிலையில் தான் இன்று ஜெர்மனி இருக்கிறது. ஜெர்மன் நாட்டிற்குள்ளாகவே தலை நகரமாகிய பெர்லினிலேயே கலவரங்கள் மூண்டு விட்டன. இதை யடக்குவது இலகுவான காரியமல்ல. இவர்கள் கைப்பற்றிய நாடுகளிலும் அளவுக்கு மீறி இவர்கள் மீது அதிருப்தி ஏற்பட்டு விட்டது. ஜெர்மனியின் தம்பியான இத்தாலியிலோ, அரசரே முடி துறந்து விடுவதென்று தீர்மானித் திருப்பதாகத் தெரிகிறது. பால்கான் பிரதேசத்தைச் சேர்ந்த பல்கேரியாவில் வசிக்கும் ஜெர்மானியர்கள் அனைவரும் மீண்டும் தம் சொந்த நாட்டிற்கே திரும்பிவிட வேண்டு மென்று கட்டளை பிறந் திருக்கிறது. இவற்றி லிருந்து ஒரே உண்மை தான் விளங்குகிறது. அதாவது அச்சு நாட்டரசாங்கங்கள் ஆட்டங் கொடுத்து விட்டன. அந் நாடுகளின் தலைவர்கள் கலகலத்துப் போய் விட்டனர். பொது மக்களுக்கு, அரசாங்கத்தின் மீதிருந்த நம்பிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது. அதாவது ஜனநாயக உணர்ச்சிக்கு அங்கு இடமில்லை யென்று தான் அர்த்தம். ஆகவே, தொழிலாளர்களுக்கும், அரசாங்கத்திற்கும் இருக்க வேண்டிய தொடர்பு பெரிதும் சீர் கெட்டு விட்டதென்றே சொல்லலாம். இந்த நிலைமையைச் சீர் படுத்துவ தென்பது முடியாத காரியம்.

இனி ஜப்பானியப் போரைப் பற்றி, சிறிது கவனிப்போம்.

ஜப்பான் ஒரு சிறிய நாடு. அதன் மக்கள் திறமைசாலிகள். அந் நாட்டில் பல எரி மலைகள் உண்டு. இதனால் அந்நாட்டின் ஜனத்தொகை பெருகுவதற்கு இட மில்லை. இருந்தாலும், நாடு பிடிக்க வேண்டு மென்ற ஆசை அவர்களுக்கு நெடு நாட்களாக உண்டு. இந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள ரகசியமாகத் தீவிர முயற்சிகள் செய்தனர். சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக சீனாவைத் தாக்கினர். சீன மக்களோ நாட்டுப் பற்றுப் பெரிதும் உடையவர்கள். தம் நாட்டைக் காக்கும் பொருட்டு ஆண்–பெண் அடங்கலும் வீறு கொண்டெழுந்தனர். இவர்களுக்கு உதவியாக, பிரிட்டனும் அமெரிக்காவும் தளவாடங்களையும், சப்ளைகளையும் அடிக்கடி அனுப்பிக் கொண்டிருந்தன. எனவே, ஜப்பானின் கை இங்கே ஓங்க வில்லை. இந்தச் சமயத்தில் ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் ஐரோப்பாவில் கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அப்போது அமெரிக்கா பிரிட்டனுக்குத் தளவாடங்களும், விமானங்களும் குத்தகைக் கடனுக்குக் கொடுத்து உதவின. இந்தச் சந்தர்ப்பத்தில் "சந்தடி சாக்கில் கெந்தகப் பொடி கால் பணம்" என்றபடி ஜப்பான் தாய்லாந்தையும், மலேயாவையும், பர்மாவையும் மற்றும் சில கிழக்கிந்தியத் தீவுகளையும் வெகு சுலபமாகப் பிடித்துக் கொண்டது. இவை வளமுள்ள நாடுகள், உணவுப் பொருள்களும், உலோக வகைகளும், எண்ணெய்க் கிணறுகளும் அதிகம். எனவே தான், ஜப்பானின் ஆசைக் கண்கள் அவற்றின் மீது பாய்ந்து, பேராசை கைகள் பற்றிக் கொண்டன. இதோடு ஜப்பானின் ஆசை ஓய வில்லை. மாஜி ஜப்பானிய மந்திரியான தனுகூ என்பவரின் திட்டப்படி சீனா, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய பெரும் நாடுகளையும் கைப்பற்றி ஆக வேண்டும். இவை இலகுவான காரியங்களா? என்றாலும், ஜப்பானியர் இதில் முனைந்து தான் இருக்கின்றனர். இவர்களுடைய எண்ணத்தில் மண்ணைப் போட நேச நாட்டுத் தலைவர்களும், படைத் தலைவர்களும், ஆலோசகர்களும் வாஷிங்டனில் கூடி ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜப்பானின் கொட்டத்தை ஒடுக்கி ஜனநாயகத்தை நிலை நாட்ட பெரிதும் முயற்சிப்பார்கள். இந்த முயற்சி வெற்றி பெறும் என்பது பற்றிக் கொஞ்சமும் சந்தேக மில்லை. எப்படி யென்றால், அமெரிக்க விமான உற்பத்திக்கு ஈடாக, வேறு எந்த நாட்டிலும் கிடையா தென்று திட்டமாகச் சொல்லலாம். அதற்கடுத்த படியாகப் பிரிட்டனில் தான் விமான உற்பத்தி அதிகம். தற்காலப் போராட்டத்தில் எந்தக் கட்சிக்கு ஏராளமான விமான பலமிருக்கிறதோ அந்தக் கட்சிதான் வெற்றி பெறும் என்பது உறுதி. எனவே, தமது சிறந்த விமான பலத்தைக் கொண்டு எதிரிகளை நாசம் செய்து நேச நாட்டுப் படைகள் வெல்லும் என்பது பற்றிக் கொஞ்சங் கூடச் சந்தேகமே கிடையாது. அப்படிப் பட்ட வெற்றியின் பெருமை யாருக் குரியது? தொழிலாளர்களுக் கல்லவா? தொழிலாளர்கள் தமது சக்தியை உணர வேண்டும். அதைப் பெருக்க வேண்டும். அப்போது உலகத்தை ஆக்கவும், அழிக்கவும் கூடும். எனவே, தொழிலாளர் உலகம் இனி இன்ப வாழ்வு வாழ வேண்டுமானால், உண்மை நிலையை உணர்ந்து தம் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள முயல வேண்டும்.

# விதியின் லீலை

நாமொன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கிறது என்பார்கள். அதாவது மனுஷன் நினைக்கிறபடி, எதிர் பார்க்கிறபடி ஏதும் நடப்பதில்லை என்பதே இதிலடங்கிய உண்மை. இந்த உண்மை எந்தக் காலத்திற்கும் பொருந்துகிறது.

அச்சு நாட்டார் இருக்கிறார்கள். அவர்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தார்கள் தெரியுமா? ட்யூனிஸியாவிலே, எட்டாவது சைனியம் தான் தங்களுக்குக் கடைசி உதை கொடுத்து, கடலில் தள்ளப் போகிறது என்று நினைத்திருந்தார்கள். ஆனால் நடந்த தென்ன தெரியுமா?

எட்டாவது சேனை, கிட்டத்தட்ட 1,800 மைல் தூரம் அச்சுநாட்டாரைத் துரத்திக் கொண்டு வந்தது. ட்யூனிஸியாவில் ஒரு கோடியில் நின்று, அவர்களுடைய தலைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. திடீரென்று பிரிட்டிஷ் முதலாவது சைனியமும், அமெரிக்கர்களும் முன்னேறிச் சென்று, எட்டாவது சைனியம் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்த அச்சுப்படைகளின் முகத்திலே போதும், போதும் என்று துடிக்கிற வரை, பயங்கரமான குத்துக்களை விட்டது. இதைத் தான் விதியின் லீலை என்கிறோம்.

இன்னொரு சமாசாரம். ட்யூனிஸும், பிஸர்டாவும் நேசதேசத்தார் வசம் வந்து விட்டபோதிலும், அச்சுநாட்டாரின் எதிர்ப்பு ஆப்பிரிக்காவில் வெகு நாட்கள் நீடித்திருக்கும் என, பலர் நினைத்திருந்தார்கள். ஆனால் நடந்ததென்ன?

சீட்டுக்களால் ஆக்கப்பட்ட வீட்டின்மீது, பலமாக ஊதினால், எப்படி அந்த வீடு முழுவதும் நொறுங்கி விழுந்து விடுகிறதோ, அம்மாதிரியே, திடுதிப்பென, வட ஆப்பிரிகாவிலே அச்சு நாட்டாரின் எதிர்ப்பு, ட்யூனிஸும், பிஸர்ட்டாவும் விழுந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே ஓய்ந்து போய்விட்டது. இது ஒரு எதிர்பாராத சம்பவந் தான்.

## பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்கு

கேப்பான் தீபகற்பத்திலே போய் ஒதுங்கிய அச்சுப் படைகளாவது கொஞ்ச காலம் போராடும் என்று எதிர்பார்த்தார்கள். அந்தத் தீபகற்பத்திலே நல்ல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால், நேசதேசத்தார் அத்தீபகற்பத்தைச் சுற்றிலும் கடற்படையைக் கொண்டும், விமான பலத்தைக் கொண்டும், தென் திசையில் நிலப்படையைக் கொண்டும் சரியான முற்றுகை போட்டுவிட்டார்கள். பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்கின் கதி போலாகிவிட்டது, அங்கிருந்த அச்சு நாட்டாருக்கு. நேசதேசத்தார் போட்ட வலையைத் தப்பி, அச்சுநாட்டுச் சேனாபதியான ஜெனரல் பான் ஆர்னீம் துரையால் கூட ஓட முடியவில்லை.

தரையில் உள்ள விமானங்களை நேசதேசத்தார் கிளம்ப விட்டால் தானே? கடல் வழியாகப் போகலாம் என்றாலோ, கேப்பான் தீபகற்பத்தைச் சுற்றி, ஆழமற்ற சமுத்திரம் தானிருக்கிறது. பெரிய கப்பல்கள் அங்கு வருவதற்கில்லை. சிறு படகுகளில் தான் தப்பிப் போகவேண்டும். அவ்வாறு போனால், உயிரோடு ஊர்போய்ச் சேருவார்கள் என்ற நம்பிக்கையில்லை.

ஹிட்லர் ஆக்ஞைப்படி கடைசி குண்டுவரை, தோட்டாவரை சுட்டுத் தள்ளினார் ஜெனரல் பான் ஆர்னீம். அதற்குள்ளாக, வீர இந்தியர்கள் பலர் அதிவேகமாகப் புயலெனப் பாய்ந்து சென்று, அந்த ஜெனரலின் முகாமை வளைத்துக் கொண்டுவிட்டார்கள். அதற்குமேல் அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. பேசாது சரணடைந்தார் அவர். அவரைக் கைதியாகப் பிடித்த பெருமை முழுவதையும் தமக்கே என்று ஆக்கிக் கொண்ட அந்த இந்திய வீரர்கள் நான்காவது இந்தியப் படையைச் சேர்ந்தவர்கள். சீக்கியர், பஞ்சாபியர், கூர்க்கர் ஆகியோரெல்லாம் அப்படையிலிருக்கிறார்கள்.

ஜெனரல் பான் ஆர்னீமையும், மற்றும் பதின்மூன்று அச்சுநாட்டு ராணுவத் தலைவர்களையும், மூன்று இத்தாலியத் தளகர்த்தர்களையும் உயிரோடு கைது செய்துவிட்டார்கள். வட ஆபிரிகாவிலே, பிரிட்டிஷார் என்றால் பான் ஆர்னீமுக்கு வேப்பங்காய். இந்தக் கசப்பு எல்லா அச்சுப்படைகள் மனதிலும் ஊறவேண்டுமென அவர் அடிக்கடி உபதேசம் செய்வதுண்டாம். அப்படிப்பட்ட மனுஷர் இன்று சீமையிலே, பிரிட்டிஷ் கைதியாக இருக்கிறார். இதுவும் விதியின் லீலையா? அல்லவா?

வட ஆபிரிகாவிலே அச்சுநாட்டாருக்கு ஏற்பட்ட தோல்வி பயங்கரமானது. ஆகவே, நேசதேசத்தாருக்கு ஏற்பட்ட வெற்றி மகத்தானது என்று சொல்ல வேண்டுமா? அச்சுநாட்டார் கிட்டத்தட்ட இரண்டு லக்ஷம் பேர்களை வட ஆப்பிரிக்காவில் இழந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் உத்சவம் பார்க்கவந்தவர்கள் இல்லையல்லவா? இத்தனை பேர்களிடமும் ஏராளமான ஆயுதங்களும், டாங்கிகளும், மோட்டார் லாரிகளும் இருக்குமல்லவா? அவை எல்லாம் இப்பொழுது நேசதேசத்தார் வசமாகி விட்டன.

வட ஆப்பிரிக்கச் சண்டை ஆரம்பமானது முதல் அச்சுநாட்டாருக்கு 1,696 விமானங்கள் 'அரோஹரா' ஆகியிருக்கின்றன. நேசதேசத்தாருக்கு நஷ்டமானது 657 தான். இது என்ன பிரமாத நஷ்டம்? இப்பொழுது கிடைத்திருக்கும் வெற்றியின் தன்மையைப் பார்த்தால், இது ஒன்றுமே இல்லை.

சாமான்களும், ஆட்களும் போனால் போகட்டும். அச்சுநாட்டார் அதைப்பற்றி ஒன்றும் கவலைப்படப் போவதில்லை. ஆனால், மானம் போய்விட்டதே! வட ஆப்பிரிக்காவிலே பெரிய சாம்ராஜ்ஜியத்தை வைத்திருக்கிறோம் என்று கொண்டிருந்த பெருமை போய்விட்டதே! கூடியவரை சுகமாக இருந்த நிலைமை மாறிவிட்டதே: பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை இரண்டாகப் பிளக்க வேண்டும் என்று போட்டிருந்த திட்டமெல்லாம் மண்ணாகப் போய்விட்டதே! ஐரோப்பாவிலே இரண்டு போர்முனைகளில் போராடும்படியான நிலைமை ஏற்பட இடங்கொடுக்கக் கூடாது என்று இத்தனை காலமாக ஹிட்லர் எத்தனையோ ஏற்பாடுகள் செய்து வந்திருக்கிறார். ஆனால் வட ஆப்பிரிக்காவிலிருந்தே ஒரேயடியாக, ஒரு ஆள்கூட பாக்கியில்லாது அச்சுநாட்டாரைக் கழுவித் துடைத்து அனுப்பிவிட்டார்களே இந்த நேசதேசத்தார். இது காரணமாக, ஐரோப்பாவின் தென் பகுதிக்கு இனி எந்தச் சமயத்திலும் ஆபத்தேற்பட இடமுண்டாகி விட்டதே!

வட ஆப்பிரிக்காவிற்கு சாமான்கள் அனுப்பி வந்த காலம் எல்லாம் மாறி, தங்கள் தலைமீது எங்கே நேசதேசத்தார் வந்து குதிப்பார்களோ என்ற கிலியோடு, பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் காலம் வந்துவிட்டதே!

இத்தாலி யெங்கும் ஒரே திகில் தானாம். இப்பொழுதே வட ஆப்பிரிக்க விமானக் கூடங்களிலிருந்தும், மால்டாவிலிருந்தும் நேசதேச விமானங்கள் இத்தாலியத் துறைமுகங்கள், தொழிற்சாலைகள், விமானக் கூடங்கள், அழகிய நகரங்கள் மீதில் எல்லாம் குண்டு மழை பொழியத் தொடங்கி விட்டார்கள். சார்டீனியா எனும் தீவை நேச தேசத்தார் கைப்பற்றி விடுவார்களோ? ஸிஸிலித் தீவை ஆக்ரமித்துக் கொண்டு விடுவார்களோ? பால்கன் பிரதேசத்திலே வந்து குதிப்பார்களோ!

இத்தாலியிலே வந்து இறங்குவார்களோ? ஸைப்ரஸிலிருநது க்ரீட் தீவை நொறுக்குவார்களோ? என்றெல்லாம் திகில் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இத்தாலியர்.

இத்தாலிய அரசர் முடி துறந்துவிட்டு, சிவனே என்று மூலையில் உட்காரட்டும்; அவருக்குப் பதிலாக அவரது பிள்ளை பட்டத்துக்கு வாலாம்; அவரது உத்திரவுப்படி ஒரு ராணுவ சர்க்கார் ஏற்படுத்தப் படலாம்; அந்த சர்க்கார் பேசாது சரணடையலாம்; முஸோலினிக்கு மங்களம் பாடி அனுப்பிவிடக் கூடும்; அவரது கைப் பொம்மையாகத் தானே



இருந்து தவித்துக் கொண்டிருந்தார் இத்தாலிய அரசர். அவரது தலை வெட்டித் தனத்தால் தானே, இத்தாலி போரில் இறங்க வேண்டி வந்தது. அதன் பலனாகத் தானே, இத்தாலியர்கள் பெரிய அவதிக்குள்ளாக நேர்ந்திருக்கிறது. ஜெர்மானியர் மகா தந்திரசாலிகள். 'புலிக்குப் பயந்தவன் என் மேலே படு' என்ற கதையாக, இத்தாலியர்களை ஆபத்துக் காலங்களில் எல்லாம் நட்டாற்றில் விட்டு விட்டு ஓடியிருக்கிறார்கள். ஜெயம் வந்தால் மட்டும் நான் என்று முன்னால் வந்து நிற்கிறார்கள். இத்தாலியிலே, அந்நியனான ஜெர்மானியன் வந்து எங்கு திரும்பினாலும், உட்கார்ந்திருக்கிறான். அவன் வைத்தது சட்டமாயிருக்கிறது. இதைப் பொறுக்க முடியாது என்றெல்லாம் இத்தாலியில் பேசிக் கொள்ளுகிறார்களாம்.

## முதலில் எரியப் போகிறது இத்தாலி தான்

வாஸ்தவந் தானே இதெல்லாம்? வட ஆப்பிரிக்காவிலே ஹிட்லருக்கு மூன்று டாங்கி டிவிஷன்கள் நஷ்டமாச்சு. ஆனால் முஸோலினிக்கோ, அவரிடமிருந்த ஆயுதந் தாங்கிய படைகள் எல்லாம் 'கோவிந்தா' ஆச்சு. இப்பொழுது இத்தாலி தான் பற்றி எரியப் போகிறது முதலிலே. ஆகவே, இத்தாலியக் கரைகளைப் பாதுகாக்க விமான எதிர்ப்பு பீரங்கிகள் வேண்டுமென கேட்டிருக்கிறார் முஸோலினி ஹிட்லரிடமிருந்து. சரியான பதில் இல்லையாம்.

இத்தாலிக் கென்று சேமிப்பிலே ஆகாரங்கள் எல்லாம் வைத்திருக்கிறார்களாம். 'அதை யெல்லாம் அனுப்புமய்யா' என்றார்களாம் இத்தாலியர்கள். 'இப்பொழுது அனுப்புகிறதா? ஹூஹூம்! அநியாயமாக எல்லாம் பாழாகிப் போய்விடும். நேசதேசத்தார் பலமாக விமானங்களிலிருந்து தாக்குகிறார்கள். அதனாலே எங்கள் ஊரிலேயே பத்திரமாக இருக்கட்டும். அதெல்லாம் மெள்ள மெள்ள, கொஞ்சம் கொஞ்சமாக அனுப்புகிறோம்' என்று பதில் சொல்லி விட்டார்களாம். எப்படி யிருக்கு கதை? சினிமாப் படம் பார்க்கப் போன இடத்திலே குழந்தைகள், பிஸ்கோத்து அல்லது சாக்லெட் வேண்டுமென்று அழும். 'இப்ப வேண்டாம் ஆத்திலே நிறைய வச்சிருக்கேன். படம் பார்த்துட்டு, ஆத்துக்குப் போனப்பறம் தர்றேன்' என்பார்கள் தாயுந் தந்தையும். ஆனால் வீட்டிலே போனால் உதை தான் கிடைக்கும். அது மாதிரி ஆகி விட்டது இத்தாலியர் விஷயமும். இத்தாலியிலே படையெடுப்புப் பயம் அதிகமானது காரணமாக, ஜூலை 1-ந் தேதி மூடப்படும் பள்ளிகளை மே 20-ந் தேதியே மூடச் சொல்லி விட்டார்களாம். ரோமாபுரி வீதிகளிலே இத்தாலியர் கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று, நேச தேசப் படையெடுப்புப் புயல் எங்கு தாக்கும்? எப்படி யிருக்கும் அது? என்று கவலையோடு பேசிக் கொண்டிருக்கிறார்களாம்.

வட ஆப்பிரிக்கப் போரிலே 18,500 இத்தாலிய விமானிகள் உயிரைக் கொடுத்து விட்டார்களாம். இத்தாலியிலே நேச தேசத்தாரதைவிட நூதன ரக விமானங்களைச் சிருஷ்டிக்கவும் முடியவில்லையாம். இந்தக் கஷ்டங்களை யெல்லாம் பார்க்கும் பொழுது, நேச தேசத்தார் இத்தாலியில் கால் வைக்க வேண்டியதுதான் தாமதம்; இத்தாலியர் எல்லாம் ஜெர்மானியருக்கு விரோதமாகக் கிளம்பி விடுவார்கள் என்றே நினைக்கிறோம். ஆனால் இத்தாலியருக்கு யுத்தம் முடியும் வரை, சுகம் ஏற்படப் போவதில்லை.

அவர்கள் நேச தேசத்தாரிடம் சரணடையும் வரை, நேச தேசக் குண்டுகளுக்குப் பதில் சொல்லி யாக வேண்டும். அப்படி நேச தேசத்தார் வசம் இத்தாலி வந்து விட்டால், ஜெர்மானியர் இத்தாலியைச் சும்மா விட்டு வைக்கப் போவதில்லை.

இத்தனை நாளும் இல்லாது, இப்பொழுது பிரஞ்சு மத்தியதரைக் கடல் பிரதேசத்தை இத்தாலியருக்குத் தானம் செய்திருக்கிறார் ஹிட்லர். வட ஆப்பிரிக்காவில் பட்ட உதைக்கு சன்மானமா இது? அல்லது நஷ்ட ஈடா? ஆனால் ஒன்று. இந்தப் பிரதேசத்தை இத்தாலியர் பெற்றதால், இங்கெல்லாம் இருந்து உதைபட வேண்டியவர்கள் அவர்கள் தான் என்பது மட்டும் தெளிவு. இதெல்லாம் விதியின் லீலைகள் அல்லாது வேறென்ன?

## சர்ச்சில் யோசனை தான் வெற்றிக்குக் காரணம்

இத்தனையும் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது என்ன தெரியுமா? நமது பிரதம மந்திரி சர்ச்சில் துரையின் ஆழ்ந்த யோசனையும் திடமான பிளானும், பரந்த எதிர்கால ஞானமும் தான். மேல் ஆப்பிரிக்காவிலே அமெரிக்கப் படை வந்திறங்க வேண்டும்; பிரிட்டிஷ் எட்டாவது சேனை முன்னேற வேண்டும், ட்யூனிஸியாவிலே இறுதிப் போர் நடக்க வேண்டும். அங்கிருந்து அச்சு நாட்டாரை உதைத் தனுப்ப வேண்டும். ஆப்பிரிக்காவிலே அச்சு நாட்டார் வாடையே இல்லாது ஒழிய வேண்டும். பின்னால் போட்டு இந்த ஆபத்தான அச்சுப் புழுக்கள் இருந்த இடத்தைக் கழுவி விட்டு விட்டு, போர்க்களமாக இருந்த வட ஆப்பிரிக்காவை, பாயுந் தளமாக மாற்ற வேண்டும் என்று எண்ணிய தெல்லாம் சர்ச்சில் துரை தான். அதோடு பிரிட்டிஷ், அமெரிக்க, இந்திய, நியூஸீலந்து, பிரஞ்சுப் படைகள் எல்லாம் ஒரு மனப்பட்டு, ஒரு பிரதம தலைவரின் கீழ் ஒற்றுமையோடு வேலை செய்து, மின்னல் போல் பாய்ந்து, கடைசிக் கட்டத்தில் அச்சு நாட்டார் சற்று நின்று மூச்சு வாங்கக் கொண்டு, சிதறிப் போன தங்கள் தங்கள் படைகளை ஒன்று சேர்க்கக்கூட அவகாசம் கொடாது நொறுக்கித் தள்ளினதும், வட ஆப்பிரிக்கப் போர் இவ்வளவு சீக்கிரமாக முடிந்ததற்கு மற்றொரு காரணம்.

வட ஆப்பிரிக்காவைப் பற்றிக் கண்டு கொண்டிருந்த கனவு நனவாகி விட்டதால், பிரதம மந்திரி சர்ச்சில் அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்டைச் சந்தித்து, மேற்கொண்டு நடத்த வேண்டியது எந்தக் கல்யாணம் என்பதை ஏற்பாடு செய்ய வாஷிங்டன் நகருக்கு, 'இஷ்டமித்ர பந்து' சகிதமாகப் போய், குதூகலத்தோடு சேர்ந்திருக்கிறார். எத்தகைய இடைஞ்சலுமின்றி அவரும், பிரபல ராணுவத் தலைவர்களும் கப்பல் மார்க்கமாகவே அமெரிக்கா போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். வெகு ரகசியமாகவே பேச்சுக்கள் நடந்து வருகின்றன. இந்திய சேனாபதியான வேவல் துரையும் அங்கு பிரசன்னமாயிருக்கிறார். ஆகவே ஜப்பானையும் நேசதேசத் தலைவர்கள் மறக்கவில்லை என்பது வெளியாகவில்லையா?

அமெரிக்காவிலிருந்தபடியே சர்ச்சில் துரை சீமையில் உள்ள 'இல்லப் பாதுகாப்பாளர்'களின் வருட விழாவை ஒட்டி ஒரு பிரசங்கம் செய்தார். சீமையிலே இப்பொழுது மேற் கண்டவர்கள் இருபது லக்ஷம் பேர்களிருக்கிறார்கள். ஜெர்மானியர் சீமை மீது படையெடுக்க முயன்றால் சீமையைக் காக்கவென அமர்த்தப்பட்டு நல்ல சிக்ஷை பெற்றிருப்பவர்கள் இவர்கள். ஆனால் இப்பொழுது மற்றொரு புனிதமான சேவையில் இவர்கள் ஈடுபடுவார்கள் என சர்ச்சில் துரையின் பேச்சிலிருந்து தெரிகிறது. கடல் கடந்து ஐரோப்பா மீது படையெடுத்துப் போய், ஹிட்லரையும், ஹிட்லரிஸத்தையும் நசுக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. அந்தக் காரியத்தில் இவர்களும் ஈடுபட வேண்டி வரலாம் என்றார் சர்ச்சில் துரை. சீமையிலே அமெரிக்கர்களும், கனடியர்களும், பிரிட்டிஷாரும் ஜெர்மனி மீது பாய்வது எப்போ? எப்போ? மாண்டு போன எங்கள் உற்றார் உறவினர்களது சாவிற்குப் பழிக்குப் பழி வாங்குவது எப்போ எப்போ என்று துடியாகத் துடிக்கிறார்கள் என்பது அவரது பிரசங்கத்திலிருந்து தெரிகிறது.

அமெரிக்காவிலே சென்ற மாதத்தில் மட்டும் 6,200 விமானங்கள் தயாரித் திருக்கிறார்கள். 150 புதுக் கப்பல்கள் கட்டி யிருக்கிறார்கள், பிரிட்டனிலோ, அச்சு நாடுகள் இரண்டிலே தயாராகும் விமானங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், அதிக எண்ணிக்கையுள்ள விமானங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. வட ஆபிரிக்கா வேறே நம் வசமாகி விட்டது. இனியும் யுத்தத்தின் முடிவைப் பற்றி சந்தேகமா?

1940-ம் வருஷம் மே மாதத்திலே, மேற்கு ஐரோப்பாவில் உள்ளவர்களும், சீமையில் இருந்தவர்களும், உலகோரும் ஜெர்மனி அடுத்தாப் போல எங்கு தாக்கும் என்ற கேள்வியைக் கேட்டுக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தார்கள். சரியாக மூன்று வருஷங்களுக்கு இப்பால் என்ன கேள்வி கேட்கப்படுகிறது

தெரியுமா? நேச நாட்டார் ஐரோப்பாவை எங்கு தாக்குவார்கள் என்ற கேள்வி தான் கேட்கப் படுகிறது. நார்வேயிலிருந்து பிரான்ஸின் தென் கோடி வரையிலும் சரி, ஸ்பெயின் முனை முதல் தென் ஐரோப்பாவிலே துருக்கி வரையிலும் சரி பத்தாயிரம் மைல் நீளமுள்ள கடற்கரை இருக்கிறது. இவற்றுள் பதினெட்டு வலுக் குறைவான இடங்களிலே நேச தேசத்தார் தாக்கக் கூடும் என்று ஜோஸியம் சொல்லுகிறார் ஒருவர். இந்த ஜோஸிய மெல்லாம் எதற்கு? கூடிய சீக்கிரமே சாக்ஷாத்தாக படை யெடுப்பு ஆரம்பமாகப் போகிறதே! அப்பொழுது எல்லாம் தெரிந்து விடுமே!

## ஜெர்மன் ஜல சக்தி பாழானது

சென்ற வாரத்திலே பிரிட்டிஷ் விமானங்கள் பெரியதோர் வெற்றி அடைந்தன. ஜெர்மனிக்கு உயிர் போன்றுள்ள ஜல சக்தியைப் பாழாக்கி விட்டன. ரூர் பிரதேசத்திலும், வேறொரு இடத்திலும் இரு பிரமாண்டமான அணைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று 13 கோடி டன் ஜலத்தைக் கொண்டது. மற்றொன்றிலே 20 கோடி டன் ஜல மிருக்கிறது. இந்த இரு அணைகளையும், உடைத்துவிட்டார்கள் பிரிட்டிஷ் விமானிகள். இதனால் ஏற்பட்ட நஷ்டம் அசாத்திய மாகவே இருக்கும் என்பதில் சந்தேகமா? தொழிற் சாலைகளுக் கெல்லாம மின்சார சக்தியை சப்ளை செய்து கொண்டிருந்த அணைக்கட்டு 'டபார்' ஆகிவிட்டால், தொழிற் சாலைகள் எப்படி வேலை செய்யும்?

இது மட்டு மல்ல. பிரிட்டிஷ், அமெரிக்க விமானிகள் பெர்லின், டேஸ்பர்க் போன்ற பல நகரங்களை சென்ற வாரத்தில் மூன்று நான்கு நாட்கள் ஒரு மணி கூட ஓய்வு கொடாது தாக்கிய வண்ணமே இருந்தார்களாம். மத்தளம் இருபுறம் அடிபடுவது போல், ஜெர்மனிக்கு, கீழ்த்திசையிலும் சரியான அடி தான். ஸோவியத் விமானிகள் வார்ஸா போன்ற நகர்களைக் கவனித்தார்கள்.

ருஷ்யாவிலே, டானெட்ஸ் நதியை ருஷ்யர்கள் கடந்து விட்டார்கள். க்யூபன் பிரதேசத்திலே ஜெர்மானியரது எதிர்ப்பு மிகக் கடுமையாகவே இருக்கிறதாம். ஆனாலும் ருஷ்யர்கள் தளரவில்லையாம். ஜெர்மனிக்கு ருஷ்யாவில் உள்ள போக்குவரத்துக்களையும், விமான கூடங்களையும், சேனைகள் சேர்ந்திருக்கு மிடங்களையும் அப்பளம் போல் தூளாக்கி வருகிறார்களாம் ருஷ்ய விமானிகள். ருஷ்யர்களிடம் நூதன சக்திவாய்ந்த பீரங்கிகள் இருக்கின்றனவாம். அவற்றைக் கொண்டு பல அதிசயங்களைச் சாதிக்கலாம் என அவர்கள் எண்ணி யிருக்கிறார்களாம்.

'படை யெடுப்பிற்குத் தயார் செய்து கொள்ளுங்கள். எந்த நிமிஷம் உங்கள் தலை மீது ஆபத்து இறங்குமோ தெரியாது. அதிலிருந்து தப்ப முடியாது. மரியாதையாகச் சரணடைந்து விடுங்கள்' என்று பிரிட்டிஷ் ரேடியோ, தனது பிரசாரத்தைத் தொடங்கி விட்டதாம்.

'ஐரோப்பாவிலே யுத்தம் அதிக நாள் நடக்காது என்று நினைக்கிறேன் நான். அது ஏன் என்று கேட்காதீர்கள்!' என்கிறார் ஒருவர். யார் கண்டார்கள்? ட்யூனிஸியாவிலே முடிந்தது போலவே சட், புட் என்று ஐரோப்பாவிலும் யுத்தம் முடிந்து விடக் கூடும். நேச தேசத்தார் ஐரோப்பாவிலே இறங்கினதும் என்னென்ன அதிசயங்கள் நடக்கப் போகின்றனவோ! விதி என்னென்ன லீலைகளை 'ஸ்டோர்' செய்து வைத்திருக்கிறதோ தெரியவில்லை.

## கூட்டிலடைபட்ட குள்ள நரி.

'வட ஆப்பிரிக்கக் கரை நம் வசப்பட்டு விட்டதால் நமது பாரம் எவ்வளவோ குறைந்து விட்டது. யுத்தப் போக்கே மாறிவிட்டது. மத்தியதரைக் கடலில் ஆதிக்கம் கிடைத்து விட்டது. ஆகவே நமது கை உயர்ந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். இனி ருஷ்யாவிற்கும், கீழக்கோடிக்கும், பஸிபிக் பிரதேசங்களுக்கும் கப்பல்கள் சீக்கிரமாகச் செல்லக்கூடும். வழியில் ஆபத்து இருப்பினும், முன் போல தென் ஆப்பிரிக்காவைச் சுற்றி இந்தியாவிற்கு வரவேண்டாம். துருக்கியின் நேசப் பான்மை உறுதியாகும். ஸ்பெயினும் அச்சு நாட்டிடம் அதிகம் குலவாடாது.

ஹிட்லர் கூண்டில் அடைபட்டு விட்டார். கூண்டு பெரியதாயிருக்கலாம். ஆகவே ஹிட்லரை மடக்கிப் பிடிக்க நாளாகலாம். ஆனாலும் கூண்டுக்குள்ளே அவர் கிடப்பது மட்டும் நிச்சயம். ஆப்பிரிக்கா மூலம் முன்னேறி காகஸஸிலிருந்த தமது சைனியங்களோடு கலந்து கொள்ள எகிப்து வரை வந்தார் ஹிட்லர். ஆனால் அவரது திட்டங்கள் எல்லாம் கவிழ்ந்து போய் விட்டன. ஜெனரல் ராமல், எவ்வளவு ஆசையோடு சூயஸ் கால்வாயை முன்னால் போய் அடைய எண்ணியிருந்தாரோ. அவ்வளவு வேகமாக 1,800 மைல் ஓடிப் போய், முன்னாலேயே ஸிஸிலியக் கால்வாயைத் தாண்டி, ஐரோப்பாவிற்கு ஓடிவிட்டார். இப்பொழுது கூண்டிலடைபட்டுத் தவிக்கும் குள்ளநரி மாதிரி ஹிட்லர் தவித்துக் கொண்டிருக்கிறார்!

---

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

ஓரளவுக்கு நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. முன் யோசனையோடும், முயற்சியோடும், செல்ல வேண்டிய துறைகள் இன்னும் பல இருக்கின்றன. இந்த மாகாணத்தில் இந்த இயக்கம் வேரூன்றி விட்டது. மக்கள் உள்ளத்தைக் கவ்விக் கொண்டது. சந்தேகிகளையும், குறை கூறுவதையே தொழிலாகக் கொண்டவர்களையும், எதிரிகளையும் வென்று கொண்டு வருகிறது.

சென்ற வருஷத்திலும், இந்த வருஷ ஆரம்பத்திலும் இருந்த நிலைமை வேறு. அக்காலத்தில் "இது இந்தியாவின் யுத்தம்", "அச்சு நாடுகளின் ஆதிக்கம் அழிய வேண்டும்", "இந்தியாவின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்", "பொய் வதந்திகள் ஆக்கத்தை அழிக்கின்றதினாலே அவற்றை நசுக்க வேண்டும்"—என்றெல்லாம் சொன்னோம். இப்போது வெற்றிக் குறிகள் தென்படுகின்றன. எனவே, நமது பல்லவியும் மாறுபட வேண்டும். "வெற்றி தென்படுகிறது; அதன்பொருட்டு நாம் உழைக்க வேண்டும்", "கைத் தொழில்களை முன்னேற்றிக் கொள்வதற்கு இந்தியாவிற்கு இது ஒரு சந்தர்ப்பம்", "வெற்றியைக் கொண்டு தான் விடுதலை பெறுவோம்". இவை தான் இன்றைய பல்லவிகள். இந்த மாறுதல்கள் கவனிக்கத் தக்கன.

---

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

கிராம மக்களுக்கு ஊக்கமும் தற்காப்புத் திறமையும் உண்டாகிறது. இவர்கள் கிராமக் காவலர்களாகவும், நம் படைகள் போக்குவரவிற்கு உதவி செய்கிறவர்களாகவும், எதிரிகள் வந்தால் அச்செய்திகளை அதிகாரிகளுக்கு அவ்வப்போது அறிவிக்கிறவர்களாகவும் விளங்குவார்கள். இவர்கள் தொண்டு பெரிதும் பாராட்டத் தக்கது.

## அங்கத்தவர்கள்

தேசியப் போர்முனை யங்கத்தினர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் 2 லட்சம் சின்னங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. பல ஜில்லாக்களிலிருந்தும் வந்திருக்கும் கோரிக்கைகளிலிருந்து இன்னும் 5 லட்சம் சின்னங்கள் மேலும் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.





# இந்தியப் படைக்குத் தனிப் பெருமை

## அச்சு நாட்டினர் ஆட்டங் கொடுக்கின்றனர்

**சென்னை வானொலி நிலயத்திலிருந்து 1943-ம் ஸு மேமீ 17உ ஒலிபரப்பப் பட்ட ஒரு பிரசங்கம் :—**

நேற்று லண்டனில் விழாக் கொண்டாடினார்கள். கோவில்களில் உயர்ந்த முறையில் வழிபாடுகள் நடை பெற்றன. அனைவரும் மகிழ்ந்திருந்தனர். காரணம் என்ன? துனிசியாவில் நேச நாடுகள் அடைந்த வெற்றி தான். இந்த வெற்றியை லண்டன் நகர முழுதும் கொண்டாடியது. ஆங்கிலேயர்களும், மற்ற நாட்டவர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர். செண்ட் பால் கோவிலிலும், வெஸ்ட்மினிஸ்டர் கதீட்ரலிலும் மா பெரும் கூட்டம் கூடி, இவ் விழாவைக் கொண்டாடினார்கள். மூன்று வருஷங்களுக்கு முன்பு டன்கர்கை விட்டுத் தப்பி வந்து சேர்ந்த போது, கோவிலுக்கு வழிபடச் சென்றவர்கள் முகத்தில் எவ்வளவு துன்பக் குறி தோன்றியதோ, அவ்வளவு இன்பக் குறி இப்போது லண்டனில் நடைபெற்ற விழாவின்போது தோன்றியது. இந்தியாவிலும் இந்த விழாவை வருகிற வெள்ளிக்கிழமை கொண்டாட வேண்டு மென்று மேன்மை தங்கிய லார்ட் லின்லித்கோ டில்லி வானொலி நிலயத்திலிருந்து செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அன்றியும், இந்தியா முழுதும் விடுமுறை நாளாகக் கொண்டாட வேண்டு மென்று கட்டளை யிட்டிருக்கிறார். நிற்க, இந்த வெற்றிக்கு, மிஸ்டர் சர்ச்சிலின் திறமையும், வரும் பொருள் உணரும் தன்மையும் தான் காரணம் என்று மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் கூறி, அவரைப் பாராட்டி யிருக்கிறார். இது மகத்தான தோர் வெற்றி. இதுபற்றிக் கொஞ்சமும் சந்தேக மில்லை. யுத்தத்தின் போக்கையே இது மாற்றி விட்டது. அச்சு நாடுகளின் இறுமாப்பை அடக்கி விட்டது. அச்சு நாட்டுப் படைத் தலைவர் பான் ஆர்னிம் கைதி யானார். இவரைப் பிடித்த பெருமை 4-வது இந்தியப் படைக்கே உரியது. அச்சு நாடுகளின் இடுப்பு முறிந்தது, இங்கே தான். மத்தியதரைக் கடல் வழியாக நேச நாட்டுப் படை கப்பல்களும், தளவாட கப்பல்களும், சப்ளை கப்பல்களும் இதுவரை போக முடியாதிருந்தது. ஆகவே, ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு நன்னம்பிக்கை முனை வழியாக, நேச நாட்டுக் கப்பல்கள் போக வேண்டி யிருந்தது. இது ஏறக்குறைய 12,000 மைல் பிரயாணம். இப்போது நிலைமை மாறி விட்டது. மத்யதரைக் கடல் வழி, இப்போது திறந்து விட்டது. ஜிப்ரால்டருக்கும், அலெக்சாண்டிரியா நகரத்திற்கும் 1,700 மைல் தூரம் தான். இதை வெகு எளிதில் விரைவாகக் கடந்து விடலாம். ஆகவே, யுத்தத் தளவாடங்களும், படைகளும், சப்ளைகளும், ரஷ்யாவிற்கும், தூரக்கிழக்கு நாடுகளுக்கும் விரைவில் போய்ச் சேர இலகுவா யிருக்கும்.

## அச்சு நாட்டினர் அச்சம்

இப்போது ஐரோப்பாவில் 2-ம் போர் முனையை நேச நாட்டினர் ஆரம்பிப்பார்கள் என்று அச்சு நாட்டினர் அஞ்சுகிறார்கள். இதற்கு ஏற்ற பாய்ச்சல் தளமாக வட ஆப்பிரிக்கா அமையும். உண்மையிலேயே 2-ம் போர் முனை இப்போது ஆரம்பமாகி விட்ட தென்றே சொல்லலாம். சென்ற 13-ம் தேதி பண்டலேரியா என்னும் இத்தாலியத் தீவை நேச நாட்டுக் கடற்படைச் சென்று தாக்கியது. இது டியூனிசுக்கு 60 மைல்களுக்கு அப்பால் உள்ளது. ஆகவே, இத்தாலி மிகுந்த ஆபத்திற்குள்ளாகி யிருப்பது உண்மை தான். அடுத்த படியாக, கிரீட் தீவை நேச நாட்டுக் கப்பற் படை தாக்கலாம். இந்தத் தீவு ரஷ்யாவிற்குப் போகும் பாதையி லிருக்கிறது. இத்தாலியை வெகு சுலபமாக துனிசியாவி லிருந்து கொண்டு தாக்கலாம். இத்தாலியின் உள் நாட்டு நிலைமையோ மிகவும் நெருக்கடியா யிருக்கிறது. இத்தாலிய மன்னர் மாட்சிமை தங்கிய இம்மானுவேல் அரசர், தன் பட்டத்தைத் துறந்து விடப் போகிறாராம். அவருக்குப் பதிலாக இளவரசர் முடி சூடிக் கொள்ளலாம். யுத்த முஸ்தீப்புகள் அபரிமிதமாக அங்கே நடை பெறுகின்றன. புதிதாக 9 பேர்களை பாசிஸ்ட் தலைவர்களாக முசோலினி நியமித்திருக்கிறார். இவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மாகாணத்திற்குத் தலைவராக அனுப்பி யிருக்கிறார். அன்றியும் 12 பாசிஸ்ட் தலைவர்களை 12 மாகாணங்களுக்கு அனுப்பி யிருக்கிறார். இது மட்டுமா? ஜெர்மானியர்கள் உணவுப் பொருள்களை இத்தாலிக்கு அனுப்புவதாக ஒப்புக் கொண்டிருந்தார்கள். இப்போது அவற்றை அனுப்ப மாட்டார்களாம். ஏன்? இத்தாலி ஆபத்தான நிலைமையி லிருக்கிறது. ஆகவே, உணவுப் பொருள்களை அங்கே அனுப்பினால். அவற்றை நேச நாட்டுப் படைகள் நாசமாக்கக் கூடும். அல்லது கைப்பற்றிக் கொள்ளவும் கூடும். எனவே, ஜெர்மானியர்கள் அவற்றை இத்தாலிக்கு அனுப்பப் போவ தில்லையாம். இவற்றிலிருந்து இத்தாலி பெரிதும் கலக்கம் அடைந்திருக்கிற தென்று தெளிவாகத் தெரிகிறது. இந்தக் கலக்கம் இத்தாலியில் மட்டும் இல்லை. ஜெர்மனியிலும் ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் விமானப் படைகளும், அமெரிக்க விமானப் படைகளும் இரவு பகல் ஜெர்மனியின் கேந்திர ஸ்தானங்களைத் தவிடு பொடி செய்து கொண்டு வருகின்றன. 4 தினங்களுக்கு முன்பு வெளிவந்த செய்தியி லிருந்து சுமார் 36 மணி நேரமாக ஜெர்மனியையும், ஜெர்மனி கைப்பற்றியுள்ள நாடுகளையும் மணிக்கு மணி தவறாது நேச நாட்டு விமானங்கள் தாக்கி குண்டு மாரி பொழிந்து கொண்டிருந்தன வென்று தெரிகிறது. பெர்லின் நகரத்திலேயே கலவரங்கள் கிளம்பி விட்டன. அல்லாமலும், ஜெர்மானியர்கள் கைப்பற்றியுள்ள நாடுகளில் அவர்கள் மேல் மிகுந்த அதிருப்தி ஏற்பட்டு விட்டது. பல்கேரியாவில் இந்த அதிருப்தி மிகவும் கடுமையாக இருப்பதாகத் தெரிகிறது. எனவே, அங்குள்ள ஜெர்மானியர்கள் அனைவரும், தம் சொந்த நாட்டிற்குத் திரும்பி வர வேண்டு மென்று ஜெர்மன் அரசாங்கம் கட்டளை யிட்டிருக்கிறது. இவை யுத்த சம்பந்தமான முன்னேற்பாடுகள் என்று சொல்லி விட முடியாது. நாடியை உணர்ந்து தான், ஜெர்மன் அரசாங்கம் இப்படிப் பட்ட கட்டளை யிட்டிருக்கிற தென்று சொல்ல வேண்டும்.

## ஹிட்லருக்குப் பலவகை நஷ்டம்

துனீசியாவில் அடைந்த தோல்வி ஹிட்லர் மனதை இன்னும் உறுத்தி கொண்டுதா னிருக்கும். அவருடைய பான்ஸர் டிவிஷன் படைகளில் மிகப் பழைய 3 டிவிஷன்கள் அவருக்கு நஷ்டமாயின. பல வகைகளிலும் ஜெர்மனிக்கு நஷ்ட முண்டா யிருக்கிறது. துனீசியாவில் அடைந்த தோல்வியினால் நேர்ந்த அவமானம் ஒரு புரம். உள் நாட்டுக் குழப்பம் மறுபுரம். தான் கைப்பற்றிய நாடுகளை நிர்வகிப்பது இன்னொருபுரம். 2-ம் போர் முனைக்கு ஆயத்தமாவது மற்றொருபுரம். ரஷ்யாவை சமாளிக்க வேண்டியது மேலும் ஒரு புரம். இவற்றை யெல்லாம் சீர் தூக்கிப் பார்த்த செக்கோசிலோவேக்கியா தலைவரான டாக்டர் பெனேஷ் "துனீசியாவில் நடைபெற்ற கடும் போராட்டம் எவ்வளவு திடீர் என்று முடிந்ததோ, அது போலவே ஜெர்மனியின் முடிவும் திடீரென்று வரும்"—என்று குறிப்பிட்டார். இது உண்மையெனத் தக்க அறிகுறிகள் தோன்றுகின்றன. என்றாலும், தம் எதிரிகளைச் சமாளிக்கும் பொருட்டு ஜெர்மானியர்கள் ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குள்ளாகவே, 2-ம் போர் முனை சரியானபடி ஆரம்ப மாகலாம். அப்போது அதைச் சமாளிக்க வேண்டும். ரஷ்யாவையும் அவர்கள் தாக்கி ஆகவேண்டும். இரண்டு போர்முனைகளில் அவர் தாக்கக் கூடும். பிரியான்ஸ்க் பகுதியிலிருந்து மாஸ்கோவைப் பின்புரம் தாக்கக் கூடும். தெற்கே, ராஸ்தாவ் நகரத்தை மீண்டும் கைப்பற்றி டான் நதியைக் கடந்து வட காக்கஸஸின் மேல் பகுதியில் முக்கியமானதோர் இடத்தைக் கைப்பற்றக் கூடும். இன்னொரு படை, பிக்கு எண்ணெய் கிணறுகளைக் கைப்பற்றலாம். இப்போது கருங்கடல் வழியாக ரஷ்யாவிற்குத் தளவாடங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுக்க கிரிமியா, ருமேனியா ஆகிய நாடுகளின் துறைமுகங்களில் உள்ள

ஜெர்மன் கப்பற்படை முயலுகிறது. இம்முயற்சிகளைத் தகர்த் தெறிகிறது ரஷ்ய கப்பற்படை. ரஷ்யாவிற்கு சப்ளைகள் போக வர கருங்கடல் மிகவும் வசதியானதோர் பாதையாக விளங்குகிறது. இங்கே ஜெர்மானியர்கள் கை ஓங்க வில்லை. அன்றியும் ஜெர்மானியர் கைப்பற்றிய உக்ரைன் பகுதியில் கியப் என்றொரு நகரம் இருக்கிறது. இங்கே தான் ஜெர்மானியர் தம் முக்கியமான போர்க் காரியாலயங்களை அமைத்திருந்தார்கள். இது சோவியத் ஜெர்மன் போர் முனைக்கு 200 மைல் தூரத்திலிருக்கிறது. இதற்கு மேற்கே, 150 மைல் தூரத்தில் உள்ள ரோப்னு என்னுமிடத்திற்குத் தம் காரியாலயங்களை எல்லாம் ஜெர்மானியர்கள் மாற்றிக் கொண்டார்கள்.

### தம் பலவீனத்தை உணருகிறார்கள்

இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. அதாவது, தாம் உக்ரைன் பகுதியிலிருந்து ரஷ்யர்களோடு போராட முடியாது என்று ஜெர்மானியர்கள் நினைக்கிறார்கள். ரஷ்யாவில் ஜெர்மானியர்கள் கை ஓங்க விடாதபடி ரஷ்யர்கள் கடுமையாகப் போராடுகிறார்கள். என்றாலும், அவர்களுக்கும் நிலைமையைச் சற்று இலகுவாக்க வேண்டுமல்லவா? ஆகவே தான், நேச நாட்டினர் வாஷிங்டனில் இப்போது கூடியிருக்கின்றனர். தன் ஆலோசகர்கள் அனைவருடனும் மிஸ்டர் சர்ச்சில் அங்கே போயிருக்கிறார். இந்தியப் படைத் தலைவர் பீல்ட் மார்ஷல் வேவலுங் கூடப் போயிருக்கிறார். சீன ஸ்தானிகர் சுங்குங் கூட அங்கே யிருக்கிறார். டாக்டர் பெனேஷும் விஜயம் செய்திருக்கிறார். விவாதங்கள் பலமாக நடக்கின்றன. கீழக் கோடி நிலைமையைக் குறித்து இந்த மகாநாட்டில் ஆழ்ந்து சிந்தித்து தக்கன செய்வார்களென்று எதிர் பார்க்கலாம். இந்த மகாநாடு அமெரிக்காவில் நடைபெறுவதற்கு முக்கிய காரணம், அங்கே நடைபெறும் அபரிமிதமான விமான உற்பத்தி தான். தற்காலப் போராட்டத்தில் விமானங்களைப் போல உதவுவது வேறு எதுவும் இல்லையென்று சொல்லலாம். விமான பலம் எந்த நாட்டிற்கு அதிகமாக இருக்கிறதோ, அந்த நாடு தான் வெற்றி பெறும் என்பது உறுதி. அமெரிக்கர்கள் சீனாவைப் பாய்ச்சல் தளமாகக் கொண்டு ஜப்பானைத் தாக்கப் போவதாகத் தெரிவித்தார்கள். அதற்கான ஆலோசனைகளும் இம் மகாநாட்டில் செய்யப்படும். நிற்க, ஜப்பானியர் தனது அறிக்கையின்படி கீழ் நாடுகள் எல்லாவற்றையும் தம் வசப்படுத்த வேண்டுமென்பது அவர்கள் திட்டம். இத் திட்டப்படி சீனாவும், இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் தான் பாக்கியிருக்கின்றன. இவற்றைப் பிடிக்க வொட்டாதபடித் தடுக்க நேச நாட்டினர் கடுமையான முறைகளைக் கையாள வேண்டும். இது பற்றி இம் மகாநாட்டில் தெள்ளத் தெளியப் பேசி முடிப்பார்கள் என்று எதிர் பார்க்கலாம். பிறகு, ஜப்பானியர்கள் கொட்டத்தையும் ஒடுக்குவார்கள்.

தாம் அடைந்த அற்ப வெற்றியினால் மதி மயங்கிப் பிதற்றுவது பிரிட்டிஷ் படைத் தலைவர்களின் தன்மையல்ல. செயலாற்றுவதிலேயே தான் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். மற்ற நேச நாட்டுப் படைத் தலைவர்களுங் கூட அப்படித் தான். துனீசியாவில் தாம் அடைந்த மகத்தான வெற்றியைக் குறித்து ஜெனரல் அலக்சாந்தர், முதல் மந்திரிக்கு அனுப்பிய செய்தியில், “துனீசியப் போராட்டம் முடிவடைந்து விட்டதென்று தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை” என்று கூறினாரே ஒழிய, பெருமிதமான வார்த்தை ஒன்று கூட அதில் காணப்படவில்லை. உண்மை வீரனின் தன்மை இது தான். இந்த வெற்றிக்குச் சிறந்த தொண்டு புரிந்த இந்தியப் படைகளை உலகமே இன்று பாராட்டுகிறது. இந்த வெற்றி, இனி ஏற்படப் போகும் பல வெற்றிகளுக்கு ஆரம்பமாக விளங்குகிறது.

## இந்தியப் படைகளுக்கு வைசிராய் பாராட்டு

**மேன்மை தங்கிய வைசிராய் லின்லித்கோ பிரபு துனீசிய வெற்றியைப் பாராட்டி டில்லி வானொலி நிலையத்திலிருந்து சென்ற 14-ம் தேதி செய்த பிரசங்கத்தின் சுருக்கமாவது :—**

“வட ஆப்பிரிக்காவில் 3 வருஷங்கள் அரும் பாடு பட்டோம். வெயர்வை வடித்தோம். கடைசியில் மகத்தான வெற்றி பெற்றோம். ஆப்பிரிக்கா கண்டமே சுத்தமாகி விட்டது. எதிரியின் பெரும் படைகள் கைப்பற்றப் பட்டன அல்லது அழிந்தன. மகா கேந்திர மார்க்கமான மத்திய தரைக் கடல் வழி திறந்து விடப்பட்டது. அதன் தென் கரை நெடுக பிரஞ்சு, அமெரிக்க, பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள், இந்தியா முதலிய நாட்டுப் படைகள் டிவிஷன் டிவிஷனாக அணி வகுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவர்கள் அனைவரும் வெற்றியால் பெருமிதங் கொண்டிருக்கிறார்கள். ஒத்திருந்து போராடுகிறவர்கள் தாங்கள் என்று உணருகிறார்கள். இவர்களுடைய பரஸ்பர நம்பிக்கை போர் முனையில் பரீட்சிக்கப் பட்டு விட்டது. அடுத்த போர் முனை எது என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பாக் கண்டம் முழுதும் பயங்கரமான நிலைமையை உண்டாக்கிய, ஓங்கி வளர்ந்திருக்கும் நாசிசத்தை வேரோடு அழித்து விட வேண்டுமென்னும் உறுதிக் கொண்டிருக்கிறார்கள்.”

“இந்த எதிரியை அழிக்கும் திருப்பணியில் நம் புகழ்பெற்ற நான்காவது இந்தியப் படையும் கலந்திருந்தது பற்றி நாம் மகிழ்ச்சி யடைவோம். 1940, 1941, 1942-ம் வருஷங்களில் ஆப்பிரிக்காவில் புகழ் பெற்ற பல படைகள் இப்போது துனீசியாவில் இல்லை. எகிப்தைக் காக்கும் பொருட்டு பீல்ட் மார்ஷல் வேவலின் தலைமையிலும், ஜெனரல் ஆகின்லெக் தலைமையிலும் போராடிய இந்தியப் படைகளை இச்சமயத்தில் மறந்து விடுவது நன்றி கெட்ட செயலாகும். இன்று நாம் கொண்டாடும் முடிவான வெற்றிக்குக் காரணம் ஆப்பிரிக்கப் போராட்ட ஆரம்ப காலம் முதல் அதில் ஈடுபட்டிருந்த பல படைகளின் கூட்டு முயற்சி தான்.”

“நமது நேச நாட்டு விமானப் படைகளும் கப்பற் படைகளும் அச்சு நாட்டுப் படைகளை விட மிகவும் சிறந்தவை என்று வட ஆப்பிரிக்காவிலுள்ள நம் படைகள் தெளிவாக உணர்ந்து கொண்டன. நமது கப்பற் படை தலை சிறந்த தென்பதை அச்சு நாட்டவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அன்றியும், எவ்வகை கஷ்டங்கள் வந்தாலும், அவற்றை யெல்லாம் சகித்துக் கொண்டு போராடத் தக்க திறமை உடையவர்கள் நம் படையினர்.”

“துனீசியாவில் மகத்தான தோர் வெற்றி நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்தியாவில் உள்ள நாம் அனைவரும் இதைக் கொண்டாட வேண்டும். இதன் பொருட்டு அடுத்த 21வ் வெள்ளிக்கிழமை ஒரு அரசாங்க விடுமுறை நாளாக விடப்பட்டிருக்கிறது. இந்த விழாவை நம் நாடு முழுதும் கொண்டாடுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.”

“துனீசிய வெற்றிக்குக் காரணம் பிரிட்டிஷ் படைகளும், இந்தியப் படைகளும் மட்டு மல்ல. அமெரிக்கப் படைகளும், போராடும் பிரெஞ்சு படைகளும், சாம்ராஜ்ய குடியேற்று நாட்டுப் படைகளும் கூட இந்தப் போரில் அருந் தொண்டாற்றி யிருக்கின்றன. அவற்றிற்கும் நாம் நன்றி கூறுகின்றோம். நிற்க, 1940-41-42-ம் வருஷங்களில் வட ஆப்ரிக்காவில் கடும் போராடிப் பல வெற்றிகளைக் கண்ட இந்தியப் படைகளில் பல, இப்போது அங்கே இல்லை. இந்தப் படைகளையும் நாம் இந்தச் சமயத்தில் மறந்து விடக்கூடாது. அவை செய்த முயற்சியின் பலனாகத் தான் இப்போது நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.”

“இந்தியாவில் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. உள் நாட்டுக் குழப்பங்களைத் தடுக்க வேண்டி யிருந்தது. கீழ்த் திசையிலிருந்தும், மேல் திசையிலிருந்தும் எதிரிகள் தாக்கக் கூடுமென்று ஒரு வருஷத்திற்கு முன்னால் எதிர் பார்த்தோம். துனீசிய வெற்றியினால் இந்தியாவின் மேல் பாகத்தை எதிரிகள் தாக்குவார்கள் என்ற அச்சம் இப்போது நீங்கிவிட்டது.”

(16-ம் பக்கம் பார்க்க.)

## இந்திய வீரரின் எழுச்சி !

இராகம்—ஸ்ரீராகம் தாளம்—ஆதி

பல்லவி

வீரம் சுரந்து நின்றனன்—இந்திய சிப்பாய்
தீரம் சிறந்து வென்றனன்
வெற்றிக் கொடி பற்றிப்படி சுற்றியும்
பெற்றுச் சயம் உற்றிக்ஷணம் முற்றிலும் (வீரம்)

அனுபல்லவி

கோரம் நிறைந்த வையம் கோவென்றழ அபயம்
ஈரம் சுரந்திதயம் எளிதளித்தெடுத்தே வாள் (வீரம்)

சரணங்கள்

(1) சாரம் இழந்தோமென்று சஞ்சலம் கொள்ளாய் இன்று
தூரம் மிகுத்தே சென்று தோள்கள் தட்டியே நின்று
சங்கடமங்கிட சிங்கமெனுந்திடம் எங்குமே பொங்கிட துங்க
முடன் நனி (வீரம்)

(2) நாற்பதாம் ஆண்டில் திங்கள் நல்ல டிஸ்ஸம்பர் மங்கல்
ஏற்பதாம் காலை தங்கள் ஈட்டியுடன் சிங்கங்கள்
என்றிடசித்திப ராணியை வென்றிட துன்றியணைந்துமே
சென்றதை வென்றனர் (வீரம்)

(3) ஓங்குகெரென் குன்றினை உச்சி மீதேறி வென்றார்
ஏங்கும் இத்தாலியாரை ஈட்டியால் வாட்டிக் கொன்றார்
ஒப்பிலர் இந்தியர் இப்புவி முந்தியும் செப்பிடவல்ல நல்
மெய்ப்புகழ் தந்திட (வீரம்)

(4) வஸமாக்கிக் கொள்ள ஹிட்லர் வஞ்சகச் சூழ்ச்சி செய்த
முஸல்மானி ராச்சியங்கள் மூண்ட இரான் இராக்கை
வல்லமை கொண்டுமே எல்லையில் வீரர்கள் தொல்லையகன்றிட
ஒல்லையில் வென்றனர் (வீரம்)

(5) ஐந்து வருடங்களாய் அபிஸீனியா விழந்து
நைந்து கிடந்த மன்னன் உய்ந்து மன மகிழ்ந்து
நாட்டினையே பெற மீட்டதையே பகை ஈட்டிய தேகொடு
ஓட்டினரே வகை (வீரம்)

(6) எல்லலா மீனில் அன்று எதிர்த்து முன் தாக்கிச் சென்று
வல்ல நாசியைக் கொன்று ஒல்லைகைப் பற்றி நின்று
எங்கணும் நாசித யங்கிமுன் ஓடிம யங்கியொழிந்திட
இங்கிதமாகவே (வீரம்)

(7) மாரத் எனும் அரணை தீரத்துடன் சிறிது
நேரத்திலே உடைத்து கோரத்தில் நாசியரின்
மண்டைகள் ஆயிரம் துண்டுற ஆயுதம் கொண்டுமே போயினர்
பண்டை நம் நாட்டினர் (வீரம்)

(8) ஆப்பிரிக்கா முழுதும் ஆர்ணிம் ஒழிந்திடக்கித்
தாப்புடன் ஜர்மனியைத் தாக்கி யொழித்தனரே
ஆங்கிலருக்கிணை யாங்கவின் வீரர்கள் நான்கெனும் இந்தியர்
ஓங்கிடு நம் படை (வீரம்)

## துவரைப் பருப்பு



**வர்ணனை.**—அடர்த்தியான ஒரு செடி. குறுகிய முப்பட்டை இலை யுடையது. பூ சிறிய, மஞ்சளும், சிவப்பும் கலந்த நிற முடையது. காய் சிறிது. மூன்று முதல் எழு விதைகள் இருக்கும். இதில் பல வகை யுண்டு. பிளந்த பருப்பு, பல வகை அள வோடும், நிறத்தோடும் இருக்கும். இந்தியா வில் உள்ள பருப்பு வகைகளில் இது ஒரு முக்கியமான வகை.

**பரவுதல்.**—நான்கு அல்லது ஐந்து அடிக்கு ஒன்று வீதம் விதைகள் ஊன்ற வேண்டும். இதற்கு நல்ல பெரிய முழு விதைகள் வேண்டும். இவை கடைகளில் கிடைக்கும்.

**பயிர் செய்தல்.**—இந்தச் செடி வரண்ட இடத்திலும் முளைக்கும். ஆனால், அது வளரும் மண், மணற் பாங்காய் இருக்க வேண்டும். ஏன் என்றால், அதன் வேர்கள் ஆழப் பாய்கின்றன. ஆறு, எழு மாதங்களில் காய்க்க ஆரம்பிக்கிறது. காய் நெற்றான வுடனே அதைப் பிடுங்கி வெயிலில் உலர்த்தி களத்தில் அடிக்க வேண்டும். அப்போது விதைகள் உதிர்கின்றன. விதைகளைப் பிறகு வெயிலில் உலர்த்தி, குத்தி, தவிடுகளைப் போக்க வேண்டும். மிகுந்திருப்பது தான் பருப்பு. காய்ப்பு ஒய்கிற சமயத்திலே செடியை வெட்டி விட்டு நன்றாக எரு விட்டால், இரண்டாவது போகமும் விளையும்.

**உபயோகங்கள்.**—இதில் உடலுக்கு உரம் தர்த்தக்க சத்துகள் மிக வுண்டு. ஆகவே, சைவ உணவு சாப்பிடுகிறவர்கள் இதை ஏராளமாக உண்கிறார்கள். இந்தப் பயிரை இடைக் காலங்களில் பயிர் செய்கிறார்கள். அறுவடையான பிறகு இதை எருவாகவும் உபயோகப் படுத்துகிறார்கள். இதில் ஏராளமான இலைகள் உண்டு. அவை நல்ல எருச் சத்தாக உபயோகப்படுகின்றன. துவரைப் பொட்டு ஆடு மாடுகளுக்கு உணவாக உபயோகப்படுகிறது.

**உள் அடக்கம்.**—காய்ந்த பருப்பு : தண்ணீர் 11·7% ; உலோகச் சத்து 2% ; புரொடீன் 21% ; கொழுப்பு 0·1% ; நார் 0·7% ; கார்போ ஹைட்ரேட்ஸ் 64·5% ; 100 கிராம் கலோரிக்கு 1,755 ; சுண்ணச் சத்து 0·09% ; மாக்னீஷியம் 0·107% ; நிமதாக்னி 0·48% ; இரும்பு 0·002% ; விட்டமின் ஏ, பீ அறிகுறிகளு மிருக்கின்றன.

(14-ம் பக்கம் தொடர்ச்சி.)

**யுத்த முயற்சிகள் :—**

"போராட்டம் ஒரு புறம் நடக்க, படைகளுக்கும், பொது மக்களுக்கும் போதுமான அளவு உணவு தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இத் துறையில் போதுமான அளவுக்கு முயற்சிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏராளமான உணவுப் பொருள்களைச் சாகுபடிச் செய்ய வேண்டும். இது மட்டும் போதாது. அளவுக்கு மீறி லாபத்துக்கு விற்கும் வியாபாரிகளையும் காட்டிக் கொடுக்க வேண்டும். இவர்கள் சமூகத் துரோகிகள்".

"யுத்தத்தின் மத்தியில் தன் திறமையைக் குறித்துத் தாமே புகழ் பாடிக் கொள்வது மகா ஆபத்தான ஒரு காரியம். இதைக் கொண்டு பரிபூர்ண வெற்றி வெகு விரைவில் வந்து விடு மென்று நாம் நம்பிவிட முடியாது. ருஷ்யர்களோடு போராடத்தக்க நிலைமையில் தான், ஜெர்மனி இன்னும் இருக்கிறது. நாஸியின் கொட்டத்தை நாம் ஒடுக்கினால் மட்டும் போதாது. ஜப்பானின் திமிரையும் அடக்க வேண்டும். முடிவில் அவர்களை நாம் வெல்வது உறுதி. அவர்களுடைய படை பலம் எவ்வளவு இருந்தாலும், அதை விட மிகுந்த பலத்தைக் கொண்டு அவர்களுக்கு ஏற்ற பாடத்தை நாம் கற்பிப்போம்.

சமீபத்தில் கிழக்கு இந்திய எல்லைப்புறத்திற்கு நான் போய் இருந்தேன். அங்குள்ள நம் படைகள் மிகச் சிறந்த நிலையிலிருக்கிறார்கள். அவர்களுடைய ஊக்கம் உயர்ந்திருக்கிறது. ஜப்பானியர்கள் முயற்சி அங்கு பலிக்கவில்லை. தற்காப்பின் பொருட்டாவது நம் படைகள் தீவிரமாகப் போராடுகிறார்கள். ஒரு அறையில் 2 விஷப் பாம்புகள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அரும் பாடு பட்டு அவற்றில் ஒன்றை அடித்துக் கொன்று விட்டோம். மற்றொன்று தலை தூக்கிக் கொண்டிருக்கிறது. அதையும் அடிக்கத் தான் போகிறோம். அதற்கிடையில் சிறிது மூச்சு விடும் நேரம் அவகாசம் எடுத்துக் கொள்கிறோம். அவ்வளவு தான்.

"ஜெர்மானியரை வெல்வது மட்டும் போதாது. கீழ்த் திசையில் ஜப்பானின் ஆதிக்கத்தையும் அடக்க வேண்டும். அதன் கை ஓங்க வொட்டாதபடித் தடுக்க வேண்டும். ஓங்கினால், நமது போராட்டத்தின் லட்சியமே தோற்று விடும். உண்மையான சுதந்திரத்திற்கே இடம் இருக்காது."

இந்த வெற்றி பரிபூர்ண வெற்றி யல்ல என்பதை நம் மனதில் இறுத்த வேண்டும். அந்தப் பூரண வெற்றியின் பொருட்டு நேச நாட்டுப் படைகள் எல்லாம் சேர்ந்து ஒத்துழைத்து நல்ல பலன் அடையும் என்பது உறுதி. அதனால் உலகத்துக்கு நன்மை உண்டு.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் வருஷம் மே மீ 28உ, வெள்ளிக்கிழமை [இதழ் 21

## பிரிட்டிஷ் சோல்ஜரும், இந்திய சிப்பாயும்:



சகோதரத்துவம்—போர்க்களத்தில் மாத்திரமல்ல ; வெளியிலுங் கூட !

# ஜெய பேரிகை கொட்டடா!

இராகம்—மாயாமாளவ கௌளம் | தாளம்—ஆதி

பல்லவி

கொட்டடா நனி கொட்டடா
ஜய பேரிகை தனைக் கொட்டடா
நாடிக் கொட்டடா
பாடிக் கொட்டடா
ஆடிக் கொட்டடா
தேடிக் கொட்டடா (கொட்)

அநுபல்லவி

பட்டுப் பட்டுதை பாழுற நடை
கெட்டுக் கெட்டுயிர் கேவலத் திடை
விட்டு விட்டழி வுற்றிடப் படை
தட்டுக் கெட்டிட்டிலர் கெட்டுப் போயிடக் (கொட்)

சரணங்கள்

மோகனம் 1

ஓடியோடி நில் லாதுமே யோடி ஓய்ந்தனர் வீடி ஓய்ந்தனர்
ஓய்வதின்றியும் மாய்வதே தொழிலாகவே சென்று மாய்ந்தனர்
கோடியெங்குமே கூடிநின்ற ஜெர்மானியர் இன்று சாய்ந்தனர்
கோவென்றே யழுதேயின்றே டுனிஸேநின்றே ஓடி வீய்ந்தனர் (கொட்)

பிலஹரி 2

எல்ல லாமீன் என்ற போரினில் ஏகமாகிய வேகமாய்
வல்ல நம்படை ஒல்லைவென்றிடத் தொல்லையோடத னின்றுமே
நில்லொணு வகை ஜர்மனிப் படைத் தள்ளி யோடியும் செல்லவே
நல்ல நம்படை சொல்லொணுவகை நாசியர்களைக் வெல்லவே (கொட்)

தன்யாசி 3

அன்று ஓட முயன்ற நாசியின் துண்டு பட்டிடும் ஆட்படை
நின்று போரிடலன்றி டுனிஸில் சென்று சேர்ந்திட நம்படை
கொண்டு பல்லருங் கோடி நாசியைக் குத்தியே கலி கொன்றதே
இன்று டுனிஸொடும் பிசர்ட்டா வென்றிடும் நகர் வென்றதே (கொட்)

நாதநாமக்கிரியா 4

தோற்றுப் போரினில் தோற்றமே மறைந் தோடினன் இழந்தோடினன்
ஏற்றுப் போரினில் தேற்றத் தோன்றிய பேற்றுப் போர்வீர ரோமலே
நேற்றுப் போர் செய்த மாற்றுப்பேர் ஆர்னிம் தோற்றுப் போயுமே நின்றனர்
ஆற்றலே மிகும் ஏற்ற நம்படை ஆப்பிரிக்காவில் வென்றதே (கொட்)



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| படம்: பிரிட்டிஷ் சோல்ஜரும் இந்திய சிப்பாயும். | 1 | துனிசிய வெற்றி .. .. .. | 6 |
| ஜெய பேரிகை கொட்டடா !.. .. .. | 2 | நமக்கென்ன ஆச்சு .. .. .. | 7 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | தொழிலாளர் பகுதி: மாஸ்கோ அறிக்கை .. | 8 |
| யுத்த முடிவு நெருங்குகிறது .. .. | 4 | துனிசிய வெற்றியின் முக்கியம் .. .. | 10 |
| ஜெர்மனியை ஜெயித்தால் போதாது, ஜப்பானை யும் ஜெயிக்கவேண்டும் .. .. .. | 5 | படம்: சைதாப்பேட்டையில் தேநீர் விருந்து .. | 11 |
| | | எருக்கள் .. .. .. .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**ஜப்பானிய உள்ளூர் போர் முனை.** ஜப்பானில் ஒரு சங்கம் இருக்கிறது. அதன் பெயர் "பரிபூரண யுத்தப் பயிற்சி சங்கம்." இதன் ஆதரவில், நடந்த ஒரு கூட்டத்தில் உள் நாட்டில் யுத்தப் பிரசாரம் எப்படி செய்வது என்பதுபற்றி விவாதம் நடந்தது. சில ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டனர். இந்த விவாதத்தைப்பற்றிய அறிக்கை ஒன்றை 'புக்கை ஷௌன்' என்ற ஜப்பானிய பத்திரிகை ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த யுத்தத்தை நடத்துவதற்கு ஜப்பானிய அரசாங்கத்திற்குள்ள திறமையைக் குறித்து மகா கடுமையாகக் குறை கூறிப் பேசியிருக்கிறார்கள். அந்தச் சங்கத்தின் அங்கத்தினரான 'தொடா' என்பவர் மக்களுக்குள் உணர்ச்சி குன்றிவிட்டதாகக் குறிப்பிடுகிறார்.

ரஷ்ய-ஜப்பான் போர் நடந்த காலத்தில் எல்லா மக்களுக்கும் இருந்த உற்சாகத்திற்கும் சென்றவருஷம் மக்களுக்குள் இருந்த உற்சாகத்திற்கும் மிகுந்த வேற்றுமை காணப்படுகிறது, என்றார். யுத்தப் பகுதிச் சங்கத்தைச் சேர்ந்த ஷிமூரா என்பவர் ஜப்பானிய உள் நாட்டுப் பிரசாரம் எவ்வளவு புராதான முறையில் நடை பெறுகிறது என்று குறிப்பிடுகிறார்: "காலையில் எழுந்தவுடனே இசைத்தட்டுகள் வைத்த மாதிரி இப்போது பாதகமில்லை. ஆனால் நாம் ஜெயிக்கத்தான் வேண்டுமென்று சொல்வதும் அல்லது நாட்டுப்பற்றுதலை ஊட்டும் பாட்டுகளைப் பாடுவதும் அல்லது யுத்த நிலைமையைப் பொதுவாக விளக்கிக் கூறுவதும் அல்லது அதன் தன்மையை வரையறுத்துக் கூற முயற்சிப்பதும், ஒரு பலனும் தராது. அப்படிச் செய்வதனால் நம்மை நாமே இழிவு படுத்திக் கொள்பவர்களாவோம்".

ஏகாதிபத்திய பாதுகாப்புக்குப் பதில் ஈடு செய்யும் சங்க டைரக்டரான சுசூக்கி என்பவர், பொதுஜன உணர்ச்சியோ ஊக்கமோ கிளம்பினால், அது வளர ஓட்டாமல் தடுக்கப்படுகிறது என்று குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறியதாவது:— இது மிகவும் வருத்தம் தரக்கூடியது. யுத்தத்தைப்பற்றிப் பல வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. இந்த யுத்தத்திற்குக் காரணம் கருத்து வேற்றுமை தான் என்கின்றனர் ஒரு சிலர்; இராணுவ பலம் என்கின்றனர் வேறு சிலர்; பொருளாதாரந் தான் காரணம் என்கின்றனர் மற்றும் சிலர். 100 வருஷங்களுக்கு இந்தப் போர் நடைபெறும் என்கின்றனர் இன்னும் சிலர். இப்படிச் சொல்வதினாலே மக்களின் நல் உணர்ச்சி ஓங்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இது பற்றிச் சந்தேகமே இல்லை. உண்மையிலேயே அவர்கள் தம் எண்ணத்திற்கு விரோதமான காரியங்களைத் தான் செய்கின்றார்கள். இன்னும் 100 வருஷங்களுக்கு நாம் போராட வேண்டுமென்று சொல்வது, நாம் தோற்றுவிடுவோம் என்று சொல்வதற்குத் தான் சமம்.

**உற்பத்தித் திட்டங்கள்.** டோக்கியோவின் வட மேற்குப் பகுதியில் உள்ள சனமி என்னும் கிராமத் தலைவராகிய மிஸ்டர் கொஸொனோடு உணவுப் பிரச்சினையைக் குறித்து விவாதிக்கிறார். இப்போது ஜப்பானில் அமுலிலிருந்து வரும் "பழைய காலத்திய தடை செய்யும் முறையை"க் கடுமையாகக் கண்டிக்கிறார். உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டியதைக் குறித்து அவர் கூறியதாவது:—(உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாகச் சமீபத்தில் வகுக்கப்பட்ட திட்டங்களைப் பற்றி மிகவும் சந்தேகப்படுகிறேன். பணத்தைக் கொண்டு வேலையை அதிகமாகச் செய்யத் தூண்டினால் உற்பத்தி குறைந்து போகும்." கூலியை அதிகப்படுத்துவதினால் உற்பத்தி அதிகப்படும் என்று நினைப்பது தவறு. ஏனென்றால், தனக்குக் கிடைக்கும் அதிக கூலியைக் கொண்டு அதிக இன்பமடைய தொழிலாளி முயற்சிக்கலாம். தொழிலாளர்கள் சௌகரியப்படவே பிறந்தவர்களென்று நினைத்துக் கொள்கிறார்கள். இதன் பயனாக-உற்பத்தி அதிகப்படுவதற்குப் பதிலாகக் குறையத் தான் செய்கிறது.

'துரோன் எய்டு அசோசியேஷன்' பொருளாதாரப் பகுதியைச் சேர்ந்த ஹொசுமி என்பவர் கூறுவதாவது:—"இப்போது நம் நாட்டிலேயே நமக்கு விரோதிகள் ஏராளமாக இருக்கின்றார்கள். இவர்கள் உணவு உற்பத்தியைப் பற்றி பிரிட்டிஷாரைப் போலவும் அமெரிக்கரைப் போலவும் நினைக்கின்றார்கள். ஜப்பானின் உள்நாட்டு வாழ்க்கையைப் புதுப்பிக்க வேண்டும்" மேலும், அவர் கூறியதாவது:—

"எண்ணெய் கிணறுகளையும், அதைச் சுத்தம் செய்யும் தொழிற்சாலைகளையும் ஜப்பானிலிருந்து அனுப்பப்பட்ட நிபுணர்கள் தான் மீண்டும் கட்டி முடிக்கிறார்கள் என்று நீங்கள் ஒவ்வொருவரும் நினைக்கின்றீர்கள். அது தவறு. இந்த வேலை முழுதும் ராணுவத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இதுபற்றிய அடிப்படையான தொழில் ஞானம் கிடையாது. தொழில ஞானம் உடையவர்களுடைய நிழல்கூட அவர்கள் பக்கம் பட்டது கிடையாது. இது போலே தான் மூழ்கிப்போன கப்பல்களை வெளியே எடுப்பதும். இராணுவத்தார் மட்டுந் தான் இந்த வேலையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். தப்பித் தவறி இரண்டொரு தொழில் நிபுணர்கள் அவ்வப்போது அங்கே வரவும் கூடும். அப்போதெல்லாம் அவர்கள் உபயோகிக்கும் கயிறுகள் குட்டையாயிருக்கும் அல்லது 'கிரேன்கள்' தகுந்த பலம் இல்லாதவைகளாக யிருக்கும். ஆகவே, மூழ்கிப்போன கப்பல்கள் கடலுக்குள்ளாகவே யிருக்கும். இவற்றிலிருந்து அதிக உற்பத்திப் பிரச்சினை உண்மையிலேயே எங்கே இருக்கிறதென்று தெளிவாகத் தெறியவரும்.

**பேச்சின் போக்கு: தோல்விக்கு அறிகுறி.** இவர்கள் எல்லோரிலும் ஒளிக்காமல் வெளிப்படையாகப் பேசியவர் மிஸ்டர் ஹோசுமி தான். அவர் கூறியதாவது:—"எண்ணத்திலும் பேச்சிலும் தோல்வி மனப்பான்மையுள்ளவர்கள் இன்னும் சிலர் ஜப்பானில் இருக்கிறார்கள். இது தெளிவாகத் தெரிகிறது. இந்தப் போராட்டத்தில் பெரும் இராணுவக் கஷ்டங்களையும் பொருளாதாரக் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டி நேருமென்று, தோல்வி மனப்பான்மை கொண்டவர்கள் கருதுகிறார்கள். ஆகவே, எந்தச் சமயத்தில் என்னென்ன நிபந்தனைகளின் பேரில் எதிரிகளோடு ஒப்பந்தம் செய்து கொள்ளலாமென்று சதா ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். சமரசம் செய்து கொள்ள வேண்டு மென்னும் தோல்வி மனப்பான்மையைக் குறிக்கும் பேச்சைக் கண்டிப்பாக ஒடுக்க வேண்டியது தான். இப்படிப் பேசுகிறவர்கள் அரசாங்கத் தலைவராகவே யிருந்தால், ஏகாதிபத்தியப் பிரகடனமே நமது தெய்வீக நிலை என்று உறுதி கொண்டிருக்கும் நாம், இந்தத் தலைவர்களோடு கொஞ்சமும் இரக்கங் கொள்ளாமல் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை." இந்தக் கருத்துக்கள் தெளிவாயிருக்கின்றன. இப்படிப்பட்ட கருத்துக்களை மட்டும் ஆதாரமாகக்கொண்டு, ஜப்பான் உளநாட்டுக் கொள்கையில் ஏதோ பெரும் பிளவு ஏற்பட்டு விட்டதாக நாம் கருதிவிடக் கூடாது. ஆனால், ஜப்பானியப் பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகள் ஜப்பானின் உள் நாட்டு நிலைமையைக் குறித்து அநேக விஷயங்களைத் தெரிவிக்கின்றன.

இந்த விவாதங்கள் "பரிபூரண யுத்தப் பயிற்சி சங்க". ஆதரவில் தான் நடைபெற்றன. பழைய அரசியல் கட்சிகளின் எச்சம், புத்திசாலித்தனமாக மறைந்திருந்து வேலை செய்வதற்கு, இந்தச் சங்கம் ஒரு மறைவிடமாகவும் இருக்கக்கூடும். ஜப்பான் உள்நாட்டு நிலைமையை அறிவிக்கும் அறிகுறிகளாக இவை உதவும்.

**துனிஸியப்போர்: பர்லின் பீத்துகிறது:** மே மாதம் 13உ ஹிட்லர் தம் தலைமைக் காரியாலயத்திலிருந்து ஒரு விசேஷ அறிக்கையை வெளியிட்டார். லார்டு ஹா ஹா ஞாயிற்றுக் கிழமை தோறும் செய்யும் பிரசங்கம் ஒன்றை மேமீ 16உ செய்தார். அதில், இந்த விசேஷ அறிக்கையைக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது. "அந்த அறிக்கையில் துனீஸியப் போராட்ட முடிவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அச்சுப் படைகள் மகா வீரத்தோடும் பிடிவாதத்தோடும் ஏன் போராடிக் காலம் கடத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை ஒருக்கால் அனேகர் உணர்ந்து கொள்ளாமல் இருக்கக்கூடும். இது ஒரு முக்கியமான முறை. ஐரோப்பியப் பாதுகாப்புக்களை எதிரிகள் தகர்க்க முடியாது அரண்கள் செய்துகொள்ள அவகாசம் வேண்டியிருந்தது. இந்த அரண்கள், வடக்கிலும், மேர்க்கிலும், தெற்கிலுங்கூட செய்ய வேண்டியிருந்தது. வட ஆப்ரிக்கப் போராட்டத்தினால் நமக்குப் போதுமான அவகாசம் கிடைத்தது." ஜெர்மன் வாய்வீச்சுப் பிரசாரத்திற்கு இது ஒரு சாம்பிள். அதாவது சென்ற நவம்பர் மாதத்தில் கண்ணை மூடிக்கொண்டு ஏராளமான படைகளை வட துனீஸியாவிற் கொண்டுபோய்க் குவிக்க முயற்சித்தது, காலம் கடத்துவதற்காகத் தானும்! முக்கியமான 6 மாத காலம் தங்களுக்குக் கிடைத்துவிட்டதாகவும், அக்காலத்தில் மத்திய தரைக்கடல் மதில் சுவற்றைத் தாம் கட்டி முடித்துவிட்டதாகவும் அவர்கள் கொட்டி அளக்கிறார்கள். மழை காலத்தில், ரஷ்யாவை முழுமூச்சாக ஜெர்மனி தாக்கிக் கொண்டிருக்கிற காலத்தில் ஆங்கிலோ அமெரிக்கப் படைகள் தென் ஐரோப்பாமீது படையெடுத்திருக்குமானால், மகா ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதை வற்புறுத்தி ஜெர்மன் ரேடியோவும், பத்திரிகைகளும் கூறுகின்றன. உண்மையிலேயே தாக்கியிருந்தால் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருப்பது நிச்சயந் தான். உதாரணமாக, ரோமல்,தான் ஆப்பிரிக்கா படையில் மிஞ்சியிருந்தவர்களை பெங்காசியிலிருந்து அப்புறப்படுத்தியிருப்பாரேயானால், வட ஆப்ரிக்காவிலிருந்து ஐரோப்பாவைத் தாக்குவதற்கு நேசநாடுகள் நெடுநாள் ஆயத்தம் செய்ய வேண்டி யிருந்திருக்கும். பிரஞ்சு வட ஆப்ரிக்காவில் விஷி ஆட்சி 2 வருஷம் நடைபெற்றதினாலே அந்நாடு பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அங்கேயும் அமைதி ஏற்பட கொஞ்சகாலம் பிடிக்கும். இன்னொரு விஷயத்தையும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏராளமான நேச நாட்டுப் படைகள் சென்ற நவம்பர் மாதந் தான் வந்திறங்கின. தற்கால இயந்திர யுத்தத்தில் அவர்களை நன்ருகப் பழக்கிய பிறகுதான் போர்முனைக்கு அனுப்பக்கூடும். ஆகவே, தாம் போராடியதாக ஜெர்மனியர்கள் கூறுவது சுத்த முட்டாள்தனம். ஜெர்மனியர்களுடைய மனோபலத்தை குறிப்பாக இத்தாலியருடைய மனோபலத்தை இந்த நெருக்கடியான பருவத்தில் உறுதிபடுத்தும் நோக்கத்தோடு தான், துனீஸியப் போராட்டத்தை ஹிட்லர் வளர்த்திக் கொண்டிருந்தார். இதனால் அவருக்கு ஏற்பட்ட நஷ்டம் மகத்தானது. ஆப்ரிக்காவில் அச்சுநாடுகளின் ஆதிக்கம் அழிவதற்கு உண்மையிலேயே அவர் அதை ஒரு முதல் கட்டமாக ஆக்கினார். அதுவே மேற்கு ஐரோப்பாவின் முதற் போராட்டமாகு

(9-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ௵ மேமீ 28உ. [இதழ் 21

## யுத்தமுடிவு நெருங்குகிறது

மே மாதம் 24-ந் தேதி திங்கட்கிழமை பீல்டு மார்ஷல் ஸ்மட்ஸ் தன் பிறந்த நாள் விழாவை ஜோகனஸ்பர்க் பட்டணத்தில் கொண்டாடினர். அப்போது அவர் செய்த பிரசங்கத்தில், திடீரென்றும், தடுக்க முடியாத ஒரு முறையிலும் யுத்தம் முடிவடையும் என்று குறிப்பிட்டார். அந்த முடிவு வெகு விரைவில் வந்து கொண்டிருக்கிறதென்றும் கூறினர். அதே நாளில் சேக்கோஸ்லோவேகியா தலைவர் டாக்டர் பெனேஷ் சிக்காகோ சர்வகலாசாலையில் செய்த ஓர் பிரசங்கத்தில் இதுதான் யுத்தத்தின் கடைசிப் பகுதி என்று குறிப்பிட்டு முக்கியமான சம்பவங்கள் விரைவில், நடைபெறப் போகின்றன என்று கூறினர். அன்றியும், கிழக்குப் போர் முனையில் கடுமையான போராட்டங்கள் நிகழப் போகின்றன வென்றும், " கிழக்கு அரண் " என்று சொல்லப்படுகிற இடத்திற்கு ஜெர்மன் படைகள் எல்லாம் கொண்டு போகப்படுமென்றும் கூறுகிருர். துனீசியாவில் அச்சு நாடுகள் தோற்று நமக்குப் பெருமிதமான வெற்றி கிடைத்த பிறகு, யுத்தம் விரைவில் முடியுமென்று எதிர்பார்ப்பதற்கு இடமுண்டு. ஆனல், அச்சு மதில்களை நாம் துளைத்துச் செல்லவேண்டும். கிழக்கு மதிலையும், அட்லாண்டிக் மதிலையும் பர்லின் பிரசாரத்தில் குறிப்பிடப்படும் மத்தியதரைக் கடல் மதிலையும் துளைத்தாக வேண்டும். மிஸ்டர் சர்ச்சிலும், தலைவர் ரூஸ்வெல்டும் வாஷிங்டனில் மிகச் சிறந்த முறையில் கலந்து பேசிக் கொண்டிருக்கிருர்கள். அங்கே நேச நாடுகளின் பெரும் படைத் தலைவர்களும் கூடியிருக்கிருர்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து எப்படிப் போரை நடத்துவது என்பது பற்றி நுட்பமாக ஆராய்ச்சி செய்து முடிவு கட்டுவார்கள். இந்த முடிவின் பயனுக, ஐரோப்பாவில் உள்ள இந்த மதில்கள் எல்லாம் தவிடுபொடியாகி விடும். ஜப்பான், தீவாகயிருப்பதனுல் தனக்கு ஆபத்தில்லை யென்று நினைக்கிறது. பிரிட்டிஷ் படைகளும், அமெரிக்கப் படைகளும், மேற்கே இருந்தும், தெற்கே யிருந்தும் ஏக காலத்தில் திடீரென்று தாக்கினுல், அச்சு நாடுகளுக்கு இப்போதுள்ள 218 டிவிஷன படைகளில் பல சிதைந்து போகும். அப்போது கூடிய விரைவில் புதிதாக ரஷ்யர்கள் மகா கடுமையாக இதைத் தாக்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம். துனீசியாவில் இத்தனை நாட்கள், வரை தாம் இழுத்துப் பறித்துக் கொண்டிருப்பதைப் பற்றி கொப்பல்சும் அவருடைய இலாக்காவும் மத்யதரைக் கடலின் மதிலைக் கட்டி முடிக்கும் பொருட்டே காலங் கடத்தியதாகச் சொல்லிக் கொள்கிருர்கள். இந்த மத்யதரைக் கடல் மதில் தான், அச்சு நாட்டாரின் கடைசி மதிலாகவும் இருக்கலாம்.

சென்ற மாதம், " நியூயார்க் ஹெரால்டு டிரிபியூன் " என்னும் பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. அதை யெழுதியவர் மேஜர் ஜ்யார்ஜ் பீல்டிங் எலியட் என்பவர். இவர் ஒரு சிறந்த அமெரிக்க இராணுவ விமர்சகர். முற்கூறிய மதில்கள், தோல்வி ஏற்படாமல் தடுப்பதற்கோ, வெற்றி பெறுவதற்கு உதவி செய்வதற்கோ மிகுந்த உதவியா யிருக்குமா என்பது பற்றி, அதில் ஆராய்ச்சி செய்கிருர். அன்னியர்கள் தம் நாட்டைத் தாக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு மதில் சுவர்கள் கட்டும் நாட்டார் தோற்று விட்டார்கள் என்று தான் அர்த்தம். அவர்களுடைய பலவீனத்தைத் தான் அது குறிக்கிறது. அவர்களுக்கு, நம்பிக்கை யெல்லாம் கற்களிலும், சுண்ணும்பிலும் தான் இருக்கிறதே ஒழிய, நிறைந்த உள்ளத்தோடு உள்ள பலத்த படைகள் மீது இல்லை என்றும் கூறுகிருர். அன்றியும் மதில்கள் கட்டுவது என்பது ஒரு தவருன ராணுவ முறை என்றும், அவற்ருல் எவ்வளவு நாசங்கள் நேர்ந்திருக்கின்றன வென்றும் சரித்திர ஆதாரங்களைக் கொண்டு கூறுகிருர். உதாரணமாக சீனப் பெரு மதில் ஏராளமான உயிர்களையும், பொருள்களையும் கொண்டு கட்டப்பட்டது. என்ருலும், வடக்கே யிருந்து வந்த கொடியவர்களின் தாக்குதல்களைத் தாங்க, அதனுல் முடியவில்லை. ஐரோப்பாவின் பல பாகங்களிலும் கட்டிய எல்லைப்புற மதில்கள் ரோம சாம்ராஜ்யம் பலவீனம் அடைந்த காலத்தில் பயன்படவில்லை. சமீப காலத்திய மஜினே மதில் ஏராளமான பொருட் செலவில், கட்டப் பட்ட தாயினும் பிரான்சை இராணுவ முறையில் உயிரற்ற தாக்கி விட்டது. இங்கே ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. மதிலைக் காவல் புரியும் படைகள் பலமானவையாய் இருக்கும் வரையில் தான், அந்த மதில்கள் பயன்படும். எதிரிப் படைகள் மதிலைத் துளைக்கும் படியாக விட்டுக் கொண்டிருக்கிற அளவிற்குப் படைகள் பலவீனமாயிருந்தால் அந்த மதிலால் என்ன பலன் ?

நிற்க, இதில் மற்றொரு கஷ்டம் இருக்கிறது: மதிலைக் கட்டி விட்டதனுல் அதை ஒட்டியே போர் முனையை அமைத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் அதில் உள்ளவர்களுக்கு இருக்கிறது. ஆனுல் அதற்கு வெளியே இருப்பவர்களுக்கோ, தம் யுக்தம் போல் எந்த இடத்தில் வேண்டுமானுலும் எந்தச் சமயத்தில் வேண்டுமானுலும் தாக்கலாம். நிற்க, மதில் ஒரு இடத்தில் துளைக்கப்பட்டால் மதில்களுக்குள் உள்ள எல்லாப் படைகளையும் அந்தத் துளை வாயில் கொண்டு வந்து வைத்துப் போராட வேண்டும் என்பது முடியாத காரியம். அப்படிச்செய்தால் மதில்களின் மற்ற புறங்களில் காவல் பலவீனம் பட்டுவிடும். ஆகவே பக்க பலம் வந்த பிறகு தான், எதிர்த்துத் தாக்க இயலும். அரண் மதில்கள் தகுந்த பாதுகாப்புகள் என்று எண்ணுவது தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதாகும். தம்மால் இயன்றவளவு யுத்த முயற்சியில் ஈடுபட வேண்டுமென்ற திட்டத்தை மீறுவதாகும். மத்யதரைக் கடல் கரையோரமாக ஒரு பெரிய மதிலை எழுப்பி இருப்பதாக ஹிட்லர் கூறுகிருர். இது பற்றி மேஜர் எலியட் கூறுவதாவது:—போர் முனையில் உள்ள ஜெர்மன்படைகளின் போர்த் திறமையையும் இருப்புப் படைகளின் திறமையையும் நேச நாட்டுப் படைகள் எந்த அளவுக்கு இந்த மதில்களைத் துளைக்கக் கூடும் என்பதையும் அவற்றை அச்சு நாட்டுப் படைகள் எந்த அளவில் தவிர்க்கக் கூடு மென்பதையும் பொருத்துத் தான் ஐரோப்பாவின் பாதுகாப்பு அமைந்திருக்கிறது.... எந்த நேரத்தில், எந்த இடத்தில், எந்த முறையில் நாம் தாக்க வேண்டுமென்று நாம் தீர்மானிக்கலாம். ஆனுல் ஜெர்மானியர்கள் அப்படிச் செய்ய முடியாது; காத்திருக்க வேண்டும். கடைசியாக நம்முடைய முறையைத் தான் அவர்களும் பின்பற்ற வேண்டும். அவர்களுடைய வெற்றியும் தோல்வியும் எதைப் பொருத்து இருக்கிறதென்ருல், எல்லைப் புற மதில்களைப் பொருத்தல்ல. ஆனுல், போராடும் படைகளின் அளவையும், இருப்புப் படையின் அளவையும், தீறத்தையும், போக்குவரவு சாதனங்களையும் பொருத்துத் தான் இருக்கிறது. தங்கள் பலமான மதில்களைப் பற்றி அவர்கள் குறிப்பிடும்



போது நம்மைப் பயமுறுத்தப் பார்க்கிருர்கள். இது ஒரு ஏமாற்றம் என்று உலக சரித்திரம் கூறுகிறது. இந்த மதிலின் பெயரைக் கொண்டு தம் நாட்டவர்களுக்கும், நண்பர்களுக்கும் தைரியம் ஊட்ட முயற்சிக்கிருர்கள். ஒரேயடியில் இந்த மதில்கள் தவிடு பொடி யாகிவிடும் என்பது உண்மை.

மேலும், அவர் கூறுவதாவது:—மதில்களைக் கொண்டு பாது காக்கும் முறை கவைக் குதவாதது. எப்படித் தாக்குவது என்று நிர்ணயிக்க மதிலுக்குள் இருப்பவர்களால் முடியாது. கப்பல்கள் போக்கு வரவுகள், சப்ளைகள், குறிப்பிட்ட இடங்களில் போர் விமானங்களை வைத்துக் கொண்டிருத்தல், நாசமாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள படைகளுக்கு உணவளித்தல் முதலிய பிரச்னைகள் அவர்களுக்கு மிகவும் சிக்கலானவை. பலமான எதிர்ப்பிருந்தால் இந்த மதில்களால் எந்தவித பயனும் இல்லையென்பது தெளிவாகிறது. யுத்தத்தில் வெற்றி பெறவேண்டுமானுல், ஒரு பெரிய மதிலைக் கட்டிக்கொண்டு அதற்குள் உட்கார்ந்து கொண்டு தாம் பந்தோபஸ்தாக இருப்பதாக மனப்பால் குடித்துக் கொண்டிருப்பதால் பலன் இல்லை. தம் பலத்தைக் கொண்டும், யுத்தத் தந்திர முறையைப் கொண்டுந் தான் வெற்றிபெற வேண்டும். வட ஆப்ரிக்காவில் வெற்றி கிடைத்ததற்கு அவை தான் காரணம். மத்யதரைக் கடல் கரை மதிலும் மற்ற மதில்களும் இதைத் தான் உண்மையாக்குகின்றன. மதில்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பீல்டு மார்ஷல் ஸ்மட்ஸ் குறிப்பிட்டபடி, கடைசியில் நேசநாடுகளுக்குத் தான் வெற்றி கிடைக்கும் என்பது பற்றிக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

## " ஜெர்மனியை ஜெயித்தால் போதாது ஜப்பானையும் ஜெயிக்க வேண்டும் "

### சர்ச்சில் பிரசங்கம்

சமீபத்தில் அமெரிக்க அரசாங்க சபையில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் வின்ட்சன் சர்ச்சில் போர் நிலைமையைப் பற்றி ஓர் பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கம் வருமாறு :—

"சென்ற முறை, நான் இந்தச் சபையோரிடம் பேசிய போது ஜப்பானியருடைய துரோகத்தினுல் இந்தச் சபை கொந்தளித்துக் கொண்டிருந்தது. இப்போது அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நேச நாடுகள் அரும்பாடுபட்டுப் பல தொல்லைகளுக் காளாகி, அரும் வீரச் செயல்களைச் செய்து தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் எதிரிகளை வென்றிருக்கின்றன.



**1940**-ம் ௵ மே மாதம் முதல் **1942**-ம் ௵ டிசம்பர் மாதம் வரை பிரிட்டன் தனித்துப் போராடியது. அப்போது பிரிட்டிஷ் சரித்திரத்திலேயே காணப்படாத தோல்வியை சிங்கப்பூரில் அடைந்தோம். பிறகு அமெரிக்கப் படைகளும், நம் படைகளோடு சேர்ந்தன. இதன் பயனுக உலக சமாதானம் ஏற்படுவது மட்டு மன்றி, அதை நிலை நாட்டவும் முடியும். சிங்கப்பூரை நாம் மீண்டும் பிடிப்பது மட்டு மன்றி அந்தப் பழியையும் நாம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஜப்பானியர்களோடு போராட வேண்டியதில் பிரிட்டிஷாருக்கு அமெரிக்கர்களைப் போலவே அக்கரை மிகவும் உண்டு. பிரிட்டனிலும், கிழக்கு எல்லைப் புறத்திலு முள்ள மூவகைப் படைகளையும் பயன்படுத்தி ஜப்பானியர்களை நசுக்கினுல் தான் நெடுநாட்களாகத் தொல்லைகளுக்குள்ளாகி கஷ்டப்பட்டு வரும் சீனுவுக்கு உதவி செய்தவர்களாவோம். இது நமது முக்கியமான நோக்கங்களில் ஒன்று. இந்திய சேனுதிபதி பீல்டு மார்ஷல் வேவலுங்கூட இவைப்பற்றித் தெளிவாக விவாதிக்கும் பொருட்டு வந்திருக்கிருர். இப்போது நாம் செய்ய வேண்டிய தெல்லாம், " சூரியோதயத்தை நோக்கி (ஜப்பானை)க் கிளம்புங்கள், பர்மா ரோட்டைத் திறவுங்கள் " என்று இந்தியப் படைகளுக்கு கட்டளைகள் பிறப்பிக்க வேண்டும். சென்ற வருஷத்தில் அமெரிக்க பிரஸிடெண்டும், பிரிட்டிஷ் முதன் மந்திரியும், போர் நிபுணர்களும் கூடி ஆலோசித்த பிறகு ஜப்பானை மட்டும் ஜெயித்தால் ஜெர்மனியையும் ஜெயித்ததாகா தென்றும், ஆனுல், ஜெர்மனியை ஜெயித்தால் ஜப்பானையும் ஜெயித்ததாகு மென்றும் சொல்லப்பட்டது. சென்ற ஒரு வருஷத்திற்கு முன் இருந்த நிலைமை மாறி அமெரிக்க கப்பற் படைகள் பஸிபிக் கடலில் வெகுவாகக் காவல் புரிகின்றன.

### ஜெர்மனி மீது விமானப் போர்

இப்போது பிரிட்டனிலிருந்து விமானப் படைகள் போய் இரவும் பகலும் ஜெர்மனியைத் தாக்குகின்றன. விமான பலத்தில் தமக்கு ஒப்புயர்வானவர்கள் யாரு மில்லை யென்று ஜெர்மானியர்கள் மனப்பால் குடித்து வந்த காலம் மாறிவிட்டது. விமானங்களுக்குச் சேத மேற்பட்டாலும் அவற்றை நாம் செப்பனிடுகிறது போல, அவ்வளவு விரைவாக ஜெர்மானியர்களும், ஜப்பானியர்களும் செய்ய முடியாது. எதிரி யுத்த முயற்சிகளை நம் விமானப் படைகள் வெகுவாக நாசம் செய்கின்றன. ரூர் பிரதேசத்தை அழித்தது முக்கியமான தோர் சம்பவம். சமீபத்தில் இரண்டு பெரிய ஜெர்மன் அரண்களை நம் விமானப் படைகள் அழித்து நாசம் செய்தன. இந்த அணைக்கட்டிலிருந்து கிளம்பிய பல ஆறுகள் போக்கு வரவு சாதனங்களாகப் பெரிதும் பயன்பட்டன. அன்றியும், ஜெர்மன் தொழிற் சாலைகளுக்கு வேண்டிய மின்சார உற்பத்தி ஸ்தானங்களாகவும் இவை இருந்தன.

ஜெர்மனியர்கள் தன் நாடுகளைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுப் பல போர் முனைகளிலும் விரவிக் கிடக்கும் தம் விமானப் படைகளையும் விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் ஜெர்மனிக்குத் திரும்பிக் கொண்டு வரும்படி ஏற்பட்டிருக்கிறது. விமான யுத்தத்தின் பலனுக வெற்றி நெருங்கிக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் நேசநாட்டு விமானப் படைகள் ஜப்பானைத் தாக்க வேண்டுமென்று முடிவு கட்டிக்கொண்டிருக்கிறேம். அமெரிக்க விமானிகளை ஜப்பானியர்கள் மிருகத் தனமாகக் கொன்ருர்கள் என்ருல், அதுபற்றி ஜப்பானியர்களுடைய மனோபாவம் விளங்குகிறது.

உலக சமாதானம் ஏற்படுமுன்னதாக ஜப்பானியரின் வெடிமருந்து சாலைகளை அடியோடு அழிக்க வேண்டியது நேச நாட்டாரின் பொறுப்பு.

### நேசப் படைகளுக்குப் போக்கு வரவு வசதி

நமது படைகளின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டுபோக வேண்டு மென்பதோ, தளவாடங்களை அதிகரித்துக் கொண்டு போக வேண்டுமென்பதோ முக்கியமானதல்ல. ஆனுல், படைகளையும், தளவாடங்களையும், சப்ளைகளையும், காடு, மலை, பாலைவனம், கடல் முதலிய கடுமையான பாதைகளின் வழியாகக் கொண்டுபோய் சேர்ப்பது தான் முக்கியமானது.

எதிரியை வெகு விரைவாகவும், சந்திக்கக் கூடிய இடங்களில் எல்லாம் போராடி வெல்லவேண்டு மென்னும் எண்ணம், நம் மனதில் வேரூன்றி இருக்கவேண்டும்.

யுத்தத்தின் போக்கு, நமக்குச் சாதகமான முறையில் வெகு விரைவாக மாறிக்கொண்டு வருகிறது. கூடிய விரைவில் தேழர் ஸ்டாலின் ஜெனரலாஸிமோ, ஷியாங் கெய் ஷேக் முதலியவர்களையும் நாம் விரைவில் சந்திப்போம். எப்படி, எங்கே, எப்போது சந்திப்போம் என்று திட்டமாக நாம் சொல்லமுடியாது. இதற்கிடையில் போரில் ஈடுபட்டுள்ள நாடுகளின் அதிகாரிகளோடு நாம் தொடர்பு கொண்டிருப்போம்.

# துனீசிய வெற்றி

## மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் ரேடியோ பிரசங்கம்



அகில இந்திய ரேடியோவின் சென்னை நிலையத்திலிருந்து மேன்மை தங்கிய சென்னை கவர்னர் மேமீ 21-ந் தேதி பின் வருமாறு ஒரு பிரசங்கம் செய்தார் :—

யுத்த நிலைமையை குறித்து நான் சென்ற முறை ரேடியோவில் பிரசங்கம் செய்தது சுமார் ஒரு வருஷத்திற்கு முன். அதாவது 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதக் கடைசியில். அப்போது யுத்த நிலைமை உற்சாக மூட்டுவதாயில்லை.

பொதுவாக இந்நாட்டிற்கும், குறிப்பாக சென்னை மாகாணத்திற்கும் கவலைக்கிடமான சம்பவங்கள் பல அக்காலத்தில் நிகழ்ந்தன. மலேயாவையும், பர்மாவையும் இழந்ததை யடுத்து விசாகப்பட்டினம், காக்கிநடா ஆகிய துறைமுகப்பட்டினங்கள் எதிரி விமானங்களால் தாக்கப்பட்டன. சென்னையில் அபாய அறிவிப்புச் சங்கு ஊதியது. சோழ மண்டலக் கரையில் எதிரிகள் உடனே படை எடுத்து வந்திறங்குவார்கள் என்று எண்ணுவதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தன.

இந்த யுத்தத்தில், அது பெரிய சோதனை காலம் என்று கூறலாம். ஏனென்றால், நம்மையும் நேச நாட்டவர்களையும் எதிரிகள் கடுமையாக நெருக்கிக் கொண்டிருந்தார்கள். பசிபிக் மகா சமுத்திரத்தில் ஜப்பானியர் கை வலுத்து வந்தது. அவர்கள் பசிபிக் மகா சமுத்திரத்தின் எல்லாப் பாகங்களிலும் ஆதிக்கம் பெற்று ஆஸ்திரேலியா மீது கூட படை எடுப்பார்களோ என்று பயப்பட வேண்டியதாயிருந்தது. இந்த ஆபத்தை நீக்க, அமெரிக்க ஆஸ்திரேலிய டச்சுப் படைகள் ஒன்று சேர்ந்து மகா யுத்தம் செய்து வந்தன.

ஐரோப்பாவின் மேற்குப் போர் முனையில், அவ்வப்போது விமானங்களில் போய் ஜெர்மனியைத் தாக்குவதைத் தவிர, தானாக எதிரிகளைத் தாக்கக் கூடிய நிலைமையில் பிரிட்டன் இல்லை. கிழக்கு ஐரோப்பியப் போர் முனையில் ஜெர்மானியர்கள் மகா கடுமையாகப் போராடி நமது வீர நண்பர்களான ரஷ்யர்களை அவர்களுடைய நாட்டிற்குள்ளாக வெகு தூரத்திற்கு விரட்டினர். வட ஆப்பிரிக்காவின் நிலைமையும் நிச்சயமாக கூறுவதற்கில்லாதிருந்தது. பிரிட்டிஷ் அமெரிக்கக் கடற்படைகள் உலகத்தின் பல பாகங்களிலும், எத்தனையோ வகை வேலைகளைச் செய்ய வேண்டி யிருந்தது. இக்காரணத்தால், அவை அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களோடு தம்மாலியன்ற அளவு போராடின போதிலும், நிலைமை நாம் எதிர் பார்த்த அளவுக்குத் திருப்திகரமாக இல்லை.

ஒரு வருஷத்திற்கு முன்னிருந்த அந்த கவலைக்கிடமான காலத்திற்குப் பிறகு, பொதுவாக உலக நிலைமையில் எவ்வளவு மாறுதல் ஏற்பட்டு விட்டது! பசிபிக் மகா சமுத்திரத்தில் அடுத்தடுத்து ஜப்பானிய படைக் கப்பல்களும் சாமான் கப்பல்களும் அழிக்கப்பட்டன. இனி ஜப்பானியர் எல்லா விஷயத்திலும் தம் மனம் போனபடி நடந்துக் கொள்வது என்பது முடியாத காரியம். சீனாவில் சீனர்கள் புது பலத்தோடு ஜப்பானியர்களை தாக்குகிறார்கள். ஜெர்மனியிலும் ஜெர்மனி வசப்பட்ட நாடுகளிலும் பிரிட்டிஷ் அமெரிக்க விமானங்கள் ஒவ்வொரு இரவும் வட்ட மிட்டு அவர்களுடைய யுத்த உற்பத்திகளையும், போக்கு வரவுகளையும், தும்சம் செய்து கொண்டிருக்கின்றன. சில நாட்களுக்கு முன்பு தான். ஜெர்மனியிலுள்ள மிகப் பெரிதும் முக்கியமானதுமான இரண்டு அணைகள் தகர்த் தெறியப்பட்டன. இங்கிருந்து தான் ஜெர்மன் தொழிற் சாலைகளுக்கு உயிர் நாடி போன்ற மின்சார சக்தி உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. ரஷ்யாவில் காகஸஸ் மலை அடிவாரத்திலிருந்து படிப்படியாக ஜெர்மனியர் விரட்டப் பட்டனர். ஸ்டாலின்கிராட், ராஸ்தாப் முதலிய முக்கியமான நகரங்கள் மீண்டும் ரஷ்யர் வசமாகி விட்டன.

நம் வெற்றிகள் எல்லாவற்றிலும் மேற்பட்டது, வட ஆப்பிரிக்க வெற்றிதான். இங்கே இத்தனை காலமாக யுத்தத்தில் நாம் தற்காப்பையே பிரதானமாகக் கருதினோம். திடீரென்று சிரினெய்க்காவை நாம் தாக்கிய பின்னர், நாம் அங்கிருந்து விரட்டப்பட்டோம். அலெக்சாந்திரியாவிற்கு 50 மைல் வரையிலும் நாம் பின் வாங்க நேர்ந்தது. கடைசியாக நாம் முன்னேற ஆரம்பித்து, லிபியா, திரிபோலி மூலமாக டியூனிஷியாவிற்குள் போய் அமெரிக்கப் பிரஞ்சு நேசப் படைகளோடு சேர்ந்தோம். ஜெர்மன் தளகர்தர்களான, ரோமல் பான் ஆர்னிம் இவர்களுடைய படைகளை தும்சம் செய்து விட்டோம். 2 லட்சம் யுத்தக் கைதிகளைப் பிடித்தோம். ஏராளமான தடவாளங்களைக் கைப் பற்றினோம்.

எகிப்து, லிபியா, துனீசியா ஆகிய நாடுகளில் நடந்த போரில் அச்சு நாடுகள் இழந்தது 6 லட்சம் பேர்களுக்கு அதிகமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அன்றியும் ஏராளமான தளவாடங்கள் சேதமாயின. தளகர்த்தர்களில் மிகச் சிறந்த சிலரையும் அச்சுநாடுகள் இழந்தன. இப்பொழுது நாம் வாஸ்தவமாக இது தான் ஆரம்பத்தின் முடிவு என்று சொல்லலாம். ஆப்பிரிக்காக் கண்டத்தில் கடைசியாக இருந்த நம் எதிரிகள் அத்தனை பேரையும் விரட்டி விட்டோம். இதன் பயனாக மத்தியதரைக் கடலில் நமது கப்பல்கள் தாராளமாக அபாயமில்லாமல் போய் வருவதற்கு உரிய வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. நமது எட்டாவது சேனை அனுபவத்தில் உலகத்திலேயே மிகச் சிறந்ததாகும். அதுவன்றி, நமது முதற் சேனையும் அமெரிக்க பிரஞ்சு படைகளும் யுத்தத்தில் உழன்று தேர்ந்த அனுபவம் அடைந்துள்ளன. நமக்குச் சொந்தமானவையும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டவையும் சேர்ந்து ஏராளமான தடவாளங்கள் இருக்கின்றன. இந்தப் படைகளையும் தளவாடங்களையும் எதிரிக்கு விரோதமாகப் பிற இடங்களில் உபயோகிக்கலாம். அவை எங்கே உபயோகப்படும் என்று எனக்குத் தெரியாது. உங்களுக்கும் தெரியாது. முக்கியமாக ஹிட்லருக்கும், முசலோனிக்கும் கூடத் தெரியாது. எங்கு தாக்கப் போகிறோம் என்பது பற்றி, எதிரிகள் கலவரப்படும்படியான பிரசாரத்தை நடத்தும் நிலைமையில் நாம் இப்போதிருக்கிறோம்.

வட ஆப்பிரிக்கப் போர் முழுவதிலும் இந்தியப் படைகளின் கீர்த்தி பெற்ற தொண்டு பற்றி இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். அவர்கள் போர்புரிந்த ஒவ்வொரு அரங்கத்திலும் அவர்களுடைய மேம்பட்ட போர் திறனை படைத்தலைவர்கள் அனைவரும் புகழ்ந்திருக்கிறார்கள். ஆனால் வட ஆப்பிரிக்காவில் அவர்கள் அடைந்த கீர்த்தி வேறெங்கும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. கடைசியாக பான் ஆர்னிமைப் பிடித்தது, ஒரு இந்தியப்படை என்பதை நினைக்கும் போது, நான் பெருமித மடைகிறேன்.

நாம் ஒரு மகத்தான வெற்றி அடைந்து விட்டோம். இந்த யுத்தத்தில் கடைசியாக வெற்றி யடைவது நிச்சயம். ஆனால், நாம் நமது முயற்சியைத் தளர விடக் கூடாது. நாம் பெரிய காரியத்தைச் சாதித்து விட்டோம் என்ற மயக்கத்தில் அசட்டையா யிருந்து விடக்கூடாது. இல்லாவிட்டால், வெற்றியின் பலன் நமக்குக் கிடைக்காது போய் விடும். நாம் இறுதியில் வெற்றி பெறுவதற்கு இன்னும் எவ்வளவோ பாடுபட்டாக வேண்டும்; போராடியாக வேண்டும்; துன்பப் பட்டாக வேண்டும். நாம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உழைக்கிறோமோ, எவ்வளவுக்கெவ்வளவு நமக்குள்ள வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு விரைவில் வெற்றி கிடைக்கும். தினந்தோறும் வளர்ந்து கொண்டுவரும் நேச நாட்டு பலத்தை எவரும் வெல்ல முடியாது. இது வரையில் ஏற்பட்டிராத பேராபத்தை அறவே அழித்து விடுவோ மென்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.



# நமக்கென்ன ஆச்சு

பெரிய இடத்துப் பெண்ணுக்குக் கல்யாணம் என்றால், நமக்கென்ன ஆசசு, நமம பையனுக்கு என்ன ஆச்சு ?! என்று கேட்டானும் ஒருவன். எதை எடுத்தாலும் இவ்வாறு, 'நமக்கென்ன ?! என்று கேட்பவர்கள் நம் நாட்டிலே அதிகம். ஆகவே, ட்யூனிஷியாவிலே நேசதேசத்தார்க்கு வெற்றி கிடைத்தது என்றதும், இந்நாட்டவர்களில் பலர், 'நமக்கென்ன ஆச்சு ?! என்று கேட்டிருப்பார்கள். ஆகவே அவர்களுடைய கேள்விக்கு பதில் சொல்லிவிட்டால் நன்றாயிருக்காதல்லவா ?

ட்யூனிஷியாவில் ஏற்பட்ட மகத்தான வெற்றியால், இந்தியாவிற்கு எத்தனையோ விதங்களில் நன்மைதான். முதலாவதாக, ட்யூனிஷியாவிலே, ஜெர்மன், இத்தாலியப் படைகளுக்கு சேனாதிபதியாக இருந்த பான் ஆர்னீம் என்பவரைக் கைதியாகப் பிடித்த பெருமை நான்காவது இந்தியப் பட்டாளத்திற்கே கிடைத்தது. இதுகாரணமாக இந்தியப் படைகளின் சக்தியை அச்சுநாட்டார் மட்டுமின்றி உலகோரே நன்கு தெரிந்து கொள்ளமுடிந்தது. பான் ஆர்னீமின் ரிவால்வர், மேற்படி இந்தியப் பட்டாளத்திற்கு, அவர்களடைந்த வெற்றிக்கு ஞாபகச் சின்னமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்தப் பட்டாளத்தில் உள்ளவர்களில் ஒரு சிலரையாவது பார்க்கவேண்டுமென்ற ஆசை சீமையில் உள்ளவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. வட ஆப்பிரிக்க யுத்தம் ஆரம்பமான நாள்தொட்டே, இந்த நான்காவது இந்தியப் படை பல அற்புதமான காரியங்களைச் சாதித்து வந்திருக்கிறது.

இந்திய சைனியத்தின் சரித்திரத்திலேயே, ஒரு காலாட் படை இவ்வளவு நீண்டகாலம் திடமாக நின்று போராடியதில்லை என்னும் புகழ் மாலை ஒரு இந்தியப் படைக்குக் கிடைத்திருக்கிறது. எண்ணற்ற கஷ்டங்களையும் லக்ஷியம் செய்யாது, வீரத்துடன் போராடிய இந்த டிவிஷனின் கதை ஒரு சாம்ராஜ்யத்தின் அழிவு புராணமாகவும் அமையும். ஒரு பெரிய கண்டத்தின் ஒரு கோடியின் விடுதலைப் புராணமாகவும் அமையும்.

வட ஆப்பிரிக்க வெற்றியின் மகிமை சட்டென்று கேட்பவர்களுக்குத் தெரியாது. அங்கிருந்த போர் நிலைமை என்ன ? நேசதேசப் படைகளுக்கிருந்த சௌகரியா சௌகரியங்கள் என்ன ? எதிரிக்கு இருந்த வசதிகள் என்ன ? என்பதெல்லாம் தெரிந்தால், நம்மவர்கள் அடைந்த வெற்றி எவ்வளவு பிரமாதமானது என்பது நன்றாக விளங்கும்.

வட ஆப்பிரிக்காவில் பெரும் பகுதியை இத்தாலி கபளீகரம் செய்து கொண்டு, அது தனக்குச் சொந்தமானதோர் சாம்ராஜ்யம் என்று பறைசாற்றிக்கொண்டிருந்தது. அங்கே வருஷக் கணக்கிலே யுத்தத்திற்கான ஏற்பாடுகளை இத்தாலி செய்து வைத்திருந்தது. யுத்தம் ஆரம்பமாகி ஒரு வருஷம் கழிந்தது. அச்சமயம் திடீரென மார்ஷல் கிரேஸியானி எகிப்து மீது பாய்ந்தார். ஆனால், நமக்கு இப்பொழுது சேனாபதியாக உள்ள பீல்ட் மார்ஷல் வேவல் துரையின் சாமர்த்தியத்தினால், அந்த கிரேஸியானியின் பாச்சா அதிகம் பலியாது, அவர் ஸிடிபரானியிலேயே நிற்கவேண்டி வந்தது. அப்பொழுது தான் இந்திய நான்காவது படை இருபதாயிரம் எதிரிகளைச் சிறைப்படுத்திற்று.

அப்பொழுதிலிருந்தே, இந்தப் படை தொடர்ந்தே வெற்றி மாலை சூடிக்கொண்டு வந்திருக்கிறது. அபிஸீனியா, ஸோமாலிலந்து, லிபியா ஆகிய பிரதேசங்களிலும், பெங்காஸி, த்ரிபோலி ஆகிய இடங்களிலும் மேற்கண்ட இந்தியப் படை பெருமையுடன் எக்காலத்திலும் சொல்லத்தக்க செயல்களைப் புரிந்திருக்கின்றது. கடைசிக் கட்டமான ட்யூனிஷியப் போரில், ஜெர்மானியர்களுக்கு இந்தியப் படை என்ற பெயரைக் கேட்டாலே உதறல் எடுத்துக் கொண்டிருந்ததாம். ஏறமுடியாத செங்குத்தான மலைகளின் உச்சிகளையெல்லாம் தைரியத்தோடு சென்றடைந்து, தங்களது துப்பாக்கி முனைகளில் உள்ள சனியன்களாலும், கத்திகளாலும், கைமுஷ்டியாலும் ஜெர்மானியரைக் கதிகலங்க அடித்திருக்கிறார்கள் நமது வீர தீரர்கள்.

### சப்ளை பொறுப்பு முழுதும் இந்தியர்களுக்கே

இதுமட்டுமல்ல. வட ஆப்பிரிக்க யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருக்கையில், அங்குள்ளவர்களுக்குப் பலவித சாமான்கள் சப்ளை செய்யும் விஷயத்தில், முழுப்பொறுப்பையும் இந்தியா ஏற்றுக்கொண்டது என்று இப்பொழுது சொன்னால் நீங்கள் பிரமிக்கத்தான் செய்வீர்கள். ரயில் வண்டிகள் முதல், சட்டைப் பொத்தான் வரை சகலமான சாமான்களும் பல லக்ஷம் டன் கணக்கிலே நாம் கொடுத்துதவியிருக்கிறோம். ஜலக்குழாய்கள்மட்டும் இங்கிருந்து பல்லாயிரம் மைல் நீளத்தில் கப்பலேறிப் போயிருக்கிறதய்யா! விமானங்களில் உள்ள ஒலி பரப்பும் கருவிகளுக்கு வேண்டிய மின்சார பாட்டரிகள் சீமையிலிருந்து தென்னாப்பிரிக்காவைச் சுற்றிவருவது என்றால் சக்தி குன்றிப்போய் விடும். ஆகவே அந்த பாட்டரிகளைத் தயாரித்துக் கொடுக்கும் வேலையையும் இந்தியா ஏற்றுக்கொண்டது. விலை மதிப்பற்ற டாங்கிகள், விமானங்கள், மோட்டார் லாரிகள் ஆகியவற்றை விரோதியின் கழுகுப் பார்வையிலிருந்து மறைக்க உதவும் வலைகள், சணற் கயிறுகள், வர்ணங்கள் எல்லாம் இந்தியாவிலிருந்தே போயிருக்கின்றன. இத்தகைய பெருமை எல்லாம் வட ஆப்பிரிக்கப் போரில் கிடைத்த வெற்றியால் நமக்கு வந்து சேர்ந்திருக்கின்றன என்று இப்பொழுது சந்தோஷமாகக் கூறிக்கொள்ளலாமல்லவா ?

### வழி திறந்து விட்டது

வட ஆப்பிரிக்காவில் அச்சு நாட்டார் இருந்தவரை, மத்யதரைக் கடல் வழி அடைத்து கிடந்தது என்றே சொல்லலாம். எதிரிகளின் விமானங்களும், கப்பல்களும் நமது போக்குவரத்துக்கு ஏக இடைஞ்சல்களை விளைவித்து வந்தன. ஆகவே தென்னாப்பிரிக்காவைச் சுற்றியே இந்தியாவிற்கு எல்லாக் கப்பல்களும் வரவேண்டியதாகிவிட்டது. அதனால்கூட ஆறாயிரம் மைல்கள் சுற்ற வேண்டியதாகிவிட்டது. அதோடு, அட்லாண்டிக் மகா சமுத்திரம் மகாமோசமான சமுத்திரம். நல்ல நாளிலேயே உபத்திரவம் கொடுக்கும் அது. இந்நாளிலே ஜெர்மானிய நீர் மூழ்கிகளின் தொல்லை வேறே. அதனால், சீமையிலிருந்தும் அமெரிகாவிலிருந்தும் வந்த கப்பல்களில் பல, அதோகதி யடைய வேண்டி வந்தது.

இந்த ஆபத்து நாளுக்கு நாள் அதிகமாகவே, சாமான் கப்பல்களுக்குப் பாதுகாப்பாக பல விமானங்களும், யுத்தக் கப்பல்களும் அவ்வழி செல்லவேண்டி வந்தது. சீமையிலிருந்து இரண்டு வாரங்களில் இந்தியா வருவதெப்படி ? ஏகப்பட்ட கஷ்டநஷ்டங்களைச் சகித்துக்கொண்டு இரண்டு மாதங்களுக்கப்பால் சாமான்கள் வருவதெப்படி ? கிடைக்கிற சாமான்கள் இவ்வாறு தாமதமாகி வருவதால், நமது நாட்டிலே கொள்ளை லாபமடிப்போர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பொது ஜனங்களின் கஷ்டமும் அதிகமாயிற்று. நடுத்தர மனிதர்களும், ஏழைகளும் சில சாமான்களை வாங்குவதென்ற எண்ணத்தையே கைவிடவேண்டி வந்து விட்டது.

இப்பொழுது வட ஆப்பிரிக்காவில் கிடைத்த வெற்றி, இந்தச் சங்கடங்களையெல்லாம் கொஞ்சம் தீர்த்துவைக்கும். வட ஆப்பிரிக்காவைக் கழுவி, பினைல் போட்டு அச்சுப் புழுக்களே இல்லாமல் சுத்தம் செய்து விட்டதோடின்றி, நேசதேசத்தார் இத்தாலியின் கால்விரல்கள்போல் உள்ள சார்டினியா, ஸிஸிலி ஆகிய தீவுகளையும் கச்சை கட்டிக் கொண்டு நொறுக்கித் தள்ளி கொண்டிருக்கிறார்கள். மேற்கண்ட தீவுகளில் உள்ள விமானக் கூடங்கள் பாழாகப் போய்விட்டால், அப்புறம் அச்சு நாட்டாரால் நமது கப்பல்களுக்கு மத்தியதரைக் கடலில் அதிக ஆபத்திராது. அதோடு, இத்தாலிமீது நன்றாகப் பாயவும் சௌகரியம் ஏற்படும்.

மத்யதரைக் கடலில் ஆபத்தில்லை என்னும்போது, மீண்டும் இந்தக் குறுக்கு வழி இந்தியாவின் சௌகரியத்திற்காகவும், ஆஸ்திரேலியாவிற்கும், சீனத்திற்கும், ருஷியாவிற்கும் சீக்கிரமே சாமான்கள் போய்ச் சேரவும் திறந்துவிடப்படு மென்பதில் சந்தேகமா? வட ஆப்பிரிக்க வெற்றியால் கிடைத்துள்ள இந்தப் பலனைவிட பெரிய பலன் என்ன இருக்கிறது

### சென்ற வருஷத்திய நிலைமை

தவிர, சென்ற வருஷம் இருந்த நிலைமையை யோசித்துப் பாருங்கள். எகிப்திலே இருந்தான் கொடிய ஜெர்மன் எதிரி. ருஷ்யாவிலேயும் அவன் பெரிய வெற்றிகளை அடைந்துகொண்டிருந்தான். அங்கு முன்னேறிக் கொண்டிருந்த படைகளோடு, எகிப்து வழியாகச் செல்லும் படைகள் ஒன்றுசேர்ந்து ஈரான், ஈராக் ஆகிய நாடுகளை முழுங்கி, இந்தியாவை அடைந்து, கிழக்கே பர்மாவிலிருந்து பாயக்கூடிய ஜப்பானியப் படைகளோடு கைகோர்த்துக் கொம்மாளம் கொட்டி, உலகத்தையே திணற அடிக்க வைப்பது என்பது தானே ஹிட்லரின் ப்ளான் ?

அந்த ப்ளானிலே வட ஆப்பரிக்க வெற்றி மண்ணைப் போட்டுவிட்டதா இல்லையா ? இந்தியாவிற்கிருந்த ஆபத்தும் பெரிதும் குறைந்துவிட்டதல்லவா. வட ஆப்பிரிக்காவிலிருக்கும் படைகளுக்கும், ஐரோப்பியப் போரில் கலந்துகொள்ளுவோருக்கும் சீமையிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் எளிதிலே இனி உதவி கிடைக்கக்கூடுமாதலால், இந்தியா கொஞ்சம் மூச்சுவிட அவகாசம் பெறும். அதனால் உள் நாட்டில் இருக்கும் நமக்கு அதிகச் சாமான்கள் கிடைக்கலாம். சீனத்திற்கும் அதிகமாக உதவிப் பொருள்களைக் கொடுத்தனுப்பலாம். இது நமக்குக் கிடைத்த நன்மையா இல்லையா ?

### ஹிட்லர் அடைந்த நஷ்டம்

இனி, பொதுவான பலன் என்ன என்பதைப் பார்க்கலாமா ? ஹிட்லர் பெரிய சூதாடி என்பதும், இருமுறை அவர் பெருந்தோல்வி அடைந்து படுநஷ்டப்பட்டுவிட்டார் என்பதும் வெளியாகிவிட்டது. ருஷ்யாவிலே, அவர் பட்ட அடியைப் போலவே வட ஆப்பிரிக்கப் போரில் அவரடைந்த உதையும் மிகக்கடுமையானது. மொத்தத்திலே இந்தப் போரிலே இரண்டேகால் லக்ஷம் ஜெர்மானியர்களையும், நான்கு லக்ஷம் இத்தாலியர்களையும் இழந்திருக்கிறார் அவர். அதோடு, இருபத்தைந்து லக்ஷம் டன் நிறையுள்ள கப்பல்களையும், எட்டாயிரம் விமானங்களையும், எழுபதாயிரம் மோட்டார் லாரிகளையும் தாரைவார்த்திருக்கிறார் அவர்.

அவரது சேனாபதிகளில் பலர் புலிக்குப் பயந்தவங்கள்ளாம் என் மேலே படுங்கடா !! என்று சொன்ன வீரனைப்போல் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆபத்துக்காலத்திலே அடியேன் தலை தப்பினால் போதும் என்ற முறையில் அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். ரோமலும், பான் ஆர்னீமும் பெரிய வீரர்கள்தான். ஆனாலும் நெருக்கடியான சந்தர்ப்பத்திலே ஒருவர் விட்டார் சவாரி, மற்றொருவர் எவர் எப்படிப்போனாலும் போகட்டும் என்று தன் உயிரைக் காத்துக் கொள்ள, சரணடைந்துவிட்டார். ஆங்காங்கே பதினாயிரக் கணக்கில் இத்தாலியர்கள், 'இப்படியும் நடப்பார்களா ஜெர்மன் தலைவர்கள்'! என்று ஆச்சரியத்தோடும், ஏமாற்றத்தோடும் பேசிக்கொண்டு, கைதிகளாகப் பிடிபடுவதற் கென்றே உட்கார்ந்திருந்தார்களாம் ட்யூனிஷியாவிலே. இம்மாதிரி எப்பொழுதாவது எந்த நேசதேச ராணுவத் தலைவராவது நடந்ததுண்டா ? கிடையவே கிடையாது. அச்சுநாட்டு ராணுவத் தலைவர்கள் மேற்கண்டவிதம் நடந்ததிலிருந்து, இத்தாலியிலே உள்ளூற எத்தனையோபேர்கள் குமுறிக்கொண்டிருப்பார்கள் எனபதில் சந்தேகமேயில்லை. தவிர, இத்தாலியிலிருந்து ஜெர்மன் ரகசியப் போலீஸாரையும், ராணுவ ஜனரல்களையும் ஜெர்மனிக்குத் திரும்பும்படி ஹிட்லர் உத்திரவிட்டிருப்பதாக வேறே ஒரு வதந்தி இருக்கிறது. ஆகவே, 'இனி கிடைக்கப் போகும் பூசை பலமாகவே இருக்கும்: அதை நீயே சாப்பிடு ?' என்று இத்தாலியைப் பார்த்துச் சொல்லிவிட்டு, தாம் தற்சமயத்திற்கு, சுகமாக ஜெர்மன் எல்லைக்குள் போயிருந்துவிடலாம் என்பது ஜர்மானியரின் எண்ணம் போலிருக்கிறது.

### வயிறு கலங்குகிறது இத்தாலியர்களுக்கு

ஏற்கெனவே, இத்தாலியத் துறைமுகங்களில் விழும் நேசதேச குண்டுகளின் பேரொலி இத்தாலியர்களின் வயிறுகளைக் கலக்கிக் கொண்டிருக்கும். ஸிஸிலியையும், சார்டீனியாவையும் நேசதேசத்தார் எந்தச் சமயமும் தாக்கக்கூடும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களாம். சென்ற வியாழனன்று மட்டும் இத்தாலிமீது நடந்த விமானப் போரிலே, 113 விமானங்களை அச்சுநாட்டார் இழந்திருக்கிறார்கள். இத்தாலியிலே சரியான பாதுகாப்பும், திறமை மிக்க ஆட்களும் இல்லை என்பது இதனால் தெளிவாகிறது. நேசதேசத்தார் அங்கு போய் இறங்கினால், சட்டென உள் நாட்டுக் கலகம் பொங்கி எழும் என்று சொல்லுகிறார்கள். முஸோலினியின் வாழ்விற்குத் தலை வலிக்கத் தொடங்கியிருக்கிறது. இத்தாலியர் அவரைப்பற்றிப் பெருமையாக எண்ணியிருந்த காலமும், அவரைக் கண்டு நடுங்கிக் கொண்டிருந்த காலமும் மலையேறிவிட்டது. இப்பொழுது மனசிற்குள்ளாகவே, 'சீ ! சீ !' என்றே ஒவ்வொருவரும் இகழ்ந்து கொண்டிருப்பார்கள். 'வருகிற சண்டைக் கெல்லாம் நானிருக்கிறேன்; வாரியல்கட்டைப் பூசைக்கு நீ' என்றால் யாருக்குத்தான் வெறுப்பேற்படாது ? இத்தாலியர்களுக்கு இப்பொழுது அசல் போறாத காலம். இதன் பலனை அவர்கள் அநுபவித்தே தீரவேண்டும். அப்புறம் தான் வரும் ஜெர்மனியின் வீழ்ச்சி.

சென்ற வாரம் நேச நாடுகளில் எல்லாம் ட்யூனிஷிய வெற்றியைக் கொண்டாடினார்களே, அபொழுது சென்னையிலும் பிரமாதமான கொண்டாட்டம் நடந்தது. சென்னை நகரத்திலே அறுபத்து மூவர், தைப்பூசம் ஆகிய உற்சவங்களுக்குக் கூடும் கூட்டத்தைப்போல பத்துமடங்கு கூட்டம் அன்று கூடி, உல்லாசமாகப் பல வேடிக்கைகளைப் பார்த்தனர்.

(9-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளர் பகுதி

# மாஸ்கோ அறிக்கை

## அகில தேசீயப் பொதுவுடைமை

### ஸ்தாபன மறைவும் அதன் முக்கியமும்

இந்த வாரம் தொழிலாளர்களுக்கு மிகவும் சிறந்த வாரம். சென்ற வாரம் போர்த் தொழிலாளர்கள் அதாவது நம் பட்டாளங்கள் துனீசியாவில் அடைந்த வெற்றியைக் கொண்டாடினோம். இந்த வாரம் அதை விட முக்கியமான சம்பவமொன்று நடைபெற்றிருக்கிறது. அதாவது, ரஷ்ய சர்வாதிகாரி, ஒரு புதிய உத்திரவை பிறப்பித்திருக்கிறார். இதன்படி, அந்நிய நாடுகளில் உள்ள பாட்டாளி மக்களைக் கொண்டு ஒரு பெரும் புரட்சியை நடத்தி, சோவியத் கொள்கைகளைப் பரவச் செய்து கொண்டிருந்த 'காமின்டர்ன்' சபையை அதாவது அகில தேசீயப் பொதுவுடமை ஸ்தாபனத்தை அவர் கலைத்து விட்டார். இதற்குக் காரணம், காரண காரியங்களை அவர் அலசிப் பார்த்தது தான். ரஷ்யாவை தளமாகக் கொண்டு உலக முழுதும் புரட்சியை உண்டாக்க வேண்டுமென்பது தான் சோவியத் யூனியன் லட்சியம். இந்த லட்சியத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தான் 'காமின்டர்ன்' தோன்றியது. இந்த முக்கியமான சபையை அவர் கலைத்து விட்டார் என்றால், அடிப்படையான சோவியத் கொள்கையில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று தான் அர்த்தம். இந்த மாறுதலுக்குக் காரணம் என்ன என்று ஆராய்வோம். இந்த யுத்தம் தோன்றுவதற்குப் பல வருஷங்களுக்கு முன்னதாகவே ஒரு பெருங் கஷ்டம் இந்த ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டது. அதாவது தனிப்பட்ட ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தொழிலாளர்களுக்குப் பல பிரச்சினைகள் உண்டு. அவற்றிற்குத் தகுந்த முடிவு காணும் பொருட்டு சர்வதேச ஸ்தாபனக் காரியாலயத்திலிருந்து வியவகாரங்களை நடத்துவதென்பது முடியாத காரியம். தவிர்க்க முடியாத பல தொல்லைகள் அந்தந்த நாடுகளிலும் மத்திய ஸ்தாபனமுள்ள நாட்டிலும் உண்டாகுமென்று தெளிவாகத் தெரிந்தது. ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளர்கள் நிலைமை சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் மற்றும் பல துறைகளிலும் பெரிதும் வேறுபட்டிருந்தது. சென்ற 25 வருஷ அனுபவத்தில் ஒரு விஷயம் தெளிவாகிறது. அகில தேசீய பொதுவுடைமை ஸ்தாபனம் தோன்றிய போது தான், தொழிலாளர் இயக்கத்தை மீண்டும் புதுப்பிக்க வேண்டிய ஆரம்பப் பருவம். இந்த இயக்கத்தின் போக்கினாலும் வளர்ச்சியினாலும், பல தனித்தனி நாடுகளிலும் அநேக சிக்கலான பிரச்சினைகள் ஏற்பட்டு விட்டன. தேசீயத் தொழிலாளர் கட்சிகள் வளருவதற்குக் கூட இடமின்றி, தடை செய்தன.

இந்தச் சமயத்தில் யுத்தம் மூண்டது. இதனால் நாடுகளுக்குள் வேற்றுமைகள் அதிகப்பட்டன. ஜெர்மானியர் வயப்பட்ட நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் தம்மாலான வரை ஹிட்லரின் ஆட்சியைக் கவிழ்க்கப் பாடுபட வேண்டும். அது போலவே நேச நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் தத்தம் அரசாங்கங்களின் யுத்த முயற்சிக்குப் பெரிதும் உதவ வேண்டும். அப்போது தான், ஹிட்லர் ஆதிக்கத்தைத் கவிழ்க்க முடியும். இந்தத் துறைகளிலும் ஒவ்வொரு நாடும் தனித்தனி முறையைக் கையாளும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதாவது, அகில தேசீயப் பொதுவுடமை ஸ்தாபனம் எந்த நோக்கத்தோடு தோன்றியதோ, அந்த நோக்கத்தின் தத்துவம் உலகத் தொழிலாளர் உள்ளத்தில் ஊன்றி விட்டதென்று ஒருவாறு சொல்லலாம். இனி இந்த ஸ்தாபனம் இருப்பதனால், ஏற்படக் கூடிய நன்மைகளை விட, பலமடங்கு தீமைகள் உண்டு. எனவே தான் இந்த ஸ்தாபனத்தைக் கலைத்துவிட வேண்டுமென்று அந்த ஸ்தாபன நிர்வாகக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது. இந்தத் தீர்மானம் தற்போதுள்ள கடுமையான யுத்த நிலைமையில் மிகச் சிறந்த தீர்மானம் என்பது பற்றி திலையளவு சந்தேகமும் உடையாது. ஆதியில் கார்ல் மார்க்ஸ் வகுத்த திட்டத்தையே கடைப் பிடித்து உலகத் தொழிலாளர் இயக்கத்தை நடத்த வேண்டுமென்று கோரியவர் தோழர் 'ட்ராட்ஸ்கி'. தன் கொள்கைக்காக எத்தனை வகைக் கஷ்டங்களானாலும் அனுபவிக்கத் தயாராயிருந்தவர். இவருக்கும் தோழர் ஸ்டாலினுக்கும் அடிப்படையான வேற்றுமையுண்டு. கொள்கையையே விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர் 'ட்ராட்ஸ்கி'; ஆனால் தோழர் 'ஸ்டாலின்' ஒரு கர்ம வீரர். நிலைமைக் கேற்றபடி, கொள்கையின் அடிப்படையான தத்துவத்திற்குப் பாதக மேற்படாதபடி அதை மாற்றி யமைத்துக் கொண்டு செயலாற்றுந் திறமையுடையவர். இதனால்தான் தோழர் லெனின் மறைவிற்குப் பிறகு, தோழர் 'ட்ராட்ஸ்கி' தலைவர் பதவிக்கு வரமுடியாமற் போயிற்று. அப்பதவி தோழர் 'ஸ்டாலினு'க்குக் கிடைத்தது. இவ்விருவருக்கு மிருந்த மன வேற்றுமை காரணமாக, தோழர் 'ட்ராட்ஸ்கி' அமெரிக்காவைச் சேர்ந்த 'மெக்ஸிகோ' நாட்டிற்குப் போய் வசித்துவந்தார். அங்கே கடைசியில் கொல்லப்பட்டார். அகில தேசீயப் பொதுவுடமை ஸ்தாபனத்தை கலைத்துவிட வேண்டுமென்பது தான் அவருடைய ஆசை. அது, அவருடைய மறைவிற்குப் பிறகு தான் நிறைவேறுகிறது.



தோழர் ஸ்டாலின்

## பொதுவுடமைத் தத்துவமும் நாஜிக் கொள்கையும்

ஜெர்மானியர்கள் பிற நாடுகளை அபகரிக்க வேண்டும் என்னும் எண்ணம் நெடு நாட்களாக உடையவர்கள். எனவே, தமக்குக் கையாளாக இத்தாலியின் உறவைத் தேடிக் கொண்டார்கள். தம் எண்ணத்தை நிறை வேற்றிக் கொள்ளுவதற்கு எது வழி என்று பார்த்தார்கள். பொதுவுடமைத் தத்துவத்தை உலகமெங்கும் பரவச் செய்ய, சிறந்த முறையில் ஒரு ஸ்தாபனம் வேலை செய்வதைக் கண்டு அஞ்சினார்கள். மக்கள் அனைவரின் நல்வாழ்வை விட, தம் நாட்டிலுள்ள மக்களின் நல் வாழ்வே மிகவும் முக்கியம் என்று கருதினார்கள். ஆகவே, பொதுவுடமைக் கட்சியை எதிர்க்க வேண்டி வந்தது. இந்தக் கட்சிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டமைந்த சோவியத் யூனியன் அரசாங்கமோ, பெரிதும் பலமுள்ளது. ஆகவே, இதை எதிர்க்க அப்போது ஜெர்மனிக்குத் தைரியமில்லை. இதற்கு ஒரு தந்திரம் ஜெர்மனி செய்தது. தம் எல்லையைப் பெருக்க வேண்டுமென்றும் குடியேற்ற நாடுகளைப் பிடிக்க வேண்டுமென்றும் முனைந்தது. ஐரோப்பாவையே தன் கைக் கீழ் கொண்டாள வேண்டுமென்று ஆசைப்பட்டது. இந்தப் பேராசை காரணமாக, ஐரோப்பாவின் பல நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு அங்குள்ள மூல பலத்தையும் ஆள் பலத்தையுங் கொண்டு சோவியத் யூனியனை எதிர்த்தது. சோவியத் அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கையான அகில தேசீயப் பொதுவுடமைக் கொள்கை, தம் அரசாங்கக் கொள்கையான நாஜிஸத்திற்கு முரண்பட்டதென்ற காரணத்திற்காக, சோவியத் யூனியன் மீது படையெடுப்பதாகச் சொல்லி, ரஷ்யாவைத் தாக்கியது. இது தான் உண்மையான காரணமா என்று கவனிப்போம். இது உண்மையான காரணம் என்றால், பொதுவுடமை ஸ்தாபனத்தை சோவியத் அரசாங்கம் கலைத்து விட்டதனால், அக்காரணம் நீங்கிவிட்டது. நியாயப்படி ஹிட்லர் இனி ரஷ்யா மீது போர் தொடுக்கக் கூடாது. உண்மையிலேயே நியாய புத்தியோடு ஜெர்மனி நடந்து கொள்ளுவதாயிருந்தால், இந்த யுத்தமே மூண்டிருக்காதல்லவா? ஜெர்மனியின் கொள்ளிக் கண்கள் ரஷ்யாவின் மூலப் பொருள்கள் மீது பாய்ந்திருக்கின்றன. குடியேற்ற நாடுகள் பிடிக்க வேண்டுமென்னும் பேராசை அதை பீடித்திருக்கிறது. அதனால் தான், உண்மையிலேயே ரஷ்யா மீது ஹிட்லர் பாய்ந்தார் என்று சொல்லலாம். ஹிட்லர் புகலான காரணத்தைச் சொல்லி உலகத்தை ஏமாற்றப் பார்த்தார். அவருடைய நோக்கத்தில மண்ணைப் போட்டு விட்டார் தோழர் 'ஸ்டாலின்'. 'இருதலைக் கொள்ளியிடை எறும்பு' போல் தவிக்கிறார் ஹிட்லர். அன்று; அன்று. செய்வதின்னதென்று தெரியாமல் திண்டாடுகிறார்.

'ஆடு மேய்ச்சாப் போலிருக்க வேண்டும்; அண்ணனுக்குப் பெண் பார்த்தாப் போலுமிருக்க வேண்டு'மென்பது பழமொழி. இதற்கு ஏற்ற சான்றாக இருக்கிறது தோழர் 'ஸ்டாலின்' செயல். நேச நாடுகளில் மிகவும் முக்கியமானவை, இங்கிலாந்தும் அமெரிக்காவும். இவ்விரண்டும் முதலாளித்துவ நாடுகள். இவற்றின் லட்சியங்கள் பொதுவுடமைத் தத்துவத்திற்கு முரண் பட்டவை. ஆகவே, தற்போதைய யுத்தத்தை முன்னிட்டு இந்நாடுகளோடு ரஷ்யா உறவு கொண்டிருந்தாலும், அது நிரந்தரமான உறவாக அமையாது. ஆனால் நேச நாடுகளுக்குள்ளாகவாவது நிரந்தரமான உறவு அமையாவிட்டால், எதிர் காலத்தில் நிரந்தரமான சமாதானத்தை நிலை நாட்ட முயற்சிப்பதாக நேச நாடுகள் கூறுவது கேலிக் கூத்தாக முடியும். இந்த வசைச் சொல்லுக்கு நேச நாடுகளை உட்படுத்த ரஷ்யா விரும்பாது. எனவே, அகில தேசீயப் பொது வுடமை ஸ்தாபனத்தைக் கலைத்து, நேச நாட்டினரின் நல்லுறவை தோழர் ஸ்டாலின் அதிகப்படுத்திக் கொண்டார். இதன் மூலம் இரண்டு காரியங்களை தோழர் ஸ்டாலின் சாதித்துக் கொண்டார். (1) ஜெர்மனி ரஷ்யா மீது படையெடுப்பதற்கு, பெயரளவில் இருந்து வந்த காரணத்தை, நீக்கி விட்டார். (2) நேச நாடுகளின் நிரந்தரமான நல்லுறவைப் பெருக்கி, அதன் மூலம் உலகம் எதிர் காலத்தில் நிரந்தரமான சமாதானத்தில் வாழும்படியான நிலைமையை உண்டாக்க உதவினார். இவருடைய இராஜ தந்திரச் செயலால், தான் என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடுகிறார்கள் முசோலினியும் ஹிட்லரும். நேச நாடுகள் அவரைப் பாராட்டுகின்றன. உலக மக்கள் அவரைப் போற்றுகின்றனர்.

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி.)

பரிணமித்தது. இந்தப் போராட்டத்தில் முழுதும் தோற்றுவிட்டதினால் ஜெர்மனிக்கும், இத்தாலிக்கும் சொந்தமான மிகச் சிறந்த காலாட் படைகளும், ஆயுதம் தாங்கிய டிவிஷன்களும் சேதமாயின. துனீஸியப் போராட்டத்திற்குப் பிறகு ஜெர்மன் விமானப்படை முன்பிருந்ததைவிட மிகவும் மோசமான நிலைமை அடைந்து விட்டது.

* * * *

**மத்திய தரைக்கடல் குறுக்கு வழி.** துனீஸிய வெற்றியின் பலனாக நேச நாடுகளுக்குச் சொந்தமான 20 லக்ஷம் டன் எடையுள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஜிப்ரால்டரிலிருந்து போர்ட் செட்டு வரையிலும் நம் கப்பல்களுக்கு பாதுகாப்பளிக்க நெடுக உதவிக் கப்பல்களை அனுப்ப இப்போது முடிகிறது. இந்தக் குறுக்கு வழி ஒரு கேந்திர ஸ்தானம். கஸபிளான்கா திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வாஷிங்டனில் செய்யப்படும் மாபெரும் தீர்மானங்கள் இந்தக் குறுக்கு வழியைப் பொருத்திருக்கும். அதிகமான கப்பல்கள் குறுக்கு வழிகளில் இருந்தால், எல்லாப் போர் முனைகளிலும் நேசநாட்டுப்படைகள் ஓங்கியடிக்க ஏதுவாயிருக்கும். இந்தியாவிற்கும் கீழக்காடி நாடுகளுக்கும் ஏராளமான படைகளையும், சப்ளைகளையும் மிகக் கொஞ்ச காலத்திற்குள் இப்போது அனுப்ப முடியும். இதுபற்றி "டைம்ஸ்" பத்திரிகை எழுதுவதாவது:

"இதுவரை பெயரமுடியாது எகிப்திலும், ஸிரியாவிலும், பாரசீகத்திலுமிருந்த படைகள் இப்போது பெயரலாம். அச்சு நாட்டார் துருக்கி மீது படையெடுப்பாரானால் புதிய அரண்களைக் கொடுத்து உதவலாம். கிரீட்டும், பால்கன் தீபகற்பமும் தகர்க்க முடியாத கட்டங்கள் என்று எதிரி நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்."

இதில் நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்னவென்றால், எந்தக் கேந்திரஸ்தானங்களை நேச நாட்டார் தாக்குவார்களென்று எதிரிக்குத் தெரியாது. ஆகையினால் எல்லா பலஹீனமான பாகங்களிலும் எதிரி பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

**சென்னையில் துனீசியா விழா.** சென்னையில் மே மாதம் 21-ம் தேதி விழா நடைபெற்றது. தேசீயப் போர் முனையின் ஆண்டு விழாவும் துனீசிய வெற்றி விழாவும் ஒருங்கே நடைபெற்றன. ஊர் முழுதும் குதூகலமாயிருந்தது. சென்னை ரேடியோவில் வெற்றிப் பாட்டுகள் பாடப் பட்டன. காலை 10 மணிக்கு, படையினரும், உள்ளூர், பாதுகாப்பாளரும், போலீசாரும் தொழிலாளர்களும் அணிவகுத்து ஐலந்து மைதானத்தில் பவனி வந்து மேன்மை தங்கிய கவர்னர் முன்னிலையில் மரியாதை செலுத்தினார்கள். அப்போது ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர்.

அன்று மாலை 'செனெட் ஹௌசு'க்குப் பக்கத்தில் பெருங் கூட்டம் திரண்டிருந்தது. பல வகை உற் பயிற்சிக் காட்சிகளும், குத்துச் சண்டையும், பாண்ட் விளையாட்டுகளும், சங்கீதக் கச்சேரிகளும் நடனக் கச்சேரிகளும் நடை பெற்றன. செனெட் மண்டபத்தில் சென்னை வாசிகளின் பொதுக் கூட்டமொன்று நடை பெற்றது. யுத்த நிலைமையைக் குறித்தும் ஆபிரிக்காக் கண்டத்தில் கிடைத்த பெரும் வெற்றியின் முக்கியத்தைக் குறித்தும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் ஒரு பிரசங்கம் செய்தார்கள். இந்த வெற்றியால், பொது மக்கள் பெருமிதங் கொள்ளக் கூடாதென்று எச்சரித்தார். அன்று மாலை 7-45 மணிக்கு அவர் செய்த வானொலிப் பிரசங்கம் வேறொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அன்றிரவு, 'வெஸ்ட் எண்ட்' சினிமாக் கொட்டகையில் காட்டப்பட்ட 'டெசர்ட் விக்டரி' என்னும் படக் காட்சியோடு இந்த விழா முடிவுற்றது.

---

(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

அப்பொழுது நமது கவர்னர் துரை பேசுகையில் ஒரு அழகான விஷயத்தை எடுத்துச் சொன்னார். சென்ற யுத்தத்திலே, ஜெர்மனி என்ன செய்தது தெரியுமோ? தனது நாட்டிற்குள்ளே சண்டையை வரவிடாமலே தடுத்துக் கொண்டு, சமயம் பார்த்து சமாதானத்திற்கு வந்துவிட்டது. இம்முறை அதை அவ்வாறு விட்டுவிடக்கூடாது. நமது நேசதேசப் படைகள் நேரே பெர்லினுக்குச் சென்று, அங்கு உட்கார்ந்து கொண்டு, அச்சுநாட்டாருக்கு சமாதானத்திற்கான நிபந்தனைகளைக் குறிப்பிடவேண்டும். நாம் சொல்வதற்கெல்லாம், தலைகுனிந்து 'எஸ்! எஸ்!' என்று சொல்ல வைக்க வேண்டும். ஹிட்லர், பிறகு, இந்தக் கோர யுத்தத்திற்குக் காரணமான ஹிட்லரையும், மற்றத் தலைவர்களையும் சரியானபடி விசாரித்து நன்றாகத் தண்டிக்கவேண்டும்' என்றாரவர்.

### வாஷிங்டனில் வழி ஏற்படுகிறது

இதற்குத் தான் வாஷிங்டனிலும் இப்பொழுது வழி செய்து கொண்டிருக்கிறார்கள். நேசதேசத் தலைவர்களில் முக்யமானவர்களான சர்ச்சில் துரையும், ரூஸ்வெல்ட் துரையும், அடுத்தபடி என்னென்ன செய்வது என்பது பற்றி அவர்களோடு பிரபல சேனாபதிகளும் கலந்து யோசனை சொல்லியிருக்கிறார்கள். கூடிய சீக்கிரமே அங்கு ரகசியமாக நடந்து வரும் பேச்சுக்கள் ஹிட்லரும் அறியும்படி பகிரங்கமாகிவிடும். ஜெர்மனியையும், இத்தாலியையும் மட்டுமின்றி ஜப்பானையும் சரியாகக் கவனித்து மண்டையைப் பிளக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

பஸிபிக் மகா சமுத்திரத்திலே அமெரிக்கப் படைகளில் பெரும்பகுதி இருப்பதாக ரூஸ்வெல்ட் தெரிவித்தார். அமெரிக்கரோடு கூட இருந்தே பிரிட்டிஷாரும் ஜப்பானியரைத் தாக்குவார்கள்; ஜெர்மனியை மண்டியிடச் செய்த பின், ஒரே கூட்டமாக நேசப்படைகள் ஜப்பான் பக்கம் திரும்பும்; ருஷ்யாவிற்கு உடனே உதவி செய்யப் போகிறோம் என்றெல்லாம் அமெரிக்க சட்டசபையினர் முன் தெரிவித்தார் சர்ச்சில் துரை. கூடிய சீக்கிரமே ஸ்டாலின், சியாங்-கே-ஷேக் ஆகியோரை தாமும் ரூஸ்வெல்டும் சந்தித்து இறுதித்திட்டப் படுத்தக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார். இவையெல்லாம் அச்சு நாட்டாருக்கு ஆனந்தம் தரும் பேச்சுக்களல்ல!

---

### ரூர் பிரதேசம் பாழ்

சென்ற வாரம் "டபார்" ஆன இரு பிரமாண்டமான ஜெர்மன் அணைகளிலிருந்து கிளம்பிய வெள்ளத்தால் ஜெர்மனிக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதி முக்கியம் வாய்ந்த ரூர் பிரதேசமே பாழாகிக் கிடக்கிறது. பல்லாயிரக் கணக்கிலே தொழிலாளர்கள் அங்கு விரைந்து சென்று உதவி செய்யப் போயிருக்கிறார்களாம். போதாக் குறைக்கு நேச தேச விமானிகள் பிர்ட்மண்ட் என்ற ஊரைச் சிதற அடித்திருக்கிறார்கள். சுமார் 500 வெடிகுண்டு வீசும் விமானங்கள் இரண்டாயிரம் டன் எடையுள்ள குண்டுகளை அவ்வூர் மீது வீசி, பல தொழிற்சாலைகளை உருப்படாது அடித்திருக்கின்றன. ருஷ்யரும் ஜெர்மானியரைப் பலி வாங்கி வருகிறார்கள். எந்தச் சமயத்திலே நேச தேசத்தார் எங்கு வந்து படையெடுப்பார்களோ என்ற பீதி அச்சு நாட்டாருக்கு அதிகமாகி வருகிறது. உலகத்தையே கட்டி ஆளலாம் என்று ஹிட்லர் போட்டிருந்த மனக்கோட்டை தகர்ந்துவிட்டது. கடவுளுக்கும் மேல் நம் ஹிட்லர் என்றிருந்த ஜெர்மானியரது மனம் கசப்படைந்து வருகிறது. நேச தேசத்தாரின் சக்தியை அவர்களே நேரில் அனுபவித் தறிந்து கொள்ளும் காலம் வந்துவிட்டது.

### சீனாவிற்கு உதவி கிடைக்கும்

தக்க சமயத்தில் ஜப்பான் நமக்குதவ, ருஷ்யா மீது பாயும் என்று அச்சு நாட்டார் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் ஜப்பானோ, தன் தலையைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்கே சௌகரியம் போறாது தவித்துக்கொண்டிருக்கிறது. அமெரிக்கர்கள் மெல்ல மெல்ல கிஸ்கா, அட்டு என்ற தீவுகளைப் பிடித்துக் கொண்டே, ஜப்பானை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். சீனாவிற்கும் கூடிய சீக்கிரமே பலத்த உதவி கிடைக்கும். ஜப்பானிய நகரங்கள் மீது எந்தச் சமயத்திலும் குண்டு மாரி பொழியக் கூடும். நேச தேசத்தாருக்குச் சரியானபடி மேற்கே வேலை கொடுத்துக் கொண்டிருப்பார் ஹிட்லர்; நாம் பாட்டுக்குக் கிழக்கிலே சுரண்டிக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கலாம் எனக் கனவு கண்டது ஜப்பான். ஆனால், அது நினைத்ததற்கு மாறாகவே எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே அவசர அவசரமாக சுங்கிங் நகரத்தையும், சிட்டகாங் நகரையும் தாக்க அது முயன்று வருகிறது. அதற்குள்ள விமான பலமும் முன் போலில்லை. தென்மேற்கு பஸிபிக்கிலும் அதன் ஜம்பம் சாயவில்லை. இந்தியாவிலிருந்தும் அதற்கு சவுக்கடிகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. திருடர்களுக்கு வேறென்ன உபகாரம் கிடைக்கும்?

# துனீசிய வெற்றியின் முக்கியம்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு நாடி போன்றது மத்யதரைக் கடல். அதன் இருபுறங்களிலுமுள்ள ஜிப்ரால்டரும், சூயஸ்கால்வாயும் பிரிட்டிஷார் வசமோ அல்லது பிரிட்டிஷ் செல்வாக்குள்ளவர்களின் வசமோ இருந்துவருகிறவரையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வியாபாரப்போக்குவரவுகளுக்கு மட்டுமன்றி, உலக வியாபாரத்திற்கே வசதியா யிருந்தது. யுத்த காலத்தில் இது ஒரு முக்கிய கேந்திரஸ்தானமாக விளங்குமென்று முன்னரே பெயர் வாங்கிவிட்டது. ஆகவே, இதன்மீது ஐரோப்பிய நாடுகளுக்கும், ஆசிய நாடுகளுக்கும் கண் விழுந்தது ஆச்சிரியமல்ல.

## முன் அறிகுறி

1935-ம் வருடம் யாருடைய அனுமதியுமின்றி (ஜெர்மனி நீங்கலாக) 2 லட்சம் சோல்ஜர்களை அபிசீனியாவிற்கு அனுப்பிவைத்தது. இதுபற்றி சர்வதேச சங்கத்தில் கேள்விகேட்டபோது இத்தாலி கொடுத்த பதிலை பிரிட்டிஷ் அரசாங்கம் வாய்மூடிக் கொண்டு ஒப்புக்கொண்டதென்று பலர் குறை கூறினார்கள். ஏனென்றால் லிபியா யாரும் விரும்பத்தக்க நாடு அல்லவானாலும், கேந்திர ஸ்தானமாக விளங்கியது.

பாஸிஸம் எங்கு பார்த்தாலும் தலைதூக்கி நின்றது. ஆகவே' கேந்திர ஸ்தானங்களில் சந்தர்ப்பத்திற்கேற்றபடி மட்டும் நடத்துகொள்வது சந்தேகத்திற்கு இடங்கொடுக்கக் கூடியதுதான். சாம்ராஜ்ய போக்குவரவுகளுக்கு மிகவும் உபயோகமான கேந்திர மார்க்கங்களும், அரண் அமைந்த துறை முகங்களும், மலைக்கோட்டைகளும் ஏராளமான முள் வேலிகளும்கொண்ட இந்த இடத்தில், ஒரு இராணுவ அதிகாரம் கொண்ட நாடு, தன்படைகளை அனுப்பி வைப்பதை எப்படி மற்றொரு அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியும்.

மத்ய தரைக்கடல் கரையோரமாக வுள்ள நாடுகளில் ஏதாவது ஒன்று, நேசப்பான்மையோடோ அல்லது நடு நிலைமையோடோ இருந்தால்தான் சாம்ராஜ்யத்தின் நாடியாக இந்தப் பாதையை உபயோகிக்கலாம். சென்ற 10 வருடங்களாக ஐரோப்பிய தென் கரையில் உள்ள பிற்போக்கான ஸ்பெயின், பாஸிஸ்ட் இத்தாலி, கொந்தளிப்பான பால்கன், துருக்கி முதலிய நாடுகளை நமது நேசநாடுகள் என்றோ, நடு நிலைமை நாடுகள் என்றோ 1928 முதல் 1938 வரை 10 வருஷ காலங்களாக நினைப்பதற் கில்லாதிருந்தது.

ஆனால், ஆப்பிரிக்க சாம்ராஜ்யத்தை முஸோலினி லிபியாவில் ஆரம்பிக்கும் முன்னதாக ஆப்பிரிக்கா கண்டத்தின் வட கரையிலுள்ள பிரஞ்சு அல்ஜீரியா, ஸ்பானிஷ் மொராகோ, பிரஞ்சு துனீஸியா, இத்தாலியின் திரிபோலி, சிரேனேய்கா அல்லது நடு நிலைமை எகிப்து ஆகியவைபற்றி நாம் அஞ்சும்படியாயில்லை. இத்தாலியர்கள் லிபியாவில் ஏராளமான படைகளைக்கொண்டு இறக்குவதினாலே நிலைமை முழுதும் கெட்டுவிட்டதென்று கூறியவர்கள், உண்மையையே கூறினார்கள்.

## நான் அப்படித் தான் சொன்னேன்

1939-ம் ஆண்டு யுத்தம் ஆரம்பமானது. உடனே மத்யக் கடல்களில் (இத்தாலியத்தீவுகள் " அதாவது சார்டீனியா, ஸிஸிலி, பெந்தலேரியா, சிரேனேக்கியாவில் உள்ள இத்தாலியத் துறைமுகங்கள் இத்தாலிக்கு இருந்தாலும், இத்தாலி அக்காலத்தில் நடு நிலைமைதான் வகித்தது) ஏராளமான எதிரி நீர் மூழ்கி கப்பல்கள் நிறைந்துவிட்டன. வியாபாரக் கப்பல்களைத்தாக்க ஆரம்பித்தன. இதனால் இந்தியா நேர்முகமாக பாதிக்கப்பட்டு மத்தியதரைக்கடல் வழி இந்தியாவிற்கு மூடப்பட்டுவிட்டது. ஆகவே, நேச நாட்டுக் கப்பற்படைத் தந்திரமும், போக்குவரவு முறைகளும் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய அறிகுறிக்ள் தோன்றின. முன்பு அரசாங்கத்தின் போக்கைக் குறை கூறினவர்கள் கூறியது உண்மை என்ற நிலைமை ஏற்பட்டது.

## சம்பவம்

பிரிட்டனும், பிரான்சும் இந்த யுத்தத்தில் ஈடுபடும்படி நேர்ந்தது. பிரான்ஸ் வீழ்ந்தது. ஐரோப்பிய, அட்லான்டிக், வடகடல் கரைகளை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டதினால் ஏற்பட்ட பயங்கரமான நிலைமையையுங்கூட பிரிட்டிஷார் சமாளித்தார்கள். ஜெர்மன் விமானப் படைகள் பிரிட்டனைத் தாக்குவதற்கான வழிகோலின. என்றாலும், பிரிட்டன் உறுதியாய் நின்றது. அச்சு நாட்டு லட்சியங்கள் வெறுக்கத்தக்கன என்று எடுத்துக் கூறி ஜனநாயக நாடுகளைத்தன் கட்சியில் சேர்த்துக்கொண்டது. ஆனால், கொஞ்ச காலம் தனித்து நின்று போராடியது. அச்சமயத்தில் ஜெர்மனி ஒவ்வொரு நாடாகக் கைப்பற்றிக்கொண்டு வந்தது. அந் நாடுகளில் உள்ள உணவுப் பொருள்களாலும் வெடி மருந்துகளாலும், சமாதான காலத்தில் மகத்தான, எதிரி நாடுகள் யுத்த ஆயத்தங்கள் செய்வதாயிருந்தால் எவ்வளவு வசதிகளோடும், சாவதானமாகவும் செய்வார்களோ, அதைவிட அதிக வசதியோடும், சாவதானமாகவும் செய்து கொள்ள ஜெர்மனிக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அப்போது ஹிட்லர் இரண்டு பெருந்தவறுகள் செய்தார். மேற்கே லண்டனுக்கு போவதற்குப் பதிலாக கிழக்கே பாரிசுக்குப் போனார். ரஷ்யாமீது துரோகத்தனமாகப் படையெடுத்துத் தன் முக்கியமான நோக்கங்கள் எவை யென்று வெளியிட்டுவிட்டார். ஏனென்றால் அவருக்குக் கிடைத்த ஆரம்ப வெற்றிகளால் நேச நாடுகள் மீது முசோலினியும் போர் தொடுத்தார். அச்சமயம் அச்சு நாடுகளுக்குப் பலமான விமான தளங்களும், துறைமுகங்களும், ரோடுகளும் திரிபோலி முதல் பார்டியா வரையிலுமுள்ள ஆப்ரிக்க கடற்கரை நாடுகளுமிருந்தன. அன்றியும், மத்யதரைக்கடலிலேயே சார்டினியா, ஸிஸிலி, பான்டலேரியா, முதலிய மத்யதரைக்கடல் கோட்டைத் தீவுகளும் ஏராளமான, வெகு வேகமாகச் செல்லக்கூடிய கப்பற் படைகளும் இருந்தன. ஜெர்மன் பிரயாணிகளும், நிபுணர்களும் நடு நிலைமை நாடாகிய பிரஞ்ச் அல்ஜீரியாவில் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் வேலையில் நெடு நாட்களாகவே ஈடுபட்டிருந்தனர். ஜிப்ராஸ்டர் முதல் சூயஸ் வரையிலும் மத்யதரைக்கடல் கரையில் உள்ள கஸபிளாங்கா, ஓரன், அல்ஜியர்ஸ் முதலிய இடங்களை முழுதும் கைப்பற்றிக்கொள்ளவும் முயற்சித்தனர். வட கிரீஸில் இத்தாலியர்கள் தோற்றுவிடவே, ஜர்மானியர்கள் உடனே அங்கு சென்று கிரீஸை வென்று ஏராளமான விமானத் தளங்களையும், நீர் மூழ்கி கப்பல் தளங்களையும் இந்தத் தீவுகளுக்குக் கீழ்க்கோடியில் உள்ள டெடக்கனீஸ் தீவுகளிலும் அமைத்துக் கொண்டார்கள். மத்யதரைக்கடல் இத்தாலிக்குச் சொந்தமானதொரு கேந்திர ஸ்தானம் என்று இத்தாலியர்கள் கூறிக்கொண்டார்கள். இந்த வீண் டம்பக்காரர்கள் இப்படிக் கூறிக்கொண்டது தவறு. ஜனநாயக நாடுகளின் போக்கு வரவுகளை அவர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள்.

## முக்கியமான அம்சம்

நாடுகள் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போது கடல் போக்குவரவு சாதனங்கள் மிகவும் இன்றியமையாதன. படைகளும், தளவாடங்களும், சப்ளைகளும் ஏற்றிக்கொண்டு போகவேண்டுமானால், கப்பல்கள் அவசியம் வேண்டும். விமானங்களில் இவற்றை ஏற்றிச் செல்வதென்பது எப்போதும் முடியாத காரியம். கப்பல்களைப்போல் அவை இதற்குப் பயன்படமாட்டா. ஆகவே, எதிரிகள் விமானங்களிலிருந்தாவது, கப்பற் படைகளிலிருந்தாவது நீர் மூழ்கிக் கப்பல்களைக் கொண்டாவது நம் கப்பல்களைத் தாக்குகிறார்கள். ஒருவர் ஜிப்ரால்டரிலிருந்து அலெக்சாந்திரியாவிற்கு ஒரு கப்பலை அனுப்புகிறாரென்று வைத்துக்கொள்வோம். அந்தக் கப்பல் போய் சேரும் முன்னதாக அதை மூழ்கடிக்கவேண்டுமென்று இன்னொருவர் விரும்புகிறார். எனவே, அதிவேகமாகப் பாய்ந்து செல்லக்கூடிய ஒரு கப்பலையோ அல்லது பல கப்பல்களையோ அனுப்பி அதைத் தடைப்படுத்துகிறார். முதலில் கப்பலை அனுப்புகிறவர் பல கப்பல்களை ஒன்று திரட்டி அவற்றிற்கு ஆதரவாக கப்பற்படை ஒன்றையும் அவற்றின் கூடவே போகும்படி ஜிப்ரால்டரிலிருந்து அனுப்புகிறார். " பாமர் " விமானங்களைக்கொண்டு பாதுகாப்புக் கப்பல்களைச் சிதறடிக்க இன்னொருவர் முயற்சிக்கிறார். ஆகவே, இந்த " பாமர் " விமானத் தாக்குதல்களைத் தடுக்கவேண்டி வெகு வேகமாகப் பாய்ந்து போய்விடும் விமானங்களை அனுப்பச் சொல்லி முதலாவது பேர்வழி வேண்டுகிறார்.

இந்த இரண்டு கட்டங்களையும் கவனியுங்கள். பிரான்ஸ் வீழ்ந்த போது மதயதரைக்கடலில் அச்சு நாடுகளுக்கு வசதிகள் கிடைத்தன. இரண்டாவதாக, கிழக்கே லிபியாவிற்கும், எகிப்திற்கும், சூயஸ் கால்வாயை நோக்கியும் இத்தாலிய—ஜெர்மன் படைகள் போய்க் கொண்டிருந்தன. அதுவரை ஜிப்ரால்டர் மத்யதரைக் கடல் வழியாக எகிப்திற்குத் தம் உதவிகளை (1,200 மைல் தூரத்திற்குள்) அனுப்பிக்கொண்டிருந்த நேச நாடுகள் 12,000 மைல்கள் கடந்து நன்னம்பிக்கைமுனை வழியாக செங்கடலையடைய வேண்டி வந்தது. இதன் பயனாக மத்ய தரைக் கடலில் ஆதிக்கம் உள்ள நாடுகளுக்கு 10,000 மைல் பிரயாணம் மிச்சமாகிவிட்டதுமட்டுமன்றி, 2 மாத காலமும் லாபமானது.

குறுக்கு வழியாக வந்தால் நேச நாடுகளுக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, தெற்கு மத்யதரைக்கடல் வழி. எப்படியென்றால் இத்தாலியும், சிசிலியும் அச்சுநாடுகளின் நீண்ட அங்கங்களாகயிருக்கின்றன. தெற்கே இருக்கும் வழியாக வந்தால் இரண்டு குறுகிய கடல்களைக் கடக்கும்படி நேரிடுகிறது.

(1) பந்தலேரியாவிற்கும், டியூனிசுக்கும் இடையே 60 மைல்கள்.

(2) கிரீட்டிற்கும், பார்டியாவிற்கும் இடையே 250 மைல்கள்.

எதிரி " பாமர்" விமானங்கள் ஒரு வளைவு சுட்டாலே, 1,200 மைல்களுக்கும், போராடும் விமானங்கள் 500 மைல்கள் தூரத்துக்கும், கூடக்கூடும்.

நமது சாமான் கப்பல்கள் தகுந்த பாதுகாப்போடும், விமான எதிர்ப்பு பீரங்கிகளோடும் இவ்வழிகளில் போனாலுங்கூட, எதிரி விமானங்களால் ஆபத்துக்கள் நேரக்கூடும். ஏனென்றால், பலவிடங்களில் விமான தளங்களும், கப்பற் தளங்களும்; அவர்களுக்கு அங்கே உண்டு. நமக்குள்ள மால்டா திவுமட்டும் இவற்றைச் சமாளிக்கத் தக்க தளமாக அமைய முடியாது. விமானங்களை ஏற்றிப் போகும் கப்பல்களில் உள்ள விமானங்களையும், மால்டா தீவிலுள்ள விமானங்களையும் நாம உபயோகிப்பதனால், எதிரிகளுக்குச் சொந்தமான தீவும் தளங்களிலிருந்தும் ஆப்பிரிக்கக் கடற்கரைத் தளங்களிலிருந்தும் எதிரிகள் கடுமையாகத் தாக்குகிறார்கள்.

நேசநாட்டுப் படைத்தலைவரின் முக்கியமான நோக்கங்களாக யிருக்க வேண்டியவை :—

சாம்ராஜ்யத்தின் உள்நாடு போன்ற போக்கு வரவு பாதைகளை மீண்டும் ஸ்வீகரிப்பது ; எகிப்தைக் காப்பது ; இந்தியாவை எதிரிகள் தாக்காதபடித் தடுப்பது; பாலஸ்தீனத்திலும், ஸீரியாவிலும் உள்ள் பிரிட்டிஷ் படைகளைப் பலப்படுத்திக்கொள்வது ; (ரஷ்யாவிற்கு சப்ளைகள் போகும் முக்கியமான பாதையை இவை காக்கின்றன). ஹிட்லர் ஆதிக்கத்திற்குட்பட்ட ஐரோப்பாவில் உள்ள அந்த ஆதிக்கத்தை அழிப்பது ; வட ஆப்ரிக்காவில் மொராக்கோ முதல் அலெக்ஸாந்திரியா வரை மீண்டும் கைப்பற்றுவது ஆகியவை. மூன்று வருஷகாலமாக பாலைவன யுத்தத்தில், வெற்றியும் தோல்வியும் நமக்கு மாறிமாறி வந்துகொண்டிருந்தன. அமெரிக்கா யுத்தத்தில் கலந்து கொண்டது. என்றாலும், ஆப்ரிக்க யுத்த முனைக்கு அமெரிக்கப் படைவந்து சேர்வதற்குச் சற்றுக் காலதாமதமானது. 1941-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் எகிப்தையும், சூயஸ்கால்வாயையும் நோக்கி ரோமல் முன்னேறினார். ஆனால், டோப்ருக் என்னுமிடத்தில் அவரை கொஞ்ச காலத்திற்கு முன்னேற ஒட்டாதபடித் தடுத்து விட்டார்கள். பிறகு அவருடைய படைகளோடு பிரிட்டிஷ் படைகள் போராடி கரையோரமாகவே பின்வாங்கச்செய்து, பார்டியாவையும் கைப்பற்றிக் கொண்டன. ரோமல் மீண்டும் 1942-ம் ஆண்டு மே மாதம் தாக்கி பார்டியாவைக் கைப்பற்றிக் கொண்டார். பிறகு ஜூன் 22உ டோப்ருக்கும் அவர் கைவசமானது. ஆகவே, அலெக்சாந்திரியாவில் உள்ள முக்கியமான பிரிட்டிஷ் தளத்திற்கு 60 மைல் தூரத்தில் ரோமல் வந்துவிட்டார். என்றாலும், அதைவிட்டு முன்னேற விடாதபடி ஆக்கின்லெக் தடுத்துவிட்டார். ஆகவே, கரை ஓரமாக எகிப்தில் தாக்குவதை விட்டுப் பாலைவன வழியாக ஜெர்மானியர்கள் வரப் பார்த்தார்கள். ஆனால் ஏமாந்தார். இதற்கிடையில் ஆக்கின்லெக்கிற்குப் பதிலாக ஜெனரல் அலக்சாந்தர், பிரதம படைத்தலைவராக 1942-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி நியமிக்கப்பட்டார். இவர் எதிரிப் படைகளைத் தாக்கி நவம்பர் மீ 5உ எல் அலமீன் என்னுமிடத்தில் பெரும் போராடி வெற்றிபெற்றார். பிறகு ஹல்பயா என்னுமிடத்தில் மற்றொரு வெற்றிபெற்று எதிரிகளை மேற்கே விரட்டினார். சொல்லூம், பார்டியா, டோப்ருக், ஆகிய இடங்களைக் கைப்பற்றினார், அன்றியும், டிசம்பர் மாதத்தில் அகல்யாவையும், 1943-ம் ஆண்டு ஜனவரி மீ 23உ திரிபோலியையும் மீண்டும் கைப்பற்றினார்.

1942-ம் ஆண்டு நவம்பர் மீ திடீரென்று அமெரிக்கப் படைகளும், பிரிட்டிஷ் படைகளும் அல்ஜியர்ஸில் வந்திறங்கின. இது கண்டு ஜெர்மன் பின்னணிப்படைகள் பெரிதும் அஞ்சவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ரோமலும், பான் ஆர்னிமும் தம் குறுக்கு வழியாக அதிகப்படி படைகளையும் தளவாடங்களையும் கொண்டுவர முடிந்தது. என்றாலும், இவர்களுடைய படைகளுக்கு மேற்கே நேசநாட்டுப் படைகள் இருந்தன. கிழக்கே தளராத கடுமையான 8-ம் படை சர்டி விரிகுடாவைச் சுற்றி திரிபோலிக்கு எல் அகல்யாவிலிருந்து வந்து நெருக்கிக் கொண்டிருந்தன. இதன் பயனாக; அச்சுநாட்டின் படைகளின் நிலைமை ஆபத்துக்குள்ளானது. என்றாலும், பிடிவாதமாக கிழக்கு நோக்கியும், வடக்கு நோக்கியும் பின்வாங்கி தங்கள் கடைசி கோட்டைகளாகிய பிஸர்ட்டாவிற்கும், ட்யூனிசுக்கும் போய் சேர்ந்தன. பான் முனையில் அமெரிக்காவிலிருந்த அச்சுப்படைகள் அடியோடு அழிந்ததையும், ஆப்ரிகாவில் உள்ள அச்சுநாட்டாருக்கிருந்த செல்வாக்குத் தொலைந்ததையும் பாராட்டி இந்தியா முழுதும் சென்ற வியாழக்கிழமை விழாக் கொண்டாடினார்கள்.

## புது வழி

இப்போது மத்யதரைக்கடலின் தென்கரை நாடுகள் எல்லாம் நேச நாட்டாரின் வசமிருக்கின்றன. இதனால் ஆபத்துக்களும் உண்டு. நஷ்டமும் ஏற்படும். என்றாலும், மத்யதரைக்கடல் வழி திறந்துவிடப்பட்டுள்ளது. சாம்ராஜ்ய நாடிபோன்ற வழி மீண்டும் நம் வசமாகிவிட்டது. ஹிட்லருடைய ஐரோப்பாவைப் பாதுகாக்கும் வசதி ஒழிந்துவிட்டது. இத்தாலியப் படைகள் வெகுவாக யிருக்கத் தான் செய்கின்றன. சிசிலி, கிரீட், டெடக்னீஸ் தீவுகள் முதலியவற்றை ஜெர்மானியர்கள் வெகுவாக அரண் செய்து கொண்டிருக்கிறார்களென்பது உண்மைதான். என்றாலும், காஸபளாங்கா முதல் அலெக்சாந்திரியா வரையில் வட ஆப்ரிக்கா கரையில் உள்ள எல்லா விமான தளங்களும், துறைமுகங்களும், நேச நாட்டார் வசம் இருக்கின்றன. மால்டா எப்போதும் பந்தோபஸ்தாகத் தான் இருக்கிறது. மத்யதரைக்கடலில் நம் சாமான் கப்பல்கள் போக வேண்டியிருந்தால் துனீசியாவிலிருந்து போராடும் விமானங்களும், திரிபோலியிலிருந்து பெங்காஸிவரை "பாமர்" விமானங்களும், அவற்றிற்குத் துணையாகக் கிளம்பும். அப்போது இத்தாலிய படைகள் தலை குனிய நேரும். அன்றியும் மத்யதரைக்கடலின் கீழக்கோடியில் டோப்ருக், பார்டியா, அலெக்சாந்திரியா, ஆகிய கோட்டைகளும் இருக்கின்றன. தென் ஐரோப்பாவில் உள்ள அச்சு நாடுகள் எந்தச் சமயத்தில் தாக்கப்படுமோ, என்று நடுநடுங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால், எகிப்தும், இந்தியாவும், பந்தோபஸ்தாகிவிட்டன. இந்த உலக யுத்தத்தின் முக்கியமான பிரச்சினை வட ஆப்பிரிக்காவில் தீர்ந்துவிடும் என்று ஜனரல் ஸ்மட்ஸ் கூறியது முற்றிலும் உண்மை.

—சென்னை, வானொலி நிலயத்திலிருந்து மே மீ, 24உ காப்டன் ஜி. டி. பி. ஹார்வி அவர்கள் ஒலி பெருக்கிய சொற்பொழிவின் சாரம்.



## சைதாப்பேட்டையில் தேநீர் விருந்து



சாகுபடியைப் பெருக்குங்கள்.
உணவுப் பொருள்களைச் சேர்த்து வைக்காதீர்கள்.
வீண் செலவு செய்யாதீர்கள்.
வீரப் படைகளுக்கு உதவுங்கள்.

# எருக்கள்

ஒரு செடி உயிர் உள்ளது. ஆகவே, அது வளர வேண்டுமானால் அதற்கு உணவு தேவை. இந்த உணவை அதன் வேரை அடுத்துள்ள பூமியி லிருந்தும், அதன் மூளையை யடுத்துள்ள காற்றி லிருந்தும் பெறுகிறது. செடிகள் பூமியி லிருந்து தம் உணவுப் பொருள்களை எப்போதும் உறிஞ்சிக் கொண் டிருப்பதனால் அவ்வப்போது புதிய உணவுகளைக் கொடுக்க வேண்டும். பூமியைக் கொழுமைப் படுத்தும் பொருட்டு, எந்தப் பொருளை உபயோகித்தாலும், அது எருவாகும். எருக்கள் நேர் முகமாகச் செடிகளுக்கு உணவு ஊட்டலாம். அல்லது மறை முகமாக (1) பூமியின் நிலைமையை முன்னேறச் செய்யலாம். (2) பூமியில் உள்ள வஸ்துக்களில் ரசாயன மார்க்கங்களை உண்டாக்கி அதைப் பூமியில் கலந்து கொள்ளும்படிச் செய்யலாம்.

எருக்கள் இரண்டு வகைப்படும். (1) தாவரங்களும், உயிருள்ள வஸ்துக்களும். (2) உயிர் இல்லாத உலோக உப்புக்கள். இவற்றைச் செயற்கை எருக்கள் என்றும் சொல்வ துண்டு. செடிகளுக்கு மிகக் குறைவாகத் தான் உணவுச் சத்துக்கள் தேவை. அவை எல்லா வகை பூமிகளிலும் சாதாரணமாய் இருக்கின்றன. சாதாரணமாக உப்பு வாயு, நிமதாக்னி, பொட்டாஷ் ஆகியவையைத் தான் சாதாரணமாக பூமியிலிருந்து செடிகள் உட்கொள்கின்றன. எனவே, சாகுபடியாகும் நிலத்திற்கு இவை யடிக்கடிக் கொடுக்கப்பட வேண்டும்.

**உப்பு வாயு.**—அடி மரமும், இலைகளும் வளர்வதற்கு உப்பு வாயு தான் முக்கியமானது. ஆகவே, செடி இளமையா யிருக்கும் போது உப்பு வாயு மிகுதியுள்ள எருக்களை மிகுதியாகக் கொடுக்க வேண்டும். செடிகள் நன்றாக வளரும் போதும் அவற்றின் கிளைகள் உண்ணத் தக்கனவா யிருந்தாலும் உப்பு வாயு எரு அதிகமாகக் கொடுக்கப் படவேண்டும். இந்த எரு குறைந்தால் செடிகள் சாதாரணமாக வளர மாட்டா. இலைகளும் பழுத்துப் போகும்.

**நிமதாக்னி.**—பூக்களும் காய்களும் கிளம்புவதற்கு இது பெரிதும் தூண்டி உதவுகிறது. இந்த எரு குறைவுபட்டால், இலைகள் நீலப்பச்சையாக மாறும்.

**பொட்டாஷ்.**—மாச்சத்தும், இனிப்புச் சத்தும் இதனால் ஏற்படுகிறது. இந்த எரு குறைந்தால் இலைகளில் புள்ளி விழுகிறது.

## சாதாரண உயிர் சத்துள்ள எருக்கள்.

**சாணங்கள்.**—உப்பு வாயு, நிமதாக்னி, பொட்டாஷ் ஆகிய மூன்றும் சாதாரணமாக உயிர் சத்துள்ள எருக்களில் இருப்பதால் தாவரங்கள் வளருவதற்கு இவை மிகவும் முக்கியமானவையாகப் பயன்படுகின்றன. உயிர் சத்துள்ள எருக்களில் மிகவும் முக்கியமானது சாணம். இது இலகுவாகவும் கிடைக்கிறது. ஏராளமான சாணத்தை எரு முட்டை யாகத் தட்டி சாம்பலாக்கி விடுகிறார்கள். பசு எருவில் சாணம் மட்டுமன்றி அதன் நீர் முதலியவையும் மாட்டுத் தொழுவத்தில் வீணாக்கப்பட்ட பல பொருள்களும் சேர்ந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் நாள் தோறும் திரட்டி ஒரு குழியில் கொட்டி உளுத்துப் போகும்படிச் செய்ய வேண்டும். நன்றாக உளுத்துப் போன மாட்டுச் சாணத்தில் செடிகளுக்குத் தேவையான சிறந்த உணவுப் பொருள்கள் மிகவும் இருக்கின்றன. எனவே, தாவரங்களுக்கு இது தான் மிகச் சிறந்த எரு.

**வெள்ளாட்டுச் சாணம்.**—இதுவும் சிறந்த எருத்தான். ஆனால், இது மெதுவாக வேலை செய்கிறது.

**எலும்புகள்.**—நிமதாக்னிச் சத்து, சுண்ணச் சத்து, உப்பு வாயு ஆகியவை இதில் நிறைந்திருக்கின்றன. 'எலும்பு எரு' என்று ஒரு வகை எரு விற்கப்படுகிறது. நிமதாக்னிச் சத்தும், சுண்ணச் சத்தும் குறைவாக யிருக்கும் போது இதை உபயோகிக்கலாம்.

**தழை எரு.**—தழைகளை ஒரு குழியில் போட்டு அழுகும்படிச் செய்தால், அதில் சாதாரணமாகப் பொட்டாசிய சத்தும், உப்பு வாயு சத்தும் அதிகப்படுகின்றன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஆண்டு ஜூன் மீ 4௳, வெள்ளிக்கிழமை [இதழ் 22

## சம நாடுகளுக்குள் சகோதரத்துவம்



" அகில தேசியப் பொதுவுடைமை ஸ்தாபனத்தைக் கலைத்தது மிகவும் சரி. தக்க சமயத்தில் அது கலைக்கப்பட்டது. எப்படி என்றால், விடுதலை நாட்டங் கொண்ட நாடுகள் எல்லாம் தம் பொது எதிரியான ஹிட்லரிசத்தைத் தாக்கி நசுக்குவதற்கு, இது மிகவும் உதவுகிறது."

" ரஷ்யர்கள் மற்ற நாட்டவரின் வாழ்க்கை முறையில் குறுக்கிட்டு அந்நாடுகளை எல்லாம் போல்ஷிவிக் நாடுகளாக மாற்றிவிட நினைத்திருப்பதாக ஹிட்லர் வகையறுக்கள் கூறி வந்தது பொய் என்று, இது வெளியாக்கி விட்டது. இனிமேல் இப்படிப் பொய் சொல்ல, ஹிட்லர் கூட்டத்தாரால் முடியாது."

" பல நாடுகளிலுள்ள பொதுவுடைமைக் கட்சியார்கள், தம் நாட்டின் நன்மைக்காக உழைக்காமல், வெளிநாட்டார் (ரஷ்யப்பொதுவுடைமைக் கட்சியார்) கட்டளைப்படி தான் நடக்கிறார்கள் என்று, தொழிலாளர் இயக்கத்திலுள்ள பொதுவுடைமைக் கட்சி விரோதிகள் கூறி வருவது பொய் என்று, இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இனி இப்படிப்பட்டப் பொய்ப் பிரசாரத்திற்கு இடமிருக்காது."

" விடுதலை நாட்டமுள்ள நாடுகளின் தேச பக்தர்களுடைய வேலைகளை இது இலகுவாக்குகிறது. அந்தந்த நாடுகளிலுள்ள முற்போக்கானவர்கள் எந்தக் கட்சியினராயினும் எந்த மதத்தினராயினும், தேசிய விடுதலை ஒன்றையே லட்சியமாகக் கொண்டு திரட்ட, அவர்களுக்கு இது உதவுகிறது. இப்படித் திரளுகிறவர்கள் பாசிஸத்தை உருக் குலைத்து விடுவார்கள்."

" விடுதலை நாட்டமுடைய மக்கள் எல்லா நாடுகளிலு மிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் திரட்டி, ஒரு சர்வதேசக் கூட்டமாக அமைத்து, உலகத்தையே ஆட்டுவிக்கப் போவதாகப் பயமுறுத்தும் ஹிட்லரிசத்தோடு போராடி, எதிர் காலத்தில் எல்லா நாடுகளும் சமத்துவத்தை யடிப்படையாகக் கொண்டு சகோதர பாவத்தோடு பழகத் தக்க ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தத் தடைகளா யுள்ளவற்றை அகற்ற, தேச பக்தர்களுக்கு இது உதவும்."

" இந்தச் சந்தர்ப்பங்களை யெல்லாம் நாம் சீர்தூக்கிப் பார்த்தால், ஹிட்லரின் கொடுமைகளை வெல்லும் பொருட்டுப் போராடும் நேச நாடுகளும் மற்ற நாட்டு மக்களும் இதனால் ஒன்றுபட்டு பலமடைவார்கள் என்று நான் நினைக்கின்றேன். மிகச் சரியான சமயத்தில், அகில தேசியப் பொதுவுடைமைக் கட்சி கலைக்கப்பட்ட தென்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், பாஸிஸ்ட் மிருகம் தனக்குள்ள கடைசி பலத்தைக் கொண்டு போராடிக் கொண்டிருக்கிறது. இந்த மிருகத்தை ஒரே மட்டாக ஒழித்துவிடவும், பாஸிஸ்ட் கொடுமைகளுக்கு உட்பட்டிருந்த மக்களை விடுவிக்கவும், விடுதலை நாட்டமுடைய நாட்டினர் அனைவரும் ஒன்றுபட்டு அமையவேண்டியது அவசியம்.

—ஸ்டாலின், மே மாதம் 29-ம் தேதி மிஸ்டர் ஹெரால்ட் கிங்குக்கு எழுதிய கடிதம்.

# நேச தேச தினக் கொண்டாட்டம்

(14—6—43)

இராகம்—பிலஹரி　　　　தாளம்—ஆதி

பல்லவி

கொண்டாடுவோம்—இன்று—கொண்டாடுவோம்
கோதிலாத பல　　நேச தேச தினம்
வாதிலாத நல　　பாசமாகி மனம்　　(கொ)

அநுபல்லவி

குண்டாடி விழும் வையம்　　திண்டாடும் இச்சமயம்
தொண்டாதி செய்த பயம்　　தந்தார்களுமே உய்யக்　　(கொ)

சரணங்கள்

1 பண்டான நாகரீகம்　　பாழான போதில் லோகம்
உண்டாகா தென்றே வேகம்　　கொண்டே யறத்தில் மோகம்
(முடுக்கு) பார்தனில் உள்ளவர் வாழ்ந்துமே மிஞ்சப்
போர்தனில் தம்பகை போயொழிந் தஞ்சச்
சேர் தரும் ஆங்கிலர் செம்மையின் நெஞ்சத்
தார் தரு வெம் மறம் அவனியர் கொஞ்சக்　　(கொ)

2 தாம் ராஜியம் அழிந்து　　சாம்ராஜியம் இழந்து
போம் ராஜியம் ஆனாலும்　　நாம் ராஜி செய்யோமென்று
(முடுக்கு) தத்துவ மோடறம்　　நித்தமும் உய்ந்திடப்
புத்தரவாம் பகை பொய்த்துமே நைந்திட
மெத்தவும் உத்தமர் ஆங்கிலருந்திடம்
உற்றிடு வெஞ்சமர் முற்றிலும் வென்றிடக்　　(கொ)

3 சிங்கந்தனை எதிர்த்துப்　　பங்கமுறு நரி போல்
எங்கும் பகை விதிர்த்து　　மங்கும் வகை யதிர்த்துச்
(முடுக்கு) செப்பரு நற் புகழ் மிக்கசெஞ் சேனை
துப்பறு வஞ்சக ஹிட்லர்என் பானை
ஒப்பியே போர்புரி ஜர்மனி யானை
இப்பொழு தோட்டிய மித்திடுந் தானைக்　　(கொ)

4 பண்டம் ஆயுதம் பணம்　　அண்டம் பிழைக்கும் வண்ணம்
கொண்டே யளிக்கும் குணம்　　கூடமரிக்கா திண்ணம்
(முடுக்கு) பாதகனகிய கோதுறு பாவி
தீதுறு காதகன் ஹிட்லரை மேவி
போதுற அன்னவன் பொய்யுறும் ஆவி
வாதுசெய் வார்அவர் தம்படை ஏவிக்　　(கொ)

5 ஜப்பான் எனும் அரக்கன்　　நிப்பான் என்பான் இறக்கத்
தப்பான் என்றே சிறக்க　　இப்பால் நின்றே உறக்கச்
(முடுக்கு) சாடி யோர் ஆண்டுகள் சாலவும் ஐந்தே
நீடிய போர் தனை நித்தமும் உய்ந்தே
கோடிய சீனர்கள் கூடிட விந்தை
யேர்டி வண் செய்குவர் நாடியு கந்தே　　(கொ)

6 ஆங்கிலரும் ருஷ்யரும்　　பாங்கின் அமெரிக்கரும்
ஓங்கிடுஞ் சீனர்களும்　　தாங்கு முப்பது தேசம்
(முடுக்கு) அச்சம தென்பது சாலவ கன்று
அச்செனு வன் பகை மிச்சமே கொன்று
துச்சம தாக தொலைச்சுமே வென்று
இச்சகம் உய்ந்திட மெச்சியும் நின்று　　(கொ)



பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| படம் : ஸ்டாலின் .. .. .. .. | 1 |
| சம நாடுகளுக்குள் சகோதரத்துவம் .. .. | 1 |
| பாட்டு : நேசதேச தினக் கொண்டாட்டம் .. | 2 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 |
| இந்தியப் படைகளுக்குப் புகழ் மாலை .. .. | 4 |
| சென்னைப் படைகளுக்கு சைப்ரஸ் நன்கொடை. | 4 |
| டிபென்ஸ் கடன் பத்திரங்கள் வாங்க வேண்டியது அவசியம்.. .. .. .. .. | 5 |
| அடிமேல் அடி .. .. .. .. .. | 6 |
| யுத்த முயற்சியும் சாரணர்கள் பெருந் தொண்டும் .. .. .. .. .. | |
| தொழிலாளர் பகுதி : "பலே ரஷ்யா" பொருளாதாரத் திட்டம் .. .. .. .. | 8 |
| இந்தியப் படைகளிடம் ஜெர்மானியர்கள் பயம் .. | 9 |
| இரசாயன எருக்கள் .. .. .. .. | 10 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**அரக்கான் போர் : தோற்றது ஏன் ?** அரக்கான் போரைக் குறித்து பிரமாதப்படுத்து கிறது அச்சு நாட்டு ரேடியோ. குறிப்பாக, துனிசியாவில் இத்தாலிய ஜெர்மன் படைகள் படு தோல்வியடைந்த பிறகு, இந்த அச்சு ரேடியோ பிரசாரம் அபரிமிதமாகயிருக்கிறது. இரண்டு வாரங்களுக்கு முன்பு பெர்லினிலிருந்து ஆங்கிலத்தில் வானொலிப் பிரசங்கம் செய்த விமர்சகர் ஒருவர் மாங்டாவை ஜப்பானியர் கைப்பற்றியதைக் குறித்துப் பேசியபோது, "பர்மாவில் கடைசியாக பிரிட்டிஷாருக்கு சொந்தமாயிருந்த கல்கோட்டைபோன்ற மாங்டாவை ஜப்பானியர் கைப்பற்றியதிலிருந்து, கிழக்கே ஜப்பானியர்களின் பலம் எவ்வளவு ஓங்கி வளர்ந்து வருகிறதென்று விளங்கும்" என்று குறிப்பிடுகிருர். பாதுகாப்பை முன்னிட்டுத் தான் அரக்கான் போராட்டம் நடைபெறுகிறதென்று அப்போதைக்கப்போது எடுத்துக் கூறப்பட்டு வந்திருக்கிறது. ஆக்யாபைத்தளமாகக்கொண்டு ஜப்பானியர்கள் இந்தியாவைத் தாக்குவதற்கு முடியாதபடி தடுப்பது தான், நேச நாடுகளின் அடிப்படையான நோக்கம். இந்த நோக்கம் ஈடேறிவிட்டது. நாடு பிடித்தோமா என்று பார்த்தால், உண்மையிலே இது ஒரு தோல்வி என்று சொல்லலாம். இந்தத் தோல்வியை நேச நாட்டார் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுவிட்டார்கள். வட ஆப்பிரிக்காவில் மகத்தான நாசமடைந்த அச்சு நாடுகள் அந்தத் தோல்வியை மறைக்கும் பொருட்டுச் செய்த பிரசாரத்தையும், நேசநாடுகள் பர்மாவில் தம் தோல்வியை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுவதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இருசாராரின் மனப்பான்மையும் நன்கு விளங்கும்.

அரக்கான் போராட்டம் மிகவும் அற்பமானதாயிருந்த போதிலும், அங்கே ஏற்பட்ட தோல்விக்குக் காரணம் என்ன என்பது பற்றிய விவாதங்கள் அதிகமாக நடைபெற்றன. இரண்டு காரணங்களைக் குறித்து வெகுவாக விவாதித்தார்கள். (1) போராடிய படைகள் நன்ருய்ப் பயிற்சி பெற்றவை தானு ? (2) போக வர ஆறுகளைத் தகுந்தபடி பயன் படுத்திக்கொண்டார்களா ? இந்தக் காரணங்களைக் குறித்து நாம் ஆராயப் புகும் முன்பு, போராட்டத்தின் போக்கு எப்படி யிருந்தது என்று கவனிப்போம். இந்தப் போராட்டத்தை 6 கட்டங்களாகப் பிரிக்கலாம் :—

1. ஜப்பானியர்கள் ஆயத்தமில்லாதிருந்த பூதிடாங் மாங்டானை, நாம் முனைேறி பிடித்துக்கொண்டோம்.

2. டான்பேய்க்-ரேதிடாங்-கியுக்தா லைனில், ஜப்பானியர்கள் கடுமையாக எதிர்த்துங் கூட நாம் மேலும் முன்னேறினோம்.

3. டான்பெய்க், ரேதிடாங் ஆகிய இரண்டு இடங்களிலுமுள்ள ஜப்பானிய ஸ்தானங்களைத் தாக்கினோம்; ஆனால் வெற்றிபெறவில்லை.

4. கலடா பள்ளத்தாக்கி லிருந்து ஜப்பானியர் எதிர்த்துத் தாக்கினார்கள். ரேதிடாங்கிலிருந்த நம் படைகளை வளைந்து கொண்டார்கள்.

5. மாயு ஆற்றைக் கடந்து ஜப்பானியர், எதிர்த்துத் தாக்கி டான்பெய்க்கை வளைத்துக் கொண்டார்கள்.

6. மாயூ மலைகளைக் கடந்து பூதிடாங் மாங்கடா ரோட்டை வெட்டிவிட்டனர்; இதன் பயனாக பூதிடாங் ஜப்பானியர் வசமானது; மாங்டாவைக் காலி செய்யும்படி நேர்ந்தது.

**போக்கு வரவுக் கஷ்டங்கள்.** டான்பெய்க்கையும் ரேதிடாங்கையும் வளைந்துகொள்ளும்படி நாம் ஏன் அனுமதித்தோம் ? இங்கே அவர்கள் தகுந்த தற்காப்போடு அமைந்து கொள்ளும்படி ஏன் விட்டுவைத்தோம் ? போக்கு வரவுக் கஷ்டந் தான் இவற்றிற்குக் காரணம். ஆற்றின் முகத்துவாரத்திலிருந்து மேல் நோக்கிக் கப்பல்கள் போய் போராடுவது சுலபம். ஆற்றின் தலைப்பிலிருந்து கீழ் நோக்கிப் போராடுவது கஷ்டம். எப்படி என்றால் மேல் நோக்கிப் போராடும் கப்பல்களுக்கு உதவியாக, எத்தனைக் கப்பல்கள் வேண்டுமானாலும் கடலிலிருந்து தருவித்துக் கொள்ளலாம். இந்த வசதி தலைப்பிலிருந்து போராடும் கப்பல்களுக்குக் கிடையாது. அன்றியும் ஒரே கரையோரமாக, பல ஆறுகள் அரக்கானில் சங்கமமாகின்றன. அந்தப் பல ஆறுகளிலுமுள்ள படைக் கப்பல்களை எல்லாம் திரட்டி ஒரே ஆற்றில் செலுத்திப் போராடக்கூடும். இந்த முறையை ஜப்பானியர்கள் கையாண்டதனால் தான் நம் படைகள் டான்பெய்க்கிலும் பூதிடாங்கிலும் நின்றுவிட வேண்டியதாயிற்று. ஆக்யாபுக்கு எதிரிலுள்ள பௌர் முனைக்குப் போய்ச்சேர, போதுமான படைகள் நம்மிடமிருந்தன. ஆனால், அந்தப் படைகளை அங்கேயே நிறுத்திவைப்பது தான், கஷ்டம். நாம் போக்கு வரவு வசதிகளை விருத்தி செய்து கொண்டிருக்கும்போது, ஜப்பானியர்கள் தங்களை பலப்படுத்தி ஊன்றிக் கொண்டார்கள். கலடாவில் நம்மிடமிருந்த படைகள் கொஞ்சம். ஆனால் ஜப்பானியர்களோ, ஏராளமான படைகளைத் திரட்டலாம். ஆற்றைக் கடக்கலாம்; ரேதிடாங்குக்குப் போகும் நம் ரோட்டைத் தாக்குவதாகப் பயமுறுத்தலாம்.

ஜப்பானியர்களும் ரோடு வழியாக வந்து தான் தாக்கினார்கள் என்ருல், நாம் ஏன் அவர்களைத் தடுத்திருக்கக் கூடாது என்னும் கேள்வி எழத் தான் செய்யும். நமது ரோடுகள் நெடுகவும் அவற்றின் தலைப்பிலும், படைகளை வெகுவாகத் திரட்டிவைத்துப் பாதுகாக்கத் தக்கபடி அந்த ரோடுகள் பலமானவையாயில்லை. அதனால் தான் ரேதிடாங்கைக் காலி செய்யும்படி நேர்ந்தது. இதே முறையைத் தான் மாயூ தீபகற்பத்திலும் எதிரிகள் கையாண்டார்கள். ஆகவே, மாங் கடா-பூதிடாங் லைனுக்கு நாம் திரும்பிப் போகவேண்டி நேர்ந்தது. ஆனால் மாங்டாவையுங்கூட ஏன் நாம் காலி செய்தோம் ? இங்கேயும் அதே தந்திரத்தை ஜப்பானியர்கள் கையாளுவார்கள் என்றதனால் தான் காலி செய்தோம். ஏனென்ருல் மாங்டாவிலிருந்து, மாயூ மலையின் மேற்குப் பக்கத்தில் நெடுக ஒரு ரோடு போகிறது. மாயூ மலைக்குக் கீழ்புறந்தான் மாயூ ஆறு ஓடுகிறது. அப்போதிருந்த நிலைமையில், மாங்கடாவை நேர் முகமாகத் தாக்க வேண்டிய அவசியமே ஜப்பானியர்களுக்குக் கிடையாது. ஆற்றுப் பாதையிலிருந்த பெரும் படைகளை ஒழித்துக் கொண்டே கடைசி மலைவரையிலும் போய், அதற்கு மேலும் போகக் கூடிய திறமை மட்டுந் தான் அவர்களுக்கு வேண்டியிருந்தது. மீண்டும் அதே பிரச்சினை தான் எழுகிறது. அதாவது, மாங்கடாவையும், அதற்குப் போகும் ரோட்டையும் பாதுகாக்கத் தக்க அளவிற்கு, நம்மிடம் படைகள் இல்லை. எனவே தான், நாம் மாங்டாவைக் காலி செய்யும்படியான அவசியம் ஏற்பட்டது. சில சிப்பாய்கள், ஜப்பானியர்கள் உள்ள இடங்களுக்குப் போய்ச் சேரலாம். ஆனால், ஆக்யாபிலிருந்து எதிரி போக்கு வரவு லைன் வரையில், போதுமான படைகளை மலைகளில் வைத்திருந்திருக்க முடியாது. இடைவிடாது, ஓய்வு ஒழிவின்றி, இரவில் தூக்கமுமின்றி, 5 மாத காலம் பெரும் படைகள் போராட வேண்டிய நிர்ப்பந்த நிலைமைக்குக் காரணம், சரியான போக்கு வரவு பாதைகள் இல்லாதது தான்.

படைகளுக்குப் பயிற்சியும் மிகவும் முக்கியமானதோர் பிரச்சினை தான். பாலைவனப் போராட்டத்திற்கென்று பழகிய ஒரு படை, காட்டுப் போரிலும் நன்ருகப் போராடும் என்று தீர்மானமாகச் சொல்ல முடியாது. ஜப்பானியர்கள் காட்டுப் போரில் நன்ருகப் பழகியவர்கள். ஒரு ஜப்பானிய டிவிஷனின் ஒரு பகுதிப் படையிலே, காட்டுப்போரில் 5 அல்லது 6 வருஷ அனுபவமுள்ள பலர் இருந்தார்கள்.

**மத்திய பர்மாவில் பிரிட்டிஷ் வெற்றி.** மொத்தத்தில், அரக்கான் போராட்டத்தில் நமக்குத் தோல்வி என்ருலும், அதனால் நன்மைகளும் உண்டு. முதலாவதாக, அரக்கானில் போராட்டம் நடந்து கொண்டிருந்ததனால், ஏற்ற சமயத்தில், ஆக்யாபை ஜப்பானியர்கள் பயன்படுத்த முடியாமற் போயிற்று. இரண்டாவதாக, ஜப்பானின் மிகச் சிறந்த டிவிஷன் படையொன்று மகா கடுமையாகச் சிதறுண்டு போயிற்று. மூன்ருவதாக, ஜப்பானியர்களைப்பற்றியும், அவர்கள் போர் முறைகளைக் குறித்தும் நம் சோல்ஜர்கள் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டார்கள்.

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில், கிழக்கே ஜப்பானியர்களின் பலம் வளர்ந்து கொண்டு வருவதாக பெர்லின் ரேடியோ கூறிய தென்று குறிப்பிட்டோம். சென்ற 3 மாதகாலமாக, மத்திய பர்மாவில், பிரிட்டிஷார், பர்மியர், கூர்க்கர், இந்தியர் ஆகியோரைக் கொண்ட பிரிட்டிஷ் படைகள் வெற்றிகரமாகப் போராடிக் கொண்டிருக்கும்போது, ஜெர்மன் ரேடியோ அப்படிக்கூறுவது எப்படி சரியாகும்." என்ருலும் இது பொது தாக்குதலின் ஆரம்பமாகாது. ஜப்பானியர்களை பர்மாவில் முழுமூச்சாகத் தாக்குவது இனிமேல் தான்.

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஜூன்மீ 4உ. [இதழ் 22


## இந்தியப் படைகளுக்குப் புகழ் மாலை

சுமார் 3½ மாதங்களுக்கு முன்பு இந்திய அரசாங்க சபைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது, டிபுடி பிரதம படைத் தலைவர் ஜெனரல் சர் ஆலன் ஹார்ட்லி, ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியப் படைகளின் வெற்றிகளைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தார். அவர் அப்போது கூறியதாவது —

"நான்காவது ஐந்தாவது இந்திய டிவிஷன்கள், மூன்றாவது இந்திய மோட்டார் பட்டாளம், முதலியவை ஆப்பிரிக்காவில் தலை சிறந்த முறையில் போராடின. இதுபற்றி, இந்தியாவும், சாம்ராஜ்யமும், நேசநாடுகளும் அவற்றிற்கு நன்றி செலுத்த வேண்டும்."

அதற்குப் பிறகு, உலகிலுள்ள, விடுதலை நாடும் எல்லா நாடுகளும் நன்றி செலுத்தத் தக்க பல அருங்காரியங்களைச் செய்து முடித்திருக்கின்றன. மகாவீரத்தோடும் பலத்தோடும் நான்காவது இந்திய பட்டாளம் மாரெத் அரண் போராட்டத்தின் போக்கையே மாற்றிவிட்ட திறமையைக் குறித்து, ஜெனரல் அலெக்சாந்தர், இந்திய படைத்தலைவரான பீல்ட் மார்ஷல் வேவலுக்கு ஏப்ரல் மாதம் 8-ம் தேதி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். வாடி அக்காரித் என்னுமிடத்தில் கிடைத்த பெரும் வெற்றியைப் பாராட்டி பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு பெரும் பாராட்டுச் செய்தியை அனுப்பியிருக்கிறார். அவர், மேன்மை தங்கிய வைசிராய் பிரபுவுக்கு அனுப்பியுள்ள செய்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"மாரெத் போராட்டத்திலும், சமீபத்தில் வாடி அக்காரித் என்னுமிடத்திலும் நடைபெற்ற போராட்டத்தில், நான்காவது இந்தியப் பட்டாளம் செய்து முடித்த அரும்பெருஞ் செயல்களை மிகவும் பாராட்டி அதன் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டு வந்திருக்கிறோம். இந்திய சிப்பாய்களின் புகழ் மிகவும் சிறந்தது. வெல்லமுடியாத கூர்க்கப் படைகளின் புகழும் மிகவும் உயர்ந்தது. மத்திய கிழக்கில் நடைபெற்ற எல்லாப் போராட்டங்களிலும், மகா உன்னதமான முறையில் இவை போராடியதன் பயனாக, அவற்றின் புகழ் மேலும் ஓங்கியது. . . இந்தியப் பட்டாளங்கள் மகாவீரத்தோடு போராடி, அடைந்த வெற்றியில் பங்கு கொள்ளுகிறார்கள் என்பது பற்றி நாம் பெருமை கொள்ளுகிறோம்."

சென்ற 3 வருஷங்களாக மத்திய கிழக்கில் எந்தப் போர்முனையில் இந்தியப் படைகள் இருந்தாலும், அப்போதெல்லாம் அவை பெருங்கீர்த்தி பெற்றன. இந்தியாவின் பண்டைக்கால இராணுவச் சிறப்பு கொஞ்சமும் குறையாதபடி நிலைநாட்டிக் கொண்டன. கேரன், கிஸ்ஸோன், மெஸ்ஸோ, சிடிபரானி, லிபியன் ஓமார், அங்கிலா, ஜாலோ, பீர் ஹகீம், பெங்காசி, மாரெத், வாடி அக்காரித், ட்யூனிஸ் ஆகிய பெயர்கள் வட ஆப்பிரிக்காவில் இந்தியப் பட்டாளங்களின் மகா வீரச்செயல்களை ஞாபகப்படுத்துவனவாயிருக்கின்றன.

ஐந்தாவது இந்தியப் படை, மிகச் சிறந்த முறையில் போராடி, இத்தாலிய எரித்ரியாவைக் கைப்பற்றியது. இங்கே நடந்த போராட்டத்தில் தான், நான்காவது இந்திய பட்டாளம் அயோஸ்டா பிரபுவைக் கைதியாகப் பிடித்தது. இதே நான்காவது இந்தியப் பட்டாளந்தான் ஜெனரல் பான் ஆர்னிமைப் பிடித்து ஆப்பிரிக்கப் போராட்டதிற்கே ஒரு முடிவு கண்டது. இதுபற்றி லண்டன் "ஈவினிங் ஸ்டாண்டர்ட்" என்னும் பத்திரிகை எழுதியதாவது—

"ஆரியர்கள் என்று தம்மைக் கூறிப் பெருமை கொள்ளும் ஒரு இனத்தார், ஆரியரல்லாதவர்கள் என்று கூறப்படுகிறவர்களிடம் தோற்றது, தற்செயலாக ஏற்பட்ட தோல்வியல்ல. தம்மை ஆரியர்கள் என்று கூறிக்கொள்ளுகிறவர்கள் மற்றவர்களை இழிவு படுத்துகிறார்கள். இவர்களை நான்காவது இந்தியப்படை, கைதிகளாகப் பிடித்தது மிகவும் பொருத்தந் தான்."

இந்தியர்கள், வெல்லமுடியாத எதிரிகள் என்பதை ஜெர்மானியர்கள் உணர்ந்து கொண்டார்கள். பெங்காசியிலிருந்து ஜெர்மானியர்கள் பின்வாங்கிக் கொண்டு போகும்போது ஜெர்மன் இரகசிய உத்தியோகஸ்தர் ஒருவர் எழுதிய குறிப்பொன்று அகப்பட்டது. அதில், "ஏழாவது இந்திய மோட்டார் பட்டாளமும், நான்காவது இந்தியப் பட்டாளமும் பாலைவனத்திலிருக்கிற வரையிலும், நாம் மகா எச்சரிக்கையோடிருக்க வேண்டும். நம்மைத் தாக்கக்கூடியவர்கள் அவர்கள் தான். பிரிட்டனின் மகத்தான பாலைவனப் படையில் இரண்டு எஃகுப் பட்டாளங்களாக இவை விளங்கின. எகிப்தின் முன்னணிப் பாதுகாப்பாயிருந்ததும் இந்த பட்டாளங்கள் தான். பிறகு சிடி பரானியில் நடைபெற்ற போராட்டத்தில் இந்த இரண்டு பட்டாளங்களும் 5 இத்தாலிய 'பட்டாலியன்'களை நாசஞ்செய்து விட்டன. இவை, பீர ஹகீமில் ஸ்திரமாக ஊன்றிக் கொண்டு பீரங்கிப் போர் செய்ததன் பயனாக, எல் அலமீனை நோக்கிவர ஒட்டாமல் ரோமல் தடுக்கப்பட்டார். பாலைவனத்திற்குக் குறுக்கே 2,000 மைல் தூரம் ஜெனரல் மண்ட்காமரி நடத்திக் கொண்டு வந்த படைகளின் முதல் அணியில் இருந்ததும் இந்தப் படைகள்தான். வட ஆப்பிரிக்கப் போராட்டம் முடிவுபெறுங் கட்டத்தில், முக்கியமான பகுதிக்கு இந்த இரண்டு பட்டாளங்களும் அனுப்பப்பட்டன. இங்கே அவை வெற்றி மாலை சூடின. "ஈவினிங் ஸ்டாண்டர்ட்" பத்திரிகை எழுதுவதாவது—

"எங்கெல்லாம் பிரிட்டிஷார் போராடுகிறார்களோ, அங்கெல்லாம் இந்தியர்கள் அவர்களோடு கலந்திருக்கிறார்கள். எல்லா விடங்களிலும் பிரிட்டிஷ் படைகளுக்குப் பெருமிதந் தேடிக் கொடுப்பவர்கள் இவர்கள் தான். புத்திசாலிகள்; சிக்கலான யுத்தப் பிரச்சினைகளைக் குறித்து முழுதும் உணர்ந்து கொண்டவர்கள். ஆபத்துக் காலத்திலும் நன்றியுடன் நடந்து கொள்ளுகிறவர்கள். இந்த சந்தர்ப்பங்களில் தான், அவரவருடைய சாதி மத வேற்றுமைகளைவிட அவரவருடைய மனப்பான்மையின் போக்குத் தெளிவாகத் தெரியவரும்."

பிரிட்டிஷ் படைகளின் சிறந்த மணிகள்போல் இந்தியப் படைகள் இந்தப் போரில் மட்டும் விளங்கினார்கள் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் சென்ற மகாயுத்த காலத்திலும் இப்படியே விளங்கினார்கள். 1914-ம் வருஷம் யுத்தப் பிரகடனம் செய்யப்பட்ட ஒரு மாதத்திற்கெல்லாம் தேர்ச்சி பெற்ற இந்தியப் படையொன்று பிரான்சுக்குக் கப்பல் ஏறியது. அங்கே போர் அணிகளில் காலியான இடங்களிலெல்லாம் இந்தியப் படைகள் போய் மகா வீரத்தோடு அமைந்து கொண்டன. மெசொபொட்டோமியா, கல்லிப்போலி, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் நடைபெற்ற போராட்டத்தில் மிகச் சிறந்த பெயர், வாங்கிவிட்டது. பிரான்ஸ், பெல்ஜியம், சலோனிக்கா, எகிப்து, சூடான், மெசொபொடோமியா, எடன், கிழக்காப்பிரிக்கா, வடமேற்குப் பாரசீகம், தெற்குப் பராசீகம், வட சீனா ஆகிய நாடுகள் பெரிதும் சிதறிக் கிடக்கின்றன. அங்கெல்லாம், நடைபெற்ற போராட்டதில், 12½ லட்சம் பேர்கள் போராடினார்கள்.

இந்த யுத்தத்தில், நார்வே, ப்ளாண்டர்ஸ், கிரீஸ், க்ரீட், மலேயா, பர்மா, முதலிய நாடுகளில் இவை போராடின. ஆபிரிக்காவிலிருந்து எதிரிகளை இவர்கள் விரட்டிவிட்டார்கள். இந்தியாவின் தலைசிறந்த இராணுவச் சிறப்பிற்குத் தகுந்த மற்றொரு அத்தியாயமாக இது அமையும்.

## சென்னைப் படைகளுக்கு சைப்ரஸ் நன்கொடை

மஜூரா கம்பெனி லிமிடெட்டுக்கு சைப்ரசைச் சேர்ந்த நிகோசியா என்னுமிடத்தில் ஒரு கம்பெனியார் ஏஜெண்டுகளாயிருக்கிறார்கள் அவர்கள் சென்ற 3—4—43-ம் தேதி தூத்துக்குடியிலுள்ள தம் கம்பெனியாருக்கு அனுப்பிய கடிதத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்கள் :—

"இந்த யுத்தத்தில் இந்திய சிப்பாய்களின் போர்த்திறமை, கஷ்டங்களைத் தாங்கும் உரம், கெட்டிக்காரத்தனம், கடமையை நிறைவேற்ற வேண்டுமென்பதில் மிகுந்த அக்கரை கொண்டிருத்தல், ஆகியவை பற்றி பல முறை அவர்களுடைய படைத் தலைவர்கள் புகழ்ந்திருக்கிறார்கள். சமீபத்தில் முதல் மந்திரியாரே புகழ்ந்தார். பொது ஜனங்களாகிய நாம் அவர்களைப் பாராட்டத் தான் செய்யலாம். அவர்களுடைய தைரியத்திற்காகவும் தியாகத்திற்காகவும் நன்றி கூறலாம் அவர்களை நம் பாராட்டுவதற்கு ஒரு சிறு அறிகுறியாக, அவர்களுடைய நன்மைக்கும் சந்தோஷத்திற்கும் பயன்படவேண்டி 25 பவுன் நன்கொடையனுப்பியிருக்கிறோம்."

இந்தக் கடிதத்தை யொட்டி, மஜூரா மில்ஸ் கம்பெனியார் 1 ரூபாய்க்கு 1 ஷில்லிங் 5 29/32 பென்சு வீதம் கணக்கிட்டு ரூ. 335-1-3-க்கு ஒரு செக், மேன்மை தங்கிய சென்னை கவர்னர் யுத்த நிதிக் காரியதரிசிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.



# டிபென்ஸ் கடன் பத்திரங்கள் வாங்க வேண்டியது அவசியம்

## ஜில்லாக்களில் "சேமிப்பு முயற்சி" ஆரம்பிக்க வேண்டும்

[மிஸ்டர் சி. எச். மாஸ்டர்மான், சி.ஐ.இ., ஐ.சி.எஸ்., சமீபத்தில் விசாகப்பட்டினத்தில் செய்த ஒரு பிரசங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.]

இந்தக் காலத்தில் உங்களில் பெரும்பாலானவர்கள் சிக்கனமாக வாழ்ந்து பெருமளவில் உதவலாம். நீங்கள் மிச்சப்படுத்தும் தொகைகளைக்கொண்டு டிபென்ஸ் கடன் பத்திரங்கள் வாங்கலாம். தபாலாபீஸ் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள் போன்றவற்றை வாங்கலாம். யுத்த நிதிக்கு சென்னை மிகச் சிறந்த முறையில் உதவியிருக்கிறது. யுத்த நிதிக்கு உதவிய ஜில்லாக்களில் முதல் ஸ்தானம் வகிப்பவற்றுள் விசாகப் பட்டனமும் ஒன்று. படைகளுக்கு ஆட்களை உதவுவதிலும் சென்னை மாகாணம் தலை சிறந்து விளங்குகிறது. அதுபோலவே, ஜில்லாக்களில் விசாகப்பட்டினமும் முக்கியமான தொன்றாக விளங்குகிறது. யுத்தத்திற்குப் பிறகு, நாட்டை எப்படித் திருத்தியமைக்க வேண்டுமென்பதுபற்றி, ஆலோசிக்க நடைபெற்ற மகாநாட்டிற்கு நான் தலைமை வகித்தேன். ஒவ்வொரு ஜில்லாவிலுமிருந்து எத்தனைப் பேர்கள் படையில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதுபற்றி அச்சமயம் நாங்கள் பரிசீலனை செய்தோம். இதில், விசாகப்பட்டினம் 4-வது ஸ்தானம் வகிக்கின்றது. முதல் மூன்று ஸ்தானங்களும் முறையே மலையாளம், வட ஆற்காடு, திருநெல்வேலி ஜில்லாக்களுக்குரியன. ஆனால், டிபென்ஸ் கடன் பத்திரங்களோ, மற்ற அரசாங்க சேம நிதியிலேயோ, மற்ற மாகாணங்களை விட, சென்னை மாகாணம் பின்னணியிலிருக்கிறது. விசாகப்பட்டினம் மேலும், பின்னணியிலிருக்கிறது. ஆனாலும், தற்காலத்தில், சாதாரணமான ஒருவர் யுத்த முயற்சிக்கு மிகவும் முக்கியமாக உதவக் கூடியது இதுதான்.

### டிபென்ஸ் கடன் பத்திரங்கள் வாங்குங்கள் :

டிபென்ஸ் கடன் பத்திரங்களை ஏன் "வாங்கவேண்டும்" முதல் காரணம் மிகவும் முக்கியமானது. யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தும்படி உங்கள் பணத்தை அரசாங்கத்திற்கு கடன் கொடுத்து உதவுகிறீர்கள். இரண்டாவது காரணம் உங்கள் பணத்தை நல்ல புள்ளிக்குக் கடன் கொடுக்கிறீர்கள். உங்கள் பணத்தைக் கொண்டு டிபென்ஸ் கடன் பத்திரங்கள் வாங்குவதனால் மிகவும் கஷ்டமும் சிக்கலுமான விலைவாசிகள் உயர்வதைத் தடுக்கப் பெரிதும் உதவுவீர்கள். முதல் இரண்டு காரணங்களையும் விளக்கத் தேவையில்லை. கடைசி காரணத்தை மட்டும் விளக்க வேண்டியிருக்கும்.

எளிய நடையில் சொல்ல வேண்டுமானால், இந்தியாவில் சில பொருள்கள் கிடைப்பதில்லை; ஆனால் அதே சமயத்தில் ஏராளமான பணம் செலாவணியிலிருந்து வருகிறது. விலை வாசிகள் உயருவதற்கு இவை இரண்டுந் தான் காரணம். முதல் காரணத்திற்கு அதாவது சில பொருள்கள் கிடைப்பதில்லை என்பதற்கு, ருசுவே தேவையில்லை. பொருள்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறதென்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். யுத்த நிலைமை தான் இதற்குக் காரணம். யுத்தத்திற்கு முன்பு, எண்ணெய், ரப்பர், அரிசி முதலியவற்றை பர்மா, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களிலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்து கொண்டிருந்தோம். இந்நாடுகளை ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இதுவும் இதற்கொரு காரணம். வேறு நாடுகளிலிருந்து கொண்டு வந்து இறக்குமதி செய்வதற்கும், கப்பல்களில் இடமில்லை. ஏனென்றால், யுத்தத்திற்குத் தேவையான முக்கியமான பொருள்களை மட்டும் இறக்குமதி செய்யத் தான் கப்பல்களில் இடம் கிடைக்கிறது. இதுபற்றி நாம் எதுவும் செய்ய முடியாது. உலகமெல்லாம் நடைபெறும் இந்தப் பரந்த யுத்தத்தின் பலனாக, இப்படிப்பட்ட நிலைமை தான் ஏற்படும்.

### போக்கு வரவுக் கஷ்டங்கள்.

மாகாணத்தின் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் பொருள்கள் கிடைக்கவில்லை யென்றால், அது வேறு விஷயம். நாட்டிற்குள்ளாகவே போக்கு வரவுக் கஷ்டங்கள் உண்டாவதால் தான் இது ஏற்படுகிறது. மாகாணம் முழுதும் மேலான முறையில் பொருள்களை விநியோகிப்பதற்கு என்னென்ன முறைகளைக் கையாளக் கூடுமோ அவற்றை எல்லாம் கையாளுகிறார்கள். யுத்த காலத்தில், ரயில் வழியாகவும் மோட்டார் வழியாகவும் போக்கு வரவு மிகவும் கஷ்டமானது என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். போக்கு வரவு 'ரீஜனல் போர்டு' அங்கத்தினராகவும் நான் இருக்கிறேன். ஆகவே போக்கு வரவு மிகவும் கஷ்டம் என்று எனக்குத் தெரியும். இந்த நிலைமையை இலகுவாக்கும் பொருட்டு என்னென்ன செய்யக் கூடுமோ அத்தனையும் செய்யப்படுகின்றன என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.

இரண்டாவது காரணம் ஏராளமான பணம் செலாவணியிலிருக்கிறது. இது உண்மைதான் என்று ஒரு சிலருக்காவது நாம் மெய்ப்பித்துக் காட்டவேண்டும். இதற்குச் சில சாதாரண உதாரணங்களை நான் சொல்லுகிறேன். கிஸ்தி வசூல் இப்போது அதிகமாக ஆவதைப் போல, ஒரு போதும் இதற்கு முந்தி ஆனதில்லை. வியாபாரம் நடந்து கொண்டிருக்கும் போதேயே தம் வருமான வரிகளை முன்னதாகவே கட்டி விடுகிறார்கள். இதற்குக் காரணம் தம்மிடமிருக்கும் ஏராளமான பணந்தான். கையில் பண மிருக்கும் போதே, கட்டி விடவேண்டு மென்று நினைக்கிறார்கள். கள்ளும் சாராயமும் முன்னையவிட இன்னொரு பங்கு அதிகமாக விற்பனை யாகிறது. இவற்றிலிருந்து எல்லா வகை மக்களும் செலவிட கையில் பணம் வைத்திருக்கிறார்கள் என்று தெளிவாகின்றது.

இவர்கள் தம் வசமுள்ள பணத்தை மிகவும் அவசியமில்லாத துறைகளில் செலவிடுவதற்குப் பதிலாக, உண்மையிலே தேவையான அளவுப் பொருள்களை விட, மிகவும் அதிகமாய் வாங்கிச் சேர்த்து வைத்துக் கொள்ளாமல், அத் தொகைகளை மிச்சப் படுத்தும்படித் தூண்டுவது மிகவும் முக்கியம். இந்த யுத்த காலத்தில், அனாவசியமாக, தமாஷாக்களிலும், கலியாணங்களிலும், திருவிழாக்களிலும் இன்னும் ஜனங்கள் பணத்தைச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தான் நான் நினைக்கிறேன். உங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளை மட்டும் வாங்கிக் கொண்டு, மீதியுள்ள உங்கள் பணத்தை எல்லாம் டிபென்ஸ் கடன் பத்திரத்தில் போட்டு வையுங்கள். அப்படிச் செய்வீர்களானால், உண்மையிலேயே சிறந்த தொண்டாற்றியவர்களாவீர்கள். யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த இந்தத் தொகை கடனாக அரசாங்கத்திற்கு உதவுகிறது. அன்றியும், அதிகப்படியிருக்கும் தொகையில் ஒரு பகுதியைச் செலாவணியில் விடுகிறீர்கள். எனறாலும், தேவை யில்லாத எந்தப் பொருளையும் இந்தத் தொகையைக் கொண்டு வாங்குவ தில்லை. இவ்வாறாக, நாளடைவில், விலைவாசிகள் உயருவதை தடுக்க, பெரிதும் உதவியவர்களாவீர்கள்.

### விலைவாசிகள் உயர்வுப் பிரச்சினை.

இப்போது எல்லோரும் விலைவாசிகள் உயர்ந்து விட்டதைக் குறித்துத் தான் கவலை கொண்டிருக்கிறார்கள். இது பற்றி எத்தனையோ பிரகடனங்கள் வெளிவந்து விட்டன. என்றாலும், பொதுமக்கள் தம் நிலை இன்னது என்று உணர்ந்து கொள்ளக் கூடவில்லை. அவர்களுக்குச் சுருக்கமாக பதில் சொல்லி விடலாம். அதாவது, "உலக யுத்தத்தில் நீங்கள் சிக்கி யிருக்கிறீர்கள். இந்தச் சமயத்தில் எல்லாம் வழக்கம் போல் நடைபெறு மென்று நீங்கள் எதிர் பார்க்க முடியாது." சில பொருள்கள் கிடைக்காது போகலாம். இது நீங்கள் எதிர்பார்க்கக் கூடியது தான். விளையும் இடங்களிலிருந்து செலவாகும் இடங்களுக்குப் பொருள்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் கஷ்டங்கள் ஏற்படும் என்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டும். ஆகவே பொருள்கள் அதிக விலைக்கு விற்கும் என்றும் எதிர்பார்க்க வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, விலைவாசிகள் உயருவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அதாவது விற்பனைக்குத் தேவையான அளவு பொருள்கள் இல்லை. பொருள்கள் விலை கொடுத்து வாங்குவதற்கு, அதிகப் பணம் கையில் இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களும் யுத்தத்தினால் ஏற்பட்டவை. சில பொருள்கள் கிடைக்காமலிருப்பதற்குக் காரணம் நான் ஏற்கெனவே தெரிவித்தபடி, பர்மா முதலிய நாடுகள் எதிரி கைக்குப் போய்விட்டது தான். அன்றியும் மற்ற நாடுகளிலிருந்து பொருள்களைத் தருவித்து இறக்குமதி செய்ய முடிவதில்லை. என்றாலும், பணச் செலாவணி பெருகியிருக்கிறது. இதற்கு காரணம் யுத்த சபைகளுக்காகவும் இராணுவ வேலைகளுக்காகவும் ஏராளமான தொகைகளைக் கொடுப்பதுதான்.

### நம் தேவைகளைப் பகிர்ந்து கொண்டு சேமிக்க வேண்டும்.

இந்த நிலைமையைப் போக்க ஒரு சாதாரண மனிதர் என்ன செய்ய வேண்டும் என்பதுதான் பிரச்சினை. இதற்கு நாம் சிக்கனமாக வாழ வேண்டும்; பொருள்களைச் சேமித்து வைக்கக் கூடாது. அதன் மூலமாக நாம் மிச்சப்படுத்தும் தொகையைக் கொண்டு, டிபென்ஸ் கடன் பத்திரங்கள் வாங்க வேண்டும். அதாவது நம் தேவைகளுக் கேற்றபடி பொருள்களை நாம் பகிர்ந்து கொண்டு, அதனால் நாம் மிச்சப்படுத்துவதைக் கொண்டு டிபென்ஸ் கடன் பத்திரங்கள் வாங்க வேண்டும்.

இதற்கு முன்பு இங்கே மற்ற காரியங்களுக்காக நான் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். என் வேண்டுகோள்களுக்கு இணங்கி உதவினீர்கள். இப்போது நான் விடுக்கும் வேண்டுகோளையும் நிறைவேற்றுவீர்கள் என்று உறுதியாய் நம்புகிறேன். நான் வெளியூர்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது, டிபென்ஸ் கடன் பத்திரங்களை வாங்கும்படி பொதுஜனங்களைக் கோர வேண்டும் என்பதற்காகவே, என்னை சென்னை மாகாண டிபென்ஸ் கடன் கமிட்டியில் ஒரு அங்கத்தினராக இருக்க வேண்டு மென்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் என்னைக் கோரினார்கள். வெளியூர்களுக்குள்ளாக, இந்தத் துறையில் விசாகப்பட்டினந் தான் முதல் ஸ்தானம் வகிக்கின்றது என்று நான் சொல்லும்படி நீங்கள் செய்ய வேண்டும். வியாபாரத்திலும், கண்டிராக்ட்களிலும் பெரும் பொருள் திரட்டுகிறவர்களில் பலர் இன்று நான் விடுத்த வேண்டுகோளை நேரிடக் கேட்கவில்லை யென்று எனக்குத் தெரியும். இங்குள்ள ஜில்லாக் கமிட்டியார், இந்த ஜில்லாவில், "சேமிப்பு முயற்சி" யைத் தீவிரமாக ஆரம்பிக்க வேண்டும். இது போலவே சென்னை நகரிலும் ஆரம்பித்துவிட்டார்கள். யுத்த முயற்சிக்கு உதவுவதற்கும், விலைவாசிகளைக் குறைப்பதற்கும் இதைவிட வேறெதுவும் நீங்கள் செய்ய முடியாது.



# அடிமேல் அடி

## அடி, இடிபோலானல் ?

'அடிமேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும்' என்பார்கள். ஆனல் அடி, இடி போலானல், அம்மி மட்டு மில்லை, அது இருக்கும் இடமே தகர்ந்து, பாழாகி விடும் என்பதில் சந்தேகமா ?

இப்பொழுது ஹிட்லரது ஜெர்மனி மீதிலும், முஸோலினியின் இத்தாலி மீதிலும் அடிமேல் அடி பேரிடிகள் போல்தான் விழுந்து கொண்டிருக்கின்றன. அது காரணமாக, ராணுவ முக்யம் வாய்ந்த நகரங்கள் பல பாழாகிக் கொண்டிருக்கின்றன. இது இப்படியே வளர்ந்துகொண்டு வந்தால், கூடிய சீக்கிரமே ஹிட்லரும், முஸோலினியும் இருந்த இடம் தெரியாமல் போய்விடுவார்கள் என்று தைரியமாகச் சொல்லலாம். ஐரோப்பாவிலும், உலகின் பல்வேறு பாகங்களிலும் சென்ற மூன்றே முக்கால் வருடங்களாக ரத்தம் ஆருகக் கொட்டி ஓடுவதற்குக் காரணமாக இருந்த இந்த அச்சு நாட்டுத் தலைவர்களையும், அவர்களது சிருஷ்டிகளான நாஜிஸம், பாஸிஸம் என்ற இரு பிசாசுகளையும் நிர்மூலமாக்க வேண்டு மென்பதே நேச தேசத்தாரின் யுத்த லக்ஷ்யமாகும். இந்த லக்ஷ்யம் எவ்வளவு சீக்கிரமாக நிறைவேறுகிறதோ அவ்வளவு விரைவினில் உலகோருக்கு மன நிம்மதியும், சமாதானமும் ஏற்படும். இந்த நிம்மதியையும், சமாதானத்தையும் நம்மனைவருக்கும் விரைவில் பெற்றளிக்கவே பிரதம மந்திரி சர்ச்சிலும், ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், முக்ய மான ராணுவத் தலைவர்களைக் கூட வைத்துக் கொண்டு, நாள் கணக்கில், வெகு விரிவாகப் பேசி, பெரியதொரு திட்டம் போட்டிருக்கிருப் போல் தோன்றுகிறது.

இந்தத் திட்டம் கூடிய சீக்கிரமே அமுல் படுத்தப்படலாம். 'யானை வரும் பின்னே, மணி யோசை வரும் முன்னே' என்கிற தினுஸிலே, இந்தப் பெரிய திட்டம் பின்னல் வருகிறது என்பதை மேற்கு ஐரோப்பாவிலும், இத்தாலி மீதும் அதை அடுத்துள்ள முக்யமான தீவுகள்மீதும் நேச தேச விமானிகள் குண்டுகளை அக்ஷதைகள் போலத் தூவி வருவதன் மூலமாக அறிவித்துக் கொண்டிருக்கிருர்கள.

ஹிட்லருக்கு திமிரையும், தைரியத்தையும் கொடுத்தவை, ஜெர்மனியில் ரகசியமாக, இருபது வருட காலமாக வளர்க்கப்பட்ட ராணுவ, விமான பலங்கள் தான். அவற்றின் உதவியால் அவர் இந்த யுத்த ஆரம்பத்தில் அடைந்த வெற்றிகள், அவரது தலையைத் திருப்பி விட்டன. தம்மையே மறந்தார் அவர். அப்பொழுதுதான் அசட்டுத் தனமான காரியமொன்றைச் செய்தார். அதுதான், ருஷ்யா மீது படையெடுக்க தமது சேனைகளை அவர் தூண்டிய செயலாகும்.

## தலை மொட்டையான முரடன்.

அதே ராணுவ பலத்தையும், விமான பலத்தையும் பூரணமாக இப்பொழுது ஒடுக்கி விட்டால், ஹிட்லர் தலை வழிக்கப்பட்ட விதவை போலாகி விடுவார் என்பதில் சந்தேகமே வேண்டாம். சாம்ஸன் என்றொரு முரடன் இருந்தான். அவனுக்குப், பலம் எல்லாம் அவனது தலை முடிதான். அந்த ரகசியத்தை அவனது காதலி மூலமாக அறிந்த அவனது விரோதிகள், தந்திரமாகத் திட்டம் போட்டு, அவனது தலையை மொட்டை யடித்துவிட்டார்கள். அதோடு ஒழிந்தானவன் என்றொரு கதை உண்டு.

அந்த சாம்ஸனைப் போன்ற முரடராகவே இருக்கிருர் ஹிட்லர். அவருக்குப் பெரிய பலமாக இருப்பவை அவரது ராணுவமும், விமானங்களும்தான், அந்த ராணுவத்திற்கும், விமானப் படைக்கும் உயிர் கொடுத்து வருவது ஜெர்மனியிலும், அதன் கையில் சிக்கிய நாடுகளிலும் இருக்கும் தொழிற்சாலைகள்தான். அந்தத் தொழிற்சாலைகளையே நேச தேச விமானிகள் இடைவிடாது தாக்கி வருகிருர்கள். வட ஆபிரிக்க யுத்தத்திற்கு மங்களம் பாடிய பிறகு, இந்த விமானிகள் முந்தியிருந்ததை விட அதிக உத்சாகத்தோடு வேலை செய்துவருகிருர்கள்.

இந்த உத்சாகத்தின் பலன்தான் ஜெர்மனிக்கு உயிர் போலிருந்த இரு பெரிய அணைகள் தகர்ந்தன. சென்ற வாரத்திலே டார்மண்ட், டஸ்ஸல்பிர்ப், எஸ்ஸென் போன்ற பெரிய தொழிற்சாலைப் பிரதேசங்கள் பாழ்படுத்தப்பட்டன. ஜெர்மனியின் அணைகளைத் தகர்த்த அதே விமானி சென்ற வாரத்தில், வெகு சாமர்த்தியமாக, ராணுவ முக்யம் வாய்ந்ததொரு பூதக் கண்ணடி உற்பத்திசாலையின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து, பீரங்கிகளிலிருந்து உயரவரும் அக்னிக் குண்டுகளை யெல்லாம் லக்ஷ்யம் செய்யாது, அந்த உற்பத்திசாலை மீது குண்டுகளைக் கணக்காக எறிந்துவிட்டுச் சென்றிக்கிருர்.

ஒவ்வொரு ஊர் மீதிலும் நாலாயிரம் பவுண்டு குண்டுகள் என்ன, எட்டாயிரம் பவுண்டு குண்டுகள் என்ன, பிரமாதமாக விழுந்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரி குண்டுகளின் சக்தி என்ன என்பது நமக்குத் தெரியாது. இதைத் தெரிந்து கொள்ளும் அபாக்யம் ஜெர்மனியின் குடைக் கீழ் இருப்பவர்களுக்கே லபித்திருக்கிறது.

இத்தகைய குண்டுகளின் வீழ்ச்சியால் பல தொழிற்சாலைகள் பாழாகிக் கிடக்கின்றன. ஹிட்லரின் ராணுவ யந்திரத்திற்கு மேற்கொண்டு உதவி கிடைப்பது இதனல் தாமதப் படுகிறது. முதலில் தலை தப்பினல் போதும், அப்பால் அதை அழகுபடுத்திக் கொள்ளலாம் என்று எண்ணுகிருர் போலிருக்கிறது ஹிட்லர் துரை. முதலிலே, மேற்கு ஐரோப்பாவில் உள்ள முக்யமான தொழிற்சாலைகளை, ஜெர்மனியிலே பத்திரமான இடங்களுக்கு மாற்ற அவர் ஏற்பாடுகள் செய்துவருகிருர்கள் என்று தெரிகிறது. பத்திரமான இடமா ? ஹூ ! இனி ஜெர்மனியிலே அம்மாதிரி இடமும் இருக்கப் போகிறதா என்ன ?

நேச தேச விமானிகள் ஜெர்மனியையே அலசிப் பார்த்துவிடத் தீர்மானித்து வேலை செய்து வருகிருர்கள். பாவம் ! முரட்டு கொயரிங் துரை மூன்று வருடங்களுக்கு முன் கத்தினது, நேற்றுக் கத்தியது போலவே இருக்கிறது.

அவர் என்ன சொன்னர் ? ஜெர்மனிக்கு ஹிருதயம் போன்றது ரூர் பிரதேசம். இந்தப் பிரதேசத்தின்மீது நேச தேச விமானம் ஒன்றுகூட வர முடியாது. அதற்கான பூரண ஏற்பாடுகளைச் செய்யும்படி எனது விமானப் படைக்குச் சொல்லி யிருக்கிறேன.

## 'வீண் கனவு' பலித்தது.

தவிர, ஆகாயத்திலே ஜெர்மனிக்குள்ள ஆதிக்கத்தை எந்தப் பயலும் "எந்தக் காலத்திலும் பிடுங்கவே முடியாது. ஜெர்மனி மீது இந்தப் பிரிட்டிஷ் விமானிகள் வரமுடியும் என்பதும் வீண் கனவு." என்றுர் அவர்.

ஆனல் கனவு கண்டது யார் ? அந்த குண்டு கொயரிங்தான். அவர் அவ்வளவு தடபுடலாகப் பேசிப் புகழ்ந்த அதே ரூர் பிரதேசம் பிரிட்டிஷ் விமானிகளால் தகர்க்கப் பெற்ற ஜெர்மன் அணைகளிலிருந்த வெள்ளத்தால் பாழ்படுத்தப்பட்டு, ஓய்ந்து கிடக்கிறது. நேச தேச விமானிகள் சொல்லிச் சொல்லி அடிப்பது போல, நானூறு, ஐந்நூறு விமானங்களுடன் சென்று நொறுக்கி வருகிருர்கள்.

சீக்கிரமே ஐரோப்பா மீது நேச தேசத்தார் படையெடுப்பார்கள். அதற்கான பூர்வாங்க வேலைதான் இதெல்லாம் என்கிருர்கள் ராணுவ நிபுணர்கள். நேசதேசத்தார் ஐரோப்பா மீது பாய சகல ஏற்பாடுகளும் ஆகிவிட்டன. கடற் படைச் சரித்திரத்திலேயே கேள்விப்பட்டிராத அவ்வளவு பெரிய படை யெடுப்பு ஒன்று நடக்கப் போகிறது பாருங்கள். அதற்காக எல்லாம் ஆயத்தம் செய்யப்பட்டு விட்டன. ஆங்காங்கே கப்பல்களும், ஆள் சுமக்கும் படகுகளும், விமானங்களும், ஆட்களும், ஆயுதங்களும் சித்தமாகவே இருக்கின்றன. ஜெர்மானிய பருந்துப் பாய்ச்சல் விமானங்களையும், டார்பீடோ வீசும் விமானங்களையும் சமாளிக்க நேசதேசக் கப்பல்களுக்கு மேலே பலமிக்க 'விமானக்குடை' ஒன்றை அமைத்து அனுப்ப போகிருர்களாம். ஏற்கெனவேயே ஜெர்மானியரது கை, வானத்திலே தாழ்ந்து விட்டிருக்கிறது. விமான உற்பத்தி வேகமும் குறைந்திருக்கிறது. ருஷ்யப் போரரங்கத்திற்கு வேறே ஏகப்பட்ட விமானங்கள் போகவேண்டியிருக்கின்றன.

## அபாரமான விமான உற்பத்தி.

ஆனல் நேசதேச விமான உற்பத்தி வேகமோ அபாரமா யிருக்கிறது. ஐரோப்பாவைத் தாக்க அவர்களுக்கு அதிக வசதிகள் கிடைத்து வருகின்றன. வட ஆப்பிரிக்காவி லிருந்து நேசதேச விமானப் படைகள் வேலை செய்ய தொடங்கிவிட்டன. மால்டா ஒரு காலத்திலே ஜெர்மானியரது குண்டு வீச்சுக்கு நல்ல இலக்காக இருந்தது. சகல கஷ்டங்களையும் சமாளித்துக் கொண்டிருந்த அதே மால்டா தீவு, நாளை ஐரோப்பா மீதும் படை யெடுக்கும் துருப்புகளுக்கு ஒரு முன்னணித் தளமாக உதவப் போகிறது என்பதை நினைக்கும் பொழுது எவ்வளவு ஆச்சரியமாயிருகிறது !

ஹிட்லருக்குத் தான் எவ்வளவு கவலைகள் ! அவரது யுத்த உற்பத்திச் சாலைகளுக்குத் தேவை யான முக்யமான சில உலோகங்களுக்குத் தட்டு ஏற்பட்டு விட்டதாம். உள்ளே உலோகங்களைக் கொடுக்காது வெறும் யந்திரங்களை மட்டும் ஓட்டிக் கொண்டிருந்தால், பீரங்கியும், துப்பாக்கியும் விமான, மோட்டார் யந்திரங்களும், வேறு பல மெஷின்களும் தாமாக உண்டாகி விடுமா என்ன ? தொழிற்சாலைகளிலே, யுத்தரங்கத்திலிருந்து ரிப்பேருக் கென்று வரும் கணக்கற்ற சாமான்களை ரிப்பேர் செய்யவே நேரம் சரியாக இருக்கிறதாம். அப்புறம் புது சாமான்கள் தயாரிப்பது எப்போ ?

நேசதேச விமானிகள் இத்தாலிக்கு நாளுக்கு நாள் அதிக ஆபத்தை உண்டாக்கி வருகிருர்கள். ஐரோப்பாவின தென் பகுதியி லிருக்கும் இந் நாட்டை முதலில் தாக்கிப் பிடிப்பதே எளிது என்கிருர்கள் விஷய மறிந்தவர்கள். தன்னைக் காத்துக்கொள்ள, சுயமாக இத்தாலிக்கு தைரியம் போதாது ; ஆள் பலமும், ஆயுத பலமும் போதாது. அண்ணத்தை ஹிட்லரின முகத்தைப் பார்த்திருந்தே அதிக உதவி பெற வேண்டும். அவரோ சுயநலப் புலி. அவரைப் போல் தானிருக்கிருர்கள் அவரது சிஷ்யர்களும். ஆபத்து வேளைகளில் இத்தாலியர்களைச் சந்தியில் நிறுத்திவிட்டு ஓடிவிடும் புண்யாத்துமாக்களல்லவா அவர்கள் ?

ஆகவே, முஸோலினி ஜெர்மனியிலிருக்கும் இத்தாலியத் தொழிலாளர்களை யெல்லாம் இத்தாலிக்குத் திரும்ப அழைத்துக்கொள்ள ஏற்பாடு செய்து வருகிருராம். இத்தாலிக்கு அருகே உள்ள ஸிஸிலி, சார்டீனியா, பாண்டலேரியா ஆகிய தீவுகளை எக்காரணம் கொண்டும் கைவிட்டு விடப்படாது ; அவை போனல், இத்தாலியக் கப்பற் படைக்கும் சரி இத்தாலிக்கும் சரி அவஸ்தைதான் என்பதை முஸோலினி உணர்ந்திருக்கிருர் என்று தோன்றுகிறது. அதுபற்றியே அவர் மேற்கண்ட தீவுகளுக்கு அதிகப்படியான படைகளை அனுப்பி வருகிருர் போலிருக்கிறது.

## இத்தாலி மக்களுச்கு மன நிம்மதி இல்லை.

இத்தாலியில் உள்ள மக்கள் மனநிம்மதியை இழந்தேயிருப்பார்கள் தங்களது அருமை நாடு நேச தேச விமானிகளின் குண்டு வீச்சைத் தங்காது தடமாடுவதை கண்டு அவர்களது மனம் துடிக்கத்தான் செய்யும். இத்தனைக்கும் காரணமான முஸோலினியை அவர்கள் உள்ளுத் திட்டித் தள்ளிக் கொண்டேயிருப்பார்கள்.

நீங்கள் நிம்மதியாக இருக்க வேண்டுமானல், உங்களது பாஸிஸ்ட் தலைவர்களை காலை வாரி விடுங்கள் என்று பிரிட்டனிலிருந்து ரேடியோ மூலம் கிளம்பும் பிரசாரங்கள், அவர்களுக்கு நாற்புறங்களிலும் ஆபத்திலிருக்கும் ஒரு ஆலம் விழுதைப்பிடித்துக்கொண்டு, கிணற்றின் நடுவே தொங்கிக் கொண்டிருக்கும் ஒருமனிதனது வாயிலே, மேலேயிருந்த தேன்கூட்டிலிருந்து சிந்திய தேன்துளிகளைப் போலிருக்கின்றன. தக்க சமயத்தில் தங்களது தலைவர்களுக் கெதிராக அவர்கள் கலகம் செய்யக் கூடும். இதற்குப்பயந்தே இத்தாலிய ரேடியோ நிலையங்கள், சீமையிலிருந்து வரும் செய்திகளை ஆகாயத்திலேயே கழுத்தைப் பிடித்து நெறிப்பது போல், காதில் உருவாக விழாது செய்து வருகின்றன. முஸோலினியை இத்தாலி எந்நாளும் மறக்கவே மறக்காது. அழகான நகரங்கள் பலவற்றைப் பாழாக்கக் காரணமாக இருந்த பாதகாத்மா அவர் என்பதை அவர்களால் எப்படி மறக்க முடியும் !

அதேபோல, நேச தேசத்தாரும் அவரை மறக்கமாட்டார்கள். லண்டன் மீது குண்டெறிவதற்கு என்நாட்டு விமானங்களுக்கும் இடம் கொடுக்கவேண்டும் என்று ஹிட்லரைக் கேட்டாரே இந்தப்பெரியார் ; அதை நேச தேசத்தார் மறக்கமுடியுமா ? இதற்குப்பதில் இந்தா வாங்கிக்கொள் என்று நேசதேச விமானிகள் இடைவிடாது இத்தாலி மீது குண்டுகளைப் பொழிகிருர்கள்.

இந்த முஸோலினியை நமது தோழனுகச் சேர்த்துக்கொண்டதே தவறு என்று ஹிட்லர் அடிக்கடி நினைக்கக்கூடும். ஆமாம் ! கோழைகளையும் ஏமாறுகிறவர் இடுப்பிலிருந்து எதையாவது அபேஸ் செய்கிறவர்களையும் சேர்த்துக்கொண்டால் என்றுமே அவஸ்தை தான். ஜூன் மாதம் பிறந்து விட்டது. ருஷ்யாமீது கடைசி முறையாகப் பெரு மூச்சுடன் தாக்க அவர் திட்டம் போடுவாரா ?, மேற்கு ஐரோப்பாவைக் காக்கத் திட்டம் போடுவாரா ? இத்தாலியைக் காக்க பிளான் போடுவாரா ? அவரது படைகளில் 218 டிவிஷன்கள் ருஷ்யாவில் இருக்கின்றன. அவற்றை வைத்துக் கொண்டு அவர் சீக்கிரமே முன்னேற முயலலாம்.

(9-ம் பக்கம் பார்க்க)



# யுத்த முயற்சியும் சாரணர்கள் பெருந் தொண்டும்

## கலவர காலத்தில் சென்னைக்குச் செய்த நன்மைகள்

### படைக்கு ஆள் சேர்ப்பது, யுத்தக் கைத்தொழிலுக்கு உதவுவது முதலிய செய்கைகள்

[சென்னை, வனொலி நிலையத்திலிருந்து மே மாதம் 27-ம் தேதி, வியாழக்கிழமை மாலை சென்னை சாரண சங்கக் கௌரவக் காரியதரிசியும் சென்னை நகர சபை அங்கத்தினருமான டி. ஆர். கோதண்டராம முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல். "யுத்த முயற்சி" என்ற தொடரில் செய்த பிரசங்கம் பின் வருமாறு :—

சாரண இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள் இளைஞருடைய நற்குணத்தையும் நன்டைக்கையையும் பெருக்கி, பிறர்க்கு எக்காலத்திலும் சேவை செய்ய அவர்களுக்கு ஒரு ஆர்வத்தை யுண்டாக்குவதுமே யாகும். மா பெருந் தலைவர் பேடன் பவெல் பிரபு இந்த இயக்கத்தை ஆரம்பித்த நாள் முதற்கொண்டே, இதனுடைய உன்னத நோக்கங்கள் உலகில் எல்லாருடைய மனதையும் கவர்ந்து, பல நாடுகளில் இயக்கம் வேறூன்றித் தழைத்து வருகின்றது. முதல் முதலாக இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தொடங்கி, இப்போது உலக முழுதும் எல்லாத் தேசங்களிலும் பரவி, இயக்கத்தின் பலனை யாவரும் அடைய ஆவலுறும் சமயத்தில், இந்த உலக யுத்தமானது சாரணர் எதிர்பாராத வண்ணமாய்த் தோன்றியது. அதற்குக் காரணம் யுத்தத்துக்குக் காரண கர்த்தாக்களாகிய ஜெர்மனி இத்தலி முதலிய இரண்டு தேசங்களிலும் சாரண இயக்கம் ஓங்காதது தான். இயக்கம் தழைத்தோங்கும் நாடுகளி லெல்லாம் ஜனங்கள் எக்காலத்தும் சமாதானத்தையும் உலக சமரசத்தையுமே உட்கருத்தாகக்கொண்டு அரசாங்க முறையை நடத்தி வருகின்றனர். ஆனல் ஜெர்மனி என்னும் முக்கிய ஆக்ஸிஸ் நாட்டில் நாஜிகள் சாரண இயக்கத்தைப் புறக்கணித்து, தங்களுடைய இளைஞர்களின் மனதில் மற்ற தேசங்களின்மேல் அருவருப்பை யூட்டி, உலகத்தையே அடக்கியாளவேண்டுமென்ற ஒரு மனோபாவத்தை இளைஞர்களுக்கு இரவும் பகலும் போதித்து வருகிருர்கள். அப்படியே இத்தாலி தேசத்திலும் பாஸிஸ்டுகள் செய்துவருகின்றனர். சாரண இயக்கம் பலப்பட்டிருக்கும் தேசங்களே, இப்போது யுனைடெட் நேஷன்ஸ் என்னும் நேசதேசங்களாக ஒருங்குசேர்ந்து ஐக்கியப்பட்டு யுத்தத்தை யெதிர்த்து வருகின்றன. இதிலிருந்தே சாரண இயக்கம் பல தேசங்களுடைய பொதுஜன வாழ்வை எப்படி மேன்மையடையச் செய்கிறதென்றும் அவர்களிடையே அன்பையும் நேசத்தையும் சமரசத்தையும் வளர்க்கிற தென்றும் நமக்கு நன்கு விளங்குகிறது.

## சாரண உள்ளம்.

யுத்தம் என்பது எக்காலத்திலும் மீண்டும் தலைதூக்காதபடி உலகிலிருந்து ஒழிய வேண்டும். எங்கு பார்த்தாலும் ஒற்றுமையும் அன்பும் சமரசமும் தாண்டவமாடவேண்டும் என்று பாடுபடும் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், உலகம் யுத்தத்தினல் படும் அலங்கோலத்தையும் கோரத்தையும் கண்டு மனமுருகி நிற்கின்றனரேனும், கூடிய சீக்கிரத்தில யுத்தத்துக்குக் காரணமாயிருக்கும் தேச துவேஷங்கள் ஒழிந்து சாரணர் உள்ளத்துட்கொண்ட உன்னத உலகமானது எங்கும் நிறுவப்படும் என்பது அவர்கள் துணிபு. எல்லாம் வல்ல இறைவன் அத்துணையருள் புரிவாராக.

யுத்த காலங்களில், சாரணர்கள் எப்போதும் நன்மை கடைப்பிடித்து தங்களுடைய தர்மத்தை யொட்டி, பல தொண்டுகள் புரிய வேண்டும். யுத்தத்தை உலகிலிருந்து அடியோடு ஒழிக்க வேண்டிய மனப்பான்மையை எங்கும் பரப்ப வேண்டும்.

இதை விதமாகக் கொண்டே, இங்கிலாந்து அமெரிக்கா முதலிய தேசங்களில் சாரணர்கள் தங்களுடைய நாட்டுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் அருந்தொண்டு செய்து தங்களுடைய இயக்கத்திற்கே கீர்த்தியையும் அழிவிலாப் பெயரையும் கொண்டு வந்திருக்கிருர்கள். கடந்த சில வருஷங்களாக, ஜெர்மனியர் இங்கிலாந்தின்மேல் ஆகாய விமானக் குண்டு வீச்சுமூலமாய் உண்டான அபாயத்தில், தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் தன்னந்தனியாக நின்று பலரைக் காப்பாற்றி அவர்களுக்கு ஏற்பட்டிருந்த இன்னல்களை நீக்கி, அவர்கள் சுகமே வாழும்படி செய்திருக்கின்றனர். தங்களுடைய வீடுகளிலும் தாய் தந்தையர்களும் எதிரியின் குண்டுகளுக்கு இரையான பிறகுங்கூட, மனந் தளராமல் தாங்கள் எடுத்துக்கொண்ட கருமங்களை செவ்வனே செய்து முடித்திருக்கிருர்கள். குண்டுகள் தங்கள் பேரிலேயே வீசப்பட்ட காலங்களிலும் அதனல் தங்கள் சகாக்களுக்கே இடையூறுகள் ஏற்பட்ட காலங்களிலும், வெகு வீரத்துடனும் தீரத்துடனும் நடந்து கொண்டனர். போர் வீரர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்தனர். ஆஸ்பத்திரிகளிலும் (First aid) முதல் உதவி ஸ்தாபனங்களிலும் முதன்மையாக அச்சமின்றி நின்று உதவி செய்தார்கள். அங்கு ஏற்பட்ட தீ விபத்துக்களிலெல்லாம் முக்கியமாய்த் தீயை யணைக்கவும் இடிந்த வீடுகளில் அகப்பட்டுக் கொண்டவர்களை ரக்ஷிக்கவும், அவர்கள் சலிக்கவில்லை.

## இந்தியச் சாரணர்கள் வேலை.

நம் நாட்டிலும் யுத்தமுயற்சியில் சாரணர்கள் எவ்வளவு பங்கெடுத்துக் கொண்டிருக்கிருர்க ளென்பதைப் பற்றியும் இன்னும் அவர்கள் எந்தெந்த நூதனமுறைகளில் உதவி புரியலாம் என்பதைப் பற்றியும் நான் உங்களுக்குச் சற்று விரிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

யுத்தத்தின் முக்கிய சாராம்சம் என்னவெனில், எதிரியின் மனதிலும் அவனுடைய நாட்டிலும் கடூரமான பயத்தைப் பரப்பிக் குழப்பத்தையும் அலங்கோலத்தையும் மனத் தடுமாற்றத்தையும் உற்பத்திசெய்து, அதனல் எதிரி தளர்ந்திருக்கும்போது அவனைக் தாக்கி வெல்லலாம் என்பதே. அதைத் தடுப்பது தான் ஜனங்களுடைய முக்கிய கடமையாகும். சாரணர்கள் வீரமும் தீரமும் பொறுமையும் வாய்ந்தவர்களாதலால், இந்தப் பொறுப்பு அவர்களுடையதே. அந்தப் பொறுப்பைச் சாரணர்கள் உலகெங்கும் ஒத்துக்கொண்டு சேவை புரிந்து வந்திருக்கிருர்கள். நம் சாரணர்களும் அவர்களுடைய தலைவர்களும் சென்ற ஏப்ரல் மாதத்தில் சென்னையிலிருந்து எதிரி நம்மைக் தாக்கக்கூடும் என்ற பயத்தினல், எல்லா ஜனங்களும் வெளியேறினலும், தாங்கள் தைரியமாக நின்று நடத்திவந்த சேவையைக் கண்ட மக்கள் அவர்களுடைய வீரத்தையும் தீரத்தையும் பின்பற்றி பயமின்றி வாழ ஆரம்பித்தனர். சாரணர்கள் செய்துகாட்டிய வீரச் செயல்களினல் ஜனங்களிடையே திகில் என்பது அகன்று ஜப்பானியருடைய மனோபீஷ்டம் ஈடேறுமற் போயிற்று.

## சாரணர்களும் யுத்த முயற்சியும்.

சாரணர்கள் பலர் சிவிக் கார்ட், ஏ.ஆர்.பி. ஊர்காப்புச் சங்கங்கள் சென்னை நகரப் பாதுகாப்புக் (City safety) கமிட்டி சிவில் டிபென்ஸ் கமிட்டி முதலிய சங்கங்களில் சேர்ந்து, யுத்த முயற்சியில் அருந் தொண்டு புரிந்து வருகின்றுர்கள்.

யுத்த கமிட்டிகளில் பல சாரணத் தலைவர்களும் ரோவர்களும் சேர்ந்து மக்களிடையே, எதிரியும் அவர்களுக்குச் சாதகமாயிருக்கும் (Fifth columnist) ஐந்தாம்படைகளும் செய்யும் பொய்ப் பிரசாரத்தைக் கண்டிப்பதிலும் உண்மையை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவதிலும் யுத்த பண்டிற்குத் தாங்களே பொருள் திரட்டிக் கொடுப்பதிலும் முயற்சி யெடுத்திருக்கின்றனர். நீலகிரி, மதுரை, தூத்துக்குடி முதலிய இடங்களில் தங்கள் முயற்சியிலேயே ஆயிரக் கணக்காக பணம் திரட்டிக் கொடுத்திருக்கிருர்கள்.

சிலர், யுத்தத்துக்கு வேண்டிய படைகளைச் சேர்க்கும் கமிட்டிகளில் (Recruitment) சேர்ந்து ராணுவத்திற்கும் கப்பற் படை ஆகாயப் படை முதலியவைகளுக்கு வீரமும் தீரமும் வாய்ந்த சாரணர்களையும் இளைஞர்களையும் சேர்த்துக் கொடுப்பதிலும் அவர்களிடையே பிரசாரம் செய்து இளைஞர்களை இப்படிப்பட்ட பயிற்சிகளுக்கு முன்வரும்படி செய்தும சேர்ந்தவர்களுக்குச் சரியான வழிகளில் பயிற்சி கற்பிக்கும் வகைகளைப் பெருக்கும் வழிகளைத் தேடியும், யுத்த முயற்சியில் ஊக்கம் காட்டி வருகிருர்கள்.

'நேஷனல் வார் பிரண்ட்' என்னும் தேசியப் போர்முனை இயக்கத்தில் பல சாரணர்கள் சேர்ந்து ஊர் ஊராகச் சுற்றுப் பிரயாணம் செய்து, பிரசாரம் செய்வதிலும் பொய் பிரசாரத்தைக் கண்டிப்பதிலும் காக்ஷிகள், சங்கீதக் கச்சேரிகள் ஊர்வலங்கள் முதலியன நடத்தி ஜனங்களின் மனதைக் கவர்வதிலும் பாடுபடுகின்றனர். இந்த முயற்சியில் சாரணர்களுடைய கூட்டங்களும் அவர்கள் தலைவர்களும் பல ஊர்களிலும் பங்கெடுத்துக் கொண்டு வருகின்றனர்.

சாரணர்கள் அநேகமாக (First aid) முதல் சிகிச்சையில் பயிற்சியடைந்து ஸெர்டிபிகேட் பெற்றவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் தனிப்பட்ட முறையிலாவது அல்லது ரெட்கிராஸ் என்னும் சங்கத்தைச் சேர்ந்தாவது யுத்தத்தால் ஏற்படும் பிணிகளுக்குத் தகுந்த சிகிச்சை செய்ய பல சந்தர்ப்பங்கள் ஏற்படும். சில சாரணத் தலைவர்கள் இப்போது ஆஸ்பத்திரிகளிலும் முதல் சிகிச்சை யிடங்களிலும் கௌரவ மெடிகல் ஆபீஸர்களாக ஒத்துக்கொண்டு வேலைசெய்து வருகிருர்கள். முதல் சிகிச்சையிடங்களில் அநேக சாரணர்கள் வாலண்டியர்களாகவும் மெஸெஞ்சர்களாகவும் பணியாற்றவும் முன்வந்துள்ளனர்.

தவிர மலேயாவிலும் பர்மாவிலுமிருந்து வந்து சரண்புகுந்தவர்களுக்குச் சாரணர்கள் புரிந்த தொண்டு, வெகு மெச்சத் தகுந்தது. சென்ற வருஷத்தில் மேயர் சக்கரை செட்டியாரும் சிடி சேப்டி கமிட்டியாரும் எடுத்துக்கொண்ட பிரயாசைகளில் சாரணர்கள் செய்த அருந்தொண்டானது எல்லாருடைய மனதையும் கவரச் செய்தது. சாரணர்கள் மக்களுடைய வாழ்த்துக்கும் அருகராயினர்.

ஏ.ஆர்.பி. முதல் முதலாக வாலண்டியர்களைச் சேர்த்த காலத்தில் சேவைசெய்ய வேண்டுமென்ற உன்னத நோக்கத்தைக் கொண்டே சாரண இயக்கத்தைச் சேர்ந்த பல தலைவர்களும் இளைஞர்களும் அதில் சேர்ந்து, இப்போதும் கௌரவ அங்கங்கள் வகித்து அரிய சேவைசெய்து வருகிருர்கள். நகரத்தை எதிரியினுடைய ஆகாய விமானங்களிலிருந்து வீசப்படும் குண்டுகளால் ஏற்படும் ஆபத்திலிருந்து காக்க, இந்தச் சங்கத்தார் பிரத்தியேகமாக பிரபல பயிற்சிபெற்று நகரத்தைச் காக்கும் பொறுப்பையும் யுத்தத்திற்குப் பிறகு நகரத்தைச் சீர்திருத்தியமைக்கும் ஆக்க வேலையையும் ஒத்துக்கொண்டு தொண்டு புரிந்து வருகின்றனர்.

சாரணர் பலருக்கு (Traffic control) டிராபிக் கண்ட்ரோல் பயிற்சியும் (Firefighting) தீயணைக்கும் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆபத்துக்காலங்களில் இந்த இரண்டு துறைகளிலும் அவர்களுடைய உதவி அரசாங்கத்திற்கும் ஜனங்களுக்கும் முழுமனதுடனும் ஊக்கத்துடனும் அளிக்கப்படும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

இப்போது யுத்தத்துக்கு முக்கியமாக வேண்டிய பல பொருள்களுக்கு நெருக்கடி ஏற்பட்டு பழைய உதவாத சாமான்களெல்லாம் பொன்னாய் விட்டதால், அதைக் கூட்டித் திரட்டி அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் சாரணர்கள் அதிக பங்கெடுத்துக் கொண்டு பழைய இரும்பு, தகரம், துத்தநாகம், பேபர், ரப்பர் சாமான்கள் முதலியவைகளை சேர்த்துக் கொடுத்து யுத்தமுயற்சிக்குத் தளரா ஊக்கம் காட்டி வருகின்றுர்கள்.

## சாரணர்களும் எதிர்கால வாழ்வும்.

இப்போது புதிதாக சாரணர்களுக்கு ஏற்பட்டிருக்கும் விமான சாரணர் பயிற்சியில் எல்லாச் சாரணர்களும் சேர்ந்து ஆகாயப் படைக்கு உதவி செய்யும் ஆற்றலைப் பெறவேண்டும். நம்முடைய தேசம் மேன்மையடையும்படி எல்லாச் சாரணர்களும் கைத்தொழில்களில் திறமை பெற்று விளங்க வேண்டும். யுத்தத்திற்குப் பிறகு அவர்கள் நம் தேச முன்னேற்றத்துக்கும் தொழிலபிவிர்த்திக்கும் முக்கிய காரண கர்த்தர்களாக விளங்கவேண்டும். நம் இந்திய நாட்டின் பாதுகாப்புக்காக பிரத்தியேகமாக கடற்படை யொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. யுத்தத்திற்குப் பிறகு நம் நாட்டைக் காப்பாற்றும் பொறுப்பு, அவர்களிடம் அளிக்கப்படும். சாரணர்கள் இந்தப் படைக்குவேண்டிய குணம்சங்கள் வாய்ந்தவர்களாதலால் அதிகமாக அந்தப் படையில் சேர்ந்து நம் நாடு கீர்த்தியடையச் செய்யலாம், தவிர, யுத்தத்தினல் இந்தக் கெடுதிகள் தான் ஏற்படும் என்று யாராலும் வரையறுத்துச் சொல்லமுடியாது. எந்தக் காலத்திலும் தயாராக இருந்து எத்துறையிலும் அரும்பணியாற்றல் வேண்டும்.

கடைசியாக மக்களிடையயே உணவுப் பொருள்கள் குறைவினல் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைத் தீர்க்கவும் இருக்கும் உணவுப் பொருள்களை எல்லோருக்கும் பங்கிட்டு வழங்கும் ஏற்பாடுகளில் முன்னே நின்று வழங்கவும் உணவுப்பொருள்களைப் பெருக்க (Grow more food) என்று நடத்திவரும் பிரசாரத்திலும் அதனை செய்து காட்டும் வழிகளிலும் சாரணர்கள் தங்களுடைய கருத்தைச் செலுத்தவேண்டும். இது எவ்வளவு முக்கியமான சேவை யென்பதை நான் அவர்களுக்கு வற்புறுத்த வேண்டுவதில்லை.

"பல துளி பெரு வெள்ளம்" என்றவாறு சாரணர்கள் செய்து வரும் தொண்டானது பெரு வெள்ளமாகி நம்மனை உலகத்திற்கே நாளடைவில் கொடுப்பதுடன், வெகு சீக்கிரத்தில் நேசதேசங்களுக்கு தீர்க்கமாய் நிலைக்கக் கூடிய வெற்றியையும் கொடுக்கு மென்பதில் ஐயமில்லை,

<u>தொழிலாளர் பகுதி</u>

# பலே ரஷ்யா: பொருளாதாரத் திட்டம்

ஒரு நாட்டின் பொருளாதாரத்தைக் குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமானல், அந்நாட்டின் ஜனத் தொகை, கல்வி, கைத் தொழில், வியாபாரம், அரசாங்க வரவு செலவு முதலியவற்றைக் கொண்டு தான் நிர்ணயிக்க வேண்டும். இந்தத் துறைகளில் ரஷ்யா நாடு எந்த நிலையிலிருக்கிற தென்று சற்று கவனிப்போம். அதன் பரப்பு 83 லட்சத்து 40 ஆயிரத்து 479 சதுர மைல். மலைகளும் ஆறுகளும் அதிகம். 31 லட்சத்து 69 ஆயிரத்து 380 சதுர மைல் காடுகள் இருக்கின்றன. இவற்றைக் கொண்டே இது செழிப்பான தோர் நாடு என்று பொதுவாகச் சொல்லலாம். அது மட்டுமல்ல இங்கே மண்ணெண்ணெயும் பல வகை உலோகப் பொருள்களும் ஏராளமாய்க் கிடைக்கின்றன. இரும்பு, நிலக்கரி, தாமிரம், அலியூமினியம், தங்கம் முதலியன விளையும் சுரங்கங்கள் இருக்கின்றன. இவ்வளவு இயற்கை வளங்கள் மிகுந்திருந்தும், சோவியத் அரசாங்கம் அங்கே அமைவதற்கு முன்னதாக, அவற்றை சரிவர பயன்படுத்திக் கொள்ளவில்லை. எனவே, பஞ்சம் தலை தூக்கிற்று. கிளர்ச்சியும், பிறகு புரட்சியும் ஏற்பட்டன.

1913-ம் வருஷம் இருந்த ஜனத் தொகையைவிட இப்போது மூன்றிலொரு பங்கு அங்கே அதிகரித்திருக்கிறது. இதிலிருந்து மக்கள் வாழ்வு மேம்பட்டிருக்கிற தென்று தெரிகிறதல்லவா? புரட்சிக்கு முன்னல் ரஷ்யா விவசாய நாடாக மட்டுந் தான் இருந்தது. வெளி நாட்டார் அங்கே நடத்திய தொழில்களைத் தவிர, உள் நாட்டார் தொழிற்சாலைகள் வைத்து நடத்த வில்லை; அப்போது 1 கோடி 12 லட்சம் தொழிலாளர்கள் தான் இருந்தார்கள். இப்போது 3 கோடியே 4 லட்சம் தொழிலாளர்கள் இருக்கிருர்கள். ஒருவராவது இப்போது வேலை யில்லா திருக்க முடியாது. ஒவ்வொரு வரும் வேலை செய்ய வேண்டும். அது அந்நாட்டுச் சட்டம். உலகில் வேறெந்த நாட்டிலும் இப்படிப்பட்ட நிலைமை இல்லை. எல்லோரும், அதாவது ஆண்களும் பெண்களும் வேலை செய்தால், உற்பத்தி எவ்வளவு அதிகமாகும்! ஆகவே அந் நாட்டில் செல்வம் கொழிக்கத் தான் செய்யும். புரட்சிக்கு முன்பு, அவர்கள் கையாண்டு வந்த கலப்பைகளுக்குப் பதிலாக இயந்திரக் கலப்பைகளைக் கையாளுகிருர்கள். தம் நிலங்களுக்கு செயற்கை எருவைப் போடுகிருர்கள். ஏராளமான சாகுபடியை அறுவடை செய்கிருர்கள் ஆகவே, அங்கே பஞ்சம் தலைகாட்டவே முடியாது. அன்றியும் அரசாங்கத்தாரே கூட்டுப் பண்ணைகள் வைத்து, குறைந்த செலவில் நிறைந்த பலனை யடைகிருர்கள். அங்கே 2 லட்சத்து 43 ஆயிரம் கூட்டுப் பண்ணைகள் இருக்கின்றன.

முதலில் தம் வயிற்றை நிரப்பிக் கொள்ள வேண்டும்; மிகுதி உணவுப் பொருள்கள் இருந்தால், பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். இதுதான் ரஷ்யர்கள் கொள்கை. உணவுப் பொருள்கள் மட்டு மிருந்தால் போதுமா? இதற்குப் போக்கு வரவு வசதிகள் வேண்டும். ரோடுகள், ரயில்வேக்கள், மோட்டார்கார்கள், ஆறுகள், விமானங்கள் ஆகியவை இதற்குப் பெரிதும் பயனபடும். ஆகவே ரயில்வேக்களை அதிகப்படுத்தினர். 1913-ம் வருஷம் அங்கே மொத்தம் 36 ஆயிரம் மைல் நீளந் தான் ரயில்வே போடப்பட்டிருந்தது. ஆனல் 1938-ம் வருஷத்தில், 54 ஆயிரம் மைல் நீளம் போட்டு முடித்தனர். அமெரிக்கா தவிர, வேறெந்த நாட்டிலும் இவ்வளவு நீள ரயில்வேக்கள் கிடையாது. என்றுலும் இந்த நாட்டின் விஸ்தீரணத்தோடு இந்த நீளத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், இது போதாது என்று தான் சொல்ல வேண்டும். இப்போது மூன்ருவது ஐந்து வருஷத் திட்டத்தை அங்கே நிறைவேற்றிக் கொண்டு வருகிருர்கள். இதன்படி 6,800 மைல் நீளத்திற்கு, ரயில்வே போட்டு முடிக்க வேண்டும். அன்றியும், கப்பல்கள் போகவரத் தக்க ஆறுகளும் ரஷ்யாவில் இருக்கின்றன. இவற்றின் வழியாக, 1913-ம் வருஷம் 47 ஆயிரம் மைல்கள் தூரந்தான் கப்பல்கள் போய் வந்து கொண்டிருந்தன. ஆனல் 1938-ம் வருஷத்தில் 83 ஆயிரம் மைல் தூரம் போய்வரத் தக்கபடி வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அன்றியும் ஒரு ஆற்றிற்கும் மற்றொரு ஆற்றிற்கும் இடையே ஏற்ற இடங்களில் கால்வாய்கள் வெட்டி விட்டிருக்கின்ருர்கள். அல்லாமலும் விமானப் போக்கு வரவுக்கும் 71 ஆயிரம் மைல்களுக்குப் பாதை யமைத்திருக்கிருர்கள். இந்தப் போக்கு வரவு சாதனங்க ளெல்லாம் கட்டி முடிப்ப தென்றுல், இலகுவான காரியமா? பெருந் தொழிற்சாலைகள் வேண்டும். ஆகவே, தொழிற்சாலைகள் கட்டத் திட்ட மிட்டார்கள். இத்திட்டங்கள் சோவியத் அரசாங்கச் சட்ட ஆதாரம் பெற்றவை. அதாவது, வகுக்கப்பட்ட திட்டப்படி காரியத்தை நிறைவேற்ருது போனுல், அது ஒரு குற்றமாகும். ஆகவே எல்லாத் திட்டங்களும் முறைப்படி நிறைவேறுகின்றன. இங்கே ஒரு விஷயங் கவனிக்கத் தக்கது. சோவியத் ரஷ்யாவில் அநேக வகைக் கைத் தொழில்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒன்றிற் கொன்று சம்பந்த முடையது. ஒன்றை யொட்டித் தான் மற்ருென்று இயங்க முடியும். உதாரணமாக, ரயில்வேயை எடுத்துக் கொள்ளுவோம். ரயில் வண்டிகள் ஓட வேண்டுமானுல், முதலில் இரும்பு வேண்டும். ரஷ்யாவில் இரும்புச் சுரங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சுரங்கங்களில் வேலை செய்ய மின்சார சக்தி வேண்டும். அங்குள்ள இரண்டு பெரிய அணைகளிலிருந்தும் ஆறுகளிலுள்ள நீர் வீழ்ச்சிகளிலிருந்தும் ஏராளமான மின்சார உற்பத்தியாகிறது. அங்கு பல வகை உலோகங்கள் மட்டுமன்றி, ரசாயனப் பொருள்களும் விளைகின்றன. இரும்பு, தாமிரம், தங்கம், 'சூபர்-பாஸ்பேட்ஸ்', 'பீட் சர்க்கரை' ஆகியவை ரஷ்யாவில் விளையும் அளவிற்கு வேறெந்த ஐரோப்பிய நாட்டிலும் விளைவதில்லை. ஆகவே, எல்லா வகைக் கைத் தொழில்களும் ரஷ்யாவில் ஓங்கி வளருகின்றன. இதற்கு முக்கிய காரணம், ஒவ்வொரு கைத தொழிலும் திட்டப்படி நடை பெறுவது தான் என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். இந்தத் திட்டங்களில், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் எப்படிப்பட்ட தன்மையுள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்படவேண்டும்; எந்த அளவிற்கு உற்பத்தி செய்யப்பட வேண்டும்; அதன் பொருட்டு எவ்வளவு செலவாகும்; அவற்றை என்ன விலைக்கு விற்க வேண்டும்; என்னென்ன நிபந்தனைகளின் பேரில் விற்க வேண்டும்; எத்தனைத் தொழிலாளர்கள், எத்தனை உத்தியோகஸ்தர்கள், எத்தனை நிபுணர்கள் வேலை செய்ய வேண்டும்; அவர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்; நிலக்கரி முதலியவற்றின் பொருட்டு என்ன செலவாகும்; தேய்வின் பொருட்டு இந்திரங்களின் விலை மதிப்பு எந்த அளவிற்குக் குறைக்கப்பட வேண்டு மென்று அத்திட்டங்களில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கும். அப்படியே இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன. அவற்றை வகுத்தவர்களின் அனுபவ ஞானம் இதல் விளங்குகிறது; ஒரு நாட்டின் பொருளாதார நிலையை, அந்நாட்டில் தொழிலாளர்களுக்கு எந்த விகிதம் கூலி கொடுக்கப்படுகிறது என்னும் புள்ளியிலிருந்து நிர்ணயித்து விடலாம். 1933-ம் வருஷத்தில் 2 கோடி 20 லட்சம் தொழிலாளர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு அந்த வருஷத்தில் ரூ. 2,770 விகிதம் கூலி கொடுக்கப்பட்டது. 1938-ம் வருஷம் 2 கோடி 80 லட்சம் தொழிலாளர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு ரூ. 5,170 விகிதம் கூலி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 5 வருஷ காலத்திற்குள் 27 சத விகிதம் தொழிலாளர் எண்ணிக்கை அதிகப்பட்டதோடல்லாமல், அவர்கள் கூலி விகிதத்திலும் ஏறக்குறைய 90 சத விகிதம் உயர்ந்திருக்கிறது. இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. ரஷ்யாவில் தொழில் அபிவிருத்தி வெகு வேகமாக நடை பெறுகிறதென் றேற்படுகிறது. இதன் பயனுக 1 லட்சம் பேர்களுக்குக் குறையாமல் வசிக்கும் 100 நகரங்களுக்கு அதிகமாகவே, இப்போது புதிதாக அமைந்திருக்கின்றன. மற்ற நாடுகளில் தனிப்பட்டவர்களின் தனிச் சொத்தாக நில புலன்கள், தொழிற்சாலைகள், வங்கிகள், போக்கு வரவு சாதனங்கள் முதலியவை இருக்கின்றன. ஆனுல் ரஷ்யாவில், இவை எல்லாம் அரசாங்கச் சொத்துக்கள். அதாவது பொது மக்களுக்குரிய சொத்துக்கள். ஆகவே தான், கைத்தொழில் வெகு விரைவில் ஓங்கி வளருகின்றன. நவீன இயந்திரங்களைக் கொண்டு கைத்தொழில்கள் ரஷ்யாவில் நடத்தப் படுவது போல, வேறெந்த நாட்டிலும் நடத்தப்படுவ, தில்லை. இவ்வளவு சிறந்த தொழில் பலம் ரஷ்யாவிற்கு இருப்பதனுல் தான், ரஷ்ய செம்படைகளும் மிகச் சிறந்து விளங்குகின்றன. அன்னியர்கள் ரஷ்யாவைத் தாக்க அஞ்சுகிருர்கள். ஜெர்மானியர்கள் தாக்கினுர்கள். ரஷ்யாவின் சில பகுதிகளைக் கூட பிடித்தார்கள். என்றுலும் அவற்றைக் காப்பாற்றிக் கொள்ள அவர்களால் முடிவதில்லை. இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாகும் அதாவது ஜெர்மானியர்கள் தம் நாட்டைத் தாக்கிப் பிடித்துக் கொள்ளக் கூடும் என்று தோன்றியவுடனே, அப்பகுதியிலுள்ள எல்லாக் கைத் தொழில்களையும் களஞ்சியங்களையும் பயிர் பச்சைகளையும், தொழிற் சாலைகளையும் கூடுமானுல் அப்புறப்படுத்தி விடுகிருர்கள். அப்படிச் செய்ய



முடியாவிட்டால் நாசஞ் செய்து விடுகிருர்கள் ரஷ்யர்கள். எண்ணெய்க் கிணறுகளைக் கூடக் கொளுத்தி விடுகிருர்கள். அரும்பாடுபட்டு, திட்டமிட்டு, கட்டி, வளர்த்த அத்தொழில்களை அழிப்பது என்றுல், யாருக்குத் தான் மனது வரும்? என்றுலும், ரஷ்யர்கள் கொஞ்சமும் மனம் வருந்தவில்லை. காரணம் என்ன? இந்தத் தொழிற்சாலைகளும் வசதிகளும் எதிரிகளுக்குக் கிடைத்தால், அந்நந்தப் பகுதிகளில் அவர்கள் வேரூன்றிக் கொண்டு, அத்தொழிற் சாலைகளைக் கொண்டே தமக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்து, மேலும் ஊக்கமாகப் போராட அவர்களுக்கு இடங் கொடுத்தது போலாகும். ஆகவே தான், அனைத்தையும் அழித்தார்கள். அன்றியும் அழிக்கப்பட்ட தொழில்களை மீண்டும் அமைத்துக் கொள்ளும் ஆற்றல் அவர்களுக் குண்டு. அதன் மூலமாக, போர்க் களத்திலிருந்து திரும்பும் தொழிலாளர்களுக்கு இடை விடாது முன்போல் வேலை கிடைக்க இடமுண்டு. ஆகவே, யுத்தத்திற்குப் பிறகு மீண்டும் ரஷ்யப் பொருள் நிலை உயர்நத முறையில் அமையும் என்பது திண்ணம்.

[1943-ம௵ ஜூன்மீ 6௳ சென்னை வானெலி நிலயத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட ஒரு பிரசங்கம்.]

# இந்தியப் படைகளிடம் ஜெர்மானியர் பயம்

பெங்காசியை விட்டு நாஜிகள் பின்வாங்கி ஓடியபோது, ஒரு ஜெர்மன் இரகசிய உத்தியோகஸ்தர் தன் கைப்பட எழுதிய ஒரு குறிப்பு, பிறகு கிடைத்தது. அதில், இந்தியப் படைகள் வெல்ல முடியாதவை என்று ஒப்புக்கொண்டிருக்கிருர். அந்தக் குறிப்பில் அவர் எழுதியிருந்ததாவது "ஆயுதந் தாங்கிய 7-வது படையும், 4-வது இந்திய டிவிஷனும் பாலைவனத்தில் இருக்கிற வரையிலும், நாம் மிகுந்த எச்சரிக்கையோடிருக்கவேண்டும். நம்மைத் தாக்கக் கூடியவர்கள் அவர்களதான்."

நிற்க "ஈவினிங் ஸ்டாண்டர்ட்" என்னும் பத்திரிகைத் தன் தலையங்கத்தில், கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது—

"துனீசியாவில் நமக்கு வெற்றி தந்த போராட்டத்தின் போது, நான்காவது இநதியப் படையிடம் ஜெனரல் பான் ஆர்ணிம் சரணடைந்தார். எரித்ரியாவிற்கு விடுதலையளித்த போராட்டத்தில், அயோஸ்டா பிரபுவைக் கைது செய்தது நான்காம் இந்தியப் படைதான். ஆரியர்கள் என்று தம்மைக்கூறி பெருமைகொள்ளும் இனத்தார், ஆரியரல்லாதார் என்று கூறப்படுகிறவர்களிடம் தோற்றது, தற்செயலாக ஏற்பட்ட தோல்வியல்ல. தம்மை ஆரியர் என்று கூறிக்கொள்ளுகிறவர்கள் மற்றவர்களை இழிவு படுத்துகிருர்கள். நான்காவது இந்தியப் படை இவர்களைக் கைதிகளாகப் பிடித்ததும் மிகவும் பொருத்தந்தான்."

"நமது மகத்தான பாலைவனப் படைகளில் எஃகுப் பட்டாளங்கள் என்று சொல்லத் தக்கபடி 7-வது இந்திய மோட்டார் டிவிஷனும், 4-வது இந்தியப் படையும் பெயரெடுத்தன. எகிப்துப் போராட்டத்தில் முன்னணிப் பாதுகாப்பிலிருந்ததும் இவைதான். சிடிபரானி என்னுமிடத்தில் நடைபெற்ற போராட்டத்தில், 5 இத்தாலியப் படைகளை இவை நாசஞ் செய்தன. இதே இந்தியப் படைகள் தான் நம்படைகளை பெங்காசிக்கு நடத்திக் கொண்டு போயின. மீண்டும் அதை பீல்ட் மார்ஷல் ரோமல் கைப்பற்றியபோது, பந்தோபஸ்தான இடத்திற்கு இவை பின்வாங்கின. இந்த யுத்த நடவடிக்கைகளிலேயே இது ஒரு மகத்தான செயல். இந்தப் படைகள் வீர ஹகீமில் ஸ்திரமாக ஊன்றிக்கொண்டு பீரங்கிப் போர் செய்ததன் பயனுக, ரோமல் எல் அலமீனை நோக்கி வரமுடியாமற் போயிற்று. பாலைவனத்திற்குக் குறுக்கே 2,000 மைல்கள் தூரம் ஜெனரல் மண்ட்காமரி நடத்திக்கொண்டு வந்த படைகளின் முதல் அணியில் இருந்ததும் இந்தப் பட்டாளங்கள் தான். வடாப்பிரிக்கப் போராட்டத்தின் கடைசி கட்டங்களில், 8-ம் படைப் போர்முனையிலிருந்து 4-வது இந்தியப் பட்டாளம் தம்தேர்ந்த தோழர்களான 7-வது இந்திய மோட்டார் படையுடன் கிளம்பி முக்கியமான பகுதிக்குப் போயின. கடும் போர்கள் பல நிகழ்ந்தன. அவற்றிலெல்லாம் வெற்றிபெற்றது இந்தியப் படைகள்தான். கடைசியாக, ட்யூனிஸ் பாதுகாப்புக்கள் எல்லாம் குலைந்தன."

### எரித்ரியாவில் வெற்றிகள்.

"இதற்கிடையில், இத்தாலியிலிருந்து எரித்ரியாவுக்கு வந்திருந்த படைகளோடு, 5-வது இந்திய டிவிஷனும், 3 பிரிட்டிஷ் பட்டாளங்களும், சூடான் பாதுகாப்புப் படையும் சேர்நது போராடின. இந்தப் போராட்டத்தை ஆரம்பிக்கும்போது இவர்களிடம் ஒரு பீரங்கியாவது ஒரு ஆயுத மோட்டார் வண்டியாவது கிடையாது. இநதப் படை, சிடிபரானியைக் கடந்த பிறகு, 4-வது இந்தியப் படையும் இத்துடன் போய்ச் சேர்ந்தது. அங்கே எதிரிகள் பெரும் படைகளோடு எதிர்த்தார்கள். நம் படையோ மிகச்சிறிது. தகுந்த தளவாடங்களும் கிடையாது. பெரும் படையும் கூட, எதிரிகளின் பலத்தைக்கண்டு திகைக்கத் தான் செய்யும். என்றுலும், நம்படைகள் மனத்தளர்ச்சி யடையவில்லை. அடுத்தது அகர்டாட், பெரந்து, அஸ்மரா, மசாவா, முதலிய இடங்களில் நம்படைகள் வெற்றி கண்டன. செரன் என்பது ஒரு மலையரண். இதை எதிரிகள் பலமாகப் பாதுகாத்து வந்தார்கள். இதையும் நம்படைகள் வென்று கைப்பற்றி விட்டனர். மனித வீர உணர்ச்சியை மதிக்கும் எல்லா நாடுகளிலும் இந்தியர்களின் வீரச்செயல்களை கதைகளாகச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இந்தியப் படைகள் ஈராக்கிலும் போராடின. சிரியாவைக் கைப்பறறியதிலும் இந்திய படைகள் பங்குகொண்டன.

"எங்கெல்லாம் பிரிட்டிஷார் போராடுகிருர்களோ, அங்கெல்லாம் இந்தியர்கள் அவர்களோடு கலந்திருக்கிருர்கள். எல்லா விடங்களிலும் பிரிட்டிஷ் படைகளுக்குப் பெருமை தேடிக்கொடுப்பவர்கள் இவர்கள்தான். இவர்கள் புத்திசாலிகள். சிக்கலான யுத்த பரிபாஷைகளைக் குறித்து முழுதும் உணர்து கொண்டவர்கள்; ஆபத்துக் காலத்திலும் நன்றியுடன் நடந்துகொள்ளுகிறவர்கள். இந்தச் சந்தர்ப்பங்களில் தான், அவரவருடைய சாதிமத வேற்றுமைகளை விடுத்து, அவரவருடைய மனப்பான்மையின் போக்கு எப்படியிருக்கிறதென்று தெளிவு படுத்திக் கொள்ளக்கூடும்."

இவர்களுடைய எண்ணிக்கை 10 லட்சத்திற்கு அதிகப்பட்டுவிட்டது. இவர்கள் பல ஜாதிகளையும் இனங்களையும் சேர்ந்தவர்கள். எல்லாப் போர்முனைகளிலும் இவர்கள் நடத்தும் போராட்டங்கள் மிகவும் முக்கியமானவை. இதோ, விடுதலைக்காக, மகத்தான இந்தியர்கள் போராடுகிருர்கள்! அதைப் பரிபூரணமாக அனுபவிக்கும் உரிமையும் பெறுகிருர்கள்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆனுல் இத்தனை படைகளையும் ருஷ்யாவிலிருக்கவிடாது, அவற்றில் ஒரு பாதியை மேற்றிசைக்கோ, தென்திசைக்கோ தமது படை எடுப்பு காரணமாக நேசதேசத்தார் வலித்திழுத்துக் கொண்டால், அப்புறம் ருஷ்யாவிற்கு கொஞ்சம் சௌகரிய மேற்படும். அது தைரியமாக முன்னேறித் தாக்கும். அதற்கு இடங்கொடுத்து விடப்படாதென்பதே ஹிட்லரின் கவலை.

இம்முறை லெனின் கிராட் நகரத்தை பிடிக்க முடியாவிட்டால், அதை உருத் தெரியாது பாழாக்கி விட வேண்டுமென ஹிட்லர் உத்திரவிட்டிருக்கிருர் போலிருக்கிறது. அங்கே இருபத்தி நான்கு மணிநேரமும் இப்பொழுது பகலாயிருக்கிறது. ஆகவே, நெடுந்தூரம் சுடும் ஜெர்மன் பீரங்கிகள் கீழே சுட்டுக்கொண்டிருக்க, வெடிகுண்டெறியும் விமானங்கள் மேலேயிருந்து அந்நகரைத் தாக்குகின்றனவாய் எங்கேயும் தற்சமயம் வெற்றி கிட்டாது, என்ன அப்பா செய்வதென்று ஹிட்லர் கவலைப் பட்டுக் கொண்டிருக்கக்கூடும்.

இப்படி சதா கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவருக்கு வைத்தியம் செய்வது என்றுல் லேசில்லைதான். அதுதான் ஹிட்லருக்கு பிரைவேட் டாக்டராக இருந்தவருக்கு உடம்பு சௌக்ய மில்லாதுபோய் விட்டதாம். இந்த எழவு ஹிட்லர் தொலைந்தாலும் தேவலைபோலிருக்கிறதே! நம் உயிர் போகிறதே அநியாயமாக! என்று அவர் மனசிற்குள்ளாகவே திட்டிக் கொண்டிருப்பாரானுல், அதில் அதிசயமொன்றுமில்லை.

ஹிட்லருக்கு அடிமேலடி கிடைத்து வருகிறது என்பது உலகறிந்த ரகசியம். அதிலும் சமீபத்தில் ஸ்டாலின் கொடுத்த அடியைப் பற்றி உலகோர் அனைவருமே சந்தோஷத்தோடு பேசிக்கொண்டிருக்கிருர்கள். அது என்ன அடி தெரியுமா?

ருஷ்யாவிலே உலகப்பொது உடைமைக்கட்சி என்று ஒன்றிருந்தது. உலகமக்களை யெல்லாம் ஒன்றுபடுத்தி, பெரியதோர் புரட்சியை எழுப்ப வேண்டு மென்பதே இக்கட்சியின் கொள்கை. இந்தக்கட்சிக்கு உலகெங்கிலும் கிளைகளிருந்தன. அவை எப்பொழுதும் மாஸ்கோவில் உள்ள தலைமைக் காரியாலயத்திலிருந்து தான் உத்திரவுகளைப் பெற்று அவற்றின்படி நடந்து வந்தன.

இந்தக்கட்சியாரின் நடவடிக்கைகளுக்கு ஒருபெரிய பூச்சாண்டிபோன்ற திருக் கோலத்தைக் கொடுத்து, 'பார்த்தீர்களா ஜெர்மானியரே! இந்த போல்ஷவிக் பிசாசுதான் உங்களைப்பிடித்துக் கொள்ள முயன்று கொண்டிருக்கிறது. இது உங்களைப் பிடித்துக்கொண்டு விட்டால் அப்புறம் உங்கள் சொத்து போகும், சுதந்திரம் போகும், சுகம் போகும், எல்லாம் போகுமே' என்று ஹிட்லரும் அவரது வாயாடி சிஷ்யரான கப்பல்ஸதுரையும் அடிக்கடி பிரசாரம் செய்துகொண்டிருந்தார்கள். இந்தக் கட்சி இருப்பதால! நேச நாடுகளில் இருந்தவர்களில் சிலருக்குக்கூட ருஷ்யா மீது சந்தேகம் இருந்தது.

இந்தச் சந்தேகங்களை யெல்லாம் தீர்த்து, ஹிட்லருக்கும் ஒரு சரியான பூசைகொடுப்பது போல், ஸ்டாலின் மேற்கண்ட ஸ்தாபனத்தையே கலைத்து விட்டார். எல்லோரும் ஒன்றுசேர்ந்து, இந்த நாஸி, பாஸிஸ மிருகங்களை வதைக்க வேண்டுமென்பதே தமது அந்தரங்க நோக்கமென்பதையும் ஸ்டாலின் தெரிவித்து விட்டார். இது காரணமாக நேச நாடுகளிடை உள்ள அந்நியோன்னிய மனோபாவம் அதிகரித்து விட்டது. ஹிட்லருக்கும் இது காரணமாக பீதி யதிகரித்திருக்கும். அதைப்பற்றி நமக்கென்ன? அயோக்யர்கள், கடைசியிலே அழிய வேண்டியது தானே நியாயம்?

ஹிட்லரின் படாடோப வார்த்தைகளையும், ஆரம்ப வெற்றிகளையும் கண்டு தானே அவரோடு கைகோர்த்து ஜப்பானும் போரிலிறங்கிற்று. அதுவும் ஆரம்பத்தில் வெற்றி காணத் தான் செய்தது. ஆனுல் இன்று நடப்பதென்ன?

அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்கு வரும் முக்ய பாதையில் உள்ள அட்டுத் தீவை போனவாரம் அமெரிக்கர் திரும்பப் பிடித்து விட்டனர். ஜப்பானுடைய தோல்வி புராணம் ஆரம்பமாகிவிட்டது என்பதையே, இது குறிக்கிறது. தோல்வியைத் தவிர வெற்றியை இனி ஜப்பானுகட்டும் மற்றிரு அச்சுநாடுகளாகட்டும் சொப்பனத்தில் கூடக் காணமுடியுமா என்ன?

## இரசாயன எருக்கள்

நிலத்தைச் செழிக்கச் செய்யும் இரசாயன எருக்கள் இருக்கின்றன. இவற்றை 'நைட்ராஜெனஸ்' எருக்கள், 'பாஸ்பேடிக்' எருக்கள், 'பொட்டாசிக்' எருக்கள் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. 'நைட்ராஜென்ஸ்' எருக்கள்.—அடிமரமும் இலைகளும் வளருவதற்கு இந்த எரு அவசியம். தழை எருக்களைக் கொண்டும் 'லெகுமினஸ்' பயிர்களைச் சாகுபடி செய்யும் நிலத்திற்கு இந்த எருவூட்டலாம். தாவர உருவத்திலில்லாத உப்பு வாயுவை செடிகள் எளிதில் உட்கொள்ளுகின்றன. 'அம்மோனியம் சல்பேட்,' 'சோடியம் நைட்ரேட்,' 'கால்சியம் சினமைட்' ஆகியவைதான் மிகவும் சாதாரணமான 'நைட்ராஜெனஸ்' எருக்கள்.

(a) 'அம்மோனியம் சல்பேட்' இது உப்பு வாயு நிறைந்துள்ள எரு. நிலக்கரியி லிருந்து 'கோக்' செய்யுப்படும்போது இது உண்டாகிறது. இது சாம்பல் நிறமான தூள். அம்மோனியா உருவத்தில், இதில் 20—21 சத விகிதம் உப்பு வாயு அடங்கி யிருக்கிறது. இந்த உப்பு வாயு, மற்ற எதிலும் கலக்க முடியாதது. எனவே, செடிகளுக்கு உடனே கிடைக்கிறது. இதற்கு நிலத்தில் இரசாயன மாறுதல்கள் ஏற்படவேண்டும். அப்போது தான் அந்தச் சத்தை செடிகள் உட்கொள்ள முடியும். ஒரு சதுர கஜப் பரப்புள்ள தோட்டத்திற்கு 2 காலன் தண்ணீரில் 1 அல்லது 1¼ அவுன்ஸ் எருவைக் கலக்கி உபயோகிக்கலாம்.

(b) 'சோடியம் நைட்ரேட்' இதில் இருக்கும் 100-க்கு 15 பங்கு உப்பு வாயு கலக்கத் தக்க முறையில் செடிகளுக்குக் கிடைக்கிறது. தோட்டங்களுக்கு ஒரு சதுர கஜப் பரப்பிற்கு ½ முதல் 1 அவுன்ஸ் சோடியம் நைட்ரேட்டை 2 காலன் தண்ணீரில் கலக்கி உபயோகிக்கவும்.

(c) 'கால்சியம் சினமைட்' இதை 'நைட்ரோலியம்' என்றும் சொல்லுவார்கள். இது மிகவும் இலேசான கருப்புத் தூள். இதில் 100-க்கு 20 பங்கு உப்பு வாயு அடங்கி யிருக்கிறது. இதிலுள்ள உப்பு வாயு உடனடியாகச் செடிகளுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, பூமியில் இது 'நைட்ரேட்' உருவடைய வேண்டும்.

(d) 'அம்மோனியம் நைட்ரேட்' இதில் 100-க்கு 38 பங்கு உப்பு வாயு இருக்கிறது. 'நைட்ராஜெனஸ்' எருக்கள் எல்லாவற்றிலும் இதுதான் மிகவும் விரைவாக வேலை செய்யக் கூடியது. இதை ஏராளமாகச் சேகரித்து வைத்திருந்தால் வெடித்துவிடும். ஆகவே இது பற்றி எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.

2. 'பாஸ்பேடிக்' எருக்கள்.—பூக்களும் காய்களும் உண்டாவதற்கு ஊக்கந்தரும் நிமதாக்கினிச் சத்து இதில் அடங்கி யிருக்கிறது.

(a) 'சூபர்பாஸ்பேட்'. இது இள மஞ்சள் நிறமான வெள்ளைத் தூள். பல படித்திரங்களாக இது செய்யப்படுகிறது. இவற்றில் நிமதாக்கினிச் சத்து 100-க்கு 18 முதல் 40 பங்கு வரை மாறுபடும்.

(b) 'பேசிக் ஸ்லாக்'. இது எ..கு உற்பத்தி செய்யும்போது ஏற்படும் ஒரு வகை மிருதுவான, கருமையும் சாம்பலும் கலந்த நிறமுடைய தூள். இதில் 100-க்கு 14 முதல் 20 பங்குகள் வரை நிமதாக்கினிச் சத்திருக்கிறது. 'சூபர்பாஸ்பேட்டைப் போல இந்த 'பாஸ்பேடிக்' எரு அவ்வளவு நல்ல பலன் தருவதில்லை.

3. 'பொட்டாசியம்' எருக்கள்.—மாச்சத்தும் சர்க்கரையும் மிகவும் ஏற்படுவதற்கு உதவுகின்றன. செடிகள் முளையாயிருக்கும் போது தான் பொட்டாசியம் சத்தை வெகுவாக உட்கொள்ளுகின்றன. ஆகையால் விதை விதைக்கும் முன்னும், நடவு நடும் முன்னும் இந்த எருக்களை உபயோகிக்க வேண்டும்.

(a) 'பொட்டாசியம் சல்பேட்' சாதாரணமாக இதைத் தனித்து உபயோகிப்பதில்லை. 'நைட்ராஜெனஸ்' எருக்களோடும், 'பாஸ்பேடிக்' எருக்களோடும் சேர்த்துத் தான் உபயோகிக்கப்படுகிறது., உடனடியாகச் செடிகளுக்குக் கிடைக்கத் தக்கபடி பொட்டாசைக் கொடுக்கிறது. கிழங்குகளுக்கும் பழங்களுக்கும் இவை மிகவும் உபயோகப்படும்.

(b) 'பொட்டாசியம் மியூரியேட்' 'பொட்டாசியம் க்ளோரைட்' என்றும் சொல்லுவார்கள். இதில் 'க்ளோரைட்' இருப்பதால், புகையிலை, உருளைக்கிழங்கு, பழங்கள் முதலியவற்றிற்கு உபயோகிக்கக் கூடாது.

### எருவிட விதிகள்

1. பச்சை எருக்கள் வேர்களில் படும்படி எருவிடக்கூடாது. நன்குகக் கலக்கித் தான் போடவேண்டும்.

2. அதிக எருவை ஒரே சமயத்தில் போடுவதை விட, கொஞ்சம் கொஞ்சமாகப் பலமுறை எருவிடுதல் நல்லது.

3. பெரும் மழைக்கு முன்பு, இலகுவில் கரையும் எருக்களைப் போடக் கூடாது. ஏனென்றால், மழைத் தண்ணீரில் அது கரைந்து வீணாகி விடும்.

4. மழை பெய்யும்போது மற்ற எருக்களைச் சேர்க்க வேண்டும்.

5. இலைகள் நன்றாக வளர வேண்டுமானால், 'நைட்ராஜெனஸ்' எருக்களைப் போடவேண்டும். பூக்களுக்கும் பழங்களுக்கும் 'பாஸ்பேடிக்' எருக்களையும் 'பொட்டாசியம்' எருக்களையும் அதிகமாகப் போடவேண்டும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஜூன்மீ 11உ, வெள்ளிக்கிழமை [இதழ் 23

## "வெற்றிக் கதிரொளி வீசுகிறது"



இந்த உலக யுத்தம் முழுவதின் மேலும் "வெற்றிக் கதிரொளி வீசுகிறது." இது பற்றிய முழு விவரங்களும் பிரிட்டிஷ் தலைவர்களுக்கும் அமெரிக்கத் தலைவர்களுக்கும் தெளிவாக விளக்கிக் கூறப்பட்டது. நாம் ஒத்திருந்து வேலை செய்யக் கூடுமென்று ருசுப்பித்து விட்டோம். நாம் ஆபத்துக்களையும் எதிர்க்கக் கூடு மென்று மெய்ப்பித்து விட்டோம். இனி ஏற்படக் கூடிய வெற்றிகளுக்கு உரியவர்களாகத் தக்க உயரிய நிலையிலேயே இருந்து கொள்ளக்கூடு மென்றும், அதனால் நல்ல காலம் பிறக்கு மென்றும் நாம் மெய்ப்பிக்க வேண்டும். எல்லாவற்றையும் விட, இது மிகவும் கஷ்டமானதாகத் தோற்றலாம். நாங்கள் என்ன முடிவிற்கு வந்திருக்கிறோமென்று மேல் பூச்சாகக் கூட நான் எதுவும் வெளியிடுவதற் கில்லை. எங்களால் இயன்றவரை நாங்கள் செய்திருக்கிறோ மென்று தான் சொல்லுவேன். அடுத்து என்ன செய்யப்பட வேண்டு மென்பது பற்றி, இரண்டு அரசாங்கங்களும் பரிபூரண ஒற்றுமை யடைந்திருக்கின்றன. சென்ற மகா யுத்த காலத்தில் ஏற்பட்டது போல, இப்போது எவ்விதமான மன வேற்றுமையு மில்லை. அரசியல் வாதிகளும், இராணுவத்தாரும் சம்மந்தப்பட்டிருப்பதனால், மன வேற்றுமைகள் உண்டாகப் பெரிதும் இடமுண்டு. இனி அடுத்தாற்போல் என்ன ஏற்படுமென்று நான் ஜோசியம் சொல்ல மாட்டேன். ஆனால் ஒன்று மட்டும் நான் சொல்வேன். வாஷிங்டனில் நாங்கள் 15 நாட்கள் கலந்து பேசினோம். அப்போது, ஆங்கிலோ-அமெரிக்கக் கொள்கை, போர்த்தந்திர முறை, பொருளாதாரம் முதலியவை பற்றி பரிபூரணமாக விவாதித்து முடிவு கட்டினோம்.

—மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் ஜூன்மீ 8-ம் தேதி செய்த பிரசங்கம்.

# நேசதேசக் கொடிகள் வாழ்த்து

தனதந்தி நாதந்தி நாதா—தான
தனதான தனதான தனதந்தி நாதா (என்ற)

ஆனந்தக்களிப்பு மெட்டு

1 நீட்டிப் பிடியடா கொடியை—வானில்
காட்டிப் பிடியடா காற்றினில் கொடியை

2 நேச தேசங்களின் கொடியே—அதைப்
பாசமுடன் கையில் தேசுறப் பிடியே

3 ஒற்றுமைத் தேசங்கள் கொடியே—அதை
ஓங்கிப் பிடித்திடில் நீங்கிடும் மிடியே

4 ஒய்யார மாய்ப்பறக் குதே—நல்ல
மெய்யார் உள்ளம் போல வேசிறக் குதே

5 சாம்ராஜியந் தன்னை ஆளும் - கொடி
சாஸ்வத மாயூனி யன்ஜாக்கே நாளும்

6 பாடிப் புகழ்ந்து நீ பிடியே—நல்ல
பாங்காம்ப்ரிட் டனின்யூ னியன்ஜாக் கொடியே

7 புள்ளி நட்சத்திரங் கோடு—போட்ட
பொன்மே வமெரிக்கா வின்கொடி நாடு

8 சம்மட்டி யோடுங் கலப்பை—கொண்ட
சந்திக் கொடியுறும் ருஷ்யர் வலக்கை

9 சீனக் கொடி கையில் தூக்கி—அதைச்
சேர்ந்து பிடிப்பாய் அவ்வீரரை யூக்கி

10 இன்னும் அறுபத்தி யாறு—தேசம்
மின்னுகொ டிகளை மேலெனக் கூறு

11 இந்தக் கொடிகள் முழுதும்—ஏந்திச்
சந்தத் தமிழ் பாடி முந்தித் தொழுதும்

12 போர்க் களத்தே ரத்தம் சிந்தி—வீரன்
போற்றிடு வான்தன் கொடியினை முந்தி

13 ஊர்க் களத் துள்ளவர் யாரும்—இவை
ஓங்கிப் பறந்திடத் தாங்கியே வாரும்

14 மூன்றரை ஆண்டுக ளாக—மூண்ட
மூன்றரக் கர்அச்சு மூவரும் வேக

15 ஏன் றவரைச் சண்டை செய்து—எங்கும்
ஏங்கியவர் நீங்கக் குண்டுகள் பெய்து

16 வெற்றிக் கொடிதனை நாட்டி—நம்மின்
வீரம் நிறை நேச தேசங்கள் ஈட்டி

17 பற்றிப் பிடித்தன ஜயமே—இனி
பாரினில் இல்லை பகர்ந்தேன்ப யமே

18 இந்திய மக்கள்எல் லோரும்—படை
முந்திய மக்கள் என வந்து சேரும் (நீட்டி)

# வீரர்களுக்கு ஊக்கம்

பச்சை மலை பவள மலை எங்கள் வள நாடு—என்ற மெட்டு

## குறம்

1 யுத்த மதில் வெற்றி பெற உத்தமரே வருவீர்—உத்தமரே வருவீர் திடச்
சித்த முடன் இந்தியாவைக் காக்கவே நீர் எழுவீர் (யுத்த)

2 உலக மதில் வளங்கள் பல நிறைந்த திந்த நாடு—நிறைந்த திந்த நாடு
ஊக்க முடன் பகைவர்களைத் தாக்கி ஜெயந் தேடு (யுத்த)

3 தீரமான வீரர்களே போரரங்கம் சேரும்—போரரங்கம் சேரும்
காரமுடன் எதிரிகளைக் கொன்று பகை தீரும் (யுத்த)

4 பாது காக்கப் படைகளிங்கே பெருகிடவு மாச்சு—பெருகிடவு மாச்சு
பற்பல நல்லா யுதங்கள் புதுமைமிகு வீச்சு (யுத்த)

5 இந்தியரும் ஆங்கிலேய ஆஸ்திரேலிப் படையும்—ஆஸ்திரேலிப் படையும்
அந்தர விமானிகளாம் அமெரிக்கப் படையும் (யுத்த)

6 பீரங்கியும் டாங்கிகளும் பெருமிதமா யுண்டு—பெருமிதமா யுண்டு
தீரங்குணம் தான் படைத்த தானைகளு முண்டு (யுத்த)

7 இத்தலிஜப் பானியரை எவ்விதத்தும் கொல்வோம்—எவ்விதத்தும் கொல்வோம்
பித்த ஜெர்மன் பேயர்களை பாய்ந்துமே நாம் வெல்வோம் (யுத்த)

8 வெற்றி பறை எட்டு திசை கொட்டி எழுவாய் நீ—கொட்டி எழுவாய் நீ
இற்று விழும் பற்றலரை வெட்டி மடிப்பாய் நீ (யுத்த)



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : மிஸ்டர் சர்ச்சில் .. .. | 1 | புலி போச்சு : கிலி வந்தது .. .. | 6 |
| வெற்றிக் கதிரொளி வீசுகிறது .. .. | 1 | "சீச்சீ ! துனீசிய திராட்சைப் பழம் புளிக்கும" .. .. .. .. | 7 |
| பாட்டுக்கள் : நேசதேசக் கொடிகள் வாழ்த்து .. | 2 | தொழிலாளர் பகுதி : நேசதேச ஒற்றுமை பலம் .. .. .. .. | 8 |
| வீரர்களுக்கு ஊக்கம் .. .. | 2 | மறைமுக எருக்கள் .. .. .. | 12 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | | |
| தலையங்கம் : நேசதேச விழா .. .. | 4 | | |
| பரிபூரண ஒற்றுமை ஏற்பட்டது .. .. | 5 | | |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**மத்தியதரைக் கடலிலுள்ள அச்சு தளங்கள் தவிடு பொடி.**

ஐரோப்பியத் தென் மேற்குப் போர் முனையில் ஹிட்லர் அமைத்திருக்கும் பாதுகாப்புக்களுக்கு 'பாஸ்டுங் யூரோப்பா' என்று பெயர். இந்த அரணைச் சுற்றி பிரிட்டிஷ் விமானப் படை தவிடு பொடி செய்து கொண்டு வருகிறது. மத்திய தரைக் கடல் பகுதியில் இத்தாலியைத் தாக்கும் நேச தேச விமானப் படைகளால் சார்டீனியா, சிசிலி, பான்டலேரியா ஆகிய இடங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. துனிசியாவிலுள்ள பான் முனைக்கும் பான்டலேரியாவிற்கும் 4? மைல் தூரந்தான். இதே 40 மைல் தூரந்தான் பான்டலேரியாவிற்கும் சிசிலிக்கும். இந்த பான்டலேரியாவைத் தளமாக எதிரிகள் கொள்ளுவார்களானால், நேச நாட்டுக் கப்பல்களின் போக்கு வரவுகளைப் பெரிதும் தடைப்படுத்த முடியும். ஆகவே, மத்திய தரைக் கடலின் மத்தியப் பகுதியில் நாம் பரிபூரண ஆதிக்கம் பெற வேண்டுமானால், சிசிலி தீவிலுள்ள எதிரி அரண்களைப் பயனற்றதாக்கி விடவேண்டும். பான்டலேரியா 45 சதுர மைல் பரப்புடையது. 1937ம் வருஷம் முசோலினி இதை அரண் செய்தார். மறு வருஷம் விமான நிலையம், தெருவிற் சாலை, துறைமுகம் முதலியவற்றை கட்டி முடித்தார். பிறகு, அந்த தீவிலுள்ள செங்குத்தான மலை யுச்சிகளில் பலமான அதிகப்படி அரண்களைக் கட்டி முடித்தார்கள். நேச நாட்டுக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடிக்கும் நீர் மூழ்கிக் கப்பல்கள் தங்கி யிருக்கும் வட்டாரங்களும் இருக்கின்றன. ஆகையால் இந்த அரண் வசதிகள் எல்லாம் எதிரிகளுக்குப் பயன்படவொட்டாதபடி செய்து விட்டால், நேச நாடுகளுக்கு மிகவும் வசதி செய்தது போல் ஆகுமல்லவா ?

அச்சு நாடுகளுக்கு, தென் பகுதியில், சிசிலியில் தான் விமான நிலையம் இருக்கிறது. இத்தீவு 9,860 சதுர மைல் பரப்புடையது. இத்தாலி யுத்தத்தில் இறங்கிய பிறகு, அநேக விமான தளங்களை இத்தீவில் கட்டி அவற்றை இத்தாலிய அரசாங்கத்தார் விசாலப் படுத்தினார்கள். வடாப்பிரிக்கப் போராட்டத்தின் போது, சிசிலித் தீவைத் தளமாகக் கொண்டு தான் ஜெர்மன் விமானப் படை, பிரிட்டிஷாருக்குச் சொந்தமான மால்டா தீவைத் தாக்கிக் கொண்டிருந்தது.

பிறகு சார்டீனியா இருக்கிறது. இங்கே இராணுவ முக்கியத்துவம் புதிதாக ஏற்பட்டது. அதாவது, வடாப்பிரிக்காவில் நேச நாட்டுத் தரைப் படைகள் கிழக்கிலும் மேற்கிலும் வெற்றி மேல் வெற்றி பெற்றதன் பலனாகத் தான், இது ஏற்பட்டது. சார்டீனியாவின் தென்புறத்தில் ககலியாரி எனனும் விமான தளமிருக்கிறது. இதற்கும் ட்யூனிசுக்கும் 160 மைல் தான். நேற்றே அச்சு நாடுகளுக்குச் சொந்தமான விமான நிலையங்களும் தளங்களும், துறைமுகங்களும், போக்கு வரவு சாதனங்களும், மின்சார இயந்திர ஸ்தாபனங்களும் பிரிட்டிஷ் விமானப் படைகளால் தவிடுபொடி யாகின்றன.

**இளக்கக் கொள்கையும் இரண்டாம் போர் முனையும்.**

இவை மட்டு மன்றி ஜெர்மன் விமானப் படையும் இத்தாலிய விமானப் படையும் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகி யிருக்கின்றன. நேச நாட்டு விமானங்களையும் விமானிகளையும் மற்ற போர் அரங்கங்களுக்கு மாற்றினாலல்லது, தென் பகுதியில் அச்சு நாடுகள் மகா கடுமையாகவும் இடைவிடாதும் தாக்கத் தான் செய்வார்கள். அச்சு நாட்டு விமானத் தளங்களை அரண் செய்யாதிருக்க வேண்டியும், அச்சு நாட்டு விமானப் படை இத்தாலிக்குள் போய் பதுங்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காகவுந் தான் இந்தப் பகுதியில் நேச நாட்டு விமானப் படைகள் போராடின.

இந்தத் தீவுத் தளங்களை நேச நாட்டு விமானப் படை விசேஷமாகத் தாக்கியதைக் கொண்டு, இது வரை வெடிகுண்டுகள் எறியப்பட்ட இடங்களுக்கும், இரண்டாம் போர் முனையை ஆரம்பிக்கும் பொருட்டு குறிக்கப்பட்டுள்ள இடத்திற்கும் ஏதோ சம்பந்தம் உண்டு என்று நினைத்துவிடக் கூடாது. இத்தாலியைத் தாக்குகிற போது, சிசிலியையும் சார்டீனியாவையும் கைப் பற்றிக் கொள்ள வேண்டுமென்பது அவ்வளவு முக்கியமல்ல. இத்தாலியைத் தாக்குகிற போதேயே சார்டீனியாவிலும் சிசிலியிலும் அமைக்கப்பட்டிருக்கும் அரண்களையும் விமானப் படையைக் கொண்டும் கப்பல் படையைக் கொண்டும் நிர்த்தூளியாக்கி விட்டால், அவை தாமாகவே நேச நாடுகள் கைக்கு வந்து விடும். இவற்றின் கரையை அடுத்து பிரிட்டிஷ் நீர் மூழ்கிகள் இத்தாலியக் கப்பல்களை நாசஞ் செய்கின்றன. இதிலிருந்து இங்கே கற்போரும் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. டிரேனியன் கடல் வழியாகவும் எட்ரியாடிக் கடல் வழியாகவும் இத்தாலியத் தலை நகரத்தையே நேர்முகமாகப் பலமாகத் தாக்கலாம்.

**ஜெர்மனிக்கு இத்தாலி ஒரு காப்புக் கட்டு.**

இத்தாலியை நேச நாடுகள் தாக்கினால், ஜெர்மனி என்ன செய்யும் ? இப்போதுள்ள நிலைமையில், இத்தாலியின் உதவிக்கு ஜெர்மன் படைகள் அனுப்பப்படும் என்று தோன்றவில்லை. இப்போது ஜெர்மனியிலிருந்து நிலக்கரியும் மற்ற மூலப் பொருள்களும் தனக்கு அனுப்பும்படி இத்தாலி ஜெர்மனிக்கு எழுதியது. ஆகவே ஜெர்மனிக்கு இத்தாலி ஒரு கல்கட்டு என்று கருதப்படுகிறது. ஹிட்லர் இந்தச் சமயத்தில் தன் தோழரைக் கைவிட்டு விடுவாரா ? அவர் அப்படிச் செய்வாரானால் தன் ஆள் படைத்தையெல்லாம் அவர் திரட்டிக் கொண்டிருக்கிறார் என்று தான அர்த்தம். இப்படிச் செய்வதனால், தான் கைப்பற்றிக் குடியேறியுள்ள நாடுகளில் உள்ளவர்கள், தன் மீது வைத்திருக்கக் கூடிய கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் இழந்து விடுவார்கள். அப்போது மரியாதையில்லாமற் போய்விடும். அன்றியும், பால்கனில் கலவரங்கள் நிகழவொட்டாதபடி போலீஸ் வேலை செய்து கொண்டு வந்த 12 டிவிஷன் படைகளுக்குப் பதிலாக, வேறு படைகளை அனுப்புவதும் மிகவும் கஷ்டம். ஒரு விஷயம் மட்டும் உண்மை. நேச நாட்டுப் படைகள் அச்சு நாடுகளைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளை மும்முரமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நேச நாடுகள் தம் முழு பலத்தையும் கொண்டு கூடிய விரைவில் இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கத் தான் போகிறார்கள். எவ்வளவுக் கெவ்வளவு நேச நாடுகள் இதில் வெற்றி பெறுகிறார்களோ, அவ்வளவிற் கவ்வளவு அச்சு நாடுகளின் போராட்டம் கடுமையாயிருக்கும். இப்போது முதலில் தாக்கும் வசதிகள் நேச நாடுகளுக்குத் தான் உண்டு. இந்த வசதிகள் அச்சு நாடுகளுக்குக் கிடையாது.

(11-ம் பக்கம் பார்க்க)

## யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞு ஜூன்மீ 11வ. [இதழ் 23

# நேச தேச விழா

உலகம் முழுதும் அடுத்த திங்கட்கிழமை ஜூன்மீ 14வ நேச நாட்டு விழாவைக் கொண்டாடுவார்கள். விடுதலையையும் முன்னேற்றத்தையும் கோரி, பல நாடுகளைச் சேர்ந்த படைகள் மிகச் சிறந்த முறையில் ஒன்றுபட்டிருப்பது பற்றித் தான் இந்த விழா கொண்டாடப்படுகிறது. இந்த ஒற்றுமை பற்றி ஒரு வருஷத்திற்கு முன்பு அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் என்ன சொன்ஞர் தெரியுமா? "நம் எதிரிகளை வென்று, மக்கள் எல்லோரும் சுயேச்சையோடு வாழத்தக்க உண்மையான சமாதானத்தை யடைய வேண்டு மென்பது தான், இந்த மகத்தான ஒற்றுமையின் அடிப்படையான நோக்கம்" என்று குறிப்பிட்டார். அன்றியும், "மக்கள் இனத்திற்கு நான்கு வகை சுயேச்சைகளும் அவசியமா இல்லையா என்பது பற்றி நேச நாடுகளுக்கும் அச்சு நாடுகளுக்கும் கருத்து வேற்றுமையுண்டு. இந்த அடிப்படையான தத்துவத்தைக் குறித்து ஒரே கருத்துடைய நாடுகளெல்லாம் ஒன்றுபட்டு மிகச் சிறந்த ஒற்றுமை யோடிருக்கின்றன. இதற்கு காரணம் அவர்கள் நோக்கத்தில் அவர்களுக்கிருக்கும் அதி தீவிர பற்றுதல்தான். இந்தப் பற்றுதலைப் போக்க ஒருவராலும் முடியாது" என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கொஞ்ச காலத்திற்குள்ளாக, நேச நாடுகளின் இந்தக் கொள்கை எத்தனைக் கட்டங்களைக் கடந்து வந்தன என்று ஆராய்வது பொருத்தமாகும். சென்ற 1941-ம் ஞு ஜூன்மீ 5வ லண்டனில் நேச நாட்டு அரசாங்கங்கள் நடத்திய மகாநாடு தான் இதன் முதல் கட்ட மென்று சொல்லலாம். பிரிட்டன், அயர்லந்து, கனடா, பெல்ஜியம், செக்கோஸ்லோவேகியா, கிரீஸ், லக்ஸெம்பொக், நெதர்லாந்து, நார்வே, போலந்து, யுகோஸ்லேவியா, ஆகிய நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளும் சுதேச்சைப் பிரஞ்சு மக்கள் தலைவரான ஜெனரல் டிகாலின் பிரதிநிதியும் இம்மகாநாட்டிற் கலந்து கொண்டனர். ஜெர்மானியர்களும், இத்தாலியர்களும் செய்யும் கொடுமைகளை எதிர்த்து நடத்தும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டு மென்றும், வெற்றி காணும் வரை நடத்த வேண்டு மென்றும், ஒருவருக் கொருவர் எந்த அளவிற்கு இதன் பொருட்டு உதவிக்கொள்ளக் கூடுமோ, அந்த அளவிற்கு உதவிக் கொள்ளவேண்டு மென்றும் தீர்மானித்தனர். ஜெர்மானியர்கள் அல்லது அவர்களுடைய கூட்டாளிகள் தம்மைக் கொடுமை படுத்துவார்களே என்பதற்காக, அவர்கள் ஆதிக்கத்திற்கு உள்ளாகி யிருக்கும் சுதேச்சை மக்களை மீட்டாலல்லது, எந்த விதமான ஒப்பந்தமோ, சமாதானமோ, முன்னேற்றமோ ஏற்பட முடியாது. யுத்தம் முடிந்த பிறகு நேச நாடுகள் எப்படிப்பட்ட தொடர்போடு வாழ வேண்டு மென்பது பற்றி அவர்கள் செய்ததோர் தீர்மானத்தில் குறிப்பிட்டதாவது:—"உலகிலுள்ள சுதேச்சை மக்கள் எல்லோரும் முழு மனதோடு ஒத்துழைக்க வேண்டும். அப்போது தான் நிரந்தரமான சமாதானத்திற்கு அடி கோலக் கூடும். அக்கிரமக்காரர்கள் தொல்லைகள் அகலும். பொருளாதாரத் துறையிலும், சமூகத்துறையிலும் அப்போதுதான் பாதுகாப்போடு எல்லோரும் வாழ முடியும். ஆகவே, இந்த நோக்கத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டு, யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் சுதேச்சை மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு வேலை செய்யவேண்டு மென்பது தான் நேச நாட்டார்களின் எண்ணம்."

இரண்டாவது கட்டம் 1941-ம் ஞு ஆகஸ்ட்டு மாதம் வெளியிடப்பட்ட அத்லாண்டிக் பிரகடனத்தைப் பற்றியது. இது ஒரு கூட்டுப் பிரகடனம். இதை வெளியிட்டவர்கள் அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்டும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய முதன் மந்திரி மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலுந் தான். தம் இரு நாடுகளுக்கும் ஒத்த பொதுவான தேசீய கொள்கைகளை இவர்கள் வகுத்தார்கள். இதை யடிப்படையாகக் கொண்டு தான் உலகத்தின் எதிர் கால வாழ்வு அமையு மென்று எதிர் பார்த்தார்கள். இந்தக் கொள்கைகளை பிறிதோர் பக்கத்தில் காணலாம்.

இரண்டு மாதங்களுக்கு முன்னதாக லண்டனில் கூடிய மற்ற நாடுகளின் பிரதிநிதிகளும், இந்தப் பிரகடனத்தை ஒப்புக் கொண்டார்கள். இதை அமுலுக்குக் கொண்டு வரத் தம்மால் இயன்றவரைப் பாடு படுவதாகவும் ஒத்துழைப்பதாகவும் வாக்குறுதிகள் கொடுத்தார்கள். அதன் பிறகும், சுதேச்சையை நாடும் நாடுகள் பல இந்தக் கோஷ்டியில் வந்து சேர்ந்திருக்கின்றன இவர்களைக் குறித்து சென்ற வருஷம் நடை பெற்ற அமெரிக்கக் கொடி விழாவன்று, ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் என்ன கூறினர் தெரியுமா? "நாம் வழக்கப்படி நடத்தும் கொடி விழாவன்று, நமது கொடியை மட்டுமன்றி, நாம் அனைவரும் எதிர்த்துப் போராடும் கொடுமைகளினின்று மீளும் நாளை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கும், யுத்தத்திற்கு உள்ளாகாதிருக்கும் நாடுகளுக்கும், யுத்தத்தினல் பல வகைகளிலும் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தும் மகா வீரத்தோடு போராடிக் கொண்டிருக்கும் நேச நாடுகளுக்கும் உரிய கொடிகளுக்கும் கூட நாம் வணக்கம் செலுத்துவோம்."

இந்த ஐரோப்பிய நாடுகளெல்லாம் தம் மீட்சி நாளை வெகு ஆவலோடு எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆசை அவர்களுக்கு முன்னையை விட இப்போது அதிகமா யிருக்கிறது. ஏனென்றால், எல்லாப் பக்கங்களிலும் அச்சு நாடுகளைத் தாக்கிப் போராடத்தக்க நிலையில் நேச நாடுகள் இன்றிருக்கின்றன. இதுபற்றி மிஸ்டர் சர்ச்சில் ஜூன் மாதம் 8-ம் தேதி செவ்வாய்க்கிழமை காமன்ஸ் சபையில் ஒரு அறிக்கை வெளி யிட்டார். அதில், "தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் விசித்திரமான சிக்கல்களை முளைக்கின்றன என்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. எதிர் காலத்தில் நமக்கு மிகவும் நல்ல நிலைமை ஏற்படத்தான் போகிறது." எதிர் காலத்தில் ஆங்கிலோ-அமெரிக்கக் கொள்கைகள், போர் தந்திர முறை, பொருளாதாரம் ஆகியவை எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி வாஷிங்டனில் பரிபூரணமான ஒற்றுமை ஏற்பட்டது. இதன் பயனாக நேச நாடுகளின் கவனமெல்லாம் தம் பொது நோக்கத்தில் பதிந்தன."

இனி நேச நாடுகள் என்ன செய்யப் போகின்றன என்று தான் உலகம் முழுதும் மிகுந்த ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. நேச நாடுகள் தம்மை எங்கே தாக்கக்கூடுமென்று அச்சு நாடுகள் மூளையைக் கிண்டிக் கிளறிக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய எல்லைப் புறங்களில், இரண்டாவது போர் முனையை ஆங்கிலோ-அமெரிக்கர்கள் ஆரம்பிக்க முயற்சிக்கலாம். ரஷ்யர்களும் வேனிற்காலத் தாக்குதலைக் கடுமையாக ஆரம்பிக்கலாம். அல்லது இந்த இரண்டு தாக்குதல்களும் ஒரே சமயத்தில் நிகழலாம். இப்படித் தான் நடைபெறு மென்று ஜெர்மானியர்கள் எதிர் பார்க்கிறார்கள். அன்றியும் ஆல்ஜியர்சில் பிரஞ்சு சுதேச்சை மக்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு விட்டது. இதுவும் ஜெர்மானியர்கள் வயிற்றை கலக்கிக் கொண்டு தான் இருக்கும். அன்றியும் அச்சு நாடுகள் கைப்பற்றின நாடுகளை நேச நாடுகள் தாக்கினல், உடனே அச்சு நாடுகளுக்கு விரோதமாகக் கலவரங்கள், பல விடங்களில் ஏற்படும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.

கூடிய விரைவில் ஐரோப்பாவைப் பெரும் படைகள் தாக்கலாம். அப்போது, நேச நாடுகளின் பலம், ஆதிக்கம், மன உறுதி ஆகியவை துலங்கும். நேச நாட்டுப் படைகளுக்குக் கடுமையான வேலை இருந்த போதிலும், முடிவில் வெற்றி கிடைப்பது உறுதி. இது பற்றி சந்தேகமே கிடையாது.



# பரிபூரண ஒற்றுமை ஏற்பட்டது

## சர்ச்சில்-ரூஸ்வெல்ட் மகாநாட்டின் அனுபவங்கள்

### காமன்ஸ் சபையில் முதன் மந்திரி பிரசங்கம்

"தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் போராட வேண்டிய விசித்திரமான சிக்கல்கள் முளைக்கின்றன என்ருலும் எதிர் காலத்தில் மிகச் சிறந்த நிலைமையை நாம் அடைவோம் என்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன."



உலகச்சமாதான வீரர்கள் சர்ச்சிலும், ரூஸ்வெல்டும்

ஜூன் மாதம் 8-ம் தேதி மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் ஒரு பிரசங்கம் செய்தார். தான், வாஷிங்டனில், தலைவர் ரூஸ்வெல்ட் முதலியோரைக் கலந்து விவாதித்ததைக் குறித்தும் அல்ஜியர்ஸுக்குப் போய பார்வையிட்டதைக் குறித்தும் அப்போது அறிவித்தார். அவர் பேசியதன் சுருக்கமாவது:—

இந்த உலக யுத்தம் முழுவதின் மேலும், வெற்றிக் கதிரொளி வீசுகிறது. இது பற்றிய முழு விவரங்களும் பிரிட்டிஷ் தலைவர்களுக்கும் அமெரிக்கத் தலைவர்களுக்கும் தெளிவாக விளங்கிக் கூறப்பட்டது. நம் ஒத்திருந்து வேலை செய்யக் கூடு மென்று ருசுப்பித்து விட்டோம். ஆபத்துக்களையும் நாம் எதிர்க்கக் கூடு மென்று மெய்ப்பித்து விட்டோம். இனி ஏற்படக் கூடிய வெற்றிகளுக்கு உரியவர்களாகத் தக்க உயர்ந்த நிலையிலேயே இருந்து கொள்ளக் கூடுமென்றும், அதனால் நல்ல காலம் பிறக்கு மென்றும் நாம் மெய்ப்பிக்க வேண்டும். எல்லாவற்றையும் விட, இது மிகவும் கஷ்டமானதாகத் தோற்றலாம். நாங்கள் என்ன முடிவிற்கு வந்திருக்கிறோ மென்று மேல் பூச்சாகக் கூட நான் எதுவும் வெளி யிடுவதற்கில்லை. எங்களால் இயன்றவரை நாங்கள் செய்திருக்கிறோ மென்று தான் சொல்லுவேன். அடுத்து என்ன செய்யப்பட வேண்டு மென்பது பற்றி, இரண்டு அரசாங்கங்களும் பரிபூரண ஒற்றுமை யடைந்திருக்கின்றன. சென்ற மகா யுத்த காலத்தில் ஏற்பட்டது போல, இப்போது எவ்வித மன வேற்றுமையு மில்லை. அரசியல்வாதிகளும் இராணுவத்தாரும் சமபந்திப்பட்டிருப்பதனால், மன வேற்றுமைகள் உண்டாகப் பெரிதும் இடமுண்டு. இனி, அடுத்தாற் போல் என்ன ஏற்படு மென்று நான் ஜோசியம் சொல்ல மாட்டேன். ஒன்று மட்டும் நான் சொல்வேன், வாஷிங்டனில் நாங்கள் 15 நாட்கள் கலந்து பேசினேம். அப்போது ஆங்கிலோ-அமெரிக்கக் கொள்கை, போர்த் தந்திர முறை, பொருளாதாரம் முதலியவை பற்றி பரிபூரணமாக விவாதித்து முடிவு கட்டினேம்.

வாஷிங்டனிலிருந்து நான் வடாப்பிரிக்காவிற்குப் போக வேண்டு மென்று விரும்பினேன். தலைவர் ரூஸ்வெல்ட், என்னுடன் அமெரிக்க விமானப் படைகளுக்கும் தரைப் படைகளுக்கும் தலைவரான ஜெனரல் மார்ஷலை அனுப்பினர். நாங்கள் வடாப்பிரிக்காவிற்கு விமானத்தில் வந்திறங்கினேம். அங்கே ஒரு வாரம் தங்கியிருந்தேன். ஜெனரல் அயிஸனேவர், ஜெனரல் அலெக்சாந்தர், அட்மிரல் கன்னிங்ஹம், ஏர் சீப் மார்ஷல் டெட்டர். ஏர் மார்ஷல் கோனிங்ஹம் ஜெனரல் மண்ட்கமரி. ஜெனரல் ஸ்பாட்ஸ், ஜெனரல் ஆண்டெல், முதலிய உயர்ந்த இராணுவ அதிகாரிகளைக் கலந்து எந்த முறையில் போரை நடத்த வேண்டு மென்பது பற்றி விவாதித்தேன். அப்போது அமெரிக்கப் படைத் தலைவர்களும் பிரிட்டிஷ் படைத் தலைவர்களும் ஒரே நாட்டின் படைகளை நடத்துகிறவர்களைப் போல எல்லா வகைகளிலும் ஒற்றுமையோடிருந்தார்கள். படையினர் எந்த நாட்டினரா யிருந்தாலும் எவ்வித வேற்றுமையுமின்றி நடத்தப்படுகிறனர். நான் நானே நின்று 25,000 பேர் கொண்ட துருப்புக்களைப் பார்வையிட்டேன். அவர்கள் எதிரியை எதிர்த்துப் போராடும் சந்தர்ப்பத்தை ஆவலோடு எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது படைகள் ஏராளமாக வந்து திரண்டிருக்கின்றன.

தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் போராட வேண்டிய விசித்திரமான சிக்கல்கள் முளைக்கின்றன என்பது உண்மை தான். எதிர் காலத்தில் மிகச் சிறந்த நிலைமையை நாம் அடைவோம் என்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.

வடாப்பிரிக்கப் போரில் எதிரிகளின், 248,000 பேர்கள் கைதியானர்கள். குறைந்தது 50,000 பேர்களாவது கொல்லப்பட்டிருக்கவேண்டும். ஆகவே, துனிசிய யுத்தத்தில் எதிரிகளுக்கு துனிசியாவில் மட்டும் 3 லட்சம் பேர்கள் நஷ்டம். இவர்களில் பாதிப் பேர்களுக்கு அதிகப்பட்டவர்கள் ஜெர்மானியர்கள். அமெரிக்க இரண்டாம் படையினர் கைப்பற்றிய 35,000 கைதிகளில், 33,00.. பேர்கள் ஜெர்மானியர்கள்.

ஜெர்மனிக்கு, துனிசியவிலும், ஸ்டாலின்கிராடிலும் நேர்ந்த நஷ்டங்கள் மகத்தானவை. ஆகஸ்டு மாதம் வரையிலும் துனிசியப் போராட்டத்தை நீடிக்கச் செய்யலா மென்று ஜெர்மானியர் எதிர்பார்த்திருந்ததாகத் தெரிகிறது. கடுமையாகப் போராடித் தான, நாம் வெற்றி காண முடியும்.

## மிகுந்த பலம் பெற்றிருக்கிறேம்.

ஒரு போதுமில்லாத அளவிற்கு நாம் படை பலத்தில் மிகுந்திருப்போம். யுத்த ஆரம்பத்தில் தமக்குக் கிடைத்த வெற்றிகளைப் பிரமாதப் படுத்திக் கொண்டிருந்த குற்றவாளிகளான அச்சு நாடுகள், யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்படும் காலத்தில், அதையும் வெகுவாய்ப் பாராட்டத் தான் செய்வார்கள். எந்த காரணத்தால் யுத்தத்தைத் துவக்கினர்களோ அவர்களே, யுத்தத்தை முடிக்கவும் காரணங் காட்ட முடியாது.

## ரஷ்யாவின் பெரும் பொறுப்பு

சோவியத் ரஷ்ய சர்வாதிகாரியும் நமது தலை சிறந்த நேசருமான தோழர் ஸ்டாலினையாவது அவருடைய பிரதிநிதியையாவது கலந்து பேசும் சந்தர்ப்பம் நமக்கு இது வரை கிடைக்காதது பற்றி உண்மையிலேயே வருந்துகிறேன். ரஷ்யா மகத்தான பொறுப்புக்களை மேற் கொண்டிருக்கிறது. ஏராளமான படைகளை இழந்திருக்கிறது. இந்தப் பெரும் பாரத்தை ரஷ்யாவிற்குக் குறைக்க வேண்டும். விரைவாகவும் தகுந்தபடியும் சீனவிற்கு உதவ வேண்டும். நியூசிலந்துக்கும் ஆஸ்திரேலியவிற்கும் மிகுந்த பாதுகாப்பளிக்க வேண்டும். இம் மூன்று நோக்கங்களும் எம் கவனத்தை விட்டு அகலுவதே கிடையாது. நாம் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களை ஒழிப்பதில் நம் கவனத்தைச் செலுத்திக் கொண்டு வருகிறோம். அமெரிக்கர்கள் ஜப்பானை ஒடுக்கி, அதன் கப்பற் படையின் அகம்பாவத்தை நசுக்குவதில் தம் சிந்தனையைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ரஷ்யப் படைகளோ 2,000 மைல் நீளமுள்ள போர் முனையில் 190 ஜெர்மன் டிவிஷன் படைகளையும், 28 மற்ற அச்சு நாட்டுப் படைகளையும் எதிர்த்து நிற்கின்றன. இங்கே தான் மிகப் பெரும் யுத்தம் நடைபெறும் போலிருக்கிறது.

(10-ம் பக்கம் பார்க்க)

# புலி போச்சு; கிலி வந்தது

ஒரே ஒரு காட்டிலே ஒரு புலி. வெகு முரட்டுப் புலி. அதைப்பற்றி யாராவது பேசினாலே, அக்கம்பக்கத்து ஊரில் இருந்தவர்கள் எல்லாம் கிடாய்த்துப் போய் விடுவார்கள். அந்தப் புலி நன்றாக நர மாமிசத்தை ருசி பார்த்துவிட்டது. ஆகவே, இருட்டு வேளைகளிலே அது நைஸாக, ஊரார் அயர்ந்திருக்கும் சமயம் பார்த்து ஊருக்குள் புகுந்து அகப்பட்டதை அடித்து, ஸ்வாஹா செய்துகொண்டிருந்தது. ஊர்க்காரர்களுக்கு என்னசெய்வது என்று புரியவில்லை. அந்த ஊரிலே யாரிடமும் துப்பாக்கி என்பதே கிடையாது. வெறுந்தடிகளை வைத்துக் கொண்டு என்ன செய்வது? தாரம், தம்படைகளை அடித்து ஓசைபடுத்தினாலோ, அந்தப் புலி கொஞ்சம் பதுங்கி யிருக்கும். பிறகு திடீரென்று பாயும். வானமளாவத் துள்ளும். பிரமாதமாக கர்ஜிக்கும். கொஞ்ச காலத்திற்கு, எல்லாம் அதன் ராஜ்யமாகவே இருந்தது.

இத்தகைய சந்தர்ப்பத்திலே, தொலையிலிருந்து ஒரு மோட்டார் வழி, பலவித் துப்பாக்கிகள் சகிதமாக அவ்வூருக்கு வந்து சேர்ந்தார். புலி செய்யும் அட்டகாசங்களைப் பற்றி அவர் ரொம்ப கேள்விப்பட்டிருந்தார். அந்தப் புலியை எப்படியாவது கொன்று ஒழித்து விடுவதென்றே அவர் கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருந்தார்.

அந்தப் புலி வாழ்ந்து கொண்டிருந்த காட்டிலே ஒரு நல்ல குகை இருந்தது. அந்தக் குகையிலே அந்தப் புலி இருந்து கொண்டு, கொட்ட மடித்துக் கொண்டிருந்தது. காட்டோரத்திலேயே அந்தக் குகை இருந்ததால், முதலில் அந்தக் குகையிலிருந்து அப்புலியைக் கிளப்பாமல் காட்டுக்குள் புகுவதற்கில்லாதிருந்தது. காட்டை அழித்து, எல்லா இடங்களையும் சமவெளியாக்கி, சிறிது பயத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என்று பார்த்தால், காட்டை யார் போய் அழிப்பது. அழிக்கபோகிற இடத்திலே அந்தப் புலி பதுங்கியிருந்து பாய்ந்து கடித்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம் எல்லோருக்கும் இருந்தது. ஆகவே துணிந்து யாரும் புறப்படவில்லை.

ஆனால், புதிதாக வந்த மனிதர், எல்லோரது மனசிலேயும் தைரியத்தை ஊட்டினார். ஒரு நாள் அவர்களில் சிலரை அழைத்துக் கொண்டு காட்டோரத்தில் நின்றவாறே பத்து, இருபது குண்டுகளைச் சுட்டார். நடு நடுவே புலியின் காஜனை கேட்டுக் கொண்டிருந்தது. அதற்கெல்லாம் புது ஆசாமி பயப்படவில்லை. மேலும் மேலும் குண்டுகளைப் பொழியச் செய்தார். அதுவரை அட்டகாசம் செய்து கொண்டிருந்த புலிக்கே கிலி ஏற்படத் தொடங்கிவிட்டது. அனுதினமும் புது ஆசாமியும், ஊரார்களும் அதற்குத் தொந்தரவளி துவந்தார்கள். ஆகவே, அப்புலி வேறு வகையின்றி அந்தக் குகையை விட்டுக் கிளம்பியது. அந்தக் குகையிருந்த பாறைமீது புது ஆசாமி ஏறிக்கொண்டார். காட்டிலே உள்ள இடங்கள் எல்லாம் அவரது திருஷ்டிக்கு நன்றாக விழுந்தன. ஊராருக்கோ மகா சந்தோஷம். அவர்கள் தங்கள் சக்தி கேற்றவாறு, அக்காட்டின் பல பாகங்களை நோக்கியும் கற்களையும், மலைனுங்கட்டியையும் தூக்கி எறிந்தார்கள். ஒரு காலத்தில் சுற்றுப்புறத்திலிருந்தவர்கள் மனதிலே கிலியை மூட்டிவந்த அதே புலியின் உள்ளத்திலே "இனி நாம் தப்பமுடியுமா? எங்கு திரும்பினாலும் எமன்களைப்போல, ஈட்டியும், கம்பும், கல்லும் தாங்கி ஆட்கள் நிற்கிறார்களே!" என்ற கிலி உண்டாகிவிட்டது. இனி, அந்தப்புலி தப்புவது அரிது என்பது எல்லோருக்கும் நிச்சயமாகிவிட்டது. ஆனால் என்று அகப்படப் போவது என்பதும், அது உயிரோடு சிக்குமா செத்த பிணமாகத்தான் அகப்படுமா என்பதும் தான் நிச்சயமாகத்தெரியவில்லை. அதோடு ஊராரைக் கலக்கி அடித்த ஒரு புலியை யாராவது சும்மா இருக்கவிட்டு விட முடியுமா? அது உயிரோடு அகப்பட்டால் உண்டு இல்லை என்று ஆக்கிவிட மாட்டார்களா?

இந்தப் புலிக் கதையும், ஹிட்லருடைய கதையும் அநேகமாக ஒத்திருப்பதை வாசகர்கள் கவனித்திருக்கலாம். சென்ற ஓரிரு வருடங்களாக ஹிட்லர் பெரும்புலியாகவே இருந்து வந்திருக்கிறார். அவர் கபளீகரம் செய்த, அப்பாவி நாடுகள் பல. ஆனால், அமெரிக்கா யுத்தத்தில் இறங்க வேண்டிய சந்தர்ப்பம் வந்ததும், ஹிட்லர் புலி பாடு கொஞ்சம் அவஸ்தைதான். ஹிட்லருக்கு ஒரு நல்ல பாதுகாப்புக் குகைபோலிருந்த வட ஆபிரிக்கப் பிரதேசம் முழுவதும், நேச தேசத்தார் வசப்பட்டபிறகு, ஹிட்லர் புலியின் உள்ளத்திலே பெருங் கிலி பிறந்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. நாலாபுறமும் விமானத் தாக்குதல்கள் நடக்க, பல திசைகளிலிருந்து வந்து தாக்க, படைகள் காத்திருக்க, நடுவில் சிக்கிய ஹிட்லர் புலி எவ்வளவு காலம் தான் கண்ணும்பொத்தி ஆட்டம் ஆடிக் கொண்டிருக்க முடியும். அவர் உயிரோடு பிடி படப்போகிறாரா, பிடிபட்டால் தமக்கு நேரக்கூடிய கோர தண்டனைகளை எண்ணிப் பயந்து உயிரை மாய்த்துக் கொள்ளப் போகிறாரா என்பதுதான் நிச்சயமாகத் தெரியவில்லை. ஹிட்லர் புலி, பிறர் மனங்களிலே கிலியை உண்டாக்கிக் கொண்டிருந்த காலமெல்லாம் போய், ஹிட்லரது உள்ளத்திலேயே பெருங்கிலி ஏற்படும் காலம் வந்துவிட்டது.

## ஹிட்லர் புலியும் ரஷ்யக் கரடியும்

ஹிட்லர் புலிக்கு ருஷ்யக் கரடியோடு போராடவேண்டிய சங்கடம் வேறு ஏற்பட்டது. அந்தக் கரடியோ நிமிர்ந்து நின்று, அதிகம் கத்தாது தனது கூரிய நகங்களால் ஹிட்லர் புலிக்கு ஏகக் காயத்தை உண்டுபண்ணிவிட்டது. அந்தக் கரடியை எப்படியாவது அடக்கி ஒடுக்கிவிட்டால், அப்பால் சுற்றி வருவதற்கு, காட்டிலே அதிக இடம் கிடைக்கும்; தன்னைத் துரத்த வருகிறவர்களின் வேலையை இன்னும் கடினமானதாக ஆக்கலாம் என்று ஹிட்லர் புலி நினைப்பதுண்டு. ஆனால் அது லேசில் முடியக் கூடிய காரியமாகவே இல்லை.

வசந்தகாலம் பிறந்தாச்சு. வழக்கத்திற்கு மாறாக, வெகு முன்னதாகவே இந்தக்காலம் இவ்வருடம் வந்துவிட்டது. ஆனால், ஹிட்லர் ருஷ்யா மீது தமது புதுத்தாக்குதலை இன்னும் ஆரம்பிக்கவேயில்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடுமென நிபுணர்கள் கூறுகிறார்கள். மனிதன் திட்டம் போடுகிறான்; கடவுள் சீட்டைக் கிழிக்கிறார் என்றொரு பழமொழி உண்டு. ஹிட்லர் என்ற மனிதன் ஏதேதோ திட்டங்கள் போட்டிருந்தான். அதனைப் பாழாக்க கடவுள் வரவேணுமென்ற அவசியம் ஏற்படாது. பார்த்துக் கொண்டுவிட்டார் ஸ்டாலின். வசந்த கால படையெடுப்பிற்கென்று ஹிட்லர் ருஷ்யாவிலே பல இடங்களில் சேர்த்து வைத்திருந்த பெட்ரோலையும், ரயில்களையும், விமானங்களையும், விடாது தாக்கி, கரியாக்கி விட்டார் ஸ்டாலின். சென்ற மூன்று மாதங்களில் மட்டும் ஹிட்லருக்கு ஐயாயிரம் விமானங்கள் நஷ்டமாம். அதே போல் ஆட்களும் சேதமாகிவிட்டனர்.

புதிதாக ஆள் வேணுமென்று ருமேனியாவையும், ஹங்கேரி தேசத்தையும் கேட்டார் ஹிட்லர். ஆனால், தன்னை அதிகாரம் செய்பவனிடம் பூரண சக்தி இருக்கும் வரை தானே, அடிமை பயந்துகொண்டிருப்பான். அவன் கறுலொடிந்து, மூக்குடைந்து நிற்கும்பொழுது, அடிமைக்கு ஒரு புது தைரியம் பிறக்காதா? அதேபோல, ஹிட்லர் வெற்றிமேல் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தவரை அவர் அமுக்கிப் பிடித்திருந்த நாட்டினர் எல்லாம், அவர் ஆட்டியபடி எல்லாம் ஆடிக் கொண்டிருந்தனர். ஆனால், இ பொழுதோ மேற்றிசையிலேயும், தென் திசையிலிருந்தும் நேச தேசத்தார் அச்சு நண்பர்களை அடித்து நொறுக்குகிறார்கள் அல்லவா? ஆகவே, ருமேனிய அரசர், அந்நாட்டு சர்வாதிகாரியாக உள்ள அன்டனஸ்குவிடம், "இனி ஆட்களை அனுப்ப முடியாதய்யா!" என்கிறாராம். ஹங்கேரி தேச ரீஜண்டும் முணக தொடங்கிவிட்டாராம். என்ன செய்வார் ஹிட்லர்? ஜெர்மனியிலே அதிக ஆட்களைத் திரட்டலாம் என்றாலோ, ஜெர்மன் மக்களின் மனம் முன்போலில்லை. நேராகத் தங்கள் தலைகளுக்கு மேலாகவே குண்டு மழை பொழிவதை அவர்கள் பார்க்கிறார்கள். ஆகவே, ஹிட்லரின் வார்த்தைகளில், அவர்களுக்கு நம்பிக்கை குறைந்துவிட்டது. அவரே கடவுள் என்று எண்ணியிருந்த எண்ணமெல்லாம் மாறி, ஜெர்மன் மக்களை பலிகொள்ள வந்ததோர் பிடாரி என்ற எண்ணம் அவர்கள் இதயங்களில் ஏற்படத் தொடங்கிவிட்டது.

## இத்தாலிக்குத் தலை வலி ஆரம்பம்.

இத்தாலியிலிருந்து முன்பெல்லாம் ஆட்களை அனுப்பச் சொல்லிக் கொண்டிருந்தார் அவர். ஆனால், ட்யூனிஸியாவிலே அச்சு நாட்டார் அடைந்த படுதோல்வி காரணமாக, இத்தாலிக்குப் பலமான தலைவலி ஆரம்பமாகிவிட்டது. அதற்கு அருகே உள்ள தீவுகள்மீது ஆகாயத்திலிருந்தும், கடலிலிருந்தும் குண்டுகளை இடைவிடாது வீசுகின்றனர் நேசதேசத்தார். சென்ற மாதத்திலே 22-ந் தேதியிலிருந்து 28-ந் தேதி வரை மட்டும், இத்தாலிமீதும், அதைச்சார்ந்த தீவுகள் மீதும் முப்பது லக்ஷம் டன் குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன என்றால், நேசதேசத்தாரின் சக்தி எப்படிபட்டதாக ஆகிவிட்டது என்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்களேன்.

இத்தாலிய மக்களுக்கு இத்தாலியில் உள்ள பாதுகாப்புக்கள் மீது நம்பிக்கை அதிகமில்லையாம். சமீபத்திலே, தென் கடற்கரையோரத்தில் உள்ள பலர், நேச தேசத்தாரின் வருகைக்காக ஏற்பாடு செய்தார்கள் என்ற குற்றத்திற்காகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்களாம்.

நேசதேசப் படைகள் எந்தச்சமயத்திலும் இத்தாலியிலோ, அதற்கு அருகே உள்ள தீவுகளிலோ வந்து இறங்கக்கூடும், அதோடு இத்தாலி சீட்டுக்கட்டாலாகிய வீடு மாதிரி தொட்டால் நொறுங்கிப் போகும் என்ற பீதி இத்தாலிய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறதாம். நேசதேசப் படைகள், மூவாயிரம் மைல்கள் பரந்துள்ள வட ஆப்பிரிக்கக் கரையோரத்திலே ஏகமாக வந்து இறங்கி, எந்த நிமிஷமும் புறப்படச் சித்தமாயிருக்கின்றனவாம். ஜிப்பால்டரிலே பெரியதோர் கப்பல் படை தயாராகக் காத்திருக்கிறதாம். படையெடுப்பு பிளான் எல்லாம் நன்றாகப் போட்டுவிட்டு, பிரதம மந்திரி சர்ச்சில் அமெரிக்காவிலிருந்து வட ஆபிரிக்கா வந்து, அங்குள்ள பிரஞ்சுத் தலைவர்களைப் பார்த்து, விவரமாக எல்லாம் சொல்லிவிட்டு, ஜிப்ரால்டர் சென்று அங்கிருந்து சீமைக்குப்போய் விட்டாராம். இனி அவர் 'ரைட்' கொடுக்க வேண்டியது தான் பாக்கி. ஒரே பாய்ச்சல்தான். உலக சரித்திரத்திலேயே கேள்விப்பட்டிராத அவ்வளவு பெரிய கடற்படையெடுப்பு ஒன்று நடக்கப்போகிறது.

இதெல்லாம் அறிந்த இத்தாலிய மக்கள் கிலிபிடித்து உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கே ஜெர்மனியிலிருந்து உதவி வந்தால் தேவலை என்றிருக்கும்போது, அவர்கள் எங்கே ருஷ்யாவிற்கு ஆளனுப்பப் போகிறார்கள்?

ஹிட்லர் ருஷ்யப்போர் முனையிலே முப்பத்தைந்து லக்ஷம் வீரர்களைக் குவித்து வைத்திருக்கிறார். ஆனாலும், இவ்வருடம் அவர் ருஷ்யாமீது முனைந்தேறிப் பாய்வது என்பது இராது என்கிறார்கள். ஏனென்றால், நேசதேசத்தார் பண்ணின திருவிளையாடல்கள் காரணமாக, ரூர் பிரதேசமெல்லாம் சூன்யப் பிரதேசமாகி விட்டது. தொழிற்சாலைகள் எல்லாம் தொலைந்துவிட்டன. புதிதாக, கிழக்கு ஜெர்மனியிலே தொழிற்சாலைகளை எழுப்பி, அங்கே வேலையைத் தொடங்க ஒரு வருஷ அவகாசமாவது அவருக்குத் தேவையாக இருக்குமாம். ஆகவே ருஷ்யாவில் நின்று, காலத்தைக் கழிக்க ஹிட்லர் தீர்மானித்திருக்கக் கூடும். ருஷ்யர்களோ சும்மா இல்லை. அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கே ஹிட்லருக்கு வேலை சரியாக இருக்கிறது. க்யூபன் பிரதேசத்திலே பயங்கரமான விமானப் போர்கள் நடக்கின்றன. அவற்றிலே, ஹிட்லர் பல விமானங்களை இழந்தார். ஆனால், ஹிட்லருக்கு சிறிது சந்தோஷமளிக்கும்படியாக, அவரது விமானிகள் கர்ஸ்க் என்ற முக்யமான நகரைப் பெரிதும் பாழ்படுத்தி விட்டார்களாம். அங்குள்ள போக்குவரத்துப் பாதைகள் சீர்கெட்டதால், ருஷ்யருக்குக் கொஞ்சம் கஷ்டம்தான். ஆயினும் அவர்கள் எல்லாவற்றையும் சமாளித்து கொண்டு வருகிறார்கள்.

## பிரஞ்சு மக்கள் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேற்றிசையிலே உள்ள டங்கர்க் போன்ற துறைமுகப்பட்டினங்களில், கடற்கரையோரமிருக்கும் பிரபல கட்டடங்களை எல்லாம் சிமிட்டிக்கோட்டைகளாக மாற்றச் செய்து விட்டாராம் ஹிட்லர். பிரான்ஸிலே உள்ள மக்கள் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், எந்த நிமிடமும் அங்கே பெரிய புரட்சி நடக்கலாம் என்றும் விஷி சர்க்கார் எதிர் பார்க்கிறார்களாம். ஆகவே முன்கூட்டியே எச்சரிக்கையாக இருக்க, பிரான்ஸில் இருபது வயதுக்கு மேற்பட்ட வயதுள்ளவர்களையெல்லாம் ஜெர்மனியில் போய் பாடுபடவேண்டுமென, கட்டாயச் சட்டமொன்று பிறப்பித்திருக்கிறார்களாம்.

ஹிட்லருக்கு போனவாரம் மற்றொரு இடி விழுவது போன்ற செய்தி ஒன்று எட்டியிருக்கும். அதுதான், பிரான்ஸிற்கு வெளியே இருந்து, பிரான்ஸின் விடுதலைக்காகப் போராடும், டிகால், ஜீரோ ஆகிய இரு கோஷ்டியாரிடை சமரசம் ஏற்பட்டு, அவர்கள் பரஸ்பர சம்மதத்தோடு ஒரு நிர்வாகக் கமிட்டியை ஏற்படுத்திக்கொண்ட செய்தியாகும். அதோடு, முப்பத்தைந்து மாத காலங்களாக, அலெக்ஸாந்திரியா துறைமுகத்தில் தூங்கிக்கொண்டிருந்த பிரஞ்சுக் கடற்படை ஒன்று, தானாகவே நேச தேசத்தார் பக்கம் சேர்ந்துகொண்டது.

இவை தவிர, அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலே, வாவர நாஸி நீர்மூழ்கிகளின் ஜம்பம் அதிகம் சாய்வதாகக் காணோம். அதற்கு மாறாக, நாஸி நீர்மூழ்கிகள் ஒரேயடியாக நீரில் முழுகியே போய்க்

(8-ம் பக்கம் பார்க்க)



# "சீச்சீ! துனீசிய் திராட்சைப் பழம் புளிக்கும்"!!

## கைக்கு எட்டி, வாய்க்கு எட்டாத பொருளைப் பற்றி அச்சுப் பிரசாரம்

### பர்லின்-ரோம் போட்டா போட்டிப் பொய்க் கணக்கு

### 'காமிண்டர்ன்' கலைப்பும், கோப்பல்சின் கலக்கமும்

[சடந்த புதன்கிழமை மேமீ 2-ந் தேதி, "இரட்டை நாவு" அல்லது அச்சு வானொலி நிலையப் பிரசார ஆராய்ச்சி என்ற தொடரில் டி. ஏ. வி. நாதன் அவர்கள் செய்த பிரசங்கம் பின்வருமாறு:—]



ஆப்பிரிக்காவில் உள்ள நேச நாட்டுப் படைகளின் பிரதம தளகர்த்தர், ஜெனரல் ஐசன்ஹவர்—'துனிசிய வெற்றி, எதிரியின் மனவுறுதிக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது"—என்று கூறியிருக்கிறார்.

சென்ற இரண்டு வாரத்திய அச்சுநாட்டுப் பிரசாரத்தைக் கவனித்தால் ஒரு கதை நினைவுக்கு வருகிறது. அது உங்களுக்கெல்லாம் தெரிந்த கதை தான். "திராட்சைப் பழ நரி கதை" என்றால் அதற்கு மேல் சொல்ல வேண்டியதில்லை. இருந்த போதிலும், சுருக்கமாக அந்தக் கதையைச் சொல்லி விட்டால், கதைக்கும் அச்சு நாட்டுப் பிரசாரத்துக்கும் இருக்கும் பொருத்தம் விளக்கமாகப் புலப்படும். பசியால் மெலிந்த நரி ஒன்று, பல திசைகளிலும் பார்த்துமொன்றும் காணாமல், கடைசியில் ஒரு உயர்ந்த திராட்சைக் கொடியைக் கண்டது. மேல் நோக்கிப் பார்த்ததில் அருமையான திராட்சைப் பழக்குலையொன்று அதன் கண்ணைப் பறித்தது. "பசிக்குப் பனம்பழம் சாப்பிட்டால் பித்தம் படுகிற பாடு படுகிறது", என்று சொல்லுவார்கள். பசிக்கு திராட்சைப் பழம் சாப்பிடுவதற்கு என்ன கசக்கிறதா? ஆகையால் நரி அந்தப்பழத்தைத் தின்பதற்குத் தாவிக் குதித்தது. பழக்குலை எட்டவில்லை. மறுபடியும் குதித்தது. தான் கீழே விழுந்ததைத் தவிர, பழம் கிட்டின பாடில்லை. எட்டி எட்டி ஆனமட்டும் குட்டிக்கரணங்கள் போட்டும், பழமும் அகப்படவில்லை, பசியும் தீரவில்லை. கீழே விழுந்து காயப்பட்டது தான் லாபம்.

### "ஈஜிப்டின் வயிற்படி எங்கள் கைப்பிடியில்"

இதே மாதிரியாக, பிற நாடுகளைக் கவர வேண்டும் என்ற கடும் பசி கொண்ட ஹிட்லருக்கு, சூயஸ் கால்வாய் திராட்சைப்பழக் குலையில் நோக்கம் சென்றது. தன்னால் ஆனமட்டும் சூயஸ் கேந்திர ஸ்தானத்தை எட்டிப் பிடிப்பதற்குப் பகீரத பிரயத்தனம் செய்தார். அவருடைய துருப்புகள் எல் ஆல்மீன் வரைக்கும் சென்றன. இன்னும் ஒரு குதி குதித்தால் சூயஸ் அகப்பட்டுவிடும் போலிருந்தது. ஆனால், உயரக் குதித்து, எட்டிப் பிடிப்பதற்கு வேண்டிய ஆற்றல் மாத்திரம் இல்லை! அப்போது குதித்த குதிப்பும், செய்த ஆர்ப்பாட்டமும் பிரமாதமாயிருந்தன.

"ஈஜிப்டின் வாயிற்படி எங்களுடைய கைப்பிடியில் இருக்கிறது. இவ்வளவு தூரம் நாங்கள் சென்றது, இப்போதாவது, பிறகாவது, பின் தள்ளப் படுவதற்காகவல்ல,"

என்று ஹிட்லருடைய ஆப்பிரிக்கத் தளகர்த்தர், ரோமல், பர்லினில், பத்திரிகை நிருபர்களிடம் வீரம் பேசினார். இந்த வீரப் பேச்சு எப்போது என்று கேட்பீர்களோ? சரியாக எட்டு மாதங்களுக்கு முன் அதாவது சென்ற வருஷம் அக்டோபர் மாதம், மூன்றும் தேதியன்று, எட்டு மாதங்களுக்கு முன் சூயசை நோக்கிக் கொட்டாவி விட்ட ரோமல் இப்போது எங்கிருக்கிறார்? பால்கன்ஸ் பிரதேசத்தில் படைகளைத் திரட்டிக்கொண்டு, அந்தத் தீபகற்பத்தின் கடற்கரை யோரத்தை பாது காத்துவிட்டால் போதும், என்ற மனப் பான்மையில் இருக்கிறார்.

### தலை தப்பினது ரோம்மலின் புண்ணியம்.

"ஆளுக்கொரு குட்டு, அடியேன் தலை மொட்டை" என்றபடி, பிரிட்டிஷ் எட்டாம்படை, பிரிட்டிஷ் முதற்படை, நான்காவது இந்தியப் படை அமெரிக்கப்படை, சுதந்தர பிரெஞ்சுபடை, முதலிய பல படைகளிடம் அடி வாங்கி, தன் துருப்புக்கள், தளவாடங்கள் முதலியவற்றை துனீசியாவில் நடந்த மாபெரும்போரில் அவர் இழந்து விட்டார் "தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்" என்று. ஆகாய விமானத்தில் தப்பி ஓடி, இப்போது பால்கன்ஸ் கரை யோரத்தில் தலையைச் சொரிந்து கொண்டிருக்கும் "பீல்டுமார்ஷல்" ரோம்மலை விட்டுவிட்டு, அவருக்கு துனீசியாவில் நேர்ந்த கடுந் தோல்வியைப்பற்றி அச்சு நிலையங்கள் கூறுவதைச் சற்று கவனிக்கலாம்.

துனீசியா பிரதேசத்தை ஆப்பிரிக்க பூகோளப் படத்தில் பார்த்தால் அச்சு அடையாளம் அப்படியே, ஒரு திராட்சைப்பழக் குலையைப் போலிருக்கிறதை நீங்கள் பார்க்கலாம். தொடங்கும்போது, திராட்சைப்பழ நரி கதையைக் கூறியதால், அதற்குத் தகுந்த மாதிரி திரித்துப் பேசுகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் படத்தை நீங்களே பாருங்கள். நான் கூறுவதன் உண்மை புலப்படும். சூயஸ் திராட்சப் பழம் கைக் கெட்டாமல் போய்விட்டது. சூயஸ் கால்வாய் இருக்கும் தீபகற்பங்கூட திராட்சைப் பழக்குலையைப் போலிருக்கிறது. ஆனால், துனீசியா திராட்சைப்பழம் கைக்கெட்டியது; வாய்க்கு எட்டவில்லை. ஆகையால், "சீச்சீ, இந்தப் பழம் புளிக்கும்" என்று அச்சு நிலையங்கள் துனீசியாவின் மேல் ஒரு தனி வெறுப்பு காட்டிக் கொண்டு வருகின்றன.

### "தோல்வியினால் லாபந் தான்"!

15-நாட்களுக்கு முன், அதாவது மே 18-ந்தேதி, பர்லினிலிருந்து ஒரு நீண்ட பிரசங்கம் ஒலிபரப்பப்பட்டது. அதில் ஒரு ஜெர்மன் விமரிசையாளர்,



ஹிட்லரின் பிரசார மந்திரி கோப்பல்ஸ்—மாஸ்கோ அறிக்கை இவரைக் கலக்கி விட்டது.

"வட ஆப்பிரிக்காவில் நேர்ந்த தோல்வியினால், எங்களுக்கு ஒன்றும் நஷ்டமில்லை. உண்மையில் எங்களுக்கு லாபம் தான். எங்களுக்கு பின்னால் இருந்து கொண்டு எதிரி தாக்கும்படியான நிலைமை போய் விட்டது"

என்று ஒரேயடியாய் அடித்து விட்டார். அப்படியானால் ஏன் துனீசியாவுக்காக அவ்வளவு வேகமாகத் தாவிக் குதித்தார்கள்? 9½ லட்சம் அச்சுத் துருப்புகளை ஏன் ஆப்பிரிக்காவில் வீணாக்கினார்கள்?

"துனீசியாவைக் கைப்பற்றியதால் மத்தியத் தரைக்கடலின் கிழக்குப் பாதையின் முக்கியமான ஒரு திறவுகோல் நம்மிடம் இருக்கிறது", என்று அப்போது பர்லின் நிலையம் வாய்ப் பறையறைந்ததே! அது என்னாயிற்று? கைக்கும் வாய்க்கும் அகப்பட்டால், "திராட்சைப்

(9-ம் பக்கம் பார்க்க)

## தொழிலாளர் பகுதி

# நேச தேச ஒற்றுமை பலம்

அடுத்த வாரம் நேச தேச விழா. இந்த விழாவை உலகமெங்கும் கொண்டாடுவார்கள். உடனே அச்சுநாடுகளில் கூடவா என்று வாசகர்கள் கேட்கக்கூடும். அவர்கள் கொண்டாடுவதற்குப் பதிலாகத் திண்டாடுவார்கள். எப்படி? அமெரிக்காவில் மிஸ்டர் சர்ச்சிலும் தலைவர் ரூஸ்வெல்டும் மற்ற முக்கியமான நேசநாட்டு படைத் தலைவர்களும் பல விஷயங்களைக் குறித்துப் பேசி முடித்துவிட்டார்கள். மிஸ்டர் சர்ச்சில் திரும்பி லண்டன் வந்து சேர்ந்துவிட்டார். உடனே மந்திரிசபையைக் கூட்டினர். இந்தச் சபையில் நடைபெறும் நடவடிக்கைகள் எல்லாம் மகா அந்தரங்கமானவை. அமெரிக்காவில் நடைபெற்ற இரகசிய மகாநாட்டு நடவடிக்கைகளைக் குறித்து எடுத்துச் சொல்லியிருப்பார். ஆகவே இவைகளைக் கேள்விப்பட்ட அச்சு நாட்டார் திண்டாட்டந்தான் செய்வார்கள். யுத்த சம்பந்தமாகக் கட்டளைகள் கிளம்பிக் கொண்டிருக்க வேண்டும். இவை வெகு இரகசியமானவை. என்றாலும், பொதுவாக, இக்கட்டளைகள் எப்படிப்பட்டவை என்று ஒருவாறு அனுமானிக்கலாம். அக்கட்டளைகளை எல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் அச்சுநாட்டுப் படைகளுக்குச் சாவுமணி அடிக்கத் தான சொல்லப்பட்டிருக்கும். இதிலே, எந்த அச்சுநாட்டிற்கு முதற் சாவுமணி என்பது தான் தெரியவில்லை. ஐரோப்பிய நாடுகளை அச்சுநாட்டார் வசமிருந்து மீட்க வேண்டுமென்பது பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சிலுடைய முழு முயற்சி. அப்போதுதான் இங்கிலாந்திலுள்ள மக்கள் நிம்மதியாக இருக்க முடியும். இதற்கு ஹிட்லர் கொட்டத்தையும் முசோலினியின் கொட்டத்தையும் ஒடுக்கவேண்டும். இந்த இரண்டு விஷப்பூச்சிகளின் பற்களையும் பிடிங்கிவிடவேண்டும். "குந்திரயா குரங்கே உன் சந்ததி யடங்க" என்று இவ்விருவரையும் மூலையில் உட்கார வைக்க வேண்டும். இதற்கான எல்லாவகை முயற்சிகளையும் மிஸ்டர் சர்ச்சில் செய்துகொண்டிருக்கிறார்.

இவை ஒருபுரமிருக்க, வளம் மிகுந்த நம் இந்திய நாடு அச்சு நாட்டார்களின் கண்களை உறுத்துகின்றது. இந்தியாவைக் கைப்பற்ற வேண்டுமென்னும் பேராசை அவர்கள் மண்டைக்கேறி அவர்களைக் கிறுகிறுக்கச் செய்கிறது. இந்தியாவோ பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கண் போன்றது. இதை இழக்கத் துணிவார்களா பிரிட்டிஷார்? பாடு பட்டும் இதைக் காப்பாற்றுவார்கள். இது உறுதி. ஆகவே பிரிட்டிஷ் படைகளும் நேசநாட்டுப் படைகளும் இந்தியாவில் வெகுவாக வந்திறங்கிக் காவல் புரிந்து வருகிறார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவைப் பற்றி அக்கரைகொள்ள வேண்டியது அவசியந்தான். மற்ற நேசநாடுகள் தம் படைகளை ஏன் அனுப்ப வேண்டும்? இந்தக் கேள்வி எழத் தான் செய்யும். நேசநாடுகள் தமக்குள் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கின்றன. இந்த ஒப்பந்தப்படி, வெற்றி கிடைக்கிற வரையிலும், அச்சுநாட்டு அரசாங்கங்கள் அடிசாய்ந்து மடிகிறவரையிலும், நேசநாடுகளெல்லாம் ஒத்திருந்து போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றன. இதன்பொருட்டு நேசநாடுகள் ஒவ்வொன்றும் தம்மாலானவரை ஒன்றிற்கொன்று உதவிக் கொள்ளவேண்டும். மற்றொரு விஷயத்தையும் நேசநாடுகள் முடிவு கட்டியிருக்கின்றன. அதாவது, இப்போது, சில நாடுகள் ஜெர்மனிக்குட்பட்டிருக்கின்றன. அது போன்ற மற்ற அச்சுநாடுகளுக்கும், சில உட்பட்டிருக்கின்றன. அடக்கு முறைகளைக் கொண்டு தான் இந்நாடுகளை அச்சுநாடுகள் ஆளுகின்றன. இந்நாடுகள் விடுதலையடைகிறவரை எந்தவிதமான சமாதானமும் நேசநாடுகள் அச்சுநாடுகளோடு செய்து கொள்ளக்கூடாது என்றும் தீர்மானித்திருக்கின்றனர். அன்றியும், உலகமெல்லாம் இன்பம் பொங்க வேண்டும். பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் மக்கள் மகிழ்ச்சியோடு வாழவேண்டும். கொடுமைகளும் அக்கிரமங்களும் அழிய வேண்டும். அப்போது தான் உலகத்தில் எதேச்சையோடு வாழும் மக்களெல்லாம் தாமாகவே ஒத்துழைக்க விரும்புவார்கள். அப்போது தான் நிரந்தரமான சமாதானத்தை உலகத்திலேயே அமைப்பதற்கு அடிகோல முடியும். இவை நேசநாடுகள் செய்த தீர்மானங்கள். இவை மிகவும் நேர்மையான தீர்மானங்கள் தான். மஹா வல்லரசுகளான பிரிட்டனும், அமெரிக்காவும், ருஷ்யாவும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. இத்தனை நாடுகள் ஒன்றுசேர்ந்து ஒரே நோக்கத்திற்காகப் பாடுபடுவதென்பது மிகவும் மகிழ்ச்சிக் குரிய செயலல்லவா? இந்த மகிழ்ச்சியை உணர்த்தும் பொருட்டுத் தான் நேசநாட்டு விழாக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவை 36 நேச நாடுகளும் கொண்டாடப்போகின்றன. ஜூன மாதம் 14-ந் தேதிதான் இந்த விழா நாள்.

நிற்க, பிரிட்டனும் அமெரிக்காவும் யுத்தகாலத்திலும் சமாதான காலத்திலும் தாம் எப்படி நடந்து கொள்ளப்போகிறன என்று தெளிவு படுத்தியிருக்கின்றனவோ, அவைதான் நேசநாடுகளின் லட்சியங்கள். இது பற்றி சர்ச்சில் ரூஸ்வெல்ட் இருவரும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் சுருக்கமாவது:—

1. மேலும் நாடுகள் பிடிக்க வேண்டும் முதலிய பேராசைகள் இந்நாடுகளுக்குக் கிடையாது.

2. அந்தந்த நாடுகளிலுள்ள மக்கள் தம் விருப்பத்தைத் தாராளமாகத் தெரிவித்திருந்தாலல்லது, எந்த நாட்டின் நிலைமையிலும் எவ்வித மாறுதலையும் உண்டாக்க விரும்பவில்லை.

3. தாம் எப்படிப்பட்ட அரசாங்கத்தால் ஆளப்படவேண்டும் என்று நிர்ணயித்துக்கொள்ளும் உரிமை அந்தந்த நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டும். பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட சுயாட்சி உரிமைகள் மீண்டும் அந்தந்த நாடுகளுக்குக் கிடைக்கத் தக்கபடி செய்யவேண்டும்.

4. தற்போதுள்ள பொறுப்புகள் பாதிக்கப்படாத முறையில் எல்லா நாடுகளும்—பெரிதாயினும் சரி; சிறிதாயினும் சரி; வென்றதாயினும் சரி; தோற்றதாயினும் சரி—தம் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான உலக மூலப்பொருள்களைப் பெறுவதிலும் வியாபாரத்தை நடத்துவதிலும் சம நிலைமையிலிருந்து சந்தோஷிக்க வேண்டும்.

5. உயரிய தொழில் நிலைமையும், பொருளாதார முன்னேற்றமும் சமுதாய பாதுகாப்பும் குலையாதிருக்க வேண்டி, பொருளாதாரத் துறையில், எல்லா நாடுகளும் பரிபூரணமாக ஒத்துழைக்கத் தக்க ஒரு நிலைமையை உண்டாக்க வேண்டும்.

6. நாஜிக் கொடுமைகள் அடியோடு ஒழிந்த பிறகு ஒரு அமைதி உண்டாகும். அந்த அமைதியில், எல்லா நாடுகளும் தத்தம் எல்லைகளுக்குள்ளாக பந்தோபஸ்தாக வாழக்கூடும். அன்றியும் எல்லா நாடுகளிலுமுள்ள எல்லா மக்களும், அச்சமும், தேவையும் இல்லாமல் வாழத்தக்க நிலைமை உறுதிப்படும்.

7. இப்படிப்பட்ட அமைதிக்காலத்தில், எல்லோரும் பெருங்கடல்களையும் சமுத்திரங்களையும் எவ்விதத் தடையுமின்றி கடக்கக் கூடும்.

8. உலகிலுள்ள எல்லா நாடுகளும் பலாத்காரத்தை அடியோடு விட்டுவிடவேண்டும். இதற்குக் காரணம் உண்மையானதாகவும் இருக்கலாம்: அல்லது தெய்வீகமானதாகவுமிருக்கலாம். தம் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட நாடுகளைத் தாக்கிக் கைப்பற்றுவதாக பயமுறுத்துகிற நாடுகளும், இனி பயமுறுத்தும் நாடுகளும், இனியும் தரைப் படைகளையும், கப்பற்படைகளையும், விமானப்படைகளையும் வைத்துக்கொண்டிருந்தால், நிரந்தரமான சமாதானத்தை நாட்டில் நிலைநாட்ட முடியாது போய்விடும். ஆகவே, பரந்த முறையில் நிரந்தரமான பொதுப் பாதுகாப்பு ஏற்படுகிறவரையிலும், அப்படிப்பட்ட நாடுகள் ஆயுதப் பரிகரணம் செய்யவேண்டிய தவசியம்.

இந்த சிறந்த இன்பங்களை யனுபவிக்கவேண்டுமானால், முதலில் துன்பப் பட்டாகவேண்டும். இந்தச் சகிப்புத்தன்மையின பயனாக, அச்சு நாட்டாருக்கு அடிமைப்பட்டு வாடிக் கொண்டிருக்கும் பல நாடுகளுக்கும் ஊக்கம் பிறக்கும். "குகை வழி இருண்டிருக்கலாம்: நீண்டிருக்கலாம்; ஆனால் கடைசியில் நல்லகாலம் பிறக்கத்தான் போகிறது." அடிமைப்படுத்தப்பட்ட நாட்டாரை நோக்கி மிஸ்டர் சர்ச்சில் செய்ததோர் பிரசங்கத்தில அவர் குறிப்பிட்டதாவது:—

'வீர நார்வேசுகாரர்களே! தைரியத்தைக் கைவிடாதீர்கள்! உங்கள் நாட்டிலேயே படையெடுக்கிறவர்கள் மட்டுமின்றி, அவர்களுக்குக் கையாட்களாகவுள்ள பேடிகளையும் உங்கள் நாட்டைவிட்டு அப்புறபடுத்தி விடுவோம். உங்களுடைய பலத்தில் நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள்.

செக்கியர்களே! உங்கள் சுயேச்சை உங்களுக்குக் கிடைக்கட்டும்.

போலந்துகாரர்களே! கொடுங்கோலர்களை எதிர்த்து நின்ற உங்கள் மக்களின் வீரத்தையும் உங்களுடைய சோல்ஜர்கள், கடற்படையினர், விமானப் படையினர் ஆகியோரின் வீரத்தையும் மறந்துவிடமுடியாது. உங்கள் நாடு மீண்டும் புத்துயிர் பெறும்; புதிய ஐரோப்பா அமைகிறபோது, உங்களுக்குரிய நிலையை நீங்கள் மீண்டும் அடைவீர்கள்.

வீர பிரஞ்சுக்காரர்களே! உங்கள் தலையைத் தூக்கிப் பாருங்கள்! நீங்கள் மீண்டும் உங்கள் சிறப்புரிமையை யடைவதற்கு டார்லன் லவால் ஆகியோரின இழி செயல்கள் தடைகளாயிருக்கமாட்டா.

ஊக்கம் நிறைந்த டச்சுக்காரர்களே! பெல்ஜியர்களே! லக்ஸம்பர்க்காரர்களே! கொடுமைப் படுத்தப்பட்டு கேவலமாக நசுக்கப்பட்ட யூகோஸ்லேவியர்களே! புகழ்வாய்ந்த கிரேக்கர்களே! இத்தாலிய ஆட்சியில் மகா கேவலமாக நீங்கள் நடத்தப்படுகிறீர்கள். என்றாலும் இம்மியளவுகூட விட்டுக்கொடுக்காதீர்கள் நாஜிகள் சம்பந்தமில்லாதபடி உங்கள் உள்ளம் சுத்தமாயிருக்கட்டும். இப்போது நாஜிகளுக்கு வெற்றிமேல் வெற்றி வெகுவிரைவாகக் கிடைத்துக் கொண்டிருந்தாலும், மனித இனத்திலேயே ஒழுக்கத்துறையில் ஒதுக்கப்பட்டவர்களாகவே அவர்கள் இருக்கின்றார்கள் என்று அவர்கள் உணரும்படி செய்யுங்கள்.'

இந்த மொழிகள் துன்பக்கடலில் ஆழ்ந்து தத்தளிக்கும் அந்நாட்டு மக்களுக்கு உண்மையிலேயே ஆறுதலளிக்கும். இதில் ஒரு தனி கண்ணியம் துலங்குகிறது. மேலும் மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது—

"உதவி வந்துகொண்டிருக்கிறது. உங்கள் சார்பாக பெரும் படைகள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றன. மனதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். நம்பிக்கை வையுங்கள். உங்களுக்கு விடுதலை கிடைப்பது நிச்சயம். உலகமெங்கும் உங்கள் நிலைமையைக் குறித்து வெகு விரைவாகத் தெரிவித்திருக்கிறோம். அந்நாடுகளிலுள்ளவர்களின் உள்ளத்தை அது கவரும். தற்போதைய துர்ப்பாக்கியமான நிலைமையை அவர்களும் மன உறுதியோடும் பிடிவாதத்தோடும் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும், நீங்களும் ஒரே நோக்கத்திற்காகத்தான் பாடுபட்டுக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, அவர்கள் முயற்சி வீணாகாது. நாஜி கொடுமைகளை அடியோடு ஒழித்துவிடுவதாக அமெரிக்க ஜனாதிபதியும், பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதியும் சேர்ந்து விடுத்த அத்லாண்டிக் பிரகடனத்தை நீங்கள் கவனித்திருப்பீர்கள்."

"இந்த வாக்குறுதி மகா முக்கியமானது. இது நிறைவேற்றப்பட வேண்டும்; கண்டிப்பாக நிறைவேற்றப்படும். இதன் பொருட்டு, பல ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன."

இவை நேசநாடுகளின் சார்பாகக் கூறப்பட்டவை. நேசநாடுகளின் உள்ளத்தை இம்மொழிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இவை நிறைவேற்றப்படும் என்பதற்கான, அறிகுறிகள் களங்கமறத் தெரிகின்றன.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

கொண்டிக்கின்றன. உற்பத்தித் திட்டத்திலே, நேசதேசத்தார்க்குப் பெரிய வெற்றி கிடைத்துவிட்டது. வானத்திலும் அவர்கள் கை ஓங்கி விட்டது. ஆகவே, அச்சு நாட்டாருக்கு அந்திய காலம் கிட்டிவிட்டது என்று தைரியமாகச் சொல்லுவதில் சந்தேகமென்ன இருக்கிறது?

நாஜிகள் பிடித்த வார்ஸா நகரிலே ஒரு வேடிக்கை. அங்குள்ள யூதர்களின் தங்கப்பற்களை நாஜிகள் பிடுங்கி வருகிறார்களாம். காரணம் தங்கம் தேவையாம். அந்தப் பற்களிலே ஏதாவது ஒரு விஷப்பல் இருக்கப்போகிறதய்யா ஹிட்லரே! உமக்கு இனி யார் எச்சரிக்கை செய்தால் என்ன, நீர் மலையின் உச்சியிலிருந்து கனவேகமாக் கால் வழுக்கி கீழே விழுந்து கொண்டிருக்கிறீர். உம்மைத் தடுத்தி நிறுத்திக் காக்க இனி யாராலும் முடியாதே!

ஹிட்லரின் சகாவான ஜெனரல் டோஜோ ஜப்பானிலிருந்துகொண்டு ஏதோ எள்ளுக் கணக்கு போட்டுக்கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. அமெரிக்க நீர்மூழ்கிகள் அவரது ஏழு யுத்தக்கப்பல்களைப் பலிகொண்டு விட்டன. ஜப்பானுக்குச் சொந்தமான அட்டுத் தீவை தாரைவார்த்து விட்டாரவர். அதுபோனது பொறுக்காமல், "இனி நாங்கள் 'லிப்ஸ்டிக்,' பவடர், வாசனை என்றும் அணிவதில்லை" என ஜப்பானிய மாதர்கள் பலர் கூறி விட்டார்களாம்.

இதுவரை கிட்டத்தட்ட இரண்டாயிரம் விமானங்களையும், 446 கப்பல்களையும் ஜப்பான் இழந்திருக்கிறது. ஆகவே அதன் பழைய வலிமை வெகுவாகக் குறைந்துவிட்டது என்று சொல்லவேண்டுமா? சீனாவிலே, சீனர்கள் சென்ற வாரத்தில், புதிதாக விமானங்களின் உதவியோடு ஜப்பானியரைத்தாக்கி, பாமுதுகுகாட்டி ஓடச் செய்துவிட்டனர். இது கண்டு, டோஜோவின் விழிகள் பிதுங்கியே போயிருக்குமென நம்புகிறோம். என்ன செய்வது விழிமட்டுமல்ல, அவரது குடலே கூடிய சீக்கிரம் பிதுங்கிப் போகப்போகிறதே!





அச்சுப் பிரசாரத்தில்
அதிர்ச்சியை உண்டாக்கும்
வெடி குண்டைப் போட்ட
மாபெருந் தலைவர்

## ஸ்டாலின்

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

பழம் என்பது உலக ஆட்சிப்பழம்", என்று சொல்வது—இல்லாவிட்டால், "அது ஒரு புளிப்புப் பழம்: தின்றால் பல்லெல்லாம் கூசும் பழம்," என்று கூறுவது—இதுதான் அச்சுப் பிரசாரத்தின் போக்கு.

ஆனால் துனீசிய வெற்றியினால்—13 நாட்களுக்கு முன் சென்னை மாகாணத்தில் நாம் சிறப்பாகக் கொண்டாடினோமே, அந்த வெற்றியினால்—நமக்கென்ன லாபம், அச்சு நாடுகளுக்கு என்ன நஷ்டம் என்பதைச் சுருக்கமாகக் கவனிக்கலாம். மத்திய தரைப் பிரதேசத்தின் கிழக்குக்கடற் பாதைக்கு உள்ள ஒரு திறவுகோல் நம்முடைய கைவசத்துக்கு வந்துவிட்டது. அச்சு நாடுகளை அருகிலிருந்து தாவித் தாக்கிக் கொண்டேயிருக்கும் ஒரு தளம் நமக்கு உறுதியாகக் கிடைத்திருக்கிறது.

### முன்னேறித் தாக்கும் தளம்.

மே மாதம் 13-ந் தேதி 'காமன்ஸ்' சபையில் பேசிய உதவி முதன் மந்திரி, மிஸ்டர் அட்லி||

"வட ஆப்பிரிக்கா இனிமேல் பாதுகாத்துகொண்டே யிருக்கவேண்டிய தளமல்ல: அச்சு நாடுகளை முன்னேறித் தாக்க வேண்டிய முன்னணி தளமாக அது விளங்குகிறது. தக்க காலத்தில், ஹிட்லருடைய ஐரோப்பியக் கோட்டை இங்கிருந்து தாக்கப்படும். முடிவில் துனீசியாவில் எப்படி ஜெர்மன் தளகர்த்தர்கள் நிபந்தனை யில்லாமல் சரணாகதியடைந்தார்களோ, அப்படியே ஹிட்லர் சரணமடையும்படி கட்டாயம் ஏற்படும்,"

என்று கூறினார். வாஷிங்டனில் மேமீ 25-ந் தேதி நடந்த பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில், முதன் மந்திரி சர்ச்சில், துனீசிய வெற்றியை நேச தேசத்தினர் சார்பாகத் திரும்பிய ஒரு வெள்ளத்தின் வேகத்துக்கு ஒப்பிட்டார். நான்கு நாட்களுக்கு முன், அதாவது சனிக்கிழமை மே 29-ந் தேதி ஆப்பிரிக்காவிலிருந்து ஒலிபரப்பிய மார்ஷல் ஸமட்ஸ்,

"துனீசிய வெற்றி மத்தியதரைப் பிரதேசத்தின் விடுதலையோடு கூட, ஐரோப்பாவின் விடுதலையின் ஆரம்பப் போரின் முதற்பாகமாகும்,"—என்று கூறினார்.

### துனீசிய வெற்றியைப் பற்றி ஜெனரல் ஐசன்ஹவர்.

அன்றைய தினமே பேசிய அமெரிக்கப் பிரதம தளகர்த்தர் ஜெனரல் ஐசன்ஹவர்,

"நேச தேசத்தாரின் கணக்குப் புத்தகத்தில் வரவு கலத்தில் அநேக லாபக்கணக்கு விவரங்களை இவ்வெற்றி சேர்த்திருக்கிறது"

என்று கூறினார். மேலும் பேசுகையில்,

"எதிரியினுடைய மனவுறுதிக்கு இவ்வெற்றி பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது."

என்றும் குறிப்பிட்டார். எப்படிப்பட்ட அதிர்ச்சி என்று கேட்பீர்களோ? ஹிட்லருடைய ஐரோப்பாவை, தெற்கில், ஆப்பிரிக்காவிலிருந்து தாக்கலாம்: மேற்கில், பிரிட்டனிலிருந்து தாக்கலாம்—இந்த இரு தாக்குதல்களால் நேரக்கூடிய ஆபத்தை அச்சு நாட்டினர் இப்போது நன்றாக உணருகிறார்கள்: அதனால் அவர்களுடைய மனவுறுதிக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது ||

### பொய்ப் பிரசாரத்தின் நோக்கம்.

சரிதான், நிலைமை அப்படி யிருக்கும்போது, "துனீசிய வெற்றியினால் எங்களுக்கு லாபம்தான்" என்று ஏன் பர்லின் கூறிற்று என்று கேட்கலாம். அச்சு நாட்டினரின் மன வுறுதியின் அதிர்ச்சியைக் குறைப்பதற்காகத் தான். இதை, ஒரு சிறு உதாரணத்தால் விளக்கலாம். வேறொரு ஜில்லாவிலுள்ள ஒரு பெரிய ஜமீனை ஒருவர் நியாயமற்ற வழக்கில் இழந்து விடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். தம்முடைய தோல்வியின் விளைவாகிய துன்பத்தையும், தம்மைச் சேர்ந்தாருடைய மன வருத்தத்தையும் போக்குவதற்காக,

"எல்லாம் நல்லதுக்குத் தான் நடக்கிறது. அந்த ஜமீன் இருந்தாலும் இருந்தது, எவ்வளவு தொல்லை, எவ்வளவு அலைச்சல்! சனியன் தொலைந்தது, நிம்மதியாயிருக்கிறது. இனிமேல், நம்ம வீட்டோடே நிலத்தோடே இருந்தால் போதும். அதை சரியாகக் கவனித்தால் எவ்வளவோ நல்லது,"

என்று அவர் கூறுகிறார். இதனுடைய அடிப்படையான மனப்பான்மைக்கும் அச்சுப் பிரசாரத்தின மனப்பான்மைக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. இதனுடைய நோக்கம் வெளியில் இருப்பவர்களை ஏமாற்றுவதற்கல்ல: உடன் இருப்பவர்களைத் தைரியப் படுத்துவதற்காகத் தான். "போனது போகட்டும், இருப்பதைக் காப்பாற்றிக் கொண்டால் போதும்—" என்ற உணர்ச்சி ஜெர்மன் மக்களிடமும், இத்தாலிய மக்களிடமும், இதர அச்சு ஆதரவு மக்களிடமும் பரவவேண்டும் என்பது தான் டாக்டர் கோப்பல்சின் நோக்கம்.

### நஷ்டத்தை மிகைபடக் கூறுவதின் நோக்கம்.

துனீசிய வெற்றியை எவ்வளவு குறைத்துக் கூற வேண்டுமோ அவ்வளவு குறைத்து அச்சு நிலையங்கள் கூறியுள்ளன. இந்த வெற்றியினால் நேச நாட்டினர் அடைந்த நஷ்டத்தை அளவுக்கு மீறி மிகைப்படுத்திக் கூறியதை நாம் சற்று கவனிக்கவேண்டும். உதாரணமாக, மேமீ 17-ந் தேதி ரோம் நிலையம்,

"பிரிட்டிஷரும், அமெரிக்கர்களும் துனீசிய யுத்தத்துக்குப் பிறகு மிகவும் களைத்துப்போனார்கள்,"

என்று கூறியிருக்கிறது. இதற்கு நான்கு நாட்களுக்குமுன், அதாவது மேமீ 21-ந்தேதி பர்லின் நிலையம் தன்னுடைய ஆங்கில ஒலிபரப்பில்,

"ஆப்பிரிக்க யுத்தத்தில் ஒரு லட்சத்து இருபதினாயிரம் நேசத் துருப்புக்கள் எங்களிடம் கைதிகளாயிருக்கிறார்கள்,"

என்று கூறிற்று. அன்றைய தினமே, பர்லினின் கூட்டாளியாகிய ரோம் நிலையம்,

"ஆப்பிரிக்க யுத்தத்தில் கைதியாக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 86,904 என்று அறிவித்திருக்கிறது. இந்தக் கணக்கை,

பர்லின் நிலையம் முன் கூறிய பொய்க் கணக்குக்கு சில மணி நேரம் கழித்து, கவனமில்லாமல் ஒலிபரப்பிவிட்டது!

இந்தப் பிரசாரத்தின் நோக்கம் நேச நாட்டு மக்களிடம் ஒரு விதமான மன அதைரியத்தை உண்டாக்க வேண்டுமென்பதுதான். பெரிய வெற்றி பெற்றாலும், அதற்காக ஏராளமான நஷ்டம் ஏற்பட்டதென்றால், அந்த வெற்றியினால் ஏற்படும் மனக்கிளர்ச்சி, தைரியம், உற்சாகம் முதலியவை குறையலாம் என்பது அச்சு நிலையப் பிரசாரகர்களின் நோக்கம். ஆனால் அச்சு நாடுகள் எவ்வளவு நஷ்டமடைந்தன? உயிரிழந்தவர்களும், கைதியானவர்களும் மொத்தம் 9 லட்சத்து 50 ஆயிரம் அச்சுத்துருப்புகள் என்று மிஸ்டர் சர்ச்சில் உண்மையை வெளியிட்டிருக்கிறார். இந்த உண்மை அச்சுத் தலைவர்களுக்கு அதிர்ச்சியை உண்டாக்கியிருக்கும். பொதுவாக, துனீசிய வெற்றியை, அச்சுப் பிரசார மனோ நிலையைக் கலைத்த ஒரு வெடிகுண்டு என்று சொல்லலாம்.

## மாஸ்கோ அறிக்கையும், அச்சுப் பிரசாரத் தடமாட்டமும்.

மற்றொரு வெடிகுண்டு டாக்டர் கோப்பல்ஸின் பிரம்மாண்டமான போல்ஷிவிக் பூச்சாண்டியை சுக்கு சுக்கலாக உடைத்தெறிந்தது. அது தான் மாஸ்கோ அறிக்கை. அகில தேசிய பொதுவுடைமை ஸ்தாபனமாகிய 'காமின்டர்ன்' இந்த அறிக்கையினால் கலைக்கப்பட்டது. இந்த அறிக்கையின் அதிர்ச்சி அச்சு நிலையப் பிரசாரகர்களை நிலைதவறி, தடுமாறி, தத்தளிக்கும்படி செய்துவிட்டது.

"ரஷ்யா வெற்றி பெற்றால் ஐரோப்பா முழுவதும் போல்ஷிவிக் மயமாய்விடும்,"

என்று செய்த பிரசாரமெல்லாம் வீணாய்ப்போய்விட்டது: இதையறிந்த பர்லினின் பிரசாரமும் முன்னுக்குப் பின் முரணாய்ப் போய்விட்டது.

"இது உண்மையான அறிக்கையல்ல: ஸ்டாலின் இதில் கையெழுத்துப் போடவில்லை"

என்று பர்லின் முதலில் கூறிற்று. பிறகு,

"இது ஸ்டாலினுடைய தூண்டுதலின்மேல் செய்யப்பட்ட கேவலமான சூழ்ச்சி, ஐரோப்பாவிலுள்ள சிறு நாடுகளை ஏமாற்றுவதற்காக இந்த அறிக்கை வெளியிடப்பட்டது; இதனால் யாரும் மயங்கிவிட மாட்டார்கள்"

என்று கூற ஆரம்பித்தது. இதற்குப்பின்,

"மாஸ்கோவின் பொதுவுடைமை ஸ்தாபனக் கலைப்புக்குக் காரணம் ஹிட்லருடைய எதிர்ப்புத் தான். ஹிட்லர் போல்ஷிவிசத்துக்கு விரோதமாக நடத்திய போரினால், ஸ்டாலின் பயந்துபோய், மாஸ்கோ ஸ்தாபனத்தைக் கலைத்துவிட்டார்"

என்று பர்லின் நிலைய அறிவிப்பாளர் ஒருவர் கூறினார். முன் கூறியவற்றிற்கு இது முரண் பாடென்ற விஷயம் பின்னால் தெரிந்து, இம்மாதிரியான பிரசாரம் கைவிடப்பட்டது.

பிறகு வேறு விதமான முறை கையாளப்பட்டது.

## ஸ்டாலினுடைய 1943-ம் கொள்கை.

"பிரசிடெண்ட் ரூஸ்வெல்டுடைய அபிப்பிராயத்துக்கு உடன்பட்டு ஸ்டாலின் இம்மாதிரி செய்திருக்கிறார்: உண்மையில் இது யாதொரு மாறுதலையும் செய்ய போவதில்லை."

என்று பின்னால் கூறப்பட்டது. மாஸ்கோ ஸ்தாபன மறைவினால் ரஷ்யாவுக்கு ஒரு புதிய கொள்கை மாறுதல் ஏற்படவில்லை என்பது ஒரு விஷயத்தில் உண்மையே. ரஷ்யப் புரட்சி சரித்திரத்தைப் படித்தால், ஸ்டாலினுக்கும், திராட்ஸ்கிக்கும் ஏற்பட்ட அபிப்பிராயபேதம் பொதுவுடைமைக் கொள்கை அகில தேசிய மயமாக்கும் வேலையை ரஷ்யா செய்யக்கூடாது என்பதைப் பற்றித் தான். 1924-ம் வருஷத்தில் 'ரஷ்யாவுக்கு மாத்திரம் பொதுவுடைமைக் கொள்கை' என்ற நோக்கத்தை ஸ்டாலின் மும்முரமாக ஆரம்பித்தார். அதன்படி ரஷ்யா இதுகாறும் நடந்து வந்தது. அலங்கார ஸ்தாபனமாக இருந்த அகில தேசிய சபை இப்போது அடியோடு கலைக்கப்பட்டது.

இதனால் நேசநாட்டினர் ஒற்றுமை பலம் இன்னும் அதிகப்பட்டிருக்கிறது. அச்சுப் பிரசாரத்துக்கு பலக்குறைவு உண்டாயிருக்கிறது. துனீசிய திராட்சைப்பழப் புளிப்பிலிருந்தும், மாஸ்கோ அறிக்கையின் கசப்பிலிருந்தும் அச்சுப் பிரசாரம் தேறி வருவதற்கு இன்னும் கொஞ்சகாலம் பிடிக்குமென்று சொல்லலாம்.

### நேச நாடுகள்: 36

அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், பிரிட்டனும் அயர்லாந்தும், சோவியத் ரஷ்யா, சீனா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, கோஸ்டா ரிக்கா, க்யூபா, செக்கோஸ்லோவேகியா, டாமினிகன் குடியரசு, எல்சல்வடார், கிரீஸ், கவுட்டிமாலா, ஹைதி, ஹொண்டுராஸ், இந்தியா, லக்ஸெம்பர்க், நெதர்லாண்ட்ஸ், நியூசிலந்து, நிகாராகுவா, நார்வே, பனாமா, போலந்து, மெக்சிகோ குடியரசு, தென் ஆப்பிரிக்க யூனியன், யூகோஸ்லேவியா, பொலிவியா, சிலி தேசத்தைச் சேர்ந்த பிரான்சு, எதியோப்பியா, ஈராக், ப்ரேசில், கொலம்பியா, வெனிசூலா.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

ஜெர்மானியர்களும் ஜப்பானியர்களும் தம் விமானப் படை பலத்தில் தான் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். இந்த எண்ணத்தில் அவர்களுக்கு மண் விழுந்து விட்டது. அவர்கள் விமானப் படைப் பலம் குறைந்து விட்டது. நம் எதிரி நாடுகளின் மீது நம் விமானங்களும், அமெரிக்க, ருஷ்ய விமானங்களும் பறந்து போய் கொஞ்சமும் தயவு தாக்ஷண்யமில்லாமல் வெடிகுண்டுகளை வீசி அவர்களை வெல்லுவது உறுதி. தம் விமான பலம் குன்றியதைப் பற்றி இப்போது அவர்கள் கலக்கமடைகிறார்கள். இதிலிருந்து அவர்களுடைய மன உறுதி குலைந்து விட்டதென்று தெளிவாக தெரிகிறது.

ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களால் இது வரை நேர்ந்ததைவிட மிகக் குறைவாகத் தான் மே மாதத்தில் நம் கப்பல்களுக்குச் சேதம் நேர்ந்தது. அன்றியும் இந்த நீர் மூழ்கிகளால் சேதமான ஒவ்வொரு கப்பலுக்கும் 3 கப்பல்கள் விகிதம், புதிதாகக் கட்டி முடித்திருக்கிறோம். ஆகவே, நம் கப்பற் பலம் பெருகிக் கொண்டு தான் போகிறது. அச்சு நாடுகள் தம் விமான பலத்தில் முழு நம்பிக்கை வைத்திருந்து ஏமாந்து விட்டார்கள். இப்போது தம் நீர் மூழ்கிக் கப்பல்களில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இதிலும் ஏமாறத் தான் போகிறார்கள். எப்படி என்றால், நேச நாட்டு கப்பல்கள் தகுந்த பாதுகாப்புக் கப்பல்களையும் விமானங்களையும் துணைக் கொண்டு தான் வெளியேறுகின்றன. அவற்றைத் தாக்க வரும் ஜெர்மன் நீர் மூழ்கிகள் நாசமடைவது உறுதி. இப்படியாக, ஜெர்மானியர்கள் கட்டி முடிக்கக் கூடிய நீர் மூழ்கிகளை விட, அதிகமாகவே இப்போது இழந்து கொண்டு வருகிறார்கள். நிற்க, சிக்கலான நிலைமையில் மன நிலை தடுமாறுதபடி ஆராயும் அமைதி ஜெர்மானியர்களுக்குக் கிடையாது. ஆகவே, இந்த ஏமாற்றங்களுக்குப் பிறகு மிகவும் பேராபத்தான நிலைமைக்கு உள்ளாகத் தான் போகிறார்கள். என்றாலும் நாம் அலட்சியமாய் இருந்து விடக் கூடாது.

## பிரஞ்சுக்காரர்கள் ஒற்றுமை

ஜெனரல் ஜிரோவை சந்தித்துப் பேசி ஒரு முடிவிற்கு வரும் பொருட்டு ஜெனரல் டி காலே ஆல்ஜியர்சுக்கு வந்த போது, நானும் அங்கிருந்தேன். சிறந்த முறையில் விவாதங்கள் நடைபெற்றன. ஏழு பேர்கள் கூடிய ஒரு கமிட்டி பிரஞ்சு சாம்ராஜ்யங்களை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஜெனரல் அயிஸனோவரும் நானும் இந்த விவாதங்களில் கலந்து கொள்ள வில்லை. என்றாலும் அவர்கள் செய்த தீர்மானங்கள் எங்களுக்கு மிகுந்த திருப்தியளித்தன. 1940-ம் வருஷம் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு ஜெனரல் டி காலே செய்திருந்த ஒப்பந்தம் ரத்தாகி விட்டது. அதற்குப் பதிலாகக் கமிட்டியோடு தான் ஒப்பந்தம் செய்து கொள்கிறோம்.

## ரூஸ்வெல்டின் சிறந்த தோழமை

இந்த சுற்றுப் பிரயாணத்தில் இரண்டு விஷயங்கள் என் மனதைக் கவர்ந்தன. வடாப்பிரிக்காவில் பிரிட்டிஷ் படைகளும் மற்ற நேச நாடுகளும் மிகச் சிறந்த மனோ பலத்தோடும், தன்மையோடும், அமைதியோடும் இருக்கின்றன. இரண்டாவது அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்கும் நெருங்கிய நேசம் ஏற்பட்டுள்ளது. எனக்கும் தலைவர் ரூஸ்வெல்டுக்கும் மிக நெருங்கிய உறவு ஏற்பட்டு விட்டது. எனது சொந்த நண்பர்களில் ஒருவராகவே நான் அவரை மதிக்கிறேன். நாங்கள் இருவரும் இந்த இரு அரசாங்கங்களின் தலைமைப் பதவிகளை வகிக்கும் வரையிலும் எங்களைப் பிரிக்க ஒருவராலும் ஆகாது.





(3-ம் பக்கம் தொடர்ச்சி)

அலீஷியத் தொடரின் மேற்குக் கடைசியிலிருப்பது அட்டுத் தீவு. இந்தத் தீவை நேச நாட்டினர் கைப்பற்றிக் கொண்டனர்.

**டோக்கியோ பிரசாரத் தடுமாற்றம்**

இதனால், டோக்கியோ ரேடியோ பிரசாரம் தடுமாற்றமடைந்திருக்கிறது. 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதி அமெரிக்க யுத்தக் கப்பல்கள் அட்டுத் தீவைத் தாக்கின. சரியாக 3 மாதங்களுக்குள்ளாக, அதாவது, மே மாதம் 12-ம் தேதி அமெரிக்கப் படைகள் அத்தீவில் இறங்கிவிட்டன. ஆனால் இந்தத் தோல்வியை ஜப்பான் ரேடியோ மே மாதம் 30-ம் தேதி தான் ஒப்புக் கொண்டது. அதுவும் அட்டுத் தீவிலிருந்த படையை அமெரிக்கக் கப்பற்படை சூழ்ந்து முறியடித்தது என்று மட்டுந்தான் குறிப்பிட்டது. அமெரிக்கப் படைகள் அட்டுத் தீவில் இறங்கி 5 நாட்களுக்கெல்லாம், ஜப்பானிய ரேடியோ பிரசாரகர்கள் ஒப்பாரி வைக்கத் தலைப்பட்டு விட்டார்கள். கப்பற்படையைக் கொண்டு தாக்கும் அமெரிக்கர்களைத் தடுப்பது முடியாத காரியம் என்று அவர்கள் சொன்னார்கள். ஏனென்றால், அந்தத் தீவு 70 மைல் நீளமும் 20 மைல் அகலமும உடையது என்றும் சொன்னார்கள். உண்மையிலேயே அத்தீவு 35 மைல் நீளமும் 18 மைல் அகலமுந் தான் கொண்டது. மே மாதம் 19-ம் தேதி டோக்கியோவிலிருந்து ஜெர்மானியர்களுக்கு ஒலிபரப்பப்பட்ட செய்தியில், மூடுபனி தான் இத் தோல்விக்குக் காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "மழைக் கட்டுப்பாடின்றி ஒரு மாதத்திற்கு முன்னதாகவே பொல்லாத அலீஷிய மூடுபனி ஆரம்பமாகிவிட்டது. இதன் மறைவில் அமெரிக்கப் படைகள் வந்து இறங்கிவிட அவர்களுக்கு அனுகூலமாயிருந்தது" என்றனர் ஆனால், அதற்கு முதல் நாள், அதாவது மே மாதம் 18-ம் தேதி ஜப்பானிய மேஜர் ஜெனரல் யஹாஜி செய்ததோர் ரேடியோ பேச்சில் என்ன கூறினார் தெரியுமா?

"பலமான கப்பற் படைகளின் ஆதரவை கொண்டு தான் அமெரிக்கர்கள் அங்கே இறங்கினார்கள். அவர்களுடைய போர்க் கப்பல்களில் பலமான பீரங்கிகளை அமைத்திருக்கிறார்கள். தம் படைகள் முன்னேறி அட்டுத் தீவில் இறங்க உதவும் பொருட்டு இந்த பீரங்கிகள் இடைவிடாது முழங்கி, குண்டுகளை வீசிக் கொண்டிருந்தன. அன்றியும் விமானந் தாங்கிக் கப்பல்களிலிருந்து ஏராளமான போர் விமானங்கள் அமெரிக்கப் படைகளுக்கு மேலே பந்தோபஸ்து செய்து கொண்டு போயின. ஆகவே தான் அமெரிக்கப் படைகள் அத்தீவில் இறங்க முடிந்தது. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதாவது, அமெரிக்கத் தளவாடங்கள், குறிப்பாக, வெடிகுண்டுகளும், போர் விமானங்களும் ஒப்பு உயர்வு இல்லாதவை."

அன்றியும் மே மாதம் 22-ம் தேதி மேஜர் ஜெனரல் யஹாஜி "எதிரிகளின் படையில் ஒரு டிவிஷன் சோல்ஜர்களும், டாங்கிகளும், பலமான பீரங்கிகளும் மட்டுந்தான் இருப்பதாகத் தெரிகிறது" என்று குறிப்பிடுகிறார். அதாவது, ஒரு சிறு அமெரிக்கப் படை ஒரு ஜப்பானியத் தீவைக் கைப்பற்றிக் கொண்டதாகப் பச்சையாக ஒப்புக் கொள்ளுகிறார்.

அட்டுத் தீவில் ஜப்பானியர்கள் தோற்றுப் போனதைக் குறித்து, தம் ரேடியோ மூலம் கூறும் சமாதானங்களைச் சீர் தூக்கிப் பார்த்தால், ஒரு உண்மை விளங்கும். அதாவது, இதுவரை ஜப்பானியர்கள் செய்துவந்த பிரசாரத்தைப் போலில்லை இப்போது செய்யப்படும் பிரசாரம். சென்ற வருஷம் 'நிச்சி நிச்சி ஷிம்புன்' என்னும் ஜப்பானியப் பத்திரிகை வெளியிட்ட கீழ்க்கண்ட வாசகத்தை பெர்லின் ரேடியோ சென்ற வருஷம் ஜூன் மாதம் 6-ம் தேதி எடுத்துக் கையாண்டது:—

"ஜப்பானியக் கப்பற் படைகள் எங்கேனும் போய்ப் போராட வேண்டியிருந்தால், தூரம் ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை."

சுமார் 15 நாட்களுக்குப் பிறகு, அதாவது ஜூன் மாதம் 25-ம் தேதி, டோக்கியோ ரேடியோ ஜப்பானிய மொழியில் ஒலி பரப்பிய செய்தியில், கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டது:—

அலீஷியாவை ஜப்பானியர்கள் கைப்பற்றிக்கொண்டதைக் குறித்து, ஜப்பானிய இராணுவ அதிகாரி ஒருவர் ஒரு பிரகடனம் விடுத்தார்.

அதில் ஜப்பானியர்கள், பசிபிக் யுத்தத்தில் பரிபூரண வெற்றியடைந்து விட்டதாகவும். இதிலிருந்து அமெரிக்கக் கப்பற் படைகள் சுத்த கையாலாகாத படைகளென்றும் குறிப்பிட்டார்.

6 வாரங்களுக்குப் பிறகு டோக்கியோ ரேடியோ இங்கிலீஷில் பேசிய போது, அதாவது 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 10-ம் தேதி குறிப்பிட்டதாவது:—

"மகா பலமான ஜப்பான் கப்பற் படைகளை எதிர்த்து நின்று, மீண்டும் அட்டு, கிஸ்கா தீவுகளை அமெரிக்கர்கள் கைப்பற்றுவது என்னும் எண்ணத்திற்கே அடியோடு மண்ணைப் போட்டுவிட்டார்கள் ஜப்பானியர்கள்."

"மிகவும் பலமான கப்பல் தளங்களையும் விமான தளங்களையும் ஜப்பானியர்கள் கிஸ்கா, அட்டு தீவுகளில் அமைத்திருக்கிறார்கள்.

**அமெரிக்கப் படைபலம்: டோக்கியோ ஒப்புக்கொள்ளுகிறது.**

இவற்றைவிட மிகவும் உயர்ந்தவை தான் அமெரிக்க தளங்கள்" என்று வெள்ளையாக ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமைக்கு ஜப்பானியர்கள் வந்துவிட்டார்கள் என்று தெளிவாகத் தெரிகிறது.

அட்டுத் தீவிற்கும் அமெரிக்கக் கப்பற் தளமான டச்சுத் துறைமுகத்திற்கும் ஏறக்குறைய 800 மைல் தூரந்தான். இதே தூரந்தான் அட்டுத் தீவிற்கும் ஜப்பானியருக்குச் சொந்தமான குனால் தீவுகளைச் சேர்ந்த பாமுஷைபர் என்னும் கப்பல் தளத்திற்கும். 1942-ம் வருஷம் ஜூன் மாதம் அட்டுத் தீவை ஜப்பானியர்கள் கைப்பற்றிக் குடியேறினார்கள். மூன்று மாதங்களுக்குப் பிறகு, அதாவது 1942-ம் வருஷம் செப்டெம்பர் மாதக் கடைசியில் அத்தீவு வெடி குண்டுகளால் கடுமையாகத் தாக்கப்பட்டது. ஆனால் அக்டோபர் மாதம் 3-ம் தேதி ஆண்ட்ரியனாப் தீவுகளை அமெரிக்கர்கள் கைப்பற்றி குடியேறினார்கள். ஆகவே, இதற்கு ஒரு வாரத்திற்குப் பிறகு 1942-ம் வருஷம் அக்டோபர் மாதம் 10-ம் தேதி, அட்டுத் தீவை விட்டுத் தாமாகவே ஜப்பானியர்கள் காலி செய்து விட்டார்கள். இதை யடுத்து மகா கடுமையாக அமெரிக்கர்கள் விமானங்களிலிருந்து கிஸ்கா தீவைத் தாக்கினார்கள். அட்டுத் தீவைக் கைப்பற்றிய அதே சமயத்தில் தான் கிஸ்கா தீவையும் ஜப்பானியர்கள் கைப்பற்றி குடியேறினார்கள். இப்போது கிஸ்கா தீவை அமெரிக்கர்கள் மகா கடுமையாகத் தாக்கிய பிறகு தான், ஜப்பானியர்கள் கண் விழித்தார்கள். இந்தத் தீவு எவ்வளவு முக்கியமானதென்று அப்போது தான் அவர்களுக்கு விளங்கியது. கிஸ்காவில் தாம் அமைத்திருக்கும் பாதுகாப்புக்கள் எல்லாம் அழிக்கப்பட்டு விட்டால் என்ன செய்வது என்று யோசித்த பிறகு தான் அவர்கள் மனதில் ஒரு வகை மாறுதல் ஏற்பட்டு, மீண்டும், 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 5-ம் தேதி அட்டுத் தீவில் ஜப்பானியர்கள் குடியேறினார்கள். இந்த அட்டுத் தீவில், அமெரிக்கர்கள் போய் குடியேறியதைக் குறித்து ஏற்கெனவே சுருக்கமாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

நேச நாடுகள் அட்டுத் தீவைக் கைப்பற்றியதனால், கேந்திர ஸ்தானமொன்றைக் கைப்பற்றி விட்டதாக நாம் சொல்லலாமா என்பது பற்றி, இங்கே ஆராய்வது பொருத்தமாகும். அமெரிக்கப் போக்கு வரவு சாதனங்கள் மிகவும் உயர்ந்தவை என்று ஜப்பானியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அட்டுத் தீவுகளை அவர்கள் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை என்பதற்கு இதை ஒரு காரணமாகச் சொன்ன போதிலும் கூட, உண்மையும் இது தான். ஜப்பானிய சப்ளை கப்பல்கள் அட்டுத் தீவுக்கு வரவேண்டுமானால், நெடுந் தூரம் கடந்து வரவேண்டியிருக்கிறது. உதாரணமாக யோகஹாமாவிற்கும் அட்டுத் தீவிற்கும் 1,700 மைல் தூரம். ஆனால் அமெரிக்கக் கப்பல்கள் போவதற்கு வசதி அதிகமாயிருக்கிறது. எப்படி யென்றால் அமெரிக்காவிற்குச் சொந்தமான தீவுகள் சங்கிலி கோர்த்தது போல் தொடர்ச்சியாக இருக்கின்றன. இந்தத் தீவுகளிலுள்ள படைகள் இவற்றிற்கு பக்கபலமாக இருக்கும். மூடுபனி கப்பிக் கொண்டிருக்கும் போது எதிரிகள் கண்ணில் படாமல் அமெரிக்கக் கப்பல்கள் போகலாம்.

அலீஷியத் தீவுகளிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கு சப்ளைகள் வெகு விரைவாக அலாஸ்கா

**அலாஸ்கா பெரு வழியும் தீவுகளுக்கு சப்ளைகளும்.**

பெருவழி மூலம் வந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பெருவழி, தற்கால நிலைமைகளுக் கேற்ப புதிய முறையில் மிக பலமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாகக் கிடைத்த சப்ளைகளைக் கொண்டு தான், கிஸ்கா தீவை விமானங்களிலிருந்து கடுமையாகத் தாக்கவும் அட்டுத் தீவை வெற்றிகரமாகக் கைப்பற்றி குடியேறவும் முடிந்தது. இந்தப் பெருவழி பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த டாசன் க்ரீக் என்னுமிடத்திலிருந்து அலாஸ்காவிலுள்ள பேர்பாங்க்ஸ் என்னுமிடம் வரையிலும் போடப்பட்டிருக்கிறது. இதன் நீளம் 1,671 மைல்கள். இதன் அகலம் 24 அடி. மலைத் தொடர்கள், ஆறுகள்

முதலியவற்றைக் கடந்து தான் இந்தப் பாதை போகிறது. இதில் 10,000 சோல்ஜர்களும் 6,000 தொழிலாளர்களும் வேலை செய்து வந்தார்கள். சென்ற 1942-ம் வருஷம் அக்டோபர் மாதம் 29-ம் தேதி தான் இது கட்டி முடிக்கப் பட்டது. நவம்பர் மாதம் 29-ம் தேதி தான் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அட்டுத் தீவைக் கைப்பற்றுவதற்கு இந்தப் பெருவழி மிகவும் உபயோகமாயிருந்தது.

அட்டுத் தீவிற்குத் தென் கிழக்கே 180 மைல்களுக்கு அப்பால் தான் கிஸ்கா தீவு இருக்கிறது. அலூஷியத் தீவுகளில் ஜப்பானியர் வசமுள்ளவற்றில் மிகவும் முக்கியமானதாக விளங்குவது கிஸ்கா தீவு தான். இப்போது இதைத் தான் மகா கடுமையாக அமெரிக்கர்கள் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதன் நீளம் 25 மைல்கள். அகலம் 5 மைல். இங்கே ஒரு நல்ல துறைமுகம் இருக்கிறது. இது நீர் மூழ்கிக் கப்பல்களுக்கு சிறந்த தளமாயிருக்கிறது. அட்டுத் தீவில் அமெரிக்கர்கள் வைத்திருந்த படையைவிட, மிகவும் பெரிய படையை ஜப்பானியர்கள் வைத்திருக்க வேண்டும். அப்போது தான் அட்டுவிற்கு அடுத்து கிஸ்காவையும் அமெரிக்கர்கள் கைப்பற்ற முடியாது. இன்னுங் கடுமையாக கிஸ்கா தாக்கப்படும் என்றும் எதிர் பார்க்கலாம்.

**அலூஷிய மூடுபனியும், வெடி குண்டுத் தாக்குதல்களும்.**

என்றாலும் மூடுபனித் தொந்தரவு தோன்றுகிறது. தாம் அட்டுத் தீவைத் தோற்றதற்கு மூடுபனி தான் காரணம் என்று ஜப்பானியர்கள் சொன்னார்கள். அதே மூடுபனி ஜப்பானியர்களுக்கு உதவியாகவும் இருக்கும், கிஸ்காவிற்கு அடுத்த சில மாதங்களில் சப்ளைகள் அனுப்பிக் கொண்டிருக்க மிகவும் வசதியாயிருக்கும். இந்தப் பகுதியில் நிரந்தரமாக மூடுபனி கப்பிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணமென்னவென்றால், வட கடலிலிருந்து கிழக்கு நோக்கி வரும் நீரோட்டங்கள் பேரிங் ஜல சந்தி வழியாக வருகின்றன. சீனக் கரையிலிருந்து வட கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் சூடான நீரோட்டமும் அங்கே போய்ச் சேருகிறது. ஆகவே தான் அங்கே நிரந்தரமான மூடுபனி இருந்து கொண்டிருக்கிறது. ஒரு விமானிக்குக் கொடிய எதிரி மூடுபனி தான் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால், மூடுபனி, தரையைக் கப்பிக்கொண்டிருப்பதனால், விமானிகள் குறி தவறாமல் தாக்க முடிவதில்லை. ஆகவே வெடி குண்டுகளைக் கொண்டு போராடுவதற்கு அலூஷியப் பகுதி ஏற்றதல்லவென்று தெளிவாகிறது. அன்றியும் வெடி குண்டுகளையும் எண்ணெய் முதலிய சடலைகளையும் உயர்ந்த முறையில் அனுப்பிக் கொண்டிருக்கத் தக்க சிறந்த போக்குவரவு சாதனங்கள் இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. விமான நிலையங்களும் கிடையாது. பெரும் விமானப் படைகளை அலூஷியத் தீவுகளில் வைத்திருக்க முடியாது. ஆகவே, நெடுந் தூரத்திலிருந்து பெருவாரியாக, அடிக்கடி விமானங்களைக் கொண்டு தாக்குவதென்பதும் முடியாத காரியம்.

## நேச நாட்டு பலம்

13 கோடி மக்களுக்குத் தலைவராக பிராங்க்லின் டிலானோ ரூஸ்வெல்ட் இருக்கிறார். இந்த அமெரிக்க நாட்டை யொட்டி 35 நாடுகள் இருக்கின்றன. சகிக்க முடியாத கொடும் படைகளை அடியோடு அழித்து, எல்லாருக்கும் விடுதலையையும் நீதியும் வழங்கும் பொது முயற்சியில் இந்நாடுகளெல்லாம் ஒன்று பட்டிருக்கின்றன.

## மறைமுக எருக்கள்

செடிகள் நேர்முகமாக, மறைமுகஎருக்களை உணவாக உட்கொள்ளுவதில்லை. ஆனால் இவை நிலத்திலுள்ள சத்துக்களைப் பிரித்து விட்டு, அப்படிப் பிரிக்கப்பட்ட சத்துக்களை, செடிகள் உட்கொள்ளும்படி உதவுகின்றன. அந்தச் சத்துக்கள் பிரிக்கப்படாதிருந்தால், செடிகள் உட்கொள்ள முடியாது. இவற்றில் சில நிலத்தை உதிரியாக்குகின்றன. மற்றும் சில, பூச்சிப் புழுக்கள் செடிகளை அரித்துவிடாதபடி தடுக்கின்றன.

1. **சுண்ணாம்பு.**—இதைத் தான் சாதாரணமாக மறைமுக எருவாகப் பயன்படுத்துகிறார்கள். சுண்ணச் சத்து செடிகளுக்கு வேண்டிய உணவுதான். என்றாலும், அவற்றிற்கு வேண்டிய அளவுக்கு பூமியில் இயற்கையிலேயே சுண்ணம் அமைந்திருக்கிறது. அதைச் செடிகள் உணவாக உட்கொள்ளுகின்றன. சுண்ணச் சத்திற்கு எரிக்குந் தன்மையுண்டு. ஆகவே நிலத்திலுள்ள உயிர்ச் சத்துக்களை எரித்துப் பாகுபடுத்துகிற தன்மை சுண்ணாம்புக்கு உண்டு. நிலத்திலுள்ள புளிப்புச் சத்தை காரச் சத்தாக சுண்ணாம்பு மாற்றுகிறது. உவர் நிலத்தை உதிரியாக்குகிறது. ஒரு சதுர கஜத்திற்கு 8 முதல் 12 அவுன்ஸ் வரை சுண்ணாம்பை உபயோகிக்கலாம்.

2. **உப்பு.**—நிலத்திலுள்ள பொட்டாஸ் முதலிய செடி உணவுகளை இது நிலத்திலிருந்து வெளிப்படுத்துகிறது.

3. **சீமைச் சுண்ணாம்பு.**—(Chalk or Calcium Carbonate) இலேசான மணற் பாங்கான பகுதிகளிலுள்ள உணவுச் சத்துக்கள் கரைந்து போகாதபடி நிலத்திலேயே நிலைத்திருக்கச் செய்கிறது.

4. **'பிரஞ்சு சாக்.'**—(Gyp um or Calcium Sulpha e) நிலத்திலுள்ள காரச்சத்தை இது குறைக்கிறது. பொட்டாசை வெளிப்படுத்துகிறது. இந்தப் பொட்டாஸ் செடிகளுக்கு மிகவும் உபயோகமான உணவுப் பொருள். மழைகாலத்தில் ஒரு சதுர கஜத்திற்கு 2, 3 அவுன்ஸ் வீதம் இதை உபயோகிப்பது நல்லது.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஞூ ஜூன் மீ 18உ, வெள்ளிக்கிழமை [இதழ் 24

## கர்ம வீரர் ஸ்டாலின்



உலகத்தையே கட்டியாள வேண்டு மென்று பெருங் கொடுமைகளைச் செய்து கொண்டு வந்த ஹிட்லருடைய கொள்கைகளை எதிர்த்துப் போராடும் பொருட்டு, சர்வ தேசக் கோஷ்டி யொன்றை யமைப்பதற்குப் பெரிதும் உதவினர். சமத்துவத்தை யடிப்படையாகக் கொண்டு எல்லா நாடுகளும் சகோதர உணர்ச்சியுடன் இயங்கத் தக்க ஒரு ஸ்தாபனத்தை எதிர் காலத்தில் அமைப்பதற்கு வழி கோலினர்.

# இந்தியர் பெருமை

## "என்ன கேள்விமுறை"—என்ற மெட்டு

இராகம்—பிலஹரி　　　　　　　　　　　　　　　　　　　தாளம்—ரூபகம்

**பல்லவி**

எந்த நாளும் இல்லை—இந்தியர் பிறர்க்—கில்லை எனும் சொல்　　　(எந்த)

**அனுபல்லவி**

தந்தே கம்உயிர் தந்தே பிறர்க்கு கந்தோர் நாடிதில்　　　(எந்த)

**சரணம்**

1 அந்த நாளிற் சரண் வந்த பறவையும் உய்ந்திடவும் தன் உடற்சதை தந்தவன்
ஐயன் சிபியாம் மெய்யன் பெருமை பெய்யும் நாடிதில்　　　(எந்த)

2 வண்ணவாபரணம் திண்ணமுறுந்தவம் கண்ணனிடம் தந்தும் கர்ணன் கனிந்து பின்
இல்லை என்பவர்க் கொல்லை தந்திட வல்லை என்றதால்　　　(எந்த)

3 ஆற்காட்டரண் அதில் ஆங்கிலர்க்கே சோறு ஏற்கக் கொடுத்துபின் எஞ்சிய கஞ்சியை
அஞ்சா துண்டுயிர் துஞ்சாதுதவி செஞ்சார் நாடிதில்　　　(எந்த)

4 அன்புடையர்பிறர்க் கென்பு முரியவர் என்பதற்குரிய மன்பதை வளரும்
ஆனுத புகழ் தானுக வரும் மேனுடிதனில்　　　(எந்த)

5 உள்ளம் நிறையன்பு கள்ளமில்லாத சொல் கொள்ளும் பணத்தொகை வெள்ளம் எனும் படை
ஓயா தினிநம் தாயா கும் ப்ரிட்டன் சாயா துதவில்　　　(எந்த)

## தைரியமும் விடா முயற்சியும் உயர் பதவி தந்தன

### சந்தோஷத்தோடு வேலை செய்ததின் பலன் பலித்தது

ஐந்து அடி உயரம். ஒரு தோளை விட மற்ற தோள் சற்று உயரமானது. முகத்தின் ஒரு பாதி சற்று அகன்றும் மற்றொரு பாதி குறுகியு மிருக்கிறது. தேனை வண்டு மொய்ப்பது போல, அழுக்கு அவனை வந்து அடைகிறது. அவன் சட்டையில் எங்காவது கிழிந்திருக்கும். பொத்தான் மாட்டும் துளை ஒன்றாவது கிழியாதிருக்காது. இவைதான் மியான்ஜியின் இலட்சணங்கள். இவனைக் கண்டவர்கள் சிரிக்காதிருக்க முடியுமா? இந்தச் சிறப்புக்களை மியான்ஜி உணர்ந்து தான் இருந்தான். இவன் கவாத்து செய்யும்போது பயங்கரமாயிருக்கும். இவனைக் கண்டவர்கள் நையாண்டி செய்வது வழக்கம். இவன் சேர்ந்திருக்கிற பட்டாளத்திற்கே, இவனால் கெட்டபேர்.

இவன் பட்டாளத்தில் சேரவேண்டுமென்று விரும்பினான். அதனால் தான் சேர்ந்தான். அப்படிச் சேர்ந்ததில் தப்பு ஒன்றுமில்லை. பட்டாளத்தில் சந்தோஷமாகத்தான் அவன் காலங் கடத்திக் கொண்டுவருகிறான். தன் நிலைமையை பற்றியோ அழகைப் பற்றியோ கொஞ்சங் கூட அவன் வருத்தப்படுவதே கிடையாது. எல்லோரும் அவனை ஏளனம் செய்தார்களென்றாலும், அவர்கள் அனைவருடனும் நேசமாகத் தான் இருந்தான். உண்மையிலேயே அவர்கள் எல்லோரும் அவனை மதித்தார்கள்.

இவன் பட்டாளத்தில் சேரு முன்பு, அவனுடைய வாழ்க்கை, துன்பமாகத் தான் இருந்தது. முதலில் இவன் ஒரு கப்பலில் ஒரு "பையர்மன்" வேலை பார்த்துவந்தான். அப்போது பல கஷ்டமான சம்பவங்கள் நேர்ந்தன. அவன் மனைவி இறந்தாள். மறுபடியும் கலியாணம் செய்துகொண்டான். அந்த மனைவியும் இறந்தாள். தன் கப்பல் வேலையைவிட்டு விட்டு, சிட்டாங்கில் ஒரு கூலியாக வேலை செய்தான். பிறகு மூன்றாவது முறையும் கலியாணம் செய்துகொண்டான். இதிலிருந்தே அவன் தைரியமும் விடாமுயற்சியும் உடையவன் என்று விளங்குகிறது.

யுத்தம் வந்ததும் மியான்ஜிக்கும் பட்டாளத்தில் சேர சந்தர்ப்பம் கிடைத்தது. இஞ்சினீர் இலாக்காவில் சேர்ந்தான். இவனுக்கு கப்பல் அனுபவமும் உண்டு. ஆகையால் துறைமுகத்திலுள்ள இராணுவ வேலைகளை மேற் பார்த்துக்கொண்டு வந்தான். இதற்கான விசேஷப் பயிற்சியும் பெற்றான். விரைவில் சாப்பர்–ஸ்டிவடோர் பதவியடைந்தான். இந்தப் புதிய வேலை அவனுக்குப் பிரியமாயிருந்தது. விரைவில் அதில் நல்ல அனுபவமும் தேர்ச்சியும் பெற்றான். மூன்றாவது கிரேடிலிருந்து இரண்டாவது கிரேடுக்கு உயர்த்தப்பட்டான். இந்தியத் துறைமுகங்களில் போராடும் பட்டாளத்திற்கு இவனை மாற்றினார்கள். அதாவது மியான்ஜியும் போர்க்களத்திற்கு வந்துவிட்டான்.

இதுவரை கேலிக்கும் இழிவுக்கும் ஆளாகியிருந்த மியான்ஜியின் உத்திரவுப்படி நடக்க அநேகர் காத்திருக்கிறார்கள். பெரிய பெரிய டாங்கிகளும், பீரங்கிகளும் மியான்ஜியின் கட்டளைப்படி கப்பலில் ஏற்றப்படுகின்றன. இப்படி ஏற்றப்படுகிறபோது எத்தனையோ வகைத் தடைகள். அவை, எல்லாவற்றையும் வெகு சாமர்த்தியமாக தவிர்க்கும் திறமை மியான்ஜிக்கு ஏற்பட்டது. இந்த வேலை 'கரணம் தப்பினால் மரணம்' என்பது போன்றது.

அவன் முகத்தில் இன்பம் தவழ்கிறது. அதனால் தான், அவன் செய்யக்கூடிய வேலையைக் கண்டுபிடித்து, அதைச் சரிவரச் செய்கிறான். இவன் செய்யும் வேலை, மிகவும் முக்கியமானது. இவன் 30 வருஷம் சேவகம் செய்திருந்தும் கூட, இப்போது அவன் மதிக்கப்படுவதுபோல ஒருபோதும் மதிக்கப்பட்டதில்லை. இவனுடைய உழைப்பைக் கோருபவர்கள் இவனுக்குச் சம்பளம் கொடுக்கும் எஜமானர்கள் மட்டும் அல்ல; ஆனால் பொது மக்களும்தான். கடைசியாக மியான்ஜி ஒரு பக்கா ஆசாமி ஆகிவிட்டான்.



**பொருளடக்கம்.**


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : கர்ம வீரர் ஸ்டாலின் .. .. | 1 | நேச தேச எதிர்த் தாக்குதல் திட்டங்கள் .. | 5 |
| பாட்டு : இந்தியர் பெருமை .. .. .. | 2 | ஆளுக்கொரு நியாயமா ? .. .. .. | 6 |
| தைரியமும் விடாமுயற்சியும் உயர் பதவி தந்தன .. .. .. .. .. | 2 | தொழிலாளர் பகுதி : ஒற்றுமை தான் வெற்றி தரும் .. .. .. .. .. | 7 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | ஆசிரியர்களும் யுத்த முயற்சியும் .. .. | 9 |
| தலையங்கம் : ரஷ்யப் போராட்டம் .. .. | 4 | | |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**ரூர் பிரதேசத்தை பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்குகின்றன.**

சென்ற ஞாயிற்றுக் கிழமை பிரிட்டிஷ் விமான மந்திரிக் காரியாலயத்தார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் சுருக்கமாவது :—

ரூர் பிரதேசத்தின் மத்தியிலிருக்கும் 'போச்சும்' என்னு மிடத்தைக் குறி வைத்து பிரிட்டிஷ் விமானப் படை கடுமையாகத் தாக்கியது. இந்த ஊரில் நிலக்கரியும் இரும்பும் ஏராளமாக உற்பத்தியாகின்றன. அன்றியும் ரூர் பிரதேசத்தின் மத்தியில் போக்கு வரவுகளுக்கு இது மிகவும் முக்கியமான இடமா யிருக்கிறது. இங்கே, ரசாயனப் பொருள்கள் உற்பத்திச் சாலைகளும் க்ரப்ஸ் தொழிற்சாலையின் பகுதிகளும் இங்கே யிருக்கின்றன. இப்படிப் பட்ட தோர் ஊரைத் தாக்குவது மிகவும் கஷ்டமென்று கூறினார்கள். ஏனென்றால் இந்த ஊரில் மூடுபனி வெகு அதிகம். அன்றியும் அங்குள்ள பல தொழிற்சாலைகளிலுமிருந்தும் புகை வெகு அதிகமாகக் கிளம்புகிறது. ஆகையினால் விமானங்களிலிருந்து பார்த்தால், நகரத்தையே காண முடியாதபடி இவ்விரண்டும் மறைத்து விடுகின்றன. ஆகவேதான், இந்த ஊரைத் தாக்குவது கஷ்டமென்று கூறப்பட்டது.

பாச்சும் நகரத்தை பிரிட்டிஷ் விமானப் படை சென்ற ஞாயிற்றுக் கிழமை தாக்கியது போல, அவ்வளவு கடுமையாக, இந்த வருஷத்திலேயே வேறெதையும் தாக்கவில்லை.. முதன் முதல் சென்ற மார்ச்சு மாதம் 29-ம் தேதி இராக்காலத்தில் பிரிட்டிஷ் விமானப் படையின் பாம்பர் விமானங்கள் இந்த ஊரைக் குறி வைத்துத் தாக்கின. இரண்டாவது முறை மே மாதம் 13-ம் தேதி 1,000 டன் வெடி குண்டுகளைக் கொண்டு வந்து இந்த ஊரின் மீது எறிந்து போயின. ரூர் பிரதேசத்தில், எஸ்ஸென், டேயிஸ்பர்க், பிர்ட்மண்ட் ஆகிய மற்ற பட்டணங்களின் மீதும் பல முறை விமானங்களைக் கொண்டு வெடிகுண்டுக ளெறிந்தார்கள். மே மாதம் 23-ம் தேதியில் மட்டும் ஒரு மணி நேரத்தில் 2,000 டன் வெடி குண்டுகளை பிரிட்டிஷ் விமானப் படைகள் எறிந்தன. ஜெர்மனியிலேயோ அல்லது வேறெந்த நாட்டிலேயோ இவ்வளவு கடுமையாக வேறெந்த ஊரும் தாக்கப்பட்டதே கிடையாது. இங்கு நடை பெற்ற விமானத் தாக்குதலை, பீரங்கிகளைக் கொண்டு தகர்ப்பதற்குத் தான் ஒப்பிட்டுச் சொல்லவேண்டும். இதன் பயனால் ரூர் பிரதேசத்திலுள்ள அணைகள் உடைந்து போய், அந்நாடு முழுதும் பெரும் வெள்ளக் காடானது. ஆகவே, அங்குள்ள கால்வாய்களின் நீர் மட்டம் மிகவும் குறைந்து போய், போக்கு வரவுகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த பாம்பர் விமானங்கள் தம் முக்கியமான குறியாக ரூர் பிரதேசத்தை ஏன் கொள்ளவேண்டும்? ஏனென்றால், ரூர் பிரதேசத்தில் தொழிற்சாலைகள் எல்லாம் அடுத்தடுத்து வேலை செய்யும் அளவிற்கு, ஐரோப்பாவின் வேறெந்தப் பகுதியிலும் நடைபெற வில்லை. இரண்டாவதாக, ஜெர்மனியில் விளையும் நிலக்கரியில் மூன்றில் இரண்டு பங்கு ரூர் பிரதேசத்தில்தான் விளைகிறது. மூன்றாவதாக, இங்கே விளையும் நிலக்கரியைப் போன்ற உயர்ந்த ரகம், ஐரோப்பாவில் வேறெங்கும் கிடையாது. இதனால் தான் ஜெர்மனியின் தொழிற்சாலைகள் பெரும்பாலும் இந்தப் பகுதியில் இருக்கின்றன. இப்படி கடுமையாகத் தாக்கப்படும் இந்தக் காலத்தில், பெரிய தொழிற்சாலைகளை யெல்லாம் வேற்றிடங்களுக்குக் கொண்டு போய் விடுவார்கள் என்று தான் சாதாரணமாக எதிர்பார்ப்போம். ஆனால், பெரிய தொழிற்சாலை ஒன்றையாவது அப்புறப்படுத்த வில்லை. ரூர்-ரைன் பிரதேசத்திலேயே அவை யிருக்கின்றன.

**ஜெர்மன் தளவாட உற்பத்தி ஸ்தலங்கள் ஒவ்வொன்றாக நாசம்.**

ஒவ்வொரு ஊரிலுமுள்ள தளவாட உற்பத்தி ஸ்தலங்களை முறையே நாசம் செய்ய வேண்டுமென்பது தான் பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த பாம்பர் விமானிகளின் கொள்கை. இப்படி வெடி குண்டுகளை எறிவதினாலேயே ஜெர்மனியை அடியோடு தோற்கடித்து விட முடியுமா? முடியாது தான். ஏனென்றால், இந்த விமானத் தாக்குதல்களால், ஜெர்மனியின் பலம் பெரிதும் சிதைந்து போகும். போக்கு வரவு வசதிகளும் பெரிதும் குலைந்து போகும். அந்தச் சமயத்தில் பல திசைகளிலிருந்தும் அந்நியர்கள் தாக்குவார்களானால், சமாளிப்பது மிகவும் கஷ்டமா யிருக்கும்.

**தரை யுத்தத்திற்கு முன்னதாக விமான யுத்தம் நடை பெற வேண்டியது அவசியம்** என்னும் உண்மை இப்போது வெகு தெளிவாகத் தெரிந்து விட்டது. மேற்குப் பாலைவன யுத்தத்திலும், துனீசிய யுத்தத்திலும் மிகச் சிறந்த பலன் கிடைத்தது. இப்படிப்பட்ட விமான யுத்தத்தின் பலனாகத்தான். எதிரிக்கு உள்ள யுத்த ஆதிக்கம் படிப்படியாக நாசமாகிறது. விமான பலத்திலும் நேச நாடுகளின் கை மேலோங்குகிறது இதற்குக் காரணம் பிரிட்டிஷ் விமானப் படைகளோடு, அமெரிக்க விமானப் படைகளும் சேர்ந்து எதிரிகளை எதிர்த்துப் போராடுவதுதான்.

விமானப் படைகள் ஏராளமாகப் போய் வெடி குண்டுகளை எறிந்து தாக்க வேண்டியது அவசியம் என்று சர் ஆர்ச்பால்ட் சிங்க்லேரும், லார்டு ட்ரென்செய்டும் வெகு தெளிவாக உணர்ந்தார்கள். சில நாட்களுக்கு முன்பு பிரிட்டிஷ் விமான மந்திரி கூறியதாவது :—

"சென்ற மகாயுத்தத்தில் தரை யுத்தம் நடத்தினோம். அதன் பயனாக, அனேகர் மடிய நேர்ந்தது. இப்படிப்பட்ட சேதம் ஏற்படாதபடி பெர்லின் நகரத்தைப் பிடிப்பதற்கு ஒரு வழி யிருக்கிறது. நமது பாம்பர் விமானங்களைக் கொண்டு ஜெர்மன் யுத்தத் தொழில்களை எல்லாம் ஸ்தம்பிக்கச் செய்து விடவேண்டும்.

விமான மார்ஷல் லார்ட் டிரேன்செய்ட் கூறியதாவது :—

"சென்ற மகா யுத்தத்தில் ஏராளமான ஆட் சேதம் ஜெர்மனிக்கு ஏற்படத் தக்கபடி தம் தரைப் படைகளைத் தாக்கிப் போராடினால் தான் வெற்றி பெறக் கூடும். அல்லது, முன்னதாகவே, வெடி குண்டுகளைக் கொண்டு எறிந்து, ஜெர்மன் மக்களின் மன நிலையைக் கலவரப் படுத்திவிடக் கூடிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஜெர்மனியில் படிப்படியாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம்௵ ஜூன்மீ 18உ. [இதழ் 24

## ரஷ்யப் போராட்டம்

இப்போது நடைபெறும் ரஷ்யப் போராட்டத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது 1941-ம் வருஷம் ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை நடைபெற்ற வேனிற் காலத் தாக்குதல். இரண்டாவது 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் 1942-ம் வருஷம் பிப்ரவரி மாதம் வரை குளிர் காலம். பிறகு ஜூன் மாதம் வரை சாதாரணமாகப் போராட்டங்கள் நிகழ்வதில்லை. காரணம் குளிர் காலத்திற்குப் பிறகு மீண்டும் வேனிற் காலம் வரும் வரை, போராட்டத்திற்கான ஆயத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. மூன்ருவது கட்டம், 1942-ம் வருஷம் ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை, வேனிற் காலத் தாக்குதல். நான்காவது கட்டம் 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் வரை நடைபெற்ற போராட்டம்.

இந்த நான்கு கட்டங்களுக்கு முன்னதாக நிகழ்ந்த சில சம்பவங்களைக் கொண்டு, இவற்றை பரிசீலனை செய்வது பயன் தரும். ஆகவே பண்டைச் சரித்திரத்திலும் சற்று புகுந்து பார்க்கலாம்.

ஐரோப்பிய ரஷ்யாவை யடுத்து மேற்குத் திசையிலுள்ளது தான் போலந்து தேசம். இங்கே ரஷ்யர்கள் பலர் குடியேறி யிருந்தனர். இதைக் கைப்பற்ற வேண்டி ஹிட்லர் படைகள் கிளம்பின. பார்த்தார் ஸ்டாலின். வந்து விட்டது தன் இனத்தாருக்கு ஆபத்து, என்று நினைத்தார். தானும் போய் போலந்தைத் தாக்கினுர். முன்பு ரஷ்யாவைச் சேர்ந்திருந்த சில பகுதிகளைக் கைப்பற்றினுர். இதுபற்றி ஜெர்மானியர்களுக்கு வருத்தந்தான். என்றுலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. உட்பகை குமுறிக் கொண்டிருந்தது. சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள். இந்த விஷயம் தோழர் ஸ்டாலினுக்குத் தெரியா திருக்குமா ? தெரிந்தது. அவரும் ஆயத்தமானுர். இரு கட்சிகளும் ஆயத்தமா யிருந்தன. ஆனுல் எப்போது யுத்தம் மூளும் என்று சொல்ல முடியாத நிலையி லிருந்தது.

**1941-ம்** வருஷம் ஜூன் மாதம் **22-ம்** தேதி ஹிட்லர் சோவியத் ரஷ்யாவைத் தாக்கினுர். அப்போது, ஸ்மாலென்ஸ்க் வழியாக மாஸ்கோ விற்குப் போக வேண்டுமென்பது தான் அவருடைய நோக்கம். தாக்க ஆரம்பித்த மூன்ரும் நாளே **வில்ஞவிற்குத்** தெற்கே ஜெர்மன் படைகள் வந்து விட்டன. ரஷ்யர் சமீபத்தில் போலந்திடமிருந்து கைப்பற்றிய ஒரு நகரந் தான் வில்ஞ. ஆகவே, ரஷ்யர்கள் **மின்ஸ்க்** என்னுமிடத்திற்குப் பின் வாங்கினுர்கள். ஒன்பது நாட்களுக்குப் பிறகு மின்ஸ்கையும் கைப்பற்றிய ஜெர்மானியர்கள், பெரிசீனு ஆற்றங் கரையிலுள்ள **போரிசாப்** என்னும் ஊரைப் பிடிக்கப் பல நாட்கள் வரை பாடுபட்டார்கள். மூன்று வாரங்கள் கடந்தன. இதற்கிடையில் ஜெர்மன் படைகள் மிகவும் பலவீன மடைந்தன. ஆரம்பத்திலேயே ரஷ்யா பல பகுதிகளை இழந்தது. லிதுவேனியா, லடேவியாவின் பெரும் பகுதி, ஐரோப்பிய ரஷ்யாவின் மேல்பாதி ஆகியவற்றை ரஷ்யா இழந்தது. பின்லந்து எஸ்தோனியா வழியாக **லெனின் கிராடைப்** பிடிக்க முயன்ருர்கள் ; மின்ஸ்க், ஸ்மாலென்ஸ்க் வழியாக **மாஸ்கோ** நகரத்தைப் பிடிக்க முயன்ருர்கள். தென் பகுதியிலுள்ள உக்ரேனிய மாகாணத்தைச் சேர்ந்த **கீவ்** என்னும் நகரத்தையும் தாக்க முயன்ருர்கள். ஸ்டாலின் பார்த்தார். போர்க்களம் 1,500 மைல் நீளம். போலந்து முதல் கருங்கடல் வரை பரவியிருந்தது. எனவே, அதை மூன்று பகுதிகளாகப் பிரித்தார். வட மேற்குப் பகுதிக்கு மார்ஷல் வரோஷிலோப்பையும், மத்தியப் பகுதில் மார்ஷல் டிமோஷேங்கோவையும், தென் மேற்குப் பகுதியில் புச்டெனியையும் படைத் தலைவர்களாக நியமித்தார். நெடு நாட்களாக ஜெர்மானியர்கள் பெரும் யுத்தத்திற்குத் தம்மை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த அளவிற்கு ரஷ்யர்கள் ஆயத்தமா யில்லை. ரஷ்ய அரசாங்கமோ பொது மக்கள் அரசாங்கம். ஆகவே, அந்நியர்கள் ஆதிக்கத்தை அரை நிமிஷமும். அவர்கள் சகிக்க மாட்டார்கள். திரண்டெழுந்தனர். பெரும் படை யமைந்தது. போதுமான யுத்தத் தளவாடங்கள் கிடையாது. எண்ணெய், நிலக்கரி, இரும்பு முதலிய பொருள்கள் ஏராளமாய் கிடைத்தும், அவற்றைக் கொண்டு தளவாடங்கள் செய்து கொள்ள வசதி யில்லை. எனவே, அமெரிக்காவி லிருந்தும் பிரிட்டனி லிருந்தும் ஏராளமான தளவாடங்கள் ரஷ்யாவிற்குப் போயின.

ரஷ்யா பரந்த நாடு. ஆகவே பாதுகாப்பு சற்று கஷ்டந்தான். தாக்குவது எளிது. எனவே, ரஷ்யர்களை எளிதில் ஜெர்மானியர்கள் பின் வாங்கிப் போகும்படி செய்து கொண்டிருந்தார்கள். ரஷ்யர்கள் இனிது வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் அல்லவா ? தம் தேவைக் கேற்ற வளவும் அதற்கு மேலும் பொருள்களைச் சேகரித்து வைத்துக் கொண்டிருந்தார்கள். ஜெர்மானியர்கள் தம் வீடு வாசல்களைக் கைப்பற்றுவார்களானுல், அவ்வளவு உணவுப் பொருள்களும் ஆடுமாடுகளும் மற்ற மிகவும் உபயோகமான பொருள்களும் ஜெர்மானியர்கள் கைக்குக் கிடைத்துவிடும். அவர்களுக்கு இவை கிடைத்தால், அவர்கள் அங்கே வேரூன்றிக் கொள்ள இடங் கொடுத்தது போலாகும். ஆகவே, ரஷ்யர்கள் தம் இடத்தை விட்டுப் பின் வாங்க வேண்டி வந்தால், தம் வசமுள்ள எல்லா வற்றையும் நாசஞ் செய்த பிறகே, அங்கிருந்து கிளம்புகிருர்கள். இந்த முறையை ரஷ்யர்கள் கையாளுவதனுல், ஜெர்மானியர்கள் பெரிதும் ஏமாற்ற மடைகிருர்கள். தமக்குத் தேவையான பொருள்களை யெல்லாம் தாமே கையோடு எங்கு போனுலும் கொண்டு போக வேண்டி யிருக்கிறது. இப்படி எத்தனை நாட்கள் தான் காலந் தள்ள முடியும். போர் முனையிலுள்ளவர்களுக்கு உணவுப் பொருள்கள் காலா காலத்தில் போய்ச் சேரும் என்று எப்படி உறுதியாகச் சொல்ல முடியும் ? ஆகவே, தம் தளங்களுக்கு வெகு தூரத்திற்கப்பாலுள்ள ஜெர்மன் படைகள் தகுந்த உணவில்லாமல் மெலிய நேர்ந்தது. முதலில் ஜெர்மானியர்கள் வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தார்கள். இது அத்தனையும் ‘ துள்ளின மாடு பொதி சுமக்கும் ’ என்பது போல, குளிர்காலம் வந்தவுடனே, ‘ பெட்டிக்குள் அடங்கிய பாம்பைப் போல ’ அடங்கி விட்டார்கள் ஜெர்மானியர்கள். இது ரஷ்யர்களுக்கு ஏற்ற காலம். தகுந் படி ஆயத்தம் செய்து கொண்டார்கள். ஜெர்மானியர்கள் கைப்பற்றிய எல்லா நகரங்களையும் மீண்டும் கைப்பற்றினர். ஜெர்மானியர்கள் மீண்டும் ரஷ்யாவைத் தாக்க முடியாதபடி கேந்திர ஸ்தானங்களை வசப்படுத்தி அரண் செய்து கொண்டனர். ஆகவே தான் ஏறக் குறைய இரண்டு வருஷங்களுக்குப் பிறகும், ஜெர்மானியர்கள் கை ரஷ்யாவில் ஓங்க முடியவில்லை.

ரஷ்யப் போராட்டத்தைக் குறித்து நாம் விவாதிக்கும் போது, கொரில்லாப் படையையும், ரஷ்யப் பெண்களும் சிறுவர்களும் செய்த முயற்சிகளையும் பற்றி குறிப்பிட வேண்டியதவசியமாகும். ஊரல் மலைச் சாரலில் தான் வளமான காடுகளும் எண்ணெய்க் கிணறுகளும் பல வகை உலோகச் சுரங்கங்களும் இருக்கின்றன. இவை தான் ரஷ்யாவின் மூலப் பொருள்கள். இவை ஜெர்மானியர்கள் வசமாகாதபடி காக்க வேண்டும். நேர்முகமாகப் போராட ரஷ்யர்களிடம் போதுமான தளவாடங்கள் இல்லை. ஆகையால் பதுங்கி யிருந்து திடீரென்று ரஷ்ய விவசாயிகள் ஜெர்மன் படைகள் மீது பாய்ந்து அவர்களை நாசஞ் செய்தன. இவர்களுக்கு உதவியாக ரஷ்யப் பெண்களும் சிறுவர்களும் அரும்பாடு பட்டனர், அன்றியும், ரஷ்ய ஆண்கள் சமாதான காலத்தில் செய்து வந்த எல்லா வேலைகளையும் பெண்கள் செய்தனர். போர் முனைகளிலும் ஆகாய விமானங்களிலும் கூடப் போய்ப் போராட்டத்திற்கு உதவினுர்கள். உலகப் பெண்களின் உள்ளத்தைக் கொள்ளும் வீரம், அவர்கள் உரிமை.

இந்தச் சிறந்த போர்த் திறமையாலும், தோழர் ஸ்டாலின் சமயோசித அறிவினுலும், பொது மக்களின் தளராத ஊக்கத்தினுலும், மற்ற நேச நாடுகளின் தளவாட உதவியினுலும் ஜெர்மனியைத் திகைக்கச் செய்து கொண்டிருக்கிறது ரஷ்யா. ரஷ்யா, தன் மூல பலத்தைக் கொண்டும் ஒற்றுமை பலத்தைக் கொண்டும், ஜெர்மனியைக் கூடிய விரைவில் தலை தூக்க மாட்டாமல் அடித்து வெல்லும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. நாகரிக உலகம் அந்த நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.






துனீசியப் பழத்தைச் சாப்பிட அச்சு நரி முயன்றது. அந்தப் பழம் கிளை யுச்சியில் இருக்கிறது. ஆகையால், அதற்குக் கிடைக்கவில்லை. அதன் முயற்சி பலிக்க வில்லை. ‘ சீச்சீ ! இந்தப் பழம் புளிக்கும் ’ என்று சொல்லுகிறது.

## நேச தேச எதிர்த் தாக்குதல் திட்டங்கள்

### அச்சு நாடுகளின் மேல் அபார குண்டு வீச்சு

**திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானெலி நிலையத்தில் “ அச்சுக் குரல் ” என்னும் பொருள் பற்றி ஜூன் மாதம் 2-ம் தேதி ரெவரன்ட் பாதர் பாலம் அவர்கள் ஒலி பரப்பிய சொற் பொழிவு வருமாறு :—**

சென்ற இரண்டு வாரங்களில் நடந்த விசேஷ நிகழ்ச்சிகளில் முக்யமானவை மூன்று. முதல் நிகழ்ச்சி வாஷிங்டனில் நடந்தது. இரண்டாவது ஜெர்மனியில். மூன்ருவது வட பசிபிக்கில்—அமெரிக்கத் தலைநகராகிய வாஷிங்டனில் மிஸ்டர் ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும் தங்களுடைய தளகர்த்தர்களின் ஆலோசனைகளைக் கேட்டு, ஜப்பானையும் ஜெர்மனியையும் ஒரே சமயத்தில் நேச தேசங்களின் முழுபலத்துடன் தாக்க ஏற்பாடு செய்தார்கள். எங்கே, அதாவது எங்கெங்கே தாக்குவார்கள் ? எப்பொழுது தாக்குவார்கள் ? எப்படியெல்லாம் தாக்குவார்கள் ? இவை வரவர வெளியாகும். இப்பொழுது இவை எல்லாம் இராணுவ இரகஸ்யம். இப்பொழுது நமக்குத் தெரியாது. அச்சுக்கும் தெரியாது. எல்லாம் இருட்டு. ஆகையால் இருட்டில் அச்சுக்கூகை கூவுகிறது. ஒரே விதமான கூச்சல் அல்ல. நாலுவகை. கேளுங்கள், அமெரிக்கர்களுக்கு அச்சுக்குரல் சொல்லுகிறது :—‘ இந்தச் சர்ச்சில் வாஷிங்டனுக்கு வந்திருப்பது ஒரே நோக்கத்துடன். உங்களைப் போர்முனையில் தள்ளி லக்ஷக்கணக்கான அமெரிக்க வாலிபர்களின் இரத்தத்தைச் சிந்தி, பலியிடுகிற பேர்வழி இந்தச் சர்ச்சில். சர்ச்சிலால் அமெரிக்காவுக்குத் தீமையே ஒழிய ஒரு நன்மை வரப்போகிறதில்லை. நாம் சொல்லவேண்டியது சொல்லிவிட்டோம்.’ இப்படி அமெரிக்காவுக்கு. பிரிட்டனுக்கோ அச்சு ரேடியோ சொல்லுகிறது :—‘ பிரிட்டிஷ் மக்களே ! நீங்கள் மோசம் போனீர்கள். உங்களுடைய சர்ச்சில் போராசை பிடித்த அமெரிக்கருக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை கொஞ்சம் கொஞ்சமாக லஞ்சம் கொடுத்து அழித்து வருகிருர். இந்த வாஷிங்டன் பேச்சுக்களில் பலன் ஒன்றுதான். என்ன ? உங்களையும் உங்களுடைய குழந்தை குட்டிகளையும், சர்ச்சில் ரூஸ்வெல்டுக்கு அடிமைகளாக விற்றுவிட்டார் ’.. இது பிரிட்டனுக்கு அச்சுக்குரல் சொல்லுவது. மற்ற நேச நாடுகளுக்கோ ? விசேஷமாக சீனுவுக்கும் ஆஸ்ட்ரேலியாவுக்கும்—‘ ஐயோ பாவம், ஆங்கிலேயரையும் அமெரிக்கரையும் நம்பி, போரில் இழுக்கப்பட நேச நாடுகளே ! உண்மை வெளியாகிவிட்டது. ரூஸ்வெல்டுக்கும் சர்ச்சிலுக்கும் உங்களைப்பற்றி ஒரு கவலையும் கிடையாது. இத்தனை மாதங்களாக உங்களுக்கு எத்தனைத் துன்பங்கள். இனியாவது உங்களுக்கு உதவி கிடைக்கப்போகிறதா ? உங்களுடைய பிரதிநிதிகளில் யாரையாவது வாஷிங்டனுக்குக் கூப்பிட்டார்களா? வாஷிங்டனில் என்ன நிர்சயித்திருந்தாலும் யூதர்களுக்கே கிடைக்கப் போகிறது லாபம். நேச நாடுகளே, உங்களுக்கு ஒரு உதவியும் கிடைக்கப் போகிறதில்லை.’ ‘ வாஷிங்டன் பேச்சு என்பதெல்லாம் வெறும் பித்தலாட்டம். வாஷிங்டனில் ஒன்றும் திட்டமாக நடக்கவில்லை. எல்லாம் ஒரே ஊழல். சர்ச்சில் ஒரு பக்கம் இழுக்க, ரூஸ்வெல்டு இன்னொரு பக்கம் இழுக்கிருர். இருவருக்கும் வெவ்வேறு மனப்பான்மை. இருவரும் ஒருநாளும் ஒத்து உழைக்க முடியாது. இரண்டு வாரங்களாக வாய்ச்சண்டை நடந்தது. கடைசியில் ஒரு முடிவுக்கும் வராமல், சர்ச்சில் திரும்ப வேண்டியதாயிற்று. வாஷிங்டனைப்பற்றி அச்சுநாடுகளின் ஜனங்கள் ஒரு சிறிதும் கவலைப்பட இடமில்லை!’ என்று அச்சுக்குரல் தாலாட்டுப் பாடி தூங்கவைக்கிறது. இப்படி அச்சுக்குரல் ஒரே வாஷிங்டன் மஹாநாட்டைப்பற்றி, நாலுவகையாருக்கு நாலுவிதமாக சொல்லிவருகிறது. அமெரிக்கருக்கு சர்ச்சில் பூச்சாண்டி காட்டுகிறது. பிரிட்டனுக்கு ரூஸ்வெல்டு பூச்சாண்டி ; மற்ற நேச நாடுகளுக்கு இருவரும் பூச்சாண்டி ; அச்சு நாடுகளின் ஜனங்களுக்கோ, பூச்சாண்டியே கிடையாது. ஒரு பயமும் இல்லை, துளிகூட கிடையாது என்று அச்சுக்குரல் அசத்யவாதம் செய்கிறது. இது முதல் நிகழ்ச்சியைப் பற்றி.



இரண்டாவது முக்யமான நிகழ்ச்சி—ஜெர்மனியில் சென்ற ஒரு மாதமாக, விசேஷமாக சென்ற இரண்டு வாரங்களாக, ஜெர்மனியில் தொழிற்சாலைகள், நேச விமான குண்டுகளுக்கு இரையாகி ஆயிரக்கணக்காய் அழிகின்றன. இரவும் பகலுமாக இடைவிடாமல் நாலே நாட்களில் 7,000 டன் நிறையுள்ள வெடிக்குண்டுகள் விழுந்திருக்கின்றன.

#### இத்தாலிக்குப் பிடித்தது தலை வலி

ஒரு பெரிய குட்ஸ் ட்ரெயின். 40, 50 வண்டிகள் கோர்த்த குட்ஸ் ட்ரெயின். 700 டன் சுமக்கிறது. இதுபோல் பத்து குட்ஸ் ட்ரெயின் கொள்ளும் 7,000 டன் வெடிகுண்டுகளை, நாலு நாட்களில் நாலு ஜெர்மன் தொழிற் சாலை கூட்டங்களின்மேல் நேச விமானங்கள் பொழிந்தன. இன்னும் பெரிய வெடிக்குண்டுப்புயல் அடிக்கப் போகிறதென்று பிரிட்டிஷ் மந்திரிகளும் அமெரிக்க அதிகாரிகளும் ஜெர்மனிக்கு வாக்களிக்கிருர்கள். இத்தாலியாவுக்குப் பிடித்தது தலைவலி. இந்தப் பெருமகழ்ச்சியைப்பற்றி என்ன சொல்லுகிறது தெரியுமா அச்சுக்குரல் ? ‘ இம்மாதிரி இலக்கு வைக்காமல் ஒரேயடியாக குண்டுமழை கொட்டுகிறது

(10-ம் பக்கம் பார்க்க)

# ஆளுக்கொரு நியாயமா?

தனக்கொரு நியாயம், பிறத்தியாருக்கு ஒரு நியாயம் என்றிருப்பவர்களை யாராவது போற்றுவார்களா? அவர்கள் கஷ்டப்படும்பொழுது, யாராவது, "ஐயோ பாவம்" என்று சொல்லி இரக்கப்படுவார்களா?

ஹிட்லர் இருக்கிறார். அவர், சுமார் மூன்றேமுக்கால் வருஷங்களுக்கு முன், திமிர்பிடித்து, நாம் என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம் என்பதையே எண்ணிப் பாராமல், கண்மூடித்தனமாக, "கத்திபிடித்தவனே ராஜா, கதை எந்தினவனே சூரன்" என்று சொல்லிக்கொண்டு, தன்னைச் சுற்றிலுமிருந்த அப்பாவி நாட்டினர் மீதெல்லாம் குண்டு மாரி பொழியவைத்து, அவர்களை அடிமை கொண்டார். பிறகு, இங்கிலாந்து மீதிலும் தமது கவனத்தைச் செலுத்தினார்.

வாலிப முறுக்கும், உடம்பிலே நல்ல ரத்த ஓட்டமும் இருக்கும் வரை, பெரிய இல்லாடியாகி, ஊரில் இருக்கும் பெண்களையெல்லாம் இழுத்துவரச்செய்து, தன்காம விகாரத்தைத் தீர்த்துக்கொண்டு, என்னைத் தட்டிக் கேட்பவன் எவனடா" என்று கேட்டுக்கொண்டிருந்தானும் ஒருவன். ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. எங்கேயாவது அவன் எக்கச்சக்கமாக அகப்பட்டுக் கொள்ள வேண்டும், அவனைச் சுண்டைக்காயை நசுக்குவதுபோல் நசுக்கி விடவேண்டும்; ஞாபகார்த்தமாக என்றென்றும் அவன் மறவாதிருக்க அவனுடைய கையையாவது, காலையாவது வாங்கிவிட வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தார்களாம் பலர். இப்படியிருக்கையில், அவன் ஒரு முரட்டுப் பெண்ணிடத்தில் போய்ச் சரியாக மாட்டிக் கொண்டானும். அவள், அவனுடைய பலத்தையெல்லாம் உறிஞ்சி விட்டாளாம். வியாதியும், வெட்டையும் பீடிக்க, நடக்க முடியாது தடுமாறும் அவன் மீது, தெருவில் போவார் வருவார், காரி உமிழ்ந்திருக்க மாட்டார்களா?

## ஹிட்லர் ஆதி புராணமும் அந்தர் தர்பாரும்

அதே நிலைமைக்குத் தான் வரப்பார்க்கிறார் ஜெர்மனிய இல்லாடி ஹிட்லர். ஆனால், நியாயமாக வியாபாரம் செய்தோ, பரம்பரை அந்தஸ்தினாலோ பணக்காரராகிறவரையும், அதிகாரம் செலுத்துகிறவர்களையும் பார்த்து யாரும் பொறாமைப்படவும் மாட்டார்கள். அவர்கள் வழிக்கு போகவும் மாட்டார்கள். ஹிட்லரது ஆதி புராணமும், அவர் பதவிக்கு வந்ததும், அவர் செய்கிற தர்பாரும் தான் உலகறிந்த ரகசியமாயிற்றே! அப்படிப்பட்ட அற்ப மனிதரொருவரின் அட்டகாசங்களை இந்த உலகம் எவ்வளவு காலம்தான். சகித்துக் கொண்டிருக்கும்?

அதன் பலனைச் சென்ற ஒருவருட காலமாகத் தான் நன்றாக அனுபவிக்கிறாரே! அவரது கொட்டத்தை அடக்கி, அவரது பலத்தைக் குலைத்து, அவரது முன் குடுமியைப் பிடித்துக்கொண்டு, "உலகோரே"! உலகோரே! இல்லாடிப்பயல் அகப்பட்டுக் கொண்டுவிட்டான்! அடிக்க வாருங்கள் என்று அழைப்பதுபோல் செய்துவிட்டனர் வீர ருஷ்யர்கள். ஹிட்லரின் முதுகிலே சும்மா "தடும், தடும்" என்று வந்து விழுகின்றன குத்துக்கள். அவர் ஒரு பெரிய "கல்லுளிமங்கன்" இத்தனை அடிவிழுந்தும், வாய்விட்டு அழாமலே இருக்கிறார். இதனால் விழுகிற அடிபலமாக இல்லையென்றோ, அவருக்கு அது வலியை உண்டாக்கவில்லை யென்றோ எண்ணலாமா?

## இந்தப் புத்தி அப்போது எங்கே போச்சு?

இந்தப் புத்தி அப்பொழுது எங்கே ஐயா போச்சு உங்களவங்களுக்கு? ஆளில்லாத சமயம்பார்த்து, வெல்ல அவல் மீது ஆசைப்பட்டு, உரலுக்குள்ளேயே தலையைப்புகுத்தி, பாட்டியம்மா பலகாரத்திற்கென்றிருந்த அவலையெல்லாம் நக்கித் தின்றுவிட்டு, தலையை வெளியில் எடுக்கமுடியாது தவிப்பவனைப் பார்த்து, "ஐயோ பாவம்!" என்று சொல்லுவதற்குண்டா?" "என் ஐயா! உரலுக்குள்ளே தலையைக் கொடுத்தால் மாட்டிக்கொள்ளும் என்பது முன்னேயே தெரிந்திருக்க வேண்டும்! அதுமட்டுமல்ல. ஏற்கெனவே மிளகாய்ப்பொடி இடித்த உரல் அது என்பதும் உமக்குத் தெரிந்திருக்கவேண்டும். அது தெரியாது, இப்பொழுது வயிறெல்லாம் எரிய ஆரம்பிக்கிறதே, எரிய ஆரம்பிக்கிறதே என்று அலறினால், யார் என்ன செய்வது? நன்றாக அவஸ்தைப்படும்! யாராவது வந்து உலக்கையால் தலையில் இரண்டு போட்டாலும் வாங்கிக்கொள்ளும்!" என்றுதான் ஆத்திரந் தீர எல்லோரும் சொல்லுவார்கள்.

அதே போலத்தான், ஹிட்லரின் சகாக்களும், ஜெர்மன் மக்களும் இப்பொழுது அலறுவதைப்பார்த்து, "ஹூ ஹூம்! இனி மேலே அழுது பிரயோசனமில்லை ஐயாமார்களே! அம்மாமார்களே! நாளுக்கு நாள் அடியும், இடியும் அதிகமாகத் தான் போகிறது. ஹிட்லர் காட்டிய வழியையே தானே நேச தேசத்தவர்களும் பின்பற்றுகிறார்கள். அது தப்பு வழி என்றால், உங்களுக்குகொரு நியாயம், எங்களுக்கொரு நியாயமா?" என்று கேட்கிறோம் நாம்.

அச்சு நாட்டாரின் பலத்தைவிட, நமது பலம் அதிகமாகிவிட்டது. ஐரோப்பாமீது படையெடுக்கவும் பரந்த திட்டங்கள் போடப்பட்டு விட்டன. அந்தத் திட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகிறது என்றுகூடச் சொல்லலாம். இப்பொழுது ஜெர்மானியர் அலறிப் பயன் என்ன?

## ஹிட்லர் மண்ணைக் கவ்விய பிறகு தான் யுத்தம் முடியும்

யுத்தத்தை அச்சு நாட்டவரின் ஹ்ருதயங்கள போல் உள்ள பெர்லின், ரோம், டோக்கியோ நகரங்கள் வரை கொண்டு போய் விடுவதென்றும், பெர்லின் நகரிலே போய் உட்கார்ந்து கொண்டு நேசதேசத்தார் சமாதானத்திற்கான ஷரத்துகளைச் சொல்லுவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோர யுத்தத்தை எவனொருவன் தன்னிஷ்டப்படி தொடங்கினானோ, அவனே இதை நிறுத்தும் ஆளாகவோ சமாதானத்திற்கான நிபந்தனைகளைப் போடும் ஆத்மாவாகவோ இருக்கப்படாது என்கிற விஷயத்திலே, நேசதேசத்தவர்களிடை இரண்டு அபிப்பிராயம் இடையாது. ஆகமொத்தம் ஹிட்லரை மண்ணைக் கௌவ விட்டுவிட்டுத்தான் யுத்தத்தை நிறுத்துவார்கள் போலிருக்கிறது.

ஆனால், நமது பலத்தைக் குறைத்து மதிப்பிட்ட நமது விரோதியைப் போல், நாம் நமது விரோதியின் பலத்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. நமது திட்டம் என்ன என்பதை அறிய அவன் ஆவலாக இருக்கிறான். அது என்ன என்பது அவனுக்குத் தெரியக் கூடாது, திடுதிப் என்று அவனைத் திகைக்க வைத்து அழிக்க வேண்டும் என்பது நமது ஆவல். நமது எதிரி, வேண்டுமென்றே ருஷ்யாவில் போய் ஏராளமான படைகளை வைத்துக்கொண்டு ஒன்றும் செய்யாமலிருக்கிறான். அவன் பெருவாரியாக ருஷ்யாவில் ஒரு தாக்குதலைத் தொடங்கட்டும்; அதே சமயம் நாமும் மேற்கேயிருந்தும், தெற்கேயிருந்தும் அவனைத் தாக்கலாம் என்று நேச தேசத்தவர் எண்ணியிருக்கக் கூடும்; இல்லாவிட்டால், ருஷ்யர்கள் முன்னேறட்டும் என்று மேற்கில் உள்ளவர்கள் காத்திருக்கக் கூடும்; இல்லாவிட்டால், விமான பலத்தாலேயே மத்யதரைக் கடலிலும், வடக்கே நார்வேயிலும் எதாவது முக்யம் வாய்ந்த இடங்களில் இறங்கி, வேர்விட்டுக்கொள்வது என்றிருக்கலாம் நம்மவர்கள், என்று எழுதுகிறார் ராய்ட்டரின் நிருபர்.

## திட்டத்தின் முதல் பகுதி வெற்றி

ஐரோப்பாவிலே இரண்டாவது போர்முனை சீக்கிரமே ஏற்படப் போகிறது. சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும் பலநாட்கள் கூடிப்பேசி, வரைந்த திட்டத்தின் முதல் பகுதி வெற்றியை அளித்துவிட்டது. இத்தனை காலயாக, இத்தாலி, தான் முன்பு திருடிய சொத்துக்களை இழந்து வந்தது. ஆனால், இப்பொழுதோ, அதன் மடியிலிருந்தே பொருள்கள் போகத் தொடங்கிவிட்டன.

பாண்டெலாரியா என்பது ஒரு சிறு தீவுதான். முப்பது சதுர மைல்கள் பரந்துள்ளதுதான். ஆனாலும் இதனை எழுவருட காலமாக, முஸோலினி பெரு சிரமப்பட்டு, பலமான கோட்டையாக மாற்றினார். பூமிக்கு அடியிலே ஓடி மறைந்து நிற்கக்கூடிய, ரகசிய விமானக்கூடமொன்றை இங்கு சிருஷ்டித்தார். இங்குள்ள மலைகளுக்கடியில் பதுங்கு மிடங்களை ஏற்படுத்தினார். நீர்மூழ்கிகளும், யுத்தக் கப்பல்களும் தங்க ஒரு பக்கா ஹார்பரைக் கட்டச்செய்தார். சென்ற சில வருடங்களாக இந்தத் தீவால் நேசதேசக் கப்பல் போக்குவரத்துக்கு ஏக உபத்திரவங்கள் உண்டாகிக் கொண்டிருந்தன. "இத்தாலியின் மால்டா இது!" என்று இதைக் குறித்து முஸோலினி அடிக்கடி ஜம்பமடித்து வந்தார். சென்னையில் உள்ள ஸென்ட்ரல் ஸ்டேஷனில் ரயில்வேஎஞ்சின்கள், வந்து நிற்கு மிடங்களில், யானையின் அடிப்பாதம்போல், இரும்பில் செய்து, சுவரிலே புதைத்து வைத்திருக்கிறார்கள். கொஞ்சம் அயர்ந்து, மறந்து எஞ்சின் டிரைவர் எஞ்சினை சுவர் ஓரம் ஓட்டிவந்துவிட்டால், அந்த எஞ்சினின் மோதுதலை மேற்கண்ட ஸ்பிரிங் "யானைக்கால்" தாங்கிக் கொள்கிறது. சுவரோ, கட்டிடமோ இடிவதில்லை. இந்த இரும்பு, ஸ்பிரிங் யானைப்பாதம் மாதிரி இத்தாலிக்கு இருந்தது இந்த பாணடெலாரிய தீவு. இத்தாலிமீது மோதவருவோர் கொடுக்கும் அடிகளைத் தாங்கி, இத்தாலிக்கு ஏற்படக்கூடிய நோயைத் தணிப்பதற்கென்று ஏற்பட்டது இத்தீவு.

## இத்தாலி தான் முதல் பலி

இதனையே தங்கள் முதல் பலியாக ஏற்றுக்கொள்ளத்தீர்மானித்தனர் போலும் நேசதேசத்தவர்கள். சென்றமாதம் ஒன்பதாந் தேதி முதல் இம்மாதம் பதினோராந் தேதி வரை எல்லாம் தவிடுபொடி.

அந்தத் தீவிலே சுமார் பதினையாயிரம் பேர்கள் இருந்தார்கள். அவர்கள் மீது இரக்கம் கொண்டு, நேசதேசப் படைத் தலைவரான, ஜெனரல் ஐஸன்ஹாவர், அத்தீவில் உள்ளோரை சரணடைந்துவிடும்படி மும்முறை கேட்டுக் கொண்டார். கடைசி வரை அத்தீவில் உள்ளோர் வீரமாகப் போர் புரிவர்' என்று முஸோலினி கூறிக் கொண்டிருந்தார். 'இதோ அத்தீவை விடாது காப்பாற்ற உதவிக்கு விமானங்கள் அனுப்புகிறேன்' என்று ஹிட்லரும் சொன்னாராம்.

## உயிர் போன பிறகு வரும் டாக்டர்!

ஆனால், உயிர் போனபின் வரும் டாக்டரைப்போல், ஜெர்மன் விமானங்கள், வந்து சேர்ந்தன. அப்புறம் என்ன பிரயோசனம்? பாண்டெலாரியா தீவிலே உள்ளவர்கள் அதிகச் சேதமின்றித் தான் பதுங்கு மிடங்களில் இருந்தார்கள். ஆனால், அவர்களிடமிருந்த குடி தண்ணீர் ஸ்டாக் எல்லாம் தீர்ந்து போய் விட்டது. ஆகவே அவர்கள் வேறு வழியின்றி வெள்ளைக் கொடியை உயர்த்தி விட்டார்கள்.

விமானங்களால் என்ன சாதிக்கலாம் என்பது தெரிகிறது பார்த்தீர்களா? விமானங்களால் தாக்குவதால் எதிர் பார்த்த பலன் கிடைக்காது போனால், கப்பல்கள் மூலம் படைகளைக் கொணர்ந்து இறக்கிவிட நேசதேசத்தவர் சித்தமாக இருந்தார்கள். பாண்டெலாரியாவிலே வெகு செங்குத்தான பாறைகள் நிறைந்த கடற்கரைதான் அதிகம். ஆகவே, படைகளை இறக்குவதில் கஷ்டமேற்பட்டிருக்கலாம். அதற்கு இடமே இல்லாது, எல்லாமே சுகமாக முடிந்துவிட்டது.

அந்தத் தீவிலே வேலை முடிந்ததும், நேசதேச விமானிகள் லாம்பெடூஸா என்ற மற்றொரு தீவை இருபத்தி நான்கு மணி நேரம் இடைவிடாது தாக்கினர். சரண்புகுந்தனர் அத்தீவில் இருந்தவர்கள். அதற்கப்பால் இரண்டு குட்டித் தீவுகள் தாமாகவே சரண் புகுந்து விட்டன. இவை கிடைத்தது காரணமாக, மத்யதரைக் கடலிலே, ஸிஸிலிக்குத்தெற்கே நமது கப்பற்படைகள் அதிக ஆபத்தின்றி தாராளமாகப் போக முடியும். இன்னும் ஸிஸிலி, ஸார்டீனியா, கார்ஸிகா போன்ற தீவுகள் நம் வசப்பட்டுவிட்டால், அப்புறம் மத்யதரைக் கடலில் இருக்கும் நமது கப்பற் படையில் ஒரு பகுதி, நார்வே அருகிலோ இந்துமகா சமுத்திரத்தை நாடியோ செல்லலாமல்லவா?

இதை யெல்லாம் உத்தேசித்துத்தான், ஜிப்ரால்டருக்கு டாங்கிகளை இறக்கக் கூடிய நாற்பத்தி மூன்று கப்பல்கள் வந்திருப்பதாக ஜெர்மானியர் கூறுகிறார்களாம். ஸிஸிலி மீது படையெடுக்கவா? பார்க்கலாம். ஸிஸிலிக்கு நிச்சயமாக உதவி அனுப்ப வேணுமென்று ஹிட்லர் சொல்லியிருக்கிறாராம்!

ஆனால், ஜெர்மானிய விமான உற்பத்தி அதிகாரி என்ன செய்வதென்று தெரியாமல் முழிக்கிறாராம். இத்தாலிக்கு விமானங்களை அனுப்புகிறார். அவற்றில் பல நாசமாகும். நாளை ஐரோப்பாவிலே யுத்தம் ஆரம்பமாகிறபோது, ஜெர்மனியைப் பாதுகாக்க வென்று சேர்த்து வைக்கப்பட்டுள்ள விமான பலம், இதனால் குறைந்து தானே போகும்? பிறகு ருஷ்யப் போர் முனையில் என்ன செய்வது? இந்தக் கவலையில் அந்த அதிகாரி தெற்கே அதிக உதவி அனுப்பாதிருக்கிறார்.

இத்தாலிக்கு ஆபத்து அதிகரித்து வருகிறது, நேசதேசத்தவரின் பலம் அபாரமாயிருக்கிறது என்று ஜெர்மன் பத்திரிகைகள் பிரசாரம் செய்யத் தொடங்கியிருக்கின்றனவாம். ஜெர்மனியிலே, "இப்பொழுது வெடி குண்டு வீசும் விமானங்களைவிட, சண்டை போடும் விமானங்களே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றனவாம். இதிலிருந்தே, ஜெர்மனிக்குக் கை இறக்கம் என்பது தெரியவில்லையா? ஆகவே, பாதுகாப்பு யுத்தத்திற்கு இறங்கிவிட்டது ஜெர்மனி என்றாகவில்லையா?

ஜெர்மனியின் ஜீவநாடி போல் உள்ள வில்ஹெல்ம்ஷேவன், டஸ்ஸல்ட்ரப், எஸ்ஸென் போன்ற நகரங்களை நேசதேச விமானிகள் பொடியாக்கி வருகிறார்கள். ஜெர்மானியருக்கு ருஷ்யாவிலே சென்ற ஒரு வாரத்தில் மட்டும் 648 விமானங்கள் நாசமாயிருக்கின்றன. அங்கு ஜெர்மானியர் முன்னேறச் செய்யும் முயற்சிகளை யெல்லாம் ருஷ்யர்கள் பாழாக்கி வருகிறார்கள். பாழாக வேண்டியதுதானே. அச்சு நாட்டவர் திட்டமெல்லாம்! நல்ல திட்டமானால் அல்லவா உருப்படும்?



## தொழிலாளர் பகுதி

# ஒற்றுமை தான் வெற்றி தரும்

மகிழ்ச்சியை அறிவிக்கும் பொருட்டுத் தான் விழாக்கள் நடைபெறுகின்றன. சென்ற திங்கட்கிழமை நம் சென்னையிலும் ஒரு பெரும் விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு **மேன்மை தங்கிய சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்கள்** தலைமை வகித்தார்கள். அது சமயம் அமெரிக்கா, சீனா, போராடும் பிரான்சு, க்ரீஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் விஜயம் செய்திருந்தனர். அது மட்டு மன்று. அந்த விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவுகள் ஆற்றினர். அப்போது, அமெரிக்கப் பிரதிநிதியான மிஸ்டர் ராய் இ. பி. பவர் கூறியதாவது:—

இங்கு கூடியுள்ள நேச நாட்டுப் பிரதிநிதிகளுடைய ஒவ்வொரு நாடும் பெரும் ஆபத்துக்களைத் தடுத்திருக்கின்றது. எதிரிகள் முன்னேறித் தாக்க ஒட்டாதபடி தடுத்தது மட்டு மன்றி, தாமே முன்னேறி எதிரிகளைத் தாக்குகின்றது. நேச நாடுகளுக்கு இப்போது வெற்றி தந்திருக்கும் ஒற்றுமையும் மன வுறுதியும், மேலும் இருந்து வருமானால், விரைவில் பூரண வெற்றி பெறலாம். இத்துடன் சமாதானத்தையும் உண்டாக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு, இப்போது நேசநாடுகள் அடைந்துள்ள ஒற்றுமையும் மனவுறுதியும் மேலும் ஓங்கி வளர்ந்திருக்க வேண்டும்.

பிறகு சீனப் பிரதிநிதியான மிஸ்டர் கூ பூ ஷூன்னும், போராடும் பிரஞ்சுப் பிரதிநிதியான மான்சியே பால் வில்லலும் அவர்களும் பேசிய பிறகு, கிரேக்க தேசப் பிரதிநிதி மிஸ்டர் டி. லெகியார்டோபுலோ, நாஜிகள் கொடுமைகளை எதிர்த்து கிரேக்கர்கள் போராடியதற்குக் காரணம், இறுதியில் நேச நாடுகள் வெற்றி பெறுவது திண்ணம் என்னும் நம்பிக்கை தான் என்றும் குறிப்பிட்டார்.

பிறகு பேசிய மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் கூறியதாவது:—



**மேன்மை தங்கிய**
**சென்னை கவர்னர் சர் ஆர்த்ர் ஹோப் அவர்கள்.**

நேச நாடுகள் அடைந்த வெற்றிகளைக் கொண்டாடும் பொருட்டுத் தான் இந்த விழா நடை பெறுகிறது. அது மட்டு மல்ல. பரிபூரண வெற்றி கிடைக்கும் வரையிலும் ஒற்றுமையோடிருக்க வேண்டும் என்னும் உறுதிப் பாட்டிற்கு இது ஒரு அறிகுறியாகவும் விளங்குகிறது. இதற்கு முன்பு பேசிய போதெல்லாம் ஒற்றுமையைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம். இங்கே நேச நாட்டுப் பிரதிநிதிகள் பலர் கூடியிருக்கிறார்கள். இப்போது பேசினார்கள். அவர்களும் ஒற்றுமையை வற்புறுத்தித் தான் பேசினார்கள். சென்ற $3\frac{1}{2}$ வருஷங்களுக்குப் பிறகு ஓரளவிற்கு நாம் வெற்றி பெற்றதற்குக் காரணம் நம் ஒற்றுமை தான். கூடிய சீக்கிரத்தில் பரிபூரண வெற்றி யடைவதற்கும் நம் ஒற்றுமை தான் காரணமாயிருக்கும். மத்திய தரைக் கடல் வழியே கீழ் நாடுகளுக்குப் போக்கு வரத்து ஆரம்பித்துள்ளது; ஐரோப்பா மீதும் தாக்குதல் ஆரம்பமாகி வருகிறது. நேச நாட்டினர் ஒற்றுமைக்கும் உறுதிக்குமே இவ்வெற்றிகள் தகுந்த சான்றுகளாகும்.

## 'பெர்லின், டோக்கியோவைப் பிடிக்கவேண்டும்'

ஹிட்லர், முஸோலினி, டோஜோ முதலியோரின் முடிவு நாள் நெருங்கி விட்டது. ஐரோப்பாவில் நடத்தப் போகும் தாக்குதல்கள் பல நோக்கங்களுடன் செய்யப்படுகின்றன. எதிரிகள் கபளீகரம் செய்த நாடுகளை விடுவிப்பதும் ஜெர்மனியிலேயே புகுந்து தாக்கி, ஜெர்மனிக்குத் தக்க படிப்பினை கற்பிப்பதும், எதிர்காலத்தில் ஜெர்மனி யுத்தம் தொடங்கும் பொருட்டு, ஆயுதங்கள் சேகரிக்காமல் தடுப்பதும் நமது நோக்கங்களாகும். ஜெர்மனியின் கூட்டாளிகளுக்கும் சரியான படிப்பினை கற்பிக்க வேண்டும். பெர்லின் ரோம், டோக்கியோ முதலான தலை நகரங்களைக் கைப்பற்றி அங்கே சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடும்படி செய்வதவசியம். நேச நாடுகளின் பலம் நாளாவட்டத்தில் அதிகரிப்பது கண்டு ஜெர்மனி பீதியடைகிறது. ஜெர்மனி இதுகாறும் தோற்கடிக்கப் படவில்லையென்பது உண்மைதான். ஆனால் தாம் தோற்பது நிச்சயமென்பதை ஜெர்மனியர் உணர்ந்தவுடன், அவர்கள் சரணடைவது திண்ணம்.

ஜெர்மன் தலைவர்கள் மட்டுமின்றி, ஜெர்மன் மக்களனைவருமே ஆதிபத்திய ஆசை கொண்டவர்க ளென்பதை நேச நாட்டினர் உணர்ந்து ஜாக்கிரதையாக நடந்து கொள்ளாவிடில் மீண்டும் ஹிட்லர் போன்றவர் ஜெர்மனியில் முளைத்து உலகைக் கஷ்டத்தில் ஆழ்த்தக் கூடும்.

அடுத்த வருஷம் ஜூன் மாதத்திற்குள் யுத்தம் முடிந்து நேச நாட்டினர் வெற்றி பெறுவரென நம்புகிறேன். சீனா கிரீஸ் முதலான நாடுகளும் அப்போது அடிமைத் தளைகளைக் களைந்து விடும். இக்கருத்தை இந்தியா ஆதரிக்குமென எனக்குத் தெரியும்.

உலகத் தொழிலாளர்களுக்கு இன்று போப்பாண்டவர் முறையிட்டார். இந்த நிலையில் தங்களது கோரிக்கைகளைப் பிடிவாதமாக வற்புறுத்தக்கூடாது என அவர் இத்தாலியத் தொழிலாளர் கூட்டத்தில் பேசினார். சுமார் 15,000 பேர் அங்க கூடியிருந்தனர்.

இதே பிரசங்கத்தில் சமாதானத்திற்காகத் தாம் முயற்சி பண்ணவில்லை எனக் கூறுவது பிசகு என்பதையும், அவர் தெரிவித்தார். "எதற்கும் பயப்படாமல் தளர்ச்சியின்றி எனது காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட வேண்டுகோள்களும் கடிதப் போக்கு வரத்துகளும், நிலைமை தெரிந்தபின் பிரசுரமாகும் போதுதான், எங்களது முயற்சி எத்தகையது என்பது புலனாகும்" என்று போப்பாண்டவர் கூறினார்.

அன்றியும், ஜெனரல் சியாங்கே-ஷேக் ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு நியூஜிலாந்து பிரதம மந்திரியான பீட்டர் பிரேஸருக்கும் நியூஜிலாந்து மக்களுக்கும் அனுப்பிய ஆசிச் செய்தியில் பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—பசிபிக்கில் நமக்குத் தற்காலம் உண்மையான அபாயமேற்பட்டிருக்கிறது. ஆனால் ஐக்கிய நாடுகளுள் ஒற்றுமையும் சக்தியும் வளர்ந்து வருவதால் எதிரியை நசுக்கி அந்த அபாயத்தைப் போக்க வேண்டுமென்ற எண்ணம் நிச்சயம் சித்தி பெறும் என்பதில் இனி எவ்விதமான சந்தேகமுமில்லை.

இப்படிப்பட்ட சிறந்த ஒற்றுமை என்றென்றைக்கும் நிலைத்திருக்க வேண்டும். அப்போது தான் நிரந்தரமான சமாதானம் உண்டாக முடியும். இதன் பொருட்டு நேச நாடுகள் எல்லாம் அரும்பாடு படுகின்றன. சோவியத் அரசாங்கம் தம் சர்வ தேசப் புரட்சிக் கொள்கையையே இதன் பொருட்டுக் கைவிட்டு விட்டது என்றால், இந்த ஒற்றுமை எவ்வளவு உறுதியானது என்பது விளங்கும்.

நிற்க, ரஷ்யா யுத்தத்தில் இறங்கு முன்பு, அதாவது நேசநாடுகளுள் ஒன்றாகச் சேரும் முன்பு, பிரிட்டிஷ் தொழில் கட்சியாருக்கும் சோவியத் தொழிலாளர் அரசாங்கத்திற்கும் கடும் பகைமை இருந்து வந்தது. இப்போது அது நீங்கிவிட்டது. பொது எதிரியை வெல்லுவது தான் முக்கியமாகி விட்டது. தம் கருத்து வேற்றுமைகளைக்

(9-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

**நேச நாட்டு வியாபாரக் கப்பல்கள் : மூழ்கிப் போன ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள்.**

இந்த யுத்தத்தை நெடு நாட்கள் வரை வளர்த்திக் கொண்டு போக வேண்டு மென்பது ஹிட்லருடைய ஆசை. இதற்கு தம் நீர் மூழ்கிக் கப்பல்கள் தான் சிறந்த கருவியா யிருக்கும் என்று அவர் பெரிதும் நம்பினுர். கீழக் கோடியிலும் ஐரோப்பாவிலும் ஒரே சமயத்தில் நேச நாடுகள் அச்சு நாடுகளைத் தாக்குவதற்குத் தடையா யிருப்பதும் இது ஒன்று தான். என்றுலும், இந்த ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் நாளுக்கு நாள் அதிகமாகவே அழிந்து கொண்டு வருகின்றன. இது மகிழ்ச்சிக்குரிய செய்தி தான். சென்ற மே மாதத்தில் புதிதாகச் சேவகத்திற்குக் கொண்டு வரப்பட்ட நீர் மூழ்கிகளைவிட அதிகமாகவே தான் மூழ்கி நாசமாயின வென்று தெரிகிறது. இதுபற்றி ஜூன் மாதம் 2-ம் தேதி பிரிட்டிஷ் கப்பற் படை மந்திரியான மிஸ்டர் ஏ. வி. அலெக்சாந்தர் பொது மக்கள் சபையில் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறுர். இதிலிருந்து ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்கி நாசமானது வெகுவாக அதிகரித்திருக்கின்றது என்று தெரிகிறது. 1942-ம் வருஷம் ஜூன் மாதம் முதல் நவம்பர் மாதம் முடிய (6 மாதங்களில்) மூழ்கி நாசமான நீர் மூழ்கிக் கப்பல்களைவிட 1942-ம்௵ டிசம்பர்மீ 1-ம் தேதி முதல் 1943-ம் வருஷம் மே மாதம் வரை (6 மாதங்கள்) கால் பங்கு அதிகமாகவே மூழ்கி நாசமடைந்திருக்கின்றன சென்ற ஒரு வருஷத்தில் மூழ்கி நாசமான அளவிற்கு, அதற்கு முந்திய $2\frac{3}{4}$ வருஷங்களில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் நாசமாக வில்லை. 1942-ம் வருஷத்தில் நேச நாட்டு வியாபாரக் கப்பல்கள் எந்த விகிதத்திற்கு மூழ்கடிக்கப்பட்டதோ அந்த விகிதத்திற்கு 1943-ம் வருஷத்தில் முதல் 5 மாதங்களில் மூழ்கடிக்கப்பட வில்லை.

வியாபாரக் கப்பல்களின் போக்கு வரவு நிலமை பெரிதும் முன்னேறி யிருப்பதற்குக் காரணம் என்ன? ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் தளங்களையும் தொழிற்சாலைகளையும் பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க விமானப் படையும் மகா கடுமையாகத் தாக்கிக் கொண்டு வருவது தான். இதனுல், அத்லாண்டிக் சமுத்திரத்தில் போய் வரும் வியாபாரக் கப்பல்களுக்குத் துணைக்கப்பல்களின் எண்ணிக்கை அதிகப்பட்டது மட்டுமன்றி, புதிய தளவாடங்களையும் வெகு அதிகமாக ஏற்றுமதி செய்ய உதவுகிறது. சென்ற மாதக் கடைசியில் போர்ட்ஸ்மௌத் என்னும் இடத்தில் மிஸ்டர் ஆந்தனி ஈடன் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது :—

"அத்லாண்டிக் சமுத்திரத்தில் நடைபெறும் யுத்தச் செய்திகள் நமக்கு ஊக்கந் தருவனவா யிருக்கின்றன. நாம் மேலும் அதிகமாக வியாபாரக் கப்பல்களைக் கட்டிக் கொண்டிருக்கிறேம். நம் வியாபாரக் கப்பல்களுக்கு நேரிடும் சேதங்கள் குறைந்து கொண்டு வருகின்றன; ஆனுல் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்குவது அதிகப்பட்டுக் கொண்டிருக்கிறது. என்றுலும், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களின் அட்டகாசம் அதிகமாகத் தான் இருக்கிறது. இதை நாம் அடியோடு ஒழித்துக் விடாது போனுலும், ஓரளவிற்கு நாம் அவற்றின் கொட்டங்களை ஒடுக்கி வைத்திருக்கிறேமென்று சொல்லலாம்.

சென்ற மே மாதம் 19-ம் தேதி பிரிட்டிஷ் முதன் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் வாஷிங்டனில் அமெரிக்கக் காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய போது, சென்ற 6 மாதங்களில் மட்டும் நேச நாடுகள் எல்லாவற்றிற்கும் சேர்ந்து எத்தனைக் கப்பல்கள் நாசமாயினவோ, அவற்றைவிட அதிகமாகவே தான் அமெரிக்காவில் மட்டும் புதிய கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன வென்று குறிப்பிட்டார்.

ஒரு விஷயம் இங்கே கவனிக்கத் தக்கது. 1942-ம் வருஷம் எப்ரல் மே மாதங்களில் 748,440 டன் வியாபாரக் கப்பல்களை அமெரிக்கர்கள் கட்டி முடித்தார்கள்; ஆனுல் 1943-ம் வருஷம் எப்ரல் மே மாதங்களில் 2,413,600 டன்கள் கட்டி முடித்தார்கள்.

**பெர்லின் ரேடியோ டம்பம் : புள்ளி விவரங்களில் ஏற்றத் தாழ்வு.**

அமெரிக்கர்கள் 222 சத விகிதம் அதிக வியாபாரக் கப்பல்கள் கட்டி முடித்துக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் பெர்லின் ரேடியோ கூறுவ தென்ன? 44 சத விகிதம் குறைந்து விட்டதாம்! சென்ற 1942-ம் வருஷம் எப்ரல் மாதம் 26-ம் தேதி பேசிய ஹிட்லர், பிரிட்டனுக்கு விரோதமாக, தான் கையாளப் போகும் முக்கியமான ஆயுதம் நீர் மூழ்கிக் கப்பல்கள் தான் என்று குறிப்பிட்டார். அன்றியும், தன் நீர்மூழ்கிகள் மாதந் தோறும் எந்த அளவிற்கு நாச வேலை செய்து கொண்டு வருகின்றன என்பதிலிருந்து இது விளங்கும் என்று கூறினுர். மாதா மாதம் இவை சாதித்த தென்ன வென்று கவனிப்போம். ஹிட்லர் இப்படிக் கூறியதற்கு முந்திய 4 மாதங்களில் சராசரி ஒரு மாதத்தில் 554,325 டன் கப்பல்களை ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் நாசஞ் செய்திருக்கின்றன என்று பெர்லின் ரேடியோ குறிப்பிட்டது. 1942-ம் வருஷத்தின் மீதி 8 மாதங்களில் மாத மொன்றிற்குச் சராசரி 855,785 டன் கப்பல்கள் நாசமாயின. ஆனுல் 1943-ம் வருஷத்திய முதல் 5 மாதங்களில் மாதந் தோறும் சாராசரி 575,720 டன்னுகக் குறைந்து விட்டது.

சென்ற 2 மாதங்களில் ஜெர்மன் நீர் மூழ்கிகளால் எவ்வளவு சேதம் ஏற்பட்ட தென்றும் 1941-ம் வருஷத்திலும் 1942-ம் வருஷத்திலும் எப்ரல், மே மாதங்களில் எவ்வளவு சேதம் ஏற்பட்ட தென்றும் பெர்லின் ரேடியோ கூறியதைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால் சில ருசிகரமான உண்மைகள் வெளியாகும். சேத விவரங்கள் :—

| | | எப்ரல்மீ | மேமீ |
|---|---|---|---|
| 1941-ம்௵ | .. | 1,000.000 | 861,460 |
| 1942-ம்௵ | .. | 585,000 | 924,000 |
| 1943-ம்௵ | .. | 423,000 | 430,000 |

நிற்க, ஒரு வருஷத்திற்கு முன்பு 102 சத விகிதம் அமெரிக்க உற்பத்திகள் அதிகரித்திருப்பதாக பெர்லின் ரேடியோ கூறியது. ஆனுல் இப்போது, இதுபற்றி பெர்லின் ரேடியோ கூறுவதை விட 183 சத விகிதம் அதிகமாக அமெரிக்கா உற்பத்தி செய்கிறது.

**ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் பிரசாரம் : பெர்லின் போக்கில் மாறுதல்.**

ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் சம்பந்தமாக ஜெர்மானியர்கள் செய்யும் பிரசாரத்தின் போக்கில் ஒரு குறிப்பிட்ட மாறுதல் காணப்படுகிறது. ஜெர்மன் நீர் மூழ்கிகளை வெல்ல யாராலும் முடியாது, அவை மாதந் தோறும் வெற்றி மேல் வெற்றி பெற்று வரும் என்று தான் ஜெர்மன் ரேடியோ பிரசாரப் போக்கு இது வரை இருந்து வந்தது. 1942-ம் வருஷம் நவம்பர் மாதம் 22-ம் தேதி பெர்லின் ரேடியோ கூறியதாவது :—"உலகத்திலுள்ள எல்லாக் கடல்களிலும் எமது நீர் மூழ்கிகள் வெற்றிகரமாக வேலை செய்துகொண்டிருக்கின்றன. ஏறக்குறைய ஒவ்வொரு நிமிஷமும் நேச நாட்டுக் கப்பல்களை நாசஞ் செய்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பெரும் நஷ்டங்களை நெடு நாட்களுக்குத் தாங்க பிரிட்டிஷாராலும் அமெரிக்கர்களாலும் முடியாது." 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி பெர்லின் ரேடியோ கூறியதாவது :—"மாதத்திற்கு மாதம் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் மகா கடுமையானவையாகிக் கொண்டு வருகின்றன.........இந்தப் போராட்டத்தில் முதலில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் சளைக்கப்போவதில்லை என்பது உறுதி." இரண்டு வாரங்களுக்குப் பிறகு பெர்லின் ரேடியோ பீத்திக் கொண்டதாவது :—"ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களோடு போராடுவதற்குத் தகுந்த எந்த திருப்திகரமான முறையையும் நேச நாடுகள் வகுக்க வில்லை. தம் கப்பல்களை அவர்கள் பாதுகாத்துக் கொள்ளவும் கூடவில்லை; புதுக் கப்பல்களும் தகுந்தபடி கட்டக் கூட வில்லை. 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 6-ம் தேதி, பெர்லின் ரேடியோ, எல்லாத் திசைகளிலும் அடியோடு அழிந்துவிடத் தக்க ஆபத்தான நிலைமையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இருக்கின்ற தென்றும், நேச நாட்டுக் கப்பல்கள் நாளுக்கு நாள் அதிகமாகச் சேதமாகி வருவதாகவும் கூறியது.

இந்த வசனங்களை, சமீபத்தில் பெர்லினி லிருந்து ஒலி பரப்பப்பட்ட செய்திகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். மே மாதம் 6-ம் தேதி ஜெர்மன் கப்பற் படை உதவித் தலைவர் லெட்சேர் பெர்லின் ரேடியோ மூலம் கூறியதாவது :—

"**நம் நீர் மூழ்கிகள் நாளுக்கு நாள் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கு மென்று எதிர்பார்ப்பதற் கில்லை.** ஏனென்றுல், ஒரு மாதம் வேலை செய்த பிறகு சில நீர் மூழ்கிக் கப்பல்கள் தம் தளங்களுக்குத் திரும்பி வந்து சேரவேண்டி யிருக்கிறது........நம் நீர் மூழ்கிகள் தம்மைத் தாக்காதபடி எல்லாவித முயற்சிகளையும் வெற்றிகரமாக எதிரிகள் செய்து கொண்டார்கள்."

சென்ற மாதக் கடைசியில், பெர்லின் ரேடியோ ஜெர்மன் மொழியில் ஒலி பரப்பிய செய்தியில் வயோல்கிஷர் பியோபட்சார் கூறியதை மேற்கோளாக எடுத்துக் கூறப்பட்டது—"சில கப்பல்களை மட்டுமே நம் நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்துக் கொண்டிருந்த காலத்திலேயே, எதிரிகள் இடைவிடாதபடி போராட வேண்டி யிருந்தது. நம் நீர் மூழ்கிகள் நாசம் செய்த கப்பல்களின் எண்ணிக்கையில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும், இந்த நீர் மூழ்கிக் கப்பல் போர் தொடர்ந்து நடந்து கொண்டுதானிருக்கும்."

(9-ம் பக்கம் பார்க்க)



# ஆசிரியர்களும் யுத்த முயற்சியும்

சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர் நிலைப் பள்ளி ஆசிரியர் ஏ. சி. பாலசுந்தர நாயக்கரவர்கள் பி.ஏ., எல்.டி., "யுத்த முயற்சி" என்ற தொடரில் "ஆசிரியர்களும் யுத்த முயற்சியும்" என்ற பொருள் பற்றி சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் ஜூன் மாதம் 10-ம் தேதி ஒலி பரப்பிய சொற் பொழிவு வருமாறு :—

இப்போது நடந்து வரும் இந்த உலகப் போரிலே, நமது நாட்டிலுள்ள பற்பல தொழில் வகுப்பினரும், நமது அரசாங்கத்தாருடைய யுத்த முயற்சியில் தங்களால் கூடிய வரையில் உதவி செய்து வருகிருர்கள். உதாரணமாக, பெரிய யந்திரசாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், இந்தியத் துருப்புகள் போர்க்களத்தில் தங்கி வசிப்பதற்கு வேண்டிய கூடாரங்களின் கம்பிகளையும் கொம்புகளையும் பல்லாயிரக் கணக்கில் செய்து கொடுக்கிருர்கள். ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், இந்தியத் துருப்புகளுக்கு வேண்டிய காகி துணிகளையும் கம்பளிகளையும் மேஜோடுகளையும் செய்து உதவுகிருர்கள். டாக்டர்கள், நர்சுகள் முதலியவர்கள் யுத்த களத்தில் காயம்பட்டுக் கிடக்கும் இந்திய வீரர்களின் சிகிச்சைக்காக வேண்டிய மருந்துகள், கட்டுகட்டும் துணிகள் முதலியவைகளைத் தயார் செய்து கொடுக்கிருர்கள். படகோட்டிகள் தங்கள் படகுகளை இரண்டு மூன்றாக இணைத்து, அவைகளின் மீது தளவாடங்களைக் கொண்டு போகும் மிலிடெரி லாரிகளை ஏற்றிக்கொண்டு, நமது நாட்டிலுள்ள பெரிய ஆறுகளின் கரையிலிருந்து மற்றொரு கரைக்குக் கொண்டு போய் விடுகிருர்கள்.

## இருந்த இடத்திலேயே யுத்த முயற்சி.

இந்த மாதிரியாக நமது நாட்டில் பற்பல தொழில்களைச் செய்யும் வகுப்பினர் நமது அரசாங்கத்தினரின் யுத்த முயற்சியில் தங்களாலான வரையில் உதவி செய்து கொண்டு வரும்போது, ஒரு குறிப்பிட்ட தொழில் வகுப்பினர் மாத்திரம், இந்த யுத்த முயற்சியில் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளாத மாதிரி காணப்படுகிருர்கள். உண்மையில், அவர்களும் இந்த யுத்த முயற்சியில் மிகுந்த ஊக்கத்தைக் காட்டிக்கொண்டுதான் வருகிருர்கள்; அவர்கள்தான் ஆசிரியர்கள்! கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள்! அவர்கள்தான் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு யுத்த முயற்சியில் பேருதவி செய்து வருபவர்கள். நமது அரசாங்கத்தார் வெற்றி பெறுவதற்கு மிக அவசியமாக வேண்டிய ஆயிரக் கணக்கான வீரர்களைத் தயார் செய்து கொடுக்கக் கூடிய வல்லமை யுடையவர்கள். இவ்வாசிரியர்கள் நல்ல பருவம் வாய்ந்த வாலிபர்களுக்குப் பாடம் சொல்கிறவர்கள். இவர்களிடத்தில் கல்வி கற்ற வாலிபர்கள் இந்தியக் கடற் படையிலும் இந்திய விமானப் படையிலும், தரைப் படையிலும் ஆயிரக் கணக்கில் சேர்ந்திருக்கிருர்கள். அவ்வாலிபர்கள் இப்போது பர்மாவில் ஜப்பானியர் வசத்திலுள்ள கோட்டைக் கொத்தளங்களை வெடி குண்டுகள் வீசித் தவிடுபொடி யாக்கிக் கொண்டு வருகிருர்கள். இப்போர்ப் படைகளில் சேருவதற்கு படித்துத் தேறிய வாலிபர்கள் இனியும் பல்லாயிரக் கணக்கில் முன்வரும்படி ஆசிரியர்கள் செய்ய வேண்டும்.

## படித்த வாலிபர்களின் கடமைகள்.

படித்துத் தேறிய வாலிபர்கள்தான் போர்முறைகளை நன்குய்க் கற்றுக் கொண்டு, சேனைத் தலைவர்களாக இருந்து, நமது நாட்டுப் படையினரை போர்முறைகளில் பழக்கி வருகிருர்கள். இனியும் பல்லாயிரக் கணக்கில் படித்துத் தேறிய வாலிபர்கள் சேனைத் தலைவர்களாக ஆகவேண்டும். எனவே, ஆசிரியர்கள் இன்னும் மேன்மேலும் செய்யவேண்டிய தென்ன? தங்களிடம் படிக்கும் பிள்ளைகளுக்கு இந்து தேச சரித்திரம், இங்கிலாந்து தேச சரித்திரம், கிரீஸ், ரோம் தேச சரித்திரங்கள் ஆகியவைகளைப் போதிக்கிருர்கள் அல்லவா? அவைகளில் வீரர்களுடைய சரித்திரங்கள் ஏராளமாகக் காணப்படும். அவ் வீரர்களின் கதைகளை ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லும்போது, "நமது நாட்டின் சுதந்தரத்தையும், உலக மக்களின் சுதந்தரத்தையும் நாம் நம்முடைய வீரத்தினுலும் வல்லமையாலும் காப்பாற்ற வேண்டும்" என்ற அடிப்படையான வீரவுணர்ச்சியை நன்கு அவர்களுக்கு ஊட்டவேண்டும். "நமது நாட்டில் முற்காலத்தில் பெரிய பெரிய வீரர்கள் இருந்தார்கள் என்று இந்து தேச சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அலெக்சாந்டரிடம் போர் புரிந்த புருஷோத்தமர் என்ன? அநேகமாக இந்திய நாடு முழுவதையும் ஆண்ட அசோகச் சக்கரவர்த்தி என்ன? சிவாஜி மகராஜ் என்ன? நமது தென்னிந்தியாவை மட்டும் எடுத்துக் கொண்டாலும், கரிகால் சோழன் இமயமலை வரையிலும் சென்று தனது வெற்றிக்கொடியை நாட்டிவிட்டு வரவில்லையா? சேரன் செங்குட்டுவன் கப்பற் படையுடன் சென்று கங்கை நதிக் கரையில் வெற்றி கண்டு திரும்ப வில்லையா? பிற்காலத்தில் தோன்றிய ராஜராஜ சோழன் கிழக்கே ஜாவா தீவு வரையில் ஆதிக்கம் செலுத்தவில்லையா? மகேந்திர வர்மனின் வீரச் செயல்கள் என்ன? ராஜா தேசிங்கு, மாவுத்துக்காரன் ஆகியவர்கள் சாமானிய வீரர்களா? ஐதர் ஆலி என்ன? தென்னிந்திய சிங்கம் அல்லவா?" என்று வீரர்களின் செயல்களைப் பற்றி ஆசிரியர்கள் வாலிபர்களுக்கு விளக்கமாகச் சொல்லவேண்டும். "இப்பேர்பட்ட வீரர்கள் வாழ்ந்திருந்த நாட்டில் இருக்கும் நீங்களும் வீரர்களாக இருக்க வேண்டாமா? உங்கள் தாய்நாட்டைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய நவீனப் போர் முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டாமா?

## பழைய போர் முறையும் புதிய போர் முறையும்.

பழங் காலத்தில் போர் செய்தவர்கள் எல்லாம் வில் அம்பு, வாள், ஈட்டி, கோடரி முதலிய ஆயுதங்களைப் போரில் உபயோகப்படுத்தி வந்தார்கள். ஆனுல் இந்தக் காலத்திலோ, துப்பாக்கிகள், பீரங்கிகள், டாங்கிகள், ஆகாய விமானங்கள், வெடி குண்டுகள், போர்க்கப்பல்கள், நீர் மூழ்கிக் கப்பல்கள் முதலிய பலவித பயங்கரமான ஆயுதங்களை உபயோகப்படுத்தி வருகிருர்கள். இவைகளை எல்லாம் எப்படிக் கையாளுவது என்று நீங்கள் தெரிந்துகொண்டால் தானே, இம்மாதிரியான ஆயுதங்களைக் கொண்டு, நமது நாட்டையும், உலக மக்களின் சுதந்தரத்தையும், ஜனநாயகத்தையும் நீங்கள் காப்பாற்ற முடியும்? இம்மாதிரியான ஆயுதங்களைச் செய்யும் முறைகளையும் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் இவ்வாயுதங்களை அன்னிய நாட்டாரிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இருக்காது; நமது நாட்டில் அகப்படும் பொருள்களைக் கொண்டு, இவ்வாயுதங்களை நாமே செய்து கொள்ளலாம்," என்று பிள்ளைகளுக்குத் தெளிவாகச் சொல்லவேண்டும். "நமது அரசாங்கத்தினர், இம்மாதிரியான ஆயுதங்களைச் செய்யும் யந்திரசாலைகளில் வந்து வேலை கற்றுக்கொள்ளுங்கள்! போர்க்களத்திற்குச் சென்று போர் செய்யும் முறைகளைக் கற்றுக் கொள்ளுங்கள்! என்று உங்களைக் கூவி அழைக்கிருர்கள். ராயல் இந்தியன கடற்படை, ராயல் இந்தியன் விமானப்படை இந்திய தரைப் படை, ஆகியவைகளில் சேரும்படி வேண்டுகிருர்கள். நன்குய்க் கல்வி கற்ற வாலிபர்கள் இப்போர்ப் படைகளில் சேர்ந்து வேலை கற்றுக் கொண்டவுடன் அவர்களுக்கு மாதம் ரூ. 200 முதல் ரூ. 300 வரை சம்பளம் கொடுக்கிருர்கள். மற்றும் அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, வைத்திய சிகிச்சை, மற்ற எல்லா வசதிகளும் அளித்து போர் முறைகளைக் கற்றுக் கொடுக்கிருர்கள்," என்று ஆசிரியர்கள் எடுத்துக் காட்டவேண்டும்.

## இந்திய வீரர்களின் சிறப்பு.

"இம்மாதிரியாகப் போர்முறைகளைக் கற்றுக்கொண்ட இந்திய வீரர்கள், வட ஆப்பிரிக்காவில் கடந்த மூன்று வருஷங்களாக நடந்த போரில், ஐரோப்பிய தளர்கர்த்தர்களும் வியக்கும்படியான வீரச் செயல்களை நடத்திக் காட்டியிருக்கிருர்கள். அந்தப் போரிலே முக்கியமான சண்டைகளைப் போட்டு மகத்தான வெற்றிகளைப் பெற்றவர்கள் நாலாவது இந்தியப் படையினர். இவர்கள் டியுனிசியாவில் நுழைந்தார்கள் என்ற செய்தியைக் கேட்டவுடனே, அங்கிருந்த ஜெர்மன் படையின் பேர்போன சேனுதிபதியான ஜெனரல் ரோமல் என்பவர் அந்த நாட்டை விட்டே ஓடிப்போய் விட்டார். பின்னுல் இதே இந்தியப் துருப்புகள் அந்நாட்டின் தலைநகரான டியூனிஸ் நகரத்தையும் கைப்பற்றி, அங்கே ஜெர்மானியரின் சேனுதிபதியாக விருந்த ஜெனரல் ஆர்னிம் அவர்களையும் பிடித்துக் கைது செய்தார்கள். இந்தியத் துருப்புக்கள் மிக்க பரபரப்புடனும், திறமையுடனும், வீரத் துடனும் சண்டை செய்து வெற்றிமேல் வெற்றி பெற்றதை நேரில் கண்ட அமெரிக்க தளகர்த்தர்களும், ஆங்கில தளகர்த்தர்களும் இந்தியத் துருப்புக்களை மனமாரப் புகழ்ந்தார்கள். இங்கிலாந்து முதல் மந்திரியான சர்ச்சில் என்பவர், "இந்திய வீரர்கள் தங்கள் தாய் நாட்டின் புராதனப் பெருமைக்குத் தகுந்தபடி போர் செய்து காட்டிவிட்டார்கள்" என்று புகழ்ந்தனர். உலக சுதந்தரத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றுவதற்காக இம்மாதிரியான வீரச் செயல்களைச் செய்து காட்டிய இந்தியப் படையில் நீங்களும் சேர்ந்து பழகினுல், நீங்களும் நாளடைவில் அம்மாதிரியான வீரர்கள் ஆவீர்கள்!" என்றெல்லாம் ஆசிரியர்கள் தங்கள் வகுப்புகளில் வாசிக்கும் வாலிபர்களுக்கு உற்சாகத்தோடும் தெளிவாகவும் அழுத்தமாகவும் எடுத்துச் சொல்லவேண்டும்.

## வீர உணர்ச்சியை ஊட்டும் பிரசாரம்.

மற்றும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும், அரசாங்கத்தார், இந்தியன் இன்பர்மேஷன், பிக்டோரியல் எடுகேஷன், வார் பிக்சர்ஸ், யுத்த சஞ்சிகைகள் முதலியவைகளை இலவசமாக அனுப்புகிருர்கள். அவைகளில் இந்திய வீரர்கள், அவர்களின் யுத்தப் பயிற்சி, அவர்களின் வீரச் செயல்கள், யுத்தத் தளவாடங்கள் செய்யப்படும் இந்திய பாக்டரிகள் ஆகியவைகளின் படங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளை, ஆசிரியர்கள் தங்கள் வகுப்புக்களில் படிக்கும் பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டி, அப்படங்களைப் பற்றிய விவரங்களைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். இம்மாதிரியான முறைகளைக் கையாண்டு ஆசிரியர்கள் வாலிபர்களின் வீரவுணர்ச்சியை மேன்மேலும் கிளப்பி, அவர்கள் பல்லாயிரக் கணக்கில் இந்தியப் போர்ப்படைகளில் சேரும்படிச் செய்தால்தான், நமது நாட்டின் சுதந்தரத்தையும் உலக மக்களின் சுதந்தரத்தையும் காப்பாற்ற முடியும். இந்த நல்ல தருணத்தில் இந்த முக்கியமான காரியத்தைப் பெருத்த அளவில் சாதித்தால்தான் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைச் செய்தவர்கள் ஆவார்கள்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

களைந்து விட்டனர். சென்ற செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெற்ற தொழிற்கட்சி மகாநாட்டில், ஒரு தீர்மானம் நிறைவேற்றினுர்கள். நிலைமை, சாதகமானவுடனேயே பிரிட்டிஷ் தொழிற் கட்சி கோஷ்டி யொன்று மாஸ்கோ போக வேண்டு மென்பதுதான் அந்தத் தீர்மானம். இதிலிருந்து உலகத் தொழிலாளர்களுக்குள் இருந்த வேற்றுமைகள் நீங்கி ஒற்றுமை வளர்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

மேலும் சமீபத்தில் அமெரிக்கத் தொழிலாளிகள் நடத்திய வேலை நிறுத்தம் முடிவடைந்தது. தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குப் போகிருர்கள். இவை எல்லாம் நேசநாடுகள் விரைவில் வெற்றி பெறுமென்றும், இந்த வெற்றி நிரந்தரமான வெற்றியா யிருக்கு மென்றும் நம்புவதற்கு மிகவும் இடமுண்டாக்கி யிருக்கிறது.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

இந்த மாதம் முதல் தேதியன்று பெர்லின் ரேடியோ ஆங்கிலத்தில் "உண்மையும் பொய்யும்" என்ற தலைப்பில் பேசிய போது குறிப்பிட்டதாவது :—

"எதிரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்படுவது குறைந்து விட்டது என்பதை மறுக்க முடியாது. பாதுகாப்பு முயற்சிகளை எல்லா வகைகளிலும் பெருக்க வேண்டி யிருக்கிறது. இதன் பயனுக, நீர் மூழ்கிக் கப்பல்களின் வெற்றிகள் வெகுவாகக் குறைந்து விட்டன."

ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களோடு நடத்தப்படும் போராட்டம் ஊக்கந் தருவதா யிருக்கிற தென்று நேச நாட்டுத் தலைவர்கள் கூறி வருவது முற்றும் உண்மை என்று பெர்லின் ரேடியோவே ஒப்புக் கொள்ளுகிறது. ஆகவே, நேச நாடுகள் தம் வியாபாரக் கப்பல்களைப் பெருக்குவதைத் தடுக்க ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களால் முடியவில்லை என்பது தெளிவாகிறது.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

மகா அக்கிரமம்' என்று ஓலமிடுகிறது. இம்மாதிரி போர்புரிவது சர்வ தேசச் சட்டத்துக்கு விரோதமாம். ஜெர்மனியும் இத்தாலியாவும் ஜப்பானும் இந்தக் கண்கெட்ட குண்டுவீச்சுச் சண்டையை ஆரம்பிக்கவில்லையாம். துவக்கினது பிரிட்டன்தானும். யுத்தம் துவக்கின இரண்டாம் நாளே, பிரிட்டிஷ் விமானங்கள்தான் டென்மார்க் தேசத்தில் எஸ்ப்யெர்க் என்ற ஊரைத்தாக்கி இந்த அக்ரமச்செயலை ஆரம்பித்ததாம். ஜெர்மனி மும்முறை முறையிட்டதாம். சொல்லிச் சொல்லியும் பிரிட்டன் கேட்கவில்லையாம். ஹிட்லரின் பொறுமையே பொறுமையாம்! பத்து மாதங்கள் பார்த்துக் கொண்டிருந்தும், பிரிட்டிஷ் அக்கிரம குண்டு வீச்சு நிற்கவில்லையாம்! எட்டுமுறை பெர்லினில் குண்டு விழுந்த பிறகுதான் ஜெர்மன் விமானங்கள் பிரிட்டிஷ் பட்டணங்களின்மேல் படை எடுத்தனவாம். இது அச்சுக்குரல் சொல்லும் கதை. உண்மை என்ன?

## முதலில் குண்டு வீசியது யார்?

பட்டணங்களின்மேல், முதல் குண்டு வீசியது யார்? ஹிட்லர். யுத்தம் ஆரம்பித்தது 1939-ம் வருஷம் ஸெப்டெம்பர் மீ 1௳ அதிகாலையில். அன்றே காலை பத்து மணிக்குள் ஜெர்மன் விமானங்கள் நூற்றுக்கணக்காய் போய் போலண்டின் தலை நகராகிய வார்ஸாவைக் சுட்டெரித்தன. இது உலகம் அறிந்த விஷயம். போகிறது. இது ஸெப்டெம்பர் முதல் தேதி. மூன்று நாட்களுக்குப் பிறகு, அதாவது நாலாம் தேதிதான், பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் இலக்குகளைத் தாக்கின. அவற்றில் முக்கிய இடம் ஜில்டு தீவு. அங்கே ஒரு பெரிய ஜெர்மன் விமான நிலையம் இருந்தது. சென்ற உடனே, பிரிட்டிஷ் விமானிகளுக்கும் ஜெர்மன் விமானிகளுக்கும் சண்டைமூண்டது. பிரிட்டிஷ் விமானிகள் துரத்தவே, ஜெர்மன் விமானிகள் பதினைந்து மைல் தூரத்தில் எதிர்க்கரையில் இருந்த டென்மார்க்கில் பிரவேசித்தார்கள். பூமிமட்டம்வரை தாழ்ந்து பறந்து தப்பிக்கப் பார்த்தார்கள். அவர்களை மெஷின் பீரங்கிகளால், சுட்டு வீழ்த்தினார்கள், துரத்திவந்த பிரிட்டிஷ் விமானிகள். அந்த மெஷின் பீரங்கிகளின் தோடாக்கள் சில எஸ்ப்யெர்க் என்ற ஊரில் விழுந்தன. எஸ்ப்யெர்க் என்ற ஊரின்மேல் பிரிட்டிஷ் விமானிகள் ஒரு குண்டும் வீசவில்லை. குண்டு வீசக் காரணமும் இல்லை. டென்மார்க்குக்கும் பிரிட்டனுக்கும் ஒரு விரோதமும் இல்லை. அப்படியே குண்டு விழுந்திருந்தால், டென்மார்க் சர்க்கார் முறையிட்டிருக்கவேண்டும். அவர்கள் அப்படியொன்றும் செய்யவில்லை. ஆகவே, அச்சுக் குரல் சொல்லிவரும் புகாருக்கு யாதொரு ஆதாரமும் கிடையாது. ஊர்களின்மேல் கண்மூடித்தனமாய் வெடிகுண்டு மழை கொட்டுவது ஜெர்மனியின் கொள்கை. அந்தக் கொள்கையை போலண்டில் வார்சாவில் காட்டினது. பிறகு ஹாலண்டில் ராட்டர்டாமில் காட்டினது. பிறகு பெல்ஜியத்தில் ஆண்ட்வெர்ப்பில் காட்டினது. ப்ரான்ஸில் பாரீஸும் அப்படியே அழிந்துவிடும் என்று பயந்து தான் ப்ரெஞ்சு சர்க்கார், பாரிஸ் நகரத்தைக் காலி செய்தது. பிறகு சரணகதி அடைந்தது. ப்ரான்ஸைப் பிடித்த பிறகு ப்ரெஞ்சுக் கரையிலிருந்து பிரிட்டிஷ் பட்டணங்களின்மேல் ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப் பொழிந்தன. அதுவரை பிரிட்டிஷ் பட்டணங்கள் தப்பினதற்குக் காரணம் ஹிட்லரின் பொறுமையல்ல. பிரிட்டனைத் தாக்க அதுவரை ஹிட்லருக்கு வசதியில்லை. ஹிட்லர் ப்ரெஞ்சு கடற்கரை அடைந்ததும் அந்த வசதிகள் கிடைத்தன. ஹிட்லரின் விமானங்கள் படை எடுத்தன. பிரிட்டிஷ் வீடுகளை ஆயிரக் கணக்காய் உடைத்தன. பிரிட்டிஷ் எதிர்ப்பைச் சுக்குத்தூள் ஆக்கிவிடுவது என்று நினைத்தார் ஹிட்லர். ஆனால், சுக்குத்தூள் ஆனது ஹிட்லரின் விமானங்கள் தான். ஹிட்லர் ப்ரெஞ்சு கடற்கரை சேர்ந்தது மூன்று வருஷங்களுக்குமுன். ஜூன் மாதம். ஹிட்லர் இரண்டு மாதங்களாக அங்கே விமான நிலயங்களைக் கட்டினார். ஆகஸ்டு மாதம் பிரிட்டனின் மேல் ஹிட்லரின் விமானங்கள் நூற்றுக்கணக்காய் வந்து வெடிகுண்டுகளையும் தீக்குண்டுகளையும் ஆயிரக்கணக்காய் கக்கின. வெகு விரைவில் எல்லாம் முடிந்துவிடும் என்று நினைத்தார். ஆனால், ஹிட்லருக்கு ஆகஸ்டு பன்னிரண்டாம் தேதி விமான நஷ்டம் அறுபது; பதின்மூன்றும் தேதி நஷ்டம் எழுபத்திரண்டு விமானங்கள். பதினைந்தாம் தேதி நஷ்டம் நூற்றெண்பது விமானங்கள். பதினாறும் தேதி எழுபத்தைந்து விமானங்கள், பதினெட்டாம் தேதி நூற்றுநாற்பத்தி நான்கு விமானங்கள். இருபத்துநாலாம் தேதி ஐம்பது, இருபத்தைந்தாம் தேதி ஐம்பத்தைந்து. இருப்பத்தாறும் தேதி நாற்பத்தாறு.

## ஆகஸ்டில் ஹிட்லருக்கு ஆயிரத்திற்கு மேல் விமான நஷ்டம்

அந்த ஆகஸ்டு ஒரு மாதத்தில் ஹிட்லருக்கு பிரிட்டிஷ் எதிர்ப்பால் நஷ்டம், குறைந்தபக்ஷம் ஆயிரம் விமானங்கள். சிறு போர்விமானங்கள் அல்ல. பெரும் வெடிவிமானங்கள் ஆயிரம் நஷ்டம். ஹிட்லரின் விமானப்படை திணறிவிட்டது. இனியும் இப்படி இடைவிடாது படைஎடுத்தால் தன்னுடைய விமானப்படை வேரோடு அழிந்துவிடும் என்று கண்டார். அந்தப் படையெடுப்பை ஒருவாறு தணித்துக்கொண்டார். இவ்விதம் பிரிட்டன்மேல் பெய்த ஜெர்மன் குண்டுமழை நின்றதற்குக் காரணம் ஹிட்லரின் பெருமையும் அல்ல, ஹிட்லரின் பொறுமையும் அல்ல; ஹிட்லரின் வறுமை தான். அப்பொழுது ஹிட்லரின் காலம். சளைத்தார். கைவிட்டார். இப்பொழுது நமதுகாலம். ஆனால் நாம் சளைக்கப் போவதில்லை. கைவிடப்போவதுமில்லை. இதுவரை நாலு வருஷங்களாக ஜெர்மனியின் தொழிற்சாலைகளின்மேல் நூறுயிரம் டன் நிறையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கிறோம். இன்னும் நூறுயிரம் டன் இறக்குவதற்கு நேசவிமானங்கள் தயாராகி வருகின்றன. கூடிய சீக்கிரத்தில் பட்டுவாடா செய்யப்படும். ஜெர்மனிக்கு மாத்திரம் அல்ல. இத்தாலியாவின்மேலும் பாரபக்ஷமின்றி நமது குண்டுமழை கொட்டப் போகிறது. மூன்று வருஷங்களுக்கு முன், அந்த ஆகஸ்டு மாதம், ஒரு நாள் ரோம் நகரில் பியாச்சா வெனெச்சியாவில், மாரைத் தட்டிக் கொண்டு முசோலினி முன்வந்து சொன்னார்: 'ஹிட்லரின் தயவால், உத்திரவுடன் இத்தாலிய விமானங்களும் இங்கிலாந்தைப் புடைக்கும் பாக்யம் பெற்றுவிட்டன' என்று பெருமை பேசினார். இத்தாலியாவுக்கு அதுவரை ஒருதீங்கும் இழைத்திராத இங்கிலாந்தின்மேல் வெடிகுண்டு விமானங்களை அனுப்பிய முசொலினியை நேசவிமானிகள் மறக்கப்போவதில்லை, மறக்கவும் முடியாது.

## ஜப்பானுக்கும் அதே கதி தான்

ஜப்பானுக்கும் அதே கதி. அதே கதியென்று சொன்னேன். இல்லை. ஜப்பானுக்கு அதோகதி. ஜெர்மனியும் இத்தாலியாவும் செய்த வஞ்சகத்திலும் பதின்மடங்கு அதிகமாக ஜப்பான் செய்திருக்கிறது. ஜப்பானுக்கும் நேசநாடுகள் கடன்பட்டிருக்கின்றன. ஹாங்காங்கிலும், மணிலாவிலும், சிங்கப்பூரிலும், ரங்கூனிலும், கொளும்பிலும், கல்கத்தாவிலும் கடன் பட்டிருக்கின்றன. வட்டியும் முதலும் திருப்பிக் கொடுக்கப் போகின்றன. வட்டிக்கு மேல்வட்டி போட்டு நேசநாடுகள் ஜப்பானுக்குத் திருப்பிக் கொடுக்கப் போகின்றன. இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷ் சேனைத் தலைவரும் விமானத் தலைவரும் கடற்படைத் தலைவரும் மிஸ்டர் சர்ச்சிலுடன் வாஷிங்டனுக்குச் சென்றது ஜப்பானுக்கு வெடிவைக்க. வேறு காரணமில்லை. இது நடக்கப் போகிற காரியம்.

## சிமின்ட் கோட்டைகளும் மனக் கோட்டைகளும்

நடந்த காரியத்தைப் பாருங்கள். அதுதான் சென்ற இரண்டு வாரங்களில் நடந்த முக்யமான நிகழ்ச்சிகளில் மூன்றுவது. வட பசிபிக் பிரதேசத்தில் சென்ற வருஷம் ஜூன் மாதம் பதினாலாம்தேதி ஜப்பானிய படைகள் அல்யூஷன் தீவுகளில் வந்திறங்கினார்கள். கிஸ்கா, அட்டு என்ற இரு தீவுகளிலும் கோட்டைகளைக்கட்ட ஆரம்பித்தார்கள். சிமெண்ட் கோட்டைகளும், மனக்கோட்டைகளும். நோக்கம் அமெரிக்காவைத் தாக்க. ஜப்பான் அமெரிக்காவைத் தாக்க வேண்டுமானால் அல்யூஷன் தீவுகள்தான் வழி. அமெரிக்க விமானங்களும் கடற்படையும் வந்திறங்கின. எதிரியைத் தாக்கத் துவக்கின. ஆனால் அல்யூஷன் தீவுகள் பனிக்கடலில் இருக்கின்றன. ஆகையால் பனிகாலம் முழுவதும் பெரும் சண்டை ஒன்றும் நடக்க முடியாமல் போய்விட்டது. பத்து மாதங்களாக கோட்டைகட்டி வந்த ஜப்பானியருக்கு பலம் அதிகம் என்று சொல்லவேண்டியதில்லை. இனியாவது அவர்களை அவ்விடமிருந்து கிளப்பவேண்டும். அட்டு தீவுதான் ஜப்பானுக்கு சமீபம். அதைத்தான் முதலில் ஜப்பானியர் பிடித்தது. அதில் இறங்கினவர்களை ஒழித்துவிட்டால், கிஸ்கா தீவுக்கு வந்திருக்கும் ஜப்பானியப் படையை வளைத்துக் கொள்வது எளிது. இந்த மேமாதம் பிறந்தது. நாள் பனிரெண்டாம் தேதி. பனி தொலைந்தது. வெயில் அடித்தது. அட்டுத் தீவிலிருந்த ஜப்பானிய துருப்புக்கள், இரண்டாயிரம் பேர் டிக்கெட்டு இல்லாமல் இலவசமாக கண்காக்ஷி கண்டார்கள். வாயைத் திறந்தார்கள். அமெரிக்காவைத் தாக்க வேண்டுமென்று பத்துமாதமாக மனக்கோட்டை கட்டிவந்த ஜப்பானிய துருப்புகள் எங்கு ஓடி ஒளிவதென்று தெரியாமல் மலைத்தார்கள். அன்று அதிகாலையில் தீவின் மூன்று பக்கங்களிலும் அமெரிக்கத் துருப்புக்கள் ஏராளமாக இறங்கிவிட்டார்கள். அமெரிக்க கடற்படை தீவை வளைத்துக்கொண்டு ஜப்பானிய சிமெண்ட் கோட்டைகளை குண்டுகளால் உடைத்துத் தகர்த்தன. வெயிற்காலம் இந்தமாதிரி விடியும் என்று ஜப்பானியர் கனவிலும் நினைக்கவில்லை. பூனைகளுக்கு நடுவில் அகப்பட்ட எலிகள்போல் விழித்தனர். இங்குமங்கும் ஓடினர். எங்குபோவது? எதிர்க்கப் பார்த்தார்கள். ஜப்பானுடைய உதவி இன்று வரும் நாளை வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஜப்பானோ ஆயிரத்தைந்நூறு மைல் தூரம்—என்ன செய்வது. கடும்போர் நடந்தது. சிறிது சிறிதாகப் பின் வாங்கினார்கள். கடைசியாக ஒரு சிறு மலையில் பதுங்கினார்கள். இருவகைக் கோட்டைகளும் இடிந்து விழுந்தன. அட்டுத் தீவு காலி. அங்கிருந்த ஜப்பானியரில் அமெரிக்க குண்டுக்கு இரையானவர் பாதி, தற்கொலை செய்துகொண்டவர்கள் பாதி—ஜெர்மன் கப்பல்கள் தான் தற்கொலை செய்துகொள்ளுகின்றன. ஆனால் ஜெர்மனியரிலும் கேடுகெட்ட ஜப்பானியரோ பொறுக்கமுடியாமல், மரிக்க நினைத்துக் குறுக்குவழி தேடி கத்தியால் தங்களுடைய தொப்பையைக் கீறித் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள். இதுதான் வீரச்செயல் என்று ஜப்பான் ரேடியோ கத்துகிறது. படாவியாவும் ஒத்து ஊதுகிறது. போர் முனையில் புறங் காட்டாது நின்று, எதிரியின் குண்டை மார்பில் வாங்கி, மடிவது வீரச்செயல். இதை உலகம் முழுவதும் ஒப்புக்கொள்கிறது. உலகம் முழுவதும், ஜப்பானைத் தவிர—ஜப்பானில் மாத்திரம் வீரம் என்பது வேறு. தப்பிஓட வழியில்லாமல் போர்முனையிலாவது, ஊர் மூலையிலாவது ஜப்பானியன் எவனாவது அகப்பட்டுக்கொண்டால், தன் கையாலேயே தன்னை மாய்த்துக் கொள்வதுதான் வீரமாம்!

## தற் கொலை, வீரனின் செயலல்ல

தற்கொலை வீரனின் செயலல்ல. கோழையின் செயல். தற்கொலை செய்துகொள்வதற்கு தைரியமே வேண்டாம். வந்த துன்பங்களைத், தளராநெஞ்சத்துடன் சகித்துக் கொண்டிருப்பதே வீரனுக்கு அழகு. நளனும் ஹரிச்சந்திரனும் தற்கொலை செய்துகொள்ளவில்லை. துரியோதனனும் இராவணனும் கூட தற்கொலை செய்துகொள்ளவில்லை. இவர்களைக் காட்டிலுமா ஜப்பானியன், வீரன்? தற்கொலைக்கு இம்மையிலும் வெற்றியில்லை. மறுமையிலும் வெற்றியில்லை. செத்தாலும் சரி, பிழைத்தாலும் சரி. ஜப்பானியர் இந்த யுத்தத்தில் தோற்பது என்னமோ நிச்சயம். அட்டுத் தீவில் நடந்தபடி தான் ஜப்பானிலும் நடக்கப் போகிறது.


**மலிவான ஜவுளி**

**கட்டுப்பாட்டுக்குட்பட்ட விலைகளுக்கு**

சென்னை கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு விற்பனை எப்போரியம்களில் கிடைக்கும்.

ஒவ்வொரு துணியின் மீதும் தெளிவாக முத்திரை யிடப்பட்டது.

அதிகாரம் பெறுத வியாபாரிகளிடம்

**அதிக விலைக்கு வாங்காதீர்கள்.**

கைத்தறி மலிவான துணிகளை, அதற்கான விலைக்கு மேல் விற்பது இந்திய பாதுகாப்பு சட்டப்படி குற்றமாகும்.

சென்னை கைத்தறி நெசவாளர்கள் மாகாண கூட்டுறவு ஸொஸைடி லிமிடேட்
1/59, மவுண்ட் ரோட், — மதராஸ்


PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் வருஷம் ஜூன்மீ 25௳, வெள்ளிக்கிழமை [இதழ் 25

## ரஷ்யர்களின் மகத்தான தியாகங்கள்



தலைவர் ரூஸ்வெல்ட்.

நேர்மையற்ற முறையில் நடந்துக் கொள்ளுவது நாஜிகளின் நெடு நாள் வழக்கம். அது போலவே தான் இரண்டு வருஷங்களுக்கு முன்பும் செய்தார்கள். சோவியத் யூனியனை நாஜித் தலைவர்கள் மிருகத் தனமாகத் தாக்கினார்கள். சோவியத் அரசாங்கமும் அதன் மக்களும் அடைந்திருந்த முன்னேற்றத்தைக் குறித்துக் குறைவாக மதித்தார்கள். தம் நாட்டை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சோவியத் படைகள் எந்த அளவிற்கு அரண் செய்து கொண்டிருந்தன வென்பது பற்றி அவர்கள் உணர்ந்து கொள்ள வில்லை. சோவியத் மக்களின் மன உறுதியையும் வீரத்தையும் அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை.

சென்ற இரண்டு வருஷங்களாக சோவியத் யூனியனைச் சேர்ந்த படைகள் சாதித்துள்ளவை சரித்திர சம்பந்தமானவை. சுயேச்சையை நாடும் உலக மக்கள் இதை மிகுந்த பெருமித வியப்போடு கவனித்துக் கொண்டு வருகின்றனர். ரஷ்ய மக்கள் மகா வீரத்தோடு செய்து கொண்டு வரும் தியாகங்களைக் குறித்து, பிறர் கேட்டால், எளிதில் நம்பமுடியாதபடி அவ்வளவு மகத்தானவை.

எல்லா நேச நாட்டுப் படைகளும் பெருகிக்கொண்டு வருகின்றன. பலம் ஓங்குகிறது. நமது பொது எதிரியை இவை கடுமையாகத் தாக்கும். நாம் கடைசியில் வெற்றி பெற வேண்டுமானல், ஒற்றுமையும் தியாக உணர்ச்சியும் மிகவும் அவசியம் என்பதைத் தான் இது காட்டுகிறது. வெற்றி கிடைத்த பிறகு, உலகத்தில் சமாதானம் நிலவும்படி செய்ய, இதே உணர்ச்சி நமக்குத் துணை செய்யும் என்று நான் நம்புகிறேன்.

தலைவர் ரூஸ்வெல்ட் மார்ஷல் ஸ்டாலினுக்கு அனுப்பிய செய்தி.

# நேசநாடுகளின் ஒற்றுமை பலம்

" வீரசுதந்திரம் " என்ற மெட்டு

1. முப்பத்துமூன்றுகும் நாடுகள்சேர்ந்துமே
முடிவுகூறப் புகுந்தார்
தப்புச்செய்ஜெர்மனி ஜப்பான் வீழும்வரை
தார்மீகப் போர்புரிவார்

2. முழுவதும்ராணுவ மயமுறஜெர்மனி
முனைந்துமே நிற்பதுவாம்
அழுதிடும்நாட்டினர் ஆக்கத்தால்போர்செய்ய
லாயினர் அச்சுநாட்டார்

3. விடுதலைகூறியே பிரிட்டிஷ் அமேரிக்கர்
வீர இந்தியர் ப்ரான்ஸார்
திடஆஸ்திரேலியர் கனடியர் முதலியோர்
தீர்க்கமாய்க் குழுமிநின்றர்

4. பொருட்பலம்அமெரிக்கா போர்ப்பலம் ரஷியாவாம்
புகழும் ஆயுதப்பலமோ
இருட்டொழிசூரியன் என்றுமேஅகன்றிடா
இங்கிலீஷ் ராஜியம்—ஜே !

5. நேசநாடுகளின்நற் சேவையின்ஐக்கியம்
நீடிய ரஷ்யாவுக்கே
வீசிடுஆயுதத் தளவாடம்பலபல
வேண்டிய தளித்ததுவே

6. வட ஆப்பிரிக்காவில் வாதுசெய் தெதிரியை
வன்மையால் விரட்டியதே
திடஜப்பா னீண்டுமுன் னேறிடாவன்மையைத்
திறலுடன் தடுத்ததுவே

7. நட்புறு நாடுகள் ஆற்றலால் எதிரியை
நசுக்கி விடா விடிலோ
திட்டமே இந்தியா முழுவதுங் களவாடித்
தீர்ப்பர் சீனு பர்மாபோல்

8. லக்ஷம்போர்வீரர்கள் ஓர்பெருங்கிராமத்தை
நாளொன்றில் வெறுமைசெய்வார்
அச்சமொன்றுமின்றி அழிவுக்குள்ளாக்குவார்
ஆகையாற் சேர்ந்தெதிர்ப் போம்

9. பாரம்பரியத்தை பழக்கவழக்கத்தைப்
பாழாக்கும் பகைவரையே
ஆரம்பத்தில்நசுக் காவிடில்நாடிதின்
ஆதாயம் அழிவுறுமே

10. அந்தத்தில்ஜெயம்நிஜம் அருந்தியா கம்தேவை
ஆக்கிரமித்த ஜப்பான்
கொந்தளிப்படக்கிடக் கொடுமையைஅழித்திடக்
கூடிடும் சோதரரே !



## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| முகப்புப் படம் : தலைவர் ரூஸ்வெல்ட் .. .. | 1 |
| ரஷியர்களின் மகத்தான தியாகங்கள் .. .. | 1 |
| பாட்டு : நேச நாடுகளின் ஒற்றுமை பலம் .. | 2 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 |
| தலையங்கம் : ஜெர்மனியின் தற்கால மனப் பான்மை .. .. .. .. .. | 4 |
| எல்லோருக்கும் உணவு வேண்டும் .. .. | 5 |
| ஆள் பலமும் பொருள் பலமும் வெற்றி தரும். | 5 |
| நாம் உண்ணத் தக்க உணவு எது ? .. .. | 6 |
| வருகிறார்கள் ! வருகிறார்கள் !! .. .. | 7 |
| தொழிலாளர் பகுதி : ஜெர்மன் பொய் மூட்டை. | 9 |
| " நான் இந்தியாவின் உண்மையான நண்பன்." | 10 |
| தம் நாட்டைக் காப்பாற்ற இத்தாலியால் முடியாது .. .. .. .. .. .. | 11 |
| பண்டலேரியா லெம்புசோ தீவுகளின் முக்கியம். | 12 |
| குருடான வீரர்களுக்குப் பயிற்சி சாலை .. | 12 |
| அச்சு நாட்டுப் போக்கு வரவுகளைத் தடுக்கும் போர் .. .. .. .. .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**3 நாட்களில் 3 தீவுகள் பிடிபட்டன.**

வடாப்பிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த பாம்பர் விமானங்கள் இந்த வாரம் இத்தாலியிலும் சிசிலியிலும் உள்ள குறியான இடங்களைத் தாக்கின. சிசிலி தீவின் தென் கிழக்கிலுள்ள சிராகூஸ் என்னும் துறைமுகமும் அதையடுத்த ஸ்தாபனமும் கடுமையாகத் தாக்கப்பட்டன.

சிசிலியின் வடகோடியிலுள்ள மெஸினு என்னுமிடத்தை அமெரிக்கப் போர்க் கோட்டை விமானங்கள் தாக்கின. சிசிலிக்கும் இத்தாலிக்கும் ஓடிக்கொண்டிருந்த கப்பற் பாதையின் கோடியை (இத்தாலியில் உள்ளது) அமெரிக்க விமானங்கள் பகலிலேயே தாக்கின. துறைமுகத்தின் மீதும், ரயில்வே ஸ்டேஷன் மீதும் 'சைடிங்' மீதும் குண்டுகள் விழுந்தன. மால்டாவைத் தளமாகக் கொண்டிருக்கும் நம் விமானங்கள் மேல சிசிலியைக் குறிவைத்துத் தாக்கின. கரைக்கு வெகு தூரத்திலிருந்த கப்பல்களையும் தாக்கின. நல்ல பலன்கள் கிடைத்தன. நேச நாட்டு விமானப்படைகள் மத்தியதரைக் கடலுக்குக் குறுக்கே வடக்கு நோக்கித் திரண்டு போய்க்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பன்டலேரியா, லெம்புசோ, லனேசா ஆகிய தீவுகளை கைப்பற்றியதனுல், மத்தியதரைக் கடலின் மத்திய பாகத்திலுள்ள கேந்திர நிலைமை அடியோடு மாறிவிட்டது. இந்தத் தீவுகள் சிசிலியின் கடலை யடுத்து முக்கோணமா யமைந்திருக்கின்றன. அச்சு நாட்டிற்குச் சொந்தமான இந்த மூன்று தீவுத் தளங்களும் அடுத்தடுத்து மூன்று நாட்களில் நேச நாட்டாரிடம் சரண் புகுந்தன. இதன் பயனுக அச்சு நாடுகளின் விமானங்கள் சிசிலிக்குத் திரும்பிப் போகும்படியான நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டது. இந்த பண்டலேரியா தீவைக் குறித்து ரோமாபுரி வானொலி நிலையம் என்ன சொன்னது தெரியுமா? "பண்டலேரியாவிலும் சிசிலித் தீவுக் கரைகளிலும் நாம் அமைத்திருக்கும் தடைகளை நீக்க ஒருவராலும் முடியாது" என்று 6 மாதங்களுக்கு முன்புதான் சொன்னது. இது கடைசியில் டம்பப் பேச்சாகத்தான் போய் முடிந்தது.

பிடிக்கப்பட்ட பண்டலேரியா ஒரு சிறந்த கேந்திர ஸ்தானம் என்பது பற்றி அங்காரா வானொலி நிலையம் ஜூன் மாதம் 12உ ஒரு தனி அறிக்கை வெளியிட்டது. அதில், "பண்டலேரியா ஒரு வெளி நாட்டுப் பகுதியல்ல, இத்தாலியின் ஒரு பகுதிதான்" என்று கூறியது. துனீசியாவிலுள்ள பான் முனையின் கிழக் கோடிக்கு 50 மைல் தூரத்தில் தான் இது இருக்கிறது. சிசிலிக் கரைக்கும் இதற்கும் 65 மைல்கள். மால்டாவிற்கும் இதற்கும் 150 மைல்கள். கைப்பற்றப்பட்ட மற்றொரு தீவு லேம்புசோ. துனீசியாவின் கிழக் கரைக்கும் இதற்கும் 90 மைல்கள். மால்டாவிற்கு 110 மைல்கள். பண்டலேரியாவுக்கு 100 மைல்கள் கூட இருக்காது. இந்தத் தீவுத் தளங்களையும், குறுகிய கடல்களிலிருந்த கடற் படையையும் விமானப் படையையும் துணைக்கொண்டு சிசிலியை ஒரு விமானக் கோட்டையாக்க வேண்டுமென்று சென்ற மழைகாலத்தில் ஜெர்மன் விமானப் படை முயன்றது. இந்தத் தீவுகள் இப்போது பிடிபட்டுவிட்டதனுல், இந்தப் பகுதியில் அச்சு நாடுகளின் விமான பலம் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது.

**பண்டலேரியாவுக்கும் மால்டாவுக்கும் வேற்றுமை.**

பண்டலேரியா விரைவில் சரணடைந்தது. ஆனல் மால்டா கடுமையாக எதிர்த்துப் போராடியது. சென்ற வருஷம் அக்டோபர் மாதம் 18-ம் தேதி பாரீஸ் வானொலி நிலையத்திலிருந்து பேசிய ஜெர்மன் விமர்சகர் ஒருவர் 'மால்டாவைத் தொலைத்து விட வேண்டும்' என்று குறிப்பிட்டார். இதற்கு என்ன காரணம் சொன்னர் தெரியுமா? இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் ஆதிக்கம் கிடைக்காதபடி இது தடுக்கிறதாம்! அச்சு விமானப் படை வெகுவாகத் திரண்டு போய் மால்டாவைத் தாக்கிய போதெல்லாம், அவற்றைத் தடுத்தது மட்டுமன்றி, திருப்பியும் அடித்தது. மால்டாவிலுள்ள மக்கள் விடிந்தது முதல் ஓயாது வெடிகுண்டுகளைத் தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனல் அதன் உறுதியான, அசைக்க முடியாத எதிர்ப்புத் தான் அச்சுப் படைகளைத் தோற்கடித்தது. மால்டா இன்னும் தலை நிமிர்ந்து நிற்கிறது; ஆனல் பண்டலேரியா, திரண்டு வந்து தாக்கப்பட்ட 3 வாரத்தில் வீழ்ந்தது. இங்கே ஒரு விஷயம் குறிப்பிடத் தக்கது. மால்டா தீவில் இத்தாலியர்கள் முதல் முதல் குண்டுகள் வீசியது 1940-ம் வருஷம் இதே தேதியில், அதாவது சரியாக 3 வருஷங்களாகின்றன.

இப்போதுள்ள நிலைமை என்ன? சிசிலிக்கும் வடாப்பிரிக்காவிற்கும் நடுவே கப்பல்கள் போக வர பந்தோபஸ்தாக மத்திய தரைக் கடலின் மத்திய பாகம் விமானப் பாதுகாப்பளித்து வந்தது. இதன் பயனுக நேச நாடுகளைத் தாக்க அச்சு நாட்டு விமானங்களுக்கு வசதியா யிருந்தது. இப்போது இந்தப் பகுதிகளெல்லாம், நேசநாட்டு விமானங்கள் வந்து தாக்கக் கூடிய தூரத்தில் தானிருக்கின்றன. பண்டலேரியாவைக் கைப்பற்று முன்பாக, நேச நாட்டுப் போர் விமானங்கள் வடாப்பிரிக்கத் தளங்களி லிருந்து வடக்கே 35 மைல் தூரத்திலுள்ள (சிசிலித் தீவிலுள்ள) பாலெர்மோ வரையிலுந் தான் போய்ப் போராடக் கூடும். இந்த தீவுத் தளத்தைக் கைப்பற்றியதனுல், நேச நாட்டு விமானங்கள் மேலும் பறந்து சென்று, டெர்ரேனியன் கடல் வரைப் போய்ப் போராடி வரலாம். துனீசியா, பண்டலேரியா, லெம்புசா, மால்டா ஆகிய பல திசைகளி லிருந்தும் திரண்டு வந்து தாக்கப்படக் கூடிய பரிதாபகரமான நிலைமையில் இன்று சிசிலி இருக்கிறது.

**மன்னர்பிரான் மால்டா விஜயம்**

சென்ற 20உ ஞாயிற்றுக்கிழமை காலை 9–30-மணிக்கு "ஆரோரா" என்னும் க்ரூய்சர் கப்பல் மத்தியதரைக் கடலிலுள்ள மால்டா தீவுகளில் ஒன்றுகிய ஜார்ஜ் க்ராஸ் தீவு வந்து சேர்ந்தது. அதில் நமது மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அங்கு வந்திறங்கினர். பலமான வரவேற்புக்கள் நடந்தன. அவருடன் சர் அலெக்சாந்தர் ஹார்டிஞ், கர்னல் சர் பியர்ஸ் வேய், க்ரூப் காப்டன் எப். எல். பீல்டன், கர்னல் எம். கவனுப், ஆகியோர் விஜயம் செய்திருந்தனர். மால்டா பீரங்கிப் படையினர் அணிவகுப்பு மரியாதைகள் நடத்தினர். இதைப் பார்வையிட்ட பிறகு, மன்னர்பிரான் 'வாலெட்டா' அரண்மனைக்குப் போனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞு ஜூன் 25உ. [இதழ் 25


# ஜெர்மனியின் தற்கால மனப்பான்மை

நேச நாட்டுப் படைகளின் விமானத் தாக்குதல்கள் காரணமாக, ஜெர்மனியில் மிகுந்த நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிற தென்று, ஜெர்மன் வெளி நாட்டு வானொலி நிலையம் அறிவிக்கிறது. ஆபத்தான் சமயத்தில் ஊரை விட்டு ஓடுவதற்கு ஆயத்தமாக மூட்டை முடிச்சுகளைக் கட்டி வைத்துக் கொண்டு பெரும்பாலோர் ஆயத்தமாயிருக்கிறார்களாம். ஒவ்வொருவருக்கும் மிகுந்த கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன; நெருக்கடியான பிரச்சினைகளை அவர்கள் சமாளிக்க வேண்டி யிருக்கிறது. அதாவது ஜெர்மனியில் எல்லோரும் எந்தச் சமயம் தம்மை நேச தேசத்தார் தாக்குவார்களோ என்று ஏங்கிக்கொண்டிருக்கக் கூடிய பருவம் வந்து விட்டது. பத்திரிகைப் பிரசாரத்தினாலும் யுத்த நிலைமை மேலும் நெருக்கடியாகிக் கொண்டுவருகிறது. இதற்கு மூன்று காரணங்கள் உண்டு: 1. ரஷ்யப் போர் முனையில் ஜெர்மானியர்கள் வெற்றி பெற முடியுமா என்னும் சந்தேக உணர்ச்சி, 2. நேச நாடுகளின் போர்த் திட்டம் இன்னதென்று ஜெர்மானியர்கள் தெரிந்து கொள்ள முடியாதபடி மூடு மந்திரமாக வைத்திருப்பது; 3. மத்தியதரைக் கடலில் நேச நாடுகள் செய்து வரும் ஆயத்தங்கள்.

ஆகவே, ஜெர்மானியப் பொது மக்கள் கொண்டிருக்கும் அச்சத்தைப் போக்க வேண்டி, ஐரோப்பா மகா பலமாக அரண் செய்யப்பட்டிருக்கிற தென்று சென்ற சில வாரங்களாக பெர்லினிலிருந்து பிரசாரம் நடைபெறுகிறது, இது மிகப் பழைய தோர் பிரசார முறை. சென்ற வருஷம் இரண்டாம் போர் முனை ஐரோப்பாவில் ஏற்படப் போவதாக ஒரு கிளர்ச்சி இருந்து வந்தது, நம் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அக்காலத்தில் கப்பல்ஸ் பிரசாரக் கோஷ்டி என்ன சொன்னது தெரியுமா? "மேற்கு ஐரோப்பியக் கரை போரங்களில் அமைக்கப்பட்டிருக்கும் அரண்களைத் தகர்க்க எவராலும் முடியாது. இதற்கு உதாரணமாக பிரான்சின் வட கரையிலும் மேல் கரையிலும் 'கமான்டோ' படைகள் நசாயிர், பொலோன், டியப்பி ஆகிய நகரங்களைத் தாக்கிய போது, விரட்டியடிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறார்கள். இரண்டாம் போர் முனை ஏற்படக் கூடும் என்னும் பருவம் கடந்த வுடனே, இந்தப் பிரசாரமும் நின்றுவிட்டது. இப்போது 2 மாதங்களுக்கு முன்பு மீண்டும் இந்தப் பிரசாரம் ஆரம்பமாகி யிருக்கிறது. சென்ற ஏப்ரல் மாதம் 13-ம் தேதி ஜெர்மனியைச் சேர்ந்த சீசன் விமான நிலையத்திலிருந்து "எதிரிகள் இங்கே வந்தால் டியப்பியில் கிடைத்த மரியாதை இங்கேயும் கிடைக்கும்; சரியான அடி கொடுத்தனுப்புவோம். வட முனை முதல் மத்தியதரைக் கடல் வரையுள்ள கடற்கரையை நாம் பலமாக அரண் செய்திருக்கிறோம். 20-ம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்ட புதிய தளவாடங்களை அங்கே அமைத்திருக்கிறோம். எதிரிகள் என்னதான் பலத்த படைகளைக் கொண்டுவந்து தாக்கினாலும், கண்டிப்பாகத் தோற்றுத்தான் போவார்கள்" என்று கூறியது. மற்றொரு முறை அதே வானொலி நிலையத்தில், தம்முடைய அரண் பலத்தைக் குறித்து வெகுவாகப் புகழ்ந்து கொண்டிருக்கிறது. அதாவது, "பெருத்த மதில்கள் சென்ற சில வருஷங்களாகக் கட்டப்பட்டன. இவை பூரணமான பாதுகாப்பு அரண்கள். மேல் மதிலையும், மகினு மதிலையும் கட்டி முடித்த அனுபவத்தைக் கொண்டுதான் இது கட்டப்பட்டிருக்கிறது. மகினு அரணில் அமைக்கப்பட்டிருந்த பீரங்கி மேடைகளிலிருந்து எல்லாத் திசைகளிலும் பீரங்கி திரும்ப முடியாது, பாதி வட்ட அளவிற்குத்தான் திரும்ப முடியும். ஆனால் இப்போது கட்டப்பட்டிருக்கும் அரணிலிருந்து எல்லாத் திசைகளின் மீதும் பீரங்கிகளைத் திருப்பிச் சுடலாம்! தரையிலிருந்து வானம் வரை எஃகு அரண்கள் பாதுகாக்கின்றன. பர்லினிலிருந்து சாலமன் தீவுவரை ரோடுகள் போடுவதற்கான காங்கிரீட் இருப்பில் இருக்கின்றது," என்று கூறுகிறது. சீனப் பெரும் சுவரைவிட, இது 200 மைல்களுக்கு மேலே நீளமாம்! மகினு அரணைவிடப் பலமானதாம்! இப்படிப்பட்ட டம்பப் பேச்சுக்களைக் கொண்டு பொது மக்களின் அச்சத்தைப் போக்கி, அவர்கள் உள்ளத்தில் கொஞ்சம் நம்பிக்கை உண்டாக்கப் பார்க்கிறார்கள்.

துனீசியாவில் தோல்வி யடைந்த பிறகு நம் வீரப்பிரதாபங்களைக் கொட்டி யளக்கிறார்கள். "நாம் இப்போது பந்தோபஸ்தா யிருக்கிறோம். துனீசிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த 6 மாத காலத்திற்குள்ளாக, இத்தாலியக் கடற்கரை யுள்பட, ஐரோப்பாவைப் பாதுகாப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டோம். ஆகவே, ஐரோப்பாவை நேச நாட்டினர் தாக்குவார்கள் 'என்ற பேச்சுக்கே இடமில்லை. எஃகு, இரும்பு, காங்கிரீட், நெருப்பு ஆகிய அரண்களால் சூழப்பட்டிருக்கும் தமக்குச் கொஞ்சமும் அச்சமென்பதில்லை யென்று ஐரோப்பிய நாடுகளுக்குத் தெரியும்," என்று கூறுகிறது பிரஞ்சுப் பாதுகாப்பைக் குறித்து நாஜிகளுக்குச் சாதகமான எழுத்தாளர் ஒருவர் "இந்த அரண்கள் கற் கோட்டைகளைவிடப் பலமானவை. எதிரி விமானங்கள், தவிடு பொடி செய்தாலுங்கூட, இந்த அரண்களுக்குள் பந்தோபஸ்தாக ஒரு காயமும் படாமல் தங்கியிருக்கலாம்" என்று எழுதுகிறார்.

இப்போது ஜெர்மன் பிரசாரத்தின் போக்கு மாறிவிட்டது. ஐரோப்பிய அரண்கள் அசைக்க முடியாதவை என்று செய்து வந்த பிரசாரம் செல்லாக் காசாகி விட்டதெனத் தெரிந்து கொண்டனர். இதனால் அருவருக்கத்தக்க பலன்கள் தான் ஏற்பட்டன என்று கண்டுகொண்டார்கள். இப்போது மத்தியதரைக் கடல் பாதுகாப்புக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போகக் கூடியவைதா னென்றும், அதலாண்டிக் மதிலைப்போல நிரந்தரமான தல்லவென்றும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அன்றியும் ஐரோப்பாவிற்குத் தெற்கு மதில் இல்லை யென்றும், குறிப்பிடுகிறார்கள். மகினு அரணைப் போன்ற தோர் அரணை ஜெர்மானியர்கள் கட்டப் போகிறார்கள் என்று கூறுவது தவறு என்று ஜெனரல் டீட்மார் என்னும் ஜெர்மன் படைத் தலைவர் கூறியிருக்கிறார்.

தாம் சரியான பாதுகாப்புக்கள் அமைந்த கற் கோட்டைக்குள் இருப்பதாக ஜெர்மானியர்கள் மனப்பால் குடிக்கிறார்கள். இது பற்றி ஒரு ஜெர்மன் பத்திரிகைக் கீழ்க் கண்டவாறு எழுதுகிறது :—

> "ஐரோப்பா ஒரு காங்கிரீட் கோட்டையாக மாறிவிட்டது. ஆகவே ஐரோப்பாவைத் தாக்க வேண்டுமானால், எதிரிகள் ஆயிரம் டன் கணக்கில் வெடிகுண்டுகளும் பீரங்கி மருந்துகளும் கொண்டு வந்தால் போதாது. கோடி டன் கணக்கில் வேண்டியிருக்கும். இவ்வளவு ஏராளமான தளவாடங்களை ஏற்றியனுப்புவதற்கு வேண்டிய கப்பல்கள் நேச நாடுகளுக்கு இல்லை. மிகவும் அமைதியான மனத்தோடு எதிர்கால நிலைபற்றி நாம் யோசிக்கிறோம். நிலைமை இன்னும் நமக்குத் தான் பெரிதும் சாதகமா யிருக்கிறது."

இவ்வளவு பிரசாரம் செய்தும் கூட, ஜெர்மன் பொது மக்கள் மிகவும் அச்சங் கொண்டுதா னிருக்கிறார்கள். நேச நாட்டுப் படைகள் தம்மைத் தாக்கினால் என்ன செய்வது என்று நடுங்குகின்றனர். ஜெர்மனிக்கு விரோதமாக ஏன் துருக்கி நேச நாடுகளுடன் சேரவில்லை என்பது பற்றி இடைவிடாது பலவகைக் காரணங்களைச் சொல்லிக் கொண்டே யிருக்கிறார்கள் ஜெர்மானியர்கள். இந்தப் பிரசாரம் இரண்டு வகை நோக்கங்களோடு செய்யப்படுகிறதென்று தெளிவாகிறது. (1) ஜெர்மன் மக்கள் கொண்டிருக்கும் தாக்குதல் பீதியை அகற்ற முயற்சிக்கிறது. (2) ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனையை ஆரம்பிக்காதபடி தடுக்க முயற்சிக்கிறது. 'ஐரோப்பியப் பாதுகாப்புகள் அசைக்க முடியாதவை.' அச்சு நாடுகளின் ஆள் பலம் மிகச் சிறந்தது. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் அபரிமிதமான வெற்றியடைகின்றன என்றும் தளவாட உற்பத்தி கொஞ்சமும் குறையவில்லை யென்றும் அவ்வப்போது கூறி பொது மக்கள் மனதில் ஒரு வகை ஊக்கத்தை உண்டாக்க முயற்சிக்கிறார்கள்.

ஆனால் நேச நாட்டு விமானப் படைகள் என்ன செய்கின்றன? ஜெர்மனியிலும் அதற்குட்பட்ட நாடுகளிலுமுள்ள விமான உற்பத்திசாலைகளைத் தவிடு பொடியாக்கிக் கொண்டு வருகின்றன. இதனால், பொது மக்கள் கலவரப்படத்தான் செய்வார்கள். இதைத் தடுக்கவும் கப்



பல்ஸ் துரை சூழ்ச்சி செய்கிறார். ஒரு புது முறையைக் கையாளுகிறார். அவர் கூறியதாவது :—

> "பிரிட்டிஷ் விமானப் படைகள் ஜெர்மனியைத் தாக்குவதில் இரண்டு நோக்கங்கள் அவர்களுக்குண்டு. (1) ஜெர்மன் யுத்தத் தளவாட வேலைகள் நடைபெறாதபடி தடுப்பது. (2) பொது ஜனங்களை பீதிக்கு உட்படுத்துவது. இவைபற்றி கொஞ்சமும் சந்தேகமில்லை. ஆனால் ஜெர்மன் தளவாட உற்பத்தியைக் குலைக்க ஒரு போதும் முடியாது. தளவாட உற்பத்திகளெல்லாம் ஒரே இடத்தில் செய்தால், அந்த உற்பத்திசாலைமீது வெடிகுண்டுகள் விழுந்தால், அந்தத் தொழிலே குந்தகப்பட்டு தளவாட உற்பத்தி தடைப்படும். ஆகவேதான், இந்த உற்பத்தி பலப்பல விடங்களில் நாடு முழுதும் பரவி நடத்தப்பட்டு வருகிறது. இதுதான் ஜெர்மன் கொள்கை."

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், ஜெர்மன் பலம் குறையவில்லை. நேச நாடுகள் ஜெர்மனியைத் தாக்க முடியாது என்பதை ஜெர்மானியர்கள் மனதில் பதியச் செய்யவேண்டு மென்பதுதான் ஜெர்மானியர்கள் நோக்கம்.

ஜெர்மன் பிரசாரம் இத்துடன் நிற்கவில்லை. ஐரோப்பாவை நேச நாடுகள் தாக்கினால், நேசநாட்டுப் படைகள் ஜெர்மனியின் உள் நாட்டிற்கு வந்து சேரு முன்னதாகவே, மூன்றில் இரண்டு பங்கு படைகளைப் பலி கொடுக்க வேண்டுமாம்! இந்தத் தந்திரங்க ளெல்லாம் இனி பலிக்காது. அச்சுநாட்டுத் திட்டங்களெல்லாம் தகர்ந்து விட்டன துனீசியாவில். ஆகஸ்டு மாதம் வரையிலாவது டியூனிஷில் காலங் கடத்திக் கொண்டிருக்க வேண்டு மென்பதுதான் ஜெர்மன் தலைவர்கள் திட்டம். வேனிற் காலத்தில் அவகாசம் கிடைக்கும் என்றும் அப்போது, தொழிற்சாலைகளிலும் வியாபார ஸ்தலங்களிலும் காரியாலயங்களிலுமிருந்து இளைஞர்களைப் பொறுக்கி எடுத்துப் பயிற்சி யளித்து ரஷ்யப் போர் முனைக்கு அவர்களை யனுப்பவேண்டு மென்பதும் ஜெர்மானியர்கள் திட்டம். ஆனால் அவர்கள் எண்ணம் பலிக்கவில்லை.

மற்றொரு முக்கியமான விஷயத்தை நாம் ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும். அதாவது 50 லட்சம் பேர்களைக் கொண்ட படை ஜெர்மானியர்களிடம் இருக்கிறது எப்படி என்றால், ஜெர்மானியர் கைப்பற்றிக்கொண்ட நாடுகளிலிருந்து ஏராளமான தொழிலாளிகளைப் பலவந்தமாகப் படையில் சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். "கட்டுச் சோற்று மூட்டையில் பெருச்சாளியை வைத்துக் கட்டிக்கொண்டு போவதற்குத்தான், இது சமமாகும்.

பிற நாடுகளிலிருந்து வந்திருக்கும் இவர்களிடையே அதிருப்தியும் கலவரங்களும் உண்டாகாதபடி வெகு எச்சரிக்கையாகக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள் ஜெர்மன் அதிகாரிகள். லீப்சிக், ட்ரெஸ்டன் ஆகிய நகரங்களைவிட, பெர்லினில் அந்நிய நாட்டார் அதிகம் என்று ஒரு ஸ்வீடன்காரர் சமீபத்தில் தெரிவித்திருக்கிறார். சென்ற 1-ம் தேதி அவர் ஒரு ஸ்வீடிஷ் பத்திரிகையில் எழுதியதாவது :—

> "நரக லோகத்தில் இருப்பதாகத் தான் அங்கிருக்கும் போது தோன்றுகிறது. எங்கு பார்த்தாலும் யுத்தக் கைதிகள் தான். இவர்களில் பெரும்பாலோர் இராணுவ உடைகளணிந்த பிரஞ்சுக்காரரும் தொழிலாளர்களும் தான். இந்தத் தொழிலாளர்கள் போலந்திலிருந்தும் உக்ரேனியாவிலிருந்தும் பலவந்தமாகக் கொண்டுவரப் பட்டவர்கள். இங்குள்ள 5 லட்சம் பேர்களைக் கொண்ட படையில் அநேக அரசியல் விஷப்பூச்சிகளும் இருக்கின்றன. அவற்றால் ஜெர்மனிக்கு ஆபத்து நேரவுங் கூடும்."

சந்தர்ப்பம் ஏற்படுகிறபோது இவர்கள் தத்தம் கடமைகளைத் தவறாது செய்து முடிப்பார்கள். என்றாலும் ஜெர்மானியர்களின் உறுதி தளர்ந்து விட்டது என்றும் சொல்லி விடுவதற்கில்லை. மிக நெருக்கடியான நிலைமை ஏற்பட்டபோது துனீசியாவில் ஜெர்மன் படைகள் சரணாகதி யடைந்தது போலவே, ஜெர்மனியிலும் சரணாகதி யடையக் கூடுமென்று ஒரு சிலர் நினைக்கலாம். அது தவறு. நெருக்கடியான சமயங்களில் மிகுந்த வீரத்தோடு போராடும் தன்மையுடையவர்கள் தான் ஜெர்மானியர்கள். ஆகவே, அவர்களை வெல்ல வேண்டுமானால், நாம் மகா கடுமையாகப் போராடித் தான் ஆகவேண்டும்.

# எல்லோருக்கும் உணவு வேண்டும்

உலக சரித்திரத்திலேயே இல்லாத கொடும் யுத்தம் சென்ற 3 வருஷங்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒருபோதுமில்லாதபடி பெரும் படைகளைக்கொண்டு நேச நாட்டு இராணுவத் தலைவர்கள் உலக முழுதிலும் எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அன்றியும் நேச நாட்டு அரசியல் ஞானிகள் யுத்தம் முடிந்தபிறகு உலக நிலை எப்படி அமைக்கப்படவேண்டு மென்பதுபற்றி திட்டங்கள் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் திட்டங்களில் ஒரு விஷயம் மட்டும் எல்லா நாடுகளுக்கும் பொதுவாயிருக்கிறது. யுத்தத்திற்குப் பிறகு உலகிலுள்ள எல்லா மக்களும், அனுபவிக்கக் கூடிய நான்கு வகைச் சுதந்தரங்கள் தான் இந்தப் பொதுவான விஷயம்.

இந்த நான்கு வகைச் சுதந்தரங்களில், மதச் சுதந்தரம், பேச்சுச் சுதந்தரம், அச்சமில்லாதிருக்கும் சுதந்தரம் இம்மூன்றும் அடிப்படையான உரிமைகள் என்று அமெரிக்கர்கள் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். ஆகவே, தேவையில்லாததோர் நிலைமையடைய வேண்டித்தான், இப்போது நேச நாடுகள் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. யுத்தத்திற்குப் பிறகு ஏற்படக்கூடிய பொருளாதார நிலையிலே நேச நாடுகளுக்குச் சுயேச்சை கிடைக்குமென்று அமெரிக்க அரசியல் ஞானிகள் கூறுகிறார்கள்.

இதுபற்றி அமெரிக்க உப தலைவர் வாலஸ் கூறியதாவது :—

சாதாரண மனிதனுக்குக்கூட முன்னைய விட மேலான வாழ்க்கையை தரக்கூடியது தான் சமாதானம். இது அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் மட்டும் கிடைத்தால் போதாது; இந்தியா, சீனா, லத்தீன் அமெரிக்கா முதலிய நாடுகளுக்கும் கிடைக்கவேண்டும். நேச நாடுகளுக்குமட்டும் கிடைத்தால் போதாது; ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் மக்களுக்குங் கூடக் கிடைக்கவேண்டும்.

"ஒரு நாடு வேறெந்த நாட்டையும் சூறையாடவேண்டு மென்னும் உரிமையைக் கடவுள் கொடுக்கவில்லை. கைத்தொழில் துறையில் தேர்ந்த நாடுகள், மற்ற நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும். ராணுவத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஏகாதிபத்தியத் தன்மை கூடவே கூடாது. . . . . .

இங்கிலாந்திலுள்ள அமெரிக்க தூதரான மிஸ்டர் ஜான் வினண்ட் கூறியதாவது :—

> "இப்போது ஏராளமாக டாங்கிகள் செய்து முடிக்கிறோம். ஆனால், யுத்தத்திற்குப் பிறகு, அதற்குப் பதிலாக வீடுகள் கட்டிமுடிக்க வேண்டும். இதுவரை எதிரிகள் நம்மைப் பட்டினி போட்டுவிடாதபடி உணவுப் பொருள்களைச் சாகுபடி செய்துகொண்டுவந்தோம்; இனி எல்லா நாடுகளிலும் எல்லா மக்களும் திருப்தியடையவேண்டி சாகுபடி செய்யவேண்டும். இதுவரை படைவீரர்கள் உடல் நிலையை உருப்படுத்துவதில் சிந்தையைச் செலுத்திவந்தோம். இனி, மரண விகிதத்தையும் நோய் விகிதத்தையும் மிகக் குறைவான விகிதத்திற்குத் கொண்டுவர முயலவேண்டும். இதுவரை படைகளுக்கு ஆட்களைத் திரட்டிக் கொண்டிருந்தோம். இனி, அவர்களுக்கு வேலை தேடுவதில் முயற்சியாயிருக்க வேண்டும். அப்போதுதான் உண்மையிலேயே அவர்கள் தேவைப்படாமல் இருக்கக்கூடும்.

# ஆள் பலமும் பொருள் பலமும் வெற்றி தரும்

ஆள் பலமும் மூலப் பொருள் பலமுந்தான் ஒரு நாட்டின் சக்தியை அளக்கும் அளவு கோல்கள். இந்த இரண்டு வகைகளிலும் நேச நாடுகள் உயர்ந்திருக்கின்றன. சமீபத்தில் கிடைத்த புள்ளி விவரங்களைக்கொண்டு பார்த்தால், நேச நாடுகளின் மொத்த ஜனத்தொகை 180 கோடி. அச்சு நாட்டினரின மொத்த ஜனத்தொகை 60 கோடி மட்டுந்தான். அதிக ஜனத்தொகையிருந்தால், படைகளுக்கும் பலவகைத் தொழில்கள் செய்வதற்கும் தாராளமாக ஆட்கள் கிடைப்பார்கள் என்றுதான் அர்த்தம். உதாரணமாக, சீனாவை எடுத்துக் கொள்ளுவோம். சீனாவைவிட ஜப்பான் மிகுந்த ஆதிக்கம் வாய்ந்தது என்றாலும் சீனாவைப் பணியச் செய்யமுடியவில்லை. காரணம் என்னவென்றால், ஜப்பானியர் ஜனத்தொகையைவிட சீனர்களுடைய ஜனத்தொகை மிக அதிகமாயிருக்கிறது தான். அதனால் தான் சென்ற 6 வருஷங்களாகச் சமாளித்துக்கொண்டிருக்கிறார்கள். ரஷ்யாவுங் கூடத் தான். இந்தியாவும் இதே நிலைமையில்தான் இருக்கிறது என்று சொல்லலாம். ஏனென்றால், இந்தியாவின் தளவாட உற்பத்திப் பொருள்கள் நேச நாடுகளுக்கு மிகுந்த ஆக்கந்தருவனவாகும்.

மற்றொரு வசதியும் நேச நாடுகளுக்கிருக்கின்றன. நேச நாடுகளில், பிரிட்டனும், அமெரிக்காவும் நார்வேயும் சேர்ந்திருக்கின்றன. இவை கப்பற்படை மிகுதியாயுள்ள நாடுகள். வியாபரக் கப்பல்களும் ஏராளம். ஓரிடத்திலிருந்து கப்பல்கள் வேறிடத்திற்குப் படைகளும், சப்ளைகளும் தாராளமாகப் போனால்தான் போரில் வெற்றி பெற முடியும்.

மூலப் பொருள்களிலும் நேச நாடுகள் சிறந்து விளங்குகின்றன. உலகத்தில் விளையும் நிலக்கரியில் மூன்றில் இரண்டு பங்கும், இரும்பில் 60 சத விகிதமும், எஃகு மூன்றில் இரண்டு பங்கும், மாங்கனீசில் ஐந்தில் நான்கு பங்கும், நேச நாடுகள் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கின்றன. பெட்ரோலியம், க்ரோம், டங்ஸ்டென், குங்கிலியம் முதலிய யுத்தத்திற்கு உபயோகமான உலோகங்களும் அச்சு நாடுகளை விட அதிமாகவே கிடைக்கின்றன. நிக்கல், சணல், செம்பு, கொக்கோ ஆகியவை எல்லாம் நேச நாடுகளுக்கு மட்டுந்தான் கிடைக்கின்றன.

# நாம் உண்ணத் தக்க உணவு எது?

## விவசாயத்தைப் பெருக்க அரசாங்க உதவி

**சென்னைத் தொழிலாளர் சங்க நிர்வாக அங்கத்தினரும் வழக்கறிஞருமான பி. ஏ. கண்ணையா நாயுடு அவர்கள் பி.ஏ., பி.எல்., "யுத்த முயற்சி" என்னும் தொடரில், 'நமது உணவு' என்ற பொருள் பற்றி சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் ஜூன் மாதம் 8-ம் தேதி ஒலி பரப்பிய சொற் பொழிவு வருமாறு :—**

நமது உடல் நலம் பெரும்பாலும் நாம் உண்ணும் உணவையே பொருத்திருக்கிறது. நாம் சாப்பிடுவது நாம் உயிர் வைத்திருப்பதற்காகமட்டுமல்ல. நாம் நன்றாக தேகாரோக்கியத்தோடு உயிர் வாழ்வதற்காகவுந்தான. மனிதன் தேகாரோக்கியத்தோடு இருக்கவேண்டுமானால், தன்னைச் சுத்தமாகவைத்துக் கொள்ளவேண்டும். சுத்தமான இடத்தில் குடியிருக்கவேண்டும். சுத்தமான காற்றையும் நீரையும் உட்கொள்ளவேண்டும். சூரிய வெளிச்சமும் வெப்பமும் தன்மீது படவேண்டும். முக்கியமாக சரியான உணவை சுத்தமாகவும் மிதமாகவும் உண்ணவேண்டும். உணவினுடைய முக்கியமான தொழில்களிரண்டு. ஒன்று உடலை வளர்த்துச் சரியான நிலையிலிருக்கச் செய்வது. இரண்டாவது, நாம் நடமாடுவதற்காக வேண்டிய சக்தியை அளிப்பது.

### உணவு வகைகள்.

நமக்கு இயற்கையாகக் கிடைக்கும் உணவு, பலவகைப்பட்டது. பால், வெண்ணெய், மோர், தயிர், நெய் ஒரு வகை. கோதுமை, அரிசி, கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய தானியங்கள் மற்றொருவகை. இறைச்சி, முட்டை, மீன் வகைகள், பருப்பு தினுசுகள், உருளைகிழங்கு போன்ற கிழங்குகள், காய்கறிகள், கீரைகள், நல்லெண்ணெய், கடலை எண்ணெய் போன்ற எண்ணெய்கள் இவைகளும் உணவாக உபயோகப்படுகின்றன. நம் நாட்டில் சாதாரணமாக தானிய வகைகள் தான் உணவில் பெரும்பகுதியாக உபயோகிக்கப்படுகின்றன. வட இந்தியாவில் பெருவாரியாக கோதுமையும், தென்னிந்தியா, பீஹார், வங்காளம் போன்ற இடங்களில், அரிசியும் முக்கியமாக உபயோகப்படுத்தப்படுகின்றன. தென்னிந்தியாவில் கேழ்வரகையும் உணவாக உபயோகிக்கின்றார்கள்.

தானியவகைகளில் மிகச்சத்து வாய்ந்தது கோதுமை. கோதுமையை பால், நெய், பருப்பு, கீரை பழம் முதலியவைகளுடன் சாப்பிட்டால் உடல்வன்மை சிறந்தாக இருக்கும். ஆனால் கோதுமை உஷ்ணத்தைத் தரும் உணவு. தென்னிந்தியா போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் கோதுமையை மாத்திரம் உணவாக வைத்துக்கொள்ளமுடியாது. ஆகையினால்தான், இங்கு அரிசி, கேழ்வரகு இவைகளை ஜனங்கள் உபயோகிக்கின்றார்கள். தானிய வகைகளில் மிக மிகச் சத்தற்றது அரிசியேயாகும். மேலும் அரிசியிலுள்ள சிறிதளவுச் சத்துக்கூட அதை நன்றாகத் தீட்டி வெண்மையாக ஆக்கிவிடுவதனால், போய்விடுகிறது. அரிசி சாப்பிடுபவர்கள் கூடிய வரையில் அதிகமாகத் தீட்டாத கைக்குத்தலரிசியையோ வேறு எந்த அரிசியையோ உபயோகிப்பது நலம்

### அரிசி உணவைக் குறைக்க வேண்டும்.

கோதுமைக்கு இரண்டாவதாக சத்துவாய்ந்தது கேழ்வரகு. கேழ்வரகு, அரிசியைவிட மிக மிகசத்துவாய்ந்தது. மேலும் கேழ்வரகைத் தீட்டாமல் உபயோகப்படுத்துவதனால் அதன் சத்து அப்படியே குறையாமல் இருப்பதற்கு ஏதுவாகிறது. நல்ல கேழ்வரகை பால், தயிர் இவைகளுடனும் கீரைகளுடனும் பழங்களுடனும் சாப்பிடுவது மிக நல்லது. கோதுமை அவ்வளவு சோளமும், கம்பும் சிறந்ததாக இல்லாவிட்டாலும், அரிசியைவிட மிக அதிகமான சத்துடையன. அரிசியை மாத்திரம் உணவாக வைத்துக்கொள்ளுவதனால் சத்தில்லாத உணவைச் சாப்பிடுவது ஒருபுறமிருக்க, மலச் சிக்கல் ஏற்பட்டு பல நோய்களுக்குக் காரணமாகின்றது. உடலை வளர்ப்பதற்கு அரிசி ஏற்றதல்ல. அதனால் தான் அரிசி சாப்பிடும் இந்தியர் உடல்வளர்ச்சி குறைந்து கட்டு தளர்ந்திருக்கின்றனர். கோதுமை, கேழ்வரகு சாப்பிடுபவர்கள் செய்கின்ற அளவு கஷ்டமான வேலை செய்ய இயலாமலிருக்கின்றனர். ஆகையினாலே, நாம் ஒரே ஒரு தானியத்தை உபயோகபடுத்துவதைவிட, அதிலும், முக்கியமாக அரிசியை மாத்திரம் உபயோகப் படுத்துவதைவிட, இரண்டு மூன்று தானியங்களை உணவுப் பொருள்களாக உபயோகிப்பது நல்லது. அரிசி உணவுடன் கோதுமை அல்லது கேழ்வரகு, சோளம், கம்பு இவைகளை உணவாக வைத்துக் கொள்ளவேண்டும். ஒன்றிலில்லாத சத்து மற்றொரு தானியத்திலிருந்து உடலை அளவாக வளர்த்துச் செல்லும். அரிசி அதிக விலையேறியிருப்பது ஒருபுறம். கிடைப்பது அரிதாயிருப்பது மற்றொருபுறம். இத்தகைய கஷ்ட காலத்தில் சத்தற்ற அரிசியை எவ்வளவுக் கெவ்வளவு குறைத்துக் கொள்ள வேண்டுமோ அவ்வளவுக் கவ்வளவு குறைத்துக் கொள்ளுவதனால் உடலுக்கும் நலம், வீண்சிரமும் குறையும். கேழ்வரகு, சோளம், கம்பு முதலியவற்றை உண்ணுவதனால் அதிகச் சத்து ஏற்படுவதுடன் அரிசிக்காக ஜனங்கள் படும் அல்லல் குறையும்.

### கீரை உணவின் உயர்வு.

வெறும்தானிய உணவுமாத்திரம் உண்ணுவது போதாது. மாமிசம் உண்ணுபவர்கள் இறைச்சி, முட்டை, மீன் முதலியவைகளைத் தானியத்துடன் தற்போது உபயோகிப்பதைவிட, சிறிதளவு அதிகம் உபயோகிப்பது நலம். பொதுவாக அனைவரும் காய் கறிகளை மிகக் குறைவாக உபயோகப்படுத்துகிறார்கள். இது தவறு. காய் கறிகளில் தானியத்தைவிட அதிகச் சத்துண்டு. கீரை வகைகளைவிட நம் நாட்டுக்கு நன்மை பயப்பது வேறொன்றுமே கிடையாது. தானிய வகைகளிலில்லாத சத்து, கீரைகளில் மிக அதிகமாக உண்டு. மலச்சிக்கலை ஒழித்து ரத்தத்தை சுத்திசெய்கின்றமையினால் கீரைகளினால் மிக நன்மை உண்டு. பழங்கள் உடம்புக்கு மிக நன்மை பயப்பன என்பது அனைவருமறிந்த விஷயம். ஆகவே கூடுமான வரையில் தானிய உணவைக் குறைத்து காய் கறிகளை அதிகப்படுத்தி கீரைகளை நிறைய சேர்த்துக்கொண்டு பழங்களையும் உபயோகப்படுத்திக் கொண்டுவந்தால், உடல் நலத்துக்கு உறுதி பயப்பதாகும்.

நம் நாட்டில் பணக்காரர்கள் கூட அரிசியை அதிகமாக உபயோகப்படுத்துகின்றார்களே ஒழிய சத்துள்ள காய் கறி, கீரை, பழவகைகளை மிகக் குறைவாக உட்கொள்ளுகிறார்கள். சத்துள்ள உணவு உட்கொள்ள வேண்டுமாயின், அரிசியோடு கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு எந்தெந்த தானியம் இவற்றில் கிடைக்கின்றதோ அதைச் சேர்த்துக்கொண்டு, பருப்பு, காய்கறி, கீரை பழங்களை நிறையச் சேர்த்துக் கொண்டு அதோடுகூட பால், தயிர், மோர், நெய் இவைகளை விசேஷமாக உபயோகிக்கவேண்டும். ஏழைகள்கூட, அரிசியைக் குறைத்து மற்ற தானியங்களை உபயோகப்படுத்திக் கொண்டு காய் கறி, கீரைகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுவதனால் செலவும் குறைந்து உடலும் உரம்பெற்று விளங்குவார்கள். பால் சேர்த்துக் கொள்ளும்போது பசும் பால், எருமைப்பாலே வேண்டுமென்பதில்லை. வெள்ளாட்டுப்பால் பசும்பாலை விட சில அம்சங்களில் சிறந்தது. ஆகையால் வெள்ளாட்டுப் பால் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும்.

புளி, மிளகாய், மிளகு, மஞ்சள், பூண்டு போன்றவை உணவை சுவைக்கச் செய்வதற்காகவும் பசி எடுப்பதற்காகவும் உபயோகப்படுகின்றனவே ஒழிய, உணவின் சத்தை அவை அதிகரிப்பதேயில்லை. இதை நாம் உணர்ந்து இவைகள் அதிகமாக விலையேறிக்கொண்டு செல்லுகின்ற இக்காலத்தில், கூடியவரையில் இந்த உபகரணங்களைக் குறைத்துக் கொள்ளுதல் நலம்.

### காபி, தேநீர் தேவையில்லை.

காபி, தேயிலை பானங்கள் உணவல்ல. அவைகள் மனிதனை ஊக்குவதற்காக ஏற்பட்டன. ஆனால் இவ்வுஷ்ணப் பிரதேசத்தில் அவைகள் அவசியமில்லை இது பலருக்குத் தெரிந்தும் அப்பழக்கத்தை விடாத காரணத்தினால் சர்க்கரைக்காகப் பலவிதமாகத் திண்டாடுகிறார்கள். இப்பானங்கள் குறைந்தால் இங்கே கிடைக்கும் சர்க்கரை நமது தேவைக்கு அதிகமாகவே இருக்கும்.

### விவசாயிகளுக்கு அரசாங்க உதவி.

தற்போது நாம் வாழ்வது யுத்தகாலம். யுத்த காலத்தில் நாட்டில் எப்போதும் உணவுப் பொருள்கள் அதிகமாக இருக்கவேண்டும். நமக்கு வெளி நாடுகளிலிருந்து வந்து கொண்டிருந்த அரிசி நின்றுவிட்டது. மற்றும் போக்குவரத்து சாதனங்கள் தடைப்படுமாயின், உணவுப்பொருள்கள் அதிகப்பட்டாலொழிய, மக்கள் இன்னலுறுவார்கள். ஆகையால் சமாதான காலத்தைவிட, யுத்த காலத்தில் உணவுப் பொருள்கள் அதிகரிக்கப்பட வேண்டும். இதை யுணர்ந்துதான், அரசாங்கத்தார் அதிக உணவுப் பொருள்களைப் பயிர் செய்வதற்காக ஓர் இயக்கம் ஆரம்பித்து கரம்பாகக் கிடந்த பல நிலங்களை உழவர்களுக்குப் பயிர் செய்யக் கொடுத்துள்ளார்கள். விதைகள் வழங்குவதற்கும் பணம் ஒதுக்கி வைத்துள்ளார்கள். ஐக்கிய நாணயச்சங்கங்கள் அதிகமாகக் கடன் கொடுத்துவருகின்றன. இவை காரணமாகப் பயிர் செய்யாமல் கரம்பாகக் கிடந்த பல நிலங்கள் பயிர் செய்யப்படுகின்றன. ஆனால் இது போதாது. பொது மக்கள் இவ்விஷயத்தின் முக்கியத்தை நன்குணர்ந்து கூடிய வரையில் உணவுப்பொருள் பயிரை அதிகரிக்க வேண்டும். இன்னும் அதிகமான நிலங்கள பயிரிடப்படவேண்டும். உழைப்பு அதிகரித்து உணவுப்பொருள் அதிகரிக்கப்படவேண்டும்.

இஃதன்றி காய் கறிகள் கீரை வகைகள் பயிரிடப்படும் தோட்டங்கள் மிக மிக அதிகரிக்கப்படவேண்டும். நாட்டுப்புறங்களிலுள்ள கொல்லைகளில் எந்தெந்தக் காய் கறிகள், கீரை வகைகள் பயிரிடமுடியுமோ அவைகளையெல்லாம் பயிரிட்டு ஜனங்களின் உணவுக்கு அவைகள் உபயோகப்படவேண்டும். நகரங்களிலுள்ள தோட்டங்களிலெல்லாம் காய் கறிகள், கீரை வகைகள் பயிரிடப்படவேண்டும். சென்னை நகர சபையும், மற்ற ஸ்தலஸ்தாபனங்களும், தோட்டங்கள் வைத்துள்ள சங்கங்களும் இவ்விஷயத்தில் அதிக சிரத்தை காட்டவேண்டும். தங்கள் வசத்திலுள்ள உத்தியான வனங்களில் எங்கெங்கு சாத்தியமோ அங்கங்கு காய்கறி, கீரைகள் வளர்க்கப்படவேண்டும். புதிதாக எங்கெங்கு இயலுமோ அங்கங்கு காய்கறி தோட்டங்களை ஏற்படுத்தவேண்டும். அஃதன்றி மேற்கூறிய சபைகள் இவ்விஷயமாகத் தீவிரமாகப் பிரசாரம் செய்யவேண்டும். பணக்காரர்கள் தங்கள் தோட்டங்களில் அழகுக்காக புஷ்பச் செடிகளும் மற்ற செடிகளும் வைத்து வளர்ப்பதை விட்டு, மக்களுக்குப் பயன்படும்படியான காய்கறிகளை வளர்க்கவேண்டும். தங்கள் தோட்டக்காய்கறிகள் புதிதாகவும் ருசியாகவும் சாப்பிட ஏதுவாகவும் இருக்கும். தேவைக்கு அதிகப்பட்டவைகளை கடைக்கனுப்பி பலருக்கும் உபயோகப்படுத்தலாம்.

நகரங்களிலுள்ள ஏழைகள், நடுத்தரமானவர்கள்கூட, புழைக்கடை போன்ற இடங்களில் எங்கெங்கு சாத்தியமோ அங்கங்கு காய் கறி, கீரைகளைப் பயிரிடவேண்டும். காய் கறிகள் விலையேறியிருக்கின்ற இக்காலத்தில், நம்மவர்கள் அவஸ்தைப்படாமல் சுத்தமான புதிதான தங்கள் தோட்டக் காய் கறிகளையே உபயோகப்படுத்தலாம். இம்மாதிரி ஏற்பட்டால் இம்முயற்சியிலீடுபட முடியாதவர்களுக்குக் காய் கறிகள் கடைகளில் கிடைப்பதற்கு ஏதுவாகும்.

கடைசியாக ஒன்று கூற விரும்புகிறேன். அனாவசியமாக உணவுப் பொருள்களைச் செலவு செய்யக்கூடாது. பொது விருந்துகளை யெல்லாம் நிறுத்திக்கொள்ளவேண்டும். கலியாணம் போன்ற சுப காலங்களிலும் மற்ற அசுப காலங்களிலும் எவ்வளவுக் கெவ்வளவு குறைந்த எண்ணிக்கையினரைக் கூப்பிடமுடியுமோ, அவ்வளவுதான் கூப்பிட வேண்டும். ஒரு வேளைக்கு மேற்பட்டு சாப்பாடுவைத்துக கொள்ளவே கூடாது. இம்மாதிரி செய்வது நம்மிடமுள்ள உணவுப் பொருள்களைச் சிக்கனஞ் செய்வதாகும். அதோடு ஏழைகளுக்கு அனாவசியமான செலவு, தீர்க்கமுடியாத கடன் இவைகளெல்லாம் ஒழியும். எந்தெந்த பொருள்கள் கிடைப்பதரிதாக இருக்கின்றனவோ, அவைகளின்றி வாழ முடியுமானால், அவைகளுக்காகத் தேடியலையக்கூடாது. அவைகளை ஒழித்துவிடவேண்டும். மிக மிக அவசியமானவையாயின் வேறு பொருள்களைக் கொண்டு மாற்றிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அப்படியும் இயலவில்லையாயின், நம் தேவையைக் குறைத்துக் கொள்ள முயலவேண்டும்.

### உணவுப் பொருள் விநியோகம்.

அரசாங்கத்தார் தானியங்கள் அதிகமாகக் கிடைக்குமிடங்களில் உத்தியோகஸ்தர்களை நியமித்து அவர்கள் மூலமாக வாங்கி தானியங்கள் பயிராகாத சென்னை நகரத்துக்கும் குறைவாக உள்ள மற்ற ஜில்லாக்களுக்கும் ஒரு அளவு நிர்ணயித்து அனுப்புகிறார்கள். அப்படியிருந்தும் அரிசி கிடைக்காமல் ஜனங்கள் கஷ்டப்படுகின்றார்கள். இதற்குக் காரணம் சில வியாபாரிகள் விலை உயருமென்று தானியங்களை விற்பனை செய்யாமல் நிறுத்திவைப்பது, வியாபாரிகளிற் சிலர் அதிக விலையேறட்டுமென்று மூட்டைகளை அடுக்கிவைப்பது. மூன்றாவது அரிசி கிடைக்குமோ கிடைக்காதோ என்ற பயத்தினால் பொது மக்களில் பலர் அரிசியை கிடைக்கும் வரையில் வாங்கி சேகரிப்பது. இவற்றை விட பெரிய தவறும் துரோகமும் வேறே கிடையாது. ஏனென்றால் இவர்கள் உபயோகப்படுத்தாமல் அடுக்கி வைத்திருக்கும் அளவுக்கு, ஏழைகளுக்கு அரிசி கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் கஷ்டப்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இதைத் தடுப்பதற்காக, அரசாங்கம் தண்டனை ஏற்படுத்தி இருக்கிறது. ஆனால், இது பொது மக்கள் பயத்தினால் வாங்குவதைத் தடுக்கப் போதுமானதல்ல. அவர்களே தாங்கள் செய்யும் தவறை உணர்ந்து ஏழைகளுக்கு விளையும் துன்பத்தை ஒழிக்க முயலவேண்டும். அனாவசியமாக வாங்கிச் சேர்த்துவைத்துக் கொள்ளக்கூடாது.



# வருகிறார்கள்! வருகிறார்கள்!!

முன்காலத்தில் எல்லாம், ஒரு ஊரிலே நாடகம் நடக்கப் போகிறது என்றால், அந்த நாடக தினத்திற்குச் சில நாட்களுக்கு முன்னால், 'வருகிறார்கள்! வருகிறார்கள்! யார்? யார்? யார்?' என்றுள்ள சுவரொட்டி விளம்பரங்கள் எங்கு பார்த்தாலும் ஒட்டப்பெறும். அப்புறம் அதைப்பற்றியே எங்கும் பேச்சாக இருக்கும். நாடக தினத்தன்று, பிரமாண்டமான நோட்டீஸ் ஒட்டப்படும்.

அதேபோல, ஜெர்மனியிலும், ஜெர்மனியின் ஆதிக்கத்தில் உள்ள நாடுகளிலும், இத்தாலியிலும், 'வருகிறார்கள்! வருகிறார்கள்! வரப் போகிறார்கள்!' என்ற பேச்சே அதிகமாக இருக்கும் என நம்புகிறோம். 'வருகிறார்கள்! வருகிறார்கள்! யார்? யார்? யார்?' என்று கேட்பதுமட்டுமின்றி, 'எங்கே? எங்கே? எப்பொழுது? எப்பொழுது?' என்ற கேள்விகளையும் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கக் கூடும்.

### முன்னறிவிப்பு நோட்டீஸ்.

தாங்கள் சீக்கிரம் வரப்போவதை, பிரபல நேசதேசக் 'கம்பெனியார்' முன்கூட்டியே விளம்பரப்படுத்தி வருகிறார்கள். இரவிலும், பகலிலும் எந்த நேரத்திலும் ஜெர்மனியின் அதிகாரத்தின்கீழ் உள்ள நாடுகளில் விழுந்துகொண்டிருக்கும் பல்லாயிரம் கணக்கில் உள்ள வெடிகுண்டுகள், முன்னறிவிப்பு விளம்பரம் இல்லாமல் வேறென்ன? இந்த நேசதேசக் 'கம்பெனியார்' ஐரோப்பாவில் வந்து இறங்கினதும், பெரிய 'நாடகம்' நடக்கும். அதற்கிணையானதை, உலக சரித்திரத்தை எழுத்தெழுத்தாக எத்தனை தரம் வாசித்தாலும், அதிலே கண்டுபிடிக்க முடியாது.

அவ்வளவு பெரிய முறையில் காரியத்தை நடத்தப் பிரமாதமான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. வடகாப்பிரிக்கா இப்பொழுது ஒரு பெரிய படையெடுப்புத் தளமாக்கப்பட்டு வருகிறதாம். அங்கிருந்து கிளம்பும் விமானிகள், ஸார்டீனியா, ஸிஸிலி போன்ற அச்சு நாட்டுத் தீவுகளைத் தாக்கிப் பொடிப்பொடியாக்க முயன்று வருகிறார்கள். வட ஆபிரிக்கக் கரைகளிலே, படையெடுப்பிற்காக, நேசதேசப் படைகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறதாம். வடக்கே நார்வேக்கு எதிரிலிருந்து, தெற்கே ஸிரியாவரை நேசதேசத்தினர், சித்தமாகக் காத்திருக்கிறார்கள்.

ஜலத்தைக்கடந்து செல்ல, ஏராளமான கப்பல்கள் தயாராக இருக்கின்றன. அவற்றிக்குப் பாதுகாப்பளிக்கவோ, எண்ணற்ற விமானங்கள் 'எப்போ புறப்படவேண்டும்? எப்போ புறப்படவேண்டும்?' என்று துடித்துக்கொண்டிருக்கின்றன.

மூன்று வருடங்களுக்கு முன்பு, இம்மாதிரி கப்பல்களில்போய் ஐரோப்பாவில் இறங்கி, ஐரோப்பாவில் சண்டை நடத்துவது என்று சிலர் சொன்னபொழுது, பலர் சிரித்தார்கள். 'கப்பலிலேயாவது, போவதாவது? போய்த்தாக்குவதாவது?' ஜெயிப்பதாவது? அவ்வாறு போனால், ஜெர்மனிக்காரன் சும்மா உங்களை விட்டுவிட்டு, வெற்றிலை பாக்குவைத்து வரவேற்பானா என்ன? என்று கேலிசெய்து கொண்டிருந்தார்கள் பலர்.

ஆனால், நேசதேசத்தலைவர்களின் தளராத உறுதி, மற்றும் பரந்த அறிவு, ஆழ்ந்த ஞானம் போன்ற அனுபவம் ஆகிய காரணங்களால் ஜெர்மானியரிடமிருப்பதைவிட, நேசநாடுகளின் விமானசக்தி அதிகமாகி விட்டது.

இந்த யுத்தம் விமான சக்தியாலேயே பெரும்பாலும் ஜெயிக்கப்பட வேண்டும் என்பதை நேசத்தலைவர்கள் நன்கு தெரிவித்து விட்டார்கள். ஆகாயத்திலே நல்ல பாதுகாப்போடு கிளம்பும் கப்பல்களுக்கு ஆபத்தே அதிகம் நேரிடாது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தானே! நீர்மூழ்கிகள் விஷயம் என்ன என்று கேட்கலாம். அவற்றைத்தான் ஒரு தினுஸாக அடக்கியாச்சே! அமெரிக்க சர்க்கார், இது விஷயத்தில் கடுமையான நடவடிக்கை எடுத்து வந்தார்கள். அதுகாரணமாக, ஒரு நாளுக்கொரு நீர்மூழ்கியாக, நீரிலேயே மூழ்கி ஒழியத் தொடங்கியது. அதற்கப்புறம், அமெரிக்காவிலிருந்து அதிகப்படியான சோல்ஜர்கள் யுத்த அரங்கங்களுக்குக் கிளம்பி யிருக்கிறார்கள். அவர்கள் செல்லும் கப்பல்களுக்கு நல்ல பாரா இருக்கிறது. தூங்கிக்கொண்டிருப்பவன் தொடையிலேதான் அச்சு நாட்டார் கயிறு திரிக்க முடியுமே ஒழிய, உஷாராக உள்ளவர்களிடை அவர்கள் அதிகம் அணுகுவதேயில்லை.

### ஹிட்லர் இடிந்து போய் விடுவார்.

அமெரிக்கா, இந்த யுத்தத்திற்காகச் செலவிடும் தொகையைக் கேட்டாலே, ஹிட்லர் இடிந்துபோய் உட்கார்ந்து விடுவார் என நினைக்கிறோம். கடற்படையை விஸ்தரிக்க 2,763 ஆயிரம் கோடி டாலர் என்றால், யாருக்குத்தான் திகைப்பு ஏற்படாமலிருக்கும். மே மாதத்தில் மட்டும், அமெரிக்காவிலே 7,200 விமானங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஆறு மாதங்களுக்குள் யுனைடட் ஸ்டேட்ஸிலே, 17 லக்ஷம் பேர்கள், அதிகமாக ராணுவத்தில் சேர்ந்து விடுவார்களாம்.

ஆனால் ஹிட்லருக்கும் எல்லாமே பஞ்சமாகி வருகிறது. நேசதேச விமானிகள் இடைவிடாது பொழியும் குண்டு மழையில் சிக்கி, ஜெர்மனிக்காக வேலைசெய்யும் தொழிற்சாலைகள் திணறுகின்றன. பல இடங்களில் பல தொழிற்சாலைகள பாழாகிவிட்டன. பாக்கி உள்ளவற்றிலே வேலை செய்ய ஆட்கள் கிடைக்கவில்லை. பிரான்ஸிலிருந்தும், பிடிபட்ட நாடுகளிலிருந்தும் எத்தனைக்காலம்தான் ஆட்களை இழுத்து வரமுடியும்? இத்தலியோ தன் தலையைக் காத்துக்கொள்ள வேண்டி வந்துவிட்டது. ஆகவே, அதனிடமிருந்து உதவி எதிர் பார்க்கமுடியாது. மற்ற நாடுகளிலோ, பொதுமக்கள் உள்ளூரக் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். நேசதேசத்தார் வந்து விட்டார்கள் என்றால், அவர்களும் தைரியமாகத் தலைதூக்கி நின்று கலாட்டா செய்யக்கூடும்.

இதற்குப் பயந்தே, ஜெர்மானிய அதிகாரிகள், எங்காவது ஓரிடத்தில் சந்தேக முண்டானாலும், அங்கு விரைந்துசென்று, பேத, தண்டோபாயங்களால் அனைத்தையும் அடக்கிவிடுகிறார்கள்.

ஜெர்மானியத் தொழிற்சாலைகள் பாழாவதனால், ஜெர்மனியின் யுத்த முயற்சிக்குப் பங்கம் ஏற்படுவது இயற்கைதானே? அந்த முயற்சிக்குப் பங்கம் ஏற்படத் தொடங்கிவிட்டால், பெரிய படையெடுப்புக்களைப் பற்றியோ யுத்தத்தை வெகுகாலம் நீடித்து நடத்துவதைப் பற்றியோ, ஜெர்மனியால் எண்ணிப்பார்க்க முடியுமா? இத்தனைகாலம் தாங்கள் செய்த அக்ரமங்கள் அச்சு நாட்டுத் தலைவர்களுக்குத் தெரியாதா என்ன? ஆகவே, நாம் அகப்பட்டுக் கொண்டால், சரியாக நிமிர்த்திவிடுவார்கள் என்ற பீதியும் அவர்களுக்கு இருக்குமல்லவா? ஆகவே, பிரசாரத்தாலாவது, கையில் இருப்பதைக்கொண்டாவது, கடுமையாகத் தாக்கி, தப்ப வழி உண்டா என்று அவர்கள் பார்க்கக் கூடும்.

### ஜெர்மன் பொது மக்கள் நம்பிக்கை குறைகிறது.

ஜெர்மன் தொழிற்சாலைகள் பாழாகி வருவதை, ஜெர்மனியின் வாயாடிப் பிரசார மந்திரி கப்பல்ஸ் துரைகூட, தமது பெரிய வாயால் மூடிவைக்கமுடியாது. ஆகவே பொதுமக்களுக்கு, தங்களை ஆளுவோர் மீதுள்ள நம்பிக்கை குறையத்தானே செய்யும்?

நேசதேசத்தார் இந்தப்பக்கம் தலைகூடக் காட்டமுடியாது என்று சொல்லிக்கொண்டிருந்ததெல்லாம் பொய்யாகிவிட்டது. பிறரது நாடுகளில் யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்த நிலைமை மெல்ல, மெல்ல மாறி வருகிறது. கூடியசீக்கிரமே ஜெர்மனிக்கே நேசதேசத்தார் யுத்தத்தைக் கொண்டு போய் விடுவார்கள் போலிருக்கிறது.

ஆகவே, ஜெர்மன் மக்களின் மனோதிடம் தளரத்தொடங்கி இருக்கலாம. இதைப்பற்றி, அவர்கள் உள்ளத்திலே தைரியத்தை புகுத்துவதற்காக், கப்பல்ஸ் துரை 'நமது தொழிற்சாலைகளில் ஒரு சாமான் செய்வதும் சரி, நேசதேசத்தார் பத்துசெய்வதும் சரி! எல்லாம் ஒரே மட்டம்!' என்று பேசத் தொடங்கியிருக்கிறார்.

ஜெர்மன் மக்கள் அவரது பேச்சை நம்பினால், நிச்சயமாக மோசம் தான் போகப்போகிறார்கள். மேலும் மேலும் வெற்றியைச் சம்பாதித்துக் கொடுத்துக்கொண்டிருந்தவரை ஹிட்லரிடமும், அவரது சகாக்களிடமும், ஜெர்மானியருக்கு ஒரு மரியாதையும், பயமும் இருந்துவந்தன. ஆனால், அவரே, 'இனி முன்னேறித்தாக்குவது சிரமம். ருஷ்யர்கள் மகா பலசாலிகளாக இருக்கிறார்கள். அவர்களைத் துரத்தியடித்து வெற்றி பெறுவது ரொம்ப கஷ்டம். ஆகவே பாதுகாப்பு யுத்தத்தைத் தான் இனி தொடர்ந்து நடத்தவேண்டும்' என்று சொல்வாரானால், அவர் மீதுள்ள நம்பிக்கை, ஜெர்மானியருக்கு சட்டெனக்குறைந்துவிடும். இவ்வளவுகாலம் அவர் சொன்ன ஆசை வார்த்தைகள் எல்லாம் தம் பிடிக்கு உதவாது போயிற்று; அதற்குமாறாக, கணக்கற்ற ஜெர்மானிய யுவர்கள் தங்கள் உயிரை இழந்தார்கள். தங்கள் வாழ்க்கையும், வீடு, வாசல்களும் பாழாயின என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்க ஹிட்லர் இடம் கொடுத்துவிட்டால், அப்புறம், யாரோ ஒருவர் ஜோஸியம் சொல்லியிருப்பதுபோல, ஜெர்மானியரிலேயே யாராவது ஒருவர் ஹிட்லரைக் கொலைசெய்துவிடக்கூடும்.

மேற்கொண்டு அதிக ஆள் நஷ்டத்தை உண்டுபண்ண ஹிட்லர் தயங்குகிறார் என்றோ, அல்லது போதுமான பலம் அவரது படைகளுக்கு இல்லையென்றோ தான் இப்பொழுது தோன்றுகிறது. இல்லாவிட்டால், இத்தனைக் காலம் அவரது படைகள் ருஷ்யாவில் ஏதும் செய்யாமல் இருப்பதேன்?

வசந்தகாலம் வந்ததும், சட்புட் என பெரிதாகப் படையை எடுத்து வருவார்கள், இந்த வருஷம் இதுவரை சும்மா இருப்பதேன்? ஏதோ, இழந்துபோன இடங்களை, சகல தியாகங்களையும் செய்து, எப்பாடுபட்டாவது பிடித்துவிடவேண்டும் என்று ஹிட்லர் உத்திரவு போட்டிருக்கிறாராம். இதை இப்பொழுது யாரால் மறுக்க முடியும்? அவரை யார், இப்பொழுது துணிந்து கேட்கமுடியும்? ஆகவே, ருஷ்யாவிலே, ஆங்காங்கே நாஜிப்படைகள் முண்டிப் பார்க்கின்றன. ருஷ்யர்களோ மகா சூரர்களாக இருக்கிறார்கள். ஹிட்லரின் திட்டங்களை எல்லாம் பாழ்ப்படுத்தும் பலே ஆட்களாக இருக்கிறார்கள்.

### எங்கே பார்த்தாலும் படையெடுப்புப் பேச்சு.

எங்கு பார்த்தாலும் படையெடுப்புப் பேச்சாகவே இருக்கிறது. ஜிப்ரால்டருக்கு பல யுத்தக்கப்பல்கள் வந்து போய்க் கொண்டிருக்கின்றனவாம். ஸிரியா அருகே பெரிய கப்பற்படை தயாராக இருக்கிறதாம். நேசதேசத்தார் எங்கே வந்து தாக்குவார்கள் என்பது தெரியாததால், ஹிட்லருக்கு ஏகப்பட்ட கவலையும், வேலையும் உண்டாகியிருக்கின்றன. பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும் அவர் பலமான மோட்டார்ப் படையைக் கொண்டு வைத்திருக்கிறாராம். எங்கு ஆபத்து என்றாலும், வாயு வேகமாகப் பறக்குமாம் இந்தப் படை. முன்னாலா, பின்னாலா?

தான் பிடித்த நாடுகளில் மட்டுமின்றி, ஜெர்மனியின் எல்லையிலும் அதிபலமான பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர் செய்திருக்கிறாராம். ஆனால் ஒரு விஷயம். அவரது ஸ்பெஷல் படையில், முன்பிருந்த சூரர்கள் எல்லாம் மறைந்துவிட்டார்கள் போலிருக்கிறது. அசல் ஆரிய ரத்தம் உடலிலே ஓடும் பேர்வழிகள்தான் அதிலே முன்பு சேர்க்கப்பட்டு வந்தார்கள். ஆனால், இப்பொழுதோ, எல்லா ஊர்க்காரர்களும் அதில் சேர்க்கப்படுகிறார்களாம். கிரீஸில் உள்ள முஸ்லீம்களில் பலர்கூட அதில் சேர்ந்திருக்கிறார்களாம். ஆள் பஞ்சம் ஏற்பட்டிருப்பதற்கு, இதைவிட வேறு ருஜு வேண்டுமா என்ன?

### அச்சு நாடுகளைப் பணிய வைக்கப் பரீட்சை.

அச்சுநாட்டாரை, இடைவிடாத விமான வெடிகுண்டு வீச்சாலே பணியவைத்துவிடலாம் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அந்த முறையையும் பரீக்ஷித்துப் பார்த்து விட நேசதேசத்தார் எண்ணியிருப்பது போலவே தான் காரியங்கள் நடந்துவருகின்றன. இத்தாலிக்குச் சொந்தமான இரண்டு தீவுகளை இந்த முறையாலேயே வெற்றிகரமாகப் பிடித்துவிட்டார்கள் அல்லவா? இப்பொழுது ஸிஸிலி மீது கண் போட்டிருக்கிறார்கள். மத்யதரைக்கடலில் கிரீட் தீவிலே ஜெர்மனியர் பல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அது ஜெர்மானியரிடம் இருக்கும் வரை தென் கிழக்கு ஐரோப்பாவை அவர் பாதுகாக்க முடியலாம். ஆனால், சென்ற வாரம், நேசதேசத்தார், சில நாட்களுக்குள் ஸிரியா துருக்கி எல்லைப்புறத்தை அடைத்துவிட்டார்கள். அப்பொழுது பிரமாதமான துருப்பு நடமாட்டங்கள் இருந்தனவாம்.

டாடிகானஸ் தீவுகளில் உள்ள இத்தாலியர்களை வெளியேற்ற முஸோலினி தீர்மானித்திருக்கிறாராம். இத்தாலிய நகரங்களும் நேசதேசக் குண்டுவீச்சால் பொடியாகி வருகின்றன.

இத்தாலியர் மீது இரக்கங்கொண்டு, நேசதேசத்தார் ஆல்ஜியர்ஸ் ரேடியோ மூலம் இத்தாலியர்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். "இத்தாலிய தொழிற்சாலைகளும், ரயில்களும் ஜெர்மனிக்காக வேலை செய்கின்றன. ஆதலால் அவற்றை விடாது தாக்கப்போகிறோம். ஆகவே, நீங்கள் மரியாதையாக அந்நகரங்களைவிட்டு, வேறு இடங்களுக்குப் போய்விடுங்கள். உங்கள் தலைவர்கள் ஹிட்லருடன் உறவு வைத்துக்கொண்டிருப்பதன் பலன்தானிது" என்பதே அந்த ரேடியோ எச்சரிக்கையின் சாராம்சம்.

ஆல்ஜியர்ஸ் என்றதும் வட ஆப்ரிக்காவில் சென்ற வாரம் நடந்த ஒரு அரிய சம்பவம் நினைவிற்கு வருகிறது. நமது மன்னர்பிரான் சென்ற வாரத்தில், வட ஆப்ரிக்காவிற்கு விஜயம் செய்து, விமானத்

திலும், ரயிலிலும், மோட்டாரிலும், பல நூறுமைல்கள் பிரயாணம் செய்து, நேசதேசத்தார் சாதித்த காரியங்களை நேரிலே பார்த்து மகிழ்ந்து, அனைவரையும் நேரில் சந்தித்துப் பேசிப் புகழ்ந்திருக்கிறார். கூடிய சீக்கிரமே நமது மன்னர்பிரான், வெற்றிக்கொடி தாங்கியப் படைகளுடன் பெர்லின் நகரத்துக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பம் வந்துவிடும் என்றே மனப்பூர்வமாக நம்புகிறோம்.

## ருஷ்யர்கள் சாதித்த மகத்தான காரியங்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலே, சென்றவாரம் நடந்த மற்றொரு விசேஷமும் ஞாபகத்திற்கு வருகிறது. அதுதான் ருஷ்யர் போரில் இறங்கிய பின், இரண்டாண்டுகள் கழிந்து முடிந்ததை யொட்டி நடந்த விழா. இந்த விழாவை ருஷ்யர்களும் சரி, உலகோருஞ் சரி நன்றாகவே கொண்டாடினார்கள். இதை எவ்வளவு சிறப்பாகக் கொண்டாடினாலும் தகும். ருஷ்யர்கள் இந்த இரண்டாண்டுகளில் சாதித்த காரியங்கள் மகத்தானவையாகும். யுத்தத்தின் போக்கையே மாற்றிய ருஷ்ய வீரர்களை உலகம் என்றுமே மறக்காது. திடமனதுடனிருந்தால் எத்தகைய ஆபத்தையும் சமாளிக்கலாம். எமன் வாயிலிருந்து கூட உயிரைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு வந்துவிடலாம். என்பதற்கு எதிர் காலத்திலே ஸ்டாலின்கிராட் ஒரு பெரிய உபமானமாக உலகெங்கும் கூறப்படப் போகிறது.

ருஷ்யர்கள் எவ்வளவோ கஷ்டநஷ்டங்களைச் சமாளித்துக் கொண்டு, சென்ற இரண்டாண்டுகளாகப் போராடி வந்திருக்கிறார்கள். இன்னும் ஒரு பெரிய போரை அவர்கள் சமாளித்தாகவேண்டும். இப்பொழுது அங்கு உணவுப்பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள், அதை பிரிட்டனும், அமெரிக்காவும் தீர்க்காமலிருக்குமா என்ன ?

இங்கே எல்லாம் இப்படியிருக்க, ஜப்பான் என்ன செய்கிறது ? பர்மாவில் உள்ள ஜப்பானியர்களுக்கு மன அமைதியில்லாது அடித்து வருகிறார்கள். இந்தியாவிலிருந்து செல்லும் விமானிகள், அடுத்த அக்டோபரில், மழைகாலம் ஓய்ந்ததும், பர்மாவை மீட்டு சீனாவிற்குச் செல்லும் பர்மா பாதையைத் திறந்து, இந்தியாவிலிருந்த இரவல் குத்தகைச் சட்டப்படி சாமான்களனுப்பும் திட்டத்தை அமுல்படுத்த நேசதேசத்தவர்கள் ஆரம்பிக்கக் கூடும் என்கிறார்கள் விஷயமறிந்தவர்கள்.

## இந்தியாவிற்குப் புதிய வைசிராய்.

இந்தியாவிற்குப் புது வைசிராயாக, இதுவரை இந்திய சேனாபதியாக இருந்த வேவல் துரை நியமிக்கப்பட்டுவிட்டார். பதவியேற்றதும் அவர் வேவல் பிரபுவாகி விடுவார் என்று தெரிகிறது. வருகிற அக்டோபரில் இவர் பதவியேற்பாராம். வட ஆப்பிரிக்க யுத்தத்திலும் இந்திய சேனாபதியாகவும் பெயர் பெற்ற இந்த வீரர், வைசிராயாக நியமிக்கப்பெற்றதை எல்லோரும் வரவேற்பார்கள் என்றே நினைக்கிறோம். இவருக்குப் பதிலாக, ஜெனரல் ஆக்கின்லக் இந்திய சேனாபதியாகிவிட்டார். இனி ஜப்பானுடன் சண்டையை நடத்த ஒரு தனி ஆளைப் போடப்போகிறார்களாம். ஏனென்றால், இந்தியா ஒரு பெரிய தளமாக ஆகிவிட்டது. இங்கிருந்துதானே ஜப்பானியர்மீது பாயவேண்டும். ஆகவே இந்த தளத்தை நன்றாக்க் கவனிக்கவே இந்திய சேனாபதிக்கு வேலை சரியாக இருக்குமல்லவா ?

அதோடு தூரக் கிழக்குத்திசைச் சண்டையை நடத்த ஒரு தனி ஆள் நியமிக்கப்படுவார் என்பதிலிருந்தே, ஜப்பானியரை நேச தேசத்தார் மறந்துவிடவில்லை என்பது வெளியாகிறதல்லவா ?

## ஜப்பான் எப்படி முன்னேற முடியும் ?

ஜப்பானியருக்கு இப்பொழுது ஒன்றும் சுகமில்லை. அவர்கள் எங்கும் தற்காப்பு ஏற்பாடுகளே செய்துகொண்டிருப்பதாக ருஷ்யப் பத்திரிகை ஒன்று எழுதுகிறது.

தற்காப்பு ஏற்பாடுகளின்றி, வேறு என்ன செய்யமுடியும் ஜப்பானால் ? அமெரிக்க உதவியால், பஸிபிக் பிரதேசத்திலே ஆஸ்திரேலியாவின் கையும் பலத்துவிட்டது. வடக்கேயிருந்தும், தெற்கேயிருந்தும் இடுக்கிபோல ஜப்பானியரை அமுக்க நேச நாட்டினர் திட்டம் போட்டுக்கொண்டு, மெதுவாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வாரம் குடால்கனலைத் தாக்கப் போய் 77 விமானங்களையும், டார்வின் நகரைத் தாக்கப்போய் 22 விமானங்களையும் ஜப்பான் இழந்திருக்கிறது. இப்படி மொத்த மொத்தமாக விமானங்கள் அழிந்துகொண்டிருந்தால், ஜப்பான் எப்படி முன்னேறுமய்யா ?

சீனாவிலோ ஜப்பானியரை சீனர்கள் துரத்திக் கொண்டிருக்கிறார்கள். நாற்பது நாட்களில் நாற்பதாயிரம் பேர்களை பலிபோட்டிருக்கிறார்கள். இப்படியே போய்க்கொண்டிருந்தால், என்று தான் முடிவு காணப்போகிறது ஜப்பான் ?

உலகிலே பல பாகங்களிலே பூகம்பங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. பூதேவிக்கே ஹிட்லர் ஆரம்பித்த இந்த அநியாய யுத்தம் பிடிக்கவில்லை போலிருக்கிறது. அநியாயம் என்றால் யாருக்குத்தான் பிடிக்கும்.

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

இதற்கு முன்பு 1927-ம் வருஷம் யார்க் பிரபுவாக இருக்கும்போது அதாவது 16 வருஷங்களுக்கு முன்பு அவர் இங்கே விஜயம் செய்திருக்கிறார். பண்டலேரியாவையும் மற்ற இத்தாலியத் தீவுகளையும் நேசநாடுகள் கைப்பற்றிய விழாவை அன்று தான் மால்டாவில் கொண்டாடுவதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

'வாலெட்டா அரண்மனையில் கவர்னர், நிர்வாக சபையங்கத்தினர்களையும் நீதிபதிகளையும் சந்தித்தார். மால்டா தீவுகளின் கவர்னரான லார்டு கோர்ட்டுக்கு பீல்ட் மார்ஷல் கோலை மன்னர்பிரான் கொடுத்தார்.' ஏர் வைஸ் மார்ஷல் சர் கீத் பார்க், பிரதம நீதிபதி சர் ஜார்ஜ் போக் இவ்விருவருக்கும் 'சர்' பட்டத்தை வழங்கினார்.

அன்று காலை அத்தீவைச் சுற்றிப் போகும்போது எல்லா விடங்களிலும் அவரை குதூகலத்தோடு வரவேற்றனர். கோவில் மணிகள் முழங்கின. துறைமுகத்திற்கு மன்னர்பிரான் விஜயம் செய்தார். அங்கிருந்து செங்கலியா என்னும் இடத்திற்குப் போய் வெடிகுண்டுகளால் நாசப்பட்டிருந்த ஒரு கோவிலைப் பார்வையிட்டார். அங்கே வாதலா அரண்மனையில் உணவருந்தினார்.

மன்னர்பிரான், மால்டா தீவுகளை விட்டுப் புறப்படும்போது அந்தத் தீவுகளின் கவர்னரான வைகௌண்ட் கோர்ட் கீழ்க் கண்ட செய்தியை மன்னர் பிரானுக்கு அனுப்பினார் :—

"இந்தத் தீவின் சரித்திரத்திலே, இந்நாளை யாரும் மறக்க மாட்டார்கள். தங்கள் விஜயம் வெற்றி விஜயமாக அமைய வேண்டு மென்று இந்தத் தீவின் படைகளும் பொது ஜனங்களும் கோருகிறார்கள். மத்திய தரைக் கடலின் நடுவில் நேசநாடுகளின் ஒரு படைத் தளமாக மால்டா இருந்து கொண்டிருந்தும், இந்தக் கோட்டைக்குத் தாங்களாகவே விஜயம் செய்து எங்களைக் கண்ணியப்படுத்தியது பற்றி நாங்கள் பெரிதும் நன்றி செலுத்துகிறோம். இந்தத் தீவுக்கு ஒரே நோக்கந்தான். அது மாட்சிமை தங்கிய தங்களுக்குத் தொண்டாற்றுவதில் தவரக்கூடாது என்பதுதான்".

### மன்னர்பிரான் பதில்



மன்னர்பிரான், மால்டா கவர்னருக்குக் கீழ்க்கண்ட பதில் செய்தியை யனுப்பியிருக்கிறார் :—

"நான் வடாப்பிரிக்காவிற்கு விஜயம் செய்தபோது, மால்டாவிற்கு வர வேண்டும் என்னும் என் ஆசையை நிறைவேற்றிக் கொண்டேன். அப்போது மால்டாவிலுள்ள படைகளுக்கும் பொது ஜனங்களுக்கும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மற்ற பகுதிகளிலுள்ள மக்களின் நல்லுணர்ச்சியைத் தெரிவிக்க இதை ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டேன். நீங்கள் இன்று எனக்களித்த பெருமிதமான வரவேற்பு என் உள்ளத்தைக் கவர்ந்தது. நம் கொடும் எதிரிகள் மகா கடுமையாக இந்தத் தீவுக் கோட்டையைத் தாக்கிய போதிலும், அதை எதிர்த்து நின்ற உங்கள் வீரம், உங்கள் விசுவாசத்திற்குச் சான்றாக விளங்குகிறது. மால்டா மக்களுக்கு மனமார நன்றி கூறுகிறேன். எதிர் காலத்தில் அவர்கள் இனிது வாழ்வார்களாக !



**தொழிலாளர் பகுதி**

# ஜெர்மன் பொய் மூட்டை

மாலை 5 மணியாயிற்று. தொழிற்சாலை சங்கு பிடித்து விட்டது. ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் விரைந்து வெளியேறுகிறார்கள். அவர்களுள் ஒருவர் மேஸ்திரி. அவருடன் ஒரு இளந் தொழிலாளியும் போகிறார். இவ்விருவரும் நாள்தோறும் பத்திரிகை படிக்கும் பழக்கம் உள்ளவர்கள். அதில் காணப்படும் விஷயங்களை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆசை இளைஞனுக்கு உண்டு. எனவே தன் மேஸ்திரியை பலபல கேள்விகள் கேட்டுக்கொண்டே வந்து கொண்டிருந்தான். அவ்விருவருக்கும் நடைபெற்ற சம்பாஷணை வருமாறு :—

இளைஞன்.—ஜெர்மனியில் கைத் தொழில்கள் மிகவும் உயர்ந்த முறையில் நடைபெறுவதாகச் சொன்னார்களே ?

மேஸ்திரி.—அதைவிடச் சிறந்த முறையில் வேறெங்கும் நடைபெறுவதில்லையா ?

இளைஞன்.—நடைபெறுமானால், 3 வருஷங்களுக்கு முன்பு, உற்பத்தியில் தங்களை வெல்ல ஒருவராலும் முடியாது என்று ஜெர்மானியர்கள் சொல்லுவார்களா ?

மேஸ்திரி.—சரி, அப்படியானால், இன்றைய நிலைமை என்ன ? ஜெர்மன் தொழிற் சாலைகளையெல்லாம் பிரிட்டிஷ் விமானப் படைகளும் நேசதேச விமானப்படைகளும் வெடி குண்டுகளை எறிந்து தவிடுபொடி செய்கின்றனவே.

இளைஞன்.—அப்படியானால், ஜெர்மானியர்கள் கையைக் கட்டிக் கொண்டு சும்மாவாகவா இருக்கிறார்கள் ?

மேஸ்திரி.—துப்பாக்கியில் குண்டிருந்தால் தானே !

இளைஞன்.—நீர்மூழ்கிக் கப்பல் பலம் ஜெர்மனிக்கு மிகவும் அதிகமல்லவா ?

மேஸ்திரி.—இந்த நீர்மூழ்கிகளும் வேட்டையாடப்படுகின்றன. அன்றியும் ஏராளமான கப்பல்களை நேச நாடுகள் கட்டுகின்றன.

இளைஞன்.—அப்படியானால் ஜெர்மனியின் கை சோர்ந்து விட்டது என்று தான் அர்த்தமோ ?

மேஸ்திரி.—இதிலே உனக்கென்ன சந்தேகம் ! துனீசியாவில் ஜெர்மன் படைத் தலைவர் சரணடையவில்லையா ? தம் கூட்டாளியாகிய இத்தாலிக்கு உதவுவதாகக் கூறி, சமயத்தில் ஜெர்மனி கையை விரித்துவிடவில்லையா ?

இளைஞன்.—எதைக் கொண்டு இப்படிச் சொல்லுகிறீர்கள் ?

மேஸ்திரி.—உண்மையிலேயே இத்தாலிக்கு ஜெர்மனி உதவியிருந்தால் அடுத்தடுத்து 3 நாட்களில் பண்டலேரியா, லெம்புசோ, லினோசா ஆகிய 3 தீவுகளும் நேசதேசத்தினர் கைக்கு இவ்வளவு எளிதில் வருமோ ?

இளைஞன்.—அது சரி ! ஜெர்மன் விமானங்கள் இங்கிலாந்தின் மேல் பறந்து வந்து குண்டுகளை எறிகின்றனவே ! இதிலிருந்து ஜெர்மன் விமான பலம் குறையவில்லையென்று தெரிகிறதல்லவா ?

மேஸ்திரி.—நான் முன்பே சொன்னேன். நீ கவனிக்கவில்லை. பண்டலேரியா முதலிய 3 தீவுகளும் எதனால் நேச நாடுகளிடம் சரண் புகுந்தன ? ஜெர்மன் விமானப் படை உதவி கிடைக்காததனால் அல்லவா ? ஜெர்மன் விமான பலம் அதிகமா யிருந்தால், அந்தக் கேந்திர ஸ்தானத்தை விட்டுவிடுவார்களா ஜெர்மானியர்கள் ?

இளைஞன்.—சென்ற 13-ம் தேதி ரோம் வானொலி நிலயத்திலிருந்து பேசிய ஒருவர், பண்டலேரியா ஒரு சிறு அற்பமான தீவு என்று தானே குறிப்பிட்டார். அதைக் காப்பாற்ற வேண்டியது அவ்வளவு முக்கியமானதாக அவர்களுக்குத் தோன்றாமலிருக்கலாம்.

மேஸ்திரி.—அப்படியானால், அதே நாளில் டோக்கியோ வானொலி நிலையம் என்ன சொன்னது தெரியுமா ? 'பண்டலேரியா தீவு நேச நாடுகள் கைவசமானபடியால், மத்தியதரைக் கடலின் நிலைமையே பெரிதும் மாறிவிட்டது.' என்று கூறியது. என்றாலும் இத்தாலியும் ஜப்பானும் அச்சு நாடுகள் தான்.

இளைஞன்.—அப்படியானால், ஏன் ஒன்றிற் கொன்று மாறுபாடாகக் கூறுகின்றன ?

மேஸ்திரி.—சமயத்திற் கேற்றபடி பேசுவதில் முதல் தாம்பூலம் கொடுக்கவேண்டும் அச்சு நாடுகளுக்கு.

இளைஞன்.—பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க விமானப் படையும் ஜெர்மன் பிரதேசங்களைக் கடுமையாகத் தாக்குவதனால் ஜெர்மானியர்களுக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டதா ?

மேஸ்திரி.—சேதம் மாத்திர மல்ல. தொழிற்சாலைகள், போக்கு வரவு சாதனங்கள், மின்சார ஸ்தாபனங்கள், அணைகள் முதலிய அனைத்தும் பாழாகி விடும்.

இளைஞன்.—அப்படியானால், எந்தக் கைத் தொழிலும், சாகுபடியும் செய்ய முடியாது போய் விடுமே ! மக்கள் பட்டினி கிடந்து வாடும்படி நேருமே !

மேஸ்திரி.—அவர்கள் வாழ ஒட்டாதபடி செய்வது தான் நேசநாடுகளின் நோக்கம்.

இளைஞன்.—அப்படியானால், இது எப்படி ஜனநாயகமாகும் ? எல்லா மக்களும் இனிது வாழ உதவுவதல்லவா நேச நாடுகளின் ஜனநாயகம் ?

மேஸ்திரி.—முதலில் நாஜிகளின் விஷப் பல்லைப் பிடுங்கிய பிறகு தான் ஜனநாயகத்தைக் குறித்து நாம் அங்கே யோசிக்க வேண்டும். ஆகையினால் தான், அவர்களுடைய வாழ்க்கை நிலையை நாம் அழிக்க வேண்டும்.

இளைஞன்.—ஜெர்மனியை யடுத்துள்ள முஸ்லீம் நாடுகள் அச்சு நாடுகளுக்கு விரோதமாகவா இருக்கின்றன ?

மேஸ்திரி.—இல்லை, அதனால் தான் முஸ்லீம் நாடுகளை நேச நாடுகளுக்கு விரோதமாகத் தூண்டிவிடப் பார்க்கிறார்கள் ஜெர்மானியர்கள்.

இளைஞன்.—பெர்லின் வானொலி நிலயத்திலிருந்து முஸ்லீம் நாடுகளுக்கு விடுக்கும் ஒலிபரப்புப் பிரசங்கத்தில், ஜெர்மானியர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள் முஸ்லீம்களுக்காக. அப்படி யிருக்க, ஏன் முஸ்லீம்கள் அச்சு நாடுகளோடு சேர வில்லை.

மேஸ்திரி.—முஸ்லீம் அரசாங்கங்கள் அவ்வளவு ரோஷங்கெட்டிருக்க வில்லை. 9 வருஷங்களுக்கு முன்பு ஒரு பாவமு மறியாத அபிசீனியா என்னும் முஸ்லீம் நாட்டை இத்தாலி தாக்கிய போது பரிந்து பேசாத ஜெர்மனி, இப்போது மட்டும், ஏன் பரிந்து பேசுகிறது ?

இளைஞன்.—சமயத்திற் கேற்ற வேஷமா ?

மேஸ்திரி.—முஸ்லீம் நாடுகளை நேச நாடுகளுக்கு விரோதமாகத் தூண்டி விட்டால், தன் கை வலுக்கு மென்பது தான் ஹிட்லரின் யோசனை.

இளைஞன்.—எப்படித் தூண்டி விடுகிறார்கள் ஜெர்மானியர்கள் ?

மேஸ்திரி.—முஸ்லீம்கள் மதப்பற்றுடையவர்கள். ரஷ்யாவில் மசூதிகளை அரசாங்கத்தார் இடித்துத் தள்ளி விட்டார்களென்றும் மதச் சடங்குகளை நடத்த ஒட்டாமற் செய்கிறார்களென்றும் தம் வானொலிப் பிரசங்கங்களில் பிரசாரஞ் செய்தார்கள்.

இளைஞன்.—ரஷ்யர்கள் அப்படிச் செய்யலாமா ?

மேஸ்திரி.—சுத்தப் பொய். தமக்குப் பரிபூரண மத உரிமை வழங்கப்பட்டிருப்பதாக சோவியத் பெரிய மப்டி, சமீபத்தில் கூடப் பேசினார்.

இளைஞன்.—இப்படியும் ஒரு அரசாங்கம் பொய் சொல்லலாமா ?

மேஸ்திரி.—அச்சு நாடுகளின் வாழ்வெல்லாம் பொய் பிரசாரத்தினால் தான் நடந்து வருகிறது.

இளைஞன்.—அண்ணா ! தங்கள் வீடு வந்து விட்டது. மற்ற சந்தேகங்களை நாளைக்குக் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன்.

# "நான் இந்தியாவின் உண்மையான நண்பன்"

## பீல்ட் மார்ஷல் வேவல் பிரசங்கம்

லண்டனில் இந்தியா மந்திரி காரியாலயத்தில் இந்திய வைசிராயாக நியமிக்கப்பட்டிருக்கும் சர் ஆர்ச்சிபால்ட் வேவல் 22-ம் தேதி பத்திரிகா நிருபர்களைச் சந்தித்து ஒரு அறிக்கை விடுத்தார். வைசிராயாக நியமனமான பிறகு அவர் விடுக்கும் முதல் அறிக்கை இது தான். அதில், தான் இந்தியர்களின் உண்மையான நண்பன் என்று கூறிக் கொண்டார். தன் நிலையை உயர்த்திக் கொள்ள இந்தியா கொண்டுள்ள ஆசையைத் தான் முழு மனதோடு ஆதரிப்பதாகக் கூறினார். அப்போது அவர் கூறிய தன் சுருக்கமாவது :—

எதிர் காலத்தில் இந்தியா ஒரு உயர்ந்த நிலையை யடையும் என்பதில் எனக்கு நம்பிக்கை யுண்டு. என் வாழ் நாட்களில் மிகச் சிறந்த 5 வருஷங்களை ஒரு இளம் இராணுவ உத்தியோகஸ்தனாக இந்தியாவில் கழித்தேன். இரண்டு வருஷங்கள் இந்தியப் படைத் தலைவனாக விருந்து மிகச் சிறந்த வாழ்க்கை நடத்தினேன். இப்போது இந்தியாவிற்குச் சேவை செய்ய எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

இந்தியா முன்னேற்ற மடைய வேண்டுமானால், யுத்தத்தைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்த வேண்டும். இதற்கு ஜப்பானியர் தொல்லைதள் ஒழிய வேண்டும். நேச நாடுகளுக்கு, கீழ்ப் பிரதேசங்களில் சப்ளை தளமாக உபயோகிக்க இந்தியா ஒரு கேந்திர ஸ்தானமாக விளங்குகிறது. எந்த அளவு விரைவாகவும் அதிகமாகவும் இந்தியா யுத்த முயற்சியில் ஈடு படுகிறதோ, அவ்வளவு விரைவாக வெற்றி கிடைக்கும். முன்னேற்ற நோக்கங்களும் ஈடேறும். பரிபூரண சுயராஜ்யமும் கிடைக்கும்.

### யுத்த காலத்திலும் அரசியல் முன்னேற்ற மடையலாம்

நான் இந்தியாவிற்கு இராணுவக் கோலத் தோடு போக வில்லை. யுத்தம் முடியும் முன்பு இந்தியா அரசியல் முன்னேற்றம் அடைய முடியாது என்றும் நான் சொல்ல மாட்டேன். அங்கே இராணுவ ஆட்சியை நடத்த வேண்டுமென்பது என் எண்ணமில்லை. மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அரசாங்கத்தார் கொடுத்துள்ள வாக்குறுதிகள் எந்த வகையிலும் பலவீனப்படாமலும் வாபீசாகாமலும் இருக்க வேண்டுமென்பது தான் என் எண்ணம்.

இராணுவ வாழ்க்கையி லீடுபட்டிருந்த என் மனம் இராணுவப் பழக்கந் தான் கொண்டிருக்கும் என்று சிலர் நினைக்கலாம். நான் சிவில் பழக்கமும் உடையவன் தான். மற்ற நாடுகளின் அரசாங்க அனுபவம் எனக்குண்டு. இந்திய வைசிராய் நிர்வாக சபை அங்கத்தினராகவுமிருந்து இந்திய அரசியல் பிரச்சினைகளைத் தெரிந்துக் கொண்டிருக்கிறேன். இந்தியா ஒரு பரந்த நாடு. அதைக் குறித்த எல்லா விஷயங்களையும் உணர்ந்து கொள்ளுவதென்பதும் முடியாத காரியம். ஆகவே, இந்தியாவைப் பற்றிய எல்லா விவரங்களையும், நான் பதவி ஏற்றுக் கொள்ளும் முன்பாகவே, இங்கேயே படித்தும் கேட்டும் தெரிந்து கொள்ளுவேன். பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் இந்தியாவில் செய்யப்பட வேண்டிய வேலைகள் மிகவும் உண்டு. இது இந்தியர்கள் செய்து



இந்திய வைசிராயாக நியமிக்கப்பட்டிருக்கும் பீல்ட் மார்ஷல் வேவல்.

கொள்ள வேண்டிய வேலை தான். என்றாலும் இந்தத் துறைகளில் நான் அனுதாபங் கொண்டிருந்தால், அவை முன்னேற வழியுண்டு என்று நினைக்கிறேன்.

நான் இந்தியப் பொது மக்களை விட, இந்தியப் படையினரைத் தான் அதிகமாகப் பார்த்திருக்கிறேன். நான் படைத் தலைவர் பதவியை விட்டு விலகும் போது, அவர்களுக்கு ஒரு செய்தி யனுப்புவேன். அப்போது இந்தியப் படையினரின் வீரத்தையும் விசுவாசத்தையும் வெகுவாகப் பாராட்டுவேன். இது வரை நான் வெற்றி பெற்றதற்கெல்லாம் காரணம், இந்திய வீரர்கள் தான். அவர்கள் மீது எனக்கு இயல்பாகவே ஒரு அன்பு பிறக்கிறது.

மிகக் கஷ்டமான தோர் நிலைமையைச் சமாளிக்க வேண்டி யிருக்கும் என்பது பற்றி எனக்குக் கொஞ்சமும் சந்தேக மில்லை. என்றாலும் இந்தியாவின் எதிர்கால நல் வாழ்வில் எனக்குப் பூரண நம்பிக்கை யுண்டு.

# இத்தாலிக்கு மால்டா போன்றது, பான்டலேரியா தீவு

மால்டாவைப் போன்றது தான் பாண்டலேரியா தீவும். சிசிலியக் கால்வாயின் திறவுகோல் போன்றது. டியுனிஸை நேசநாடுகள் கைபற்றுகிறவரை இந்த தளத்திலிருந்துதான் அச்சு நாடுகள் தம் விமானப் படைகளையும், நீர்மூழ்கிக்கப்பல்களையும் போர்முனைக்கு அனுப்பிக்கொண்டிருந்தன.

சுமார் 2,000 வருஷங்களுக்குமுன்பு கார்தே ஆரியர்கள் இதை ஒரு தளமாகக் கொண்டுதான் சிசிலியைத் தாக்கிப்பிடித்தார்கள். அதன் பொருட்டு அதை அரண் செய்துகொண்டிருந்தனர். இந்தத் தளம் எவ்வளவு முக்கியமானதென்று அபிசீனிய யுத்தத்தின்போது முசோலினி கண்டார். ஆகவே 1937-ம் வருஷம் அவர் ஒரு உத்தரவு பிறப்பித்தார். அதன்படி அந்தத்தீவிற்கும், அதையடுத்துள்ள கடலுக்கும் மேலே விமானங்கள் பறக்கக்கூடாது. அதுவரை தம் நாடுகளிலேயே அடைந்து கிடந்து வந்த ஐரோப்பிய நாடுகள் கலவரப்பட்டு துள்ளி எழுந்தன. ஸ்பெயின் தேசத்தையடுத்துள்ள கடலைப்பற்றி ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டன. அப்போது இத்தாலிய அரசாங்கத்தார் ஒரு அறிக்கை விடுத்தனர். கப்பற்படைத் தளங்களும் விமான தளங்களும் கட்டும் பொருட்டுத் தான் இந்தக் கட்டளை பிறப்பித்திருப்பதாக முசோலினி ஒரு அறிக்கை விடுத்தார். இங்கு வெகு இரகசியமாகவே அரண்கள் கட்டப்பட்டன. யுத்தம் ஆரம்பமாவதற்குச் சற்று முன்னதாக, பாறையைத் துளைந்து ஒரு விமான நிலையம் அமைத்தார். தரைக்கடியில் அவர்கள் கட்டிவைத்திருந்த விமானத் தளங்களெல்லாம் பயன்படாமற் போய்விட்டன. குடிக்கத் தண்ணீர் கிடைக்காதபடியால், நேச நாடுகளிடம் சரண்புகவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இங்கே பொது ஜனங்கள் சுமார் 9,000 பேர்கள் வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள் ; மற்றவர்கள் மீன் பிடிக்கிறவர்கள். திராட்சையை வெகுவாகப் போற்றிவளர்த்து "ஒயின்" தயாரித்து ஏற்றுமதி செய்கிறார்கள். இங்கே ஒரு பெரிய கிராமமும் பல சிறு கிராமங்களுந்தான் இருக்கின்றன. குடிக்கத் தண்ணீர் கிடைப்பதுதான் கஷ்டம். வெந்நீர் ஊற்றுக்களைத்தான் பெண்கள் உபயோகிக்கிறார்கள்.



# தம் நாட்டைக் காப்பாற்ற இத்தாலியால் முடியாது

## அச்சு அறிக்கையின் தொனியில் மாறுதல்

சென்ற மாதம் 21-ம் தேதி இந்நாடு முழுமைக்கும் ஒரு குதுகல நாளாக இருந்தது. நேசநாடுகள் வட ஆப்பிரிக்காவில் அடைந்த பெருமிதமான வெற்றிகளை உலகத்தின் நாகரிகமான நாடுகளோடு நாமும் கொண்டாடினோம். இந்த வெற்றியானது நேசநாடுகளுக்கு எவ்வளவு பலத்தை கொடுத்திருக்கிறது என்பதும் அச்சு நாட்டினர்களை, குறிப்பாக இத்தாலியை எவ்வளவு பரிதாப நிலைமைக்கு ஆளாக்கிவிட்டது என்பதும் கவனிக்கத்தக்கது, என்று திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து கே. நஞ்சுண்டையா அவர்கள் ஜூன் மாதம் 6-ம் தேதி ஒலிபெருக்கிய சொற்பொழிவில் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது :—

### துனீசிய வெற்றியால் ஏற்பட்ட நன்மை.

துனிஸியா வெற்றியானது இத்தாலியின் ஆப்பிரிக்க சாம்ராஜ்யத்தைப் பறித்துவிட்டது என்பது மாத்திரமல்ல. மத்தியதரைக் கடலில் நேசநாடுகளுடைய பிடிப்பையும் வலுப்படுத்தியிருக்கிறது. மத்ய கிழக்கு, இராக், பார்ஸியா முதலிய நாடுகள் சம்மந்தப்பட்டவரை, மறுபடியும் மத்யதரைக் கடல் வழியாகக் கப்பல் போக்குவரத்து ஏற்பட்டதால், சுமார் 20 லக்ஷம் டன் எடையுள்ள வர்த்தகக் கப்பல்கள் காப்பாற்றப்பட்டதுமன்றி எல்லாக் கப்பல்களும் இம் மார்க்கமாகவே போவது என்று ஏற்பட்டால் கிட்டத்தட்ட 50 லக்ஷம் டன் எடையுள்ள கப்பல்கள் தாராளமாக போக்குவரத்து செய்ய வசதி ஏற்படும். வட ஆப்ரிக்கா வெற்றி, மத்தியதரைக் கடலுக்கு மாத்திரம் சம்மந்தப்பட்டதல்ல. நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவுக்கும் சைனாவுக்கும் இதுவரை அனுப்பப்பட்டு வந்த ஸப்ளைகளை, செங்கடல், ஸுயஸ் கால்வாய் வழியாக இனிமேல் இரட்டிப்பாகப் பெறமுடியும். அதுவும் இதுவரை ஸப்ளைகளை சுமந்து வந்ததை விட குறைவான எண்ணிக்கையுள்ள கப்பல்களால் கொண்டு வரமுடியும். தெளிவாகக் கூறவேண்டுமென்றால், மத்தியதரைக் கடலில் ஸப்ளை கப்பல்களின் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த சண்டைக் கப்பல்கள், மனித பலம், அவைகளின் போரிடும் சக்தி ஆகியவை எல்லாம் எதிரியைத் தாக்குவதற்காக உபயோகிக்கும் சக்தியை இன்று பெற்றிருக்கிறது. 9,000 மைல்கள் ஆப்ரிக்காவின் மேற்கிலும் கிழக்கிலும் நம்முடைய கப்பல் பாதைகளைப் பாதுகாக்க உபயோகப்படுத்தப்பட்டு வந்த ஏராளமான கப்பல்கள், வட ஆப்ரிக்காவின் வெற்றியின் பயனாக இத்தாலியின் பேரிலும் ஜெர்மனியின் பேரிலும் எதிர்த்துத் தாக்கும் சக்தியைப் பெற்றிருக்கின்றன.

துனிஸியா வீழ்ச்சியை கோபல்ஸும் ஹிட்லரும் அலட்சியப்படுத்திக் கூறினது மல்லாமல், நேசதேசங்களின் வெற்றியின் அளவைக் குறைத்துக் கூற பகீரதப் பிரயத்தனப்பட்டார்கள். உண்மையில் முஸோலினியும் அவருடைய பாஸிஸ்டு கூட்டமும் வட ஆப்ரிக்காவில் தாங்கள் முழுமையும் இழந்துவிடவில்லையென்றும் ஆனால் நிலைமை கொஞ்சம் கேவலமாய் இருக்கிறதென்றும் இத்தாலி மக்களிடத்தில் கொக்கரித்தார்கள். ஆனால் எவ்வளவு நாளைக்கு இத்தாலியர்களை முட்டாள்களாக வைத்திருக்கமுடியும் ? சென்ற 3 வாரங்களாக நேசநாட்டினர் ஆகாயப்படை இத்தாலியின் கரையோரங்களையும் நகரங்களையும் தாக்கும் வேகத்தைப் பார்த்தால் இத்தாலியை காப்பாற்றமுடியும் என்ற நம்பிக்கை அந்நாட்டுப் பொதுமக்களுக்கு அற்றுப்போயிருக்க வேண்டும். ஏன் ? இத்தாலியின் கொடுங்காலத்து நண்பன் ஹிட்லருக்கே அற்றுப் போயிருக்கவேண்டும்.

* * * * *

### இத்தாலி நேசநாட்டினர் வயப்பட்டால் ?

ஓடிந்திருக்கும் ஜெர்மனியர்களுடைய ஒத்தாசை கொண்ட இத்தாலியர் தம் நாட்டையாவது காப்பாற்றப்போகிறார்களா ? இத்தாலி நேசநாட்டினர் கைக்கு வந்துவிட்டால், பால்கன் நாடுகளில் அச்சு ஆதிக்கம் கலைந்துவிட வழி ஏற்படும். அதனுடைய அர்த்தம் என்ன ? ஜெர்மனியின் முடிவுகாலம் நெருங்கிவிட்டது என்பதுதான். இந்த விபரீதமான நிலைமை ஜெர்மனிக்குத் தெரியாதென்பது அல்ல. நன்கு தெரியும். சென்ற போரிலே பல்கேரியா வீழ்ச்சிதான், ஜெர்மனியின் தோல்விக்கு காரணமாக இருந்தது. ஹிட்லர் மறந்துபோயிருக்க மாட்டார். ஆப்ரிக்காவில் தலைதெறிக்க ஓடிய தளகர்த்தன் ரோமலை பால்கன் நாடுகளுக்கு ஹிட்லர் அனுப்பியிருப்பதாக சமீபத்தில் வந்த செய்தி ஒன்று கூறுகிறது.

உலகத்தைக் கட்டியாள நினைத்த ஹிட்லர் இன்று தன் நாட்டைக் காத்துக்கொள்ளச் செய்யும் பெருத்த முயற்சிகளில் இதுவும் ஒன்றாயிருக்கலாம். அப்படியாயின் இத்தாலியைவிட எல்லா விதத்திலும் பலமும், திறமும் படைத்த நேசநாட்டினர்களின் படையெடுப்பினின்றும் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பை இத்தாலியிடம் தன்னந் தனியாக ஜெர்மனி விடப்போகிறதா ? இத்தாலியை நேசநாட்டினர்கள் பிடித்துக் கொள்வதனால் உள்ள அபாயம் ஜெர்மனி அறியாதா ? இத்தாலியின் சோதனையில் அச்சுநாட்டுத் தலைவன் துணை செய்யாவிட்டால், ஜெர்மனியின் படைபலம் குன்றிப் போய்விட்டதென்று உலகம் எண்ணாதா ? ஆம். இவையத்தனையும் ஜெர்மனிக்குத் தெரியும். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இந்த ஜெர்மனியின் ராக்ஷஸப்படை பலம் இன்று பெரும் பங்கு குன்றிபோய்விட்டது. இந்நிலையில் இத்தாலிக்கு துணை போவ தெங்கே ?

### அச்சு பலம் குறைகிறது : நேச நாடுகள் பலம் உயருகிறது.

இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் வட ஆப்ரிக்காவில் ஏற்பட்ட தோல்வியினால் எவ்வளவு பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்பது சிந்திக்கத் தக்கது. ஸ்டாலின்கிராடிலே அடைந்த நஷ்டங்கள் போன்றது. சொல்லப் போனால் அதைவிட விபரீதமானது. ஸ்டாலின்கிராடில் 3,30,000 படை பலத்தில், செஞ்சேனை வீரர்களால் கைதியாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 90,000 தான். துனீஸியாவிலோ இரண்டரை லக்ஷம் படைகள். அதுவும் எல்லா யுத்தத் தளவாடங்களுடன் சரண் அடைந்திருக்கின்றனர் அல்லது கைது செய்யப்பட்டிருக்கின்றனர். 1940-ம் வருஷம் வட ஆப்ரிக்கா யுத்தம் தொடங்கினது முதல் துனீஸியாவின் இறுதி வெற்றிவரைக்கும், அச்சுநாட்டினரின் படைகளின் சேதம் அளவுக்கு மீறியது. கொல்லப்பட்டோ, காயப்படுத்தப்பட்டோ, கைதியாக்கப்பட்டோ, ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் மீண்டும் உபயோகப்படாத மாதிரியில் சேதப்படுத்தப்பட்டிருக்கிறவர்களுடைய எண்ணிக்கை 8 முதல் 9 லக்ஷம் வரை. இதன் பயனாக ஸோவியத் ரஷ்யாவை தாக்கும் சக்தி பெற்றிருந்த உயர்தரமான பெரும் பகுதிப் படைகளை ஒரு பக்கம் அழித்தாய்விட்டது. நேசநாட்டினர்களின் பொதுவான படைபலங்களோ, எதிரிகள் கண்டு பிரமிக்கத் தகுந்த மாதிரியில் உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

### இத்தாலியில் உள்நாட்டு நிலைமை சரியில்லை.

வட ஆப்ரிக்காவில் நேச நாட்டினர் அடைந்த வெற்றியின் பயனாக, இத்தாலியப் பொதுமக்கள் மத்தியில் ஊக்கமும் உணர்ச்சியும் கெட்டுப் போய்விட்டது. இந்தத் தொல்லையைச் சரிப்படுத்தும் வேலையே முஸோலினிக்கும் ஹிட்லருக்கும் சரியாக இருக்கும். அச்சுநாட்டினரின் தலைவர் ஹிட்லர் இத்தாலியில் ஏற்படும் இம்மாதிரியான சம்பவங்களைப்பற்றி கவலை எடுத்துக் கொண்டதாக உலகத்தினருக்குக் காட்டிக் கொள்ளாமலிருக்கலாம். தங்களின் பிரசாரத்தினால் உலகத்தினர் கண்களில் மண்ணைத் தூவப் பிரயத்தனப்படலாம். ஆனால் இத்தாலியில் நாட்டு நிலைமை அச்சுநாட்டினர்களின் எண்ணத்துக்கு தகுந்த மாதிரியில் இல்லையென்பது மட்டும் நிச்சயம். சமீபத்தில் முஸோலினியின் பேச்சுக்களும், செய்கைகளுமே அவற்றை ருசுப்படுத்துகின்றன. தமது கட்சியின் விரோதிகளுக்குத் துப்பாக்கித் தோட்டாக்கள் பரிசு. தன்னுடைய இனத்தைச் சேர்ந்தவர்களையே, எண்ணிக்கை எவ்வளவு அளவில் உயர்ந்திருப்பினும், கவலைப்படாது ஒழித்து வடிக்கட்டுதல், மந்திரிசபையை மாற்றியமைத்தல், இவைகளெல்லாம் முஸோலினியுடைய சங்கடங்களை தெளிவாக்குகின்றன.

### நேச நாடுகளின் மகா நாட்டுத் திட்டம்.

போரின் போக்கு நிச்சயமாக நேசநாட்டினர்களுக்குச் சாதகமாகத் திரும்பிவிட்டது ; நான்கு மாதங்களுக்கு முன்னாலேயே முடிவின் ஆரம்பத்தைக் கண்டுவிட்டோம் என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி கூறியது நமக்கு நினைவிருக்கலாம். சரித்திர பிரசித்தி பெற்ற வாஷிங்டன் மகாநாட்டிலே, நேசதேசங்களின் போர்த்திட்டம் உருவாக்கப்பட்டு விட்டது. உலகத்தில் இரு பெரும் தலைவர்கள் சர்ச்சில்—ரூஸ்வெல்டு இதற்கு முன் நான்கு முறை சந்தித்தனர். முதலில் 1941-ம் வருஷம் ஆகஸ்டில், இரண்டாவது அதே வருஷ டிஸம்பர் மாதம், மூன்றாவது 1942-ம் வருஷம் ஜூன். இந்தச் சந்திப்பின் போதுதான, டோப்ருக் வீழ்ச்சி. நான்காவது கஸாப்ளாங்காவில் இவ் வருஷம் ஜனவரி மாதத்தில். கஸாப்ளாங்கா மகாநாடு நேசநாட்டினர்களின் தளர்ச்சியை ஒழித்து உணர்ச்சியை ஊட்டியது. ஈஜிப்து காப்பாற்றப்பட்டது. லிபியா, எதிரிகளின் தோல்வியினின்று விலக்கப்பட்டது. ட்ரிபோலி கைப்பற்றப்பட்டது. ஐந்தாம் முறையாக வாஷிங்டனில் மீண்டும் அத் தலைவர்கள் சந்தித்த அதே நாட்களில், வட ஆப்ரிக்காவில் நேசதேசங்கள் வெற்றியின் சிகரத்தைக் கண்டன. இவையனைத்தும் நமக்கு மகிழ்ச்சி உண்டாக்கும் செய்திகள். ஜெர்மனியை தன்னுடைய நாட்டிலோ, இத்தாலியிலோ அல்லது பிடிபட்ட தேசங்களிலோ யுத்த தளவாடங்களை எடுத்த அளவில் உற்பத்தி செய்ய விடுவதில்லை யென்பது எங்களின் உறுதியானதும் முடிவானதுமான திட்டம், என்று ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் உலகத்துக்கு வாஷிங்டனிலிருந்து உறுதி கூறியிருக்கிறார்கள். மத்யதரைக்கடலின் மத்தியிலிருந்து நேசநாட்டினரின் ஆகாயப்படைகள் இத்தாலியில் எடுத்த அளவில் தாக்க முற்பட்டிருக்கின்றன. இத்தாலியின் கடல் தளங்கள், விமான நிலையங்கள் மற்றும் முக்கிய ஸ்தானங்கள் ஆகாய வெடிகுண்டுகளின் ருசியை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. தேசங்களின் அளவை, அதனால் உண்டாகும் பிரதிபலன்களை இத்தாலியும் இப்பொழுது உணரத் தொடங்கி யிருக்கிறது. அச்சுநாட்டுத் தலைவர்கள் ஹிட்லரும் முஸோலினியும் சந்தித்து துக்கம் விசாரித்துக் கொண்டது உலகமறியும். போர் ஆரம்பத்தில் இவர்களுடைய சந்திப்பை மிக உன்னிப்போடும் ஆவலோடும் உலகம் கவனித்து வந்தது. சென்ற மாரிகால சந்திப்பு, உலகத்தின் கவனத்தை இழுக்க முடியவில்லை. இப்பொழுது அவர்களுடைய எண்ணமெல்லாம் படைகள் திரட்டி பல்வேறு நாடுகளை பாதம் தாங்கிகளாகச் செய்வது என்பது அல்ல. நடுக்க முற்றிருக்கும் தங்கள் நாட்டினர்களை நேசநாட்டினர்களின் படையெடுப்பினின்றும் எப்படி பந்தோபஸ்து செய்துகொள்ளவது என்பது தான். அவர்கள் விட்ட அறிக்கையின் தொனியே மாறியிருக்கிறது. எதிர்த்துத் தாக்குவதற்கு பதிலாக பாதுகாப்பு முறைகளை வகுக்கின்றனர். எதிர்காலத்தில் அழிவுகளைப்பற்றி ஹிட்லரும் முஸோலினியும் கட்டிக் கொண்டு அழுவது பரிதாபகரமா யிருக்கிறது. பிடிபட்ட நாட்டு மக்களை, தங்களுடைய ஒத்தாசைக்கு வருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர். அந்நாடுகள் இந்த சர்வாதிகாரிகளுக்கு உதவி செய்வது, தங்களுடைய அடிமைக்கு தாங்களே உதவிக்கொள்வது வேடிக்கையாக இருக்குமல்லவா ? ஒவ்வொரு முறையும் ஹிட்லரும் முஸோலினியும் சந்தித்துத் திரும்புங்கால் முஸோலினியுடைய ஒவ்வொரு நரம்பும் வாதிக்கப்பட்டு வந்தது. கடைசிச் சந்திப்புக்குப் பிறகு, முஸோலினிக்கு பார்சவாயுவே கண்டுவிட்டது போலாகிவிட்டது.

### ஜெர்மன் இத்தாலியத் தலைவர்களைப் பிடிக்கும் வலை.

வாஷிங்டன் மகாநாட்டின் எதிரொலி, இத்தாலிக் கரையிலுள்ள தீவுகளையும் இத்தாலியப் பட்டணங்களையும் நேச நாட்டார் தாக்குவதால், இத்தாலியர் தனிமையாக அமெரிக்காவுக்கு மட்டும் தனி சரணாகதியடைய முயற்சித்ததற்கு அமெரிக்கா ஐக்யநாட்டாருடன் ஏற்பட்டிருக்கும் மகத்தான ஒப்பந்தத்துக்கு விரோதமாக, தனிச் சமாதானத்துக்கு இடங்கொடாது என்று கிடைத்திருக்கும் வாஷிங்டன் செய்தியும், சமீபத்தில் ரஷ்ய நாட்டுத் தலைவர் ஸ்டாலினை, ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் சந்திக்கப் போவதாக வந்திருக்கும் நற்செய்தியும், ஆகிய இவை எல்லாம் ஜெர்மன் இத்தாலியத் தலைவர்களைக் கட்டிப் பிடிப்பதற்கு சரியான வலை ஐக்ய நாட்டாரால் வீசப்பட்டிருக்கிறது என்பதின் நல்ல அறிகுறிகள். அவ்வலையின் ஓர் பாகம் கிழக்கேயும் பிரிக்கப்பட்டிருக்கிறது. தமது சக்திக்கு மீறி நடவடிக்கைகளை எடுத்துத் திண்டாடிக் கொண்டிருக்கிற ஜப்பானியரையும் விட்டதல்ல. ஜப்பானின் அலுஷியன் தீவுகளில் அட்டுத்தீவு இப்பொழுது பதினெட்டு நாட்களிலேயே அமெரிக்கர்களின் வசமாயிருக்கிற தென்பதே இதற்கு நல்ல ஆதாரம். இன்னும் பல மகிழ்ச்சி யூட்டும் வெற்றிகள் உண்டாகத் தக்க அறிகுறிகள் தோன்றுகின்றன. கிழக்கேயும் மேற்கேயும் ஏக காலத்தில் எதிரிகளை "தாக்கப் போகிறோம் என்று வாஷிங்டனிலிருந்து வரையறுக்கப்பட்டிருக்கிறது. மேற்குப் போர் முடிந்த பிறகு அல்ல, கிழக்குப் போர். இரண்டும் ஒரே காலத்தில். இந்த முழக்கம் வட ஆப்ரிக்காவில் நேசநாடுகள் அடைந்த வெற்றியின் எதிரொலி. எதிரிகள் நாட்டில் குழப்பமும், திண்டாட்டமும். நேசநாடுகளில் வெற்றியும், கொண்டாட்டமும். உலகத்தின் நாகரிகமும் மக்களின் சமாதான வாழ்க்கையும் நேசநாடுகளின் வெற்றியோடு பிணைக்கப்பட்டிருக்கின்றன. நேசநாடுகளின் இறுதி வெற்றிகளை விரைவில் கொண்டாட முயலுவோமாக." "முயற்சி திருவினையாக்கும்."

## பென்டலேரியா லெம்புடுசா தீவுகளின் முக்கியம்

"டெய்லி எக்ஸ்பிரஸ்" பத்திரிகையின் இராணுவ நிருபர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் :—

பண்டலேரியா நிபந்தனை யில்லாமல் சரணடைய வேண்டுமென்று ஜூன் மாதம் 8-ம் தேதி மாலை 6 மணிக்கு இறுதிக் கடிதம் துண்டுப் பிரசுர உருவத்தில் விமானங்களி லிருந்து அத்தீவில் பரப்பப்பட்டன. அங்குள்ள பொது ஜனங்கள் உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என்பது தான் இதன் நோக்கம். நிபந்தனை யில்லாமல் சரணடைகிற வரையில் தரைப்படைகளைக்கொண்டும், கப்பற்படைகளைக்கொண்டும் விமானப் படைகளைக்கொண்டும் தாக்கப்படுமென்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. அனாவசியமாக உயிர்ச்சேதம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் சாதாரணமாக இராணுவத் தலைவர்கள் இந்த முறையைக் கையாளுவது வழக்கம். அந்தத் தீவில் இந்த இராணுவம் நீங்கலாக 9,000 பேர்கள் பொதுமக்கள் வசித்துவந்தனர். சம்பவங்கள் வெகு விரைவாக நடந்துகொண்டிருந்தன. ஆகவே, நேச நாட்டுப்படைகள் அத்தீவைக் கைப்பற்றிப்போய் இறங்கியது சாதாரணமாக நடைபெறக்கூடிய சம்பவம் என்று தான் சொல்லவேண்டும். ஜூன் மாதம் 7-ம் தேதி திங்கட்கிழமைவரை பண்டலேரியா கரையிலிருந்த பீரங்கிகள் சுட்டுக் கொண்டுதானிருந்தன.

இனி லெம்புடுசாவைப் பற்றி சிறிது கவனிப்போம். இங்கே என்னென்ன பாதுகாப்புக்களை எதிரிகள் அமைத்திருக்கிறார்களென்று வேவு பார்க்கும்பொருட்டு சில கப்பற்படைக் கமாண்டோக்கள் இறங்கினார்கள். இவர்கள் லெம்புடுசாவைத் தாக்கியதைக் குறித்து ஜெர்மனியர்கள் இத்தாலியர்களுக்கு என்ன சமாதானம் சொன்னார்கள் தெரியுமா ? உண்மையிலேயே பலமாக எங்கே நேச நாடுகள் தாக்கப் போகிறார்கள் என்று தெரிந்து அச்சு நாடுகள் உஷாராகாதபடி, கவனத்தைச்சிதறடிக்கும் நோக்கத்தோடு லெம்புடுசாவைத் தாக்கியதாகக் கூறி இத்தாலியை ஜெர்மானியர்கள் சமாதானப்படுத்தினர்.

பண்டலேரியாவையும் லெம்புடுசாவையும் கைப்பற்றிக் கொண்டதனால் நேச நாட்டுப் படைகளின் தென் பகுதியிலுள்ள தடைகள் நீங்கின. அன்றியும் சிசிலிக்கு இருந்த முக்கியத்துவமும் குறைந்து விட்டது. இந்த இரண்டு தீவுகளிலும் துறைமுகங்கள் இருந்தன. இங்கே நீர் மூழ்கிக் கப்பல்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளு மிருந்தன. அன்றியும் அங்கே விமான நிலையங்களு மிருந்தன. மால்டாவிற்குப் போய்க் கொண்டிருந்த சாமான் கப்பல்களைத் தாக்க பண்டலேரியா தளத்திலிருந்துதான் நீர் மூழ்கிகளும் விமானங்களும் கிளம்புவது வழக்கம். இப்போது பண்டலேரியா தீவின் பெரும்பகுதி மனிதர் குடியிருப்புக்கு ஏற்றதல்ல. வடமேற்குப் பகுதியில் தான் தரை சமமாக யிருக்கிறது. இங்கேதான் பூமிக்குக் கீழே விமானக் கூடங்களையும் நீர் மூழ்கிகளும் இலேசான கப்பல்களும் தங்கும் துறைமுகங்களும் இத்தாலியர்கள் கட்டிமுடித்திருந்தார்கள்.

தீவில் போய் இறங்குவது எளிதல்ல. ஏனென்றால், கரையோரத்தில் கப்பல்கள் போய் நிற்பதற்கு தேவையான அளவிற்குக் கடல் ஆழமாயில்லை. அல்லாமலும் கடலையடுத்த கரையும் செங்குத்தான பாறைகளைக் கொண்டிருக்கிறது.

இது 30 சதுர மைல்கள்தான் பரப்புடையது. என்றாலும் இத்தாலியைப்போய்ப் பிடிக்க இது முதல் படியாக உதவுகிறது. அன்றியும் போராட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு இது ஏற்ற தளமாகப் பயன்படும்.

சிசிலி மிகுந்த ஆபத்தான நிலைமையிலிருக்கிறது. பண்டலேரியாவும் லெம்புடுசாவும் எப்படிக் கட்டுப்பட்டுப் போயினவோ, அது போலவே, சிசிலியும் விரைவில் கட்டுப்பட்டுப் போகும். இதையடுத்துள்ள மெசினா ஜலசந்தி 4 மைல்கள் அகலம் தான. இதன் வழியாக இத்தாலிக்கும் சிசிலிக்கும் கப்பல்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த ஓட்டம் தடைப்படாது நடைபெறுகிற வரையிலும் சிசிலி போராடிக் கொண்டிருக்க முடியும். இந்தக் கப்பலோட்டம் எப்போதும் நடக்கும் என்ற நம்பிக்கை இத்தாலிக்குக் கிடையாது. அன்றியும் விமான பலம் நேச நாடுகளுக்குத்தான் இங்கே பூரணமாயிருக்கிறது. நமது படைகள் முன்னேற ஒட்டாதபடி தடுக்கவேண்டுமென்று சென்றவாரம் அவர்கள் செய்த முயற்சி பயனற்றதாயிற்று. இதற்கு இரண்டு காரணங்கள்தான் இருக்கவேண்டும். (1) எதிரிகள் படைகளுக்குப் பெருஞ்சேதம், (2) எதிரி விமான தளங்கள் முறைப்படி தாக்கி நொறுக்கப்படுவதனால் அவை பயன்படாமற் போய்விட்டன.

மசீனா ஜலசந்தியின் இருபுறங்களிலும் அமைக்கப்பட்டிருக்கும் ஸ்தாபனங்களை இடைவிடாது தாக்கிக்கொண்டிருக்கிறோம். ஆகாயத்தில் அடியோடு அவர்களை அடித்துத் தள்ளிவிடுவது என்பது முடியாத காரியம். ஏனென்றால் இத்தாலியர்கள் தம் நஷ்டங்களை வெகு விரைவில் சமாளித்துக்கொள்ளும் திறமையுள்ளவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் சிசிலிக்குப் போகும் சப்ளை கப்பல்களை நேச நாட்டு விமானப் படைகள் நாசஞ்செய்து குலைத்து விடுவது தான் நல்லது. இதனால் சிசிலித் தீவின் கப்பல் போக்குவரவு மட்டும் பாதிக்கப்பட்டது என்பதல்ல. இத்தாலியர்களுக்கும் பெரும் கஷ்டங்களும் நேரும். எப்படியென்றால் அந்தத் தீவின் போக்குவரவு சாதனங்களெல்லாம் அதன் கரைகளிலேதான் இருக்கின்றன. ஆகவே கப்பற்படைகளைக் கொண்டும் விமானப் படைகளைக் கொண்டும் எளிதில் தாக்கலாம்.

மத்தியதரைக் கடலின் இந்தப் புதிய கட்டத்தைக் கொண்டு, ஐரோப்பா விரைவில் தாக்கப்படும் என்று சொல்லலாம்.

## குருடான வீரர்களுக்குப் பயிற்சி சாலை

டேரா டூன் என்னுமிடத்தில் இந்த மாதம் யுத்தத்தினால் கண் குருடான இந்தியப் படையினருக்கும், மாலுமிகளுக்கும், விமானிகளுக்கும் பயிற்சி யளிக்கும்பொருட்டு செண்ட் டான்ஸ்டன்ஸ் மாணவ விடுதியொன்றை ஆரம்பிக்கப் போகிறார்கள்.

இது வரை யுத்தத்தில் கண்ணிழந்த சிப்பாய்கள், தாம் இனி எதற்கும் பயன்படாதவர்கள் என்று கருதித் தம் வாழ்நாட்களை யெல்லாம் தம் கிராமங்களிலேயே கழித்து வந்தார்கள்.

முதன் முதல் இந்தியாவில் குருடர்களுக்கு 50 வருஷங்களுக்கு முன்பு தான் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பமானது. இப்பொழுது 33 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவை பெரும்பாலும் சிறுவர்களுக்காகத் தான் நடைபெறுகின்றன. அங்கே படிப்பு, எழுதுதல், சங்கீதம், கூடை பின்னுதல், நெசவு துணி பின்னுதல், பிரம்பு நாற்காலி பின்னுதல் முதலியன சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

இந்த டேரா டூன் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கிறவர் சர் ஆர்தர் பியர்சன். இவரே ஒரு குருடர். லண்டனிலுள்ள பல பத்திரிகைகளுக்கு இவர் சொந்தக்காரர். இங்கே சிப்பாய்களுக்குப் பயிற்சி யளிக்கப்படுவது மட்டுமல்ல. அவர்கள் விரைவில் பயிற்சி பெற்றுக் கொண்டால், அவர்களுடைய குடும்பங்களையும் அங்கே பராமரிக்கப்படும். வீடுகள் கட்டிக்கொள்ள பண உதவி செய்யப்படும் ; கிராமபோன்கள், இசைத்தட்டுக்கள், சங்கீதக் கருவிகள், வீடுகளுக்குள் விளையாடக்கூடிய ஆட்டப் பொருள்கள் முதலியவற்றையும் வழங்கப்படும். ஒரு மாணாக்கர் மிகவும் கெட்டிக்காரராயிருந்தால் தன் கிராமத்தி லிருந்தபடியே வேலை செய்துகொள்வதற்கு வேண்டிய கருவிகளையும் மூலப்பொருள்களையும் கொடுத்து, அவ்வப்போது மேல்பார்வை வைத்துக் கொள்ளுகிறார்கள்.

இந்தச் சங்கத்தை அரசாங்கத்தார் நடத்தவில்லை ; பொதுஜனங்களின் உதவியைக் கொண்டுதான் நடைபெறுகிறது.

கண்களை இழந்த சிப்பாய்களை மெடிகல் டைரக்டர்கள் டேரா டூனிலிருக்கும் இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்புவார்கள். அவர்கள் ஆஸ்பத்திரியி லிருக்கும்போது செனட் டான்ஸ்டன் பயிற்சிசாலையினர் அவர்கள் விஷயத்தில் அக்கரை கொள்ளுகின்றனர். பிறகு ஆஸ்பத்திரியிலிருந்து பயிற்சி சாலைக்கு அவர்களை மாற்றுகிறார்கள். சிப்பாய்களின் குடும்பங்களும் அவர்களோடு வசிக்கும்படி அனுமதிக்கப்படும். இராணுவச் சம்பளம் அல்லது பென்ஷன் மட்டுமன்றி, மாதம் ரூ. 8 வீதம் அதிகமாகக் கொடுக்கப்படும்.

மூன்று நோக்கங்களோடு இந்தப் பயிற்சி யளிக்கப்படுகிறது. :—

(1) தாங்களே எங்கு வேண்டுமானாலும் போகவும் எந்தக் காரியத்தை வேண்டுமானாலும் செய்யவும் கூடும் என்னும் மன உறுதியடையப் பழக்குவது.

(2) அவகாசம் கிடைக்கிறபோது, விளையாட்டுக்களிலும் சமூதாய விஷயங்களிலும் அக்கரைகொள்ளும்படிச் செய்வது.

(3) தம் வீட்டிலிருந்தபடியே உபயோகமான வேலைகளைச் செய்வது.

மிகக் கொஞ்சம் பேர்கள்தான் யுத்தத்தில் கண்ணிழந்திருக்கிறார்கள். அதாவது 30 பேர்கள்தான். இன்னும் எத்தனைப் பேர்கள் கண் இழப்பார்கள் என்று இப்போது திட்டமிடமுடியாது. அது, இனி நடைபெறப்போகிற யுத்தத்தின் போக்கைப் பொருத்திருக்கிறது. இனி இதுவரை இருந்து வந்ததைப் போல குருடா யிருப்பதால் நிரந்தரமான குறைபாடு ஏற்பட்டுவிட்டதாகக் கருதப்படமாட்டாது. இந்த யுத்த ஆரம்பகாலத்தில் கண்ணிழந்தவர்கள் 18 மாதங்களுக்குப் பிறகு விமான இயந்திரங்களின் பல பகுதிகளையும் இணைப்பது, கட்டப்படும் விமானங்களை சோதிப்பது, டெலிபோன் எக்ஸ்சேஞ்சு வேலை செய்வது தரைப் படையிலும், கடற்படையிலும் புதிதாகச் சேர்ந்தவர்களுக்குப் பிரசங்கங்கள் செய்வது, மறைக்கும் வலைகள் பின்னுவது முதலிய வேலைகளைச் செய்கிறார்கள். ஒருவர் சினிமாவில் நடிக்கிறார். ஆகவே இவர்கள் இப்போது தமக்கு உபயோகமான முறையில் வாழுகிறார்கள்.

யுத்தத்தில் கண்ணிழந்த ஒரு சோல்ஜர் கூறுவதாவது :—

"நான் ஒரு பத்திரிகாசிரியன். ஒரு இராணுவப் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தேன். 28 வருஷங்களுக்கு முன்னால், கல்லிபோல் என்னுமிடத்தில் ஒரு ஷெல்குண்டு விழுந்ததனால், நான் கண்ணிழந்தேன். என்றாலும், செனட் டான்ஸ்டன் சங்கத்தார் உதவியினால், நான் மீண்டும் சுறுசுறுப்பாகவும் சந்தோஷத்தோடும் வேலை செய்கிறேன்."

இவர் இப்போது தன் பண்ணை வேலையைப் பார்க்கிறார். பார்லிமெண்ட் அங்கத்தினராகவு மிருக்கிறார். அது சம்பந்தமான அலுவல்களையும் கவனிக்கிறார். குருடர்கள் நல உரிமை வேலைகளைத் திருத்தியமைக்கிறார். பொது ஜனங்களுக்கு வேண்டுகோள்கள் விடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார். பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் யுத்த முயற்சி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார். இவைமட்டுமா ? லண்டன் பி.பி.சி. வானொலி நிலைய கவர்னராகவும் இரண்டு பெரிய கைத்தொழில் வியாபாரக் கம்பெனிகளின் டைரெக்டராகவு மிருக்கிறார். தன 18-வது வயதில், பிரான்சில் நடைபெற்ற யுத்தத்தில், தன் கண்ணை இழந்தார். இவர்தான் இந்த செனட் டான்ஸ்டன் சங்கத்தலைவராயிருக்கும் சர் இயான் பிரேசர்.

## அச்சு நாட்டுப் போக்கு வரவுகளைத் தகர்க்கும் போர்

நேசநாடுகளின் விமானப்படைகள் முக்கியமாக ஜெர்மனியின் போக்கு வரவு சாதனங்களைத் தான் இடைவிடாமல் வெகுவாகத் தவிடு பொடியாக்குகின்றன. இதுதான் நாளடைவில் நமக்கு வெற்றிதரக் கூடிய முறை. ஜெர்மனியிலும் ஜெர்மனியர் வயப்பட்ட நாடுகளிலும் உள்ள ரயில்வேக்களையும் கால்வாய்களையும் இடைவிடாது தாக்கிக் கொண்டிருப்பது உண்மையிலே மிகச் சிறந்த யுத்த தந்திரந் தான். ஹிட்லர் ஒரு பெரும் பிழை செய்தார். அதாவது, ஜெர்மன் மோட்டார் போக்கு வரவிற்கான பாதைகளின்மீது தான் கவனம் செலுத்தினாரேயொழிய, ஜெர்மன் ரயில்வேக்கள் மீது தகுந்தபடி கவனம் செலுத்தவில்லை. இந்த யுத்த நெருக்கடியில் மிகச்சிறந்த ரோடுகள் அவருக்குப் பயன்படக் கூடவில்லை. ஏனென்றால் பெட்ரோல் கிடைப்பது அரிதாகி விட்டது. உள்நாடுகளிலுள்ள ரயில்வே லைன்களையும் நம் நேசநாட்டு விமானங்கள் நாசஞ் செய்துவிட்டபடியால், அவையும், அவர் எதிர்பார்த்ததைப் போலப் பயன்படவில்லை. இதனால்தான் ஜெர்மனி தரைப்போரில் இருபுறமும் தாக்கப்பட்டால் என்ன செய்வது என்று திண்டாடுகிறது.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஜூலை 2௨, வெள்ளிக்கிழமை [இதழ் 26

## இந்தியா பலமடைந்து விட்டது



"சென்ற 200 வருஷங்களாக இந்தியாவிற்கு ஏற்பட்டிராத பெரும் ஆபத்துக்கள் நான் இந்தியச் சேனாதிபதியாக இருந்த இரண்டு வருஷங்களில் நடந்திருக்கின்றன. இந்த ஆபத்துக்கள் அடியோடு நீங்கி விடவில்லையானாலும், அவை நிகழாதபடி தடுக்கப்பட்டிருக்கின்றன. எதிரிகள் வந்து தாக்காதபடி இந்திய நாடு பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் உங்களுடைய முயற்சியின் பயனாகவும், மற்ற போர் அரங்கங்களில் நேச நாடுகளுக்குக் கிடைத்த வெற்றிகளின் பலனாகவும் அளவிட்டுமுடியாதபடி இந்தியா பலமடைந்துவிட்டது. ஏராளமான படைகளும் தளவாடங்களும் கொண்டு வந்து பலப் படுத்தப் பட்டிருக்கிறது. இந்தியாவிற்கு அநேக போர் விமானங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. இந்திய மன்னர்களும் நேபாள மகாராஜாவும் இந்தியப் படைக்குச் செய்த உதவியின் பயனாக, மிகுந்த பலமடைந்திருக்கிறது. தற்கால யுத்தத் தளவாடங்களும் தேவையான அளவு இருக்கின்றன. தற்கால யுத்தத்திலும் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இந்திய கடற்படையும் இந்திய விமானப் படையும் வெகுவாக அதிகப்பட்டு விட்டது. பிரிட்டிஷ் விமானப் படையும் ராயல் கப்பற் படையும் செய்த அருமையான வேலைகளோடு இவையும் சிறந்த முறையில் தொண்டாற்றின. பல இனங்களைச் சேர்ந்த பொது ஜனங்களும் பலவகைத் துறைகளிலும் யுத்த முயற்சியில் ஈடுபட்டனர். இதன் பயனாக, பெரும் படைகளை இந்தியாவில் திரட்ட முடிந்தது. யுத்த உற்பத்தியும் மிக அதிகப்பட்டது. நன்கு அமைக்கப்பட்ட உள் நாட்டுப் பாதுகாப்பு ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இப்போது இந்தியா பலமுடையதா யிருக்கிறது. இங்குள்ள எல்லோரும் தம் கடமையை நிறைவேற்றுவதில் கொஞ்சமும் அச்சமில்லா மன உறுதியோடு இருந்தால், இந்தியாவின் பாதுகாப்பைக் குறித்துக் கொஞ்சமும் கவலை கொள்ளத் தேவையில்லை.

இப்போதைய சேனாதிபதியும், இந்திய வைசிராயாக நியமிக்கப் பட்டிருக்கிறவருமான பீல்ட் மார்ஷல் சர் ஆர்ச்சிபால்ட் வேவல் ஜூன் மாதம் 28-ம் தேதி படைகளிடம் விடை பெற்றுக்கொள்ளும்போது அவர்களுக்கு விடுத்த செய்தி.

# தமிழ் வீரனே, எழு!

இராகம்—அடாணா　　　　　　　　　　　　　　தாளம்—ஆதி

### பல்லவி

பிறந்திருப்பதும் ஏனோ—பேசாது வீரம்
மறந்திருப்பதும் ஏனோ
　　பேணாரு பண்டைத் தமிழ்
　　நீணில சண்டைத் திறம்
　　பூணாத லின்றிச் சுகம்
　　காணாத லின்றிச் சகம்　　　　　　(பிறந்)

### அனுபல்லவி

சிறந்திருந்த தமிழன்　　　சிவந்திருந்த குருதி
நிறந்திருந்த நரம்பின்　　　திறம் திறம் பாவரம்பில்　　　(பிறந்)

### சரணங்கள்

1. அறந்திறம்பியும் வையம்　　　அழிந்திடும் இச்சமயம்
அகந்திருந்திடக் கையும்　　　அரும்படை எடுத்தெய்யும்
　　அம்மற நன்னிலை நின்று
　　எம்முறையும் பகை வென்று
　　வெம்மையுறும் படை கொன்று
　　செம்மை யுறுமனு மின்று　　　　(பிறந்)

2. வெட்டுண்ட தன் கரத்தை　　　வீசிப்பகைச் சிரத்தைப்
புட்டுண்டு போக வைத்த　　　போர்த்தமிழன் திறத்தை
　　விட்டிடலும் வெகு நீதே
　　கிட்டிடுநம் பகை மீதே
　　வெட்டியவர் பிழை யாதே
　　சுட்டிடவும் அனு காதே　　　　(பிறந்)

3. தன்னுடம்பிற் படுத்த　　　பன்னெடும் அம்பெடுத்துப்
புன்னகையால் தொடுத்து　　　வன்பகை மேல் விடுத்துப்
　　போர்தனில் வென்றுயர் வீரன்
　　சீர்குலம் என்றிடு பேரன்
　　பார்புகழ் செய்யு முதாரன்
　　நேர் தமிழ் வழி திரன்　　　　(பிறந்)



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம்: பீல்ட் மார்ஷல் சர் ஆர்ச்சிபால்ட் வேவல் .. .. .. .. | 1 | நவீன ஐரோப்பிய அரணின் நிலை .. .. | 6 |
| இந்தியா பலமடைந்து விட்டது .. .. | 1 | கப்பற் படையில் சேருவ தெப்படி? .. .. | 7 |
| பாட்டு: "தமிழ் வீரனே! எழு!" .. .. | 2 | இந்தியப் படைகளுக்கு வேவல் பிரிவுச் செய்தி. | 8 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | அதன் அர்த்தம் என்ன? .. .. | 9 |
| தலையங்கம்: இந்தியாவின் பலம் பற்றி வேவல் கருத்து .. .. .. .. | 4 | இந்தியக் கப்பற் படையின் வெற்றிகள் .. | 10 |
| ரஷ்யாவின் மாபெரும் போர் .. .. | 5 | தொழிலாளர் பகுதி: ஜெர்மனி தளர்ச்சி யடைகிறது .. .. .. .. | 11 |
| | | இந்தியக் கப்பற்படை பெரிதாகிறது .. .. | 12 |
| | | இந்திய யுத்தக் கைதிகள் மீண்டனர் .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**ஆல்ஜியர்ஸ் ஒப்பந்தம்: பிரஞ்சு தேசியக் கமிட்டியின் நோக்கங்கள்.**

பிரஞ்சு அரசியல் சிக்கல் மிகவும் கடுமையானது. பழமையானதுங் கூட. இதற்கு இப்போது ஒரு முடிவு கண்டுவிட்டனர். நேச தேசங்கள் இதில் தலை யிட்டதன் பயனாகத் தான் முடிவு காண முடிந்தது. இது பற்றி ஆல்ஜியர்விலிருந்து ராய்ட்டர் விசேஷ நிருபர் தெரிவித்ததாவது:—

ஜூன்மீ 22உ இரவு நெடு நேரம் வரை கூடிப் பேசினார்கள். பிறகுதான் பிரஞ்சுப் படைகளை எப்படித் திருத்தி யமைப்பது என்பது பற்றி ஒரு சமரசத்திற்கு வந்தார்கள்.

இந்தச் சமரசத்தின் பயனாக, ஆதிக்கம் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. பிரஞ்சு ஜெனரல்கள் இருவரும் இதுபற்றி திருப்தி யடைந்திருக்கிறார்கள். தற்போதைக்கு ஜெனரல் டிகால் தன் படைகளையும் ஜெனரல் ஜிரோ தன் படைகளையும் நடத்துவார்கள். இங்கே ஒரு கூட்டு இராணுவக் கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. இதன் நோக்கம், பிரஞ்சு தரைப்படை, கப்பற்படை, விமானப்படை ஆகிய மூன்றையும் ஒன்றுபடுத்தி, ஒரு புதிய படையாக அமைக்க வேண்டு மென்பதுதான்.

"பிரஞ்சுப் படைகள் ஒன்றுபடுவது சம்பந்தமான ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டபடியால், மகா பெருங் கஷ்டம் நீங்கி விட்டது. மற்ற கஷ்டங்கள் இருக்கலாம். அவை அவ்வளவு கஷ்டமானவையல்ல. தேசீய விடுதலைக் கமிட்டியைக் கலைக்கத் தக்கதோர் நெருக்கடியான நிலைமை இப்போது ஏற்படப் போவதில்லை."

இது பற்றிய சமரசம் ஏன் முன்பே ஏற்பட்டிருக்கக் கூடாது என்று பலர் ஆச்சரியப்படலாம், பிரஞ்சு தலைவர்களுக்கு இதில் என்ன கஷ்ட மிருந்த தென்று ஆச்சரியப் படத்தான் செய்வார்கள். தனிப்பட்டவர்களின் மன வேற்றுமைதான் இதற்குக் காரணம் என்று சாதாரணமாக எல்லோரும் நினைத்திருப்பார்கள். உண்மையிலேயே அது அப்படி யல்ல. இந்தப் பிரச்சினை உண்மையிலேயே மிகவும் சிக்கலானது தான். இதற்கு முடிவு காணும் பொருட்டு ஏழு பேர்கள் ஆல்ஜியர்சில் கூடினார்கள். இவர்கள், நாட்டுப்பற்று மிகுதியும் உள்ளவர்கள். இவர்கள் கட்டும் முடிவினால், பிரான்சு உண்மையிலேயே மீட்சி பெறுமா, அல்லது மீண்டும் குழப்பத்திற்கும் அராஜகத்திற்கும் உள்ளாகி நாச மடையுமா என்று அவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு தானிருக்கிறார்கள். அவர்கள் சுய நன்மையை மறந்து விட்டு, பிரான்சின் முன்னேற்றத்தையும் நேச நாடுகளின் பொது நன்மையுமே இலட்சியங்களாகக் கொண்டு விவாதித்து புத்திசாலித்தனமான முடிவு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாயிருந்தது. இந்த ஒற்றுமைப் பிரச்சினை பற்றிய எல்லாத் துறைகளையும் பற்றி நெடு நேரம் ஆலோசித்தார்கள். கடைசியாக ஒரு முடிவிற்கு வந்தார்கள். சமரசம் ஏற்பட்டது. நாளடைவில் பரிபூரண ஒற்றுமையாக இது மாறும்.

**பிரான்சின் தற்கால நிலை: நான்கு வகைக் கூட்டாளிகள்.**

இவர்கள் விவாதித்த சிக்கல்களில் மகா முக்கியமானவை பற்றிச் சருக்கி "டைம்ஸ்" பத்திரிகையின் விசேஷ நிருபர் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார்:—

"பிரான்சு மீட்சிக் காலத்தில், பிரஞ்சு நிர்வாகத்திலும் பொருளாதாரத் துறையிலும் உள்ளவர்களைப் பாகுபடுத்தும் இழிவான வேலைக்கு இடங் கொடுக்கும் இவர்களில் சிலர் அயோக்கியர்கள். மற்றுஞ் சிலர் முட்டாள்கள். கூட்டுறவு கொண்டிருப்பது சிலருக்கு மகிழ்ச்சி தரும். ஆதிக்கம் பெறுவதற்கு அது வழி காட்டியாயிருக்கும். மற்றொரு வகையினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது கொஞ்சங் கூடப் பிடிக்காது. வேறு வகையில்லாமல் திண்டாடுகிற தருணத்தில், மேற்கொண்ட கடமைகளை மிகுந்த வருத்தத்தோடு நிறைவேற்றுகிறார்கள்."

இப்போது ஜெர்மானியரோடு கூட்டாளிகளாக பிரான்சில் உள்ளவர்களில் நான்கு வகையினர் இருக்கிறார்கள். தங்கள் தலைக்குத் தாம்பூலம் எப்போதும் உண்டு என்று அவர்களுக்குத் தெரியும். என்றாலும், தமக்கு ஆதிக்கம் மேலும் வேண்டும் என்னும் பேராசை கொண்டு, அவற்றை யடைவதற்கு மிகவும் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மானியர்களோடு ஒத்துழைப்பது நியாயம் தான் என்று கூறுகிறவர்கள் முதல் கூட்டத்தார். இந்தக் கூட்டத்தின் தலைவர் **டீட்**. இரண்டாவது கூட்டத்தின் தலைவர் '**தோரியோ**'. சரியானபடி காரியங்கள் செய்வதானால், ஜெர்மானியர்களோடு ஒத்துழைப்பதற்கு இது தங்கமான சந்தர்ப்பம் என்று கருதுகிறார்கள். மூன்றாவது கூட்டத்திற்குத் தலைவர் **சார்லஸ் மவுராஸ்**. பிடெய்னுக்கு இவர் பக்க பலம் அதிகம். தாம் தோல்வி யடைந்ததால் தமக்குக் கிடைத்த தண்டனை தான் இது என்று சொல்லி தம்மைத் தாமே தேற்றிக் கொள்ளுகிறார்கள். நான்காவது கூட்டத்திற்குத் தலைவர் **லவால்**. இவருடைய கூட்டத்தார், தற்போதுள்ள நிலைமையில் இது தான் மிகச் சிறந்த பேரம் என்று கருதுகிறார்கள். லவாலுக்கு வால் பிடித்துத் திரிகிறவர்கள் தான் இன்று அதிகாரப் பதவிகளையும், தேசீயப் படையில் உள்ள பெரும் பதவிகளையும் வகிக்கின்றனர். புதிய "பிரஞ்சுப் படை" லவாலிடத்தில் விசுவாசப் பிரமாணம் செய்திருக்கிறது. பிரஞ்சு மீட்சி இயக்கம் மறைமுகமாக நடைபெற ஒட்டாதபடி தடுக்கும் இழிவான எதிரி, லவால் தான்.

இந்த நான்கு கூட்டத்தாரிடத்திலும் வேற்றுமையுண்டு. எதை அடிப்படையாகக் கொண்டு அச்சு நடுகளோடு ஒத்துழைக்க வேண்டும் என்பது பற்றியவை தான் அவ் வேற்றுமைகள் என்றாலும் பிரஞ்சு ஜனநாயக ஸ்தாபனத்தையும் இலட்சியத்தையும் தாக்கும் போது, இந்த எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு விடுகின்றன. ஆகவே, ஒரு விஷயம் விளக்கமாகத் தெரிகிறது. இப்படிப்பட்டவர்கள் பிரான்சின் அரசியல் வாழ்க்கையில் கலந்திருப்பதனால், சமீபத்திலேயே அங்கே உள் நாட்டுக் கலகம் ஏற்படும் என்பது உறுதி. ஆல்ஜியர்சில் கூடி விவாதித்த பிரஞ்சுத் தலைவர்கள் தம் விவாதங்களின்போது ஒரு விஷயத்தை முக்கியமாகக் கவனத்தில் வைத்திருந்தார்கள். தாம் சம்பந்தப்பட்ட வரையிலாவது கலவரங்களுக்கு இடமே கொடுக்கப்படாது என்பது தான் அது.

(8-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞு ஜூலைமீ 2உ. [இதழ் 26

## இந்தியாவின் பலம் பற்றி வேவல் கருத்து

இந்தியாவின் படைத் தலைவராக விருந்தவர் பீல்ட் **மார்ஷல் சர் ஆர்ச்சிபால் வேவல்.** இவர் இப்போது இந்தியாவின் இராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் சமீபத்தில் ஒரு இறுதிச் செய்தியை இந்தியவிலுள்ள தனிப் படைகளுக்கு விடுத்தார். அதில் சென்ற இரண்டு வருஷங்களாக இந்தியப் பாதுகாப்பு நிலைமை எப்படி யிருந்ததென்றும் இன்று எவ்வளவு சிறந்த பலம் பெற்றிருக்கிறதென்றும் சுருக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார். அதில் இந்தியப் படையினரையும் பொது ஜனங்களையும் வெகுவாகச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார். இந்திய ராஜப் பிரதிநிதி என்னும் முறையில் மீண்டும் இந்தியாவிற்குத் தொண்டாற்ற தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பது பற்றி, மகிழ்ச்சி யடைகிறார். இவருடைய வேலை கடுமையானது தான். என்றாலும், இந்தியப் பொது மக்களின் கூட்டுறவையும் ஆதரவையும் பெற்று, அக்கடமைகளைத் திறமையுடன் நிறைவேற்றுவார் என்பது பற்றி சந்தேகமே கிடையாது.

அவரை இந்தியாவின் ராஜப்பிரதிநிதியாக நியமித்ததை இந்தியாவில் வரவேற்கிறார்கள். தற்போதுள்ள நிலைமையில் இதுதான் மிகச் சிறந்த ஏற்பாடு என்று உலக முழுதும் பாராட்டுகிறது. இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் இந்திய வைசிராயாக நியமிக்கப்பட்டது இதுதான் முதல் முறை. இவருடைய இராணுவ வாழ்க்கை இருபதாம் நூற்றண்டின் ஆரம்ப முதலே தொடங்குகிறது. இவர் பெரும்படைகளை நடத்திக்கொண்டு போயிருக்கிறார். கொடும் எதிரிகளுக்கு விரோதமாகப் பெரும் போர்கள் நடத்தியிருக்கிறார். சமீபத்தில் பி.பி.சி. வானொலி நிலையத்திலிருந்து மிஸ்டர் ஜே. பி. மெக்கிச்சி, செய்தி விமரசக ஒலி பரப்புப் பிரசங்கத்தில் கூறியதாவது:—"தற்கால யுத்த தந்திர முறைகளைக் குறித்த நுட்பங்களை பீல்ட் மார்ஷல் வேவலைப் போலத் தெரிந்து கொண்டவர்கள் வேறு யாருமில்லை." 1943-ம் வருஷத்தில், இந்திய அரசாங்கத் தலைவராக வரப்போகிறவருக்கு இது முதல்தரமான தகுதியாகும். இந்தியா அச்சு நாடுகளோடு போராடிக் கொண்டிருக்கிறது. அச்சு நாடுகள் படுதோல்வியடையும் வரை போராடிக் கொண்டிருக்க வேண்டியது இந்திய அரசாங்கத்தின் முதல் கடமையாகும். இந்தியா ஒரு வெடி மருந்து சாலை போன்றது. ஏராளமான தளவாடங்களையும் ஆள்படை வீரர்களையும் சப்ளை செய்யக் கூடியது. இந்த ஒரு தளமாகக் கொண்டு சீனவையும் பர்மாவையும் விடுவிக்கலாம். அப்போது வெற்றி கிடைப்பது உறுதி. ஆகவே, இந்தியா தன் கடமையைச் செய்தே தீரும்.

இந்தப் புதிய வைசிராய் வெற்றி பெறவேண்டுமானல், போர்வீரராகமட்டு மிருந்தால் போதாது. அதற்கு மேம்பட்டவராகவும் இருக்கவேண்டும். "மிகச் சிக்கலான அரசியல் கடமை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது, அதாவது அவர் இந்தியாவை ஒற்றுமைப்படுத்தவேண்டும்; அல்லது கூடுமானவரை, இந்தியர்கள், தம் முயற்சியினலேயே ஒன்றுபடுவதற்கு அவர் உதவி புரியவேண்டும்; என்று பி.பி.சி. வானொலி விமரசகர் ஒருவர் குறிப்பிடுகிறார். இது போன்ற அரசியல் தொண்டுகள் புரிந்த பல படை வீரர்களை மேற்கோள்களாக அவர் எடுத்துக் கூறுகிறார். ஜார்ஜ் வாஷிங்டன் இருந்தார். இப்போது நம் மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் இருக்கிறார். நம் பிரிட்டிஷ் முதல் மந்திரி எந்தப்படைக்கும் தலைமை தாங்கி நடத்தவில்லை என்றாலும், தன் வாழ்க்கையின் ஆரம்பத்தின் சோல்ஜராகத்தான், இருந்தார். ஒரு சோல்ஜரின் தைரியம், நெடு நாள் உகை அனுபவம், எந்த விஷயத்தையும் வெள்ளையாகப் பேசும் தன்மை ஆகிய தகுதிகளைக் கொண்டு, தான் பலம் பெற்று பிரிட்டிஷ் கூட்டுமந்திரி சபைக்குத் தலைவராக இருந்து வருகிறார். ஒரு சோல்ஜருக்குரிய சிறந்த தன்மைகள் பீல்ட் மார்ஷல் வேவலுக்குண்டு என்று அந்த விமர்சகர் கூறுகிறார். மற்ற சிறந்த தன்மைகளும் அவரிடம் காணப்படுகின்றன. யுத்தக் கலையைப் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார், அலென்பரி வாழ்க்கையைப்பற்றி ஒரு நூல் எழுதி யிருக்கிறார். இவற்றிலிருந்து அவர் ஒரு நல்ல எழுத்தாளர் என்றும் ஓரளவிற்குத் தத்துவ சாஸ்திரி என்றும் தெரிகிறது. ரஷ்ய மொழி பேசத் தெரிந்த பெரிய பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களில் இவரும் ஒருவர். சென்ற இரண்டு வருஷங்களாக இவர் வைசிராய் நிர்வாக சபை யங்கத்தினரா யிருந்து அரசாங்க வேலைகளைக் குறித்த எல்லா நுட்பங்களையும் மிகவும் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறார். இந்திய அரசியல் தலைவர்களை அவர் சந்தித்திருக்கிறார். சென்ற வருஷம் சர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த போது, இந்தியாவின் எதிர்கால அரசியல் நிலையைக் குறித்த விவாதங்களில் இவரும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது:

புதிய வைசிராயிக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் இப்போது கிடைத்துள்ள சிறந்த சந்தர்ப்பத்தைக் குறித்து மிஸ்டர் மக்கிச்சி கூறுவதாவது:—"புதிய வைசிராய் ஆட்சிக் காலத்திலேயே, இந்தியா பூரண சுயாட்சி பெற்றுவிடுமென்று பிரிட்டனிலுள்ள ஒவ்வொருவரும் எதிர்பார்க்கிறார்கள். இதற்கு இந்தியர்களே முயற்சி செய்ய வேண்டும். முதலில் தமக்குள்ள வேற்றுமைகளைப் போக்க வேண்டும். இந்துக்களும் முஸ்லீம்களும் ஒத்துக் கொள்ளக் கூடியதோர் அரசியல் திட்டத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். இதற்கு, புதிய வைசிராய் உதவ வேண்டும். இந்தக் கடமையை பீல்ட் மார்ஷல் வேவல் நிறைவேற்றுவார் என்று எதிர்கால சம்பவங்கள் தான் தெளிவுப் படுத்தும். இதற்குத் தேவையான அனுபவமும், பரந்த நோக்கமும், தத்துவ சாஸ்திரிகளுக்குரிய மன அமைதியும், தாராள மனப்பான்மையும் அவருக்கு உண்டு; இந்தப் புதிய வைசிராயின் ஆட்சிக் காலத்தில் அச்சு நாடுகளை நேச நாடுகள் வெல்லுவது மட்டுமன்றி மகா சிக்கலான இந்தியப் பிரச்சினைக்கு முடிவு காணும் முயற்சியிலும் வெற்றி பெறக் கூடுமென்று இந்திய மக்கள் எதிர் பார்க்கிறார்கள்.



# ரஷ்யாவின் மாபெரும் போர்

## இரண்டாவது ஆண்டு விழா சிந்தனைகள்

### ரஷ்ய யுத்த முனை

**திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து வங்காள அரசாங்க விளம்பர ஆலோசகர் சர். ஆர். எஸ். சர்மா அவர்கள் சி.ஐ.இ. ஜூன் மாதம் 22-ம் தேதி செய்த ஒலிபரப்புப் பிரசங்கம் வருமாறு :—**

#### இரண்டாவது ஆண்டு விழா.

வல்லமை பொருந்திய ரஷியா, உலக யுத்தத்தில் கலந்து இரண்டாண்டுகள் முடிவடையும் இந்நாளை நாம் மகிழ்ச்சியுடன், வீரமக்களின் வெற்றிகரமான வாழ்க்கையின் திருநாள் போன்ற ஒரு நன்னாளாகக் கொண்டாடக் கடமைப்பட்டிருப்பதோடு அதன் சம்பந்தமாக நாம் கடவுளை வாழ்த்தவும் வேண்டும்.

ரஷிய மக்களைப்பற்றி, நாம் நினைக்கையில், அவர்களது ஆத்மார்த்தமான, தன்னலமற்ற தேச பக்தியும், திடசித்தமும், விடாமுயற்சியும், எவற்றையும் தியாகம் செய்யத்துணிந்த அவர்களது மன ஊக்கமும் நம் மனக்கண்முன் தோன்றுகிறது.

இவ்வரிய குணவிசேஷத்தால், தற்போதைய யுத்தப்போக்கு எவ்வளவுதூரம் நேசநாடுகளுக்கு வெற்றிகரமாக இருந்து வந்ததென்பது உலகம் அறிந்த உண்மை.

யுத்த நெருக்கடியில், அக்னிப்பரீக்ஷை போன்ற மகத்தான சோதனையில், வெற்றிகரமாகத் தேறி, உலகமக்களுக்கே ஒரு படிப்பினையை போதித்த வீர ரஷியா, இன்று, யுத்த முடிவில் வரப்போகும் உலக சீர்திருத்தத் திட்டத்திற்கு அஸ்திவாரம் போன்ற ஒரு செய்கையினல்; உலக மக்களையே பிரமிக்கச் செய்திருக்கிறது.

இன்றைக்குச் சரியாக ஒரு மாதத்திற்கு முன் மே மாதம் 22-ந்தேதி, ரஷியாவிலுள்ள அகில பொது உடமைக் கக்ஷி தலைமை காரியாலயத்திலிருந்து அந்த ஸ்தாபனம் கலைக்கப்பட்டு விட்டதென்ற செய்தி உலகிற்கு அறிவிக்கப்பட்டது.

#### உலக முழுவதும் ஒரு மாறுதல் ஏற்பட்டது.

இந்த செய்தி உலகமுழுவதும் ஒரு மாறுதலை எற்படுத்தியிருக்கிறது.

இது நாஜி கக்ஷியின்மேல் இடி விழுந்தால் போன்றதென்று கூறுவது மிகையாகாது. ஏனெனில், இந்த முக்கியமான அறிக்கையில், தொழிலாளர்களுக்கு பரம விரோதியான நாஜிகளின் "பாசிச" கக்ஷியையும், அதன் கிளைகளையும் அறவே பூண்டுடன் வேரறுக்க ஹிட்லருக்கு எதிர்ப்பான சகல சங்க ஸ்தாபனங்களும் ஒன்று சேருவதன் அவசியத்தைத் தெளிவாக வற்புறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மகத்தான செய்கை ராஜீய உலகில் ஒரு சூழ்ச்சியென்றும், தங்களை வீழ்த்தவே செய்யப்பட்ட காரியமென்றும் நாஜிகள் கருதுவதிலிருந்து, இதனல் அவர்கள் அடைந்திருக்கும் திகைப்பும் பிரமையும் நன்கு விளங்கும். நடக்க இயலாத காரியம் நடந்துவிட்டதாக ஹிட்லரும், கோபல்சும், திகைத்து, திகிலடைந்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஏனெனில் பலம் குலைந்து, மனத்திடம் குன்றியிருக்கும் ஜெர்மானிய பாமர மக்களிடம் இனி நாஜிகள், இந்த அகில பொது உடமைக் கக்ஷி ஸ்தாபனத்தை ஒரு பூச்சாண்டிபோல், காட்டி, அவர்களை பயமுறுத்தி மனதைக் கலைத்து தங்களுடைய சூழ்ச்சி வலையில் சிக்க வைக்கமுடியாமல்போனதில் நாஜி தலைவர்களுக்கு ஆத்திரமும் ஏமாற்றமும் அவமானமும் பொங்குவது இயல்பு.

1919-ம் ஆண்டில், லெனினல் ஸ்தாபிக்கப்பட்ட நாள் முதல், இந்த அகில பொது உடமை ஸதாபனததின் காரணமாக, பல்வேறு தேசங்களிடையே மாறுபட்ட அபிப்ராயமும், மனக்கசப்பும், அதிருப்தியும் இருந்துவந்தன.

"ஆபத்திற்குப் பாபமில்லை" என்ற பழமொழிப்படி, யுத்த நெருக்கடி காரணத்தால் மட்டுமே, ரஷியா ஐக்யநாடுகளுடன் சேர்ந்து போராட சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதை எதிர் பார்க்காத நாஜிகள், பிரான்சு தேசத்தை முசோலினி தாக்கியதைப்போல், ரஷியாவைத் தாங்கள் மறைவிலிருந்து பின்புறமாக தாககியதை நினைத்தாலும், அவர்கள் நெஞ்சம் திடுக்கிடும்.

#### அகிலப் பொதுவுடைமை ஸ்தாபனம் ஏன் கலைந்தது ?

இந்த அகில ஸ்தாபனம் கலைக்கப்பட்டதற்கு நேசதேசங்களில் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆங்கிலேயர்களும், அமெரிக்க ஐக்ய நாடும் சேர்ந்து ஸ்டாலினை வற்புறுத்தியதாலே நடந்தேறியதாக அமெரிக்க மககள் கருதுகிறார்கள். துருக்கியர்களோ, இந்த அறிக்கையால், ஜனநாயக அரசாங்கமுள்ள பிரசித்திபெற்ற மேல்நாடுகளுடன், சுயேச்சையை விரும்பும் பல்வேறு சிறு நாடுகளுடனும், ஒன்றுகக் கலந்து சேவை புரிய, ரஷியா கொண்டுள்ள மனப்பூர்வமான எண்ணம் இந்த அறிக்கையால் தெளிவுபடுத்தப் பட்டிருப்பதாக, நம்புகிறார்கள்.

இது எவ்விதம் இருந்தபோதிலும், ஸ்டாலின் தன்னுடைய இந்த ஒரே செய்கையினல், இந்த ஸதாபனத்தின் முடிவான கொள்கைகளைப்பற்றி, இதுவரை இருந்துவந்த சகல சந்தேகங்களையும் அறவே ஒழித்து, உலகப் பாதுகாப்புத் திட்டம் வகுக்கும் காலம் வருகையில் ரஷியாவை, எவ்வளவு தூரம் நம்பலாம் என்பதைத் தெளிவாகக் காட்டியிருக்கிறார்.

மேலும், இந்த அகில பொது உடமை ஸ்தாபனத்தின் மறைவு, ஐக்யநாடுகளின் அரசியல் லக்ஷ்யத்திற்கும், யுத்தப் போக்கிற்கும், ஒரு வெற்றி சின்னமாக இருப்பதோடு, உலக சமாதானத்திற்கே ஒரு சான்றுகும். ரஷ்யாவில் நடந்தேறிய இந்த மகத்தான சம்பவத்தின் ஆழ்ந்த கருத்தும், தத்துவமும், லண்டனிலும், அமெரிக்காவிலும் பிரதிபலிக்க வேண்டும்.

ஏனெனில், உலக சமாதானத்திற்கும், க்ஷேமத்திற்கும், ரஷியாவுடன் பரஸ்பர நம்பிக்கையும், ஏகோபித்த மனப்பான்மையும் ஏற்படுவது முக்யமென்பது துணிபு.

#### ரஷ்யர்களின் புதிய நம்பிக்கை.

இது நிற்க, யுத்தரங்கத்தில், ரஷிய போர்வீரர்கள் காட்டிவரும் ஊக்கமும் நேசநாடுகள் வட ஆபிரிக்காவில் அடைந்திருக்கும் வெற்றியும் சேர்ந்து, ரஷிய மக்களிடையே மிகுந்த மனக்கிளர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது. தங்களுடைய யுத்த பளுவை குறைக்க நேசநாடுகள் செய்துவரும் ஏற்பாடுகளில் அவர்களுக்குப் புதிய நம்பிக்கையும், பலமும் ஏற்பட ஏதுவாயிருப்பதால், ரஷிய மக்கள் தங்கள் பொருளாதார அபிவிருத்தியில் முழு கவனத்தையும் செலுத்தி, நாட்டின் தேவைகளைப் பெருக்கி, பாமர மக்களின் மனதிடம் குன்றுமல், பூரண பொலிவு பெற்றுவிளங்கும்படி செய்துவருகிறார்கள்.

சென்ற அக்டோபர் மாதம், சோவியத்து தலைமை அதிகாரியான, காலினின் தேசபாதுகாப்புத் தலைமை அதிகாரியான ஸ்டாலின் இருவரும் இரண்டு முக்யமான அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள். இவைகளினல், ரஷியாவிலுள்ள ராஜீய கக்ஷியினருக்கும், யுத்த தளபதிகளுக்கும் இடையே இருந்துவந்த வித்தியாச மனப்பான்மை விலகியதுடன், அவ்விரு வகுப்பினரும், யுத்த ரங்கத்தில் ஒன்றுபட்டு, மனவேற்றுமை இன்றி, பணியாற்றத் தகுந்த திட்டமும் வகுக்கப்பட்டிருப்பதால், இதுவரை இருந்துவந்த பல சிக்கல்கள் நிவர்த்தியாகி, மக்களின் எல்லையற்ற தேசபக்தியும், ராஜீய உணர்ச்சியும் மேலிட்டதால், யுத்த முயற்சி யாதொரு விதத்திலும் பாதிக்கப்படாமல், மக்கள் எல்லோரும் ஒரே துறையில் ஒரேமுகமாக, ஒன்றுபட்டு யுத்தத்தில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

#### ரஷ்யாவின் 3 யுத்த நோக்கங்கள்.

ரஷியாவின் யுத்த நோக்கங்கள் மூன்று பிரிவாகும். அவைகள் ஸ்டாலினல் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஹிட்லரின் ஆக்ஷிமுறையையும் அதற்கு கையாட்களாயிருப்பவர்களையும் ஒழிப்பது முதலாவதாகும். இரண்டாவதாக ஹிட்லரின் படைபலத்தையும் அதன் தலைவர்களையும் நிலைகுலைப்பது. மூன்ருவதாக நாஜிகளின் கொடுமையும்; அட்டூழியங்களும் நிரம்பிய, "புதிய ஆக்ஷி" என்ற வருங்காலத் திட்டத்தையும், அதற்கு, காரணமா யிருப்பவர்களையும் அழிப்பதாகும்.

இந்த மூன்று கொள்கைகளும் கைகூடினல், ஏற்படும் நன்மைகளை விவரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. பூலோக சொர்க்கமே கிட்டி விட்டதெனக் கொள்ளலாம்.

நாஜி கொடுமைகளால் ஆத்திரமும், ஆவேசமும் கொண்ட ரஷிய மக்கள் இந்தக் கொள்கைகளை நிறைவேற்ற, சற்றும் பின்வாங்கமாட்டார்கள் என்பது நிச்சயம். அவர்களது அதிசயிக்கத்தக்க யுத்த வேகத்தின் பலனக, ரஷியர்கள் இதுவரை பல முக்கிய பிரதேசங்களை மீண்டும் அடைந்திருப்பதோடு, பல ஆயிரக் கணக்கான மைல்கள் விஸ்தீரணமுள்ள உணவுப்பொருள் விளையும் பிரதேசங்களும் சேர்ந்திருப்பதால், இதற்குமுன் என்றுமிராத முழுபலத்துடன் ரஷியர்கள் தங்கள் போர் முனையைத் துவக்க ஆயத்தமாயிருப்பது மகிழ்ச்சியளிக்கக் கூடிய சம்பவமாகும்.

தங்கள் தாய் நாட்டையும், தலை நகரங்களையும் காக்க ரஷிய வீரர்கள் எவ்விதத் தியாகத்தையும் பொருட்படுத்தமாட்டார்கள். நாஜிகள் தங்கள் முழு பலத்தையும் உபயோகித்தும், பயன்படாமல் செய்த ரஷிய யுத்தவேகம் சரித்திரத்தில் முக்ய இடம் பெறும். அவர்களை எதிர்க்கும் ஏற்பாடுகள் அவ்விதமே முடிவுறும் என்பதும் திண்ணம். உலகம் உள்ளவரை, ரஷியர்கள் உயிர் உள்ளவரை, அவர்கள் தேசத்தையோ, மக்களின் லக்ஷியத்தையோ ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டார்கள்.

உணர்ச்சி மிகுந்த, வீரம் செறிந்த ரஷிய மக்கள் இந்த மூன்றும் ஆண்டு முடிவதற்குள் ஐரோப்பிய யுத்தத்தில் நேச நாடுகள் பூரண ஜெயம் பெற்று, உலகத்தில் நிரந்தரமான சமாதானம் நிலவி, மக்கள் சுகமே வாழ, ஆண்டவன் அருள் புரிவாராக !

# நவீன ஐரோப்பிய அரணின் நிலை

## அச்சு நாடுகளின் வீண் வீரப் பேச்சுகள்

*சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து சென்ற ஜூன் மாதம் 16-ம் தேதி பி. என். அப்புசாமி ஐயரவர்கள் 'இரட்டை நாவு' என்னும் தலைப்பின் கீழ் ஒலி பரப்பிய சொற்பொழிவாவது :—*

இளவேனிற் காலத்திலே பகலெல்லாம் பாடிப் பறந்து திரிந்த குயிலொன்று ஒரு நாள் மாலை வேளையில் மைதானத்தின் நடுவில் இருந்த பூச்செடி ஒன்றின்மேல் வந்து களைப்பாற உட்கார்ந்து, அயர்வினால் உறங்கிவிட்டது. அப்பக்கத்திலுள்ள அறிவிலிகள் சிலர் அதைக் கண்டார்கள். "ஆகா நாம் வெகு காலமாகக் குயில் வளர்க்க ஆசைப்பட்டோமே, இன்று அது நம்மிடம் அகப்பட்டுக்கொண்டது. இனி அது இங்கிருந்து ஓடிவிடாதபடி இந்தப் பெரிய மைதானத்தைச் சுற்றி ஒரு வேலியைக் கட்டிவிடுவோம்" என்று பேசிக்கொண்டு, ஒரு ஆள் உயரமுள்ள நெருக்கமான முள்வேலியைக் கட்டினார்கள். "இந்த முள்வேலியிலுள்ள முட்கள் யாவும் மிகவும் கூர்மையான முட்கள். ஒருவரும் அவற்றில் கிட்ட நெருங்க முடியாது. இந்த வேலியோ சிறிதுகூட இடைவெளியே இல்லாதபடி மிக நெருக்கமாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஒருவராலும் இதன் உள்ளே நுழைய முடியாது. நுழைய முயன்றால் மேலெல்லாம் இரத்த வெள்ளமாகிவிடும். மேலும் வேலியும் ஒரு ஆள் உயரத்துக்கு மேல் இருக்கிறது. ஆகையால் ஒருவராலும் அதைத் தாண்டிக் குதிக்கவும் முடியாது. ஆகையால் இனி நமக்கு ஒரு கவலையும் இல்லை. இந்த மைதானத்தைவிட்டு இந்தக் குயில் ஒரு நாளும் வெளியே போக முடியவே முடியாது" என்று சந்தோஷமாகப் பேசிக்கொண்டே, இரவெல்லாம் முயன்று, அந்தப் பெரிய மைதானத்தைச் சுற்றி ஒருவாறு வேலியிட்டு முடித்தார்கள்.

இதற்குள் இரவு கழிந்தது. இளவேனிற் காலத்தில் காலைச் சூரியன் உதயமாகித் தன்னுடைய பொன்னிறக் கதிர்களை மெல்லென நாலு பக்கமும் வீசத் தொடங்கிற்று. வாடி உறங்கிக்கிடந்த குயில் விழித்தெழுந்தது. அச்சமயம் அதைச் சூழ இருந்த காவலாளிகள் "இதோ விழித்துவிட்டது நம்முடைய குயில். இப்போது அது பாடப்போகிறது. நாம் கேட்டு ஆனந்தமடைவோம்" என்று கூவி ஆர்ப்பரித்தார்கள். ஆனால் குயிலோ தன் சிறகுகளைச் சிலிர்த்திக்கொண்டு, எளிதாகப் பறந்து ஓடி வெளியே போய்விட்டது.

அப்போது அந்த அறிவிலிகள் "நாம் இட்ட வேலியின் உயரம் போதாது. இன்னும் இரண்டடி உயரம் அதிகமாக வேலியை நாம் போட்டிருந்தால், அந்தக் குயில் நம்மிடமிருந்து தப்பியிராது" என்றார்கள். ஆனால் வேறு சிலர் "நீங்கள் வேலிக்குக் கூரை போட்டிருந்தால் தான் அது ஓடிவிடாதபடி காப்பாற்றியிருக்க முடியும்." ஆனால் மைதானத்துக்குக் கூரை போடுவது எப்படி என்று தமக்குள்ளே பேசிக்கொண்டார்கள்.

### அச்சு நாடுகளுக்கு அரண் ஒரு கேடா?

இப்பொழுது ஐரோப்பாவின் அச்சு நாடுகளின் நிலையும் அந்த அறிவிலிகளின் நிலையைப் போன்றதுதான். "ஐரோப்பாவை ஒரு கோட்டையாக ஆக்கிவிட்டோம். கடல் எங்களது அகழி. யமனுடைய கொடிய வாயைப்போன்ற வாய்களையுடைய பல்லாயிரக்கணக்கான பீரங்கிகள் எங்கள் கோட்டையின் அயற்கதவுகள்" என்று ஜெர்மானியர் கூறுகிறார்கள். அபிஸீனியாவில் வெற்றிக்கொடி நாட்டி, பிரிட்டிஷ் ஸோமாலிலாந்தில் ஜெயபேரிகை முழக்கிய இத்தாலியோ படிப்படியாக ஆப்பிரிக்கா முழுவதையும் இழந்தாயவிட்டது. ஐரோப்பாவைச் சேர்ந்த தீவுகளையும் இழக்கத் தொடங்கிவிட்டது. ஆயினும், அதுவும் "எங்கள் நாடு முழுவதுமே ஓர் அரண். நாட்டு மக்கள் அனைவரும் மகாவீரர்கள். சத்ரு எங்கே, எங்கே என்று அவர்கள் தேடித் துடிதுடித்துக்கொண்டிருக்கிறார்கள். சத்ருவின் தலை கண்ணில் படவேண்டியதுதான், அதைச் சின்னாபின்னமாகத் தகர்த்துவிடுவார்கள் என்று சென்ற வாரம் கூறிற்று. ஆயினும், கிட்டத்தட்ட அதே சமயத்தில் ரோம் நகரத்திலிருந்து "டாகென் நிகிடர்" என்னும் பத்திரிகைக்கு எழுதி வரும் நிருபர், ஆகாயத்திலிருந்து குண்டு மாரி பொழிந்து இத்தாலியைத் தூள் தூளாகத் தகர்த்தெறிய வேண்டும் என்பது ஐக்கிய நாடுகளின் உத்தேசம் என்பதைப் பற்றி ஒருவருக்கும் சந்தேகமில்லை. எவ்வளவு காலம் இந்த ஆகாயத் தாக்குதல் நிகழும். அதற்கும் பின்பு நிகழப்போவது என்ன என்றுதான் ஒவ்வொருவரும் பிரமித்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று இத்தாலியின் உண்மை மனநிலையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஐரோப்பியக் கோட்டையில் மதிற்சுவர் உறுதியாயிருக்கலாம், அல்லது உறுதியில்லாமலும் இருக்கலாம். அதன் உண்மை சீக்கிரம் தெரிய வரும். ஆனால் இப்போது, ஐரோப்பியக் கோட்டைக்குக் கூரை ஒன்றில்லை என்பது ஒவ்வொரு நாளும் தெளிவாகிக்கொண்டே வருகிறது. "மூன்று வீடு கட்டினேன், அதில் இரண்டு வீடு பாழ், மூன்றாவதற்குக் கூரையே இல்லை என்றது போலவேதான் ஹிட்லரும் முஸ்ஸோலினியுமாகக் கட்டிய நவீன ஐரோப்பிய அரணின் நிலையும்

### படிப்படியான மாற்றங்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்ஸோலினியின் மனநிலை படிபடியாக மாறிவந்திருப்பதைக் கவனிக்கலாமென்று தோன்றுகிறது.

முதற்படி : 1940-ம் வருஷம் நவம்பர் மாதம் 18-ம் தேதியன்று முஸ்ஸோலினி தமது மார்பைத் தட்டிக்கொண்டு பேசியது. "இத்தாலியா நாட்டு ஆகாய விமானப்படையின் மூலமாகவும், ஸப்மரீன் படையின் மூலமாகவும் பிரிட்டனைத் தாக்கி, ஜெர்மனியோடு போரின் முன்னணியில் நிற்கவேண்டுமென்று நாங்கள் பேராவல் கொண்டிருக்கிறோம். இதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று ஜெர்மனி நாட்டின் தலைவரை நான் வேண்டிக்கொண்டேன். அவ்வேண்டுகோளுக்கு இணங்கி, அவர் எங்களுக்கு அனுமதி கொடுத்ததற்காக, நான் அவருக்கு நன்றி பாராட்டுகிறேன்."

இனி இரண்டாவது படி : 1942-ம் வருஷம் நவம்பர் மாதம் 3-ம் தேதி, "இத்தாலியையாவது தாக்கவாவது. ஒரு நாளும் இத்தாலியை எதிரிகள் நேரில் தாக்கவே முடியாது. இத்தாலியைத் தாக்கவேண்டுமானால், எகிப்திலும் லிபியாவிலும் நம்முடைய எதிரிகள் வெற்றி பெறவேண்டும். இதுவோ ஒரு நாளும் முடியாத காரியமாயிற்றே" என்று பேசினார்.

இனி மூன்றும் படி : 1943-ம் வருஷம் ஜூன் மாதம் "எதிரிகள் எங்கள் நாட்டில் காலை வைத்தால், காலைத் துண்டித்துவிடுவோம்" தலையை நீட்டினால் தலையைத் தகர்த்துவிடுவோம்."

முதற்படி : எதிர்க்கும் இத்தாலி, இரண்டாம்படி : ஒருவராலும் தாக்க முடியாத இத்தாலி. மூன்றாவது படி : தாக்கினால் பின் வாங்காத இத்தாலி ஒவ்வொரு படியிலும் வீரமொழி பேசுவதற்குச் சிறிதும் கூசாத இத்தாலி. இப்பொழுது நான்காவது படி நெருங்கிவிட்டது.

இனி கிழக்கே ஜப்பானுடைய நிலையைப் பார்ப்போம். அலூஷியன் தீவுகளின் மேற்குக் கோடியிலுள்ளது அட்டு என்னும் சிறு தீவு. இது டச்சு ஹார்பர் என்னும் யுனைடட் ஸ்டேட்ஸ் கப்பற்படைத்துறைமுகத்தினின்றும், பராமூஷைர் என்னும் ஜப்பானியக் கப்பற்படைத் துறைமுகத்தினின்றும் சம தூரத்திலுள்ளது. இது யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்கத்தைச் சேர்ந்ததாயிருந்தது. போன வருஷம் ஜூன் மாதத்தில் இதையும், இதற்குச் சற்று தூரத்துக்கு அப்பாலுள்ள கிஸ்கா என்னும் தீவையும் ஜப்பானியர் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இதற்கு நான்கு மாதங்களுக்குப் பிறகு, அதாவது அக்டோபர் மாதம் 3-ம் தேதியன்று அமெரிக்கர் ஆஸ்ட்ரியானுப் என்னும் தீவில் பாளையம் ஏற்படுத்தியவுடன் இதை ஜப்பானியர் அக்டோபர் மாதம் 10-ம் தேதியன்று காலி செய்தார்கள். பிறகு அமெரிக்கர்களால் கிஸ்காவுக்கு ஆபத்து நேரிடக்கூடுமென்று பயந்து, மீண்டும் இதை டிசம்பர் மாதம் 5-ம் தேதியன்று கைப்பற்றிக்கொண்டார்கள். இந்த வருஷம் மே மாதம் 12-ம் தேதியன்று அமெரிக்கப் படை இதைத் தாக்கிற்று. மே மாதம் 30-ம் தேதியன்று இது முற்றிலும் அமெரிக்கர்களுடைய கைவசமாயிற்று. இது சம்பந்தமாக வெளிவந்த பிரசாரங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

### ஜப்பானியர் அபயம் அபஜெயமானது.

ஜப்பானியக் கடற்படைக்கு எங்கேயாவது செய்யவேண்டிய வேலையிருக்குமானால், அது தூரத்தை ஒரு பொருட்டாக நினைப்பதே கிடையாது." என்று விஷ்ணு தம்முடைய பக்தர்களுக்கு அபயம் அளிப்பது போல அபயம் அளித்தார் ஜப்பானியக் கப்பற்படைத் தலைவர். சென்ற வருஷம் ஜூன் மாதம் 25-ம் தேதியன்று ஜப்பானிய யுத்த நிபுணர் "நமது சேனை அலூஷியன் தீவுகளைக் கைப்பற்றுகையில் பசிபிக் மகா சமுத்திரத்தில் எங்கும் நமது கடற்படைக்கு வெற்றி—முற்றிலும் வெற்றி. இதனால் துலங்கும் ஒரு விஷயம் என்னவென்றால் அமெரிக்கக் கடற்படை ஒன்றுக்கும் உதவாதது என்பது தான்." என்றார். போன வருஷம் ஆகஸ்டு மாதம் 10-ம் தேதியன்று ஜப்பானியர் வெளியிட்ட ஆங்கிலச் செய்தி ஒன்று, "அட்டு தீவையும் கிஸ்கா தீவையும் மீண்டும் கைப்பற்றலாம் என்று அமெரிக்கர் கனவு காண்கிறார்கள். நம்முடைய மகா பராக்கிரமம் பொருந்திய கடற்படையானது அந்தக் கனவைத் தகர்த்தெறிந்துவிட்டது." என்று கம்பீரமாகக் கூறினார்கள். மற்றொரு சமயத்தில் "காடல்கனல் பக்கத்தில் நடந்த கடற்போரில், நிப்பான், எதிரியின் இடுப்பை ஒடித்துவிட்டது. பசிபிக் மகா சமுத்திரம் முழுவதும், நம்முடைய வசமாகிவிட்டது. முப்பத்தாறு நிமிஷத்தில் இவ்வளவு பெரிய வெற்றியடைந்ததாக இதுவரை எவரும் கண்டதும் இல்லை கேட்டதும் இல்லை" என்று ஜெயபேரிகை அடித்தார்கள்.

இதற்கிடையில் எதிர்பாராவண்ணம் மே மாதம் 12-ம் தேதி அமெரிக்கர்கள் அட்டுவைப் படையெடுத்தனர், "அந்தப் பிரதேசத்தில் எப்போதும் மூடுபனி சூழ்ந்திருக்கும், ஆதலால், எதிரிப் படையை அந்தத் தீவில் இறங்கவொட்டாமல் தடுப்பதற்கில்லை" என்று ஜப்பானியரும், அட்டுத் தீவு மிகப் பெரியது. எழுபது மைல் நீளமும் முப்பது மைல் அகலமும் உள்ளது, ஆதலால் எங்கேயாகிலும் எதிரி இறங்கிவிடக் கூடும் அல்லவா "என்று ஜெர்மானியரும் கூறினார்கள். உண்மையில் அட்டு முப்பத்தைந்து மைல் நீளமும் பதினெட்டு மைல் அகலமுமே உள்ளது. மே மாதம் 18-ம் தேதியன்று மேஜர் ஜெனரல் யகாகி "அமெரிக்க கப்பற்படையின் கொடிய பலத்தின் துணையைக்கொண்டும், அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்களிலிருந்து துள்ளியெழுந்து இடைவிடாது குண்டுமழை பொழியும் ஆகாய விமானத் தாக்குதல்களின் துணைகொண்டுமே, அட்டு தாக்கப்பட்டது. இவற்றை எதிர்ப்பதற்கு வேண்டிய சௌகரியங்கள் எங்களுக்கு இல்லை" என்றார்.

பதினெட்டு நாள் அட்டுவில் போர் நடந்ததே. தூரத்தைப் பொருட்படுத்தாத ஜப்பானியக் கப்பற்படை எங்கே? அது தன் வேலையை மறந்துவிட்டதா? மிகவும் பராக்ரமுள்ள ஜப்பானியக் கப்பல்கள் எங்கே? அவை தம் பலத்தை இழந்துவிட்டனவா?

பசிபிக் மகா சமுத்திரம் எங்களது கைவசமாகிவிட்டது என்று ஜப்பானியர் அட்டுவை இழந்ததும், மத்திய தரைக்கடல் எங்கள் வீட்டுக்குளம் என்று கூறிய இத்தாலியர் பாண்டலேரியா முதலிய தீவுகளை இழந்ததும் ஒரே காரணத்தால் தான் :—நேசக் கட்சியாரின் பலத்தால் . . .



# கப்பற் படையில் சேருவ தெப்படி?

யுத்தம் ஆரம்பமானதிலிருந்து பல நூற்றுக்கணக்கான சென்னை மாகாண வாசிகள் இந்திய கப்பற் படையில் சேர்ந்திருக்கிறார்கள். இதிலுள்ள பல கிளை வேலைகளிலும் சேர்ந்திருப்பவர்கள் கடற்கரை ஜில்லா வாசிகள் மட்டுமல்ல. உள்நாட்டில் வெகு தூரத்திலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் வந்திருக்கிறார்கள்.

சென்ற நவம்பர் மாதம் இந்து மகா சமுத்திரத்தில் இரண்டு பெரிய ஜப்பானிய போர்க் கப்பல்கள் தென்பட்டன. அவற்றைத் தாக்க இந்திய கப்பற் படையைச் சேர்ந்த "பெங்கால்" என்னும் கப்பல் கிளம்பியது. இதன் பீரங்கிப் படையைச் சேர்ந்தவர்கள் ஏழு பேர்கள். அவர்களில் இருவர் சென்னை மாகாண வாசிகள். ஒவ்வொரு கப்பலிலும் கரையிலுள்ள ஸ்தாபனங்களிலும் சென்னை மாகாணத்தார் தம் கடமைகளைச் சரிவரச் செய்துவருகிறார்கள். இந்த கப்பற்படை உத்தியோகங்கள் பெருகிக் கொண்டு வருகின்றன. தாம் முன்னேறிக்கொள்ள இந்தச் சந்தர்ப்பங்களைத் தகுந்தபடி அவர்கள் உபயோகித்துக்கொள்ளுகிறார்கள்.

கப்பற் படையில் சேருகிற ஒருவர் எந்தப் பகுதியில் சேருவதாயிருந்தாலும் முதன் முதலாக மாலுமியாக வேண்டும். ஆகவே, அதற்குத் தகுந்த உடலுள்ளவர்களாகவும், சுறுசுறுப்பான பழக்க வழக்கங்கள் உள்ளவராகவும், புத்திக் கூர்மையுள்ளவராகவும், சந்தோஷமான மனப்போக்குள்ளவராகவும் இருக்க வேண்டியது அவசியம்.

### சம்பளமும் வசதிகளும்.

அதிகப்படிப்பில்லாத இளைஞர்களுக்கு ஆரம்பக் கணக்கும், சாதாரணமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும் தெரிந்திருந்தால் போதும். "சீமென்" ஆகவோ "ஸ்டோக்கர்" ஆகவோ சேரலாம். இந்த இரண்டு கிளைகளிலும் விருப்பத் தகுந்த மிகுந்த பிரயோசனமான கடமைகள் பல உண்டு. கப்பற் படையில் சேர்ந்தபிறகும் பொதுவாகக் கல்வியளிக்கப்படுகிறது. எல்லா விஷயங்களைக் குறித்தும் பூரணமாகப் பாடங்கள் கற்பிக்கப்படும். இவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 40. சாப்பாடு, இருக்க வீடு, உடுப்பு, வைத்திய உதவி ஆகியவை இலவசமாகக் கொடுக்கப்படும். அன்றியும் கப்பற்படையினருக்குரிய எல்லா வசதிகளும் அளிக்கப்படும். மற்றவை, அவரவருடைய திறமையைப் பொறுத்தது. உத்தியோக உயர்வடையத்தக்க தகுதிகள் பெறுவதற்காக எல்லா வகைகளிலும் ஊக்கம் அளிக்கப்படுகிறார்கள். உத்தியோக முறையில் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை, அவர்களுடைய தொழில் திறமையையும், நன்னடத்தையும், ஒழுக்கத்தையும், தலைமை தாங்கி நடத்தும் திறமையையும் பொருத்திருக்கிறது.

உயர்ந்த கல்வி கற்று பத்தாவது வகுப்புப் பயிற்சியில் (மெட்ரிகுலேஷன்) தேறியவர்கள் கப்பற்படையைச் சேர்ந்த மற்ற கிளை வேலைகளுக்குத் தகுதியானவர்கள். அவரவர் கல்வி உயர்விற்குத் தகுந்தபடியான வேலைகளுக்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள். அவர்கள் சம்பள விகிதம் அவரவர்கள் கல்வி உயர்விற்குத் தகுந்தபடி ஏற்படும். குறிப்பாக போக்குவரவு (கம்யூனிகேஷன்) கிளைக்கு, நல்ல இங்கிலீஷ் தெரிந்துகொள்ளவும் எழுதவும் படிக்கவும் திறமையுள்ள புத்திசாலிகளை அனுப்பவேண்டும். செய்திகளைக் குற்றமில்லாமல் பெற்றுக்கொள்ளவும் தெரியவேண்டும். அது, வெளித்தோற்ற சைகைகள் மூலமான செய்திகளாகவோ, கம்பியில்லாத் தந்தி மூலம் அனுப்பப்படும் செய்திகளாகவோ இருக்கலாம். ஒரு யுத்தக் கப்பலில் நாள்தோறும் நடைபெறும் வேலைகளில் இதுவும் ஒன்று. விரைவாகச் செய்திகளைச் சைகைகள் மூலம் அனுப்பி, பெற்றுக்கொண்டாலல்லது, கப்பற்படையின் போராடும் திறமை பெரிதும் பாதிக்கப்படும்.

அதிகப்படியாகப் படித்துத் தேறி, மெக்கானிக்கல் அல்லது எலெக்டிரிகல் இஞ்சினீரிங் பட்டங்கள் அல்லது தேர்ச்சிப் பத்திரங்கள் பெற்றவர்கள் அந்தந்தத் துறைகளில் மிகவும் உயர்ந்த தேர்ச்சி பெறுவதற்கு ஏராளமான சந்தர்ப்பங்களிருக்கின்றன. இஞ்சினீரிங் ஆர்டிபிசர், எலெக்ட்ரிகல் ஆர்டிபிசர் அல்லது ஆர்ட்னன்ஸ் ஆர்டிபிசர் முதலிய உயர்ந்த நிபுணத்வம் தேவையான வேலைகளுக்கு கப்பற்படையில் பரிபூரண பயிற்சியளிக்கப்படும். படகு கட்டும் தச்சர்களுக்குத்தான் "ஷிப்ரைட்ஸ்" என்ற பெயர். இந்த வேலையில் சேருகிறவர்களுக்கு முற்கூறிய அதிகப்படி தகுதிகள் தேவையில்லை. ஆனால் தச்சு வேலையில் இரண்டு மூன்று வருஷ அனுபவமாவது இருக்க வேண்டியது அவசியம். ஆர்டிபிசர்களாகவும் ஷிப்ரைட்களாகவும் ஆரம்பப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு சிவிலியன் மாணாக்கர்கள் என்னும் முறையில் மாதமொன்றுக்கு ரூ. 70 வீதம் உதவிச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி, ஜெய்ப்பூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த பிலனி என்னுமிடத்திலுள்ள தொழிற் பயிற்சி சாலையில் நடைபெறும். இதில் சேர விரும்புகிறவர்கள், தமக்கு அருகிலுள்ள நாஷனல் லேபர் ட்ரிபியுனலுக்காவது, தொழிலாளர் ரிக்ரூட்டிங் உத்தியோகஸ்தரிடமாவது மனுச் செய்துக்கொள்ளவேண்டும்.

கப்பற் படைக்குப் பையன்களைத் தயார் செய்யும் ஸ்தாபனங்கள் இரண்டு கராச்சியி லிருக்கின்றன. 14 முதல் 17 வயதிற்குட்பட்ட பையன்களுக்கெல்லாம் கப்பற்படை சம்பந்தமான எல்லாப் பாடங்களிலும் தகுந்தபடி பயிற்சியளிக்கப்படுகிறது. "திலவர்" என்னும் கப்பலில் கீழ்த்தர மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்களுடைய வயது 11 முதல் 15½ வரைதான் இருக்கவேண்டும். இங்கே ஒரு வருஷம் பள்ளிக்கூடப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. பிறகு தான் "பகதூர்" என்னும் கப்பலிலுள்ள உயர்தர கல்விச் சாலைக்கு அனுப்புகிறார்கள். இங்கே, அவரவருக்கு ஏற்றபடி, சீமென், அல்லது ஸ்டோக்கர், அல்லது கம்யூனிகேஷன் கிளை ஆகியவற்றிற்கு மேற்கொண்ட பயிற்சியளிக்கப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை.

வைத்தியப் பகுதி, கணக்கர் பகுதி, கல்விப் பகுதி முதலிய பகுதிகளில் சேர விரும்புகிறவர்கள் நேர்முகமாகவோ கடித மூலமாகவோ விண்ணப்பித்துக் கொண்டால், "இந்தியன் நேவி" என்னும் தலைப்புடைய ஒரு அழகான துண்டுப் பிரசுரம் கிடைக்கும். ரிக்ரூடிங் ஆபீசில் இதில் சேர விரும்புகிறவர்கள் கல்வி சம்பந்தமாகவும் உடல் நிலை சம்பந்தமாகவும் சோதிக்கப்படுவார்கள்.

ராயல் இந்தியன் நேவல் வாலண்டியர் படை ரிசர்வ் உத்தியோகஸ்தர்களுக்கு ஆட் சேர்ப்பது கீழ்க்கண்ட முறையில் நடைபெறுகிறது :—

17 வயதிற்கு மேல் 36 வயதிற்குட்பட்டவர்கள் தமக்கு அருகிலிருக்கும் இராணுவத் தலைமைக் காரியாலத்திற்காவது, கலெக்டராபீசுக்காவது மனுச் செய்துகொள்ளவேண்டும். பிறகு மாகாண தேர்தல் போர்டாரும், மத்திய நேர்முகப் பரீட்சை போர்டாரும் தேர்ந்தெடுக்கவேண்டும். 36 வயதிற்கு மேற்பட்டவர்கள்கூட அதே அதிகாரிகளுக்குத்தான் மனு செய்துகொள்ள வேண்டும். அவர்களை, அவர்கள் வசித்து வரும் இராணுவ சரகத்தைச் சேர்ந்த ஜில்லா தலைவர் அல்லது ஏரியா தலைவர் நேரில் பார்வையிடுவார். எலெக்ட்ரிகல் எக்சிகூடிவ் இஞ்சினீராகவும் கணக்காளர் பகுதிக்கும் உத்தியோகஸ்தர்களாகப் பொறுக்கி எடுக்கப்படலாம். இந்த இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடைசி 3 பதவிகளுக்கும் விசேஷத் தகுதிகள் இருக்கவேண்டும். "கப்பற்படை உத்தியோகஸ்தராவது எப்படி" என்னும் தலைப்புள்ள புத்தகத்தில் இதுபற்றிய எல்லா நுணுக்கங்களும் காணப்படும். இந்தப் புத்தகம் சென்னை, மௌண்ட் ரோட், விகடரி ஹௌஸ், மாகாண போர்டு காரியதரிசியிடம் கிடைக்கும். தேவையான கல்வித் தகுதி மட்டுமன்றி, தலைமை வகித்து நடத்துந் திறமை, ஊக்கம், கடுமையாக வேலை செய்யக் கூடிய திறமை ஆகியவையும், கப்பற்படை உத்தியோகஸ்தர்களாக விரும்புகிறவர்களுக்கு அமைந்திருக்கவேண்டும்.

தரை வாழ்க்கைக்கும் கப்பற்படை வாழ்க்கைக்கும் அடிப்படையான வேற்றுமை உண்டு. கடற்படையையொட்டிய அசௌகரியங்களும் கஷ்டங்களும் இருக்கின்றன. ஒரு ரேடிங் ஆனாலும், உத்தியோகஸ்தரானாலும் இவற்றிற்கு ஏற்றாற்போல் அவர்கள் தங்களைப் பழக்கிக்கொள்ள வேண்டும். கப்பற்படையிலோ, கடற் போராட்டத்திலோ நாள்தோறும் நிகழத்தக்க சம்பவங்களை எப்படிச் சமாளிப்பது என்பதுபற்றி பூரணமான பயிற்சி யளிக்கப்படுகிறது. ஆகவே, இளைஞர்கள் கப்பற்படை வாழ்க்கையை மேற்கொள்ளுவதற்கு எதுவும் தடையாயிருக்கப் படாது.



# இந்தியப் படைகளுக்கு வேவல் பிரிவுச் செய்தி

## "மன்னருக்கும் இந்திய மக்களுக்கும் உண்மையோடு உழைப்பேன்"

இந்தியப் படையை விட்டு விலகி, இந்திய ராஜப்பிரதிநிதி பதவியை ஏற்கும் பீல்ட் மார்ஷல் சர் ஆர்ச்சிபால்ட் வேவல் கீழ்க்கண்ட செய்தியைத் தன் இந்தியப் படைகளுக்கு அனுப்பியிருக்கிறார் :—

"அடுத்த அக்டோபர் மாதம், மேன்மைதங்கிய லின்லித்கோ பிரபுவிற்குப் பதிலாக இந்திய வைசிராய் பதவியை ஏற்றுக்கொள்ளும்படி மன்னர்பிரான் எனக்குக் கட்டளையிட்டார். ஆகையால் இந்திய சேனாதிபதிப் பதவியை விட்டு நான் விலகிக் கொண்டேன். இந்தியாவிற்கு நான் மேலும் தொண்டாற்றுவதற்கு இதன் மூலம் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்தப் புதுப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுவதனால், ஏற்படக்கூடிய கடமைகளை மாட்சிமைதங்கிய மன்னர்பிரானுக்கும், இந்திய மக்களுக்கும் உண்மையோடு நிறைவேற்ற என்னால் - இயன்றவரை முயற்சிப்பேன். இந்தியாவிலுள்ள மாலுமிகள், சிப்பாய்கள், விமானிகள் ஆகியோர் விஷயங்களில் நான் மேலும் அக்கரையோடு இருப்பேன். அவர்கள் வேலை மிகச் சிறந்தது. அவர்கள் மிகச் சிறந்த குணமுடையவர்கள். என் இராணுவ வாழ்க்கை முழுதும் நான் இவர்களைப்பற்றி தெரிந்து கொண்டு பாராட்டி யிருக்கிறேன். குறிப்பாக இந்த யுத்த காலத்தில் மத்திய கிழக்கிலும், இந்தியாவிலும், மற்ற இடங்களிலும் என்னிடம் மிகச் சிறந்த முறையிலும் நன்றியோடும் சேவகம் செய்தார்கள்."

"மீண்டும் ஜெனரல் ஆகின்லெக் உங்கள் சேனாதிபதியாகி விட்டார். அவரை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த யுத்தத்தில் பல போர் முனைகளில் வெற்றி பெற்றவர். இந்தியப் படையில் நெடு நாட்களாக உத்தியோகம் பார்ப்பவர். திறமையோடும் அனுபவத்தோடும் சேனாதிபதி பதவியை வகித்து நடத்தகூடியவர்கள் வேறு யாருமில்லை. அவர் மீண்டும் இப்பதவி ஏற்றுக்கொள்ளுவதுபற்றி நீங்கள் எல்லோரும் எப்படி மகிழ்ச்சியடைகிறீர்களோ அதுபோலவே தான் நானும் மகிழ்ச்சியடைகிறேன்."

"சென்ற 200 வருஷங்களாக இந்தியாவிற்கு ஏற்பட்டிராத பெரும் ஆபத்துக்கள் நான் இந்தியச் சேனாதிபதியாக இருந்த இரண்டு வருஷங்களில் நடந்திருக்கின்றன. இந்த ஆபத்துக்கள் அடியோடு நீங்கிவிடவில்லையானாலும், அவை நிகழாதபடி தடுக்கப்பட்டிருக்கின்றன. எதிரிகள் வந்து தாக்காதபடி இந்திய நாடு பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் உங்களுடைய முயற்சியின் பயனாகவும் மற்ற போர் அரங்கங்களில் நேச நாடுகளுக்குக் கிடைத்த வெற்றிகளின் பலனாகவும் அளவிட முடியாதபடி இந்தியா பலமடைந்துவிட்டது. ஏராளமான படைகளும் தளவாடங்களும் கொண்டுவந்து பலப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவிற்கு அநேக போர் விமானங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. இந்திய மன்னர்களும் நேபாள மகாராஜாவும் இந்தியப் படைக்குச் செய்த உதவியின் பயனாக மிகுந்த பலமடைந்திருக்கிறது. தற்கால யுத்தத் தளவாடங்களும் தேவையான அளவு இருக்கின்றன. தற்கால யுத்தத்திலும் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இந்திய கடற்படையும் இந்திய விமானப் படையும் வெகுவாக அதிகப்பட்டுவிட்டது. பிரிட்டிஷ் விமானப் படையும் ராயல் கப்பற் படையும் செய்த அருமையான வேலைகளோடு இவையும் சிறந்த முறையில் தொண்டாற்றின. பல இனங்களைச் சேர்ந்த பொது ஜனங்களும் பலவகைத் துறைகளிலும் யுத்த முயற்சியில் ஈடுபட்டனர். இதன் பயனாக, பெரும் படைகளை இந்தியாவில் திரட்ட முடிந்தது. யுத்த உற்பத்தியும் மிக அதிகப்பட்டது. நன்கு அமைக்கப்பட்ட உள்நாட்டுப் பாதுகாப்பு ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது இந்தியா பலமுடையதாயிருக்கிறது. இங்குள்ள எல்லோரும் தம் கடமையை நிறைவேற்றுவதில் கொஞ்சமும் அச்சமில்லா மன உறுதியோடு இருந்தால், இந்தியாவின் பாதுகாப்பைக் குறித்துக் கொஞ்சமும் கவலைகொள்ளத் தேவையில்லை. யுத்தத்தை வெற்றிகரமாக முடிவடையச் செய்யவேண்டும். ஜப்பானியர்கள் ஆதிக்கம் உண்டாகிவிடும் என்னும் அச்சம் ஆசியாவிலிருந்து நீக்கப்பட வேண்டும். இவற்றிற்கு இன்னும் பெரும் முயற்சிகள் செய்யவேண்டியிருக்கிறது. இதன் பொருட்டு நாமெல்லோரும் ஒன்று பட்டு வேலை செய்வோம். என் ஆணைக்குட்பட்டு நீங்கள் எல்லோரும் விசுவாசத்தோடு உழைத்து பற்றி நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். இனி நீங்கள் மேற்கொள்ளும் வேலைகளில் வெற்றிபெற வேண்டுமென்று நான் ஆசி கூறுகிறேன். வெகு தூரத்திலுள்ள தம் வீடு வாசல்களை விட்டு இந்தியாவிற்கு வந்திருக்கும் பிரிட்டிஷ் படையினருக்கு ஒரு வார்த்தை : "இந்தியாவைப் பாதுகாப்பதும் ஜப்பானைத் தோற்கடிப்பதற்கு ஆயத்தங்கள் செய்வதும் உங்கள் வேலைகளில் மிகவும் முக்கியமானவை. சாம்ராஜ்ய நாட்டுப் படையினரான உங்கள் தோழர்கள் இதை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். பிரிட்டிஷாரும் இந்தியர்களும் நெடு நாட்களாக முயன்று வந்ததின் பலனாகத் தான், நிரந்தரமான வெற்றி, நேர்மையான முறையில் ஏற்படும்."

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

**பிரான்சில் மறை முக இயக்கம்**

அச்சு நாடுகளின் கொடுமைகளிலிருந்து தம் நாட்டை மீட்க வேண்டு மென்னும் ஆசை மேலீட்டினால், ஆங்காங்கே பலர் கூடி பல கோஷ்டிகளாக அமைந்திருக்கிறார்கள் என்பதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. ஜெர்மானியர்களின் யுத்த முயற்சிகளைப் பாழாக்கும் பொருட்டுத் தாம் என்னென்ன செய்யக்கூடுமோ அத்தனையும் அவர்கள் அவ்வப்பொழுது செய்துகொண்டு வருகிறார்கள். இந்த மறைமுக இயக்கத்தாரை நசுக்கவேண்டிய முன் ஏற்பாடுகளை அரசாங்கத்தார் செய்ய வேண்டிய அளவிற்கு அவர்கள் மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். நம்பத் தகுந்த இடங்களிலிருந்து வரும் செய்திகளிலிருந்து இது உண்மை என்று தெரிகிறது. 'லா டெரிமான்ட்' என்னும் சுவித்சர்லாந்து பத்திரிகையில், தாம் நேரில்கண்ட தோர் சம்பவத்தை ஒருவர் எழுதுகிறார். அதில் அவர் கூறுவதாவது : அநேகர் அங்கே கைதி செய்யப்படுகிறார்கள் ; மகா கொடுமையாக நடத்தப்படுகிறார்கள். இவற்றை எதிர்ப்பதற்காக ஏற்பட்டிருக்கும் ஸ்தாபனங்கள் தம் இரகசிய பிரசாரத்தை வெகுவாக அதிகப்படுத்திக் கொண்டு வருகின்றன. அதே சமயத்தில் ஜெர்மன் படைகளும் லவாலின் போலீசாரும் மகா சுறுசுறுப்பாக இருந்து வருகிறார்கள். மேலும் அவர் கூறியதாவது :—

"முக்கியமான இடங்களிலும், ரயில்வேயில் ஒதுக்கப்பட்ட இடங்களிலும், ஸ்டேஷன்களிலும், தொழிற்சாலைகளிலும் கண்காணிப்பு அதிகப்பட்டு விட்டது. வேவு பார்க்கிறவர்களை எதிர்த்துச் சண்டைகள் அதிகமாக நடக்கின்றன. ஜெர்மன் படையினருக்கும் போலீசாருக்கும் அதிகப்படி ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறார்கள். படைகளும் அடிக்கடி இடம் மாறிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பல வாரங்களாக சோல்ஜர்களையும், வெடி மருந்துகளையும், முள் கம்பிகளையும், கட்டடச் சாமான்களையும் பிரான்சின் தென் பகுதியிலுள்ள போர்டோ என்னுமிடத்திற்கு ஜெர்மானியர்கள் அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இப்போது அவை மீண்டும் வடக்கே வந்துகொண்டிருக்கின்றன."

பிறகு பிரஞ்சுக்காரர்களை பலாத்காரமாக ஜெர்மனிக்குத் தொழிலாளர்களாக அனுப்புவதைக் குறித்து அவர் குறிப்பிடுகிறார். இதன் பயனாக, பிரஞ்சு மக்களுக்கும் விஷி அரசாங்கத்திற்கும் இருக்கக் கூடிய தொடர்பு அற்றுவிட்டது. பிடெய்னைப் பற்றிய பேச்சே கிடையாது. அவருக்கு எவ்வித அதிகாரமுமில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர் மீது விசேஷ வெறுப்பை உண்டாக்கிக் கொண்ட சில அரசியல் வாதிகள் தவிர வேறு யாரும் அவர் மீது குறை கூறுவதில்லை. லவாலுக்குப் பொது ஜனங்களிடம் செல்வாக்கில்லை. ஆனால் அவர் மீது பொது ஜனங்களுக்கு வெறுப்பு அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது. இது பற்றி அவர் கூறியதாவது :

"எல்லா வகை எதிர்ப்புக்களும் உண்டு. அக்கிரமங்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு தானிருக்கின்றன. ஆனால் லவாலின் போலீசார், நாட்டுப் பற்றுடையவர்களின் எதிர்ப்பு ஸ்தானங்கள் பலவற்றைக் கலைத்து விட்டனர். நன்றாக்க முன்னவர்களின் ஊக்கத்தைக் குலைத்தார்கள். ஆயிரக் கணக்கான இளைஞர்களைச் சிறைப்படுத்தினார்கள். இவர்களில் அநேகர் பிரஞ்சு மறைமுக மீட்சிப் படை உத்தியோகஸ்தர்கள். சிறைப்படுத்துவதாகவும் கொலை செய்வதாகவும் என்னதான் பயமுறுத்தினாலும், அவர்கள் மனம் மாறுவதே கிடையாது. உள்ளம் உறுதியாகவே இருக்கிறது."

**வருந்தத் தக்க உணவு நிலை**

பிரான்சில் உணவு நிலை பெரிதும் வருந்தத் தக்கதாயிருக்கிறது. உணவுகள் கிடைப்பது மகா அரிதாயிருக்கிறது. இது பற்றி ஒரு நிருபர் கூறுவதாவது :—

"என் நண்பர்கள் சிலர் கொஞ்சம் கீரையையும் சிறிதளவு இறைச்சியையும், முள்ளங்கியையும் தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அங்கே மிக மிகக் குறைந்த உணவுதான் கிடைக்கிறதென்பது பற்றி 'ஜெர்னல் டி ஜினிவா' என்னும் பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையும் வலியுறுத்துகிறது. அதில்,

"அந்த நிலைமையில் மகா கொடிய அம்சம் ஒன்று உண்டு. அது பற்றி, மருத்துவக் கழகத்தைச் சேர்ந்த ஆசியர் ரிச்செட், விவசாய மந்திரிக்கு விடுத்துள்ள அறிக்கையில், கடுமையான ஒரு வாக்கியத்தில், அத்தனையும் சுருக்கி அமைத்திருக்கிறார். அந்த வாக்கியத்தில் 'உணவுக் குறைவு காரணமாக 1 கோடி பிரஞ்சுக்காரர்கள் படிப்படியாக இறந்து கொண்டு வருகிறார்கள்' என்று குறிப்பிடுகிறார். ரயில் வழியாகவும் ரோடுகள் வழியாகவும் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது. கடைகளில் மிகவும் இன்றியமையாத பொருள்கள் கூடக் கிடைப்பதில்லை" என்று எழுதியிருக்கிறார்.

தற்காலத்தில் பிரான்சின் நிலைமைபற்றி இது ஒருவாறு விளக்குகிறது. அதிருப்தியும் கலவரமும் மிக அதிகமாய் இருப்பதாகத் தெரிகிறது. நேச தேசங்களின் படைகள் ஐரோப்பாவைத் தாக்கும் போது இவை எல்லாம் கரை கடந்து பெருந் தீயாக மூண்டு விடக் கூடும்.



# அதன் அர்த்தம் என்ன?

நேற்றுவரை அடிக்கிறேன், உதைக்கிறேன், கொல்லுகிறேன், உலகத்தையே கட்டி ஆளப்போகிறேன் என்று அட்டகாசம் செய்துகொண்டிருந்த பேர்வழி, இன்று திடீரென்று, சீ! இதென்ன சண்டை வேண்டியிருக்கு? நமக்குள்ளே சமாதானம் நிலவினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! சமாதானத்திற்கு உடனே வழிதேடவேண்டும், என்று பேச ஆரம்பித்தால், எப்படியிருக்கும்? ஏனய்யா இவன் இப்படிப் பேசுகிறான் என்ற சந்தேகம் தானே எல்லோருக்கும் உண்டாகும்?

இதேமாதிரி ஐரோப்பாவிலே இப்பொழுது ஆங்காங்கே சமாதானத்தைப் பற்றிய பேச்சுகள் அடிபடுகின்றன என்பது தினசரிச் செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

இத்தாலியர்கள் யாரோ ஆல்ஜியர்ஸில் உள்ள பிரஞ்சுக்காரர்களின் காதுகளிலே சமரசப் பேச்சைப் போட்டு வைக்கப்போனார்களாம். அதே மாதிரி மேற்கு ஐரோப்பாவிலும் ஜெர்மானியரிடை சமாதானப் பேச்சு எழுந்ததாம். அச்சுநாட்டார் சார்பிலே, யுத்தத்தை நிறுத்துவதுபற்றி ஸ்பெயின் பேச்சைக் கிளப்பக்கூடும் என்று வேறே சொல்லிக்கொண்டார்கள். இந்தப் பேச்சுகளுக்கு ஏதாவது அர்த்தம் உண்டா?

பேஷாக உண்டு.

### அச்சு நாட்டாரால் அடிதாள முடியவில்லை.

நேசதேசத்தார் காட்டும் கைவரிசை நாளுக்கு நாள் பலமாகி வருகிறது ; அச்சு நாட்டாரால் அடிதாள முடியவில்லை. நேசநாட்டார் இப்படியே தொடர்ந்து ஐரோப்பாமீது குண்டுகளை மழையாகப் பெய்துகொண்டே போனால், ஐரோப்பா முழுவதும் ஒரே இடுகாடுபோலாகிவிடும். அப்புறம் ஐரோப்பா திரும்பவும் தலைதூக்கி நிற்க பல தலைமுறைகளாகும். அதோடு மட்டுமன்றி, இந்த யுத்தத்திலே ஜெயம் என்பதை நேசதேசத்தார் பெற்றுவிட்டால் (பெற்றுவிடுவார்கள் என்பதில் சந்தேகம் தான் கிடையாதே!) அப்புறம், இந்த யுத்தத்திற்குக் காரணமாக இருந்த அச்சுத் தலைவர்களை எல்லாம் லேசில் விடமாட்டார்கள் நேசதேசத் தலைவர்கள் என்பது அச்சுநாட்டுத் தலைவர்களுக்குத் தெரிந்துவிட்டாற்போலிருக்கிறது. ஏண்டாப்பா தெரியாத்தனமாக இந்த அக்கப்போரை ஆரம்பித்தோம், 'பிள்ளையார் பிடிக்க குரங்காக முடிந்துவிட்டதே'! என்ற பீதி அவர்கள் மனசிலே ஏற்பட்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால், திடீரென்று சமாதானப் பேச்சுப் பேச வந்துவிடுவார்களா வணங்கா முடியர்களாகிய அச்சுநாட்டார்? பிடரியிலே விடுகிற அடிபலத்தால் தானாக உண்மையைக் கக்குகிறது வாய் என்பது அனுபவ சித்தாந்தமான ரகசியமாசசே!

நேசதேச விமானிகள் செய்யும் வேலைகள்தான் அச்சுநாட்டாரின் அடிவயிற்றிலே புளியைக்கரைத்துவிட்டு வருகின்றன. ஜெர்மனிக்கு ஜீவநாடிபோன்ற ரூர் பிரதேசத்தையே பொட்டலாக அடித்துவிடுவது என்று நேசதேச விமானிகள் தீர்மானித்து விட்டார்கள். அல்லலும் பகலும் அறுபது நாழிகையும் அந்த ரூர் பிரதேசங்களை யாராவது சில நேசதேச விமானிகள் தரிசிக்கத் தவறுவதில்லை.

நேற்றுவரை விமானங்களுக்கான பாகங்களையும், எஃகுப் பொருள்களையும், நிலக்கரியையும், நீர்மூழ்கி யந்திரங்களையும் தயாரித்து ஜெர்மன் யுத்த ராக்ஷஸனது வயிற்றை நிரப்பிக்கொண்டிருந்த ரூர்பிரதேசத்தில் பெரும்பகுதி, இன்று பாழாகிக் கிடக்கிறது. அங்கிருக்கும் பிரபல தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்களில் பதினைன்று இன்று ஓய்ந்து போய், தூங்கிக்கொண்டு கிடக்கின்றன. நாளுக்குநாள் ரூர் பிரதேசத்தின் உற்பத்தி சக்தி தளர்ந்து கொண்டிருக்கிறது. அவ்வளவுக் கவ்வளவு ஜெர்மனியின் தாக்கும் சக்தியும் குன்றுகிறது.

ருஷ்யாவிலே ஜெர்மானியர் வசந்தகாலத் தாக்குதலை மேற்கொள்ளவில்லை என்றால் அதற்குக் காரணம் ரூர் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகள் முன்போல வேலைசெய்ய முடியாது போனதுதான்.

ருஷ்யா, இரண்டு வருடம் போரை அதிவெற்றிகரமாக நடத்திவந்திருக்கிறது. இதிலே ருஷ்யாவிற்கு ஏக நஷ்டம்தான். யுத்தத்தின் இரண்டாவது வருடம் பூர்த்தியானதைக் குறித்த விழாவை நடத்தியபோது, ருஷ்யாவிலிருந்து, மாஸ்கோ ரேடியோ என்ன சொன்னது தெரியுமா? இந்த இரண்டு வருட யுத்தத்திலே, 42 லக்ஷம் ருஷ்யர்கள் சேதப்பட்டிருக்கிறார்கள். 35 ஆயிரம் பீரங்கிகளும், 30 ஆயிரம் டாங்குகளும், 23 ஆயிரம் விமானங்களும் அவர்களுக்கு நஷ்டமாகி விட்டனவாம்.

ஆனால், இதேகாலத்தில் 64 லக்ஷம் ஜெர்மானியரை ஹிட்லர் செலவிலே எழுதவேண்டி வந்தது. 56 ஆயிரம் பீரங்கிகள், 42 ஆயிரம் டாங்கிகள், 43 ஆயிரம் விமானங்கள் கோவிந்தா ஆகிவிட்டன. 1942-ம் வருடக் கடைசியில் நடந்த மாரிகாலப் போரே ஜெர்மனிக்கு பெரிய யமனாக மாறிற்று. யுத்தத்தின் போக்கையே நிச்சயமாக அந்தப்போர் மாற்றிவிட்டது. இந்த இரண்டாவது வருடப் போரிலேதான் ஜெர்மானியருக்கு ஏகப்பட்ட நஷ்டம். ஆனால் ஒருகாணி நாடாவது புதிதாகப் பிடித்தார்களா? ஹூஹூம்! அதற்கு மாறாக, ஏற்கெனவே ஏகப்பட்ட கஷ்டநஷ்டங்களோடு கைப்பற்றியிருந்த பிரதேசங்கள் பலவற்றைக் கைவிட்டார்கள். அவ்வாறு விட்ட கையும் நன்றாகச் சுட்டுவிட்டது. அந்தக் கையால் திரும்பவும் எதையும் தொட முடியவில்லை.

### நேச தேசங்களுக்கு நல்லவேட்டை.

இந்தக் காலத்திலே நேசதேசத்தார் பாடு நல்ல வேட்டை. அவர்களுடைய கை நாளுக்குநாள் உயர்ந்து வந்தது. இப்பொழுது மட்டும் மேற்கே இரண்டாவது போர்முனையை ஆரம்பித்தால், அச்சுநாட்டார் பாடு நிச்சயமாக அம்பலமாகிவிடும் என்று ருஷ்யர்கள் எண்ணுகிறார்கள். பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் இவ்விஷயம் தெரியாமலில்லை. தாவுவதற்கு முன் இருமுறை எண்ணிப் பார்க்கவேண்டும் என்றொரு பழமொழி இருக்கிறதல்லவா? சிறுகுழியைத் தாண்டும்பொழுதே இந்தப் பழமொழிப்படி நடந்தாகவேண்டும். அப்படியிருக்க பெரிய கடல்களைத் தாண்டவேண்டிய நிலைமையில், அதோடு எதிர்க்கரையில் உள்ள விரோதி எமகாதகன் என்று தெரிந்திருக்கையில், இருமுறை அல்ல இருபது முறை, எண்ணவேண்டாமா? தாண்டிக் குதிக்குமுன், எதிர்க்கரையில் உள்ள கரடு முரடுகளை மெதுவாக்க வேண்டாமா.

அதையேதான் நேசதேச விமானிகள் இடைவிடாது செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களது செயல் ஜெர்மானியரையும், என்னடா செய்வது?, என்று யோசிக்க வைத்திருக்கிறது. ரூர் பிரதேசத்திலிருந்து பத்து லக்ஷம் பேர்களை அப்புறப்படுத்த அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்களாம். திட்டம் போடுவது எளிது. அதை அமுல் படுத்துவது லேசா என்ன? எத்தனை ரயில்கள், எத்தனை நாட்கள் ஓடவேண்டும்! அதற்கு எவ்வளவு நிலக்கரி வேண்டும்! இந்த ரயில்கள் ஓடுவதால், யுத்த முயற்சி எவ்வளவு பாதகமடையும்! இப்போதுள்ள நிலைமையில் ஒரு விநாடியையாவது வீணாக்க முடியுமா?

### ரூர் பிரதேசத்தை காலி செய்தது ஏன்?

ஆயினும் என்ன செய்வது? அநியாயமாக ஜெர்மன் பொது மக்கள் மடிந்தால் என்ன பிரயோசனம்? ஒரு தேசத்தின் சக்தியை அதன் ஜனத்தொகையிலிருந்தும் கணக்கிடுவது உண்டல்லவா? அப்படியிருக்க, ஜெர்மன் மக்களை வீணாக, நேசதேசக் குண்டுவீச்சுக்கு ஆளாக்கி, ஈசல்கள்போல் மடிய வைக்கலாமா? கூடாது. இந்த எண்ணம் தோன்றியது காரணமாகவே, ஹிட்லர் ரூர் பிரதேசத்தைக் காலிசெய்ய உத்திரவிட்டிருக்கவேண்டும்.

நாளுக்கு நாள் நேசதேச விமானங்களின் குண்டுவீச்சின் உக்கிரம் அதிகமாவதைக் கண்டு, ஹிட்லர் அந்த விமானங்களை ரூர் பிரதேசத்திற்கு வெகு தூரத்திற்கு மேற்கிலேயே, கடற்கரைப் பிரதேசத்திலேயே தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்து வருகிறாப் போலிருக்கிறது. அங்கே ஏகப்பட்ட சோதனை விளக்குகளையும், விமானங்களைச் சுடும் பீரங்கிகளையும் குவிக்கச் செய்திருக்கிறார் அவர். ஆனாலும், மகா சக்திவாய்ந்த நூதன நேசதேச விமானங்கள் இவற்றையெல்லாம் லக்ஷ்யம் செய்வதாக இல்லை. கண்ட இடங்களை யெல்லாம் நொறுக்கித் தள்ளுகிறார்கள் அவற்றில் வரும் விமானிகள். செய்வதற்கு அரிய காரியங்கள் என்று இத்தனை காலமாக எல்லோரும் கருதிவந்த காரியங்களை எல்லாம் நேசதேச விமானிகள் இப்பொழுது வெகு எளிதில் செய்து வருகிறார்கள்.

போன வாரத்திலே, சில விமானிகள் ஜெர்மனியில் உள்ள ராணுவ முக்கியம் வாய்ந்த இடங்களை நாசப்படுத்திவிட்டு, நேரே வட ஆப்பிரிக்காவில் உள்ள விமானக் கூடங்களில் போய் இறங்கினார்கள். அங்கே பெட்ரோல் போட்டுக்கொண்டு, குண்டுகளையும் நிரப்பிக்கொண்டு சீமையை நோக்கிப் புறப்பட்டு, போகும் வழியில் இத்தாலியத் துறை முகங்களுக்கு ஒரு சரியான அடி கொடுத்துவிட்டுப் பத்திரமாக தங்கள் யதாஸ்தானம் சென்றடைந்தார்கள். ஏககாலத்தில் ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் உதை கொடுக்கும் இந்த முறையால் எத்தனையோ பலன்கள் உண்டு என்பது போகப்போகத் தெரியவரும்.

வட ஆப்பிரிக்கா விமானிகளோ, ஸிஸிலியையும், சார்டீனியாவையும், இத்தாலியில் உள்ள சில நகரங்களையும் விடாது தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மத்யதரைக்கடலில் ஒரு பெரிய பிரிட்டிஷ் கப்பற்படை ஒன்று சேர்ந்து நிற்கிறது. அதோடு, பல அமெரிக்க யுத்தக் கப்பல்களும் இப்பொழுது கலந்து கொண்டு விட்டனவாம்.

### ஐரோப்பியக் கோட்டை வாசல் : இத்தாலி.

இத்தாலியருக்கு திக், திக் என்றிருக்கிறாப்போலிருக்கிறது. நேசதேசத்தார் இத்தாலியையே ஐரோப்பியக் கோட்டையின் வாசலாகக் கருதியிருக்கிறார்கள் ; ஆகவே இத்தாலியையே முதலில் தாக்குவார்கள் போலிருக்கிறது என்று இத்தாலியர்கள் அடிக்கடி கூறுகிறார்களாம்.

இத்தாலியைக் காக்க பத்து ஜெர்மன் டிவிஷன் படைகள் இத்தாலிக்குச் சென்றிருக்கின்றனவாம். பல இத்தாலிய நகரில் உள்ள மக்களை உள்நாட்டுக்கு அனுப்பிவிட்டார்களாம். ருஷ்யப் போர்முனையில் வேலைசெய்து கொண்டிருந்த எண்ணற்ற தொழிலாளர்கள், இத்தாலி அருகே உள்ள பிரதேசங்களை வலுப்படுத்த அழைத்து வரப்பட்டிருக்கிறார்களாம். பத்து லக்ஷக்கணக்கான யுத்தக் கைதிகளைக்கொண்டு, மேற்கு ஐரோப்பாவிலும், ரூர் பிரதேசங்களிலும் பாழான தொழிற்சாலைகளை மீண்டும் ஆஸ்திரியாவிலே அமைக்க ஹிட்லர் திட்டம்போட்டு, அதனை உடனே அமுல்படுத்தத் தொடங்கிவிட்டாராம்.

### வரவர உண்மை பேசுகிறார்கள் ஜெர்மானியர்.

நேசதேசத்தாரும் ஐரோப்பாமீது குண்டுபோட புதுத் திட்டங்கள் போட்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. அவர்களது விமானங்களில் உள்ள பெரிய பீரங்கிகளை நினைத்தாலே பயமாயிருக்கிறது என்கிறார்கள் ஜெர்மானியர். அடி அதிகமாக விழவிழ உண்மையைக் கக்குவார்கள் என்ற பழமொழிப்படி, ஜெர்மானியர் வரவர உண்மைபேசத் தொடங்குகிறார்கள். ருஷ்யாவைச் சாதாரணமாக எண்ணினோம் ; ஆப்பைப் பிடுங்கின குரங்குபோலானோம் என்று அவர்களே இப்பொழுது பச்சையாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

நேசதேசப் படையெடுப்பு எந்தச் சமயத்திலும் ஏற்படலாம் என்பதை உணர்ந்த ஹிட்லர், அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலே கொட்டமடித்துக் கொண்டிருந்த தமது நீர்மூழ்கிகளை, சொந்த இடங்களுக்குத் திரும்ப உத்திரவிட்டுவிட்டாராம். அதோடு, நேசதேசத்தார் படையெடுக்கத் தொடங்கியதும் உபயோகிக்க வென்று ஜலத்தின்மீது பாவி எரியும் எண்ணெய் ஒன்றை ஏராளமாகச் சேர்த்து வைத்திருக்கிறாராம்.

இதையெல்லாம் நேசதேசத்தார் பொருட்படுத்தவே போவதில்லை. பெல்ஜியம், ஹாலந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ளவர்களுக்கெல்லாம் நேசதேசத்தார்கள் எச்சரிக்கை விட்டிருக்கிறார்கள். நாங்கள் இன்னும் பலமாகக் குண்டு வீசப்போகிறோம் உங்கள் நாடுகளில் உள்ள தொழிற்சாலைகள் மீது. ஆகையால் முன்கூட்டியே உங்கள் பெண்டு பிள்ளைகளை ஆபத்தில்லாத இடங்களுக்கு அனுப்பிவிடுங்கள். நீங்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களானால், இன்னும் திறமைமிக்க அபாய அறிவிப்பு முறைகளை ஏற்படுத்துவதோடு, உங்களுக்கென்று பிரத்யேகமான பதுங்குமிடங்களைக் கட்டச்சொல்லி உங்கள் ஜெர்மானிய எஜமானர்களைக் கட்டாயப்படுத்துங்கள். வீணாகச் செத்து மடியாதீர்கள், என்பதே இந்த எச்சரிக்கை.

இவ்வாறு எச்சரிக்கை கொடுத்துவிட்டு அப்பால் குண்டு வீசியபோதிலும், கொப்பல்ஸ் துரை விநோதப்ரசாரம் ஒன்றைத் தொடங்கியிருக்கிறார். "நேசதேசத்தார் அநியாயமாக ஐரோப்பாவில் உள்ள கலைப்பொக்கிஷங்களை எல்லாம் அழித்துப் பாழாக்குகிறார்கள்! அமெரிக்கர்கள் தங்களது சிக்காகோ நகரிலும், சான்பிரான்ஸிஸ்கோ நகரிலும் ஐரோப்பாவில் உள்ளவை போன்ற கலைச்சின்னங்களைச் சிருஷ்டிக்க முடியவில்லையே என்ற ஆத்திரத்தில், இப்பொழுது ஐரோப்பாமீது வேண்டுமென்று பறந்துவந்து, இங்குள்ள கலைச்சின்னங்களை அழிக்கிறார்கள். இது நியாயமா?" என்று கேட்கிறார் அவர். அடாடா! என்ன உருக்கம்! நேற்றைய தினம் நாஸி விமானங்கள் லண்டன் நகரையும், வார்ஸாவையும், ராட்டர்டாமையும், ஸ்டாலின்கிராடையும் நாசமாக்கியபொழுது, கணக்குப் பார்த்து கலைப்பொக்கிஷங்களை ஒதுக்கி நிறுத்தினார்களா? ஒரு சித்திரசாலை அருகே ஒரு யுத்தசாலை இருந்ததென்றால், அது யாருடைய குற்றம்? தமது கட்சிக்கு ஆதரவு வேண்டுமானால், ஒரு நியாயமான பேச்சு! இல்லாவிட்டால் ஒரு ஜம்ப பேச்சு கொப்பல்ஸ் துரையின் பேச்சிலே புளிப்புத்தட்ட ஆரம்பித்துவிட்டது. இதனால் தானோ என்னமோ, இவருக்கு மேலாக ரிப்பன்ட்ராப் ஐயாவை பிரசாரகத் தலைவராகப் போட்டிருக்கிறார்களோ என்னமோ?

(10-ம் பக்கம் பார்க்க)

# இந்தியக் கப்பற் படையின் வெற்றிகள்

1939-ம் ஆண்டு யுத்தம் ஆரம்பமானது முதல், தூரத் தொலைவிலுள்ள பல போர்முனைகளிலும் நம் இந்தியக் கப்பற்படை வேலை செய்து கொண்டு வந்திருக்கிறது.

கிழக்காப்பிரிக்காவில் இத்தாலிய சாம்ராஜ்யத்தை யழிப்பதற்கு இவற்றில் சில போராடி உதவின. சோமாலி லாந்தைச் சேர்ந்த பார்பராவைக் கைப்பற்றிக் கொண்டது, இவற்றின் வீரச்செயல்களில் ஒன்றாகும். 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் 16-ம் தேதி யுத்தக் கப்பல்களும் படைவீரர்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களும் கரைக்கு வெகு தூரத்திற்கு அப்பால் தோன்றின. இவற்றோடு டாங்கர் கப்பல்களும் லேட்டர் கப்பல்களு மிருந்தன. அந்தப் போர்க் கப்பல்கள் இந்தியக் கப்பற்படையைச் சேர்ந்தவை. கப்பற் படையினர் பதிவிருந்து பார்த்த பிறகு கரையைத் தாக்கி இத்தாலிய பீரங்கிகளைப் பயனற்றதாக்கி விட்டனர். படைகள் அங்கே போய் இறங்கியபோதுங் கூட, எதிர்ப்பே கிடையாது. நமது படைகள் எதிரிகளைத் தாக்கும் முன்னதாகவே, அவர்கள் தப்பியோட வழிபார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே மேற்கொண்டு போரிடாமலேயே பார்பராவைக் கைப்பற்றிக் கொண்டோம்.

கோன் என்னுமிடத்தில், எதிரிகளை இடது புறத்தில் தாக்கும் பொருட்டு, கரையிலிருந்த இந்தியப் படைகள் உள்நாட்டிற்குப் போகவேண்டி வந்தது. அது, சூடானிலிருந்து இத்தாலிய குடியேற்ற நாடாகிய எரிட்ரியாவிற்கு எதிரிகளை விரட்டிக்கொண்டிருந்த நம் வெற்றிக் காலம். அப்போது நம இந்தியப் படைகளுக்கு சப்ளைகள் கொண்டு வந்து உதவிக் கொண்டிருந்தது இந்தியக் கப்பற் படையைச் சேர்ந்த கப்பல்கள் தான். அன்றியும் எரிட்ரியாவில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஒரு தளத்தில் நம் இந்தியக் கப்பல்கள் படைவீரர்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்குத் துணையாகக் காவல் புரிந்து கொண்டு வந்தன. அன்றியும் இப்போராட்டம் வெற்றி பெறுவதற்கு மிகவும் முக்கியமான பல வழிகளிலும் இவை உதவின.

மசாவா துறைமுகத்தைக் கைப்பற்றும் கடைசி கட்டத்தில், அங்கே சுரங்க வெடிகள் வெகுவாக மிதக்கவிடப்பட்டிருந்தன. இந்தத் துறைமுகத்திற்குள் போய் நம் படைகளுக்கு உதவி செய்யும் கட்டளை நம் இந்தியக் கப்பற் படைக்கும் பிரிட்டிஷ் கப்பற்படைக்கும் ஏற்பட்டது. அப்போது வெள்ளைக் கொடி வீசப்பட்டது. இது கண்ட இத்தாலியக் கப்பல்கள் குழப்பமடைந்து தாங்களே மூழ்கி விட்டன. சுரங்க வெடிகள் நிறைந்திருந்த துறைமுகத்திற்குள் கடந்து போவது இந்தியக் கப்பற்படைக்கு ஒரு கடுமையான வேலையாகத்தான் இருந்தது. ஆனால், இந்திய மாலுமிகள் கப்பலோட்டுவதில் கெட்டிக்காரர்களாகையால், சுரங்க வெடிகளுக் கெல்லாம் தப்பி கப்பலைச் செலுத்திக் கொண்டு போனார்கள். அந்த இத்தாலியத் துறைமுகத்திற்குள் முதல் முதல் வழி கண்டு போன பெருமை இந்திய கப்பற் படையைச் சேர்ந்த ஒரு சப்பலுக்கே உரியது. அசாப் என்னும் மற்றொரு இத்தாலியத் துறைமுகத்தில் நடைபெற்ற போராட்டத்தில், இந்தியக் கப்பல் ஒன்று சிறந்த முறையில் போராடியது. ஈரானில் (பாரசீகம்) ஜெர்மானியர்கள் சூட்சி செய்ததை யடுத்து, நடைபெற்ற கொஞ்ச காலப் போராட்டத்தில், இந்தியப் படைக் கப்பல்கள் படைகளைக் கொண்டுபோய் அங்கே இறக்கியது மட்டுமன்றி, அவர்களுக்குக் காவலாகவும் அந்த கடற்கரையிலேயே இருந்தன.

**'ஜமுனா'வின் தீரச் செயல்கள்.**

'ஜமுனா' ஒரு இந்தியப் படைக் கப்பல். இது படேவியா ஜப்பானியவர் கைவசமாகும் முன்னதாக, கடைசியாக, அங்கிருந்து வெளியேறியது இந்தக் கப்பல்தான் என்று தெரிகிறது. கிழக்கிந்தியத் தீவுகளை யடுத்துள்ள கடல்களில் ஜப்பானியர் ஆதிக்கம் வலுத்திருக்கும் போதுகூட, அவ்வழியாகச் செல்லும் சப்ளை கப்பல்களுக்குத் துணைக்கப்பலாக சுந்தாஜலசந்தியில் இது பல முறை போய்வந்துகொண்டிருந்தது. ஒரு சமயம் எதிரி பாம்பர் விமானங்கள் இதை இடைவிடாது தாக்கின. என்றாலும் அக்கப்பற்படையைச் சேர்ந்த இந்திய பீரங்கிப் படையினர் சளைக்கவில்லை. தம் விமான எதிர்ப்புப் பீரங்கிகளைக் கொண்டு பகல் முழுதும் எதிரி விமானங்களால் சப்ளை கப்பல்களுக்கு நஷ்டமுண்டாகாதபடி பார்த்துக்கொண்டு போராடினர். இரவு வந்தது. சப்ளைக் கப்பல்கள் பயங்கரக் கட்டத்தைத் தாண்டிப்போய்விட்டன. இந்தப் போராட்டத்தில் 3 ஜப்பானிய விமானங்கள் நாசமாயின. இந்த பீரங்கிப் படைத் தலைவருக்கு டி. எஸ். சி. பட்டமும், இரண்டு இந்திய சிப்பாய்களுக்கு வீரப்பதக்கங்களும் கிடைத்தன.

சிங்கப்பூரை யடுத்துள்ள கடலில் நல்ல வேலை செய்த கப்பல்களில் சட்லெஜும் ஒன்று. பாங்கா கடற்கரையை யடுத்து சில சப்ளை சப்பல்கள் வடக்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. அவற்றிற்குத் துணையாக 'சட்லெஜ்' போய்க்கொண்டிருந்தது. அப்போது ஒரே சமயத்தில் 27 ஜப்பானிய பாம்பர் விமானங்கள் வந்து சப்ளை கப்பல்களைத் தாக்கின. அவற்றை எதிர்த்து சட்லெஜ் போராடிக் கொண்டிருந்தது. இதற் கிடையில் தகுந்த பாதுகாப்போடு சப்ளை கப்பல்கள் கடந்துவிட்டன.

ஒரு முறை இந்தக் கப்பல் பல சப்ளை கப்பல்களுக்குத் துணையாக படேவியாவிற்குப் போகும்படி நேர்ந்தது. இந்தக் கப்பல்களை 110 ஜப்பானிய பாம்பர் விமானங்கள் தாக்கின. அவற்றோடு 'சட்லெஜ்' போராடி அவற்றை விரட்டிவிட்டது. அவற்றுள் ஒரு விமானம் எரிந்துபோய்க் கடலில் விழுந்தது.

பர்மியப் போரிலும் கூட இந்திய கப்பற்படை அரிய சேவை செய்திருக்கிறது. ஜாவாவிற்குத் 1000 மைல்களுக்குத் தென் மேற்கே "பெங்கால்" என்னும் கப்பல் முதல் முதல் ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியவிற்கு வந்து கொண்டிருந்த போது, மகா வீரத்தோடு எதிரிகளோடு போராடி உலகம் புகழத்தக்க நிலைமையடைந்தவிட்டது. ஒரு பெரிய ஜப்பானியக் கப்பலை மூழ்கடித்தது மட்டுமன்றி, மற்றொரு பெரிய கப்பலையும் பெரிதும் சேதப்படுத்திற்று.

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

### பட்டினி போடுவது யுத்தகால ஆயுதமா?

சுயநிலைமை மோசமாக ஆக, சுற்றிமுற்றிலுமிருப்பவர்கள்மீது ஹிட்லருடைய கோபத்தீ பாய்கிறது. கிரேக்க நாட்டில் உள்ளவர்களையும், ஹாலந்து, டென்மார்க் நாடுகளில் இருப்போரையும், நார்வே மக்களையும் பட்டினிபோட்டுக் கொல்லுகிறாராம் அவர். பட்டினி போடுவதையே ஒரு யுத்தகால ஆயுதமாகக்கொண்டு விட்டார்போலிருக்கிறது அவர். யார் பட்டினி கிடந்தாலும், ஜெர்மானியர் பட்டினி கிடக்கப்படாது என்பது பொது உத்திரவாம். இதற்காக ஐரோப்பாவின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் ஜெர்மனிக்கு உணவுப்பொருள்கள் போகின்றனவாம். இதெல்லாம் ஹிட்லருக்கு விரோதமாகவே முடியப்போகின்றன.

கிரேக்க நாட்டிலே உள்ள தேசபக்தர்கள் சென்றவாரம் திடீரெனப் பல ரயில் பாலங்களைத் தகர்த்து விட்டார்களாம். அவற்றைச் சீர்ப்படுத்தப் பல மாதங்களாகுமாம். பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும், போலந்திலும் எண்ணற்றவர்கள் கொதித்து எழுந்து நாஜிகள் குரல்வளையைப் பிடித்து நசுக்க, தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள். நேச தேசத்தார் ஐரோப்பாவில் காலடி வைக்கட்டும். உடனே அங்கே என்னென்ன எதிர்பாராத மாறுதல்கள் நடக்கப்போகின்றன என்பதைப் பாருங்கள்!

அங்குமட்டுமல்ல; இங்கே, கீழ்த்திசையிலும் சீக்கிரமே பல மாறுதல்கள் ஏற்படப்போகின்றன. அக்டோபர் வரட்டும். அதற்குள் பர்மாவில் மழை நின்றுவிடும். அதற்குள் சீனாவிற்குப்போகவென்று இந்தியா, திபேத் வழியாகப் புதிதாகப் போடப்படும் பாதையிலே, வேலை மும்முரமாக நடந்துகொண்டிருக்கும். இந்தியா வழியாக பல விமானங்கள் சீனுபோயமையும். புது வைசிராயாக, பீல்ட் மார்ஷல் வேவல் துரை வந்துவிடுவார். கீழ்த்திசைப் போரை நடத்துவதற்கென்று ஒரு தனித் தலைவர் நியமிக்கப்பட்டுவிடுவார். ஜப்பானை யாரும் மறந்துவிட மாட்டார்கள். ஜப்பானியர் தமது இஷ்டம்போல இனி வாலாட்ட முடியாது. இந்தியாவின் ராணுவ பலம் ஏகமாக அதிகரித்துவிட்டது. இதையே தளமிடமாகக்கொண்டு அற்புதச் செயல்கள் பலவற்றைச் செய்யப் போகிறார்கள் நேசதேசத்தார்.

சென்ற பல மாதங்களாக ஜப்பானுக்கு விமான நஷ்டமும், கப்பல் நஷ்டமும் அதிகமாகி யிருக்கிறதே ஒழிய, பிரதேசலாபம் ஒரு சிறிதும் இல்லை.

ஆனால், ஆஸ்திரேலியாவின் விமானபலம் முன்னைவிட நூற்றுக்கு அறுபது வீதம் அதிகரித்திருக்கிறதாம். சீமையிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் அதற்கு நிறைய உதவி கிடைத்துவிட்டதாம். மாக் ஆர்தரின் விமானங்கள் ஜப்பானியருக்குப் பெரிய எமன்களாக விளங்குகின்றன. அமெரிக்க நீர்மூழ்கிகள் அடித்து நொறுக்குகின்றன.

### ஜப்பானுக்கு நஷ்டந்தான்: லாபமில்லை.

ஜப்பானியருக்கும் வரவர பீதி அதிகமாகிவருகிறது. சும்மாவாவது அமெரிக்கரைப் பயப்படுத்தப் பார்க்கிறார்களாம் அவர்கள். அதே சமயத்திலே, ஜப்பானிலே ஏ.ஆர்.பி. ஏற்பாடுகளைப் பலமாகச் செய்துகொண்டிருக்கிறார்களாம். பதுங்குமிடங்களை நிறையக் கட்டுகிறார்களாம். இதன் அர்த்தமென்ன? சீனாவிலே அமெரிக்க விமானங்கள் மேலும் மேலும் வந்த வண்ணமாயிருக்கின்றன; அவை ஜப்பானைத் தாக்ககூடும் என்பதுதான்.

சீனாவிலே ஜப்பானியர் கஜகர்ணம் போட்டுப் பார்க்கிறார்கள். ஆனாலும் ஜெயத்திற்கான வழியே அவர்களுக்குத் தென்படவில்லை. அடியெடுத்து வைத்த இடத்தில் எல்லாம் அடியாகவே இருக்கிறது. அயோக்யர்களுக்கு வேறென்ன மரியாதை கிடைக்கும்.



**<u>தொழிலாளர் பகுதி</u>**

# ஜெர்மனி தளர்ச்சி யடைகிறது

"யானை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே." இது ஒரு பழமொழி. யுத்த நிலைக்கு இது மிகவும் பொருத்தம். நேச நாடுகளின் வெற்றி முரசந்தான் எல்லா நாடுகளிலும். இந்த முரசத்தை யடுத்து வருவது தான் யானை. அது தான் வெற்றி யானை. வெற்றி கிடைத்து விட்டதா என்று அவசரப்பட வேண்டாம். நேச நாடுகள் வெற்றி பெறுவது உறுதி. இது பற்றி கொஞ்சமும் சந்தேக மில்லை. ஏன்? அச்சு நாடுகளின் தலை போன்றது ஜெர்மனி. அங்கேயே தளர்ச்சி ஏற்பட்டு விட்டது. எப்படி என்று நீங்கள் கேட்கலாம். பல வகைகளில் இது வெட்ட வெளிச்சமாகிறது. ரூர் பிரதேசம் நிர்தூளியாகிறது. இரவும் பகலும் நேச நாட்டு விமானங்கள் குண்டு மாரி பெய்த வண்ணமாகவே இருக்கின்றன. இது தொழிற்சாலைகள் மிகுந்த பிரதேசம். ஆகவே, தொழிலாளர்கள் பெரிதும் வசிக்கும் பகுதி. இவர்கள், இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய அண்ணனோ, தம்பியோ, கணவனோ, தந்தையோ தான் இன்று ரஷ்யப் போர் முனையிலிருப்பவர்கள். அவர்களுக்கு இச் செய்தி எட்டாமல் இருக்குமா? அப்போது அவர்கள் மனம் என்ன பாடு படும? உயிர் வாழ்வது எதற்காக என்னும் வெறுப்பு உண்டாகுமல்லவா? இவர்கள், எப்படித் தம் இராணுவக் கடமைகளைச் சரிவர நடத்த முடியும்? அச்சம் நிறைந்த மனம் என்ன தான் செய்ய முடியும்? ஒன்றும் முடியாது.

நிற்க, நார்வேயின் வட பகுதியிலுள்ள ஒரு துறை முகத்தில், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று போய நின்றது. அதிலிருந்த படையினர் திரும்பத் தம் கப்பலுக்குப் போக மறுத்து விட்டார்கள். "கொடுங் கோல் மன்னன் வாழும் நாட்டில், கடும் புலி வாழும் காடு நன்றே" என்னும் பழமொழிக்கு உதாரணமாக நடந்து கொண்டார்கள். இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்? ஜெர்மன் படையினர் தம் சர்வாதிகாரியின் கட்டளையை மீறத் துணிந்து விட்டார்கள். இதனால், தமக்குக் கடுந் தண்டனை யுண்டு என்று அவர்களுக்குத் தெரியும் எனினும், ஹிட்லர் கட்டளையை நிறைவேற்றுவதை விட, உயிரை வேண்டுமானாலும் இழக்கலாம் என்னும் துணிவு கொண்டு விட்டார்கள். இது ஜெர்மன் மக்களின் மனப் போக்கைப் படமெடுத்துக் காட்டுகிறது. இது மட்டுமா? ஹிட்லர் ஒரு உத்திரவு பிறப்பித் திருக்கிறார். அது கடுமையான உத்திரவு. நீர் மூழ்கிக் கப்பல் தலைவர்கள் அனுப்பும் அறிக்கைகள் உண்மையானவை அல்லவாம். பொய் அறிக்கைகள் தானாம். அவரவர்கள் எல்லையை விட்டுப் போய் விடுகிறார்களாம். அப்படிப்பட்டவர்களைக் கடுமையாகத் தண்டிப்பாராம் ஹிட்லர். இது கடுமையான எச்சரிக்கை. ஏன விடுத்தார் இதை? தன் நீர் மூழ்கிக் கப்பல் தலைவர்கள் மோசம் செய்கிறார்கள் என்று உணர்ந்து தானே! இதற்குக் காரணம் அவர்கள் அடைந்த அதிருப்தி தான். ஹிட்லர் வார்த்தையில் அவர்களுக்கிருந்த நம்பிக்கை குறைந்து விட்டது ஹிட்லர் தன் நீர் மூழ்கிக் கப்பல் படைகளின் திறமையிலேயே மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார் இந்த நம்பிக்கையிலும் ஹிட்லருக்கு மண் விழுந்தது. இவருடைய சொந்த நாட்டிலேயே இந்தக் கதி. வேற்று நாடுகளில் இவருடைய கதி என்ன? இவர் தன் கொடுமைகளால் வசப்படுத்தி வைத்திருக்கும் நாடுகள் சும்மா யிருக்குமா? அங்கெல்லாம் கொந்தளிப்புத் தான். இந்தக் கொந்தளிப்பை அடக்குவதென்பது இலேசான காரியமா? மிகக் கஷ்டம். வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள வசதியான சமயத்தை யல்லவா எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் அந் நாட்டார். சமயங் கிடைத்தால் நழுவ விடுவார்களா? இங்கே ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. ஜெர்மன் போராட்டம் ஆயுதங்களைக் கொண்டும் தளவாடங்களைக் கொண்டும் ஒரு பாதி தான் நடை பெறுகிறது. மறு பாதி பிரசாரத்தினால் தான். ஜெர்மன் பிரசாரம் என்றாலே புளுகு மூட்டை யென்று தான் அர்த்தம். இதற்குக் கர்த்தா டாக்டர் கொப்பல்ஸ். இவருக்கும் மேலாக வான் ரிப்பன்ட்ராப்பை நியமித்திருக்கிறார் ஹிட்லர். ஏன் நியமிக்க வேண்டும்? கொப்பல்ஸ் பிரசார முறை சரியல்ல என்பதைத் தான் இது குறிக்கிறது. இந்த முடிவிற்கு அவர் வரக்காரண மென்ன? பல விதங்களிலும் பல விடங்களிலும் அவர் அடைந்த தோல்விகள் தான் காரணம். அது மட்டுமல்ல. இப்போது ரஷ்யாவில் கடும் போராட வேண்டும். நேச நாடுகள் இரண்டாம் போர் முனையை ஆரம்பித்தால், அதையும் சமாளிக்க வேண்டும். இதற் கேற்ற வசதிகள் ஜெர்மனியில் அவர்களுக்குக் கிடையாது. இந்த வசதிகள் இருந்திருந்தால், மத்தியதரைக் கடலிலுள்ள பண்டலேரியா, லெம்புசா, லினோசா ஆகிய தீவுகளை அவ்வளவு இலேசாக நேச நாடுகள் கைபபற்றும்படி விட்டுவிடுவார்களா. ஏன்? அவை உலகப் பாதைகளுக்குக் கதவுகள் போலமைந்திருக்கின்றன. இந்த மூன்று தீவுகளை இழந்ததனால் உலகப் போக்கு வரவின நிலைமையும் வெகுவாக மாறி விட்டதென்று தான் சொல்ல வேண்டும். இந்தத் தீவுகள் இத்தாலியைச் சேர்ந்தவை. இத்தாலி ஜெர்மனியின் கையாள். தன் கையாளுக்கு நேர்ந்த ஆபத்துக் காலத்தில், ஜெர்மனி உதவக் கூடவில்லை. இதிலிருந்து ஜெர்மனியின் பலவீனத்தை ஓரளவிற்கு மதிப்பிடலாம். அல்லாமலும் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான மால்டா தீவைக் கைப்பற்றக் கூட இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் முடியவில்லை. மால்டா தீவு எதிரிகளால் சூழப்பட்டிருந்தது. என்றாலும் மகா வீரத்தோடு போராடி தற்காத்துக் கொண்டது. இந்தத் தீவிற்கு, சமீபத்தில் மாட்சிமை தங்கிய நம் மன்னர் பிரான் விஜயம் செய்தார். எதிரிகளால் நாசமடைந்த பல விடங்களையும் பார்வையிட்டார். அங்குள்ள வீரப் படையினரைப் பாராட்டினார். மால்டா தீவின் கவர்னரான லார்ட் கோர்ட்டுக்கு 'பீல்ட் மார்ஷல்' பதவிக்குரிய கோலைக் கொடுத்தார். 'ஏர் வைஸ் மார்ஷல் சர் கீத் பார்க், பிரதம நீதிபதி சர் ஜார்ஜ் போக் ஆகிய இருவருக்கும் 'சர்' பட்டம் வழங்கினார். மால்டாவிற்கு விஜயம் செய்யும் முன்னதாக, அவர் வடாப்பிரிக்காவிற்குப் போனார். போர்த் தலைவர்களைக் கண்டு பேசினார். போர் அரங்கங்களுக்கு பிரிட்டிஷ் மன்னர் இவ்வளவு வாலாயமாகப் போகலாமா? ஆபத் தேற்படாதா? என்று கேட்கலாம். வீரர்கள் ஆபத்துக்களைக் கண்டு அஞ்சுவதில்லை. நமது மாட்சிமை தங்கிய மன்னர் பிரானும் ஒரு வீரர் தான். இவர் விஜயம், நம் நேச நாட்டுப் படைகளுக்குப் பெரும் ஊக்கம் தந்தது. அது மட்டுமன்று. நேச நாடுகளுக் குள்ளிருக்கும் ஒற்றுமையும் உறுதிப்பட்டது. இவரது விஜயத்தை யடுத்துத் தான் ஜெனரல் டிகாலும் ஜெனரல் ஜிரோவும் கூட சமரச மானார்கள். அவர்களுக்குள் இருந்த கடுமையான வேற்றுமைகள் நீங்கின. இப்போது நேச நாடுகளின் கை ஓங்கியிருக்கிறது. இரண்டாம் போர் முனையை ஐரோப்பாவில் ஆரம்பிக்க இதுதான் ஏற்ற சந்தர்ப்பம். இதற்கான முன்னணி ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று தான் சொல்ல வேண்டும். ரஷ்யாவைத் தாக்க ஜெர்மானியர்கள் முயற்சிக்கிறார்கள். ஆனால், பலிக்கவில்லை. ஆனால், ரஷ்யர்களோ ஜெர்மன ஸ்தானங்களைக் கடுமையாகத் தாக்குகிறார்கள். செய்வ தின்ன தென்று தெரியாமல திண்டாடுகிறார் ஹிட்லர். ஜப்பானியர்களை யொழித்துக் கொட்டத்தை யடக்க நேச நாடுகள் முனைந்து விட்டன. அமெரிக்கத் தளவாட உற்பத்தி அதிகப் பட்டுக் கொண்டே போகிறது. அலாஸ்காவை யடுத்துள்ள கிஸ்காத் தீவை, அடுத்தடுத்து நேச தேச விமானங்கள் தாக்கிக் கொண்டிருக்கின்றன. விரைவில் இது நேச நாடுகள் வசப்படும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. அப்போது ஜபபானைத் தாக்க வெகு இலகுவாயிருக்கும். தென் மேற்குப் பசிபிக்கிலும் பல விடங்களில் ஜப்பானியர்கள் அடிக்கடி தோல்வி யடைந்து கொண்டுவருகின்றனர். ஆஸ்திரேலியா தனக்கு உதவி வேண்டு மென்று பல முறை பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு விண்ணப்பித்துக் கொண்டது.. இந்த விண்ணப்பங்கள் வீண் போகுமா? இப்போது ஆஸ்திரேலியாவில் பலமான கப்பற் படையும் விமானப் படையும் இருக்கின்றன. அங்கே காணப்படும் ஜப்பானியக் கப்பல்களை அவை அடியோடு நாசமாக்குகின்றன. இந்தத் தொல்லைகளைத் தாங்கமாட்டாமல் ரப்பரால் கப்பல்கள் கட்ட ஆரம்பித் திருக்கிறார்கள் ஜப்பானியர்கள். குழந்தை விளையாட பலூன்களையும் பொம்மைகளையும் செய்து விற்றுக் காசாக்கும் பேர்வழிகளல்லவா? ரப்பர் கப்பல் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். ரப்பர் எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் தன்மையுள்ளது. போர் முனைகளில் வெடிகுண்டுகளும் நெருப்புந் தான் முக்கியம். இவை பட்டால், இந்த ரப்பர் கப்பல் என்ன கதியாகும்? இது பற்றி நாம் காத்திருந்து பார்ப்போம். பர்மாவிலும், இந்திய விமானப் படையும் பிரிட்டிஷ் விமானப் படை

(12-ம் பக்கம் பார்க்க)

# இந்திய கப்பற்படை பெரிதாகிறது

## கடற்கரைக்கும் வியாபாரத்திற்கும் காவல்

இந்தியாவிற்குக் கப்பற்படை என் வேண்டும்? நீண்ட கடற்கரைகளால் சூழப்பட்டு வடக்கே மிகவும் உயர்ந்த இமயமலை அமைந்திருப்பதனுல், இந்தியாவை ஒரு தீவு என்றே சொல்லலாம். இங்கே போய்ச் சேரவேண்டிய பொருள்களும் மனிதர்களும் பெரும்பாலும் கடல் வழியாகத்தான் போகவேண்டியிருக்கிறது. தரைப்பாதை மிகவும் நீண்டது. கஷ்டமானதுங்கூட. வெளி நாடுகளோடு அது நடத்தும் வியாபாரம் வெகு அதிகம். எனருலும், ஏறக்குறைய் எல்லா வியாபாரமும் கடல் கடந்துதான கோண்டுபோகப்படுகின்றன. இப்போது யுத்தம் நம் நாட்டிற்கு நெருங்கிவிட்டது. நம் நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு ஏராளமான படைகளும் தளவாடங்களும் வந்திறங்கிய வண்ணமாகவேயிருக்கின்றன. இவைகூடக் கடல் வழியாகத்தான் வரவேண்டும். மற்ற நாடுகளுக்கும் இந்தியாவின் விளை பொருளகள் தேவை. ஏனென்ருல், அப்போதுதான அக்கிரமக்கார எதிரிகளோடு போராடி வெல்லுவதற்கு தளவாடப்பொருளகளும மற்ற பொருள்களும் செய்துமுடிக்க முடியும். இந்த மூலப்பொருள்களை நம் துறைமுகங்களிலிருந்துதான் கப்பல்களில் ஏற்றியனுப்புகிருேம்.

சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் ஒரு தீவு தன் போக்குவரவிற்கு எப்படி கடற் பாதையைமட்டுமே நம்பியிருக்கவேண்டுமோ, அது போலவே, இந்தியாவும் தன் போக்குவரவிற்குக் கடற்பாதையைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. தன் கடற்கரைகளையும், அங்கு வந்து போகும் கப்பல்களையும் பாதுகாப்பதற்குத்தகுந்த ஏற்பாடுகளைச் செய்துகொள்ளாத எந்தத் தீவும் முன்னேறியதில்லை. கடற்பாதுகாப்புக்கெனறே சில கப்பல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் தேவையான அளவிற்குத் தளவாடங்கள் முதலிய உபகரணங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பயிற்சிபெறற படையினரும் இருக்கிருர்கள். நேச நாடுகளின கப்பற்படை பலத்தால்தான் இந்தியா பாதுகாக்கப்பட்டுவருகிறது. இந்த பலத்தை அவற்றிற்கு உண்டாக்கியது இந்தியா தான்.

நம் நாட்டிலுள்ள ராயல் இந்திய கப்பற்படையின், வேலைபற்றி நாம் பெருமை கொள்ளலாம். நம் கடற்கரைகளைக் காவல்புரிகிறது. இடைவிடாது நம் கடற்கரையில் ரோந்து போய்வந்து கொண்டிருக்கிறது. எதிரி நீர் மூழ்கிக்கப்பல்கள், படைக் கப்பலகள், போர் விமானங்கள் முதலியவை எங்கே தென்படுகின்றன என்று கண்ணை விழித்துக் கவனித்துக் கொண்டிருக்கிறது. வியாபாரக் கப்பலகளுக்குத் துணையாகப் போகிறது. ஏராளமான கப்பற் பகுதிகள் நம் இந்தியத் துறைமுகத்திற்குச் சென்ற வருஷம் கடைசியாகக்கொண்டு வந்த வியாபாரக் கப்பல்களுக்குத் துணையாக வந்தது. ராயல் இந்திய கப்பற்படையைச் சேர்ந்த கப்பல்தான். அதில் படைகளும் யுத்த சாமான்களும் வந்து சேர்ந்தன. இந்தக் கப்பலை எதிரிகள் தாக்காதபடி பாதுகாத்துக் கொள்ளவேண்டியது கடற்படையின் கடமை. இந்திய கடற்படையின் கடமையுங்கூட. இந்த வேலை மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. இந்த வேலையில் "சீனியர்" உத்தியோகஸ்தர்கள் மிகவும் புகழ் வாய்ந்தவர்கள்.

அநேக நூற்ருண்டுகளுக்குமுன்பு இதே நோக்கத்தை முன்னிட்டு இந்திய மன்னர்கள் கப்பற்படை வைத்திருந்தார்கள். சமீபகாலத்தில் கூட தரைப்போரிலும், கடற்போரிலும் மராட்டியர்கள் நல்ல புகழ் பெற்றனர். மொகலாயச் சக்கரவர்த்திகளுங்கூட கப்பற்படையை வைத்திருந்தார்கள். கி.மு. 1612-ம் வருஷத்திலேயே இந்திய கப்பற்படை ஆரம்பமானதாகத்தெரிகிறது. அப்போது கிழக்குக் கடல்களில் கடற் கொள்ளைக்காரர்கள் அதிகம். ஆகவே இவர்கள் அட்டகாசத்தை ஒடுக்கவேண்டி, ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் தம் வியாபாரத்திற்குப் பாதுகாப்பளிக்கும்பொருட்டு ஒரு கடற்படையை அமைத்தார்கள். இந்தப் படையின் பெயர் பலவகைகளில் மாறிவிட்டது. சுமார் இரண்டு நூற்ருண்டுகளாக இந்தக் கப்பற்படை பம்பாயிலிருந்து வந்தது. அங்கே புகழ் வாய்ந்த கப்பல் கட்டும் பார்சி கம்பெனியார் இந்தியக் கப்பற்படைக்கும் பிரிட்டிஷ் கப்பற்படைக்கும் பல கபபல்களைக் கட்டிமுடித்தார்கள். இப்போது கப்பல் படைத் தலைமை ஸ்தானம் நியூ டில்லியிலிருக்கிறது. இதுதான் மததிய அரசாங்கத்தின் இருப்பிடம். என்ருலும், அதன் தளம் பம்பாயில தானிருக்கிறது.

1914-1918-ல் நடைபெற்ற மகா யுத்ததில் இந்திய கப்பற் படையைச் சேர்ந்த கப்பல்களும் படையினரும் வெகுவாக உதவினுர்கள். உதாரணமாக சூயெஸ் காலவாயைச் கடந்து இஜிப்டைத் தாக்க வேண்டுமென்று திட்டமிட்டுக்கொண்டு வந்தபோது, மகா வீரத்தோடு "ஹார்டின்ஜ்" எனனும் கப்பல எதிர்த்து நின்று பாதுகாத்தது. இப்போது மீண்டும் இந்தியக் கப்பற்படை காவல் இருந்துகொண்டு வருகிறது. நமது கரைகளையும் வியாபாரக் கப்பல்களையும் காவல் புரிந்துவருகிறது. ஆனுல் இப்போது இது வெகுவாகப் பெருகிவிட்டது.

இந்த யுத்தம் ஆரம்பமாவதற்கு 5 வருஷங்களுக்கு முன்பே, கடலில் மிதக்கும் சுரங்க வெடிகளை ஒதுக்கி அப்புறப்படுத்துவதிலும், பீரங்கிகளைக் கையாளுவதிலும் இந்தியக் கடற்கரையைக் காவல்புரிவதற்கான முக்கியமான வேலைகளைப் பார்ப்பதற்கு சிலரை நன்ருகப் பழக்கி, ஒரு காவற்படையை அமைத்தனர். 1939-ம் வருஷம் யுத்தம் ஆரம்பமானது. அப்போது அதன பொறுப்புக்களும் அதிகப்பட்டன. இந்தப் பொறுப்பை நிறைவேற்ற ஏராளமான கப்பல்களும் படையினரும் தேவையானுர்கள். ஆகவே இந்தப்படை விரிவடைந்து இன்னும் விரைவாகப் பெருகிக்கொண்டுவருகிறது.

---

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

யும் அடிக்கடி பறந்து போய் முக்கியமான குறிகளைத் தாக்கிக் கொண்டு வருகின்றன. இங்கேயும் ஜபபானியர்கள் கை ஓங்கவில்லை, தென மேற்குப் பசிபிக் சமுத்திரத்தில் சென்ற 8 மாதங்களாக நாளொன்றிற்கு 8 விமானங்கள் விகிதம் ஜப்பானியர் இழந்திருக்கிருர்கள். அதாவது சென்ற மே மாதம் 1-ம் தேதியிலிருந்து ஜூன் மாதம் 26-ம் தேதி வரை 455 விமானங்கள் ஜப்பானியர்களுக்குச் சேதம். ஆனுல் நேச நாடுகளுக்கு 17 விமானங்கள் மட்டுந் தான் நஷ்டம். இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. ஜப்பானிய விமானிகள் இப்போது திறமையுள்ளவர்களாயில்லை என்ற முடிவிற்குத் தான் வரவேண்டியிருக்கிறது. அமெரிக்க விமானிகள் பலர் சிவில் படையைச் சேர்ந்திருக்கிருர்கள். இவர்கள் 75,000 பேர்கள் கிளம்பி, சுமார் 2 கோடி மைல்கள் தூரம் பறந்தனர். 150 ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டனர். அவற்றில் பலவற்றை மூழ்கடித்தனர். இவர்களில் 30 விமானிகள் தான இறந்தனர். 73 விமானங்கள் மட்டுந் தான் திரும்பி வரவில்லை. இந்த சிவில் விமானப் படையினர் அமெரிக்கக் கடற்கரையில் காவலிருக்கின்றனர்.

சீனுவிலும் ஜப்பானியர் ஜம்பம் பலிக்கவில்லை. அங்கேயும் விரட்டப்படுகிருர்கள். அச்சு நாடுகளின் பேராசையில் தீ மூண்டு கொண்டுவருகிறது. அவர்கள் அழிவு காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நேச நாட்டினர் எப்போது, எந்த இடத்தில் தாக்குவார்கள் என்று ஹிட்லர் தெரிந்து கொள்ள முடியவில்லை. அதனுல் தான், தகுந்த ஏற்பாடுகளோடு முன்னெச்சரிக்கையாக இருந்து கொள்ள முடியாமல் திண்டாடுகிருர். அச்சு நாடுகள் அழியுங் காலம் அருகிலிருக்கிறது. சமாதான சூரியன் தோன்றும் பருவம் வந்துவிட்டது. அதற்கான ஆயத்தங்களெல்லாம் செய்ய நேச நாடுகள் முனைந்திருக்கின்றன. யுத்தம் முடிந்த பிறகு, நிரந்தரமான சமாதானத்திற்கு எல்லா நாடுகளும் வழி கோலிக் கொண்டிருக்கின்றன. இனி யுத்தமே ஏற்படாதபடி ஒரு திட்டம் வகுக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. இவற்றின் பயனுக உலக நிலையே மாறிவிடும். இன்ப உலகம் கம்பீரமாகத் தலை தூக்கும். துன்பம் அகலும். அந் நன்னுளை விரைவில் வரவேண்டுவோமாக!

[சென்னை அகில இந்திய வானெலி நிலையத்திலிருந்து ஜூன் ௴ 2ந்உ ஒலி பரப்பப்பட்ட ஒரு பிரசங்கம்.]

### இந்திய யுத்தக் கைதிகள் மீண்டனர்.

சென்ற மே மாதம் 13-ம் தேதி காலையில் அலெக்சாந்திரியா துறைமுகத்திற்குள் ஒரு வெள்ளைக் கப்பல் வந்து புகுந்தது. அதைக் கண்டவுடனேயே நெடுந் தூரம் பிரயாணம் செய்திருந்ததென்று தெளிவாகத் தெரிந்தது. அதன் கைப்பிடிக் கம்பிகளைப் பற்றிக் கொண்டு நின்றவர்கள் இந்தியப் படையினர். இவர்கள் மூன்று வருஷங்களுக்கு முன்பு கைதிகளாகி எதிரிகள் வசமிருந்து மீட்கப்பட்டவர்கள். இவர்கள் அந்தக் கப்பல் ஓரங்களில் நின்று கொண்டு ஊரைப் பார்த்தபோது கொட்டை எழுத்துக்களில் "நானகாவது இந்தியப் படையிடம் வான் ஆர்னிம் சரணடைந்தார்" என்னும் சுவரொட்டிகளைக் கண்டார்கள். அளவற்ற ஆனந்தங் கொண்டார்கள். இவர்களில் பலர் அந்தப் படையில் சேர்ந்திருந்தவர்கள். இந்தப் படையின் 11-வது பட்டாளம் டோப்ருக்கைத் தாக்கிய போது, அங்கே போராடியவர்கள்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஞூ ஜூலை ௴ 9உ, வெள்ளிக்கிழமை [இதழ் 27

## சீன யுத்தத்தின் 7-வது ஆண்டு விழா



மிஸ்டர் சர்ச்சில்.

சீன யுத்தத்தின் 7-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, பிரிட்டிஷ் மக்களின் சார்பாக நான் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன். 18 மாதங்களுக்கு முன் பிரிட்டனும் சீனுவும் நேச நாடுகளாக ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தம் பெயரளவில் மட்டுமின்றி, உணர்ச்சியளவிலும் அமைந்திருக்கிறது. பல வகை இன்ப துன்பங்களிலும் நம் இரு நாடுகளும் அது முதல் ஒன்றுபட்டே இருந்திருக்கின்றன. வடாப்பிரிக்காவில் வெற்றி பெற்ருேம். யாங்ட்சியிலும் வென்ருேம். கிழக்கிலும் மேற்கிலும் என்ன நடக்கப் போகிறதென்பது பற்றி தெளிவான சாட்சியங்கள் இருக்கின்றன.

நாம் நடத்த வேண்டிய போராட்டத்தைப் பற்றியும், அது சம்பந்தமான கஷ்டங்களைப் பற்றியும் பிரிட்டனே சீனுவோ, குறைவாக மதிப்பிடப் போவதில்லை. சம்பவங்களின் போக்கு இப்போது தெளிவாகிக் கொண்டு வருகிறது. இதுவரை நம் எதிரிகள் தான் போராட்டத்தை ஆரம்பித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது நாமே ஆரம்பிக்கப் போகிருேம். உலக முழுதிலுமுள்ள அக்கிரமக்காரர்கள் எந்த வித நிபந்தனையுமின்றி சரணடைய வேண்டிய காலம் விரைவில் வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருேம்.

பிறகு உலக நிலையைத் திருத்தியமைக்க வேண்டும். இது மகா கடுமையான வேலை. அப்போது நாகரிகக் கலைகள் மீண்டும் புத்துயிர் பெறும். யுத்தத் தீயில் தழைத்தது ஆங்கிலோ-சீன ஒற்றுமை. யுத்தப் பரீட்சையிலும் இந்த ஒற்றுமை வெற்றி பெற்றது. ஆகவே, சமாதானம் ஏற்பட்ட பிறகு, ஏற்படக்கூடிய பல வகைச் சிக்கலான பிரச்சினைகளுக்கும் முடிவு காணுவதற்கு இந்த ஒற்றுமை ஏற்றபடி பயன் படும்.

—மிஸ்டர் சர்ச்சில் ஜெனரலாசிமோ ஷியாங்-கெய்-ஷேக்குக்கு ஜூலை 6-ம் தேதி விடுத்த செய்தி

# சீனாவின் வீரம்.

'எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி' என்ற பாரதியார் மெட்டு.

1. சீனத்துமக்களின் செந்தழல் தியாகங்கள்
   செப்பவு மாகாதே—அவ
   ரானதினாலாறு ஆண்டுகள் போராடி
   அஞ்சாது மிஞ்சுகிறார்.

2. மெத்த உறுதிகொள் சித்த முடையவர்
   எத்தனை யோவகையில்—அவர்
   நத்துந்தி ருநாட்டின் பத்திகொண் டே தினம்
   பித்துப்பி டித்தவர் தான்.

3. அக்கிரம நிப்பனும் அஞ்சிடும் போர்த்திறல்
   ஆற்றலில் மிக்கவர் தான்—நாளும்
   சிக்கித் தவித்திடும்—சீரியர் தங்களைச்
   சேரவே மீட்பவர் காண்.

4. நேசதே சங்களின் வாசம லரென
   பேசப்ப டுஞ் சீனா—அதன்
   நாசந்த விர்ஜென்ர லாசிமோ ஷாங்கேஷேக்
   பாசமுடையவராம்.

5. நாலரைக் கோடி சதுர மைல் கொண்ட
   நாடது சீனாவாம்—அதன்
   பாலரை நாற்பத்தைந்து கோடி பேர்களைப்
   பாலித்தி டும் நாடு.

6. நீரும்நி லவளம் சீரும்உ லோகமும்
   நேர்ந்திடு நன்னாடு—அது
   யாரும் இனிது உறைந்து வளர்ந்திட
   ஏற்றதோர் தொன்னாடு.



## பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : மிஸ்டர் சர்ச்சில் .. .. | 1 | பெண்களும் யுத்த முயற்சியும் .. .. | 6 |
| சீன யுத்தத்தின் 7-வது ஆண்டு விழா .. | 1 | தொழிலாளர் பகுதி : சீனப் போர்த் திருநாள். | 7 |
| பாட்டு : சீனாவின் வீரம் .. .. .. | 2 | கணக்கு பாழாயிற்று .. .. .. | 8 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | பிரிட்டிஷ் விமானப் பாய்ச்சலும், டாக்டர் கோப் பல்சின் கூச்சலும் .. .. .. | 11 |
| தலையங்கம் : சீன நாளும் பசிபிக்கில் புதிய பாய்ச்சலும் .. .. .. .. | 4 | நம் வேலையைப் பார்த்துக்கொண்டிருப்போம். | 12 |
| "இதுபோன்ற பயங்கர யுத்தம் நடந்ததே இடையாது" .. .. .. | 5 | | |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**முசோலினியும் பாஸிஸ்ட் கட்சியும்: உள்ளுக்குள் வேற்றுமைகள்.**

சென்ற திங்கட்கிழமை ரோம் வானொலி நிலையத்திலிருந்து முசோலினி ஒரு பிரசங்கத்தை ஒலிபரப்பினார். அது பாஸிஸ்ட் கட்சி டைரக்டர்களுக்கு, அவர் செய்த பிரசங்கம் பாஸிஸ்ட் கட்சிக் காரியதரிசி ஸ்கார்லோ ஸ்கோர்ஸாவின் அறிக்கை பற்றி அதில் குறிப்பிட்டார். அந்த அறிக்கையைப் பலர் தப்பர்த்தம் செய்வதாக அவர் கூறுகிறார். அவர் மேலும் கூறுவதாவது :—

"இதற்கு முன்பு மக்கள் பல தவறுகள் செய்திருக்கிறார்கள். இவைபற்றி நாம் பிறகு பேசுவோம். ஆனால் இந்தத் தவறுகள் நல்லெண்ணத்தோடு தான் செய்யப்பட்டன."

ஒரு விஷயம் இங்கே குறிப்பிடத்தக்கது. ஸ்கோர்ஸாவும் பாஸிஸ்ட் கட்சி டைரக்டர்களும் சமீபத்தில் முசோலினியின் ஆட்சி முறையிலுள்ள குறைபாடுகளைக் குறித்து வெளியிட்டார்கள். சமீபததில் அவர்கள் முசோலினிக்கு ஒரு செய்தி யனுப்பினார்கள். கட்சி ஒழுங்கு முறைகளைக் கடுமையான நடவடிக்கைகளைக் கொண்டு வற்புறுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். இத்தாலியர்களின் ஒற்றுமையைக் குலைக்க வேண்டி செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் இன்னின்ன கொடூரமான முறைகளைக் கொண்டு ஒடுக்க வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள். சாதாரணமாக முசோலினிக்கு இவ்வாறு அனுப்பப்படும் கடிதங்களில், அவரைக் குறித்து வெகுவாகப் புகழ்ந்து எழுதப் படுவது வழக்கம். இந்தச் செய்திக் கடிதத்தில் அப்படிப்பட்ட புகழுரைகள் எதுவுங் காணப்படவில்லை. ஸ்கோர்ஸா என்னென்ன செய்யப்பட வேண்டுமென்று கோரினார் தெரியுமா? (1) உள்ளச் சட்டங்களைக் கண்டிப்பாக அமுல் நடத்தவேண்டும். (2) பாஸிஸ்ட் ஆட்சிக்கு விரோதிகளாக இத்தாலியிலுள்ளவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். (3) உபயோகமில்லாத அந்நிய நாட்டவர்களை வெளியேற்றி விடவேண்டும். (4) நிர்வாகத் திறமை மேம்படவேண்டும். (5) விநியோகங்கள் இன்னும் மேலான முறையில் நிர்வகிக்கப்படவேண்டும். (6) எந்தப் பொருளையும் அதிக விலைக்குத் திருட்டுத்தனமாக விற்காதபடி தடுக்க வேண்டும். (7) சுகபோக விடுதிகளையும் சிற்றுண்டிச் சாலைகளையும் கண்டிப்பான முறையில் மேல்பார்வையிட வேண்டும். முசோலினி வானொலிப் பிரசங்கம் செய்யும் போது, திருட்டுத்தனமாக அதிக விலைக்குப் பொருள்களை விற்கிறவர்கள் மீது மகா கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமென்றும், சுகபோக விடுதிகளையும் சிற்றுண்டிச் சாலைகளையும் அவை போன்ற ஸ்தாபனங்களையும் மூடிவிடப்படும் என்றும் குறிப்பிட்டார்.

**முசோலினியின் முன்னேற்பாடுகள்.**

பாஸிஸ்ட் கட்சி தோன்றியது முதல் இது வரை ஒரு முறையாவது நிர்வாக ஊழல்களைக் குறித்து ஒருவரும் குறை கூறியதே இடையாது. இப்போது ஸ்கோர்சா குறைகூற முன்வநதது முன்னேற்பாடாகவும் மிருக்கலாம். இத்தாலி, பணக்காரர்களின் ஆதிக்கம் மிகுந்துள்ள நாடு. ஆகையால் முசோலினியின் சொற்படியும் ஸ்கோர்சா இப்படிச் செய்திருக்கவுங் கூடும். கஷ்டம் வந்தால் சர்வாதிகாரிகள், தாமே பொது ஜனங்களின் கண்ணியம் வாய்ந்த தலைவர்கள் என்று பிறர் நினைக்கவேண்டும் என்பதற்காக், இப்படித் தந்திரமாக நடந்துகொள்ளுவது வழக்கம். நேர்மையில்லா சிப்பந்திகளின் வார்த்தைகளைக் கேட்டு சர்வாதிகாரி தவறு செய்துவிட்டாரே யொழிய, தாமாகவே, தவறு செய்யமாட்டார் என்னும் எண்ணம் பொது ஜனங்களுக்கு உண்டாக்க வேண்டுமெனபதற்காகத் தான் இந்த முறையை அவர்கள் கையாளுவது வழக்கம். இந்தத் தந்திர முறையினால், நிர்வாகம் நடத்தும் கட்சியைச் சேர்ந்த ஒருவரே முன் வருகிறார். நிர்வாகத்தைப்பற்றி குறை கூறுகிறார். பாஸிஸ்ட் கொள்கைக்கும் அதன் தலைவருக்கும் அகௌரவத்தை ஒரு சிலர் உண்டாக்குவதாக அவர்கள் மீது பழி சாற்றுகிறார். இதன் பயனாக, தம் கட்சித் தலைவரின்மீது பொது ஜனங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீக்கப்படுகிறது. இந்த முறையைக் கொண்டு, இதற்கு முன் தான் வெட்கப்படத் தக்க முறையில் நடந்து கொண்டதற்குப் பொறுப்பாளி தானல்ல என்று பொது ஜனங்கள் நினைக்க வேண்டுமென்று விரும்புகிறார். சில குறைபாடுகளை எடுத்து வெள்ளையாகச் சொல்லுகிறார் ஸ்கோர்சா. உடனே நிர்வாகத்தில் கடுமையான சீர்திருத்தங்கள் நடைபெறுகின்றன. பாஸிஸ்ட் கட்சியிலிருந்து, விரும்பத்தகாதவர்களை யெல்லாம் விலக்குகிறார்கள். முசோலினி பரிசுத்தராகிவிட்டார்! பாஸிஸம் சுத்தமாகி விட்டது என்று பிறர் நினைப்பதற்கான மறைமுக ஏற்பாடுகளா யிருக்கலாம் இவை.

* * * * *

**ஸ்கோர்சாவும் முசோலினியும் : கட்சியில் அதிருப்தி.**

முசோலினியின் நிர்வாகத்தின் மீது ஸ்கோர்சா குறை கூறியதற்கு வேறொரு அர்த்தங் கூடச் சொல்லலாம். முசோலினியின் சம்மத மில்லாமலுங்கூட, அவர் குறை கூறி யிருக்கலாம். அப்படியானால் முசோலினியைப் பதவியிலிருந்து விரட்ட அவர் முரட்டுத் தனமாக முயற்சிப்பதாகவு மிருக்கலாம். அல்லது இத்தாலிய ஸ்தானீகருக்குப் பிடிக்காத தோர் கொள்கையை அவர் பலவந்தமாகப் புகுத்த முயற்சிக்கிறாரா? முசோலினியின் சம்மதமின்றி அவர் அப்படிச் செய்திருக்க முடியாது. ஏனென்றால், தற்போதுள்ள நெருக்கடியான நிலைமைக்குக் காரணம் முசோலினி தான் என்று வெளிப் படையாகக் குறை கூற பொதுவாக இத்தாலியர்கள் எண்ணுகிறார்கள் என்று நினைப்பதற்குத் தகுந்த காரணமில்லை. அவர்கள் வெறுப்பெல்லாம் கொள்ளை லாபம் அடிப்பவர்கள் மீதும், ஒழுக்கமற்ற உத்தியோகஸ்தர்கள் மீதும், ஜெர்மானியர்கள் மீதும் தான். ஸ்கோர்சா தன் பொறுப்பை, உணர்ந்து அதாவது பாஸிஸ்ட் கட்சிக் காரியதரிசி என்னும் பதவியை முன்னிட்டு, தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு, தன் கருத்துக்களையும் சீர்திருத்தங்களையும் புகுத்த முயற்சித்திருக்கலாம்.

இந்த அறிக்கைகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப் படுவதில்லை. இவற்றில் ஒரு அறிக்கை சொல்லுகிறது : கட்சியின் பழைய படையினரைத் தனக்கு ஆதரவாகத் திரட்ட முசோலினி இப்போது முற்பட்டிருக்கிறார். இந்தக் கட்சியின் ஆரம்பக் காலத்தில் இந்தப் படையினர் பிற்போக்கானவர்களா யிருந்தாலும், அவர்களுடைய அந்தத் தன்மையை அவர் லட்சியம் செய்யவே யில்லை. மற்றொரு அறிக்கை சொல்லுகிறது : ஊக்க முள்ள இளைஞர்களைக் கட்சி டைரக்டர்களாகக் கொண்டுவரப் பார்க்கிறார் ஸ்கோர்சா. இதற்கு அரசாங்கத்தின் நிர்வாகப் போக்கில்

(9-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

வா'ர வெளியீடு

மலர் III] 1943-ம் ௵ ஜூலை ௴ 9௳. [இதழ் 27


## சீன நாளும் பசிபிக்கில் புதிய பாய்ச்சலும்

ரஷ்யா பரந்த நாடு. அது போலவே தான் சீனாவும். பண்டைக் கலையிலும் நாகரிகத்திலும் தலை சிறந்து விளங்கியது. சமீப காலத்தில், அதன் சிறப்புக் குலைந்து மற்ற நாடுகள் அலட்சியமாக நினைக்கக் கூடிய அளவிற்கு வந்து விட்டது. சீனாவிற்குக் கிழக்கே பசிபிக் மகா சமுத்திரம். இதில் உள்ளது தான் ஜப்பான். 5 சிறு தீவுகள் கொண்டது தான் ஜப்பான் சாம்ராஜ்யம். இது அளவில் சிறிது ; ஆசையில் பெரிது. இந்தப் பேராசை காரணமாக கிளம்பியது நாடு பிடிக்க. அடுத்துள்ள நாடு சீனா தான். இவ்வளவு பெரிய நாட்டைப் பிடிக்க, பெரும் படை திரட்ட வேண்டும். இதற்காக 30 வருஷங்களுக்கு முன்பே திட்ட மிட்டனர். தம் நாட்டு இளைஞர்களுக் கெல்லாம் புத்துணர்ச்சியை ஊட்டினர். தம் நாட்டின் பொருட்டு எதையும் தியாகஞ் செய்யத் தயாராயினர் இந்த இளைஞர்கள். நாட்டில் தொழிலும் வாணிபமும் பெருகின. செல்வம் கொழித்தது. இவர்கள் பெருக்கமும் முன்னேற்றமும் அரசியல் மேம்பாட்டையே அடிப்படையாகக் கொண்டவை. ஆகவே, பிற நாடுகள் இதன் போக்கைக் கவனிக்கத் தொடங்கின. சீனாவும் கூடத்தான் கவனித்தது. திடீரென சீனா மீது பாய்ந்தது ஜப்பான். சீனாவில் இரண்டொரு பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டது. இந்த நிலையிலே சீன மக்கள் பதைத் தெழுந்தனர். விரைந்தனர் ஒன்றுபட. இவர்களுக்குத் தலைவராக ஷியாங்-கெய்-ஷேக் கிளம்பினார்.

இனி, மற்ற நாடுகள் இதுபற்றி என்ன நினைத்தன வென்று கவனிப்போம். சீனா சற்று தளர்ந்திருக்கும் காரணத்தால், ஜப்பான் சீனாவைக் கைப்பற்றிக் கொண்டால், அதை யடுத்துள்ள பல நாடுகளின் கதி என்னாகும் என்று அந்த நாடுகள் ஒவ்வொன்றும் சிந்திக்கத் தொடங்கின. சீனாவோ, பல வளங்களும் மலிந்த பரந்த நாடு. இவற்றை ஜப்பானியர்கள் கைக்கொள்ளுவார்களானால், மற்ற அரசாங்கங்கள், அதை யடுத்து ஆட்சி நடத்துவது முடியாத காரியம். எனவே, இந் நாடுகளெல்லாம் சீனாவிற்கு உதவி செய்வதென முடிவு கட்டின. சீனாவும் புத்துணர்ச்சி பெற்றது. பிற நாடுகளின் உதவியும் கிடைத்தது. ஆகவே சென்ற 7 வருஷங்களாக ஜப்பானியர்களை எதிர்த்து நிற்கிறார்கள் சீனர்கள். இந்த 7-வது யுத்த ஆரம்ப ஆண்டு விழா சென்ற புதன்கிழமை உலக மெங்கும் கொண்டாடப்பட்டது. சீனாவிற்குப் பல நாடுகளின் உதவியும் கிடைத்து விடவே, அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டத்தைத் தளர்த்தி, தம் கவனத்தைத் தெற்கு நோக்கிச் செலுத்திற்று ஜப்பான். தாய்லாந்து, இந்தோசீனா, சயாம், பர்மா, மலேயா முதலிய நாடுகளை வெகு விரைவாக ஒன்றன்பின் னொன்றாகக் கைப்பற்றியது. ஏன்? இந் நாடுகளும் வளம் மிகுந்தவை. இங்குள்ள மூலப் பொருள்களைக் கொண்டு ஜப்பானியர்கள் தளவாடங்கள் செய்ய முடியும். அதுமட்டுமல்ல. உணவுப் பொருள்களும் ஏராளமாக உண்டு. இவற்றை பக்க பலமாகக் கொண்டு, சீனாவையும் ஆஸ்திரேலியாவையும் இந்தியாவையும் கைப்பற்றி அடிமைப் படுத்திக் கொள்ள வேண்டுமென்பது தான் ஜப்பான் எண்ணம். இந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டித் தான், ஜெர்மனியோடும் இத்தாலியோடும் ஜப்பான் ஒப்பந்தம் செய்துக்கொண்டது. ஐரோப்பாவைக் 'கட்டியாள வேண்டுமென்று ஆசை கொண்டார் ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிட்லர். ஆசியாவைக் கட்டியாள வேண்டுமென்று ஆசை கொண்டார் ஜப்பான் நிப்பன். இவ்விருவர் சார்பிலும் மஞ்சள் குளிக்கப் பார்த்தார் முசோலினி. இவர்கள் பேராசையில் மண் விழுந்தது. ஜனநாயக நாடுகள் வீறுகொண்டெழுந்தன. அந் நாட்டு மக்களெல்லாம் கொதித்துப் போர்முனைக்குப் புறப்பட்டனர். நெடுநாட்களாக இரகசியமாக ஆயத்தங்கள் செய்து கொண்டு வந்த ஜெர்மனியும் ஜப்பானும், ஆரம்ப காலத்தில் அடுத்தடுத்து வெற்றிகள் பெற்றன. இப்போது ஒரு அடி கூட முன்னேற முடியாமல் தவிக்கிறார்கள். அதுமட்டுமல்ல. எதிர்த்துத் தாக்குவதை விட்டு, தற்காப்புப் போரில் இறங்கிவிட்டார்கள்.

இரும்பை, பழுக்கக் காய்ச்சிய பிறகு அடித்தால் தான் நம் இஷ்டப்படி வளைக்கலாம், உருவாக்கலாம். அதுபோலவே தான் போராட்டங்களிலும் இந்த நிலைமைக்கு அச்சு நாடுகள் வந்து விட்டன. ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனையை ஆரம்பித்தால், ஹிட்லரின் அகம்பாவம் தானாகவே விரைவில் ஒடுங்கும். ரஷ்யர்களுக்கு இது மிகுந்த வசதியை யுண்டாக்கும். ஜெர்மனியின் தோல்வி அப்போது நிச்சயம். அது போலவே தான், ஆசியாவிலும் ஜப்பானியர்கள் கை சீனாவில் ஓங்கும்படி அனுமதிக்கக் கூடாது. ஏனென்றால், ஏழு வருஷங்களாகப் போராடி களைத்திருக்கிறது சீனா. அன்றியும் முன்போல தளவாடங்களைச் சரளமாக சீனாவிற்கு அனுப்பக் கூடவில்லை. ஏனென்றால், பர்மா ரோடை ஜப்பானியர்கள் பிடித்துக் கொண்டார்கள். இப்போது இதை மீட்க வேண்டும். இரண்டாவதாக, ஆஸ்திரேலியாவையும் கிழக் கிந்தியத் தீவுகளையும் கைப்பற்ற முயற்சிக்கும் ஜப்பானியர்களைத் தோற்கடிக்க வேண்டும். இங்கே பெரும்பாலும் தீவுகள்தான். கடற் படைகளும் விமானப் படைகளும் வெகு மும்முரமாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. தோல்விக்கு மேல் தோல்வி யடைந்து கொண்டிருக்கிறார்கள் ஜப்பானியர்கள். இது தான் ஆசியாவிலும் இரண்டாம் போர் முனை. இது காரணமாக சீனாவிற்குப் பெரும் வசதி ஏற்படுவதுமன்றி, ஜப்பானைத் தாக்க சீன தளங்கள் பெரிதும் உதவப் போகின்றன. இது உறுதி.

இந்த யுத்தம் சம்பந்தமாக சீனத் தலைவர் ஷியாங்-கெய்-ஷேக் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் 'நேச தேசத்தார் வெற்றி பெறுவார்களா என்பதைப் பற்றி நாம் கவலை கொள்ளவில்லை ; ஆனால், எப்போது வெற்றி கிடைக்கும் என்பதைப் பற்றித் தான் கவலை,'' என்று கூறுகிறார். இந்த வாக்கியத்திலிருந்து என்ன விளங்குகிறது ? நேச தேசத்தார் வெற்றி பெறுவார்களா அல்லவா என்பதைப்பற்றி அவருக்குக் கவலையே இல்லையாம். வெற்றி நிச்சயம் என்பதில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அது விரைவில் கிடைக்கவேண்டும் என்பது பற்றித் தான் அவர் கவலைப்படுகிறார். ஜெனரல் மெக்கார்தர் முழு மூச்சாகக் கிளம்பி விட்டார் வெற்றியை நாடி. விரைவில் வெற்றிக் கொடி நாட்டுவார். இதில் சந்தேகமில்லை.



# இதுபோன்ற பயங்கர யுத்தம் நடந்ததே கிடையாது

## நமது கடமையை நிறைவேற்ற தவற மாட்டோம்

### நேச நாடுகளோடு 20 வருஷ ஒப்பந்தம்

### சர்ச்சில் பிரசங்கம்

சென்ற ஜூன் மாதம் லண்டன் நகரத்திலுள்ள 'கில்ட்ஹால்' மண்டபத்தில் ஒரு விழா நடந்தது. அது லண்டன் விடுதலை விழா எனப்படும். இதன் பொருள் பலருக்கு விளங்காமலிருக்கலாம். மிகச் சிறந்த அறிஞர்களைப் பாராட்டும் பொருட்டு, சர்வ கலாசாலையினர் கௌரவப் பட்டங்கள் அளிப்பது வழக்கம். அது போன்றதுதான் 'லண்டன் விடுதலை விழா'வின்போது அளிக்கப்படும் பட்டமும். இந்தப்பட்டம், நாட்டிற்கு மிகச் சிறந்த தொண்டு புரிந்தவர்களுக்கு மட்டுந்தான் வழங்கப்படும். இது நெடுநாள் வழக்கம். பிரிட்டனில் மட்டுமன்றி ஐரோப்பாவின் பல நாடுகளிலும் இந்தப்பட்டங்கள் வழங்கப்படுகின்றன. இந்தப் பட்டத்தை அன்று யாருக்கு வழங்கினார்கள் தெரியுமா ? நமது பிரிட்டிஷ் அரசாங்க முதல் மந்திரிக்கு. அவர் தான் மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில். இந்தப் பட்டத்தை லண்டன் லார்ட் மேயர் வாசித்தளித்தார். அந்தப் பட்டத்திற்குப் பதிலளிக்கும் போது அவர் கூறியதாவது :—

"வேனிற் காலமுடிவிற்குள்ளாக, மத்தியதரைக் கடலிலும் மற்ற இடங்களிலும் கடுமையான யுத்தம் நடக்கும். நாஜிகளும், பாஸிஸ்ட்களும், ஜப்பானியர்களும் நிபந்தனை எதுவுமின்றி சரணடைய வேண்டுமென்று கேட்கிறோம். எதிர்க்க வேண்டுமென்று அவர்கள் கொண்டுள்ள மன உறுதியை அடியோடு தகர்த்தெறியவேண்டும். நமது இயக்கத்தையும் நீதியையும் கோரி அவர்கள் தாமாகவே இணங்கி வரவேண்டும்."

மேலும் அவர் கூறியதாவது : மே மாதத்தில் அத்லாண்டிக் சமுத்திரத்தில் மட்டும் 30 ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் நாசமாயின. ஜூன் மாதத்தில் நேசநாடுகளின் கப்பல்கள் எத்தனை மூழ்கினவோ, அதுபோல் 7 அல்லது 10 மடங்கு புதிய கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மே மாதம் மத்தியிலிருந்து வட அத்லாண்டிக் சமுத்திரத்தில் நேச நாடுகளுக்குச் சொந்தமான ஒரு வியாபாரக் கப்பல்கூடச் சேதமாகவில்லை.

ஜெர்மனியைச் சேர்ந்த ரூர் பிரதேசத்தில் நேசநாட்டு விமானங்கள் வெடி குண்டுகளை எறிந்து சேதப்படுத்துவதைக் குறித்து அவர் சொன்னதாவது : இரவு நேரம் அதிகப்படுகிறது ; அதுபோலவே, அமெரிக்க விமானப்படையும் வெகுவாக அதிகப்படுகிறது. அழிவு வேலையில் ஈடுபட்டிருக்கும் இந்த விமானப்படைகள் ஜெர்மானியர்கள் முக்கியமாகக் கொண்டுள்ள குறிகளைத் தாக்காது விடமாட்டா.

என்மீது கொண்டுள்ள அன்பை இன்றுமட்டுமா நீங்கள் வெளிப்படுத்துகிறீர்கள் ; என் கடமையை நான் நிறைவேற்றும் போதெல்லாம் உங்கள் அன்பு துலங்குகிறது. இதுபற்றி உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். உங்கள் அன்பு காரணமாக எனக்கு ஊக்கம்பிறக்கிறது. எனவே, நான் என் கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதி கொள்ளுகிறேன். உலக சரித்திரத்திலேயே இப்போது நடைபெறும் யுத்தத்தைப் போன்றதோர் பயங்கரமான நெடுநாள் யுத்தம் நடந்ததே கிடையாது. என்றாலும், பிரிட்டிஷ் மக்கள் அனைவரையுமே, உலகின் பல பகுதிகளிலும் வசிக்கும் பிரிட்டிஷ் இனத்தார் அனைவரையுமே, இந்த யுத்தம் ஒன்றுபடுத்தியதுபோல, வேறெந்த யுத்தமும் உண்மையிலேயே ஒன்றுபடுத்தியது கிடையாது. நமது கடமை என்னவென்று நமக்குத் தெளிவாகத் தெரியும். அதை நாம் நிறைவேற்றி வந்திருக்கிறோம். கடைசிவரை நெறிதவறாது நிறைவேற்றிக் கொண்டு வருவோம். இதில் நாம் இலாபத்தைக் கோரவில்லை ; நாடுபிடிக்க வேண்டுமென்ற ஆசையில்லை. மற்ற நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டு ஆதிக்கம் செலுத்தவேண்டுமென்னும் அதிகார வெறியில்லை ; இன்னும் எதையும் எதிர்பார்க்கவில்லை. சமரசத்திற்கு நாம் இணங்கமாட்டோம். இதை யடிப்படையாகக்கொண்டுதான் நம் செயல்களை நம் மனசாட்சியால் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். நம் சந்ததியாரும் அப்படித்தான் பார்ப்பார்கள்.

#### சாம்ராஜ்ய யுத்த முயற்சி.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்னும் பதத்தை உபயோகிக்கவே நான் விரும்புகிறேன். இது பலவகை மக்கள் மிகச்சிறந்த முறையில் சேர்ந்துள்ளதோர் சங்கம். இம்மக்களில் சிலரை வென்றோம். பலர் சேர்ந்திருக்கச் சம்மதித்தனர். நமது தலைசிறந்த அதிகாரத்தினாலும் செல்வாக்கினாலும்தான் கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலந்து, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகள் தம் படைகளை கடல்கடந்துவந்து போராடி வெல்லவோ சாகவோ அனுப்புகின்றனர்.

இந்தியா மிகப் பரந்த நாடு. இதை ஒரு சிறு கண்டமென்றுகூடச் சொல்லலாம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்டு இது இருக்கிறது. இது பற்றி அது பரிபூரண திருப்தியோடிருக்குமென்று தான் நம்புகிறோம். அங்குள்ள வீர இனத்தவர்களும் மற்ற இனத்தவர்களும் நம் கொடிக் கீழ் திரண்டிருக்கின்றனர். 20 லட்சம் பேர்களுக்குமேல் படைகளில் சேர்ந்திருக்கின்றனர். ஜெர்மானியர்களோடும் இத்தாலியர்களோடும், ஜப்பானியர்களோடும் நடைபெற்ற கடுமையான போராட்டங்களில் அவர்கள் மிகச்சிறந்த முறையில் போராடி புகழ் பெற்றிருக்கின்றனர். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா பெரிய நாடுகளும் பல லட்சக் கணக்கான படைகளைப் போர்முனைக்கு அனுப்பியிருக்கின்றன. என்றாலும் இவை எல்லாம் இந்தியாவோடு ஒப்பிடக் கூடியவையல்ல. ஏன்? இந்தியப் படைகள் எவ்விதமான நிர்ப்பந்தமுமில்லாமல், தானாகவே திரட்டப்பட்டது. இந்தச் சிறப்பு பிரிட்டனிலோ, அமெரிக்காவிலோ, ரஷ்யாவிலோ, பிரான்சிலோ, நம் எதிரி நாடுகளிலோ உள்ள படைகளுக்குக் கிடையாது. இந்தியப் படையினரில் ஒருவரையாவது படையில் சேரும்படி நிர்ப்பந்தித்தது கிடையாது. சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த பெரிய குடியேற்ற நாடுகளிலும் இது போலவே தான். உஷ்ணப் பிரதேசங்களிலுள்ள அநேகத் தீவுகளிலிருந்து பல்லாயிரக் கணக்கானவர்கள் படையில் சேர்ந்திருக்கிறார்கள்.

இந்தக் கடுமையான போராட்டத்தில் சேர்ந்து, உயர்ந்த முறையில் போராடிக் கொண்டிருக்க வேண்டுமென்று, நம் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த குடியேற்ற நாட்டுப் படைகள், மிகுந்த ஆவல் கொண்டிருக்கிறார்கள். நாம் உலகம் முழுவதிலும் தொடர்ந்து நடத்திக்கொண்டுவரும் வேலையைக் குறித்து, அறியாமையினாலும் பொறாமையினாலும் குறை கூறிக் கொண்டிருக்கிறவர்களுக்கு இந்தப் படைகளின் தன்மை தகுந்தபடி பதில் சொல்லும். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மென்னும் சங்கம் உலகம் முழுவதும் பரந்து சிதறுண்டு கிடக்கிறது. பலவகைகளில் ஒன்றோடொன்று இணைந்திருக்கிறது. இதற்குக் கடுமையான சோதனைக் காலம் வந்தது. இது, சாம்ராஜ்யத்தின் தாய் நாடு. மன்னர்பிரான் பரம்பரையாய் வாழ்ந்துவந்த நாடு. புகழ் மிகுந்த தீவு. இதுவே அழிந்து விடுமோ என்று அஞ்சத்தக்க தோர் நிலைமை ஏற்பட்டது. ஹிட்லர் வெற்றி மேல் வெற்றி பெற்றுக்கொண்டிருந்தார். அவருக்கு வால் பிடித்துக் கொண்டிருந்தது பேராசைக்கார இத்தாலி. நாம் தனித்திருந்தோம். நம் கையிருப்புக்களோ மிகவும் குறைவு. அந்த நிலையை நினைத்தாலுங் கூட மனம் திடுக்கிடுகிறது. நமது சாம்ராஜ்யமே சீர்குலைந்து போயிருக்கக் கூடிய பருவம் அதுதான். தாம் கொடுமைப்படுத்தப் படுவதாக நினைக்கக் கூடிய சாம்ராஜ்ய நாடுகள், வெற்றி பெற்றுவரும் நாஜிகளோடும் பாசிஸ்டுகளோடும் நல்லமுறையில் உடன்படிக்கை செய்துகொண்டு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தொடர்பை அறுத்தெறிந்துவிட வேண்டுமென்று நினைத்திருக்கக்கூடும். இதற்கு அதுவே ஏற்ற தருணம். ஆனால், நடந்ததென்ன ? அந்த பயங்கரமான யுத்தகாலத்தில், ஒரு மகத்தான செய்தி கிடைத்தது. சாம்ராஜ்ய நாடுகள் அனைத்தும், மிகப்பெரிது முதல் மிகச் சிறிதுவரை, மிகப் பலமானது முதல் மிகப் பலவீனமானதுவரை, நவநாகரிக நாடுமுதல் பண்டைப் பழக்க வழக்கங்களையே இன்னும் கொண்டிருக்கும் நாடுவரை, கிளம்பி ஒன்றுபட்டுவருவதாக வாக்களித்தன. நம் சாம்ராஜ்ய ஸ்தாபனம் மிகவும் உறுதியாயிருக்கின்றது. ஆகையால் வெற்றி கிடைப்பது உறுதி. இதுபற்றி நான் பெருமித மடைகிறேன்.

#### ஆங்கிலோ-அமெரிக்க கூட்டுறவு.

இனி அமெரிக்காவைக் குறித்து சற்று கவனிப்போம். அதற்கு ஆதிக்கம் அதிகம். எனவே, பயம் என்பதே கிடையாது. அது மிக உயர்ந்த நிலைமையிலிருக்கிறது. என்றாலும் பிரிட்டிஷார் இதுபற்றி பொறாமை கொள்வதில்லை. அமெரிக்காவும் பிரிட்டிஷ் சாமராஜ்ய நாடுகளும் இணைந்து எந்தக் கொள்கையை ஒற்றுமையோடு வகுக்கிறதோ, அதையொட்டிதான் எதிர்கால உலக வாழ்வு அமையும். இவர்கள் ஒற்றுமையைக் குறித்து அத்லாண்டிக் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. போர்த்துறையிலும் அரசியல் துறையிலும் இவர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிடுமானால், எல்லாம் இனிதாக முடியும். இவர்கள் ஒற்றுமைப் படாமல், அவர்கள் விதிப்படி திரிவதாயிருந்தால், தற்கால நாகரிகம் பெருந் தொல்லைகளுக்கும் குழப்பங்களுக்கும் உள்ளாகும்படி நேரும். நான் வாய் வீச்சு வீசுகிறேனென்று நீங்கள் நினைக்கவேண்டாம். இது முக்காலும் உண்மை. இந்த அடிப்படையானத் தத்துவத்தை அலட்சியப் படுத்தும் பேர்வழிகளும் இந்த இரண்டு நாடுகளிலும் இருக்கின்றார்கள். இதனால், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெரிய நாடுகளுக்கோ சிறிய நாடுகளுக்கோ எந்த விதத்திலும் தீமை நேரமுடியாது. வீர ரஷ்யர்களோடு, சிறந்ததோர் சகோதர உணர்ச்சிகொண்டு அதைப் பெருக்கிக் கொண்டு வருகிறோம். அவர்களோடு 20 வருஷ ஒப்பந்தம் ஒன்று செய்திருக்கிறோம். அதன்படி ஒருவரோடொருவர் நேசமாகவும் உதவியாகவும் இருக்கவேண்டும். நெடுநாட்களாக பெருந்தொல்லைகளுக்கு உள்ளாக்கிக் கொண்டுவரும் சீனக் குடியரசு மிகவும் பெருகும் என்று நான் எதிர்பார்க்கிறேன். பிரான்சும் மீண்டும் ஒற்றுமைப்பட்டு பண்டைப் பெருமையை யடையுமென்று நம்புகிறேன். மற்ற நாடுகளெல்லாம் நம்மீது விசுவாசத்தோடும் நம்பிக்கையோடு மிருக்கின்றன. பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் ஒன்றுபட்டால், பலவகைத் தொல்லைகளுக்குள்ளாகியிருக்கும் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். இல்லாவிட்டால், உலக மக்களின் வாழ்வே குலைந்துபோகும்.

லண்டன் நகரத்தை நெடுநாட்கள்வரை இடைவிடாது ஈவிரக்கமில்லாமல் தாக்கிக் கொண்டிருந்தார்கள் ஜப்பானியா. இதுகேட்ட அமெரிக்கர்களுடைய உள்ளம் மலர்ந்தது. அந்தச் சமயத்தில்தான், அநியாயக்கார ஜப்பான், ஆசியாவைக்கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்னும் ஆசைவெறிகொண்டு 'பெர்ல் ஹார்பர்' என்னுமிடத்தைத் தாக்கியது. அதுமுதல் நாமும் அமெரிக்கர்களும் எல்லா வகைகளிலும் ஒன்றுபட்டு எதிர்த்துப் போராடிக் கொண்டு வருகிறோம். சோவியத் ரஷ்யாவிலும், மத்தியதரைக்கடலிலும் மற்றப்பகுதிகளிலும் பிரிட்ஷாரும் அமெரிக்கர்களும் தாக்கிப் போராடுவதனாலும் ஜெர்மனியும், இத்தாலியும் ஒழியவேண்டும். பிரிட்டிஷ் விமானப்படையும், அமெரிக்க விமானப் படையும் சேர்ந்து ஜெர்மனியிலுள்ள யுத்த உற்பத்திச் சாலைகளைத் தரைமட்டமாக்கிவிட வேண்டும். அதுவரை ஜப்பான் தலைதூக்கியிருக்கு மானால், பிரிட்டிஷ் அரசாங்கத்தைச் சேர்ந்த எல்லாப் படைகளும், எல்லாக் கப்பல்களும் எல்லா விமானங்களும் பசிபிக் சமுத்திரத்திற்கு அனுப்பப்படும் என்று உறுதி கூறுகிறேன். இதையே தான் சமீபத்தில் அமெரிக்கக் காங்கிரசுக்கும் உங்கள் சார்பாக நான் கூறினேன்.

#### ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் நாசம்.

யுத்தத்தின் போக்கு திருப்திகரமாக யிருக்கிறது. இரண்டு பெரும் போராட்டங்களில், நேசநாட்டுப் படைகள் வெற்றிபெற்றன. துனீசிய யுத்தத்தைப்பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோம். அங்கே ஜெர்மானியர்களில் கொல்லப்பட்டவர்களும் கைதியானவர்களும் சேர்ந்து 3½ லட்சம் பேர்கள். ஏராளமான யுத்தத் தளவாடங்கள் கைப்பற்றப் பட்டன ; அல்லது, நாசஞ்செய்யப்பட்டன. இதுபோன்ற மற்றொரு வெற்றியுங் கிடைத்தது. அதாவது சென்ற மே மாதம் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை அத்லாண்டிக் சமுத்திரத்தில் வென்றது. பிரிட்டிஷ் சப்ளைக் கப்பல்களும் தளவாடக் கப்பல்களும் போகவர ஒட்டாதபடி தடுக்க சென்ற மே மாதம் ஜெர்மன் நீர் மூழ்கிக்கப்பல்கள் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து பார்த்தன. இவை வரிசையாக நிறுத்தப்பட்டன. 10 அல்லது 15 நீர் மூழ்கிகள் வந்து நம் சப்ளை கப்பல்களைத் தாக்கின. கனடா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் கப்பற்படைகளும் விமானப்படைகளும் ஒரே சமயத்தில் அவற்றைத் தாக்கி வெற்றி பெற்றன. 30 ஜெர்மன் நீர் மூழ்கிக்கப்பல்களுக்கு குறையாமல் மூழ்கடிக்கப்பட்டன. ஆகவே, நீர் மூழ்கிகளின் தொல்லை ஜூன் மாதத்தில் கிடையாது. யுத்தம் ஆரம்பமாகி 46 மாதங்களாகின்றன. இவற்றில்

(10-ம் பக்கம் பார்க்க)



இங்கிலாந்தில் பெண்கள் படையினர் உடற்பயிற்சி செய்யும் முறை.

# பெண்களும் யுத்த முயற்சியும்

## கௌரவத்தைக் காக்க நாம் உதவ வேண்டும்

### பல வகைகளிலும், படையில் சேர்ந்தும், பணி யாற்றலாம்.

[சென்னை அகில இந்திய வானொலி நிலயத்திலிருந்து சென்ற ஜூன் மாதம் 24-ம் தேதி, ஸ்ரீமதி குஞ்சிதம் அம்மையார், B.A., L.T.. அவர்கள் ஒலிபெருக்கிய பிரசங்கம் வருமாறு.—]

" இந்தப் போர் எப்போது தான் முடியுமோ ! அரிசி, காய்கறி விலை கூட ஒன்றுக்கு 3 மடங்கு 4 மடங்காய் ஏறிவிட்டதே ! விலை ஏறுவதோடு நிற்கவில்லையே ! கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறதே ! "—இந்த மாதிரியான பேச்சுகளும் பிரலாபங்களும் நாம் கேட்காத நாளே கிடையாது.

செல்லம்மாள் சொன்னதைக் கேளுங்கள் :—

" எனக்கு ஒரே ஒரு மகன்தான் இருக்கிறான். நேற்றுதான் காக்கிச் சட்டை, காக்கிக் குல்லா, பூட்ஸ் சகிதமாய் பூனாவிலிருந்து ஒரு மாத லீவில் வந்திருக்கிறான். பார்த்தால் அடையாளமே தெரியவில்லை ; சாண்டோ மாதிரி இருக்கிறான். இந்தப் போர் எப்போதப்பா முடியுமென்று கேட்டேன். ஒரு ஆண்டிற்குள் முடியுமென்றான். ஆனால் நானும் என்னாலானதைப் போர் முயற்சிக்குச் செய்யவேண்டுமாம். என்னால் என்ன செய்யமுடியும் ? "

" செல்லம்மாள், நான் சொல்வதைக் கேள். நம் நேசக் கட்சியார் வெற்றி பெற்றுக்கொண்டேயிருக்கிறார்கள். நாம் எல்லோரும் மட்டும் நம்மாலான எல்லா உதவிகளையும் செய்வோமானால் நம் எதிரிகளை—முக்கியமாக நம் நாட்டைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் ஜப்பான்காரனைத் தோற்கடித்துவிடுவது வெகு சுலபம். ஒரு ஆண்டு ஏன் ? அதற்கு முன்பாகவே கூடப் போர் முடிந்துவிடலாம்," என்று நான் செல்லம்மாளுக்குப் பதில் சொன்னேன்.

#### என் ஒரே மகனைப் போர் முனைக்கு அனுப்பி யிருக்கிறேன்.

" பெண்ணாகிய நான் என்ன செய்யப் போகிறேன் ? எனக்கிருக்கும் ஒரே பிள்ளையைப் போர்முனைக்கு அனுப்பியிருக்கிறேன். என்னைப் போன்ற ஒரு பெண்மணி இந்தச் சிறு கிராமத்திலிருந்து கொண்டு என்ன செய்யமுடியும் ? என் கையில் தாராளமாய்ப் பணமிருந்தாலும் கவர்னரின் யுத்த நிதிக்கு நன்கொடையாவது கொடுக்கலாம். ஏதோ என்னால் முடிந்தது மாதம் 5 ரூபாய் மிச்சம் பிடித்து இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை ஒரு 'டிபென்ஸ் சேவிங்ஸ் சர்டிபிகேட்' வீதம் வாங்கிக் கொண்டிருக்கிறேன். ஓய்வு வேளையில் வீண் வம்பு பேசிக் கொண்டிருக்காமல் பக்கத்துவீட்டுப் பெண்களை அழைத்து வைத்துக் கொண்டு 'யுத்த சஞ்சிகை' யைப் படித்துக் காட்டுகிறேன். வேறு என்ன செய்ய முடியும் என்னால் ? " என்று செல்லம்மாள் கேட்டாள்.

" ரொம்ப சரியம்மா ! நீ செய்வது நல்ல காரியந்தான். ஆனால் பெண்கள் போர் முயற்சியில் செய்யக்கூடியது வேறெதுமே இல்லையென்று நினைக்க வேண்டாம். எவ்வளவோ விதங்களில் பெண்கள் உதவிசெய்து வருகிறார்கள் பிற நாடுகளில். ஏன் ? நம் நாட்டில் கூடத்தான். இதோ ! இந்தத் துண்டுப் பிரசுரத்தைப் படித்துப்பார். இதில் பெண்கள் போர் முயற்சியில் என்னென்ன செய்யலாம் என்று எழுதியிருக்கிறேன். இதிலுள்ள வழிகளில் உன்னால் முடிந்ததை நீ செய்யலாம். மற்றப் பெண்கள் அவரவர் சந்தர்ப்பம், மன உறுதி, தைரியம் இவைகளுக்குத் தகுந்தபடி உதவி செய்யலாம். இதோ,

#### பொய் வதந்திகளை நம்பவுங் கூடாது; பரப்பவுங் கூடாது.

" சாதாரணக் காலங்களைவிட, போர்ச் சமயங்களில் எந்த நாட்டிலும் வீணான பொய் வதந்திகள் கிளம்புவது மிகச் சாதாரணம். அதுவும் நம் நாட்டில் இதர நாடுகளை விடப் படிப்புக் குறைவு. படித்தவர்களுங் கூட எல்லாருமே உண்மை பேசுவதில்லை ; எல்லோருமே தைர்யசாலிகளுமல்ல. பயமும் கெட்ட எண்ணமும் சேர்ந்து பெற்றதுதான் பொய் வதந்தி என்னும் தொத்து நோய். இந்தப் போரில் நேச நாட்டினர் வெற்றியடைய வேண்டுமென்று எல்லோரையும் விடப் பெண்கள் சமூகமாகிய நாம் அதிக மனப்பூர்வமாய் விரும்புகிறோமல்லவா ? காரணமென்ன ? நம் எதிரிகளால் கவரப்பட்ட நாடுகளில் பெண்கள் எவ்வளவு அக்கிரமாகவும் கொடுமையாகவும் நடத்தப்பட்டார்கள்—மானபங்கப் படுத்தப்பட்டார்கள் என்பதை யெல்லாம் படிக்கிறோமே !—ரஷ்யக்கிராமங்களில் ஹிட்லரின் படைகள் பெண்களிடம் காட்டிய மிருகத்தனத்தையும், சிங்கப்பூரைப் பிடித்தவுடன் ஜப்பானியப் படைகள் சீனப் பெண்களை நடத்திய அக்கிரமச் செயல்களையும் நாம் மறக்க முடியுமா " ஆகையால் நேச நாட்டினர் வெற்றிக்கு முதற்படியாகச் செய்யவேண்டிய உதவி என்ன ? நாம் பொய் வதந்திகளை நம்பக் கூடாது. அவைகளைப் பரப்பவும் கூடாது.

#### சிக்கனக் குடித்தனம்.

பெண்கள் கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கிய விஷயம், சிக்கனக் குடித்தனம். உணவுப் பொருள்களின் விலையோ ஏறிக்கொண்டேயிருக்கிறது. அதிக விலை கொடுத்தாலும் சில சமயம் கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் நாம் சாமான்களைப் பாழாக்காமலும் தேவைக்கு மேல் தயார் செய்து வீணாக்காமலும், வீண் சடங்குகள் பெயரால் அவசியமற்ற பெரு விருந்துகள் வைத்து உணவுப் பொருள்களைச் சேதப்படுத்தாமலும் வெகு வெகு சிக்கனமாய் உபயோகப்படுத்த வேண்டும். போர் நடக்கும் இந்தக் காலத்தில் எவ்வளவுக் கெவ்வளவு பணம் சேமித்து வைக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது. போர் முடிந்ததும் விலைவாசிகள் குறையும். குறைந்த தொகைக்கு நல்ல சாமான்கள் வாங்கலாம்.

#### குப்பையில் எறியும் சாமான்களின் உபயோகம்.

இதுமட்டுமல்ல. நம் வீடுகளில் உபயோகமற்ற சாமான்கள் பல இருக்கும். நாள் தோறும் சிறிது சிறிதாய்ச் சேர்ந்து கொண்டு மிருக்கும். உதாரணமாய், காலி டின்கள், உடைந்த பாட்டில்கள், கிழிந்து போன ரப்பர் விளையாட்டுச் சாமான்கள், இரும்பு—பித்தளை—அலுமீனியம்—வெண்கலம் இவைகளால் செய்யப்பட்ட உடைந்த உபயோகமற்ற பாத்திரங்கள், கிழிந்துபொன அட்டைப் பெட்டிகள், காகிதத் துண்டுகள்—

(10-ம் பக்கம் பார்க்க.)



## தொழிலாளர் பகுதி

# சீனப் போர்த் திருநாள்

நெசவுத் தொழிற்சாலையில் மாலைச் சங்கு பிடித்தது. ஏராளமான தொழிலாளர்களும் மற்றவர்களும் தொழிற்சாலையை விட்டு வெளிக்கிளம்பி வருகின்றனர். ஒரு தொழிலாளியும் மேஸ்திரியும் கீழ்க்கண்டவாறு பேசிக் கொண்டே தெருவில் போய்க் கொண்டிருக்கிறார்கள் தத்தம் வீடுகளுக்கு :—

தொழிலாளி.—அண்ணா ! இந்த வாரம் என்ன விசேஷம் ?

மேஸ்திரி.—விசேஷமா ? இதுகூடத் தெரியாதா உனக்கு ?

தொழிலாளி.—தெரியாமல் தானேண்ணா கேட்கிறேன் !

மேஸ்திரி.—ஜப்பான் சீனாவைத்தாக்க ஆரம்பித்து 7 வருஷங்களாகின்றன.

தொழிலாளி.—ஏழு வருஷங்களாகப் போராடுவதென்றால் லேசான காரியமா அண்ணா !

மேஸ்திரி.—அதனால் தான் ஒரு பெரிய விழாவாக அதைக் கொண்டாடுகிறார்கள்.

தொழிலாளி.—உண்மையிலேயே அது அவர்களுக்குப் பெருமையளிக்கக் கூடியது தான். ஆகையினால், அவர்கள் அதைக் கொண்டாட வேண்டியதும் நியாயம் தான்.

மேஸ்திரி.—இதைக் கொண்டாடுவது சீனர்கள் மட்டுமல்ல.

தொழிலாளி.—இன்னும் வேறு யார் ?

மேஸ்திரி.—நேசநாடுகள் எல்லாம் கொண்டாடுகின்றன.

தொழிலாளி.—அவை எல்லாம் ஏன் கொண்டாட வேண்டும் ?

மேஸ்திரி.—உண்மையான சிநேகிதத்திற்கு இதுதான் அறிகுறி.

தொழிலாளி.—ஏழு வருஷங்களாகப் போராடுகிறார்கள் என்று சொல்லுகிறீர்களே ; இவ்வளவு காலம் போராடுவதற்கு வேண்டிய படைகளும் தளவாடங்களும் மற்ற வசதிகளும் அபரிமிதமாக இருக்க வேண்டுமே !

மேஸ்திரி.—ஆமா ! சீனாவைச் சின்ன நாடென்று நினைத்தாயா ?

தொழிலாளி.—மிகப் பெரிய நாடா ?

மேஸ்திரி.—44,810,006 சதுர மைல் அதன் பரப்பு. அதில் 4,581 லட்சம் பேர்கள் வசிக்கிறார்கள்.

தொழிலாளி.—வசித்தால் மட்டும் போதுமா ? யுத்தத் தளவாடங்களுக்கு என்ன செய்கிறார்கள் ? அவற்றைச் செய்வதற்கான தொழிற்சாலைகளும் மூலப் பொருள்களும் அங்கே கிடைக்குமா ?

மேஸ்திரி.—சீனா மலைகள் அடர்ந்த தோர் நாடு. மலைகள் மேல் ஏராளமான மூலப் பொருள்கள் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு தளவாடங்களை உற்பத்தி செய்கிறார்கள்.

தொழிலாளி.—இந்த உற்பத்திகளில், மேல் நாடுகளோடு சமமாக சீனா தலை தூக்கமுடியுமா ?

மேஸ்திரி.—முடியாதுதான். ஏனென்றால், சமீப காலத்திலிருந்த சீனர்கள் தம் இன்ப வாழ்க்கையிலேயே காலங் கழித்தார்களே யொழிய, நாட்டிற்கு வேண்டியவற்றை செய்து முடிக்க வேண்டுமே என்னும் எண்ணம் கொஞ்சமும் இல்லாதிருந்தனர்.

தொழிலாளி.—இன்னும் அதே நிலையில்தான் அவர்கள் இருக்கின்றார்களா ?

மேஸ்திரி.—இல்லை. வெகு விரைவில் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

தொழிலாளி.—எப்படி ?

மேஸ்திரி.—சியாங்-கெய்-ஷேக் என்னும் ஒரு வீரர் தோன்றினார். தன்னலமற்ற தியாகி. இவர், மக்களுக்குள் புத்துணர்ச்சியை ஊட்டினார். படைகளைத் திரட்டினார். ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளின் நல்லுறவைக் கொண்டார்.

தொழிலாளி.—அவர்களெல்லாம் சீனர்களுக்கு உதவக் கூடாதோ ?

மேஸ்திரி.—அவர்கள் அனுப்பும் விமானங்களைக் கொண்டு தான் இப்போது சீனா ஜப்பானியர்களை எதிர்த்து நின்று போராடிக்கொண்டு வருகிறது.

தொழிலாளி.—தளவாடங்கள் ?

மேஸ்திரி.—ஏராளமான தளவாடங்கள் சீனாவிற்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனால், இப்போது கொஞ்ச காலமாக, முன்போல் அனுப்ப முடியவில்லை.

தொழிலாளி.—ஏன் அண்ணா, அனுப்பமுடியவில்லை,

மேஸ்திரி.—பர்மாவிலிருந்து சீனாவிற்கு ஒரு ரோடு போய்க் கொண்டிருந்ததே.......

தொழிலாளி.—ஆமா ; அதைத்தான் ஜப்பானியர்கள் கைப்பற்றிக்கொண்டார்களே.

மேஸ்திரி.—அதனால்தான் முன்போல தளவாடங்கள் போய்ச் சேரக்கூடவில்லை.

தொழிலாளி—அப்படியானால், சீனர்களுக்குக் கையொடிந்தது போலிருக்குமே !

மேஸ்திரி.—சீனர்களும் தகுந்தபடி தொழிற்சாலைகள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அன்றியும் திபேத்து வழியாகவும் தளவாடங்கள் அனுப்பப்படுகின்றன.

தொழிலாளி.—என்றாலும் சீனர்களால் ஜப்பானியர்களை எதிர்த்து நிற்க முடியுமா ?

மேஸ்திரி.—ஆரம்பத்தில் கொஞ்சம் நாடுகளை சீனர்கள் இழந்தார்கள்.

தொழிலாளி.—பிறகு சமாளித்துக்கொண்டார்களா ?

மேஸ்திரி.—ஆமா ; அல்லாமலும் சீனர்களிடத்திலே இன்னொரு நல்லகுண மொன்றிருக்கிறது.

தொழிலாளி.—அதென்ன அது ?

மேஸ்திரி.—'' வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்தும், மனனஞ்சான் ஆகலினிது '' என்னும் செய்யுளுக்கு உதாரணமாக அவர்கள் விளங்குகிறார்கள்.

தொழிலாளி.—அந்தச் செய்யுளுக்கு அர்த்தம் விளங்கவில்லையே அண்ணா !

மேஸ்திரி.—எப்படிப்பட்ட கஷ்டங்கள் நேர்ந்தாலும் தைரியத்தைக் கைவிடக் கூடாது என்பது தான் அந்தச் செய்யுளின் கருத்து.

தொழிலாளி.—அப்படியானால் அவர்கள் அருந் தியாகிகளாகத் தான் இருக்க வேண்டும்.

மேஸ்திரி.—ஒரு விதத்திலா ? பர்மா நாட்டைக் கைப்பற்றிய பிறகு, வேறு நாடுகளின் சம்பந்தமே தகுந்தபடி ஏற்படாதபடி ஜப்பானியர்கள் செய்து விட்டார்கள்.

தொழிலாளி.—அப்படியானால் சீனாவில் எல்லா வியாபாரமும் ஸ்தம்பித்துவிடுமே.

மேஸ்திரி.—அது மட்டுமா ? நாணயச் செலாவணி கூட வெகுவாக பாதிக்கப்பட்டு விட்டது.

தொழிலாளி.—எப்படி ?

மேஸ்திரி.—செலாவணிக்குத் தேவையான நாணயங்கள் கஜானாவில் இருப்பில் வைத்திருக்காமல், ஏராளமான காயித நோட்டுக்களை அச்சடித்து செலாவணி செய்கிறார்கள்.

தொழிலாளி.—இதனால் என்ன நேரிடும் ?

மேஸ்திரி.—பணம் அதிகமாகச் செலாவணியாகிறது. அதின் பயனாக விலை வாசிகளும் உயருகின்றன.

தொழிலாளி.—அப்படியா ?

மேஸ்திரி.—அது மட்டு மல்ல. அந் நாட்டின் நாணய மதிப்பு மற்ற நாடுகளில் குறைந்து விடும்.

தொழிலாளி.—அப்படியானால், அது மிகுந்த தொல்லையாக வல்லவோ இருக்கும் !

மேஸ்திரி.—அது மட்டுமா ? போதுமான உணவுப் பொருள்களும் கிடைப்பதில்லை.

தொழிலாளி.—'' பசி வந்திடப் பத்தும் பறந்து போம் '' என்பார்களே.

மேஸ்திரி.—உண்மைதான். ஆனால் சீனர்கள் மட்டும் அப்படி யில்லை. எப்போதும் இனிய முகத்தோடேயேயிருக்கிறார்கள்.

தொழிலாளி.—இப்படிப்பட்ட நல்ல குணமுடையவர்களை ஜப்பானியர்கள் ஏன் தாக்குகிறார்கள் ?

மேஸ்திரி.—ஜப்பானியர்கள் சமீபத்தில் கைப்பற்றிய நாடுகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், அவர்கள் சீனாவையும் கைப்பற்றித் தானாக வேண்டும்.

தொழிலாளி.—ஏன் ?

மேஸ்திரி.—சீனாவில் நல்ல தளங்களும் துறைமுகங்களுமிருக்கின்றன. இவற்றிலிருந்து சீனாவோ, நேச நாடுகளோ ஜப்பானை எளிதில் தாக்கலாம். இதற்கு இடங் கொடுக்கக் கூடாது என்பது தான் ஜப்பானியர்கள் கருத்து.

தொழிலாளி.—அப்படியா ? சரி அண்ணா ! வீடு வந்து விட்டது. போய் வருகிறீங்களா ?

மேஸ்திரி.—சரி.

தொழிலாளி.—வணக்கம்.

மேஸ்திரி.—வணக்கம்.

# க ணக் கு பா ழா யி ற் று

பையன் பரீட்சை எழுதுகிறான். இரண்டரை மணி நேரம்தான் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அவகாசம். அதற்குள் அவன், தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வினாத்தாளில் உள்ள கணக்குகளை யெல்லாம் போட்டாகவேண்டும். சும்மா, போட்டேன் என்ற கணக்கிற்கு, போட்டு முடித்தால் போதுமா ? சரியாகப் போடவேண்டும். அப்பொழுது தானே பரீட்சை பாசாகும்.

ஐயா, ஒரு பையன் இருக்கிறான். சாதாரண நாட்களிலே மகா புத்திசாலி அவன். நூற்றுக்கு நூறு வெகு சுலபமாக வாங்குவான். அப்படிப்பட்டவன் சர்க்கார் பரீட்சை எழுதுகிறான். அப்பொழுதும் அவனுக்கு மகா அலக்ஷ்யம்தான். இதென்ன பிரமாதக் கணக்கு ? என்ற எண்ணத்தோடேயே கணக்கு போடத் தொடங்குகிறான். கணக்கெல்லாம் போட்டு முடித்து விடுகிறான்.

இன்னும் பத்து நிமிஷங்களே பாக்கி இருக்கின்றன. போட்ட கணக்குகளையெல்லாம் திருப்பிப் பார்க்கிறான். ஒவ்வொரு கணக்கிலும் ஒவ்வொரு இடத்திலே கைப்பிசகு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காண்கிறான். அப்பொழுது தான், இதுவரை போட்டக் கணக்கெல்லாம் பாழாகி விட்டதே என்ற எண்ணம் அவன் மனதிலே உதிக்கிறது. அது காரணமாக அவனுடைய தேகம் எல்லாம் பதறி, மேலெல்லாம் வியர்வை பொங்குமானாலும், அதிலே ஆச்சரியப்படுவதற் கொன்றுமில்லை. அவனுக்கே பயம் தோன்றிவிட்டது. ஒருபுரம், எங்கே, தான் செய்த தவறுகளையெல்லாம் சரிப்படுத்த முடிகிறதோ இல்லையோ என்று, அது காரணமாக பரீட்சையிலே பாஸாகுமோ, ஆகாதா என்ற அச்சமும் ஏற்பட்டுவிட்டது. இந்தக் கொள்ளையில் "இன்னும் ஐந்து நிமிஷங்கள் தான் இருக்கின்றன" என்று ஒரு வாத்தியார் கத்துகிறார். பையனுக்கு கைகள் பதறுகின்றன. எழுதுகிறான், அடிக்கிறான் ; திரும்பவும் எழுதுகிறான். "நிறுத்துங்கள் எழுதுவதை !" என்ற கட்டளை பிறக்கிறது. மனம் திக், திக் என்று அடித்துக் கொள்கிறது. எழுந்து நின்றுகொண்டே அவசர அவசரமாக ஏதோ எழுதுகிறான். வாத்தியார் வந்துவிட்டார். பையனுடைய விடைப் பத்திரங்களைப் பிடுங்கிக் கொண்டு, போயே போய்விட்டார். பையன் அதற்குமேல் என்ன செய்வான் ? பேந்தப்பேந்த முழிப்பான், கல் மனத்தினனாக இருந்தால் ! கொஞ்சம் கோழையாக இருந்தால், அவனுக்கு அழுகை, அழுகையாக வரும். யாரிடமும் முகத்தைக் கொடுத்துப் பேசாமல், வீட்டைப் பார்த்து எடுப்பான் ஓட்டம். அதே பீதியில் அவனுக்கு ஜுரம் வந்தாலும் வரக்கூடும்.

## சமர்த்துப் பையனும் ஹிட்லரும்

இந்தச் சமர்த்துப் பையன் செய்த தவறைப்போலவே, ஹிட்லர் என்ற சமர்த்துப் பிள்ளையும் ஏதேதோ தவறுகள் செய்துவிட்டது. மணி அடிக்கப்போகிறது. உலக சமாதானத்திற்காகப் போராடும் நேசதேச வாத்தியார் வந்திறங்கப் போகிறார், இந்தப் பிள்ளையை வெளியில் அனுப்ப. இந்தப் பிள்ளை போட்டிருந்த கணக்கெல்லாம் பாழாகப்போய் விட்டது. பாழான கணக்கைச் சரிப்படுத்தவும் அவகாசம் கிடையாது. பிள்ளையாண்டான் 'இனி' பெயில்தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா ? பள்ளிக்கூடத்துப் பையனுக்காவது ஒரு தடவை தவறினால், மறு தடவை பரீட்சைக்குப் போக வசதியுண்டு. ஆனால் இந்தக் கல் நெஞ்சனான ஹிட்லர் பையனுக்கு, மறுபடியும் கணக்குப் போடவோ, தனது உச்ச நிலையை அடையவோ, முன்னேறவோ சந்தர்ப்பமே கிடைக்கப்போவதில்லை.

ஹிட்லர் ருஷ்யப் போரைப்பற்றிப் போட்ட கணக்கு, சுத்தத் தப்புக் கணக்காகப் போய்விட்டது என்பது உலகறிந்த விஷயம். அதை ஜெர்மானியரே இப்பொழுது பகிரங்கமாகப் ஒப்புக்கொள்ளுகிறார்கள். தற்சமயம் வேறுவகையில்லாததால், ஜெர்மானியப் படைகளில் பெரும் பாகத்தை ருஷ்யாவிலேயே நிறுத்திவைக்க வேண்டி வந்துவிட்டது ஹிட்லருக்கு. ஜெர்மனி சும்மா இருந்தவரை, ருஷ்யாவும் சும்மாதானிருந்தது. ஆனால், ஜெர்மனி போய், ருஷ்யாவின் சிண்டைப் பிடித்து இழுத்தது. அப்புறம் ருஷ்யா சும்மா இருக்குமா ? அதுவரை உலகோரின் திருஷ்டியில் படாது ரகசியமாகவும், மறைவாகவுமிருந்த தனது அகோர பலத்தை அது அவிழ்த்து விட்டுவிட்டது. அது அடித்துக் கொண்டு கிளம்பிவிட்டது. அந்த வேகத்தைச் சமாளிக்க முடியாது, நாஜிப் படைகளும், அச்சு நாடுகளுடன் சேர்ந்துகொண்ட மற்ற ஐரோப்பிய நாட்டுப் படைகளும் திணறிப் போயின.

பிரிட்டனுக்கு ஒய்வு கொடுத்துவிட்டு, ருஷ்யாவையே ஜாக்கிறதையாகக் கவனிக்கவேண்டிய பொறுப்பு ஹிட்லருக்கு ஏற்பட்டுவிட்டது. 'ரொம்பவும் நல்லதாச்சு !' என்று பிரிட்டன் தனது பலத்தை அதிவேகமாக அதிகரிக்கச் செய்துவிட்டது. ஜெர்மனியின் மண்டையை உடைக்க வருகிறீர்களா ? ஹிட்லருக்கு புத்தி புகட்ட வந்திருக்கிறீர்களா வாருங்கள் ; இங்கே தங்குங்கள் ; எங்களோடு சேருங்கள் என்று அமெரிக்க, கனடிய விமானப் படையினருக்கு இங்கிலாந்திலே இடம் கொடுத்தார்கள்.

எல்லோருமாகச் சேர்ந்து, ஜெர்மனியின் ஜீவநாடிகளைத் தெரிந்தெடுத்து, அவற்றை நொறுக்கித் தள்ளத் தொடங்கிவிட்டார்கள். கனவிலும் இத்தகைய குண்டு மழை பொழியும் என எண்ணியிராத ஜெர்மன் மக்கள், தங்களுடைய தலைவர்களின் வெத்து வேட்டுகளை உண்மையென நம்பி ஏமாந்து போயினர். அதன்படி அவர்கள் அனுபவித்தே தீரவேண்டியதாயிற்று.

இப்பொழுது, நேசதேசத்தினர் ஐரோப்பாவைத் தகர்க்க, ஏகப்பட்ட ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவை என்னென்ன ஏற்பாடுகள் என்று ஜெர்மனிக்கு அவர்கள் தெரிவிக்கமாட்டார்கள் அல்லவா ? நேசதேசத்தினருக்கு ஜெர்மனியர் சம்பந்திகளா என்ன, முன்கூட்டி எல்லாம் தெரிவிக்க ? ஆகவே ஜெர்மானியரும், அவர்களோடு சேர்ந்து ஆழந் தெரியாமல் காலை விட்டுவிட்டு நிற்கும் இத்தாலியரும், நேசதேசத்தார் எங்கே வந்து இறங்குவார்களோ, எப்படி முன்னேறுவார்களோ என்பது தெரியாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நேசதேசத்தினரின் முஸ்தீபுகளைக் கண்டு, ஜெர்மானியர் ருஷ்யாவிலே முன்னேறித் தாக்க, முயற்சிகள் எதும் செய்வதாகவே தோன்றவில்லை. அவ்வாறு முயற்சிப்பதால், இரு அரங்கங்களில் போராடவேண்டிய நிலைமையை சீக்கிரமே இழுத்துவிட்டுக் கொண்டவர்களாவார்கள் அல்லவா அவர்கள் ?

இப்பொழுது மேற்கு ஐரோப்பாவைத்தான் முதலில் பாதுகாத்துத் தீரவேண்டும். அதற்காகவே ஜெர்மானிய சேனாபதிகளில் ஒருவரான கீட்டல் துரை, ருஷ்யாவிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு தமது காரியாலயத்தை மாற்றிக் கொண்டிருக்கிறாராம். படையெடுப்பைச் சமாளிக்க இவர் புது ஏற்பாடுகள் செய்வாராம்.

சென்ற சில மாதங்களாக ருஷ்யப் போர் முனையில் அமைதியே நிலவிக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம். இந்த சமயத்தை ருஷ்யர்கள் தங்களுக்குச் சாதகமான காலமாகவே கொண்டனர். தங்களுடைய பலத்தை அதிவேகமாக அதிகப்படுத்திக் கொண்டனர். அதோடு, ஜெர்மானியரையும் நிறுத்தி வைத்து, ஆங்காங்கே பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுவாக்கி விட்டனர்.

இப்பொழுது அவர்கள் முன்னேறித் தாக்கவும் சித்தமாக இருக்கிறார்கள் எனறு கூறப்படுகிறது. டமான் தீபகற்பத்திலே உள்ள ஜெர்மானியரையும், அதற்கருகே உள்ள நாஜிக் கப்பல்களையும் ருஷ்யர்கள் நொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற சில தினங்களாக பைலோகிராட் என்ற நகருக்கு வடமேற்கே கடும்போர் நடந்து கொண்டிருக்கிறதாம். நேசதேசத்தார் தங்கள் கதையை மேற்கே ஆரம்பிக்கவேண்டியதுதான் தாமசம். கிழக்கே ருஷ்யர்களும் துள்ளி எழுவார்கள் என்று தோன்றுகிறது.

ஜூலை 3-ந் தேதி நேசதேசத்தினர் ஐரோப்பாவில் வந்திறங்ககூடும் என்று ஜெர்மானியர் சும்மா சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களது ஜோஸியம் பொய்யாகிவிட்டது. அதை உண்மையாக்க வேண்டுமென்பதற்காக, நேசதேசத்தார் அந்தத் தேதியில் வந்து இறங்குவார்களா என்ன ?

ஜூலை 14-ந் தேதி ஒரு விசேஷமான நாள். இந்தத் தேதியில்தான் பல வருடங்களுக்குமுன், பிரான்ஸிலே, சுதந்தர ப்ரியர்கள், பாஸ்டில் என்ற பெரிய சிறைக் கூடத்தைத் தகர்க்க கிளம்பினர். அதுவே புரட்சி நாளாகவும் ஆயிற்று. அன்று ஆரம்பித்த புரட்சி நாளுக்குநாள் கடும் வேகத்தோடு அதிகரித்து, கடைசியில் பிரஞ்சு மன்னரும், மகாராணியும் தூக்குமேடையில் ஏற்றப்பட்டு, பிரான்சு சுதந்திர நாடாக ஆகும்வரை தொடர்ந்து நடந்தது. இந்த நாளை பிரான்ஸிலே வருடாவருடம் கொண்டாடி வருவார்கள். இந்த வருஷம் இந்தத் திருநாளும், நேசதேசத்தார் ஐரோப்பாவைத் தாக்கத் தொடங்கும் நந்நாளும் ஒன்றாகச் சேர்ந்து கொள்ளக் கூடும் என்று கூறப்படுகிறது.

## திகைக்கச் செய்யும் பாய்ச்சல் முறை

இதிலிருந்தே படையெடுப்பு ஏற்பாடுகள் எவ்வளவு பூரணமாக இருக்கின்றன என்பது தெரியவில்லையா ? மத்யதரைக்கடலிலே நேச தேசத்தார் அநேகமாகப் பகிரங்கமாகவே ஏதேதோ செய்துவருகிறார்கள். ஆனாலும், அச்சு நாட்டாரைத் திகைக்க வைக்கும்படியான தினுஸிலேயே இருக்கும் நேசதேசத்தினரின் பாய்ச்சல் முறை என்று நினைக்கிறோம்.

நேற்றுவரை ஆயிரக் கணக்கான அச்சு விமானத் தாக்குதல்களை பொறுமையோடு சமாளித்துக்கொண்டிருந்த மால்டா தீவிற்கு என்றுமே ஒரு தனிப் பெருமை உண்டு என்பது நிச்சயம். இப்பொழுது அந்தத் தீவையே, இத்தாலி மீது பாய்வதற்கான தளமாக நேச தேசத்தார் உபயோகிக்கக் கூடும் என்கிறார்கள்.

வட ஆபிரிக்காவிலுள்ள நேசதேச விமானிகள் இடை விடாது ஸிஸிலியையும், சார்டீனியாவையும் தாக்கிக்கொண்டே இருக்கிறார்கள். அந்தத் தீவுகளில் உள்ள பல முக்யமான விமானக் கூடங்களும், துறைமுகங்களும், நகரங்களும் பாழடிக்கப்பட்டுவிட்டன. அவற்றைப் பாதுகாக்க முயலும் அச்சு விமானங்கள் விளக்கில் மோதவரும் விட்டில் பூச்சிகளென விழுந்து நொறுங்கிக் கொண்டிருக்கின்றன.

இத்தாலியிலே, ரோமாபுரிக்கு அருகில் உள்ள பிரதேசங்களும் தாக்கப்பட்டுவருகின்றன. அச்சுநாட்டினரின் ராணுவத்திற்கு உயிர் கொடுத்து வரும் தொழிற்சாலைகள் எங்கிருந்தாலும், அவற்றைத் தகர்ப்பதென நேசதேசத்தார் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ரோமாபுரி பல கலைகளுக்குத் தாயகமாக இருக்கலாம். பண்டையக் கட்டிடங்கள் பல அங்கிருக்கலாம். அதனருகே போப்பாண்டவரின் வாசஸ்தலம் இருக்கலாம். ஆனாலும் என்ன ? அந்நகரை நிராயுதபாணியான நகர் என்று இத்தாலியர் பகிரங்கமாக அறிவிக்கும் வரை, அந்நகரை நேசதேசத்தார் எந்தச் சமயத்திலும் தாராளமாகத் தாக்கக்கூடும்.

'முஸோலினியை அழைத்து, ரோமாபுரியைக் காக்க வகை செய்யச் சொல்வதுதானே ?' என்று கேட்டார் ஒரு பார்லிமெண்டு அங்கத்தினர் ராஜாங்க அதிகாரி ஒருவரிடம்.

## அவருக்கே அக்கரை யில்லை ; நமக் கென்ன ?

இது அழைத்துச் சொல்லும் காரியமல்லவே ! அவருடைய நாட்டு மக்களைக்காக்க அவருக்கே அக்கரையில்லா திருக்கும்பொழுது, நமக்கென்ன வந்தது ? தவிர, 'பிரான்ஸ் மீது திருட்டுத்தனமாக பாய்ந்து பிடுங்கு ! பிரிட்டன் மீது கோழைபோல் குண்டு போடவா என்று நாமா அழைத்தோம் அவரை ?' என்று அந்த அதிகாரி பதில் சொல்லியிருக்கிறார்.

'அதோடு, இத்தாலிய மக்களைப் பாதுகாக்க முஸோலினி விரும்பினால், நேசதேசத் தலைவர்கள் கூறியபடி நிபந்தனையின்றிச் சரணடையலாம். இத்தாலியர்களிடமே இத்தாலியின் ஆட்சி இருக்கும் எப்பொழுதும்' என்று அதே அதிகாரி தெரிவித்தார்.

இதையெல்லாம் கேட்ட முஸோலினிக்கு உள்ளூரப் பயம் ஏற்பட்டுவிட்டாப்போலிருக்கிறது. உடனே தமது நாட்டு மக்களுக்கு அவர் ஒரு எச்சரிகை விடுத்துவிட்டார்.

"நேச நாட்டாரின் வாக்குறுதிகளை நம்பி, சரணடைந்தால், என்றென்றைக்குமே இத்தாலி நிராயுதபாணியாக, மானமிழந்து, தொழிற்சாலைகளையும் இழந்து, ஒரு நாலாந்தர நாடாகவே இருக்கவேண்டிவரும் ; இது உயிருக்காக நடத்தப்படும் யுத்தமாகும். இந்த யுத்தம் திடீர் திடீர் என வெவ்வேறு மாதிரியாக மாறக்கூடும். விரோதி நம்நாட்டில் காலடிவைத்தால், எல்லோரும் சேர்ந்து அவர்களைத் தாக்கி விரட்டவேண்டும். நமது மானத்தைக் காக்க, முழு மனதுடன் போராடவேண்டும். நமது விரோதிகள் நமது நாட்டில் வந்திறங்கி, வேரூன்றிக் கொண்டு, பிறகு முன்னேற முயலக்கூடும். இந்த முயற்சியில் அவர்கள் தோற்றால், அப்புறம் அச்சு நாட்டாரை அவர்களால் அசைக்கவே முடியாது" என்று கூறியிருக்கிறார் அவர்.

## ஜெர்மனி மீது பாயத் தயார்

வட ஆப்பிரிகாவிலே எட்டாவது படை, பாலஸ்தீனத்திலும் ஸிரியாவிலும் ஒன்பதாம் படை, பாரசீகத்திலும் ஈராக்கிலும் பத்தாவது படை இருக்கின்றன. இரண்டு வருடங்களுக்கு முன்பாக, ஜெர்மானியர் மடை திறந்த வெள்ளம் போல, வழியில் இருந்தவற்றையெல்லாம் அடித்துக் கொண்டு, ஈராக், பாரசீகம் வழியாக இந்தியாவிற்குள் புகுந்து, ஜப்பானியரோடு கைகோத்துக்கொண்டு, கொட்டமடிக்கலாம் என்று கனவுகண்டு கொண்டிருந்தனர். அவர்களடைந்து கொண்டிருந்த வெற்றிகளைக்



கண்டு நேசதேசத்தினரும் பெரிதும் அஞ்சிக் கொண்டு தானிருந்தனர். அப்பொழுது, பாதுகாப்புக் கென்றிருந்தன, மேற்கண்ட மூன்று படைகளும்.

ஆனால் அதே படைகள் இன்று ஜெர்மனிமீது பாயச் சித்தமாக இருக்கின்றன. நேசதேசத்தாரின் விடாமுயற்சியாலே, ஆபத்துக்கள் எல்லாம் தீர்ந்து, ஆனந்தம் பெறுவதற்கான காலத்தை அணுகிக் கொண்டிருக்கிறோம் நாம.

நேசப்படைகள் இத்தாலியிலோ, பால்கனிலோ, மேற்கு பிரான்ஸிலோ இறங்கக் கூடும் என அச்சு நாட்டார்கள் எதிர்பார்க்கிறார்கள். பால்கன் பிரதேசத்திலே சமீபத்திலே கூட அச்சுநாட்டு சேனாபதிகள் ஒரு கூட்டம போட்டுப் பேசினர். கிரேக்க நாட்டின் கடற்கரைப் பிரதேசங்களையும, துருக்கி எல்லையையும் ஜெர்மானியத் துருப்புகள் பாதுகாக்கத் தொடங்கியிருக்கின்றனவாம். இதுவரை அங்கெல்லாம் பல்கேரியத் துருப்புகளே இருந்தனவாம.

இந்த பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா எல்லாம் இத்தாலியோடு சேர்ந்து, ஒரு கோஷ்டியாக, ஆபத்து அதிகமாகும் வேளையில் காலை வாரி விட்டுவிடுமோ என்ற பீதி ஜெர்மானியருக்கு ஏற்பட்டிருக்கிறாப் போலிருக்கிறது. அந்தக் காரணத்தை யொட்டியே, எங்கும் ஜெர்மன் படைகளே அனுப்பப்படுகின்றன.

ருஷ்யாவிலே ருஷ்யர்களது விமானபலம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. சிற்சில இடங்களில், போக்குவரத்து சௌகரியங்கள் அதிகமாக இருப்பதால், ஜெர்மானியரின் விமான பலம் உயர்ந்திருக்கிறதே ஒழிய, மொத்தத்திலே ருஷ்யர்களின் கைதான் உயர்ந்திருக்கிறது. இந்தக் கொள்ளையிலே, மேற்கு ஐரோப்பாவிற்கு ஜெர்மானிய விமானங்களில் பல அனுப்பப்படுகின்றனவாம். கொயரிங் துரை மேற்றிசைக்குப் போயிருக்கிறாராம்.

## உக்ரேன் ஜெர்மானியர்களுக்கா?

"ஜெர்மானியரின் வேலையைப் பார்த்தீர்களா ? உக்ரேன் பிரதேசத்திலே அவர்கள் நிரந்தரமாகக் குடியிருக்க பல ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்களாம். பல ஊர்களிலே ஏகப்பட்ட ஜெர்மானியப் பெண்கள் வந்து சேர்ந்திருக்கிறார்களாம். அவர்களுடைய விடாமுயற்சியால், நாற்பது வருடகாலங்களில், உக்ரேனிய ஜனத்தொகையில் பெரும் பகுதியினர் ஜெர்மானியர்களாக மாறிவிடுவார்கள் என்று ஒரு அதிகாரி சொன்னாராம்.

அவ்வளவு சுலபமாக ஜெர்மானியரை அங்கு குடியேற விட்டுவிடப் போவதில்லை, வீர ருஷ்யர்கள். அங்கே கொரில்லாக்களின் உபத்திரவம் அச்சு நாட்டாருக்குப் பொறுக்கவே முடியவில்லையாம். நாஜிகள் செய்யும் முயற்சிகளை யெல்லாம் ரகசியமாகப் பாழடித்துவிடும் இவர்களை நிர்மூலமாக்க ஜெர்மானியர் ஆசைப்படுகிறார்களாம். ஆனால் அவர்களது ஆசையெல்லாம் நிராசையாவது நிச்சயம். ருஷ்ய மக்கள் ஒவ்வொருவருடைய உடம்பிலும் தேச பக்தி நன்றாக ஊறிக்கிடக்கிறது. பிரசாரகர்கள் உதவியில்லாமலே, அவர்கள் தாய் நாட்டைக்காக்கப் போராடுவார்கள் என்பது நிச்சயம்.

நேச நாட்டினரின் ஏற்பாடுகளைப் பற்றி பிரதம மந்திரி சர்ச்சில் நாலைக்கு சில தினங்களுக்கு முன் ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அதை ஆராய்ந்துப் பார்ப்பவர்களுக்கு, இன்னும் நான்கு மாதங்களுக்குள்ளாகவே, ஐரோப்பியப் படையெடுப்பு, மும்முரமாக ஆரம்பமாகிவிடும் என்பது தெரியும்.

## இனிமேல் தான் பாட்டு ஆரம்பம்

இப்பொழுது இத்தாலிமீதும், இத்தாலிக்கருகில் உள்ள தீவுகள்மீதும் தினம் தவறாது, பல்லாயிரம் டன் கணக்கில் குண்டுகள் வீசப்படுகின்றன பாருங்கள், இதெல்லாம் சும்மா முதலிலே ஸ்ருதிகூட்டிக் கொள்வது போலவாம். இனிமேல்தான் பாட்டு ஆரம்பமாகும்.

அடிக்கிற அடியிலே, இடுப்பொடிந்து, நமது கால்களில் வந்து விழுந்து "தெரியாமல் யுத்த விளையாட்டி லிறங்கிவிட்டேன் ! தெரியாமலிறங்கி விட்டேன் ! மன்னிக்கவேணும். நீங்கள் என்னை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள்" என்று ஹிட்லரும், முஸோலினியும், டோஜோவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும் வரை, இந்த குண்டுவீச்சு வேகம் நாளுக்கு நாள் விஷம்போல ஏறிக்கொண்டு போகும்" என்கிறார் பிரதம மந்திரி.

"இந்தியாவிலிருந்து இருபது லக்ஷம் பேர்கள் யுத்த சன்னத்தர்களாகி, போர்க்களம் சென்று, அபார சாகசங்கள் பலவற்றைப் புரிந்திருக்கிறார்கள். இத்தனை பேர்களும் தாமாக விரும்பி வந்தவர்கள் என்பதைக் கவனிக்கும் பொழுது, நமது யுத்தம் எவ்வாறு தர்மநியாயமானது என்பது தெரியவில்லையா ? என்றார் பிரதம மந்திரி.

வாஸ்தவம் ! யுத்த ஆரம்பத்தில் ஒரு லக்ஷம் பேர்கள் இந்திய சேனையில் இருக்கிறார்கள் என்று சொன்னபோது எல்லோரும் சிரிக்கத்தான் செய்தார்கள். ருஷ்யப்போரிலே, ஜெர்மானியரும், ருஷ்யருமாக ஒரு கோடிப்பேர்கள் செலவு ஜாபிதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கும்பொழுது, ஒரு லக்ஷம் சோல்ஜர்கள் என்பது சிரிப்பையே உண்டாக்கும்.

ஆனால், இன்றோ, இந்தியாவெங்கும் யுத்த சன்னத்தமாயிருக்கிறதெனலாம். இந்நாட்டைக் காக்க எத்தனை விமானங்கள், எத்தனை விமான பீரங்கிகள், எத்தனை டாங்கிகள், எத்தனை அந்நியப் படைகள் இருக்கின்றன ! இந்தியாவே ஜப்பானுக்குச் சரியான சூடுகொடுக்கவல்ல, வலிமை மிக்க தளமாக மாறியிருக்கிறது !

## ஜப்பானியருக்குப் போதாத காலம்

ஜப்பானியருக்கும் போதாதகாலம் ஆரம்பமாகிவிட்டது. ஜெனரல் மாக் ஆர்தர் தனது படை பலத்தை ரகசியமாகவே அதிகரித்துக்கொண்டு, ஜப்பான்காரன் முதுகிலே ஒரு குத்து வைத்துவிட்டார். அவரது படைகள் ஓரிரண்டு தீவுகளைப் பிடித்துவிட்டன. நியூகினியாவில் ஜப்பானியர்கள் உள்ளவரை போர்ட் மார்ஸ்பி என்ற துறைமுகத்திற்கும், ஆஸ்திரேலியாவிற்குமே ஆபத்துத் தான். ஆகவே, நியூகினியாவிலிருந்து ஜப்பானியரைத்துரத்தும் நோக்கத்துடன், ஆஸ்திரேலியப் படைகள் நியூகினியாவில், ஜப்பானியர் இருக்குமிடத்தருகே தைரியமாக இறங்கி, சலாமுவா என்ற பிரதான ஸ்தலத்தைப் பிடிக்க முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

சாலமன் திவுகளிடையே மாக் ஆர்தரின் படைகள் அட்டகாசம் செய்கின்றன. ஜப்பானியக் கப்பல்களும், புதிதாக விரைந்துவந்த அமெரிக்கப் கப்பல்களும் பெரிய கடற்போரில் ஈடுபட்டிருக்கின்றன.

ஜப்பானியர் நூற்றுக் கணக்கான விமானங்களோடு வந்து தாக்கி, இரண்டு நாட்களில் 166 விமானங்களைப் பறிகொடுத்துவிட்டனர். ஆஸ்திரேலியாவிற்கு ஜப்பானியரைப் பற்றிய பயம் இருந்தது மாறி, இப்பொழுது ஜப்பானியருக்கு ஆஸ்திரேலிய, அமெரிக்கரைப் பற்றிய பீதி ஆரம்பமாகியிருக்கிறது என்பது தெளிவு. சிறுகச் சிறுகத் தாக்கி, ஜப்பானியரை சித்ரவதை செய்வதுபோல் செய்து, இறுதியில் அதனைப் பலமற்றதாகச் செய்து விடுவதே இந்தப் படையெடுப்பின் நோக்கம் போலிருக்கிறது.

ஜப்பானியருக்கு சீனாவில் சரியான பூசை கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஒரு பிரதேசத்திற்கு அறுபதாயிரம் படைகளோடு போனவர்கள், அதிலே பாதிக்குமேலே ஒரு பிரதேசத்திலே இழந்திருக்கிறார்கள். அமெரிக்கருக்கு சீனரின் நிலைமையை விளக்கி, அவர்களிடம் அதிக உதவி கோரிவிட்டு, சீனா திரும்பிவிட்டார் சியாங்கே ஷேக்கின் மனைவியார்.

ஜப்பானியர் பர்மாவிலே சுரண்டல் வேலையைத் தொடர்ந்து நடத்துகிறார்கள். இது சம்பந்தமாகவே சிங்கப்பூருக்கு டோஜோ வந்திருக்கிறார் போலும்.

ஜப்பானியர் பர்மாவை ஆள இரண்டு சாதனங்களின் உதவியை நாடுகிறார்களாம். ஒன்று அச்சாலை. மற்றொன்று சாராயம் காய்ச்சும் சாலை. போகுமிடங்களில் எல்லாம் இவற்றைச் சிருஷ்டித்து விடுகிறார்களாம். மேற்கண்ட அச்சாலைகளில் உபயோகமற்ற ரூபாய் நோட்டுக்களை அச்சடித்துத் தள்ளுகிறார்களாம்.

ஜப்பானியர்கள் வருகிறார்கள் என்று தெரிந்ததுமே கண்யமான குடும்பத்தவரெல்லாம், தங்கள் வீட்டுப் பெண்களைக் காடுகளுக்கு அனுப்பி விடுகிறார்களாம். ஜப்பானியர் பிரத்யட்சமாகி, கண்ணில் கண்ட ஆடு, மாடு, கோழி, அரிசி அனைத்தையும் அள்ளிப் புசிக்கிறார்களாம். அரிசியிலிருந்து சாராயம் வடிக்க ஆரம்பிப்பதால், பர்மிய மக்களுக்கு அரிசிப் பஞ்சம் உண்டாக்கிவிட்டதாம். தங்களுக்கு உதவ மறுப்போரை காலைக் கட்டி, வெயிலிலே மரத்திலே தொங்கவிட்டுவிடுகிறார்களாம். தவிர; பர்மியப் பெண்களின் ஆடைகளைப் பிடுங்கி ஜப்பானிய தாசிப்பெண்களுக்கு அனுப்பிவிடுகிறார்களாம். என்ன புத்தி ! என்ன புத்தி ! சீ !

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

ஒரு பெரும் புரட்சியை யுண்டாக்கித் திருத்தி யமைக்க வேண்டி யிருக்கிறது. இது, பொது மக்கள் ஆதரவைக் கொண்ட சர்வாதிகாரத்தை யடிப்படியாகக் கொண்டதாயிருக்க வேண்டும். இதற்காகத் தான் அவர் முயற்சிக்கிறார்.

எது எப்படி யிருந்தாலும், ஒரு விஷயம் மட்டும் வெகு தெளிவாக விளங்குகிறது. பாஸிஸ்ட் கட்சிக்குள் மிகுந்த அதிருப்தி இருந்து வருகிறது. பொது மக்களுக்கும் முசோலினி மீது அதிருப்தி யிருந்து வருகிறது. இப்படி அதிருப்தியும் அவநம்பிக்கையும் தன் மீது பொது ஜனங்கள் கொண்டிருக்கிறார்கள் என்று தன் குடும்ப வெளியீட்டுப் பத்திரிகையில் அவரே வெளியிட்டு ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்தக் கட்டுரையை எழுதியவர் போலோ பெடுஸ்ச்சி. இவரைப் பற்றி ஒருவருக்கும் சாதாரணமாகத் தெரியாது. இதை முசோலினியின் குடும்பப் பத்திரிகையிலேயே வெளியிட்டார்களென்றால், அவருக்குத் தெரியாமலும் அவருடைய அனுமதி யில்லாமலும் அதை வெளியிட்டிருக்க முடியாது. அவர், அந்தக் கட்டுரையில் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

"திடீர் புரட்சி யொன்று செய்து, கட்சியின் போக்கையே மாற்றி யமைக்க வேண்டுமென்று பாஸிஸ்ட்களில் சிலர் கருதுவதாகத் தெரிகிறது. அவர்கள் பெரிதும் அதிருப்தி கொண்டு விட்டார்கள். இதற்குக் காரணம், சில பாசிஸ்ட் கட்சிக் கொள்கைகளுக்கும் நடைமுறைக்கும் உள்ள வேற்றுமைகள் தான் ஒரு அரசியல் கட்சித் தலைவரே அரசாங்க நிர்வாகத் தலைவராக யிருந்தால், அவர்மீது இப்படிக் குறைகூறுவது எதைக் குறிக்கும் ? அவரைப் பின்பற்றுகிறவர்கள் முழுதும் சலித்துப்போய் அராஜரீகத்தில் இறங்கத் துணிந்துவிட்டார்கள் என்றுதான் அர்த்தம்.

பொது மக்களுக்கு நாம் இன்னதுதான் செய்யப் போகிறோமென்று தெளிவாகச் சொல்லிவிடவேண்டுமென்று, அவர் அக்கட்டுரையில் அடிக்கடி குறிப்பிடுகிறார். அன்றியும் அவர் கூறுவதாவது :—

பாசிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எந்தக் கொள்கையைக் கொண்டிருந்ததுவோ, அதே கொள்கையைத் தான் இப்போதும்கூட அடிப்படையான கொள்கையாகக் கொள்ளக்கூடுமென்று தெரிகிறது. ஆகவே, இதிலிருந்து பாசிஸ்டுகளுக்குள்ளாக மிகுந்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது தெரிகிறது.........சில சமயங்களில் இவை பற்றி பொது மக்களின் மனோநிலை தடுமாற்றமடைவதுண்டு. அப்போது அவர்களுககுள்ள நம்பிக்கை யற்றுப்போகும். அப்போது, உறுதியோடிருக்கிறவர்கள்கூட பெரிதும் கவலை கொள்ளுவாாகள்...... இந்தப் பிற்போக்கான நிலையை நாம மாற்றவேண்டும்......பழமை நீங்கி, புதுமை தழைக்குமானால், அந்தப் புதுஉணர்ச்சி முசோலினிக்குச் சாதகமான முறையில் தழைக்குமானல், இப்போதுள்ள நெருக்கடி இலகுவில் நீங்கிவிடும்.

இந்த கட்டுரையினின்று ஒரு விஷயம் 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' தெளிவாகிறது. அதாவது பாசிஸ்ட் கட்சியினருக்குள் கவலையும், அவநம்பிக்கையும், தடுமாற்றமும் ஏராளமாயிருக்கின்றன வென்று தெளிவாகிறது.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆகிய நூற்றுக்கணக்கானவைகள் உண்டல்லவா? இவை யாவும் நமக்கு அற்பமாகத் தோன்றலாம். ஆனால் இவை போர் சம்பந்தமான கருவிகள் செய்வதற்கு எவ்வளவு அவசியமாயிருக்கின்றனவென்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரே ஒரு உதாரணம் மட்டும் இப்போது சொல்கிறேன். கேளுங்கள். நாம் அலட்சியமாய்க் குப்பையில் போடும் காகிதத்துண்டுகள் இருக்கின்றனவே! அந்த மாதிரி ஒரு டன் துண்டுகளால் 600 வெடிகுண்டு மூடிகள் செய்யலாம்; குண்டுகளுக்குத் தேவையான வாஷர்கள் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் செய்யலாம். கிழிந்த காகிதத்துண்டுகளால் 18 விதமான போர்க் கருவிகள் செய்யப்படுகின்றன என்பதை நாம் மறக்கக்கூடாது. இம் மாதிரியேதான் நம் வீட்டிலுள்ள உபயோகமற்ற சாமான்கள் அத்தனையும் போருக்குப் பலன் படுகின்றன. பெண்கள் இவ்விஷயத்தில் கவலையெடுத்துக் கொள்வார்களேயானால், போர் முயற்சிக்கு நல்ல உதவியாகும். முன்பு கூறப்பட்ட சாமான்களைச் சேகரித்து Salvage டிப்போக்களுக்கு அனுப்பவேண்டும். அப்படிச் செய்வதால் நம் வீடுகளும் சுத்தப்படுமல்லவா?

வயதுசென்ற பெண்மணிகளும் பள்ளி மாணவிகளும் பிற பெண்களும் தங்களது ஓய்வு நேரங்களில் கம்பளி நூலினால் சட்டைகள், பனியன்கள், கால் உறைகள் முதலியவைகள் பின்னி நம் போர் வீரர்களுக்கு அனுப்பலாம். இவைகளுக்கு வேண்டிய கம்பளிநூல், ஊசிகள், பின்னும் மூறைகள் முதலியவைகள் செஞ்சிலுவைச் சங்கத்தார் கொடுப்பார்கள். இனமாகப் பின்னிக் கொடுப்பது ஒன்றுதான் நாம் செய்ய வேண்டியது.

## புத்தகங்களும் பத்திரிகைகளும் சேகரிப்போம்.

இதுமட்டுமல்ல. போர்முனைக்குச் சென்றுள்ள நம் நாட்டு வாலிபர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் உற்சாகமாக இருக்க வேண்டாமா? நம் வீட்டில் நாம் படித்துவிட்டு வீணாய்க் கிடக்கும் சிறுகதைப் புத்தகங்கள், பழைய பத்திரிகைகள், நாவல்கள் முதலியவைகளைச் சேகரித்து தேசீயப்போர் முனையாளருக்கு அனுப்பினால், அவர்கள் அவைகளை நம் போர் வீரர்களுக்கு அனுப்பிவிடுவார்கள். தம் உயிரை அற்பமாக மதித்து நம் நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகப் போர்புரியும் பொருட்டுச் சென்றிருக்கும் நம் தியாகமூர்த்திகளுக்கு, இந்த மாதிரியான அற்ப உதவிகளையாவது நாம் செய்ய வேண்டியது அவசியமல்லவா?

இப்போரில் நம் நாட்டைவிட இதர நாட்டுப் பெண்கள் அதிகமான பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக ரஷ்யாவில் பெண்கள் பாரச்சூட் என்னும் விமானக்குடைகள் மூலம் ஆகாய விமானங்களிலிருந்து குதித்துத் தங்கள் எதிரிகளைத் தாக்குகிறார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா முதலிய நாடுகளில் பெண்கள் நர்சுகளாகவும், மோட்டர் ஓட்டுபவர்களாகவும், குமாஸ்தாக்களாகவும், டெலிபோன், ரேடியோ முதலியவைகளை இயக்குபவர்களாகவும், போர் அரங்கத்தில் சமையற்காரர்களாகவும் வேலை செய்து வருகிறார்கள். அமெரிக்காவில் மட்டும் போர்ச் சாதனங்கள் தயாரிக்கும் வேலைகளில் 1½ கோடி மங்கையர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஏன்? நம் நாட்டையே எடுத்துக்கொள்ளுங்கள். பெண்களின் துணைப் படை என்றொரு பிரிவு இருக்கிறதே தெரியுமா? அதில் பெண்கள் 45 விதமான வேலைகள் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு இனமாகக் காக்கி உடைகளும் நல்ல சாப்பாடும், உயர்ந்த சம்பளமும், நல்ல பாதுகாப்பும் அளிக்கப்படுகின்றன. 18 முதல் 50 வயது வரையிலுள்ளவர்கள் இதில் சேரலாம். இது சம்மந்தமாய் முழு விவரம் வேண்டுபவர்கள் தேசீயப் போர் முனை காரியாலயத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். இந்தப் பெண்கள் படையில் இதுவரையில் 5,000 போர்கள் தாமாகவே சேர்ந்திருக்கிறார்கள்.

## பெண்கள் வாலின்டியர் படை.

இதையல்லாமல் பெண்கள் வாலின்டியர் படை என்னும் ஒரு முறை இருக்கிறது. இதில் சேர்ந்தவர்கள் எவ்வித ஊதியத்தையும் எதிர்பார்க்காதவர்கள். பொது நல நோக்கங் கொண்டவர்கள். தாமாகவே அன்போடு போருக்குத் தொண்டாற்றுபவர்கள். இவர்கள் செய்யும் வேலை இரண்டுவகைப்படும். ஒன்று, பெண்களுக்குத் தகுதியான போர் வேலைகளைக் கண்டுபிடித்து அவைகளில் பெண்களைச் சேர்ப்பதற்கு உதவி செய்தல். இரண்டாவது, விமானப் படையெடுப்பு பாதுகாப்பு சம்மந்தமான (A.R.P.) விஷயங்களைப் பெண்களுக்குச் சொல்லுதலும், பெண்களிடம் போர் ஆதரவுப் பிரசாரம் செய்தலும் ஆகும். இந்தப் புனிதமான இயக்கம் நம் நாட்டில் மட்டும் இன்னும் நன்றாய் அமைக்கப்படவில்லை. இங்கிலாந்தில்மட்டும் இவ்வியக்கத்தில் பத்துலட்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். நாமும் சுறுசுறுப்பாய் முயலுவோமானால், இந்தத் துறையில் வெகு அருமையான வேலை செய்யலாம். இந்தப் பயங்கரமான போர் நமக்கு வெற்றிகரமாக முடிந்ததும் அவரவர் தாம் தாம் போரில் செய்த தொண்டைப் பற்றிக் கூறியும் நினைத்தும் பெருமைப் படுவார்கள். அப்போது பெண்கள் சமூகமாகிய நாம் மட்டும் வெட்கித் தலைகுனியும்படியாய் இருக்கலாமா? ஆகையால் நம் நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் பணியில் நம்மாலானதை உடனே செய்வோம். இன்றே செய்வோம். வெற்றி நெருங்குகிறது. ஜயமுண்டு. பயமில்லை.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

ஒரு மாதத்திலாவது இவ்வளவு குறைந்த அளவுச் சேதம் ஜெர்மன் நீர் மூழ்கிகளால் ஏற்பட்டது கிடையாது. கப்பல் கட்டுவதற்கு அமெரிக்கா பெரும் திட்டமொன்று போட்டிருக்கிறது. இதற்குக் கனடாவும் பிரிட்டனும் பெருவாரியாக உதவிக் கொண்டிருக்கிறது. அதன் பயனாக, மூழ்கடிக்கப்படும் நேசநாட்டுக் கப்பல்களைப் போல், ஜூன மாதத்தில் 7 முதல் 10 மடங்கு அதிகமாகக் கப்பல்கள் கட்டி முடித்திருக்கிறார்கள். வட அத்லாண்டிக் சமுத்திரத்தில் நேசநாட்டு வியாபாரக் கப்பல் ஒன்றுகூட மே மாத பிற்பகுதியிலிருந்து மூழ்கடிக்கப்படவே யில்லை. ஜூன் மாதத்தில் சப்ளை கப்பல்களுக்குத் துணையாகப் போகும் கப்பல்கள் வெகுவாக தாக்கப்படவில்லை. என்றாலும் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களில் அநேகம் சேதமடைந்தன.

## ஜெர்மனி மீது விமானத் தாக்குதல்.

மே, ஜூன் மாதங்களில் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் அடைந்த சேதத்திற்கும், நமது தாக்குதல் போராட்ட முறையின் ஒரு பாகத்திற்கும் தொடர்பு இருக்கிறது. ஜெர்மன் உற்பத்திசாலைகளில் இந்த இரண்டு மாதங்களில் நாசமானதுபோல வேறெந்த மாதத்திலும் ஆனதில்லை. அப்போது ஏராளமான வெடிகுண்டுகள் வீசப்பட்டன. இந்த அரை வருஷத்தில், அச்சு விமானங்கள் இங்கிலாந்தில் எத்தனை டன் வெடிகுண்டுகளை எறிந்தனவோ, அதைவிட 35 மடங்கு அதிக வெடிகுண்டுகளை பிரிட்டிஷ் விமானப் படை மட்டும் ஜெர்மனி மீது எறிந்திருக்கிறது. ஒரே இரவில், அல்ல ஒரே மணி நேரத்தில், ஜெர்மனியைச் சேர்ந்த டஸ்ஸல்டார்ப் என்னுமிடத்தில் 2,000 டன் வெடிகுண்டிகளை பிரிட்டிஷ் விமானப்படை எறிந்தது. அதனால், 38 ஜெர்மன் போர் விமானங்கள் நாசமாயின. அந்த வருஷத்தின் முன் 6 மாதங்களில் 1,500 டன் வெடிகுண்டுகளுக் கதிகமாக எதிரிகள் நம்மீது எறியவில்லை. அதாவது அவர்கள் எறிந்த வெடிகுண்டுகள் எல்லாம் சேர்ந்து 1,500 டன் கூட இருக்காது இதனால், எதிரிகளுக்கு 245 விமானங்கள் சேதம். அன்றியும் அமெரிகக விமானிகள் பட்டப்பகலிலேயே ஜெர்மனியின் யுத்தத் தளவாட உற்பத்திசாலைகளைத் தவிடுபொடி செய்து கொண்டுவருகின்றனர். உலக முழுவதையுமே வென்று கட்டியாள வேண்டுமென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அச்சு நாடுகளையும் அவற்றின் கொடுங்கோல் தலைவர்களையும் மண்ணைக் கவ்வும்படி செய்கின்றனர். இதுபோல பழிக்குப் பழி இதுவரை வாங்கப்பட்டதே கிடையாது. (கரகோஷம்).

ஜெர்மனியின் யுத்தத் தொழிற்சாலைகள் மிகுந்துள்ள பகுதிக்கு ரூர் பிரதேசம் என்று பெயர். ஜெர்மன் போராட்டத்திற்கே ஆணிவேர் போன்றது இததான். இதைத்தான் சென்ற கோடைகாலத்தில் மிகவும் கடுமையாகத் தாக்கினோம். இரவு நேரம் அதிகப்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்போது அதே சமயத்தில் அமெரிக்கப் போர் விமானங்களின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டு வருகிறது. ஆகவே, இனி, நாம் பலமான தளவாடங்களைக் கொண்டு இரவும் பகலும் இடைவிடாது தாக்குவோம். ஜெர்மனியில் தொழிற்சாலைகள் மிகுந்துள்ள இடங்களையும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் அடியோடு அழிக்காமல் விடப்போவதில்லை. ஜெர்மனியின் யுத்தத் தொழிற்சாலைகளில் பலவற்றை அநேக சிறு சிறு பட்டணங்களுககு மாற்றிவிட்டார்கள். முதலில் நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளை ஒழித்துவிட்டு, பிறகு பட்டணங்களில் சிதறிக்கிடக்கும் தொழிற்சாலைகளை நாசஞ் செய்வோம். ரஷ்யப் போர்முனையின் முன்னணி மிகவும் நீண்டது. அந்த முன்னணி முழுதும் ரஷ்யப் போர் விமானங்கள் அணிவகுத்துப் போருக்கு ஆயத்தமாயிருக்கின்றன. ஜெர்மன் தொழிற்சாலைகளை அழிக்கும் கைங்கர்யத்தில் இவையும் பெரிதும் ஈடுபடும்.

ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் பெருவாரியாகச் சேதமடைந்து விட்டன. இதன் பயனாக, ஜெர்மானியர்களின் மனோஉறுதி அடியோடு நாசமாகிவிட்டது. நேச நாடுகளின் மீது பழிக்குப் பழி வாங்கப்போவதாக கொப்பல்ஸ் ஜெர்மன் மக்களுக்குச் சொல்லி தைரியமூட்டப் பார்க்கிறார். இது வெகு விசித்திரமான வாக்குறுதி. இன்னொரு விஷயமும் அவர் சொல்லுகிறார். அதாவது, நேச நாடுகளின் போர் விமானங்கள் எந்த அளவிற்கு நாசங்கள் உண்டாக்குகிறார்களோ, அதைவிட வெகு அதிகமாகத் தம் நீர் மூழ்கிக் கப்பல்கள் நேச நாடுகளுக்குச் சேதமுண்டாக்குகின்றன வென்று கூறி கண் துடைக்கப் பார்க்கிறார். அதற்கும் இடமில்லை என்று ஏற்பட்டுவிட்டால் நாசகால ஹிட்லரும் மோசக்காரத் தோழர்களும் திண்டாடவேண்டித் தான் வந்து சேரும். ஆகையால் முன்பிருந்ததைவிட, நம் நிலைமை எவ்வளவோ மடங்கு சாதகமாயிருக்கின்ற தென்று தெரிகிறது. என்ன நேர்ந்த போதிலும், சரி; நாம் உறுதியோடிருக்க வேண்டுமென்று முடிவு செய்துகொண்டிருக்கிறோம். நமது கடமைகளை நிறைவேற்றுவதில் நாம் கொஞ்சங்கூடச் சோர்வடைய மாட்டோம். நம்மால் இயன்றவரை, எல்லாம் செய்வோம்.

## நிபந்தனை யில்லாது சரணடைய வேண்டும்

இனி மத்தியதரைக்கடலில் நடைபெறும் போராட்டத்தைக் குறித்தும் இத்தாலியர்கள் நடத்தும் போராட்டத்தைக் குறித்தும் கவனிப்போம். இங்கே இப்போதுதான் பிள்ளையார் குட்டு குட்டியதுபோல வெடிகுண்டுகளை வீச ஆரம்பித்திருக்கிறோம். அதற்குள்ளாகவே, இத்தாலியர்கள் மகா நடுக்கம் நடுங்குகிறார்கள். நாம் அவர்களை எங்கே தாக்குவோம், எந்த வகை வெடிகுண்டுகளை உபயோகிப்போம் என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள். அவர்களுடைய கவலையைப் போக்க வேண்டியதில் நமக்குக் கொஞ்சமும் அக்கரையில்லை. திரிபோலியையும், அபிசீனியாவையும், அவர்கள் எப்படி அடித்துத் தாக்கினார்கள்! அல்பேனியாவில் எப்படிப் போராடினார்கள்! கிரேக்கர்களின் பேரில் எப்படி பாய்ந்தார்கள்! இஜிப்டைத்தாக்க எப்படிக் கிளம்பினார்கள்! இவற்றை எல்லாம் அவர்களே எண்ணிப் பார்க்கட்டும். அவர்களுடைய பயத்தைப் போக்குவதற்கு நான் எதுவும் செய்யமுடியாது. ஆனால் நம் நாட்டு மக்களுக்கு எச்சரிக்க வேண்டி யிருக்கிறது.

முதலாவது, போராட்டங்களெல்லாம், நாம் எந்த அளவிற்கு ஆபத்துக்களை லட்சியம் செய்யாமல் இருக்கிறோமோ, அதைப் பொருத்தும், அதிர்ஷ்டத்தைப் பொருத்துந் தான் இருக்கின்றன. அளவு கடந்த நம்பிக்கை கொள்ளக்கூடாது. இநத உணர்ச்சியை நாம் அடியோடு நசுக்கிவிடவேண்டும். ஒரே காலத்தில் பல நாடுகளின் பலவகைப் படைகளும் சேர்ந்து போராடவேண்டுமானால், இதற்கான அமைப்பு வேலைகளைச் செய்து முடிக்கப் பல மாதங்கள் செல்லும். இதற்குமேல் நான் இன்று எதுவும் சொல்வதற்கில்லை. வேனிற் காலம் முடியு முன்பு மத்தியதரைக் கடலிலும் மற்றும் பலவிடங்களிலும் போராட்டங்கள் நடைபெறக்கூடும். நாஜிகளும், பாசிஸ்ட்களும், ஜப்பானியர்களும் எவ்வித நிபந்தனையுமின்றி, நம்மிடம் சரணடைய வேண்டுமென்று கோருகிறோம். அதாவது, அவர்கள் தாக்கும் சக்தி அடியோடு அழியவேண்டும். நமது நீதிக்கும் இரக்கச் சித்தத்திற்கும் அவர்கள் கட்டாயம் பரிபூரணமாகத் தலைவணங்கியே தீரவேண்டும். நெடுநாட்களாக ஆலோசித்துத் திட்டமிட்டுத் தாக்குவதனாலும், மூர்க்கத்தனமான அக்கிரமங்களாலும், உலகம் மீண்டும், கஷ்டத்திற்குள்ளாகி, நாசமாகாதபடி தடுப்பதற்கான எல்லா முறைகளையும் கைக்கொள்ளவேண்டும். அன்றியும், நாம் வெற்றியடைந்த பிறகு, தோல்வியடைந்தவர்களை மனிதத்தன்மைக்கு மீறிய முறைகளில் நடத்தமாட்டோம். பழிவாங்கவும் மாட்டோம். உலகிலுள்ள எல்லா இனத்தவர்களும், நெடுநாட்கள் சுயேச்சையோடு சுகவாழ்வு வாழ்வதற்கான முறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறோம்.



# பிரிட்டிஷ் விமானப் பாய்ச்சலும், - - - - - - - டாக்டர் கோப்பல்சின் கூச்சலும்

## ரூர் பிரதேசத்தில் வெடி குண்டுகளின் நாசமும், பர்லினின் வீண் பசப்பு வேஷமும்

### பிரிட்டிஷ் மக்களை மிரட்டவும், மயக்கவும் ஜெர்மனி செய்த வானொலிப் பிரசார ஆராய்ச்சி

["இரட்டை நாவு" என்ற தொடரில் பிரிட்டிஷ் விமானத் தாக்குதல்களைப்பற்றி பர்லின் நிலையம் செய்த பிரசாரத்தை ஆராய்ந்து, டி. எ. வி. நாதன் அவர்கள் சென்னை வானொலி நிலையத்திலிருந்து 30-6-43-ல் செய்த பிரசங்கம் பின் வருமாறு.—]

"தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்" என்று சொல்வதுண்டு. இதை கோப்பல்ஸ் இப்போதுதான் அறிந்துகொண்டார். எப்படி என்று கேட்பீர்களோ? நேச நாட்டு வெடிகுண்டு விமானங்கள் ஜெர்மனியின் யுத்தத் தளவாடத் தொழிற்சாலைப் பிரதேசங்களை இடைவிடாது தாக்கிக் கொண்டு வருகின்றன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவைகளுடைய முக்கியமான முயற்சி வளர்ந்து கொண்டே வருகிறது. மாதம் மும்மாரி பெய்யுங் காலத்தைப்பற்றி நாம் கேட்டிருக்கிறோமல்லவா? இப்போது ஒரு நாளைக்கு இரண்டு தடவை வெடிகுண்டு மாரி பெய்துவரும் வழக்கத்தைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். பகற் காலத்தில் அமெரிக்க வெடி குண்டு விமானங்களும், இராக்காலத்தில் பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்களும் மேற்கு ஜெர்மனியில் உள்ள ரூர் பிரதேசத்தை முக்கியமாக நாசம் செய்து வருகின்றன. கோடைகாலத்து இடி யோசையைப் போன்ற பிரிட்டிஷ் பெருங் குண்டுகளின் வெடிப்பு, ஜெர்மன் மக்களின் கடின உள்ளத்தில் துடி துடிப்பை உண்டாக்கி யிருக்கிறது; அக் குண்டுகளின் நாச வேலை ஜெர்மன் தலைவர்களுக்கு தலைவலியைக் கொடுத்திருக்கிறது; ரூர் பிரதேசத்தில் நடத்தப்படும் பிரிட்டிஷ் விமானப் பாய்ச்சல், டாக்டர் கோப்பல்சுக்குக் காய்ச்சல் வரும்படி செய்திருக்கிறது. அந்தக் காய்ச்சலில் அவர்போடும் கூச்சல் இவ்வளவு அவ்வளவு அல்ல.

## அழுகைப் பிரசாரம்.

சென்ற ஜூன் 26-ந்தேதி, டாக்டர் கோப்பல்ஸ் மியூனிச் நகரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசினார். அது சாதாரண பேச்சாயில்லை; 'குய்யோ முறையோ' என்ற கூச்சலாயிருந்தது. வீண் பெருமையும், ஆடம்பரமும், அட்டகாசமும் செய்வதே தொழிலாயிருந்த கோப்பல்ஸ், இப்போது அழுகைப்பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். "பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனை வந்தக்கால் கீச்சுக் கீச்சென்னுங் கிளி" என்று சொல்லுவார்கள். அதைப்போல், ஜெர்மனியர்களுக்கு விளங்கக்கூடிய மொழியில் பிரிட்டிஷ் வெடி குண்டுகள் பேசுவதைக்கண்டு, கோப்பல்ஸ் கத்துவதல்லாமல் வேறென்ன செய்யமுடியும்? கோப்பல்ஸ் கூறியதை "ஜெர்மன் நியூஸ் எஜென்ஸி" என்ற செய்தி நிலையம் பிரசுரித்திருக்கிறது. அவர் கூறுகிறார் :—

"ஐரோப்பாவினுடைய உயிருக்கு ஆதாரமான வேர்கள் அடியோடு பறிக்கப்படுகின்றன. நாகரிகம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு எங்களுடைய கலை ஸ்தாபனங்களை அழிக்கிறார்கள். அமெரிக்கர்கள் ஐரோப்பிய பட்டணங்களை நிர்மூலம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய சிகாகோ அல்லது சான் பிரான்சிஸ்கோ பட்டணங்கள் எந்தக் காலத்திலும் எங்களுடைய பட்டணங்களைப்போலச் செய்ய முடியாதென்ற காரணத்தால், இப்படி எல்லாம் செய்கிறார்கள்."

இது கூறியதற்கு முந்திய நாள், அதாவது வெள்ளிக்கிழமை, ஜூன் 25-ந்தேதி, பர்லின் நிலையம், டாக்டர் கோப்பல்ஸின் பத்திரிகைக் கட்டுரையின் சில பாகங்களை ஒலி பரப்பியிருக்கிறது. "தாஸ்ரைஷ்" என்ற தம்முடைய வாரப்பத்திரிகையில், டாக்டர் கோப்பல்ஸ் அதுபற்றி எழுதியிருக்கிறார் :—

"அச்சு நாடுகளை ஆகாய விமான யுத்தத்தினால் மாத்திரம் அழித்துவிடலாம் என்று பிரிட்டிஷார் நினைத்திருக்கிறார்கள். இது நடக்காத காரியம். எங்களுக்குப் பயமும், பீதியும் உண்டாக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய பயங்கரமான தாக்குதல்களுக்குப் பதில் தக்க காலத்தில் அளிக்கப்படும்."

## இரண்டு விதமான நோக்கம்.

அதில், ஒரு விசேஷம் நாம் கவனிக்கவேண்டும். பயந்தவன், எதிரியைப் பயங்காட்டும் கொள்கையை அவர்கள் அனுசரித்திருக்கிறார்கள். "நீ எவ்வளவு வேண்டுமானாலும் அடி, பட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் இதற்கெல்லாம் பின்னால் நான் என்னால் ஆனதைச்செய்து விடுகிறேனா, இல்லையா, நீயே பார்"—என்ற மிரண்டவன் மிரட்டும் மனப்பான்மை அவருடைய பிரசாரத்தில் காணப்படுகிறது. இதனுடைய நோக்கம் இரண்டு விதமானது. மனக் கலக்கமடைந்த ஜெர்மன் மக்களுக்கு இது ஒரே விதமான தைரியத்தைக் கொடுக்கும் என்பது ஒன்று. மிரட்டுகிற மிரட்டலில் பிரிட்டனும் ஒருவேளை சற்று அஞ்சக்கூடும் என்ற நினைப்பு மற்றொன்று.

இந்த மிரட்டல் பிரசாரம் சில நாட்களாக மிக மும்முரமாக நடந்து வருகிறது. இதில் ஒரு விஷயத்தை அச்சுநிலையங்கள் ஆங்கிலமல்லாத பிற மொழிகளில் முக்கியமாக வற்புறுத்தி வருகின்றன. "நேச தேச விமானங்கள் ஜெர்மன் மக்களைப் பயப்படுத்துவதற்காகத் தான் வெடிகுண்டுகளைப் போடுகின்றன; யுத்தத்தில் ஈடுபடாத சாதாரண மக்களைத் தாக்குவதுதான் அவர்களுடைய நோக்கம்"—என்று அடிக்கடி பர்லின் கூறிக்கொண்டு வந்திருக்கிறது.

ஜூன் 16-ந் தேதி, பர்லின் நிலையம் இந்துஸ்தானி ஒலிபரப்பில் இந்தப் பொய்யை மறுபடியும் கூறியிருக்கிறது.

"இத்தாலியிலும் ஜெர்மனியிலும் உள்ள ஆயுதந் தாங்காத நிரபராதியான மக்களை, ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் பயங்கரமான வெடி குண்டுத் தாக்குதல்களுக்கு ஆளாக்கி கொண்டு வருகிறார்கள்."

என்று பர்லின் வாய் கூசாமல் கூறுகிறது. இது உண்மையல்ல என்ற விஷயம், இதற்கு நான்கு நாட்களுக்கு முன், அதாவது ஜூன் 12-ந் தேதி, பர்லின் நிலையம் தன்னுடைய ஆங்கில ஒலி பரப்பில் கூறியதி

பிரிட்டிஷ் வெடி குண்டு விமானங்கள் ஜெர்மனியின் தொழிற்சாலை பிரதேசமாகிய ரூர் பகுதியை அடிக்கடி தாக்கிக்கொண்டு வருகின்றன. பக்கத்தில் காட்டப்பட்ட விமானம் ரூர் தாக்குதல்களில் சம்பந்தப்பட்ட விமானம்.



லிருந்தே விளங்குகிறது. அன்றையத் தினம் ஆங்கில மக்களுக்காகச் செய்யப்பட்ட ஆங்கில ஒலி பரப்பில்,

"பிரிட்டிஷ் விமானத் தாக்குதல்களுடைய நோக்கம் நிச்சயமாக, ஜெர்மன் யுத்த யந்திரத்தை உடைத்துப் பழுதாக்க வேண்டுமென்பது தான்"

என்று கூறியிருக்கிறது. ஆனால் முன்னுக்குப் பின் அதிக முரண்பாடு இருக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு, சில வார்த்தைகளைக் கூடச் சேர்த்திருக்கிறது. "ராணுவத்தைச் சேர்ந்த சாதாரண மக்களைப் பயப் படுத்த வேண்டுமென்பது மற்றொரு நோக்கம்," என்று அடுத்தபடியாகக் கூறுகிறது.

**பல விதமான ஏமாற்றுப் பிரசாரம்.**

டாக்டர் கோப்பல்சினுடைய பொய்ப் பிரசார அவசரத்தில் இம்மாதிரியான தவறுதல்கள் நேருகின்றன வென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அப்படியல்ல. அச்சுப் பிரசாரம் பலதிறப்பட்ட மக்களை பலவித மான வழிகளில் ஏமாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்துஸ்தானி மொழியில் அம் மொழி பேசும் மக்களை மயக்குவதற்கான பிரசாரம் ஒலிபரப்பப்படும். ஆங்கில ஒலிபரப்புகள் பிரிட்டிஷ் மக்களையும், இதர ஆங்கில மொழி நாடுகளின் மக்களையும், திருப்பும் நோக்கத்துடன் செய்யப்படும்.

சரிதான், "ஜெர்மன் யுத்த யந்திரத்தை உடைத்துப் பழுதாக்கும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் விமானத்தாக்குதல்கள் செய்யப்படுகின்றன"— என்று கூறியதில், என்ன ஏமாற்றம். அல்லது தந்திரம் இருக்கிறது என்று கேட்கலாம். இருக்கிறது ஒரு தந்திரம்! எல்லாம் தெரிந்தவர்களிடம் பொய் பேசுவதில் என்ன லாபம்? பிரிட்டிஷ் மக்களுக்குத் தங்களுடைய விமானத் தாக்குதல்களின் நோக்கம் நன்றாகத் தெரியும்; ஆகையால் அவர்களிடம் உண்மையை ஒப்புக்கொண்டு, வேறு வழியில் அவர்களை திருப்பவேண்டும் என்பது டாக்டர் கோப்பல்சினுடைய எண்ணம். பர்லின் நிலையத்திலிருந்து செய்யப்பட்ட சில ஆங்கில ஒலிபரப்புகளிலிருந்து இந்த விஷயம் விளக்கமாகப் புலப்படுகின்றது.

ஜூன் 12-ந் தேதியல்லவா பிரிட்டிஷ் தாக்குதல்களின் உண்மை லட்சியத்தை பர்லின் ஒப்புக்கொண்டது? அதற்கு அடுத்தநாள், ஆகாய விமான யுத்தத்தைப்பற்றி, ஜெர்மன் விமானப்படையைச் சேர்ந்த ஜெனரல் க்ராண்டர் வெளியிட்ட அபிப்பிராயத்தை, பர்லின் ஆங்கில மொழியில் ஆங்கில மக்களுக்கு ஒலிபரப்பி யிருக்கிறது. அதில்,

"ஜெர்மன் யுத்தத் தளவாடத் தொழிற்சாலைகள் வெகு காலத்துக்கு முன்பே பிரித்து வேறிடங்களுக்கு கொண்டு போகப்பட்டன. ஆகையால் வெடி குண்டு போட்டு அவைகளை அழிக்க முயற்சித்தால், அது ஒன்றும் பயன்படாது."

என்று அந்த ஜெர்மன் விமானத் தலைவர் அறிவித்திருக்கிறார். இதைப் பின்பற்றி பர்லின் ஒரு வியாக்கியானம் செய்திருக்கிறது. அதை நீங்கள் கேட்டால், பர்லின் ஏன் உண்மையை ஒருவாறு ஒப்புக்கொண்டது என்பது விளங்கும். பர்லின் ஆங்கில ஒலிபரப்பில் கூறுகிறது:

"வெடி குண்டுகளினால் ஜெர்மனியின் யுத்த உற்பத்தியை அழித்துவிட முடியாதென்ற அபிப்பிராயத்தை பர்லினில் உள்ள ராணுவ வட்டாரங்கள் வற்புறுத்துகின்றன. ஜெர்மனியின் யுத்தத் தளவாடத் தொழிற் சாலைகள் பல யிடங்களில் சிதறிக் கிடக்கின்றன. ரூர் பிரதேசத்தில் உள்ள இரும்புத் தொழிற்சாலைகளும், நிலக்கரித் தொழிற் சாலைகளும் விமானத் தாக்குதல்களால் அழிக்க முடியாத ஏற்பாடுகள், செய்யப்பட்டிருக்கின்றன."

இது பர்லினில் உள்ள ராணுவ வட்டாரங்களின் அபிப்பிராயம் என்று ஆங்கில மக்களுக்குக் கூறப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பிறகு, அதாவது, ஜூன் 20-ந் தேதி, பிரிட்டனில் உள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தான் இரகசியமாக அறிந்து கொண்டது போல பர்லின் பாவித்து அதை பிரிட்டிஷ் மக்களுக்கு ஒலி பரப்பியிருக்கிறது. அன்றைய தினம் செய்யப்பட்ட ஆங்கில ஒலிபரப்பில் பர்லின் கூறுகிறது:—

"பிரிட்டனிலிருந்து இரகசியமாக வரும் தகவல்களிலிருந்து, சில விஷயங்கள் வெளியாகின்றன. ஜெர்மனி, இத்தாலி, ஆதிக்க நாடுகள் முதலியவைகளின் மேல் அதிகரித்துக்கொண்டே போகும் நேச விமானங்களின் நாசம், பிரிட்டிஷ் மக்களைப் பயப்படுத்தியிருக்கிறது. இவ்வளவு நஷ்டமடைந்தும் பலன் என்ன என்று பொறுப்பான வட்டாரங்கள் வாதம் செய்ய ஆரம்பித்திருக்கின்றன. பிரம்மாண்டமான விமானத் தாக்குதல்கள் நடத்துவது சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்று பலர் சொல்லுகிறார்கள். இந்த முறையினால் யுத்தத்தில் நாம் வெற்றி பெற்றுவிட முடியாது என்று அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்." இந்த ஒலிபரப்புக்கு அடுத்த நாள், அதாவது ஜூன் 21-ந் தேதி ஆங்கில ஒலிபரப்பில் விமானத்தாக்குதல்களால் "ஜெர்மன் யுத்த உற்பத்தி தடைப்படவில்லை."—

என்று பெர்லின் கூறுகிறது.

**"தனக்கு வந்த தலைவலி"**

இதெல்லாம் பர்லின் திரித்த சரடுகளே ஒழிய வேறல்ல. ஆனால் அச்சுப் பிரசாரத்தின் மனப்பான்மை எப்படிப்பட்டது என்று இதன் மூலம் தெரிந்துகொள்ளலாம். பிரிட்டிஷ் விமானங்கள் ரூர் பிரதேசத்தைத் தாக்கி, யுத்தத் தொழில் நிலையங்களைத் தவிடுபொடியாக்கி வருவது, ஜெர்மனிக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்திருக்கிறது. எங்களுடைய தொழில் நிலையங்கள் எல்லாம் வேறிடத்தில் இருக்கின்றன; உங்களுடைய வெடிகுண்டுகளெல்லாம் வீணாய்ப் போகின்றன" என்றால் தாக்குதல்களின் தன்மையும் வேகமும் குறைந்துவிடும் என்று டாக்டர் கோப்பல்ஸ் நினைக்கிறார் போலும். அந்த பிரசார ஜம்பம் பிரிட்டனிடம் பலிக்காது. "பயங்கரமான தாக்குதல்களால் பாமரர்கள் மாய்கிறார்கள்" என்ற பொய் மந்திரம், உண்மையறிந்த உலக மக்களை மயக்காது. லண்டன், கவெண்ட்ரி, பிரிஸ்டல், வார்சா, ராட்டர்டாம், பெல்கிரேட் முதலிய நகரங்களை மிகக் கடுமையாகத் தாக்கிய மிருகக்கூட்டத்துக்கோ இந்த வேஷம்? அப்போது அந் நகரப் பாமரமக்கள் என்ன கஷ்டப்பட்டார்கள்! இப்போது அது போன்ற நிலைமை ஜெர்மனியர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. தலைவலியும் காய்சலும் தங்களுக்கு வந்த போது, கஷ்டம் தெரியாமலா இருக்கும்? ஆனால் இத்தோடு கூட ஐரோப்பிய படையெடுப்பு என்ற குளிர்சுரமும் சீக்கிரத்தில் சேரப்போகிறது. அப்போது குரங்குக்குத் தேள் கொட்டியதுபோல, அச்சு நிலையங்களின்பாடு திக்குமுக்காடித் திணறும் நிலைக்கு வந்துவிடும்.

## நம் வேலையைப் பார்த்துக்கொண்டிருப்போம்

"இரண்டு வருஷங்களுக்கு முன்பு மேல் திசையிலிருந்து பயமுறுத்தப் பட்டோம். சிரியா, ஈராக், பாரசீகம் ஆகிய நாடுகளின் வழியாக இந்தியாவிற்குள் தம் படைகள் நுழைவதற்கான சூழ்ச்சிகளை ஜெர்மானியர்கள் செய்தார்கள். ஆனால் நம் ரஷ்ய தோழர்களின் வீரமும் மத்திய தரைக் கடலின் கீழ் பாகத்திலுள்ள நம் பாதுகாப்புப் படைகளும், அவர்கள் முயற்சியைப் பாழாக்கின. இப்போது கீழ்த் திசையிலிருந்து நேர் முகமாக வரும் பயமுறுத்தலை நாம், சமாளித்து வருகிறோம். ஜப்பானியர்கள் எங்கிருந்து கிளம்பி வந்தார்களோ, அந்த இடத்திற்குத் திரும்பிப் போகும்படி அடித்து விரட்டப்படுகிற வரை, இந்தப் பயமுறுத்துதல் இருந்து கொண்டு தான் இருக்கும்."

"ஜப்பானியர்கள் முரடர்கள். மனவுறுதியோடு சண்டை போடுகிறவர்கள். தம் நாட்டின் பொருட்டு உயிர் விட எப்போதும் தயாரா யிருக்கிறார்கள். அவர்களை நாம் வெல்லத் தான் வேண்டும். மற்ற எல்லா வேலைகளையும் விட இதையே முதன்மையானதாக நாம் ஒவ்வொருவரும் கொள்ள வேண்டியது அவசியம். வெற்றி பெற வேண்டு மென்னும் நம் உறுதிக்குத் தடைகளாக நமது வசதிகளோ, தன்னலமோ, இருக்கவே கூடாது. நாம் தாமதிக்கக் கூடாது. நம் வேலையைப் பார்ப்போம்."

இந்திய சேனாபதி **ஜெனரல் ஆகின்லெக்**
தன் படைகளுக்கு 1943-ம் வருஷம் ஜூலை மீ 4-உ விடுத்த செய்தி.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் வருஷம் ஜூலை மீ 16-உ, வெள்ளிக்கிழமை [இதழ் 28

## வெற்றி நிச்சயம்



ஜெனரல் மண்காமரி.

இத்தாலியிலும் ஐரோப்பாக் கண்டத்திலும் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய பருவம் வந்து விட்டது. வெளி நாடுகளில் இத்தாலிக்குச் சொந்தமா யிருந்த சாம்ராஜ்ய நாடுகள் அடியோடு அதை விட்டு விலகி விட்டன.

இக்கடமையை நிறைவேற்றுவதில் பிரிட்டிஷ் படைகளின் சார்பாகப் போராடும் பெருமை எட்டாம் படைக்கு வாய்த்திருக்கிறது. நமது இடது புரத்தில் நம் அமெரிக்கத் தோழர்கள் இருக்கிறார்கள். நாம் இருவரும் சேர்ந்து இத்தாலியர்களை அவர்களுடைய நாட்டிலேயே தீர்த்து விடுவோம். இது நிச்சயம். தங்களுடைய சௌகரியத்தை முன்னிட்டுத் தான் அவர்கள் இந்தப் போரில் இறங்கினார்கள். ஆகவே, அதன் பலா பலன்களை அவர்கள் அனுபவிக்கத் தான் வேண்டும்.

நம் எட்டாம் படையோடு கனடியப் படைகளும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு மனப்பூர்வமான வரவேற்பளிக்க விரும்புகிறேன். அவர்கள் மகத்தான போர் வீரர்கள். நாம் செய்ய வேண்டிய வேலை எளிதன்று. நமது போராட்டங்கள் எல்லாவற்றிலும் பிரிட்டிஷ் கப்பற் படையும் பிரிட்டிஷ் விமானப் படையும் மிகச் சிறந்த முறையில் உதவின. இந்த மூன்று வகைப் படைகளும் ஒன்றுபட்டு மகத்தான பலங்கொண்டு போராடுகின்றன. இதை எதிர்த்து நிற்க யாராலும் முடியாது. இந்தப் போராட்டத்தில் பரிபூரண வெற்றி கிடைக்கும் என்பது பற்றி எனக்கு முழு நம்பிக்கையுண்டு.

போராட்டம் ஆரம்பமானவுடனேயே சாம்ராஜ்ய மக்கள் எல்லோரும் நம் மீதே கவனம் கொண்டிருப்பார்கள். நாம் அவர்கள் அனைவருக்கும் ஏராளமான நற்செய்திகளை யனுப்பிக் கொண்டிருப்போம். உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு செய்தி. இத்தாலியிலேயே இத்தாலியர்களை நன்றாக வேட்டையாடும் சிறந்த அதிர்ஷ்டம் உங்களுக்கு வாய்க்கப் போகிறது.

ஜெனரல் மண்காமரி, சிசிலியைத் தாக்கும் நேசதேசப் படையினருக்கு ஜூலை மாதம் 14-ம் தேதி விடுத்த செய்தி.

## பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : ஜெனரல் மண்காமரி .. | 1 | தொழிலாளர் பகுதி : அரசாங்க மலிவுத் துணித் திட்டம் .. .. .. .. | 4 |
| வெற்றி நிச்சயம் .. .. .. | 1 | உற்சவ ஆரம்பம் .. .. .. | 5 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 2 | மிதமிஞ்சி சேகரிப்பவர்கள் சமூகத் துரோகிகள். | 7 |
| தலையங்கம் : சிசிலிப் போராட்டம் .. .. | 3 | | |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**இந்தியாவும் தென்மேற்கு பசிபிக்கும்**

தென்மேற்குப் பசிபிக் கடலில் போர் நடக்கிறது. இது இந்தியாவின் பாதுகாப்பையும் பாதிக்கக் கூடும். ஏனென்றால், ஆசியா முழுவதையும் கைப்பற்றி, கட்டியாள வேண்டுமென்று ஜப்பானியர்கள் திட்டம் போட்டிருக்கின்றனர். இது ஒரு பைத்தியக்காரப் பகற் கனவுதான். ஏனென்றால் இதற்கு முதற்படியாக, ஆஸ்திரேலியாவிற்குக் கிழக்கேயும் வடக்கேயும் சங்கிலி கோர்த்தது போல அமைந்திருக்கும் தீவுகளில், நேசதேசப் படைகளோடு போராடி அவர்கள் வெல்ல வேண்டும். இதன் பொருட்டு, மேற்கே செலிபிசிலிருந்து கிழக்கே சாலமன் தீவுகள் வரை தொடர்ச்சியாகத் தம் பாதுகாப்புகளைச் சங்கிலி கோர்த்தது போல அமைத்துக் கொள்ள வேண்டுமென்பது அவர்களுடைய ஆசை. அந்த ஆசை மண்ணைக் கவ்வியது. எப்படி என்றால், நியூ கினியாவைச் சேர்ந்த பூனா என்னுமிடத்திலும், சாலமன் தீவுகளைச் சேர்ந்த குடால்கனாலிலும் ஜப்பானியப் படையை நேசதேசப் படைகள் செம்மையாக நொறுக்கித் தள்ளி விட்டன. ஜெனரல் மெக்கார்தர் ஜப்பானியப் படைகளைத் தாக்கக் கிளம்பி விட்டார். ஆகவே, ஜப்பானியப் பாதுகாப்புக்கள் நிர்த்தூளியாகின்றன. இந்தத் தாக்குதல் சென்ற ஜூன் மாதம் 30-ம் தேதி ஆரம்பமானது. அதற்கு 2 நாட்களுக்கு முன்பு, ஜப்பான் இராணுவத் தகவல் கழகத்தின் டைரெக்டரான மேஜர் ஜெனரல் யஹாகி, டோக்கியோ என்னுமிடத்தில் பேசியபோது என்ன சொன்னார் தெரியுமா ?

"ஒரு பெருந் தாக்குதலை ஆரம்பிக்க ஜப்பான் ஆயத்தமாயிருக்கிறது," என்றார்.

யஹாகியின் சொற்பொழிவைச் சுருக்கி டோக்கியோ வானொலி நிலையம் தொடர்ச்சியாக வெளியிட்டது. அந்தச் சமயம், ரெண்டோவா தீவுகள், நசாவு விரிகுடா ட்ரோபிரியான்ட், உட்லார்க் தீவுக் கூட்டங்களை யடுத்து நேச நாட்டுப் படைகள் நெருங்கி வந்து கொண்டிருந்தன. ஜூன் மாதம் 29-ம் தேதி டோகியோ வானொலி நிலையம் ஆங்கிலத்தில் ஒலி பரப்பிய பிரசங்கச் சுருக்கத்தின் கடைசியில்,

"இவை மீண்டும் உறுதி கூறும் வார்த்தைகள். இப்படிப் பேசியவர் ஜப்பானியப் படைகளின் சார்பாகப் பேசக் கூடியவர்" கூறப்பட்டது.

மறுநாள் தான் நேச நாடுகளின் படைகள் ஜப்பானியர்களைத் தாக்க ஆரம்பித்தன. அப்போது, மற்றொரு ஜப்பானிய இராணுவ ஆராய்ச்சியாளர் கூறியதை ஆங்கிலத்தில் அது ஒலிபரப்பியது :

"எந்தச் சமயம் வேண்டுமானாலும் ஆஸ்திரேலியாவைத் தாக்கிப் பிடித்துக் கொள்ளுவதற்கு ஏற்ற இராணுவத் தளங்களுக்குத் தேவையான எல்லா முன்னேற்பாடுகளையும் ஜப்பானியப் படைகள் செய்து முடித்து விட்டன."

இந்தத் தளங்கள் எவை ? எங்கே இருக்கின்றன ? ஒருவருக்கும் தெரியாது. இங்கே, ஒரு விஷயம் குறிப்பிடத் தக்கது. சென்ற பிப்ரவரி மாதத்தில் தான் குடல்கனாலை விட்டு ஜப்பானியர்கள் காலி செய்தார்கள். இதனால் ஜப்பானிய மக்களுக்கு மனக் கலக்கம் ஏற்பட்டு விடாதபடி பூசி மெழுகும் பொருட்டு டோக்கியோ வானொலி நிலையத்திலிருந்து ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதில், "மேலும் தெற்கே பல முக்கியமான இடங்களை ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டதாக" கூறினார்கள். இப்படிச் சொல்லி 5 மாதங்களுக்கு மேலாயிற்று. இது வரை, அந்த முக்கியமான இடங்கள் எவை என்று டோக்கியோ வானொலி நிலையம் தெரிவிக்கவேயில்லை. ஏன் ? அவர்கள் கைப்பற்றியதாகச் சொல்லுவதற்கு ஏதேனும் ஒரு இடம் இருந்தாலல்லவோ ? அவையெல்லாம் டோக்கியோ பிரசாரகர்களின் மனோ சிருஷ்டிகள் தான் !

* * * *

**ஜப்பானுக்குப் பாதுகாப்புத் திட்டமாம் !**

தென் மேற்கு பசிபிக் மகா சமுத்திரத்தில் நடைபெற்ற போராட்டத்தில், உட்லார்க், டோப்ரியாண்ட் தீவுகளைக் கைப்பற்றினோம். நசாவு விரிகுடாவில் போய் இறங்கினோம். பிறகு 4 நாட்களாகின. என்றாலும், இது பற்றி ஜப்பானிய வானொலி நிலையத்திலிருந்து ஒரு வார்த்தை கூடக் கிளம்பவில்லை. என்றாலும் ஜூலை மாதம் 1-ம் தேதி ஜப்பான் சாம்ராஜ்யத் தலைமைக் காரியாலயத்திலிருந்து ஒரு அறிக்கை வெளிவந்தது. அதில் நியூகினியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டத்தைக் குறித்து ஒரு வார்த்தை கூடக் காணப்படவில்லை. ஆனால் சாலமன் தீவுகளில் நடைபெற்றுக் கொண்டிருந்த யுத்தத்தைக் குறித்து மட்டும் தெரிவித்தது. முதன் முதல் இந்தப் போராட்டங்களைக் குறித்துக் குறிப்பிட்டது படேவியா வானொலி நிலையந் தான். இது ஜப்பானியர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. இது வெளியிட்ட விவரங்களுக்கும் அரசாங்க அறிக்கைக்கும் மிகுந்த வேற்றுமையுண்டு. அந்த வானொலி நிலையத்திலிருந்து ஜூலை மாதம் 2-ம் தேதி ஆங்கிலத்தில் ஒலி பரப்பப்பட்ட செய்தியில்,

"அமெரிக்க கொரில்லா போராட்டத்திற்கு உதாரணமாயிருக்கிறது ரெண்டோவா தீவில் நடைபெறும் யுத்தம். இனி, இந்த யுத்தம் சாலமன் தீவுகளுக்கும் பரவும் என்று இராணுவ வட்டாரங்களில் சொல்லப்படுகிறது. இங்கே போராடுவது எதிரிகளுக்கு (நேச நாட்டுப் படைகளுக்கு) மகா கஷ்டமாயிருக்கும் ; ஏராளமான நஷ்டங்களும் ஏற்படும். ஏனென்றால் தென் மேற்கு பசிபிக் முழுவதிலும் தகர்க்க முடியாத பாதுகாப்பு அரண்களை அமைத்திருக்கிறோம்," என்று குறிப்பிட்டது.

இப்போது ஜப்பான் வானொலி நிலையங்களிலிருந்து ஒலி பரப்பப்படும் செய்திகளைப் பார்த்தால், ஒன்றிலாவது முன்போல, தாக்குவது என்னும் பேச்சே கிடையாது. பாதுகாப்புக்களைப் பற்றி மட்டுமே கூறுகின்றன. 'ஆஸ்திரேலியாவை உடனடியாகத் தாக்கப் போகிறோம்' என்ற வார்த்தையே கிடையாது ; ஆனால், ஜப்பானியப் பாதுகாப்புகளைத் துளைத்துக் கொண்டு நேசநாட்டுப் படைகள் ஒவ்வொரு தீவாகக் கைப்பற்றக் கூடும் என்று குறிப்பிடுகிறது. இது பற்றி ஜூலை மாதம் 3-ம் தேதி டோக்கியோ வானொலி நிலையம் கூறியதாவது :—

"தங்களுடைய யுத்த தந்திரத்தைக் கொண்டு எதிரிகள், தெற்கே நாம் கைப்பற்றியிருக்கும் பகுதிகளுக்குள் நுழைய வேண்டும் என்னும் எண்ணம் கொண்டிருக்கலாம். அனால், நமது விமானப் படைகளுக்கு அவர்கள் இரையாக வேண்டுமென்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்."

(8-ம் பக்கம் பார்க்க)




## யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ஆம் ஜூலை மீ 16உ. [இதழ் 28


## சிசிலிப் போராட்டம்

சிசிலி என்பது ஒரு தீவு. இது மத்திய தரைக் கடலில் இருக்கிறது. இதன் வட கோடிக்கும் இத்தாலியின் தென் கோடிக்கும் இடையே ஒரு ஜலசந்தி இருக்கிறது. இதன் அகலம் 2 மைல் தான். இத்தீவு 9,935 சதுரமைல் விஸ்தீரணமுடையது. இங்கே சற்றேறக் குறைய 40 லட்சம் பேர்கள் வசிக்கிறார்கள். இது இத்தாலிக்குச் சொந்தம். இங்கே மலைகள் அதிகம். 'எட்னா' என்னும் எரி மலையும் இங்கே தான் இருக்கிறது. இந்தத் தீவு வளமிகுந்தது. ஆகவே, விளைபொருள்களும் அதிகம். மலைகளும் வளமும் அதிகமானால், அந்தத் தீவு செழித்து, வணிகமும் ஓங்கி யிருக்கவேண்டும். இதற்கு ஏற்ற, பல துறைமுகங்களு மிருக்கின்றன. இவற்றுள் முக்கியமானது சைராக்யூஸ். இது ஒரு கப்பற்படை தளமுங்கூட. வடாப்பிரிக்கப் போர் நடந்து கொண்டிருந்த போது, சிசிலியைத் தான் அச்சு நாடுகள் தளமாகக் கொண்டிருந்தன. ஆகவே, இங்கே பல கப்பல் தளங்களும் விமான தளங்களும் இருக்கின்றன. இந்தத் தீவை இத்தாலியோடு 1862-ம் வருஷம் சேர்த்தவர் கிரிபால்டி என்னும் இத்தாலிய அரசியல் ஞானி. இதை இத்தாலியின் மாகாணமாக அவர் ஆக்கினார். அது முதல் இன்றுவரை இத்தாலிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகத் தான் இருக்கிறது. மத்தியதரைக் கடலிலுள்ள எல்லாத் தீவுகளிலும் இது தான் பெரிது. பிரிட்டிஷாருக்குச் சொந்தமான மால்டா தீவுக்கும் இதற்கும் 60 மைல் தூரந் தான். ஆகவே, இது ஒரு கேந்திர ஸ்தானம்.

வடாப்பிரிக்கப் போராட்டம் முடிந்த பிறகு, நேச நாட்டுப் படைகள் சிசிலித் தீவைத் தாக்க முற்பட்டன. இதற்கு முன்னதாக, நேச நாட்டுப் படைத் தலைவர் பிரஞ்சு மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அது ஒரு வானொலிப் பிரசங்கம். அதில் பிரஞ்சு மக்களுக்கு மீட்சி விரைவில் கிடைக்குமென்று குறிப்பிட்டிருக்கிறார். இதன் நோக்கமென்ன ? சிசிலியைத் தன் படைகள் தாக்க ஆரம்பிக்கும் போதே, பிரஞ்சு மக்கள் அங்கங்கே கலவரங்களை உண்டாக்க வேண்டுமென்று தூண்டுவதாகும் என்று சொல்லலாம். இதற்கும் சிசிலியைத் தாக்குவதற்கும் என்ன சம்பந்தமென்னும் கேள்வி பிறக்கலாம். மிகுந்த சம்பந்தமுண்டு. சிசிலியில் நேசநாட்டுப் படைகள் இறங்கி அதைக் கைப்பற்றிக் கொண்டன என்றால், நாஜிகளுக்கும் பாசிஸ்டுகளுக்கும் தோல்வி என்று தானே பொருள். அப்போது விஷி அரசாங்கத்தின் பாடு கலகலத்து விடும். ஏனென்றால், இது ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனையை ஆரம்பிப்பதற்குச் சமானம் தான். அதனால் தான் ஜெனரல் ஐசினோவரும், பிரஞ்சு மக்களைத் தன் பிரசங்கத்தால் தூண்டினார்.

மற்றொரு விஷயம் இங்கே கவனிக்கத் தக்கது. அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஸ்டிம்சன் இப்போது லண்டன் வந்திருக்கிறார். இது யுத்த முயற்சி சம்பந்தமான பயணம் என்பது பற்றி சந்தேகமே கிடையாது. இதே சமயத்தில், லண்டனிலுள்ள ரஷ்ய அரசாங்கப் பிரதிநிதியான தோழர் மெய்ஸ்கி இப்போது மாஸ்கோவிற்குப் போயிருக்கிறார். இவற்றால் ஏதோ பிரமாதமான காரியம் நிகழப் போகிறது என்று மட்டுந் தான் சொல்லலாம்.

இனி, சிசிலித் தீவை நேச நாட்டுப் படைகள் தாக்கிக் கொண்டு வருவதைப் பற்றி சிறிது கவனிப்போம்.

சைராக்யூஸ் ஒரு சிறந்த கப்பற்படைத் தளம் என்று ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேசநாட்டுப் படைகள் இதைக் கைப்பற்றிக் கொண்டன. அன்றியும் லிகெட்டா, அவோலா, பொஸாலோ, இஸ்பிக்கா, நோடோ முதலிய துறைமுகப் பட்டணங்களையும் கைப்பற்றிக் கொண்டன. ப்ளாரிடா ஜில்லா முழுவதையும், சிசிலி தீவின் தென்மேற்குக் கரையை யடுத்த மலை யடிவாரங்களையும் நேசநாட்டுப் படைகள் கைப்பற்றிப் பூரண ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. தாம் கைப்பற்றிய இடங்களை மிகவும் எச்சரிக்கையோடு காப்பாற்றிக் கொண்டும் வருகின்றன. கடற் கரையிலிருந்து 20 மைல்கள் வரை உள்நாட்டிற்குள் இந்தப் படைகள் புகுந்து விட்டன. இந்தத் தரைப் படைகளுக்குத் துணையாக பலமான கப்பற் படைகளும் விமானப் படைகளும் உடனே சென்று கொண்டிருக்கின்றன. மத்ய கடேலினா என்னும் சமபூமியில் நேசநாட்டுப் படைகள் விசிறி வீசியது போல, சிதறி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அங்குள்ள இத்தாலியப் படைகள் வேண்டா வெறுப்பாக எதிர்ப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இங்கே நேசநாட்டுப் படைகளின் வேலை எளிதாயிருக்கிறது. என்றாலும், இது இப்படியே இருக்குமென்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், சிசிலியை இழக்க அச்சு நாட்டார் துணிய மாட்டார்கள். கடுமையான போராட்டம் நடக்கத் தான் போகிறது. இதன் பொருட்டு ஜெர்மன் படைகள் அக்ரிஜெண்டா என்னும் கப்பல் தளத்தில் வந்திறங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தக் கப்பல் தளம் சிசிலியின் மேல் கரையிலுள்ளது.

சிசிலி தீவு மத்தியதரைக் கடலில் அச்சு நாடுகளின் கல்கோட்டை என்று கருதப்படுவது. ஆகவே, இங்கே தலைசிறந்த படைகள் வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இப்போது எதிர்த்துப் போராடும் படைகள், முழு மனதோடு போராட வில்லை யெனத் தெரிகிறது. இதினின்று நாம் தெரிந்து கொள்வது என்ன ? இத்தாலியப் படைகள் நேசநாட்டுப் படைகளுக்கு விரோதமாகப் போராட மனமில்லாதிருக்க வேண்டும் ; அல்லது திடீரென்று பாய்ந்து தாக்குவதற்காக, அயரப் போட்டுக் கொண்டிருக்கவேண்டும். இந்த இரண்டு காரணங்களும் பொருத்தமானவை தான். இத்தாலியப் பொது மக்கள் சேர்ந்தது தான் இத்தாலியப் படை. அவர்கள் ஹிட்லர் மீதும் ஜெர்மானியர்கள் மீதும் கடுமையான அறுவறுப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கையாளாகவிருக்கும் தம் சர்வாதிகாரியான முசோலினியையும் வெறுக்கிறார்கள். எனவே, இத்தாலிய மக்கள் போராட மனமில்லாதிருக்கலாம். இரண்டாவதாக சிசிலித் தீவை இத்தாலி இழந்தால், அதன் அரசியல் ஆணி வேர் ஆட்டங் கொடுத்துவிடும். நேசநாட்டுப் படையினர் எதையும் மிகுந்த எச்சரிக்கையோடு தான் செய்வது வழக்கம். இதில் தவறுவதில்லை. இங்கேயும் அப்படியே தான் நடந்து கொள்ளுவார்கள். சிசிலித் தீவின் வடபகுதியில் உயர்ந்த மலைகள் உண்டு, படைகள் அங்கே பதிவிருந்து வந்து தாக்க ஏற்ற வசதிகள் இருக்கின்றன. எனவே, இத்தாலியப் படைகள் அங்கிருந்து கொண்டு, கொரில்லா போராட்ட முறையைக் கைக்கொள்ளக் கூடும். இதுபற்றி மிகவும் எச்சரிக்கையோடு தான் நேசநாட்டுப் படைகள் நடந்து கொள்ளும். இவை மகா கொடுந் துன்பங்களைச்

சகித்து, வடாப்பிரிக்காவில் வெற்றி பெற்றவை. குறிப்பாக எட்டாம் படையும் சிசிலியப் போராட்டத்தில் இறங்கியிருக்கிறது.. படைத் தலைவர்களும் வடாப்பிரிக்கப் படைத் தலைவர்கள் தான். பிரிட்டிஷ் படைகளுக்கு ஜெனரல் மண்காமரி தான் தலைமை வகிக்கிறார். இந்தப் போராட்டத்திற்குப் பொதுத் தலைவராக ஜெனரல் அய்சினோவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர்களுக்குத் துணைவர்களாகத் தலை சிறந்த படைத் தலைவர்கள் பலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய போர்த் திறமையை சமீபத்தில் உலகம் வியந்தது. இந்தப் புகழை அவர்கள் காப்பாற்றிக் கொள்ளுவார்கள். படையினரும் மிகச் சிறந்த வீரம் படைத்தவர்கள். ஆகவே, விரைவில் சிசிலியைக் கைப்பற்றி, அச்சு நாடுகளை அலறடிப்பார்கள் என்பது உறுதி.

## தொழிலாளர் பகுதி

# அரசாங்க மலிவுத் துணித் திட்டம்

## வறுமையைப் போக்க, சிறந்த முறை

*சென்னை வானொலி நிலையத்திலிருந்து சமீபத்தில் மிஸ்டர் ஆர். எச். ஹாப்டே ஒலி பரப்பிய பிரசங்கத்தின் சாரமாவது :—*

"மலிவான துணிகளும் கைத் தொழிலாளர்களும்" என்பது இந்தப் பிரசங்கத்தின் தலைப்பு. இது இரண்டு விஷயங்களைப் பற்றி குறிப்பிடுகிறது. மலிவான துணிகளைப் பற்றி சமீபத்தில் பலகட்டுரைகள் எல்லா விதமான பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன. இதற்குக் காரணம் ஏழை மக்கள் வாங்கக் கூடிய அளவில் துணி மலிவாக விற்கப்பட வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டதால் தான். இந்த அவசியத்தை முன்னிட்டு, அரசாங்கத்தார் அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்து வருவது மற்றொரு காரணம்.

கைத்தறி நெசவாளர்களை எடுத்துக் கொள்வோம். உங்களில் பெரும்பாலோர் கைத்தறி அல்லது நெசவாலைத் தொழிலில் சம்பந்தப்படாதிருக்கலாம். இருந்தாலும், எப்போதாவது கைத்தறியாளர் தன் வேலை செய்வதைப் பார்த்திருக்கலாம். உங்களில் பலர் அவர்களுடைய வாழ்க்கை நிலையில் ருசிகரமான கவனம் செலுத்தியிருக்கலாம். அவர்களுக்குக் கூட்டுறவு இயக்கம் மிகவும் பயன்படக்கூடியதென்று நான் சொல்லுவேன். ஏனென்றால், இது கவற்சியோடு ஆராய்ந்து அறிந்து கொள்ளப்படக் கூடியது. நிர்மாணவேலை செய்வதற்கு நிறைய சந்தர்ப்பங்கள் இதிலிருக்கின்றன. தற்காலக் கல்வி முறைப்படிப் பார்த்தால், பொதுவாக நெசவாளிகள் படிக்காதவர்கள் என்று தான் சொல்லவேண்டும். என்றாலும், அவர்களுடைய பரம்பரைத் தொழிலில் மிகவும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக, தனிப்பட்ட நெசவாளருக்குச் சொந்த முதலில்லை. ஆகவே, பிறர் கையை எதிர்பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்து வருகிறார்கள். உயர்ந்த விகித வட்டிக்கு வியாபாரிகள் இவர்களுக்கு முன் பணம் கொடுக்கிறார்கள் ; அல்லது நூல் கொடுக்கிறார்கள். இந்த நூலின் விலையும், நூலைக் கொண்டு நெய்யப்பட்ட துணியின் விலையும் இவ்வியாபாரிகளுக்கே மிகச் சாதகமாக உள்ளன. இதன் பயனாக, நெசவாளியின் நிலை நாளுக்கு நாள் மோசமாகி வந்து, கடைசியில், அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் வயிற்றைக் கழுவுவதற்குக் கூடப் போதுமோ போதாதோ என்றாகி விடுகிறது. என்றாலும், எல்லா விடங்களிலும், இப்படிப்பட்ட நிலைமையில்லை. கூட்டுறவு இயக்கத்தில் கலந்து கொள்ளாத அநேகர், இதை விட மேலாகவும் நல்ல முறையிலும் நடத்தப்படுகிறார்கள். நெசவாளிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு, கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலமாக மிகுந்த உதவி வழங்கப்பட்டு வந்தது ; இன்னும் வழங்கப்பட்டு வருகிறது. இவற்றை, நெசவாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தான் நிர்வகிக்கிறார்கள். இவற்றை அரசாங்கக் கூட்டுறவு இலாக்கா அதிகாரிகளும், சென்னைக் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தாரும் மேற்பார்வை யிடுவார்கள்.

### நெசவுத் தொழில் திறமை.

ஒரு நெசவாளியின் சிறு வீட்டிலுள்ள ஒரு சிறு அறையில், நீங்கள் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். அங்கே கைத்தறிக் கெண்டை மேலும் கீழுமாக ஓடிக்கொண்டிருக்கும் போது, "க்ளக், "க்ளக்" என்று சத்தம் கேட்கிறது. உடனே, எப்படி நெய்வது என்று உங்கள் மனத்தில் பதிந்து விடுகிறது. நெசவாளி திறமையோடு நெய்கிறார். விரைவில் துணியாகிறது. அதில் கண் கவரும் வர்ணங்கள். நுட்பமான "டிசைன்"கள். விரைவில், அந்தப் புது "மோஸ்த"ரைப் பற்றியே நாகரிகப் பெண்களெல்லாம் பேசிக் கொண்டிருப்பார்கள். எதிர்ப்புறமும் ஒரு தறி. அதுவும் சுறு சுறுப்பாகத் தான் வேலை செய்து கொண்டு வருகிறது. இதில் தயாராவது, அதிக வேலைப்பாடில்லாத துணி. இது தான் இந்த மாகாண மலிவுத் துணித் திட்டப்படி விற்பதற்கான ஷர்ட்டுத் துணி. இதற்கென்று ஒரு தறியை நெசவாளி ஒதுக்கி விடுகிறார். ஆகவே, யுத்த முயற்சிக்கு, அவர் சிறந்த முறையில் உதவுகிறார். உங்களுக்குத் தேவையான துணிகளை நியாயமான விலைக்கு வாங்கும்படி உங்களுக்கு உதவி செய்கிறார். "க்ளக், க்ளக்" என்று கெண்டை ஓடிக்கொண்டிருக்கிறது. நெசவாளியின் கைகளும் கால்களும் வேலை செய்த வண்ணமாகவே யிருக்கின்றன. அவருடைய முன்னோர்களும், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, இவரைப்போலவே தான் சிறந்த வேலைப்பாடுகளமைந்த துணிகளை நெய்து, கிரேக்க நாட்டிற்கும் ரோமாபுரிக்கும் கூட அனுப்பினார்கள்.

இந்தியா முழுவதிலும் நியாயமான விலைக்குத் துணி கிடைக்கும்படி செய்ய வேண்டி, அரசாங்கத்தார் செய்து வரும் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப்பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். ஆரம்பத்தில் நெசவாலைகளில் நெய்யப்படும் துணியை மட்டும் கட்டுப்படுத்துவது என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு திட்ட மிட்டார்கள். கைத்தறி நெசவாளர்கள் இம்மாகாணத்தில் ஏராளமாயிருக்கிறார்கள். இவர்களுக்குக் கிடைக்கும் கூலியைக் கொண்டு, இவர்களில் பெரும்பாலோர் வயிறார உண்ணவும் முடிவதில்லை. கைத்தறி நெசவாளர்களின் நிலைமையை உயர்த்துவது பற்றி, சென்னை அரசாங்கத்தார் அநேக வருஷங்களாகக் கவனம் செலுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். இம்மாகாணத்தில் மலிவுத் துணித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று நிச்சயித்தபொழுது, சென்னைக் கைத்தறி நெசவாளர் மாகாணக் கூட்டுறவு சங்கமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பல கூட்டுறவு சங்கங்களும் இம்மாகாணத்திற்குத் தேவையான மலிவுத் துணியை நெய்து கொடுக்க வேண்டுமென்று முடிவு கட்டப் பட்டது.

இந்தச் சங்கங்களுக்கு நூல் சப்ளை செய்வது பற்றி, அரசாங்கமும் மாகாண முழுதிலுமுள்ள பஞ்சாலைகளும் ஒத்துழைக்கின்றன. பருத்தித் துணி டைரக்டர் நூலுக்கு விலை விகிதங்களை விதிக்கிறார். அடக்க விலைக்கு மேல், நியாயமான இலாபம் கிடைக்கத் தக்கபடி தான் இந்த விலைகள் விதிக்கப்படுகின்றன. யுத்தத் தேவைகளுக்கு நூல்கள் வேண்டியிருப்பதனால், அவ்வப்போது நூல் விலை பரிசீலனை செய்யப்பட்டு, மாற்றியமைக்கப்படுகிறது. இந்த விலை இயல்பாகவே கடை விலைக்குக் குறைந்தது. விலைகளைக் கட்டுப்படுத்து முன்பு, நூல், யானை விலை குதிரை விலைக்கு விற்றது.

### மலிவுத் துணி எப்படித் தயாராகிறது.

"நூல் விலை" என்பது இன்றைய பிரசங்கத்தின் ஒரு பகுதியல்ல. ஆனால், மலிவுத் துணிகள் கடைக்கு எப்படி வந்து சேருகின்றன வென்று உங்களுக்கு விளக்கிக் காட்ட விரும்புகிறேன். ஆலைகளிலிருந்து வரும் நூல் நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. சங்கத்து அங்கத்தினர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. எந்தெந்த துணி நெய்தால் எவ்வளவு கூலி கொடுக்கப்பட வேண்டுமென்பது பற்றி, மாகாண சங்கத்திற்கும் நெசவுச் சங்கங்களின் கமிட்டிகளுக்கும், ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. நூலைக்கொண்டு நெய்து முடித்த பிறகு நூல் கமிஷனருடைய ஏற்பாட்டின்படி, மாகாண சங்கத்தார் வாங்கி விற்பனைக்காக விநியோகிக்கின்றனர்.

ஷர்டிங், புடவை, வேஷ்டி, துண்டுகள் ஆகியவற்றை விநியோகிப்பதற்கென்று ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பல இடங்களில் துணி தொடர்ச்சியாக விற்கப்பட்டு வருகிறது. மாகாண சங்கத்திற்குச் சொந்தமான பண்டக சாலைகளிலும், இந்த மாகாணம் முழுதும் பதிவு செய்யப்பட்டிருக்கும் கூட்டுறவு சங்கங்களிலும் ஸ்டோர்களிலும் கூடிய சீக்கிரத்தில் ஷர்டிங் முதலிய பலரகத் துணிகளை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்வதென்று யோசனையிருந்து வருகிறது. அடக்கச் செலவையும் அதற்கு மேல் நியாயமான இலாபத்தையும் ஒட்டி அந்தந்த வகைத் துணிக்கு விலை தீர்மானிக்கப்படுகிறது. இந்த இலாப விகிதம், ஒவ்வொரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும், பொருளாதாரத்திலும் அமைப்பு தன்மையிலும் சரியான தனித்தனி சங்கங்களாயிருந்து வரத் தக்க உதவி புரிவதாயிருக்க வேண்டும். கைத்தறித் துணிகள் நெய்வதற்கென்று அங்கீகரிக்கப்பட்ட இடை ஸ்தாபனமாயிருக்க வேண்டும். இதனால், அந்தத் துணியை விலைக்கு வாங்கி உபயோகிப்பவர்களுக்கும், பரம்பரையாக நெசவுத் தொழில் இந்த மாகாணத்தில் செய்து கொண்டிருக்கும் பெருவாரியான ஜனங்களுக்கும் இதனால் நன்மையிருக்க வேண்டும்.

### மலிவுத் துணித் திட்டத்தின் நோக்கங்கள்.

இரண்டு நோக்கங்களைக் கொண்டு மலிவுத் துணித் திட்டம் வகுக்கப்பட்டது : (1) நியாயமான விலைக்கு ஜனங்களுக்குத் துணிகள் கிடைக்கும்படிச் செய்வது ; (2) நெசவுத் தொழிலாளர்களுக்கு உதவுவது. கூடிய விரைவில் நமது உற்பத்தியின் அளவு வெகு விரைவில் முன்னேற்றமடைந்து, மாதமொன்றிற்கு 35 லக்ஷம் கஜம் தயாரிக்கப்படும் ; நாளடைவில் 60 லக்ஷம் கூட தயாரித்து விடக்கூடுமென்று சொல்லுவேன். இவ்வளவு நெய்தாலும், நமது தேவைகளுக்கு, அதுவும் குறிப்பாக ஆரம்பக் காலத்தில், போதவே போதாது என்று எனக்குத் தெரியும். ஆனால் நாமெல்லோரும் மாதந் தோறும் துணிகளை வாங்குவதில்லை என்பதைக் கொண்டு பார்த்தால், இந்த சப்ளை தேவைகளுக்குப் போதுமானது, குறிப்பாக ஏழைகளுக்குப் போதுமானது. மேலும் தேவைப்பட்டால், கூடிய சீக்கிரம் விற்பனைக்கு வரப்போகிற மில் மலிவுத் துணிகள் ஈடு செய்து கொள்ளும். எந்த அளவிற்கு உற்பத்தி செய்யக்கூடுமோ, அந்த அளவிற்கு உற்பத்தி செய்து, உற்பத்தியான துணிகளை மிகத் திறமையோடு விற்பனை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நீங்கள் சென்னையில் வசித்தாலும், கிராமத்தில் வசித்தாலும், உங்களுக்கு வேண்டிய துணி எளிதில் கிடைக்கும். இப்போதே வெகு சீக்கிரம் கிடைக்கும்.

மாகாண சங்கத்தார் மலிவுத் துணி உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது மட்டுமன்றி, தம்மோடு இணைக்கப்பட்டுள்ள சங்கங்கள் தேவைக் கேற்ற அளவு உற்பத்தி செய்ய வேண்டுமெனபது பற்றியும் கட்டுப்படுத்துவார்கள். அன்றியும் விசேஷ ரகத் துணிகள் நெய்வதில் சென்னை நெசவாளர்கள் பெயர் பெற்றவர்கள். அவற்றையும் நியாயமான விலைக்கு விற்கப்படும்.

### கைத்தறியாளர் பழம் பெருமை.

இப்போது நெசவாளர்களைக் கவனிப்போம். பண்டைக் காலத்தில் இந்தியாவிலிருந்து மெல்லிய மஸ்லின் துணிகளும் மற்ற துணிகளும் எகிப்துக்கும் கிரீசுக்கும் ரோமுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்றால், உங்களில் சிலர் ஆச்சரியப்படலாம். அந்தக் காலத்தில், மேல் நாடுகள் இறக்குமதிப் பொருள்களையே விற்று வந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த ஏற்றுமதி குலையத் தலைப்பட்டதற்கு பல வகைக் காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த யுத்தம் ஆரம்பமாகும் முன்னதாகக் கூட, சில விசேஷ ரகத் துணிகள் பர்மா



இலங்கை, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. பண்டைக் காலத்திலேயே அநேக ஜில்லாக்களில் இந்தத் தொழிலில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள். உதாரணமாக அக்காலத்திலேயே துணிகளுக்கு அச்சடிப்பதில் மசூலிப்பட்டணம் பெரிதும் புகழ் பெற்றிருந்தது. ஒரு விஷயம் இப்போது முக்கியமாகக் கவனிக்கத் தக்கது. இப்போது இராணுவத்தார் அணியும் காக்கித் துணியின் சாயத்தை இந்தியாவின் மேல் கரையிலுள்ள கைத்தறி நெசவாளர் தான் முதன் முதல் கையாண்டார்கள். ஒரு முறை அப்போது இந்தியச் சேனாதிபதியாக இருந்து வந்த ராபர்ட்ஸ் பிரபு அங்கே போனார். அந்தக் காக்கியைப்பார்த்து, இந்தியா முழுவதிலும் இராணுவங்கள் அதையே உபயோகிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தார். 1851-ம் வருஷம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவின் மேற்குக் கரைக்கு வந்திறங்கிய ஒரு நெசவு நிபுணர் இநதச் சாயத்தைக் கண்டு பிடித்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் பெயர் ஹாலர். இவர்தான் இயந்திரக் கெண்டைத் தறியையும் கண்டு பிடித்தவர். இவருக்கு அரசாங்கத்தாரும் செல்வாக்குள்ளவர்களும் ஆதரவளித்தார்கள். இதன் பயனாக மரக் கெண்டைத் தறிக்குப் பதிலாக இயந்திரக் கெண்டைத் தறி அதிகப்பட்டது. ஆகவே, உற்பத்தி அதிகப்பட்டது. நெசவாளியின் வருவாயும் அதற்கேற்றாற்போல் உயர்ந்தது. இந்த கைத்தறி நெசவுத் தொழிலில் சென்னை மாகாணந்தான் முதல் ஸ்தானம் வகிக்கிறது. அதாவது 340,500 கைத்தறிகள் இருக்கின்றன. இது ஒரு குடிசைக் கைத்தொழில். இரண்டொரு தறிகளைக் கொண்டு ஒரு நெசவாளி தன் குடும்ப நிர்வாகத்தை நடத்துகிறான். இதிலிருந்து கைத்தறித் துணிக்குத் தொடர்ந்து கிடைக்கும் ஆதரவின் காரணமாக, எத்தனை ஜனங்கள் பிழைக்கிறார்கள் என்பது விளங்கும். எனக்குக் கிடைத்திருக்கிற புள்ளி விவரங்களிலிருந்து 487,000 நெசவாளிகள் இருக்கிறார்களென்று தெரிகிறது. இவர்களுடைய குடும்பங்களில் நெசவுத் தொழில் செய்யாதவர்களையும் குழந்தைகளையும் இந்த எண்ணிக்கையில் சேர்க்கவில்லை. கைத்தறித் துணிகளுக்குப் பொது ஜன ஆதரவை அதிகமாக்கும் நோக்கத்தோடு மாகாண சங்கத்தார், சொந்தத் தொழிற்சாலை யொன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். புது ரகத் துணிகளையும் அலங்காரத் துணிகளையும் தயாரிப்பது அதன் நோக்கம். இணைக்கப்பட்டிருக்கும் நெசவுச் சங்கங்களுக்கு என்னென்ன ரகங்களுக் கிராக்கி இருக்கிறது என்று அப்போதைக்கப்போது தெரிவிக்கப்படும். அன்றியும், உற்பத்தியை முன்னிட்டு தொழில் சம்பந்தமான எல்லாத் தகவல்களும் கொடுக்கப்படும். கூடிய விரைவில் துணிகளுக்கு அச்சடிக்கும் இயந்திரமொன்று அமைக்கப்படும். 'டிஸைன்' செய்வதில் தேர்ந்தவர்களும், அச்சடிக்கும் தொழிலில் தேர்ந்தவர்களும் நியமிக்கப்படுவார்கள். சில நாட்களுக்கு முன்பு துணியில் அச்சடிக்கப்படுவதை நான் பார்த்தேன். அப்போது நான் கண்டதிலிருந்து, இறக்குமதியாகும் துணிகளிலுள்ள ரகங்களைப் போலவே, கூடிய சீக்கிரத்தில் கைத்தறித் துணியிலும் அச்சடிக்கக் கூடுமென்று நான் முழுவதும் நம்புகிறேன். கைத்தறி நெசவு நடைபெறும் இடங்களைக் குறித்துத் தெரியாத பாமரர்கள், நெசவுத் தொழில் என்றால், நெசவாலைத் தொழில் என்று தான் சாதாரணமாக நினைப்பார்கள். ஆனால், சென்னை சம்பந்தப்பட்டவரை இது ஓரளவிற்குத் தான் பொருந்தும். இந்தக் கைத் தொழிலைக் கூட்டுறவு முறையில் திருத்தியமைத்ததால், இந்த இனத்தவர்களில் பெரும்பாலோர் பொருளாதாரத் துறையில் அதிக முன்னேற்ற மடைந்து கொண்டிருப்பார்களென்று நான் நம்புகிறேன்.

### கைத் தறியாளர்களின் வறுமை.

கூட்டுறவு நெசவாளிகள் மட்டுமன்றி, நெசவுக்காரர்களுக்குட் பட்ட அன்றாடக் கூலிக்கும் ஒப்பந்தக் கூலிக்கும் நெய்கிறவர்களுமிருக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவு நெசவாளிகளா யிருந்தாலும் மற்றப்படி யிருந்தாலும், நம் பொருளாதார அமைப்பில் அவர்கள் மிகவும் முக்கியமான ஸ்தானம் வகிக்கிறார்கள். ஆகவே அவர்கள் சுகமாக வாழ்வதற்கு நாம் உதவி புரிய வேண்டும்.

அவர்கள் கைதேர்ந்தவர்கள். சேலம், கோயமுத்தூர், மதுரை முதலிய ஊர்களில் நெய்யப்படும் சேலைகளுக்கு இந்தியாவின் பல பாகங்களிலும் நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. சென்னையிலிருந்து கைக்குட்டைகள் சாதாரணக் காலங்களில் வெகுவாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நாம் ஒழுங்காக உற்பத்தி செய்து சாதாரணமாக ஏற்றுமதி செய்யும் துணி வகைகளில், அலங்காரத் துணிகளும் லுங்கிகளும், கோட்டுத்துணிகளும், சில.

நான் மலிவுத் துணியைப் பற்றிப் பேச ஆரம்பித்தேன். இப்போது அதைக் கொண்டே முடிக்கிறேன். உங்களுக்கு தற்சமயம் எவ்வளவு தேவையோ அதற்கு அதிகமாக வாங்காதீர்கள். நாளை விலை உயர்ந்து விடாது. முத்திரை போடப்பட்டிருக்கும் விலையைக் கொடுத்து வாங்குங்கள். உங்களுக்கு அவ்வப்போது அவசியமான துணிகளை மட்டுமே வாங்கிக் கொள்ளுங்கள். அதன் மூலம் துணி வாங்க விரும்பும் உங்கள் அயலார்களுக்கு உதவி செய்தவர்களாவீர்கள். பெரும் சமூகத்தினராகிய நெசவுத் தொழிலாளர்களுக்கும் உதவியவர்களாவீர்கள். இவர்களில் பெரும்பாலோர், காயங்களுக்குக் கட்டும் "பாண்டேஜ்" துணி, வலைத்துணி, முதலியவற்றை நெய்கிறார்கள். இவை இந்திய கப்பற்படை, தரைப்படை, விமானப்படை ஆகியவற்றின் வைத்திய இலாகாவிற்குப் பயன்படும். அல்லது ஏ.ஆர்.பி. வேலையிலும் அது போன்ற மற்ற வேலைகளிலும் இருக்கும் உங்கள் நண்பர்களுக்கு சாம்பல் நிறமான ஷர்டிங் துணி ஆவதற்கும் நெய்கிறார்கள்.

மாகாணக் கூட்டுறவு சங்கங்களுக்குச் சொந்தமான பண்டக சாலைகள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் மூலமாக மட்டுந்தான் கைத்தறி மலிவுத் துணி விற்கப்படுகிறது. கைத்தறி நெசவாளர்களின் வியாபாரக் குறியோடு உள்ள துணியின் மேல் குறிக்கப்பட்ட விலையைவிட, அதிக விலை கூறப்பட்டால், அதை வாங்காதீர்கள். அப்படி யாரேனும் விற்க முயன்றால், இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி அவர் தன்னை தண்டனைக்கு உள்ளாக்கிக் கொள்ளுகிறார். சமூக உணர்ச்சியில்லாதவர்களுக்கு ஆதரவு காட்டவே கூடாது.

கைத்தறி நெசவாளர்கள் யுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆகையால் நாம் அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். அதன் மூலம் நமக்கு நாமே உதவிக் கொள்ளுகிறோம்.

# உற்சவ ஆரம்பம்

வெள்ளிக்கிழமை ராத்திரி பதினொன்றரை மணி இருக்கும். சந்திரன் நிம்மதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். ஜெர்மனியிலும், அதன் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளிலும் உள்ள சில நகர்களில் வசிப்போரும், ஸிஸிலி எனும் தீவில் இருப்போரும், இத்தாலியரில் பலரும், பர்மாவில் சில இடங்களில் தங்கியிருக்கும் ஜப்பானியர்களும், சாலமன் தீவுகளிலே சில இடங்களில் இருப்பவர்களும் தவிர.., உலகின் மற்ற பாகங்களில் உள்ளோரெல்லாம், நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வட ஆப்பிரிக்க மண்ணிலிருந்து கிளம்பிச்சென்ற விமானிகள் ஸிஸிலி மீது வழக்கம்போல ஏராளமான குண்டுகளை வீசி, நைஸ் பண்ணிவிட்டு, தமது நிலையங்களுக்குத் திரும்பிகொண்டிருந்தனர்.

இந்தச் சமயத்திலே, ஸிஸிலித்தீவிற்குமேலே பல பிரிட்டிஷ் அமெரிக்க விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. திடீரென அவற்றிலிருந்து, நூற்றுக்கணக்கானவர்கள் கீழே குதித்தார்கள். மங்கிய நிலா ஒளியில் அவர்கள் ஆடிஅலைந்து இறங்கியது அவ்வளவு நன்றாகத் தெரியவில்லை. நமக்குத் தெரிந்து என்ன ஆக வேண்டும் ? கீழே உள்ள விரோதிகளுக்கு இது தெரியாதவரை க்ஷேமந் தானே ?

பலகாலமாக பாரசூட்டை உபயோகிக்கப்பாடம் கற்றதெல்லாம் வீணாகவில்லை. ஐரோப்பிய மக்கள் அடிமை வாழ்விலிருந்தும் காப்பாற்ற இப்பொழுது அந்தப் பாடம் பெரிதும் உபயோகமானது.

பாராசூட் துருப்புகள் குதித்துக் கொஞ்ச நேரத்திற்கெல்லாம், பல விமானங்கள், தங்கள் வால்களிலே கிளைடர் விமானங்களைக் கட்டிக் கொண்டு பிரமாண்டமான உயரத்தில் பறக்கலாயின. அந்த கிளைடர் விமானங்கள் சப்தமின்றி, வெகு ஜோராக மிதந்துவந்து, ஸிஸிலி தீவிலே, பீச்சுக்கரை யோரங்களிலே வந்திறங்கின. அவற்றிலிருந்து வீரர்கள் சட், புட் என்று வெளியே குதித்து, தங்கள் வேலை மீது கண்ணாயினர். மாப்பிள்ளை விஜயமா என்ன, மேளதாளங்களுக்கு எதிர்பார்த்து நிற்க ?

நேசதேச வெடிகுண்டு விமானங்கள் அன்றுதான் வெகு மும்முரமாக ஆப்ரிகாவிலிருந்தும், மால்டாவிலிருந்தும் வருவதும் போவதுமாக இருந்தன. ஜூலை 10-ந் தேதி அதிகாலையிலே, எண்ணற்ற கப்பல்களும், சிறு படகுகளும் கணக்கற்ற போர்வீரர்களையும், டாங்கிகளையும், மற்ற யுத்த சாதனங்களையும் ஏற்றிக் கொண்டு, பலமான யுத்தக்கப்பல்களின் ஆதரவோடும், விமானங்களின் பாராவோடும் ஸிஸிலிக்கரையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன.

திடீரென கப்பல்களில் உள்ள பீரங்கிகள் "பேச" த்தொடங்கிவிட்டன. அதனுடைய "பேச்சு" எல்லோரது செவிகளையும் உடைத்துவிட முயற்சித்ததுமட்டுமன்றி, ஸிஸிலித் தீவிலே ஒரு பெரிய எரிமலை கொதித்து எழுவது போல், பிரமாண்டமான தீயையும் மூட்டிவிட்டுவிட்டது. இந்தப் பேச்சை அச்சுநாட்டார் கவனித்துக் கொண்டிருக்கும் பொழுதே, நேசதேசப்படைகள், அச்சுநாட்டார் அளித்திருக்கும் கணக்குப்படி, ஏழு இடங்களில் துணிவோடுபோய் இறங்கினர். சுமார் இரண்டாயிரம் கப்பல்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், கப்பல் சேதமே இல்லாதது/ ஒரு பெரிய ஆச்சரியம் தான் என்றே அங்குள்ள நேசதேச அதிகாரிகள் கூறுகிறார்கள்.

ஏதோ கப்பலில்வந்து, ஹார்பரில் இறங்கி, தயாராகக் காத்திருக்கும் மோட்டாரில் ஏறி ஊருக்குள் போவது போலவே இருந்ததாம் கனடியர்களுக்கு. அமெரிக்கர்களும், பிரிட்டிஷாரும் வெவ்வேறு இடங்களில் இறங்கி, வெகு சமர்த்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறார்களாம்.

### அச்சு நாட்டார் எதிர் பார்த்தது தான்

அச்சுநாட்டார் எதிர்பார்த்து தான் இந்தப் படையெடுப்பு. ஆனாலும், இவ்வளவு சுலபமாகவும், கஷ்டமில்லாமலும் நேசதேசத்தாரை இறங்க விடுவோம் என்று அவர்கள் நினைத்திருக்கமாட்டார்கள் என்பது சத்தியம். ஜெர்மானிய, இத்தாலிய நீர் மூழ்கிகள் எல்லாம் எங்கு போய்விட்டன ? இதைவிட அச்சுநாட்டாருக்கு தங்கமான தருணம் வாய்க்கப் போகிறதா ? ஆயினும், அச்சு நாட்டார் ஒரேயடியாக "ஆப்ஸெண்ட்" ஆகப்போய்விட்டார்களே ! இது ஏன் ?

ஏன் ? நேசதேசத்தினர் போட்டுள்ள அற்புதமான பிளான் தான் இதற்குக் காரணம். எல்லாம் ஆலோசித்து முடிவுகட்டியபடியே, விக்னமில்லாமல் நடந்துவிட்டது. மேலும், மேலும் நேச தேசக் கப்பல்கள் ஓய்வொழிவு இன்றி, வட ஆப்பிரிக்கக் கரையிலிருந்து ஆட்களையும், ஆயுதங்களையும் கொணர்ந்து தள்ளிய வண்ண மாகவே இருக்கின்றன.

சென்ற ஒரு வாரமாக, எல்லாம் திட்டப்படியே நடந்துவருகின்றன. சில விமானக்கூடங்கள் நேசதேசத்தினர் கைகளுக்கு வந்துவிட்டன. முக்கியமான ரயில்பாதையில் ஒரு பகுதியை நேசதேசத்தார் உபயோகமில்லாது செய்துவிட்டார்கள். மளமளவென, இறங்கிய இடங்களில் இருந்தெல்லாம் நேசதேசப்படைகள் உள்நாட்டை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

அச்சுநாட்டினர் ஆரம்பத்தில் கடுமையாக எதிர்க்கவில்லை. ஸிஸிலித் தீவிலே மூன்றுலக்ஷம் அச்சுப் படைகளிருப்பதாகவும், அதிலே லக்ஷம் பேர்கள் ஜெர்மானியர்கள் என்றும் கூறப்படுகிறது. இத்தாலி வழியாக, மேற்கொண்டு ஜெர்மானியப் படைகளும், யுத்த சாதனங்களும் ஸிஸிலிக்குள் வந்திறங்கிய வண்ணமாக இருக்கின்றனவாம்.

ஒருவர் சொல்லியிருப்பது போல், வெண்ணெயை கத்திகொண்டு வெட்டுவதுபோல், ஸிஸிலிப்போர் சுலபமாக முடிந்துவிடாது என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்தப்போர் வெகு கடுமையாகவும் இருக்கும். வெகு காலமும் நீடிக்கும். ஏகச் சேதமும் ஏற்படும்.

ஆனாலும், தமது லக்ஷ்யத்தின் புனிதமான தன்மையை நேசதேசத்துருப்புகளில் ஒவ்வொருவரும் ரொம்ப நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே ஆத்திரத்தோடு போராடுகிறார்கள்.

ஸிஸிலியின் தென்கிழக்குக் கோடியிலே, நூறு மைல்கள் பரந்த பிரதேசத்திலே நேசதேசத்தார் இறங்கினார்கள். நேசதேசத்தார் எங்கு வந்திறங்குவார்கள் என்பது. அச்சுப்படைகளுக்கு நிச்சயமாகத்

தெரியாததால், ஸிஸிலித்தீவின் கரைகளில் எல்லாம், அச்சுப்பாது காப்பு அவ்வளவு பலமாக இல்லை. ஆனால், இப்பொழுது நேச தேசத்தார் இறங்கின இடம் எது என்பது தெரிந்து விட்டதால், அச்சுப் படைகள் தென்திசை நோக்கி விரைந்து வந்துகொண்டிருக்கின்றனவாம். நேசதேசப்படைகளுக்கு மேல்திசையில் அச்சுப்படைகள் தோன்றக்கூடும்.

அச்சுப்படைகளை வரும்வழியிலேயே ஏக நஷ்டத்திற்குள்ளாக்க நேச தேசவிமானிகள் முயன்றார்கள். இரண்டாயிரம் கப்பல்களுக்குமேல் சேர்ந்துவந்ததை அச்சுநாட்டு விமானங்கள் முதலில் தாக்காது இருந்து விட்டபோதிலும், நேசதேசப்படைகள் கரைகளில் இறங்கியபின், சில அச்சுவிமானங்கள் தோன்றினவாம். விமான எதிர்ப்பு, பீரங்கிகளும் அவ்வளவு சூடாக, ஆக்கவில்லையாம் ஆகாயத்தை. ஆனால், வர வர அச்சு நாட்டார் உஷாராகி வருகிறார்களாம். ஆங்காங்கே அவர்கள் கடுமையாக எதிர்க்கிறார்களாம்.

நேசதேசப்படைகள், தங்களுக்கு முதலில் கிடைத்த சௌகரியத்தை ரொம்ப நன்றாகப் பயன்படுத்திக் கொண்டுவிட்டார்கள். மளமளவென இரண்டு, மூன்று நாட்களுக்குள் சைராக்யூஸ், லிகாடா போன்ற இரு பெரிய துறைமுகங்களையும், வேறு பல ஊர்களையும் அதிக சிரமமின்றிப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள். அவர்களிடம் இப்பொழுது இரண்டு மூன்று விமானக் கூடங்களும் இருக்கின்றன. அவற்றை உபயோகிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். லக்ஷக்கணக்கான படைகளைக்கொண்டு இறக்கிவிட்டால்போதுமா? தொடர்ந்து அப்படைகளுக்கு ஆகாரமும், வெடிமருந்துகளும், டாங்கிகளும், பீரங்கிகளும், மோட்டார்களும், மேற்கொண்டு ஆள் உதவியும், டாக்டர்களும் கொண்டு சேர்க்க வேண்டாமா? இதற்கு நல்ல ஆழமான துறைமுகங்கள் இருந்தால் அல்லவா தேவலை? கடற்கரை யோரமாகப் பெரிய கப்பல்கள் போக முடியவில்லை என்றால், தூரத் தேச கப்பல்களை நிறுத்தி, அவற்றிலிருக்கும் சாமான்களை சிறு படகுகளிலும், சிறு கப்பல்களிலும் இறக்கிக் கொண்டு வரவேண்டும். இதிலே ஏகப்பட்ட சிரமங்களிருக்கும். வேறே வழி இல்லாவிட்டால், இந்த வழி இருக்கவே இருக்கிறது.

## இனி வேலை சுலபம்

இதை மனசில் கொண்டே, நேசப்படைகள் விரைவிலே இரண்டு பெரிய துறைமுகங்களைப் பிடித்துவிட்டன. இனி, உதவிகளைக் கொணர்ந்து இறக்கும்வேலை கொஞ்சம் சுலபமாகிவிடும்.

பாவம்! முதலில் வந்திறங்கியபொழுது, கொந்தளிக்கும் கடலிலே பதினைங்கடி ஆழமுள்ள ஜலத்திலே ஆயுதங்களோடு குதித்து, கரைக்கு நீந்திச் சென்றிருக்கிறார்கள் நேசதேசப்படையினர். எடுத்த காரியத்தில் என்ன இடைஞ்சல்கள் இருந்தபோதிலும் அவர்கள் லக்ஷியம் செய்யவே இல்லை.

உலக சரித்திரத்திலேயே இம்மாதிரியான படையெடுப்பு எக்காலத்திலும் நடந்ததே இல்லை. அதெப்படி ஐயா நீங்கள் சொல்லலாம், இம்மாதிரி எப்பொழுதுமே நடந்ததில்லை என்று? திருட் தீவை அச்சுநாட்டார் பிடிக்கவில்லையா முன்பு? என்று நீங்கள் கேட்கலாம்.

ஆனால், அப்பொழுது, ஜெர்மானியர் போன இடமெல்லாம், பூரண பாதுகாப்பு இல்லாதிருந்தது. ஆனால், இப்பொழுது ஸிஸிலியிலே, பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் அச்சு நாட்டார். இங்கே நேசதேசத்தார் கட்டாயம் வந்திறங்குவார்கள் என்று அவர்கள் நிச்சயமாக எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆகவேதான், மூன்று லக்ஷம் படை வீரர்களை இங்கு வைத்திருக்கிறார்கள். பல விமானக் கூடங்களைக் கட்டியிருக்கிறார்கள். நவீன சாதனங்களுடன் கூடியதொரு படையை இங்கு நேசதேசத்தார் எதிர்த்தாக வேண்டும். தவிர, மலைகள் நிறைந்த பிரதேசங்கள் இங்கு ஏராளமாக இருக்கின்றன. சுமார் பத்தாயிரம் சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள பெரிய தீவு இது. இத்தாலிக்கு வெகு அருகிலிருக்கிறது. இத்தீவைச் சுற்றி ஏராளமான சுரங்கவெடிகள் தூவப்பட்டிருக்கின்றன. கடல் மார்க்கமாகவே சகல உதவிகளும் வரவேண்டும். இத்தாலிய, ஜெர்மானிய கடற்படையும், நீர்மூழ்கிகளும் அருகிலேயே இருக்கின்றன.

இத்தனையையும் சமாளித்துக்கொண்டு, இத்தீவில் இறங்குவதென்றால் அது ஒரு ராக்ஷஸ வேலைதான். அதனால் தான் அந்தப்படையெடுப்பைக் குறித்து, மாதக் கணக்கில் உட்கார்ந்து ஆராய்ந்து ஒரு முடிவு கட்டியிருக்கிறார்கள் நேசதேசத்தார். விரோதியின் சக்தியை யாரும் குறைத்துக் கூறவில்லை. இனித் தான் சங்கடங்கள் பல தோன்றப் போகின்றன! என்றே அடிக்கடி நேசதேச அறிக்கைகள் கூறிக் கொண்டிருக்கின்றன.

## அவஸ்தைகளைச் சமாளித்தே தீருவோம்

எத்தகைய அவஸ்தையானாலும் சமாளித்தே தீருவோம்; இந்த அயோக்ய எதிரியை ஸிஸிலியிலே மண்ணைக்கௌவ வைப்போம்; இதிலிருந்தே தொடர்ந்து ஹிட்லரின் ஜெர்மன் கோட்டையையும், அவரது மனக்கோட்டையையும் ஏககாலத்தில் தகர்ப்போம் என்று நேசதேச வீரர்களும், தலைவர்களும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடை உள்ள ஒற்றுமையைக் கண்டு உலகமே அதிசயிக்கிறது.

எல்லோருக்கும் தலைவராக ஜெனரல் ஐஸன்ஹோவர் என்ற அமெரிக்கர் இருக்கிறார். பிரிட்டிஷ் தரைப்படைகளைக் கவனித்தால், உலகப் பிரசித்திபெற்ற பிரிட்டிஷ் எட்டாவது படையின் தலைவரான ஜெனரல் மண்ட்காமரி இருக்கிறார். கடற்படைக்குத் தளகர்த்தராக ஸர் அண்ட்ரூ கன்னிங்ஹாம் என்ற நிபுணர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அச்சுநாட்டாரை உதைப்பதில் ஒவ்வொருவரும் நல்ல அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அச்சுநாட்டாருடைய யுத்த தந்திரங்கள் எல்லாம் இவர்களுக்கு நல்ல பாடம்.

## இரண்டாவது போர் முனை ஏற்பட்டு விட்டது

ஸிஸிலியிலே நேச தேசத்தார் போய் இறங்கிவிட்டார்கள்; இரண்டாவது போர் முனை ஏற்பட்டுவிட்டது என்ற செய்தி உலகெங்கும் பரவி, "நேச நாட்டினரிடை அளவுக்கு மீறிய ஆனந்தத்தை உண்டுபண்ணியிருக்கிறது. ஜூலை 10-ந் தேதியை எதிர்கால சரித்திரக்காரர்கள் கொட்டை எழுத்துக்களில் தங்கள் "டயரி" களில் குறித்துக் கொண்டுவிட்டார்கள். இனி யுத்தத்தின் முடிவு எப்படியிருக்குமென்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகமிருக்கவே தேவையில்லை. ஆனால், அதன் போக்கிலோ பல பள்ளங்களும், மேடுகளும் இருக்கலாம். யுத்தமென்றால் இதெல்லாமிருப்பது சகஜந்தானே? பீச்சு ரஸ்தாவில், அறுபது மைல் வேகத்தில் பெரிய மோட்டரில் சவாரிசெய்வது போல இராது விரோதிகளது நாட்டில் போயிறங்கி முன்னேற முயலுவது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தான்! எல்லாரும் நிம்மதியாக இருந்த காலத்திலே, அச்சு நாட்டார் திருட்டுத் தனமாக தமது ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டு, தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது பாய்ந்து, அவர்களது நாடுகளைப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள். அதற்கப்பால் ஆரம்பித்து, ஆட்களும் ஆயுதங்களும் கப்பல்களும் சேர்க்கத் தொடங்கினர் நேச தேசத்தார். சென்ற நான்கு வருடங்களாகவே இதே வேலையில் தான் அவர்கள் சிரத்தை காட்டிக் கொண்டிருந்தனர். நல்ல காலமாக, ஹிட்லர் அசட்டுத்தனமாக ருஷ்யாமீது பாயந்தார். சரியாக மாட்டிக்கொண்டார். ஆப்பை பிடுங்கின குரங்குபடும் அவஸ்தையெல்லாம் பட்டுக்கொண்டிருக்கிறார் அவர்.

இதனால் கிடைத்த அவகாசத்தையும் நேச தேசத்தார் பயன்படுத்திக் கொண்டனர். ஹிட்லர் ஆத்திரங்கொண்டார். அட்லாண்டிக் மகா சமுத்திரத்திற்கு தனது நீர்மூழ்கிகளையெல்லாம் அனுப்பினார். அவருக்கு ஆனந்தமளிக்கும் வகையில் சிலகாலம் நீர்மூழ்கிகள் அந்த சமுத்திரத்திலே கொட்டமடித்தன. ஏகப்பட்ட கப்பல்கள் மூழ்கின. ஆயினும் அமெரிக்கர்கள் மனந் தளரவில்லை. அவர்களே நேரடியாக யுத்தத்தில் கலந்துகொள்ள நேரிட்டுவிட்டது. ஆகவே, பூரண மனசோடு, இரவுபகலென்று பாராமல் கப்பல்களைக் கட்டினார்கள். நீர்மூழ்கிகளை ஒழிக்க வழிகள் தேடினார்கள்! அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றார்கள்.

இப்பொழுது நாஸி நீர் மூழ்கிகள் தங்களுடைய காயங்களை ஆற்றிக் கொள்ள தங்கள் ஊர் ஆஸ்பத்திரிகளை நாடிச் சென்றிருக்கின்றன. அமெரிக்கக் கப்பல்கள் சந்தோஷமாக வட ஆப்ரிக்கப் போருக்கு உதவியை சுமந்து சென்றன. அங்கும் வெற்றி.

இப்பொழுது அவை மத்ய தரைக்கடலுக்குள் பிரவேசித்திருக்கின்றன. அங்கு இப்போதுள்ளதுபோன்ற பெரிய கப்பற்படை எக்காலத்திலும் இருந்ததில்லை. வட ஆப்பிரிக்காவிலே நாற்பத்திநான்கு காலாட்படை டிவிஷன்களும், 15 முதல் 20 வரை உள்ள டாங்கி டிவிஷன்களும் இருக்கின்றனவாம். இன்னும் பல படைகள் புதிதாக வந்த வண்ணமாயிருக்கின்றன.

இவற்றிலிருந்து, நேசதேசத்தாரிடை விழிப்பு ஏற்பட்டுவிட்டது என்பது தெரியவில்லையா? இனி வெற்றியிலிருந்து வெற்றிக்கே நம்மவர்கள் தாண்டிக்கொண்டு போகப்போகிறார்கள். ஹிட்லருக்கு இனி இடிமேல் இடியாகத் தான் விழப்போகிறது.

ஸிஸிலிப்போரிலிருந்து ஜெர்மனியின் ராணுவ சக்தி இன்னதென்பது வெளியாகும்; இது ஒரு பெரிய பரீட்சைதான் என்றே ஜெர்மானியர் நினைக்கிறார்களாம். ஸிஸிலிப் படையெடுப்பைப்பற்றிய செய்திகளடங்கிய பத்திரிகைகளை ஜெர்மன் மக்கள் ஆவலோடு பிடுங்கி வாசித்தார்களாம்.

இத்தாலியிலே, இது எதிர் பார்த்த விஷயமாகவே பட்டதாம். ருஷ்யர்கள் ஜெர்மனியரை உதைப்பதுபோல அவ்வளவு கடுமையாக மற்ற நேச தேசத்தார் இங்கு இத்தாலியர்களை நடத்தமாட்டார்கள் என்றொரு பிரசாரம் நடந்துவருகிறதாம் இத்தாலியிலே. அதன் பயன் என்னவென்றால் ரோமில் உள்ள இத்தாலியர்கள் ஸிஸிலிப் படையெடுப்பு பற்றிய சேதி கேட்டும், அதிகக் கலவரமடையாது, குதிரைப் பந்தயங்களுக்கு ஓடிக்கொண்டிருந்தார்களாம். ஆனால், இத்தாலியப் பத்திரிகைகள் அச்சு நாட்டாருக்கு நம்பிக்கை தரும்படியாக ஏதும் எழுதக் காணோமாம். எப்படி எழுதுமய்யா, இங்கே ஒருபுறம் பூதைலமாக விழும்போது!

## அடுத்த படியாக எங்கே?

நேச தேசப் படைகள், கார்ஸிகா, ஸார்டீனியா, கிரீட் போன்ற தீவுகள் மீதும் சீக்கிரமே கைவைக்கும் என்ற தோன்றுகிறதாம். பால்கன் பிரதேசங்கள் அவ்வளவு வலுவுள்ளவை அல்ல. அவற்றைத் தாக்கவும் படைதேடக் கூடுமல்லவா நம்மவர்கள்?

ஸிஸிலிப்போர் ருஷ்ய மக்களுக்கு மட்டற்ற மகிழ்சியை அளித்திருக்கிறதாம். வெகு காலமாக வேண்டிக் கொண்டிருந்த இரண்டாவது போர்முனை இதோ ஏற்பட்டுவிட்டது என்றெண்ணி அவர்கள் மகிழுகிறார்களாம். தற்சமயம், ருஷ்யாவிலும் கோடைப்போர் நடந்துக்கொண்டிருக்கிறது. ஹிட்லரும் நிதானித்து நிதானித்துப் பார்த்தார், நேச தேசத்தார் எங்கேயாவது போரைத் தொடங்குவார்களா என்று! நேச தேசத்தாரோ, ஹிட்லர் ருஷ்யாவில் வாலாட்ட ஆரம்பிக்கட்டும், அந்தச் சமயம் பார்த்து, மற்றொரு திசையில் நாம் காட்டலாம் நம் வேலையை, என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். கோடைக்காலமோ மெள்ள மெள்ளக் கழிந்துக் கொண்டேயிருக்கிறது. குளிர்காலம் வந்துவிட்டாலோ, ருஷ்யர்களுக்குக் குஷியாகிவிடும். அதோடு, ஜெர்மன் மக்களுக்கும் தமது சமர்த்தைக் காட்டியாக வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்குச் "சப்" என்றுபோய்விடும்.

சென்ற இரண்டு மாத காலமாக, ஜப்பானியர் மூலமாக ஜெர்மனிக்கும் ருஷ்யாவிற்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்திவிட ஹிட்லர் முயன்றதாகவும், ஸ்டாலின் அவர் முகத்தில் கரியைப் பூசிவிட்டதாகவும், இனியும் சும்மா இருப்பது கூடாது என்று ஹிட்லர் தமது படைகளுக்கு "மார்ச்" என்று ஜூலையில் உத்திரவு கொடுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இரண்டாயிரம் மைல்கள் பரந்துள்ள போர்முனையில் போராடியதெல்லாம் பழங்கதையாகப் போய்விட்டது. இப்பொழுது ஜெர்மனியர் ஓரல், கர்ஸ்க், பைல்கோராட் என்ற மூன்று நகர்களுக்கிடையில் உள்ள சிறு பிரதேசத்தையே, ஏகப்பட்ட படைகளோடு தாக்குகிறார்கள்.

ருஷ்யர்கள் இதற்குத் தயாராகவே இருந்தார்கள். வானிலும், தரையிலும் சென்ற பத்து நாட்களாக அதி கடுமையாகவே போர் நடந்துகொண்டிருக்கிறது. முதல் எட்டு நாட்களுக்குள்ளாகவே அச்சு நாட்டார் ஆயிரத்து நூறு விமானங்களைப் பறிகொடுத்துவிட்டனர். இரண்டாயிரம் டாங்கிகளுக்குமேல் கோவிந்தா ஆகிவிட்டன. எண்ணற்ற ஆட்களையும் பறிகொடுத்தாயிற்று. ஆயினும், பெரிய வெற்றி ஏதும் பெறவில்லை. சில இடங்களில் மட்டும் கொஞ்சம் முன்னேறியிருக்கிறார்களாம்.



## புலி டாங்கிகளின் வால் அறுபட்டது

ஜெர்மானியர் தங்களது "புலி டாங்கு" களைப்பற்றிப் பிரமாதமாக எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால் அந்தப் "புலி" களின் வால்களை ருஷ்ய டாங்கி வீரர்கள் ஒட்ட அறுத்து விட்டார்கள். இப்பொழுது இன்னும் அதிவேகமாகச் செல்லும் புது டாங்கிகளை ஜெர்மானியர் கொணர்ந்திருக்கிறார்களாம். எங்கெங்கிருந்தோ இப்போர்முனைக்கு விமானங்களைக் கொண்டுவந்து குவிக்கிறார்களாம். ஆகாயத்தில் மட்டும் வலு இருந்து தரையிலே உள்ள படை இடிந்து போய்விட்டால், அப்புறம் என்ன பிரயோசனம்?

மாஸ்கோவிற்கும், ருஷ்யாவின் தென் பிரதேசங்களுக்கும் உள்ள தொடர்பை அறுக்க ஜெர்மானியர் முயற்சிக்கிறாப் போலிருக்கிறது. ருஷ்யர்கள் இந்த முயற்சியைப் பாழடிக்க, ரிஸர்வ் படைகளைக் கொணர்ந்து தள்ளுகிறார்களாம்.

வட ஆப்பிரிக்காவில் கற்ற பாடத்தைக் கூட ஜெர்மானியர் ருஷ்யாவில் உபயோகிக்கவில்லையாம். ஆனால், ராமல் ருஷ்யாவிற்குப் போகவில்லையே! அவரைப்பற்றித் தான் சப்தமே காணோமே! உதைபட்ட வீரர் ஜாபிதாவில் சேர்ந்து ஊமையாகிவிட்டாரா அவர்?

இரண்டு போர்முனைகளில் போராடும்படியான நிலைமை ஏற்படக் கூடாது என்று ஹிட்லர் எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டிருந்ததுண்டு. அந்த நிலைமை வராது தடுக்க ஏதேதோ தகடுதெத்த வேலைகள் எல்லாம் செய்து பார்த்து விட்டார் அவர். பாவம்! அவரது கவலை இப்பொழுது ஆயிரக்கணக்கான பங்கு அதிகரித்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. இனி அவர் பாடு பெருந்தொல்லைதான். பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்குக்கு ஏற்படும் கதியே அவருக்கும் ஏற்படப்போகிறது. உலக சமாதானத்தைக் குலைத்து, கோடிக்கணக்கான மக்களின், உயிரை வாங்கி, ஈடிணையற்றிருந்த எண்ணற்ற நகரங்களைப் பாழாக்கி எந்நாளும் உலகோரின் சாபத்திற்குக் குறியாவதைத்தவிர வேறென்ன பலனையும் ஹிட்லர் அடையப்போவதில்லை.

இது இப்படியிருக்க, ஜப்பானியர் ஆஸ்திரேலியா அருகே சரியான பூசைபெற்று வருகிறார்கள். அமெரிக்க, ஆஸ்திரேலியப் படைகள் ஜப்பானியரிடமிருந்த தீவுகளில் இறங்கி, அங்குள்ள முக்யமான நகரங்களைக் கைப்பற்ற முயன்றுகொண்டிருக்கிறார்கள். இந்நாள் வரை ஆங்கிலேயர்கள் புகுந்திராத காடுகளில் எல்லாம் அமெரிக்கர்கள் புகுந்து கொண்டிருக்கிறார்களாம். ஜப்பானியக் கப்பல்கள் பலகுலா வளைகுடாவில் மாட்டிக்கொண்டன. அவற்றையெல்லாம் அமெரிக்கப் கப்பற்படை சேதப்படுத்திவிட்டது. அந்தப் பிரதேசத்தில் உள்ள தீவுகளை எல்லாம் ஒவ்வொன்றாகப் பிடித்துக்கொண்டுவிட வேண்டுமென்பது அங்குள்ள அமெரிக்கத் தலைவரது யோசனை. ஒவ்வொரு இடத்திலும் ஜப்பானியர்கள் எதிர்க்கவந்து கப்பல்களையும், விமானங்களையும் இழப்பார்கள் அல்லவா? வரவர அவர்களது விமானபலம் குறைந்துதான் வருகிறதாம். இன்னும் சில காலத்திலே, வானத்திலேயே ஜப்பானிய விமானங்கள் தோன்றாதவாறு நம்மால் செய்துவிட முடியும் என்கிறார் ஒருவர்.

ஜப்பானிய பிரதம மந்திரி தென்திசைத் தீவுகளுக்கெல்லாம் போய், எல்லாம் சரியாக இருக்கிறதாவென்று பார்த்துவிட்டு, டோக்கியோ திரும்பிவிட்டாராம். ஜெர்மனியிலிருந்து நீர்மூழ்கிகள் மூலமாக ஜப்பானுக்கு விமான யந்திர நிபுணர்கள் வந்திருக்கிறார்களாம். விமானங்களின் சுடும் சக்தியை அவர்கள் அதிகப்படுத்தியிருக்கிறார்களாம். பெரிய நீர்மூழ்கிகள் இப்பொழுது நேரே ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூருக்கு வருகின்றனவாம். மயிர் சுட்டுக் கரியாவதுண்டா எங்காவது? சூறுவளி போல் வருகிறது நேச தேசப் படையெடுப்பு. அச்சு எதிர்ப்பு அதன் எதிரே தூசியாகப் பறக்கப்போகிறது. பார்த்துக்கொண்டே வாருங்கள், இப்பொழுதுதானே உற்சவம் ஆரம்பமாயிருக்கிறது. இன்னும் எத்தனையோ வேடிக்கைகள் நடக்க வேண்டியிருக்கின்றன.

# மித மிஞ்சி சேகரிப்பவர்கள் சமூகத் துரோகிகள்

## ஐந்தாம் படையினர் பொய்ப் பிரசாரத்திற்கு ஆப்பு

### உண்மைக் காரணம் என்ன?

[திருச்சி அகில இந்திய வானொலி நிலயத்தி லிருந்து சேலம் கல்லூரித் தலைவர் ஏ. இராமசாமிக் கவுண்டரவர்கள் ஒலி பெருக்கிய சொற்பொழிவு வருமாறு.—]

### மித மிஞ்சி சேகரித்தல்

இப்பொழுது நடக்கும் உலகப்போரின் காரணமாக விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டே இருக்கின்றன. இன்றைக்கு இருக்கும் விலை நாளைக்கு இருக்குமென்று எண்ணவோ திடமில்லை எனறு கூறினும் மிகையாகாது. எங்கு பார்த்தாலும் இதே பேச்சு. எல்லோருக்கும் இதே ஏக்கம். பாலுக்கு சர்க்கரை இல்லை என்பார்க்கும் பருக்கையற்ற கூழுக்குப்போட உப்பு இல்லை என்பார்க்கு வருத்தம் ஒன்றே என்பது போல, விலைவாசிகளின் நெருக்கடியால், ஏழைமக்களைப்போலவே செல்வவான்களும் வருந்துகின்றனர். பெட்ரோல், காகிதம், பொன், இரும்பு முதலியவற்றின் விலை உயர்வதினால் பாதிக்கப்படுபவர்கள் சிலரேயாவர். இவை இல்லாமலும்கூட மக்கள் சாதாரணமாக உயிர்வாழக்கூடும். ஆனால் எல்லோருக்கும் அவசியமாயும் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாததுமாய் இருப்பது உணவு. இந்த உணவுப்பொருள்கள் போதுமான அளவு கிடைக்காமையால், இந்நாட்டில் ஒரு பெருத்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்திய மக்களுக்கு அரிசி, கோதுமை, கேழ்வரகு, கம்பு முதலியவை முக்கியமான உணவுப் பொருள்களாகும். நம் நாட்டில் மொத்தத்தில் ஐந்துகோடி டன் தானியங்கள் வருடந்தோறும் உற்பத்தியாகின்றன. ஆனால் $5\frac{1}{4}$ கோடி டன் தானியம் செலவாகிறதென கணக்கெடுத்திருக்கின்றனர். எனவே நம்நாட்டில் விளையும் உணவுப்பொருள்கள் 100-க்கு 96 பேர்களுக்கு போதுமானதாக இருக்கிறது. அதாவது 100-க்கு 4 வீதம் தான் உணவுக் குறைவு எனத் தெரிகின்றது. இக்குறைவு உண்மையில் சிறியதாயிருந்தும் தற்போது, பெருத்த நெருக்கடி ஏற்பட்டு விட்டதற்குப் பலகாரணங்கள் கூறப்படுகின்றன.

### பொய்ப் பிரசாரம்

இந்தியாவிலே தற்போதுள்ள இராணுவமே காரணமெனச் சிலர் கூறுகின்றனர். இது ஒரு பொய்ப்பிரசாரம். இந்திய இராணுவத்தில் சேர்ந்திருப்போர் பெரும்பாலும் இந்தியரேயாவர். இவர்கள் எல்லோரும் இராணுவத்தில் சேர்வதற்கு முன் எவ்வளவு சாப்பிட்டு வந்தனரோ அதையே தான் இராணுவத்தில் சேர்ந்த பின்பும் உண்டுவருகின்றனராதலால் இந்திய இராணுவத்தில் உணவுப் பஞ்சம் உண்டாயிற்றென்பது எல்லாம் ஐந்தாம் படையினரின் விஷமப் பிரசாரமேயாகும். மேலும் இந்தியாவில் இப்பொழுதுள்ள அயல்நாட்டுச் சிப்பாய்களால் உணவுச் செலவு அதிகமாக இல்லையோ எனின், அதுவுமில்லை. அயல்நாட்டுச் சிப்பாய்கள் எவ்வளவு பேர் இந்தியாவில் இருக்கின்றனரோ அவ்வளவு இந்திய சிப்பாய்கள் போரின் காரணமாக அயல்நாட்டில் இருக்கின்றனர். எனவே, உணவுப் பஞ்சத்திற்கு இராணுவம் தான காரணமென்பது ஒரு பொருந்தாக் கூற்று என்பது வெள்ளிடைமலை. இனி, சிலோன் முதலிய நாடுகளுக்கு ஏராளமாக உணவுப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதால், நமக்கு உணவுப் பஞ்சம் நேர்ந்ததென்று கூறுவர் மற்றொரு சாரார். இது முற்றிலும் உண்மையல்ல; எனினும் இதில் ஓர் சிறிதளவு உண்மை உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. சென்ற ஆண்டில், பிறநாடுகளுக்கு ஏற்றுமதியான தானியம் மொத்த விளைவில் 100-க்கு $1\frac{1}{2}$ பங்கு எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் சிறிதே. எனினும், இதுவும் நிறுத்தப்பட வேண்டியது அத்யாவசியமே. ஆனால், இதனாலேயே நமக்கு உணவுப் பஞ்சம் நேர்ந்ததென்று சொல்வது மிகைபடக் கூறலாகும்.

### உண்மைக் காரணம் என்ன?

மேலும் பர்மா முதலிய நாடுகளிலிருந்து வந்துகொண்டிருந்த அரிசி இப்பொழுது நின்றுவிட்டமையால், இந்த நெருக்கடி ஏற்பட்டது என்பாரும் உளர். நம்நாட்டில் விளையும் தானியம் நமக்கே போதாதென்றும், அது 100-க்கு 4 குறைவுப்படுகிறது என்றும் முன்னமே சொன்னேன் அல்லவா. அந்தக் குறைவைச் சரிக்கட்ட பர்மா, சையாம், முதலிய நாடுகளிலிருந்து அரிசி வந்து கொண்டிருந்தது. அவ்விறக்குமதி இப்பொழுது நின்றுவிட்டது, நமது துரதிர்ஷ்டவசமே. இதனால் 100-க்கு நால்வரே பாதிக்கப்படவேண்டிய ஓர் சிறிய நெருக்கடி உண்டாகவேண்டுமே யன்றி, எல்லோரையும் பாதிக்கும் இப்பெரிய நெருக்கடி உண்டாதல் இயலாது. ஆகையால் தானியத்தை மிதமிஞ்சி சேகரித்தலே இப்பொழுதுள்ள இந்நெருக்கடிக்கு உண்மையான காரணமெனக் கூறவேண்டும்.

இந்தப் போரின் காரணமாக, தானியவிலை அதிகரித்துக் கொண்டே வந்தது. விலை மேலும் மேலும் உயருமென்றும், தானியங்கள் பின்னால் கிடைக்குமோ கிடைக்காதோ எனவும் பயந்து பணம் படைத்த சிலர் தமது தேவைக்கதிகமான தானியங்களை வாங்கிச் சேர்த்து வைக்கலாயினர். பணக்கார விவசாயிகள் தாங்கள் வழக்கம்போல் விற்கும் தானியங்களை விற்காமல் சேர்த்து வைத்தனர். இவையெல்லாம் ஒருபுறமிருக்க, மிகுதியான இலாபத்தை முன்னிட்டு வியாபாரிகள் ஏராளமான தானியங்களை வாங்கி மிதமிஞ்சிச் சேகரித்து வைத்தனர். இம்மூன்று காரணங்களாலும் ஏராளமான தானியம் நம் நாட்டில் இருந்தும், மார்க்கட்டுக்கு வராமல் மறைத்து வைக்கப்பட்டது. மார்க்கட்டில் தானியங்கள் குறைந்ததும் விலைகள் உயர்ந்தன. விலை உயர உயர சேமிப்பும் அதிகரித்தது. விலை உயர்வும் சேமிப்பும் ஒன்றுக்கு மற்றொன்று காரணமும் காரியமுமாகி அவ்விரண்டும் பெருகலாயின. இத்தகைய சுழலில் அகப்பட்டு மக்கள் துன்புறுகின்றனர். பணக்காரர்களுடைய கஷ்டமும் வருந்தத்தக்கதே. எனினும் ஏழைமக்களாகிய தொழிலாளிகள் படும் துன்பத்திற்கு அளவே இல்லை. நாள்முழுதும் கூலிவேலை செய்து அன்றன்று வாங்கி உண்ணும் ஏழைமக்கள், தானியம் கிடைக்காமல் பட்டினி கிடப்பதைக் காணின், கன்னெஞ்சினராயினும் கலங்காமல் இருக்க முடியாது. பாடுபட்டு உழைத்தும் பசிக்கு உணவில்லை என்றால், பாட்டாளி மக்களின் கதிதான் என்னே. இதனாலன்றோ "தனி மனிதனுக்கிங்கு உணவிலையேல் இச்சகத்தினை அழித்திடுவோம்" என்றார் தேசீயக்கவி பாரதியார் அவர்களும்.

### அரசாங்க உதவி

பொதுமக்களின் இத்தகைய துன்பத்தைக் கண்டு, அரசாங்கத்தாரும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய உடனே முன்வந்தனர். "சாகுபடி அதிகஞ் செய்" என்ற பிரசாரத்தை எங்கும் பரப்பினர். விவசாயிகளுக்கு அனேக சலுகைகள் காட்டப்பட்டன. கரம்பு நிலங்களை விவசாயிகளுக்கு இனமாக வழங்கினர். விவசாய அபிவிருத்திக்காக கடன்கள் கொடுக்கப்பட்டன. நீர்ப்பாசன அபிவிருத்திக்காக ஏராளமாகச் செலவு செய்தனர். இந்தச் சலுகைகளின் காரணமாகவோ, அல்லது விலையுயர்வின் காரணமாகவோ, அல்லது இவ்விரண்டின் காரணமாகவோ, இவ்வாண்டில் தானியவிளைவில் $\frac{1}{4}$ கோடி டன் அதிகமாக உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தானிய உற்பத்தி 100-க்கு 4 பங்கு அதிகரிக்குமாதலால் இந்திய மக்களனைவருக்கும் போதுமான உணவுப் பொருள்கள் இந்நாட்டிலேயே இனிமேல் விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது நமது மகிழ்ச்சிக்குரிய ஓர் விஷயமாகும்.

நீர்வளம், நிலவளம், மலைவளம் முதலிய வளங்களுடைய விவசாய நாடாகும் நமது இந்தியா. தன்னையும் காப்பாற்றிக்கொண்டு, பிறநாடுகளுக்கும் உணவூட்டும் பெருமையுடையது இந்நாவலந்தீவு. காலப்போக்கினாலும் நவீன நாகரிகத்தினாலும் போதிய ஊதியமின்மையாலும் விவசாயத்தொழில் தளர்ச்சியுற்று குறையலாயிற்று. அதன் விளைவாக நமக்குப் போதுமான உணவையும்கூட நாம் விளைவித்துக் கொள்ளும் திறனின்றி, அயல்நாட்டின் ஆதரவை எதிர்பார்க்கும் இழிநிலை எய்தினோம். இது காலச்சக்கரத்தின் கோலம். "மேழிச்செல்வம் கோழை படாது" "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்"; உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை, கண்டீர்

பழுதண்டு வேறோர் பணிக்கு ; "சுழன்றும் ஏர்பின்னது உலகம்" என்றெல்லாம் பாராட்டப்பட்ட விவசாயத் தொழிலைப் புறக்கணித்தோம். விவசாயிகளே ஒரு நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர் என்பதையும் அவர்களே சமூகத்தின் ஜீவநாடிகளாவர் என்பதையும் மறந்தோம். விவசாயிகளும் தங்கள் தொழில்களை விடுத்து வேறு தொழிலை மேற்கொண்டு கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும் குடியேறலாயினர். இப்போது அரசாங்கத்தார் விவசாயத்தின் மேன்மையை யுணர்ந்து அதை விருத்திசெய்ய முன்வந்தது போலவே, யுத்தத்திற்குப் பின்னரும் அரசாங்கத்தார் விவசாயத்தை அபிவிருத்தி செய்வார்களாகில், போதுமான உணவுப்பொருள்கள் இந்தியாவில் உற்பத்தியாகும். விவசாயிகளும் நலம் பெறுவார்கள். உணவுப் பஞ்சம் நிகழாது.

இரண்டாவதாக வியாபாரிகளின் சேமிப்பை விலக்க அரசாங்கத்தார் சில ஏற்பாடுகள் செய்தனர். ஒவ்வொரு வியாபாரியும் லைசென்ஸ் பெற்றே வியாபாரம் செய்யவேண்டு மென்றும், லைசென்ஸ் பெற்ற ஒவ்வொரு வியாபாரியும் தமது இருப்புச் சரக்கு எவ்வளவு என்பதை அவ்வப்போது அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டு மென்றும், எந்தத் தானியமும் கட்டுப் பாட்டு விலைக்கே விற்கப்பட வேண்டு மென்றும், ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கு அதிகாரிகளின் உத்தரவின்றித் தானியங்களை அனுப்பக்கூடா தென்றும், பலவிதிகளை அரசாங்கத்தார் ஏற்படுத்தினார்கள். மீறி நடந்தவர்களைத் தண்டித்தனர். மாகாண அரசாங்கத்தார் தத்தம் மாகாணத்தில் மிகுதியாயிருக்கும் தானியங்களை குறைவாயுள்ள மாகாணங்களுக்கு அனுப்பிவருகின்றனர். அது வியாபாரிகளின் மூலமாகவும், கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும், பொது மக்களுக்கு விற்கப்படுகிறது. தானியப் பஞ்சத்தைப் போக்க இதைப் போன்ற பலமுறைகளையும் அரசாங்கத்தார் கையாண்டு வருகின்றனர். இன்று பல செய்தும், சேமிப்பு நீங்கினபாடில்லை.

## உணவுப் பங்கிடு முறை

விலைக் கட்டுப்பாட்டில் சேமிப்பைத் தடுத்து விடலாமென அரசாங்கத்தார் நினைத்தனர். ஆனால் வியாபாரிகளோ இந்தக் கட்டுப்பாட்டை மீறுவதற்குப் பல குறுக்கு வழியினை வகுத்துக் கொண்டார்கள். அதிலே முக்கியமானது கள்ள விற்பனையாம். கட்டுப்பாட்டு விலைக்கு விற்க விருப்பமில்லாத வியாபாரிகள், தமது தானியங்களைக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்றதாகப் பொய்க் கணக்கு எழுதிக்கொண்டு, அதை அதிக விலைக்குத் திருட்டுத் தனமாக விற்க ஆரம்பித்தனர். இக்கள்ள விற்பனை அதிக மும்முரமாய் நடந்தது. இன்னும் நடந்து வருகின்றது. உதாரணமாக அரிசியின் திட்டவிலை ரூபாய்க்கு 2½ படியென்று வைத்துக் கொள்வோம் என்றாலும் அரிசி வாங்க கடைக்குப் போனால் அரிசி இல்லை என்ற பதில் கிடைக்கிறது. ஆனால் ஒரு ரூபாய்க்கு 1½ படி வீதம் வாங்கத் தயாராயிருந்தால், ஒருமூட்டை அரிசி வேண்டுமானாலும் அதேகடையில் வாங்கிக் கொள்ளலாம். இதற்குத் தான் கள்ள விற்பனை என்று பெயர். அரசாங்கத்துடன் வியாபாரிகள் ஒத்துழைக்காமையால் விலைக் கட்டுப்பாடு, கள்ள விற்பனையை அதிகரித்தது. இக்கள்ள விற்பனையைத் தடுக்க இரண்டொரு வழிகள் உண்டு. அவற்றில் விகிதாசாரப் பங்கீடுமுறை முதலாவதாகும். ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு வீதம் பங்கிட்டுக் கொடுப்பதுதான் விகிதாசார பங்கீடுமுறை யெனப்படும். இந்நாட்டுக்கு இது ஒரு புதிய முறையாகும். பரந்த இந்நாட்டில் இம்முறை சாத்தியமானதல்ல எனக் கூறுவோரும் உண்டு. ஆனால் மேல்நாடுகளிலே இம்முறை மிகவும் வெற்றிகரமாகக் கையாளப்படுகிறது. அதனை இந்நாட்டிலும் புகுத்துதல் மிகவும் விரும்பத் தக்கதேயாகும். இதனால் பணக்காரர்களுக்கு அசௌகரியங்களும் வியாபாரிகளுக்கு இலாபக் கேடும் உண்டாகலாம். எனினும் பெருவாரியான ஏழைமக்களின் கஷ்டத்தைப் போக்குவதற்கு, இதுவே சாலச் சிறந்த தென்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு.

இனி உணவு தானியங்களைப் பொதுமக்களுக்கு விற்கும் பொறுப்பினை அரசாங்கத்தாரே ஏற்றுக் கொள்வது மற்றொரு முறையாகும். வெளியிலிருந்து வரும் தானியங்களை வியாபாரிகள் மூலம் விற்பதைக் காட்டிலும், பல கூட்டுறவு சங்கங்களை ஆங்காங்கு ஏற்படுத்தி அவற்றின் மூலமாக தானியங்கள் விற்கப்படுமாயின், இப்போதுள்ள உணவுப் பஞ்சம் பெரும்பாலும் நிவர்த்தியாகுமென நான் நம்புகிறேன். வியாபாரிகள் பலர் இதனால் பாதிக்கப்படுவார்கள். என்றாலும் பெரும்பாலராகிய பொதுமக்களின் நன்மையைக் கருதி இம்முறை கையாளப்படுவது மிகவும் உசிதமேயாகும்.

இனி இந்நெருக்கடியைப் போக்குவதில் பொதுமக்களின் கடமை யென்ன, என்பதைச் சிறிது ஆராய்வோம். விவசாயிகள் வழக்கம் போல் தானியங்களை விற்கவேண்டும். பணக்காரர்களும் நடுத்தர வகுப்பினரும் தமது தேவைக்கு அதிகமாக வாங்கிச் சேர்த்து வைக்கக்கூடாது. திருமணம், திருவிழா முதலிய காலங்களில் விருந்துகளை முன்னிட்டு உணவுப்பொருள்களை அதிகம் வீண் செய்யக்கூடாது. இலாபத்தைக் கருதி வியாபாரிகள் தானியங்களை சேமித்து வைக்கக்கூடாது. சேமித்தலின் தீமைகளைப் பற்றி போதுமான பிரசாரங்கள் செய்யவேண்டும்.

## சேமிப்பதால் நேரும் தீமைகள்

சேமித்து வைத்தல், பஞ்சமாபாவங்களுக்கும் பிறப்பிடமென்பதை மக்கள் உணறுமாறு செய்யவேண்டும். கள்ள விற்பனையால் களவும், களவை மறைக்கப் பொய்யும், பட்டினியால் கள் குடியும், கள்ளினால் காமமும், ஆகிய பலபாவங்களும், சேமித்துவைத்தலால் மக்களிடையே காட்டுத்தீ போல் பரவுகின்றன. ஆதலால் சேமித்து வைப்பவர்களை சமூகத் துரோகிகள் என்று பொதுமக்கள் கருத வேண்டும். தானியங்களை உற்பத்தி செய்து கொண்டே சாப்பிடுவதும், சாப்பிட்டுக் கொண்டே உற்பத்தி செய்வதுந் தான் நியாயமான முறையாகும். இதைமீறி நடப்பவன் எவனாயினும், அவனைத் தண்டிப்பதும் தண்டனைக் குள்ளாக்குவதும் நீதியாகும். நெல் பயிரிலிருக்கும் களையை நீக்குதல் எவ்வாறு அவசியமானதோ, அப்படியே சேமிப்பவரை சமூகத்தினின்று விலக்குவதும் நீதியே என்ற எண்ணம் பொதுமக்களிடம் பரவவேண்டும்.

சோம்பலின்றி உழைக்கவேண்டியது மனிதனின் கடமை. மூன்று வேளையும் வயிறார உண்ணுதல் அவனது உரிமையாகும். இந்த உரிமையை மறுத்து, தானியங்களை மறைத்து தனது இலாபத்தை பெருக்குகின்றவன் மனித சமூகத்திற்கும், அறத்திற்கும் விரோதியாவான். அவனை அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுத்துத் தண்டனைக்கு உள்ளாக்குவது, நமது கருமமும் தருமமுமாகும். "செயதக்க செய்யாமையானும் கெடும்" என்பது ஆன்றோர் ஆணையாகும்.

சேமிப்பால் விலையுயர்வும், விலையுயர்வால் சேமிப்பும், இவ்விரண்டால் விலைக்கட்டுப்பாடும், விலைக்கட்டுப்பாட்டால் கள்ள விற்பனையும், கள்ள விற்பனையால் தானியப்பஞ்சமும், தானியப்பஞ்சத்தால் ஏழை மக்களுக்குப் பசிப்பிணியும் உண்டாவதால் சேமித்து வைப்போர் தண்டனைக்குரியவர் என்பதையும், இதையொழிக்கும் வழிகள் எவை என்பதையும் கூறக் கேட்டீர்கள். இம்முறையில் மிதமிஞ்சிய சேகரித்தலை ஒழித்து, நீங்கள் நலமுற வாழுங்கள் ; பிறரையும் நலமுற வாழச்செய்யுங்களென்று உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஜூலை மாதம் 2-ம் தேதி டோக்கியோ வானொலி நிலையத்திலிருந்து வெளிவந்த செய்திகள் பெரிதும் மிகைபடக் கூறப்பட்டவை. இது அவர்கள் வழக்கம். தென் மேற்குப் பசிபிக் பகுதியில் யுத்தம் ஆரம்பமானதிலிருந்து ஜப்பானிய கடற்படை, 81 க்ரூய்சர் கப்பல்களையும் 86 நாசகாரிகளையும் மூழ்கடித்திருக்கவேண்டும் அல்லது நாசஞ் செய்திருக்கவேண்டுமென்று கூறியது! இது, குடலால்கனாலிலும் அட்டுத் தீவிகளிலும் போராட்டம் நடந்தபோது படித்த பழைய பாடம். ஜப்பானிய கடற்படை மகா வீரத்தோடு போராடி ஏராளமான நாசத்தை உண்டாக்குகின்றனவாம்' அப்படியானால், அந்தத் தீவுகளைக் காலி செய்து விட்டு ஏன் இவர்கள் ஓடிப் போனார்கள்?

*   *   *   *

இப்போது பசிபிக் போராட்ட நிலைமை மாறிவிட்டது.

**மூன்று மாதங்களில் மாறுதல்கள்.**

3 மாதங்களுக்கு முன்பு, ஆஸ்திரேலியாவை ஜப்பானியப் படைகள் தாக்கக்கூடும் என்ற அச்சம் ஆஸ்திரேலியர்களுக்கு இருந்தது. இதைச் சாதகமாகக் கொண்டது ஜப்பான், ஆஸ்திரேலியாவை எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் கைப்பற்றிக் கொள்ளலாம் எனும் தைரியம் இருப்பதாக டோக்கியோ வானொலி நிலையம் கூறியது. அப்படி நிராதரவான நிலையில் ஆஸ்திரேலியர் இருந்தால், ஜப்பான் ஏன் அதைத் தாக்கவில்லை. அதைத் தாக்கிப் பிடித்திருந்தால், நேச நாடுகளைத்தாக்க, சிறந்த தளமாகப் பயன்பட்டிருக்குமே!

**ஜெனரல் மெக்கார்தர் போர்முறை.**

கேந்திர ஸ்தானங்களைக் குறித்துப் பேசிய ஜெனரல் மெக்கார்தர் கூறியதாவது:

ஜப்பானிய பயமுறுத்தலுக்குச் சரியானபடி நம் நேசச் நாட்டு விமானங்கள் வாயடைத்துக் கொண்டு வருகின்றன. அவர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளில் ஊன்றிக் கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள். நேச நாடுப் படைகள் கையாண்ட யுத்த தந்திர முறைகளாவன :—(1) கிழக்குப் போர் முனையில் போர் நடைபெற ஒட்டாதபடி தடை செய்து கொண்டு வருவது, (2) ரஷ்யாவிற்குத் தேவையான தளவாடங்களும் உணவுப் பொருள்களும் கொடுத்து உதவுவது. மேற்கே, (3) அச்சு நாடுகளைத் தாக்குவது. தம் மூல பலத்தை நேச நாடுகள் சிதற விடக்கூடாது என்பது தான் அவர்கள் கொள்கை. இந்தக் கொள்கை ஸ்டாலின்கிராடிலும் துனீசியாவிலும் ஏற்ற பலனளித்தன.

ஆஸ்திரேலிய அந்நிய நாட்டு மந்திரியான டாக்டர் ஈவாட் ஜூன்மீ 28உ லண்டனில் செய்த தோர் பிரசங்கத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :—

"சென்ற 12 மாதங்களாக ஆஸ்திரேலிய மக்களுக்கு மகா கஷ்டமான காலம். ஆனால் இப்போது நிலைமை பெரிதும் முன்னேறி யிருக்கிறது. பசிபிக் மகா சமுத்திரத்தில் நிலைமை மகா பயங்கரமாயிருந்தது மாறி, மன உறுதி யுண்டாக்குகிறது. இது நாம் தனித்திருந்து சாதிக்கக் கூடிய காரியமல்ல."

சமீபத்தில் ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் சார்பாகப் பேசிய ஒருவர் கூட, இதே மன உறுதியோடு தான் பேசுகிறார். இதற்குக் காரணம் தென் மேற்குப் பசிபிக்கில், ஏராளமான நேச நாட்டு விமானங்கள் வந்து சேர்ந்து எதிரிகளைச் சரியானபடி தாக்கிக் கொண்டிருப்பது தான். ஆஸ்திரேலிய அரசாங்கம் விடுத்த தோர் அறிக்கையி லிருந்து இது விளங்குகிறது.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஞு ஜூலை மீ 23உ, வெள்ளிக்கிழமை [இதழ் 29

## இத்தாலியர்களுக்குச் செய்தி



முதல் மந்திரி சர்ச்சிலும், ஜனத்தலைவர் ரூஸ்வெல்ட்டும்.

உங்கள் நாட்டில் நெடுந்தூரத்திற்குள் அமெரிக்கப் படைகளும், பிரிட்டிஷ் படைகளும், கனடா படைகளும் ஜெனரல் அய்சினோவர் தலைமையிலும், அவருடைய உதவியாளரான ஜெனரல் சர் எச். அலெக்சாந்தர் தலைமையிலும் இப்போது போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

முசோலினியும் அவருடைய பாஸிஸ்ட் ஆட்சி முறையும், வெட்கப்படத்தக்க தலைவருக்கு உங்களை அடிமைப்படுத்தி விட்டதனால் தான், இந்த நிலைமை ஏற்பட்டது.

பொது ஜனங்களையும் சுயேச்சைகளையும் மிருகத்தனமாக அழிக்கிறவனுக்குத் துணைவராக, இந்தப் போரில் உங்களையும் முசோலினி கொண்டு போனார். இந்தப் போரில் ஹிட்லர் ஏற்கெனவே வென்று விட்டார் என்று நம்பி உங்களையும் இந்தப் போராட்டத்தில் மூழ்கும்படி முசோலினி செய்து விட்டார்.

உங்களுடைய படையினர் இத்தாலியின் நன்மையை முன்னிட்டுப் போராடவில்லை ; ஆனால், நாஜி ஜெர்மனியின் நன்மைக்காகத் தான் போராடினர். மிகுந்த வீரத்தோடு தான் போராடினர். என்றாலும், ருஷ்யப் போர் முனையில், ஜெர்மானியர்கள் இவர்களைக் காட்டிக் கொடுத்து, கைவிட்டு விட்டார்கள். ஆப்பிரிக்கப் போர் முனையில், எல் அலமீனிலிருந்து பான் முனை வரையில் நடந்த போராட்டத்திலும் இப்படித் தான் செய்தார்கள்.

*மிஸ்டர் ரூஸ்வெல்டும் மிஸ்டர் சர்ச்சிலும் ஆல்ஜியர்ஸ் வானொலி நிலையத்திலிருந்து இத்தாலிய மக்களுக்கு 1943-ம் ஞு ஜூலை மீ 16உ ஒலிபரப்பிய செய்தி.*

பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| முகப்புப் படம்: ஜனத் தலைவர் ரூஸ்வெல்டும் முதல் மந்திரி சர்ச்சிலும் .. .. | 1 |
| இத்தாலியர்களுக்குச் செய்தி .. .. | 1 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 2 |
| தலையங்கம்: சிசிலியில் முதல் வெற்றி .. | 3 |
| பூனைக் குழந்தையும் பாட்டினால் சொக்குகிறது. | 4 |
| வெற்றிப் பாதையில் .. .. .. | 5 |
| நம் நாட்டின் முக்கிய பிரச்சினை .. .. | 5 |
| தொழிலாளர் பகுதி: ஜெர்மனியில் தொழிலாளர் அலங்கோலம் .. .. .. | 6 |
| அல்வாத் துண்டுகள் .. .. .. | 7 |
| விஞ்ஞான ஆராய்ச்சி யுத்த முயற்சிக்கு உதவுகிறது .. .. .. .. | 8 |
| வீரச் செயல்கள் .. .. .. .. | 8 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**கர்ஸ்க் போர் முனை: ஜெர்மானியர் திட்டம்.**

கர்ஸ்க் வளைவிற்கு வடக்கேயுந் தெற்கேயும் மகா கடுமையான போராட்டம் நடைபெறுவதாக, மாஸ்கோவிலுள்ள ராய்டர் விசேஷ நிருபர் தெரிவிக்கிறார். மேலும் அவர் கூறுவதாவது: ஜெர்மானியர்களுக்குப் பக்கபலமாக டாங்கிகளும், விமானங்களும் தரைப் படைகளும் வெகுவாக வந்து சேர்ந்தன. இவற்றைக் கொண்டு ஜெர்மானியர்கள் தம் படைகளைத் திருத்தியமைத்துக் கொண்டார்கள். இந்தப் படைகளின் தலைவர், வான் க்ளூஜ் என்பவர். ஜெர்மன் டாங்கிகளுக்கும், சோவியத் படைகளின் டாங்கி எதிர்ப்புப் படைகளுக்கும் மட்டும் நடைபெறும் போராட்டந் தான் என்று கர்ஸ்க் போராட்டத்தைக் கூறலாம். இந்தப் போராட்டத்தின் பலாபலன்கள் மிகவும் முக்கியமானவை. ஏனென்றால், இவற்றை யொட்டித் தான், இனி மற்ற போர் முனைகளில் என்ன போர்த் தந்திர முறையைக் கையாள வேண்டுமென்பது நிர்ணயிக்கப்படும். இதுவரை ஜெர்மானியர்கள் எந்தவித வெற்றியும் பெறவில்லை. ஆனால் கர்ஸ்க் பகுதியில் தரைமட்டமாக்கிவிட வேண்டுமென்னும் தம் நோக்கத்தை அவர்கள் ஈடேற்றிக் கொள்ளுவாரானால், மாஸ்கோவைப் பின்புரம் வந்து வளைந்து தாக்கிக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிக்கலாம். கர்ஸ்க் பகுதியின் முக்கியமான இரண்டு பகுதிகளில் தான் ஜெர்மானியர்கள் வெகுவாகத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று பையல்கராடுக்கு வடகிழக்கிலுள்ளது; மற்றொன்று, ஓரெல்லுக்குத் தென் மேற்கிலுள்ளது. கர்ஸ்க்குப் பின்புறத்தில் எங்கேனும் ஒரு முக்கியமான போக்குவரவு ஸ்தானத்தில் தம் இரண்டு படைகளும் வந்து சந்திக்க வேண்டுமென்பது ஜெர்மானியர்கள் திட்டம். இது வரை ஏராளமான தளவாடங்களையும் படைகளையுங் கொண்டு போய்க் குவித்துக் கொண்டு ஜெர்மானியர்கள் போராடினார்கள். என்றாலும், அவர்கள் எதிர்பார்த்தபடி தகுந்த பலன் கிடைக்கவில்லை. ரஷ்யப் போர் முனையிலிருந்து வரும் செய்திகள் ஊக்கந் தருவனவாயிருக்கின்றன. ஓரெலுக்கு வடக்கே, ஜெர்மன் அணிவகுப்புக்களில் ஒரு பிளவு ஏற்பட்டு, அது பெரிதாகிக் கொண்டு வருகிறது. அது வழியாக இடைவிடாது சோவியத் படைகள் புகுந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஓரெல் பகுதியில் ரஷ்யப் படைகள் வெற்றிகரமாகத் தாக்கிக் கொண்டு வருவதாக, "ரெட் ஸ்டார்" பத்திரிகை கூறுகிறது.

* * * * *

**நாஜிகளின் திடீர் தாக்குதல்.**

தாம் ரஷ்யப் போர் முனையில் திடீரென்று தாக்குவதற்குக் காரணம் என்ன என்பதுபற்றி நாஜி பிரசாரகர்கள் கூறுகிறார்கள். இந்தக் காரணங்கள் கொஞ்சங் கூடப் பொருத்தமாயில்லை. தாம் தாக்கப் போவதாக, சோவியத் படைத் தலைவர் எதிர் பார்க்க முயற்சித்ததாக அந்த நாஜி பிரசாரகர்கள் குறிப்பிடுகிறார்கள். பையல்கராட்-ஓரெல் பகுதியில் நடைபெறும் போராட்டத்தில் ரஷ்யர்கள் தான் ஜெர்மானியர்களைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே தாம் விரைவில் வெற்றிபெற வேண்டுமென்பது ஜெர்மன் படைத் தலைவரின் எண்ணம் போலும். அன்றியும், தாமே மேல் நோக்கித் தாக்கிக் கொண்டு முன்னேற வேண்டுமென்பது அவருடைய நோக்கமென்று தெரிகிறது. ரஷ்யத் தாக்குதல்களைத் தாம் வென்று விட்டதாகவும், பையல்காரடுக்கு வடமேற்கேயும், கர்ஸ்க்குக்கு வடக்கேயும் உள்ள முக்கியமான இடங்களைக் கைப்பற்றிக் கொண்டதாகவும் ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள். ஆனால், இது உண்மையல்ல. இப்படிப்பட்ட விசித்திரமான வதந்திகளை ஏன் ஜெர்மானியர்கள் கிளப்புகிறார்கள்? இதற்குக் காரணம், இராணுவ சம்பந்த முடையதல்ல வென்றும், அரசியல் சம்பந்தமுடையதென்றுந் தான் நினைக்க வேண்டியிருக்கிறது. இதில் ஜெர்மானியர்கள் வெற்றி பெறுவார்களானால், ஜெர்மன் படைகளின் புகழ் மேலும் ஓங்கும். ஏனென்றால், இந்த ஜெர்மன் படைகள் தம் கருத்துக்கு விரோதமாகத் தான் போர் முனைக்குச் சென்றன; பல பெரும் வெற்றிகளையும் அடைந்தன. ஆனால், ஜெர்மானியர்கள் தோற்றால், அதற்குக் காரணம் என்ன சொல்லுவார்கள் தெரியுமா? தாம் கடுமையாகத் தாக்கவில்லையென்றும், ரஷ்யர்களின் தாக்குதல்களை மழுங்கச் செய்ய முயற்சித்ததாகவும் தான் காரணங் கூறுவார்கள். தாம் திடீரென்று பூரண வெற்றியடைய வேண்டுமென்று ஜெர்மானியர் விரும்பினார்கள். அது பலிக்கவில்லை. ஆகவே, இந்தத் தோல்வியைக் கூட, தமக்குச் சாதகமான முறையில வியாக்கியானம் செய்து கொள்ளுகிறார்கள். இங்கே ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. நாஜிகள் தம் பிரசாரத்தை மிகவும் எச்சரிக்கையோடு செய்து வருகிறார்கள். தற்போது நடைபெறும் யுத்தத்தை மிகவும் அற்பமாகப் பிறர் மதிக்கும்படி பூசி மெழுகுகிறார். இதற்குக் காரணம் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பது போல, (1) கர்ஸ்க் வளைவைத் தரை மட்டமாக்குவது, (2) ஓரெல் பகுதிக்கு வடக்கிலும், பையல்காராட் பகுதிக்குத் தெற்கிலும் தம் இரண்டு படைகளையும் சந்திக்கும்படி செய்ய வேண்டியது, ( ) மாஸ்கோவிற்குத் தாம் போய்ச் சேர, குறுக்கு வழி கண்டு பிடிக்க வேண்டியது. பிரமாத ஆடம்பரத்தோடு தான் சாதாரணமாகத் தம் நோக்கத்தை வெளியிடுவது ஜெர்மானியர்களின் வழக்கம். ஆனால், இந்த முறை அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

* * *

**மூன்றாவது கோடைத் தாக்குதல்: தாமதத்திற்கு இரண்டு காரணங்கள்**

1941-ம் வருஷம் கோடை காலத் தாக்குதல் ஆரம்பித்த தேதியை விட, இந்த வருஷம் ஆரம்பித்த தேதி 12 நாட்கள் கழித்துத் தான். அது போலவே 1942-ம் வருஷக் கோடை காலத் தாக்குதல் ஆரம்பித்த தேதியை விட, இந்த வருஷம் ஆரம்பித்த தேதி 15 நாட்கள் கழித்துத் தான். அதாவது இந்த மூன்றாவது வருஷக் கோடை காலத் தாக்குதல் ஜூலை மாதம் 5-ம் தேதி காலையில் தான் ஆரம்பமானது. இவ்வளவு தூரம் தாமதமானதற்குக் காரணம் என்ன? துனீசியப் போராட்டந் தான் இதற்குக் காரணம். எதிர்பார்த்ததை விட விரைவாகவே, துனீசியாவில் நேச நாடுகளுக்கு வெற்றி கிடைத்தது. இதன் பயனாக, ஐரோப்பிய அரணின் தென் மதில்களைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் ஹிட்லருக்கு ஏற்பட்டது. இதனால் தான் இதற்கு முன்னதாகவே போராட்டத்தை ஆரம்பிக்க ஹிட்லரால் முடியவில்லை. ஜெர்மன் தாக்குதல் தடைப்பட்டதற்கு, மற்றொரு முக்கியமான காரணமுமுண்டு. ஜெர்மன் அணிவகுப்புக்களுக்குப் பின்புரம் ரஷ்ய விமானப் படைகள் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தன. இதன் பயனாக, ஜெர்மன் போக்கு வரவுகள் வெகுவாகத் தடுமாறி விட்டன. இவர்கள் விமான நிலையங்கள் வெகுவாகப் பழுதாயின. அன்றியும், போர் முனையிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து உதவிக் கொண்டிருந்த 'சப்ளை டிப்போ'க்களும் மிகவும் பழுதுபட்டன.

(8-ம் பக்கம் பார்க்க)




யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஞு ஜூலையீ 23உ. [இதழ் 29


# சிசிலியில் முதல் வெற்றி

சிசிலியைத் தாக்கும் பொருட்டு மிகச் சிறந்த முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. இதில் பல திரப்பட்ட 2,000 கப்பல்கள் பங்கு கொண்டன. சிசிலியின் தென் கரையிலுள்ள கேலா, லிரேடா ஆகிய ஊர்களுக்கருகில் அமெரிக்க ஏழாம் படை இறங்கியது. இதன் தலைவர் லெப்டினெண்ட் ஜெனரல் பாட்டன். சிசிலியின் கிழக்குக் கரையில் பாசெரோ முனை இருக்கிறது. இங்கே பிரிட்டிஷ் எட்டாம் படை ஜெனரல் மண்ட்காமரி தலைமையில் வந்திறங்கின. இந்தத் தீவின் மேல் திசையில் தான் நேச நாட்டுப் படைகள் தாக்குமென்று இத்தாலியர்களும் ஜெர்மானியர்களும் எதிர் பார்த்திருந்தனர். ஆகவே சிசிலி பொது மக்கள் இதில் ஏமாந்து போயினர். இந்த இரண்டு படைகளும் கரையில் இறங்கி விசிறி போல் பரவி, ரகூசா என்னும் இடத்தில் ஒன்றுபட்டன. இவ்வாறாக, சிசிலியின் தென் கிழக்குப் பகுதி முழுதும், நேச நாடுகள் வசப்பட்டுவிட்டன. இங்கேயுள்ள பல விமான நிலையங்களும் நேச நாடுகள் கைக்கு வந்து விட்டன. எட்டாம் படை கரை ஏறிய 24 மணி நேரத்தில், சைராக்யூஸ் என்னும் கப்பல் தளத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இது மகா ஆச்சரியமான தோர் சம்பவம். இங்கே பல முறை பண்டைக் காலத்தில் முற்றுகைகள் போட்டிருந்திருக்கிறார்கள். இது மிகப் பெரிய துறைமுகம். இயற்கையாகவே இது அமைந்துள்ளது. இங்கே தான் ஆர்க்கிமிடிக்ஸ் என்னும் விஞ்ஞானி, எதிர்த்து முற்றுகையிட்டுக் கொண்டிருந்த ரோமன் படைகளை, ஒரு பெரிய பூதக்கண்ணாடியின் உதவியால், சூரியனுடைய வெப்பத்தைக் கொண்டு, எரித்துச் சாம்பலாக்கினார். சைராக்யூசைப் பிடித்தப் பிறகு அதற்கு 10 மைல்களுக்கு வடக்கேயுள்ள அகஸ்டா என்னும் இன்னொரு துறைமுகத்தையும் கைப்பற்றினார்கள் எட்டாம் படையினர். சைராக்யூசைப் போலவே இதுவும் ஒரு முக்கியமான துறைமுகம். இங்கே நீர் மூழ்கிக் கப்பல்களுக்கும் விமானந் தாங்கிக் கப்பல்களுக்கும், விமானங்களுக்கும் தளங்கள் அமைந்திருக்கின்றன. இந்த இரண்டு முக்கியமான தளங்களும் கொஞ்சங்கூடச் சேதப்படாமல் நேச நாட்டினருக்குக் கிடைத்தது அவர்கள் அதிர்ஷ்ட வசந்தான் என்று சொல்ல வேண்டும். அதே சமயத்தில், அமெரிக்கர்கள் வடக்கிலும் தெற்கிலும் கரையோரமாகவும், உள் நாட்டை நோக்கியும் பரவிக் கொண்டிருந்தனர். கனடியப் படைகளோ, பரசெபோ முனையைச் சுற்றி வசப்படுத்திக் கொண்டிருந்தனர்.

இங்கே எதிரிகள் கடுமையாக எதிர்த்துத் தாக்கக் கூட வில்லை. இதன் பயனாக 35.000 பேர்கள் எதிரிகளில் கைதியானார்கள். இவர்கள் பெரும்பாலும் மேற்குக் கரையில் இருந்தவர்கள். கிழக் கரையில் ஜெர்மன் படைகள் திரண்டிருந்தன; எனவே, அவர்கள் மன ஊக்கத் தோடிருந்தனர். இத்தாலியர்களைக் கட்டுப்பாடின்றி விட்டு விட்டால், தாமாகவே அவர்கள் சரணடைந்து விடுவார்கள். அங்குள்ள அச்சு நாட்டுப் படைகளின் எண்ணிக்கை சுமார் 3½ லட்சம். இவர்களில் ஜெர்மானியர்கள் மட்டும் 60 ஆயிரம் பேர். இப்போது காடினு துறைமுகத் தருகில் போர் நடைபெறுகிறது. இது ஒரு கப்பற் படைத்தளம். இதையடுத்து ஒரு சம வெளி யிருக்கிறது. இது தான் சிசிலியிலேயே மிகப் பெரிய சமவெளி. இங்கே தான் எதிரிகள் வேரூன்றிக் கொண்டு போராடுவார்களென்று எதிர் பார்க்கப்பட்டது. இந்தச் சம வெளியின் ஓரமாக, கரை நெடுக எட்டாம் படை வந்து சேர்ந்தது. இதன் வழியில் 'லென்டினி' என்னு மோர் இடமிருக்கிறது. இங்கே ஒரு குறுகிய பாதையுண்டு. இதன் வழியாக ஒரு ரோடும் ரயில் பாதையும் போகின்றன. இந்த இடத்தில் ஜெர்மானியர்கள் தம் டாங்கிகளைக் கொண்டு பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் மண்ட்காமரியின் படைகளுக்கு முன்பு, அவர்களால் நிற்க முடியவில்லை. ஜெனரல் கஜ்ஜோனியின் படைகளைத் திணற அடிக்கின்றது பிரிட்டிஷ் எட்டாம் படை. கடேனியாவிற்கு 2 மைல் தூரத்தில் தான் நேச நாட்டுப் படைகள் இப்போதிருக்கின்றன.

இப்போது, அச்சு நாட்டுப் படைகள் மஸீனாவை நோக்கிப் பின் வாங்கிக் கொண்டிருக்கின்றன. இவை எவ்வளவு தூரம் பின் வாங்கிக் கொண்டு போகுமென்று நாம் எதுவும் திட்டமாகச் சொல்ல முடியாது.

நிற்க. இத்தாலியின் தலை நகராகிய ரோமாபுரியையே நேச தேச விமானங்கள் தாக்கக் கிளம்பிவிட்டன. அதுவும் பட்டப்பகலில். ரோமாபுரி மிகப் பழைய நகரமல்லவா? கலைச் சின்னங்கள் அங்கே வெகு அதிகம். மத சம்பந்தமான கட்டிடங்களும் மிகவும் உண்டு. இவையன்றி இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பல விடங்களும் கூட இருக்கின்றன. இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பல விடங்களையும் நேச நாட்டுப் படைகள் நிர்தூளி செய்து கொண்டு வருகின்றன. சுமார் 2½ மணி நேரத்தில் 350 டன் வெடி குண்டுகள் ரோமாபுரி நகரத்தின் மீது எறியப்பட்டன என்றால் அந் நகரத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கும்?

* * *

அங்கே நாம் அடைந்த வெற்றிகளைக் கொண்டு, நாம் பெருமிதமடையக் கூடாது. இவ் வெற்றிகளால் நமக்கு இலாபம் உண்டு என்பது உண்மை தான்.

வடாப்பிரிக்காவில் வெற்றி பெற்ற படைத் தலைவர்கள் தான் இங்கும் படைத் தலைமை தாங்கிப் போராடுகிறார்கள். ஜெனரல் அய்சினோவர் தான் பிரதம படைத் தலைவர். இவருடைய ஆணைக் குட்பட்டு ஜெனரல் மண்ட்காமரியும், ஜெனரல் சர் ஹெரால்ட் அலெக்சாந்தரும், கர்னல் ப்ளாட்டும் தத்தம் படைகளைக் கொண்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள். சிசிலித் தீவுக்கு இராணுவ கவர்னராக ஜெனரல் சர் ஹரால்ட் அலெக்சாந்தரை ஜெனரல் அய்சினோவர் நியமித்திருக்கிறார்.

சிசிலியின் வட பகுதியில் மலைகள் அதிகம். இங்கே கடுமையான போராட்டம் நடை பெறக்கூடும். இதை நாம் இலகுவாக நினைத்து விட முடியாது. ஏனென்றால் இத்தாலியும் ஜெர்மனியும் சிசிலி தீவை இழக்க முடியாது என்று தான் சொல்ல வேண்டும். சிசிலி தீவை நேச தேசப் படைகள் வென்றால், அச்சு நாடுகளின் ஆணி வேர் கலகலத்து விடும். எனவே தான் எப்பாடு பட்டாவது சிசிலியைக் காப்பாற்ற அச்சு நாட்டுப் படைகள் முயற்சிக்கும். இதைச் சமாளித்து வெற்றி காண வேண்டியது நேச தேசப் படைகளின் கடமை. இந்தக் கடமையை அவை நிறை வேற்றும் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

# ஏழைக் குழந்தையும் பாட்டினால் சொக்குகிறது

## பாவமும், இசையும், மொழியும் ஒருங்கே தோற்றுவிப்பது

### யுத்த முயற்சியும் பாடலும்

*சென்னை வானொலி நிலயத்திலிருந்து ஜூலை மாதம் 21-ம் தேதி மாலே, **புதுவை பாரதிதாசன்** அவர்கள் "யுத்த முயற்சி" என்னும் தொடரில், ஒலி பெருக்கிய பிரசங்கம் வருமாறு :—*

இப்போது நடந்து வரும் உலக யுத்தத்தில் நம் நேச நாடு வெற்றிபெறவேண்டிய அவசியத்தை இந்தியப் பொது மக்கள் உணரவேண்டும். அல்லாமலும், யுத்த காலத்தில் ஏற்படும் பல வகையான நெருக்கடிகளிலும் மக்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை அவர்கட்கு எடுத்துக் காட்டவேண்டும். இந்தப் பிரசாரமானது, ஆங்கில சர்க்காரால் நடக்கும் யுத்த சஞ்சிகை என்னும் பத்திரிகை வாயிலாகவும், பிரசங்க வாயிலாகவும் நடந்து தான் வருகிறது.

ஆயினும் அவைகள் வசன நடையால் தான் நடைபெறுகின்றன. யுத்த முயற்சியானது அதாவது யுத்தப் பிரசாரமானது பாடல்களால் நடத்தப்பட்டால் எப்படியிருக்கும்? என்பது பற்றித் தான் 'யுத்த முயற்சியும் பாடலும்' என்ற தலைப்புடன் இப்போது சிறிது சொல்ல ஆசைப்படுகிறேன்.

உரை நடையைப் பார்க்கிலும் பாடல் மக்கள் உள்ளத்தைக் கவரக்கூடிய தென்றால், அதை யாராவது மறுக்க முடியுமா?—ஏனெனில் உரை நடைக்கு இல்லாத சில மேன்மைகள் பாடலுக்கு அமைந்திருக்கின்றன. கவிஞனின் உள்ளத்திலிருந்து பாவமும் இசையும், மொழியும் அதாவது கருத்தும் ஒரே காலத்தில் தோன்றுவதல்லவா பாடல்!

பாவம் என்றால் என்ன? எதிரியின் குண்டு வீழ இருக்கையில் ஒரு கிழவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிக் கவிஞன் பாடல் எழுதுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அந்தக் கவிஞனின் உள்ளம் முதலில் கிழவனின் உருவத்தை யடையும். அதைத் தான் பாவம் என்பது.

இசை என்பது என்ன? அந்தந்த நாட்டில், பழநாள் தொட்டு மக்களின் உணர்வில் ஊறி நாளடைவில் உருப்பட்ட இலக்கணம் உடையது. பாட்டுக்குப் பாவம் எப்படியோ, அப்படியே இசையும் முக்கியம்.

இனி மொழி என்பது அந்நாட்டின் பேச்சு. பாட்டுக்கு வேண்டிய மொழிகள், எல்லாருக்கும் புரியும்படி இருக்க வேண்டும். இலக்கண முடையவையாகவும் இருக்க வேண்டும்.

### கவிஞனின் உள்ளம்

இப்படிப்பட்ட, பாவமும், இசையும், கருத்தும் பிறக்கின்ற கவிஞனின் உள்ளமானது மொழி யிலக்கணம். யாப்பிலக்கணம் பிழையறதா யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் பாடும் பாடல்கள் பாடியவனுடைய பெருமையைக் கெடுத்து விடுவதோடு, எதைக் குறித்துப் பாடினானோ அந்தச் செய்தியே இகழ்ச்சிக் குரியதாகிவிடும்.

பாடல்களின் நோக்கம் என்ன எனில், பாவமும் இசையும் மொழியும் இருப்பது மாத்திரமல்ல; பாடும்போது கருத்து விளக்கமுற வேண்டும். பாடலில் மொழி அதாவது கருத்துத் தான் இரத்தினம். பாவமும் இசையும் வர்ணத்தகடும், வேலைப் பாடுந் தான்.

இப்போது உரை நடைக்கும் பாடலுக்கும் உள்ள வேறுபாடு விளங்கியிருக்கும். பாடலின் மேன்மையை இன்னம் கூறவேண்டுமானால், உரைநடையானது கேட்க முடியும், எழுதிவைக்க முடியும், நினைவில் நிறுத்த ஏற்றதல்ல. பாட்டு நினைவில் நிற்கும். பாடுவது பாட்டின் கருத்தை மக்கள் நினைவில் நிற்கச் செய்யத் தானே!

பாடலினால் ஒரு கருத்தை மற்றொருவன் நெஞ்சில், உரித்த சூளை போல் புகுத்த முடியும். அது போலவே இன்பம் பயக்கும். இன்னொன்று பாருங்கள். ஆயிரம் பேர் பேசட்டும். அது சந்தைக் கடை கூச்சலாகவோ அல்லது அறிஞரின் சொற்பொழிவாகவோ இருக்கட்டும். எதுவாயிருந்தாலும் அந்தப் பேச்சு நடுவில் ஒரு பாடல் கிளம்பினால், எல்லோருடைய செவிகளும் அப்பாட்டை நோக்கியே திரும்பும். சூரியனை நோக்கிச் சூரியகாந்திப் பூ திரும்புவது போல, அதென்னமோ பாடலில் மக்கள் நெஞ்சை அள்ளும் ஒரு வகை வன்மை அமைந்திருக்கிறது.

பாடலின் மேன்மை அதன் உபயோகம் இவற்றைக் கருதியல்லவா மதத் தலைவர்களும், தாம் தம் கொள்கையைப் பாடலால் அமைத்தார்கள். சைவக் கொள்கையை நிறுவத் தேவார திருவாசகங்கள் என்ன, வைணவத்திற்குத் திருவாய்மொழி என்ன, மற்றும் வேதாந்த கருத்துக்களுக்குத் திருப்புகழ், தாயுமானார் என்ன, இவைகள் எல்லாம் இன்னிசைப் பாடல்கள் எல்லவா? வேதங்கள் பாடல்கள். இன்னும் கிறிஸ்தவம், இஸ்லாமியம் கூடப் பாடலால் மக்கள் உள்ளத்தைக் கவரும் நோக்கம் உடையவை.

### உயிரின் இயற்கை

பாட்டுக்கு மகிழ்வதென்பது, உயிரின் இயற்கை என்று கூடச் சொல்லலாம். மனிதனின் இயல்பான நிலை தவிரச் சிறிது மகிழ்ச்சி உண்டானால், அவன் பாட அல்லவா தொடங்கி விடுகிறான். ஏழைக் குழந்தை பாட்டை விரும்புகிற தென்றால், பாட்டில் உள்ள பாசத் தன்மை பற்றிக் கூறவா வேண்டும்?

உடல் நலியப் பாடு படுகிறவர்களும் பாடுகிறார்கள். உழுபவன் பாடுகிறான். ஏற்றம் இறைப்பவன் பாடுகிறான். இவ்விடத்தில் மற்றோர் உண்மை நமக்கு விளங்குகிறது, பாட்டானது மனிதனுக்கு இன்பந் தருவது மட்டிலும் அல்லாமல், அது, இருக்கும் துன்பத்தையும் நீக்கக் கூடியது. சேற்றில் முள் தைப்பது கூடத் தெரியவில்லை உழவுப் பாடகனுக்கு.

பாட்டின் உபயோகத்தைச் சொல்ல வேண்டுமானால், நன்றாக அமைந்த பாடல் தன் கருத்துப்படி மனிதனைத் திருப்புகிறது. இது தான் பாட்டினிடத்தில் உள்ள குறிப்பிடத் தக்க மேன்மை.

சிவப்பிரகாச சுவாமிகள் திருவாசகப் பாடலைப் பற்றிக் கூறுகிறார்

> திருவாசகம் இங்கு ஒருகால் ஓதில்
> கருங்கல் மனமும் கரைந்துகக கண்கள்
> தொடுமணற் கேணியில் சுரந்துநீர்பாய
> மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப் பெய்தி
> அன்ப ராகுநர் அன்றி
> மன்பதை யுலகில் மற்றைய ரிலரே
>
> என்பதாக!

வீரப் பாடலோ எனில் பயமற்ற நெஞ்சையும் துடித்தெழும்படி செய்கிறது. இதற்குச் சான்று பிரான்ஸ் தேசத்து உலகம் புகழ்பெற்ற மார்ஸேயேஸ் என்னும் போர் நடைப் பாட்டு ஒன்றே போதும்.

சோகப் பாட்டு, சோகம் பொழிவதைச் சந்திரமதி புலம்பலே சொல்லிவிடும்.

### பாட்டின் பெருமை

பாட்டுக்கு முன் வறுமை பறக்கிறது. பாட்டுக்கு முன் பசி பறக்கிறது. "செவிக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்று கூறினார் வள்ளுவர்.

பிச்சைக்காரன் பாடிக் கொண்டே பிச்சை கேட்கிறான். அவனுக்குச் சோறு கிடைக்காவிடில், பாட்டோடு தூங்கி விடுகிறான் இரவில்.

பாட்டில் இன்னொரு சொக்குப்பொடி. பகலெல்லாம் உழைத்து அரைத் தூக்கத்தில் கிடக்கும் ஒரு பெண்ணையும், பிச்சைக்காரனின் தெருப்பாட்டு எழுப்பிவிடுகிறது. விரையாய் எழுந்து பிச்சை யிடுகிறாள்.

இன்னொன்று கேளுங்கள். மூக்கறையன் பாடினால் நன்றாயிராது. பாடாமல் இருப்பதில்லை. நொணநொண என்று பாடுகிறான் உரக்க. பல்லில்லாக் கிழவர்க்கும் பாட்டு வெறி. இது மட்டுமா? பாடும் உணர்வே யில்லாதவன்கூட, மற்றவன் பாடும் விருத்தத்துக்குத் தாளம் போட்டுத் தலை யசைத்து மகிழ்கின்றான்.

இவற்றையெல்லாம் எண்ணித் தான், நம் தமிழையே மூன்றாகப் பிரித்து, இசையை நடுவில் அமைத்தார்கள். மேலும் ஆய கலைகள் அறுபத்து நான்கில் பாட்டையும் ஒலியத்தையும் நெருங்கலை என்றும் லலிதவித்யா என்றும் கூறினார்கள்.

ஆதலால யுத்தப் பிரசாரத்தைப் பாடல் வாயிலாகச் செய்வது நல்லது என்பது மட்டு மல்ல. கட்டாயமாகச் செய்யத் தக்கது என்றும் சொல்லலாம்.

நம் நேச நாடு வெற்றி பெறவேண்டிய அவசியத்தையும், நெருக்கடியால் நடந்து கொள்ளவேண்டிய முறையையும் எதையும் பாடல் மக்களிடம் சுமந்து செல்லும் ஒட்டகம்போல. போர்ப்பற்றிய எண்ணங்களை மக்கள் எண்ணமாகவே மாற்ற வல்லது பாட்டுப் பிரசாரந்தான்.



# வெற்றிப் பாதையில்!

இன்றல்ல நேற்றல்ல. சென்ற எட்டு மாத காலமாகவே அட்லாண்டிக் கடலைக் கடந்து எண்ணற்ற துருப்புகள் மத்யதரைக்கடல் போரிலும் ஐரோப்பாவை அரக்கர்களிடமிருந்து விடுவிக்க நடத்தப்போகும் போரிலும் கலந்துகொள்ள இடைவிடாது வந்திருக்கிறார்கள் என்ற செய்தி இபபொழுதே வெளியிடப்பட்டிருககிறது. வெற்றி பெற்றே தீருவோம் என்பதே நேசதேசத்தாரின் திடநம்பிக்கை. 'அந்த நம்பிக்கை நனவாகும் காலம் சமீபத்திலேயே இருக்கிறது' என்று பலர் சொல்லுகிறார்கள். இன்னும் வெகுகாலம் யுத்தம் நடந்தாலும், இறுதியில் நமக்கே வெற்றி என்பதைப் பற்றி இப்பொழுது இரண்டுபட்ட அபிப்பிராயங்கள் இல்லவே இல்லை.

நமது நேசதேசப் படைகள் அசல் வெற்றிப் பாதையில் இறங்கிவிட்டார்கள். ஸிஸிலியிலே நடக்கிறதே கடும் போர், இது ஐரோப்பாவில் நடக்கப்போகும் பெரிய போரின முதல் அத்தியாயம். இந்த அத்தியாயத்தில் பாதியை ரொம்ப ஜோராகப் படித்து முடித்து விட்டார்கள் நம்மவர்கள். ஸிஸிலியில் மூன்றிலொரு பங்கிற்குமேல் இவர்கள் கைகளில் பிடிபட்டுவிட்டது.

ஒருபுறம் அமெரிக்கர்கள். நடுவே கனடிய வீரர்கள். கீழ்த்திசையிலே உலகம்புகழ் பிரிட்டிஷ் எட்டாவது சேனை. முன்னேறிய வண்ணமாகவே இருக்கின்றன. பிரிட்டிஷ் சேனைக்கு ஏக எதிர்ப்பு இருக்கிறதாம். முன்னேறும் வேகம் சற்றுக் குறைந்திருந்தாலும், முன்னேறுவது தடைப்படவில்லை. கடானியா என்பது ஒரு முக்கியமான துறைமுகப் பட்டினம். இதைப் பிடிக்கவே யத்தனங்கள் செய்யப்படுகின்றன. கடலிலிருந்து கப்பல்களும் மேலேயிருந்து விமானங்களும் இந்நகரைச் சுட்டெரிக்கின்றன. ஒரே தீக்காடாக இருக்கிறதாம். மூலையில் சிக்கிக்கொண்ட முரட்டு எலிகள் மாதிரி ஆவேசத்தோடு சண்டைபோடுகிறார்களாம் அச்சு வீரர்கள். எலியை அடிப்பதுபோல் அவர்களை அடிக்கவே நேசதேசத்தார் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நேசதேசப் படைகளில் ஒரு பகுதி ஸிஸிலியின் நடுவே உள்ள என்னா என்ற நகரை அடைந்து விட்டனவாம். 'இனி என்ன?'

இந்தத் தீவு வெகு முக்யமான தீவு. இதை கிரேக்கர்கள் கார்த்தஜீனியர்கள் ரோமர்கள், காத் எனும் ஜாதியினர், பைஸான்டைன் என்போர், ஸாரஸன்ஸ், நார்மனஸ், ஜர்மானியர், பிரஞ்சுக்காரர்கள், ஸ்பானியர்கள்—இத்தனை ஜாதியினரும் ஆண்டிருக்கிறார்கள். பத்தொன்பதாவது நூற்றாண்டிலே, இதை இத்தாலிய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார் கரிபால்டி என்பவர்.

### சிசிலியின் சிறப்பு.

இந்த யுத்தத்திலே, லிபியாவிற்கும் ட்யூனிஸியாவிற்கும் அச்சுப் படைகளுக்கு உதவிகளைக் கொண்டு சேர்த்தவர்களுக்கெல்லாம் கால் வைதது சுகமாகத் தாவ வசதியளித்துவந்த தீவு இதுதான். ஆரஞ்சு மரங்கள் இங்கே அபரிமிதமாயிருக்கின்றன. இப்பொழுது நமது படைகள் பதுங்கிச் செல்ல வெகுவாக உபயோகப்படுகின்றன இவை. இத்தீவிலே தான் எட்னா என்ற எரிமலை இருக்கிறது. இத்தீவிலே நாற்பது லக்ஷம் பேர்களிருக்கிறார்கள். இங்கே உள்ள நிலங்களில் பெரும் பகுதி உழுது சாகுபடி செய்யப்படுகிறது. இங்கே 1,200 மைல் நீளமுள்ள ரயில் பாதைகள் இருக்கின்றன. இத்தாலிக்கும் இத்தீவிற்கும் இடையே ஒரு இடத்தில் இரண்டு மைல் அகலம் தான் கடலிருக்கிறது. ஆகவே, இத்தீவு முழுவதும் நம் கைவசமானால், இத்தாலியை நொறுக்க ஒரு அற்புதமான சாதனம் நமக்குக் கிடைத்தது போலாகும். அதற்காகவே லக்ஷககணக்கிலே இத்தீவிலே நம்மவர்கள், ஆபத்துகளையெல்லாம் லக்ஷ்யம் செய்யாது போய் இறங்கியிருக்கிறார்கள்; அதற்காகவே, அச்சு நாட்டார் பேயாகப் போராடுகிறார்கள். அவர்கள் எப்படித்தான் போராடட்டுமே; இனி அவர்கள் ஸிஸிலியில் அதிக நாட்கள் வாலாட்டமுடியாது. இப்பொழுதே அங்குள்ள ஜெர்மன் படைகள் அதிவேகமாக இத்தாலிக்குப் பின்வாங்கிப் போகினறனவாம். இத்தாலியர்கள்தான் அசட்டுத்தனமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஸிஸிலியிலே பிடிபட்ட பிரதேசங்களை நிர்வகிக்க ஒரு ராணுவ சர்க்காரை ஏற்படுத்தி, அதற்கு ஜெனரல் அலெக்ஸாந்தரை ராணுவ கவர்னராகவும் நியமித்துவிட்டார்கள். இந்த கவர்னர் தமது முதல் அறிக்கையை வெளியிட்டாயிற்று.

ராணுவச் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் வரை, இங்குள்ள இத்தாலியர்கள் வழக்கம்போல் தங்கள் தொழில்களைச் செய்து வரலாம். நேசதேச ராணுவத்தினர் இங்கு உள்ளவரை, இத்தாலிய அரசாது ஆதிக்கம் இங்கு இராது. இப்பொழுதுள்ள இத்தாலிய சட்டதிட்டங்களே இனியும் இருக்கும். இங்குள்ள பாஸிஸ்ட் கட்சி கலைக்கப்படும். ஆளுக்கொரு சட்டம் என்றிருப்பதெல்லாம் போச்சு!

இதுவே இந்த ராணுவ கவர்னர் அறிக்கையில் அடங்கிய விஷயங்கள். இம்மாதிரியே இத்தாலியில் பிடிபடப்போகும் பிரதேசங்களும் நிர்வகிக்கப்படப்போகின்றன. இதைப் பார்க்கும்பொழுது இனி நடக்கப் போவது என்ன என்பது தெரியவில்லையா? அவ்வாறு தெரியவில்லை என்போருக்குத் தெரியும்படி செய்யத் தான், நேசதேச விமானங்கள் இத்தாலிய நகரங்களை அதிகக் கடுமையுடன் தாக்குகின்றன. சென்ற நான்கு வருடகாலமாக குண்டுவீச்சின் சுவையையே அநுபவித்திராத ரோம் நகரின்மீது சென்ற திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு, நல்ல ராகுகால வேளையில் குண்டுகள் சம்பிரமமாக வீசப்பெற்றன. ரயில்வே ஸ்டேஷனும், கூட்ஸ் வண்டிகள் நின்றுகொண்டிருந்த பிரதேசமும் பலமாகத் தாக்கப்பெற்றன. இரண்டரை மணி நேரம் வாணவேடிக்கை நடந்ததாம். அதற்கு முன்பாக, பொது ஜனங்களை எச்சரிக்கவும், ரோமாபுரி அச்சுநாட்டாரின் அக்ரமப்போருக்கு உதவும் அதிமுக்யமான நகராக இருப்பதை உத்தேசித்து அதைத் தாக்கவேண்டி வந்திருப்பதையும், போப்பாண்டவருக்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கொடுத்துள்ள வாக்குப்படி, கூடியவரை கோவில்களும், கலை, மதஸ்தாபனங்களும் தாக்கப்படும் என்பதைத் தெரிவிப்பதற்கும் துண்டுப் பிரசுரங்கள் ஏராளமாக வீசப்பட்டன. அப்புறமே குண்டுவீச்சு நடந்திருக்கிறது.

இந்தச் செய்தி உலகோருக்கு பிரமிப்பையும், நேசதேசத்தாரது திடமான தீர்மானத்தையும் நன்றாக எடுத்துக் காட்டிவிட்டது. இத்தாலியர் புத்திசாலிகளானால், ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், பிரதம மந்திரி சர்ச்சிலும் சேர்ந்து அறிவித்துள்ளபடி, மரியாதையாக நிபந்தனையின்றி நேசதேசத்தாரிடம் சரண் புகுந்துவிட வேண்டும். இத்தாலியைக் குட்டிச்சுவராகப் போகச்செய்த பாஸிஸ்ட் கட்சித் தலைவர்களை ஒழிக்க வேண்டும் இல்லாவிட்டால், அவர்கள் யுத்த அரக்கனின் ஆவேசத்திற்குப் பலியாகியே தீருவார்கள். ஜெர்மனியோடு சேர்ந்திருப்பவர்கள் யாரானாலும் அவர்கள் உலக க்ஷேமத்தின் விரோதிகள் என்றே கருதப்படுவார்கள். அத்தகைய விரோதிக்கு பஞ்சணை மெத்தையும், சம்பிரமமான விருந்தும் அளித்துக் கொண்டிருப்பார்களா. யாராவது மண்டையிலடித்து மட்டந்தட்ட அல்லவா வேண்டும். அதைச் செய்தபின்னரே நேசதேசத்தா நிற்கப்போகிறார்கள்.

கூடிய சீக்கிரமே ஸிஸிலி பிடிபடலாம். அங்குள்ள இத்தாலியர்களில் பலர் ஏற்கெனவே கிளர்ச்சி செய்யத் தொடங்கி விட்டார்களாம். ஜர்மன் சேனுபதிகளின் கட்டளைகளை எதிர்த்து நடக்கத் துணிந்து விட்டார்களாம். ஸிஸிலி ஆச்சு என்றால் இத்தாலியில் போய் இறங்குவார்கள் நேசதேசத்தார். இதுவே ஐரோப்பியப் போரின் இரண்டாவது கட்டமாகும். நேசதேசத்தாரின் விமான பலம் நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. அச்சுப்படைகள் மெஸினாவை நோக்கிப் பின்வாங்கிக் கொண்டிருக்கின்றனவாம். ஹிட்லரும் முஸோலினியும், வடக்கு இத்தாலியில் ஒரு இடத்தில் சந்தித்துப் பேசினார்களாம் இனி, அச்சுத் தலைவர்கள் மனங்களில் ஏக உதைப்பு இருக்க வேண்டியது தானே நியாயம்!

ருஷ்யாவிலே, ருஷ்யர்கள் கிளம்பிவிட்டார்கள் ஜெர்மானியரை நொறுக்க. ஜெர்மனியின் கோடைப் படையெடுப்பு புஸ்வாணம்போல், சிறிது நேரம் எரிந்து புகைந்துவிட்டது. ருஷ்யர்கள் அவர்களைப் பின்னே துரத்தத் தொடங்கிவிட்டார்கள். ஜெர்மானியருக்கு மற்றொரு ஸ்டாலின்கிராட் அநுபவம் ஏற்படும்போலிருக்கிறதாம். இத்தாலியிலே போர் தொடங்கிவிட்டால், அப்பால் அச்சு நாட்டார் அவதி இன்னும் அதிகமாகும். நேசதேசத்தார் வெற்றிப்பாதையில் புகுந்துவிட்டது எவ்வளவு தூரம் உண்மையோ, அவ்வளவு தூரம் அச்சுநாட்டினர் தோல்விப் பாதைக்குத் துரத்தப்பட்டார்கள் என்பதும் உண்மை.

## நம் நாட்டின் முக்கிய பிரச்சினை

நம் நாட்டின் சில பகுதிகளில் உணவுப் பஞ்சம் தான் மிகவும் முக்கியமான பிரச்சினை, நாட்டில் தானியங்கள் இருக்கின்றன, ஆனால், திருட்டுத்தனமாக, அதிக விலைக்கு விற்கிறவர்கள் கையில், அவை சிக்கியிருக்கின்றன.

உணவுப் பொருள்களின் போக்கு வரவை, திருட்டுத் தனமாக அதிக விலைக்கு விற்கிறவர்கள் தடை செய்யக் கூடா தென்ற மன உறுதி, இந்நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் கொள்ளுவார்களானால், நிச்சயம் வெற்றி பெற முடியும்.

திருட்டுத் தனமாக, அதிக விலைக்கு விற்கும்படி அனுமதிக்கக் கூடாதென்று நாம் அனைவரும் உறுதி கொண்டால், அப்படிப்பட்ட விற்பனையே நடைபெறாது.

டாக்காவில் அரிசிப் பஞ்சம் என்று அறிவிக்கப்பட்டது. போலீசார், 7 பெரிய வியாபாரிகளின் கிடங்குகளைச் சோதனை யிட்டதில், அங்கே சேமித்து வைக்கப்பட்டிருந்த 20,000 மணக்கு அரிசி அகப்பட்டது. அந்த வியாபாரிகளைக் கைது செய்து காவலில் வைத்தனர். இப்படி சேமித்து வைக்கப்பட்டிருக்கும் உணவு தானியங்களைக் கண்டு பிடிப்பதில், பொது ஜனங்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு உதவுவார்களானால், திருட்டுத்தனமாக அதிக விலைக்கு விற்பது நின்றுவிடும். நாட்டிலுள்ளவர்கள் அனைவரும் இது பற்றி உறுதி கொண்டால், இந்தியாவில் எந்தப் பகுதிக்கு உணவுப் பொருள்கள் தேவையோ, அங்கே, அவற்றை விரைவில் அனுப்பக் கூடுமென்பது நிச்சயம்.

தொழிலாளர் பகுதி

# ஜெர்மனியில் தொழிலாளர் அலங்கோலம்

எல்லோரைப்போலவே நானும் முணுமுணுத்தேன். இப்படி முணுமுணுப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நாம் வாழ்ந்து வேலை செய்யக்கூடிய நிலைமையைக் குறித்து நான் அடிக்கடி குறை கூறுகிறேன். என்றாலும், ஜெர்மனியிலுள்ள தொழிலாளர்கள் வாழும், நிலைமையோடு என் நிலைமையை ஒப்பிட்டுப்பார்த்தால், இது பரலோக வாழ்விற்குச் சமானம். ஏனென்றால், ஜெர்மன் தொழிலாளருக்குத் தந்த சுயேச்சையை, நாஜிகள் நாசஞ் செய்துவிட்டார்கள். அவர்கள் நம்மை அடிமைகள் எனத்தக்க நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். தன் வேலையை அவன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், மறு வார்த்தை பேசாது, அவன் செய்து தானாக வேண்டும். உங்களுக்கும் எனக்கும் இப்படிப்பட்ட நிர்ப்பந்தமில்லை. நாம் இஷ்டப்பட்டால், திரும்பவும் நம் கிராமங்களுக்குப் போய்ப் பயிர்த் தொழில் செய்யலாம்.

ஜெர்மனியில், ஹிட்லர் ஆதிக்கத்திற்கு வந்தவுடனே, தொழிலாளர்களை அவர் எப்படி அமைத்தார் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆறு மாதங்களுக்குள்ளாக எல்லாத் தொழிற் சங்கங்களும் கலைக்கப்பட்டன. தொழிலாளர் தலைவர்களை சிறைப்பட்டனர். ஒவ்வொரு தொழிலாளியும் "தொழிலாளர் முன்னணி" என்னும் ஓர் ஸ்தாபனத்தில் சேரவேண்டி யிருந்தது. ஆனால், அந்த ஸ்தாபனத்தை நடத்துவிப்பதில் அவர்களுக்கு ஒருவித உரிமையுமில்லை. விவாதிக்கக்கூடாது. "தொழிலாளர்கள் போர்முனையாளர்" சொல்லுகிற படி நடக்க வேண்டியது தான் அவருடைய வேலை. நாஜி நிர்வாகத்தில் ஒரு பதருக்குச் சமானமாகி விட்டார்கள் தொழிலாளர்கள்.

### வேலைக் கேற்ற கூலி இல்லை.

ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தவுடனேயே, நாடு முழுவதையும் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்யத் தலைப்பட்டார். யுத்தக் கைத்தொழில்களை நடத்துவதற்காக ஏராளமான தொழிலாளர்கள் தேவையாயிருந்தது! அளவிற்கு மீறி அதிக நேரம் தொழிலாளர்கள் வேலை செய்ய நேர்ந்தது. நாமுங் கூடத் தான் யுத்தத்திற்கு முன்பு வேலை செய்ததைவிட, அதிக நேரம் வேலை செய்கிறோம். இதற்கேற்றபடி நமக்கு அதிகச் சம்பளம் கிடைக்கிறது. ஆனால் ஜெர்மனியிலோ, அதிக நேரம் வேலை செய்தவர்களுக்கு அதே கூலி தான் கொடுக்கப்படுகிறது. அதிக நேர உழைப்பிற்கேற்ற நன்மை யொன்றும் அவர்களுக்கு கிடையாது. அவர்களுக்கு அதிகக் கூலி கொடுப்பதற்குப் பதிலாக, அவர்களுடைய கூலியிலேயே, ஆறில் ஒரு பங்குத் தொகையைப் பிடித்து "தொழிலாளர் முன்னணியாளர்" விரும்புகிறபடி, தொழிலாளர்களைக் கலந்து கொள்ளாமலேயே, செலவு செய்யப்படுகிறது.

அன்றியும், தொழிலாளர்கள் தம் வேலையை மகிழ்ச்சியோடு செய்து கொண்டிருக்க முடியாது. ஆடு மாடுகளைப் போல, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அடிக்கடி மாற்றி யனுப்பப்படுகிறார்கள். கல்கத்தாவில் வேலை பார்க்கும் ஒருவர் 12 மணி நேரத்தில் கான்பூருக்குப் புறப்பட வேண்டுமென்றால் அவரது நிலைமை எப்படியிருக்கும்? சென்னையிலுள்ள ஒருவரை லாகூருக்குப் போகத் தான் வேண்டுமென்று நிர்ப்பந்தித்தால் அவருடைய மன நிலை எப்படி இருக்குமென்று எண்ணிப் பாருங்கள். இப்படிப்பட்ட கட்டளைகள் தமக்குக் கிடைக்காதபடி தடுத்துக் கொள்ள ஜெர்மனியில் தொழிலாளர்களால் முடியாது. ஏனென்றால், இந்தக் கட்டளைகளை ஆட்சேபிப்பதே குற்றமாகும்.

### குடும்ப வாழ்விலும் சுயேச்சை யில்லை

தன் குடும்ப வாழ்க்கையில் கூட தொழிலாளிக்குச் சுயேச்சையில்லை. அவனுக்கு விதிக்கப்படும் கட்டளைப்படித் தான் அவன் செய்ய வேண்டும். ஒரு காலத்தில் பெண்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடா தென்றும், தத்தம் வீடுகளிலிருந்து குழந்தைகளைப் பராமரிக்க வேண்டுமென்றும் நாஜிகள் சொன்னார்கள். இது நியாயமாயிருக்கலாம். ஆனால், திடீரென்று யுத்தம் மும்முரமாகவே, தொழிலாளர்கள் அதிகமாக வேண்டியிருந்தது. எனவே, நாஜிகள் தம் கொள்கையை மாற்றிக் கொண்டார்கள். வீடுகளிலிருந்து குழந்தைகளை பராமரித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்ட அதே பெண்கள் இப்போது, தொழிற்சாலைகளுக்குப் போய் வேலை செய்ய வேண்டுமென்றும், கொஞ்ச நேர சாவகாசத்தில், வெகு தொலையிலுள்ளதோர் ஊருக்குப் போகவேண்டுமென்றும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்.

இந்நாட்டில் நாம் எங்கே வசிக்கவேண்டுமென்றும் எங்கே வேலை செய்யவேண்டுமென்றும் நம் இஷ்டம் போல் நிர்ணயித்துக் கொள்ளலாம். நாம் சட்டப்படி நடந்துகொண்டால், வேறெதையும் செய்யவேண்டிய தில்லை. நமக்கு விருப்பமான வேலையைச் செய்யலாம். நாம் விரும்புகிறோம் என்பதற்காகவோ, நல்ல சம்பளம் கிடைக்கிறது என்பதற்காகவோ, அல்லது நாம் யுத்தத்தில் வெற்றி பெற விரும்புகிறோம் என்பதற்காகவோ, அல்லது ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்குப் பயிற்சியளிக்கப்படுகிறதுடன் சம்பளமும் கிடைக்கிறது என்பதற்காகவோ, நாம் ஒரு வேலையைச் செய்யலாம். ஆனால் நாஜிகள் சுயேச்சையை வெறுக்கிறார்கள். தொழிலாளர்களும் ஜனங்கள் தான் என்னும் முறையில் நாஜிகள், அவர்கள் விஷயங்களில் அக்கரை கொள்ளுவதில்லை. ஆனால் உலகத்தை நாஜிகள் வென்று ஆளுவதற்கு ஏற்பட்ட சாதனம் என்று தான் கருதுகிறார்கள்.

நாஜிகளைப் பற்றி இதுவரை நான் உங்களுக்குக் கூறினேன். ஜப்பானியர்களும் இவர்களைப் போன்றவர்கள்தான். இவர்கள் ஆசியாவையும் உலகத்தையும் கட்டியாள ஆசை கொள்ளுகிறார்கள். நாஜிகளும் ஜப்பானியர்களும், சமமானவர்கள் தான். எனவே, அவர்களை வெல்ல வேண்டும். சிப்பாய்களும், கப்பற்படையினரும் விமானப்படையினரும், அவர்களை வெல்ல உதவுவது போலவே தான், இங்கே தொழிற்சாலைகளில் வேலை செய்யும் நாமும் உதவுகிறோம். நான்காவது இந்திய டிவிஷன் படையைப்பற்றி நாம் ஒவ்வொருவரும் பெருமை கொள்ளுகிறோம். நம் நாட்டிற்குப் பெரும் புகழை அவர்கள் தேடிக்கொடுத்திருக்கிறார்கள். இங்கே தொழிற்சாலைகளில் தம் வேலையைச் செய்யும் ஒவ்வொருவரும் தன்னைப்பற்றியும் தன் தோழர்களைப்பற்றியும் பெருமை கொள்ள சம உரிமையுண்டு.


மண்ணினால் செய்த இது போன்ற

உருவச் சிலைகள்

செங்கற்பட்டு, செண்ட் ஜோசப்ஸ்
உயர்தரக் கலாசாலையில்

தயார் செய்து

ஹிக்கின்பாதம் கம்பெனியார்

விற்கிறார்கள்

—:o:—

விற்ற வரவின் இலாபத் தொகை எல்லாவற்றையும்

மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய

பட்டாளங்களின் சௌகரிய நிதிக்கு வழங்கப்படும்.



மிஸ்டர் சர்ச்சில்




# அல்வாத் துண்டுகள்

[யுத்தத்திற்கும் அல்வாத் துண்டுகளுக்கும் என்ன சம்பந்தம்? என்று நீங்கள் கேட்கலாம். இருக்கிறது. யுத்த காலமென்பதால், சாமான்கள் கிடைப்பது வெகு சிரமம் தான். அப்படியிருந்தும், யாராவது சிரமப்பட்டு சாமான்களைச் சேகரித்து, அல்வா தயாரித்து, துண்டு துண்டாக்கி, நமது வாயில் கொணர்ந்து போட்டால், நாம் விழுங்காமல் இருப்போமா? அந்த அல்வாத் துண்டுகளைப்போல், ருசியான துண்டுச் செய்திகளை இங்கே கொடுக்கலாமென்று நினைக்கிறோம். அதற்காக பத்திக்கே ஒரு ருசியான பெயரைக் கொடுத்தோம். இதில் தவறொன்றுமில்லையே!]

இந்த இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பமாகி நாலாண்டுகள் முடியப் போகின்றன. இந்த நாலாண்டுகளில் சென்ற இரண்டு வருடங்களுக்கு மேலாகவே நம் நாட்டில் ஏராளமான துருப்புக்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. யுத்த ஆரம்பத்தில் ஏதோ ஒரே ஒரு லக்ஷம் பேர்களை ராணுவத்தில் கொண்டிருந்த இந்த நாட்டிலே, மளமளவென ராணுவ பலம் பெருக ஆரம்பித்தது. இன்று இந்நாடு தன்னைத் தானே காத்துக்கொள்ளும் அந்தஸ்தை அடைந்திருக்கிறது. நாம் தான் இந்தியாவின் எல்லைகளை இப்பொழுது காத்துக் கொள்ள வேண்டுமென்று நமது புது சேனாபதி ஆக்கின்லெக் துரைகளும் கூறும்பொழுது, நம்மை யறியாமலே நமக்கு ஒரு உற்சாகம் உண்டாகிறது.

### இந்தியர்களின் தனிப் பெருமை.

எத்தனை விமானங்கள், எத்தனை லக்ஷம் ஆட்கள், எத்தனை புது விமானக் கட்டடங்கள், எத்தனைப் பாதுகாப்பு ஏற்பாடுகள், 'அடேயப்பா!' என்று ஒவ்வொருவரும் பார்த்துப் பிரமித்து மூக்கின் மீது கை வைக்கும் படியாக இருக்கிறது இங்கு நடக்கும் ராணுவ வேலைகள். கட்டாயத்தின் மேல் ராணுவத்திற்கு ஆள் சேர்த்திருக்கிறார்கள் அநேகமாக எல்லா வெளி நாடுகளிலும். ஆனால் பிரதம மந்திரி சர்ச்சில் துரை கூறியது போல், எத்தகைய கட்டாயமுமின்றி, தாமாகவே முன்வந்து சேர்ந்து படைபலத்தைப் பெருக்கிய பெருமை, இந்தியர்கள் ஒருவருக்கே கிடைத்திருக்கிறது.

இதுமட்டுமில்லை. இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பாக, ஊரிலே ராணுவ நடையாட்டம் அதிகமானதும் ஊரிலே எத்தகைய பரபரப்பு ஏற்பட்டது தெரியுமா?

'அடே! சோல்ஜர் பசங்க வரப்போறாங்களாம். பெண்டாட்டி பிள்ளைகளையும், அம்மா, தங்கச்சிமாரையும் ஊருக்கு அனுப்பிட வேண்டியது தான் அப்பேன்! சோல்ஜருங்க வந்தா, எந்தப் பொண்ணைப் பார்த்தாலும், கெடுத்துப்புடுவானுமில்ல!' என்றே பலர் பேசிக்கொண்டிருந்தார்கள். இதுகாரணமாக பல வீடுகளில் உள்ள கிரகஸ்தர்கள், தற்கால பிரமசாரிகளானார்கள்.

ஆனால், இப்பொழுது நாட்டில் உள்ள நிலைமை தெரியுமா? அதை விளக்க ஒரு சிறு சம்பவத்தை எடுத்துச் சொல்லுகிறோம்.

பிரிட்டனிலிருந்து இங்குவந்து இறங்கும் பிரிட்டிஷ் சோல்ஜர்கள், பர்மா போரில் ஈடுபடுவதற்கென்று பயிற்சி பெறுகிறார்கள். அவ்வாறு பயிற்சிபெறும் கோஷ்டிகளில் ஒன்றைச் சேர்ந்தவர்கள் சமீபத்திலே தென்னிந்திய கிராமம் ஒன்றிலே வந்து தங்கினார்களாம். அதற்கு முன்னால் அக்கிராமத்திலே உள்ளவர்கள், வெள்ளைக்கார சிப்பாய்களைக் கண்டதே கிடையாது. ஆகையால், அவர்களுக்கு ஏகக் குஷி உண்டாகி விட்டது.

அதற்கேற்றாப்போல, அந்த வெள்ளைக்கார சோல்ஜர்கள் அவர்கள் முன்னால் ஒரு போலிச் சண்டையை நடத்திக் காட்டினார்கள். நெருப்பைக் கக்கும் ரவைகளையும், பெரிய வெடிகுண்டுகளையும், புகையைக் கொட்டும் வெடிகளையும் தாராளமாகப் பிரயோகித்துக் காட்டினார்கள். 'நல்லாருக்குதுடா வாண வேடிக்கை! தம்பிடி செலவில்லாமலே நல்ல தமாசுடா!' என்று அந்தக் கிராமவாசிகள் ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டார்கள்.

இடுப்பிலும், தோளிலும், முதுகிலும் குழந்தைகளைக் கட்டிக்கொண்டு, பெண்களும் ஏராளமாக வந்து கூடி, சிறிதும் அச்சமின்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெடிகுண்டுகளை உபயோகிக்க வேண்டி வந்ததல்லவா. ஆகவே, ஊருக்கு வெகு தூரத்திற்கு வெளியிலே தான் இந்த வேடிக்கைகள் நடந்தன.

அந்த இடத்தில் கூடியிருந்த கிராமவாசிகளுக்கு, இந்த பிரிட்டிஷ் சோல்ஜர்களும், தங்களோடு சுற்றும் மோட்டார் காபி ஹோட்டலிலிருந்து, தின்பண்டங்களும், டீயும் 'சப்ளை' செய்தார்கள். கிராமவாசிகளுக்கு வாயெல்லாம் பல்லாகிவிட்டது. எல்லாம் முடிந்ததும், அவர்களை எல்லாம் ராணுவ லாரிகளில் ஏற்றிக்கொண்டு, திரும்பவும் அவர்களது கிராமத்தில் கொண்டுபோய் இறக்கிவிட்டார்கள் அந்த சோல்ஜர்கள்.

'திரும்பவும் எப்போங்க இந்தத் தமாசு!' என்று கேட்டானும் ஒரு கிராமவாசி.

அதற்குச் சில தினங்களுக்கப்பால், அதே கிராமவாசிகள் மேற்படி சோல்ஜர்களுக்கு ஒரு விருந்தளித்தார்கள். அடேயப்பா! பிரமாத உபசாரம் போங்கள்! விருந்துக்குப் பிறகு, கிராமத்தார் எல்லாம் சேர்ந்து ஒரு தெருக்கூத்து நடத்தினார்கள். முன்பு தங்களைக் குஷிப்படுத்திய அந்த பிரிட்டிஷ் சோல்ஜர்களை பதிலுக்குப் பதில் வட்டியும் முதலும் சேர்த்து, ஏகமாகக் குஷிப்படுத்திவிட்டார்கள் அந்தக் கிராமத்தார். 'அற்புதம்! ஆச்சரியம்!' என்று சொல்லிக்கொண்டே சென்றார்கள் அந்த சோல்ஜர்கள். சோல்ஜர்கள் என்றால் பயந்துவிடவேண்டும் என்றிருந்த மனப்பான்மை எங்கோ மறைந்துபோய்விட்டது பார்த்தீர்களா?

"ஐயா! இந்தியாவிலிருந்து எத்தனையோ ஆயிரக்கணக்கிலே போர் வீரர்களைப் போர்க்களங்களுக்கு அழைத்துப் போயிருக்கிறார்களே, அங்கே அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் கிடைக்கிறதா?" என்று உங்களில் சிலர் கேட்கலாம்.

'ஆஹா!' என்பதே அதற்கான பதில். அவர்களை எப்பொழுதும் சுறுசுறுப்பாகவும், கவலைகளின்றியும், நோய் நொடியின்றியும் வைத்துக்கொள்வதில் சேனைத் தலைவர் அபார சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார்.

போர்க்களத்தில் காயமுண்ட இந்தியப் போர்வீரர்களுக்கு உடனே வைத்திய சிகிச்சை செய்வதற்கும், அவர்களை உடனுக்குடன் வெளியேற்றுவதற்கும் இப்பொது வசதி ஏற்பட்டிருக்கிறது. இந்திய ராணுவப் பகுதியிலே, 'பறந்துசெல்லும் ரண சிகிச்சைக் கோஷ்டிகள்' என்று தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கோஷ்டியினர் நல்ல பயிற்சிபெற்று, போர்க்களம் செல்ல சித்தமாகவே இருக்கிறார்கள். பாரசூட் மூலம் விமானங்களிலிருந்து குதிக்கவும் இவர்கள் நல்ல தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இவர்களை பாரசூட் படைகளின் ஒரு பகுதியாகவே கொள்ளலாம்.

சோல்ஜர்கள் செல்லுமிடமெல்லாம் டாக்டர்கள் இருக்க வேண்டுமென்பது இந்திய ராணுவ வைத்தியப் பகுதியின் கொள்கை. இந்தக் கொள்கையை அநுஷ்டானத்திலும் காட்ட சித்தமாக இருக்கிறார்கள் அந்தப் பகுதியினர். அவசியம் ஏற்படும்பொழுது விமான மூலமாக, உபகரணாதிகளுடன், போர்க்களத்தில் போய் குதிப்பார்கள் இவர்கள். இறங்குவதற்கு வசதி இருந்தால், விமானங்களே அங்குபோய் இறங்கி, காயமுண்டவர்களை ஏற்றிக்கொண்டு கிளம்பிவிடும். ஆகவே, போர்க்களத்திற்குச் செல்லுவோரைப் பற்றி யாரும் கவலைப் படவேண்டிய தில்லை.

### இந்தியப் படையின் இணையற்ற சேவை.

தரை, ஆகாயம், கடல் ஆகிய மூன்று பிரதேசங்களிலும் நடக்கும் போர்களில் இந்தியர்கள் இணையற்ற சேவைபுரிந்து வருகிறார்கள் என்பதை இந்த உலகமே ஒப்புக் கொள்ளுகிறது. அதிமுக்யமான ட்யூனிஷியப் போரிலே இந்தியர்கள் சாதித்த ஒப்பற்ற காரியங்களை யெல்லாம் உலகம் மறந்து விடுமா என்ன?

அவ்வப்பொழுது, நமது மன்னர், நமது இந்திய வீரர்களைப் பாராட்டி, அவர்களில் பலருக்கு கௌரவம் அளித்து வருகிறார்.

சமீபத்தில்கூட பக்கிங்ஹாம் அரண்மனையில் ஒரு பட்டமளிப்பு விழா நடந்தது. அதிலே இரு இந்திய மாலுமிகள் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் அஹமதுல்லா என்பவர். இவருக்கு வயசு 50. ஒரு மனைவியும், இரண்டு பெண்களும், மூன்று பிள்ளைகளும் பெற்றவரிவர். இன்னொருவரின் பெயர் சுலைமான், இவருக்கு ஒரு மனைவியும், இரண்டு வயதான சிறு பிள்ளையும் இருக்கிறார்கள்.

இவர்கள் ஒரு பிரிட்டிஷ் கப்பலில் பல வருஷங்களாக வேலை பார்க்கிறார்கள், அல்ஜீரியா அருகே உள்ள கடலில் இவர்களது கப்பல் ஜெர்மனியரால் தாக்கப்பட்டதாம். எதிரி வெடிவிமானங்கள் குண்டுமழை பொழிகிறார்கள் வெளியே. அஹமது, அக்கப்பலின் எஞ்சின் அறையில் வேலை பார்ப்போரை உற்சாகப்படுத்திக் கொண்டே, அவரவர் தம்தம் கடமைகளைச் செய்துவரும்படி தூண்டிக் கொண்டிருந்தார். எல்லோருக்கும் ரப்பர் பெல்டுகளைக் கொடுத்து, ஆபத்து வந்துவிட்டால் வெளியேறத் தயாராயிருக்கச் செய்தார். பல சந்தர்ப்பங்களில் அவரது உயிருக்கே ஆபத்துவரவிருந்தது. ஆயினும் அவர் தன் உயிரை லக்ஷியம் செய்யவில்லை. கடமையே பெரிதென்று வேலை செய்துகொண்டிருந்த அவரை, எல்லா ஆட்களும் பின்பற்றினர்.

சுலைமானோ, கப்பலின் மேல்தளத்தில் பற்றிக் கொண்ட தீயை அணைப்பதில் பிரமாத சிரமம் எடுத்துக்கொண்டார். இவ்விருவரும் மன்னரால் கௌரவிக்கப்பட்டபோது, மாலுமி கோஷ்டியினர் அனைவருக்குமே மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டதாம்.

யுத்தத்திற்குப்பின் இந்த உலகில் நாம் எத்தனையோ அற்புத மாறுதல்களைக் காணப்போகிறோம். விமானத்தில் ஏறுவதென்றால் உடம்பெல்லாம் வியர்க்கும் காலம் மாறி, விமானப் போக்குவரத்து என்றால் விரைந்தோடிப்போய் வரவேற்கும் காலமாகிவிடப் போகிறது இனி. இதை எதிர்பார்த்தே பல கம்பெனிகள் புதுப் புதுமாதிரியான ஆள்தூக்கி விமானங்களைக்கட்டி வருகின்றனவாம். இருபது பிரயாணிகளுடன் ஒரே மூச்சில் 3,000 மைல்கள் செல்லக்கூடிய நாலு எஞ்சின் விமானங்கள் கட்டப்பட்டு, பிரிட்டனில் பறந்து கொண்டிருக்கின்றனவாம்.

இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையில் பறந்துசெல்லவென்றும் ஒருமாதிரியான விமானம் கட்டப்பட்டிருக்கிறதாம்.

இதிலே, நான்கு படுக்கை அறைகளாம்; ஒரு கூடமாம்; பனிரெண்டுபேர்கள் உட்கார்ந்து சாப்பிட ஒரு சாப்பாட்டு அறையாம் கூடாகவோ, ஜில்லென்றோ சாப்பாடு தயாரிக்க சகல சௌகரியங்களும் கொண்ட மின்சார அடுப்புகளிருக்கின்றனவாம். ஜோர்தான் போங்கள்.

'உடனே புறப்படு' என்று மாமியார் வீட்டிலிருந்து தந்தி வந்த இரண்டாவது மணிக்கு மாமியார் வீட்டில் போய் நிற்கும் காலம் வரப் போகிறதய்யா, வரப்போகிறது!

# விஞ்ஞான ஆராய்ச்சி யுத்த முயற்சிக்கு உதவுகிறது

## இந்திய விஞ்ஞானக் கழக வேலைகள்

இந்திய விஞ்ஞானக் கழகம் இந்தியாவின் யுத்த முயற்சிகளுக்கு மிகச் சிறந்த முறையில் உதவிக்கொண்டு வந்திருக்கிறது. இதைத் தோற்றுவித்தவர் சர் ஜாம்ஷெட்ஜி டாட்டா. இவருக்கு ஊக்கமளித்து இந்தியா அரசாங்கமும், மைசூர் அரசாங்கமும் உதவின. இந்தக் கழகத்தைத் தோற்றுவித்தவர்களின் நோக்கங்கள்: (1) விஞ்ஞான ஆராய்ச்சியை அதிகப்படுத்துவது, (2) பல ஆராய்ச்சியாளர்களுக்கு உயர்தரப் பயிற்சி யளிப்பது. இவர்கள் பயிற்சிபெற இவர்களுக்கு இங்கே இடங் கிடைக்க வில்லை யென்றால், வெளிநாடுகளுக்குத் தான் போகவேண்டி யிருந்திருக்கும். இந்தக் கழக ஆராய்ச்சி சாலைகளும் விடுதிகளும் கட்டும்பொருட்டு மைசூர் அரசாங்கத்தார் 371 ஏக்கர் நிலம் வழங்கினார்கள். இவை கட்டி முடிந்து 30 ஆண்டுகளாகின்றன. இந்தக் கழகத்தில் தேறிச்சென்ற மாணவர் பலர், பொறுப்புள்ள பல முக்கியமான பதவிகளில் இருக்கின்றனர்.

மின்சாரத் தொழில் இலாக்காவில் மட்டும் 250 மாணவர்கள் யுத்த வேலைக்கென்று பயிற்சி பெற்றுக்கொண்டு வருகிறார்கள். விமானப் படையை முன்னிட்டு ஏராளமான வேலை நடைபெற்றது. தென்னிந்திய சிக்னல் படையினர், ஆராய்ச்சி சாலையையும் தொழிற்சாலையையும் வெகுவாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஏறக்குறைய ஒவ்வொரு வாரமும் ஏதாவதொரு வகையில் இந்தக் கழகத்தின் உதவியை இராணுவ அதிகாரிகள் நாடிப் பெறுகிறார்கள்.

### இரசாயனங்களும் மூலிகைகளும்

இதுவரை இரசாயனப் பொருள்களையும் மூலிகைப் பொருள்களையும் இறக்குமதி செய்து கொண்டிருந்தோம். யுத்தத்தினால், அவற்றை இங்கேயே உற்பத்தி செய்யவேண்டிய அவசிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. கழகத்தில் இரசாயன இலாக்கா தன் முழு கவனத்தையும் இதில் செலுத்தியிருப்பதோடு, விட்டமின்களையும் உணவுப்பொருள்களையும் உற்பத்தி செய்வதில் அக்கரை கொண்டிருக்கிறது.

ஜட ரசாயன இலாக்கா, பலவித இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்வதில் மிகவும் முக்கியமான வேலை செய்திருக்கிறது. இந்த வேலை, கழக ஆராய்ச்சி சாலையிலும், பெருவாரியாக உற்பத்தி செய்யும்பொருட்டுக் கட்டப்பட்டிருக்கும் உற்பத்திச் சாலைகளிலும் செய்யப்பட்டது. இந்த இலாக்காக்காரர்கள் "பொட்டாசியம் க்ளோரேட்" என்னும் இரசாயனப் பொருளைச் செய்து முடிப்பதற்கான முறைகளை வகுத்து முடித்துவிட்டனர். தென்னிந்திய இரசாயன சாலையார் இதை வியாபார முறையில் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். "பார்மல்டிஹைட்", நிமதாக்கினி இவ்விரண்டு இரசாயனப் பொருள்களும் ஓரளவிற்குச் செய்யப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சி சாலையில் "அனேஸ்தெடிக்குசும்" "பார்பிச்சுரேட்சும்" தயாரிக்கப்பட்டுவிட்டன. அன்றியும் மலேரியா நோயைப் போக்குவதற்கான கலவை மருந்துகள் சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இந்தியாவில் மலேரியாவிற்கு மிகச் சிறந்த மருந்து எது என்று கண்டுபிடிக்கும் பொருட்டு ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அந்த மருந்து மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடியதாயும், நோயை எளிதில் போக்கக்கூடியதாயும், எவ்விதப் பாதகமும் செய்யாததாயும் இருக்க வேண்டும்.

### வேர்கடலையிலிருந்து சத்தான உணவு

"பையோ கெமிஸ்ட்ரி" இலாக்காவில் இன்சுலின் தயாரித்துவிட்டார்கள். "ரென்னெட்" "பெப்டோன்ஸ்" ஆகியவற்றை தயாரிக்கும் முயற்சியில் இறங்கி யிருக்கிறார்கள். வேர்கடலையிலிருந்து ஒரு வகைப் புதிய தூள் ஒன்றைத் தயாரித்திருக்கிறார்கள். இந்தத்தூளைச் சாப்பிடலாம். பஞ்சாலைகளிலுள்ள கழிவுப் பஞ்சுகளைக்கொண்டு ஒரு திரவ பதார்த்தம் செய்வதற்கான ஆராய்ச்சிகள் முடிந்துவிட்டன. இந்த திரவ பதார்த்தம் அருவருப்புண்டாக்காது. மற்ற எருக்களோடு இதையும் சேர்ந்து விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம். அகமதாபாதில் இதைச் சோதித்ததில், நல்ல பலன் கிடைத்திருக்கிறது. இதற்கு முன்பு, அகமதாபாதில், கழிவுப் பஞ்சுகளைக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

இந்த ஆராய்ச்சி மாணவர்களில் பல பெண்களும் இருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் திருமதி நாகமணி சாமராவ். ஜட இரசாயன இலாக்காவைச் சேர்ந்த டாக்டர் ஜட்காருடன் இவர் ஒத்துழைத்து, பரமாணுக்களிலுள்ள ரசாயனத் தன்மையைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். இந்தப் புதிய ஆராய்ச்சி காரணமாக, இந்த ஆராய்ச்சி மாணவர்கள் ஒரு புது விதியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதனால் பல முக்கியமான பலன்கள் விளையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

"பிசிக்ஸ்" இலாக்காவிற்குத் தலைவர் சர் சி. வி. ராமன். உலகமறிந்த இந்திய விஞ்ஞானி. இவருடைய மேற்பார்வையில் நடைபெற்ற ஆராய்ச்சியின் பயனாக, கனப்பொருள்களைப்பற்றி அங்கீகரிக்கப்பட்ட கருத்துக்களை அடியோடு மாற்றிக் கொள்ளும்படியான நிலைமை ஏற்படுமென்று தெரிகிறது.

# வீரச் செயல்கள்

## சென்னை டாக்டரின் பொறுப்புணர்ச்சி

சின் மலை, பர்மாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே யுள்ளது. இதன் உயரம் சுமார் 9,000 அடிகள். ஒரு டாக்டர் அதைக் கடந்து போனார். கொஞ்ச தூரம் தன் குதிரை மேல் போனார். மலை யுச்சியை யடைந்த பிறகு தன் சைக்கிலில் ஏறிக் கொண்டு கிளம்பினார். வழியில் அதன் சக்கரம் பழுதாகி விட்டது. பிறகு கால் நடையில் கிளம்பினார். இவர் போய்ச் சேரவேண்டிய இடம் இன்னும் தூரத்திலிருந்தது. அந்த இடத்திற்கு 9 மைல்களுக்கு, அப்பால் ஜப்பானியர் படை வீடுகளிருந்தன. என்றாலும், நம் டாக்டர் கொஞ்சமும் மனந் தளர வில்லை. விரைந்து முன்னேறினார், அங்கே, ஒருவர் காலொடிந்து கிடந்தார். இவருக்குச் சிகிச்சை செய்யும் பொருட்டுத் தான் அவர் அவ்வளவு வேகமாகப் போனார். நோயாளியைக் கண்டார். 'முதலுதவி' செய்து ஒரு டோலியி லேற்றி, அங்கிருந்து 33 மைல்கள் தூரத்திலுள்ள தன் இராணுவ வைத்திய சாலைக்கு ஆட்களைக் கொண்டு அவரை எடுத்துக் கொண்டு திரும்பினார். போகும் போது, இவர் நடந்தே போக வேண்டி நேர்ந்தது. இவருடைய குதிரையும் களைத்து விட்டது. சைகிலும் பழுதாகி விட்டது. இந்த டாக்டர் ஒரு சென்னை வாசி. இவருடைய மனைவியாரும் ஒரு டாக்டராக பெங்களூரில வேலை செய்துவருகிறார்.

(2-ம் பக்கம் தொடர்சசி)

அத்லாண்டிக் மகா சமுத்திரத்திலும், மத்திய தரைக் கடலிலும் உள்ள தன் படைகளை

**இரண்டு வருஷங்களுக்கு முன்பும் இன்றும்**

அழித்து விடுவதாக பிரிட்டிஷ் படைகளும் அமெரிக்கப் படைகளும் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. இது ஹிட்லருக்கு நன்றாகத் தெரியும். அப்படி யிருந்தும், அவர் ஏன் ரஷ்யப் போராட்டத்தை இந்த வருஷம் ஆரம்பித்தார்? இந்தக் கேள்வி சாதாரணமாக எழக் கூடியது தான். முதற் காரணம்: தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு ஹிட்லர் இந்தப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. சென்ற வருஷம் நவம்பர் மாதத்திலேயே, மகத்தான முறையில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை எதிர்த்துத் தாக்கினார்கள். அப்போதே ஜெர்மானியர்களின் கௌரவ மெல்லாம் மலை யேறி விட்டது. மற்றொரு காரணம் யுத்த தந்திர முறையை யொட்டியது. ஜூலை மாதம் 5-ம் தேதி போர் முனையிலிருந்த ஜெர்மன் படைகள் அவ்வளவு திருப்திகரமான நிலைமையிலில்லை. ஓரெல் பகுதியில் கர்ஸ்க் பகுதியின் முக்கியமான இடங்களில் ரஷ்யப் படைகள் ஏராளமாக வந்து குவிந்து விட்டன. ஆகவே, அங்கிருந்த ஜெர்மன் படைகளுக்கு ஆபத்து தலைக்கு மேல் இருந்தது. அன்றியும் ஓரெல், ப்ரியான்ஸ்க், கராச்சேப், உனெயச்சா ஆகிய பகுதிகளில் சோவியத் விமானப் படை கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தது. இவற்றிலிருந்து என்ன தெளிவாகிறது? ஓரெல் பகுதியில் முக்கியமான இடங்களைச் சரிப்படுத்திக் கொண்ட பிறகு, பெருந் தாக்குதலை ஆரம்பிக்க வேண்டு மென்பது தான் ரஷ்யாவின் நோக்கம்.

நிற்க, நேச நாட்டுப் படைகள் ஜெர்மனி மீது படையெடுக்கும் போது ரஷ்யப் போர் முனையில் தாம் தற்காத்துக் கொள்ள முடியாத இடங்களைத் தம் வசம் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்பது தான் ஜெர்மன் படைத் தலைவரின் எண்ணம். ரஷ்யாவில் தாம் கைப்பற்றியுள்ள பகுதிகளில் பலமான அரண்களை அமைத்துக் கொண்டால், நேச தேசப் படைகள் தம்மைத் தாக்குகிற போது, தம் நிலைமை மேலாக விருக்கு மென்று நினைக்கிறார்கள். 1941-ம் வருஷம் ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கினார். ஏனென்றால், தான் பிரிட்டன் மீது படையெடுக்கு முன்னதாக, தனக்குப், பின் புரத்திலிருந்து கிளம்பக் கூடிய பெரிய ஆபத்தைத் தவிர்க்கும் பொருட்டுத் தான் ரஷ்யாவைத் தாக்கினார். ஆனால், இப்போதைய யுத்தத்தில், ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள் தம்மைத் தாக்கு முன்னதாக, தமக்குப் பின்புரமிருந்து கிளம்பக் கூடிய பெரிய ஆபத்தைத் தடுப்பதற்காகத் தான் ரஷ்யப் போரை நடத்துகிறார். இரண்டு வருஷங்களுக்கு முன் தாக்கும் நிலையில் ஹிட்லர் இருந்தார்; இப்போது நேச நாடுகள் அந்த நிலைமையில் இருக்கின்றன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஜூலை 30உ, வெள்ளிக்கிழமை [இதழ் 30

# மூலைக்கல் நொறுங்குகிறது



மிஸ்டர் சர்ச்சில்.

முசோலினி நெடு நாட்கள் இத்தாலியில் ஆட்சி செலுத்தினார். அந்த ஆட்சி மிகக் கடுமையானது. இவரது ஆட்சி முடிவடைந்து விட்டது. இது பற்றி சந்தேகமே கிடையாது. இது, இத்தாலிய சரித்திரத்திலேயே ஒரு முக்கியமான பகுதியாகும். பாஸிஸ்ட் கட்டடத்தின் மூலைக்கல் நொறுங்கிவிட்டது. இதுவரை பாஸிஸ்ட் கட்டடமே நொறுங்கி விழுந்து நாசமாகியிருக்கும். இல்லையானால், இனி நொறுங்கி விழத்தான் போகிறது. இப்படிச் சொல்லுவது சோதிடங் கூறுவதாகாது.

தனிக் கட்சி சர்வாதிகாரம் செலுத்தும் முறை: இதற்கு உதவியாக இரகசியப் போலீசார். எல்லா உத்தியோகங்களிலும் சர்வாதிகாரிகளே. சிறு வேலைகளிலுங் கூடத் தான். நிர்வாகிகளின் ஆட்சிக்கு உட்பட்டவை தான் கோர்ட்டுகளும். மாஜிஸ்திரேட்டுகளுங்கூடச் சர்வாதிகாரிகள் தான். பின்னல் கோர்த்தது போல ஒவ்வொரு குடும்பங்களிலும் வேவுகாரர்கள். அடுத்த வீட்டுக்காரர்களே அரசாங்கத்திற்கு உளவு கூறுகிறவர்கள். இப்படிப்பட்ட ஆட்சி முறை நெடுநாட்கள் நடக்குமானால், பொதுஜனங்களுக்குத் தம் நாட்டின் போக்கில் எந்த விதச் செல்வாக்கும் இல்லாமற் போய் விடுகிறது. உத்தியோகஸ்தர்களுடைய சார்பில்லாமல் தனித்து இயங்க முடியாதவர்களாகி விடுகிறார்கள்.

"இப்போது, வெளியேயிருந்து தாக்கும் யுத்தத்தினால், இந்த நிர்ப்பந்தமான நிலைமை இத்தாலியில் நீங்கிவிட்டது. இந்த நிலைமை நெடு நாட்களாக அங்கே இருந்து வந்தது. அதாவது 20 வருஷங்களுக்கு அதிகமாகவே இருந்து வந்தது. அந்தக் காலத்தில் இத்தாலியப் பொது மக்களின் உடலும் மனமும் சர்வாதிகாரத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. ஆகவே, பெருத்த மாறுதல்கள் இத்தாலியில் நேரும் என்று எதிர்பார்ப்பது நியாயந் தான்."

—மிஸ்டர் சர்ச்சில் ஜூலை மாதம் 27-ம் தேதி காமன்ஸ் சபையில் கூறியது.

# முடிந்தான் முரட்டு முஸ்ஸோலினி !

இராகம்—காபி மிஸ்ரம். தாளம்—ஆதி.

**பல்லவி**

முடிந்ததடா முரட்டு முஸ்ஸோலினி—வாழ்வும்
ஒடிந்ததடா புரட்டச்* சாணி யினி !

**அநுபல்லவி**

படிந்திருந்த மன்னவன்† பதைத் தெழுந்தேயும் நின்று
கடிந்திடக் கலங்கியும் கதியிழந்தே யின்று (முடி)

**சரணம்**

1 மடிந்த சவம் எனவே மயங்கி நின்றிழிந்தான்
மண்டை யிழந்த ரோமன் போல் மதிப் பழிந்தான்
இடிந்த குட்டிச் சுவரென் றேசவும் ஒழிந்தான்
இருமாப் பெனும் உடைசேர் இரும்புடல் கிழிந்தான் ! (முடி)

2 பின்னின்று பேடி போலப் ப்ரான்சினைத் தாக்கச் சென்றான்
முன்னின்று போர்செய் வீரம் முற்றிலும் மாய்த்துக் கொன்றான்
என் என்றும் ஏவலில்லா ஏகாதிகாரக் குன்றான்
தன் மனக் கோட்டை வீழத் தத்தளித்தே மண் தின்றான் (முடி)

3 கான மயிலைக் கண்டும் தானும் மயிலென் றாடி
மான மிழந்த கோழி மதியை யடைந்தே நாடி
ஊன மிகுந்த தோல்வி ஒன்றுபின் னொன்றாய்த் தேடி
ஈன மிகுந் தித்தாலிக் கிழிவுறத் தந்தான் கோடி (முடி)

4 சும்மா கிடந்த சங்கைச் சுளுவில் ஊதிக் கெடுத்தான்
சுயஅறி விழந் திட்லர் சொல்லாலே போர் தொடுத்தான்
இம் மாநிலத் தித்தாலி எளிதிற் பலி கொடுத்தான்
என்னாளும் மீளாப் பழி இழி நரகம் படுத்தான் (முடி)

* புரட்டு அச்சு ஆணி=அச்சு நாட்டார் பலம். † இத்தாலி மன்னன், விக்டர் இமானுவல்.



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : மிஸ்டர் சர்ச்சில் .. .. | 1 | புயலில் சிக்கித் தப்பிய விமானி .. .. | 5 |
| மூலைக்கல் நொறுங்குகிறது .. .. | 1 | தொழிலாளர் பகுதி : தொழிலாளரும் யுத்த முயற்சியும் .. .. .. | 7 |
| பாட்டு : முடிந்தான் முரட்டு முசோலினி .. | 2 | சமூகத் துரோகம்—வதந்தி .. .. | 8 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | இடது கை முறிந்தது .. .. .. | 9 |
| தலையங்கம் : முடிந்தது முசோலினி காண்டம். | 4 | வீழ்ந்தான் ஒரு அரக்கன் .. .. | 10 |
| சோற்றை வீணாக்காதே .. .. .. | 5 | | |


## போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**நாஜிகளின் பழைய ஏடு புரண்டுவிட்டது.**

சமீபத்தில் நேச நாட்டுப் படைகளுக்குக் கிடைத்த வெற்றிகளின் பயனாக, பெண்களிடம் நாஜிகள் கொண்டிருந்த போக்கு அடியோடு மாறிவிட்டது. தம் கணவருக்குத் தொண்டு புரிவதும், குழந்தைகள் பெறுவதும் அவர்களை வளர்ப்பதும் தான் பெண்கள் செய்யக் கூடிய வேலை என்பது நாஜிகளின் பழைய கொள்கை. இதைத் தவிர வேறு வேலைகள் அவர்களுக்கில்லை என்று நாஜிகள் கூறினார்கள். இதுபற்றி ஹிட்லர் 1934-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 8-ம் தேதி செய்ததோர் பிரசங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஆண்கள் விவகாரங்களில் பெண்கள் தலையிடுவது சரி என்று நாம் நினைக்கவில்லை....... தேசீயப் போராட்டத்தை நடத்த ஆண்கள் உதவுகின்றனர்; அது போலவே, தேசீயத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நபர்களைப் பெண்கள் காப்பாற்றி உதவுகிறார்கள்...... ..... இப் பெண்கள் பெறும் ஒவ்வொரு குழந்தையும் இந்நாடு வாழுவதற்காக நடத்தும் போராட்டத்தில் ஒரு தாக்கு தாக்க உதவும்."

பெண்கள் இழிவானவர்கள் என்னும் கொள்கை தான் நாஜிகள் கொண்டது. ஆகையால், யுத்த ஆரம்ப காலத்தில், பிரிட்டன் பெண்களையும் படையில் சேர்த்தபோது, நாஜிகள் எள்ளி நகையாடினார்கள். 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் 4-ம் தேதி பெர்லின் வானொலி நிலையம் கூறியதாவது :—

"இப்போது ஜெர்மனியை விட இங்கிலாந்துக்குத் தான் மகா மோசமான காலம். குடும்ப வாழ்க்கை சிதைந்து கொண்டிருக்கிறது. தாம் குடும்ப விளக்குகளென்பதைப் பெண்கள் மறந்து விட்டார்கள். பெண்கள் யுத்த வேலைகளில் இறங்கி விட்டார்கள். அது தவறு".

இப்போது நாஜிகள் சொல்லும் பாடம் வேறு. இந்த வருஷம் ஜனவரி மாதத்தில் எல்லாப் பெண்களும் படையில் சேரவேண்டுமென்று ஏற்பட்டு விட்டது. பிப்ரவரி மாதத்தில் ஜெர்மன் விமானப் படையின் உதவிப் படையினராகத் திரட்டப்பட்டனர். சென்ற பிப்ரவரி மாதம் 9-ம் தேதி, பெர்லின் வானொலி நிலையத்திலிருந்து 'சுவார்ஸ் வான்பர்க்' என்பவர் கூறியதாவது :—

"எப்படிப்பட்ட அவசரமான யுத்த வேலையாயிருந்தாலும் அதை நிறைவேற்ற, ஒவ்வொரு பெண்ணும் ஆயத்தமா யிருக்க வேண்டும். அவர்களுடைய உதவியில்லாமல் நாம் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது என்று அவர்கள் மனதில் பதியத் தக்கவாறு நாம் நம் காரியங்களைச் செய்யவேண்டி யிருக்கிறது."

சென்ற ஜூன் மாதம் 11-ம் தேதி ஒரு பிரச்சினை கிளம்பியது. அதன்படி, தீயணைக்கும் படையில் பெண்கள் சேர வேண்டி யிருந்தது. குழந்தைகளைப் பெற்று அவற்றை பராமரிக்க வேண்டிய அவர்களுடைய நிலைமை மாறிப் போய், தற்போது மிகவும் அவசரமும் அவசியமுமான நாஜிகளின் யுத்த வேலைகளில் உதவி செய்ய வேண்டியவர்களாகி விட்டார்கள். இதுவரை, நேர்மையான முறையிலும் சோரத்தனமாகவும் குழந்தைகள் பெற்ற பெண்களைப் பேணுவது, தம் பரிசுத்தமான கடமை என்று நாஜிகள் மதிக்கிறார்கள்.

இதுபற்றி முன்பு ஹிம்லர் சொன்னதை இங்கே கூறுவது பொருத்தமாகும் :

"சுத்த இரத்த முடைய ஜெர்மன் பெண்களுக்கு, கலியாணம் செய்து கொள்ளுவது தவிர, மற்றொரு கடமையும் உண்டு. இதற்கும் கலியாணத்திற்கும் சம்பந்தமே கிடையாது. அதாவது போர்முனைக்குச் செல்லும் சோல்ஜரோடு கூடி, குழந்தைகளைப் பெறுவது தான் அந்தக் கடமை."

இப்போது ஜெர்மன் பெண்கள் தொழிற்சாலைகளில் மிகவும் நல்ல வேலை செய்வார்கள் என்று நாஜித் தலைவர்கள் நினைக்கிறார்கள். ஆகவே, தம் பழைய கொள்கையைக் கைவிட்டுவிட்டார்கள். ஜெர்மன் அரசாங்க செய்தி ஸ்தாபனமான 'டி.என்.பி.' மூலம் சென்ற ஜூன் மாதம் 22-ம் தேதி ஒரு அறிக்கை வெளியானது. அதில் கூறப்பட்டிருந்ததாவது :—

"சோரத்தனமாகப் பெறும் குழந்தைகள் சம்பந்தமாக, சமுதாய இழிவும், நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் ஏற்பட, இடமுண்டு. பெற்றோரில் ஒருவர் பராமரிப்பின்றி அந்தக் குழந்தை படிக்க வேண்டும். பெரும்பாலும், அந்தத் தாய்மாருக்கு, மேற்கொண்டு குழந்தைகள் பிறப்பதில்லை. குறுகிய மனப்பான்மையால் தோன்றியது ஒழுக்கம். இந்தக் கொள்கை ஒருபுறமிருக்க, நாம் கவனிக்கவேண்டிய தேசீயப் பிரச்சினைகளும் இருக்கின்றன. இதைக் கொண்டு பார்த்தாலும், சோரத்தனத்தால் குழந்தைகளைப் பெற்று மக்கள் இனத்தை அதிகப்படுத்துவதால் இலாபம் உண்டா என்பது பற்றி இன்னமும் சந்தேகமாகவே இருக்கிறது".

**வேலை செய்ய ஜெர்மன் பெண்களுக்கு விருப்பமில்லை.**

நாஜிகள் தம் கருத்துக்களை மாற்றிக் கொண்டார்கள். இது பற்றி சந்தேகமே யில்லை. இப்படி திடீரென்று மாற்றிக் கொள்ளப்பட்ட கொள்கைப்படி நடந்து கொள்ள ஜெர்மன் பெண்களால் முடிய வில்லை. சென்ற ஜூன் மாதம் 12-ம் தேதி வெளி வந்ததோர் மேலஜெர்மன் பத்திரிகைச் செய்தியிலிருந்து இது தெளிவாகிறது. அதில் கூறப்பட்டதாவது :—

"உள்ளுணர்ச்சி இருந்தால் மட்டுந் தான், எந்த வேலையும் சுலபமாகவும் முழு மனதோடும் நடைபெற முடியும். புதிதாகப் படையில் சேர்க்கப்பட்ட பெண்களுக்கு இந்த உணர்ச்சி சில சமயங்களில் குறைவா யிருக்கிறது. கட்டாயப்படுத்தினால் மட்டுந் தான், சில பெண்கள் வேலை செய்கிறார்கள். இந்தப் புது வேலைகளைச் செய்வதில் தமக்குள்ள வெறுப்பை அவர்கள் ஒளிக்காமல் வெளி யிடுகிறார்கள். முதல் சில மாதங்களில், பரிபூரண யுத்த முயற்சியை முன்னிட்டு என்னென்ன செய்ய வேண்டியது அவசியம் என்று அவர்கள் உணர்ந்து கொள்ள வில்லையாம்".

"நாஷனல் செய்துங்" என்பது மற்றொரு பத்திரிகை, ஜூன் மாதம் 10-ம் தேதி வெளியீட்டில் அது எழுதியதாவது :—

"ஆண்கள் போர் முனைக்குப் போகிறார்கள். அவர்களுக்குப் பதிலாகப் பெண்கள் தொழிற் சாலைகளில் வேலை செய்ய வேண்டும். இது உண்மையிலேயே மிகவும் அவசியந் தான். இருந்தாலும் இதைச் சொல்லயே

(6-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஆண்டு ஜூலை 30உ. [இதழ் 30


## முடிந்தது முசோலினி காண்டம்

அட்டகாசக்கார முசோலினி அடங்கி விட்டார். ஓடி விட்டாராம் ஊரை விட்டே. ஸ்பெயின் நாட்டிற்குப் போய்ச் சேர்ந்து விட்டாராம். அவரோடு அழிந்தது பாஸிஸம். இந்தக் கட்சியையே கலைத்து விடுவது என்று முடிவாகி விட்டது. இது இத்தாலிய அரசாங்க சபையில் நிறைவேறிய தீர்மானம். இக்கட்சியினால் இத்தாலிக்குத் தீமையே யொழிய, நன்மையில்லை. இந்த உண்மையை இந்த யுத்தம் களங்கமற விளக்கிவிட்டது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு முசோலினியின் கையாட்களாக விருந்தவர்கள் நடுக்கங் கொண்டு விட்டனர். இத்தாலிய செனெட் சபைத் தலைவரான கௌண்ட் சுவார்டோவுங் கூடத் தன் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். அது மட்டுமா? இத்தாலிய செய்தி ஸ்தாபனத் தலைவரான சிஞோர் மணிலோ மோர்கொகோர்ணி தன்னைத் தானே சுட்டுக் கொண்டு செத்தார். சென்ற ஏப்ரல் மாதம் முசோலினியினால் நிதி மந்திரி பதவியிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டவர் கௌண்ட் வால்பி என்பவர். இது வரை இவர் ஸ்வித்சர்லந்திலிருந்து, இப்போது ரோமாபுரிக்குத் திரும்பிவிட்டார்.

இப்போது பல கட்சிகள் தலை தூக்குகின்றன. இவற்றுள் ஒன்று வைதீகக் கத்தோலிக்கக் கட்சி. இதை போப் பாண்டவர் ஆதரிக்கிறார். வட இத்தாலிய நகரமான 'ட்யூரின்' என்னும் துறைமுகத்தில் நன்கு அமைக்கப்பட்ட 5 கட்சிகள் இருக்கின்றனவாம். வட இத்தாலிய நகரங்களில் பல பிரசுரங்கள் தாராளமாகப் பரப்பப்பட்டிருக்கின்றன. இவற்றில், தற்காலிக பிரதம மந்திரியா யிருக்கும் மார்ஷல் பொடோக்லியோவிற்கு எச்சரிக்கை செய்கிறார்கள். விரைவில் தகுந்த பலன் கிடைக்கத் தக்கபடி காரியங்கள் நடைபெற வேண்டுமாம். தவறினால், உள் நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டு விடுமாம். ஆகவே, இதற்கென்று ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். 1. கௌரவமான முறையில் நேச நாட்டாரோடு சமரசம் செய்து கொள்ளுவது. 2. இத்தாலியை விட்டு ஜெர்மானியர்கள் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும். 3. பொறுப்புள்ள பாசிஸ்டுகள் எல்லோரும் கைது செய்யப்பட வேண்டும். 4. ஜன நாயகக் கொள்கைகள் மீண்டும் இடம் பெற வேண்டும். 5. அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்.

பாசிசம் ஒழிந்ததுமே, ஜனநாயகம் தலை தூக்குவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றதாகத் தெரிகிறது. பாசிசம் ஒழிந்தது பற்றி இத்தாலிய மக்கள் விழாக் கொண்டாடினார்களாம். அவர்களுடைய ஜனநாயக உணர்ச்சியைக் குறித்துச் சொல்லவோ வேண்டும்! இத்தாலியின் ஜன நாயக வீரராக விளங்கிய கரிபால்டியின் கல்லறைக்குப் போய் இத்தாலிய மக்கள் வணக்கம் செலுத்தினார்களாம்.

இது வரை, இந்தப் போரில் இத்தாலிக்கு ஏராளமான நஷ்டம். இதற்குக் காரணம் முசோலினி, ஹிட்லர் ஆட்டுவித்தபடி யெல்லாம் ஆடியது தான். இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருந்தும், மேலும் போரை நடத்த வேண்டு மென்று கூறுகிறார் படோக்லியோ. ஆனால், சமரசப் பேச்சுகளுக்கும் அவர் முயற்சிப்பதாகத் தெரிகிறது. போப்பாண்டவர் நகரமான வாடிகானிலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதியையும் அமெரிக்கப் பிரதிநிதியையுங் கொண்டு, போப்பாண்டவர் மூலமாக, சமரச முயற்சி நடைபெறுவதாகத் தெரிகிறது, அல்லாமலும் துருக்கி அந்நிய நாட்டு மந்திரியைக் கொண்டும் சமரச முயற்சி நடைபெறுகிறதாம.

நிற்க, இத்தாலிய மக்களின் உணர்ச்சி இப்போது எப்படி யிருக்கிறது என்று தெரிந்து, அதற்கேற்ப மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் பேசும்போது, கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

"பரிபூரண சரணாகதி அடைந்து விடுவதென்று இத்தாலியர்கள் முடிவு செய்து விடுவார்களானால், அதன் பயனாக, மேலும் போராடவேண்டிய தொல்லை அவர்களுக் கில்லாமற் போகும். அடிமை வாழ்வினின்று மீட்சி பெறுவார்கள். கொஞ்ச காலத்திற்குப் பிறகு, மீட்சி பெற்ற புதிய ஐரோப்பாவில், கண்ணியமான நிலைமையும் கிடைக்கும்."

இந்தப் போராட்டம் சம்பந்தப்பட்ட வரை இத்தாலிய மக்களுக்குப் போராட மனமே கிடையாது என்று தெரிகிறது. இதுபற்றி பேசியபோது,

"பாலெர்மோ ஒரு அழகிய நகரம். இதற்குள் அமெரிக்கப் படைகள் புகுந்த பொழுது, அங்கு நடைபெற்ற சம்பவங்களைக் குறித்து மிகவும் தெளிவான அறிக்கைகள் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை நான் பரிசீலனை செய்ததில், இத்தாலிய மக்களின் உள்ளத்தை அவை படமெடுத்து காட்டுகின்றன. தம்மைக் கொடுமைப் படுத்திவரும் ஜெர்மானியர்கள் வெளி யேறிவிட வேண்டும். மேலும் தம்மை நிச்சயமாக நாசப்படுத்தக் கூடிய எந்த வேலையிலும் ஈடுபடக்கூடாது. பழைய ஜன நாயக ஸ்தாபனமாகிய பார்லிமெண்டு சபையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். இந்த ஆசைகள் இத்தாலிய மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஆசைகள் நிறைவேறுவதும் நிறைவேறாததும், அவர்கள் கையிலிருக்கின்றது." என்று அவர் கூறினார்.

இத்தாலி மீதில் பழி வாங்க வேண்டு மென்னும் எண்ணம் பிரிட்டனுக்கோ அமெரிக்காவுக்கோ கிடையாது. ஆனால் இத்தாலி பரிபூரண சரணாகதி யடைய வேண்டு மென்று கூறுகிறார் சர்ச்சில். இத்தாலியை நாசப்படுத்தி விட்டால், அந்நாட்டின் சார்பாக யாருடன் சமரசம் பேசுவது என்றும் கேட்கிறார். இந்தப் பருவத்தில் மீண்டும் இத்தாலிய சாம்ராஜ்யம் ஏற்படுவதற்கு உதவ வேண்டு மென்பது தான் பிரிட்டன் நோக்கம். இதற்கு பிரிட்டன் ஆயத்தமா யிருக்கிறது. இத்தாலி புத்திசாலித் தனமாக நடந்து கொள்ளுவதா யிருந்தால், இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடமாட்டாது.

இத்தாலியைக் கைப்பற்றி அதைக் கட்டியாள வேண்டு மென்பது பிரிட்டனின் எண்ணமல்ல. இது மகா பொறுப்பான வேலை. அந்நாட்டவரின் வெறுப்புக்குத் தான் ஆளாக வேண்டும். அநேக உயிர்கள் பலியாக வேண்டி



நேரும். அதனால் பிரிட்டனுக்கோ அமெரிக்காவிற்கோ திவலை யளவு இலாபமும் கிடையாது. ஜெர்மானியர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளைக் கட்டியாள விரும்பி, கடுமையான முறைகளைக் கையாண்டதனால், பெரும் அல்லல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். இது ஒரு நல்ல பாடமல்லவா? இதே குற்றத்திற்கு ஆளாக பிரிட்டனும் அமெரிக்காவும் விரும்பவில்லை.

'கானலை நீரென' நம்பி ஏமாந்து போகும் விலங்கினம் போல 'ஹிட்லரை' உலக ரட்சகன் என்று நினைத்து, முசோலினி ஏமாந்தார். அவரோடு இத்தாலிய மக்களும் ஏமாந்து விட்டார்கள். இது களங்கமற அவர்களுக்கே தெரிந்து விட்டது. இனியாவது தம் பண்டை நாகரிகத்தையும் கலையையும் காப்பாற்றிக் கொள்ள விரும்புவார்களானால், அவர்களுக்கு இதுவே ஏற்ற தருணம். இச்சமயம் நேசநாடுகளிடம் பரிபூரண சரணாகதி யடைந்து ஐரோப்பாவில் கண்ணியமான நிலையில் வாழலாம். இப்போது இத்தாலியர்கள் என்ன செய்யப் போகிறார்களென்று பார்ப்போம்.

# சோற்றை வீணாக்காதே

## மகனுக்குத் தாய் போதித்த முறை

லட்சுமி நன்றாகப் படித்தவள், பி.ஏ.. பட்டம் பெற்றவள். அவள் கணவனும் பெரிய உத்தியோகஸ்தர். சுக வாழ்வு அவளுக்கு வாய்த்தது. அவளுக்கு ஒரே மகன். 'கண்ணு' என்பது அவன் பெயர்.

ஒரு நாள் லட்சுமி வெளியே போவதற்கு உடுத்திக் கொண்டிருந்தாள். விருந்திற்கு போவதற்கு ஆயத்தமானாள். இதைக் கண்டான 'கண்ணு.' இவனுக்கு வயது 5 தான். கையையும் காலையும் உதைத்துக் கொண்டு அழுதான். தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த சோற்றை எடுத்து வீசி இரைத்தான்.

செய்வ தின்ன தென்று தெரியவில்லை லட்சுமிக்கு. தயங்கினாள். அவன் உடம்புக்குச் சுகமில்லையோ என்று நினைத்தாள். பசி உண்டாக வில்லையோ என்று கருதினாள். சாப்பாடு ருசியாயில்லையோ என்று சந்தேகித்தாள். இல்லை. லட்சுமி வீட்டுச் சமையல்காரி மிகவும் திறமைசாலி. ஒருக்கால் அவன முந்தியே வயிறு நிறைய சாப்பிட்டிருக்கக் கூடும். இந்தச் சந்தேகந் தோன்றியவுடனே, லட்சுமி வேலைக்கார சுப்பம்மாளைக் கூப்பிட்டாள். சுப்பி வந்து,

"என்னுங்கம்மா?" என்றாள்.

"இது இரண்டாம் வேளையா, கண்ணுக்கு?"

"ஆமாங்கம்மா!" அதுதான் சாதம் போடச் சொல்லிக் கத்துச்சு; நான் போட்டு ஊட்டுனேன்....கத்துச்சு"....

கண்ணு சுற்றிப் பார்த்தான். பிறகு, தன் தாயையும் பார்த்தான். ஒரே ஓட்டமாக ஓடி வந்தான். லட்சுமி உடுத்தியிருந்த உயர்ந்த பட்டுப் புடவைகளை எல்லாம் நாசஞ் செய்திருப்பான். அச்சமயம் இதமாகப் பேசினாள் லட்சுமி.

"எங்க ராஜாவல்ல!, எங்கப்பனல்ல! இங்கே வாங்க! கையைக் கழுவிக்கோ. வேறே சொக்கா போட்டுக்கோ! ஓடிவாங்க வா! வா!"

தாயின் இத மொழிகள் அவனுடைய உள்ளத்திற் றைத்தன. அவன் சீற்றந் தணிந்து சாந்தமானான். அப்போது லட்சுமி தன் தலையை வாரிவிட்டுக் கொண்டே தன் மகனோடு பேசினாள்.

"அம்மா மேலே ஆருக்கு ரொம்ப ஆசை."

"நானு, நானு தான்" என்றான் மழலைத் தேன் சொரியும் வாயால். அம்மொழிகளைக் கேட்ட தாயின் மனம் பூரித்துத் தான் போயிருக்கும். இதில் சந்தேகமில்லை. "அப்பா மேலே ஆருக்கு ஆசை?" என்று கேட்டாள். மீண்டும், "நானு, நானு" என்று கூவிக்கொண்டே ஓடி வந்தான். அந்த அறையைப் பலமுறை சுற்றினான். தாய் தன் மகனை அழைத்து அருகணைத்து "கண்ணு நீ இரண்டாம் வேளை சாப்பிடுகிறப்போ, மூன்று பிடி சோறு எடுத்துக்கோ; முதல் பிடி, அப்பாவுக்கு வச்சுடு; இரண்டாவது பிடி அம்மாவுக்கு வச்சுடு; மூணாவது பிடி தான் நீ சாப்பிடணும். மொதல்லெ, ஒம்பிடியெச் சாப்பிடு; அப்புரம் அம்மா பிடியெச் சாப்பிடு; கடைசியா அப்பா பிடியையும் சாப்பிடு" என்று கூறினாள். இது கேட்ட கண்ணு மிகுந்த சந்தோஷங் கொண்டான்.

அன்று முதல் தான் சாப்பிடுவதில் மூன்று பிடிகள் பிடித்து, மூன்றாவது பிடியை மட்டுமே தான் சாப்பிட்டு வந்தான். சோற்றை இரைப்பதை அடியோடு விட்டு விட்டான். மூன்று பிடிகளையும் தானே சாப்பிட்டு விட்டால், தன் தாய் தந்தையருக்குச் சோறில்லாமற் போகுமே என்று நினைத்தான்.

# புயலில் சிக்கி, தப்பிய விமானி

மேக மண்டலம். கார்மேகங்கள் கவிந்திருந்தன. ஒரு தனி விமானம் அங்கே தோன்றியது. அதைச் சுற்றிலும் புயற்காற்று சுழற்றி யடித்தது. கடும் மழையும் பொழிந்தது. அந்த விமானத்தின் இஞ்சின் குளிர்ந்து விட்டது. அதைச் செப்பனிட முயன்றார், அந்த விமானி. பலிக்க வில்லை அவருடைய முயற்சி. விமானம் நாலாதிசைகளிலும் மோதியடிக்கப்பட்டது. இதனால், விமானியின் தலையில் காயம்பட்டது. பிரக்ஞை இழந்தார். அவர் எப்படி கீழே விழுந்தாரென்றும், பிறகு நடந்த சம்பவங்களைக் குறித்தும், அவர் கூறியதாவது :—

நியூசிலந்து என் நாடு. என் சொந்த ஊர் கான்டர்பரி. என் பெயர் வாரன்ட் ஆபீசர் பிரான்சிஸ் டி. சி. ப்ரௌன். எனக்கு வயது 21, நான் ஆகாயப் படையில் சேருமுன்னதாக ஆட்டுப் பண்ணையில் வேலை பார்த்து வந்தேன். நான் பெற்ற விமானப் பயிற்சி, என் உயிரை காப்பாற்றியது. நான் பர்மாவிற்குக் கிளம்பினேன். சுமார் 20 நிமிஷ நேரம் பறந்திருக்கலாம். கடும் மழையும் புயலும் கிளம்பின. என் விமானத்தைச் சுற்றிலும் மின்னல்கள் என் கண்ணைப் பறித்தன, திக்குமுக்காடினேன். நாலாதிசைகளிலும் என் விமானம மோதியது. அதன் இஞ்சின் பழுதாயிற்று. செப்பனிட முயன்றேன். முடியவில்லை. விமானம் கலை மோதியதனால், என் தலையில் கடுமையான காயம் ஒன்று பட்டது. என் கண்களுக்குள்ளே மிகுந்த வலி ஏற்பட்டது. என் சுய அறிவு நீங்கியது. பிறகு என்ன நிகழ்ந்த தென்று எனக்குத் தெரியாது. நானாகவே, விமானத் தளைகளை அவிழ்த்துக் கொண்டு கீழே குதித்தேனோ, அல்லது விமானம் அலைமோதியதனால் தளைகள் அறுந்து நான் கீழே விழுந்தேனோ என்னவோ எனக்குத் தெரியாது. 20,000 அடி உயரம் விழுந்த பிறகு, எனக்கு ஒருவாறு சுய உணர்வு வந்தது. நான் மகா வேகத்தோடு விழுந்து கொண்டிருந்த போதிலும், மேகங்களோடே மிதந்து வந்து கொண்டிருந்தேனாகையால், அந்த வேகம் எனக்குத் தோற்றவில்லை. அப்போது நான் கலைகீழும் மேலுமாய் உருண்டு வந்து கொண்டிருந்தேன். என்னைச் சுற்றிலும், உடைந்து சிதறிப் போன என்னுடைய விமானத்தின் பல பாகங்களும் விழுந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். அப்போது சுமார் 3,000 அடி உயரத்திலிருந்தேன். தரை கண்ணுக்குத் தென்பட்டது. என்னையும் அறியாமலேயே என்கைகள் பாரசூட்டின் கயிற்றுச் சுருக்கை இழுத்தன. உடனே அது குடைபோல் விரியத் தலைப்பட்டது. நான் சமுத்திரத்திற் கருகில் விழுந்தேன். அது சிறு தீவு. அதற்கும் அடுத்த கிராமத்திற்கும் சுமார் ½ மைல் தூரம் இருக்கும். என்னை ஒரு சிறுவன் முதன் முதல் அங்கே கண்டான். அந்தக் கிராமத்திற்கு ஓடினான். அங்குள்ளவர்களுடைய உதவியை நாடினான். அவர்கள் வந்து என்னைத் தட்டுத் தடுமாறி அழைத்துக் கொண்டு போனார்கள் அந்த கிராமத்திற்கு. அங்கே யிருந்தவர்கள வங்காளிகள். வானலோகத்திலிருந்து வந்ததாகவே மதித்து எனக்கு உபசாரங்கள் செய்தார்கள். வந்தவர்க ளெல்லோரும் இளநீராவது, சூடான தேநீராவது ஆட்டுப்பாலாவது கொண்டுவந்து கொடுத்தார்கள். அன்றியும் தர்ப்பூசனி, வாழைப்பழம், சோறு, பருப்பு, தேநீர் முதலியவையும் கொடுத்துச் சாப்பிடச் செய்தார்கள். அந்தச் சிறு தீவின் குக் கிராமத்திலுள்ள ஒரு ஓலைக்குடிசையில் அன்றிரவைக் கழித்தேன்.

பொழுது விடிந்தது. அவ்வூர் உபாத்தியாயர் வந்தார். தன் மாணாக்கர்களுக்கு ஒரு பிரசங்கம் செய்யும்படி என்னைக் கோரினார். நானும் செய்தேன். இதற்கிடையில் ஒரு மாட்டு வண்டி வந்து சேர்ந்தது. ½ மணி நேரம் பிரயாணம் செய்தேன். கடைசியாக ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தோம். அங்கே அன்றிரவைக் கழிக்கும்படி நேர்ந்தது. மறுநாள் மாலை 4 மணிக்கு ஒரு சம்பான் படகு வந்தது. அதில் ஏறினேன். மறுநாள் காலை 8 மணி வரை அதிலிருந்தேன். இதற்கிடையில் புயல்காற்று நின்றுவிட்டது. நானும் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தேன். டாக்டர்கள் என்னைச் சோதித்து, என் கண்ணிற்குள்ளிருந்த இரத்தக் குழாய்கள் வெடித்துவிட்டதாகக் கூறினார்கள். நான் இப்பொழுது பூரணகுணமடைந்து என் விமானப் படையில் மீண்டும் சேர்ந்து விட்டேன்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

தீர வேண்டும். ஏனென்றால், மற்ற பெண்களுக்கு மட்டுந் தான் இப்படிப்பட்ட அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்று நினைக்கிற பெண்களும் இன்னும் இருக்கிறார்கள்.... பல முறை வேண்டுகோள்கள் விடுத்தும் கூட, இன்னும் படையில் சேராதவர்களும் இருக்கிறார்கள். இன்னும் சிலர் தாம் இருந்த இடத்தை விட்டு வெளியேறி விடுவது நல்லது என்று நினைக்கிறார்கள். இந்த யுத்த நெருக்கடியான சமயத்தில் படையில் சேர மறுக்கும் பாவத்தை செய்கிறவர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.''

சென்ற மே மாதத்தில் கூட, பெண்களின் போக்கைப் பற்றிய குறிப்புக்கள் ஜெர்மன் பத்திரிகைகளில் வெளி வந்தன. சென்ற மே மாதம் 25-ம் தேதி வெளி வந்த ''ஓய்ல்ஷெர் பியோபாச்டர்'' என்னும் பத்திரிகை, பெண்கள் மீது குறை கூறுகிறது. அதாவது ''பெண்கள் வீட்டு வேலைகளைப் பற்றி அதிகமாக விவாதிக்கிறார்கள்; அல்லது, அடுத்தடுத்து, தம் தாயைப் பற்றியும் அத்தையைப் பற்றியும் வாத நோயைப் பற்றியும் பேசுகிறார்கள்,'' என்று எழுதியது. ''பெர்லினர் போயர் சென் செய்துங்'' என்பது மற்றொரு பத்திரிகை, மே மாதம் 29-ம் தேதி வெளி வந்த அப்பத்திரிகையில், யுத்த வேலைக்கேற்ற வளவு பலம் தம் உடலில் இல்லை என்று சாக்குப் போக்குக் கூறி தப்பித்துக் கொள்ள ஜெர்மன் பெண்கள் முயற்சிக்கிறார்கள் என்று கூறுகிறது. மேலும் அது கூறுவதாவது:—

''படையில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு அவசியமான வைத்திய பரீட்சைகள் இயல்பாகவே நடை பெறுகின்றன. ஆனால், இதற்கு நெடுங்காலம் செல்லுகிறது. ஆகவே, வேலை செய்ய முயற்சிக்கும் பெண்களை முதலில் அனுப்புவது மேல். சாதாரணமாக உழைத்துப் பழக்கமில்லாத ஜனங்கள், தமக்குள்ள சிறு நோயைக் கூட பிரமாதப்படுத்திக் கூறுவது இயற்கை தான். தியாகங்கள் செய்யப்படாமல், நாட்டிலுள்ள மக்கள் அனைவரையும் படையில் சேர்ப்பது என்பது முடியாத காரியம்.''

* * * *

**இங்கிலாந்து நிலைமையும் ஜெர்மனி நிலைமையும்.**

தத்தம் நாடுகளில் நடைபெறும் யுத்த முயற்சி பற்றி பிரிட்டிஷ் பெண்களும் ஜெர்மன் பெண்களும் கொண்டுள்ள போக்கின் தாரதம்மியம் பற்றி ஆராய்ச்சி செய்வது பொருத்தமாகும். தமக்குள்ள மிகுந்த தேசியப் பொறுப்பை இங்கிலாந்திலுள்ள பெண்கள் தெளிவாகக் காட்டிக் கொண்டார்கள். முழு மனதோடு தம் நாட்டின் யுத்த முயற்சியில் ஈடுபட்டு திறமையோடு தம் கடமைகளை நிறைவேற்றுகிறார்கள். இது தம் கடமை என்று மட்டும் அவர்கள் நினைக்க வில்லை. தேசீய யுத்த முயற்சிக்கு உதவுவது தம் உரிமை என்றும் கருதுகிறார்கள். ஆனால், ஜெர்மன் பெண்களோ, நாஜிகள் தமக்கு வழங்கிய இழிவான நிலையிலேயே வாயை மூடிக் கொண்டு அமைதியோடும் திருப்தியோடும் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள். ஆகவே, இப்போது பெண்கள் படையில் சேரவேண்டுமென்றால், அவர்கள் மனமில்லாதிருக்கிறார்களென்று சொல்லலாம். ஏனென்றால், தாமும் யுத்த முயற்சியில் பரிபூரண பங்காளிகள் என்னும் உணர்ச்சி அவர்களுக்கில்லை. வேறு எந்த வழியும் பலிக்காமற் போகவே, தம்மைப் படையில் சேர்க்கிறதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

''நியோ சூர்ச்சேர் செய்துங்'' என்பது சூரிச்சிலிருந்து வெளிவரும் ஒரு ஜெர்மன் பத்திரிகை. இதில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது:—

''படையில் சேர்க்கப்பட்ட பொது ஜனங்களில் 83 சதவிகிதம் பெண்கள். இவர்களில் 50 சத விகிதம் பேர்கள் வேலைக்குத் தகுதியானவர்கள் என்று பிரகடனம் செய்யப்பட்டவர்கள். இவர்களில் பாதிப் பேர்கள் இதற்கு முன்பு எவ்வித வேலையும் செய்தறியாதவர்கள். கால் பங்குப் பேர்கள் மட்டுந்தான் உழைப்பான வேலைகளைச் செய்தவர்கள்.''

இப்படிப்பட்ட பெண்களையுங்கூட படைகளில் சேர்த்து ஜெர்மனி தொழிற் சாலைகளில் வேலை செய்யும்படி ஏன் நிர்ப்பந்திக்கிறார்களென்று தெரியவில்லை. ஜெர்மானியர்களின் தொழில் உற்பத்திகள் திருப்தியாயில்லை. என்னும் காரணத்தினலா? ஜெர்மன யுத்த வேலைகள் தடைப்படுவதற்கு 3 காரணங்கள் உண்டு: (1) ஸ்டாலின்கிராடிலே ஹிட்லர் சிதறடிக்கப்பட்டார், (2) ரூர் பள்ளத் தாக்குப் பிரதேசத்தில் நேச நாட்டு விமானங்கள் வெடி குண்டுகளை அதிகமாக எறிந்து தாக்குகின்றன, (3) சிசிலி தீவு மீது பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் படை எடுத்தது. இந்த நிலைமையில், பெண்களை எல்லாம் தொழிலாளர்களாகத் திரட்டுவதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. தம் யுத்த உற்பத்தி வேகம் குறைந்து விடக்கூடாது என்பதற்காக நாஜிகள் பகீரதப் பிரயத்தனங்கள் செய்கிறார்கள். அவர்கள் எதிர்பார்க்கிற அளவிற்கு அவர்கள் முயற்சி பலிக்கப் போவதில்லை.

* * * *

**சிசிலி போராட்டத்தில் நேச நாடுகள் முன்னேற்றம்.**

சிசிலி போராட்டத்தின் முற்போக்கைக் குறித்து தான் மிகவும் திருப்தி யடைந்திருப்பதாக ஜெனரல் மண்ட்கமரி கூறியதாக, ஆல்ஜியர்ஸ் வானொலி நிலையம் அறிவித்தது. சிசிலியில் நேச நாட்டுப் படைகள் அடுத்தடுத்து முன்னேறின. என்றாலும், அத்தீவின் மத்தியப் பகுதியிலும், தென் மேற்குப் பகுதியிலுமுள்ள மலை நாடுகளை யடுத்துப் போராட வேண்டிய பருவத்தில், இவ்வளவு வேகமாகப் போராட முடியாதென்று சொல்லப்படுகிறது. இப்போது சிசிலியின் அரசியல் நிலைமை மாறுபட்டிருக்கிறது. இதற்குக் காரணம், முசோலினி ஒழிந்தது தான். இதிலிருந்து ஒரு எண்ணம் தோன்றுகிறது. அதாவது, சிசிலிப் போராட்ட ஆரம்ப காலத்தில் எதிர்பார்த்ததைப் போல, அவ்வளவு அதிக நாட்கள் செல்லாது அதை முடிக்க, என்று எண்ண இடங் கொடுக்கிறது.

சிசிலிப் போராட்டத்தில் ஒரு முக்கியமான அம்சம் உண்டு. அது தான், நேச நாடுகளின் தரைப் படையும், கப்பற்படையும், விமானப் படையும், இந்த மகா சிக்கலான போராட்டத்தில், பரிபூரணமாக ஒத்துழைத்தது. தரைப் படைகளும் விமானப் படைகளும் ஒன்றுபட்டு வேலை செய்கின்றன. சிசிலியை யடுத்துள்ள கடல்களில் போராடிக் கொண்டிருக்கும் நேச நாட்டுக் கப்பற் படைகளுக்கு மேலே ஆகாயத்தில் குடை பிடித்ததைப் போல, பலமான நேச நாட்டு விமானப் படைகள் அமைந்து சிசிலிக் கரைகளிலுள்ள பாதுகாப்பு அரண்களையும் மற்ற இராணுவ இலக்குகளையும் வெடி குண்டுகளைக் கொண்டு நாசஞ்செய்து கொண்டிருக்கின்றன. அநேக நாட்கள் கடேனியாவை நேச நாட்டு விமானப் படைகளை தாக்கிக் கொண்டிருந்தன. பிரிட்டிஷ் கப்பற் படை மாசினா ஜலசந்திக்குள்ளேயே புகுந்து விட்டது. எதிரி கரைக்கு மிகவும் அருகிலுள்ளதோர் இடம் இது. மிகச் சிறந்த விமான பலமும், படைகளுக்குள் பரிபூரண ஒத்துழைப்பும் இருந்தாலல்லது, இது இயலாத காரியம்.

**நேச தேச வெற்றிகளைக் குறைத்துக் கூறுகிறது அச்சு ரேடியோ.**

இவ்வளவு சிறந்த நிலைமையும் மூவகைப் படைகளுக்குள்ளும் இருந்த, இருந்து வரும் கூட்டுறவு காரணமாகவும் நேச நாடுகளுக்கு வெற்றிகள் கிடைத்து வந்தன. இதனால், எதிரி விமான நிலையங்கள் தடுமாறிப்போய் கலவரமடைந்து விட்டன. ஆகவே, அச்சு நாட்டுப் பிரசாரங்கள் பல வகைகளிலும் ஒன்றிற்கொன்று முரண்படுகின்றன. இரண்டு வாரங்களுக்கு முன்பு, பெர்லின் வானொலி நிலையமொன்று இங்கிலீஷில் சிசிலி போராட்டத்தில் இன்னும் கலந்து கொள்ளவில்லை, என்று கூறியது. இதற்கு மறுநாள், அச்சு நாட்டார் ஆதிக்கத்திற்குட்பட்ட ''ப்ரீ இந்தியா'' வானொலி நிலையம் தமிழில் என்ன கூறியது தெரியுமா? ''சிசிலி போராட்டம் கடைசி கட்டத்தை அடைந்து விட்டது'' என்று சொன்னது. ஜூலை மாதம் 16-ம் தேதி ஜெர்மன் வானொலி நிலையம் ஆங்கிலத்தில், ''சிசிலியில் நேச நாட்டுப் படைகள் மேலும் முன்னேறக் கூட வில்லை'' என்றது. அச்சு நாட்டார் ஆதிக்கத்திற்குட்பட்ட ''அசாத் ஹிந்த்'' என்னும் ஒரு வானொலி நிலையம் அதற்கு முன் தினம் அதாவது ஜூலை மாதம் 15-ம் தேதி தமிழில், ''அச்சுப் படைகளின் முக்கியமான பகுதியை இன்னும் நேச நாட்டுப் படைகள் சந்தித்துப் போராட வில்லை; இன்னும் உள் நாட்டில் 20 மைல்கள் கூடப் புகுந்து போக முடியவில்லை,'' என்று கூறியது. ஜெர்மன் இராணுவ விமரிசகரான காப்டன் செர்டோரியஸ் ஜூலை மாதம் 17-ம் தேதி பெர்லினிலிருந்து ஒலிபரப்பிய போது குறிப்பிட்டதாவது:—

''கடேனியாவிற்குத் தெற்கே, கடற்கரைப் பகுதியில், பலமான பிரிட்டிஷ் காலாட் படைகளோடு ஜெர்மன் படைகள் போராடின....ஸ்கார்டியவிலிருந்து முன்னேறிக் கொண்டு வரும் கனடியத் துருப்புக்கள் கடேனிய சம பூமிக்குள் நுழைய வேண்டி இப்போது போராடிக் கொண்டிருக்கிறார்கள்.''

உண்மை என்னவென்றால்: சிசிலியின் தென் கோடி முனையிலிருந்து 50 மைல்கள் வரை உள் நாட்டிற்குள் கனடியத் துருப்புக்கள் முன்னேறி விட்டன; எல்லாப் பகுதிகளிலும் நேச நாட்டுப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இந்தப் படைகளைக் கரையோரத்திலேயே நிறுத்திவிட வேண்டுமென்று அச்சு நாடுகள் விரும்பின. ஆனால் முடியாமற் போயிற்று.



தொழிலாளர் பகுதி

# தொழிலாளரும் யுத்த முயற்சியும்

**சென்னை வானொலி நிலையத்திலிருந்து சமீபத்தில், ''யுத்த முயற்சி'' என்னும் தொடரில், ''தொழிலாளரும் யுத்த முயற்சியும்'' என்பது பற்றி ஜி. செல்வபதி செட்டியாரவர்கள் ஒலி பெருக்கிய பிரசங்கமாவது:—**

இந்த உலக யுத்தமானது 1939-ம் வருஷம் ஆரம்பமாகி, சுமார் 4 ஆண்டுகளாக நடந்து வருகிறது. தற்கால யுத்தம், முற்கால யுத்தத்தைப் போன்றதல்ல. முன்னர், இரண்டு சைன்யங்களும் எதிர்த்து, யுத்தகாலத்தில் சண்டையிட்டு, எந்த நாட்டின் சைந்நியம் ஜெயிக்கிறதோ, அந்த நாடு வெற்றி பெற்றதாகக் கருதப்படும். தற்போது சண்டை என்றால், நிலத்தில் மட்டுமல்ல. நீரிலும், ஆகாயத்திலும் கூடச் சண்டை பரவி விட்டது. இம்மூவகைச் சண்டைகளுக்கு சிப்பாய்கள் மட்டும் போதாது. யுத்தக் கப்பல்கள், டாங்கிகள், பீரங்கிகள், ஆகாய விமானங்கள் இவைகளெல்லாம் வேண்டும். ஆகாய விமானமென்றால், ஒரே விதமல்ல. பலவிதமான விமானங்கள் பல்வேறு தொழில்களுக்கு உபயோகப்படவேண்டும். அதே போலத்தான மற்றவைகளும். இஃதன்றி சண்டையிடும் கருவிகள் வேண்டும். சண்டையிடுபவர்கட்குத் துணி முதல் அவசியமான சாமான்களெல்லாம் வேண்டும். மூழ்கிவிட்ட கப்பல்களுக்கும் அழிந்துபோன ஆகாய விமானங்களுக்கும் மற்றவைகளுக்கும் பதிலாக, உடனுக்குடன் வேறு கப்பல்கள், விமானங்கள் முதலியன செய்யப்படவேண்டும். வியாபார கப்பல்கள், அவைகளுக்குப் பாதுகாப்பாகச் செல்லும் கப்பல்கள்——இவைகள் சில சமயங்களில் மூழ்கிவிடுகின்றன. இவைகளுக்குப் பதிலாகவும் வேறு செய்யப்பட வேண்டும். சண்டையிடும் கருவிகள் ஒரு வகையல்ல; எத்தனை வகைகள் உண்டோ, அத்தனையும் செய்யப்படவேண்டும். புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் ஆயுதங்களெல்லாமும் செய்தாக வேண்டும். ஆயுதத்திற்காக மாத்திரம், பலகோடி தொழிலாளர்கள் பல்வேறு வேலைகளைச் செய்து வருகின்றனர்.

சிப்பாய்களின் போர்த்திறத்தினால் மாத்திரம் இம்மா பெரும் யுத்தத்தை ஜெயிக்க முடியாது. யுத்தத்திற்கு வேண்டிய சாமான்களைத் தயாரிக்கும் தொழிலாளரது முயற்சியினால் தான் முக்கியமாக இந்த யுத்தம் ஜெயிக்கப்படவேண்டும். இங்கிலாந்திலே தொழிற்கட்சி அரசாங்கத்தில் பங்கெடுத்துக் கொள்வதற்கு முன்னர், யுத்த முயற்சி மிகக் குறைவாகத் தானிருந்தது. தொழிலாளர் இந்த யுத்தத்தில் சிரத்தை காட்ட ஆரம்பித்த பின்னர் தான், யுத்த சாமான்கள் குவிய ஆரம்பித்தன. ஜனங்களிடையும் ஊக்கமும் தைரியமும் அதிகரித்தது. யுத்தத்தினுடைய போக்கும் மாறுபட்டு ஜெயத்திற்கு அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தன.

## யுத்த முடிவு தொழிலாளரைப் பொருத்தது

இந்த யுத்தத்தின முடிவு, நேசநாடுகளின் தொழிலாளரைப் பொருத்திருக்கிறது. எதிரிகள், கைப்பற்றிய நாடுகளிலிருந்து தொழிலாளரைக் கொண்டு போய்த் தங்கள் தொழிற்சாலைகளில் யுத்த வேலைக்கு உதவியாக்கிக் கொள்ளுகின்றனர். ஆனால் சிறைப்பட்ட தொழிலாளர் விதியின்றி வெறுப்புடன் செய்யும் வேலைக்கும், நேச நாட்டுத் தொழிலாளர் தாம் யுத்தத்திற்குப் பிறகு, தங்கள் நிலைமை மேன்மை பெறும் என்ற நம்பிக்கையுடன் செய்யும் வேலைக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. ரஷ்யாவிலே தொழிற்சாலைகள் பல. எதிரி தாக்குதலினால், முன்னிருந்த இடங்களை விட்டுப் புதிதான இடங்களுக்கு மாற்றப்பட்டு, அப்புதிய இடங்களிலேயும் பழைய மாதிரியே தொழிலாளர் எத்தனைக் கஷ்டங்கள் இருந்த போதிலும் உழைத்து, யுத்தத் தளவாடங்களைக் குவித்து வருகின்றனர். இதற்குக் காரணம், தாங்கள் தற்போது அனுபவிக்கும் சௌகரியங்கள் எதிரிகள் ஜெயித்தால் போய்விடும்; யுத்தத்திற்குப் பிறகும் தங்கள் நிலை, தற்போதைய நிலையைப் போலவே இருக்கவேண்டுமானால், யுத்தத்தை ஜெயிக்க அளவின்றி ஆயுதங்கள் தயாரிக்க வேண்டும் என்ற உண்மையை, அவர்கள் உணர்ந்துள்ளனர்.

சங்கங்களின்றி அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு மனமின்றி வேலை செய்கிறார்கள், அச்சு நாட்டுத் தொழிலாளர். ஆனால், நேசதேசத் தொழிலாளரோவெனில், இந்த யுத்தம் முடிந்த பிறகு, எப்படியும், தாங்கள் தான் நாட்டில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளப் போகிறோம் என்ற தைரியத்தில், உற்சாகத்தில வேலை செய்கிறார்கள். தொழிலாளர்கள் யுத்தத் தளவாடங்களை ஓய்வின்றி செய்வது மாத்திரமல்ல; எதிரிகள் தங்கள் தொழிற்சாலைகளைத் தாக்கினாலும் தைரியத்துடன் உயிருக்குத் துணிந்து தங்கள் வேலையைச் செய்கின்றார்கள்.

நம் நாட்டில் தொழிலாளர் யுத்தத்திற்காக என்ன செய்கின்றார்களென்று ஆராய்வோம். யுத்தக் கருவிகள் சில தொழிற்சாலைகளில் செய்கின்றார்கள். யுத்தத்திற்கு வேண்டிய மற்ற சாதனங்களைச் செய்கிறார்கள் மற்றும் சிலர். மில்களில் சிப்பாய்களுக்கு வேண்டிய துணிகளை நெய்து அனுப்புகிறார்கள். இரவு பகலாகத் தொழிலாளர்கள் உழைக்கிறார்கள். உணவுப் பொருள்களும் மற்றவையும் அதிகமாக விலை யேறியும் தங்கள் சம்பளம் அதற்கீடாக அதிகம் ஆகும் வரை, சிறிது இன்னற்பட்டாலும், உற்சாகம் குன்றாமல், வேலை செய்கின்றார்கள். ஆகாய விமானத்திற்கு வேண்டிய பாகங்கள் கப்பல்கள் எல்லாம் கூட, தொழிலாளர்கள் தயார் செய்கின்றார்கள். எதிரி படையெடுத்தால், தடுப்பதற்கு அவசியமான காப்பு வசதிகளெல்லாமும் செய்கின்றார்கள். இஃதன்றி, யுத்தத்தில் முக்கியமான கருவியான உணவை, உழவர்கள் தளர்வின்றி எத்தனையோ கஷ்டங்களுக்கிடை உற்பத்தி செய்கின்றார்கள். சிப்பாய்கள் செய்யும் சேவையைப் போலவே, தொழிலாள வீரர்களும் யுத்தத்திற்காக அரும் பாடுபடுகிறார்கள்.

## ''பெவின் பாய்ஸ்''

யுத்த வேலையில் வல்லுநர்களாவதற்காகவும் மேனாட்டிலுள்ள முறைகளை இந்நாட்டுத் தொழிற்சாலைகளிலும் கையாளத் திறமையுடையவர்களாக வேண்டுமென்பதற்காகவும், அரசாங்கத்தார் இந்நாட்டுத் தொழிலாளர் சிலரை இங்கிலாந்திற்கு அனுப்பி அங்குள்ள தொழிற்சாலைகளில் அவர்களுக்குப் பயிற்சி யளித்து அனுப்பினர் அவர்களைத் தான் ''பெவின் பாய்ஸ்'' என்று சொல்லுவது. அவர்களும் தம் அனுபவத்தை நம் நாட்டில், யுத்த முயற்சியிலீடுபட்டிருக்கும் தொழிலாளருக்கு உபயோகப்படுத்துகின்றனர். அமைதி நாட்களில், வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த லட்சக்கணக்கான தொழிலாளர்கள், இன்று யுத்த வேலையில் யீடுபட்டுள்ளார்கள்.

பலவந்தமின்றி, உடல் நலம் குன்றியும், தொழிலாளர் யுத்தத்திற்காக உழைப்பதன் நோக்கந் தான் என்ன? தொழிலாளருக்கு முக்கியமாக வேண்டியது, தங்கள் சங்கம். அச்சு நாடுகளில் தொழிலாளர்கள் சங்கம் வைத்துக் கொள்ளவும், தனிப்பட்டு இயங்கவும் முடியாது. மேலும், தங்களுடைய பரிதாபகரமான நிலைமை ஒழிய வேண்டுமென்று தொழிலாளர்கள் எண்ணுகின்றார்கள். முக்கியமாக வேலை செய்யச் சக்தியிருந்தும், வேலையில்லாமல் திண்டாடுவது, வேலை விட்ட பிறகு, வயோதிகராய்த் தங்களுக்கு ஆதரவில்லாமல், அவஸ்தைப்படுவது, நோய் வாய்ப்பட்டபோது, பாதுகாப்பில்லாமலிருப்பது, இத்தகைய குறைகளெல்லாம் ஒழிய வேண்டுமென்பது தொழிலாளர் கோரிக்கை. அச்சு நாடுகள் முறியடிக்கப்பட்டு, நேசநாடுகள் ஜெயித்தால், இக்குறைகள் நீங்கும். ஆங்காங்குள்ள அரசாங்கங்கள் தொழிலாளர்களின் உழைப்பை உன்னி, அவர்களுக்கு வேண்டிய வசதிகள் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை தொழிலாளரிடை பரவியுள்ளது.

புத்துலகத்தில் தங்களுடைய தற்காலத் தொண்டு தங்களுக்கு முக்கிய ஸ்தானத்தை யளிக்கும் என்ற எண்ணம் தான் தொழிலாளரை ஊக்கி வருகிறது.

யுத்தத்தை ஜெயிப்பதற்கு முக்கியமாக வேண்டியது நம்பிக்கை. எல்லா யுத்த சாதனங்களிலும் முக்கியமானது நம்பிக்கை. இந்த நம்பிக்கையைத் தான் தொழிலாளர்கள் மற்றவர்களுக்குப் படிப்பினையாகக் காட்டுகின்றார்கள். தங்களது துன்பங்களெவ்வளவிருந்த போதிலும், தங்களது எதிர்காலத்திலே நம்பிக்கையுடையவர்களாய், தொழிலாளர்கள் தளராது உழைக்கின்றார்கள். பொது ஜனங்களும் அவ்வாறே யுத்தம் முடியும் வரை நம்பிக்கையைக் கைவிடாமலிருக்க வேண்டும்.

பல்வேறு தொழில்களிலிருந்து தொழிலாளர்கள் யுத்த வேலையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். யுத்தம் முடிந்த பிறகு, அவர்கள் வேலையின்றித் திண்டாடாமல், உடனே வேறு வேலைகளில் அவர்களை அமர்த்தி உபயோகப்படுத்திக் கொள்ளுவதற்கான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். போர் வீரர்களின் சேவை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் தொழிலாள வீரர்களது சேவையும். ஆதலால், போர் வீரர்களுக்காக, யுத்தம் முடிந்த பிறகு, அவர்களை எப்படிக் காப்பாற்றுவதென்று திட்டங்கள் தயாரிக்கின்றார்களோ, அவ்வாறே, வேறு தொழில்களிலிருந்து யுத்த வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு, யுத்தம் முடிந்த பிறகு, வேலை யளிப்பதற்குத் தற்போதே திட்டங்கள் தயாரிக்க வேண்டும்.

# சமூகத் துரோகம் - வதந்தி

## தொத்து நோய்க்கும் நெருப்பிற்கும் இது சமம்

## இவற்றைக் கொல்லுவது ஒவ்வொருவருடைய கடமையுமாகும்

*சென்னை வானொலி நிலயத்தி லிருந்து ஜூலை மாதம் 22-ம் தேதி "சமூகத் துரோகம்" என்னும் தொடரில் "வதந்தி" என்பது பற்றி த. பா. நித்தியானந்தம் அவர்கள் ஒலி பரப்பிய சொற் பொழிவு.*

சமூகத்துரோகம் என்னும் சொற்றொடருக்கே, பொது மக்களுக்குச் செய்யப்பட்ட தீங்கு என்று பொருள். இப்படிப்பட்ட செய்கைக்குக் காரணம் தன்னலந்தான். "தானே வாழவேண்டும்; தலைமகளுங் கூடத் தாலி யறுக்கவேண்டும்" என்னும் எண்ணம் உள்ளவர்கள் தான் சமூகத் துரோகிகள். "எல்லா உலகும் இன்புற்றிருப்பதுவே யல்லாது வேறொன் றறியேன் பராபரமே" என்னும் தாயுமானுரின் திருவாக்குக்கு முற்றும் முரண்பட்டவர்கள்.

சமூகத் துரோகச் செயல்கள் பலவகைப்படும். அவற்றுள் ஒன்று "வதந்தி." வதந்திகள் எப்படித் தோன்றுகின்றன? எப்படிப் பரவுகின்றன? அவற்றால் என்ன பலன் விளைகிறது? அவற்றை எந்தெந்த வகையில் எதிர்த்துப் போராடி வெல்ல வேண்டும்?

### இரண்டு வகை வதந்திகள்.

வதந்திகள் இரண்டு வகைப்படும். முதலாவது, ஏதேனும் ஒரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுப் பரப்பப்படுவது, இரண்டாவது, எவ்வித நோக்கமுமின்றி, அறியாமையினால், உண்மையை உணர்ந்துகொள்ளும் திறமையில்லாமல், தம்தம் மனம்போல் செய்திகளைக் கற்பித்துப் பரப்புவது. இவ்விரண்டிலும் பொது மக்களுக்குத் தீமை உண்டு. சாதாரண காலத்திலேயே தீமை உண்டு என்றால், யுத்த காலத்தில் சொல்லவா வேண்டும்? மகத்தான தீமைகள் நேரத் தான் செய்யும். இத்தீமைகள் ஒரு சிலரை மட்டும் பாதிப்பவையா யில்லை. ஆகையால், இவற்றை முளையிலேயே கிள்ளி எறிந்து விடவேண்டியது அறிஞர் கடன்.

நிற்க, முதல்வகை வதந்திகளை எடுத்துக் கொள்ளுவோம். யுத்தத்தில் ஜெயிக்க வேண்டும். நேசநாடுகளைப் போலவே, அச்சு நாடுகளும் இந்த ஆசை கொள்ளுகின்றன. இதை நிறைவேற்றிக் கொள்ள இருதரத்தாரும் முயலுகிறார்கள். இந்த முயற்சியின் ஒரு வகை தான் வதந்திகளைப் பரவச் செய்வது. உதாரணமாக இரண்டு நாட்களுக்கு முன்பு இலங்கைத் தீவின் கீழக்கரையில், ஜப்பான் விமானங்கள் தென்பட்டன என்னும் செய்தி உண்மையானது தான். இதை அச்சுநாட்டார் வெகு அழகாகச் சித்தரித்து, தம் வானொலி நிலயங்களிலிருந்து ஒலி பரப்புவார்கள். இப்படிச் சித்தரிக்கப்பட்ட செய்திகள் தான் வதந்திகளில் முதல் வகை. இந்த வதந்திகளைக் கேட்கிறவர்களுடைய மனதில் என்ன உணர்ச்சி தோன்றும் தெரியுமா? ஜப்பானியர்கள் மகா பரிசுத்தவான்கள்; கீழ்நாடுகளின் ரட்சகர்கள்; உலகவாழ்விற்குக் காரணபூதர்களென் றெல்லாம் மனதில் பதியத் தக்கபடி பேசுவார்கள். வாழைப் பழத்தில் ஊசி ஏறுவது போலிருக்கும் அவர்களுடைய பிரசங்கங்கள். இந்த வகைப் பிரசாரத்தில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். இப்படிப்பட்ட வதந்திகள் இந்த யுத்த காலத்தில் பொதுமக்களிடையே பரவுமானால், யுத்த முயற்சியும் தடைப்படும்படி நேரலாம். இதை வளரவிட்டால், தோல்வி யல்லவா ஏற்படும்? ஆகவே, அதைப்பரவ ஒட்டாமல் தடுக்க வேண்டும்.

### வதந்திகளுக்கு இடம் கொடுக்கவே கூடாது.

இந்த இரண்டாவது வகை வதந்திகளைக் குறித்து ஒரு சிறிது கவனிப்போம். யானையைக் காணச்சென்ற குருடர்களின் கதையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதாவது, நான்கு குருடர்கள் யானையைப் பார்க்கப் போனார்கள். ஒருவன் அதன் துதிக்கையைத் தொட்டுப் பார்த்து விட்டு, உலக்கை போலிருக்கிறது யானை என்றான். மற்றொருவன் காதைத் தொட்டுப் பார்த்துவிட்டு, முறம் போலிருக்கு மென்றான். இன்னொருவன் காலைத் தொட்டுப் பார்த்துவிட்டு, அடிமரம் போலிருக்கு மென்றான். வேறொருவன் வாலைத் தொட்டுப் பார்த்துவிட்டு, சாட்டை போலிருக்குமென்றான். இந்நால்வரும் அவரவர் மனதார உண்மையைத் தான் சொன்னார்கள். ஆனால், யானையின் உருவம் அவர்கள் எண்ணியபடி யில்லை. இவர்கள், தாம் உணர்ந்தவற்றை மக்களிடையே பரவச் செய்ய முயற்சித்தால், மகத்தான தீங்கல்லவா நேரும். ஆகையால், எந்தக் காரியத்தையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்யவேண்டும். "கண்ணால் கண்டதும் பொய்; காதால் கேட்டதும் பொய்: தீர விசாரிப்பதே மெய்" என்பது ஆன்றோர் வாக்கு. வதந்திகள் கிளம்பியவுடனே அவை தலை தூக்க ஒட்டாதபடி நசுக்கி விடவேண்டும். ஒரு சிற்றூரில் ஏழைக் குடியானவன் ஒருவனுடைய குடிசையில் தீப்பற்றிக் கொண்டதென்று வைத்துக்கொள்வோம். அந்த ஊரார் அனைவரும் அதை அணைக்க உடனே முந்துவார்களல்லவா? ஏன்? அந்தத் தீ பரவினால், ஊர்முழுதுமே எரிந்துச் சாம்பலாக்கிவிடும். ஆகவே தான், ஊரார் எல்லோரும் கூடி, அது பரவ ஒட்டாமல் தடுக்கிறார்கள். ஒரு ஊரில் வாந்திபேதி நோய் ஆரம்பமானதாக வைத்துக் கொள்ளுவோம். உடனடியாக அந்நோய் பரவ ஒட்டாமல் இருப்பதற்கு, என்னென்ன செய்யவேண்டுமோ, அத்தனையும் செய்கிறோமல்லவா. ஏன்? அது ஒரு தொத்து நோய். இந்நோய் மற்றவர்களையும் பற்றிக்கொண்டால், இலகுவில் விடாது. பெருந்தீங்குகள் நேர இடங்கொடுக்கும். ஆகவே தான், தொத்துநோய் கண்டவுடனேயே அது பரவ ஒட்டாமல் தடுக்க, எல்லா வகைகளிலும் முயற்சிக்கப் படுகிறது. இவை போன்றவை தான், வதந்திகளும். தீ, எப்படி ஊரையே எரித்துச் சாம்பலாக்கிவிடக் கூடுமோ, வாந்திபேதி நோய் எப்படி ஊரையே நிர்மூலமாக்கிவிடுமோ, அதுபோலவே, வதந்திகளால் எதிரிகளின் நோக்கங்கள் ஈடேறுவதற்கு இடங் கொடுத்து விடும். ஆகவே, வதந்திகளுக்கு இடங் கொடுக்கவே கூடாது.

### வதந்தி, போராட்டத்தின் ஆயுதம்.

வதந்தி போராட்டத்தின் ஆயுதமாக விளங்குகிறது. இரும்பு போன்ற மனங் கொண்டவர்களையும் இளகி விடுகிறது. அதுமட்டுமா அதன் சக்தி. விஷ அம்புகள் உடலில் பாய்ந்தால், எவ்வளவு விரைவில் மரணம் நேருமோ, அதுபோலவே, எந்த அளவிற்கு நாம் வதந்திகளுக்குச் செவி சாய்க்கிறோமோ, அந்த அளவிற்குத் தீங்குகள் நம்மைத் தொடரும். "கேழ்வரகில் நெய் ஒழுகுகிறது என்றால், கேட்பவர்களுக்கு மதி எங்கே போச்சு?" இந்த வதந்தியை நாம் நம்புகிறோமா. கிடையாது. காரணம், கேழ்வரகில் நெய் ஒழுகாது என்னும் உண்மை நமக்குத் தெரியும். ஆகவே, அதை நாம் நம்பமாட்டோம். இங்கே நம் பகுத்தறிவைக் கொண்டு பரிசீலனை செய்கிறோம். இதற்குத் தான் ஆராய்ச்சி என்று பெயர். ஆராய்ச்சி யில்லாததனால் நேர்ந்த சில சம்பவங்களைக் கொண்டு இதை மேலும் விளக்குவோம். இது ஒரு கதை தான். பத்து வயது பெண். அரசன் மகனை மணந்து கொள்ள ஆசைகொண்டாள். ஆசைக்கு அளவேது? தனக்கும் குழந்தை பிறக்கும் என்று எண்ணினாள். அடுத்து, அக்குழந்தைக்கு நோய்கண்டு அது இறந்துபோனால்? இந்த எண்ணத்தினால், தான் சிந்தனை உலகத்தி லிருப்பதையும் மறந்தாள். அலறித் துடித்தாள். அதுகேட்ட அவள் தாயும், சேர்ந்து அலறித் துடித்தாள். அவர்கள் வீட்டில் யாரோ இறந்து விட்டதாக வதந்தி கிளம்பியது. இறந்து போனது யார் என்று விசாரிக்காமல், அவர்களுடைய உறவினர்களும சேர்ந்து அழ ஆரம்பித்தார்கள். அந்தப் பெண்ணின் சிந்தனை உலகம், அவர்கள் வீட்டை ஒரு இழவு வீடாக்கிவிட்டது. அந்தச் சமயம், கிராமத்தலைவர் அங்கே வந்து விசாரணை செய்தார். உண்மை வெளியானது. அங்கே அழுது கொண்டிருந்த அனைவரும் வெட்கத்தால் தலை குனிந்தனர். வதந்தியை நம்பியதனால் நேர்ந்த கேடல்லவா இது. அவர்கள் அனைவரும் அவமானம் அடைந்தார்கள்.

### படைகளை விட வதந்திக்கு ஆற்றல் அதிகம்.

இனி, நாடு முழுதுக்கும் பெருந் தீங்கு விளைவிக்கக் கூடிய வதந்திகளும் உண்டு. பெரும் படைகளைவிட, இந்த வதந்திகளுக்கு ஆற்றல் அதிகம். படைகளைக் கொண்டும் ஆயுதங்களைக் கொண்டும் வெல்ல முடியாத நாடுகளை, வதந்திகளைக் கிளப்பிவிட்டு வெல்ல முடியும். எதிரிகள் தம் சாமர்த்தியமான பிரசாரத்தால், பொது மக்கள் மனதில் பீதியை உண்டாக்க முயற்சிப்பார்கள். தமக்கு உதவி செய்கிறவர்களை இந்திரலோகப் பதவியில் அமர்த்துவதாகக் கூறுவார்கள். தம்மை எதிர்த்து நிற்பவர்களை சின்னாபின்னப் படுத்திவிடுவதாகச் சீறுவார்கள். இந்த வெத்து வேட்டுகளைக் கேட்டு நாம் மனக் கலக்கங் கொள்ளலாகாது. அவர்கள் கூறுபவை உண்மைதானா வென்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நம் பகுத்தறிவிற்குப் புரியாவிட்டால், நம்மைவிட, அதிகம் அறிந்தவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்களும் இந்த வகையில் நமக்கு உதவி செய்வார்கள். எந்த வதந்தி கிளம்பினாலும், அதுபற்றி தீர ஆலோசித்து முடிவு கட்ட வேண்டும். பிறகு, அது பரவ ஒட்டாதபடி, அதைப் பரப்பியவருடைய வாயை மூடவேண்டும். உண்மையிலேயே, கெட்டநோக்கம் எதுவுமின்றி அந்த வதந்தியை வெளியிட்டவராக விருந்தால், நாம் கூறும் காரண காரியங்களைக்கொண்டு திருப்தி யடைவார். மேலும் அந்த வதந்தியைப் பரப்ப மாட்டார். இவ்வளவு செய்தும் மேலும் அவர் பரப்புவாரானால், அவர் முதல்தரமான சமூகத்துரோகி. இந்த உண்மையை நாடறியச் செய்ய வேண்டும். அதுதான் அவருடைய வதந்தியைக் கொல்லும்வழி. ஏன்? கடுகளவு செய்தியை மலையளவாக்கி விடக்கூடியது வதந்தி தான். பேனைப் பரியாக்கி, பரியைக் கரியாக்கி விடக்கூடியதும் வதந்தி தான். அதாவது, இன்னார் வீட்டில் நான் பேனைக் கண்டேன் என்று சொன்னால், அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர், இன்னார் வீட்டில் பரியைக் கண்டேன் என்கிறார். அதாவது, குதிரையைக் கண்டேன் என்று கூறுகிறார். பரியைக் கண்டதாகக் கூறப்பட்டதைக் கேட்டுக்கொண்டிருந்தவர், பரி என்பதற்குப் பதிலாக, கரியைக் கண்டேன் என்கிறார். கரி என்றால் யானை. ஒருவர் வீட்டில் பேன் இருந்தது என்று சொல்லுவதற்குப் பதிலாக, யானை யிருந்தது என்று சொன்னால், எப்படி நம்புவது? இதுதான் வதந்தி எனப்படுவது. ஆகவே, வதந்திகள் கிளம்பு முன்னதாகவே, நசுக்கப்பட வேண்டும். இது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். இப்படிச் செய்யத் தவறினால், தாம் மட்டுமன்றி, சமூகம் முழுதுமே பாதகமடைய நேரும். வதந்திகளைக் கிளப்புகிறவர்கள் சமூகத் துரோகிகள் என்று கூறுகிறோம். சமூகத்துரோகிகள் அவர்கள் மட்டுமல்ல. அவ்வதந்திகளைப் பரவச்செய்கிறவர்களும், அவற்றைக் கேட்டும் அவை பரவாதபடி தடுக்கத் தவறுகிறவர்களும் சமூகத் துரோகிகள் தான். ஆகவே, இந்தத் துரோகிகளைப்பற்றி சமூகம் எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.





# இடது கை முறிந்தது

### கொரில்லா சேஷ்டை

இப்பொழுது ஜெர்மனியிலே என்ன நடக்கும் என்பதை அறிய அங்கு போய்த் தான் ஆகவேண்டுமென்று நினைக்கிறீர்களா என்ன? யுத்தச் செய்திகளை ஒழுங்காக வாசித்து வருவோருக்கு இந்த அவசியமே கிடையாதே!

இதோ பாருங்கள். மானசீகமாக, பெர்லின் நகரிலே ஒரு கோடியில் வசிக்கும் ஒரு பெண்மணி செய்கிற காரியத்தை! அவளுக்கு ஒரே ஒரு பிள்ளை. மகா முரடன். சுத்த அதிகப்பிரசங்கி. இன்னும் இரண்டு வயசானால் இழுத்துக் கொண்டு போய்விடுவார்கள் அவனை ராணுவத்தில் சேர்க்க. ஏதோ அம்மாவிடம் சண்டை போட்டுக் கொண்டு விட்டானவன்.

அதற்கு அவனுடைய அம்மா என்ன சொல்லுகிறாள்? அடே! பேசாமலிருக்கிறாயா, யூகோஸ்லேவிய தேசத்திற்கு, உன்னைத் தூக்கி அனுப்பட்டுமா? என்று கேட்கிறாளவள்.

பையன் அலறித் துடித்துக் கொண்டு, "ருஷ்யாவிற்காவது அனுப்பி விடம்மா! யூகோஸ்லேவியாவிற்கு மட்டும் வேண்டவே வேண்டாம்!" என்று கத்துகிறான்.

ஏன் தெரியுமா? போர்க்களத்திலே நேரே வரும் விரோதியை எதிர்த்து நிற்கவோ, குண்டுபட்டு சாகவோ அவன் தயாராக இருக்கலாம். ஆனால் யூகோஸ்லேவியாவிலே, அந்த கொரில்லாக்கள் செய்யும் சேஷ்டைகளைச் சகிக்க, அவன் தயாராக இல்லை என்பது தெளிவாகிறது.

அந்த கொரில்லாக்கள் படுத்தும் பாடு சகிக்க முடியாது! அச்சு நாட்டார் அங்கே எட்டு டிவிஷன் படைகளை நிறுத்தி வைக்க நேர்ந்திருக்கிறது. திடீர் திடீரென்று எதிர்பாராத இடங்களிலிருந்து, இந்த கொரில்லாக்கள் குதித்தால், வீர தீரனானாலும் கொஞ்சம் அயர்ந்து போகவேண்டியது தான்! ஆகவே, ஜெர்மனியிலே நடப்பதைக் குறித்து, கற்பனைச் சித்திரம் ஏது வரைந்தாலும் அது சரியாகவே இருக்கும் என்பதில் சந்தேகமே வேண்டாம்.

இந்த கொரில்லாப் படைகளுக்குள்ள தேச விசுவாசம் அளவு கடந்தது. ஜெர்மானியப் படைகளின் போக்குவரத்து மார்க்கத்தை அடிக்கடி துண்டிப்பதும், காட்டு வழிகளிலே எதிர்பாராத இடங்களிலே நாற்புறத்திலிருந்தும் சட்டெனப் பாய்ந்து தாக்குவதுமே இவர்களின் வேலைமுறை. இந்த வேலைக்கென்றே அந்நாட்டிலே பயிற்சிப்பள்ளிகள் இருக்கிறாப் போலிருக்கிறது. இந்தப் படைகளின் சக்தியை அறிந்து பயந்தே ஹிட்லர் யூகோஸ்லேவியாவில் எட்டு டிவிஷன் படைகளை நிறுத்தி வைத்திருக்கிறாராம்.

இப்பொழுது முசோலினியின் வீழ்ச்சிக்குப் பிறகு அதிகாரத்திற்கு வந்துள்ள மார்ஷல் படோக்லியோ, யூகோ நாட்டிலும், கிரீஸிலும், பிரான்ஸிலும் உள்ள இத்தாலியப் படைகளை தாய் நாட்டுக்குத் திரும்பி விடும்படி உத்திரவிட்டிருக்கிறாராம். இனி யூகோவிலே உள்ள ஜெர்மானியர் பாடு இன்னும் கஷ்டமாகப் போகிறது. கொரில்லாக்களுக்கு நல்ல வேட்டை-தான் இனி!

### கோடைப் புலி

"கோடைகாலம் வரட்டும், எங்கள் சூரத்தனத்தைக் காட்டுகிறோம்" என்று ஹிட்லரும், அவரது சகாக்களும் வழக்கமாகப் பறைசாற்றுவதுண்டு. உலக மாந்தரும், ஹிட்லரை கோடைப்புலி என்றே எண்ணி வந்தனர். கோடை காலத்திலே ஜெர்மானியர் இருமுறை கிளம்பி ஏதோ பல வெற்றிகளைக் கண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் இம்முறை அந்த ஜம்பம் ஒன்றும் சாயவில்லை. கடலைத் தாண்டுகிறேன் என்று ஏகத்திற்கு ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த ஒருவன், சுவர்மீதிருந்து கீழே குதித்து காலை ஒடித்துக் கொண்ட கதையாகிவிட்டது ஹிட்லர் செய்த வேலை.

தெற்கு ருஷ்யாவிலே, அவர் தமது படைகளை ஒன்றுகூட்டி, குறுகிய தொரு பிரதேசத்திலே ருஷ்யர்களைப் பலமாகத் தாக்கச் செய்தார். ஆனால் ருஷ்யர்கள் எங்கு போனாலும் அவர்களை அடித்து நொறுக்கச் சித்தமாகவே இருந்தார்கள். ஜூலை 7-ம் தேதியன்று ஜெர்மானியரின் கோடைப் போர் தொடங்கிற்று பத்து நாட்களில் அது ருஷ்யரின் கோடைப்போராக மாறிவிட்டது.

முன்னால் போன தூரத்தை மட்டுமின்றி, ஏற்கெனவே இருந்த இடத்திற்கு வெகுதூரம் பின்வரையில் உள்ள தூரத்தையும் ஜெர்மன் படைகள் கடந்து பின்வாங்கி ஓடி வரவேண்டியதாகிவிட்டது. இரண்டு வருட காலமாக ஓரேல் அருகே எல்லாம் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜெர்மானியர் செய்துவந்திருக்கிறார்கள்.

தங்கள் நாட்டின் விடுதலையைக் கோரும் வீர ருஷ்யர்களின் விடா முயற்சியால், ஒரு சில தினங்களில் அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் தவிடு பொடியாகி விட்டன. ஓரெல் என்ற முக்கிய பட்டணத்தை மூன்று திசைகளிலிருந்தும் தாக்குதவற்கென்று அதி வேகமாக வந்துகொண்டிருக்கிறார்கள் ருஷ்ய வீரர்கள்.

ஜூலை மீ 5-டயிலிருந்து 23 தேதிவரை ஜெர்மானியர் எழுபதாயிரம் காரர்களையும் சிப்பாய்களையும் இழந்திருக்கிறார்கள். 2,900 டாங்கிகள், 1,392 விமானங்கள், 5,000 லாரிகள் நாசமாகியிருக்கின்றன.

பைல்சொரோடு பிரதேசத்திலே நடந்த கடும்போரிலே, நாஜி டாங்கிப் படைத் தலைவர் கோவிந்தா ஆகிவிட்டாராம். குர்ஸ்க், பைல்கொரோடு ஆகிய இரு நகர்களையும் இணைக்கும் ரயில்பாதை வழியாக ருஷ்யர்கள், நாஜிப் படைகளைத் துரத்திச் செல்லுகிறார்களாம்.

லெனின்கிராட் அருகிலும் செஞ்சேனைகள் போரைத் துவக்கிவிட்டனவாம். பின்லாந்தருகே ருஷ்ய வீரர்கள் ஒரு பிரதேசத்திலே போடு போடென்று போட்டிருக்கிறார்கள்.

மாஸ்கோவிற்கு ஆபத்து, ருஷ்யாவிற்கே அவஸ்தை என்று ருஷ்யர்கள் பேசிக்கொண்டிருந்த காலமெல்லாம் போய்விட்டது. கோடைப் புலியின் குட்டை, ஸ்டாலின் உடைத்து விட்டுவிட்டார். ருஷ்யர்களின் கை நன்றாக ஓங்கிவிட்டது. அதனால்தான ருஷ்யர்கள், யுத்தத்திற்குப்பின் நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி விவரமாகப் பேசத் தொடங்கிவிட்டார்கள்போலிருக்கிறது இதிலே சந்தேகமென்ன வேண்டியிருக்கு? தைரியமாகவே பேசலாமே! இனி என்ன நடக்கும் என்பதை எந்தக் குழந்தையைக் கேட்டாலும் சொல்லுமே!

கிடைக்கிற சான்ஸ் எதுவாக இருந்தாலும் அதைக் கை விடப்படாது என்கிறார்கள் அனுபவசாலிகள். ஏதேதோ வாய் கிழியப் பேசும் ஹிட்லருக்கு இது தெரியாது போய்விட்டது. 1940-ம் வருஷத்திலே அவருக்கு "பஸ்ட் கிளாஸ்" சான்ஸ் கிடைக்க விருந்தது. அப்பொழுது பிரிட்டனிலே ஆயுத பலம் அநேகமாக "ஸைபர்" என்றே சொல்லி விடலாம். அப்பொழுது தானே யுத்த தளவாட உற்பத்தி பற்றியே பேசத் தொடங்கி யிருந்தார்கள்.

அந்த சமயத்திலே ஹிட்லர் பிரிட்டன் மீது படையெடுத்துச் சென்றிருந்தாரேயானால், நிச்சயம் வெற்றி கண்டிருப்பார். யுத்தத்தின் போக்கே வேறு திசையில் திரும்பி யிருக்கும். அதிகப்படிச்சதுகளே இம்மாதிரி தான். நல்ல சமயங்களில் அசடுகளாக நடந்துகொள்ளும்.

அதன் பலன் என்ன? ஹிட்லரது மனக்கோட்டைகள் எல்லாம், எதிர்பார்த்ததை விட விரைவிலேயே "தடார்" "தடார்" என்று இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன.

முதலாவது மகா யுத்தத்தைப் போலவே இதுவும் நான்கு வருடங்களில் முடிந்துவிடாதா என்று ஆவலோடு எதிர் பார்ப்பவர்களின் எண்ணிக்கை இப்பொழுது நாளுக்குநாள் அதிகரித்து வருமென்றே நினைக்கிறோம். ஹிட்லருக்கு இடது கை ஒடிந்தது போலாகியிருக்கு மல்லவா? சூரப்புலி முஸோலினி திடுதிப்பென்று குப்புற விழுந்த காரணத்தினாலே உலகோரின் விருப்பமெல்லாம், முஸோலினியைப்போலவே ஹிட்லரும், டோஜோவும் மண்ணைக் கௌவ வேண்டு மென்பதுதான். இந்தத் தலைகள் மறைந்துவிட்டால், உடல் எல்லாம் பேசாது கிடக்குமல்லவா?

ஜப்பானியர் லேசுப்பட்டவர்களல்ல! என்று எத்தனையோ பேர்கள் இதுவரை சொல்லியாச்சு! நாமும் தான் இதை இன்னொரு தடவை சொல்லி வைப்போமே! ஏனென்றால் எதிரிகளை மட்டும் குறைவாக மதிக்கவேபடாது. எதிரியின் பலம் நம்மை விட பத்துப் பங்கு அதிகமாக இருக்கிறதென்று நாம் கணக்கிட்டு, அதற்கும் அதிகமாக நமது பலத்தை உயர்த்திக் கொள்ளுவது தான் புத்திசாலித்தனம்.

இந்தியாவிலே இதே கணக்கில் தான் பல ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது இந்நாடு தன்னைத் தானே காத்துக்கொள்ளும் சக்தி பெற்றிருக்கிறது. தினம் தவறாமல் பர்மாவில் உள்ள ஜப்பானியத் துருப்புகள் கூடிக்கிடக்கும் இடங்கள் மீதிலும், அங்குள்ள ரயில் பாதைகள் மேலும், துறைமுகங்கள் மீதிலும், இந்தியாவிலிருந்து செல்லும் விமானிகள் ஏராளமாக குண்டுகளை, அக்ஷதைபோல் அள்ளி வீசிவிட்டு வருகிறார்கள். எதிரியைச் சும்மா இருக்கவிட்டுவிட்டால், அவன் நாளையத்தினம் நமது தலைக்கு வைப்பதற்குப் பெரிய கல்லைத் தான் புரட்டிக்கொண்டு வந்து சேருவான். அதற்கு இடங்கொடுப்பார்களோ?

ஜப்பானியர் நியூகினியா தீவிலே கடுமையாகத்தான் போராடுகிறார்களாம். காலநிலமை வேறே ஆஸ்திரேலிய அமெரிக்கப் படைகளுக்கு அவஸ்தையை யூட்டுகின்றது. ஆயினும் ஜப்பானியரை எலிகளைப்போல் அமுக்கிக்கொல்ல நேசதேசத்தவர் முயன்று வருகிறார்கள்.

அந்தப் பிரதேசத்திலே இப்பொழுது ஜெர்மானிய விமானங்களும் தென்படுகின்றனவாம். அவற்றிலே ஜப்பானிய விமானிகள் இருக்கிறார்களாம். ஜெர்மனியால் ஜப்பானுக்கு தம்பிடி பிரயோசனமில்லை என்று ஊரார் கேலி செய்வதைக்கேட்டு வெட்கப்பட்டு ஹிட்லர் ஜப்பானுக்கு சாம்பிளாக சில விமானங்களை அனுப்பியிருக்கிறார்போலிருக்கிறது.

ஜப்பானியரை ஜாவாவிலும் போய்த் தாக்கிச் சென்றிருக்கிறார்கள் ஆஸ்திரேலிய விமானிகள். சுமார் 2,480 மைல்கள் பறந்திருக்கிறார் அந்த விமானிகள். ஜாவாவிலே உள்ள முக்ய நகரான சௌரப்யாமீது அவர்கள் வீசிய வெடிகுண்டுகள் வெகு கணக்காக விழுந்திருக்கின்றன. எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலை ஒன்று "ஹோகயா!" ஸ்டேஷன், வீடுகள் எல்லாம் காலி.

ஜப்பானியர் இதே சமயத்திலே, இலங்கைப் பக்கம் அப்படி சும்மா போய், ஒரு நோட்டம் பார்த்துவிட்டுப் போயிருக்கிறாப்போலிருக்கிறது. திரிகோணமலை அருகே எதிரி விமானம் ஒன்று தென்பட்டதாகவும், அபாய அறிவிப்புச் சங்கு ஒலித்ததாகவும், ஆனால் அபாயம் எதும் நேரவில்லை என்றும் கூறப்படுகிறது. எங்குமே இருமாந்திருக்கவில்லை, யாரும். இன்னும் ஆபத்து நீங்கவில்லை யென்பதை எல்லோரும் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள். நாட்டைக் காக்க நாளுக்குநாள் புதுப்புது ஏற்பாடுகள் செய்தவண்ணமாகவே இருக்கிறார்கள். இனி ஜப்பான்காரன் இங்கு வந்தால், கடச்கடக் கிடைக்கும் அவனுக்கு.

# வீழ்ந்தான் ஒரு அரக்கன்!

அப்பா! என்ன ஆட்டம் ஆடினாரய்யா இந்த முஸோலினி! கேவலம் ஒரு கருமானின் பிள்ளையாகப் பிறந்த இவர் சென்ற மகா யுத்தத்தினபோது, ஒரு சாதாரண சோல்ஜராகச் சேர்ந்தார் பட்டாளத்திலே. அப்பால் கார்ப்பொரல் பதவிக்கு உயர்ந்தார். ஹிட்லர் கதையும் இதேமாதிரி தான்.

சென்ற யுத்தம் முடிந்ததும், இவர் தனது பாஸிஸ்ட் கட்சியை ஆரம்பித்துவைத்தார். கருஞ்சட்டையினர் என்ெருருபடையை ரகசியமாகத் திரட்டினார் அவர்களில் நாற்பதாயிரம் பேர்களை அழைத்துக் கொண்டு ரோமாபுரியில் உள்ள சர்க்காரைத் தாக்கக் கிளம்பினார்.

சர்வாதிகாரத்தையும் கொடுக்கிறாயா? சாம்பலாக்கட்டுமா என்று ஏதோ ஒரு பெரிய முனிபோல் பேசினார் முஸோலினி. அந்த நாளிலிருந்தே அரசரின் அன்பனாக இருந்த மார்ஷல் படோக்ளியோ, அரசரை அணுகி, "அரசே! மூன்று படைவரிசைகளை எனக்குக்கொடும். இந்த முஸோலினிக் கூட்டத்தையே தூளாகப்பறக்கடிக்கிறேன்" என்று சொன்னாராம்.

ஆனால் விக்டர் எம்மானுவேல் மகா சாது. இத்தாலியிலே ரத்தம் சிந்துவதா என்று எண்ணிவிட்டார். படோக்ளியோவைச் சும்மா இருக்கச் சொல்லிவிட்டார். முஸோலினியின் பாடு வேட்டையாகிவிட்டது. அவரை பிரதம மந்திரி ஆக்கிவிட்டார் அரசர். சோஷலிஸ்டுகளின் எதிர்ப்பு இருக்கத் தானிருந்தது. பலாத்காரத்தால் அனைவரையும் அடக்கி ஒடுக்கி விட்டார் முஸோ. அதற்கு மூன்று வருடங்களுக்குள்ளாக அவர் இத்தாலியின் சர்வாதிகாரியாகிவிட்டார்.

எங்கு பார்த்தாலும் அவரது கருஞ்சட்டை வீரர்களும், பாஸிஸ்டு கட்சியினரும் அட்டகாசம் செய்யலாயினர். இத்தாலிக்குப் பெரிய சாம்ராஜ்யத்தைச் சம்பாதித்துக் கொடுக்கப் போவதாக தம்பட்டம் கொட்டினார் முஸோ. சாதாரண கூலியாள் வேலை முதல் பெரிய உத்தியோகங்கள்வரை எல்லாம் பாஸிஸ்டுகளுக்கே கொடுக்கப்பட்டது. அவர்களை எதிர்த்த பல்லாயிரவர் சிறைகளுக்குள் தள்ளப்பட்டனர். அவர்களில் பலர் செத்து மடிந்தனர். இன்னும் பலர் சிறைகளிலேயே கிடந்து உழன்று கொண்டிருக்கிறார்கள். முஸோ செய்வதற்கெல்லாம் இடம் கொடுத்துக் கொண்டிருந்தார் இத்தாலிய அரசர். அவரைத் தனது கைப்பொம்மையாகக் கொண்டு ஆட்டிக்கொண்டிருந்தார் முஸோ.

இத்தாலிக்கு ஒரு சாம்ராஜ்யத்தைப் பெறும் ஆசையில் அவருக்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டது. உடனே, அருகில் உள்ள ஜெர்மானிய சர்வாதிகாரியோடு கை கோர்த்துக்கொண்டார். இவர்களிருவரும் ஓரினத்தவர்களாதலால், அதாவது சர்வாதிகாரப் பித்துப் பிடித்தவர்களாதலால், இருவரும் பிரமாதமாகக் குலவாடிக் கொண்டனர்.

இத்தாலியை நவ யுகத்திற் கேற்ற இத்தலியாக மாற்ற முயன்றார் முஸோலினி. தான் இட்டதே சட்டம் என்று கொண்டு, ஏதேதோ செய்தார். சாதாரணமாக இருந்த இத்தாலியை ஒரு பெரிய வல்லரசாக ஆக்கிவிட்டார்.

இவரது ஆர்ப்பாட்டமான பேச்சுக்களையும், இவரைக் கண்டு இத்தாலி நடுங்கிக் கொண்டிருப்பதையும் பார்த்து பிரான்சும், இங்கிலாந்தும் இவர் வழிக்கே போகாமலிருந்த நாட்களுண்டு. அநியாயமாக அபிஸீனியா மீது தமது சைனியத்தை முஸோலினி ஏவிவிட்டபோதுகூட, எல்லோரும் சும்மா இருந்துவிட்டார்கள். அதனால் மமதை கொண்ட முஸோலினி அபிஸீனிய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினார். அதை மார்ஷல் படோக்ளியோதான் கடைசியாகப் போய், நிராயுதபாணிகளான அபிஸீனியரைத் தோற்கடித்து, வெற்றி பெற்றார். அவரையே அபிஸீனிய வைஸிராயாக அமர்த்தினார் முஸோ. ஆனால் ஆறுமாதங்களுக்குள் அந்தப் பதவியை விட்டுவிட்டு, இத்தாலி திரும்பிவிட்டார் படோக்ளியோ.

அபிஸீனியா ஆயிற்று. அல்பேனியாமீது கை வைத்தார் முஸோ. மத்தியதரைக்கடல் இத்தாலிக்குச் சொந்தம் என்றுகூட சொல்லும்படியான துணிச்சல் வந்துவிட்டது அவருக்கு. அப்பால் ஸ்பானிய யுத்தத்திலேகூட அவர் தமது செல்வாக்கை உபயோகப்படுத்தினார். வெகு காலமாகவே பிரான்ஸிடமிருந்து டியூனிஸியா, கார்ஸிகா, நைஸ் ஆகிய பிரதேசங்களைக் கேட்டுக் கொண்டிருந்தாரவர்.

இப்படி இருக்கும்பொழுது, இந்த இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. 1940ம் ஜூன் 10௳ வரை நடு நிலைமை நாடாக இருந்த இத்தாலியை, முன்பின் யோசியாமல் போரிலிழுத்து விட்டு விட்டார் முஸோலினி, மார்ஷல் படோக்ளியோவையும் தலைமைச் சேனாபதி ஆக்கினார்.

புண்பட்டுக்கிடந்த பிரான்ஸை முஸோலினி முதுகில் தாக்கினார். பிரான்ஸும் வீழ்ந்தது. முஸோலினிக்கு தலைகால் புரியவில்லை. காளையைப்பார்த்து, அதைப்போல் தனக்கும் பெரிய வயிறு ஏற்படவேண்டுமென வயிறை உப்பவைத்து, டபார் என வயிறு கிழிந்து மாண்ட மட மண்டூகத்தை நிகர்த்த காரியத்தைச் செய்தாரவர். கிரேக்க நாட்டின் மீது இத்தாலியப் படைகளை ஏவிவிட்டார். ஹிட்லரது படைகளின் உதவியாலேயே இவரது படைகள் தப்பின.

அப்பொழுதிருந்தே முஸோலினிக்கு மட்டம் தட்டியது போல் தானிருந்தது. போதாக் குறைக்கு அபிஸீனியாவும் கோவிந்தா ஆயிற்று. புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் அடித்துப் போவது போல், இத்தாலிய சோமாலிலாந்தும் 'கயா' ஆகிவிட்டது.

அப்புறம்தான் நமக்கெல்லாம் கதை தெரியுமே! ஜெர்மன் சேனாபதியான ராமல், தமது படைகளுடன் எகிப்திற்குள் புகுந்து அலெக்ஸாந்திரியாவிற்கு வெகு சமீபமாகப் போய் நின்றாரல்லவா? அப்பொழுது அலெக்ஸாந்திரியாவிற்குள் வெற்றி விருதுகளுடன் பிரவேசம் செய்ய புது உடுப்புகளணிந்து தயாராக இருந்தாராம் முஸோலினி.

பாவம்! அவரது கதை நனவாகவே இல்லை. ரோமல் தான் சரியான உதை வாங்கிக்கொண்டு ஓடியே போய்விட்டாரே! ஜெர்மானியப் படைகளும், வேகமாகச் செல்லும் வாகனங்களை எல்லாம் தங்களுக்கு உபயோகித்துக்கொண்டு, இத்தாலியரை சந்தியில் நிறுத்திவிட்டுப் போய் விட்டார்களே!

மளமளவென முஸோலினிக்குப் போறாதகாலம் வந்துவிட்டது என்றே நினைக்கிறோம். வட ஆப்பிரிக்காவில் புதிதாக ஏதும் கிடைக்காது போனதோடு, வெகுகாலமாக இருந்த லிபியாவும் பறிபோய்விட்டது. ட்யூனிஸியச் சண்டையில்கூட, நாஸிப்படைகள் இத்தாலியப் படைகளை நட்டாற்றில் விட்டுச் சென்றன.

ஹிட்லரோடு கைகோர்த்துக் கொண்டு, ஐரோப்பா முழுவதையுமே பங்கிட்டுக்கொண்டு ஆளலாம் என்று சொப்பனம் கண்டுகொண்டிருந்தார் முஸோலினி. "இங்கிலாந்தின் நெம்பர் 1 விரோதி ஹிட்லர் தான். அவரோடு சேராதே!" என்று அக்காலத்திலே சர்ச்சில் துரை கூட உபதேசம் செய்தார்.

ஹிட்லரின் ராணுவ பலத்தில் தமக்கிருந்த அபார நம்பிக்கையில் முஸோலினி எல்லொரையும் கன்னாபின்னா என்று பேசிவிட்டார். "நீடித்த சமாதானத்திலேயே எனக்கு நம்பிக்கை கிடையாது. எண்பது லக்ஷம் துப்பாக்கி முனைகளைக் கொண்டுதான் இத்தாலி இந்த சமாதானத்தை நிலைநாட்டிவரும். பலாத்காரம் என்பது என் சம்பந்தப்பட்டவரை வெகு நியாயமான முறைதான். சமரசம் பேசுவதைவிட நல்ல முறை அது. வார்த்தைகள் வெகு சுகமானவை தான். ஆனால் சாதா துப்பாக்கிகளும், சுழல் துப்பாக்கிகளும், யுத்தக் கப்பல்களும், வெடி விமானங்களும், பீரங்கிகளும் இன்னும் சுகமான விஷயங்களாகும் ஸ்திரீக்கு பிள்ளைப்பேறு என்பது எவ்வளவு ஆனந்தத்தைத் தருகிறதோ, அவ்வளவு ஆனந்தத்தை மனிதனுக் களிப்பது மகாயுத்தங்கள் தான். நிரந்தர சமாதானத்திலே எனக்கு நம்பிக்கையே கிடையாது" என்று திமிர் பிடித்துப் பேசியிருக்கிறார் முஸோலினி.

ஆரம்பத்தில் அபிஸீனியா, ஆல்பேனியா, அப்பால் கிரீஸ் எல்லாம் கிடைத்ததும் இத்தாலியர்கள் சும்மா இருந்தார்கள். பாஸிஸ்டுகள் பரம சந்தோஷ மடைந்திருந்தார்கள்.

ஆனால், மெள்ள மெள்ள இத்தாலி எங்கிலுமே ஜெர்மன் ஆதிக்கம் பாவத் தொடங்கியதைக் கண்ட இத்தாலிய மக்களின் மனம் பொங்கலானது. திரும்பின இடமெல்லாம் ஜெர்மன் ரகசியப் போலீஸ்; அவர்களின் கெடுபிடி என்றால எப்படி இருக்கும்?

போதாக்குறைக்கு, ஹிட்லரின் வார்த்தையைத் தட்ட முடியாது, முஸோலினி கணக்கற்ற இத்தாலியரை, கடும்பனிபெய்யும் ருஷ்ய மண்ணில் இரையாக அனுப்பினார். இத்தாலியப் படைகளை பிரான்ஸிலும், பால்கன் பிரதேசங்களிலும் நடந்த யுத்தங்களில் கொண்டு தள்ளினார்.

இன்று இத்தாலிக்கே ஆபத்து அதி சமீபத்தில் வந்துவிட்டது. ஸிஸிலியிலே பெரும் பகுதியை நேச தேசத்தார் பிடித்துக் கொண்டு விட்டார்கள். இத்தாலிய நகரங்கள் பல நாசமாகி வருகின்றன. ரோமாபுரி மீது கூட குண்டு விழுந்து விட்டது.

இத்தகைய சந்தர்ப்பத்திலே, இத்தாலியைக் காக்க போதிய படைகளில்லை என்றால், இதைவிடக் கேவலம் வேறென்ன வேண்டும்? ருஷ்யாவில் ஹிட்லர் உதைபடத் தொடங்கியதிலிருந்தே, அச்சு நாட்டினரின் ஆசைகள் ஏதும் பூர்த்தியாகப் போவதில்லை என்பதை இத்தாலியர்களில் பலர் உணரத் தொடங்கிவிட்டனர். ஹிட்லர் செய்கிற காரியங்களுக்கெல்லாம் தம்பிடி பிரயோசனமில்லாது மூஸோ தலையை ஆட்டிவருவதையும் அவர்கள் பார்த்தனர். நேச தேசத்தாரின் கை ஓங்குவதையும் அவர்கள் தெரிந்து கொள்ளாமலிருக்க முடியவில்லை. இதற்கிடையில ஆப்பிரிக்காவிலே அடிமேலடி விழுந்து ஆப்பிரிக்கா என்ற பெயரை உச்சரிக்கவுமே யோக்கியதை இல்லாது போய்விட்டது இத்தாலியருக்கு.

முஸோலினியை ஒழியுங்கள்! பாஸிஸ்டு ஆட்சியையும், அந்தக் கட்சியையும் அழியுங்கள்! உங்களை ஒன்றும் செய்வதில்லை என்று நேச நாட்டினர் இடைவிடாது கூறலாயினர்.

இந்த சமயத்திலே முஸோலினியும் ஹிட்லரும் சந்தித்தார்கள். "இத்தாலியின் தென் பாகத்தைக் காலி செய்து விட்டு, வடக்கே பாதுகாப்புக்களுடன் கூடிய ஒரு போரரங்கத்தைச் சிருஷ்டித்துக் கொள்ளுங்கள். ஜெர்மனியிலிருந்து அதிகமாக ஏதும் அனுப்ப முடியாது" என்று ஹிட்லர் முஸோவிடம் சொன்னதாகக் கூறப்படுகிறது. யார் கண்டார்கள்? அதற்கப்பால் பாஸிஸ்டு கட்சிக் கூட்டம் நடந்திருக்கிறது. "முஸோ, இத்தாலிய மன்னரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட வேண்டும்" என்ற தீர்மானம் அக்கூட்டத்தில் "பாஸ்" ஆயிற்று.

எப்பக்கம் போனாலும் எரி நெருப்பாக இருப்பதை உணர்ந்த முஸோலினிக்கு மனம் உடைந்தே போயிருக்கும். அவர் பேசாது, சென்ற ஞாயிறன்று தமது பதவியை திடீரென்று ராஜிநாமா செய்து விட்டார். இத்தாலிய மன்னரும் அதை ஏற்றுக்கொண்டு தாமே பிரதம சேனாபதியாகி விட்டாதாகத் தெரிவித்துவிட்டார். பழைய நண்பரான மார்ஷல் படோக்ளியோவை பிரதம மந்திரியாக்கி விட்டார்.

அவர் இத்தாலி முழுவதிலும் ராணுவ ஆட்சியை அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டார். யூகோ, கிரீஸ், பிரான்ஸ் ஆகிய பிரதேசங்களில் உள்ள இத்தாலியப் படைகளை ஊருக்குத் திரும்பக் கட்டளையிட்டுவிட்டார்.

முஸோலினி ஜெர்மனிக்கு தப்பி ஓட முயன்றதாகவும், வழியில் ராணுவ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. முஸோலினி வீழ்ந்ததும், இத்தாலியிலே பல நகரங்களிலே பாஸிஸ்டுகளுக்கு விரோதமான கிளர்ச்சிகள் நடந்திருக்கின்றன. பாஸிஸ்டு ஆட்சியும் முஸோலினியோடு பரமபதமடைந்து விட்டது.

நேச தேசத்தினருக்கு இது ஒரு பெரிய வெற்றி அல்லவா? ஆனால், இத்தாலிக்கு இனியாவது புத்தி வரவேண்டுமே! அது நேச தேசத்தாரோடு சமாதானம் செய்து கொண்டு விடலாமே! இத்தாலியைப் பிடித்து ஆளுவதில் எத்தனையோ சிரமங்களுண்டு. அதை பிரதம மந்திரி சர்ச்சிலும் அழகாக எடுத்துக் கூறிவிட்டார். ஆகவே, இத்தாலி நிபந்தனையின்றி நேச தேசத்தாரிடம் சரண் புகுந்துவிட்டால், அப்புறம் அங்குள்ள ஜனங்களுக்குப் பிடித்த சர்க்காரை இருக்க அனுமதித்துவிட்டுப் போகிறார்கள் நேச தேசத்தார்.

இத்தாலியை அநியாயமாக அழித்துப் பாழாக்க அந்நாட்டு மன்னரோ, மார்ஷல் படோக்ளியோவோ விரும்புவார்கள் என்று நாம் நினைக்கவில்லை. யுத்தம் தொடர்ந்து நடக்கும்" என்றே அவர்கள் அறிக்கை விடுத்திருக்கிறார்கள். நேச தேசத்தார் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்பார்கள். உண்மையிலே இத்தாலி நம்மவர்களை எதிர்த்து நின்றால், நமது பலமனைத்தையும் கொண்டு நாலாபுறங்களிலிருந்தும் இத்தாலி மீது பாய்ந்து அதனைச் சுட்டெரித்துவிட நம்மவர்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள்.

இருபத்தோரு வருடம் அட்டகாசம் செய்துவிட்டு, ஆடிப் பாடி அமர்ந்து போனார் முஸோலினி. துள்ளினமாடு பொதி சுமக்குமா, ஐயா!

முஸோலினியின் வீழ்ச்சி ஹிட்லருக்கும், டோஜோவுக்கும் பேரிடிபோலிருந்திருக்கும். இனி ஜெர்மனிக்கும் இத்தாலிக்குமுள்ள உறவிலே கூட மாறுதல்கள் ஏற்படலாம். அச்சு முறிந்துவிட்டதா ஐயா ஹிட்லரே! ஐரோப்பாவில் இனி நீர் ஒண்டி தான்! உம்மைத் தாக்கி ஒழிக்க உலகமே சேர்ந்துவருகிறது. எத்தனைகாலம் நீர் தாக்குப் பிடித்தாலும், கடைசியில் முஸோலினியைப் போலவே நீரும் உமது நாட்டு மக்களின் சாபத்திற்கு ஆளாகப்போகிறீர். முஸோலினியின் வீழ்ச்சி ஒரு அரக்கனின் வீழ்ச்சிக்குச் சமானமாகும். சர்வாதிகாரிகளுக்கு ஒரு நல்ல படிப்பினையுமாகும்! என்ன வேகத்தில் மாறுகிறதய்யா உலகப்போக்கு

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஆகஸ்டு 6௳, வெள்ளிக்கிழமை [இதழ் 31

## நல்ல காலம் ஆரம்பமாகிறது



மே. த. லின்லித்கோ பிரபு.

யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் நாம் ஒன்றுகவே இங்கிருந்திருக்கிறோம். நான் இந்தியாவை விடடுப் புறப்படுகிற சமயத்திலே, நல்லகாலம் ஆரம்பமாகிறது. பல போர் முனைகளிலும் நேசநாட்டுப் படைகள் கொட்டும் வெற்றி முரசம் அதிரிக்கிறது. ஒரு பெரும் அச்சுத் தலைவர் ஒழிந்தார். அது நமக்கு ஊக்கம் தருகிறது. நமக்கு விரோதமாக இத்தாலியைப் போரில் இழுத்து விட்ட கொள்கையும் ஒழிந்தது.

யுத்தம் ஆரம்பமானபோது, இந்தியப் படையினர் தகுந்தபடி வகுக்கப்படவில்லை. அவர்களுடைய எண்ணிக்கையும் அவ்வளவு அதிகமல்ல. தளவாடங்களும் குறைவு தான். எதிரிப் படைகளோ, பெரியவை. நன்றாகப் பயிற்சி பெற்றவை. அச்சு நாடுகளின் யுத்தத் தளவாடங்களும் அதிகம். ஆகவே, அவர்களுடைய கடுமையான தாக்குதலைத் தாங்க நம்மால் முடிவதில்லை. இந்தியாவிற்கு வெளியேயுள்ள அரண்களைக் காப்பாற்றினால் மட்டுந் தான், இந்தியா பாதுகாக்கப்படடுமென்று நமக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் வெளிநாடுகளுக்கு எந்த அளவிற்குத் துருப்புக்களை அனுப்பக் கூடுமோ, அந்த அளவிற்கு அனுப்பினோம். நாம் அப்போது செய்த அந்த முடிவு தான் சரியான முடிவு என்பதை அனுபவத்தில் உணர்ந்தோம். எப்போதோ ஒவ்வொரு சமயத்தில், எதிரி விமானத் தாக்குதல் நேர்ந்தாலும் அதனால் அவர்களுக்குப் பலனில்லை. இருந்தபோதிலும் நாம் அப்போது செய்த முடிவு தான் சரி என்று இப்போதும் நினைக்கிறேன். யுத்தக் கொடுமைகளுக்கு இந்தியா உள்ளாகவில்லை. கடவுள் சித்தம் அதுவானால், இனியும் அது உள்ளாகாமலேயே இருக்கும்.

இந்தியப் படையினர் எவ்வளவு சிறந்த முறையில் போராடினார்களென்று உங்களுக் கெல்லாம் தெரியும். வடக்காப்பிரிக்காவிலும் கிழக்காப்பிரிக்காவிலும் மகத்தான முறையில் இந்தியத் துருப்புக்கள் போராடின. அவர்களுடைய ஒப்புயர்வில்லாத போர்த்திறமை, மன உறுதி, அஞ்சா நெஞ்சம், பயிற்சி முதலியவை அவர்களுக்கு உற்ற துணைகளாக விளங்கின. இவற்றைக் கொண்டு தான் ஆப்பிரிக்காவில் இத்தாலிய சாம்ராஜ்யத்தை யழித்தார்கள். எட்டாம் படை மகத்தான வெற்றி பெற்று அழியாப் புகழைத் தேடிக்கொண்டது. அதற்கு மேலும் வெற்றிவாகை யளித்தது 4-வது இந்திய டிவிஷன் படை. இது நம் அனைவர் மனதிலும் பதிந்திருக்கிறது. தூரக்கிழக்கு நாடுகளிலும், பர்மாவிலும், சிங்கப்பூரிலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள மற்ற தம் தோழர்களைப் போலவே, எதிரியின் பெருஞ் சேனைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அப்போது எதிரிப் படைகள் முன்னேறிவிடாதபடி தாமதிக்கச் செய்யும் பொருட்டுத் தான் அவர்கள் போராடினார்கள். இந்தப் போராட்ட முறையே ஒரு தனி மாதிரி. இதற்குப் படையினர் மகா திறமைசாலிகளா யிருக்கவேண்டும். பெரும் எதிரிகளை எதிர்த்து மகா வீரத்தோடும் போராடியதனால், பிறர் இந்தியாவைத் தாக்காதபடி பூரணமான பாதுகாப்புக்கள் அமைத்துக் கொள்ள முடிந்தது.

—மே. த. லின்லித்கோ பிரபு இந்திய சட்ட சபைகளின் அங்கத்தினர்களுக்கு ஆகஸ்டு 3-ம் தேதி செய்த பிரசங்கம்.

# விவசாயிகளுக் கோர் வேண்டுகோள்

—:o:—

இராகம்—கானடா தாளம்—திரிபுடை

பல்லவி

விளைந்த நெல்லைச் சேமித்தே விலைகள் ஏற்றும்—நாட்டு
விவசாயிகாள் இதுவும் தகுமோ நீர் சாற்றும்? (விளை)

அனுபல்லவி

முளைந்த உயிர் பிழைக்க முற்றும் பயிர் தழைக்க
வளைந்தும் உடல் உழைக்க வாழ்ந்தவர் கூறிழைக்க (விளை)

சரணம்

1 தளர்ந்து மெலிந்தும் உடல் தாயிருக்கப் பட்டினி
தடுக்க முடியாப் பசி தாங்க முடியாதினி
வளர்ந்திடு குழந்தைவாய் வைத்துச் சுவைத்துப் பாலே
வாடு முலை காணுமல் வானத்தை நோக்க மேலே (விளை)

2 கோட்டை கட்டியும் வீட்டுக் குதிருக்குள்ளுமே போட்டுக்
குவித்து வைத்திருந்தே நெல் குன்றினைக் கொண்டீர் நாட்டுத்
தேட்டை போடும் எலிகள் தின்றழித் தாலும் என்றும்
தேவைக்கு மேலே வைத்துத் தேசமக்களைக் கொன்றும் (விளை)

3 தெருவில் கிடக்கும் பிணம் சேர்ந்திடுவரை காடு
தின்றிடச் சோறு நாடாச் சிறந்தவர் வாழ்ந்த நாடு
உருவிற் பலர் மெலிந்தும் உணவின்றிச் சாப்பாடு
உலகிற் பிணமாய்க்கண்டும் ஒப்பியிழைத்தே கேடு (விளை)

4 பணத்திற் பேராசைவைத்துப் பதைக்க வைத்தீர்கள் ஊரை
பசியாற நீவிர் உண்டும் பருக்கை யுலர்ந்த சோறைக்
குணத்துடன் ஏழையர்க்கே கொடுத்துதவாத கையீர்
குலத்தையும் தேசமக்கள் நலத்தையும் கொன்ற கையீர் (விளை)

---

பல்லவி

, ரிரி ஸா ஸ நீ தா நி ஸா நி ஸ ரி ப மகா மா ரீ ஸ
, விளைந்த நெல்லைச் சேமித்தே விலைகள் ஏற்றும்ம்

ரி ரி நி ஸ ரி க ரி ஸா ஸ நி த நீ ஸா நி ஸ ரி பா ம கா
விளைந்தஅஅ நெல்லைச் சேமித்தே விலைகள் ஏற்றும்

ம ம த த த த நி த த ப ப தா ப த நி ஸ்
நாட்டு விவசாயிகாள் இதுவு . . ம்

நி ஸ் பா ப ம ப த நீ பா ம க
தகுமோ நீர் சாஅற்றும்
ரி ரி ஸா ஸ நி தா நி ஸ
விளைந்த நெல்லைச் சேமித்தே

நிறுத்தவேண்டிய முறை :
நி ஸ ரி ம ப நி ப கா க ம பா ம கா ரீ ஸ

அனுபல்லவி

நி ஸ் தா நீ ஸ்ா ஸ் ரீ ஸ்ா
முளைந்த உயிர் பிழைக்க

ரீ ஸ்ா ஸ் ஸ் ஸ் ஸ். நி ஸ் ரி ரி ஸ் நி த
முற்றும் பயிர் தழைக்க

க ம தா த ப தா ப த ப த நி ஸ் ஸ் பா ப
வளைந்து முடல் உழைக்க வாழ்ந்தவர்க்

ம, ப த நி ப ம த ப ம கா
கூறிழைக்க

ரி ரி ஸா ஸ நி தா நி ஸ
விளைந்த நெல்லைச் சேமித்தே

சரணம்

*தா த மா ப தா த நீ தா தா த த நீ த ப த நி ஸ் பா
தளர்ந்து மெலிந்து முடல் தாயிருக்கப் பட்டினி

ப ப பா ப ப தா ப த நி ஸ் ஸ் பா ப ம ப த நி ப ம த ப ம கா
தடுக்க முடியாப் பசி தாங்க முடியா தினி (விளை)

* மற்ற சரணங்களையும் இது போல் பாடவும்.

குறிப்புகள்.—
ஸ்=இம்மாதிரி புள்ளி வைத்திருந்தால் மேல் ஸ்தாயி என்று தெரிந்து கொள்ளவும்.
நி=மந்திரஸ்தாயி என்று தெரிந்து கொள்ளவும்.

ஸ் பா ப=குழைவு கொடுத்துப் பாடவும்.
ப த நி ஸ்=ப்ருகாவாக உபயோகிக்கவும்.



பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| முகப்புப் படம் : மே. த. லின்லித்கோ பிரபு. | 1 |
| நல்ல காலம் ஆரம்பமாகிறது .. .. | 1 |
| பாட்டு : விவசாயிகளுக் கோர் வேண்டுகோள் .. | 2 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 |
| தலையங்கம் : இத்தாலியின் நிலைமை .. | 4 |
| இந்தியாவின் எதிர்கால அரசியலுக்கு யார் பொறுப்பாளி? .. .. .. | 5 |
| ஜப்பானியர் மீது இத்தாலியர்களுக்கு நம்பிக்கை யில்லை .. .. .. | 6 |
| தொழிலாளர் பகுதி : விவசாயத் தொழிலாளியின் யுத்த முயற்சி .. .. .. | 7 |
| பொறுக்கு மணிகள் .. .. .. | 9 |
| அப்புறம் என்ன? .. .. .. | 10 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**நேசநாடுகளின் யுத்த தந்திரம்.**

சென்ற ஜூலை மாதம் 28-ம் தேதி அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார். அது அமெரிக்கா முழுதும் ஒலி பரப்பப்பட்டது. அப்போது அவர் யுத்த நிலையைக் குறித்துப் பேசியதாவது :—

"சுமார் ஒன்றரை வருஷங்களுக்கு முன்பு நான் அமெரிக்கக் காங்கிரஸ் சபையில் பேசும்போது கூறியது, உங்களுக் கெல்லாம் ஞாபகமிருக்கு மென்று நினைக்கிறேன். 'பெர்லினிலும், ரோமாபுரியிலும், டோக்கியோ விலுமுள்ள இராணுவத்தார்கள் இந்த யுத்தத்தை ஆரம்பித்தார்கள். பொது ஜனங்களின் கோபக் கனலால் தான் அது முடிவடையும்' என்று சொன்னேன். இந்த வார்த்தைகள் இப்போது நிறைவேறிக் கொண்டு வருகின்றன. பொது மக்களின் கோபம், திரண்டு உருப்பெற்று முன்னேறிக் கொண்டிருக்கிறது. ரஷ்யாவிலும் பசிபிக் போர்முனையிலும், ஐரோப்பாவிலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இதன் முடிவான இலட்சியங்கள் பெர்லினிலும் டோக்கியோவிலுந் தான்."

ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் தற்போதுள்ள நிலைமையைப்பற்றி விளக்கிக் கூறி விட்டு, பசிபிக் போர்முனையைக் குறித்து அவர் கூறியதாவது :—

"அலேஷியன் தீவுகளைச் சுற்றிக் கொண்டிருக்கும் ஜப்பானியரை இப்போது நியூ கினியாவிற்கு விரட்டிக் கொண்டிருக்கிறோம். அங்கேயும் நாம் தான் முந்திக் கொண்டு போகிறோம். இதை நாம் விட்டுவிடப் போவதில்லை. ஜப்பானியர்களின் ஆக்கம் அங்கே சிதைந்து கொண்டு வருவது வெகு தெளிவாக படிப்படியாகத் தெரிந்து கொண்டு வருகிறது. ஜப்பானியர்கள் ஏராளமான விமானங்களையும் கப்பல்களையும் இழந்தார்கள். இந்த அளவிற்குக் கட்டி முடித்து, அதைச் சரிக் கட்டிக் கொள்ள, அவர்களால் முடியவில்லை. ஜப்பானியர்களைச் சிதைக்கும் இந்தப் போராட்டம் தொடர்ச்சியாகவும் ஊக்கமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் பயனாக, தாம் கைப்பற்றிய நாடுகளிலிருந்து அவர்கள் பின் வாங்க நேரும். அதாவது, பர்மா, சயாம், ஸ்ட்ரெய்ட்ஸ் செட்டில்மெண்டுகளிலிருந்து நெதர்லந்து வழியாக, கிழக்கு நியூ கினியாவிற்கும் சாலமன் தீவுகளுக்கும் போய்ச் சேருவார்கள். அவர்கள் நாட்டிற்குக் வெகு தூரத்திற்கப்பாலுள்ள இடங்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய விமானப் படையோ, கப்பற்படையோ ஜப்பானியர்களிடம் இருக்க முடியாது.

ஜப்பானியர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளிலுள்ள பொருள்களை யெல்லாம் திரட்டிச் சூறையாடிக் கொண்டு போகவே முடி, நீண்ட காலத்திட்டம் போடமுடியாதென்று ரூஸ்வெல்ட் எச்சரித்தார். அவர்கள் தம் திட்டத்தைத் திருத்தி யமைத்துக் கொள்ள வேண்டு மென்று கூறுகிறார். ஏனென்றால், நேச நாட்டார் அவர்களைச் சும்மா விடப்போவதில்லை. இந்த எச்சரிக்கையை ஜெனரல் மக்கார்தர் இப்போது நிறைவேற்றுகிறார். ஜப்பானியர்களை அடியோடு விரட்டி யடிப்பதற்கு, அவர் நியூ கினியாவையும் சாலமனையும் தாக்க ஆரம்பித்திருப்பது இதன் முதற்படியாகும். இனி இரண்டாவது நோக்கமென்ன? சாலமுவ விலிருந்து ரபால் வழியாக, முண்டாவிற்குப் போவதானால், அந்த வழி ஒரு அரைவட்டமாக அமையும். அதன் நீளம் 700 மைல்கள். இங்கே அநேக தளங்களை ஜப்பானியர்கள் அமைத்திருக்கிறார்கள். இந்த தளங்களிலிருந்தும் அவர்கள் பின்வாங்கும்படி செய்யவேண்டும். இதற்குப் பிறகு தான் ஜப்பானையே தாக்க வேண்டும்.

* * * * *

**பிரிகேடியர் விங்கேட் கட்டளை**

ஜப்பானுக்கு சப்ளைகள் போக்கு வரவு பாதைகளை வளைத்துக் கொள்ளுகின்றன, நேசநாட்டுப் படைகள். இது தான் நேசநாட்டுப் படைகள் முக்கியமாகக் கையாளும் தந்திரம். இது பர்மாவில் எப்படி நடைபெறுகிறதென்று, சென்ற ஜூலை மாதம் 10-ம் தேதி வெளி வந்த 'விக்டரி' பத்திரிகையில் பிரிகேடியர் விங்கேட் சித்தரித்து கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார் :—ஜப்பானியன் கையில் 100 தோட்டாக்களைக் கொடுத்து ஒரு பள்ளத்திலேயே இருந்து கொண்டு உன் சக்கரவர்த்திக்காக உன் உயிரைக் கொடு என்றால், அவன் அப்படியே செய்வான். அவனைத் தாக்க வேண்டியதே யில்லை. மற்றவர்களோடு அவன் சேராதபடி வெட்டிவிடவேண்டும். தன் சக்கரவர்த்திக்காக அவன் சாகட்டும்; அல்லது பட்டினியால் மாளட்டும்."

தென் மேற்குப் பசிபிக் போர்முனையில், நேச நாட்டுப் படைகள் வெகு விரைவாக முன்னேறவேண்டும் இதற்கு, நாம் தாக்கும் ஒவ்வொரு தீவையும், தகுந்தபடி தாக்குவதற்கான திறமை நமக்கு வாய்த்திருக்க வேண்டியது அவசியம். குடால்கனாலில் ஆறுமாதகாலம் வரை யுத்தம் நீடித்துக்கொண்டு போனதற்குக் காரணம் என்ன வென்னும் கேள்வி எழலாம். ஜப்பானிய சப்ளை கப்பல்கள் போய்க் கொண்டிருந்ததைத் தடுக்கக் கூடிய விமானப் படையும் கடற்படையும் பரிபூரணமாகாதிருந்தது தான் காரணம். தகுந்தபடி தாக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறவரை இந்த முற்றுகை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தப் போராட்டத்தின் பிற்பகுதியில், தகுந்தபடி தாக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே தான், எதிரிகள் விரைவில் காலிசெய்து கொண்டு வெளியேறிவிட்டனர்.

அட்டு தீவில் சப்ளைகள் ஜப்பானியப் படைகளுக்கு வர ஒட்டாதபடி தடுத்துவிட்டோம். அதன் பயனாக, அங்கிருந்த ஜப்பானியர்கள் அனைவரும் பட்டினியால் மாண்டார்கள். அதுவும் போராடிக்கொண்டே மாண்டார்கள்.

அலேஷியன் தீவுகளில் ஒன்றான அட்டுத் தீவை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் குடியேறியதைக் குறித்து, 'டைம்' என்னும் ஒரு அமெரிக்க பத்திரிகைக்கு அதன் நிருபர் அனுப்பிய செய்தியில், அவர் குறிப்பிடுவதாவது :—

"அட்டுத் தீவில் நெடுநாட்கள் தாம் தங்கியிருக்கலாமென்று ஜப்பானியர்கள் எதிர்பார்த்தார்கள். அவர்களுக்கு ஏராளமான உணவு சப்ளைகளும் இருந்து கொண்டிருந்தன. அவர்கள் உணவு மிகவும் எளிய உணவு. இவற்றோடு அவ்வப்போது மீனைச் சுட்டும் சமைத்துச் சாப்பிட்டார்கள்."

கொஞ்சம் அரிசிச் சோறு இருந்தால் ஜப்பானியர்களுக்குப் போதும்; அதைச் சாப்பிட்டுக் கொண்டே மகா கடுமையாகப் போராடக் கூடும் என்றெல்லாம் எதிரிகள் பிரசாரம் செய்தார்கள். இதில் கொஞ்சங்கூட உண்மை கிடையாது; ஏனென்றால், அரிசி ஊக்கம் அளிக்கத் தக்கதோர் உணவல்ல; அன்றியும் அரிசியைச் சோறாக்கித் தான் சாப்பிடவேண்டும். இதற்குப் போர்க்களத்தில் நேரமேது? குடால்கனாலைவிட்டு ஜப்பானியர்கள் வெளியேறிய

(9-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம் ஆகஸ்ட்டு 6உ. [இதழ் 31


## இத்தாலியின் நிலைமை

விளக்குகள் நின்று போகும் போது சுடர் விட்டெரியும். சாகப் போகிற ஒருவனுக்கு, முகம் தெளிவு கொடுக்கும். அது போலவே, அச்சு நாடுகள் அழியும் சமயத்தில், அதி வீரமாகப் போராடுகிறார்கள் வட இத்தாலியிலே. இத்தாலியர்களுக்கு இவர்களிடம் கடுமையான வெறுப்பு ஏற்பட்டு விட்டது. இதை ஜெர்மன் படைகள் நன்கு தெரிந்து கொண்டன. எனவே, இத்தாலியப் படைகளிடம் உள்ள ஆயுதங்களை யெல்லாம் பிடுங்கிக் கொள்ளுகின்றன. என்ன தான் முயன்றாலும் ஜெர்மானியர்கள் கை ஓங்கக் கூட வில்லை.

சிசிலி தீவில் பல நகரங்களையும் துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் நேச நாட்டுப் படைகள் கைப் பற்றிக் கொண்டன. அமெரிக்கப் படைகளும், கனடியப் படைகளும், பிரிட்டிஷ் படைகளும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு முன்னேறுகின்றன. சிசிலிக் கரையில் இறங்கிய படைகளில், இந்தியப் படையின் உயர்ந்த போர்த் திறமை குறிப்பிடத் தக்கது. என்றாலும் சிசிலி மக்கள் நேச நாட்டுப் படைகளை அன்போடு வரவேற்றார்கள் என்றால் சாதாரணமாக யாரும் நம்புவதற்கில்லை. என்றாலும் அது தான் உண்மை. இதற்குக் காரணமென்ன? முசோலினி மீதும், அச்சு நாட்டுப் படைகளின் மீதும் அவர்களுக்கு அருவருப்புத் தான் காரணம். தம் பழத் தோட்டங்களுக்குள் நேச நாட்டுப் படைகள் புகுந்து தம் இஷ்டம் போலச் சாப்பிட்டுக் கொள்ளும்படி அனுமதித்தார்கள். பூரண கும்பங்களைக் கொண்டு வரவேற்பதை விட, மேலான வரவேற்பல்லவா இது?

ஜெர்மானியர்கள் இப்போது போராடுவது, நேச நாட்டுப் படைகள் முன்னேறாது தடுக்கும் பொருட்டுத் தான். இப்போது ஜெர்மனியிலிருந்து உதவிகள் வந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. கடேனியா சமபூமியின் பெரும் பகுதியை அச்சு நாட்டார் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுக் கடும் போராடுகிறார்கள். என்றாலும் சமாளிக்க முடியவில்லை. நேச நாடுகளின் படைகளுக்கு முன் ஜெர்மன் 15-வது பான்சர் டிவிஷனுக்கும் பிரிட்டிஷ் எட்டாவது டிவிஷன் படைக்கும் கடும் போர் நடக்கிறது. அகிராவென்னும் ஊரை இருதரத்தாரும் மாறிமாறி பிடித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியாக ஜெர்மன் பட்டாளம் விரட்டப்பட்டது. அகிராவும் நேசதேசப் படையினர் கைக்கு வந்தது.

சிசிலியின் வடகோடியில் கரோனியா என்னும் ஊரை அமெரிக்க ஏழாம் படை கைப்பற்றி 6 மைல் தூரம் முன்னேறியது.

கடேனியா சம பூமிக்கு மேற்கேயுள்ள போர் முனையின் நீளம் 60 மைல்கள். இங்கேயும் கடுமையான போராட்டம் நடைபெறுகிறது. அச்சு நாட்டாருக்கு அளவு கடந்த சேதம். இங்கே இறந்து விழுந்து கிடக்கும் சோல்ஜர்களை எடுத்து அடக்கம் செய்யவுங் கூட, அச்சு நாட்டாருக்கு அவகாசமில்லை. ஓட்டமெடுக்கிறார்கள்.

சிசிலியின் மத்தியப் பகுதியில் கடினோவா, அகிரா ஆகிய ஊர்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டதனால், அங்கே நம் நிலைமை உயர்ந்திருக்கிறது.

சிசிலிப் போருக்குத் தளகர்த்தாராக ஜெனரல் அலெக் சாந்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இங்கே ஈடுபட்டுள்ள நேச நாட்டுப் படைகளுக்கு 15-வது 'க்ரூப்' என்றுபெயர்.

நிற்க, முசோலினியின் வீழ்ச்சி பற்றி, இதியோப்பிய சக்கரவர்த்தியான மாட்சிமை தங்கிய ஹெய்லி செலாசி கூறியதாவது:—

"முசோலினி செய்த அக்கிரமங்கள் பல. அவை மகா அயோக்கியத் தனமானவை. அவருடைய அக்கிரமங்களுக்கு ஆளானவர்களில் நானும் ஒருவன். அவர் செய்த அக்கிரமங்களுக் கேற்றபடி அவர் தண்டனை யடைந்தார். "முற் பகல் செய்யிற் பிற் பகல் விளையும்."

போராட்டத்தை நிறுத்தி விடவேண்டும் என்னும் கிளர்ச்சி இத்தாலியிலிருப்பதாகத் தெரிகிறது. இதை முன்னிட்டு ஒரு பிரம்மாண்டமான ஊர்வலம் நடத்த ரோமாபுரியில் ஏற்பாடுகள் நடக்கின்றதாகத் தெரிகிறது. இத்தாலி மன்னரும் படோக்லியோவும் இதற் கிணங்கா விட்டால், அவர்களும் தம் பதவிகளை இழக்க நேர்ந்தாலும் நேரலாம்.

ட்யூரின், மிலான் ஆகிய நகரங்களிலுள்ள தேச பக்தர்கள், இத்தாலிய மன்னர் விக்டர் இம்மானுவேலும், முதன் மந்திரி படோக்லியோவும் ராஜிநாமாச் செய்துவிட வேண்டுமென்று கேட்கிறார்கள்.

அமெரிக்காவில் ஏராளமான கப்பல்கள் கட்டப்படுகின்றன. இவற்றுள் 150 முதல் 200 கப்பல்கள் வரை பிரிட்டிஷ் கப்பற் படைக்கு இன்னும் 10 மாதங்களில் சிறுகச் சிறுக மாற்ற விட வேண்டுமென்று முடிவு கட்டி யிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இப்போதே ஆரம்பித்து விட்டார்கள். இது போலவே, கனடாவில் கட்டப்படும் கப்பல்களையும் பிரிட்டிஷ் கப்பற் படைக்கு மாற்ற ஒரு யோசனை இருந்து வருகிறது. 'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை' என்னும் கொள்கையை பிரிட்டிஷார் கடைபிடித்திருக்கிறார்கள். இதர நேச நாடுகளும் இதை முற்றும் ஆதரிக்கின்றன. ஆகவே, இந்த யுத்தத்தில் நிச்சயம் நேச நாடுகளுக்குத் தான் வெற்றி.



# இந்தியாவின் எதிர்கால அரசியலுக்கு — — யார் பொறுப்பாளி?

## தென்னாப்பிரிக்கா சட்டம் பற்றி அரசாங்க ஆலோசனைகள்

### பீல்ட் மார்ஷல் வேவலைப் பற்றி லின்லித்கோ கருத்து

### இந்தியா சட்ட சபை யங்கத்தினர்களுக்கு லார்ட் லின்லித்கோ பிரசங்கம்

நியூ டில்லியில் அரசாங்க சபை, இந்தியா சட்ட சபை ஆகிய இரு சபையங்கத்தினர்களையும் ஒரே சபையினராகத் திரட்டி, மேன்மை தங்கிய லின்லித்கோ பிரபு கீழ்க்கண்டவாறு ஒரு பிரசங்கம் செய்தார். இதுதான் அவர் இச்சபைகளுக்குச் செய்யும் கடைசி பிரசங்கமாகவுமிருக்கலாம்.

யுத்தம் ஆரம்பமானதிலிருந்தே, கட்சிகளையும் கட்சித் தலைவர்களையும் ஒன்றுபடுத்த முயன்றேன். இதுபற்றி மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கத்தாரின் எண்ணங்களைச் சந்தேகித்தவர்களுக்குச் சமாதானங்கள் கூறி, உண்மையை உணரச் செய்தேன். மனிதனால் என்னென்ன செய்யக் கூடுமோ அவ்வளவும் செய்துவிட்டேன். கட்சிகளிடை பொதுவான ஒப்பந்தம் ஏற்படவேண்டுமென்று பாடுபட்டேன். நிரந்தரமான அரசியல் அமைப்பு ஏற்படுமுன், அவசியமான நம்பிக்கை தரத்தக்க முறையில் அனைவருடைய உரிமைகளும் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் முயற்சித்தேன். இவற்றின் பொருட்டு சென்ற 4 ஆண்டுகளாக பெரும் முயற்சிகள் செய்து வந்தும பலனில்லை. ஆகவே, நான் பெரும் ஏமாற்றமடைந்து விட்டேன். நமது லட்சியம் கைகூடுவதற்கு வழி காணக்கூட வில்லை. உள்நாட்டு வேற்றுமைகள், ஜாதிச் சண்டைகள், போட்டிகள், இந்தியாவின் நன்மைதான் முக்கியம் என்பதை மறந்து, அந்தந்த இனத்தவர்கள் தத்தம் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமெனும் மனப்பான்மை, நாட்டின் பொது நன்மையைக் கோரும் வகையில் பொறுமை, ஆகியவை தான் இந்நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பவை.

### நிர்மாணத் திட்டம் எதுவு மில்லை.

நான் மற்றோரிடத்தில் தெரிவித்தபடி அந்த வேற்றுமைகளுக்குக் காரணம், இந்திய அரசாங்க நிர்வாகத்தை இந்தியர்களுக்கே ஒப்படைக்க மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கத்தார் விரும்பவில்லை என்பதல்ல; அதை ஒப்புக் கொண்டு நடத்துவதற்கு அவர்கள் ஆயத்தமில்லா திருப்பது தான்.

இங்கே வேற்றுமைகள் இருக்கின்றன. இது மிகவும் வருந்தத் தக்க நிலை. இதுவரை, இந்தியக் கட்சியினர் ஒருவராவது தகுந்ததோர் நிர்மாணத் திட்டத்தைக் கொண்டு வாராதது மேலும் வருந்தத் தக்கது. ஆகவே, இந்தப் பொறுப்பு முழுதும் மாட்சிமைதங்கிய மன்னர்பிரான் அரசாங்கத்திற்கும் எனக்கும் மட்டுமே ஏற்பட்டிருக்கிறது.

நாங்கள், எங்களால் ஆனவரை உதவுவதற்குத் தயாராயிருக்கிறோம். ஒவ்வொரு ஆலோசனையையும் பரீட்சித்துப் பார்த்தோம். மக்களுக்குள்ளிருந்த மகா கடும் வேற்றுமைகளை ஒருவாறு சமாளித்தோம். பார்லிமெண்ட் அரசாங்க முறைப் பழக்கம் பல நூற்றாண்டுகளாக எங்களுக்கு உண்டு. இந்த அனுபவத்தைக்கொண்டு எவ்வளவு சிறந்த முறையில் நடவடிக்கைகள் நடத்தக் கூடுமோ, அவ்வளவும் முயன்றும், பலனில்லை.

கடைசியாக மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கத்தார் இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சியாருக்கும் இனத்தவர்களுக்கும் ஒத்த முறையில் வகுத்ததோர் திட்டத்தை, ஒவ்வொரு கட்சியும் நிராகரித்து விட்டது; அதற்கீடாக, வேறொரு திட்டத்தைக் கொடுக்கவில்லை.

இந்திய நிர்வாகத்தில் மாறுதல் இருக்க வேண்டுமென்று விரும்பினால், இந்தியர்களே தான் அதற்கொரு வழி கண்டுபிடிக்க வேண்டும்.

சமீபகாலத்தில் இந்நாட்டில் நடைப்பெற்ற விவாதங்களிலிருந்து நான் என்ன தெரிந்துகொண்டேனென்றால், தற்காலிக அரசாங்கத் திட்டத்தைக் குறித்துத் தான் வெகுவாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இது நிரந்தரமானதல்ல. தோன்றி மறையும் தன்மையது. இப்படிப்பட்ட மாறுதல்களால், நிரந்தரமான அரசியல் அமைப்பிலுள்ள தன்மைகள் ஏற்படமுடியாது. நிரந்தரமான அரசியல் அமைப்பை, இப்போது, இந்த யுத்த நெருக்கடியில் அமைப்பதும், முடியாத காரியம்.

### குறுக்கு வழி ஆபத்தில் கொண்டு போய் விடும்

குறுக்கு வழியைக் கொண்டு நாம் அரசியல் அமைப்பை வகுக்க முயற்சித்தால், அது ஆபத்தில்தான் கொண்டுபோய் விடும். இப்போதுள்ள நிலைமையில் நாம் ஆலோசிக்க வேண்டிய பிரச்சினை எதிர்காலத்தையும் பொருத்தது. நாம் பழமையை விட்டு எதிர்கால வாழ்வைக் குறித்துக் கவனிப்போம்.

இந்த நாட்டின் அரசாங்கத்தில் பரிபூரணமாகவும் கௌரவமாகவும் ஒத்துழைக்கிறதற்கான வழியை நாடுகிறவர்களுக்கு அது கிடைக்கும் என்று நான் முன்பே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் வற்புறுத்திக் கூறி தெளிவாக்குகிறேன்.

முன்பு உதவியது போலவே, மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கமும் நானும் உதவ முயற்சிக்கலாம். ஆனால், பொறுப்பு இந்தியாவிற்குத் தான். இந்தியத் தலைவர்களுக்குத் தான். தேசீய வாழ்க்கை நடத்தும் முக்கிய ஸ்தாபனங்களுக்குத் தான். இந்த முக்கிய ஸ்தாபனங்களுக்குள் ஒற்றுமை கிடையாது; நம்பிக்கையில்லை; சிறுபான்மையோரின் நியாயமான உரிமைகளை ஏற்றுக்கொள்ள ஆயத்தமில்லாதிருக்கிறார்கள். இந்தத் தடைகளை இந்தியர்கள்தான் போக்கிக் கொள்ள வேண்டும். யுத்தம் முடிந்தபிறகு, இந்தியர்கள் தாமே கூடி, எல்லாக் கட்சியினருக்கும் ஏற்றமுறையில் ஒரு அரசியல் அமைப்பை வகுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படும்.

இதற்கு இந்தியத் தலைவர்கள் ஆயுத்தமாயிருக்கவேண்டும் தமக்குள்ள வேற்றுமைகளைக் களைந்து விடுவது அறிவுடைமையல்லவா?

இந்தியத் தலைவர்கள் தமக்குள்ளாக உள்ள வேற்றுமை காரணமாக, எந்த விதமான அரசியல் அமைப்பையும் வகுக்கக் கூடவில்லை. அதன் பேரில் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கத்தார் ஒரு திட்டம் வகுத்தனுப்பினார்கள். அதுவும் இந்தியர்களுக்குப் பிடிக்கவில்லை. அதற்குப்பதிலாக வேறே எவ்விதத் திட்டத்தையும் இந்தியர்கள் வகுக்கவில்லை.

இனி வகுக்கப் படப்போகும் திட்டமும் நடை முறைக்கு ஒத்ததாக அமைக்கப் படவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு தேசீய அரசாங்கம் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். பெரும்பான்மைக் கட்சியினரின் பொது ஆதரவு அதற்கு இருக்க வேண்டும்; அன்றியும் பொதுவாக மக்களின் பேராதரவும் வேண்டும். அப்போதுதான் அது உண்மையிலேயே தேசீய அரசாங்கமாகும்.

### மாகாண சுயாட்சி.

நான் இந்த இராஜப் பிரதிநிதி பதவியை இரண்டு நோக்கங்களைக் கொண்டு ஒப்புக்கொண்டேன் (1) மாகாண சுயாட்சி வழங்கப்படவேண்டும். அது நடைபெறுவதற்கான எல்லா உதவிகளையும் செய்யவேண்டும், (2) ஐக்கிய அரசியலையும் ஏற்படுத்த வேண்டும். இந்திய அரசியல் அமைப்பை முன்னேற்றுவதற்கு மாகாண சுயாட்சி பெரிதும் உதவும். ஐக்கிய அரசியலுங் கூடத் தான் உதவும். இந்த உறுதி 1935-ம் வருஷம் எனக்கேற்பட்டது; அது இன்னும் எனக்கு மாறவில்லை.

மாகாண சுயாட்சித் திட்டத்தை நம் அனுபவத்தைக் கொண்டு பரீட்சித்தோம். அது அனுபவ சாத்தியமானதோர் நல்ல திட்டந்தான். இந்தியாவிலுள்ள மாகாணங்களில் 6 மாகாணங்களில் இப்போது மாகாண சுயாட்சி நடைபெறுகிறது. மற்ற மாகாணங்களில் ஏன் நடைபெறவில்லையென்றால், அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டவர்கள், அவற்றை நிறைவேற்ற மறுத்துவிட்டனர்.

பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மந்திரிகளாகி, சட்ட சபைகளில்பெரும்பான்மைக் கட்சியினரின் ஆதரவைப்பெற்று, காலத்திற்கேற்றபடி நிர்வாகத்தை நடத்துவதை விட, வேறொரு சிறந்த அரசியல் திட்டம் உயர்ந்ததாக இருக்கமுடியாது என்பது எனது உறுதியான நம்பிக்கை.

### ஐக்கிய அரசியல்.

இங்குள்ள பிரச்சினைகளைக் குறித்து, யுத்தம் நடந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், விவாதிப்பதில் பலனில்லை. ஐக்கிய அரசியல் திட்டம் என்னதான் குறைபாடுகள் உள்ளதாக இருந்த போதிலும், அது பெரிதும் உபயோகமாக விருக்கும் என்று நான் கருதுகிறேன்.

எந்தத் திட்டமும் எல்லாவகைகளிலும் குற்றமற்றதாக இருக்க முடியாது. அவற்றில் குற்றங்கள் இருக்கத் தான் செய்யும். அனுபவத்தைக் கொண்டு அக்குற்றங்களைக் கண்டுபிடித்துப் போக்கிக் கொள்ளவேண்டும். ஐக்கிய அரசியல் திட்டத்தை வெகு கடுமையாகக் குறைகூறினார்கள் என்று எனக்குத் தெரியும். மாகாண சுயாட்சி எப்படி வெற்றிகரமாக நடைபெறுகிறதோ, அதுபோலவே ஐக்கிய அரசியலும் நடைபெறும் என்பது என் நம்பிக்கை.

கட்சிகளும், தனிப்பட்டவர்களும் ஓரளவிற்குத் தியாகங்கள் செய்யத் தான் வேண்டும். தற்கால அரசியலிலே, தான் கோரிய அனைத்தும் பெறுவது என்பது முடியாத காரியம். முன்னேற்றமடைய வேண்டுமானால், சமரசத் தன்மை, விட்டுக்கொடுக்கும் இயல்பு, மற்ற கட்சிகளின் நேர்மையான உரிமைகளை நியாயமானபடி மதிப்பது, ஆகிய அனைத்தும் வேண்டும்.

ஐக்கிய அரசியல் அமைப்பு ஏற்பட்டிருக்குமானால், மாகாணப் பிரதிநிதிகளும், சமஸ்தானப் பிரதிநிதிகளும், அதில் அங்கத்தினர்களாயிருப்பார்கள். இவர்கள் உண்மையிலேயே நேர்மையான பிரதிநிதிகளாயிருந்து நிர்வாகத்தை நடத்த இடமுண்டு. இதுதான் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கத்தின் நோக்கமுங்கூட. அப்போது தான் இந்திய அரசாங்கப் பொறுப்பை இந்திய மக்களிடம் ஒப்புவிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தால் முடியும்.

இப்படிப்பட்ட ஒரு அரசியல் அமைப்பு ஏற்பட்டிருக்குமானால், அந்த அரசாங்கத்தின் தலைமையின் கீழ் இந்தியா இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருக்கும். அதற்கென்று ஒரு தனி கௌரவமும் பெருமையும் ஏற்பட்டிருக்கும். ஆனால் யுத்தம் மூண்டு விட்டபடியால் ஐக்கிய அரசியல் அமைப்பை அமுலுக்குக் கொண்டுவர முடியாமற் போயிற்று. ஆகவே, யுத்தம் முடிந்து ஐக்கிய அரசியல் அமைகிறவரையில், அரசாங்கத்தோடு பல செல்வாக்குள்ள கட்சிகளும் சேர்ந்து உழைத்து யுத்த முயற்சிக்கு உதவும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அக்கட்சிகளைக் கோருகிறார்கள்.

நான் எதிர்பார்த்த அளவிற்குக் காரியங்கள் சாதிக்க முடியாமற் போயிருக்கலாம். ஆனால், இந்த யுத்தகாலத்தில் மகா முக்கியமான காரியங்களையும் நான் செய்து முடித்திருக்கிறேன். பெரிய அரசியல் கட்சிகளை அரசாங்கத்தை நடத்தும்படி நான் தூண்டமுடியாமற்போய் விட்டதென்று என்பேரில் குற்றம் சொல்லலாம். முன்பு, என் நிர்வாக சபையில் 7 அங்கத்தினர்கள் இருந்தார்கள். இவர்களில் பெரும்பாலோர் உத்தியோகஸ்தர்கள். இப்போது இச்சபையில் 14 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்களில், படைத்தலைவர் உள்ளிட உத்தியோகஸ்தர்கள் 4 பேர்கள் (ஐரோப்பியர்கள்) மட்டுந் தான்.

(8-ம் பக்கம் பார்க்க)

# ஜெர்மானியர் மீது இத்தாலியர்களுக்கு நம்பிக்கையில்லை

☆

## தன்னலமே பெரிதெனக் கருதும் கீழினத்தார்

☆

### உலக மக்களின் கோபத் தீ கிளம்பி விட்டது

### ரூஸ்வெல்ட் பிரசங்கம்



அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட்.

சென்ற ஜூலை மீ 28உ அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் செய்த வானொலிப் பிரசங்கத்தின் சாரமாவது :—

ஒன்றரை வருஷங்களுக்கு முன்பு நான் காங்கிரஸ் சபையில் பேசியபோது, பெர்லின், டோக்கியோ, ரோமாபுரி ஆகிய நகரங்களிலுள்ள இராணுவத்தார்கள் தான் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள் என்று குறிப்பிட்டேன். நான் அப்போது கூறியது இப்போது நிறைவேறிக்கொண்டு வருகிறது.

“இப்போது மக்கள் இனமே திரண்டு, கோபத் தீயுடன் கிளம்பி விட்டது. ரஷ்யப் போர் முனையிலும், பரந்த பசிபிக் மகா சமுத்திரத்திலும், ஐரோப்பாவிலும் முன்னேறிப் போய், பெர்லினையும் டோக்கியோவையும் வளைந்து கொள்ள முந்திக் கொண்டிருக்கின்றன. இத்தாலியில் அயோக்கிய பாசிச ஆட்சி, சிதறி கொண்டிருக்கிறது. நாஜிகளும் பாஸிஸ்டுகளும் கொண்டது கொள்ளைத் தத்துவம். இந்தத் தத்துவம் எதிர்ப்புக்குத் தாளமாட்டாது. தக்க சமயத்தில் தக்க இடத்தில் நேச நாடுகளின் தலை சிறந்த விமானப் படைகளும் கப்பற் படைகளும் தரைப் படைகளும் பயன்படுத்தப் பட்டன. முஸோலினியைக் காப்பாற்றத் தக்க உதவி யளிக்க ஹிட்லர் மறுத்து விட்டார். சிசிலித் தீவில் இத்தாலிய படைகளிட மிருந்த எல்லா மோட்டார்களையும் ஹிட்லர் பிடுங்கிக் கொண்டார்; ஆகவே இத்தாலிய வீரர்கள் நிராதரவாக விடப்பட்டனர். அதனால் தான் அவர்கள் சரண்புக நேர்ந்தது. ரஷ்யப் போர் முனையிலுங் கூட இது போலவே தான் செய்தார்கள்.”

## சிசிலி படை எடுப்பால் இலாபந் தான்.

இதற்கப்புறம் அவர் சிசிலி படை யெடுப்புத் திட்டம் மிகவும் லாபகரமாக இருந்ததாகக் குறிப்பிட்டார். சேதமும் நஷ்டமும் எதிர் பார்த்ததை விட, குறைவு எனவும் அவர் கூறினார். போர் நடவடிக்கையை நிர்வகித்தவர்களது திறமையையும் நேர்மையையும் அவர் மிகவும் பாராட்டினார். பிரிட்டிஷ் எட்டாம் படையின் தீரத்தையும் அவர் முக்கியமாக எடுத்துச் சொன்னார்.

தரைப் படைகளும், விமானங்களும், கப்பல் படையும் இந்தப் போரில் ஒருமித்து சேவை புரிந்ததாகவும் மேலும் எவ்வளவோ சாதிக்க வேண்டி யிருப்பதாகவும் இந்த யுத்தத்தில் நாம் பஸிபிக் பிரதேசத்தையும் பிரதானமாக பாவிக்க வேண்டியிருப்பதாகவும் கூறினார்.

இப்போது கப்பல் நஷ்டம் குறைந்து வருவதாகவும் எதிரி நீர்மூழ்கிக் கப்பல்கள் வேட்டையில் அதிக பலன் ஏற்பட்டிருப்பதாகவும், அமெரிக்கர் தற்சமயம் ஏற்பட்டு வரும் உணவுப் பொருள் கஷ்டத்தை சகித்துக் கொண்டு பிரிட்டன், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும், ரஷ்யாவில் ஹிட்லரின் முயற்சி வீணாகி விட்டதாகவும் அவர் கூறினார்.

‘ஜப்பானுடன் நடக்கவேண்டிய யுத்தம் இன்னும் எவ்வளவோ இருக்கிறது. நாம், நமது லக்ஷியத்தை அடையும் காலம் சமீபித்துவிட்டது. ஜப்பானியரைத் தாக்குவதற்கு வேண்டிய முக்கியமான இடங்களைப் பிடித்து வருகிறோம்’ எனக் கூறினார்.

பர்மாவில் ஜப்பானிய விமான ஆதிக்கம் குலைந்து, நேச தேசத்தாரே வலிமை பெற்றுவிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார், சீனா, இந்தோ-சீனா, பர்மா முதலிய இடங்களிலுள்ள ஜப்பானிய நிலையங்கள் தாக்கப்படுவதாகவும், அவர் வெளியிட்டார்.

யுத்தத்திற் கப்புறமுள்ள உலக நிலை பற்றி நேசதேசங்கள் ஒரே வகைக் கருத்துக் கொண்டிருப்பதாகவும் சமாதான நிபந்தனைகளைப் பற்றியும் எதிர்காலத் திட்டங்களைப் பற்றியும் விவாதிக்க இது காலம் அல்ல என்றும் வாய்ப் பேச்சில் கவனத்தைச் செலுத்தி நமது முயற்சியை நழுவ விடக் கூடாது என்றும், யுத்தத்தில் ஜெயிப்பதே முக்கியமான நோக்கமாகும் என்றும், வெற்றியில் கருத்துக்கொண்டு, தாங்கள் உலகப் பிரச்னைகளை அலக்ஷியம் பண்ணவில்லை என்றும், யுத்தம் முடிந்ததும் தற்போது பலவித தியாகங்களுக்கும் உட்பட்டு வரும் ராணுவத்தாரின் சுகவாழ்வுக்கு வழி தேடுவது கடமையாகும் என்றும் அவர் சொன்னார்.

முஸோலினியையும் அவரது சகாக்களையும் உதைத்துத் தள்ளும் முயற்சி பலித்து வருவதாகவும் ஹிட்லரை இது போலவே படுத்தி வைக்க வேண்டும் என்றும், இது சுலபம் அல்ல என்றும் கூறினார்.



தொழிலாளர் பகுதி

# விவசாயத் தொழிலாளியின் யுத்த முயற்சி

“காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுகிறேன்” புத்திசாலியான விவசாயி, ஆனால் சோம்பேறியோ கடைசி பருவம் வரைக் காத்திருக்கிறான். கடைசியாக சந்தர்ப்பத்தை இழந்து விடுகிறான்.

விவசாயத் தொழிலைவிட, விவசாயிகள் தம் வாழ்க்கையில இந்தப் படிப்பினையைப் பயன்படுத்துவார்களானால், நல்ல பலனுண்டு. இதிலிருந்து ஒரு விஷயம், தெளிவாகிறது. அனைவருக்கும சம சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டிருந்தும், ஒரு சிலர் மட்டும் மற்றவர்களை விட மேலான நிலையிலிருப்பதற்கு இப்படிப்பட்ட போக்குத் தான் காரணம்.

ஒரு ஊரில் இரண்டு விவசாயிகள். ஒருவன் பெயர் ராமன்; மற்றவன் பெயர் சோமன். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 10 ஏக்கர் நஞ்சை நிலமுண்டு.

சென்ற அறுவடைக் காலத்தில் நெல், யானை விலை, குதிரை விலைக்கு விற்றது. ஆனால் அதற்கேற்றாற்போல, கிஸ்தித் தொகையோ, கடனுக்கு வட்டி விகிதமோ அதிகப்படவில்லை. இவ்விருவரும் தமக்குத் தேவையான நெல் போக, அதிகப்படியா யிருந்த நெல்லை விற்றார்கள், கைநிறைய கண்டார்கள் பணம். ஒவ்வொரு வருஷமும் சுமார் ரூ. 300 தான் மிச்சமிருக்கும், இந்த வருஷமோ ரூ. 1,000 மிச்சம். இதை எப்படிச் செலவழிப்பது என்று தெரியாமல் தயங்கிக் கொண்டிருந்தான் ராமன்.

அவன் மனைவி அவனிடம் வந்தாள். பெருமைத்தீ பறந்தது அவளுடைய முகத்தில்.

ராமன்.—என்ன சமாசாரம்?

சீதை.—உங்களைக் கலியாணம் செய்துகொண்டதிலேயிருந்து, நான் என்ன அனுபவித்தேன்?

ராமன்.—இப்போது அந்தக் கேள்வி பிறக்கவேண்டிய காரணம்?

சீதை.—அடுத்த வீட்டு அஞ்சிலையைப் பாருங்கள்! எதிர்த்தவீட்டு ஏகேஸ்வரியைப் பாருங்கள்!

ராமன்.—அவர்களை ஏன் நான் பார்க்கவேண்டும்?

சீதை.—என்ன அழகான சேலைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்?

ராமன்.—நீ மட்டும் சேலை கட்டிக்கொள்ளாமல் இருக்கிறாயா?

சீதை.—போதும்; போதும்! இப்படி விளையாட்டாகப் பேசிக் கொண்டே ஏமாற்றி விடுகிறீர்கள்!

ராமன்.—அது சரி; இப்போது என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?

சீதை.—அது உங்களுக்கே யல்லவா தெரிய வேண்டும்; நான் சொல்லியா தெரிய வேண்டும்?

ராமன்.—உன் புதிர் எனக்கு விளங்க வில்லையே!

சீதை.—நானும் நம்ம ரத்தினமும் கட்டியிருக்கிறது சேலையா? கந்தலா? நீங்களும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறீர்கள். இது உங்கள் கண்ணில் படவில்லையே; மனதில் தைக்க வில்லையே!

ராமன்.—ஓகோ! சேலை வேண்டுமா? அதை அப்போதே சொல்லித் தொலைக்கிறது தானே? சரி; இன்றைக்குச் சாயங்காலம் கடைத் தெருவுக்குப் போய் உங்களுக்குச் சேலை எடுத்துக் கொள்ளலாம்.

சீதை.—நல்ல சேலையாக, உயர்ந்த சரிகைச் சேலையாக வாங்கித் தரவேண்டும்!

ராமன்.—நல்லது.

* * * *

இருவரும் கடைத் தெருவிற்குப் போனார்கள். விலைவாசிகள் ஒன்றிற்குப் பத்தாக ஏறி யிருந்தன. இது கண்ட ராமன் திகைத்தான். சீதையோ தன் லட்சியத்திலேயே குறியா யிருந்தாள். விலை வாசிகள் உயர்ந்திருக்கும் சமயத்தில் துணிகள் வாங்குவதனால், தமக்குத் தான நஷ்டமென்பது பற்றி அவளுக்குக் கவலையில்லை. துணிக் கடையில், பல வகைப் புடவைகளை எடுத்துக் காட்டுகிறார்கள். ஒவ்வொன்றும் கண்ணைப் பறிக்கின்றன.

ராமன்.—சீதை! என்ன; ஒவ்வொன்றும் யானை விலை குதிரை விலையா யிருக்கிறதே!

சீதை.—எங்களுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றால் மட்டும் எல்லா வித ஆட்சேபனைகளும் முளைத்துவிடும்.

ராமன்.—சேச்சே! நான் அதற்காகச் சொல்ல வில்லை;

சீதை.—பின்னே, எதற்காகச் சொன்னீர்கள்?

ராமன்.—கொஞ்சம் விலை இறங்கிய பிறகு, வாங்கிக் கொள்ளலா மென்று நினைக்கிறேன்.

சீதை.—அதைத் தான் நானும் சொன்னேன். நீங்கள் பணத்தை மட்டுந் தான பெரிதாக மதிக்கிறீர்கள்.

ராமன்.—சேச்சேச்சே! அப்படி எல்லாம் ஒன்றுமில்லை.

சீதை.—நம்மைப் பிறர் மதிக்க வேண்டாமா? ஆள் பாதி; ஆடை பாதியல்லவா?

ராமன்.—சரி. இப்போது எந்தப் புடவை எடுக்க வேண்டுமென்கிறாய்! உன் இஷ்டம் போல் எடுத்துக் கொள்.

சீதை சில புடவைகளையும் ஜாக்கெட் துணிகளையும் மற்றும் பல வகைத் துணிகளையும் எடுத்து மூட்டை கட்டிக் கொண்டாள். அந்தக் கடை குமாஸ்தா, ராமன் கையில் பட்டியலைக் கொடுத்தான். இதைக் கண்டதும் திகைத்துப் போனான் ராமன். மனைவியை திருப்திப் படுத்த வேண்டி; ரூ. 300-ம் எண்ணிக் கொடுத்துவிட்டுக் கிளம்பினான்.

* * * *

ஒரு வாரம் கழிந்தது. ராமன் வீதி வழியே போய்க் கொண்டிருந்தான். குமரனும் நகுலனும் எதிர்ப்பட்டனர். மூவரும் யோக க்ஷேமங்கள் விசாரித்துக் கொண்டனர்.

குமரன்.—ராமா! உன்னைக் காணத் தான் வந்தேன்.

நகுலன்.—கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல, நீயே எதிரில் வந்து விட்டாய்;

ராமன்.—என்ன விசேஷம்?

குமரன்.—நாங்களெல்லோரும் யாத்திரை கிளம்புகிறோம்.

ராமன்.—எங்கே?

நகுலன்.—இராமேச்சுரத்திற்கு.

ராமன்.—எப்போது?

குமரன்.—அடுத்த வியாழக்கிழமை.

நகுலன்.—நீயுங் கிளம்ப வேண்டும் எங்களோடு.

ராமன்.—நான் வரவில்லை ஐயா! எனக்குப் பிரார்த்தனை எதுவுமில்லை.

குமரன்.—பிரார்த்தனை எதுவு மில்லா விட்டால், வரக் கூடாதோ?

நகுலன்.—ராமா! விவரம் தெரியாமல் நீ பேசுகிறாய். யாத்திரை செய்வதனால் எவ்வளவு இலாப முண்டு தெரியுமா?

ராமன்.—அதெல்லா மிருக்கலாம். யார் சொன்னது இல்லை என்று.

குமரன்.—பின்னே! நீ ஏன் வரமாட்டேனென்கிறாய்?

நகுலன்.—பணஞ் செலவாகி விடுமென்று பார்க்கிறாய் போலிருக்கிறது

ராமன்.—இப்பத் தான் ரூ 300-க்கு துணிகள் வாங்கி விட்டேன். அடுத்த மாதம் நம்ம ரத்தினத்திற்குக் கலியாணம்; தேதி குறித்தாயிற்று. இதை யெல்லாம் உத்தேசித்துத் தான் நான் சொல்லுகிறேன்.

நகுலன்.—அதெல்லாம் இருக்கலாம் ஒரு குடும்பம் என்று இருந்தால் செலவில்லாம லிருக்குமா?

குமரன்.—இப்படிப்பட்ட சமயம் கிடைக்காதே.

நகுலன்.—வழியிலே எத்தனை ஸ்தலங்கள்; தீர்த்தங்கள். ஆறுகள், மலைகள், இயற்கைக் காட்சிகள். இவற்றை யெல்லாம் கண்டு இன்புறாமையை, முன் ஜன்மத்தில் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

ராமன்.—எனக்கு மாத்திரம் அவற்றை யெல்லாம் காண வேண்டு மென்னும் ஆசையில்லையா?

நகுலன்.—இருந்தால், நீ ஆட்சேபித் திருக்க மாட்டாயே!

குமரன்.—ராமன் ஆட்சேபிக்கவே யில்லையே. நாம் அப்படி நினைத்துக் கொண்டோமே யொழிய, அவர் ஆட்சேபிக்க வில்லை.

நகுலன்.—தனக்குள்ள அசந்தர்ப்பங்களைத் தான் சொன்னார்.

கடைசியாக ராமனும் இந்தக் கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டு யாத்திரை போக வேண்டுமென்று முடிவாயிற்று.

* * * *

புளி மூட்டைகளோ எனத் தக்கபடி ரயில் வண்டிகளில் மக்கள் அடைந்திருந்தனர். நிற்பதற்கு கூட இடமில்லை. யாத்திரை இந்தக் கோலத்தில் ஆரம்பமானது. முதலில் ஒரு ஊரில் இறங்கினார்கள். அரிசி வாங்கிச் சமைத்துச் சாப்பிட வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால், அரிசி கடைகளில் கிடையாது. ஹோட்டல்களில் சாப்பாடு எடுத்துக்கொண்டு வந்து சாப்பிட்டு விடலாமென்று நினைத்தார்கள். சாப்பாடு கொடுக்க முடியாது என்று கூறி விட்டான் ஹோட்டல்காரன். அங்கேயே எல்லோரும் போய் உட்கார்ந்து சாப்பிட்டு விடலாமென்று நினைத்துப் போனார்கள். அரிசி கொண்டு வந்து கொடுத்தால், வடித்துப் போடுவதாகச் சொன்னான் ஹோட்டல்காரன். பசியோ வயிற்றை கிள்ளுகிறது. உடனே கோவில் ஞாபகம் வந்தது அவர்களுக்கு. கோவில் பட்டைச் சோற்றை வாங்கி வரும்படி ஒருவரை யனுப்பினர். அங்கே 2 பட்டைச் சோறு தான் இருந்தது; அதுவும் உண்ணுவதற்குத் தகுதியற்ற நிலையில் கல்லும் நெல்லும் கலந்து மலிந்திருந்தன. பலவித கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு யாத்திரையை முடித்தனர். திரும்பு காலில் ராமனுக்கும அவன் தம்பி லட்சுமணனுக்கும் காய்ச்சல் கண்டது. நோயுடன் திரும்பி வந்தனர். இந்த நோயை போக்க ரூ. 300 செலவாயிற்று.

இந்த நிலையில், ராமனுடைய மகள் ரத்தினத்தின் திருமண நாள் நெருங்கியது. அவன் கையில் பணமில்லை. ஏங்கினான். அடுத்த வருஷம் நடத்திக் கொள்ளலாமென்று நினைத்தான் உறவின் முறையார் ஒரே பிடிவாதம் செய்தனர். இது மகா அவமான மென்று ராமன் மனைவியும் அழுதாள். எனவே வட்டிக் கடை செட்டியிடம் போனான் ராமன். தன் நிலத்தை ஈடு வைத்து ரூ. 2,000 கடன் வாங்கினான். திருமணம் சிறப்பாக நிறைவேறியது.

* * * *

இனி சோமனைக் குறித்துச் சிறிது கவனிப்போம். கடந்த மகா யுத்த காலத்திய அனுபவம் சோமனுக்கு இருந்தது. அப்போது ராமனைப் போலவே தான் பணத்தை யெல்லாம் செலவழித்து விட்டுத் திண்டாடினான். கடைசியாக விவசாயிக் கடன் நிவாரணச் சட்டம் தோன்றியது. அதன் உதவியால் சோமன் தப்பிக் கொண்டான். "கடன் பட்டான் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்னும் செய்யுளடி அடிக்கடி அவன் ஞாபகத்திற்கு வருவதுண்டு. ஆகையால், கடன் வாங்குவதை விட்டு விட்டான்.

தன் கிராமத்திலுள்ள கூட்டுறவு சங்கத்திற்குப் போய்த் தன் ரொக்கத்தில் ஒரு பாதியை அங்கே 'டிபாசிட்' செய்தான். டிபென்ஸ் சேவிங்ஸ் பாங்கியில் கொஞ்சம் போட்டான். கூட்டுறவு சேமிப்பு நிதியிலும் கொஞ்சம் போட்டான். தன் பேரிலும் தன் மனைவியின் பேரிலும் தலா ரூ. 10,000-க்கு இனஷியூரென்ஸ் பாலிஸி எடுத்தான்.

இவை யனைத்தும் யுத்தம் முடிந்த பிறகு, சோமனுக்கு உற்ற துணைகளாக உதவும் யுத்த காலத்தில் விலைவாசிகள் உயர்ந்திருக்கும் சமயத்தில் இஷ்டம்போல் ஒன்றிற்குப் பத்தாக விலை கொடுத்து வாங்கினால், யுத்தம் முடிந்து சாதாரண விலைக்கு அந்தச் சாமான்கள் விற்கும்போது, தான் வாங்கிய சாமான்களின் விலை ஐம்பதிற்கு ஒன்றாகக் குறைந்துவிடு மென்று நன்றாக உணர்ந்திருந்தான்.

இவ் விருவரில் யார் புத்திசாலி. நாட்டின் நன்மைக்குப் பாடுபடுகிறவர் யார்? கொள்ளை லாபக்காரர்களை வெல்லும் வீரர் யார்? சோமனல்லவா? அது மட்டுமா? அவர் சேர்த்து வைக்கும் தொகைகளுக்கு வட்டி கிடைப்பது ஒரு புறமிருக்க, அவருடைய பணம் யுத்த முயற்சிக்கு எவ்வளவு சிறந்த முறையில் பயன்படுகிறது!

---

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

இந்த அங்கத்தினர்களில் பலவேறு வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. இதை யாரும் மறுக்கமுடியாது.

நான் வைசிராயாக விருந்த இந்த 7½ வருஷங்களும் மிகவும் முக்கியமான காலம். மகத்தான அரசியல் கிளர்ச்சிகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

சென்ற நான்கு வருஷங்களாக, இந்தியாவைப் பாதுகாப்பதைக் குறித்தும், தரைப்படை, கப்பற்படை, விமானப்படை ஆகியவற்றிக்குப் படைகளைத் திரட்டி பயிற்சியளிப்பது சம்பந்தமாகவும் மிகுந்த அக்கரை கொள்ள வேண்டி ஏற்பட்டது. போர்முனைக்குப் பணமும் பொருளும் அனுப்ப வேண்டியிருந்தது.

யுத்தத்திற்காக உதவிகோரிய போதெல்லாம் மிகச் சிறந்த முறையில் இந்திய மக்கள் உதவி யிருக்கிறார்கள். நேசநாடுகள் வெற்றிபெற வேண்டி இந்தியர்கள் செய்துள்ள அரிய தொண்டு பற்றி அவர்கள் பெருமை கொள்ளலாம்.

## தென்னாப்பிரிக்காவில் இந்தியர் நிலைமை.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களைப் பாதிக்கத் தக்க முறையில் ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள். அதுபற்றி நான் பெரிதும் வருந்துகிறேன். என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதுபற்றி எனது அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

மற்றபடி இந்தியாவிற்கு எல்லா நாடுகளிலும் கண்ணியம் உயர்ந்து விட்டது. வாஷிங்டனிலும் சுங்கிங்கிலும் இந்திய அரசாங்கப் பிரதிநிதிகள் இருக்கின்றனர். அதுபோலவே, சீனப்பிரதிநிதியையும், அமெரிக்கத் தலைவரின் பிரதிநிதியையும் இந்தியாவிற்கு அனுப்பியிருக்கிறார்கள். யுத்த மந்திராலோசனை சபையில் இந்திய அங்கத்தினர் ஒருவர் சென்ற ஒருவருஷமாக இருந்து வருகிறார்.

யுத்த சம்பந்தமாக ஏற்பட்ட எல்லாவகை முக்கியமான முன்னேற்றத்திலும் இந்தியாவும் சம்பந்தப்பட்டிருக்கிறது.

மூன்றுவகை இந்தியப்படைகளும் உலகம் புகழத்தக்கபடி சிறந்த முறையில் போராடி ஜெயக்கொடி நாட்டியிருக்கின்றன. யுத்த முயற்சிக்காக இந்தியர்கள் உதவியுள்ளது ஒவ்வொருவருக்கும் தெரிந்தது தான். இன்னும் கொஞ்சகாலம்வரை கிடைக்கக்கூடிய பொருள்கள் எல்லாவற்றையுங் கொண்டு போராட்டத்தில் நம் கவனத்தைச் செலுத்த வேண்டும். பிறகு நிலைமை மாறும். மக்களின் பொருளாதார நிலையைக் காப்பாற்றவேண்டும். மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் நம் சிந்தையைச் செலுத்த வேண்டும்.

## விலைவாசிகள் குறைவு.

இப்போது துணி விலை குறைந்து விட்டது. சில சில்லரைக் கடைகளில் 40 சத விகிதம் வரை குறைந்துவிட்டது. வியாபாரச் சூதாட்டக்காரர்களையும் கொள்ளை லாபம் அடிக்கிறவர்களையும் தடுக்கிறதென்று இந்தியா அரசாங்கத்தார் உறுதியான முடிவிற்கு வந்து விட்டார்கள். ஏனென்றால், இது நாட்டின் உயிரையே உறிஞ்சுவிடக் கூடியது. இது போன்ற சமூக விரோதமான செயல்கள் செய்கிறவர்களுக்குத் தண்டனை விதிப்பதென்றேற்பட்டது. இதுவரை கையாளப்பட்டிருக்கிற முறைகளால் நல்ல பலன் விளைந்திருக்கிறது. இதுபற்றி நான் மகிழ்ச்சி யடைகிறேன்.

என்றாலும், நாம் இதுபற்றி பெருமிதமாயிருந்து விடலாகாது. இந்தப் போராட்டம் முடிவடைந்து விட்டதென்ற எண்ணம் நமக்கு உண்டாவதற்கு இடமே கொடுக்கப்படாது. யுத்தமே இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. விலைவாசிகள் உயராதபடி தடுப்பதற்கு மகா கடுமையான முறைகளைக் கையாளுவதென்று முடிவுகட்டி யிருக்கிறோம். நாட்டின் பொருளாதார நிலை பாதுகாக்கப்படும். இதற்கு அனைவருடைய கூட்டுறவும் வேண்டும்.

எனக்குப் பிறகு பீல்ட் மார்ஷல் வைகௌண்ட் வேவல் இந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளப்போகிறார். இவர் நெடுநாட்களாக மிகச்சிறந்த முறையில் இந்நாட்டில் பணியாற்றி வந்திருக்கிறார். போர் முனையில் தான் ஒரு மாபெருந் தலைவர் என்று, களக்கமறத் தெளிவு படுத்தி விட்டார். மற்றொரு சிறப்பையும் நீங்கள் அவரிடத்தில் காண்பீர்கள். சென்ற 2 வருஷங்களாக நான் அவரிடம் மிகவும் நெருங்கிப் பழகிய அனுபவத்தைக் கொண்டு தான் இதைச் சொல்லுகிறேன். அவர் எந்த விஷயத்தையும் இலகுவில் தெரிந்துகொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர்; அறிவாளி; அரசியல் ஞானி; உயர்ந்த நிதான புத்தியுடையவர்; வீரமும் பிடிவாதமும் உடைய தலைவர்; மக்களிடம் மிகுந்த அன்புடையவர்; இந்திய மக்கள் மீது பிரியமுள்ளவர்; இந்தியப் பிரச்சினைகளைக் குறித்து அவர் கொண்டுள்ள அக்கரை அனைவரும் அறிந்ததே.

இனி வருங்காலம் கடுமையானது. யுத்த சம்பந்தமான பிரச்சினைகள் எவ்வளவு கஷ்டமானவையோ, அவ்வளவு கஷ்டமானவை தான் சமாதானகாலப் பிரச்சினைகளும். அவருக்கு முதிர்ந்த அனுபவமுண்டு. இந்தியாவைப் பற்றி எல்லா விவரங்களையும் அவ்வப்போது அவர் தெரிந்து கொண்டிருக்கிறார். அவருடைய உள்ளம் தூய்மையானது. ஆகவே, இந்த நாட்டிற்கு இவருடைய சேவை மிகவும் பயன்படும்.



# பொறுக்கு மணிகள்

### அளவு கடந்த அன்பு

எதுவும் அளவு கடந்து விட்டால் ஆபத்துத்தான். அன்பு, பிரியம், ஆசை, எல்லாம்கூட அப்படித்தான். அயோக்கியத்தனமான காரியத்தைச் செய்யப் புறப்படும் இருவர், தத்தம் மனத்தில் உள்ளதை வெளிப்படுத்துகிறார்கள். "அடாடா! எவ்வளவு ஒற்றுமை!" என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். கைக்குள் கைபோட்டு மாட்டிக்கொண்டு "ப்ரதர்! ப்ரதர்!" என்று அழைத்துக்கொண்டு கிளம்பிவிடுகிறார்கள். கொஞ்ச காலத்திற்கு, தங்களது ஜோடி, "ஈடிணையற்ற ஜோடி! இணைபிரியா ஜோடி! வைரக்கல் ஜோடி!" என்றெல்லாம் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் உண்மையில் இதெல்லாம் ஒற்றுமையாகுமா? அவர்கள் "ப்ரதர்கள்," அதாவது சகோதரர்கள் ஆவார்களா? அவர்கள் இணைபிரியா ஜோடியாகவே இருப்பார்களா? அவர்களிடை நீடித்த பிரியம் இருக்குமா?

ஜெர்மானியரும் இத்தாலியரும் இப்படித் தான் குலவாடிக்கொண்டிருந்தார்கள். ஹிட்லரும், முஸோலினியும் சேர்ந்து ஐரோப்பாவையே கட்டி ஆளலாம் என்று திட்டம் போட்டுக் கொண்டதன் பலன் இது. தங்களது சிநேகம் 1943-ல் என்ன ஆகப்போகிறது என்பதைச் சிறிதும் அறிந்துகொள்ளாமல், அறிவற்று, ஜெர்மனியும், இத்தாலியும், சேர்ந்து ஒரு அச்சுபோல என்று உலகோருக்கு பறை சாற்றினார்கள். "ஒரு பயல், இந்த அச்சை அசைக்க முடியாது" என்றார்கள். உறுமினார்கள். கர்ஜித்தார்கள். துள்ளிக் குதித்தார்கள்.

முஸோலினியும் ஹிட்லரும் இப்படிச் செய்து கொண்டிருந்தார்களே ஒழிய, ஜெர்மனியாருக்கும் இத்தாலியருக்கும் இடையில் பரஸ்பர அவநம்பிக்கை இருந்து கொண்டே தானிருந்தது. தங்களைவிட ஜெர்மானியர் பலவிதங்களில் அதிக சக்தி கொண்டிருக்கிறார்கள் என்பது இத்தாலியருக்குத் தெரியும். அதோடு, கிரீஸ் மீது படையெடுக்கும்படி முஸோலினி இத்தாலியரை கிளப்பிவிட்டபோது, இத்தாலியர் நன்றாக உதைபட்டு விட்டார்கள். ஜெர்மானியர்கள் வந்து உதவினார்களோ; மானம் மிஞ்சிற்றோ? வட ஆப்பிரிக்காவில், வேறே பிரிட்டிஷார் இத்தாலியரைப் பல இடங்களில் தனியாகச் சந்தித்து சவுக்கடி கொடுத்துவிட்டார்கள். ஆகவே, இத்தாலியர்களை ஜெர்மானியர்கள் மட்டமாகத் தானே நினைத்திருப்பார்கள். அது உள்ளுக்குள்ளே வேலைசெய்துகொண்டு தானே இருக்கும்?

### ஜெர்மானியர் தன்னலம்

அதுவுமல்லாமல், வட ஆப்பிரிக்காவைவிட்டு வரும்பொழுதும் சரி, ஸிஸிலியிலும் சரி, ஜெர்மானியர் தங்கள் பாட்டை முதலில் பார்த்துக்கொண்டு, வேகமாகச் செல்லும் லாரிகளையெல்லாம் தங்களுக்கு உபயோகப்படுத்திக் கொண்டு, கொடிய பாலைவனங்களிலும், பயங்கரமான மலைப்பிரதேசங்களிலும் இத்தாலிய வீரர்களைத் தவிக்க விட்டு விட்டு ஓடிவிட்டார்கள் அல்லவா?

இதையெல்லாம் இத்தாலியர் மறக்கமுடியுமா? அவர்களுக்கு ஜெர்மானியர் மீதுள்ள "அன்பு" அளவுகடந்து போய் விட்டிருக்குமல்லவா? ரோட்டு அழுகாகத் தான் இருக்கிறது. ரோட்டைக் கடந்து போனால் என்ன இருக்கும்? சாககடைதானே?

அந்த தினுசில் இத்தாலியரது அன்பு; அளவு கடந்து போனதும், எதில் கொண்டு விட்டது தெரியுமோ? ஸிஸிலியிலே, 51-வது ஹைலண்டு பிரிட்டிஷ் துருப்புகள் போய் இறங்கினார்கள். கடற்கரையைப் பாதுகாக்க விரோதிகள் பலமான ஏற்பாடுகள் செய்திருப்பார்கள். அம்மாதிரி செய்திருந்தால், படையெடுப்புப் படகுகளில் வந்து இறங்கி, ஓடிவரும் படைகளை வெகு எளிதில், சௌகரியமாகச் சுடலாமல்லவா? அதனால், பிரிட்டிஷ் துருப்புகள், வெகு ஜாக்கிரதையாகவே, துப்பாக்கி ஏந்தின கைகளோடு முன்னேறினார்கள். ஆனால் மூச்சு, பேச்சே காணோம். ஏதாவது மாயமா? மந்திரமா? தந்திரமா? மோசமா! எனறெல்லாம் எண்ணிவிட்டார்களாம் பிரிட்டிஷ் வீரர்கள்.

அவர்கள் பூனைபோலப் பதுங்கிப் பதுங்கி, ஒரு பெரியபீரங்கி நிலையத்தை, அடைந்தார்களாம். அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்கு பிரமிப்பையும், சிரிப்பையும் கலந்து உண்டாக்கி விட்டனவாம்.

### பழிக்குப் பழி

அந்த பீரங்கி நூதனமான ஜெர்மன் பீரங்கியாம். அதை உபயோகிக்க இரு ஜெர்மன் நிபுணர்கள் அங்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள். அவர்களை அங்கிருந்த இத்தாலியர்கள் பிடித்து, தொண்டையை அறுத்துத் தள்ளிவிட்டுப் போயிருந்தார்களாம். என்ன அன்பு! என்ன அன்பு!

இது மட்டுமா? சமுத்திரக் கரையிலே அங்கங்கே போடப்பட்டிருந்த கண்ணிவெடிகளுக்கு, நெருப்பு வைக்காமலே போயிருந்தார்கள் இத்தாலியர்கள். இதெல்லாம் நமக்கு ரொம்ப சௌகரியமாகப் போச்சு.

இத்தாலியில், ஜெர்மானியரிடை இருக்கும் அன்பின் அளவு இன்னும் போகப்போக வெளியாகும். முஸோலினியின் வீழ்ச்சிக் கப்பால், இத்தாலியிலே எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இனி அங்குள்ள ஜெர்மானியருக்கு நித்யகண்டம், பூரணாயிசுதான்!

* * * * *

### ஒரு சாகசச் செய்கை

ஏதாவது காயம்பட்டால் அதற்கென்று இருக்கட்டும் என ஒரு மருந்தை, கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வரும் வழியிலேயே நமக்கு ஒரு காயம் உண்டாகிறது; அந்த மருந்தைப் பூசுகிறோம்; காயம் குணமாகிறது என்றால், நமக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? அந்த மருந்தைக் குறித்து எல்லோரிடமும் பிரமாதமாகப் பேசமாட்டோமா?

அதேபோல, இந்தியாவிற்கு உதவுதற் கென்று பிரிட்டனில் ஒரு கப்பல் புதிதாகக் கட்டப்பட்டது. அந்தக் கப்பல், இந்தியாவுக்கு முதன் முறையாக வந்து கொண்டிருந்தது. வரும்பொழுதே, வியாபாரக் கப்பல்கள் சிலவற்றிற்குப் பாரா வேலையும் பார்த்துக் கொண்டே வந்தது. அந்தச் சமயத்திலே ஒரு நாஜி நீர்மூழ்கி, அந்தக் கப்பல் கோஷ்டியையே தாக்கத் தொடங்கிவிட்டது.

உடனே மேற்படி புதுக்கப்பல் அந்த நீர்மூழ்கியை வேட்டையாட ஆரம்பித்தது. சரியானவேட்டை. அதன் முடிவு நீர்மூழ்கிக்கு, பலத்த காயம். அந்த நீர்மூழ்கி அழிந்துகூடப் போயிருக்கும் என்று தோன்றுகிறதாம்.

இந்தக்கப்பல் 106 நாட்களில் பதினாறாயிரம் மைல்கள் மிதந்துவந்திருக்கிறது. இது எந்த வர்த்தகக் கப்பல் கோஷ்டியைப் பாதுகாத்துக் கொண்டு வந்ததோ, அந்த கோஷ்டியில் இருந்த கப்பல் ஒன்றை 200 மைல் வரை இழுத்துக் கொண்டு வந்திருக்கிறது. நீர்மூழ்கிகள் என்றால் நடுங்கிய காலம் மலையேறிவிட்டதய்யா!

### சில ரஸமான தகவல்கள்

வட ஆப்பிரிக்காவிலிருந்து அச்சு நாட்டாரை அடித்து விரட்டியது எதற்காக என்று தெரியுமோ இல்லையோ? அங்குள்ள விமான நிலையங்களைப் பிடித்துக்கொண்டு, அங்கிருந்து சௌகரியமாக அச்சை முறிக்கத் தொடங்கலாம் என்று அவர்கள் திட்டம் போட்டிருந்தார்கள். அவர்கள் விரும்பிய படியே, அச்சுப் படைகளை உதைத்துத் துரத்தியாச்சு! இப்பொழுது வட ஆப்பிரிக்காவிலே நேசப்படைகள் அளவற்று இருக்கின்றன. அங்குள்ள விமான நிலையங்களில் எல்லாம், பிரிட்டிஷ், கானடிய, அமெரிக்க விமானங்களே நிறைந்து கிடக்கின்றன.

அந்த நிலையங்களிலிருந்து ஒரு அமெரிக்க 'பறக்கும் கோட்டை' இத்தாலியில் உள்ள நேபிள்ஸ நகரை ஒரு முறைபோய் தாக்கிவிட்டுவர வேண்டுமென்றால், ஆயிரத்து நூறு காலன் பெட்ரோல் செலவாகிறதாம். ஒரு விமானத்திற்கு ஒரு தடவைக்கு இவ்வளவு ஆனால், தினசரி நூற்றுக்கணக்கிலே, பலதடவைகள் போய், இத்தாலியை 'மருதுவாக' ஆக்கிவருவதற்கு எவ்வளவு பெட்ரோல் செலவாகும் என்று பார்த்துக் கொள்ளுங்களேன்! இதற்கெல்லாம் பெட்ரோல் அவசியமா? நாம் இங்கே சுகத்திற்காக அங்குமிங்கும் போய்வர பெட்ரோல் அவசியமா? அதுதான் வெகுசெட்டாக, ரொம்ப அவசியமானவர்களுக்கு மட்டும் பெட்ரோல் கொடுத்து வருகிறார்கள்! யுத்தம் முடிந்தால், எல்லா பெட்ரோலும் உங்களுக்குத் தானே!

* * * * *

ஸிஸிலி மீது நேச தேசத்தார் படையெடுத்து, அந்தத்தீவில் முக்கால் பாகத்திற்குமேல் தம் கைவசப்படுத்திக்கொண்டிருக்கிறார்களே, இந்தப் படையெடுப்பிற்கு எத்தனை கப்பல்கள் தேவையாக இருந்தன தெரியுமோ? மூவாயிரம் கப்பல்கள். அவற்றிலே ஒரு லக்ஷத்து அறுபதாயிரம் வீரர்களிருந்தார்கள். பதினான்காயிரம் மோட்டார்கள் இருந்தன. அறுநூறு டாங்கிகள், ஆயிரத்து எண்ணூறு பீரங்கிகள் இருந்தன.

இது முதல் கோஷ்டி. இந்த கோஷ்டிக்கு மேலும் மேலும் உதவிகள் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன. அனுதினமும் அஸ்தமித்தால் புது ஆட்களும், டாங்கிகளும், சாப்பாடும் அங்கே போய் இறங்கின வண்ணமாகவே இருக்கின்றன. இதெல்லாம் முன் கூட்டியே வெகு கணக்காகப் போட்ட திட்டம் தான், அதற்கு நல்ல வட்டி கிடைத்திருக்கிறதல்லவா?

* * * * *

அமெரிக்கர்களும், பிரிட்டிஷாரும் சேர்ந்தால், நெருப்பும், காற்றும் சேர்ந்தாப் போல்தான், அந்த இடத்திலே பற்றிக் கொண்டு எரியுமே! ஒருவருக்கொருவர் அவ்வளவு நேச மனப்பான்மை உள்ளவர்கள் என்று அச்சு நாட்டார் கழுதையாகக் கத்தலாம். சிலரும் கொஞ்சம் சந்தேகிக்கலாம்.

அதோடு, தரைப் படைக்கும், கடற்படைக்கும் என்றும் 'லடாய்' தான்! இதற்குமுன் எத்தனையோ தடவைகளில் பார்த்தாச்சே என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொல்லியது போல், ட்யூனிஸியாவிலும், ஸிஸிலியிலும் நடந்த சம்பவங்கள் மேற்கண்டவாறு அபிப்பிராயம் கொண்டிருந்தவர்கள் முகங்களில் நிறைய கரியை வாரிப் பூசிவிட்டன. அமெரிக்கரான ஜெனரல் ஐஸன்ஹோவரின் தலைமையில் சகல நாடுகளிலிருந்தும் வந்துள்ள நேசதேசப்படைகள், வெகு ஒற்றுமையோடும், தாம் போராடுவது தர்ம நியாத்தைக் காப்பதற்கென்பதை உணர்ந்தும், அற்புதமாகப் போராடி, அச்சு நாட்டாரின் இடுப்பை ஒடித்து வருகின்றன.

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

காலத்தில் ஜப்பானியர்கள் என்ன காரணம் சொன்னார்கள் தெரியுமா? அவர்கள் அரிசியை அங்கே சமைத்துச் சாப்பிடக் கூட வில்லையாம்! ஏனென்றால், சமையல் செய்தால் புகை கிளம்பும். புகையைக் கொண்டு ஜப்பானியர்கள் இருப்பிடத்தை நேசநாட்டு விமானங்கள் கண்டு கொண்டு, அங்கே வெடிகுண்டுகளை எறியக்கூடும். எவ்வளவு பொருத்தமான காரணம்!

* * * * *

**முண்டா முற்றுகை.**

சாலமன் தீவுகளின் மத்தியில் 'முண்டா' என்றொரு தீவு இருக்கிறது. இதைக் கடுமையாக நேசநாட்டுப் படைகள் முற்றுகையிட்டுக் கொண்டிருக்கின்றன. இங்கே, ஆகாயப் படையும், கடற்படையும், தரைப்படையும் கூடியிருந்து தாக்குகின்றன. முண்டா, பெய்ரொகோவிலா, கொலம்பங்கரா தீவைச் சேர்ந்ததோர் துறைமுகம் ஆகியவை மீது நேசநாட்டுப் படைகள் குண்டு மாரி பொழிந்து கொண்டிருந்தார்கள். கொலம்பங்கா தீவிலிருந்து பெய்ரொகோ என்னுமிடத்திற்கு 12 மைல்கள். கொலம்பங்கரா தீவிலிருந்து தான் பெய்ரொகோவிற்கு உணவுப் பொருள்கள் வந்து கொண்டிருந்தன. பிறகு, அங்கிருந்து, ஒரு வழி 10 மைல் தூரத்திலுள்ள முண்டா தீவிற்குத் தரைவழியாகப் போய்ச் சேருகிறது. கூலா வளைகுடாவிலுள்ள அந்த 12 மைல் தூரத்திலும் நேச நாட்டுக் கப்பற்படைகள் ஏராளமா யிருந்தன. அவற்றுள் பல நீர்மூழ்கிக் கப்பல்களும் உண்டு. இவற்றிற்கு உதவியாக, ஆகாய விமானங்களும் அக் டலை வட்டமிட்டுக்கொண்டிருந்தன எதிரி நாசகாரிக் கப்பல்களுக்கும் போக்கு வரவு கப்பல்களுக்கும் ஏராளமான நஷ்டம். சாலமன் தீவுகளில் வடகோடியிலுள்ள புக்காவிலிருந்து முண்டா வரை 300 மைல் தூரத்திலும், எதிரிகளுக்குப் பெருவாரி நாசம் தான்.

# அப்புறம் என்ன?

முஸோலினி எனும் அர்க்கன் வீழ்ந்தாச்சு! அப்புறம் என்ன? என்ற கேள்விதான எங்கும் தோன்றிக் கொண்டிருககிறது. நேசதேசத்தார் தான் வெகு நாட்களுக்கு முன்பாகவே இறுதியான பேச்சு என்ன என்பதைத் தெரிவித்துவிட்டார்களே! ஷரத்துக்கள் எதுமற்ற பூரண சரணுகதிதான் முடிவு என்று அவர்கள் அப்பவே சொல்லியாச்சே! அவ்வாறு அச்சு நாட்டார் சரணுகதி யடையாவிட்டால் எவ்வளவு காலமானுலும் யுத்தம் நடக்கத் தான் போகிறது.

ஆனுல் இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால், இத்தாலி வெகு நாட்கள் போர்க்கோலம் பூண்டிராது என்று தோன்றுகிறது. ஆனுல் இத்தாலி போர்க்களமாக ஆகக்கூடும், நிற்க, நேசதேசத்தார் இன்னும் பெரிசாக ஏதோ 'பிளான்' தயாரித்து, வருகிற கிருஸ்துமஸ் பண்டிகைக்குள் இந்த கோர யுத்தத்திற்கு முற்று புள்ளி குத்தி வைக்க சித்தமாக இருக்கிருர்கள் என்று தெரிவதாக யாரோ ஒருவர் சொல்லுகிருர். 1944-ல் எங்கும் அமைதி நிலவும் எனகிருர் ஒரு ஜோஸியர். ஜோஸியர்களது வாக்கு பலிக்கட்டுமே! உலகத்திற்கே இது நல்லது தானே?

அந்த நன்மை வருவதற்குள் இன்னும் எத்தனை நாடுகளும், அவற்றில் உள்ள பிரபல நகர்களும், ஆட்களும் பாழாகவேண்டுமோ தெரியவில்லை. முஸோலினியின் முட்டாள்தனத்தால் போரில் இறங்கிய இத்தாலி, இப்பொழுது செய்வதென்ன என்று தெரியாது முழி பிதுங்க முழிக்கிறது.

சென்ற வாரம், அதாவது ஜூலை 29-ந்தேதியோடு முஸோலினிக்கு அறுபது வயசு பூர்த்தியாகிவிட்டதாம். இனிமேல் சொல்லாமலே கிறுகிறுப்பு வந்துவிடும் அவருக்கு. சென்ற 21 வருடகாலமாக, முஸோலினியின் பிறந்தநாட்கள் என்ருல், இத்தாலியில் என்ன தடபுடலாக இருக்கும் தெரியுமா?

ஆனுல், முஸோலினியின் வண்டவாளம் இப்பொழுது தானே வெளியாகியிருக்கிறது. அவரது சாயம் வெளுத்துப்போச்சு! சாயம் வெளுத்த துணியை, கலரும் வெளுப்பும் கலந்த துணியை கண்ணியமானவர்கள் அணிந்து கொண்டிருப்பார்களா? தலையைச்சுற்றித் தூர எறிந்துவிட்டார்கள். அதுவும் அவருக்கு சஷ்டியப்த பூர்த்திக் கொண்டாட்டம் நடப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னுலே! என்ன அநியாயம்!

அன்றையத்தினம் அவரை அவரது சிறைக்கோட்டத்திலே முதன் முதல் சந்தித்தவன் அவரது, பரியாரிதானும். பட்டம் பதவியிழந்து 'கம்மனுட்டி' போல ஆகிவிட்ட முஸோலினிக்கு ஒன்றே ஒன்று குறை என அவனுக்குப்பட்டதாம். அவருக்கு 'ஸலாம்' செய்துவிட்டு, அவரை மழுங்கச் சிரைத்துவிட்டுப் போனுனும் அவன்.

முஸோலினியின் கதி என்ன ஆயிற்று என்று நிச்சயமாகத் தெரியவில்லை. அவர் ஸ்பெயினுக்குப் போய்விட்டதாக ஒரு வதந்தி எழுந்தது. அதில்லை. போன ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தின ஞாயிற்றுக்கிழமை அவர் பாஸிஸ்டு கட்சிக்கூட்டத்திற்குப் போனுர். அக்கூட்டத்திலே, முஸோலினி அவரிடம் சர்வாதிகாரங்களையும் ஒப்படைத்துவிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. முஸோலினி அரசரிடம் போகாது, குடியானவர்கள் பரிசளிப்பு விழாவிற்குப் போனுர். அரசருக்கு இச்செய்தி எட்டிற்று. அவர் முஸோவை உடனே வரும்படி உத்திரவிட்டார். முஸோலினி வந்தார். அரசர் கண்டித்தார். 'நான் இத்தாலிக்கு எவ்வளவு செய்திருக்கிறேன். அதை ஒரு உன்னத நிலைமைக்குக் கொண்டுவந்தவன் நான் தானே?' என்று கேட்டார். 'அதை இப்பொழுதுள்ள பாழ்நிலைமைக்குக் கொண்டுவந்ததும் நீர் தான் அல்லவா?' என்ருர் அரசர். முஸோலினி முறுக்காகத் திரும்பினுர். "ஐயா! ஏறய்யா 'அம்புலன்ஸ்' மோட்டாரிலே!" என்ருர்கள் ராணுவ வீரர்கள். முஸோலினி அவரது மாளிகையிலேயே சிறைவைக்கப்பட்டார் என்றொரு செய்தி கூறுகிறது.

## முஸோலினி நினைப்பிற்கு முத்திரை

அவர் எங்கிருந்தால் என்ன? நேசதேசத்தார் அவுரைச் சும்மா விடப்போவதில்லை. அநியாயமாக அநேகாயிரம் மக்களுக்கு யமனுக அமைந்த அவரை, நேசதேசத்தார், நனருக விசாரித்து, தக்கபடி தண்டிக்காது விடமாட்டார்கள். தூர்வாச மகரிஷியை எப்படி விஷ்னு சக்கரம் ஈரேழு பதினுன்கு லோகங்களிலும் துரத்தித் துரத்தி யடித்ததோ, அம்மாதிரி நேசதேசத்தார் முஸோலினியை எங்குபோனுலும் விடமாட்டார்கள். நடுநிலைமை நாடுகளுக்கு தப்பியோடித் தஞ்சம் புகலாம் என்று முஸோலினி நினைக்கக்கூடும். அந்த நினைப்பிற்கும், சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின் ஆகியோர் பெரிய முத்திரை வைத்துவிட்டார்கள்.

முஸோலினிபோன்ற கொலைகாரர்களுக்கு யாரும் அபயமளிக்கக்கூடாது. 'அவ்வாறு செய்யும் நாட்டாரை சர்வதேச சட்டங்களை மீறியவர்கள் என்று நாங்கள் கருதுவோம் என மேற்கண்ட மூவரும் தெரிவித்துவிட்டார்கள். இம்மாதிரி சர்வாதிகாரப் பித்துப்பிடித்து, தான் தோன்றித்தனமாக எதும் செய்யப்படாது என்பதை எதிர்காலத்தவர்கள் நன்ருக அறிந்துகொள்ளத் தக்க வகையில், முஸோலினியையும், அவரது கோஷ்டியாரையும் தண்டித்தே தீருவார்கள்.

முஸோலினியின் வீழ்ச்சி அவரது குடும்பத்தாருக்கும், அவரை ஒரு பெரிய தீரராக எண்ணிக் கொண்டிருந்த அவரது சகாக்களில் பலருக்கும் பெரிய அதிர்ச்சியாகவே இருந்திருக்கும். அவரது குடும்பத்தாரும் மற்றையோரும் கைது செய்யப்பட்டுவிட்டார்கள். முஸோலினி தடுமாறி விழுந்தார் என்ற செய்தி கேட்டதும், இத்தாலிய செய்தி ஸ்தாபனத் தலைவர் தம்மைத் தாமே சுட்டுக் கொண்டாராம்.

உலகெங்குமுள்ள பாஸிஸ்டு கட்சி நிலையங்களில் இருந்த முஸோலினியின் படங்கள் கிழித்தெறியப்பட்டனவாம். முஸோலினியின் வீழ்ச்சியை இத்தாலிய நகரங்கள் பலவற்றில் ஏக உத்சாகத்தோடு கொண்டாடினுர்களாம். பாட்டாம், கூத்தாம்! ஏக ஜமாவாம்!

## பாஸிஸ்ட் இயக்கமும் உலகோர் வெறுப்பும்

பாஸிஸ்டு இயக்கம் தான் இத்தாலியின் அந்தஸ்தை உயர்த்திற்று. ஆனுல் உலகோரின் வெறுப்பையும் அது சம்பாதித்துக் கொண்டு விட்டது. அந்த இயக்கத்தால் இத்தாலிக்கு இனி கடுகளவு உபயோகமுமில்லை என்பது இத்தாலியர்களுக்குத் தெரிந்துவிட்டது. தேய்ந்துபோன செருப்பை, 'குதிரை' அறுந்த கால்ஜோடைக் கழற்றி எறிவது தானே வழக்கம். அம்மாதிரி பாஸிஸத்திற்கே மங்களம் பாடிவிட்டார்கள் அவர்கள்.

முஸோலினியின் சிருஷ்டியான கருஞ்சட்டைக்காரர்கள் நாய்பட்ட பாடுபடுகிருர்கள். எங்குபோனுலும் கல்லெறி படுகிருர்கள். உண்ண உணவு கிடையாது, ஊரார் காலில் விழுகிருர்கள். அவர்களில் பெரிய அதிகாரிகள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். சாதாரணமானவர்கள் இத்தாலியப் படையில சேர முயலுகிருர்கள்.

பொதுஜனங்களுக்கு சிறிதும் சம்பந்தமில்லாது நடந்துவந்த ஒரு கட்சி ஆட்சி இவ்வாறுக முற்றுப்பெற்று, திருச்சிற்றம்பலம் பாடி, ஒடுங்கிவிட்டது. 'சண்டைபோதும்; சமாதானம் வேண்டும்' என்ற கூக்குரல் எங்கும் கிளம்பிவிட்டது. ஆங்காங்கே உள்ள ஜெர்மானியரை அடித்து விரட்டும் மனப்பான்மை அப்பட்டமாக வெளியே தோன்றத் தொடங்கிவிட்டது. பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. வட இத்தாலியிலே, ஜெர்மன் படைகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இத்தாலியை பூரணமாக ஆக்ரமித்துக்கொண்டு, சட்புட் என்று நேசதேசத்தார் ஜெர்மனியை நெருங்கிவிடாது பார்த்துக்கொள்வதே ஹிட்லரின் நோக்கம் போலிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளை அவர் செய்து வருகிருர். வட இத்தாலியில் பல நகரங்களை ஜெர்மானியர் பிடித்துவிட்டார்களாம். பல இடங்களில் இத்தாலியருக்கும் அவர்களுக்குமே துப்பாக்கிப்போர் நடக்கிறதாம். ஐந்து இத்தாலிய நீர்மூழ்கிகளை ஜெர்மானியர் கைப்பற்றி விட்டார்களாம்.

வட இத்தாலியிலே ஒரு பலமான அரண் வகுத்து, அங்கே ஏராளமான படைகளை வைக்க ஹிட்லர் நினைத்திருக்கிருப் போலிருக்கிறது. அதனுல்தான், ஸிஸிலிப்போரை அவர் எவ்வளவு காலம் நீடித்து நடத்தமுடியுமோ அவ்வளவு காலம் நடத்தலாம் என்று அநுபவமிக்க சூரர்களை அங்கே அனுப்பிக் கொண்டிருக்கிருர்.

வெகு கடுமையாகவே கடானியா அருகே போர் நடந்து கொண்டிருக்கிறது. அமெரிக்கர்கள் அதிஜாக்கிரதையாக வடகரையோரத்தில் உள்ள இடங்களைப் பிடித்துக் கொண்டு முன்னேறி வருகிருர்கள். பிரிட்டிஷ் எட்டாவது சேனை தமது பலமெல்லாவற்றையும் சேர்த்து, ஜெர்மானியரது பாதுகாப்பு அரண்களை உடைக்க முயலுகிருர்கள்.

இதற்கிடையில், ஜெர்மானியர், கிரீஸிலும் மற்ற பிரதேசங்களிலும் உள்ள இத்தாலியப் படைகளை நிராயுதபாணிகளாக்கி வருகிருர்கள். இத்தாலியரை இனி ஜெர்மானியர் நம்புவார்களா? நல்ல சமயத்தில் காலைவாரி விட்டுவிட்டால் என்ன செய்வதென்ற பீதி இருக்குமல்லவா?

## ஜெர்மனியின் உற்பத்தி சக்தியில் மண் தான்

ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகளிலும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிருப் போலிருக்கிறது. அந்நாடுகள் எல்லாம் சமாதானத்தை நாடுகின்றன. ஆனுல், ஜெர்மனி அந்நாடுகளைத் தம் இஷ்டப்படி போக விட்டுவிடுமா என்ன? ஹங்கேரிய எல்லையில் ஏகப்பட்ட படைகள் கூடிக்கிடக்கின்றனவாம். ருமேனியாவில் உள்ள ஒரு பெரிய எண்ணெய் வயலையும், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளையும் நேசதேச வெடிவிமானங்கள் பட்டப்பகலில் அக்னி பகவானுக்கு இரையாக்கிவிட்டு வந்தன. மேற்கே ஹாம்பர்க் நகரத்தை 105 தடவைகள் நொறுக்கியாச்சு. ஜெர்மனியின் இரண்டாவது பெரிய நகரமான இந்த ஹாம்பர்க் இன்று ஒரே பாழாகக்கிடக்கிறது. அங்குள்ள நீர்மூழ்கிக் கப்பல் உற்பத்திசாலைகள் உருப்படியில்லாது போய்விட்டன. அங்கிருந்த ஜனங்கள் வெளியேற்றப்பட்டு விட்டனர்.

இப்படியே ஒவ்வொரு முக்ய நகரத்தையும் 'ரொட்டி' யாக்கிக் கொண்டேவந்தால், ஜெர்மனியின் உற்பத்தி சக்தியில் மண் விழுந்து போகுமல்லவா?

அதிலே ஒருபுறம் மண்விழ, யுத்தத்திற்குவேண்டிய முக்யப்பொருள்களில் ஒன்றுன எண்ணெய்க்கும் ஆபத்து உண்டாக்க நேசதேசத்தவர் ஆரம்பித்துவிட்டதைக் கண்டு ஹிட்லர் துடிக்கத் தொடங்கியிருப்பார்.

இத்தாலியிலே படோக்லியோ என்பவர் சர்க்காரை நடத்துகிருர். முஸோலினி வீழ்ந்து பனிரெண்டு நாட்களாகிவிட்டன. நேசதேசத்தார் எதிர்பார்த்தபடி அவர் சமாதானத்திற்கு இன்னும் வரக்காணேம். இத்தாலிய மக்களின் விருப்பப்படி அவர் புதிதாக ஏதும் செய்யவில்லை.

அதற்கு மாருக, ஜெர்மனியின் கட்டாயத்திற்குப் பயந்தோ என்னமோ சும்மா காலத்தைக் கடத்திவருகிருர். இத்தாலியில் உள்ள ஜெர்மானியர் சௌகரியமாக வடக்கே போய்விடவோ, ஜெர்மானியர் வட இத்தாலியில் நன்ருக வேரூன்றிக்கொள்ளவோ அவர் மறைமுகமாக உதவி செய்கிருரோ என்றுகூட சிலர் நினைக்கிருர்கள்.

நேசதேசப் படைத்தலைவரான ஜெனரல் ஐஸன்ஹோவர் சாதாரண ஆளல்ல. இந்த 'ஜோக்' வேலையெல்லாம் அவருக்குப் பிடிக்காது. சரணுகதிக்கான நிபந்தனைகளை யெல்லாம் அவர் தெளிவாகத் தெரிவித்துவிட்டார். படோக்லியோ பதவிக்கு வந்ததும் ஏதாவது செய்வார் அவர் என்று எண்ணி, இத்தாலிமீது குண்டு வீசுவதைக் கொஞ்சம் நிறுத்திவைக்கச்சொன்னுர்.

இதற்கிடையில், இத்தாலியை ஆக்ரமித்து, அதை ஆளும் நோக்கம் தங்களுக்குக் கிடையாது என்பதையும், அதில் உள்ள சிரமங்களையும் சர்ச்சில் துரை எடுத்துக் கூறிவிட்டார்.

இத்தனை ஆனபின்னரும் படாக்லியோ தகடுதத்தம் செய்துகொண்டிருந்தால், நேசதேசத்தார், மீண்டும் இத்தாலி மீது குண்டுமழை பொழிவார்கள். அருமையான, சரித்திரப் பிரசித்திபெற்ற நகரங்கள் பல தரைமட்டமாகும். இத்தாலியிலே ரத்தம் ஆருக ஓடும். தேவையானுல் ரோமாபுரிமீது மீண்டும் குண்டு வீசப்படும் என்றுகூட சொல்லிவிட்டார்கள். இத்தாலியர்களுடன் பேரம்பேச ஜெனரல் ஐஸன்ஹோவருக்கு சர்வாதிகாரமும் கொடுத்திருக்கிருர்கள். 'மயிலே மயிலே இறகு போடு' என்ருல் போடாது என்பது அவருக்குத் தெரியாதா என்ன?

* * * *

ருஷ்யாவிலே ஓரெல் நகர் அருகிலும், மியூஸ் நதி ஓரத்திலும் பயங்கர யுத்தங்கள் நடக்கின்றன. எட்டுப்பெரிய செஞ்சேனைகள், ஜெர்மானியரைக் கௌவ வருகிருர்கள். மழை கொட்டுகிறது. ஹிட்லர் தமது டாங்கிப்படைகளை ஏவிவிடுகிருர். வெற்றி என்ற பேச்சே அவர் காதில் விழுந்து வெகு நாட்களாகி விட்டன.

## தம்பி ஹிட்லருக்கு வந்த வாழ்வு, அண்ணன் ஹிட்லருக்கும்

ஜெர்மானியர் பல கிராமங்களை பலமிக்க கோட்டைகளாக மாற்றியமைத்திருக்கிருர்கள். ஒவ்வொரு வீடும் ஒரு தனிக் கோட்டைமாதிரி இருக்கிறதாம். ஏகப்பட்ட அகழிகளாம். எங்குபார்த்தாலும் பீரங்கிகளாம். ஆகவே யுத்தம் வெகு மும்முரமாகவே இருக்கும். இருநூறு மைல் நீளமுள்ள போர்முனையிலே ஐந்து லக்ஷம் பேர்கள் மாட்டிக்கொண்டு, ராக்ஷஸர்கள்போல் போராடுகிருர்கள். போனமாசம் மட்டும் ஓரெல் அருகே லக்ஷம் பேர்கள் பலியாம். 1,300 டாங்கிகளும், 1,300 விமானங்களும் காலியாம். எத்தனைகாலம்தான் இப்படி அருமையான ஜெர்மன் உயிர்களையும், பொருள்களையும் ஹிட்லர், தமது சூதாட்டத்தில் பணயமாக வைத்து விளையாடிக் கொண்டிருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்? தம்பி முஸோலினிக்குவந்த வாழ்வு, அண்ணனுக்கு ஹிட்லருக்கும் என்றோ ஒருநாள் வந்தே தீரப்போகிறது. அதிலே சந்தேகம் வேண்டாம்!

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம்௵ ஆகஸ்டு௴ 13உ, வெள்ளிக்கிழமை [இதழ் 32



ஜெனரல் மண்ட்காமரி

## சிசிலியில் ஜெர்மானியர்கள் நாசம்

இப்போது சிசிலியில் நடைபெறும் போராட்டத்தில் பிரிட்டிஷ் எட்டாம் படைக்குத் தலைவரான ஜெனரல் மண்ட்காமரி ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி கூறியதாவது:

"சிசிலியில் ஜெர்மானியர்கள் கதி நாசந் தான்
அவர்களுக்கு அந்தியகாலம் வந்து விட்டது"

எட்டாம் படையோடு போர்க்களத்திற்குப் போயிருக்கும் ராய்ட்டர் விசேஷ நிருபர் கீழ்க்கண்டவாறு தந்தி கொடுக்கிருர்:

"சிசிலிப் போராட்டம் முடிந்து விட்டது
நாம் வென்று விட்டோம்"

# ஜர்மன் படை ஓட்டம்!

இராகம்—தேசிகத் தோடி　　　　தாளம்—ஏகம்

பல்லவி

ஸ்ா நீ த மா—ப த நீ ஸ்ா நீ த பா
ஓடுது பார்—உடைந்தோடுது பார்

ம ப த நி ர்ரி, க்ரிரிஸ் நி த பா
சிதைந் தோடுது பார்

ரீ ரிரிரி ரிக் ரி
ஓலமிட் டுயிரை

ஸ்ர ஸ் ஸ் நி ரி ஸ்
ஏலமிட்டழிவி

நி ஸா நி ஸா க ரி
ஞேடு முட்டியுடல்

கா ரீ ஸா நி த ப
நாசி விட்டபடை　　　　(ஓடுது)

அனுபல்லவி

மா ம ப ப நி தா பா நி நி,　　ஸ்ா நி ரீ ஸ்
ஓங்கி ருஷ்யர் வதைக்க　　ஓயாதுமே சிதைக்கத்

ரீ ரி க்ா ரி ஸ் ஸ் நீ ஸ்ா　　க ரி ரி ஸ ரி ஸ ஸ நி ஸ நி த த ம ப த நி
தாங்காதுமே பதைக்கத்　　தவித்தும் நாசியர் படை　　(ஓடுது)

சரணம்

மா ம ப ப நி தா　　பா நி நி ஸா நி ரீ ஸ்
1 நாடு பிடிக்க அன்றே　　நாற்பது நாளில் வென்றே

ரீ ரி க்ா ரி ஸ் ஸ் நீ ஸ்ா க் ரி ரி ஸ்　　ரி ஸ் ஸ் நி ஸ நி த த ம ப த நி
நாமும் பிடிப்போம் என்றே　　நாடி ருஷ்யாவிற் சென்றே

கா ரி ஸ ரீ ஸ நி
நாசமுறப் பரி

ஸா நி தா ப த நி ஸா
காசமுறச் சிறை

ரீ ஸ நி ஸா நி த
வாசமுறப் புகுந்

நீ த பா ம ப த நி
தேசுமுறப் படிந்　　　　(தோடுது)

2 *வெய்யிலின் காலத்திலும்　　வெறும் பனிக் கோலத்திலும்
நையு மனத்தராகி　　நாளு மெலிந்தே ஏகி
வெற்றி யழிந்தழி
வுற்றிடவும் உயிர்
பற்றிய வாறுமே
சுற்றி யலைந்துமே　　　　(ஓடுது)

*N.B.—முதல் சரணத்தைப் போல் பாடவும்.



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : ஜெனரல் மண்ட்காமரி .. .. | 1 | பெரிய மேலான யுத்தக் காட்சி சாலை சென்னையில் நடைபெறும் .. .. .. | 8 |
| சிசிலியில் ஜெர்மானியர்கள் நாசம் .. .. | 1 | தாய் நாடு திரும்பியவர்களும் யுத்த முயற்சியும் .. .. .. .. .. | 9 |
| பாட்டு : ஜெர்மன் படை ஓட்டம் .. .. | 2 | தொழிலாளருக்கு வாக்குறுதி .. .. | 9 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | ஹிட்லருக்கு உண்மையிலே நோயா ? .. | 10 |
| தலையங்கம் : ஒரே மாதத்தில் உலைந்தது சிசிலி. | 4 | பொறுக்கு மணிகள் .. .. .. | 11 |
| சென்னை நிருபர்களின் சிறப்பான வெடி குண்டு விமானப் பயணம் .. .. .. | 5 | | |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**கொப்பல்ஸ் பிரசாரம் : ஜெர்மனி தனித்துப் போராடுகிறதாம் !**

முசோலினியின் ஆட்சி ஒழிந்தது. அதனுல் ஜெர்மனிக்கு நேர்ந்த சாதக பாதகமென்ன? இதை நாம் ஆராயப் புகுந்தால், அச்சு நாட்டார் பிரசாரப் போக்கின் உண்மைத் தத்துவம் வெளியாகும். இத்தாலியில் ஏற்பட்டது திடீர் மாறுதல். ஆகையால், பொய் மூட்டைகளைக் கணக்கு வழக்கில்லாமல் பரவச் செய்யும் கொப்பல்சுக்குக் கூட, வாயைத் திறக்க முடியாமற் போய்விட்டது. சென்ற ஜுலை மாதம் 26-ம் தேதி அவர் மூன்று வானொலி நிலையங்களில் பேசுவதாக ஏற்பாடாகி யிருந்தது. அவை ஜெர்மன் உள்நாட்டு மக்களுக்கென்று ஏற்பாடாகி யிருந்தவை. அவை மூன்றையும் ரத்து செய்து விட்டார் கொப்பல்ஸ். இவற்றிற்கு பதிலாக பெர்லின் ரேடியோ என்ன செய்தது தெரியுமா? 30 மணி நேரம் ஒலி பரப்பியது. அத்தனையும் முசோலினியின் இராஜிநாமாவைப் பற்றியதே. அவருக்கு உடம்பு அசௌக்கியமாம்! அதனுல் தான் ராஜீநாமா செய்துவிட்டாராம்! முசோலினி விலகிக் கொண்டதனுல், ஜெர்மனியின் பாதுகாப்புக்கு ஏதேனும் பாதகம் நேருமோ என்னும் சந்தேகம் ஜெர்மன மக்களுக்கு ஏற்படக் கூடுமல்லவா? இதைப் போக்க வேண்டிய அவசியம் பிறகு ஏற்பட்டது. ஆகவே, இதற்கொரு காரணம் கற்பித்தார்கள். அவர் ராஜீநாமா செய்தது ஒரு அரசியல் சாம்பிரதாயமாம்! அதனுல் ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் உள்ள நேசம் பாதிக்கப்பட்டதாம்! அந்த வாரம் ஜெர்மனி செய்த பிரசாரம் இதுதான். இத்தாலி தங்களைக் கைவிட்டு விடாது என்று ஜெர்மன் மக்கள் நம்பும்படி செய்யும் பொருட்டு கொப்பல்ஸ் அரும்பாடு பட்டார். "யுத்தம் தொடர்ந்து நடக்கிறது" என்று படோக்லியோ சொன்னுரல்லவா? அதை, பெர்லினிலிருந்து ஒலி பரப்பப்பட்ட ஒவ்வொரு செய்தித் திரட்டிலும் குறிப்பிட்டார்கள்.

பிறகு, கொப்பல்ஸ் கயிறு திரிக்க ஆரம்பித்தார். ஜெர்மனி இன்னமும் பலமாயிருக்கிறது என்று கூறினுர். இப்படி அவர் கூறக் காரணமென்ன? ஜெர்மனியை இத்தாலி கைவிட்ட போதிலும், ஜெர்மனி தனித்திருந்தே போராடக்கூடிய பலத்தோடிருக்கிறது என்று பொது மக்கள் நம்பவேண்டும் என்பது தான் அவருடைய அவா. லார்ட் ஹாஹா என்பவர் ஒரு ஜெர்மானியர். இவர் செய்த ஒரு வானொலிப் பிரசங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

"ஜெர்மனி இன்று தன் சொந்த பலத்தையே நம்பிக் கொண்டிருக்கிறது. பரிபூரண வெற்றி பெறுவதற்கு ஜெர்மனிக்குள்ள ஆயுத பலம் போதுமானது: இதை ஜெர்மனி நம்பிக்கொண்டிருக்கலாம்."

கொஞ்ச காலமாக ஜெர்மன் மக்களுக்கும், தம் கைவசப் பட்டிருக்கும் ஐரோப்பாவிலுள்ள மற்ற நாட்டினருக்கும் ஒருவகைப் பிரசாரம் செய்கிறுர்கள்.

"ஜெர்மனி, தகுந்தபடி பலத்தோடிருக்கிறது. தான் தனித்திருந்த போதிலும், அவசியம் நேர்ந்தால், தற்காத்துக் கொள்ளத் தக்கபடி மத்திய ஸ்தாபனம் நன்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அல்லது தம்மிடம் தோல்வியுற்றவர்களைச் சுரண்டி உயிர் வாழலாம். தம் கூட்டாளிகள் உதவியே தேவையில்லை."

முசோலினியின் வீழ்ச்சிக்குப் பிறகு, நாஜி பிரசாரத்தின் முக்கியமான போக்கின் உட்கருத்து இது தான். இந்த உட்கருத்து இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

**கோப்பல்ஸ் திட்டம் : முன்னதாகவே பின்வாங்கப் பிரசாரம்.**

கோப்பல்ஸ் பிரசாரத்தில் ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். ஐரோப்பாவின் பலத்தைக் குறித்து அவர் வற்புறுத்தவில்லை; ஆனுல், ஜெர்மனியின் சொந்த பலத்தைக் குறித்தே வற்புறுத்துகிருர். ஜெர்மனி, ஈ கூட நுழைய முடியாத எஃகுக் கோட்டை என்று அவர்கள் கொண்டிருந்த எண்ணம் மெதுவாக மறைந்து விட்டது. பெர்லின் பத்திரிகைகளில் அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் சுருக்கமாவது :—

"இராணுவ பலமும் மனோ பலமும் தமக்கு எவ்வளவு உண்டு என்று ஜெர்மன் மக்களுக்கு தெரியும். ஆகவே, பரிபூரண வெற்றி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவார்கள்."

தனித்திருந்த போதிலும், யுத்தத்தை ஜெர்மனி தொடர்ந்து நடத்தும் என்னும் எண்ணம் ஜெர்மன் மக்கள் மனதில் பதிய வேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் பிரசாரம் நடை பெற்றது. இத்தாலி தோற்றுவிட்டால், அதன் பிறகு, தான் செய்யவேண்டிய பெரும் பிரசாரத்தை முன்னிட்டு, அதற்கான வழிகளை இப்படியாக ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறுர் கொப்பல்ஸ். நாஜிகள் ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு செக் பத்திரிகை ஜுலை மாதம் 28-ம் தேதி வெளியீட்டில், கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறது.

"ஜெர்மன் மக்கள் ஒற்றுமையோடிருக்கிற வரையிலும், ஐரோப்பாவின் அடிப்படையான முக்கிய ஸ்தானங்களை ஜெர்மன் படைகள் வைத்துக் கொண்டிருக்கும் வரை, ஜெர்மனியை வெல்ல ஒருவராலும் முடியாது. அப்படிப்பட்ட ஸ்தானங்கள்; நார்வே கரை, பிரஞ்சு அட்லாண்டிக் கரை, ரைன் நதியின் கடைப் பகுதிகள், பிரென்னர் கணவாய், டான்யூப் ஆற்றுப் பாதைகள், பால்கன் நாடுகளிலுள்ள மற்றப் பகுதிகள்."

இவற்றிலிருந்தாவது, அல்லது ஜெர்மானியர்கள் செய்யும் பிரசாரத்திலிருந்தாவது அவர்கள் குறிப்பிடும் கிழக்கரண் கோட்டை எங்கே யிருக்கின்றதென்று தெளிவாகத் தெரியவில்லை. பிரென்னர் கணவாய்க்காவது, டான்யூப் ஆற்றுப் பாதைகளுக்காவது தன் படைகளைப் பின் வாங்கிப் போகும்படி ஜெர்மன் சர்வாதிகாரி உத்தரவிட்டாரா அல்லவா என்பது பற்றி இப்போதே முடிவு கூறி விடுவதற்கில்லை.

**இத்தாலியில் நேசநாடுகளின் எச்சரிக்கை நிறைவேறியது.**

இத்தாலியின் மகா முக்கியமான நகரங்கள் மிலான், ட்யூரின், ஜினேவா ஆகிய இம்மூன்றும். இத்தாலியத் தொழிற்சாலைகளில் மூன்றில் இரண்டு பங்கு, இந்நகரங்களில் தான் இருக்கின்றன. இந்த பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த லங்காஸ்டர் விமானங்கள் ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி சனிக்கிழமை இரவு பலமாகத் தாக்கின. இதுபற்றி ஸ்விட்சர்லந்து வானொலி நிலையம் ஒலி பரப்பியதாவது :—

"அலைகளைப் போல விமானங்கள் வந்து மிலான் நகரத்தைத் தாக்கின. இப்படி ஒரு மணி நேரம் நடந்தது. தரையில், பாதுகாப்புப் படையும், இரவில் போராடும் படையும் மிகவும் கடுமையாகப் போராடின,

(7-ம் பக்கம் பார்க்க)

# யுத்த சஞ்சிகை
வார வெளியீடு

மலர் III] 1943-ம்ஹு ஆகஸ்ட்டுமீ 13உ. [இதழ் 32


## ஒரே மாதத்தில் உலேந்தது சிசிலி

சிசிலி ஒரு கேந்திர ஸ்தானம். இதை உலகம் ஒப்புக் கொண்டிருக்கிறது. அன்றியும் வளம் மிகுந்த நாடு. இது இத்தாலிக்குத் தென் கோடியை யடுத்திருக்கிறது. இத்தாலிக்குத் தான் இது சொந்தம்.

இங்கே நடை பெறும் போராட்டம் முடிந்து விட்டது என்று கூடச் சொல்லலாம். நேச நாட்டினர் 'எண்ணித் துணிந்தனர்' அடுத்தடுத்து வெற்றி பெற்றனர். ஜெர் மானியரும் எண்ணித் தான் துணிந்தனர். என்றாலும், நேச நாட்டினர் எண்ணத்திற்கும் அச்சு நாட்டினர் எண்ணத்திற்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு. உலகம் இனிது வாழ வேண்டும் என்னும் கொள்கையை படிப்படியாகக் கொண்டது, நேச நாட்டினர் எண்ணம். ஆனால், 'ஊரை யடித்துத் தன் உலையிலே கொட்ட வேண்டும்' என்பது அச்சு நாடுகளின் எண்ணம். ஆகவே இவ்விரண்டு நோக்கங்களும் ஒன்றிற் கொன்று முரண்பட்டவை. அந் நோக்கங்களின் பலாபலன்களும் ஒன்றிற் கொன்று முரண்பட்டிருக்கின்றன.

சிசிலி போராட்டம் சென்ற ஜூலைமீ 10உ காலையில் ஆரம்பமானது. ஆரம்பத்திலேயே தக்க பலத்தோடு தான் நேச நாட்டுப் படைகள் கிளம்பின. 1,000 போர்க் கப்பல்களும் 2,000 விமானங்களும் கிளம்பின. இதை நினைக்கும் போது, எதிரிகளை எப்படி மதித்திருக்கிறார்கள் நேச நாட்டினர் என்று விளங்குகிறது. "சிறு பாம்பாக விருந்தாலும் பெரிய தடி கொண்டு அடிக்க வேண்டும்" என்னும் பழமொழிப்படி, ஜெனரல் அயிசினேவர் நடந்தாரோ என்னவோ! ஏறக்குறைய ஒரு மாத காலத்தில் அங்கே நேச நாடுகள் பரிபூரண வெற்றி பெற்று விட்டனவென்று தான் சொல்ல வேண்டும். இதற்குக் காரணமென்ன? முதல் காரணம் ஒற்றுமை. இரண்டாவது காரணம் உறுதி. ஏறக்குறைய 36 நேச நாடுகளும் சேர்ந்து அச்சு நாடுகளை அலற அடிக்கின்றன. அது மட்டுமா? இந்நாடுகளின் படைகளெல்லாமுங் கூட, ஒரே படைத் தலைவரின், அதாவது ஜெனரல் அயிசினேவர் ஆணைக்கு அடங்கிப் போராடின. உலக சரித்திரத்திலேயே அரசியல் அரங்கங்களில் இத்துணை ஒற்றுமை ஏற்பட்டதே கிடையா தென்று சொல்லலாம்.

சிசிலிப் போர் ஆரம்பமான போது,, அங்கிருந்த இத்தாலியர்கள் அவ்வளவாக எதிர்த்துப் போராடவில்லை என்று தெரிகிறது. ஆனால் போர் கடுமையாக நடந்தது ஜெர்மன் படைகளுடன். அச்சு அரசாங்கங்கள் சிசிலியைப் பறி கொடுத்துவிட்டால், அவர்கள் பாடு அம்பலத்திற்கு வந்து விடும். 'உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணு' என்றது போல, அவர்கள் சொந்த நாட்டையும் இழந்து போகும்படியான நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படக் கூடும். ஆகவே தான், மகா கடுமையாக சிசிலியில் ஜெர்மன் படைகள் போராடின. ஆனால், இத்தாலியப் படைகளோ, அந்த அளவிற்குப் போராட வில்லை என்று சொல்லலாம்.

கடேனியா ஒரு முக்கியமான பகுதி. இந்த ஒரு பகுதியில் தான் மகா கடுமையாக இருதரத்தாரும் போராடினார்கள். 26 நாட்கள் போர் நடந்தது. முடிவில் நேச நாட்டுப் படைகள் வெற்றி பெற்றன. நேச நாட்டுப் படைகள் துனீசியாவில் பெற்றிருந்த போர்ப் பயிற்சி, அவற்றிற்கு உற்ற துணையாக விளங்கியது. சிசிலி, மலைகளும் ஆறுகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த நாடு. எனவே, இங்கே போராடுவது மிகவும் கஷ்டமான காரியம். என்றாலும் முடிவில் நம் நேச நாட்டுப் படைகள் தான் வெற்றி பெற்றன. இந்த வெற்றியில் நம் இந்தியப் படையினருக்கும் சிறந்த பங்கு உண்டு. இங்கே ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. சிசிலிய மக்கள் நேச நாட்டுப் படையினரை மிகுந்த அன்போடு வரவேற்று உபசரிக்கின்றனராம்! நேச நாட்டார் மீது அவர்கள் கொஞ்சங் கூட வெறுப்புக் கொண்டிருப்பதாகத் தெரிய வில்லை. மற்றொரு விசேஷம் என்னவென்றால், நேச நாட்டுப் படைகளில் எத்தனையோ வகை மொழிகள் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். என்றாலும் ஒருவராவது சிசிலிய மொழியைத் தெரிந்து கொள்ளவோ பேசவோ முடிய வில்லை; ஆனால், இந்தியப் படைகள் வெகு எளிதில் சிசிலிய மொழியைத் தெரிந்து கொண்டு பேசுகிறார்களாம்.

இங்கு நடந்த போராட்டத்தில் ஊன்றி கவனிக்கத் தக்கது நேச நாட்டுப் படைகள் கையாண்ட போர் முறை தான். ப்ராண்டியிலிருந்து சிசாரோ வரை 45 மைல் தூரத்துக்கு அரை வட்ட வடிவமாக நேச நாட்டுப் படைகள் நின்று கொண்டன. வட பகுதியில் அமெரிக்கப் படைகளும், மத்தியப் பகுதியில் கனடியப் படைகளும், தென் பகுதியில் பிரிட்டிஷ் எட்டாம் படையும் தகுந்தபடி அமைந்து கொண்டன. இந்த அரை வட்டத்திற்குள் சிக்கிக் கொண்டன ஜெர்மன் படைகள். இப்படிச் சிக்கித் தவிக்கும் படைகள் தப்பி ஓடக் கூடிய எல்லா வழிகளையும், நேச நாட்டு விமானப் படைகள் தவிடு பொடியாக்கிக் கொண்டு வருகின்றன. கடல் வழியாகத் தப்பிப் போக ஒட்டாதபடி நேச நாட்டுக் கப்பற் படைகள் கடுமையாகக் காவல் புரிகின்றன. எனவே ஜெர்மன் படையினர் திக்கு முக்காடுகிறார்கள். ப்ரான்டியிலிருந்து பிரிட்டிஷ் 'படைகள் கிளம்பி' எட்னா ரோட் வழியாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இந்தப் படைகள் இப்போது வந்துள்ள இடத்திற்கு 5 மைல்களுக்கு அப்பால், மிகவும் முக்கியமான ரோடுகள் சந்திக்கின்றன. அமெரிக்க 7-ம் படையினர் ட்ராய்னாவிலிருந்து கிளம்பி மலைகள் வழியாகக் கடந்து சிசாரோ வந்து சேர்ந்து விட்டனர். இதற்கும் ரண்டாசோ என்னுமிடத்திற்கும் 17 மைல் தூரம் தான். இந்த ரண்டாசோ ஜெர்மானியர்களின் பலமான அரண் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் எட்டாம் படைக்கும் இந்த அமெரிக்க 7-ம் படைக்கும் ப்ராண்டிக்கும் சிசாரோவுக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டு விட்டது. ஆகவே அச்சு நாட்டுப் படைகள் அரை வட்டமாக அமைந்து விட்டன. ஜெர்மன் படைகளைத் திகைக்க வைத்து விட்டன. சிசிலியிலுள்ள 26 விமான தளங்களும், ஏராளமான யுத்த தளவாடங்களும் உணவுப் பொருள்களும் நேச நாட்டினர் வசப்பட்டு விட்டன. எதிரிகளில் 2 லட்சம் பேர்களுக்கு மேல் சேதம். ஓட்ட மெடுக்கிறார்கள் ஜெர்மானியர்கள். ஓரிடத்திலிருந்து, தம் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடும் போது, எட்டாயிரம் போர் விமானங்களையும் ஏராளமான தளவாடங்களையும் அப்படியே போட்டு விட்டு ஓட்ட மெடுத்து விட்டனர்.

ஆகவே சிசிலியில் போர் முடிந்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும். இதற்கு ஆதாரமாக, எட்டாம் படையோடு போர் முனைக்குப் போயிருக்கும் ராய்ட்டர் விசேஷ நிருபர் "சிசிலிப் போராட்டம் முடிந்து விட்டது, நாம் வென்று விட்டோம்" என்று தந்தி கொடுத்திருக்கிறார். சென்ற 9-ம் தேதி ஜெனரல் மண்ட்காமரியுங்கூட "சிசிலியில் ஜெர்மானியர்கள் கதி நாசந்தான்; அவர்களுக்கு அந்திய காலம் வந்து விட்டது" என்று குறிப்பிட்டார், அச்சு நாட்டாரின் அந்திய காலம் அணுகி விட்டது என்றே நாமும் கூறுவோம்.



# சென்னை நிருபர்களின் சிறப்பான வெடிகுண்டு விமானப் பயணம்

### தாக்குதல் பயிற்சியில் கலந்தது, இந்தியாவில் இதுதான் முதல் தடவை!

**மேக மண்டலத்தி லிருந்து தோன்றிய மனித உலகம்—ஜெர்மனியின் மேல் விமானத் தாக்குதலைப் போன்ற அனுபவம்.**

**$2\frac{1}{2}$-மணி நேர இணையிலா ஆனந்தக் கிளர்ச்சி — மாயமாய் மறைந்த மர்ம விரிப்புக் குடை—கடைசியில் எடுத்த கவின்பெறும் புகைப்படம்.**



மேலே காட்டப்பட்டிருப்பது ஒரு பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானம். இதைப் போன்ற விமானத்தில் பறந்து சென்ற அனுபவங்கள் இங்கு விவரிக்கப்படுகின்றன.

**தென்னிந்தியாவில் "ஏதோ ஒரு இடத்தில்," ஆகாய விமானப் படைகளும், தரைப் படைகளும் ஏகோபித்துத் தாக்குதல் பயிற்சிச் "சண்டைகள்" நடத்தின. இந்த பயிற்சிச் "சண்டைகளை"ப் பார்ப்பதற்கு, சென்னையிலுள்ள பத்திரிகை நிருபர்கள் பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்களில் ஏற்றிக் கொண்டு போகப்பட்டார்கள். "மெட்ராஸ் வார் ரிவ்யூ" என்ற ஆங்கில யுத்த சஞ்சிகையின் சார்பாக, அதன் ஆசிரியர், மிஸ்டர் டி. எ. வி. நாதன், ஒரு வெடிகுண்டு விமானத்தில் சென்றார். இது சம்பந்தமாக தன்னுடைய அனுபவங்களைப் பற்றி, சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து, ஜூலை மாதம் 16-ம் தேதி, ஆங்கிலத்தில் அவர் செய்த பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பு பின் வருமாறு :—**

உள்ளக் கிளர்ச்சி மிகுந்த அனுபவங்களை வாழ்க்கையிலிருந்து கிரகிப்பதைப் பற்றி, பலர் பேசக் கேட்டிருக்கிறேன். அதனுடைய பொருள் என்ன என்பதை நான் மிக லேசாகத் தான் அறிந்திருந்தேன். அதனுடைய முழு அர்த்தத்தையும், அனுபவ பூர்வமாக, பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த ஒரு வெடிகுண்டு விமானத்தில் பறக்கும் போது தான் நான் அறியலானேன். அந்த வெடிகுண்டு விமானம் சென்னை நகரத்திலிருந்து ஒரு பயிற்சிச் சண்டையின் சம்பந்தமாகப் பறந்து சென்றது. இது சமீபத்தில் தென்னிந்தியாவில் நடந்த விமானப் படை—தரைப்படை கூட்டுப் பயிற்சி சண்டையில் நடந்த ஒரு சம்பவமாகும்.

இந்தச் சம்பவம் ஒரு ஞாயிற்றுக் கிழமை யன்று நடந்தது—1943-ம்ஹு ஜூன்மீ 20உ. அந்த நாளை நான் என்றும் மறக்கமாட்டேன். எப்படி நான் மறக்கக்கூடும்? அன்றையத் தினம், உள்ளக் கிளர்ச்சி மிகுந்த வாழ்க்கையின் சிறந்த அனுபவத்தை நான் உண்மையில் அடைந்தேன். ஆனால் என்னுடைய நெஞ்சு தைரியமான முயற்சியைப் பற்றி, நான் என் வீட்டில் யாரிடமும் சொல்லவே யில்லை. வெடிகுண்டு விமானத்தில் பறந்து, பிறகு வீட்டுக்குத் திரும்பிச் சென்றதன் பின்தான் இதைப் பற்றி, அறிவித்தேன். எல்லோரும் திடுக்கிட்டார்கள். "என்ன அநியாயம், இப்படியும் உண்டா?" என்று என்னை நிந்தித்தார்கள். "நல்ல காலம், தப்பித் திரும்பி வீடு வந்து சேர்ந்தீர்களே" என்று என்னுடைய நல்லதிர்ஷ்டத்தைப் போற்றினார்கள்.

நான் திரும்பி வந்தவுடன், மிகுந்த பெருமையுடன் தான் இருந்தேன். சிறந்த தைரியவான்களுக்கு "விக்டோரியா கிராஸ்" என்ற வீரப் பதக்கம் கொடுக்கிறார்களல்லவா?—அந்தப் பதக்கத்தை யணிந்தவனுக்குள்ள உணர்ச்சி எனக்கிருந்தது. அவ்வளவு பெருமையுடன் நான் இருந்தேன். யார் தான் அப்படிப் பெருமையடைய மாட்டார்கள்? முதன் முதலில் ஆகாயத்தில் பறக்கும் அனுபவம் எனக்கு அப்போது தான் கிடைத்தது. இந்த முதல் அனுபவம் மன்னர் பிரானின் பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையைச் சேர்ந்த வெடிகுண்டு விமானத்தில் கிடைத்தது என்றால் அது ஒரு சிறந்த விசேஷந் தானே!

### ஒரு தனிச் சிறப்பு

இதல்லாமல், எங்களுடைய விமானப் பயணத்தில் வேறொரு தனிச் சிறப்பு இருந்தது. இந்தியாவில் பத்திரிகை நிருபர்கள், பயிற்சிச் சண்டையின் போது வெடிகுண்டு விமானங்களில் பறந்து சென்றது இது தான் முதல் தடவையாகும். இந்தியப் பத்திரிகை உலகத்துக்கே இது ஒரு விசேஷமல்லவா? இதற்கு முன் பத்திரிகை நிருபர்கள் விமானங்களில் பறந்திருக்கிறார்கள். ஆனால் அவை சாதாரண பிரயாண விமானங்கள். உட்காருவதற்கு 'மெத்' தென்றிருக்கும் ஆசனங்கள்; அவைகளில் சௌக்கியமாக உட்கார்ந்து கொண்டு, யாதொரு வித அசௌகரியமு மில்லாமல் அவர்கள் வேடிக்கை பார்த்திருக்கிறார்கள். துனீசிய வெற்றிக் கொண்டாட்ட நாளின் போது, இப்படிப்பட்ட சம்பவம் நடந்தது. சென்னைப் பத்திரிகை நிருபர்கள் மேலே விமானத்திலிருந்து, வெற்றி கொண்டாட்டத்தின் போது சென்னை நகரம் எப்படி யிருந்தது என்று பார்த்து ஆனந்தித்தார்கள்.



ஆனால் அப்படிப்பட்ட சௌகரியங்கள் எங்களுக்கில்லை. தென்னிந்தியாவில் ஏதோ ஒரு இடத்தில் "எங்களுடைய" விமானங்கள் "வெடிகுண்டுத் தாக்குதல்" செய்யப் புறப்பட்டன; அதில் நாடக பாத்திரர்களாக இருக்கும்படியான பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது.

ஒரு நாள் அதிகாலையில், பிரிட்டிஷ் விமானப் படையின் பொது ஜனத் தொடர்பு ஸ்தாபனத்தை ('பப்ளிக்' ரிலேஷன்ஸ் டைரக்டரேட்)தைச் சேர்ந்த இரண்டு 'ஆபீசர்'கள் எங்களைச் சந்தித்து, ஒரு ராணுவ மோட்டார் லாரியில் விமானச் சாலைக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். அப்போது அருமையான நிலா வெளிச்சம்; 'ஜில்' லென்ற விடியற்காலைக் காற்று—இவை இரண்டும் மிக ரம்மியமாயிருந்தன. 'ஜில்' லென்ற காற்று எங்களுக்கு ஆனந்தத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கிற்று. அந்தக் காற்றை நன்றாகச் சுவாசித்து நான் களிப்படைந்தேன்.

### புன்னகை தவழும் புனிதத் தலைவர்

விமானச் சாலைக்குச் சென்றோம்; பொழுது விடிந்தது. அங்குள்ள அனைவரும் விழித் தெழுந்து விட்டார்கள். விமானப் போக்கு வழி காட்டுபவர்கள், விமான ஓட்டிகள், விமான பீரங்கியாளர்கள்—அனைவரும் மேசைகளைச் சுற்றியுள்ள கைப்பிடி நாற்காலிகளில் உட்கார்ந்து, சிறித்துக்கொண்டும், 'சிகரெட்' பிடித்துக் கொண்டும், பேசிக்கொண்டு மிருந்தார்கள். அவர்களுடைய 'கமாண்டிங் ஆபீசர், (தலைவர்) அங்கே நின்று கொண்டிருந்த ஒரு ராணுவ மோட்டார் வண்டியின் முன்பாக வெளிப்புறத்தில், சக்கரத்தின் மேலுள்ள மூடி (மட்கார்ட்) யின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தார். அதி விடியற்காலையில் முக க்ஷவரம் செய்து கொண்டார் போலும்; கன்னங்களில் சிறிது ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அதைத் துடைப்பதற்கு ஒரு கை குட்டையை மையொற்றும் கடுதாசி ('பிளாட்டிங் பேப்பர்') யைப் போல உபயோகித்துக் கொண்டிருந்தார். நல்ல மாதிரியான மனிதர்; அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. எல்லோருக்கும் அவரிடத்து நட்பு உண்டாயிற்று. எங்களுடைய பத்திரிகை நிருபர் 'பட்டாளத்து'க்குத் தலைவரான ப்ளெட்-லெப்டினெண்ட் பெர்ரி அவரிடம் சென்று பேசினார். நாங்கள் சற்று மனக் கவலையுடன் காத்துக் கொண்டிருந்தோம். "ஏற்பாடுகளெல்லாம் சரியா யிருக்கின்றனவா? நாங்கள் விமானங்களில் செல்லலாமா"? "ஆம், செல்லலாம்." நாங்கள் பறக்கப் போகிறோம்! எங்களுடைய குதூகலத்தில் கொஞ்சம் பயமும் கலந்திருந்தது. புதிதான கிளர்ச்சி அனுபவம் அருகில் வரும்போது, கூடக் கொஞ்சம் பயமும் தன்னுடன் கொண்டு வருகிறது. இதை ஒப்புக்கொள்வதை நான் அவமானமாகக் கருதவில்லை.

தாழ்வாரத்தின் ஒரு ஓரத்தில் நாங்கள் உட்கார்ந்து கொண்டோம்; அதிக நேரம் காத்துக் கொண்டிருந்தோம். ஒன்றும் நடக்க வில்லை. விமான ஓட்டிகள் 'சிகரெட்' பிடித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் இருந்தார்கள், சிலர் பகடை யாடிக் கொண்டு காலங் கழித்தனர். அவர்களை நான் மிகவும் உன்னிப்பாகக் கவனித்தேன். உலகத்தில் அவர்களுக்கு ஒரு சிறு கவலையாவது இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் ஏதோ ஒரு சம்பவத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் மனோபாவம் எங்கு பார்த்தாலும் காணப்பட்டது. "புறப்படுங்கள்!" என்ற கட்டளை வார்த்தைக்கு அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

## காலைச் சூரியனும், கண்டதோர் விமானமும்.

பிறகு, காப்பி வந்தது—தேவாமிர்தம் போன்ற காப்பி. நறுமணம் வீசிய காப்பி. காப்பி உள்ளுக்குப் போனதும் வெளி உலகம் வேறொரு தோற்றமாகத் தோன்றியது. திடீரென்று கிழக்குத் திக்கிலிருந்து ஒரு சத்தம் கேட்டது. காலைச் சூரியனி லிருந்து வெளிக் கிளம்பியது போல போர் விமானம் (' பைடர் ப்ளேன் ') அதி வேகத்துடன் வந்தது. அதனுடைய வாலில் வெள்ளைக் கோடு போட்டிருந்தது. அது எங்களுடைய கட்சியைச் சேர்ந்த விமானம்—எதிரியைப் பற்றிய விவரங்களை அறிவிப்பதற்காக வந்தது. விமான நிலையத்தை மேலே யிருந்து சில தடவை சுற்றி வந்து, பிறகு மெதுவாகக் கீழே இறங்கியது. இறங்கியதும், அங்குள்ள விமானப் படைத் தலைவரும், இரண்டொரு ஆபீசர்களும் அவ் விமான ஓட்டியிடம் பேசுவதற்கு விரைந் தோடிச் சென்றார்கள். அந்த விமானத்தைப் பின் பற்றி, ஒன்றன் பின் ஒன்றாக இதர போர் விமானங்கள் வந்தன. உடனே விமானங்கள் பறப்பதன் சத்தம் ' உர்-ர்-ர் ' என்று ஒரு பெருங் கோஷ்டமாக இருந்தது. விமானங்களிலிருந்து இறங்கும் விமான ஓட்டிகளைச் சந்திப்பதற்காக, ராணுவ மோடார் ' ட்ரக் ' வண்டிகள் இங்குமங்கும் ஓடுகிற சத்தமும் கூடச் சேர்ந்தது.

எங்கு பார்த்தாலும் ஆரவாரமும், தடபுடல் ஓட்டமுமா யிருந்தன. இதை யெல்லாம் நான் பார்த்துக் கொண்டே யிருந்த போதிலும், என்னுடைய கவனம் மாத்திரம் விமானப் படைத் தலைவரின் மேலிருந்தது. அவர் விமானப் பகுதித் தலைவரையும், இன்னும் இரண்டொரு முக்கிய ஆபீசர்களையும் அழைத்து, அவர்களுடன் கலந்து பேசினார். நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அருகில் தான் இந்தச் சிறு மகா நாடு நடைபெற்றது. சிறிது நேரம் பேசின பிறகு, " எல்லோரும் உள்ளே வாருங்கள் !" என்று விமானப் படைத் தலைவர் உரத்த குரலில் அழைத்தார். உடனே விமான ஓட்டிகளும், இதர விமான சிப்பந்திகளும் ' ஆபரேஷன்ஸ் ரூம் ' என்ற அறைக்குள் சென்றார்கள். எதிரி ஏற்பாடுகளைப் பற்றி கொண்டு வரப்பட்ட தகவல்களைப் பற்றிப் பேசி முடிவு செய்வதற்காக அவர்கள் உள்ளே சென்றார்கள். கொஞ்ச நேரம் கழித்து, எல்லோரும் வெளியே வந்தார்கள். " காற்று நிலை நமக்கு விரோதமாக இருக்கிறது " என்று ஒருவர் கூறினார். காற்று நிலை வெடி குண்டு பயிற்சிப்போருக்கு அனுகூலமாக இல்லாததால், எங்களுடைய விமானப் பயணம் கொஞ்ச காலம் தடைப் படுத்தப் பட்டது.

## ' பாரஷூட் ' வேடிக்கையும், அதனால் உண்டான பயமும்.

பயணம் தடைப் பட்டதும், நாங்கள் மேல் அணிந் திருந்த விமான விரிப்புக் குடை (' பாரஷூட் ') தளைகளை அவிழ்த்து விட்டோம். போர் விமானங்கள் வருவதற்கு முன், அவைகளை நாங்கள் அணிந்து கொண்டோம். அதை எப்படி அணிவது என்ற மர்ம இரகசியங்களை ஒரு ஆபீசர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அது ஒரு வேடிக்கையான பொருள்—இந்த ' பாரஷூட் ' என்பது. அதை நான் அணியும் போது, என்னையே நான் ஒரு முடிச்சுப் பூட்டுக் கட்டிப் போடுவது போலிருந்தது. அதை அணிவது முதலில் சற்று கஷ்டமா யிருந்தது, 1, 2, 3, 4 என்ற பூட்டுகளை மாட்டுவது தெரிந்த பிறகு, அது மிகவும் சுலபமாய் விட்டது.

அதை அணிந்து கொள்வதற்கு இரண்டு நிமிஷங்கள் பிடித்தது ; ஆனால் ஒரே விநாடியில் அதை அவிழ்த்து விட்டோம். எங்களுடைய நெஞ்சுக்கு அருகில் இருந்த ஒரு சிறு விசையை கையினால் ஓங்கி ஒரு குத்துக் குத்தினதும், பூட்டுகள் கழன்று விமானக் குடை மாட்டும் தளைகள் அவிழ்ந்து விட்டன. மேக மண்டலத்தி லிருந்து வெட்ட வெளியில் குதிக்கும் படியான தோற்றங்கள் எங்கள் கண் முன் தோன்றின. முதலில், அவை கொஞ்சம் பயத்தையும் பின்னால் விளையாட்டு உணர்ச்சியையும் உண்டாக்கின. போகப் போக, விளையாட்டு உணர்ச்சி அதிகப்பட்டது. ஆனால் கடைசி வரைக்கும் பயம் முழுவதும் என்னை விட்டு நீங்கிவிட்டது என்று நான் நிச்சயமாகச் சொல்ல முடியாது.

பிறகு காத்துக் கொண்டிருக்கும் விளையாட்டு ஆரம்பித்தது—காத்துக் கொண்டிருப்பதும் பார்த்துக் கொண்டிருப்பதும். நாங்கள் இங்கு மங்கும் உலாவித் திரிந்தோம். காலத்தைப் போக்குவதற்கு. " பொறுமை "ச் சீட்டாட்டம் ஆடலா மென்றால், சீட்டுக் கட்டு இல்லை. ஏதாவது பத்திரிகை அல்லது சஞ்சிகை படிக்கலா மென்றால், அங்கு ஒன்றும் கிடைக்க வில்லை. ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு தூரத்திலிருந்த வெடி குண்டு விமானங்களைச் சதா பார்த்துக் கொண்டிருந்தேன். அவைகளில் ஒரு விமானத்தில் நான் பறந்து செல்ல வேண்டும்—தனியாக !—ஏனென்றால் மற்ற பத்திரிகை நிருபர்கள் ஒவ்வொருவரும் தனியாக ஒவ்வொரு வெடி குண்டு விமானத்தில் செல்லும்படியா யிருந்தது. ஆனால், விமானத்தைச் சேர்ந்தவர்கள் கூட இருப்பார்கள் ; இருந்த போதிலும் நான் தன்னந் தனியாக இருக்கப் போகிறேன் என்ற உணர்ச்சி ஒரு பளுவைப் போல மனத்தை அழுத்தியது.

தனிமை உணர்ச்சியில் என் மனம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, நான் வைத்த இடத்தில் இருந்த விமான விரிப்புக் குடையைப் பார்த்தேன். அதைக் காணோம் ! யார் அதை எடுத்திருப்பார்கள் ? அல்லது நான் தான் அதை வேறு எங்கேயாவது வைத்து விட்டேனோ, என்னமோ ? என்னுடைய நிருப நண்பர்களுடைய விமான விரிப்புக் குடைகள் வைத்த இடத்தில் இருந்தன. ஆனால் என்னுடையது மாத்திரம் மாயமாய் மறைந்து விட்டது ! உண்மையில், எனக்கு முன் அது மேக மண்டலத்துக்குப் பறந்து சென்றது ; பின்னால் என்னுடன் கூடப் பறந்து வந்தது, என்ன நடந்தது என்றால், ஒரு விமானத் தலைவர் அதை அணிந்து கொண்டு மேலே பறந்து சென்றார். அவர் திரும்பி வந்ததும், அந்த விமான விரிப்புக் குடையை மெதுவாக நான் கைப்பற்றிக் கொண்டேன்—பிறகு ஒரு பாதுகாப்பான இடத்தில் அதை ஒளித்து வைத்து விட்டேன் !

## மோட்டார் பயணமும், விமானப் பறப்பும்.

கடைசியில், " தாக்குதல் காலம் " வந்தது, சுமார் 12½ மணி இருக்கும். எங்களைத் தயாராக இருக்கும்படி சொன்னார்கள். அவசரம் அவசரமாக விமான விரிப்புக் குடையை மாட்டிக் கொண்டோம் ; எல்லாம் சரியாக இருக்கிறதா என்று எங்களையே நாங்கள் மேற் பார்வை பார்த்துக் கொண்டோம். சரி, எல்லாம் ஒழுங்காய் இருந்தது. நாங்கள் பறப்பதற்கு தயாராய் இருந்தோம். தாக்குதல் திட்டம் வகுக்கும் அறையில் (' ஆபரேஷன் ரூம் ') மறுபடியும், பிரிட்டிஷ் விமானப் படையினர் மகா நாடு கூடியது. பின்னர் எல்லோரும் வெளி வந்தார்கள், மூன்று மூன்று பேர்களாகப் பிரிந்து, அங்கு காத்துக் கொண்டிருந்து ராணுவ மோடார் வண்டிகளில் ஏறிக் கொண்டார்கள். விமானப் போக்கு வழி காட்டுபவர்,' விமான ஓட்டி, விமானப் பீரங்கியாளர், இப்படியாக மும்மூன்று பேராகப் பிரிந்தார்கள். இப்படிப் பிரிந்த ஒரு கூட்டத்தில் என்னைச் சேர்த்துக் கொண்டார்கள்.

ராணுவ மோடார் வண்டியிலிருந்து இறங்கி வெடி குண்டு விமானத்தில் ஏறுவதற்கு இரண்டு நிமிஷங்கள் கூடப் பிடிக்க வில்லை ; ஆனால், அதற்குள் என்னுடைய நண்பர்கள் இருவர் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தார்கள். நான் விமானத்தில் ஏறுவதற்கு முன், அதை தலை முதல் வால் வரை ஒரு பார்வை பார்த்தேன். மிகவும் அழகான விமானம் ! கண்ணியமும், பெருமையும், இறுமாப்பும், அமைதியும், நம்பிக்கையும், பலமும், ஒன்று சேர்ந்ததைப் போல அந்த விமானம் காட்சி யளித்தது. விமானத்தில், முதலில், விமானப் போக்கு வழி காட்டுபவர் ஏறினார் ; அவர் உட்காருமிடம் விமானத்தின் மூக்கு போன்ற பாகத்தில் இருந்தது. அவருக்குப் பின் விமான ஓட்டி ஏறினார் ; பிறகு நான் ஏறினேன். விமானப் பீரங்கியாளர் நான் ஏறுவதற்கு ஒத்தாசை செய்தார் ; விமான ஓட்டியின் பக்கத்திலுள்ள சிறு ஆசனத்தில் நான் போய் உட்கார்ந்தேன். விமானப் பீரங்கியாளர் எங்களுக்குப் பின் புறத்தில் இருந்த வேறு இடத்தில் ஏறி யிருக்க வேண்டும் ; ஆனால் நாங்கள் பறக்கும் போது அவர் என் கண்ணில் அகப்பட வில்லை அதாவது இரண்டரை மணி நேர காலம் அவரை நான் பார்க்க முடியவில்லை. எல்லோரும் ஏறிய பிறகு, விமான ஓட்டி ' காண்டாக்ட் ' (' விமானத்தை இயங்குவிக்க ') என்று கூச்சலிட்டார். விமான இயந்திரங்கள் கர்ஜித்தன. எங்களுடைய விமானப் பயணம் ஆரம்பித்தது. அப்போது சரியாக ஒரு மணி இருக்கும் ; என்னுடைய கைக் கடியாரத்தைப் பார்த்தேன். பிறகு அண்ணாந்து நோக்கினேன். சூரியன் என்னுடைய தலைக்கு நேராக இருந்தது.

எங்களுடைய வெடி குண்டு விமானம் முதலில் தரையிலேயே ஊர்ந்து கொண்டு சென்றது. அப்போது, யாரோ மேலேறி வந்து விமான ஓட்டியிடம் பேசினார்கள். " நீங்கள் பத்து நிமிஷம் கால தாமதமாகப் புறப்பட்டிருக்கிறீர்கள். இரண்டு வெடி குண்டு விமானங்கள் இப்போது ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கின்றன. சீக்கிரத்தில் அவைகளை நீங்கள் பிடித்து விட்டு அவற்றிற்கு முன் செல்லவேண்டும். ஏனென்றால் நீங்கள் தான் இந்த வெடி குண்டு தாக்குதல் படைக்குத் தலைவர் " என்று அவர் பேசியதை நான் கேட்டேன். ஓகோ, அப்படியா சமாச்சாரம் ! வெடி குண்டு படையின் தலைமை விமானத்திலா நான் இருக்கிறேன் ! தாக்குதல் முயற்சியின் தலைவர் பக்கத்திலா நான் உட்கார்ந்து இருக்கிறேன் ? இது ஒரு பெரிய விசேஷம் தான். இந்தியாவில் முதல் முதலில் இப்போது தான் பத்திரிகை நிருபர்களுக்கு ஒரு பயிற்சி வெடி குண்டு தாக்குதலில் கலந்து கொள்ளும் படியான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது ; முதலாவது செல்லும் நிருபர் கூட்டத்தில் நான் கொண்டு போகப்பட்டேன் ; வெடி குண்டு தாக்குதல் படைக்குத் தலைமை வகிக்கும் முதல் விமானத்தில் இருக்கும்படி பாக்கியம் பெற்றேன். இதைக் குறித்து என்னை நான் பாராட்டிக் கொண்டேன். " பறக்கும் பதக்கம் " பெற நான் தகுதியானவன் என்று நினைத்துக் கொண்டேன்.

## மேலிருந்து பார்த்த காட்சி.

வெடி குண்டு விமானம் நீல வானத்தை நோக்கி மேலும் மேலும் பறந்து சென்றது. சாதாரண உலகம் தூரத்தில் உருண்டு செல்வதைப் போலிருந்தது. கீழே பார்த்தால் ஒரு குறுக்கு வார்த்தைப் பந்தயக் கட்டத் (' க்ராஸ் வோர்ட் பசுல் ') தைப் போல் தோன்றியது. நிலங்கள் சிறு சதுரக் கட்டங்கள் அல்லது நீண்ட கட்டங்கள் போலவும், பெரிய மரங்கள் சிறு செடிகளைப் போலவும், பெருங் கட்டடங்கள் பொம்மை வீடுகள் போலவும், ரோட்டுகள் ' ரிப்பன் ' கள் போலவும், ஆறுகள் பாம்புகளைப் போலவும் தோன்றின. மேலிருந்து பார்த்த காட்சியின் மிகச் சுருக்கமான வர்ணனை இது !

வெளியிலுள்ள ஆச்சரியத்தையும் அழகையும் என் கண்கள் நிறையும்படி பார்த்த பிறகு, விமானத்தின் உள் நோக்கினேன். முன்னணியில், விமானப் போக்கு வழி காட்டி ஒரு நோட்டுப் புத்தகத்தில் சுறு சுறுப்புடன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார் ; எந்தத் திக்கு நோக்கி விமானம் போகிற தென்பதை அவர் குறித்துக் கொண்டு வருவதாகத் தெரிந்தது. பிறகு அவர் விமான ஓட்டியிடம் ஒரு குழாய் போன்ற கருவியின் மூலம் பேசினார். அவர் பேசியதில் ஒரு வார்த்தை கூட என் காதில் விழவில்லை —விமான இஞ்சின்களின் சத்தம் காது செவிடுபடும்படியாக இருந்தது. (என்னுடைய காதுகளில் இரண்டு பஞ்சுத் துண்டுகளை அடைத் திருந்த போதிலும் !). விமான ஓட்டி முதலிய யாரிடமும் பேச்சுக் கொடுத்து, அவர்களுடைய வேலைக்குத் தொந்தரவு அல்லது இடைஞ்சல் கொடுக்கக் கூடாதென்று எங்களுக்கு முதலில் அறிவிக்கப் பட்டது. ஒரு சிறு பரீட்சை செய்து பார்க்கலா மென்று நினைத்தேன். முதலில் மெதுவாக இரும்பிப் பார்த்தேன். ஒன்றும் கேட்க வில்லை. பிறகு உரக்க இரும்பினேன. என்னுடைய காதுக்கே கொஞ்சங்கூட சத்தம் கேட்கவே யில்லை. ஆகையால் விமான ஓட்டியின் கவனம் திருப்பப் படவில்லை.

## வெடிகுண்டு தாக்குதல் ஆரம்பம்.

பிறகு, விமானப் போக்கு வழி காட்டுபவர் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து நான் இருந்த இடத்துக் கருகில் வந்து, என் பக்கத்தில் இருந்த ஒரு மின்சார விசையில் (' ஸ்விட்ச் ') ஒரு சிறு குழாயை மாட்டினார். ' சரிதான், சமயம் நெருங்கி விட்டது. ' எதிரி ' யின் லட்சியத்தின் மேல் வெடிகுண்டு போடப் போகிறோம் " என்று நினைத்துக் கொண்டேன். கடிகாரத்தைப் பார்த்தேன். மாலை 2¼ மணியாயிற்று. நாங்கள் புறப்பட்டு ஒரு மணி நேரத்துப் பின்பு, திடீரென்று விமானப் படைத் தலைவர் விமானத்தைக் கீழ் நோக்கி ஓட்டினார். கீழே பாய்ந்து சென்றோம். என்னுடைய இருதயம் அப்படியே நின்று போய்விட்டது ; மூச்சைப் பிடித்துக் கொண்டேன். பக்கத்தில் ஏதாவது இருந்தால் பிடித்துக் கொண்டு சமாளித்துக் கொள்ளலாம் என்று பார்த்தால் ஒன்றும் கிடைக்க வில்லை. ஏதேதோ யந்திரங்களும் விசைகளும் பல இருந்தன ; ஆனால் அவற்றில் ஏதாவதொன்றைத் தொட்டால் அபாயமாக முடியலாம் ; ஆகையால் பேசாமல் நான் உட்கார்ந்தபடியே பின்னால் சாய்ந்து கொண்டேன். விமானத் தலைவர் தன்னுடைய வலது கையை நீட்டி என் கழுத்தைத் தொட்டாற் போல நீட்டினார். என்னுடைய இருதயம் வேலை செய்வதை ஒரு அரை விநாடி நேரம் நிறுத்தி விட்டது. அவர் என் பக்கத்தில் இருந்த ஒரு பிடியைத் தளர்த்திவிட்டார். பிறகு இருதயம் வேலை செய்ய ஆரம்பித்தது.

விமானப் போக்கு வழி காட்டுபவர் கீழே உற்று நோக்கினார் ; பிறகு விமான ஓட்டியையும் என்னையும் பார்த்து புன்னகை புரிந்தார் ; எங்களுடைய 'வெடிகுண்டு'கள் 'எதிரி'யின் தலைமை ஸ்தானமாகிய ஒரு விமான தளத்தின் மேல் சரியாக விழுந்தன என்று தெரிந்தது. இந்தச் சமயத்தில், ' எதிரி ' போர் விமானங்கள் எங்களைத் தடுத்து, எங்கள் விமானங்களைக் கலைப்பதற்குக் கூட்டமாக வந்தன. அவைகளுடைய முயற்சி பலிக்க வில்லை. எங்களுடைய பீரங்கியாளர் அவைகளைச் சரியாகக் ' கவனித்து' விட்டார் !



## தென்னைமரமும், முடிவுகாலத் தோற்றமும்.

அடிக்கொரு தடவை ' எதிரி ' விமான தளத்தைத் தாக்கினோம். எங்களுடைய விமானம் கீழ் நோக்கிப் பாயும் போதெல்லாம், என்னுடைய இருதயம் ஓய்வெடுத்துக் கொள்வதற்கு அனுமதி கேட்டது. ஒவ்வொரு சமயத்தில், வரிசையாகக் கீழே இருந்த தென்னை மரங்கள் திடீரென்று பெரிதாகவும் மிக உயரமாகவும் தோன்றும் ; நாங்கள் அவைகளை நோக்கி அவ்வளவு கடுமையான வேகத்துடன் பாய்ந்து சென்றோம். ஒரு தடவை முடிவுகாலம் வந்துவிட்டது என்று நான் உண்மையில் நினைத்தேன்.

நாங்கள் நடத்திய கீழ்ப்பாய்ச்சல் வெடிகுண்டு தாக்குதல்களைப் போலவே தான், பிரான்ஸ், ஹாலண்டு, ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலைப் பட்டணங்கள் முதலியவைகளின்மேல், பிரிட்டிஷ் விமான ஓட்டிகள் தாக்கி வருகிறார்கள் என்று பின்னால் கீழே இறங்கியதும் அங்குள்ள விமானப் படைத் தலைவர் (" கமாண்டிங் ஆபீசர் ") கூறினார். உடனே எனக்கு மயிர்க்கூச் செறிந்தது.

வெடிகுண்டு தாக்குதல் முடிந்து திரும்பினோம். சீக்கிரத்தில் நீலக் கடல் என் கண்ணில் பட்டது. நாங்கள் திரும்பிச் செல்லும் பயணத்தில் இருக்கிறோம் என்று அறிந்தேன். எங்களுடைய விமானத் தளமும், விமானம் கீழே செல்லும் பாதைகளும் புலப்பட்டன. ஆனால், வெள்ளி நிறமுள்ள புகை தரை மட்டத்தில் நீளமாகப் போய்க் கொண்டிருந்ததைக் கண்டேன் ; அதென்ன ? ஒரு வேளை எங்களுடைய விமான தளத்தை ' எதிரி 'கள் தாக்கிவிட்டார்கள் போலும் என்று நினைத்தேன் அல்ல. அந்தப் புகை காற்று வாட்டம் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை எங்களுக்குக் காட்டுவதற்காக உண்டாக்கப்பட்டது.

## உலகத்தின் உச்சஸ்தானம்.

எங்களுடைய விமானம் தான் முதலில் கீழே இறங்கியது. சில நிமிட நேரங்கள் கழித்து, ஒவ்வொன்றாய் மற்ற விமானங்கள் வந்து சேர்ந்தன. ஆகாயத்தில், உலகத்தின் உச்சஸ்தானத்தில், நாங்கள் இரண்டரை மணி நேர காலம் பறந்து திரிந்தோம்.

எங்களிடம் காட்டிய அன்பிற்காக, பத்திரிகை நிருபர்கள் சார்பாக, ' கமாண்டிங் ஆபீசரு'க்கு நான் நன்றி செலுத்தினேன். பிறகு நாங்கள் எல்லோரும், ' கமாண்டிங் ஆபீசர் ' உட்பட, ஒன்றாக நின்று புகைப் படம் பிடித்துக்கொண்டோம். அப்புகைப் படத்தை நான் என் ஆயுளுள்ளளவும் கவனமாக, விலையுயர்ந்த பொருள்களைப்போல, வைத்திருக்கப் போகிறேன். ஏனென்றால், அது என்னுடைய வாழ்க்கையின் சிறந்ததொரு சம்பவத்தின் நினைவுப் பொருளாகும். வாழ்க்கையில் அனுபவம் நிறைந்த பரவசம் பெற்ற ஒரு மணி நேரத்தின் பெருமையைப் பற்றி ஒரு ஆங்கிலக் கவி குறிப்பிட்டிருக்கிறார். எனக்கு 2½ மணி நேர காலம் அப்படிப்பட்ட அனுபவம் கிடைத்தது.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

எல்லைப் புரத்திலிருந்து பார்த்தபோது, பெருந் தீக்கள் தென்பட்டன. பொழுது விடிகிறபோது, ஏராளமாகப் புகை கிளம்பியதனால் தெளிவாகக் காணக் கூடவில்லை.''

மேலும், மார்ஷல் படோக்லியோ கால தாமதம் செய்வாரானால், கடுமையாக இத்தாலி தாக்கப்படும் என்று நேசதேசத்தார் முன்னதாகவே இத்தாலியை எச்சரித்திருந்தார்கள். அதை இப்போது நிறைவேற்றி விட்டார்கள். புதிய இத்தாலிய அரசாங்கம் ஏதேனும் ஒரு முடிவிற்கு வருவதற்கு வேண்டிய அளவிற்கு ஒரு சிறிது அவகாசம் கொடுக்கப்பட்டது.

பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் ' பார்லிமெண்ட் காமன்ஸ் ' சபையில் சென்ற ஜூலை மாதம் 27-ம் தேதி பேசும்போது கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:—

" இத்தாலிய நெருக்கடி இன்னுங் கொஞ்ச காலம் முதிரும்படி விட்டு வைப்பது தான் அறிவுடைமையாகும். இந்த நெருக்கடி முதிர்ச்சி யடைய பல கட்டங்கள் ஏற்படக் கூடும். இப்படிப்பட்ட உருவற்ற நிலையிலே இத்தாலிய விவகாரங்கள் இருந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், பிரிட்டனும் அமெரிக்கவும் மிகவும் எச்சரிக்கையாகவே நடந்து கொள்ள வேண்டும். இத்தாலியின் அரசியல் அமைப்பு சிதையக் கூடாது. தன் நிலைமை எடுத்துச் சொல்லத் தக்கபடி, இத்தாலி இருக்க வேண்டும்."

மிஸ்டர் சர்ச்சில் இப்படிப் பேசிய 5 நாட்களுக்குப் பிறகு' அதாவது ஆகஸ்ட்டு மாதம் 1-ம் தேதி ஆல்ஜியர்ஸி லிருக்கும் வானொலி நிலையம் இத்தாலியர்களை எச்சரித்தது. ஜூலை மாதம் 25-ம் தேதியிலிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சவகாசம் தீர்ந்து விடுகிறதென்று அறிவித்தது. படோக்லியோ ஆட்சி முறை, எந்தக் கொள்கையை அடிப் படையாகக் கொண்டு நடைபெறப் போகிற தென்று வெள்ளையாகத் தெரிவித்துவிட வேண்டுமென்று கூறியது. விரைவில், முழு மூச்சாக, பகலிலும் இரவிலும் விமானத் தாக்குதல் நடைபெறப் போகிறது என்று களக்கமற அறிவித்தது. அப்படியே விமானத் தாக்குதலும் ஆரம்பமாகி விட்டது. ஏனென்றால், தம் நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ள வேண்டி சவகாசமாக இத்தாலிய அரசாங்கம் வேலை செய்து கொண்டிருந்தால், அது வரை, நேச நாடுகள் காத்திருக்கக் கூடுமா ?

### இத்தாலிய புதிய ஆட்சியும் பழைய தவறும்.

இதற்கு இத்தாலியர்களே முதன் முதல் முயற்சிக்க வேண்டு மென்று நேச நாடுகள் விரும்பின. ஏனென்றால் சென்ற 20 ஆண்டுகளாக, அவர்கள் அடிமைப் பட்டுக் கிடக்கிறார்கள். இப்போது இத்தாலிய மக்கள், யுத்தத்திலிருந்தும், அடிமைத் தனத்திலிருந்தும் விடுபட்டு, கொஞ்ச காலத்திற்குப் பிறகு, புதிய, மீட்சி பெற்ற ஐரோப்பாவில், கண்ணியமான தோர் நிலையை அடைய விரும்புகிறார்களா ? அல்லது, ஹிட்லரோடு கூட்டுக் குற்றவாளியா யிருந்து நேச நாடுகளுக்கு விரோதமாக, தொடர்ந்து போராடப் போகிறார்களா ? கொடிய எசமானர்களான ஜெர்மானியர்களிட மிருந்து இத்தாலியர்கள் மீட்சி பெற விரும்புகிறார்கள் என்றும், தமது ஜனநாயக பார்லிமெண்ட் ஸ்தாபனத்தை மீண்டும் அமைத்து நடத்த விரும்புகிறார்கள் என்றும் மிஸ்டர் சர்ச்சில் உண்மையிலேயே நினைத்தார். ஜெர்மானியர்களின் கொடுங் கோன்மைக்குட்பட்டே இருக்க வேண்டு மென்று படோக்லியோ, அரசாங்கம் முடிவு செய்தால், எப்படிப்பட்டதோர் நிலைமை ஏற்படு மென்று அவர் வெகு தெளிவகத் தெரிவித்து விட்டார். அதாவது, " இதனால் யுத்தத்தின் பொதுவான போக்கு வெகுவாக பாதிக்கப்பட மாட்டாது. அதன் முடிவையும் இது எந்த விதத்திலும் மற்ற முடியாது. பழைய குற்றத்தையே இன்னும் செய்து கொண்டிருக்க வேண்டு மென்று புதிய அரசாங்கம் பிடிவாதமாயிருந்தால், என்ன பலன் ஏற்படும் தெரியுமா? இத்தாலி முழுதும் பொசுங்கிச் சாம்பலாகி விடும். மிலான், ட்யூரின, ஜினோவா ஆகிய நகரங்கள் மீது வெடிகுண்டுகள் எறியப்படுவதி லிருந்தே இந்த வேலை ஆரம்பமாகி விட்டதென்று தெரியவில்லையா.

### இடையிலுள்ள ஒரு தடை.

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதனாலே, எவ்வித நன்மையும் உண்டாகப் போகிறதில்லை என்னும் உண்மையை இத்தாலிய மக்கள் நன்கு உணரும்படிச் செய்ய வேண்டு மென்று அமெரிக்கப் பொது மக்கள் தலைவரான மிஸ்டர் ரூஸ்வெல்ட் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். இதுபற்றி, ஜெனரல் அய்சினோவரும் தன் அறிக்கையில் தெளிவு படுத்தி யிருக்கிறார். இத்தாலியர்களுக்கும் நேச நாடுகளுக்கும் இடையே குறுக்கிடும் தடைகள் இரண்டு என்று குறிப்பிடுகிறார். ஒன்று பாஸிஸம், மற்றொன்று அக்கிரமக்கார ஜெர்மானியர்கள் இத்தாலியில் இருப்பது. பாஸிஸத்தை இத்தாலி ஒழித்து விட்டது. ஆனால் அக்கிரமக்கார ஜெர்மானியர்கள் அங்கிருந்து இன்னும் ஒழிய வில்லை. முசோலினியின் வீழ்ச்சி பற்றி தாம் கொண்ட மகிழ்ச்சிக்கறி குறியாக இத்தாலியர்கள் பெரும் விழாக் கொண்டாடினார்கள் என்பது உண்மை தான். ஆனால், பாஸிஸ்டு ஆட்சிக்குப் பின் பதவி யேற்றுக் கொண்ட அரசாங்கம் சமரசத்தைக் கோருவதா யில்லை. இத்தாலியின் எதிர்கால நிலைமையைக் குறித்து மகா ஊக்கத்தோடு அரசியல் விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அது பற்றி இத்தாலியர்கள் ஒரு தீர்மானத்திற்கு வருகிற வரை, அதாவது நெடு நாட்கள் வரை, நேச நாடுகள் காத்திருக்கக் கூடவில்லை. நேச நாடுகளுக்கு, இத்தாலி இன்னும் ஒரு குற்றவாளி நாடாகத் தான் தோன்றிக் கொண்டிருக்கிறது. யுத்தமும் அரை குறையாகத் தான் இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். நிற்க, ஆல்ஜியர்ஸ் வானொலி நிலையம் ஒலிபரப்பிய ஒரு பிரசங்கத்தில். எந்தக் காரியத்தையும் பருவ மறிந்து செய்ய வேண்டு மென்று இத்தாலிக்கு வற்புறுத்தியது. மேலும், இத்தாலிக்குக் கொடுக்கப்பட்ட அவகாசத்தில் ஜெர்மானியர்கள் இத்தாலியிலும் பால்கன்ஸிலும் உள்ள தம் பாதுகாப்பு ஸ்தலங்களைப் பலப்படுத்திக் கொள்ள சந்தர்ப்பங் கிடைத்தது, என்றும் கூறியது.

" யுத்தம் தொடர்ந்து நடக்கிறது " என்று படோக்லியோ சொல்லி விட்டார். நேச நாட்டார் கொடுத்த சமரச நிபந்தனைகளை இத்தாலி ஏற்றுக் கொள்ள விரும்புவதற்கான அறிகுறி ஒன்றுகூடக் காணப்படவில்லை. ஆகவே, மீண்டும் விமானத் தாக்குதல் ஆரம்பமானது, சில நாட்களுக்கு முன்பு. பிரிட்டிஷ் விமானப் படை, இத்தாலி மீது வெடிகுண்டுகளெறிந்து, தவிடு பொடி செய்து வந்ததைக் கண்ட முசோலினி, அலறிப் போனார். இப்போது படோக்லியையும் அலறும்படிச் செய்ய வேண்டும்.

# பெரிய மேலான யுத்தக் காட்சி சாலை சென்னையில் நடை பெறும்.



யுத்த வேலைக் கண் காட்சி :—விமான எதிர்ப்பு பீரங்கிகளும், மற்ற பீரங்கிகளும் எப்படி உபயோகிக் கப் படுகின்றன வென்று, திருச்சியில் நடை பெற்ற இக்காட்சிசாலையில் காட்டப்பட்ட போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தின் ஒரு பகுதி.

இப்படிப்பட்ட பெரிய கண் காட்சி இது வரை உலகத்தி லேயே நடைபெற்ற தில்லை என்று தான் இந்த யுத்த வேலைக் காட்சி சாலையை வர்ணித்தார்கள். அதுவும் பொருத்தந் தான். உலகத்தின் வேறெந்தப் பாகத்திலும் இவ்வளவு பெரிய கண் காட்சி சாலை இலவசமாக எல்லாரும் பார்க்கத் தகுந்தபடி காட்டப்பட வில்லை. இப்படிப்பட்ட வேடிக்கைகள் அவ்வப்போது தான் நடை பெறுகின்றன. இக்கண் காட்சியின் உண்மையான பலன் என்னவென்றால், சாதி, மதம், கொள்கை என்ற வேற்றுமை எதுவுமின்றி ஏராளமான பொது மக்களுக்கு அது அறிவூட்டுகிறது.

ஆகஸ்டு மாதம் 27-ம் தேதி வெள்ளிக்கிழமை ஐலந்து மைதானத்தில் மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர் கள் இந்தக் காட்சி சாலையைத் திறந்து வைப்பார்கள். அன்று முதல் பத்து நாட்கள் வரை அது நடைபெறும். இதற்கு முன்பு, சென்ற மார்ச்சு மாதம் டில்லியில் ஒரு காட்சி சாலை நடைபெற்றது. பிறகு, பம்பாயிலும், பெங்க ளூரிலும், திருச்சிளுப்பள்ளியிலும் காட்சி சாலைகள் நடை பெற்றன. இப்போது சென்னையில் நடைபெறப் போவது ஐந்தாவது முறை என்று சொல்லலாம். நாள் தோறும் 50,000 பேர்கள் சராசரி காட்சி சாலைக்கு விஜயம் செய்திருக் கிறார்கள். இது வரை 20 லட்சம் பேர்கள் இந்தக் காட்சி களைப் பார்த்திருப்பார்கள் என்று சொல்லலாம்.

இதற்கு முன்பு நடைபெற்ற நான்கு காட்சிசாலைகளை விட, சென்னையில் நடைபெறப் போகும் காட்சிசாலை தனிப் பெருமையோடு விளங்கும். அவற்றைவிடப் பெரிது; மேலானது, அழகானது. சாதாரணமாகக் காட்டப்படும் டாங்கிப் போர்கள், பீரங்கிப் போராட்டம், இந்திய இஞ்சினீர் கள் பாலங்கள் அமைப்பது, விமான வித்தைகள் முதலிய பல வகைக் காட்சிகளைக் காணலாம். அன்றியும், நேச நாடுகளுக்குச் சொந்தமானவையும், எதிரிக்குச் சொந்த மானவையுமான பல வகை யுத்தத் தளவாடங்களையும் அழகாகக் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கும். அங்கே, விமானம், தாக்கும் பலூன், எல்லா வகை டாங்கி களும் பீரங்கிகளும் கப்பல் படைத் தளவாடங்கள், யுத்தக் கப்பல் போன்ற பொம்மைகள், முதலியவை வைக்கப்பட் டிருக்கின்றன. அன்றியும், தூள் தூளாக்கும் 12 பௌண் டர் பீரங்கி யுள்பட, இந்திய கப்பற் படையைச் சேர்ந்த 'பெங்கால்' என்னும் கப்பலின் முன் பகுதி மீண்டும் முழுதும் கட்டப்பட்டிருப்பதும் காட்டப்படும்.

தொழில் இலாக்காக் காரர்கள் ஒரு பெரிய தொழிற் சாலையை அங்கே அமைக்கிறார்கள். இது தொழிற் பயிற் சித் திட்டத்தின் பகுதியாக விளங்கும். அங்கே பயிற்சி பெறுகிறவர்களுக்குக் கஷ்டமான கைத்தொழில்கள் செய்து காட்டப்படும். அவையாவன : உள்ளூர் கைத்தொழில்கள், செஞ்சிலுவைச் சங்கத்தார், இந்தியப் பெண்கள் உதவிப் படை, பெண் தொண்டர் படை, தேசீயப் போர்முனை. உணவுப் பொருள்களை அதிகமாக பயிர் செய்யுங்கள் என்ற இயக்கத்திற்கும் அங்கே இடமுண்டு.

சென்னைக் கண் காட்சியில் பல புதிய அம்சங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை : பிரிட்டன், மால்டா, பர்மா முதலிய நாடுகளில் போராடி காயப்பட்ட ப்ளென்ஹிம் பாம்பர் விமானம். விமானங்கள் அணி வகுத்துப் பறந்து வெடிகுண்டுகள் போடும் காட்சி, மூன்று வகைப் படைகளும் சேர்ந்து போராடும் முறை கடலுக்குள் வெகு தூரம் மூழ்குதல் முதலியன. அன்றி யும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் மெய்காவற் படையினர் குதிரை சவாரி, தாண்டுதல், கூடார மடித்தல் முதலியன செய்து காட்டுவார்கள். நாள்தோறும் இரண்டு இராணுவ வாத்தியக் கோஷ்டியார் வாசித்துக் கொண்டிருப் பார்கள். தேசீயப் போர் முனையாளர் இதற்கென்று அமைத்துள்ள பரந்த கொட்டகையில், ஒரு சினிமாக் காட்சி யும் நடைபெறும்.

யுத்த வேலைக் காட்சி சாலை போன்றதெதுவும் இது வரை சென்னைக்கு வந்ததே கிடையாது. இது அறிவை வளர்க் கும்; ஆனந்த மூட்டும். எதிர்காலத்தில் அநேகர் சமா தானத்தோடும் முன்னேற்றத் தோடும் வாழுவதற்கான வழியை இது காட்டும்.



# தாய் நாடு திரும்பியவர்களும் யுத்த முயற்சியும்

## ரங்கூனில் நடந்த விமானத் தாக்குதல் அனுபவங்கள்

**ஆகஸ்டு மாதம் 4-ம் தேதி சென்னை வானொலி நிலையத்திலிருந்து, ரங்கூன் கௌரவ மாஜிஸ்திரேட்டாக யிருந்து இப் போது தாய் நாட்டிற்குத் திரும்பி வந்திருக்கும் சி. எஸ். பூஷணம் அவர்கள் எம்.ஆர்.ஏ.எஸ்., எப்.ஆர்.இ.எஸ். (லண்டன்) ஒலி பெருக்கிய சொற் பொழிவு பின் வருமாறு :—**

### பர்மாவின் சிறப்பு.

பர்மா இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. சமீபத்தில் தான் அது ஒரு தனி அரசாங்கமாகப் பிரிந்தது. நீர் வளமும், நில வளமும், மலை வளமும் அங்கே அதிகம். செல்வம் அங்கே கொழிக்கிறது: பல ஆறுகள் பாய்கின்றன. இவற்றில் கப்பல் போக்கு வரவு உண்டு. விளைச்சல் நிலங் கள் ஏராளம். எண்ணெய்க் கிணறுகளும் இருக்கின்றன. அங்குள்ள மக்களும் சோம்பேறிகளல்ல. ஆண்களும், பெண்களும் பாடுபடுகின்ற னர். ஆகவே, அந்த நாட்டை "குபேர" நாடு என்று கூடச் சொல்ல லாம். இதைக் கண்ட மற்ற அரசாங்கங்களுக்கு நாவில் ஊற்றெடுத்தது. இவற்றில் முக்கியமானது ஜப்பான். ஜப்பான் அச்சு நாடுகளோடு சேர்ந் தது. பிரிட்டிஷாருக்கும், மற்ற நேச நாடுகளுக்கும் விரோதி. என்று லும் தன் பிரசார சக்கரத்தை பர்மாவிலுள்ள இந்தியர்கள் மீது ஏவியது. ஜப்பானியத் தலை நகரம் டோக்கியோ. அங்கே ஒரு ரேடியோ யிருக்கிறது. அங்கிருந்து தான் தம் பிரசார பாணங்களை ஜப்பானியர்கள் வீசுவது வழக்கம்.

### ஜப்பான் போலிப் பிரியம்.

இந்தியர்கள் தம் தோழர்கள் என்று அடிக்கடி அவர்கள் கூறுவார்கள். புத்தர்பிரான் தோன்றிய நாடாகிய இந்தியாவில் பிறந்தவர்களைத் தாம் பாராட்டுவதாகவும் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இதைக் கேட்ட இந்தியர்கள் தமக்குச் சாதகமாக இருப்பார்கள் என்பது ஜப்பானியர்களின் ஆசை. இது வீண் ஆசை. இவை பசுத் தோல் போர்த்த புலியின் வார்த்தைகள் என்று உணர்ந்து கொண்டார்கள் பர்மாவிலிருந்த இந்தியர் கள் ; எனவே, யுத்த முயற்சியில் பூரணமாக ஈடு பட்டனர். தம்மால் இயன்ற அளவு பொருளுதவி செய்தனர். மூவகைப் படைகளிலும் சேர்ந்தனர். பலவகைத் தொழில்களையும் பெருக்கி, தளவாட உற்பத் தியை அதிகப்படுத்தினர்.

### ஜப்பான் மோசம்.

என்றாலும் தகுந்த பாதுகாப்பில்லா திருக்கும் சமயம் பார்த்து, பர்மாவை தாக்கினார்கள் ஜப்பானியர்கள். 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 23-ம் தேதி தான் இந்தச் சம்பவம் ஆரம்பித்தது. அந்த நாளை நினைக்கும் போதே, நம் உடல் பதறுகிறது. ஜப்பான் விமானங்கள் ரங்கூன் நகரில் நடத்திய போராட்டத் திருவிளையாடல்களை வாய் விட்டுச் சொல்ல முடியாது. அதைப் போராட்டத் திருவிளையாடல்கள் என்று சொல்லுவது பொருத்தமாகாது ; நாச காலத் திருவிளையாடல்கள் என்று தான் சொல்லவேண்டும். ஏன் ? எதிர்த்து நின்று போராடினால் தான் போராட்டம் என்று சொல்ல வேண்டும். இங்கே எதிர்த்துப் போராட வில்லை. என்றாலும், போராட்டம் நடை பெற்றது. எதற்காக ? அங் குள்ள மக்கள் பாதுகாப்புள்ள இடங்களுக்குப் போய்ச் சேரும் வரை, ஜப்பானியர்களுடைய தீக் கண்கள் அவர்கள் மீது பாயாதபடி யிருக்கும் பொருட்டுத் தான். பர்மாவின் கலைகளை அழித்தார்கள். அந்த கலைகள் மிகவும் உயர்ந்தவை. பர்மா மிகப் பழைய நாடு. அதன் நாகரிகமும் மிகவும் பழமையானது. அதன் சிறப்புச் சின்னங்களை எல்லாம் தரை மட்டமாக்கி விட்டார்கள் ஜப்பானியர்கள். மாந்தலே முதலிய முக்கியமான நகரங்கள் எல்லாம் இப்போது உருத் தெரியாமற் போய்விட்டன. இந்த ஜப்பானியர்களின் கொடுமைகளுக்குத் தப்பி யோடியவர்களையுங் கூட, அவர்கள் சும்மா விட்டு விட வில்லை. விமானங்களைக் கொண்டு விரட்டி விரட்டி நாசஞ் செய்தார்கள். இவர்கள் குண்டுகளுக்கு இலக்கானவர்கள் எத்தனையோ ஆயிரம் பேர்கள்.

### தாய் நாடு திரும்பும் இந்தியர்கள்.

இவர்களுக்கு அஞ்சி கால் நடையாகவும், கப்பல்கள் மூலமும், விமானங் களிலும் கூட பலர் தப்பி இந்தியா வந்து சேர்ந்தனர். இவர்களுக்கு வழியில் நேர்ந்த தொல்லைகள் கொஞ்சமா ? குறிப்பாக கால் நடையாக வந்தவர்கள் நெடுந்தூரம் பிரயாணம் செய்ய வேண்டி யிருந்தது. வழி யில் காட்டு விலங்குகளின் தொல்லை ஒரு புரம். கள்ளர் கூட்டத்தின் கொள்ளை மறு புறம். மலேரியா நோயின் கொடுமை இன்னொருபுரம். பஞ்சத்தால் பட்டினி வேறொரு புரம். எண்ணத் தொலையாத் தொல்லை கள். இந்தத் தொல்லைகளைத் தாங்க மாட்டாமல் உயிர் துறந்தவர்கள் அநேகர். மிகுந்தவர்கள் தாய் நாடாகிய இந்தியாவிலுள்ள தம் உறவின் முறையாரை அடுத்து வந்து சேர்ந்தனர். வந்து சேர்ந்த பிறகும் அநேகர் யமனுக்கு இரையாகி விட்டனர். மிகுந்தவர்கள் உயிர் வாழ்ந்து கொண் டிருக்கிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை சுவையற்ற பால் போலிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார் கள். இது ஒருபுர மிருக்க, அங்கிருந்து திரும்பி வரும் வழியில் கணவனை விட்டுப் பிரிய நேர்ந்த மனைவிமார் எத்தனை. தந்தையைப் பிரிந்த மக்கள் எத்தனை. நண்பனைப் பிரிந்த தோழர்கள் எத்தனை. தாயைப் பிரிந்த சேய்கள் எத்தனை ! சொல்லத் தகுமா அவர்கள் அடைந்த சோகங்கள்.

### அரசாங்கத்தார் அளிக்கும் உதவி.

இப்போது அரசாங்கத்தார் அவர்களுக்கு அளித்து வரும் உதவி அவர் கள் வயிற்றில் பால் வார்ப்பதற்குச் சமானம். இப்போது இந்தியாவி லுள்ள நெருக்கடியில் இவர்களுக்கு வாழ்க்கை வசதிகள் இங்கில்லை. இவர்கள் எண்ணமெல்லாம பர்மாவின் மேலேயே பதிந்திருக்கிறது. மீண் டும் பர்மாவைக் கைப்பற்றி முன் போலவே அங்கு நல் வாழ்வு வாழ வேண்டும் என்பது தான் இவர்களுடைய ஆசை. இதன் பொருட்டு எவ் வித முயற்சியையும் செய்ய இவர்கள் சித்தமாயிருக்கிறார்கள். இவர்கள் எண்ணம் பலிக்கும் என்று நம்புவதற்கான அறிகுறிகள் தென்படுகின் றன. எவை இந்த அறிகுறிகள் என்று நீங்கள் கேட்கலாம். இந்திய படைத் தலைவராக இருந்த பீல்ட் மார்ஷல் வேவல் இப்போது இந்திய வைசிராயாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த நியமனமே மிகச் சிறந்த அறிகுறி. இரண்டாவதாக, அவருக்குப் பதிலாக இந்திய சேனாதிபதியாக ஜெனரல் ஆகின்லெக் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்விருவரும் இந்தி யாவை மிகச் சிறந்த முறையில் பாதுகாத்து வருவார்கள். அன்றியும், கிழக்குப் போர்முனைகளுக்குப் படைகளை இந்தியாவிலுள்ள தளங்களி லிருந்து அனுப்பிக் கொண்டிருப்பார்கள். இவற்றை விட மிகவும் முக்கிய மான அறிகுறி என்ன வென்றால், கீழ் நாடுகளில் போர் நடத்தும் பொருட்டு ஒரு படைத் தலைவரை விரைவில் நியமிக்கப் போகிறார்கள். இவை மட்டுமா ! அச்சு நாடுகளுக்கு அடிமேலடி விழுந்த வண்ணமாகவே இருந்து வருகிறது. ஓரிடத்திலாவது அவர்கள் தலை தூக்க முடியவில்லை. ஆகவே, எல்லா நிலைமைகளும் நமக்கு சாதகமாக இருக்கின்றன.

### நமது கடமை

தப்பி யோடி இந்தியாவிற்குள் வந்தவர்களாகிய நாம் இந்தச் சமயத்தை நழுவ விடக் கூடாது. இந்தியாவிலேயே இருப்பவர்களை விட, போர் அனுபவம் நமக்கு கொஞ்சம் அதிகம் உண்டு. அதை நாம் தக்க தருணத்தில் பயன் படுத்த வேண்டும். தரைப் படை, கப்பற்படை, விமா னப்படை முதலியவற்றில் சேர வேண்டும். டாக்டர்களும், இஞ்சினீர் களும் மற்றும் பல வகைத் தொழிற் பழக்கம் உள்ளவர்களும் அரசாங் கத்தோடும், இராணுவ அதிகாரிகளோடும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். நாம் பர்மாவி லிருக்கும்போது யுத்த முயற்சிக்குத் தாராளமாகப் பணம் கொடுத்து உதவினோம். இப்போது நம் உண்மையான உணர்ச்சியை வெளியிட வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு பரிபூரணமாக ஒத் துழைத்து அவர்களிடம் இன்னும் நிறைந்த அன்பு கொள்ளவேண்டும். அப்போது அவர்களும் நம்மிடம் நல்லுறவு கொண்டிருப்பார்கள்.

### மீண்டும் பர்மாவைப் பிடிக்க முயற்சி

இப்போது பர்மாவை மீண்டும் பிடிப்பதற்காகத் தீவிர முயற்சிகள் நடை பெறுகின்றன. தம் முதற் கடமையாக இதைக் கொண்டுள்ள பர்மா அர சாங்கம் இப்போது சிம்லாவில் தங்கி யிருக்கிறது. இது மகா வேகமாக இந்த ஏற்பாடு வேலைகளைச் செய்துகொண் டிருக்கிறது. இந்த வேலை களைச் சீர்குலைக்க அச்சு அரசாங்கங்கள் அதி தீவிர முயற்சிகள் செய்கின் றன. அம்முயற்சிகளைச் சிதறடிக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். இதில் கட்டாயம் வெற்றி கிடைக்கும். இந்த உறுதி நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வேரூன்றி யிருக்கும். முயற்சியும், முழு மனமும் இருந்தால், நிச்சயம் வெற்றி கிடைக்கும். "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்."

## தொழிலாளருக்கு வாக்குறுதி

"ஜெர்மனி கீழ்த் திசையில் தோல்வி யடையலாம் ; துனீசியாவில் தோற்றதைப் போலவே சிசிலியிலும் தோற்கலாம். என்றாலும் கீழ்த் திசையில் மீண்டும் ஜெர்மனி தாக்கலாம். நேசநாடுகளின் முழு சக்தியையும் இன்னும் ஜப்பான் உணர்ந்து கொள்ளவில்லை. ஆனாலும், ஜப்பானின் கை ஓங்க ஒட்டாதபடி தடுத்தாயிற்று. ஜப்பானைத் தீர்த்துக் கட்டி விடுவோ மென்று தொழிலாளர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்."

"பால்கன் நாடுகளிலும் தம் கூட்டாளிகளா யிருக்கும் மற்ற நாடுகளிலும் தமக்கு என்னென்ன தீங்கு கள் சம்பவிக்குமோ வென்று ஜெர்மானியர்கள் மனத்திற்குள்ளாகவே பீதி கொண்டிருக்கிறார்கள். நிற்க, பிரிட்டனில் எங்கேயாவது ஒரு பக்கத்தில், ஒரு இரவில், வந்தது வரட்டுமென்று துணிந்து ஜெர்மானியர்கள் பல மாகத் தாக்கவுங் கூடும். இந்தப் பெரும் எதிரியை நாம் வெல்ல வேண்டி யிருக்கிறது. ஜெர்மனிக்கு இன்னும் பெரும்படை இருக்கிறது. ஆகவே, உங்கள் வேலையை மிகுந்த ஊக்கத்தோடு நீங்கள் செய்ய வேண்டும்.

[மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிசன் லங்காஷையரில் ஆகஸ்ட்டு மாதம் 11-ம் தேதி பேசியது.]




ஹிட்லருக்கு உண்மையிலே நோயா ? அல்லது நேச நாட்டுப் படைகள் தாக்குதல் பீதியா ?



# பொறுக்கு மணிகள்

## ஜம்பம் பலியாதது ஏன் ?

ஸிஸிலித் தீவு தான் நேச தேசத்தவர்களின் தாக்குதலுக்கு முதல் இலக்காகும் என்பது அச்சு நாட்டாருக்கு என்றுமே நன்ருகத் தெரிந்திருக்க வேண்டுமே! தவிர, ஸிஸிலி வெகு காலமாகவே அச்சு நாட்டாரிடம் இருந்து வருகிறதே! போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அங்கே செய்திருக்கலாமே! இரண்டு மைல்கள் பரந்துள்ள சமுத்திரத்திற் கப்பால் இத்தாலியை வைத்துக் கொண்டுள்ள அச்சு நாட்டாருக்கு, அதை விட அதிக தூரத்தில் உள்ள ஆப்பிரிக்கக் கரைகளிலிருந்து ஆட்களையும் ஆயுதங்களையும் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு வரவேண்டியவர்களாக இருந்த நேச தேசத்தாரை விட, சௌகரியங்கள் பல இருந்திருக்குமே! கடல் தாண்டி வருகிறவர்களைத் தாக்க விமானங்கள், நீர் மூழ்கிகள் எல்லாம் இருக்கின்றனவே ? படகுகளிலிருந்து கரைகளில் இறங்குவோரை, வெகு எளிதில் சுட்டு வீழ்த்தலாமே! இத்தனை வழிகளிருந்தும் அச்சு நாட்டார் ஏன் நேச தேசத்தாரை ஸிஸிலியில் இறங்க வொட்டாமலே தடுக்கத் தவறினார்கள் என்ற கேள்வி எழக் கூடும்.

அச்சு நாட்டார் ஸிஸிலியில் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்க முடியும் ; கடலைத் தாண்டிப் போவதில் என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன ; கடலைத் தாண்டி படைகளை இட்டுச் செல்லுவதற்கு முன்பாக என்னென்ன செய்யவேண்டும் என்பதை யெல்லாம் நேச தேசத்தார் பல தடவைகள் கூடிக் கூடி, பிரமாதமாக யோசித்துத் தீர்த்து விட்டார்கள். எதிர் பார்த்த சங்கடங்கள் பல ஏற்படவே யில்லை. எதிர் பாராதபடி முஸோலினியை இத்தாலியர் காலை வாரி விட்டு விட்டனர்.

இவை எல்லாம் சேர்ந்து மட்டும், நேச தேசப் படைகளுக்கு ஸிஸிலியில் சாதகமான நிலைமைகளை உண்டாக்கி விடவில்லை.

## திட்டங்களை நிறைவேற்றுவது தான் கஷ்டம்.

காகிதத்திலே பிரமாதமான திட்டங்கள் இருக்கலாம் ; ஆனுல் அவற்றை நடை முறையில் கொண்டு வருவது தான் சிரமம். ஒரு லக்ஷம் பேர்களுக்கு மேல் ஸிஸிலியில் சரியான பாதுகாப்போடு போய் இறங்க வேண்டும் என்று காகிதத்திலே பெரியவான திட்டம் போட்டு வைத்திருக்கலாம். லக்ஷம் பேர்கள் என்ருல் லேசா ? அத்தனை பேர்களுக்கான ஆகாரம், பீரங்கிகள், டாங்கிகள், வெடி மருந்து ஸ்டாக்குகள், லாரிகள் எல்லாவற்றையும் ஏற்றிப் போக வேண்டாமா ? நேச தேசத்தார் இத்தனைக்கும் மூவாயிரம் கப்பல்களுக்கு மேல் உபயோகப்படுத்தி யிருப்பதாகத் தெரிகிறது.

இத்தனை கப்பல்களுக்கும் நிலக்கரி, எண்ணெய் எல்லாம் ஆபிரிக்காவில் வந்து இறங்கி யிருக்கிறது. இத்தனைக் கப்பல்களையும் திடுதிப்பென்று, ஒரு மந்திரக் கோலைச் சுழற்றினதன் மூலம் நேச தேசத்தார் வட ஆப்பிரிக்கத் துறைமுகங்களில் கொண்டு நிறுத்தி விட்டார்களா என்ன ?

யமன்கள் போல சதா சுற்றிக் கொண்டிருக்கும் நீர் மூழ்கிகளின் கொட்டத்தை அடக்கினுர்கள் முதலிலே. பிறகு ஒவ்வொரு சிறு கப்பல் கூட்டத்திற்கும் விமானப் பாதுகாப் பளித்தார்கள். அதற்கு எத்தனை விமானங்கள், அவற்றிற்கு எவ்வளவு பெற்றேல், எத்தனை விமானிகள் என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள்! அந்தக் கப்பல் கூட்டங்கள் ஆட்களோடும், சாமான்களோடும் வட ஆப்பிரிக்காவை அடைந்திருக்கின்றன.

அங்கேயுள்ள துறைமுகங்களில் பல பாழாகிக் கிடக்கின்றன. அவற்றை ரிப்பேர் செய்து, அங்கங்கே கப்பல்களைப் பிரித்துப் பிரித்து வைத்தார்கள். அக் கப்பல்களில் ஏறிச் சென்று ஸிஸிலியில் இறங்கி, முன்னேறித் தாக்க, லக்ஷக் கணக்கானவர்களுக்கு பயிற்சி அளித்தார்கள்.

## சிசிலி நகரங்கள் பொடியாகின்றன.

இதற்கிடையில், பயங்கரமான சக்தியும், வேகமும் உள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் ஸிஸிலி, இத்தாலி ஆகிய பிரதேசங்களில் உள்ள விமான நிலையங்களையும், நகரங்களையும் பொடிப் பொடியாக்கிக் கொண்டிருந்தன. அந்நாட்டு மக்கள் மனங்களிலே பீதி என்னும் விதையைத் தூவினர். அது ஏகக் கலவரம் என்னும் மரமாக அதி வேகமாகத் துளிர்க்கத் தொடங்கி விட்டது. தினம் விடிந்தால், தட்டிக் கேட்பாரின்றி, நேச தேச விமானிகள், சண்டப் பிரசண்டம் செய்து கொண்டிருப்பதைக் கண்ட ஸிஸிலி மாந்தருக்கும், இத்தாலியர்களுக்கும் தங்களுடைய தலைவர் சொன்ன வார்த்தைகளில் பலமான அவநம்பிக்கை ஏற்பட்டது. இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் பலமெல்லாம் நசித்துப் போய் விட்டது என்ற விஷயம் புரியலாயிற்று. யுத்தம் நடந்தது போதும் என்ற அபிப்பிராயம் தழைத் தோங்கலாயிற்று. நேச தேசத்தார் பாடு கொண்டாட்டமாயிற்று. வெளு வெளு என்று வெளுத்து வாங்கிக் கொண்டிருக்கிருர்கள்.

நேச தேசத்தாருக்கு இந்த ஸிஸிலிப் போரிலிருந்து பல உண்மைகளும், பல ரகசியங்களும் வெளியாகி யிருக்கின்றன. சமுத்திரக் கரைகளையும், கரையோரமுள்ள கடலையும் விரோதிகள் அடைய வொட்டாது வெற்றிகரமாகத் தடுக்கக் கூடிய சுரங்க வெடிகளை அச்சு நாட்டார் இன்னும் கண்டு பிடிக்க வில்லை என்பது ஒரு ரகசியம்.

போர் விமானங்கள், யுத்தக் கப்பல்கள் ஆகியவற்றின் கண் காணிப்பில் செல்லும் படைகளை, நீர் மூழ்கிகள் பிரமாதமாக ஒன்றும் செய்துவிட முடியாது என்பது இரண்டாவது ரகசியம். போன வாரம் 20, 30 ஜெர்மன் நீர் மூழ்கிகள் கூடி, வட அட்லாண்டிக் பிரதேசத்தில் தோன்றி, ஒரு பெரிய நேச தேச கப்பல் கோஷ்டியை மடக்கித் தாக்க கஜகர்ணம் போட்டுப் பார்த்தனவாம். ஆனுல், எங்கு திரும்பினுலும் அந்த நீர் மூழ்கிகளுக்கு ஒரே திட்டாக இருக்கும்படி செய்துவிட்டார்கள் அக்கப்பல் கூட்டத்தைப் பாதுகாக்க வந்தவர்கள். ஆகவே அக் கூட்டத்திலே ஒரு கப்பலுக்குக் கூட, ஏன் அக்கப்பலில் உள்ள ஒரு இரும்பாணிக்குக் கூட சேத மேற்படாது எல்லாம் சுகமே தம் லக்ஷ்யத்தைப் போய் அடைந்தனவாம்.

நீர் மூழ்கிகள் உதவியால் உலகையே திணற அடிக்கலாம் என்று ஹிட்லர் தம்பட்டம் கொட்டிக் கொண்டிருந்தாரே, அதெல்லாம் வெறும் ஜம்பம் என்பது பகிரங்கமாகிவிட்டது. இதற்காகத் தான் பேசு முன் நினை என்கிருர்கள். வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று வாயில் வந்தபடி பிதற்றி விட்டால், அதைப் பலர் குறித்து வைத்துக் கொண்டிருப்பார்கள். நாளை சமயம் வரும்பொழுது, 'என்னடா, பிரமாதமாக அன்று ஜம்பமடித்தாயே, இப்போ என்ன கிழித்து விட்டாய்' என்று தான் கேட்பார்கள், அதனுல் உஷாராகப் பேசுவதே நல்லது.




## சர்ச்சில் சோதிடம் பலித்தது

பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்சில் துரை இந்த விஷயங்களில் எல்லாம் வெகு உஷார்! அவர் பதவி ஏற்றதும் என்ன சொன்ஞர் ?

'நான் வேறெவ்வித உறுதி மொழியும் கொடுப்பதற்கில்லை. கண்ணீரும், கஷ்டங்களும், மனத் துடிப்புமே தான் பல நாட்களுக்கு நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும். ஆனுல், இறுதி வெற்றி நமதே! அந்த வெற்றி லேசில் வராது. நேச தேசத்தார் ஒரு தர்ம நியாயக் கட்சிக்காகப் போராடுகிருர்கள். ஆகவே, அவர்கள் கட்சியின் பலம் கட்டாயமாக வளரும். ஒரு நாள், அந்த பலம் அச்சு நாட்டாரின் பலத்தை விட பன்மடங்குங் அதிகமாகி விடும். அப்பொழுது, அச்சு நாட்டாரை இந்த அநியாயப் போரில் கொணர்ந்து சிக்க வைத்த அயோக்யர்களின் கொட்டத்தை, என்ன சிரமமானுலும் சமாளித்துக் கொண்டு, அடக்கியே தீருவோம் என்ருர் அவர்.

சமீபத்திலே ஒரு தடவை பேசிய பொழுது, 'இது வரை உலகோரே கண்டும், கேட்டும் இராத அளவிலும், முறையிலும் நேச தேசப் படைகள் கடல் கடந்து சென்று, அயோக்ய அச்சு நாட்டாரை அதம் செய்யப் போகிருர்கள். கூடிய சீக்கிரமே, மத்யதரைக் கடலிலும், வேறு இடங்களிலும் பயங்கரப் போர் நடக்கும்' என்று கூறினுர்.

அவர் கூறிய வார்த்தைகள் எல்லாம் அப்படியே பலித்துக் கொண்டிருக்கின்றன. என்ன நடக்கும் என்பதைத் தீர்க்கமாக யோசித்த பின்பே அவர் பேசுகிருர். தவிர, ஹிட்லர், முஸோலினி போல் பொறுப்பற்றவரா என்ன ? சர்வாதிகாரியா ? இல்லையா ? ஜனநாயகத்திற்கே தாயகமாகிய பிரிட்டனிலே, இரு பெரிய பார்லிமெண்டு சபைகள் இருக்கின்றன. அந்த சபைகளில் உள்ளவர்களுக்கு, தாம் செய்கிற காரியத்தை எல்லாம் அவர் சொல்லி யாகவேண்டும். ஏதாவது கோளாறு ஆகி விட்டால், அவரை பார்லிமெண்டு அங்கத்தினர் கேள்வி கேட்கலாம். ஒவ்வொரு காரியத்தையும் தேசத்தாரின் பிரதிநிதியாகவே செய்கிருர் அவர். ஆகவே தான் அவர் அவ்வளவு உஷாராக இருக்கிருர்.

மத்யதரைக் கடலிலே, அவர் சொன்னபடி யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. வேறிடங்கள் என்ருரே, அது எங்கெங்கே என்று நீங்கள் கேட்கலாம். ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்க லாகாதா ?

அவை எந்தெந்த இடங்கள் என்பது இன்னும் சில தினங்களில் தெரிந்து போகப் போகிறது. பிரதம மந்திரி சர்ச்சில் கானடாவிற்கு தம்பதி, குடும்ப சமேதராகப் போயிருக்கிருர். ரூஸ்வெல்ட் வேறே தம் ஊரில் ராணுவ கப்பற் படை ஆகியவற்றில் உள்ளவர்களை அழைத்து அந்தரங்கமாக ஏதோ பேசிக் கொண்டிருக்கிருர். கல்யாண விஷயமா பேசிக் கொண்டிருப்பார்கள் ? இத்தனை பேர்களும் கூடி ஹிட்லர் தலைக்கு உலை வைக்கத் தான் பேச்சு நடந்து கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

## சிசிலிப் போரின் கடைசி காண்டம்

ஸிஸிலிப் போர் கடைசி காண்டத்திற்கு வந்து விட்டதல்லவா ? சென்ற வாரம் கடானியா என்ற முக்யமான நகரம் ஸிஸிலியிலே பிரிட்டிஷ் எட்டாவது சேனை வசமாயிற்று. ஸிஸிலிப் போரிலேயே வெகு கடுமையான போர் இங்கு தான் நடந்தது. ஜெர்மானியர் இங்கு வெகு உக்ரமமாகவே போராடி யிருக்கிருர்கள். ஆனுல் பெருகி வரும் வெள்ளத்தை அவர்களால் தடுக்க முடியவில்லை.

பிரிட்டிஷ் எட்டாவது சேனை ஜெயமடைந்த சமயம், அமெரிக்க, கனடியப் படைகளும் வெற்றி மாலை சூடி, பல முக்கிய நகர்களைக் கைப்பற்றி, அச்சுப் படைகளை அல்லோல கல்லோலப் படுத்திக் கொண்டிருந்தன.

## இந்தியர் சேவை.

பிரிட்டிஷ் எட்டாவது சேனையோடு இந்திய வீரர்களும் இருக்கிருர்களாம். படைகளின் பின் வரிசையி லிருந்து மகத்தான உதவிகளைச் செய்து வருகிருர்களாம் அவர்கள்.

பஞ்சாபியர், சீக்கியர், முஸல்மான்கள், பட்டாணியர்கள், தோக்ராக்கள் எல்லோரும் ஊக்கத்தோடு ஸிஸிலிப் போரில் செய்த சேவையை எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். கப்பல்களி லிருந்து முதன் முதல் சாமான்களை இறக்கிய வேலையில் அவர்களுக்குப் பிரமாதப் பெயர். ஒரு படகு, தாய்க் கப்பல் சென்று சாமான்களை ஏற்றிக் கொண்டு வரு முன் ஒரு படகில் உள்ள சாமான்களை அந்த இந்தியர்கள் அதிவேகமாக இறக்கி விடுவார்களாம்.

ஸிஸிலியில் இறங்கியவர்களுக் கெல்லாம் ஸிஸிலிய பாஷை தெரியவில்லையாம். பிடிபட்ட நகரங்களிலே புகும் நேசப் படைகளில் இந்தியர்கள் மட்டும் தான் அதிக சிரமமின்றி ஸிஸிலிய மக்களின் பாஷையைப் புரிந்து கொள்ளுகிறார்களாம். ஆகவே எங்காவது கடைத் தெருவிற்குப் போனால் ஒரு இந்தியரை அழைத்துக் கொண்டே போகிறார்களாம், பிரிட்டிஷ், அமெரிக்க வீரர்கள்.

## அச்சுப் படைகள் தப்பியோடும் வழி

ஸிஸிலியிலே மெஸினா என்பது ஒரு முக்யமான ஊர். இத்தாலிக் கரைக்கு எதிர்க் கரையிலே இருக்கும் முக்ய துறை முகம் அது. அங்கே தான் கடைசிப் போர் நடக்கவேண்டும். அங்கிருந்து தான், சென்ற சில தினங்களாக, அச்சுப் படைகள் தப்பிப் போய்க் கொண்டிருக்கின்றனவாம்.

நீர் மூழ்கிகளில் கூட ஆட்களை ஏற்றிச் செல்லுகிறார்களாம். ஏகப்பட்ட படகுகள் வேலை செய்கின்றனவாம். நேச தேச விமானிகளுக்கும் ஏகக் கொண்டாட்டமா யிருக்கிறது ஆனால், சில தினங்களாக, மெஸினாவின் மீது பறப்பது சற்று சிரமமாக இருக்கிறதாம். காரணம், அங்கே இப்பொழுது ஏராளமான விமான எதிர்ப்பு பீரங்கிகள் வைக்கப்பட்டிருப்பது தான். தவிர, போர் விமானங்களும் அதிகமாகத் தோன்றி யிருக்கின்றனவாம். எப்படியாவது, சாத்யமான வரை, போர் வீரர்களை உயிரோடு தப்பச் செய்ய வேண்டு மென்பதே அச்சு நாட்டாரின் நோக்கம்போ லிருக்கிறது. இதை மனதில் கொண்டே, கடானியா நகர்ப் போரை இவ்வளவு கடுமையானதாகச் செய்து கொண்டார்கள் போலிருக்கிறது. இது வரை ஸிஸிலியிலே ஒரு லக்ஷத்து இருபத்தையாயிரம் அச்சு நாட்டார் கைதியா யிருக்கிறார்கள்.

ட்யூனிஸியாவிலே, பான்முனையிலே கடும் போர் நடக்கும் என பலர் எதிர் பார்த்திருக்கையில், ஈசல் கூட்டம் போல், ஏராளமான படை வீரர்கள் சரணகதி அடைந்தார்களா இல்லையா ? அம்மாதிரி மெஸினாவிலும் ஆகலாம் என்று சொல்லுகிறார்கள். பார்க்கவேண்டும். இனி ஸிஸிலியிலே வெகு காலம் நிற்கலாம் என்ற எண்ணம் அச்சு நாட்டாருக்கு இருக்கவே முடியாது, அடுத்தது இத்தாலிப் போராகத்தா னிருக்கும். யார் கண்டார்கள் ? அடுத்த வாரம் எழுத வேண்டியதே இத்தாலிப் போரைப் பற்றியே இருக்கலாம் அல்லவா ?

## இத்தாலியிலே !

இத்தாலியிலே நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. படாக்ளியோ சர்க்கார் 'படா' மோச சர்க்காராக இருக்கும் போலிருக்கிறது. துணிந்து எதுவும் செய்ய அது தயாராக இல்லை போலிருக்கிறது. ஹிட்லரின் கைப்பிடி அதன் கழுத்தின் மீதும் இருப்பதாகவே தோன்றுகிறது. இதை நேசதேசத்தார் உணர்ந்து, 'நொறுக்குங்கள்' என்று தங்கள் விமானிகளுக்கு உத்திரவு போட்டுவிட்டார்கள்.

அவ்வளவுதான் ! மிலான், ட்யூரின், ஜினோவா நகரங்கள் மீது ஒரே வாண வேடிக்கை மயமாகி விட்டது. எங்கும் நெருப்புக் காடாகவே தோன்றலாயிற்று. மக்கள் மனம் பதறி, படோக்ளியோவை மனசாரத் தூற்றிக் கொண்டிருப்பார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ ?

ஹிட்லர் இத்தாலிக்கு இன்னும் ஆதாவளிப்பதாகவும், அடுப்பிலிருக்கும் வெண்டைக்காயை கைசுடாது, வெண்டைக்காயும் கருகாது எடுத்துவிடலாம் என்று சொல்லுகிறார் போலிருக்கிறது. ரோமுக்கும், பெர்லினுக்கும், டோக்கியோவுக்கும் இடையில் ஏதோ பரபரப்பான பேச்சுக்கள் நடப்பது போல் தோன்றுகிறது. ஆனால், ஹிட்லருடைய தேக நிலைமையைப் பற்றி மோசமான செய்திகள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன.

ஜெர்மன் மக்கள் ஹிட்லரை ஒரு கடவுள் என்று நினைத்திருந்த காலம் எல்லாம் போய்விட்டது. காலன் எனவே அவரை அந்நாட்டவர் இன்று கருதியிருப்பார்கள். ஹிட்லருக்குத் தலை முழுகிவிட்டு, ஜெர்மனியிலே ராணுவ சர்க்கார் ஒன்றை ஏற்படுத்தி, தக்க சமயமும், சௌகரியங்களும் கிடைக்கும் பொழுது சமாதானம் பேசலாம் என்று வேறே சொல்லுகிறார்கள்.

## " முற்பகல் செய்யிற், பிற்பகல் விளையும் "

இத்தாலியிலே ஒரு காலத்திலே முசோலினியால் ஆரம்பிக்கப் பெற்ற 'அவந்தி' என்ற பத்திரிகை, திரும்பவும் கிளம்பி, ரகசியமாக வெளியாகி, முஸோலினியை ஒரு போர்க் குற்றவாளி என்று கொண்டு, விசாரணைக்குக் கொணர்ந்து, கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறதாம். 'முற்பகலில் விதைத்தான் ; பிற்பகலில் அடைகிறான் அதன் பலனை !' என்று கூறுகிறார் அபிஸீனிய சக்கரவர்த்தி ஹெயில் ஸெலாஸி, முஸோலினியைக் குறித்து.

' ஐரோப்பிய அரசியலில் கொள்ளைக்காரன் முறையை முதன் முதலில் புகுத்திய மூர்க்கன் முஸோலினி தான் ! அவனைச் சரியானபடி தண்டிக்கவேணும். என் நாட்டிற்கு அவன் செய்த கெடுதல்களை எண்ணி, பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்துடன் நான் இவ்வாறு கூறவில்லை. ஆனால், எதிர்காலத்திற்கு நன்மை ஏற்பட வேண்டுமெனும் நல் எண்ணத்துடனேயே தான் இவ்வாறு பேசுகிறேன் ' என்றும் கூறியிருக்கிறார் ஹெயில் ஸெலாஸி. விடுதலை பெற்ற நாட்டினர் ஒவ்வொருவரும் ஹெயில் ஸெலாஸியைப் போலவே நினைப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

ஜெர்மானியர் இத்தாலியின் தென், மத்ய பகுதிகளைக் காலி செய்து விட்டு வடக்கேபோய், பலமாக நின்றுவிடச் சம்மதிக்கிறார்களாம். அதற்கு ஒரு நிபந்தனை உண்டாம். அது என்னவென்றால், ஜெர்மானியர் வடக்கே போனதும், அவர்கள் காலிசெய்த இத்தாலியை, நேசதேசத்தார் தங்கி நின்று போராடி முன்னேற வசதியளிக்கும் இடமாக்க அநுமதி கொடுக்கப்படாது என்பதுதானும். இதற்கு படாக்ளியோ சர்க்கார் சம்மதிக்குமா என்பது தெரியவில்லை. அந்நிய ரேடியோ செய்திகளை யாரும் கேட்கப்படாது என்ற உத்திரவு பிறந்திருக்கிறதாம்.

'போர் நிற்காது ' என்கிறாராம் அவர். 'சரி ! குண்டு வீச்சும் நிற்காது ' என்கிறார்களாம் நேசதேசத்தவர்.

சரி ! நேசதேசத்தவரோடு இத்தாலியர் சேருகிறார்களய்யா, உடனே இத்தாலிய நகர்கள்மீது நேசதேசத்தவர் விமானங்களின் உதவியால் தாக்கமாட்டார்களா ? என்று கேட்கலாம்.

இத்தாலியிலே ஜெர்மானிய விமானங்கள் அப்படியொன்றும் பிரமாதமாக இல்லை. ருஷ்ய முனையிலிருந்து கொண்டு வந்தால் உண்டு. இப்போ அங்கிருந்து கிளப்புவரோ விமானங்களை ? அப்படியே ஜெர்மானியர் தாக்க வந்தாலும், நேசதேசத்தாரின் விமான பலம் தான் அளவுக்கும் அதிகமாக இருக்கிறதே, ஒருகை பார்க்க.

## ஜெர்மானியர்கள் மோசடி

பால்கன் பிரதேசங்களிலே பரபரப்பு ஏற்பட்டிருக்கிறதாம். அங்கிருந்த இத்தாலிய விமானங்களைப் பலாத்காரமாகக் கைப்பற்றி, ஜெர்மன் வர்ணம் பூசுகிறார்களாம். பல கப்பல்களை, இத்தாலியர்கள் போல் வேஷம் போட்டுச் சென்று நாஸி வீரர்கள் கைப்பற்றிவிட்டார்களாம். யூகோஸ்லேவியாவிலே பாதுகாப்பிற்காக இத்தாலியத் துருப்புக்களிருக்கின்றன. அவர்களுக்குப் பதிலாக பல்கேரிய துருப்புகள் நியமிக்கப்படுகின்றனராம்.

ஹிட்லருக்கு ஏக சங்கடம் தான் ! ஆயிரம் கவலைகளிருந்தாலும், நடுவே ஒரு இன்பச் செய்தி வந்தால் கொஞ்சம் மன நிம்மதி ஏற்படும். எல்லாமே ஒரே கொள்ளி என்றால், எங்குபோய் குளிர்ச்சியை அநுபவிப்பது ?

பெர்லின் நகர்மீது நேசதேச விமானிகள் துண்டுப் பிரசுரங்களை வீசி எறிந்திருக்கிறார்கள். " யானை வரும் பின்னே, மணி யோசை வரும் முன்னே " என்ற பழமொழிப்படி, ' குண்டு வருகுது பின்னே, துண்டுப் பிரசுரம் வருகுது முன்னே ! ' என்று செய்திருக்கிறார்கள் போலிருக்கிறது நேசதேச விமானிகள்.

ஹாம்பர்க் நகருக்கான கதி என்ன என்பதை உலகமே அறியுமே ! அந்த கதி பெர்லினுக்கும் ஏற்படக்கூடாது என்ற திகில் எல்லோருக்கும் இருக்கிறப் போலிருக்கிறது. பெர்லின் நகரையே பாதுகாப்பற்ற நகரம் என்று ஆக்கிவிடலாம் என்று யோசிக்கிறப் போலிருக்கிறது. நாற்பது, ஐம்பது லக்ஷம் மக்களை பல ஜெர்மானிய நகரங்களிலிருந்து வெளியேற்றி விட்டார்கள். பெர்லின் நகரிலிருந்து மாதரையும், மக்களையும் அப்புறப் படுத்துகிறார்கள்.

' இதனால் சர்க்காருக்கே பீதி ஏற்பட்டிருப்பதாக யாரும் நினைத்துவிட வேண்டாம். அவ்வாறு நினைப்பது தவறு. முன்பு லண்டன் நகரிலிருந்த பெண்களும், குழந்தைகளும் அப்புறப்படுத்தப்பட்ட பொழுது, பிரிட்டிஷ் சர்க்கரர் தடுமாறிப் போய்விட்டது என்று நினைத்தோம் நாம். அது தவறு என்பது ருஜுவாகி விட்டது. அதே மாதிரி, இப்பொழுதும் யாரும் தவருக நினைக்க வேண்டாம் ' என்கிறாராம் கப்பல்ஸ் துரை.

' எங்கப்பா குதிருக்குள்ளே இல்லை ' என்பது போல் பேசுகிறார் இந்த வாயாடி ஆசாமி. இவரை யார் கேட்டார்கள் வியாக்கியானம் எல்லாம் ? கடைசியில் தெரிந்து போகிறது இவர் வண்டவாள மெல்லாம்.

ருஷ்யாவில் ஜெர்மானியர் நாய் பட்டபாடு படுகிறார்கள் என்பதை உலகம் கவனித்துக் கொண்டு தானிருக்கிறது. மடக்கி மடக்கி, இடுக்கி போல் வந்து கௌரவித் தாக்குகிறார்கள் வீர ருஷ்யர்கள்.

புது வெள்ளம் வந்து பழைய தண்ணீரையும் அடித்துக்கொண்டு போனதாம். அம்மாதிரி, ஹிட்லர், ருஷ்யா மீது கோடைத் தாக்குதலை ஆரம்பித்தார். ' இதில் பிழைத்தால் உண்டு. இல்லா விட்டால் அரோஹரா தான் ! இதை நினைவில் வைத்துக்கொண்டு, பெரும் போடாகப் போட வேண்டும். இதுவே நமது வெற்றிக்கான கடைசி யுத்தமாக இருக்க வேண்டும் ' என்று வேறே உபதேசம் செய்தனுப்பினார் தம் வீரர்களை.

## ஒரு மாதப் போராட்டத்தின் பலம் சூன்யம்

சரியாக ஒரு மாச மாச்சு. அவர் இவ்வாறு தன் அருமை வீரர்களை அனுப்பி முன்னே போனவர்கள், முட்டுக்கட்டையால் தடைப்பட்ட ரதம் போல தடுமாறி நின்றதோடில்லாமல், முதுகு காட்டி வேறே ஓடவேண்டி வந்துவிட்டது. ருஷ்யர்களின் கை ஓங்கிவிட்டது.

சென்ற வாரம், ஸிஸிலியில் பிரிட்டிஷ் எட்டாவது சேனை கடானியாவைப் பிடித்து வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கையில், ' சபாஷ் ! சபாஷ் ! ' என்று உலகத்தோர் கூற, செஞ்சேனை வீரர்கள் ஓரெல் நகரைப் பிடித்துக் கொண்டார்கள். மாஸ்கோவிற்கு ஓரெல் சாவி போல ; கார்கோவ் நகருக்கு பைல்கொரோட் நகர் சாவி போல என்பார்கள். இந்த இரண்டு நகரங்களையும் கடும் போருக்குப் பிறகு செஞ்சேனை வீரர்கள் கைப்பற்றிவிட்டனர். அதோடு நில்லாமல், கார்கோவ் நகரைச் சூழவும் சென்றுவிட்டனர்.

" தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம் " என்று ஓடுகிறார்கள் நாஸி சூரர்கள். இப்படி அவர்கள் ஓடும்பொழுது, பெர்லினில் உள்ளதொரு ஜெர்மன் துரை என்ன சொல்லுகிறார் தெரியுமா ? ' ஓரெல் அருகே செஞ்சேனையை இழுத்து, ஏக நஷ்டத்தை விளைவிக்க நாங்கள் போட்ட திட்டம் நிறைவேறிவிட்டது. மூன்று லக்ஷம் ருஷ்யர்களைச் சிறைப்படுத்திவிட்டோம் ! அப்புறம் ஓரெலைக் காலி செய்துவிட்டோம் ' என்கிறார் அவர்.

## " தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் "

ஓரெலில் மற்றொரு ' ஸ்டாலின்கிராடு ' நடவாது தப்பியதே ஆச்சரியம். டாங்கிகளும், விமானங்களும் ஓடி ஓடிச் சென்று தாக்கினது காரணமாக நாஸிகளிடை பெருஞ் சேதம். குப்பை குப்பையாக ஆயுதங்களையும், ஆட்களையும் கைவிட்டு விட்டு ஓடுகிறார்கள் அவர்கள். கார்கோப் நகரையும் அவர்கள் காலி செய்கிறார்கள். இம்முறை அதிகச் சண்டையும், நஷ்டமுமின்றி கார்கோப் நகரம் ருஷ்யர்கள் வசமாகும் என்று தோன்றுகிறது. அடுத்த போர் பிரயான்ஸ்க் நகரைக் கைப்பற்ற, நடக்கும். அப்புறம் ?

அப்புறம் என்ன ? நாஸி சனியன்களை ருஷ்ய மண்ணிலிருந்து விரட்டும் வரை ருஷ்யர்கள் நிற்கப் போவதில்லை.

ஜெர்மனிக்குப் பல திசைகளிலிருந்தும் வரும் ஆபத்தை உணர்ந்த ஹிட்லர், ஜப்பானின் தயவை நாடுகிறப் போலிருக்கிறது. ' ருஷ்யாவை வந்து தாக்கையா ! ' என்று அவர் கெஞ்சுகிறார் போலிருக்கிறது டோஜோவை. ஐயோ ! என்ன கதி வந்துவிட்டதய்யா ஹிட்லரே, உமக்கு ?

ஜப்பானியர் நைஸாக ஏதோ ஆங்காங்கே சிறு சிறு சண்டைகளில் மட்டும் ஈடு பட்டிருக்கிறார்கள். பெரிய சண்டை போட பலமேது ? நியூ ஜார்ஜியா தீவிலே முண்டா என்ற இடத்தை அமெரிக்கர்கள் முண்டிப் பிடித்து விட்டார்கள். ஒரு வருஷமாக ஜப்பானியரிட மிருந்த முக்யமான விமான நிலையத்துடன் கூடிய நகர் இது. இது கிடைத்ததால் ரபால் தீவிற்கு 200 மைல் அருகில் வந்தாயிற்று.

ஜப்பானியர் சாலமன்ஸ் தீவுகளையே காலி செய்து விட்டு, ஜாவாவிலே வந்து டேரா போடுவார்கள் போலிருக்கிறதாம். அங்கே, சௌரபாயாவிலே, சிங்கப்பூரையும் தோற்கடிக்கக்கூடிய துறைமுக மொன்றைக் கட்டியிருக்கிறார்களாம். அவர்களுக்கு பர்மாவைப் பற்றிய பயம் அதிகமாகிவிட்டாப் போலிருக்கிறது. அதனால் தான் அங்கே நிறையப் படைகளைக் கொண்டு குவிக்கிறார்கள் போலிருக்கிறது. குவிக்கட்டும், குவிக்கட்டும், எல்லாம் கோவிந்தா ஆவதற்குத் தானே !

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் ஆகஸ்ட்டு 20, வெள்ளிக்கிழமை [இதழ் 33

## விமான யுத்தத்தில் முழு வெற்றி

ஜெர்மன் விமானப் படை தோற்றுவிட்டது. ஆகாய விமான யுத்தத்தில் முழு வெற்றி பெற்றோம். நாம் உண்மையிலேயே வென்று ஒரு வருஷமாகிறது. ஆகாய விமானங்களின் உதவி யில்லாமலேயே போராட ஜெர்மன் படைகள் கற்றிருக்கின்றன. யுத்தம் முடிகிற வரை நமது விமான பலம் ஓங்கிப் பெருகிக் கொண்டிருக்குமானாலும், நாமும் அப்படிப் போராடக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இரண்டு மாதங்களுக்கு மத்திய தரைக்கடலில் மிகச் சிறந்த பருவம். இந்தப் பருவம் இன்னும் இரண்டு மாதங்களுக்கு இருக்கும். நம்மாலான எல்லா வகைகளிலும் நேச நாட்டுப் படைகளுக்கு இப்போது உதவி செய்வோம். அதனால், நம்மீதே அவர்கள் அளவுகடந்து சார்ந்திருக்கலாகாது.

இங்கிலீஷ் கால்வாய், ரஷ்யா போன்ற சில இடங்களில், தாம் ஏதோ விமானப் போராடுவது போலப் பாவனை செய்கிறார்கள் ஜெர்மானியர்கள். அவர்கள் வீணுக்கும் இயந்திரங்கள் மிக மிக அதிகம். அவர்களுடைய விமானிகளுக்கும் போராட வேண்டும் என்னும் உணர்ச்சி குறைந்து கொண்டு வருகிறது.

இத்தாலியர்களுக்கு இனியும் போராடக் கூடிய வலிமை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், அவ்வளவு கடுமையாக நாம் அவர்களைத் தாக்கி விட்டோம். இனியும் அப்படியே தாக்கிக் கொண்டிருப்போம். அடுத்த இரண்டு மாதங்கள் பல ஆட்டங்கள் காட்டுவதற்கு சிறந்த பருவமாகும்.

—விமான மார்ஷல் சர் ஆர்தர் கானிங்ஹாம், சிசிலியில் ஒரு நேச நாட்டு தளத்திலிருந்து ஆகஸ்டு மாதம் 16-ம் தேதி கூறியது.

# நாலு வருடப் போர் நடத்திேனும்!

இராகம்—உமாபரணம் தாளம்—ஆதி 1/2 இடம்

பல்லவி

நாலு வருடப் போரை நடத்திவிட்டோம்—பகை
நாட்டினரை அடக்கிக் கிடத்திவிட்டோம் (நாலு)

அனுபல்லவி

மேலும் ஜயம் நமக்கே மேவும் சொன்னேன் இதைக்கேள்
காலும் ஓடிந்தே யோடிக் கவிழ் வார் நம் பகைப்பேடி (நாலு)

சரணங்கள்

1 பாலும் பழமிருந்த பாரினில் நாம் வருந்தத்
தோலின் உள்ளே யிருந்த தூய ரத்தம் அருந்தக்
காலன் என ஜனித்தான் கடையன் ஹிட்லர் இனித்தான்
கவிழ்ந்திடவும் குனித்தான் காசினி யோர் பிழைத்தனர் (நாலு)

2 நேச நாடுகள் எங்கும் நிறைந்த வெற்றியே பொங்கும்
நாசி நாடுகள் மங்கும் நாசநாடாய முங்கும்
மோச முஸோலினியே முறிந்தழிந்தான் இனியே
மாசடையும் ஜர்மனியே மடிந்தொழியும் தனியே (நாலு)

3 ஜப்பான் எனுங் கொடிய நிப்பான் நாடு மடியத்
தப்பாது காண் படியத் தடுமாறியும் ஒடிய
எப்பாலும் நேசப் படை ஏறியழித்தே தடை
அப்பாலும் வெற்றியடைந் தாளும் உலகினிடை (நாலு)

# சிசிலி கரையில் இந்திய கப்பற் படையின் வீரம்

## புயற் காற்றையும் லட்சியம் செய்ய வில்லை

இந்திய கப்பற் படைகள் இப்போது மத்திய தரைக் கடலில் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. வடாப்பிரிக்கத் துறைமுகங்களிலிருந்து படைகளையும் 'சப்ளை' களையும் ஏற்றிக் கொண்டு கிளம்பும் படைகளுக்குத் துணைக் கப்பல்களாக இவை இப்போது வேலை செய்கின்றன. இந்தக் கப்பல்கள் ஒன்றி லிருந்து ஒருவர் எழுதுவதாவது:—

"சென்ற சில நாட்களாக இந்தியக் கப்பற் படையைச் சேர்ந்த தோர் கப்பல் அச்சு நாட்டு நீர் மூழ்கிக் கப்பல்களை சிரெனெய்கா என்னும் ஆபத்தான பகுதியில் வேட்டை யாடிக் கொண்டிருக்கிறது. மற்ெருரு கப்பல், ஒரு 'சப்ளை' கப்பல் கூட்டத்திற்குக் காவலாகப் போய், அந்தக் கப்பல் களைக் கொண்டு போய்ச் சேர்த்தது. நான் அந்த யுத்தக் கப்பல்களில் இரண்டாவது கப்பலில் இருந்தேன். ஆகவே எனக்கு எல்லா விவரங் களையும் நேரில் காணச் சந்தர்ப்பங் கிடைத்தது. அந்தக் கப்பல்களில் ஒன்று கூடச் சேதமாக வில்லை யென்று உறுதியாக நான் கூறுவேன். அவற் றிற்குக் காவலாகப் போன யுத்தக் கப்பல்கள் மிக மிக எச்சரிக்கையோ டிருந்தன வாகையால், எதிரி விமானங்கள் எதுவும் செய்ய முடியாமற் போயிற்று. வழி நெடுக எதிரிகளின் நீர் மூழ்கிக் கப்பல்கள் தொல்லைகள் வெகு அதிகமாயிருந்ததாகவும், எதிரி விமானங்கள் இந்த 'சப்ளை' கப்பல் கள போவதைக் கண்டிருக்க வேண்டு மென்றும் அவ்வப்போது செய்தி கள் வந்து கொண்டுதா னிருந்தன.

நாங்கள் சிசிலி துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த பொழுது, நிலா மறையும் வேளை. அப்போது எதிரி விமானங்கள் எங்கள் கப்பல்களைத் தாக்க முயற்சித்தன. துறைமுகத்திலேயே எங்கள் கப்பல்களை மூழ் கடித்து விட வேண்டு மென்பது அவர்களுடைய எண்ணம். பிரிட்டிஷ், இந்தியன், கிரேக்க யுத்தக் கப்பல்களி லிருந்து விமான எதிர்ப்புப் பீரங்கி கள் பலமாக எதிர்த்துத் தாக்கின. கடைசியாக அந்த விமானங்கள் கண்ட படி வெடி குண்டுகளை எறிந்து விட்டுத் தான் போயினவே யொழிய, நம் கப்பல்களில் ஒன்றைக் கூட அவற்ருல் தாக்க முடியவில்லை.

நான் பாலத்தி லிருந்தேன். எல்லாப் போர்க் கப்பல்களும் வானத்தை நோக்கிச் சுட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அன் றியும் நம் கப்பல்களை எதிரி விமானங்கள் துறைமுகத்தி லிருந்த வியா பாரக் கப்பல்களை கண்டு கொள்ள ஒட்டாத படி, புகையைக் கிளப்பி விட்டுக் கொண்டே இருந்தன. இந்தியப் போர்க் கப்பல்களில் தகுந்தபடி விமான எதிர்ப்புப் பீரங்கிகள் அமைக்கப்பட்டிருந்தன. அதிலிருந்த கப்பற் படை யினரும் அதைத் திறமையுடன் உபயோகித்தனர். காலை 4 மணி முதல் அருணோதய வேளை வரை, இடை விடாது நூற்றுக் கணக்கான முறை இந்தியக் கப்பல்களி லிருந்து பீரங்கிகள் சுட்டுத் தள்ளிக் கொண்டிருந்தன. இந்தக் கப்பலுக்கு மேலே விஷப்புகை அரணாக அமைக்கப்பட் டிருந்தது. எனவே எதிரி விமானங்கள் அருகிலிருந்து தாக்க முடியாமல். மிகவும் உயரப் பறந்து வெடிகுண்டுகளை எறிந்தன. ஆனால் அக்குறிகள் தவறி விட்டன. கப்பலின் மேல் எதுவும் விழ வில்லை. எதிரி விமானங்களைத் தூரத்திலே இருக்கும்படி செய்த இக்கப்பல் மாலுமிகள் எதிரி விமானங் களி லொன்றைச் சுட்டு வீழ்த்தி விட்டார்கள்.

இப்படித் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கையிலும், விமானத் தாக்குதல் களும் நீர் மூழ்கிக் கப்பல் தாக்குதல்களும் இந்தக் கப்பல்களுக்கு நேரத் தக்க பல சந்தர்பங்கள் ஏற்பட்டன. அப்போதெல்லாம் நம் கப்பற் படை யினர் தற்காப்பிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தனர். அதாவது, மொத்தப் படையில் பாதிப் பேர்கள் காவல் புரிந்து கொண்டிருக்க, மற்ற பாதிப் பேர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள் என்று தான் அர்த்தம். அவசியம் நேர்ந்தால் அத்தனைப் பேர்களும் துள்ளி எழுந்து தம் கடமை களை நிறை வேற்றுவார்கள். எதிரிகளைக் கண்டு பிடிக்கும் இயந்திரங்க ளெல்லாம் நிரந்தரமாக அமைக்கப்பட்டு வேலை செய்யப்பட்டும் வந்தன. இந்தக் கப்பல்களுக்கு மேலே சதா காலமும் பிரிட்டிஷ் விமானப் படை வட்ட மிட்டுக் கொண்டிருந்தது.

அச்சுப் நாட்டுப் படைக ளோடு போராடி, தற்காலக் கப்பற் போராட்டத்தில் நல்ல அனுபவம் அடைகிறதற்குத் தமக்குக் கிடைத்த சிறந்த சந்தர்ப்பம் பற்றி நேச நாட்டுப் படையினர் பெருமை கொள்ளுகிருர்கள். இனியும் இப்படிப்பட்ட பல சந்தர்ப்பங்கள் கிடைக்கு மென்று எதிர்பார்க்கிருர்கள். மத்திய தரைக் கடலில் திடீரென்று புயற் காற்றுக்கள் கிளம்பி விடுவ துண்டு. என்ருலும், இந்த பருவந் தான அங்கே போராடுவதற்கு மிகவும் ஏற்ற பருவம். முதன் முதல் இத்தாலியைத் தாக்க ஆரம்பித்துப் புறப்பட்ட போது, முதற் கட்டத்திலேயே புயல் கிளம்பி விட்டது. அப்போது 'சப்ளை' கப்பல்களுக்குத் துணைக் கப்பலாக வந்து கொண்டிருந்தது ஒரு இந்தியக் கப்பல். அது வடாப்பிரிக்காவி லிருந்து புறப்பட்டுப் போகும் வழி யில், கடும் புயலுக்கு உள்ளாக நேர்ந்தது. அப்படி யிருந்துங் கூட, எல் லாக் கப்பல்களும், குறிப்பிட்டுத் திட்டமிட்டிருந்த வேளையில் வந்து சேர்ந்து விட்டன.

அது முதல், நம் கப்பல்கள் அங்கு மிங்கும் போய்க் கொண்டு தானிருக் கின்றன. போர் முனையின் முன்னணியிலிருக்கும் போர் வீரர்களுக்கும் 'சப்ளை' கள் வழங்கிக் கொண்டிருக்கின்றன. நம் படை வீரர்கள் போர்க் களத்தில், மிகவும் மகிழ்ச்சி யோடு இருக்கிருர்கள்.



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| விமான யுத்தத்தில் முழு வெற்றி .. | 1 | அடிமேல் அடி வாங்கி நகர்ந்த அச்சு அம்பி .. | 6 |
| பாட்டு: நாலு வருடப் போர் நடத்திேனும் .. | 2 | தொழிலாளர் பகுதி: லண்டனில் இந்தியர்களுக்கு வசதி நிதி .. .. .. | 8 |
| சிசிலி கரையில் இந்திய கப்பற் படையின் வீரம் .. .. .. .. | 2 | கூட்டுறவாளர்களுக்குச் சோதனை .. .. | 9 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | செலனை யுத்தக் காட்சி சாலை .. .. | 10 |
| தலையங்கம்: குவெபெக் மகாநாடு .. | 4 | பொறுக்கு மணிகள் .. .. .. | 11 |
| படம்: ஹிட்லர் கதி என்ன? .. .. | 5 | ஒரே திணறல் .. .. .. .. | 12 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**முண்டா வீழ்ச்சி**

பிரிட்டிஷ் கப்பற்படையின் தலைமை நிர்வாகியாக விளங்குபவர் மிஸ்டர் ஏ. வி. அலெக்சாந்தர். இவர் சௌதாம்டன் என்னும் ஊரில் சென்ற 15-ம் தேதி ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது:—

"ஐரோப்பாவில் அச்சுப் படைகளை நாம் அடியோடு அழித்த போதிலும், கடைசியாக அவர்களை நாம் கைதிகளாகப் பிடித்தபோதிலும், நமது புகழொளி உலகமெங்கும் வீசியபோதிலும் கூட, ஒரு விஷயத்தை நாம் மறந்துவிடாது, ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். கீழக் கோடியிலுள்ள கொடுங்கோலனை வெல்லுகிற வரை, நம்முடைய யுத்த முயற்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும்."

கீழக் கோடியில் சில சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவற்றைக் கொண்டு யுத்தப் போக்கு ஜப்பானியர்களுக்கு விரோதமாகத் தான் இருக்கிறதென்று தெளிவாகத் தெரிகிறது. ஜார்ஜியா தீவில், முண்டா விமான தளம் எதிரிக்கு மிகவும் முக்கியமானது. அது இப்போது நம் கைக்கு வந்துவிட்டது. யுத்தப் போக்கு ஜப்பானியர்களுக்குச் சாதகமா யில்லை என்பதற்கு இது ஒரு சான்று. இந்த நேசநாட்டுப் படைகள் விமானங்களிலிருந்து தாக்கியதைப் போல, வேறெந்த விடத்திலும் தாக்கியதே யில்லை யென்று சொல்லலாம். இத்துடன் கஹிலி, வைலா, பெய்ரோகோ ஆகிய ஜப்பானிய 'சப்ளை' போகும் பாதையிலுள்ள கேந்திர ஸ்தானங்களையும் விமானங்களிலிருந்து தாக்கினேம். இப்படித் தாக்கிய விமானங்கள் 50, 100, 200, 250 ஆகிய கூட்டங் கூட்டமாகச் சென்று தாக்கின. ஜப்பானியர்களோ ஒரே சமயத்தில் 30 அல்லது 40 விமானங்களுக்கு மேல் அனுப்ப முடிய வில்லை. அவர்கள் மிகக் கடுமையாகத் தாக்கிய ரெண்டோவா மேலேயுங் கூட 75 முறைகளுக்கு மேல் விமானங்கள் பறக்க முடியவில்லை.

ஹெண்டர்சன் விமான தளத்தை விட்டு விரட்டப்பட்டவுடனே, ஜப்பானியர்கள் முண்டா விமான தளத்தைக் கட்டி முடித்தார்கள். இதை இப்போது தாக்குவது, தாக்குதல் போராட்டத்தின் முதற் கட்டமாகும். இதை யடுத்து கொளம்பங்கரா தீவிலுள்ள வைலா விமானதளம் தாக்கப்படும். இது கூலா வளைகுடாவிற்கு அக்கரையில் 12 மைல் தூரத்தில் இருக்கிறது. வைலாவும் முண்டாவும் நேசநாட்டினர் வயப்பட்டு விட்டால், பசிபிக் போராட்டத்தில் கஹிலி, புயின், கீடா முதலிய இடங்கள் தாக்கப்படும். அப்போதுதான் பூகெய்ன்வில்லாவை மூவகைப் படைகளும் ஏகோபித்துத் தாக்கக்கூடும். பூகெய்ன்வில்லா நியூஜார்ஜியாவிற்கு 150 மைல் வடமேற்கிலும், உட்லாக் தீவிற்கு வடகிழக்கே 250 மைல் தூரத்திலு மிருக்கிறது. இதை உட்லார்க் தீவை நேசநாட்டினர் ஜூன் மாதம் 30-ம் தேதி கைப்பற்றிக் கொண்டனர்.

கடலில் நேசநாடுகளுக்கு ஆதிக்கம் ஏற்பட்டு விடாதபடி தடுக்கவும், அவர்களுடைய போக்குவரவுகளைத் தடை செய்யவும் வேண்டி ஜப்பானியர்கள் சாலமன் தீவுகளுக்குத் தம் கப்பற் படைகளை அனுப்புவார்களா? அனுப்ப மாட்டார்கள் என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்ருல், ஜப்பான் விமானங்களை விட, அதிக விமானங்கள் நேசநாட்டாருக்கு இப்போதிருக்கின்றன; அன்றியும், ஜப்பானிய விமானிகளை விட, நேசநாட்டு விமானிகள் மிகுந்த திறமைசாலிகளா யிருக்கின்றனர். சென்ற வருஷம் நவம்பர் மாதம் சாலமன் தீவுகளில் விமானத் தாக்குதல் நடந்தன் பயனாக, 2 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கிவிட்டன. அது முதல் அந்தப் பகுதியில் எதிரி போர்க் கப்பல் ஒன்று கூட தலை காட்டவே யில்லை. முண்டா விமான தளத்தை நேசநாட்டுப் படைகள் தகுந்தபடி பயன்படுத்திக் கொண்டால், எதிரிக் கப்பல்கள் இந்தப் பக்கமே தலை காட்ட முடியாமற் போய் விடும்.

**குடால்கனல் போர் முறை: விமானத் திறமைச் சிறப்பு**

குடால்கனலில் எந்தப் போர் முறையைக் கையாண்டு வெற்றி பெற்ருேமோ அதே முறையைக் கையாண்டு தான் முண்டா விமான தளத்தையும் கைப்பற்றினேம் என்பது கவனிக்கத் தக்கது. ஹெண்டர்சன் விமான தளத்தை ஜெர்மானியர்கள் இழந்த போது, நியூஜார்ஜியாவின் வடமேற்கு முனையில் அதற்கு 180 மைல்களுக்கு அப்பால், ஒரு புதிய விமான தளத்தைக் கட்டினார்கள். இதற்குத் தான் முண்டா முனை என்று பெயர். இங்கிருந்து அமெரிக்க விமானப் படைகள் புதிதாகக் கைப்பற்றிய தளத்தை தாக்கலா மென்று நினைத்தார்கள். இந்த முயற்சியில் அவர்கள் தோல்வி யடைநதார்கள். ஏனென்ருல் நேசநாட்டு விமானத் தாக்குதல்களைச் சமாளிக்க அவர்களால் முடிய வில்லை. திரும்ப ஹெண்டர்சன் விமான தளத்தைப் பிடிக்கும் முயற்சியில் ஜப்பானியர்கள் முண்டாவிலிருந்து கிளம்பிப் போய் அதை நாசஞ் செய்து விடவேண்டு மென்று ஆசைப் பட்டார்கள். முடிவில் முண்டாவிற்குத் தான் அநத கதி நேர்ந்தது.

ஜப்பானியர்கள் ஹெண்டர்சன் விமான தளத்தின் பக்கவாட்டுகளில் வந்து சிறுகச் சிறுக இறங்கித் தாக்கி விடலா மென்று நினைத்தார்கள். இவர்கள் எண்ணம் பலிக்க வில்லை. ஏனென்ருல், அமெரிக்க கீழ்ப் பாய்ச்சல் பாம்பர் விமானங்களும், மோட்டார் டார்பிடோ படகுகளும் குடால்கனலைச் சுற்றி இடை விடாது காவல் செய்து கொண்டிருந்ததனல், ஜப்பானியப் படைகள் அங்கே வந்து இறங்க முடியாது போயிற்று. அந்தத் தீவில் தம் விமான பலத்தை நிலை நாட்டிக்கொண்ட பிறகு, நேசநாடுகளின் பெரும் கப்பற்படைகள் தருவிக்கப்பட்டன. ஆகவே குடால்கனல் மேலும் உறுதி செய்யப்பட்டது. கடைசியாக, தம் சாமான்கள் வருவதற்கு வழி யில்லாமற் போகவே, ஜப்பானியர்கள் அத்தீவை விட்டு வெளி யேறவேண்டிய தாயிற்று.

முண்டாவிலும் ஏறக்குறைய இது போலவேதான் நடைபெற்றது. இங்கே நேச நாடுகளுக்கு ஒரு வசதி யிருக்கிறது: முதலாவதாக விமான தளங்களிலிருந்து கிளம்பும் விமானங்கள் ஆகாயத்தில் பாதுகாப்பளிக்கும். இந்த விமான தளங்களில், பெரிய பாம்பர் விமானங்களும் அதிகமாயிருந்தன. ரெண்டோவா தீவில் நேசநாட்டுப் படைகள் இறங்கிய சில மணி நேரத்தில் ரெண்டோவா துறைமுகத்திலிருந்து கடலில் 7 மைல்களுக்கு அப்பாலுள்ள முண்டா துறைமுகத்தை கப்பற் படைகள் கடுமையாகத் தாக்கின. ஆகவே இந்த கேந்திர ஸ்தானத்தை இலகுவில் பிடிக்க முடிந்தது.

**தீவிற்கு தீவு தாவுதல்: இரண்டு முக்கிய அம்சங்கள்.**

ஒரு தீவிலிருந்து மற்ெருரு தீவிற்குப் பாய்ந்து போராடும் யுத்த தந்திர முறையை தென்மேற்குப் பசிபிக் போராட்டத்தில் நேசநாட்டார் கையாண்டார்கள். இதனல் வெற்றி கிடைத்தது. இந்த வெற்றிகளுக்கு இரண்டு காரணங்கள் உண்டு. நேசநாட்டுத் தரைப் படைகள் போருக்

(7-ம் பக்கம் பார்க்க.)

யுத்த சஞ்சிகை
வார வெளியீடு
மலர் III] 1943-ம் ஆகஸ்ட்டு 20உ. [இதழ் 33

# குவெபெக் மகாநாடு

குவெபெக்கில் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டும் பிரிட்டிஷ் முதன் மந்திரி சர்ச்சிலும் சந்தித்தனர். இன்னும் சந்தித்துப் பேசிக் கொண்டுதான் இருக்கின்றனர். இத்தாலியை எப்படிச் சரணடையச் செய்ய வேண்டும் ? ஜெர்மனியின் கொட்டத்தை எப்படி ஒடுக்க வேண்டும் ? ஜப்பானின் அட்டகாசத்தை எப்படி அடக்க வேண்டும் ? அடிமைப்பட்ட நாடுகளை எப்படி மீட்க வேண்டும் ? உலக மக்கள் இனிது வாழ எப்படி அடி கோல வேண்டு மென்பது பற்றி அவர்கள் கலந்து பேசுகிறார்கள் என்று எதிர் பார்ப்பது தான் நியாயம்.

இரண்டு பெரிய நேச நாடுகளின் நிர்வாகங்களின் தலைவர்கள் இவர்கள். மற்றொரு நேச நாட்டின் தலைவர் தான் மார்ஷல் ஸ்டாலின். ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் இதற்கு முன்பு 6 முறை சந்தித்திருக்கின்றனர். ஆனால் ஒரு முறையாவது மார்ஷல் ஸ்டாலின் இம்மகா நாடுகளுக்கு வரவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பது பற்றி பின்னர் கவனிப்போம். இந்த ஒரு விஷயத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, ஜெர்மன் ரேடியோக்கள் மித்திர பேதம் செய்யத் தலைப்படுகின்றன. ருஷ்யா மீது பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் நம்பிக்கையில்லையாம் ! அது போலவே, பிரிட்டன் மீதும் அமெரிக்கா மீதும், ருஷ்யாவிற்கு நம்பிக்கை யில்லையாம் ! இது சுத்தப் பொய். சென்ற மே மாதம் வாஷிங்டனில் நடைபெற்ற மகா நாட்டிற்கே ஸ்டாலினைத் தருவிக்க வேண்டுமென்று ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் பெரிதும் முயன்றார்கள். தன் நாட்டில், "வாழ்வதா சாவதா ?" எனத்தக்க, கடும் போர் நடந்து கொண்டிருப்பதால், தான் வருவதற்கு இயல வில்லை என்று கூறி தன் வருத்தத்தை ஸ்டாலின் அறிவித்திருந்தார். இது மிகவும் பொருத்தமான காரணம். இன்றும் நிலைமை மாறிவிட வில்லை. பல இடங்களில் ரஷ்யர்கள் வெற்றி பெற்றுக் கொண்டு வந்த போதிலும், ஜெர்மானியர்களின் கொட்டம் இன்னும் ஒடுங்க வில்லை. அது ஒடுங்குகிற வரை, தான் வேறெதிலும் சிந்தையைச் செலுத்த முடியாது என்று ஸ்டாலின் கூறுகிறார். ஆகவே அவர் குவெபெக் மகா நாட்டிற்கு வரக் கூட வில்லை. இதைக் கொண்டு கட்டடம் கட்டுகிறது ஜெர்மன் ரேடியோ. இந்தப் பிரசாரத்தை வெளி நாடுகளில் தான் நடத்துகிறார்கள். தம் ரேடியோ மூலமாக இந்த மகா நாடு நடை பெறுவதைப் பற்றிய செய்தியே ஜெர்மனியில் யாரும் தெரிந்து கொள்ள முடியாதபடி தடுத்திருக்கிறார்கள். இந்த மகா நாட்டைப் பற்றியே, ஜெர்மனியர்களுக்குத் தெரியா தென்றால், இதற்கு மார்ஷல் ஸ்டாலின் வந்ததும் வராததும் அவர்களுக்கு எப்படி தெரியக் கூடும் ? அவர்கள் இதைத் தெரிந்து கொள்ளக் கூடாது என்பது தான், ஹிட்லர் எண்ணம். அவர்கள் இது பற்றி தெரிந்து கொள்ளுவார்களானால், என்ன நேரும் என்று சற்று கவனிப்போம்.

முசோலினி தன் நாட்டை விட்டு ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது. இச் செய்தியை ஜெர்மன் மக்கள் அறிந்து கொண்டார்கள். அதனால் அவர்களுடைய மனோ பலம் குன்றி யிருக்கிறது. இதிலேயே அவர்கள் நிலை பெரிதும் தடுமாறி யிருக்கும். இப்போது மகத்தான பலம் வாய்ந்த அமெரிக்க நாடும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் கலந்து பேசுகிற தென்றால் அவர்கள் பெரும் பீதி கொள்ளத் தான் செய்வார்கள். ஜெர்மன் மக்கள் பீதி கொண்டால், ஹிட்லரும் அவருடைய சகாக்களும் என்ன பாடுபடும்படி நேரு மென்று அவர்களுக்குத் தெரியும். அதனால் தான் இந்த உண்மையை ஜெர்மன் மக்களுக்கு அறிவிக்காம லிருக்கிறார்கள்.

மார்ஷல் ஸ்டாலின் மகாநாட்டிற்குப் போகாவிட்டாலுங் கூட, அவ்வப்போது நடை பெறும் விவாதங்களைத் தெரிந்து கொண்டு தான் இருக்கிறார். இது தான் ஜெர்மானியர்களுக்குப் பெரும் பீதியை யுண்டாக்குகிறது. சென்ற 13-ம் தேதி பி.பி.சி. வானொலி நிலையத்திலிருந்து தன் சொற்பொழிவை ஒலி பெருக்கிய மிஸ்டர் ஜேம்ஸ் பெர்கூசன், "இருந்த இடத்திலேயே தன் வேலைகளைச் செய்து முடிக்கக் கூடியவர் ஸ்டாலின் ; நீங்களும் நாமும் கூட அப்படிச் செய்யலாம்" என்று குறிப்பிட்டார்.

இதற்கு முன் 5 மகா நாடுகள் இந்த யுத்த சம்பந்தமாக நடை பெற்றன. ஒவ்வொன்றிலும் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின. முதலில் "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்" என்னும் கப்பலில் 1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் சந்தித்துப் பேசி அத்லாண்டிக் பிரகடனத்தை வெளியிட்டனர். இரண்டாவதாக 1941-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில், பெர்ல் துறைமுக சம்பவத்திற்குப் பிறகு வாஷிங்டனில் சந்தித்தார்கள். மூன்றாவதாக, 1942-ம் வருஷம் ஜூன் மாதம் கப்பல் வியாபார நிபுணர்களைக் கலந்து பேசும் பொருட்டுக் கூடினார்கள். நான்காவதாக 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் கசப்ளாங்காவில் கூடி, "எதிரிகள் பரிபூரண சரணாகதி யடைய வேண்டும்" என்று முடிவு கட்டினார்கள். ஐந்தாவதாக, 1943-ம் வருஷம் மே மாதம் வாஷிங்டனில் தென் மேற்கு பசிபிக் போராட்டத்தை குறித்து பீல்ட் மார்ஷல் வேவலுடன் கலந்து பேசும் பொருட்டுக் கூடினார்கள். இப்போது கூடுவது ஆறாவது முறை. இதனால் பல முக்கியமான தீர்மானங்கள், ஏற்படு மென்று தெரிகிறது, அமெரிக்க யுத்த சபையும், பிரிட்டிஷ் யுத்த சபையும் கூடி விவாதிக்கும் மகா நாடல்லவா இது. கசப்ளாங்கா மகாநாட்டில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தைப் புனராலோசனை செய்யக் கூடு மென்று தெரிகிறது. சமீபத்தில் ஜெனரல் அயிசினோவரிடமிருந்து ரூஸ்வெல்டுக்கும் சர்ச்சிலுக்கும் ஒரு செய்தி வந்திருக்கிறதாகத் தெரிகிறது. இத்தாலியை உடனே தாக்குவதற்கு நேச நாட்டுப் படைகள் ஆயத்தமா யிருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறா ரென்று பலமான வதந்தி உலவுகிறது. ஆகவே, இன்னும் சில மணி நேரத்தில் இத்தாலி தாக்கப் படவுங் கூடும்.

நிற்க, இம் மகா நாட்டிற்கு வந்திருக்கிறவர்கள், இன்னும் யாரையோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம். அது ஒருக்கால் ஜெனரல் அயிசினோவராக இருக்கலாம். அல்லது இத்தாலிய சமரச தூதர்களது வரவை அவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கவுங் கூடும். இந்த மகா நாட்டில் மிகவும் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். இந்தத் தீர்மானங்களால் உலகம் இனிது வாழ நல் வழி பிறக்கும் என்று எதிர் பார்க்கலாம்.



## ஹிட்லர் கதி என்ன ?



சென்ற வாரம் மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ரூஸ்வெல்ட்டும் வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கையில் 90 நாட்களில் 90 ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை மூழ்கடித்து விட்டதாகக் குறிப்பிட்டனர். ஜெர்மன் நீர்மூழ்கிக ளெல்லாம் இப்படி நாச மடைந்தால், ஹிட்லரின் கதி என்ன ?

# அடிமேல் அடி வாங்கி நகர்ந்த அச்சு அம்மி

## சிசிலியில் ஹிட்லருடைய சபதம் சபலமாய்ப் போதல்!

### " ஐரோப்பியக் கோட்டை வலிமை "யைப் பற்றிய பிரசாரம் கைவிடப்பட்டதன் தத்துவம்,

### முசலினி வீழ்ச்சி—ரோம் நிலைய மௌனம்—கோப்பல்சின் தடமாட்டம்— பர்லின் பழைய பாடத்தில் ஒரு ஏடு.



" எதிரியால் தாக்கமுடியாத ஐரோப்பியக் கோட்டை"க்குள் நேசத்துருப்புகள் சென்ற காதை,—முதல் பாகம் :— நேசத்துருப்புகள் சிசிலித் தீவின் கரையோரங்களில் இறங்கி, பீரங்கிகள், டாங்கிகள், வெடிகுண்டுகள் முதலியவற்றை கப்பலிலிருந்து தரைக்கு விரைவில் கொண்டு வரும் காட்சியை இப்புகைப் படத்தில் காணலாம்.

ஆகஸ்ட்டு மாதம் 11-ம் தேதி சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து " இரட்டை நாவு " என்ற தொடரில் **டி. ஏ. வி. நாதன்** அவர்கள் செய்த பிரசங்கம் பின்வருமாறு :—

" அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் " என்று சொல்லுவார்கள். அதைப்போல, நேசத் துருப்புகளின் இடைவிடாத் தாக்குதல்களின் பயனாக, அச்சு அம்மி நகர்ந்து கொண்டே போகிறது. முக்கியமாக சிசிலி போர் முனையில் அச்சுத் துருப்புகள் பின் வாங்கிச் செல்லுகின்றன.

" சிசிலி யுத்தம் முடிந்து விட்டது ; அதில் நாம் வெற்றி பெற்று விட்டோம்."

என்று எட்டாவது பட்டாளத்துடன் இருக்கும் " ராய்ட்டர் " பிரத்தியேக நிருபர் தெரிவிக்கிறார். எட்டாவது பட்டாளத்தின் மாபெருந் தளகர்த்தர், ஜெனரல் மண்ட்காமரி,

" சிசிலியிலுள்ள ஜெர்மானியர்களுக்கு முடிவு காலம் கிட்டிவிட்டது. அவர்களுடைய நாட்கணக்கு நிர்ணயித்தாய் விட்டது "

என்று குறிப்பிடுகிறார். இன்று காலைச் செய்தியில், எட்னா எரிமலைப் பிரதேசத்தின் வடகோடியான ரண்டாசோ என்ற இடத்துக்கருகில் நமது துருப்புகள் சென்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ராண்டோசோவைப் பிடித்து விட்டால், ஜெர்மன் துருப்புகள் அபாயத்தில் சிக்கிக் கொள்கின்றன. ஸ்டாலின்கிராடிலும், டுனீசியாவிலும் அவர்களுக்கு நேர்ந்த விபத்து, சிசிலியிலும் நேரக்கூடும்.

ஜெர்மன் துருப்புகளுக்கு நேரக்கூடிய விபத்து, தம்முடைய பிரசாரத்துக்கு நேரக்கூடாது என்பது டாக்டர் கோபல்சினுடைய நோக்கம். அதனால் தான் அவர் ஒரு புதிப் பிரசாரத் திட்டத்தை தமது இலாகாவுக்கு வகுத்திருக்கிறார். ஜெர்மன் துருப்புகள் தப்பி ஓடுவதற்கு இயலாமல் அகப்பட்டுக் கொண்டாலும், தம்முடைய பிரசாரப் போக்கு மாத்திரம் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் இப்போது பிரசாரம் செய்து வருகிறார்.

### கோபல்சின் முன்னெச்சரிக்கை.

" சிசிலி போகும் முன்னே, அச்சுப் பிரசாரம் போகும் பின்னே,"

என்று இந்த நிலைமையைக் குறிப்பிடலாம். " சிசிலியை இழந்துவிடப் போகிறோம் ; அதற்கு முன்னோ அல்லது பின்னோ, இத்தாலி நம்மைக் கைவிட்டு விடப் போகிறது. ஆகையால் இப்போதிருந்தே நம்முடைய பிரசாரத்தைப் பழுது பார்த்துக் கொள்ள வேண்டும்," என்று ஹிட்லருடைய பிரசார மந்திரி முன்னெச்சரிக்கையாய் விட்டார். " வந்த பின் காப்பதை விட வருமுன் காப்பது " விசேஷமல்லவா? ஆகையால், தம்முடைய பிரசாரத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டார். " அசைக்க முடியாத ஹிட்லருடைய ஐரோப்பிய கோட்டை "யைப் பற்றிய பிரசாரம், இப்போது மெதுவாகக் கைநழுவ விடப்பட்டது. அதற்கு பதிலாக, " மிக வலிமையுள்ள ஜெர்மன் கோட்டை "யைப் பற்றிய பிரசாரம் மும்முரமாக நடக்கிறது. 1941-ம் ஆண்டு டிசம்பர் 11உ,

" எதிரியால் தாக்க முடியாதபடி ஐரோப்பியப் போர்முனையை நான் அசைவிலாததாகப் பலப்படுத்தப் போகிறேன்,"



என்று ஹிட்லர் சபதம் கூறினாரல்லவா? சிசிலியில் நாம் பெற்ற வெற்றிகளுக்கு பிறகு, இந்தச் சபதம் சபலமாய் போய்விட்டது. ஆகவே, அவருடைய பிரசார மந்திரி, ஜெர்மன் கோட்டையின் வலிமையைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார். டாக்டர் கோபல்சின் பிரதம சிஷ்யர், லார்டு ஹா-ஹா கூறுகிறார் :—

" இன்றையத்தினம் ஜெர்மனி தன்னுடைய சொந்த பலத்தையே நம்பி யிருக்கிறது ; கடைசியில் வெற்றி அடைவதற்கு இந்த பலம் போதுமானது என்று நம்புகிறது."

### அச்சுப் பிரசாரத்தின் மனோபாவம்.

இதிலிருந்து அச்சுப் பிரசாரத்தின் மனோபாவம் எப்படிப்பட்டது என்று விளங்குகிறது. " நாளடைவில் ஜெர்மனி எப்படியும் தனித்திருந்து தான் போராடும்படி வரும், அதற்கு இப்போதிருந்தே அடிகோலிக் கொண்டு வந்தால் அவமானமாவது குறையும் " என்ற மனோ நிலை இதில் புலப்படுகிறது. இந்த விஷயம் இன்னும் விளக்கமாக ஒரு செக்கோஸ்லோவாக் பத்திரிகையில் காணப்படுகிறது. ஜெர்மானியர்களுடைய மேற் பார்வையில் நடத்தப்படும் அப்பத்திரிகை ஜூலை 28-ந் தேதி பின் வருமாறு கூறுகிறது :—

" ஜெர்மனி தன்னுடைய சொந்த நாட்டில் மிகுந்த பல முடையதாக விளங்குகிறது. ஜெர்மன மக்கள் ஒற்றுமையாய் இருக்கும் வரையில், ஜெர்மன் பட்டாளம் ஐரோப்பிய முக்கிய ஸ்தானங்களை கைப்பற்றி யிருக்கும் வரையில், அதை ஒன்றும் செய்ய முடியாது. அந்த ஸ்தானங்களாவன : நார்வேயின் கடற்கரைகள், பிரான்சின் அட்லாண்டிக் கடற்கரை, ரைன் நதியின் கீழ் பாகங்கள், பிரென்னர் கணவாய், டான்யூப் வாயிற்படிகள், பால்கன்ஸ பிரதேசத்தில் சில இடங்கள்.

### பிரென்னர் கணவாய்க்குப் பின்வாங்குதல்

இதில் ஒரு விஷயத்தை நாம் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். அதாவது, பிரென்னர் கணவாய் ஜெர்மன் கோட்டையின் எல்லையாகக் குறிப்பிடப்பட்ட விஷயம். சிசிலி யுத்தம் இன்னும் தீர்மானமாக முடிவு பெற வில்லை ; இத்தாலியை நேச தேசத்தார்கள் இன்னும் வீழ்த்த வில்லை —இதற்குள் பிரென்னர் கணவாய்க்கு அச்சுப் பிரசாரம் பின் வாங்கிச் சென்று விட்டது. இந்தக் கணவாயில் தான் ஹிட்லரும், முசோலினியும் சந்தித்து, சதியாலோசனை செய்வது வழக்கம். இதைப்பற்றி அச்சு வானொலி நிலையங்கள் ஆடம்பரப் பிரசாரம் செய்வதுண்டு. அந்த நாள் போய்விட்டது! முசோலினி இத்தாலியின் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப் பட்டதிலிருந்து, ஹிட்லருக்கு வலது கை போய்விட்டது போலாய் விட்டது. டாக்டர் கோபல்சுக்குத் திடீரென்று வாயடைத்துப் போய்விட்டது. ஜூலை 26-ந் தேதி, உள் நாட்டு மக்களுக்கு வழக்கமாக ஒலிபரப்பும் மூன்று ஜெர்மன் பிரசாரங்கள் ரத்து செய்யப்பட்டன. முசோலினி விலக்கப்பட்டு 30 மணி நேரத்துக்குப் பிறகும், பர்லின் அதைப் பற்றி விளக்கமாக ஒன்றும் சொல்லவில்லை. உடல் நலிவின் காரணமாக அவர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார் என்று மாத்திரம் பர்லின் கூறிற்று. டாக்டர் கோபல்சின் மனோ நிலை அந்த திடுக்கிடும்படியான சம்பவத்தால் குலைந்து விட்டது என்பது தான், இதற்குக் காரணம்.

### பிரசார நிலையங்கள் பேசாமடந்தைகளாதல்

ஜூலை 26-ந் தேதி ரோம் நிலையம் " மௌனம் கலக நாஸ்தி " என்று பரம சாந்த நிலையை அடைந்தது. அதனுடைய செய்தி ஒலிபரப்புகள், அதாவது, இந்துஸ்தானி, பாரசீகம், அராபி மொழிகளில் செய்யும் ஒலிபரப்புகள், ரத்து செய்யப்பட்டன ; அவைகளுக்குப் பதிலாக, இசைத் தட்டு சங்கீதம் முழங்கப்பட்டது! இதில் நாம் குறிப்பாகக் கவனிக்க வேண்டியது அச்சு நிலையங்களின் பிரசார இயல்பு. அதாவது, திடீரென்று திடுக்கிடும் சம்பவங்கள் நடந்தால், அச்சு நிலையங்கள் பாடு திண்டாட்டமாய் விடுகிறது ; வாய் ஓயாமல் பிரசாரம் செய்யும் நிலையங்கள் திடீரென்று பேசாமடந்தைகளாய் விடுகின்றன. ஆனால் பின்னால் வரப் போகும் தோல்விகளின் மணி யோசையை, டாக்டர் கோபல்ஸ் முன்னமேயே காது கொடுத்துக் கேட்டால், அச்சு நிலையங்களின் பிரசாரப் போக்கு வேறு விதமான முறையில் திருப்பப்படுகிறது. சற்று கால அவகாசம், டாக்டர் கோபல்சினுடைய மூளை வேலை செய்வதற்கு மிக அவசியம் போலத் தோன்றுகிறது! இத்தாலியிலும், சிசிலியிலும் நடந்த சம்பவங்கள் இதை 'உள்ளங்கை நெல்லிக் கனி'யைப் போலக் காட்டுகின்றன.

சிசிலியிலும் நேச நாட்டினர் முழு வெற்றி பெறப் போகிறார்கள் என்ற நிலைமையை டாக்டர் கோபல்ஸ் ஜூலை 26-ந் தேதியிலேயே, மறை பொருளாக, ஒப்புக் கொண்டு விட்டார். அதனால் தான் அன்றையதினம், பர்லின் தன்னுடைய ஆங்கில ஒலிபரப்பிலும், இந்துஸ்தானி ஒலிபரப்பிலும், நேச நாட்டினருடைய நஷ்டத்தைப் பற்றி மிகை படுத்திக் குறிப்பிட்டது.

" சிசிலி சண்டைகள் சம்பந்தமாக, ஏராளமான நஷ்டங்களை, முக்கியமாகக் கப்பல் நஷ்டங்களை, அமெரிக்கர்களும், பிரிட்டிஷாரும் அடைந்தார்கள்,"

என்று பர்லின் கூறியிருக்கிறது. இதனுடைய நோக்க மென்ன? வெற்றி பெற்றாலும், நஷ்டக் கணக்கு அதிகம் என்றால், இத்தாலியர்களுக்கு ஒரு விதமான சந்தோஷமும், நேச தேச மக்களுக்கு சற்று மன அதைரியமும் உண்டாக்க வேண்டு மென்பது தான். ஆனால், யுத்தத்தில் பல தோல்விகளை யடைந்து களைத்த இத்தாலியர்கள் இதனால் மனக் கிளர்ச்சி யடையப் போவதில்லை ; நேச நாட்டினர், பர்லின் தப்புக் கணக்கினால், மனச் சோர்வு அடையப் போவதுமில்லை.

### சிசிலி வெற்றிகளும், ரஷ்யாவுக்கு உதவியும்

சிசிலியைப் பற்றி, பர்லின் மற்றொரு விஷயத்தைக் கூறி யிருக்கிறது. ஜூலை 22-ந் தேதி செய்யப்பட்ட ஆங்கில ஒலிபரப்பில்,

" சிசிலியில் நடக்கும் போராட்டத்தால் ரஷ்யர்களுக்கு யாதொரு வித அனுகூலமும் இல்லை,"

என்று பர்லின் வியாக்கியானம் செய்திருக்கிறது. இது பழைய பாடத்திலுள்ள ஒரு ஏடு. நேச நாட்டினரிடையே அபிப்பிராய பேதமும், மனத் தாங்கலும் உண்டாக்க அச்சு நிலையங்கள் அடிக்கடி முயற்சி செய்து வந்துள்ளன. ஆனால் வாய் வருந்தச் செய்த முயற்சிக்குப் பலனொன்றும் கிடைக்கவில்லை. ரஷ்யர்களுக்கு அனுகூலம் இல்லை என்றல்லவா பர்லின சொல்லிற்று? இதைப்பற்றி ரஷ்ய அபிப்பிராயம் என்ன? டாஸ் என்ற ரஷ்யச் செய்தி நிலையத்தின் லண்டன் பிரதம நிருபரான மிஸ்டர் எம். ஆன்ட்ரூ ரோட்டி ஸ்டீன் சிசிலிப் போரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். சமீபத்தில் லண்டனில் நடந்த அயல் நாட்டு நிருபர் சங்க விருந்து விழாவில் பேசியபோது,

" ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஆரம்பிக்க, ஒரு பெரிய முயற்சியில் நேசதேசத்தார்கள் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள். இச் செய்தியைக் கேட்ட ரஷ்ய வீரர்களெல்லாம் மகிழ்ச்சியடைகிறார்கள்,"

என்று அவர் கூறியிருக்கிறார். இதைவிட ரஷ்யர்களுடைய அபிப்பிராயத்தைப் பற்றி வேறென்ன வேண்டும்?

### பர்லினின் நாணமில்லாத சமாதானம்.

சிசிலி போராட்டம் ரஷ்யர்களுக்கு மகிழ்ச்சியை மாத்திரம் அளிக்கவில்லை ; ரஷ்யப் போராட்டத்துக்கு ஒரு விதத்தில் சிறந்த அனுகூலமும் செய்திருக்கிறது. ஜெர்மன் ராணுவ பலத்தின் முழு வேகமும் ரஷ்யாவின்மேல் பாய்வதை, நேசதேசத்தினர் ஒருவாறு தடுத்திருக்கிறார்கள். ஹிட்லரின் பிரம்மாண்டமான தளமாகிய ஓரெலை ரஷ்யர்கள் இப்போது பிடித்திருக்கிறார்கள் ; தங்களுடைய போர்த் தளமாகிய குர்ஸ்கைப் பிடிக்க யத்தனித்த ஜெர்மனியர்களை முறியடித்திருக்கிறார்கள் ; வேனிற்கால தாக்குதலில் ஜெர்மனியர்கள் தான் வெற்றி பெற முடியும் என்ற புரட்டுக் கதையை, விரட்டி யடித்தார்கள். ஆகஸ்ட்டு 5-ந் தேதி, ஓரெல் தோல்வியைப் பற்றி பர்லின் ஜெர்மன் மக்களுக்கு என்ன கூறியிருக்கிறது என்று நினைக்கிறீர்கள்?

" பாதுகாப்புச் சண்டையின் போக்கில், ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின்படி, ஓரெல் வளைவுப் பிரதேசத்திலிருந்து ஜெர்மன் துருப்புகள் விலகி வந்து விட்டன,"

என்று பர்லின் நாணமில்லாத சமாதானம் கூறுகிறது. இன்றையச் செய்தியிலிருந்து, கார்கவ் என்ற ஜெர்மனிய பெருந்தளமும் சீக்கிரத்தில் கைப்பற்றப்படலாம் என்று தெரிகிறது. ரஷ்ய செஞ்சேனையின் ராணுவ வலிமையும், மனவுறுதியும்தான் இதற்கு முக்கிய காரணம் என்று கூறினாலும், சிசிலியில் நடந்த போராட்டமும் ரஷ்ய வெற்றிகளுக்கு ஒரு துணைக் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

சிசிலி உருவத்தில் ஒரு காலடியைப் போலிருக்கிறது. அந்த காலடியில் கால்வைத்த நேசதேசத்தினர் ஹிட்லருடைய கோட்டையை அடிமேல் அடிவைத்து நொறுக்கி வீழ்த்த முற்படுவார்கள் என்பது திண்ணம். இதற்குத் திட்டம் வகுப்பதற்காகவே மிஸ்டர் சர்ச்சில் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். அவருடைய அமெரிக்க விஜயம் டாக்டர் கோபல்சுக்கு மேலும் அச்சமுறுத்தும் என்பதில் ஐயமில்லை.

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி.)

குக் கிளம்பும் போதெல்லாம், நேசநாட்டு விமானப் படையும் அவற்றைப் பாதுகாக்க மேலே ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டே எதிரிகள் அணுக ஒட்டாதபடி தடுத்துக் கொண்டிருந்தன. இரண்டாவதாக, நேசநாட்டார் தாக்கப் போகும் தீவைச் சுற்றிலு முள்ள கடலில், நேசநாட்டுக் கப்பற்படையைக் கொண்டு தமக்கு ஆதிக்கத்தை அதிகப் படுத்திக் கொண்டனர். இந்த இரண்டு வகைகளிலும் நேசநாட்டுப் படைகள் எவ்வளவு உறங் கொண்டிருக்கின்றனவோ, அவ்வளவு விரைவாக வெற்றியும் கிடைக்கும். சென்ற வருஷம் சாலமன் தீவுகள் எல்லாம் ஜப்பானியர் கைவசந் தான் இருந்தன. அதற்கு வெகு தூரத்திற்கு அப்பால்தான் நேசநாட்டு விமான தளங்கள் இருந்தன. குடால்கனலிலிருந்து மோர்ஸ்பி துறைமுகம் 850 மைல் தூரம், க்வீன்ஸ்லந்து 1,000 மைல், நியூ ஹெப்ரிடிஸ் 6 0 மைல், இவ்வளவு தூரத்தையும் காவல் செய்யக் கூடிய விமானப் படையை அமைப்பது முடியாத காரியம். பலமான எதிரி யுத்தக் கப்பல்கள் அப்போது சாலமன் தீவுப் பகுதிகளில் கடுமையாகக் காவல் புரிந்து கொண்டிருந்தன.

எதிரிகள் வசமுள்ள ஒரு விமான தளத்தையாவது நேசநாடுகள் பிடுங்கியாக வேண்டும். நேசநாடுகள் கடற்படையில் ஆதிக்கம் பெறவேண்டுமானால், கண்டிப்பாக இது அவசியம். ஆகவே ஒரு தளத்தைக் கைப்பற்றிக் கொள்ளுவதில் எத்தனை ஆபத்துக்கள் நேர்ந்தாலும் அத்தனையும் சமாளிக்கத் தான் வேண்டி யிருந்தது. அங்கே அமெரிக்கக் கப்பற்படை போய் இறங்குவதற்கு பந்தோபஸ்து செய்ய வேண்டிய பொறுப்பு நேசநாட்டுக் ' க்ரூய்சர் ' களுக்கு ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பொறுப்பை அவை திறமையோடு நிறைவேற்றின. இதை நிறைவேற்றும் போது ஜப்பானியர்கள் சுட்டதன் பயனாக, மூன்று அமெரிக்க ' க்ரூய்சர் 'களும் ஒரு ஆஸ்திரேலிய ' க்ரூய்'சரும் மூழ்கடிக்கப்பட்டன. இது மகத்தான தியாகந்தான். என்றாலும், இந்தத் தியாகம், செய்யத் தக்கது தான்.

## தொழிலாளர் பகுதி

# லண்டனில் இந்தியர்களுக்கு வசதி நிதி

## சென்னை யளித்த உதவி—நம் வேலைக்கு ஊக்கந் தருகிறது

### இந்திய மாலுமிகள் விடுதிக்கு இந்தியா "ஹை கமிஷனர்" விஜயம்

*லிவர்பூல் நகரத்தை யடுத்து பர்க்கன்ஹெட் இருக்கிறது. இங்கே யிருக்கும் ' மியர் ஹால் ' என்னு மிடத்தில் தான் இந்திய மாலுமிகள் விடுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது 9 எக்கர் நிலத்தில் அமைந்திருக்கின்றது. தற்காலத்திற்குத் தேவையான எல்லா வசதிகளும் இங்கே இப்போது அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டனி லிருக்கும் எல்லா விடுதிகளிலும் மிகச் சிறந்த விடுதி இது தான். இந்த முயற்சியிலு ல் ஏற்படும் செலவுகளையும் அதை நடத்துவிக்கும் செலவும் கப்பல் காரர்களைப் பொருத்தது.. 'மியர் ஹாலின்' ஒரு தோற்றத்தை இப்படம் காட்டுகிறது.*



லிவர்பூரில் இந்திய மாலுமிகள் விடுதி.

இந்தியா ' ஹை கமிஷனராக ' லண்டனிலிருப்பவர் சர் சாமியல் ரங்கநாதம் அவர்கள். லண்டன் வானொலி நிலையத்தி லிருந்து அவர் ஆகஸ்டு மாதம் 10-ம் தேதி இந்திய மக்களுக்கு ஒரு பிரசங்கம் செய்தார். இந்தியர்களுக்கு வசதி நிதியார், இந்திய விமானிகள் விடுதிக்கு அளித்துள்ள உதவிகளைப் பற்றி அந்தப் பிரசங்கத்தில் அவர் குறிப்பிட்டார். சாம்ராஜ்யத்திலுள்ள பல துறைமுகங்களுக்கும் வந்து சேரும் இந்திய மாலுமிகளுக்கு, துணிகளும் மற்ற வசதிகளு மடங்கிய ஒரு 'பார்சலை'க் கொடுக்கிறார்கள் என்று கூறினார். சென்னை கவர்னர் யுத்த நிதியிலிருந்து 15,000 பவுன் இந்த லண்டன், இந்தியர்கள் வசதி நிதிக்கு அனுப்பி, இந்திய மாலுமிகளின் வசதிகளின் பொருட்டுச் செலவு செய்யும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ' இந்தியர்கள் வசதி நிதி 'க்குத் தலைவியார் ஸ்ரீமதி ப்ளாரென்ஸ் அமெரி. இவருடைய காரியாலயம் லண்டன், 'இந்தியா ஹௌஸ்' என்னுமிடத்தி லிருக்கிறது. இவர் முன் கூறிய 15,000 பவுனையும் வரப்பெற்றவுடன், மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் (சென்னை கவர்னர்) அவர்களுக்கு எழுதி யிருக்கும் கடிதத்தில்,

" தாங்கள் அனுப்பி யிருக்கும் இந்தத் தொகை, நாங்கள் மேற்கொண்டுள்ள இந்த வேலையில், எங்களை ஊக்குகிறது" என்று தெரிவிக்கிறார்.

இந்த நிதிக் கமிட்டியார், பிரிட்டனிலுள்ள இந்தியப் போர் வீரர்களுக்கும், வெளி நாடுகளில் யுத்தக் கைதிகளா யிருக்கும் இந்தியர்களுக்கும், எத்தனையோ வகைகளில் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள்.

### வேலை விவரங்கள்

1942-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் முடிய இந்தக் கமிட்டியார் செய்துள்ள பல வகை வேலைகளைக் குறித்தும் தம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் சுருக்கம் வருமாறு :

1942-ம் வருஷம் எப்ரல் மாதத்தில் ஐரோப்பாவில் அநேக மாலுமிகள் உள்பட 2 500 யுத்தக் கைதிகளான இந்தியர்களை, இந்த நிதிக் கமிட்டியார் பராமரித்திருக்கிறார்கள். வடாப்பிரிக்கப் போராட்டம் அதிகப்பட அதிகப்பட அந்த வெயிற் காலம் முழுதும் இவர்களுடைய எண்ணிக்கை அதிகப்பட்டுக் கொண்டே போனது. 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் 18 500 பேர்களுக்கு உதவி யளிக்கும்படியான அவசியம் நேரிட்டது. இதற்காக செப்டம்பர் மாதம் 7-ம் தேதி முதல், வாரந்தோறும் 20,000 உணவுப் பார்சல்கள் தயாரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தாரின் அனுமதி பெற்றார்கள்.

1942-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் இந்த எண்ணிக்கை மிகவும் அதிகம் என்று தெரிய வந்தது. ஆகவே, வாரந்தோறும் 15,000 உணவுப் பார்சல்களாகவும், 608 துணிப் பார்சல்களாகவும் இதைக் குறைத்தார்கள். 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 2-ம் தேதி இதை மேலும் குறைக்கக் கூடுமெனத் தெரிந்து, வாரந்தோறும் 10,000 உணவுப் பார்சல்களும் 400 துணிப் பார்சல்களுமாகக் குறைத்தார்கள்.

இதற்கு முன்பு தயாரித்து அதிகப்படியாக அனுப்பப்பட்ட பார்சல்கள் கையிருப்பில் வைத்துக் கொள்ளப்பட்டன. அவை வீணாக்கப்பட வில்லை.

மற்றொரு முக்கியமான முடிவும் செய்யப்பட்டது. அதாவது செப்டம்பர் மாதம் 7-ம் தேதி முதல், அனுப்பப்படும் பார்சல்களில் உள்ள துணிகள் 3 மாதங்களுக்குப் பதிலாக 6 மாதங்கள் வரை தாங்கத் தக்கவையா யிருக்க வேண்டும். மற்ற துணிகளும் 6 மாதங்களுக்குள் கிழியாதவையாகவே பார்சல் செய்யப்படுகின்றன.

1942-ம் வருஷம் எப்ரல் மாதம் 6-ம் தேதி முதல் 1943-ம் வருஷம் எப்ரல் மாதம் 3-ம் தேதி வரை 52 வாரங்களில், 544,388 விசேஷ இந்திய உணவுப் பார்சல்கள் ஜினிவாவிற்கு அனுப்பப்பட்டன.

ஒவ்வொரு பார்சலிலும் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் உணவுப் பொருள்கள் ஒவ்வொருவருக்கும் போது மானது. உணவு நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் தான் அவை ஒவ்வொன்றிலும் என்னென்ன வைத்துக் கட்டப்பட வேண்டு மென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பார்சலிலும் சாதாரணமாகக் கீழ்க்கண்டவை இருக்கும் :—

| | | |
|---|---|---|
| * மார்கரைன் | பிஸ்கோத்துகள் | காய்கறிகள் |
| * பால் | தேயிலை | டப்பியி லடைத்த பழங்கள் |
| சர்க்கரை | அரிசி | |
| இந்திய காய்த் தானிய வகைகள் | கறிமா | உப்பு |
| | * சாக்கொலேட் | சால்மன் மீன் |

* விட்டமின் சத்துக்கள் விசேஷமாகச் சேர்க்கப்பட்டவை.

இந்தப் பார்சல்களில் உள்ளவைகளை எல்லா இனத்தவர்களும் உண்ணலாம். இதில் சோப்பும் வைக்கப்பட்டிருக்கிறது.

'இந்திய வசதிகள் நிதி'யார் துணிகளுக்கு விலைகொடுத்து வாங்கி பார்சல்களாகக் கட்டி யுத்தக் கைதிகளாயுள்ளவர்களுக்கு அனுப்புகிறார்கள். 1942-ம் வருஷம் எப்ரல் மாதம் 6-ம் தேதி முதல் 1943-ம் வருஷம் எப்ரல் மாதம் 3-ம் தேதி வரை 23,162 பார்சல்கள் விநியோகிக்கும் பொருட்டு ஜினேவாவிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் 2 பார்சல்கள் போதும். சாதாரணமாக ஒவ்வொரு பார்சலிலும் கீழ்க்கண்டவை காணப்படும்.

| | | |
|---|---|---|
| துண்டு | கழுத்துப் பட்டை | தலைவார ' ப்ரஷ் ' |
| ஷர்ட்டு | கைக் ' க்ளவ்ஸ் ' | பென்சில் |
| வெஸ்ட் | ஜோடுகள் | பல்துலக்க ' பேஸ்ட் ' |
| கால் சட்டை | சீப்பு | க்ஷவர சோப் |
| 2 ஜதை மேல்ஜோடு | மெல்லுவதற்கு ஜவ்வு மிட்டாய் | பெல்ட் |
| சன்லைட் சோப் | | பூட்ஸ் கட்டும் கயிறு |
| போர்வை | க்ஷவரக் கத்தி | தையல் சாமான்கள் |
| குல்லாய் | பல்துலக்க ' ப்ரஷ் ' | ' கீடிங்ஸ் ' தூள் |

இந்த நிதியிலிருந்து தைலங்களும், சீக்கியர்களுக்குத் தேவையான விசேஷப் பொருள்களும் அனுப்பப்படுகின்றன. மற்ற பொருள்களை இந்தியாவிலிருந்தே செஞ்சிலுவைச் சங்கத்தார் நேர்முகமாக ஜினேவாவிற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

உணவுப் பொருள் பார்சல்களின் பேரிலும், துணிப் பார்சல்களின் பேரிலும் விசேஷக் குறிகள் போடப்படுகின்றன. இந்தப் பார்சல்கள் இந்தியர்களுக்கு மட்டுந் தான் விநியோகிக்கப்பட வேண்டு மென்பது தான் அந்த விசேஷக் குறியின் பொருள். இந்த பார்சல்கள் மொத்தமாகச் சேர்த்து அனுப்பப் படுகின்றனவே யொழிய, தனிப்பட்ட நபர்களுக்கென்று அனுப்பப்படுவதில்லை. இதற்குக் காரணங்கள் வருமாறு :—

(1) யுத்தக் கைதிகளை ஒரு முகாமிலிருந்து வேறொரு முகாமுக்கு மாற்றலாம்.

(2) மொத்தமாக வரும் பார்சல்களில் ஒரு பகுதி காணாமற்போய் விட்டால், மீதியுள்ளதை மற்ற முகாம்களிலுள்ளவர்களுக்குள் பகிர்ந்து கொள்ளலாம்.

(3) புது யுத்தக் கைதிகளின் பெயர்கள் லண்டனுக்குப் போய்ச் சேருமுன்னதாகவே இந்தப் பார்சல்கள் அவர்களுக்குக் கிடைக்கலாம்.

ஐரோப்பாவில் ஜெர்மனியர் வசமும் இத்தாலியர் வசமும் ஏறக் குறைய 14,000 யுத்தக் கைதிகள் இருப்பதாக இப்போது தெரிய வருகிறது. ஆகவே, 1943-ம் வருஷம் மே மாதம் 17-ம் தேதி முதல், வாரந்தோறும் 14,000 உணவுப் பார்சல்களும், 560 துணிப் பார்சல்களும் கட்டியனுப்பி விநியோகிக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### புத்தகங்கள்.

யுத்தக் கைதிகள் புத்தக சாலைகளுக் கென்று, ஒரு தொகையை, மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் உதவியுள்ளார்கள். இந்தத் தொகையில் ஒரு பகுதியை இந்தியக் கைதிகளின் புத்தகசாலைகளுக் கென்று ஒதுக்கிவிடும்படி 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் தெரிவித்தார். இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தார் ஏராளமான புத்தகங்களை லண்டனுக்கு அனுப்பினார்கள். அவற்றில் ஒரு பகுதி துரதிர்ஷ்டவசமாகப் போய்ச் சேரவில்லை. மற்றவை போய்ச் சேர்ந்தன. அவை ஜெர்மனியிலும் இத்தாலியிலும் இருக்கும் இந்திய யுத்தக் கைதிகளுக்கு அனுப்பப்பட்டன. அந்தப் பார்சல் ஒவ்வொன்றின் பேரிலும், அதில் எப்படிப்பட்ட நன்கொடை யிருக்கிறதென்று தெரிவிக்கும் பொருட்டு, வின்சர் அரண்மனைப் புத்தகசாலைத் தலைவர் கையொப்பம் காணப்படுகிறது. மன்னர்பிரானின் சொந்தப் பணத்தைக் கொண்டே இந்தப் புத்தகங்கள் வாங்கி அனுப்பப்பட்டன. மற்ற வகைப் புத்தகங்களும் கிடைத்த போதெல்லாம் அனுப்பப்பட்டன.

(9-ம் பக்கம் பார்க்க.)



# கூட்டுறவாளர்களுக்குச் சோதனை

(ராவ் பகதூர் ஜே. சி. ரயன் அவர்கள் எழுதியது.)

ஒரு நாள் என்னைப் பார்க்க ஒருவர் வந்தார். அவர் சொன்னார்: "நல்ல வேளையாக யுத்தக் கொடுமைகளுக்கு உள்ளாகாது தப்பினோம். இது வரை நம் நாட்டை எதிரிகள் தாக்கவில்லை. என்றாலும் இந்த யுத்த காலத்தில் உயிர் வாழ்வது மகா கஷ்டமா யிருக்கிறது. அரிசி கிடைப்பதில்லை; விறகு கிடைப்பதில்லை; சர்க்கரை கிடைக்கிறதில்லை. இன்னும் கூடிய சீக்கிரத்தில் எத்தனையோ பொருள்கள் நமக்குக் கிடைக்காமற் போகப் போகின்றன."

அந்தச் சமயம் என்னோடு ஒருவர் இருந்தார். அவர் திருவல்லிக்கேணி அர்பன் கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தினர். இவர் உடனே அவருக்கு விடையளிக்க ஆரம்பித்தார். அவர் கூறியதாவது :—

"ஐயா, தயவு செய்து எங்கள் திருவல்லிக்கேணி அர்பன் கூட்டுறவு சங்கத்திற்கு வந்து பாருங்கள். எங்கள் சங்கத்திற்கு 64 கிளைகள் இருக்கின்றன. எங்கள் தலைமைக் காரியாலத்திற்காவது, எந்தக் கிளைக்காவது போய்ப் பாருங்கள். உங்களுக்கு என்ன தேவையோ, அது அங்கே கிடைக்கும். தம் தேவைகளை அங்கே பெற்றுக் கொள்ள வேண்டு மென்பதற்காகத் தான், அதில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். அங்கத்தினர்களின் தேவைகளை விட இந்த யுத்த காலத்தில் நாட்டின் தேவை யல்லவா முக்கியம். ஆகவே, அங்கத்தினர்க ளல்லாதவர்களுக்குங் கூட, இங்கே பண்டங்கள் விற்கப்படுகின்றன. எங்கள் சங்கத்திற்கு அரசாங்கத்தார் பண உதவி செய்திருக்கிறார்கள். தாராளமாக உணவுப் பொருள்களை விற்கத் தகுந்தபடி அதிகமாக இருப்பு வைத்துக் கொள்ள அனுமதித்திருக்கிறார்கள். நாளைக்கே நீங்கள் அங்கே போய், உங்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ளுங்கள்," என்று சொல்லி விட்டு வெளியே போக எழுந்தார். அப்போது, அவர் தடுத்து,

"நல்லதையா ! என்ன விலைக்கு அரிசி விற்கிறீர்கள் ? ரூபாய்க்கு ஒரு படி விகிதமா ?"

"அல்ல ; அல்ல, அப்படி விற்பது திருட்டு விற்பனை யல்லவா ? எங்கள் ஸ்டோர்களில் அரசாங்கத்தார் விதித்திருக்கும் கட்டுப்பாட்டு விலைப்படி அதாவது ரூபாய்க்கு 2⅜ படி வீதம் விற்கிறோம். கூட்டுறவாளர்களாகிய நாங்கள் தொண்டு செய்கிறவர்களே யொழிய, கொள்ளை லாபம் சம்பாதிக்கிறவர்களல்ல. பிறர் செலவில் உயிர் வாழ்வதில் எங்களுக்கு நம்பிக்கை யில்லை. 'நம் கையைக் கொண்டே கரணம் போடுவதுடன், பிறருக்கும் உதவ வேண்டு மென்பது தான்' எங்கள் கொள்கை. இப்போது கூட்டுறவு பண்டக சாலைகள் நூற்றுக் கணக்கில் பெருகி விட்டன. இம் மாகாணத்தில் இப்போது 950-க்கு அதிகமான பண்டக சாலைகளிருக்கின்றன. இவை எல்லாம் பொது நோக்கம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டவை. யுத்த காலத்தில் பொது மக்கள் திருப்தியாக வாழும்படி நாம் கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தைரியம் கொஞ்சங் கூடக் குறையக் கூடாது. ஏதேனும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு விடுமானால், உணவுப் பொருள் நிலைமையைச் சமாளிக்க வேண்டி 34 கேந்திர ஸ்தானங்களில் கூட்டுறவு பண்டக சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. சரக்குகளை இங்கே அவர்கள் சேமித்து வைப்பதில்லை. கையிலுள்ள சரக்குகளை அவ்வப்போது செலவழித்து விட்டு, அதை ஈடு செய்து கொள்ள புதுச் சரக்குகளைக் கொள் முதல் செய்து கொள்ளுகிறார்கள். அப்போது தான் சரக்கு உளுத்துக் கெட்டுப் போகாது. புதிதாக விற்பனைக்குக் கிடைக்கும். இப்போது நீங்கள் கூட்டுறவாளரா யில்லை. இந்த இயக்கத்தில் நீங்களும் சேரலாம். கூட்டுறவாளராக நீங்கள் இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, பொது நோக்கோடு, கூட்டுறவு பண்டகசாலையார் உங்களுக்கு எப்போதும் உதவுவார்கள். இந்தப் பொது நோக்கத்தை ஈடேற்றுவதில் தான் கூட்டுறவாளர்களும் மற்றவர்களும் முனைந்திருக்கிறார்கள். ஒற்றுமைப் போர் முனையில் நாம் இருக்கிறோம். உள் நாட்டில் பொருளாதாரத் துறையிலுள்ள தேசியப் போர் முனை, இது தான்."

"அப்படியா ?" என்று வியந்து கேட்டார் புதிதாக என்னைக் காண வந்தவர். மேலும் கூட்டுறவாளர் கூறியதாவது :—"இது மட்டு மல்ல. உள்ளூரிலிருப்பவர்களுக்கு நாம் உதவுவது போலவே, வெளியே போர் முனைகளிலிருந்து நெருப்பையும் வெடி குண்டுகளையும் எதிர்த்து நின்று போராடிக் கொண்டிருக்கும் நம் படைகளுக்கும் உதவுகிறோம்."

"எப்படி உதவுகிறீர்கள் ?"

"இம்மாகாணத்தில் கைத்தறி நெசவாளக் கூட்டுறவு சங்கங்கள் 220 இருக்கின்றன. துணிகளும், காயங் கட்டுவதற்குப் பயன்படும் ' பாண்டேஜ்' துணிகளும், மற்ற வகைத் துணிகளும் இந்தச் சங்கத்தார் படையினருக்கு அனுப்புகிறார்கள். இது வரை, 10,000 துண்டுகள்; 20,000 கைக் குட்டைகள், 75,000 ' டஸ்டர் ' துண்டுகள் ஆக 20 லட்சம் கஜம் துணிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன."

இதைப் கேட்டவுடன் அவர் பெரிதும் ஆச்சரிய மடைந்தார். மேலும் அக் கூட்டுறவாளர் கூறியதாவது :—

"இது மட்டு மல்ல. இம்மாகாண முழுதுக்கும் விற்பனைச் சங்கம் ஒன்று சென்னையில் இருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களி லிருந்தும் மற்ற வியாபாரிகளிடமிருந்தும் நெய் 6¼ லட்ச ரூபாய்க்கு அதிகமாக வாங்கி, இராணுவ அதிகாரிகளுக்கு அனுப்பி யிருக்கிறார்கள்."

"இந்தத் தொகையை யார் கொடுத்தார்கள் ?"

"அரசாங்கத்தார் தான். இதற்குங் கூட, நாம் உதவி செய்திருக்கிறோம். ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திலும் பொது நன்மைக் கென்று ஒரு தொகையை ஒதுக்கி வைக்கிறோம். இந்தத் தொகையி லிருந்து கவர்னர் யுத்த நிதிக்குத் தாராளமாய் உதவி யிருக்கிறோம். இப்படிக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 60,000-க்கு அதிகமாயிற்று. இது மட்டுமன்றி, ' டிபென்ஸ் சேவிங்ஸ் கடன் பத்திரங்களிலும், டிபென்ஸ் சேவிங்ஸ் பத்திரங்களிலும் ' சேர்ந்து 85 லட்ச ரூபாய் போ டிருக்கிறோம். பாதுகாப்புக் கடனாக இம்மாகாண முழுதிலும் வசூலிக்கப்பட்ட தொகையில் இது ஆறில் ஒரு பங்கு ஆகும்."

"இவற்றை எதற்காகக் கொடுத்தீர்கள் ?"

"யுத்தத்தில் வெற்றி பெறவும், நம் பொது நோக்கம் ஈடேறவும் வேண்டும். இதற்குப் போர் முனையிலுள்ள நம் படையினருக்கு வசதிகள் இருக்க வேண்டியது அவசியம். ஆகையினால் தான் இவ்வளவு தொகை கொடுக்க வேண்டியது அவசியமாயிற்று.

கூட்டுறவாளர் இப்படிச் சொன்னதைக் கேட்ட அவர் ஊக்கங்கொண்டார். " நான் மத்திய கூட்டுறவு பாங்கியில் கொஞ்சம் பணம் போட்டு வைத்திருக்கிறேன். அதைத் திருப்பி வாங்க வேண்டியது அடுத்த வாரத்தில் தான். அதிலிருந்து டிபென்ஸ் கடன் பத்திரங்கள் கொஞ்சம் நான் வாங்கலாமா ?" என்று கேட்டார்.

கூட்டுறவாளர் :—அப்படியே வாங்கலாம். உங்கள் பணத்தைக் கொண்டு ' டிபென்ஸ் சேவிங்ஸ் கடன் பத்திரங்கள் ' வாங்கி விடும்படி பாங்கிக்கு எழுதி விடுங்கள். பிறகு ஒரு வாரத்தில் கூட்டுறவு இலாக்கா டிபுடி ரிஜிஸ்திரார் அவர்களிடமிருந்து ஒரு ரசீது அந்தத் தொகைக்கு வந்து சேரும். அத்துடன் டிபென்ஸ் சேவிங்ஸ் கடன் பத்திரங்களும் உங்களுக்குக் கிடைக்கும்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போது கோயமுத்தூரிலிருந்து ஒரு கூட்டுறவாளர் வந்து சேர்ந்தார். நாங்கள் பேசிக்கொண்டிருந்த விஷயங்களைக் குறித்து அவர் சுருக்கமாகத் தெரிந்து கொண்டார். உருளைக் கிழங்கு சாகுபடியைக் குறித்து நீலகிரியில், உருளைக்கிழங்கு விற்பனை சங்கத்தார் செய்துவரும் வேலைகளை அவருக்குத் தெரிவித்தீர்களா ? என்று எங்களைக் கேட்டார். மேலும் அவர் கூறியதாவது :—" நீலகிரியிலுள்ள உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு 4 லட்ச ரூபாய் பெறுமானமுள்ள எருவை, கூட்டுறவு சங்கங்கள் ' சப்ளை ' செய்திருக்கின்றன இந்த எருவைக் கொண்டு சாகுபடியாகும் உருளைக்கிழங்கு இராணுவத்திற்கும் பொது ஜனங்களுக்கும் பயன்படுகிறது. உருளைக் கிழங்கு சாகுபடியை விருத்தி செய்யும் பொருட்டு, சங்கத்தாருக்கு அரசாங்கத்தார் உதவியுள்ள விசேஷ உத்தியோகஸ்தர்களின் உதவியினால் தான் இதைச் சாதிக்க முடிந்தது. எங்கள் ஜில்லாவிலுள்ள சமபூமிகளில் பரந்த அளவில் சாகுபடி செய்வதற்குத் தகுந்தபடி பொருளுதவ பல சங்கங்கள் இருக்கின்றன. உணவுக்கான தானியங்கள், பழ மரங்கள், காய் கறிகள், முதலிய எல்லா வகை நல்ல சாகுபடிகளையும் விரிவாகச் செய்வதற்கு, கிராமக் கூட்டுறவு லேவாதேவிச் சங்கங்கள் இருக்கின்றன."

"பொது நோக்கம் எப்படி இதனால் நிறைவேறுகிறது ?" என்று கேட்டார் என்னை முதலில் காண வந்தவர்.

கூட்டுறவாளர் :—இப்போது தானே, உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை யென்று குறை கூறிக்கொண்டிருந்தீர்கள் !

" ஆம். "

"உணவுப் பொருள்கள் அதிகமாக சாகுபடியானால் இந்தக் குறைபாடு நீங்கிவிடுமல்லவா ?"

"அப்படியா ! பட்டணங்களிலும் கிராமங்களிலும் இருக்கும் கூட்டுறவாளர்களாகிய நீங்கள், இந்தப் பொது நோக்கத்திற்குப் பெரிதும் உதவுகிறீர்கள்."

கூட்டுறவாளர்கள் :—ஆம். உதவத் தான் செய்கிறோம். நாங்கள் பட்டணத்திலிருந்தாலும் கிராமத்திலிருந்தாலும், அல்லது எங்கிருந்தாலும் பொது நோக்கத்தை நிறைவேற்றுவதே எங்கள் கொள்கை. யுத்த காலத்தில் உற்பத்தியாளர்களும் அந்த உற்பத்திப் பொருள்களை உபயோகிப்பவர்களும் பரஸ்பர தொடர்புடையவர்கள். நாம் அனைவரும் ஒரு பொது நோக்கத்தைக் கொண்டிருக்கிறோம். அந் நோக்கம் போரில் வெல்வது தான். நம் கொள்கையில் மிகுந்த பற்றுதல் கொண்டு, நாம் வெற்றி பெறுவோமாக !

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

### இந்திய மாலுமிகள்

முற்கூறிய 52 வாரங்களில் பிரிட்டனில் தங்கியிருக்கும் வியாபாரக் கப்பல் படையைச் சேர்ந்த இந்திய மாலுமிகளுக்கு 27,298 துணி மூட்டைகள் கட்டி யனுப்பப்பட்டிருக்கின்றன. கப்பல்களில் வேலை செய்கிறவர்களுக்கும் கரைகளில் வேலை செய்கிறவர்களுக்கும், இவற்றை, ஹைகமிஷனரின் ' ஸ்பெஷல் இந்திய மாலுமிகள் வெல்பேர் ' உத்தியோகஸ்தர்களும், பொது ஸ்தாபனத் தொண்டர்களும் விநியோகித்தனர்.

இதே நோக்கத்திற்காக மாட்சிமை தங்கிய மகாராணியாரவர்கள் இந்த இந்திய மாலுமிகள் விடுதிகளுக்காக, கருணையுடன் கீழ்ங்கண்டவாறு உதவியிருக்கிறார்கள் :—

வேல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த ' ஸ்வான்சீ, நியூ போர்ட், கார்டிப் ஆகிய மூன்று துறைமுகங்களுக்குள்ளும் பகிர்ந்து கொள்ளும்படி 100 பவுன்.

பர்க்கன்ஹெட் மெர்ஸி மிஷன்சுக்கு வேண்டிய மரச் சாமான்களும், ஒரு கிராமபோன் பெட்டியும் வாங்க 40 பவுன்.

லிவர்பூலில் ' மியர் ஹாலு 'க்காகவும், அதில் நிறுவப்பட்டிருக்கும் இந்திய மாலுமிகள் சங்கத்திற்காகவும் 200 பவுன்.

சமீபத்தில் ஹல் துறைமுகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய மாலுமிகள் சங்கத்திற்கு 200 பவுன்.

அவன்மௌத் என்னுமிடத்தில் ஒரு புதிய மாலுமிகள் சங்கத்தை ஆரம்பிக்கப் போகிறார்கள். இதற்கு 200 பவுன் கொடுப்பதாக மாட்சிமை தங்கிய மகாராணியார் வாக்களித்திருக்கிறார்கள்.



இந்திய மாலுமிகள் சங்கத்தில் அவர்கள் உல்லாசமாக உட்கார்ந்திருக்கும் அறையின் ஒரு காட்சி.

# சென்னை யுத்தக் காட்சிசாலை

## நம் நாட்டின் முயற்சியை நேரில் காணலாம்



யுத்த காட்சிசாலையில் தீ யணைத்துக் காட்டப்பட்ட போது கூடியிருந்த ஒரு கூட்டம்.

சென்னை யுத்தக் காட்சி சாலை ஆகஸ்ட்டு மாதம் 27-ம் தேதி மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்களால் ஆரம்பிக்கப்படும். பிறகு அது 10 நாட்கள் வரை நடைபெறும். இதற்கு முன்பு 4 இடங்களில் இது போன்ற காட்சி சாலைகள் நடைபெற்றன. சென்ற மார்ச்சு மாதம் டில்லியில் ஒன்று நடைபெற்றது. பிறகு பம்பாயிலும், பெங்களூரிலும், திருச்சினுப்பள்ளியிலும் நடைபெற்றன. இந்தக் காட்சியை இது வரை சராசரி 20 லட்சம் பேர்கள் பார்த்திருக்கலா மென்று கணக்கிடுகிறார்கள். அதாவது நாளொன்றிற்குச் சராசரி 50,000 பேர்கள் பார்த்திருக்கலாம். அடுத்த காட்சிசாலை இந்தூரில் அடுத்த அக்டோபர் மாதத்தில் நடைபெறும். பிறகு நவம்பர் மாத மத்தியில் நாகபுரியில் நடை பெறும்.

மக்களின் அறிவைப் பெருக்கும் பொருட்டுத் தான் இந்தக் காட்சி ஏற்பாடாகி யிருக்கிறது. இந்தக் காட்சியின் நோக்கம், நம்மிடம் ஏராளமான யுத்தத் தளவாடங்கள் இருக்கின்றன என்னும் எண்ணம் பொது மக்கள் மனத்தில் உண்டாக வேண்டு மென்பதல்ல. ஆனால், பயன்படத்தக்கத் தொழில்களில் இந்தியர்கள் பயிற்சி யளிக்கப்படுகிறார்கள்; இந்தத் தொழில்கள், சமாதானம் ஏற்பட்ட பிறகுங் கூட, அத் தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு உற்ற துணையாக விளங்கும் என்பதை விளக்கும் பொருட்டுத் தான், இக்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அன்றியும் இதன் முக்கியமான நோக்க மென்ன வென்றால், நம் நாட்டின் யுத்த முயற்சிகளைக் குறித்து, பொது மக்கள் நன்றாகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் கண்ணால் பார்த்த மாத்திரத்திலேயே உணர்ந்து கொள்ளத் தக்கபடி செய்து, பொது மக்களின் மனோ நிலை குலையாதிருக்கும்படிச் செய்ய வேண்டியது தான். இது பற்றி மாறுபட்ட நோக்கம் யாரேனும் கொள்ளுவார்களானால், அது, பாரபட்சத்தினால் உண்டானதாகும்.

இந்தக் காட்சிசாலை 5 முக்கியமான பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கிறது:—இந்திய கப்பற்படை, இந்திய தரைப்படை, இந்திய விமானப்படை, தொழில் இலாக்கா, சிவில் இலாக்கா.

**இந்திய கப்பற்படை**—இதன் முக்கியமான காட்சிப் பொருள்களாவன:—'டார்பிடோ' படகுகள், சுரங்க வெடிகள் (மூழ்கடிப்பது உள்பட) கப்பற்படைப் பீரங்கிகள் ('பெங்கால்' என்னும் கப்பலில் ஏற்பட்டிருந்த 12 பௌண்டர் உள்பட) மூழ்கித் தாக்குதல், காற்றின் போக்கைக் காட்டும் கருவிகள், யுத்தத் தளவாடங்கள், பல வகை யுத்தக் கப்பல்கள். ஒரு இந்திய யுத்தக் கப்பலின் முற் பகுதி பம்பாயில் கட்டப்பட்டது. அதில், பாலம், பீரங்கிகள் முதலியவை எல்லாம் இருக்கின்றன. இதுவும் நிரந்தரக் காட்சிப் பொருளாக அந்த இடங்களுக்கு எடுத்துப் போகப் படுகிறது.

**இந்திய தரைப் படைகள்**—இதில் பல வகை டாங்கிகள் (ஜெனரல் லீஸ்' டாங்கிகளும், 'வாலன்டைன்' டாங்கிகளும், ஆயுதந் தாங்கிய அநேக கார்களும், விமான மேற்றிப் போகும் கார்களும், பல வகை விமான எதிர்ப்பு பீரங்கிகளும், இருக்கின்றன. அன்றியும் தொழிற்சாலை லாரிகளும், பாலங்கள் அமைக்கும் சாமான்களுடைய லாரிகளும் இருக்கின்றன. அங்கே, போலி யுத்தமொன்று நடைபெறும், அப்போது பீரங்கிகள் வெத்து வேட்டுகள் சுடும். இந்தப் போலிப் போராட்டம் நாள் தோறும் நடைபெறும். இந்தக் காட்சி சாலையில் "பாலைவனக் காட்சி" என்று ஒன்றிருக்கிறது. எதிரிகளிடமிருந்து கைப்பற்றியவற்றை இங்கே அழகாக அமைத்திருக்கிறார்கள். அன்றியும் சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ், சிக்னல்கள், உள்ளூரில் தண்ணீர் கொண்டு போகிறதற்கான வசதிகள் செய்கிறவர்கள் ஆகியோரின் தனித்தனி பகுதிகளும் உண்டு.

**இந்திய விமானப்டை**—ஒரு 'ஹரிகேன்' போர் விமானமும், இந்தியாவில் செய்யப்பட்ட விமானமும் பல முறை காட்டப்பட்டிருக்கின்றன. இவற்றிற்குப் பதிலாக, பிரிட்டன், மால்டா, பர்மா ஆகிய நாடுகளில் போராடி வெற்றி பெற்ற பௌன்ஹீம் பாம்பர் விமான மொன்று வைக்கப்பட்டிருக்கிறது. மற்றொன்று "ஹாப்பிட்டி" விமானம். இது விசேஷமாகத் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அன்றியும் ஒரு முழு 'ஹரிகேன்' விமானமும், நொறுக்கப்பட்ட பாம்பர் விமான மொன்றும் இந்தக் காட்சி சாலையின் நிரந்தரப் பொருட்களா யிருக்கின்றன. ஒரு போலி விமான நிலையமும், நன்றாக வேலை செய்யக் கூடிய 'ப்ளென் ஹீம்' விமானம் ஒன்றும் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. இவை மட்டுமன்றி, 'பலூன்கள்', 'பாரசூட்டுகள்', 'காமராக்கள்' வெடி குண்டுகளைக் கண்டுபிடிப்பது, பீரங்கி மேடைகள் முதலியவையு மிருக்கின்றன.

### தொழில் இலாக்கா

தொழில் இலாக்காக்காரர்கள் ஒரு மிஷின் தொழிற்சாலை போன்ற தொன்றை அமைத்திருக்கிறார்கள். தொழில் பயிற்சிபெறும் மாணவர்கள் இங்கே வேலை செய்வார்கள். அந்தந்த தொழில்களில் எப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற தென்று அவர்களுக்கு விளக்கிக் காட்டப்படும். அன்றியும் கைத்தொழிற் பயிற்சித் திட்டப்படி பயிற்சி யளிக்கப்படும் மற்ற எல்லா வகைத் தொழில்களும் அங்கே அமைக்கப்பட்டிருக்கும்.

### சிவில் பகுதி

இந்தக் கண் காட்சியில் சிவில் பகுதியில் கீழ்க்கண்டவை காணப்படும்:—செஞ்சிலுவைச் சங்கம், சப்ளை இலாக்கா, தேசீயப்போர்முனை, பெண்கள் தொண்டர் படை, பெண்கள் உதவிப்படை (1), உள்நாட்டுப் பாதுகாப்புப்படை, உணவுப் பொருட்களை அதிகமாக பயிர் செய்ய வேண்டும் என்னும் இயக்கம், உள்ளூர் கைத்தொழில்கள் முதலியன.

இந்தக் காட்சி சாலை ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போகும்போது, காட்சிப் பொருட்களின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்த முயற்சிக்கப்படுகிறது. சென்னைக் காட்சி சாலையில் விசேஷமான புதிய அம்சங்களாவன:—(1) மூவகைப் படைகளும் சேர்ந்து போராடுதல், விமான பல்டிகள், ஒரு போலி நகரம், ஒரு போலிப் பண்ணை (மோட்டார் சைக்கில், குதிரை) சவாரி வேடிக்கைகள்.

இங்கே தேசீயப் போர்முனையாளர்கள் ஒரு சினிமாக் கொட்டகையை அமைத்திருக்கிறார்கள். அங்கே சினிமாக் காட்சிகள் நடைபெறும். ஐலந்து மைதானத்தில் நாள்தோறும் இரண்டு பட்டாளங்களின் பாண்டு வாத்தியக் கச்சேரிகள் நடைபெறும். காட்சிக்கும், அதற்குள்ளிருக்கும் எல்லாக் கடைகளுக்கும் இலவசமாகப் போகலாம்.



# பொறுக்கு மணிகள்

### அலங்கோல ஆட்டம்

லாரல், ஹார்டி என்ற இருவரும் இரு பிரபல தமாஷ் நடிகர்கள். வெகு காலத்திற்கு முன்பாக இவர்கள் நடித்த படம் ஒன்றிலே ஒரு வேடிக்கை இருந்தது. அவர்கள் ஒரு கோட்டைக்குள் சிக்கிக் கொண்டு விட்டார்கள். வெளியே விரோதிகள் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். லாரல், ஹார்டி இருவரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் போன இடம் தெரியவில்லை. அவர்களிருவரிடமும் இருந்த தோட்டாக்களோ மிகக் குறைவு. இருவர் மட்டும் சுட்டால், 'ஓ! இவ்வளவுதானா இந்தக் கோட்டையில் இருப்பவர்களின் பலம்' என்று விரோதிகள் எண்ணி விடுவார்கள் அல்லவா? அதற்கு லாரலும், ஹார்டியும் ஒரு தந்திரம் செய்தார்கள். அங்கே ஒரு ஏணி இருந்தது. அதிலிருந்த இரு நீண்ட கம்புகளில் ஒன்றை அகற்றி விட்டார்கள் அப்பால் பாக்கி உள்ள கம்பை அவர்களிருவரும் தூக்கிக் கொண்டு கோட்டைச் சுவர் அருகே உள்புறம் உலாவலானார்கள். ஏணிப் படிகளின் முனைகள் முனை முனையாக நீட்டிக்கொண்டிருப்பது வெளியிலிருந்து பார்ப்பதற்கு ஏதோ துப்பாக்கி முனைகள் மாதிரி இருந்தது. கோட்டைக்குள் ஏகப்பட்ட வீரர்கள் பாரா கொடுப்பது போலிருந்தது. அதைக் கண்டு, கோட்டையை முற்றுகை போட வந்தவர்கள் பயந்தே போனார்கள்.

ஆனால் அவர்களில் ஒருவன் தந்திரமாக கோட்டைக்குள் புகுந்து பார்த்த பின் தான், குட்டு வெளியாயிற்று. உள்ளே யெல்லாம் ஒரே மோசமாக இருப்பது தெரிந்தது.

இந்தக் கதை இப்பொழுது எதற்கு என்றால், ஹிட்லரின் கைவசப்பட்ட ஜெர்மனி, வெளி உலகிற்கு ஏதோ பிரமாதமான சக்தி போல் தோன்றுகிறது. 1939, 1940-ல் வேண்டு மானாலும் அது அப்படி இருந்திருக்கலாம். ஆனால் இன்று அப்படி நினைப்பதற் கில்லை. இது வரை எவ்வளவோ நஷ்டங்களும், சேதங்களும் ஏற்பட்டும், அது இன்னமும் வாலை ஆட்டிக் கொண்டிருக்கிறதே; அதனிடம் இன்னமும் ஏராளமான சக்தி இருக்கிறாப் போலிருக்கிறது என்று வெளியில் இருப்பவர்கள் நினைக்கலாம். ஆனால் கொஞ்சம் ரகசியமாக ஜெர்மனிக்குள்ளும், ஜெர்மானியர் ஸ்வாஹா செய்து கொண்ட நாடுகளுக்குள்ளும் போய்ப் பார்த்து விட்டு வரலாம் வருகிறீர்களா?

'ஐயோ! நான் மாட்டேன்! எங்க வீட்டிலே திட்டு வாங்க!' என்று சொல்லுகிறீர்களா? பரவா யில்லை. எனக்கு தைரிய மில்லை என்பதை இப்படி வேறு பாஷையில் சொல்லுகிறீர்கள் போலிருக்கிறது, அதுவும் பரவா யில்லை. இருக்கிற இடத்தில் இருந்த படியே பார்ப்பதற்கு சௌகரியம் செய்து கொடுத்தால் கூடவா பயப்படுவீர்கள்? ஆ! அதற்குப் பயமில்லையே! ரொம்பச் சரி!

மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் வெளியாகும் பத்திரிகைகளில் அச்சிடப்படும் செய்திகள் பல நடு நிலைமை நாடுகள் வழியே வெளியே எழுதி வந்து கொண்டிருக்கின்றன. அவற்றைக் கவனித்தால், உள்ளே எல்லாம் மோசம்; ஒரே யடியாக அழுகிக் கிடக்கிறாப் போலிருக்கிறதே என்று தான் எண்ணத் தோன்றுகிறது. அங்கெல்லாம் அலங்கோலம் பேயாகத் தலைவிரித்தாடுகிறது என்பது திண்ணமாகத் தெரிகிறது.

பிரான்ஸிலே பதினாறுக்கு மேல் அறுபதுக்குட்பட்ட வயதினர் எல்லாம் ஒரு கட்டாயச் சட்டப்படி வேலை செய்தே தீர வேண்டும். அப்படி வேலை செய்யும் குடியானவன் ஒருவன் எழுதிய கடிதம் ஒன்றிலே, கீழ்க்கண்ட தகவலும் அடங்கி யிருக்கிறது.

"இந்த ஊருக்கு பல ஜெர்மானியர்கள் தஞ்சம் புக வந்திருக்கிறார்கள். ஏதோ உல்லாசமாகப் பொழுதைப் போக்கச் செல்லும் கோஷ்டியார்களைப் போலவே சதா சோம்பேறிகளாகவே இருப்பவர்களை நாம் என்ன செய்ய முடிகிறது?"

எங்கள் ஊருக்கு 1940-ம் வருஷம் ஜூன் மாதத்திலே இவர்கள் எழுநூறு பேர்கள் வந்தார்கள். அறுவடை காலம் வந்தது. அப்பொழுது வயல்களிலிருந்து கோதுமையை அறுத்து வர கைதிகளின் மனைவியரும், கிழவர்களும், குழந்தைகளுமே இருந்தார்கள்.

ஊருக்கு வந்த எழுநூறு பேர்களில் ஆறு பேர்கள் தான் குடியானவர்களுக்கு உதவ வந்தார்கள். திராக்ஷரஸ சேகரிப்புக் காலம் வந்த பொழுது, இன்னும் சிலர் தாமாகவே வந்தார்கள். ஆனால் அவர்கள் சேகரித்த திராக்ஷைப் பழங்களைவிட, அவர்கள் வயிற்றுக்குள் போனதே அதிகமாக இருந்தது.

### ஒரு நாளைக்கு 14 மணி நேர வேலை

ஒரு வருட காலம் அவர்கள் எங்களோடு இருந்தார்கள். அவர்கள் இருந்த வரை நம் தொழிலாளர்கள் எல்லாம் ஒரு நாளைக்கு 14 மணி நேரம் கூட உழைக்க வேண்டியிருந்தது. அவர்கள் குஷாலாக பைசைகிள் வண்டிகளில் ஏறி ஊர் சுற்றவோ, மீன் பிடிக்கவோ போய்க் கொண்டிருந்தார்கள்.

பனிக்காலம் வந்தது; அப்பொழுதும் மாதரும், கிழவர்களும், சிறுவர்களுமே விறகு சேகரிக்க ஓட வேண்டி வந்தது. மேற்கண்ட பிரபுக்களுக்கு இலவச விறகு சப்ளைக்கு ஆக்ஞை பிறந்தது. அவர்களில் ஒருவர் கூட ஒரு சுள்ளி விறகு கூடப் பொறுக்க வில்லை, என்று எழுதுகிறார் அவர்.

என்ன அக்ரமம் பாருங்கள்! ஏழை அழுத கண்ணீர் வீணாகப் போகுமா?

டென்மார்க் தேசத்திலே ஒரு ஸ்திரீ பகிரங்கமாக ஹிட்லரையும், ஜெர்மானிய தறிதலை அதிகாரிகளையும் நிந்தித்துப் பேசியிருக்கிறாள். ஆளுக்கு முப்பது நாள் சிறை வாசம் லபித்ததாம். இதற்கு முன் அவள் எத்தனையோ தடவை சிறை சென்று திரும்பியாயிற்றாம்.

நேசதேச விமானிகள் ஜெர்மனியையும் ஜெர்மனியால் ஆக்ரமிக்கப்பட்ட பிரதேசங்களையும் நொறுக்குகிற நொறுக்கலிலே, அங்கெல்லாம் என்ன ஆகி விட்டது தெரியுமோ? ஒரு பத்திரிகை எழுதுகிறது:

சமீபத்தில் நடந்த விமானத் தாக்குதலின் பயனாக, ஹோட்டல்களில் உள்ள சாமான்கள் எல்லாம் பாழாகி விட்டன. பல கடைகளில் அவற்றில் மண்ணும், கல்லும், கண்ணாடித் தூள்களும் உணவுப் பண்டங்கள் மீது விழுந்து, அவற்றைத் தின்பதற்கும் லாயக்கற்றவை யாக்கி விட்டன. ஆகவே சர்க்கார் ஒரு புதுச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி "இனி கடைகளின் முன் புறத்திலே உள்ள கண்ணாடி பீரோக்களிலும், ஜன்னல்களிலும் அசல் உணவுப் பொருள்களைக் காட்சிக்கு வைக்கக்கூடாது. ஆனால் போலிப் பொருள்களை வைக்கலாம். இதை மீறினால் கடுந் தண்டனை."

டென்மார்க்கிலே ஒரு தமாஷ். அங்குள்ள பலர் லண்டன் ரேடியோவைக் கேட்டு, அந்த உபதேசப்படி நடந்ததற்காக சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார்களாம். அதைக் குறித்து நாஜி ஆதரவுப் பத்திரிகை ஒன்று என்ன எழுதுகிறது தெரியுமோ?

### சதிகாரர்களுக்கு ஆதரவு

"சதி வேலைகளில் ஈடுபடக் கூடாது என்று அரசாங்கம் ஆயிரம் தடவை எச்சரிக்கை செய்தாயிற்று சமீப காலத்தில் பத்திரிகைகளும் அரசாங்க உத்திரவுகளுக்கு ஒரு மாதிரியான ஆதரவளித்து வருகின்றன. ஆனாலும் இது வரை செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகி விட்டன. பள்ளிகள், காலேஜ்கள், சர்வ கலாசாலை இங்கெல்லாம் சதிகாரர்களுக்கு ஆதரவு காட்டப்படுகிறது. ஊக்கமும் ஊட்டப்படுகிறது. அந்த டேனிஷ் அதிகாரிகள் வாய்பொத்திப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் ஒரு நாடக மேடையில் ஒரு மாஜிக் வித்தை நடந்தது. மாஜிக் செய்பவன் ஒரு வெறும் பெட்டியிலிருந்து, நிறைய கடுதாசியும், பித்தளைத் தகடுகளில் செதுக்கப்பட்ட யூனியன் ஜாக் கொடிகளையும் சிருஷ்டித்தான். அந்தக் கொடிகளை மளமளவென சபையோரிடை கொடி ஒன்று இரண்டு க்ரோனர் வீதம் (சுமார் இரண்டு ரூபாய்கள்) விற்றுவிட்டான். அதைப் பார்த்து சபையோர் ஆனந்தத்தோடு கரகோஷம் செய்துகொண்டிருந்தார்கள். ஒரு ரகசியப் போலீஸார்கூட அங்கு பிரசன்னமாக இருந்தார். அவர் யார் என்று தெரியாது. அந்த மாஜிக் காரன் அவரிடமும் ஒரு கொடியை நீட்டினான்: உடனே அந்த போலீஸ் அதிகாரி தனது கோட்டிலுள்ள மடிப்பைப் பிரித்து நைஸாகக் காட்ட, அதிலே இரண்டு யூனியன் ஜாக் கொடிகள் சொருகப்பட்டிருந்தது தெரிந்தது!

'பலே பேஷ்!' என்று உங்களுக்குச் சொல்லத் தோன்றுகிறதா இல்லையா?

ஹிட்லரின் பேயாசைக்காகப் போர் முனையிலே தம் அரிய உயிர்களை லக்ஷக்கணக்கிலே தியாகம் செய்யும் வீரர்களது மனைவியரின் வாய்களிலே மண்ணை வாரிப்போட ஜெர்மானிய அரசாங்கம் தயங்குவதே இல்லையாம், ஒரு சட்டம் சொல்லுகிறது:

### விசித்திர சட்டம்.

இப்பொழுதுள்ள ஜெர்மானிய விதிப்படி, தம்பதிகளில் ஒருவர், கோர்ட்டில் விவாக ரத்து வழக்கு நடக்கும் பொழுது இறந்துபோனால், கோர்ட்டார் அவர்களிடை உள்ள விவாக சம்பந்தத்தைக் கலைத்துவிட முடியாது. அதுகாரணமாக, தம்பதிகளில் உயிரோடு இருக்கும் பேர்வழி கைம்மை அடைந்தவராகிறார். சட்டப்படி அவருக்கு படி எல்லாம் கொடுக்கப்படவேண்டும்.

இந்த விதிப்படி நடந்தால், பல கேஸ்களில் நியாயமற்ற பலன் ஏற்படுகிறது. ஐயா, ஒருவன் போர் முனையில் இருக்கிறான். அவன் மனைவி ஊரிலே விபசாரம் செய்கிறாள். புருஷன் இதை அறிந்து விவாக ரத்து வழக்குத் தொடருகிறான். இதற்கிடையில் அவன் போரில் மடிந்து, வீரசுவர்க்கமடைகிறான். இப்பொழுதுள்ள விதிப்படி, அவன் மனைவி அவனது கைம்பெண்ணாவாள் ஆனால் இந்தப் புதுச் சட்டப்படி, இறந்தவனுக்கு தன் மனைவி மீது தொடர்ந்த வழக்கில் சாதகமான முடிவைப் பெற வசதி செய்யப்பட்டிருக்கிறது.

சில வீரர்களுக்கு ஊரில் நடப்பதே இன்னதென்று தெரியாமலிருக்கலாம். அம்மாதிரி சந்தர்ப்பங்களிலே கூட கோர்ட்டார், அதிகாரிகளின் வாதத்தைக் கேட்டு, போர்முனையில் இறந்த வீரன் விவாக ரத்து வழக்குத் தொடர்ந்ததாகவே கொண்டு, அவனுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கலாம்.

என்ன நியாயம்! இதெல்லாமா வெற்றியைக் கொடுக்கப் போகிறது? இதையெல்லாம் கணக்கெடுத்துக் கொண்டே இருக்கிறார்கள் நேசதேசத்தார். இத்தனைக்கும், ஐரோப்பாவையும், இந்த உலகையுமே அல்லோ கல்லோலப்படுத்திய அயோக்கியர்கள், என்றோ ஒரு நாள் தக்க தண்டனையை அடையவே போகிறார்கள். உள்ளே உளுத்துக்கொண்டே வருகிறது திடீரென ஒரு நாள் சடசட என நாஜி மரம், முஸோலினி முறிந்து வீழ்ந்ததுபோலவே விழப்போகிறது. அதிலே சந்தேகமே வேண்டாம் ஐரோப்பாவில் நாஜிகள் செய்து வரும் அட்டூழியங்கள் அப்பொழுதல்லவா பூராவாக வெளியாகப் போகின்றன!

### கடலிலே ஏழு நாள் உத்சவம்.

இந்தியாவைப் பாதுகாப்பதற் கென்று வானம், கடல் ஆகிய இரண்டு பிரதேசங்களிலும் சேவை செய்துவரும் எண்ணற்ற வீரர்கள் தினம் பல சாகஸங்களைப் புரிந்து வருகிறார்கள். தினசரி பர்மா மீது பறந்து சென்று, அங்குள்ள விரோதிக் கூட்டங்களையும், ஆலைகளையும், துறைமுகங்களையும் தும்சம் செய்துகொண்டிருக்கிறார்கள். சென்ற வாரம் கூட அந்தமான் தீவுகளிலே பல இடங்களை அக்னி குண்டங்களாக மாற்றிவிட்டு வந்தனர். இவர்களுக்கெல்லாம் ஆபத்தே ஏற்படாமலிருக்கிறது என்று சொல்வதற்கில்லை. ஆனால் அஞ்சா நெஞ்சு கொண்டவர்கள் இவர்கள். ஆபத்து வேளைகளிலே அதைரியப்படாது இருந்து, சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொள்ளுகிறார்கள்.

சென்ற மாதக் கடைசியில் ஒரு விமானம் வங்காளக் குடாக் கடல் மீது பாரா வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, திடீரென தீபற்றிக்கொண்டதாம். உடனே ஆபத்துச் செய்தியை ரேடியோ மூலம் அறிவிக்கவும் அவகாசம் இல்லை. விமானம் கடலில் விழுந்துவிட்டது. அதனுள் ஒருவர் தான் சிக்கி மாண்டார். மற்றவர்கள் விமானத்திலிருந்து எறியப்பட்ட ரப்பர் படகு ஒன்றிலே தொத்திக் கொண்டார்கள், சுமார் பதினைந்து மைல் தூரத்திலே ஜப்பானியர் தங்கியிருக்கும் தரை புலப்பட்டது. பையிலே இருக்கும் உணவோ மிகக் குறைவு, குடிப்பதற்கோ ஜலமில்லை. இரண்டு நாட்கள் வரை அந்த விமானிகள் பட்டினி கிடந்தார்கள். மூன்றும் நாளன்று அவர்களது மனம் மகிழ மழை பெய்தது. கைகளையே கிண்ணங்களாகக் கொண்டு, சிரமத்தோடு, ஆனால் ஆனந்தத்தோடு மழை ஜலத்தை ஏந்திப் பிடித்துக் குடித்தனர். அந்தப் படகை வலிக்கவோ அவர்களிடம் துடுப்பு இல்லை. கைகளே துடுப்பாக ஆகவேண்டும். அதுவோ வட்ட வடிவமான படகு. சும்மா சுற்றிக்கொண்டே இருக்கும். ஆனால் முன்னால் சட்டெனப் போகாது. பாய்மரம் கட்டலா மென்றாலோ, சாமான் இல்லை. ஏதாவது கூரான வஸ்து ரப்பரைக் கிழித்துவிடப் போகிறதே என்று பயந்து, அம்மாதிரியான வஸ்துக்களையெல்லாம் தூர எறிந்துவிட்டார்களாம். நாட்கள் சில கழிந்தன. தூக்கமும் போய்விட்டதாம். படகில் விழும் தண்ணீரை இறைப்பதே பெரிய வேலையாகிவிட்டதாம், பசியோ அசதி யுண்டாக்குகிறது. நல்ல வேளையாக ஒரு விமானம் அவர்களைக் கண்டதாம். ஆனால் அது அற்ப சந்தோஷமாக மாறிற்றும். அப்பொழுது திடீரென்று ஏற்பட்ட புயல் அவர்களை எங்கோ கொண்டு போய்விட்டதாம். கடைசியாக நிலம் தென்பட்டதாம், ஆனால் கரையை அடைய முடியவில்லை. முடிவிலே ஒரு பெரிய விமானம் அவர்களைக் கண்டு, உணவுப் பொருள்களை எறிந்ததாம். அதை உண்டு உயிரைக் கைகளில் பிடித்திருந்தார்களாம் அவர்கள். ஏழாம் நாள் காலையிலே அந்தப் படகு ஏதோ ஒரு தீவில் தரை தட்டியதாம். அங்கேயிருந்த இந்தியர்கள் இவர்களை அன்போடு உபசரித்தார்களாம். அப்புறம் இந்தியா வந்து சேர்ந்தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

எதிரியை ஒழிப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டு கிளம்பிய பின், இடையில் நேரும் இடைஞ்சல்களை யாராவது லக்ஷியம் செய்வார்களா என்ன?

—••✣••—

# ஒ ரே தி ண ற ல்

அடிமேல் அடி கொடுத்து, அடிமேல் அடி பிடித்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் பிரிட்டிஷ் எட்டாவது சேனையைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தான் அதி கடுமையான எதிர்ப்பெல்லாம். ஆயினும் அவர்களது வீரம் இரும்பை நிகர்த்தது. எதையும் லக்ஷியம் செய்யாது புரண்டோடும் ஆற்றுவெள்ளத்தை ஒத்தது அவர்களது முற்போக்கு. எட்னா மலையை நம்பிக் கொண்டிருந்த எதிரிகள், இப்பொழுது அந்த நம்பிக்கை இழந்து, தலை தப்பினால் போதும் என்று இத்தாலிக்கு ஓடப் பார்க்கிறார்கள்.

இத்தாலிய பூமி நம்மவர்களின் கண்கள் எதிரே இருக்கின்றது. அச்சு நாட்டார் இந்தச் சமயம் பார்த்து, நெடுந் தூரம் சுடும் பீரங்கிகளை இத்தாலிய மண்ணில் நாட்டி, எட்டாம் சேனையைப் பார்த்துச் சுடத் தொடங்கியிருக்கிறார்களாம்.

அமெரிக்கப் படை வடஸிஸிலியிலே வெகு தந்திரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அவர்கள் முன்னேறி வரும் வேகத்தை விட, அச்சு நாட்டுப் படைகள் ஓடும் வேகமே அதிகமாக இருக்கிறதாம்.

இப்பொழுது அச்சுப் படைகள் மெஸ்ஸினா என்ற துறை முகத்தை அணுகி விட்டன. அங்கிருந்து இரா வேளைகளில் திருட்டுத்தனமாக இத்தாலிக்கு படகுகள் மூலம் தப்பி போகப் பார்க்கிறார்களாம். மெஸ்ஸினா நகரிலே ஐநூறு விமான எதிர்ப்பு பீரங்கிகளுக்கு மேல் வைத்திருக்கிறார்களாம். அந்த ஊர் மேலே பறப்பதே ஆபத்தாக இருக்கிறதாம். இம்மாதிரி ஒரு குடை அமைத்துக் கொண்டு, அச்சு நாட்டார் தப்பலாம் என்று பார்க்கிறாப் போலிருக்கிறது.

நேச தேச விமானிகளோ இதற்கெல்லாம் அஞ்சாது, சமயம் பார்த்து அவர்களை சம்ஹாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தாலியிலே போய் இறங்கக் கூடிய இடங்களை யெல்லாம் குண்டுகளால் துளைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸிஸிலியிலே நமக்கு வெற்றி தான், இன்னும் சில தினங்களிலே ஸிஸிலிப் போர் தீர்ந்துபோகும். ஆனால் ஒரு விஷயத்தில் நமக்கு வெற்றியில்லை தான். ட்யூனிஸியாவிலே அமுக்கியது போல், ஏராளமான அச்சுத் துருப்புகளை ஸிஸிலியிலே அமுக்க முடியாது போனது ஒரு தோல்வி தானே!

## எல்லோர் நினைவும் இத்தாலி மீதே

இத்தாலி மீதே எல்லோருக்கும் இப்பொழுது நினைவு. சென்ற வாரம் மிலான் நகரம் தவிடு பொடியாகி விட்டது. நேச தேச விமானிகள் விளையாடிவிட்டுப் போன பிறகு, அவ்வூர் மேயர் ராஜிநாமா செய்து விட்டார். ரயில், டிராம், பஸ் ஒன்றுமே ஓடவில்லை. ஜனங்கள் பீதி கொண்டு தப்பி ஓட முயற்சிக்கிறார்களாம். அதனால் ராணுவப் போக்கு வரத்திற்கு சங்கடம் உண்டாவது இயற்கைதானே. அதுபற்றி ராணுவத்தார் குறுக்கிட்டு, மிலான் நகரை விட்டு மக்கள் வெளியே போகாதவாறு தடுக்க முயலுகிறார்களாம். இதனால் அவஸ்தை அதிகமாகப் போகிறதே ஒழிய குறையப் போகிறதா என்ன?

மிலான் நகருக்கான கதி ரோமாபுரிக்கும் ஆகக் கூடாதென்று தான் பார்க்கிறார்கள். ரோமாபுரியைப் பாதுகாப்பற்ற நகரமாக்கி விட்டதாகச் சொல்லுகிறார்கள். போப்பாண்டவரின் ரேடியோ நிலையம் கூட இதை வெளியிட்டது. அங்கே மந்திரிகளின் காரியாலங்களோ, ராணுவத் தலைமைக் காரியாலயமோ இல்லவே இல்லையாம். ஆனால், ரோம் நகரிலே அமைதியைப் பாதுகாக்க மட்டும் துருப்புகள் இருக்கிறார்களாம்.

இதை யெல்லாம் கேட்டு விட்டு, நேச தேசத்தார் சும்மா இருந்துவிடவில்லை. ராணுவ எதிர்ப்போ, அல்லது ராணுவம் என்ற வாசனையோ அங்கிருக்கப்படாது; நம்மவர்களில் சிலர் போய் ரோமாபுரியைச் சுற்றிப் பார்த்துத் திருப்தி கொள்ள வசதி அளிக்க வேண்டும் என்று நேச தேசத்தார் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு இரண்டாம் முறையும் ரோமாபுரியைத் தாக்கியாயிற்று. அங்கேயுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள் உபயோகமற்றுப் போய்விட்டனவாம்.

வட இத்தாலியிலே ஜெர்மானியப் படைகள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றனவாம். இத்தாலியை லேசில் விட்டுவிட்டால், ஜெர்மனிக்கு ஆபத்து அதிகமாகும் என்பதை உணர்ந்த ஹிட்லர் இந்த ஏற்பாடு செய்தார் போலிருக்கிறது.

## ஹிட்லருக்கும் ராணுவத் தலைவருக்கும் பிணக்கம்

அவருடைய கட்சியினருக்கும், ராணுவத் தலைவர்களுக்கும் இப்பொழுது பிணக்கம் ஏற்பட்டிருக்கிறதெனத் தெரிகிறது. ஓரெல் நகர் அருகே ருஷ்யர் வரும் பொழுது, ஜெர்மனியிலே ஹிட்லர், கொயரிங், ஹிம்லர், கொப்பல்ஸ், ரிப்பன்டிராப் ஆகியோர் நிலப்படை, விமானப்படை அதிகாரிகளோடு கலந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். ஓரெல் நகரை காலி செய்ய உத்தரவிட்டது ஜெர்மன் சேனாபதிகள் என்றே தெரிகிறதாம். அநியாயமாக, பிரயோசனமில்லாமல் ஆட்களைப் பலி கொடுக்க வேண்டாமென எண்ணியவர்கள் அவர்களாகத் தானிருக்க வேண்டும். நாஸிகளுக்குள்ள ஆதிக்கம் குறைவதை இது காட்டுகிறது. ஜெர்மனியிலே விழும் நேச தேசக் குண்டுகளைக் கண்டு ஜெர்மானியர் பீதி கொண்டு கிடக்கிறார்கள். இந்த பீதி காரணமாக, அங்கே கலவரம் ஏற்பட்டு விடக் கூடாதே என்ற பீதி ஹிட்லர் மனத்தில் தோன்றி யிருக்கக் கூடும்.

ஜெர்மன் போலீஸ் தலைவர் ஹிம்லர் பெரிய சிங்கமானாலும், அப்புறம் அவர் பாச்சா கூடப் பலிக்காது. போன யுத்தத்தின் போக்கையே இந்த யுத்தமும் கொண்டு வருகிறது என்பது ஜெர்மானியருக்குத் தெரியத் தொடங்கிவிட்டது. பாடு படுவதால் பலனில்லை என்று அறிந்து கொண்டு விட்டார்கள். இனி ஹிட்லருக்கு உள் நாட்டிலேயே ஆபத்து ஏற்படக் கூடும்.

இதைக் கொண்டு ஜெர்மனி குலைகிறது என்று தீர்மானித்து விட முடியாது. நாஜிப் படையினர் மகா கொடிய ராக்ஷஸர்கள். கடைசிவரை போராடியே தீர்ப்பார்கள். போகப் போக நேச தேசத்தவர்க்கு எதிர்ப்பு வலுக்கக் கூடும். ஆனாலும் நேச தேசத்தவர்க்கு வெற்றி நிச்சயம்.

துருக்கி கூட சந்தர்ப்பம் வரும் பொழுது நேச தேசத்தாருடன் சேர்ந்து போராட சித்தமாக இருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. இதிலிருந்தே ஜெர்மனியைப் பற்றி துருக்கிக்கு இருந்த உயர்ந்த அபிப்பிராயம் மாறியிருக்க வேண்டுமென்றோ, அல்லது தனது சக்தியில் அதிக நம்பிக்கை ஏற்பட்டிருக்கிற தென்றோ தைரியமாக முடிவு கட்டலாம்.

இத்தாலிக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார்கள் அல்லவா நேச தேசத் தலைவர்கள். அது போலவே ஜெர்மனியின் இரும்புப் பிடியில் சிக்கிய மற்ற நாடுகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப் போகிறார்களாம். இலையுதிர் காலத்திற்கு முன் மத்திய தரைக் கடலிலும், இதர இடங்களிலும் போர் நடக்கும் என்றார் அல்லவா பிரதம மந்திரி சர்ச்சில்? அது என்ன என்பது சீக்கிரமே தெரியப் போகிறது.

அதைத் தெரியப் படுத்தத் தான் நேச தேசத் தலைவர்கள் கானடாவில் உள்ள க்வெபெக் நகரில் கூடி யிருக்கிறார்கள். ரூஸ்வெல்ட் வந்ததும், பேச்சு நடக்கும். அது முடியு முன் ஜெனரல் ஐஸன்ஹோவருக்கு ஆக்ஞை பிறப்பிக்கப்பட்டு விடலாம். எங்கே தாக்குவார்களோ என்று ஏங்கி யிருக்கும் ஹிட்லரின் ஏக்கம் அதோடு தீர்ந்து போகும்.

## ஒரு நல்ல செய்தி: சிசிலி முழுதும் பிடிபட்டது.

இப்பொழுது கடானியா அருகே ஒரு பெரிய கப்பற் படை தென் பட்டதாகவும், அதிலே ஏராளமான துருப்புகளும், டாங்கிகளும் வருவதாகவும் ரோம் ரேடியோ அறிவிக்கிறது. இதை எழுதிக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு சந்தோஷச் செய்தி வந்து சேர்ந்திருக்கிறது. "ஸிஸிலிப் போர் முடிந்து விட்டது. சென்ற செவ்வாயன்று அச்சுப் படைகளின் கடைசி கோஷ்டி ஸிஸிலியைக் காலி செய்து விட்டது. இப்பொழுது இத்தாலியி லிருந்து மெஸினா ஊரை அச்சு பீரங்கிகள் தாக்குகின்றன. மெஸினாவை அமெரிக்கப் படைகள் பிடித்தன. அங்கே 1,35,000 பேர்கள் பிடிப்பட்டார்கள்" என்பதே இந்தச் செய்தி.

## அடுத்தபடி?

ஜூலை 10-ல் ஆரம்பமான ஸிஸிலிப் போர் ஆகஸ்டு 17-ல், அதாவது 39 நாட்கள் நடந்திருக்கின்றது. இது ஒரு பெரிய வெற்றி தான். அடுத்தாற் போல இத்தாலி தாக்கப் படலாம். க்ரீட் தீவும் தாக்கப்படக் கூடும்; அப்பால் தென் கிழக்கு ஐரோப்பாவிற்கு தலைவலி ஏற்படும் என்றும் சொல்லுகிறார்கள். ஏற்பாடுகள் எல்லாம் தீர்ந்து போய் விட்டனவாம். படையெடுக்க வேண்டியது தான் பாக்கியாம்.

இத்தாலியிலே உள்ள படோக்ளியோ சோப் போடப் பார்க்கிறாராம். ஜெர்மானியருக்கு விரோதமாக நடந்த கலவரங்களிலே ஜெர்மானியருக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு ஈடு செய்து கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறாராம் அவர். ஏதாவது தங்களுக்கு விரோதமாக நடந்தால், முஸோலினியை திரும்பவும் கொணர்ந்து வைத்து விடுவதாக ரிப்பன்ட்ராப் என்ற ஜெர்மன் தலைவர் மிரட்டுகிறாராம். ஆனால் இத்தாலியர், ஜெர்மானியரின் கை நீளத்திற்கும் அப்பால் உள்ள இடத்திலே, முஸோலினியைக் காவலில் வைத்திருக்கிறார்களாம்.

ருஷ்யாவிலே ஹிட்லர் தலை பறக்க கார்க்கோப் நகர் அருகே போரை நடத்திக் கொண்டிருக்கிறாராம். ஏராளமான டாங்கிகளையும் விமானங்களையும் அங்கு அனுப்பி ருஷ்யர்களின் முன்னேற்ற வேகத்தைக் கொஞ்சம் மட்டுப் படுத்தி யிருக்கிறாராம். ஆனால் ருஷ்யர்களைத் தடை செய்து நிறுத்த முடியவில்லை அவரால். நேச தேசத்தார் இத்தாலியை 'க்ளோஸ்' செய்து விட்டு, வேறு இடத்தில் ஜெர்மானியரைத் தாக்கத் தொடங்கினதும், ருஷ்யா ஜப்பானுடன் போருக்குக் கிளம்பலாம் என்று ஒரு அமெரிக்கப் பத்திரிகை எழுதுகிறது ஜப்பானை சும்மா வாலாட்ட விட்டுக் கொண்டிருக்க முடியுமா என்ன?

நேச தேச சேனாபதிகளில் சிலர் பேசுவதைப் பார்த்தால், கூடிய சீக்கிரமே பர்மா போர் வெகுக் கடுமையாகவே ஆரம்ப மாகும் எனத் தோன்றுகிறது. ஜப்பானியருக்கு கடற் போர்களில் ஏக நஷ்டங்கள் ஏற்பட்டுக் கொண்டே யிருக்கின்றன. ஜப்பானின் இறுதித் தோல்வி யோடு தான் இதுவும் நிற்கும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் III.] 1943-ம் வருஷம் ஆகஸ்ட்டுமீ 27உ, வெள்ளிக்கிழமை [இதழ் 34

## கார்க்கோப் மீண்டது



"ஸ்டெப்பிசிலிருந்து வந்த படைகளோடு, வாரனேஜி லிருந்தும், தென் மேற்குப் போர் முனைகளி லிருந்தும் படைகள், பக்க வாட்டுகளில் போய்ச் சேர்ந்து கடுமையாகப் போராடியதன் பயனாக, கார்க்கோப் நகரம் பிடிபட்டது."

"இப்படியாக உக்ரேனின் இரண்டாவது தலை நகரமான் நமது சொந்த கார்கோப் ஹிட்லரின் அயோக்கியக் கூட்டத்தாரின் கொடுமையி லிருந்து விடுபட்டது."

"எதிர்த்துத் தாக்கும் போது, மகா வீரத்தோடும், பயிற்சி யோடும் நம் படைகள் போராடின."

"நமது தாய் நாட்டின் விடுதலைக்காகவும் சுயேச்சைக்காகவும் நடைபெறும் போராட்டத்தில், மடிந்த வீரர்களுடைய் புகழ் நீடூழி வாழ்க! படை யெடுக்கும் ஜெர்மானியர்கள் வீழ்க!"

மார்ஷல் ஸ்டாலின் ஆகஸ்டு 23-ம் தேதி ஒலிபரப்பிய செய்தி.

# டன்கர்க்குக்குப் பிறகு பிரிட்டன் செய்ததென்ன ?

ஹிட்லர் தன்னைத் தாக்கு முன்னதாகவே, தானாகவே ஜெர்மனியோடு போரிலிறங்கிய முதல் நாடு, பிரிட்டன் தான். யுத்தத்திலிறங்கிய பிறகு என்ன செய்தது ? சில தவறுகள் செய்தது என்பது உண்மை தான். குழப்பத்திற்கு இடங் கொடுக்கக் கூடிய காரியங்கள் செய்ததும் உண்மை தான். பிரிட்டிஷார் தவறுகள் செய்தார்கள். என்றாலும், அவற்றிலிருந்து விஷயங்களை உணர்ந்துகொண்டு, அதற்கேற்ப உழைத்து, கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல் ஒரே பிடிவாதமாகப் போராடி வெற்றி பெறுவதும் பிரிட்டிஷார் தான்.

டன்கர்க்கில் பிரிட்டிஷாருக்கு நேர்ந்த தோல்விக்குப் பிறகு, பிரிட்டிஷ் படைகளே ஒழிந்து விட்டதாக உலகம் நினைத்தது.

" ஒழிந்தா விட்டோம் ? " என்று கேட்டது பிரிட்டிஷ் படை. அப்படிக் கேட்டதோடு நிற்கவில்லை. மீண்டும் பலம் பெற்றது ; தன்னைத் திருத்தியமைத்துக் கொண்டது ; உரங்கொண்டெழுந்தது ; வேலை செய்யத் தொடங்கிற்று.

சந்தேகப் பேர்வழிகளுக்கு பிரிட்டிஷ் படைகள் அளித்த பதில் என்ன தெரியுமா ? இத்தாலியக் கிழக்காப்பிரிக்கா, அபிசீனியா, மடகாஸ்கார், லிபியா, துனீசியா, பண்டலேரியா, லெம்புசோ, சிசிலி ஆகியவை தான். இவற்றை வென்று கைப்பற்றுவது இலகுவான காரியமல்ல. கடும் உழைப்பாலும், வியர்வை, ரெத்தம், கண்ணீர் ஆகியவற்றை சிந்துவதனாலும் தான், இவற்றை கைப்பற்ற முடிந்தது.

முதல் மூன்று வருஷங்களில் பிரிட்டிஷ் படைகள் ஈடுபட்டிருந்த பெரும் போர்கள் எல்லாவற்றிலும், அவர்களை விட, எதிரிகளின் எண்ணிக்கை தான் மிகவும் அதிகம்.

ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் எதிரியோடு பிரிட்டிஷ் படைகள் போராடியது மட்டிலு மல்ல. மற்றொரு முக்கியமான காரியத்தையும் செய்திருக்கிறார்கள். அதாவது, ஐஸ்லந்து, பிரிட்டிஷ் தீவுகள், ஜிப்ரால்டர், மால்டா, சைப்ரஸ், பாலஸ்தீனம், ஈராக், சிரியா, பாரசீகம், மடகாஸ்கர், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்த எதிரிகளின் பலத்தை ஒடுக்கி வைத்துவிட்டார்கள்.

கிழக்காப்பிரிக்கப் போரில் சில மாதங்களிலேயே பிரிட்டிஷ் படைகள் அபிசீனியாவை வென்றன. எந்த நாடு முதன் முதலாக அச்சு நாடுகளின் ஆதிக்கத்திற் குட்பட்டதோ, அந்த நாடுதான் முதன் முதல் விடுதலையும் பெற்றது.

1940-ம் ஆண்டு சூடானில் போராட்டம் ஆரம்பமான காலத்தில் 10 எதிரிகளுக்கு ஒரு பிரிட்டிஷர் விகிதம் இருந்தது படைகளின் எண்ணிக்கை. என்றாலும் வெகுவிரைவில் இத்தாலியக் கிழக்காப்பிரிக்காவை பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

கிழக்காப்பிரிக்கப் போராட்டத்தில் 17 நாட்களில் (மார்ச்சுமீ 1உ முதல் 17உக்குள்) 744 மைல்கள் தூரம் எதிரிகளை பிரிட்டிஷ் படைகள் விரட்டியடித்தன. இந்த பிரிட்டிஷ் படைகளின் தலைவர் ஜெனரல் கன்னிங்ஹாம். அங்கேயுள்ள கொகடுஷுவுக்கும் ஜிஜிகாவுக்கும் 744 மைல் தூரம். நாளொன்றிற்குச் சராசரி 44 மைல்கள் வீதம் 17 நாட்களில் எதிரிப் படைகள் பின்வாங்கி ஓட்டமெடுத்தன.

உலக சரித்திரத்திலேயே இவ்வளவு வேகமாக வேறெந்தப் படையும் விரட்டப்பட்டதாக இல்லை. ஆனால் 1942-43-ம் வருஷத்தில் ஏறக்குறைய இவ்வளவு வேகமாக 8-ம் படை எதிரிகளை விரட்டியது.

நிற்க, கிழக்காப்பிரிக்காவி லிருந்த பிரிட்டிஷ் படைகள் ஜெனரல் கன்னிங்ஹாம் தலைமையில் 53 நாட்களில், 1,725 மைல் தூரம் முன்னேறிப் போய் ஆடிஸ் அபாபா போய்ச் சேர்ந்தன.

ஆப்பிரிக்கப் போராட்டங்களில் எதிரிப் படைகள் 5 லட்சம் பேர்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாகி விட்டார்கள்.

100 இத்தாலிய ஜெனரல்கள் இப்போது பிரிட்டிஷ் யுத்த கைதிகளாயிருக்கிறார்கள்.

எகிப்துப் போராட்டத்தில், ஜெனரல் அலெக்சாந்தர், ஜெனரல் மண்ட்காமரி ஆகியோரின் தலைமையில் எதிரிப் படைகளை பிரிட்டிஷ் படைகள் வெற்றி கொண்டன. (1942-ம் வருஷம் அக்டோபர், நவம்பர் மாதம்) எல் அலமீனுக்கும் ஜெடப்யாவிற்கும் 830 மைல்கள். இவ்வளவு தூரத்தையும் நாளொன்றிற்கு 43 மைல்கள் சராசரி வீதம் 1942-ம் ஆண்டு நவம்பர்மீ 4உ முதல் 23உக்குள் அதாவது 19 நாட்களில் பிரிட்டிஷ் எட்டாம் படை கடந்து சென்றது. அன்றியும், அகேலா, ப்யூரெத் என்னும் கணவாய்கள் 40 மைல்கள். இவை நீங்கலாக, 1,400 மைல் தூரத்தை 80 நாட்களில் எட்டாம் படை கடந்தது.

இந்த வெற்றிகள், பிரிட்டனின் முக்கியமான தளத்திலிருந்து கடலிலே 12,000 மைல்களுக்கு அப்பால் ஆப்பிரிக்காவில் கிடைத்தன.

1940-41-ம் வருஷங்களில் நடைபெற்ற போராட்டத்தில் ஏற்பட்ட சேதங்களில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகள் எல்லாவற்றிலும் 70 சத விகித நஷ்டம் பிரிட்டிஷ் படைகளுக்குத் தான் ஏற்பட்டன.

1942-ம் ஆண்டு நவம்பர்மீ 10உ வரை எட்டாம் படைக்கு நேர்ந்த மொத்தச் சேதம் 13,600 பேர்கள். இவர்களில் 100-க்கு 56 பேர்கள் பிரிட்டிஷ் படையினர்.

1942-ம் ஆண்டு நவம்பர்மீ துனீசியாவில் முதல் முதல் பறந்து போய்த் தாக்கிய பாரச்சூட் படைகள் பிரிட்டிஷ் முதல் நம்பர் படைதான்.

# யுத்தம் நடப்பதே ஹங்கேரியர்களுக்குத் தெரியாது

## ஜெர்மன் பொய்ப் பிரசாரத்தின் பலன்

### யுத்த நிருபர் கூறும் விவரங்கள்

ஒரு விஷயம் மிகவும் நம்பத்தகுந்த இடத்திலிருந்து கிடைத்திருக்கிறது. அதன்படி, ருமேனிய முதல் மந்திரி மிஹாய் அந்தனெஸ்கு, தாம் யுத்தத்திலிருந்து விலகிக்கொள்ள முடியுமா என்பதைக் குறித்துக் கலந்துகொள்ளும் பொருட்டு, முசோலினியைச் சந்திக்க ரோமாபுரிக்குப் போனாராம். தாம் அச்சு அரசாங்கங்களிலிருந்து விலகிக் கொள்ள வேண்டிய பருவம் வந்து விட்டது என்று அவ்விருவரும் முடிவு கட்டினார்களாம். என்றாலும், எப்படி விலகிக் கொள்ளுவது என்று தெரியாமல் தவித்தார்களாம். தம் நாடுகளில் ஜெர்மன் ஆதிக்கம் வெகு அதிகமாயிருப்பதனால், தாம் போராட்டத்திலிருந்து விலகிக் கொள்ளுவது தற்கொலைக்குச் சமானமாகும் என்று கடைசியாக இருவரும் முடிவு கட்டினார்களாம்.

என்றாலும், இந்நாடுகள் தற்கொலை செய்துகொள்ளக் கூடிய நிலைமையில் தான் இப்போது இருக்கின்றன. இதுவும் அவர்களுக்குத் தெரியும். முசோலினியைக் காணும் பொருட்டு அந்தனெஸ்கு ரோமாபுரிக்குப் போனபோது சிசிலி படையெடுப்பு ஆரம்பமாகவில்லை. யுத்தத்தில் தோல்வி தம் கட்சிக்கு ஏற்பட்டுவிட்டதென்று இவ்விருவருக்கும் மூன்று வாரங்களுக்கு முன்பே நன்றாகத் தெரியும்.

ஜெர்மானியர் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த எல்லா நாடுகளும் இதே நிலைமையில்தான் இருந்தன. ஆனால் ஜெர்மனியிலேயே இருந்த ஜெர்மன் மக்கள் மட்டுந்தான் தமக்கு அதிர்ஷ்டம் பிறக்கப்போகிறதென்று நம்பிக் கொண்டிருந்தார்கள். இதற்குக் காரணம், ஜெர்மானிய அரசாங்கத்தின் பொய்ப் பிரசாரந்தான். பிரிட்டிஷ் விமானப் படைகள் பலமுறை வெடிகுண்டுகளைக் கொண்டு ஜெர்மனியைத் தாக்கியுங்கூட, வெடிகுண்டுகளால் தாக்கப்படாத பகுதிகளிலிருக்கும் ஜெர்மானியர்களுக்கு வெகு நாட்கள் வரை தெரியாதிருந்தது. இன்னமும் தெரியாதிருக்கலாம். வெடி குண்டுகளால் தாக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறி தாக்கப்படாத பகுதிகளுக்குப் போனவர்கள், அங்குள்ளவர்களோடு கலந்து பழக முடியாதபடி பிரித்து வைக்கப்பட்டு, அவர்கள் பந்தோபஸ்தாயிருக்கக் கூடிய ஊர்களுக்கு அனுப்பப்பட்டனர். குழந்தைகளை ஹங்கேரிக்கும் பல்கேரியாவிற்கும் அனுப்பினார்கள்.

ஆகவே, ஹங்கேரியிலும் பல்கேரியாவிலும் இருந்தவர்கள் தம் நாட்டில் விமானத் தாக்குதல் நேராது என்று நம்பினார்கள். அங்கு வந்து சரண் புகுந்தவர்களிடமிருந்து பிரிட்டிஷ் விமானப் படைத் தாக்குதல் எப்படிப்பட்டது என்று கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். என்றாலும் அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. தமக்கு விமானத் தாக்குதல் நேராது என்பது அவர்கள் நம்பிக்கை. ஐரோப்பாவிற்குள் ஒரு ஈ எறும்பு கூட நுழைய முடியாதென்று ஹிட்லர் முந்தியே சொல்லியிருக்கிறாரல்லவா ? அந்த நம்பிக்கை தான் அவர்கள் அலட்சியமாயிருந்ததற்குக் காரணம்.

இப்போது சிசிலியைக் குறித்து கவனிப்போம். சமீபத்தில் அனடோலியன் செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிருபர் ஒருவர், புடாபெஸ்டுக்குப் போனார். அவர், தன் முதல் அறிக்கையைத் தந்தி மூலம் அனுப்பியிருக்கிறார். அவர் குறிப்பிடுவதாவது :—

> யுத்தம் நடைபெறுகிறது என்பதே தெரியாமல் ஹங்கேரியர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ரஷ்யப் போர்முனையில், அவர்களும் போராடினார்கள் ; என்றாலும் வேண்டா வெறுப்பாகத்தான் போராடினார்கள். இப்போது சிசிலி தாக்கப்படுவதினால் தான் உண்மை நிலைமையை அவர்கள் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். யுத்தத்தைக் குறித்து அவர்கள் மறந்தே விட்டார்கள். இப்போது ஐரோப்பாவின் வாசலிலேயே யுத்தம் நடைபெறுகிறது. இந்த யுத்தத்தை அங்கே நடத்துகிறவர்கள் ரஷ்யர்களல்ல. ரஷ்யர்கள் மட்டும் தான் தம் எதிரிகள் என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் தான் அங்கே யுத்தம் நடத்துகிறார்கள். ஐரோப்பியக் கோட்டைகளில் சிசிலி தீவும் ஒன்றல்ல என்பது அவர்கள் எண்ணம். ஆகவே, நேச நாட்டுப் படைகள் முன்னேற ஒட்டாதபடி தடுக்கும் பொருட்டு மட்டுந் தான் அச்சுநாட்டுப் படைகள் போராடுமென்று நம்புகிறார்கள். ஆனால், தம் எல்லைப்புரம் ஆட்ரியாடிக் கடலோரத்திலிருக்கிறதென்றும், தம் எல்லைப்புரத்திற்கு நேசநாட்டுப் படைகள் வராது போன போதிலுங்கூட, விமானங்களிலிருந்து குண்டுகளால் தாம் தாக்கப்படலாமென்று அஞ்சுகிறார்கள். ஏனென்றால், சிசிலி தீவு பாதுகாப்புக்கு ஏற்ற இடமாக இல்லாதிருக்கலாம். என்றாலும் அங்கே நல்ல விமான தளங்களிருக்கின்றன. இங்கிருந்து ஐரோப்பாவின் மத்திய பாகம் வரையிலும், குறிப்பாக, டானியூப் ஆற்றுப்பகுதிவரையிலும் கூடப் போய்த் தாக்கிப் போராடலாம்.
>
> ஹங்கேரிய மக்களுக்கு இப்போது பீதி தோன்றியிருக்கக் கூடும். கொஞ்சகாலத்திற்கு முன்பு ஹங்கேரிய அரசாங்கம் பீதி கொண்டது என்று சொல்லத் தக்க அறிகுறிகள் தோன்றின. இந்த விஷயம் ஹங்கேரிய மக்களுக்கு தெரியாது.

ஜெர்மன் அரசாங்கத்தார் தம் தளவாட உற்பத்திச் சாலையின் ஒரு பகுதியை ஹங்கேரிக்கு மாற்றிவிட்டார்கள் என்று துருக்கிப் பத்திரகா நிருபர்கள் அறிவித்த போது, அதை ஹங்கேரிய அரசாங்கத்தார் உடனே மறுத்துவிட்டார்கள். அப்போதே தங்களையும் விமானங்களிலிருந்து நேச நாட்டுப் படைகள் தாக்கக்கூடு மென்று அஞ்சினார்கள்.

பல்கேரியா ஒரு சிறிய, பரிதாபகரமான நிலைமையிலுள்ள ஒரு நாடு. ஒரு காலத்தில் இந்நாடு மகா மூர்க்கமாயிருந்தது. இப்போது, தனக்குக் கொஞ்சங் கூட மூர்க்கத் தனமான எண்ணமே கிடையாது என்று பிரகடனம் செய்திருக்கிறது. இல்லை என்பது உண்மை தான். தாம் ஏற்கெனவே கைப்பற்றிய நாடுகளைக் காப்பாற்றிக் கொண்டாலே போதுமென்று நினைக்கிறார்கள். பல்கேரியர்கள் தம் நாட்டைக் காப்பாற்றும் பொருட்டு ஒன்றுபடவேண்டுமென்று அங்கே கிளம்பும் கூச்சலைப் பார்த்தால், எதிர்காலத்தைக் குறித்துத் தாம் பெரிதும் அச்சங்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.



பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம் : பீல்ட் மார்ஷல் ஸ்டாலின் .. | 1 | சென்னை யுத்தக் காட்சி சாலை .. .. | 7 |
| கார்க்கோப் மீண்டது .. .. .. | 1 | யுத்த நெருக்கடியும் அரசாங்க உதவியும் .. | 7 |
| டன்கர்க்குப் பிறகு பிரிட்டன் செய்ததென்ன ? | 2 | நரம்புகள் தெறிக்க .. .. .. | 8 |
| யுத்தம் நடப்பதே ஹங்கேரியர்களுக்குத் தெரியாது .. .. .. .. | 2 | திவான் பகதூர் எம்.சி. ராஜா மறைந்தார் .. | 8 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 3 | 4-வது இந்தியப் படையின் மகா வீரச் செயல்கள் .. .. .. .. .. | 9 |
| தலையங்கம்: கார்க்கோப் வெற்றி விழா .. | 4 | சென்னைக்கு பிரிட்டன் நன்றி .. .. | 9 |
| யுத்த நிருபர்களும் யுத்த முயற்சியும் .. | 5 | அங்கும் இங்கும் .. .. .. .. | 10 |


# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**நான்கு வருடப் போர்**

அடுத்த வாரத்தோடு, இரண்டாவது மாபெரும் யுத்தம் ஆரம்பமாகி 4 வருஷங்கள் முடிகிறது. இதில் முக்கியமான விஷயமென்னவென்றால், நேசநாடுகள் பல சிறந்த வெற்றிகள் அடைந்திருக்கின்றன. சென்ற நான்கு ஆண்டுகளாக நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்து சற்று கவனிப்போம். பிரான்சு தோற்றுப் போவதற்குச் சற்று முன்னதாக, மிஸ்டர் சர்ச்சில் கூறியது நமது ஞாபகத்திற்கு வருகிறது. போலந்து, நார்வே, டென்மார்க்கு, ஹாலந்து, பெல்ஜியம், லக்செம்பர்க் முதலிய நாடுகளை ஹிட்லர் கைப்பற்றி விட்டார். பிரான்சும் ஏறக்குறைய தோற்றுவிட்டதென்றே சொல்லலாம். அந்தச் சமயத்தில், அதாவது, 1940-ம் ஆண்டு ஜூன்மீ 18உ பிரிட்டிஷ் முதல் மந்திரி கூறியதாவது :—

> " சென்ற மகா யுத்தத்தின் முதல் நான்கு வருஷங்களில் பிரிட்டனுக்குத் தோல்விகளும் ஏமாற்றங்களும் தான் ஏற்பட்டன. என்றாலும், கடைசியில் நம் மனோ பலம், ஜெர்மானியர்களின் மனோ பலத்தை விட மிகவும் அதிகமாயிருந்தது. ஜெர்மானியர்களோ, அப்போது வெற்றிமேல் வெற்றி பெற்றுக் கொண்டு தான் இருந்தார்கள். அந்த வெற்றிக ளெல்லாம் மூர்க்கத்தனத்தினால் ஏற்பட்டவை."

பிரிட்டனுடைய சரித்திரத்திலேயே மகா மோசமான பகுதி அதுதான். என்றாலும் முதலாவது மகா யுத்தத்தைப் போலவே, இதையும் பிரிட்டன் சமாளித்தது. ஹிட்லர் முதலில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். அப்போது ஹிட்லருடன் பிரிட்டன் தனித்து எதிர்த்துப் போராட வேண்டி யிருந்தது. அது மகா கடுமையானதோர் வேலை. யுத்தத்தில் பிரிட்டனுக்குத் தோல்வி ஏற்பட்டு விடும் போலிருந்தது. தன் கொள்கைகளாலும், தந்திரத்தாலும், மோசடியாலும் 'கலை'யின் பெயராலும் பொருளாதாரக் கோஷ்டிகளைக் கொண்டும், ஆஸ்திரியாவையும் செக்கோஸ்லேவிகாவையும் ஹிட்லர் அழித்தார். அன்றியும் ஜெர்மானியர்கள் பால்கன் நாடுகளில் கொஞ்சங் கொஞ்சமாகப் போய் புகுந்து கொண்டனர். மற்ற நாடுகளும் ஸ்காண்டிநேவியாவும் " பூனை கண்ணை மூடிக்கொண்டால், உலகமே இருண்டு விட்டது " எனத் தக்க கொள்கையை மேற்கொண்டன. தாம் எந்தக் கட்சியிலும் சாராதிருப்பதை கடைசி வரை, ஜெர்மனி பாராட்டும் என்று நம்பிக் கொண்டிருந்தன. இந்த நாடுகளையும் ஒவ்வொன்றாக அவர் கைப்பற்றிக் கொண்டார். ஸ்பெய்னோ, இத்தாலியரையும் ஜெர்மானியரையும் எதிர்க்க முடியாத நிலைமையி லிருந்தது. ஏனென்றால், உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவர்கள் அங்கே வந்து புகுந்து கொண்டார்கள். இத்தாலியோ ஜெர்மனியின் நெருங்கிய கூட்டாளி.

1939-ம் வருஷத்தில் இதுதான் ஐரோப்பாவின் நிலைமை. பிரிட்டனும் பிரான்சும் அரசியல் துறையில் ஒதுங்கிக் கிடந்தன. அன்றியும் துருப்புகளும் ஆயத்தமாயில்லை. இந்தச் சமயத்தில் ஜெர்மானியர்களோடு போராடுவதென்றால் எளிதான காரியமா ? இந்த யுத்தத்தின் போக்கே அடியோடு புது மாதிரியானதா யிருந்தது. அந்தப் போர்த் தந்திர முறைகள் இந்த இரண்டு நாடுகளுக்கும் தெளிவாகத் தெரிந்திருக்க வில்லை கீழ்ப் பாய்ச்சல் வெடி குண்டு விமானம், டாங்கிகள் ஆகியவற்றின் சக்தி இன்னதென்று அவர்களுக்கு அப்போது தெரியாது. விரைவில் பல விடங்களிலும் வந்திறங்கி, ஒன்று சேர்ந்து பிறகு. விசிறி வீசியதைப்போல் அணிவகுத்து நின்று போராடும் எதிரிகளின் முறை, இவர்களுக்கு அப்போது தெரியாது. பாரசூட் படைகளைக் குறித்தும் எல்லா விடங்களிலு மிருந்த ஐந்தாம் படையினரைக் குறித்தும் அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது.

பிரிட்டனுக்கு அது மகா ஆபத்தான காலம். ஏனென்றால், மேற்கு ஐரோப்பா முழுதும் ஹிட்லர் காலடியில் சரணாகதியாகிக் கிடந்தது. பிரிட்டனுக்கு மேலே ஜெர்மன் விமானப் படைகள் கூட்டங் கூட்டமாக வந்து தாக்கின. முசோலினி எகிப்தைத் தாக்கக் கிளம்பினார். என்றாலும் இத்தனையையும் சமாளித்துக் கொண்டு பிரிட்டன் எதிர்த்து நின்றது. தன் வீரத்தினாலும் தைரியத்தினாலும் உலகத்தையே காப்பாற்றியது.

**ஹிட்லர் டம்பமும் சர்ச்சில் பதிலும்.**

இது வரை நடை பெற்ற போராட்டத்தில் நான்கு அம்சங்களைக் காணலாம். இந்த அம்சங்களிலெல்லாம் நேச நாடுகளுக்கு வெற்றி தான். முதலாவது அம்சம் : பிரிட்டிஷாரின் எதிர்ப்புச் சக்தியை அடியோடு நசுக்க ஜெர்மனியால் முடியவில்லை. இரண்டாவது அம்சம் : செம்படைகளை அடியோடு அழிக்க ஜெர்மனியினால் முடியவில்லை. மூன்றாவது அம்சம் : ஜப்பான் யுத்தத்தில் இறங்கியதும், ஜப்பானைக் கொண்டு இந்தியாவை வளைந்து கொள்ளச் செய்வதுடன், தான் காக்கஸஸ் மலை வழியாகவும் மத்திய கிழக்கு வழியாகவும் வளைந்து கொண்டு வருவது என்று ஹிட்லர் வகுந்திருந்த திட்டமும் நிறைவேறவில்லை. நான்காவது அம்சம் : தற்போது, நிலைமையைத் தலை கீழாக மாற்றி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுப் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

> "என்னவானாலும் இங்கிலாந்தை நொறுக்கிவிடுவோம் "

என்று ஹிட்லர் 1940-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 5-ம் தேதி ஹிட்லர் கூறினார். இதற்கு மிஸ்டர் சர்ச்சில் 1940-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 11-ம் தேதி பதில் கூறிய போது, " நம் நாட்டின் சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமான தோர் வாரமாக அடுத்த வாரம் இருக்கலாம்", என்று கூறினார். அந்த வாரந் தான் பிரிட்டிஷ் விமானப் படை ஹிட்லர் கனவுகளை யெல்லாம் சிதறடித்து பிரிட்டானிய யுத்தத்தில் வெற்றி கண்டது. இந்த மகத்தான பெரும் போராட்டத்தில் 2,375 ஜெர்மன் விமானங்கள் நாசமாயின. 1940-ம் வருஷக் கோடை காலத்தில் எதுவும் செய்து கொள்ள முடியாதது போலிருந்த பிரிட்டிஷார், டன்கர்க்கில் ஏராளமான யுத்தத் தளவாடங்களை இழந்திருந்தும், ஜெர்மானியர்கள் கனவிலுங் கூட நினைக்க முடியாதபடி திரண்டு விட்டார்கள். பிரிட்டனைத் தாக்குவதற்கு 1940-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதியை ஹிட்லர் குறி பிட்டிருந்தார். அதன்படியே வந்து தாக்கினார் ; ஆனால் அப்போதே அவருடைய படைகள் அழிக்கப்பட்டன. லண்டன் நகரத்திற்கு மேலே நடை பெற்ற போராட்டத்தில் மட்டும், 883 விமானங்களும் 2,500 விமானிகளும் ஹிட்லருக்கு நஷ்டம்.

(6-ம் பக்கம் பார்க்க.)

**யுத்த சஞ்சிகை**
**வார வெளியீடு**

மலர் III] 1943-ம் ஆகஸ்ட்டு 27உ. [இதழ் 34

# கார்க்கோப் வெற்றி விழா

கார்க்கோவ் நகரம் ரஷ்யாவின் தென் பகுதியிலுள்ளது. அதன் இருதயம் போன்றது. இது உக்ரேய்ன் சமவெளிகளை யடுத்துள்ளது. ரஷ்யாவின் மிகச் சிறந்த பகுதி, உக்ரேய்ன் தான். உலோகப் பொருள்களும் விளை பொருள்களும் இங்கே ஏராளம். ஆகவே, இதைக் கவர்ந்து கொள்ள வேண்டும் என்பது தான் ஹிட்லர் ஆசை. அதைப் பேராசை என்று கூறுவது தவறுகாது. இந்தப் பகுதியைக் கைப்பற்ற பெரும் முயற்சி செய்தார் ஹிட்லர். இதைக் கைப்பற்ற வேண்டுமானால், முதலில் கார்க்கோப் நகரத்தைக் கைப்பற்ற வேண்டும். இந்நகரம் மிகவும் முக்கியமானது. ஒரு கேந்திரஸ்தானமாக அமைந்துள்ளது. இது ஒரு பெரிய ரயில்வே ஜங்ஷன். இங்கிருந்து எட்டு ரயில்கள் பிரிகின்றன. தென் ரஷ்யாவிற்கே இது மிகவும் முக்கியமான நகரமாக விளங்குகிறது. இதைக் கைப்பற்றி விட்டால், உக்ரேய்ன் மாகாணத்திற்கு வழி திறந்தது போலத் தான். இது, முதலில் ரஷ்யர்கள் வசமிருந்தது. அப்போது பெரிய பெரிய தொழிற்சாலைகளெல்லாம் அங்கேயிருந்தன. ஜெர்மானியர்கள் முதல் முதல் 1941-ம் வருஷம் அக்டோபர் மாதம் தாக்க ஆரம்பித்த வுடனேயே, இத் தொழிற்சாலைகளில் மிகவும் முக்கியமானவற்றைப் பிரித்து விட்டனர். அவற்றை ஊரல் பகுதியில் கொண்டுபோய் மீண்டும் கட்டி யமைத்துக் கொண்டனர். இங்கிருந்து தான் பெரிய பெரிய டாங்கிகளெல்லாம் ரஷ்யர்கள் தயார் செய்கிறார்கள். இப்படிப்பட்ட முக்கியமான பகுதிக்குத் திறவுகோல் போன்ற கார்க்கோபை விட்டுவிட யாருக்குத்தான் மனம் வரும். ரஷ்யர்களும் ஜெர்மானியர்களும் இதன் பொருட்டு கடுமையாகப் போராடினார்கள். இதன் பயனாக, கார்க்கோப் நகரம் நான்கு முறை கை மாறியது. ரஷ்யர்களிடமிருந்து 1941-ம் வருஷம் அக்டோபர் மாதம் ஜெர்மானியர்கள் கைப்பற்றினார்கள். 16 மாதங்கள் தம் ஆதிக்கத்தில் வைத்திருந்தார்கள். பிறகு 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 16-ந் தேதி மீண்டும் ரஷ்யர்கள் அதைக் கைப்பற்றினார்கள். என்றாலும் அதை நெடுநாட்கள் வரை காப்பாற்றிக் கொள்ளக் கூடவில்லை. ஒரு மாதத்தில், அதாவது மார்ச்சு மாதம் 15-தேதி மீண்டும் ஜெர்மானியர்கள் வசமானது. 23 வாரங்கள் ஜெர்மானியர்கள் வசமிருந்தது. பல வகைத் தொல்லைகளுக்கு உள்ளானது. உருத் தெரியாதபடி சிதைந்தது. அங்கு வசித்து வந்த 5 லட்சம் யூதர்களுக்குக் கொலைக் களமானது. ஜெர்மானியர்கள் வயப்பட்ட நாட்டில் வேறு எதைத் தான் எதிர்பார்க்க முடியும்? அன்று முதல் இன்று வரை ரஷ்யர்கள் மீண்டும் இதை மீட்க அரும்பாடு பட்டுக் கொண்டு வந்தனர். கடைசியாக, சென்ற 23-ம் தேதி கார்க்கோப் நகரத்தை மீண்டும் பிடித்துவிட்டனர். இந்த வெற்றி ஒரு மகத்தான வெற்றி. ரஷ்யர்கள் இது வரை அடைந்துள்ள வெற்றிகள் அனைத்திலும், தலை சிறந்த வெற்றி. ரஷ்ய மக்கள் தென் பகுதியில் வாழ்வதா, வீழ்வதா என்பது பற்றி உரை கல்லில் தீட்டியதுபோல் எடுத்துக் காட்டத் தக்க வெற்றி. இந்த வெற்றி விழாவை ரஷ்யர்கள் கொண்டாடுவதில் ஆச்சரியமில்லை. அதுவும் மகத்தான முறையில் கொண்டாடினார்கள். நகரமெங்கும் மகர தோரணங்கள். பல நிறப் பட்டொளி வீசும் பூ வேலைகள். அங்கு வீசிக் கொண்டிருந்த கொடிகள் வெற்றி வீரர்களை வாழ்த்தி வரவேற்பன போன்றிருந்தன. 324 பீரங்கிகள் முழங்கின. நகர மக்கள் இன்பப் பெருக்கில் தோய்ந்திருந்தனர். ஐவருக்கு மேல் சேர்ந்து பொது இடங்களில் இருக்கக் கூடாது என்னும் பொது விதியை அன்றிரவு 2-மணி வரை நீக்கி வைத்தனர். அன்று பீல்டு மார்ஷல் ஸ்டாலின் ஒரு ஒலிப் பரப்புப் பிரசங்கம் செய்தார். அது ரஷ்ய நாடெங்கும் பரவப் பட்டது. இந்த விழா எவ்வளவு சிறப்பாக நடைபெற்றது என்பதை எதிர் காலத்தில் ஞாபகப் படுத்திக் கொள்ளும் பொருட்டு, பீரங்கிகளும் டாங்கிகளும் முழங்கிய முழக்கத்தை ஒலிப் பதிவு செய்திருக்கிறார்கள்.

கார்க்கோப் நகரை இழந்த ஜெர்மானியர்கள் மேற்கு நோக்கிப் பின் வாங்குகிறார்கள். பால்டோப் நகரத்தை நோக்கி ஓடுகிறார்கள். இங்கேயும் அவர்கள் தப்ப முடியாது என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், ரஷ்யர்கள் வெகு இலகுவில் கார்க்கோபிலிருந்து க்ராஸ்னோக்ராட் வரை போய்ச் சேர்ந்து விடக் கூடும். பால்டோப் அதற்கு அடுத்துத் தான் இருக்கிறது. எனவே, இன்னும் சில நாட்களில் பால்டோபிலிருந்து ஜெர்மானியர்கள் விரட்டப் படுவது உறுதி. இனி, ஜெர்மானியர்கள் நீப்பர் ஆற்றுக்குக் கீழ் புரத்தில் இருக்க முடியாத தோர் நிலைமை ஏற்பட்டுவிட்டது "முற் பகல் செய்யிற் பிற் பகல் விளையும்" என்னும் பழ மொழிக்கு, இது ஒரு ஏற்ற சான்றாக விளங்குகிறது.

இனி, கிஸ்கா தீவை குறித்து ஒரு சிறிது கவனிப்போம். இது பசிபிக் சமுத்திரத்தின் வட பகுதியிலுள்ளது. அலூஷியன் தீவுகளில் ஒன்று. ஜப்பானுக்குப் போவதற்கு இது ஒரு கட்டம். இது ஜப்பானியர்கள் வசம் இருந்து வந்தது. அவர்களோடு கடுமையாகப் போராட வேண்டும் என்று அமெரிக்கத் துருப்புகள் கிளம்பி வந்தன. ஆனால், அவை போராடினவா? அதுதான் இல்லை. என்? யாரோடு போராடுவது? ஜப்பானியர்கள் அங்கிருந்தாலல்லவா போராடுவதற்கு? இவர்கள் வருவதற்கு முன்பே, ஜப்பானியர்கள் அந்தத் தீவை விட்டுக் காலி செய்து விட்டார்கள். ஆகவே, அமெரிக்கப் படைகள் வந்த போது, திவலையளவு எதிர்ப்புக் கூட, அவர்களுக்கு அங்கே கிடையாது. எதிர்ப்பு இல்லை யென்றால், சேதமே கிடையாது என்று தான் பொருள். ஒரு ரவை குண்டு கூடச் செலவுச் செய்யாமல், ஒரு துளி ரத்தங் கூடச் சிந்தாமல், அந்தத் தீவைக் கைப்பற்றிய அமெரிக்கப் படைகள் அதிர்ஷ்ட சாலிகள் என்று தான் சொல்ல வேண்டும்.

ஜப்பானியர்கள் என் காலி செய்தார்கள்? "உள்ளங்கை நெல்லிக் கனி" போல் விளங்குகிறதே காரணம். தோல்வி மனப் பான்மை தோன்றி விட்டது ஜப்பானியர் உள்ளத்தில். அவர்கள் அகந்தை ஒழிந்து, அச்சம் கொள்ளுகின்றனர். அச்சு அரசாங்கங்கள் அடிபடுவதைக் காணும் ஜப்பான் அச்சங் கொள்ளாது வேறு என்ன தான் செய்ய முடியும்? அது மட்டுமா? முண்டா, நியூ ஜார்ஜியா, விலாக் முதலிய தீவுகளையும் ஜப்பானியர்கள் இழந்தார்கள். அவற்றோடு நூற்றுக் கணக்கான கப்பல்களும் விமானங்களும் ஜப்பானியர்களுக்குச் சேதமாயின. சீனாவிலும் இவர்கள் கை ஓங்க விடாமல் விரட்டி யடிக்கிறார்கள் சீனர்கள். பர்மாவிலும் திணறுகிறார்கள். கிஸ்காவிற்கு அருகிலுள்ள செகுலா என்னும் தீவையும் அமெரிக்கர்கள் கைப்பற்றிக் கொண்டனர். ஆகவே, அலூஷியன் தீவுகளெல்லாம் இப்போது அமெரிக்கர்கள் வசமாயின. அல்லாமல், க்யூபெக் மகா நாட்டில் ஜப்பானைத் தகுந்தபடி கவனித்து விட வேண்டு மென்று முடிவு கட்டி யிருக்கிறார்கள். இவை எல்லாம் ஜப்பானியர்கள் நெஞ்சத்தை அறுக்கும் என்பதில் சந்தேக முண்டா?





கேப்டன் மோடிலால் கட்ஜு என்ற பிரபல இந்திய நிருபர், பிரிகேடியர் வின்கேட் அவர்களுடைய துருப்புகளுடன் பர்மாவுக்குள் வெகு தூரம் சென்றார். சிண்ட்வின் நதிக்கரையை நமது துருப்புகள் கடந்து சென்றதை அவர் மிக அழகாக வர்ணித்திருக்கிறார். சிண்ட்வின் நதியைக் கடந்த பிறகு, விமானப் படையின் ரேடியோ சைகைப் பகுதியினர் தம்முடைய தளத்துக்கு நடைபெற்ற விஷயங்களை அடிக்கடி தெரிவித்தார்கள். அப்போது எடுக்கப்பட்ட படத்தை பக்கத்தில் காணலாம்.

# யுத்த நிருபர்களும், யுத்த முயற்சியும்

## பொது மக்களுக்காகச் செய்யும் தொண்டும் தியாகமும்

### பர்மா போர் முனையில் உயிரிழந்த இந்திய நிருபர் கேப்டன் மோடிலால் கட்ஜு

### யுத்த நிருபர்களுடைய "யந்திர பீரங்கி"களும், அவற்றின் மூலம் அறிவு உலகத்துக்கு அவர்கள் செய்யும் திருப்பணியும்

*ஆகஸ்டு மாதம் 17-ம் தேதி சென்னை வானொலி நிலையத்திலிருந்து, "யுத்த முயற்சி" என்னும் தொடரில் "யுத்த நிருபர்களும் யுத்த முயற்சியும்" என்பது பற்றி, டி. ஏ. வி. நாதன் அவர்கள் ஒலிபெருக்கிய பிரசங்கமாவது :—*

சில வாரங்களுக்கு முன், அமெரிக்க யுத்த நிருபர் ஒருவரைச் சந்திக்கும் படியான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அவர் அமெரிக்காவிலுள்ள பிரபல பத்திரிகையான "நியூ யார்க் டைம்ஸ்" ஸின் நிருபர்—மிஸ்டர் ஹெர்பர்ட் மேத்தியூஸ். அவரைப் பற்றி நீங்கள் அடிக்கடி பத்திரிகைகளில் படித்திருக்கலாம்; அவர் அமெரிக்காவுக்கு எழுதியனுப்பும் விவரங்கள், மீண்டும் நம் நாட்டுக்கு 'ராய்ட்டர்' செய்தி நிலையத்தால் அனுப்பப்படுகின்றன; அவற்றை இங்குள்ள பத்திரிகைகளில் நீங்கள் படித்திருக்கக்கூடும். அவர் தென்னிந்தியாவில் சில காலம் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவருடன் கூட நானும் சிறிது தூரம் சுற்றுப் பிரயாணம் செய்தேன். அவர் நம் நாட்டுக்குப் புதிதாகையால், அவரை அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தும்படியான கடமை எனக்கு அளிக்கப்பட்டது. அந்தக் கடமையை நான் நன்றாக பயன் படுத்திக் கொண்டேன். யுத்த நிருபர்களை பற்றிய பல விவரங்களை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அவர் ஒரு படை வீரரைப்போல் "காக்கி" உடுப்பு அணிந்திருந்தார்; தோள்களுக்கருகில் "அமெரிக்க யுத்த நிருபர்" என்ற குறிப்பெழுத்துகள் காணப்பட்டன. யுத்த நிருபர்கள் எப்படிப்பட்ட நிலைமையில் தம்முடைய கடமைகளைச் செய்து வருகிறார்கள் என்பதைப்பற்றி அவர் அநேக ருசிகரமான விஷயங்களைக் கூறினார்.

### ஆபத்துக்களுக்கிடையில் தான் யுத்த நிருபர்கள் வேலை

யுத்த நிருபர்கள், போர் வீரர்களைப் போல, பல அசௌகரியங்களுடனும், ஆபத்துகளுக் கிடையிலும், தம்முடைய வேலையைச் செய்து வருகிறார்கள்; சில சமயங்களில், எதிரியின் குண்டுக்கு இலக்காகி தங்களுடைய உயிரைப் பலியாகவும் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எப்படிப்பட்ட ஆபத்துக்களுக் கிடையில் அவர்கள் பொது ஜனத் தொண்டு செய்கிறார்கள் என்பதை ஐரோப்பாவில் நடந்த ஒரு சம்பவத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

பிரிட்டிஷ் விமானப் படை பர்லின்மேல் பெரிய வெடிகுண்டுத் தாக்குதல் செய்யப் புறப்பட்டது. லண்டன் பத்திரிகை நிருபர்களும் அதனுடன் புறப்பட்டார்கள். வெடிகுண்டுத் தாக்குதல் விமானங்களில் பத்திரிகை நிருபர்கள் சென்றது, இது தான் முதல் தடவை. புறப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னிருந்து, அவர்கள் விமானப் படைச் சிப்பந்திகளுடன கூடவே யிருந்தார்கள். அவர்களுடன் கூடவே பயிற்சி வேலையும் செய்தார்கள். நிருபர்களில் சிலர் தகுதியான உடல் வலிமையும், இருதய வலிமையும் இல்லாமையால், விலக்கப்பட்டார்கள். விமானத்தில் பறப்பதற்கு உடல் வலிமையும், இருதய வலிமையும் வேண்டுமா என்று நீங்கள் கேட்கலாம். கட்டாயம் வேண்டும். ஏனென்றால் வெடிகுண்டு விமானங்கள் அதிக உயரத்தில் பறக்கும் போதும், கடு வேகத்தில் செல்லும் போதும், சமாளித்துக் கொள்ளும்படியான தன்மை வேண்டும். இதைப் பற்றி எனக்குச் சொந்தத்தில் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது. ஏனென்றால், ஒரு வெடிகுண்டு விமானத்தில் நான் அதிக உயரத்தில் பறந்திருக்கிறேன். ஆனால் அதைப் பற்றிப் பின்னால் சொல்லுகிறேன்.

### யுத்த நிருபர்களின் போர்ப் பயிற்சி

இப்போது, பர்லினுக்குச் சென்ற பிரிட்டிஷ் நிருபர்களைப் பற்றியல்லவா குறிப்பிட்டோம்? வைத்தியப் பரீட்சை, தேகப் பயிற்சி, விமானப் படையினர் நடைமுறை வாழ்க்கை, விமான விரிப்புக் குடையுடன் மேலிருந்து கீழே குதித்தல், கடலில் விழுந்தால் உயிர்தப்புவிக்கும் சிறு படகுப் பயிற்சி, இன்னும் அபாய காலங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறை—முதலியவை எல்லாம் அவர்கள் பயிற்சி பெற்றுத் தேற வேண்டியிருந்தது. இதெல்லாம் முடிந்த பிறகு, நிருபர்கள் பர்லினைத் தாக்கச் சென்ற விமானங்களில் புறப்பட்டார்கள். ஆனால் அவர்களில் பலர் பர்லினுக்குப் போய்ச் சேரவே யில்லை. இதை நீங்கள் தவறாக அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது—நல்ல வேளையாக ஒரு நிருபருக்காவது உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. ஒரு விமானத்தின் பீரங்கியாளர் எதிரி விமானத்தால் தாக்கப்பட்டு காய மடைந்தார்; விமானத்துக்கும் சற்று சேதம் ஏற்பட்டது; ஆகையால் அந்த விமானம் அதில் இருந்த நிருபருடன் லண்டனுக்குத் திரும்பி வரவேண்டியதாய் விட்டது. நிருபர் உயிர்தப்பியது அவருடைய நல்லதிர்ஷ்டம் தான்! மற்றொரு விமானம் டென்மார்க்கின் மீது பறக்கும் போது, விமான எதிர்ப்பு பீரங்கி குண்டினால் தாக்கப்பட்டது. அதனுடைய எஞ்சின் சற்று பழுதாய் விட்டது. ஆகவே அந்த விமானமும் திரும்பி விட்டது. இப்படியாக சில விமானங்கள் திரும்பி விட்டாலும், மற்றும் சில பர்லின்மேல் பறந்து சென்று வெடிகுண்டு பொழிந்தன. அவற்றில் ஒரு விமானத்தில் இருந்த நிருபர், தாக்கும் லட்சியத்தின் மேல் இரண்டு நிமிட காலம் விமானம் பறந்து கொண்டிருந்த தென்றும், இந்த இரண்டு நிமிட காலமும் தான் மயிர்க்கூச்செறிந்து மிகுந்த பயத்தோடிருந்ததாகவும், வர்ணித்திருக்கிறார்.

### இந்தியப் பத்திரிகா நிருபர்கள் விமானப் பிரயாணம்

ஏறக்குறைய இதே மாதிரியான அனுபவம், எனக்கும் என் போன்ற சில நிருபர்களுக்கும், சமீபத்தில் கிடைத்தது. இரண்டு மாதங்களுக்கு முன், அதாவது ஜூன் மாதம் 20-ம் தேதி, நாங்கள், நான்கு நிருபர்கள், வெடி குண்டு விமானங்களில் பறந்து சென்றோம். இது இந்திய பத்திரிகை உலக சரித்திரத்திலேயே ஒரு விசேஷ சம்பவமாயிருந்தது. ஏனென்றால், இதற்கு முன் இந்தியாவில் வெடி குண்டு விமானப் பயிற்சித் தாக்குதலில், பத்திரிகை நிருபர்கள் ஈடுபட்டதே கிடையாது. எங்கள் எல்லோருக்கும் விமானத்தில் பறப்பது இது தான் முதல் தடவை. எப்படி யிருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். உள்ளே பயந்தான். ஆரம்பத்திலிருந்து முடிவு வரை அஸ்தியில் ஜுரந்தான். அதைப்பற்றி சந்தேகப்பட வேண்டாம். ஆனால் "ஆனது ஆகட்டும்," என்று துணிந்து தான் சென்றோம். 'பாரஷூட்' என்ற விமான விரிப்புக் குடையை எப்படி உபயோகிப்பது என்று எங்களுக்கு ஒரு விமான ஓட்டி கற்றுக் கொடுத்தார். அப்போது ஆகாயத்திலிருந்து கீழே குதித்தால் என்ன நேருமோ என்ற பயம் ஒரு பக்கம் இருதயத்தில் 'பட, பட' என்று அடித்துக் கொண்டிருந்தது. "பயிற்சித் தாக்குதலில் என்ன பயம்? விமா

2

ணத்துக்கு ஒன்றும் நேர்ந்து விடாது. மிகுந்த கெட்டிக்காரர்களைத் தானே விமான ஓட்டிகளாக வைத்திருக்கிறார்கள். ஆகையால் ஒன்றும் பயமில்லை!" என்ற சமாதான அமைதி மனப்பான்மை மற்றொரு பக்கம் பயத்தின் வேகத்தை குறைத்துக் கொண்டிருந்தது.

### விமானப் பயண அனுபவங்கள்

"சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்காலாழம்" என்று சொல்லுவார்கள். "ஆயுள் முடிவுக்குத் துணிந்தவனுக்கு ஆகாயம் ஒரு அவரைக்காய்" என்று நான் சொல்லிக் கொண்டேன். ஆகாயத்தை நோக்கி விமானம் போகப்போக, பயம் குறைந்து கொண்டே போயிற்று. காற்றின் மேல் கடுவேகத்துடன் செல்லும் மோட்டார் வண்டியில் பிரயாணம் செய்வதைப் போலிருந்தது என்னுடைய விமானப் பயணம். ஆனால் திடீரென்று கீழ் நோக்கிப்பாயும் போது, லண்டன் நிருபருக்கு மயிர்க்கூச் செரிந்தது போல, எனக்கும் பய உணர்ச்சி தோன்றியது. ஒரு தடவை, வரிசையாக இருந்த தென்னை மரங்களை நோக்கி, விமானம் சென்றது. கீழே செல்லச் செல்ல, தென்னை மரங்கள் பெரிதாகவும் உயரமாகவும் வளர்ந்து கொண்டே வந்தன. சரிதான், தென்னை மரத்தில் மோதப் போகிறோம். நம்முடைய முடிவு காலமும் கிட்டி விட்டது என்று நினைத்தேன். அடுத்த விநாடியில் மரங்களுக்கு மேல் பறந்து சென்று, மேக மண்டலத்துக்கு மீண்டும் சென்றோம். இப்படி பல தடவை கீழ் நோக்கிப் பாய்ந்து, பயிற்சி வெடி குண்டுகளை எதிர்க்கட்சியின் விமான தளத்தில் போட்டோம். அப்படிப் பாயும் போதெல்லாம், அடியேன் பாடு அம்பலம் தான்!

இரண்டரை மணி நேரம் இப்படி பறந்து திரிந்தோம். பிறகு கீழிறங்கினோம். நாங்கள் கண்ட காட்சியும் பெற்ற அனுபவமும், எங்களுக்கு உள்ளக் கிளர்ச்சியை ஊட்டின. ஜெர்மனி, பிரான்சு, ஹாலண்டு முதலிய நாடுகளின்மேல், இதைப்போலத் தான் கீழ் நோக்கிப் பாய்ந்து வெடிகுண்டு தாக்குதல் செய்யப்படுகிறது என்று விமானத் தலைவர் எங்களுக்கு அறிவித்தார். பயிற்சித் தாக்குதலில் சென்றதே இவ்வளவு பயத்தை உண்டாக்கியதே; உண்மையான தாக்குதலில், உயிரைக் கையில் பிடித்துச் செல்லும் யுத்த நிருபர்களுடைய வீரம் தான் என்னே என்று வியந்தோம். யுத்த முயற்சியின் பொருட்டு, பொதுமக்கள், உள்ள விவரங்களை அறிவதற்காக, அவர்கள் செய்யும் தியாகத்தை மிகவும் பாராட்டினோம்.

"தியாகம்" என்று சொன்னதும், தன்னுடைய உயிரைப் பர்மா போர் முனையில் தியாகம் செய்த இந்திய யுத்த நிருபர், கேப்டன் மோதிலால் கட்ஜுவின் பெயர் நினைவுக்கு வருகிறது. அவர் பர்மாவுக்குள் பிரிகேடியர் வின்கேட் துருப்புகளுடன் வெகு தூரம் சென்றார். முடிவில் ஜப்பானியருடைய குண்டுக்கு இரையாய்விட்டார். அவருடைய பெரும் தியாகத்தைப் பத்திரிகை உலகமும், மக்கள் உலகமும் என்றும் மறக்கமாட்டா.

அவருடைய நாட் குறிப்புப் புத்தகம் மாத்திரம் கிடைத்திருக்கிறது. அதில் சிண்ட்வின் நதியைக் கடந்து சென்ற நமது துருப்புகளின் அனுபவங்களையும், ஜப்பானிய தாக்குதல் அபாயங்களையும், கண்முன் நிற்பது போல, அவ்வளவு அழகாகவும் தத்ரூபமாகவும் வர்ணித்திருக்கிறார்.

### யுத்த நிருபர்கள் இலக்கியத் திறமை.

பொதுவாக, யுத்த நிருபர்கள் எல்லோருமே சிறந்த எழுத்தாளர்கள் தான். அவர்கள் பலருடைய யுத்த வர்ணனைகள் இலக்கிய உலகில் மொழி நடைக்காக மிகவும் பாராட்டப்படுகின்றன. உதாரணமாக, லண்டன் "டெய்லி எக்ஸ்பெரஸ்" பத்திரிகை நிருபர் ஆலன் மூர்ஹெட், யுத்த நிருபர்களில் பிரசித்திபெற்ற ஒருவர். சென்ற வருஷம், சிறிது காலம் அவர் இந்தியாவில் இருந்தார். யுத்தம் ஆரம்பித்த பிறகு, மத்திய தரைப் போர் முனையிலேயே அதிக காலம் அவர் இருந்து வந்திருக்கிறார். இடைக்கிடையே, இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றாலும், பெரும் பாக காலத்தை அந்தப் போர் முனையிலேயே அவர் கழித்திருக்கிறார். "மத்தியத் தரைப்போர் முனை", "ஒரு வருஷ யுத்தம்" என்ற பெயர்களுடன் வெளியிடப்பட்ட அவருடைய இரண்டு புத்தகங்கள் இலக்கிய அழகை மெச்சுவோருடைய உள்ளத்தைக் கவரும் முறையில் எழுதப்பட்டுள்ளன. குவெண்டின் ரேனால்ட்ஸ், வின்ஸ்சண்ட் ஷீயன், என்ற வேறு இரண்டு யுத்த நிருபர்களைப் பற்றி இந்தியர்கள் பலருக்குத் தெரிந்திருக்கலாம்; அவர்களும் சிறந்த எழுத்தாளர்கள் தான்.

இதல்லாமல் பத்திரிகைகளில் பல யுத்த நிருபர்களின் பெயர்களைப் பார்க்கிறோம்; வானொலிச் செய்தி ஒலிபரப்புகளிலும் அவர்களுடைய பெயர் அடிபடுகிறது. உதாரணமாக மாஸ்கோவில் உள்ள பால் விண்டர்டன் என்ற "நியூஸ் கிராணிகள்" நிருபர் மத்தியதரைப் போர் முனையில் உள்ள ராஸ் மூசன் என்ற பி. பி. சி. நிருபர், சிசிலி போர் முனையிலுள்ள ராபர்ட்டன்னட் என்ற ராய்ட்டர் நிருபர், எட்டாவது பட்டாளத்துடன் இருக்கும் ராஸ் மன்ரோ என்ற கனடா நிருபர், பர்மாவில் உள்ள எப். ஆர். மோரேய்ஸ் என்ற "டைம்ஸ் ஆப் இந்தியா" நிருபர் முதலியவர்கள் பிரசித்தி பெற்ற சிலர். இன்னும் பலர் அனாமதேயமாக, பல போர் முனைகளில் தொண்டு செய்து வருகிறார்கள்.

போர் முனைகளுக்கும் பொது மக்களுக்கும் தொடர்பு யுத்த நிருபர்கள் தான். அவர்கள் இல்லாவிட்டால், யுத்தத்தின் ருசிகரமான சம்பவங்கள் மக்களுக்குத் தெரியமாட்டா; யுத்த முயற்சியில் தீவிரமான பங்கெடுத்துக் கொள்ளும் படியான உற்சாகமும் அவர்களுக்கு உண்டாகாது. "டைப்" அடிக்கும் யந்திரங்கள் தான் அவர்களுடைய யந்திர பீரங்கிகள். அவற்றின் மூலம், அறிவு உலகத்தில் அவர்கள் போர் புரிகிறார்கள். அவர்களுடைய தியாகப் போரை அறிவு உலகம் என்றும் மறவாது.

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

இனி இரண்டாவது அம்சத்தைக் குறித்துக் கவனிப்போம். இச்சமயத்தில் பிரிட்டன் செய்வதின்ன தென்று தெரியாமல தடுமாறிக் கொண்டிருந்தது. எதிரிக்கோ பலம் அதிகம்; மகா கடுமையாகத் தாக்குகிறான். அதைச் சமாளிக்கத் தன்னால் முடியுமென்று பிரிட்டன் அப்பொழுது காட்டிவிட்டது; என்றாலும் திருப்பித் தாக்க பிரிட்டனுக்குப் போதுமான பலம் அப்போதில்லை. ஹிட்லர் தான், முதலில் தாக்கக் கூடிய நிலைமையிலிருந்தார். என்றாலும், பிரிட்டனைத் தாக்க ஹிட்லர் செய்த முயற்சி பலிக்கவில்லை. ஹிட்லருக்கு நீர்மூழ்கிக் கப்பல்கள் இருந்தன. இவை, நேச நாட்டுக் கப்பல்களை வெகுவாக சேதப்படுத்தின. முசோலினி இஜிப்தைத் தாக்கினார். ஆனால் பலிக்க வில்லை. என்றாலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஸ்தம்பித்து விடும்படி செய்யக் கூடிய நிலைமையில் ஹிட்லர் இருந்தார், அதாவது மத்தியக் கிழக்கு நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு இந்தியா மீது படையெடுத்துப் போயிருக்கக் கூடும். 1940-ம் வருஷத்தில் நேர்முகமாக பிரிட்டனைத் தாக்கி வெற்றி கொள்ள ஹிட்லரால் முடியவில்லை. ஆகவே 1941-ம் வருஷம் மறை முகமாக முயற்சித்தார். 1941-ம் வருஷத்தின் கோடை காலத்தில் தென் கிழக்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள் ரஷ்யா ஆகியவற்றை வென்ற பிறகு, பிரிட்டனைச் சரணடையும்படிச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்பினார்.

**1940, 41-ல் ஹிட்லர் போர் முயற்சிகள்.**

இதற்கான வழிகளெல்லாம் செம்மையாக அமைந்திருப்பதாக ஹிட்லருக்குத் தோன்றியது. 1941-ம் வருஷம் மே மாதம் ஹிட்லரின் பேராசைக்கு க்ரீசும், யூகோஸ்லேவியாவும் பலியாகின. க்ரீட் தீவை ஜெர்மானியர்கள் தகர்த்துவிட்டார்கள். ஈராக்கில், ஜெர்மானியர்களுக்குச் சாதகமா யிருந்த ரஷீத் அலி அதிக்கம் பெற்றார். 1941-ம் வருஷம் செப்டெம்பர் மாதத்தில் லெனின்கிராட், மாஸ்கா, ராஸ்தாப் ஆகிய நகரங்களின் வாயில்களில் ஹிட்லருடைய படைகள் இருந்தன. ஆப்பிரிக்காவில் ஜெனரல் வேவல் இஜிப்து எல்லைப்புரத்திற்கு விரட்டப் பட்டார். இதற்குக் காரணம், கிரீசில் போராடும்படி அவருடைய படைகளில் 4 டிவிஷன்கள் அனுப்பப்பட்டது தான்.

அது தான் ஹிட்லருக்கு மகா உன்னதமான பருவம். தன் திட்டத்தை அவர் ஏறக் குறைய நிறைவேற்றி விட்டார் என்று சொல்லலாம். எல்லாம் அவருக்குச் சாதகமாகவே யிருந்தன. தாக்கக் கூடிய பலமும் அவருக்கு அப்போது இருந்தது.

எதிர் பாராதபடி சம்பவங்கள் நிகழ்ந்தன. 1940-ம் வருஷத்தில், பிரிட்டிஷ் விமானப் படையின் திறமையினாலும், கிரெனெய்க்கா மீது மகா கெட்டிக்காரத்தனமாக ஜெனரல் வேவல் படையெடுத்துச் சென்றதனாலும், பிரிட்டன் காப்பாற்றப் பட்டது. அதே போல, 1941-ம் வருஷம் அபிசீனியாவை விட்டு அடியோடு இத்தாலியர்களை விரட்டி விட்டதனால் சூயசுக்கு ஏற்படவிருந்த ஆபத்து நீங்கியது. அன்றியும், பாதுகாப்பின் பொருட்டு, ஈராக், சிரியா, ஈரான், ஆகிய நாடுகளில் நேச நாட்டுப் படைகள் இருந்ததனால், இந்தியா பாதுகாக்கப்பட்டது. ஆனால், ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மகத்தான முறையில் ரஷ்யாவில் செம் படைகளுக்கு வெற்றி கிடைத்திருக்காவிட்டால், இத்தனை வெற்றிகள் பிரிட்டனுக்கும் கிடைத்திருக்க முடியாது. 1941-ம் வருஷம் ஹிட்லர் நிறைவேற்ற துணிந்த திட்டம் ஈடேற ஒட்டாமடிக்க, ரஷ்யாவின் மகத்தான பலந்தான் செய்தது. ரஷ்யாவுக்கு உதவி செய்ய பிரிட்டன் வராது என்று ஹிட்லர் அப்போது நினைத்தார். இங்கே, அவர் ஏமாந்து விட்டார். ரஷ்யாவை ஹிட்லர் தாக்க ஆரம்பித்து 18-மணி நேரத்தில், தாம் ரஷ்யாவிற்கு உதவுவதாக மிஸ்டர் சர்ச்சில் தெரிவித்தார்.

**எதிர்பாராத சம்பவங்கள்.**

பிரிட்டனை மீண்டும் தாக்கும் முன்னதாக ரஷ்யாவை ஒழித்து விடவேண்டுமென்று ஹிட்லர் விரும்பினார். ரஷ்யாவை ஒழித்து விடுவதென்பது முடியாத காரியம் என்று அவர் தெரிந்து கொண்டிருந்த போதிலுங் கூட, பிரிட்டனை வெல்ல, அவரால் முயற்சிக்கக் கூடவில்லை. ஏனென்றால், அவருடைய படைகளுக்குப் பின்னே யிருந்த படை மகா பலத்தோடும் கட்டுப் பாட்டோடும் இருந்தது. ஒவ்வொரு நாடாகக் கைப்பற்ற வேண்டுமென்னும் அவருடைய கொள்கை பலிக்க வில்லை, ரஷ்யாவை யாவது பிரிட்டனையாவது விட்டுவிட அவரால் முடியவில்லை.



# சென்னை யுத்தக் காட்சி சாலை



யுத்தக் காட்சி சாலையில் ஜெனரல் லீ டாங்கை அங்கே வந்திருப்பவர்கள் பார்வையிடுங் காட்சி.

உலக சரித்திரத்திலேயே இத்தனை அதிகம் பேர்களுக்கு, இவ்வளவு அதிக வேடிக்கைகள் இலவசமாகக் காட்டப்பட்டதே கிடையாது. அது தான் யுத்தக் காட்சி சாலை. இது ஐந்தாவது முறையாகச் சென்னையில் நடை பெறப் போகிறது. இதை மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் ஆகஸ்ட்டு மாதம் 27-ம் தேதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப் போகிறார். அங்கே பல நல்ல காட்சிப் பொருட்கள் அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. சாதாரணமாக இந்தக் காட்சிப் பொருள்களைக் காணும் பொருட்டு பெருந் தொகைகளைச் செலவு செய்து கொண்டு வெகு தூரங் கூட அநேகர் போவார்கள்.

சென்னை யுத்தக் காட்சி சாலையில் வைக்கப் பட்டிருக்கும் நூற்றுக் கணக்கான பொருள்களில் சிலவற்றை கீழே குறிப்பிட்டிருக்கிறது :—

(1) மூவகைப் படைகளும் சேர்ந்து நடத்தும் போராட்டம்—இந்தியாவில் இப்படிப்பட்ட காட்சி பொது மக்களுக்கு ஒரு போதும் காட்டப்பட்டதில்லை. இது மயிர்க் கூச் செரியச் செய்யும். அறிவை வளர்க்கும். பெரும் வேடிக்கையா யிருக்கும். இன்னும் எவ்வளவோ......

(2) விமானங்களெல்லாம் சேர்ந்து கூட்டங் கூட்டமாக வந்து விமான விளையாட்டுகளாடி வெடி குண்டுகளை வீசும்.

(3) டாங்கி யுத்தங்கள். பீரங்கிப் போராட்டங்கள். லிபியா, துனீசியா, சிசிலி ஆகிய நாடுகளில் நிகழ்ந்த சம்பவங்களை, உங்கள் கண் முன் நடித்துக் காட்டப் படுவதை நேரில் காண்பீர்கள்.

(4) எதிரிகளிடமிருந்து கைப் பற்றப் பட்ட தளவாடங்கள். இந்தக் காட்சி சாலைப் பொருள்களிலே 'பாலை வனக் காட்சி' தான் மிகவும் புகழ் வாய்ந்தது. இங்கே எதிரியிடமிருந்து வேவல் கைப்பற்றிய டாங்கிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இக்காட்சி அனைவரையும் நடுங்கச் செய்யும்.

(5) 'பாரேஜ் பலூன்கள்'—வெள்ளிக் கட்டி போன்ற தோர் ஆயுதம். ஜெர்மானியர்களின் விமான பலத்தைக் குலைத்து பிரிட்டிஷ் விமான பலத்தைப் பெருக்க உதவியது இது தான்.

(6) ஒரு 'ப்ளென் ஹீம்' பாம்பர். இது 60 முறைகளுக்கு மேல் பர்மாவைப் போய்த் தாக்கி வந்திருக்கிறது. அதில் காணப்படும் காயங்களி லிருந்து இது 60 முறை பர்மாவைத் தாக்கித் திரும்பியது என்று சொல்லக் கூடுமா?

(7) ஒரு 'வங்காள' பீரங்கி. 'வங்காள' என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இது, சுரங்க வெடிகளை ஒதுக்கும் ஒரு சிறிய கப்பல். இதைவிட 10 பங்கு பெரிய ஜப்பானியக் கப்பலொன்றை மூழ்கடித்தது இது தான்.

(8) ஒரு இந்திய யுத்தக் கப்பலின் முன் பாகம் முழுவதையும் திருத்திக் கட்டி யமைப்பது.

(9) தொழிற் பயிற்சித் திட்டப்படி நடை பெறும் வேலைகளை விளக்கும் ஒரு பெரிய தொழிற்சாலை. இந்திய எதிர் கால சிற்பிகளில் பெரும்பாலோர் இத்திட்டப்படி பயின்றவர்களாகத் தான் இருப்பார்கள்.

(10) பட்டணங்கள் எதிர் காலத்தில் எப்படி அமைக்க வேண்டுமென்பதை விளக்கிக் காட்டும் ஒரு 'மாடல்' பட்டணம். இப்படிப்பட்ட திட்டம் இந்தியாவிற்குத் தேவைதான்.

(11) அதிகமாக உணவுப் பொருள்களைப் பயிர் செய்யுங்கள் என்னும் இயக்கத்திற்கு ஆதாரமான ஒரு பண்ணை. இதை விடச் சிறந்த காரியம் வேறெதுவுமில்லை.

(12) ஒரு பெரிய ஆட்டக் கொட்டகையைத் தேசியப் போர் முனையாளர் கட்டி முடித்திருக்கிறார்கள். இங்கே நாள் தோறும் கச்சேரிகளும் ஆட்டங்களும் நடை பெறும்.

இங்கே குறிப்பிடப் பட்டுள்ளது ஒரு டஜன் தான். இன்னும் எத்தனையோ டஜன் பொருள்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூட மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் விசேஷக் காட்சிகள் காலை 9-மணி முதல் 11-மணி வரை நடை பெறும். சாதாரணமாக மாலை 4-மணி முதல் 8-மணி வரை காட்சிகள் நடைபெறும். நாள் தோறும் இரண்டு இராணுவ பாண்ட் வாத்தியக் கச்சேரிகள் நடைபெறும். நீங்கள் நம்பினாலும் நம்பா விட்டாலும் இத்தனையும் இலவசமாகவே காட்டப்படும்.

# யுத்த நெருக்கடியும் அரசாங்க உதவியும்

யுத்த நெருக்கடியான நிலைமை சம்பந்தமாக, சென்னை அரசாங்கத்தார் பல விதமான பொது ஜன உதவி வேலைகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். இவை பற்றிய விவரங்கள் வருமாறு :—

### செங்கற்பட்டு ஜில்லா.

கடற் கரை ஓரங்களிலுள்ள பெரிய நகரங்களிலும் கிராமங்களிலு மிருந்து பொது மக்கள் அமைதியாக உள் நாட்டிற்குப் போகத் தக்க வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

2. அப்படி அவர்கள் வெளியேறிப் போகுங் காலத்தில், அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, தண்ணீர் முதலியவை தடையில்லாமல் கிடைக்கத் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இந்த வேலைகளைக் கவனிக்கும் பொருட்டு ஒரு 'ஸ்பெஷல் ஆபீசரை' நியமித்திருக்கிறார்கள்.

3. 'ரோடு' பக்கங்களில் 'முகாம்'கள் கட்டி, கிணறுகளும் வெட்டி வைக்கப்பட்டிருக்கின்றன.

### இராமநாதபுரம் ஜில்லா.

உணவுப் பொருள்களின் விலைகளும், துணிகளின் விலைகளும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டு போவதைத் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாலூக்காவிலும் முக்கியமான டவுன்களிலும் விலைவாசி நிர்ணயக் கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கமிட்டியில் இரண்டொரு வியாபாரிகளும் பொது மக்களின் பிரதி நிதிகளும் அங்கத்தினரா யிருக்கின்றனர். இந்தக் கமிட்டிகள் அவ்வப்போது கூடி, விலைவாசிகளை நிர்ணயிக்கிறார்கள். இதன்படிக்கின்றி, மீறி அதிக விலைக்கு விற்கும் வியாபாரிகளைத் தண்டனைக் குட்படுத்துகிறார்கள்.

மண்ணெண்ணெயும் சர்க்கரையும் அனைவருக்கும் கிடைக்கத் தக்கபடி பெரிய டவுன்களிலும் பெரிய பட்டணங்களிலும் வீடுதோறும் 'கூப்பன்கள்' வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு அவை இப்போது வாரந்தோறும் கிடைக்கின்றன. இது போலவே கிராமங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நிற்க, உணவுப் பொருள்கள் முதலியவற்றை சேமித்து வைத்துக் கொண்டு, அரசாங்கத்தார் விதித்த விலைப்படி விற்காமல், அதிக விலைக்கு விற்கும் வியாபாரிகளைத் தண்டனைக்குள்ளாக்கப்படுகிறது.

# நரம்புகள் தெறிக்க

புலியைவிட கிலியே மனுஷனை சீக்கிரம் கொன்றுவிடும் என்று சொல்லுவார்கள். அதேமாதிரி, கூடிய சீக்கிரமே வரப்போகும் நேச தேசப் படையெடுப்பைவிட, அது எப்பொழுது ஏற்படும்; எங்கே ஏற்படுமோ என்று எண்ணி எண்ணி நடுங்கிக் கொண்டிருப்பது ஹிட்லருக்கு அதிக சங்கடத்தை விளைவிக்கு மென்பதில் சந்தேகமே யில்லை. இந்தச் சங்கடம் அதிகமாக ஆக, அவரது நரம்புகளுக்கும் வேலை அதிகமாகும். தெறித்து விடும்படியான நிலைமையை அவை அடைந்து விடுமானல், யாரும் ஆச்சரியப்படவே மாட்டார்கள். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் தான் மனுஷனுக்குப் பைத்தியம் பிடித்துவிடுகிறது. ஆகவே ஹிட்லரைப் பைத்தியமாக அடிப்பதற்கான விஷயங்கள் எல்லாம் இப்பொழுதே நேசநாடுகளில் நடந்துகொண்டிருக்கின்றன.

பிரதம மந்திரி சர்ச்சிலும், ஜனதிபதி ரூஸ்வெல்டும் கனடாவிலே க்யூபெக் என்னும் அழகிய நகரிலே பல நாட்கள் தங்கள் முக்கிய சிப்பந்திகளுடன் கலந்து பேசினர்கள். ஜனதிபதி அட்டாவா சென்று விட்டார். அவர் வாஷிங்டன் சென்றதும், அங்கே சர்ச்சில் அவரைப் போய் சந்திப்பார். இரண்டாவது போர்முனையை ஸ்தாபிப்பதற்கான திட்டங்கள் எல்லாம் வரையப்பட்டுவிட்டன. எந்தெந்தப் போர்முனைக்கு யார் யார் சேனபதி என்பதெல்லாம் தீர்மானமாகிவிட்டது. ஐஸனஹோவருக்கு பால்கன் பிரதேச சேனதிபதித்வம் அளிக்கப்படும். சீமைக்கு எதிர்ப்புறத்தே உள்ள விரோதி நாடுகளைத் தாக்கத் துணியும் படைக்கு ஒரு பிரிட்டிஷ்காரர் சேனதிபதி யாக்கப்படுவார். இதே சமயம் பஸிபிக் பிரதேசத்திலும் பயங்கரத் தாக்குதல் தொடங்கும், கானடாக்காரர்கள் ஜப்பானைத் தாக்கும் முயற்சியில் பெருவாரியாகப் பங்கெடுத்துக் கொள்ளுவார்கள். சீனப் பிரதிநிதி க்யூபெக்கிற்குப் போயிருந்தார். அங்கேற்பட்ட முடிவுகள் அவரது முகத்தை மலரச் செய்துவிட்டன. பர்மா, இந்தியாவிலிருந்தும், சீனவிலிருந்தும் தாக்கப்படும். ஜப்பானிய நகரங்களையும் ஒரு போடுபோட தென் கிழக்கு சீனவில் உள்ள விமானிகள் சரியான காலத்தை எதிர் பார்த்திருக்கிறார்கள்.

பிரிட்டனை படையெடுப்புத் தளமாக ஆக்க ஏற்பாடுகள் அநேகமாக பூர்த்தியாகிவிட்டன. அங்குள்ள வீரர்கள் நாஸிகளின் ரத்தத்தை ஆருகப் பெருக்க, துடியாகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள், நார்வேயிலிருந்து ஸ்பெயின்வரை உள்ள கடற்கரையிலே எங்கெங்கு நேசதேசத்தார் இறங்குவார்களோ தெரியாது. அவர்களது விமான பலம் அளவுக்கு மீறிவிட்டது. எத்தகைய எதிர்ப்பும் அவர்களுக்கு லக்ஷ்யமில்லை.

### ஜெர்மினியர் பிடித்த நாடுகளில் கலக ஆரம்பம்.

ஜெர்மனியின் பிடியில் அகப்பட்ட நாட்டில் உள்ளவர்களை நேச நாட்டினர் சும்மா கலகம் செய்யக் களப்பிவிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அதன் பலனையும் நேரில் காணமுடிகிறது. ஹாலந்திலும், பிரான்ஸிலும், இத்தாலியிலும், வேறு சில பிரதேசங்களிலும் பொது ஜனங்கள் பகிரங்கமாக அதிகாரத்தை மீறுகிறார்கள். எத்தகைய தண்டனையையும் ஏற்கத் தயாராக இருக்கிறார்கள்.

நேசதேச விமானங்கள் எமன்களாக மாறிவிட்டன. ஐரோப்பாவில் எந்த ஊரும், அவை பறந்து சென்றடையமுடியாத தூரத்தில் இல்லை. யுத்தத்திற்கு உதவும் தொழிற்சாலைகள் எல்லாம் தரைமட்டமாகி வருகின்றன. ரயில் போக்குவரத்துக்கு நாளுக்கு நாள் சங்கடங்கள் வலுத்துவருகின்றன. மக்களின் மனங்களிலே பீதி நிறைந்து கிடக்கிறது. ஹாம்பர்க் நகரம் அரோஹரா ஆகிவிட்டது. அடுத்த ஆட்டம் பெர்லின் நகரில் நடக்கும்போலிருக்கிறது. பெர்லின் நகரிலிருந்து அரசாங்கத்தார் உள்பட எல்லோரும் வெளியேறவேண்டி வந்திருக்கிறது. 1940-லே லண்டன் நகரத்தை நாஸி விமானங்கள் த்வம்சம் செய்ய முயன்றன அல்லவா? அப்பொழுது கூட பிரிட்டிஷ் அரசாங்கம் லண்டனை விட்டுக் கிளம்பவில்லை. ஆனல் ஜெர்மன் அரசாங்கம் இப்பொழுதே கம்பி நீட்டப்பார்க்கிறது. அதிலிருந்தே அடிவிழும் வேகம் தெரியவில்லையா?

### கார்க்கோப் நகரம் பிடிப்பட்டது.

ருஷ்யாவிலே செஞ்சேனை ராக்ஷஸ சேனையாக நாஸிகளுக்குத் தோற்றமளித்து வருகிறது. கோடை வெள்ளத்தைப் போல, கட்டுக் கடங்காது வருகிறது அது என்று ஜெர்மானிய ரேடியோவே அலறுகிறது. கார்க்கோப் நகரைக் காக்க ஹிட்லர் கஜகர்ணம் போட்டுப் பார்த்தார். லக்ஷக் கணக்கிலே புதுச் சேனையைக் கொண்டு தள்ளினர். எல்லாம் பெரிய உடைப்பில் போட்ட ஒரு கூடை மண்போலாகிவிட்டது. கார்க்கோப் நகரிலிருந்து கல்தா பெற்றுவிட்டன நாஸிப் படைகள். அடிபொறுக்காது ஓடிக்கொண்டிருக்கின்றன அப்படைகள். ஸ்டாலின், 'நில்' என்று எப்பொழுது உத்திரவிடப்போகிறாரோ தமது செஞ்சேனைக் கென்பது தெரியவில்லை, யூக்ரேன் தான் ருஷ்யாவிற்கே களஞ்சியம் போல. அப்பிரதேசத்திலே ருஷ்யர்கள் வெகு ஜோராக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். க்ரிமியா அருகே இருக்கும் நாஸிப்படைகளைத் துண்டிக்க அவர்கள் முயலுகிறார்கள். கார்க்கோப் ருஷ்யர்களுக்குத் திரும்பக் கிடைத்தது ஒரு மகத்தான வெற்றியாகும்.

ருஷ்ய யுத்தம் ஆரம்பித்த பிறகு நான்குமுறை இந்நகரம் கைமாறியாகிவிட்டது. இனி திரும்பவும் இதைப்பற்றி நாஸிகள் கனவிலும் நினைக்க வசதி இராது என்றே நம்புகிறோம்.

ருஷ்யர்கள் இங்கேதான் பிரமாண்டமான டாங்கிகளையும், விமானங்களை தம் தயாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்தத் தொழிற்சாலைகளில் மட்டும் ஒன்பது லக்ஷம் தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். இது திரும்பக் கிடைத்து விட்டதால், குளிர் காலத்திலேயும் போர் நடத்த நேரிட்டால், இங்கிருந்தே பல அற்புதச் செயல்களைச் செய்யலாம். ருஷ்யாவிலே, தமது முன்னணியைக் குறுக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கிறது. இருநூறு, முந்நூறு டிவிஷன் படைகளை அங்கே பரந்த பிரதேசத்தில் முடக்கி வைத்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்? அதிக ஆபத்தில்லாத இடங்களை விட்டு விட்டு, முன்னணியைக் குறுக்கிக் கொண்டால், ருஷ்யாவில் உள்ள படைகளில் பெரும் பகுதியை மேல் திசைக்கோ, தென் பிரான்ஸிற்கோ, பால்கன் பிரதேசங்களுக்கோ கொண்டு போகலாமல்லவா? ஜப்பானும் ருஷ்யாவைத் தாக்கி உதவு மென்று தோன்றவில்லை. அதன்பாடே அம்பலத்தில் நிற்பதாக இருக்கும் போலிருக்கிறது. அப்படியிருக்க அது எங்கே வந்து உதவப் போகிறது?

### ஹிட்லர் மனத்தடுமாற்றம்.

இத்தனைச் செய்திகளும், யோசனைகளும் ஹிட்லர் மனசிற்கு எட்டும் பொழுது, அவர் நிம்மதியாக இருக்க முடியாமா? நாளுக்கு நாள் திணறல் தான் அதிகமாகிறது. தரித்திரம் பிடித்த இத்தாலி, ஸ்பெயின் போல யுத்தத்தில் சேராமலே இருந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும் என்று ஹிட்லர் நினைக்கக் கூடும். வாஸ்தவம்! இத்தாலி மட்டும் முஸோலினியின் மடத்தனத்திற்குக் குறியாகாதிருந்திருந்தால், யுத்தத்தின் போக்கே வேறு விதமாகத் தான் இருந்திருக்கும்!

பிராங்கோ என்றதும் ஒரு விஷயம் நினைவிற்கு வருகிறது. அவருக்கும் ஸ்பெயினிலே இருப்பது நெருப்பு மீதிருப்பது போல் தானிருக்கிறுப் போலிருக்கிறது. ஹிட்லரது திணறலும், முஸோலினியின் வீழ்ச்சியும், அச்சு நாட்டார் பக்கம் அவர் கொண்டிருந்த பாசத்தின் அளவை வெகுவாகக் குறைத்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. போன வாரம் கூட, ஸ்பெயினிலே பிராங்கோவைச் சந்தித்து ஸர் ஸாமுவேல் ஹோர் பேசி விட்டுப் போயிருக்கிறார். பேச்சு, சுமுகமாகவே நடந்ததாகக் கூறுகிறார் அவர். ஸ்பெயினிலே நாஸிகள் நடமாட்டம் அதிகமாவது விரும்பத் தகாது ஆதலாலும், ஜிப்ரால்டர் ஜல சந்தியின் முக்யத்வம் இப்பொழுது அதிகமாகி விட்டதால், அங்கு போகும் கடற் படைகள் நாஸிகள் கண்களில் விழுவது கூடாது ஆதலாலும், நேச நாட்டினர் ஸ்பெயினை தம் பக்கத்தில் சேர்த்துக் கொள்ள முயலுவதில், தவறொன்றுமில்லையே! ஸ்பெயின் அவ்வாறு சேர்ந்து விட்டால், ருஷ்யப் போர் முனையில் போராடும் ஸ்பானியத் தொண்டர் படையினர் ஆயுதங்களைக் கீழே வைததுவிட மாட்டார்களா?

துருக்கி கூட நேச தேசத்தாரோடு சேர்ந்து போர்க் கோலம் பூணக் கூடும். இல்லாவிட்டால் பால்கன் பிரதேசத்திலே போர் தொடங்கினல், துருக்கி வழியாக உதவி போக அந் நாட்டு சர்க்கார் அநுமதி யளிக்கக் கூடும். துருக்கியின் தயவு இருந்தால், பால்கன் படையெடுப்பிலே சீக்கிரமே வெற்றிகரமான முடிவைக் காணலாமே!

துருக்கியும், ஸ்பெயினும் என்ன செய்யப் போகிறதோ என்ற கவலை வேறே ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கும். ஸிஸிலித் தீவு வேறே ஒரு மண்டல காலம் சரியாகப் போர் நடக்கு முன்பே கைவிட்டுப் போய்விட்டது. ஸிஸிலி இனி நேச நாட்டினருக்கு முக்ய தளமாகும். அங்கிருந்து ஸார்டீனியா தென் பிரான்ஸ், இத்தாலி ஆகிய பிரதேசங்களை ஜோராகத் தாக்கலாமே!



### திவான்பகதூர் எம் சி. ராஜா மறைந்தார்.

திவான் பகதூர் எம். சி. ராஜா அவர்கள், சென்ற திங்கட்கிழமை இரவு பரங்கிமலையில் உள்ள தம்முடைய இல்லத்தில் காலஞ் சென்றார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர், டில்லியிலுள்ள தேசீயப் பாதுகாப்பு சபையின் அங்கத்தினராகவும், சென்னை மாகாண தேசீயப் போர் முனையின் பகுதித் தலைவராகவும் ('ரீஜனல் லீடர்') இருந்தார். சமாதான காலத்திலும், யுத்த காலத்திலும் அவர் நாட்டுக்கு பாராட்டத் தக்க சிறந்த சேவை செய்தார். அவருடைய இரண்டு குமாரர்களைப் பட்டாளத்தில் சேர்த்தனர். அவரைப் பிரிந்து வருந்தும் அவருடைய குடும்பத்தாருக்கு மனமார்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



தொழிலாளர் பகுதி

# 4-வது இந்தியப் படையின் மகா வீரச் செயல்கள்

## ஆப்பிரிக்கப் பாலைவனப் போராட்ட விவரங்கள்

### எகிப்தில் நிகழ்த்திய ஆச்சரியங்கள்



4-வது இந்தியன் டிவிஷனைச் சேர்ந்த சிப்பாய்கள் மேற்குப் பாலைவனத்தில் எதிரிகளைத் தவிடு பொடி யாக்குகிறார்கள்.

இந்த இரண்டாவது உலக யுத்தத்திலேயே மிகவும் முக்கியமானது மத்திய கிழக்கில் 4-வது இந்திய டிவிஷன் நடத்திய போராட்டந்தான். அவர்களுடைய வீரம், மற்ற தோழர்களோடு ஒத்துழைக்குந் தன்மை ஆகிய குணங்கள் பெரிதும் போற்றத் தக்கன. இதை உலகம் ஒருபோதும் மறக்க முடியாது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் படைகளில் வேறெதுவும் இதைப் போல அதிகப் போராட்டங்களில் கலந்து கொண்டதில்லை. 1943-ம் வருஷம் பிப்பிரவரி மாதம் வரை இப் படையில் 15,000 பேர்கள் சேதப்பட்டனர். ஆனல் 1 லட்சம் பேர்களை யுத்தக் கைதிகளாகப் பிடித்தனர். அன்றியும் போர் முனைக்குப் போன முதல் இந்தியப் படை இது தான். எல்லா வகைப் போர்த் தொழில்களிலும் இது தலை சிறந்து விளங்கியது. அது மட்டுமன்று. அவர்களுக் குள்ளிருந்த ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மகா சிறந்தன.

### வேவல் படைகளோடு போய்ச் சேர்ந்தது.

இந்தியாவின் பல பாகங்களிலு மிருந்தவர்களைக் கொண்டது இந்தப் படை இவர்களோடு இரண்டாவது கமரன் ஹைலாண்டர்ஸ் படையும், பிரிட்டிஷ் டாங்கிகளும், ஆயுதந் தாங்கிய மோட்டார் கார்களும், பீரங்கிகளும் சேர்ந்து, வேவலின் தலைமையிலிருந்து ஒரு சிறு படையோடு போய்ச் சேர்ந்தன. இந்தப் படை சிறிதானலும் திறமையில் பெரிது. 1940-ம் வருஷம் டிசம்பர் மாதம் 9-ம் தேதி வெற்றிப் போர் ஆரம்பமானது. சிடிநெய்காவைத் தாக்க பிரிட்டிஷ் படைகள் ஆரம்பித்தன. அப்போது பிரிட்டனுக்குப் போதுமான விமான பல மில்லை. அங்கிருந்த எதிரிகளின் எண்ணிக்கையும் மிக அதிகம். எல்லாம் பிரிட்டனுக்குப் பாதகமா யிருந்தும் ஆச்சரியப்படத்தக்க விதமாக பிரிட்டனுக்கு வெற்றி கிடைத்தது.

இந்த இந்திய டிவிஷன், இத்தாலியர்கள் நன்கு அரண் செய்திருந்த நிபெய்வாவைக் கைப்பற்றி, அங்கிருந்த ஏராளமான எதிரி தளவாடங்களையும் 200 யுத்தக் கைதிகளையும் கைப்பற்றினார்கள். மறு நாள் சிட்டிபரானியைக் கைப்பற்றினார்கள்.

டிசம்பர் மாதம் 12-ம் தேதி அங்கிருந்து விரைந்து போய் இத்தாலிய கிழக்காப்பிரிக்காவில் 1941-ம் வருஷம் ஜனவரி மாதம் 19-ம் தேதி போராட்டத்தை ஆரம்பித்தனர். இங்கே எதிரியோடு மகா கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. கேரனைக் கைப்பற்றிய வுடனே, இந்தப் படை இஜிப்துக்கும் பாலைவனத்திற்கும் இடையிலுள்ள எல்லைப்புரத்திற்கு வந்து சேர்ந்தன. ஏனென்றால், ரோமலின் படைகளால் பாதகம் அங்கே நேரக்கூடு மென்று எதிர் பார்க்கப்பட்டது.

இந்தப் படை இஜிப்தில் 6 வாரங்கள் இருந்த பிறகு, அதைப் பல பகுதிகளாகப் பிரித்து, சினய் தீபகற்பம், பாலஸ்தீனம், ட்ரான்ஸ் ஜோர்டானியா, சிரியாவின் எல்லைப்புரம் ஆகியவற்றிற்கு அனுப்பினர். ஜூன் மாதம் 5-வது இந்தியன் பட்டாளமும் பிரஞ்சுப் படையும் சேர்ந்து வடக்கே போய் டமாஸ்கஸைத் தாக்கிக் கைப்பற்றின. பிறகு, இப்பகுதிகளெல்லாம் ஒன்று சேர்ந்து பாலைவனத்தின் மேற்குத் திசைக்குப் போய் ஜெனரல் ஆகின்லெக் தலைமையில் 1941-ம் வருஷம் நவம்பர் மாதம் 17-ம் தேதி மீண்டும் போராடத் தொடங்கி, அடுத்தடுத்து, சிட்குரெசேழ், டோப்ருக், கஸாலா, டேர்ந, சைரேன், பெர்ஸ் முதலிய ஊர்களைப் பிடித்த பிறகு, டிசம்பர் 25-ம் தேதி பெங்காசி வந்து சேர்ந்தனர்.

1942-ம் வருஷம் ஜனவரி மாதக் கடைசியில், பெங்காசியைச் சுற்றிலுமுள்ள முக்கியமான இடங்கள் இந்தியர்கள் வசமிருந்தன. இதில் 7-வது இந்தியக் காலாட் படையை ஜெர்மன் படைகள் வெட்டி விட்டு வளைந்து கொண்டன. இந்தப் படை சாதாரணமாகக் கிழக்கு நோக்கிப் போகத் தான் முயற்சிக்கு மென்று எல்லாரும் எதிர் பார்த்தார்கள். ஆனல், மூன்று பிரிவுகளாகப் பிரிந்து தெற்கேயும் மேற்கேயும் தப்பி எதிரி டாங்கிப் படைகளை ஏமாற்றி வெளிப்பட்டுவிட்டன. எதிரி விமானப் படைகள் இவர்கள் மீது வெடி குண்டுகளை வீசின. ஆனல், இவர்கள் பதிலுக்குச் சுடவில்லை. ஆகவே, அந்த விமானப் படையினரையும் ஏமாற்றி விட்டார்கள். பிறகு எதிரிகளுக்கு பெட்ரோல் கொண்டு போய்க் கொண்டிருந்த வண்டிகளைப் பிடித்து, அதிலிருந்த பெட்ரோலைத் தாம் நிரப்பிக் கொண்டார்கள். பிறகு 200 மைல் தூரம் எதிரி நாட்டைக் கடந்து பிரிட்டிஷ் படை வீடுகளுக்கு வந்து சேர்ந்தனர்.

இரண்டாவது ராயல் லான்சர்ஸ் படையைச் சேர்ந்தவர் மேஜர் குமார் ராஜேந்திர சிங்ஜி. இந்தப் படையைச் சேர்ந்த 2-வது இந்திய மோட்டார் பட்டாளம், மக்கிலியில் போராடிக் கொண்டிருக்கும் போது, எதிரிகள் வளைந்து கொண்டார்கள். நம் படைகள் டோப்ருக்குத் திரும்பிப் பின் வாங்கிப் போகாதபடி தடுக்கும் பொருட்டுத்தான் இப்படிச் செய்தார்கள். அப்போது மேஜர் ராஜேந்திர சிங்ஜியின் பட்டாளம் மேல் நோக்கிப் போனது. அங்கேயும் எதிரிகள் நெருப்பு கக்கிக் கொண்டிருந்தார்கள். என்றாலும், அவர்களைக் கடு வேகமாகத் தாக்கிப் புகுந்து வெளிக் கிளம்பி விடவேண்டு மென்று ஊக்கினர். படையினரும் அப்படியே செய்தார்கள். எதிரிகள் விரட்டிக்கொண்டு பின் தொடர்ந்தனர். மலைகளின் மேல் ஏறி, எதிரிகள் கண்களுக்கு அகப்படாமல் மறைந்து விட்டார்கள். திடீரென்று 15 இத்தாலிய லாரிகள் தோன்றின. அவற்றைத் தாக்க இந்தப் படை ஆயத்தமானது. அதிலிருந்து இத்தாலியர்கள் 200 பேர்கள் சரணுகதி யடைந்தார்கள். ஜெர்மானியர்கள் அனைவரும் கைதியானர்கள், ஒரு லாரி இந்தப் படையோடு சேர்ந்து கொண்டது. 30 மணி நேரம் இடைவிடாது போராடிக் கொண்டே போய், கடைசியில் பிரிட்டிஷ் படை வீடு வந்து சேர்ந்தார்கள்.

இது போன்ற வீரச் செயல்கள் பலவற்றை இந்தியர்கள் நிகழ்த்தினர்கள். கேரன் யுத்தத்தில் சுபேதார் ரிச்பால் ராம் காயப்பட்டு சாகுந் தருவாயிலிருந்தார். அப்போதுங்கூட, தாம் குறிப்பிட்ட ஸ்தானத்தைக் கைப் பற்றியே தீரவேண்டுமென்றும், ஆகவே, முன்னேறிப் போகவேண்டு மென்றும் தம் படைக்கு உத்தரவிட்டார்.

மத்திய கிழக்குப் போர் முனையில் '6-வது ராஜ்புதான ரைபில்ஸ்' பட்டாளத்திற்கு ஒரு 'டிஸ்டிங்விஷ்ட் சர்விஸ் ஆர்டரும்', 4 'மிலிடரி க்ராஸ்'களும், 7 இந்தியன் 'ஆர்டர் ஆப் மெரிட்'டும், 9 'டிஸ்டிங்விஷ்ட் சர்விஸ் மெடல்'களும், 5-வது மராட்டிய 'லைட்' காலாட் படைக்கு டி.எஸ்.ஒ.-வுக்கு ஒரு 'பாரும்', ஐ.டி.எஸ்.ஒ., 4 மிலிடரி க்ராஸ்களும், 4 இந்தியன் ஆர்டர் ஆப் மெரிட்டும், 2 டிஸ்டிங்விஷ்ட் சர்விஸ் மெடல்களும் கிடைத்தன. இப்படிப் பட்ட உயர்ந்த வீரச் செயல்கள் பல 4-வது இந்தியப் பட்டாளத்தவர்கள் செய்தார்கள்.



4-வது இந்தியன் டிவிஷனைச் சேர்ந்த சைகைப் படையினர், காலாட் படையைப் பின் தொடர்ந்து கம்பி யில்லாத் தந்திக் கட்டுகளோடு போகும் காட்சி.

### சென்னைக்கு பிரிட்டன் நன்றி

லண்டனில் சர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸிடமிருந்து மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட தந்தி 1943-ம் ஆகஸ்ட்டு 8உ வந்து சேர்ந்தது :—

சென்னை மக்கள் அனுப்பிய மற்றொரு சிறந்த தொகை பற்றி, மீண்டும் மகிழ்ச்சியோடு நான் நன்றி செலுத்துகிறேன். சென்னைவாசிகளின் தாராளத் தன்மையினல் ஏற்பட்ட அந்த ஏராளமான போர் விமானங்களும் வெடிகுண்டு விமானங்களும் ஆகாயத்தில் காவல் புரிகிறதற்கு இத்தொகைப் பெரிதும் உதவும்.

SECRETARIAT LIBRARY
1945
MADRAS GOVERNMENT

# அங்கும், இங்கும்

நம்மைப் பற்றி நாமே சொல்லிக் கொள்ளுவதை விட, நம்மிடம் உதை வாங்கும் நமது விரோதிகள், நம்மைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்பது ரஸமான விஷயமாகுமல்லவா? நேச தேச விமானப் படையைச் சேர்ந்தவர்கள் மகா சூரர்களோடு மட்டுமின்றி மகா நிபுணர்களும் கூட. [illegible] ஆசையிலே மண்ணைப் போட்டு வருகிறவர்கள் அவர்களே! எங்கே படையெடுப்பு என்றாலும், யானைக்கு முன்னே வரும் மணியோசை போல, விமான வீரர்கள் முன் கூட்டியே அந்த இடத்தின்மீது தோன்றி, அதனைப் பொடிப் பொடியாக்கி விடுவார்கள். இதற்கு 'மிருது வாக்குதல்' என்ற பெயரைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். இப்படியே அச்சு நாடுகளனைத்தையும் மிருதுவாக்கி, அப்புறம் இந்த உலகிலேயே யுத்த மென்பது தலைகாட்டாது செய்ய அவர்கள் திட்டம் போட்டிருக்கிறாப்போலிருக்கிறது.

## விமானத்திலிருந்து தீப்பந்தங்கள்

அது ஒருபுற மிருக்க, ஜெர்மானியர் நமது விமானத் தாக்குதலைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்று கவனிக்கலாமா? ஒரு இடத்தின்மீது குண்டுகளைப் போடுமுன் நேச தேசத்தவர்கள், குறிப்பிட்ட இலக்குகளைச் சுற்றிலும் பச்சை நிறத்தோடு எரியும் தீப்பந்தங்களை எறிகிறார்களாம். 'தெரிகிறதா இடம்! அடிடா தம்பி!' என்று குண்டு வீசத் தயாராக இருக்கும் வீரர்களுக்கு தீப்பந்தம் எறியும் அண்ணாத்தை சொல்லிக் காட்டுவது போலிருக்கிறதாம் இது.

தீப்பந்தங்களின் மூலம் இலக்குகள் இருக்குமிடம் தெரிந்ததும், நேச தேச வெடி விமானங்கள் அலையலையாக அந்த இடத்தைச் சுற்றி வந்து, குண்டுகளை வீசி விடுகின்றன. குறிப்பிடப்பட்ட இலக்குகளில் எரியும் பச்சைத் தீப்பந்தங்களை அணைப்பதற்கு முயலும் ஏ.ஆர்.பி. ஆட்கள் பாடு இதனால் திண்டாட்டமாகி விடுகிறதாம்.

அப்பால் வரும் விமானங்கள் குறிப்பிடப்பட்ட இலக்குகள் மீது குண்டு மழையையே பொழிந்து தள்ளுகின்றனவாம். சூடு ஏற ஏற காற்றும் லேசாகுமல்லவா? காற்று லேசானால் உயரக்கிளம்பி விடுமல்லவா? ஒரு இடத்தில் காற்று குறைந்து இடம் காலியானால், அந்த இடத்தை நாடி அருகில் இருக்கும் பிரதேசத்தில் உள்ள காற்று குபீரென்று பாய்வது இயற்கையாச்சே! புயல் வீசுவதற்குக் காரணமே இதுதானே! ஆகவே, நேச தேச விமானிகள் போட்ட புது தினுஸு திட்டத்தாலே, அச்சு நாடுகளில் பல இடங்களில் அடிக்கடி புயல்கள் தோன்றுகின்றனவாம். இந்தப் புயல் காரணமாக, நெருப்பணைக்கும் கோஷ்டியினரோ, மற்றப் படையினரோ ஒன்றும் செய்யமுடியாது திணறுகிறார்களாம். ஆகவே, நேச தேச விமானிகள் வருகிறார்கள் என்ற எச்சரிக்கை பிறந்ததுமே, 'புயல் வருகுது டோய்!' என்றே அச்சு நாட்டார் அலறி ஓடுவார்கள் என நினைக்கிறோம். எங்கே ஐயா ஓடுவது நீங்கள்? எல்லாப் பக்கங்களிலும் எரி நெருப்பை மூட்ட பிளான் போட்டிருக்கிறார்களய்யா, கானடாவில் உள்ள கியூபெக் நகரில் கூடிய நேச தேசத்தலைவர்கள்! அதிலிருந்து தப்ப முடியுமா என்ன? மூட்டைப்பூச்சிகள் மாதிரி, 'பொட், பொட்' என்று சுருண்டு விழுந்து மாளவேண்டியது தான்!

## அடுத்த அடி இத்தாலி மீது தான்

இப்பொழுது இத்தாலியைப் பற்றிய நினைவே எல்லோருக்கும் இருக்கின்றது. காரணம் அந்த நாட்டிற்கு இரண்டு மைல் தூரத்தில், நேச நாட்டினர் மட்டில்லாத பலத்தோடு 'பாயுங்கள்' என்ற ஆக்ஞையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். அடுத்தாற் போல விழும் அடி இத்தாலி மீது தான் விழும். எப்படி விழும்? எங்கே விழும்? என்பதெல்லாம் ராணுவ ரகசியங்கள். நடக்க நடக்கத் தான் பார்க்க வேணும்.

இப்பொழுது இத்தாலிய அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு மார்ஷல் படோக்ளியோ என்ற போர் வீரரிடம் இருக்கிறது. இவர் முஸோலினியின் வீழ்ச்சிக்கப்பால் அரசாங்கத்தை ஏற்று நடத்த வந்ததும், இத்தாலி வெகு சீக்கிரமே சரணடைந்து விடப்போகிறது என்று பலர் எதிர்பார்த்தனர்.

ஆனால், ஹிட்லர் எமகாதகப் பேர்வழி அல்லவா? அதனால் தானே, அவரது சக்தியைக் குறைத்து மதிப்பிடாது, நேச தேசத்தார் ஆர அமர யோசித்து எல்லாக் காரியங்களையும் செய்கிறார்கள். தவிர, இருபத்தைந்து வருஷகாலமாக 'பிளான்' போட்டுப் போரில் இறங்கிய ஒருவரை, சட் புட் என்று அமுக்கிவிட முடியுமா?

## ஹிட்லரின் யோசனை

ஹிட்லர், தன் ராஜ தந்திர முறைகளாலும், பயமுறுத்தல்களாலும் படோக்ளியோ அரசாங்கம் அவசரப்பட்டு எதும் செய்ய விடாதபடி தடுத்து விட்டார்போலிருக்கிறது. அதோடு, இத்தாலிய அரசாங்கத்தார் 'பல்டி' அடித்து விட்டால், சட்டென்று இத்தாலியை ஆக்ரமித்துக் கொண்டு, இத்தாலியைப் போர்க்களமாக்க ஹிட்லர் தயாராக இருக்கிறார் என்றும் தெரிகிறது.

ஏற்கெனவே அங்கே பதினைந்து டிவிஷன் ஜெர்மானியப் படைகள் இருக்கின்றனவாம். மேற் கொண்டும் இத்தாலிக்குள் நாஜிப் படைகள் வந்து குவிந்த வண்ணமாகவே இருக்கின்றனவாம். போ என்னும் நதி தீரத்திலே போகாது கெட்டியாக நிலைத்து நிற்க நாஜிகள் பலமான அரண்களை அதி வேகமாக அமைத்துக் கொண்டிருக்கிறார்களாம். ஸிஸிலியிலிருந்து வேறே ஏராளமான ஜெர்மன் படைகள் இத்தாலிக்குள் தப்பியோடி யிருக்கின்றன. இத்தாலியக் கடற்கரை யோரங்களையும் நன்றாகப் பாதுகாக்க ஹிட்லர் உத்திரவிட்டிருக்கிறார் போலிருக்கிறது. தெற்கு இத்தாலி பறி போனாலும், வட இத்தாலியில் ஒரு கை பார்த்துவிட்டுத்தான் விடுவார் அவர் என்பதில் சந்தேகமேயில்லை. பார்க்கட்டும், பார்க்கட்டும்! நேச நாட்டினரது கை ஓங்கி வருவதையே பார்ப்பார் அவர். வெகு சீக்கிரமே தனது கோட்டை என்றெண்ணிக் கொண்டிருக்கும் ஜெர்மனியின் வீழ்ச்சியையும் பார்ப்பார். அப்புறம் நடப்பவற்றைப் பார்க்க, அவரே இருப்பாரா என்பதைப் பற்றி நாம் சொல்ல முடியுமா என்ன?

JL
V2:11:19(8m) N43.3
69526

## இத்தாலிய அரசரின் குணதிசயங்கள்

இதெல்லாம் சரி! இத்தாலியிலே, சக்கரவர்த்தி என்று சொல்லிக் கொண்டு ஒருவர் இருந்தாரே, அவர் இருக்கிறாரா இல்லையா என்று கேட்கலாம். இருக்கிறார். பேஷாக இருக்கிறார். எப்பொழுதும் போலவே 'ஈஸ்வரா!' என்று மூலையில் அடைந்துக் கிடக்கிறார். முஸோலினி இருந்தவரை, அவரது கைப்பாவையாக ஆடிக்கொண்டிருந்தார். அவரைத் தட்டிக் கேட்கவும் தைரியமின்றி இருந்தார். அவர் பட்டத்திற்கு வந்து நாற்பத்தி மூன்று வருஷங்களாகின்றன. நல்ல கிழடாகிவிட்டார். நல்ல நாளிலேயே வாயைத் திறக்கமாட்டார். நாலா புறங்களிலும் குண்டு மழை பொழியும் இச்சமயத்தில் பேசப்போகிறாரா என்ன?

இவரைப்பற்றி சில ரஸமான விஷயங்கள் 'லண்டன் அப்ஸர்வர்' பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது. ஐரோப்பாவிலே ஆட்சி புரியும் வெகு புராதனமான வம்சத்தைச் சேர்ந்தவராம் இவர். பால்ய வயதிலே படிப்பே கதியாக இருந்தவராம். சிறு வயதிலிருந்தே தம்மைக் கண்டிப்பவரை வெகுவாக நேசித்து வந்தாராம்.

மகா சாது. தான்தான் அரசன் என்று தன் மனிதிலுள்ளதை அமுல் படுத்த அவர் என்றுமே துணிந்த தில்லையாம். ஆனால் கட்டுப்பாடுகளோடு கவர்ன்மென்ட் நடக்கவேண்டும் என்று விரும்புகிறவராமிவர். தமது அரண்மனையிலே ஆடம்பரச் செலவுகள் எதும் நடக்க அனுமதி யளிக்கமாட்டாராம். பொது ஜனங்கள் முன்பாக அடிக்கடி தோன்றுவதையோ, படாடோபமாகப் பேசுவதையோ இவர் விரும்பினதில்லையாம். முசோலினியின் கட்டுப்பாட்டின்பேரில் சில தடவைகள் அரண்மனை முன்பு தோன்றி, முத்துத் தீர்த்தது போல் நாலேநாலு வார்த்தைகள் பேசி, முடித்திருக்கிறார். அவ்வளவுதான்.

புள்ளி விவரங்கள் சேகரிப்பதென்றால் மகா பைத்தியம் இவருக்கு. ஏதாவது ஒரு கற்சிலையைப் பார்த்து விட்டால், 'இதன் கனமென்ன?' என்று கேட்கத் தொடங்கி விடுவாராம். தன்னைப் பார்க்க வெளி நாட்டார் யாராவது வந்து விட்டால், 'உங்கள் நாட்டிலே மிகப் பெரிய மலை எது? அதன் உயரம் எவ்வளவு? உங்கள் ஊரிலே நதி இருக்கிறதா? அதன் அகல மெவ்வளவு? ஆழம் எவ்வளவு?' என்று தான் கேட்கத் தொடங்குவாராம். உலகத்தில் உள்ள அபூர்வ நாணயங்களில் எல்லாம் ஒவ்வொன்று இவரிடம் இருக்கிறதாம். நாணயங்களைச் சேர்க்கும் பழக்கத்தை இன்னும் விடவில்லையாம் இவர். முசோலினி தன் முகவாயை அதிகார வெறியால் உயரத் தூக்கிப் பேசிக்கொண்டே அட்டகாசம் செய்த காலத்தில் எல்லாம், இந்த எம்மானுவேல் ராஜா தமது அரையில் அமர்ந்து, எதைப் பற்றியும் அலட்டிக்கொள்ளாது, நாணய ஆராய்ச்சியிலேயே மூளையைச் செலவிட்டுக் கொண்டிருந்தாராம். இப்படிப்பட்ட ஒரு மன்னனையும் அவருக்குக் கீழிருப்பவர்களையும், இப்பொழுது ஹிட்லர் தம் கைப்பிடிக்குள் வைத்துக்கொண்டு ஆட்டி வருவதில் ஆச்சரிய மென்ன இருக்கிறதையா?

## இந்தியப் படைகள் சும்மாயில்லை.

'குதிரைக்கு தண்ணி காட்டிட்டு வா!' என்றாராம் ராயர். தென்னாலி ராமன் குதிரையை ஜலமிருந்த தொட்டிக்கு எதிரே கொண்டு நிறுத்தி, 'பார்த்துக்கொண்டாயா தண்ணியை?' என்று கேட்டுவிட்டு, குதிரையை இழுத்துக்கொண்டு வந்து விட்டானாம். அந்த மாதிரி போரில் ஈடுபடவென்று சேர்ந்த இந்தியத் துருப்புகள், இந்நாட்டில் இப்பொழுது போர் ஒன்றும் தான் நடக்கவில்லையே என்று சும்மா தூங்கிக் கொண்டிருக்கவில்லை; பொது ஜனங்களுக்கு அவ்வப்பொழுது தங்களாலான சகாயங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

சமீபத்திலே, அஜ்மீர், மேர்வார் பிரதேசங்களிலே கன மழை பெய்து கடும் வெள்ளம் ஏற்பட்டதல்லவா? அந்த வெள்ளத்தினால் அவதிப்பட்டவர்கள் அநேகாயிரம் குடும்பங்கள். சோறில்லாது வாடிக்கொண்டிருந்த அத்தகைய குடும்பத்தவர்களுக்கு இந்தியத் துருப்புகள் வெகு அவசியமான உணவு, ஆடை முதலியவற்றைச் சுமந்து சென்று, விநியோகம் செய்தார்கள்.

வெள்ளம் என்ற செய்தி வந்தது. உடனே, அந்த இடத்திலிருந்து முப்பது மைல் தூரத்திலிருந்த ஒரு இந்திய ரெஜிமெண்டைச் சேர்ந்த மேலதிகாரிகளும், சிப்பந்திகளும் தங்களுக்கு அளிக்கப்படும் படியிலிருந்து மூவாயிரம் பவுண்டு உணவுப் பொருள்களையும், எல்லோருமாக மனமிரங்கிச் சேர்த்த இரண்டாயிரம் ரூபாய்களையும் வெள்ளத்தால் வாடும் பிரதேசத்திலிருப்பவர்களுக்கு அனுப்பினார்கள். இடிந்து விழுந்த வீடுகளில் சிக்கி மடிந்த இருநூறு உடல்களை வெகு பிரயாசையின் பேரில் இந்தியத் துருப்புகள் வெளியில் எடுத்துக் கொடுத்தார்களாம். போகிற பாதையில் இருந்த ரஸ்தா பாழாகிக் கிடந்ததால் அதையும் அவர்கள் 'ரிப்பேர்' செய்து கொண்டே சென்றனர். தமது சகோதர, சகோதரியர் வாட, அவர்கள் பார்த்திருப்பார்களா? காக்கி உடை தரித்ததுமே கல்மனமாகிவிடுமா என்ன?

## ஹாலந்தில் ஜெர்மானியர் ஹாஸ்ய முயற்சி.

ஹாலந்து தேசம் இப்பொழுது ஜெர்மானியரின் பிடியில் சிக்கி, தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அங்கே ஜெர்மானியர் ஒரு பத்திரிகையை நடத்துகிறார்கள். அதிலே, சோல்ஜர்களிடமிருந்து ஹாஸ்யத் துணுக்குகளைச் சேகரித்துப் போட விரும்பினார்களாம். ஒரு துணுக்கிற்கு பத்து ரூபாய்க்கு ஈடான அத்தேசப் பணம் அளிப்பதாகவும் விளம்பரப்படுத்தினார்களாம். ஆனால் அந்நாட்டினரது பிழைப்பே 'சிரிப்பாணி'க்கு இடமாகிக் கிடக்கிறதே! அப்படி யிருக்க சிரிக்கவோ, சிரிப்பு மூட்டத்தக்க ஹாஸ்யத்தை சிருஷ்டிக்கவோ அவர்களால் முடியுமா என்ன?

## நிறைய வேலை குறைய சோறு.

பிரான்ஸிலிருந்து வலுக்கட்டாயத்தின் பேரிலே பிரஞ்சு மக்களை ஜெர்மனியில் வேலை செய்ய இழுத்துக்கொண்டு போகிறார்கள். இடுப்பொடிய வேலை வாங்குகிறார்களே ஒழிய, வயிறு நிறைய உணவளிப்பதில்லை. அது காரணமாக குழந்தைகள் எல்லாம் சோகை பிடித்துக் கிடக்கின்றன. பல பெண்கள் ஆறும் மாசத்திலும், ஏழாம் மாசத்திலும் பிரசவித்து விடுகிறார்கள். அதனால் பிறக்கும் குழந்தைகள் சோனிகளாகவே இருக்கின்றன. கருவிலேயே செத்துப் பிறக்கும் குழந்தைகளுக்கு கணக்கே இல்லையாம். பசி பசி என்ற ஓலம்தானும் எங்கு திரும்பினாலும். அதை ஏதோ ஒரு வித சங்கீதம் என்று எண்ணிக்கொண்டு சிரித்துக்கொண்டே போகிறார்களாம் நாஜி வீரர்கள்.

இதன் பலன் என்ன? வேலை செய்யும் இயந்திர சாலைகளில் பல விபத்துக்கள் ஏற்படுகின்றனவாம். முக்கியமான சமயத்திலே ஒரு மெஷினை நிறுத்த வேண்டு மென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது பசிக் கொடுமையால் கண் பஞ்சடைந்து தலை சுற்றத் தொடங்கினால் மெஷினை நிறுத்தத் தோன்றுமா? இரும்பைக் காய்ச்சி ஊற்றும் இடத்திலே இம்மாதிரி நிலைமையில் ஒரு தொழிலாளி இருந்தால், அவன் மயங்கி விழுந்தே விடுவான். விழுவது நெருப்பிலே விழுவானோ, பழுக்கக் காய்ந்து ஜலம் போல் ஓடும் இரும்புக் குழம்பிலேதான் விழுவானோ, அல்லது தரையிலே விழுவானோ, கடவுளுக்கே ப்ரீதி!

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.